கம்பராமாயணம்

ஐந்தாவது

சுந்தரகாண்டம்

வை. மு. சடகோபராமாநுஜாசார்யரும்

சே. கிருஷ்ணமாசார்யரும்

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரும்

இயற்றிய

உரையுடன்

சென்னை:

ஆர். ஜீ. அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

வெகுதான்ய ஹு கைபீ

1939

விலை ரூபா—5

இப்புத்தகத்திலடங்கியவை:—

	சுந்தரகாண்டம்	பக்கம்
	நூன்முகம்	...
1.	கடறுவுபடலம்	3
2.	ஊர்தேடுபடலம்	98
3.	காட்சிப்படலம்	285
4.	நிந்தனைப்படலம்	335
5.	உருக்காட்டுபடலம்	390
6.	சூளாமணிப்படலம்	471
7.	பொழிலிறுத்தபடலம்	520
8.	கிங்கராவதைப்படலம்	553
9.	சம்புமாலிவதைப்படலம்	588
10.	பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்	615
11.	அட்சகுமாரன்வதைபபடலம்	648
12.	பாசப்படலம்	677
13.	பிணிவீட்டுபடலம்	726
14.	இலங்கையெரியூட்டுபடலம்	821
15.	திருவடிதொழுதபடலம	853
	செயயுண்முதற்குறிப்பகராதி	909
	அரும்பதவகராதிமுதலியன	918

நூன்முகம்.

"நீலமுக காயாம் பூவும் நிறைந்தறை கடலுந் தூய
ஞால மெண டிக்கு மஞ்ஞைக கந்தர நிறமு நாணும்
கோலமோ டாழி சங்கு சார்ங்கம்வாள் கதைகொண டோங்கும்
மாலினை நினைந்து வாழு மடியர்தாள் மனதுள் வைப்பாம்."

இதிஹாஸசிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் மற்றைக்காண்டங்களி னும சுந்தரகாண்டம சிறந்துவிளங்குவது, அதன்பெயாமாத்திரததால்தானும் விளங்குவதாகும: அன்றியும், இராமாயணம்முழுவதையும் பாராயணஞ்செய வோ செய்துவராநிற்க, பலா இந்தச் சுந்தரகாண்டத்தையே நித்யபாரா யணஞ்செயவதாலும் பெறப்படும்.

இனி, இக்காண்டம் சுந்தரகாண்டமஎனப்பெயர்பெறப் பின்னா உண்ணத தொடக்கததில் சுந்தரகாண்டமஎனபதற்குப்பொருளகூறுமிடததுககாட்டப் படும்வகையாகவன்றி, வேறுவகையாகவும காரணங்கள் கூறபபடும் அவை வருமாறு.-இந்த ஸ்ரீராமாயணததில் தலைமைபெற்ற சுவையாகிய விப்பிரலம்ப சிருங்காரம இந்தககாண்டததில் இனிதுவிளங்குவதால, இதற்கு இப்பெயா வந்ததென்பது, சில அலங்காரநூலா கொள்கை. இனி, ஸ்ரீராமன் சீதா பிராட்டிஎன்ற இவாகளுடைய அழகு இனிதுகூறப்படுவதனால் இப்பெயா வந்ததென்று வேறுசிலரும், இதுவரையிற் பிரிவுத்துயரால் மனமுளைந்து கிடந்த சீதாராமரிருவரும ஒருவாக்கொருவரின்க்ஷேமததை யறிநது மகிழ் கையால இப்பெயாவந்தது எனறு வேறுசிலரும், வாணனுபாகமும் சரிதை களினபுணாட்புகளும் மிகவும் மகிழ்வுவிளைததலால் இப்பெயாவந்ததென்று பின்னுஞ் சிலரும் கூறுவா.

இனி, இக்காண்டததாற்பெறப்படும் உள்ளுரைவருமாறு—கிட்கிந்தா காண்டத்தில உலகமெல்லாங்காப்பவனான திருமாலுககு ஆசாரியருபமான புருஷகாரலாபததைப் பேசிய மகாகவி, இநதக்காண்டததில் ஆசார்யனசெயய வேண்டிய செயல் இனனதெனபதைத தெரிவிககினறனரென்ப ஆசாரயன் செயலாவது - உடலிற் சிறையுண்டு கிடக்குஞ் சேதனுக்கு எம்பெருமான் திறத்து உணாவைப்பிறபபிததுப் பின்னா ஞானவானான அந்தசசேதனை யங்கீகரிககுமாறு பகவானுககு அறிவிததலாகும் இந்தககாண்டததில் சிறிய திருவடியெனப்படும அனுமான் இலங்கையிறசிறையுண்டுகிடக்குஞ் சீதா பிராட்டியார்ககு ஸ்ரீராமபிரானது செவ்வியையெல்லாமுணாததி அப்பிரான வந்து நம்மை யங்கீகரிப்பா னென்ற கருத்து அப்பிராட்டிககு உறுதியாகத தோன்றுமாறுசெயதபின்னா அப்பிராட்டி இலங்கையிற குற்றமற்றவளா யிருததலால் அங்கீகரிததற்குஉரியளென்று ஸ்ரீராமபிரானிடம தெரிவிததல் காணக.

இனி, இந்தககாண்டததில தூதரின் இலககணமும் கறபுடைமகளிர் இன்னுவாறு இருததறகு உரியரென்பதும முதலியன வெளியாகும. அவறறை முறையே கூறுவேன். தூதனுககுவேண்டிய முக்கியகுணஙகள் திருவள்ளுவ நாயனுர "அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பாக்கு, இன்றி யமையாத மூன்று" என்றனர் இமமூன்றுகுணஙகளுள் அனுமானுக்குத் தனதுதலைவனுகிய இராமபிரானிடதது அன்பு உடைமையைப்பற்றி யாம விசேடித்துச சொலலவேண்டுவதிலலை அறிவு என்பது, காலத்திற்குஏற்ப உணரும்உணாசசி இததன்மை அனுமானிடதது மிககிருந்த தென்பது, பிர மாதிரத்தினுல் இந்திரசிததுகட்டியது விடுபட்டபின்பும், அனுமான் தான் கட்டுணடிருப்பவன்போல நடித்து அரககர்மூலமாகவே இராவணனுடைய இலககத்தைசசேர்ந்து அவனுடன்பேசிப் பினனா அவ்விராவணனதுஏவ லினுற் பணியாளா வாலில்நெருபபுவைததிடவும் அஞ்சாது, இலஙகையி லுள்ள தூககம் முதலிய இரகசியஙகளை யறிநதுபோகவேணடுமென்னும் விருப்பினுல் மானுவமானஙகளையும் பொருடபடுத்தாது இலஙகைநகரின்வீதி கள் தோறும் தன்னை இழுததுசசெல்லும் அரக்கருடன் திரிந்து, பிறகு "இட் டுவா வென்றுற் சுட்டுவநதவன்" என்று உலகததா கொணடாடுமபடி இலங்கையில்நெருப்பிட்டதனுல் நனகுவிளஙகும. இராவணனோடு பேசுமிடத் தைக் கிணபோமாயின் அனுமான் சொல்வன்மையுடையானென்பதும் பெறப்படும். இனி "தூயமைதுணைமை துணிவுடைமை யிம்மூன்றின், வாய்மை வழியுரைப்பான்பணபு," "இறுதிபயப்பினு மெஞ்சா திறைவற்கு, உறுதிபயப்பதாநதூது" என்பவற்றுற் கூறிய தன்மைகளும் அனுமா னிடதது அமைந்துள்ளனவென்பது—பலமகளிரைககணடவிடததும மனஞ் சலியாமை, பகைவரிடததவனுகிய விபீடணனைத்தனக்குப்பரிந்துபேசுமாறு செய்து கொண்டமை, பகைவரிடையில் தான் தனிநின்று தனதுதலைவ னுகிய இராமபிரானுடைய பலபராக்கிரமஙகளைப் பாராட்டிச சிறிதும பின் வாஙகாது இராவணனிடததுககூறியமை, தன்வாலில் நெருப்புவைததிருக கவும் கலஙகாது பகைவருரை அந்தத்தீயைககொண்டு கொளுததியமை என்ற செயல்களால் தெளிவாகவிளஙகும. இஙஙன் அனுமான் தூதரின இலககணததிற்கு இலககியமாதல் காணக.

இனி, சீதையினெழுககததாற் கற்புடைமாதரிலக்கணம் பெறப்படுவ தைக காட்டுவாம். இராட்சச சக்கரவாததியாகிய இராவணன சீதாபிராட்டி யினிடத்துள்ள பெருவேட்கையால் அன்னுளைசசாரந்து பலபடிகெஞ்சிப் பேசியபின்பு "குடிமைமூனறுலகுஞ்செயுங கொற்றததென், அடிமைகோடி யருளுதி" என்று படியின்மேல் விழவும, அந்தப் பிராட்டி அவனைத துரும் பாகமதிததுப் பலபடி கடிந்துபேசியதேயன்றி ஸ்ரீராமபிரானது பெருமை யைபபேசுமமுகததால அன்னுளைசசரண்புண்டாலன்றி வேறுவகைசெயயின் உனக்கு முடிவே நேருமென்றுகூறியது அப்பிராட்டியாரின மனததிட்பத தைக்காட்டும். அன்றியும், அநுமான் "இராமனெதிர நின்னைககாட்டியடி

தாழ்வென்" என்றுவேணட, அதற்குச சீதாபிராட்டி "ஆரியன், வென்றி வெஞ்சிலைமாசுணும்", "உலகநகள்யாவுமேன், சொல்லினுற்சுடுவேனது தூயவன், விலலினுற்றற்கு மாசென்றுவீசினேன்", "வேறுமுண்டுரை கேளது மெய்ம்மையோய், ஏறுசேவகன் மேனியல்லா லிடை, ஆறுமைம் பொறி நின்னையுமாணெனக, கூறுமிவ்வுருத தீணடுதல்கூடுமோ" என்பன வற்றால் - கணவனுக்குயாதோரிழுககுமுணடாகாதவாறுபாரததுகொள்ள லும், பிறராற் றீமை நேராதவாறு காததுக்கொள்ளுதற்குஏற்ற வல்லமை யுடைமையும, பரபுருடனைத தீணடாததன்மையும், வெளிபபடுததியமை யைக் காணலாம். மற்றும காடசிப்படலதது 3 - ஆம் பாடல் முதல் 15 - ஆம பாடல்வரையிற் சீதையின் நிலையினைச சொல்லுமிடதது "விழுதல் விம்மு தன மெயயுற வெதும்புதல் வெருவல், எழுத லேகுத லிரகுத லிராமனை யெனணித, தொழுதல சோருத றுளகுத றுயருழநதுயிரத்தல், அழுத லன்றி மற்றயலொன்றுஞ் செய்குவ. தறியாள", குமையுறத்திரண டொருசடையாகியமெயயாள், மெனபுனலிடைததோய்கிலாமெய்யாள ", "இருந்தமாநிலஞ செல்லரிததிடவு மாணடெழாதாள்" என்பன முதலி யனவாகக கூறுவது, கற்புடையா இன்னபடியிருப்பாரெனத் தெளிவாகக காட்டும.

அனறியும, காமம் சிறுமையைத்தருமென்பதும், கணபபயனவிளைகு மென்பதும், பணியாளா தலைவன்கட்டளைப்படிநடததல் அவாக்குக் குற்றந் தராதென்பதும், கற்புடைமாதராகட்டளைகுத் தேவரும படிந்தொழுகுவ ரென்பதும்முதலியன இநதककாணடத்துப்பெறப்படுதலுங காணலாம் இன் னும பலவுள: விரிப்பிற் பெருகும.

இஙஙனம் பலபடியாகச சிறப்புற்றுவிளஙகும் இநதச சுந்தரகாணடம, முன்னா அடியேனது ஆசிரியர்களான ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியஸ்வாமிகளாலும் ஸ்ரீ. உ. வே. சே. கிருஷ்ணமாசாரியஸ்வாமி களாலும் காட்சிப்படலம உருக்காட்டுபடலம சூளாமணிப்படலம திருவடி தொழுதபடலம என்பனவற்றிற்குஉரையெழுதப் பெற்றுஉ, பின்னா ஷை ஸ்ரீ. உ. வே. சே. கிருஷ்ணமாசாரியஸ்வாமிகளாலும அடியேனாலும மறறைப் படலஙகட்கும உரையெழுதப்பெற்றும முழுப்புததகமாக ரகதாட்சிவருடம [கி. பி. 1924ஆ] வெளியிடப்பட்டது. ஆயினும, பலபிரதிகளைவைத்துஒப்பு நோகககித திருததமானபாடஙகளைச சோத்து அசசிடின உலகத்துககு மிகக பயன் விளைகுமென்ற கருகது அடியேனுககு இருநதமையால், இரண்டாம பதிப்பு அசசிடநேரந்த இப்போது அவ்வாறுசெயயமுயன்றேன். எனினும, இடமபொருளேவலகளின சௌகரியககுறைவால், ஆராய்ந்து செவ்வனே செய்ய இயலாமற்போயிற்று: என்றாலுஙக, கிடைததசிலபிரதிகளைவைததுக் கொண்டு ஒபபிட்டுப்பாத்துப் பரிசோதிததனால், முன்னிலும பலஇடஙக ளை திருததம்பெற்றுளளன என்பதறகு ஐயமிலலை: அஙஙனம திருததம பெற்றவைகளுள் முககியயானது - பொழிலிறுதத படலததது 49 - ஆஞ

யுளில "நின்றதோரசமிததகணடான" என்பது நின்றசெய்குன்று ணடான்" என்று திருத்தமபெற்றது: சமிததம்என்றசொற்கு - ஓமமண்ட பமஎன்று பொருளகூறிவநதனராயினும், அசசொல்லுககு அப்பொருள எவ் வாறுவநததென்றசநகை இடைவிடாது மனததையுறுததிவந்தது. இகுச் சமித்தம்என்பதற்குஏறப, அடுதத இடகளில ஓமம்என்ற பாடம காணப்பட, ஓமம் - ஓமமணடபம என்றுபொருள் கூறிவநதனா. யான கணட ஏட்டுப் பிரதிகளில 'ஓமம்என்ற இடகளிலெலலாம் வேரமஎன்றசொல் காணப்படு கின்றது வேரமென்பது, மலையெனனும்பொருளதாம்: இது இப்பொரு ளில்வருதலை 'தேசுறுமேருவென்னச சிகரமோரிலககஞ்சூடி, வீசுபொன் சுடரநின்றவேரமொன்றகட்கணடான்", "விணடொடாநதவேரம" என்ற இடகளிலுக காணக. ஆகவே, செயகுன்று, வேரம என்றபாடகள் மிக பொருந்திச் சிறததல காணக' இன்னும் பலவகைததிருததகள் ஊனறிப் பாரகுமிடத்து விளகும்.

கிடைதத ஏடடுப்பிரதிகளைவைதது ஒப்பிட்டுப் பாடபேதகளோடு அச சிட்டபின்னாச செநதமிழ்பபததிரிகையில் இராமாவதாரச செயயுட்பாடாந் தரம்என்று சில குறிததுள்ளன என்பது ஞாபகததிற்கு வந்தது. வரவும, அதனைககொணடு சுந்தரகாணடபபகுதிமுழுதையும ஒபபிட்டுப்பாரததேன்: ஆகுகுகாட்டபபட்டுளள சிலபாடல்கள இநதப்பதிப்பில வநதிடாமையால் அவற்றை ஈணடுக குறிகக்கினறேன்.

காட்சிப்படலத்து 29 - ஆஞசெய்யுளுக்குப்பின்

இனன வெண்ணி யிடருறு வாண்மருங்கு
உன்னெ ராயிர கோடி யரககியர்
துன்னு காவலுட டேய திரிசடை
என்னு மங்கை துணையின்றி வேறிலாள்
தருமநீதி தழுவிய சிநததைகொண்டு
உரிய வீடணன் றநதரு ளொண்டொடி
திரிசடைக்கொடி நாடொறுந் தேற்றுஞ்சொல்
அருளி னுறறன தாவிபெற் றுய்ந்துளாள்.
அனன ளாய வருந்ததி கற்பினுள
மன்னு சோலையின் மாருதி யுமவரத்
தன்னி டந்துடித் தெய்துறச சானகி
யென்னு மநகை யினிதிருந் தாளரோ.

என மூன்றுபாடலகள் உள்ளன.

நிந்தனைப்படலம 23 - ஆஞ செயயுளுக்குப்பின்

என்ன வாழ்த்திய மாருதி யீதுநாம
இன்னுக காண்டு மெனமறைந் தெய்தினுன
சொனனவ வாளரக கன்சுடு தீசசுடும
புனனை வைகுறு மவ்விடத தாயினுன்.

என்றபாடலும், 82 - ஆஞ்செய்யுளுக்குப்பின்

தீயோர் செய்கை தானு மிராம னொருதேவி
தாயா டுன்பு மாருதி கண்டே தளர்வெய்தி
மாயா தொன்றே யன்றி மனத்தே மலிதுன்பத்
தோயா துன்னிச் சோரபவ னொன்றங் குணர்வுற்றான்.

என்ற பாடலும் உளளன.

உருக்காட்டுபடலம 21 - ஆஞ் செயயுளுககுப்பின்

சுற்றிய கொடியொன்றைத் துணித்துத் தூயளோர்
பொறறடங் கொம்பினிற் பூடடிப பூமியே
நறறவ முடையன்யா னாகி னுயகன்
வெறறிசேர் திருவடி மேவு வேனென்றாள்.
என்றருந் ததிமனத் தெமமை யாளுடைத்
துன்றருங் கற்பினாள் சுருதி நாயகன்
பொன்றரு மலாபபதம வழுதது பூங்கொடி
தன்றனிக கழுத்திடைத் தரிக்கு மேல்வையில.

எனற பாடலகளும், 22 - ஆஞசெயயுளுககுப்பின்

தோன்றினன் றனதுருக் காணத் தூயவன்
மூன்றுல கினுக்குமோ ரன்னை மொய்ம்மலாத்
தேன்றிகழ் திருவடி சென்னி யாற்றொழுது
ஏன்றபே ரன்புகொண் டறைதன் மேயினான்.
நோக்கின னரககியர் நுனிபபில கோடியா
நீக்கினர் துயிலினை நின்னைக் காணுதற்கு
ஆக்கிய காலம்பாத தயல மாந்துபின்
தாககணங் கவா துயில கணடு சாந்துளேன்.

என்ற பாடல்களும், 54 - ஆஞசெய்யுளுககுபபின்

எள்ளற் கரிய நிலையுளதா யிசைந்து தமமி லினையொத்துத்
தள்ளப படாத நிலையாகிச சார்கத் திரிகை வகையொழுகி
அள்ளற் பளளத் தகனபுனலி னமைந்த வாவி யுள்வளரும
வளளைத் தண்டின் வனப்பழித்த மகாக குழையின குழை யம்மா.

என்ற பாடலும, 88 - ஆஞ்செயயுளுககுபபின

தவந்தந்த நெஞசிற றனதாருயிர்த் தம்பி யோடு
நவந்தந்த குன்றுங் கொடுங்கானமு நாடி யேகிக
கவந்தன் றனதாவி கவாந்தொரு காலு நீங்காச
சிவந்தந்து மெய்ம்மைச் சவரிககுத தீர்ந்து வந்தான்.

என்ற பாடலும, 117 - ஆஞ்செய்யுளுககுப்பின்

சென்றே யடியே னினதின்னல் சிறிதே யவர்க்கங் குரைத்தபோ
தன்றே யரக்கா வருககமுட னமையா தினனு மடியேன்கை

மன்றே கமழுந் தொடைபோலா நிருதா குழுவு மாநகரும் [ன்.
என்றே யிறைஞ்சிப் பின்னருமொன் றிதயத்துணர்ந்தா னீறில்லா

என்றபாடலும் உள்ளன. பொழிலிறுத்தபடலம் 59 - ஆஞ்செயயுளுக்குப்பின்

எனப்பதம் வணங்கி யன்னு ரியம்பிய வார்த்தை கேளாக்
கனக்குரு லுருமு வீழக் கன்மலை சிதறத் தேவர்
மனத்தறி வழிந்து சோர மாகட லிரைப்புத் தீரச்
சினத்துவாய் மடித்துத் தீயோன் நகைத்திவை செப்ப லுற்றான்.

என்றபாடலும் கிங்கரர் வதைப்படலம் 2 - ஆஞ்செய்யுளுக்குப்பின்

என்றலு மிருகை கூப்பி யிருநுதல் படியிற் றோயச்
சென்றடி பணிந்து மண்ணுந் தேவருந் திசையு முட்க
வென்றியன் றெனினும் வல்லே விரைந்துநாம் போகிவீரர்
துன்னிய சூரங்கைத் தூக்கித் தருதுமென் றுரைத்துப் போனார்.

என்றபாடலும், சம்புமாலிவதைப்படலம் முதலில்

என்றலு மரக்கர் வேந்த னெரிகதிர் வாளைநோக்கிக்
கன்றிய பவளச் செவ்வா யெயிறுபுக் கழுந்தக் கவ்வி
ஒன்றுரை யாடற் கில்லா னுடலமும் விழியுஞ் சேப்ப
நின்றவா ளரக்கர் தமமை நெடிதுற நோக்குங் காலை.

என்ற பாடலும் உள்ளன.

அந்தச்செந்தமிழில் இந்தப்பாடல்களன்றிச் சிலபாடல்களுக்குப் பாடபேதம காட்டப்பட்டிருப்பினும, அவற்றுட் சிறந்தனவாகக்கொளளததககன பல இப்பதிப்பில் வநதிட்டமையாலும, விடுபட்டனவற்றுட் பல சிறந்தனவாகத்தோன்றுமையாலும், அவை யனுபந்தமாகக் காட்டப்பட்டில.

உரைப்பகுதியிலும், முன்னையபதிப்பினும பலஇடங்கள் இப்போது திருததம பெற்றுள்ளன. அன்றியும, செய்யுணமுதற்குறிப்பகராதியும, அருமபதவகராதி முதலியனஎன்பதும் இப்பதிப்பிற்சோக்கப்பட்டுள.

வை. மு. கோ.

கம்ப ராமாயணம்.

ஐந்தாவது

சுந்தர காண்டம்.

இந்த வடமொழித தொடர்மொழி, பண்புத்தொகை. சுந்தரமாகிய காண்டம் என விரியும். அழகிய பாகம் என்பது பொருள். சுந்தரம் - அழகு. காண்டம்-கூட்டம; இப்பொதுப்பெயா-இங்கு, சரிததிரததின் ஒரு பாகத்தை யுணாததுஞ் செய்யுட்களின் கூட்டமென்று சிறப்பாகக் கொள்ளததக்கது. முதனூலாசிரியராகிய ஸ்ரீவால்மீகி மகாமுனிவர் இதற்கு முந்திய பாகங்களுக்கும் பிந்தியபாகங்களுக்கும சரிததிரததின் பிரதான விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களாற் பெயரிட்டதுபோல இலங்கையில நடந்தகாரியங்களைசசொல்லுகின்ற இக்காண்டத்துக்கு 'லங்கா காண்டம்' எனப்பெயரிடாமல் 'சுந்தரகாண்டம்' என்று பெயரிட்டது என்னையோவெனின்,—மற்றைக் காண்டங்களின் கதைகளினும் இக்காண்டத்துக்கதை மனததிற்கு மிகவும் உல்லாசகரமாகியும், ஸ்ரீராமனிடததில் மிக்க பக்தியுள்ள மெய்யடியாராகிய அநுமானுடைய மகிமையை நன்கு விளக்குவதாகியும் அழகியதாயிருத்தலால் என்று பெரியோர் சொல்வர். இனி, அநுமானுக்குச சுந்தர னென்று பெயருண்மையால் அநுமான் செயலைக்கூறும் பாக மென்பாரு முளர்.

இக்காண்டம் - கடல்தாவுபடலம் முதல் திருவடிதொழுதபடலம் ஈறாக கரு-படலங்கள அடங்கிய க,ஙரு0 - செய்யு ளுள்ளது

கதைத் தொடர்ச்சி.

[இராமாயண கதை மிகப்பிரசித்தமானதாதலால், இக்காண்டத்துக்கு முன்கதைத்தொடர்ச்சி மிக்க சுருக்கமாக எழுதப்படுகின்றது.]

முன் ஒருகாலததில் தேவர்களெல்லாரும் இராவணன் முதலிய இராக்கதர்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல்ஸ்ரீமகாவிஷ்ணுவைசசரணமடைந்து, துஷ்டநிக்கிரக சிஷடபரிபாலனம் செயதருளுமாறு வேண்டினார்கள். அத்திருமால் அவ்வேண்டுகோளுக்கு இரங்கி லோக ஸம்ரக்ஷணத்தின்பொருட்டுத் தனது அமசததைககொண்டு நான்கு ரூபமாகத தசரதமகாராஜனிடத்தில் அவதரித்து துஷ்டீயோரை யழித்து நல்லோரைப் பாதுகாப்பதாக அருளிசசெய்தான். இது நிற்க. இப்பாரதகண்டத்துக் கோசல தேசததிலே சரயூ நதிக கரையில் அயோததியா நகரததிலே திரேதாயுகததிற சூரியகுலத்தில் உதித்து நிலவுலகம முழுவதும் தனிசசெங்கோல் செலுத்திய தசரதசக்கரவர்த்தி தனகு அநேக ஆயிரம் ஆண்டுகள கழிந்தும் பலமனைவியர்களிருந்தும் புதிரபாகியமில்லாமையினாலே மிகமனம் வருந்திக குலகுருவாகிய வசிஷ்ட மகாமுனிவனிடம் தனது குறையைககூறி அம்முனிவனது கட்டளைப்படி ருசியசிருங்கமுனிவனை அழைததுவந்து அந்தக் கலைகளோட்டுமாமுனிவனைக்

கொண்டு அசுவமேதயாகமும் புத்திரகாமேஷ்டியும் செய்தான், அந்தயாகத்தின் புண்ணியச் சக்கரவர்த்தியின் பிரதான தருமபத்தினியர் மூவருள் கௌசல்யாதேவியினிடம் ஸ்ரீராமனும், கைகேயியினிடம் பரதனும், ஸுமித்திரையினிடம் இரட்டையராய் லக்ஷ்மணசத்துருக்கனரும் திருவவதாரஞ்செய்தார்கள். (இவர்களில் இராமபிரான், ஸ்ரீமந்நாராயணனது ஏழாவது திருவவதாரம். இளையபெருமாள், அத்திருமாலுக்குப் பலவகைக் கைங்கரியங்களைச் செய்கிற ஆதிசேஷனது அவதாரம். பரதாழ்வானும், சத்துருக்கனாழ்வானும், சுதர்சந பாஞ்சஜந்ய மென்னும் திருமாலின் சக்கர சங்கங்களின் அவதாரம். ஆனாலும், லக்ஷ்மணன் முதலியோரிடமும் விஷ்ணுவின் அம்சம் இருந்தது. அதுபற்றியே, 'திருமால் நான்கு ரூபமாக அவதரித்தனன்' என்பது.)

இராமபிரான், இளமையிலேயே விசுவாமித்திர மகாமுனிவனுடைய வேள்வியைப் பாதுகாத்ததற்பொருட்டு அம்முனிவனது விருப்பத்தின்படி அவன் பின்னே இலக்குமணனுடன் செல்லுங்கால், வழியிலெதிர்ப்பட்ட தாடகை யென்னும் கொடிய அரக்கியையும், அந்த யாகத்தில் தீங்குவிளைக்க வந்த தாடகாகுமாரனான சுவாகு முதலிய பல அரக்கர்களையும் கொன்று, தாடகையின் மற்றொரு குமாரனான மாரீசனை வாயவ்யாஸ்திரத்தாற் கடலிலே தள்ளிவிட்டு, யாகத்தை நிறைவேற்றியபின் அம்முனிவனுடன் விதேக தேசத்து மிதிலா நகரத்துக்கு எழுந்தருளி, அங்கு ஜநகமகாராஜன் வளர்த்த மகளான சீதைக்குக் கந்யாசுல்கமாக வைக்கப்பட்ட சிவதநுசை எடுத்து வளைத்து முறித்து, இலக்குமியினது அவதாரமான அந்த ஜாநகியைத் திருக்கலியாணம் செய்துகொண்டான். அப்பொழுது அங்குச் சநகன் தான் பெற்ற மகளான ஊர்மிளையை லக்ஷ்மணனுக்கும், தன்தம்பி புத்திரிகளான மாண்டவி சுருதகீர்த்தி என்பவர்களைப் பரதசத்துருக்நாகளுக்குமகொடுக்க, அவர்கட்கும் விவாகம நிகழ்ந்தது. பின்பு மிதிலையினின்றும் மீண்டுவருகையில், வழியவந்து எதிரிட்ட பரசுராமனை ஸ்ரீராமன் வெனறு செருக்கையடக்கி அனுப்பிவிட்டு, அயோத்தி சேர்ந்தனன்.

பின்பு இராமபிரான் தனதுசிறியதாயான கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்திருந்த இரண்டுவரங்களையும் நிறைவேறறுதலினிமித்தம் அக்கைகேயியின் சொல்லால் அவள்மகனான பரதனுக்கு உரியதாம்படி இராசசியத்தைத் தான் கைவிட்டுப் பதினான்குவருடம் வனவாசம்செய்ய உடன்பட்டு மனைவியாகிய சீதையோடும், தன்னைவிட்டுப்பிரியாத தம்பியான இலக்குமணனோடும் புறப்பட்டுக் குகனோடு தோழமைகொண்டு அவனுதவியாற் கங்கைகடந்து சித்திரகூடத்தில் வசிக்கையில், தந்தையிறந்த செய்தியை வந்துசொல்லி அயோத்திக்கு எழுந்தருளி அரசாளவேண்டு மென்று வேண்டிய பரதனுக்கு இன்சொற கூறிப் பாதுகைகொடுத்து அனுப்பியபின், தண்டகாரணியம்சேர்ந்து விராதனைக் கொன்று சரபங்கமுனிவாகக் முதலியளித்து அகத்தியரைத்தரிசித்துக் கோதாவரிநதிதீரத்திற் பஞ்சவடியாசிரமத்திலே வசிக்கும்போது, அரக்கர் தலைவனாய் இலங்கையில் வாழ்கின்ற இராவணனுடைய தங்கையான சூர்ப்ப

ணகை வந்து இராமபிரானது திவ்வியசௌந்தரியத்தைக் கண்டு மிகக ஆசை கொண்டு தன்னைமணஞ்செய்து கொள்ளும்படி பலவாறுவேண்ட, அதற்கு அப்பெருமான் உடன்படாமல் உபேக்ஷித்ததமைபற்றி, அவ்வரகி 'அருகிலிருக்கிற இந்தப்பெண்ணை அகற்றிவிட்டால் இராமன் என்னை மனைவியாகக் கொள்வன்' என்று எண்ணிச சீதையைத் தனிததிருகிற சமயம்பாததுத் தூக்கிச்செல்லததொடங்க, அதுகண்ட இலக்குமணன் அவளுடைய மூககு முதலிய சிலஉறுப்புக்களை அறுததது மன்றி, இங்ஙனம் மானபங்கப்பட்ட அவளுக்காகப் பரிந்துவந்த கரன் தூஷணன் முதலிய கொடிய இராக்கதாபலவீரயும் இராமன் கொன்று ஒழிததான். பின்பு இராவணன் சூர்ப்பணகையினால் தூண்டப்பட்டுச சீதையினிடம் பெருங்காதல்கொண்டு சந்யாசிவேஷம்பூண்டு வந்து, மாயையாற பொன்மானுருவங்கொண்ட மாரீசனது சூழ்ச்சியினால் இராமலக்ஷ்மணரை அப்புறப்படுததி, சீதையைத் தனிததிருகிற சமயததில் வஞ்சனையாக எடுத்துப் போகுமளவில், முன்வந்து எதிர்த்த ஜடாயுவை வலியழித்துச்சென்று, இலங்கையில் அசோகவனததில் அரக்கியர்சூழச சீதையைச் சிறைவைததிட்டான்.

பிறகு சீதையைததேடிககொண்டு இலக்குமணனுடன்சென்ற ஸ்ரீராமன், சீதையின் நிலைமையைச சிறிதுகூறி யிறந்த ஜடாயுவுக்குச சரமகிரியை செய்து, கபந்தனைக கொன்று சபரிக்கு முததியளித்துச் செல்லும் வழியில், எதிர்பபட்ட அநுமான்மூலமாகச சுகிரீவனோடு நட்புகொண்டு, அவன் வேண்டுகோளின்படி, அவனது தமையனும் வாநரராசனும் இராவணனது நண்பனும் வலிமையிறசிறந்தவனுமான வாலியைத் தந்திரமாகக்கொன்று சுக்கிரீவனைக் கிஷ்கிந்தைநகரத்துககு அரசனாக முடிசூட்டிவைத்தபின், அவ்வாநரராசன் சீதையைததேடுதற்பொருட்டு அநேக வானரவீரர்களை ஆங்காங்குத் தூதனுப்ப, அங்ஙனம் இரண்டுவெள்ளம் வாநரசேனையுடன் தென்திசையிற சென்ற அங்கதன் ஜாம்பவான் நீலன் அநுமான் முதலிய வீரர்கள் பலவிடங்களிலும் தேடிச சீதையைக் காணாதபின்பு, ஜடாயுவின் தமையனான சம்பாதி சொல்ல இராவணன் சீதையை இலங்கையிறசிறைவைத்திருத்தலை யுணர்ந்து, இலங்கைக்குச செல்லுதற்பொருட்டுக் கடல்கடக்கும் வலிமையில்லோமென்று மற்றையோரசொல்லியபிறகு, ஜாம்பவானாற்புகழ்ந்து தூண்டப்பட்ட அநுமான், தென்கடற்கரையிலிருக்கும் மகேந்திரமலையின்மீது ஏறி, இலங்கைசேர்தலினிமித்தம் அக்கடலைகடக்குமாறு பேருருவங்கொண்டு நின்றனனென்பதாம்.

முதலாவது

கடறாவு படலம்.

இலங்கைசேருமாறு அநுமான் கடலைத் தாவிச்செல்லுஞ் செய்தியைக் கூறும் பாகமென்பது பொருள். கடல் + தாவு + படலம் எனப்பிரியும். 'காண்டம், என்றதற்குப்போலவே 'படலம்' என்கிற வடசொல்லுக்கும் கூட்ட

மென்றே பொருள்; ஆயினும், அது - சங்கேதத்தால், இங்கு, ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறியபாகத்தைக் குறிக்கும்.

கடவுள்வணக்கம்: ராமஸ்தோத்ரம்.

அலங்கலிற் றோன்றும [1]பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கங்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவி லேந்தி
யிலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.

இது காப்புசெய்யுள். இதனால், கவி தாம் பாடத்தொடங்கிய காண்டம் இடையூறில்லாமல் இனிதுமுடிதற்பொருட்டு, உயர்ந்தோர் வழக்கத்தின் படியே செயயப்படும் கடவுள்வணக்கத்தை, மாகஸமாகவன்றி வாசிகமாகவும் கூறுகின்றார் நூலின்முகத்திற் கடவுள்வணக்கம் கூறியது அமையாதோ? காண்டந்தோறும் கூறவேண்டுமோ? எனின்,—ஆசிரியர் பதஞ்சலியார் 'மங்கலத்தை முதலிலும் இடையிலும் கடையிலு முடைய நூல்கள் மிகச்சிறப்புடன்தோன்றும்' என மாபாடியத்திற்கூறினாராதலின், இடையிலும் மங்கலமாகக் கடவுள்வாழ்த்துக்கூறுதல் நலமாதலாலும், கல்விகற்பயன் கடவுளை வணங்குதலே யாதலாலும், நூல் ஒன்றேயாயினும் காண்டங்கள் பொருளால் வேறுபடுதலாலும், இவ்வாறு கூறினரென்க. தசரதனது மதலையாய, ஸ்ரீராமனுகித திருவவதரித்ததனானே கவிசக்ரவர்த்தியாகிய கம்பர், ஈடுமெடுப்பு மில்லாத அவ்வுத்தமநாயகன்விஷயமாகச் செய்யப்புக்க இப்பெருங்காப்பியத்திற்கு அவரையே வாழ்த்தல்வேண்டுதலின், காண்டந்தோறும் அவர்விஷயமாகவே கடவுளைவாழ்த்துக் கூறத்துணிந்து பாலகாண்டத்தில் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே மூன்றுகவிகளாற கூறி, அயோத்தியாகாண்டத்தில் இக்காப்பியத்தலைவராகிய ஸ்ரீராமபிரான் ஸர்வேஶ்வரனென்று கூறி, ஆரணியகாண்டத்தில் அப்பெருமான் வேதம்முதலிய நூல்களாலும், பிரமனமுதலிய பெரியோர்களாலும உணர்த்தற்கரிய பரவஸ்துவென்று கூறி, கிஷ்கிந்தாகாண்டத்தில அப்பெருமான் சகலபிரபஞ்சத்தையும் தனக்குச் சரீரமாகக்கொண்டவனென்றுகூறி, இக்காண்டத்தில் இக்கவியால் வள்ளுநிர்தேசரூப மங்கள முகத்தாலே பரம்பொருளே இராமனுகத திருவவதரித்து ராவணாதி ராக்ஷஸஸம்ஹாரம் செய்தவனென்கிறார்.

(இதன்பொருள்.) அலங்கலில்-மாலையினிடத்தில், தோன்றும் - உண்டாகின்ற, பொய்ம்மை அரவு என - பாம்பு என்ற பொய்யாகிய எண்ணமபோல, (விபரீதபுத்தியையுண்டாக்குவது), பூதம் ஐந்தும்-பஞ்சபூதங்களும், விலங்கிய-(தனித்தனியேயிருக்குந் தன்மையை விட்டு) மாறி ஒன்றாகச்சேர்ந்ததனாலானதும், விகாரப்பாட்டின்-(அறுவகையாக) விகாரபடுதலையுடையதும், வேறுபாடு உற்ற-(தேவர் மனிதர் விலங்கு தாவரம் என்னும்)பாகுபாடுபொருந்தியதுமான, வீக்கம்-மிக்ப்பிரப்பு, எவரை கண்டால-எவரைப பார்த்தமாத்திரத்தில்

கலங்குவது-ஒழிந்துவிடுமோ, மறைகளுக்கு இறுதி ஆவார்-வேதங்களின் முடிவான உபநிடதங்களிற் கூறப்படுகின்ற பொருளாயிருப்பவராகிய, அவர் அன்றே - அக்கடவுளே,—கை வில் ஏந்தி - கையிற் கோதண்டத்தையேந்தி வந்து, இலங்கையில் பொருதார் - இலங்கையிற் (சென்று அரக்கருடன்) போர்புரிந்து அவரைவென்றவராவர், என்பர்-என்று சொல்வர்,(உண்மையை யுணர்ந்த தத்துவஞானிகள்); (என்றவாறு.)

இச்செய்யுளினால், வேதாந்தங்களின் முடிவிற் கூறப்பட்டுள்ள உண்மைப்பரமபொருளே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யுமாறு தசரதன் மகனாய்த் திருவவதரித்ததாக காணக்கூடி லுறைந்து சீதையைக் கவர்ந்ததை வியாஜமாகக்கொண்டு இலங்கையிற் சென்று ராக்ஷஸராஜனான இராவணனைத் தனது அம்புகளை யெய்து பொருது கொன்றவனென்ற உண்மையைக் கூறினாராயிற்று. ஆகவே, இராவணாதியரைப்போல அப்பெருமானை மானுடனென்று எண்ணி அழிந்தொழியாது, உண்மைப்பரமபொருளே தனது சங்கற்பத்தால் இவ்வாறு திருவவதரித்தனனென்ற மெய்ப்பொருளைக் கடைப்பிடித்து அக்கடவுளை சரணமாகக் கொண்டு அவன்தாளிற்சேர்ந்து நற்கதிசேர்மினென உலகத்தவரை நோக்கி உபதேசித்ததாகவாவது,அவ்வாறானகடவுளை யான் வணங்குவேனென்றதாகவாவது கருதுக. வாழ்த்து, வணக்கம், தலைமைப்பொருளுரைத்தல் என்ற மூன்றுவகை மங்களங்களுள், இச்செய்யுள் மூன்றுவதன் பாற்படுமென்று அறிக. அன்றியும், இக்காண்டத்தில் இவ்வாறு கடவுள் வாழ்த்துக் கூறியதனால், இக்காண்டத்திற் கூறப்படுகின்ற அநுமானதுசெயலெல்லாம், இராமபிரான் கடல் கடந்து இலங்கையிற்புக்கு ராக்ஷஸஸம்ஹாரஞ் செய்யக் காரணமாமெனக் குறிப்பித்தவாறுமாயிற்று.

இச்செய்யுளில் திருமாலின் பரத்துவமும், சௌலப்பியமும் விளங்குதல் காண்க.

விபரீதஜ்ஞானமெனினும், திரிபுணர்ச்சியெனினும் ஒக்கும், அதாவது உயிரல்லாத உடம்பில் உயிரென்ற எண்ணமும், கடவுளுக்கு அடிமைப்பட்ட உயிரை ஸ்வதந்திரமுடையதென்று எண்ணுதலும், பிறர்க்கு ஆடியவனல்லாத அவ்வுயிரைப் பிறர்க்கு அடியவனென்று கருதுதலும், தலைமைத்தேவரல்லாதார் பக்கல் தலைமைத்தேவரென்ற நினைப்பும், பரமபுருஷார்த்தமாகாத செல்வம் முதலியவற்றினிடத்துப் பரமபுருஷார்த்தமென்ற நோக்கமும்,உபாயமாகமாட்டாத காமம் முதலியவற்றில் உபாயமென்ற சிந்தனையும் தொடக்கமானவை. மாலையைக் கண்டு பாம்பென மருளுதலைப்போன்ற திரிபுணர்ச்சிக்கட்கு இடமாய இவ்வுலகத்தில உயிர்கட்கு உண்டாகிற பஞ்சபூதங்களினாலாகிய பிறப்பு, உண்மைப் பரம்பொருளின் வடிவத்தைக் காணகிறவர்கட்கு ஒழிந்துவிடுமெனக்; "அப்பரம்பொருள் பார்க்கப்படுமாயின், இவ்வான்மாவினது மனத்திற் குவிந்துகிடக்கும் அஜ்ஞானமும், அதனகாரியமான பலவகைச் சந்தேகங்களும், பிறப்பிறகுகாரணமான இருவினைகளும் ஒழிந்துவிடும்"

னற வடநூல்மேற்கோள் இவகுக் கருதத்தக்கது. ஐம்பூதங்களும் ஒன்றாகச் சேர்வதனாலேயே இவ்வுலகம தோன்றியுள்ள தென்பதை, "நிலந் தீ நீர் வளி விசும்போ டைந்துங், கலந்த மயக்க முலகம்" எனக கூறிப்போந்தார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். ஐம்பெரும்பூதங்களும் அவ்வவ்வுடலுக்குத் தக்கபடி சேர்தலினாலேயே, தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவர சரீரங்கள் தோன்றுகின்றன வென்பது, நூறகொள்கை. ஐம்பூதங்களாவன - நிலம் நீர் தீ காற்று வானம் என இவை. இவற்றை, முறையே, ப்ருதிவீ அப் தேஜஸ் வாயு ஆகாசம் என்பர் வடநூலார்.

வேதங்கள் காமகாண்டம் ஞானகாண்டம் என இருவகையாகப் பகுக்கப் பட்டுள்ளன; அவற்றில் முதலதாகிய கர்மகாண்டததிற் கடவுளினது ஆராதந ஸ்வரூபமும், ஈறறதாகிய ஞானகாண்டததில் ஆராத்யனான கடவுளின் ஸ்வரூபமும கூறப்பட்டுள்ளன வாதலால், கடவுளை 'மறைகளுககு இறுதியாவார்' என்றார்.

விகாரப்பாடு விகாரப்படுதல்; ஒருநிலையில் நிலைத்திராது மாறுபடுதலாகிய (இருததல், பிறததல், பருததல், வளாதல், தேயதல், அழிதல் என்ற உடலுக்கு உண்டாகினற அறுவகையான) விகாரங்கள். இவ்வறுவகைவிகாரங்கள், வடமொழியில் 'ஷட்பாவவிகாரம்' எனப்படும். வீகம்-கட்புலனாம்படி பருததுததோன்றுகினற உடல். இவகு, இலக்கணையால், பிறப்புக்கு ஆயிறற; கடவுளைக் காணவே பிறப்பொழியுமெனக கருததுக்கொள்ளவேண்டியிருததலின். வீக்கம் - சாதியொருமை. எனபா - அசைசனனவுமாம வேதங்கள் நான்காதலாலேனும வேததிலேயே "அநநதா வை வேதாः [வேதங்கள் எல்லையில்லாதன]" எனக் கூறியிருத்தலாலேனும மறைகள் எனப்பன்மையாற் கூறினார் அன்று, ஏ என்ற இரணடு எதிரமறைகள் ஒருங்குசேர்ந்து தேற்றககருததை வறபுறுததின.

பஞசபூதங்களும் தம்மிலமாறுபடககலநது பஞ்சீகரணப்பட்டுப் பரிணாமமடைதலினால் வேறாகததோனறுகின்ற ஸ்தூலமாகிய பிரபஞ்சம் எந்தப் பரமாதமாவின் சொரூபததையுணர்நதாற் பழுதையினிடததுததோனறுகிற பாம்பென்னும் மயககமபோல இல்லையாகுமோ, அந்தப் பரமாத்மாவே கைவிலேந்தி இலங்கையிறபொருதவரும் மறைகளுக்கு இறுதியாவாருமாவ ரென்று கூறுவர் (உணாந்தோர்) என்று இசசெயயுளுக்குப் பொருள் கூறலும் உண்டு.

துறை - கடவுள்வாழ்ததது, தொல்காப்பியததில் 'வாழ்த்தியல் வகையே நாற்பாறகு முரிததே" எனறதன்கண, 'வகை' என்றதனாற கொண்ட அறுமுறைவாழ்ததன்றித் தனககும் பிறாககும் பயன்படும்படி "யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது" என்றதனால், முன்னிலையனறியும கடவுளை வாழ்த்துதலின், இகுவி கடவுள்வாழ்ததெனப் பெயாபெற்றது; [அறுமுறை வாழ்த்தினுள் வாழ்த்தப்படும பொருள்களாவன:—முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அரசரும், முழையும், நாடுமாம.] பிரதிபேதம்:—[1]பொய்ம்மையாமென்.

இதுமுதல் முப்பத்தொன்பது கவிகள் - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மறறை நான்கும மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். மேலும் இவ்வனமே காண்க.

க.—பேருருவங்கொண்டுநின்ற அநுமான் வானுலகத்தைக்கண்டு அங்குச் சீதையில்லையென்பது கருதுதல்.

ஆண்டகை யாண்டவ வானோர் துறக்கநா [1]டருகர்க் கண்டா
[2]னீண்டிது தான்கொல் வேலை யிலங்கையென் றைய மெய்தா
வேண்டரு விண்ணு டெனனு மெய்ம்மைகண் டுள்ள மீட்டான்
[3]காண்டகு தோகை யும்ப ரிலலெனக்[4]கருத்துட் கொண்டான்

(இ - ள்.) ஆண்தகை - ஆண்மைக்குணமுளளவனாகிய அநுமான்,—ஆண்டு - அப்பொழுது, அ வானோர் துறக்கம் நாடு - அந்தத்தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்கலோகததை, அருகா - சமீபத்திலே, கண்டான் - பார்த்தவனாய்,—'ஈண்டு இதுதான் - இங்கே காணப்படுகின்ற இந்த நாடே, வேலை இலங்கை கொல்-கடலினாறசூழப்பட்டுள்ள லங்காபுரியோ?' என்று—, ஐயம் எய்தா - சந்தேகங்கொண்டு,—வேண்டு அரு விண்நாடு என்னும் மெய்ம்மை கண்டு - வேண்டிப்பெறுதறகு அருமையான தேவலோக மிது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டு,—'காண்தகு தோகை - பார்க்கத்தக்க [வடிவழகையுடைய] மயிலபோலுஞ்சாயலையுடையவளான சீதை, உம்பர் - இமமேலுலகததிலே, இல் - இலலை,' என - என்று, கருததுள் கொண்டான் - மனத்தில் எண்ணியவனாய், உள்ளம் மீட்டான் - (அத்தேவலோகததைப்பார்ப்பதிற செலுததிய தனது) கருத்தை (அதனினின்றும்) மீட்பவனாயினான்; (எ - று.)

மகேந்திரமலையினமீதேறிப் பேருருக்கொண்டுநின்ற அநுமான் தனக்குச் சமீபத்தில் தோன்றிய தேவலோகததைச செலவசிறப்பாலும பொன்மயமாயிருததலாலும இலங்கைமாநகரமோ வென முதலிற் சந்தேகித்து, பின்பு அங்குத தேவர்கள் வசிப்பதனாலும மேலிடததிலிருப்பதனாலும் 'இது ராக்ஷஸராஜதானியாய்ப் பூலோகததிலுள்ள இலங்கையன் என்று தெளிந்து, தனது கணணுக்குத தெரிந்தவரையிற புலனாகாமையாலும, சீதை இலங்கையிலுள்ளாளெனச சம்பாதி கூறியிருததலாலும, ராக்ஷஸராஜனான ராவணன் தனது பகைவராகிய தேவர்களமாததிரமே வாழ்கின்ற இங்குச சீதையைச சிறைவைபபானென்ற உறுதிப்பாட்டினாலும், மற்றும் அங்கு நாடிப் பார்ப்பதை யொழித்தன னென்பதாம.

இச்செய்யுளில் தேவலோகத்தைக்கண்டு இலங்கையென்று ஐயுறறுப் பின்னர்த் தெளிந்ததாகக் கூறியது, தெளிவைமுடிவிறகொண்ட ஐயவணியின்பாற்படும. ஆண்டு அநுமான் இவ்வாறு பேருருக்கொண்டுவளர்ந்துநின்ற சமயததி லென்க. அவ்வாறுநின்றதை, கிட்கிந்தாகாண்டதது மகேந்திரப்படலததில் "பொருவருவேலைதாவும புதியான் புவனந்தாய, பெருவடிவுயாநத மாயோன் மேககுறப்பெயாந்ததாள்போல், உருவறிவடிவனும்ப ரோகின

னுவமையாலும், திருவடி யென்னுந்தன்மை யாவர்க்குந் தெரியநின்றான்" என்றதனாலும் அறிக.

ஆணதகை - அன்மொழிததொகை. 'அவ்வாறோர்' என்றவிடத்து அகரம் - பிரசித்தியைக காட்டும்; உலகறிசுட்டு சேய்மைசசுட்டுமாம். துறக்கம் (இவ்வுலகசம்பந்தததைத) துறந்து அடையததக்க இடம் எனக் காரணப்பொருள் பெறும்: இனி, ஸ்வர்க்கம் என்ற வடசொல்லின் சிதைவுஎனக கூறுவாருமுளர். அருகர் - அருகு குற்றியலுகரததுகக 'ஆ' - போலி. கொல் - ஐயம். எய்தா - உடன்பாட்டுவினைபெசசம். 'ஆணடு' என்பதற்கு - அவ்விடத்தினின்று என்றும், 'வேணடு அரு விணைநாடு' எனபதறகு - (அனைவராலும) விருமபபபடுவதும் பெறுதற்கு அரியதுமான சுவர்க்கலோகமென்றும், தனக்கு இபபொழுது வேண்டாததான சுவாகக மென்றும, 'காண்தகு தோகை' எனபதறகு - தான காணவேணடியவளான சீதை யென்றும பொருள்கொள்ளலாம். தோகை - இருமடியாகுபெயர் இல் - இல்லையென்பதன் விகாரம்.

விலகுகினததைச சார்ந்த வாநரமாகிய அநுமானை 'கணடான்' முதலியனவாக உயாதிணையாற்கூறுதல் இலककணததுசகு ஒககுமோ வெனின்,— உயாதிணை அஃறிணை என்ற பகுபபிறகுக் காரணம முறையே அறிவினநிறைவும குறைவுமே யாதலால், அவ்வறிவிற்குறைவினறி ஐம்பொறியறிவோடு பகுததறிவையும் கொணடு மனிதர்போலவே தொழில்திற மமைந்த தெய்வக்குரங்கை உயாதிணையின்பாற்படுததுதல் ஒக்குமெனக; இத்தன்மை, மறறை வாநராகட்கும், கரடியாகிய ஜாம்பவானுக்கும், கழுகுகளாகிய சமபாதிசடாயுக்கட்கும, பெரியதிருவடியாகிய கருடாழ்வானுக்கும் பொருநதும்: தொல்காப்பியத்து மரபியலில் உரைகாரர் "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்ற சூததிரததின்கீழ்க் குரங்கை விலகுகின மென்று பொதுவகையாற்கூறியவாதாமே "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்ற அடுதத சூததிரததின்கீழ 'குரங்கு முதலாகிய விலகுகினுள அறிவுடையன எப்படும் மனவுணாவுடையன உளவாயின் அவையும ஈணடு ஆறறிவுயிராய் அடங்கும்' என்றமை காணக. 'ஓரோவழி அஃறிணைப்பொருள்கள் மொழியாற பேசுவன உளவாயின், அது தெய்வத்தன்மைமுதலிய விசேடத்தா னன்றிப் பொருட்டன்மையானன்மையின், அமைததுக்கொள்வது' என்ற இலककண விளककசசூறறவளியும் இவகுக காணததककது. அன்றியும், இவர்கள் வடிவில மனிதரிறசிறிதுவேறுபாட்டையே யுடையராயிருந்தன ரென்பதும் அறிக.

பி-ம்:—[1]அருகில். [2]ஈண்டது. [3]காணடகுங்கொள்கை. கருததில். (க)

உ.—அநுமான் இலங்கையைக்கண்டு தோள்கொட்டியார்த்தல்.

கண்டன னிலங்கை மூதூர்க் கடிபொழிற் கனக நாஞ்சின்
[1]மண்டில மதிலுங் கொற்ற வாயிலு டணியிற செய்த
வெண்டளக [2]கனக மாட வீதியும் பிறவு [3]மெலலா
மண்டமுந்திசைக ளெட்டு [4]நடுங்கதகதோள் கொட்டி யார்த்தான்.

(இ - ள்.) (பின்னர் அநுமான்),—இலங்கை முது ஊர் - இலங்கை யென்ற பழமையான நகரத்தினது, கடி பொழில் - நறுமணம் வீசுகின்ற சோலையையும், கனகம் நாஞ்சில் மணடிலம் மதிலும் - பொன்மயமான நாஞ்சிலென்னும் உறுப்புடைய வட்டமான மதிலையும், கொற்றம் வாயிலும் - வெற்றியைதெரிவிக்கின்ற [வெற்றிக்கொடிகள் நாட்டிய] நகரவாயிலையும், மணியின் செய்த வெள்தளம் கனகம் மாடம் வீதியும் - இரத்தினங்க ளிழைத்துசெய்யப்பட்டனவும் வெணணிறமாக விளங்குகின்ற உபரிகைகளை யுடையனவும் பொன்னினு லமைக்கப்பட்டனவுமான வீடுகளை (இருபுறததி லுங்கொணடுள்ள) வீதிகளையும், பிறவும் - இவையொழிந்த பிறவற்றையும், எல்லாம் - ஆகிய எல்லாவற்றையும், கண்டனன் - (அமமலையின்மீது நின்ற படியே) பார்த்தான; (அப்பொழுது), அண்டமும் - வானுலகமும், திசைகள் எட்டும் - எட்டுததிக்குககளும், நடுங்க - (அதிர்ச்சியினுல்) நடுங்கும்படி, தோள் கொட்டி - (தனது) தோள்களை (கைகளால்) தட்டிக்கொணடு, ஆர்த்தான் - ஆரவாரஞ்செய்தான்; (எ - று.)

மகேந்திரமலையின்மீது பெருவடிவங்கொணடு நின்ற அநுமான் முதலில் மேலேநோக்கிச சுவர்க்கத்தைக் கணடபின்பு தனதுபார்வையைத தாழச செலுததவே தான் செல்லவேண்டிய இலங்கை புலப்பட, அதனைக் கணட தனுல் மகிழ்ந்து தனது தோள்களைக் கொட்டி ஆரவாரஞ்செய்தன னென்ப தாம். வீரர்கள் மனகளிளர்ச்சிகொண்டு தமதுபராக்கிரமம்தோன்ற ஒருகாரியத் தைச்செய்யததொடங்குவதற்குமுன்னர்ததோள்தட்டியாரவாரித்தல்,இயல்பு.

'கடி' என்ற பலபொருள் குறிககும் ஓர் உரித்திரிசொல், இங்கு நறுமண மென்றபொருளில் வந்தது; இனி, காவல், விளககம, சிறப்பு, மிகுதி, புதுமை, ஆர்த்தல் என்ற பொருள்களும் இங்கு ஏறகும். மணி - நவமணிப்பொது; தறசமவடசொல். கநகம், மண்டலம், வீதி, திஸா என்ற வடசொறகள் திரிந்து நின்றன. நாஞ்சில், ஞாஞ்சில், ஞாயில் என்பன-ஒருபொருளன; ஒரு வகை மதிலுறுப்புக்குப் பெயர்: 'எப்புழைக்கு நடுவா யெய்து மறையுஞ் சூட்டு' என்பர். அண்டமும் - இந்த அண்டகோளம் முழுவதும் எனினுமாம். மணி கனகம் என்று முன்னும் பின்னும் வருதற்கு ஏற்ப, 'வெள்' என்ப தறகு-(சுணணநதீற்றியதனுல்) 'வெணமையான' எனப்பொருள்கூறுது, முத் துக்கள்பதிததலால் வெணமையான என்று உரைக்கலாம. தளம - மேல் மாளிகை. 'பிறவும்' என்றது - கடைததெரு, குளம் முதலியவற்றை. எட் டுததிசைகளாவன - நான்கு பெருந்திக்குக்களும், நான்கு மூலைததிக்குக்களும்.

பி-ம்:-[1]மணடலமதில். [2]தாளமாடவீதி [3]எல்லாவணடமும். [4]குலுங்க. ()

௩.—இதுமுதல் பத்துக்கவிகள் அநுமனது கால்கள் ஊன்றியழந்த அதனுல் அம்மலையிற் பலவகை நிகழ்ச்சியுண்டாதலைக் கூறும்.

வன்றந்த வரிகொ ணுகம் [1]வயங்கன லுமிழும் வாய
பொன்றந்த முழைக டோறும புறத்துராய்ப் [2]புரண்டு போவ
நின்றநத மிலா னூன்ற நெரிந்துகீ ழுழுந்தி [3]நீலக்
[3]குனறநதன் வயிறு கீறிப் பிதுங்கின குடர்கன் மான,

(இ-ள்.) அந்தம் இல்லான்-அழிவில்லாதவனாகிய அவ்வநுமான், நின்று-(பேருருவததுடன் அந்தமலையின்மீது) நின்றுகொண்டு, ஊன்ற-(தனதுகால்களை) வைத்து அழுதத, (அதனால்)-நிலம் குன்றம்-நீலநிறத்தையுடைய அம்மகேந்திரமலை, நெரிந்து - நொருங்கி, கீழ் அழுந்தி - கீழே அமுங்க, (அப்பொழுது),-தன் வயிறு கீறி பிதுங்கின குடர்கள் மான-தனது வயிறு கீண்டு வெளியிற்சரிந்த குடல்களை யொகுரும்படி,-பொன் தந்த முழைகள் தோறும்-பொன் மயமான (அமமலையின்) குகைகளிலெல்லாம் வசிகின்ற, வல் தந்தம் வரி கொள் நாகம்-வலிய விஷப்பற்களையுடையனவும் இரேகைகளைக் கொண்டுள்ளவையுமான மலைப்பாம்புகள், வயங்கு அனல் உமிழும் வாய - எரிகிற விஷாக்கினியைக கக்குகின்ற வாயகளையுடையனவாய், உராய் - உடறபுறத்து உராய்ந்துகொண்டு, புரண்டு புறதது போவ - நெளிந்து வெளியே செல்வனவாயின; (எ - று.)

வாய உராய்ப்போவ என முடிபு காண்க. அச்செய்யுளிலுள்ள 'நின்று அந்த மில்லான் ஊன்ற' என்ற தொடர், அடுத்த ஒன்பது செய்யுள்களோடும் இயையும்.*கடலைககடக்குமாறு மகேந்திரமலையினுசசியிற் பேருருவகொண்டு நின்ற அநுமான் தனதுகால்களால் அழுததியதனால் நொருங்கிப்போன அமமலைக்குகையில் வசிததிருந்த பாமபுகள், அநுமானது உடறபாரத்தைத தாங்க முடியாமையால் அமமலை வயிறுகிழிய வெளிப்பட்ட குடல்களோ வென்னும்படி அககுகைப்புறததுப் புரண்டு போவனவாயின வென்பதாம். இவ்வருணனை, போஜமகாராஜன் செய்த சம்பூராமாயணததிலும கூறப்பட்டிருக்கின்றது;(அது வருமாறு·—"ததாநீம் த்ருடதாநிஹிதசரணதல நிஷ்பீடநம் ஸோடு மக்ஷமஃ க்ஷமாப்ருத...கஹ்வர நிபிரீஸ நிஸ்ஸரத் ஸரீஸ்ருபதயா நிர்களிதாந்தரமால இவ"எனபது.) குகையினின்று வருந்திப் புரண்டுவெளிப்படுகிற நாகங்களை மலையின்குடல்களாகக் கற்பித்ததனால், இது-தன்மைத்தற்குறிப்பேற்றவணியாம்; -இசசெய்யுளில், நான்கடிகளிலும் முதலெழுத்து

* அனுமான் கடல்கடததறகுமுன் பேருருவகொணடதனால் அவனது நான்குகால்களும் மலையில் அழுத்தியதை 'அந்தமில்லான் ஊன்ற' என்றார்; அன்றி, இதனையே,கடல்கடகக வேணடுமென்றகருத்தினால் மேலெழுவதறகாகக் கால்கள் அழுத்திவைத்ததைக கூறியதாகக் கொணடால், மேல் கடு-ஆங்கவியில் "அலங்கரூழ்மார்பன் முன்றாழ்ந்தடிததுணையழுததலோடும்"என வருவது கூறியதுகூறலா மென்க. அன்றியும், இங்கு அநுமான் பேருருவகொண்டபோது தனது நான்குகால்களையும் பதியவைததிருந்தானென்றும, கடல் தாவ எழுகின்றபொழுது இரணடுகால்களையே அழுததி வைததா னென்றும அறிக. ஸ்ரீவால்மீகிபகவானும் "நிஷ்பரமாணஶரீரஸ்ஸந்லிலங்கயிஷுரர்ணவம் பாஹுப்யாமபீடயாமாஸ சரணுப்யாஞ்சபாவதம்" என்று முதலிற்கூறி, பின்பு "பதப்யாம்ருத்ருடமவஸ்தாநம கருதவா .....ஹநூமாநுதபதிஷ்யந்" எனக் கூறியதும், (அங்கு 'பலவங்கமாநாம் சதுர்பிஸ் ஸஞ்சாராத' என்ற வியாக்கியானமும்) கருதத்தக்கன.

மாறுபட்டிருக்க இரண்டுமுதலிய சிலவெழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள் வேறுபட்டுவந்தது, திரிபு என்னுஞ் சொல்லணியாம்.

காளம், காளாத்திரி, யமன், யமதூதீ எனப் பாமபிற்கு நசசுப்பற்கள் நான்காம். நாகம்-நகத்தில்வாழ்வது எனப் பொருள்படும் வடசொல்; நகம்-மரமும், மலையும். அனல் - அநல மென்ற வடசொல்லின் விகாரம். பொன் தந்த முழை - (கநிகளினின்று) பொன்னைத் தருகின்ற குகை யெனினுமாம். பொன்று அந்த முழைகடோறும் புறத்துஉராய் என எடுத்து - (தாங்கள்) உயிரொடுகுகுகின்ற அந்தக்குகைகடோறும் வெளியில் உராய்ந்து எனக்கூறலுமாம். உராய்==உராய்ந்து; முதனிலையே வினையெசசப்பொருளில் வந்தது: "வரிப்புனைபந்து" என்னுமிடததிற் போல. அநுமான், சிரஞ்சீவிகள் எழுவருள் ஒருவனுதலால், 'அந்தமில்லான்' எனப்பட்டான்: (மற்றையோர்-அசுவத்தாமா, பலிசக்ரவாததி, வியாசன், விபீஷணன், கிருபன், பரசுராமன்.) குடர்==குடல்: போலி. பி - மீ:—[1]வயநகழல். [2]புரண்டுபோந்த. [3]குன்றந்தவயிறு. (ந)

ச. புகலரு முழையுட் டுஞ்சும் பொங்குளைச் சீயம் [1]பொன்றி
யுகலருங் குருதி கக்கி யுள்ளுற நெறிந்த வூழி
[2]னகலிரும் பரவை நாண வரற்றுறு குரல வாகிப்
பகலொளி கரப்ப வானை மறைத்தன பறவை யெல்லாம்.

(இ ள்.) புகல் அரு-நுழைவதற்கு அருமையாகிய[சிறிய வாயிலையுடைய] முழையுள் - குகையிலே, துஞ்சும்-தூங்குகின்ற, பொங்கு உளை சீயம்-மிகுதியான பிடரிமயிரையுடைய சிங்கங்கள்,—உகல் அருங குருதி கககி - (இது வரையிற்) சிந்துதலில்லாத இரத்ததை (இப்போது) கக்கிக்கொண்டு, பொன்றி - உயிரொழிந்து, உள் உற-(வெளியில்வரமுடியாதபடி மலைக்குகையின்) உளளிடங்களிலேயே, நெரிந்த - நொருங்கிப்போய்விட்டன; பறவை எல்லாம் - (அம்மலையின் மீதிருந்த) பறவைகளெல்லாம், ஊழின் - யுகாந்த காலததிலே, அகல் - (உலகமுழுவதும்) பரவுகின்ற, இரும் பரவை - பெரிய சமுததிரமும், நாண-(தமதுபேரோசைக்குமுன்னே) வெள்கிப்பின்னிடும்படி, அரற்றுறு குரல ஆகி - அஞ்சிக் கத்துகின்ற பெருங்குரலையுடையனவாய், பகல் ஒளி கரப்ப - சூரியனது ஒளிமறைநதுபோம்படி, வானை மறைததன ஆகாயமுழுவதையும் (பரவி) மறைததுவிட்டன; (எ - று.)

அநுமானது அடிகள் அழுததுவதனால், அம்மலைக்குகைகளில் தூங்கிக் கொண்டிருந்த சிங்கங்களெல்லாம் அங்குநின்று வெளியே வரமாட்டாதனவாய் நொருங்கி இரத்ததைக் கக்கிக்கொண்டு இறந்தன; பறக்குநதன்மையுள்ள பறவைகளோ, அம்மலைநொருங்குவதைக் கண்டு பேரிரைசசலிட்டுக் கொண்டு எழுந்து சூரியனொளியும் மறையும்படி ஆகாயமுழுதும் பரவிப்பறந்தன என்பதாம்.

சீயம்-ஸிம்ஹ மென்ற வடசொல்லின் சிதைவு: இது-(மிருகங்களையெல்லாம்)ஹிம்ஸிப்பதென்று பொருள்படும். பரந்துள்ளது,பரவை யெனக் கடலுக்குக் காரணக்குறி. பறவை-ஆகாயத்திற் பறப்பது. 'பகலொளிகரப்ப' என்பது-தொடர்புயர்வுநவிற்சியணி; இது, வடமொழியில் ஸம்பந்தாதிசயோகதி யெனப்படும். 'புகலரு முழை' என்பதற்கு-(தாம்வசித்ததலால் எந்தபிராணியும்) நுழையமாட்டாத குகையென்றும் பொருள்கொள்ளலாம். பி-ம்:—[1]பொங்கி. [2]அகலருபரவை. (ச)

ரு. மொய்யுறு [1]செவிக டாவி முதுகுற முறைகா தள்ள
மையுறு விசும்பி னூடு நிமிர்ந்த[2]வா லதிய மஞ்சின்
[3]மெய்யுறத் தழீஇய மெலன பிடியொடுமவெரு வல்லோடுங்
கையுற மரங்கள் சுற்றிப பிளிறின களிநல் யானை.

(இ - ள்.) களி நல் யானை - மதக்களிப்பையுடைய சிறந்த ஆணயானைகள்,—மை உறு விசும்பினூடு நிமிர்ந்த வாலதிய-மேகங்கள் பொருந்திய ஆகாயத்தினிடததே [மேறபுறமாகத] தூக்கிய வால்களையுடையனவாய், மஞ்சின் மெய் உற தழீஇய-மேகம்போலக கருநிறமான (தமது) உடமபை இறுகத்தழுவிககொண்ட, மெல்லென் பிடியொடும் - மென்மையான பெணயானைகளுடனே, வெருவலோடும - அசசததோடு, மொய் உறு செவி - வலிமை மிகக (தமது) காதுகளை, முதுகு உற கடாவி - (தமது) முதுகின்புறததிற்படுமபடி யசைத்து, முறை கால் தள்ள - (அசைககின்ற ஒவ்வொரு) முறையிலும் காறறுவீச, மரங்கள் கை உற சுறறி - மரங்களை (தம்) துதிக்கையால் உறுதியாகசசுறறிக்கொணடு, பிளிறின - வீரிட்டன; (எ - று.)

பேருருவங்கொணட அநுமானது பாதங்கள் ஊன்றின அதிர்சசியினால் அஞ்சிப்பெணயானைகள் வாலையுயர்ததிக்கொணடு ஓடிவந்து தமமைததழுவிககொள்ள, ஆணயானைகளும் அஞ்சித தமதுசெவியையசைததுநின்று மரங்களை இறுகப்பிடித்துக்கொணடு வீரிட்டன வென்பதாம். தன்மைநவிற்சியணி. பெணயானைகள் வாலையுயர்ததிக்கொணடு ஓடிவந்து ஆணயானைகளைத் தழுவியதும், ஆண்யானைகள் காதையசைததபடி நின்று மரங்களைப்பறறிககொணடு பிளிறியதும் - அச்சத்தின் செயல்களாம. இனி, ஆணயானைகளும் அவற்றைத தழுவிய பெண்யானைகளும் அசசததினாற் செவியசைத்து வாலெடுதது மரங்களைப பற்றிக்கொணடு வீரிட்டன யெனற கருத்துப்பட உரைததலுமாம். செவிகள தாவி முதுகுஉற முறைகால் தள்ள என்றுககொணடு, செவிகள அசைநது முதுகிலேபொருந்தி ஒவ்வொருதாரததிலும் காறறை வெளிவீச என்றுமாம. காது அசையுந்தோறும் காறறுவீசுதலால், 'முறைகாறள்ள' என்றார். வாலதி - வடசொல். நிலையிலலாமையாற பொய்யாகிய உடமபை 'மெய்' என்பது - மரங்கலவழக்கு. தழீஇய - சொல்லிசையளபெடை. பிடி - யானையின் பெணணம்பெயர்; "பிடியென்பெணபெயர் யானை மேற்றே" என்றார் தொலகாப்பியனார்: இதன் ஆண, களிறு எனப்படும்; "வேழக்

குரிததே விதந்து களிற்றென்றல்" என்பதுகாணக. பிடிக்குமென்மை எளிதில் அசசகொள்ளாதனமை பி-ம். உ [1]செவிகடாழ்நது. [4]வான்மதிய மஞ்ச. [3]மெய்யொடுந்தழீஇய என்பன. (கு)

சு. பொன்பிறழ் சிமயக் கோடு பொடியுறப் பொறியுஞ சிந்த
மின்பிறழ் குடுமிக் குன்றம் [1]வெரிநுற விரியும் வேலை
புன்புற மயிரும பூவாக் கட்புலம் புறத்து நாறு
வன்பறழ் வாயிற கவவி வல்லிய மிரிந்த மாதோ.

(இ-ள.) மின் பிறழ் குடுமி குன்றம-மினனல்போல் ஒளிவீசுகின்ற உசசியையுடைய மகேநதிரமலையானது,—பொன் பிறழ் சிமயம கோடு-பொனமயமாக விளகுகின்ற (தனது) சிகரம, பொடி உற - நீறாக,—பொறியும் சிநத-தீப்பொறிபறகுமாறு, வெரிந் உற விரியும (தன) முதுகு மிகுதியாகப்பிளவுபடுகின்ற, வேலை - சமயகதில,—வலலியம புலிகள,—புல் புறம மயிரும் பூவா - சிறிய உடமபுமயிர்களும் முளையாதனவும், கண புலம் புறதது நாறு - கணகள்மலராதனவுமாயிருக்கின்ற, வல பறழ் - வலிய (தமது, குட்டிகளை, வாயின் கவ்வி - வாயினாற கவ்வி யெடுத்துகொணடு, இரிந்த - நிலை கெட்டு ஓடின; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசைகள்.

அநுமானது அடிகளின பாரதததைப பொறுக்கமாட்டாது [2]சிகரம்பொடியாயப்போயக தீப்பொறிபறக்குமாறு அம்மலை பிளநதசமயததில அனறபொறியையும அவ்வோசையையும கணடு கேட்டதனால் அஞ்சிய புலிகள, மயிர முளைக்காமலும் கணபிரியாமலும் இருககின்ற தமதுசிறியகுட்டிகளை வாயிற கவ்விக்கொணடு நிலைகெட்டுஓடின வென்பதாம்.

சிமயககோடு - மலைசசிகரம; ஒருபொருட்பன்மொழியுமாம். கட்புலம் புறதது நாறுமை - கணணுகிய உறுபபு வெளியில தெரியாமை நாறுதல், தோன்றுதல். பூவாதபறழ நாறுதபறழ்என்க. "நாயே பன்றி புலிமுய ஞன்கு-மாயுவகாலைகுருளையென்ப," "நரியுமமறறே நாடினா கொளினே," "குட்டி பறழுங கூற்றவண வரையா" எனபவறறால, புலிகுட்டியை 'பறழ்'எனறார். அபபொழுதுதான பிறநதகுட்டி யென்றறகு, 'புன்மயிரும பூவா கட்புலம புறதது நாறுப் பறழ்' எனப்பட்டது. தன்மைநவிற்சியணி. [3]பி ம்:—[1]வெரிலுற நெரியுமவேலை. (சு)

எ. தேக்குறு சிகரக குன்றந் திரிந்துமெய்ந் நெரிநது சிந்தத்
தூக்குறு தோலா வாளா துரிததி னெழுந்த தோற்றந்
தாககுறு செருவி [1]னேரார் தாளர வீசத தாவி
மேகுற விசைத்தா ரென்னப பொலிந்தனர் விஞ்சை வேந்தர்.

(இ - ள.) தேககு உறு சிகரம குன்றம் - தேககு'மரம்பொருந்திய உச்சியோடுகூடிய அம்மகேநதிரமலையானது, திரிந்து - (அநுமானது பாதங்களின் பாரததால் தன) நிலைமாறி, மெய் நெரிநது-(தனது) உடல் நொருங்கி, சிந்த - சரிய,—'அதனால அஞ்சிய), விஞ்சைவேந்தா - விதியாதரவரசாகள, தூக

குறு - (தமது கைகளில்) தாங்கிகொண்டிருக்கின்ற, தோலர் - கேடகமுடையவர்களாகவும், வாளர் - வாள்களையுடையவர்களாகவு மிருந்துகொண்டு, துரிதத்தின் - விரைவாக, எழுந்த - (வானத்தில்) உயரச்சென்ற, தோற்றம - (தமது) தோற்றத்தால்,—தாக்குறு செருவில் - மோதிச்செய்கின்ற யுத்தத்திலே, நேரார் - (தமது) பகைவர், தாள அறவீச - (தமது) கால்கள் அறுபடும்படி (ஆயுதங்களை) யெறிய, (அதற்குத் தப்புமாறு), மேக்கு உற தாவி - மேலெழுந்து, விசைததார் என்ன - வேகங்கொண்டு சென்ற வரைப்போல, பொலிந்தனர் - விளங்கினார்கள்; (எ - று)

அம்மகேந்திரமலை திடீரென நிலைகுலைந்து நொருங்கிச் சரிந்ததனால் அஞ்சிய விதியாதரவரசர்கள் தமது கைகளிற் கேடகத்தையும் வாளையும் எடுத்துக்கொண்டு விரைந்து மேலெழுந்த தோற்றம்-போர்க்களத்தில் தமது பகைவர் படைக்கலங்கொண்டு தமது கால்களைத் துணிக்குமபடி முயன்றபோது, தமது கைகளில் ஆயுதமிருக்கவும், அதற்குத்தப்பியுய்யுமாறு, வீரர்கள் விரைந்துமேலெழுமபிச்செலவதை யொத்திருந்தது, என்பதாம்: உவமையணி. பின்னிரண்டடிக்கு - மோதுகின்ற போரிலே தமதுபகைவரது தாள்களைத் துணிக்குமாறு வீசுவதற்காகத் தாவி மேலே விசை நது எழுந்தவர் போலப் பொலிந்தன ரென்றும் பொருள் கொள்ளலாம். தோல் - பகைவாக ளெறியும் படைகள் தம்மீது படாதபடி தடுக்கவல்லதாகிய கேடகம்; தோற்பரிசை. துரிதம்-த்வரிதம என்ற வடசொல்லின் விகாரம் விஞ்சைவேந்தர்-மாலிகாஞ்சனம் முதலிய மாயவித்தைகளில் வல்ல விதியாதர ராஜர். விஞ்சை-வித்யா என்ற வடசொல்லின் சிதைவு: வித்யை, விதத்தை, விசசை, விஞ்சை யெனக காண்க. விஞ்சை-அதனையுடையார்க்கு ஆகுபெயர். பி-ம்.—[1] சேர்ந்தார். 'நோந்தார்' என்ற பாடத்துக்கு - எதிர்த்தவரென்பது பொருள்.

அ. தாரகை சுடாகண் மேக மென்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை யழுந்து கின்ற படர்நெடும் பனிமாக் குன்றங்
கூருகிக் குவவுத் தோளான் கூமபெனக குமிழி பொங்க
வாகலி யழுவத் தாழுங் கலமென லாயிற் றன்றே.

(இ - ள்.) (அநுமனது கால்களின் பாரத்தைப் பொறுக்கமுடியாமல்)—தாரகை நக்ஷத்திரங்களும், சுடாகள்-சூரியசந்திரர்களும், மேகம-மேகங்களும, என்ற இவை—, தவிர - (தன்னிடத்தை) விட்டு (மேலே) செல்லுமாறு, தாழ்ந்து - (தான்) இறங்கி, பாரிடை அழுந்துகின்ற - பூமியிலே அழுங்கிப் போகின்ற, படர் நெடும் பனி மா குன்றம - அகன்று நீண்டுள்ள குளிர்ந்த பெரிய அம்மகேந்திரமலையானது,—கூர உகிர் குவவு தோளான் கூம்பு எனகூர்மையான நகங்களையும் திரண்டதோள்களையு முடையவனான அநுமான் பாய்மரம்போலிருக்க, குமிழிபொங்க ஆகலி அழுவத்து ஆழும் - நீர்க்குமிழி மேலேயுண்டாகுமாறு சமுத்திர வெள்ளத்திலே முழுகிப்போகின்ற, கலம் - மரக்கலமாம், எனல் ஆயிற்று - என்று சொல்லலாம்படியிருந்தது; (எ - று.)

பெருவடிவங்கொண்ட அநுமான் தன்மீது இருந்துகொண்டு கால்கள் வைத்ததைத தாங்கமுடியாமல் அமமகேந்திரமலை தன்மீது தவழ்ந்துகொண்டிருந்த நக்ஷத்திரம் சூரியசந்திரர் மேகம் இவைகளெல்லாம் தன்னைவிட்டுத் தவிர்ந்து தனக்கு வெகுதூரம் அப்பால்மேலேயிருப்பனவாம்படி தான் மிகத் தாழ்ந்து பூமிக்குள் அழுந்திய தன்மை, ஒருமரககலம் மேலே பாய்மரந் தோன்ற நீர்க்குமிழியுண்டாகுமாறு கடலுக்குள்முழுகுவதை யொததிருந்தது என்பதாம். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பூமியை ஆர்கலியழுவமாகவும், அப்பூமியில் தாழ்ந்து உட்புகும மகேந்திரமலையை அககடலில் முழுகிப்போகும் மரக்கலமாகவும், அம்மலைமீது நின்ற அநுமானை அமமரக்கலத்தின் மீதுள்ள பாய்மரமாகவும், அககாலத்து மலையின் மேற்புறததில் தோன்றும் நக்ஷதிரங்களையும சுடர்களையும் அம்மரக்கலம் முழுகுநகாலத்துத் தோன்றும் நீர்க்குமிழிகளாகவும் கொள்க. 'மேகந்தவிர' என்று கூறியது;இயற்கைபற்றியதேயன்றி, உவமையை நிறைத்தற்காகவன் றென்க.

தாரகை - தாரகா என்ற வடசொல்லின் விகாரம்: இதனால், சூரியசந்திர ரொழிந்த மற்றைக்கிரகங்களையும் குறித்தவாறும். குமிழி - நீரிறகுமிழ்ப்பதெனக் காரணப்பொருள்படும். ஆர்கலி - கடல். நிறைந்த ஓசையையுடையதென வினைத்தொகைப்புறததுப் பிறந்த அன்மொழித்தொகை. (அ)

கூ. தாதுகு நறுமென் [1]சந்தங் குங்குமங் குலிகந் தண்ணென்
போதுகு பொலன்ரு தென்றித் தொடக்கத்த யாவும் பூசி
மீதுறு சுனைநீ ராடி [2]யருவியொ டுலகின் வீழ்வ
வோதிய [3]குன்றங் கீண்டு குருதிநீர் சொரிந்தா லொத்த.

(இ - ள.) மீது உறு சுனை நீர் - அம்மலையின் மீதுள்ள சுனைகளின் நீர்ப் பெருக்குககள்,—தாது - காவிகஉறகளும், உகு நறு மெல் சநதம் - (மரஙகளினின்று) ஒடிந்துகீழ்விழுந்துள்ள நறுமணமுடைய மெல்லிய செஞ்சந்தனக் கட்டைகளும, குஙகுமம - குஙகுமபபூககளும், குலிகம் - இஙகுலிகமும், தண்ணென்போது உகுபொலன் தாது-குளிர்ந்தமலர்களினின்று நீதிர்நதபொன்னிறமான மகரந்தப்பொடிகளும், என்ற இ தொடக்கத்த யாவும் - என்ற இவை முதலிய செந்நிறப்பொருள்கள் பலவறறையும், பூசி - தன்மேற்பூசிக் கொணடு, அருவியொடு ஆடி - (மற்றும் அம்மலையிலுளள) நீரருவிகளோடு சேர்ந்து, உலகின் வீழ்வ - பூமியில் விழுவனவாய்,—ஓதிய குன்றம்-(முன்பு) கூறப்பட்ட அம்மகேந்திரமலையானது, கீண்டு - வயிறுகிழிபட்டு, குருதி நீர் - இரத்தநீரை, சொரிநதால் ஒத்த-சொரிவதை யொததிருந்திருந்தன; (எ-று.)

அநுமான்கால்களால்நொருங்கி பொடியாய்விட்ட தாதுமுதலிய பொருள்களோடுசோந்து செந்நிறமடைந்து அதிரச்சியால் மலையெஙகும் பாய்ந்தோடிய அருவிநீரோடுமெ சோந்து வெளியேபெருகுகின்ற அம்மலைசசுனையின் நீர்ப் பெருக்குககள,பேருருககொணட அநுமானது கால்களின் பாரத்தைப் பொறாமல அம்மலை வயிறுகீண்டு இரததத்தைக கக்குவதுபோன்றிருந்தன வென்பு

தாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. அன்றியும், சுனைநீர்கள் தாதுமுதலிய பிறபொருள்களின் செந்நிறத்தைப் பெற்றனவாகக் கூறியது, பிறிதின் குணம் பெறலணியாம்; இது வடமொழியில் தத்குணாலங்கார மெனப்படும். "அநுமான கடலைக்கடக்குமாறு கால்களையழுத்தியதைப் பொறுக்கமாட்டாத இமமகேந்திரமலை, அகன்ற தாழ்வரையெங்கும் அஞ்சியோடுகின்ற மான்களினது காறகுளம்புகளினுறு பிளப்புண்ட செங்காவிகளின் புழுதிகள் மேலெழப்பெறுதலால், இரத்தத்தைக் கக்குவது போன்றிருந்தது" என்று சமபூ ராமாயணத்திற் போஜமகாராசன் கூறியது, இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

எளிதிற்பொடியாகு மென்றற்கு, 'மென்சந்தம்' என்றார். தாது - தூது- இரண்டாமடியில், தாது மகரந்தப்பொடியெனப் பொருள்படும் தெனமொழி. சநதம-சநதனமென்ற வடசொல்லின் விகாரம். குங்குமம்-அதன்பூவுக்கு, முதலாகுபெயர். குலிகம - இங்குலிக மென்பதன் முதற்குறை. அது, சாதிலிங்க மெனப்படும் போது - மலருமபருவத்து அரும்பு. பொன + தாது=பொலன் தாது; "பொன்னெனகிளவியீறுகெட முறையின்,முன்னர்ததோன்றும் லகார மகாரஞ்,செய்யுண்மருங்கிற் றொட்டியலான"என்னுஞ் சூத்திரவிதியோடு மகரனகரபபோலியும பெற்றது. இனி, பிற்காலததா,பொன்னென்ற பொருளில் 'பொலம்' என்று தனியே ஒருசொல் கொள்வா; அசசொல் மகரனகரப்போலி பெற்று, 'பொலன்' என்று ஆயிற்று என்றலுமாம் பி-ம்:—[1]சாந்தம். [2]அருவி போலெகினம்வீழ்வ [3]குன்றகீறிகுறுதிநீர சொரிவதொத்த. (கூ)

கo. கடலுறு மத்தி தென்னக் [1]கருவரை திரியுங் காலை
மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர் விசுமபி னுற்றார்
திடலுறு கிரியிற் [2]றாந்தஞ் செய்வினை முற்றி [3]முறறு
துடலுறு பாசம் வீசா [4]தும்பர்செல் வாரு மொத்தார்.

(இ - ள்.) இது—, கடல் உறும் மதது - பாற்கடலிற்பொருந்திய மதாகிய மந்தரமலையேபோலும்,' என்ன - எனறு (கணடவர்) கூறும்படி, கருவரை திரியும காலை - கருநிறமாயுள்ள அம்மகேந்திரமலை (அநுமானது திருவடிக ளழுததுவதாற) சுழன்றபொழுது,—திடல் உறு கிரியில் - மேடாகப் பொருந்திய அம்மகேந்திரமலையி லிருநதுகொணடு, மிடல் உறு புலனகள் வென்ற - வலிமை மிக்க ஐமபொறிகளையும் (அதனதனபுலன்களிற செல்லாதபடி) அடக்கிய, மெய் தவர்தாம் - உண்மையான தவததையுடைய இருடிகள்,—தம் செய் வினை முறறி முறறுது-தாங்கள் செயயதொடங்கிய தமது காரியங்களைப் பாதிமுடித்து முறறுமமுடியாமலே, விசும்பின் உற்றார் - ஆகாயததிற சென்றவாகளாய்,—உடல் உறு பாசம் வீசாது - உடம்பிறபொருந்திய பாசத்தை ஒழியாமலே, உமபர் செல்வாரும் - மேலுலகததுக்குச செல்பவர்களையும், ஒததார்—; (எ - று.)

அம்மகேந்திரமலை அநுமானது ஊன்றிய திருவடிப்பொறையை ஆற்ற மாட்டாது முன்பு பாற்கடல் கடைந்த மந்தரகிரியைப போலச சுழலவே. அவ்வதிராசசியினால், அரைகுறையாய்த் தவஞ் செய்திருந்த இருடிகள் மேலெழுந்தது - தமது பாசம் முற்றிலும் நீங்கப்பெறாமலிருப்பவா இவ் வுடம்புடனேயே வானுலகததுக்குச செல்வதை யொததிருந்ததென்பதாம: தன்மைத் தற்குறிப்பேற்றவணி. அங்கு அசைவுற்றத் தவஞ்செய்து கொண்டிருந்த யோகிகளையும் மலை சுழன்று மேலெழுப்பிய தென்க. வரைதிரியுங்காலை, தவர் விசும்பினுற்றார், பாசம வீசாது உம்பாசெலவாரொததார் என இயையும். மலை திரிந்தகாலத்தும் தாம தவ நிலையினின்று விலகாது நின்றனராதலால், அவாகளை 'மெய்த்தவர்' என்றார்.

செல்வாரும, உம்மை - இசைநிறை. உயர்வு சிறப்பும்மையாககொண்டு 'மெய்த்தவா' எனறதனோடு கூட்டி, வலிமைமிக்க ஐம்புலவாசைகளை வென்று நிலைபெற்ற தவததைச செய்து கொண்டிருந்தவாகளும (அஞ்சிககலங்கி நிலைகுலைந்து) வானததிலெழுந்தவர்களாய இவ்வுடமபுடனே சுவாககலோகததுக்குச செல்லுதற்குத தாம் செய்யவேணடிய தவவேளவிச சடங்குகளை அமமலையிலிருந்து செய்தேனும செய்யாமலேனும இசசரீர பாசபநததததை யொழியாமலே இவ்வுடமபுடன் மேலுலகததுக்குச செலபவரைய போனறனரென்று உரைததலு மொன்று. புலன்கள வென்ற மெய்ததவரும் அஞ்சிச சிதறும்படி யிருந்தது, அப்பொழுது அம்மலையில் அநுமான் அடியூனறுதலாலுண்டான மிகககுழப்ப மென்க. இதனை, இராவணன் வரையெடுத்தபடலததில "சததவிருடிககணமகப்பட வெழிற்றவமுனிததலைவருஞ், சுத்த விதயப பிரமநிட்டருமிறப்பில்சுராகொததடையவும பிததருமதித்ததவபததரு மெழிற் பிரமததலைவருஞ, சிததரு மியக்கரும வெருககொளுமனதத ரடையசசிதறினா" எனறாற்போலக கொள்க.ஸஶரீரஸ்வாகககமனததின பொருட்டுச சில சடங்குகள் நூல்களிற கூறப்பட்டுளளன அவை செயயாமலே வேறு சகதிகளால் இவ்வுடமபுடன் சுவாககம்போய வந்தவரு முணடு. உடலுறுபாசம் வீசியவா இவ்வுடமபுடன் சுவாககம்புகாது இதனை இங்குததுறந்து சுததமான தேவசரீரததுடன உம்பாசெல்வ ரென்க.

துருவாசமுனிவனது சாபததால் தேவலோகததுச செல்வங்களெல்லாம் கடலிற்புகுகனவாக, பின்பு தேவர்கள் அவற்றை மீண்டும் பெறுதற பொருட்டுத திருமாலின் கட்டளைப்படியே மந்தரமலையை மததாகநாட்டி வாசுகி யென்னும மகாநாகத்தைக கடைகயிறாககொண்டு அந்நாகத்தின் தலைப்புறத்தை அசுரர்களும் வாற்புறததைத தாங்களுமாகப் பறறிக்கொண்டு வலியஇழுததுப் பாறகடலைக் கடைகையில், மந்தரமலை சுழன்றதென்க.

மதது - மந்தம வடசொல. மனதததை நல்வழியிற செல்லவொட்டாது தடுததுத தீநெறியிற் செலுத்துமாறு மிகத திணணியனவாதலால், 'மிடலுறு

புலன்கள்' என்றார். புலன்கள் - இங்கு இலக்கணையாற் பொறிகளை யுணர்த்திற்று: ஐம்பொறிகளாவன - மெய், வாய், கண, மூக்கு, செவி. புலன் - புலம்: இறுதிப்போலி திடல் - மிகுதியுரம: இதனை 'தருடம்' என்ற வடசொல்லின் விகாரமெனக் கொண்டால், திடல் உறு - வலிமை மிக்க எனப் பொருளாம். கிரி, பாஶம் - வடசொற்கள். ஆசை - கயிறுபோல நின்று ஆன்மாவைக் கட்டுப்படுத்தலால், 'பாசம்' எனப்படும்; ஆகவே, இச்சொல் - உவமையாகு பெயராம்.

பி - ம்:—[1]கார்வரை [2]தந்தம் [3]மூற்றுவடலுறு. [4]உம்பர்செல்வாரை யொத்தார். (கo)

கக. வெயிலியற் குன்றங் கீண்டு வெடித்தலு நடுக்க மெய்தி
[1]மயிலியற் றேவி மார்க டழீஇக்கொள்ள பொலிந்தவாணே
ரயிலெயிற றரகக னள்ளத் திரிந்தநா ளணங்கு புல்லக்
கயிலையி னிருந்த தேவைத் தனித்தனிக் கடுத்தல் செய்தார்.

(இ - ள்.) (அநுமான் அடியூன்றிய பாரததைப் பொறுக்கமுடியாமல்): வெயில் இயல் குன்றம் - சூரியகாந்திபோன்ற ஒளிபொருந்திய அம்மகேந்திரமலை, கீண்டு - பிளவுபட்டு, வெடித்தலும் - வெடித்ததாகவே,—மயில் இயல் தேவிமார்கள் - மயில்போன்ற சாயலையுடைய தமது மனைவியர், நடுக்கம் எய்தி - (மிகுத அச்சத்தினால்) நடுக்கமடைந்து, தழீஇக்கொள - (தம்மை) இறுக அணைத்துக் கொள்ள, பொலிந்த - விளங்கிய, வாணோர் - (அம்மலையின்மீது வசிக்கும்) தேவர்கள்,—அயில் எயிறு அரக்கன் - கூர்மையான பற்களையுடைய (ராவணனென்ற) ராக்ஷஸன், அள்ள - (தனது கைகளைக்கொண்டு) அலட்சியமாகத் தூக்கியதனால், திரிந்த - (கயிலாயமலை) சுழற்சியையடைந்த, நாள் - அக்காலத்தில், அணங்கு புல்ல - (பார்வதியென்னுந்) தெய்வமகள் (தன்னைத்) தழுவ, கயிலையின் இருந்த - (அக) கைலாசகிரியில் வீற்றிருந்த, தேவை - சிவபெருமானை, தனி தனி—, கடுத்தல் செய்தார் - ஒதிருந்தார்கள்; (எ - று.)

அம்மகேந்திரமலை அநுமானது உடற்பொறையை யாற்றாது திடீரெனக் கீறிவெடித்ததனால் மிகுத நடுக்கங்கொண்ட தமது மனைவியரால் தழுவப் பெற்ற தேவர்கள் ஒவ்வொருவரும், இராவணன் கைலாசமலையைத் தூக்கிய காலத்தில் அஞ்சிப் பார்வதீதேவியால் தழுவப்பெற்ற சிவபிரானைத் தனித தனி ஒத்திருந்தன ரென்பதாம்; உவமையணி.

அணங்கு - தேவி; அம்பிகை. இரண்டாமடியில், இயல் - உவமவுருபு. தழீஇக்கொள—தழுவிக்கொள்ள: சொல்லிசையளபெடை. அரக்கன் - ரக்ஷஸ் என்ற வடமொழியின் விகாரம். அவன் அம்மலையை ஒருபொருளாக மதியாது எடுத்தமை தோன்ற, 'அள்ள' என்றார்.

பி - ம்:—[1]மயிலியற்றளிர்க்கைமாதர்.

கைலையை யெடுத்த கதை:—இராவணன் அளகாபுரிக்குச் சென்று குபேரனோடு எதிர்த்துப்பொருது அவனைவென்று அவனது புஷ்பகவிமானத்

தைப்பறித்து அதனமேலேறிக்கொண்டு கைலாசமலைக்கு நேராக ஆகாயமார்க்கத்திலே விரைந்து மீண்டுவருகையில், அம்மலையின் மகிமையால் விமானம் தடைப்பட்டுநிற்க, இராவணன் அதற்குக்காரண மின்னதென்று அறியாது திகைக்கையில், நந்திதேவர் எதிரில்வந்து,'சிவபிரானெழுந்தருளியிருக்கு மிடமான கயிலாயதின் பெருமை யிது' என்றுசொல்லவும், கேளாமல் அத்தசமுகன், 'எனதுபிரயாணதுககுத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடுபறித்து எடுத்து அப்பாலெறிந்து விட்டுத் தடையின்றி மேறசெல வேன்' என்றுகூறி விமானதினின்று இறகுகித தனது இருபதுகைகளையும் அமமலையின கீழ்கொடுத்து அதனைப் பெயாத்து அசைகக, அப்பொழுது பார்வதீதேவி அஞ்சிப பரமசிவனைத்தழுவிககொள்ளவே, அதனைக்கண்ட உருதிரமூாததி சினநது தன் கால்விரலால் சிறிது அழுதத, அரககன் மலையின் கீழ் அகப்பட்டுக கைநசுநகி மிகவருந்தி வெகுகாலம புலமபிப் பினனர்ச சாமவேதகானத்தாற சிவனருளைபபெற்று விடுபட்டன னென்பதாம். (கக)

கஉ. [1]ஊறிய நறவு முறற குற்றமு முணர்வை யுண்ணச
சீறிய மனத்தர் தெய்வ மடந்தைய ருட றீவுற்
றுறின ரஞ்சு கின்று ரன்பரைத் தழுவி யும்ப
ரேறின ரிட்டு நீத்த பைங்கிளிக கிரங்கு கின்றார்.

(இ - ள்.) ஊறிய நறவும்-(குடித்து உடம்பிலே) ஊறிய மதுவும், உற்ற குற்றமும் - (கணவா தம்விஷயத்திற்) செய்த பிழையும், உணர்வை உண்ண- (தமது) நல்லறிவைக் கெடுகக, (அதனால்), சீறிய - (அக்கணவர்திறததில்) மிககசினநகொண்ட, மனததா - மனததையுடையவராகிய, தெய்வம மடந்தையா - தேவதாஸ்திரீகள, —அஞசுகின்றா - (அவகு உண்டான அதிர்சசியினால்) மிகக அசசநகொணடவராய, ஊடல் தீவுறறு - (தாம கொண்டிருநத) பிணககு நீநகி, ஆறினர் - சினந்தணிநது, அன்பரை தழுவி - (தமது) கணவரைத தழுவிககொண்டு, உமபா ஏறினா - வானததினமீது ஏறி,— இட்டு நீதத - (பரபரப்பினால உடன எடுததுக்கொள்ளாது அம்மகேநதிரமலையிலேயே கூட்டில்) விட்டுவநத, பைந கிளிககு - (தமது) பசுநிறமான கிளியைககுறித்து, இரநகுகின்றா - வருந்துபவரானாகள; (எ - று.)

மதுபானமயக்கததில் தமதுகணவர்செய்த பிழையைக்குறித்து வெறிகொணடு ஊடிய தேவமகளிர, அம்மலை திடீரென அசைந்திட்டதைக கணடு மனம் துணுககுறறு உடனே தாம கொணடிருநத சினம நீநகித தம் கணவரைத தழுவிககொணடு ஆகாயததிறசெனறு, பின்பு, பரபரப்பினால் மனந்தடுமாறி விட்டுவந்த கிளியைககுறித்து வருந்தினாக ளென்பதாம்.

பதிவிரதைகளாகிய அம்மாதர்கள தம்கணவர்மீது சினந்ததற்கு அவாகள் கள்ளுண்டதும் அவாகளவிஷயததிற கணவர் பிழைசெய்ததும் காரணமாகுதலால், 'நறவும உறறகுறறமும் உணாவையுண்ண' என்றா. "வித்தியாதரர் தமது மனைவியருடன தாகள் குடிப்பதறகுரிய பொன்மயமான பாததி

ரம்முதலியவற்றைப் பாரபூமியிலேயே போகட்டு ஆகாயத்திற்சென்றனர்" என முதனூலிற்கூறியிருத்தல்கொண்டு, இவருத தெய்வமடந்தையரென்றது, வித்தியாதாரமகளிரை யென்னலாம். ஊடலாவது - இன்பநிலையில் அவ்வின்பத்தைமிகுவித்தற்பொருட்டு ஆடவரோடு மகளிர் பிணங்குதல்; இது, புலவி யெனவும், பிரணயகலா மெனவுமபடும். 'தெய்வமடந்தைய ரூடல்தீர்வுற்று ஆறினரஞ்சுகின்ற ரன்பரைத் தழுவி' என்றதை, "அதிகோபமொடுகூட நினையா. ஆடலைமறந் துமைமடந்தை யரனைத் தனமுறத்தழுவினாள்" என்றாற்போலக் கொள்க, ஊறிய நறவு - (பாளைமுதலியவற்றிற) சுரந்த மது வென்றும், நாட்படுதலால் முதிர்ந்து காரமேறும்படி மூங்கிற்குழலில்வார்த்தும் பூமியிற்புதைத்துவைத்தும் முற்றசெய்யப்பட்ட மது வென்றும் கூறினமாம். இட்டுநீத்த—நீத்திட்ட. விகுதி பிரிததுககூட்டல்.

பி - ம் :—[1]'ஊறியநறவையுண்ட குற்றந் தம்முணர்வை யுண்ண'. (கஉ)

கஉ.—அக்காலத்துத் தேவர்முதலியோர் மலர்முதலியவற்றைத் தூவி விடைகொடுக்க, அநுமான் கடல்கடக்குமாறு விரைதல்.

இத்திற நிகழும வேலை யிமையவர் முனிவா மற்றை
முத்திறத துலகத் தாரு முறைமுறை விரைவின் மொய்த்தா
தொத்துறு மலருஞ் சாந்துஞ் சுண்ணமு மணியுந தூவி
வித்தக [1]சென்றீ யென்றார் வீரனும விரைவ தானான்.

(இ - ள்.) இ திறம நிகழும் வேலை - (அநுமானது அடிகள் அழுத்துவதனால்) இவ்வாறாகப பலவகை நிகழ்ச்சிகள் தோன்றிய சமயததிலே,—இமையவர் - தேவர்களும், முனிவர் - இருடிகளும், மற்றை முத திறததது உலகததாரும - மறறும் மூவுலகத்திலுள்ள பெரியோர்களும், முறை முறை விரைவின் மொய்ததார் - வரிசைவரிசையாக விரைந்துவநது (அநுமானை) நெருங்கியவாகளாய்,—தொததது உறு மலரும் சாநதும் சுண்ணமும் மணியும் தூவி - கொத்துககொத்தாகவுள்ள மலர்களையும் சந்தனத்தையும் வாசனைப்பொடிகளையும இரத்தினகளையும் (அவ்வநுமான்மீது) வாரியிறைததது,—'வித்தக - சதுரப்பாடுடையவனே! சென்றீ - போய்வருவாயாக,' என்றார் - எனறு (அநுமானுக்கு) விடைகொடுத்தார்கள் ; வீரனும - அநுமானும், விரைவது ஆனான் - (கடலைக்கடந்துசெல்லுமாறு) மனத்தில்விரைவுகொள்பவனானான் ; (எ - று.)

இமையவர் முதலியோர் அநுமானை நோகி 'வித்தக சென்றீ' என்றது- 'நீ சதுரப்பாடுடையவனாதலால், இக்கடல் நமகு எம்மாததிரமென்று அலக்ஷ்யமாகக்கருதாமல் ஜாக்கிரதையுடன் செல்லவேணடுமென்றற்கு : ஆகவே, இங்கு அநுமானை 'வித்தக' எனறு விளித்தது - கருத்துடையடைகொளியணியின்பாறபடும். இனி, வித்தகனென்பதறகுத் தூதனென ஒரு பொருளுள்ளதனால, இராமதூதனே! என விளித்தாருமாம; நவவியாகரணபண்டிதனே யென்றும் பொருள்படும். இமையவர் முதலியோர் மலர்- முதலிய

வர்ரைத்துவியது, தங்களுடைய உள்ளக்கிளர்ச்சியாலும், அநுமானைப் பின்னும உற்சாக மூட்டுவதற்காகவும். மணி - மூத்துமாம.

சுண்ணம் - சூர்ண மென்ற வடசொல்லின் சிதைவு. சென்றீ - 'செல்' என்றது றகரவெழுத்துப்பேற்றையும், ஈகாரததையும் பெற்று வந்தது; "முன்னிலை முன்னா ஈயும் ஏயும், அந்நிலைமரபின் மெய்யூர்துவருமே" என்பது நன்னூல். விரைவதானன் - விரைதலை யுடையவனானன்.

பி - ம்:—[1]சேறியென்றார். (கங)

கச.—நண்பர்கள் அநுமானைநோக்கி 'ஜாக்கிரதையாகச் செல்க' எனல்

குறுமுனி குடித்த வேலை குப்புறுங் கொள்கைத் தாதல்
வெறுவிது விசயம் வைகும் விலங்கறலோ ளலங்கல் வீர
[1]சிறுவிதென் றிகழற் பாலை யல்லைநீ சேறி யென்னு
வுறுவலித் துணைவர் சொனனாரொருப்பட்டான் பொருப்பை
[யொப்பான்.

(இ - ள்.) (அப்போது), உறு வலி துணைவர் - மிககவலிமையையுடைய வரான (அநுமானது) சிநேகிதர்கள்,—(அவனை நோக்கி),—"விசயம் வைகும்-வெற்றி தங்கியுள்ளனவும், விலங்கல் - மலைபோன்றனவுமான, தோள்-தோள்களையும், அலங்கல் - வெற்றிமாலையையுமுடைய, வீர - வீரனே!—'குறுமுனி குடித்த - குறுகிய வடிவமுள்ளவரான அகத்தியமுனிவர் (தமது அகங்கையினாலெடுத்துப்) பருகிய, வேலை - இந்தச் சமுத்திரம், குப்புறும் கொள்கைத்து ஆதல் - கடக்கவேண்டிய எண்ணத்திற்கு விஷயமாயிருப்பது, வெறுவிது - மிகவும பிரயோசனமற்றது; (கடலைக் கடத்தலாகிய இககாரியம), சிறுவிது - (எமது திறத்துக்கு) மிகவும எளியது', என்று—, இகழல் பாலை அல்லை - இகழத்தகாதவனாய் [அலக்ஷயமாக நினையாமல்], நீ—, சேறி - (கருததுடன்) செல்வாயாக", என்னு - என்று, சொன்னா—; பொருப்பை ஒபபான் - மலையையொததவனான அநுமான், ஒருப்பட்டான் - (அதற்கு) உடன்பட்டவனானன்; (எ - று.)

அப்போது உடனிருந்த ஜாம்பவான் முதலியோர் அநுமானை நோக்கி 'வீரனே! முன்பு குறுமுனிவராகிய அகத்தியர் தமது கையால எடுத்துப்பருகிய இக்கடல் மிகப்பெருவடிவமுடைய எனககு எமமாததிரம? இதனைக்கடப்பது எனது பெருமைக்கு இழுககாகுமே யனறி, இதனாற சிறிதேனும் எறற முண்டாகுமோ? என்று அலக்ஷயநகொளளாமல், போகின்ற காரியம பெரியதாகையால அதனிடத்திற கருததுடனிருந்து அககாரியத்தை முடித்துக் கொண்டுவா' என்றகூறி விடையளிகக, அநுமானும் அதறகு உடன்பட்டனனென்பதாம். 'குறுமுனிகுடித்தி' என்ற அடைமொழி, அககடல் அவமதிததறகு உரியது என்ற கருத்தைக கொணடிருததலால; கருத்துடையடைமொழியணி; இங்கு அகத்தியரை வேறு பெயராற்கூறாது.'குறுமுனி'

பெயராற் கூறியது, அக்கடலைக்குடித்தவரோ பெரிய முனிவருமல்லர்' பார்வைக்கு மிகச சிறியதோற்றமுடையவ ரொருவரென்ற கருதததத தருவது - கருத்துடையடைகொளியணி. பின்னேயுள்ள கருத்துடையடை மொழியணிக்கு, முன்னேயுள்ள கருத்துடையடைகொளியணி அங்கமாக நிற்றலால், இஃது - உறுப்புறுப்பிக்கலவையணியாம். விஜயம் - விசேஷ ஜயம்.

இனி, இசசெய்யுளில் மற்றொருபொருளும் தோன்றுவதாகக் கூறுவர்; அது வருமாறு:—'குறு முனி - சிறிய யானைக்கன்று போன்றவனான இராம பிரான், குடிததது - (தனது ஆகினேயாஸதிரத்தாற் கடலின் நீரை) வற்றச செய்து, (அணைகட்டி), அ வேலை - அந்தச் சமுத்திரததை, குப்புறும் கடந்து (சீதையை மீட்குமாறு உனது இலங்கைகக்கு) வருவான்; கொள் - உனது கொள்கை [சீதையை கைகொளளலாமென்ற எணணம்], கைத்து ஆதல் - கைகூடுவதாவது, வெறுவிதே - அசாததியமான காரியமேயாம்; விசயம் வைகும் விலங்கல் - வெற்றிபொருந்திய கைலாசபர்வததால், தோள் அலங்கல் - தோள் (நசுக்குணடு) வருநததலையடைந்த, வீர - வீரனாகிய இராவணனே! சிறுவிது - (நீ பிறா தாரததை விரும்பிக கவர்ந்தஇது) மிக்க இழிதொழிலாம்," என்று—,இகழல் பரலை - (இராவணனைநோக்கி) இடித்துச சொல்லி அவனை இகழீகதகவனாகின்றாய் [இகழவேண்டு மென்றபடி], நீ—, அல்லை - லோக மாதாவாகிய சீதையை, சேறி - அடைவாயாக,' என்னு - என்று, உறு வலி துணைவா சொன்னார்—; (அதற்கு), பொருப்பையொப்பான் ஒருப்பட்டானென்பதாம். முனி - யானைக்கன்று, "முனியென்ப தியானைககன்று முனிவன் வில் லகத்தி நாற்போ" என்பது நிகண்டு. இங்கு இராமனை வேறு பெயராற் குறியாது, 'குறுமுனி' என்ற பெயராற கூறியது, முன்பு ஒரு குறுமுனிவனான அகததியனாற பரிபவப்பட்டதுபோல இககுறுமுனியினாலும் வலிமைதொலையு மென்று குறிப்பிததற்காக வென்பா. இராவணன குறுமுனியாற பரிபவப்பட்டது - "தேவரெல்லாரும் கூடி, யாம சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து தென்திசை உயாந்தது; இதற்கு அகததியனாரே ஆண்டு இருததற்கு உரியர்' என்று அவரை வேணடிககொள்ள, அவரும் தென்திசைககண போதுகின்றவர்...காடுகெடுத்து நாடாகக்கி பொதியிலின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாறபிணிதது இராக்கதரை ஆணடு இயங்காமை விலகக்கி' என்ற தொல்காப்பியப்பாயிரதது நசசினார்க்கினியருரையாலும், பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சியில் "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற,ரென்முது கடவுள்" எனபதற்கு - 'இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி பேரகின கிட்டுதற்கரிய வலியினை யுடைய பழமை முதிர்ந்த அகத்தியன்' என்ற நச்சினார்க்கினிய ருரையாலும் விளங்கும். 'அல்லா' என்ற ஆவீறான வடசொல், அல்லையெனத் திரிந்தது; இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கது; அம்பா, அககா, அல்லா என்பன - வடமொழியில் மாத்ருவாசகம்.

பி - ம்:—[1]சிறிதிதென்று.

கரு.—அநுமான் விசையாகப் பாயுமாறு தன் கால்களை அழுத்திவைத்தல்.

இலங்கையி னளவிற் றன்று லிவவுரு வெடுத்த தோற்றம்
விலங்கவு [1]முளதென் றென்று விண்ணவா வியந்து நோக்க
வலங்கருழ் [2]மார்பன் முன்றாழ்ந் தடித்துணை யழுத்த லோடும்
பொலங்கெழு மலையுந் தாளும் பூதலம் புக்க மாதோ.

(இ - ள்.)—விண்ணவா - தேவர்கள், 'எடுத்த இ உரு தோற்றம் - (இவன்: இங்கு இப்பொழுது) கொண்டுள்ள இந்த உருவத்தின் காட்சியானது, இலங்கையின் அளவிற்று அன்று - இலங்கை வரையில் மாத்திரம் செல்வதற்காக வன்று: விலங்கவும் உளது - அதற்கு அப்பாலும் செல்வதற்காக ஏற்றுக்கொண்டதாம்,' என்று என்று - என்று எண்ணியுஞ் சொல்லியும், வியந்து நோக்க - ஆச்சரியத்துடன் காணுமாறு, (பேருருவத்தோடு எழுந்து நின்றவனாய்),—அலங்கல் தாழ் மாபன் - வெற்றிமாலை தொங்கப்பெற்ற மார்பையுடையவனான அநுமான், (கடலைகடக்கும்படி பாய்தற்காக), முன் தாழ்ந்து - முன்புறம் சாய்ந்து, அடி துணை அழுத்தலோடும் - தனது இரண்டு பாதங்களையும் பதியவைத்ததுவளவில்,—பொலம் கெழு மலையும் - பொன்மயமாக விளங்குகின்ற அம்மகேந்திரமலையும், தாளும் - (அதன்மேல் அழுத்தி வைத்த அநுமானது) கால்களும், பூதலம் புக்க - பூமியிற்புதைந்தன; (எ - று.) —ஆல், மாது, ஓ - ஈற்றசைகள்.

'இவன் இத்துணைப் பெருவடிவமெடுத்தது, இலங்காபுரிவரையில் மாத்திரம் போவதற்கு அன்று; அதற்கு அப்பாலும் இவன் செல்லவேண்டியிருக்கின்றதுபோலும்' என்று தனது பேருருவத்தைக் கண்டு தேவர்கள் வியந்து கூறுமாறு பெருவடிவமெடுத்த அநுமான் தாவிப்பாய்ந்து கடலைக்கடக்க வேணுமென்ற கருத்தினால் முன்தாழ்ந்து கால்களை யழுத்தவே அதனைத் தாங்கமாட்டாத அம்மகேந்திரமலை பூமியில் அழுந்திப்போக, அதன் மீதிருந்த அநுமானது கால்களும் உடனழுந்தின வென்பதாம். ஈற்றடி உடநிலைநவிற்சியணி. இளமையில் அநுமானுக்கு இந்திரன் வரமளித்ததபோது பொற்றாமரை மலர்மாலையொன்றை யளித்ததனனென வரலாறு உள்ளதனால், 'அலங்கல்' என்றது அதனைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

பி - ம்.—[1]உளதன்று. [2]மார்பமுன்றாழ்ந்து. (கரு)

கசு.—அநுமான் கடல்கடக்க மேலெழுதல்.

வால்விசைத் தெடுத்து வன்றாண் மடக்கிமார் பொடுக்கி மானத்
[1]தோள்விசைத்துணைகள் பொங்கக் கழுத்தினைச்சுருக்கித் [2]தூண்டுங்
கால்விசைத் தடக்கை நீட்டிக் கட்புலங் கதுவா வண்ண
மேல்விசைத் தெழுந்தா னுச்சி விரிஞ்சனு டிரிஞ்ச வீரன்.

(இ-ள்.) வீரன் - அநுமான்,—வால் விசைத்து எடுத்து - (தனது)வாலை வேகமாக உயரத்தூக்கியும், வல் தாள் மடக்கி - வலிமையுள்ள (தனது) கால்

களை மடக்கியும், மார்பு ஒடுக்கி - மார்பைக் குறுக்கியும், மானம் விசை தோள் துணைகள் பொங்க - பெருமையையுடைய விரைவுள்ள தோள்களிரண்டும் பூரித்து உயருமாறு, கழுத்தினை சுருக்கி - கழுத்தைச் சுருக்கிக்கொண்டும், தூண்டும் கால் விசை தட கை நீட்டி - (தனது பாய்ச்சலுக்கு உதவியாய்த் தூண்டுகின்ற காற்றின் வேகத்தைக் கொண்ட (தனது) பெரிய கைகளை முன்னே நீளச்செலுத்தியும் உச்சி விரிஞ்சன நாடு உரிஞ்ச - (தனது) தலை பிரமலோகத்தை அளாவ, கண்புலம் கதுவா வண்ணம் - (பிறர்) கண்களினால் காணமுடியாதவாறு [மிகக் வுயரத்தில்], விசைத்து மேல் எழுந்தான்-வேகங் கொண்டு உயர எழும்பினான் ; (எ று.)

அப்போது அநுமான் வாலை உயரவெடுத்துக் கால்களை மடக்கி மார்பையொடுக்கித் தோள்களை யுயர்த்திக் கழுத்தினைச்சுருக்கி இரண்டு கைகளையும் முன்நீட்டியபடி உயரவெழுந்தன னென்பதாம். உயரத்தாவி யெழுந்து செல்லும்போது நிகழுந் தன்மைகளை உள்ளபடி இனிமையாகக் கூறியிருத்தலால், இச்செய்யுள் - தன்மைநவிறசியணியாம். கழுத்தினைத் தாழ்த்துக் கொள்ளும்போது தோள் உயர்தலும், அவ்வாறு தோள உயர்கையில் மார்பு ஒடுங்குதலும் இயற்கை. தாவிப்பாயும்பொழுது வாலிலும் தோளிலும் விசையை அதிகமாகச் செலுத்தவேண்டியிருத்தலால், 'வால்விசைத்தெழுந்தது' என்றும், 'விசைததோள் துணைகள்' என்றும் கூறினார். வால் - வாலம் என்ற வடசொல்லின் விகாரம். விரிஞ்சன் - அன்னப் பறவையால் தாங்கப்படுவனென்றும், படைத்தற்கடவுளென்றும் பொருள்படும் வடசொல் கண்புலம் - கண்ணாகிய இந்திரிய மென இருபெயரொட்டு. 'மடக்கிமார்பொடுக்கி', 'விரிஞ்சனுரிஞ்ச'—பிராசம். இரண்டாமடியில் 'தோள் விசை' என வந்தது, இனவேதுகை. 'கட்புலங் கதுவாவண்ணம் மேல் விசைத்து' என்பதற்கு - கண்களின் காட்சிப்புலனுக்கு இலக்காகாதபடி அதிகமான வேகத்தைக்கொண்டு என்றலும் அமையும்; காண்பவர்களது கண்பார்வை எவ்வளவு தூரம் செல்லுமோ அதனைக் கடந்து செல்லுமாறு விரைவுகொண்டு என்க மேல் சுக - ஆஞ் செய்யுளில் "அவன் கட்புலம்பிற்பட முந்துபோனான்" என வருவதும் காண்க கதுவுதல் - பற்றுதல், உரிஞ்சுதல் - உராய்தல்

பி - ம்:—[1]தோல்விசைத்துணைகள். [2]தூண்டிக கால்விசைத்திமைப் பில்லோர்க்கும். (கசு)

கஎ.—அநுமான் சென்ற வேகத்தால் அம்லையினின்று மரம் முதலியனவும் உடன் எழுதல்.

ஆயவ னெழுத லோடு மரும்பணை மரங்க டாமும்
வேயுயா குன்றும் வென்றி வேதமும் பிறவு மெல்லா
நாயகன் பணியி தென்னு நளிர்கட லிலங்கை தாமும்
பாய்வன வென்ன வானம் படர்ந்தன [1]வெழுவ மான.

(இ - ள்.) ஆயவன் எழுதலோடும் - இவ்வனமாகிய அநுமான் உயர எழும்பியவுடனே,—அரும் பணை மரங்கள் தாமும் - அருமையான பருத்த கிளைகளையுடைய மரங்களும், வேய் உயர் குன்றும்-மூங்கில்கள் ஓங்கிவளரப் பெற்ற அம்மலையின் பெருங்கற்களும், வென்றி வேழமும் - (அம்மலையில் வாழ்கிற) வெல்லுந்தன்மையையுடைய யானைகளும், பிறவும் - மற்றுமுள்ள பொருள்களும், எல்லாம - ஆகிய இவைகளெல்லாம்,—'இது நாயகன் பணி என்ன - இவ்வாறு கடலைக்கடந்து இலங்கைக்குச்செல்லுதல் இராமபிரானுடைய கட்டளையாகுமென்று எண்ணி, நளிர் கடல் இலங்கை தாமும் எழுவ மான பாய்வன - குளிர்ந்த கடல சூழ்ந்துள்ள இலங்கையைநோக்கித் தாமும் எழுந்துசெல்வதையொக்கும்படி செல்லுகின்றன,' என்ன - என்று (காண்பவர்) சொல்லும்படி, வானம் படர்ந்தன-ஆகாயத்தை நோக்கித் தாவிச செல்வனவாயின; (எ - று.)

அநுமான் பாய்ந்துசென்ற விசையினால் மரங்களும் மலைப்பாறைகளும் அங்குள்ள யானைமுதலிய பிறபிராணிகளும் உடனெழுந்து வானத்திற்படர்ந்தது, இராமபிரானது கட்டளையைநன்குமதித்துத தாமும் இலங்கையை நோக்கி யெழுவதை யொதிருந்தது என்பதாம்: ஏதுத்தற்குறிப்பேற்றவணி. குன்று - மலையென்றே கூறினுமாம்.

கிளைகட்கு அருமை - இவ்வளவு பருமையும் நீட்சியு முடைய கிளைகள் வேறெங்கும் கிடைத்திடாமை; எட்டுதற்கருமையுமாம். நாயகன் - சராசரப் பொருள்கட்கெல்லாம தலைவன். இது நாயகன்பணி என்ன - இது இராம காரியமென்று அறிந்து என்றலுமாம். எழுவ - எழுவது: தொகுத்தல்; இரண்டனுருபு தொக்கது. மான - தற்குறிப்பேற்றவுருபு. மூன்றுமடியில் 'தாமும' எனற உம்மை - இறந்தது தழுவிய எச்சம. மற்றவை - எண்ணுப் பொருளன. பி - ம்:—[1]அழுவமான. (கஎ)

கஅ —அவ்வாறு அநுமானுடன் எழுந்த மரம்முதலியன கடலில்வீழ்தல்.

இசையுடை யண்ணல் சென்ற வேகத்தா லெழுந்த குன்றும்
பசையுடை மரனு மாவும் பல்லுயிர்க் குலமும் வல்லே
திசையுறச் சென்று சென்று செறிகட லிலங்கை சேரும்
விசையில வாகத் [1]தள்ளி வீழ்ந்தன வென்ன வீழ்ந்த.

(இ - ள்.) இசை உடை அண்ணல் - கீர்த்திபெற்ற பெரியவனான அநுமான், சென்ற - தாவிப்போன, வேகத்தால்—, எழுந்த - உடனெழும்பிய, குன்றும் - மலைப்பாறைகளும், பசை உடை மரனும் - பசுமையையுடைய மரங்களும, மாவும் - மிருகங்களும், பல் உயிர் குலமும் - மற்றும் பலவகைப் பட்ட பிராணிவர்க்கங்களும்,—வல்லே - விரைவாக, திசை உற சென்று சென்று - (அநுமான செல்கின்ற) அத்தெற்குத்திக்கிற் பொருந்தும்படி போயப்போய், கடல் செறி இலங்கை சேரும் விசை இல ஆக - கடலினுற்

சூழப்பட்ட இலங்கையை யடைவதற்கு வேண்டிய வேக மில்லாதனவாய், தள்ளி வீழ்ந்தன வென்ன - தள்ளப்பட்டுக் கீழ்விழுந்தன போல, வீழ்ந்த - (கடலில் ஆகாசங்கு) விழுந்திட்டன; (எ - று.)

அநுமான்சென்றவிசையால் உடனெழுந்துசென்ற குன்று முதலானவை, அநுமானைப்போல இலங்கைசேரும் விசையிலலாமற் பிறரால் தள்ளப்பட்டனவோ வென்னும்படி இடையிலேயே கடலில் விழுந்திட்டன வென்க; இதுவும - ஏதுத்தற்குறிப்பேற்றவணியே. விசையிலவாக வீழ்ந்தமைக்குத தள்ளப்பட்டமையைக காரணமாகக கூறியமை காண்க. 'குன்று' என்றது - இங்கு, அம்மகேந்திரமலையின் பெருங்கற்களை; கீழ்ச்செய்யுளிலும இவ்வாறே; "கல்லும்" என அடுத்தகவியில் வருதல் காண்க. இவைகளெல்லாம் விழுந்தது கடலி லென்பது, மேல் "புணரிபொங்கத தூவின" என்பதனாலும் அமையும. சென்று சென்று - அடுகு, பன்மைபற்றியது. 'பல்லுயிர்க்குலம' என்றது, அம்மலையில்வாழ்ந்த ஊர்வன முதலியவற்றை. பசை - பிசினுமாம். 'தள்ளி வீழ்வன வென்ன' வீழ்ந்த, வீழ்ந்தன.

பி - ம்:—[1]'தாழ்ந்துவீழ்ந்தன' என்றும் பாடமுண்டு. (கஅ)

கக—அவ்வாறு கடலில்விழுந்த பிராணிகள்முதலியவற்றின் வருணனை.

மாவொடு மரனுங் கல்லும் வல்லியு மியாவு மற்றும்
போவது புரிந்த வீரன் விசையினாற் புணரி பொங்கத்
தூவின கீழு மேலுந் தூர்த்தன சுருதி யன்ன
சேவகன் சீறு முன்னஞ் சேதுவுந் தெரிந்த மாதோ.

(இ - ள்.) போவது புரிந்த வீரன் விசையினால்-மேலெழுந்து செல்லத தொடங்கிய அநுமானது வேகத்தினால், (அம்மலையின்மீ திருந்து உடன் செல்லத்தொடங்கிய), மாவொடு - மிருகங்களும், மரனும் - மரங்களும், கல்லும்-கற்களும், வல்லியும் - கொடிகளும், மற்றும் யாவும - மற்றுமுள்ளனவான எல்லாப்பொருள்களும், புணரி பொங்க - சமுத்திரம் பொங்கும்படி, தூவின - விழுந்தனவாய், மேலும் கீழும் தூர்த்தன - (அச்சமுத்திரததை) மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் நிரம்பும்படிசெய்து, சுருதி அன்ன சேவகன் சீறுமுன்னம் சேதுவும் தெரிந்த - வேதங்களையொத்த வில்வீரனாகிய இராமபிரான் (வந்து) கோபிததற்குமுன்னமே யுண்டானதொரு சேதுவாகவும் காணப்பட்டன; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

கீழ்க்கூறியபடி வரிசையாய் மரங்களமுதலியவை விழுந்து கடலைத் தூர்க்கவே, இராமபிரான் சீறுவதற்கு முன்னமே சேது உண்டானாற்போலக் காணப்பட்ட தென்பதாம். மரங்கள முதலியவை விழுந்துகிடத்தலை, சேது வுண்டானதாகக் கற்பித்துக்கூறியது - தற்குறிப்பேற்றவணி. இனி உண்டாகப்போகின்ற அத்தசசேது இராமபிரான் சீறியபினபு தோன்றுவது; இதுவோ சீறுமலிருக்கையிலேயே தோன்றியது என இவவிரண்டற்கும

வேறுபாடுதோன்றக் கூறியது, வேற்றுமையணியின்பாற்படும்: (சம்பூராமாயணத்தில் "அநுமான் சென்ற விசையால் மரம் முதலியன கடலில் ஆங்காங்கு விழுந்திருப்பவை, இராமபிரான் இனிக்கட்டப்போகின்ற சேதுவுக்காக நூல் பிடிப்பதற்கு நாட்டிய முளைகள் போலும்" என இச்செய்யுளினும் சிறிது கருத்து வேறுபடக் கூறியுள்ளது.)

'வீரன் விசையினாற் போவது புரிந்த' என்று எடுத்து 'மா' முதலியவற்றோடு இயைபததலுமாம். சுருதி=ஸ்ருதி ; எழுதாக்கிளவியாய்க் குருஶிஷ்ய கிரமத்திலேயே கேள்விமூலமாய் வருவதென வேதத்துக்குக் காரணக்குறி. சுருதியன்ன சேவகன் - வேதங்களைப்போலவே நிததியனான வீரன்; ஒருவராலுஞ் செய்யப்படாது எப்பொழுதும் ஒருபடிப்படநிற்கும வேதம், பரப்பிரஹ்மத்தின் சொரூபமான இராமபிரானுக்கு உவமை. இனி, 'சுருதியன்ன சேவகன்' என்பது அநுமானையே யுணாததுவதாககொண்டு, இராமபிரான் சீறியபின் சேது தோன்றிறறு; இராமதூதனான அநுமான் சீறுவதற்கு முன்னமே சேது தோன்றிற்று என நயமபடக் கருததுக்கூறினுமாம் : பெரிய திருவடியை வேதசொரூபியெனக் கூறியிருத்தலால், சிறியதிருவடியாகிய அநுமானை 'சுருதியன்ன சேவகன்' என்னத்தகும்: "சுருதியன்ன மாருதி" எனபர் மேல் கிஙகராவதைப்படலத்தும. சேதுவும, ஊம்மை-உயாவு சிறப்பு ;இறந்ததுதழுவிய எசசமுமாம. சேது - ஸேது : வடசொல்; அணை.

இராமபிரான் சீறிச் சேதுகட்டிய வரலாறு:—கடல்கடந்து செல்கின்ற அநுமான் சீதையைக கண்டு - மீண்டுவந்து செய்திகூற, உடனே இராமபிரான் பெரிய வானரசேனையைச் சித்தப்படுத்திக்கொண்டு புறப்பட்டுத் தென்கடற்கரைசேர்ந்து எழுநாள் உபவாஸமாககிடந்து வேண்டினவிடத்தும வருணன் அப்பிரஸந்நனானதனால் ஆக்கினேயாஸ்திரத்தைககொண்டு கடலையெரிததிடுமாறு முயன்று, அஞ்சிச் சரணமடைந்த வருணன் சொல்லியபடி வாநரங்களைககொணடு மலைகளைக்கொணர்ந்து அணைகட்டுவித்தனனென்பதாம். (கக)

உ0.—தன் விசையினாற் கடல்கிழிய, அநுமான் நாகலோகங் காணுதல்.

கீண்டது வேலை நன்னீ ரீழுறக் கிடந்த நாகர்
வேண்டிய வுலக மெங்கும் வெளிப்பட மணிகண் மின்ன
வாண்டகை யதனை நோக்கி யரவினுக் கரசர் வாழ்வுங் [டான்.
காண்டகு தவத்த னானை னியானெனக் கருத்துட் கொண்

(இ - ள்.) வேலை நல் நீர் - சமுத்திரத்தின மிக்கநீரானது, கீண்டது - (அநுமான்சென்ற விசையினாற்) கிழிபட்டது ; (அதனால்), கீழ் உற கிடந்த - (அக்கடலின்) கீழாகப் பொருந்தியுள்ள, நாகர் வேண்டிய உலகம் எங்கும் - நாகசாதியார் விரும்பிவாழ்கின்ற பாதாளலோகம்முழுவதும், வெளிப்பட - வெளிப்பட்டுததோன்றவு ம, மணிகள் மின்ன - (அந்நாகங்களின் முடிமீ

துள்ள) மாணிக்கங்கள் (அங்குப்) பிரகாசிக்கவும், ஆணதகை - ஆணமைக் குணமுள்ளவனான அநுமான், அதனை நோக்கி - அவ்விடத்தைப்பாராது,— 'யான்—,—அரவினுக்கு அரசா வாழ்வும - சாப்பங்களுட்சிறந்தவாகள வசிக் கின்ற நாகலோகத்தையும், காணதகு - பார்க்கத்தகக, தவததன் ஆனேன் புண்ணியதததையுடையவனாய்விட்டேன்', என - என்று, கருததுள் கொண டான - மனத்தி லெண்ணினான் ; (எ - று.)

அநுமான், தான் பாய்கின்ற விசையினாலே அந்தசசமுததிரம் கிழிபடப் பாதாளலோகமும் வெளிப்பட்டு மாணிககங்களும் விளங்கக்கண்டு 'நாம இந்த நாகலோகததையும் காணக் கிடைத்தது என்ன பாக்கியம்!' என மகிழ்ந்தன னென்பதாம். அநுமான் நாகலோகததை இன்னவாறு கண்டன னென் பதை 'கீண்டதுவேலைநன்னீர்' என்ற வாகக்கியம் விளக்கிநிறபது - தொடர் நிலைச் செய்யுட்குறியணியாம் ; நாகா - படமும் வாலு முடையராய் மனித வடிவமும் தெய்வப்பிறப்புமாயப் பாதாளலோகததில் வசிக்கின்ற சர்ப்பசாதி யார். சுவாக்கலோகததைக் கண்டதுமாததிரமன்றியென்ற பொருளைத தருத லால், 'நாகர்வாழ்வும்' என்ற இடததது, உம்மை - இறந்ததுதழுவிய எசசப் பொருளது. (உ௦)

உக.—அப்போது அநுமானைக்கண்ட நாகசாதியாரின் அச்சம்.

வெய்தின்வான் சிறையி னானீர் வேலையைக் கிழிய வீசி
நொய்தினா ரமுதங் கொண்ட நோன்மையே நுவலு நாக
ருய்துநா மென்ப தென்னே யுறுவலிக் கலுழ னூழி
னெய்தினா னெமென் றஞ்சி மறுக்கமுற் றிரியல் போனா.

(இ - ள்.) (கருடன்), வான் சிறையினால் - (தனது) பெரிய இறகுகளி னால், நீர் வேலையை - ஜலமயமான சமுததிரததை, கிழிய வெய்தின வீசி - பிளவுபடுமபடி பலமாக மோதி,(பின்பு அவ்வழியாகவேபாதாளலோகததிற்கு), ஆர் அமுதம் நொய்தின் கொண்ட - கிடைத்தற்கு அருமையான தேவாமிரு தத்தை விரைவிற் கவர்ந்துகொண்டுவந்த, நோன்மையே - வலிமையையே, நுவலும் - (அச்சததால் எப்பொழுதும) பாராட்டிக்கூறுகிற, நாகா—, (சமுத திரஜலம்கிழியும்படி அநுமான் வேகமாகச்செல்லுகையில் அவனைநோகி),— 'உறுவலி கலுழன் - மிககவலிமையுள்ள (நமது பகைவனாகிய) கருடன், ஊழின் - (நமது) விதியினால், எய்தினன் ஆம் - (மீண்டும்) வந்தவனாவான்; (இனி), நாம் உய்தும் என்பது என்னே - நாம் பிழைததிருப்போ மென்பது தான் என்ன நிச்சயம்?' எனறு - என்றுசொலலி, அஞ்சி - பயந்து, மறுககம உற்று - மனக் கலககங்கொண்டு, இரியல் போனா - (ஓரிடததில நிலைதத லின்றிச்) சிதறி யோடினார்கள ; (எ - று.)

அநுமான் கடல்நீர்பிளவுபடும்படி விரைந்து ஓடிச்செல்வதைக் கண்டு, நாகசாதியா, 'முன்பு கருடன் கடல்கிழியும்படி சிறகடித்து அமிருததததைக

கொணர்ந்து அடிமையினின்று நீங்கி நமமை நமது நா அறும்படி செய்து கொல்லதொடங்கினனே! அவனேவருகின்றதுபோலக் காணகின்றதே! இனி எப்படி நாம் பிழைப்போம்?' என்று நடுங்கி நான்குபக்கங்களிலும் சிதறியோடினார்க ளென்பதாம். அநுமானைக்கண்டு கருடனென்று அஞ்சிய தாகக் கூறியது - மயக்கவணி. "வெய்தின் அமுதங்கொண்ட நோன் மையே நுவலும்' என்ற அடைமொழி அந்நாகர் இரியல்போதற்கு உரிய வரே யென்ற கருத்தைத் தெரிவிப்பது - கருத்துடையடைமொழியணி. உய் தும் - இங்கு எதிர்காலங்காட்டும் 'தும' விகுதிபெற்ற உளப்பாட்டுத் தன்மைப் பன்மைமுற்று. என்னே, ஏகாரம் - இரக்கம். கலுழன் - கருடன்; விகாரம்.

'சிறையினால் நீர்வேலையைக் கிழியவீசி நோய்தீர் ஞாழுதங்கொண்ட கதை:—காசிபமுனிவரது மனைவியராகிய விநதைக்கும் கத்துருவுக்கும் வானத்திற சென்ற உச்சைச்சிரவ மென்ற தேவலோகத்துக் குதிரையின வாலினது நிறத்தைபபற்றி யுண்டான விவாதத்தில் கத்துருவென்பவள் அக குதிரையின்வாலைச் சுறறிக்கொண்டு கருநிறமாகத் தோன்றுவிக்குமாறு தனது புதல்வராகிய கருநாகங்களை யேவிப் பந்தயத்தை வென்றனளாக, அதனால் அக்கத்துருவுக்கு அடிமையாய்விட்ட விநதையும் அவளது புதல்வ னான கருடனும் கத்துருவையும் அவளது புதலவரான நாகங்களையும் சுமந்து செல்லவேண்டிநேரிட, அதுகண்ட கருடன், அவ்வடிமையினின்று நீங்கு மாறு அந்நாகங்களின்மொழிப்படியே அமிருததைக் கொணருமாறு அங்கு நின்று தேவலோகத்துக்குச்சென்று தேவர்களுடனபொருது எல்லாரையும் வென்றபொழுது, தேவேந்திரனது வேண்டுகோளினால் அமிருததை மீட் கும் உபாயத்தை அவனுக்குக்கூறி, தான சர்ப்பங்களை யுணணுமாறு அத தேவேந்திரனிடத்தினின்று வரமும் பெறறு, அங்குநின்று அமிருதத்தை யெடுத்து வந்து பாதாளலோகத்தையடைந்து அமிருததைத் தருபபையின் மீது அந்நாகங்களின்முன்னா வைத்திட்டுத் தமது அடிமைத்தன்மையை நீங்கிக்கொண்டு அவர்களையெல்லாம் அமிருததையுணணுதற்காக ஸ்நானஞ் செய்து வருமபடி தந்திரமாகச் சொல்ல, அந்நாகங்கள் மூழுகுவதறகுப போயிருக்கையில், கருடனதுமொழியின்படியே தேவேந்திரன் அங்குவந்து அமிருததையெடுத்துச் சென்றுவிடவே, மூழுகச்சென்றநாகங்கள் விரைந்து வந்து பாரத்து அமிருதமில்லாமையைக் கண்டு வருத்ததோடு அது வைத் திருந்த இடத்தை நக்கியதனால் அத்தருப்பை அவர்களது நாவை அறுத்து விட, அவர்கள் பிளவுபட்ட நாவையுடையராய்க் கருடனது உபாயத்தை நினைந்து அச்சமும் நா அற்றதனாற் பெருந்துயரமு மடைந்தன ரென்பதாம். (உக)

உஉ.—அநுமான் சென்ற விசையினால்,
கடல்நீர் இலங்கையில் மோதுதல்.

துள்ளிய மகர மீன்க டுடிப்பறச் சுறவு தூங்க
வொள்ளிய "பனைமீன் றுஞ்சுந் திவலைய ஊழிக் காலின்

வள்ளுகிர் வீரன் செல்லும் [3]விசைபொரு மறுகி வாரி
தள்ளிய திரைகண் முந்துற் றிலங்கைமேற் றவழ்ந்த மாதோ.

(இ - ள்.) (அப்போது),—வள் உகிர் வீரன் ஊழி காலின் செல்லும் விசை பொரு - கூரிய நகங்களையுடைய வீரனான அநுமான் யுகாந்தகாலத்துப் பெருங்காற்றுப்போல விரைந்து செல்லுகின்ற வேகத்தைத் தாங்கமுடியாமல்,— துள்ளிய - (சிறிதும் அடங்காது) துள்ளிக்கொண்டிருந்த, மகரம் - முதலையும், மீன்கள் - சாதாரணமீன்களும், துடிப்பு அற - (மரணவேதனையினால்) துள்ளுதல் ஒழியவும், சுறவு - சுறாமீனகள், தூங்க - (ஓரிடத்தில்நிலையாது) தத்தளிக்கவும, ஒள்ளிய பனைமீன் - ஒளியையுடைய பனைமீன்கள், துஞ்சும் - இறந்துபடுவதற்கு இடமான, திவலைய - நீர்த்துளிகளையுடைய, வாரி - சமுத்திரம், மறுகி - கலங்கி, தளளிய - வீசியடித்த, திரைகள் - அலைகள்,—முந்துஉற்று - (அநுமானுக்கும்) முற்பட்டுச் சென்று, இலங்கைமேல் தவழ்ந்த - லங்காநகரத்தினமேல் மோதின; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

அநுமானது மிக்கவேகத்தா லெழுந்த காற்றினால், கடலினலைகள் அவனினும் முற்பட்டு இலங்கையில்மோதின என்பதாம். 'தூங்க' என்பதற்கு நிலைபெயரமாட்டாது ஓரிடத்திலேகிடக்க வென்றும், இறக்க வென்றும் பொருள் கொள்ளலாம். பனைமீன் - யானைமீ னெனப்படும் பெருமீன். இறத்தலைத் துஞ்சுதலென்பது, மரூஉவழக்கு; மீளவும எழுந்திராத பெருந்தூக்கமென்க. துள்ளிய - துள்ளு மியல்பினவான வென்க. மேல் சுறவு பனைமீன் என வருதலால், 'மீன்' என்றது - அவையொழிந்த மீனகளைக் குறித்தது; அன்றி, மகரமாகிய மீ னெனவுமாம். 'வீரன்செல்லும் விசைபொரு' என்றது - மகரமீன்கள் துடிப்பறுதல், சுறவுதூங்குதல், பனைமீன் துஞ்சுதல் என்பவறறிற்கும், வாரிமறுகுதற்கும் காரணம. பொரு=பொருமல்.

பி - ம்:—[1]துள்ளுறுமகரமீன்கடுடிப்புற. [2]பனைமீன்றுஞ்ச. [3]விசைபொர.

உ௩.—இதுழுதல் ஒன்பது கவிகள் - ஆகாயத்திற் செல்லும் அநுமானது தோற்றத்தின் வருணனை.

இடுக்குறு பொருள்க ளென்னு மெண்டிசை சுமந்த யானை
நடுக்குற விசையிற் செல்லு நாயகன் றூத னாக
மெடுக்குறு கால வன்காற் றிடியொடு மொடிய வந்நாண்
முடுக்குறக கடலிற் செலலு முத்தலைக் கிரியு மொத்தான்.

(இ - ள்.) (இவ்வாறு அநுமான் விசையாகச்செல்வதனால்), இடுக்குறு பொருள்கள் என் ஆம் - (உலகததிலே) இடையிலுள்ள சராசரப்பொருள்கள் யாதாய்முடியுமோ? எண திசை சுமந்த யானை - எட்டுதிக்குக்களின் கடையெல்லையி லிருந்துகொண்டு (உலகதனைத்த) தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்களும், நடுக்கு உற - (அசைத்தினால்) நடுக்கமடையும்படி, விசையின் செல்லும் - மிக்க வேகததோடு (ஆகாயமார்க்கமாகப்) போகின்ற, நாயகன் தூதன்

இராமபிரானது தூதனாகிய அநுமான்,—நாகம் எடுக்குறு காலம் - ஆதிசேஷனோடு பிரதிக்கினைசெய்த காலத்திலே, வல் காற்று - மிகக்கடுமையாக வீசிய வாயுவினால், இடியொடும் ஓடிய - (மேருகிரியின் மூன்றுசிகரங்கள்) பேரொலியோடு ஓடிந்துபோக, அ நாள் - அப்பொழுது, *(அவ்வாயுவின் விசையினாலேயே), முடுக்குற கடலில் செல்லும் - வேகமாகததென்கடலிலே சென்று சோகின்ற, முத் தலைக் கிரியும்-திரிகூடபருவதத்தையும், ஒத்தான்—; (எ-று.)

அநுமான் சென்ற விசையினால் அஷ்டதிக்கஜங்களுமே கலங்கின வென்றால், மற்றைய சாதாரணமானபொருள்களின் நிலைமை யாதாகுமோ? இவ்வாறு மிககவிரைவுடன்செல்லும் அநுமான், முன்பு ஆதிசேஷனுடன் பிரதிஜ்ஞைசெய்து வாயுபகவான விசையாகமோதியடிக்க ஓடிபட்டுத தன்னுடைய மேருவின் சிகரமான திரிகூடபருவதம் தென்கடலைநோக்கிச செல்வது போன்றிருந்தன னென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. 'அஷ்டதிக்கஜங்களுமே நடுங்கின வென்றால், மற்றைப்பொருள்களின் தன்மை எவ்வாறாய்த்தான் முடியுமோ?' என்று தண்டாபூபிகாநியாயம்படக் கூறியதனால், 'இடுக்குறுபொருள்களென்னும் எண்டிசைசமந்தயானை நடுக்குற விசையிற் செல்லும்'என்றதொடர்-தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. [தண்டாபூபிகாநியாயமாவது - தடியை விழுங்கியமை கூறவே அதிற்கட்டியிருந்த பணியாரங்களை விழுங்கியமை தானே பெறப்படுதல் போல்வன.]

எண்திசை யானைகள்—ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம, அஞ்சனம், புட்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதீகம் என்பன; இவை முறையே கிழக்கு முதலிய எட்டுதிக்குகளில் நின்று பூமியைத்தாங்குவன வென்று அறிக. 'இடியொடும ஓடிய' என்பதற்கு - இடித்தலினால் [முறிதலினால்] ஓடிய எனக் கொள்ளினுமாம். நாகம் எடுக்குறு காலம் என்பதற்கு - ஆதிசேஷன் (தனதுதலைகளைச சற்றே) தூக்கிய சமயதில் என்றும் பொருள் கூறலாம். 'நாகம் எடுக்குறு காலம வல் காறறு இடியொடும்' என்பது - மேருமலையைப் பெயர்ததற்கு உரிய காலததுக் கடுங்காறறு மோதுதலினால் என்றும், ஆதிசேஷனைத தலைபெயர்கத்தொடங்கிய வலிய காற்று வீசுதலினால் என்றும் பொருள்படும். முத்தலை - 'த்ரிகூடம' என்பதன் மொழிபெயர்ப்பு. அநுமானுகியமலைக்குத தலையொன்றும் தோள்களிரண்டுமாகிய மூன்றையும் மூன்றுசிகர மெனக் கருதுக. (உ௩)

உ௪. கொட்புறு புரவித் தெய்வக் கூர்நுதிக் குலிசத் தாற்குங்
கட்புலங் கதுவ லாகா வேகத்தாற் கடலு மண்ணு
[1]முட்பதங் கூட்டி யண்ட முறவுள செலவி னொற்றைப்
புட்பக விமானந் தானவ் விலங்கைமேற் [2]போவ தொத்தான்.

(இ - ள்.) கொட்பு உறு-மண்டலமாகப்போதலைப் பொருந்திய, புரவி - (உசசைசசிரவமென்னும்) வெள்ளைக்குதிரையையுடைய, தெய்வம்கூ

நுதி குலிசத்தாற்கும் - தெய்வததன்மையையும் கூரியநுனியையுமுடைய வசிராயுததைதை யேந்தியவனான இந்திரனுக்கும், கண் புலம் கதுவல் ஆகா - கணகளினாற் காணமுடியாத, வேகத்தால் - வேகததோடு,—கடலும் மண்ணும் உளபதம் கூட்டி - சமுததிரமும் பூமியும் தனது கால்களினுள்ளே யாம்படி, அண்டம உற உள - இவ்வண்டங்களையெல்லாம் ஒருங்கேகடக்குமாறு (தான்) கொண்டுள்ள, செலவின் - போக்கினால்,—(அவ்வநுமான்) ஒற்றை புட்பக விமானம் - தனிப்பட்ட புஷ்பகமென்ற விமானமானது, அ இலங்கைமேல் - அந்த இலங்காபுரியைநோக்கி, போவது - போவதை, ஒததான்—; (எ - று.)

ஆயிரங்கணணனான இந்திரனும காணமுடியாதபடி மிககவேகததுடன் அநுமான் இலங்கைநோகிசசெல்வது, வெறும்புஷ்பவிமானம் வானததுப் போவதுபோனறிருந்த தென்பதாம்; தந்துறிப்பேற்றவணி. கடல்கடக்கும் போது அநுமான் கொண்ட வேகம பூமி சமுததிரம் அண்டம் ஆகிய எல்லாவற்றையும கடக்கததக்க அளவினதாயிருந்த தென்பது, 'வேகததாற் கடலு மணணு முட்பதங்கூட்டி யண்டமுறவுள செலவின்' என்றதன் கருத்து. "வீரன்முடுகியவேகம் வெய்யோரிலங்கையினளவன்று" என்பா மேலும்.

விமானம் - தேவரூர்தி. புட்பகம்—புஷ்பகம்; வடசொல். எத்தனைபோ ஒருங்கு ஏறினாலும் அததனை போக்கும் தான் வளர்ந்து இடங்கொடுக்குந் தெய்வததன்மையுடையதாய், உலகமனைத்தையும் தனதகத்தேகொள்ளுமபடி மிகப்பெரிதாய் வளாந்து பறந்து செல்லும் புட்பகம், அநுமானது பெருவடிவுககு ஏற்ற உவமையாம். தன்மேலேறியவர் நினைத்தவிடததில் அவாநினைததபடி செல்லவல்லதான இது, குபேரனது தவத்துககு உவந்த பிரமதேவன் அவனுக்குத் தந்தது; இதனை, ராக்ஷஸராஜனான ராவணன் தான் திக்விஜயம் செய்தகாலததில் அவனிடததினின்று பறிததுக்கொண்டனன். அவ்விமானம அடிக்கடி இராவணனை யேற்றிகொண்டு இலங்கையினின்று வெளியிலும், வெளிப்புறததினின்று இலங்கையிலும் செல்லு மாதலால், வெளிப்புறத்தினின்று இலங்கைககுச செல்லும் அது இலங்கையை நோக்கிச் செல்லும் அநுமானுக்கு உவமையாயிறறு. அநுமானொருவனே செல்பவ னாதலால், அவனுக்கு தன்மீது ஒருவருமின்றிச செல்லும் புட்பகததை உவமைகூறினா. இனி, கடலும மணணும் உள் பதம கூட்டி - கடல்களையும் (கடல் சூழ்ந்த) உலகங்களையும் தனது உள்ளிடததிலே சேரக்கொண்டு, அண்டம் உற உள செலவின் - ஆகாயததையளாவ உயாந்துசெல்லுதலையுடைய, ஒற்றை - ஒப்பற்றதான என்றும் பொருள் கொள்ளலாம், கொட்பு - மண்டலகதி.'கட்புலங்கதுவலாகா வேகத்தால்'—"கட்புலங்கதுவாவண்ணம்" என்றார் முன்னும்.

பீ - ரீ:—[1]உட்படக்கூடியண்டம. [2]போவதொத்த. (உச)

உரு. விண்ணவ ரேத்த வேத முனிவரா் வியந்து வாழ்த்த
மண்ணவ ரிறைஞ்சச செலலு மாருதி மறமுட் கூர

வண்ணல்வா ளரக்கன் றன்னை யமுக்குவா மின்ன மென்னுக்
கண்ணுத லொழியச் செல்லுங் கயிலையங் கிரியு மொத்தான்.

(இ - ள்.) விண்ணவர் ஏத்த - தேவர்கள் துதிக்கவும், வேதம் முனிவரர் வியந்து வாழ்த்த - வேதங்களில் வல்லவரான இருடிச சிரேஷ்டர்கள் அதிசயித்து ஆசிசொல்லவும், மண்ணவர் இறைஞ்ச-இப்பூவுலகத்தவர் வணங்கவும், செல்லும்-(வானத்துச) செல்லுகின்ற, மாருதி-அநுமான்,—மறம் உள் கூர - பகைமை மனத்தில் மிக்கதனால், 'அண்ணல் வாள் அரக்கன் தன்னை - பெருமையிற சிறந்தவனான கொடிய ராக்ஷஸனாகிய ராவணனை, இன்னம அமுக்கு வாம் - இன்னமும் நசுக்குவோம்', என்னு என்று எண்ணி, கண் நுதல் ஒழிய செல்லும் - நெற்றிக்கண்ணனான சிவபிரானை விடுத்தனியே செல்லுகின்ற, கயிலை அம்கிரியும் - அழகிய கைலாசமலையையும, ஒத்தான் - போன்றான்.

பெருவடிவுகொண்ட அநுமான் இலங்கையை நோக்கிச சென்றது, தன்னை முன்னொருகாற பெயர்தெடுத்த இராவணனை அக்காலத்து அழுத்தியதோடு திருப்திப்படாமல் இன்னமும் அமுக்கவேண்டுமென்று கைலாசமலை அவன்மீது வயிரங்கொண்டு சிவபிரானின்றித தனியேசெல்வதையொத்திருந்த தென்பதாம் இது - தற்குறிப்பேற்றவணியே. தமது தகுதிக்கு ஏறப விண்ணவர் ஏத்துதலும், முனிவரர் வாழ்த்துதலும், மண்ணவர் இறைஞ்சுதலும் செய்தனரெனக. தமது பெருமபகைவன் அழிதற்கு முதற்காரணமா யிருத்தலால், அநுமானை விண்ணவா ஏத்துவாராயினா. திரிலோக கண்டகனான இராவணனை நசுக்கியழிக்குந்திறத்தில் யாவரும் மனமகிழ்வரென்க. முன்னாச சிவபிரான் இராவணன் சாமகானஞ்செய்ததற்கு உவந்து அவனைக கால்தளர விட்டிட்டமை கருதி, கைலாசகிரி இபபொழுது அவனையமுக்குதற்கு அப்பிரானின்றித் தான் தனியே சென்றதென்க. இராவணனை யழிக்கக் கருதிச்செல்லும் சத்துவகுணப் பிரதானனான பெரிய அநுமானுக்கு, அங்ஙனங கருதிசசெல்லும் வெளளிமலையாகிய கைலாசத்தை உவமைகூறுதல் சாலும். இப்பொழுது அநுமான் எவரையும் மேற்கொண்டு செல்லாமை, கருததககது. மறம் - வைரம்; கறுவு.

மாருதி - வாயுவின்குமாரன் வடமொழித்தத்திதாந்தநாமம; மாருதன் - வாயு கேசரியென்ற வாநரவீரனது மனைவியாகிய அஞ்சனாதேவியினிடத்தில் வாயுதேவனருளால் இவ்வநுமான தோனறினனென உணர்க இவன், வாயுவினம்சத்தோடு ருதிராமசமு முடையவன். வாள் அரக்கன் - (சிவபிரானாற் கொடுக்கப்பட்ட சநதிரகாசமென்னும்) வாளாயுததததையுடைய இராவணனெனினுமாம். (உரு)

உசு. மாணியாம் வேடந் தாங்கி மலரயற் கறிவு மாண்டோ
ராணியா யுலகுக் கெலலா மறமபொரு ணிரபபு மண்ணல்
சேணுயர் நெடுநா டீர்ந்த திரிதலைச் சிறுவன் றன்னைக்
காணிய விரைவிற் செலலுங் கனகமால வரையு மொத்தான்.

(இ - ள்.) மாணி ஆம் வேடம் தாங்கி - பிரமசாரிவடிவங்கொண்டு, மலர் அயற்கு அறிவு மாண்டு - திருமாலினது (நாபீ) கமலத்தில் தோன்றிய பிரம தேவனினும் அறிவுமிக்கு, உலகுக்கு எல்லாம் ஓர் ஆணி ஆய் - உலகங்கட்கெல்லாம் ஓர் ஆதாரமாய், அறம் பொருள் நிரப்பும்-தருமமென்றபொருளைத் தழைக்கும்படி செயயப்போகின்ற, அண்ணல் - பெருமையிற் சிறந்தவனாகிய அநுமான்,—(வானத்தில் தாவிசசெல்பவனாய),—நெடு நாள் தீர்ந்த - (தான்) நெடுநாளாகப பிரிந்திருக்கிற, சேண் உயர் திரிதலை சிறுவன்தன்னை - மிக வுயர்ந்த 'த்ரிகூடமலை' என்ற தனது புதல்வனை, காணிய-பார்த்தறபொருட்டு, விரைவின் செல்லும் - வேகமாகப்போகின்ற, கனகம மால் வரையும்-பொன் மயமான மகாமேருகிரியையும், ஒத்தான—; (எ - று.)

பொன்னிறமான பெருவடிவமுள்ள அநுமான் தென்புறமாக இலங்கை நோக்கிசசென்றது, வடபுறததிலுள்ள பொனமயமான மகாமேருமலை நெடு நாளைக்குமுன்பு தென்திசையிற் சென்ற தனது புதல்வனாகிய திரிகூடமலை யைக் காணச செல்வதுபோன் றிருந்ததென்பதாம; இதுவும், முற்செய்யு ளிற் கூறிய அணியே.

அநுமான் நிததியப்பிரமசாரி யாதலால், அவனை 'மாணியாமவேடந் தாங்கி' என்று விசேடித்தா. மலரயற்கு அறிவுமாண்டு - உருபுமயககம். உலகதீதில் தருமத்தை அறக்கெடுத்து வருத்தும ராவணுதிராக்ஷஸர் வதைக்கப் பட்டொழிதறகு இவ்வநுமான தூதுசெல்வதே முக்கிய காரணமாக நிற்ற லால், இவன், 'ஆணியாயுலகுக்கெல்லாம் அறம்பொருணிரப்பு மண்ணல்' எனப்பட்டான். அறம் பொருள் நிரப்பும் - அறததையும பொருளையும் நிறையசசெய்யும் என்றும கூறலாம். ஆணி - அசசாணி. திரிதலை - மூன்று தலை. மேருமலையினது சிகரமே திரிகூடமென ஒரு மலையாய் நிற்றலின், அதனை, கனகமால்வரையின் சிறுவனெனக் கொண்டார். (உசு)

உஎ. [1]மழைகிழித் துதிர மீன்கண் மறிகடல பாய வானங்
குழைவுறத் திசைகள் கீற மேருவுங் குலுங்கக் கோட்டின்
முழையுடைக் கிரிகண் முற்ற முடுக்குவான் முடிவுக் காலத்
தழிவுறக் கடுக்கும வேகத் தாதையு மனைய னானான்.

(இ - ள்.) மீன்கள் மழை கிழிதது உதிர - நக்ஷததிரங்கள் மேகங்களைப் பிளந்துகொண்டு கீழேசிதறவும், மறி கடல் பாய - (அலை) மடங்குகின்ற சமுத்திரம் பொங்கியெழவும, வானம் குழைவுற - மேலுலகம் குழைந்து காட்டவும், திசைகள் கீற-திக்குகளெல்லாம வெடிககவும், மேருவும் குலுங்க- மகாமேருகிரியும் நடுங்கவும், கோட்டின் முழை உடை கிரிகள் முற்ற - சிக ரங்களையும் குகைகளையுமுடைய மறறைசசாதாரணமலைகளெல்லாம் வேர் பறிந்தழியவும், முடுக்குவான் - விரைந்துசெல்பவனாகிய அநுமான்,—முடிவு காலத்து - கறபாந்தகாலததிலே, அழிவுற - (உலகம்) அழியும்படி, கடுக்கும் - விரைந்துவீசுகின்ற, வேகம் - வேகததையுடைய, தாதையும் - (தனது) தந் தையான வாயுதேவனையும், அனையன் ஆனான் - ஒத்தவனாயினான்; (எ - று.)

யாவும் அழியுங் கற்பாந்தகாலத்தில், நக்ஷத்திரங்கள் மேகமண்டலத்தைக் கிழித்தல் முதலியன நிகழுமாறு பெருங்காற்று வீசு மென்க. அந்நிகழ்ச்சிகளெல்லாம் தனதுவிசையால் தோன்றுமாறு செல்லும் அநுமானுக்கு, கற்பாந்தகாலத்து அப்பெருங்காற்றையே உவமைகூறினர் "தந்தையரொப்பர் மக்கள்" ஆதலால், வாயுகுமாரனுக்கு வாயு வுவமை ஏற்கும். முடுக்குவான்-பெயர். தாதை-தாத: என்ற வடசொல் ஈறுதிரிந்தது. பி ம்:—[1]மழைகிழித்துதிரு மீன்கள் மறிகடல் பாய. (உஎ)

உ௮. தடக்கைநா லைந்து பத்துத் தலைகளு முடையான் றானே
யடகியைம புலன்கள் வென்ற தவபபய னறுத லோடும்
கெடக்குறி யாக மாகங் கிழக்கெழு வழக்கு நீங்கி
வடகெழுந் திலங்கை செலலும் பரிதிவா னவனு மொத்தான்.

(இ - ள்.) நால் ஐந்து தட கை - பெரிய இருபதுகைகளையும், பத்து தலைகளும் - பத்துத்தலைகளையும, உடையானதானே - உடையவனான இராவணன் தானே, ஐம்புலன்கள அடக்கி வென்ற - (தனது) பஞ்சேந்திரியங்களையும் (ஐம்புலன்களிற்செல்லாதபடி) தடுத்துச் சயித்துச் செய்த, தவம் பயன் - தவத்தினது வலிமை, அறுதலோடுமெ - அழிந்தவுடனே [அழிந்துவிட்டதனால்],—கெட குறி ஆக - (இனி அவ்விராவணன்) அழிந்துபோவானென்பதற்கு அறிகுறியாக, மா கம் கிழகு எழு வழகு நீங்கி - பெரிய ஆகாயத்திலே கிழகேயுதி (தது மேற்கே அத்தமி) கிற முறைமை நீங்கி, வடகு எழுந்து இலங்கை செல்லும் - வடகேயுதித்து (த் தெற்கேயுள்ள) இலங்கையை நோகிப் போகின்ற, பரிதி வானவனும் - சூரியபகவானையும், ஒத்தான்—; (எ - று)

பெரியஒளிவடிவமுள்ள அநுமான் தென்கடலின் வடகரையிலுள்ள மகேந்திரகிரியிலிருந்து இலங்கையை நோக்கிச் சென்றது, இராவணனுக்கு நல்லகாலம கழிந்துவிட்டதனால் இனி விரைவில் அவனுக்கு நேரப்போகிற அழிவுகு அறிகுறியான உற்பாதமாகச் சூரியபகவான் கிழகேயுதித்து மேற்கே அத்தமித்தலாகிய தனது இயற்கையைவிட்டிட்டு வடக்கே யுதித்துத் தெறகே செல்வது போன றிருந்த தென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. சூரியன் தனது இயறகையில தவறி வடகேயுதித்துத் தெற்கேசெல்லுதல் போல்வன - பினனாநேருந்தீங்கை முனனமே யறிவிகின்ற தீநிமித்தங்களான உற்பாதங்களாம். அநுமான இலங்கைகுச்சென்றது இராவணநாசத்துகு ஏதுவாதலால், இவ்வாறு கறபித்தார்.

இராவணன் தனது தாயாகிய கேகசியின் சொற் கேட்டுக் கோகரணுச் சிரமமடைந்து, கோடைகாலத்துப் பஞ்சாக்கினிமத்தியிலும் கார்காலத்துத் தணணீரூடுவிலும் நின்று நிராகாரனுய் மனத்தை ஒரேநிலையில்நிறுத்தி, ஓராயிராமாண்டிறகு ஒவ்வொருதலையாகத் தனது தலைகளைக் கொய்து தீயில்

ஓமஞ்செய்து வரங்கள் பெற்றதை, 'அடக்கியைம்புலன்கள்வென்ற தவப்பயன்' என்றார். (உஅ)

உகூ. [1]புறத்துற லஞ்சி வேறோ ராணம்புக் குறைதல் போக்கி
மறத்தொழி லரக்கா வாழு மாநகர் மனுவின் வந்த
திறத்தகை யிராம னென்னுஞ் சேவகற் பற்றிச் செல்லு
மறததகை யரசன் றிண்[2]போ ராழியு மனைய னானான்.

(இ - ள்.) (ஆகாயத்தில் தாவிச்செல்லுகின்ற அவ்வநுமான்) மறம்தொழில் அரக்கா வாழும் மா நகா - பாவத்தொழிலையுடைய ராக்ஷஸர்கள் வசிக்கின்ற இலங்காநகரத்தினிடத்திலே, புறத்து உறல் அஞ்சி - (இராவணபயத்தால்) வெளியேநிற்கமாட்டாமல், வேறு ஓர் அணமபுகு உறைதல்போக்கி - வேறொருபுகலிடத்தை யடைந்துவசித்தலையும் தவிர்ந்து, மனுவின வந்த திறம் தகை இராமனென்னும் சேவகன் பற்றி - மநுகுலத்திற பிறந்துள்ள வல்லமையையும நற்குணத்தையுமுடைய இராமனென்கிற வீரனையே துணையாகப் பெறறு, (அவனது ஆதரவினால்), செல்லும - போகின்ற, அறம தகை அரசன் - தருமத்தையே (தனக்கு உரிய) குணமாகக் கொண்ட அரசனது [தருமதேவதையினது], திண் போ ஆழியும - வலிய போர்செய்தற்கு உரிய ஆஜ்ஞாசக்கரத்தையும, அனையன் ஆனான் - ஒத்திருந்தான் ; (எ - று.)

அநுமான் இலங்கைநோக்கிச் சென்றது, ராவணாதி ராக்ஷஸர்கள் தலையெடுத்ததமையால் இலங்காபுரிக்குள் நுழைவதற்கும அஞ்சி அதனை அறநீத்தும வெளியே தனித்து நிற்க அஞ்சியுமுள்ள தருமதேவதை இராமபிரானைச் சரணமடைந்து அவனையே பெருந் துணையாகப் பற்றிக்கொண்டு பின்பு தான் அந்நகரத்திற்செலுத்திய ஆஜ்ஞாசக்கரம செல்வதை யொத்திருந்ததென்பதாம் ; இதுவும் - தற்குறிப்பேற்றவணியே. ராவணாதியா வாழ்கின்ற நகரத்தில் அடியோடு அழிந்த தருமம் இராமபிரானால்தான மீண்டும தலையெடுக்கப்போகின்ற தாதலால், 'புறத்துறலஞ்சி ..இராமனென்னுஞ் சேவகற் பற்றிச்செல்லும் அறததகையரசன்' என்றார். இதனால், இராமபிரான் தாமஸம்ஸ்தாபநத்திற்காகவே திருவவதரித்தன னென்றவாறு. தருமமூர்த்தியான இராமபிரானால் ஏவியனுப்பப்பட்டு அவன் கட்டளைகொண்டு செல்லும் தூதனாகிய அநுமான், அறஞ்செலுத்ததும் ஆஜ்ஞாசக்கரமபோல்வ னென்க. இனி, [1]புறத்துறைவஞ்சி என்று பாடங்கொண்டு, புறத்து உறை வஞ்சி - (எப்போதும இராமபிரானது) சமீபத்திலேயே வசிக்கின்ற வஞ்சிக்கொடி போன்ற சீதாபிராட்டி, வேறு ஓர் அணமை புகுகு உறைதல் - வேறொரு வாழிடத்திலே [இலங்கையில் அசோகவனிகையிலே] புகுந்துவாழ்தலினாலே, மறம தொழில் அரக்கா வாழும் (அந்த) மாநகரிலே, மனுவின் வந்த திறததகை இராமனென்னும், சேவகனபறறி - சேகவனுக்காக, போகி - செலுத்தப்பட்டு, செல்லும் - செல்லுகின்ற, அறததகை அரசன திண் போர் ஆழியும் - தருமபரிபாலனத்தில் தகுதியுள்ள சுக்கிரீவமகாராஜனுடைய மிக்கவலிமை

கொண்ட ஆஜ்ஞாசக்ரகதத்தையும், (அவ்வநுமான்), அனைய ஞானன் எனப் பதவுரை கூறுதலுமுண்டு; புறத்து உறைவு அஞ்சி என்று பிரித்தால், வெளியே வசித்தற்குப பயந்து என்று பொருளாம்.

அரணம - ஸரணம்: வடசொல். மநு சூரியனது புதல்வன்: ஆதலால், 'வைவஸ்வதமநு' என்றும் வழங்கப்படுவன்; இவனே சூரிய வம்சத்து முதலரசன். மநு - இங்கு, அவனது குலத்திற்கு இலக்கணை. இனி, மனுவினிடத்தினின்று வந்த எனினுமாம். மனிதனாய்த்தோன்றிய என்றும பொருள்; காசியபமுனிவரது மனைவியருள் மநுவென்பவளிட மிருந்து தோன்றியவா மனிதரென்க ("மநூ மநுஷ்யாந் ஜநயத" என்பது, ஸ்ரீவால்மீகிராமாயணம்.) மனிதர் தவிர மறைப்பிராணிகளால் இறவாதபடி வரம்பெற்றுள்ள இராவணனைக கொல்லுதற்பொருட்டுத திருமால் இராமனாக மனிதபபிறப்பெடுத்துள்ளா னாதலால், அங்ஙனம் மனிதனாய் வந்தவனை அறத்தகையரசன் பறறுககோடாககொண்டனனென்றல் சாலும்; வேறோ ரரணம்புககு உறைதல் போக்கியதும் இதுபறறியே. தருமத்தைத் தவிர்ந்த வரை அறககடவுளே அழிக்கு மாதலால், அதன் ஆஜ்ஞாசககரம் 'போராழி' எனப்பட்டது

பி - ம்:—[2]பேராழி. (௨௧)

௩0. கேழுலா முழுநி லாவிற் கிளரொளி யிருளைக் கீறப்
பாழிமா மேரு நாண விசும்புறப படர்ந்த தோளா
ஞழிசூ ழுலக மெல்லா மருங்கனன் முருங்க வுண்ணு
மூழிநாள் வடபாற் றோன்று முவாமுழு மதியு மொத்தான்.

(இ - ள.) கேழ் உலாம் முழு நிலாவின் - ஒளிவிளகுகின்ற நிறைந்த நிலாவைப்போல, கிளர் - விளகுகின்ற, ஒளி - (தனது உடம்பின்) ஒளியா னது; இருளை கீற - இருட்டை ஒழிக்க, பாழி மா மேரு நாண விசும்பு உற படர்ந்த - வலிமை பொருந்திய மகாமேருகிரியும் (ஒப்பாகமாட்டாமையால்) வெளகுமபடி ஆகாயத்தையளாவ உயர்ந்த, தோளான் - தோள்களையுடையவ னான அநுமான்,—அருங கனல-பொறுத்தற்கரிய பெருந் தீயானது, ஆழி சூழ் உலகம எல்லாம முருங்க உண்ணும - கடலினாரசூழப்பட்ட இவ்வுலகங்கள் முழுவதும் அழியும்படி எரிககபபோகின்ற, ஊழிநாள் - கறபாந்தகாலத்தில், வடபால் தோன்றும் - வடதிசையிற் காணப்படுகின்ற, உவா முழு மதியும் பௌர்ணமியில் தோன்றுகிற பூர்ணசந்திரனையும, ஒத்தான்:—(எ - று.)

அநுமான, யுகாந்தகாலத்தில் வடபுறத்ததுதோன்றுஞ் சந்திரனை யொத் திருந்தன னென்பதாம். இலங்கைநோககிசசெல்லும்போது அநுமான் வட புறத்தினின்று தெற்கேசெல்கின்றன னாதலால், அவனுக்கு வடபுறத்து உதிக்குஞ் சந்திரன் உவமையா மென்க. இதுவும் - தற்குறிப்பேற்றவணியே. மழைமுதலியவற்றாற கடலினீர் மிகாதபடி வடவையென்னும் பெணகுதிரை

யின் முகத்தினின்று அந்நீரை உறிஞ்சுகின்ற வடவைத்தீயானது யாவும் அழியும் பிரளயகாலத்தில், 'அங்கு நின்று எழுந்து உலகங்களையெல்லாம் எரித்தழிக்கு மென்பதும், அப்பொழுது சூரியசந்திரர் முதலிய கிரகங்கள் தம்நிலைதவறி வேற்றுப்புலத்தில் உற்பாதமாகத்தோன்று மென்பதும் நூற கொள்கை. (௩௦)

௩௧. [1]அடலெலாந் திகிரி மாயற் கமைந்தன னாற்றல் காட்டக்
குடலெலா மவுணர் சிந்தக் குன்றெனக் குறித்து நின்ற [ய்வக்
திடலெலாந தொடர்ந்து செலலச் சேண்விசும் பொதுங்கத் தெ
கடலெலாங் [2]கலங்கத தாவுங் கலுழனு மனைய னானான்.

(இ - ள்.) (அநுமான்),—திகிரி மாயற்கு - (சுதரிசனமென்கிற) சக்கராயுததனையேந்துகின்ற மாயனாகிய திருமாலுக்கு, அடல் எலாம் அமைந்தனன் - (தனது வலிமைமுழுவதும் அடங்கியவனாயிருந்தும், ஆற்றல் காட்ட - (தனது) வலிமையை (த தேவாகட்கு)க் காட்டுமாறு,—அவுணர் குடல் எலாம் சிந்த - அசுராகளது குடல்கள் சரியவும், குன்று என குறிக்து நின்ற திடல் எலாம் தொடர்ந்து செல்ல - மலையென்று பெயர்கூறப்பட்டு நிறகின்ற மேடுகளெல்லாம் (தனதுவிசையாற் பெயர்ந்து) உடன்தொடர்ந்துவரவும், சேண் விசும்பு ஒதுங்க - தூரததிலுள்ள மேகங்களும் விலகிப்போகவும், தெய்வம் கடல் எலாம் கலங்க - தெய்வத்தனமையுள்ள எழுகடல்களும் நிலைகுலையவும், தாவும் - தாவிச்செல்லுகின்ற, கலுழனும - கருடபகவானையும், அனையன் ஆனான் - ஒதிருந்தான்; (எ - று.)

எப்பொழுதும திருமாலினுடனிருந்து அப்பெருமானுக்கு வாகனமாய் அடிமைசெய்தலால, கருடனுககுப் பெரியதிருவடியென்றும், இராமாவதாரததில்மாதரம் அவ்வாறு உடனிருந்து உதவுதலால் அநுமானுககுச் சிறியதிருவடியென்றும் வைஷ்ணவசம்பிரதாயததில் திருநாமம். அமிருததைத் தேவருலகததினின்று கொணாதற்காகத தேவாகளுடன் போரசெய்யச்சென்ற பெரியதிருவடியாகிய கருடபகவானை, அமிருததினுடன்தோன்றிய லக்ஷ்மியின் அம்சமான சீதாதேவியைக் காணசசென்ற சிறியதிருவடியாகிய அநுமானுககு உவமைகூறினாரென நயமகாணக. அவுணர்குடலைச் சிந்தியமை முதலியன, உபமானம் உபமேயம என்ற இரண்டிடததுகளும் ஏற்கும். "முற்றுநீ ருலகமுற்றும் விழுங்குவான் முழங்கிமுந்நீ, ருற்றதேயெனினு மண்ட முடைந்துபோ யுயர்ந்ததேனும், இற்றைநும்மருளு மெங்கோ னேவலு மிரணடுபொலுங, கற்றைவாசிறைகளாகக் கலுழனிற் கடப்பல் காணீரா" என்று அநுமான் தானே தனகுக் கருடனை உவமைகூறியதைக் கிட்கிந்தா காண்டத்து மகேந்திரப்படலததிற் காணக. அடல் எலாம் திகிரியென்பதை, எலாம் அடல் திகிரி என மாற்றி - எல்லாவறறையும் அழிக்கவல்ல திகிரியெனினுமாம. கடலுகுகுத தெய்வத்தன்மை - கரையின்றியும் ஓரெல்லையில்

அடங்கி நிற்றல். பி-ம்:— [1] அடலுலாந் திகிரிமாயற் கமைந்ததன் னுற்றல் காட்ட. [2]கடகக. (௩௧)

௩௨.—அநுமான் வாலைத் தூக்கிக்கொண்டுசென்றதைப் பற்றிய வருணனை.

நாலினோ டுலக மூன்று நடுக்குற [1]வடுக்கி நாகர்
மேலின்மே னின்ற காறுஞ் [2]சென்றகூ லத்தின் விண்டு
காலினு லளந்த வான முகட்டையுங் கடக்கக் கால
வாலினு லளந்தா னென்று வானவர் மருளச் சென்றான்.

(இ - ள்.) நாகா மேலின் மேல் அடுக்கி நின்ற காறும சென்ற கூலத்தின் - தேவாகளுடையனவாய் ஒன்றன்மேலொன்றாக அடுக்கப்பட்டு (ஆறு என்ற கணககையுடையனவாய்) இருகின்ற (உலகஙகளின்) பரப்புவரையிலும் உயர்ந்துசென்ற எல்லையினையுடையதும், விண்டு காலினால் அளந்த - ஸ்ரீமஹாவிஷ்ணுவினது ஒறறைககாலினால் அளககப்பட்டதுமான, வானம் முகட்டையும் - இவ்வண்டகடாகததையும், கடக்க-கடந்து, நாலினோடு உலகம் மூன்றும் நடுக்குற காலன் வாலினால் அளந்தான் - எழுலகங்களும் அஞ்சி நடுக்கமடையும்படி (இவ்வநுமான்) காலபாசத்தையொத்த (தனது) வாலினால் அளந்திட்டனன், என்று—, வானவா மருள - தேவர்களும் திகைப்படையும்படி, 'சென்றான் - (ஆகாயததின்மீதாகத தனது வாலைத் தூக்கிக்கொண்டு) சென்றனன், (அநுமான்); (எ - று.)

'பூவுலகதிலே திருமால் தனது காலினால் அளந்த மேலுலகஙகளை யெல்லாம். இவன தனது வாலினால் அளந்தான்' என்றுசொல்லித் தேவாகளும் திகைப்படையுமாறு அநுமான் வாலைத தூகககொணடு சென்றனனென்பதாம். கூலம - கரை; இவகு - அண்டததின்மேற்புறம். வடசொல். புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜநலோகம், தபோலோகம், சததிய லோகம என மேலேயுள்ள தேவாகள் வாழ்தற்கு உரிய ஆறுலோகஙகளும் ஒன்றனமேலொன்றாய் அடுக்காக நிற்பனவாதலால், 'அடுகி நாகர்மேலின் மேல் நின்றகாறும' என்றார். அநுமானது வால் எழுலகஙகளிலும் சென்ற போது 'இது என்னோ?' என்று அவ்வுலகங்களிலுள்ளவாகள் அஞ்சுவாராயினரென்க.

விண்டு - விஷ்ணு. வடசொல்; எஙகும் வியாபித்து நிறபவனென்றபடி: இது, திருமாலினது ஐவகை நிலைகளுள் அந்தர்யாமித்வத்தைப் பற்றிய பெயராம. கம் - சுகம் அதறகு எதிரானது, அகம் - துக்கம் அஃது இல்லாதது நாகம் எனச சுவர்க்கத்திற்குக் காரணப்பெயா; வடசொல். அதில் வசிப்பவரென்ற காரணத்தால், தேவாகட்கு நாகரெனறு பெயராகும். காலன் - உயிர்களின் ஆயுட்காலத்தைக கணகககிட்டு அக்காலததில் இறுதியைச செய்பவனென, யமனுக்குக் காரணக்குறி; இச்சொல், இலககணையால், அவனது

பாசத்தை யுணர்த்திற்று. அன்றி, காலவால் - யமனபோல் (உயிர்கட்கு இறுதியைச செய்வதான) வால் எனினுமாம; மேல், அநுமான் இலங்கையில் தனதுவாலைக்கொண்டு பலவுயிர்களை யழிததொழிததல் காணக. இனி, நாலிலோடு உலகமூன்றும் நடுகுற, நாகரது மேலின்மேல் அடுக்கிநின்ற, காறும் - எல்லைவரையிலும், சென்ற—, கூலத்தின் - வாலையுடைமையால், விண்டு அளந்த வானமுகட்டையும் வாலினாற் கடந்தளந்தானென்று வானவாமருளச சென்றானெனினுமாம்; இப்பொருளில், கூலம் - லாங்கூலமென்ற வடசொல்லின் முதர்குறை. பி - ம்.—[1]அடுகுநாகா. [2]சென்றகாலத்தின். (௩௨)

௩௩ —இதுவும் அடுத்தகவியும் - அனுமானது வாலின் வருணனை.

[1]விளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால் வேத மெய்க்கு
மளித்துப்பி னனும னென்று [2]மறந்துணை பெற்ற தாயுங்
களித்துப்புன் றொழின்மே னின்ற வரக்கர்[3]கண் ணுறுவ ராமென்
றொளிததுபபின் செல்லுங் கால பாசத்தை யொத்த தன்றே.

(இ - ள்.) விளிதது - பேராரவாரஞ் செய்து, பின் - பிறகு, வேலை தாவும் - கடலைக் கடக்குமாறுசெல்லுகின்ற, வீரன் - வீரனான அநுமானது, வால் - வாலானது,—வேதம் மெய்க்கும் அளி - வேதங்களில் நிரூபிததுச சொல்லப்படுகின்ற (திருமாலினவதாரமான இராமபிரானது) கருணையாகிய, துப்பின - வலிமையைப் பெற்றுள்ள, அனுமன் என்னும் அறம - அநுமா னென்று சொல்லப்படுகின்ற தருமதேவதையை, துணை - (தனகுதது) துணையாக, பெற்றது ஆயும் - பெற்றிருந்தும்,—களிதது புல் தொழில்மேல் நின்ற அரக்கர் கணணுறுவர்ஆம என்று - கர்வங்கொண்டு இழிதொழிலையே செய்கின்ற ராக்ஷஸர்கள் (தன்னைப்) பார்க்கக்கூடுமெனறு எணணி, ஒளிதது - மறைந்துகொண்டு, பின் செல்லும் - (அவ்வனுமானது) பின்புறததிலேயே போகின்ற, கால பாசத்தை - யமனது பாசமென்ற ஆயுததததை ஒததது—.

அநுமானது வாலாகிய பாசம் அவனது பின்னே யிருத்தறகு, அரக்கரிடத்து அசசத்தினால் முன்புறத்திலிருததற்கு அஞ்சிப் பின்னே அனுமனுடம்பின் மறைவில் ஒளிததுச செல்வதாகக காரணங கற்பிததுக் கூறியது, தற்குறிபேற்றவணி. இதனால், அவ்விலங்கையிலுள்ள அரககாக்கு யமனும் அஞ்சிப் பதுங்கியுள்ளானென்பது தோன்றும் அநுமானையே அறமென்றது, இராமபிரான துஷ்டநிகிரகஞ்செய்து அறததை நிலைநிறுததுதறகுப் பேருதவியாயிருத்தலினா லென்க. அநுமனென்னும் அறம் - வஞ்சகவுயர்வுநவிற்சியணி; ஒரு பொருள் வேறொன்றாக வழங்குமாறு தனது இயற்கைவடிவை மறைத்துநிற்கின்றதென்ற வாய்பாட்டாற் கூறுவது, இதன் இலகக்கணம். காலபாசம் - வீசப்பட்டாரைத தவறாது அழிக்கவல்ல யமனது உயிரறின் வடிவமான ஒருவகை ஆயுதம்; வடசொல். கீழ் இரண்டாஞ் செய்யுளில் "அண்டமூன் திசையளைட்டு நடுங்கத தோள் கொட்டியாரத்தான்" என்று

ராதலின், இங்கு 'விளித்துப் பின் வேலைதாவும் வீரன்' என்றார். மெய்த்தல் - உள்ளபடி உணமைவிளங்க கூறுதல். அளி - திருவருள்: அது, அநுமானுக்கு முக்கிய பலம். இராமபிரான் இவனே சீதையைக் காணுதற்கு உரியவனென மதித்து மற்றை வாநரர்களினும் அநுமானிடத்து விசேட அபிமானங்கொண்டு பலவகை அடையாளங்களையும் சீதையினிடம சொல்லுமாறு எடுத்துக்கூறித தனது மோதிரத்தையும் ஈந்தனுதலால், 'அளித்துப்பி னனுமன்' என்றார். களித்தல் - கள்ளுண்ணுதலுமாம.

அனுமன் - ஹநுமாந் என்ற வடசொல்லின் விகாரம்; பிறந்தவுடனே இளஞ் சூரியனைக் கனிந்தபழமென்று கருதிப் பிடிக்கப் பாய்ந்தபொழுது அதனையறிந்து கோபங்கொண்ட இந்திரனது வசிராயுதத்தால் அடிக்கப்பட்டுச சிதைந்த கன்னமுடைமையால், இவனுக்கு இப்பெயர்; இது, இந்திரன் இட்டது. ஹநு - கன்னம், மாந் - வடமொழிப்பெயா விகுதி; கன்னத்தில் விசேஷமுடையவனென்பது, திரண்டபொருள். பி-ம்:—[1]வெளித்துப் பின. [2]அருந்துணை [3]கணணுறுவரென்ன. (௩௩)

௩௪. மேருவை முழுதுஞ் சூழ்ந்து மீதுற்ற வேக நாகங்
கார்நிறத் தண்ண லேவக் கலுழன்வந் துற்ற காலை
சோர்வுறு மனத்த தாகிச சுற்றிய சுறறு நீங்கிப்
பேர்வுறு கின்ற வாறு மொத்ததப் பிறங்கு பேர்வால்.

(இ - ள்.) அ பிறங்கு பேர் வால் - விளங்குகின்ற (அனுமானது) அந்தப் பெரிய வாலானது,—மேருவை - மேருமலையை, முழுதும் சூழ்ந்து - முறறிலுஞ் சூழ்நதுகொண்டு, மீது உறற - அதன்மேலும் கவிந்துகொண்டிருந்த, வேகம நாகம் - மிக்க வலிமையுள்ள ஆதிசேஷனுனது, கா நிறத்து அண்ணல் ஏவ கலுழன் வந்து உறற காலை - கருநிறததையுடைய பெருமையிற் சிறந்தவனுன திருமால் கட்டளையிட்டதனுல் கருடன் வந்து சேர்ந்தபொழுது, சோர்வுறும மனதது ஆகி - தளாவடைந்த மனமுடையதாய் [தான் உறுதியாகச சுற்றியிருந்ததை தளரவிட வேணடுமென்ற எண்ணங்கொணடு], சுற்றிய சுற்று நீங்கி - (மேருமலையைச) சுற்றிககொணடிருந்த சுறறைத் தவிர்ந்திட்டு, பேர்வுறுகின்ற - அப்பாற் போகின்ற, ஆறும் - தன்மையையும, ஒத்தது—; (எ - று.)

அநுமானது வாலானது, மேருவைச சுற்றிக்கொண்டிருந்து கருடன் வந்த மாத்திரத்திற் பிரிந்து செல்லுகின்ற நாகமோ வென்னுமபடி விளங்கிற்று என்பதாம்; தற்குறிப்பேற்றவணி. அநுமானுக்கு - மேருமலையும், அவனது நீண்டுள்ள வாலுக்கு - மேருவைசசுறறுதலைத் தவிர்ந்து நீட்சிகொண்ட ஆதிசேஷனும் உவமையாம். வேகநாகம் - விஷவேகமுடைய

பாம்புமாம். கார்நிறம் - காளமேகவண்ணமுமாம் அண்ணல் - எப்பொருள் கட்கும் இறைவன். கருடனைக் கண்ட வளவில் அஞ்சி நிலைகுலைதல், பாம்புகளின் இயல்பு. (௩௪)

௩௫.—இதுமுதல் மூன்றுகவிகள் - அனுமனதுவேகத்தின் வருணனை.

குன்றொடு குணிக்குங் கொற்றக் குவவுத் தோட குரக்குச் சீயஞ்
சென்றுறு வேகத் திண்கா லெறிதரத் தேவர் வைகு
மின்றொடர் வானத்தான விமானங்கள் விசையிற் றம்மி
னொன்றொடொன் றுடையத் தாக்கி மாக்கடலுற்ற மாதோ.

(இ - ள்.) குன்றொடு குணிக்கும் - மலையோடு உவமை சொல்லத்தக்க, கொற்றம் - வெற்றிபொருந்திய, குவவு - திரணமுள்ள, தோள் - தோள்களை யுடைய, குரங்கு சீயம் - வாநரர்களுள் சிறந்த அநுமான், சென்று - (கடல் கடந்து) செல்லுதல்காரணமாக, உறு - உண்டான, வேகம் திண் கால் - வேக முள்ள வலிய காற்று, எறிதர - வீசுதலினால்,—தேவர் வைகும் - தேவர்கள் தங்கியிருப்பவையும், மின் தொடர் - ஒளிவிளங்குகின்றவையும், வானத்து ஆன-(அப்பொழுது) வானத்திற் செல்பவையுமாகிய, விமானங்கள்—, விசை யின் விரைவாக, தம்மின் - தமகளுள்ளே, ஒன்றொடு ஒன்று உடைய தாக்கி - ஒன்றோடொன்று மோதியுடைந்து, மா கடல் உற்ற - பெரிய கடலிற் போய் விழுந்தன; (எ - று.)

அநுமான் கடலைக்கடக்குமாறு விரைந்துசெல்ல, அவ்விசையினாலுண் டாகுங் காற்றினால், அதிசயங்காணுமாறு வானத்தில்வந்த தேவர்களின் விமா னங்கள ஒன்றோடொன்று மோதியுடைந்து கடலில் விழுந்தன வென்ப தாம். இசசெய்யுள் - அநுமானது விசையை விளக்கவந்த தொடர்புயரீவு நவிற்சியணி. பூமியில் மிக்க அதிசயம் யாதாயினும் நிகழும்போது அதனைக் காண்பதற்குத் தேவர்கள் வானத்தில் விமானமேறிவருவரெனக் கூறுதல், நூல் வழக்கு. விமாநம் - வடசொல்: தேவரூர்தி; மேலுலகத்திலுள்ள தேவர் மாவிசைகளுமாம். 'சீயம்' என்றது, 'குரங்கு' என்பதனொடு சேர்ந்து நின்று சிறப்பை யுணர்த்திற்று; வாநரச சிரேஷ்டனென்க: புலி, ஏறு முதலியன வும, இவ்வாறுவரும். (௩௫)

௩௬.—விண்ணுலகமும் மண்ணுலகமும் அனுமனது வேகத்திற்கு அஞ்சுதல்.

வலங்கையின் வயிர வேதி வைத்தவன் வைகு நாடுங்
[1]கலங்குவ தேகு வான்றன் கருத்தென்கொ லென்னுங் கற்பான்
விலங்கயி லெயிற்று வீரன் [2]மூடுக்கிய வேகம வெய்யோ
ரிலங்கையி னளவன் றென்னு விம்பாரா [3]டிரிந்த திப்பால்.

(இ - ள்.) வலம் கையின் - (தமது) வலக்கையிலே, வயிரம் எதி - வஜ்ரமென்று சொல்லப்படுகின்ற ஆயுததைத்; வைத்தவன - பிடித்திருப்பவனாகிய இந்திரன், வைகும் - தங்கியிருக்கிற, நாடும் - தேவலோகமும்,— ஏகுவான்தன் கருத்து என்கொல் என்னும் கற்பான் - ('கடலைத்தாவிச) செல்லுகின்ற இவ்வநுமானது நினைவு யாதோ?' என்கிற எண்ணத்தினால், கலகுகுவது - கலககமடைவதாயிற்று' இம்பர் நாடு - இந்தப்பூலோகமானது,— 'விலங்கு அயில் எயிறு வீரன் - வளைந்துள்ள கூரமையான பற்களையுடைய வீரனாகிய அநுமான், முடுக்கிய - விரைந்துசெல்லுகின்ற, வேகம் - வேகமானது, வெய்யோர் இலங்கையின் அளவு அன்று - கொடியவரான ராக்ஷஸர்கள் வசிகின்ற இலங்கைவரையிலும் மாத்திரம் செல்வதற்கு உரிய அளவையுடையதன்று', என்னு என்று எணணி, இப்பால் இரிந்தது - இப்பால் விலகியோடுவதாயிற்று ; (எ - று.)

அநுமான் கடல்கடக்குமாறு முயன்றுசெனறபோது, 'இனி ராக்ஷஸவதமாகிய நமதுகாரியம் இனிதுமுடியும்' என்று எண்ணி மகிழ்ந்திருந்த தேவர்கள், அனுமானது விசையைப் பார்த்து 'இவன் இலங்கைக்குச செல்லுகின்றவன்போலக் காணப்படுகின்றிலனே !' என்று நினைந்து மனக்கலக்கங் கொண்டனர்; அவ்வாறே பூமியிலுள்ளவர்களும் 'இவன் கொண்டுள்ள வேகம இலங்கைவரையிலும் மாதத்திரம் செல்வதறகு அன்று' என்று நினைந்து அஞ்சினரென்க. இசசெய்யுளும் தொடர்புயர்வுநவிற்சியணி. இலங்கையை நோக்கிசசெல்லும் அநுமான் தாழ்ந்து செல்லாமல் மிகககவுயரததிலே செல்லுதலால், தன்மேற பாய்தற்காகத தன்னை நோக்கிததான் வருகின்றனனோவென்று தேவாநாடு -கலங்கியதாகவும் கொள்ளலாம். இமபர்நாடு இரிநதது - இந்நிலவுலகமுழுவதும அசசததாற் கலங்கிய தென்றலுமாம். முதலிரண்டடியை இம்பாநாட்டின் கருததாகக்கொண்டு உரைப்பாரு முளர். அநுமான் உயாந்து செல்லசசெல்ல இவ்வுலகம் இப்பால் இரிந்ததாகத் தோன்று மியல்பு, கருதத்தக்கது.

வலம் கை - வெற்றிபொருந்திய கை யெனினுமாம. இந்திரன் தனது பகைவர்களை அழிததொழிப்பதில் மிகக கருததுகொணடு எப்பொழுதும வசசிராயுதத்தைக் கையிலேயே வைததுளா னென வேதமும் கூறுதலால், அவனை 'வலங்கையில் வயிரவேதிவைததவன்' என்றா. 'வலங்கை' எனத திரிந்தது, எதுகை நயங்கருதி. வயிரம --வஜ்ரம், எதி—ஹேதி: வடசொற்கள். கற்பு - கற்றல்; இங்கு, இலகக்ணையால், எண்ணமென்ற பொருளைத தந்தது: கறபனை விலங்குதல் - கடைவாயினின்று வெளிப்பட்டுத் தெரிதலுமாம். இனி, விலங்கு என்பதை, விளங்கு என்பதன் போலியெனக் கொள்ளினுமாம். பி-ம்:—[1]கலங்குறவேகுவான். [2]முடுகிய. [3]இரிந்ததன்றே. (௩௬)

ங.ள்.—அனுமானது விசையினாற் கடலிற் பலபிராணிகள் உயிரொழிதல்.

ஓசனை யுலப்பி லாத வுடமபமைந் துடைய வென்னத்
தேசமு நூலுஞ் சொல்லுந் திமிங்கில கிலங்க ளோடு
மாசையை யுற்ற வேலை கலங்கவன் றண்ணல் யாக்கை
வீசிய காலின் வீந்து மிதந்தன மீன்க ளெல்லாம்.

(இ - ள்.) அன்று - (அநுமான் கடலைக காவிச செல்லுகின்ற) அக்காலத்தில், அண்ணல் யாக்கை - பெருமையிற சிறந்தவனான அவ்வநுமானுடைய உடம்பினின்றும், வீசிய—, காலின - காற்றினால், ஆசையை உற்ற வேலை கலங்க - திக்குக்களி னெல்லைவரையிலும் பொருந்தியுள்ள சமுததிரமுழுவதும் குழப்பமடைய, (அதனால்).—"உலப்பு இலாத ஓசனை - அளவில்லாத [மிகப்பல] யோசனைதூரம், உடம்பு அமைந்து உடைய - உடமபுபொருந்தியுள்ளன", என்ன - என்று, தேசமும - உலகதிலுள்ளவர்களாலும், நூலும்- சாஸ்திரங்களாலும், சொல்லும் - சொல்லப்படுகின்ற, திமிங்கிலகிலங்களோடும் - திமிங்கிலகிலங்களும், மீன்கள் எல்லாம் - (மற்றுமுள்ள) எல்லாமீன்களும், வீந்துமிதந்தன - இறந்து மிதக்கலாயின; (எ - று.)

அநுமான்சென்ற விசையினாற் பெருங்காற்றுத தோன்றவே, கடல் குழம்பி அதிலுள்ள மிக்கபேருருவத்தினை யுடைய திமிங்கிலகிலங்களும் மற்றுமுள்ள சிற்றுருவத்தையுடைய மீன்களும் உயிரொழிந்து மிதந்தன வென்பதாம். திமிலென்பது - கடல்வாழுயிர்களுள் ஒன்று: யானைமீனெனவும், பெருமீனெனவும படும்; நூறுயோஜனை நீளமுள்ளது' அதனைவிழுங்குவது - திமிங்கிலம்; அதனையும் விழுங்குவது - திமிங்கிலகிலமெனப்படும்: வடமொழிக் காரணப்பெயர். (அதனை விழுங்குவதை 'திமிங்கிலகிலகிலம்.என்பா.) சிறியதைப் பெரியது உணபது, மீனின் இயல்பு இது மிக்க பேருருவத்தினையுடையதென்பது உலகவழக்கிலும் நூல்வழக்கிலும் பிரசித்தமென்றறகு, 'ஓசனையுலப்பிலாத வுடம்பமைந்துடைய வென்னத, தேசமு நூலுஞ் சொல்லுந் திமிங்கிலகிலம்' எனப்பட்டது.

ஓசனை - யோஜநா என்ற வடசொல்லின் விகாரம்; அது, நான்குகுரோசம் கொண்டது. இனி, அன்று அணணல் வீசிய காலின், ஓசனையுலப்பிலாத உடம்பு அமைந்துடைய என்னத தேசமும நூலும் சொல்லும திமிங்கிலமும், கிலங்களோடு - திமிங்கிலகிலமும், வேலை கலங்க, ஆசையை உற்றவடகடலெல்லையைப் போய்சசோநதன; மீன்களெல்லாம் வீழ்நதுமிதநதன என உரைப்பாருமுளர். திமிங்கிலகிலங்களோடும வேலை கலங்கும்படி அணணல் யாககைவீசிய காலினால் வீநதுமிதந்தன மீன்களெல்லாம் என்று யாறறு நீர்ப்பொருளாக வுரைததலும் தகும்.

(ங.ள்)

௩அ.—அனுமானது முன்னே நீட்டிய கைகளின் வருணனை.

பொருவரு முருவத் தன்னான் போகின்ற பொழுது வேகந்
தருவன தடக்கை கள்ளா நிமிர்ச்சிய தம்மு ளொபப
வொருவருங் குணத்து வள்ள லோருயிர்த் [1]தம்பியோடு
மிருவரு முன்னர்ச் சென்றா லொத்தவவ விரண்டு பாலும்.

(இ - ள்.) பொருவு அரும் உருவத்து அன்னான்-ஒப்பிலாத வடிவத்தை யுடைய அந்த அநுமான், போகின்ற பொழுது—, வேகம் தருவன - விரைவைக் கொடுப்பனவும், தள்ளா நிமிர்சசிய-தளர்சசியடையாமல் நிமிர்ந்துள்ளவையும், தம்முள் ஒபப - தமகுத்தாமே ஒப்பனவாயுமுள்ள, தட கை-நீண்ட கைகள்,—ஒருவு அருங குணத்து வள்ளல் - நீகுதலில்லாத நற்குணங்களை யுடைய வரையாதருளுமியல்பினனான இராமபிரானும், ஓர் உயிர் தம்பியோடும் - (அப்பெருமானது) ஒப்பற்ற உயிரபோன்ற தமபியான இளைய பெருமாளும ஆகிய, இருவரும் - அந்த இரண்டுபேரும், அ இரணடு பாலும - அவ்வநுமானது இருபுறததிலும், முன்னர் சென்றால் - முன்புபோனால், (அதனை), ஒதத - ஒததன; (எ - று.)

அநுமானது முன்னே நீணடுள்ள விரைவுகொணட இரண்டுகைகளும் அவ்வநுமனுககு முன்னே இராமலக்ஷ்மணரிருவரும் செலவதை யொத்திருந்தனவென்பதாம்; தந்தறிப்பேற்றவணி. ஆஜாநுபாஹுவான அநுமானுடைய கைகள் செயறகரிய செயல்களையும் [2]எளிதிற செயயவல்ல திறத்தனவாய்த தம்முள் ஒததுளளன வெனபதும், அநுமான் இராமலக்ஷ்மணர்களின் தெய்விகசகதியை முன்னிட்டுகொணடே இலஙகை நோகிச செல்கின்றனனென்பதும், "வேதத்தினமுன் செலக மெயயுணர்நதோர் விரிஞ்சன் முதலோர், கோதற்ற ஞானக்கொழுநதின்முன் செல்க .. .. .தொல்லை மூலப் பரஞ்சுடரே" என்றபடி ததுவஞானிகளின் முன்னே எமபெருமான் எழுந்தருளுதலும தோன்ற, இககற்பனை கூறினரென்க. ஒருவு அருங குணம (அடியார்களை) நழுவவிடுதலில்லாத குண மெனினுமாம். பி-ம்:— [1]தமபியென்னும். (௩அ)

வேறு

௩௬.—அப்போது மைநாகமலை அநுமானையுபசரிக்குமாறு கடலினின்று வெளிவருதல்.

இந்நாக மன்னா னெறிகாலென வேகும் வேலை
[1]திந்நாக மாவிற் செறிகீட்டிசைக் காவல் செய்யுங்
மைந்நாக மந்நாள் கடல்வந்ததொர் காட்சி தோன்ற
மைந்நாக மென்னு மலைவானுற வந்ததன்றே.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - குளகம்.

(இ - ள்.) இநாகம் அன்னான் - மலைபோன்றவனான [அல்லது யானை போன்றவனான] இந்த அநுமான், எறி கால் என ஏகும் வேலை - வீசுகின்ற காற்றுப்போல விரைந்துசெல்லும்பொழுது,—திக் நாகம் மாவில் - திககஜங்களுள், செறி கீழ் திசை காவல் செய்யும் மை நாகம் - வலிமை மிக்கதும் கிழக்குதிக்கிலிருந்து அத்திசையைத் தாங்குவதுமான துதிக்கையையுடைய (ஐராவதமென்னும்) யானை, அ நாள - (பாற்கடல்கடைந்த) அந்தக்காலத்தில், கடல் வந்தது ஓர் காட்சி தோன்ற-அப்பாற்கடலினின்று எழுந்த தன்மைக்கு ஒப்பாக, மைந்நாகம் என்னும் மலை - மைநாகமென்ற மலையானது, வான் உற வந்தது - ஆகாயத்திற்பொருந்த (ககடலினின்று எழுந்து) வந்தது; (எ - று)

திருப்பாற்கடலினின்று ஐராவதயானை தோன்றியதுபோல இந்த உவர்க் கடலினின்று மைநாகமலை தோன்றிற் றென்பதாம்; உவமையணி. இக்ஷ்வாகு வம்சத்துத்தோன்றிய இராமபிரானது தூதனாகிய அநுமான கடல்கடந்து இலங்கைக்குச் செல்லுமாறு தாவிவருவதை யறிந்தவனாய், இக்ஷ்வாகுவம்சத்துச்சாகரரால் தோண்டப்பட்ட சமுத்திரராஜன், அவ்வநுமானுக்கு ஏதேனும் உதவிசெய்யவேண்டுமெனக்கருதித் தனதகத்தேயொளித்திருந்த மைநாக மலையை நோக்கி 'இந்திரன் எல்லாமலைகளையும் சிறகரிந்தகாலத்தில் உன்னை என்னிடத்திற்சேருமாறு உதவிபுரிந்த வாயுதேவனது குமாரனாகிய அநுமான் இப்போது இராமதூதனாய் வருகின்றனனாதலால், அவனுக்கு உன்னாலாகும் உபசாரங்களைப் புரிவாய்' என்று கட்டளையிட, அந்த மைநாகமலை அங்ஙனமே அநுமானை உபசரிக்குமாறு கடலினின்று வெளிதோன்றிற்று என முதனூலினால் விவரம் காண்க. இததன்மை, மேல் ருச, ருரு, ருசு-ஆம் பாடல்களிற் புலனாம்.

திக + நாகம்=திங்நாகம்; வடமொழிபபுணர்ச்சி. இதுதொடர், திக்நாக மென விகாரப்பட்டது. நைந்நாகமென்றே, யானை யென்றதாயிற்று; "நைம் மலை" என்றாற் போல முதலடியில் 'இநாகமன்னான்' என்பதற்கு - (வலிமையிலும் விரைவிலும் திருமாலுக்குப் பலவாறு தொண்டு பூண்டொழுகுதலிலும்) ஆதிசேடனைப் போன்றவனாகிய அநுமான என்று பொருள்கொள்ளினுமாம். நாக மென்ற வடசொல் - யானையைக் குறிக்கும்போது மலைகளில் வாழ்வது என்று காரணப்பொருள் பெறும். நாகம் 'மா - யானையாகிய மிருக மென இருபெயரொட்டு. கீழ்த்திசை - கீட்டிசை யென மரூஉ. பாற்கடலினின்று ஐராவதம் வெளிவந்தது, துர்வாசமுனிசாபத்தாற கடலிற் புக்கொளித்த தேவர்கள்செல்வமனைத்தையும் எடுத்தற்காக அதனைக் கடைந்த காலத்திலென்க. பீ-ம்:—[1]தென்னாக மணனிறசெறி கீழ்த்திசைகாவல்செய்யும். [1]அந்நாட்கடல்.

(ருகூ)

௪௦.—இதுமுதற் பதினொருகவிகள் - மைநாகமலையின் வருணனை.

மீயோங்கு செம்பொன் முடியாயிர மின்னி மைப்ப
வோயா வருவித் திர[1]ளுத் தரியத்தை யொப்ப
தீயோ ருளராகியதா லவர்தீமை தீர்ப்பான்
மாயோன் மகரக் கடனின் றெழுமாண்ப தாகி.

(இ - ள்.) மீ ஓங்கு செம் பொன் முடி ஆயிரம் - மேற்புறமாக உயர்ந்திருக்கின்ற செம்பொன்மயமான ஆயிரஞ்சிகரங்கள், மின் இமைப்ப - ஒளி வீசவும், ஓயா அருவி திரள் - இடையறாது பெருகுகின்ற நீரருவிகளின் தொகுதிகள், உததரியத்தை ஒப்ப - (தோளில்தரித்த) மேலாடைபோன்றிருக்க,—தீயோர் உளர் ஆகியதால் - (இராவணன் முதலிய) கொடியவர்கள் (இவ்வுலகத்தில்) தங்கியிருப்பதனால், அவர் தீமை - அக்கொடியவர்களால் நேர்கின்ற தீமைகளை, தீர்ப்பான் - நீக்குதற்பொருட்டு, மாயோன் - திருமால், மகரம் கடல்நின்று எழு - சுறாமீன்கள் நிறைந்த சமுத்திரத்தினின்று மேலெழுந்து வருகின்ற, மாண்பது ஆகி தன்மையையுடையதாய்,—(எ - று.) —'மைந்நாகமென்னுமலை வானுற வுந்தது' எனக் கீழ்க்கவியோடு தொடர்ந்து முடியும்: அடுத்த பத்துப் பாடல்களுக்கும் இங்ஙனமே முடிபுகாண்க. குளகச்செய்யுள்கள் மேறகவியோடுதொடர்தலன்றிக் கீழ்க்கவியோடும் தொடர்தலுண்டென அறிக.

ஆயிரஞ்சிகரங்களையும் பொன்னிறமாய்ததோன்றும் நீரருவிகளையுமுடைமையால், அந்த மைநாகமலை, ஆயிரமுடிகளையும் பீதாம்பரத்தையுமுடைய திருமாலை யொத்திருக்குமென்க. கடலினின்று மைநாகமலை யெழுந்ததற்கு, அரக்கர்களாலாகிய தீமையைத் தீர்க்குமாறு கடலினின்று எழுகின்ற திருமாலை உவமையாகக் கற்பித்ததனால், இது தற்குறிப்பேற்றவணி. இம் மைநாகமலை 'ஹிரண்யநாபம் [பொன்னை தன்நடுவிற்கொண்டது]' என்ற தன் பெயர்க்கு ஏற்பப் பொன்னை இடையிலுடைய தாகையால் அப்பொன்மயமான இடங்களின்மீதெல்லாம் நீரருவிபாய்ந்து செல்லும்போது பொற்பட்டாடையாகிய பீதாம்பரத்தை யொத்திருக்கும். திருமாலுக்குத் திருமுடிகள் ஆயிரமென்பதையும், அத்திருமால் பீதாம்பரத்தையுடையவ னென்பதையும், முறையே "முடியாயிரம்", "ஆணி நிறப்பீதாம்பரனார்" என்பவை கொண்டும்உணர்க. திருமால் கடலிற்பள்ளிகொண்டுள்ளவனாதலால்,'மாயோன் கடனின்றெழு' என்றது ஏற்கும். பி - ம்:—[1]உத்தரியத்தை யொத்த. (௪௦)

௪௧. நூலேந்து கேள்வி [1]நுகராப்புல னோக்க லுற்றார்
போலேந்தி [2]நின்ற தனியாண்மெய் பொறாது நீங்கக்

காலாழ்ந் தழுந்திக் கடல்புக்குழீஇக் கச்ச மாகி
மாலேந்த வோங்கு [3]நெடுமந்தர மேயு மான

(இ - ள்) நூல் ஏந்து கேள்வி நுகரா - சாஸ்திரங்களிற் கூறியுள்ள கேட்டற்கு உரிய பொருள்களை (ப் பெரியோரிடத்திற்) கேட்டறியாமல், புலன் நோக்கல் உற்றார் போல் - (தமது ஐம்பொறிகளையும்) ஐம்புலன்களிடத்துச் செல்லவொட்டாது தடுக்கலுற்றார் ரான சிறியோர்களைப் போல, ஏந்தி நின்ற தனியாள் மெய் பொறாது நீங்க - முதலிற்பொறுத்திருந்த ஒப்பற்ற பூமிதேவியானவள் (தனது) உடல்வலிமையைத் தாங்கமுடியாமல் விலகிப்போக, (அதனால்), கால் ஆழ்ந்து அழுந்தி - (தன்னுடைய) அடிப்பாகமும (அப்பூமி தேவியுடனே) முழுகி அழுந்துமாறு, கடல் புக்க உழி - கடலிற் புகுந்த சமயத்தில், மால் கச்சம் ஆகி ஏந்த - திருமால் கூர்மாவதாரஞ் செய்து தாங்க, ஓங்கும் - மீண்டும் உயரவெழுந்த, நெடு மந்தரமும் - நீண்ட மந்தரமலையையும, மான - ஒப்பவும்,—(ஈ - று.)—முடிபு, கீழ்ச்செய்யுளிற் காட்டப்பட்டது.

கடலில்மூழ்கியிருந்த மைநாகமலை மீண்டும் எழுந்தது, பாற்கடல்கடைகையில் முதலிற் கடலில் மூழ்கியிருந்து கூர்மாவதாரங்கொண்ட திருமாலால் மேலெடுக்கப்பட்ட மந்தரமலையை யொத்திருந்த தென்பதாம். உபதேச மொழிகளை அநுபவமுடைய ஆசிரியாபாற்கேட்டு அதனால் மெய்ப்பொருளையுணராதவாகள் முதலில் ஆராய்ச்சியின்றித தவவிரதங்களை மேற்கொண்டு பின்பு அவற்றைமுடியச்செலுத்தும் ஆற்றலின்றி விட்டிடுதல்போல, பூமிதேவியும் முதலில் மந்தரமலையைத் தாங்க ஒருப்பட்டுச் சிறிது பொழுதிறகுள் அப்பொறையைப் பொறுககமுடியாமல் அம்மந்தரமலையினாலே அழுந்திவிட்டனளென்பது, முன்னிரண்டடியின கருத்து. (''கறறீண்டு மெய்ப்பொருள கணடார் தலைப்படுவர், மற்றீண்டு வாராநெறி'' என்றதனால், உயர்கதிபெறும் ஒழுககததிற்குக் கேள்வி [சிரவணம] முதற்காரணமாத லுணர்க.) இக்கவி, ஆங்காகு உபமானமுகததாலும், மற்றும் வேறுவகையினாலும் நீதிகளைப் போதிககுந் தன்மை கருததககது. பொறுமையில் ஒப்பற்றவளாதலின், பூமிதேவியை 'தனியாள' என்றார். புகழீஇ - இன்னிசையளபெடை. கச்சம் - ஆமை: கச்சபம் என்ற வடசொல்லின விகாரம பி ம்:—[1]நுகரா புலனோக்கலுறறார் [2]நின்றவனியாள். [3]மந்தரந் தன்னைமான. (சக)

சஉ. தள்ளற் கருநற் சிறைமாடு தழைப்பொ டோங்க
வெள்ளறகரு நன் னிற [1]மெலலையி லாத புல்ல
வள்ளற கடலைக் கெடநீக்கி மருந்து வவ்வி
யுள்ளுற் றெழுமோ ருவணத் தரசேயு [2]மொப்ப.

(இ - ள்.) தள்ளற்கு அரு நல் சிறை - நீக்குதற்கு அருமையான அழகிய சிறகுகள், மாடு - (தனது இரண்டு) பக்கத்திலும், தழைப்பொடு ஓங்க-தழைத்தோங்கவும்,—எள்ளற்கு அரு - பழித்தற்கு அரிய, எல்லை இலாத-(கண்களினால் பார்த்து) அளவிடமுடியாத, நல் நிறம் - நல்ல உடம்பின்நிறம், புல்ல - பொருந்தவும்,—வள்ளல் கடலை கெட நீக்கி - பலவகை வளப்பங்களையுடைய சமுத்திரம் பிளவுபடும்படி அதனைக்கிழித்துக்கொண்டு, மருந்து வவ்வி உள் உற்று - (தேவலோகத்தினின்று) அமிருததத்தைக் கவர்ந்துகொண்டுவந்து அக்கடலினுட் புகுந்து (பாதாள லோகத்திற்குச் சென்று), எழும் - (அங்கு நின்று மீண்டும்) உயர எழுந்துவருகின்ற, ஓர் உவணத்து அரசும் - ஒப்பற்ற சுபர்ணனென்ற பெயரையுடைய (பறவைகட்கு) அரசனான கருடனையும், ஒப்ப - ஒத்திருக்க—; (எ - று.)

இருபுறத்திலும் சிறகைப்பரப்பிகொண்டு நவரத்தினங்களாற் பலவகை வருணங்களை யுடையதாய் இந்திரன் சிறகரிந்த காலத்துச் சமுத்திரத்தினுட் புக்கு மீண்டு இப்பொழுது கடலைக்கிழித்துக்கொண்டு மேலெழுந்த மைநாக மலை, இரண்டுசிறகுகளைப் பரப்பிக்கொண்டு கழுத்து இறகு மூக்கு கண கால் முதலிய இடங்களில் பலவகைநிறம்பொருந்தி அமுதங்கொண்டு பாதாள லோகத்திற்குச்சென்று மீண்டு அங்கிருந்து கடலைக் கிழித்துக்கொண்டு வந்த கருடபகவானைப் போன்றதென்பதாம். தள்ளற்கு அரு சிறை - பிறரால் அழிக்கமுடியாத சிறை. கருடன் ஒருவராலும் கெடுக்கமுடியாதபடி மிக்கபலமுள்ளவனாதலாலும், பாவதங்களெல்லாம் சிறகறுக்கப்பட்டபொழுது மைநாக மலை வெட்டுண்டு தப்பியோடிச் சென்றதனாலும், 'தள்ளற்கு அரு நல்' என்ற அடைமொழி, கருடன் மைநாகமலை என்ற இரண்டின் சிறகிறகும் ஏற்கும். உவணம் - ஸுபர்ணமென்ற வடசொல்லின் விகாரம்: அழகிய சிறகினையுடையதென்பது பொருள்; அதது - சாரியை; உவணமாகிய அரசு என, இருபெயரொட்டு. பல வளங்களையுடையதாய் அவற்றைக் கைம்மாறு கருதுதலின்றிப் பலர்க்கும் வரையாதுகொடுத்தல் பற்றி, 'வள்ளற்கடல்' எனப்பட்டது. பி - ம்:—[1]எல்லையிலாதுபொங்க. [2]ஒத்த. (சஉ)

சங. [1]ஆன்று நெடுநீரிடை யாதியொ டந்த மாகித்
தோன்றாது நின்றானரு டோன்றிட[2] முந்து தோன்று
மூன்று [3]முலகத்திடை முற்றுயி ராய மற்று
மீன்றானை யீன்ற சுவணத்தனி யண்ட மென்ன.

(இ - ள்.) ஆதியொடு - எல்லாவுலகங்களையும் (சிருஷ்டிகாலத்திற்) படைத்தவனும், அந்தம் ஆகி - (பிரளயகாலத்தில்) அழிப்பவனுமாய் நின்று, தோன்றாது நின்றான் - (தனது உண்மைவடிவு ஒருவராலும்) அறியப்படாமல் நின்றவனான திருமாலினது, அருள்-(படைக்க வேண்டுமென்ற) சங்கற்ப

மானது, தோன்றிட - உண்டாக,—ஆன்று ஆம் நெடு நீரிடை - பரந்துள்ள பெரிய ஜலத்திலே,—முந்து தோன்றும் மூன்று ஆம் உலகத்திடை - முற்பட்டுத்தோன்றிய (மேல் கீழ் நடு என) மூன்றுவகையாகிய உலகங்களில், முற்று - நிறைந்துள்ள, உயிர் ஆய - உயிர்களையெல்லாம், மற்றும் - மீண்டும், ஈன்றானை - படைப்பவனாகிய பிரமதேவனை, ஈன்ற - பெற்ற, சுவணம் தனி அண்டம் என்ன - பொன்மயமான ஒப்பற்ற அண்டம் போலவும்;—(எ - று.)

திருமால் உலகங்களையெல்லாம் சிருஷ்டிப்பதற்காகப் பிரமனை யுண்டாக்குவதனிமித்தம் தனதுசங்கற்பத்தால் தோன்றிய பெரும்புனலிடையில் தனது மலர்ந்தநாபீகமலத்தினின்று படைத்துவிடுத்த பொன்மயமான அண்டத்தை யொத்திருந்தது, கடலில்தோன்றிய பொன்னிறமான அம்மைந்நாகமலை யென்பதாம். "கடவுள் சிந்தித்துத் தனது சரீரத்தினின்று பலவகைப் பிராணிகளைப் படைக்கவிரும்பி முதலில் ஜலங்களை யுண்டாக்கினார்; அவற்றில் தனதுசக்திருபமான விதையை யிட்டார்; அது, பொன்மயமான அண்டமாயிற்று; அதில் எல்லாவுலகங்களையும் படைக்கும் பிரமன் தோன்றினான்" என்ற மநுதர்மசாஸ்திரம் இங்கு உணரத்தக்கது. பிரளயகாலத்தில் மூலப்பிரகிருதியிலே உரைமெழுக்கிற்பொன்போலக் கிடந்த உயிர்களையெல்லாம திருமால் எடுத்துத்தந்து அவ்வுயிர்கட்குக் கைகால் முதலிய உறுப்புக்களோடு கூடிய சரீரத்தைப் படைக்குமாறு பொன்னிறமான அவ்வண்டத்தில்தோன்றிய பிரமதேவனுக்குக் கட்டளையிட, அவன் பிரளயத்துக்குமுன்பு இருந்தது போலவே படைத்தனனாதலால், 'முந்துதோன்று மூன்றுமுலகத்திடை முற்றுயிராயமற்றும் ஈன்றானை' என்றார். நித்தியமான உயிர்களை ஈனுதலாவது, உடம்புடன் கூட்டுகை.

'ஆதியோடு அந்தமாகி' என்றதில், காத்தலையும் உபலக்ஷணத்தால் அடக்கிக்கொள்க. திருமாலே பிரமனாய்ப் படைக்கின்றானென்றும், தானனைத்தன்மையனாய்க் காக்கின்றானென்றும், சிவனாய் அழிக்கின்றானென்றும் நூல்கள் கூறும். இனி, 'ஆதியொடந்தமாகி' என்பதற்கு - எல்லாப்பொருள்கட்கும் தான் முதலும் ஈறுமாய் என்றும்பொருள்கொள்ளலாம்; எல்லாப் பொருள்களும் தோன்றும்முன்னும் அவையனைத்தும் அழிந்தபின்னும் தனக்கு ஓர் ஆதியும் அந்தமுமில்லாமல் நிதயனாய்நிற்பவன் திருமால்என்பது கருத்து. தோன்றாதுநின்றான் - எளிதிற் கண்ணுக்குப்புலனாகாது நின்றவனுமாம். 'உயிராயமற்றும்' என்பதற்கு - உயிருள்ளவைகளையும் உயிரில்லாதவைகளையும் என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]ஆன்றாழ்நெடுநீரிடை. [2]முந்து தோன்றி. [3]உலகத்தோடு முற்றுயிராயமுற்றும். (சரு)

சச. இந்நீரி னென்னைத்தரு மெந்தையை யெய்தி யன்றிச்
[1]செந்நீர்மை செய்யே னெனச் சிந்தனை செய்து நொய்தி

[2]னந்நீரில் வந்து முதலந்தண [3]ஞதி நாளம
முந்நீரின் மூழ்கித் தவமுற்றி முளைத்த வாபோல்.

(இ - ள்.) 'ஆதிநாள் - முற்காலததிலே, இ நீரின் - இந்த ஜலததில், என்னை தரும் - என்னைப் படைத்த, எந்தையை, எனது தந்தையை, எய்தி அன்றி - பிரதியக்ஷமாக அடைந்தாலல்லாமல், செம் நீர்மை - செம்மையான நல்லசெய்கையை, செய்யேன்—', என என்று, சிந்தனைசெய்து - எண்ணி,—முதல் அந்தணன் - முதலில்தோன்றிய வேதியனாகிய பிரமதேவன், நொய்தின் - விரைவாக, அ நீரில் வந்து மூழ்கி - அந்தஜலததிற்புக்கு முழுகியிருந்து; அ முந்நீரில் - அந்தச சமுததிரததிலேயே, தவம் முற்றி - (அத்தந்தையைக் காணுமாறு) தவத்தைசசெய்து முடிதது, முளைத்த ஆ போல் (பிறகு) மேலேயெழுந்த தன்மைபோலவும்,—(எ - று.)

கடலினின்று வெளிவந்த மைநாகமலை, 'இந்தப் பெரிய வெள்ளததிலே என்னையுண்டாகின எனதுபிதாவைப் பிரதியக்ஷமாகக கணடாலல்லாமல் நான் செயயவேணடிய காரியமொன்றையும் செய்கிலேன்' என்று நினைத்து அககடலினீரிலேயே முழுகியிருந்து தவஞ்செய்து முடித்துப் பின்பு வெளிவநத பிரமதேவனை யொததிருந்த தென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. கடலினின்று வெளிவந்த பல முடிகளையுடைய மைநாகமலைக்கு, கடல்நீரில் மூழுகியிருந்து வெளியெழுந்த நான்முகனான பிரமன் உவமை. 'இந்நீரின்' என்பது, 'என்னைததரும' என்பதனோடு இயையும: அன்றி, என்னைததரும் எந்தையை இநநீரின் எய்தியன்றி என இயைதது, திருமால் மசசாவதாரஞ் செய்தனாதலால் அககடவுளை அவனுக்கு இருப்பிடமான நீரிற் காணுமாறு பிரமன் முன்னா முழுகியிருந்து பின்னர் வெளிப்பட்டதை யொக்குமெனக் கருததுக் கூறுவாரு முளர். அந்நீரில் - (தான் நினைத்த) அப்படியே எனினுமாம. முநநீர் - படைததல் காததல் அழித்தல் என்ற மூன்று தன்மையை யுடையதென, இஙகு, சிருஷ்டிக்குக் காரணமாயிருந்த மஹாஸமுத்ரததுக்குப் பணபுத் தொகைப்புறததுப்பிறந்த அன்மொழிததொகை; பி-ம்:—[1]செய்நநீர்மைசெய்யேன். [2]அநநீரிலவந்த. [3]ஆதிநாளின். (சச)

சரு பூவா லிடையூறு [1]புகுந்த [2]பொறாத நெஞ்சிற்
கோவா முனி சீறிட [3]வாரி குளிதத வெல்லா
மூவா முதனாயகன் மீள முயன்ற வந்நாட்
டேவாசுரர் வேலையில் வநதெழு திங்க ளென்ன.

(இ - ள்.) பூவால் - (இலக்குமியினது) மலர்மாலையினால், புகுந்த (இந்திரன் பவனிவரும்பொழுது) நேர்ந்த, இடையூறு - தீமையான செயலுககு, பொறாத நெஞ்சின் கோ ஆம் முனி - (எப்போதும்) பொறுக்குந்தன்மையில்லாத [மிக்க கோபம பொருந்திய] மனததையுடைய சிறந்தவனான துருவாச

முனிவன், சீறிட - கோபித்ததனால், வாரி - கடலிலே, குளித்த - மூழுகி மறைந்துபோன, எல்லாம் - (தேவலோகத்துச) செல்வங்களெல்லாம், மீள - மீண்டு வருமாறு, மூவா முதல் நாயகன்-அழியாத முதற்கடவுளான திருமால், முயன்ற - முயற்சிசெய்த, அ நாள் - அந்தக்காலத்தில்,—தேவ அசுர வேலையில் - தேவர்களும் அசுரர்களும் கூடிக் கடைந்த திருப்பாற்கடலிலே, வந்து எழு - வந்துதோன்றிய, திங்கள் என்ன - சந்திரன் போலவும்,—(எ - று.)

கடலினின்றுதோன்றிய மைநாகமலை, தேவாசுரர்கள் கடைந்தகாலத்துப் பாற்கடலினின்று தோன்றிய சந்திரனை யொத்திருந்த தென்பதாம்.

இடைஊறு நடுவில் உறுவது தீமைக்குக் காரணக்குறி; இங்கு அதனை விளைகும் செயலுக்கு ஆயிற்று. துருவாசமுனிவர் அளவிறந்த கோபமுடையவராதலால், 'பொறுதலெஞ்சிற் கோவாமுனி' என்றார். இதுபற்றியே, இவரைக் காளிதாசமகாகவி சாகுந்தளநாடகத்தில் "சுலபகோபரான மஹர்ஷி" என்றான்; வில்லிபுத்தூராரும் மகாபாரதத்தில் "சாபத்தாலுஞ் சாபமொழி தன்னால் வளருந் தவத்தாலுங் கோபத்தாலும் பேர்படைத்த கொடிய முனிவன் துருவாசன்" என்றார். மற்றை முனிவர்களெல்லாம் பிறரைச் சபிக்கத் தவம் குறையும்; இவரோ, அங்ஙனமன்றி, சபிக்கத் தவம் வளர்ந்து வருமாறு வரம்பெற்றுள்ளவர்; ஆதலால், எப்பொழுதும் பெருங்கோபங் கொண்டவராய்ச் சபிப்பது, இவர்க்கு இயல்பு. இவர், அத்திரிமுனிவரது புத்திரர். பூவால் இடையூறு புகுந்த நெஞ்சின் - மலர்மாலையை அவமதித்ததுகாரணமாக வருத்தங்கொண்ட மனத்தையுடைய முனி என்றும் உரை கூறலாம். 'புகுந்த' என்பதை 'புகுந்தது' என்ற தொழிற்பெயரின் தொகுதல் விகாரமாகவும், 'கோவாமுனி,'என்பதை 'கோவமுனி'என்றதன் நீட்டல் விகாரமாகவும் கொண்டு, ஒருமலர்காரணமாகத் தமது மனப்போகிற்குத் தடைநேர்ந்ததைப் பொறாத மனத்தையுடைய கோபமுனிவராகிய துர்வாசர் என்று உரை கூறவும் தகும். பி - ம்:—[1]புகுந்து. [2]பொறாது. [3]வேலைகுளித்த, வேலைகுதித்த. (சரு)

சகூ. நிறங்குங்கும மொப்பன நீனிறம் [1]வாய்த்த நீரி
னிறங்கும் பவளக்கொடி சுற்றின செம்பொ னேய்ந்த
பிறங்குஞ சிகரபடர் முன்றி றொறும் பிணவோ
டுறங்கும் மகரங்க ளுயிர்ப்பொ [2]டுணர்ந்து லாவ.

(இ - ள்) (ஒருபுறத்திலே), நிறம் - (தனது) நிறத்தினால், குங்குமம் - குங்குமப்பூவை, ஒப்பன - ஒத்திருப்பனவும்,—(மற்றொரு புறத்திலே), நீல் நிறம் வாய்த்த - கருநிறத்தைப் பொருந்தியிருப்பனவும்,—நீரின் இறங்கும் - நீரிலே வேர்வீழ்ந்திய, பவளம் கொடி - பவழக்கொடியினால், சுற்றின- சுற்றிக்கொள்ளப் பெற்றிருப்பனவும்,—செம் பொன் ஏய்ந்த - செம்பொன்

பொருந்தியனவுமான, பிறங்கும் சிகரம் - விளங்குகின்ற (தனது) சிகரங்களிலே, படா - விசாலமாயுள்ள, முன்றில்தொறும் - முற்றங்களிலெல்லாம், பிணவோடு உறங்கும் - (தமது) பெண்பால்களுடனே தூங்கிகொண்டிருந்த, மகரங்கள் - சுறாமீன்கள், உணர்ந்து-துக்கம்தெளிந்து, உயிர்ப்பொடு உலாவ-பெருமூச்சோடு உலாவவும்,—(எ - று.)

அந்த மைநாகமலை நீரிறங்கிடந்தபோது, சிலவிடங்களிற் பவழமும் செம்பொன்னும் பொருந்தியும் சிலவிடங்களிற் குங்குமநிறமாயும் மற்றுஞ் சிலவிடங்களில் நீலநிறமாயுமுள்ள அம்மலைச்சிகரங்களின் மேலிடங்களிலே கவலையற்றுப் பெண்பால்களோடு உறங்கிகொண்டிருந்த மகரமீன்கள், அம்மலை கடலினின்று வெளிப்போந்த இப்போது துகில்நீங்கித் தத்தளிப்பனவாயினவென்பதாம். இனி, முன்னிரண்டடிகட்கு - நீலநிறமுள்ள நீரிலே வேரிறங்கிய பவளக்கொடிகள் சுற்றிக்கொண்டிருப்பதனால் குங்குமநிறத்தையொத்தனவாய்ச் செம்பொன்பொருந்திய சிகரம் என்று உரைகூறினுமாம். நீர்வாழுயிராதலால், அந்நீரினின்று வெளிவந்ததுபற்றி நெட்டுயிர்ப்புற்று வருந்தினவென்பார், 'உயிர்ப்பொடுலாவ' என்றார். நீரினின்று வெளிப்பட்ட மாத்திரத்தில் துடித்துவருந்துதல், மீன்களின் இயல்பு - தன்மைநவிற்சியணி. முன்றிலெனப்பொருள்படும் இல்முன் என்பது - இங்கு; இலக்கணையால், மேலிடத்தை யுணர்த்தநின்றது. இனி, சிகரங்களாகிய பரந்த வெறுநிலங்கள்தோறுமெனறு பதப்பொருள் கொள்ளலு மொன்று. "பெணணும் பிணவு மககட்குரிய"என்ற தொல்காப்பியத்து மரபியற்சூத்திரத்தினுரையில் 'மக்கட்குறிய வெனவே, உரியவன்றி "துறகல் விடரளைப் பிணவுப பசிகூர்ந்தென" எனப் புலிமுதலியனவற்றிற்கும கொள்க' என்றதனால், இங்கு பெண்மகரம் பிணவெனபபட்டது அமையும். பி - ம்:—[1]வாய்ந்த. [2]உணர்ந்து போவ. (சகூ)

சஎ கூன்சூன் முதிரிப்பி குரைக்க நிரைதத பாசி
வான்சூழ் மழையொப்ப வயங்கு பளிங்கு முன்றி
லுன்[1]சூல நாளிற்றகை முத்த முயிர்த்த சங்க
மீன்சூழ்வரு மம்முழு வெண்மதி வீறு கிற.

(இ - ள்) கூன் சூல் முதிர் இப்பி குரைக்க - வளைதத உடம்புடையன வாய்க் கருப்பம் முதிர்ந்த முதுசிப்பிகள் ஒலிக்கவும், நிரைத்த பாசி - (பல காலமாக நீரிலேயே அமிழ்ந்திருந்ததனால் அம்மலையின்மேல்) வரிசையாகப் படாந்துள்ள பாசிகள், வான சூழ் மழை ஒப்ப-வானததிற் பரவிய மேகங்களையொததிருக்கவும், வயங்கு - விளங்குகின்ற, பளிங்கு முன்றில் - பளிங்குப் பாறையாலான (அமமலையினது) முன்னிடங்களில், தான்—, சூலம் நாளில் - கருவுயிர்க்கவேண்டியகாலத்திலே, தகை முத்தம் உயிர்த்த— பெரிய முத்துக்களைப் பெற்ற, சங்கம் - சங்கானது, மீன் சூழ்வரும் அ வெள் முழு மதி வீறு

கிற - நக்ஷத்திரங்களாற் சூழப்பட்டுள்ள அந்த வெண்ணிறமான பூர்ணசந்திரனது பெருமையைக் குலைக்கவும்;—(எ - று.)

முத்துச்சிப்பிகளினொலி மேககர்ச்சனையாகவும், பாசிகள் மேகங்களாகவும், பளிக்குப்பாறையினிடங்கள் நிலாப்பரவிய ஆகாயமாகவும், முத்துக்கள் நக்ஷத்திரங்களாகவும், சங்கு பூர்ணசந்திரனாகவு மிருக்க, இவ்வாறு, அந்த மைநாகமலை, சிலவிடங்களில் மேகமதோன்றப்பெற்றுப் பூர்ணசந்திரனும நக்ஷத்திரங்களும் விளங்குகின்ற ஆகாயத்தை யொத்திருந்ததென்பதாம்; தன்மைத் தற்குறிப்பேற்றவணி சூலம், அம் - சாரியை; சூல என்று எடுத்து, குறிப்புப்பெயரெச்சமாகவும் கொள்ளலாம. 'அநாளில்' என்பது 'அந்நாளில்' எனத் தொக்கதாககொண்டு, உரைத்தலு மொன்று. பளிங்கு முன்றில் - படிகக்கல் மயமான வெறுநிலமுமாம். சங்கம் முத்துப்பிறக்கு மிடங்களிருபதில் ஒன்றுத லறிக. பி - ம்·—[1]சூலினுளில். (சஎ)

சஅ. பல்லாயிர மாயிரங் காசினம பாடி மைக்குங்
கல்லார் சிமயத் தடங்கைத்தல நீண்டு காட்டத்
தொல்லார் கலியுட்புக மூழ்கி வயங்கு தோற்றத்
தெல்லாமணி யீட்ட [1]முகந்தெழு கின்ற தென்ன.

(இ - ள்.) பல் ஆயிரம் ஆயிரம் - பலவாயிரககணக்கான, காசு இனம் - இரத்தினவகைகள், பாடு - தம்மிடங்களில், இமைக்கும் - ஒளி வீசப்பெற்ற, கல் ஆர் சிமயம் தடம் - கறகள் மிகுதியாகப்பொருந்திய அம்மலையினது உச்சியிடங்கள், கை தலம் நீண்டு காட்ட - கைகள்போல மேலோங்கித் தோன்றுதலினால்,—தொல் ஆர்கலியுள் - பழமையாகிய சமுத்திரத்திலே, புக மூழ்கி- உட்புகுமாறு முழுகி, வயங்கு தோற்றத்து எல்லாம் மணி ஈட்டம் முகந்து - விளங்குகின்ற ஒளியையுடைய இரத்தினவகைகளின் கூட்டங்களை யெல்லாம் வாரியெடுத்துகொண்டு, எழுகின்றது என்ன - மேலே மீண்டும உயர்ந்து வருகின்றது போலவும்;—(எ - று.)

கடலில் முழுகியிருந்த மைநாகமலை தனதுசிகரங்களிற் பலவகையிரத்தினங்களும் விளங்க வெளியேவந்தது, கடலிற்குளித்து இரத்தினங்களை யெடுப்பவன் தனது கைகளிற் பலவகையிரத்தினங்களை வாரியெடுத்துகொண்டு மேலேவருவதனை யொத்திருந்ததென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. மலையை முழுகுகின்றவனாகவும், மலைசிகரங்களை அவனது நீட்டியகைகளாகவும், சிகரங்களிலுள்ள இரத்தினங்களை அவன் கைகளிலுள்ள இரத்தினங்களாகவும கொள்க. 'காசினம்' என்றது - கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைரியம் என்னும நவரத்தினங்களை குறிக்கும். கடல் 'ரத்நாகரம் [இரத்தினங்கட்கு இருப்பிடம்]' ஆதலால், அதில்மூழ்கிப் பவழம் முத்து முதலியவற்றை

யெடுத்தல், வழக்கம். சிமயம் தடகைத்தலம் என எடுத்து - சிகரங்களாகிய பெரிய கைகளினிட மெனினுமாம். பி ம்:—[1]முகந்தொழுவானுமென்ன.(சஅ)

சகூ மனையிற்பொலி மாக நெடுங்கொடி மாலையேய்ப்ப
வினையிற்றிரள் வெள்ளரு வித்திர நேங்கி வீழ
நினைவிற்கட லூடெழ லோடு முணர்ந்து நீங்காச்
சுனையிற் பனைமீன் றிமிலோடு தொடர்ந்து துள்ள

(இ - ள்.) மனையில் பொலி மாகம் நெடுங் கொடி மாலை எய்ப்ப - உபரி கைகளிலே விளங்குகின்ற ஆகாயமளவும் நீண்டுள்ள துவசபடங்களின் வரிசை கட்கு ஒப்பாகுமாறு, வினையின் திரள் வெள அருவி திரள் தூங்கி வீழ - முறைமையாகததிரணட வெண்மையான அருவித்தொகுதிகள் அசைந்து பெருகவும்,—நினைவின் - (அறுமானுக்கு உதவவேணடுமென்ற) எணணத துடன், கடலூடு எழலோடும் - (அம்மலை) கடலினின்று வெளியே உயர எழுந்தவளவில், பனைமீன் - பனைமீன்களும், திமிலோடு - திமிலென்னும் மீன்களும, உணர்ந்து - (தமது அறிவினால்) தெரிந்துகொண்டு, நீங்கா சுனை யில்-(ஒருபொழுதும்) நீர் வற்றுதலில்லாத சுனைகளிலே, தொடர்ந்து துள்ள- ஒருசேரத்துளளிவிழவும,—(எ - று.)

அம்மலைசசிகரங்களினின்று அருவிகள்பாய்ந்துபெருகுவது, உயர்ந்தமாட மாளிகைகளின்மேல் வானுறவோங்கிக் கொடிசசீலைகள அசைவதை யொத் திருந்த தென்பது, முன்னிரணடடிகளின் கருத்து. வினையின் திரள் புணணியசசெய்கைபோல் திரணட என்று உரைப்பினுமாம்; புணணியததை வெண்ணிறமாகக்கூறுதல் கவிசமயம். புணணியதிரளை உவமைகூறுதல் ஏற்கு மென்க. இனி, வினையின்திரள் - ஊழ்வினைபோலத் திரண்ட என்று பதவுரைகூறி, ஊழ்வினை இடைவிடாது என்றும் உயிரைப்பற்றியிருப்பது போல அவ்வருவியும் இடைவிடாது என்றும் அம்மலையைப் பற்றிநிற்கு மெனக கூறுதலு மொன்று. வினையின் திரள் அருவி-செயற்கையால் திரண் டதுபோ லுள்ள அருவி யெனினுமாம்; அருவி இயல்பில் திரணடிருப்பது, செயற்கையாகக் கடைந்து திரட்டப்பட்டதுபோற் செவ்விதாயுள்ள தென்று கருத்து. 'நினைவின் கடலூடு எழலோடும்' என்பதற்கு - நினைததமாத்திரத் திலே கடலினின்று எழுந்தவளவில் என்று உரை கூறலுமாம். மைநாகமலை கடலில் மூழ்கியிருந்தபோது அதன் சிகரங்களில் தங்கியிருந்த பனைமீனும் திமிலும், மலை வானுற எழவே 'இனி இவ்வுநிற்பின் நம்உயிர்களுக் கேடு வரும்' எனக் கருதித தப்பியுய்யுமாறு எண்ணி அவ்வுநின்று நீர்வற்றாத அம் மலைசசுனைகளில் துள்ளிகுதிததுப் பிழைததன வென்பது, பின்னிரண்டடி யின் கருத்து. பனை, திமில் என்ன - மீனின் சாதிபேதங்கள். (சகூ)

ரு0. கொடுநாலொ டிரண்டு குலப்பகை குற்ற மூன்றுஞ்
சுடுஞானம் வெளிப்பட வுய்த்த துயக்கி லார்போல்
விடநாக முழைத்தலை [1]விம்ம லுழன்று நீங்க
நெடுநாள் பொறையுற்ற வுயிர்ப்பு நிமிர்ந்து நிற்ப.

(இ - ள்.) கொடு - கொடுமையான, நாலொடு இரண்டு குலம் பகை - ஆறாகிய கூட்டமாயுள்ள பகைகளையும், குற்றம் மூன்றும் - முக்குற்றங்களையும், சீடு - அடியோடு அழிப்பதான, ஞானம் - நல்லுணர்வு, வெளிப்பட - தோன்றியதனால், உய்த்த துயக்கு இலார் போல்-முன்னேயிருந்த சந்தேகங்களெல்லாம் நீங்கிய ஞானிகள் போல,—விடம் நாகம் - விஷத்தையுடைய பாம்புகள், முழைததலை விம்மல் உழன்று - (அம்மலை நெடுங்காலமாக நீரினுள் மூழ்கியிருந்ததனால்) அதன்குகைகளில் (இதுவரை) மிக்கவருகத்தையடைந்திருந்து,—நீங்க - (அம்மலை இப்போது) வெளியே வந்ததனால், நெடுநாள் பொறை உற்ற உயிர்ப்பு நிமிர்ந்து நிற்ப - வெகுநாளாகப் பந்தித்துக் கிடந்த சுவாசம் தடையின்றி வெளிவரப்பெற்று நிற்கவும்,—(எ - று.)—இச்செய்யுள்வரையுள்ள வினையெச்சங்கள் 'மைந்நாகமென்னும்மலை வானுற வந்ததன்றே' என்பதனோடு தொடரும்.

முத்திபெறும் உபாயத்தை இன்னதெனவுணராது ஐயுற்றுக் காமம் முதலிய அறுபகைகளினாலும் முக்குற்றங்களினாலும் தாகுண்டு வருந்தியவர் பின்னர் ஞானம் உதிக்க அதனால் அவ்வருத்தத்தினின்று நீங்குதல்போல, மைநாகமலை சமுத்திரத்தில் மூழ்கியிருந்தமையால் இயல்பாக மூச்சுவிட முடியாமற் சுவாசத்தை அடக்கிக் கொண்டிருந்த அம்மலைக்குகையில் வசிக்கும பாம்புகள் இப்போது அம்மலை வெளியேவந்தவுடனே சுவாசத்தையடக்கும் நிர்ப்பந்ததினின்று நீங்கிப் பெருமூச்சுவிட்டு முன்னேகொண்டவருத்தம் நீங்கி மகிழ்ந்தன வென்பதாம்; உவமையணி.

காமம்முதலியவை வடமொழியில் அரிஷட்வர்க்க மெனபபடுதலால், 'குலப்பகை' என்றார்; அவையாவன - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பன. (காமம் - தகாதவற்றில் விருப்பம் வெகுளி - அப்பொருள்பற்றிப் பிறாமாட்டுக் கொள்ளுங் கோபம். கடும்பற்றுள்ளம - வேணடுமவற்றிற்கும் பொருள்கொடாமல் அதனை இறுகப்பிடித்தல்; லோபம். மானம் - மாத்ஸர்யம்: அஃதாவது சான்றோரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியதுமுடித்தே விடுதலும் முதலாயின. உவகை - தகாதவற்றைப்பெறுதலால் மனமகிழ்தல்; மோகம். மதம் - செல்வக்களிப்பு) முக்குற்றங்களாவன - வித்தியாமதம், தநமதம், குலமதம் என்பன; இவை, 'முககுறும்பு' எனவும்படும். ஆணவம், மாயை, கன்மம் எனவும் கூறுதலுண்டு; ஐயம், திரிபு அறியாமை என்பவற்றையும் கொள்ளலாம். பி - ம்:—[1]விம்மலுழந்துவீங்கி. (ரு0)

ருக.—அவ்வாறு கடலினின்று மேலெழுந்த மைநாகமலையைக்குறித்து அநுமான் சந்தேகித்தல்.

எழுந்தோங்கி விண்ணோடு மண்ணொக்க விலங்கு மாடி
யுழுந்தோடு காலததிடை [1]யும்பரி னிம்ப ரெங்குங்
கொழுநதோடி நின்ற [2]கொழுங்குன்றை வியந்து நோக்கி
யழுங்கா மனத் தண்ண லிதென்கொ லெனுவ யிர்த்தான்.

(இ - ள்.) அழுங்கா மனத்து அண்ணல்-(எதற்குஞ்) சலியாத மனத்தை யுடைய அநுமான்,—இலங்கும் ஆடி உழுந்து ஓடு காலததிடை - விளங்கு கின்ற கணணாடியினமீது இட்ட ஓர் உளுந்து உருள்கின்ற காலததிறகுள்ளே, விண்ணோடு மண ஒக்க எழுந்து-ஆகாயமும் பூமியும் ஒருங்கராக வியாபித்து, ஓங்கி - உயர்ந்து, உம்பரின் இம்பர் எங்கும் கொழுந்து ஓடி நின்ற - மேலும் கீழும் எல்லாப்பக்கமும் முடியும அடியும் படர்ந்துநின்ற, கொழுநகுன்றை - செழிபபுள்ள அம்மைநாகமலையை, வியந்து நோக்கி - (திடீரெனமேலெழுநத தனால்) ஆசசரியத்தோடு பாரதது,—இது என்கொல் எனு-'இது என்னோ!' என்று, அயிர்த்தான் - சநதேகிததான்; (எ - று.)

அம்மைந்நாகமலை கடலினின்று வெளிததோன்றி மேலும்கீழும்வியா பிதது நின்றதைக கண்ட அநுமான், சிறிதும் அஞ்சாது முதலில் அதனை இன்னதெனவுணராது ஐயுற்றன னெனபதாம். மிககவிரைவைக குறித் தற்கு, கண்ணாடியிலுழுநதுருளுங்காலததிடை யென்றார். வழுவழுப்புள்ள கணணாடியின்மீது திரணடவடிவமுடைய பொருளை யிட்டால் அது தட்டுத் தடையின்றி விரைந்துருளு மியல்பு, இங்கே கருததத்தக்கது. உம்பர்க்கொ ழுந்து - முடிசசிகரம். இம்பாகொழுந்து - அடிவோர்; ஓடுதல் - படர்தல். எழுந்து - கடலினினறு மேலெழுந்து. பி-ம்:—[1]உம்பரோடு [2]நெடுங்குன்றை.

ருஉ.—அநுமான் அம்மலையைத் தனதுமார்பினால் தள்ளிவிட்டு பின்னும் உயர்ந்துபோதல்.

[1]நீர்மேற் படரா நெடுங்குன்று நிமிர்ந்து நிற்றல்
சீரமேற படராதெனச் சிந்தை யுணர்ந்து செல்வான்
வேர்மேற்பட வன்றலை கீழ்ப்பட நூக்கி விண்ணோ
ரூர்மேற் படாக் கடிதும[3]பரின மீது யர்ந்தான்.

(இ - ள்.) செல்வான்-(கடலின்மீது தாவிச்) செல்லுகின்றவனான அநு மான்,—'நெடுங குன்று - பெரிய இம்மலை, நீர்மேல் படரா - கடலின்மீது பரந்து, நிமிர்ந்து நிற்றல் - மேலோங்கியிருத்தல், சீரமேல் படராது-(நமக்கு) நன்மையைத தருவதாகாது,' எனஎன்று, சிந்தை உணர்ந்து - மனத்தினால்

ஆராய்ந்தறிந்து,—வேர் மேல் பட - (அம்மலையின்) அடியானது மேற்புறமாகவும், வல் தலை கீழ் பட - உறுதியான சிகரம் கீழ்ப்புறமாகவும், (புரண்டுவிழும் படி), நூக்கி - (தனதுமார்பினால் அம்மலையை) தள்ளிவிட்டு,—(பிறகு), கடிது - விரைவாக, விண்ணோர் ஊர்மேல் படர - தேவர்களுடைய ஊரினளவு உயரத்திலே தனது செல்லுகை உளதாம்படி, உமபரின்மீது - ஆகாயத்தின்மேல், உயர்ந்தான் - உயர்ந்து சென்றான்; (எ - று.)

முதனூலில் அம்மலையெழுசசியைத் தனது போக்கிற்குத் தடையாகக் கருதினன் அனுமனென்பது கருத்து: இவ்வுரை, மேல் ருச ஆஞ் செய்யுளில் "வேற்றுப்புலத்தோனெனல்" எனவும, ருஅ - ஆஞ் செய்யுளில் "உரைத்தானுரையா லிவனூறில னென்ப துன்னி" எனவும் வருவன காணக. "உரஸாபாதயாமாஸ" எனக் கூறியுள்ளதனால், நூக்கி யென்பதற்கு - மார்பினால்தள்ளி யென உரைக்கப்பட்டது. பி-ம்.—[1]நீர்மேற்படர் நன்னெடுங்குன்றம், நீர்மேற்படர் குன்றிது கோடு. [2]உம்பரினூடு பாய்ந்தான்.

ருங.—உடனே மைநாகமலை அம்பினால் தொடர்ந்து
மானுடவடிவங்கொண்டு அநுமானை நோக்கிக் கூறத்தொடங்குதல்.

உந்தாமு னுலைந்துயர் வேலை யொளித்த [1]குன்றுஞ்
சிந்தாகுல முற்றது பின்னருந் தீர்வி லன்பால்
வந்தோங்கி யாண்டோர் சிறுமானிட வேட மாகி
யெந்தா யிதுகே ளென [2]வின்ன விசைத்த தனறே.

(இ - ள்.) உயர் வேலை ஒளித்த குன்றம் - அலைகளுயர்கின்ற சமுத்திரத்தில் (நெடுங்காலம்)ஒளித்துக்கிடந்த அந்தமைநாகமலையும்,—உந்தா முன் - (அவ்வாறு அநுமான்) தள்ளுவதற்கு முன்னமே [தள்ளியவுடனே யென்றபடி], உலைந்து - வருந்தி, சிந்தா ஆகுலம் உறறது-மனத்துயரதனை யடைந்ததாகி,—பின்னும் - அவ்வாறு வருத்தமடைந்தபின்பும்,—தீர்வு இல் அன்பால் - நீங்குதலில்லாத அன்பினாலே, ஆண்டு ஓர் சிறு மானிடவேடம் ஆகி - அப்போது [அவ்விடத்தில்] சிறியதொரு மானுடவடிவங்கொண்டு, ஓங்கி வந்து - (அநுமான் செல்லுகின்ற உயரத்தளவும்) உயர்ந்து தொடர்ந்து,—(அநுமானை நோக்கி), 'எந்தாய்-எனதுஐயனே! இது - (நான் சொல்லுகின்ற) இதனை, கேள் - கேட்பாயாக', என - என்றுசொல்லி, (பின்பு), இன்ன-இவ்வாறாதனைகளை, இசைத்தது - சொல்லலாயிறறு; (எ - று.)—அவற்றை அடுத்த நான்குகவிகளிற் காணக. அன்றே - ஈறறசை.

அப்போது அம்மைநாகமலை அநுமான் தன்னைவீழ்த்தியதனால் தான் மிக்கவேதனையையடைந்தும, அவன்மீது மிகக அன்புகொண்டு மீண்டும் ஒருமனிதவுருவமெடுத்து உயரவெழுந்து தொடர்ந்து அநுமானையடுத்துச

சில பேசலாயிற் றென்பதாம். வேண்டியபடி வடிவுகொள்ளுதல், சிததி விசேடம்; இது அம்மலைதெய்வததுககு உளதென்க. உநதாமுன் உலைந்து - விரைவின்மிகுதியை விளககவந்த மிகையுயர்வுநவிற்சியணி. அன்பிற்குக காரணம், அநுமானது தந்தையாகிய வாயுபகவான் இந்திரனால் தனக்கு நேர்வதாயிருந்த ஆபத்தினின்று விடுவிதத செய்ந்நன்றியை மறவாமையினாலாகியது. மைநாகமலை கடலினுள் மூழ்கியொளிதத விவரம், மேல்விளங்கும். மலையினுருவதததை நோகக மனிதவுருவம் மிகசசிறியதாகுதலால், 'சிறுமானிடவேடம்' என்றார். அநுமானை மைநாகமலை 'எந்தாய' என விளித்தது, உயாவுபற்றி. பி - ம்:—[1]குன்றம். [2]இன்னதிசைத்தது. (ருகூ)

ருச.— இதுமுதல் நான்துகவிகள் - ஒருதோடீ: மைநாகமலை அநுமானிடத்துத் தான்வந்த காரணத்தைக் கூறுதல்.

வேற்றுப் புலத்தோனென லைய விலங்க லெல்லா
மாற்றுச் சிறையென் றரி வச்சிர மாண வோச்ச
வீற்றுப்பட நூறிய வேலையின் வேலை யுய்த்துக்
காற்றுக் கிறைவன்னெனைக் காத்தன னன்பு காக்க.

(இ - ள்.) ஐய - ஐயனே!—வேற்றுப் புலததோன் எனல் - (நீ என்னை) மாற்றாரது இனததைச சேர்ந்தவனென்று நினையாதே; (மற்றுயாவனெனில்), —(முறகாலததில்), 'விலஙகல் எல்லாம்-மலைகளெல்லாவறறின், சிறைமாற்று- (பறந்துவந்து நினைததவிடங்களில் தஙகியழிப்பனவான) இறகுகளை யொழிப்பாய்; எனறு - என்று (தன்தெய்வப்படைக்குக) கட்டளையிட்டு, அரி - இந்திரனானவன், மாண - (உலகததிற்கு) நன்மையுண்டாகுமாறு, வசசிரம் ஓசச- (தனது கையிலுள்ள) வசசிராயுதத்தை ஓஙகிவீச, (அப்படைக்கலம்), வீற்றுப்பட நூறிய - வேறுவேறாக அறும்படி (மலைசசிறகுகளை) அரிந்த, வேலையின் - சமயததில்,—காறறுககு இறைவன் - வாயுதேவன், அன்பு காகக - (நான் என்றைககும் அவனிடததில்) அன்புகொள்ளுமாறு, எனை - என்னை, வேலை உய்த்து - சமுததிரததிற்கொண்டு செலுத்தி, காததனன் - (எனது சிறகு அறுபடாதபடி) பாதுகாத்தான்; (எ - று.)

அநுமானே! உனதுகாரியத்தைச செவ்வனே நிறைவேறவொட்டாது இடையூறுசெய்யப்புகக பகைவரைச் சோந்தவனென்று நீ என்னைக கருதாதே; முன்பு கிருதயுகததிலே மலைகளெல்லாம் இறகுகூடயனவாய்த் தாம் நினைத்தவிடஙகளிலெல்லாம பறநதுசென்று கண்டவிடஙகளிலுந்தஙகி உலகததிற்குப் பேரழிவைசசெய்ய, அக்காலத்துத் தேவர்களினுடைய வேண்டுகோளின்படியே இந்திரன் மலைகளையெல்லாம் தனது வச்சிராயுதத்தைக் கொண்டு சிறகைத்துணிக்குமளவில், வாயுபகவான் அவ்வாபத்தினின்று தப்புமாறு என்னைத் தள்ளிகொண்டுவந்து இககடலில் விழுத்தினான்; ஆதலால்,

யான் அவ்வாயுதேவனிடத்து மிக்க அன்பு கொண்டுள்ளேன் என்று மைநாக மலை கூறிற்றென்பதாம். அன்புகாக்க - என்னிடத்து அவ்வாயுபகவான் அன்புகொண்டுள்ளதனால் எனினுமாம்.

விலங்கல் - ஊக்கு ஒருபுறமாக விலகிநிற்பதெனப் பொருள்படும் காரணக்குறி; ("இருபுனலும் வாய்ந்தமலையும் வருபுனலும், வல்லறணும் நாட்டிற குறப்பு" என்ற திருக்குறளில் 'வாயந்தமலை' என்றவிடத்துப் பரிமேலழகர் இடையதன்றி ஒருபுடையதாதலை மலைக்கு வாய்ப்பாகக்கூறியமை உணர்க) அரி - ஹரியென்ற வடசொல்லின்விகாரம். (பகைவர்களை) அழிப்பவனெனபது பொருள். மாற்றுச்சிறை—தொல்காப்பியத்தில் "ஔவெனவருஉ முயிரிறுசொல்லும், ஞநமவவென்னும் புள்ளியிறுதியும, குற்றியலுகரத்திறுதியுமாப்பட, முற்றதோன்று முன்னிலைமொழிக்கே" என்றதனால், ஏவலொருமைமுற்றின்முன வலிமிகுதென்க; "ஏவல்முன் வல்லின மியல்பொடு விகறபே" என்றார் நன்னூலாரும். வேலையின் வேலையுய்தது - சொறபின்வருநிலை. (ருச)

ருரு. அன்னு னருங்கா தல னாதலி னன்பு தூண்ட
வென்னுலுனக் கீண்டு [1]செயறகரி தாய தின்மை
பொன்னார் சிகரத்திடை யாறினை [2]போதி யேனு
முன்னு லுயர்ந்தே னுயர்விற்கு முயர்ந்த தோளாய.

(இ - ள்.) உயாவிற்கும உயர்ந்த தோளாய் - (மலைமுதலிய எப்பொருளின்)உணாச்சியினும் மேலாக உயாந்துள்ள தோள்களையுடையவனே!—(நீ), அன்னான் அருங்காதலன் ஆதலின் - (அவ்வாறு என்னைக்காத்த) அவ்வாயுதேவனது அருமையான குமாரனாதலால், அன்பு தூண்ட-(அவ்வாயுவினிடம் யான்கொண்டுளள) அன்பானது (என்னைத்) தூண்டுதல்பற்றி, என்னால் ஈண்டு உனக்கு செயறகு - எனனால் இபபோது உனகுச செய்யப்படுதறகு, அரிது ஆயது - மிகவும அருமையான உபகாரம், இன்மை - இல்லாமலிருத்தலினால், பொன் ஆர் சிகரத்திடை - பொன்னிறமாகவிளங்குகின்ற (எனது) உசசியிலே, ஆறினை - இளைப்பாறினவனாய், போதிஎனும - நீசெல்வாயானாலும், உன்னால் உயர்நதேன் - (அம்மாதிரத்தினால்) நின்னால் மேன்மை பெற்றவனாவேன்; (எ - று.)

இதனால், ஒருவர் தக்சமயத்திலே கைம்மாறு கருதாது ஒருவனுககுப் பேருதவிசெய்வாராயின், அவன் அதனை மறவாது, அவரிடத்தனறி அவரைச் சோந்தவரிடததும் தான் நன்றியுள்ளவனாயிருகக வேணடுமென்ற முறைமை விளக்கப்பட்டது. உன்னால உயர்ந்தேன் - உன்பொருட்டாகவே (கடலினின்று) வெளிவந்தே னென்றலு மொன்று. காதலன் அன்பிற்கு இடமான

வன்; மகன். பி - ம்:—[1]செயற்குரித்தாய தன்மை [2]போதியென்றேயுன்னு வுயர்நதேன். (௫௫)

௫௬. கார்மேக வண்ணன் பணிபூண்டருங் காலின் மைந்தன்
றேர்வான் வருகின்றது சீதையைத் தேவ ருய்யப்
பேர்வா னயல்சேறி யிதிற்பெறும பேறி லென்ன
நீரவேலையு மென்னை யுரைத்தது நீதி நின்றாய்.

(இ - ள்.) நீதி நின்றாய் - நீதிநெறியில் தவறாதுநடப்பவனே!—'அருங காலின் மைந்தன் - வாயுதேவனது அருமையான குமாரன் [அநுமான்], வருகின்றது - வருகின்ற செயல்,—கார் மேகம் வணணன டணி பூணடு - கான மேகம்போன்ற [கரிய] நிறததையுடையவனான இராமபிரானது கட்டளையை மேறகொண்டு, தேவர் உய்ய - தேவாகளெல்லாம் (அரகாகளால் நேர்ந்த ஆபத்தினின்று) விடுபட்டுபபிழைக்குமாறு, சீதையை தோவான்-சீதையைத் தேடுதறபொருட்டு, (ஆகும்); (ஆதலால், அவன் தவகுமாறு), பேர் வான் அயல் சேறி - (நீ) பெரிய ஆகாயததினது அருகே செல்வாயாக; இதின் - இதனைகாட்டிலும், பெறும் - (நீ) அடையக்கூடிய, பேறு - பாகியமானது, இல் - வேறு இல்லை,' என்ன - என்று,—நீர் வேலையும - ஜலமயமான சமுத்திரமும், என்னை - என்னைநோகி, உரைததது - சொலலிற்று; (எ - று.)

இதனால், மைநாகமலை, அநுமான்வருஞ் செய்தியைத் தான் தெரிந்து வந்த காரணததைத தெரிவிதததென்பதாம்.

வருகின்றது தேர்வான் (ஆகும்) என இயையும். 'பூண்டவன்... .. .. வருகின்றது' என்ற பாடம் இனிது பொருள்படும். அநுமான் இப்போது சீதையைத் தேடும்படி இலங்கைநோக்கிச செல்வது, பரம்பரையாக ராக்ஷஸ நாசத்துக்குக காரணமாகுதலால், 'காலின்மைந்தன் தேர்வான் வருகின்றது சீதையைத் தேவருய்ய' எனப்பட்டது. ஸீதா என்ற வடசொல்லிற்கு - கலப்பையுழுபடைசசாலென்று முதலிற் பொருள்; ஜநகமகாராஜா யாகஞ் செய்தற்குச் சாலையமைத்தற்பொருட்டு நிலத்தை உழுதபொழுது அப்படைச் சாலினின்று தோன்றியவளாதலால், பிராட்டிக்குச சீதையென்று பெயரா யிற்று: இடவாகுபெயராகிய காரணக்குறி. இததிருநாமம், பிராட்டியாரது திருவவதாரசசிறப்பை விளக்கும். போவானென்பதை ஒரு மொழியாகவே கொண்டு, தேவர்களுய்யுமாறு செல்பவனான அநுமானுக்கு இடமாகுமபடி செல்வாய் எனக் கூறவுந் தகும். (௫௬)

௫௭. நற்றாயினு நல்ல னெனக்கிவ னென்று நாடி
[1]யிற்றேயிறை யெய்தினை யேய்ந்தது கோடி யென்றாற்

பொற்றாரகன் மார்பதம் மில்லுழை வந்த போதே
யுற்றார்செயன் மற்று முண்டோவென வுற்று ரைத்தான்.

(இ - ள்.) பொன் தார் அகல் மார்ப - பொன்மயமான மாலையையணிந்த பரந்த மார்பையுடையவனே!—'எனக்கு—, இவன் - (இங்கு வந்திருக்கின்ற மலைவடிவாகிய) இவன், நல் தாயினும் நல்லன் - (தன்மக்களிடத்து மிக்க அன்பைக்கொண்டுள்ள) பெற்றதாயைக்காட்டிலும் நல்லவன்', என்று நாடி - என்று (நீ என்னைகுறித்து) மனதிற்கொண்டு, இற்றே - இப்பொழுதே, இறை எயதினை - சற்றுநேரம் என்னிடததில்தங்கி இளைப்பாறியவனாய்' என்னால் ஏய்ந்தது கோடி - என்னாற்செய்யக்கூடிய விருந்தை அங்கீகரிப்பாயாக; தம் இல்லுழை வந்தபோதே - தமது வீட்டிறகு (ஒருவர்) வந்த சமயத்திலே, உறாரூர் செயல் - மனம்பொருந்திய நண்பர் செயயுஞ் செயல், மறறும் உண்டோ - (இதனைத்தவிர) வேறேயு முளதோ?' என - என்று, உற்று - மனம்பொருந்தி, உரைததான் - சொன்னான்; (எ - று.)

நீ என்னைப் பெறறதாயைப்பார்க்கிலும் அந்தரங்கமான நண்பையுடையவனென்று நம்பி என்னிடததில தங்கி யான்செய்யும் விருந்தை அங்கீகரிப்பாயாகவென மைநாகமலை அநுமானை வேண்டிறறென்க. உறையுளும் உணவும் உதவுவதே உறாருடைய தொழிலென்பது, பின்னிரண்டடியிற் கூறியது. அநுமான் தன்னைப்பறறி நினைக்கவேண்டிய வகையை, 'நறாயினும் நல்லனெனக்கு இவன்' என்று கூறிறறு. நற்றாய் - பெறற தாய். இளமையில் இந்திரன் பெயரிட்டு வரமளித்தபோது கொடுத்த பொறறாமரைமலா மாலையை யுடையானாதலால, அநுமான், 'பொறறாரகன்மாப' என விளிககப் பட்டான்; கரு - ஆஞ் செய்யுளில் "அலங்கலதாழ்மார்பன்' என்றதும் காணக. பி - ம்.—[1]இறறேயிறையெய்தினன் (ருஎ)

ருஅ.—அநுமான் மைநாகமலையைத் தெளிந்தபின்பும் அப்பாற்செல்ல நினைக்கையில், தனது அருகில் அம்மலை உயர்ந்துவருதலைக் காணுதல்.

உரைத்தா னுரையா லிவனூறில னென்ப துன்னி
விரைத்தாமரை வாண்முகம் விட்டு [1]விளங்கு வீரன்
சிரித்தா னளவே [2]சிரித்துததிசை செல்லநோக்க
வரைத்தாணெடுமெ பொறகுடு மித்தலை மாடு கண்டான்.

(இ - ள்.) விரை தாமரை முகம் வாள் விட்டு விளங்கு வீரன் - வாசனையையுடைய தாமரைமலா போன்ற முகம் ஒளிவீசி விளங்கப்பெற்ற பராகிரம சாலியான அநுமான்,—உரைததான் உரையால் - அப்படிக்கூறிய மைநாக மலையினுடைய பேசினால், இவன் ஊறு இலன் எனபது உன்னி - 'இவன் குற்றமில்லாதவன்' எனபதனை உளங்கொண்டு, அளவே சிரித்தான் - சிறிதள

வாகச சிரிததான் [மந்தஹாஸம்செய்தான்]; சிரிதது - (அவ்வாறு) சிரித்து, திசை செல்ல நோக்க - (தான் போய்க்கொண்டிருந்த) திக்கையே மீணடும் போகுமாறு பார்ககையில்,—தான் வரை நெடுமை பொன் குடுமி தலை - அடிப் பாகததோடுகூடிய அம்மலையினது பெரிய பொன்மயமான சிகரமாகிய முடிப் பாகததை, மாடு - (தனது) சமீபததிலே, கண்டான் - பாரததான்; (எ - று.)

அநுமான், மனிதவடிவாகவந்த அம்மைநாகமலையினது வாரதையினால் அம்மலையினது தன்மையைததேறி, மீணடும தான் தென்திசையிற செல்லு மாறு கருதுகையில், முன்பு தன்னால் தலைகீழாகத தள்ளப்பட்ட அம்மலை மீணடும் தனது அருகில தன்னுசசிதோனற வந்திருந்ததைக கணடனனென் பதாம. இதகு, ஈகை - முன்னர் அமமலையைககணடபோது வேற்றுபபுலத தானோவென்று சஙகித்து நாக்கியமையைப்பறறியது; அன்பினாலாகிய மகிழ்சசி பறறிய புன்சிரிப்புமாம. அளவுக்குமேற சிரிததல் பெருமிதமன் றாதலால், 'அளவேசிரிததான்' எனறனரென்னலாம. மைநாககிரி புருஷ வடிவஙகொணடு சென்று பேசியதனால, உயாதிணையாணபாலாறகூறப் பட்டது. 'திசை செல்ல நோகக' என்பதறகு - (இஙகனம பேசுகிற அபபுரு ஷனுள்ள) திசையைநோககிப் பாரவையைச செலுத்தவென்று பொருள் கொள்ளுதல் சாலும. இசசெய்யுள், கீழ்சசெய்யுளோடு அந்தாதிதொடை யாகத் தொடர்ந்துவந்தது. பி-ம்:—[1]விளஙக. [2]சிரித்தத்திசைசெல்ல நோககி.

௫௬.—இதுவும் அடுத்த செய்யுளும் அநுமான் மைநாகமலையை நோக்கிக் கூறிய உபசாரமொழி.

[1]வருந்தேனது [2]வென்றுணை வானவன் வைத்த காத
லருந்தேனினி யாதுமென் னாசை [3]நிரப்பி னல்லாற்
பெருந்தேன் [4]பொழி சாரனின் னன்பு பிணித்த போதே
யிருந்தே னுகர்ந்தே [5]னிதினாங்கினி [6]யீவ துண்டே.

இதுமுதல் மூன்று கவிகள ஒரு தொடர்.

(இ - ள்.) (அநுமான் மைநாகமலையை நோக்கிப் பின்வருமாறு கூறு வான்):—வருந்தேன் - (யான் இவ்வாறு வெகுதூரஞ் செல்வதனால்) வருததம டையேன்; அது - அதற்குககாரணம, என் துணை வானவன் வைத்த காதல் - எனக்கு (எல்லாக்காலத்திலும்) துணையாயிருக்கிற கடவுளான இராம பிரான் (என்னிடததில்) வைததுள்ள அன்பாம்; என் ஆசை நிரப்பின் அல் லால் - எனது மனோரதம் நிறைவேறப்பெறாலல்லாமல், இனி - இப்பொ ழுது, யாதும் அருந்தேன் - (நான்) எதனையும் உணணமாட்டேன்; பெருந் தேன் பொழி - மிக்கதேனைசசொரிகிற, சாரல் பகககளை. [தாழ்வரைகளை] யுடைய, நின் - உனது, அன்பு - பிரீதியாவது, பிணித்த போதே - (என்னி

டம்) உண்டானபொழுதே, இருந்தேன் நுகர்ந்தேன்-(உன்மீது) தங்கி விருந்துண்டவனானேன்; இதின் ஊங்கு - இந்த அன்பைக்காட்டிலும் மிகததாய், இன்னி - இன்னமும், ஈவது - (நீ எனக்குக்) கொடுக்கக்கூடியது, உணடே உணடோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

அப்போது அநுமான் மைநாகமலையை நோகி 'நான் இராமபிரானது அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாயிருப்பதனால், வழிசசெல்வதனால் இளைப்பாவது பசிதாகஙகளாவது எனக்கு உண்டாகமாட்டா. அன்றியும, என் காரியத்தை முடிததன்றி யுண்பதில்லையென யான் விரதமும் கொணடிருக்கின்றேன்: ஆதலால், நான் உன்னிடத்தே தஙகி உணணுவிடினும், உனது அன்பைக்கண்டு, தஙகி விருந்துண்டதனினும் மிகமகிழ்ந்தேன்' என, அம்மலையின் அன்பைக கொணடாடிக் கூறின னென்பதாம.

உணர்ந்தபோதோடு உறஙகும்போதோடு வாசியற எப்போதும் அவனே எனக்குச சரணமென்பான், 'என்துணைவானவன்' என்றான்; அநுமான் இராமபிரானைத திருமாலினது திருவவதாரமென உண்மையுணர்ந்த ததது வஞானியாதலால், இவ்வாறு கூறினான். 'என்துணைவானவன்வைததகாதல்' என்பதற்கு எனகுத்துணையாகிய வானவனிடததில் யான்வைதத பகதி என்றும் பொருள் கூறலாம். 'இனி' என்னும் இடைசசொல் - இரண்டாமடியில், எதிர்காலஙகாட்டாது நிகழ்காலஙகுறித்து நின்றது. 'பெருந்தேன் பொழிசாரல்' என்பதை அன்மொழித தொகையாகக்கொணடு, மலையை நோகிய அணமைவிளி யென்றலுமாம். பி - ம்:—[1]வருந்தேல் [2]நின். [3]நிரப்பியல்லாமல். [4]பிழிசாலும். [5]இதனூஙகு. [6]ஈவதென்னே. (நுகு)

சுஂ.—இதுவும் அது

முன்பிற் சிறந்தாரிடை யுள்ளவர் காதன் முற்றப்
பின்பிற் சிறந்தார் குணநன்றிது பெற்ற யாக்கைக்
கென்பிற் சிறந்தாயதொ [1]ரூற்றமுண் டென்ன லாமே
யன்பிற் சிறந்தாயதொர் பூசனை [2]யார்க ணுண்டே.

(இ - ள்) காதல் முறற - (இரப்போரது) ஆசை பூர்ணமாகும்படி (கொடுப்பதில), முன்பில் சிறந்தார் - முன்னுசசிறந்த முதல்வள்ளல்களும், இடை உள்ளவர்-இடைவள்ளல்களும், பின்பில் சிறந்தா-கடைவள்ளல்களும், (மேற்கொணடிருக்கின்ற), குணம் - உரியகுணமாகிய, இது - இந்த அன்பே, நன்று - மிகசசிறந்தது; பெற்ற யாக்கைக்கு - (உயிரைப்) பெற்றுள்ள சரீரதுக்கு, 'என்பின் சிறந்துஆயது ஓர் ஊற்றம் - (எழுவகைத தாதுக்களுள்) எலும்பைக்காட்டிலும் சிறந்த வலிமையுடைய பொருள், உண்டு - உளது', என்னல் ஆமே - என்று சொல்லமுடியுமோ? (இல்லையே; அதுபோலவே,)

அன்பில சிறந்து ஆயது - (உயிரககு உரிய குணஙகளுள்) அன்பினும் சிறந் திருபபதாகிய, ஓர் பூசனை - மதிததுககொணடாடததக்க பொருள், யார்கண் உணடு - யாரிடத்திலேதான் உள்ளது? [எவரிடததுமில்லை யென்றபடி.]

மூவகையாகச சொல்லத்தக்க வள்ளல்களும் தாம கொடைத்தொழிலை மேற்கொணடிருப்பது, அனபினாலேயே. உடலிலுள்ள எழுவகைத் தாதுக்க ளுள் (எலுமபுசிறததல்போல) உயிரக்குரிய குணஙகளுள் அன்பே சிறந்ததாம். இதையொப்ப மதிப்புடையது வேறொன்றில்லையென்றவாறு. நீ என்னி டதது அன்பைக காட்டினாயாதலால் இதைவிட எனக்கு வேறு செய்யவேண் டியது ஒன்றுமில்லை யென்றவாறு. வேண்டாதிருக்கையில் வலியத தாமே கொடுப்பவர் முதலவள்ளல்களெனவும், வேணடக்கொடுப்பவர் இடைவள் ளல்களெனவும, புகழக்கொடுப்பவா கடைவள்ளல்களெனவும் கூறப்படுவர்; "உறுபொருள்தணடாதீந்தும் வாரியிலிரநதோாக்கிட்டும் வளர்புகழ் துதிகக வீந்தும், பேரியல்வையமெணணப்பெறறனர் முப்பாலாரும்" என்ற சூடா மணி நிகணடையும் காணக.

"அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க், கென்போ டியைந்த தொடர்பு" என்ற திருசகுறளிலும் என்போடு அன்புக்கு ஒப்புமை காண்க. பி-ம்:—[1]ஊற்றும். [2]யாஙகணுணடே. (சு0)

சுக.—அநுமான் மைநாகமலைக்குச் சமாதானங்கூறி அப்பாற்செல்லுதல்.

ஈண்டியான் கடிதேகி யிலங்கை விலங்க லெய்தி
யாண்டா னடிமைத்தொழி [1]லாற்றலி [2]னாற்ற லுண்டேன்
[3]மீணடியா னுகாவென்னல் விருந்தென வேண்டி மெய்ம்மை
பூண்டா னவன்கட் புலம்பிறபட [4]முந்து போனான்.

(இ - ள்.) 'யான் - நான், ஈண்டு - இப்பொழுது, கடிது ஏகி - விரை வாகசசென்று, விலஙகல் இலஙகை எய்தி - திரிகூடமலையின்மீதிருக்கின்ற இலஙகையைச சேர்ந்து,—ஆணடான அடிமை தொழில் - (என்னை) ஆட் கொண்டவனாகிய இராமபிரான் கட்டளையிட்ட தொழிலை, ஆற்றலின் - (எனது) வல்லமையினால், ஆற்றல் - செய்துமுடிததல், உணடெனல் - நிகழ்ந்து விடுமானால்,—(பின்பு), யான்—, மீண்டு - திரும்பிவந்து, நல் விருந்து-அன் போடுசெய்யப்படும் (உனது) விருந்தை, நுகர்வென் - உண்பேன்,' என- என்றுசொல்லி, 'வேணடி மெய்ம்மைபூண்டான் அவன் - (தன்னை) விரும்பி மெய்யான அன்பைக்கொணடவனாகிய அம் மைநாகனது, கண புலம்பின் பட - (நெடுந்தூரஙகாணகின்ற) கண்பார்வையும பின்வாஙகும்படி, முந்து போனான் - (அநுமான்) மிகவிரைந்து சென்றான்; (எ - று.)

அநுமான் 'இப்போது யான் சென்று காரியத்தை முடித்துக்கொண்டு மீணடுவரும்போது உனதுவிருந்தை யேறறுக்கொள்வேன்' என்று சொல்லி,

மைநாகன் அன்புடன் பார்த்துகொண்டிருக்கையில் அவன் கண்ணுக்கு எட்டாத தூரமளவு அதிவேகமாகச்சென்றுவிட்டன னென்றவாறும். வேணடி மெய்ம்மைபூண்டான் - மெய்ம்மைபூண்டு வேணடினான் என விகுதி பிரித்துக்கூட்டலுமாம். விருந்துக்கு நன்மை - அன்போடு இடப்படுதல்; "ஆதரஸ் ஸப்தமோரஸ:" என்று அறுசுவையோடு அன்பும் ஏழாவதுசுவை யாகச் சேர்த்துச் சொல்லப்படுதலால், அதனையுடைய உணவு சிறந்ததா மென்பான், 'நல்விருந்து' என்றான் பி ம்·—[1]ஆற்றியென். [2]ஆறறலுண்டே. மீண்டானுகர்வேனான், மீணடானுகாவென்னின். [4]முன்புபோனான் (சுக)

சுஉ.—அங்ஙனம் மிகவிரைந்துசெல்லுகின்ற அநுமானது வருணனை.

செவவான் கதிருங் குளிர்திங்களுந் தேவா [1]வைகு
வெவ்வேறு [2]விமானமு மீனொடு மேக மற்று
மெவ்வா யுலகததவு [3]மீண்டி யிருந்த தமமி
னொவவாதன வொத்திட வூழிவெங் [4]காலு மொத்தான்.

(இ - ள்.) வான் - ஆகாயததிலே, செம கதிரும் - செநிறமான கிரணங களையுடைய சூரியனும், குளிர் திங்களும் - குளிர்சத (கிரணங்களையுடைய சந்திரனும், தேவா வைகு வெவ்வேறு விமானமும் - தேவாகள் வசிததிருக் கப்பெறற வேறுவேறு விமானங்களும், மீனொடு - நக்ஷததிரங்களும், மேகம - மேகங்களும், மற்றும்-மேலும், எ வாய் உலகததவும் [உலகததுஎவ்வாயவும]- உலகத்தில எல்லாவிடங்களிலுமுள்ள பொருளகளும், (அப்போதைய அநுமா னது வேகததினால்), ஈண்டி இருந்த - ஒன்றுகசசோந்திருநதன; (இவ்வாறு தனது விசையினால சேராதவற்றையும் சேரசசெய்த அநுமான்), தமமின ஒவ்வாதன ஒததிட - தமக்குள் ஒன்றோடொன்று சேராத பொருள்களெல் லாம் ஒன்றுகச சேரும்படி (வீசுகின்ற), ஊழி வெம காலும - பிரளயகாலத துப் பிரசண்டமாருதத்தையும, ஒததான் - போல்பவனானான்; (எ - று.)

சூரியனுககு ஓரிடம், சந்திரனுக்கு ஓரிடம், நக்ஷததிரங்கட்கு ஓரிடம், மேகங்கட்கு ஓரிடமென இவ்வாறு அவ்வப்பொருட்கு ஏற்பட்டிருந்த இட நிலைகளெல்லாம் அனுமனது வேகததால் மாறிபபோய் எல்லாம் ஓரிடததில் திரணடன வென்பதாம். மிக்கவேகமாகச செலலுகின்ற அநுமானுகு, அவ னது தந்தையாகிய பிரசண்டமாருததை உவமை கூறியது, ஏறறுமம. செவ் வான் கதிர் - சிவநத பெரிய சூரியனெனினுமாம். தமமின் ஒவ்வாதன ஈண்டி யிருநத ஒத்திட என்று எடுதது, தம்முட் சேராதனவாய் ஆங்காங்குப் பொருந்தியிருந்தவைகள் ஒருங்குசேரவென்று உரைப்பினுமாம். பி - ம்·— [1]வைகும. [2]விமானங்களும. [3]ஈண்டியிரிந்திட. [4]காற்றும். (சுஉ)

சுஙு.—அநுமான் பாய்ந்துசெல்வதைக் கண்டு சூரியன் ஐயமுறுதல்.

நீர்மாக்கடன் மேனிமிர் கின்ற நிமிர்ச்சி [1]நோக்காப்
பார்மேற் றவழ் சேவடி பாய்நடவாப் [2]பதத்தே

தேர்மேற் குதிகொண்டவ னித்திறன் சிந்தை செய்தா
ஞர்மேற்கொ லென்றெண்ணி யருக்கனு மைய முறறான்.

(இ - ள்.) (அநுமான் ஆகாயத்திற் பாய்ந்துசென்ற அப்போது)— அருக்கனும - சூரியனும்,—நீர மா கடல்மேல் - ஜலமயமான பெரிய கடலின் மீது, நிமிர்கின்ற - (அவ்வநுமான்) உயர்ந்துசெல்லுகின்ற, நிமிர்சசி - வேகத்தை, நோக்கா - பாராது, 'சே அடி பாய் நடவா - சிவந்தகால்களைப் பரவவைத்து நடக்கமுடியாத, பார்மேல் தவழ்பததே - பூமியின்மேல் தவழக கூடிய (குழந்தைப்) பருவத்திலேயே, தோமேல குதி கொண்டவன் - (எனது) தேரின்மேற் குதிதத இவன், (இபபோது), ஆமேல் - யார்மேற் பாய்வதற்காக, இ திறன் சிநதை செயதான்கொல் - இவ்வாறு தாவுவதை யெண்ணினனோ?, என்று எணணி - என்று நினைத்து, ஐயம் உற்றான் சந்தேகத்தைப் பொருந்தியவனனன்; (எ - று.)

அநுமானது விசையைப் பார்தத சூரியன் 'குழந்தைப்பருவத்திலேயே என்மீது பாய்நத இவன வலிமைபெற்றுள்ள இப்பருவததில பாய்கின்றானே; இது யாரைககுறிததோ? முதிரநதபருவததையடைந்த இவன் பாய்தலைத் தாஙகவல்லா ரொருவருமில்லையே!' எனச சங்கிததனனென்க.

அநுமான் தேர்மேற்குதிகொண்ட வரலாறு:—கேசரி'யென்னும் வாநர வீரனது மனைவியாகிய அஞ்சனாதேவியினிடத்தில் அரககர்களை யழிததறகு உதவுதறபொருட்டு வாயுதேவனது அருளால் உருததிராமசமாய்ப் பிறந்த அநுமான, பிறந்தவுடனே தனது தாயைநோககி 'எனக்கு இரை யாது?' என வினவ, அவளும 'சோலையிலே முதிர்ந்து செநநிறமடைந்த பழஙகளெல்லாம உனக்கு இரையாவன' எனறுசொல்லி அவனது உணவின்பொருட்டுக கனிகொணர்தற்காகக் காட்டிறகுசசென்றனளாக, அப்போது பசிபொறுகக மாட்டாமல இவ்வநுமான் காலையிலுதிதத சூரியவிம்பத்தைக் கனியெனக் கருதி அதனைககவருமாறு அசசூரியனது தேரின்மேல் தாவிப்பாய, பின்னர் இவனுற பேருதவி பெறவேணடியிருப்பதை நோக்கிச் சூரியனும் சுடா திருந்தன னென்பதாம்.

பாய் - 'பர' என்ற முதனிலையினடியாப்பிறந்த இறந்தகாலவினையெச சம். பதம் - இடம: இடப்பெயர்கள் சிலவிடத்துக் காலப்பொருளையு முணாததுமெனக குதி - முதனிலைதொழிற்பெயர். நிமிர்சசி - உயாவு மாம். "பின்னுங கூறுவா பிறந்தபோதே யிவன் பிதாவே, யன்னவேகதத னுற்றலா லருககன்மேரபாயந்தான, மன்னுமாருதி வளர்ந்தபின் மருவல ராலோ, ரென்னதாகி யென்பவெரோ விவன்கையா லென்றார்", "ரது வான வா தானவா முதலினோ ரியம்ப" என மேல் உததரகாண்டத்தில் வருவது இஙகு ஒபபு நோகககத்தக்கது. பி - ம்:—[1]நேர. [2]பததென்.

இனி, இசசெய்யுட்கு வேறொருரை வருமாறு.—பாமேல் தவழ் - பூமியின்மேற் செல்லுதற்கு உரிய, சேஅடி - சிவந்த அடிகளை, பாய் நடவா-பரவியவாறு நடக்கமுடியாத, பததே - ஸ்தாநமாகிய ஆகாயததிலே, தோமேல் குதிகொண்டவன் - 'சூரியனது) தேரின்மேலே கால்களில்லாமையால் பாய்ந்தேறி நிலைதிருப்பவனான அருணன், நீமாகடல்மேல் - (அநுமான்) நிமிர்கின்ற நிமிர்சசிநோகி, '(இவ்வநுமான), இ திறன் - இந்தவேகததை, ஆர் மேல சிந்தைசெய்தான்கொல்-யாரக்காக உததேசிததிருகின்றானோ?', என்று எண்ணி - என்றுநினைக்க, அருகனும்—, (அவ்வாறே), ஐயம உறறான் என்க; ஓரிடதது நிலைதது நில்லாத அருணனும சூரியனும அநுமானது வேகததை இன்னதைப்பற்றியதென்று உணராமல் சந்தேகிததனரென்பதாம. இததிறன் சிநதைசெய்தான் - அனுமனது இவ்வகைவேகவலியைக் குறித்துச சிநதிக்கலானான் என்றலுமாம 'ஆமேறகொலென்று' என்பதை மத்திமதீபமாக 'சிநதைசெயதான்' என்றதனோடும், 'எணணிஐயமுற்றான்' என்பதனோடும் இயைககவுந் தகும (சுஙூ)

சுஙச.—அநுமானது உடம்பின் வருணனை.

வாளொத்தொளிர் வாலெயி றாழின மருங்கி மைபப
நீளொத்துயா [1]வாலின் விசும்பு [2]நிரம்புமெய்யன்
கோளொத் [3]தவன் மேனி விசுமபிரு கூறு[4]செய்த
நாளொத்தது [5]மேலொளி கீழிரு ளுற்ற ஞாலம்.

(இ - ள்.) வாள் ஒதது ஒளிர - வாளாயுதத்துககு ஒபபாய்ப் பிரகாசிகின்ற, வாள் எயிறு - வெணமையான பறகள், ஊழின - வரிசையாயிருந்து, மருங்கு இமைப்ப-பக்கங்களில் விளங்கிகொணடிருநக, விசுமபு நிரமபிமெய்யன் - ஆகாயமெல்லாம் நிரம்பப்பெறுகின்ற உடமபையுடையவனும, நீள ஒதது உயர் வாலின்-நீளமாகப் பொருநதி உயர்ந்துள்ள வாலினாலே, கோள் - (சிலகாலங்களில்) மறைததுகொளளுதலையுடைய கேது என்ற கிரகததை, ஒத்தவன் - ஒததவனுமாகிய அனுமனது, மேனி உடம்பானது, விசும்பு இரு கூறு செய்த நாள் - ஆகாயததில் (பகல் இரவு என்ற) இரணடு பகுதியையும் உணடாக்கியதொரு தினத்தை, ஒததது - ஒததிருந்தது; (அப்போது) ஞாலம் - இப்பூமியினது, மேல் - மேறபுறமானது, ஒளி - வெளிசசததையும, கீழ் - கீழ்ப்புறமானது, இருள - இருளையும, உற்ற - அடைந்தன; (எ - று)

சாதாரணமாக ஒருநாளின் ஒருபகுதி பகலும், மற்றொருபகுதி இரவுமாம்: அவ்வாறன்றி, இப்போது அநுமான் தான் வானததிலிருந்துகொணடு தனக்குமேலெல்லாம் ஒளியையும், கீழெல்லாம் இருளையும் உண்டாக்குவதனால், ஒரேகாலததிற் பகலையும் இரவையும கொண்டதொருநாளை யொததிருந்தது அவ்வநுமானது உடம்பு என்றவாறு: இல்பொருளுவமை.

மற்றும், இசசெய்யுட்கு - வாளாயுதமபோன்றுவிளங்குகின்ற வெண்ணிறமானபற்கள் வரிசையாக வாயினிருபுறததிலும் விளங்க அதனால் ஆகாயமெல்லாம் பிரகாசமுற்றன: நீளம்பொருந்தியுயாநத வாலினால் வானமெங்கும் ஒளியால்நிரம்புகின்ற மேனியையுடையவனான சூரியனை இராகுபோல் மறைத்தவனான அநுமானது திருமேனியினால் வானததை இருகூறுசெய்த காலததை யொத்ததாய் வானததின்கீழ்ப் பூமியெல்லாம இருளடைநதனவென்று பதவுரைகூறி, அநுமானது திருமேனியின் நீளத்தாலும் பருமையாலும் நடுவிலேமறைவு உள்ளதாதலால் ஆகாயம இரண்டுகூறாகச செய்தாற்போலாகிப் புவியெல்லாம் இருளாயின, தந்தவரிசையால் ஆகாயமெல்லாம ஒளியாயின வென்று கருத்து உரைப்பாருமுளர்.

இசசெய்யுள் மற்றும்பலவகையாகப் பொருள்படுகின்றது; அவறறையெல்லாம விரிப்பிற பெருகுமாதலால், ஏறறபெறறி கணடுகொள்க.'நாளொதது' என்பதனை, 'மேலொளிகீழிருளுற்றனாலம்' என்ற வாக்கியம் சாதித்துநிற்பது - தொடர்நிலைச்செய்யுட்துறியணி. சூரியனை மறைததனால் அநுமானதுவாலுககுக கோளை உவமைகூறினா ரென்க. கீழ், மேல் என்ற இரணடெழுவாயும் அடுகுகி, 'உற்ற' என்னும் பலவின்பால்முற்றை யேறறன. பி-ம்.—[1]தோளின். [2]நிறைந்த. [3]பொன. [4]செய்யும். [5]மேல்வெளி. (சுச)

சுரு.—தேவர்களுடையவேண்டுகோளின்படி சுரசையென்பவள் அனுமனது பலத்தைப் பரீக்ஷிக்க அரக்கியுருவெடுத்து வருதல்.

மூன்றுறற தலத்திடை முற்றிய துன்பம வீப்பா
னேன்றுறறு வநதான வலிமெய்மமை யுணாத்துநீயென்
றான்றுற்ற வானோ குறைநேர வரக்கி யாகித
தோனறுறறு நின்றாள் சுரசைப்பெயர்ச சிந்தை தூயாள்.

(இ - ள்) 'மூன்று உறற தலததிடை - (சுவாக்கம் மதியும் பாதாளம என்று) மூவகையாகப் பொருநதிய உலகஙகளிலும, முற்றிய - (இராக்கதாகளால்) மிகுதியாகநோநத, துன்பம் - துனபகதை, வீப்பான் - ஒழிததறகாக, ஏன்றுறறு-உடன்பட்டு, வநதான-வந்தவனாகிய அநுமானது, வலிமெய்மமை-மெய்மமையான பலததைப்பறறி, நீ உணர்தது - நீ (எங்கட்கு) அறிவிப்பாயாக,' என்று—, ஆன்று உறற வானோ குறை நேர - மிகுதியாக ஆகாயததிறபொருநதிய தேவாகள் வேணடிககொளள, சுரசை பெயா சிநதை தூயாள் - சுரசையென்ற பேரைககொணட மனப்பரிசுத்தியையுடையவள், அரகி ஆகி - ராகஷவிவடிவுகொணடு, தோன்றுற்று நின்றாள - (அனுமனது எதிரிற) காணப்பட்டு நின்றாள; (எ - று.)

பேருருவககொணடு மகேந்திரமலையும் உட்புகுமாறு தாவியதும் மைநாக மலையை மாபினால வீழ்ததியதுமாகிய இருமுறைகளில் அனுமனது பலத

தைக கண்கூடாகக்கண்டிருந்தும் தேவர்கள் 'தமது காரியம் பலிக்குமா?' என்ற அதிசங்கையினால் முழுநம்பிக்கையில்லாதவராகளாய், அவனது பலத்தைச் சோதிக்குமாறு, நாகமாதாவான சுரசையென்பாளை யேவ, அவள் அரக்கிவடிவங்கொண்டு அனுமனெதிரில் வந்துநின்றனளென்பதாம். சீதையைத் தேடிக்கண்டுவருவதாக உடன்பட்டுவந்ததையே, உபசாரவழக்கால், 'மூன்றுறறதலததிடைமுறறியதுனபம்வீப்பா னேன்றுற்று வந்தான்' என்றனா. 'அரக்கியாகி' என்பதை 'உணர்த்து' என்றதனோடு இயைத்தலுமாம். சிந்தைதூயாள் - இயல்பிலே மனததிற் களங்கமில்லாதவள். (சுரு)

சுசு.—இதுவும், அடுத்தகவியும் - அரக்கிவடிவங்கொண்ட சுரசை அநுமானை அதட்டியதைக் கூறும்.

பேழ்வாயொ ரரக்கி யுருக்கொடு பெட்பி னோங்கிக்
[1]கோழ்வா யரியின் குலத்தாய் கொடுங்கூற்று முட்க
வாழ்வா யெனக்கா [2]மிடமாய் வருவாய்கொ லென்னு
[3]நீள்வாய் [4]விசும்பின் றனதுசசி நெருங்கி நின்றாள்.

(இ - ள்.) (சுரசையென்பவள்),-பேழ் வாய் பிளவுபட்ட [மிகக அகன்ற] வாயையுடைய, ஓர் அரக்கி உருகொடு-ஒரு ராக்ஷஸியின் வடிவததைஎடுததுக கொணடு, பெட்பின் - (அநுமானை யுணணவேணடுமென்ற) ஆசையினாற் போல, ஓங்கி உயர்ந்துநின்று,—(அநுமானைநோகி),—கோழ் வாய்-கொழுப்புப்பொருந்திய, அரியின் குலத்தாய - குரங்குகுலததிற் பிறநதவனே! கொடுங்கூற்றம் உட்க வாழ்வாய்-கொடியயமனும் அஞ்சும்படி வாழுமவனே! எனககு ஆமிடம் ஆய் வருவாய்கொல்-எனக்குஏற்ற மாம்சமாக வருபவனோ நீ, என்னு - என்றுசொல்லிககொணடு; நீள வாய் விசும்பின் தனது உசசி நெருஙகி - உயாசசிபொருந்திய ஆகாயததிலே தனது தலையானது முட்டுமாறு வளாந்து, நின்றாள—; (எ - று.)

அசசுரசை வானுறவோஙகிய ராக்ஷஸிரூபததைக் கொணடு 'எனக்கு நீ இரைசசிபோலும்' என அநுமானைப் பரிகசித்துக் கூறினளென்க. தன்னைப் பொருள்செய்யாது தனமுன்வநதது கொழுப்பின் காரியமென்றும சபலபுததியின் பயனென்றும் குறிப்பாள், 'கோழ்வாயரியினகுலததாய்' என்று விளிததனளென்க. ஆமிடம் - ஆமிஷன் என்ற வடசொல்லின் விகாரம்; மாமஸமென்பது பொருள். ஈறறடி - இனவெதுகை, நெருஙகி யென்பதை நெருங்கவென எசசததிரிபாகியும் உரைக்கலாம் கீழ்சசெய்யுளில் 'அரக்கியாகித தோன்றுற்று நின்றாள்' என்று தொகுததுச சுட்டியதன் வகுத்துக்காட்டல், இசசெய்யுள். பி - ம்:—[1]கோள்வாய். [2]ஆமுணவாய். [3]நீள்வான். [4]விசும்பிற் றனது, விசும்புற்தனதுசசி நெருக்கி. (சுசு)

சுஎ. தீயே யெனலாய பசிப்பிணி [1]தீர்த்தல் செய்வா
யாயே [2]விரைவுற்றெனை யண்மினை வண்மை யாள
நீயேயினி வருதெ னிணங்கொள் பிணங்கெ யிற்றின்
வாயே புகுவாய் வழிமற்றிலை வானி னென்றாள்.

(இ - ள்.) (மற்றும சுரசை அநுமானைநோக்கி),—'வணமை ஆள - வணமையையுடையவனே! (நீ), தீயே எனல் ஆய - (இது) அகினியே போன்று உடம்பினையெரிகின்றது என்று சொல்லப்படுவதாகிய, பசி பிணி (எனது) பசியாகிய நோயை, தீர்த்தல்செய்வாய ஆயே - போகுபவளாகியே, விரைவுற்று - விரைவாக, எனை அணமினை - என்னை நெருங்கிவிட்டாய்போலும்; நீயே - (நானபற்றவேண்டாமல்) நீ சுயமாகவே, இனி - இனி மேல், வருது—, என் நிணம கொள் பிணங்கு எயிற்றின் வாயே புகுவாய் - எனது மாமசத்தைகொண்டுள்ள வளைந்த கோரப்பற்களையுடைய வாயினுள்ளே புகுவாயாக; வழி-(நீ தப்பிசசெல்லும்)வழி, வானின்-ஆகாயத்திலே, மற்று இலை - வேறேயிலலை,' என்றாள் - என்றுகூறினாள்; (எ - று.)

'நீ இங்குவந்தது எனதுபசியைத தணிததற்காகவே போலும்; இங்கே யோ நீ தப்பிசசெலவதறகு வேறுவழியு மில்லை ஆதலால், தனது வாயில் நீ தானே புகுவாயாக' என்று சுரசை கூறின ளெனபதாம. அநுமான் தன்னுடம்பைத் தானேவந்து உணவாக வலிய வுதவுந் தன்மைய னென்று குறித்து, அவனை 'வண்மையாள' என விளிததாள்: முதலவள்ளலே யென்றவாறு. வயிற்றிற்புகும் உணவுகளையெல்லாம எரிதது ஒழிகின்ற ஜாடராகினியினாலேயே பசி விளைதலபற்றியும அஃது மூளுங்காலதது உடமபைத் தகிதது வருததுதலபறறியும 'பசிதீ' எனப்படுதற்கு ஏற்ப, 'தீயேயெனலாய பசிப்பிணி' என்றாள். இனி, இதனொடாகுயானைததீ யென்று சொல்லப்படுகின்ற பெருமபசியை யுணடாகுகின்ற வியாதியையென்றும் பொருள்கொள்ளலாம். ஆயே - தாயே யென விளியாகவுமாம். நிணங்கொள்ளுதல் - இதற்குமுனபு தின்ற பிராணிகளின் உடற்கொழுப்பு ஒட்டிக்கொண்டிருததல். பி - ம்:—செய்ய, வாயே விரைவுற்றனை நீயே; தீர்ததல் செய்வா, னாயே விரைவுற்றனை யன்பின்வழாமையான, நீயே. (சுஎ)

சுஅ.—அனுமனது மறுமொழி.

பெண்பாலொரு நீபசிப் பீழை [1]யொறுக்க நொந்தா
யுண்பாயென தாக்கையை யானுத வற்கு [2]நேர்வல்
விண்பாலவர் நாயக னேவ லிழைத்து மீண்டா
னண்பா லெனசசொல்லிய நல்லறி வாள னக்கான்.

(இ - ள்.) 'பெண்பால் ஒரு நீ - ஒருபெணணாகிய நீ, பசி பீழை ஒறுக்க- பசியினாலாகிய துன்பம் (உன்னை) வருததுதலினால், நொந்தாய்-வருந்தினாய;

வினபாலவா நாயகன் ஏவல் இழைத்து மீண்டால-மேலுலகத்திலுள்ளவாக ளான தேவாகட்கெல்லாக தலைவனாகிய இராமபிரானது கட்டளையைச செய்துவிட்டு (நான்) மீண்டுவந்தால், (அப்போது), எனது ஆகக்கையை - எனது உடம்பை, உண்பாய் - நீ உணணலாம்; யான் - நானும், உதவற்கு - (நீ உண்ணுமாறு) கொடுத்ததற்கு, நேர்வல - உடன்படுவேன்', என-என்று, நண்பால் சொலவி - சினேகத்தோடு சொல்லி, அ நல் அறிவாளன் - சிறந்த ஞானமுள்ளவனாகிய அவ்வநுமான், நககான்-சிரித்தான்; (எ - று.)

இவகு, அநுமான் சிரித்தது - அவளைக்கண்டு தான் அஞ்சவில்லை யென் பதைத தெரிவித்ததறகும், பெணணாகியநீ இவ்வாறு பெருமபசி கொள்ளுதல் தகாதெனக் குறிப்பித்தற்குமாம; ஆகவே, நகைநான்கனுள் இஃது - எளனலின்பாற்படுமென அறிக. சினேகிதரிடத்துச் சொல்வதுபோல ஸஹஜ மாகக் கூறினனெனபா, 'நணபாலெனச சொல்லி' எனறார். 'பெணபா லொருநீ' என்ற விதப்பு, ''பெண்ணென்றாற் பேயும் இரங்கும்'' என்றபடி யாவரும இரங்கத்தக்க பெணபாலாருள் ஒருத்தியாகிய நீ பெரும்பசிகொண்டு மிக வருந்துதலை ஆணமக்களிலொருவனான யான் தீர்ததற்குக் கடமைப்பட் டுள்ளேனென உலகியல்பு தோன்றக் கூறியவாறும்; நணபால் நேர்வல என்றலுமாம். 'அந்நல்லறிவாளன்' என்பது, 'அநல்லறிவாளன்' எனத் தேர்க்கது; சொல்லிய நல்லறிவாளன் என்று எடுக்கலாம். பீழை - பீடா என்றவடசொல்லின் சிதைவு. பீ - ம்:—[1]பசிப்பீழை யுறுததல்போ. [2]சொல் லினல்லறிவாள னக்கான். (கூஅ)

கூகூ.—மீண்டும் சுரசை 'நின்னைத் தின்பேன்' என்றலும், அதற்கு அநுமான் 'வல்லவளாயின் செய்' என்றலும்.

காய்ந்தே ழுலகங்களுங் காணநின் யாக்கை தன்னை
யாய்ந்தே பசி[1]தீர்வெனின் ஞணையென் [2]றன்னள் சொன்னு
ளோர்ந்தானு [3]மிகழ்ந்தொரு வேனின தூழில் பேழ்வாய்
[4]சேர்ந்தேகு கின்றேன் வலையாமெனிற் [5]றின்னி யென்றான்.

(இ - ள்.) 'காய்ந்து - (உன்னைக்) கொன்று, ஏழ் உலகங்களும் காண - ஏழுலகத்தவரும் பாரததுககொணடிருககையிலேயே, நின் யாகக்கைதன்னை - உனது சரீரத்தை, ஆய்ந்து - ருசிபாரத்து, பசிதீர்வென் - (எனது) பசியைப் போகக்கொள்வேன்; நின் ஆணை-உன்மேல ஆணை,' என்று—, அன்னள - அந்தச சுரசை, சொன்னள்—; ஓர்ந்தானும்-எல்லாவற்றையு முணரும் அறி வினனாகிய அவ்வநுமானும, இகழ்ந்து - பரிகசித்து, 'ஒருவேன் - தனிமைப பட்டிருககின்ற யான், நினது ஊழ் இல பேழ் வாய்-உனது முறைப்படியில் லாத [மிககக்கோரமாயுள்ள] திறந்த வாயின் வழியாக, சேர்ந்து - புகுந்து, ஏகு கின்றேன் - போகினறேன்; வலை ஆம் எனில் - நீ (என்னை விழுங்கும்) வல் லமையுடையவளானால், தின்னி - தின்பாய்,' என்றான் - என்றுகூறினான்

காரியத்தை முடித்து மீண்டுவருகின்றேனென்று அநுமான் சொல்லவும் கேளாமல், அவ்வாசகி 'உன்மேலாணை; நான் உன்னை இப்போது விழுங்கியேதீர்வேன்' என்று சொல்ல, அதற்கு அநுமான் 'நான் உன்வாயிற் புகுந்து செல்லுகின்றேன்; உனக்கு வல்லமையிருந்தால் என்னை விழுங்கு, பார்ப்போம்' என அலக்ஷ்யமாகக் கூறினனெனக. "இங்கேவருபவர்கள் எனது வாயிற புக்கன்றிப் போகக்கூடாது" என்று முதனூலிற் கூறியதையொட்டி, 'காயந் தேழுலகங்களுவ காண நின்யாகைதனனையாயந்தே பசிதீரவெ னின்னுணை யென் றனனன் சொன்னுள்' எனக் கூறினா. தனது செய்கையால அவளை எளிதில்வென்றிடலா மென எண்ணியதனுல், அவளை இகழ்ந்து கூறினன் அனும னெனக.

'ஒருவேன' - அஸஹாயசூரனுகிய யா னென்றவாறு; இனி, ஒருவேன் - (உனது விருப்பத்தைக்) கடந்துசெல்லேன் என்றுமாம. இப்பொருளில், ஒருவு - முதனிலை. காய்ந்து ஆயந்து பசிதீர்வென் என இயையும. காய்ந்து - கோபித்து எனகொண்டால், 'சொன்னுள்' என்பதனேடு இயைக்கலாம். இகழ்ந்து என்றான் என இயையும; இகழ்ந்து ஒருவேன் என இயைத்து உரைப்பினுமாம. 'உண்டு' அலலது 'தின்று' என்னுது 'ஆய்ந்து' என்றது, உனது உடம்பு எனககு முழுவுணவாதற்குப போதா தென்ற குறிப்பு. இதுவும, 'நின்னுணை' என்றதும் - பரிகாசமாககூறிய வீகட வார்த்தை. பி-ம்:—[1]ஆர்நதேபசிதீரவனிதாணை, ஆயநதேபசிதீரவனிதாணை [2]அன்ன. [3]உவந்தொருவேன், உகநதொருவேன். [4]சோர்தேகுகின்றேனெனையாமெனில். [5]தின்றிடுகின்றி. (சுகூ)

எ0.—அப்போது அவள் அநுமானை விழுங்குமாறு தனது வாயை விரிக்க, அநுமானும் மிக்கபேருருவங் கொள்ளுதல்.

அக்காலை யரக்கியு மண்ட மனந்த மாகப்
புக்கா னிறையாத புழைப்பெரு வாய் [1]திறந்து
விக்காது விழுங்க நின்றுளது நோகக்கி வீரன்
[2]றிககாரவள வாய்சிறி தாமவகை சேணி னீண்டான்.

(இ - ள.) அ காலை - அப்போது, அரக்கியும் - அநதராக்ஷஸியும்,—அனந்தம் அண்டம் ஆக புக்கால் - அனேக அண்டங்கள ஒருசேர வந்து புகுநதாலும், நிறையாத - நிரம்பாத, பெரும் புழை வாய திறந்து - மிகப் பெரிய துவாரததையுடைய வாயை அகல விரித்துக்கொண்டு, விக்காது விழுங்க - விக்கலெடுக்காமல் [தடைப்படாமல்] விழுங்குமபடி, நின்றுள்—; அது நோக்கி - அதனைப பாத்து, வீரன் - வீரனுகிய அநுமான், திககு ஆர் அவள் வாய சிறிது ஆம் வகை - எல்லாததிசைகளிலும் பரவிய அவளதுவாய் (தனது உருவததிற்குமுன்னே) சிறியதாகுமாறு, சேணில் நீண்டான் - ஆகாயததில் நீண்டுவளாநதான; (எ - று)

அநுமான் தானே அவள்வாயிற்புகுவதாக இசையவும், அவள் பின்னும், தனது வாயை அகலவிரித்ததைக் கண்டு சினங்கொண்டு அவளது வாய்கொள்ளாதபடி மிகப்பேருருவத்துடன் வானுறவோங்கிவளர்ந்தனனென்பதாம். புக்கால் என்றதன்பின் உம்மை விகாரத்தால் தொக்கது; புழை - உட்டுளை; குகைபோன்ற என்றலு மொன்று. வாயினுட்கொள்ளப்படும் உணவுத் திரளை பெரிதாயிருக்குமானால் விக்க லுண்டாதல்கூடும். அதற்கு இடமின்றி அனுமனதுபேருருவத்திலும் தனதுவாய் மிகப்பெரிதாகத் தட்டின்றி எளிதில் விழுங்குமாறு நின்றனனென்பார், 'விக்காது விழுங்க நின்றான்' என்றார். அன்றி, 'விக்குதல்' என்பது, தான்கொண்டகாரியத்தைத தடையின்றிச செயயமுடியாமல் எளிமைபபடுதலைக் காட்டு மென்னலுமாம்; "விககற் பொருதுதுவன்" என்னுமிடததிலும் காண்க. திக்காரம் வள் வாய் என்று கொண்டு - (தனது பெருமையைப்) பழிகின்ற (அவளது) பெரியவாயென்று கூறுதலுமொன்று; திககாரம் - வடசொல் சேணின் நீண்டான் - அகன்று நீண்டான் எனினுமாம்; சேண - அகலம். 'திககு ஆர்' என்பது - (அநுமான் செல்லுந் தெறகுத) திக்குமுழுவதும நிரம்பிநிற்கின்ற என்றும் பொருள்படும். பி - ம்:—[1]புழுங்க. [2]திகககாநெறிவாய். (எ0)

எக.—அநுமான் சிறியவடிவங்கொண்டு அவள் வாயினிற்புக்கு வெளியே வந்துவிட, வானோர் மலர்மழைதூவி வாழ்த்துதல்.

நீண்டா னுடனே சுருங்கா [1]நிமிர்வாள் வயிற்றி
னூண்டா னெனவுற் றொருயிர்ப புயிராத முன்னர்
மீண்டா னதுகண்டனர் [2]விண்ணுறை வோரக ளெம்மை
[3]யாண்டான் வலனென்றலர் தூயநெடி தாசி சொன்னார்.

(இ - ள்.) நீண்டான் - அவ்வாறுவளாந்தவனான அநுமான், உடனே— சுருங்கா - (தன்னுடமபு மிகசசிறிதாகுமாறு) சுருங்கி, நிமிர்வாள் வயிறறின் ஊணா தான் என உறறு - தன்னை அவ்வாறு ஓங்கியிருக்கின்ற சுரசையினது வயிற்றுக்கு உணவேயென்று (கணடோர்) நினைகக்கும்படி (அவளவாயினுள்) தான்புகுந்து, ஓர் உயிர்ப்பு உயிராத முன்னர் மீணடான் - ஒருமுறை மூசசு விடுதற்குமுன்னமே [மிகவிரைவில்] வெளியேவந்துவிட்டான்; அது கண்டனர் - அவ்வதிசயத்தைப் பார்த்தவர்களாகிய, விண உறைவோர்கள்-(வானத்தில் அப்போது வந்திருந்த) வானுலகத்தவரான தேவர்கள், எம்மை ஆணடான் வலன் என்று - 'நம்மை (ஆபத்தினின்றுவிடுவித்துப்) பாதுகாப்பவனாகிய இவன் (நமகாரியததை முடிபபதில்) வல்லவனே' என்று சொல்லி, அலர்தூய் - புஷ்பவகளைத தூவி, நெடிது ஆசிசொன்னார் - மிகுதியான வாழ்த்து மொழிகளைக் கூறினாகள்; (எ - று.)

சுரசையினது செருககு அடகுமாறு அவள்வாய்க்கு அடகாதபடி ஓங்கிவளாந்த அநுமான், காலதாமதமாவதைக கணடு அவள்விருப்பிற்குத் தான் முன்னர் இசைந்துகூறியபடியே தனது உடலை மிகவுஞ்சுருக்கிக்

கொண்டு அவள்வாயினுட் புக்கு அவள் அவ்வாயை மூடுவதற்கு முன்னமே மீண்டுவந்திட, அது கண்டு, அவனது பலத்தை யுணருமாறு அச்சுரசையை யேவிய தேவாகள், மூன்றுமமுறையிலும் அவனது வல்லமையைக் கீண் கூடாகக் கண்டதனால், 'இனி நாம் விரும்பிய ராக்ஷஸவதம் இவனுதவியால் முடிநதுவிடும்' என்று உறுதிகொண்டு அவனதுதிறததை மெசசிப் பூமழை பொழிந்து அவனை வாழ்த்தினரென்க. "அநுமான் கட்டைவிரலளவான வடிவநகொணடு அவள்வாயினுட் புககு மீணடுவந்து 'உனது வரததிற்கு மாறில்லாமல் உன்வயிற்றினுட் புகுந்து ஆயிற்று; இனி எனது காரியத்தை நாடிசசெல்வேன் என்று அவளைத் தொழுதனன்" என, முதனூலிற் கூறியுள்ளது. இவநவணம நினைத்தபடி வளாதல் - 'மகிமா' என்ற யோகசித்தி யும், சுருநகுதல் - 'அணிமா' என்ற யோகசித்தியுமாம்; இவை - எண்வகைச் சித்தியின் பாற்படும்.

ஆண்டான் - (தனது செய்கையால்) ஆளப்போகின்றவன்: தெளிவி னால் எதிரகாலம் இறந்தகாலமாகச் சொலலப்பட்ட காலவழுவமைதி. அடி மைகொணடவன்; எசமானன், தலைவன எனினுமாம். ஊனதான்—தான் - அசையுமாம். 'ஒருயிர்ப்புயிராதமுன்னம்' என்றது, மிகக காலநுட்பத்தைக காட்டும்; 'மூசசுவிடுமுனனே'' என்றா பிறரும. 'ஊன் தான் ஏன உற்று ஓர் உயிரப்பு உயிராதமுனனம் மீண்டான்' எனபதற்கு - உணவாகின்றேன் யான் என்று சொல்லிகொண்டே புகுந்து (அவன் தனது மிக அகன்ற வாயைச சுருககி மூடுவதற்குள்ளே) அதிவிரைவாக வெளிப்போந்தன னென்று உரைக்கவும்படும் பி-ம்.—[1]நிமிர்வாயிடததின். [2]விண்ணுறையோர் கண் மெய்ம்மை. [3]ஆணடானிவனென்று. (எக)

எஉ.—பின்பு சுரசை தனது உண்மைவடிவத்துடன் அவனை வாழ்த்திச் செல்ல, அநுமானும் அவளைப் புகழ்ந்துபோதல்.

[1]மின்மேற்படர் நோன்மைய னாயுடல் வீங்கி நீங்கத்
தன்மேனிய ளாயவ டாயினு மன்பு தாழ
வென்மேன் முடியாதன வென் றினி தேத்தி நின்றாள்
பொன்மே னியனு நெடிதாசி புனைந்து போனான்.

(இ - ள.) (அவ்வநுமான), நோன்மையன் ஆய் - (தனது செய்கை யையே) முககியவிரதமாக வுடையனாயககொணடு, மின் மேல படா உடல் வீஙகி - ஒளி மேலேபரப்புமாறு (மிககவொளி) உள்ள (தனது) உடம்பு (முன்பு தான் செல்லுமபோது இருநதபடியாகவே) பருததது, நீஙக - (தனது வழியைநோககிப) போகுமாறு முயல,—(அப்போது), அவள் - அசசுரசை, தன் மேனியள ஆய - (தானகொணடிருந்த ராக்ஷஸவடிவததை யொழித்து நாகமாதாவாயுள்ள) தனது இயற்கைவடிவததுடனே (அநுமானது எதிரிலே வநது), தாயினும அனபு தாழ-(பெற்ற) தாயினும் அன்பு அதிகமாக,—மேல் முடியாதன என்றென் - 'இனிமேல் (உன்னால) முடிக்கக்கூடாதனவான

செய்கை எவைதாம உளளன? [எவ்வகைததொழிலையும் நீ முடிககவல்லாய்], என்றுசொல்லி, இனிது எததி நின்றாள - இனிமையாகப் புகழ்ந்துகொணடு நினறாள்; பொன் மேனியனும் - அழகிய உடமபை யுடையவனான அநுமானும், நெடிது ஆசி புனைந்து - (அவளது) மிக்கவாழ்ததுககளைப் பெற்றுக் கொண்டு, போனான்—; (எ - று.)

கட்டைவிரலினளவாகச சிறுத்து அவளது வாயினுட்புக்கு மீணடுவந்த அநுமான் தனது கருமமே கணணாகவுடையனாய் முனபோலவே பெரு வடிவநகொணடு மீண்டும போகத்தொடஙகுகையில், அந்தசசுரசையானவள் தனது இயற்கைவடிவுடனே அவனது எதிரில தோன்றி அவனைப் புகழ்ந்து வாழ்த்திசசெல்ல, அநுமானும் முன்போலவே போகலாயின னென்பதாம. 'மின் மேல் படர் நோன்மையன ஆய்' என்பதற்கு - (திடீரென்று மிகப பெரிதாகத தோன்றி விளஙகி உடனே மிகசசுருஙகிவிடுதலில்) மின்னலி னும் அதிகமாக மிக்க ஆற்றலையுடையவனாகி என்று உரைப்பினும அமையும்; நோன்மை - சக்தி. நீஙக - (தன்வாயினின்று) நீஙகிவிட எனினுமாம். முடியாதன - (நினககு) நிறைவேறாதன. "தாயொககு மன்பின்" என்றபடி பெற்றதாய் அன்பிற் சிறத்தலால 'தாயினு மனபு தாழ' என்றார். பொன மேனியன் - பொன்போன்ற உடமபையுடையவ னென்றுமாம; "காஞ்ச நாதீ கமநீய விகரஹம்". என்பதும காண்க. பொன்மேனியனும், நெடிது ஆசி - மிக்க வாழ்ததுக்களால், புனைந்து-(அந்தச சுரசையைப்) புகழ்ந்துகூறி, போனானெனக கூறுவாருமுளர். பி - ம்.—[1]மினமேறபடா மெயயினதான வள் வீக்கநீஙகி. [2]இனிதாசிபுனைந்து. (எஉ)

எங.—அநுமானது செய்கையைக்கண்ட பலரும் பலவகையாகக் கொண்டாடுதல்.

கீதங்க ளிசைத்தனர் கின்னரர் கீத நின்ற
[1]பேதங்க ளியம்பினர் பேதைய ராடல பின்னாப
பூதங்க டொடர்ந்து புகழ்ந்தன பூசு ரேசர்
வேதங்க ளியம்பினர் தென்றல் [2]விருந்து செய்த.

(இ - ள்.) கினனரர் - கின்னரர்கள், கீதஙகள் இசைததனர் - பாடல் களைப்பாடினாகள்; பேதையர் - (தேவ) மாதாகள், கீதம் நின்ற பேதங்கள் - பாடல்களிலுள்ள பலவகைவிகற்பஙகளை, ஆடல் - நர்ததனஙகளைச செய்து கொணடே, இயமபினர் - பாடினாகள்; பூதஙகள் - பலவகைப்பிராணிகளும, பின்னர் தொடர்ந்து - (அநுமனது) பின்புறததிலேயே தொடாந்துபோய, புகழ்ந்தன - (அவனைப்) புகழலாயின; பூசுர ஈசா - பிராமணசசிரேஷ்டாகள் [ருஷிகள்], வேதஙகள் - வேதஙகளை, இயம்பினா - (அனுமானுக்கு மஙகள முண்டாகுமாறு) கூறினாகள்; தெனறல்-தெனறற்காற்று, விருநது செயத - புதுமையாக வீசிற்று; (எ - று.)

அநுமான் அவ்வாறு பிறர்க்கரியசெயலைச் செய்தது கண்டு பலரும் பல வகையாகத் தமது மகிழ்ச்சியைக் காட்டினரென்க. கிந்நரர் - எப்பொழுதும் ஆணும் பெண்ணுமாய் இரட்டைபபட்டு நின்று கிந்நரமென்னும் வாததியம் கைகொண்டு பாடித்திரிவதொரு தேவசாதியார்; குதிரைமுகமும் மனித வுடம்புமுடையவர், அந்தணர்கள் வேதங்களில் ஸ்வஸ்திவாசநமென்ற பாகத்தைப் பாராயணஞ் செய்தனரென்க. 'பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன, என்பதற்கு - பூதகணங்கள் பின்தொடர்ந்து புகழ்ந்தனவென்றும் கூறுவர்; அநுமான் பூதகணநாதனான சிவபிரானது அம்சமாதலால். ஆடல் இயமபினர் - மூன்றும்வேற்றுமைத்தொகை; ஆடலோடு இயமபினரென்க. பின்னர்- மறறும் எனினுமாம். தொடர்ந்து - ஆடல்பாடல் செய்பவர்களுடன் கூடியென்றலுமொன்று. தென்றல் விருந்துசெய்த - 'இப்படிப்பட்ட இனிய காறறை யான் இதுவரையிலும் கண்டதில்லை' என்று அநுமான் கொண்டாடும்படி தென்றற்காறறு மெல்ல வீசிறறு. செய்த - செய்தது என்பதன் தொகுத்தல். தென்றல் - தெறகிலிருந்துவரும் காறறு; அத்திசை நோக்கிச் செல்லும அநுமான் முகத்திறபடக் குளிர்ந்துவீசி இளைப்பு இன்றுமாறு இனிமை செய்தலையே, தென்றல் விருந்துசெய்ததாகக் குறிததார் ("விஷேவேக ததாவாயுஃ ராமகாயார்த்தவிததயே" என்றார் ஸ்ரீ வால்மீகிபகவானும்.) எம்பெருமானுககு அடிமைசெயயலுற்றால் தந்தையும உபசரிகக்கக் மேன்மையுண்டாகுமெனபது இஙகுப போதருமெனபர். பூமிக்குத தேவர்களபோல விளஙகுதலால், அந்தணா, வடமொழியில் 'பூஸுரர்' எனப்படுவா. "நிலததேவா" என்றா பெரியாரும்: பி-ம்:—[1]"பேதங்களிசைததன பேதையராடன்மிக்க,' [2]விருந்துசெய்'. (எரு)

எச.—இதுவும், அடுத்தகவியும் - தூாகம்; அநுமான் இனிதுசெல்ல அப்போது அங்கு அங்காரதாரை வருதல்.

மந்தார முந்து மகரந்த [1]மணந்த வாடை
செந்தா மரைவாண் முகத்திற் செறிவேர் சிதைபபத்
தந்தா முலகத திடைவிஞ்சையா [2]பாணிதள்ளுந்
கந்தார [3]வீணைக்களிசெஞ்செவிக் காதுறுங்க.

(இ - ள்.) மந்தாரம் மந்தாரமலர்களின் மணததை, உந்து-வீசுவதான, மகரநதம மணந்த - மகரநதப்பொடிகளை யடித்துககொண்டு வருகின்ற, வாடை - தென்றறகாற்றானது, செம் தாமரை வாள் முகததில்-செந்தாமரை மலாபோன்ற ஒளிபொருநதிய (தனது) முகததிலே, செறி - மிகுதியாகத தோன்றிய, வோ - வோவைவீரை, சிதைப்ப - ஒழிக்கவும்,—விஞ்சையா - வித்தியாதரர்கள், தம தாம உலகததிடை-தங்கள் தங்களுலகததிலே யிருந்துகொண்டு, பாணி தள்ளும் - கைவிரலகளினால் தடவிவாசிகின்ற, வீணை - வீணையினது, கந்தாரம் களி-காநதாரமென்னும் இசைப்பாட்டாகிய மதுவை, செம செவி காது - மிகக அழகினையுடைய (தனது) காது, நுங்க - இனிதாகப் பருகிகொண்டிருக்கவும்,—(அநுமான் வானததிற் செல்லுகையில்),

(எ - று.)—'அங்கார தாரை எழுந்தாள்' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும். அன்றி, கீழ்ச்செய்யுளில்வந்த முற்றுக்களையெல்லாம் எச்சமாக்கி அவற்றையும், இச்செய்யுளிலுள்ள 'சிதைப்ப', 'நுங்க' என்ற எச்சங்களையும் எஉ - ஆஞ்செய்யுளிற்போந்த 'போனான்' என்ற முற்றோடு கூட்டி யுரைத்தலும் தகும்.

அநுமான் வானத்தில் மிக உயரத்திற செல்லுகின்றானென்பதை விளக்க, 'மந்தாரமுந்து வாடை' என்றார்; பின்னிரண்டடிகளும் இவ்வாறே கருதுதற் காணக. ஆகவே, இச்செய்யுள - தொடர்புயர்வுந்விற்சியணியாம். முதலடி, வாயுவுக்கு 'கந்தவஹன' என்று ஒருபெயா இருத்தலை நன்குவிளக்கும். மந்தாரமென்பது - தேவலோகத்திலுள்ள ஐந்துதருக்களிலொன்று; (மற்றவை - ஸந்தானம், பாரிஜாதம், கல்பகம் ஹரிசந்தனம் என்பன.) இந்த மரத்தின பெயா அதிலுள்ள மலரைக் குறித்ததலால், முதலாகுபெயராம். 'வாடை' என்றது - வடக்குநோக்கி வீசுவதென்ற காரணத்தால், தென்றலைக் குறித்தது; இவ்வாறு கொள்ளாவிடின், "தென்றல்விருந்துசெய்த" என்று கீழ்க்கவியிறகூறியதனோடு முரணும். மகரந்தம் - பூந்துகள். கந்தாரம்-காந்தாரமென்னும் வடமொழியின் விகாரம் வோ - வேர்வையென்பதன் விகாரம்; முதனிலைத் தொழிலாகுபெய ரெனினுமாம். வேர்சிதைத்தல் - வேழவையை யுலாத்தி இளைப்பையாறறுதல். கீழ்ச்செயயுளில் 'தென்றல் விருந்துசெய்த' என்று தொகுத்துச்சுட்டியதன் வகுத்துக்காட்டலிதுவென்க. 'வாதங்கால் வளி மருத்து வாடையே பவனங்காறறு" என்ற நிகண்டின்படி வாடையென்பது காற்றுக்குப் பொதுப்பெயராகவும் வழங்குதலால் 'மந்தாரம் உந்து மகரந்தம் மணந்தவாடை' என்பதற்கு - மந்தாரமலாகளினின்று சிந்துகின்ற தேனோடு சம்பந்தபபட்டு அதனமணம் வீசுகின்ற (தேவலோகத்திலிருந்து கீழ்நோக்கிய) காறறு என்று பொருள் கொள்ளுதலும் கூடும். தம் உலகத்திடை விஞ்சையாதாம் பணிதள்ளும் என இயைபபினுமாம். 'பாணிதள்ளும்' என்பதறகு - தாளகதிரமதத்தில் காலந்தள்ளிப் பாடுகின்ற என்றும் பொருளகொள்ளலாம். 'பாணி' என்ற கையின்பெயர் - ஆகுபெயராய், கையினால் ஒத்தறுதது இடப்படுவதாகிய தாளத்தைக் குறிக்கும். காந்தாரம்- ஓா பண். களி - களிப்பைச்செய்வது எனக காரணகுறி. முதலடியிற் பிராசங் காணக. (இச்செய்யுளின் முதலடி - வடமொழியில் ஒறறெழுத்து நீங்கலாகப் பதினான்கெழுத்துக்களை யுடைய சகவரீசந்தசில் 'வசந்ததிலகம்' என்னும் விருத்தத்தின் இலக்கணத்துக்கு ஒப்ப அமைந்திருத்தல், கருதத்தக்கது) செவி—செவ்வி; தொகுத்தல இனிய தேவகானத்தைக்கேட்குமாறு பாகியம்பெற்ற காது என்றறகு, 'செஞ்செவிகாது' எனப்பட்டதென்னலாம்: (அநுமான, சங்கீதத்திலும் பாண்டித்தியமுடையவன்) இனி, ஒரு பொருட்பன மொழியாக, 'செவிக்காது' எனறதாகவும் கொள்ளலாம்.

பி-ம் —[1] மலாந்தவாடை'. [2]'பாணிதாழ'. [3]-வீணைதொனி செஞ்செவிக் காதுநுங்க' எனபனீ பாடபேதம்.

இச்செயயுளுக்குபபின்பு,

"பரவுக்குரல் பணிலக்குரல் பணையின்குரல் பறையின்
விரவுக்குரல் சுருதிக்குரல் வீணைஞேர்களும் விரவா
வரவகுல முயிருட்கிட வசனிக்குர லடுபோ
ருரவுகரு டனுமுட்கிட வுடலுட்கின வுலகம்."

என்று ஒரு செய்யுள் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

வேறு.

எரு. வெங்கார் நிறப்புணரி வேறேயு மொன்றைப்
பொங்கார் கலிபபுன ரரபபொலிவ தேபோ
லிங்கார் கடத்திரெனை யென்ஞ வெழுந்தா
ளங்கார தாரைபெரி தாலால மன்ஞள்.

(இ - ள்.) ஆலாலம பெரிது அனஞள்-ஆலகாலவிஷத்தை மிகவும் ஒத தவளான, அங்காரதாரை - அங்காரதாரை யென்பவள்,—(அநுமான் தன் மீதாகசசெல்வதைக் கண்டு சினந்து),—வெம் கார் நிறம புணரி - (பாரபப தறகு) அச்சந்தருகின்ற கருநிறமான சமுததிரம், வேறும் ஒன்று பொஙகு புனல் ஆர் கலியை தர - பொஙகுகின்ற நீர்மயமான வேறொரு சமுத்திரத தைப் பெறறுவிட, பொலிவதேபோல் - (பழைய சமுததிரததின்மேற புதிய அசசமுததிரம்) விளஙகுவதுபோல,—'இங்கு - இப்பொழுது, எனை-என்னை, ஆர் கடத்திர் - யார் கடநது செல்கின்றீர்?' என்ஞ-என்றுசொல்லிகொண்டு, எழுந்தாள் - (அக்கடலினின்று) மேலோஙகி நின்ருள்; (எ - று)

அநுமான் மீண்டுஞ் சென்றுகொண்டிருக்கையில், அஙகாரதாரை யென்ற கொடிய ராக்ஷஸி, கடலின்மீது மற்ருெருகடல் விளங்குவதுபோலத் தோன்றுமாறு, 'இஙகு யாரடா வருபவன்?' என்று அநுமானை அதட்டிக் கொண்டே கடலின்மீது அவனது வழிசகுக் குறுக்கே தோன்றினளென் பதாம. கடலினின்று வெளியெழுந்த அவளுக்கு, அக்கடலினால் உண்டாக் கப்பட்டு எழுந்ததொரு கடல் உவமையாதல் ஏற்கும. தற்குறிப்பேற்றவணி. கருநிறத்திலும் அளக்கலாகாத அளவிலும உவமை

தனக்குநேரேவானத்திற்செல்லுகின்ற பிராணியின்நிழலைத்தான்பிடிதத மாததிரத்தில் அந்தப் பிராணி பிடிக்கப்பட்டதாமபடியான பேராற்றலுடைய வளும் அதனுறசாயாக்கிரகிணியென்று போபெற்றவளும் ஸிம்ஹிகையென்று பெயருடையவளுமாய்க் கடலில் வாழ்ந்துகொணடிருந்த இவள், அநுமான கடல்கடந்துசென்றுகொணடிருந்த இசசமயத்தில், அவ்வநுமானது பெரிய நிழலைக் கடலிலேகணடு, நெடுநாளாகவுள்ள தன்பசியைத் தீர்க்கப்போதுமான இரை இன்று கிடைத்ததென்று மகிழ்ந்து, அநநிழலைப் பிடித்துக்கொணடு அநுமானது செல்கையைத்தவிர்த்து, அவனையதட்டிக்கொணடே கடலி னின்று வெளிவந்தனளென்க. இவளுக்கு அஙகாரதாரையென்றும் ஒரு பெயருணடென்பதை "அஙகாரதாரை குடாமாலை சூடி" என வரும் உத்தர காண்டததினுலும் உணரலாம். இவ்வடசொற்ருெடர்மொழி - தணலின்

கொழுந்து போலக் கொடியவளெனப் பொருள்படும். இவள் இராவணனுக்குக் கடலறணிலே ஒரு காவலாயுள்ளவளென்றும், இவளிருக்கின்ற இடத்துக்குச் சுற்றும ஒருகாத வழிதூரத்திற்குள் எந்தப்பிராணியும் செல்லவியலா தென்றும் கூறுவர் ஆலாலம் - ஹாலாஹலமென்ற வடமொழியின் விகாரம்: இது பாற்கடல் கடைந்த காலத்தில் தேவர்களெல்லாம அஞ்சியோடும்படி மிகக்கொடியதாய் அக்கடலினின்று தோன்றியதொரு விஷம். பயங்கரமாய்க் கடலினின்று எழுந்த இவ்வரக்கிக்கு, அங்ஙனங் கடலினின்று எழுந்த அந்த விஷம் உவமை. பெரிது ஆலாலம் அன்னாள் - பெரிய ஆலாலவிடத்தை யொத்தவ ளெனினுமாம் பாற்கடலினின்றுதோன்றிய ஆலாலம் இவட்கு உவமைபோதாதென்றுகொண்டு, (அதனினும்) பெரியதோ ராலாலத்தைப் போன்றவ ளெனறுமாம் 'பிறிதாலாலமன்னாள்' என்ற பாடத்துக்கு - (பாற்கடலில்தோன்றிய ஆலாலமன்றி) வேறே உவாக்கடலினின்றெழுந்ததோ ராலாலம் போன்றவ ளென்க. பொங்குகின்ற ஆகலியின்நீர் வேறேயு மொரு வெங்கார் நிறம்புணரியைத தரவென்று பதவுரைகூறவும தகும். 'ஆர் கடதிர' எனறவிடத்து, 'யார்' என்ற வினாபபெயரின் மருஉவான 'ஆர்' என்றது - முன்னிலைப்பன்மைக்கு வந்தது; "யாரென் வினாவினைக் குறிப் புயர்மூப்பால்" என நன்னூலார் கூறியபடி 'யார்' என்பது உயாதிணைப்படாக்கைக்கு மாத்திரம் உரியதன்றே வெனின்.—அஃறிணையிருபாற்கணணும் ஏனையிடத்தினும் இலக்கியங்களிற் பயிலுதலால், எல்லாவற்றிற்கும் உரியதென்க ஆனதுபற்றியே, "வேறில்லை யுணடி யார் வேணடுந்தகும படும், வினைபெயரெச்சம் வியங்கோள்பததுந், திணைப்பாலிட மெலாஞ் செல்லுமென்ப" என்பாராயினர், இலக்கணக்கொததுடையார். இங்ஙனம் கொளளாவிடின், முன்னிலையிற படாக்கைவந்த இடவழுவமைதி யெனவேணடும். போல் எழுந்தாள் என இயையும இங்கு - இவ்விடத்தில் எனவும்படும 'கடததிரென வெணணாவெழுந்தாள்' என்றும பாட்முணடு.

இதுமுதற் பத்துக்கவிகள் - முதறசீரும நான்காஞ்சீரும் மாச்சீர்களும், மற்றையிரணடும் காய்ச்சீர்களுமாகிய அளவடிநான்கு கொணட கலிவிருத்தங்கள். முதல்மூன்றையும காயச்சீராகவும பிரிக்கலாம். (எடு)

எசு.—இதுவும், அடுத்த கவியும் - அங்காரதாரையின் வருணனை.

காதக் கடுங்குறி கணக்கிறுதி கண்ணாள்
பாதச் சிலம்பினொலி வேலையொலி பமப
வேதக் கொழுஞ்சுடரை நாடி நெறி மேனா
ளோததத்தின் மேவுமது கைடவரை யொததாள்:

(இ - ள்.) காதம் கடுங குறி - காததூரததிலே (இருக்குமபொருளையும்) விரைந்து குறித்தறிகின்ற, கணக்கு இறுதி கணணாள்-(அளவிடுதற்குப்பார்த்தால்) கணக்கேழுதிதலையுடைய கணக்களையுடையவளான அவ்வரக்கி,—பாதம்சிலம்பின் ஒலி வேலை ஒலி பமப - (தன்) கால்களிலணிந்துள்ள சிலம்

பென்னும் அணியினது சததமானது சமுத்திரகோஷத்தைப்போல ஒலிக்க,- மேல் நாள் - முற்காலத்தில், வேதம்கொழுஞ்சுடரை - (வேதத்திற் பிரதிபாதிக்கப்பட்டுள்ள பரஞ்சோதியாகிய திருமாலை (எதிர்த்தற்கு). நெறி நாடி - வழிதேடிகொண்டு, ஓதத்தில் மேவும் - பிரளயக்கடலிற் போன, மதுகைடவரை - மது கைடபன் என்ற அசுரர்களை, ஒத்தாள் - ஒத்துவிளங்கினாள்.

அநுமானது சாயையை நாடிக்கடலின்மீதுசென்ற அங்காரதாரை திருமாலைநாடிப் பிரளயசமுத்திரத்தின்மீதுசென்ற மதுகைடபர்களை யொத்தனளென்பதாம்; உவமையணி. பெருவடிவத்துக்கு ஏற்ப நெடுங்கண்களைப் பெற்றுக் காததூரத்திலிருக்கும் பொருளையும் நோக்கவல்லவளென்பது; 'காதக்கடுகுறி கணகிறுதிகணணாள்' என்றதன் கருத்து. கொழுஞ்சுடர் - பண்புத்தொகையன்மொழி. பெருவடிவத்துக்குத் தக்கவாறே பெருஞ்சிலம்பு அணிந்திருத்தலின், அதனினின்று தோன்றும் ஒலி கடலோசைபோல எங்கும் நிறைவதாயிற்றென்க. வேதம் - (நன்மைதீமைகளை) அறிவிப்பதெனக் காரணப் பொருள்படும்.

மதுகைடவர் ஓதத்தின்மேவிய கதை.—பிரமதேவனது தினப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினால் எங்கும நீர்மயமாயிருந்தபொழுது, அவ்வெள்ளத்தில் திருமால் ஆதிசேஷனாகியசயனத்தில் அமர்ந்திருக்கையில், அத்திருமாலினிடத்தினின்று ரஜஸ்தமோகுணங்களின் வடிவமாய்ததோன்றி 'எமமை நீ கொலைபுரிக என்று தம்வாயாறசொல்லியபின்னரே தம்மைப் பிறர் கொல்லலாகும்' என்று வரம்பெறற மதுகைடபரென்ற அசுரரிருவரும், அப்பிரளயநீரைக் குழப்பிக்கொண்டு பேராரவாரத்துடன் சென்று பிரமதேவனைக் கண்டு அவனிடத்தினின்று வேதங்களையெல்லாம் பறித்துக் கொண்டு அப்பிரளயவெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்ய வேண்டுவது இன்னதெனததேறாது திகைப்புக்கொண்ட அப்பிதாமகக்கடவுள் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத்துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அகக்கடவுள் ஹயக்கிரீவாவதாரம்செய்து அக்கடலிற் புக்கு இனியதோ ரிசையைப்பாட, அவ்வினியதேதத்தைக்கேட்ட அவ்வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலிவந்த வழியைப் பிடித்துச செல்லுமளவில், திருமால் அவ்வேதங்களுள்ள விடத்திற்சென்று அதனைக்கொணாந்து பிரமனுக்கு அளித்தருள, அப்போது ஒருவரையுங் காணாதவராய் வேதங்களும் எடுத்துகொண்டு போகப்பட்டதை யுணர்ந்த அவ்வசுரர்கள் மிகசசினந்து அரவணையிலறிதுயிலமரும் பரம்பொருளைக் கிட்டிப் போர்செய்யதொடங்கவே, திருமாலுக்கும அவ்வசுராகளும் வெற்றி தோல்விகளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் 'உனது ஆற்றலுக்கு உவந்தோம்; வேண்டும் வரமபெறுக கொள' என்ன, அக்கடவுள 'யான் உம்மைகொல்லவேணும்' என்று வரம் வேண்ட, அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் 'உங்கட்கு

வேணடும் வரங்கொணமின்' என்ன, 'ஒருவரும் இறவாத இடத்தில் நான்கள் இறக்கவேணடும்' என்று அவாகள் வேண்ட, திருமாலும் அநவனமே வரமளித்துத் தனது துடையைகொணடு அவர்களை இறுக்கிகொன்றிட்டனனென்பதாம். இவ்வரலாறு சிறிதுவேறுபடக் கூறுதலு முண்டு.

"மதுகைடவரென்பவர் வானவாதம், பதிகைகொடுகெட்டவர் பண்டொரு நா, ளதிகைதவ ராழியனந்தனையும, விதிகைம்மிக முட்டிய வெம்மையினுர்," "நீராழியிழிந்து நெடுந்தகையைத் தாராயமரென்றனர் தாமொருநாள், ஆராழியவண்ணனலு மஃதிசையா, வாராவமர்செய்கெனவந்தனனுல்" என்று தொடகி மேல யுத்தகாணடதிற் கூறுவதும் காண்க.

'காதற் கடுங்குறி கணக்கு இறுதி கணணுள்' என்பதற்கு - காதலாம் பார்வைசெல்வனவும (அக்காதமென்னும்) எல்லையையே தமக்கு அளவாக வுடையனவுமான பெருநகண்களை யுடையவளென்றலு மொன்று. சிலம்பு வது சிலம்பு என்று பாததணடைக்குக காரணக்குறி; சிலம்புதல் - ஒலித்தல். வேலையொலி பம்ப - கடலொலியினும மிகுதியாக ஆரவாரிகக வெனினுமாம். 'உருவகவுவமையில் திணைசினைமுதல்கள், பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே," "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்பவாதலால், ஓரரககிக்கு மதுகைடபரிருவரை உவமைகூறிய இதில் ஆணபால் பெண்பால்களும ஒருமைப்பால்பன்மைப் பால்களும மாறுபடுதல் அமையும். இவ்வாறுவருமிடங்கட்கெல்லாம் இது கொள்க. 'ஒதததிலுேடு' என்பதும பாடம். (எசு)

எஎ. துண்டப் பிறைத்துணை யெனச்சுட ரெயிற்ருள்
கண்டத் திடைககறை யுடைககடவுள் கைம்மா
[1]முண்டத் துரித்த வுரியாண் முளரிவந்தா
னண்டத்தி னுக்[2]குறை யமைத்த பிலவாயாள்

(இ - ள்.) (மற்றும், அவள்),—துணடம் பிறை துணை என சுடர் எயிற்ருள் - குறைச்சசந்திரனுகிய பிறை ஒப்பாமென விளங்குகின்ற கோரப்பற்களை யுடையவளும,—கணடதிதிடை கறை உடை கடவுள - கழுததில் விஷக் கறையையுடைய பரமசிவன போல, கை மா முணடதது உரித்த உரியாள் - துதிககையையுடைய யானையினது உடலினின்று உரிததெடுதத தோலைப் போர்த்துககொணடிருப்பவளும,—முளரி வந்தான அணடததினுககு அமைத்த உறை பிலம வாயாள்-(திருமாலினது நாபீ) கமலத்துத தோன்றிய பிரமதேவன் படைதத உலகவுருணடைககு ஏற்படுத்திய உறைபோன்றுள்ள பெருந் துவாரமான வாயையுடையவளுமாயிருந்தாள்; (எ - து.)

துணடப்பிறை—"துணடவெணபிறை" எனருர் பெரியாரும்: (முழு மதியாயிராது) துணடமாயிருககின்ற பிறையென்க; இருபெயரொட்டு. இனி, முதலடிக்கு - சந்திரகணடமாகிய பிறை யிரணடுபோல விளங்குகின்ற வகநிரதந்தங்களை யுடையவளென்றும பொருள்கொள்ளலாம். முளரிவந்தான்

அண்டம் - பிரமாண்டம். அண்டத்திலுக்கு உறையமைத்த - அண்டகோள முழுவதும் கொள்ளுமாறு ஓர் உறையமைத்தாறபோன்ற வென்க. பிரமனால் அமைக்கப்பட்ட வெனறலுமாம. சுடரெயிறு - வினைத்தொகை. முண்டம் - தலையறற உடம்பு. 'மா' என்ற பொதுப்பெயா, 'கை' என்ற அடைமொழியால், யானையை உணர்த்திற்று. அவளது வாய் உலகவுருண்டையும் கொள்ளுமாறு மிகபபரந்து அகன்றுள்ள தென்பது, 'முளரிவந்தானண்டத்தினுக் குறையமைத்த பிலவாயாள்' என்பதன் கருத்து: தோடர்புயர்வுநவிற்சியணி. முளரி - முளளாகிய அரையை யுடையதெனத தாமரைக்குக் காரணப்பெயா; அரி - தண்டின் சுற்றுபபுறம. பாற்கடல் கடைகையில் அதனினின்றுதோன்றிய ஆலகாலவிஷததை யுண்டதனாற் கறுத்த கழுததையுடையவனாதலின், சிவபிரான 'கண்டத்திடைக் கறையுடைககடவுள்' எனப்பட்டான்.

கண்டத்திடைக் கறையுடைக்கடவுள் கைம்மாவுரிதரித்தகதை:—ஒரு காலத்தில் பரமசிவன், தவசசெருகதினால தன்னைமதியாத தாருகவனத்து முனிவாகளது கருவத்தைப் பகனுசெய்யவும் அவர்கள் மனைவிமார்களின் கற்புநிலையைப் பரிசோதிக்கவும் கருதித தான் ஒருவிடவடிவங்கொண்டு அவரில்லந்தோறும சென்றுபிக்ஷாடனஞ்செய்து, தன்னைநோக்கிக காதல்கொண்ட அம்முனிபத்தினியாது கறபுநிலையைக் கெடசசெய்ய, அதுகண்டு பொறாமற கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபிசாரவோமமொன்று செய்து, மந்திரபலததால் அவ்வேளவிததீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை, முயலகன் வெண்டலை முதலியவற்றையும, அவ்வோமத்தீயையும சிவனைககொன்று விடும்படி ஏவ, சிவபெருமான், தன்மேற சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத தனது கணங்களாகவும கொண்டு, மானை இடககையில் ஏந்தி, புலியைத தோலையுரித்து உடுத்து, யானையைத தோலையுரித்துப் போாத்து, முயலகனை மூதுகிற்காலாலூன்றி, வெண்தலையைக் கையிறபறறிச சடைமேலணிந்து, நெருப்பை ஒருகையிலேந்தி, இவ்வாறனமே அவற்றையெல்லாம் வலியடககிப் பயனிலவாகச் செய்துவிட்டனன் என்பதாம. பி - ம்:—[1]'முண்டத்துரித்த வுடையாள்,' 'முண்டத்துரித்த வுடையான்' [2]'உறையமைத்தனையவாயாள்'. (எஎ)

எஅ.—அனுமான் அரக்கியின்வரவை உணர்தல்.

[1]நின்றுணிமிர்ந்தலைநெடுங்கடலினீ்தன்
வன்றுளலம்பமுடிவான்முகடுவவ
வன்றுயதிறத்தவனறத்தையருளோடுந்
தின்றுளொருத்தியிவளென்பதுதெரிந்தான்.

(இ - ள்.) (இவ்வாறு கடுநதோற்றத்தையுடைய அநகாரதாரை),—அலை நெடுங் கடலின் நீா தன் வல் தாள் அலமப - அலைகளையுடைய நீண்ட கடல் நீரானது தனது வலியகால்களோட கழுவவும், முடி வான முகடு வவ்வ-(கனது

தலையானது ஆகாயத்தினுச்சியில் முட்டவும், நிமிர்ந்து நின்றாள் - உயர்ந்து நின்றாள்; அனறு - அப்போது,—ஆய் திறத்தவன்-ஆராயுந்திறமுள்ளவனான அவ்வநுமான், 'இவள்—, அறத்தை அருளோடும் தின்றாள ஒருத்தி - அறத்தையும் அருளையும் அடியோடு விழுங்கிவிட்ட ஒருத்தியாவள்,' என்பது - என்ற தன்மையை, தெரிந்தான் - தெரிந்துகொண்டான்; (எ - று.)

அகாதமான சமுத்திரமும் குளம்படிநீர்போலுமாறும், தனது உச்சி வானத்தில் முட்டுமாறும் மிகப்பெருவடிவங்கொண்டு நின்றன ளென்பது. முன்னிரண்டடிகளின் கருத்து. கீழ்க் கூறியவாறு தனது சாயையைப் பிடித்துக் கடலினின்று வெளியேறிப் பேருருவங்கொண்டு நின்றவள ஓர் அரக்கியாவளென அநுமான் உணர்ந்தன னென்க. 'அறத்தை அருளோடும் தின்றாள்'—அறத்தைத் தின்றவள - தருமகாரியத்தைக் கெடுத்தவள்; அருளைத் தின்றவள் - இரக்கமற்றவள. இஃது - உடனவிற்சியணி. அறத்தை யருளோடுந் தின்றாள் - தின்னப்படாதவற்றைத் தின்னப்படுவனபோலக் கூறிய மரபு வழுவணி. மதி "அறனும், அருளுடையான் கணணதே யாகும்" என்றபடி அறஞ்செய்தற்கு அருள் மூலகாரண மாதலால், அறத்தை அடியோடு தின்றவளென்றவாறுமாம்; 'மரத்தை வேரோடும் பெயர்த்தான்' என்றாற் போல. பி-ம்.—[1]'நின்றா ணெடுங் கடனிறைந்தநெடுநீர்'. (எஅ)

எசு.—அவளைக் கொல்லுமாறு கருதி, அநுமான் ஒன்று கூறத்தொடங்குதல்

பேழ்வா யகத்தலது பேருலக மூடு
நீள்வா னகத்தினிடை [1]யெங்குநெறி காணு
வாழ்வா [2]னணுக்க[3]னவ ளாழ்பில வயிற்றைப்
போழ்வா னினைந்தினைய வாய்மொழி புகன்றான்.

(இ - ள்.) பேழ் வாயகத்து அலது - (அவ்வரக்கியினது) திறந்த வாயினுட் சென்றாலன்றி, போ உலகம் ஊடும் - பெரிய பூமியிலும், நீள் வானகத்தினிடை நீண்ட ஆகாயத்தினிடத்திலும், எங்கும்-எவ்விடத்தும், நெறி - (தான் செல்வதற்கு உரிய) வழியை, காணான் - காணாதவனாய், ஆழ்வான் - (முதலில் துன்பத்தில்) மூழுகியவனாய்,—(பின்பு தேறி),—அவள் ஆழ் பிலம் வயிற்றை போழ்வான் நினைந்து - (வாய்வழியாகப்புகுந்து) அவளது ஆழ்ந்த குகைபோன்றுள்ள வயிறறைப் பிளக்குமாறு கருதி, அணுக்கன் - (அவளை) நெருங்கியவனாகி, இனைய வாய்மொழி புகன்றான் - இவ்வாறான வாய்வாராததையைக் கூறுபவனானான்; (எ - று.)—அதனை, அடுத்தகவியிற காண்க.

செல்லும்வழி யில்லாமையைக்கண்டு அநுமான முதலில் மிகவருந்திப் பின்பு தெளிந்து அவளைகொல்லுமாறு கருதி ஒன்றுகூறின னென்க. அவ்வரக்கி மண்ணையும் விண்ணையும் வியாபித்து வாயைத் திறந்துகொண்டு நின்றதனால், 'பேழ்வாயகத்தலது பேருலகமூடு நீள்வானகத்தினிடை யெங்கு நெறிகாணான்' என்றார். அணுக்கன் - அணுகுதலுடையவனா யென்க. கடல் மேற செல்லுகின்ற தனது சாயையைக் கண்டு அந்நிழலைப்பிடித்து இழுக்க

அநுமான் அவளை நெருங்கின னெனபார 'அணுககன' எனக் கூறினரெனக கொள்ளவுமாம். வாழ்வான் என்று எடுததும் உரைககலாய; சிரஞ்சீவியாய வாழ்பவ னென்க. இரணடாமடி - இனவெதுகை. 'அணுககன' என்ற பாடத்துக்கு - வருததமுற்றவ னென்பது பொருள். பி - ம் —[1]எகுநெறி நேரா. [2]எனகளிளரும. [3]வளாவாள. (எகூ)

அ௦.—அநுமானது வாரத்தை.

[1]சாயா வரநதழுவி ஞய்தழிய பின்னு
[2]மோயா துயாந்தவிசை கண்[3]டுமுணா கில்லாய்
வாயா லளநதுநெடு வான்வழி யடைத்தாய்
நீயாரை யென்னையிவ ணின்றநிலை யென்றான்.

(இ - ள்.) 'சாயா வரம தழுவிஞய - சாயையைப் பிடிதது இழுககும வரததை யுடையாளபோலத தோனறுகின்றாய்; (நீ), தழிய பினனும - (எனனைப்) பிடித்திழுககவும், ஓயாதுஉயர்ந்த-சிறிதும ஓய்வில்லாமல மிக்குச செல்லுகின்ற, விசை - (எனது) வேகததை, கணடும - பாரத்தும, உணரா கிலலாய் - (எனதுபலத்தை) அறியும வலலமையற்றிருககின்றாய்; வாயால் நெடு வான் அளநது - வாயினால் நீணட ஆகாயததை யளாவிககொணடு, வழி அடைத்தாய் - (போகும்) வழியை அடைததுககொணடு நிறகின்றாய; நீ யாரை - நீ யா ? இவண நின்ற நிலை என்னை - (நீ) இவகு நிறகின்ற நிலை என்ன காரணம்பற்றியது?' என்றான் - என்று வினவினன், (அநுமான்).

தனது சாயையைப் பற்றி யிழுததலால், அநுமான், அவளை 'சாயாவரந் தழுவினாய்' எனறான. 'நீ எனனைப பற்றியிழுக்கவும நான் சிறிதுஞ்சலியாது செலவதனைக் கணடும என்னை நீ வெல்லலாமென்று எணணி எனது வழி யைத தடுகின்றனையே ! இது என்ன பேதைமை?' என அநுமான் அவளை யிகழ்நது, பின்பு அவளவரலாறறை வினவின னென்பதாம. வானை வரயா லளததலாவது - ஆகாயததினளவாக வாயைத திறநதுகொண டிருததல். இனி, வாயா லளநது - வாயினால் வீணவார்ததைகளைப் பேசி யெனறுமாம; 'அளததல்' என்பது 'வீண்பேசசுப் பேசுதல்' என்ற பொருளிலே வழகுதல் காணக. யாரை, ஐ - சாரியை. சாயாவரம் - அழியாத வரமஎனினுமாம். தழிய—தழுவிய : விகாரம் ; "தமிழ்த்தழியசாயலவா" என்றதுங காணக. பி-ம்:—[1]சாயாய்சலம, சாயாசலம. [2]ஓயாதுவந்த. [3]உணர்வில்லாய் (அ௦)

அக.—அங்காரதாரையின் மறுமொழி.

பெண்பா லெனககருது பெற்றியொழி யுற்றால்
வினபா லவாக்குமுயிர [1]வீடுறுவது மெய்யே
காணபா லடுத்தவுயிர் காலன்வரு மேனு
முண்பா னருததிய தொழிப்பரிய தென்றாள.

(இ - ள்.) (அதற்கு அவள் அநுமானைநோக்கி), '(நீ), பெண்பால் என கருது பெற்றி - (என்னைப) பெண்ணென்று நினைக்கின்ற நினைவை, ஒழி - விட்டிடு; உறுறுல் - (எனது அருகில்) வந்திட்டால், விண்பாலவர்களும்-விண ணுலகத்தவரான தேவர்கட்கும், உயிர் வீடுவது - உயிரொழிதல், மெய்யே - தவறுது; காலன் வரும்எனும் - யமனே (விடுவிததறகு) வருவனுனுலும், கண பால் அடுத்த உயிர் - (எனது) கண்ணெதிரில் அகப்பட்ட பிராணிகளை, உண பான் - உண்ணும்படி (யான்கொள்ளுகின்ற), அருத்திஅது - (எனது) ஆசை யை, ஒழிப்பு - போகக்குவது, அரியது - அருமையானது,' என்றுள் - என்று (தன்நிலையைக) கூறினுள்; (எ - று.)

நீ என்னைப் பெணணென்று அவமதிக்கவேண்டா; எனனையெதிர்த்த வாகள தேவர்களேயானுலும் இறநதேவிடுவாகள; கொல்லுதறகடவுளாகிய யமனேயானுலும் என்கைப்பட்டவுயிரை விடுவிக்க இயலாது என்று அவ் வரகக தன்நிலையைத் தெரிவித்தனளென்க. தான் பெணணுயிருந்தும் 'பெண்பாலெனக கருதுபெறறியொழி' என்று கூறுகின்ற மறை - வீரர்களை யெல்லாம் எதிரதது அழிககும் போரிற்றல் வாய்ந்தவள் யான் என்ற பொரு ளைத தரும்.

இனி, இசசெய்யுளில், அரக்கிக்கு அநுமானுல இனி நேரப்போகின்ற அழிவுககு ஏறப ஓர் அவலப்பொருளும தோன்றும்; அது வருமாறு :—இப் போது என்னைக கொண்டுபோக யமன் வந்திருந்தும், (பசி அதிகமாயிருதத லால) என் கண்ணெதிரில் அகப்பட்ட உன்னை உணணவேணு மென்கிற ஆசைமாதகிரம நீக்கமுடியாம லிருககின்றது; (ஆதலால், நான் உன்னைபபற றினேன; ஆயினும்,) நீ என்னைப் பெணணென்று விட்டிடாதே; அன்றி யும், அழிவுகாலம் நேர்ந்தால், தேவர்கட்கும் உயிரொழிதல் நிசசயம; [யான தெய்வப் பிறப்பினளாயினும் இப்போது அழிவுகாலம குறுகிவிட்டதனுல் இறப்பேன்] என்பதாம். பி ம்:—[1]வீடுறுதல் [2]ஒழிபபதரிது. (அக)

அஉ.—அநுமான் அவள்வாயினுட்புக்கு அவளுடலைப் பிறிக்கொண்டு வெளிப்படுதல்.

திறந்தாள் [1]வயிற்றின்வழி யண்ணலிடை சென்று
னறந்தா னரறறிய தயர்த்தமர ரெய்த்தா
ரிறந்தா னெனககொடொ ரிமைப்பதனின் முன்னம
பிறந்தா னெனப்பெரிய கோளரி பெயர்ந்தான்.

(இ - ள்.) திறந்தாள - (இவ்வாறுகூறி உடனே அநுமனை விழுங்கு மாறு) வாயை, (மிகப்பெரிதாகத) திறநதுகொணடு நின்றவளான அஙகார தாரையினுடைய, வயிற்றின் வழி - வயிறறின் வழியாகிய, இடை - இடத் தில்,—அண்ணல் - பெருமையிற சிறந்தவனுன அநுமான், சென்றான் - பிர வேசித்தான; (அப்போது), இறந்தான் என கொடு - (அநுமான் இறந்து விட்டனனென்று எணணி, அறம்தான் - தருமதேவதையும், அயற்றியது

புலம்புவதாயிற்று; அமரா - தேவர்களும், அயாதது எயதா - வருந்தி யிளைத்தார்கள்; ஓர் இமைப்பு அதனின் முன்னம் - ஒருமாதிரைப பொழுதிற்குள், பெரிய கோள் அரி பிறந்தான் என - (தூணினின்று) மிக்க பெருந்தோற்றத்தையுடையனாய வலிமையையுடைய நரசிங்கமூர்த்தி தோன்றியதுபோல, பெயாநதான் - (அவளது வயிற்றைப் பீறிகொண்டு) வெளிப்பட்டுவந்தனன், (அநுமான்); (எ - று)

நரசிங்கமூர்த்தியாகிய திருமால் தூணைப்பிளந்துகொண்டு வெளிப்பட்டதுபோல, அவள்வாயின் வழியாக உட்புகுந்த அநுமானும் அவளது வயிற்றைக்கூரிய கைந்நகங்களினாற் பிளந்துகொண்டு வெளிப்பட்டுவந்தனனென்பதாம்: உவமையணி. (போஜமகாராஜனும் சம்பூராமாயணத்தில் இச்செய்தியைச் சொல்லுமிடத்து "ரகுநாதஸ்ஸ: சிசகேத——நகரை——நிருஸிம் ஹாம்ஹ: பதி விம்ஹிகாநகம்" என்று கூறியுள்ளான்.) நரசிங்கமூர்த்தியை "கோளரி" என்றார் திருமங்கையாழ்வாரும். இனி, ஈற்றடிக்கு—பெரிய - பெருந்தோற்றத்தையுடைய, கோள் - மிடுக்கைக்கொண்ட, அரி சிங்கம் போன்றவனான [அல்லது வாநரமாகிய] அநுமான், பிறந்தான்என-(புதியனாய்) பிறந்தானென்று சொல்லும்படி, பெயர்ந்தான் - (அவளது வயிற்றினின்று) வெளிப்பட்டுவந்தானெனக் கூறலுமாம். பெரிய ஆலத்தினின்று அரிதில் தப்பிவந்தால் மீளவும்பிறந்ததாகக் கூறுதல் உலகவழக்கு. அனுமனாலேயே தமதுதொழில் நிறைவேறுமென்று நம்பியிருந்த அறக்கடவுளும்தேவர்களும், அநுமான் அரக்கியின் வயிற்றினுட் புக்கதைக் காணவே, அழுங்கினாரென்க. பி - ம்:—[1]எயிற்றையவள். (அஉ)

அ௩—இதுவும், அடுத்தகவியும்-அவள்தடலைக் கைக்கொண்டு விளங்கிய அநுமனது தோற்றத்தை வருணிப்பன.

கள்வாயரக்கி கதறக்குடா கணத்திற்
கொள்வாரா தடக்கையின் [1]விசும்பின்மிசை கொண்டான்
முள்வாய் பொருப்பின்முழை யெய்திமிக நொய்தி
னுள்வாழ் அரக்கொடெழு திண்கலுழ னொத்தான்.

(இ - ள்.) கள் வாய அரக்கி கதற கள்பெருகிவழிகின்ற வாயையுடைய அந்தராக்ஷசி கதறும்படியாக, கணத்தின் - ஒருநொடிப்பொழுதிலே, குடர் கொள் - (அவளது) குடலை (வயிற்றினின்று) பிடுங்கிக் கொண்ட, வாரா தடகையின் - நீண்டபெரிய கைகளோடு, விசும்பின் மிசை கொண்டான் - ஆகாயத்தின்மீது தோன்றியவனான அவ்வநுமான,—முள் வாய் பொருப்பின் முழை எய்தி - முட்செடிகள் பொருந்தியுள்ள மலையினது குகைக்குட் புக்கு, உள் வாழ் அரக்கொடு மிக நொய்தின் எழு - அக்குகையினுள்ளே கிடக்கும், கொடியபாம்புகளை எடுத்துக்கொண்டு அதிவிரைவாக மேலெழுகின்ற, திண் கலுழன் - வலிய கருடனை, ஒத்தான் - ஒத்துவிளங்கினான்; (எ - று.)

அவ்வரக்கியினது வாயிற் புக்கு அவளது குடல்களைப் பிடுங்கிக்கொண்டு அநுமான்மேலெழுந்தது, மலைக்குகையினுள் நுழைந்து அங்குவாழ்கின்ற பாம்புகளைத் தூக்கிக்கொண்டு கருடன் மேலெழுந்ததை யொத்திருந்ததென்பதாம். உவமையணி. முள்-கூரிய கோரப்பற்களுக்கும், பொருப்பு - அவளது உடம்புக்கும், முழை - அவளது வாய்க்கும், பாம்பு - அவளது குடலுக்கும், கருடன் - அநுமானுக்கும் உவமை யெனக் காண்க. பி - ம்:—'விசும்பை,' "சொற்றூகள்" என்று தொடங்கும் பாடல் சில பிரதிகளில், இந்தப் பாடலின் பின்னும், சில பிரதிகளில் "சாகாமிருகத்தலைவர்" (84) என்றபாடலின் பின்னும் காணப்படுகின்றது. (அங)

அச [1]சாகா மிருகத்தலைவ ரிறறிலக மன்னு
னேகா வரக்கிகுடா கொண்டுட னெழுந்தான்
மாகா லசைப்பவட மணணினுற வாலோ
டாகாய முறற கதலிக்குவமை [3]யானான்.

(இ - ள்.) சாகா மிருகத் தலைவரில் திலகம் அன்னான் - வானரத் தலைவர்களில் திலகம்போலச் சிறந்து தோன்றுபவனான அநுமான்,—ஏகா - (மூற கூறியவாறு அவளது வாயினுட்) புக்கு, அரக்கி குடா கொண்டு - அவ்வரக்கியினது (வயிற்றைப் பீறிக்) குடலைப் பிடுங்கிக்கொண்டு, உடன் - உடனே, எழுந்தான் - உயரவெழுந்தவனாய்,—மா கால் அசைப்ப - பெருங்காற்று வீசியதனால், வடம் மண்ணின் உற - கயிறு பூமியிலிருந்து ஆகாயத்திலே பொருந்த, வாலோடு ஆகாயம் உறற - வாலுடனே ஆகாயத்திற் பறந்ததலைப் பொருந்திய, கதலிக்கு - காற்றாடிக்கு, உவமை ஆனான் - ஒப்பாகத் தோன்றினான்; (எ - று.)

கையினாற் கயிற்றைப் பிடித்துக்கொண்டு வால்கட்டிய காற்றாடியைத் தக்கக்காற்று வீசும்போது வானில்விடுதல், இயற்கை. அங்காரதாரையின் வயிற்றைப் பீறிக்கொண்டு அவளதுகுடல் பூமியில் தொங்குமாறு வானத்தில் வாலுடனே அநுமான் மேலெழுந்தது, வால்கட்டியதொரு காற்றாடி விடப்படுவதை யொத்திருந்ததெனக். அநுமானுக்குக் காற்றாடிபடமும், அவனது வாலுக்குக் காற்றாடியின்வாலும், தொங்குகின்றகுடலுக்குக் காற்றாடிசூத்திரமும், அக்குடலோடு தொடர்புபட்டுக் கீழ்வீழ்ந்துகிடக்கின்ற அங்காரதாரைக்குச் சூத்திரத்தைக் கையிற்கொண்டு அக்காற்றாடியை விடுபவனும் நிகரா மெனக் காண்க. சாகாம்ருகம் - மரக்கிளைகளிற் சஞ்சரிக்கும் மிருகம். குரங்கு [1]சாகாவரத்தலைவரில் என்று பாடங்கொண்டால், சிரஞ்சீவியருள் என்று பொருளாம். மூன்றாமடிக்கு - கொடுங்காற்று வீசியதனால் அறுபட்டுக் கயிற்றுருண்டை பூமியில்விழுந்துகிடக்க என்றும் கொள்ளலாம்; இப்பொருளில், அவளது குடலுக்கு அறுபட்ட கயிற்றின்மிச்சமும், கீழ்விழுந்துகிடக்கும் அவளது உடலுக்குக் கயிற்றுருண்டையும் உவமையாம். காற்றாடி விடுபவர்கள் நூலுருண்டையிலிருந்து சிறிதுசிறிதாக நூலை வாங்கிவிடும் இயல்பு, கருத்தத்தக்கது. அநுமான்கைக்கொண்டகுடல் காற்றாடியின்முன்

புறத்தில் கட்டும் வாலுகளும், அனுமனது பூமியளவுந்தொடுகும்வால் மணணி லிருந்து விண்ணளவுந்தொடாசசிப்படுமெ காறறுடிக்கயிற்றுகளும ஒபபுமை யென்பதுபட உரைகளவுந் தகும். பி-ம்:—[2]ஆனுள். (அச)

வேறு.

அரு.—அதுகண்ட அசுரர்கள் வருந்த, விண்ணவரிமுதலியோர் மகிழ்தல்.

[1]ஆர்த்தனர்கள் வானவாக டானவ [2]ரழுங்கா
[3]வோர்த்தனர் விரிஞ்சனும் வியந்து மலாவெள்ளந்
[4]தூர்த்தன னகன்கயிலை [5]யிறறெலைவி லோனும்
[6]பார்த்தனன் முனித்தலைவ ராசிகள் பகர்ந்தார்.

(இ - ள்.) (அநுமானது அசசெயலைக கண்டு),—தானவா - அசுரர்கள், அழுங்கா - மனம்வருந்தி, வோத்தனா - (உடம்பு) வோத்தாகள்; வானவா கள - தேவர்கள, ஆர்த்தனர்கள் - (மகிழ்சசியால்) ஆரவாரித்தாகள்; விரிஞ்ச னும் - பிரமதேவனுமு, வியந்து - கொணடாடி, மலர் வெள்ளம் தூர்த்தனன்- பூமாரியை நிரம்பப பொழிந்தான; அகல் கயிலையில் தொலைவு இலோனும் - அகன்ற கைலாசகிரியில் வாழ்கின்ற அழிவில்லாதவனான சிவபிரானும், பார்த் தனன் - (ஆசசரியத்தோடு) பார்த்தான்; முனி தலைவா - ருஷிசசிரேஷ்டர் கள, ஆசிகள் பகாந்தா - வாழ்த்துககூறினுர்கள; (எ - று.)

தம்தமதகுதிககு ஏறப அநுமானதுசெயலை அவரவர்கள் பாராட்டின ரென்க. பிறாககுத் தீமைசெய்து தருமதிறகுப் பகையாயிருக்குந்தன்மை யில் அசுரரும் அரககரோடு ஒபபாவராதலால, அநுமான் பிழைததுவந்ததைக காணவே, அவரும மனமழுகி வோபபாராயினுர். உடல்வோர்த்தல் - சோகத தின மெய்ப்பாடு. 'தொலைவு இலோன' என்றது - அழிததறறெழிறகு இட மானவ னென்றும் பொருளபடும் சகுகாரககடவு ளென்றபடி; தொலை விலோன் என்று பிரிததால், (பகைவர்களை) அழிக்கின்ற வில்லையுடையவ னென்று பொருளாம். 'வியந்து' என்றதை, 'பார்ததனன்' என்பனேடும் கூட்டுக. பி - ம்:—[2]அழிந்தார். [3]வோததான். [5]துயில்.

இக்கவி - நான்காஞ்சீரொன்று தேமாச்சீரும், மற்றைமூன்றும் கூவிளங காய்சசீர்களுமாகிய அளவடி நான்குகொணட கலிவிருத்தம். இனி, [1]ஆர்த தா, [3]வோர்ததா, [4]தூர்த்தான், [6]பாரததான என்று எட்டுபபிரதிகளில் பாடம் காணப்படுகின்றது; அவவனங்கொள்ளுமிடதது, வேறுவகைககலிவிருதத மாகாமல் எடு - ஆவ கவிபோன்ற கலிவிருத்தமேயாமென உணர்க. (அரு)

வேறு.

அசு.—அநுமான் மீண்டும் ஏதுதல்.

மாண்டா ளரக்கியவள் வாயவயிறு [1]காறுங்
கீண்டா னிமைப்பினிடை மேருகிரி கீழா

நீண்டான் வயக்கதி நினைப்பி னெடிதென்னுப்
பூண்டா [2]னருக்கனுயர் வானின்வழி போனான்.

(இ - ள்.) அரக்கி மாண்டாள் - அந்தராக்ஷசி இறந்தவளாகும்படி, அவள் வயிறவாய்காறும் நீண்டான் - அவளதுவயிறறை வாய்வரையிலும கிழித்து மேலெழுந்தவனான அநுமான், இமைப்பினிடை - ஓரிமைப்பொழுதினுள்ளே, மேருகிரி கீழ் ஆ நீண்டான் - மிகவுமுயாந்ததான மகாமேருகிரியும் கீழாகு மாறு உயர்ந்து, வய கதி - வலியவேகத்தை, நினைப்பின் நெடிது என்னு பூண்டான் - மநோவேகததினும அதிகமாயிருககுமாறு கொணடு, அருக்கன் உயர் வானின் வழி போனான - சூரியன்செல்லுகின்ற உயாந்த ஆகாயமார்க் கத்திலே சென்றான் [வானததிற சூரியன்செல்லும் வீதியினளவு உயரத் திலே சென்றான்] (எ - று.)

அவ்வரக்கியைக் கொன்றபின்பு, அநுமான், மிக்க உயரத்தில் மனோ வேகத்தினும் விரைநதுபோகலுற்றன னென்க. பி - ம்.—[1]தாறும். [2]ஒருத் தனெடு.

இதுவும், அடுத்தகவியும் - எரு - ஆங கவி போன்ற கலிவிருத்தம்.(அசு)

அஎ.—அநுமனது அப்பொழுதைய எண்ணம்.

சொற்றார்கள் சொற்ற[1]தொகை [2]யலலதுணை யொன்றோ
முற்று முடிந்தநெடு வானினிடை முந்நீ
[3]ரிற்றுவி யெற்றெனினும் யானினி யிலங்கை
யுற்றால் விலங்குமிடை யூறென வுணர்ந்தான்.

(இ - ள்.) 'முந்நீர் இசசமுததிரமானது, சொற்றார்கள் சொற்ற தொகை துணை ஒன்றோ - வருணிததுச சொல்லுபவாகள் கூறுகின்ற அளவைககு அடங்கியிருப்பதொரு பொருளோ! அல்ல;—(இவ்வாறான பெருங கடலைத தாணடுமாறு), முற்று முடிந்த நெடு வானினிடை - ஓரளவிலடங்காமல் மிக்க பரப்புடைகொணட நீணட ஆகாயமாாககத்தில் (யான்செல்லுமபோது), இற்று ஆவி எற்ற எனினும - இப்போது வநததுபோனற பிராணி எது வந்ததானாலும், (அதற்காகப் பின்னிடையாமல்), யான் - நான, இனி - இனி மேல், இலஙகை - இலஙகையை, (போயசசேவேன்); உற்றால - அவ்வாறு போய்ச சேர்ந்துவிட்டால், இடையூறு - விகனங்க ளெல்லாம, விலங் கும் - ஒழிநதுபோயவிடும்,' என - என்று, உணாநதான் - (அநுமான) எணணினான; (எ - று.)

இஙகும இவ்வாறு பெரும்பிராணியினால் துன்பம் நேர்ந்தகாலை இன் னும கடலின் அக்கரை குறுகவில்லையென்று தோனறுகின்றது; ஆதலால், இதுபோலவே இன்னும் இடையூறுகள் பல உணடாகககூடும: எதுநேர்ந்தா லும சரி, நான் கொணட காரியததில் மனஞ்சோராது எப்படியாவது இலங் கையை யடைந்தேனானால், அப்பால யாதொரு துன்பமுமின்றி என்காரியம

முற்றும் என்று அநுமான் நினைத்தன னென்க. வற்புறுததுதற்பொருட்டு 'தொகைததுணை யொன்றோ? அல்ல' என வினவும் விடையுமாகிய இரண்டு வாய்பாட்டாலும கூறினர். ஆவி - உயிர: பிராணிக்கு, இலக்கணை. 'எனின்' என்பதுகு முடிக்குஞ்சொல் வருவிகக.

இனி, இசசெய்யுட்கு வேறொருவகையாகவும் உரைகூறலாம; எவ்வன மெனின்,—துணை - (வானம கடல் என்ற இவற்றின்) அளவு, சொற்றாகள சொறற தொகை ஒன்றோ - (கணககுவகைகளை ஆராய்கது நூல்களிற்) கூறி யவாகள கூறியுளள தொகைகளுள ஒனறிலஅடகுமோ? அல்ல - அடக காது; முறறு முடிநத - (அவ்வனம) வரையறுததறகரியதாய் அமைநதுளள, நெடு வானினிடை முந்நீர் - பெரிய வானததிலும கடலிலும, இறறு ஆவி எறறு - இததன்மையதான பிராணி எததுணையோ! எனினும - அவ்வன மிருந்தாலும, யான் இனி இலவகை உறறால் - நான் இனி (விரைநது) இலவ லகையிறபோய்சசோநதுவிட்டாலதான, இடையூறு விலவகும் - விக்கினம நீவ கும, என உணாநதான்-என்று ஆலோசிததனன், (அநுமான்) எனக காண்க. வேறு ஒபபுமைபெறறுமையில தம்மில்நிகராவனவும், எளிதில்வரையறுக்க இய லாதனவும, தன்னால்தாவபபடுவனவுமான வானம் கடல் என்ற இரணடுபொ ருளகளின் முழுபபரப்பையும அவை பலவகைபபிராணிகட்கு இடமாயிருக தலையும குறிதது அனுமான் சிநதித்து, 'இனி விரைவில்யான் இலவகைஏசோந் துவிட்டால்தான இடையூறினறுகும' என்று நிசசயித்தனனென்க. வானத் திலிடையூறுயநோந்த சுரசையையும, கடலினறு இடையூறுயெழுநத அவகாரதாரையையும கருதி, வானம கடல என்ற இரணடினியலபைககுறித தனன் இலவகையிலுளள அரககாகளை வெலலுதறகுரியராக மதிததிலனனும னெனபதும இதில வெளியாம். 'முறறுமுடிந்த,' 'நெடு' என்ற அடைமொழி களை 'வான்,' 'முநநீர்' என்ற இரணடுககும் கூட்டுக 'இடை' என்ற ஏழ னுருபு, முநநீரோடும் இயைககத தக்கது. பி - ம்.—[1]துணை. [2]பலதொகைய தன்றோ. [3]இறறுக, இறறுகி. (அஎ)

வேறு.

அஅ —அநுமான் ராமநாமஸ்மரணமே எல்லாத்துன்பங்களையும்போக்கும் உபாயம் என நிச்சயித்தல்.

ஊறுகடி தூறுவன வூறிலற முன்னுத்
[1]தேறலி லரக்கர்புரி தீமையவை தீர
[2]வேறுவகை [3]யாண்டைய [4]விராமனென வெல்லா
மாறுமதின் மாறுபிறி தில்லென [5]வலித்தான்.

(இ - ள்.) 'கடிது ஊறுவன - விரைவில் (ஒன்றன்பின் ஒன்றாய்ச் செல்லுமவழியில) தோவனவான, ஊறு - இடையூறுகளும, ஊறு இல் அறம் உணனு - கெடுதலில்லாத தருமததை நினையாத, தேறல் இல் - தெளிந்த அறிவிலலாத, அரககா - இராகததாகள, புரி - செயகின்ற, தீமை அவை -

அத்தீமைகளும், தீர - நீங்க, ஏறு வகை - (அத்துன்பங்களைக) கடந்து உய்யும உபாயம், யாணடைய - எங்கு உளளன? இராமன் என - இராம னெனறு (ஒருகால்) சொல்ல, எல்லாம் மாறும்-எல்லாத் துன்பங்களும் நீங்கி விடும்; அதின் மாறு பிறிது இல்-(துன்பங்களை நீக்கிக்கொளளுதற்கு) அதனி னும் வேறான உபாயம் ஒன்றுமில்லை,' என - என்று, வலிததான் - (அந்த ராமநாமஸ்மரணததையே) உறுதியாகக கொணடனன, (அநுமான்); (எ - று.)

எல்லாத துன்பங்களையும போக்குதறகுத் தக்கவுபாயம் ராமநாமஸ்மர ணமேயென்று அறுதியிட்டு, அனுமான், தனககு ஒருவகைததுன்பமும வாராது நீங்குமாறு அதனையே செயதனனென்பதாம். இவ்வாறு கவி அநுமா னது செயதியைக் கூறும் முகத்தால் தமக்குள்ள ராமபகதியை வெளியிட் டார். இராமனென வெல்லாம மாறும்—"அடியாரபடுதுயராயின வெல்லாம், நிலந்தரஞசெய்யும .. .. நாராயணவென்னும்நாமம்', என்றதுபோலக கொளக; 'நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே, தின்மையும பாவமுஞ் சிதைந்து தேயுமே, சென்மமு மரணமு மின்றித தீருமே, யிம்மையே யிராம வென் றிரணடெழுத்தினால்" எனறார் பாயிரத்திலும். தாங்கள் ராமநாம பாராயணஞ் செய்த மாததிரததிலே சம்பாதிக்குச சிறகுமுளைத்து வளாநத தைப் பிரததியக்ஷமாகக கணடவனாதலால், அநுமான், இவ்வனைய தாரகமந்தி ரத்தின் மகிமையை யுணாநதன னென்க 'மாறும்' என்ற சொல்லின ஆறற லால், ஊறுகளும தீமைகளும செய்யும் எதிரிகட்கே யாகுமென்பதும் தோன்றும். மாறு-ஒப்புமாம். பி - ம்:—[1]தேறிலியககர். [2]ஏறுமவகை. [3]எங்குள. [4]இராமவென. [5]வகுததான்.

இககவி - மேல் அரு - ஆங கவிபோன்ற கலிவிருத்தம். (அஅ)

வேறு.

அகூ.—அநுமான் இலங்கைத்தீவிற் பவளமலையிற் பாய்தல்.

தசும்புடைக் கனக நாஞ்சிற் கடிமதி [1]றரிதது நோக்கா
னசுமபுடைப பிரசத் தெய்வக் கறபக நாட்டை [2]யண்மி
விசும்பிடைச் செல்லும வீரன் [3]விலங்கிவே றிலங்கை மூதூர்ப்
பசுஞ்[4]சுடர்ச் [5]சோலைத தாங்கோ பவளமால வரையிற் பாய்ந்தான்.

(இ - ள்.) அசுமபு உடை பிரசம தெய்வம கறபகம நாட்டை அணமி விசும்பிடை செலலும வீரன - ஊறறெடுததுப பாயகின்ற தேனையுடைய தெயவத தன்மையுளள கற்பகவிருக்ஷங்களைககொணட தேவலோகததைச சமீபித்து ஆகாயமாககமாகச் செல்லுகின்ற வீரனாகிய அநுமான்,—கனகம் தசுமபு நாஞ்சில் உடை - பொன்மயமான கலசங்களையும நாஞ்சிலெனனும் உறுப்பையு முடைய, கடி மதில் - காவலுள்ள (இலங்காபுரியின்) மதிலில், தரிதது - தங்கி, நோககான - (அவ்விலங்கையைப்) பாாததல் செய்யாதவ னாய,—இலங்கை மூது ஊர் வேறு விலங்கி - இலங்கையெனற பழமையான அங்ககாரதிறகு (நேரேசெல்லாது) சிறிதுஒதுங்கி,—ஆங்கு - அங்கேயுளள

பசுஞ் சுடா சோலைத்து ஓர் மால பவளம் வரையில் - பசுமையான சோலைகளை யுடையதாகிய ஒப்பற்ற பெரிய பவளமலையின்மீது பாய்ந்தான்—;(எ-று.)

ராமநாமோச்சாரண பலத்தால் இடையூறினறி ஆகாய மார்காகமாக மேலோங்கிச செல்கின்ற அநுமான், இலங்கையின் மதிலின்மேலே இறங்கினால் அங்கு எவ்வகைப் பொறியினால் என்ன தீங்கு நேரிடுமோ வென்றும், அது எவ்வாறு காக்கப்பட் டிருக்கின்றதோ வென்றும் கொண்ட எண்ணத்தினால் ஜாகரிதைப்பட்டு, அங்கு இறங்காது அதற்கு இப்பாலுள்ள பவளமலையிற் குதித்தன னென்பதாம்.

கல்பகம் - தனது நிழலையடைந்து வேண்டுவார் வேண்டியதைக் கல்பிப்பது [உண்டாகக்கொடுப்பது] எனக் காரணப்பொருளபடும் வடசொல். இவ்வாறு சிறப்புத்தன்மையையுடைய கற்பகமரமுடைமையால், அத் தேவலோகம், 'கற்பகநாடு' எனப்பட்டது. 'தெய்வநாடு' எனக் கூட்டவுமாம். தசும்பு - குடம்: இங்கு, கோபுரம் முதலிய இடங்களில் வைக்கப்படுகின்ற குடம்போன்ற உருப்பாகிய கலசத்தை யுணர்த்திற்று. அசும்பு - ஊற்று. பிரசம் - தேன். இந்தமலை, முதனூலில் 'லம்பம்' என்ற பெயராற் கூறப்பட்டுளளது. 'தரிதது' என்ற எச்சம், நோக்குதல் வினையைக் கொள்ளும். பி - ம்.—[1]தனிதது, தரிததல். [2]அண்ணி. [3]விலங்கனமேல். [4]படா. [5]சோலை தாங்கு.

இதுமுதல் இப்படலம் முடியுமளவுமுள்ள ஆறு கவிகள் - இக்காண்டத்தின் காப்புச் செயயுள்போன்ற அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள்.

கூ௦.—அம்மலையின் அப்போதைநிலையைப்பற்றிய வருணனை.

மேக்குறச் செல்வோன் பாய [1]விலங்கிநீ ரிலங்கை [2]வெற்பு
நூக்குறுத் தங்கு மிங்குந் தள்ளுற [3]நுடங்கு நோன்மை
[4]போகினுக் கிடையூ றாகப் புயலொடு பொதிந்த வாடை
தாக்குறத் [5]தளர்ந்து சிந்துங் கலமெனத் தகக தன்றே.

(இ - ள்.) மேக்கு உற செல்வோன் - மேலோங்கிச செல்பவனாகிய அநுமான், விலங்கி பாய - (வானநெறியைவிட்டு) விலகி(த தன்மீது) பாய்ந்ததனால், நீர் இலங்கை வெற்பு - (நாற்புறத்திலும் கடலின்) நீரினால் சூழப்பட்ட இலங்காபுரியைச சார்ந்ததான அப்பவளமலை, நூக்குறுத்து - அசைக்கப்பட்டு, அங்கும் இங்கும் தள்ளுற நுடங்கும் - அப்புறமும் இப்புறமுமாகத் தளளாடிச சலிக்கின்ற, நோன்மை - தன்மையானது,—புயலொடு பொதிந்த வாடை - மழையோடுகூடிய பெருங்காற்றானது, போகினுக்கு இடையூறு ஆக தாக்குற - (தான்) போவதற்குத் தடையாக விசைகொண்டு மோத, (அதனால்) தளர்ந்து - தளளாடி, சிந்தும் - (தன்னிடத்திலுள்ள பொருள்களை யெல்லாம்) கீழே சிந்துகிற, கலம் - மரக்கலமாகும்', என தக்கது - என்று சொல்லும்படியிருந்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

அநுமான் விசையோடு வந்து தன்மேற் குதித்ததைத் தாங்கமாட்டாத அப் பவளமலை தள்ளாடித் தன்னிடத்திலுள்ள பொருள்களைச் சிந்துவது புயல்காற்றுக்குப் பொருது மரக்கலம் ஆடிப்போய்த் தன்னிடத்துப் பொருள்களைச் சிந்துவதுபோன்றிருந்ததென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. சிந்துதல் - நிலைகுலைதலுமாம். வெறுபு விலங்கி - மலை நிலை பெயர்ந்து என்றலு மொன்று. கடலிடைத்தீவின் முனைபுறத்திலேயுள்ள உயர்ந்த பெரிய மலைக்கு, கடலிடையுள்ள உயர்ந்த பெரிய மரக்கலம் உவமை; இது வாயுவினால் சிதைதல் அது வாயுகுமாரனால் சிதைதற்கு உவமை கூறப்பட்டதென நயமகாண்க. 'விலங்கி' என்பதைக் கீழ்செய்யுளிற் கூறியதன் அநுவாதமென்றால், ஒதுங்கியென்பது பொருள.பி-ம்.—[1]வேலைமேல், விலங்கன்மேல் [2]மூதூர். [3]துளங்கு [4]போகுற. [5]தகாந்துசாயுங்கலமெனலாயிற்றன்றே. (கூ0)

கூக —அநுமான் அம்மலையில் நின்று இலங்கையைக் காணுதல்.

மண்ணடி யுற்று மீது [1]வானுற வாம்பின் றன்மை
யெண்ணடி வுற்ற [2]குன்றத் தலத்துநின் [3]றெயத நோக்கி
விண்ணிடை யுலக மெனனு மெலலியன் மேனி நோக்கக
கணணடி வைதத தன்ன விலங்கையை[4]த் தெரியக் கண்டான்.

(இ - ள்.) மண் - இநநிலவுலகத்தினது, அடி - அடிப்பாகம வரையிலும், உற்று - (தனது வோ) ஊன்றபபெற்று,—மீது (தனது) உசசி, வான வாம பின் தன்மை உற வானுலகததின் எலலைவரையிலும பொருந்துமாறு, எண்ணணியதுபோல (உயாநதுள்ள), அடி உற்ற - (இலங்கைக்கு) முன்னடியிலுளளதான, குனறம தலத்து - அபபவளமலையினிடததில், நின்று - நின்று கொணடு, (அநுமான), எயத நோகி - உறறுபபாாப்பவனாய்,—விண் இடை உலகம் என்னும மெல்இயல் - வானததிலுள்ள தேவலோகமாகிய பெண, மேனி நோக்க - (தனது) வடிவழகைப் பாாக்குமாறு, கணணடி வைததது அன்ன - நிலைககணணாடி வைததது போ லிருககின்ற, இலங்கையை-இலங்காநகரத்தை, தெரிய கணடான் - நன்றாகப் பாாததான்; (எ - று)

அங்ஙனம் பவளமலையிற பாய்ந்து நின்ற அநுமானுககு, வானுலகத்துககு நேராக கீழே ஒரு நிலைககணணாடி வைததிருநதால் அகககணணாடியில் அது கவ்வாறு விளங்குமோ அதுபோன்றிருநதது இலங்கையென்பது, கருதது; தன்மைத் தற்குறிப்பேற்றவணி. நோகிக கண்டான் என இயையும. தெரியககாணுதல் - அதன வகைகளெல்லாம் தோன்றககாணுதல்; அங்ஙனங்கண்டமை, மேறகூறுமாறறால் நனகுவிளங்குதல்நோக்குக. பூமியினுடைய அடிபபாகததின எல்லையைககண்ட தான் வானுலகின எலலையையும காணவேணடுமென்று கருததுக கொணடாறபோல அம்மலை உயாந்திருநததெனபது, முன்னிரணடடியின் பொருள; இஃது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி: இயறகையில உயாநதிருநததறகு ஒருகாரணம கற்பிததவாறு காணக 'விணணிடையுலகமெனனு மெலலியல' எனறார, 'மணமகள்''

என்றாற் போல. கணணடி - கண்ணாடி யென்பதன் குறுக்கலவிகாரம். மண் அடியுறுதல் - கீழே மணணுலகமுள்ளவளவும் வேரூன்றுதல். எண அடியுற்ற - எணணதைத உள்ளுறக்கொணட வெனினுமாம். பி ம்:—[1]வாணாள் [2]குன்றினிடத்து நின்று, குனறை நிலைத்து நின்று. [3]உறறு. என்று சில பிரதிகள். [4]இதன்னில்.

சில பிரதிகளில் (கடல்தாவுபடலம்) இந்தச் செய்யுளோடு முடிய, அடுத்தபாடல் முதல் நிலாத்தோற்றுபடலம் என்று உள்ளது. (கக)

கூஉ.—இதுமுதல் மூன்று சுவிகள் - அநுமான் இலங்கையைநோக்கி வியத்தல்.

நன்னக ரதனை நோக்கி நளினககை மறித்து நாகர்
பொன்னக ரிதனை யொக்கு மென்பது புலலி தம்மா
வன்னக ரிதனி [1]னன்றே யண்டத்தை முழுது மாள்வா
னிந்நக ரிருந்து [3]வாழ்வா னிதுவதற் கேது வென்றான்.

(இ - ள்.) (அநுமான்),—நல் நகா அதனை நோககி - அழகிய அந்த இலஙகாபுரியைப் பார்த்து, நளினம் கை மறிதது - தாமரைப்பூப்போன்ற (தனது) கையை மடககி வைத்துக்கொண்டு,—'நாகர் பொன் நகர் - தேவர்கள் வாழ்கின்ற பொன்மயமான அமராவதிநகரம், இதனை ஒக்கும் - இநத இலஙகையை யொததிருககும், என்பது - என்று கூறுதலும், புல்லிது - அறிவீனமாம்; அமமா - ஆசசரியம! (இப்படியிருகக), அ நகா இதனின் நன்றே - அவ்வமராவதிநகரம் (இதறகு உவமையாகச சொல்லும்படி) இந்நகரததினும் சிறந்ததாமோ? [ஆகாதென்றபடி]; அணடததை முழுதும் ஆள்வான் - எல்லாவுலகஙகளையும (தனது பராகிரமததால் வென்று தனகககு கீழ்ப்படுததிக்கொணடு) ஆள்பவனாகிய இராவணன், இ நகா இருந்து வாழ்வான் - இவ்விலஙகாபுரியிலிருந்து கொணடு வாழ்கின்றவனா யிருககின்றான், இது-என்ற இதுவே, அதறகு ஏது - பொன்னகரததினும் இலஙகாபுரி உயாநதுள்ளதென்ற அவ்விஷயததை மெய்ப்பித்தறகு ஏறறகாரணமாகும்!, என்றான் - என்று கருதினான்; (ஈ - று.)

எல்லா வுலகஙகளையும வென்றவனான இராவணன எந்தநகரம எல்லாவறறினுஞ் சிறந்துள்ளதோ அஙகேயே வாழ்வானாதலால, அவன் வாழ்கின்ற இவ்விலஙகாபுரிககுப் பொன்னகரம ஈடாகாதெனத தெறறென விளஙகும். ஆகவே, இந்நகரதிற்குப் பொன்னகரததை உபமானமாகச சொல்வது, அறிவீன மென்பதாம் பொனனகரததினிடததுப் பிரசித்தமாயுள்ள உபமானத் தன்மையை மறுத்துககூறியது - எதிரிநிலையணி. வடநூலா, ப்ரதீபாலஙகாரமென்பா. உபமேயததினும உபமானம சிறநதிருததல வேண்டுமென்ற அலஙகாரநூலா கொளகைககு மாறாக உபமேயததை உபமானததினுஞ் சிறநததென்று கூறுவது, இதனிலகணம. பொன்னகரிதனை•யொககுமெனபதும் புல்லிதென்பதை 'அணடததை முழுதுமாள்வான் இந்நகரிருந்து வாழ்வான்,

இது அதற்கு ஏது' என்ற வாகியம் சமர்ததிதது நின்றது - தொடர்நிலைச் செய்யுட்குறியணி.

ஒரு பொருளை வியந்து செல்லுமபோது கையை மடக்கித் தாடையில் வைத்துகொண்டு கூறதல், சிறுபாலார்ககு இயற்கையென்க. அம்மா-வியப் பிடைசசொல்; இலஙகாபுரியினது சிறப்பைககுறிதது வியநதவாறு: அடுத்த செய்யுளிலும் இதுகாண்க. 'அந்நகர் இதனின் ஈன்றே' என்றது, அநதத தேவநகரம் இவ்விலஙகைபோலச் சிறநததா? எனறும் பொருள்படும். பி-ம்:—[1]அனறேல. [2]வாழான் (கஉ)

கூ௩. மாண்டதோர்நலத்திற்றுமென்றுணாத்துதல் வாய்மைத் தன்றால்
வேண்டிய [1]வேண்டினெய்தி வெறுபபின்றி [2]விழைந்த துய்க்கு
மீண்டரும் போக வின்ப மீறில தியாண்டுக [3]கண்டா
மாண்டது துறக்க மஃதே யருமறைத் துணிவு மம்மா.

(இ - ள்.) '(தேவலோகம்), மாணடது ஓர் நலததிற்று ஆம் - மாட்சிமைப்பட்டதாகிய ஒப்பற்ற அழகையுடையதாம்', எனறு உணர்ததுதல் - என்று சொல்வது. வாயமைத்து அன்று - மெய்யான வாதததை யன்று; வேணடிய வேணடின் எயதி - வேணடிய பொருள்களை யெல்லாம வேணடிய படியே யடைநது, விழைநத வெறுப்பு இனறி துய்ககும - (அஙஙனம) விரும்பிப்பெற்ற பொருள்களை வெறுப்பில்லாமல் அனுபவிககவல்ல, ஈணடு அரும் போகம இன்பம்-(வேறிடஙகளிற்) கிடைத்தறகு அரிய சுகாநுபவத்தை, ஈறு இலது - முடிவில்லாததாக, யாணடு கணடாம-எவ்விடததிற பார்ததோமோ, ஆணடு அது துறக்கம-அத்தனமைததாகிய அவ்விடமே சுவாககமாவது: அருமறை துணிவும் அஃதே - அருமையான வேதஙகள துணிந்த கொள்கையும் அதுவேயாம்; (எ - று.)—ஆல - ஈற்றசை; தேற்றமுமாம்.

விரும்பியவறறையெல்லாம் பெறுதல் எந்த இடததிற் கூடுமோ, அந்த இடந்தான் சுவாகக மென்று வேதஙகளும கூறுகின்றன வாதலாலும், தேவலோகம் எல்லாவற்றையும் அளிககவல்ல போகஸதாநமென்பது இப்போது பிரதியக்ஷத்திறகுமாறுயப் பொய்ம்மைப்படுதலாலும், இராவணன் ஆளகின்ற இவ்விலஙகாபுரியே எல்லாப்போகஙகளையும வேணடியவா வேண்டியபடி யடைதறகு இடமாயிருததலாலும, இதுவே சுவாக்கமா மென்றன னென்பதாம. தேவலோகததிற்கு உரிய போகமளிக்குந் தன்மையை மறுததது இலஙகையில் ஏறறிககூறியது, அவநுதியணியின் பாறபடும். அதன் இலகககணம- "சிறப்பினும் பொருளினுங குணததினு முண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவனுதியாகும்" எனக காண்க; இது, ஒழிப்பணி யெனவும்படும்.

இனி, மாண்டது ஓர் நலததிற்று ஆம் என்று உணர்ததுதல் வாய்மைத் தன்று - மிகசசிறநத ஒபபற்ற, அழகை மாததிரமுடையது இவ்விலஙகை யென்று சொல்லுதல உணமையாகாது என்றுமாம்; எல்லாநலஙகளாலும குறைவின்றி விளஙகுகின்ற இதனை ஒருவகையான நலததைககொணட

தென்று கூறுதல் இழுக்கே யென்றபடி. ஈண்டு - முகனிலைத்தொழிற்பெயர்: நான்காம்வேற்றுமைத்தொகை பி - ம்:—[1]வேணடுஞ் செல்வம், வேண்டுநீதி. [2]வீழ்ந்து. [3]காண்டும். (கூஉ)

கூச உட்புல மெழுநூ றென்ப யோசனை யுலக மூன்றிற்
றெட்புறு பொருள்க ளெல்லா மிதனுழைச் செறிந்த வென்றா
னுட்புல னுணங்கு கேள்வி நுழைவின ரெனினு நோக்குங்
கட்புலன் [1]வரம்பிற் றாமே [2]காட்சியுங் [3]கரையிற் றாமே.

(இ - ள்.) உள் புலன் - (இவ்விலங்கையின்) உள்ளிடத்தினளவு. எழுநூறு யோசனை—, என்ப - என்று கூறுவா, (உணர்ந்தோர்); உலகம் மூன்றில்-மூன்றுலகங்களிலும், தெட்பு உறு-உயர்வாகப்பொருந்திய, பொருள்கள் எல்லாம் - எல்லாப்பொருள்களும், இதனுழை செறிந்த - இந்த இலங்காபுரியிற பொருந்தியுள்ளன, என்றால்—, நுண புலன் நுணங்கு கேள்வி நுழைவினா எனினும் - நுட்பமாகிய அறிவைக்கொண்டு சூக்ஷ்மமாய் அறியத்தக்ககேள்வியினால் எல்லாப்பொருள்களையும் ஆராய்தலையுடையவரென்றாலும், நோக்குழ கண்புலன் வரமபுஇற்று ஆமே - பார்க்கின்ற (அவர்களது) கட்புலனும் வரம்பில்லாததாய் நீண்டிருக்குமோ? (அன்றி), காட்சியும் - (இந்நகரத்திற) காணக்கூடிய விஷேதப்பொருளும், கரையிற்று ஆமே - ஓரளவையுடையதாகுமோ? (என்று எண்ணினன் அநுமான்); (எ - று.)

நூலறிவு நிரம்பப்பெற்ற பேரறிவாளராயிருந்தாலும், அவர்களது கட்புலனும் ஏனையோரது கட்புலன்போலவே ஒரு வரம்பினையுடையதாய் அளவுபட்டிருத்தலால், மிகப் பரப்பினையுடைய இவ்விலங்காபுரியிலுள்ள எல்லையில்லாத காட்சிகளையெல்லாம அப்பேரறிவாளரும் தமது கணகொணடு முறறகாணுதலரிதென, இலங்காபுரியின் சிறப்பை அப்பவழமலையின் மீதிருந்த அநுமான எண்ணினனென்க: இச செய்யுட்கு, மேல் ஊர்தேடு படலத்து சஉ - ஆஞ் செய்யுளிலுள்ள 'என்றனன்' என்பதனோடாவது, இப்படலத்து கூஉ - ஆஞ் செய்யுளிலுள்ள 'என்றான்' என்பதை இங்குக் கூட்டியாவது முடிபு காண்க.

பேரறிவாளராலும காணமுடியாதென்பதனை, 'கட்புலன்வரம்பிற்றாமே,' 'காட்சியுங்கரையிற்றாமே' என்ற வாக்கியங்கள் ஏதுவாய்நின்று சாதித்து நிற்பது - தொடர்நிலைச் செய்யுட் குறியணி. இனி, 'கட்புலன் வரமபிற்றாமே' எனபதற்கு - கண்களின் காட்சிப்புலன் ஒரு வரையறையுடையதாகுமே யென்றும், கண்ணாகிய பொறி இத்துணையென ஓரளவுடைய தாகுமேயென்றும் உரைப்பாருமுளர்; அப்பொழுது, 'வரம்பிறறு' என்றது - உடன்பாட்டுக் குறிப்புமுற்று. ஏகாரம் - தேறறம். அளவிறநத பல கண்களும் அவற்றிறகு வரமபில்லாத காட்சியறிவும் இருந்தால்தான் இந்நகரம முழுவதையும் காணுதல்கூடுமெனக. அநுவனம் எவாக்கும இல்லையாதலால் 'உட்புலன் எழுநூறபோசனை' என்றலும் சரியாயிராது; [அளவு இன்னும அதிகமா

யிருக்கலாம்] என்பது உட்கோள். இனி, நோக்குங்கட்புலன்வரம்பிற்றாமே. காணபவாகணபாவைக்கு அடங்குவதா (இந்நகரின்காட்சி) ? என்பா ஒரு சாரா. பி - ம்:—[1]வரமபிறறன்றே. [2]காட்சியின. [3]கரைகளமமா.

ஸ்ரீ வால்மீகிராமாயணத்துச் சுந்தரகாண்டகதின் முதற்சருககத்திற் கூறிய செய்தி, கம்பராமாயணத்துச சுந்தரகாண்டத்தின் முதற்படலமாகிய இதிற் கூறப்பட்டது. (கூச)

கடல்தாவுபடலம் முற்றிற்று.

இரண்டாவது

ஊர்தேடுபடலம்.

(அநுமான்) இலங்காபுரியிற் (சீதாபிராட்டியைத) தேடிய செய்தியைக் கூறுகின்ற பாகம். ஊர்தேடு - ஏழாம்வேற்றுமைத்தொகை தேடுபடலம் - வினைத்தொகை. சில பிரதிகளில் முதல் ருக - கவிகளும் சில பிரதிகளில் முதல் சுo - கவிகளும் நிலாத்தோற்றுபடலம் எனவும், அதன்பிறகு "அன்னதே முடிந்தது" (கூடு) என்ற பாடல் வரையில் இலங்காதேவிப் படலம் அல்லது இலங்கைமாதேவிப் படலம் எனவும பின்னரே ஊர்தேடு படலம் எனவும் காணப்படுகின்றன.

அநுமான் தான் பவளமலையி லிருந்தபடியே திரிகூடகிரியின்மேலுள்ள இலங்காபுரியின் வளங்களைப் பார்த்து அவற்றைச்குறித்துப் பலவாறு கருதுதல், இதுமுதல் நாற்பத்தொருகவிகளிற் கூறப்படுகின்றது.

வேறு

க.—இதுமுதல் எட்டுக்கவிகள்-அந்நகரத்து மாடமாளிகைகளின் வருணனை.

பொன்கொண் [1]டிழைத்து மணியைககொடு பொதிநத
மினகொண் [2]டிழைத்த வெயிலைக்கொடு சமைத்த
வெனகொண் டியறறிய வெனததெரி கிலாத
வன்கொண்ட [3]ருவி மதிமுட்டுவன மாடம்.

(இ - ள்.) வல் கொணடல்தாவி - வலிய மேகங்களைக்கடந்து அப்பாற் சென்று, மதி முட்டுவன - சந்திரனைத் தொடுவனவான, மாடம் -(இவ்விலங காபுரியிலுள்ள) வீடுகள,—பொன்கொணடு இழைதது மணியை கொடு பொதிநத - பொன்னைககொணடுசெய்து (அதில்) இரததினங்களைக கொணடு வந்து பதிககப்பெற்றவையோ? (அல்லது), மின்கொணடு இழைதத - மின்னலைககொணடு செய்யப்பட்டவையோ? வெயிலை கொடு சமைத்த - சூரிய

காந்தியைக்கொண்டு செய்யப்பட்டவையோ? என்கொண்டு இயற்றிய-(வேறு) எதனைகொண்டு செய்யப்பட்டவையோ? என - என்று சந்தேகித்தற்கு இடமாகி, தெரிகிலாத - உண்மையறியமுடியாம லிருக்கின்றன; (எ - று.)

இயல்பிற் பொன்னினாற் செய்யப்பட்டு இரத்தினங்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ள மிகவுயர்ந்த இவ்விலங்கைநகரத்து உபரிகை வீடுகள் அப் பொன் மணிகளின் மிக்க வொளியினால் இன்னபடியென்று சொல்லமுடியாமல் திகைக்கும்படி யிருந்தனவென்க; ஐயவணி. 'வன்கொண்டமுவிமதி முட்டு வன மாடம்' என்றது, மேகமண்டலத்தினும் மேலாகவுயர்ந்து சந்திரமண்டலத்தைச் சாரவுள்ள மாளிகைக ளென்றபடி; தொடர்புயர்வுநவிற்சியணி.

உலகமும் அதற்கு உறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகின்ற சிறப்புடைமை தோன்ற, 'வன்கொண்டல்' எனப்பட்டது. பி - ம்:—[1]இழைத்த. [2]அமைதத. [3]விட்டு.

இதுமுதல் மூன்றுகவிகள் - கீழ்ப்படலத்தின் எழுபத்தைந்தாம் கவி போன்ற கலிவிருத்தங்கள். (க)

உ. நாகா லயங்களொடு நாகருல குந்தம்
பாகார் [1]மருங்குதுயில் வென்னவுயர் பண்ப
வாகாய மஞ்சவகன் மேருவை யனுக்கு
மாகால் வழங்குசிறு தென்றல்வர நின்ற.

(இ - ள்) (மற்றும் இந்நகரத்துமாளிகைகள்),—நாக ஆலயங்களொடு தேவர்களின் மாளிகைகளுடனே, நாகர் உலகும் - தேவலோகமும், தம் பாகு ஆர் மருங்கு துயில்வ - தமதுபாகமாய்ப் பொருந்திய இடத்திலே இனிது தங்கத்தக்கவை, என்ன - என்று சொல்லும்படி, உயர் பண்ப - (தேவலோகத்தினும்) உயர்ந்த தன்மையையுடையன; ஆகாயம் அஞ்ச - வானத்திலுள்ளாரஞ்சும்படி, அகல் மேருவை அனுக்கும் - அகன்ற மகாமேருமலையை(க கொடு முடிபறித்து) வருத்திய, மா கால் - பெருமையையுடைய வாயுதேவனால், வழங்கு - இனிதாக அளிக்கப்படுகின்ற, சிறு தென்றல் - இளந்தென்றற் காற்று, வர - வரும்படி, நின்ற - உள்ளன; (எ - று.)

தேவர்கள் வசிக்கின்ற கிருகங்களுட்படத தேவலோகம் தமது பகுப்பாய்ப் பொருந்திய ஓரிடத்திலே [கீழ்நிலையிலே] இனிது தங்கத்தக்கனவென்னும்படி மிக்க உயாசசியுடையவை இந்நகரத்து மாளிகைகளென்பது, முதலிரண்டடியின் கருத்து தொடர்புயர்வுநவிற்சியணி. அம்மாளிகைகளின் மிககபரபபும் இங்குத் தொனிக்கும. அங்ஙனம் அவை மிகவுயர்ந்திருந்தாலும், மிகக வலிமையையுடைய வாயுதேவன் இராவணனிடத்து அசசத்தால் அடங்கி மந்தமாருதமாக இனிது வீசபபெற்றிருந்தன வென்பது, பின்னிரண்டடியின கருத்து.

இனி, இசசெய்யுளின் முன்னிரண்டடிகளு - தேவலோகத்து மாளிகைகளும் பாதாளலோகத்து மாளிகைகளும் தமது பக்கத்திலே இனிது தங்குதற்குரியவை [ஒருகோவையாகசசொல்லத்தக்கன] என்னுமாறு மிகச் சிறந்துள்ளன (இந்நகரத்துமாளிகைகள்) என்றலுமொன்று; நாகர் - சுவர்க்கத்து வாழ்பவரும், நாகசாதியாரும். ஆலயம், உலகு - இலகக்ஷணையால், மாளிகையையுணர்த்தின. நாக + ஆலயம், நாகாலயம் தீர்க்கசந்தி. பாகு - பாகமென்ற வடசொல்லின் விகாரம். ஆகாசம் அதிற்சஞ்சரிக்குந் தேவரைக் குறித்தலால், இடவாகுபெயர். 'மாகால்வழங்குசிறுதென்றல் - முரண்தொடை. பீ - ம்:— [1]மருங்குமிலவென்ன. (உ)

ங. மாகாரின் [1]மின்கொடி மடக்கின [2]ரடுக்கி
மீகார மெங்கணு நறுந்துகள் விளக்கி
யாகாய கங்கையினை யங்கையினி னள்ளிப்
பாகாய செஞ்சொலவர் [3]வீசுபடு காரம்.

(இ - ள்.) பாகு ஆய செம் சொலவர் - கருப்பஞ்சாற்றின் பாகுபோன்ற இனிய சொறகளையுடையவர்களான (சிலதியரெனப்படுகின்ற) குறமேவல் மகளிர், மா காரில் மின் கொடி மடக்கினர் அடுக்கி - பெரிய காளமேகங்களில் தோன்றுகின்ற மின்னற்கொடிகளைப் பிடித்துப்பிடிததுச சேர்த்துத் துடைப்பக்கற்றையாகக்கொண்டு, (அதனால்), மீ காரம் எங்கணும் நறுந்துகள் விளகி மேற்பகக்மெங்குமுள்ள சுகந்தப்பொடிகளை விளகிததள்ளி, ஆகாயகங்கையினை அம் கையினின் அள்ளி வீசு படு-ஆகாயகங்கைநீரை அழகிய (தங்கள்) கைகளால் முகந்துகொண்டுவந்து தெளிகக்பெற்ற, காரம் - வீதிகள், (இந்நகரத்து உள்ளவை; (எ - று.)

இராக்கதராஜனான இராவணனது ஆளுகைக்கு உட்பட்ட அந்நகரத்திற் குறமேவல் மகளிரகள் அவ்விடத்து மாளிகைகளில் பணிவிடை செய்கின்ற விதம் இதில் வெளியாம். மேகத்துமின்னல்களைப் பிடித்துப் பிடிததுத தொகுத்து வாரகோலாக்கி அவ்விளகுமாறு கொண்டு குபபை கூட்டியொதுகி ஆகாச கங்கைநீரைக்கொண்டாந்து தெளித்துத தளததைசசெவ்வைப்படுததுகின்றன ரென்க; வீறுகோணி. இராவணனது நகரமாகிய அதிலேயுள்ள குறமேவல்மகளிரின் ஆறறலும், அந்நகரத்து மாளிகைகள் மேகமண்டலத்து மின்னலகளை எட்டிப் பிடிததுக் கொள்ளும்படியாகவும் ஆகாயகங்கைநீரை எட்டி முகந்துகொள்ளும்படியாகவும் மிகவுயர்ந்துள்ளன வெனபதும், இதில் வெளியாம். அவ்விடத்து மாளிகைகளிலே சிந்தியிருக்கின்ற வாசனைப் பொடிகளொழிய வேறு தூசியில்லை யென்பதுபற்றி, 'மீகார மெங்கணு நறுந்துகள்விளகி' எனப்பட்டது. மேனிதிமிர்ந்த சந்தனத்தின் பொடி, கந்தப்பொடி, கதம்பப்பொடி, குடியமலர்களினின்று சிந்திய மகரந்தபபொடி என்றாயவும், 'நறுந்துகள்' என்றதில் அடகும். இராவணன் தனது பலத்தினால் தேவமாதரையே பணிபெண்களாகக் கொண்டிருந்த

லால், 'பாகாயசெஞ்சொலவா'என அககுற்றேவல் மகளிரது சொல்லினிமை பாராட்டிக கூறப்பட்டது.

மின்கொடி - கொடிபோன்ற மின்னல் மீ - மேல். காரம - பக்கம். பாகு- வெல்லம், சாக்கரை, கற்கண்டு. ஆய - உவமவுருபு. காரம - அகாரமென்ற வடசொல்லின் முதற்குறைவிகாரம; வீடுஎன்பது, பொருள். கருஹமென்ற வடசொல பிராகிருதத்திற் காரமெனச சிதைந்துவழங்கு மாதலின், அது இங்குக காரமென முதனீண்டுவந்ததெனினும இழுக்காது. ஏற்றசொல் வருவிதது முடிககப்பட்டது; அன்றி, இசசெய்யுளின்றிலுள்ள 'காரம' என்ற. பால்பகா அஃறிணைப்பெயரை முந்திய செயயுளில்வந்த 'பண்ப', 'நின்ற' என்ற முற்றுககளுக்கு எழுவாயாககொண்டு இரண்டு செய்யுளகளையும குளகமாக முடிப்பினுமாம். பி - ம்:—[1]மீன். [2]அடககி. [3]வீசுபடகாரம். (௩)

வேறு

௪. பஞ்சி யூட்டிய [1]பாட்டிசைக் கிண்கிணிப [2]பதுபஞ்
செஞ்செ விச்செழும் பவளத்தின் கொழுஞ்சுடா சிதறி
மஞ்சி னஞ்சன நிறமறைத் தரக்கியர் வடித்த
வஞ்சி லோதியோ [3]டுவமைய வவர்க்குற வமைவ.

(இ - ள்.) பஞ்சி ஊட்டிய - செம்பஞ்சுக்குழம்பு ஊட்டபபெற்றவையும், பாட்டு இசை கிணகிணி - இசைப்பாட்டுப்போலினிய ஒலியையுடைய கிகிணியென்னும் ஆபரணததை யணிந்தவையுமான. பதுமம - செந்தாமரை மலாபோன்ற (இரகுகரதது மாடமாளிகைகளிலுளள இராகததமாதர்களது) பாதங்கள், செம செவி செழும் பவளததின் கொழுஞ் சுடா சிதறி - செவ்வையான அழகையுடைய செழுமையான பவழம்போனற விரல்களின் மிகுதியான காநதியை வீசி, மஞ்சின் அஞ்சனம நிறம மறைதது - மேகங்களின் கருநிறததைப் போககிச செந்நிறமாகுதலால்,—அவாககு உற அமைவ - அவ்வரககியாககு (மேனிநிறததில) ஒபபுமையாக அமைவனவான அந்தககாளமேகங்கள்,—அரகியா வடித்த அம சில் ஓதியோடு உவமைய - அந்த அரகக மகளிரகளின சிறநத அழகிய வட்டமான ஆபரணத்தையணிநத கூந்தலோடு ஒபபனவாவன; (எ - று)

இயல்பில் மிகக கருநிறமுடைமையால அரகியர்ககு மேனிநிறத்திலொப்புமையாகின்ற காளமேகங்கள், அவாகள இரகுகரதது உபரிகைகளிலுலாவும்போது அவர்களுடைய செமபஞ்சுககுழம பூட்டப்பெற்ற செநதாமரை மலாபோலச சிவநத கால்களிலமைநத பவழததுணடுபோன்ற விரல்களினது செந்நிறவொளி வீசுதலால் தமது கருநிறம மறைககப்பட்டுச செந்நிறமபூணடு அவ்விராக்கதமாதரது செமபட்ட மயிரோடொப்பாயின வெனபதாம். கால்களிலூட்டிய செம்பஞ்சின் செம்மையை மேகங்கள்பெற்றதாகக கூறியது - பிறிதின்குணம்பெறலணி. இராகததமாதங்களுடைய கால்விரல்களின் செந்நிறமிகுதியை வருணிதத இதில், அந்தகரத்து உபரிகைகள் மேக

மண்டலததையள்ாவி உயர்ந்துள்ளன வென்பது பெறப்படுதலும் காண்க. செந்தாமரைமலர்போன்ற பாதங்களை 'பதுமம்' எனவும், திரண்டபவழத் துண்டுபோன்ற விரல்களை 'பவளம்' எனவும் உபமேயததை உபமானமாகவே சொன்னது, உருவகவுயர்வுநவிற்சியணி. 'பஞ்சியூட்டிய,' 'பாட்டிசைக்கிண் கிணி' என்ற அடைமொழிகள், பதுமமென்றதன் பொருளை விளகுகின. பாட் டிசைகுகிண்கிணிப் பதுமம் - (கீதததோடொத்து நாட்டியஞ் செய்கின்ற பொழுது) அப்பாடலின் அமைப்புகுஏற்ப ஒலிததலையுடைய சதங்கைகளைத் தரித்த தாமரைமலாபோன்றபாதங்களெனினுமாம; "பதங்களிற் றண்ணுமை பாணிபணணுற விதங்களின் விதிமுறை சதியிதிப்பவர், மதங்கிய ரச்சதி வகுத்துக்காட்டுவ, சதங்கைகள்" என்றது காணக.

பஞ்சியெனினும், பஞ்செனினும் ஒக்கும். [2]பதுமசெஞ்செவி' என்ற பாடததிற்கு, பாதபதுமங்களிலுள்ள விரற்பவளங்களின் மிக்கவொளியானது வீசி யென்க. அஞ்சனநிறம - மைபோன்ற நிறம்; எனவே, கருமை யாயிற்று. வடிதத சில் - பலஅணிகலங்களுள் தேர்ந்தெடுத்தணிந்த வட்ட மாகிய முடியணி; சூடாமணி. வடிதத ஓதி என்றெடுத்து, வாரிவிட்ட கூந்த லெனினுமாம். பி - ம்:—[1]பாட்டமை. [3]அமைவன வைத்தனவுவமை, உவமையவவரைக்குற முவமை.

இதுமுதற் பதினைந்துகவிகள் - முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாசசீர்களும், மற்றைமூன்றும் விளசசீர்களுமாகிய செடிலடி நான்குகொண்ட கலிநிலைத் துறைகள். (ச)

ரு. நான நாண்மலர்க் கற்பக [1]நறுவிரை நாறப்
பானம் வாயுற வெறுத்ததா ளாறுடைப் பறவை
[2]தேனவா விரைச்செழுங கழுநீர்த்துயில் செய்ய
வான யாறுதம் [3]மரமியத் தலந்தொறு மடுத்த.

(இ - ள்.) நானம் - கஸ்தூரிவாசனையுள்ள, நாள்-அன்றுமலர்ந்த[புதிய], கற்பகம் மலா - கற்பகவிருக்ஷததுமலர்களின், நறு விரை - திவ்வியபரிமளம், நாற - (தமதுஉடமபில்) வீசவும, பானம் வாய உற - (அக்கற்பகமலர்களிற்) குடிதத தேன் (தேக்கெறிந்து) தம்வாயிற பெருகவும, வெறுததத-(கற்பகமலர் களின் நறுமணததையும தேனையும் மிகுதியாகநுகாந்து தெவிட்டி அவற்றி னிடம) வெறுப்புகொண்ட, தாள் ஆறுஉடை பறவை-ஆறுகால்களையுடைய பறவைகளாகிய வண்டுகள், தேன் அவா - வேற்றுததேனினிடத்து ஆசையி னால், விரை செழுங கழுநீர் துயில்செய்ய - நறுமணமுள்ள செழுமையான செங்கழுநீர்ப்பூவில்வந்து இனிதுதங்க, வானயாறு - ஆகாயகங்காநதியானது, தம் அரமியம் தலம தொறும மடுதத - இந்நகரத்துமாளிகைகளின் நிலாமுற் றங்களிற பாய்ந்துகொண்டிருக்கின்றது; (ஈ - ரு)

இந்நகரத்து மாளிகைகளின் மிக்கவுயர்வைக் கருதுவார், அவற்றின் நிலா முற்றங்களில் ஆகாயகங்காநதி பாயகின்ற தென்றார். தேவலோகத்துக்கற்பக

தருவினதுமலர்களின் பரிமளத்தையும் தேனையும் மிகுதியாக நுகர்ந்து தெவிட்டிய வண்டுகள் அககோட்டுப்பூவைவெறுத்து வேறறினமான நீர்ப் பூவின் தேனையவாவி ஆகாயகங்காநதியிலுள்ள செங்கழுநீர மலர்களிற்சேர்ந்து இனிது தங்குகின்றன வென, அவ்வானயாறறுநீர்ப்பூக்களின சிறப்புக்கூறிய வாறும்.

தாளாறுடைப்பறவை—வடமொழியில் 'ஷட்பதம்' எனவும், தென் மொழியில் 'அறுகால்' எனவும்படும். 'கழுநீர்துயில்செய்ய' என்பதற்கு-செங் கழுநீர்ப்பூவில் (தேனைமிகுதியாகக்குடித்து அக்குடிமயக்கததால்) துங்குதலைச செய்யவென்று பொருள்கொள்ளினுமாம். ஹர்ம்யம் என்ற வடசொல், செல் வர்கள்மாளிகையைக் குறிக்கும்; அது தமிழில் அரமியமென விகாரப்பட்டு, வீட்டின்மே லுலாவும்வெளியாகிய நிலாமுற்றததுக்கு வழங்குகின்றது. மடுதத - மடுத்தது - தொகுததல்; இனி, இதனைப் பலவின்பால் முற்றுகவே கொண்டு, தமதுநிலாமுற்றங்களில் வானயாறுபாயப்பெற்றன (இந்நகரதது மாளிகைகள்) என்று எழுவாய் வருவித்துமுடித்தல், நோ. 'அடுத்த' என்று எடுத்தல், மோனைதொடைக்கு முரணும். பி - மீ:—[1]நறு விரைநான்ற, விரைநான்றநான்ற. [2]தேனவாமவிரைசசெங்கழுநீர். [3]அரமியத்தலததொடு மடுப்ப. (௫)

சு. குழலும் வீணையும் யாழுமென் றிணையன குழைய
மழலை [1]மென்மொழி கிளிக்கிருந தளிக்கின்ற மகளிர்
சுழலு நன்னெடுந் தடமணிச சுவாதொறுந் துவன் று
நிழலுந் தம்மையு [2]மெய்ம்மைநின் றறிவரு நிலைய.

(இ - ள்.) குழலும் வீணையும் யாழும் என்று இனையன குழைய - புள் ளாகுழலும் வீணையும் யாழும் என்று இததன்மையனவான இன்னிசைக் கருவிகளின் ஒலியும தோற்குமபடி, மெல மழலை மொழி - மிகவும் இனிமை யான (தங்கள்) மழலைசசொறகளை, இருந்து கிளிகளு அளிகளின - மாளிகை களிலேயிருந்து (தாமவளர்க்குங) கிளிபபிள்ளைகட்டு அன்போடுகறறுகொடுக் கின்ற, மகளிர் - மாதாகளினுடைய, சுழலும் நல் நெடுந் தட மணி சுவர் தொறும் துவன்றும் நிழலும் - சுற்றிலுமுள்ள அழகிய உயர்ந்த பெரிய இரத் தினமயமான சுவாகளிலெல்லாம் தெரிகின்ற பிரதிபிம்பங்களையும், தம்மை யும் - அமமகளிரையும், நின்று மெய்ம்மை அறிவு அரு - (பார்த்துத்) துணி வாக உணமையுணாதற்கு அருமையான, நிலைய - நிலைமையையுடையன, (இந்நகரத்து மாளிகைகள்); (எ - று.)

இந்நகரத்துமாளிகைகளின் சுவாகளெல்லாம் இரத்தினமயமானவையாத லால், அவற்றில மகளிருருவம பிரதிபலிகின்றபோது காணபவர் இன்னது மகளிரது நிஜரூப மென்றும இன்னது அதன பிரதிபிம்ப மென்றும உணமை யறிதறகரிதாகின்ற தென்க இங்கு, இயறகைமகளிருருவததுக்கும மணி களில்தோன்றும பிரதிபிம்பமாகிய மகளிருருவததுக்கும் ஒற்றுமையதாற்

பேதந்தோன்றுமையைக் கூறியது மறைவணி. யாழ்-வீணையின்சாதிபேதம் குழல், வீணை, யாழ் என்பன - அவற்றின் ஒலிக்குமூதலாகுபெயர்; "குழலினிதியாழினிதென்ப" என்றவிடத்துப் போல மழலை - நிரம்பாமென்சொல்; இது, குதலையென்றும் கூறப்படும் சீவசிந்தாமணியில் "மெய்பெருவெழுத துயிர்க்குமழலைவா யின்முறுவல், தையலாள்" என்றவிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மழலை எக்காலத்திற்கு கூறுப'என்றதனால், மகளிரது குழவிப் பருவத்து இன்சொல்லையே யன்றி அவரது எப்பருவத்துச்சொல்லையும் மழலையென்றல மரபென உணர்க. எற்றஎழுவாய் வருவித்து முடிக்கப்பட்டது. பி - ம்:—[1]யாழ் [2]மெயம்மைகணடு. (சு)

எ. இனைய மாடங்க ளிந்திரற் [1]கமைவர வெடுத்த
[2]மனையின் மாட்சிய வென்னினச் சொல்லுமா சுண்ணு
மனைய தாமெனி னரக்கர்தந் திருவுக்கு மளவை
நினைய லாமன்றி யுவமையு மன்னதா நிற்கும்.

(இ - ள்.) இனைய மாடங்கள் - இத்தன்மையனவான (இங்கரத்து வீடுகள், இந்திரற்கு அமைவர எடுத்த மனையின் மாட்சிய - தேவேந்திரன் வசித்தற்குத் தக்கஇடமாக அமையும்படி உயாததிகட்டிய அரண்மனைபோன்ற சிறப்பையுடையன, என்னின்-என்று ஒப்புமைகூறினால், அ சொல்லும் மாசு உண்ணும் - அங்ஙனஞ்சொல்லுகின்ற சொல்லும் (பொருளோடு பொருந்தாதாதலாற்) குற்றமடையும்; (இங்ஙனமன்றி), அனையது ஆம் எனின் - அங்ஙனம் இவ்வீடுகட்குத் தேவேந்திரனரணமனையை ஒப்புமைகூறுவது சரிதானென்றால், அரக்காதம் திருவுக்கும அளவை நினையல் ஆம் -.இராக்கதர்களுடைய ஐசுவரியத்துக்கும் ஓரளவை எண்ணுதல்கூடும் அன்றி - அது மாத்திரமேயல்லாமல், உவமையும் - (அந்த ஐசுவரியத்துக்கு) ஒப்புமையும், அன்னது ஆ நிற்கும் - அதுதன்மையதாகநிற்கும் [இந்திரனது பரமைசுவரியமென்னலாம்படி நிற்குமென்றபடி]; (எ - று)

இந்தரன் என்ற வடமொழிப்பெயர், பரமைசுவரியமுடையவ னென்று பொருள்படும். இராக்கதாகளவசிக்கின்ற இலங்கைநகரத்து மாடமாளிகைகள தேவேந்திரனது அரண்மனை போல்வன வென ஒப்புமைகூறினால் அசசொற்றொடர் பொருட்குஏலாதாதலால வெற்றெனதொடுத்ததலென்னுங குற்றத்திறகிடமாகிநிற்கு மென்பது, முன்னிரண்டடியின் தோந்தபொருள். இங்ஙனமன்றி, மாடங்கட்குகூறிய இந்திரனரண்மனையொப்புமை பொருந்து மென்றால், அமமாளிகைகட்கு உடையவாகளாகிய அரக்காகளது செல்வத்துக்கும ஓா அளவை எணணலாம; அன்றியும் அவ்வரககா செல்வத்துக்கு ஒபபுமையும் இந்திரனது ஐசுவரியத்தைக் கூறலாகும் என்றது - அரககரதுசெல்வம ஓரளவுபடாதெனபதையும, இநதிரனது ஐசுவரியம் ஓரளவிற்பட்டதென உபசிஷததினால் விளங்குவதையும உட்கொணடு கூறியதென்க. அரககர் திருவுக்கு அளவில்லாமையால் அதற்கு ஓா ஒப்புமையும் அமையாது; அவர்

கள் மாளிகைகட்கும் ஒப்புமையமையாதுஎன்பது. இச்செய்யுளின் தாற்பரியம். இங்குப் பிரசித்தமாய் உபமானமாகக் கூறப்படுகிற தேவலோகத்துமனை, செல்வம் இவற்றினிடத்து உபமானத்தன்மையையறுத்துக்கூறியது எதிர்நிலையணி.

பி - ம்:—[1]அமைவுறவெடுத்து, அமைவுறவெடுத்த. [2]அனையமாட்சிய, வனையுமாட்சிய. (எ)

௮. மணிக ளெத்துணை பெரியவு மாறிரு மார்பி
ணணியுங் காசினுக் ககன்றன வுள[1]வென லரிதாற்
றிணியு நன்னகர்த் திருமனை தெய்வமாத் தச்சன்
றுணிவின் [2]வந்தன தொட்டழ கிழைத்தவத் தொழில்கள்.

(இ - ள்.)மணிகள் எத் துணை பெரியவும - எவ்வளவுசிறந்த இரத்தினங்களும, மால் திருமாபின் அணியும் காசினுககு அகன்றன உள எனல் அரிது ஆல்-திருமால் தனது திருமாபில்தரித்துள்ள (கௌஸ்துப) ரத்தினத்தினும மேம்பட்டவையாகவுள்ளன வென்று சொல்லப்படுத லிலலையன்றோ: (அது போலவே) மா தெயவத்தச்சன் - சிறந்த தேவசிற்பியான விசவகன்மனுடைய, துணிவின் - (மிகசசிறந்ததொரு நகரத்தைச செய்வே னென்ற)உறுதியினால், வந்தன - தோன்றியனவும், தொட்டு - தன் கைகளால் தொட்டு, அழகு தொழில்கள இழைத்த - அப்படிப்பட்ட [மிகசசிறந்த] அழகியதாக வேலைத்திறங்களமைக்கப் பெற்றனவுமான, திணியும் நல் நகர் திருமனை - வலிமைகொண்ட அழகிய இவ்விலங்காபுரியிலுள்ள சிறந்த வீடுகளும், (தம்மினுமமேம்பட்டவையுளவென லரிதாம்படியிருந்தன); (எ - று.)

உலகத்தில் எவ்வளவுசிறந்த இரத்தினங்களிருந்தாலும அவை திருமால் மாபிலதரித்துள்ள ஸ்ரீகௌஸ்துபமென்னுந் திவ்வியரத்தினத்தினும் மேம்பட்டனவாகாவென்பது பிரசித்தம்;அங்ஙனமே,மற்றைநகரங்களில் எவ்வளவு சிறந்த மாடமாளிகைகளிருந்தாலும் அவையெல்லாம் இவ்விலங்காபுரியிலே சிறந்ததெய்வத்தச்சனான விசுவகருமனால் தன் கைத்திறங்கொண்டு அழகிய வேலைபபாடுகளமைக்கப்பெற்ற சிறந்த மாளிகைகளினும் மேம்பட்டனவாகா என்பது, கருத்து; எடுத்துக்காட்டு வண்ணயணி. வினைமுற்றுவருவிக்க.

தச்சன் - தக்ஷனென்ற வடசொல்லின் விகாரம். தெய்வத்தச்சனான விசுவகாமா பூவதத்தில் இந்திரனுக்காக மிகக சிறபபாய்சிருமித்த இலங்காபுரியிலே மாலியவான் முதலிய பூர்விகராக்ஷசாகள் குடியேற, அவர்களைத் திருமால் வென்று துரத்தியபினபு, அந்நகரத்திலே குபேரன் வசிக்க, பிறகு அவனை அகறறிவிட்டு இராவணன அரககாகளுடனே அதிற் குடியேறினனென அறிக. பி - ம் —[1]எனிலரிதாய்த திணியும். [2]வந்தனன் (அ)

கூ.—இலங்காபுரியின் பரப்பையும் அதிலுள்ள ததிரைச்சேனை மிதுதியையும் கொண்டாடுதல்.

வாழு மன்னுயிர் யாவையு மொருவழி [1]வாழ
வூழி நாயகன் றிருவயி றொத்துள திவ்வூ

ராழி யண்டத்தி னருக்கன்ற னலங்குதேர்ப் புரவி
யேழு மல்லன வீண்டுள [2]குதிரைக ளெல்லாம்.

(இ - ள்.) இ ஊர்-இந்த இலங்காபுரி யானது, வாழும் மன் உயிர் யாவை யும் ஒருவழி வாழ - (உலகததில்) வாழ்கின் நிலைபெறற பிராணிகளெல்லாம் ஒருங்கு (தன்னிடத்திலே) இனிது வசிக்கும்படி [மிகவிசாலமாய்], ஊழி நாயகன் திரு வயிறு ஒத்து உளது-உலகத்துக்கு இறைவனான திருமாலினது திருவயிற்றைப் போன்றுளது; ஆழி அண்டதத்தின்-வட்டவடிவமான அண்டம் முழுவதிலுமுள்ள, ஈண்டு உள - இவ்விலங்காபுரியிலேயுள்ள, குதிரைகள் எல்லாம்—, அருக்கன்தன் அலங்கு தோ புரவி ஏழும் அல்லன - சூரியனது விளங்குகின்ற தேரிறபூட்டிய குதிரைகளேழுமல்லாதன; (எ - று.)

உலகம் முழுவதிலும் பொருந்தி வாழ்கின்ற சகலபிராணிகளும் ஒருங்கு தன்னிடத்தில் வாழுமபடி அதிவிசாலமாயிருத்தலால், இவ்விலங்காபுரி, பிரளயகாலததிற் சகலசராசரங்களையும இனிது கொள்கின்ற திருமாலின் திருவயிறு போன்றுளளது என்பது, முன்னிரண்டடியின் பொருள்; பாலகாண்டத்தில் அயோதிமாநகர வருணனையில "ஊழியினிறுதியுறையுளோ யாதென வுரைப்பாம்" என்றது காணக. அண்டம முழுவதிலுமுள்ள குதிரைகளுள் சூரியனது தேரிற் பூட்டப்பட்டுளள ஏழு குதிரைகள தவிர மற்றைக குதிரைகளெல்லாம் இங்கு உள்ளனவென, அந்நகரததுக குதிரைச சேனைகளின் மிகுதியைக் கூறியவாறும. ஒற்றைசசக்கரமுடைய சூரியனது தேர்கக்குக் குதிரைகள் ஏழென்றும், காயத்ரீ உஷ்ணிக அநுஷடுப் ப்ருஹதீ பங்கதி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தங்களுமே அகுதிரைகளாக அமைந்துள்ளன வாதலால் அவை அப்பெயரபெறுமென்றும் நூல்கள் கூறும. 'மனனுயிர் யாவையும்' என்றது, பெரும்பான்மைபற்றியதா மென்பதை பின்னிரண்டடி களில் உதாரணமுகத்தால் விளககின ரென்க.

ஊழிநாயகன் - காலத்துககுத் தலைவனெனினுமாம்; அழியாமுதல்வ னென்பது கருத்து ஆழியண்டம்-அண்டகோளம், உலகவுருண்டை. அலங்கு தோ - ஒருகணமேனும நிறறலின்றி இடைவிடாமல் எப்பொழுதுஞ் சஞ்சரிக கின்ற தோ என்றலுமாம். இசசெயயுளின் முதலடிககு—மன் உயிர் யாவை யும் - (உலகத்தில்) நிலைபெறுதலையுடைய சகல பிராணிகளும், ஒருவழி வாழும் - இந்த ஓரிடததில்தானே அடங்கி வாழும் வாழ - இவ்வாறு வாழ் தற்கு இடமாதலால் என்று பதவுரை கூறுவாரு முளர்.

இசசெய்யுள் "போரியைநதன" என்று தொடங்கும் பதிஞோராமபாடலுக்குப பின்னிருததல், நலம: அவ்வாறு இருப்பின், சதுரங்கங்களுள யானை தோ குதிரை என்ற மூன்றுவகைச சேனையையும் முறைபடக் கூறியதாகும

சில பிரதிகளில், இசசெய்யுள் "தழங்குபேரியின்" (கஙு) என்ற பாடலுக்குப்பின் காணப்படுகின்றது.

பி - ம்:—[1]வாழும். [2]குதிரையும். (கூ)

கo. அந்நகரத்தின் செல்வ அதிகாரங்களைக் கொண்டாடுதல்.

மரம டங்கலுங கற்பக மனையெலாங் கனக
மரம டந்தையர் சிலதிய ரரக்கியர்க் கமர
ருரம டங்கிவந் துழையரா [1]யுழல்பவ ரொருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்[2]செய்த தவமால்.

(இ - ள.) மரம் அடங்கலும் - (இந்நகரத்திலுள்ள) மரங்களெல்லாம், கற்பகம் - கற்பகவிருக்ஷங்களேயாம்; மனை எலாம - (இந்நகரத்து) மாளிகைகளெல்லாம், கனகம - பொன்மயமா யுள்ளன அரக்கியர்கு - (இந்நகரதில் வாழ்கின்ற) இராக்கத மாதாகட்கு, அரமடந்தையர் சிலதியா - (தேவலோகத்து) அப்ஸரஸ்த்ரீகள் குற்றேவல் செய்யும மகளிராயுள்ளார்; அமரா - தேவர்கள், உரம் அடங்கிவந்து உழையா ஆய உழல்பவா - தங்கள வலிமையொடுங்கிவந்து (இந்நகரத்து அரக்காசட்குக்) குறறேவல்செய்பவராய இங்குமங்கும் ஓடித்திரிகின்றனர்; இது - இவ்வளவு சிறப்பும், ஒருவா தாம அடங்குவது அன்று - ஒருவாககு உரியதாக இயல்பிற கூடுவதன்று; (ஆகவே இவ்வகைச்சிறப்பு,) தவம செய்த தவம் - (இராவணன்) தவஞ்செயது பெறற பயனாகும்; (எ - று)

கற்பகம் அடங்கலும் மரம் என்றது, இராவணன் தனது ஆற்றலாற் கற்பகமரங்களை பெயர்ததுக கொணாநது இங்கு வைததுள்ளானாதலால, மேல் திருவடிதொழுத படலததில "வேலையுளிலங்கை யென்னும விரிநக ரொருசார் விணடோய், காலையு மாலைதானு மில்லதோ கனககற்பச, சோலையங் கதனில்" என வருதலும காணக. அமரமடந்தையா என்பது, அரமடந்தையா எனறு விகாரப்பட்டது. உழையர் - அருகிலிருநது ஏவலசெயபவா. 'தவம்' எனற சொல் இரணடனுள், பிநதியது-ஆகுபெயராய், பயனையுணர்த்திறறு. இனி, 'தவமசெயத தவம்' என்பதறகு-தீயினிடையேயிருந்து செயத தவததினா லாகுமென்றும பொருள்கொள்ளலாம; இராவணன் ஆதியிற் பஞ்சாக்கினிமத்தியில் நின்று தவமியற்றியமை உணாக. அன்றி, தவம தான்செயததொருதவமா மென்றலு மொன்று; தவததுககு மேன்மையளிப்ப தென்க; மேல் திருவடிதொழுதபடலததில் "தவஞ்செய்ததவமாந தையல்" என வருகின்றது. பி - ம்:—[1]உழல்குவா. [2]தவஞ்செயத்தகுமால். சிலபிரதிகளில் இசசெய்யுள "மணிகளெதுணை" (அ) என்ற செய்யுளின்பின் காணப்படுகின்றது. (கo)

கக.—யானைச்சேனை தேர்ச்சேனை மிதுத்யைக் கொண்டாடுதல்.

[1]போரி யைந்தன தோற்றவென் றிகழ்தலிற புறம்போய்
நேரி யன்றவன் றிசைதொறு நின்றமா நிற்க
[2]வாரி யநதனி [3]யைங்கரக் களிறுமோ ராழிச
சூரி யன்றனித் தேருமே யிந்நகர் தொகாத.

(இ - ள.) போர் இயைந்தன தோற்ற என்று இகழ்தலின் - (முன்புதன்னுடன்) போர்செய்தறகு அமைந்தனவாய் (அவனனாசெய்த போரில்) தோல்

வியடைநதன வென்று (இராவணன்) இகழ்ந்துவிட்டதனால், புறம்போய் நேர் இயன்ற வல்திசை தொறும் நின்ற - தூரத்தேசென்று நேரிதாய்ப பொருந்திய வலிய எட்டுத்திசையெல்லைகளிலும் நின்ற, மா - யானைகள, நிற்க - கிடக்க. ஆரியம் தனி ஐங்கரம் களிலும்-மேன்மையான் ஒப்பறற ஐந்து கைகளையுடைய விநாயகக்கடவுளாகிய யானையும், ஓர் ஆழி சூரியன் தனி தேருமே - ஒற்றைச சக்கரத்தையுடைய ஒப்பறற சூரியனது தேரும் ஆகிய இவையே, இ ங்கர் தொகாத-இவ்விலங்காபுரியில் வந்து சேராதவை; (எ-று.)

கீழ் கூ - ஆஞ் செயயுளில் 'பிரபஞ்சத்திலுள்ள குதிரைகளுட் சூரியன் தேர்க்குதிரைகளேழல்லாதனவெல்லாம் இந்நகரத்திலுள்ளன' என்று குதிரைசசேனைமிகுதியைக் கூறினாற்போல, இசசெய்யுளில் பிரபஞ்சத்திலுள்ள யானைகளுட் கணபதியாகிய ஐங்கரக்களிலும் பிரபஞ்சத்திலுள்ள தோகளுட் சூரியன் தேருமல்லாத யானைகள் தோசளனைததும இந்நகரத்தி லுள்ளன வென்று, அவ்விடத்து யானைசசேனை தோசசேனைகளின் மிகுதியைக் கூறினார். அங்ஙனங கூறுமிடத்து, உலகத்தின்கீழ் எட்டுத்திசையெல்லைகளிலும நின்று அதனைத தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்கள் அவையவைநிற்கின்ற விடங்களில் ஆதாரமாய்நின்றுகொண்டிருசகின்றனவேயன்றி இங்குவரவில்லையேயென்ற ஆசங்கையைத தாமேகொண்டு. அவை முன்பு இராவணனுடன் போர்செய்து தோல்வியுற்றனவாதலால் அவற்றை இராவணன் தனது சேனுங்கமாக நகரினுட்கொள்ள விரும்பாது உபேகஷசெய்துதள்ளி விட்டமைபற்றியே அவை ஆங்காங்கு நின்றநிலையில் நிற்கின்றனவென்று அதற்குசசமாதானம கறபித்துக கூறினா; ஏதுத்தற்குறிப்பேற்றவணி.

'மா' என்ற விலங்கின பொதுப்பெயர், இங்குச சிறப்பாய யானையை உணர்த்திறது. ஆர்யம் - வடசொல்; உயாகுலத்திற் பிறந்த தென்றும், நல்லொழுகக முடையதென்றும், சாரததககதென்றும் பொருள்படும். விநாயகாக்கு இயலபாகிய நானகுகைகளோடு யானைவடிவதுககு உரியதான துதிக்கையுமாக ஐநதுகரங்கள் காண்க. சூரியனதுதோ ஸமவதஸரரூபமான ஒற்றைசசகரத்தை புடையதென்று நூலகள கூறும். இநதயானை தோகளின் மிகசசிறப்புத் தோன்ற, இவையொவ்வொன்றுக்கும தனிஎன்ற அடைமொழி கொடுகக்பட்டது. ஆழி - வட்டவடிவமானது. 'புறமபோய் நேரியன்ற வல்திசைதொறுமநின்ற' எனபதறகு - தோல்வியுறற தாம் யாவாகணனுகக்கும் எட்டாதபடி ஒதுங்கிவசித்தறகு ஏறறனவாயமைந்த வலியதிசைகளின் கடையெல்லைகளில் நின்ற வென்று உரைபபினும அமையும்.

பி - ம்:—[1]போரியன்றன. [2]ஆரியன்றவன, ஆரியன்றன, ஆரியன்றனி [3]ஐங்கரக்களிறும், தெய்வதக்களிறும், தெய்வமாக்களிறும (கக)

இராவணன் தேவர்களை யேவல்கொள்ளுகிற சிறப்பைக் கொண்டாடுதல்.

கஉ. தேவ ரென்பவர் [1]யாவருந் திருநகர்[2]க கிறைவற்
[3]கேவல செய்கிலா ரேவரே யெணவகை யுருவின்

[4]மூவர் தம்மினு மதிகனென் றுலிவன் முயன்ற
தாவின் மாதவ மல்லது பிறிதொன்று தருமோ.

(இ ள்.) தேவர் என்பவர் யாவரும்-தேவர்களென்று சொல்லப்படுகின்றவர்களனைவருள்ளும், திரு நகர்க்கு இறைவற்கு ஏவல்செய்கிலார் ஏவரே - (இந்தச) சிறந்த இலங்கைநகரத்துக்கு தலைவனான இராவணனுக்கு ஊழியஞ்செய்யாதவர் யாவர்தாம்? [எவருமில்லை யென்றபடி]; எண்வகை உருவின் மூவர்தம்மினும் அதிகன என்றால் - எட்டுவகையான வடிவத்தையுடைய திரிமூர்த்திகளினும் மேம்பட்டவனாய் விளங்குகின்றனன் (இராவணன) என்று சொன்னால், இவன் முயலும் தா இல் மா தவம் அல்லது பிறிது ஒன்று தருமோ - இவ்விராவணன் ஊக்கததோடுசெய்த அழிவற்ற பெரியதவமே (இவனுக்கு) இவ்வகையான மிக்கசிறப்பைதந்ததல்லாமல் வேறொன்று (இவ்வகையாற்றலைத்) தரவல்லதாகுமோ? [ஆகா தென்றபடி]; (எ - று)

தேவர்களனைவரும் தனக்கு ஏவலசெய்யப்பெற்றுத தலைமைததேவர்களான திரிமூர்ததிகளினும் மேலானவனென்று உயர்ததிசசொல்லுமபடி மிகக சிறப்புற்ற இராவணனது அரிய பெரிய தவததின் ஆற்றலைக கொணடாடிய வாறாம.

எணவகையுரு - நிலம், நீர், தீ, காறறு, வானம் என்ற ஐமபெரும்பூதங்களும, சூரியனும சந்திரனுமாகிய இருசுடரும், எஜமானனும் என்ற அஷ்டமூர்ததி; இந்தமூர்ததங்களைட்டும் சிவபிரானுக்கு உரியனவெனச சிறப்பாக நூலகளிற கூறப்பட்டிருப்பினும ஒற்றுமைநயம்பறறி உபசாரவழககால் அவறறை மறறையிருமூர்ததிகளுககும் ஏற்றிக்கூறினார்; இங்ஙனம திரிமூர்ததிகளை அபேதமாகக்கொணடு கூறுதல், ஒருமரபு. அரேகமூர்ததிகளில் அஷ்டமூர்ததிகள் அடங்குதலும் காண்க. இனி, எண - (யாவராலுங) தியானிகக்படுகின்ற [அல்லது நன்கு மதிக்கப்படுகின்ற], வகை - பலவகைபபட்ட, உருவின்-வடிவங்களையுடைய என்று பொருள்கொள்ளலுமாம; இப்பொருளில், எண்வகை-வினைத்தொகை: மூந்தியபொருளிற் பண்புத்தொகை. மூவா - தொகைக் குறிப்பு. பி - ம்:—[1]யாருமித. [2]வீராகக [3]ஏவலசெய்பவரேவரும். [4]மூவாதம்மினு மொருவனிவ்வுழையுளான் முயலின். இரண்டு மூன்றுமடிகள் - ஏவல் செயகிலாதவரெவ ரென்னிடில முதல்வர், மூவர்தம்முளு மொருவனிங்கு குழையனாய் முயலின் என்று உள்ளன. (கஉ)

கங.—அவ்விடத்திலுள்ள பலவகையோசைகளைப் பாராட்டுதல்.

கழங்கு பேரியி னாகலி தகைநெடுங் களிறு
முழங்கு [1]மோதையு மூரிநீர் முழககொடு முழங்குங்
கொழுங[2]கு ழற்புதுக் குதலையர் நூபுரக் குரலின்
வழங்கு மபபெருந துழனிகள் வயன்றொறு மறையும்.

(இ - ள்) தழங்கு பேரியின் ஆர் கலி - ஒலிகின்ற பேரிகை வாததியத்தினது நிறைந்த [மிகுதியான] ஓசையும், தகை நெடுங்களிறு முழங்கும்

ஓதையும் - அழகிய பெரிய யானைகள் கர்ச்சிக்கின்ற ஓசையும், மூரி நீர் முழக்கொடு முழங்கும் - கடலின் ஆரவாரததோடு மாறுபட்டு ஒலிக்கும்; கொழுங் குழல் புது குதலையர் - செழுமையான புள்ளாங்குழலி னிசைபோ லினிய புதுமையாகிய குதலைசொற்களையுடைய மகளிரது, நூபுரம் - காற்சிலம் பணிகளின், குரலின - ஓசையினால், வழங்கும் அ பெருங் துழனிகள் வயின் தொறும் மறையும் - கீழ்க் கூறப்பட்ட (அந்தப்பேரிசைமுழக்கம் முதலிய) பெரிய ஓசைகள் இடந்தோறும் அடங்கிப்போம்; (எ - று)

ஒவ்வோரிடததையும வருணிக்கும்பொழுது, ஆங்காங்குப்பலவகை யோசைகள் பொருந்தியுளளனவென்று காட்டுதல், மரபு பேரி-முரசு; பறைப் பொதுவுமாம். வாத்தியகோஷமும யானைகளின பிளிறலும் கடலொலியினும் மிக்குள்ளன வென்பது, முந்தியவாக்கியததின் பொருள். மகளிர்நடக்கிற பொழுதும் நாட்டியஞ் செய்கிறபொழுதும அவர்களின் காற்சிலம்புகள் ஒலிக் கின்றவொலி கீழ்க்கூறிய மூவகையொலிகளினும் பெரிதாயிருக்குமென்பது, பிந்திய வாக்கியத்தின்கருத்து. இச்செய்யுளில், மேன்மேலுயர்ச்சியணி காண்க. கலி, ஓதை, முழக்கு, குதலை, குரல், துழனி என ஒருபொருள் குறிக் கும் பலசொற்கள் அமைந்ததனால், பொருட்பின்வருநிலையணியு முண்டு. இலங்கை கடல்சூழ்ந்த தீவாதலால், மூரிநீர்முழக்கும் கூறப்பட்டது.

• மூரிநீர் - பெரியநீர்; எனவே, கடலாயிற்று. பழையநீ ரெனினுமாம் "நீரையே முதலிற படைத்தனா கடவுள்" என நூல்கள் ஓதுதலால் வலிய நீரெனறலும் அமையும்; உலகத்தை ஆக்கல் அளித்தல் அழித்தல் தொழில் கள் கடலுக்கு உளளன வாதலின். புதுக்குதலை - "பழக்கப்பழக்கப்பாலும்புளிக் கும்" எனறபடியனறிக கேட்குந்தோறும புதுமையாகவே தோன்றுகின்ற குத லைசசொல் எனினுமாம். பி - ம்:—[1]ஓதையின. [2]குரல் [3]வழங்கும்பெருஞ் சதிகளும், வழங்குபோதருஞ்சதிகளும, வழங்கும்பெருந் துவனிகள். (கஙு)

கச —தேர்ச்சாலைகளைக் சொண்டாடுதல்.

மரக தத்தினு மற்றுள மணியினும் [1]வனைந்த
குரக் தத்[2]தடந் தேரின [3]பவைபயில் கொட்டி
லிரவி வெள்ளுகின் றிமைகின்ற விபற்கைப வென்றா
னரக மொக்குமா னன்னெடுந் துறககமிந் நகர்க்கு.

(இ - ள்.) மரகதத்தினும - மரகதரததினங்களினாலும், மற்று உள யினும - மற்றுமுளள பலவகையிரததினங்களினாலும், வனைந்த - அழகாகச செய்யப்பட்ட, குரகதம் தட தேர் இனம் அவை - (சிறந்த) குதிரைகளபூட் டும பெரிய தேர்களின கூட்டங்கள், பயில் - பொருந்திய, கொட்டில் - (இந்நகரததிலுள்ள) சாலைகள், இரவி வெளக நின்று இமைகின்ற இயற கைய-சூரியனும் நாணுமபடி ஓங்கி நின்று விளங்குகின்ற இயல்பையுடையன, என்றால—, நல்நெடுந் துறக்கம் இந்நகர்க்கு நரகம் ஒக்கும் ஆல்-சிறந்தபெரிய சுவர்க்கலோகமும இந்நகரத்திற்குமுன் நரகத்தைப்போன்றதாகுமன்றோ;

நவரத்தினகசிதமாய் மிகவும் விளங்குகின்ற தேர்க்கொட்டாரங்களை யுடைய இந்நகரத்தினது மிககெல்வசிறப்பை நோக்குமிடத்துச் சுவர்க்க லோகமும் வெறுக்கத்தக்கதாகுமென்பது கருத்து. துன்பநுகர்ச்சிக்கேயுரிய இடமாகிய நரகத்தினும் இன்பநுகர்ச்சிக்கேயுரிய இடமாகிய சுவர்க்கத்துக்கு எவ்வளவு மேம்பாடு உண்டோ, அவ்வளவு மேம்பாடு உண்டு அச்சுவர்க்கத் தினும் இவ்விலங்கைக்கு என்பது போதரும். எனவே, இதற்குச் சுவர்க் கத்தை உவமை கூறுதல் அடாதென்பது தொனிக்கின்றது. ஒன்றன் குணத்தினால் மற்றொன்றற்குக் குற்றமுண்டாதலைச் சொல்லுதலாகிய அக மலர்ச்சியணி இதிற் காண்க: "அமராவதியுந் நரகா மந்தமாநகர்க்கே" என்றத னோடு இதனை ஒப்பிடுக. 'மரகதத்தினும் மற்றுளமணியினும் வனைந்த' என் றது - தேர்க்கும், தேர்கொட்டிலுக்கும் அடைமொழி. மரகதம்=மரதகம். மற்றுள மணி - கோமேதகம், நீலம், பவழம், புஷ்யராகம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. குரகதம் என்ற வடசொல் - (வலிய ஒற்றைக் குளம்புகளினால் (விரைந்து) செல்வது என்று பொருள்படும். தேர்கொட் டல் - ரதசாலை. தடம் என்று எடுத்து, இடம்என்றுகொண்டு, குதிரைகள் கட்டுமிடங்களும், தேர்கள் தங்குமிடங்களுமென்று உரைப்பாருமுளர். பி-ம்:- [1]அமைத்த. [2]தனிதேரெலாம். [3]உறைந்திடுங்கூடம், கொழுங்கதிர்சுற்றி (கச)

கரு.—அந்நகரத்து ஒளியைக் கொண்டாடுதல்.

திருகு [1]வெஞ்சினத் தரக்கருங் கருநிறந் தீர்ந்தா
ரருகு போகின்ற திங்களு மறுவற்ற தழகைப்
பருகு [2]மிந்நகர்த் துன்னொளி [3]பரத்தலிற் பசும்பொ
னுருகு கின்றது போன்றுள துலகுசூ ழுவரி.

(இ - ள.) அழகை பருகும் இந்நகர் துன் ஒளி பரத்தலின் - (தனனைக் காண்பவர் தனது) அழகைப் பருகுவதுபோல உற்றுநோக்கி நுகருமபடியுள்ள இந்த இலங்காபுரியிலே (மாடமாளிகை கூடகோபுரம் மதில்முதலியவற்றில்) நிறைந்த ஒளி சென்று பரவுதலினால்,—திருகு வெம் சினத்து அரக்கரும் கரு நிறம் தீர்ந்தார் - (எப்பொழுதும் பிறரோடும்) மாறுபடுதற்குக் காரணமான கொடிய கோபத்தையுடைய (இந்நகரில்வாழ்கின்ற) இராக்கதர்களும் (தங்கள் இயற்கைக்) கரியநிறம்நீங்கப்பெற்று விளங்கினார்கள்; அருகுபோகின்றதிங்களும் மறு அற்றது - அருகிச்செல்லுகின்ற சந்திரமண்டலமும் (தனது இயற்கைக் களங்கம் நீங்கி விளங்குவதாயிற்று; உலகுசூழ்உவரி-உலகத்தைச் சூழ்ந்துள்ள கடல், பசும்பொன் உருகுகின்றது போன்று உளது - (தனது இயற்கைக் கரு நிறம் ஒழிந்து) மாறறுயர்ந்த பொன்உருகுகின்றதுபோல் விளங்குவதாயிற்று.

இது அந்நகரின் ஒளிமிகுதியை வருணித்தவாறும் ஒரு பொருள் தன் குணத்தை நீத்துப் பிறிதொன்றன் குணத்தைப் பெறுதலாகிய பிறிதின் குணம் பெறலணி, இதில் உள்ளது. (இங்கு நீத்தகுணம் - கருநிறம், பெற்ற குணம் - ஒளி.) இடைவாக்கியத்திலுள்ள 'அழகைப்பருகுமிந்நகர்த்துன் னொளிபரத்தலின்' என்ற ஏதுவை முதலிரண்டு வாக்கியங்களோடும்கூட்டுக;

இடை நிலைத்தீவகம். 'உலகுகுழுவரி' என்பதற்கு-இவ்விலங்கைத்தீவைசுழ்ந்துநாறுபுறத்துமுள்ள கடலென்று உரைப்பாருமுளர். 'உலகு'என்பதுஉலகதின் பகுதியையும் உணர்த்துதலை "மாயோன் மேயகாடுறை யுலகமும்"என்ற தொல்காப்பியத்திலும் காணக பி - ம்:—[1]திருகுறளு [2]நன்னகர். [3]பாய்தலின்.

கசு.—அந்நகரத்துமாளிகைகளின் ஒளியைக் கொண்டாடுதல்.

அண்ட முற்றவும் வீங்கிரு ளகறறுகின் [1]றலரி
கண்ட வாற்றினிக கடிநகா நெடுமனைக் கதிரக
ளுண்ட [2]வாற்றினென் றுரைப்பரி தொபபிடிற [3]றன்முன்
விண்ட வாய்ச்சிறு மின்மினி யென்னவும் [4]விளங்கா.

(இ - ள்.) அணடம் முற்றவும் வீங்கு இருள் நின்று அகற்றும் அலரி கண்ட ஆற்றின் - உலகமுழுவதும நிறைநத இருளைத தான் நிலைபெற்று விலக்குகின்ற சூரியன் செயகின்ற வகையோடு, இ கடி நகர் நெடு மனை கதிர்களை உணட ஆறறின்-சிறந்த இவ்விலங்காபுரியிலுள்ள உயாந்த மாளிகைகளின் கிரணங்கள் (அவ்விருள முழுவதையும) உணடொழிக்கின்றவகைக்கு, ஒன்று உரைப்பு அரிது - சிறிதும ஒப்புமைசொல்ல இயலாது; ஒப்பு இடில் - (அங்ஙனமன்றி இவ்வொளிகட்கு அசசூரியகிரணங்களை) உவமைகூறினால், (அவை), விண்ட வாய் சிறு மின்மினி தன்முன் என்னவும் விளங்கா - திறக்கின்ற வாயையுடைய சிறியமின்மினிப்பூசசி அசசூரியன் முன் விளங்குகின்ற வளவேனும இவறறின் முன் தாம விளங்கமாட்டா; (எ - று)

சூரியன் வானததிலே உயரததில் நின்று தனது ஆயிரங்கிரணங்களைக் கொணடு உலகதது இருளை விலகசுகின்றனன்; இலங்கைநகரததது மாளிகைகளின் ஒளிகள் தாம இந்நிலவுலகத்தி லிருந்துகொணடே உலகமுழுவதிலுமுள்ள இருள் முழுவதையும பற்றற உண்டொழித்துவிடுகின்றன; ஆதலால், இவறறிறகுக தமமில் ஒப்புமைசொல்ல இயலாது; ஆராய்சசியின்றி ஒப்புமை கூறினாலோ, சூரியன் முன்னிலையில் மின்மினிப்பூசசி விளங்குகின்றவளவேனும் அச்சூரியகிரணங்கள் இம்மாளிகையொளிகட்குமுன் விளங்கமாட்டா என்பதாம். "மதியாதவன் கதிா மின்மினிபோலொளிா வைகுந்தம்" என்றதனினும் மேலாக மதிககுமபடியுள்ளது இந்நகரினொளி யென்க. அண்டம் - ஆகாயமுமாம். கடி - பலபொருள் குறிக்கும உரிசசொல்; அசசம, அழகு, ஆரவாரம், இன்பம; ஒளி, களிப்பு, காவல்; புதுமை, மணம் என்ற பொருள்களும் இங்கு அமையும். 'விளங்கான்' என்ற பாடத்துககு, சூரியன் - எழுவாய் பி - ம்:—[1]அலாவான், அலாவ [2]ஆற்றலொன்று, ஆற்றலென்று. [3]தம்முன் [4]விளங்கான் இசசெய்யுள் "தேனுஞ்சாந்தமும்" (கஎ) என்ற பாடலின்பின் சில பிரதியிலுள்ளது சில பிரதியிற் காணப்படவில்லை. (கசு)

கஎ.—தேன்முதலியவற்றைக் கொண்டாடுதல்.

தேனுஞ் சாந்தமு மான்மதச் செறிநறுஞ் சேறும்
வான நாண்மலர்க் கற்பக மலர்களும் வயமாத்

தான [1]வாரியு நீரொடு மடுத்தலிற் றழீஇய
மீனுந் தானுமோர் வெறிமணங் [2]கமழுமாம வேலை.

(இ - ள்.) தேனும் - (சூடியமலர்களினின்று சொரிகின்ற)மகுவும், சாந்தமும் - சந்தனமும், மான்மதம் செறி நறுஞ் சேறும் - கஸ்தூரியைக்கொண்டு செய்த களிப்புள்ள வாசனை வீசுகின்ற குழம்பும், வானம் நாள் மலர் கற்பகம் மலர்களும் - வானுலகத்திலுள்ள புதிதுபுதிதாக மலர்தலையுடைய கற்பகதருக்களின் மலர்களும், வயமா தான வாரியும-வலிமைமிக்க யானைகளின்மதநீர்ப் பெருக்கும், நீரொடு மடுத்தலின் - கடல்நீரிற்பாயாது அதனோடு மிகுதியாகக் கலத்தலினால், வேலை - அக்கடல், தானும் தழீஇய மீனும ஓர் வெறிமணம் கமழும் ஆம் - அகக்கடல் தானும தனனிடத்திறபொருந்திய மீன்களும்(தமகு இயல்பான புலாலநாறறம் ஒழிந்து)ஒப்பறறநறுமணம வீசுவனவாம; (எ-று.)

இதனால், இந்நகரத்திலுள்ள தேன் முதலியவற்றின் மிகுதி கூறியவாறும்; வீறுகோளணி. பாலகாண்டததில் அயோத்திமாநகரவருணனையில் "புதுப்புனல்குடையுமாதா பூவொடு நாவிபூத்த, கதுப்புறுவெறியேநாறுங கருங்கடற்றரங்கம்" என்றது, இங்குக் காணத்தக்கது. மான்மதம் - கஸ்தூரி மானினது கொழுப்பு; வடமொழியில் 'மருகமதம்' எனப்படும். "வயவலியாகும்" என்பது தொல்காப்பியத்து உரிசசொல்லியற்சூத்திரம். வயமா - வலிமையையுடைய விலங்கு. எனவே, யானையாயிற்று. தானவாரி - [3]மதமாகியநீரென இருபெயரொட்டு. பி-ம்:—[1]வாரியின் [2]கமழுமால், கமழுமல்

கஅ.—இவ்வகைச்சிறப்பின் காரணத்தைக்குறித்து வியத்தல்.

தெய்வத தச்சனைப புகழ்துமோ செங்கண்வா ளரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ[1]விரிஞ்ச
னையப் பாடிலா வரதததையே மதித்துமோ வறியாத்
தொய்யற் [2]சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பாம்.

(இ - ள்.) தெயவ தசசனை புகழ்துமோ-தேவசிற்பியான விச்சுவகருமாவைக் கொண்டாடிப் பேசுவோமோ? செம் கண வாள் அரககன்மெய் ஒதது ஆறறிய தவத்தையே வியததுமோ - கோபத்தாற்சிவந்த கண்களையுடைய கொடிய இராகததனான இராவணன் மெய்ம்மைதவறாமற்செய்த தவத்தையே அதிசயிததுப் புகழ்வோமோ? விரிஞ்சன ஐயப்பாடு இலா வரத்தையே மதிததுமோ - பிரமனளிதத சந்தேகிததறகிடமில்லாத வரத்தின்பலத்தையே நன்குமதிததுப் பேசுவோமோ? அறியா தொய்யல் சிந்தையாம் - (இன்னதைப் பாராட்டிப் பேசவேணடுவதென்று) அறியாமற் சோர்வுபடுகின்ற மனததையுடையோமான நாம், யாவரை யாது என்று துதிப்பாம் - (மேற்கூறிய மூவரில்) எவரை எனனவென்று துதிகக வல்லோம்? [துதிக்கவல்லோமல்லோம் என்றபடி]; (ஈ - று.)

இஙஙனம ஒப்புயாவறற மிக்க சிறப்பையுடைய இவ்வலங்காபுரியை நிருமிததவன், தேவசிற்பியான விசசுவகருமன; இதில் அரசுவீறறிருக்கின்ற

இராவணன் இவ்வளவுசெல்வச்சிறப்பைப் பெற்றதற்குக் காரணம், அவன் உள்ளும்புறமும் ஒதுதுத் திரிகரணசுததியுடன் நெடோள்செய்த அரியபெரிய தவமும், அதற்கு உவந்து பிரமனளித்த தவறுப்பெருவரமுமாம். ஆகவே, தெய்வதத்சன் இராவணன் பிரமன் என்ற மூவரும் துதிகததகவரென்க. வாள் - கொடுமைக்கு இலக்கணை. வாளரகன் - சிவபிரானிடததினின்று பெற்ற சந்திரஹாஸமெனனும் சிறந்தவாளாயுததைத யேந்திய அரககனெனினுமாம். மெய் ஒதது - மனமொத்து என்னவுமாம். பி - ம்:—[1]விதியோன். [2]சிந்தையேம். (கஅ)

வேறு.

கக.—வனம் உபவனம் என்ற இவற்றைக் கொண்டாடுதல்.

வானுந் நிலனும் பெறு[1]மாறினி மற்று முண்டோ
கானும் பொழிலும் மிவைசெங்கன கத்தி னாலு
மேனைம் மணியாலு மியற்றிய வேனும் யாவுந்
தேனும் மலருங் கனியுந்தரச் செயத செய்கை.

(இ - ள்.) கானும பொழிலும இவை-(இந்நகரத்தைசசாரந்த) காடுகளும் சோலைகளுமாகிய இவை, செம் கனகத்தினாலும ஏனை மணியாலும் இயற்றிய ஏனும் - செம்பொன்னாலும் மறறும இரததினஙகளினாலும் செயயப்பட்டவையாயினும, யாவும - அவையெல்லாம், தேனும மலரும கனியும்தர - (இயறகைக காடு சோலைகளிலுளள மரஙகள்போலத) தேனையும மலர்களையும் பழஙகளையும தருமபடியாக, செயத - அமைததிருககிற, செய்கை - விசிததிரமான செயலை, இனி மற்றும நிலனும வானும் பெறும ஆறு உண்டோ - இந்நகரத்தினும வேறான நிலவுலகமும வானுலகமும பெறும்வகை யுண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

பொன்மணிகளா லியறறப்பட்ட செயற்கைக்காடுகளும் சோலைகளும் இயற்கைமரஙகளபோலத் தேன்மலாகனிகளைத தருகின்ற அற்புதம் இநநகரத்திலுள்ளதேயனறி மறறைநிலவுலகததிலேனும வானுலகததிலேனும் எஙகுமில்லை யென்பதாம; தொடர்புயர்வுநவிற்சியணி. வானுந்நிலனும், பொழிலும்மிவை, ஏனைம்மணி, தேனும்மலா எனபன - விரிததல்விகாரம். செஙகனகம் - மாற்றுயாந்த பொன். இவ்வகைததெயவிக ஐசுவரியததை இவ்விராவணனேயன்றி மண்ணுலகததாரும விணணுலகததாரும் பெறுதலுணடோ வென்றும பொருள்கொளளலாம். பி - ம் —[1]மறறினிமாறுமுணடோ.

இக்கவி - கீழ்ப்படலத்தின் முப்பததொன்பதாந கவிபோனற கலிநிலைத்துறை. (கக)

வேறு.

உ0.—கோபுரத்தைக் கொண்டாடுதல்.

நீரும் வையமு நெருப்புமே னிமிர்நெடுங் காலும்
வாரி வானமும வழங்கல வாகுந்[1]தம வளாச்சி

ஊரி னிநெடுங் கோபுரத் துயர்சசிகண் டுணர்ந்தான்
மேரு வெங்ஙனம் விளர்க்குமோ முழுமுற்றும் வெள்கி.

(இ - ள்.) நீரும் - ஜலமும், வையமும் - பூமியும், நெருப்பும் - அக்கனியும், மேல நிமிர நெடுங காலும் - மேலேயுலாவுகின்ற நெடிய வாயுவும், வாரி வானமும - (இந்த நான்கு பூதங்களும்) வருதற்கிடமான ஆகாயமும், (ஆகிய ஐமபெருமபூதங்களும), தம் வளாசசி வழங்கல ஆகும் - (இந்நகாககோபுரத தின்வளாசசிககுமுன்பு தாம்) தமது வளாசசியினுற் சிறப்பிதது வழங்கப்படாவாம; (மற்றும்), ஊரின் இ நெடுங கோபுரத்து உயர்சசி கணடு உணாநதால்- இந்தநகாரததிலுளள நெடியகோபுரததின் உயாவைப் பாாததறிந்தால், மேரு- மகாமேருகிரி, வெள்கி - வெட்கப்பட்டு, முழுமுற்றும் எங்ஙனம விளர்ககுமோ-தனது உடம்புமுழுவதும் எவ்வாறு வெணணிறமடையுமோ. (எ - று.)

மிகக வளர்சசியுடையனவென்று பிரசிததமாக வழங்கப்படுகின்ற பஞ்சமகாபூதங்களும், தம்மினுமவளாசசியுடையதாக இந்நகர்க்கோபுரம ஏற்பட்டுவிட்டதனுல் இனி அங்ஙனம வளாசசியில்மேம்பட்டனவாக வழங்கப்படா என்பது, முந்தியவாக்கியத்தின் பொருள். அககோபுரத்தின் உயர்வு, எணபத்துநான்காயிரம் யோசனையுயர்வுள்ளதென்று சொல்லப்படுகிற மகாமேருகிரியும மிகவும் வெட்கப்படுமபடி அதனினும் அதிகப்பட்டுள்ள தென்பது, பிந்திய வாக்கியத்தின் கருதது. இதுவும தொடர்புயர்வுநவிற்சியணியே. வெட்கததினுல் மேனிநிறமமாறுதல், இயற்கை; மேருவின் பொன்னிறம் ஒழிந்து வெண்ணிறமாகு மென்க. நீரை முதலில நிறுததியது, "ஆதியிற் கடவுள நீரையே படைத்தா" என்றபடி அது முதலிலதோன்றிய சிறப்புப் பற்றி யென்க. வையம் - (பொருள்களை) வைககுமிடமெனநிலததுககுக் காரணககுறி. வாரி - வருமிடம. மற்றை நானகுபூதங்களும தங்குதற்கு இடமாகுதல பற்றியும, அவற்றின உற்பத்திககு மூலகாரணமாகுதல் பற்றியும், 'வாரிவானம' எனப்பட்டது கணடு உணாந்தால் - பாாததது அதனுயாவையும தனனுயாவையும ஆலோசிததால் என்றலுமொன்று. பி - ம் —[1]தன் [2]ஓரினின்னெடுங, ஊருளிகநெடுங.

இதுமுதற் பதினுன்கு கவிகள் - இப்படலத்தின் நான்காம் கவிபோன்ற கலிநிலைத்துறைகள். (உ0)

உக.—மதிலின்ஒளியைக் கொண்டாடுதல்.

முன்னம் யாவரு மிராவணன் முனியுமென் றெண்ணிப்
பொன்னின் மாநகர் மீசசெலான் [1]கதிரெனப் புகல்வார்
கன்னியாரையி னொளியினிற கண்வழுக் குறுத
லுன்னி நாடொறும விலங்கினன் போதலை யுணரா.

(இ - ள்.) கன்னி ஆரையின ஒளியினில் - அழிவில்லாத (இந்நகாரததது) மதிலின் ஒளியினுல், கணவழுககுறுதல-கணணொளி மழுங்குதலை, உனனி - நினைதது, நாள் தொறும் - தினந்தோறும, விலங்கினன் போதலை - விலகிச

செல்லுதலை, உணரா - அறியாமல்,—முனனம் - நெடுநாளாக, யாவரும் - அனைவரும், இராவணன் முனியும என்று எணணி கதிர் பொன்னின் மா நகரம் செலான் என புகல்வா - இராவணன கோபிப்பானென்று நினைத்து அஞ்சிச சூரியன் பொன்மயமான பெரிய இந்நகரத்திற்குமேலே செல்லான் என்று சொல்வார்கள்; (எ - று.)

மூவுலகததையும் வென்று அடகி அரசாளுகிற இராவணனிடத்து அசசததாற சூரியன் அவனது இலஙகைநகரததுக்குமேலாக வானததே சென்று தனது உஷ்ணகிரணஙகளை வீசுதற்குப பின்வாஙகி அந்நகரததினும் விலகிச செல்லுதலாகிய உண்மையை மறத்து, அந்நகரத்தின் பொன்மயமான மதிலினது ஒளியினாற் கணகூசுதல்பறறி விலகிசசெல்வனென வேறொன்றை வகுத்துக கூறியதனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி.

ராவணன் என்ற வடமொழிப்பெயர் - கூசசலிடுபவனெனறும், கூசசலிடசசெய்பவனெனறும் பொருளபடும. சிவபிரானது கைலாசகிரியைப் பெயாக்கததொடஙகி அதன்கீழ்த தன்கைகள் அகப்பட்டு நசுககுணடபோது பேரிரைச்சலிட்டதனாலும், தானசெய்யும் பலதுன்பஙகளினால் உலகததாரை அலறிக் கதறசசெய்ததனாலும், இவனுக்கு இப்பெயா. இது, சிவபிரான் இட்டது. இனி, விசிரவமுனிவனது புதல்வனெனப் பொருளபடும தகதி தாஞ்ச நாமமெனக கொள்ளுதலு மொன்று; இவன - பிரமபுததிரரான புலஸ்தியமகாமுனிவரது குமாரராகிய விசிரவமுனிவாகக்குக் கேகசியென்றராக்ஷஸ ஸதிரீயினிடததிற் பிறந்தவன்; (விசிரவமுனிவர்கு மூததமனைவியினிடம் பிறந்தவன், குபேரன்.) லஙகாநகரத்தரசன்; திககுவிசயஞ்செய்தவன். இவனது உடன்பிறந்தவா கும்பகர்ணன், சூாப்பனகை, விபீஷணன்.

கதிர் - ஒளி; ஆயிரஙகிரணஙகளையுடையனான கதிரவனுக்குச சினையாகு பெயா. கன்னி - அழிவின்மை. ஒளியினால கண்கூசிப் பார்வை மழுஙகுதல், இயல்பு. உணரா=உணராமல். பி - ம்:—[1]கதிரென்பர் புலவா. இசசெய்யுள் சில பிரதிகளில் "தீயசெய்குநா" (உஉ) என்ற பாடலுககுப்பின் காணப்படுகின்றது: சில பிரதிகளில் இசசெய்யுள காணப்பட்டிலது. (உக)

உஉ.—மதிலின்உயர்ச்சியைக் கோண்டாடுதல்

தீய செய்குநா தேவரா [1]லனையவர் சேரும்
வாயி லில்லதோர் வரம்ப[2]மைக் குவனென மதியாக்
காய மென்னுமக் கணக்கறு பதத்தையுங கடகக
வேயு நன்மதி லிட்டனன் [3]கயிலையை யெடுத்தான்.

(இ - ள்.) கயிலையை எடுததான் - (முன்பு) கைலாசகிரியைப் பெயாத தெடுதத ஆறறலையுடையவனான இராவணன்,—'தீய செய்குநர் தேவா ஆல்- (இராக்கதாகளாகிய நமக்குத) தீஙகுகளைச செய்யககூடியவர்கள் (தொன்று தொட்டுப் பகைவாகளான) தேவர்களே யன்றோ: (ஆதலால்), அனையவா சேரும வாயில் இல்லது ஓா வரம்பு அமைககுவன் - அததேவாகள வரும்படியான வழியைக கடநததாகிய ஓர் எல்லையை (நமது நகரத்துககு) அமைப்

பேன்,' என மதியா - என்று எணணி,—காயம் எனனும் அ கணககு அறு பதத்தையும கடக்க ஏயும - அளவிறநத அந்த [தேவாகள் சஞ்சரிகின்ற] ஆகாயமென்கிற இடமமுழுவதையும் கடந்து மேலாகப்பொருந்திய, நல்மதின்- நல்லமதிலை, இட்டனன் - அமைத்துக்கொணடனன்போலும்; (எ - று)

வானததினெல்லை எவ்வளவு உணடோ அவ்வளவையுமகடந்து உயர்ந்துள்ளது, இந்நகரதது மதில; அதற்கு, இராவணன் தநகட்கு சத்துருககளாகிய தேவாகள் எப்பொழுதேனும் தீநகு செய்பவராதல்கூடு மென்பது கருதி அவாகள வருமவழியை யடைதது வான வீதிகளனைதுக்கும மேலாகத தனது நகாககாவறசுற்றுமதிலை யமைததனனெனக் கற்பனைகூறியது - ஏதுத் தற்குறிப்பேற்றவணி. காயம் - முதறகுறைவிகாரம். பி - ம்:—[1]எனையவர் [2]அமைககுவம். [3]கயிலையன்று, கயிலையேன்று. (உஉ)

உங.—மதிலின்வலிமையைக் கோண்டாடுதல்.

கறங்கு கால்புகா [1]கா புகா கதிர் புகா [2]மறலி
மறம்பு காதினி வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
வறம்[3]பு காதிந்த வணிமதிட் கிடக்கைநின் றகத்தின்.

(இ - ள்.) இந்த அணி மதிள் கிடககை நின்று - இந்த அழகிய மதிலெல்லையைக கடந்து, அகத்தின் - இநநகரினுள்ளே, கறகுகு கால் புகா - சுழன்று வீசுமியல்புள்ள காறறுககளும செல்லமாட்டா; கா புகா - மேகநகளுஞ் செல்லமாட்டா; கதிர் புகா சூரிய சநதிரர்களும புகார்; மறலி மறம புகாது - யமனுடைய கொடியதிறமும செல்லமாட்டாது; இனி - இவவனமாகின்றபோது, வானவர் புகார் எனகை வமபே - 'தேவாகள் இந்நகரினுட் செலலத திறமிலா' என்றுசொல்லுதல் வீணேயாம; திறமபு காலததுள - (யாவும்) அழியுங காலததில [சாவசங்காரகாலததில்], யாவையும் சிதையினும் - எல்லாப பொருளகளும அழிந்தாலும், சிதையா - தான அழியாத, அறம் - தரும தேவதையும், புகாது - (இநநகரினுட்) பிரவேசியாது; (எ - று.)

காற்றுநுழையவும் இடமில்லாதபடி அந்நகரத்துமதில் உயாந்தும எவகுஞ் சந்துவிடாமறசெறிநதும அரியகாவலுடையதாயு மிருககின்றதென்க. 'யமனதுவீரமும்இதனுட்புகாது' என்றது, அமமதிலின் காவலுடைமையைக் காட்டும. எவகுந்தடையின்றிச செல்லுகின்ற ஆறறலையுடைய வாயுவும் மழைக்கடவுளும சூரியசநதிரரும யமனுமே இம்மதிற்காவலைககடந்து இந்நகரினுட்செல்லாரெனறதனாலேயே, மறறைததேவர்கள் செலல வல்லரல்லரென்பது தணடாபூபிகாநியாயததாற பெறப்படுதல்பற்றி, அதனைத தனியேயெடுததுககூறுதல் மிகைபடககூறலென்னுங குறறத்தின்பாறபடு மென்பா, 'இனி வானவா புகாரெனகை வம்பே' எனறார்; இது - தொடாநிலைச் செய்யுட்போருட்பேறணியாம். நல்வினைகளை யொழித்துத தீவினைகளைச செய்கின்ற கொடும்பாதகனான இராவணனது ஆட்சியில் கொடிய அரசகர்கள் வசிக்கின்ற இலங்கையில தரும மெனபது சிறிதுமில்லாமையை, அம்மதிற்

காவலினாற் தருமதேவதை அந்நகரினுள் நுழைய மாட்டாதெனக் கறபிதது கூறியது, தரிகுறிப்பேற்றததின்பாறபடும். பலதிசைசளினின்றும் வீசுதல் பற்றியும, ஆவஹம் முதலியவாக எழு வாயுகள் இருப்பனவாகப் புராணங்கள் கூறுவதாலும், 'கால்புகா' என்றும் சப்தமேகங்களுள்ளன வாதலால் 'காா புகா' என்றும், பன்மையாற் கூறினர். கறகுதல் - ஒலிததலுமாம். கதிர் - கதிர்களையுடையவாககு ஆகுபெயா மறல் - கொடுமை, கொலை, கோபம், திறமை. போா, வலி, வீரம; அதனையுடையவன், மறலி.

இவ்வூரினுள்ளே தருமம் புகாதிருததலால் இவ்வூரவர் விரைவிலழிவுறுவரென்பது நிச்சயம; ஆகவே, 'காறறு முதலிய தேவாகள இதனுட் புகா' என்று இனிசசொல்லுதல் வீணேயாமென அரககாககு அமங்கலமாகின்ற ஒருபொருள் இசசெயயுளில் தொனிககுமென்பா. 'வமபே' என்பதறகு - புதுமையோ? [அனறு] எனறு உரைபபா ஒருசாாா; இப்பொருளில், எ - எதிாமறை பி - ம்:—[1]கதிரவனொளி. [2]கனலின. [3]புகாமையாலழியுமிநநகரென வயிாததான், புகாமையாலழியுமிப்பதியென வறைந்தான. (உஙு)

உச.—விமானசிகரத்தைக் கொண்டாடுதல்.

[1]கொண்ட வான்றிரைக் குரைகட லிடையதாய்க் குடுமி
யெண்ட வாவிசுப் பெட்டநின் [3]றிமைககின்ற வியலபாற்
பண்டை நாகணைப பளளியா னுநதியிற் பயந்த
வண்ட மேயுமொத் திருந்ததிவ வகனக ரமைதி.

(இ - ள்.) (இநநகரமானது), கொணட வான் திரை குரை கடல் இடையது ஆய் - தனனிடததேகொணட பெரிய அலைகளையுடைய ஒலிககின்ற கடலினிடையே யுள்ளதாய, குடுமி எண தவா விசும்பு எட்ட நின்று இமைக்கின்ற இயல்பால் - (தனனிடையேயுளள அரணமனையின) விமானசிகரம ஓரெலலைககு அடஙகாத ஆகாயததையளாவ உயாநது விளஙகுகின்ற தன்மையையுடைமையால்,—இ அகல் நகா அமைதி-இநத விசாலமான இலஙகாபுரியின அமைபபு, நாக அணை பள்ளியான் பணடை உநதியின் பயந்த அணடமஎமஒதது இருநதது - சாப்பராஜனுகிய ஆதிசேஷனுகிற சயனததிலே படுததலகொணடு அறிதுயிலமாகின்றவனுன திருமால் ஆதிகாலததில் (தனது) நாபியினின்று தோனறுவிதத அணடகோளததையும் போன்றுளளது; (எ-று)

பெருங்கடலிடையே தோன்றியெழுந்து உயாந்து காணப்பட்ட பிரமாணடததை, தெனகடலிடையே மிகவுயாந்து காணபபடுகின்ற இலங்கை நகாககு ஒபபுமைகூறினா; உவமையணி. தவு - தபு என்பதன் மருஉ. தவுதல் - அழிதல்; குறைதல். நாகணை - நாகவணை யென்பதன் தொகுததல். பி - ம்:—[1]கொணடல் [2]இமைகின்ற வெழிலால் (உச)

உரு.—ஊடல்பாடலாதி விநோதங்களைக் கொண்டாடுதல்.

பாடு வாாபல 'ரென்னின்மற் றவரினும் பலரா
[2]லாடு வாரினி யவரினும் பலருள ரமைதி

கூடு வாரிடை யின்னியங் கொட்டுவார் முட்டில்
வீடு காண்குறுந் தேவரால விழுநடங் காண்பார்.

(இ - ள்.) பாடுவார் பலர் என்னின் - (இநநகரத்தில்) இசைபாடுகின்றவர்கள் அநேகரென்றால், இனி ஆடுவார் - நாட்டியஞ்செய்கின்றவாகள், அவரினும் பலா - அப்பாடுகின்றவர்களினும் பலராவா; அமைதி கூடு வார் இடை இன் இயம கொட்டுவா - (அந்நாட்டியததிற்குஏறபக) தாளவமைப்புப் பொருந்தியதும தோல்வாரினாற கட்டப்பட்டதுமாகிய இனிமையான வாத்தியத்தை [மததளததை] த தட்டிமுழககுகின்றவாகள், அவரினும பலர் உளர்- அந்நாட்டியஞ்செய்பவர்களினும பலராயுள்ளா; முட்டில் வீடு காண்குறும் தேவரால் விழு நடம காண்பா-சிறையிலிருந்து விடுதல்பெறற தேவர்களைக கொண்டு (இநநனஞ்) சிறந்த நாத்தனத்தைச செய்விதது வேடிககைபாரபபாரகள், (இராககதர்கள்); 'எ-று.)—'மறறு' அசை; ஆல்-அசை;தேற்றமுமாம்

இலஙகையில் அரக்காகள் தம்மால் வென்று சிறைபிடித்துக காவலில் வைககப்பட்டுள்ள தேவர்களுள் பாடுதல் ஆடுதல் மததளஙகொட்டுதல் என்றவற்றில் வலல பலரைத் தாம் வேணடுமபொழுதெல்லாம் சிறையினின்று விடுதது அவர்களைக்கொண்டு இசைநாடகங்களை நடத்தித தாம் அதனை விஞ்ஞெகுகணடு மகிழ்வ ரென்பது கருத்து. முதல் மூன்றடிகளில், மேன் மேலுயரீச்சியணி காண்க.

கூடு, இடை என்ற வினைத்தொகையிரண்டும் - இயத்துக்கு அடைமொழி. இயம் - வாசசியப்பொதுபபெயர்; இகுகுச சந்தர்ப்பததினால் மததளத்தைக குறித்தது. 'அமைதி கூடுவாரிடை' என்பதற்கு - சமயம் நேர்ந்து கூடியவர்களான சபையார்களின் நடுவிலே யென்று பொருளகொணடு, அதனை, பாடுவார் ஆடுவா இயககொட்டுவர் என்ற மூன்றனோடும் கூட்டியுரைத்தலு மொன்று இவ்வாறு இசைநாடகங்களை நடத்துவார் அரக்கரென்றுகொணடு, அநகுத் தாம் தாம் செய்யும ஊழியஙகளைக் குறைவின்றிச சரிவரசசெயது முடிதது விடுதல்பெறற தேவாகளே அச்சிறந்தநாட்டியத்தை (வியநது) காண்பாரகள என்று இறுதி வாக்கியத்துககுப் பொருளுரைப்பாருமுளா; இபபொருளில் 'தேவரால்' என்பதில், ஆல் - அசை: அரக்கர்ககு ஊழியஞ செய்தலினின்று தாம்விடுதல்பெறும்வகையை யெதிர்பாரகின்ற தேவ ரென்றலுமாம். பி - ம்:—[1]எணணின். [2]ஆடுவாரகண்மற்று. (உரு)

உசு.—நடனச்சிறப்பைக் கொண்டாடுதல்.

வான மாதரோ டிகலுவர் விஞ்சையர் மகளி
ரான மாதரோ டாடுவ ரியக்கிய ரவரைச
சோனை வார்குழ லரக்கியர் [1]தொடர்குவர் தொடர்ந்தா
லேனை [2]நாடிய ரரு'நடக கிரியையாய்ந் திருப்பார்.

(இ ள்.) (இவவிலங்காபுரியில்), வானம மாதரோடி - (மேற்கூறியவாறு நாததனஞ்செய்கின்ற) தேவமாதாகளுடன், விஞ்சையா மகளிா - வித்தியாதர

மாதர்கள், இகலுவர் - மாறுபட்டு அவர்களினும் மேலாக நாட்டியஞ்செய்வர்; ஆன மாதரோடு - அங்ஙனமான விதியாதரமாதர்களுடன், இயக்கியா - யக்ஷஸ்திரீகள், ஆடுவா - (மாறுபட்டு அவாகளினும் மேலாக) நாட்டியஞ்செய்வர்; சோனை வார் குழல் அரககியர் - விடாப் பெருமழை பொழிகின்ற காள மேகம்போன்ற நீண்ட கூந்தலையுடைய இராகததமாதர்கள், அவரை தொடர்குவர் - அந்த யக்ஷஸ்திரீகளோடு மாறுபட்டு அவாகளினுஞ்சிறப்பாக நாட்டியஞ் செய்வா; தொடாநதால் - அங்ஙனம் நாட்டியஞசெய்யுமிடதது, ஏனைநாடியர் - மற்றைநாட்டு மகளிர்கள், அரு நடம கிரியை ஆய்ந்திருப்பார் - (அவாகளோடு எதிர்ததுத் தாம நாததனஞ்செய்யமாட்டாமல் அவர்களுடைய) அருமையான நர்ததனத்தின அடைவுகளை மனத்தினுலாராய்ந்து வியந்துகொண்டிருப்பார்.

இராகததமாதாகளுடைய அதிவிசிததிரமான நாட்டியததிறம், இதிற் கூறப்பட்டது. இயககியா, அரக்கியர், நாடியர் என்பன - இயக்கர், அரககர், நாடா என்றவற்றின பெணபால். மிகக கருநிறமுடைமைக்குச சோனை மேகம உவமை கூறப்பட்டது தொடாதல் - வாதுக்குஅழைத்தல். இனி, ஈற்றுவாகயித்துககு-அங்ஙனம் அரககியர் இகலி ஆடுமிடதது மறறைநாட்டு மாதாகள் அருமையானநடனததுககு அங்கயான செயல்களைத தாம் ஆராய்ச்சியுடனேசெய்துகொண்டுஉதவுவார்கள் என்றபொருள்கொள்ளுதலுமொன்று. பி -ம் —[1]தொடர்வரததொடர்ந்தார். [2]நாகியா. [3]நடக்கிரியமைந்திருப்பா.

உஎ.—நவநிதிகளைக் தற்றேவல் கொள்கின்ற சிறப்பைக் கொண்டாடுதல்.

இழையு மாலையு மாடையுஞ் சாந்தமு மேந்தி
யுழைய ரென்னநின றுதவுவ நிதிபங்க ளொருவர்
விழையும் போகமே யிங்கிது வாய்[2]கொண்டு விளம்பிற்
குழையு நெஞ்சினு னினையினு மாசென்று கொள்ளும். -

(இ - ள்) நிதியங்கள் - (நவ) நிதிகள்,—இழையும் - ஆபரணங்களையும், மாலையும் - பூமாலைகளையும், ஆடையும - வஸ்திரங்களையும், சாந்தமும் - சந்தனததையும், ஏநதி - (தாம்) எடுததுககொணடு, உழையா என்ன நின்று உதவுவ - பரிசாரகாபோல அருகில்நின்று (இந்நகரத்து அரககாகட்கு வேணடும் போதெலலாம அவ்விழை முதலியவற்றைக) கொடுப்பன; இஙகு இது - இவ்வூரிலுள்ள இவ்வகையானபோகம், ஒருவர் விழையும் போகமோவேறொருவர் விருமபததக்க போகமோ? [அன்று என்றபடி]; வாய்கொண்டு விளம்பின் - (இதனை) வாயினுல் வருணிததுசசொல்லத தொடஙகினுல், குழையும்-(அவ்வாயசொல்லததிறமில்லாமற்) குளறிப்போம்: நெஞ்சினுல்நினையினும (இதனை வருணிக்கவேண்டுமென்று) மனததினுல் நினைத்தாலும, மாசு என்று கொள்ளும - (அககருததுசசிறிதுநககாததுபறறி அங்ஙனம நினைததலை அம்மனமதனக்கு) குற்றமாகக் கொள்ளும்; (எ - று)

அந்நகரததவாபோகம மற்றையெவாககும மனமொழிமெய்கட்கு எட்டாததென்பது விளக்கப்பட்டது. ("அதிசயமளிப்பதற்கருளறிந்துநற், புதி

தலாகற்பகத்தருவும பொய்யிலாக், கதிரொடுமணிகளுங கறவையான்களும், நிதிகளுமுறைமுறைநின்று நீட்டவே" என்று ஆரணியகாண்டத்திற் கூறியது காணத்தக்கது.) இவ்விலங்காபுரியில் ஒருவர் அநுபவிக்கின்ற போகமாகிய இதனையே வாயினாற்சொல்லுதலும் மனத்தினால் நினைத்தலுமமுடியாதெனப் பின்னிரண்டடிகட்குப் பொருள் கூறலுமாம்; எனவே, இங்ககரத்திலுள்ள அனைவரும் அநுபவிக்கின்ற போகத்தை ஒருங்கே வருணித்துச்சொல்லுதலும் மனத்தினாலெண்ணுதலும் முடியாதென்பது, கருத்து. மகாபதுமம், பதுமம, சங்கம், மகரம், கச்சபம, முகுந்தம், குந்தம, நீலம, வரம் என நிதிஒன்பது வகைப்படும். போகம் சுகாநுபவம். பி-ம்.—[1]உதவுவார் மாகதமகளிர். [2]கொடு.

உஅ.—நகரத்தின் அமைப்பைக் கொண்டாடுதல்.

பொன்னின் மால்வரை மேனமணி [1]பொழிந்தனன பொருத்தி
[2]யுன்னு நான்முகத் தொருவனின் றாழ்முறை யுரைக்கப்
பனனி நாள்பல பணி[3]யுழந் தரிதினிற் படைத்தான்
சொன்ன வானவா தசசனு மிந்நகா துதிப்பான்.

(இ - ள்.) உன்னும் - (இந்நகரம் இன்னபடி அமையவேண்டு மென்று) நினைத்த, நால் முகத்து ஒருவன - நான்குமுகங்களையுடைய ஒப்பற்றவனான பிரமன், நின்று - அருகில்நின்று, ஊழ் முறை உரைக்க - செய்யவேண்டிய செயலை முறையே சொல்லிவர, சொன்ன வானவா தசசன் - (சிறந்த சிற்பியாக நூல்களிற) கூறப்பட்ட தேவசிற்பியான விசுவகருமன், பன்னி - ஆராய்ந்து, பொன்னின் மால் வரைமேல் மணி பொழிந்தனன் பொருத்தி - பொன்மயமான பெரிய மகாமேருகிரியிலுள்ள இரத்தினங்களை மிகுதியாகக் கொணர்ந்து சொரிந்து அவற்றை உரிய இடங்களிற பதித்து, பல நாள் பணி உழந்து - அநேக நாள் சிரமப்பட்டு வேலைசெய்து, அரிதினின் - அருமையாக, துதிப்பான இ நகா படைத்தான் ஆம் - (யாவரும்) துதிக்குமபடி இவ்விலங்காபுரியை அமைத்தானபோலும்; (எ - று.)

இந்நகரத்தினது அதிவிசித்திரமான செய்கைத்திறத்தைக்கொண்டாடிக கூறியது இது, இங்ஙனஞ்செய்திருந்தாலன்றி இத்துணைசிறப்பு அமையாதெனறபடியாம. வடமொழியில 'ரத்நஸாநு' என்பது மேருவின்பெயர்களிலொன்று. இரத்தினமயமான தாழ்வரைகளையுடைய தென்பது அதன்பொருள்; ஆனதுபற்றி, 'பொன்னின்மால்வரைமேல் மணி' எனப்பட்டது; மேல்-ஏழனுருபு. இலங்கைநகரத்துக்கு ஆதாரமான திரிகூடகிரி மேருவின் சிகரங்களி லொன்றாதலால். பொன்மயமான பெரியமலையினமீது இரத்தினங்களைநிரம்பக்கொட்டி அவற்றைப் பொருந்தப்பதித்துப் படைத்ததனாலென்று உரைத்தலுமொன்று. 'தசசனும்' என்றவிடத்து, தசசன் நாம் என்றுபிரித்து, நாம் துதிப்பான் - நாம கொண்டாடுமாறு என்று உரைப்பர் ஒருசாரார.

பி - ம்:—[1]பொழிந்தனபொருவ. [2]உன்னி. [3]உழனறு. (உஅ)

உகூ.—யாழிசையையும் அகிற்புகையையும் கொண்டாடுதல்.

மகர வீணையின் மநதிர கீதத்து மறைந்த
சகர வேலையி னார்கலி திசைமுகன் [1]றழுவுஞ்

சிகர மாளிகைத தலநதொறுந் [2]தெரிவையர் நிவந்த
வகரு தூபத்தி னெழுந்தின முகிற்குல மனைத்தும்.

(இ - ள்.) மகரவீணையின் மந்திரகீதத்து - (இந்நகரததவர்வாசிகின்ற) மகரவீணையினது கமபீரமான இசையொலியில், சகர வேலையின் ஆர்கலி மறைந்த-சகரசக்கரவர்ததி புதல்வாகளால் தோணடப்பட்ட கடலினது நிறைந்த ஓசைகள் அடஙகிவிட்டன; திசைமுகன் தடவும் சிகரம மாளிகை தலம் தொறும் - (எல்லாவுலகஙகளுள்ளும் மேலதான சத்தியலோகத்தில் வசிக்கின்ற) நான்முகனை பிரமன சேரும்படி உயர்ந்துள்ள சிகரதகையுடைய இந்நகரத்து மாடமாளிகைகளிலெல்லாம், தெரிவையா நிவந்த - மகளிர் (தமது கூந்தல் முதலியவற்றிற்கு) மிகுதியாயூட்டிய, அகரு தூபதத்தின் - அகிற் புகையில், முகில் குலம் அனைத்தும அழுந்தின - (வானத்திற் செல்லுகின்ற) மேகக்கூட்டஙகள்யாவும அடஙகிவிட்டன; (எ - று.)

இசசெய்யுளில், கீதவொலியில் வேலையின் ஆர்கலி மறைந்ததாகவும், அகில்தூபதத்தில் முகிறகுலம் அழுந்தியதாகவும கூறியது மறைவணி. திசைமுகன் தழுவுஞ் சிகரமாளிகை - தொடர்புயர்வுநவிற்சியணி. பேரியாழ்,மகரயாழ், சகோடயாழ், செஙகோட்டியாழ் என்ற நான்கனுட்பதொன்பதுநரமபு கட்டுனை மகரயாழ், இஙகுக கூறப்பட்டது; "ஒன்று மிருபது மொன்பதும் பத்துடனே, நின்ற பதினாறும பின்னேழுஙு - குன்றாத, நால்வகையாழுகு நன்னரம்பு சொன்முறையே, மேல்வகைய நூலோரவிதி" என்றதனால், முறையே இவற்றிறகு நரமபு இததுணையவென்க. மகரவீணை - மகரமீன்வடிவமாக வேலைத்திறமமைகக்பெற்ற வீணை. 'மந்தரகீதம்' என்ற வடமொழித் தொடர் விகாரப்பட்டது. கலம, மந்தரம், தாரம என்ற இசைவகைகளுள் மத்திமமாகிய மந்தரம, இஙகுக கூறப்பட்டது; கலம - செவிககு இனியதும எழுதது நன்குவிளஙகாததுமான தொனி; மந்தரம் - கம்பீரமான தொனி, தாரம - அதிகமான தொனி. அகருதூபம் - அகிற்கட்டையை யெரிததலாலாகும் புகை; வடமொழிததொடர். பி - ம்.—[1]தடவும. [2]மடநதையர் தீர்தத.

ங0 —அரக்கர்களின்களிப்பைக் கோண்டாடுதல்.

பளிக்கு மாளிகைத் தலந்தொறு மிடந்தொறும் பசுந்தேன
றுளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைக டோறு
மளிக்குந் தேறலுண் [1]டாடுநர் பாடுந ராகிக்
களிக்கின் றாரலாற் [2]கவல்கின்று ரொருவரைக் காணேன.

(இ - ள்.) (இந்நகரதத்திலுளள), பளிஙகு மாளிகை தலம் தொறும் - ஸ்படிகக்கறகளினாலமைககப்பட்ட வீடுகளினிடஙகளிலும, பசுந் தேன் துளிக்கும கற்பகம தண நறுஞ சோலைகள் தோறும - புதிய தேனைச சிந்துகின்ற கறபகவிருக்ஷஙகளையுடைய குளிர்சசியான சோலைகளிலும, இடந்தோறும் - மற்றும் பலவகையான இடஙகளிலும, அளிக்கும் தேறல உண்டு ஆடுநகா பாடுநா ஆகி களிக்கின்றா அலால் - (பரிசாரகர்களாற) கொணடுவந்து கொடுகக்

படுகிற மதுவைக் குடித்துக் கூத்தாடுகின்றவர்களும் இசைபாடுகின்றவர்களு மாய்க் களித்திருக்கின்ற அரக்காகளை (க் காணகினறேனே) யல்லாமல், கவல் கின்றா ஒருவரை காணேன் - (களிப்பின்றிக்) கவலையுடனிருக்கின்றவரான அரக்கரொருவரையும காணகின்றேனில்லை; (எ - று.)

இலஙகையிலுள்ள மிகப்பலரான அரக்கர்களனைவரும் கவலையின்றிக கட்குடித்துக் களித்து ஆடல்பாடல்களைசசெய்துகொணடு மகிழ்ந்திருக்கின் றனரேயன்றி, ஒருவரேனும் களிபபின்றிக் கவலையுடையராயிருக்கவில்லை யென்பது, கருத்து 'கற்பகசசோலை'—கற்பகம்போலுள்ள சோலை யென் றாவது, தேவலோகததுக்கற்பகத்தருக்களே இராவணனால் அங்குநின்று பெயர்த்து இஙகுககொணர்ந்து நாட்டப்பட்டன வென்றாவது கொள்க. பி - ம்.—[1]ஆடினர் பாடினராகி. [2]கலுழ்கின்றா. (ஙஂ)

ஙக.— அவர்களது போகத்தைக் கோண்டாடுதல்.

தேறன் மாந்தினர் தேனிசை மாந்தினர் செவ்வா
யூறன் மாந்தின ரின்னுரை மாந்தின ரூடல்
கூறன் மாந்தின ரனையவர்த [1]தொழுதவர் கோபத்
தாறன் மாநதின ராக்கியர்க் குயிரன்ன வரக்கர்.

(இ - ள்.) அரக்கியர்க்கு உயிர் அன்ன அரக்கர்-(இஙகரததிலே) இராக் கதமாதர்கட்கு உயிரபோன்றவர்களான இராக்கதர்கள, தேறல் மாந்தினர் - (அம்மாதாகளாலளிக்கப்பட்ட) மதுவைப் பானஞசெய்கின்றவர்களும், தேன் இசை மாந்தினர் - (அவாகள் பாடுகின்ற) தேன்போலினிய கீததைத ஆவ லோடு கேட்கின்றவாகளும், செவ் வாய ஊறல் மாந்தினர் - (அவர்களுடைய) சிவந்த வாயிதழி லூறுகின்ற அமுதநீரை உட்கொள்ளுகின்றவர்களும், இன் உரை மாந்தினர் - (அவர்களுடைய) இனிமையான பேசசை அன்புடன் கேட்கின்றவர்களும், ஊடல் கூறல் மாந்தினர் - (அவர்கள்) ஊடி அதனாற் கூறுங் கடுஞ்சொற்களையும் பிரியததோடு கேட்கின்றவர்களும, அனையவர் தொழுது - அஙஙனம ஊடிய அம்மாதர்களை (ஊடல்தீர) வணஙகி, அவர் கோபதது ஆறல் மாந்தினர் - அவர்கட்குஉண்டாயிருந்த கோபநதெளிந்த நிலையை ஆசையோடு காண்கிறவாகளுமா யுள்ளா; (எ - று.)

அஙகரத்து அரககர்களும் அரக்கியர்களும் கவலையின்றிக களிததுப்பல படியால் உல்லாசமாகவிருக்கின்றமையை இஙஙனம் பாராட்டிக கூறினர். மாந்துதல் - குடித்தல்; இது - இலக்கணையாய், ஆதாரததோடு செவியுற்றும் கண்ணுறறும உட்கொள்ளுதலையும் உணர்ததிற்று. வாய - இதழுககு இலக் கணை. வாயூறல் மாந்துதல் - அதரபாநம. "ஊடுதல் காமததிற்கின்பமதறகின பம், கூடி முயஙகபபெறின்" என்பவாதலால், ஊடல்கூறல்மாந்துதலும் கோபததாறல்மாந்துதலும மகிழ்சசிககுக காரணமாயின. இசசெயயுளில், 'மாந்தினா' என்ற ஒருசொல் ஒருபொருளிலேயே பலமுறை வந்தது, சொற் பொருட்பின்வருநிலையணி. பி - ம்.—[1]தொழுதெழு. (ஙக)

ஙஉ.—இதுவும் அது.

எறித்த குங்குமத் திளமுலை யெழுதிய தொழில்கள்
கறுத்த மேனியிற் [1]பொலிந்தன வூடலிற் [2]கனன்ற
[3]மறிக்க ணோக்கியர் மலரடி [4]மஞ்சுளப் பஞ்சி
குறித்த கோலங்கள் [5]பொலிந்தன வரக்கர்தங் குஞ்சி.

(இ - ள்.) எறித்த குங்குமத்து இளமுலை எழுதிய தொழில்கள் - செந்நிறவொளிவீசுகின்ற குங்குமப்பூவின் குழம்பைக்கொண்டு இந்நகரத்து இராக்கதர்களால், அரக்கியர்களின் இளமையான தனங்களிலே எழுதப்பட்டுள்ள சித்திரங்கள், கறுத்த மேனியில் பொலிந்தன - (அவர்களை இறுக ஆலிங்கனஞ் செய்கின்றபொழுது அவ்வரக்கருடைய) கருநிறமானவுடம்பிற பதிந்து விளங்கின; (ஊடலைத்தணிக்கும்படி தம்மை வணங்கின அரக்கரை அரக்கியர் உதைக்கும்போது) ஊடலிற் கனன்ற மறிகண நோக்கியர் மலர் அடி மஞ்சுளம் பஞ்சி குறித்த கோலங்கள்-பிணங்கியதனாற கொதித்தவரும் மான் குட்டியின் பார்வைபோன்ற பார்வையை யுடையவர்களுமான அரக்கியரது செந்தாமரை மலர்போன்ற கால்களிலூட்டப்பட்டுள்ள அழகிய செம்பஞ்சுக குழம்பு பட்ட அடையாளங்கள், அரக்கர்தம் குஞ்சி - அரக்கருடைய தலைமயிர்களில், பொலிந்தன - விளங்கப்பெறுகின்றன; (எ - று.)

அரக்கரும் அரக்கியரும் தழுவும்பொழுது, அரக்கியர்மார்பிற் செந்நிறமான குங்குமப்பூங் குழம்புகொண்டு எழுதப்பட்டுள்ள மகரிகாபத்திரங்கள் அரக்கரதுகருநிறமானமார்பிற் பதிதல், முதல்வாக்கியத்திற் கூறப்பட்டது அரக்கியா ஊடல்கொண்டபொழுது கோபமிகுதியால் அரக்கரதுமுடியில் தமது அடி படுமாறு உதைக்கையில் அவ்வடிகளிலூட்டிய செம்பஞ்சுக் குழம்பு அம்முடியிறபடிவது, பிந்திய வாக்கியத்திற்கூறிய பொருள். மாற்று நிலையணி; இது வடமொழியில் பரிவ்ருத்தயலங்கார மெனப்படும்; உயர்ந்ததையேனும தாழ்ந்ததையேனும் ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை வாங்குதல், இதனிலக்கணம், அரக்கர் ஆலிங்கனத்தையும வணக்கத்தையும அரக்கியர்க்குத் தந்து, அவரிடத்தினின்று முலைத்தொய்யிலையும் காற்செம்பஞ்சின நிறத்தையும் பெற்றதாகக் கூறியது காண்க. இசைசெய்யுளின் முன்னிரண்டடி - கூடலையும், பின்னிரண்டடி - ஊடலையும கூறுவன. மஞ்சுளம் - வடசொல். குஞ்சி - ஆடவர்தலைமயிர். பொலிந்தில என்ற பாடத்திற்கு - அரக்கரின் தலைமயிர் செம்பட்ட நிறமுடைமையால், அவற்றில் செம்பஞ்சுக் கோலங்கள் விளங்கவில்லை யென்க. பி - ம்.—[1]பொலிந்தனர். [2]கனன்று. [3]மறித்து. [4]மஞ்சனப், பங்கயா. [5]பொலிந்தில. (ஙஉ)

ஙங.—மகளிரின்அழகைக் கொண்டாடுதல்

விளரிச சொல்லியர் [1]வாயினன் வேலையுண் மிடைந்த
பவளக் காடெனப பொலிந்தது படைநெடுங் கண்ணாற்
குவளைக் கோட்டகங் கடுத்தது குளிர்முகக் குழுவான்
முளரிக் கானமு [2]மானது [3]முழங்குநீ ரிலங்கை.

(இ - ள்.) முழங்கு நீர் இலங்கை - ஒலிகின்ற கடல்நீர்சூழ்ந்த இவ்விலங்காபுரியானது,—விளரி சொல்லியர் - விளரியென்னும் இசைபோ லினிய சொற்களையுடையவராகளான மகளிரது, வாயினால் - (செந்நிறமான) வாயிதழ்களால், வேலையுள் மிடைந்த பவளம காடு என பொலிந்தது - கடலில் மிகுதியாயுள்ள பவழத்தொகுதிபோல விளங்கிற்று; படை நெடுங் கண்ணால் - (அம்மகளிரது) வாளாயுதம்போற்கூறிய நீண்ட கண்களினால், குவளை கோட்டகம் கடுத்தது - கருங்குவளைமலாகள்நிறைந்த நீர்நிலையைப் போன்றது; குளிர் முகம் குழுவால் - (அம்மாதாகளது) குளிர்ச்சியான [காணுதற்கு இனிய] முகங்களின்கூட்டத்தால், முளரி கானமும் ஆனது - செந்தாமரைக்காடு போலவு மாயிற்று; (எ - று.)

ஒரு பொருளினிடத்துப் பலதன்மைகளை ஆரோபிததுக் கூறியதனால் பலபடப்புனைவணி. மகளிரது வாய்ககுப் பவழம் - செந்நிறத்திலும், கண்களுககு வாட்படை - கூர்மையிலும, ஆடவரநெஞ்சின் திணமையை யொழித்தலிலும், கண்களுக்கு நீலோறபலமலா - கருமை மென்மை யழகுகளிலும், முகததிற்குத தாமரைமலா - கணடவாகணகளிக்கசசெயயும் அழகிலும உவமையெனக காணக வடமொழியில ஷட்ஜம. ரிஷபம், காந்தாரம், மததியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும ஸபதஸவரங்கள் - தமிழில் முறையே குரல், துத்தம, கைகிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசை யெனப்படுதலால், விளரியென்றது - தைவதமென்னுஞ் சுர மென்னலாம். விளரியென ஓரபணணும் உண்டு. பவளககாடு - பவழககொடியின் தொகுதி. படைஎன்ற ஆயுதப்பொதுப்பெயர்ககு - வேல் அம்பு என்ற பொருள்களும் இங்கு அமையும; அவையும், கண்ணுக்கு உவமையாம். கடுததது,ஆனது-உவமவாசகம். தாமரைத்தொகுதியை'தாமரைக்காடு'என்றல,மரபு. முழங்குநீர்-ஆரவாரிக்கின்ற நீர்: எனவே, கடலாயிற்று. பி-ம்:—[1]ஓதியால். [2]ஒதததது. [3]மூரி.

வேறு.

கஉ —அரக்கர்களின் பெருந்தொகையைக் கொண்டாடுதல்.

எழுந்தனர் திரிந்து வைகு [1]மிடத்ததா யின்று காறுங்
கிழிந்தில தண்ட மென்னு மிதனையே கிளப்ப தல்லா
[2]லழிந்துநின் றுவ தென்னே யலருளோ ஞதி யாக
வொழிந்த[3]பே ருயிர்க ளெல்லா மரக்கருக் குறையும் போதா.

(இ - ள்.) அண்டம்-அண்டகோளமானது, எழுந்தனா திரிநது வைகும் இடத்தது ஆய் - (இநநகரதிலுளள அரக்காகளிததனைபேரும்) மேலெழுந்து திரிநது தஙகுமிடததை யுடையதாயிருந்தும், இன்று காறும் கிழிந்திலது - இன்றைநாளளவும் உடைந்து தகர்ந்திலது, என்னும் இதனையே - என்கிற இநத வலியுடைமையையே, கிளப்பது அலலால் - அதிசயமாகப் பாராட்டிச சொல்வதல்லாமல், அழிந்து நின்று ஆவது என்னே (அவ்வரககர்களுடைய தொகை இவ்வளவெனறு சொல்லமுடியாமையைக் குறித்து)வருந்தி நிற்றலா

லாகும் பயன் யாது? [எதுவுமில்லை யென்றபடி]; அலா உளோன் ஆதி ஆக ஒழிந்த பேர் உயிர்கள் எல்லாம் - தாமரைமலரில வாழ்கின்றவனான பிரம தேவன் முதலாக மற்றுமுள்ள பெருந்தொகையாகிய பிராணிகளனைத்தும், அரக்கருக்கு உறையும்போதா-(இந்நகரததிலுள்ள)அரககர்களின் தொகைக்கு உறையிடுதறகும் போதமாட்டா; (எ - று.)

உறையிடுதலாவது - பொருள்களைக கணக்கிடும்போது ஞாபகததின் பொருட்டு ஒவ்வொருபெருந்தொகைக்கு ஒன்றாகஇடுவதோர் இலக்கக்குறிப்பு. பிரமன் முதல் எறும்பீறாக உலகததிலுள்ள உயிர்களெல்லாம் இந்நகரத்தி லுள்ள அரக்கர்களின் தொகைக்கு உறையிடவும் போதாவென்று அவ்வரக்கர் களின் தொகைமிகுதியை விளககியவாறு. இநநனம் அளவிறந்த அரக்கா கள் எழுந்து திரிந்து தநகுதற்கு இடநகொடுத்துககொண்டு அண்டகோளம இதுவரை பிளவுபடாதிருந்ததைப்பற்றி வியக்கவேண்டுமேயன்றி இவர்கள் தொகை இததனையென்று தெரியாமையைக் குறித்து வருந்தவேணடுய தில்லையென்பது, முதல்வாக்கியததின் கருதது. பி - ம் —[1]இடததால். அழுந்தி. [3]வேறு.

இதுமுதல் ஒன்பது கவிகள் - கீழ்ப்படலத்தின் முதற்கவிபோன்ற அறு சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (௩௪)

௩௫.—நகரத்தின் பரப்பைக் கோண்டாடுதல்.

காயததாற் பெரியர் வீரங் கணக்கில ருலகங் கல்லு
மாயத்தார் வரத்தின் றன்மை யளவற்ரு ரறித றேற்ரு
மாயத்தார் [1]நகர்க்கெங் கேனும் வரம்புமுண் டாமே மற்ரோர்
தேயத்தா [2]தேயஞ் சேறல் தெருவிலோர் தெருவின் சேறல்.

(இ - ள.) காயத்தால் பெரியா - உடம்பினளவினாற் பெருமையுடைய வர்களும், வீரம் கணககு இலா - வீரததனமையில் அளவில்லாதவர்களும், உலகம் கல்லும ஆயததா - உலகததை நாசஞ்செய்யச சிததராயிருப்பவா களும, வரதின் தன்மை அளவு அற்ரூ - (தாமபெற்றுள்ள) வரபலத்தின் சிறப்பில் ஓரளவிலலாதவாகளும, அறிதல தேற்ரு மாயததா - (எவரும்) அறிந்துகொளள முடியாத மாயையுடையவாகளுமாகிய அரககாகள வசிக கின்ற, நகாககு - இநநகரததிற்கு, எநகு ஏனும் வரம்பும் உணடு ஆமே - எவ் வகையிலேனும் ஓரளவும உள்ளதாகுமோ? [ஆகா தென்றபடி]; தெருவி லோர் தெருவின் சேறல் - (இவ்வூரில்) ஒருதெருவிலிருப்பவா அதனி னின்று வேரொருதெருவிற்குச செலலுதல், ஓர தேயததார் மற்று தேயம் சேறல் - ஒருநாட்டிலுள்ளவர்கள் (அந்நாட்டினின்று) பிறிதொரு நாட்டிற் குச செல்லுதல்போலாம்; (எ - று.)

உடமபு, வீரம், முயற்சி, வரம், மாயை முதலிய ஒவ்வொன்றிலும அள வறறவர்களான இவ்வரக்காகள் வசிக்கின்ற இந்நகர்கு ஓரளவு இருத்தல கூடியதோ? அனறு என்றது, முதல் மூன்றடிகளின் தேர்ந்தபொருள்

ஒவ்வொரு தெருவும் மிக நீண்டுள்ள தென்பதனை, நான்காமடியால் விளக்கினார். தெருவிலோ தெருவின் சேறல் மற்றோ தேயத்தார் தேயஞ்சேறல போலு மென்றது 'சேறல்' என உபமான உபமேயங்கட்கு ஐக்கியந்தோன்றச சொன்னது, காட்சியணி. 'உலகமகல்லும ஆயத்தா' என்பதற்கு - உலகத்தை மேலுங் கீழும் பறிக்குமபடியான நீளததையுடையவாக ளென்று உரைப்பாருமுளர்; இவ்வுரையில, ஆயம் - நீளம் ஆயத மென்ற வடசொல்லின் விகாரம். முந்தினவுரையில், ஆயத்தமென்ற வடசொல ஆயமென விகாரப்பட்ட தென்க; யத்தனமெனபது பொருள். இனி, இதற்கு - உலகததைப் பெயாதெடுக்கவல்ல [மிக்கவலிமையுள்ள] மகளிரகூட்டத்தையுடையவரென்று உரைகூறுதலு முண்டு; (ஆயம - மகளிரகூட்டம்.) அறிதல் தேறறும என்று எடுதது, உரைப்பா ஒருசாரார. ஏ - எதிர்மறை. காயம் - வடசொல். எங்கேனும - அகலம, நீளம, சுற்றளவு, உயரம முதலிய எவ்வகையிலாயினு மென்றபடி. தெருவில் ஓரதெருவின் எனறு எடுதது, ஒரு வீதியினின்று மறறொருவீதிககு என்று உரைககவும் இடமுண்டு.

பி - ம் —[1]அவாகெங்கேனும், அங்கங்கேனும. [2]சோந்தாற, சென்றால்.

ங.—அரக்கர்களது பராக்கிரமத்தையும் போகத்தையும்கொண்டாடுதல்.

கழ[1]லுலாக் காலுங் கால [2]வேலுலாக் கையுங் காந்து
மழலுலாக் கண்ணு [3]மில்லா வாடவ ரில்லை யன்னார்
குழ[4]லுலாய்க் களிவண் டார்க்குங் குஞ்சியாற் பஞ்சி குன்று
மழலையாழ்க் குதலைச செவ்வாய் மாதரு மில்லை மாதோ.

(இ - ள்.) கழல் உலா காலும் - வீரக்கழலணிநத கால்களையும், காலன் வேல் உலா கையும் - யமன்போன்ற வேலாயுததை யேந்திய கையையும், காந்தும் அழல் உலா கண்ணும் - மூண்டெரிகின்ற நெருப்பு உலாவுகின்ற கண்களையும், இல்லா - பெற்றிராத, ஆடவா - புருஷர்கள், இல்லை - இந்நகரததிலில்லை; அன்னார் - அந்தஆடவாகளுடைய, குழல் உலாய்களி வண்டு ஆரகும் குஞ்சியால் - இசைப்பாட்டுடனே திரிந்துகொண்டு களிப்பையுடைய வண்டுகள் ஆரவாரிக்கப்பெறற தலைமயிரினால். பஞ்சி குன்று - (தங்கள்கால்களிலூட்டிய) செம்பஞ்சுககுழம்பு குலைவுபடாத, மழலை யாழ் குதலை செவ் வாய் மாதரும - இனிய ஒலியையுடைய யாழினிசைபோ லினிமை தருகின்ற குதலைசசொற்களைப் பேசுகின்ற சிவந்தவாயையுடைய மகளிரும், இல்லை - (இந்நகரில) இல்லை; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

இநநகரத்தவரான அரககரனைவரும் இயற்கைக் கோபகுணததால் 'கொள்ளிககணணா', 'கொடுங்கணணா' என்னுமபடி கொதிககின்ற நெருப்பைச சொரிகின்ற கணகளை யுடையவாகளாயும, தமது வீரததுககு அறிகுறியாகக காலிற கழலென்னும அணிகலததை அணிநதவர்களாயும், கொடுமையால எப்பொழுதும போரககுசசிததராயக கையில் வேலேநதிய

வாகளாயு மிருகின்றாக ளென்பது, முதல் வாக்கியதின் கருத்து. மகளிர் ஊடியபொழுது அவ்வூடலைத்தணிததற்பொருட்டுத் தமதுமுடி அவரடியிற்படுமாறு விழுந்து வணங்கும்பொழுதும, மகளிர் ஊடல்மிகுதியால ஆடவர்களின முடிமேல் தமது அடிபடுமாறு அவர்களை உதைக்கும்பொழுதும ஆடவரதுமுடிபட்டு மகளிர்காற செம்பஞ்சுக்குழம்பு குலைகின்றதென்பது, பிந்தியவாக்கியத்தின் கருத்து.

வேலுக்கு யமனுவமை, கொல்லக்கருதியவர்களைத் தவறாது கொல்லுதலிலெனக. குழல் - இசைப்பாட்டு. 'குழல்உலாய' என்பதற்கு - வேய்ங்குழல்போல இனனிசைசெய்துகொண்டு என்றும், நெய்குழல்போல ஓய்வின்றியுலாவி என்றும பொருள்கொளளலாம். வண்டுகள் குஞ்சியில் (மொய்தது) ஆரதல், அங்குசசூடியமலாகளின் தேனையுணண வென்க. பி - ம்.—[1]இலா. [2]அயில். [3]உள்ள. [4]உலாம. (௩௬)

௩௭.—யானைகளைக் கொண்டாடுதல்.

கள்ளுறக் [1]கனிந்த பங்கி யரக்கரைக் கடுதத காதற்
புள்ளுறத் [2]தொடர்வ மேனி ப்புலாலுறக் கடிது போவ
வெள்ளுறுப் [3]பெயிற்ற செய்ய தலையன கரிய மெய்ய
வுள்ளுறக் [4]களித்த குன்றி னுயர்ச்சிய வோடை யானை.

(இ - ள்.) காதல் புள் உற தொடாவ - ஆசையோடு வண்டுகளினால் மிகுதியாகத தொடரப்படுபவையும, மேனி புலால் உற கடிது போவ - உடமபிற் புலால்நாற்றம்வீசும்படி விரைநதுசெல்பவையும், வெள் உறுப்பு எயிற்ற - வெண்ணிறமாய் வெளிப்பட்டுவிளங்குகிற உறுதியான தந்தங்களை யுடையவையும, செய்ய தலையன - செநநிறமான தலைகளையுடையவையும், கரிய மெய்ய - கருநிறமான உடம்பையுடையவையும், உள் உற களித்த-மனததில் மிகுதியாகக களிபபையுடையவையும, குன்றின் உயாசசிய - மலைபோன்ற உயர்வையுடையவையுமான, ஓடையானை-நெற்றிப்பட்டததையணிநத யானைகள்,—கள் உற கனிநத பங்கி அரக்கரை கடுதத - (சூடியமலாகளின்) தேன் பெருக வளாந்த செம்பட்ட மயிர்களையுடைய இராக்கதாகளைப் போலுள்ளன.

இலங்கையிலுள்ள யானைகட்கு அந்நகரத்து அரக்கர்களோடு ஒப்புமை குறிக்கப்பட்டது; சிலேடையுவமையணி. மதநீரை யுண்ணுதற்பொருட்டு வண்டுகள் யானைகளைத் தொடரும; தரித்தமலர்மாலைகளிலுள்ள தேனைப பருகுதற்பொருட்டு அவை அரககரையுந தொடரும்; 'புள்' என்ற பொதுப் பெயா சிறப்பாய், வண்டைக் குறிததது. இனி, புள் - பருந்துமாம்; மத யானையினாற் கொல்லப்படும் பிராணிகளின் தசையையுணணலாமென்னும் அவாவினால் அதனைப் பருந்துகள் தொடரும். இக்காரணததால் அரககரையும் பருநதுகள தொடரும். யானைக்குப் புலால் - பலரைக்கொன்றதனாலாகிய தசைநாற்றமுமாம். அரக்காககுப புலால் - தசையுண்ட நாற்றம். யானைக்கு வெளளுறுப்பெயிறு - தநதம; அரககர்க்கு இருபுறமும் வெளியெழுந்து

விளங்குகிற வலிய கோரப்பல் யானைகுச செய்ய தலை-செம்பட்டினாலாகிய முகபடாத்தை யணிதலினால்; மதங்கொண்ட காலத்தில் துதிக்கையாற் புழுதியையெடுத்துததானே தன் தலையிற் போகட்டுக்கொள்ளுதலுமாம் முகத்தில் உததமவிலககணமாகிய செம்புள்ளிகளையுடைமையும ஒன்று. அரககாகுச செய்ய தலை - செம்பட்ட மயிருடைமையால. கரியமெய்யும், குன்றினுயாசசியும - இருபாற்கு மொக்கும. உள்ளுறக்களிததல் - யானைக்கு மதமயக்கததால்; அரககாகு மதுபானததால். கனிதல - முதிாதல். உறுப்பு - உறுதி. ஓடை - நெற்றிப்பட்டம்; நெற்றிப்பட்டம், அரககாகும் ஏறகும. (ருஎ)

பி - ம்:—[1]களிதத. [2]தொடரும். [3]எயிறறு. [4]குளித்த.

ருஅ.—அரக்கியரது நடனச்சிறப்பைக் கொண்டாடுதல்.

வள்ளிநுண் மருங்கு [1]லென்ன வானவர் மகளி [2]ருள்ளந்
தள்ளுறப் பாணி தள்ளா நடம்புரி தடங்கண் மாதர்
[3]வெள்ளிவெண் முறுவ [4]றோன்ற மடந்தையர் வெள்கு கின்றார்
[5]கள்ளிசை [6]யரக்கா மாதர் களியிடு குரவை காண்பார்.

(இ - ள்.) வானவர் மகளிர் - தேவமாதர்கள், வள்ளி நுண் மருங்குல் என்ன - பூங்கொடிபோன்று நுணணிய இடையையொப்ப, உள்ளம் - தம் மனம், தள்ளுற - சோாவடையும்படி, பாணி தள்ளா நடம புரி - தாளக்கிரமந் தவறாத நாட்டியததைச செய்கின்ற, தட கண மாதர் - பெரிய கணகளை யுடைய இராக்கத மகளிாகளது, வெள்ளி வெள் முறுவல - வெள்ளிபோல வெணணிறமாகவுளள புன்சிரிப்பு, தோன்ற - வெளிப்பட,—மடந்தையா - அத் தேவமாதாகள், வெள்குகின்றா - (முன்நிற்றறகு) வெட்கப்படுகின்றவர் களாய,—கள் இசைஅரககா மாதா களி இடு குரவை காணபா - கள்ளைக் குடிதத இராக்கதமாதாகள் அக்களிபபினாலாடுங்குரவைக்கூததை(ச் சென்று) காண்பாாகள்; (எ - று)

ஆடல்பாடலாதி விநோதங்களில தேவமாதாகள்மிகச்சிறந்தவரென்பது, பிரசிததம்; அததெய்வமகளிர் இங்கு அரக்காக்கு ஊழியஞ்செய்கின்ற பொழுது வேலையொழிந்த வேளைகளில் அரககியரது நாத்தனததைக கணடு மகிழ்பவராவா: நாட்டிய சாஸதிர விதிமுறைதவறாது தாளவடைவொததது அவ்வரககியராடும் நாட்டியமானது, அததேவமாதா தமக்கு இவ்வகை நாட்டியஞ் செய்யத் தெரியவிலலையே யென்பது குறிததது மனஞ்சோரும்படி அதிவிசிதததிரமாயிருககும்; அதனை அத தேவமாதாகள வியந்து பாததுககொண்டிருககின்றபொழுது, அவ்விராகததமகளிா நாட்டியமுறைமையிற்செய்த புன்சிரிப்பைக் கணணுற்று, அதனைத தங்களைப பரிகசிததுச சிரிததததாகககருதி அங்கு நிறக வெள்கி வேறிடததில் அரக்கியா கட்குடித்துக களித்து ஆடுங குரவைகூததைக காணபாாகள் எனக கருத்துவிரிதது உரைததுக்கொள்க. அவாகள கட்குடிதது மயங்கியாடுங்கூதது அததுணையாக விதிமுறைககு ஒத

திராதாதலின் அதனை நாணுதலின்றிக் காணலாமென்பது, அத தேவமாதர்களுட் கோளென்க. அரகா மாதா - அரக்கரும் அரகியரும என்னவுமாம; உம்மைத தொகை. 'மடந்தையா' என்றது, சுட்டுமாதிரமாய் நின்றது.

வள்ளி - வல்லீயென்ற வடசொல்லின் விகாரம். பாணி - கைகொணடு ஒததறுதது இடப்படுந் தாளத்துக்கு இலகணை. இனி, 'பாணிதள்ளா'என்பதற்கு - பாட்டுககு ஏற்ற என்ற பொருளும் அமையும். குரவை - கைகோதாடுவ கூதது: கள் இசை அரக்கா மாதா - தேன்போலினிய சொற்களையுடைய இராக்கதமகளிா, களி இடு - கட்குடிதத களிப்பினாற் செய்கின்ற, குரவை என்று பதவுரை கூறவும்படும. இசை - சஙகீதமுமாம். பி - ம்:— [1]அன்ன. [2]மருளின. [3]தெள்ளிய. [4]தோன்றுநகையாதாம. [5]களளிடை, கள்ளுடை. [6]அரக்கிமாரகள. (ரூஅ)

ரூகூ.—செல்வமிததியைக் கொண்டாடுதல்.

ஒறுத்தலோ நிற்க [1]மறறெம் முயர்படைக் [2]கொருங்கிவ வூர்வந்
திறுத்தலு மெளிதா மற்றும யாவர்க்கு மியக்க முண்டே
கறுத்தவா ளரக்கி மாரு மரக்கருங் கழித்து வீசி
வெறுத்தபூண் வெறுக்கை யாலே தூருநிவ வீதி யெல்லாம்.

(இ - ள்.) ஒறுத்தலோ நிற்க - (யாம இநநகரத்தை)அழித்தல் இருக்கட்டும்; எம் உயா படைககு - எமது சிறந்த (வாநர) சேனைக்கு, ஒருஙகு இ ஊர் வந்து இறுத்தலும் எளிது ஆம் - ஒருசேர இந்த ஊரகுவந்து சேர்தலும் எளியதாகலாம்; மற்றும்-அஙஙனம வந்து சோந்தாலும, யாவர்க்கும் இயக்கம் உணடே - அவ் வாநராகட்கெல்லாம இவ்வூரில அடிவைத்துச் செல்லுதல் உணடாகுமோ? [உண்டாகா தென்றபடி]; (ஏனெனில்),—கறுதத வாள் அரக்கிமாரும் அரககரும் கழிதது வீசி வெறுதத பூண வெறுக்கையாலே - கருநிறமுள்ள கொடிய இராக்கதிகளும இராககதாகளும கழற்றியெறிந்து வேணடாவென்று வெறுத்துவிட்ட ஆபரணஙகளின் மிகுதியால், இ வீதி எல்லாம் தூரும் - இநநகரதது வீதிகளெல்லாம் நிறைந்துகிடககின்றன; (எ - று.)—மற்று-வினைமாற்று; அவ்வொறுத்தலை யல்லாமல் என்க.

மிக்க செல்வததவரான இநநகரதது அரக்கியரும் அரககரும் புதிய ஆபரணங்களையணியும்போது முன்பு தாம அணிநதிருநத பழைய ஆபரணஙகளைக் கழற்றி இனி இவைவேணடாவென்று வெறுததது வீதியி லெறிகின்றனர்; அவவூரில் அனைவரும் பெருஞ்செல்வராதலால அஙஙனம் பிறர் கழித்துத தெருவிலெறிந்தவற்றை எவரும விரும்பியெடுததுகொள்வாரில்லை. ஆகவே, அவ்வணிகலஙகள் அஙகஙகுககிடந்து நடப்பவாகாலி லுறுததுதலால, அத தெருககளில் நடத்தல் எவாக்கும அரிதாகின்றதென்க இது - செல்வ மிகுதியைச சொலலுதலால, வீறுகோளணி. நீராடுதல, ஊடுதல் கூடுதல, பாரமெனக கருதுதல் இசசமயஙகளில் அணிகலஙகளைக கழற்றி யெறிகின்றனரென்றலுமுணடு. 'ஒறுத்தலோநிற்க' என்றது - இந்நகரததை நாம அழிப்

பதைக் குறித்துப் பின்பு ஆலோசித்துகொள்ளலாம்; இந்நகரில் நம்மவர் அடியிடுதலரிதென்கிற விஷயம இப்பொழுது சிந்திக்கத்தக்கதாகின்றது என்றபடி. 'இறுத்தலுமெளிதாம்' என்ற உம்மையால், கடல்கடந்து இங்கு வந்து சோதலினும இவ்வீதிகளில் அடியிட்டு நடத்தல் அரிதென்றவாறும். வெறுக்கை - வெறுக்கப்படுவது, என மிகுதிக்கு காரணக்குறியாம.

பி - ம் —[1]மற்றோ ருயா படைகொதுங்கி. [2]தூர்ந்தன வூரையெல்லாம் வெள்ளிடையரிதிவ்வீதி. (ங்க)

சா0 —இதுவும் அது.

வடங்களுங் குழையும் பூணு மாலையுஞ் சாந்தும் யானைக்
கடங்களுங் கலின மாவி லாழியுங் கணக்கி லாத
விடங்களு மிடங்க டோறும் யாற்றொடு [1]மெடுத்த வெல்லா
மடங்கிய தென்னி லென்னே யழியி னாழ்ந்த துண்டோ.

(இ - ள்.) இடங்களும - (இந்நகரத்து) வீதியிடங்களிலெல்லாம்,—வடங்களும - (கீழ்க்கூறியபடி அரக்கியாகளும அரக்கர்களும் கழற்றியெறிந்த) பொன் மணிகளினாலாகிய ஆரங்களும, குழையும் - காதணிகளும், பூணும் - (மற்றை) ஆபரணங்களும், மாலையும - பூமாலைகளும், சாந்தும - (அவாகள்தம் உடம்பினின்று வழிதெறிந்த) சந்தனக்குழம்பும், யானை கடங்களும - யானைகளின் கன்னங்களினின்று பெருகுகின்ற மதநீாகளும், கலினம் மா விலாழியும் - கடிவாளம்பூண்ட குதிரைகளின் வாயினின்று வழிகின்ற நுரையும், கணக்கு இலாத - எலலையில்லாம லுள்ளன; இடங்கள் தோறும் யாற்றொடும் எடுத்த எல்லாம - அவ்விடங்களெலலாவற்றிலும உண்டான நதிகளினால் எடுத்துக் கொண்டுபோகப்பட்ட அப்பொருளகளெல்லாம, அடங்கியது - (தன்னிடததே) அடங்கப்பெற்றது (கடல்), என்னில - என்றால், என்னே ஆழியின் ஆழ்ந்தது உண்டோ - என்னே! கடல்போல ஆழ்ந்தஇடம் (வேறு) உணடோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

யானைகளின் மதநீரும் குதிரைகளின் வாய்நுரையும் விரவி வெள்ளமாகி ஆறுபட்டு ஆரம் முதலியவற்றை அடித்துக்கொண்டு சென்று கடலிற் சேர்கின்றதெனக. "தாறுமாயதறுகட்குன்றந் தடமதவருவிதாழ்ப்ப, ஆறுமாய்க கலினமாவிலாழியாலழிந்தோராறாய" என்று பாலகாண்டத்து மிதிலாபுரி வருணனையிற் கூறியது காணக இங்ஙனம கொண்டு செலுததப்பட்ட மிகப் பலவாகியபொருள்களனைததும தன்னிடததிலடங்கப்பெற்றதனாற் கடல்போலாழ்ந்தது வேறிலலையென்று கடலின் ஆழமுடைமை கூறும்முகததால், வடம முதலிய இலங்கைநகரத்துப் பொருள்களின மிகுதி கூறியவாறும். இவ்வாக குப்பைகளெல்லாம கொட்டும பெரும்பள்ளம் கடலெனக. என்னே என்றது, வியபபினால் ஓ - எதிாமறை. கடம - வடசொல்: யானைக்கன்னம்; அதனினின்று பெருகும் மதநீாக்கு இடவாகுபெயர். கலினமா - கடிவாளம பூண்ட விலங்கு: எனவே, குதிரையாயிற்று. எல்லாம் அடங்கியது ஆழி -

இடத்து நிகழ்பொருளின் தொழில் இடததின்மேல நின்றது.

பி - ம்.—[1]யாறெனவடுத்த. (சா0)

சக.—சேனை மிதுதியைக் கோண்டாடுதல்.

[1]விற்படை பெரிதென் கேனோ வேற்படை பெரிதென்கேனோ
மற்படை யுடைத்தென் கேனோ வாட்படை வலிதென் கேனோ
கற்பணந் தண்டு பிண்டி பாலமென் றினைய காந்து
[2]நற்படை மிகுமென் கேனோ நாயகற் குரைக்கு நாளில்.

(இ - ள்) (யான்),—நாயகற்கு உரைக்கும் நாளில் - (எல்லாப்பொருள் கட்கும்) இறைவனான ஸ்ரீராமபிரானிடம சென்று (இந்நகரத்தின் சேனை பலததை) எடுததுச் சொல்லுமபொழுது, வில படை பெரிது என்கேனோ- வில்வீராகளதுசேனை பெரியதெனறு சொல்வேனோ? வேல் படை பெரிது என்கேனோ - வேலவீராகளது சேனை அதிகமெனறு சொல்வேனோ? மல் படை உடைத்து என்கேனோ-மற்போரிலவல்ல வீராகளது சேனை மிகுதியர் யுள்ளதென்று சொல்வேனோ? வாள படை வலிது என்கேனோ - வாள்வீராக ளது சேனை மிகுதியாயுள்ளதென்று சொலவேனோ? கற்பணம் தணடு பிணடி பாலம் என்று இனைய காநதும் நல்படை மிகும என்கேனோ-கப்ப ணம்சதை பிண்டி பாலம் என்று இததன்மையனவான ஆயுதஙகள் விளஙகப் பெற்ற சிறந்த சேனை மிகுதியுடையதென்று சொல்வேனோ? (எ - று.)

இந்நகரில் ஒவ்வொருவகைச சேனையும மிகவும் அதிகமாயுள்ளதனால், அவற்றில் இன்னதுபெரிதென்று அறிந்து சொலலுதல் இயலாது என்ப தாம். விற்படை - வில்லைக்கொண்டு போரசெய்தலில் தோந்து அதனை யேநதியுள்ளவர்களான வீரர்களின் தொகுதி; பிறவும் இஙஙனமே காணக. மல் - ஆயுதமெடாமல் உடல்வலிமைகொணடு கை கால் முதலிய உறுப்புகக ளால் தாககிச செய்யும் போர். கற்பணமெனினும், கப்பணமெனினும ஒக் கும். அது, இருமபால் ஆனைநெருஞ்சிமுள்ளாகப் பண்ணிய ஆயுதம். தணடு- தண்டமெனற வடசொல்லின் விகாரம். பிணடிபாலமென்பது ஓர் எறி ஆயு தம; வடசொல். பி - ம்:—[1]விற்படை பெரிதென்கோயான் வேற்படை மிகு மென்கோயான், மறபடையுடைததென்கோயான் வாட்படைவலிதென்கோ யான் [2]நறபடைபெறிதென்கேனோ நற்படையுடைததென்கோயான். (சக)

சஉ. அநுமான் உடம்பைச்சுருக்கிக்கொள்ளுதலும், சூரியன்அஸ்தமித்தலும்.

என்றன னிலங்கை நோக்கி யினையன பலவு மெண்ணி
[1]நின்றவா ளரக்கர் வந்து நேரினு நேர்வ ரென்னாத்
தன்றகை [2]யனைய மேனி சுருக்கி[3]யச் சரளச் சாரற்
குன்றிடை யிருந்தான் வெய்யோன் [4]குடகடல் குளிப்பதானான்.

(இ - ள்.) (அநுமான்),—இலஙகை நோக்கி என்றனன இனையன பல வும் எண்ணி - இலஙகைநகரததைப் பார்தது என்று இததன்மையனவான பலவற்றையும் நினைத்து,—நின்ற வாள் அரக்கர் வந்து நேரினும் நேர்வர்

என்னு - (இவ்வூரில்) நிலைபெற்றுள்ள கொடிய இராகததாகள் (யான்வந்திருத தலையறிந்து) வந்து (என்னை) எதிர்த்தாலும எதிர்ப்பார்கள்' என்று நினைதது, தன் தகை அனைய மேனி சுருக்கி - தனது பெரிய அவ்வுடமபைச் சுருங்கச் செய்துகொண்டு, அ சரளம் சாரல் குன்றிடை இருந்தான் - அழகிய சாரல்களையுடைய அந்தப் பவழமலையிலே இருந்தனன்; (அசசமயத்தில்), வெய்யோன்-- சூரியன், குடகடல் குளிபபது ஆனான் - மேல்கடலில மூழ்கி மறைபவனானான் [அஸ்தமிததா னென்றபடி]; (எ - று.)

அநுமான் தனதுபெருவடிவததைசசுருககிககொள்ளுதல்சூரியன் தனது கிரணங்களைச் சுருக்கிகொணடு அஸதமித்தல் போலு மென்ற உவமை இங்கு தொனிககின்ற தென்னலாம். 'தன்தகை அனைய மேனி' என்பதற்கு - தனது பெருமைக்கு ஏற்பக கொணட பெருவடிவமென்று உரைகூறலுமாம். பி - ம்:—[1]நினறனன் [2]அரிய. [3]நற்சோலைச. [4]குரை. (சஉ)

வேறு

சஙு இருள் செறிதல்.

ஏய்வினை யிறுதியிற செல்வ மெய்திநு
ஞய்வினை மனத்திலா னறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலா [1]னொருவன் மெய்யிலான்
றீவினை யெனவிருள் [2]செறிந்த தெங்குமே.

(இ - ள்.) ஏய் வினை இறுதியின் செல்வம எய்திஞன் - தன்மனம் போனபடிசெய்த கொடுஞசெயலினால் (பிறாககு) அழிவை யுண்டாக்கி அதனாற் செல்வததையடைந்தவனும, ஆய்வினை மனத்து இலான் - (இனனது நல்லது இன்னது தீயது என்று) ஆராயதலை மனததிற்கொள்ளாதவனும், அறிஞர் சொல்கொளான் - (நலலவற்றையும தீயவற்றையும) பகுத்தறியும் விவேகமுடையவரகள் சொல்லுஞ் சொற்களை ஆதரததோடுகேட்டு உட்கொண்டு அவற்றின்படி நடவாதவனும், வீவினை நினைககிலான் - (தனக்கு வரும) கேட்டை யுணர்தலும் அதனைககுறிததுச சிந்தித்தலு மில்லாதவனும, மெய் இலான் - வாய்மை பேசுதலில்லாதவனுமான, ஒருவன் - ஒருவனது, தீவினை என - பாவமசெறிந்தாறபோல, எங்கும இருள செறிந்தது - எல்லா விடத்திலும இருள் அடாந்து மிककது; (எ - று.)

பாவததைக கருநிறமுடையதென்றல் கவிமர பாதலால், அது இங்குக் கரிய இருளுககு உவமை கூறப்பட்டது; தற்குறிப்பேற்றவணி. 'ஒருவன்' என்றது, இராவணனை யென்னலாம். ஏய வினை - தன்மனத்துக்கு இயைந்த வினை; கள்ளம, வஞசகம், போர முதலியன. இனி, முதலடிக்கு - முன்பு செய்தமைந்த நல்வினையினால் எல்லையிலலாத செல்வததை யடைந்தவனென்று பொருள் கூறவும படும். பி-ம்:—[1]ஒருவன்வெம்மையான். [2]செறிந்த திककெலாம், சிறுமை தீரவே.

இதுமுதற பததொன்பது கவிசள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாசசீரும, மற்றைமூன்றும் விளசசீரகளுமாகிய அளவடி நான்குகொணட கலிவிருத்தங்கள். (சஙு)

சச.—இதுமுதல் மூன்றுகவிகள் - இருளைப்பற்றிய வருணனை.

கரித்தமூன் றெயிலுடைக் கணிச்சி வானவ
னெரித்தலை யந்தண ரிழைத்த யானையை
யுரித்தபே ருரிவை[1]யா லுலகுக் கோருறை
புரித்தன [2]னுமெனப் பொலியும் பொற்பதே.

(இ - ள்.) கரித்த மூன்று எயில் உடை கணிச்சி வானவன் - எரிதத திரிபுரத்தை யுடையவனும மழுவென்னும ஆயுதத்தை யேந்தியவனுமான மகாதேவனாகிய சிவபிரான், அந்தணா எரிததலை இழைத்த யானையை உரிதத - (தாருகவனதது) முனிவாகள் வேள்விததீயினிடம் உணடாக்கி யனுபபிய யானையை உரிதெடுதத, போ உரிவையால் - பெரியதோலைக கொண்டு, உலகுககு ஓா உறை புரிததனன் ஆம் என - (தான்போாததுக் கொண்டது மாததிரமன்றி) உலகமுழுவதுககும ஓர் உறையைச செயதனன போலுமென்று ஒப்புமைகூறுமபடி, பொலியும-(உலகமுழுவதையும்) போர்த துள்ள, பொற்பது - மிகுதியை யுடையது, (அவ்விருள்); (எ - று.)—எழு வாய், வருவிதது முடிககப்பட்டது.

தன்மைத்தற்குறிப்பேற்றவணி. கருநிறமிகுதிபற்றிய கற்பனை இது. எயில் - மதில்; பொன்மதில், வெள்ளிமதில், இரும்புமதில் என்பவற்றை யுடைய திரிபுரததைக் குறிததது; இலக்கணை. கணிசசி - சூலாயுதமுமாம். உரிகக்பபடுவது, உரிவை. புரிததனன்=புரிநதனன்: வலிததல். மூனறுமடி-முற்றுமோனை, பி - ம்:—[1]போல். [2]நான்முனென்னும். (சச)

சரு. அணங்கர வரசர்கோ னளவி லாண்டெலாம்
பணங்களின் றலைதொறு முயிர்த்த பாய்விட
முணங்கலி லுலகெலா முறையி னுண்டுவந்
திணங்கெரி புகையொடு [1]மெழுந்த தென்னவே.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) அணஙகு அரவு அரசா கோன் - வருததததைச செயகின்ற நாகராஜாகட்கு அரசனாகிய ஆதிசேஷன், அளவு இல் ஆண்டு எலாம - அள வில்லாத [மிகப்பலவாய் இதுவரைகழிந்த] வருஷசாலஙகளெலலாம், பணங களின் தலை தொறும உயிாதத - படஙகளையுடைய ஆயிரம் வாய்களினின றும் சொரிநத, பாய விடம் - பரவுந்தன்மையுள்ள விஷமானது, உணஙகல் இல் உலகு எலாம முறையின் உண்டு வந்து - குறைவில்லாத உலகமுழு வதையும் முறையே தனககு உள்ளாக்கிககொணடுவந்து, இணஙகு எரி புகையொடும எழுந்தது என்ன - தன்னோடு இயைபுடைய நெருப்புடனும புகையுடனும் எழுந்து பரவியதுபோலவும,—(எ - று.)—'அவ்வழி அவ்விருள் பரநத' என மேல சஎ - ஆநகவியோடு தொடரும.

தற்குறிப்பேற்றவணி. மிக்க கருநிறமும கொடுமையும்பற்றி, இருளுக்கு விஷம் ஒப்புமை கூறப்பட்டது. நிசாசராகளாகிய இராக்கதர் இருளில் ஊக்

கத்தோடு சஞ்சரிதது மற்றைப் பிராணிகட்குத தீங்குசெய்தல்பற்றி. இருள் மிகக் கொடிதாகின்றது மிகுதியாய்ததிரணட இருட்கு உவமையாக்குதற் பொருட்டு, சாப்பராஜனான ஆதிசேஷன் தனது ஆயிரம் முகங்களினின்றி நெடுங்காலமாகசசொரிந்த விஷததை எடுத்துக்கூறினார். அரவுஅரசர்கோன்- சர்ப்பங்களின் அரசர்க்கு அரசன்; நாகலோக சக்கரவர்ததியென்க. 'அரவரசா' என்றது, வாசுகி முதலிய அஷ்டமகா நாகங்களை. 'அரவரசாகோன்' என்பதற்கு - அஷ்டமகாநாகங்களும் அவாகட்குத தலைவனான ஆதிசேஷனு மென்று உரைத்தலு மொன்று. 'விஷாக்கினி' என்னும் வழக்குப்பற்றி எரியைககூறி, அதற்கு அங்கமாகிய புகையையும் உடன்கூறினார். உப மேயமாகிய இருளோடு இயைபுடைய செவ்வானததைககருதி,உபமானத்தில் இணங்கெரி அமைககப்பட்டதென்க. இருள் உலகததைக கவிந்துகொண் டமைபற்றி உபமானததில் 'உணங்கலிலுலகெலாம் முறையினுண்டுவந்து' எனப்பட்டது. பி - ம்:—[1]மெழுகிற்றென்னவே. (சரு)

சகூ. வண்மை[1]நீங் காநெடு மரபின் [2]வந்தவள்
பெண்மைநீங் காதகற் புடைய பேதையைத்
திண்மைநீங் காதவன் சிறைவைத் தா[3]னெனும்
வெண்மைநீங் கியபுகழ் விரிந்த தென்னவே.

(இ - ள்.) வண்மை நீங்கான் நெடு மரபின் வந்தவன் - (வேண்டுவாாக்கு வேண்டுவனவற்றை யளிக்கும்) ஔதாரியகுணம் நீங்காதவனான ஜநகமகா ராஜனது சிறந்த குலத்தில் தோன்றியவளான, பெண்மை நீங்காத கற்பு உடைய பேதையை - மகளிர்க்குஉரிய நற்குணங்கள் நீங்காதவளும் பதி விரதா தருமமுடையவளுமான பேதைமைக் குணமுள்ள சீதாபிராட்டியை, திண்மை நீங்காதவன் சிறை வைத்தான்-வலிமைநீங்காதவனான இராவணன் காவலில் வைத்தான், எனும் - என்கிற, வெண்மை நீங்கிய புகழ் - வெண் ணிற மில்லாத கீர்ததி [கருநிறமுள்ள அபகீரதி]. விரிந்தது என்னவே - உலகமுழுவதும் பரவியது போலவும,—(எ - று.)—'அவ்வழி அவ்விருள் பரந்த' என, அடுதத கவியோடு தொடரும்.

புகழை வெண்ணிற முடையதென்றும், பழிப்பைக் கருநிறமுடைய தென்றும கூறுதல் கவிமர பாதலால். சீதையைக கவர்ந்துவந்து சிறைவைத் தவனான இராவணனது பழி காரிருளுக்கு உவமைகூறப்பட்டது; தற்குறிப் பேற்றவணி. பழியும் அபகீரதி என்று கூறப்படுதலால், அதனை 'வெண்மை நீங்கிய புகழ்' என்றனா; இது, பிறகுறிப்பின்பாறபடும். கற்புநிலையுடைய பிறன்மனைவியைக் காதலிதது வலியககவாநது தேசாந்தரத்திற் கொணாநது சிறைவைததல் பெரும பழிபபுக்கிடமாத லுணாக.

பெண்மை - மகடூஉகுணம் நாணு நாணம, மடம், அசசம், பயிரப்பு என்பன (நாணம் - மகளிாக்கு இயல்பாய்ப் பிறரைககாணி வெட்கமடையும் ஓா தன்மை. மடம் - வேறொன்றை யறியாமை; குரவருணாததக கொணடு.

கொண்டது விடாமை; அறிந்தும அறியாதுபோலிருக்குந் தன்மையும், கபடமின்மையுமாம். அசசம - பிறரைக்கண்டு அஞ்சுதல்; பெண்தன்மையாற் புதியபொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்பபு - வேறோரினபதத்தை அருவருத்தல் பயிலாதபொருளின்கண் வெறுப்புற்றுநிற்கும நிலைமை; தன் கணவனலலாதவரது ஆடைமுதலியன தன்மேற்படுதற்கும அருவருத்தல்.) கற்பாவது - தன் கணவனைத தெய்வமென்று உணாவதோர் மேற்கோள்; பதிவிரதாதருமம். கொண்டானிற சிறந்த தெய்வமிலலை யென்றும், அவனுககு இன்னவாறு நீ குற்றேவல் செயதொழுகு என்றும, தாய்தநதையராலும் பிறராலும் கற்பிககபபட்டு இவ்வொழுக்கம் உண்டாகி நிலைபெறுதலால், கற்பு எனப் பெயா பெற்றது. "பேதைமையென்பது மாதர்ககு அணிகலம," "நுணணறிவுடையோர நூலொடுபழகினும, பெணணறிவென்பது பெரும் பேதைமைததே" என்பவாதலால், சீதை 'பேதை' எனப்பட்டாள். மாயமானைப் பிடித்துததருமாறு வறபுறுததிக கணவனை வேணடுதல் முதலியவறறாற் சீதையினிடத்துப் பேதைமை ஆநகாநகு விளநகுதல் காணக. திணமை - தேகபலம், மநோபலம, ஆயுதபலம, சேநாபலம் முதலியன.
பி - ம்:—[1]நீநகா. [2]வநதவன். [3]என. (சசு)

சஎ.—நிசாசரர்களாகிய அரக்கர்கள்

இரவு தோடங்கியவுடன் எங்குந்திரிதல்.

அவ்வழி யவ்விருள் பரந்த வாயிடை
யெவவழி மருங்கினு மரகக ரேகினார்
செவ்வழி மந்திரத் திசைய [1]ராயினும்
வெவ்வழி யிருடர மிதித்து மீச்செல்வார்.

(இ - ள்.) அ வழி அ இருள் பரந்த அ இடை - அவ்விடததில் அத்தன்மைததான இருள் பரவிய அசசமயததில்,—அரககா - இராக்கதாகள், செவ்வழி மந்திரம திசையா ஆயினும - நேராக(க் குருசிஷயகரமததில் உபதேச பரம்பரையாய்ப்) பெற்றுள்ள மந்திரத்தின்பலத்தால் (கருதியமாததிரத்துத) திசைக்கு செல்லவல்லராயினும், வெவ் வழி இருள் தர மிதித்து மீ செல்வார் - (தாம்செல்லுஉ) கொடியவழியிலே இருள் செறிந்திருக்க அதனை மிதித்து மேற்செல்பவாகளாய், எ வழி மருநகினும் ஏகினா - எல்லாப் பககத்து வழிகளிலும சென்றாகள்; (எ - று.)

இராக்கதர் நிசாசர ராதலால், செல்லககருது மிடத்துத் தாம்தேர்ந்த மநதிரசிததியால், சேரவல்ல ஆற்றல் தநகட்கு அமைந்திருககவும், இருள் பரநத இரவிற் பலவிடநகட்கும் எநகுஞ செறிந்து காணபபட்ட இருளின் மீது கால்வைத்துப் படியேறுவாரபோலேறி மேறசெல்வாராயின ரெனறார. இருள் மிகத்திண்ணிய பரிசிககப்படுபொருள் போற செறிந்துள்ள இயல்பு விளநக, இககற்பனை கூறப்பட்டது; இருளின் கருமை கொடுமைகளினும தமது கருமைகொடுமைகள் மிகநிருததலால அதனைக் காற்கடைக்கொணடு

வென்று மேற்செல்வாரென்பது, நான்காமடியில் தோன்றும். பி - ம்:— [1]ஆகையால். (சஎ)

[இதுவும் அது.]

சஅ. இந்திரன் வளநகர்க் கேகு வா[1]ரெழிற்
சந்திர னுலகினைச் சார்கு வார்[2]சலித்
[3]தந்தக னுறையுளை யணுகு வா[4]ரயில்
வெந்தொழி லரக்கன தேவன் மேயினார்

(இ-ள்.) (அவ்விருளில் இராகததாகள்),—அயில் வெம் தொழில் அரக்கனது ஏவல் மேயினா - வேற்படைகொண்ட கொடுந்தொழிலையுடைய இராக்கதனான இராவணனது கட்டளையிற்பொருந்தியவர்களாய்,—இந்திரன் வளம் நகர்க்கு ஏகுவார் - செல்வவளம்நிறைந்த தேவேந்திரனது அமராவதி நகரத்தைகுறித்துச செல்பவர்களும், எழில் சந்திரன் உலகினை சாகுவார் - அழகிய சந்திரனது உலகத்தைச சோபவர்களும், சலித்து அந்தகன் உறையுளை அணுகுவார் - கோபங்கொண்டு யமனுடைய இருப்பிடததைச சென்று சமீபிப்பவர்களு மாயினர்; (எ - று.)

ஒவ்வோரிடததுககுஞ் சிற்சிலராகச சென்றன ரென்க. இசசெய்யுளை 'எவ்வழிமருங்கினு மரககரேகினா' என்றதன் விவரணமெனக கொள்ளலாம். யமனது நகரம், 'ஸமயமிநீ' எனறு பெயரெறும. அந்தம் - அழிவு: அதனை (ப் பிராணிகட்கு)ச செய்பவன், அந்தகன். வடசொல். பி - ம்:—[1]இகல். [2]கலித்து. [3]அந்தணன். [4]அழல், இயல். (சஅ)

சகூ —தேவசாதிமாதர்கள் இராவணனுக்குத் தூற்றேவல்செய்தற்பொருட்டு விரைந்து வருதல்.

பொன்னகர் மடந்தையர் விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதைய ரியக்கர் பாவையர்
[1]முன்னின பணிமுறை [2]மாற முந்துவார்
மின்னின மிடைந்தென விசும்பின் மீச்செல்வார்.

(இ - ள்.) பொன் நகர் மடந்தையர் - பொன்மயமான தேவலோகததிலுள்ள தேவமாதாகளும், விஞ்சை பூவையா - வித்தியாதரமகளிரும், பன்னக வனிதையர் - நாககன்னிகைகளும், இயக்கா பாவையர் - யக்ஷஸ்திரீகளும்,—முன்னின பணி முறைமாற-(அரககர்கள்) நினைக்கின்ற செயல்களைக் (குறிப்பாலுணாந்து) கிரமமாகச்செய்தற்பொருட்டு, முந்துவார் - (ஒருவரினும் ஒருவா) முற்பட்டு விரைந்து, மின் இனம மிடைந்து என விசும்பின் மீ செல்வார் - மின்னல்களின்கூட்டம் நெருங்கினாற்போல ஆகாய மார்க்கமாய் (அவ்விரவிற் செல்வாகள்; (எ - று.)

மெல்லியதாய்ததோன்றும் வடிவுக்கும், மிக்க தேககாந்திக்கும், விசும்பிற் செல்லுதற்கும் மின்னலுவமை கூறப்பட்டது. 'பநநகவநிதா' என்ற வட

மொழித்தொடர் விகாரப்பட்டது. பங்கம என்பது, பதநகம் என்று பிரிந்து, கால்களால் நடவாதது என்று காரணப்பொருள்பெறும். இவரும், பதினெட்டுத்தேவகணங்களி லொருவகைய ராதலால், விசும்பிற் செல்வர். இயக்கர் - யக்ஷரென்ற வடசொல்லின சிதைவு. பூவை - கிளி, நாகணவாயப் பறவை; அதுகொஞ்சுவதுபோல இன்சொற்பேசுபவர், பூவையர். பாவை - சித்திரப்பதுமை; அதுபோ லழகியவர், பாவையர். உவமையணி. பி - ம்:— [1]முன்னினர். [2]மாறு, மாறி. (சகூ)

ரு௦.—தேவகணத்து ஆடவர்கள் அங்ஙனம் வருதல்

தேவரு மவுணருஞ் செங்க ணாகரு
மேவரு மியக்கரும் விஞ்சை வேந்தரு
[1]மேவரும் விசும்பிரு ளிரிய வீண்டினர்
தாவரும் பணிமுறை தழுவுந் தன்மையார்.

(இ - ள்.) தேவரும - தேவர்களும், அவுணரும் - அசுரர்களும், செம் கணநாகரும் - சிறந்தகணகளையுடைய நாகசாதியாரும, மேவரும இயக்கரும்- விரும்பத்தகக [அழகையுடைய] யக்ஷர்களும், விஞ்சை வேந்தரும்-விதியாத ராகளும், ஏவரும - மற்றும் தேவகணத்தவ ரனைவரும்,—தா அரும பணி முறை தழுவும் தன்மையார் - கெடுதலில்லாத குற்றேவலகளை (அரசகர்களிடு கின்ற கட்டளை) முறைபபடி செய்யுந் தன்மையுடையவர்களாய், இருள் இரிய விசும்பு ஈண்டினர் - (தமது தேககாந்தியால) இருளழியும்படி ஆகாய மார்க்கமாக (இரவில வந்து) திரளலானார்கள்; (எ - று.)

அரககாகள் இரவுபகலாக பகல் இரவாக மாறுயொழுகு மியல்பினராத லால், மற்றையோர் பகலின்தொடக்கததில தொழில்முறை கொள்ளுதல் போல அவர்கள் இரவின்தொடக்கததில் தொழில்முறை கொள்ளுவரென்ப தனை உணர்க. கந்தருவர், கருடா, கிநரா, கிம்புருஷர் முதலிய மற்றைத்தேவ கணத்தவா, 'ஏவரும' என்றதில் அடகுகுவா. "உருவமேலெழுதலாகா வொளியுமிழ்ந்திலங்குமேனி, பரிதியினியன்றதொக்கும பன்மலர்ககணணி வாடா" என்றபடி தேவாகள் மேனியொளி கொணடவராதலால், 'விசும் பிருளிரிய வீண்டினர்' என்றார். பி - ம்:—[1]யாவரும. (ரு௦)

ருக.—[அவர்களின் விரைவு.]

[1]சித்திர பததியிற் றேவர் சென்றன
ரித்துணை [2]தாழ்ந்தன முனியு மென்றுத
முததிரு ரங்களு [3]முடியின் மாலையு
முததரீ யங்களுஞ் [4]சரிய வோடுவார்.

(இ - ள்.) சித்திரம பததியின் - சிதிரப்பாவைகளின் வரிசைபோல [நிலைகுலையாமல் அழகுஅமைய], சென்றனர் - தமது இயல்பின்படி மந்ததி யாய் வந்தவர்களான, தேவர் - தேவர்கள், (சூரியன் அஸ்தமித்துச சிறிது

பொழுது ஆய்விட்டதை யுணர்ந்து), 'இத துணை தாழ்ததனம - இவ்வளவு தாமதித்துவிட்டோமே; முனியும் - (இராவணன்) கோபங்கொள்வனே', என்று - என்றுஎணணி,—தம - தங்களுடைய, முதிதின ஆரங்களும்-முத்து மாலைகளும், முடியின் மாலையும - மயிற்முடியிற்சூடிய மலர்மாலைகளும, உதத ரீயங்களும-மேலாடைகளும,சரிய - கீழ்விழும்படி, ஓடுவார்-ஓடுபவராஞர்கள்.

முக்தா என்பது-(சிப்பியினின்று) விடுபட்டது எனக்காரணப்பொருள் பெறும். பீ-ம்:—[1]சித்திரப்பத்தியின். [2]தாழ்ந்ததனம். [3]முடியும். [4]இரிய. (ருக)

ருஉ.—இதுமுதல் மூன்று கவிகள் சந்திரோதயவருணனை.

தீண்டருந் தீவினை தீக்கத் தீநதுபோய்
மாண்டற வுலர்ந்தது மாரு திப்பெய
ராண்டகை மாரிவந தளிக்க வாயிடை
யீண்டற முளைத்தென முளைத்த திந்துவே.

(இ - ள்.) தீண்டு அரு - கையினல் தொடுதற்குந்தகாத, தீ வினை-(இரா வணனன்முதலிய அரககர்களினலான) பாபகருமங்களாகிய கோடை, தீகக-எரிததலினல், தீநது போய் - கரிந்துபோய், மாணடு - வலியொடுங்கி, அற உலாநதது - மிகவும உலாநதுவிட்டதான, அறம் - தருமமாகிய முளை,மாரு தி பெயா ஆணதகை மாரி வந்து அளிக்க - அநுமானென்னும் பெயரையுடைய ஆணமைககுணங்களுள்ள வீரஞகிய மழை வந்து உதவிப் பாதுகாகக, (அத ஞல்), ஆயிடை ஈணடு முளைத்து என - அப்பொழுது இவ்விடததில் மீள வும் முளைததாற்போல, இந்து முளைததது - சநதிரன் உதிதது விளங்கிற்று.

உருவகவணியை அநகமாககொணடுவந்த தற்குறிப்பேற்றவணி. தரு மததை வெணணிறமுடையதென்றல, கவிமரபு; ஆதலால், சந்திரனுக்கு ஒப் புமை கூறப்பட்டது. அநுமான கடலகடநது இலங்கையிற் பிரவேசித்தது முறையே இராவணன் முதலிய அரககாகளழியத தருமம்தலையெடுததோங்கு தற்குக காரணமாதலை உணர்க. இடத்தையுணாத்துஞ்சொற்கள் ,காலத்தையு முணாததும் வழகுப்பற்றி, 'ஆயிடை' என்பதற்கு - அப்பொழுது என்று உரைககப்பட்டது. இனி, 'ஈணடரம்' என்பதை வினைத்தொகையாகக கொணடு, (அனைவரும விரும்பிச) சேரத்தக்க நல்வினையென்று பொருள் கொள்ளினுமாம; முதலடி - முற்றுமோனை. (ருஉ)

ருங. வந்தன னிராகவன் றூதன் [1]வாழ்ந்தன
னெந்தையே யிந்திர ஞமென் [2]றேமுறு
வந்தமில் கீட்டிசை யளக வாணுதற்
சுந்தரி முகமெனப பொலிந்து தோன்றிற்றே.

(இ - ள்.) 'இராகவன் தூதன் வந்தனன் - இராமபிரானது தூதஞகிய அநுமான் (இலங்கைக்கு) வந்துசேர்ந்தான்; (ஆதலால், இனி), எந்தைஇந்தி ரனே வாழ்ந்தனன் ஆம - எமது தலைவஞகிய இந்திரனே வாழ்வுபெற்றவஞ

வன்,' என்று - என்றெணணி, ஏம் உறு - மகிழ்ச்சியடைந்து, (அதனால்), அந்தம் இல் கீழ் திசை அளகம் வாள்நுதல் சுந்தரி - அழிதலில்லாத கிழக்குத் திக்காகிய கூந்தலையும் பிரகாசமான நெற்றியையுமுடைய அழகிய பெணணினது, முகம் என - முகம் (பொலிவுற்று விளங்கினாற்)போல, பொலிந்து தோன்றிற்று - (சந்திரன்) விளங்கிககாணப்பட்டது; (எ - று.)

இராமதூதனான அனுமான் சீதைசிறையிருககுமிடமாகிய இலங்கைக்கு வந்துசேர்ந்ததனால் இராவணன்முதலிய அரக்காகள விரைவி லழிய அவாகளால வருத்தமுற்றிருககிற எனது தலைவனான தேவேநதிரன் இனி வாழ்வு பெறுதல்கூடுமென்று எண்ணி அவ்விந்திரனுக்கு உரிய கிழக்குதிசையாகிய பெண மனமகிழ அம்மகிழ்ச்சியால் அவளதுமுகமண்டலம் விளக்கமுற்றாற் போலக் கிழக்குததிசையிற் சந்திரமண்டலம் விளங்கிற்று என்பதாம்; தந் தூறிப்பேற்றவணி. இநதிரன் கிழககுத்திககுப்பாலகனா யிருத்தலும், வடமொழியில் திசையைககுறிககின்ற சொற்களெல்லாம பெணபாலாதலும், திக்குக்கு உரிய தேவதை பெணணாதலும, முகததிற்கும் சந்திரனுககுமுள்ள ஒப்புமையும், இங்குக் கருதததக்கவை.

ராகவன் - ரகுவென்னும் அரசனது குலததில் உதித்தவன்; ததிதாந்த நாமம் ரகுவென்பவன் வணமை வீரம் முதலிய குணவிசேடங்களிற் சிறப்புற்றவனாதலால், இராமபிரான், அவன்மரபுபற்றிவநத பெயராற் கூறப்பட்டனன். 'வாழ்ந்தனன்' - விரைவும் தெளிவும பற்றி எதிர்காலம் இறந்த காலமாகசசொல்லப்பட்ட காலவழுவமைதி. 'எந்தையே இந்திரன்' என்றவிடத்து, பிரிநிலையேகாரம் பிரிததுககூட்டப்பட்டது. அந்தம் இல் - எல்லையற்ற வென்றுமாம். பி - ம்.—[1]வாழ்ந்தனம். [2]எழுறும், எழுற. (ருரு)

ருச கற்றைவெண் கவரிபோற் கடலின் வெண்டிரை
சுற்றுநின் றலமரப் பொலிந்து தோன்றிற்று
லிற்றதெம் பகையென வெழுந்த விந்திரன்
கொற்றவெண் குடையெனக் குளிர்வெண் டிங்களே.

(இ - ள்.) கடலின் வெள் திரை - கடலினது வெணணிறமான அலைகள், கற்றை வெள் கவரிபோல - திரட்சியான வெணசாமரங்கள்போல, சுற்றும் நின்று அலமர - சுற்றிலுமநின்று சுழன்றுவிழ,—எம்பகை இற்றதுஎன எழுந்த இந்திரன் கொற்றம் வெள்குடை என - 'எமதுபகையாகிய இராககதவருக்கம் இனி அழிந்தது'என்றுமகிழ்ச்சிகொணடு வெளியேபுறப்பட்ட இந்திரனது வெணகொற்றக் குடைபோல, குளிர் வெள் திங்கள் பொலிந்து தோன்றிற்று - குளிர்ந்த வெணணிறமான சந்திரமண்டலம் விளங்கிககாணப்பட்டது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராமதூதனாகிய அநுமான் இலங்கைக்குவந்து சேர்ந்ததனை யறிந்த தேவராஜனான இந்திரன், இனி அரககா விரைவிலழிவரென்ற நம்பிக்கையினால் உற்சாகங்கொணடு இதுவரை அடங்கியொடுங்கியிருந்ததுபோலன்றி

இப்பொழுது உல்லாசமாகத தனககுரிய கிழக்குத்திசையினின்று வெளியே புறப்பட்டனனுக, அவனது ஒற்றைவெணகொற்றக்குடை விளகுகினுற் போலச சந்திரமண்டலம் கிழககில விளகுகிறறு என்றும் அவனது வெண் சாமரைகள் சுழன்று வீசிவிளகுகினுறபோல நிலாவிற் கடலின்வெண்டிரைகள் சுழன்று வீசிவிளகுகின என்றும வருணனை கூறினுர்; தற்குறிப்பேற்ற வணி. சந்திரனது நிலாவில் மிககவெணமையான தோற்றததுடன் கடலினலை பொநகுதல், கருதத்தக்கது. கவரி - சமரீயென்ற வடசொல்லின் சிதைவு; இப்பெண்மானின்பெயா, அதன்வாலின் வெள்ளை மயிரினுலாகிய சாமரையைக் குறிததது, இருமடியாகுபெயா. (ருச)

ருரு.—இதுவும் அடுத்தகவியும் நிலவின் தோற்ற வருணனை.

தெரிநதொளிர் திங்கள்வெண் குடத்தி னுற்றிரை
முரிந்துயர் பாற்கடன் முகந்து மூரிவான
சொரிந்ததே யாமெனத் துள்ளி மீனெடும்
விரிந்தது [1]வெண்ணிலா மேலுங் கீழுமே.

(இ - ள்.) மூரி வான் - பெரிய வானமாகிய ஒருபுருஷன், தெரிந்து ஒளிர திங்கள வெள் குடததினுல - தோன்றி விளகுகுகின்ற சந்திரமண்டலமாகிய வெள்ளிககுடததைக்கொண்டு, திரை முரிநது உயா பால் கடல் முகநது - அலைகளெழுந்து மடியப்பெற்ற பாற்கடலின்பாலை மொணடெடுத்து, சொரிந்ததே ஆம் என - சொரிந்ததுவேயாகுமென்று சொல்லும்படி, வெள்நிலா - வெண்ணிறமான நிலவானது, துள்ளி மீனெடும - அந்தப்பால் துளிகளெனத்தகக விணமீன்களாகிய நகூத்திரகளுடனே, மேலும் கீழும் விரிந்தது - வானததிலும் பூமியிலும எங்கும பரவி விளங்கிற்று; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. மேலுள்ள வானமாகிய புருஷன் சந்திரமணடலமாகிய வெள்ளிக்குடத்தைககொணடு பாற்கடலின்பாலை மொணடெடுத்து மேல்நின்று சொரிய அந்தப்பால் அநகுநின்று பெருகி எநகுமவழிநதோடிப் பரவினுற்போல வெண்ணிறமான நிலா எநகும்பரந்தது எனக்கற்பனை கூறியவாறும். அப்பொழுது வெணமையாய் வானததில்விளகுகின்ற விணமீனெனப்படும நகூததிரகளை, அப்பால்சொரியும்போது சிதறிததெறிததபால் துளிகளாகக கருதுக. நிலாவில் வெண்ணிறமாய்க கடலிற்காணப்படுகிற மீன்களை அப்பாற்கடலின் மீன்களெனககருதலாமென்பதும், 'மேலுங்கீழுந் துள்ளி மீனெடும விரிந்தது' என்றதில் தோன்றும்; அப்பொழுது, துளளி மீன - துள்ளுமியல்புடைய மீனக ளென்க. நகூத்திரகளையும் அநநனஞ் சிதறி மேலெழுந்த மீன்களென்னலாம். 'முரிநதுயா' என்றதை 'உயாந்து மூரி' என விகுதிபிரிததுக் கூட்டுக. இனி, அலைகள் மடிந்து எழப்பெற்ற வெனினுமாம். முரிதல் - ஒடிதல். பி-ம்·—[1]தண்ணிலா. (ருரு)

ருசு. அருந்தவன் சுரபி[1]யே யாதி [2]வானமா"
விரிந்தபே [3]ருதயமே மடிவெண் டிங்களா

வருந்தலின் [4]முலைகதிர் வழங்கு [5]தாரையாச்
சொரிந்தபா லொத்தது நிலவின் றோற்றமே.

(இ - ள்.) ஆதி வானமே-முதன்மையான ஆகாயமே, அருந்தவன் சுரபி ஆ - அருமையான தவத்தைச் செய்துள்ளவனாகிய வசிஷ்டமகாமுனிவனது காமதேனுவாக,—விரிந்த பேர் உதயமே - (கிரணங்கள்) விரிந்த பெரியசந்திரனுதிக்கின்ற இடமே, மடி (ஆ)-(அக்காமதேனுவினது) பாலுள்ள மடியாக,—வெள் திங்கள் - வெண்ணிறமான சந்திரனே, வருந்தல் இல் முலை ஆ - வருத்தப்பட்டுக்கறக்கவேண்டாத [எளிதிற்பால்சுரக்கின்ற] (அமமடியின்கணுள்ள) முலைகளாக,—கதிர் - சந்திரகிரணங்களே, வழங்கு தாரை ஆ - சுரக்கின்ற பாலின்தாரையாக,—நிலவின் தோற்றம் - சந்திரிகையின் காட்சியானது, சொரிந்த பால் ஒத்தது - பெருகிவழிந்த பாலைப் போன்றது; (எ - று.)

இயைபுருவகவணியை அங்கமாகக் கொண்டுவந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. வெண்ணிறமும், குளிர்ச்சிதருதலும பற்றி, நிலாப பால் போலும்; "வால்வெண்ணில வுலகாரசுரகும வெண்டிங்களென்னும், பால்விண்சுரவி சுரமுதிர்மாலை,' என்ற திருவிருத்தம இங்கு நோக்கத்தக்கது. பாற்கடல் கடைந்தபோது அதனினின்று தோன்றிய காமதேனுவென்னுந் தெய்வப்பசு வசிஷ்டமுனிவரிடம் வந்து அவரது ஆட்சிக்கு உட்பட்டுநின்றதாதலால், 'அருந்தவன்சுரபி' எனப்பட்டது. மற்றைநான்கு பூதங்கட்கும் காரணமாய முந்திததோன்றியதனால், 'ஆதிவானம்' என்றார். பி - ம்:—[1]போல். [2]வான்மிசை, வானவன். [3]உதயமும்மிளிர். [4]பசுங. [5]தாரையால். ()

ருஎ.—நக்ஷத்திர வருணனை.

எண்ணுடை யனுமன்மே லிழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
வண்ணல்வா ளரக்கனை யஞ்சி யாய்கதிர்
விண்ணிடைத் [1]தங்கின போன்ற மீனெலாம்.

(இ - ள்.) மீன் எலாம-நக்ஷத்திரங்களெல்லாம்,—எண் உடை அனுமன் மேல் - யாவரும் நன்குமதிக்கத்தக்க பெருமையையுடைய அநுமான்மேல், இழிந்த - (தேவர்களாற் சொரியப்பட்டுச்) சிந்தியனவான, பூ மழை - புஷ்பவர்ஷங்கள்,—அண்ணல் வாள் அரக்கனை அஞ்சி - பெருமையையுடைய வாளாயுதத்தையேந்திய இராவணனுக்குப் பயந்து, மண்ணிடை வீழ்கில - பூமியில் விழாதனவாயும், மறித்தும் போகில - மீண்டும் மேற்செல்லமாட்டாதனவாயும், ஆய்கதிர் விண்ணிடை தங்கின - தெளிவாகவிளங்குகின்ற (சூரியன் முதலிய) சுடர்கள் சஞ்சரித்ததற்கிடமான வானத்தில் தங்கியவற்றை, போன்ற-ஒத்தன; (எ - று.)

வானத்தில் விளங்குகின்ற நக்ஷத்திரங்கள், இராமதூதனான அநுமான் மேல் தேவர்களால் மழைபோலச் சொரியப்பட்ட கற்பகமலர்கள் இராவணனிடத்து அச்சத்தால் தரையில்விழாமல் அந்தரத்தில் நின்றவற்றைப் போன்

றனவென்க; தற்குறிப்பேற்றவணி. "வானாடாகூடி - முறைமுறையின், தாதிலகு பூத்தெளிததாலொவ்வாதே தாழ்விசும்பின, மீதிலகித் தான்கிடக் கும்மீன்" என்ற பெரியதிருவாதாதியும, "தாராகணம் மண்ணளந்தவந்நாள் .....உம்பாதூவியதண்மலா வீழ், தாரா கணமுநிலலா காற்றிற்சூழ் வளந்தா ஞெக்குமே" என்ற திருவரங்கததந்தாதியும் இங்கு ஒப்புநோக்கததக்கன. தேவாகளின் சம்பந்தமான அசேதனங்களும இராவணனிடத்து அஞ்சுகின் றனவென, அவனது அதிபயங்கரமான தன்மை இங்கு வெளியாம். பற்பல நிறமுடையனவாக விளங்குகின்ற நக்ஷததிரங்கள், பற்பலநிறமுள்ள மலர்கள் போலும். பி - ம்.—[1]தொங்கின, தோற்றின. (ருஎ)

ருஅ.—மல்லிகையரும்புகள் மலர, அவற்றில் வண்டுமொய்த்தல்.

எல்லியி னிமிரிருட் குறையு மவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியுங் [1]கவவின
புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் [2]வதிந்த வண்டெலாம்.

(இ - ள்.) மல்லிகை மலாதொறும - மல்லிகைமலர்தோறும, வதிந்த - (தேனையுணணுதற்பொருட்டு) மொய்ததுவதிந்த, வணடுஎலாம் - வண்டுகள் எலாம், எல்லியின் இமிர இருள் குறையும - இராப்பொழுதிற் செறிந்த இருளின் துணடங்களும, அ இருள் கல்லிய நிலவின் வெள் முறியும் - அஃத இருளை அடியோடழிககவல்ல வெணமையான நிலாவின் துணடுகளும், புல் லிய பகைஎன - (ஒன்றை மற்றொன்று) தனக்குப்பொருந்திய பகையென்று கருதி, கவ்வின - ஒன்றையொன்று பற்றியனவாய், பொருவ - போாசெய் வனவற்றை, போன்றன - ஒத்துள்ளன; (எ - று.)

வெணமையான மலலிகையரும்புகள் மலாகிறசமயத்தில் அவற்றிலுள்ள தேனை நுகரும் நசையாற் கருவணடுகள் அம்மலாகளில் மொய்த்தனவாக, அததோற்றம, இரவில அடாகிற கரியஇருளின் துண்டுகளும் அவ்விருளைப் போக்கவல்ல வெளளியசநதிரகிரணத்துணடுகளும் தமமிற்பகைமைகொண்டு ஒன்றையொனறு கவ்வுமியல்பினவாய்ப் போாசெய்வதை யொக்கு மென்ப தாம; தற்குறிப்பேற்றவணி; எல்லியில் நிமிரஎன்றுபிரிததும் உரைக்கலாம். நிமிரதல் - நெருங்குதல், வளர்தல். பி - ம்:—[1]கள்வன. [2]வதிர்ந்த. (ருஅ)

ருகூ.—நிலா எங்கும்பரவியமை.

வீசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
வாசுற வெங்கணு நுழைந்த ளாயது
[1]காசுறு கடி[2]மதி லிலங்கைக் காவலூர்த்
தூசுறை யிட்டது போன்று தோன்றிறறே.

(இ - ள்.) வீசுறு பசுங கதிர் - வீசுகின்ற குளிாசசியான கிரணங்களை யுடையசந்திரனது, கற்றை - தொகுதியாகிய, வெள் நிலா - வெணமையான நிலா, ஆசு உற எங்கணும நுழைந்து அளாயது - விரைவாக (அநநகரின்)

எல்லாவிடத்திலும் புகுந்து கலந்திருக்கின்ற தோற்றமானது,—காசு உறுகடி மதில் இலங்கை - இரதனங்கள்பதித்த பாதுகாவலையுடைய மதில்கள் சூழ்ந்த இலங்காபுரியாகிய, காவல ஊர் - (இராவணனது) பாதுகாப்பிலுள்ள அந்நகரத்திற்கு, தூசு உறை இட்டது - வெள்ளைவஸ்திரத்தைக்கொண்டு உறையமைத்துமூடியதை, போன்று - ஒத்து, தோன்றிற்று - விளங்கியது.

வெண்ணிறமான சந்திரிகை இலங்காபுரியெங்கும் நிறைந்தது, வெள்ளை வஸ்திரத்தினால் உறைசெய்து அந்நகரம்முழுவதும மூடியதுபோ லிருந்த தென்பதர்ம; தற்குறிப்பேற்றவணி. "பொருவில்வெண்டுகில்கொடுபொதிந்த தென்னவே, பரிநெடுந்தோமிசைப் பானிலாவெழ" என்றது, இங்கு ஒரு சா ஒப்புநோக்கத்தக்கது. பி - ம்.—[1]காசறு. [2]நகரிலங்கைக்காவலன். (ருகூ)

சுஂ.—இதுவும் அது.

இகழ்வரும் பெருங்குணத் திராம னெய்ததோர்
பகழியின் செலவென வனுமன் [1]பற்றினு
லகழ்புகுந் தாண்புகுந் [2]திலங்கை யன்னவன்
புகழ்[3]புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே.

(இ - ள்.) இகழ்வு அரும் பெருங் குணத்து இராமன் எய்தது - இகழ்ச்சிக்கு இடமில்லாத சிறந்த குணங்களையுடைய இராமபிரானாற் பிரயோகிக்கப்பட்டதான, ஓர் பகழியின் - ஓர் அம்பினது, செலவு என - செல்லுகை போல, அனுமன் பற்றினால் - அனுமான் இலங்கைக்குச் சென்று சேர அந்த ஆதாரத்தைக் கொண்டு, அன்னவன் புகழ் - அந்த இராமபிரானது கீர்த்தி, அகழ் புகுந்து - (சூழ்ந்துள்ள கடலாகிய) அகழியைக் கடந்து, அரண்புகுந்து- மதிலையுங் கடந்து, இலங்கை புகுந்து - இலங்கையிற் பிரவேசித்து, உலாயது - (எங்கும) பரந்து விளங்கியதான, ஓர் பொலிவும் - ஓர் அழகையும, போன்றது - ஒத்தது, (அச்சந்திரிகையின் தோற்றம்); (எ - று.)—எழுவாய் வருவித்து முடிக்கப்பட்டது.

வெண்மையான நிலா அவ்விலங்கைமுழுவதும் பரவி விளங்கிய தோற்றமானது, இராமதூதனான அநுமான் அவ்விராமபாணம்போலத் தடையின்றி விரைவாக இலங்கையை யழிக்குமாறு அதிற்சென்றுசேர, அதுமூலமாக அவ்விராமபிரானது கீர்த்தி அந்நகரம் முழுவதும் பரவி விளங்கினாற்போன்றது என்றார்: தற்குறிப்பேற்றவணி. காப்பியங்களிலே கதாநாயகனது சிறப்புத் தோன்ற அவனது சம்பந்தமான பொருள்களைச் சிலவிடங்களில் உபமானமாக அமைத்தல் கவிமரபாதலால், நிலாவிற்கு இராமன்புகழையும், அநுமனது செல்லுகைக்கு இராமபாணஞ் செல்லுதலையும் உவமை கூறினார். இலங்கையிற் புகுதலினது அருமை தோன்ற, 'அகழ்புகுந்து அரணபுகுந்து இலங்கை புகுந்து' எனப்பட்டது. இகழ்வரும்பெருங்குணம் - ஹேயகுணமில்லாத திவ்வியகுணங்கள். பி - ம்:—[1]பற்றினன். [2]இலங்கைக்கு. [3]புரிந்து. (சுஂ)

சுக.—அநுமான் இலங்கையினுட்செல்ல முயலுதல்.

அவ்வழி யனுமனு மணுக லாம்வகை
யெவ்வழி யென்பதை யுணர்வி னெண்ணினான்
செவ்வழி [1]யொதுக்கினன் றேவ ரேத்தபோய்
வெவ்வழி [2]யரக்கனூர் மேவன் மேயினான்.

(இ - ள்.) அ வழி - அப்பொழுது, அனுமனும் - அநுமானும், அணுகல் ஆம் வகை எ வழி என்பதை உணர்வின் எணணினான் - இவ்விலங்காபுரியினுள் தான் சென்று சேரலாகும்வகை எவ்வழியினாலென்பதைக் குறித்து மனத்தில் ஆலோசித்தவனாய், செவ் வழி ஒதுக்கினன் - நேரானவழியை நிசசயித்து, தேவர் ஏத்த போய் - தேவர்கள் துதிக்க(அபபவளகிரியினின்று) புறப்பட்டுச் சென்று, வெவ் வழி அரக்கன்ஊர் மேவல் மேயினான் - கொடிய வழியிற செல்கின்ற இராக்கதனது இராசதானியான அநநகரினுட் போகத் தொடங்குபவனானான்; (எ - று.)

செவ்வழி ஒதுக்குதல் - யாவருஞ்செல்லும் அந்நகர்க் கோபுரவாயிலின் வழியாய உட்செல்வதாக நிசசயித்தல் ஒதுக்குதல் - தீர்த்தல். அநுமான் செலவது முறையே அரக்கரழியத் தேவர்கள் வாழ்தற்கு ஏதுவாவதனால், அதனைக்கருதித தேவர்கள் அவனைத துதிப்பவராயினர். 'செவ்வழி ஒதுக்கினன்' என்பதற்கு - நேரான வழியிற்செல்லுதலை விலக்கினவனா யென்று உரைகூறுதல் பொருந்தாது; அநுமானுக்கு அக்கருததுப் பின்னருண்டாவதாக மேல் எச - ஆஞ செய்யுளால் விளங்குதல் காணக இனி, 'செவ்வழி யொழுக்கினன்' என்ற பாடம் சிறக்கும்; சன்மார்க்க மெனப்படுகிற நல்லொழுக்க வழியில் நடக்குமியலபினனான அநுமான தீயொழுக்கவழியிலொழுகுகின்ற அரக்கரது ஊரினுட் செல்லலாயின னென்க. பி-ம்:—[1]ஒதுங்கினன். [2]அரக்கா.

(சுக

வேறு.

சுஉ.—அநுமான் இலங்கையின்மதிலை யணுகுதல்.

ஆழியக ழாக[1]வரி தாயமரா வாழு
மேழுலகின் மேலைவெளி காறுமுக டேறிக்
கேழரிய [2]பொனகொடு சமைத்தகிளர் வெள்ளத
தூழிதிரி நாளுமுலை யாமதிலை யுறறான்.

(இ - ள்.) ஆழி அகழ் ஆக - கடலே சுற்றிலும அகழியாக இயல்பில் அமைய, அரிது ஆய் - (யாவர்க்குஞ் செல்லுதறகு)அருமையானதாய், அமரர் வாழும் ஏழ் உலகின் மேலை வெளிகாறும் முகடு ஏறி - தேவர்கள் வாழ்கின்ற மேலேழுலகங்களின்மேலுள்ள வெளியிடமளவும் உசசி உயர்ந்து, கேழ் அரிய பொன்கொடு சமைத்த - ஒப்பறற பொன்னைக்கொண்டு செய்யப்பட்டதும், கிளர் வெள்ளத்து ஊழி திரி நாளும் உலையா - கறபாந்தகாலத்திற பொங்கியெழுகின்ற கடறபெருக்கினால் உலகங்கள நிலைகுலைகின்ற காலத்திலும

அழியாததுமான, மதிலை - (அவ்விலங்காபுரியின்) மதிலை, உற்றான் - அடுத்தனன், (அநுமான்); (எ - று.)

சமைத்த, உலையா என்ற இரண்டு பெயரெச்சங்களும் - மதிலுக்கு அடைமொழி. வெளி - வானம். மேலைவெளிமுகடுகாறும் ஏறி என்று மொழி மாற்றினுமாம். கேழ் அரிய பொன் - மாற்றின் உயர்வினால அருமையான பொன் என்றலுமாம்; கிளர் வெள்ளத்து ஊழிதிரிதல் - கற்பாந்தகாலத்தில் மகாப்பிரளயத்தினால் உலகங்களழிதல். பி-ம்:—[1]அருகா. [2]மாழையினிழைத்த.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - கீழ்ப்படலத்தின் அரு - ஆங் கவி போன்ற கலிவிருத்தங்கள். (சுஉ)

சுங.—அநுமான் அம்மதிலின் உயர்ச்சியை வியத்தல்.

கலங்கலில் கடுங்கதிர்கண் மீதுகடி தேகா
வலங்கலயில் வஞ்சகனை யஞ்சியெனி னன்று
விலங்கைமதி லிங்கிதனை யேறலரி தென்றே
விலங்கிய[1]கல கின்றன [2]விரைந்தென வியந்தான்.

(இ - ள்) கலங்கல் இல் கடுங்கதிர்கள் - நிலைகலங்குதலில்லாதனவும் விரைவை யுடையனவுமான (சூரியன் முதலிய) விண்ணொளிகள், அலங்கல் அயில் வஞ்சகனை அஞ்சி - வெற்றிமாலையைத்தரித்த வேலாயுதத்தையுடைய வஞ்சகனான இராவணனுக்குப் பயந்து, மீது கடிது ஏகா-(அவன் வசிக்கின்ற இலங்காபுரியின்) மேல் விரைந்துசெல்லா, எனின் - என்று சொன்னால், அன்று - (அது) உண்மையான காரண மன்று; பின்னை என்னையோ வெனின்,—) இங்கு இலங்கை மதில் இதனை ஏறல் அரிது என்றே விலங்கி விரைந்து அகல்கின்றன - இவ்விடத்திலுள்ள இவ்விலங்காபுரியின் மதிலைக் கடந்து மேலுசெல்லுதல் தமமாலாகாதென்று எணணி அதனாலேயே விலகி விரைந்து அப்பாற செல்கின்றன, என - என்று எணணி, வியந்தான் - (அம் மதிலின் மிகக உயர்சசியைககுறித்து) ஆசசரியப்பட்டனன் (அநுமான்); (எ - று.)—ஆல - ஈற்றசை.

கீழ்சென்ற உக - ஆங் கவியோடு இககவியை ஒபபுநோககி, அதறகும் இதறகுமுளள ஒறறுமைவேறறுமைநயங்கள் உய்தது உணரற்பாலன. அணி, அசசெய்யுட்குக் கூறியதே வெற்றிககு அறிகுறியானது, வாகைப் பூமாலை. சீதாபிராட்டியை வஞ்சனையாற கவர்ந்து வந்ததும், மாயாபலமும் பற்றி, 'வஞ்சகன்' என்றார்; வடசொல். இங்கு இதனை-இவ்வாறு உயர்ந்து தோன்றுகிற இதனை யென்றலுமாம். பி - ம்:—[1]ஆகல்கின்றனா. [2]இழிந்தென. (சுங)

சுச.—இதுவும் - அம்மதிலினை அநுமான் வியத்தல்.

தெவவள விலாத[1]விறை [2]சேறலுள தென்று
லவவளவ [3]தன்றரண மண்டமிடை யாக
வெவ்வளவி லுண்டுவெளி யீறு[4]மது வென்னு
வெவ்வள வரக்கனை மனக்கொள வியந்தான.

(இ - ள்.) 'அளவு இலாத - அளவிறந்தனவான, தெவ் - பகைவர் கூட்டங்கள், இறை சேறல் - சென்றுதங்கும்படியாக, உளது - உள்ளது, அரணம் - இந்நகரத்து மதில்,' என்றால் - என்று சொன்னால், அ அளவதுதீ அன்று - அவ்வளவோடு நிறுத்தக்கூடியதன்று; அணடம் இடை ஆக எ அளவில் வெளி உணடு - அணடகோளம் முழுவதன்நடுவினும் எவ்வளவு விசாலமுணடோ அவ்வளவு விசாலம இமமதிற்சுற்றினகததே உண்டு: ஈறும் அது - (இம்மதிலின்) உயாசசிமுடி வெல்லையும அவ்வணடகோளத்தின் மேல முகட்டினளவேயாம, என்னு—என்றுஎணணி, (அநுமான்), வெவ்வளம அரக்கனை மனம் கொள வியந்தான் - அந்நகாத்தலைவனுனகொடிய வலிமையுடைய இராவணனைக குறித்துத் தன்மனததிலே பொருந்த அதிசயிததான்.

மற்றைப் பிராணிகட்கெல்லாம் பகையும் எமது இறைவனுன இராமபிரானுககுப் பகையுமாகிய அரக்கரது அளவிறந்த திரள் உலகததில் எவ்வளவு உணடோ, அவ்வளவும் புக்குத தன்னிலடங்கும்படி யுள்ளது அம்மதிற்சுற்று என்றால, அவ்வளவுமாத்திரமே போதாது அதனபெருமையை யுணர்த்துவதற்கு என்பது, முதல்வாக்கியததின் கருத்து. 'இறைசேறல்' என்பதனை, சென்று இறுததல என மொழி மாறறிகொள்க. வளம - செல்வவளமுமாம். வெவ் அளவு அரககனை என்று பிரிததும் உரைககலாம். இனி, முதல் வாக்கியத்துககு அளவிறநத பகைவாகள் [வாநரவீரா] கூடினால் இதனைக கட்டுச் செல்லுதல் சிறிது உணடாகுமெனறால் அநுநனஞ்சொல்லததக்க அற்ப வளவை யுடையதன்று அமமதில் என்று உரைப்பாரு முளா; இப்பொருளில், இறை - சிறுமை, பி ம்:—[1]இடை. [2]தேறலரிதம்மா. [3]அன்றதரண. [4]இது ()

சுரு.—அநுமான் அந்நகரத்துவாயிலைப் பார்த்தல்.

மடங்கலரி யேறுமத மால்களிறு நாண
நடநதுதனி யேபுகுது நமபிநனி மூதூ
[1]ரடங்கரிய தானையயி லந்தகன தாணைக்
கடுந[2]திறலின் வாயனைய வாயிலெதிர் கண்டான்.

(இ - ள்.) மடங்கல் அரி ஏறும் - (பிடரிமயிர்) மடஙகுதலையுடைய ஆண சிஙகமும், மதம் மால் களிறும் - மதஙகொணட பெரிய ஆணயானையும், நாண - வெட்கமடையுமபடி, தனியே நடந்து புகுதும் - (துணையொருவருமில்லாமல்) தானொருவனுகவே (கமபீரமாக) நடநது (அம்மதிலினருகிற) செல்லுகின்ற, நமபி - ஆடவரிற்சிறந்தவனுன அநுமான்,—அடஙகு அரிய தானை - (எணணிக்கைக்கு) அடஙகுதலில்லாத (இராக்கத) சேனைகளையுடையதும், அயில் அந்தகனது ஆணை கடுந்திறலின் வாய அனைய - சூலாயுதத்தையேந்திய யமனுடைய கட்டளை தவறாத கொடிய வலிமையையுடைய வாயைப் போன்றதுமான, நனி முது ஊர் வாயில் - பெரிய பழமையான அந்நகரததின் கோபுரவாயிலை, எதிர் கணடான் - எதிரிற பார்ததான்; (எ - று)

தனியேபுகுதும் நம்பி - அஸஹாயசூர னென்றபடி. யமனது விருப்பதத்திறகு ஏற்பப் பிராணிகளைக கொணறுதின்னத திறந்த வாயென்று கற்பனை கூறுவார், 'அந்தகனது ஆணைக்கடுந்திறலின் வாய்' என்றார். இனி, அடக்கு அரியதானை அயில் - அளவிறந்த (அரககரது) சேனைகளை உண்ணத்திறநத, அந்தகனதுவாய எனறு பதவுரைகூறுதலு மொன்று. நளிகணடான் என்று எடுத்து, நன்றாகப்பாரததான் என்றலுமாம். பி - ம் — [1]அடங்கரியதான. [2]திசையின். (சுரு)

சுசு.—இதுவும், அடுத்தகவியும் - அவ்வாயிலை அநுமான் வியத்தல்.

மேருவை நிறுத்திவெளி செய்ததுகொல் விண்ணோ
ரூர்புக வமைத்தபடி கால்கொலுல கேழுஞ்
சோரவில நிலைக்கநடு விட்டதொரு தூணோ
நீர்புகு கடறகுவழி யோவென நினைந்தான்.

(இ - ள்.) மேருவை நிறுத்தி வெளி செய்தது கொல் - (ஜம்பூத்வீபத்தின் நடுவிலுள்ள பொன்மலையாகிய) மகாமேருகிரியைக் கொணடுவந்து இநகு நிறுததி அதிற் பெரியதோ ரிடைவெளியை உணடாக்கியதுதானோ? விண்ணோர் ஊர் புக அமைத்தபடி கால் கொல் - தேவர்களுடைய ஊர்க்கு ஏறிச செல்லுமாறு அமைதத ஏணிகாலதானோ? உலகு ஏழும் சோர்வு இல நிலைகக நடு இட்டது ஒரு தூணோ - ஏழுலகங்களும் தளாவில்லாதனவாய் நிலைததுநிற்கும்படி அவறறிற்கு ஆதாரமாக நடுவில்நாட்டியதொரு தூணதானோ? நீர் புகு கடற்கு வழியோ - கடல்நீர்முழுவதும புகுநதுசெல்லுதற்கு இட்ட ஒருமதகு வழிதானோ? என நினைந்தான் - என்று (மிகப்பெரிதாயோநகிய பொன்மயமான அந்நகரதது வாயிலைகுறித்து) நினைததனன், (அநுமான்); (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. படிக்காலென்பது படிகாலென மிகாதுநின்றது, செய்யுளோசையின் பொருட்டு. படிககால் - படிக்கட்டு. கொல் - ஐயம். (சுசு)

சுஎ. ஏழுலகின் வாழுமுயிர் யாவையு மெதிர்ந்தா
[1]லூழின்முறை யன்றியுட னே[2]புகுத லுண்டே
வாழியரி யங்குவழி யீதென வகுத்தா
லாழியுள வேழினள வன்றுபகை யென்றான்.

(இ - ள்.) ஏழு உலகின் வாழும் உயிர் யாவையும் எதிர்ந்தால்-ஏழுவகைப்பட்ட உலகங்களிலும் வாழ்கின்ற உயிர்களெல்லாம் ஒருசேர (இராவணனை) எதிர்ததுவந்தாலும், ஊழின் முறை அன்றி உடனே புகுதல் உண்டே - ஒரு வாபின் ஒருவராக முறையே புகுவதல்லாமல் அனைவரும் ஒரு சேரப்புகுதல் (மிக அகலமாயுள்ள இவ்வாயிலின்கண) உணடாகுமே; வாழியா இயகு வழி ஈது என வகுத்தால-(இந்நகரில்)வாழ்பவாகளான இராக்கதர்கள் (தாம்)வழிகமாகச் செல்லுமவழி இதுவாக அமைததுவைத்துள்ளா ரெனறால், பகை ஆழி உள ஏழின் அளவு அன்று - (நமக்குப)பகையான அவ்வரக்கரது திரள் கடல்க

ளென்றுளள எழினளவில் அடங்குவதன்று [அதனினும் மிக்கதாம்], என்றான் - என்று எண்ணினான், (அநுமான்); (எ - று.)

ஏழுலகு - கீழேழும் மேலேழுமாகிய பாரேழுலகங்கள். 'அவ்வுலகங்களனைதிலும் வசிக்கின்ற உயிர்களெல்லாம் எதிர்ந்தால்' என்றதனால், இராவணன் சகலலோகங்களடக்க னென்றவாறும; அவனை அனைத்துயிரும் எதிர்த்தல் கூடுமென்க. ஊழ் - முறைமை. ஊழின்முறை-ஒருபொருட் பன்மொழி. சகலபிராணிகளும் ஒருங்குவந்தாலும் முறையாகவன்றி ஒருசேர தட்டுத்தடுமாறலின்றி இனிதுசெல்லும்படி அதிவிசாலமாகவுள்ள இந்நகரத்துவாயிலின் பரப்பை நோக்கி, அதுகொண்டு இந்நகரத்தில்வாழும அரக்காகளின் தொகை அளவிறந்த தென்பதனை அநுமாநப்பிரமாணத்தால் ஊகித்தவாறும். இனி, மூன்றுமடிக்கு-நமதுசேனையில வாழ்கின்ற வாநரவீராகள் வந்துசெல்லத்தக்க வழி இதுவென்று நிசசயித்தாலென உரைபபாரு முளர்: பி - ம்:— [1]ஊழ்முறையினன்றி. [2]புகுமீதொனறோ. (சுஎ)

சுஅ.—அவ்வாயில் காவலாபார்களை அநுமான் பார்த்தல்.

வெளளமொரு நூறொடொரு நூறுமுடை [1]வீரக்
கள்ளவினை வெவவலி யரக்கரிரு கையு
முள்ளெயிறும் வாளு[2]முற முன்னமுறை நின்று
ரெள்ளரிய காவலினை யண்ணலு மெதிர்ந்தான்.

(இ - ள்.) வெள்ளம ஒரு நூறொடு ஒரு நூறும் உடை-இருநூறுவெள்ளமென்னுந் தொகையையுடைய, வீரம களளம வினை வெவ் வலி அரககர் - பராகிரமததையும் மாயையினுறசெய்யும் வஞ்சனையாகிய கொடுஞ்செயலையுமுடைய இராகததாகள், இரு கையும் முள் எயிறும் வாளும் உற - (தமதுவாயின்) இரண்டுபகககளிலும முள்ளுப்போறகூரிய கோரதந்தங்களும் இரணடு கைகளிலும் ஆயுதங்களும விளங்க, முன்னம முறை நினறார்-(அவ்வாயிலின்) முன்னிடததிலே முறைப்படி நின்றவர்களாய, எள் அரிய காவலினை - அசட்டையில்லாத பாதுகாவல் செயதலை, அண்ணலும் எதிர்ந்தான - பெருமையிற சிறந்தவனான அனுமானும எதிரிற்கணடான்; (எ - று.)

வெள்ளம் - ஓரெருந்தொகை. மிகப்பல அக்ஷௌகிணி கொண்டது; (யானை ஒன்றும், தேர் ஒன்றும், குதிரைமூனறும், காலாள் ஐந்தும் கொண்டது பத்தியெனப்படும; அப்பத்தி மூன்றுபகுகு கொணடது - சேனாமுகம்; சேனாமுகம் மூன்று - குல்மம்; குல்மம மூன்று - கணம்; கணம் மூன்று - வாகினி; வாகினிமூன்று - பிரதனை; பிரதனை மூன்று - சமூ; சமூ மூன்று - அநீகினி; அநீகினி பத்து - அக்ஷௌகிணி; (ஆதலால, அக்ஷௌகிணியென்பது. தேர் - உகஅஎ0, யானை - உகஅஎ0, குதிரை - சுடுசுக0, காலாள்-க0கூகூடு0: ஆக, உகஅஎ00 - கொணடதாம.) அக்ஷௌகிணி எட்டுப்பகுகொண்டது - ஏகம்; ஏகம் எட்டு - கோடி; கோடி எட்டு - சங்கம்; சங்கம எட்டு - விந்தம்; விந்தம் எட்டு - குமுதம; குமுதம எட்டு - பதுமம்; பதுமம் எட்டு - நாடு;

நாடு எட்டு - சமுத்திரம்; அந்தச சமுத்திரம் எட்டுப்பங்குகொண்டது-வெள்ளம் என விவரம் காணக.)

'இருகையும்' என்பதற்கு எயிற்றோடு இயையவும் வாளோடு இயையவும் இருபொருள கொள்ளப்பட்டது; இரட்டுறமொழிதல் எள்ளரிய காவல் - (கடத்தற்கெளியதென்று பிறா) அசட்டை பணணக்கூடாத பாதுகாப்பு எனினுமாம். வாள - ஆயுதப்பொது. பி - ம்:—[1]வீரா. [2]முறை. (சுஅ)

சுகூ.—இதுவும், அடுத்தகவியும்-அக்காவலாளரின் இயல்பை விளக்கும்.

சூலமழு வாளொடயி றோமர முலக்கை
காலவரி விறபகழி கற்பண முசுண்டி
கோல்கணைய நேமிகுலி சஞ்சுரிகை குந்தம்
[1]வாலமுத லாயுதம் [2]வலித்தனர் வலத்தார்.

(இ - ள்.) வலததார்-(மற்றும் அநகு உள்ள) பலசாலிகளான இராககதர்கள்,—சூலம் - சூலமும், மழு-மழுவும், வாளொடு - வாளும், அயில் - வேலும், தோமரம் - பேரீட்டியும், உலககை - இருப்புலக்கையும, காலன் வரி வில் பகழி- யமன்போன்ற [பிராணிகளைத தவறுமற்கொல்லவல்ல] வில்லும் அம்பும், கறபணம் - இருப்பு நெரிஞ்சின் முளளும், முசுண்டி - முசுணடியும, கோல் - தடியும், கணையும் - வளைதடியும், நேமி - சக்காமும், குலிசம் - வசிரமும், சுரிகை - உடைவாளும, குந்தம - கைவேலும், வாலம் - பிணடிபாலமும், முதல் - முதலான, ஆயுதம் - படைக்கலஙகளை, வலிததனா - உறுதியாக ஏந்தியுள்ளார; (எ - று.)

சூலம் - முத்தலைவேல். மழு - எரியிரும்புப்படை; கோடாலிக்கும் இப்பெயருமுணடு. வாள - வாளமெனற வடசொல்லின்விகாரம்; தனியே தமிழ் மொழியுமாம். ஒருபெயரின ஒரு பகுபபைக்கொணடு அப்பெயர்முழுவதையும குறிககும் வழககுப்பற்றி, பிணடி பாலமென்ற வடசொல்லின் திரிபாகிய பிணடிவாலத்தை வாலமென்றே குறிததார; இது, வடமொழியில் 'நாமைக தேஶநாமக்ரஹணம்' எனப்படும. முசுணடி - ஆயுதவிசேஷம். பிண்டி வாலம் - திருகுதடி யென்பர். பி - ம்:—[1]பாலமுதலாயுத. [2]எடுததனர் பரிததார், வலததனா வலிததார், அனைத்தையுமைத்தார். (சுகூ)

எ0. அங்குச நெடுஙகவ [1]ணயிற்சிலை வழங்கும்
வெங்[2]குசைய பாசமுதல் வெய்யபயில் கையார்
செங்குருதி யன்னசெறி குஞசியர் சினத்தோர்
பங்குனி மலர்ந்தொளிர் பலாசவன மொப்பார்.

(இ - ள்.) (மற்றும அநகுள்ள இராககதர்கள்),—அநகுசம - மாவெட்டியும், நெடுஙகவண - நீணட கல்லெறிகயிறும், அயில் சிலை வழஙகும் வெம்குசைய பாசம் - நுனியிறகூர்மையையுடையதும (வீசும்போது) ஒலியைச செய்வதும் கொடியதும் தருப்பைபோல அறுக்கவல்லதுமான (கயிறறுவடிவ

மாகிய) பாசமும், முதல் - முதலான, வெய்ய - கொடிய ஆயுதங்கள், பயில்- பொருந்திய, கையார - கைகளையுடையவர்கள்; குருதி அன்ன செறி செம் குஞ்சியா - இரதத்தம்போன்ற அடர்ந்த செம்பட்டமயிரை யுடையவர்கள்; சினததோர் - (கண்களும் முகமும் சிவக்கும்படியான) கோபாக்கினியை யுடையவர்கள். (ஆதலால), பங்குனி மலர்ந்து ஒளிர் பலாசவனம் ஒப்பார்- பங்குனி மாதத்திற் பூப்பூத்து விளங்குகிற செம்முருக்க மரக்காட்டை யொத் திருப்பார்கள்; (எ - ரு.)

அங்குசம் - யானையின் காதில் மாட்டியிழுத்து அதனையடக்கும் கருவி; தோட்டியெனவும்படும். குசை - தருப்பை; அதனமேற் பிறந்த குறிப்புப்பெய ரெச்சம் - 'குசைய'. உத்தரபல்குனி நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ண மாசியையுடைய மாசம், பங்குனியெனப்படும் வடநூலார் பாலகுநமென்பர். ாற்றடி - செந்நிறம்பற்றிய உவமை. பி - ம் —[1]அடற்சிலை வழங்கும், அடுத துடல் விசிக்கும். [2]குலிச. (எ0)

எக.—மற்றும் அங்குஉள்ள காவற்சேனையை அநுமான் பார்த்தல்.

ஆளக்கவரி தாகிய கணக்கொடய னிறகும்
விளக்கின மிருட்டினை விழுங்கிவெளி கால
[1]வுளக்கடிய காலன்மன முட்குமணி வாயி
லிளக்கமில கடற்படை யிருக்கையை யெதிர்ந்தான்.

(இ - ள்.) அளகக அரிது ஆகிய - கணகக்கொடு இத்தனையென்று வரை யறைசெய்ய இயலாததான [மிகப்பெரிய] தொகையுடனே, அயல் நிற்கும - அவ்விடத்திலுளள, விளககு இனம் - விளக்குகளின் கூட்டம், இருள்தனை விழுங்கி வெளி கால - இருளை விழுங்கி ஒளியையுமிழ, உளம கடிய காலன் மனம உட்கும - மனதத்திற்கடுமையையுடை யயமனும் (துணிந்து உட்புகமாட் டாமல்) மனமஞ்சி நிற்கும்படியான, மணி வாயில் - அழகிய(அவ்விலங்காபுரி யின்) கோபுரவாயிலில், இளகக்கம இல் கடல படை இருககையை-சோர்வில் லாத கடல்போற்பரந்த இராகக்கதசேனை யிருத்தலை, எதிர்ந்தான் - (அநுமான்) பார்த்தான்; (எ - று)

அயல் - இடம். விளக்கு-(பொருள்களை)விளங்கச்செய்வது எனத் தீபத் துக்குக் காரணக்குறி. 'விளககினம இருட்டினை விழுங்கி'என்றது - உணரு தலை உணபதுபோலவும உணணப்படாததை உணணப்படுவதுபோலவும கூறிய மரபு வழுவமைதி; இருளைபபற்றற ஒழித்து என்றபடி. வெளி காலு தல்—வெளிசசதத்தை வீசுதல். 'இருட்டினை விழுங்கி வெளிகால' என்ற விடத்து மாற்றுநிலையணி தோன்றுதல் காணக. சிறிதும் இரககமிலலாத கல் நெஞ்சனாய்ப் பிராணிகளைத் தவறாமற் கொல்கின்ற யமனும் இராவண னிடத்து அசசத்தால் அரக்கர்களுயிரைக் கவாதற்பொருட்டு அந்நகர வாயிலி னுட்புகுதற்குத் தைரியமினறி நிற்கினறனனென்க. இராவணன் திகக்குவிசய காலத்திற் யமனையும் வெனறவனாத லுணர்க. அணிவாயில் எனறும பிரிகக

லாம். இளக்கம் - விகுதிபெற்ற தொழிற்பெயர். பி - ம்.—[1]உளக்கரிய, வளக்கடிய. (எக)

எஉ.—அவ்வாயில் காவலைக்குறித்து அநுமான் வியத்தல்.

எவ்வமர ரெவ்வவுண ரெவ்வருள ரென்னே
கவ்வைமுது வாயிலி னெடுங்கடை கடப்பார்
தெவ்வரிவர் சேமமிது சேவகனும் நாமும்
வெவ்[1]வமர்தொ டங்கிடினெ னாய்விளையு மென்றான்.

(இ - ள்) 'என்னே - (இது) என்ன ஆச்சரியம்! கவ்வை முது - (அளவிறந்த அரக்கர்களின் கூட்டத்தால்) ஆரவாரம் மிக்க, நெடு - நீண்ட, வாயிலின் கடை - இவ்வாயிலிடத்தை, கடப்பார் - கடந்துசெல்லவல்லவராய், எ அமரர் - எந்ததேவர்தாம், எ அவுணர் - எந்த அசுரர்தாம், எவ்வர்-மற்றும் எவர்தாம், உளர் - இருக்கின்றனர்? [எவருமில்லை யென்றபடி]; தெவ்வர் இவர் சேமம் இது - பகைவர்களான இவ்வரக்கர்களது பாதுகாவல் இதன் மைத்தாயிருக்கின்றது; சேவகனும் யாமும் வெவ் அமர் தொடங்கிடின்-மகாவீரனான இராமபிரானும் வானரவீரர்களாகிய நாமும் (இனி இங்கு வந்து) கொடியபோர் தொடங்குமிடத்து, என் ஆய் விளையும் - யாதாய் முடியுமோ?' என்றான் - என்று எண்ணினான் (அநுமான்); (எ - று)

தேவர் அசுரர் முதலியோரில் எவர்தாம் இக்காவலைக்கடந்து இவ்வாயிலினுட்செல்லமாட்டுவர் என்பது, முதலிரண்டடியின் பொருள். முதலடி - முற்றுமோனை. 'என்னே' என்றது, அவ்வாயிலின் கடுங்காவலை வியந்து கூறியவாறும். எவ்வர் - எவரென்பதன் விரிதலவிகாரம். பி - ம்:—[1]அமரின்மேலினி. (எஉ)

எங — இக்காவல்கடந்துசெல்லக்காலம்நீட்டிக்குமெனஅநுமான்கருதுதல்.

கருங்கடல் [1]கடத்தலரி தனறி'நகர் காவற்
[3]பெருங்கடல் கடப்பதரி தெண்ண மிறை பேரி
னருங்கடன் முடிப்பதரி தாமமர் கிடைக்கி
னெருங்கமா [4]கிடக்குநெடு நாளென நினைந்தான்.

(இ - ள்.) 'கருங் கடல் கடத்தல அரிது அன்று - கரியகடலைக் கடந்து வருவது அருமையான காரியமன்று; இந்நகர் காவல் பெருங் கடல் கடப்பது அரிது - இந்நகரத்தைப் பாதுகாவல்செய்துநிற்கின்ற பெரிய இச்சேனைசமுத்திரத்தை வென்று அப்பாற்செல்வதே அருமையானது; எண்ணம் இறை பேரின் - (நாம) ஆலோசனையிற் சிறிது தவறினால், அருங் கடன் முடிப்பது அரிது ஆம் - (சீதையைத் தேடிக் கண்டு பேசிச்சென்று செய்தி சொல்லுதலாகிய நமது) அருமையான கடமையைச் செய்துமுடிப்பது அரியதாகும்; அமர் கிடைக்கின்-(இவர்களோடு நமக்குப்) போர்நேர்ந்தால், நெருங்கு அமர் நெடு நாள் கிடக்கும்- நெருங்கிய அந்தயுத்தம் நெடுநாளைக்கு இருக்குமே,' என நினைந்தான் - என்றும் எண்ணினான், (அநுமான்); (எ - று.)

'கடல்கடத்தலினும் அரியது, இவ்வாயில்காவற்சேனைப் பெருங்கடலைக் கடப்பது' எனக் கருதினன் அநுமான். கடலுக்கேனும் எல்லையுண்டு, இவ்வரக்காதொகுதிக்கோ எல்லையில்லை யென்னுங் கருத்தால், அது 'பெருங் கடல்' எனப்பட்டது. நாம் இவர்களோடு போர்தொடங்கிச்செய்து இத்தனை பேரையும் வென்றொழித்துவிட்டு இவ்வாயிலைக்கடந்து நகரினுட் புகுவதாக முயல்வோமாயின், முடிவு எங்ஙனமாவதானாலும் போரிலேயே மிகப்பலநாள் கழியலாகும் ஆதலால், செவ்வையான ஆலோசனையின்றி அதில் தலையிடுதல், இராமதூதனாய் நாம் வந்த காரியத்தை முடிக்குங் கடமையை நிறைவேறுதற்கு இடையீடாகும் என்று கருதினன் அறிவிற் சிறந்தவனான அனுமனென்க. பி - ம்:—[1]கடப்பரிதன்று. [2]நனிகாவல். [3]பெருங்கடை. [4]விளைப்பர்.

எச.—அநுமான் அவ்வாயில்வழிச் செல்லாதுமதிலைக்கடந்துசெல்லமுயறல்.

வாயில்வழி சேறலரி தன்றியும் வலத்தோ
[1]ராயிலவர் வைத்தவழி யேகலழ கன்றால்
காய்கதி ரியக்கினமதி லைக்கடிது தாவிப்
போயிநகர் புக்கிடுவெ னென்றொரயல் போனான்.

(இ - ள்.) 'வாயில் வழி சேறல் அரிது - (ஆதலால்) இந்தவாயிலின்வழியாகச் செல்லுதல் எளியதன்று; அன்றியும் - அல்லாமலும், ஆயில் - ஆராயுமிடத்து, வலததோர் - வலலமைசாலிகளாயுள்ளவர்க்கு, அவர் வைத்த வழி ஏகல்-பிறாவைத்துள்ள வழியாகச்செல்லுதல், அழகு அன்று-அழகியதன்று; ஆல் - ஆதலால், காய் கதிர் இயக்கு இல் மதிலை கடிது தாவி போய - எரிக்கின்ற சூரியகிரணங்களும் கடந்துசெல்லமாட்டாத இமமதிலை விரைவாகத் தாண்டிச்சென்று, இ நகர் புகுகிடுவென - இந்தநகரத்தினுட் பிரவேசிப்பேன்', என்று - என்றுநிச்சயித்து, ஓர் அயல் போனான் - (அம்மதிலின்)ஒருபுறத்தே சென்றனன், (அனுமான்); (எ - று.)

திறமையுள்ளவனான யான் பகைவரான அரக்கரமைத்துள்ள வாயிலின் வழியாயசெல்லுதல் அழகன்று எனறும் கருதினனென்க. "பகைவரது இருப்பிடத்தை வாயில்வழியாற சோதலாகாது' என்ற நூற்கொள்கையும் இங்குக் கொண்டதாம். ஆயில் - 'ஆய்' என்ற பகுதியின் வினையெச்சம்; ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். இநகா-தொகுதல். பி - ம்:—[1]ஆய்வில்.

வேறு.

எரு.—அங்கு இலங்காதேவி அநுமானை வழிமறித்தல்.

நாணு ளுந்தா னல்கிய காவ னனிமூதூர்
வாணு ளந்நாள் போவதின் மேலே வழிநின்றா
டேணு மென்னுந் தோளுடை யானைச் சுடரோனைக்
காணு [1]வந்த கட்செவி யென்னக் கனல்கண்ணாள்.

(இ - ள்.) நாள் நாளும் தான் நல்கிய காவல் - (நெடுங்காலமாகத்) தினந்தோறும் தான் அனபோடு செயதுவருகின்ற பாதுகாப்பிலுளள, நனி முது ஊர-மிகப்பெரிய (இலங்கையாகிய) அந்தஊரினது, வாழ் நாள் - ஆயுள்நாள், அ நாள்-அன்றைநாளில் முடிந்துபோவதனுல்,—(அந்நகரதேவதை),—தூண் ஆம என்னும தோள உடையாளை - இவை தூணகளேயா மென்று சொல்லதககத தோள்களை யுடையவளுன அநுமானை, காணு - பாரதது, சுடரோனை காணு வந்த கட்செவி என்ன கனல் கணணுள் - சூரியனைப்பாரததுப் (பற்றிக கொள்ள) வருகிற (இராகுகேதுவென்னும) பாமபுபோலக கோபாகனி சொலிககின்ற கணகளையுடையவளாய், போவதின் வழிமேலே நின்ருள - (அங்ஙனம அநுமான) செல்லும் வழியிலே தடுததது நிறபவளாளுள்; (எ - று.)

அன்றையிரவில் அநுமானுலெரிககபபட்டு அந்நகரம அழியப்போவதனுல், 'வாணு ளந்நாள்' என்ருர். அன்றி, தான் வாழ்நதிருநகுங்காலத்தில் (தனது அநுமதியினறி அநுமான் அந்நகரினுள்ளே) அன்றைக்குசசெல்லத் தொடங்கியதனுல் அதனை அவள வழிமறிததுகின்ருளென்றலுமாம. தான் (அந்நகரததில்) வாழும நாள் அன்றைததினததில முடிந்துபோவதனுலே அநுமனை வழிமறிததன ளென்றலுமொன்று இனி, 'வாணுளன்ருள' என்ற பாடம சிறக்கும; லங்கிணியென்றும் லங்காதேவியென்றும சொல்லப்படுகிற இவள், அவ்விலங்கையைப பாதுகாவல்செயது நிறகும் நகரதேவதை; லங்காதிதேவதை; இவள் வலியழிநதால் இநநகரமழியு மென்பது பிரமன் கட்டளையாதலால், இவளை 'அவ்வூரின வாழ்நாள்போன்றவள' என்ருரென்க. மேல் கூச - ஆஞ் செயயுள், இங்கு நோகககதகது. இவள்வரலாறும, அங்ஙனமே விளங்கும்.

கட்செவி-கணகளையே காதுகளாகவு முடையது: அன்மொழிததொகை. பார்ததலுமகேட்டலுமாகிய புலனிரணடும கண்ணுகிய பொறியொன்றிலே பாமபுககு அமைநதிருககும இயல்பு இங்குக கருதத்ககது. வடநூலாரும் 'சக்ஷுஸ்ரவஸ்' என்பா. ஆகாயமாரககமாகச செலலுஞ சூரியனைக கண்டு சீறிக்கனன்று அவனைப்பற்றவரும பாம்புவடிவான இராகுகேது, வானத்தில் தாவிசசெல்ல முயலும் அநுமனைக கண்டு கோபிததுத தீபபுறப்படவிழித்து அவனைத தடுககவந்த இலங்கைமாதேவிககு உவமையாம். பி ம்:—[1]வந்தாள.

இதுமுதல் இருபததெட்டுகககவிகள - பெரும்பாலும் ஒன்று இரண்டு நான்காஞ் சீரகள மாசசீரகளும, மூன்ருவது கூவிளசசீரும், ஐந்தாவது புளிமாங்காய்சசீருமாகிய நெடிலடிநானகுநொண்ட கலிநிலைத்துறைகள். (எடு)

எசு.—அவ்விலங்காதேவியின் இயல்பு.

எட்டுத் தோளா ணுலு முகத்தா ளுலகேழுந்
தொட்டுப பேருஞ் சோதி [1]நிறத்தாள சுழலகண்ணுண்
முட்டிப பேரின மூவுல கத்தை முதலோடுங்
கட்டிச சீறுங் [3]காவல வலத்தாள் கமையில்லாள்.

(இ - ள்.) (அந்த இலங்கைமாதேவி),—எட்டு தோளாள் - எட்டுத்தோள்களை யுடையவள்; நாலு முகத்தாள் - நான்குமுகங்களை யுடையவள்; உலகு ஏழும் தொட்டு பேரும் சோதி நிறத்தாள் - ஏழுவகையுலகங்களிலும் போய் விளங்கி மீளுகின்ற பிரகாசமுள்ள உடமபின் நிறததை யுடையவள்; சுழல் கண்ணாள் - வட்டமிடுகிற கணணின் கருவிழியையுடையவள்; முட்டி பேரின் - பகைத்து மோதினதால், மூ உலகத்தை - மூன்று உலகததவரையும், முதலோடும் கட்டி - அடியோடு கட்டிவிட்டு, சீறும் - (அதன்பின்னரும் அடங்காமற) கோபிக்கின்ற, காவல் வலத்தாள் - பாதுகாவல்செயதற்கேற்ற வலிமையையுடையவள்; கமை இல்லாள-பொறுமையென்பது சிறிதுமில்லாதவள்; (எ - று.)

'உலகேழுந்தொடுபபேரும,' 'மூவுலகததை முதலோடுங்கட்டிசசீறும்-

தொடர்புயர்வு நவிற்சியணி. 'உலகேழ்' என்றது, கீழேழ் மேலேழ் என்ற வகைபற்று, 'மூவுலகம்' என்றது, மேல கீழ் நடுஎனனும் நோககததால்.கமை-க்ஷமா என்ற வடசொல்லின் விகாரம்; தெரிநதாவது தெரியாமலாவது ஒருவா தனகககு குற்றஞ்செய்தவிடததுத் தான் அவர்க்குத தீங்குசெய்யாது பொறுததல. 'பேரும' 'பேரின' என்பவை - பெயரும், பெயரின் என்பவற்றின் மரூஉ. பி - ம்:—[1]வலததாள். [2]போரின. [3]காலவலததாள், காலன் வலத்தாள். (ஈசு)

எஎ.—அவளுடைய ஜாக்கிரதை.

பாரா நின்று ளெண்டிசை தோறும் பலரப்பால
வாரா நின்று ரோவென மாரி மழையேபோ
[1]லாரா நின்று ணூபுர மச்சந் தருதாளாள்
வேரா மெய்யாண் மின்னி னிமைக்கு மிளிரபூணாள்.

(இ - ள்) நூபுரம் அச்சம் தரு தாளாள் - (அணியப்பட்ட) சிலம்பென்னும அணிகலம (மிக்க ஓசையினுற பிறாககு) அச்சத்தை விளைவிக்கப்பெற்ற கால்களையுடையவளும், மின்னின் இமைக்கும மிளிர பூணாள் - மின்னல் போல மிகுதியாக ஒளிசெயகின்ற ஆபரணங்களைத் தரித்துள்ளவளுமான அவ்விலங்கைமாதேவி,—பலா அப்பால் வாராநின்றோ என எண திசை தோறும் பாராநின்றாள் - (இவனுக்குத துணையாக மறறும்) பலா தூரததில் வருகின்றாகளோ வென்று எட்டுததிக்குக்களிலும பாரகின்றவளும், மாரி மழையே போல ஆராநின்றாள் - மழைபொழிகின்ற மேகம்போலக கர்ச்சிகின்றவளும், வோ ஆம் மெய்யாள்-(கோபததால்) வேர்வையுண்டாகப்பெற்ற உடமபையுடையவளு மாயினாள்; (எ - று.)

இனி, 'பாராநின்றாள்' முதலிய அனைததையும் அவளியல்பாகக் கொண்டு உரைப்பாரு முளர் ஆததல் - ஆரவாரிததல். நூபுரம் - வடசொல் வோ - முதனிலைதொழிற்பெயா. இமைக்கும, மிளிர - ஒருபொருட் பன்மொழி. பி - ம்:—[1]ஆராநின்ற. (எஎ)

எஅ.—இதுமுதல் மூன்று கவிகள் - அவளியல்பை விளக்குவன.

வேல்வாள் சூலம் [1]வெங்கதை பாசம் விளிசங்கங்
கோல்வாள் [2]குந்தங் கொண்ட கரத்தாள் வடகுன்றங்
போல்வா [3]டிங்கட் போழி னெயிற்றாள் புகைவாயிற்
கால்வாள் காணிற் காலனு மூட்குங் கதமிக்காள்.

(இ - ள்.) வேல்—, வாள—, சூலம—, வெம் கதை-கொடிய கதாயுதம், பாசம்—, விளி சங்கம் - முழக்கஞ்செய்கின்ற சங்கு, கோல் - தடி, வாள் குந்தம் - ஒளிபொருந்திய ஈட்டி, (என்கின்ற எட்டுப்படைக்கலங்களையும்), கொண்ட - தரித்த, கரத்தாள் - (எட்டுக்) கைகளையுடையவள்; வட குன்றம் போலவாள் - (மிகப்பருத்து உயர்ந்துவிளங்குகின்ற பெருவடிவினால்) வடக்கின்கணுள்ள மகாமேருகிரியைப் போலபவள்; திங்கள் போழின் எயிற்றாள்- சந்திரமண்டலத்தை இரண்டு துண்டாக்கிவைத்த பிளவைகள்போன்ற கோரதந்தங்களையுடையவள்; வாயின் புகை கால்வாள் - வாயினாற் புகையைக் கக்குபவள்; காணின் காலனும் உட்கும் கதம் மிக்காள் - பார்த்தால் யமனும் அஞ்சும்படியான கோபமமிக்கவள, (அவ்விலங்காதேவி); (எ - று)

தனது பேரொலியால் அசசத்தைவிளைத்துப் பகைவரையழித்தல்பற்றி, சங்கம் ஆயுதவகையிற சோததுக் கூறப்படும். புகைவாயிற்காலுதல், உகிர மிகுதியால். பி - ம் —[1]வீசுறு. [2]சாபம். [3]திங்கள் போழும. (எஅ)

எசு.—அஞ்சு வணநதி ஞடை யுடுத்தா ளரவெலாம்
அஞ்சு வணத்தின் வேக மிகுத்தா ளருளில்லாள்
அஞ்சு வணத்தி [1]னுத்தரி யத்தா ளலையாரும
அஞ்சு வணத்தின் முத்தொளி ராரத் தணிகொண்டாள்.

(இ - ள்.) அஞ்சு வணதின் - பஞ்சவாணங்களுள்ள, ஆடை - வஸ்திரததை, உடுத்தாள - அரையில் தரித்தவள்; அரவு எல்லாம அஞ்சு - நாகங்களனைததும் அஞ்சததக்க, உவணத்தின் - கருடன்போல, வேகம மிகுததாள்- வேகம் மிக்கவள்; அருள் இல்லாள் - ஜீவகாருணியமில்லாதவள்: அம் சுவணத்தின் உத்தரியததாள் - அழகிய பொன்னைகொண்டு தொழிலசெய்த மேலாடையையுடையவள்; அலை ஆரும் - அலைகள் பொருந்திய, அம் - கடல்நீரில் தோன்றிய, சு - அழகிய, வள் - பெரிய, நததின - சங்கிலுண்டான, முதது - முத்துக்களினாற் செய்யபபட்டு, ஒளிர - விளங்குகின்ற, ஆரதது - மாலையாகிய, அணி-ஆபரணத்தை, கொண்டாள்-தரித்துள்ளவள், (அவ்விலங்கிணி); (எ-று.)

அஞ்சு - ஐந்து என்பதன் முழுப்போலி. ஐந்துவாணம் - வெண்மை, கருமை, செமமை, பொன்மை, பசுமை. வணம் - வாணமென்ற வடசொல்லின் சிதைவு. மகளிரும் ஈருடையுடுத்தல் மர பாதலால், இடையிலுடுக்குமாடையும் மேலாடையுமாக இரண்டுகூறினா. கருடனைக கண்டமாதிரததிற் பாம்புகள் அஞ்சியொடுங்குதல் இயல்பு. உவணம், சுவணம் என்பன -

ஸுபர்ணன், ஸ்வாணம் என்ற வடசொற்களின் விகாரம். ஈற்றடியில், ஸு, ஹாரம் - வடசொற்கள்.

இசசெய்யுளின் அடிதோறும முதலிற் சிலவெழுத்துக்கள ஒன்றிநின்று வெவ்வேறுபொருள விளைத்தது, யமக மென்னுஞ் சொல்லணி. இடையிட்டு வந்த முதல் முற்றுமடக்கு எனப்படும். பி - ம்:—[1]உததரிசததாள். (எகூ)

௩௦. சிந்தா ரத்தின் செச்சை யணிந்தாள் [1]தெளிநூல்யா
ழுநதா ரத்தி னோவரு சொலலா ளறைதும்பி
கந்தா ரத்தி னின்னிசை [2]பாடிக் களி[3]கூரு
மந்தா ரத்தின் மாலை யலம்பு மகுடத்தாள்.

(இ - ள்.) சிந்து - (வாசனை) வீசுகின்ற, ஆரததின் செசசை - சநதனக் குழம்பை, அணிந்தாள - பூசியவள்; தெளி - தெளிவான, நூல்-சங்கீதசாஸ்திரத்தின் முறைமைக்கு ஏற்ற, யாழ்-வீணையில் வாசிககபபடுகிற, அம் தாரதின் - அழகிய தாரமென்னும இசைக்கு, நேர்வரு - ஈடாக அமைந்த, சொல்லாள் - சொற்களையுடையவள; அறை தும்பி - ஒலிசெயகின்ற வண்டுகள், கந்தாரததின் இன் இசை பாடி-காந்தாரமென்னும பண்போல இனிமையான இசைப்பாட்டைப் பாடி, களி கூரும் - களிப்புமிகுதறகிடமான, மநதாரத்தின் மாலை-மநதாரமென்னுந் தேவதருவின்மலர்களாலாகிய மாலை, அலம்பும் - (சூட்டப்பட்டு) அசையப்பெற்ற, மகுடததாள் - முடியையுடையவள், (அந்நகர்த்தேவதை): (எ - று.)

'சாச்சா' என்ற வடசொல்லுக்கு பூசசு என்று பொருள். அது செசசை எனததிரிந்து செஞ்சநதனககுழமபைக காட்டிறறு. நூல் - இகுகு, இசை நூல். கநதாரம - காநதாரமென்பதன் குறுககல. மந்தாரம் - பஞ்சதேவதருக்களி லொன்று வடசொல; அதன்மலாககு முதலாகுபெயா. அநுமானால் தெய்வநிலை குலைகின்ற சமயம இவட்குச சமீபித்ததமைபற்றி, இவள சூடிய தெய்வமலாமாலையில் வண்டுகள் மொயததன வென்க; தேவாகள் மாலையில் வண்டுமொய்தத லியல்பனமை உணாக. கீழ் எஎ - ஆஞ் செயயுளில் 'வேர் ஆம மெய்யாள்' என்றதும இதுபற்றியே. 'எல்லைமூவைந்து நாளகளுளவென விமைக்குங கணணும, நல்லெழின்மாலை வாடும' என்ற சீவகசிநதாமணி கொண்டு, தேவாகட்குத் தெய்வநிலைகுலைபுஞ்சமயம் சமீபிக்கின்றபொழுது தெயவிகக்குறிகள் நிலைகுலைதலை உணரலாகும். பி - ம்:—[1]தெரி. [2]பன்னி. [3]கூறும்.

இசசெய்யுளில, அடிதோறும் முதலெழுத்துமாதிரம் வேறுபட்டிருக்க, இரணடாவது முதலிய சிலவெழுத்துககள் ஒன்றிநின்று பொருள்வேறுபட்டது, திரிபு என்னுஞ் சொல்லணியாம. (௩௦)

அக.—அவள் தன்னை யெதிர்த்தலை அநுமான் காணுதல்

எல்லா முட்கு மாழியி லங்கை யிகன்மூதூர்
நல்லா ளவ்வூர் வைகுறை [1]யொக்கு நயனத்தா

ணில்லாய் நில்லா யென்[2]றுரை நேர்வா ணினையாமுன்
வல்லே சென்றுண மாருதி கண்டான் வருகென்றான்

(இ - ள்.) எல்லாம் உட்கும் - எல்லாப்பிராணிகளும் அஞ்சுமபடியான, ஆழி இலங்கை - கடல்சூழ்ந்த இலங்கையாகிய, இகல் மூது ஊர் - வலிமை கொண்ட பெரிய ஊர்கு,நல்லாள்-நன்மையைச் செய்பவளும். அ ஊரா வைகு உறை ஒக்கும் நயனத்தாள்-அந்த ஊர் முழுவதுக் தங்கும்படியானதோருறையைப்போன்ற கணகளையுடையவளுமாகிய அததேவி,—நில்லாய் நிலலாய் என்று உரை நேர்வாள் - 'நில் நில்' என்று (அநுமானைநோகி) அதட்டிக கூறுபவளாய்,—நினையாமுன் வல்லே சென்றாள் - நினைததற்கு முன்பு விரைவில் (அநுமானெதிரிற்) சென்றாள்; (அங்ஙனஞ் சென்ற அவளை), மாருதி கண்டான்-அநுமான்பாரதது, வருக என்றான் - 'வருவாயாக' என்று சொல்லித தைரியததுடன் அழைத்தான்: (எ - று.)

'அவ்வூர்வை குறையொக்கு நயனத்தாள்' என்றது-மிகப் பெரிய கணகளை யுடையவளென்ற பொருளோடு, அவ்வூரைத் தனது கணணினுட் கருமணிபோல வைததுக் குறிகொண்டு பாதுகாப்பவளென்ற கருததையும் காட்டும். தான் ஏதிர்பாராத சமயததில எவரேனும வந்து திடீரென்று எதிரதாலும் சிறிதும பின்வாங்காது அவாககு மாறுசெய்யுந துணிவுடையவன் அநுமான் என்பது, இங்கு நன்கு விளங்கும். 'நில்லாய் நில்லாய்' என்ற அடுக்கு,கோபம் பற்றியது. நினையாமுன் வல்லே-மிக்க விரைவி லென்றபடி. இனி, நினையாமுன் சென்றாள், வல்லேவருக என்றான் என்று இயைத்தும் உரைக்கலாம். வருகென்றான்-தொகுததல். பி-ம்:—[1]போலும். [2]உணாநேரா.

அ௨.—அவள் அநுமானை அதட்டுதல்.

[1]ஆகா செய்தா யஞ்சலை போலு மறிவில்லாய்
சாகா மூலந் தின்[2]றுழல் வார்பாற் சலமென்றும்
பாகா ரிஞ்சிப் பொன்மதி லுவிப் [3]பதையாதே
போகா யென்றாள் பொங்[4]கன லென்னப புகைகண்ணாள்.

(இ-ள்.) (அப்பொழுது அவ்விலங்காதேவி),—பொங்கு அனல் என்ன புகை கணணாள் - மூண்டெரியும் நெருப்புபபோல (உக்கிரகோபததாற்)புகைகின்ற கண்களையுடையவளாய, (அநுமானை நோக்கி), 'அறிவு இல்லாய் - அறிவில்லாதவனே! ஆகா செய்தாய் - தகுதியல்லாத காரியங்களைச செய்தாய்; அஞ்சலை போலும் - (அஞ்சவேண்டுவதற்கு) அஞ்சுவாயல்லைபோலும்; சாகா மூலம் தின்று உழல்வாபால் - இலைகளையும வேர்களையும் தின்றுதிரிபவரிடததில், சலம் என் ஆம் - (எனது) பெருங்கோபம் எதற்கு? பாகு ஆர்-சுணணசசாந்தின் குழமபு நிரமப பூசப்பெற்ற, பொன் - அழகிய, இஞ்சி மதில் - இம்மதிலை, தாவி - கடக்கமுயன்று, பதையாது - விரைவுபடாமல், போகாய் - விலகிப்போ', என்றாள் - என்று அதட்டிப்பேசினாள்; (எ - று.)

'ஆகா' என்று பண்மையாற் கூறியது, கடல்கடந்து இங்குவந்ததையும், மதிலைத்தாவிக கடந்துசெல்ல முயலுதலையும; எதிர்மறைப் பலவினபால் வினையாலணையும்பெயர். 'அஞ்சலைபோலும் அறிவில்லாய' என்றது. "அஞ்சுவதஞ்சாமை பேதைமை" என்றபடி அஞ்சப்படுவதற்கு அஞ்சாது அசட்டே துணிவுகொண்டு தொழில் செய்யும் பேதைபோலும் நீ யென்று இழந்த வாறும். இரண்டாமடி - வலிமையைத் தருகின்ற தசைமுதலியன உண்ணாது சாகமூலங்களைத் தின்று திரியும் வாநரரான உங்கள் விஷயத்தில் அழிவுசெய வதற்கு யான் சிறிது கோபங்கொள்ளுதலே போதுமென்றபடி. 'ஸாகமூலம்' என்ற வடமொழிதொடர், எதுகைநோக்கி நீட்டல் விகாரம் பெற்றது வாநரவீரரான உம்மிடத்தில் எனதுகோபம் பயன்படாது என மேல்வருந் தீங்கிற்கு ஏற்ற அமங்கலப்பொருளும இவ்வார்த்தையில் அமைதல் காண்க. 'உழல்வார்' என்றது. முனனிலைப்பன்மாகக்கை: இடவழுவமைதி சலம - தணி யாக்கோபம். பாகு ஆர் அழகு அமைந்த எனினுமாம்; இபபொருளில், 'பாகு' என்பது - பாங்கு என்பதன விகாரம. இஞ்சி, மதில் - ஒருபொருட்பன் மொழி. 'தாவிபபதையாது' என்றதை 'பதைத்துத்தாவாது' என்று விகுதி பிரித்துக்கூட்டலாம். 'பதையாதே' எனபது, எதிர்மறையொருமையேவலா கக கொள்ளுதற்கும ஏற்றும. மதில்தாவிப்பதையாதே - மதிலைப்பாய்ந்துதாவி (என்னால் மோதப்பட்டுத) துடியாமலே என்றலு மொன்று. பி - ம்:—[1]ஆகாய். [2]உழல்வார்மேற [3]பகையாதே. [4]அழல். (அஉ)

அங.—அநுமான் பணிவாய்ப் பேசுதல்.

களியா வுள்ளத தணணன் மனத்திற கத[1]மூழ்க
விளியா நின்றே [2]நீதி [3]நலத்தின் [4]வினையோ ரவா
னளியா லிவவூர் காணு [3]நலத்தி னணைகின்றே
னெளியே னுற்றால யாவ துனக்கிங் கிழவென்றான்.

(இ - ள்.) களியா உளளதது அணணல்-(பொருளின்பங்களினு லாகுங்) களிப்பைக கொள்ளாத மனததையுடைய பெரியோனான அநுமானை,—மனத் தில் கதம் மூழ்க-(தன) மனததிலுணடாகின்ற கோபம (வெளிபபடாது) உள் ளடங்கிநிற்க, நீதி நலததின் வினை ஓர்வான் - நல்ல நீதிமாககத்தால் (அவ ளது) செயலை அறிதறபொருட்டு,—விளியா நின்றே - ('வருக' என்று அவளை) அழைததுநின்று, 'அளியால் இ ஊர் காணும் நலததின் அணைகின் றேன் - அன்போடு இநத ஊரைப்பாரககவேணடுமென்னும் ஆசையால் வரு கின்றேன், (யான்); எளியேன் உறறால் - எளியவனான யான் (இவ்வூரினுட்) சென்றால், இங்கு உனககு இழவுயாவது - இதனால் உனககு நஷ்டமென்ன?' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

அநுமான் நிததியப்பிரமசாரியெனபது தோன்ற, 'களியாவுள்ளததணை னல்' என்றார. தனவலிமை மிகுதியைக்கருதிச செருகி, அதனால் முதலி லேயே போரதொடங்காமற கோபததை அகததடகி நாலவகையுபாயங்களுள

முதலதாகிய சாமோபாயத்தால் முயலுதல்பற்றியும், இங்ஙனங்கூறுதல் ஏற்கும். நீதிநலததின்வினையோதல் - எதிரபபவளது நிலைமையை விரைவு படாமல் ஆயந்துஉணர்தல் பி - ம்:—[1]மூள. [2]வீர. [3]நலததால். [4]விதி. (அஙு)

அச.—அதற்கு அவள் சினந்து மறுமொழிகூறிச் சிரித்தல்.

என்னு முன்ன மேகென [1]வேகா தெதிர்மாற்றஞ்
[2]சொன்னு யேநீ யாவ னடாதொல் புரமட்டா
னன்னு [3]ரேனு மஞசுவ ரெயதற களியுற்று
லுன்னு லெய்து மூாகொ லிவவூரென் றுறநக்காள.

(இ - ள.) என்னு முன்னம் - எனறு (அநுமான்) சொல்லாதமுன்னே [சொன்னவுடனே யென்றபடி] - (அவ்விலஙகாதேவி அநுமானைநோககி),— 'எகு என எகாது - 'போ' என்ற நானசொல்லவும போகாமல், எதிர் மாற்றம் சொன்னுயே - எதிரவார்ததைசொல்லிகொணடு அஞ்சாது நிறகினறானையே! நீ யாவன் அடா-நீ யாரடா? தொல் புரம அட்டான அனனா எனும்-பழமை யான திரிபுரதைத யெரிதகவனுகிய சிவபிரானைப போனறவாகளேயானு லும், எயதறகு அஞ்சுவா - (இவ்வூரினுள்) வருவதறகுப் பயப்படுவர்; அளி உற்றால் உன்னுல எய்தும ஊா கொல் இ ஊா - நீ விருபபங்கொணடால் அவ் விருப்பததின்படியெல்லாம் உனனுறசெல்லததகக ஊரோ இந்தஊா? என்று- என்றுசொலலி, உற நககாள் - (பரிகாசககுறிப்புததோனற) மிகுதியாகச சிரிததாள்; (எ - று)

அனைததையுமழிககும் உகரமான ஆறறலுடைமையின், உருதரமூாத் தியை எடெதுககூறினா. 'அடா' என்றது, அலகஷயமாகவிளிததலில் உயர் திணையாணபாறகு வருவதோ ரிடைசசொல்; (அடஎன்பது, பெணபாறகண வரும.) எதிரமாறறம - பிரதியுத்தரம. எகு என எகாது என்பதறகு - (இவ் வாறு சமாதானமாகப்பேசிய அநுமானைநோககி) '(நீ) உட்புகுப்பா' என்று சொல்லி(த் தான்) அபபாறசெலலாமல என்றுமாம பி - ம்:—[1]எகா. [2]சொன் னுய நீயே [3]எயதறகஞசுவரமமா, அனனாஞ்சுவதெய்த. (அச)

அரு. அநுமான் சிரித்துத் தனது துணிவைக் கூறுதல்.

நக்கா ளைக்கண் டையன் மனத்தோ நகைகொண்டா
[1]னக்காய் [2]நீயார் யார்சொல வந்தா யுனதாவி
[3]யுக்கா லேதா [4]மோடலை யென்று ளினியிவ்வூர்
புககா லன்றிப போகிலெ னென்றான் புகழ்கொண்டான்.

(இ - ள.) நககாளை - (அவ்வாறு) சிரித்தவளான அவளை, கணடு - பாரததது,—ஐயன் - சிறந்தவனுகிய அநுமானும,—மனத்து ஓர் நகை கொண டான - (இகழ்ச்சிகுறிப்பான) கருத்தோடு ஒருவகைப்புன்சிரிப்பைக் கொண டான்; (அதுகணடு அவள்,) 'நகாய் - (இங்ஙனஞ்) சிரித்தவனே! நீ யாா—?

யார் சொல வந்தாய் - எவாசெல்லசசொல்ல (அசசொற்படி) நீ வந்தாய்? உனது ஆவி உக்கால் ஏது ஆம் - உனது உயிா (என்னால்) ஒழிந்துபோனால் (உனக்கு யாதுபயன்? ஓடலை - இன்னும் ஓடிப்போகாமல் நிற்கின்றாயே!" என்றாள - என்று அதட்டிகூறினாள்; (அதற்கு),—புகழ் கொண்டான் - கீர்த்திபெற்றவனான அநுமான், இனி இ ஊா புக்கால்அன்றி போகிலென் என்றான்-'இனி இந்தஊரினுட் சென்றாலலது வெளிசசெல்லேன்' என்று (தனது உறுதியை மறுமொழியாகக) கூறினான்; (எ - று)

[1]கொண்டானகக்காணீ' என்ற பாடததுககு, அக்கால் - அப்பொழுது, என்றாளெனக. தான் அவனைககொலலுதல் தவறாதென்பது தோனற, 'உனது ஆவியுககா லேதாம்' எனறாள். 'இனி' என்றது, நீ இவ்வளவு கூறிய பின்பு என்றபடி. [4]'ஓடலையென்று னினி யிவ்வூா' எனற பாடததிறகு சிரித்த அவளைப் பாரதது, கீாதிபெற்றவனான அநுமான், குறுநகை கொணடு, 'அககாய் - அமமா! நீயாா? யாாசொல்லவந்தாய்? உனது ஆவி உக்கால் ஏதாம்? ஓடலை' என்றான், 'இனி இவ்வூர்புக்காலன்றிப் போகிலென்' என்றும் கூறினான் எனக காணக. தாயையுணாததுகின்ற 'அக்கா' என்ற வடசொல் - 'அககை' என ஆவீறஐயாகி, அது பின்பு ஐ ஆய்என ஈறுதிரிந்து விளியாயிற றென்க; பெரியவளே யென விளிததவாறு. பி-ம்:— [2]நீதானாா. [3]உக்காலேதான். (அரு)

அசு—இலங்காதேவியின் சிந்தை.

வஞ்சங் கொண்டான் வானர மல்லன் வருகாலன்
றுஞ்சுங் கண்டா லென்னை யிவனசூழ் திரையாழி
நஞ்சங் கொண்ட கண்ணுத லைபபோ னகுகின்றா
னெஞ்சங் [1]கண்டே கலலென நின்றே [2]நினைவுறறாள.

(இ - ள்.) வானரம் அல்லன் - (இவன் உணமையான) குரங்கல்லன்: வஞ்சம கொணடான் - வஞ்சனையால் இவ்வடிவுகொணட வேறொருவனாதல் வேணடும; வரு காலன் - (பிராணிகட்கு அழிவுசெய்தற்கு அந்தியகாலததில்) வருகின்ற யமன, என்னை கணடால் துஞ்சும - என்னைப்பாாததால் ஓடுவகி விடுவன: (ஆதலால் இவன் வேற்றுருவகுகொண்டுவந்த யமனல்லன்; மறறு) இவன்—, (என்னைக்கணடு அஞ்சாதுநின்று), சூழ் திரை ஆழி நஞ்சம் கொணட கணணுதலை போல் நகுகின்றான்-சுற்றிலு முள்ள அலைகளையுடைய பாற்கடலில் தோன்றிய விஷத்தை உட்கொண்ட சிவபிரானைப்போலச் சிரிக கின்றான்; (என்று), நெஞ்சம கண்டே கல் என நின்றே நினைவு உற்றாள - (அவனது) மனவுறுதியைப் பாாததது அதனால் (திடுகிட்டுக) கற்போல அசைவின்றிநின்று ஆலோசிபபவளானாள, (அநத இலஙகாதேவி); (எ - று.)

யமனிலும் வலிய துணிவுடையவ னிவனென்பதூ, அவளுட்கோள். "மெயதெரிபொருண்மே லன்மையும விளம்ப" என்றதனால், 'இவன வாநர

மல்லன்' என்று துணிந்தபொருளின்மேல் மற்றொன்றல்லாததன்மை வைத்ரீக் கூறப்பட்டது. துஞ்சுதல் - இறத்தலும், சூழ்தல் - சுழலுதலுமாம். நகுகின்றான் என்றதன்பின் 'என்று' என வருவித்து, அதனை 'நினைவுறரூள்' என்பதனோடு இயைத்து முடிபுகாண்க. பி-ம்:-[1]கண்ட. [2]நினைகின்றாள்.

அஎ.—இலங்காதேவி அநுமான்மேற் சூலத்தையெறிதல்.

கொல்வா மன்றேற் கோளுறு மிவ்வூ ரெனல்கொண்டாள்
வெல்வாய் நீயே வென்றி யெனத்தன் விழிதோறும்
வல்வாய் தோறும வெங்கனல் பொங்க மதில்வாயில்
செல்வா யென்னு மூவிலை வேலைச செலவிட்டாள்.

(இ - ள்.) 'கொல்வாம் - (இவனைக) கொல்லக்கடவோம்; அனறு எல் - அங்ஙனம் நாம்செய்யாமற்போனால், இ ஊர் கோள் உறும் - இநத ஊர் (இவனால்) அழிவடையும்', எனல் கொண்டாள் - என்று கருதினவளாய, (அநுமானை நோககி), வெல்வாய நீயே வென்றி என ('வெல்லவல்லவன் நீயேயானால் (என்னை இபபொழுது) வெல்லக்கடவாய்' என்று சொல்லி, மதில் வாயில் செல்வாய் என்னு - '(நீ உட்செலலவல்லவனானால்) இம்மதிலின்கணுளள கோபுரவாயிலினவழியாகவே உட்செல்வாய்' எனறும சொல்லி, —தன விழிதோறும் வல் வாய் தோறும் வெம் கனல் பொங்க - தனது (எட்டுக் கணகளிலும வலிய நான்கு) வாய்களிலும் வெவ்வியநெருபபு மிகுதியாக எழ, மூ இலை வேலை செல விட்டாள் - (தன்கையிலுளள) முததலைச சூலாயுதததை (அநுமான்மீது) செல்ல எறிந்தாள், (இலஙகாதேவி); (எ - று.)

அன்றேல் - நம்மாற கொல்லமுடியாதானால எனினுமாம்.—வென்றி - எவலொருமைமுற்று. 'நீ இம்மதிலின் வழியாய்பபோவாய்' என்று இகழ்ச்சிகுறிப்பாகிய எதிர்மறையிலககணையாற கூறியதாகவும கொள்ளலாம; நீ போகமுடியா தென்றபடி. (அஎ)

அஅ.—அச்சூலத்தை அநுமான் ஒடித்துஎறிதல்.

தடித்தா மென்னத் தன்னெதிர் செல்லுந் தழல்வேலைக்
கடித்தா னாகம விண்ணின் முரிக்குங கருளன்போ
லொடித்தான் கையா லுமப ருவப்ப வுயர்வுகாலம்
பிடித்தா ணெஞ்சந் துண்ணென வெண்ணம[1]பிழையாதாள்.

(இ - ள்.) தடிதது ஆம என்ன தன் எதிர் செல்லும்-மின்னலேயாமிது வென்று சொல்லுமபடி தனது எதிரிலே வந்த, தழல் வேலை - நெருப்புச சொலிக்கினற அநதச்சூலாயுதததை—(அநுமான்),—நாகம் கடிததான் விணணில முரிக்கும கருளன் போல் - சாப்பதததை வாயினால கவ்விககொணடு சென்று ஆகாயமாகததில் துணடுபடுத்துகின்ற கருடன்போல, உம்பா உவப்ப - தேவர்கள் மகிழவும, உயர் காலம் பிடித்தாள்-நெடுங்காலமாக (அச்சூலத்தைக்) கையிற்பிடிததுளளவளும, எணணம் பிழையாதாள் - தான்

நினைத்தகாரியந் தவறாதவளுமான அவ்விலங்காதேவி, நெஞ்சம்துண்ணெனமனம் திடுக்கிடவும், கையால் ஓடிததான் - தன்கைகளாற பிடிதது ஓடித் தெறிந்தான்; (எ - று.)

உவமையணி. தடித - வடசொல். கருளன் - வடசொல்திரிபு. சிறிய திருவடியாகிய அநுமானுக்குப் பெரியதிருவடியாகிய கருடாழ்வானும், பிராணிகளைகொல்லுங்கொடிய நீண்ட சூலாயுதத்துககு நாகமும உவமை. துண்ணெனல் - அசசக குறிப்பு. பி - ம்:—[1]பிழையாதான். (அஅ)

அகூ.—அநுமான் அவளது மற்றையாயுதங்களையும் பறித்துஎறிதல்.

இறறுச சூல்[1]நீறெழு காலத் தெரியொபபாண்
மற்றுததெய்வப பலபடை [2]கொண்டு மலைவாண்மே
லுற்றுக் கையா லாயுத மெலலா மொழியாமற்
பற்றிக் கொள்ளா விண்ணி லெறிநதான்[3]பழியோர்வான்.

(இ - ள்.) சூலம் இற்று நீறு எழு காலத்து - (இங்ஙனம் தனது) சூலாயுதம் முறிந்து துகளாயப்போனபோது, எரி ஒப்பாள - (இலங்காதேவி) நெருப்புப்போல்க கோபத்தாற) சொலிப்பவளாய, மறறு தெய்வம் பல் படை கொண்டு மலைவாள்-தெயவத்தன்மையுளள மாறைப்பல ஆயுதங்களைக் கொண்டு போரசெயபவளானாள்; (அதுகண்டு), பழி ஓர்வான் - (பெண்பாலாகிய இவளைக் கொல்லுதல்) பழிபபுகுகிடமா மெனறு எணணுபவனான அநுமான், மேல் உற்று - அவளமேற பாய்நது, ஆயுதம் எல்லாம ஒழியாமல் கையால் பறறி கொள்ளா - (அவள்கைகளிலிருநத) ஆயுதங்களையெல்லாம ஒன்றும மிசசமில்லாதபடி தனகைகளாற பிடிததுப்பறித்து, விணணில எறிந்தான் - வானததிற செல்ல வீசியெறிநதுவிட்டான்; (எ - று.)

'மறறுத தெயவப்பல்படை', 'ஆயுதமெல்லாம' என்றது, எஅ - ஆஞ செய்யுளிற்கூறிய வேலமுதலிய எட்டனுள சூலமொழிநத ஏழினையும. ஆயுதம் - வடசொல் அவளைகொல்லாமல் அஞ்சுவித்து வெலலக்கருதினனாய் அவள்கையிற படைகலங்களை இல்லையாகின னென்பா, 'பழியோவான்' என்றார்; மேல் கூக - ஆஞ செயயுளையும காணக. அவ்வாறு தான கைப்பறறிய ஆயுதங்களை அவளமேலெறியாமல் விணணிலெறிநததறகு இது காரணமாகினறதனால், கருத்துடையடை கோளியணி யெனனலாம். பி - ம்:—[1]நீறெழலோடும். [2]கொணடமலைவாளை. [3]பழியில்லான. (அகூ)

கூ0.—அவள் அநுமானை அடிக்கவருதல்.

வழங்குந் தெய்வப பல்படை காணாண் [1]மலைவான்மேன்
முழங்கும் மேக மென்ன [2]வுரபபி முதிர்கின்றாள்
கழங்கும பநதுங் குனறுகொ டாடுங் கரமோசசித்
தழங்குஞ செந்தீச் சிநத வடித்தா [3]டகவில்லாள்.

(இ - ள்.) (பின்பு), தகவு இல்லாள் - தகுதிறகுணமாகிய பொறுமை யில்லாதவளான அவ்விலங்காதேவி, வழங்கும தெய்வம் பல் படைகாணாள் - (தான்) பிரயோகிப்பதற்குஉரிய தெயவத்தன்மையுளள பல ஆயுதங்களையும் தன்னிடத்திலில்லாதவளாய், மூதிரின்றாள் - கோபம்மிக்கவளாகி, முழங்கும மேகம் என்ன உரப்பி - இடிமுழங்குகின்ற மேகம்போலே ஆரவாரஞ் செய்து (அநுமானை) அதட்டி, குன்று கழங்கும் பந்தும் கொடு ஆடும் கரம் ஓசசி - மலைகளைக கழற்காய்களாகவும் பநதுகளாகவும் கொணடு ஆடவல்ல தன்கைகளை உயரவெடுத்து, (அவற்றால்), மலைவான்மேல் - (தன்னையெதிர்த் துப்) போரசெய்பவனான அவ்வநுமானமீது, தழங்கும செம் தீ சிந்த அடித் தாள - ஒலிததுக்கொணடெரிகின்ற செந்நிறமான நெருப்புப்பொறி சிதறும படி அறைபவளானாள்; (எ - று.)

நீகுச் செம்மை - இயற்கையடைமொழி; இனம்விலக்க வந்ததன்று. "தகுதியான்வென்றுவிடல்" என்றவிடத்து 'தகுதி' என்றதுபோல, இங்கு 'தகவு' என்பது - பொறுமை யென்றபொருளில் வந்தது; இசசொற்கு - அறிவு, இரக்கம, உவமை என்ற பொருள்களும் உண்டு. பி - ம்:—[1]மழை வான்மேல். [2]மூரற்றிமுனிகின்றாள், உரப்பி முரிகின்றாள். [3]தகையில்லான்.

கூக.—அநுமான் அவள் கைகளைப்பிடித்துக்கொண்டு அவளை யடித்தல்.

அடியா முன்ன மங்கை யனைத்து மொருகையாற
பிடியா வென்னே பெண்ணிவள் கொலலிற் பிழையென்னு
வொடியா நெஞ்சத் தோரடி கொண்டா னுயிரோடு
மிடியே றுண்ட[1] நாகமெனப்பா ரிடைவீழ்ந்தாள்.

(இ - ள்.) அடியா முனனம் - (அவ்வாறு தன்னை அவள்) அடிததற்கு முன்பு, (அநுமான்), அம் கை அனைத்தும ஒரு கையால் பிடியா - (அவளு டைய) அழகியகைகளையெல்லாம் தனது ஒருகையினாற் சேரப்பிடிததது, 'என் னே - இது எனன தருமசங்கடம! பெண இவள - பெணணாயிருககின்றாள் இவள்: கொல்லின் பிழை-(இவளைக) கொனறால் ஸ்தரீஹததிதோஷமாகின் றது,' என்னு - என்றுஎணணி, ஒடியா நெஞ்சதது ஓர் அடி கொணடான் - உடையாதவலிமையையுடைய (அவளது) மாபில் (தனது மறறொருகை யால்) ஓர் அறை அறைந்தான; (அதனால் அவள்), இடிஏறு உணட நாகம் என-பேரிடி விழப்பெற்ற மலைபோல, உயிரோடும் பாரிடை வீழ்ந்தாள் - உயிருடன தரையில் விழுநதாள்; (எ - று.)

இங்ஙனம் வலியஎதிர்ப்பவளைக் கொல்லவேண்டுவது அவசியமாதலையும், அங்ஙனகொனறால பெரும்பாதகமாதலையும் கருதி, 'என்னே!' என்று சிந் தித்து, அவளைகொல்லாது வலியொடுகூடி வெலவானாயின னென்க: 'ஓர் அடிகொண்டான்' என்பதறகு ஒருகாலையிட்டு உதைததானென்றுபொருள் கூறுவது மேல கூச - ஆஞ் செயயுளொடு மாறுபடும் உயிரோடுமெ பாரிடை

வீழ்ந்தாள். உயிரமாததிரமேநிற்க வலிமை முற்றும் ஒடுங்கி விழுந்தனளென்க. நாகம் - சாப்பமுமாம். பி - ம்:—[1]மால்வரை போனமணணிடை. (௧௧)

௧௨.—அடிபட்டுவிழுந்த அவள் எழுந்து சிலசொல்லத்தொடங்குதல்.

விழுந்தா ளெழுந்தாள் வெங்குரு திச்செம் புனல்வெள்ளத்
தழுந்தா நின்ற ஞன்முக ஞர்தம் [1]மருளுன்றி
யெழுந்தாள் யாரும் யாவையு மெல்லா [2]வுலகத்துந

தொழுந்தாள் வீரன் றூதுவன் முன்னின் றிவைசொன்னாள்.

(இ - ள்) விழுந்தாள - (அவ்வாறு) விழுந்தவளான அவ்விலங்காதேவி, கொந்தாள் - (உடலும் உள்ளமும்) வருந்தியவளும், வெம் குருதி செம் புனல் வெள்ளத்து அழுந்தாநின்ற - வெவ்விய (தனது) இரத்தமாகிய செந்நீர் வெள்ளத்தில் அழுந்திநின்றவளுமாய, நான்முகனாதம் அருளூன்றி-(முன்பு தனக்குப்) பிரமன்கட்டளையிட்டிருத்தலை உள்ளத்திற்கொண்டு, எழுந்தாள் - எழுந்து, எல்லா உலகத்தும் யாரும் யாவையும் தொழும் தாள வீரன் தூதுவன் முன் நின்று - சகலலோகங்களிலுமுள்ள உயர்திணையுயிர்களனைவரும் அஃறிணையுயிர்களனைத்துமவணங்கப்பெற்றதிருவடிகளையுடையவீரனான ஸ்ரீராமபிரானது தூதனாகிய அவ்வநுமானது எதிரில்நின்று, இவை கூறினாள்-இவ்வார்த்தைகளைச் சொல்பவளானாள்; (எ - று)—அவற்றை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க. நான்முகனா, 'ஆ' விகுதி - உயர்த்தற்பொருளது. நான்முகன் - சதுர்முகன். பி - ம்·—[1]அருளுன்னி. [2]உலகேழும். (௧௨

வேறு.

௧௩.—அவள் தன்னை இன்னாளென்று தெரிவித்துப் பணிமொழி கூறுதல்.

ஐயகேள் வையநல்கு மயனரு ளமைதி யாக
வெய்தியிம் மூதூர் காப்பெ [1]னிலங்கைமா தேவி யென்போ
செய்தொழி லிழுக்கி யுள்ளந் திகைத்திந்தச் சிறுமை செய்தே
னுய்தியென் [2]றளித்தி யாயி னுணர்த்துவ னுணமை யென்றாள்.

(இ - ள்.) ஐய கேள் - ஐயனே! (யான் சொல்வதை நீ) கேட்பாயாக: வையம நல்கும அயன் அருள் அமைதி ஆக - உலகங்களைப் படைத்த பிரமனது கட்டளை காரணமாக, இ முது ஊர் எய்தி காப்பென் - பழமையான இந்த ஊர்காக்க வந்து (இதனைக) காத்துவருகின்றேன்; இலங்கை மாதேவி என்போ - இலங்காதேவியென்பது எனது பெயர்; செய் தொழில் யான்செய்யும் இந்நகாக் காவற்றொழிலில் ஊக்கத்தால், இழுக்கி - (உன் விஷயத்திற் செய்ய வேண்டிய பணிவு) தவறி, உள்ளம் திகைத்து இந்த சிறுமை செய்தேன் - மனமயங்கி இந்தச் சிறுதொழிலை (நினக்கு,ச செய்தேன்; உய்தி என்று அளித்தி ஆயின் - (நீ என்னைக் கொல்லாமல் எனது குற்றத்தைப் பொறுத்தருளி) உயிர்வாழ்வாயாகவென்று (எனக்கு) அருள்செய்வையானால், உணமை உணர்த்துவல் - மெய்ம்மையான தொரு செய்தியை (உனக்குத) தெரிவிப்

பேன்' என்றாள் - என்று சொன்னாள், (அவ்விலங்காதேவி); (எ - று.)—அவ்வுணமை. அகித்தகவியில் விளங்கும்.

என்னை நீ கொல்வதில்லையென்று அருள்செய்வையாலால் என்பது, 'உய்தியென்றளிததியாயின்' என்றதன் கருத்து 'செய்தொழிலிழுக்கி' என்பதறகு - யானசெய்யுந் தொழிலில் தவறியென்று உரைததல், சிறப்பன்று. இலங்கைமாதேவி என்பதில், மா - அசை; "உலோகமாபாலன்" என்றதிற் போல. பி - ம்.—[1]இலங்கையாவேனும் யானே, இலங்கைமாதேவியென் பேன் [2]உரைததியாயின்.

இதுமுதல் இருபத்தொன்பது கவிகள் - இக்காண்டத்தின் முதற்கவி போனற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (கூக)

கூச.—முன்பு பிரமன் அவட்குக் கூறிய கட்டளை.

எத்தனை காலங் காபபல் யானிந்த மூதூ ரென்று
முத்தனை வினவி னேற்கு முரண்வலிக் குரங்கொன் றுன்னைக்
கைத்தல மதனாற் றீண்டிக் காய்ந்தவன் றென்னைக் காண்டி
சித்திர நகரம் பினனைச சிதைவது திண்ண மென்றான்.

இதுவும், அடுதத கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) இந்த மூது ஊர் எததனை காலம காப்பல் யான் என்று - 'பெரிய இந்நகரததை எவ்வளவு காலம் காககககடவேன் யான்?' என்று, முத்தனை வினவினேற்கு-அந் நான்முகககடவுளை வினாவின எனகு,—(அப்பிரம தேவன்),—'முரண வலி குரகு ஒனறு-மிகக வலிமையுடைய ஒரு குரகு, உன்னை—, கைததலம அதனால் தீண்டி காய்ந்த அன்று - தன்கைகளினால் தொட்டு வருத்தும் அந்காளில, எனனை காணடி - (அநநகரத்தை விட்டுவந்து) என்னைப் பாரப்பாய்; பினனை - அதன பின்பு, சிததிரம நகரம் சிதைவது திணணம - அழகிய அநநகரம அழிவது நிசசயம்,' என்றான்-என்று சொல்லியருளினன்; (எ - று.)

இலங்காபுரியைக காககுமாறு தனகுப் பிரமன் கட்டளையிட்டபோது இத் தேவி இங்ஙனம வினவினளெனக. 'முததன்' - முததி பெறுதறகு உரியவனென்றபடி. முத்தன - வடசொல். முததுப்போ லருமையானவ னெனினுமாம. முரண, வலி - ஒரு பொருட்பன்மொழி. 'காயும் அன்று' எனற பொருளில 'காய்ந்த அனறு' என்றது, இயல்புபற்றிவந்த காலவழு வமைதியெனத தக்கது; அங்ஙனங காயதல் தவறுதென்ற நிசசயம் தோன்ற இறந்தகாலத்தாற் கூறினரென்றலுமாம. சித்ரநகரம் - வடமொழித்தொடர்

கூரு.—அநுமானைப் புகழ்ந்து விடையளித்து அவள் செல்லுதல்.

அன்னதே முடிநத தைய வறம வெலலும் பாவந தோற்கு
[1]மெனனுமீ தியம்ப வேணடுந் தகையதோ வினிமற் றுன்னு

லுன்னிய வெல்லா முற்று முனக்குமுற் றுத துண்டோ
பொன்னகர் புகுதி [2]யெனனுப் புகழ்நதவ னிறைஞ்சிப் போனுள்.

(இ - ள்.) 'ஐய - ஐயனே! அன்னதே முடிந்தது-அப்பிரமன் சொன்ன படியே யாயிறறு; அறம் வெல்லும் பாவம் தோறகும் எனனும் ஈது இயம்ப வேண்டும் தகையதோ - 'தருமமே ஜயிககும் பாவம தோல்வியடையும்' என்கிற இவ்வுணமை புதிதாகச சொல்லவேண்டுந் தன்மையதோ? [அன்று: பிரசித்தமென்றபடி]; இனி—, உன்னுல் உன்னிய எல்லாம முறறும - உன்னுல் நினைககப்பட்ட காரியங்களெல்லாம தடையின்றி நிறைவேறும்; உனக்கு முற்றுதது உணடோ - (மிக்க ஆறறலையுடைய) உனக்கு முடியாததும ஒன்று உளதோ? பொன நகர புகுதி - பொனமயமான இந்நகரினுள்ளே (இனி உன் விருப்பததின்படி இனிது) செல்வாய்', என்னு - என்று சொல்லி, அவள் - அநத இலங்காதேவி, புகழ்ந்து-(அநுமானைத்)துதித்து, இறைஞ்சி வணங்கி, போனுள் - (பிரமலோகததுககுச) சென்றுள்; (எ - று.)—மற்று - வினை மாறறு. பி - ம் —[1]என்னுமதியம்ப, [2]எ - று புகன்றயனுலகமபுககாள். (கரு)

கூசு.—அநுமான் மதிலைத்தாவி இலங்கையினுட் புகுதல்.

வீரனும் விரும்பி நோக்கி [1]மெய்ம்மையே விளையு மஃதென்
றுரியன் கமல பாத மகத்துற வணங்கி யாண்டப்
[2]பூரிய ரிலங்கை மூதூர்ப் பொன்மதி றுவிப் புக்கான்
சீரிய பாலின் வேலை சிறுபிரை தெறித்த தன்னுன்.

(இ - ள்.) வீரனும் - வீரனுன அநுமானும்,—விரும்பி - (அதுகேட்டு) மகிழ்சசிகொண்டு, நோக்கி - (அவள்சொனன அச்சொல்லைகருறிது) ஆலோசித்து, மெய்ம்மையே விளையுமஃது என்று - உணமையானநீதியே பலிப்பது என்று எணணி, ஆரியன கமலம பாதம அகததுஉற வணங்கி - (யாவரும்) சரணமடையததக்கவனுன இராமபிரானது தாமரைமலர்போன்ற திருவடிகளை மனததிலே பொருந்தக்கொணடு வணங்கி, ஆண்டு - அதன்பின்பு, அபூரியா இலங்கை முது ஊர பொன் மதில் தாவி-அநதக் கீழ்மக்களான அரக்கர் வாழ்கிற இலங்கையென்னும பெரியநகரத்தினது பொன்மயயான மதிலைதாண்டி, சீரிய பாலின் வேலை சிறு பிரை தெறிததது அன்னுன் புக்கான் - சிறந்தபாற்கடலிற் சிறிதுமோர் சிந்தினதைப்போன்று (அந்நகரினுட்) பிரவேசித்தான்; (எ - று.)

பால்மிகுதியாயிருந்தாலும் அதிற சிந்திய சிறிதுமோர் அப்பால்முழுவதையும் தன்மை திரிததுவிடுதல்போல, பெரிய அவலிலங்காபுரியினுட் சிறுவடிவமுள்ள அவ்வநுமான் புகக்கது அந்நகரமுழுவதையும் விகாரப்படுததுதற்குக காரணமாதலைக கருதி, இவ்வொபபுமை கூறினுர்; அநுமான் இனி அந்நகரமெங்கும சென்றுசோதலையும காட்டும இவ்வுவமை யென்க. உவமையணி. 'மெய்மமையேவிளையுமஃது' என்றது, சததியமேஜயமென்ற கருதது. 'அஃது மெய்ம்மையேவிளையும என்று' என மொழிமாறறி, அவள்சொன்ன

அசசெயகை தவறாமலே நிகழுமென்று நம்பிகைகொண்டு என்றும் உரைகக லாம. பி - ம்:—[1]மெய்மமையும வினையும. [2]பூரியன. (கசு)

கூஎ.—அங்குள் ா வெளிச்சத்தை அநுமான் பார்த்துப் பகலோவெனக் கருதுதல்.

வான்றொடர் மணியிற் செய்த மையறு மாட கோடி
யான்றபே ரிருளைச் சீத்துப் பகல்செய்த வழகைநோக்கி
யூன்றிய வுதயத் துச்சி யொற்றை[1]வா ளுருளைத் தேரோன்
றோன்றினன்கொல்லோ[2]வென்னவறிவனுந்[3] துணுக்கங்[4]கொண்டான்.

(இ - ள.) வான் தொடர் - ஆகாயத்தையளாவியுயாந்தனவும், மணியின் செயத இரதத்தினகளினாற செயயப்பட்டனவுமான, மை அறு மாடகோடி - குற்றமறற (அந்நகரததிலுள்ள) உபரிகைவீடுகளின் வரிசை, ஆன்ற பேர் இருளை சீத்து பகல் செயத - (உலகததிற) பரவிய மிகுதியான இருளை யொழிதது (இராததிரிகாலததிற) பகல்போன்றவெளிசசததைசசெயதுள்ள, அழகை—, நோக்கி - பார்தது,—'வான் ஒற்றை உருளை தேரோன் - பெரிய ஒரு சகரமுள்ள தேரையுடையவனான சூரியன், ஊன்றிய உதயத்து உசசி தோன்றினன் கொல்லோ - (கீழ்ததிசையில்) நிலைபெறற உதயகிரியினது சிகரததில் உதிததுவிட்டானோ?' என்னா - என்று எணணி,—அறிவனும் துணுககம கொணடான் - அறிவிற்சிறந்தவனான அனுமானும திடுக்கிட்டான்.

அந்நகரமுழுவதிலும் சீதையைத் தேடிகாணுதற்கு இரவை எறறசமய மென்று கருதியிருநதன னாதலின், அஃதொழியச சூரியோதயம விரைவில் நேர்தல்குறிதது திடுகிகிட்டு வருந்தினனென்க. அந்நகரதது இரத்தின கசிதமான மாடமாளிகைகளின் ஒளியினாலாகிய வெளிசசததைக கணடு அத னைச சூரியகிரணததாலாகிய தென மயங்கின னென்றதனால, மயக்கவணி. அவனமதிரிபுணர்வுகொளளுதறகுவலாதவன் காலவுணர்வையுடையவனான அநுமான் என்பது, 'அறிவனும்' என்றதனால் விளகுகிற்று. மாடகோடி - மாளிகைகளின் சிகர கலச மென்றுமாம் பி - ம்.—[1]வாா. [2]என்றங்கு. துயர்வு. [4]உற்றான. (கூஎ)

கூஅ.—அன்னகரினொளியை அநுமான் கொண்டாடுதல்.

மொய்ம்மணி மாட மூதூா முழுதிரு ளகற்றுநதானே
மெய்ம்மையே யுணரி [1]னாரு மிகையென விலங்கிப் போனா
னிமமதி விலங்கை நாபப ணையதுமேற் றன்[2]பா லெய்து
மினமினி யல்ல னோவவ வெயிறகதிா வேந்த [3]னென்றான்.

(இ - ள.) (இவ்வனம் துணுககங்கொண்ட அநுமான்),—உடனே செவ் வையாயபபாரததது அவ்வெளிசசத்தின் உண்மைககாரணத்தை யுணாந்து),— மெய்ம்மையே உணரின் - உணமையைக கணடறியுமிடத்து, மொய் மணி மாடம் முது ஊா - கூட்டமான இரததினங்கள பதிதத உபரிகைவீடுகளை

யுடைய பெரிய இவ்விலங்காபுரிதானே—, இருள் முழுது அகற்றும் - இருள் முழுவதையுமபோகவிடுமெ; நாண ஆம-நாமஇவ்விலங்கையினிருளைநீக்குமாறு சென்றால் (நமகசு) வெட்கமாம மிகைவிலங்கிபோனான-(நாம் இந்நகரத்திறகு வெளிச்சந்தருவது) அநாவசியம், என - என்று எணணி, (சூரியன்) ஒதுங்கிச செலகின்றவனானான்; (இங்கனமின்றி), இ மதில் இலங்கை நாப்பண் - மதில்சூழ்ந்த இவ்விலங்காபுரியின் நடுவில், அவெயில் கதிர வேந்தன்-உஷ்ண கிரணங்களையுடையவனும் (சுடர்கட்கெல்லாம) தலைவனுமான அசசூரியன், எயதும எல - வருவானானால், தன்பால் எய்தும் மினமினி அல்லனோ - (அச சூரியன்) தனது முன்னிலையில்வந்த மின்மினிப்பூசசிபோலாகானோ? என்றான் - எனறு எணணினான; (எ - று.)

இராவணனிடதது அசசததாற் சூரியன் இந்நகரததிற்குநேராக மேலே வானததிறசெல்லாமல் ஒதுங்கிசசெல்லுதற்கு, இஙகும் வேறொருகாரணம் கற்பிததுக்கூறப்பட்டது. இந்நகரத்திலுளள இரததினகசிதமான மாடமாளிகைகள்தாமே இருள்முழுவதையு மொழிதது மிகப் பெருஞசோதியாய் விளங்குதலைக கணடு, சூரியனதான் இதனெதிரில் வருதற்குவெள்கியும, இந்நகரத்துக்கு வெளிசசந்தருதற்குத் தான வேணடுவதில்லையென்பதைக் கருதியும், விலகிசசென்றனனெனறு ணைக; என்றது ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இசசெய்யுள், கீழ் கசு - ஆஞ் செயயுளோடு ஒருசாரா ஒப்பிடததககது. முது ஊர மணி மொய மாடம என்று மொழிமாறறி, பெரிய இந்நகரிலுளள இரததினங்கள்நிறைந்த மாளிகைகளென்று பதபபொருள்கூறுதலு மொன்று. பி - ம் —[1]யானோ. [2]தன்முதன [3]அமமா (கூஅ)

கூகூ —இதுவும் அது.

பொசிவுறு பசும்பொற குன்றிற பொன்மதி னடுவட் பூத்து
வசையற விளங்குஞ் சோதி மணியினா [1]லமைநத மாடத்
[2]தசைவில விலங்கை மூதூ [3]ராரிரு ளின்மை யாலே
நிசிசர ராயிற் றம்மா நெடுநகர் நிருத ரெல்லாம.

இதுவும் அதேத கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) நெடு நகர் நிருதர் எல்லாம் - பெரிய இவ்விலங்காபுரியிலுள்ள அரக்கரனைவரும,நிசிசரா ஆயிற்று இரவிற்சஞ்சரிகின்றவாகளாயினமை,— பொசிவு உறு பசுமபொன் குன்றின் - நெகிழுமியல்புள்ள மாற்றுயாநதபொன் மயமான மகாமேருகிரிபோன்ற, பொன்மதில்-பொன்மயமாயோங்கிவிளங்குகின்ற மதிலினது, நடுவண - நடுவில், பூத்து - அழகியனவாயுணடாகி, வசை அற விளங்கும்-குறறமில்லாமல் விளங்குகின்ற, சோதி மணியினால அமைந்த மாடதது - ஒளியுள்ள இரத்தினங்களினாலமைந்த உபரிகைவீடுகளின் பிரகாசததால், அசைவு இல இலங்கை முது ஊர் - அழிவில்லாத பெரிய இவ்விலங்காபுரியில, ஆ இருள் இனமையாலே நிறையுமியல்புள்ள இருள் இல்லாததனாலேயாம் ; அமமா - ஆசசரியம! (எ - று.)

இராக்கதர் இயல்பிலே இரவில் வலிமைகொண்டு சஞ்சரிப்பவராயிருத்தற்கு, அவர்கள் வாழுமிடமாகிய இலங்காபுரியிற பொன்மயமான மதிலகளின் நடுவில் இரதத்தினசிதமாயுள்ள மாடமாளிகைகளின் ஒளியினால் அந்நகரில் இராததிரியிலுமுட்பட இருளில்லாமையினாலே யாகுமென ஒருகாரணம் கற்பிததது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி மிகவுமமாறறுயாந்த பொன்நெகிழுமியல்பினதாதலால், 'பொசிவுறு பசுமபொன்' எனபபட்டது. பி - ம்.—[1]அமைதது. [2]இசையினால். [3]இருளினமையாதலாலே. (கூகூ)

கஂ0.—அநுமான் வீதியின்நடுவிற்செல்லாமல் ஓரமாய்ச்செல்லுதல்.

என்றன னியம்பி வீதி யேகுத லிழுக்க மென்னாத்
தன்றகை யனைய மேனி சுருககிமா ளிகையின் சாரல்
சென்றன னென்ப மன்னோ தேவருக் கமுதமீந்த
குன்றென வயோத்தி வேந்தன் புகழெனக் குவவுத் தோளான்.

(இ - ள்.) தேவருக்கு அமுதம் ஈந்த குன்று என - தேவாகட்கு அமிருதத்தைககொடுதத மநதிரகிரிபோலவும, அயோத்திவேநதன புகழ் என - அயோததிமாநகரததுககுஉரிய அரசனாகும் இராமபிரானது கீரததிபோலவும, (ஓநகிவிளங்குகின்ற), குவவு தோளான் - திரண்டதோள்களையுடையவனான அநுமான,—என்றனன இயம்பி - எனறு (இவவாறு தனககுள்ளே) சொல்லிககொணடு, வீதி ஏகுதல் இழுக்கம என்னா - 'வீதிகளின் நடுவே செல்லுதல் தகுதியன்று' என்று எணணி, தன் தகை அனையமேனி சுருகி - தனது பெருந்தகைமைக்கு ஏற்பக கமபீரமான தோறறமுடையதாயிருககின்ற உடம்பைச சுருங்கசசெய்துகொணடு, மாளிகையின சாரல் சென்றனன் (அவ்வீதிகளிலுளள) வீடுகளினஓரமாகப் பிராட்டியைததேடிக்கொணடு) செல்பவனானான; (எ - று.)—என்ப, மன், ஓ - அசைகள், என்ப - எனறுசொலலுவா (அறிந்தோர்) எனறும கொளளலாம.

இததன்மைததான வெளிசசததிலே தெருக்களின்நடுவில் தான்சென்றால் தனனைப் பிறர் கவனிததுபபாரததது உணாதல் கூடுமாதலின் அது தவறென்றுகருதி அங்ஙனஞ்செல்லாமல் வீடுகளின்நிழல் சாய்ந்திருக்கப்பெற்ற ஒருசாரோரமாகவே ஒதுங்கிசசென்றன னெனக. கீழ் சஉ-ஆஞ்செயயுளில் "தன்தகையனையமேனி சுருகி யசசரளசசாரறகுனறிடையிருந்தான்" என்றவா மீணடும இங்கு 'தன்தகையனையமேனி சுருகிசசென்றனன்' என்றதனால், இடையே இலங்காதேவியோடு பொருகின்றபோதும மதிலைத தாவிககடநது சென்றபோதும தனதுஉடமபை வளாத்திககொணடனனென்பது தோனறுமெனபா. இனி, முனபு மேனிசுருகியவன் இபபொழுது இனனும அதனை மிகசசுருகின னென்றறகு இதுகூறினரெனினும ஒககும. கடலகடததறபொருட்டுத் தனது வடிவததை மிகபபெரிதாக வளர்ததிககொணட அநுமான அநத விசவரூபததை அடககித தனது நிஜவடிவமாகியமையை அங்குககூறியவா, அவ்வநுமான் இலங்கையில் தன்னைப பிறா

கண்டு பொருள்செய்யாதவண்ணம் மீளவும் உடம்பைசசுருக்கி மிகச சிறுவடி வங்கொண்டதனை இங்குக கூறுகின்றன ரெனக் கொள்ளுதல். நோ; முக னூலிலும் இருமுறை உடலசுருககியமை கூறப்பட்டுளளது; இப்பொழுது பூனையளவாயின னென்றது, முகனூல் மந்தரகிரியை மதாகக்கொண்டு தேவாகள் பாறகடல் கடைந்தபொழுது அகனின்ற அமிருதம் எழுந்தது பற்றி, 'தேவருககு அமுதமீந்தகுன்று' எனப்பட்டது; உபசாரவழகு. தசரதசக்கரவர்த்தியின் மூத்தகுமாரனாய் மநுநீதிமுறைப்படி அரசுககு உரி யவனாகலின், இராமபிரானை 'அயோத்திவேந்தன்' என்றார்; தசரதசக்கர வாததியென்று கொள்வாரு முளர் (கஎ0)

கஎக.—அநுமான் அங்குப் பல இடங்களிற் சீதையை நாடிக்கொண்டு செல்லுதல்.

ஆத்துறு சாலை தோறு மானையின் கூடந் தோறு
மாத்துறு மாடந் தோறும வாசியின் பந்தி தோறுங்
காத்துறு [1]கடைக டோறுங் கருங்கடல் கடந்த [2]காலாற்
பூத்தொறும [3]வாவிச் செல்லும் பொறிவரி வண்டிற் போனான்.

(இ - ள்.) ஆ துறு சாலை தோறும - பசுககள் கட்டப்பட்டிருக்கின்ற கொட்டகைகளிலும், ஆனையின கூடம் தோறும் - யானைகள் கட்டப்பெற றுள்ள இடங்களிலும், மா துறு மாடம் தோறும் - சேனையின சதுரங்க களுட் பெரியனவான தோகள நிறகின்ற இடங்களிலும், வாசியின பந்தி தோறும - குதிரைகள் கட்டுகின்ற சாலைகளிலும், காத்து உறு கடைகள் தோறும் - கரிய கடலைத தாணடிவந்த (தனது) கால்களினால் (தாவி),—பூ தொறும வாவி செலலும பொறி வரி வணடின - மலாகளிலெலலாம் (தேனை விரும்பிச) செலலுகின்ற உடறபுளளிகளையும இசைப்பாட்டையு முடைய வணடுபோல, போனான - (சீதையைத தேடிககொணடு) சென்றனன், (அநுமான்); (எ - று.)

உவமையணி. புஷ்பஸாரமாகிய தேனை மலர்கள்தோறும் அவைகெடாத படி நாடிசசெல்லும வணடு, ஸாரஜீவனாகிய பிராட்டியை இடந்தோறும அவை நலிவுபடாதபடி நாடிசசெலலும் சிறுவடிவினனான அநுமானுககு உவமை கூறபபட்டது. ஆகதுறுசாலை - தொழுவம, துறுதல் - நெருங்குதல். யானை நிறகுமிடம, கூடமெனபபடும. குதிரைகட்டுஞ் சாலையைப பந்தி யெனப. எளிதிற சென்றமை தோனற, 'கருங்கடலகடந்தகாலாறபோனான்' என்றார். முனனும பினனும நின்ற ஆனை வாசிகளின பொருததததிறகு ஏற்ப, இடையிலநின்ற 'மா' என்பது, தேரெனக கொளளப்பட்டது. இனி, மா துறு மாடம - திருமகள பொருநதி வசிககின்ற வீடுகளெனறும் கொளள லாம; செலவம நிரமபிய மாளிகைக ளெனறவாறு: அழகுநிறைநத மாடமு மாம. கடை - இடமும, கருமை - பெருமையுமாம. நானகாமடியின் முதலில

பூததொறுமவாவிசசெல்லும் என்றும் படிககலாம. பி - ம்:—[1]சோலை. [2]தாளான். [3]காவிற. (கஎ௩)

கரஉ.—அப்பொழுதை அநுமானது நிலைமை.

பெரியநா ளொளிகொ ணாரு விதமணிப பித்திப பத்தி
சொரியுமா [1]நிழல்க ளாங்குச சுறறலாற் காலின் றோன்றல
கரியனாய வெளிய னாகிச செய்யனாய்க காட்டுங் காண்டற்
கரியனா [2]யெளிய னாய்ததன் னகத்துறை யழக னேபோல.

(இ - ள்.) நாள் ஒளி கொள் - நக்ஷத்திரங்களின ஒளியைகொணடுள்ள, நாரு விதம் - பலவகையான, பெரிய மணி - பெரிய இரததினங்களாலமைக கப்பட்ட, பிததி பததி - சுவாவரிசைகள், சொரியும் - வெளிவிடுகின்ற, மா நிழலகள - பெரிய ஒளிகள, ஆங்கு - அவ்வவ்விடததில், சுறறலால் - சூழ்தலினால்,—காலின் தோன்றல் - வாயுகுமாரனான அநுமான,—காண்டறகு அரியன் ஆய் எளியன் ஆய் தன் அகதது உறை அழகனேபோல் - (பகதியில்லாத பிறர்க்குக்) காணககூடாதவனாகியும (பகதியுள்ள அடியார்களுக) கானுதற்குஎளியவனாகியும தனதுமனதததில் வீற்றிருககின்ற ஸாவாமிகசுந்தரனாகிய திருமால் போலவே,—கரியன் ஆய் வெளியன் ஆகி செய்யன் ஆய் காட்டும்- (அங்கங்குச செல்லுமபோது) கருநிறமுடையவனாயும் வெணணிறமுடையவனாயும செநநிறமுடையவனாயும தோன்றுவன்; (எ - று)

நீலம் மரகதம மாணிககம் பவழம முதது வயிரம் முதலிய நவரததினங்கள் பலவலகநிறமுடையன வென்பது வெளிபபடை; வானததில் விளங்குகின்ற நக்ஷத்திரங்கள் பலவேறு நிறமுடையன வெனபதும் பிரசிததம; ஆகவே, 'நக்ஷத்திரங்களி னொளியைகொணட பலவகையிரததினங்கள்' எனப்பட்டன. அநுமான் பிராட்டியைத தேடிகொணடு இலஙகையிற பலவிடங்களிற செல்லுகின்றபொழுது நீலநிற விரததினசசுவாகளின ஒளி தன்மேல் வீசுகின்றவிடததுத தான நீலநிறமுடையவனாயும், வெணணிற விரததினசசுவாகளின ஒளி தன்மேல் வீசுகின்றவிடததுத தான் வெணணிறமுடையவனாயும, செந்நிற விரததினசசுவாகளின ஒளி தன்மேல் வீசுகின்றவிடத்துத தான செந்நிறமுடையவனாயும தோன்றுவன். இதறகு, அங்ஙனம் வெவ்வேறு நிறங்கொணட வடிவமாய்ததோன்றும ஸ்ரீ மகாவிஷ்ணுவை உவமை கூறினர். ஸ்ரீமந்நாராயணன தேவாகள் வேணடுகோளினபடி நான்கு வடிவமாய் அயோததியில் திருவவதரிததவிடததது இராமபிரானும் பரதாழ்வானும் கரியதிருமேனியையும, சதுருககனாழ்வான வெணணிறமான திருமேனியையும், இளையபெருமாள செயயதிருமேனியையு முடையவராதல் காணக. அன்றியும, மாயவனான எமபெருமான, கிருத யுகததிலுள்ளார சததுவகுணம் தலையெடுததவ ராதலால் அவர்களுககும்படி அககாலததில் அக்குணத்துககுரியவெணணிறததைககொணட வடிவுடையவனாயும், திரேதா யுகத்திலுள்ளார ரஜோகுணம் தலையெடுததவ ராகையால் அவாகளுககுமபடி

அக்காலத்தில் அகுகுணத்துக்குரிய செந்நிறத்தைக் கொண்ட வடிவுடையவனாயும், துவாபர யுகத்திலுள்ளார் ரஜோகுணதமோகுணமிசிரரா யிருக்கையால் அவர்களுடைய ருசிக்கு அநுகுணமாக அக்காலத்திலே சிவப்புமன்றி நீலமுமன்றியிருக்கும் பசுநிறத்தைக்கொண்ட வடிவுடையவனாயும், கலியுகத்திலுள்ளார் தமோகுணம் தலையெடுத்தவராகையால அவர்களுக்கமபடி அக்காலத்தில் அகுகுணத்துக்குரிய கருநிறத்தைக்கொண்ட வடிவுடையவனாயும காட்சிதருவ னென்பது, "பாலினீரமை செமபொனீரமை பாசியின் பசுமபுறம, போலுநீரமை பொற்புடைத்தடத்து வண்டுவிண்டுலா, நிலநீரமையென்றிவை நிறைந்த காலம நானகுமாய," "திருவடிவிற்கருநெடுமால் சேயனென்றுந் திரேதைககணவளை யுருவாய்த திகழ்ந்தானென்றும, பெருவடிவிற் சுடலமுதங கொண்டகாலம பெருமானைக கருநீலவண்ணனதன்னை" என்ற பெரியா பாசுரங்களால் விளங்கும; அவற்றில், பசுமை கருமைகட்கு உள்ள சிறு வேறுபாட்டைப் பெரிதாகப் பாராட்டாது அபேதமாகக் கூறும ஒற்றுமை நயமபறறிப் பசுமையை யொழிதது, கருமை வெணமை செமமையென்ற மூன்று நிறங்களையே எடுத்துக் கூறினரெனக கொள்க.

எமபெருமான் காணடற்கு அரியனும் எளியனுமாதலை, "பத்துடையடியவரககெளியவன் பிறர்களுக்கரிய விததகன்" எனப பெரியாரபணிததனுறுமுணாக. "என்றேனுங, கட்கணணுற காணுதவவ்வுருவை நெஞசெனனும, உட்கணணேற் காணு முணாநது" என்றபடி எம்பெருமான் புறககணணுகிய ஊனக்கண்ணுககுப் புலபபடாதவனாகியும அகககணணுகிய ஞானககணணுககுப் புலப்படுவனாகியும இருததல் பற்றியும 'காணடறகரியனாய் எளியனாய்' என்றல அமையும. எமபெருமான் "தமமையே நாளும வணககித தொழுவாரககுத, தம்மையே யொககவருள செயவராதலால" ராமபாவனையுடையனான அநுமான உட்கிடநதவணணமே புறமபொசிநது காட்டிடுகின்றனனென ஒருவகைச சமதகாரமமைய இக்கறபனை கூறினா கமபநாடரென்க. மேல் கஙச, உஙச-ஆஞ் செயயுள்களிலும அநுமனுககுத திருமாலை உவமை கூறுவா; நாள - நாளைக்குறிககின்ற நகூததிரததுககு ஆகுபெயா. பிறிதின் குணம்பெறலணியை அநுகமாகககொண்டுவந்த உவமையணி. பினனிரண்டடிகளில் தொடைழரணும், யமகமும காணக. பி - ம்:—[1]சிழலநகநகே. [2]எளியனும: (கஙஉ)

கஙங.—இதுமுதற் பத்தொன்பதுகவிகள் தூதகம்; அரக்கியர்முதலிய பற்பலரை அநுமான் பார்த்துக்கொண்டு செல்லுதல் கூறப்படுகின்றது.

காவக மயிலக ளென்னக களிமட வனன மென்ன
வானன கமலப போது [1]பொலிதர வரக்கா மாதர்
[2]தேனுகு சரளச் சோலை [3]தெய்வநீ ராறறிற் றெண்ணீர்
வானவர் மகளி ராடட மஞ்சன மாடுவாரை.

(இ - ள்.) தேன் உகு சரளம் சோலை - (மலர்களினின்றும் தேன்கூடுகளினின்றும) தேனபெருகடபெற்ற இனிமையான பூஞசோலைகளிலே,

வானவர் மகளிர் - தேவமாதாகள், தெயவம் நீர ஆற்றின் தெள் நீர்-தெயவத் தன்மையுளள (ஆகாசகங்கா) நதியினினறு கொணாநத தெளிவான நீரைக கொணடு, ஆட்ட- நீராட்ட, ஆனனம் கமலம போது பொலிதர - (தங்கள்) முகமாகிய செந்தாமரை மலா விளககமடைய, கான அகம மயில்கள் என்ன- காட்டிலுள்ள மயிலகள் போலவும், களி மடம் அனனம் எனன - களிப்பை யுடைய இளமையான அனனபபேடைகள போலவும், மஞ்சனம ஆடுவா - நீராடுபவாகளான, அரககாமாதரை - இராககத மகளிரையும,—(எ - று.)— 'மயககற நாடி யேகும மாருதி' என மேல கூக - ஆஞ செயயுளோடு முடி யும; மேல் கஂடு - ஆஙு கவி முதலியவற்றிலுள்ள 'பொததுவாரை' முதலிய இரணடாம வேற்றுமைகளுககும அச செய்யுளிலுள்ள 'நாடி' என்றதே முடிக்குஞ சொலலாம்.

தேவயாதர்கள் ஆகாயகங்கை நீரைக் குடங்களில் முகந்து கொண்டுவந்து அந்நீரினால் ஸநாநஞ் செய்விககப பூஞசோலைகளிலே இருநது இனிது நீராடி மகிழ்கின்ற இராக்கதமாதாககு, காடுகளில தன்னிசசையாக இருநதுகொண்டு காாகாலதது மழைபொழியக களிககின்ற மயில்களும, நலல நீநிலையிலே இருந்து களிதது விளையாடுகின்ற நீவாழ் பறவையாகிய அன்னமும உவமை கூறபபட்டன. சாயலபற்றி மயிலும, நடைபறறி அனனமும மகளிரககு ஒப்புமை. முதலடியில் உவமையணியும, இரணடாமடியில உருவகவணியும இருததலால், சேரிவையணி, 'அரககாமாதா மஞ்சன மாடுவாரை' என்ற விடதது, மஞ்சன மாடுவா அரககாமாதரை என உருபுபிரிததுக கூட்டப் பட்டது- 'சோலைதெயவநீர்' என வலிமிகக பாடமும் உணடு. பி - ம்:— [1]பொலிதரும. [2]தேநகு. [3]தெயவநீராற்றுத தெணணிர. (கஂங)

கஂஎச. ஈட்டுவார் தவம லான்மற றீட்டினா லியைவதின்மை
காட்டினா விதியா[1]ரஃது காண்கிறபார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபொ ருத பொய்யிடை நையப் பூநீ
ராடுவா ரமரா மாத ராடுவா ரரக்கர் மாதா.

(இ - ள்:) ஈட்டுவா - நாடிததொகுப்பவா, தவம அலால் - தவததைச் செய்து சோததாற் பெரும்பயனடையலாமே யல்லாமல், மற்று ஈட்டினால் - (அததவத்தையன்றி) மற்றொன்றை நாடிததொகுத்தால அததேட்டததால், இயைவது இன்மை - (அவாகட்கு) வருவதொரு நறபயனிலலாமையை, விதி யா காடடினா - படைததற்கடவுள் (இசசெயலால்) தெரிவிததுள்ளா; அஃது காணகிறபா காணமின-அஙஙனம தவததாலடைந்த பெரும்பயனைப பிரதியக்ஷமாகப பாாககவிருமபுபவா பாருங்கள்; வா பூட்டு முலை பொருத - கசசணிநத தனங்களின பாரததைத தாங்கமாட்டாத, பொய இடை-உருவந் தோனறாத [மிகநுணணிய] தங்கள் இடையானது, நைய-வருந்துமபடி, அமரா மாதா - தேவஸதிரீகள, பூ நீ ஆட்டுவா - நலல நீரைக்கொண்டு ஸ்நாநஞசெயவிப்பார்கள அரககா மாதா-ராக்ஷஸஸ்திரீகள், ஆடுவா - நீராடு வாாகள; அம்மா - ஆசசரியம; (எ - று.)

குலம்முதலியவற்றாற் சிறந்த தேவமாதாகள் பரிசாரிகைகளா யடைந்து இராக்கதமாதர்க்குப் பணிவிடைசெய்வதற்குக் காரணம், இராவணன் முதலிய இராகததாகள செயத தவத்தின் பெருமையே யாதலால், அததபோபல மகிமையை இங்ஙனம் பாராட்டிக கூறினர். பலவகைமகளிரைக கூறத தொடங்கி அரக்கர்மாதா மஞ்சனமாடுவாரைக கூறியவிடத்து அங்ஙனமாடுதற்குக காரணங்காட்டுவதாய்த தவப்பெருமையைப் பாராட்டுகின்ற இசசெய்யுள இடைப்பிறவரலாக நின்றதென்க. இங்ஙனம், கதைநிகழ்சசியைக் கூறுமிடத்து, அதனாறபோந்தபயனை ஆங்காங்கு உலகததாரைநோகிச் சொல்லிப் போதல், ஒருவகைக கவிசமயம். திருவள்ளுவனார அறனவலியுறுததலில் "அறததா றிதுவென வேணடா சிவிகை, பொறுததானோ சேந்தா னிடை" என்று அறததின்சிறப்பை எடுததுக காட்டினாற போல, இங்கு இங்ஙனம் தவததினசிறபபை யெடுததுக காட்டினா.

விதியா என்றவிடத்து, 'ஆ' என்றபன்மைவிகுதி-உயர்வுப்பொருளில் வந்தது. 'காணகிற்பா காணமின்' என்றவிடதது, முன்னிலையிற படாககை வந்த இடவழுவமைதி. அம்மா - வியபபிடைசசொல் பூட்டு - (ஆபரணங்களைத்) தரிதத, வார் - கசசணிநத மூலை யென்றும பதவுரைகூறலாம் இடையினது மிகசநுணமையை விளககுவா, 'பொய்யிடை' என்றார். பி - ம்:— [1]இன்று, ஆகும். (கஎச)

கஎரு. இலக்கண மரபிற் கேற்ற வெழுவகை நரம்பி னல்யா
ழலத்தகத் தளிரகைகை நோவ வளந்தெடுத் [1]தமைந்த பாடல்
கலக்குற [2]முழங்கிற் றென்று சேடியர் கன்னி மார்கண்
மலாககையான் மாடத்தும்பா மழையின்வாய் பொத்து வாரை.

(இ - ள.) 'இலக்கணம மரபிறகு ஏற்ற - (சங்கீதசாஸ்திரங்களிற்கூறிய) லக்ஷணகிரமததிற்குததக்கபடியமைந்துள்ள, எழுவகை நரமபின்-எழுவகைப் பட்ட ஸ்வரங்களுககு உரிய நரமபுகளையுடைய, நல் யாழ் - சிறந்த வீணையில், அலததகம் தளிர கை நோவ அளந்து எடுத்து - செமபஞ்சுகுழமபூட்டின தளிரபோன்ற கைவிரல்கள் வருநதும்படி தாளப்பிரமாணந்தவறாமல் அளவு செய்து இசையெழுப்புதலால், அமைநத-நிரம்பிய இலக்கணததாயுண்டான, பாடல் - இசைப்பாட்டு, கலக்கு உற - கலக்கமடையும்படி, முழங்கிற்று - (இது) இடிமுழங்கியது', என்று - என்று (மேகததினகுற்றததை) மனததிற கொண்டு, மாடதது உம்பர் மழையின் வாய் - உபரிகையின்மேலுள்ள மேகததினது வாயை, மலர் கையால பொததுவா - தாமரைமலர்போனற (தமது) கைகளால் மூடுபவாகளாகிய, சேடியா கன்னிமாகளை-குறறேவல்செய்பவர்களான சிறுபெணகளையும் —(எ - று.)

அவ்விலங்காபுரியின் மாடமாளிகைகள மிகவுயாநத வானததையளாவி நிறறலால், அவற்றின உபரிகைகளில் மேகங்கள தங்கி இடிமுழகுகின்றன; அம்முழக்கம் அம்மாடங்களிலிருந்து மாதாகள நூல்முறைதவறாமல அருமை

யாய் வீணைவாசிக்கின்ற இசைப்பாட்டிறகுத் தடையாகின்ற தென்பது பறறி அஞ்சி அமமேகநகளின்வாயை அம்மாளிகைகளிற் பணிபபெணகளா யமைந் துள்ள இளமகளிா விரைந்துசெனறு தமது மெல்லியகைகளால் மூடுகின்றன ரென்க. தொடர்புயர்வுநவிற்சியணி. இதனால் அந்நகரதது மாடநகளின் மிக்க உயசசிவிளகுகும். 'சேடியாகன்னிமாசள்' என்பதறகு - விததியாதர கன்னிகைகளென்று பொருள கொளளலுமாம்; 'சேடி' - விததியாதாருலகு.

எழுவகைநரமபு - ஸ ரி க ம ப த நி என்ற ஏழுஎழுத்துககளைத தமககு உரியனவாககொணட ஷட்ஜம் ரிஷபம் காநதாரம் மதயமம பஞ்சமம் தைவ தம் நிஷாதம என்ற ஏழுஸவரநகளை இசைகின்ற தநதிரிகள்; இந்த இசைக ளேழும தமிழில குரல் துததம கைகிளை உழை இளி விளரி தாரம் எனப படும். பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செநகோட்டியாழ் என்ற நான் கினுள் ஏழுநரமபுகட்டின செநகோட்டியாழ் இநகுக் குறிகசப்பட்டதென்க; "ஒன்று மிருபது மோரேழ்மேறபததுடனே, நின்ற பதினாறேழு நேடுநகாற- குன்றாத, நால்வகையாழிற்கு நனனரம்பு சொன்முறையே, மேல்வகைய நூலோர் விதி" என்பது காணக. முறையே உக, கஎ, கசு, எ-நரம்புகளென்க. முகியமான காலபரிமாணமாகிய தாளஅடைவு தவறாது வாசிககப்பட்ட இன்னிசை யென்பார், 'அளநதெடுத்தமைந்த பாடல்' எனறார்; மேல் ககூஉ - ஆறு செய்யுளிலும் "அளந்த பாடல" என்பர். மெனமையும செமமையும் பறறி, கைவிரலுககுத தளிர் உவமைகூறப்படும மரபு-சம்பிரதாயம். 'கன்னி மாரகள் பொததுவாரை' எபது, பொததுவா கனனிமாரகளை யென உருபு பிரித்துக கூட்டப்பட்டது. பி - ம் —[1]அமைதத. [2]முழநக நோகஇக கன்னியா சேடிமார்கள். (கஙு)

கஙசு. சந்தப்பூம் பந்தர் வேய்ந்த தமனிய வரங்கிற றத்தஞ்
சிந்தித்த துதவுந் தெயவ மணிவிளக் கொளிருஞ சேககை
[1]வநதொததுந் துரித மாக்கள் விளம்புநதந் நெறிவழாமை
கந்தாபப மகளி ராடு நாடகங் காணகினறாரை.

(இ - ள்) தம் தம் சிந்திததது உதவும் தெய்வம் மணி விளக்கு ஒளிரும் சேக்கை - அவரவாநினைததபொருளைக கொடுககின்ற தெய்வததன்மையுள்ள (சிந்தாமணியென்னுந்) தேவமணியாகிய விளக்கு விளநகப்பெறற படுக்கை யின மேல் (சாய்நதபடியிருந்துகொணடு),—சந்தம பூ பந்தா வேயந்த-அழகிய மலர்களினாலாகிய பந்தலை மேலேயிட்டு அலநகரிககப்பெறற, தமனியம் அரநகில் - பொனமயமான நடனசாலையில், வநது - அடைவுடன்வந்து, ஒத தும் - கைகளால ஒறறித் தாளமிடுகின்ற, துரிதமமாகக் விளமபும் - துருத மென்னும விரைநதலயவிசேஷததில் தோநத சனநகளால பாராட்டிககூறப் படுகினற, தம நெறி வழாமை கந்தாப்பமகளிர் ஆடும-தமது தாளப்பிரமாண வகைகள தவறாமல கநதருவஸதிரீகள ஆடுகின்ற, நாடகம - நாட்டியததை, காணகினறாரை - பார்பபவாகளான இராககதமாதாகளையும்;—(எ - று.)

அழகியமலர்களாற பந்தரிட்டு அலங்கரிகக்பெற்ற பொன்மயமான நட னசாலையில் தாளவடைவு சிறிதுந் தவறாமற கநதருவமாதர்களாடுகின்ற நாட் டியத்தை, சிந்தாமணியென்னுந தெய்வமணியையே தீபமாகவைத்திருத்த லால் அதனொளிவீசப்பெற்ற மெததென்றபடுக்கையின்மீது சாய்ந்தபடி யிருநதுகொண்டு பாரத்து உகந்து பொழுதுபோககுகின்றனர், இராக்கதமாத ரென்க. 'சேகைக' என்ற ஏழாம்வேற்றுமைததொகை 'காணகின்றாரை' என்பதனோடும், 'அரங்கில்' என்ற ஏழாமவேற்றுமைவிரி 'வந்து' என்பதனோ டும, இயையும. ஒததுதல் ஒத்தறுததல், தாளமபோடுதல்; உடனவந்து பொறுந் துதலுமாம். துரிதம - த்ருதம என்ற வடசொல்லின் சிதைவு. விளமபிதம், மத்யம், த்ருதம என்று லயககிரமம் மூன்றுவகைப்படும; அவற்றில் காலதாம தங்கொண்டது விளமபிதம்; காலவிரைவுகொண்டது துருதம்; இவற்றின் நடுத்தரமான நிலை மததியம். இவற்றினுள துருததில் தோந்த சனங்களென் றது, உபலக்ஷணவகையால் மற்றவற்றிலுந் தோந்தவ ரென்றவாறும. சிறப் புப்பற்றி, துருதம் எடுததுக்கூறப்பட்ட தெனக; அன்றி, சிறப்புப்பெயர் பொதுப்பொருளின் மேலதாகும பாஷைநடைப்பற்றித துருதமென்ற ஒரு வகை லயவிசேஷததின் பெயா பொதுப்பட லயக்கிரமமென்ற மாததிரமாய் நின்றதென்றுங கொள்ளலாம இவைதோந்த ஆடலாசிரியரது இயல்பையும், அரங்கினது இயல்பையும், சிலபபதிகாரம் முதலியவற்றிற் காணலாம். அரங்கு- கூததாடுமிடம; ரங்கம் என்ற வடசொலலின் விகாரம். நாடகம் - கதை தழுவிவருங் கூதது; வடசொல.

தபநீயம என்ற வடமொழி தமணியமெனறும். கநதாவா என்ற வட மொழி கநதர்பபரென்றும் சிதைந்தன. தபநீயம - நெருப்பினால் தபிககப் பட்டு ஒளிவிளங்குவது; மாற்றுயாநதபொன "சுடசசுடரும பொன்." சிநதா மணியென்ற தேவரதினததின பெயாப்பொருள் விளங்க, 'தததஞசிந்தித் தது உதவுந் தெயவமணி' எனப்பட்டது. கரபகவிருக்ஷமும் காமதேனு வும் போலஇதுவும தன்னைசசாநதவாநினைததவறறைத தருவது. இதனையே அரங்கில் தீபஸ்தாநதது வைத்துளா அரகக ரென்க. இங்கு மாக்கள் என் றது - சனங்களென்றமாததிரமாய் நின்றது. 'துரிதமாககள விளம்பித நெறி வழாமை' என்ற பாடத்துககு - நட்டுவாகளாற் குறிக்கப்பட்ட விளம்பித மென்னும் லயவிசேஷத்தின முறைமை தவறாமலென்று பொருள். பி-ம்:— [1]வநதொத்துத துருதமாககள் விளம்பின நெறிவழாமல. (கoசு)

கoஎ. திருத்திய பளிக்கு வேதி தெள்ளிய வேல்க ளென்னக்
கருத்தியல புரைககு முண்கட் கருங்கயல செம்மை [1]காட்ட
வருத்திய கொழுநா தம்பால வரம்பின்றி வளாந்த காம
வருத்திய பயிர்க்கு நீரபோ லருநற வருந்து வாரை.

(இ - ள.) திருததிய பளிங்கு வேதி - அழகியனவாக் அமைகககப்பட்ட ஸ்படிககநற்களினாலாகிய மேடைகளில் (இருந்துகொண்டு),—கருததுஇயல்பு

உரைகுகும - மனதிலுள்ள எண்ணங்களை வெளியேகாட்டுவனவும, உண்மையுடனவுமான, கண கருங கயல - கறுதத கயல்மீன் போன்ற தங்கள் கணகள், தெளளிய வேல்ளை என்ன செம்மை காட்ட - தெளிவான ஒளியுள்ள [வடிதத] வேற்படைகள போலச செநநிறங்காட்டுமபடி, வருததிய கொழுநா தம்பால் வரமபு இன்றி வளர்கத காமம் அருததிய பயிரகுநீர் போல் - (தமது பிரிவினால் தங்களை) வருந்துமபடி செய்த தங்கள் கணவர் விஷயமாக அளவிலலாமல் மேனமேலவளாநத தங்கள் காமவிருபபமாகிய பயிர செழிததறகுத தணணீர (பாய்சசினால)போல, அருநற அருந்துவாரை-கிடைத்தறகு அருமையான [மிகசசிறநத] மதுவைப் பானஞ்செய்பவாகளாகிய இராகததமாதாகளையும்,—(எ - று.)

'வேதி' என்ற ஏழாம்வேற்றுமைத தொகை, 'அருந்துவாரை' என்பதனோடு இணையும். பளிங்குக்கல்மயமான திணணைகளி லிருந்துகொண்டு கட்குடிககின்றனா இராகததமாதரென்க. மதுபானததாலாகுங களிபபுக் காமததை வளாப்பதென்பது வெளிப்படை, "தூமமுணகுழலிய ருண்டதூநறை காமவெங்கனலினைக கனறறிகாட்டிறறே" என்றார் பாலகாண்டததும். கட்குடியினாற் கணசிவததல் இயல்பு. வருததிய கொழுநா-தாங்கள் ஊடல்கொள்ளுமபடியான பிழையைச செய்து அதுபறறித தாங்கள பிணங்கி வருந்தச செயத கணவ ரென்றலுமாம. இனி, (தாம் ஊடலாறசினங்கது) கருததியல் புரைக்குமுணகட்கருங்கயலில வேல்களென்னச் செமமைகாட்ட (அதனால) வருததமுறற கணவாவிஷயமாகவெனலும அமையும்; இவ்வுரையில், 'வருந்திய' - வருததப்பட்ட எனச செயபபாட்டு வினைபபொருளில வநத செய்வினை. கோபததினாற கணசிவததல், இயலபு.

'வேதிததெள்ளிய' என வலிமிக்கபாடமும உண்டு தெள்ளிய - தேர்ந்தெடுககப்பட்ட எனினுமாம. திருவளளுவா குறிப்பறிதலில் "பகைமையுங கேண்மையுங கணணுரைகுங கணணின, வகைமை யுணாவாாப் பெறின்" என்றபடி கண்களின்பாவை வேறுபாடுகளால் மனதின விருபபுவெறுப்புகள் பிறரறியககூடியன வாதல்பறறி, 'கருததியல்புரைகுங கண' எனபபட்டது. உரைக்குங கண - பேசாதது பேசுவதுபோலச சொலலப்பட்ட மரபு வழுவமைதி. பி - ம்:—[1]நாட்ட. (கஎ)

கஎஅ. கோதறுங குவளை நாட்டங் கொழுநர்க ணாட்டங் கொள்ளத்
தூதுளங் கனியை வென்ற துவாததவாய வெண்மை தோன்ற
மாதரு மைந்தர் தாமு மொருவர்மே லொருவா வைத்த
காதலங் கள்ளுண் டாரபோன் முறைமுறை களிகக்கின றாரை.

(இ ள.) கோது அறும - குறறமறற, குவளை நாட்டம - நீலோற்பல மலாபோனற [கருமையான] (இராகததமாதாகளின்) கணகள், கொழுநாகள் நாட்டம கொள்ள - (தமதம) கணவரான இராகததரது கணகளின் தனமையைக கொள்ளுமபடியாகவும [செநநிறங்கொள்ளவுமஎன்றபடி], தூதுளம்

கனியை வென்ற துவர்த்த வாய் - (தமதுசெநநிறமிகுதியால்) தூதுளம்பழத்தைச் சயித்த சிவந்த வாய், வெணமை தோன்ற - வெணணிறநகாட்டும்படியாகவும், மாதரும மைநதாதாமும ஒருவர்மேல் ஒருவர் வைதத காதல் அமகள உணடாரபோல் முறைமுறை களிககின்றுரை - மகளிரும் ஆடவரும தமமுள் ஒருவாமீது ஒருவாகொணடுள்ள ஆசையாகிய அழகிய [இனிய] களளைகுடிககினறவாபோல மாறிமாறிக கட்குடிககின்றவாகளான இராககத தம்பதிகளையும;—(எ - று.)

கண் இயற்கை நிறமமாறிச சிவத்தலும், வாய் இயற்கைச்செநநிறம் மாறி வெளுததலும், கட்குடியினு லாகுவன; கொள்ளிக்கணணன கொடுநகண்ணன் குருதிககணணன என்னுமபடி இராககதரில் ஆடவா கணகள் இயற்கையிலேயே சிவநதிருததலால். அவை கட்குடியினுற செயறகைச செநநிறங கொணடது வேறுபட விளங்காமைபறறி, அதனை யெடுததுககூறாமல், இராக்கதமாதரது இயறகையிறகரிய கணகள் கட்குடியினுற செயறகைசசெநநிறங கொணடதுமாததிரததையே 'குவளை நாட்டங கொழுநாகள்நாட்டங்கொள்ள' என்று எடுததுககூறினா; அரககரில மாதாகணகளும் ஆடவாகணகளபோலச செநநிறமுடைய வென்பது கருதது. இரணடாமடியிற கூறிய செயற்கை, அரககரில ஆடவா மகளிா எனனும் இருபாலார்ககும ஒக்கும். கட்குடித்தல் ஸதிரீ புருஷவாஞ்சையை மிகுவிதது மனததைக களிப்பிததல் பற்றி, 'மாதரு மைநதாதாமு மொருவாமேலொருவர் வைதத காதலங கள்ளுணடாரபோல்' என உவமை கூறபபட்டது; மாதரும் மைந்தரும மாறிமாறிப் போகம நுகாந்து களிபபதுபோல மாறிமாறிக கட்குடித்துக களிப்பவாயின ரென்பதும அமையும; கணசிவபபும, வாயவெளுபபும கலவியினுலு மாகுவன. "இலவிதழ்த்தது வாவிடவெயிறுதேனுக, ...கலவிசெய்கொழுநருங களளுமொததவே" எனறதையும நோககுக. (கஎஅ)

கஎகூ. விறபடர் பவளப் பாதத் தலத்தக மெழுதி மேனி
பொறபள விலலா வாசப புனைநறுங கலவை பூசி
யற்புத வடிக்கண் [1]வாளி னஞசன மெழுதி [2]யந்தில்
கற்பகங் கொடுக்க [3]வாங்கிக கலன்றெரிந தணிகின் றுரை.

(இ - ள்.) அநதில் - அவ்விடததில், கறபகம கல்பகவிருக்ஷம், கொடுகக- (தமககு வேணடுவெனவான செமபஞசுக குழமபு முதலியவறறை அப்பொழுதைககபபொழுது)கொடுத்து உதவ, வாங்கி-(அவறறைப) பெறறுககொணடு,—(அவறறில), அலத்தகம - செமபஞசுககுழமபை, விலபடா பவளம பாததது எழுதி - ஒளிபரவுவதான பவழமபோன்ற (தமது) காலகளில தடவி,—பொறபு - பொலிவையும், அளவு இல்லா வாசம - அளவறற நறுமணததையுமுடைய, புனை நறுங கலவை - புதுமையான நல்ல கலவைசசந்தனததை, மேனி பூசி-(தமது) உடமபிற பூசி,—அஞசனம-மையை, அற்புதம வடி கண வாளின எழுதி - (காணபவாககு) வியபபைவிளைககின்ற கூறியவாளபோனற

(தமது) கண்களில் இட்டு,—கலன் - ஆபரணங்களை, தெரிந்து அணிகின்றுரை - தக்கனவாகத தேர்ந்தெடுத்து (அணியுமிடங்களில்) அணிந்துகொள்கின்றவர்களான இராக்கதமாதாக்களையும்;—(எ - று)

தேவலோகத்துக் கற்பகவிருக்ஷம இந்திராதியரைவென்ற இராவணனால் மேலுலகத்தினின்று வலியக்கவர்ந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு அரக்கர்கட்கு வேண்டுமபொருள்களை யெல்லாம் அவர்கள வேண்டுகின்ற அவ்வப்பொழுது கொடுத்துவர அவர்கள் அவற்றை பெற்றுத தமக்கு உரியபடி உபயோகித்துக கோலஞ்செய்து கொள்கின்றனரென்க. 'அந்தில் கற்பகங கொடுக்கவாங்கி' என்றது, 'அணிகின்றுரை' என்பதனோடுமாதிரமன்றி, 'எழுதி' 'பூசி' 'எழுதி' என்றவற்றோடுங கூட்டப்பட்டது; கடைநிலைத்தீவகம்.

கலவை - பலவகை வாசனைப்பொருளும் கலக்கப்பெற்றது. 'அலத்தக மெழுதி', 'அஞ்சனமெழுதி' என்றவற்றால, அணிகின்றவர் மாதரென்பது விளங்கும். கணவாள் - வாட்கண் முன்பின்னாகத தொக்க உவமத்தொகை. வடிக்கண் - மாவடுபோன்ற கண எனினுமாம; அவ்வடுவின் உட்பிளவு, கண்களுக்குவுவிலிலுவமையாம். 'வடுப்பிளவனையகண்ணாள்' என்றசிந்தாமணியைக் காண்க. அந்தில் - அசையுமாம. பி - ம்:—[1]வாளிக்கு. [2]அமபொற் கற்பகம். [3]நோக்கி. (க0ங)

கக0. [1]புலியடு மதுகை மைந்தர் புதுப்பிழை யுயிரைப் புக்கு
[2]நலிவிட வமுத வாயா னசசுயிர்த் [3]தயிற்க ணலலார்
மெலிவுடை மருங்குன் மின்னி னலமரச் சிலம்பு விம்மி
யொலிபட வுதைக்குந் தோறு [4]மயிர்புள [5]குதிக்கின் றுரை.

(இ - ள்.) புலி அடு மதுகை மைந்தர் - புலியையுங கொல்லவல்ல வலிமையையுடைய ஆடவர்கள செய்த, புது பிழை - புதியகுற்றம, புகு உயிரை நலிவிட - (தமது மனத்தினுட்) புகு உயிரையுமுட்பட வருத்துதல்செயய, அயில் கணவல்லார் - வேலாயுதமபோனற [கூரிய] கண்களையுடைய அழகிய இராக்கதமாதா, அமுதம வாயால் நஞசு உயிர்த்து - அமிருதமபோலினிய தங்கள வாயினால் விஷமபோலக கொடுமையாகப பெருமூசசுவிட்டு, மெலிவு உடை மருங்குல மின்னின அலமர - நுணணியவடிவையுடையதங்கள் இடையானது மின்னல்போலத துவளுமபடியாகவும, சிலம்பு விமமி ஒலிபட-சிலம்பென்னுங காலணி அசைந்து ஒலிக்கும்படியாகவும், உதைக்குமதோறும - உதைக்கும்பொழுதெலலாம், மயிர் புளகு உதிக்கின்றுரை - மயிர்சிலிர்ப்பு (தமது உடமபில) உண்டாகப்பெறுகின்றவர்களான அரக்கர்களையும்;—(எ-று.)

அரக்கியர் தமது கணவரிடத்துப் பிறமகளிரைக் காமுறுதலமுதலியகுற்றங்களைக் கண்டவிடத்து மிக்க வருத்தமும மிக்க கோபமுங்கொண்டு வெவ்விதாகப் பெருமூசசுவிட்டு அவ்வாடவரைப் பலமுறை காலாலுதைக்க, அவ்வுதைபடுந்தோறும, அவ்வரக்கர், அவ்வுடற பரிசத்தாலாகிய இன்பம்பற்றி

உடம்பில் மயிர்சிலிர்ப்பைப் பெறுகின்றனரென்க. 'புலியடு மதுகை'மைந்தர்' என்பதற்கு-புலிபோல(ட் பிறவுயிர்களை)க கொல்லும் வலிமையுடைய ஆடவரென்றலும் அமையும். 'புலிபடுமதுகைமைநதா' என்ற பாடததுககு-புலியினிடததுள்ளவவ்வளவு வலிமையையுடைய இளவீரரென்பது பொருள். அமுத வாய - அமிருததையுடைய வாயெனினுமாம; இதுவும் அதராமிருததைக கருதியது. இனி, 'அமுதவாயால் நசசுயிர்தது' என்பதற்கு-அமிருதமபோ லினியசொற்களைப் பேசுமியல்புள்ள வாயினால் விஷம்போன்ற கடுஞ்சொற்களை வெளியிடடு என்று உரைததலும், ஒன்று. இநகு 'அயிற் கணநல்லா' என்றது-அப்பொழுது அவாகள் கொழுநரைச சினந்துபாரகும் பாரவையின் கொடுமையை யுணாததுக கருத்தினது; **கருத்துடையடை கோளியணி.** **பி-ம்:**—[1]புலிபடு [2]நலிவுடை. [3]அலககண [4]மயிர்ப்புளகு. [5]உறுகின்றுரை. (கக0)

ககக. உள்ளுடை மயக்கா லுணகண் சிவந்துவாய் வெண்மை யூறித்
[1]துள்ளிடைப புருவங கோட்டித [2]துடிபபவேர் பொடிப்பத தூய
வெள்ளிடை மருங்கு லாதம் மதிமுகம் வேறொன் றாகிக்
கள்ளிடைத் தோன்ற நோககிக் [3]கணவரைக கவல்கின றாரை.

(இ - ள்) உள் உடை மயக்கால் - (மதுபானத்தினால்) உள்ளேயுணடான மயககததால், உண் கண சிவந்து - மையுணட (தமது) கருநகணகள் செந்நிறமடையப்பெற்றும, வாய் வெணமை ஊறி - (செந்நிறமான தமது) வாய் வெணணிறந தோன்றப்பெற்றும, துள் இடை புருவம கோட்டி-துடிகின்ற நடுவிடததையுடையனவாகப் புருவங்களை வளைததும துடிப்ப -(கீழ்நகூறிய கண வாய புருவங்கள்) துடிக்கவும, வோ பொடிபப-வோவவைரரும பவும், தம மதி முகம - தமது சநதிரமணடலமபோன்ற முகமானது, வேறு ஒன்று ஆகி கள்ளிடை தோன்ற - வேறொரு வகையாயக் கள்ளிலே தெரிய, நோககி - (அதனைக்) கணணுற்று, கணவரை கவலகின்றா - (தம்மை அடையாளங காணமாட்டாது தம கணவா தடுமாறுவரேயென்று) அகொழுநரைக் குறிததுக கவலைப்படுகின்றவாகளாகிப, தூய வெள இடை மருங்குலாரை - சுததமான ஆகாயவெளிபோனற [வடிவுதோன்றாத] இடையையுடையவாகளான இராக்கதமாதாகளையும்,—(எ - று.)

கணசிவததல், வாய்வெளுததல்,புருவததை நெற்றியின்மேலேற நெறிததல், கண வாய புருவங்கள் துடிததல், வோவையரும்புதல் என்பன-கட்குடியினாலுண்டாகும் வேறுபாடுகள. இராகததயாதா தாம் கட்குடிததுக களிததபோது தமதுமுகம கண்சிவததல் முதலிய வேறுபாடுகளை யடைந்து பிறிதொரு முகமபோலக கள்ளிலே பிரதிபிமபிததலைக கணணுற்று, இநவனம் நமதுமுகம மாறுபட்டிருததலால், நமது கணவா நம்மைஅடையாளங கணடுபிடிக்கமாட்டாமல் தடுமாறுவரே யென்பதுபற்றிக கவலைப்படுகின்றனரெனக் கருததுக் காணக; (''சாடியுள் நறவமுணடாள் தன்னுருவேறுபாட்டை,ஆடி

யுள்நோககி உயிரன்னான் வந்திகுகென்னைத், தேடி னென் செய்கேன்'' என்ற திருவிளையாடற புராணம், இகுகு ஒப்புநோககத தக்கது) இனி, அம் மகளிர தமது மாறுபட்டமுகததின் பிரதிபிம்பத்தைக் கள்ளிற்கணடு குடிம யகககதால் தமமை அயல்மாதராக நினைததுத தமமைச சாரநின்ற கணவரின் பிரதிபிம்பமும அக்கள்ளில்தெரிதலை நோககித தம் கணவரை வேற்று மக ளிரைச் சாரநிறகினறன ரென் றெணணி அவரது கூடாவொழுககத்தைக் குறித்துக கவலைப்படுகின்றன ரெனக கருத்துககொளளுதலும அமையும; (அப்பொழுது ''களிததவ ளொருததிநின் றவாடியுட்கணவன் றன்பி,னொளித் தவ னுருவுநதானு நேர்பட வுருததுநோககித, துளிததகணணீரளாகியேதிலா டோடோய்ந தினபங, குளிததனை யிருததியோவென றுரைததனள் கோப மூணடாள்'' என்ற திருவிளையாடற்புராணம், ஒருசா ஒப்புநோக்கத தகக தாம) இபபொருளுக்கு, 'உள்ளுடை மயக்கால்' என்பதை 'கவல்கின்றா' என்பதனோடு இயைததல் இனிது. ''கணவரைக கனல்கின்றாரை' என்று பாடமாயின், கணவரைக்குறிததுக கோபிககின்றவரை யெனற பொருள். 'மருநகுலரா கவல்கின்றாரை' என்பது, கவல்கினறா மருநகுலாரை யென உருபுபிரித்துக் கூட்டப்பட்டது. பி - ம் —[1]துள்ளுடை. [2]துடிதத, துடிகக.

ககஉ. ஆலையின் மலையின சாரன் முழையினி லமுத வாரிச்
சோலையிற றுவச ரிலலிற சோனகர் மனையிற றூய
வேலையிற கொளவொ ணாத வேறகணா குமுதச செவவாய
வாலெயிற றூறு தீந்தேன் [1]மாநதினா மயங்கு வாரை.

(இ - ள்.) ஆலையில - கருமபாலையிலும, மலையின் சாரல்முழையினில் - மலைபபककநகளிற காணப்படுகினற குகையிலும, அமுதம்வாரி சோலையில - இனிய நீர்ப்பெருककுப்பாயப்பெற்ற பூஞசோலையிலும, துவசா இலலில் - களவிற்பவருடைய இடததிலும, சோனகா மனையில் -மிலேசசருடைய வீட் டிலும், தூய வேலையில - சுததமான பாற்கடலிலும, கொளஒணாத-பெறுதல் கூடாத, வேல் கணா குமுதம் செம்வாய் வால் எயிறு ஊறு தீம தேன் - வேலாயுதமபோனற கணகளையுடையவரான மகளிரது செவ்வாமபல மலா போனற சிவநத வாயிலும வெணமையான பறகளிலுஞ் சுரககினற இனிமை யான தேனை, மாந்தினா - பருகி, மயநகுவாரை - (களிப்பினால) மயநகிக் கிடப்பவரான இராककதாகளையும,—(எ - று.)

அதராமிருதபானததிலும் தநதாமிருதபானததிலுமாகிய ஆனந்ததால மயநகிककிடककின்றனா இராककதாக ளெனக. அவ்வமிருதநகளுककு, கரும பாலையிற கிடைककினற கருப்பஞ்சாறும, மலைசசாரலகளில ஒதுककிடததிற் கட்டிய கூடுகளிறகிடைककினற கறறேனும, நீரவளததாற் செழிதது வளாகிற பூஞசோலையில மலாகளினின்று கிடைककினற தேனும, தெநகுபனைமரந களிலிருநது களகொணாநது விறபவரான சானறாரது வீட்டுककடைகளிற கிடைककினற கள்ளும, மதுபானம் மிककவாகளான மிலேசசர்களது வீடுகளிற

கிடைக்கக்கூடிய மதுவர்ககங்களும், பாற்கடலில் தோன்றிய வாருணி யென்னும் மதுவும் [தேவாமிருதமும்], சிறிதும் ஒப்பாகமாட்டா அவற்றி னும் இவ்வமுதங்கள் மிகசசிறந்தன என்ற கருத்தை 'ஆலையில் மலையின் சாரன்முழையினில் அமுதவாரிச, சோலையில் துவசரில்லில் சோனகாமனை யில்துய வேலையிறகொளவொணாத வேற்கணார் குமுதசசெவ்வாய் வாலெயிற் றூறு தீநதேன்' என்று விளக்கினர். கொளவொணாத தேன் என இயையும். இனி 'வேற்கணா குமுதசசெவ்வாய் வாலெயிற் றூறு தீநதேன்' என்ப தற்கு - மகளிரது சிவந்த அதரகதில் தமது கூரிய பற்களை வைததலாற் சுரக்கின்ற இனிய அமிருதம் என்று பதவுரைகூறலும் அமையும் சோனகம்- ஐம்பதாறு தேசங்களில் ஒன்று' பதினெண்பாஷை நிலங்களிலும் ஒன்று; அந்நாட்டவா, சோனகர். பி - ம்.—[1]மாந்திட. (ககஉ)

ககங. நலனுறு கணவர் தம்மை நவையுறப் பிரிந்து [1]நல்கு
முலையுறு கலவை தீய முள்ளிலா முளரிச செங்கேழ்
மலர்மிசை மலர்பூத் தென்ன [2]மலர்க்கையால் வதனந் தாங்கி
[3]யுலவரு முயிரி னோடு நெடிதிருந் துயிர்க்கின் றாரை.

(இ - ள்.) நலன் உறு கணவர்தம்மை - அழகுமிகக (தமது) கணவரை, நவை உற பிரிந்து - (பிறமகளிரைக் காமுறுதல் முதலிய) குறறம் (அவாகளி டத்து) நேர்ந்ததனால் ஊடிப்பிரிந்து,—(அவ்விரகதாபததால்), நல்கும் முலை உறு கலவை தீய - (சைத்தியோபசாரமாகத தமது தோழியாற) பூசப்பட்ட (தமது) தனங்களிற பொருந்திய கலவைசசநதனம தீநதுபோக,—முள் இலா செம கேழ் முளரி மலர்மிசை மலா பூதது என்ன முட்களில்லாததொரு செந் நிறததாமரைமலரின்மேல் அததன்மைததான தாமரைமலரொன்று பூததாற போல, மலா கையால் வதனம தாங்கி - விளககததையுடைய (தமது) கை யொன்றினால் (தமது) முகத்தைத தாங்கிகொண்டு, உலவ அரும உயிரி னோடு - போவதும் வருவதுமாய் உலாவுகின்ற அருமையான உயிருடனே, இருந்து நெடிது உயிர்க்கின்றாரை - பெருமூசசுவிட்டுகொண்டிருக்கின்ற வாகளான இராக்கதமாதாகளையும்—(எ - று.)

கணவரிடத்துநேர்ந்த குற்றங காரணமாகத் தாம் பிணங்கிப் பிரிந்த விடத்து, அப்பிரிவுத துயரைப் பொறுக்கமாட்டாமல், அததாபமிகுதியால் தமது உடமபிறபூசிய கலவைசசந்தனம் தீய, தமதுமுகததைத் தமது கை யொன்றிற் சாயவைததுகொண்டு உயிா தடுமாறப் பெருமூசசுவிடுபவராய் வருநதுகின்றனா இராகததமாத ரென்க. கையிலே தலையைவைததுகொள் ளுதல், சிநதை சோகங்களின் காரியம மகளிா கையும முகமும் தனித்தனி செநதாமரைமலா போலுதலால, கையால் வதனநதாங்குதற்கு முளரிசசெங கேழ் மலாமிசை மலாபூததல் உவமைகூறப்பட்டது; இல்போருஉவமை; முள் - தாமரைமலா தோன்றிய நாளததிலுள்ளது. இபபொழுது மனமகிழ்சசி யினமையால மயிாசிலிபபுபபெறாத முனனங்கை யென்பது 'முள்ளிலா'

என்ற அடைமொழியாற் போதரும். உயிர் உடமையைவிட்டுப்போவதும வருவதுமாய்ததடுமாற என்பது, 'உலவருமுயிரினோடு' என்பதன கருதது: இதனால், விரகத்தால் மரணவேதனையுறறனரென்றவாறு. நெடிதுஉயிரகின்றா என இயையும் இருந்து உயிரகின்றாரை-உயிரதிருககின்றாரை என விகுதி பிரிததுக கூட்டுக. பீ ம் —[1]போநது. [2]வலைகையால. [3]அலமருமுயிரினோடு நெடிதுயிரததயாகின்றாரை. (ககஉ)

ககச. ஏதியங் கொழுநர் தம்பா லெய்திய [1]சலத்தர் வைகுந்
தாதியங் [2]கமளிச் சேக்கை யுயிரிலா வுடலிற் [3]சார்வார்
மாதுயர்க் காத றாண்ட வழியின்மேல் வைத்த கண்ணார்
தூதியர் முறுவ னோக்கி யுயிர்வந்து துடிக்கின் றாரை.

(இ - ள்) ஏதி அம் கொழுநாதமபால எயதிய சலததர் - (வில் வாள் முதலிய) ஆயுதஙகளில தோநத அழகிய (தமது) கணவாமீது (ஊடலாற) கொணட கோபமுடையவாகளாய், வைகும தாது இயஙகு அமளி சேக்கை- (தாம) தஙகுகின்ற மலரிதழ்களாலான மெததையாகிய படுகையில், உயிர் இலா உடலின் சாவாரா-உயிரநீஙகிய உடலபோல(க தனிபே) சாந்து படுப்பவராகி,—மாதுயாகாதல் தூணட-மிகததுன்பத்தைவிளைகின்ற ஆசை தூணடுதலால், வழியின்மேல வைதத கணணார-(தமதுகணவாவரக்கூடிய)வழியின் மேற செலுததிய பாரவையையுடையவர்களாய், தூதியா முறுவல நோக்கி - (தம் கணவரால) தூதுவிடப்பட்ட மகளிரது புன்சிரிப்பைப்பாரததது, உயிா வந்து-அதனாலதமது உயிா மீணடுவரப்பெறறு, துடிக்கின்றாரை-துடிக்கின்றவாகளான இராக்கதமாதர்களையும,—(எ - று)

சில இராக்கதமாதர்கள், தமது கணவரிடத்து வேறறுமகளிரைக்காமுறுதல் முதலிய குறறஙகணடபொழுது ஊடல்கொணடு கோபிததது அககணவரைபபிரிந்து தனியேசெனறு, மலாகளினிதழ்களா லமைக்கப்பட்டிருநத மெததென்ற சயனத்திற பள்ளிகொள்ளும் பொழுது, தமது பிராணநாயகரைப் பிரிநததனாலாகிய துயரமிகுதியாற் சோாந்து, உயிர்நீஙகிய உடல் போலப் படுக்கையிற சாய்நது விழுவாராயினர்; அவ்வாறு மூாசிததுவிழுநதவர், இஙஙனம பெருந்துன்பததை விளைததற்குக காரணமான ஆசை தூணடுதலாற் சிறிதுதெளிந்து, தமதுகோபததைச சமாதானப்படுததித தமமைத தழுவுதற்குத தமதுகணவா வருவரோவென்று அவாவரக்கூடியவழியிற கண செலுததுகையில், அதற்குள் அக்கணவரால் தமதுகோபந்தணிததறபொருட்டு தூதனுப்பபபட்ட தோழியர் புன்முறுவலோடு தமமைக்குறிததுவிரைந்துவருவதைக கணணுறறு, இனிப் பிராணநாயகரை விரைவிற கூடுதல் கூடுமென்ற நமபிகையினால் நீஙகிய உயிா மீணடு வரப்பெற்றவாபோல நன்றாக மூர்சசை தெளிந்தனா. தெளியவே, மூாசிததுக கிடந்தபொழுது உயிாநீஙகினாற் போலயாதொரு புடைபெயாசசியுமினறியிருந்த அவாகளுடம்பு இப்பொழுது பிரிவுததுயரின தொடாசசியால் துடிபபதாயிற்று எனக கருத்து விவரஙக

காண்க. இனி, தாதுஇயங்கு அமளி-மகரந்தப்பொடி பரவப்பெற்றமெத்தை யுமாம். பி - ம்:—[1]காதலாலே. [2]அமலச. [3]சாயவா. (ககச)

ககரு சங்கொடு சிலம்பு நூலும் பாதசா லகமுந் தாழப்
பொங்கு[1]பன் முரச மார்ப்ப வில்லுறை தெய்வம் [2]போற்றிக்
கொங்கலர் கூந்தற் செவ்வா யரம்பையர் பாணி கொட்டி
மங்கல கீதம் [3]பாட [4]மலர்பலி வகுக்கின் றாரை.

(இ - ள்.) பொங்கு பல் முரசம் ஆர்ப்ப-ஒலிமிகக பலவகையான வாத்தியங்கள் ஆரவாரிககவும,—கொங்கு அலா கூந்தல்-வாசனை வீசுகின்றகூந்தலையும, செம் வாய - சிவந்த வாயையுமுடைய, அரமபையா-தேவமாதர்கள், பாணி கொட்டி-கைகளால் ஒத்தறுத்துத தாளமிட்டுககொண்டு, மங்கல கீதம பாட-மங்களகரமான இசைப்பாட்டுக்களைப் பாடவும்,—சங்கொடு-சங்கினாலாகிய (தமது) கைவளைகளும், சிலமபும்-சிலம்பென்னுங காலணிகளும், பாதசாலகமும்-பாதசரமென்னுங காலணிகளும, நூலும்-மேகலாபரணங்களும், தாழ-(செயல்விரைவினாற்) சிறிதுதாழவும,—இல் உறை தெய்வம்போற்றி—(தங்கள) கிருகத்துககு உரிய தெயவத்தைத துதித்து, மலர் பலி வகுக்கின்றாரை - மலர்களைககொண்டு அருசசனை செயகின்றவாகளான இராக்கமாதர்களையும்,—(எ - று.)

பலவகை வாதிய கோஷதோடும தேவமாதர்களின் மங்கலகீததோடுமிருந்து, சில இராக்கதமாதாகள, தாம விரைந்து தொழில செய்தலால் தமது கைவளை முதலிய ஆபரணங்கள தாமுமாறு தமது கிருக தேவதைகளைக் குறித்துப் புஷ்பாஞ்சலி முதலிய பூசைவகைகளைச செயகின்றனரென்க தன் தலைமகனுககுத தொழுகுலமாகிய தெயவத்தை அவனது நன்மைககாக வழிபடுதல் கற்பேயாமென்க. அரக்கா ஒருசாா தேவாகள் முனிவர்கள் முதலிய நல்லோரை மிக நலிந்துவரினும, மற்றொருசாா தேவபூசை அக்நிஹோத்ரம முதலிய வைதிக கருமங்களையும விடாது அனுஷ்டித்து வந்தனரென்பது, நூல்களாற் புலனாகின்றது; மேல் கஙஙு-ஆஞ் செய்யுளில் "தேவராலயங்கள்" என வருவதுங காணக.

நூல் - அதுகொண்டு மணிகளைக் கோத்து அமைககப்பட்ட இடையணிககு இலக்கணை. பாதசாலகம - இளம்பூவரும்பின் தொகுதிபோலத் தொழில்திற மமைக்கப்படடதொரு காலணி விசேடம். அரம்பையர்-ரம்பை முதலியோர். பி - ம்:—[1]பொன். [2]பேணி [3]பாடி. [4]மறிப்பலிவகுக்கின்றாரை.

ককঙ. இழைதொடா வில்லும் வாளு மிருளொடு மலைய யாணர்க்
குழைதொடா நயனக் கூர்வேல குமரர்நெஞ் [1]சுருவக்கோட்டி
முழைதொடர் சங்கம் பேரி முகிலென முழங்க மூரி
மழைதொடர் மஞ்ஞை யென்ன விழாவொடு வருகின் றாரை.

(இ - ள்.) இழை தொடர் - (தாம அணிந்துள்ள) ஆபரணங்களிலிருந்து வெளிவீசுவனவான, வில்லும் வாளும - வில்லென்றும வாளென்றுங கூறப் படுகிற ஒளிகளாகிய விற்படையும் வாட்படையும, இருளொடு மலைய-இருளோடு போர்செய்து அதனை யொழிககவும,—யாணா குழை தொடாநயனம்- அழகிய குழையென்னுங காதணியை யளாவுகின்ற (தமது) கணகளாகிய, கூர வேல் - கூரிய வேற்படைகளை, குமரா நெஞ்சு உருவ கோட்டி - இளமைப் பருவமுடைய ஆடவரகளின இதயத்தைத துளைகுமபடி செலுததிகொண்டும்,—முழை தொடா சங்கம பேரி முகில் என முழங்க - உள்துளை பொருந்திய சங்க வாத்தியங்களும் பேரிகைகளும மேகமபோல ஆரவாரஞ்செய்ய, (அவற்றைத் தொடாந்து), மூரி மழை தொடா மஞ்ஞை என்ன - பெரிய மேகங்களைத தொடாநதுவருகின்ற மயிலகளபோல, விழாவொடு வருகின்றூரை-மங்கலச சடங்குகளுடனே வருகின்றவரகளான இராக்கத மாதாகளையும்,—(எ - று.)

விவாகம முதலிய மங்கலச சடங்குகளின் சமபாதமாக ஊர்கோலம்வரும் பொழுது,சில இராகததமாதாகள்தமமை விசேஷமாக அலங்கரித்துகொண்டு அகககளிப்புடனே உலலாசமாக இனிது நடந்து உடன்வருகின்றனர்;அவ்வூர் கோலங்களில் சங்குபேரி முதலியவாததியங்கள் மேகததினிடி முழககமபோல முன்னே முழங்கிசசெலல அதன்பினனே வருகின்ற அமமகளிரக்கு மேக கோஷததைத தொடாந்து பின்செலலும மயிலகளை உவமைகூறினர். கார் காலததுமேககோஷததைக கேட்டுக் களிததுக் கொண்டாட்டமடைதல், மயிலினியல்பு.

இமமாதர்கள்வருகின்றபொழுது நிகழ்கின்ற சிலசெயல்களை, அவர்கள் வில்லும் வாளும வேலுமாகிய சிறந்த படைக்கலங்களைகொண்டு போரத தொழில்செய்துவருவதாக முதலிரணடடிகளிற கற்பிததார். இலங்கையில் அரக்கரேயன்றி அரகியரும எப்பொழுதும படையெடுததுப போரசெய்கின்றன ரெனச சமதகாரமாகக்கூறியதாம. பலவகையாபரணங்களினின்று வீசுகின்ற ஒளிகள் இருளையொழிததலை, விற்படைவாட்படைகள் இருளொடுபோரசெயவனவாககுறிததார 'வில்லுமவாளும்' என்றது, சிலேஷ்ட ரூபகம். மலைதல்வினைக்கு ஏறப, இருளை யானையாகக கருதுக;ஏகதேசரூபகம். அமமகளிர தமது கூரியகணகளின்பாரவையைச செலுததுகின்ற பொழுது அபபாரவை யழகிலீடுபட்டு யௌவனபுருஷாகள் நெஞ்சம புணணுவர்; அதனை, அவாகள கணகளாகிய வேற்படைகளைக குமரானெஞ்சுருவும படி வீசுவதாகக குறிததார.

முழை - மலைகுகை; பெரிய உள்துளையை இங்குககுறிததது இலக்கணை. பி - ம்:—[1]உருக.

(ககசு)

ககஎ. பளளியினை மைநத ரோடு மூடிய பண்பு நீங்கி
[1]யொள்ளிய கலவிப பூச லுடறறுதற் குருத்த நெஞ்சர்

மெள்ளவே யிமையை நீக்கி யஞ்சன [2]விழுது வேய்ந்த
கள்ளவா [3]ணெடுங்க ணென்னும் வாளுறை கழிக்கின றுரை.

(இ - ள்.) பள்ளியில்-படுக்கையில், மைந்தரோடும் ஊடிய பணபு நீங்கி-(தமது) கணவரோடு பிணங்கிய தனமையை விட்டு, ஒள்ளிய கலவி பூசல் உடற்று தற்கு உருதத நெஞசா - சிறநத புணாசசியாகிய போரைச செய்தற்கு எழுநத மனததையுடையவர்களாய, மெள்ளவே இமையை நீகி - மெலல (த தமது) கணணிமைகளைத திறந்து, அஞ்சனம் இழுது வேய்ந்த கள்ளம வாள நெடுங கண எனனும வாள் உறை கழிகினறுரை - மையாகிய நெய பூசபபெற்ற வஞ்சனையையும ஒளியையுமுடைய நீணட தமது கணகளாகிய வாளாயுதங்களின உறையைக கழறறுபவாகளான இராககதமாதாகளையும,—(எ - று.)

சில அரகியா தமது கணவரும் தாமுமாக ஒருபடுக்கையிற் கூடியிருக்கின்றபொழுது அகக்கூடலினபம சிறககுமாறு தமதுகொழுநரிடதது ஏதேனுமொருகுற்றததை ஏறிட்டு அதுவியாஜமாக மனஸ்தாபங்கொண்டு அவரோடு சேராது சிறிதுவிலகித தனியேபடுததுக கண்மூடி யுறங்குவாபோ லிருப்பா; அங்ஙனம பொய்யுறககங்கொணடிருக்கையில, மனம் கலவியை நாடியதனால், அகததிற் புலவிதணிந்து, தமதுகொழுநா தமது ஊடலைதீர்ககும முயற்சியுடையராகின்றனரோவென்று நோக்கக் கருதி அவா அறியாதவணணம் கணகளைச சிறிதுதிறந்து பாரப்பவராயினா; அவ்வாறு கணணிமைகளை மெலல நீக்கிக கணகளைக்கொணடு பாரததல, வாட்படைகளை உறைகழிததெடுததது உருவுமாறுபோ லிருநததென்க. அப்படி வஞ்சனையாக மெல்லத திறநத தலைவியா கணகளினழகிலே அககாதலியாமேலேயே கண்ணுங்கருததுமாயிருநத அவ்வரககா ஈடுபட்டு நெஞ்சுருகி நெகிழ்பவராயின ரென்பதும இஙகுப்போதரும. கணணுகிய வாளுககு இமை உறையும், மையே நெய்யுமாம். கொழுநா அறியாதபடி மெல்லப்பார்த்து அவரியல்பை அறிய முயன்றமைபற்றி, 'கள்ளம' என்ற அடைமொழி கண்ணுக்குக கொடுக்கப்பட்டது.

உருவகவணி. பி - ம்:—[1]உள்ளிய. [2]எழுதி. [3]நயனமென்னும. (ககஎ)

ககஉ. ஓவிய மனைய மாத[1] ரூடின ருணர்வோ டுள்ள
மேவிய கரண மற்றுங் கொழுநரோ டொழிய யாணர்த்
தூவிபம் பேடை யென்ன [2]மின்னெனத் துவள வேகி
யாவியுந் தாமு மேசென் றருங்கத வடைக்கின்றுரை.

(இ - ள்.) ஊடினா - (தமது கணவரோடு) பிணங்கியவாகளாய் (அவாகளை விட்டுபபிரிநது),—உணாவோடு-(அங்ஙனம பிணங்கிய தமது) அறிவும, உள்ளம - மனமும, மற்றும் மேவிய கரணம - மற்றும பொருநதிய(சிததமும அகங்காரமு மாகிய) அந்தககரணங்களும், [ஆக அகததுறுப்பு நான்கும], கொழுநரோடு ஒழிய - அநதத தமது கணவருடனே சென்றுவிட, மின் என துவள - மின்னலபோலத (தமது உடம்பு)துவள, யாணா தூவி அம் பேடை

என்ன - அழகிய இறகுகளையுடைய அழகிய அன்னப்பேடை போல, ஏகி - (மெல்ல) நடந்து, ஆவியும தாமுமே சென்று - தமது உயிருந்தாமுமாகவே (ஓரறையினுள்ளே) சென்று, அருங கதவு அடைகின்றார் - அருமையாகக் கதவுகளை மூடிகொள்ளுகின்றவர்களான, ஓவியம் அனைய மாதரை - சித்திரபிரதிமைபோன்ற [சிரம்பிய அழகுள்ள] இராக்கதமாதாகளையும்,—(எ-று.)

கொழுநரிடத்துநேர்ந்தகுற்றங காரணமாக ஊடிப் பிரிந்த விடத்தும், மகளிரது அந்தககரணங்கள அவரிடததே தங்கிவிட்டதனால், அமமகளிர, உயிர மாததிரமே மிசசப்பட்டவாகளாய், மின்னல்போல உடம்பு தள்ளாட அன்னப் பேடைபோல மந்ததியாக நடந்து கோபகிருகத் தினுட் சென்று,வலியிலலாமற்சிரமப்பட்டு மெல்லக கதவைசசாததுகின்றன ரெனக. கலைததுக்கலைத்துச சோதிருததி எழுதககூடியதாதலால, சிததிரப்பாவை அழகிற சிறநததாதல்பற்றி அழகிய மகளிரகளு உவமை கூறப்படும். இங்கு அது அழகுகளேயன்றி அயாசசியாற் செயலறுதற்கும உவமையாகுமாறு உணரக; பேடை - பறவையின பெணமைப்பெயர; 'தூவி' என்ற அடைமொழியினால், அன்னப்பேடையைக குறிததது தூவி - அன்னசசிறகு. 'மாதா அடைக்கின்றாரை' என்பது, அடைகின்றாமாதரை யென உருபு பிரிததுக கூட்டப் பட்டது. பி ம்:—[1]ஊடியவுணாவோடு. [2]மினனிடை. (கக அ)

கக௯. கின்னர மிதுனம் பாட [1]வெண்மழை கிழித்துத் தோன்று
மின்னெனத தரளம வேயநத வெணணிற விமான மூர்ந்து
பன்னக மகளிர சுற்றிப் பலாண்டிசை பரவப் பண்ணைப்
பொன்னகர் வீதி தோறும புதுமனை புகுகின் றாரை.

(இ - ள.) கினனர மிதுனம பாட - ஆணும்பெண்ணுமாகிய இரட்டையாய் நிற்கின்ற கினனரரெனனுந் தேவசாதியார கீதமபாடவும், பனனக மகளிர சுற்றி பலாணடு இசை பரவ - நாககன்னிகைகள் சூழ்ந்து வாழ்த்துப் பாடல்களைப் பாடிவாழ்ததவும,—வெள மழை கிழிதது தோன்றும் மின் என- வெள்ளமேகததைக கிழிததுககொணடு விளங்குகின்ற மினனல்போல, தரளம வேயந்த வெள் நிறம் விமானம ஊர்ந்து - முததுக்களால் அலங்கரித்துசசெய்யப்பட்ட வெணணிறமான விமானததில ஏறி, பணணை - மகளிர கூட்டததுடனே, பொன நகர வீதிதோறும - அழகிய அந்த இலங்காபுரியின் வீதிகளிலெலலாம், புது மனை புகுகின்றாரை - புதிதாக(க கணவர) மனைக குச செலகின்றவராகளான இராகததமங்கையரையும,—(எ - று.)

பெணவீட்டில விவாகம நடந்தேறியபினபு அங்குநின்று சுபமுகூரததத் திற கணவாமனைககுச செலகின்ற கல்யாணபபெணகள், இங்குக குறிக்கப் பட்டனர அங்ஙனஞ செலலுஞ சடங்கு, வதூப்ரவேசமெனபபடும. வெண்ணிறவிமானததிறகு வெணமழையும், மெலலியராய விளங்கும் மங்கையாகக் கின்னலும உவமையாம. 'நீரையுட்கொணடிராத வெணமழையைக கிழித

துத்தோன்றும் மின்னல்' என்றது - இல்பொருளுவமை. கிந்நரரும், யக்ஷரும் - பதினெண்தேவகணங்களிற சேர்ந்தவர். பலலாண்டு - பல் ஆண்டு பல வருஷகாலம் வாழவேண்டுமென்று வாழ்த்தும் பாடல். 'புதுமலை புகுகின்றாரை' என்பதற்கு - புதிதாககட்டப்பட்ட மாளிகைகட்குக் கிருகபிரவேசம் போகின்றவர்களை யென்றலுமொன்று. பி - ம்.—[1]கிளர், விண. ()

கஉ0. கோவையுங் குழையு மின்னக் கொண்டலின் முரச மார்ப்பத்
தேவரவந் தாசி கூற முனிவர்சோ பனங்கள் செப்பப
பாவையர் குழாங்கள் சூழப பாட்டொடு வான நாட்டுப
பூவையா பலாண்டு கூறப புதுமணம் புணர்கின் றாரை.

(இ - ள்.) கொண்டலின் முரசம் ஆர்ப்ப - நீர்கொண்டமேகம் (இடி முழங்குமாறு) போல முரசவாத்தியங்களை ஆரவாரிக்கவும், தேவர் வந்து ஆசி கூற - தேவர்கள் வந்து ஆசீர்வாதஞ்சொல்லவும், முனிவர் சோபனங்கள் செப்ப - இருடிகள் மங்கலவாழ்த்துக் கூறவும், பாவையர் குழாங்கள் பாட்டொடு சூழ - ரிஷிபத்நிகளின் கூட்டங்கள் பாட்டுப்பாடிகொண்டு சூழ்ந்து வரவும், வானம நாடு பூவையர் பலாண்டு கூற - தேவலோகத்துப்பெண்கள் பல்லாண்டு பாடவும், கோவையும் குழையும் மின்ன புதுமணம் புணர்கின்றாரை - (கழுத்திலணிந்த) ஹாரங்களும் (காதிலணிந்த) குழையென்னும் அணிகளும் (தமது புடைபெயர்ச்சியால்) மின்னுமாறு புதிதாகக் கல்யாணஞ் செய்துகொள்ளுகின்றவர்களான இராகதர்களையும்;—(எ - று)

மின்னமணமபுணர்கின்றார் என இயையும். பாவையர்-சித்திரப்பதுமை போலழகியமகளிர் 'முனிவர்சோபனங்கள்செப்ப' என்றதை அடுத்துநின்றதனால், 'பாவையர்' எனபது முநிபத்நிகளென்று கொள்ளப்பட்டது. பூவை-கிளி அல்லது நாகணவாய்ப்பறவை; அதுபோன்றவர், பூவையர்: கொஞ்சிப் பேசும இனசொல்லில் உவமம (கஉ0)

கஉக.—சீதையைத்தேடிச்செல்லும் அநுமான் கும்பகர்ணனைப் பார்த்தல்.

இயக்கிய ரரககி மார்க ளுகிய [1]ரெஞ்சில் விஞ்சைச்
முயறகறை [2]மலராத் திங்கண முகததிபா முதலி னோரை
மயக்கற நாடி [3]யேகு மாருதி மலையின் வைகுங்
கயக்கமி றுயிறசிக் [4]கும்ப கருணனைக் கண்ணிற் கண்டான்.

(இ - ள்.) (மற்றும பல வேறுவகைபபட்ட தொழில்களை மேற்கொண்டு நிறகின்றவர்களான), இயகியர்-- யக்ஷஸ்திரீகளும், அரகிமார்கள் - ராக்ஷஸஸ்திரீகளும், நாகியர் - நாகக்கன்னிகைகளும, எஞ்சு இல் - குறைவற்ற [நிறைந்த], விஞ்சை - மாயவித்தைகளில தோந்த [வித்தியாதரசாதியரான], முயல் கறை மலரா திங்கள் முகததியா - முயலெனப்படுகின்ற களங்கம விளங்காததொரு பூரணசந்திரன (உண்டானால அது) போன்ற முகத்தை யுடையவரான மாதர்களும், முதலினோரை - முதலானவர்களையும், மயக்கு

அற நாடி - சந்தேகமில்லாதபடி நன்றாகப் பார்த்துக்கொண்டே, ஏகும் - செல்லுகின்ற, மாருதி - வாயுகுமாரனான அநுமான்,—மலையின் வைகும் - மலைபோலப் பெருவடிவமாயபடுத்துள்ள, கயக்கம் இல் துயிறசி கும்பகருணனை - கலக்கமில்லாத தூகததையுடைய கும்பகாணனை, கணணின் கண்டான் - (தனது) கணகளாற பாத்தான்; (எ - று.)

கும்பகர்ணன் என்ற வடமொழிப்பெயாக்கு - குடம்போன்ற காதுகளையுடையவனெனபது பொருள். இவன் தனது தமையன் தம்பிகளான இராவணவிபீஷணாகளுட னிருநது இளமையிற பெருநதவஞ்செய்து முடித்த பொழுது, இவனுககு வேணடிய வரங்கொடுகெகுமாறு பிரமதேவன் பிரதியக்ஷமாக, அக்கடவுளை 'என்றும் யான் அழியாது நிததியனாயிருத்தல் வேணடும்' என்று வரமவேணடதொடஙகிய இவன, தேவாகள் விருப்பததின்படி தன்நாவில் வந்து நின்ற ஸரஸ்வதீதேவியின் சூழ்ச்சியால் என்றும் யான் நிததிரையுள்ளவனாயிருததல் வேணடும்' என்று வரம் வேண்ட, அப்படியே அநகடவுள் அநுகிரகித்தனால், இவன் என்றும் நெடுந்தூககமுள்ளவனாய விட்டனன். ஆனதுபாறி, 'கயக்கமில் துயிறசிக் கும்பகருணன்' என்றார். மலை - கும்பகாணனது பருததோஙகிய வலியபெரியவடிவிறகு உவமை.

களஙகமற்ற விததியாதரமாதா முகத்துக்கு உவமையாவதறகாக களங்கமில்லாததொரு சநதிரமணடலததை அதற்கு உவமையாகக் கறபிததார்: இல்பொருளுவமை; சந்திரனிடததுள்ள களஙகத்தை முயலென்றல், ஒரு வகைக கவிசமயம். மானென்றலு முணடு. இவர்களிற சீதையிலலை யென்று நன்றாக அறிநது என்பார், 'மயககறநாடி' என்றார். பி - ம்:—[1]செஞ்சொல். [2]இலாத. [3]ஏஙகும். [4]ஆன. (கஉக)

வேறு

கஉஉ.—கும்பகர்ணன் படுத்திருக்கின்ற மண்டபத்தின் இயல்பு.

ஓசனை [1]யேழகன் [2]றுயர்ந்த வும்பரின்
வாசவன் மணிமுடி கவித்த மண்டப
[3]மேசற விளஙகிய திருளை யெண்வகை
யாசையி னிலைகெட [4]வலைக்க லான்றது.

(இ - ள்.) ஓசனை ஏழ் அகன்று - ஏழுயோஜனை விசாலமுள்ளதாய், உயர்ந்த உமபரின - சிறந்த மேலுலகததில், வாசவன் மணி முடி கவிதத- இந்திரன் இரததினகிரீடஞ் சூட்டப்பெறுதற்கிடமான, மண்டபம் - மணடபமபோல, எசு அற விளஙகியது - குறறமிலலாமல் விளஙகிகொணடிருப்பது; இருளை - இருட்டை, எண வகை ஆசையில் நிலைகெட - எட்டுவகைத் திகுககளிலும் நிலைநிலலாமற போமபடி, அலைகல் ஆன்றது - அழித்தல் பொருநதியது; (எ - று.)—இசசெய்யுளிலுள்ள 'விளஙகியது,' 'ஆன்றது, என்ற தெரிநிலைமுறறுககளுககு 'கும்பகாணன் படுதிருகின்ற மண்டபம்' என்று எழுவாய வருவிகக.

ஏழுயோசனை தூரம் விசாலமுள்ளதும், சிறந்த சுவர்க்கலோகத்தில் இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் நடந்த இடமுமான சுதாமையென்னும் தேவசபாமண்டபம்போலச சிற்பசாஸ்திர லக்ஷணததின்படி யாதொரு குற்றமுமில்லாம லமைந்துள்ளது அம்மண்டப மென்றும், எட்டுத் திக்குக்களிலும் இருளென்ப திலலையாம்படி நெடுந்தூரம் விளங்கும் பிரகாசமுள்ளது அமமண்டப மென்றும கூறியதாம். இராவணனும கும்பகர்ணனும் விபீஷணனும தவஞ்செயது வரமபெற்று இலங்கையை யடைந்தபினபு வரபலததால் நிததிரையானது கும்பகர்ணனைப் பீடிக்க, அவன 'எனக்குச சுகமாய் நிததிரை செய்யுமபடியான தொரு மாளிகை நிருமிததுத தரவேண்டும்' என்று அணணனிடஞ் சொல்ல, உடனே இராவணன் படிகக்கற்களினாலும் பொன்னாலும் அழகியதும் பெரியதும் பரந்ததுமான மாளிகையொன்று கட்டுவித்துக கொடுததனன்; தமபியும அதிறபடுததது நெடுங்காலந் துயில்வானாயினனென்பது, உததர ராமாயண வரலாறு. உத்தரகாண்டச செய்யுளில "அகலமோரோசனை" என வருதலால, இச்செயயுளில் 'ஓசனையேழகன்று' என்றது, கும்பகர்ணன் தூங்குகின்ற மண்டபததுக்கு அடைமொழியாக்கப்படாது இந்திரன் மணிமுடிகவிதத மண்டபத்துக்கு அடைமொழியாக்கப்பட்டது. வாஸவன் வடசொல்வசுகளை தலைவன்; அல்லது, ஐசுவரியமுடையவன். வசு-தேவரிலொரு பகுப்பினரும, ஐசுவரியமும். பி - ம்:—[1]நூறு. [2]உயர்ந்தது. [3]ஏசுற. [4]அளப்பவான்றது.

இதுமுதல் எட்டுக்கவிகள் - இப்படலத்தின் ௪௩ - ஆங கவிபோன்ற கலிவிருத்தங்கள். (கஉஉ)

கஉ௩. இதுமுதல் ஏழுகவிகள் - தூங்கும்: - கும்பகர்ணன் தூங்கிக்கொண்டிருக்கின்ற நிலையை வருணிப்பன.

அன்னத னடுவெணு ரமளி மீமிசைப்
பன்னக வரசெனப் பரவைதானெனத்
துன்னிரு ளொருவழித் தொகக தாமென
வுன்னருந் தீவினை யுருக்கொண் டென்னவே.

(இ - ள்.) அன்னதன் நடுவண் - அத்தன்மைத்தான மண்டபத்தின் நடுவிடத்திலே,—ஓர் அமளி மீமிசை - ஒருபடுகக்கையினமேல்,—பன்னகம அரசு என - சர்ப்பராஜனான ஆதிசேஷன் போலவும், பரவைதான் என - கடல் போலவும், துன் இருள் ஒருவழி தொகக்கது ஆம என - (உலகததது)நெருங்குகின்ற இருளெல்லாம் ஓரிடததிற் சோநதிருநததது போலவும, உன அருந் தீவினை உரு கொண்டு என்னவே - நினைததற்குங கூடாததான பாவங்கள் (திரண்டு) ஓர் ஆடவவடிவத்தைக கொண்டாற் போலவும்,—(எ - று.)—'உறக்கமெயதினான' என மேல் கஉ௩-ஆஞ் செயயுளோடு தொடாநது முடியும; 'நடுவண்,' 'மீமிசை' என்றவற்றிறகும அதுவே முடிககுஞ சொல.

மிகபபரந்த நீண்ட வடிவில், ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன் கும்பகர்ணனுககு உவமை. கரிய பெரிய வடிவததில, கடல் உவமை: அதுபற்றியே, 'இருளொருவழிததொக்கதாமென' என்றும், 'தீவினையுருக்கொணடென்னவே' என்றும உவமை குறித்தார். இவ்வுவமைகளெல்லாம், அசசந்தருதல் பற்றியும ஏற்கும. பாவததைக கருதிறமுடைய தென்றல், கவிமரபு. அத் தீவினையின் மிக்க கொடுமையை விளக்குவார் அதற்கு 'உன்னரு' என்ற அடைமொழி கொடுததார் 'உன்னருத் தீவினை உருககொணடென்ன' என்ற உவமையால, கும்பகாணன் கொடிய தீவினைகளையே செய்பவனெனபதும கூறியதாம. (கஉரு)

கஉச. முன்னிய கனைகடன் முழுகி மூவகைத்
தன்னியல [1]கதியொடு தழுவித் தாதுகு
மன்னெடுங் கறபக வனததுள் வைகிய
வின்னிளந் தெனறல்வந் திழுகி [2]யேகவே

(இ - ள்.) முன்னிய கனை கடல் முழுகி - முன்னுள்ள [அருகிலுள்ள தான] ஒலிகினற கடலில தோயாது எழுநது, தன் இயல மூ வகை கதியொடு தழுவி - தனகுப பொருந்திய மூனறுவகையான நடைகளோடுங கூடி, தாது உகு மன நெடுங கறபகவனததுள் வைகிய-மகரநதப்பொடிகள சிந்தப்பெற்ற நிலையான நீண்ட கற்பகசசோலையில் தங்கிய, இன் இளந் தெனறல் - இனிய இளமையான தென்றற்காற்று, வந்து இழுகி ஏக-வநது (தன்மீது) உராய்ந்துசெல்லவும:—(எ - று.)—'உறககமெயதினான்' என்க.

குமபகாணன் படுததிருககிற மாளிகையில் இததெனறறகாற்று இனிமையாக அவன்மேல் வீசிகொணடிருத்தலை எடுத்துக கூறினர். அக்காற்று அவ்விலங்காபுரியைச சாரவுளள கடலிற் பட்டுக குளிரசசிபெற்று அதன் சிறுதிவலைகளை வீசிகொணடுவருதலை விளக்குவார, 'முன்னிய கனைகடல் முழுகி' என்றார். மூவகைக கதி - மந்தகதி [மெதுவான நடை], மததியகதி [இடைத்தரமான நடை], தவரிதகதி [விரைவானநடை] என்பன; கற்பக வனம் - தேவலோகததுக் கற்பகதருவை வலியகொணாந்து நாட்டப்பெற்ற இலஙகை நகரததுசசோலை. முழுகி, தழுவி, வைகிய தென்றலென இயையும் பி - ம்:—[1]கதியொடும. [2]ஏறவே. (கஉச)

கஉரு. வானவர் மகளிராகால வருட மாமதி
யானனங் கண்டமண் டபத்து ளாய்கதிர்க்
கானகு காந்தமீக் கானற காமாரீர்த்
தூநிற நறுந்தளி முகததிற் றோற்றவே.

(இ - ள்.) வானவா மகளிர - தேவமாதர்கள், கால் வருட - (தனது) காலகளைப பிடிக்கவும,—மா மதி ஆனனம்கணட - (அவர்களுடைய) பூர்ண சநதிரன்போனற முகததைப் பாரதத, மணடபததுள ஆய கதிர் கால நகு

சாந்தம் - அந்த மண்டபத்திற் சிறந்த ஒளியையுடைய தூண்களாய் விளங்குகின்ற சந்திரகாந்தககற்கள், மீ கான்ற - மேலநின்று சொரிகின்ற, காமர்நீர் - அழகிய [இனியையான] நீரினது, தூ நிறம் ஊறுந் தளி - சுத்தமானநிறத்தையுடைய நல்ல துளிகள், முகத்தில் தோற்ற - (தனது) முகத்தில் தெறிக்கவும்,—(எ - று.)—'உறககமெய்திஞன்' என்க.

சந்திரகாந்தம்-சந்திரன்முன் நீர்காலுவதொரு கல்; கும்பகர்ணன்படுத்து உறங்கும்போது தேவஸ்திரீகள் அவனுக்குக் கால்பிடிக்கின்றனர்; அங்ஙனம் பாதசேவைபணஞுகின்ற அம்மாதர்களின் முகசந்திரன் ஒளி வீசுதலால் அருகிலுள்ள சந்திரகாந்தக் கற்றூணகள் மேலிருந்து நீர்சுரந் துமிழ, அந்நீர்த் துளிகள் காற்றிஞல வீசப்பட்டு அக்கும்பகாணனது முகத்தில் தெறிகத அவனுக்குக் குளிர்ச்சிசெயகின்றன வென்க. முகத்தைச சந்திரனென்று மயங்கிச சந்திரகாந்தம் நீர்கான்ற தென்றதஞல், மயக்கவணி. (கஉரு)

(இதுவும், அடுத்தகவியும் - கும்பகாணன் தூங்கும்போது விடுகின்ற சுவாசத்தின் வலிமையை விளக்கும்.)

கஉசு. மூசிய வுயிர்ப்பெனு முடுகு வாதமும்
[1]வாசலின் புறத்திடை நிறுவி வன்மையா
ஞசியி னளவையி [2]னடத்தக் கண்டவன்
[3]கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினன்.

(இ - ள்.) மூசிய - (ஒன்றன்பின் ஒன்ருய) நெருங்கிவருகின்ற, உயிர்ப்பு எனும் - (கும்பகாணனது) சுவாசமென்கிற, முடுகு வாதமும - விரைவு கொண்ட [அல்லது வலிய] காற்றும், வாசலின புறத்திடை நிறவி - (அம் மண்டபத்தையடுத்துச செல்லுகின்ற அநுமானை அப்பாற்செல்லவொட்டாது அம்மண்டபத்து) வாயிலின் வெளிப்புறத்தில் நிறுத்தி, நாசியின் அளவையின் வன்மையான் நடத்த - (அக்கும்பகாணனது) மூக்குவரையில் வலிய இழுத்துக் கொண்டுசெல்ல,—கண்டவன் - (அதனைப்) பார்த்துணர்ந்தவனான அவ்வநுமான், கூசினன் - (அம்மூக்கினுள்ளே செல்லக) கூசியவனும், விதிர்த்த கையினன் குதித்தனன் - (அச்சத்தால்) நடுங்கிய கைகளையுடையவனும் விலகி அப்பாற்குதித்தனன்; (எ - று)

மிகக வலிமையையுடைய அநுமான் வீதியோடு செல்லும்போது அவனை அப்பாறசெல்ல வியலாதபடி இம்மண்டபத்து வாசலுக்கு நேராக வெளியில் நிறுத்தி மூக்குவரையிலும வலிய இழுத்துச்செலலும் வலிமையதாயிருந்தது அக்கும்பகாணனது மூச்சுக்காற்று என்பதாம். யுத்தகாண்டத்துக் கும்பகருணன் வதைப்படலத்தில் "திண்டிறல் வீராவாயில திறந்ததலும சுவாத வாதம, மண்டுற வீரரெலலாம வருவது பேர்வதாகி" என்பது, இங்கு நோக்கத்தக்கது கைநடுங்குதல், அச்சத்திஞலாகுவது.

'மூசியவுயிர்ப்பு' என்ற சொற்சோக்கையால், மூசுவது மூச்சு என அச்சொல் காரணப்பொருள்பெறுவ தென்று தோன்றுதலை உய்த்துணர்க.

'வன்மையான் நாசியின் அளவையின நடத்த' என்பதற்கு - வலிமையை யுடையவனான அகக்குமபகாணனது மூக்கினளவாகச செலுத்த என்று பொருள் கொள்ளுதலுமாம். முந்தினபொருளில், 'வன்மையான' என்பது - மூன்றும் வேறறுமைவிரி; இப்பொருளில், குறிப்புவினையாலணையும பெயர். கண்டு அவன என்று பிரித்தலுமாம். பி - ம்:—[1]ஆசையின்புறத திடையளவி. [2]நடக்க. [3]கொதித்தனன். (கஉசு)

கஉஎ. பூழியின் றொகைவிசும பணவப போய்ப்புகுங்
கேழிலவெங [1]கிளாகிடை யுயிரபபுக கேடிலா
வாழிய வுலகெலாந துடைககு மாருத
மூழியின் வரவுபாத் துழலவ தொததே.

(இ - ள்.) பூழியின் தொகை விசும்பு அணவ - துளியின் கூட்டம் (எழுந்து) ஆகாயததை யளாவிசசெல்லுமபடி, போய - (அகக்குமபகாணனது மூக்கினின்று) வெளியே சென்று, புகும - (மீளவும அமமூககினுள்ளே வந்து நுழைகின்ற,—கேழ் இல் - ஒப்பறறதும், வெம - கொடியதும, கிளா - மேனமேலெழுவதுமான, கிடை உயிரப்பு - (அகக்குமபகாணன்) படுததுக் கொண்டு தூங்குமபோது விடுகிற சுவாசமானது,—கேடு இலா வாழிய உலகு எலாம துடைக்கும மாருதம் - அழிதலிலலாமல் நெடுங்காலம நிலைபெறறு வாழ்தலையுடைய உலகங்களையெல்லாம (கறபாந்தகாலததில்) அழிபபதான பிரசண்டவாயு, ஊழியின் வரவு பாரதது உழலவது - அவ்யுகாந்தகாலததின் வருகையை யெதிரபாரதது அதுவரையில ஓரிடததுச சஞ்சரிததுககொண்டி ருப்பதை, ஒத்தது - போனறது; (எ - று.)—குளகசசெயயுளகளின் நடுவில் இடைபபிறவரலாகவந்த இவவிரணடுசெய்யுளகளின்பின 'இகுநனம ஆக' என்று வருவிதது, மேல் கஉக - ஆஞ் செயயுளில் 'உறககமெய்திஞன்' என் பதனோடு முடிகக.

உசசுவாசமாக வெளியேசெல்லுமபோது தெருக்களிலுளள புழுதிகளை யெல்லாம வாரியெழுப்பி ஆகாயததையளாவச செலுததிய பிறகு நிசசுவாச மாகத திரும்பிமூககினுட்புகுவதான குமபகாணனது சுவாசமானது, கறபாந் ததில் மிகப் பெரிய சூறறுவளியாக நெடுங்காலம உலகமெங்கும வீசி அவ் வுலகங்களையெல்லாம் அழிபபதான சண்டமாருதம் அவ்வூழிககாலததின வரவை யெதிர்பார்ததுககொண்டு அதுவரை ஓரிடததுச சஞ்சரிததிருந்தாற போனற தெனக தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கிளரிடை. (கஉஎ)

கஉஏ பகையென மதியினைப் பகுத்துப பாடுற
வகையிலபேழ் வாய்மடுத தருந்து வானெனப
புகையொடு முழங்குபே ருயிரப்புப் பொங்கிய
நகையிலா முழுமுகத தெயிறு நாறவே.

(இ - ள்.) மதியினை - பூரணசந்திரனை, பகை என - (அரக்கராகியதங்க ளுககுப) பகைவனென்று நினைதது, பகுதது - (அசசந்திரமண்டலததை இரு

கூருகப்) பிளந்து, பாடு உற (தனது வாயின இரண்டு)பகுதிகளிலும பொருந்துமபடி, நகை இல் பேழ் வாய மடுத்து - அழகியதாயிராத திறந்த (தனது) வாயில் இட்டு, அருநதுவான என - உணகின்றனன் (இவ்வன)என்று தோன்றும்படி,—புகையொடு - புகையுடனே, முழுநகு-ஒலிகின்ற. போ உயிர்ப்பு-பெரிய சுவாசம், பொருகிய - மிகுதியாய் வரப்பெற்ற, நகை இலா முழு முகத்து - சிரிபபிலலாத [கடுமையேதோன்றுகின்ற] பெரிய முகத்தில், எயிறு நாற - வகிரதநதங்கள் விளங்கவும,—(எ - று.)—'உறக்க மெய்திஞன்' என்க.

வாயினிருபுறததும வளைந்து வெணணிறமாய வெளித்தோன்றுகின்ற கோரதநதங்கள், சந்திரனதுபிளவு போலும. வடிவும நிறமும பற்றிய உவமை. இராகததராசனுககு அடுதத தமபியாகிய குமபகாணன் சந்திரனிடததுத் தேவாகளிலொருவனென்பது பற்றிப் பகைமைபாராட்டி அவனது வடிவை இருகூருகப்பிளநது தனது வாயிற்பெயது தின்னதொடஙகும்போது அசசநதிரதுண்டஙகள அவனது திறநத கடைவாயிரணடிலும் சிறிது வெளியே தோனறிஞறபோலு மென்று அவனது கோரப்பற்களை உதபிரேட்சிததா; தற்குறிப்பேற்றவணி. சுவாசததிற் புகையெழுதல், அவனது மிகக கொடுமையால. முழுநகுபேருயிரபபு - குறட்டை. (கஉஅ)

கஉகூ. தடைபுகு மநதிரந் தகைந்த நாகம்போ
விடைபுக லரியதோ ருறக்க மெய்திஞன்
கடையுக முடிவெனுங் காலம் [1]பாரததயற்
புடைபெய ராநெடுங் கடலும் போலவே.

(இ-ள) தடைபுகு மந்திரம-தடைசெயவதான மந்திரத்தால், தகைந்த - கட்டுப்பட்ட, நாகம போல - நலலபாமபு போலவும்,—கடையுகம் முடிவு எனும காலம பாரதது - (கற்பததினது) கடைசியுகததின் முடிவென்கிற ஊழிககாலததை எதிரபாரததுக கொணடு, துயல்புடை பெயரா-பக்கததிலெங்கும் பொருகிவராமல் ஒருநிலையில் நிறகின்ற, நெடுஙகடலும் போல - பெரிய கடலும்போலவும,—இடைபுகல் அரியது ஓர் உறக்கம எயதிஞன் - நடுவில விழிததலிலலாத தொரு பெருந்தூககததை யடைநதிருநதான, (அக குமபகாணன்); (எ - று.)

எலலாவுயிகளையும எளிதிற்கொலலககூடிய கும்பகாணன் வரத்திஞற் பெருந்தூககததை யடைநது பிறாககுத தீஙகு ஒனறும் செய்யமாட்டா திருததற்கு, எவ்வுயிரையுந தீணடி யழிககவலலதான பாமபுஸ்தமபநமநதிரத்தாற் கட்டுபபட்டுத தனனிசசைபபடி செல்லமாட்டாது ஒடுஙகியிருததலும, பொருகியெழுநது உலகஙகளினமீது பரவி அவற்றை ஒருஙகுஎளிதில்அழிகக வலலதான கடல கறபாநதகாலமவரையிலும அநஙனஞசெயயாதுகடவுளிஞ ணைககுக கட்டுப்பட்டு ஒருநிலையி லடஙகிநிறறலும உவமை யெனககாண்க. உவமையணி.

இடை புகல - இடையிற்புகுவது: எனவே, இடையூறுயிற்று; தூக்கத திற்கு இடையூறுவது - விழிததல். பி - ம் —[1]ஓர்ந்தயல். (கஉகூ)

வேறு.

கஙo — அவனை இராவணனென் றெண்ணி அநுமான் பெருங்கோபங் கொள்ளுதல்.]

ஆவதாகிய தன்மைய வரக்கனை யரக்கர்
கோவெ னுநின்ற குணமிலி யிவனெனக கொண்டான்
காவலுட்டங்கள் பொறியுகக் கனலெனக் கனன்று
னேவ னேவிவன் [1]மூவரி னொருவனு மீட்டான்.

(இ-ள்.) ஆவது ஆகிய தன்மைய அரககளை-அவ்வாறான தன்மையை யுடைய அந்தராக்ஷஸனை, அரக்காகோ எனு நின்ற குணம இலி இவன் என கொண்டான் - ராக்ஷஸராஜனென்று சொல்லப்பட்டு நிலைபெற்ற நற்குணஞ் சிறிதுமில்லாதவனான இராவணனிவ னென்று நினைதது, காவல் நாட்டங கள் பொறி உக கனல் என கனன்றான்-(தன்னைச சரணமடைநதவாகளைப்) பாதுகாககவல்ல தன் கணகளினின்று தீப்பொறி சிந்துமாறு நெருப்பு போலக கோபித்தான்;(யாவனெனின்,—)இவன் மூவரின ஏவனோ ஒருவன் ஆம் ஈட்டான்-இவன் திரிமூர்ததிகளுள் யாராயினுமொருவனென்று சொல் லததக்க பெருமையையுடையவனான அநுமான்; (எ - று.)

பலபராக்கிரமங்களிற் சிறந்தவனும், கம்பீரமான தோற்ற முடையவனு மான அநுமான் அயன் அரி அரன் என்னுந திரிமூர்ததிகளி லொருவ னென்றுகருதுமபடி யிருததலபறறியும, ருததிராமசமாதலபற்றியும,'ஏவனோ இவன் மூவரினொருவனு மீட்டான்' எனப்பட்டான. இனி, ஆவதாகிய தன் மைய அரககனை, ஈட்டான் ஆம இவன மூவரின் ஏவன் ஒருவனோ என-பல சாலியான இவன (இராவணன் கும்பகாணன் விபீஷணனெனகிற சகோ தரா) மூவரில எந்த ஒருவனோ வென்று (முதலிற) சநதேகித்து, (பினபு), அரககா கோ எனு நினற குணமிலி இவன் என கொண்டான்—ராக்ஷஸ ராஜ னென்று சொலலபபட்டு நினற [இராவணனுகிய] குணககேடனிவனென்று எணணி, காவல நாட்டங்கள கனறபொறி உகக கனன்றான் என்று பொருள கூறுதலும பொருநதும; மூநதினவுரையில, ஈடு - பெருமை, இவ்வுரையில, ஈடு - வலிமை; வடிவின பெருமையுமாம.

தனது அடியாரகளை அருளொடு நோகக்கிப பாதுகாபபன அநுமானுடைய திருககணக ளென்பா, 'காவல் நாட்டங்கள்' எனறார. அங்ஙனம அனபர்கள் மீது குளிரநத கடாக்ஷததைச செயயும இயலபினவான கணகள் இப்பொழுது பகைவாமீது சினந்து அனற்பொறி சொரிநதனவெனக. எனவே, அநுமான் அடியாரையளிககவும கொடியாரை யழிககவும வலல துஷ்டநிகரக சிஷ்ட பரிபாலன சீலனெனபது போதரும. 'நினற' எனறது, குணமிலிககு அடை மொழி. காவல நாட்டங்கள் எனறு பிரிக்கவுமாம பி-ம்:—[1]இறைவாமூவாக ளொனு மீட்டான்.

இதுமுதற் பததொன்பது கவிகள் - இப்படலத்தின் நான்காங்கவி போன்ற கலிநிலைத்துறைகள். (௧௩௦)

௧௩௧.—இராவணனல்லனென்று அறிந்து அனுமான் தணிதல்.

குறுகி நோக்கிமற் றவன்றலை யொருபதுங் குறித்த
விறுகு திண்புய [1]மிருபதிங் கிவனில லென்னு
மறுகி யேறியமுனிவெனும் வடவைவெங் கனலை
யறிவெ னும்பெரும் பரவையம் புனலினு லவித்தான்.

(இ - ள்.) அவன் - அங்ஙனங் கோபித்த அநுமான்,—மற்று - பின்பு, குறுகி நோக்கி - அருகிறசென்று பாரத்து,—தலை ஒருபதும் - பத்துத்தலைகளையும், குறித்த இறகு திண புயமிருபது - (அப்பத்துத் தலைகளுக்கு ஈடாகக) குறிக்கப்படுகிற நெருங்கிய வலிய இருபது தோள்களையும், இங்கு இவன் - இங்குப் படுத்திருக்கின்ற இவ்வரக்கன், இலன் - உடையனல்லன், [ஆதலால் இராவணனல்லன்], என்னு - என்று எண்ணி,—மறுகி ஏறிய முனிவு எனும் வடவை வெம கனலை - மனத்தில் மாறுபடக் கருதியதனு லுண்டாகி வளர்ந்த கோபமாகிய வெவ்விய படபாமுகாக்கினியை, அறிவு எனும் பெரும் பரவை அம புனலினுல் அவித்தான் - தனது அறிவாகிய பெரிய கடலின் நீரினுல் தணித்தான்; (எ - று.)

கும்பகர்ணனை இராவணனென்று மாறுபடவுணர்ந்ததனுலாகிய பெருங் கோபமானது, அவனிடம பத்துத்தலைகளும் இருபதுதோள்களு மிலலாமையைக்கண்டு இவன் இராவணனல்லனென்று உண்மையுணர்ந்ததனுல உடனே தணிந்ததென்க; அதற்கு, வடவாமுகாக்கினி கடல்நீரினுல் ஒருங்கியில் அடங்கிநிற்றல் உவமைகுறிக்கப்பட்டது. பின்னிரண்டடி - உருவக்கவணி விபரீதஞானத்தாலாகும் கொடுமைக்குப் பரிகாரம உண்மையுணர்வினுலாவதென்பது வெளிப்படை. மறறு - வினைமாறறும, அசையுமாம. அவன்தலையொருபதும என்றுஎடுத்து,அவ்விராவணனுக்குஉரிய பத்துத்தலைகளுமெனறு உரைத்தலு மொன்று இருபது என்பதில், எண்ணும்மை விகாரத்தால் தொக்கது [1]இருபது மிவற்கிலையென்னு என்று பாடமோதுவா ஒருசாரார. மறுகுதல் - மனத்தில் மாறுக்கருதுதல். (௧௩௧)

௧௩௨.—அனுமான் அப்பாற் செல்லுதல்.

அவித்து நினறெவ னுயினு மாகவென் றங்கை
கவித்து நீங்கிடச் சிலபக லெனபது கருதாச
செவிக்குத் தேனென விராகவன புகழினைத் திருத்துங
கவிக்கு நாயக னனையவ னுறையுளைக் கடந்தான்

(இ - ள்.) செவிக்கு தேன என - (கேட்பவருடைய) காதுகளுக்கெல்லாம் தேனபோலினிமையா யிருக்குமாறு, இராகவன புகழினை திருத்தும - ரகுகுலத்தில் திருவவதரித்தவனுன இராமபிரானது கீர்த்தியைத் திருத்த

சொல்கின்ற, கவிக்கு நாயகன் - குரங்குகட்குத் தலைவனாகிய அநுமான்,— அவித்து நின்று - (இவ்வாறு கோபத்தை) அடக்கிநின்று, எவன் ஆயினும் ஆக என்று அமைகைகவித்து - 'இவன்யாராயிருந்தாலும் இருக்கட்டும், என்று (உதாசீனமாகத்) தனது அழகியகையை யமைத்து, நீங்கிட சில பகல் என்பது கருதா - (இவ்வாகைகன்) அழிதற்கு இன்னுஞ் சிலநாள்களே யுள்ளன' என்பதாகவும் எண்ணி, அனையவன் உறையுளை கடந்தான் - அக் குமபகாணனது இருப்பிடத்தைக் கடந்து அப்பாற்சென்றான்; (எ - று.)

அமைகைகவித்தல் - உபேக்ஷையின் காரியம். இன்னுஞ் சிலநாள்களுக்குள் இராமன் இங்குவந்து எல்லாவரக்கரையுந் தொலைத்திடுவனெனபது உட்கோளாதலால், 'நீங்கிடச் சிலபகலென்பது கருதா' எனபபட்டது. பகல் - நாளுக்கு இலக்கணை.

தேன் உணபவாநாவுக்கு இனிமைதருதல்போல, இராமபிரானது கீர்த்தியமிருதம் கேட்பவர்செவிகுக்கு இனிமைதருவதென்க; இராமபிரானது கீர்த்தியைத் தனதுசெவிகளுக்குத் தேனாக அழகிதாகக்கொள்ளும் வாநரத்தலைவனென்றலும் ஒன்று; 'எந்தஎந்த இடத்தில் இராமகதை சொல்லப்படுகின்றதோ அந்தஅந்த இடத்தில அநுமான் தலைமேற்கூப்பியகையனாய நின்று ஆனந்தக்கண்ணீர்ததும்ப அச்சரிதராமிருத்தத்தைச் செவியிலேற்றுப் பருகிக் களிக்கின்றனன்' என்ப. கபி - வடசொல். (கஙஉ)

கஙங.—அநுமான் மற்றும் பல இடங்களில் தேடிச்செல்லுதல்.

மாட கூடங்கண் மாளிகை [1]யோளிகை மகளி
ராட ரங்குக ளமபலந் தேவரா லயங்கள்
பாடல் வேதிகை பட்டிமண் டபமுதற் பலவு
நாடி யேகின [2]னிராகவன் புகழெனு நலத்தான்.

(இ - ள்.) மாட கூடங்கள் - மண்டபங்களின் சிகரங்களும், மாளிகை ஓளிகை - வீடுகளின் வரிசைகளும், மகளிர் ஆடு அரங்குகள் - மாதர்கள் நாத்தனஞ்செய்கின்ற சாலைகளும், அமபலம் - பலரும் வந்து கூடத்தக்க பொது விடங்களும், தேவர் ஆலயங்கள் - தேவாலயங்களும், பாடல் வேதிகை - (இனிதுவீறறிருந்து) இசைபாடப்பெற்ற மேடைகளும், பட்டிமண்டபம் - கல்விபயிறறும் மண்டபங்களும், முதல் - முதலான, பலவும் - பல இடங்களிலும், நாடி - (பிராட்டியைத்) தேடிக்கொண்டு, ஏகினன் - சென்றான் (யாவனெனில்,—) இராகவன் புகழ் எனும் நலத்தான்-இராமபிரானது கீர்த்தியே யென்று சொல்லத்தக்க சிறபபையுடையவனான அநுமான்; (எ - று.)

கூடம் - வடசொல்; மலையினுச்சி இங்கு இலக்கணையாய, மேலிடத்தை யுணர்த்திற்று. 'ஓளி கை' என்பது ஒருபொருட் பனமொழியாய்த் தொடர்ந்தது. பட்டிமண்டபம் - கலவிபயிலுதற்கிடமான மண்டபம்; விதிதியாசாலை; இராமபிரானது கீர்த்திக்கு முக்கியாதாரமாய நின்ற அநுமானை, இராமபிரானது கீர்த்தியாகவே குறித்தனர். இராமபிரானது கீர்த்தியே ஒரு புருஷ

வடிவங்கொண்டாற் போன்றவனென்ற கருத்தும் அமையும் மாளிகை யோளிகை யென்றவிடத்துப் பிராசங் காண்க. பி - ம்:—[1]ஒழுங்குகள். [2]நாய கன் புகழெனுங்கலத்தான். (கஉ௩)

கஉ௪.—அநுமான் எங்கும் உட்புகுந்து தேடிச் செல்லும் நிலைமை.

மணிகொள் வாயிலுட் சாளரத் தாள்களின் மலரிற்
கணிகொ ளுளதிற [1]காலினும் புகையினுங் கலக்கு
நுணுகும் வீங்குமற் றவனிலை யாவரே நுவல்வா
ரணுவின் மேருவி னாழியா னெனச்செலு மனுமன்

(இ - ள்.) அனுமன் - அநுமான்,—மணி கொள் வாயிலுள் - அழகு கொண்ட (அங்ஙகரத்து மாளிகைகளின் வாயில்களினுள்ளும், சாளரம் தாள் களில் (அம்மாளிகைகளிலுள்ள)பலக்கணிகளினசலாகைகளினுள்ளும், மலரில் - மலர்களினுள்ளும், கணி கொள் நாளதில - ஊன்றிப்பார்த்து உணரத்தக்க பூரதணுக்களின உட்டுளைகளிலும், காலினும் புகையினும் கலக்கும் - சாரறுப போலவும புகைபோலவும நுணணிதிறசென்று புகுந்ததேடுவான்; நுணுகும் வீங்கும - (அந்தந்த இடத்தின வழிகுத்த தக்கபடி) மிகச்சிறிய வடிவங்கொள் வான பெரியவடிவமுங் கொள்வான; அவன் நிலை யாவரே நுவல்வா - அவ் வநுமான் வேண்டியபடி வடிவங்கொள்ளுகின்ற நிலைமையின் சிறப்பை எவ் தாம சொல்லமாட்டுவர்? [அத்திறமை எவரும சொல்லி முடிக்கத் தரத்ததன்று என்றபடி]; அணுவின் - மிகச்சிறபொருளாகிய அணுவிலும, மேருவின் - மிகப்பெருமபொருளாகிய மேருவிலும, ஆழியான் என - ஸ்ரீமந்நாராயணன் (உட்புகுந்து அந்தாயாமியாயிருத்தல்) போல, செலும - (அவ்வநுமன் எவ் வகைப் பொருளிலும இடையீடின்றி) உட்செலலவலலன்; (எ - று.)

சிறபொருள் பெருமபொருளென்ற வேறுபாடின்றி எல்லாப்பொருளி னுள்ளும் ஒருபடியாகப் புக்கு வியாபிக்கின்ற இயல்பு திருமாலுக்கு உள தென்பது பிரசித்தம். அங்ஙனம அந்தாயாமியாகின்ற திருமாலின்து நிலைமை இராமபிரானாகிய அப்பெருமானையே எப்பொழுதும்இடைவிடாது தியானிக கின்ற மெய்யடியவனான அநுமனிடத்தும அப்பரமனருளால் அமைந்தது போலுமென ஒருவகைச்சமதகாரந தோன்ற, 'அணுவின் மேருவினாழியா னெனச் செலுமனுமன்' என்றன ரென்னலாம். இனி, இச்செய்யுளின் ஈற்றடிக்கு—அணுவின - அணுவவ்வளவு சூக்ஷ்மரூபமாயும, மேருவின் - மேருவவ்வளவு ஸ்தூலரூபமாயும ஆழியான் என செலும - திருமால்போலச் செல்கின்றான, அநுமன் என்று பொருளுரைப்பாருமுளர் அணிமா மகிமா முதலிய அஷ்டமகாசித்திகளில மிகவும நுணணியவடிவமாதல், அணிமா; மிகப்பெரிய வடிவமாதல, மகிமா; இவ்வகைச்சித்திகள் யோகிகளிடத்தும யோகேசவரனான பகவானிடத்தும உண்டு அநுமான் யோகசித்தி கைவந்தவ னாதலால், அவனபக்கல் அவை உள. ஆனதுபற்றி, 'நுணுகும வீங்கும' என்றார் அந்தாயாமித்வம வாமநாவதாரம விசுவரூபம திரிவிக்கிரமாவதாரம முத

லிய சந்தர்ப்பங்களில் அணிமா மகிமா என்ற குணங்கள் திருமாலினிடத்து விளங்குதல காண்க. ஆழியான் - சக்கராயுதத்தையுடையவன், கடலிற் பள்ளி கொண்டுள்ளவன், கடலபோற் கருநிறமானவன்.

மூன்றாமடியில் 'நுணுகும் வீங்கும்' என்ற முறைமைக்கு ஏற்ப, நான்கா மடியில 'அணுவின் மேருவின்' என நிறத்தியது, முறைநிரனிறைப்பொருள் கோளின்பாற்படும். உருவமில்லாததாகிய காற்று மிக நுண்ணிய தெனபது வெளிப்படை. புகை மிகநுணணிய தென்பதை "நீரினுநுண்ணிது நெய் யெனபர் நெய்யினும், யாருமறிவர் புகைநுட்பம்" என்ற நாலடியாரினாலும் அறிக. மாயைகளில் தேர்ந்தவனான இராவணன் சீதையை எவருஞ்சென்று காணலாகாதபடி மிகநுணணிய இடத்தில் மறைத்துவைத்திருத்தலுங் கூடு மெனபதுபற்றி, மலர்களினுளளும் பூந்தண்டுகளினுட்டுளைகளிலும் புகுந்து தேடுபவனானான். 'காலினும் புகையினும் கலக்கும்' என்றதற்கு - காற்றைக காட்டிலும் புகைகயகாட்டிலும் மிகநுணணியனாய் உட்புகுவானென்று பொருள்கூறுதலு மொன்று; மேல் ககக - ஆனாசெய்யுளைக் காணக. காற்றி னுள்ளும் புகையினுள்ளும் ஊடுருவிச்செல்வ னென்று உரைப்பர் ஒருசாரார். காற்றோடு 'காற்றாயும் புகையோடு புகையாயுங் கலந்துசெல்வனென்று உறைத்தலு முண்டு மணிகொள - இரத்தினம்பதித்த என்றுமாம்; இந்த அடைமொழியைச் சாளரத்துக்கு கூட்டலாம். சாளரத்தாள - பலக்கணிக கம்பி பீ - ம்:—[1]காலெனப்புகையெனக் கலக்கும். (கஙஉ)

கஙரு.—அநுமான் விபீஷணனதுமாளிகையினுட் புகுதல்.

ஏந்த லிவ்வகை யெவ்வழி மருங்கினு மெய்திக்
காந்தண் மெல்விரன் மடந்தையா யாரையுங் காண்பான்
வேநதர் வேதியர் மேலுளோ கீழுளோர் விரும்பப
போந்த புண்ணியன் கண்ணகன் கோயிலுட் புக்கான்.

(இ - ள்) இவ்வகை - இவ்வாறு, எவ்வழி மருங்கினும் எய்தி எவ்வகைப் பட்ட இடங்களிலுஞ் சென்று, காந்தள் மெல விரல் மடந்தையர் யாரையும் காணபான - செங்காந்தள்மலரினிதழ்போன்ற மெனமையான கைவிரல்களை யுடைய மகளிரனைவரையும பாரத்துவருபவனாகிய, ஏந்தல் - பெருமையிற் சிறந்தவனான அநுமான்,—வேநதர் - அரசாகளும, வேதியர் - அந்தணாகளும், மேல் உளோர் - மேலுலகத்திலுள்ளவாகளும், கீழ் உளோர்-கீழுலகத்திலுள் ளவாகளும், விரும்ப-(தன்னை) விரும்பும்படி, போந்த - பிறந்த, புணணியன்- நல்வினைகளையேயுடையவனான விபீஷணனது, கண் அகல கோயிலுள்-இட மகன்ற மாளிகையினுளளே, புககான் - சென்றான்; (எ - று.)

சீதையைத்தேடிக கண்டுபிடிககவேணடி, அவ்விலங்கையிலெங்குமுள்ள மாதாகளையெல்லாம பார்ப்பவனாயினன் அநுமா னெனக. ஏந்தல் - (யாவரி னும்) உயாந்தவன்; ஆணபாற்சிறப்புப்பெயா. காந்தள், முதலாகுபெயா.

இராவணனது இறுதிதமபியான விபீஷணன் வேதசாஸ்திரங்களிற் கூறிய நற்குணநற்செல்களையே எப்பொழுதுமுடையவனாய்நின்று யாதோ ருயிர்க்கும்யாதொருதீங்குஞ்செய்யாது ஸாவஜநமித்ரனாகிஎவுலகத்தாக்கும நன்மையேசெய்தல்பற்றி, 'வேந்தர் வேதியா மேலுளோ ரீழுளோ விரும பப்போந்த புணணியன்' என்றார். பி - ம்:—[1]'இவ்வழி யெவ்வழிமருங்கினும்'

கஙசு.—அநுமான்விபீஷணனைச் சமீபித்து நோக்குதல்.

பளிக்கு வேதிகைப பவளத்தின் கூடத்திற் பசுந்தேன
றுளிக்குங் கறபகப பந்தரிற் [1]கருநிறத் தோரை
வெளித்து வைகுவ தரிதென வவருரு மேவி
யொளித்து வாழ்கின்ற [2]தருமமன னுனறனை யுற்றான்.

(இ - ள்.) பசுந தேன் துளிகுகும கற்பகம பந்தரில - புதுமையான தேனை (மலர்களினின்று) சொரிகின்ற கற்பகவிருக்ஷங்கள் அடாந்து நிழல் செய்கின்ற இடததிலே, பளிங்கு வேதிகை - படிககக்கற்களினாலாகிய மேடை களையுடைய, பவளததின் கூடததில் - பவழமயமான அந்தமாளிகையில், கரு நிறததோரை வெளிதது வைகுவது அரிது என - கருநிறமுள்ளவர்களான இராக்கதாகளின் முன்னிலையில வெளிபபடையாய்(த்தனகுரியதான)வெண ணிறவடிவததைககொண்டு வாழ்வது கூடாதென றெணணி, அவா உரு மேவி- அவ்வரகக்ர்களுக்குரிய கருநிறவடிவததை(ததானும) கொண்டு, ஒளிதது வாழ் கின்ற-(அவ்வரக்காகளை)வஞ்சிதது மறைந்து வசிகின்ற, தருமம-தருமததை, அன்னான்தனை - போனறவனாகிய விபீஷணனை, உற்றான் - சமீபித்து நோக்கினன், (அநுமான்;) (எ - று)

தருமமே செயயுமியலபினனான விபீஷணனை 'தருமமன்னான்'எனறார், விபீஷணஸ்துதாமாதமா''எனபபலவிடங்களிற்கூறுவாரால்மீகிபகவானும். தருமம வெணணிற வடிவமுடையது. விபீஷணனோ கருநிறமுடையான; ஆனதுபறறி, அத்தருமமானது கருநிறங்கொண்ட அரகக்ர்களின்முன் தான வெளிப்படையாய்த தனக்குரிய வெண்ணிற வடிவததோடு வாழ்தலியலா தென்றுஎணணி அவாகளபோலவே கருநிறவடிவங்கொண்டுஉருககரந்துவசித தாற போனறவனென்று கறபிததார்; தந்தறிப்பேற்றவணி. கறபகப்பநதரிற பவளததின் கூடத்தில வாழ்கின்ற என இயையும. கீழ் கo ஆஞ் செய்யுளில ''மரமடங்கலுங் கற்பகம்'' என்றபடி இராவணாதி இராக்கதாகள்செய்தபெருந் தவபபயனால் இலங்கையில மரங்களெல்லாம கறபகமாயிருததலால் திவ்விய மானதொரு பூஞசோலை, 'கறபகபபநதர்' எனப்பட்டது. இனி, பவழமய மான கூடததிற படிகமயமான வேதிகையின்மீது தேன துளிகின்றகறபக மலாகளாலாகிய பநதலினகீழப பளளிகொண் டிருகின்றனன் விபீஷண னெனக கொளளினுமாம. அரகக்ர்களில் இவனொருவனே அறவினையாள னெனபது போதரும. வெளிதது, உற்றான் - இரட்டுறமொழிதல. பி - ம்:— [1]கருநிறததோபால வெளுததுவைகுதல். [2]தருமமொபபானறனை. (கஙசு)

கஙஎ. அவனை நல்லனென்று அறிந்து அநுமான் அப்பாற்செல்லுதல்.

உற்று நின்றவ னுணர்வைத்தன் னுணர்வினு லுணர்ந்தான்
குற்ற மில்லதோர் குணமுள னிவனெனக் கொண்டான்
செற்ற நீங்கிய மனத்தின [1]னொருசிறை சென்றான்
பொற்றை மாடங்கள் கோடியோர் நொடியிடைப் புக்கான்.

(இ - ள்.) உற்று நின்று - (இஙஙனம் அநுமான் விபீஷணனைச) சமீபித்துப்பாரத்து நின்று, அவன உணர்வை தன் உணர்வினால உணர்ந்தான் - அவனது அறிவினியல்பைத் தனது நுணணறிவுகொண்டு ஆராயந்தறிநது, குற்றம் இல்லது ஓர் குணம உளன் இவன் என கொண்டான் - குறறமற்ற நற்குணத்தையேயுடையவ னிவனென்று எணணியவனாய, செற்றம் நீஙகிய மனத்தினன் - (அதனால் அரகக்கனாகிய அவன்விஷயத்திற்) கோபமிலலாத மனத்தையுடையவனாகி, ஒரு சிறை சென்றான் - (அமமாளிகையைககடநது) வேறொருபகககத்திற் சென்று, பொறறை மாடஙகள கோடி ஓர் நொடியிடை புக்கான் - மலைபோனற [உயாந்த பெரிய] ஒருகோடி மாடமாளிகைகளுள ஒருநொடிப்பொழுதிலே சென்றான்; (எ - று.)

மாடஙகள்கோடி ஓரநொடியிடைப புககான்-மிகப்பல வீடுகளினுள்ளே அதிவிரைவாகச சென்று பிராட்டியைத் தேடின னெனக. திருமுருகாற்றுப படையில "இகலொடு செற்ற நீகிய மனத்தினா" என்றவிடத்து நசசினாக்கினியா'பகைமை நெடுஙகாலம நிகழ்வது செற்றம்' என்று உரைத்ததுஉணரத்தக்கது. பி - ம்.—[1]ஒருதிசை சென்றான். (கஙஎ)

கஙஅ —அநுமான் இந்திரசித்தின் வீட்டுவாயிலிற் சேர்தல்.

முந்த ரம்பையர் முதலினர் முழுமதி முகத்துச
சிந்து ரம்பயில் வாய்ச்சியர் யாரையுந் தெரிந்து
மந்தி ரமபல [1]கடந்தவன் மனத்தின்முன் செல்வா
னிநதி ரன்சிறை யிருநதவா யிலினகடை யெதிர்ந்தான்.

(இ - ள்.) (அஙஙனம கோடிக் கணககான மாடஙகளில் மிகவிரைநது புக்கு), முந்து அரமபையா முதலினா - (அவ்விடஙகளிலுளள) சிறநததேவ மாதாகள் முதலியவாகளான, முழுமதி முகத்து சிந்துரம பயில வாய்ச்சியா யாரையும் - பூணசநதிரன் போனற முகததையும செநநிறம பொருநதிய வாயையு முடையவாகளாகிய மகளிரனைவரையும, தெரிந்து-பாரத்து (இவர்களில ஒருததியும சீதையல்லளெனறு) அறிந்துகொண்டு, மந்திரம பல கடந்தவன் - அநத மாளிகைகள் பலவற்றையுஞ் சென்றுகழிததவனாய்,மனத்தின் முன் செலவான - தனமனததின் வேகததுக்கும முநதி [மிகவிரைந்து] அப்பாற் செலபவனான அநுமான, இநதிரனசிறை இருந்தவாயிலின்கடை எதிரநதான் - (முன்பு) தேவேநதிரன சிறைகிடநத (இநதிரசிதினது வீட்டின்) கடைவாயிலைச சோநதான (எ - று.)

எவ்வளவு தூரத்திலுள்ள பொருளையும் நினைத்த மாத்திரத்தில் மனம் அவ்விடத்துச் சென்று சேர்தலால், அது. மநோவேகமென விரைவிற்குச் சிறந்ததாக எடுத்துக்கூறப்படும். அதனினும் விரைவாகச் செல்வதெனன்பது, 'மனத்தின்முன் செல்வான்' என்பதன் கருத்து. எந்த விடத்திற் செல்ல வேண்டுமென்று எண்ணினாலும் அங்ஙனம் எண்ணுதற்கு முன் அவ்விடத்திற்கு அப்பாற்சென்று சேர்கின்றனன் விரைவினாலென்க.

இராவணன் இராக்கதசேனையுடனே சென்று திக்குவிசயஞ்செய்கையிற்சுவர்க்கலோகத்தையடைந்து இந்திரனையெதிர்த்துப்போர்செய்தபொழுது அவனால் இந்திரனைச் சயிக்கமுடியாமற்போக, அச்சமயத்தில் அவன்மகனான மேகநாதன் மாயையால் மறைந்து பொருது இந்திரனைக் கலங்கச்செய்து அவனை மாயப்பாசத்தாற் கட்டிக்கொண்டுபோய் இலங்கையில் தனதுவீட்டு வாயிலிற் சிறைவைத்துப் பிறகு சிறைமீட்கவந்த பிரமனால் 'இந்திரஜித்' என்று ஒருசிறப்புப்பெயரிடப்பெற்றனனென்ற வரலாற்றுவிவரத்தை உத்தரகாண்டத்திற் காணலாம். ஆனாற்றறி, அவன் மனைவாயில், 'இந்திரன்சிறையிருந்த வாயில்' எனப்பட்டது. கடைவாயிலெனினும், தலைவாயிலெனினும் ஒக்கும்; முன்வாசல். இனி, வாயிலின்கடை - வாயிலின் இடமென்றலுமாம். எதிர்ந்தான் என்பது, நோக்கினானென்றும் பொருள்படும். பி -ம்·—[1]கடந்து தன் மனத்து. (கஙஅ)

கஙகூ.—அநுமான் அவ்வாயிலில் மிகப்பலஅரக்கரின் பாதுகாவலைக் கடந்து உட்செல்லுதல்.

ஏதி யேந்திய தடக்கையா பிறை[1]யெயி றிலங்க
மூது ரைபெருங் கதைகளும் பிதிர்களு மொழிவா
ரோதி லாயிர மாயிர [2]முணர்விலி யரக்கர்
காது வெஞ்சினக் களியினர் காவலைக் கடந்தான்.

(இ - ள்.) ஏதி ஏந்திய தடகையர்-வாள்முதலிய ஆயுதங்களைக்கொண்ட பெரிய கைகளையுடையவர்களும், பிறை எயிறு இலங்க - பிறைச்சந்திரன் போன்ற வக்கிரதந்தங்கள் வெளியே விளங்க [சிரித்த முகத்தோடு], மூது உரை பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார் - பழமொழிகளுடனே பெரிய சரித்திரங்களையும் விடுகதைகளையும் சொல்லிக்கொண்டிருக்கின்றவர்களும், காது வெம் சினம் களியினர் - (பகைவரைக்) கொல்லவல்ல கொடிய கோபத்தினாலாகிற யுத்தோத்சாகத்தை யுடையவர்களுமான, ஓதில் ஆயிரம் ஆயிரம் உணர்வு இலி அரக்கர் - அளவுசொல்லுமிடத்து ஆயிரத்தாற் பெருகிய ஆயிரமென்னுந் தொகையுள்ள அறிவற்ற இராக்கதர்களின், காவலை - பாதுகாவலை கடந்தான் - (அவ்விந்திரசித்தின் வீட்டுவாயிலிற் கடந்து அதனுள்ளே சென்றனன், (அநுமான்); (எ - று.)

மூதுரை - முதுமொழி; அதனிலக்கணம் - "நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடைமையு, மென்மையு மெனாறிவை விளங்கத் தோன்றிக, குறித்த

பொருளை முடிததற்கு வருஉ, மேது நுதலிய முதுமொழி யான" எனத தொல்காப்பியததிற காணக. பெருங்கதை - தேவாசுரயுததம், க்ஷீராப்தி மதநம, பூவிகராக்ஷசர்வரலாறு போல்வன. பிதா - ஒருசமயத்திற கம்பா ஔவையாரைநோக்கி "ஒருகாலடு நாலிலைப்பந்தலடு" என்றுசொல்லி 'இதன் பொருளென்?' என்று வினவியதும, அதற்கு ஔவையா "ஆரையடாசொன் னாயது" என்று விடைகூறியதும் போல்வன; (ஆரைக்கீரைமுதலின் காம்பு கள் நான்குபிளவுபட்ட இலையையுடையனவாயிருககும்) இராவணன் எதி ரின்றி அரசாட்சிசெயகின்ற அககாலததில் அவன்மகனும் அவனினும வலிய வனுமான இநதிரசிததுககு மாறுயத துணிவுகொண்டு அவன்வீட்டு வாயிலி னுட் செல்லவல்லவ ரெவரு மில்லையாகவே, அவ்வாயில் காவலர்ககுத் தம் கரு மத்திற கருத்துவைககவேண்டிய அவசியமில்லையாதல்பற்றி, அவர்கள் விநோதமாகப் பழமொழிகளையும் பெருங்கதைகளையும் பிதிர்களையும் ஒரு வரோடொருவா சொல்லிககொண்டு பொழுதுபோககுவரென்க.

களி - போர்வெறி; கட்குடியினாலாகிய களிப்புமாம். அரக்கா காது வெஞ்சினக் களியினர் காவல் - இராககதாகள் எதிரிகளையழிக்கும கொடுங் கோபததையும போரூக்கத்தையு முடையவாகளாய் அவ்வாயிலிற் கடுமை யாகப் பாதுகாவல்செய்து நிற்கின்ற நிலை. பி - ம்.—[1]எயிற்றரக்கர் [2]உறு வலியரக்கர். (கஙகூ)

கசா0.—அநுமான் இந்திரசித்தைப் பார்த்தல்.

முகக மேணாக்கினன முதன்மக னறுவகை முகனுந்
திக்கு நோக்கிய புயங்களுஞ் சிலகரந் தனையா
னொக்க நோக்கியர் குழாத்திடை யுறங்குகின் றானை
புககு நோக்கினன் புகைபுகா வாயிலும் புகுவான்.

(இ - ள.) முக்கண நோக்கினன் முதல் மகன் - மூன்றுகணகளாற பாரக்குமியல்பினனான பரமசிவனது சிறநததகுமாரனாகிய முருகக்கடவுள, அறுவகை முகனும-(தனகு இயல்பாயுள்ள) ஆறு முகங்களிலும், திகுநோக் கிய புயங்களும் - திகுககளையளாவிவளாந்துளள (பன்னிரணடு) தோளகளி லும், சில கரந்து அனையான - சில மறையபபெறறுவந்தாற போனறவனாய், ஒகக நோக்கியா குழாததிடை உறங்குகின்றானை - (தனது அழகுககுச) சம மாக அழகுளளவர்களாகிய மாதாகளின் கூட்டததினிடையே தூங்குகினற வனான இந்திரசிததை, புககு நோக்கினன் - (அவன்வீட்டினுள்ளே) போய்ப் பாரததான்; (யாவனெனின,—) புகை புகா வாயிலும புகுவான் - புகை நுழையமாட்டாத வழியிலும் நுழைந்துசெல்லவல்லனான அநுமான்;(எ - று.)

சிவபிரானது இளையகுமாரனான முருகக்கடவுள், அழகிலும் பலபராக் கிரமங்களிலுஞ் சிறததலால், அவ்வியல்புகளில் இளவீரர்ககு உவமைகூறப் படுவன். இராவணன்மகனும் மகாவீரனுமான இந்திரசித்து ஒருமுகத்தையும இருகைகளையுமே யுடையனாயிருததலால, அவனை, 'ஆறமுகங்களையும் பன்னி

ரண்டுகைகளையு முடையனான சுப்பிரமணியமூர்த்தி ஒருமுகத்துடனும் இரண்டு கைகளுடனும் இருந்தாற் போன்றனன்' என வருணித்தார் தம் துறிப்பேற்றவணி.

முக்கணநோக்கினன் - த்ரிநேத்ரன். தேவசேனாபதியாய்த்தீயோரை யழித்து நல்லோரைக்காத்துப் புகழ்பெருமைகள்படைத்து அழகிலும் ஆற்றலிலுஞ் சிறந்ததலால், முருகக்கடவுள், 'முதன்மகன்' எனப்பட்டான்; அன்றியும், சுப்பிரமணியனைத் திரிமூர்த்திளினுமமேம்பட்டவனென்பது, அவனைத் தெய்வமாகக்கொண்ட கௌமாரசமயத்தாரது கொள்கை: அவனைத் திருமுருகாற்றுப்படையில் "பலர்புகழ்மூவருந் தலைவராக" என்றது முதலியவற்றாலுணரலாம்: அந்தந்தத் தேவரைக்குறித்துப் பிரஸ்தாபிக்கும்போது, அவ்வவரைத் தலைமைதெய்வமாகக் கொள்பவரது கோட்பாட்டின்படி சிறப்பித்துக் கூறுதல் மகாகவிகளியல்பு இனி, முக்கணோக்கினனாகிய முதல்வனது மகனென்றும் பதவுரை கூறலாம்.

"மணணளவு பாதலமெலாஞ் சரண மாதிரவரைப்பு மிகுதோள், விணணளவெலாமுடிகள்" என்றபடி முருகக்கடவுள் விசுவரூபங்கொள்ளுமிடத்து அவன் தோள்கள் திசைகளை யளாவி வளாதலால், 'திக்குநோக்கியபுயங்கள்' என்றார் ஒக்கநோக்கியா - உருவம குணம் குலம் செல்வம் முதலியவற்றில் இந்திரசிதனோடு ஒப்புமையுடைய மகளிரெனனலாம். ஒக்க என்ற செயவெனெச்சம், 'நோக்கியர்' என்ற பெயரிற பொதிந்துநின்ற 'உடையவர்' என்பதைக் கொள்ளும். புகைபுகமாட்டாத சிறுவழியினுள்ளும் புகுபவனென, அநுமானது அணிமாவென்னுஞ் சித்தியின் காரியத்தை விளக்கினார் (கச0)

கசக.—அவனது உருவத் தோற்றத்தால் அவனிடத்து அநுமான் பெருமதிப்புக் கொள்ளுதலைத் தெரிவித்தல்.

வளையும் வாளெயிற் றரக்கனோ கணிசசியான் மகனோ
வளையில் [1]வாளரி யனையவன் யாவனோ வறியே
னிளைய வீரனு மேந்தலு [2]மிருவரும் பலநா
ளுளைய வுள்ளபோ ரிவனொடு முளதென வுணர்ந்தான்.

(இ-ள்.) அளையில் வாள் அரி அனையவன் - மலைக்குகையினுள வாழ்கின்ற கொடிய சிங்கம்போன்றவனான இவன்,—வளையும வாள எயிறு அரக்கனோ - வளைந்திருக்கின்ற பிரகாசமுள்ள கோரப்பற்களையுடைய இராக்கதக்குமரனோ? கணிசசியான் மகனோ - மழுவாயுதத்தை யுடையவனான சிவபிரானது குமாரனாகிய முருகக்கடவுளோ? யாவனோ - யாரோ? அறியேன - (நான) அறிகின்றேனில்லை இளைய வீரனும - இளையபெருமாளும [இலக்குமணனும்], ஏந்தலும் - தலைவனான இராமபிரானும், இருவரும் - ஆகிய இவ்விருவர்க்கும் பலநாள - அநேகநாள், உளைய - சிரமமுண்டாமபடி உள்ள -

உளதாகின்ற, போர் - யுத்தம், இவனொடும் உளது-இவனோடும் உண்டாகும், என - என்று, உணர்ந்தான் - ஊகித்தனன், (அநுமான); (எ - று.)

கோரதந்தமுடைமைபற்றி அரக்கனெனத்தக்காளாயினும் கம்பீரமான தோற்றத்தில் முருகவேள் போன்றிருத்தலால், ஐயத்துக்கு இடமாயிற்று. பிறகு ராமலக்குமணரிருவரும் இங்கு வரும்போது இவனுடன நெடுநாள வருந்திப் பெருமபோரியற்றினால் இவனை வெல்லுதல் கூடுமேயன்றி எளிதில் வெல்ல இயலாதென்று, இவனது தோற்றத்தால் ஆறறலை உள்ளபடி கருதலாயினன், ஊகித்தலிற் சிறந்த நுண்ணுணர்வையுடைய அனுமனென்க. பி - ம்:—[1]வாழரி. [2]இருவரும் மலருள்ளுளையும் வெஞ்சம மிவனுடனுள தென. (கசக)

கசஉ. இவனை யின்றுனை [1]யுடையபோ ரிராவண னென்னே
புவன மூன்றையும வென்றதோர் பொருளெனப் [2]புகறல்
சிவனை நான்முகத் தொருவனைத் திருநெடு மாலா
மவனை [3]யல்லவர் நிகர்ப்பவ ரென்பது மறிவோ.

(இ - ள்.) இவனை-இத்தன்மையனான பெருவீரனை, இத்துணைஉடைய-(தனக்கு) இணிமையைச்செய்யும போர்த்துணைவனாகப் பெற்றுள்ள, போர் இராவணன் - தானும் போரைச்செய்தலிற தோந்த இராவணன், புவனம் மூன்றையும் வென்றது - மூன்று உலகங்களையும் வெற்றிகொண்டதை, ஓர் பொருள் என புகறல்-அரியதொருசெயலாகப் பாராட்டிக் கூறுதல், என்னே-எங்ஙனம அமையும்! சிவனை - சிவபிரானையும், நால் முகத்து ஒருவனை - நான்கு முகங்களையுடைய ஒருமூர்த்தியான பிரமனையும், திரு நெடுமால் ஆம் அவனை - திருமகள் கணவனான மகாவிஷ்ணுவாகிய அம்முதற்கடவுளையும் [ஆகிய திரிமூர்த்திகளையும], அல்லவா - அல்லாத மற்றையோர், நிகர்ப்பவர்-(இவனை) ஒப்பவராவர், என்பதும் - என்று சொல்வதும், அறிவோ-விவேகத்தின் காரியம்ஆகுமோ? [ஆகா தென்றபடி]; (எ - று)

அளவற்ற பலபராக்கிரமங்களையுடையவன அத்தன்மையனானமகாவீரன் போர்த்துணைவனா யிருக்கின்றபோது இராவணன மூன்றுலகத்தாரையும வென்றது ஒரு பெருங்காரியமாகப பாராட்டத்தக்கதன்றென்று எண்ணினன் அநுமன். மூன்றுமடியிற் கூறிய திரிமூர்த்திகளின் முறைமை, காரியகாரணக் கிரமம்பற்றியதெனபர. 'திருநெடுமாலாம அவன்' என அகரச்சுட்டாற குறித்தது, சிறபபுப்பற்றி. புவனம் - இடவாகுபெயர். வைசேடிகர் பொருள பண்பு தொழில் சாதி விசேடம இயைபு எனபவற்றை அறுவகைப்பொருளென்றாறபோல, இங்குச செயல் பொருளெனபபட்டது. பி - ம்:—[1]உடையனாமிராவணற்கு. [2]புகலேன், புகலேம். [3]அவனையல்லது நிகரநிற்பர், அலது நிகர்பிறர். (கசஉ)

கசஙக.—இங்கு வீணேநிற்பது தகுதியன்றென்று அநுமான் அப்பாற் செல்லுதல்.

என்று கைம்மறித் திடைநின்று காலத்தை [1]யிகபப
தன்று போவதென் றுயிர மாயிரத் தடங்காத்
[2]துன்று மாளிகை யோளிக டுரிசறத் துருவிச்
சென்று தேடின னிந்திர சித்தினைத் தீர்ந்தான்

(இ - ள்.) என்று - என்று நினைத்து, கைமறித்து - கையை மடகித தாடையில் வைத்துகொண்டு வியந்து,—'இடைநின்று காலததைஇகப்பது- இவ்விடததில் நின்று வீணே பொழுது கழிப்பது, அன்று - தகுதியன்று: போவது - அப்பாற்செல்வதே (காரியம), என்று - என்று எணணி, இநதிர சித்தினை தீர்ந்தான் - இந்திரசித்தைவிட்டு அப்பாற் சென்றவனாய்,—ஆயிரம் ஆயிரதது அடகுகா-பத்துலகுமென்றஅளவிலும்அடகுகாத, துன்றுமாளிகை- நெருகுகிய வீடுகளின், ஓளிகள் - வரிசைகளில், துரிசு அற துருவி - (ஐயந் திரிபுகளாகிய) குறறுகுகளில்லாதபடி (பிராட்டியைத்) தேடிக்கொணடு, சென்று—, தேடினன் - (பின்னும்) தேடுபவனானான்; (எ - று.)

'போவது' என்பதை வியகுகோள்முற்றுகவுங கொள்ளலாம். இந்திர சித்து இராவணனுக்கு மந்தோதரியென்னும் பிரதான பத்தினியிடம் பிறந்த மூத்தகுமாரன்: இவனது இயறபெயர் மேகநாதனென்பது; பி - ம்:—[1]இகழ்வது. [2]துன்றுமாளிகை துரிசறததுருவினன்றொடாந்து. (கசஙக)

கசஙச.—அகூஷன் அதிகாயன் முதலியோரது வீடுகளை அநுமான் கடத்தல்.

அக்கன் மாளிகை கடநதுபோய் மேலதி காயன்
[1]றொக்க கோயிலும் பொருநர்களில்லமுந் துருவித்
தகக மந்திரத் தலைவர்கண் [2]மனைகளுந் தாவிப்
புக்கு நீங்கின [3]னிராகவன் கழலெனப் புகழோன்.

(இ - ள்.) அகுகன் மாளிகை கடந்து போய் - அகூகுமாரனது வீட்டைக் கண்டு கழித்துச்சென்று,—மேல் - அதறகு அப்பால், அதிகாயன் தொகுக கோயிலும் - அதிகாயனென்பவன பொருநதிவசிகின்ற சிறந்த வீட்டிலும், பொருநாகள் இல்லமும - (மற்றும்பல) போர்வீரர்களுடைய வீடுகளிலும், துருவி - (பிராட்டியைத) தேடி,—தகக மந்திரம தலைவர்கள் மனைகளும தகுதியான ஆலோசனைகளுரிய தலைவாகளாகிய மந்திரிகளுடைய வீடுகளிலும், தாவி புகு - குதிதது உட்புக்குததேடி, நீங்கினன் - மீள்பவனாயினான் — (யாவனெனில்,—) இராகவன் கழல் என புகழோன - இராமபிரானது திருவடியென்று கீதததிபெற்றவனான அநுமான; (எ - று.)

எககாலததும எம்பெருமானுககு வாகனமாய்நின்று பணிவிடைபுரியுங் கருடாழ்வான்போலன்றி அநுமான இராமாவதாரததில்மாததிரம வாகனமாய் நினறு பணிவிடை புரிதலால, அநுமானுககு 'சிறியதிருவடி என்று ஒரு

திருநாமம் வைஷ்ணவசம்பிரதாயத்தில் வழங்கும்; அப்பெயரை 'திருவடி' என்றே வழங்குதலும் மரபே. திருவடி - திருவடித்தொண்ட னென்றபடி. 'இராகவன் கழலெனப் புகுநீங்கினன் புகழோன்' என்பதற்கு - திருமாலாகிய இராமபிரானது திருவடி (திரிவிக்கிரமாவதாரத்தில் எங்கும் பரவிச் சென்று மீண்டமை) போலக் கருதியவிடங்களிலெல்லாம் புக்கு நீங்கினன் கீர்த்திமானான அநுமானென்று பொருளுகூறலுமாம்.

அக்ஷன் - இந்திரசித்தினது தம்பி; மந்தோதரியினிடம் பிறந்த இளைய குமாரன். அதிகாயன் என்ற பெயர் - பெரிய உடம்புடையவனென்று பொருளாகும்; இவனும் இந்திரசித்தின் தம்பியே. இராவணனுக்குத் தான்ய மாலினி யென்னும் மனைவியினிடம் பிறந்தவன் இவன்; பூர்வத்தில் திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடபரென்னும் அசுரரிற் கைடபனது அமசமானவன். (குமபகர்ணன், மதுவின் அம்சம்.) பி - ம்:—[1]தொக்க கோயிலுந் தம்பியரில்லமுந் துருவி.' [2]மனைகளுமதடவி.' [3]இராகவனசரமென, இராகவன்கணையென. (கசச)

கசரு.—அநுமான் மற்றும் அந்தரங்கமானவிடங்களில் தேடக்கருதி நடுவகழியைச் சார்தல்.

இன்ன ராமிரும் பெரும்படைத் தலைவாக ளிருக்கைப
பொன்னின் மாளிகை யாயிர கோடியும் புக்கான்
கனனி [1]மாநகர்ப் புறத்தகன் கரந்துறை காணபான்
சொன்ன [2]மூன்றினு நடுவண தகழியைத தொடர்ந்தான்.

(இ - ள்.) இன்னா ஆம் - இதனமையரான, இரும பெரும படைதலைவர்கள் - மிகப்பெரிய சேனைகளின் தலைவர்கள், இருக்கை - இருக்கின்ற இடமாகிய, பொன்னின் மாளிகை ஆயிரகோடியும - பொன்னினாலமைந்த ஆயிர கோடிக்கணக்கான வீடுகளிலும, புகான் - போய் (சீதையை) த் தேடியவனான அநுமான்,—கன்னி மா நகர்ப்புறத்து - அழிவற்ற பெரிய அவ்விலங்காபுரியினிடத்துள்ள, அகல் கரந்துறை - பரந்த மறைவிடமான இராவணனரணமனையை, காணபான - பாரத்தற்பொருட்டு, சொன்ன மூன்றினும நடுவணது அகழியை தொடாந்தான - (சிற்பசாஸ்திரங்களிற) கூறப்பட்டுள்ள மூன்று அகழிகளுள்ளும நடுவிடத்திலுள்ளதான அகழியைச சார்ந்தான; (எ - று.)

புறநகர் இடைநகர் அகநகர் என்று நகரம் மூன்றுபகுப்பினதாக அமைக்கப்படும். அபபகுப்பு ஒவ்வொன்றையுஞ் சூழ மதிலும் அதனைச்சார அகழியும உண்டு. இங்கனம் நூறகொள்கையமைந்திருத்தலால், 'சொன்ன மூன்று' எனப்பட்டது இலங்கையிற புறநகரத்துமதிலைச சாாந்த அகழி, கடலேயாக இயலபில் அமைந்தது; இது, இயறகைநீரரண மறறவை - செயறகை. அநுமான் அநதப் புறவகழியையும அதற்குஉளளிட்ட புறமதிலையுங கடந்து புறநகரி லெங்கும பிராட்டியைத தேடியதை இதுவரையிறகூறிய கவி, இனி

அவ்வநுமான் அதற்கு உள்ளடங்கிய இடைநகா அகநகர்களிற்சென்று தேடக் கருதி இடைநகரைச் சூழ்ந்த மதிலைச சார்ந்துள்ள அகழியை யடுத்தமை இங்குக் கூறினா. (அகநகரின் அகழிமதில்கள், மேல் கசுசு-ஆஞ் செய்யுளிற் கூறப்படும்.)

இராவணன் கோட்டை யென்று பிரசித்தமாகக கூறும்படி இராவணன் வசிகின்ற இடம் புறத்தவா அகத்துவருதலும் அகத்தவர் புறத்திற்செல்லுதலும் எளிதிலியலாதபடியும, இன்னவிடத்தி லின்னதன்மையதா யுள்ளதென்று புறநாட்டவா எளிதிற்கண்டு உணரலாகாதபடியும் அமைந்திருத்தல் பற்றி, 'கரந்துறை' எனப்பட்டது. கரந்து உறை - மறைவாயிருப்பதென்று பொருள். அவ்விடம, விசாலமாயிருத்தலால, 'அகன்கரந்துறை' எனறா. நகாப்புறத்து-நகரில்; புறம்-ஏழனுருபு: இனி, நகாப்புறத்துபுறநகரத்திலிருந்து நடுவணது அகழியைத்தொடாந்தான் என்றலுமாம். நகர்ப்புறம் இலகணப் போலி. இனி 'கரந்துறை' சுருங்கையெனப்படுகின்றகரந்தகற்படையென்று கொண்டு, பின்னிரண்டடிகளுக்கு - புறநகரத்திலிருந்து செல்லும் அகன்ற கரந்தகற்படையையுமுட்படப் பாத்துசசெலபவனான அநுமன் அநநீர்வருவழியால் இடையகழியைச சோந்தனனென்றலுமொன்று;"நீணிலம்வகுத்து நீரிரந்துவந்திழிதரச, சேணிலத்தியற்றிய சிதறிரச சுருங்கை சேர், கோணிலத்து வெய்யவாங கொடுஞ்சுறத்தடங்கிடங்கு" என்ற சிந்தாமணி காணக. கனனி - அழிவின்மை. இனி, கன்னி மாநகா - கன்னிகைபோல எவருஞ் சேரவொணாத மிக்க பாதுகாவலையுடைய பெருநகர மெனினுமாம; பி - ம்.—[1]மாமதிற்புறத்தவன். [2]மூனறினுண்டுவணத்தகழியை. (கசரு)

கசசு.—அவ்வகழியின்பரப்பை அநுமான் கொண்டாடுதல்.

தனிக்க டக்களி றெனவொரு துணையிலான் [1]ருய
பனிக்க டற்பெருங் கடவுடன் பரிபவந் துடைப்பா
னினிக்க டப்பதன் றேழ்கடல் கிடந்ததென் றிசைத்தான்
கனிக்க டற்கதிர் தொடர்ந்தவ னகழியைக் கண்டான்.

(இ - ள்.) தனி கடம் களிறு என - ஒப்பற்ற மதயானைபோல, ஒரு துணை இலான் - ஒருதுணையையும் வேண்டாதவனும், கடல் கதிர்-கீழ்கடலினின்று உதித்த சூரியனை, கனி தொடாந்தவன் - பழமென்றுகருதி(ப் பிடித்தற்கு)ப பாயந்தவனுமான அநுமான்,—அகழியை கண்டான் - அந்த இடைநகரகழியைப் பாத்து,—தாய - '(என்னால்) தாண்டப்பட்ட, பனி கடல் - குளிரசசியான கடலாகிய, பெருங கடவுள்தன் - பெரிய தேவனுக்கு (யான் தாண்டியதனால) நேர்ந்த, பரிபவம - அவமானததை, துடைப்பான்-நீகுதற பொருட்டு, இனி கடபபது அன்று ஏழ் கடல் கிடந்தது - இனி (என்னால) தாண்டமுடியாததாய் ஏழுகடலும ஒருசேர இவ்வாறு இயைந்துகிடந்தது,' என்று இசைததான - என்று (தனக்குட்) சொல்லிக்கொண்டான: (எ - று.)

ஐம்பூதவீபததுக்கும் இலங்கைத்தீவுக்கும் இடையிலுள்ளதும், உவாக் கடலின் ஒருபகுதியும், எளிதிலெவருங்கடக்க வியலாததுமான கடலைததான் எளிதிற்கடந்தமைபற்றி அக்கடலரசனாகிய வருணனுக்கு நேரிட அவமானத தைப் போக்கவேண்டு மென்ற கருததினால், தான அங்ஙனம இனிததாண்ட முடியாதபடி ஏழுகடல்களும் ஒருங்குகூடி இவ்வாறு இருந்ததாகு மென்று, அவ்விடைக ரகழியாகிய நீரநிலையின அருமைபெருமைகளை மனத்திற் பாராட்டின னனும னென்பதாம; தற்குறிப்பேற்றவணி. வடமொழியில் வருணனுக்கு மஹாதேவனென்று ஒருபெயா வழங்குதலால, 'பெருங்கட வுள' எனறா. 'கடபபதன் றேழ்கடல் கிடந்தது' - பன்மையொருமை மயக்கம். பி - ம்:—[1]சாவான். (கசசு)

இதுவும் அது.

கசஎ. பாழி நன்னெடுங் கிடங்கென[1]ப் பகர்வரேற் பல்லோ
ரூழி காலநின் றுலகெலாங் கல்லினு[2]முலவா
வாழி வெஞ்சினத் தரக்கனை யஞ்சியாழ் கடலக
ளேழு மிங்ஙகர் [3]சுலாயது கொலாமென விசைத்தான்.

(இ - ள்.) 'பாழி - அகலமுள்ளதும், நல் - சிறந்ததும், நெடு - நீண்டது மான, கிடங்கு - அகழியாகும் (இது),' என - என்று, பகாவர் ஏல் - (எவரே னும) சொல்வாரானால்,—பல்லோ - பலபேர், ஊழி காலம் நின்று - கற்ப காலமளவுங கூடிநின்று [நெடுங்காலமநின்று என றபடி], உலகு எலாம்கல்லி னும - நிலவுலகமுழுவதுந தோண்டினாலும, உலவா - (இங்ஙனம) முடிவு பெறமாட்டா [இவ்வளவு அகலமும நீளமும ஆழமும உண்டாகா]. (ஆதலால், அகழியென்று கொள்ளற்பால தன்று இது; மற்று யாதோவெனின்.—) ஆழி வெம சினதது அரக்கனை - (கரிய பெரிய வடிவததிற) கடல்போன்றவனும கொடியகோபமுளளவனுமான தலைமையரககனாகிய இராவணனுக்கு, அஞ்சி- பயந்து, ஆழ் கடல்கள் ஏழுள இங்கா சுலாயதுகொல் ஆம-ஆழ்ந்த ஏழுகடல் களும ஒருங்குசோந்து ஓர அகழியாகி) இநத இலங்காபுரியைச சூழ்ந்தது போலும இது, என இசைததான் - என றும (தனக்குட்)சொலலிக்கொண்ட னன், (அறுமான்); (எ - று.)

உலகததில எததனையோ ஒருங்குகூடி எவ்வளவுகாலம் தொடாசசியாய வேலைசெய்யததலைப்பட்டு நிலவுலகமுழுவதும தோண்டினாலும இவ்வளவு அகன்றும் நீண்டும ஆழநதுமுளள பெரிய நீரநிலை யமையா தாதலால், இது செயற்கையகழியன்று என றும், இராவணனிடதது அசசத்தால் ஏழுகடல் களும ஒருங்குகூடி அவனது இடைநகாகு இங்ஙனம் இயற்கையகழியா யமைந்திருததலகூடு மென றும எணணினன அனுமனெனக. ஒரு பொருளி னிடதது அதன் உணமைததனமையை மறுதது மறறொருதன்மையை யேற் றிக கூறியதலால, இது - ஒழிப்பணி; இதனை, வடநூலா அபஹ்நுதியலங் கார மென்பா. பி-ம்.—[1]உணாவனேற். [2]முடியா. [3]சுலாயகொலாமெனநினைந தான். (கசஎ)

கசஅ—அவ்வகழியையடைந்த அநுமான் அதன்கடத்தற்கு அருமையைக் கருதுதல்.

ஆய தாகிய வகன்புன லகழியை யடைந்தான்
ரூய வேலையி னிருமடி விசைகொடு தாவிப்
போய காலத்தும் போக்கரி [1]தென்பது புகன்று
ஞய கன்புகழ் [2]நடந்தபே ருலகெலா நடந்தான்.

(இ - ள்.) அயது ஆகிய - அதுதன்மையதான, அகல் - அகன்ற, புனல் அகழியை - நீர்நிறைந்த அவ்வகழியை அடைந்தான் - சேர்ந்தவனாய்— 'தாய - வேலையின் இரு மடி விசை கொடு தாவி போய காலத்தும் - (முன்பு) தாண்டின கடலுக்காக கொண்ட வேகத்தினும் இரண்டுபங்கான வேகத்தைக் கொண்டு (யான்) தாண்டிப்போனபோதிலும், போக்கு அரிது - கடத்தற்கு அரியது (இவ்வகழி),' என்பது புகன்றான - என்று (தனக்குட்) சொல்லிக்கொண்டனன்: (யாவனெனில்,—) நாயகன் புகழ் நடந்த பேர் உலகு எலாம் நடந்தான் - லோகநாயகனான இராமபிரானது கீர்த்தி சென்றுபரவிய பெரிய உலகங்களிலெல்லாம் (தானும் தனது புகழினால்) சென்றவனான அநுமான்; (எ - று.)

முன்பு கடல்கடந்துவருதற்கு நாம் எவ்வளவு வேகங்கொண்டோமோ அதனினும் இரட்டிப்பான வேகங்கொண்டு சென்றாலும் இவ்வகழியைக்கடத்தல் முடியாதென்று எண்ணினன் அநும னென்பது, இடையிரண்டடிகளின் கருத்து. தலைவனான இராமபிரானது கீர்த்தியோடு தூதனான அநுமானது கீர்த்தி ஒற்றுமைபபட்டிருத்தலால், அவ்விராமகீர்த்திபரவிய உலகமுழுவதிலும் அநுமானது புகழுடமபும் சென்றுள்ளதென்பது, நான்காமடியின் தாற்பரியம்; எனவே. இராமனோடொத்த கீர்த்திமான் அநும னென்றதாம், முதலடி - முற்றுமோனை பி - ம்:—[1]ஆமென்று. [2]நடாய. (கசஅ)

வேறு

கசகூ—இதுமுதல் ஏழுகவிகள் - அவ்விடைநகரகழியின் வருணனை: கவிக்கூற்று.

மேக்கு நால்வகை மேகமுங் கீழ்விழத்
தூக்கி னாலன்ன தோயதத தாய்ததிய
ராககி னான்பட யன்ன வகழியை
வாககி னாலுரை [1]வைக்கலு மாகுமோ.

(இ - ள்.) மேக்கு-மேலிடத்தில் [வானத்தில்] செல்லுகின்ற, நால்வகை மேகமும் - நான்குவகைப்பட்ட மேகங்களும், கீழ் விழ- கீழிடமாகிய நிலவுலகத்திலுள்ள தனனைக் கடலென்றுகருதி நீரமுகந்து கொள்ளுதற்பொருட்டு தனனைநோக்கி) இறங்கிவருமாறு, தூக்கினால் அன்ன (தான்) தலையெடுத்து

காட்டினாற் போன்ற, தோயத்தது ஆய் - நீரையுடையதாய், துயர் ஆக்கினான் படை அன்ன - (உலகத்துக்கு) துன்பத்தைச்செய்தவனான இராவணனது சேனையைப் போன்ற, அகழியை - அந்த அகழியின் இயல்பை, வாக்கினால் உரை வைக்கலும் - வாயினாலெடுத்துச் சொல்லுதலும், ஆகுமோ முடியுமோ? [முடியாதென்றபடி]; (எ - று.)

அந்த அகழிவருணனையாகிய தனிப்பிரபந்தத்துக்கு இம்முதற்செய்யுள் அவையடக்கமபோன்று நிற்கும்; அதன்சிறப்பை வருணித்துச் சொல்லுதல் முடியாதென்றன ராதலி னென்க அவ்வகழியில் நிறைந்திருக்கின்ற நீர் அலைகளால் மேலெழுதலை, வானத்துச் செல்லுகின்ற மேகங்கள் தன்னைக் கடலென்றுகருதித் தன்னிடத்து நீர் முகக்கவருமாறு அவற்றிக்குத் தனது இருப்பைத் தலையெடுத்துக்காட்டுகின்றவாறு போன்றதென வருணித்தார்; தற்குறிப்பேற்றவணி. நால்வகை மேகம் - நான்குதிசைகளினின்றும் வரும் மேகங்கள். புஷ்கலாவாத்தம் முதலிய நான்குமேகங்களென்றலு முண்டு; பழையதிருவிளையாடற் புராணத்து நானமாடகக்கூடலான திருவிளையாடலில் "புட்கலாவருத்தமுன்னு, வென்றிகொணான்கு மேகவேந்தரை வரவழைத்தான்" என்றும், கடம்பவனபுராணத்தில் "வென்றிப்புட்கலா வருத்தமுதற் புயல்களுன்னிக்" என்றும் கூறுதல் காண்க. இராவணன் சகலலோகங்களுக்கும் எல்லாப்பிராணிகட்கும் துன்பஞ் செய்தலால், 'துயராகினான்' என்று ஒருபெயரிட்டுக் கூறப்பட்டான்; ராவணன் என்ற பெயர் - பிறர்கூச்சலிடுமாறு உபத்திரவஞ்செய்கின்றவனென்று பொருள்படுதலும் உணர்க. அவனது சேனை, தொகையிற்பெரியதும் வடிவத்திற்பரந்ததுமாயிருத்தலால், வெள்ளமென்றும், கடலென்றும் கூறப்படும்; அதனை, இங்கு அகழியின்பரப்புக்கு உவமையாகினார்: இதனால், கடத்தற் கருமையையுங் காட்டியதாம். பி - ம்.—[1]வைக்கவும் வைகுமோ.

இதுமுதல் ஒன்பது கவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (கசகூ)

கரு0.—அவ்வகழியிற் பலவகை நறுமணம்.

ஆனை மும்மத மும்பரி யாழியும்
வான மங்கையர் குங்கும வாரியு
நான மாதர் நறைக்[1]குழ லாவியுந்
தேனு மாரமுந் தேய்வைபு நாறுமால.

(இ - ள்.) ஆனை மும் மதமும் - யானைகளின் மூன்றுவகை மதஜலங்களும், பரி ஆழியும் - குதிரைகளின் வாய்நுரைநீரும், வானம் மங்கையர் குங்குமம் வாரியும் - தேவமாதர்கள்பூசிய குங்குமக்குழம்பும், மாதர் நானம் நறைகுழல் ஆவியும்-(மற்றும்பல) மகளிரது கஸ்தூரிகுழம்புதடவியதும் நறுமணமுள்ளதுமான கூந்தலுக்கு ஊட்டிய அகிற்புகையும், தேனும் - (மலர்களி

னின்று சொரிகின்ற) தேனும், ஆரமும் - சந்தனக்குழம்பும், தேய்வையும் - (மறறும் அகில் தகரம் முதலிய வாசனைமரங்களின்) தேய்த்தபூசசும், நாறும - (தன்னிடத்து)மணம்வீசப்பெறும், (அவ்வகழிநீர்); (எ-று.)—ஆல்-ஈற்றசை.

யானைகளின் மதஜலங்களும், குதிரைகளின் வாய்நுரைகளும், அவ்விலங்கைகளில் வசிக்கின்ற தேவமாதாகளும் மற்றைமகளிரும் உடலிற் பூசிய குங்குமக்குழம்பையும் சந்தனத்தேய்வையையும மறறுஞ்சில வாசனைத் தேயவைகளையும அவர்கள் கூந்தலுக்கு ஊட்டிய அகிற புகையையும் அடித்துக்கொண்டு பெருகும நீரும், அவ்வகழியிலுள்ள நீர்ப்பூக்களினின்று சொரிகின்ற தேனும் அவ்வகழியில் சேதலால், மதமணம் முதலியவற்றின் நறுமணம் வீசுகின்றது அவ்வகழிநீ ரென்றவாறு. அகழிநீர் ஆனைமதம் முதலியன நாறும் - இடத்து நிகழ்பொருளின்தொழில், இடத்தினமேல் நின்றது [உபசார வழக்கு.] ஆழி - விலாழி யென்பதன் விகாரம. குங்குமவாரி - குங்குமப்பூவை யரைததுக்கரைத்த குழம்பு. நாளம் - கஸ்தூரி; அதனுலாகியபயிர்ச சாந்துக்கு இலக்கணை. தேய்வை - தேய்க்கப்பட்டது. ஆரம்-புஷ்பஹாரமென்றும, தேய்வை - சந்தனததேய்வையென்றும் கொள்ளினுமாம். மும்மதம் - துதிக்கைமதம, கர்ணமதம், பீஜமதம. பீ - மீ:—[1]குழ ஞவியும். (கரு0)

கருக —அவ்வகழியிற் பலவகை நீர்ப்பறவைக ளோலித்தல்.

உன்னு நாரை மகன்றில் புதாவுளி
லன்னங் கோழி வண்டானங்க ளாழிபபுள்
கின்னரங் குரண்டங் கிலுக் கஞ்சிரல்
சென்னங் காகங குணலஞ் சிலம்புமே.

(இ - ள.) உன்னும் - (மீனுகிய இரையைத தேடுக) கருததையே யுடைய, நாரை - நாரைகளும, மகன்றில் - மகன்றிலகளும, புதா - குருகுகளும், உளில - உள்ளான்களும், அன்னம் - ஹமஸங்களும், கோழி - நீர்க் கோழிகளும, வண்டானங்கள - பெருநாரைகளும், ஆழி புள் - சக்கரவாகங்களும், கின்னரம் - கின்னரங்களும், குரண்டம - கொக்குகளும், கிலுக்கம - கிலுக்கங்களும், சிரல் - சிசிலியென்னும் மீன்குத்திக் குருவிகளும், சென்னம் - (நீர்ப்) பருந்துகளும், காகம் - (நீர்க்) காக்கைகளும, குணலம் - குணலங்களும், சிலம்பும-(அவ்வகழிநீரில்) ஒலிகுகும்; (எ - று.)

இதிற் கூறியனவெல்லாம் நீரவாழ்பறவைகளின் சாதிபேத மென்பது வெளிப்படை. 'உன்னநாரை' என்ற பாடம், நீரவாழ்பறவைகளாகிய நாரை முதலியனவென்று பொருள்பட்டுச சிறகுகும; உன்னம் - நீரவாழ்பறவைப் பொதுப்பெயா. மகன்றில் - அன்றிலில ஒருசாதி; ஆணன்றிலென்பா ஒருசாரா. ஆழி - சகரம்; அப்பெயராற் குறிக்கப்படுதல்பற்றி, 'நேமிப்புள்' என்றாற்போல 'ஆழிபபுள' எனப்பட்டது. காகமென்பது, காவென்று கதது வதெனக் காரணப்பொருள் பெறும். 'சென்னம் - ஸ்ரேநமென்ற வடசொலின் சிதைவெனத தகுதது. (கரு)

கருஉ.—மாதர்களின் அகிற்புகை முதலியன அவ்வகழியில் மிகுதியாகச் சேர்ந்திருத்தல்.

நலத்த மாதர் நறை[1]யகி லுவியு
மலத்த கக்குழம் புஞ்செறிந் தாடிய
விலகக ணைக்கரி யோடிள மென்னடைக்
குலப்பி டிக்குமொ ருடல் கொடுக்குமால்.

(இ - ள்.) நலத்த மாதா - அழகுள்ள (அநநகரதது) மகளிரது, நறை அகில் - நறுமணமுளள அகிற்புகையும், நாவியும - கஸ்தூரிப்புழுகும், அலத்தகம குழமபும - செமபஞ்சுககுழமபும, செறிந்து - (தனனிடததில்) மிகுதியாகச சேரபபெறறிருததலால்,—(அவ்வகழிநீரானது),—ஆடிய இலக்கணம் கரியோடு - (தனனிடததில்) நீராடிய உத்தமவிலகநகணமமைநத ஆணயானைகளோடு, குலம மெல் நடை இள பிடிகளும - உயர்சாதியில்தோனறிய மென்னடையுள்ள இளமையான பெண்யானைகளுநகும், ஓர் ஊடல்கொடுக்கும் - ஒருவகைபபிணக்கைஉணடாகும; (எ - று)— ஆல் - ஈற்றசை

அநநகரில நீரெல்லாம, அந்நகரத்து மகளிர நீராடுவதால் தமது கூந்தலுக்கு அவாகள் ஊட்டியுளள அகிறபுகையையும மயிற்சாந்தையும, கால்களிலூட்டியுள்ள செம்பஞ்சுககுழமபையுங கரைத்துககொணடு பெருகி அவவகழியில வந்து சேர்தலால், அவ்வகழிநீரில அவ்வகிறபுகை மணம முதலியன செறிநதுள்ளன; ஆணயானைகள அவவகழிநீரில மூழ்கியெழுந்துவருகின்றபொழுது அவை தமமீது படியப்பெறறுப புதுமையான மணததையும், புழுதிபடிநதாறபோன்ற நிறவேறுபாட்டையுங கொள்ளுதலால, அவற்றைக கணட பெணயானைகள், தமககு உரிய அவவாணயானைகளை வேறுபடியானையோடு கலவிகொணடு வநதன வென்று மாறுககருதி, ஊடல்கொள்ளுமெனக் கருத்துணாக. அநநகாரது மாதரது மிகுதியும், செல்வசசிறப்பும், இதில் வெளியாம். பி - ம்:—[1]அகிலாவியும. (கருஉ)

கருங.—அவ்வகழியில் தாமரைமலர்கள் துவிந்திருத்தல்.

நறவு நாறிய நாணறுந் தாமரை
றுறைக டோறு முகிழ்த்தன தோன்றுமால்
சிறையி னெய்திய செலவி முகததினோ
டுறவு தாமுடை யாரொடுங் காகளோ.

(இ - ள்) நறவு நாறிய - தேனுடனே வாசனைவீசுகின்ற, நாள் - புதிய [அன்றுமலாநத], நறுந தாமரை-நல்ல தாமரைமலாகள, துறைகள தோறும்- (அவ்வகழியின) இடநதோறும, முகிழ்ததன தோன்றும - (அவவிராபபொழுதிற) குவிநதனவாயக காணப்படும; சிறையின எயதிய செலவி முகததினோடு உறவு உடையா - (இராவணனுற) சிறையில் வைககப்பட்டுளள சீதாபிராட்டியினது முகததினுடன உறவுமுறையுள்ளவாகள, தாம ஓடுநகாாகளோ - (அமமுகம வாடியிருககுமபோது) தாமும ஓடுநகாமலிருபபாாகளோ? (எ-று.)

அவ்வகழிநீரிலுள்ள செந்தாமரைமலர்கள் இடல்பாக இரவிற்குவிந்திருப்பதை, அவை ஜாநகிப்பிராட்டியின் திருமுகத்துக்கு உறவினமாதலாலசிறைவைக்கப்பட்டது காரணமாக அமமுகம ஒடுங்கியபோது தாமும ஒடுங்கியதாகக் கற்பித்ததார். முனனிரணடடியிற் கூறிய சிறபபுப் பொருளைப் பின்னிரணடடியிற கூறிய பொதுப்பொருள்கொணடு சாதித்தலால், வேற்றுப் பொருள்வைப்பணி. முகத்துக்கும் செந்தாமரைமலர்க்குமுளள ஒப்புமை கருதி, அவை ஓரினமாகக குறிநகப்பட்டன. அநுமான் அவ்வகழியை யடைந்த சமயம இராபபொழுதாதலால, அப்பொழுது தாமரைமலா குவிந்திருததலை வருணித்தன ரெனக. எயதிய - சேர்ந்த செல்வி-செல்வதிற குரிய தலைவியான திருமகளின அவதாரமானவள. (கருங)

கருச —அவ்வகழி நீர் பளிங்குபோலத் தெளிந்திருத்தல்.

பளிங்கு செற்றிக் குயிற்றிய [1]பாயொளி
விளிம்பும் வெள்ளமு மெயதெரி யாதுமேற்
றெளிந்த சிந்தைய ருஞ்சிறி யார்களோ
டளிந்த போதறி தறகெளி தாவரோ.

(இ - ள்.) பளிங்கு செற்றி குயிற்றிய - படிகக்கற்களைச செதுககிப் பதிக்கபபெற்ற, பாய ஒளி விளிமபும்-வீசுகின்ற ஒளிபையுடைய (அவ்வகழியின்) ஓரமும, வெள்ளமும-(அவ்வகழியின) நீரும, மேல் மெய தெரியாது-மேல் தோற்றததில வடிவம வேறுபடக காணப்படாதனவா யிருந்தன; தெளிந்த சிநதையரும - தெளிவுளள மனமுடையவாகளும, சிறியாகளோடு அளிநதபோது - (உளதெளிவிலலாத) சிறியவாகளுடன் கூடியபோது, அறிதற்கு எளிது ஆவரோ-எளிதில வேறுபாடறியதககவ ராவரோ? [ஆகா].

"நாந்தநுண பளிங்கெனத தெளிந்த வீரமபுனல்" என்றபடி பளிங்கும தெளிவானநீரும தம்மிலொப்புமையுடையன வென்பது வெளிப்படை. அவ்வகழியின் கரையிற பளிங்கு கற்பதித்த இடமானது, தன்னையடுதத அவ்வகழிநீரோடு தான் வேறுபிரிததுக காணபபடாததாயிருந்தது. இசசிறப்புப் பொருளை, 'தெளிந்தசிநதையரும் சிறியாகளோடு அளிநதபோது அறிதற்கு எளிதாவரோ' என்ற பொதுப்பொருள்கொண்டு கவி சமத்காரமாகச சாதித்ததனா; வேற்றுப்பொருள்வைப்பணி. பளிங்கு உள்ளும புறமுமஒப்பத தெளிந்திருததலால் அதனைத தெளிந்தசிநதையராகவும, அகழிநீா மேலே தெளிநதிருநதாலும உள்ளே தெளிவிலலாததும பள்ளமடையிற்பாயு மியல்பினதும கரைவிளிமபிற்குக கீழுளளதுமாதலால் அதனைசசிறியாாகளாகவும கருதுக. நன்னீரை 'வெளளம' எனறல,மலையமானுட்டினின்று வநதுவழுகுகிய திசைசசொல். விளிமபும வெள்ளமும மெய்தெரியாது - பனமையொருமை மயக்கம; வழுவமைதி தனிததனி தெரியாதென்க; அளிதல் - உருகுதல, கனிதல; இலகக்ணையாய, சிநேகித்ததலைக குறித்தது. முனனிரணடடிகளிற பளிங்கு விளிமபையும வெளளததையும வைதத முறைமைககு

ஏற்ப மூன்றுமடியில் தெளிந்த சிறதையரையும் சிறியார்களையும் நிறுததியது முறைநிரனிறைப்பொருள்கோளின்பாற்படும். பி - ம்.—[1]பாலொளி. (கருச)

கருரு.—அவ்வகழியிற் பலவகையிரத்தினங்கள் ஒளிவீசுதல்.

நீல மேமுத னன்மணி நித்தில
[1]மேல கீழுபல் வேறொளி வீசலாற்
பாலின் வேலை முதற்பல வேலையுங்
கால்க லந்தன வோவெனக் காட்டுமே.

(இ - ள்.) மேல கீழ - (அவ்வகழியின் கரைகளில் நீரளவுக்கு) மேலே பதிகக்பெற் றுள்ளனவும கீழே பதிக்கப்பெற் றுள்ளனவுமாகிய, நீலமே முதல் நல் மணி - நீலரததினம் முதலிய சிறந்த (பலவகை) இரததினங் களும், நிததிலம் - முத்துக்களும், பல் வேறு ஒளி வீசலால் - (அந்நீரின் மேற்) பலவேறுவகைப்பட்ட ஒளியைவீசுதலினால்,—(அவ்வகழிநீரானது),— பாலின் வேலை முதல் பல வேலையும் கால் கலநதனவோ என காட்டும - பாற் கடல் முதலிய பலநிறக்கடல்களும காற்றினால் ஒன்றுசேர்ந் திட்டனவோ வென்னும்படி தோன்றும; (எ - று.)

அகழியின் விளிமபிற் சிலவிடங்களில் மேலும் கீழும பதிக்கப்பெற் றுள்ள நவரததினங்கள் பலவகையொளிகளை வீச, அவ்வொளிகளின் சம்பந தத்தால் அவ்வகழியின் தெளிவானநீர் பலவேறு நிறங்கொண்டு காணப்படு கின்றது. அதனை வேவவேறு நிறமுள்ள ஏழுகடல்களும் ஒருங்குசேர்ந்தாற் போலுமென உதபிரேக்ஷித்தார்; தற்குறிப்பேற்றவணி. அவ்வகழியின் மிகக பரப்பு, நீர்மிகுதி இவைகளும் இதனால் விளங்கும்.

பின்னர் 'நிலததிலம்' என வருதலால் முன்னர் 'நீலமே முதல் நன்மணி' என்றது, நவரததினங்களுள் முத்தொழிந்த பிறவற்றையாம். கறபாந்தகாலத தில் ஊழிக்காற்றுவீசுதலால் ஏழுகடல்களும் தம்மிற் கலந்து பிரளயப்பெரு வெள்ளமாதலை உட்கொண்டு, 'கால்கலந்தன' என்றார்; மூன்றும்வேற்றுமைத தொகை. இனி, 'கைகூடுதல்,' 'காலசீததல்' எனபனபோல, 'காலகலததல்' என்பதை ஒரு சொல்லாகககொண்டு கால-தமிழுபசருக்கமென்றலுமொன்று. பி - ம் —[1]மேலுபாநதயன்மாணொளிவீசலால. (கருரு)

கருசு.—அநுமான் அவ்வகழியையும் அதனோடுசேர்ந்த மதிலையுங் கடந்து இடைநகரினுட் செல்லுதல்

அனன வேலை யகழியை யார்கலி
யென்ன வேகடந் திஞ்சியும் பிற்படத்
துனன•ருங்கடி மாநகர் துன்னினான்
பின்ன ரெயதிய தன்மையும பேசுவாம.

(இ - ள்.) அன்ன வேலை - அப்பொழுது,—(அநுமான்),—அகழியை-அவ்விடைநகரகழியை, ஆர்கலி என்னவே கடநது-(முன்பு) கடலைக் (கடந்து சென்றது) போலவே தாண்டிசசென்று, இஞ்சியும் பின்பட - (அவ்வகழியைத தாணடும் விசையிலேயே அதனையடுதத) மதிலும (கடக்கப்பட்டுப்) பின்னேயாய்விட, துன் அரும கடி மா நகா துன்னினன் - (எவரும்) கிட்டுதற்கு அரிய காவலையுடைய பெரிய அவ்விடைநகரினுள்ளே சோந்தான்; பின்னர் எய்தியதன்மையும் - பின்பு அநகு நிகழ்ந்த செய்திகளையும, பேசுவாம் - இனிசசொல்வோம்; (எ - று.)—அவற்றை, அடுததகவி முதலாகக காண்க. ாற்றடி - கவிக்கூற்று. (கருசு)

கருஎ.—அந்நடுநிசியில் அங்குப் பலதெருக்களில் அநுமான் தேடுதல்.

கரிய நாழிகை பாதியிற் காலனும்
[1]வெருவி யோடு மரக்கர்தம் வெம்பதி
பொருவ னேயொரு [2]பன்னிரு யோசனைத்
தெருவு மும்மைநூ றாயிரந் தேடினன்.

(இ - ள்.) கரிய நாழிகைபாதியில் - அந்நடுராத்திரிப்பொழுதிலே, காலனும் வெருவி ஓடும அரககர்தம வெம் பதி - யமனும அஞ்சியோடும்படியான இராக்கதாகள் வாழ்கின்ற கொடிய அந்நகரில,—ஒருவனே-(அநுமான்தான்) ஒருவனுகவே,—ஒரு பன்னிரு யோசனை - பன்னிரண்டுயோசனை யளவு தூரமுள்ள, தெருவு மும்மை நூறாயிரம - மூன்றுலக்ஷத் தெருகளில், தேடினன் - (சீதையைத்) தேடலானன்; (எ - று)

கரிய நாழிகை - இருளினுற் கருமையையுடைய பொழுது: என, இரவுக்கு ஒருபெயா கூறினர்; "கரியநாழிகை யூழியிற்பெரியன கழியுமாறறியேனே" என்றாபெரியாரும்: நாழிகை - இருபததினுன்கு நிமிஷநகொண்ட நேரம. இது, அந்நாழிகை பலவற்றைக கொண்ட இரவுக்குச சினையாகுபெயராக நின்றது. 'ஒருவனே' எனறது, அநுமானது அஸஹாய சூரத்தன்மையில ஈடுபாடு. 'மும்மை' என்ற சொல் - மூன்றென்னும் எணணையே யுணாதது. "தெரிமாணதமிழ் மும்மைததென்னம்பொருப்பன்" என்றவிடத்துப் போல;இதில் 'மை'என்பது பகுதிப்பொருள விகுதியென்னும ஸ்வார்த்தபாவததத்திதபரத்யயமாம். பி-ம்:-[1]வெருவு செய்யும. [2]பன்னிரண்டோசனை. (கருஎ)

வேறு.

கருஅ.—அந்நடுநிசிப்பொழுதில் அவ்விடைநகரிலிருந்த நிலைமைகளை இதுமுதல் எட்டுக்கவிகளிற் கூறுகின்றார்.

வேரியு மடங்கின [1]நெடுங்கடல் விளம்பும்
பாரியு மடங்கின [2]தடங்கியது பாடல்
காரிய மடங்கினர்கள் கம்மியர்கண் மும்மைத்
தூரிய மடங்கின தொடங்கிய துறக்கம்.

(இ - ள்.) (அப்பொழுது நடுநிசியாய விட்டதனால் அவ்விடத்தில்),—வேரியும் அடங்கின - மதுபானங்களும் ஓய்ந்துவிட்டன; நெடுங் கடல்விளம்பும் பாரியும் அடங்கினது - பெரிய கடல் (சத்திப்பது) போல (இராக்கதர்கள் உரத்தகுரலாக)ப் பேசுகின்ற பாரிபபும் அடங்கிவிட்டது; பாடல அடங்கியது - (அங்கங்குப் பாடுகின்ற) இசைப்பாட்டும் அடங்கிவிட்டது; கமமியாகள் காரியம அடங்கினாகள - தொழிலாளிகளும் தம தமது செய்தொழிலடங்கினார்கள்; மும்மை தூரியம் அடங்கின - மூன்றுவகைப்பட்ட வாததியங்களும் அடங்கிவிட்டன; உறககம்தொடங்கியது - (யாவாக்கும்) தூக்கம தொடககமாயிற்று; (எ - று.)

நள்ளிரவில் அனைத்துயிரும தூயிலுதல் இயல்பாதலால், நிசாசரராகிய அரக்கரும தம் தம் செயதொழிலோய்ந்து துயிலுதலைக கூறுகின்றார். வேரிகள்; இலககணையாய், அதனைக் குடித்ததலின்மேல் நின்றது. பாரி - பாரிபபு: சொற்பரப்பு: முதனிலைத்தொழிற்பெயா. கமமியாகள் காரிய மடங்கினாகள்- "உயர்திணை தொடாந்த பொருணமுதலாறும், அதனொடு சாாததி னததிணை முடிபின" என்றபடி வந்த திணைவழுவமைதி. கமமம் - காமம: தொழில்; அதனைச செயபவன் - கமமி, காமீ கம்மியா - கம்மாளருமாம். மும்மைத் தூரியம் - மங்கலமுரசு, வெறறி முரசு, கொடைமுரசு. கீதாங்கம, நிருதாங்கம், உபயாங்கம என்ற வாசியவகை மூன்றையுங கொள்ளுதலுமாம; கீதாங்கம - கீதத்துககு வாசிபபது; நிருத்தாங்கம - நிருத்தத்துககு வாசிபபது; உபயாங்கம - இரண்டிற்கும வாசிபபது. தூரியம - பறைபபொது; வாததியப் பொதுவுமாம. பி - பி:—[1]நெடுங்களி. [2]அடங்கியன.

இதுமுதல் ஒன்பது கவிகள் - கடல்தாவுபடலத்தின் அரு - ஆங் கவி போன்ற கலிவிருத்தங்கள். (கரு அ)

கரு௯. இறங்கின நிறங்கொள்பரி யேமமுற வெங்குங்
கறங்கின மறங்கொளெயில காவலா துடிககண்
[1]பிறங்கிணர் நறுங்குழல ரன்பர்பிரி யாதோ
ருறங்கினா பிணங்கியெதி ருடினவ ரல்லார்.

(இ - ள்.) (அந்நள்ளிரவில),—நிறம கொள் பரி - நல்லறநித்தைக கொண்ட குதிரைகள், ஏமம் உற-இன்பமுண்டாக, இறங்கின-தலைசாய்ந்து தூங்கலாயின; மறம கொள் எயில் காவலா துடி கண்-வலிமைகொண்ட (அங்ஙகரத்து) மதில்காபபவர்கள அடிகின்ற துடியென்னும்பறையின் அடிக்குமிடங்கள், எங்கும் கறங்கின - எவ்விடத்தும் ஒலிசெயதன; பிறங்கு இணர் நறும குழலா - விளங்குகின்ற பூங்கொத்துக்களைச சூடிய வாசனைவீசுகின்ற கூந்தலையுடையவரான மகளிருள, அன்பர் பிரியாதோ - தமது அனபுககிடமான கணவரைப பிரியாதவாகளும, பிணங்கி எதிர் ஊடினவா அல்லா - (அக்கணவரோடு) மனஸ்தாபப்பட்டு அவரெதிரிலே கோபங்காட்டியவாகளல்லாதவாகளும, உறங்கினா - தூங்கினாகள், (எ - று.)

நிசாசரராகிய அரக்கர்கள அந்நள்ளிரவில் ஓய்ந்து சஞ்சாரமின்றியுறங்கத்தலைப்பட்டதனால். அவாகளோடுவனவாய்நிற்கின்ற குதிரைகளும் அப்பொழுது ஓயவுபெற்று உறங்கததொடங்கியமை, முதல்வாககியததிற் கூறப்பட்டது. ஏமமுற இறங்கின - இனிது துயின்றன வென்க. இனி, இறங்கின - தாமேலேறிய அரக்க ரிறங்கப்பெற்றன வென்றலு மொன்று. இடையாமக் காவலாளா அந்நள்ளிரவில் எங்குஞ்சுற்றிவந்து முழங்குகின்ற துடியென்னும்வாததியத்தின் முழகததை இரண்டாவதுவாககியததிற் கூறினா. மகளிரிற் கணவரைப்பிரிந்தவரும் கணவரோடு ஊடல்கொண்டவரும் விரகவேதனையால் அந்நள்ளிரவிலுமுட்படாத துயில் கொள்ளாது தவிகக, கணவரோடுகூடிமகிழ்ந்த மறறையோரெலலாமசுகமாகததூங்குகின்றனரென்பது, மூன்றுமவாககியததின கருதது. 'பிணங்கியெதிரூடினவா' என்ற சொற்போக்கினால், கலவியிற புலவிநுணுககங்கொண்டவ ரென்பது போதரும். இனி, பின்னிரண்டடிகளு - நறுங்குழலரான மகளிரிலும அவரது அன்பரான ஆடவரிலும் பிரியாதோரும் பிணங்கியெதிரூடினவரல்லாருமாயுள்ளார் உறங்கினரென்று இருபாலாரது நிலைமையையுங கூறியதாகவுரைககவும இடமுண்டு 'கண' என்பது - வாததியததில் அடிக்கப்படுமிடமாதலை கடிப்பிடுகண முரசம என நாலடியாரிலுங காணக. பி - ம்:—[1]பிறங்கின நறுங்குழலா. (கருகூ)

ககூ0. வடந்தரு [1]தடங்கொளபுய மைநதர்கல விப்போர்
கடந்தன ரிடைந்தனர் களிததமயில் போலு
[2]மடந்தையா கடந்தன முகட்டிடை மயங்கிக
கிடந்தனா நடந்தது புணாச்சிதரு கேதம்.

(இ - ள்.) (அந்நள்ளிரவில்),—வடம் தரு-(பலவகை)ஆரங்களையணிந்த, தடம் கொள புயம்-பெருமைகொண்ட தோள்களையுடைய, மைந்தா-இளமை மாறாத அரக்காகள, கலவி போா கடந்தனா - கோபமாகிய போரைச் செய்துமுடிததவாகளாய், இடைந்தனர் - ஓய்வுற்று, களிதத மயில்போலும் மடநததையாகள் தம் தனம் முகட்டிடை மயங்கிகிடந்தனா-களிப்புகொண்ட மயில்போனற (சாயலையுடைய) இளமகளிரின பருததனங்களின்மீது சோாந்துபடுபபாராயினா; புணாசசி தரு கேதம் - போகததாலாகிய இளைபபு, நடந்தது - (அங்ஙனமே சிலநாழிகை தொடாசசியாக) நிகழ்ந்தது; (எ - று.)

'புணாசசியிறுதிக்கண் அவசததான் முலையிடத்துயிலுந் துயிலை' இங்ஙனங கூறினா. வடம - முததுபவழம முதலிய இரததினங்களாலும, மலாகளாலு மாகிய மாலைகள்: இனி, வடம் தரு-வில்லினநாண் இழுத்து அம்பெய்யுமபோது படுதலால அததழுமபு பெற்ற, தோள் என்றலு மொன்று. கேதம் - பரிசசிரமம; வடசொல். பி - ம்:—[1]கடங்கொள். [2]மடந்தையா தடந்தமை. (ககூ0)

கசுக. வாமநறை யின்றுறை மயங்கினர் மறந்தார்
காமநறை யின்[1]றிற [2]நுகர்ந்தனர் களித்தார்
பூமனறை வண்[3]டறை யலங்கமளி புக்கார்
தூமநறை யின்றுறை பயின்றிலர் துயின்றார்.

(இ - ள்.) (அநநள்ளிரவில்),—வாமம் - அழகிய [இனிமையான], நறையின் துறை-மதுபானவகைகளாகிய நீர்த்துறைகளில் மூழ்கியதனால், மயங்கினர் - மதிமயநகி, மறந்தா - மெய்ம்மறந்தவாகளும்,—தூமம நறையின் துறை - (அகிற்புகைமுதலிய) புகைகளின் நறுமணமுள்ள இடத்தில், பூமன் நறை வண்டு அறை அலநகு அமளி - மலர்களில் மிகுதியாகப்பொருந்திய தேனினிடதது வண்டுகளொலிக்கப்பெற்ற விளநகுகின்ற படுக்கைகளில், புக்கா - சேர்ந்து, காமம்நறையின் திறம் நுகர்ந்தனர் களித்தா - சிற்றின்ப போகமாகிய மதுவினவகைகளை யுண்டுகளித்தவாகளும்,—பயின்றிலர் துயின்றார் - சஞ்சரிக்கமாட்டாதவாகளாய்த் துநகினாகள்; (எ - று.)

கள்ளுண்டு களிததவர்களும், புஷ்பசயநததிற் சிறறின்பம நுகாந்து களிததவர்களும் ஒருங்கிராக அவசமுற்று இட்டகாலிட்டகையராய்கிடநது துயிலுதல் கூறப்பட்டது. 'பூமனறைவண்டறையலநகமளி' எனவே, மலாப் பள்ளியென்றதாயிற்று. 'வாமநறையின் துறை' என்ற சொற்போக்கில் சாக்த சமயத்து வாமமென்னுமபகுப்பினர் உபயோகிககின்ற மதுவர்க்கமென்ற பொருளும் தோன்றும; அவாகள்மேற்கொள்ளும அவ்வகையொழுக்கம், வாமாசாரனெனப்படும். அலநகு அமளி - அசைகின்ற படுககை யெனக கொண்டு, ஊசலின்மீது அமைத்த படுக்கை யென்றலு மொனறு. பூ மன் - "புஷ்பேஷு-ஜாஜீ" என்றபடி, புஷ்பசஷ்ரேஷ்டமான ஜாஜி மல்லிகைமலர் களினாலாகியதும தேனில் வண்டுகள ஆரவாரிப்பதுமான விளநகுகின்ற மெததை யென்றலு மொன்று. இனி, வாமநறையின் துறைமயநகினராய்ப் பரவசமுற்று, காமநறையின் திறம்நுகாநதனராய்க் களித்து, தூமநறையின் துறையில பூமன்நறைவண்டு அறை அலநகு அமளியிற புக்கு, வெளிசசஞ் சரிப்பில்லாதவர்களாய், (பலர்) துயின்றார் என்று ஒருதொடாசசியாகவும்; (சிலா) வாமநறையின் துறை மயநகினா மறந்தா; (சிலர்) காமநறையின் திறம்நுகர்ந்தனர் களிததா; (சிலா) தூமநறையின் துறையில் அமளிபுகுப் பயின்றிலா துயின்றார் என்று வெவ்வேறுவாக்கியமாகவும் உரைப்பாருமுளர். பி - ம்:—[1]துறை. [2]நுகர்ந்தவா. [3]உறை. (கசுக)

கசுஉ. பண்ணிமை[1] யடைத்த பலகட்பொருநர் பாடல்
விண்ணிமை யடைத்தன[2] விளைந்ததிருள் வீணை
தண்ணிமை யடைத்தன தழங்கிசை [3]வழங்குங
கண்ணிமை [4]யடைத்தன வடைத்தன கபாடம்.

(இ - ள்.) (அநநள்ளிரவில்),—பல கள் பொருநா - கட்குடிததாடுங பலவகைககூததர்களுடைய, பாடல் - பாட்டுகள், பண இமை அடைத்த-

இசைகளாகிய இமைகள் மூடப்பெற்றன [பாடறபண்கள் அடங்கி ஒலிதத லில்லையாயின என்றபடி]; விளைந்தது இருள் - முதிர்ந்த இருளினால், விண் இமை அடைததன - வானத்தினிடங்கள வெளிச்சம் சிறிதுமில்லாமற கண மூடின [மிகஇருண்டின]; வீணை - வீணைகள், தண் இமை அடைததன - குளிர்ந்த [இனிய] ஸ்வரஸ்தாநமாகிய இமைகள் மூடப்பெற்றன [வாசிதத லில்லையாய இசையொடுங்கின என்றபடி]; தழங்கு இசை வழங்கும கண - முழங்குகின்ற ஒலியைத தருகின்ற வாசியங்களின் கணகள, இமை அடைத் தன - அடிபட்டு ஒலிதத லில்லையாயின; கபாடம் அடைததன - (எங்கும) கதவுகள் மூடப்பெற்றன; (எ - று)

ஒடுங்கினவென்ற பொருளில் 'கணமூடின' என்றல், வழக்கு. கள்ளுண்டு களிததுபபாடியாடுங கூததாகள அந்நடுநிசியில வாயொடுங்கி உறங்குபவ ராயின ரென்பது, முதலவாகியபதின கருதது. பொருநர் - சிலவகை யிசைககருவிகள்கொண்டு பாடும ஒருவகைச்சாதியாருமாம; அவர் ஏககளம் பாடுநரும், போககளம்பாடுநரும பரணிபாடுநரு மெனப் பலராவ ரென பது, தொல்காபபியவுரையால் விளங்கும் இனி, பல கண - பல விடங்களில், பொருநாபாடல் பண்ணிமையடைத்தன வென்றலு மொன்று. இசைக்கரு வியாகிய யாழில் இனிய இசையெழுமிடங்கள, 'தண இமை' எனப்பட்டன. இவவகையான வாககியங்களுடன் 'அடைததன கபாடம்' என்றதையும் வைத ததனால், வாயிலாகிய கணணுககுக் கதவுகளை இமையெனககொண்டு, நடுநிசி யில் வாயிற்கதவுகள் சாததபபட்டதை அவ்விமையடைததாகக கொண்டன ரென்ற கற்பனை தோன்றும. இசசெய்யுளின அணி, உருவகவிசேடம்; அத னுடன் சொற்பொருட்பின்வருநிலையணியும சோந்துளளது. கண - துளைக் கருவிகளாகிய வாசியங்களெனபாரு முளா. பி-ம்:—[1]அடைததகல். [2]விளைதத தொருவீணை. [3]முழங்கும. [4]அடைதெனை. (கசுஉ)

கசுரு. விரிந்தன நரந்தமுதல் [1]வெண்மலர் விளாகத்
துரிஞ்சவரு தென்றலுயி [2]ரின்புடை யுலாவச்
சொரிநதன கருங்கண்வரு துள்ளிதரு வெள்ள
மெரிந்தன பிரிந்தவர்த [3]மெஞ்சுதலி னெஞ்சம்.

(இ - ள்.) விரிந்தன் - மணம்வீசுவனவான, நரந்தம் முதல் - கஸ்தூரிப் பழுகுமுதலிய நறுமணப்பூசசுகளும, வெள் மலர் - வெணணிறமான மலா மாலைகளும், விள் - விளங்கப்பெற்ற, ஆகதது - (தமது) மார்பிலே, உரிஞ்ச - உராய, வரு - வருகின்ற, தென்றல - தென்றற்காற்றானது, உயிரின் புடை உலாவ - உயிரின்மீது மோத,—பிரிந்தவர்தம - (கணவரைப்) பிரிந் தவரான மகளிரது, கருங கண - கரிய கணகள், வரு துளளி தரு வெள் ளம் - மேன்மேல்வருகின்ற துளிகளா லாகும நீர்ப்பெருककை, சொரிநதன - பொழிந்தன; எஞ்சுதல் இல நெஞ்சம - (அமமகளிரது) யாதொரு குறை பாடுமிலலாத மனங்கள், எரிந்தன - (விரகதாபததால்) எரிந்தன; (எ - று.)

உறக்கமின்றி விரகவேதனையால் வருந்தும் மகளிரது கண்கள் நீர் சொரிதலையும், அவாமனம் அப்பொழுது மிகததவிததலையும், அககாலதது நிகழ்ச்சிகளாக இங்கு எடுததுககூறினா. கூறினாக்கு இன்பந்தரும் பொருள்களெல்லாம் பிரிந்தாாககுத துன்பததைவிளைதத லியல்பாதலால், குளிாந்த தென்றறகாற்று அப்பிரிந்தாாககு வருததததை மிகுவிககின்றது. அவ வியல்பை, அவாகளுடமபினமீது தவழ்கிற தென்றற்காற்று அதனகத்துள்ள உயிரின்மீது அராவுவதாகக் குறிததா. வெணமலர் - மலலிகை, முல்லை முதலியன, மலா விள் - மலா மலரப்பெற்ற என்று பதவுரை கூறலுமாம. இப்பிரிவொன்றேயனறி மற்றைப்படி அம்மகளிாக்கு யாதொருமனக்குறையுமில்லை யென்பா, 'எஞ்சுதலில்நெஞ்சம்' என்றார். பி - ம்:—[1]மென்மலா. [2]உணர்வுண்டல். [3]எஞ்சுதனிநெஞ்சம். (கசுஙு)

கசுஙச. இளக்கரிழு [1]தெஞ்சவிழு [2]மெண்ணரு விளக்கைத்
துளக்கியது தென்றல்பகை சோரவுயர் வோரி
னளக்கரொ டளக்கரிய வாசையுற [3]வீசா
விளக்கினம் விளக்குமணி மெய்யுறு விளக்கம்.

(இ - ள்.)•இளக்கா இழுது எஞ்ச - இளகுதலையுடைய நெய் குறையவே, விழும் அழிவனவான, எண அரு விளக்கை - கணக்கிடமுடியாத [மிகப்பலவாகிய] விளககுக்களை, தெனறல் - தெனறற்காறருனது, பகை சோர உயர்வோரின் - பகைவாகள் தளாசசியடைய (அசசமயம பாாத்து அவாகளையழிததுத தாம) எற்றமபெறுபவாபோல, துளககியது - அசைத்து அவித்துவிட்டது; மணி மெய உறு விளககம-(அநநகரத்து மகளிரது) அழகிய உடமபிற்பொருந்திய ஒளிகள், அளககரொடு அளகக அரிய ஆசை உற வீசா கடலையும் அளவிடவொண்ணாத திகககளையும் அளாவ (த தாம்) சென்று பரவி, விளககு இனம விளகதம - தீபவாககஙகளாக (நினறு) இருளைப்போககும்.

விளக்குக்கள் இரவில நெடுநேரம் எரிததனால், நெய் குறைந்துவிட்டது; அநநனம் நடுநிசியில் நெயகுறைந்த அவியுநதனமையடைந்த விளக்குக்களினமேல் தென்றற்காற்று வீசினமாத்திரததில் அவ்விளககுககள அவிநது விட்டன. தான வீசி அவிதத தென்றலுககு, பகைவா சோர்வடைந்த சமயம் பாாததுக கணணோட்டமினறி அவாகளமேல தாககி அவர்களை அறததொலைத்துத தாம தாம மேமபாடடையுஞ் சிலரை உவமைகூறினா. முன்னிரணடடி- உவமையணி.

அநநனம விளக்கொளி நீஙகியபோதும் இவ்விலஙகைகாகரதது மகளிரின்மேனியிலுள்ள ஒளி, விளககுப்போல இருளையொழிததது விளஙகுதலைப் பின்னிரணடடியிற் கூறுகினறார். நாற்புறததுமுள்ள கடலையும் அதற்கும் அப்பாற்பட்ட திசையெலலைகளையும் அளாவி நெடுந்தூரஞ்சென்று வீசுகின்றது இததேககாந்தி யென்பது, மூன்றாமடியில் விளக்கப்பட்டது. இனி,

மூன்றுமடிககு - கடலோடு அளகதுஒப்பிடவொண்ணாத [கடலினும்பெரிய] காதல் (தன்னைக்கணணுறுவாரககு) உண்டாம்படி அமமேனியொளி வீசி யென்றும் உரைகூறலாம். ஆரா என்ற வடசொல் - திசையையும், விருப்பத தையுங குறிக்கும். விளக்கு அவிந்தும இருளையோட்டுதல் நிகழ்ந்ததாகக கூறியது, விபாவநாலங்காரம். பி-ம் —[1]சுஞ்சு. [2]எணணறு. [3]வீயாவிளககென விளங்கும். (ககச)

ககூரு. நித்தநிய மத்[1]தொழில ராய்நிறையு [2]ஞானத்
துத்தம ருறங்கினாகள் [3]யோகியர் துயின்றார்
மத்தமத வெங்களி றுறங்கின [4]மயங்கும்
பித்தரு முறங்கின ரினிப்பிற ரிதென்னும்.

(இ - ள்) நிததம் நியமம் தொழிலா ஆய் - நாள்தோறும் முறைதவறு மறசெய்யும் வைதிகசசெயல்களை யுடையவர்களாய், நிறையும் ஞானதது - பரிபூர்ணமான ஆதமஞானத்தையுடைய. உததமா - மேலோரகளும், உறஙகினாகள் - (அந்நடுநிசியில்) தூஙகினாகள்; யோகியா - அஷ்டாஙகயோகநிலையில் நின்றவாகளும், துயின்றா - தூஙகினாகள்; மததம மதம் வெம் களிறு-மயககததைததருகிற மதமபிடிதத வெப்பங்கொணடயானைகளும், உறஙகின-தூஙகின; மயஙகும் பிததரும மதிமயककங்கொணடலைகின்ற பைததியककாராகளும், உறஙகினா - தூஙகினாகள்; (எனறால), இனி—,பிறா இது எனஆம - மற்றையோா (அநநடுநிசியில்தூஙகினாக ளெனனும) இசசெயதியைக குறிததுச சொலலவேணடுவ தெனனே? (எ - று)

நித்தியநியமத்தொழிலராய் நிறையும்ஞானதது உத்தமா - 'ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடையா.' பஞ்சகால அஷ்டகாலபராயணரான அவாகள இராத்திரிபோஜநாநந்தரம் ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளையடக்கிப் பிராணயாமஞ்செய்து மனததைப் பரம்பொருளினிடததே லயப்படுததித தியானததோடு சயநிததலாகிய யோககாலநியமததை யநுட்டிககுமபோது இரவில் நெடு நேரமானதனால நிததிரைகொணடனரெனபது முதலடியிற் கூறிய விஷயம். 'யோகியாதுயினறா' என்றது, நள்ளிரவு எவரையுஞசிறிதேனுந்துயில்கொள்ளச செயயுமியலபின தென்பதைக காட்டுதற்கு. மததால்மயஙகி வெப்பங்கொணட யானைகட்கும, மதிமயककங்கொணடலையும பிததாகக்கும நிததிரை கொளளாமை இயல்பு. இநதபபிராணிகளும துயில் கொணடமை கூறவே, மற்றைபபிராணிகள துயிலகொணடமை கூறவேணடாதாயிற்று. இஙஙனம நண்டாபூபிகாந்யாயததாற் பொருளை விளககுதல், தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.

பி - ம்:—[1]தொழின்முடிததது நெடு. [2]வானத்து. [3]யோகிகள். [4]உறஙகாப் பிததரு முறஙகின ரினிப்பிறர்களென்னும.

கசுசு.—அநுமான் அகந்கரத்தின் அகழிமதில்களைக் கடத்தல்.

ஆயபொழு தம்மதி லகத்தரசர் வைகுந்
தூயதெரு வொன்றொடொரு கோடி துருவிப்போய்த்
தீயவ னிருக்கையயல் செய்த வகழிஞ்சி
மேயது கடந்தனன் வினைப்பகையை வென்றான்.

(இ - ள்.) ஆய பொழுது - அங்ஙனமாகிய அந்தநடுநிசிப்பொழுதில்,—வினை பகையை வென்றான் - இருவினைகளாகிய பகைகளைச சயித்தவனான அநுமான்,—அ மதில் அகத்து-அந்தஇடைநகரதது மதிலுக்குள்ளாக, அரசர் வைகும் தூய தெரு ஒன்றொடு ஒரு கோடி துருவி போய் - அரசர்கள்வசிக்கின்ற சிறந்த இரண்டுகோடிதெருக்களில் (பிராட்டியைத்) தேடிக்கொண்டு சென்று,—தீயவன் இருக்கை அயல் - கொடியவனான இராவணனது இருப்பிடத்துக்கு அருகில், செய்த அகழ் இஞ்சி மேயது - செய்யப்பட்ட அகழியும் மதிலுமாய்ப் பொருந்திய இடததை, கடந்தனன் - தாண்டி உட்சென்றான்; (எ - று.)

அரசாவைகுந் தெரு - ராஜவீதி. இங்கு 'அரசா' என்றது, இராவணன் சுற்றததாரை. தூய தெரு - சிற்பசாஸ்திரலக்ஷணததின்படி குற்றமின்றியமைந்த வீதி. அவ்விலங்காபுரியில்இராவணன்வசிக்கின்றஅகநகரைசசார்ந்து புறத்தேயுள்ள மதிலும், அதனையடுதத அகழியும, இங்குக கூறப்பட்டன. அகழிமதில்கள் ஒன்றையொன்று அடுததிருப்பன வாதலால், ஒற்றுமைநயம் தோன்ற 'அகழிஞ்சி மேயது' என, ஒருமையாகக கூறினர்; இங்ஙனம் ஒருமைப்படுததிககூறியதனால், கீழ் கடுசு-ஆங கவியிற் கூறியபடி இடைநகரத்து அகழிமதில்களை ஒருதாண்டிறகடநது உட்சென்றமைபோலவே, இவ்வகழி மதிலகளையும் ஒருபாய்சசலிற்கடநது அப்பாற்சென்றான் னென்பது தோன்றும். கீழ் கசரு - ஆறு செயயுளில் "சொன்னமூனறினும்" எனக் குறிககப்பட்டவற்றுள் அகத்தது இது.

பலவகைத்தீங்கையும் விளைததல்பற்றி, வினை, பகை யெனப்பட்டது; "எனைப்பகையுற்றாரு முயவா வினைப்பகை, வீயாது பின்சென் றடும்" என்றார் திருவள்ளுவரும். 'வினைப்பகையை வென்றான்' என்றதனால், அநுமான் சகல கருமங்களையும போகி ஜீவந்முகதனாயப் பரமுததிப்பேற்றுககு உரிமை பூணடுள்ளவ னென்றவாறும. இதுதொடா - அகப்பகைவாகக மெனப்படுகின்ற காமம கோபம முதலிய குற்றங்களை யொழிததவனென்றும பொருளபடும். கடததற்கரிய வினைகளையே கடந்தவனுக்குப் பிறவற்றைக்கடததல் அரிதன்றென்பது தோனற, 'அகழிஞ்சிமேயது கடந்தனன் வினைப்பகையை வென்றான்' என்றார.

(கசுசு)

வேறு.

கசுஎ.—இராவணன்மாளிகையைச் சுற்றி அவனுரிமைமகளிரின் மாளிகைகளிருக்குமிடத்தை அநுமான் சமீபித்தல்.

போரி யற்கை யிராவணன் பொன்மனை
சீரி யற்கை நிரம்பிய திங்களாத்
தார கைக்குழு விற[1]றழு வித்தொடர்
நாரி யர்க்குறை வாமிட நண்ணினான்.

(இ-ள்.) போர இயற்கை இராவணன் பொன் மனை-(யாவரோடும்)போர் செய்தலையே இயலபாகவுடைய இராவணனது பொன்மயமான மாளிகை, சீர இயற்கை நிரமபிய திங்கள ஆ - (தனது) அழகியவடிவம நிரம்பியுள்ள சந்திரமண்டலமாக, தாரகை குழுவின் தழுவி தொடர - (அசசந்திரனைசசார வுள்ள) நக்ஷத்திரங்களின் கூட்டமபோல (அவ்விராவணகிருகதத்தை)ச சாரந்து சுற்றிலுந்தொடாசசியாகவிருககின்ற, நாரியர்கு உறைவு ஆம் இடம - (அவ னுக்கு உரியவராகிய)மகளிர் வசிப்பனவான மாளிகைகளிருககின்ற இடததை, நண்ணினான் - சாரந்தனன், (அநுமான்); (எ - று.)

அவ்வகநகரினிடையே மிகப்பெரியதான இராவணன்மாளிகை தலைமை பெற்றுவிளங்க அதனையடுததுச சுற்றிலும அவனுககு உரிமையுடைய மகளி ரின்கிருகங்க ளுள்ளன; அவறறிற்கு, கலைநிரம்பிய பூரணசந்திரன இடை யிலே சிறந்துவிளங்க அவனைசசுறறிவிளங்குகின்ற அவன் மனைவியரெனப் படும நக்ஷதிரங்களை உவமைகூறினார; உபமையணி. பி - ம்:—[1]தழைத தோங்கிய, தடவிததொடர.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - இபபடலததின் கசகூ - ஆக கவி போன்ற கலிவிருத்தங்கள். (கசுஎ)

கசுஅ.—அநுமான் அந்த இயக்கியர்வீதியை யடைதல்.

முயறக ருங்கறை நீங்கிய மொய்ம்மதி
யயர்க்கும் வாண்முகத் [1]தாரமு தன்னவ
ரியக்கர் மங்கையர் யாவரு [2]மீண்டினார்
நயக்கு மாளிகை வீதியை நண்ணினான்.

(இ - ள்.) முயல கரு கறை நீங்கிய மொய் மதி - முயலெனப்படு கின்ற கரிய களங்க மிலலாததொரு (கலை) நிரம்பிய சநதிரன் உண்டானால் அதுவும, அயாககும - (ஒப்பாகமாட்டாமல்) சோர்வடையததக்க, வாள் முகதது - ஒளியுள்ள முகததையுடைய, ஆர அமுது அன்னவர் - கிடைத்தற கரிய தேவாமிருததததைப் போன்றவர்களான, இயககர் மநகையா யாவரும - யக்ஷஸ்திரீகளெலலாரும, ஈண்டினார - ஒருங்குசேர்ந்தவாகளாய், நயககும - விருமபிவசிகககின்ற, மாளிகை - வீடுகளையுடைய, வீதியை - தெருவை, நணணினான் - அடைந்தனன, (அநுமான்): (எ - று.)

இராவணன் திக்குவிசயஞ்செய்து வருகின்றபொழுது ஆகாசகிருந்த யக்ஷ கந்தர்வ அசுர முதலிய பற்பலதேவஜாதிகளனிகைகளை வலியக கவர்ந்து தேரேறறி இலங்கைக்குகொணாந்து தனகு உரிமையாக்கிகொண்டனனென்பதை, உத்தரராமாயணங்கொண்டும் உணரலாம். அரகியரிலும் பலரை மனைவியராகககொண்டிருந்தனனென்பதும், நூல்களால் விளங்குகின்றது. அவாகளில யக்ஷஸ்திரீகளின் மாசற்றமுகமண்டலம களங்கமற்றசந்திரனும் வெளகும்படி அழகு சிறந்துளளதென்றார். பி - ம்:—[1]அன்னவருங்கதி. [2]எய்தியே. (கசுஅ)

கசுகூ.—அநுமான் அவ்வகந்தகரிலேங்கும் நுண்ணிதிற்சென்று பிராட்டியைத் தேடுதல்.

[1]தழைந்த [2]மொய்யொளி [3]பெய்மமணித் தாழ்தொறு
[4]மிழைந்த நூலினு மின்னிளங் காலினு
[5]நுழைநது நொய்திணின் [6]மெயயுற நோக்கினான்
[7]விழைந்த வெவ்வினை வேரற வீசினான்.

(இ - ள்.) தழைந்த - மிகுதியான, மொய் ஒளி - அடர்ந்த ஒளிகளை, பெய் - சொரிகின்ற, மணி தாழ்தொறும - வயிரததினமயமான திறவுகோல் செல்லுமிடங்களிலெல்லாம், இழைந்த நூலினும இன் இளங காலினும நொயதினில் மெய் உற நுழைந்து - இழைகக்பெற்ற [நுணணிய] நூலைக் காட்டிலும் இனிமையான இளங்காற்றைக காட்டிலும நுட்பமாகத தன் வடிவ மமைய நுழைந்துசென்று, நோகினான - பாரததனன்: (யாவனெனில்,—)விழைந்த - (பொருள்களினிடத்து) ஆசைகொளளுதலாகிய, வெம வினை வேர் - கொடிய கருமங்களின் வேரை, அற வீசினான - முழுவதும் போக்கியவனான அநுமான்; (எ - று.)

கதவுகள சாததிப் பூட்டிடப்பெற்ற இடங்களிலும் அக்கதவுகளில் திறவுகோலசெல்லும வழியில் மிகநுணணிய வடிவததோடு நுழைநதுசென்று தேடினனென்க வயிரரததினம மிக வலியதாதலால, திறவுகோல் அதனாற் செய்யப்பட்டது. இதனால், அக்கதவுபூட்டுக்களின வலிமையும், இலங்கையின் செல்வசசிறப்பும விளங்குத லுணரக. 'மணி' என்ற நவமணிப்பொதுப் பெயா இங்குச சிறப்பினால வயிரததினமேல நின்றது. தாழ் எனினும், தாள எனினும் ஒகும் இங்கு, தாழககோல்செல்லுந் துவாரததுகு இலககணை. நூலினும் - நூல்போலவும், காலினும் - காற்றுபபோலவும [அதிநுட்பமாய], நொயதினின் நுழைந்து - விரைவாகப புகுநது, மெய உற நோகினான் - (அந்தந்த இடங்களை) உணமை விளங்குமாறு நன்றாகப் பாரததான் என்று உரைபபாரு முளர். "அவாவெனப வெல்லா வுயிாககு மெஞ்ஞான்றுந், தவா அப் பிறபபீனுமவிதது" என்றபடி, பொருள்களினிடதது உண்டாகும் ஆசை பிறபபுகு மூலகாரண மாகுதலால, அதனையொழிததவ னென்ற பொருளில. 'விழைந்த வெவ்வினைவே ரற வீசினான்' என்றார்; "ஆாவவேரரிந்து" என்றார் பிறரும். ஈற்றடி - முற்றுமோனை. பி - ம்:—[1]தழைதத.

[2]மெய்யொளி, பேரொளி. [3]பொன்மணித்தாடொறும், தழைந்த மொய்ம மணிததாடொறும. [4]இழைதத. [5]நுழைதத. [6]மையற, மெய்யற. [7]விழைந்த தீவினை, விழைத்ததீவினை. (கசுகூ)

கஎ0.—இதுமுதல் ஒன்பது கவிகள் - அச்சமயத்தில் அவ்வியக்கியரிருந்த நிலைமையைக் கூறும்.

அத்தி ரமபுனை யானை யரக்கன் மேல்
வைத்த சிநதையர் வாங்கு[1]முயிர்ப்பினர்
பத்தி ரமபுரை நாட்டம[2]பதைப்பறச்
சிததி ரங்க ளெனவிருந தார்சிலர்.

(இ - ள்.) சிலா - சில இயககமாதாகள்,—அததிரம புனை யானை அரக கன்மேல் - மலைகளை யொத்த யானைகளையுடைய இராவணனிடததில், வைத்த—, சிநதையா - மனததையுடையவாகளும், வாங்கும் உயிர்ப்பினா - விடுகின்ற பெருமூசசையுடையவாகளுமாகி,—(பினபு), பதிரம் புரை நாட்டம பதைப்பு அற-(தாமரைமலரின்)இதழை யொதத தமதுகணக ளிமைதத லில்லாமல், சிததிரஙகள என இருந்தா - (தமமைக கணடவா தமமைச) சித்திரப்பாவைகளென்று சொல்லுமபடி அசைவற்றிருந்தாகள்; (எ - று.)

இராவணன சீதையினிடததுக காதலகொண்ட காலம்முதல் பிறமகளி ரெவரையும சிறிதுங காதலிப்பதிலலை; ஆகவே, அவன் தனககு உரிமை பூணட மகளிரில் எவரிடததும் வந்துசோநதிடானுக, அநதநத மகளிர தமதம இருபபிடததில் அவன் வரவைத திணபபடியாய ஆவலுடன் நெடுநேரம எதிரபாரததிருநது நடுநிசியளவும வரகககாணுமையால வருததமுறறுப் பல வகையான விரகவேதனைகளை யனுபவிப்பதை, இதுமுதல் ககூச - ஆக கவி வரையிலும எடுததுக கூறுகினறார.

முன்பு இயககியாக்குச சிததிரப்பாவை அழகில் மாத்திரம் உவமையா யிருநதது; இப்போது கணணிமையாது அசைவறவிருததலிலுய உவமையா யிற் றென்க. மன்மதாவதைகளுள் நினைப்பும் வெய்துயிரததிரஙகலும் மூசசையும இஙகுக கூறப்பட்டன. அதிரம் - அதரியென்ற வடசொல லின் விகாரம. 'யானை யரககன்' என்பதற்கு - யானை போன்ற அரக்க னெனப் பொருள்கொள்ளின் உவமைககு உவமைகூறியதாமாதலால், அவ வுரை பொருநதாது; "அடுககிய தோற்றம் விடுததல் பணபே" என்ற தொல் காப்பியததைக காணக. இனி, அத்திரம புனை - (பகைவரெறிந்த) படைக கலஙகளினுலாகிய ஊறுபாடுகளை அலஙகாரமாககொணட,யானை அரக்கன்- யானைபோல் வலிய அரககன எனறும் பொருள்கொள்ளலாம்; வீரர்கு விழுபபுண அணிகலமாம அதிரம் - அதனுலாகிய வடுவுககு இலக்கணை. 'பதிரம் புரை நாட்டம' என்ற தொடா - அம்புகளையொதத கண்கள என்றும் பொருளபடும். பி - ம்:—[1]உயிர்ப்பிலா. [2]பதைப்பறச. (கஎ0)

களக. [1]அள்ளல் வெஞ்சர மாரனை யஞ்சியோ
[2]மெள்ள வேகன வின்பயன் வேண்டியோ
[3]கள்ள மென்கொ லறிந்திலங் கண்முகிழ்த்
துள்ள மின்றி யுறங்குகின் றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சில இயக்கமகளிர்—அள்ளல் வெம் சரம் மாரனை - அள்ளுதலைக் கொண்ட கொடிய அமபுகளையுடைய மன்மதனுக்கு, அஞ்சியோ - பயந்துதானோ, மெள்ளவே கனவு இன் பயன் வேண்டியோ-மெதுவாக நற்கனவாகிய இனிய பயனைப் பெற விரும்பித்தானோ, கள்ளம் என்கொல் அறிந்திலம் - (அம்மகளிரின்) வஞ்சனைக்கருதது யாதோ? அறியோம்: கண முகிழ்த்து - (தமது) கணகளை மூடிக்கொண்டு, உள்ளம இன்றி உறங்குகின்றார் - அகத்தில் தூககமில்லாதிருககையில் வெளிககுத தூங்குவார் போலவிருக்கின்றனர்; (எ - று.)

விரகவேதனையால் உள்ளுறத துயில்கொளளாவிடினும், அயாச்சியினாலும் இரவில் நெடுநேரமாய்விட்டதனாலும கண்மூடியுறங்குவாரபோ லிருக்கின்றனர், சில இயக்கியர்; அப்பொய்யுறககததிற்கு இருவகையான காரணங்களை ஊகிக்கின்றார் ஒன்று - தமமீதுகொடிய அமபுகளைப் பிரயோகிக்கின்ற மன்மதன் தாம் உறங்குவாரபோலிருந்தால் தருமயுதசமுறைப்படி தம்மேல் அம்பெய்யாமலிருப்பனென்று கருதுதல்; மற்றொன்று இராவணன் வந்து தழுவுவதாகக் கனவுண்டாகுமாயின் அககனவுதோறறதினாலாவது இனிமையடையலாமென்று கருதுதல. தற்குறிப்பேற்றவணி. மாரனென்ற வடமொழிப் பெயர் (பிரிந்தவரை) மரணவேதனைப் படுததுபவனென்று பொருள் படும். [1]வள்ளலவெஞ்சரமாரன் என்ற பாடததிற்கு - வரையறையின்றி மேன்மேற சொரியுங கொடிய அம்புகளையுடைய மன்மத னென்ப. பி - ம்:— [1]வள்ளல் வெஞ்சிலை. [2]மெளளவின்கனவின. [3]கள்ளமே. (களக)

களஉ. பழுதின் மன்மதன் [1]வெங்கணை பன்முறை
யுழுத கொங்கைய ரூச லுயிர்ப்பின
ரழுது செய்வ தென் னாணை யரக்கனை
யெழுத லாங்கொலென் றெண்ணுகின் றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சில யக்ஷஸ்திரீகள்,—பழுது இல - பழுதுபடுதலில்லாத, மன்மதன் வெம கணை - மன்மதனது கொடிய அம்புகள், பல் முறை உழுத - பலமுறை பாய்ந்துசெல்லப்பெற்ற, கொங்கையா - தனங்களையுடையவரும், ஊசல் உயிர்ப்பினா - ஊசலாடுகின்ற [போவதும் வருவதுமாயிருக்கின்ற] சுவாசததையுடையவரகளுமாய்,—'அழுது செயவது என் - (நாம் வீணே) புலமபுவதனாற் செயவது என்ன இருக்கின்றது? ஆணை அரக்கனை - (எவரும தவறாதுசிரமேற்கொள்ளுங) கட்டளையையுடைய இராவணனை, எழுதல் ஆம்கொல் - (சிதிரததில்) எழுதுதல் முடியுமோ?' என்று எண்ணுகின்றார் - என்று நினைகின்றார்கள்; (எ - று.)

பிரிவுற்ற மகளிரிற் சிலர் இராவணனது வடிவதனைச் சித்திரத்திலெழுதி அதனைப்பாராதது மகிழக்கருதி, அழகியதும் கம்பீரமான தோற்றமுடையதுமான அவ்வுருவம் நமமால் எழுதுந்தரத்ததோ வென்று சிந்திக்கின்றனரென்க. ஊசலுயிர்ப்பினர் - உயிர் தத்தளிக்கின்றவர்; இனி, இச்செய்யுளுக்கு - சிலா, கொங்கைகளில் மன்மதபாணம் தைக்கப் பெருமூச்செறிந்து அழுது, "இனிச்செய்வது என்ன இருக்கின்றது? இராவணனுடைய உருவதனைச் சித்திரத்திலெழுதுதலாவது செய்யலாமா?" என்று நினைக்கின்றனரெனப் பொருள் கூறுவாருமுளர். முந்தினவுரைக்கு 'அழுது' என்றது 'செய்வது' என்பதனோடும், இவ்வுரைக்கு 'எண்ணுகின்றார்' என்பதனோடும் இயையும்; முந்தின வுரையில், 'எழுதலாகுகொல்' என்றது-எழுதுதற்கருமை காட்டும். பி - ம்:—[1]எக்கனை. (கஎஉ)

கஎங. [1]ஆவ தொன் றருளா யென தாவியைக்
கூவு கின்றிலை கூறலை[2]சென்றெனைப
பாவை பேசுவ போற்கண் [3]பனிப்புறப்
பூவை யோடும் புலம்புகின் றார்சிலர்.

(இ - ள்.) சிலா - சில இயக்கியா,—கண பனிப்பு உற --(தமது)கணகள் மிகுதியாக நீர்துளிக்க,—'எனது ஆவியை கூவுகின்றிலை - என்னுடைய உயிரை [எனது பிராணநாயகனான இராவணனை] இங்குவரும்படி (போய) அழைக்கின்றாயில்லை; சென்று கூறலை - (என்செய்தியை என்கணவனிடத்திற) போயச் சொல்லுகின்றாயுமிலலை; ஆவது ஒன்று அருளாய - (இங்ஙனம எனக்கு) ஆகவேண்டிய காரியமொன்றையும் எனபக்கல இரக்கங்கொண்டு செய்யாதிருக்கின்றாய', என - என்று, பாவை பேசுவ போல் - சித்திரப்பிரதிமைகள பேசுவனபோல, பூவையோடும் புலம்புகின்றார் - நாகணவாய்ப் பறவைகளைநோக்கிக் குறைசொல்லி யழுகின்றார்கள; (எ - று.)

ஆவது ஒன்று - அநுகூலமானதொரு காரியம. இனி, 'ஆவதொன்றருளாய்' என்பதற்கு - உன்னால் ஆகக்கூடிய தோருதவியையுஞ் செய்யமாட்டாயா? என்றும் பொருள்கூறலாம். 'எனது' என ஒருமையாகக்கூறியதனால், தனித்தனி அவரவர் தாமதாம வளாக்கும் பூவையை நோக்கி இங்ஙனஞ் சொல்லியிரங்குகின்றன ரென்க பாவை பேசுவபோல் - இல்பொருளுவமையணி. பனிப்பு - இடைவிடாது நீர்துளித்தல. பி - ம்:—[1]ஆவ வென்று. [2]சோ. [3]பசப்புற. (கஎங)

கஎச. ாரத தென்ற விழுக [1]மெலிந்துதம்
பாரக கொங்கையைப [2]பார்த்தனர் பாதகன்
வீரத் தோள்களின வீக [3]நினைந்துயிர்
சோரச் சோரத் துளங்குகின் றார்சிலர்.

(இ - ள்.) சிலா - சில இயக்கப்பெணகள்,—ஈரம் தென்றல் இழுக - (பிறாகுக) குளிராசசியைசசெய்யுந தென்றற்காறறு (த தம்மீது) உராய்ந்து

செல்ல அதனால், மெலிந்து - வருந்தி, தம பாரம் கொங்கையை பார்த்தனர்- தமது பருத்த தனங்களைப் பார்த்தவாகளாய், பாதகன் வீரம தோள்களின் வீக கம் நினைந்து - (தம்மைக்கூடாது) வருத்துபவனான இராவணனது போர்த் திறமமைந்த தோள்களின் பருமையைக கருதி, உயிர் சோர சோர துளங்கு கின்றார் - (தமது) உயிர் மெலியமெலியத் துடிக்கின்றாகள்; (எ - று.)

தனம்போல ஆடவாக்குத தோள் வேட்கைவிளைககுஞ் சிறந்தவுறுப் பாதலால், இமமகளிர தமது பருதத கொங்கைகளைப் பார்த்தவுடன், அவை பயனபடும்படி தழுவுதற்குஉரிய இராவணனது பருத்ததோள்கள் அதுசெய் யாது நிறறலைக் கருதி, விரகவேதனையால் மரணவஸதைப் படுகின்றன ரென்க. ஈர - (தமது உடம்பை) ஈர்வதாய் எனினுமாம. இப்பொருளில, ஈர- செயவெனெச்சம். இன்பமபெறாமல் வருத்தத்தை விளைப்பதுமாதிரமா யிருத்தல் பறறி, அவர்கள் தமது பருத்தகொங்கையை வீணபாரமாகக் கருது கின்றன ரென்பதும தோனற, 'பாரக்கொங்கை' எனப்பட்டது. பாதகன் -. பாதகன் என்ற வடசொல்லின விகாரம நலிபவனென்பது பொருள்; இனி, 'பாதகன்' என்பதைத்தற்சமவடசொல்லாககொண்டு, தனக்குஉரிமைபூண்ட மகளிர பலரிருக்கவும பிறன்மனைவியை [சீதையை] விருமபுதலாகிய கொடிய பாவச செயலையுடையவ னென்று உரைததலுமாம; "அறனிறகொண்ட தன் மனையாளமளிததலதறி லழுதிரங்கப், பிறனில்தேடும பெரும்பாவி" என்றது காண்க. பீ - ம் —[1]மெலிந்த. [2]பார்ததிருநதப். [3]எனு. (கஎச)

கஎரு. நக்க செம்மணி நாறிய நாணிழல்
பக்கம வீசுறு பள்ளியிற் பல்பக
லொக்க வாசை யுலக்க வுலந்தவா
செக்கர் வான்றரு திங்களொத் தாசிலர்.

(இ - ள.) சிலர் - சில இயக்கமாதா,—நகக-விளங்குகின்ற, செம மணி- சிவந்த இரததினங்களினின்று, நாறிய - தோன்றிய, நாள் நிழல - எந்நாளும் ஒருபடியாயுள்ள காநதிகள, பக்கம வீசுறு - பகககளில வீசப்பெறற, பள்ளி யில் - படுகக்கையிலே, பல் பகல் ஓகக ஆசை உலகக உலநதவா - பலநாள்க ளாய் ஒரேவிதமாகத தமது ஆசை வீணேயொழிதலால் மெலிந்து கிடப்பவாக ளாய்,—செக்கா வான் தரு திங்கள ஒததார்-செவவானததில்தோன்றுகின்ற சந்திரனைப் போன்றிருந்தாகள்; (எ - று.)

செம்மணி - பதுமராகம், மாணிக்கம். செந்நிறவிரததினங்கள் பதிக்கப் பெற்ற கட்டிலிலே அவ்விரததினங்களினொளிவீசுதலாற செநநிறமாயவிளங் கும் மெத்தையிலே விரகவேதனையால் மெலிநது கிடககின்ற மகளிரகு, அந்திமாலைப்பொழுதிற் செவவானததினிடையே காணபபடுகின்ற கலை குறைந்தசந்திரனை உவமைகூறினா; உவமையணி. சாயங்காலதது மேற் றிசையிற்காணப்படுகின்ற செவ்வானததில் விளங்குஞ் சந்திரன் பிறையேயா மென்பது வெளிப்படை. கலைகுறைந்தஅது, உடலமெலிநதமாதாக்குஒப்புமை யென உணாக. நாள்நிழல - எப்பொழுதும் புதுமையாயுள்ள ஒளி. (கஎரு)

களசு. வாளி னுற்றெளி கற்பக வல்லியர்
தோளி னுற்றிய தூங்கம ளித்துயி
ளுளி னுற்செவி யிற்[1]புக நாமயாழ்த்
தேளி னுற்றிகைப் பெய்துகின் றார்சிலர்.

(இ - ள்.) வாளினால் தெளி - ஒளியினால் தெளிவுபெற்று விளங்குகின்ற, கற்பக வல்லியா - கல்பகவிருக்ஷத்தைச் சார்ந்து படரும் காமவல்லியெனனும் பொறபூங்கொடி போன்றவர்களான, சிலர் - சிலஇயக்கமகளிர்,—தோளின் நாற்றிய - (விரகவேதனையால் மெலிவுற்ற தங்கள்) தோளகள் (சோர்ந்தாடுவது) போல அசைந்தாடுமாறு கட்டியிருக்கின்ற, தூங்கு அமளி - தூங்குமஞ்சததில, துயில் நாளினால் - தூங்கும்போது, செவியில் புக - (பாடகர்வந்து பாடுகின்ற வீணைப்பாட்டு) காதிலநுழைய, நாம யாழ் தேளினால் - அசசந்தருகின்ற அவ்வீணையினிசையாகிய தேளினால, திகைப்பு எய்துகின்றார் - மயகக மடைகின்றாகள்; (எ - று.)

சில இயக்கமாதாகள் விரகவேதனையால் வருந்திக்கொண்டிருக்கையில், நடுநிசியானதனால் படுத்துச சிறிது துயிலமுயன்றுபாரப்போமென்றெணணி, தூங்குமஞ்சததி லமைககப்பட்டுள்ள படுக்கையிற் சோவாராயின்ா. இம்மகளிர் இராவணனுககு உரிமைபூணடு மேன்மையுற்றவராதலால, இவர்கட்கு இனிய தூக்கத்தை விளைகுமாறு இவாகள்மாளிகைககுச சென்று இவர்கள்செவிப்பட நாள்தோறும இடையிரவில் வீணைவாசிகும்படி இராவணனால லேவப்பட்டிருந்த இனனிசைப்பாடகா, தமவழகநப்படி அசசமயத்தில் அங்குவந்து வீணைவாசிககலானாகள். அவயாழினிசை காமோத்தீபகப்பொருள்களிலொன்றாதலால், அபபிரிவுடைமகளிரின காதிறபட்டமாததிரததில் அவர்கட்கு வருதததை மிகுவிகக அதனால, தேள கொட்டினாற்போல அவாகள் மிகக வருதததை யடைவாராயினரென விவரங காணக.

தூங்கு அமளி-ஊசலாக அமைத்தசயனம். அது தொங்கியசைந்தாடுதற்கு, அப்பிரிந்தமகளிரின்மெலிவுற்றதோள்க ளசைந்தாடுதலை உவமைகூறினா.

யாழ் - அதன் இசைக்கு முதலாகுபெயர். நாம - அச்சந்தருவதோ ருரிச்சொல், "பே நா முருமென வரூஉங கிளவி, யாமுறைமூன்று மசசப்பொருள்" என்பது தொல்காப்பியம். இதனமேல அ - சாரியை; குறிப்புப்பெயரெசச விகுதியெனினும் இழுக்காது; நாமம என்று எடுதது, 'உரிசசொல் ஈறுதிரிந்தது' எனபா நசசினாககினியர். இனி, நாமம யாழ் - பிரசித்திபெற்ற வீணையென்றலு மொனறு. அனறி, யாழ் நாமம தேளினால் என்று மொழிமாற்றி, யாழிசையெனனும பெயரை யுடைய தேளினா லெனறு உரைப்பாரு முளா. செவியிற்புக நாமயாழ்ததேளினால் திகைபபெயதுகின்றா—மேல் ககஉ-ஆங கவியில் "அளநத பாடல் வெவ்வரவு தஞ்செவிபுக வலமர லுறுகின்றா" எனபதனோடு ஒப்பிடுக. நாளினால - உருபுமயக்கம். பி - ம்:—[1] புகுநாம யாழ்.

(களக)

கஎஎ. கவ்வு [1]தீக்கணை மேருவைக் கால்வளைத்
தெவ்வி னன்மலை யேந்திய [2]வேந்து தோள்
வவ்வு [3]சாந்துதம் மாமுலை [4]வெளவிய
செவ்வி கண்டு குலாவுகின் றார்சிலர்.

(இ - ள்.) சிலர்-சில யக்ஷஸ்திரீகள்,—மேருவை கால் வளைத்து - (வில் வடிவாகக்கொண்ட) மகாமேருமலையை இருகோடிகளுமவளையச்செய்து, கவ்வு தீ கணை எவ்வினன் - (பட்டவிடத்திற்)பற்றுமியல்புள்ள அக்கினியை முனையாகவுடைய (திருமாலாகிய) அம்பை (த திரிபுரசங்காரகாலத்தில்) பிரயோகித்தவனான சிவபிரானது, மலை - (இருப்பிடமாகிய) கைலாசகிரியை, எந்தியபெயர்த்துஉயரதூக்கிய, ஏந்து தோள் - உயர்ந்த (இராவணனது) தோள்களில், வவ்வு - பூசப்பட்ட, சாந்து - சந்தனக்குழம்பை, தம மா முலை வெளவிய - தங்களுடைய பருத்ததனங்கள் கவர்ந்துள்ள, செவ்வி - நிலையை, கண்டு - பார்த்து, குலா வுகின்றார் - மகிழ்கின்றார்கள்; (எ - று.)

சிலமகளிர், முன்பு தாம இராவணனை ஆலிங்கனஞ் செய்தகாலத்தில் அவனதுதோள்களிற பூசப்பட்டுள்ள சந்தனக்குழம்பு தமதுகொங்கைகளில ஒட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்து, அந்தப் பழைய இன்பநிலையை ஞாபகத்திற்கொண்டு இந்தப்பிரிவுககாலத்தில ஒருவாறுமகிழ்ந்து பொழுதுபோக்குவாராயினரென்க.இராவணனைப்பிரிந்து பலமாதகாலமாயினும அந்நாள்முதல் இவர்கள் பிரிவுதாங்காமல் நீராடாமலேயிருக்கின்றனரென்பது இதனாற் போதரும்; "நாள்பலவு, மண்ணுதுமேனியும் வாராவுறக்கமு மாசுடையும், புண்ணுனெஞ்சும புகைதாழுயிரபும பொரிமுத்துமே" எனப் பிரிவாற்றாமைக்குரிய குறிகள் காண்க.

எவ்வுதல் - எய்தல், ஏவுதலென்பதன விகாரம். 'தீக்கணை யெவ்வினன் மலையேந்தியதோள்' எனவே, இராவணன புஜ மென்றதாயிற்று. பி - ம்:—[1]திணடிதல். [2]ஏந்தரோள. [3]சாந்தந்த. [4]வைகிய கொண்டு. (கஎஎ)

கஎஅ. கூடி நான்குயர் வேலையுங் கோக்கநின்
றாடி னன்புக ழங்கை நரம்பினா
னாடி நாறபெரும் பண்ணு நயப்புறப
பாடி னன்பெயா பாடுகின் றார்[1]சிலா.

(இ - ள்.) சிலா - சில இயக்கியா,—உயா - பொங்கியெழு மியல்புள்ள, நான்கு வேலையும - நாற்றிசைக்கடல்களும, கூடி கோக்க-தமமில் நெருங்கிக் கலந்து பெருவெள்ளமாக, (அந்த மகாப்பிரளயகாலத்தில்), நின்று - (தான் அழியாது) நின்று, ஆடினன - ஆனந்ததாண்டவஞ்செய்தவனான பரமசிவனுடைய, புகழ் - கீர்த்தியை, அம் கை நிரம்பினால் - அழகிய தனது கையின் நரம்புகளைக்கொண்டு, நாடி - ஆராயந்து, நால் பெரும பண்ணும் நயப்பு உற பாடினன்-நால்வகைப்பெரும்பண்களும இனிமையடையும்படி பாடியவனான இராவணனுடைய, பெயா - புகழை, பாடுகின்றார் - பாடுகின்றவராஞ்சிலர்,

விரகவேதனையுற்ற மகளிர்சிலர், தமதுகணவனுடைய புகழைக் கூறும் பாட்டுக்களைப பாடிப் பொழுதுபோக்குவாராயின ரென்க. பெயர்பாடுதல் - நாமசங்கீர்த்தனமுமாம். 'கூடிநான்குயாவேலையுங கோகக நின்றுடினன்' என்றதனால், சிவபிரான் அழித்ததற்றொழிற்கடவு ளென்பதையும், அப்பெருமானது அற்புதசக்தியையும் வெளியிட்டார். இராவணன் கைலாசகிரியைப் பெயாதெடுக்கத தொடங்கி நசுக்குண்டு நெடுநாள்புலம்புகின்றபொழுது, பிரஹஸ்பதன்முதலிய மந்திரிகள் சொன்னதனால், தனது பத்துத்தலைகளி லொன்றைத் தடிந்து தனது இருபதுகைகளுள ஒன்றுடன் சேர்த்து அக்கையின் நரம்புகளே தந்திரிகளாய நிற்க வீணையாகஅமைத்து அச்செயற்கைசரீரவீணையைக்கொண்டு ஸாமவேதகானஞ்செய்து சிவபிரானை மகிழ்வித்து வரம்பெற்றன னென்பது வரலாறுதலால், 'ஆடினனபுகழங்கைநரம்பினால் நாடியபாடினன்' என்றார். பெருமபண நானகு - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பன. பெரும்பண-ஸம்பூர்ணராகம. பி-ம்-[1]பலர். (கஎஅ)

கஎ௩.—அநுமான்இயக்கியர்வீதியைக்கடந்து அரக்கியர்வீதியைச் சேர்தல்.

இனைய தன்மை யியக்கிய [1]ரெய்திய
மனையொ ராயிர [2]மாயிர கோடியா
மனைய வன்குலத் [3]தாயிழை யாரிட
நினைவி னெய்தின னீதியி னெயதினன்.

(இ - ள்.) இனைய தன்மை-இப்படிப்பட்ட தன்மைகளையுடைய, இயக்கியா - யக்ஷஸ்திரீகள், எயதிய - சோந்துவசிக்கின்ற, மனை - வீடுகள், ஓர் ஆயிரம் ஆயிரகோடி ஆம - ஆயிரத்தாறபெருக்கிய ஆயிரகோடியென்னுந் தொகையனவாம; (அவறறைக்கடந்து),—நீதியின் எயதினன் - நியாயமாக கதிற் சோந்தொழுகுபவனான அநுமான,—அனையவன குலத்து ஆயிழையா இடம-அவவிராவணனதுகுலத்துமகளிர [ராக்ஷஸஜாதி ஸ்திரீகள்] இருக்கின்ற இடத்தை, நினைவின் எயதினன - (தனது) விருப்பத்தின்படி அடைந்தான்; (எ - று.)

சிறிதுந்தடையில்லாமல் தானநினைத்தபடிசென்றுசோந்தனனென்பார், 'நினைவி னெயதினன்' என்றார்; இதுதொடர்கு - தான்நினைத்ததமாதிரத்தில் [அதிவிரைவில்] சேர்ந்தன னென்றும் பொருள்கொள்ளலாம். நீதியின் எய்தினன் - நீதிசாஸ்திரமுறைப்படி உத்தமதூதனாய்ச சென்றவனுமாம்; இதுதொடா - முறையே [ஒன்றன்பின் ஒன்றாய] அமமாளிகைகளிற் சென்று தேடியவனான அநுமா னெனறும பொருளபடும. பி - ம்:—[1]ஈணடிய. [2]ஆயிரமவாயிலபோய. [3]ஆய்வளையாரிடம். (கஎகூ)

வேறு.

கஅ௦.—இதுமுதற் பன்னிரண்டு கவிகள்—ஒருதொடர்: அவற்றிற் பதினொரு கவிகள் - அநுமான் சென்ற அந்நடுநிசியில் இராவணனுக்கு உரிமை பூண்ட அவ்வரக்கியர் பிரிவாற்றாமையுடனிருந்த பலவேறு நிலைமைகளை எடுத்துக்கூறும்.

எரிசுடர் மணியின் செங்கே ழிளவெயி லிண்டவி டாது
விரியிருள்[1]பருகி நாளும் விளககின்றி விளங்கு மாடத்

தரிவையர் [2]குழுவு நீங்க வாசையுந் தாமு மேயா
யொருசிறை யிருந்து போன வுள்ளத்தோ டேடு வாரும்.

(இ - ள்.) எரி - நெருப்புப்போலப்பரவி ஜ்வலிக்கின்ற, சுடர் - ஒளியை யுடைய, மணியின் - மாணிக்கங்களின, செம கேழ் - செந்நிறமுள்ள காந்தி யாகிய, இள வெயில் - இளஞ்சூரியகிரணம, இடைவிடாது - நடுவிலொழித லில்லாமல், விரி இருள பருகி - பரவுமியல்பினதான இருளை உண்டிடுத லால், நாளும் விளக்கு இன்றி விளங்கும - எந்நாளும் விளக்குவைத்தலில் லாமலே தாமேவிளங்குகின்ற, மாடத்து - மாளிகைகளில, அரிவையா குழுவு நீங்க - (ஏவல்செய்பவர்களான) மகளிரது கூட்டம (தம்மைவிட்டு) நீங்க, ஆசையும தாமுமே ஆய ஒரு சிறை இருந்து - (தாம் கொண்டுள்ள) காதலும தாமுமேயாக ஒருபுறததிலே இருந்துகொண்டு, போன உள்ளத தோடு ஊடுவாரும - (தமதுகணவனான இராவணனிடததுச) சென்ற மனத தோடு பிணங்குகின்றவர்களும்—, (எ - று.)

மன்மதாவத்தைகளுள் நினைப்பு ஒன்றுதலால், பிரிந்திருக்கின்றசமயததி லெல்லாம் அரசகியரது மனம நாயகனான இராவணனிடததே செல்கின்றது; அதுபற்றி அவர்கள் அமமனததைக குறித்து 'நமதுகாதலனான அவன் பிரிந்து நம்மை நினையாதிருக்க, நீமாததிரம அவனிடததுச செல்வ தென்ன?' என்று மநஸ்தாபப்படுகின்றன ரென்க. திருவள்ளுவர் காமததுப்பாலில் நெஞ் சொடுகிளத்தலில் "பரிந்தவா நல்காரென் றேங்கிப் பிரிந்தவர், பின்செலவாய பேதையென் னெஞ்சு" என்று கூறியது காணக. இரவில நெடுநேரமான தனாற்பரிவாரமகளிரனைவரும இததலைவியரைப பிரிந்து துயிலகொள்ளச சென்றனரெனபார் 'அரிவையா குழுவுநீங்க' என்றும, இங்ஙனம் துணை எவ ருமில்லையாகத் தணியாத ஆசையுடனே ஒருபுறததது ஒடுங்கியிருந்து வருந் தின ரென்பார் 'ஆசையுந தாமுமேயா யொருசிறையிருந்து' என்றும கூறி னர். அன்றியும, விரகவேதனையுடையார் தமது காதலநோயமிகுதியைப் பிறர்காணுதற்கு நாணி அனைவரையும அகறறிவிட்டுத தனியேயிருதத லியல்பு; பிரிவாற்றாமைக்குரிய குறிகளுள் "தனியும அறைபோனநெஞ்சமும உணடென்பரே" எனககாணக. 'குழுவைநீங்கி' என்றும பாடமுண்டு. இச செய்யுளில 'எரி சுடாமணி' என்றும, 'நாளும விளக்கின்றிவிளங்குமாடத்து' என்றும, 'அரிவையாகுழுவுநீங்க ஆசையுந தாமுமேயாய் ஒருசிறையிருந்து போனவுள்ளததோடு ஊடுவாரும்'என்றும அமைந்தவை, அமமாடங்கட்கு அநு மான் எரியூட்டுதலாலும இராமபிரான இராவணசங்காரஞசெயதலாலும் அவ் வரக்கியாகு அதிசீகிரததில நேருந தீங்குகளைக குறிக்கும அமங்களசசொற் களாமென உயததுணாக. பி - ம்.—[1]மெருகி. [2]குழுவுநீங்கி.

இதுமுதற் பனனிரண்டு கவிகள - இக்காண்டத்தின், முதற்செய்யுள் போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (கஅ0)

௧௮௧. நகையெரிக கற்றை நெற்றி நாவி[1]தோய்ந் தனைய வோதி
புகையெனத் தும்பி சுற்றப் புது[2]மலர் பொங்கு சேக்கை
பகையென [3]வேகி [4]யான்ற பளிங்குடைச் சீதப்பள்ளி
[5]மிகையொடுங் காத காம விம்மலின் வெதும்பு வாரும்.

(இ - ள்.) நகை எரி கற்றை நெற்றி - பிரகாசமுள்ள அக்கினிச்சுவாலையின்மீது, நாவி தோய்ந்து அனைய - கஸதூரிப்புழுகு பூசினாற் போன்ற, ஓதி - (தமது) கூந்தலில், புகை என தும்பி சுற்ற - புகைபோல வண்டுகள் சுழன்றுமொய்க்க, புது மலர் பொங்கு சேக்கை - புதிய [அன்றலர்ந்த] மலர்கள் பரப்பப்பெற்று விளங்குகின்ற படுகையை, பகை என - (தமக்கு) விரோதமாகக்கொண்டு, ஏகி - (அதனைவிட்டுச்) சென்று, ஆன்ற பளிங்கு உடை சீதம் பள்ளி - அகன்ற படிககக்கல்லினாலமைதலையுடைய குளிர்ந்த மேடையைப் படுகையாகக்கொண்டு அதிற்கிடந்து, மிகை ஒடுங்காத காமவிம்மலின் வெதும்புவாரும்-மேன்மேல்வளர்தல் தணியாத காமமிகுதியால் தவிப்பவர்களும்;—(எ - று)

அரகியர் அகநினிசசுவாலைபோலச் செந்நிறமாய்விளங்குகின்ற தமது செம்பட்டமயிரின்மீது கஸதூரியினாலாகிய மயிர்ச்சாந்தைப் பூசியலங்கரித்துள்ளதனால், அவர்கள்கூந்தல் 'நகையெரிக்கற்றைநெற்றிநாவிதோய்ந்தனைய வோதி' எனப்பட்டது. நெற்றி - உச்சி, மேலிடம். செம்பட்டமயிரின்மீது வண்டுகள் சூழ்ந்து மொய்த்தல அகநினிசசுவாலையின் மீது புகைசூழ்ந்திருந்தாற் போலு மென்பார், 'ஓதிபுகையெனத் தும்பிசுற்ற' என்றார். இவர்கள் கூந்தலில்மொய்த்துள்ள வண்டுகள இவர்களை இடம்விட்டுப் பெயரும்பொழுது புடைபெயர்ந்து சுழலுதலையும் 'தும்பிசுற்ற' எனறதிற் குறிததவாறும். விரகவேதனையுற்றாரகுப புஷ்பசயநம காமோததீபகப்பொருளாய் அக்காதல் நோயை மிகுவிததல்பற்றி, அதனைப் பகை யென்று கருதி விட்டுச செல்வாராயினர்; அநங்கனம் மலர்ப்பள்ளியைவிட்டுக குளிர்சசியைநாடிப் பளிங்கு மயமான வெறுந்தரையிற படுததவிடததும் காமதாபநதணிய விரகில்லையாகவே, காதல்மிகுதியால் அநகும்தவிததுக்கொண்டிருகின்றனர் அரகியரென்பதாம். இசசெயயுளில், அரகியாகுழற்கற்றைககு எரிககற்றையையும், அததலைமயிரில் மொயககும வண்டுகட்குத தீபபுகையையும் உவமை கூறியதும், அவர்கள் மலர்ப்பள்ளியிற்படுததலை விட்டு வெறுந்தரையிற் படுதது ஆசை நோயால் தவிப்பவராயின ரென்றதும - அவர்கட்கு இனி விரைவில் நேறும அமங்களததுககுச சூசகமாதல காணக இங்ஙனமேமுன்னும பின்னும் உள்ள இடங்களிலுபததுணாக. நாவி-நாபி; மிருகநாபி. பி-ம்:—
[1]தோய்ததனைய. [2]மலாப்பொங்கு. [3]எய்தி. [4]யாணாப் [5]மிகையுயிரோடும்.(௧௮௧)

௧௮௨. சவிபடு தகைசால் வானந் தானொரு மேனி யாகக்
குவியுமீ னார மாக மின்கொடி மருங்கு லாகக்
கவிரொளிச [1]செக்காக கற்றை யோதியா [2]மழையுண் கண்ணு
வவிர்மதி நெற்றி யாக [3]வந்திவா னொக்கின் றாரும்.

(இ - ள்) ஒரு மேனி தான் - ஒப்பற்ற [பெரிய] தங்களுடம்பே, சவி படு தகை சால் வானம் ஆக - சூரியனொளிசாயப்பெற்ற பரப்பு மிகக ஆகாய மாகவும,—ஆரம் - (தாங்களணிந்துள்ள) முத்துமாலைகள், குவியும் மீன ஆக- (அவ்வானததில்) திரண்டுவிளங்குகின்ற நக்ஷத்திரங்களாகவும்,—மருங்குல்- (தங்கள்) இடை, மின் கொடி ஆக - மின்னற்கொடியாகவும,—கற்றைஒதி- திரட்சியான (தங்கள்) கூந்தல், கவி ஒளி செக்கா ஆ - முருக்குமலரினொளி கொண்ட செவ்வானமாகவும்,—உண் கண - மையுண்ட (தங்கள்) கணகள், மழை ஆ - மேகமாகவும,—நெற்றி - (தங்கள்) நெற்றி, அவி மதி ஆக - (மாலைப்பொழுதிற் செவ்வானததைச் சாந்து) விளங்குகின்ற பிறைசசந்திர னாகவு மிருக்க,—அந்தி வான் ஒக்கின்றாரும - (தாங்கள்) மாலைக்காலத்து ஆகாயத்தை யொததிருக்கின்றவாகளும்;—(எ - று)

அரகியரது உடம்புக்கு வானம் - கரிய பெரிய வடிவில உவமம். இரா வணனைப்பிரிந்த வருததத்தால்இவ்வரக்கமாதா ஆபரணங்களையணிந்துவிளங் காமைபற்றி, இவர்களுடம்புக்கு, சூரியனஸ்தமிகக்பெற்ற வானம உவமை கூறப்பட்டது. சவி - வடசொல் ஒளி; சிறப்பாய, இங்குச சூரியனொளி யைக் குறித்தது, இனி, சூரியனைக குறிகின்ற 'ஸவிதா' என்ற வடசொல் சவியென விகாரப்பட்ட தென்றலு மொன்று. படுதல சாயதல், ஒழிதல். விரகதாபங்கொண்ட இவர்கள் அவ்வெப்பததைத தணிககக் கருதிககுளிர்ச்சி செயயு மியல்பினவான முததுக்களைத் தமது உடமபின்மீது தரித்தன ரென் பது தோன்ற, ஆரமாத்திரத்தைபே கூறினார். 'மின்கொடி மருங்குலாக'என்ற தனால் விரகதாபத்தால் அவாகளது இடை மிக மெலிந்துள்ள தென்பதும, 'கவிரொளிசசெக்கா கற்றையோதியா' என்றதனால் இவர்கள் கூந்தலை வாரி முடிதது அலங்கரியாமைபற்றி அது படாந்துள்ள தென்பதும், 'மழையுண கணணா' என்றதனால் இவாகள் கணணுங்கணணீருமா யுள்ளா ரென்பதும் செவ்வானததுப் பிறைஒளிமழுங்கிய தாதலால், அது, விரகினிகளின் பொலிவிழந்த நெறறிககு உவமையாதறகு ஏற்கும. செம்பட்டமயிரை யுடைமை, அரகியர்க்கு இயல்பு. மேகததையுடைமை வானத்தினியல் பாதலால. அத்னையுங கூறினார். உவமையணி. 'ஆக' என்பது - உவமவுருபு. அன்றி, இயைபுருவகவணியை அங்கமாககொண்டுவந்த உவமையணியெனி னும் இழுகாது. பி-ம் [1]செகநர்கற்றை. [2]மழை யொணகணணா [3]அந்தியாள்.

கஉ௩. பானலுண் கண்ணும வணணப் படிமுறை மாறப பண்ணைச்
சோனைபோன் றளிகள் பம்புஞ் சுரிகுழற் கற்றை சோர
[1]மேனிமிாந் தெழுந்த மாட வெண்ணிலா முன்றி னண்ணி
வானமீன் கையின் வாரி மணிக்கழங் காடு வாரும.

(இ - ள்.) மேல் நிமிர்ந்து எழுந்த - மேலேயோங்கியெழுந்த [மிகவு யாந்த], மாடம் - உபரிகைவீடுகளிலுள்ள, வெள் நிலா முன்றில் - வெணமை யான நிலா விளங்கும் முற்றததை, பனைனை நணணி-தோழியரானமகளிரது

கூட்டத்துடன் அடைந்து—பானல் உண கணணும - நீலோற்பல மலர் போன்ற மையுணட கணகளும் வணணமபடி முறை மாற - (தமது) நிறம முறையே மாறவும,—சோனை போன்று ஒளிகள பமபும் - விடாப்பெரு மழைபோனறு பெருகுகின்ற தேன மிகக, சுரி குழல் கற்றை நுனிசுருணட தலைமயிரின தொகுதி. சோர - தளாநதுதாழவும,—வானம மீன் கையின வாரி ஆகாயதது விளங்குகின்ற நக்ஷத்திரங்களைக கைகளாற சோததெடுதது, மணி கழங்கு ஆடுவாரும - அழகிய கழறசிககாய்களாகக கொணடு ஆடுகின்ற வாகளும,—(எ - று)

இராவணனது பிரிவை யாற்றாமல விரகதாபததால் வருந்துகின்ற அரககியரிற சிலா, நள்ளிரவிலுமூட்படட துயில்கொள்ளாமையால் அப் பொழுது ஏதேனுமொருதொழிலிற் கருத்தைசசெலுததி அதனால ஒருவாறு பொழுதுபோககக கருதி, தமது மாளிகைகளின் உபரிகையி லுள்ள நிலா முற்றத்தைத தமது தோழியருடனே யடைந்து, அங்கு அருகிலிருககின்ற நக்ஷத்திரங்களிற் சிலவற்றைக கைகளால் வாரியெடுத்து அவைகளைக கழற் காயகளாககொண்டு ஆடுகின்றன ரென்க. இதில் அம்மாடமாளிகைகள் நக்ஷத்திர மணடலங்களையளாவி உயாந்துள்ளன வென்பதும், அரககியர் மிகப்பெரு வடிவமுடைய நக்ஷத்திரங்கள் பலவற்றை எளிதில் இடம்விட்டுப் பெயாதெடுததுச சுவாதீனமாகக்கொணடு ஆடுகருவியாக்கி ஆடவல்ல ஆற்றலுடையவ ரென்பதும விளங்கும்.

நக்ஷத்திரங்கள பலவேறுநிறமுடையன வென்பது பிரசித்தம்; கீழ் ௧௦௨ - ஆஞ் செய்யுளையுங காணக. அங்ஙனம் சில நக்ஷத்திரங்களைக கைக களிற்கொணடு அவற்றினிடததுக கணபாவையைவைத்து அவற்றை உயரச செலுததி யாடுகையில் அவை ஒன்றனபின ஒன்றாக எழுந்து கண்களுககு நேராகச சமீபித்துவருமபொழுது அவற்றின் பல வேறுவகைபபட்ட ஒளி மாறிமாறிபபாயுநதோறும கணகளநிறம மாறுபடுதலை, 'பானலுணகணணும் வணணபபடி முறைமாற' என எடுததுககாட்டினா. வணணப படி-நிறமாகிய பணபு என இருபெயரொட்டுப்பண்புதொகை; படி - குணம். அங்ஙனம் ஆடும்போது உணடான சிறிது அயாசசியாற கூந்தல் சிறிது சோர்தல்,இரண் டாமடியில் எடுத்துககூறப்பட்டது. மணிக கழங்கு - இரததினங்களாற கழற் காய்கள்போலச செய்தவை யெனறுங கொள்ளலாம; நக்ஷத்திரங்களோ டொப்ப இரத்தினங்களிலும பலவேறுநிறமுணடென்பதும், கீழ் ௧௦௨-ஆங் கவியால் விளங்கிறது. பிரிவுககாலததில் நிலவினால் தம்மைவருத்துகின்ற சந்திரனுககுத தாம் ஓர் ஊறுசெயயக கருதி நிலாமுற்றததிறசேர்ந்து அவனுககுப பிரிவுததுயாவிளையுமாறு அவன் மனைவியாராகிய நக்ஷத்திரங் களைக கைகளால் வாரியெடுததுக கழங்காடலாயின ரென ஒரு கற்பனை சுறபிககவும் இடமிருததலை உய்ததுணாக

நிலாமுன்றில்-உபரிகையில் நிலவெறிக்கும வெளியாகிய முன்னிடம்: 'சோனைபோன்றளிகள்பம்பும் சுரிகுழற்கற்றை' என்பதாகு விடாப்பெரு

மழை பொழியுங காளமேகம்போன்று வண்டுகள் நிறையமொய்த்து ஆர வாரிகப் பெற்ற கடைசுருண்ட கூந்தலின் திரட்சி யென்று உரைப்பினும் அமையும். பி - ம் —[1]மேனிவநதெழுநத. (க௩௩)

க௩௪. [1]உழையுழை பரந்த வான யாற்றுநின் றும்பர் நாட்டுக்
[2]குழைமுகத் தாயந் தந்த புனல்[3]குளிர்ப் பிலவென் றூடி
யிழைதொடுத் திலங்கு[4]மாட மிடைதடு மாற வேறி
மழைபொதுத் தொழுகு நீரான் மஞ்சன மாடு வாரும்.

(இ - ள்) உழை உழை பரந்த - பலவிடங்களிற் பரவியுள்ள, வானயாறு நின்று - ஆகாசகங்காநதியிலிருந்து, உமபா நாடு குழை முகத்து ஆயம் தந்த - தேவலோகததவர்களான குழையென்னுங காதணியோடு விளங்கும முகத்தை யுடைய பரிசாரிகைப் பெணகளின் கூட்டம் கொணர்ந்துகொடுதத, புனல் - தீர்த்தங்கள, குளிர்ப்பு இல - குளிர்ச்சியில்லாதன, என்று - என்றுகொண்டு, ஊடி - (அதற்காக அததேவமாதர்களோடு) மநஸ்தாபப்பட்டு,—இழை தொடுதது இலங்கும் மாடம் - இரததினங்களை யிழைததல்செய்யப்பட்டு விளங்குகின்ற (தமது) கிருகங்களின் உபரிகையின்மேல், இடை தடுமாற ஏறி - தமது இடை துவளும்படி ஏறி, மழை பொதுத்து - (தாமே) மேகங்களை (க்கைகளால்) துளைதது, ஒழுகும் நீரால் மஞ்சனம் ஆடுவாரும்—(அவற்றி னின்று) சொரிகின்ற நீரைகொண்டு நீராடுகின்றவாகளும்,—(எ - று.)

சில அரகியா இராவணனது பிரிவினாலாகிய விரகதாபததால் தபிக கின்ற நள்ளிரவிலே குளிர்ச்சியான தீரததத்தில் நீராடித் தாபந்தணியலா மெனறு கருதி, தமகுக குற்றேவலாளராயமர்ந்துள்ள தேவமாதரைக் குளிர் ந்த நீர் கொணரும்படி யேவ அவர்கள ஆகாசகங்காநதியிலிருந்து தீரததங் கொணாந்து கொடுததனர்; அததீரததம் மிகக குளிர்ச்சியுடையதாயிருந்தும் தணிக்க மாட்டாதாக, வெதும்புகின்ற அவ்வரகியா அந்நீர் குளிர்ச்சியுடைய தன் றென்று எண்ணி குளிரததநீர் கொணராததற்காக அப்பரிசாரிகைகளை வெறுத்து, தாமே அயாசசியால இடைதுவளுமாறு மிகவுயர்ந்த தமது மாளி கைகளின் உபரிகையின்மீது ஏறி அங்குச சாந்துள்ள மேகங்களைக் கைகளாற் பொத்தி அவைசொரியும் நீரைக்கொண்டு ஸ்நானஞ்செய்கின்றன ரென்க

கீழ் ௫ - ஆஞ் செய்யுளிற கூறியபடி தேவகங்காநதி மிகவுயர்ந்த இந்நக ரதது மாடமாளிகைகளின் நிலாமுற்றதலைதச சார்ந்து செல்லுதல் தோன்ற 'உழையுழைபரந்த வானயாறு' எனபபட்டது. 'உம்பர்நாட்டு ஆயம்' எனவே, தேவமாதரென்றாயிறது அவாகள அரக்கியர்களுப் பணிப்பெணகளாயமைந்து ஆகாயகங்காநதியிலிருந்து தீரததங் கொணாநது உதவுதல, கீழ் க௦௩, க௦௪- ஆஞ செய்யுள்களிலுங கூறப்பட்டது. இனி, இததொடர்கு - (தமது தலை மையும் இன்பநலமும் ஒழிய ஏவலாளராயினமைபற்றி) வாடிய முகத்தை யுடைய மகளிரது திர ளென்றும் பொருள்கொள்ளலாம். நீர் ஒன்றேயாயி னும அதனை முகந்துகொண்டுவந்த பாததிரங்களின பன்மைபற்றி, 'புனல் குளிர்ப்பில' எனப் பன்மையாற கூறப்பட்டது. இரததினசசிதமான மாடங்க

ளென்பது, 'இழைதொடுத்திலங்குமாடம், என்பதன் கருத்து. 'இடைதடு மாறவேறி' என்றதனால், அம்மாடங்களின் உயரவும், இம்மகளிரின் மென்மையும், இவர்கள் விரகவேதனையாலயாந்திருக்கதலும் புலனும 'அமமாடங்களிலேறி மழைபொதுக்கின்றனர்' என்றதனால், மேகமண்டலத்தை யளாவியுயர்ந்துளள அமமாடங்களைச சாரந்து மேகங்கள தவழ்கின்றன வென்பது போதரும; பி - ம்:—[1]உழையுழையபரந்த. [2]குழை முகத்தவாகடந்த. [3]குளிர்ப்பிலதென்று. [4]மாடத்திடை (கஅச)

கஅரு பன்னக வரசா செங்கேழ்ப பணாமணி [1]வலிதிற் பற்றி
யின்னுயிர்க் கணவ[2]னீந்தா னாமென விருத்தி விஞ்சை
மன்னவா முடியும பூணு மாரமும் பணைய மாகப்
[3]பொன்னணி பலகை சூது துயில்கிலா பொருகின் றாரும்.

(இ - ள.) 'செம கேழ் - செந்நிறமுள்ள, பன்னக அரசா பணாமணி சர்ப்பராசாகளுடைய படத்தி லிருக்கின்ற மாணிக்கத்தை, இன் உயிர் கணவன் வலிதின் பறி ஈந்தான - (எமது) இனிய பிராணநாயகனான இராவணன் வலிதிறபறித்துக்கொணர்ந்து (எமக்கு) கொடுத்தான்: ஆம (ஆதலால் அது) எம்மிடத்தே வைத்துக்கொளளுதற்கு உரியது,' என் றென்று எணணி, இருத்தி - (அரக்க நாகரத்தினத்தைமாத்திரம்) வைத்துக்கொணடு, விஞ்சை மன்னவா முடியும ஆரமும பூணும் பணையம ஆக - வித்தியாதராசாகளிடத்திலிருந்து (இராவணனால் வலியபபறித்துக்) கொணடுவந்து தரப்பட்ட அவாகளுடைய கிரீடங்களையும ஆரங்களையும மறறையாபரணங்களையும் பந்தயமாக வைத்து, துயிலகிலா - தூக்கமிலலாதவாகளாய், பொன் அணி பலகை - பொன்மயமான அழகிய பலகையில, சூது பொருகின்றாரும சூதாட்டமாடுகின்றவாகளும்,—(எ - று)

இராவணனைபபிரிந்த அரக்கியரிற் சிலர், அப்பிரிவாற்றாமைத் துயரால் நடுநிசியிலுமுட்படத்துயிலில்லாமையால் தமமில ஒருவரோடொருவா சூதாடுவாராயின ரென்க. அங்ஙனம ஆடுங்காலத்து, அவர்கள், முன்பு இராவணனால் தமக்குத தரபபட்டுளள பொருளகளுள நாகரத்தினத்தைமாத்திரம் அதனருமைகருதி என்றும் தமகே யுரியதாக வைத்துக்கொணடு மறறவறறையெல்லாம பந்தயமாக வைத்து ஆடுகின்றன ரென்க. இனி, இசசெயயுளுக்கு 'பன்னக வரசா செங்கேழ்பபணாமணிவலிதிற்பறறி இன்னுயிரககணவன ஈந்தான்' என்று (நாகராசரது சிரோரத்தினத்தின சிறப்பையெடுத்துச) சொல்லி அதனைப் பந்தயமாக வைத்து (இங்ஙனமே மற்றவறறின் சிறப்பையும எடுத்துச (சொலலி) விஞ்சைமன்னவா முடிமுதலியவறறையும் பந்தயமாகவைத்துச சூதாடுகின்றன ரெனறு பொருளகொள்ளலுமாம; இவ்வுரையில், 'ஆம' எனபதற்கு - இது தக்க பந்தய மாகு மென்க.

விஞ்சை-வித்தையை மாயவித்தை; அதனையுடைய வித்தியாதராகளுப் பணபாகுபெயா. (சீவகசிந்தாமணியில் "விஞ்சைக்கிறைவன்" என்றவிடத்து,

நசசினார்க்கினியர் 'விஞ்சை - குணப்பணபு பண்புடைப் பொருள்மேல்நின்ற ஆகுபெயர்' என்றது காணக. பலகை சூதுகாய்களை வைக்கும் அஸ்ற வகுத்த பலகை படைகளைக்கொணடு செய்யும போரில் வெற்றிதோல்விகளால் இராசசியதைப் பெறுதலும் இழதலும நிகழ்தல்போலக காயகளைக் கொணடு செய்யுஞ் சூதாட்டததிலும் ஜயாபஜயங காரணமாகப் பொருள்களைப் பெறுதலும் இழததலும் நேர்வதுபற்றி, சூதாடுதலைப் பொருதலாகக் கூறுதல் மரபு. சூதாட்டததில் ஒருவர் தமது காயைக்கொணடு எதிரியின் காயை 'கொல், அடி, வெட்டு' என்றுகூறிக களைவதுபற்றியும், மாறுபாட்டுக்கு இடமாதல்பற்றியும், சூதாட்டம், 'போர்' எனத்தகும் பி - ம்.—[1]வலியிற்பற்றி. [2]ஈந்தயாவையுங கொடுதது [3]பொன்னின்பலகைசசூது துயிலிலர். (சஅடு)

கஉகூ. [1]தெனனகு குடமுட் பாடல் சித்திய ரிசைப்பத் தீஞ்சொற்
பண்ணக மகளிர் வள்வாத தண்ணுமை பாணி[2]பேண
பொன்னகர்த தரளப பந்தர் கற்பகப பொதும்பர்ப பொற்றோ
ளின்னகை யரம்பை மாரை யாடல்கண் டிருக்கின் றாரு.

(இ - ள்.) தென் நகு குடம் உள் - அழகாக விளங்குகின்ற [இனிமையாக ஒலிகின்ற] குடமுழாவின் தாளவடைவுக்கு உட்பட்ட, பாடல்-இசைப் பாட்டுக்களை, சிததியர் இசைப்ப - சிததகன்னிகைகள்பாடவும,—தீமசொல் பண்ணக மகளிர் - இனிமையான சொறகளையுடைய நாககன்னிகைகள, வள்வார் தணணுமை - வலிய தோற்கயிற்றினால கட்டப்பட்ட தணணுமை யென்னும் முழாவை, பாணி பேண - கைகளால கருததோடு தட்டி முழக்கவும,—கறபகம பொதுமபர் - கறபகசசோலையில், பொன் நகர் - பொன் மயமான மாளிகையில், தரளமபந்தர் - முததுக்களினால் வேயபபட்ட பந்தலின் கீழ், பொன தோள் இன நகை அரமபையரை-அழகிய தோள்களையும் இனிமையான புன் சிரிப்பையுமுடைய அப்ஸரஸ்திரீகளை, ஆடல் கணடு - (நர்ததனஞ் செய்யசசொல்லி) அந்த ஆட்டத்தைப பாரததுகொணடு, இருக்கின்றாரும - இருகின்றவரகளும்,—(எ - று.)

இராவணனைப்பிரிந்த விரகத்தால் இடையிரவிலுந் துயில்கொளளாத அரக்கியரிற் சிலர், பதினெணணாயிரகணகளுட் சித்தசாதி கன்னிகைகளையும் நாகசாதிகன்னிகைகளையுந் துணைகொண்டு அப்ஸரஸ்திரீகளை நாட்டியமாடசசொல்லி அதனைப் பார்த்துக்கொணடிருக்கின்றன ரென்க.

குடம் - குடமுழா; இது தோலாற்செயயப்பட்ட கருவிகளுள் ஒன்றென்றும், எழுவகைமுழாககளுள் உத்தமமான அகமுழாவின்பாற பட்டதென்றும, தணணுமை - மத்தியமமான அகபபுறமுழாவினபாற் பட்டதென்றும சிலப்பதிகாரவுரையா லுணரலாம். சிததியா ஸித்தரென்பதன் பெண்பன்மை.நகர்-சிறந்தமாளிகைக்கு இலக்கணை. அபிநயங்களை அழகிதாகக்காட்டுதறகுத் தோளழகும், சிருங்காரரசப் பிரதானமான பாட்டுக்களின் பாவங்களை விளகுதற்கு முகமலாசியும் வேணடுதல்பற்றி, அவற்றையுடை

மையை 'பொற்றோள்', 'இன்னகை' என்ற அடைமொழிகளாற் காட்டினா. அரம்பைமாரை ஆடல்கண்டு,—அரம்பைமா ராடலைக கண்டு என்று உருபு பிரித்துகூட்டவுந் தகும். பி-ம்:—[1]தென்ன வென்றமிர்தப்பாடல். [2]பேணிப்.

கஅஎ. ஆணியிற் கிடந்த காத லகஞ்சுட [1]வருவி யுண்கண்
சேணுய ருறக்கந் தீர்ந்த சிந்தையர் செய்வ தோரார்
வீணையுங் குழலுந் தத்த மிடறும்[2]வேற் றுமையுந் தீர்ந்த
[3]பாணிக ளளந்த பாட லமிழ்துகப் பாடு வாரும்.

(இ - ள்.) ஆணியின் கிடந்த காதல் - (அழுந்தத தைதத) இருப்பாணி போல (எளிதிற் பெயர்ககலாகாதபடி தமது உள்ளததில்) ஊன்றிககிடக் கின்ற ஆசையானது, அகம் சுட - அந்தமனத்தைத் தவிககசசெயய (அத னால்), அருவி உண் கண் - மலையருவிபோல நீர பெருக்குகின்ற மையுணட கணகளில், சேண் உயர் உறக்கம தீர்ந்த - மிக நெடுநாளாகத் தூங்குத லொழிந்த, சிந்தையர் - மனக்கவலையுடையவர்களான சில அரககியர், செய் வது ஓரார் - தாம் இன்னதுசெயவதென்று அறியாதவாகளாய்,—வீணையும் குழலும் தம் தம்மிடறும் வேற்றுமையும தீர்ந்த - யாழிசையும் புள்ளாகுழ லிசையும தங்கள் சாரீரமும் (தம்மில முழுவதும ஒத்திருத்தலே யன்றி) வேறுபாடென்பது சிறிதுமில்லாத, பாணிகள் அளந்த பாடல் - கைகளால் தாளமொற்றி அளவு செய்யப்படுகின்ற பாடல்களை, அமிழ்து உக பாடு வாரும் - அமிருதம்போன்ற இனிமை மேன்மேற் சுரகூமபடி பாடுகின்றவா களும்,—(எ - று.)

நெடுநாளாகத் தொடாச்சிப்படுதலால் மனதிலழுந்திய விரகாக்கினி காரணமாக நடுராத்திரியிலுந தூக்கநகொள்ளாத அரகியரிற் சிலர், பாடிப் பொழுதுபோககுவாராயின ரென்க. இவாகளை இராவணன் பிரிந்ததற்குக் காரணம், அவன் சீதையினிடத்துக்கொணடகாதல். அதற்கு இவர்கள் ஒன் றும் பரிகாரஞ்செய்யமாட்டிற்றில ரென்பதும, இவர்கள் செய்வதறியாது திகைத்தலும்தோன்ற, 'செய்வதோரார்' என்றார். "தானே கழநகமனை தண்சுனைநீ ராடாள், கானேரிசைபயிலாள் கைகிளியும்-மானினமும், பூவை யையும் போற்றாள் பொருந்தவே பாநகியருக், கேவல்புரியாள்களிப்ப தென்று,' என்றபடி பிரிவாற்றாது வருந்தும் மகளிர்க்கு இசைபயிலாமை இயல்பாயிருக்கவும அதற்குமாறாக இவர்கள் இசைபாடுவது அங்ஙனஞ் செய் வன தவிரவன அறியாமையினு லென்பதையும் பெறவைத்தா; கீழ் (கஅஙு) கழநகாடுதல், (கஅச) நீராடுதல் கூறியதும் இதுபற்றியே யென்க. இச்செய்யு ளின் முனனிரணடடி - முனனுமபின்னுங காரணகாட்டாத செயயுள்களி லும கூட்டததக்கது; ஏற்புழிகோடலென்னும் உத்தியால். சேண உயர் உறக்கம - (பிராணிகட்கு இன்றியமையாதாதல்பற்றி) மிகசசிறந்த தூக்க மெனினுமாம.

மன்மதாவதாரங்களுள் வெதுப்பு 'அகஞ்சுட' என்றதனாலும், நினைப்பு 'சிந்தையா' என்றதனாலும கூறப்பட்டன. இவாகள் குரல இன்னிசைக்கருவியின் இசையோடொப்ப இனிமைவாய்ந்ததெனபதும, இசைக்கருவிகளின் நாதமும சாரீரமும் வேறுபகுததுக காட்டாதபடி பாடுந்தரததினா இவாகளென்பதும், இவாகள்பாடல் தாளப்பிரமாணந தவறாம லமைந்ததென்பதும், இனிமைமிகக தென்பதும், பின்னிரணடடிகளில் விளகுகின. வீணையும் குழலும் தததமிடறும வேற்றுமையுந் தீர்ந்த பாடல்—சீவகசிந்தாமணியில் "இருநகடற்பவளச்செவ்வாய் திறநதிவள்பாடினளோ, நரம்போடுவீணைநாவினவின்றதோ வென்று நைந்தா," "விரல்கவாந் தெடுத்த கீத மிடறெனத தெளிதல்தேற்றா" என்றவை நோககத்தககன. மிடறு - இங்கே, கண்டத தொனி. பி-ம்:—[1]அருவிக்கை.[2]வேற்றுமையிற்றீாநத.[3]பாணிதள்ளா. (கஅஎ)

கஅஅ. தண்டலை வாழை யன்ன குறங்கிடை யல்குற் றட்டிற்
கொண்டபூந் துகிலுங் [1]கோவை கலைகளுஞ் சோரக் கூர்ங்கள்
ளுண்டல [2]மந்த கண்ணோ டுசலிட் டுலாவு கின்ற
குண்டலந் திருவில் வீசக் குரவையிற் [3]குழற்று வாரும்.

(இ-ள்.) தண்டலை வாழை அன்ன - தோட்டததிலுள்ள வாழைமரதினது அடித்தண்டைப் போன்ற, குறஙகு - தொடைகளின், இடை - நடுவிலுள்ள, அல்குல் தட்டில் - அல்குலாகிய தட்டின்மீது, கொண்ட - தரிதத, பூ துகிலும் - அழகிய சேலையும், கோவை கலைகளும் - (பொன்மணிகளைக) கோதத இடையணியும் (அரைப்பட்டிகையென்னும்) இடையணியும், சோர- தளர்ந்துதாழும்படியும,—ஊசலிட்டு உலாவுகின்ற - ஊஞ்சல்போலாடி யசைகின்ற, குண்டலம் - குண்டலமென்னுங காதணி, திரு வில் வீச - அழகிய ஒளியை வீசும்படியும்,—கூர் கள் உணடு அலமந்த கண்ணோடு-உறைப்புளள கள்ளைக் குடிததனால் மயஙகிச சுழல்கின்ற கண்களுடனே, குரவையின் குழறறுவாரும் - குரவைககூததாடி ஆரவாரிப்பவாகளும,—(எ - று.)

பிரிவை யாற்றாது வருந்துகின்ற அரக்கியரிற் சிலா தமது தோழியருடனே குரவைககூததாடிக கொககரிககின்றன ரென்க. குரவை - கைகோத்தாடுங கூதது; "குரவைககூததே கைகோத்தாடல்" என்பது, திவாகரம். அனறியும், இது, விநோதக்கூததின வகைகளு ளொன் றென்றும, வரிக்கூததின் ஒருறுப் பென்றும், 'குரவை யென்பது - காமமும வென்றியும் பொருளாகக் குரவைசசெயயுள் பாட்டாக எழுவரேனும எணமரேனும ஒன்பதினமரேனும கைபிணைநதாடுவது' என்றும சிலப்பதிகாரவுரையால தெரிகின்றது. இதனையாடுமபோது அரையிலுடுதத ஆடையும் கோவைகலைகளாகிய இடையணிகளும் நெகிழ்தலையும, குணடல மென்னுங காதணி அசைந்து ஒளிவீசுதலையும் எடுததுக கூறினா. நன்றாக ஆடுதற்கு வேணடிய உற்சாகததையுணடாக்கிக கொள்ளுதற்பொருட்டு, கார மேற்றிய களளைக் குடிததனா. அதனாற் கண்கள் வட்டமிட்டன. தண்டலை - பண்புத தொகையன்மொழி.

கோவை - எணகோவையாகிய மேகலை, ஒரு கோவையாகிய காஞ்சி முதலியன. பி - ம் —[1]கோவைகலன்களுஞ சோர. [2]அலமந்தகணணோ. [3]குழறுவாரும். (கஅஅ)

கஅகூ. நசசெனக் கொடிய நாகக் கள்ளொடு குருதி நக்கிப்
பிச்சரிற் பிதற்றி யல்குற் பூந்துகில் கலாபம் பீறிக்
குசசரிக் திறத்தி னோசை களங்கொளக் குழுக்கொண்டுண்
சச்சரிப பாணி கொட்டி நிறைதடு மாறு வாரும். [டிச்

(இ - ள்) நாகம் நஞ்சு என கொடிய - நல்லபாம்பின் விஷம்போலக கொடுமையுடைய களளொடு - கள்ளையும், குருதி - (பலவகைப் பிராணிகளின்) இரததததையும், நககி - குடிததது, (அதனால் மிகுதியான மதிமயகததையும வெறியையுங கொணடு),-குழு கொணடு ாணடி - (தமமிற்)கூட்டங கொணடு திரண்டு,—குசசரி திறததின ஓசை களம் கொள - குசசரியென்னும பணவகை போன்ற இனியகுரல தமது கணடததில் தோன்ற, பிசசரின பிதற்றி - பைததியங்கொணடவாபோல (வாயில்வந்தவற்றை)சசொல்லிக் கொணடு,—சசசரிபாணி கொட்டி - சசசரியென்னும் வாத்தியம்போலொலிபடத தமது கைகளைத தட்டி,—அல்குல் பூ துகில் கலாபம் பீறி-அல்குலின்மேலணிநத மெல்லிய ஆடையும கலாபமென்னும் அரைநூன்மாலையும் துணி படுமாறு, நிறை தடுமாறுவாரும - (தமது) நிறையென்னும் மகடூஉக் குணம் அழிபவர்களும்;—(எ - று.)

பிரிவால்வருந்துகின்ற அரக்கியரிற் சிலர், இன்னது செய்வதென்றறியாமையாலும, மனததிற் செயற்கையானதோருற்சாகத்தை யுண்டாககிக் கொணடு பொழுதுபோகக் கருதியும, தமது சாதி தருமததுக்கேற்ப நாகததின் நஞசுபோல மிகக மயகததை விளைகக வல்ல கொடிய கள்ளையும் இரத்ததததையுங குடிததது, அதனால் அளவிறநத மதிமயக்கத்தையும வெறியையுங கொணடு, தம்மிற பலா ஒருங்குகூடி, தமது இனிய குரலாற் பிததாபோலத தோன்றிய வற்றையெலலாஞ சொல்லிககொணடு, கைகளால் தாளமிட்டு, உடுதத ஆடையும அதன்மேலணிந்த இடையணியும பீறுமாறு தலைதெரியாமல் அடககமின்றிக் கூததாடுகின்றனரென்க. நிறையாவது - மனததது அடககற்பாலனவறறை யடககுதல; "நிறையெனபபடுவது மறைபிறரறியாமை" என்றார பிறரும. 'பூநதுகில கலாபம் பீறி', 'சசசரிப்பாணிகொட்டி' என்றவற்றால், நிறைதடுமாறுதற்கு அடகக மின்றி ஆடுதலளவும பொருள் கொள்ளப்பட்டது. குழுககொணடு - (தமது தோழியரோடு) கூடி யெனினுமாம்.

நாகக கள்ளொடு - (பாற்கடலிலதோன்றிய வாருணியென்னுந்) தேவலோகததது மதுவினுடனே யென்றலுமாம. குடிததுஎன்ற பொருளில 'நககி' என்றது; ஒருபொருளின் வினையை மற்றொருபொருளின்மேலேற்றிய உபசார வழககு. பிசசா - பிததரென்பதன் போலி. கலாபம் - இருபததைநது கோவையுள்ள இடையணி; "எணகோவைமேகலை காஞ்சியொருகோவை.

பணகொள் கலாப மிருபதைந்து—கணகொள், பருமம் பதினறு முப்பத திரண்டு, விரிசிகை யெனறுணரற் பாற்று'' எனக காணக. (கஅகூ)

ககூ0. [1]தயிர்நிறத துறுக ளுள்ளந் தள்ளுற வறிவு தள்ளிப்
பயிர்வுறத் தெய்வ மென்மேற் படிந்தது பார்மி னென்னு
வுயிருயிர்த் திரண்டு கையு முசசிமே லுயர நீட்டி
மயிர்சிலிர்த் [2]துடலுங் கூசி [3]வாய்விரித் தொடுங்கு வாரும்.

(இ - ள்.) தயிர் நிறத்து உறு கள் - தயிரினது நிறத்தைப் பொருந்திய கள்ளானது, உள்ளம் தள்ளுற - (பருகிய தககள்) மனத்தைத் தடுமாறச் செய்ய (அதனுல்), அறிவுதள்ளி - அறிவுமயககி,—பயிரவு உற - ஆரவார முண்டாக, தெய்வம் என்மேல் படிநதது பார்மின் என்னு - 'தெய்வம் என் மேல் ஆவேசித்தது, பாருநகள்'என்று சொல்லிகொணடு, உயிர் உயிரதது - பெருமூச்சுவிட்டு, இரணடு கையும் உசசிமேல் உயர நீட்டி - (தமது) இரண்டுகைகளையும் (குவித்துத்) தமது தலைபின்மீது உயரநீட்டி, மயிர் சிலிரதது - மயிரசசிலிப்புகொணடு, உடலும கூசி - உடற்கூச்சததையும அடைந்து, வாய்விரித்து - வாயதிறநது ஆவென்றுகதறி, ஒடுகுவாரும் - (பின்பு) ஓயநது விடுபவாகளும,—(எ - று)

கட்குடியா தாம் அக்களிபினுல் மதிமயங்கிசசெய்யும் பலவகைச செயல் களைத தன்மீது தெயவம் ஆவேசிததனுலாகியனவென்று பெருமைப்படச சொல்லிக்கொளளுத லுணடு 'பயிர்வுற' என்பதற்கு - (தம்மைக காண்பவர்) அச்சமடைய வென்று உரைப்பாரு முளா. கூசி - நடுகுகி யெனினுமாம். நிறத்து உறு - அததுசசாரியைநிற்க இரணடனுருபு தொககது. பி - ம் — [1]தயிநிறக்களுணடுள்ளந்தள்ளத தமமறிவு தள்ளப்பயிருற [2]உடலங்கூசி. [3]வாய்விசிதது (ககூ0)

কককককক

கழித்து [அநகும் சீதையைத தேடி], உத திசை - அப்புறமான இடத்தில், விஞ்சைமாதா உறையுளை-வித்தியாதரமாதாகள வசிக்கின்ற வீதியை, முறையின் உற்ருன் - முறையே சோதனன், (அநுமான்); (எ - று.)

தேவமாதாகளைப் பணிகொள்ளுந் தவப்பயன் மிக்க அரககமாதா வசிக்கின்ற திவ்வியமான வீதி யாதலால் அதற்கு 'தெய்வம' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. 'உத்திசை' என்பதில், உகரசுட்டு - அப்பாலென்ற பொருளை புணாததிற்று. முறையின் உறுதல் - ஒவ்வோரிடமாகத தேடிக கொணடு செல்லுதல். பி - ம்:—[1]பததியினுறையும பதநிப படர்நெடுந்தெரு.

வேறு

கசூஉ.—இதுமுதல் மூன்றுகவிகள் அந்த அர்த்தராத்திரியில் அவ்வித்தியாதரமாதர்களிருந்த நிலைமையைக் கூறும்.

வளர்ந்த காதலர் மகரிகை நெடுமுடி யரககனை வரக்காணா
தளர்ந்த சிந்தை தம்[1]மிடையினு நடுங்கிட வுயிரொடு தடுமாறிக்
[2]களந்த வாநெடுங் கருவியிற கைகளிற் செயிரியர் கலைக்கண்ணு
லளந்த பாடல்வெவ் வரவுதஞ் செவிபுக [3]வலமரா லுறுகின்ருர்.

(இ - ள்) வளாந்த காதலா - (தமது கணவனுகிய இராவணனிடததது) அதிகமான ஆசையையுடையவாகளான சில வித்தியாதரமாதா,—மகரிகை நெடு முடி அரக்கனை வர காணுர்-சுருமீனின் வடிவமமையச் சித்திரிககப்படு தலையுடைய நீணட கிரீடமுளள இராவணன் (தமமிடததது) வருதலைக்காணுதவாகளாய்,—தளர்ந்த சிநதை தம் இடையினும நடுநகிட-சோர்வுறற (தமது) மனம தமது இடையைக காட்டிலும அதிகமாகத துடிகக, உயிரொடு தடுமாறி-உயிரோடு தடுமாறறநகொணடு,—செயிரியா - (வீணை முதலிய வாததியநகளை இயக்கிப பாடும) பாடகர், களம தவா நெடுந கருவியின் - (தநகள்) சாரீரததோடு மாறுபடாத [ஒதது இசைகின்ற] (யாழ் முதலிய) சிறந்தவாத்தியநகளில், கைகளின் - (தநகள்) கைவிரல்களைகொணடு, கலை கணணுல் - நூல்களாகிய கண்களால் [சாஸதிரமுறைமைப்படி], அளநத-(தாளப் பிரமாணத்திறகு ஏற்ப) அளவிட்டு எழுப்பிய, பாடல் - இசைப்பாட்டாகிய, வெம் அரவு - கொடிய பாமபு, தம் செவி புக-தமது காதுகளில நுழைய, அலமரல் உறுகின்ருர்-(அதனைப பொறுக்கமாட்டாமல்) கலககமடைகின்ருர்கள்;(எ-று.)

இச செய்யுள், கீழ்ப்போந்த கஎசு - ஆஞ செய்யுளோடு ஒப்புநோக்குதற்குஉரியது. மகரிகை யென்றது, கிரீடததிலமைக்கப்பட்டதொரு தொழில் திறததை; அநவனந் தொழிலமைககப்பட்ட நெற்றிபபட்ட மென்னும் அணிகலததை யாகவுமாம. இனி, 'மகரிகை நெடுமுடி யரககன்' என்பதற்கு-மகர தோரணமபோல நெடியவரிசையாக அமைநதுள்ள (பததத்) தலைகளையுடைய இராவண னென்றலும அமையும. களம - கணடம்; அதன் குரலுககு [சாரீரத்துககு] ஆகுபெயர். கலையை 'கண' என்றது, இன்றியமையாசிறப்புப் பற்றி. பொருளினியல்பை உள்ளபடி காணுதற்குக் கருவியாதல்பற்றியும்,

இங்ஙனமகூறததகும. பாடல்வெவ்வரவு தஞ்செவிபுக - **உருவகம்;** பாட்டானது கொடிய பாமபுபோலத் தமது செவிததுளையில் வந்து நுழைய வென்பது கருதது. பி - ம் —[1]இடையினினுடநகிட வுபிரகொடு. [2]கிளாந்தவானெடுங்கருவியிற்கிளைகளிற் செயிரியர்களைகண்ணு [3]அலமரவுயிரக்கின்றூர.

இதுமுதற் பததொனபது கவிகள் - பெரும்பாலும மூதற்சீர் மாசசீரும், ஈற்றுசசீர் மாங்காய்சசீரும, மற்றைநான்கும விளசசீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொணட அறுசீராசிரியவிருத்தங்கள்.

ककூ. புரியு நனனெறி முனிவரும் புலவரும் புகலிலாப் பொறைகூர, வெரியும் வெஞ்சினத் திகலடு கொடுந்திற லிராவணற் கெஞ்ஞான்றும், பரியு நெஞ்சின ரிவரென வயிரத்ததோர் [1]பகைகொடு பனித்திங்கள், சொரியும் வெங்கதிர் [2]துணை முலைக் குவைசுடக் கொடிகளிற் றுடிக்கின்றூர்.

(இ - ள்.) 'புரியும-(பலராலும்) விருமபப்படுகின்ற, நல் நெறி-சன்மாக்கத்தி லொழுகுகிற, முனிவரும்-இருடிகளும், புலவரும - தேவாகளும், புகல் இலா - சரணமாக அடைவதறகு எவரையுமபெறுமல, பொறை கூர-மிகுதியாகப் பொறுததுककொணடிருகக, எரியும வெம் சினத்து இகல் அடு - மூண்டெழுகின்ற கொடிய கோபாककினியினுல (அவாகளுடைய)வலிமையையழிக்கின்ற, கொடுந் திறல - கொடிய வல்லமையையுடைய, இராவணற்கு - இராவணனவிஷயததில, எஞ் ஞான்றும் பரியும-எப்பொழுதும அனபுகொணட, நெஞ்சினர் - மனமுடையவா, இவா - இம்மகளிர,' என - என்று எணணி, வயிரதது ஓர பகை கொடு-வயிரம்பற்றியதான ஒருபகைமையைக கொணடு, பனி திங்கள சொரியும் - குளிரசசியான சந்திரன் பொழிகின்ற, வெம கதிர்- உஷ்ணகிரணங்கள், துணை முலை குவை சுட - குவிநதெழுநத இரணடுதனங்களையும எரிகக, (அதனுறசிலவிததியாதரமாதாகள), கொடிகளின் துடிகின்றூர-(வெயிலினுற்)பூங்கொடிகள (வாடுவது)போலததுடிக்கின்றூகள; (எ-று.)

இராவணவிரகததாற் சிலவிததியாதரமாதாகள் வருந்துகின்ற போது, சநதிரகிரணங்கள அவாகளுடம்பினமீது பட, காமோததீபகமான அந்நிலாவின தொடாபால் அவாகள் தீபபட்டகொடிபோல மிகததவிபபாராயினரென்க. பலாककுங குளிரசசியைசசெயயு மியலபினவான சநதிரகிரணங்கள் அவாகட்கு வெபபந்தருதறகு ஒருகாரணங்கறபிப்பா, 'இவவிததியாதரமாதர்கள் தேவகணடகளும ருஷிகணடகளுமான கொடிய இராவணனபககல நெடுநாளாக மனப்பூவமாக அன்பு கொணடுள்ளா ரென்பதுபறறிச சந்திரனுகிய தேவன் அவாகளிடம கறுவு கொணடு பகைமைமிककு அவாகள்மேல உஷ்ணகிரணததைச சொரிகின்றூன்' எனறூ.

நன்னெறி புரியும என மொழிமாறறினுமாம. புகல் இலா பொறை - சொலல வொணணாத பொறுமை யெனினுமாம; இவ்வுரையில், புகல் - முதனிலைததொழிற்பெயா. பி - ம்:—[1]பகையொடு. [2]பணை முலை. (ककூ)

கக௯. சிறுகு காலங்க ளூழிக ளாம்வகை திரிந்து [1]சிந்தனை சிந்த,முறுகு காதலின் வேதனை யுழப்பவா [1]முயங்கினர் முலைமுன்றி, லிறுகு சாந்தமு [2]மெழுதுநற் குறிகளு மின்னுயிர்ப் பொறையீர, மறுகு வாட்கண்கள் சிவப்புற நோக்கினா வயிர்த்தன ருயிர்க் கின்றார்.

(இ - ள்.) சிறுகு காலங்கள ஊழிகள் ஆம வகை - (நிமிஷம் நாழிகை முதலிய) சொற்பகாலங்களும் கற்பகாலங்கள்போல மிகநீண்டனவாகத்தோன றுமபடி, சிநதனை திரிநது சிந்த - மனம் மாறி நிலைகுலைய, முறுகு காதலின் வேதனை உழப்பவா - முதிநத காமநோயினால் வருந்துபவர்களும், முயங்கி னா - (முன்பு இராவணனைக) தழுவியிருநதவர்களுமான வித்தியாதரமாதர் சிலர்,—முலை முனறில் - (தமது) தனங்களின்மேல், இறுகு சாந்தமும் - (முன்பு தம்மை அவன் ஆலிங்கனஞ் செய்தபொழுது அவனுடம்பு) அழுந் தப்பெற்ற சந்தனததையும், எழுது நல் குறிகளும் - (அம்முலைமுகட்டில் அவ் விராவணனால்) தொய்யிலெழுதப்பட்ட நல்ல அடையாளங்களையும், இன் உயிர் பொறை நா - (தமது) இனிய உயிராகிய பாரததைப் பிளநது வருத் தும்படியாகவும், மறுகு வாள் கணகள் சிவப்பு உற - சுழலுகின்ற வாளா யுதம போன்ற (தமது) கண்கள் (ஊடலாற்) செந்நிறங்கொள்ளுமபடியாகவும், நோக்கினர் - பார்தது, வயிரதனா - வயிரங்கொண்டு, உயிர்க்கின்றா - பெருமூச்சு விடுகின்றார்கள்; (எ - று.)

இராவணனுககு உரிமைபூண்டு அவனைத தழுவியிருந்த வித்தியாதர மாதரிற் சிலர், நெடுநாளாக அவனைபபிரிந்ததனால் வருந்துகின்றபொழுது, அவனைப் பிரிந்தநாள்முதல் நீராடுதலையொழிநத தங்களுடம்பிற் கொங்கை களின்மீது பூசபபட்டிருநத சநதனக்குழமபில் முனபு அவன் இறுகத் தழு வியபோது அவனுடம்புபடிந்த சுவட்டையும, முன்பு அகங்கொங்கைகளில் அவன் சந்தனக் குழம்புமுதலியன கொண்டு லீலையாக எழுதிய சிததிரக கோலததையும் கணடு, அதனால் முன்புகூடியிருந்த நிலையை நினைப்பூட்டப் பெறறவர்களாகி, மிக வருந்தி, நெடுநாளாக அவன் தமமைத் தழுவாது உபே க்ஷித்து வேறறு மாதினிடம் [சீதையினிடம்] காதல்கொண்டிருத்தலபற்றி அவனிடத்துக கோபமும மாறுபாடுகொண்டு பெருமூசசுவிடுகின்றன ரென்க. கூடியநிலையில் ஒருகணமாகக கழிகிறபொழுதானது பிரிநதநிலையில் அநேகயுககாலமாக நீட்டித்துத தோன்றுகின்றமைபற்றி, 'சிறுகுகாலங்க ளூழிகளாமவகை' எனபபட்டது; இவவனந்தோனறுதல் மனததின்திரிபு பறறியே யென்பது விளங்க, 'திரிநது சிந்தனை' என்றார்.

பிரிந்த நிலையில் உயிரவைததுகொணடிருததலும் சுமையெனத தோன்றுதலால், 'உயிரபபொறை' என்றனர். பொறுகக்படுவது பொறை யெனச சுமைககுக் காரணக்குறி; பொறுததல் - சுமத்தல். உயிர்ப்பொறை- உயிரைத தாங்குவது என்று கொணடால், உடமபு என்று ஆகும். கூரியன

வாய் ஆடவரை வருத்துவனவான கண்கள பிறழ்ச்சியை யுடைமையால், அவற்றிறகு, சுழற்றப்படுகிற வாட்படைகள் உவமை கூறப்பட்டன. பி - மீ:— [1]முயலகிய [2]எழுதிய. (கசுச)

கசுரு. வித்தியாதரமாதர் வீதியைக் கடந்து செல்லும் அநுமான் மந்தோதரியின் மாளிகையைப் பார்த்தல்.

ஆய விஞ்சையர் மடந்தைய ருறைவிட மாறிரண் டமைகோடி
தூய மாளிகை நெடுந்தெரு த [1]துருவிபபோய த தொலைவின்மூன் றுலகிற்கு
நாய கன்பெருங் கோயிலை நண்ணுவான் கண்டன னளிரதிங்கண்
மாய நந்திய வாண்முகத் தொருதனி [2]மயன்மக ளுறைமாடம்.

(இ - ள்.) ஆய - இவ்வாறான, விஞ்சையா மடந்தையர் வித்தியாதர மாதரகள், உறைவு - வசிக்கப்பெற்ற, இடம - இடமாகிய, ஆறு இரண்டு அமை கோடி தூய மாளிகை - பன்னிரண்டுகோடியென்னுந் தொகையுளள சுத்தமான வீடுகளை யுடைய, நெடுந் தெரு - நீணட வீதிமுழுவதும, துருவி போய - (பிராட்டியைத்) தேடிககொணடு சென்று, தொலைவு இல் மூனறு உலகிறகும நாயகன பெருங கோயிலை நணணுவான் - அழிவில்லாத மூன்று உலகங்கட்குந் தலைவனான இராவணனது பெரிய அரணமனையைச சமீபிப பவனான அநுமான்.—நளிர திங்கள் மாய நந்திய - பெரிய [பூரண] சந்திரன் தோறகுமபடி விளகுகின்ற, வாள் முகதது - ஒளியுள்ள முகத்தையுடைய, ஒரு - ஒப்பற்ற, மயன மகள் - மயனென்பவனது மகளாகிய மந்தோதரி, உறை - வசிகின்ற, தனி மாடம் - தனிதத மாளிகையை, கண்டனன், பார்த்தான; (எ - று.)

தூய மாளிகை சிற்ப சாஸ்திரததிற் கூறியபடி நல்லிலக்கணமமைந்த கிருகம. இவ்வுலகங்கள கற்பந்தோறும உள்ளனவாய்ப் பிரவாஹதோநித்ய மெனப்படுதலால், அவறறிற்கு 'தொலைவுஇல்' என்ற அடைமொழி கொடுக் கபபட்டது. இராவணன் திக்குவிசயகாலததில் திரிலோகாதிபதியான இந்திரனைத தன் மகனைககொண்டு வென்று அவனுரிமையைத தான் உடை யனானதனால, 'மூன்று உலகிறகும நாயகன்' எனப்பட்டான. சந்திரமணட லத்தினும மேலாகக் காணபவர்கரு மகிழ்ச்சியை விளைதது விளகும் முக மென்பது, 'நளிரதிங்கள்மாய நந்திய வாளமுகம்' என்றதன் கருத்து. மந்தோதரி-இராவணனது பட்டமகிஷி; (தான்யமாலினி முதலாக அவனுககு மற்றும் பலமனைவியரும உண்டு,) அசுரத்தச்சனான மயனது மகளிவள்; (இவ ளுடன பிறந்த ஆடவா - மாயாவி, துந்துபி யென்பா) அழகிற் சிறநதவள்; பஞ்சகன்னிகைகளுள் ஒருததி: (மற்றையோர் - அகலியை, திரௌபதி, சீதை, தாரை யெனபா.) பி - மீ·—[1]துறநது. [2]மயன்மகண் மணிமாடம். ()

கசுரு·—அநனைச்சீதையைவைத்திருக்கும் மாளிகையோவென்று அநுமான்சங்கித்தல்.

கண்டு கண்ணொடு கருத்தொடு கடாவினன் காரணங் கடைநின்ற
துண்டு வேறொரு சிறபபெங்க ணாயகர்க் குயிரினு [1]முரியாளைக்

கொண்டு போந்தவன் வைத்ததோ[2]ருறையுள்கொலகுலமணி மனைகலெல்லாம விண்டு வின[3]றட மார்பினின் மணியொதத திதுவென வியப்புற்றான்.

(இ ள்.) (அநுமான்),—கண்ணொடு கணடு (அந்தமாளிகையைக) கண்களாற பாரத்து, கருததொடு கடாவினன்-மனத்தினாலாராய்ந்து,—'காரணம்-(நாம) இஙகு வருவதறகுக காரணமாகிய பிராட்டியைக தேடுதல், கடைநின்றது - பூரததியாய்விட்டதுபோலும்: (எஙஙனமெனின்,—வேறு ஒரு சிறப்பு உணடு - (எல்லாமாளிகையினும இமமாளிகையினிடததுத்) தனியே ஒரு விசேஷ மிருகின்றது; (ஆதலின, இநதமாளிகை), எஙகள் நாயகாககு உயிரினும உரியாளை கொணடு போநதவன் வைத்தது ஓரஉறையுள்கொல் - நமகெல்லாந தலைவனான இராமபிரானுக்கு உயிரைககாட்டிலுஞ் சிறந்த அன்புறிமையுடையவளாகிய சீதாபிராட்டியை யெடுததுககொண்டுவந்தவனான இராவணன் (அவளை) வைத்திருகின்ற ஓரிடம்போலும்: மனை குலம் மணிககு எல்லாம்-வீடுகளாகிய சிறந்த சாதிரததினஙகளுகெல்லாம், விண்டுவின் தடமாரபினில் மணி ஒத்தது இது - திருமாலினது பரந்த திருமார்பி லணிந்த (கௌஸதுபமென்னும்) இரத்தினததைப் போன்றுள்ளது இம்மாளிகை,' என-என்று, வியப்பு உற்றான் - அதிசயித்தான்: (எ - று.)

அநுமான் இது வரையிற்பாரத்த வீடுகளெல்லாவற்றினும் இம்மாளிகை மிகசசிறந்து தனிபபட விருததலால், 'இராவணன் தான் இததனை மாதரையும் புறககணித்துப் பெரிதுந காதலிததுக கவாநதுசென்ற சீதையின் சிறப்புக்கு ஏற்றதாகத் தேர்ந்து அவளை வைததிருகின்ற மாளிகைபோலும் இது' என்றசஙகிதது, அஙஙனமாயின் தான் வநத காரணம் பயனபெறுதலால், அதனைககுறிதது மகிழ்சசிகொணடன னென்க.

கணணொடு கருத்தொடு என்றவற்றில், 'ஓடு' என்ற மூன்றனுருபு கருவிப்பொருளில் வந்தது; "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்றவிடததுபோல. புறககணணுகிய ஊனககணகளைககொணடு கணடு அகக்கண்ணுகிய ஞானககணணைககொணடு ஆலோசிப்பவனாயின னென்பார், 'கணடு கணணொடு கருததொடு கடாவினன்' எனறார். கடாவுதல் - வினாவுதல், உசாவுதல், ஆராயதல்; இனி, 'கணணொடு கருததொடு கடாவினன' என்பதறகு - தனது கணகளை மனததினுடனே கூட்டி ஆலோசித்தன னென்று உரைப்பாரு முளர். விஷ்ணு வென்ற வடசொல், விணடு வெனச சிதைந்தது; எஙகும் வியாபிததுள்ளவ னென்று பொருள்படும். 'காரணஙகடைநின்றது' எனபதறகு - 'நான் தேடிவந்ததறகுக காரணமானபொருள் கடைசியிலநின்றது' என்று உரைத்தலும அமையும; மகளிரனைவருமிருகின்ற மாளிகைகட்கெல்லாம அப்பாலிருநதது பிராட்டியிருக்கின்ற மாளிகை யென்பது கருதது: நான்தேடிவந்தபொருளாகிய பிராட்டியை முடிவிற்காணலாயிற றென்க. பி - ம்:—[1]இனியாளை. [2]உறையுளாம. [3]தொடா மார்பினில்,

கக௬.—அந்த மாளிகையில் மந்தோதரி படுத்துக்கொண்டிருக்கிற நிலைமையை இது முதல் மூன்றுகவிகளிற் கூறுகின்றார்.

அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி[1]யாதியர் மலாக்காமன்
சரம்பெய் தூணிபோற் றளிரடி தாந்தொடச சாமரை பணிமாறக்
[2]கரும்பை யுஞ்சுவை கைப்பித்த சொல்லியர் [3]காமரங் கனியாழி
னரம்பி னின்னிசை செவிபுக நாசியிற் கற்பக விரைநாற.

(இ - ள்.) அரம்பை - ரம்பையும், மேனகை - மேனகையும், திலோத்தமை - திலோத்தமையும், உருப்பசி - ஊர்வசியும், ஆதியர் - முதலான அப்ஸர ஸ்திரீகள, காமன் மலர் சரமபெய் தூணி போல் தளிர் அடி தொட - மன்மதனது புஷ்பபாணங்களை யிட்டுவைத்துள்ள அம்பறாத்தூணி போன்ற வடிவமுள்ளனவும் தளிர்போல் மெல்லியனவுமான (தனது) பாதங்களைப் பிடிக்கவும,—தாம் சாமரை பணிமாற - அவ்வரமபையர் தாம் வெண்சாமரஞ் சுழற்றிவீசவும் —கரும்பையும் சுவை கைப்பித்த சொல்லியர்-கருப்பஞ்சாறறையும் கைப்புச்சுவையுள்ளதென்று சொல்லும்படி மிக இனிமையாயுள்ள சொற்களையுடையவர்களான தேவமாதர் வாசிக்கின்ற, காமரம் கனி யாழின்-நாதமினிய வீணையினது, நரம்பின் - நரமபுகளினின்று எழுகின்ற, இனி இசை - இனிய கீதமானது, செவி புக - தன் காதுகளில் நுழையவும,—கற்பகம் விரை - கல்பக விருக்ஷத்து மலர்களின் மணம், நாசியில்நாற-மூக்கிற் பரிமளிக்கவும,—(எ - று.)—'துயில்வுறு தையலை' என மேல் கக௩ - ஆங கவியோடு தொடரும்; குளகம்.

மந்தோதரி படுத்துக் கொண்டிருக்கையில் அவளுக்கு உபசாரமாகத் தெய்வமகளையரிற் சிலர் அவள் காலகளைப் பிடித்ததலும், அம்மாதரிற சிலர் அவட்கு உபசாரமாகவும் இராவணனது பட்டமகிஷியான அவளுக்கு ஏற்ற இராஜாங்க மரியாதையாகவும சாமரம் வீசுதலும், அம்மகளிர்சிலர் அவள் கேட்டு ஆனந்தித்து இனிது துயில்கொள்ளுமாறு வீணைவாசித்ததலும், அப் பெண்களிற சிலர் அவள் மூக்கில் நன்மணம வீசுமாறு அதற்கு நேராகக் கற்பகமலர்களை யேந்துதலும் கூறப்பட்டன.

மகளிர்கணைக்காலுக்கு அம்பறாத்தூணி வடிவிலுவமையாதலை, "வேணு வுடன், சோகமுறுமமபுபெய்தூணியுங் வாறகன்றும, காகளமும் போன்ற கணைக்கால்" என்ற உபமானசங்கிரகத்தாலும் உணர்க. "சேடாவ நாழிகையிற புடைதிரண்டு தேனெய்பெய், வாடாத காமபேபோற கணைக்காலின் வனப் பினவே" என்பது, சிந்தாமணி. தம்மாலெய்யப்பட்டோர்க்கு வேட்கைநோயை விளைக்கும் மன்மதனது மலரம்புகளைப் பெய்துள்ள தூணியை உவமையெடுத் துக்கூறியது, அது கண்டார்க்கு வேட்கை விளைக்கு மியல்பின தென்பதைக் காட்டுதற்கு. "பூங்கழைகுழைக்கும வேனில்வேளபகழிபொதிந்த பொன்னு வம் வென்கொடுப்பித, தோழமைகொண்டன கணைக்கால்" என்று கைடதநூலார் கூறியதும் இவ்வியல்பு பற்றியே.

திலோத்தமை - ஆவிறுஜயான வடசொல்; உலகத்தில் அழகுடைமங்கை யரது உடமபிற சிறநத அழகை எள்ளளவு எள்ளளவாக எடுததுத சிரட்டி அது கொணடு அமைகைகப்பட்ட பெணணுதலால், திலோததமையென்று பெயரா யிற்று. திலம - எள், உததமா - மேலானவள். தாமரைமலர், மாமலர், அசோக மலா, முல்லைமலா, நீலோற்பலமலர் என்ற ஐந்தும் மனமதனுக்கு அம்புக ளாதலால, 'மலாககாமன்சரம்' எனப்பட்டது. காமன - அனைததுயிர்க்கும ஆசையைவிளைககுந தேவன். அனைவராலும் விருமபப்படும் அழகுடையவன் சாமரம்என்ற வடசொல, சாமரையென ஈறுதிரிநதது;சமரமென்னும்மானின் வாலமயிரகொணடு செய்யபபட்டதோ ரிராஜ சின்னம; தத்திதாந்தநாமம். கருபபஞ்சாற்றினும மிகவும மதுரமான சொறகளை யுடையவ ரென்பது, 'கருமபையுஞசுவைகைப்பிததசொலலியா' என்பதன கருதது; உம் - உயாவு சிறபபு. கனி யாழ் - கனிநத யாழ் என வினைதொகை. காமரம் - இசைப பொது. ஒருவகைப்பணணுமாம். பி ம்:—[1]ஆதியாயலாமாரன். [2]கரும்பையின் சுவை கறபித்த. [3]காமரநகனிகின்ற. (ककव)

ककउ. விழைவு நீங்கிய மேன்மையோ ராயினுங் கீழ்மையோர் வெகுளுறறூற், பிழைகொ னன்மைகொல் பெறுவதென் றையுறு பீழையாற் பெருந்தென்ற, லுழையர் கூவப்புக் [1]கேதெனப் பெயர் வதோ ரூசலி [2]னுளதாகும, பழையம் யாமெனப் [3]பண்பில செய் வரோ பருணிதர் பயனோர்வா.

(இ - ள்) 'விழைவு நீங்கிய மேன்மையோ ஆயினும் - (பொருள்களி னிடததுப்) பற்றற்ற மேனமைகுணமுடையவரே யானாலும், கீழ்மையோ வெகுள் உற்றால் - கீழ்மககளுடைய கோபததுககு இலககானால், பெறுவது - (அககோபததால அமமேலோ) அடைவது, பிழைகொல் நன்மைகொல் - தீமையோ நன்மையோ', என்று ஐயுறு-என்று சநதேசிப்பதனாலாகிய, பீழை யால - துன்பததால்.—பெருந் தென்றல் - பெருமையுடைய தென்றற் காற்றானது,—உழையா கூவ - (மந்தோதரியின்) ஏவலாளா அழைக்க, புககு- அருகிற்சென்று,ஏது என-'என்னகட்டளை?'என்று வினவி யறிந்துகொணடு, பெயாவது - பிறகு மீள்வதாய், ஓர் ஊசலின் உளது ஆகும் - ஓர் ஊஞ்சல் போலப் போவதும வருவதுமா யிருககும்; பயன் ஓவாா - (தாம செய்யுந் தொழில்களால தமக்குவரும) பயனை ஆராய்ந்தறிபவரான, பருணிதா - புதி மான்கள், பழையம யாம் என-யாம் நெடுநாளாகப் பழககமுடையோமென்று கருதி, பணபு இல செய்வரோ - தகுதியிலலாத காரியங்களைச செயவா களோ? [செய்யா என்றபடி]; (எ - று.)

எல்லாப்பொருள்களினமீதும் ஒருபடியாக வீசு மியல்புள்ள தென்றற காறறு, மாந்தோதரி படுததுககொணடிருககிற இடததிலதான் எங்ஙனம் வீசினால மநதோதரிககு உகப்பாயிருக்கு மெனபதைத் *தெரிந்துகொண்டு அதறகு ஏறப வீசுதறபொருட்டு அவள மாளிகைவாயிலிற் காததுநின்று

அவளது குற்றேவலாளர் தன்னைக் கூப்பிடும்போது உள்ளேசென்று அவள் குறிப்பை விளுவித தெரிந்துகொண்டு மீள்வதாய் இங்ஙனம் போவதும் வருவதுமாகிய ஊஞ்சலின் தன்மையதாம். விருப்பு வெறுப்பறதலாகிய மேன்மைக்குணத்தையுடைய காற்றும் இங்ஙனம் அங்கு அலைவதற்குக் காரணம் நற்குணமொன்றேனுமில்லாதவரும் ஒரு கட்டுகளும் அடங்காதவருமான கீழ் மகளின் கோபத்திற்கு இலகானுல் எத்துணை மேலோரும ஒருசமயததில் அவரால் தீமையடைதலுங கூடுமென்ற சங்கையினுல் நேர்ந்த அச்சமேயென்பதை முன்னிரண்டடிகளில் விளகினுர். இவ்வாறு முதல்மூன்றடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை நான்காமடியிற் கூறிய பொதுபபொருள்கொண்டு சாதிததது, **வேற்றுப் பொருள்வைப்பணி.** திருக்குறளில் அமைசசியலில் மன்னரைசசோர் தொழுகலென்ற அதிகாரத்தில் "பழைய மெனககருதிப பண்பல்ல செய்யுங, கெழுதகைமை கேடுதரும்" என்ற திருக்குறளை அடியொற்றியது இசசெய்யுளின் ஈற்றடி யென்க. இராககத ராசனுன இராவணனுக்குச செல்லுகையுள்ள கால மிதுவென்பதை யுணாந்து அதுபற்றி வாயுதேவன் அச்சங்கொண்டு, தனது தெய்வததன்மையையும நெடுநாளாகத தான் அவனுடன் பழகிய பழக்கத்தையும் பாராட்டாது, அவன் மனைவியினேவலாளர் வாவென்ருல் வருவதும் போவென்ருற் போவதுமாய் அடங்கியொழுகுவ னென்பது, இசசெயயுளின் தோந்தகருதது.

விழைவு - கோபம் முதலிய குற்றங்களுக்கும் உபலக்ஷணம். 'வெகுள்வுற்ருல்' என்பதும் பாடம. பீழை - பீடா என்ற வடசொல் சிதைந்தது. பருணிதா - பரிணதா என்ற வடசொலலின் விகாரம; ஞானபரிபாகமுடையவ ரென்பது பொருள். பி - ம்.—[1]ஏகெனபபெயாவது. [2]உளதாகப். பண்பல.

குளகச்செய்யுள்களின் நடுவில் இடைப்பிறவரலாயவந்த இசசெய்யுளை அடுத்தசெய்யுளின் முதலில நிற்கின்ற 'இன்னதன்மையின்' என்றதனேடு இயைதது, அதனை 'துயில்வுற' என்பதனேடு தொடர்சசிப்படுததி, முடிபு காண்க. (கக்அ)

கக்கூ.—அவளைச் சீதையென்று மயங்கி அநுமான் வருந்துதல்.

இன்ன தன்மையி [1]னெரிமணி விளக்கங்க ளெழிலகெடப் பொலிகின்ற, தன்ன தின்னெளி [2]தழைப்புறத் [3]துயிலவுறு தையலைத் தகைவில்லா, னன்ன ளாகிய சானகி யிவளென வயிர்த்தகத் தெழு [4]வெந்தீத், துனனு மாருயி [5]ருடலொடு சுடுவதோ துயருழந் திவை சொன்னுன்.

(இ - ள்.) இன்ன தன்மையின்-இட்படிப்பட்ட தன்மையுடனும்,—எரிமணி விளக்கங்கள எழிலகெட பொலிகின்ற தனனது இன் ஒளி தழைப்புஉறப்பிரகாசிகின்ற இரததினமயமாக விளகுகள் ஒளிகெடுமபடி அவற்றினும் மிகுவிளகுகின்ற தனது இனிமையான தேககாதி எகும் செழிததுப்

பரவவும், துயில்வு உறு-தூங்கிக்கொண்டிருக்கின்ற, தையலை-அழகியவளான மந்தோதரியை, தகைவு இல்லான் தடையின்றிச் செலபவனான அநுமான் (கண்டு), அன்னள ஆகிய சானகி இவள் என அயிர்த்து அதன்மையளான சீதாதேவி யிவளென்று சங்கித்து, (அதனால்), அகத்து எழு வெம்தீ-மனதில் மூண்டெழுகின்ற வெவ்விய கோபாக்கினி, துன்னும் ஆர் உயிர் உடலொடுசுடு வது-பொருந்திய அருமையான தனதுஉயிரையும் உடம்பையும் எரிப்பதான, ஓர் துயர்-ஒப்பற்ற பெருந்துன்பத்தால், உழந்து-வருந்தி,—இவை சொன் னான்-இவ்வார்த்தைகளை (தனக்குட்) சொல்லிக்கொள்ளலானான்; (எ - று.)

(கக௪) தொட, பணிமாற, புக, நாற, (கக௮, கக௯) விழைவுநீங்கிய ..பயனோவா இன்னதன்மையின், (கக௯) தழைப்புற துயில்வுறு என ஒருதொடராகிய மூன்று செயபுளகட்கும் முடிபு அமையும.

இம்மந்தோதரியைச் சீதையென்று சங்கித்த அநுமான் அவள இவ்வி லங்கையில் அசுரகரில் திவ்வியமானஒரு மாளிகையிற சிறிதுங் கவலையின்றிப் புஷ்பசயநத்திலே மகாசம்பிரமத்துடன் இனிது துயில்வதை உளதறிற கொண்டு மிகக்கோபத்தையும் வருத்தத்தையும அடைந்தனனென்க. இரத் தினங்களைக்கொண்டு விளக்குக்கலங்களை யமைத்து அவற்றிலேற்றிய எரிசுடா விளக்குக்களும, இரத்தினங்களையே விளக்குக்களாக வைத்திருக்கும் மணி விளக்குக்களும ஆகிய இரண்டும, 'எரிமணிவிளக்கங்கள்' என்ற தொடரில் அடங்கும. எரிவிளக்கும் மணிவிளக்கும மாகியவை யென இயைப்பினுமாம். ஜாநகீ என்னும் வடமொழிப்பெயா ஜநகமகாராசன் வளாத்த மகளெனறு பொருள்படும்; தத்திதாந்தநாமம தத்துவஞானத்திலும வைதிக கருமா நுட்டானத்திலும சிறந்த தருமத்தையே பிரதானமாகவுடையராய் ராஜரிஷி களெனப்படுகிற ஜநகரது குலத்தில வளாந்தவளெனச்சிறப்பை விளக்குவது இத்திருநாமம். 'அன்னளாகிய' என்ற விடத்து, அகரச்சுட்டு - உயர்வுகுறிப் பது. சுகிரீவ மகாராஜா வாநரர்களைத் திசைதோறும பிராட்டியைத்தேடு தற்கு அனுப்பியபோது இராமபிரான் அநுமானைத் தனிப்படக்கொண்டு சீதையின் திருமேனியடையாளங்கள் பலவற்றை வகுத்துக்கூறியுளளா னாத லின், அவற்றைக் கருதி 'அன்னளாகிய சானகி' என்றதாகவுங் கொளளலாம.

பி - ம்:—[1]எழில் [2]தழைபுற. [3]துயில்கொளும், துயிலுறு. [4]வெந்தீ. உடலொடும். (கக௯)

௨௦௦ அநுமானது சிந்தை.

எற்பு வான்றொடர் யாக்கையாற் பெறும்பய [1]னிகந்தனெ னிதுநிறக, வற்பு வான்றளை யிற்பிறப் பதனொடு [2]மிகந்துதன் னருந் தெய்வக, கறபு நீங்கிய கனங்குழை யிவளெனிற் காகுத்தன் புக ழோடும, பொறபும் யானுமிவ விலங்கையு மாக்கரும் [3]பொன்றுது மின்றெனறான்.

(இ - ள.) என்பு வான் தொடர் - எலும்பை முக்கிய ஆதாரமாகக் கொண்டு வளர்கின்ற, யாக்கையால் - உடம்பை யெடுத்ததனால் பெறும் - அடையும்படியான, பயன-பயனை, இகந்ததனென் - அடையாதொழிந்து விட்டேன் யான்' இது நிற்க - (நான் உடம்பெடுத்த பயனை யடையாமற் போன) இத்தன்மை இருக்கட்டும். அன்பு வான் தளை-அன்பென்கிற பெரிய பாசபந்ததையும, இல் பிறப்பு அதனொடும்-உயர்ந்த குலததிற் பிறந்ததற குரிய மேன்மையையும், இகந்து போறருதுவிட்டு, தன் அருந் தெய்வம் கறபு நீங்கிய-கனது அருமையான தெயவததன்மையுள்ள கற்புநிலைமை யொழிந்த, கனங்குழை - சீதை, இவள்—,எனின் - என்றால்,—நாகுத்தன் புகழோடும்- இராமபிரானது கீர்ததியும், பொற்பும்-(அப்பெருமானது) பொலிவும், யானும்—,இ இலங்கையும் - இந்த இலங்காபுரியும், அரக்கரும இராக்கதரும், இன்று பொன்றதும் இன்றைககே அழிவோம், என்றான்-என்று (தனக்குட்) சொல்லிக்கொண்டனன், (அநுமான்) ; (எ - று.)

ஒவ்வோருயிரும் ஏதேனுமோருடம்பையெடுத்து இவ்வுலகிற் பிறந்ததன் பயன் எம்பெருமானுக்குப் பணிவிடையை இனிதுசெய்து முடிதது அவனது திருவுள்ளததுக்கு உகப்பைவிளைதது அவனருட்குக தான் இலக்காதலே யாம: அங்ஙனம திருமாலாகிய இராமபிரானுக்குச சீதாபிராட்டியைத் தேடிக் கொடுததலாகிய கைங்கரியத்தைப் பூர்ததியாகசசெயது எனது பிறவியைப் பயனுளதாகக்கொள்ளத தலைப்பட்ட யான், அப்பிராட்டி கறபுநிலை கலங்கி யிருக்கக் கண்டேனாதலால், யான் மேறகொண்ட தொண்டு இனிது முடி யாமைபற்றி, எனது பிறப்பு வீணேயாயிறது. இங்ஙனம நான் பேறு பெறாமற் போனதுமன்றி என்பது, முதலடியின் கருததது.

பிராணநாயகனான இராமபிரானிடததுப் பிராட்டி வைத்திருந்த அன்பு மனப்பூர்வமான மெயயன்பாயிருக்குமாயின் அவள் கறபுநிலை கலங்கியிரா ளென்பதுபற்றி 'அற்புவான்தளையிகந்து தன் கறபு நீங்கிய கனங்குழை' என் றும், எக்காரணத்தாலும எவ்வகை நிலையிலும ஒரு சிறிதும ஒழுக்கநதவறாமை உயர்குடிப்பிறந்தார்கக இயல்பாயிருக்க அதற்குமாறாக ஜநகுலததவளான இவள் கற்பொழுக்கமிழந்தனளென்று கொண்டு 'இற்பிறப்பதனொடு மிகந்து தன்கறபுநீங்கிய கனங்குழை' என்றும கூறினன. 'தெயவந தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள், பெயயெனப் பெய்யு மழை,'' ''கொண்டான் குறிப்பறிவான் பெண்டாட்டி .. .. . .பெய்யெனப பெயயு மழை'' என்ற படி கடவுளினுணைபால் நிகழ்கூடிய செயல்களையும தான் நிகழ்ததவல்ல ஆறறல் கறபுநிலைகு இருந்ததலால் 'தெய்வக்கற்பு' என்றும், கறபுநலததின் சிறப்பைக கருதி 'அருங்கற்பு' என்றும் கூறப்பட்டது.

புகழ் புரிந்தில்லிலோரக கில்லை யிழ்வார்மு, னேறுபேற் பீடுநடை'' என்றபடி மனைவி கற்புநிலை கலங்கினாற் கணவனது புகழும் பெருமிதமும் ஒழிதலபறறி 'நாகுத்தன் புகழோடும பொறபும இன்று பொன்றும' என்றும், பிராட்டியை இங்ஙனம நிலைகுலைநதிருக்கக கண்டபின்பு தான் உயிர்வைத

திருப்பதிற் பயனில்லை யென்பதுபற்றி 'யான் இன்று பொன்றுவென்' என்றும், இராவணமை அவள் கற்பொழிதற்குக காரணமான இராவணன் அததீவினைப்பயனால் பந்துமிதிரருடனும ஊரோடும தவறாமல் விரைவில் ஒழிவனென்பது பற்றி 'இவ்விலங்கையும் அரக்கரும இன்றுபொன்றுவா' என்றும் கருதினன அநுமான. தான கண்ணுற்றது இன்றைக்கே யாதலாலும், முன்னமே அவள் நிலைகலங்கியிருப்பின் அக்கொடிய வினையால் அரக்கர்களும அவளாகளும் அழிவு உண்டாயிருத்தல் கூடும்: அராவணமை இதுவரை ஆகாமையால், இவ்வொழுக்கக்கேடு இன்றைக்கே நிகழ்ந்திருக்குமென்று கருதியமை பற்றியும, 'இன்று' எனறனன. காகுத்தனருந தேவி கற்பழிந் திருப்பின், அராவணமாதற்குக காரணமான இராவணனை, அரக்கருடனும இலங்கையுடனும ஒழிதது யானும் எனனுயிரை மாயத்துக்கொளவே னெனறு அனுமான் கூறியதாகப் பின்னிரண்டடிகட்குக் கருத்துக் காணினுமாம. இவள கற்பு நிலை கலங்கிய சீதையாயிருப்பின், காகுத்தன புகழ் முதலியன உடனே தவறு தழீயு மென்று கருதின னென்க.

யாக்கையென்ற பெயர் - (எலுமபு தோல் தசை முதலிய எழுவகைத் தாதுக்களினால்) யாக்கப்பட்டது எனறு காரணப்பொருள்பெறும்; அவ்வேழு தாதுக்களுள் எலுமபுக்கு உள்ள தலைமையைக் கருதி, 'எற்புவான்றொடர்யாக்கை' எனப்பட்டது. வான் - பெருமை, சிறப்பு. அன்பாவது - ஒருவரிடத்து மனமகிழ்ச்சி நிகழ்தலி அமமனதத்தை மிகவும் பிணிப்பிதது நிறகும் நேயமாதலால், 'அறபு வானதனை' என்றனர் காகுத்தஸ்தன் எனறவடசொல்-ககுதஸ்த னென்ற அரசனது மரபிற பிறந்தவனெனறு பொருளபடும்; தத்தி தாநத நாமம். சூரிய குலத்துப புரஞ்ஜயனென்ற அரசன், தன் விருப்பத்தின்படி தனக்கு வாகனமாய எருதுவடிவங்கொண்ட இந்திரனது ககுத் எனப்படுகிற முசுப்பினமேலேறி வீறறிருந்து அசுரரைப பொருதழித்ததனால், ககுதஸ்தன எனறு ஒரு பெயர் பெறறனன். 'புகழோடும் ..பொன்றுதும்'—தன்மையும படாகையும அடுக்கித தன்மைப்பன்மை முறறைக் கொண்டன. இன்று 'பொன்றுதும்' 'என்றது, விரைவுதோன்ற நின்றது.

பி - ம்:—[1]இழந்தனன். [2]அழிந்ததன்னருந்தெயவக, இழந்தருந்ததிபோலுங, அருந்ததியனையாடன. [3]பொன்றுவதினறென்றான். (உ௦௦)

உ௦க.—சில காரணங்கொண்டு சீதையல்ல ளிவ ளென்று அநுமான் தெளிதல்

மானு யர்த்திரு வடிவின ளவளிவண் மாறுகொண் டனள்கூறிற்
றானி யக்கியோ தானவர் தையலோ வையுறுந் தகையானுள்
[1]கானு யர்த்ததா ரிராமன்மே னோக்கிய காதல்[2]காரிகை யாக்கு
மீனு யர்த்தவன மருங்குதான்[3]மீளுமோ நினைந்தது மிகையெனறான்

(இ - ள்.) அவள் - அப்பிராட்டியோ, மானுயா திரு வடிவினள் அழகிய மனித ரூபமாயிருப்பவள. இவள - இவளோ, மாறு கொண்டனள்

மனிதஜாதியின் வேறான வடிவங் கொண்டிருக்கின்றாள்; கூறின் - (இவளை இன்னாளென்று குறிப்பிட்டுக) கூறப்புகுமிடத்து, தான் இயக்கியோ தானவா தையலோ ஐயுறும் தகை ஆனாள் - இவள் தான் யக்ஷஸ்திரீயோ அசுரஸ்திரீயோ (என்று) சந்தேகிக்கத்தக்கவளாயிருக்கின்றாள்; காரிகையாக்கு-மகளிர்க்கு, கான உயர்த்த தார் இராமன்மேல் நோக்கிய காதல் - நறுமணஞ் சிறந்த மலர் மாலையைத் தரித்த இராமபிரானது வடிவழகைக் கண்ணுறற அப்பெருமான் பக்கல் கொண்ட ஆசை, மீன் உயர்த்தவன் மருங்குதான் மீளுமோ - மீனக்கொடியை உயரவெடுத்தவனான மன்மதனிடத்திலாவது திருமபிச்செல்லுமோ? நினைந்தது மிகை - (இராவணனுக்கு உரிமைபூண்ட சீதை யென்று இவளை யான்மாறாக) கருதியது குற்றம், என்றான் - என்று எண்ணினான், (அநுமான்); (எ - று.)

சக்கரவாததி குமாரனான இராமபிரானுக்கு வாழ்க்கைப்பட்ட சீதை மனிதவடிவமாயுள்ளவளென்பது வெளிப்படை. மந்தோதரி அசுரதச்சன மகளென்பது, உத்தர ராமாயணத்தால் விளங்கும். மனிதவடிவமபோல இல்லாமையால், சீதையல்ல வென்று கருதினான், அநுமான். "ராகவா உன் வடிவு கண்டால் மன்மதனு மடவாராக வாதரஞ்செயவன்," 'ஸாக்ஷாந் மந்மத மந்மத:" என்றபடி அழகிறசிறந்த ஆணபாலான மன்மதனும் பெண்மையை அவாவுமபடி அதிசௌந்தரியமுள்ள புருஷோத்தமனாகிய இராமபிரானது திருமேனியழகைக் கண்டு அதிலீடுபட்டு அவனைக் காதலித்த பெண்பாலாகக் பிறகு அக்காதல் கைசோர வேறொரு புருஷனிடத்து மனஞ் செல்லமாட்டாதென்பது பற்றியும், இவள் பிராட்டியல்லளென்று நிச்சயித்தன னென்க.

மானுயர் - மாநுஷா என்ற வடசொல்லின் விகாரம்; (காசியப முனிவரது மனைவியரில்) மானுவென்பவளது சந்ததியா ரென்பது பொருள். தத்திதாந்த நாமம். காரிகையார் - அழகிய மகளிர். மீன் - அவ்வடிவமெழுதிய கொடிக்கு ஆகுபெயர் பி-ம்.—[1]கானுயிர்த்த. [2]ஒன்றுகாணேன். [3]நிறுகுமோ.

உ௦உ.—அநுமான் அவளது அங்கவிலக்கணங்கொண்டு அவட்கு நேர்ந்த தீங்கைக் கருதுதல்.

இலக்க ணங்களுஞ் சிலவுள வென்னினு மெல்லைசென் றிறுக்கில்லா, வலக்க ணெய்துவ தணியதுண் டென்றெடுத் தறைகுவ திவள்யாக்கை, மலர்க்க ருங்குழல் சோர்ந்துவாய் வெரீஇ இசசில மாற்றங்கள பறைகின்றாளுலகுக் மிங்கிவள் கணவனு மழிவு[1]மிவ வியனகர்க் குளதென்றான்.

(இ-ள.) இலக்கணங்களும் சில உள எனனினும் உத்தம ஸ்திரீ லக்ஷணங்கள் சில (இவளிடத்தில்) உளளனவாயிருந்தாலும், இவள் யாக்கை - இவளது உடம்பு, எல்லை சென்று இறுக்கில்லா அலக்கண எய்துவது அணியது உண்டு என்று எடுத்து அறைகுவது-ஓரெல்லையிறபோய் முடியாத பெருந்தீங்கு (இவட்கு) நேர்வதாய்ச் சமீபித்துள்ளதென்று எடுத்துச் சொல்லுகின்றது;

(மற்றும் இவள் தூங்கிக்கொண்டிருக்கையில்), மலர்கருங் குழல் சோர்ந்து - மலர்களைசசூடிய கரியகூந்தல் அவிழ்ந்துகிடக்கப் பெற்றவளாய், வாய் வெரீ இ சில மாற்றங்கள் பறைகின்றாள் - வாயகுளறி மாறுபட்ட வார்த்தைகள் சில வற்றைச சொல்லுகின்றாள் (அதனால்), இங்கு - இப்பொழுது [இனி விரை வில் என்றபடி], இவள் கணவனும் உலக்கும - இவளுடைய கணவனும் இறப்பான்; இ வியல் நகாககும் அழிவு உளது-இந்தப் பெரிய நகரத்துக்கும் அழிவுண்டாம, என்றான் - என்று எண்ணினன், (அனுமன்); (எ - று.)

உததமஸ்திரீகளுககுரிய லகூணங்களில் சில இவளுடம்பிற் காணப்பட் டாலும், இப்பொழுது இவளுடம்பில் தோன்றுகின்ற அவலகூணங்கள் இவள் சிலரளைக்குள்ளே எலலையில்லாத பெருந்துன்பத்தை யடைவளென்று தெரிவிககின்றன; அன்றியும், இவள தூங்கும்போது தலைமயிர் அவிழ்த தீய சொற்களை வாய்பிதற்றுதலால், இவள் கணவனுக்கும் இவள் வசிப்பதும் அவன் ஆள்வதுமான இப்பெருநகரததிறகும கேடு சமீபித்திருக்கின்றதாகத் தெரிகின்றது என்று எண்ணினன் அநுமனெனபதாம். அநுமான அங்க விலக்கண நூலாகிய சாமுததிரிகசாஸ்திரத்தையும் சூரியபகவானிடத்திற் கற்றுத தேர்ந்த மகா புததிமானாதலால், இங்ஙனம மநதோதரியின் உடற்குறி கள் கொண்டு இனி அவட்கு நேரும் தீமைகளை ஊகித்து உணரலாயின னென்க.

'இலக்கணங்களும் சில வுளவென்னினும்' என்பதற்கு - (பிராட்டியினி டத்திலுள்ளனவாக இராமபிரான்சொனன) நலவிலக்கணங்களிற் சில (இவளி டதது) உள்ளனவானாலும என்று பொருள் கொளளலுமாம். இறுத்தல்-சோ தல், தங்குதல். அலம் கண - சஞ்சலமான கண கண கலங்குதற்குக காரண மான துன்பதது்மேல் நின்றது; காரணபபொருளைக காரியசசொல்லாற் கூறிய உபசாரவழககு 'அறைகுவதிவள்யாகதை' என்ற தொடரில், பேசாத தைப் பேசுவதுபோலச சொல்லும் மரபுவழுவமைதியும், இயல்புபற்றி வருங் காலவழுவமைதியும இருத்தல் காணக. வெருவுதல் - அஞ்சுதல். இங்கு, அதன் காரியமான குழறுதலைக குறித்தது; இதுவும் உபசார வழக்கு. 'அழிவு மிவ்வியனகாக்குளது' என்றவிடத்தில், இறந்தது தழுவிய எசசவும்மை பிரித்துக் கூட்டப்பட்டது. பி - ம்:—[1]இவ்வுயாநகர்க்கு. என்ற பாடம், மோனைததொடை சிறக்கும். (உ0உ)

உ0ங.—பிறது அநுமான் இராவணன் மாளிகையினுட் புதுதல்.

என்று ணர்ந்துநின் றேமுறு[1]மிந்நிலை நிற்கவித் திறனென்னுப
பின்று சிந்தையன் பெயர்ந்தன னெடுமனை பிற்படப் பெருமேருக்
[2]குன்று குன்றிய தகையுற வோங்கிய கொற்றமா ளிகைதன்னிற்
சென்று புக்கன னிராவணற் கெடுபபருங் கிரியெனத் திரடோளான்.

(இ - ள்.) என்று உணாந்து - என்று ஊகிததறிந்து, நினறு எழு றும இ நிலை இ திறன் நிற்க - (யான் அபபாற்செல்லாமல் இங்கு) நின்று

(இவள் சீதையோ அல்லளோ வென்று) கலக்கமடைகிற இந்த நிலைமை இவ்வளவோடு நிற்கட்டும், என்னு-எனறு எணணி, பின்று சிநதையன்-(அக்கலக்கததினின்று) மீணட மனததையுடையவனாய, நெடு மலை பினபட பெயாந்தனன் - அந்தப்பெரியமாளிகை பின்னாயவிடுமபடி அகலைகககடநது அபபாற் சென்று, பெரு மேரு குனறு குன்றிய தகை உற ஓஙகிய கொற்றம மாளிகைதன்னில் - மகாமேருகிரியும குறுகியுள்ளதென்று சொல்லும்படி மிக உயாந்துள்ள வெற்றியமைநத ஒரு மாளிகையிலே, சென்று புககனன் - போயச சோநதான் (யாவனெனில்,—)இராவணறகு எடுப்பு அருங கிரி என திரள் தோளான் - இராவணனுககுப் பெயாததெடுகக முடியாததொரு கைலாசமலைபோலத் திரணட தோள்களையுடையவனான அநுமான்; (எ - று.)

'எழுறுமிநிலைநிற்கவிததிறன் என்றது, பராமுகமாகக் கூறியது;யான் இஙகனம ஐயமுற்றது சிறிதுந் தகுதியற்றதென்றவாறு. பின்று சிநதையன்-(அம்மாளிகையினின்று; மீணட மனததையுடையவனெனினுமாம. குலகிரிகளிலொன்றும் மிகப் பெரியதுமான கைலாசமலை இவவநுமானது தோள்களுக்கு உவமைபோதாது; ஏனெனில், அம்மலை இராவணனால எளிதில் நிலை பெயர்தது எடுக்கப்பட்டது இததோள்களோ இஙகனம அவனால் எளிதில்நிலை பெயர்க்கப்படுவனவன்றி அவனது வலிமைநிலையைக குலைப்பனவா மென்பதை யுட்கொணடு, 'இராவணனுக்கு எடுக்கமுடியாததொரு கைலாசகிரி போல' என்று அநுமானது தோள்களுககு இல்லபோருளுவமை வகுததுக கூறினா. மாளிகைகளெல்லாவறறினும மேம்பட்டிருததல பற்றி 'கொறற மாளிகை' என்றான். பி-ம்:—[1]நினைவனிற்க. [2]குனறு குனறியந்தகையுற, குன்றுயாந்தறகையுற. (உ௦௩)

உ௦௪.—அப்பொழுது உண்டான உற்பாதங்கள்.

நிலந்து டித்தன நெடுவரை பொடித்தன நிருதர்தங் குலமாதர், பொலந்து டிக்கமை மருஙகுல்போற கணகளும புருவமும் பொற்றோளும, வலந்து டித்தன மாதிரந் துடித்தன தடிததின்றி மதிவானங், கலந்தி டிததன வெடித்தனபூரண மங்கல கலசங்கள.

(இ - ள். அவ்வரணமனையினுளளே அநுமான் புக்கபொழுது),—நிலம துடிததன - பூமியினிடங்கள அதிரநதன; நெடு வரை பொடிததன - பெரிய மலைகள் பொடியாயுதிரநதன; நிருதாதம் குலமமாதர் - ராக்ஷஸஜாதி ஸதிரீகளுடைய, பொலம் துடிக்கு அமை மருஙகுல போல-அழகியதும உடுகககைக்கு ஒபபாக அமைநததுமான இடை மிகநடுப்பததால துவணடு நடுஙகுவது) போல, கணகளும் (அவ்வரகபெரது) கணகளும், புருவமும - புருவஙகளும, பொன்தோளும - அழகிய தோள்களும, வலம துடிததன-வலபுறம துடிப்பனவாயின; மாதிரம துடிததன - கூகுகள அதிரசசியுறறன; மதி வானம்-சநதிரனவ எஙகுகின்ற ஆகாயததிலே, தடிததது இன்றி - மின்னலிலலாமலிருககையில், கலாது இடிததன - பலவகையான இடிமுழகக முணடாயின;

பூரண மங்கல கலசங்கள் - மங்களகரமான பூரணகும்பங்கள், வெடித்தன - உடைந்தன; (எ - று.)

அந்தமாளிகையில் அநுமான்பிரவேசித்தது அதில்வசிக்கின்ற இராவணனுக்கும் பெருந்தீங்குவிளையக் காரணமாகுதலால, அங்ஙனம விரைவில்தீங்கு நேர்தற்கு அறிகுறியான தீநிமித்தங்கள் நிகழ்ந்தன வென்க. நிலந்துடித்தல்-பூகம்பம். நெடுவரை குலபர்வதங்கள். துடியென்னும வாசியம மகளிரிடைக்கும் வடிவில் ஒப்புமை - 'துடியைப்போன்ற இடை என்றது, 'துடிக்கு உபமானமாக அமைந்த இடை' எனறது, எதிர் நிலையணி. மிகநுணணியவடிவில அவ்விடைக்குஉளள சிறபபை விளக்கும உபமேயத்தினும உபமானம் பலமடங்கு சிறந்திருத்தல்வேண்டு மெனபது, அலங்காரநூலாகொளகை. அரக்கியரது இடையெனனுமுறுப்பு கூந்தல் முதலியவற்றின் பாரத்தைத் தாங்கமாட்டாது துவண்டுநடுங்கும இயற்கையை, அமமகளிரது கணணும புருவமும தோளும் வலந்துடிக்கின்ற செயறகைக்கு உவமையாக அமைத்தனர். மகளிர்க்கு கண முதலிய வலந்துடித்தல், தீநிமித்தம். சந்திரன் விளங்குகின்ற ஆகாயமெனவே, மேகசஞ்சாரமில்லாததென்றதாயிறு; அங்ஙனமிருக்கையில் இடிமுழக்கமுண்டாதல் உரபாதமாதலை, 'மேகங்களவழங்காமல் விண்ணதிர்ந்திட் டோகோளும வெயிலைசசூழ்ந்து, பூமபமபிறந்து'' என்ற பாரதத்தாலும அறிக. தொடாசசியாயப் பலஇடிகள் இடித்தனவென்பது விளங்க. 'கலந்திடித்தன' என்றார. நீர்நிறைந்தகுடங்களை வாயிலில் வைத்திருத்தல், மங்கலங்களி லொன்று. அந்நிறைந்தகுடங்கள் வெடிவிரிதல் தீநிமித்தம். (உ0ச)

உ0ரு.—அவ்வுற்பாதங்களைக் கண்டு அநுமான் சில கருதுதல்.

புக்கு நின்றுதன்[1]புலன்கொடு நோக்கினன் பொருவருந் திருவுள்ள, நெக்கு நின்றன [2]னீங்குமக தோவிநத நெடுநகர்த் திருவென்னு, வெக்கு லங்களின் யாவரே யாயினு மிருவினை யெலலோர்க்கு, மொக்கு மூழ்முறை யல்லது வலியதொன் றில்லென வுணர்வுற்றான.

(இ - ள.) புக்கு நின்று - (அநுமான் அவ்விராவணன் மாளிகையினுட்) போய்நின்று, தன புலன்கொடு நோக்கினன் - (அப்பொழுது நிகழ்ந்த உறபாதங்களைத) தன்கணகளாற பாரததவனும (அவறறைப்பறறித) தனது அறிவினால் ஆராய்ந்தவனுமாகி, (அதனால்), பொருவு அருந் திருஉளளம நெக்கு நின்றனன-ஒப்பறற தனது சிறந்தமனம நெகிழப்பெறறு நின்று, அந்தோ இந்த நெடு நகர் திரு நீங்கும என்னு - 'ஐயோ! இநதப் பெரியநகரததினது ஐசுவரியம் நீங்கிபபோயவிடுமே!' என்று (தனக்குட்) சொல்லிகொண்டு,— 'எ குலங்களின் யாவரே ஆயினும் - எந்தககுலங்களிற்பிறந்த எவ்வகையோராதாமானாலும, எலலோரக்கும இருவினை ஒக்கும - அனைவரக்கும் புணணியபாவங்கள் (தவறுமறபயனளிததலிற) சமமேயாம; ஊழ் முறை அல்லது வலியது

ஒன்று இல் - ஊழ்வினையின் ஒழுங்கே அனைததினும வலியதலலாமல் அதனினுமவலியது வேறொன்றில்லை', என உணர்வுஉற்றான் - என்றும் ஆலோசித்தனன், (அநுமான); (எ - று.)

இந்நகாததலைவனது நல்வினைப்பயனுலஇநநகரில் இதுவரை நெடுநாளாகச செல்வம் நிலைபெறறிருந்தது; அநநல்வினைப்பயன் நீங்கத் தீவினைப பயன் நுகருங்காலம நேரவதால், இந்நகரின் ஐசுவரியம் இனிகுன்றும்; இங்ஙனம் அரசனுககும நகாக்கும குடிகட்கும் நேருந தீங்குக்கு அறிகுறியாக உதபாதங்கள் விளைந்தன வென்று ஆலோசித்தனன் அநுமனென்க. கீழ் உoங -ஆஞ் செய்யுளில் 'மாளிகைதன்னின் சென்றுபுக்கனன்' என்றதன் தொடர்ச்சியாக இசசெய்யுளில் 'புகுகுநின்று' என்றார். 'இரட்டுறமொழிதல்' என்னும் உததியால், 'தன்புலன்கொடுநோகுகினன்' என்பதற்கு - இருவகைப்பொருள் ஒருங்குகொள்ளப்பட்டது. இதற்குச செயப்படுபொருள், கீழ்ச செய்யுளிற கூறிய பலவகை யுற்பாதங்கள். பொறியைப் புலனென்றல், ஒருவகை உபசாரவழக்கு. ஐம்பொறியையுங குறிககக்கூடிய இப்பொதுப்பெயா-பின் 'நோகுகினன்' என வருவதுபற்றி இங்குச சிறப்பாய்க கணணையுணாததிற்று. அந்தோ - இரக்கககுறிப்பிடைசசொல்; ஹந்த என்ற வடசொல்லின் சிதைவெனத் தககது. பகைவரது நகரதின் செல்வம் நீங்குமென்பது குறித்து நெகிழும் படியான அவ்வளவு இரககத்தை இயல்பில் உடைமைபறறி,அநுமானது மனம, 'பொருவருந்திருவுள்ளம' என்று சிறப்பிததுக கூறபபட்டது. பி-ம்:— [1]புலன்கொள. [2]நீங்குமன்றே. [3]ஊழ்வினை. (உoரு)

உoசு.—இதுழதப் பன்னிரண்டு கவிகள் - தளகம்: அநுமான் இராவணனைப் பார்த்தலும், அவன்படுத்திருக்கின்ற நிலைமையும்.

நூற்பெ ருங்கட னுணங்கிய கேள்விய னேகுகின [1]னியனேன்றான்,வேற்பெ ருங்கடல [2]புடைபரந் தீண்டிய வெள்ளிடை வியன்கோயிற, பாற்பெ ருங்கடற் பனமணிப் [3]பஃறிரைப் பரப்புடைப படாவேலை, [4]மாற்பெ ருங்கடல [5]வதிந்ததே யனையதோர் வனபபினன் றுயில்வானை.

(இ - ள.) நூல் பெருங கடல் - சாஸ்திரங்களாகிய பெரிய கடல்களில் மூழ்கியவனும், நுணங்கிய கேளவியன் - நுணணியவான நூற்கேள்விகளை யுடையவனுமாகிய அநுமான்,—இயல் (ஓரிடததில் நில்லாமல் எப்பொழுதும்) உலாவுகின்ற, நோன தாள - வலிய கால்களையும, வேல - (கையில்) வேற படையையுமுடைய, பெருங கடல் - பெரிய (இராககதரது காலாட்சேனையாகிய) சமுததிரம, புடை பரநது ஈண்டிய - எப்புறததும் பரவலாய்த் திரண்டிருககபபெறற, வெள் இடை - வெளியிடஞ் சூழ்ந்த, வியல் கோயில்-விசாலமான அரணமனையிலே,—பெரு பால கடல் - பெரியபாற்கடலில், பல் மணி பல் திரை பரப்பு உடை படா வேலை பெரு மால கடல் வதிந்ததே அனையது- பலஇரததினங்களை வீசுகின்ற பல அலைகளின் பரப்பையுடையதும் பரந்த

கரையுள்ளதுமான பெரியகருங்கடல் தங்கியிருந்தாற் போன்றதான ஓர்வனப் பினன் ஒரு அழகிய தோற்றமுடையவனாய், துயிலவானை - வெண்ணிற மலர்களாகிய படுகைகையில்) தூங்கிக்கொண்டிருப்பவனாகிய இராவணனை,— நோக்கினன் - பார்த்தான் ; (எ - று.)

மிகவும் விசாலமான வெண்மலர்ப்பள்ளியிற் கரிய பெரிய வடிவமுடைய இராவணன் படுத்திருத்தல், பாற்கடலின்மீது ஒரு கருங்கடல் தங்கினாற்போன் றிருக்கின்றதென்க ; பொருளுவமையணி. இராவணன் மாளிகையைச் சுற்றி வெற்றிலையாயுள்ளவிடத்தில் மிகப்பல காலாள்வீரர் திரண்டு வேலேந் திய கையராய் உலாவிக்கொண்டே காவல்செய்கின்றனரென்பது 'இயல் சோன்தாள் வேற்பெருங்கடல் புடைபரந்தீண்டிய வெளளிடை வியனகோ யில்' என்றதனால் விளங்கிற்று. பெருங்கடல் - வீராகுழாத்துக்கு உவமை யாகு பெயர். கற்றற்குரிய நூல்களைக் கற்றலாகிய கல்வியும், கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டலாகிய கேளவியும் ஆகிய இர ணடையு முடையவன் அநுமனெனபதை, 'நூற்பெருங்கடல் நுணங்கிய கேளவியன்' என்றதனா லுணர்த்தினர். திருக்குறளில் "நுணங்கியகேள்வி யர்" என்றவிடத்துப் பரிமேலழகர் 'கேட்கப்படுகின்ற பொருளினது நுண மை கேள்விமேல் ஏற்றப்பட்டது' என்று விசேடவுரை கூறியது, இவ்விடத் திற்கும் அமையும்.

'பன்மணிப்பஃறிரைப்பரப்புடை.' 'படர்வேலை' என்றவை - கடலுக்கு அடைமொழிகள். கடல் இரத்தினாகரமாதலால், 'பன்மணி' என்ற விசேஷ ணம் ஏற்கும் உபமேயமாகிய இராவணன் பலவகை இரத்தினங்கள பதித்த கிரீடங்களைத் தரித்தவனாயும் இருபதுகைகளைப் பரப்பிக்கொண்டும் படுத் திருத்தல், உபமானமாகிய கடலுக்குக் கொடுத்த அடைமொழியினால் தோன் றும் மேல் உகரு ஆஞ் செயயுளில் இவனுக்குத் திருமாலை உவமைகூறு கின்றாராதலின் அதற்கேற்ப, இவன படுகைகையைத் திருமால்பள்ளிகொள்ளு மிடமான திருப்பாற்கடலெனறனரென்னலாம். மால் - கருமை; வதி வெவி என்ற வடமொழிவினையடியின் விகாரம். டல் + திரை = பஃறிரை: ஆய்த்த குறுக்கம், கால்மாத்திரை. பி - ம்:—[1]மறுங்கூறும். [2]படை. [3]பஃறலைப். கருங்கடல் [5]விரிந்ததே. [6]வளப்பினன். (உ0சு)

உ0எ. குழவி ஞாயிறு குன்றிவர்ந தனையனகுருமணி நெடு மோலி, யிழைக ளோடுநின் றிளவெயி லெறித்திட விரவெனும் பொருள்வீய, முழைகொண் [1]மேருவின் பொருட்டிடைக் கனகனை முருகுகிய முரட்சீயந், தழைகொ டோளொடு தலைபல பரபபிமுன் றுயிலவதோ தகையானை.

(இ - ள்.) குழவி ஞாயிறு குன்று இவர்ந்து அனையன - இளஞ்சூரியன் (உதய) கிரியினமேல் ஏறியிருந்தாற் போன்றனவான குருமணி நெடுமோலி- பெரிய இரத்தினங்கள் பதித்த நீண்ட கிரீடங்கள், இழைகளோடு நின்று -

(நெற்றிப்பட்டம் முதலிய மறறை) ஆபரணங்களுடனே நின்று, இள வெயில் எறிகதிட- இளவெயிலபோன்ற செந்நிறவொளீயையவீசவும்,—இரவு எனும் பொருள வீய - (அதனால்) இராததிரியென்கிற பதாரததம அழிந்தொழிய வும் —முழை கொள் மேருவின பொகுட்டிடை - குகையைகொண்ட மேரு மலையினிடையே, முன் கனகனை முருகிய முரண் சீயம் - முன்பு இரணி யனைக கொன்ற வலிமையையுடைய நரசிங்கமூர்ததி, தழை கொள் தோளொடு தலை பல பரப்பி வளாசசிகொண்ட பலதோளகளையும் பலதலைகளை யும பரபபிகொண்டு, துயிலவது - தூங்குவதுபோன்ற, ஓர் தகையானை-ஒரு தகுதியை யுடையவனுமான இராவணனை,—(எ - று)—'அநுமான் நோககி னன' எனகீழசசெய்யுளோடு ஒரு தொடராக முடிக்க.

முனனிரணடடிகளில், இராவணனது கரிய பெரிய வடிவுககு - உதய கிரியும, அவனது பததுததலைகளிலும் அணியப்பட்டுளள கிரீடததுககு அவ் வுதயகிரியின சிகரததிலேறி விளங்குகின்ற சூரியரும, அககிரீடம வீசுகின்ற செந்நிறவொளிகுகு - அவ்விளஞசூரியரது ஒளியும உவமையெனக காணக. பின்னிரணடடிகளில. பொனமயமான பெரியமாளிகையினிடையே ஓரிடத தில ராக்ஷஸராஜனான இராவணன் பததுததலைகளையும் இருபது கைகளையும் பரபபிகொணடு தூங்குதல் பொன்மயமான மேருமலையின் குகையிலே விசுவ ரூப நரசிங்கமூரததி பலதோளகளோடும பலதலைகளோடும பளளிகொண டிருந்தாற போலு மென உவமைவகுத்தனா இரணியன் மேருமலையில் அரசு வீறறிருந்தன னென்பது, யுததகாணடதது இரணியனவதைப படலததில் மேருமாலவரையுசசிமே லரசுவீறறிருககும்" எனபதனால் விளங்கும். ஆகவே, அவனதுவாயில் தூணினின்று வெளிப்பட்ட நரசிங்கமும மேரு மலையின் கணணதாயிற்று. முன முருக்கிய என இயைககப்பட்டது

குழவிஞாயிறு - பாலசூரியன். குரு - நிறமுமாம. குருமணி - முழு மாணிககமுமாம; சீவகசிந்தாமணியில, "ஆனுதேயிருள்பரு குருமணி" என்ற விடதது நசசினாககினியா 'உதயகிரியிற சிந்தூரவருவிவீழ்நத சிந்தூராகரத் திற் பிறந்து பதினாறுசதாயுகம் சிவப்பேறின முழுமாணிகம் இருளைகெடுத் தலின்' என்றது, இவகு நோகக்ததककது மோலி - மௌலி யென்ற வட சொல்லின் விகாரம; தலையின்பெயா, கிரீடததுककு இலककணை 'முடி' என் றது போல. பொன்னிறமுளளவனாயிருததல்பறறி, ஹிரணயனென்று பெயா. ஹிரணயம், கநகம எனபன பொனனின பரியாயநாமங்களாதாலல, இரணியனை 'கனகன்' எனறா தழை - முதனிலைததொழிறபெயா. 'பல' என்பதைத தோளொடுங கூடடுக. முன - முன்னிடததிலெனினுமாம. தகை - பெருமை, மேனமை, தன்மை யெனினுமாம. பி - ம்:—[1]மேருவின் முகட்டிடை, மேருவென பொகுட்டிடை. (உ௦எ)

உ௦௨ ஆய பொற்றலத் தாய்வளை யரம்பைப ராயிர[1]ரணிநின்று
தூய பொற்கவ ரித்திர ளியக்கிடச் சுழிபடு பசுங்காற்றின்

வீய கற்பகத் தேன்றுளி[2] விராயன வீழ்தொறு நெடுமேனி தீய
நற்றொடிச் சீதையை நினைதொறு முயிர்த்துயிர் தேய்வானை

(இ - ள்) பொன் ஆய தலத்து - பொன்மயமான உலகத்தில் [சுவர்க்க லோகத்தில்] வசிக்கின்ற, ஆய் வளை அரம்பையர் - தோள்தெடுத்தணிந்த வளையல்களையுடைய தேவமாதர்கள், ஆயிரர் - ஆயிரக்கணக்கானவர்கள், அணி நின்று - வரிசையாய (இருபுறத்தும்) நின்று, துய பொன் கவரி திரள் இயக்கிட - வெண்ணிறமானவையும் பொற்காம்பிட்டவையுமான சாமரைக்கற்றைகளைச் சுழற்றிவீசுவதனால் சுழி படு - சுழற்சி பொருந்த உண்டான, பசுங்காற்றின - இளங்காற்றினால். கற்பகம் வீய தேன் துளி விராயன வீழ்தொறும் - கற்பகமலர்களினிடத்து உள்ள தேனின் துளிகள் பல கலந்து (தனது உடம்பின்மேல்) விழும்போதெல்லாம், நெடு மேனி தீய - பெரிய (தனது) உடம்பு வெதும்ப,—நல் தொடி சீதையை நினைதொறும்-சிறந்த தொடியென்னும் வளையலை யணிந்த சீதையை நினைக்கும்போதெல்லாம், உயிர்தது - பெருமூச்சுவிடடு, உயிர்தேயவானை - உயிரின் வலிமை தளரப்பெறுமான இராவணனை'—(எ - று.)— அநுமான் நோக்கினன்' எனக் கீழ் உ0சு-ஆஞ் செய்யுளோடு இயைத்து முடிக்க.

காதல்நோயுகொண்டார்க்குக் குளிர்ந்தகாற்றும் மலர்களும் பனிநீரும் பகையாம்; ஆகவே, அப்ஸரஸ்திரீகள்பலர் ஒழுங்குபடநின்று சாமரங்களைச் சுழற்றி வீசுவதனாலாகிய இளங்காற்றினால் அருகிலிருக்கின்ற கற்பகவிருக்ஷத்து மலர்களிலுள்ள தேனின் துளிகள் பனிநீர்தெளித்தாற்போல இவனுடம்பின்மீது விழுந்தோறும் இவனுடம்பு தாபமிக்கதென்க மன்மதாவத்தைகளுட் சுபபிரயோகத்தின் பாற்பட்ட நினைப்பும், விப்பிரயோகமாகிய வெய்துயிர்த்திரங்கலும், சோகத்தின் பாற்பட்ட வெதுப்பும் இராவணனிடத்து நிகழ்தல் இங்கு எடுத்துக்கூறப்பட்டது. பி - ம் —[1]பலர் நின்றார். [2]வீரன் மேல். (உ0அ)

உ0கூ. குழந்தை வெண்மதிக் குடுமிய னெடுவரை குலுங்கிய குலத்தோளைக், கறிந்து புக்கிடை [1]கரந்தன [2]வனங்கன்வெங் கடுங்கணை பலபாய, வுழந்த வெஞ்சுமத் துயர்திசை யானையி னொளிமருப் புற்றிற்ற, பழந்த மூமபினுக் கிடையிடை யேசில பசும்புண்க ளசும்பூற.

(இ - ள்.) அனங்கன் வெம் கடுங் கணை பல - மன்மதனது மிகக்கொடிய பல அம்புகள், குழந்தை வெள் மதி குடுமியன் நெடு வரை குலுங்கிய குலம் தோளை-வெண்மையான இளஞ்சந்திரனை முடியிற்கொண்டவனாகிய சிவபிரானது இருப்பிடமான பெரியகைலாசகிரியை அசைத்துப் பெயர்த்தெடுத்த சிறந்த தனது தோள்களை, இடை கரந்தன கழிந்து புகுபாய - நடுவில் தாம சிறிதுபொழுது மறைந்தவையாய ஊடுருவிச்சென்று பாய்தலால்,—உழந்த வெம் சமத்து உயர் திசை யானையின் ஒளி மருப்பு உற்று இற்ற பழந்தமூமபி

னுககு இடை இடையே-(முன்பு) வருந்திசசெய்த கொடிய போரிலே உயர் நத திக்கஜஙகளின் ஒளியுள்ள தநதங்கள் பட்டு ஒடிந்ததனுலாகிய பழையவடுக களுககு இடையிடையே, சில பசும புணகள அசும்பு ஊற-சில புதிய புணக ளுணடாகிப் புலாலநீரசுரநது வடிந்துகொணடிருக்கவும்,—(எ-று)—'நெஞசு பாழ்பட்டானை' என அடுத்தகவியோடு இயைக்கலாம். '(அப்புணகளில்)தேன் துளி விராயனவீழ்தொறும நெடுமேனிதீய' என முந்தினகவியோடு இயைத தலும ஒன்று; சில ஏட்டுப்பிரதிகளில் இச்செய்யுளும் இதற்குமுந்தின செய்யு ளும் முன்பின்னுக மாறியிருககக் காணலாம. அன்றி, கீழ் உ0ரு ஆங கவியிற் போந்த 'துயிலவானை நோககினன்' என்றதனேடு இவைதது முடிப்பினும் அமையும்.

இராவணன் திக்விஜயஞ்செயகின்றகாலத்தில் ஐராவதம்முதலிய திக் கஜஙகளை யெதிரததபொழுது, அவை கோபஙகொண்டு இவன்தோள்களில் தந்தங்களால் தாககுகையில், மிகநவலிமையுடைய இவன்தோள்களை முழு வதும் ஊறுபடுததமாடடாமற சிறிதுஊறுபடுததிய மாதிரததில அவைதாம நுனியொடிந்திட்டன வென்க. அஙஙனம திககஜஙகளினுல் தமது கூறிய தந்தங்கள்கெணடு நன்ருகஊறுபடுததமாட்டாமற்போன இராவணனதோள் களை மன்மதபாணந் தைததுத துளைதது முழுவதும ஊடுருவிச சென றன வென்க பழையபுணகளின் வடுககளை 'பழநதழுமபு' என்றும, அஙஙனம காழ்ப்பேறிய தழுமபுகளின் இடையிடையே இப்பொழுது காமபாணஙகள பாய்தலாற் புதியனவாயுணடான பசசைப்புணகளில் ஊனீசுரநதுவடிதலை 'பழந்தழுமபினுக் கிடையிடையே சிலபசுமபுணகளசுமபூற' என்றுங கூறினர.

குழந்தை யென்ற சொல - இளமையுடையதென்று பொருள்படும;குழ- இளமை, உரிசசொல் பகுதி; தை - பெயாவிகுதி. கழிநதுபுகுதல் - முழுவ துந்துளைதது அப்பாறசெலலுதல். அஙஙனம அம்புகள் ஊடுருவுமபோது இடையே சிறிதுபொழுதுமறைதலை 'இடைகரந்தன' என்று கூறினுர. சிவ பிரான் யோகஞசெய்துகொணடிருககையில அவன்மீது மலரமபுகளையெயது அவனது தவததைக் கெடுககமுயன்று, அதுபறறி அப்பெருமான் சினநது விழித்த நெற்றிககணணின் நெருப்புககு இலககாகி, உடமபுஎரிந்து சாமபலா யொழியப்பெற்றமையறி. மனமதனுககு 'அநஙகன' என்று பெயா; வட சொல. அநகமில்லாதவன்; ந + அஙக=அநஙக வடமொழிசசந்தி. ந - எதிா மறை குறிப்பது, அநகம - உடம்பு. வெம், கடு - ஒருபொருட்பன்மொழி. பி - ம்:—[1]கலநதன. [2]அனஙகவேள.

(உ0கூ)

உக0 சாந்த ளாவிய கலவைமேற் றவழ்வுறு தண்டமிழ்ப பசுந்தென்ற, லேந்து காமவெங் கனலினுக் குயிழதட் டுருத்தியி னுயிரபபேறக், காந்தண் மெலவிரற் சனகிமேன் மனமுதற் கரணங் கள் கடிதோடப், பாந்த ளீங்கிய முழையெனக் குழைவுறு நெஞ் சுபாழ் பட்டானை,

(இ - ள்.) கலவை அளாவிய சாந்து மேல் (தனதுஉடம்பிற்பூசிய) பலவகை வாசனைபொருள்கள் கலக்கப்பெற்றதான சந்தனத்தின்மேல், தவழ வுறு - மெதுவாக வீசுகின்ற கண தமிழ் பாகு தென்றல் - குளிர்ந்த இனிய இளமையான தென்றற்காற்றானது, ஏகு காமம் வெம் கனலினுக்கு உமிழ் (அவ்விராவணன) கொண்டுள்ள வெவ்வியகாமாகினி வளர்தறபொருட்டுவீசு கின்ற, அதன் துருத்தியின் உயிர்ப்பு - தோல்துருத்தியினாலாகுங காற்றாக, ஏற - மேன்மேற்செல்ல,—சாந்தள் மெல் விரல் சனகிமேல் - செங்காந்தள் மலரினிதழ்போன்ற மென்மையான விரல்களையுடைய சீதையினிடத்திலே, மனம் முதல் கரணங்கள் கடிது ஓட-மனம் முதலிய அந்தக்கரணங்கள் விரை வாகச்சென்றுவிட அதனால், பாந்தள் நீங்கிய முழை என - பாம்புகள் நீங் கிப்போகப்பெற்ற புற்றுப்போல, குழைவு உறு நெஞ்சு பாழ்பட்டானை நெகிழ்ச்சிபெற்ற உள்ளம் பாழாயிருக்கின்றவனுமான இராவணனை — (எ - று.)—'நோகின்றான்' எனக் கீழ் உ0சு ஆங் கவியோடு முடிக்க. உயிர்ப் பேற' என்றதை 'பாழ்பட்டானை' என்றதனோடு இயைக்கலாம்; அனறி (உ0சு) 'துயிலவானை நோகின்றான்' என்றதனோடு இயைத்துமுடித்தலுமாம்.

இராவணன் சீதையினிடத்துக்கொண்டகாமத்தால்தவிக்கின்றபொழுது அவனது உடலின் தாபம் தணிதறபொருட்டு அவனது பரிஜநங்களிற் சிலர் அவனுடம்புமுழுவதுங் கலவைச சந்தனக்குழம்பைப் பூசுவாராயினர்; அதுதா பந்தணிதற் பொருட்டாகவே அவன்குறிப்பினபடி குளிர்ந்ததென்றற்காற்றும் அக்கலவைச்சந்தனத்தின்மேல் வீசுவதாயிற்று; அதுதென்றல் அவனது தாபத தைத் தணிக்கமாட்டாமல அதனை மேனமேல வளர்தலால், அதுதென்றற காற்றை, காமமாகிய அகினி வளர்ந்தெரியுமாறு வீசுங் தோல்துருத்திககாற றாகக் குறிததார்; தற்குறிப்பேற்றவணி. இராவணனது மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் சீதையின்மேல் மிக விரைந்து சென்றுவிட்டமை பற்றி, அவனது இருதயஸ்தானம் பாழாய் விட்டது; அதறகு, பாம்பு நீங்கிய புறறை உவமை கூறினார். கொடுமை யும் வகிரகதியிற் செல்லுதலும் பற்றி, இராவணனது அகத்துறுப்புகட்கு பாம்பை உவமைகூறுதல் ஏறகும். உள்ளுறுப்பாதலாற குகையெனப்படுதல் பற்றி, நெஞ்சத்தை 'முழை' என்றல் பொருந்தும்.

'சாந்தளாவிய கலவைமேல்' எனபது, கலவையளாவிய சாந்துமேல் என அந்வயிக்கபபட்டது; மொழிமாற்றுப்பொருள்கோள். கலவை - கூட்டுவாக் கங்கள் கலந்த சந்தனம். தமிழ்ப பாஷை தென்றலுக்கு இனிமையில் உவ மையாக அமையும். இனி, குளிர்சசியான தமிழ்ப்பாஷையோடு பிறந்துவரு கிற இளந்தென்றலென்று உரைப்பாரு முளர். (உ0)

வேறு.

உகக. கொண்டபே [1]ருக்க மூளத் திசைதொறுங் குறித்து மேனாண்
மண்டிய செருவின் [2]வீரத் தோள்களால வாரி வாரி

யுண்டது தெவிட்டிப் பேழ்வாய்க் கடைகடோ றொழுகிபபாயு
மண்டர்தம் புகழிற றோன்றும் வெள்ளெயிற றமைதி யானை.

(இ - ள்.) கொண்ட பேர் ஊகைகம் மூள-தான் இயல்பாகக கொணடுள்ள பெரிய உறசாகம் நாளடைவில் மேன்மேலதிகப்பட அதனால், திசைதொறும் குறிதது - எல்லாததிகுகளிலும் (உளள வீரர்களனைவரையும் தான் வெல்வதாக) எண்ணி, மேலநாள் - முன்காலததில், மணடிய-வலியசசென்று உககிரமாகசசெய்த, செருவின - போரில், வீரம தோள்களால் வாரி வாரி - போர்த்திறமமைந்த (தனது) கைகளால் அளளியளளி யெடுதது, உணடது - (தனது வாய்களிறபெய்து) உணணப்பட்டதாய், தெவிட்டி பேழ் வாய் கடைகள தோறு ஒழுகி பாயும் - அளவிற்கு விஞ்சியமைபற்றித திறந்த (தனது) வாய்களின் இரண்டு ஓரங்களிலும பெருகி வழிகின்ற, அணடர்தம புகழின் - தேவர்களுடைய கீர்ததிபோல, தோனறும் - விளங்குகின்ற, வெள எயிறு அமைதியானை - வெணணிறமான கோரதந்தங்களின தோற்றததை யுடைய வனுமான இராவணனை,—(எ - று)— உ௦சு 'நோககினன்' என இயைகக.

இராவணனுடைய கோரப்பற்கள், இங்குவருணிக்கப்படுகின்றன. இயல்பிலேயே மகா தைரியசாலியான இராவணன் திகவிஜயஞ்செயது அஷ்டதிக்பாலகா முதலிய தேவாகளுடைய வெணணிறமான கீரததியைக கைகளால் திரட்டியெடுதது வாயினுட்பெய்து உணணுமபோது அககீரததிகள் அவ்வாய் கொளளாது நிறைந்து இருபுறததும வழிநதன போனறன அககடைவாய்ப பற்களென்றுகறபனைகூறினா; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பத்துததிசைகளுககும உரியவர்களான தேவாகளின கீரததிகளை இருபது கைகளாலும வாரியெடுததுப் பதது வாய்களிலும பெயதுஉட்கொள்ளுமபோது ஒவ்வொரு வாயி னிருபுறததும் ஒழுகி வழிநத அககீரததிகள போனறன ஒவ்வொரு வாய்ககும இவ்விரணடு வீதமாக அமைநதுள இருபது பறகளுமெனக கற்பனையின நயங்காணக கீரததியை வெணணிற முடையதெனற கூறுங கவி மரபும, ஒருவனது புகழை மறறொருவன வெனறொழிததன னெனறபொருளில அதனை அவன வாயிற போட்டுககொணடனனெனற கூறும உலக வழககும இவ்வருணனைககு மூலம.

ஊகைகமாவது - மனம மெலிதலின்றி வினைசெயதலிற் கிளர்தல். மனவெழுசசி; இச்சொறகு - முயறசி, வலிமை என்ற பொருள்களும உணடு. வீரததோள்' என்றது - அவயவியின பணபை அவயவததின்மேல் ஏறறிக கூறிய உபசாரவழக்கு தோள் - கை; சிந்தாமணியில் "தோளுற றொதெய்வந் துணையாய்" என்ற விடததிற போல. பி - ம்:—[1]உறக்கம. [2]மானத

இதுமுதல் ஐந்து கவிகள் - இககாணடதின முதறகவிபோன்ற அறுசீராசிரிய விருத்தங்கள்.

(உகக)

உகஉ வெள்ளிவெண் சேக்கை வெநது பொறியெழ வெதும்பு மேனி,புள்ளிவெண் மொக்கு ளென்னப[1]பொடித்துவேர்கொதித்துப்

பொங்கக, கள்ளவிழ் மாலைத் துமபி வண்டொடுங் கரிந்து சாம்ப, வெள்ளிணர் மாலை தீய வுயிர்க்கின்ற வுயிர்ப்பி னானை.

(இ - ள்) வெளளி வெள் சேகை-வெள்ளிபோல வெணணிறமாயுள்ள மலாப்படுக்கை, வெந்து—,பொறி எழ - தீப்பொறி கிளமபும்படியாகவும், —வெதும்பு மேனி - தாபங்கொணட (தனது) உடம்பிலே, புள்ளி வெள் மொகுள் என்ன - புள்ளிபுளளியாயெழுகிற வெணணிறமான கொப்புளம் போல, வோ பொடிதது - வேர்வைநீருமபி, கொதிதது பொங்க - கொதிப்புக்கொணடு பொங்குமபடியாகவும்,—கள் அவிழ் மாலை - தேன் சொரிகின்ற (தான அணிந்த) மலாமாலைகளில மொய்க்கின்ற, தும்பி வண்டொடும்-துமபிகளும வணடுகளும, கரிநது சாம்ப-கருகியழியுமபடியாகவும,—ஒள இணர் மாலை-ஒளியமைநத பூங்கொததுகளினாலாகிய தனது) மாலைகள், தீய-தீந்து போமபடியாகவும, உயிர்க்கின்ற - வெளிவிடுகின்ற, உயிரபபினானை - பெருமூசசை யுடையவனுமான இராவணனை —(எ - று.)—(உ௦௬) 'நோகின்றான்' என இயைக்க.

இராவணன் சீதையின விஷயமாகக் கொணட காதல்நோயினால் வெய்துயிரததல் இங்கு கூறப்பட்டது. அவனது அப்பொழுததைய சுவாசத்தின் வெப்பமிகுதியாலாகும சிகழ்ச்சிகளே, வெள்ளி வெணசேக்கை வெந்துபொறி யெழுதல் முதலியன வெளளிவெணசேக்கை - மல்லிகைமலர் முல்லை மலாமுதலிய வெணணிறமலாகளாலாகிய புஷ்பசயனமென்க; அடுதத செய்யுளில "பூவியலமளிமேலா" எனபதுகாணக. சேகைகை பொறியெழ - இடத்து நிகழ்பொருளின தொழில இடததினமேல் நின்றது; உபசார வழக்கு. மொக்குள் - அருமபு வடிவில ஒபபுமைபறறி, கொபபுளததை யுணாததிறறு; உவமையாகுபெயா. 'மொக்குளென்ன' என்பதறகு - நீர்குமிழிகளபோல எனறு உரைபபாரு முளா. 'பொறியெழ' எனபதை 'வெதுமபு' என்பதனோடு இணையது உரைக்கவும இடமுணடு. தும்பி - வணடின சாதிபேதம. பி - ம்:—[1]பொடிதத. (உ௬௨)

உ௬௩. தேவிய னேமி யானிற் சிநதைமெயத் திருவி னேகப்
பூவிய லமளி மேலாப பொயயுறக குறங்கு வானைக்
காவியங் கண்ணி தனபாற [1]கண்ணிய காதனீரி
னாவியை யுயிர்ப்பென் றோது மாமியிட் டரைகின் றானை.

(இ ள.) தே இயல நேமியானின் - தெயவததன்மை பொருந்திய சகராயுததததையுடையவனான திருமாலபோல,—சிந்தை மெய் திருவின் ஏக-தன்மனம உணமையான பிராட்டியினிடததே செல்ல, பூ இயல் அமளிமேல ஆ - மலர்களாலமைகக்பட்ட படுகையின்மேலே [மலாகளின் தன்மையாகிய மெணமையமைநத படுகையின்மேலே], பொய உறகு உறகுவானை - பொய்யான தூககந தூககுகின்றவனும,— காவி அம கணணி தன்பால் கணணிய காதல் நீரின் - நீலோற்பலமலாபோன்ற அழகிய கணகளை

யுடையவளான சீதாபிராட்டியின் விஷயமாகக் கொண்ட ஆசையாகிய நீரி னுதவியைகொண்டு, ஆவியை - தனது உயிரை, உயிரபபு என்று ஓதும அம்மி இட்டு அரைகின்றானை - பெருமூசசென்று சொல்லப்படுகின்ற அம் மியிலே வைத்து அரைகின்றவனுமான இராவணனை,—(எ - று.)—(உ௦சு) 'நோக்கினன்' என இயைக்க.

"பிதுதா பனிமலர்மேற பாவைககு" என்று பெரியார் பணிக்கும்படி தனது பட்டமகிஷியான திருமகளினிடத்து மிக்க ஆசைமயககங் கொண்ட வனாய் அதனால் 'திருமால்' என்று திருநாமம்பெற்ற ஸ்ரீமந்நாராயணன் அப் பெரியபிராட்டியாரிடததே எப்பொழுதும் மனததைச செலுத்துதலும், 'வாதாசநன்' என்னுமபடி காறறை உணவாகக கொள்ளுமியல்பினனாதலாற் காறறடைதத மெததைபோல மெததென்றிருக்கிற ஆதிசேஷனாகிய சயனத திலே அப்பெருமான் பள்ளிகொண்டு உறங்குவான்போல் யோகுசெய்த பெருமானை" என்றபடி தூங்குகின்றவன் போல லோகரக்ஷண சிநதைசெய்து கொண்டிருத்தலும் பிரசித்தம். அததூககம்-பொய்யுறக்கம், யோகநித்திரை, அறிதுயில், துயிலாததுயில் எனப்படும். ஸாக்ஷாத் பிராட்டியின் திருவவதார மான சீதையினிடததே எப்பொழுதும் மனததைச செலுததிககொணடு அச சிநதையினால தூக்கங்கொள்ளாமற புஷபசயநததிலே தூங்குவான்போலக் கண்மூடியுள்ளவனான இராவணனுககு அததிருமாலை உவமை கூறினா. இங்கு உவமையணிக்கு 'பூவியலமளி' என்ற விடததுச சிலேடை உதவி யாய் நின்றது. 'நேமியானின்' என்பதற்கு - சகரபாணியான திருமாலின் அவதாரமாகிய இராமபிரான்போல வென்று பொருள் கொள்ளுதலு மொன்று; பிராட்டியைப் பிரிநதுள்ளவனான அபபெருமான எபபொழுதும் அததேவியா பக்கல் சென்றமனததனாயத தூககமபிடியாமல் உறங்குவான் போலக் கணமூடிப் பள்ளி கொணடிருததல காணக. அபபொழுது 'பூ இயல் அமளிமேலா' என்பதற்கு - வெறுநதரையாகிய பொருநதிய படுகைகையின் மேலே யெனறு பொருள். பூ - வடசொல்; பூமி. 'தேவியல்' என்றது, நேமியானுக்கு அடைமொழி; தன்மைததேவனாக அமைநதவென்பது பொருள்; தே - தெய்வம்.

சீதாதேவியை அதிகமாகக காதலித்த பெருமபாவியான இராவணனுக் குத திருமகள்கொழுநனான திருமாலை உவமை கூறுதல் எறகுமோ வெனின், —"மிதுதலுங் குறுதலுந தாழ்தலு முயாதலும பான்மாறுபடுதலும் பாகு பாடுடைய" என்று அணிநூலா அமைததுள்ளா ராதலின், இழிந்த பொரு ளுக்கு உயர்ந்த பொருளை உவமை கூறுதலும ஒரோவிடததிற பொருந்து மென்க. இங்கு இராவணனது சிறப்பை யெடுத்துக கூறு மிடமாதலின், அதற்கு ஏறபத திருமாலை உவமைகூறி அவனைச சிறபபித்ததனா. இனி,'தேவி யல் நேமியானின்' எனபதற்கு - தெயவததன்மை பொருந்திய ஆஜ்ஞாசக கரதததையுடையவனான தசரதசக்கரவாததிபோல வென்று உரைபபாரு முளர்; அவன் தனது மனம மெய்த்திருவினிடதது [உணமையாகிய செல்

வதனைப் பாதுகாத்தலில்] செல்ல (முன்பு தான் கைகேயிகு வாக்களித்த திருத்த வரங்களைத் தவறாது தருதற்குக் கட்டுப்பட்டவனாகிய) பூமியலமளி மேல் வீழ்ந்து உறங்குவான்போல மூர்ச்சையடைந்தமை காணக ஆஞ்ஞாசக காரத்துக்குத் தெய்வத்தன்மை - அரசன் ஓரிடத்தே உளனாக அவனுறங்குகின்ற காலத்திலுமுட்பட எப்பொழுதுந்தான் உலகமுழுவதுஞ் சென்று உயிர்களைக் காத்தல். கணணிய—கண்ணுதல் - கருதுதல், குறித்தல். சிருங்காரரஸ மென்பவாதலால், காதல் நீரேனதாகும். "காம நீர்வேளாது" என்றார் பூதத்தாரும். 'அமமி' என்றதில், உபலக்ஷணத்தாற் குழவியும் அடங்கிற்று. இராவணன் சீதையினிடத்துக் கொண்ட ஆசையினால் நெட்டுயிர்ப் பெறியுந்தோறும் உயிரின் வலிமை நெகிழ்தல் பற்றி. 'காவியங் கணணிதன் பாற கணணிய காதல்நீரின் ஆவியையுயிர்ப்பெனறோது மமமி யிட்டரைகின்றான்' என உருவகங் கூறினர் ஆவி - அரைக்கப்படுபொருள். நீர் பெயது அரைத்தல், இயல்பு. பி - பீ —[1]கனறிய (உ௬௩)

உ௬௪.மிகுந்தகை நினைப்பு முற்ற வுருவெளிப் பட்ட வேலை
நகுந்தகை முகத்தன காத னடுகுறு [1]மெய்யன் வார்தே
னுகுந்தகை மொழியாண் [2]முன்ன மொருவகை [3]யுறையு ளுள்
புகுந்தன ளன்றோ வென்று மயிர்புறம் பொடிக்கின் றானை [ளே

(இ - ள.) மிகும-தகை - மேன்மேல் வளருந் தன்மையையுடைய, நினைபபு - (சீதையின் விஷயமான) சிநதனை, முற்ற - மிகுதலால், உரு வெளிப்பட்ட வேலை-(அவளுடைய) வடிவம் தன் கணணெதிரிற புலனாகையொழுது, (அவ்வடிவத்தை உண்மையான சீதையெனறு கருதி,) நகும தகை முகததன்- சிரிக்கின்ற கம்பீரமான முகங்களையுடையவனும். காதல் நடுகு உறு மெய்யன் - ஆசையால நடுக்கமடைகின்ற உடம்பையுடையவனுமாகி, 'வார் தேன் உகும தகைமொழியாள - மிகுதியான தேன் சிந்துகின்ற அழகிய சொற்களையுடையவளான சீதை ஒருவகை - ஏதோ ஒருவகையால் (இணங்கி), உறையுளுளளே - (நான்) படுத்திருக்கின்ற அறையினுள்ளே, முனனம - (எனது) எதிரில், புகுந்தனன் அன்றோ - வந்து சேர்ந்துவிட்டாளல்லவா?" என்று- எனறு எணணி, புறம மயிர் பொடிக்கின்றானை - (தனது) உடம்பின்மேலெல்லாம மயிர்சிலிர்க்கப் பெறுகின்றவனுமான இராவணனை,—(எ - று.)— (உ௦௬) 'நோக்கினன' என இயைக்க.

மனதில் யாதொருபொருள் இடைவிடாது நினைக்கப்படுகின்றதோ அப் பொருள் அந்தப் பாவனையின் மிகுதியாற் கண்ணுக்கெதிரிற காணப்பட்டாற் போலத் தோனறுதல் இயல்பு. அது - உருவெளித்தோற்றமெனவும், உரு வெளிப்பாடெனவும் கூறப்படும் இராவணன் எப்பொழுதும் இடைவிடாது சீதையையே நினைத்திருத்தலால், அவன் படுத்திருக்கும்போது அவளுருவம் அவனது கணணெதிரிற புலனாகிறது; அதனைக் காதலமிகுதியுடையவனான அவன் பொய்யதோற்றமெனறு உணராது உண்மையான சீதை

யென்றே எண்ணி மகிழ்ச்சியாற் சிரிப்பையும மயிர்சிலிர்ப்பையும், மோகத்தால் உடல் நடுகததையு முடையனுயின னென்க சீதை தன்கருத்துக்கு இணகுதற் பொருட்டுச சாம தான பேத தண்டங்களாற பலவகை முயற்சி செய்துவந்தனளுதலால, அவற்றில் ஏதோ ஒருவகையினுல் அவள் தன்னைச சார்ந்தனளென்று மகிழ்வானுயினன். மயிர்சிலிர்த்தல், மகிழ்ச்சியினுலாகும் மெய்ப்பாடு. மிகுந் தகை நினைப்பு-வரமபுகடந்த தன்மையையுடைய எண்ணமென்றும. பி - ம்.—[1]மனத்தின். [2]முன்னி. [3]உள்ளினுள்ளே. (உகச)

உகரு மென்றொழிற் கலாப மஞ்ஞை வேட்கைமீக் கூரு மேனுங், குன்றொழித் தொருமாக் குன்றி னரிதிற்சேர் கொள்கை போல, வன்றொழிற கொற்றப் பொற்றோண் [1]மணந்தரு மயிலே யன்னு, ரொன்றொழித் தொன்றி னேக வரியதோ ரொழுக்கி னுனே.

(இ - ள.) மெல் தொழில் - நுட்பமான வேலைதிறமமைந்த, கலாபம் - தோகையையுடைய, மஞ்ஞை - மயிலானது, வேட்கை மீக்கூரும எனும் - ஆசையை அதிகமாககொண்டதாயினும், குன்று ஒழிதது ஒரு மா குன்றின் அரிதின்சோ கொள்கைபோல (தானிருககின்ற)ஒருமலையைவிட்டு மற்றொரு பெரியமலைக்குச சிரமததோடு சென்று சேரும் தன்மைபோல,—அரு மயிலே அன்னுா - அருமையான மயிலபோன்ற சாயலையுடையவாகளான மகளிர, வல தொழில் கொற்றம பொன் தோள மணநது - வலியசெயல்களைச செய்ய வல்லதும வெற்றிகொணடதுமான அழகிய (தனது) தோளைத தழுவி, ஒன்று ஒழித்து ஒன்றின் ஏக அரியது - (அங்ஙனம தாம தழுவிய) ஒருதோளை விட்டு மற்றொருதோளிற் செல்லுதறகு அரியதான, ஓா ஒழுக்கினுனே - ஒபபற்ற தோளவரிசைகளை யுடையவனுயான இராவணனே,—(எ - று.)—(உ௦சு) 'நோககினன' என இயைக.

உலகத்திலுளள பலமலைகளுள ஒருமலையில் இனிதுவசிககின்ற மயில் அதனைவிட்டு மற்றொருமலையைசசோநது அவ்விடததின் இனிமைகளை நுகருமாறு மிகக விருப்பங கொணடதாயினும இமமலையினின்று அமமலைகுச சென்றுசேர்தற்கு மிகவும சிரமப்படுமியல்பை யுடையதாயிருககின்றது; அவ்வாறே இராவணனுடமபில இரட்டைவரிசையாயுளள தோள்களிருபதில் ஒன்றைத தழுவி இன்பம் நுகாந்த மாதா அததோளைவிடடு மறறொரு தோளுககுச்செலலுதல அரியதாகினற தென்க; உவமையணி. அததோளினது பருமையுயாவுவலிமைகளும, அததோள்களில ஒன்றறகொன்றுளள இடைவெளியின் மிகுதியும பாராட்டப்பட்டவாறும. மயில் - குறிஞ்சி நிலப் பறவை. ஓரெடுப்பில நெடுநதூரம பறந்துசெலலமாட்டாமை, அதற்குஇயலபு; அது அங்ஙனமாதற்குக காரணம தோகையின பாரமென்பது தோன்ற, 'கலாபமஞ்ஞை' எனறார. அததோகையில தெயவசசெயலாய இயறகையாக அமைநதிருக்கின்ற கணமுதலியவறறின் விசிததிரங்கள செயறகையாக மிகநுணணிதிற்செய்யுஞ் சிதரவேலைப்பாடுகள்போல விருககின்ற அருமை

யைப் பாராட்டி, 'மென்றொழிறகலாபம்' எனப்பட்டது; இது மகளிர்கூந்தற்கு உவமையாகக் கொள்ளத்தக்கது பி-ம்:—[1]மணந்திடு மடந்தைமார்கட்கு.

வேறு

உகசு. தழுவா நின்ற கருங்கடன்மீ துதய கிரியிற் சுடாத யங்க, வெழுவா னென்ன மின்னிழைக்கு மாரம் [1]புரளு மியல்பிற் றாய், முழுவா னவரா யுலகமொரு மூன்றுங் காக்கு முதறறேவர், மழுவா ணேமி குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை.

(இ - ள்.) தழுவா நின்ற கருங கடல் மீது - சுற்றிலும் பரவியுள்ள கடலின்மேல், உதயகிரியில் - (உயாநது காணபபடுகின்ற) உதயபருவதத்திலே, சுடா தயங்க எழுவான என்ன-(தனது ஆயிரங) கிரணங்கள் விளங்க உதிப்பவனான சூரிய போல, மின் இழைக்கும ஆரம் புரளும் - ஒளிவிளங்குகின்ற இரததினஹாரம புரளுகின்ற, இயல்பிறறு ஆய்-தன்மையை யுடையதாய்,—முழு வானவா ஆய் தலைமைக்குணங்கள் மிகக தேவாகளாய், உலகம் ஒரு மூனறும் காக்கும் மூன்று உலகங்களையும் பாதுகாககின்ற, முதல் தேவர்-சிறந்த தேவர்களான சிவபிரான திருமால் இந்திரன் என்பவாகளுடைய, மழுவாள் நேமி குலிசததின் - மழுவும் ஒளியுளள சக்கரமும் வசிரமுமாகிய ஆயுதங்களின், வாயமை தவறாத வலிமையை, துடைத்த - போக்கிய, மார்பானை - மாரபையுடையவனுமான இராவணனை,—(எ - று.)—(உ௦சு)' நோக்கினன்' என இயைக்க.

இராவணனது கரிய பெரிய உடம்புக்கு-சுற்றிலுமுள்ள கருங்கடலும், அவ்வுடம்பில் உயாநது பரந்து காணப்படுகின்ற மாபுககு - கீழ்கடலினிடையேயுள்ள உதயகிரியும், அமமாபில் ஒளிவீச அணியப்பட்டுப் புரண்டு விளங்கும் இரததினஹாரததுக்கு - அவ்வுதயகிரியினமீது தனது ஆயிரங கிரணங்களும் பரவ உதிததுச சஞ்சரிக்கத தொடங்கி விளங்குனு சூரியனும் உவமையெனக்காணக; உவமையணி, திரிமூாததிகளுட் போர்மூயற்சியில்லாது வேதமோதிக்கொண் டிருப்பவனும இராவணனது குலத்துக்கு ஆதிபுருஷனுமான பிரமனை நீக்கி, இந்திரனைக் கூட்டி அம்மூவாது படைக்கலங்களும் இவனது மார்பிறபட்டு அதனை ஊறுபடுததமாட்டாமற் சிறப்பிழந்தன வென இராவணனது மார்பின்வலிமையை வருணித்தா. பி - ம்·—[1]பிறகு மியலபிற்றாய்.

இக்கவி-மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும காய்சசீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தம். ()

வேறு

உகஎ தோடுழுதண் டார்வண்டுந் திசையானை மதந்துதைந்த வண்டுஞ் சுற்றி, மாடுழுத நறுங்கலவை வயக்களிறறின் சிந்துரத்தை மாறு கொள்ளக், கோடுழுத மார்பானைக் கொலையுழுத வடிவேலின் கொற்ற மஞ்சித, தாடொழுத பகைவேந்தர் முடியுழுத தழும்பிருந்த சரணத் தானை.

(இ - ள்) தண தார் - குளிர்ச்சியான (தனது மார்பின்) மாலையிலுள்ள, தோடு-மலரிதழ்களில், உழு - கிண்டிமொய்த்துள்ள, வண்டும - வண்டுகளும், திசை யானை மதம் துதைந்த வண்டும் - திக்கஜங்களின் மதநீரிலே நெருங்கி மொய்த்துள்ள வண்டுகளும், சுற்றி - சுழன்றெழுந்து, மாடு உழுத-பக்கங்களில் மொய்த்துக் கிளறுவனவாகுமபடியும்,—நறுங கலவை-வாசனை வீசுகின்ற (தனது மாபிற பூசிய) கலவைச்சந்தனம், வய களிற்றின் சிந்துரத்தை மாறுகொள்ள வலிமையையுடைய திக்கஜங்களின் முகத்திலணிந்த சிந்தூரத் திலகத்தை மாறறிகொள்ளுமபடியும, கோடு உழுத - (அத்திக்கஜங்களின்) தந்தங்கள பதிந்து கிளறப்பெற்ற, மார்பானை - மாபையுடையவனும்,—கொலை உழுத - கொலைசெய்யுமாறு பாய்ந்து கிளறுகின்ற, வடிவேலின் - (தனது) கூரிய வேலாயுதத்தினது, கொறறம-வெறறிக்கு, அஞ்சி பயந்து, தாள தொழுத - (தனது)கால்களில விழுந்து வணங்கிய, பகை வேந்தர் - பகையரசர்களது, முடி - கிரீடங்கள், உழுத - பட்டுத் தேயத்தலினாலாகிய, தழும்பு - வடுக்கள், இருந்த - பொருந்திய, சரணத்தானை - கால்களையுடையவனுமான இராவணனை,— (எ - று.)—(உ0சு) 'அநுமான் நோக்கினன்' எனக் குளகச் செயயுள்கட்கு முடிபு காணக.

இராவணன் திக்குவிசய யாத்திரையில அஷ்டதிக்கஜங்களை எதிர்த்த பொழுது, அவை தமது தந்தங்களைக்கொண்டு இவன மாபில வலியத்தாக்கி ஊறுபடுத்துவன வாயின; அங்ஙனம பாய்ந்து நெருங்கும்பொழுது, இராவணன் மார்பில் தரித்துள்ள மாலையில் மொய்த்துக்கிடந்த வண்டுகளும திக்கஜங்களின் மதஜலத்தில் மொய்த்துக்கிடந்த வண்டுகளும அஞ்சி இடமவிட்டுப் பெயாந்து பிறகு புதுமணத்திலுள்ள அவாவினால் இமமலாவண்டுகள அமமத்தத்தையும அம்மத வண்டுகள் இமமலரையும நாடி மாறிச்சென்று, அத்தாக்கு விசையில் தாம் அகபடட்டுக்கொள்ளாதபடி ஜாக்கிரதைப பட்டுப் பக்கங்களில் மொய்ப்பனவாயின வெனபது முதலடியின கருத்து. அங்ஙனம திக்குயானைகள் இராவணன் மாபிற பாயுமபோது, அம்மாபிற பூசிய கலவைச்சந்தனக் குழமபு அவ்வானையின் முகத்திலும, அந்த யானையின் முகத்திலிட்டுள்ள சிந்தூரப்பொட்டு இவன மாபிலுமாக மாறிபபடிதல், 'நறுங்கலவை வயக்களிற்றின் சிந்துரத்தை மாறுகொள்ள' எனறதனால் விளக்கபபட்டது. மாற்று நிலையணி யெனபபடும பரிவாத்தநாலங்காரம இம்முதலிரண்டடிகளிலிருத்தல் காண்க; அதன் இலக்கணம்—''பொருள பரிமாறுதல் பரிவர்த்தனையே'' என்றார் தண்டியாசிரியா. இரண்டாமடியிலுள்ள 'உழுத' எனபது - பலவின் பாலிறந்தகாலமுறறு, எச்சத்தன்மை யடைந்தது. இம்முற்றெச்சமும், 'கொள்ள' என்ற செயவெனெச்சமும் அடுக்கி, உமமை தொக்கதனால் வினைச்செவ்வெண்ணாகி, மூனறாமடியிலுள்ள 'உழுத' என்ற பெயரெச்சத்தோடு இயையும். இனி, 'சுறறி' என்ற செய்தெனெச்சத்தை 'சுற்ற' எனச் செயவெனெச்சமாகத்திரித்து அதனை 'கோடுழுத' என்றதனோடு இயைத்து,

மாடு உழுத நறுங கலவை - தன்னிடததிற் பூசப்பட்ட நறிய கலவைசசந்தன மென்றலுமாம்.

இராவணன் தான் தனது மாமனாகிய மயனிடததினின்று பெற்ற தெய்வத தன்மையுளள வேலாயுததினது தவறாப் பெருவலிமையைத துணைக்கொணடு அரசாகளை யெதிர்ததுப் பொருதழித்து வெல்லத்தொடங கியபொழுது அப்பகையரசாகளிற் பலா அவ்வேலின் கொலைததிறத்துக்கு அஞ்சிப் போரொழிந்து இவனைச சரணமடைபவராய இவன் கால்களில் தங் கள முடிபடுமபடி விழுந்து ஸாஷடாங்கமாகத தண்டனிடுகையில் அவர்கள் கிரீடங்கள் படுதலால் இவனடிகளில தழுமபுகளமைந்தன வென்பது, பின் னிரண்டடிகளிற் கூறப்பட்டது. இங்கு 'கொலையுழுத வடிவேலின் கொற் றம்' என்று சிறப்பிததுக் கூறப்பட்ட வேற்படையின பெருமையை, மேல் யுத்தகாண்டத்து வேலேற்றுப்படலததிற் காணலாம. 'சிநதூரததை மாறு கொள்ள' என்பதற்கு -சிநதூரப்பொட்டை யழிக்க வென்றலுமாம. இசசெய் யுளில் 'உழுத' என்ற சொல் ஒரு பொருளிலேயே பலமுறை வநதது, சொற்பொருட்பின்வருநிலையணி. முதலடியில் 'தோடுழுத தார்வணடு' என்று பாடமோதுவாரு முளர்.

இக்கவி - இறுதி யிரணடுசீரும மாசசீர்களும், மற்றைநான்கும் காய்சசீர் களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தம். (உகஎ)

வேறு

[இராவணனைக்கண்ட அநுமனது கோபம்]

உகஅ. கொண்டதோ ருருவ மாயன் குறளினுங குறுக நின்றான்
றிண்டலை பத்துந் தோள்க ளிருபதுந் தெரிய நோக்கிக
கண்டனன் காண்ட லோடுங் கருததின்முன் காலச் செந்தீ
விண்டன கண்கள் கீண்டு வெடித்தன கீழு மேலும்.

(இ - ள்.) கொணடது ஓர் உருவம் மாயன் குறளினும குறுக நின்றான் - தான் கொணடுள்ள ஒபபற்ற வடிவம (முன்பு) திருமால்கொணட வாமனவடி வததினுங குறுகியதாயிருக்க நின்றவனான அநுமான், திண தலை பததும தோள்கள் இருபதும தெரிய நோககி - (அங்ஙனம்படுத்துள்ள அவ்வரக்கனது) வலிய தலைகள் பததையும தோள்கள் இருபதையும் நன்றாகப்பாரததது, கணட னன் - ('இவன் இராவணன்' என்று) தெரிந்துகொணடான: காண்டலோ டும் - (அங்ஙனம்) அறிந்தமாததிரததில், கருததின் முன் - (ஆலோசிககின்ற அவ்வநுமனது) மனத்திறகுமுன்னமே, கணகள் காலம செம் தீ விண்டன - (அவனது) கணகள் செந்நிறமான காலாககினியை வெளிபபடுத்தின: (அந்த உககிரத்தால்), கீழும் மேலும் கீணடு வெடிததன - கீழுலகமும்மேலுலகமும பிளந்து வெடிக்கலாயின; (எ - று.)

அநுமான், பிராட்டியைத தேடுதற் பொருட்டுக் கொணட வடிவம வாமனவதார வடிவததினுங குறுகியதென்று அநுமனது அணிமாவென்னுஞ்

சித்தியின் மகிமையைவிளக்கினா. காணுதல் - நோக்கு அல்நோக்கம். ஈற்றடி தொடர்புயர்வுநவிற்சியணி.

இககவி - இக்காண்டததின் முதற்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம்.

வேறு.

உகக. தோளாற்ற லென்னுகு மேனிற்குஞ் சொலலென்னும்
வாளாற்று கண்ணுளை வஞ்சித்தான் மணிமுடியென்
றுளாற்ற லாவிடித்துத் தலைபத்துந் [1]தகர்த்தென்ற
னுளாற்றல் காட்டேனு லடியேனுய் முடியேனே.

(இ - ள்.) தோள் ஆற்றல என் ஆகும் - (இவனது) புயஙகளின் வலிமை யாதுபயன்படும்! மேல் நிற்கும் சொல் என் ஆம - நெடுஙகாலம அழிவின்றி நிற்பதான இவனது புகழ்தான யாதுபயன்படும்!! (இவ்விரணடும் பயன் படாதபடி), வாள் ஆற்று கணணுளை வஞ்சிததான் - வாளாயுதமபோன்ற கணகளையுடையவளான சீதையை வஞ்சனையாற கவர்நதுவாநதவனுகிய இவ விராவணனுடைய, மணி முடி - இரததின கிரீடஙகளை, என் தாள் ஆற்ற லால் இடிததும் - எனது கால்களின் வலிமையால் உதைததுததள்ளி, தலைபத தும் தகர்த்து - பகதுத தலைகளையும் உடைதது, என்தன் ஆள் ஆற்றல் காட் டேன் ஆல் - எனது ஆணமைததிறததைக காணபியாமற் போவேனுயின், அடியேன் ஆய முடியேன் - நான் ராமதாஸனுய (அவ்வடிமைத தொழில) நிறைவுறேன்; (எ - று.)—ஈற்று ஏகாரம - தேற்றததோடு இரககம.

நேரில்வந்து இராமபிரானை யெதிரததுப் புயவலிமைகொண்டு பொருது வென்று பிறகு அவனுரிமையான சீதையைக கவாதல்செயயாது வஞ்சனை யால அப்பிராடடியைக் கவாநது சென்றமை இராவணனது புஜபலததுககு மிகக பழிபபையே தரு மெனபதுபற்றி 'தோளாற்ற லெனனுகும மேனிற குஞ்சொல்லென்னும்' என்றார. சீவகசிந்தாமணியில "வாளுறறகணணுள" என்றாறபோல, இஙகு 'வாளாறறு கணணுள' எனறார. ஆற்று - உவம வுருபு. எனது தலைவனுககுத துரோகஞ் செயதவனது தலைகளை யான் உடைதது எனது பராகரமததை வெளியிட்டாலதான் எனது அடிமைததிறம நிறை வுற்றதா மென்பது, இசசெயயுளின் கருதது. 'காட்டேனுல்' எனபதறகு - காட்டாதிருககின்றேனுதலால் என்று உரைபபாரு முளா. பி - ம்.—[1]தகாத தின்றென், தகாததுருட்டி. [2]ஆளாறறல காட்டேனேல்.

இதுமுதல் இப்படலம முடியுமளவுமுளள பதினுறு கவிகள - பெரும் பாலும நாற்சீரும் காய்சசீராய் வந்த அளவடி நான்கு கொணட கலிவிருத்தங் கள். இவற்றை நாற்சீர்நாற்கடித்தரவுகொச்சக மெனறலுமொனறு.(உகக)

[இதுவும் அது.]

உஉ0. நடித்துவாழ் தகைமையதோ வடிமைதா னன்னுதலைப்
பிடித்தவா ளரக்கனுர் யான்கண்டும் பிழைப்பரோ

வொடித்துவான் றோளனைத்துந் தலைபத்து முதைத்துருட்டி
முடிததிவலூர் முடிததான்மேனமுடிவதெலாமுடிந்தொழிக.

(இ - ள்.) அடிமைதான் - (ஒருவர்க்கு) அடிமை செய்வதென்பது தான், நடிதது வாழ் தகைமையதோ - (அடியவன்போல) வெளிவேஷங காட்டிப் பிழைககின்ற தன்மையோ டமைவதோ? [அன்று என்றபடி], நல் நுதலை பிடித்த வாள அரககனோ - அழகிய நெற்றியையுடையவளான பிராட்டியை வஞ்சிததுக கவாநதுவநத கொடிய ராக்ஷஸன, யான் கணடும் பிழைப்பரோ - (இராமபிரானது மெயயடியவனான) நான பாரதத பினபும தப்பிப் பிழைத்திருககககடவனோ? (அவனது), வான் தோள அனைததும - பெரிய தோள்களையெலலாம, ஒடிதது - (என கால்களால) ஒடிதது எறிந்து, தலை பத்தும்-பததுத தலைகளையும, உதைததது - (என் கைகளால்) உதைத்துததள்ளி, உருட்டி - கீழேயுருளபபணணி, முடிததது - (இஙஙனம அவனை யான்) கொன்று, இ ஊர முடிததால-(அவனது நகரமான) இவ்விலஙகாபுரியையும் அழிதது விட்டால, மேல - அதன் பிறகு, முடிவது எலாம் முடிந்து ஒழிக - நடபபதெல்லாம நடந்துதீக; (எ - று.)

அடியவனபோலப புறததே பாவனைகாட்டிப் பாசாஙகுசெயது திரிவது உணமையான அடிமைததிற மாகாது, எசமானனுககுத துரோகனு செயதவனை அறதவதாலேததமலே பூரணமான அடிமைததிற மெனறவாறு. 'அரককனோ பிழைபபரோ' எனறது, இகழ்ச்சிபபனமை; உயாவசொல், குறிபபு நிலையின இழிபுவிளககிறது' எனபா நசசினாককினியா; எனது தலைவனுককுத துரோককு செயதவனையும அவனுரையும யான அழிததபினபு, அதனுல எனককு ஏதேனுநதீஙகுநோநதாலும நோக, அதனுல ஒனறுஙகுறறமிலலை யெனற துணிவுபறறி, 'மேல முடிவதெலாம முடிந தொழிக' எனறான. (உஉ0)

உஉக. கோபங்கொண்ட அநுமான் சிறிது ஆலோசித்து அக்கருத்தொழிதல்.

எனறாককி யெயிறுகடித் திருகரனும பிசைநதெழுந்து
நினறாককி யுணாந்துரைபபா னெமியோன [1]பணியனறு
லொனறாককி யொனறிழைதத துணாவுடைமைக குரிததனறுல
பினறாককி னிதுசாலப பிழையாகு மெனபபெயாநதான.

(இ - ள்.) என்று - எனறுஎணணி, ஊককி - யுததோற்சாகஙகொண்டு, எயிறு கடித்து - பறகளைককடித்து, இரு கரனும பிசைநது - இரண்டுகைகளையும பிசைநது, எழுநது—,(பின்னா அநுமான), நினறு - சறறுநின்று,ஊককி உணர்ந்து - முயனறு ஆலோசித்து, உரைபபான-தனককுட் சொல்லிককொளளபவனுய,—'நேமியோன பணி அனறு - (நான இராவணனையும் இலஙகையையும அழிபபது)இராமபிரானது கட்டளையன்று; (அனறியும), ஒனறு ஊককி ஒனறு இழைததல - ஒருகாரியததைச செயயமுயன்று வேமொரு காரியததைச செயதல், உணாவு உடைமைக்கு உரிததது அனறு - அறிவுடை

மைக்கு உரிய செய லாகாது; பின் தூககின - பின்பு ஆலோசிககுமிடதது, இது - (நான் இராவணனையுமஇலஙகையையும அழிககும) இசசெயல், சால பிழை ஆகும் - பெரிதுஙகுற்றமுடையதாககூடும,' என - என்று சொல்லி, பெயர்ந்தான் - (அசசெயலினின்று) பினவாஙகுபவனானான்; (எ - று.)—, 'ஆல' இரண்டும் - தேற்றம.

பற்களைக் கடிததலும, கைகளைப் பிசைதலும் - கோபகாரியம். நேமியோன் - ஆஜ்ஞாசக்கரததையுடையவனென்றுஙகொணடு, சுககிரீவமகாராஜனைக் குறிதத தென்பாருமுளர். பிராட்டியிருககின்ற இடததைத தேடியறிந்து மீணடுவந்து செயதி சொலலுதலே இராமபிரான சுககிரீவன் என்ற இவ்விருவா கட்டளையுமா மென்பது, கிட்கிநதாகாணடததில் விளஙகுகிறது. ஒன்றுஊகுகி ஒனறுஇழைததல்-பிராட்டியைககணடு செயதிசொலலுதலாகிய ஒருகாரியததைச செயயததொடஙகிப் பகையழிததலாகிய வேறொரு காரியததைச செய்தல். பி - ம்:—[1]அருளன்றால. (உஉக)

உஉஉ.—இதுவும் அது.

ஆலமபார்த துண்டவன்போ லாறற[1]லமைந் துளரெனினுஞ்
சீலம்பாக் குரியோர்க ளெண்ணாது செய்பவோ
மூலம[2]பாக் குறினுலகை முறறுவிக்கு [3]முறைதெரினுங
காலமபாாத் [4]திறைவேலை கடவாத கடலொத்தான்.

(இ - ள.) பாாதது ஆலம் உணடவன் போல் - (தேவாகள படுகிற துனபததைக) கணடு விஷததை யமுதுசெயதவனான சிவபிரானபோல, ஆறறல அமைந்து உளா எனினும - வலலமையமைநதுளளவராயினும, சீலம பாாகக உரியோாகள - தமககேறற ஒழுககமுறைமையைக குறிககொணடு பாதுகாக்க உரியவாகளான பெரியோா, எணணாது செய்பவோ - ஆலோசியாமல (ஒரு காரியததைச) செயவாகளோ? [செயயாாஎனறபடி]; (ஆகவே), மூலம்பாாக குறின - (தனது) தலைமையைப பாாககுமிடதது, உலகை முறறுவிககும முறைதெரினும - உலகமுழுவதையும அழியசசெயயுந திறமை (தனககு உளளதெனறு) தெரிநதிருநதாலும, காலமபாாதது-(தான அழிததறகுஉரிய) கறபாநதகாலததின வரவை எதிரபாாததுககொணடு, இறைவேலை கடவாத - (அதுவரையிலும) சிறிதுஙகரைகடவாமல அடஙகிநிறகின்ற, கடல - கடலை, ஒததான - போனறனன, (அநுமான); (எ - று.)

இராவணனையும இலஙகையையும் எளிதில் அழிககவலல திறமை தன்னிடமிருககவும அனுமன அதுசெயயாது அதறகேறறகாலததைக கருதி இது சமயமனறென்று அடஙகியதறகு, அஙஙனஙகடல் அடஙகியிருததலை உவமை கூறினா; உவமையணி. இசசிறபபுபபொருளை, நலலொழுககநெறியில் நிற்பவா எவவகையாறறலுடையரேனும ஆலோசனையின்றி ஒருகாரியததைச செயயா ரெனற பொதுபபொருளகொணடு விளகியது, வேற்றுப்பொருள் வைப்பணி. இஙஙனம இரணடணிகள சோநதுவநதது - சேரிவையணி.

பாரகவுரியோர்கள் என்பது 'பாரகுரியோர்கள்' என்றும், தெரியின் என்பது 'தெரின்' என்றும் தொகுத்தல்விகாரமடைந்தன பி - ம்.—[1]அமைந்துள தெனினும். [2]பாததிடின். [3]முறைததெனினும். [4]உயா (உஉஉ)

உஉங. இதுவும் அது.

இற்றைப்போர்ப் பெருஞ்சீற்ற மென்னோடு முடிந்திடுக, கற்றைப்பூங் குழலாளைச் சிறைவைத்த கண்டகனை, முற்றப்போர் முடித்ததொரு குரங்கென்றான முனைவீரன, கொற்றப்போர்ச சிலைத் தொழிற்குக குறைவுண்டா மெனக்குறைந்தான்.

(இ - ள்.) 'இறறை போர் பெருஞ்சீறறம் - இப்பொழுது (இராவணனோடு) போரசெயயுமாறு (எனககு) உண்டான பெருங்கோபம், எனனோடு முடிந்திடுக - (பிறாககுப்புலனாமல்) என்மனததிலேயே அடங்கிவிடககடவது; 'பூ கற்றை குழலாளை சிறை வைத்த கண்டகனை - மலாகளைசசூடிய திரடசியான கூநதலை யுடையவளாகிய பிராட்டியைக காவலிலவைத்த கொடியவனை [இராவணனை], முற்ற - அழியுமபடி, ஒரு குரங்கு போர்முடித்தது - ஒருகுரங்குபோரசெயதுமுடித்தது,' எனறால-எனறு சாலலுமபடியானால், முனை வீரன கொறறம போர் சிலை தொழிறகு குறைவு உண்டாம - (அரக்கரைககொலலுதறகெனறே) முனைநதுநிற்கிற வீரனான ஸ்ரீராமனது வெற்றியைததரும போரைச செயயவலல விறலொழிறதோசசிககு ஒருகுறைவு உண்டாகும்', என என்றுஎணணியும, குறைந்தான் - அடங்கினான, (அநுமான்) : (எ - று.)

தோநத ஆலோசனைசெயயாதமுன்பு விரைநதெழுந்த கோபம் காரிய காரியாகாது அடங்கிவிடவேண்டுமெனறு கருதினனெனபது, முதலடியாற போநதது. நான இபபொழுது இராவணனைக கொல்வேனேயாகில், 'தன் மனைவியை வஞசனையாறகவாநதுசிறைவைத்த கொடியவனை இராமபிரான் தானே ஏறறபடிதணடித்து பழிதீரததுகொளளாதிருகையில ஒருகுரங்கு புகுநது அதொழில் செயதிட்டது' எனறு பிரசிததியுணடாகி அபபெருமானது திறமைககுக குறைபாடாய முடியுமென்பது கருதியும கோபநதணிந்தனன அனுமனெனக. கண்டகம் - முள்; வடசொல். அதுபோலப் பிறாககு வருததஞசெயபவன், கண்டகன. முனை வீரன் - வினைதொகை. (உஉங)

உஉச. அநுமான் மற்றுமொன்றை ஊகத்தா லுணர்தல்.

அந்நிலையான் பெயர்ந்துரைபபா னாயவளைக்கை யணியிழையா
ரிநநிலையா னுடன்றுயில்வா ருளரலல ரிவனிலையும்
புன்னிலைய காமததாற புலாகினற நிலைபூவை
நன்னிலையி னுளளென்னு நலனெனக்கு நலகுமால்.

(இ - ள்.) அந்நிலையான் - அவ்வாறு (கோபமடங்கித்) தனநிலையில் நின்றவனான அநுமான், பெயர்ந்து உரைப்பான் - மீளவும (அடியில வருமாறு

தனக்குட்) சொல்லிகொள்வான்'—ஆய் வளை கை அணி இழையார்-தேர்ந்தெடுத்த வளையலகளை யணிந்த கைகளையும் அழகிய மறறும் பல ஆபரணங்களையுமுடையவரான மகளிரெவரும், இ நிலையானுடன் துயில்வார உளர் அல்லர்-இந்தநிலைமையையுடையவனான இவ்விராவணனுடனே படுத்துத்தூங்குபவராயில்லை; இவன் நிலையும் - இவனது நிலைமையும், புல் நிலைய காமததால் புலாகின்ற நிலை - இழிவான நிலைமையையுடைய காமவெப்பததால் தவிக்கின்ற நிலைமையாயிருககின்றது ; (இந்நிலை), பூவை நன்னிலையில் உளள் என்னும் நலன் எனககு நல்கும - சீதாபிராட்டி (இவனுககு இணங்காமற் பதிவிரதாதருமமாகிய) நல்லநிலையில இருககினறாளென்னும நல்லசெயதியை எனக்குச சொல்லிகசொடுககினறது; (எ-று)—ஆல்-ஈறறசை; தேறறமுமாம்.

சீதை இவனகருததுககு இலசநதிருபபின் இவன இஙஙனம மதநாவஸ்தையோடு தவிததுத தனியேபடுததிருককக காரணமிலலை யென்பதை யுட்கொணடு, இவனநிலையால, பிராட்டியின கறபழியாததனமையை அநுமான் அறிநதனன் அநுமானென்க. இழிததுரைককபடுமு ஒருதலைக் காமததா லெனபா, 'புனனிலையகாமததால' எனறா. நல்நிலை - கலஙகாத கறபுநிலை. பி -ம்:—[1]ஆயிழையாள. (உஉச)

உஉரு. அங்கெங்தம்சீதைகாணப்படாமையைக்குறித்து அநுமான் பலவாறு சிந்தித்தலை இதுமுதல் ஒன்பதுகவிகளிற் கூறுகின்றார்.

எனறெண்ணி யீண்டினியோர் பயனிலலை யெனநினையாக்
குன்றனன தோளவனறன் கோமனைபிற படபபெயாநதா
னின்றெண்ணி யுனனுவா [1]னநதோவிந நெடுநகரம
பொனறுனனு மணிபபூணு நிலரெனனப் பொருமுவான்.

(இ - ள.) எனறுஎணணி-என்று ஆலோசித்து, இனி ஈண்டு ஓர் பயன் இலலை என நினையா - இனி இங்கு (சிறறலால) ஒருபயனுமிலலையென்று நினைததது, குனறு அனனதோளவன தன கோ மனை பினபட பெயாநதான-மலைபோனற தோளகளையுடையவனான இராவணனது அரணமனை பினனும படி அதனைக்கடநது அப்பாறசெனறு, நின்று-(அங்கு) நின்று, எணணி உனனுவான - சிநதித்து ஆலோசிபபவனாய்,—'அநதோ - ஐயோ! இநெடு நகரம- இநதப பெரிய நகரததில, பொன துனனும மணி பூணாஇலா-பொனனிலே பதிதத இரததினங்களையுடைய ஆபரணங்களைத தரிததவரான சீதாபிராட்டியா இலலையே!' எனன - எனறு, பொருமுவான - துகிபபவனானான; (எ - று.)—இது. தொகுததுசசுட்டல்; அடுதத எட்டுககவிகளும - இதனவகுததுககாட்டலாம்.

கோ மனை-சிறந்த மாளிகையுமாம், 'குன்றன்ன' என்ற அடைமொழியை 'கோமனை'ககுங கூட்டலாம. பூணா இலா - உயாவுபபண்மை; வடநூலா 'பூஜாயம பஹுவ்ரீஹி' எனபா. பி - ம்:—[1]அநதோவிநநீணகரிற, பொனறுனனு மணிபபூணுளிலலென்னபபொருமினான. (உஉரு)

உஉசு. கொன்றானோ கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலாற்
றின்றானோ வபபுறத்தே [1]செறித்தானோ சிறையறியே
னோனறானு முணரகிலேன் மீண்டினிபபோ யென்னுரைக்கேன்
பொன்றாத பொழு[2]தெனக்கிக் கொடுந்துயரம் போகாதால.

(இ - ள்.) கற்பு அழியா குலம மகளை - (தன்கருததுக்கு இணகாகிக்) கற்பழியாமற்போன உயாகுலத்துப்பிறந்த பெணபாலான சீதையை, கொன்றானோ - (இராவணன்) கொனறுவிட்டானோ? கொடுந் தொழிலால் - (மனிதரைததின்னுதலாகிய தகாகள்சாதிககுஉரிய) கொடியசெயலால், தின்றானோ - (அவளைத) தின்றுவிட்டானோ? அபபுறததே சிறை செறிததானோ - (இநத இலஙகைகக) அப்பால (எஙகேனுஙு கொணடுபோய) சிறைககாவலிற் பத்திரப்படுத்தி வைததிருககின்றானோ? அறியேன் - (இநதமூவகையில் உணமையாகநிகழ்ந்தது இன்னதெனறு) அறிகினறேனிலலை; ஒன்றானும உணரகிலேன் - ஒருவகையாலும் அறியமாட்டாத யான், இனி மீண்டு போய் என் உரைக்கேன - இனித திருமபிசசென்று (இராமபிரானிடம்) யாதுசொல்வேன்? பொனறாத பொழுது - (நான) சாவாமலிருநதால், எனக்கு - (சீதையைத்தேடிவநத) எனககு, இகொடுந்துயரம் போகாது - இநதக் கொடியதுன்பம் நீஙகுகின்றதிலலை; (எ - று.)—ஆல - ஈற்றசை; இரககமுமாம.

கற்பழியாமை, கொல்லுதற்குந் தின்னுதற்குஙு காரணமாகுதலால், ஸாபிப்ராயவிசேஷணம்; கருத்துடையடைமொழியணி. கொடுநதொழில்-நரமாம்ஸ பக்ஷணஞ்செயதல். செறிததல் - அடக்கிவைத்தல். ஒன்றானும்-பிரதியக்ஷம், அநுமாநம, சப்தம் முதலிய பலவகைப்பிரமாணஙகளுள் எந்த அளவையினாலாவது என்றபடி; ஒன்றானும - சிறிதாயினும் எனறலுமாம். 'பொனறாத பொழுது' என்பது, எதிரகாலவினையெசசவாயபாடுபட நின்றது. நான் இறப்பதன்றித துனபம் நீஙகுமவழி யில்லையென்பது, ஈற்றடியின்பொருள். பி - ம்:—[1]சோததானோசிறை சிறியேன். [2]எனககுக. (உஉசு)

உஉஎ. கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிகுலக்கோன்
கொண்டுவரு மென்றிருக்கும் யானிழைத்த கோளிதுவால
புண்டரிக நயனத்தான் [1]பாலின்னம போவேனோ
விண்டவரோ டுடன்வீயா தியான்வாளாவிளிவேனோ

(இ - ள்.) (என்னைக்குறித்து),—காகுததன் - இராமபிரான், கணடுவரும் என்று இருக்கும - '(இவன் சீதையைப) பாாததேமீள்வன' என்று நினைததிருப்பன்; கவி குலம் கோன் - குரஙகுகளின் கூட்டத்துகுத் தலைவனான சுகரீவன், கொணடுவரும் என்று இருககும - (இவன சீதையைப்) பறறிய செய்தியைகொண்டு வருவன்' என்று எணணியிருப்பன்; (அஙஙனம் அவர்கள மிகக நம்பிகையுடனிருகக), யான் இழைத்த கோள் இது - நான் செய்த செயலோ இஙஙனம் பயனற்றதாயிருக்கின்றது; இன்னம-இவ்வாறான பின்பு, புண்டரிகம் நயனததான்பால் போவேனோ - செந்தாமரைமலர்

போலுந் திருக்கணகளையுடையவனான இராமபிரானிடத்து யான் செல்லக் கடவேனோ! விண்டவரோடு உடன் வீயாது-(என்னுற்) பிரியப்பட்டவரான (அங்கதன் முதலான) வாநரவீராகள் இறக்கமுயன்றபோது அவாகளுடனே இறந்தொழியாமல், யான் வாளா விளிவேனோ - நான் (இங்ஙனம்வந்து)வீண பட்டு இறக்கக்கடவேனோ! (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நான் செல்லுங்காரியத்தைச் சாதித்து வருவேனென்று ஸ்ரீராமனும் சுக்கிரீவனும் நம்பியிருப்பாாகளென்பது, முன்னிரண்டு வாக்கியத்தின் பொருள. யான் இழைத்ததுகோள் இது - நான்வந்துசாதித்த காரியம இத்தன் மையது. சீதையைத்தேடுதற்பொருட்டுத் தென்திசைநோக்கி யனுப்பப் பட்டு இரண்டுவெள்ளம வாநரசேனையுடனே வந்த அநுமான் அங்கதன் ஜாம்பவான் முதலிய வீராகள தமக்குச் சுக்கிரீவன் அளித்த ஒருமாதத்தவணை யளவும பலவிடங்களில் தேடிப்பாாத்தும சீதையைக்காணாராய் 'இப்பயனில் செய்தியை மீண்டுசென்று சொல்லுதலினும இறத்தலே நலம்' என்று, பேசிக்கொண்டிருக்கையில், ஜடாயுவின் தமையனான சம்பாதி சமீபித்து 'சீதை இலங்கையிற்சிறைவைக்கப்பட்டிருக்கின்றாள்' என்றுசொன்ன வாாத தையைக் கேட்டு ஆலோசித்து அனுமனையனுப்ப, அவன் கடலைக்கடந்து வரலா யின னென்ற விவரம கிஷ்கிந்தாகாண்டத்திற பரக்கக்கூறப்பட்டது. இனி, ஈற்றடிக்கு - பகைத்தவாகளான இவ்விராக்கதாகளைக் கொன்று அவர் களுடன் யானும் இறப்பேனே யல்லாமல நான் மாத்திரம் சும்மா இறப் பேனோ? என்று உரைப்பாரு முளர். பி-ம்:—[1]பாலினியான் (உஉஎ)

உஉ௨ கண்ணியநாள் கழிந்துளவாற் [1]கண்டிலெனுற கனங் குழையை, விண்ணடைது மென்றுரை யாண்டிருத்தி[2] விரைந்தயா, னெண்ணியது முடிக்கிலேன் யான்முடியா திருப்பேனோ, புண் ணியமென் றொருபொருளென னுழைநின்றும் போயதால்.

(இ - ள்.) கண்ணிய நாள் கழிந்துளள-(பிராட்டியைத் தேடிவருதற்கு தவணையாகச் சுக்கிரீவனுற) குறிக்கப்பட்ட நாள்களோ முன்னமே கழிந்து போயின; கனம குழையை கண்டிலென் - பிராட்டியை (நான்) பார்த்தேனு மில்லை; விண்ணடைதும் என்றுரை ஆண்டு இருத்தி விரைந்த யான்- 'இற ந்து பரலோகமடைவோம்' என்று பிரயத்தனப்பட்ட அங்கதன் முதலான வீராகளை அவ்விடத்திலே இருக்கச்செய்து விரைவுகொண்டுவந்த யான், எண் ணியது முடிக்கிலேன்-நினைத்துவந்த காரியத்தை முடிக்கமாட்டாமற்போ னேன்; யான் முடியாது இருப்பேனோ - (அங்ஙனமான) யான (அதற்கொழி லைப்) பூாத்திசெய்யாது உயிாவாழ்ந்திருப்பேனோ! புண்ணியம் என்ற ஒரு பொருள் என் உழைநின்றும் போயது - நல்வினையென்னும் ஒருபொருள் என்னிடத்தினின்று நீங்கிவிட்டதுபோலும; (எ - று.)—'ஆல்' மூன்றும் - ஈற்றசை.

சுக்கிரீவன் தவணைகுறித்த ஒருமாத காலம கழிந்தும் சீதையைக்காணு மையால் யாவரும் இறந்தொழிவோமென்று அங்கதன்முதலிய வீரர்களனை

வரும் ஆலோசித்தபொழுது அநுமான் 'அத்தவணைகடந்துபோனாலும், நாம் பிராட்டியைக் கண்டு மீளவோமாயின், சுக்கிரீவன் தவணைகடந்ததற்காகக் கோபிக்கமாட்டான்' என்று சொல்லிப் பிறகு சம்பாதியின்சொற்படி கடல் கடந்துவந்தனனாதலால், 'கணணியநாள் கழிந்துள' என்றதனை யடுத்து 'கண்டிலெனாற் கனங்குழையை' என்று இரங்கினன். நல்வினைப்பயன் சிறிதேனு மிருந்தால் இங்ஙனம் கருதியசெயல கைகூடாமற்போகாதென்பது, ஈற்றடியினுட்கோள். பி - ம்:—[1]கண்டிலமால். [2]மீண்டியான் (உஉஅ)

உஉகூ. எழுநூ றோசனைசூழ்ந் தெயில்கிடந்த திவ்விலங்கை
வாழுமா மன்னுயிரியான் காணாத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி யொருவரையும் [1]யான்காணே
னழிதா யிடராழி யிடையேவீழ்ந் தழிவேனோ.

(இ - ள்) எழு நூறு ஓசனை சூழ்ந்து எயில் கிடந்தது - எழுநூறு யோசனை யளவு சுறறிலும மதிலுளளதாகிய, இ இலங்கை-இந்த இலங்காபுரியிலே, வாழும-வசிக்கின்ற, மா மன் உயிர்-சிறந்த பெரிய பிராணிகளுள், யான் காணாத இலலை - நான் பாராதவை எவையுமிலலை: ஊழியான் பெருந்தேவி ஒருவரையும் யான் காணேன் - உலகமனைத்துக்குந் தலைவனான ஸ்ரீராமபிரானது சிறந்த மனைவி யாகிய சீதாபிராட்டியாரொருவரை மாத்திரம் நான் கண்டேனிலலை; (அங்ஙனங்காணாமல்), ஆழி தாய் இடர் ஆழியிடையே வீழ்ந்து அழிவேனோ-ஒருகடலைத் தாண்டிவந்து துன்பமாகிய கடலைக் கடக்க மாட்டாமல் அதிலவிழுந்து அழிந்து விடக்கடவேனோ! (எ - று)—மற்று அசை.

'எழுநூறோசனை சூழ்ந்தெயிலகிடந்த திவ்விலங்கை'—எழு நூறி யோசனை யகல மிட்ட சூழுமாமதில் என்பது, இலங்கைகேள்விப் படலம் ஜாங்கியா இவ்விலங்கையிலிருந்தால், எல்லாவுயிர்களையுங் கண்ட யான் அவரைக் காணாதிருக்கக்கூடுமோவென்பது, இடையிரண்டடிகளின கருத்து. ஊழி - உலகம். இச்சொல்லுக்கு - காலம், ஊழ்வினை யென்றபொருள்களு மிருத்தலால் 'ஊழியான்' என்றதற்கு - காலத்துக்குத் தலைவ னென்றும், விதிக்குத் தலைவ னென்றும பொருள்கொளளவுமாம். பெருந்தேவி - பெரிய பிராட்டியார். இயற்கைக்கடலினும் இவ்விடாக்கடல் பெரிதாயிற் றென்பது ஈற்றடியாற் போதரும். பி - ம்:—[1]யானொருவேன். [2]ஆழிக்கு. (உஉகூ)

உஙூ0. வல்லரக்கன் றனைபபற்றி வாயாறு [1]குருதியுகக்
கல்லரக்குங் கரதலத்தாற் காட்டென்று காண்கேனோ
வெல்லரக்கு [2]மயினுதிவே லிராவணனு மிவனூரு
மெல்லரக்கி னுருக்கியுக வெந் [3]தழலால் வேய்கேனோ.

(இ - ள்.) வல் அரக்கன்தனை பறறி-கொடிய இராக்கதனான இராவணனைப் பிடித்து, வாய் ஆறு குருதி உக - (அவனது) வாய்வழியாக இரத்தம் பெருக, கல் அரக்கும கரதலத்தால காட்டு என்று - கல்லையும் அழிக்கவல்ல

(என்) கைகளால் '(பிராட்டியைக) காட்டு' என்றுசொலலி(க்கன்னகளில் அறைந்து வருததி), காணகேனோ - (இந்த நிரப்பநதத்தால் அவன் காட்டக) காணககடவேனோ? (அனறி), எல் அரககும் - சூரியனொளியையும அழிக்கின்ற, அயில் நுதி வேல் - கூரியநுனியுள்ள வேலாயுததனதையுடைய, 'இராவணனும்—, இ ஊரும் - இந்த லஙகாபுரியும, மெல் அரக்கின உருக்கி உக - மென்மையான அரக்குபபோல உருகிக கரையும்படி, வெம் தழலால் வேய் கேனோ-வெவ்விய நெருப்பினால மூடககடவேனோ? (எ - று)

ஆறு-வழி;இனி, வாயினின்று குருதி உக-வாயினின்று ஆறுபோலஇரத தம்பெருக எனினுமாம். 'கரதலததால்' என்பதை, 'வல்லரக்கன்றனைப்பற்றி' என்றதனோடுங கூட்டலாம். எல் - ஒளி; சிறப்பினால், சூரியனொளியைக் குறித்தது. மெல் அரககு - நெகிழுந்தன்மையதான அரக்கு என்றபடி, பி - ம்:—[1]உருகியுக. [2]அயிலா. [3]தழலிட்டேகுவனோ. (உ௩௦)

உ௩௧. வானவரே முதலோரை வினவுவெனேல் வல்லரக்கன்
ருனொருவ னுளனாக வுரைசெயயுந் தருக்கிலரா
[1]லேனையர்க ளெஙகுரைபபா ரெவவண்ணந் தெரிகேனோ
வூனழிய நீங்காத வுயிர்சுமந்த வுணர்விலேன்.

(இ - ள்.) வானவரே முதலோரை வினவுவென் எல் - தேவாகள் முதலான நல்லவர்களை (க் கண்டு 'சீதையை இராவணன் எவ்விடத்திற் சிறை வைத்திருக்கின்றான்?'என்று) விசாரிப்பேனானால், (அவர்கள்), வல் அரக்கன் தான் ஒருவன் உளன் ஆக உரைசெய்யும தருக்கு இலர்-கொடிய இராக்கதனான இராவணனொருததன் இருப்பதனால் (அவனுக்கு எதிராகச சீதையிருக்கின்ற இடததை எனக்குச) சொல்லுமபடி யான துணிவிலலாதவாகளா யிருக்கின்றாகள்; ஏனையாகள எஙகு உரைப்பா-மற்றையோர் [அசுராகளமுதலிய அவனைச்சோந்தவர்கள] (பிராட்டியிருக்குமிடத்தை) எஙஙனஞ சொல்வாகள்? ஊன் அழிய - (இததன்மைததான கவலையினால) உடமபு சோர வடைய, நீங்காத உயிா சுமநத-நீஙகிபபோகாத உயிரைச் சுமந்துகொணடிருககின்ற, உணர்வு இல்லேன் - அறிவில்லாதவனான யான், எ வணணம தெரிகேனோ - எந்தவகையால் (சீதை நிலையைத) தெரிந்துகொள்வேனோ! (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'வானவரே முதலோரை' என்றது, தேவர்கள்முதலாக நமக்கு அநுகூலராயுள்ள சாதுசனகளை யென்றவாறு; இனி, 'வானவரேமுதலோரை' என்பதற்கு - தேவாகள்முதலிய விசேஷஜ்ஞரை யென்று கொணடால், 'ஏனையாகள்' என்றது-மற்றைச் சாமானியசனகளென்று ஆகும். எ-உயாவு சிறப்பு. உளனாக - உயிரோடிருககுமளவு மென்றபடி. தருககு-தைரியம். 'சுமந்த' என்ற சொல்லின் ஆற்றலால் உயிாவைததுக்கொணடிருததலை வீண் பாரமாகக் கருதினன் அநுமனென்பது தோன்றும் நான் இறவாமல் உயிாவைததுககொணடிருததல பேதைமை யெனபது பட, 'உணாவிலலேன்' என்று தன்னைததானே வெறுத்துககொணடனன். பி - ம்.—[1]ஏனையவர்,

உ௩உ. எருவைக்கு முதலாய சம்பாதி யிலங்கையிலத்
திருவைக்கண டனெனென்ரு னவனுரையுஞ் சிதைந்ததால்
கருவைக்கு நெடுநகரைக் கடலிடையே [1]கரையாதென்
னுருவைக்கொண் டின்னமுநா னுளெனுகி யுழல்கேனோ?

(இ - ள்.) எருவைக்கு முதல் ஆய சமபாதி-கழுகுகளுக்குத் தலைவனுன சம்பாதியென்பவன், இலங்கையில் அ திருவை கண்டனென் என்ருன் - 'இலங்காபுரியிலே அநதச சீதாபிராட்டியைப் பாரகின்றேன் யான்' என்று சொன்னுன்; அவன் உரையும் சிதைந்தது - அவனுடைய வார்த்தையும பொயயாய்ப்போயிறறு; கரு வைககும நெடு நகரை -(பிராட்டியை எனக்குப் புலனுகாதபடி தனது) அகததே மறைததுவைததிருககின்ற பெரிய இவ்விலங காபுரியை, கடலிடையே கரையாது - இககடலிலே கரைத்துப் பிராட்டியைக கணடுபிடியாமல், இன்னமும் நான் என உருவை கொணடு உளென் ஆகி உழல் கேனே - இன்னமும நான் எனது உடம்பைக்கொணடு பிழைத்திருக கின்றவனுய் (இஙஙனம) வருந்தககடவேனே! (எ - று.)—ஆல் - ஈற்றசை.

ஸமபாதி - சூரியசாரதியான அருணனது புதல்வன், ஜடாயுவின் தமையன். கழுகரசன். ஸம்பாதி ஜடாயு என்ற இருவரும் பூர்வத்தில் தேவலோகததைப் பாரககக கருதி வானத்தி லுயரப்பறந்து செல்லுகையில், சமீபிதத சூரியனது கிரணஙகள், முன்னேபறந்துசென்ற ஜடாயுவை வெதுப்ப, அவன் 'அணுணு! என்னைக் காப்பாற்று' என்று ஓலமிட, சம்பாதி அவனுக்கு மேலே பறந்து தன் சிறகிரணடையும் விரிதது அவன்மேல் வெயில் தாக்காதபடி நிழல் செய்து தமபியைப்பாதுகாததது அதனுல் தனது இறகுகளும உடம்பும் தீயாது பூமியில் விழுமபோது, சூரியபகவான் கண்டு கருணைகொணடு, 'இனி ஒருகாலத்திற் சீதையைத் தேடிவரும வாநரவீரா உன்னைக்கணடு ராம நாமோசசாரணஞ் செயதால் அப்பொழுது உனக்கு இறகுகள் வளரும். நீ இனிது எழுந்திருப்பாய்' என்று அநுககிரகிததனன். பிறகு, மகேந்திரகிரியின் சாரலில் லோகஸாரங்க மகாருஷியின் ஆசசிரமததருகில் விழுந்து, சிறகிழந்த வருததததாற் பிராணததியாகஞ் செயதுகொள்ள யத்தனிக்கையில், அநத முனிவன் வநது தேறுதல் கூறியதனுல், சம்பாதி தம்பியைக கழுகரசனுகுமாறு அனுபபிவிட்டுத் தான அரிதில் உயிர்வைத்திருககலானுன். இங்ஙனம நெடுநகாலஞ்செல்ல, பின்பு சுககிரீவன் கட்டளைப்படி சீதையைத தேடிககொணடு தென்திசை நோககிச்சென்ற அநுமான் அஙகதன் முதலிய வாநரவீராகள் பலவிடஙகளில் தேடிக் காணுராகி மகேந்திரமலையைசசார்ந்து, 'தவணைகடந்து விட்டதனுல், இனி நாம வீணே உயிர்வைத்துக கொண்டிருததலிற் பயனில்லை' என்று உயிரவிடததுணிந்து பேசிககொணடிருக்கையில் 'இன்னமும் சீதையைத் தேடிப்பாரப்போம்; அவள் அகப்படாவிட்டால் முடிவில் அப்பிராடடியினிமிததமாய்ப போரிலுயிர்துறந்த ஜடாயுவைப்போல நாமும் உயிரநீததலே நலம்' என்று அநுமான்சொன்ன வார்த்தையைக் கேட்

டுச சம்பாதி தன் தம்பியின் மரணத்தினால வருந்தி அருகில்வந்து அவர்களை வினவிசசெய்தியறிந்து அவர்களோடு அளவளாவி, அவர்கள செயத ராம நாமோசசாரணத்தினால் இறகுமுளைகபபெறறவனாகி, அவர்கள் வந்த காரியத்தை வினவி, 'சீதையை இராவணன தரையுடன் பெயாதெடுத்துக் கொண்டுபோய் இலங்கையிற் சிறைவைத்திருக்கின்றான்; அதோ சீதை எனக்குதெரிகின்றாள்; அங்குசசென்றால நீங்கள பாரககலாம்' என்று கூறிப் போயினன் என்ற விவரம, கிட்கிந்தா காண்டத்துச சம்பாதிப்படலத்திற பாரகக்கூறப்பட்டது

கரு - காபபம் நடு. இளி, கருவைககும என்பதற்கு - (இராவணன் முதலிய அரககாகளை) தனதிடததே வைத்துள்ள என்றும, பெருமை கொண்ட என்றும் பொருள்கூறலாம். பி - ம் —[1]கரையாதே. (உ௩உ)

உ௩௩. வடித்தாய்பூங் குழலாளை வானறிய மண்ணறியப்
பிடித்தானிவ [1]வடலரக்க னெனுமாற்றம பிழையாதா
லெடுத்தாழி யிலங்கைதனை யிருங்கடலி னிடடிவனை
முடித்தாலே யான்முடிதன் முறை[2]மன்றவென்றுணர்வான்.

(இ - ள்) 'வடித்து ஆய பூ குழலாளை - தோநதெடுத்த மலாகளைச சூடிய கூந்தலையுடையவளான சீதையை, வான அறிய மண அறிய - மேலுலகததாா அறியவும் இந்நிலவுலகததாா அறியவும், இ அடல் அரக்கன் பிடித்தான் - இந்தக கொடிய ராகததன் [இராவணன] கவர்ந்துசெனறான்',எனும்- என்று பிரசிததமாயுள்ள, மாறறம் - வாாத்தை, பிழையாது - தவறாகாது; ஆல் - ஆதலால், ஆழி இலங்கைதனை எடுத்து இருங்கடலின இட்டு - கடல சூழந்த இவ்விலங்காபுரியைப பெயாத்து இநதபெரிய கடலினுளளே போகட்டு, இவனை முடித்தாலே - இவவிராவணனை அழித்தபின்பே, யான் முடிதல் - நான இறததல், மனற முறை-நிசசயமாய நியாயமாகும்', என்று உணாவான்-என்று (தனககுள) ஆலோசிப்பவனாயினன், (அநுமான); (எ - று.)

மலர்கள் பலவுளவாயினும் பிராட்டியினது கூநதலின் தகுதிககு ஏற்ற மலாகளைத தேடியெடுததலின அருமை தோன்ற, 'வடித்து ஆய் பூ' எனப்பட்டது. 'மன்ற' என்ற இடைசசொல தேற்றமுணாததுதலை, "மன்றவென் கிளவி தேற்றஞ செயயும" என்ற தொலகாபபியததா லுணாக. ஆல - ஈற றசை. பி - ம்:—[1]வலலரகக்கன். [2]நன றென்றுமினிகின்றான. (உ௩௩)

உ௩௪ —அநுமான் அசோகவனத்தைப் பார்த்தல்.

எள்ளுறையு மொழியாமல் [1]யாண்டையினு முள்ளுயத்தன்
னுள்ளுறையு [2]மழகனைபபோ லெம்மருங்கு முலாவினான்
[3]புள்ளுறையுய் யானதைத யுறநோகி யயலபோவான்
கள்ளுறையு மலர்சசோலை யயலொன்று கணணுறறான.

(இ - ள்.) கள் உறையும் ஒழியாமல்-ஓா எள்ளளவு இடமும் தப்பாமல், யாண்டையினும் உளன ஆய்-எலலாவிடததிலும வியாபிததுள்ளவனாய, தன்

உள் உறையும - தனது மனததிலும வசிக்கின்ற, அழகனை போல-ஸாவாநக சுநதரனகிய திருமாலைப்போல, எ மருநகும உலாவினன - (அவ்விலநகை யில) எல்லாவிடநகளிலுஞசென்று (பிராட்டியைத) தேடியவனன அநு மான,—(இநநனம் ஆலோசிககையில்), புள் உறை உய்யானததை உற நோககி - வணடுகள் சஞசரிககப்பெற்ற சிநகாரப்பூஞசோலையையடைந்து தேடககருதி, அயல போவான் - அப்பாற் செல்பவனய, அயல் - சமீபத்தில், கள உறையும மலர் சோலை ஒனறு கணணுற்றான் - தேனபொருந்திய மலர் களையுடைய ஒரு சோலையைப் பார்ததான: (எ - று.)

இலநகையிலுள்ள மாளிகைகளிலெல்லாம பிராட்டியைத தேடிமுடித்த அநுமான, பிறகு அந்நகரதது உததியானவனததிலுஞ்சென்று தேடவேண்டு மென்று கருதி அதனை நாடிசசெலலுகையில், அசோகவனததைப் பாரத்தன னென்க. 'நோக்கி' எனறது, நோககு அலநோககம. கணணுறுதல் - நோககுதல. முதலடியில, உறை - இடம, உம - இழிவுசிறப்பு. 'புள்' என ற பறவைப்பொதுபபெயா, சிறப்பாய், வணடுககும வழநகும். உயயானம - உத யாநமென்ற வடசொல்லின் சிதைவு; சிநகாரபபூஞ்சோலை பி - ம்:—[1]யாண டையுளும. [2]ஒருவனைபபோல். [3]புள்ளுறைபுமாவனததினதா நோககிப்புறம் போவான்.

இப்படலததின முதல் ௪௦ - செய்யுளளவும் 'நிலாத்தோற்றுப்படலம்' என்றும், அதற்குமேல் ௩௫ - செய்யுள்கள 'இலங்காதேவிப்படலம்' என் றும, மற்றை ௧௩-செயயுளகள 'ஊர்தேடுபடலம்' என்றும சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

மூன்றாவது

காட்சிப்படலம்.

சிறியதிருவடி [அநுமான்] லநகாநகரததில அசோகவனததில் சிம்சுபா விருக்ஷததின்கீழ ராக்ஷசிகளநடுவில இருந்த சீதாபிராட்டியாரைக் கண்டு களிதத கதையை யுணாத்தும பாகம். இதுதொடர்மொழி, இரணடனுருபும பொருளும உடனதொககதொகை. காட்சி - காணுதல்; தொழிறபெயா.

க.—அநுமான் அப்போது மனத்தில் நினைத்தல்.

மாடு நின்றவம் மணிமலர்ச சோலையை மருவித்
தேடி. [1]யிவவழி காண்பெனேற் றீருமென் சிறுமை
யூடு கண்டிலெ [2]னெனிறபின்ன ருரியதொன் றிலலை
வீடு வேன்மற் றிவ்விலங்கன்மே லிலநகையை விட்டி

இதுவும அடுதத கவியும - ஒருதொடா.

(இ - ள்.) மாடு நின்ற - அருகிற் பொருநதிய, அ - அந்த, மணி - அழ கிய, மலா சோலையை - பூந்தோட்டததை, மருவி - அடைந்து, இ வழி-இவ்

விடததில், தேடி காணபென எல்-தேடி (ச சீதையை) ப் பாரப்பேனுயின், என் சிறுமை - எனது துன்பம், தீரும்-நீங்கிவிடும்; ஊடு - அச்சோலையினுள்ளும், கணடிலென் எனின் - (பிராட்டியைக) காணுதவனுவேனுயின், பின்னர் - பின்பு, உரியது ஒன்று இல்லை - (செய்தற்கு) உரிய தொழில் வேறு யாதும் இலலை; இலஙகையை - லஙகாநகரததை, இ விலஙகலமேல் - இந்தத திரிகூடமலையின்மேலே, வீட்டி - நாசபபடுததி, வீடுவேன் - (யானும்) உயிர விடுவேன்: (எ - று.)—'வீடுவேன்' எனபது, வருஙக கவியில் 'என்று' என்னும் வினையெசசததோடு முடியும.

இலஙகைமுழுவ துமதேடியும சீதையைக காணுத அநுமான், அப்போது தேடாது மிசசமாயுளள இடம அசோகவனிகையே யென்று அறிந்து, 'சீதையை இஙகுக காணககூடும, அவ்வாறு கணடால் என் மனததுயரமெல்லாம் நீஙகும; ஒருகால் இஙகும் சீதாபிராட்டி காணப்படாளாயின், இனித தேடுதற்குரிய இடமேயிலலை; ஆதலால், சீதையைக காணலாமென்ற எணணததையே ஒழிதது விட்டு, இவவிடததினின்று திருமபவேணடியதுதான்: சீதையைகாணுமல் கொடுதத தவணையும கடந்து திருமபிககடுந்தணடமுள்ள சுககிரீவனைசசேரநது, அஙகே பலவகை வருததததிறகும் உள்ளாவதைவிட, சீதையைகவவர்ந்த இராவணன வசிக்கின்ற இலஙகைக்கே நாசமுணடாகும்படி பழிவாஙகிச சிறிது மனசசாந்தியடைநது, பின்பு உயிரைவிடுவதே எனகுச செய்தொழில்' என்று கருதின னென்பதாம்.

அம்மணி எனப பிரிதது, அம - அழகிய, மணி - நீலமணிபோலக கரிய, சோலை என்றுமாம சிறுமை - பிராட்டியைக காணுமையால் உணடானது. மற்று-வினைமாற்று. விலஙகல்மேல இலஙகையை வீட்டுதல் - லஙகாநகரததை அடியோடு பெயாதது எடுதது மலையினமேல தாகக விழுத்தி அழித்தல்; இனி, மலையின்மேலுளள லஙகையை (வேறுபலவகைகளாலும்) அழிதது மீளுவேன என்றுமாம. பி - ம்:—[1]அவ்வழி. [2]என்ற பின்.

இதுமுதற் பதினெட்டுக்கவிகள் - முதற்சீரும ஐந்தாஞ்சீரும் மாச்சீரகளும, மறறைமூன்றும விளசசீரகளுமாகிய நெடிலடி நான்குகொண்ட (காப்பியக்) கலித்துறைகள் (க)

உ.—அனுமான் அசோகவனிகையைச் சேர்தல்.

என்று சோலைபுக கெய்தின னிராகவன் றூத
னெனறி வானவர் பூமழை [1]சொரிந்தன ருவந்தா
[2]ரன்ற வாளரக கனசிறை யவவழி வைத்த
துன்ற லோதிதன் [3]னிலையினைச் சொலலுவான் றுணிந்தாம்.

(இ - ள்.) எனறு - என்று (இவ்வாறு), எணணி-, இராகவன் தூதன் - ஸ்ரீராமனது தூதனுகிய திருவடி, சோலை - அசோகவனததை, புக்குஎயதினன் - போய்ச்சேரநதான்; (அப்பொழுது), வானவா - தேவாகள், ஒன்றி - ஒருஙகுகூடினனு, பூமழை சொரிநதனா - மலாகளை மழைபோல (அவ்வது

மான்மேற்) பொழிந்து, உவந்தார்-சந்தோஷித்தார்கள்; (இதுநிற்க), அ வாள் அரக்கன் - ஆயுதங்களையுடைய அந்த ராக்ஷசன் [ராவணன்], அ வழி-அந்தச சோலையில், சிறை வைத்த - காவலில் வைத்திருந்த, துன்று அல ஓதிதன- நெருங்கின இருள்போலக் கரிய கூந்தலையுடைய பிராட்டியினது, அன்று நிலையினை - அப்பொழுதை நிலைமையை, சொல்லுவான் துணிந்தாம் - (யாம் இனிச்) சொல்லத்துணிந்தோம்; (எ - று.)—அது, மேல் இருபத்தேழுகவி களாற் கூறுகின்றார்.

அனுமான் அசோகவனத்தைச் சேர்ந்ததும, தேவர்கள் இனி இவ்வனு மான் சீதையைக்காணுதல்மூலமாகத் தாமநெடுநாளாக எதிர்பார்த்ததுகொண் டிருக்கும இராவணவதம விரைவில நிறைவேறுமென்ற களிப்பினால் ராம தூதனான அனுமானமீது பூமாரி பொழிந்தன ரென்பதாம. பின்னிரண்டடி- கவிக்கூற்று. பி - ம்.—[1]உவந்தனாசொரிந்தார். [2]அன்று.[3] நிலையினி. (உ)

ங. இதுமுதல் இருபத்தேழு கவிகள் - அரக்கியர் நெருக்க, சீதை மெலிந்து வருந்தியிருத்தலைக் கூறும்.

வன்ம ருங்குள்வா ளரக்கியர் நெருக்க[1]வங் கிருந்தார்
கன்ம ருங்கெழுந் தென்றுமோ துளிவரக் காணா
நன்ம ருந்துபோ னலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல வேறுள வங்கமு மெலிந்தாள்.

(இ - ள்.) வல மருங்குல் - வலிய இடையையுடைய, வாள் அரக்கியர்- வாளேந்திய ராக்ஷசிகள்பலர், அங்கு இருந்தார் - அவ்விடத்தில் (சீதையைச சுற்றிலும்) இருந்தவர்களாய, நெருங்க - அச்சமுறுத்திவருத்த, (அதனால்), கல் மருங்கு எழுந்து - கல்லினிடையே தோன்றி, என்றும ஓர் துளிவர காணா - எப்பொழுதும ஒருதுளி நீராயினும தன்மேல் துளிக்கப்பெறாத, நல மருந்துபோல் - நல்ல சஞ்சீவிமருந்து போல, நலன் அற - அழகுகெட, உணங்கிய-வாடிய, நங்கை - சீதை, மெல் மருங்குலபோல் - மெல்லிய (தனது) இடைபோல, வேறு உள அங்கமும - வேறாகவுள்ள (கைகால முதலிய) அவயவங்களும, மெலிந்தாள் - (மிக) இளைத்தாள்; (எ - று.)

சீதாபிராட்டி அரக்கியர்களினிடையே நெருங்குண்டு, பலமாதங்களா யும் தனது நாயகனாகிய இராமபிரானது கருணையைப் பெறாமல் மிகவும் மெலிந்து கிடந்தன ளென்பதாம. முன்பு சீதாபிராட்டிக்கு மருங்குலில்மாத திரம் இருந்த மெலிவு, இராமபிரானைப பிரிந்துள்ள இந்நிலையில பருத்திருந்த மற்றை யவயவங்களிலும பரவுவதாயிற்றென, ஒரு சமத்காரந தோன்ற கூறியவாறு.

மணலில் முளைத்த மருந்தாயின் மழைநீர்த்துளியும் வளர்த்தற்குச சொரியும் நீர்த்துளியுஞ் சிறிதுமபெறாதாயினும நிலத்தின் தணமையாற் சற்றேதளிர்த்தல் கூடுமாதலால், அதனை ஒழித்தற்கு 'கன்மருங்கெழுந்து' என்றார். மூலிகைக்குக் கல்போலப் பிராட்டிக்கு அரக்கியா நிரம்பிய இலங்கை

தளிர்த்ததற்கு ஏற்ற இடமன றென்றபடி, மருந்து எப்பொழுதும மழைநீரத துளியையே எதிர்பாரததிருத்தல்போலச சானகி அலலுமபகலும அனவரதமும் இராகவபெருமானது கருணைமழையின் துளியினது வருகையையே பார்த்திருககின்றன ளென்க. அவவாறு பாரததிருநதவள் இதுகாறும் வரக் காணாமையால் வேறுஉயயு மாறினறி உணரகிலள். சீதைக்குச சிறைக் காவல்செய்பவராதலால், 'வாளரககியா' எனறு ஆயுதங்கூறினார்; இனி, வாள்-சாதியடை யாகவுமாம் பி - ம்·—[1]ஆங்கிருந்தாள். (ரு)

ச. துயிலெனக் கணக ளிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெயயாள்
மயிலி யறகுயின் மழலையாண் மானிளம் பேடை
யயிலெ யிறறுவெம புலிக்[1]குழாத் தகபபட்ட தன்னாள்.

(இ - ள்.) மயில் இயல் - மயில்போன்ற சாயலையும, குயில மழலையாள - குயிலின் குரலபோன்ற [இனிய] குதலைசசொலலையும உடையவளாகிய பிராட்டி,—துயில்என கணகள முகிழ்ததலும் இமைததலும் துறந்தாள - தூக்கமென்று கண்களை மூடுதலையும விழிததலையும விட்டவளும், (உறக்கமறறவளும்),—வெயிலிடை தந்த-வெயிலிலே ஏற்றிவைதத, விளககு என - தீபம் போல, ஒளி இலா - பிரகாசமில்லாத, மெய்யாள-உடம்பையுடையவளுமாகி,—அயில் எயிறு - கூர்மையான பற்களையுடைய, வெம - கொடிய, புலிகுழாதது-புலிகளின கூட்டததினிடையில, அகப்பட்டது - அகபபட்டுக கொணடதாகிய, மான் இளபேடை-ஒரு இளைய பெணமானை, அன்னாள் - ஒததாள் (எ - று.)

சீதாபிராட்டி, இராமபிரானைவிட்டுப் பிரிநததனா லுணடான விரக வேதனையினாற சிறிதுங கணணுறக்கமினறி, நீராடுதல்முதலியன இல்லாமையால் மேனி நிறம் மழுங்கி அரககியாகூட்டததில் அகபபட்டுத் துடிததாளென்க. அயில - வேலபோனற என்றுமாம. புலிக்குழாம - அரக்கிமாரகூட்டத்துக்கும, மான்பேடை-சானகிககும் உவமம். பி-ம்:—[1]குழாத்திடை. ()

ரு. விழுதல் விம்முதன் மெய்யுற வெதுமபுதல் வெருவ
லெழுத லேங்குத லிரங்குத லிராமனை யெண்ணித
தொழுதல் சோருத றுளங்குத றுயருழந் துயிர்த்த
லழுத லன்றிமற் [1]றயலொன்றுஞ் செய்குவ தறியாள்.

(இ-ள்.) (சீதாபிராட்டி), இராமனை எணணி-ஸ்ரீராமபிரானை நினைதது, விழுதல - கீழே விழுதலும, விமமுதல் - வாய்விடடுப் புலம்புதலும, மெய் உற வெதும்புதல் - உடமபு மிகவும வெணமைகொளளுதலும, வெருவல் - அஞ்சுதலும, எழுதல் - எழுந்திருத்தலும், ஏங்குதல் - மனங்கலங்குதலும், இரங்குதல - பரிததிததலும, தொழுதல - வணங்குதலும, சோருதல் - தளர்தலும், துளங்குதல் - நடுங்குதலும, துயா உழந்து - துன்பத்தால வருந்தி,

உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதலும், அழுதல் - கண்ணீர்விட்டு அழுதலும், அன்றி-ஆகிய இவையேயல்லாமல், மற்று அயல் ஒன்றும் - வேறேயாதொன்றும், செய்குவது - செய்யத்தக்கதொழிலை, அறியாள் - அறியாதவளானாள்.

சீதாபிராட்டி இராமனைப்பிரிந்தவருத்ததால் கீழ்விழுதல் விம்முதல முதலியன செயவாளாயின ளென்பதாம்; இங்கே பிராட்டியினிடத்து விழுதல்முதலிய செயல்கள் தாமரைநூற்றிதழைக் குத்துமமுறையால் ஏககாலத்தில் நிகழ்ந்தனவாகக கூறியது, கூட்டவணியின் பாற்படும். இதனை வடநூலார் ஸமுச்சயாலங காரமென்பா. தொழுதல்-கைகூப்புதல், திக்குநோக்கித் தண்டனிடுதல். பி - ம்:—[1]ஒன்று. (ரு)

சு. தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப்
புழைத்த போலநீ ரிரந்தரம் பொழிகின்ற பொலிவா
[1]லிழைக்கு நுண்ணிய மருங்குலா ளிணைநெடுங் கண்கள்
மழைக்க ணென்பது காரணக் குறியென வகுத்தாள்.

(இ - ள்.) இழைகளும் நுண்ணிய மருங்குலாள் - பஞ்சின் நூலிழையினும் நுட்பமாகிய [மிகச்சிறுத்த] இடையினையுடையபிராட்டி,—இணை நெடு கண்கள் - (தனது) ஒன்றோடொன்று ஒத்த கணக ளிரண்டினையும், மழை கண் என்பது - 'மழைக்கண' என்று சொல்லுவது,—நீர் அருவி - கணணீரவெள்ளங்கள், தழைத்த - ஓங்கிவளாந்த, பொன் - பொன்னிறமாகிய தேமலையுடைய, முலை தடம் - தனங்களாகிய மலைகளை, கடந்து - தாண்டிபபெருகி, போய் - ஓடி, தாழ - கீழே விழுமபடி, (அவ்வெள்ளங்களை), புழைத்த போல - துளையினின்று வழிவன போல, நிரந்தரம - இடைவிடாமல் [எப்பொழுதும்], பொழிகின்ற - சொரிகின்ற, பொலிவால் - மிகுதியினாலே (வந்த), காரணக்குறி என - காரணப்பெயரென்று, வகுத்தாள - தெரிவித்தாள்; (எ - று.)

மழைபோலமிகக்குளிர்ச்சியான இயல்புடைமையால் மகளிர்கணகளெல்லாம் 'மழைக்கண' என்று வழங்கப்படும்; பிராட்டியின் கணகளோஎப்பொழுதும் இடையறாது நீரமழையைப் பொழிதலால் 'மழைககண' என்று சொல்லப்படும்படி யாயின வென்றபடி. மழைபோலக்குளிரந்திருததலால் மகளிரிற் சோந்த சீதாபிராட்டியின் கணகட்கும வந்த மழைக்கணென்ற பெயாக்குக கண்ணீர மழைபொழிவதனால் வந்த பெயரென்று வேறொருவகையாகக் காரணங காட்டியது - பிரிநிலைநவிற்சியணியாகும்; ஒருகாரணத்தால் வந்த பெயாககு வேறொருகாரணப்பொருள் கறபிததுக்கூறுவது - இதனிலககணம்; இதனை, வடநூலா நிருகதியென்பர். பொன் - அதன்நிறமான சுணங்குககு உவமவாகுபெயா. அருவியெனறதறகு ஏற்ப, தடம் - மலையென்று கொள்ளப்பட்டது. கணணீரருவி இரணடாதலால், 'புழைத்தபோல' என உபமானததையுமபன்மையாகக கூறினார். 'இணைக்கணகள்' என்றதனால், பிராட்

டியின் கண்களுக்கு வேறு உவமைகிடையா தென்றபடி. காரணக்குறி - ஒரு காரணத்தால்வரும பெயர்; பி - ம்:—[1]இழைதத. (சு)

எ. அரிய மஞ்சினோ டஞ்சின முதலிவை யதிகங்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடலபுகக் கலுழ்வா
ளுரிய காதலி னொருவரோ டொருவரை யுலகிற
[1]பிரிவெ னுநதுய ருருவுகொண் டாலன பிணியாள்.

(இ - ள்.) உலகில - உலகததில, உரியகாதலின் - தக்க அன்பினை யுடைய, ஒருவரோடு ஒருவரை - தலைமகனையுந் தலைமகளையும், பிரிவுஎனும்- (ஒருவர் ஒருவரைவிட்டுப்) பிரிதலென்கிற, துயா - துன்பம் [விரகவேதனை], உருவு கொண்டால் அன - ஒருவடிவதததை எடுத்துவந்து காணப்பட்டாற் போன்ற, பிணியாள் - விரகநோயையுடையாளான சீதாபிராட்டி, அரிய - அருமையான, மஞ்சினோடு - மேகமும, அஞ்ஞனம் - மையும், முதல் - முதலிய, அதிகம கரிய - மிகக் கறுப்பநிறமுடையனவாகிய, இவை - இப பொருளகளை, காணடலும - பார்த்தமாததிரததில், (இராமபிரானது திருமேனி நினைப்புககுவருவதனால்), கணணின் நீர கடல் புக - கணகளினின்றும் (தாரையாகப் பெருகுகிற) நீர (ஆறாகி ஓடிக்) கடலைச சேரும்படி, கலுழ்வாள் - அழுவாள்; (எ - று.)

இராமபிரானைப் பிரிந்த சீதாபிராட்டி அத்தலைவனது உருவததுக்குப் போலியான காளமேகம அஞ்சனம் முதலிய பொருள்களைக கணடபோது தன் கணவனது நினைப்புமிகவே, அப்பிரானைப பெறமுடியாததுபற்றி மிகவும் கண்ணீர் பெருக மிககவிரகவேதனை யடைந்தன ளென்பதாம். சீதாபிராட்டி தன்னைக் கணடவர் 'இவள்பிரிவுததுயாகொணடு வருந்துகின்றாள்' என்று உணருமாறுதோன்றுகின்றாளென்பது, பின்னிரணடடியின்கருததது. இராகவனது திருமேனிக்கு ஒப்பாகசசொலலததக்க பேறுபெறறமைபற்றி, 'அரிய மஞ்சு' என்றார. 'அரிய' என்பதனை அஞ்சனததோடுங கூட்டுக. பி - ம்:—[1]பிரிவருந்துயா. (எ)

௮. துப்பி னாற[1]செய்த கைகொடு கால்பெற்ற துளிமஞ்
சொப்பி னன்றனை நினைதொறு நெடுங்கண்க ளுகுத்த
வபபி னனைந் தருந்துய ருயிர்பபுடை யாககை
வெப்பி னாறபுலர்ந் தொருநிலையுறுதமென் றுகிலாள்.

(இ - ள்.) (பின்னுஞ் சீதாபிராட்டி),—துப்பினால் செய்த-பவழததாலாகிய, கை கொடு - திருககைகளையுடைததாய், கால் பெற்ற - (பவழததாலாகிய)திருவடிகளையும் உடைததான, துளி மஞ்சு - மழைததுளிகளைப்பெய்கிற காளமேகத்தை, ஒப்பினன்தனை - தனக்கு உபமானமாகவுடைய ஸ்ரீராமனை, நினைதொறும் - எணணும் பொழுதெல்லாம், நெடு கண்கள் - நீணட திருக்கணகள், உகுத்த- சிநதின, அபபினால - நீரப்பெருகினால், நனைந்து - ஈரமாகி, (உடனே), அருதுயா - (பொறுததற்கு) அரிய துன்பத்தினையும்,

உயிர்ப்பு - (அத்துன்பத்தாலாகிய) பெருமூசசையும், உடை - உடைய, யாக கை - தன்உடமபினது, வெப்பினுல் - வெப்பத்தால், புலாநது - உலாந்து, (இவ்வாறு அடிககடி நனைதலும் உலர்தலுமாயிருத்தலால்), ஒரு நிலை உறுத - (எப்பொழுதும) ஒரு தன்மையாயிராத, மெல் துகிலாள்-மெல்லிய ஆடையை யுடையாள; (எ - று.)

இராமபிரானது பிரிவினுற், சீதாபிராடடிககுத துயாக்கணணீரும் வெப பமும் தோன்றியதை, இதனுற் கூறுகின்றுரென்க. சீதாபிராட்டியினது கண்களினின்று துயககணணீர் ஆறுய்ப்பெருகுவதனுல் அநதப்பிராட்டி யினது ஆடை நனைவதும், அப்பிராட்டியின் திருமேனிவெப்பத்தால் நனைநத அந்த ஆடை உடனே உலாவது மாயிறறென்பதாம். இதனுல், சீதாபிராட்டி இலஙகையிலிருநதபோது கணணீரில தினந்தோறும மூழ்கு வாளாயினளென்று கூறியவாறுயிறறு சீதாபிராட்டியின் ஆடைக்குக கண் ணீரினுல் நனைவதும், திருமேனியின் வெப்பத்தால் உடனே உலாந்து முன் போலாவதுமாகிய செயலைக கூறியது - தொல்லுருப்பெறலணியின் பாற படும; ஒருபொருள் தனது குணத்தை யிழநது மீணடும் அதனைப்பெறு வதைக கூறுவது - இவ்வணியினிலக்கணம; வடநூலா இதனை 'பூாவரூபம்' என்பா. தொழிலும பணபிலடஙகும. கைகால்களின செம்மைநிறத்தின் மிகுதிபறறி, 'துப்பினுறசெயத' என்றார். முதலடி - இப்போருளுவமை. மேகவுவமை கருநிறமுடைமைககும, கைமமாறுகருதாது உதவுநகொடைக்கு மென்க. 'துளிமஞ்சு' என்றது, திருககடைககணகளினின்று ஒழுகுகின்ற கருணை மழைத்துளியைக் கருதி. அப் - வடசொல். பி - ம்:—[1]சில. (அ)

கூ. அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதிவானவன் குலததையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வருமவரு மென்பதோ துணிவாற்
கருதி மாதிர மனைத்தையு மளக்கின்ற கண்ணுள்.

(இ - ள்.) 'போகவோ - (யான்) உயிரீஙகுவேனுகவோவென்றுல், விதி வலி கடத்தல் - ஊழ்வினையின வலிமையை மீறுதல், அரிது - அருமை யானது [கூடாதகாரியமாம்]', என்று - என்று எண்ணி, அஞ்சி-(உயிரவிடுதற் குப்) பயந்து [அரிதிறபிழைததிருநது]—'சுருதி நாயகன் - வேதஙகளுககுத் தலைவனுகிய ஸ்ரீராமன், (எளிய என்பொருட்டு இஙகு வாரானுயினும்), பரிதி வானவன குலத்தையும - (தான் அவதரிதத) சூரியபகவானது திருககுலத தின் மேன்மையையும், பழிபையும - (அக்குலத்துககு இதுவரையுமின்றி இப்பொழுதுநேரநத இப்பெரிய) பழியின் கீழ்மையையும், பாரா - ஆராய்ந்து பாரதது, (அதை நீகதவாயினும்), வரும் வரும் - விரைவிலேயே வருவா', என்பது ஓர் துணிவால் - என்பதொரு நிசசயததினுல், கருதி - (அவ்வருகை யையே) நினைதது, மாதிரம அனைததையும அளககின்ற - எல்லாத்திககுக்களை யும் அளாவிப் பாரகின்ற, கணணுள் - திருக்கணகளையுடையாள்; (எ - று.)

'உயிர்விடுவதென்பது விதிமாண்டவர்க்கே இயலுமாதலால், என்போலியர்க்கு அதுவும் இயலாத காரியமே' என்று உயிர்துறததற்கும் அஞ்சியவளாய், சீதாபிராட்டி, 'எனது கணவனுர் எனனை மீட்கவேணும்' என்று முயற்சி கொண்டு இவ்விடததிற்கு வராவிட்டாலும், 'தன்மனைவியையும் காக்கமுடியாத ஒருத்தன் சூரியகுலத்திற் பிறநதுளளானென்று பிறா ஏசுவரென்பதற்காகவாவது இநகே வரககூடும்' என்ற உறுதியான எணணத்திலுல், எததிசையாக அப்பிரான் வரககூடுமோ என்று அப்பிரானது வருகையையே நாற்புறத்திலும் எதிர்பாரதது நிற்பவளாயின ளென்பதாம். விதியாவது - முற்பிறப்புககளிற் செய்த நலவினை தீவினைகளின் பயன்களைச செய்த உயிரே பிற்பிறப்பில் அடைந்து அனுபவிகக வேண்டிய நியதி. சுருதிநாயக னென்பதற்கு - வேதநகளாற் புகழப்படுபவனென்றும், வேதநகளை ஆதியில் வெளியிட்டவ னென்றுங கருத்துககொள்க. வரும்வரும், அடுக்கு - விரைவும் துணிவும் பறறியது. (௯)

௧0. கமையி னுடிரு முகததயல் கதுப்புறக்[1]கவ்விச
சுமையு டைக்[2]கற்றை நிலத்திடைக் கிடந்ததூ மதியை
யமைய வாயிறபெய் துமிழ்கின்ற வயிலெயிற ரவிற்
குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள்.

(இ - ள்.) கமையினுள்-பொறுமையையுடையவள்; நிலததிடை கிடந்த-பூமியிற்பொருந்திய, தூ மதியை - பரிசுத்தமான சந்திரனை, அமைய - நன்ருக அடநகும்படி, வாயில் பெய்து - வாயினுள்ளேகொணடு, உமிழ்கின்ற - மீண்டும வெளிவிடுகின்ற, அயில்எயிறு அரவின்-கூரமையானபற்களையுடைய (இராகு வென்னுங கரும்) பாம்புபோல, திரு முகத்து அயல் - அழகிய முகததின் பகககளில், கதுப்பு - கபோலநகளை, உற - நன்ருக, கவ்வி-பற்றி, சுமை உடை - பாரததையுடைய, கற்றை - தொகுதியான, குமை உற திரண்டு - நெருக்கமாக ஒன்றுகூடி, ஒரு சடை ஆகிய - ஒரே சடையாகத் திரிந்த, குழலாள் - கூந்தலை யுடையாள்; (எ - று.)

முகம்மாத்திரமதெரியக் கதுப்புமுதல மயிரதிரள்நிரமபி ஒற்றைப்பின்னலாகத் தொநகுஞ் சீதாபிராட்டியின் சடைககூநதல் - சந்திரனைத தனது வாயிற் பெய்துமீணடும் உமிழ்கின்ற இராகுவைப்போலு மென்று குறித்தார்; தன்மைத் தற்குறிப்பேற்றவணி. திரணடு சடையாகிய கற்றை குழலாள் என இயையும. கமை - க்ஷமா என்னும் வடமொழியின் திரிபு. திரு - கண்டாரால் விரும்பப்படுந தன்மை; என்றது, அழகு. முகததுக்கு மதி-குளிராசசி அழகு கண்டவர் கணகளைக களிப்பித்தல ஒளி முதலியவற்ருலும், கூந்தலுக்கு ராகு - நீட்சி கருமைகளாலும உவமை. மதி - கலைநிறைந்த பூர்ணசந்திரன். மதிகருத தூயமை - மறுவினமை. நிலததிடைப் பொருந்தியதொரு களநகமிலலாதபூரணசநதிரன்-சீதையின் திருமுகததுக்கு இல்பொருளுவமை. கூந்தல வாரி முடிதது அலநகரிததல் இலலாமையால, சடையாயிற்று. பி - ம்:—[1]கதுவி. [2]கறை நிறுததிடை. (௧0)

கக ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யா
டேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
வோவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்.

(இ - ள்.) புனைவது-(தான் பழமையாக) உடுத்துக கொண்டிருப்பதாகிய, ஆவி அம் துகில் ஒன்று அன்றி - புகைபோல மெல்லியதாகிய அழகிய ஆடை ஒன்றையேயல்லாமல், வேறு அறியாள் - வேறொரு ஆடையைக கண்டறியாதவள்; தூவி - சிறகுகளையுடைய, அன்னம் - அன்னப்பறவைகள் (தகுகுதறகு உரிய), மெல் புனலிடை - மென்மையாகிய தண்ணீரில், தோய கிலா - ஸ்நானஞ் செயயாத, மெய்யாள் - உடம்பையுடையவள்; (ஆதலால்), அனங்க வேள் - மனமதன், தெள் கடல் - தெளிவாகிய பாற்கடலினின்று தோன்றின, தேவு - தெய்வத தன்மையையுடைய, அமிழ்துகொண்டு - அமி ருததால், செய்த - தீட்டிய, ஓவியம் - சித்திரப்பிரதிமை, புகை உண்டது- புகையேறப்பெற்றதை, ஒக்கின்ற - ஒததிருககிற, உருவாள் - ரூபததை யுடையவள்; (எ - று)

சீதாபிராட்டி அரையிலுடுத்த ஒறறைத துகிலோடும பலநாளாகத தண ணீரில் மூழ்காமையால் மாசுபடிந்த மேனியோடும அநத அசோகவனிகையில் தஙகியிருநதன ளென்பதாம. இபபிராட்டியை மன்மதன் அமுதுகொணடு செய்த ஓவியமென்று உவமைகூறியது - கணடவா கணணையும கருத்தையும் கவரும்மாதருடைய கட்டழகு கொணடு ஆடவர்ககுக காதல்விளைக்குமவன் அவனேயாதலா லென்க. 'ஒனறன்றி' என்றதனால் - மேலாடையாகிய உத் தரீயததில் தனது ஆபரணஙகளை முடிந்து சுககிரீவன் முதலிய வானராகளது முன்னிலையிற் போகட்டதையும், 'வேற்றியாள்' என்றதனால் - இராவணன் விலையுயாந்த பல ஆடையாபரணஙகளைக் கொடுக்கக காததிருந்தனளாயினும் அவற்றுளொன்றையும விரும்பினளில்லை யென்பதையும விளககினார். அமி ருததத்துக்குத் தெய்வத்தன்மை - கணணுககினியதாயிருத்தலும், யாவராலும் விரும்பப்படுதலும், உணடவரது மரணத்தை யொழித்தலும், தன்னை நுகாந் தவா வேறொன்றை நுகராமல் தடுக்குந்தன்மையும், கிடைததறகருமையும, மிக இனிய சுவையுடைமையும் முதலாயின. குமரவேளை விலககுதற்கு, அனஙகவேள் எனப்பட்டது வேள - ஆடவர்க்கும் மகளிர்க்கும் ஒருவாக் கொருவர் விருபபதததை விளைப்பவன்; அன்றிகசே, எல்லாராலும் விரும்பத் தக்க கட்டழகுடையவன்: [வேட்டல் - விரும்புதல்.] இது, காமன் என்னும் வடசொல்லின் மொழிபெயாப்பு. ஏ - தேறறம். (கக)

கஉ. கண்டி லன்கொலா மிளவலுங் கனைகட னடுவ
ணுண்டி லங்கையென் றுணாநதில ருலகெலா மொறுப்பான்
[1]கொண்டி ருந்தமை யறிகில ராமெனக் குழையாப்
புண்டி றநததி னெரிதுழைந் தாலெனப் புகைவாள.

(இ - ள்.) 'இளவலும - இலக்குமணனும், கண்டிலன் கொல் ஆம் - (மானின்பின்னே தொடர்ந்துசென்ற தன் தமையனுரைக) கண்டானில்லை போலும்; (கண்டனனாயினும்), உலகு எலாம் ஒறுப்பான-எல்லாவுயிர்களையும் வருத்திவருகிற இராவணன், கொண்டு இருந்தமை - (என்னை) எடுத்துக் கொண்டு போனதை, அறிகிலர் ஆம் (இருவரும்) தெரிந்திலரானாலும்;(அறிந்தனராயினும்), கனை கடல் நடுவண - ஒலிக்கின்ற கடலின் இடையிலே, இலங்கை உண்டு என்று - லங்காநகரம் உளதென்று, உணர்ந்திலா-(அவ்விரு வரும்) அறிந்திலர் போலும்'; என - என்று எண்ணி, குழையா-வருந்தி, புண திறந்ததின் எரிநுழைந்தால் என - வாயவிட்ட புண்ணின் துளையிற கனல் நுழைந்தாற்போல, புகைவாள - மேன்மேல் மிக வருந்துவாள்; (எ - று.)

'இலக்குமணன் நான இருந்த இடத்தைவிட்டு இராமபிரானுள்ள விடத்தை நாடிச்சென்றனனே, அவன அப்பிரானை ஒருகால் காணவில்லையோ? கண்டானாயின், பிறகு, இருவரும் சேர்ந்து என்னைத்தேடித திரிந்து பார்க்கக்கூடும; அங்ஙனம் தேடித்திரிந்தால், இராவணன் என்னைக் கவர்ந்துபோன செய்தி சடாயுவின் மூலமாக அவர்கட்குத் தெரிந்திருக்குமே. அங்ஙனம் அறிந்திருப்பின் யான் இருக்கின்ற இவ்விடத்தைச்சேர்ந்து அவர்கள் என்னை மீட்கவராமலிருப்பாரோ? இராவணன் என்னைக்கவர்ந்து போன செய்தியை யுணர்ந்தாராயினும் இராவணன் என்னை வைத்திருப்பது கடலினிடையேயுள்ள இலங்கையென்று ஒருகால் உணரவில்லையோ? அங்ஙனம் உணராமலிருப்பின் யான் என்செய்வது?' என்று இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுச் சீதாபிராட்டி திறந்தபுண்ணில் எரிகொள்ளி நுழைந்தாற்போல மிகவருந்துவாளாயின ளென்பதாம். கொல், ஆம் என்பவை - ஐயப்பொருளோடு விகற்பப்பொருளையும உணர்த்தின, பி-ம்.—[1]கொண்டிறந்தமை. (கஉ)

கங. மாண்டு போயின னெருவைகட் கரசன்மன[1]மற்றோர்
யாண்ட யெனனிலை யறிவுறுப் பார்களிப பிறபபிற
காண்ட லோவரி தென்[2]றெனறு விம்முறுங் கலங்கு
மீண்டு மீண்டுபுக கெரி[3]நுழைந் தாலென மெலிவாள.

(இ - ள்.) 'எருவைகட்கு அரசன் - (என்னை இராவணன் எடுத்துவந்ததைப்பார்த்த) கழுகுகளுக்குத் தலைவராகிய ஜடாயு, மாண்டுபோயினன் மன்- இறந்து போயவிட்டாரோபோலும்; மற்றோர் - அவரொழிந்த மற்றையோர், என நிலை - எனது நிலைமையை [இராவணன் எடுத்து வந்ததை], யாண்டை- எவ்வாறு, அறிவுறபபார்கள - (இராமலட்சுமணர்களுக்குத்) தெரிவிக்கமாட்டுவார்கள்? (தெரிவிபபவர் பிறரெவரும இல்லையாதலால்), இ பிறப்பில் - இந்த ஜன்மத்தில், காண்டலோ - (அவர்கள என்னைக) காணுதலோ, அரிது- அருமையானது,'. என்று என்று - என்று பலவாறுநினைத்து, விம்முறும - அழுவாள்; கலங்கும் - கலங்குவாள்; மீண்டு மீண்டு - மறுபடியும் மறுபடியும்,

எரி புக்கு நுழைந்தால் என - கனல் (புணணில்) நுழைந்துபுகுந்தாற்போல, மெலிவாள் - வருந்துவாள; (எ - று.)

ஜடாயு - அருணனது புதல்வர்: சம்பாதியின் தமபி. இவர் தசரத சககரவர்த்திககுப் பலவுதவிகளசெய்து உயிரதோழராகித் தமையனுயிருககும் முறை பற்றி, இவருககு வைஷ்ணவசமபிரதாயததில் 'பெரியவுடையா' என்று திருநாமம. இராவணன் சீதாபிராட்டியை எடுததுககொண்டு வந்த பொழுது இவா கணடு அவனை தடுததுப் போரசெய்து அவன் தோமுதலிய வற்றை அழித்துவிட்டபின் அவனுல் சிறகறுக்கப்பட்டுக் கீழ்விழுந்தனராதலால், இராமலட்சுமணர்களைக காணபதற்கு முன்னமே மாண்டுபோயினனோ?' என்று சீதாபிராட்டி ஐயமுறறு, 'அவன மாண்டிருப்பின் என் நிலைமையை அவாகட்குத்தெளிய எடுத்துசசொல்லக்கூடியவர்கள் வேறொருத்தரு மில்லையே! அஙகனமாயின, அவர்கள் நான் இஙகிருப்பதையுணர்ந்து என்னைக்கணடு மீட்குமாறு வருவது எவ்வாறு இயலும?' என்று கலங்கிப் புலம்பி மெலிவாளாயின ளென்பதாம. மன் என்னும இடைசசொல் - இஙகே ஐயமுணர்தலிற்று. யாணடை - ஐகாரசசாரியைபெறறுவந்த குற்றியலுகரம. காணடல் என்பதறகு - நான் அவர்களைககாணுதல் என்றும பொருள்கொள்க. ஓ - உயரவு சிறபபு. பி - ம்:—[1]மற்றுளரோ. [2]என்றுள்ளுங். [3]நுழைவாளென.

கச. என்னைநாயக னிளவலையெண்ணலாவினையேன்
சொன்னவார்த்தைகேடடறிவிலளெனத்துறந்தானோ
முன்னையூழ்வினை முடிந்ததோவென்றென்று முறையாற்
பன்னவாய்புலர்ந்துணர்வுதேயந்தாருயிர்பதைபபாள்.

(இ - ள்.) 'வினையேன் - தீவினையையுடைய யான, இளவலை - இளைய பெருமாளை, எணணலா - (சிறிதும்) மதியாமல், சொன்ன—, வார்ததை - கடுஞ்சொற்களை, கேட்டு - (அவாசொலலச) செவியுற்று, அறிவு இலள் என - (இவள்) அறிவில்லாதவளென்று எண்ணி, நாயகன் - இராமபிரான், என்னை—, துறந்தானோ - வெறுததுவிட்டாரோ? (அல்லது), முன்னை ஊழ்வினை முடிந்ததோ - முற்பிறபபிற்செய்த கருமவசததினுல் (இவ்வாறு) நேர்ந்ததோ!' என்று என்று - என்று இப்படிப் பலவாறு, முறையால் - ஒன்றன்பின் ஒன்றாக, பன்ன சொல்வதனுல், வாயபுலர்ந்து - நா வறண்டு, உணாவு தேயந்து - அறிவு சோர்ந்து, ஆர் உயிரபதைப்பாள் - அரிய உயிா துடிப்பாள; (எ - று.)

எண்ணலா வினையேன் - எணணி அளவிடுதறகரிய தீவினையுடையேனென்றுமாம். 'சொன்னவாரததை' என்றது - இராமனம்பினு லெயயப்பட்டு இறந்துபோந்தருணததில்' ஹாஸீதா! லக்ஷ்மணு' என்று கூவிய மாயமானின் குரலைககேட்டுச சீதை தன் நாயகனது குரலென்று நினைதது இளையபெருமாளசொன்ன தேறுதலைக கேளாமல அவரைத் தீயநினைப்புடையராகஎணணி, "குறறம் வீந்த குணத்தி னெஙகோமகன், மறறை வாளரக்கன் புரிமாயையா, லிற்று வீந்தன னென்னவு மென்னயல், நிற்றியோ வினையோ

யொருநீ'' என்றும், ''நின்றநின்னிலையி து நெறியிற்றன்று'' என்றும், ''ஒரு பகல் பழகினு ருயிரை யீவரால், பெருமக நிலைவுறுபெற்றி கேட்டுநீ, வெருவலை நின்றனை வேறென் யானினி, எரியிடை வீழ்ந்துயி ரிறப்ப லீண்டு'' என்றுங் கூறியவற்றை. நான் தனது தமியாகிய இலக்குமணனைத் தீச சொற்கூறியது கேட்டு, 'இவ்வாறு அறிவிலி யானவனை நாம இனிக கைவிடுவதே நலம்' என்று எனது கணவன் துணிந்தானோ? இதுவோதான் என்விதி? என்று தனக்குநேரந்த வருததத்தைச சொலலி நாவறணடு அறிவுசேர்ந்து, சீதாபிராட்டி உயிரபதைப்பாளாயின ளெனபதாம். ஓ - ஐயம். (கச)

கரு. அருந்துமெலலடகாரிடவருந்துமென்றழுங்கும்
விருந்துகண்டபோதென்னுறுமோவென்றுவிம்மு
மருந்துமுண்டுகொலயான்கொண்டநோய்க்கென்றுமயங்கு
மிருந்தமாநிலஞ்செல்லரித[1]திடவுமாண்டெழாதாள்.

(இ - ள்.) அருந்தும் - (காட்டில்) உண்ணப்படுகிற, மெல் அடகு-மென்மையான இலையுணவு முதலியவற்றை, ஆர் இட - யாவா எடுத்துப் பரிமாற, அருந்தும - (இராமபிரான்) அமுது செயவா,' என்று - என்றுஎண்ணி, அழுங்கும் - வருந்துவாள்; விருந்து கண்டபோது - விருந்தினரை வரககண்ட பொழுது, என் உறுமோ - (உபசரிப்பாரில்லையேயென்று) என்ன துன்பப் படுவாரோ? என்று - எனறுஎணணி, விம்மும் - அழுவாள்; இருந்த மாநிலம்- தானிருந்த பெரிய இடம் முழுவதும், செல் அரித்திடவும-கறையான பிடித்து அரிககவும், ஆண்டு எழாதாள - அவ்விடத்தை விட்டு எழுந்திராதவளாய், யான் கொண்ட நோய்ககு - நான் கொணடிருககிற மனோவியாதிககு, மருந்தும் உண்டு கொல் - தீரககும்மருந்து உளதாமோ? என்று - என்று எணணி, மயங்கும் - மயங்குவாள்; (எ - று.)

உணணும்போது பரிமாறுவதற்கு மனைவியில்லாமையால் 'மெல்லடகு ஆர்இடஅருந்தும்' எனறும், மனைவியோடு இலலறததில் வாழ்பவனே ''துறந்தார்ககுந் துவ்வாதவர்க்கும * * * இல்வாழ்வானென்பான் துணை'' என்றபடி விருந்தினராகவரும் துறந்தா முதலியோரை உபசரிக்கததககவ னாதலால், மனைவியை யிழந்த நிலையிலிருககிற இராமபிரானுக்கு விருந்தினரை உபசரித்தல் இயலாமை பறறி 'விருந்துகண்டபோ தென்னுறுமோ' என்றும சீதாபிராட்டி கவல்பவ ளாயின ளென்க. இராவணன் வைத்த விடத்தை விட்டுச சலியாமல் அங்குத் தானே நிலையாக நிறபவள சீதாபிராட்டியெனபதை விளக்க, 'இருந்த மாநிலஞ் செல்லெரித்திடவுமாண்டெழாதாள்' என்றார்; இது, உலகவழக்குநவிற்சியணியின் பாற்படுமெ; இதனை, வடநூலா ''லோகோகதி'' எனபா. அடகு - காய் கனி கிழங்கு முதலிய மற்றை உணவுக்கும் உபலட்சணம். இவை, வனததில் வதியும் முனிவர்ககு உரிய உணவு. மெல் அடகு - பணபுததொகை; வினைதொகையாய், மெல்லுதற்குஉரிய அடகு என்றுமாம். என் உறுமோ - என்னை நினைப்பாரோ? என்றுமாம்,

எழாதாள் - முற்றெச்சம். வருந்தும், உம் - உயர்வு சிறப்பு. கொல் - ஐயம். பி - ம்:—[1]எழவும். (கரு)

கசு. வன்கண் வஞ்சனை யரக்கரித் துணைப்பகல் வையார்
தின்ப ரென்னினிச் செயத்தக்க [1]தென்றுதீர்ந் தாளோ
தன்கு லப்பொறை தன்பொறை யெனத்தணிந் தாளோ
வென்கொ[2]லெண்ணுவே னென்னுமங் கிராப்பக லில்லாள்.

(இ - ள்.) 'வன்கண் - கொடுந்தன்மையும், வஞ்சனை - வஞ்சிததலையுமுடைய, அரக்கர் - இராட்சசர், இ துணை பகல் - இத்தனைநாள், வையார் - (சீதையை உயிரோடு) வைத்திருக்கமாட்டார், தின்பர் - (கொன்று) தின்றேயிருப்பர்; இனிசெய தக்கது என் - (நாம்) இனிமேற் செய்யத்தக்கது யாது? [ஒன்றுமில்லை],' என்று - என்று எணணி, தீர்ந்தாளோ-(இராமபிரான்) என்னைத் தேடுவதை விட்டாரோ? (அன்றி), தன்குலம் பொறை - தான் பிறந்த சூரியகுலத்தாருக்கு இயல்பாயுள்ள பொறுமை, தன்பொறை - தனக்கும் வகிககதத்கதொரு குணமாம், என-என்று எண்ணி, தணிந்தாளோ-(கோபம்) தணிநதுவிட்டாரோ? என் கொல் எண்ணுவேன் - என்னவென்று நினைப்பேன்? என்னும் இரா பகல் இல்லாள்-என்று இராத்திரியென்றும பகலென்றும் வேறுபாடில்லாமல் [எப்பொழுதும] கவலைபபடுவாள்; (எ - று)

இராவணன் என்னைக் கவர்நது இலஙகையிற கொண்டுபோனதை இராமபிரான் உணர்ந்தா ளாயினும், அவன் என்னை மீட்டுகொணடுசெல்ல இஙகு வராமைக்குக் காரணம், இராககதா மனிதரை யுணணுந்தன்மைய ராதலால் சீதையையும் விழுஙகியிருப்பரென்று எணணியதோ? அன்றி, 'சூரியகுலத்தார்க்கு இயறகையானது பொறுமைகுணம்' என்று எணணித் தன் மனைவியைக் கவர்ந்தவனிடததும் கோபஙகொள்ளாது வாளாவிருததலோ? என்று சீதாபிராட்டி எண்ணுவாளாயின ளென்பதாம். பொறையாவது - காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தனக்குக் குற்றஞ் செய்தவிடத்துத்தான் அதனை அவனிடத்துச் செய்யாமற் பொறுத்தல்; பொறு-பகுதி, ஐ-தொழிற்பெயர் விகுதி. இரணடாவதுபொறையில் ஐ - செயப்படுபொருள் விகுதி. அங்கு - அசை; அப்பொழுது-அவ்விடத்தில் என்றுமாம. பி - ம்:—[1]இது வென்றுதான். [2]என்றெணணியிராப்பகலில்லாள். (கசு)

கஎ. பெற்ற தாயருந் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டிறந் தார்களோ குறித்துச்
சொற்ற வாண்டெலா முறைந்தன்றி யந்நகர் துன்னு
னுற்ற துண்டெனப் படருழந் [1]துறுதகோ யுறுவாள்.

(இ - ள்.) 'பெறற தாயரும் - பெற்ற தாய்மார்களும், தம்பியும்-அடுத்த தமபியாகிய பரதாழ்வானும், பெயர்த்தும் வந்து எய்தி - மறுபடியும் வந்து சோந்து, கொற்றம் மாநகர் - வெறறியையுடைய சிறந்த அயோத்தியாபட்ட

ணத்துக்கு, கொண்டு இறந்தார்களோ-(இராமபிரானை) அழைத்துக் கொண்டு போனார்களோ? (அவர்), குறித்து சொற்ற ஆண்டு எலாம - (முன்னே கைகேயி) குறித்துச்சொன்ன பதினான்கு வருஷகாலமுழுவதும், உறைந்து அன்றி - (வனத்தில்) வாசஞ்செய்தல்லாமல், அ நகர் துன்னான் - அந்த நகரத்திற்குச் செல்லமாட்டார்; உற்றது உண்டு - (இன்னும் வனத்தில்) இருப்பதே உளதாம், என்று என்று எணணி, படர் உழந்து - துன்பத்தால் வருந்தி, உறுதி நோய உறுவாள் - (எவரும் ஒருநாளும்) அடையாத மனோவியாதியை அடைவாள்; (எ - று.)

'முன்பு இராமபிரான் சித்திரகூடத்தில் 'இருக்கையில் தம்பியாகிய பரதன் தாய்மார்முதலியோரையும் உடனழைத்துக்கொண்டுவந்து அப்பிரானை நகரத்திற்குத் திரும்பிவரவேணுமென்று வேண்டியதுபோலவே, மறுபடியும் ஒருகால் அவர்கள் யாவரும் வந்து வேண்டி அயோத்திமாநகருக்கே இராமபிரானை இட்டுக்கொண்டு சென்றார்களோ' என்போமென்றால், பிதிருவாகிய பரிபாலனத்தில் மிக்க ஊற்றமுள்ள அப்பிரான் ஒருகாலும் அவ்வாறு செய்யான்: தான் முன்பு வாக்களித்ததபடியே பதினான்கு வருடமும் வனத்தில் வசித்தேதீர்வனென்று எணணி, அப்பிரானும் தானும் தனிப்பட்டுள்ள நிலைமைக்குச் சீதாபிராட்டி மிகவும் வருந்துவாளாயினளெனபதாம். இனி, உற்றது உண்டு என்பதற்கு - (அவனுக்கு) நேர்ந்துள்ள விபத்து எதேனும் இருக்கவேணுமென்று பொருள்கொண்டு, அவ்விராமபிரான் தனது நகரத்திற்குத் திரும்பிப்போயிருக்கமாட்டான்: அவ்வாறாயின், அவன் இங்கு வந்து என்னைமீட்டுக்கொண்டு போகாததுபற்றி ஒருகால் அப்பிரானுக்கே எதேனும் ஆபத்து நேர்ந்திருக்கவேணு மென்று கருதி மிகவும் வருந்தினாளென்று கருதக்கொள்ளலுமாம். தசரதசக்கரவாத்திக்கு மனைவிமார் பலரும் இராமனிடத்திலே பெற்றபிள்ளையினிடத்திற்போல இயல்பாக மிகுந்த அன்புடையவராதலால், 'பெற்றதாயர்' என்றாள். பி - ம்:—[1]உறுதன. (கஎ)

கஉ. [1]முரனெ னத்தகு மொய்ம்பினோர் முன்பொரு தவர்போல
வரனு மாயமும வஞ்சமும் வரம்பில வலலார்
பொரநி கழ்ந்ததோர் பூசலுண் டாமெனப பொருமாக்
கரனெ திர்ந்தது கண்டன ளாமெனக் கவல்வாள்.

(இ - ள்.) 'முரன் என தகும் - முரன் என்கிற அசுரனெனறு சொல்லத்தக்க, மொய்ம்பினோர்-தோள்வலியையுடையவர்களும், முன் பொருதவர் போல் - முன்னே (ஜநஸ்தானத்திற்) போர்செயதவர்கள்போல, வரம்பு இல-அளவில்லாதனவாகிய, வரனும - வரங்களும், மாயமும்-மாயைகளும், வஞ்சமும் - வஞ்சனைகளும், வல்லார் - வல்லவர்களுமாகிய அரக்கர், பொர-(வந்து) போர்செய்ய, நிகழ்ந்தது-நடக்கிறதாகிய, ஓர் பூசல் ஒரு பெருமபோர், உண்டு ஆம் உளதாயிருக்கல் கூடும்', என - என்று எணணி, பொருமா - துக்கித்து, கரன் எதிர்ந்தது-(முனனே) கரன் (வந்து) எதிர்த்ததை, கண்டனள் ஆம் என- (இப்பொழுதுங் கண்ணுக்கெதிரில்) கண்டவள்போல, கவல்வாள்—; (எ-று.)

ஒருகால் இராமபிரான் இலங்கையைநோக்கி வருகையில், முன்புஜநஸ்தானததில் கரன் முதலிய பதினாலாயிரவர் அரக்கர்கள் போர்செய்ய வந்தது போல, மகாபலபராகிரமசாலிகளான அரக்கர்கள் இப்போதும் போர்செய்யுமாறு வந்து விட்டதனால்தான் அபபிரான் இஙகு வரமுடியாமல் தடைப்பட்டதோ ? என்று சீதாபிராட்டி எண்ணி அப்பிரான் கரனோடு போர்செய்தது நினைவுககுவரப் பாவனையின மிகுதியால் அப்போரை எதிரிலேகண்டனள் போல மிகவும வருந்துவாளாயின ளென்பதாம். முரன் - திருமாலாற் கொல்லப்பட்டானொரு பேராறறலுடைய அரக்கன்; இவனைக் கொன்றதுபற்றித் திருமாலுககு 'முராரி' என்று ஒரு திருநாமம். கரன் சூரப்பணகையின் மூக்கையுஙு காதையும இலககுமணன் அறுதததைக கேட்டுப் பல அரக்கரோடு வந்து எதிரததுப் போர்செய்து இராமனம்பினா லிறந்தான். கரனெதிர்ந்த காலததுச சீதை கண்டு கவன்றதை 'நின்றனனிருந்தான் கண்ணீர் நிலனுறப் புலர்கின்றாள்பால்', "குழையுறு மதியம் பூத்த கொம்பனாள் குழைந்து சோர", "அனிக வெஞ்சமத தாருயிர் போகத்தான, தனியிருந்த வுடலன்னதையல்பால்" என்று ஆரணியகாணடத்துக் கூறினர். பி-ம்:—[1]முரண். (கஅ)

வேறு.

கக. தெமம டங்கிய சேணிலங் கைகயர்
தம்ம டந்தையுன் றம்பிய தாமென
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை யுன்னி வெதும்புவாள்.

(இ - ள்.) கைகயர்தம் மடந்தை-கேகயநாட்டரசர்குலத்துமகளாகிய கைகேயி, 'தெவ் மடஙகிய சேண நிலம - பகை யொழிந்த பெரிய இராச்சியம், உன தம்பியது ஆம் - உனது தம்பியாகிய பரதனுடையதாம், [உனக்கு இல்லை],' என - என்று சொல்ல, (சிறிதும வருந்தாமல்), மும்மடங்கு பொலிந்த முகததினன - (முன்னிலும) மூன்று பஙகு அதிகமாக மலாந்து விளஙகிய முகததையுடையவனாகிய, வெம் மடங்கலை - கொடிய ஆண்சிங்கம் போன்ற ஸ்ரீராமனது அப்பொழுதைய நிலைமையை, உன்னி - நினைத்து, வெதும்புவாள் - வாடுவாள். (எ - று.)

ஒருவரைப்பிரிநதுள்ள நிலையில் அவர்களது குணஙகள் நினைவுக்குவந்து பிரிவுத்துயரை மிகுவிததல் இயல்பாதலால், இராமபிரானது சாந்தகுணத்தையும் அழுககாறின்மையையும தன பக்கலினுந் தம்பிமார்பக்கல் மிகக அன்புடைமையையுஙு கருதிச சீதாபிராட்டி வருந்துவாளாயின ளென்க.

இதுமுதற் பதினொரு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும விளச்சீரு ளுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (ககூ)

உ0. மெய்த்தி ருப்பத மேவென்ற போதினு
மிதகி ருத்துறந் தே[1]கென்ற போதினுஞ்

[2]சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
யொத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்.

(இ - ள்.) 'மெய் - உண்மையாகவே, திரு பதம் - சிறந்த (தனது) உலக முழுதாளும் பதவியை, மேவு - (நீ) அடைவாயாக', என்ற போதினும் - என்று (தசரதசகரவர்த்தி) சொன்னகாலத்தும், 'இ திரு-இவ்வரசாட்சிச செல்வத்தை, துறந்து-விட்டு, ஏகு - (வனத்துக்குச) செல்லு;' என்ற போதினும்-என்று (கைகேயி) சொன்னகாலத்தும், (ஒருபடியாக), சித்திரதின் அலர்ந்த செந்தாமரை ஒத்து இருக்கும் சித்திரித்த உருவத்தில் மலர்ந்திருந்த சிவந்த தாமரை மலரைப் போன்று விளங்கின, முகத்தினை - (இராமபிரானது) திருமுகத்தை, உன்னுவாள் - நினைப்பாள்; (எ - று)

இதனால், இராமனது இன்பதுன்பங்களில் விருப்பு வெறுப்பில்லாமல் இரண்டையும் ஒரு நிகரனவாகப் பாவிக்குந் தன்மையைக் கருதி வருந்திய வாறு. "இப்பொழுதெம்மனோரா லியம்புதற்கெளிதேயாரும், செப்பருங குணத்திராமன் திருமுகச்செவ்விநோக்கி, லொப்பதேமுன்புபின்பவ் வாசக மூணரக்கேட்ட, வப்பொழுதலர்ந்தசெந்தா மரையினைவென்றதம்மா" என்ற அயோத்தியாகாண்டச செய்யுள் இங்கு அறியதக்கது. இசசெய்யுள் சில பிரதியில் "இன்னல்" (உஉ) என்பதன் பின் உள்ளது. பி - ம்:—[1]என்றியம்பவும். [2]சித்திரத்து மலர்ந்த. (உ0)

உக. தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்
வாங்கு கோல வடவரை வார்சிலை
யேங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள்.

(இ - ள்.) ஏங்கும் மாத்திரத்து - இவர் வில்லைவளைப்பரோ வளைக்கமாட்டாரோவென்று (ஜனகமகாராஜர்) சந்தேகித்தபொழுதில்,—கங்கை தேங்கு- ஆகாசகங்காநதி தங்கிய, திரு முடி - அழகிய ஜடாமுடியையும், செம்கணான்- சிவந்த மூன்று கண்களையுமுடைய சிவன், வாங்கு - (கையில் எடுத்து) வளைத்த, கோலம் - அழகிய, வட வரை - வடக்கிலுள்ள மேருமலையின் அமசமாகிய, வார் சிலை - நீண்ட வில், இரண்டு ஆய் இற்று விழ - இரண்டுதுண்டாய் ஒடிந்து விழும்படி, வீங்கு - பருத்த, தோளை - (இராமனது) புஜத்தை, நினைந்து - எண்ணி, மெலிந்துளாள் - இளைத்தவளாவாள்; (எ - று.)

பரமசிவன் கங்கையைத் தனது திருமுடியில தேங்கவைத்தது, கபில மகா முனிவரது கோபத்தீக்கு இரையாகிச சாமபரான சகரபுத்திரர் அறுபதினாயிரவரையும் நற்கதியடைவிக்க விருமபிய அவர்வழித்தோன்றிய பகீரதனென்னுஞ் சூரியகுலத்தோன்றலது வேண்டுகோளால் மேரு சிவனுக்கு வில்லானது, திரிபுரசங்காரகாலததில், திரியம்பகம் என்னும் பெயரையுடைய இச்சிவதனுசு பரமசிவனால் ஜனகமகாராஜாவுக்குக் கொடுக்கபபட்டு அவரால் இவ்வில்லை எடுத்து வளைத்தவர்க்குச சீதையைக கலியாணஞ்செய்து

கொடுப்பதென்று கன்னியாசுல்கமாக ஏற்படுத்திவைக்கப்பட்டது. எனது கணவனான இராமபிரான் இத்தகைய பெரியதோள்வலிமை பெற்றிருந்தும் அதனை என் விஷயததிலும் சிறிது உபயோகித்து என்துயரைக் களைய வேண்டியதாயிருக்க, அவ்வாறு செய்யாது உபேட்சிகின்றனனே யென்பதைச் சீதாபிராட்டி நினைந்து வருந்துவாளாயின ளென்க. இச்செய்யுள் சில பிரதியில் "தெம்மடங்கு (கசு) என்ற பாடலின் பின் உள்ளது. (உக)

உஉ. இன்ன லம்பர வேந்தற் கியற்றிய
பன்ன லம்பதி னாலாயி ரம்படை
கன்னன் [1]மூன்றிற் களப்படக் கால்வளை
வின்ன லம்புகழ்ந் [2]தேற்றி வெதும்புவாள்.

(இ - ள்.) அம்பரம் வேந்தற்கு - தேவலோகத்துக்குத் தலைவனாகிய இந்திரனுக்கு, இன்னல் - துன்பங்களை, இயற்றிய - செய்த, பல் நலம் - (வரபலம் புஜபலம் முதலிய) பல நன்மைகளையுடைய, பதினாலாயிரம் படை - (கரதூஷணாதியரோடு வந்த) பதினாலாயிரம் ரதாதிபதிகளது கூட்டம், கன்னல் மூன்றில் - மூன்று நாழிகைப் பொழுதிலே, களம் பட - போர்க்களத்தில் அழியும்படி, கால்வளை-இரண்டுகோடியும் வளைந்த, வில் - கோதண்டத்தினது, நலம் - சிறப்பை, புகழ்ந்து ஏற்றி - கொண்டாடி உயாத்துச்சொல்லி, வெதுமபுவாள் - வாடுவாள்;(எ - று.)

இராமபிரானது ஒப்புயர்வில்லாத பெருவீரம் தனக்கு இதுவரையில் பயன் தராமைபற்றிச சீதாபிராட்டி வெதும்புவாளாயின ளென்க. வேந்தன் என்னுஞ் சொல் இந்திரனென்னும் பொருளை உணர்த்துவதை "வேந்தனும் வேந்து கெடும்," 'வேந்தன் மேய தீம்புன லுலகமும்' என்ற இடங்களிலுங காண்க. பி - ம்:—[1]ஒன்றில். [2]ஏத்தி, ஏங்கி. (உஉ)

உ௩. [1]ஆழ நீர்க்கங்கை யம்பி கடாவிய
வேழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
[2]வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்.

(இ - ள்.) ஆழம் நீர் - ஆழ்ந்திருப்பதான நீரையுடைய, கங்கை - கங்கா நதியிலே, அம்பி கடாவிய - தோணியைச செலுததின, ஏழை வேடனுக்கு- எளிய வேடர்குலத்தில் தோன்றிய குகப்பெருமானுக்கு, 'எம்பி - என் தம்பி, நின் தம்பி - உனது தம்பியாவன்; நீ தோழன் - நீ (எனக்குத) தோழனாவை; மங்கை - சீதை, கொழுந்தி - (உனக்கு) மைத்துனியாவள்,' என் - என்று, சொன்ன-(இராமன்)சொல்லியருளிய, நண்பினை-சிநேகதருமத்தை, உன்னி- நினைத்து, மயங்குவாள் - கலங்குவாள்; (எ - று.)—வாழி - அசை.

ஒருவர் தனபமுற்று வருந்துகையில், அவரை அதீதுன்பதினின்று விடுவித்தற்கு வேண்டிய குணங்கள் இரண்டு. அவற்றுள் முதலதாகிய மகா

வீரத்தைப் பாராட்டிக் கூறிய சீதாபிராட்டி இரண்டாவதாகிய பெருங் கருணைக தன்மையை இங்குப்பாராட்டிக்கூறிய பேராற்றலோடு பெருங கருணையும் படைத்த அப்பிரான் என்னை உபேட்சித்தறகுக் காரணம என்னையோ? என்று மயங்குவாளாயின ளென்பதாம.

குகன் - கங்கையில் ஓடம்விடுபவனும், ஆயிரம் ஓடத்துக்குத் தலைவனும், கங்கைககரையிலுள்ள சிருங்கிபேரபுரததிற்கு அதிபதியுமாகிய ஒரு வேடத் தலைவன்; இராவணுதி ராக்ஷசசங்காரததின் பொருட்டுத் திருவவதரித்த இராமபிரான் வனவாசஞ்செய்ய உடன்பட்டு, மனைவியான சீதையோடும் தன்னைவிட்டுப்பிரியாத தம்பியாகிய இலகுமணனோடும அயோத்தியா புரியை நீங்கிக் கங்கைத்துறை சேர்கையில் குகன் இராமனைக் காணும் பொருட்டுக காணிக்கைகளுடன் அருகில வந்து சோந்து வணங்கிநிற்க, ஸ்ரீராமன் அவனை நண்பனாக ஏற்று 'இங்கு இரு' என்றுசொல்லி மிகக அன்புடன் அவன் கொணாந்த காணிகைகளையும உகந்து, 'இன்று நீ உனது ஊர்க்குச் சென்று நாளையுதயத்திற் கங்கை கடத்தற்கு ஓடங்கொண்டுவா' என்று நியமிக்க, அன்பிற்சிறந்தவனான அக்குகன் இராமனைவிட்டுப் பிரிய மாட்டாதவனாய 'இங்கேயேயிருந்து இயன்ற அடிமை செய்வேன்' என்ன, இராமன் அதற்கு இணங்கி, 'யாதினும் இனியநண்ப! நம்முடன் இரு' என்று அனுமதிசெய்ய, குகன் தன்சேனைகளுடன் இராமனைசசூழ்ந்து இராமுழுவதும் வில்லும் கையுமாகப் பாதுகாவல் செயது நின்றனன். மறுநாளுதயததில் இராமன் குகனை ஓடங்கொண்டுவரச சொன்னபோது குகன்பணிந்து, 'நாங்கள் துணை செய்ய நீங்கள் இவ்விடததிலே வசித்தருளவேண்டும்' என்று வேண்ட, அதற்கு இராமன் உடன்படாது 'புண்ணியநதிகளில் ஸ்நாநமும் மகரிஷிகளின் சேவையும் செய்துகொணடு சிலகாலம் கழித்தபின்பு உன்னிடம் வருவேன்' என்று சொலலிப் பிறகு குகன் கொணர்ந்த ஓடத்திலேறிக் கங்கைகடந்து அப்பாற் செல்லத் தொடங்குகையில், குகன் மிக்கபரிவோடு வணங்கி 'அடியேனும பணிவிடைகள செய்துகொண்டு உடன்வந்து உதவுவேன்' என்று விணணப்பஞ்செய்ய, இராமபிரான் அதற்கும இணங்காமல் 'என்மனைவியான இந்தசசீதை உன்தோழி; என்தம்பியான இவ்விலக்குமணன் உன் தம்பியே; நீ எனது உயிரித்தோழன' என்றும், 'இதுவரை நாங்கள் உடன் பிறந்தவர் நால்வராயிருந்தோம்; இப்பொழுது உன்னுடன் ஐந்துபேராயினோம்' எனறும ஒற்றுமை நயம்தோன்றக்கூறி 'உன்சுற்றத்தார் என்சுற்றததார்; அவாகள உன்னைப்பிரிநது வருந்தலாகாது; ஆதலால், நீ இங்கேயேயிருந்து அவர்களைப் பாதுகாப்பாய்' அன்றியும், அயோததியாபுரி கெடாமைககாக அங்குப் பரதனை வைததோம்; வழியடிகெடாதபடி இங்கே நீ நில். நான் மீணடு வடக்குநோகி வரும்போது உன்னிடம் வருவேன்' என்றும சொல்லிக குகனை வலிவில் நிறுத்தின னென்பது, அயோத்தியா காண்டத்தில் வந்தவரலாறு: "ஏழையேதலன கீழ்மகனென்னு திரங்கி மற்றவற்கினனருள் சுரந்து, மாழைமான்மடநோக்கி யுன்தோழி யுமபி யெம்பியென் றொழிநதிலை யுகந்த, தோழ னீயெனக் கிங்கொழி யென்ற சொற்கள்

வந்தடியேன்மனத்திருந்திட, ஆழிவண்ணநின் னடியினை யடைந்தேன் அணி பொழிற் றிருவரங்கதத்தம்மானே" எனப் பெரியார்பணித்ததும் காண்க.

கொழுந்தி - கொழுநதனென்பதன் பெணபால். இராமபிரானை நோக்குமிடதது, வேடர்தலைவன் வறியவனே யென்பார் குகனை 'ஏழை' என்றார்; இனி, ஏழை அறிவிலலானெனினுமாம். [2]ஆழிநணபினையுன்னியழுகுவாள்' என்னும் பாடத்துக்கு - கடல்போலும பெரிய நட்பை நினைத்து வருநதத தலைப்பட்டா ளென்று உரைக்க. பி - ம்:—[1]ஆழி. (உ௩)

உச. மெய்த்த தாதை விரும்பின னீட்டிய
கைத்த லங்களைக் கைகளி னீக்கிவே
றுய்த்த போது தருப்பையி [1]லொண்பதம்
வைத்த [2]வேதிகைச் செய்தி மனங்கொள்வாள்.

(இ - ள்.) மெய்த்த - நல்லொழுககந்தவறுத, தாதை - தனது தந்தையாகிய ஜனகமகாராஜா, விரும்பினன் - விருப்பமுள்ளவராகி, நீட்டிய பிடித்துக்கொடுதத, கைத்தலங்களை - (தன்) கைகளை, கைகளின் நீகி - (அவரது) கைகளினின்றும விடுவிததது, [இராமபிரான் தமது வலககையால் தனது இடககையைப் பற்றிகொணடு], வேறு உய்தத போது - வேறுகிய வைதிக காரியததை நடத்தும் பொழுது, தருப்பையில்-தருப்பையைப்போல, ஒள்-பரிசுததமாகிய, பதம - (தனது) வலக்காலை, வைத்த - (அவர் தமது வலக்கையாற் பிடிததது அம்மியின் மேல்) எடுத்துவைதத, வேதிகை செய்தி - (விவாகத்தின் பொருட்டு இட்ட) வேதிகையில் நிகழ்ந்தசெய்கையை, மனம் கொள்வாள் - மனததில் எணணுவாள். (எ - று.)

இதனால், விவாககாலத்தில் நடந்த பாணிககிரகணத்தையும், அச்மாரோபணத்தையுங் கருதினாள். அன்போடு மணந்தவர் என்னை இப்போது நீதது உறைதல் தகுதியோ? என்பது, சீதையின் கருத்து. பி - ம்:—[1] 'உண்பதம்' என்ற பாடத்துக்கு - அகனினிதேவன் உண்ணுகின்ற உணவாகிய நெய்யையென்க. [2]வைதிகச. (உ௪)

உ௫. உரங்கொ டேமலர்ச் சென்னி [1]யுரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வனைந்திலன்
றிரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்
கிரங்கி யேங்குவ தெண்ணி யிரங்குவாள்.

(இ - ள்.) தம்பி - தமது தம்பியாகிய பரதாழ்வான், உரம் கொள் சிறப்பைக் கொண்ட, தேன்மலர் - தேனினுடைய பூக்களைச் சூடிய, சென்னி - சிரசில் தரித்தறகு, உரிமைசால் - தகுதியமைந்த, வரம் கொள் - மேன்மையைக கொணட, பொன்முடி - ஸ்வர்ணமயமான கிரீடத்தை, வனைந்திலன் - சூடாதவனாய், திரங்கு செம் சடை கட்டிய - திரிததுவிட்ட சிவந்த ஜடையைத் தரித்த, செய் வினைககு-செயதொழிலுக்காக, இரங்கி-(இராமபிரான்)

மனமிரங்கி, ஏங்குவது - வருந்தியதை, எணணி - நினைதது, இரஙகுவாள்- தான் வருந்துவாள். (எ - று.)

இராமபிரானைக் காட்டிலிருந்து திருப்பியழைத்துவரவேணு மென்னுங கருத்துக்கொண்டு, பரதன் சித்திரகூடத்தையடைந்து இராமபிரானைதரி சித்துத தன்கருத்தைததெரிவிக்கையில், பரதன் முடிசூடாமல் தன்னைப் போலவே சடைமுடிபுனைந்திருப்பது கணடு இராமபிரான் இரஙகினனென்க. வரம்கொல் - கைகேயி வரத்தினாற் கொண்ட என்றுமாம். பி - ம்.—[1]உரிமை யால். (எ - று.) (௨௫)

௨௬. பரித்த செல்வ மொழியப் படருநா
ளருத்தி வேதியற் கான்குல மீந்தவன்
கருத்தி னாசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைத்தழுஞ் செய்கையாள்.

(இ - ள்) பரிதத - தாம் தாங்குதற்குரிய, செல்வம் - அரசாட்சிச் செல்வம், ஒழிய - (தம்மைவிட்டு) நீங்க, படரும் நாள் - (வனத்திறகுச(செல்கிறநாளில், அருதத வேதியற்கு - (தானம் பெறவேணுமென்னும்) ஆசையையுடைய ஒரு பிராமணனுககு, ஆன்குலம்-பசுககூட்டங்களை, ஈந்து- தானஞ்செயது, அவன் - அவ்வந்தணனது, கருததின் - மனதிலே யுள்ள, ஆசை-ஆசைககு, கரைஇன்மை - எல்லையில்லாததை, கணடு - பார்த்து, இறை - (யாவர்ககுந்) தலைவராகிய இராமபிரான், சிரித்த - புன்சிரிப்புக் கொண்ட, செய்கை - செய்கையை நினைத்து எண்ணி, அழும் - அழுகிற, செய்கையாள் - செய்கையை யுடையவளாவாள்; (எ - று.)

இராமபிரான் தந்தைசொல் பொய்யாகாதவாறு கைகேயியின் கட்டளைப் படியே காட்டிற்குச செல்லப் புறப்படுமபோது யாத்திராதானம் செய்ய எண்ணி, வசிஷ்ட முனிவரின் புதல்வராகிய சுயஜ்ஞா முதலியோர்க்குத் தனது இரதத்தினம அணிகலம வாகனம் முதலிய பொருள்களைத் தானஞ் செய்ய, அப்போது திரிசடனென்ற முனிவன் தனது மனைவியால் தூண்டப் பட்டுத தனது பேராசை தோன்ற யாசகனுய் வநது இராமபிரானையணுகி யாசிக்க, அப்பிரான் மற்றைப்பொருள்கள தானஞ் செயயப்பட்டன வாத லால் எஞ்சியுள்ள பசுத்திரளை வேண்டியவளவு கொள்ளுமாறு புன்னகை யோடு சொல்ல, அவ்வந்தணன் மேலாடையை அரையில் இறுகக்கட்டிக் கொணடு ஒரு தடியை வீசியெறிந்து அது விழுந்த இடம் வரையிலுமுள்ள பசுத்திரளைத தனககுத தருமாறு வேணட, இராமபிரான் அவ்வாறே அவற்றை யளித்தன னென்பது, அயோததியாகாணடத்து வரலாறு. பரிகா சனுசெய்யுந்தன்மையை மேற்கொண்டபொழுதும இராமபிரான் வேண்டு வார் வேண்டியதைத் தவறாது அளிப்பவனுதலால், 'என்விருப்பம் கெட உபேட்சித்தல தகுதியோ?' என்று சீதை ஏங்கின ளென்க. வேதியன் என் பது - இங்கே, திரிசடனென்பவனை யுணர்தற்று. [1]வேதியர்க்கான்குலமீந்த

வா என்னும் பாடதிற்கு—வேதியா அவர் என்பன - ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி யென்க. (உசு)

உஎ. மழுவின் [1]வாளினின் மன்னரை மூவெழு
பொழுதி னூறிப் புலவுறு புண்ணினீர்
முழுகி னன்றவ மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள்.

(இ - ள்.) மழுவின் வாளினின் - மழுவாகிய ஆயுதத்தினால், மன்னரை- அரசர்களை, மூ எழு பொழுதின் - இருபத்தொருமுறை, ஊறி - அழித்து, புலவு உறு புண்ணின் நீர் - (அவர்களது) புலால்நாற்றம் பொருந்திய ரக்தத்தில், முழுகினன் - ஸ்நானஞ்செய்து தருப்பணம் பணணின பரசுராமனது, தவம மொய்ம்பொடு-தவத்தின் வலிமையோடு, மூரி வில்-வலிமையையுடைய (அவரது) வில்லை, தழுவும் - கொண்ட, மேன்மை - மேமபாட்டை, நினைந்து - எணணி, உயிர் சாம்புவாள் - உயிரொடுஙகுவாள்; (எ - று.)

இருபத்தொருமுறை பூலோகததைப் பிரதக்ஷிணஞ்செய்து ஆஙகாங்குள்ள சகல க்ஷத்திரியாகளையுந் தமது கோடாலிப் படையாற் சங்கரித்து அவாகளிரததத்தால ஸ்யழுநதபஞ்சகமென்று ஐந்து குளஙக ளமைத்து அவற்றில் நீராடிக் கார்த்தவீரியாசசுனனாற் கொல்லப்பட்ட தமது தந்தைக்குத் தருப்பணஙக கொடுத்து முடித்த பரசுராமர், சீதாகலியாணம் முடிந்து தசரத சககரவாததி மககளோடும மருகிகளோடும அயோததிக்கு மீணடுசெல்லுகையில் எதிரில் வந்து 'முன ஹரிஹரயுத்ததில இற்றுப்போன சிவனது வில்லை முறித்த திறமையை அறிந்தேன்; இந்த ஸ்ரீமகாவிஷ்ணுவினது வில்லை வளை' என்று ஒருதனுசைககையிற் கொடுக்க, ஸ்ரீராமா உடனே அதனை வளைததுக் கணைதொடுத்து 'இவ்வம்புககு இலககு என?' என்று கேட்க, பாரக்கவராமர் அதற்கு இலककாகத தமது தபோபலமுழுவதையுங கொடுகக, ஸ்ரீராமா, பரசுராமா க்ஷத்திரியவமிசத்தை கருவறுததவராயிருந்தாலும் வேதவிததும் தவவிரதம்பூணடவரு மாதல் பற்றி அவருயிரைக கொல்லாமல் தவததைக் கவாந்த மாத்திரததோடு விடுத்தாரென்பது கதை. எததுணை வலியாரையும் அடக்குந்திறமை படைத்த இராமபிரானுக்கு, இவ்வரக்கரை யடக்கி மீட்டல் ஒரு பெரிய காரிய மன்றாதலால், 'எனனை உபேட்சிப்பது என் கொணடு' என்று சீதை உயிசாமபுவாளாயினளென்க. பி - ம்:—[1]வாளினன், வாளியின். (உஎ)

உஅ. ஏக வாளியவ் விந்திரன் காதன்மேற்
போக வேவி யதுகண் பொடித்தநாட்
காக முற்றுமோர் கண்ணில வாக்கிய
வேக வென்றியைத் தன்றலை மேற்கொள்வாள்.

(இ - ள்.) அ இந்திரன் காதல்மேல் - காகவடிவமாய்வந்த இந்திரனது குமாரனாகிய ஜயநதன் மேலே, போக - செல்லும்படி, ஏகம் வாளி - ஒப்பற்ற

தொரு அம்பை, ஏவி - பிரயோகித்து, அது - அவ்வமபு, கண் பொடித்த நாள் - (அககாக்கையின்) கணணொன்றைப் போக்கடிதத நாள்முதல், காகம் முற்றும்-எல்லாக்காக்கைகளையும், ஓர் கணஇலஆக்கிய-ஒரு கண் இலலாதன வாகச செய்த, வேகம வென்றியை - உக்கிரமான சயத்தை, தன் தலைமேல் கொள்வாள் - தன்சிரசின்மேற்கொணடு கொணடாடுவாள்; (எ - று.)

என்திறததிலே அபராதஞ்செய்த ஜயந்தனென்னுங் காகாசுரன்மீது அம்பு தொடுததது அவனது அபராததைப் போககின இராமபிரான் என்னையே கவாந்த மகாபராதியாகிய இவ்விராவணனைத தனது திறத்திலுல் அடக்கிவிடாது உபேட்சிக்கின்றனனே யென்பது, சீதையின குறிப்பு. சித்திரகூட பருவதப்பிரதேசத்திலே பெருமாளும் பிராட்டியும் ஏகாந்தமாயிருக்கச் செய்தே, இந்திரன்மகனான ஜயநதன், தமோகுணத்தாலே விவேக குனியனாய், தேவவேஷத்தை மறைத்துக் காகவேஷத்தைப் பூண்டு கொண்டு வந்து, பெருமாளும் மடியிலே பள்ளிகொணடருளா நிற்கச்செயதே, தாயென்று அறியாதே, பிராட்டியாரது திருமார்பிலே குதத, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி அதிகோபிஷ்டராய் ஒரு தருப்பத்தை யெடுத்து அதில் பிரமாஸ்திரத்தை யோஜித்து அதனை அந்தககாகததின் மேலே செலுததிவிட, அந்த அஸ்திரம் மந்தகதியாக விடப்படுகையாலே பின் தொடர்ந்துசெல்ல, அதனைத தப்பவழிதேடி முந்துறத் தமப்பனிடஞ்சென்ற வளவில் பிதாவாலும் மாதாவாலுங கைவிடப்பட்டு, பந்துகளானவர்கள் கைக்கொள்ளுவர்களோவென்று அவர்கள்பக்கலிலே சென்றவளவில் அவர்களாலுங் கைவிடப்பட்டவனாய், ரிஷிகள்தாங கைகொள்ளுவாகளோவென்று அவர்கள்பக்கலிலே சென்றவளவில் அவர்களுங கைவிடுகையாலே, திறந்து கிடந்த வாசல்கள்தோறும் ஒருகால் நுழைநதாற்போலே ஒன்பதின்கால் நுழைந்து, மூன்றுலோகங்களையும வளைய வோடித திரிந்தவிடததிலும், ஒருவருங கைக்கொள்ளாமையாலே, சீறினாலுங காலைக் கட்டிக கொள்ளலாமபடியிருக்குங கிருபாவானுகையாலே சரணியரான பெருமாள் குணத்தைச சொல்லித தனகுவேறு புகலின்மையாலே சரணுகதனுனமை தோற்றக் கூப்பிட, இப்படி சரணம் புகுகையாலே கிருபையால பெருமாள் ரகூஷிததருளுகிறவளவில் காகததுகுப் பிராணப்பிரதானம பண்ணி அஸ்திரததுக்கு ஒரு கணணழிவு கற்பிக்கையாலே, முன்பு தலையறுப்பதாகத தொடாந்த அநத அஸ்திரந்தானே அகனுடைய ஒரு கண்ணை அறுததுவிட்ட தென்பது, இஙகுக குறிதத வரலாறு; காதல - அனபு; அவ்வன்பு செய்யப்படுங் காதலனுக்கு ஆகுபெயர். காகம் - கா என்று கததுவது. (உஅ)

உகூ. வெவ்வி ராதனை மேல்வருந் தீவினை
வவவி மாற்றருஞ் சாபமு மாற்றிய
வவ்வி ராமனை யுன்னித்தன் னுருயிர
செவ்வி ராதுணர் வோய்ந்துட றேம்புவாள்.

(இ - ள்.) வெம் விராதனை - கொடிய விராதனது, மேல் வரும்-மேல் மேல் வருகின்ற, தீ வினை - பாபகருமத்தை, வவ்வி - நீக்கி, மாற்று அரு சாபமும் - நீக்குதற்கு அரிய (அவனது) சாபத்தையும், மாறறிய - நீகியருளின, அ இராமனை - அந்த ஸ்ரீராமனியல்பை, உன்னி - நினைத்து தன் ஆர் உயிர்-தனது அரிய உயிர், செவ் இராது - செவ்வே நில்லாமல், உணர்வு ஓய்ந்து - அறிவு ஒடுங்கி, உடல் தேம்புவாள் - உடம்பு வருந்துவாள்; (எ-று.)

தம்பியை யிழித்துச்சொன்னதற்காக எனக்கு நேர்ந்த குற்றத்தை நீக்கி என்னையும் பாதுகாக்கவேண்டியிருக்க, அவ்விராமபிரான் இதுவரையில் அவ்வாறு செய்யாமைபற்றிச் சீதாபிராட்டி உணாவோய்ந்து உடல் தேம்புவாளாயினளென்க. விராதனென்னும் வடசொல்லுக்கு - மிகுதியாக அபராதஞ் செய்பவனென்று பொருள்; இவன் முன்பு துமபுருவென்னும் பெயருள்ள கந்தருவனாயிருந்து குபேரனது சாபத்தாற பின்பு ராக்ஷஸனாகி வனத்தில் திரிந்து வந்தவன். இராமலட்சுமணர்கள் சீதையுடனே தண்டகாரணியத்திற் செல்லுகையில் இவ்வரக்கன் வந்து ஜானகியைத் தூக்கிக்கொள்ளக் கண்டு ராமலக்ஷ்மணா எதிர்க்க அவன் அவளைவிட்டு இவர்களிருவரையுந் தூக்கிக்கொண்டு செல்ல, இராகவவீரர்கள் அவனைத் தோளகளை வெட்டிக் கொன்று விட்டு அவன் தனது பிறப்பையுணர்த்தி வேண்டிக் கொண்டபடி பள்ளம்வெட்டிப் புதைத்துச்சென்றனர்; அவன் இவர்களைத் தோள்களின்மே லெழுந்தருளப் பணணிக்கொண்டு போன பொழுதும் ஸ்ரீராமன் காலாலுதைத்துப் பள்ளத்தில் தள்ளியபொழுதும் இவர்கள் திருவடிகள் பட்ட பாக்கியத்தால் தீவினையெல்லாந்தீர்ந்து சாபமொழிந்து பூர்வ ஜன்மத்து நிஜரூபத்தைப் பெற்றுத் தன்னுலகஞ்சென்று இன்பமடைந்தானென்பது, ஆரணியகாண்ட வரலாறு. (௨௬)

வேறு.

௩௦. திரிசடையன்றி மற்றை அரக்கியர் யாவரும் நள்ளிரவில் தூக்கத்தால் மயங்கிக்கிடத்தல்.

இருந்தன டிரிசடை யென்னு மின்சொலிற்
றிருந்தினு ளொழியமற் றிருந்த தீவினை
யருந்திற லரக்கிய ரல்லு நள்ளுறப்
பொருந்தலுந் [1]துயினறைக் களிபொ ருந்தினர்.

(இ - ள்.) இருந்தனள் - (சீதைக்கு) நல்லவளாக இருந்த, திரிசடை என்னும் - தரிஜடையென்கிற, இன் சொலில் திருந்தினுள் ஒழிய - இனிய சொற சொல்லுதலிற சீதிருந்தின ராக்ஷசியொருத்தி தவிர, மற்று இருந்த- இன்னங்காவலாக இருந்த, தீவினை - கொடிய செய்கைகளையும், அரு திறல்- அளவிடுதற்கரிய வலிமையையுமுடைய, அரக்கியர் - ராக்ஷசிகள் யாவரும், நள அல்லு உற பொருந்தலும் - நடு இராத்திரி வந்து சேர்ந்தவளவில், துயில் நறை களி பொருந்தினர் - தூக்கமாகிய மதுவையுண்டு. அதனால் மயக்கமடைந்தனர்; (எ - று)

மெய்ம்மறந்து தூங்கினா என்றபடி. திரிசடை - விபீஷணரது திருமகள்; பிராட்டிபக்கல் மிகுந்த அன்புடையாள். தந்தையைப்போல நற்குணநற்செய்கைகளை யுடையவள்: இவள் சீதையின் வருத்தத்திற்கு மனப்பூவமாக வருந்துபவளாதலால், அவ்வருத்தமிகுதியால் நள்ளிரவிலும் சீதையைப் போலவே துயிலின்றி யிருந்தனளென்க அல்லு, உ - சாரியை. துயில் நறைக்களிபொருந்தினர் - கள்ளுண்டு களித்த மயக்கத்தால் தூக்கம் பொருந்தினர் எனறும் உரைப்பர். பி - ம்:—[1]துயிலுடை

இதுமுதல் இப்படலம் முடிகின்றவரையில் நாற்பதெட்டுக கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாசசீரும், மற்றைமூன்றும் விளசசீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (௩௦)

௩௧. சீதாபிராட்டி தனக்குத்தோன்றிய நன்னிமித்தத்தைத் திரிசடையினிடம் கூறத் தொடங்குதல்.

ஆயிடைத் திரிசடை யென்னு மன்பினு
டாயினு மினியவ டன்னை நோக்கினு
டூயைநீ கேட்டியென் றுணைவி யாமெனு
மேயதோர் கட்டுரை விளம்பன் மேயினுள.

(இ - ள்.) அ இடை - அப்பொழுது, (பிராட்டி), தாயினும் இனியவள்- (தனகுகுத) தாயைக்காட்டிலும நல்லவளாகிய, திரிசடை என்னும்-தரிஜடை யென்கிற, அன்பினுள் தன்னை - (தன்பக்கல்) அன்புடையவளை, நோக்கினுள்- பார்த்து, 'நீ—, தூயை - பரிசுத்தகுணமுடையவள்; என் துணைவி ஆம் - எனக்குத தோழியாவாய் கேட்டி - (யான்சொல்வதைக) கேட்பாயாக', எனு- என்றுசொல்லி, மேயது ஓர் கட்டுஉரை - பொருநதியதொரு நன்மொழியை, விளம்பல் மேயினுள - சொல்லத் தொடஙகினுள; (எ - று)—அது மேல் நான்குகவிகளாற் கூறுகின்றார்

அரகியர்யாவரும் உறகக்கதினுல் மயஙகிக்கிடக்கையில், இதுவே நம்மிடத்துப் பேரன்புள்ள திரிசடையோடு பேசுதறகு ஏறற சமயம என்று கருதி, சீதாபிராட்டி அவளோடு தனகுகுத தோன்றியுள்ள நன்னிமித்தத்தைக் கூறத்தொடஙகின ளெனபதாம். இசசெயயுளின் முன்னிரண்டடிகட்கு, அரகியரயாவரும உறஙகிய காலததில், (சீதாபிராட்டியோடு கலந்து பேசுதறகுத் தகககாலம் இதுவேயென்று கருதி,) திரிசடையென்னும் அன்பினுள் தாயினும் இனியவளான சீதாபிராட்டியைப் பார்தனள; (அக்குறிப்பையறிந்த அபபிராட்டியும அவளை நோககி) 'தூயைநீ கேட்டி' என்று சொல்லததொடஙகினு ளென்றுமாம். (௩௧)

௩௨.—நான்குகவிசள-ஒருதொடர்; சீதை திரிசடையினிடம் தனக்குநேர்ந்த நன்னிமித்தத்தினுல் யாதுபயன் விளையுமோவென்று ஐயுறுதல்.

நலந்துடிக் கின்றதோ நான்செய் [1]தீவினைச
சலந்துடித் தின்னமுந் தருவ தண்மையோ

பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன்.

(இ - ள்.) பொலன் துடி மருங்குலாய் - அழகிய உடுக்கை போன்ற இடையை யுடையவளே! நலம் - நன்மைதான், துடிக்கின்றதோ - (எனக்கு உண்டாக) விரைகின்றதோ? (அன்றி), நான்—, செய் - (முற்பிறப்பிற்) செய்த, தீவினை - பாவத்தின், சலம் - கொடுமை, துடித்து - அதிகப்பட்டு, இன்னமும் - இனிமேலும், தருவது - (வருத்தத்தைக்) கொடுப்பதுதான், உண்மையோ - உண்டாகுமோ? புருவம் கண முதல் - புருவமுங் கண்ணும் முதலிய உறுப்புக்கள், வலம் துடிக்கின்றில - வலப்பக்கம் துடிக்கின்றன வில்லை [இடப்பக்கமே துடிக்கின்றன]; வருவது - (இக்குறியால்) இனிவருவ தோர்பயனை, ஓர்கிலேன்-(யான்) இனனதென்று அறிகிறேனில்லை; (எ-று.)

எனது இடககண முதலியன துடிக்கின்றதனால், இனியேனும் எனக்கு நன்மையுண்டாகுமோ? அன்றித தீவினைப்பயனே இங்ஙனம தோன்றி எனக்கு ஒரு ஆசையை விளைத்து அதன மூலமாக எனக்குத துன்பதத்தை மிகுவிககப பார்ககின்றதோ? இதனால் விளையப்போவது யாதோ? என்று சீதாபிராட்டி தனக்குததோன்றிய எணணததைத் தனது துணைவியான திரிசடையினிடம் தெரிவிக்கலாயின ளென்பதாம். 'தீவினைசலந்துடிதது' என்று இயல்பான பாடமாயின், நான் செய்த தீவினையானது (எனகக நற்பயன விரைவிற்சித்திககு மென்று கருதுமாறு) வஞ்சனையாக இடந்துடித்து, இனியும் எனக்குத் துன்பத்தைததான் விளைவிககப்போகின்றதோ? என்று பொருளுரைக்க. மகளிரககு இடமும், ஆடவாக்கு வலமும் துடிப்பது நன்னிமித்தமாகும். (௩௨)

௩௩. முனியொடு மிதிலையின் [1]முதல்வன் முந்துநாட்
[2]டுனியறு புருவமுந் தோளு நாட்டமு
மினியன துடித்தன வீண்டு மாண்டென
நனிதுடிக் கின்றன வாய்ந்து நல்குவாய்.

(இ - ள்.) முதல்வன் - நாயகனாகிய ஸ்ரீராமன், முனியொடு - விசுவாமிததிர முனிவருடனே, மிதிலையின் - மிதிலா பட்டணத்துக்கு, முநதும் நாள் - வநதபொழுது, துனி அறு புருவமும-குற்றமற்ற (எனது) புருவமும், தோளும—, நாட்டமும் - கணணும, இனியன-இனிமையைவிளைப்பனவாய், துடித்தன - (இடந்) துடிததன; ஈணடும் - இப்பொழுதும், ஆண்டு என - அப்பொழுது துடிததாற்போலவே, நனி துடிககின்றன - நன்றாக (இடந்) துடிக்கின்றன;—ஆய்ந்து நல்குவாய் - (இதன்பயனை) ஆராய்ந்து (எனககுச) சொல்வாயாக; (எ - று.)

இராமபிரான் விசுவாமிததிர முனிவரோடு முன்பு மிதிலாபுரியிற்புகும் போது எனக்கு இடப்பககந் துடித்தது போலவே இப்போதும் இடம் துடிக்கின்றனவே! இவ்விலஙகையில எனக்கு அவ்வாறான நன்மை யாதுவிளையும்?

இதன் பயனை ஆராயந்து சொல்லுக என்று சீதாபிராட்டி திரிசடையை வேண்டின ளென்க. மிதிலை - ஜனகமகாராஜாது நகர்; இசசொல்லிற்கு - மிதி யென்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்பது பொருள்: நிமி சக்கரவாத்தியின் உடலில் முனிவர் அரணியிட்டுக் கடைந்ததனாற் பிறந்தமைபற்றி, மிதி யென்று ஜனக குலத் தலைவருக்குப் பெயர். பி - ம்:—[1]முதல்வர் வந்த நாள். [2]உறு. (௩௩)

௩௪. மறந்தனெ னிதுவுமோர் மாற்றங் கேட்டியா
லறந்தரு சிந்தையென் னாவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந் [1]துடித்ததால்.

(இ - ள்.) மறந்தனென் - (முன்னே) சொல்ல மறந்தேன்; இதுவும் ஓர் மாற்றம் - இவ்வொரு வார்தத்தையையும், கேட்டி - கேட்பாய்; அறம் தரு சிந்தை - தருமமே பொருந்திய மனத்தையுடைய, என் ஆவி நாயகன்-எனது உயிரோடொத்த கொழுநராகிய இராமபிரான், பார் முழுவதும் - பூமிமுழுவதையும், பிறந்த தம்பியே - தன்பின் பிறந்த அடுத்த தம்பியாகிய பரதனே, பெற - பெறும்படி, துறந்து - (அயோதத்தியை) விட்டு, கான் புகுந்த நாள் - வனதத்திற்கு வரும்பொழுது, வலம் துடித்தது - (புருவம் முதலியன) வலப்புறம் துடித்தது; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

கீழ்ககவியில் தனககு முன்னே நன்மை விளைந்த காலத்தில் அதற்கு அறிகுறியாக இடந்துடித்ததைக கூறிய சீதாபிராட்டி,இக்கவியாலும் அடுத்த கவியாலும் தனக்குத் தீமை விளைந்த காலங்களில் அவற்றிற்கு அறிகுறியாக வலந்துடித்ததைக் கூறுகின்றாள்; பிறந்த பார் என்று எடுத்து - தன்க்கென்று சொல்ல உண்டான இராசசிய மெனினும் அமையும். ஆல் - ஈற்றசை. பி - ம்:—[1]துடித்ததே. (௩௪)

௩௫. நஞ்சனை யான்வனத் திழைத்த நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையா
லெஞ்சல [1]வீண்டுதா மிடந்து டித்ததா
லஞ்சலென் றிரங்குதற் கடுப்பதி யாதென்றாள்.

(இ - ள்.) நஞ்சு அனையான் - விஷம்போலக் கொடிய இராவணன், வஞ்சனையால் - கபடத்தினாலே, வனதது - தண்டகாரணியத்தில், இழைத்த நாளிடை - (எனககுத தீங்கு) செய்த பொழுதில, வலம் துடித்த - வலப்பக்கந் துடித்தன; (அப்பொழுதெல்லாம), தாம - இவ்வுறுப்புகள், வாய்மையால் - உண்மையாகிய விளை பயனால், எஞ்சல - குறையாதவை யாயின; ஈண்டு-இப்பொழுது, இடம் துடித்தது - இடப்புறந் துடித்தது; ஆல் - ஆதலால், அஞ்சல் என்று - பயப்படாதே என்று சொலலி, இரங்குதற்கு - (என் பக்கல்) இரக்கங்கொள்ளுமாறு, அடுபபது - வருவதாகிய செயல், யாது - எதுவோ? என்றாள் - என்று (பிராட்டி) சொன்னாள்;(எ - று.)

இடந்துடித்தால் தீமைவிளைவதும வலந்துடித்தால் நன்மைவிளைவதும் இதற்கு முன்னெல்லாம் எனக்குத தவறாதுவிளைந்தன; இப்போதோஎனக்கு இடம் துடிக்கின்றது; ஆனால், கடலிடையிலுள்ள இலங்காபுரியில் அரக்கரிடையிலே அகப்பட்டுக்கிடக்கின்ற எனக்கு எந்த நன்மை உண்டாகக் கூடும? இவ்வ நன்மை விளைதற்கு யாதொருவழியும் தெரியவில்லையே என்று ஏங்கிச் சீதாபிராட்டி திரிசடையினிடம் தெரிவித்தன ளென்க.

இராவணன் தன்னை மணஞ்செய்யுமாறு பலபடிநயபயங்களால்வேண்டியும் இணங்காதசீதையை இணங்குவிக்கும்படி அரக்கிமார்களை ஏவிச் செல்ல, அவர்களும் அவ்வாறே அச்சமுறுத்தி வற்புறுததுகையில், சீதாபிராட்டி, தன்னை இராமன் தேடிமீட்க வராமைக்குக் காரணங்களைப் பலவாகச சங்கித்துத தனது பாககியக்குறைவே காரணமென்று அறுதியிட்டு இனித் தனக்கு மரணமே சரணமென்று நிச்சயிக்க, அதுபோது திரிசடை தான் கண்ட கனவுகளையும் அவற்றின் பயன்களையும் கூறிச சீதையைத் தேற்றுகையில், சீதைக்கு நன்னிமித்தம் தோன்றின வென்று முதனூலிற் கூறப்பட்டுள்ளது. பி - ம்.—[1]நன்மையாலிடந்துடிக்குமால். (௩௫)

௩௬.—சீதாபிராட்டியை நோக்கித் திரிசடை நற்பயன்விளையுமென்று பின்னும் கூறுதல்.

என்றலுந் திரிசடை யியைந்த சோபன
நன்றிது நன்றெனு நயந்த சிந்தையா
ளுன்றுணைக் கணவனை [1]யுறுத லுண்மையா
லன்றியுங் கேட்டியென் றறைதன் மேயினாள்.

(இ - ள்.) என்றலும் - எனறு-(பிராட்டி) சொன்னவளவில், திரிசடை-தரிஜடையானவள், 'இயைந்த - (உனக்கு) உண்டான, சோபனம் இது-இம மங்களகுறி, நன்று நன்று - மிகவும நன்மையைத்தருவதாம்,' எனு - என்று சொல்லி, (பின்பும்), நயந்த சிந்தையாள்-(பிராட்டியினிடத்து) அன்புவைத்த மனத்தையுடையளாய் 'உன் துணை கணவனை - உனக்குத் துணையான கொழுநராகிய ஸ்ரீராமரை, உறுதல் - (நீ) சேர்தல், உண்மை - நிச்சயம்; அன்றியும - இது வல்லாமலும், கேட்டி - (யான்சொல்வதைக)கேட்பாயாக', என்று - என்று சொல்லி, அறைதல் மேயினாள் - சொல்லத தொடங்கினாள்; (எ - று.)—அதனை மேல் இரண்டுகவிகளாற் கூறுகின்றார். (௩௬)

௩௭.—இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்; சீதாபிராட்டியினிடம் தான்கண்ட நன்னிமித்தத்தைத் திரிசடை எடுத்துக்காட்டுதல்.

உன்னிறம் பசப்புற வுயிரு யிர்ப்புற
[1]வின்னிறத் தேனிசை யினிய நண்பினான்
மின்னிற மருங்குலாய் செவியின் [2]மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால்.

(இ - ள்.) மின் நிறம் மருங்குலாய் - மின்னல்போன்ற தன்மையுள்ள இடையையுடையவளே! உன் நிறம் பசப்பு உற - உனது திருமேனியின் நிறம் பசுமைபெறும்படியாகவும், உயிர் உயிர்ப்பு உற - ஜீவன் பிழைத்தலைப் பெறும்படியாகவும், பொன் நிறம் தும்பி - பொன்னின் நிறத்தையுடைய தொரு வண்டு, இனிய நனபினால் - இனிமையான தன்மையினால், மெல்லென வந்து - மெதுவாக வந்து, இன் நிறம்-(கண்ணுக்கு) இனிய நிறத்தை யுடைய, தேன் - (தான் உண்ணுந்)தேன் போன்ற, இசை - பாட்டிசையை, செவியின் - (உனது) காதில, ஊதி - ஊதிவிட்டு, போயது - இப்பொழுது போயிற்று; (எ - று.)

பொன்வண்டு செவியினிடத்தில் இன்னிசையை ஊதிச்சென்ற இது நல்ல குறியென்பதைக் குறிப்பிததற்கு 'உன்னிறம் பசப்புற உயிருயிர்ப்புற' என்றான். பி - ம்:—[1]இன்னிறத தேழிசை. [2]மெல்லவோர். (௩௭)

௩௮. ஆயது தேரினுன் ஞவி நாயக
னேயது தூதுவந் தெதிர்த லுண்மையாற
றீயது தீயவர்க் கெய்த றிண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள.

(இ - ள்.) ஆயது - அதனை, தேரின் - ஆலோசித்தால், உன் ஆவி நாயகன் - உனது பிராணநாயகன், ஏயது - ஏவியனுப்பின, தூது-தூதன், வந்து எதிர்தல் - (இங்கு) வந்து சேர்தல், உண்மை - நிசசயமாம்; (அன்றியும்), தீயவர்க்கு - கொடுந்தன்மையுள்ள இராவணுதியர்க்கு, தீயது-கொடிய துன்பம், எய்தல் - வருதலும், திண்ணம் - உறுதியாம; (அதற்கு அறிகுறியாக), என் வாயது - என்னிடம் நிகழ்ந்ததை, கேள்—,என-என்று சொல்லி, மறிததும் கூறுவாள் - மீண்டுஞ் சொல்லுவாள், (திரிசடை); (எ - று)

'எந்த நன்மையையும எதிர்ப்பாரததற்கிடமில்லாத இவ்வசோகவனிகையில் அரக்கரிடையே அகப்பட்டுத் தவிகின்ற உனககு இடந்துடிக்கின்ற தனால யாது நற்பயன் விளையும?' என்று ஐயுறவேண்டா; உனது திருமேனியில் நன்னிற மூண்டாகுமாறும் உனனுயிர் தேறுதலடையுமாறும் பொன்னிறவண்டு இன்னிசையை உன் செவியிலே ஊதிச் சென்றதனால் அதன் பயனாக இப்பொழுது உனது பிராணநாயகனாகிய ஸ்ரீராமனிடததிலிருந்து ஒரு தூதுவன் வந்து செய்திசொலலிவிட்டுப் போவானென்பது, தெற்றென விளகுகின்றது; இதுவே, உனககு இடப்புறம் துடிததது தன் பயனும; அன்றியும், இவ்விராககதர்கட்குத் தீமைவிளையுமென்பதற்கு அறிகுறியாக இப்போது ஒரு கனவும் கணடேன்; அதனை யான் கூறககேளென்று திரிசடை கூறலாயினளென்பதாம். (௩௮)

௩௯.—திரிசடை தான் நற்கனுக்கண்டமையைச் சீதாபிராட்டியினிடம் எடுத்துக்கூறத் தொடங்குதல்.

துயிலில தாதலிற் கனவு தோன்றல
வயில்விழி [1]பொருகன வமைந்து நோக்கினேன்

பயில்வன பழுதில [2]பழுதி நாடென
[3]வெயிலினு மெய்யன வுரைத்தன் மேயினாள்.

(இ - ள்.) அயில் விழி - வேல்போலுங் கணகளையுடையவளே! — துயில் இலது ஆதலின் - (உனக்குத) தூக்கமில்லையாதலால், கனவு தோன்றல-கனாக்கள் காணப்படுவனவில்லை; (யான்), ஒரு கனவு - ஒரு கனாவை, அமைந்து நோக்கினேன் - உண்டாகிக காணப்பெற்றேன்; பழுது இ நாடு-குற்றமுள்ள இந் நாட்டில், பயில்வன - உண்டாகுங கனாமுதலிய தோற்றங்கள், பழுது இல - பழுதுபடுகின்றன வில்லை, என - எனறு சொல்லி, வெயிலினும் மெய்யன-சூரியனைக்காட்டிலும் தவறாதவன வாகியசொறகளை, உரைததல் மேயினாள் - சொல்லததொடஙகினாள; (எ - று.)

திரிசடை பிராட்டியை நோககி 'சீதையே! உனக்கு உறககமிலலாமையால் நன்னிமிததமாததிரம் தோன்றியனவேயன்றிக் கனாதோன்றவில்லை; அரக்காக்குத் தீமைவிளையு மென்பதற்கும் உனக்கு நன்மை யுண்டாகுமென்பதற்கும் அறிகுறியாக யான் ஒருகனாக் கணடேன்; அதனைக் கேள்' என்று சொல்லிக கூறததொடஙகின ளென்பதாம்.

இந்த நாடு குற்றமே நிறைந்ததாயினும் இதிற்காணும் கனாமாத்திரம ஒரு போதும் பொய்க்காதென்பாள் 'பயில்வன பழுதில பழுதிநாடு' என்றாள். அயில் விழி - அன்மொழிததொகை; அணமைவிளி. இ நாடு - தொகுத்தல். [2]'பழுதினாடு' என்ற பாடத்துக்கு-பழுதுக்கு இல்லான[உறைவிடமான](இந்த) நாட்டில் என்க. வெயில் - சூரியனுக்கு இலகக்ஷண. சூரியன் தான் உதித்தலும் அஸ்தமித்தலும் பொய்ககாதிருத்தலால், பொய்யல்லாத மெய்ச்சொல்லுக்குச் சூரியனை உவமை கூறுவர்; "காலையன்ன சீர்சால் வாய்மொழி" என்ற பதிற்றுப்பததின் அடியையும், 'ஆதித்தனைப்போல் எஞ்ஞான்றும் தப்பாதாகிய மெய்ம்மொழி' என்ற அதனுரையையும் காண்க. இனி, ஒருசாரார [3]'வெயிலினும் வெய்யன என்ற பாடங்கொண்டு, 'சூரிய கிரணத்தினும் விரும பத்தகுந்த சொற்களை' என்று பொருளுரைத்து, ஈள்ளிரவில் அரக்கியரிடைப் பட்டு மிகவும் வருந்துகின்ற சீதைக்கு அவ்வருத்தம் சிறிது நீஙகுமாறு இனி விடிந்துதோன்றபபோகின்ற சூரியனைக்காட்டிலும் செவிக்கினிய சொறகள் என்று கருதுததகொள்வர். இங்கு வெய்யன கொடிய சொற்கள் என்று உரைத்தல், அததுணைச சிறவாது. இசசெய்யுள் சில பிரதியில் "உன்னிறம்" (௩எ) என்றதன் பின் உள்ளது. பி - ம்:—[1]அன்னை கண்ணமைய. [4]விளம்பக் கேட்டியால். (௩௯)

சம - இதுவும் அடுத்தகவியும்-ஒருதொடர்; திரிசடை இராவணன்தலத்தோடு நாசமடைவதைக்குறிக்குங் கனாக்கண்டதைக் கூறுதல்.

எண்ணெய்பொன் முடிதொறு மிழுகி [1]யீறிலாத்
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மே

[2]லண்ணலவ் விராவண னரத்த வாடைய
னண்ணினன் றென்புல னவையில் கற்பினாய்.

(இ - ள்.) நவை இல் கற்பினாய்-குற்றமில்லாத கற்புநிலைமையையுடையவளே!—அண்ணல் பெருந்தன்மையையுடைய, அ இராவணன்-அந்த இராவணன், பொன் முடிதொறும் - அழகிய (தனது) பத்துத்தலைகளிலும், எண்ணெய் - எண்ணெயை, இழுகி - தேய்த்துக்கொண்டு, ஏறு இலா - அளவில்லாதனவாகிய, திண் நெடு கழுதை - வலிய பெரிய கழுதைகளும், பேய் - பேய்களும், பூண்ட - பூட்டப்பட்டுள்ள, தேரின்மேல் அரத்தம் ஆடையன் - சிவந்த வஸ்திரத்தை உடுத்துக்கொண்டவனாய், தென் புலன்-தெற்குத்திக்கை நோக்கி, நண்ணினன் - சென்றான்; (எ - று.)

இராவணன் தனது பத்துத்தலைகளிலும் எணணெய்தேய்த்துக்கொண்டு கழுதையும் பேயும் பூட்டிய தேரின்மீதேறி, இரதத வாடையுடன் தென் திசை நோகஙிச செல்வதாகக கனாகண்டே னென்று கிரிசடை பிராட்டியினிடம் கூறின ளென்க. "இல்லை கனாமுதுறுதவினை" என்ப வாதலால், இராவணனுககுத் தீவகுநேர்வது கனாவினால் முந்துறத் தெரிவிக்கப்பட்டது. வான்மீகிபகவானும இவவாறனமே கூறியுள்ளார். எணணெய் எள்ளிலிருந்து உண்டாகும் நெய்; தைலம். அகராசசுட்டு, பிரசித்தியைக் காட்டிற்று. அரத்தம்-ரக்தம். பி-ம்:—[1]ஏறிய. [2]அண்ணல்வேல். (௪௦)

௪௧. மக்களுஞ் சுற்றமு மற்று ளோர்களும்
புக்கன ரப்புலம் போந்த தில்லையாற்
[1]சிக்கற நோக்கினென் றீய வின்னமு
மிக்கன [2]கேட்கென விளம்பன் மேயினாள்.

(இ - ள்.) 'மககளும் - (அவனது) பிள்ளைகளும், சுறறமும்-உறவினர்களும், மற்று உளோரகளும் - இன்னமுள்ள அரக்கர்களும், அ புலம்-அந்தத் திக்கைநோக்கியே, புக்கனர் - சென்றார்கள்; போந்தது இல்லை - திரும்பி வரக் கண்டதில்லை; சிக்கு அற - தவறுபடாமல், நோக்கினென்-பார்த்தேன்; இன்னமும்—, தீய - கொடியவை, மிககன - மிகுந்துள்ளவற்றை, கேட்க - கேட்பாயாக', என-என்று சொல்லி விளம்பல் மேயினாள் - (அவறறையும்) சொல்லத தொடஙகினாள், (கிரிசடை); (எ - று.)

அன்றியும், இராவணன் எந்ததிசையாகச சென்றானோ அந்தத் தென் திசை நோக்கியே அவனது மக்களும் சுற்றத்தாரும் திரும்பிவராமலே செல்லக் கனாக்கணடேன்; ஆதலால், வமிசநாசமாக இராவணன் அழிவது நிசசயம்: இவற்றைததவிர இன்னும சில கனாவும் கணடேன்; அவற்றையும் கூறுவேனென்று கிரிசடை கூறலாயின ளென்க. பி - ம்:—[1]சிக்குற. [2]கேட்டியால் விளைவு கூறுவேன். (௪௧)

சஉ.—திரிசடை பின்னும் தான்கண்ட கனவைக் கூறுதல்.

ஆண்டகை யிராவணன் வளர்க்கு [1]மவ்வன
ஈண்டின விறந்தவா லினங்கொள் செஞ்சிகைத்
தூண்டரு மணிவிளக் கழலுந் தொன்மனை
கீண்டதால் வானவே றெறியக் கீழுநாள்.

(இ - ள்.) ஆண் தகை - ஆண்மைக்குணத்தையுடைய, இராவணன்—, வளர்க்கும் - (நெய்முதலியன சொரிந்து) வளரச்செய்வனவாகிய, அ அனல்- அந்த ஓமாக்கினிகள், ஈண்டின - ஒன்று கூடினவாய் [ஒருசேர], இறந்த - அவிந்தன; இனம் கொள் - கூட்டத்தைக்கொண்ட, செம் சிகை சிவந்த சுவாலையையுடைய, தூண்டு அரு - தூண்டுதல் வேண்டாத, மணி விளக்கு-இரத்தினமயமான தீபங்கள், அழலும்-விளங்கப்பெற்ற, தொல் மனை - (அவனது) பழமையான மாளிகை, கீழுநாள் - விடியற்காலத்தில், வானம் ஏறு எறிய- ஆகாயத்துப் பேரிடி இடித்துவிழுதலால், கீண்டது - இடிபட்டது; (எ - று.)

கீழ் இரண்டுகவிகளினால் இராவணன் வம்சநாசமாவதைச் சூசிப்பிக்குங் கனாக் கண்டதைக் கூறிய திரிசடை, இந்தச்செய்யுளினால் இனி இராவணனதுமாளிகை விரைவிலழிவதைக்குறிப்பிக்குங் கனாக்கண்டதைக்கூறுகின்றனளென்க. ஆண்டகை-ஆண்டகைமை; பராக்கிரமம். ஆகவநீயம், காருகபதியம், தக்ஷிணாக்கினி என்று ஓமாக்கினி மூன்றுவகைப்படுதலால் 'ஈண்டின் இறந்த எனப் பன்மையாற் கூறப்பட்டது. ஏறு - ஆண்பெயர்; வாளேறு, வேலேறு என்றாற்போல, 'வான வேறு' என்றார்: சிறந்ததை ஆணென்றல், மரபு; பேரிடியென்று கருகது; ஆணலை போல. 'கீழுநாள்' என்றதனால், இந்தக் கனா முழுவதும் இன்றை விடியலிறகண்டது எனத தெரிவித்தாள். விடியற்காலத்துககனா தவறாது விரைவிற் பலிககுமென்பது, நூற்றுணிபு.
பி - ம்:—[1]அவ்வனம். [2]ஈண்டியல்பு. (சஉ)

சஙு. இனித் திரிசடை இலங்கையில் தோன்றும் உற்பாதங்களை ஆறுகவிகளாற் கூறுகின்றாள்.

பிடிமதம் பிறந்தன பிறங்கு பேரியு
மிடியென முழங்குமா லிரட்ட லின்றியே
தடியுடை முகிற்குல மின்றித் தாவில்வான்
வெடிபட வதிருமா லுதிரு மீனெலாம்.

(இ - ள்.) பிடி மதம் பிறந்தன-பெண்யானைகள் மதமொழுகப்பெற்றன; பிறங்கு பேரியும்-விளங்குகின்ற முரசவாத்தியங்களும், இரட்டல் இன்றியே- அடித்தலில்லாமலே, இடி என - இடிபோலவே, முழங்கும-தாமே கொடுமையாக ஒலிக்கும்; கரு உடை-மின்னலையுடைய, முகில் குலம் - மேகக்கூட்டம், இன்றி இல்லாமலே, தா இல் வான் - கெடுதலில்லாத ஆகாயம், வெடி பட-

(அண்டமெல்லாம்) வெடிக்கும்படி, அதிரும் - இடியிடிக்கும்; மீன் எலாம் - நக்ஷத்திரங்களெல்லாம், உதிரும் - உதிர்ந்துவிழும் ; (எ - று.)

பெண்யானை மதநீரொழுகப்பெறுவதும், பேரிகை அடிக்கப்படாமலே ஒலித்தலும், ஆகாயத்தில் முகிற்குலங்களில்லாமலே இடித்தலும், நட்சத்திரங்கள் உதிர்தலும், பி வருந் தீங்கைத தெரிவிக்கும் உற்பாதங்க ளென்க; மேலிறகவிகளும் இங்ஙனமே காணக. தடி - தடித . வடமொழி. (சரு)

சச. விற்பக [1]லினறியே யிரவு விண்டற
வெற்பக [2]வெரிந்துள தென்னத் தோன்றுமான்
மறபக மலர்ந்ததோண் மைந்தா சூடிய
கற்பக மாலையும் புலவு காலுமால்.

(இ - ள்.) வில் - ஒளியையுடைய, பகல் - பகற்பொழுது, இன்றியே - இல்லாமலே [இராப்பொழுதிலே], இரவு விண்டு அற - இருள் நீங்கி ஒழியும்படி, எல் - சூரியன், பக எரிந்துளது என்ன-பிளவுபட [பாதி] எரிந்து போனதுபோல, தோன்றும - விளங்கும்; மல் பக - வலிமையிக, மலர்ந்த-விளங்குகின்ற, தோள-தோள்களையுடைய, மைந்தர்-வீரர்கள், சூடிய தரித்த, கற்பகம் மாலையும - கல்பகவிருக்ஷங்களின் மலர்களால் தொடுத்த மாலைகளும், புலவு காலும் - (நறுமணமின்றிப்) புலால்நாற்றம் வீசும்; (எ - று.)

இரவிலும் இருளொழியும்படி சூரியன் பாதிவடிவத்தோடு தோன்றுவதும், வீரர்கள் சூடிய கற்பகமாலைகள் புலால்நாற்றம் வீசுவதும் உற்பாதமாக உண்டாயின. இராவணனிடத்து அச்சத்தால் தேவர்கள் கொணாநது கொடுத்த கற்பகமலர்மாலையை இராக்கதவீரா அணிநதுள்ளா ரென்க. இரவு-இருளுக்கு ஆகுபெயர் விண்டு என்னும் வினையெச்சம், இங்கே தனவினைப் பொருளது. பி - ம்:—[1]அன்றியே யிரவுவிண்டர. [2]எரிந்துள வெனன. (சச)

சரு. திரியுமா லிலங்கையு மதிலுந் திக்கெலா
மெரியுமாற் கந்தர்ப்ப நகர மெங்கணுந்
தெரியுமான் மங்கல கலசஞ் சிந்தின
விரியுமால் விளக்கினை விழுங்கு மாலிருள்.

(இ - ள்.) இலங்கையும் - இந்த லங்காபுரியும், மதிலும் - (அதனைச் சூழ்ந்த) மதில்களும், திரியும் - சுழலும்; திக்கு எலாம் - எல்லாத்திக்குகளும், எரியும் - நெருப்புப்பற்றி எரியும; கந்தர்ப்ப நகரம் - கந்தருவர்களது பட்டணம், எங்கணும் - எல்லாவிடத்தும், தெரியும - காணப்படும்; மங்கல கலசம்-சுபகரமான பூர்ணகும்பங்கள், சிந்தின விரியும - வாய்விரிந்தனவாகி உடையும்; இருள் - இருட்டு, விளக்கினை - தீபத்தை, விழுங்கும் - சூழ்ந்துமறைக்கும்; (எ - று)

இலங்கையின் மதிலும் இலங்காபுரியும் திரிதலும், திக்குக்கள் எரிதலும், கந்தர்வநகரம் எங்கும் தெரிதலும், பூர்ணகும்பங்கள் வாய்விரிந்து உடைதலும், விளக்குகளை இருளைப் போக்கவேண்டியதாயிருக்க அந்நிலைமாறி இருள்

விளக்கை விளங்கவொட்டாது தான் மேம்படுதலும் உற்பாதமாகத் தோன்றின வென்க. கந்தர்ப்பநகரம் - மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் முதலிய அமைந்துள்ள நகரம்போல ஆகாயத்தில் தோன்றி மறையுந்தன்மையது; இதனை, கபுரம [ஆகாசபட்டணம்] என்றும் வழங்குவர். "ஸாவதிகுத்தம் ஸததோத்தித்தம்ச பயதம் ந்ருபதிராஷ்ட்ராணாம்" [கந்தர்வநகரம் எல்லாதிசைகளிலும் எப்போதும் தோன்றுமாயின், அது அரசனுக்கும் தேசத்திற்கும் பேரச்சத்தை விளைக்கும்]" என்று வராக மிகிரர் கூறியுள்ளதனால், எங்கணும் என்பதற்கு - இரட்டுறமொழிதலாக எல்லாவிடத்திலும் எல்லாப்போதிலும் என்று பொருள் கொள்ளலாம். கந்தர்வநகரம் - கந்தருப்பநகரமெனத் திரிந்தது; 'கந்தர்ப்பநகர மெங்கணுங் கரியும்' என்று பாடங்கொண்டு மன்மதன் வாசஞ்செய்யுமிடமாகிய சிங்காரப்பூஞ்சோலை அந்தப்புரம் முதலியவை தீந்துகாணப்படும் என்று பொருள் கொள்ளுதல் அதனுணைச் சிறப்பின்று. (௪௫)

௪௬. தோரண முறிந்தன துணியச சூழிமால்
வாரண முறியுமால் வலத்த [1]வாண்மருப
பாரண மந்திரத் தறிஞர் [2]நாட்டிய
பூரண குடத்துநீர் [3]நறவு பொங்குமால்.

(இ - ள.) தோரணம் - தோரணங்கள், முறிந்தன ஒடிந்தனவாகி' துணிய - துண்டுபட,—சூழி - முகபடாதத்தையுடைய, மால்-பெரிய, வாரணம்-யானைகள், வலத்த - வலிமையுள்ள, வாள் - ஒளியையுடைய, மருப்பு - தந்தங்கள், முறியும் - ஒடிபடும்; அறிஞர் - (வைதிகருமங்களை) அறிந்த அந்தணர், ஆரண மந்திரத்து - வேதமந்திரங்களைகொண்டு, நாட்டிய - பிரதிஷ்டித்த, பூரண குடத்து - நிறைந்த கும்பங்களிலுள்ள, நீர் - பரிசுத்த ஜலம், நறவு பொங்கும் - கள்ளாகிப் பொங்கும்;'எ - று.)—ஆல்-அசை.

தோரணம் முறிந்து துண்டுபடுதலும், யானைகள் பகைகளைக் குத்திக் கொல்லுந்தன்மைவாய்ந்த தமது வலிய தந்தங்கள் ஒடியப்பெறுதலும், வேதம் வல்ல அந்தணர் அபிமந்திரித்துவைத்த பூர்ணகும்பங்களின் சுத்தஜலம் கள்ளாய்ப்பொங்குதலும் உற்பாதமாக நிகழ்ந்தன வென்க. தோரணம்-ஆங்காங்கு அமைக்கப்படுவனவாகிய கட்டுவாயில்; பி - ம்:—[1]வான் மருப்பு. [2]ஆட்டுறு. [3]நறவிற். (௪௬)

௪௭. விண்டொடர் மதியினைப் பிளந்து [1]மீனெழும்
புண்டொடர் குருதியிற் பொழியும் போர்மழை
தண்டொடு [2]திகிரிவா டனுவென் றின்னன
மண்டமர் புரியுமா லாழி மாறுற.

(இ - ள.) விண் தொடர்-ஆகாயத்திற் செல்கின்ற, மதியினை-சந்திரனை, பிளந்து - பிளந்துகொண்டு மீன - நக்ஷத்திரம், எழும் - புறப்படும்; போர் - (ஆகாயத்தில்) கவிந்துபரந்த, மழை - மேகங்கள், புண் தொடர் குருதியின் -

விரணத்திலிருந்து வழியும் இரத்தத்தைக்கொண்டு, பொழியும் - மழைபெய்யும்; தண்டொடு - கதையும், திகிரி - சக்கரமும், வாள் - வாளும், தனு - வில்லும், என்று இன்னன - என்று இப்படிப்பட்ட ஆயுதங்கள், ஆழி மாறு உற - (பேரொலியால்) கடலோடு மாறுபடும்படி, மணடு அமர் - மிகுந்தபோரை, புரியும் - தாமேசெய்யும்; (எ - று.)

'நட்சதிரநாதன்' என்று பேர்பெறும்படி நட்சத்திரங்கட்கெல்லாந் தலைவனான சந்திரனை அந்த நட்சதிரங்கள் மீறிப் பிளந்துகொண்டு எழுதலும், வானம் இரததமழைபொழிதலும், தண்டம் சக்கரம் முதலிய ஆயுதங்கள் பேரொலிபடத் தாமே ஒன்றோடொன்று போர்புரிதலும் உற்பாதமாகத் தோன்றின வென்க. புண் தொடர் - குருதிக்கு அடைமொழி. குருதியைப் பொழியும் எனப் பொருள் கொண்டால் குருதியின் என்பதில், இன்சாரியை நிற்க இரண்டனுருபுதொக்கதென்க பி - ம்.—[1]மின்னெழும். [2]மதியமீன்.

சஅ. மங்கையர் மங்கலத் தாலி மற்றையோ
ரங்கையின் வாங்கின ரெவரு மன்றியே
கொங்கையின் வீழ்ந்தன குறித்த வாற்றினு
லிங்கித னற்புத மின்னுங் கேட்டியால்.

(இ - ள்.) மங்கையர் - பெண்களது, மங்கலம் தாலி - சுபமான தாலிகள், மற்றையோர் எவரும் - பிறரொருவரும், அம் கையின் வாங்கினர் அன்றியே- தமது அகங்கையால் அறுத்தனரல்லாமலே, கொங்கையின் -(அவரவர்) தனங்களின்மேல், வீழ்ந்தன - தாமேவிழுந்தன; இங்கு குறித்த ஆற்றினால் - இப்பொழுது சொன்ன முறைப்படியே, இதன் - இத்தீக்குறியினது, அற்புதம்- ஆச்சரியத்தை, இன்னும் - இன்னமும், கேட்டி - கேட்பாயாக; (எ - று.)

இராக்கதமகளிர் தமது கழுத்திலணிந்துள்ள மங்கலநாண்கள் பற்றியிழுப்பவு ரெவரும இல்லாமலே தாமே அற்று அம்மகளிர் கொங்கைகளின்மேல் விழுகின்றன; இதுவும் ஓர் உற்பாதமே; இன்னும் கூறுகின்றேன் கேள்! என்று பின்னும் திரிசடை கூறலாயினளென்க. (சஅ)

சகூ.—இராவணனுக்குத் தீங்கு உண்டாவதைக் குறிக்கும் தீக்குறியைத் திரிசடை கூறுதல்.

மன்னவன் றேவியும் மயன்ம டந்தைதன்
பின்னவி ழோதியும் பிறங்கி வீழ்ந்தன
[1]துன்னிருஞ் சுடர்சுடச் சுறுக்கொண் [2]டேறின
வின்னலுண் டெனுமிதற் கேது [3]வீதெனு.

(இ - ள்.) மன்னவன் தேவி - லங்காராஜனான இராவணனது மனைவியும், அ மயன் மடந்தைதன் - அந்த மயனது மகளுமான மந்தோதரியினது, ஓதியும் - கூந்தல் மயிர்களும், பின் அவிழ் பிறங்கி வீழ்ந்தன - பின்னல அவிழ்ந்து நிறைந்து விழுந்தன; (இன்னும் அவை), துன் இரு சுடர் சுட - -

(அருகில்) பொருந்திய பெரிய விளக்கின் சுவாலை பற்ற, சுறுக்கொண்டு எறின - சுறுசுறு வென்று விரைந்து வெந்தன; இன்னல் உண்டு எனும் இதற்கு - (கொடிய அரக்கர்களுக்கெல்லாம்) துன்பமுண்டாமென்று (நான்) சொன்னதற்கு, ஏது - காரணம், ஈது - இச்செயலுமாம், எனு - என்று, (எ - று.),—'இயம்பி' என மேற்கவியோடு முடியும்.

இராவணனது மனைவியான மந்தோதரியினது பின்னிய கூந்தல்தானே அவிழ்ந்ததும், விளக்குச் சுடரில் சுறுக்குண்டு வெந்ததும் அவள் மங்கலநாணி ழத்தலைத தெரிவிக்குந் தீக்குறியா மென்றன ளென்பதாம். பின்-முதனிலைத தொழிற்பெயர். பின் - பின்னே, வீழ்ந்தன வென்றுமாம். சுறுக்கொண்டு - விரைந்து வேதற்குறிப்பு. பி - ம்:—[1]துன்னரும். [2]எறிற்றுல. [3]என்பதே.

ரு0 —இதுமுதல் நான்குகவிகளால், திரிசடை தான் பின்னுங்கண்ட கனவைக் கூறுதல்.

என்றன னியம்பிவே [1]றிசைப்பக் கேட்டியா
லின்றிவ ணிப்பொழு [2] திசையந்த தோர்கனு
வன்றுணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை [3]யுழுவையங் குழுக்கொண் டீண்டியே.

(இ - ள்.) என்றனள் இயம்பி - என்று இவ்வாறு சொல்லி, (பின்பு), வேறு இசைப்ப - வேறொன்று (நான்) சொல்ல, கேட்டி - கேட்பாயாக; இன்று - இன்றைக்கு, இவண் - இவ்விடத்தில், இப்பொழுது—, ஓர் கனு - ஒருசொப்பனம், இயைந்தது-உண்டாயிற்று; (அதுஎன்னவென்றால்),—வல்-வலிய, துணை-ஒன்றுக்கொன்று துணையான, கோள் அரி இரண்டு-இரண்டு ஆண்சிங்கங்கள், மாறு இலா குன்றிடை - ஒப்பில்லாததொரு பெரியமலையிலே, அம் உழுவை குழு கொண்டு-கணணுக்கு அழகிதாகத்தோன்றுகின்ற புலிக்கூட்டத்தை (த்தமக்குத் துணையாக) க்கொண்டு, ஈண்டி - (அதனோடு) சேர்ந்து வந்து,—(எ - று.)—இக்கவியில் 'ஈண்டி' என்பது, மேற்கவியில் 'கொன்ற' என்னும் வினையோடு முடியும்.

கீழ்ப்பாட்டினிறுதியில் 'எனு' என்று வந்ததனால் இப்பாட்டில் 'என்றனள்' என்றது - அனுவாதம்; அன்றிக்கே, எனு - அசையாகவுமாம். முன் சொன்ன கனு நிகழ்ந்த காலத்தை, கீழ் ௪௨-ஆங கவியில் 'கீழைநாள்' என்றதனுற் கூறியதனால், இனிச்சொல்லுங கனு நிகழ்ந்த காலத்தையும் இடத்தையும் 'இன்றிவணிப்பொழுது' என்றதனுற் கூறினள். இக்கனு நிகழ்ந்தது இவ்விடத்திலென்றதனால், முற்கனு நிகழ்ந்தது இவ்விடத்திலன்று தனதுவீட்டிலென்று கொள்க. அரி - ஹரி என்னும் வடமொழியின் திரிபு; (யானை முதலிய பெரிய விலங்குகளையும்) ஒறுக்கவல்லதென்று பொருள்: ஹரித்தல் - அழித்தல். குன்றிடை ஈண்டி என இயையும்; குன்றிடை உழுவை என இயைந்தால், மலையில் வசிக்கும் புலிக ளெனக. பி - ம் —[1]இன்னுங். [2]எதிர்ந்தது. [3]உழுவையாம்.

௫௧. வரம்பிலா [1]மதகரி யுறையு மவ்வன
நிரம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன
[2]குரம்பறு பிணம்படக் [3]கொன்ற மாறிலாப
புரம்புக [4]விருந்ததோர் மயிலும் போயதால்.

(இ - ள்.) வரமபு இலா-அளவிலலாத, மத கரி-மதத்தையுடைய யானைகள், உறையும - வசிக்கின்ற, அ வனம - அந்தக்காட்டை, நிரம்புஉற - நிரம்புதல் பொருந்த [இடைவிடாமல்], வளைந்தன - சூழ்ந்துகொண்டவையாய் நெருககி - வருததி, நேர்ந்தன - எதிர்ததது, குரம்பு அறு பிணம படட - எல்லையில்லாத பிணஙகள் பொருந்தும்படி, கொன்ற - கொன்றன; இருந்தது ஓர் மயிலும - (அவ்வனததில்) வந்திருந்ததொரு மயிலும், மாறு இலா - ஒப்பில்லாத, புரம் - (அசசிஙகஙகளது) நகரததை, புக - அடைதற்கு, போயது - (அவற்றுடன்) சென்றது; (எ - று.)

அரியிரணடுஙு கொன்ற வெனக. இக்கனுவினுல், ராமலக்ஷ்மணர் பெரு வலியுள்ள வானரர்களைத் துணையாகக்கொணடு இலஙகையைச சார்ந்து அஙகுள்ள அரக்கரையெல்லாம கொன்று, சீதாபிராட்டியைச சிறைமீட்டுததமது நகரத்துக்குத திருமபிசசெல்லுதல் குறிப்பிககப்படுதல் காணக. அயோத்தியெனபதன் பொருளை உட்கொணடு, மாறிலாப்புரம - பகையில்லாத பட்டணம் என்று கூறியதுமாம். பி - ம்.—[1]மால். [2]வரமபு. [3]கொன்று வாலிதின். [4]மீண்டதோ. (௫௧)

௫௨. ஆயிரந் திருவிளக் கமைய [1]மாட்டிய
சேயொளி [2]விளக்கதொன் றேந்திச செய்பவ
ணுயகன் றிருமனை நின்று [3]நண்ணுதன்
மேயினள் வீடணன் கோயின் மென்சொலாய்.

(இ - ள்.) மெல் சொலாய-மென்மையான சொற்களை யுடையவளே!—ஆயிரம் திரு விளக்கு - ஆயிரம் அழகிய விளக்குக்களை, அமைய-எரியும்படி, மாட்டிய - கொளுததிய, சேய் ஒளி விளக்கு அது ஒன்று - சிவந்த ஒளியை யுடையதொரு பெரு விளக்கை, ஏந்தி - கையிலெடுததுக கொணடு, செய்யவள் - சிவந்தநிறமுடையவளொருத்தி, நாயகன் திரு மனைநின்று - ராக்ஷசராஜனுகிய ராவணனது அழகிய அரணமனையினின்றும், வீடணன் கோயில - விபீஷணனது அரணமனையை, நண்ணுதல் மேயினள் - அடைதலானுள்; (எ - று.)

இது, ராஜ்யலக்ஷ்மி இராவணனுடைய மாளிகையிலிருந்து ஸ்ரீவிபீஷணுழ்வானுடைய மாளிகையைச சார்தலைக் குறிப்பித்தல் காணக. முதலடியில் விளக்கு - திரியிற் பற்றியெரியும் நெருப்புச்சுவாலை; இரணடாமடியில் விளக்கு - அசசுவாலைகள் பலவற்றிற்கு இடமான தணடுக்கு ஆகுபெயர். 'செய்யவள்' என்றது, இலக்குமியை யென்னலாம். பி - ம்.—[1]நாட்டிய. [2]விளக்கம். [3]நன்னுதல். (௫௨)

௫௩. [1]பொன்மனை புக்கவப் பொருவில் போதினி
லென்னைநீ யுணர்த்தினை முடிந்த தில்லென
வன்னையே யதன்குறை காணென் [2]றாயிழை
யின்னமுந் [3]துயில்கெனு விருகை கூப்பினாள்

(இ - ள்.) பொன் மனை புக்க - (அப்பெண என் தந்தையது) பொன்மயமான மாளிகையை அடைந்த, அ - அந்த, பொருவு இல் போதினில்-ஒப்பில்லாத சமயத்தில், நீ—, என்னை—, உணர்த்தினை - துயிலெழுப்பினாய்; (ஆதலால்), முடிந்தது இல் - (அக்கனா) முடிந்ததிலலை, என - என்று (திரிசடை) சொல்ல,—ஆயிழை - ஆராய்ந்து எடுத்தணிந்த ஆபரணங்களையுடைய பிராட்டி,—'அன்னையே - தாயே! அதன் குறை காண் - அககனாவின் குறையைக் காண்பாயாக,' என்று - என்று சொல்லி, இன்னமும துயில்க என - (அதன்பொருட்டு) இன்னமுந் தூங்குவாயாக வென்றுஞ் சொல்லி, இரு கை கூப்பினாள் - (தனது) இரண்டு கைகளையுங குவித்துத தொழுதாள்; (எ-று.)

இவ்வாறு அனுகூலமான நற்குறிகளைக் கனாநிகழ்ச்சியால் முன்னமே அறிந்து கூறிய திரிசடையை நோககி, குறையாயுள்ள அந்தக கனாவை முற்றவும் அறியவேண்டு மென்று ஆதரகொண்ட சீதாபிராட்டி 'இனியும் உறங்கி அந்தக் கனாவை முற்றவும் உணர்ந்து கூறுவாயாக' என்று சொல்லிக் கைகூப்பி வணகினா ளென்பதாம் பொன் - இலக்குமிபோன்ற அவள், மனைபுக்க என்றுமாம். பி - ம்:—[1]பொன்னகர் [2]ஆய்வளை. [3]துயிலெனு. (௫௩)

மீட்டுமத் திரிசடை யெனனு மென்சொலாள்
தோட்டடம் பொருகுழைத தோகை யேயனாய்
கேட்டலுங் கடுவெனக் கிளரும் பாதமாய்
நாட்டினின் யாவரு நடுங்கக் காட்டுமால்.

என்று ஒருபாடல் இங்கே சில பிரதிகளிற் காண்கின்றது.

௫௪. அப்போது அநுமான் சீதையிருக்குமிடத்தைக் காணுதல்

இவ்விடை யண்ணலவ விராம னேவிய
வெவ்விடை யனையபோர் வீரத் தூதனு
மவ்விடை யெய்தின னரிதி னோக்குவா
னெவ்விடை மடந்தைதன் னிருக்கை நோக்கினான்.

(இ - ள்.) இ இடை - இப்படிப்பட்ட சமயத்தில், அண்ணல் - பெருந்தன்மையையுடைய, அ இராமன் - அந்த ஸ்ரீராமன், ஏவிய - அனுப்பின, வெமவிடை அனைய - கொடிய காளையைப் போன்ற, போர் - போரில்வல்ல, வீரம - வீரததன்மையையுடைய, தூதனும் - தூதனாகிய அனுமானும்,—அரிதின் - அருமையாக, நோக்குவான் - பார்த்துவருபவனாய், அ இடை - அந்த இடததை, எய்தினன் - அடைந்து,—நொ இடை. மடந்தைதன் - (மிகவும்

மெல்லியதாதலால்) வருந்துகின்ற இடையையுடைய பிராட்டியின், இருக்கை-இருப்பிடத்தை, நோக்கினான் - பார்த்தான்; (எ - று.)

மேல் ௬௩-ஆஞ் செய்யுளில் சீதையை அனுமான் நேரிற் கண்ட செய்தியைக் கூறுவதனால், ஆசிரியர் இச்செய்யுளில், சீதையிருக்கின்ற அசோக வனிகையைக் கண்டதையே கூறுகின்றனரென உணர்க. இராமபிரானது தூதனாய் இலங்கையிற் புகுந்து 'சீதையை எங்குக் காண்போம்?' என்னுங் கவலையோடு ஓரிடத்தையும் விடாமல் உற்றுப்பார்த்துக்கொண்டுவருபவனாகிய அனுமான் சீதாபிராட்டி யெழுந்தருளியிருக்கின்ற அவ்வசோகவனிகையைக் காணலாயினனென்க. விடை - வ்ருஷம் என்னும் வடமொழியின் திரிபு: இது, கம்பீரமான தோற்றத்துக்கும் நடைக்கும் வலிமைக்கும் உவமை. நொவ்விடை - வினைதொகை; நொ என்னும் வினைப்பகுதியின்முன் இடையெழுத்து மிகுதி; [நன் - உயிர் அ.] இடைக்கு வருததம-மேலுங்கீழுமுள்ள பருத்த உறுப்புக்களைப் பரித்தலினாலாகியது. (௫௪)

௫௫ - துயிலினாற் சோர்ந்துகிடந்த அரக்கியர் உணர்ந்தெழுந்து அப்பொழுது படைகளை யேந்திக்கொண்டு திரளுதல்.

அவ்வயி னரக்கிய ரறிவுற் றமமவோர்
செவ்வையி றுயினமைச் [1]செகுத்த தீதெனா
வெவ்வயின் மருங்கினு மெழுந்து வீங்கினார்
வெவ்வயின மழுவெழுச் சூல [2]வெங்கையார்.

(இ - ள்.) அ வயின் - அப்பொழுது, அரக்கியா - (பிராட்டிக்குக் காவலாகவுள்ள) இராக்ஷசிகளெல்லாம்,—அறிவுற்று - தூக்கம் தெளிந்து, 'அம்ம-ஆசசரியம்! ஓர் - ஒரு, செவ்வைஇல் - நன்மையில்லாத, துயில் ஈது - இந்தத் தூக்கம், நமை - நம்மை, செகுத்தது - கெடுத்தது', எனா - என்றுசொல்லி, எ வயின் மருங்கினும் - எல்லாப்பக்கங்களிலும், எழுந்து - எழுந்திருந்து,—வெம - கொடிய, அயில் - வேலையும், மழு - மழுவையும், எழு - வளைதடியையும், சூலம் - சூலத்தையும் ஏந்தின, வெம கையார் - கொடிய கைகளையுடையவர்களாய், வீங்கினார் - திரண்டாரகள்; (எ - று.)

சீதாபிராட்டியின் சிறைக்காவலாக இராவணனேவியுள்ள அரக்கியர் சற்றுக் கண்ணயர்ந்துகிடந்து திடீரென்று துயிலுணர்ந்தெழுந்து 'நமது அரசன் கட்டளைகளுமாறாக கணணுறங்கிவிட்டோமே!' என்று அஞ்சித் துணுக்குற்றுத் தமது செயலைப் பழித்திட்டு, வேல் மழு முதலிய படைகளைக் கைகளிலேந்திக்கொண்டு நாறபுறத்திலும திரண்டனரென்க. முதலடி-முற்றுமோனை. அம்ம - வியப்பிடைச்சொல். பி - ம்.—[1]செய்த தீங்கெனா. [2]எச்சினார். (௫௫)

௫௬.-இதுமுதல் ஐந்துகவிகள் - அவ்வரக்கிமார்களின் தன்மையைத் தெரிவிக்கும்.

வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியிற்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கின

எயிற்றினுக் கிடையிடை யானை[1]யாளிபேய்
துயிற்கொள்வெம் பிலனெனத் தொட்ட வாயினர்.

(இ - ள்.) (அவ்வரக்கியருட் சிலர்), வயிற்றிடை-வயிற்றில், வாயினர்-வாயையுடையவர்கள்; வளைந்த-வளைவாகவுள்ள, நெறறியில்-நெற்றிமேலே, குயிற்றிய - (கடவுளால்) அமைக்கப்பட்ட, விழியினர் - கண்ணையுடையவர்கள்; கொடிய நோக்கினா - பயங்கரமான பார்வையை யுடையவரகள்; எயிற்றினுக்கு இடை இடை-பற்களுக்கு நடுவே நடுவே, யானை - யானைகளும், யாளி - யாளிகளும், பேய - பேய்களும், துயில் கொள் - நித்திரை கொள்ளுகின்ற, வெம்-கொடிய, பிலன் என மலைக்குகைபோல, தொட்ட - ஆழமாகவுளள, வாயினர்-வாயையுடையவர்கள்; (எ - று.)

அவகுள்ள அரகக்கியர்யாவரும் கண்டமாதத்திரத்தில் திடுக்கிட்டு அஞ்சும் படியான கோரரூபமுடையவ ரென்பது இங்கு விளங்கும். யாளி - யானையைக் கொல்வதும், சிவகம்போல்வதும், துதிக்கையை யுடையதுமாகியதொரு மிருக விசேஷம். பி - ம்:—[1]யாளிகள். (௫௬)

௫எ. ஒருபது கையின ரொற்றைச் சென்னிய
ரிருபது தலையின ரிரண்டு கையினர்
வெருவரு [1]தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை யெனமுலை பலவு நாற்றினர்.

(இ - ள்.) ஒரு பது கையினர்-பததுக்கைகளையுடையவர், ஒற்றை சென்னியர்-ஒரு தலையையுடையவர்; இருபது தலையினர் - இருபது தலைகளை யுடையவா; இரண்டு கையினா - இரண்டு கைகளை யுடையவர்; வெருவரு தோற்றத்தர் - (யாவரும்) அஞ்சுதற்குக் காரணமான ரூபத்தை யுடையவர்; விகட வேடதா - வெவ்வேறுவகைப்பட்ட (ஆடைமுதலிய) கோலங்களை யுடையவர்; பரு வரை என - பருத்த மலைகள் போல, முலை பலவும் - பல தனவகளும், நாற்றினர் - தொறகப்பெற்றவர்; (எ - று)

விகடவேடத்தா - வேறுபட்ட [காண்பதற்கு விகாரமாகிய] வடிவமுள்ளவரென்று பொருள் கூறலுமாம். வேடம் - வேஷம். நாற்றினர், நால்என்பதன் பிறவினையாகிய நாற்று - பகுதி. (௫எ)

௫௭. சூலம்வாள் சக்கரந் தோட்டி தோமரங்
காலவேல் கப்பணங் கறற கையின
ராலமே யுருவுகொண் டனைய மேனியர்
வாலமே தரித்தவன் வெருவும் வன்மையர்.

(இ - ள்.) சூலம் - முத்தலைவேலும், வாள் - வாளும், சக்கரம் - சக்கரமும், தோட்டி - அகுசமும், தோமரம் இருப்புலக்கையும், கால வேல் - யமனுக்கொப்பான பெருவேலும், கப்பணம் - கைவேலும், (ஆகிய இவ்வாயுதக

களைப் பிரயோகிப்பத்தற்கு), கற்ற - பழகிய, கையினா - கையையுடையவர்கள்; ஆலமே - விஷந்தான், உருவு கொண்டு அனைய - பெண்வடிவமாகப் பரிணமித்தாற்போன்ற, மேனியா-உடம்பின் கருநிறத்தையுடையவர்; வால் அம் தரித்தவன் - வெண்ணிறமுள்ள கங்காஜலத்தை (சடையிற்) கொண்ட (சங்காரக்கடவுளாகிய) உருத்திரமூர்த்தியும், வெருவும் - அஞ்சும்படியான, வன்மையர் - வலியின் மிகுதியையுடையவர்; (எ - று)

தோமரமென்று பேரீட்டிக்கும் பெயருண்டு. எல்லாப் பிராணிகளுக்கும் ஊழ்வினைக்கேறபக் காலத்தை வரையறுத்தலால், காலன் என்று யமனுக்குப் பெயர். கப்பணம்-இரும்பால் யானைநெருஞ்சி முள்ளாகப் பண்ணியது என்பர் நச்சினார்க்கினியர். ஆலம் - ஹாலம். தோட்டி - மாவெட்டி. அம் - நீர். சர்வசங்காரக்கடவுளும் அஞ்சத்தக்கவரென்று அரக்கியரது மிககொடுமையை ஈற்றடியில் விளக்கினர். (௫௮)

௫௯. கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபே
யரிநரி நாயென வணிமு கத்தினர்
வெரிநுறு முகத்தினர் விழிகண் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும வாயினர்.

(இ - ள்.) கரி - யானையும், பரி - குதிரையும், வேங்கை மா - புலியும், கரடி - கரடியும், யாளி - யாளியும், பேய் - பேயும், அரி-சிங்கமும், நரி - நரியும், நாய் - நாயும், என - ஆகிய இவைபோல, அணி - பொருந்திய, முகத்தினர் - முகத்தையுடையவர்; வெரிந் உறு - முதுகிலே பொருந்திய, முகத்தினர் - முகத்தையுடையவர்; விழிகள் மூன்றினர் - மூன்று கண்களையுடையவர்; புரிதரு கொடுமையர் - செய்கின்ற கொடுந்தொழிலையே யுடையவர்; புகையும் வாயினர் - புகைகின்ற வாயையுடையவர்; (எ - று.)

அவ்வரக்கியர் யானைமுகம் குதிரைமுகம் முதலாகப் பலவகைக் கொடிய மிருகங்களின் முகங்கள் அமையப்பெற்று இவ்வாறு உடம்புகளுக்குத்தக்க முகம் அமையாமல் அருவருப்புக்கும் அச்சத்துக்கும் இடமான தோற்றமுடையவரென்பதாம். (௫௯)

௬௦.-துயிலுணர்ந்த அரக்கிமார் சீதாபிராட்டியைச் சூழ்ந்துகொள்ளுதல்.

எண்ணினுக் களவிட லரிய வீட்டினர்
கண்ணினுக் களவிட லரிய காட்சியர்
பெண்ணெனப் பெயர்கொடு திரியும் பெற்றியர்
துண்ணெனத் துயிலுணர்ந் [1]தெழுந்து சுற்றினர்.

(இ - ள்.) எண்ணினுக்கு - மனத்திற்கும், அளவு இடல் அரிய-அளவிடுவதற்கருமையான, ஈட்டினர் - வலிமையையுடையவர்களும், கண்ணினுக்கு அளவு இடல் அரிய - கண்களுக்கு அளவிட அருமையான, காட்சியர் - தோற்றமுடையவர்களும், பெண் எனபெயர் கொடு திரியும்-பெண்களென்று

பெயர் வைத்துகொண்டு திரிகிற, பெற்றியர் - ஆண்தன்மை யுடையவர்களு மாகிய அரக்கிமார்,—துண் என - திடுக்கென்று, துயில் உணர்ந்து-தூக்கம் விழித்து,எழுந்து சுற்றினர்-எழுந்துவந்து(சீதையைச) சுற்றிக்கொண்டார்கள்;

ஈடு - பலம்; ஈட்டு என எடுத்துத் திரட்சியென்றும கொள்ளலாம். பெற்றி - பௌருஷம். பி - ம்:—[1]எ வரும். (௬௦)

சூக —அப்போது சீதை வருந்துதலும், அநுமான் ஆங்கு மரத்தின்மே லிருத்தலும்.

ஆயிடை [1]யுரையழிந் தழகன் றேவியுந்
தீயனை யவாமுக நோக்கித் தேம்பினு
ளாயகன் றூதனும் விரைவி னண்ணினு
ளோய்வில துயர்மரப் பணையி னும்பரான்.

(இ - ள்.) அ இடை - அப்பொழுது, அழகன் தேவியும் - சர்வாங்க சுந்தரனாகிய இராமபிரானது மனைவியான சீதையும், உரை அழிந்து-பேச்சு ஒடுங்கி, தீ அனையவர் முகம் நோக்கி - நெருப்புப்போலக் கொடிய அவ்வரக்கி மாரது முகங்களைப் பார்த்து, தேம்பினாள்-வாடினாள்; நாயகன் தூதனும் - ஸ்ரீராமதூதனாகிய அனுமானும்,—விரைவில் நண்ணினான் - சீகிரத்தில் (அங்குவந்து) சேர்ந்தவனாய், ஓயவு இலது உயா மரம் பணையின் உம்பரான்- முடிவில்லாமல் உயாந்து வளர்ந்திருப்பதான ஒருமரத்தின் கிளையின்மே லுள்ளவனானான்; (எ - று)

அரக்கியர்களின் கொடுமைக்கு அஞ்சிப் பிராட்டி ஒடுங்கியிருக்கையில், அநுமான் அங்குள்ளதொரு ஓங்கிய மரகிளையில் சிறிய வடிவதோடு எவர்க்குந் தெரியாதபடி மறைந்து பார்த்திருந்தன னென்பதாம். பி - ம் — [1]உரையவிழ்ந்து. (௬௧)

சூ௨.—அரக்கியர் ஆயுதங்களோடு திரண்டதன் காரணத்தை அநுமான் கருதுதல்.

அரக்கிய ரயின்முத லேந்து மங்கையர்
நெருக்கிய குழுவினா துயிலு நீங்கின
ரிருக்குநர் [1]பலரிதற் கேது வென்னெனாப்
பொருக்கென வவரிடைப் பொருந்த நோக்கினான்.

(இ - ள்) 'அரக்கியர் பலர் - அநேக ராக்ஷசிகள், அயில் முதல் - வேல் முதலிய ஆயுதங்களை, ஏந்தும் - தரித்த, அம கையர் அங்கையையுடையவர் களும், நெருங்கிய குழுவினர் - நெருங்கமுள்ள கூட்டமாகக் கூடினவரும், துயிலும் நீங்கினர் - தூக்கமும் தெளிந்தவர்களுமாய், இருக்குநர் - (இங்கே) இருக்கிறார்கள்; இதற்கு ஏது என் - இதற்குக் காரணமென்ன ?' எனு என்று சிந்தித்து, அவா இடை - அவர்களுள்ள இடத்தை, பொருக்கென

விரைவாக, பொருந்த நோக்கினான்-உற்றுப்பார்த்தான், (திருவடி); (எ-று)—பொருக்கென - விரைவுக் குறிப்பு.

அரக்கியா துயிலுணர்ந்துவந்து வேல்முதலிய படைகளைக் கையிற் கொண்டு சீதாபிராட்டியை நெருங்கிநிற்க, அதனைக்கண்ட அனுமான் 'இவர்கள் இங்ஙனம் செய்யக காரணம் யாது?' என்ற எண்ணத்தோடு அவ்வரக்கியர் திரண்ட இடத்தை உற்றுப்பார்க்கலாயின னென்பதாம். பி - ம்.—[1]மற்றிதற்கு. (௬௨)

௬௩.-உற்றுப்பார்த்த அநுமான் அவர்கள் நடுவில் சீதாபிராட்டியைக் காணுதல்.

விரிமழைக் குலங்கிழித் [1]தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டன
னுருநிறத் தொருதனிக் கொண்ட [2]லூழியா
னிருநிறத் துற்றவெற் கியைந்த காந்தத்தை.

(இ - ள்.) உரு நிறத்து - திருமேனிநிறத்தினால், ஒரு தனி கொண்டல்-ஒப்பற்றதொரு நீர்கொண்ட மேகம்போன்ற, ஊழியான் - யுகாந்தகாலத்தும் அழியாத நிலைமையுள்ள திருமாலினது, இரு நிறத்து-பெரிய மார்பில், உற்ற-பொருந்திய, எற்கு இயைந்த-எனது பக்திக்கு ஏற்ற இடமாயுள்ள, காந்தத்தை-அழகிய பொருளான இலக்குமியின் அவதாரமாகிய சீதாபிராட்டியை,—விரி-(ஆகாயத்திற்) பரவுகிற, மழை குலம் - கறுத்த மேகக்கூட்டத்தை, கிழித்து - (நடுவிற்) பிளந்துகொண்டு, ஒளிரும் - (அங்கு) விளங்குகிற, மின் என-மின்னலைப்போல, கரு நிறத்து அரக்கியர் குழுவின-கரியநிறத்தையுடைய அரக்கிமார் கூட்டத்தினிடையில், கண்டனன்-பார்த்தனன், (அனுமான்); (எ-று.)

"அகலகில்லேனிறையு மென்று அலாமேல்மங்கை யுறை மார்பு" என்றவாறு ஒருநொடிப்பொழுதும திருமாலின் திருமார்பை விட்டுப்பிரியாதவளாகியஇலக்குமியினது திருவவதாரமான சீதாபிராட்டி,கரியமேகக்கூட்டங்களைப் பிளந்துகொண்டு மின்னறைகொடி விளங்குவதுபோலக் கன்னங்கறேலென்று தோன்றுகின்ற அரக்கியாகூட்டத்தின் நடுவில் விளங்குவதை அனுமன் கண்டன னென்பதாம். 'எற்கியைந்தகாந்தம்' எனபதனால் நூலாசிரியர் தாம் பிராட்டி பக்கல் வைத்துள்ள அதிசயத்தையும், அபிராட்டியினது ஒப்புயர்வில்லாத பேரழகையும விளக்கினார். காந்தம் - அழகிய பொருள்; இனி, மனத்தை ஈடுபடுமாறு இழுத்துக் கவர்வதுபற்றி, காந்தமென்று ரெனினுமாம். பி - ம்:[1]ஒங்கு. [2]ஆமெனுக கருநிறத்தழகனுக்கமைந்த காந்தையை. (௬௩)

௬௪.-இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்; இவள் சீதையே யென்று நினைத்து, அநுமான் மிகமகிழ்தல்.

தொடற்கரு மரக்கியர் காவல் சுற்றுளாண்
மடக்கொடி சீதையா மாத ரேகொலாங்

கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை யிருந்ததோ ரன்னத் தன்மையாள்.

(இ - ள்.) தொடற்கு அரும் - தொடுவதற்குங் கூடாத [மிகப் பயங்கரமான அல்லது அருவருப்பைத்தருகிற], அரக்கியர் - அரக்கிமார்களால், காவல் சுற்றுளாள் - சுற்றிலுங் காவல் செய்யப்பட்டுள்ளவளாகிய, மட கொடி இளைய பூங்கொடிபோன்ற இம்மகள், கடல் துணை நெடிய - கடலவ்வளவு பெரியனவாகிய, தன் கண்ணின் - தனது கண்களினின்றும் பெருகுகின்ற, நீர் - நீராகிய, பெரு தடத்திடை - பெரிய தடாகத்திடையில், இருந்தது - இருந்ததாகிய, ஓர்-ஒரு, அன்னம்-அன்னப்பேடுபோன்ற, தன்மையாள்-தன்மையை யுடையவளாதலால் [இடைவிடாமற் கணணீர் வெள்ளத்தைப் பெருக்குதலால்], சீதை ஆம் மாதர் ஏ கொல் ஆம்-சீதாபிராட்டியாரேபோலும்; (எ-று.)

ஒருதடாகத்தின் நடுவில் அன்னப்பறவை தங்கியிருத்தல்போலத் தனது மிகப்பரந்த கண்களினின்று நீர்வெள்ளம் பெருகித் தடாகமாக அதன்நடுவே அரக்கியர் சூழ்ந்து காவல்செய்ய இருக்கின்றாளாதலால், இந்நங்கை, சீதாபிராட்டியாகவே இருக்கவேணு மென்று அனுமான் ஊகித்தனனென்பதாம். கண்ண நீரைப்பெருகக்கொண்டிருத்தலால், இவள் சீதை யென்று கண்டனனென்க. கடற்றுணை நெடியதன்கண் - "அஞ்சொற்களமுதிலள்ளிக் கொண்டவள் வதன மைதீர், கஞ்சத்தி னளவிற் றேனுங் கடலினும் பெரிய கண்கள்" என்றார் ஆரணியகாண்டத்தும். "தொடற்கரும்" என்னும் இச்செய்யுள்தொடங்கி, அடுத்த செய்யுளில் 'தேவியே' என்பதுவரையில் அநுமான் தன்னுள்ளத்தில் நினைவது. (௩௪)

௩௫. வீடின தன்றறன் யானும் வீகலேன்
றேடினென் கண்டனென் றேவி யேயெனு
வாடினன் பாடின னுண்டு மீண்டும்பாய்ந்
தோடின னுலாவின னுவகைத் தேனுண்டான்.

(இ - ள்.) 'அறன் - தருமம், வீடினது அன்று - அழிந்ததன்று; யானும்- நானும், வீகலேன் - (இனி) இறக்கமாட்டேன்; (ஏனென்றால்), தேடினென்- (பிராட்டியைத்) தேடிவந்த யான், கண்டனென் - (இப்பொழுது அவரைப்) பார்த்தேன்; தேவியே - இவள் பிராட்டியேயாம்,' எனு - என்றுதெளிந்து (அனுமான்), உவகை தேன் உண்டான் - ஆனந்தமாகிய மதுவைப்பருகியவனாகி, ஆடினன் - கூத்தாடினான், பாடினன் - கீதம்பாடினான்; ஆண்டும் ஈண்டும் பாய்ந்து ஓடினன் உலாவினன் - அங்கும் இங்கும் [எங்கும்] குதித்து ஓடி உலாவினான்; (எ - று)

கீழ்ச் சீதையைக் காணாதபொழுது தருமம்பொய்த்தது-என்றும், தான் இறப்பதாகவுங் கருதினனாதலால், இங்கு 'வீடினதன்றறன்'யானும்வீகலேன்' என்றான். (௩௫)

சுசு.—இதுமுதற் பதினொருகவிகள் - அநுமான் தன்னுட்கூறும் வார்த்தை.

எள்ளரு முருவி[1]னல் லிலக்க ணங்களும்
வள்ளறன் னுரையொடு மாறு கொண்டில
கள்ளவா ளரக்க [2]னக் கமலக் கண்ணனு
ருள்ளுறை யுயிரினை யொளித்து வைத்தவா.

இதுமுதல் பன்னிரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) எள் அரும - நிந்தித்தறகுக் கூடாத, உருவின் (இப்பிராட்டி) வடிவதனின், நல் இலக்கணங்களும் - நல்ல லக்ஷணங்களெல்லாமும், வளளல் தன் உரையொடு - வரையாது கொடுக்குந்தனமையுளள இராமபிரான் அடையாளஞ் சொனன வார்த்தைகளோடு, மாறுகொண்டில - (சிறிதும்) வேறுபட்டனவில்லை; களளம் வாள் அரககன் - வஞ்சனையையுடைய வாள்போலுங் கொடியஇராவணன், அகமலம் கணணனா-அழகிய செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடைய அந்த இராமனது, உள் உறை உயிரினை - உடம்பினுள்ளே தஙகிய உயிர் போன்ற பிராணநாயகியை, ஒளித்து வைத்த ஆ - (பிறர்க்குத் தெரியாமல்) மறைத்துவைத்த விதம், (என்னே!) (எ - று)

இப்போது காணப்படுகின்ற இவளது வடிவம் நல்லிலக்கணங்கள் யாவும் அமையப்பெற்று இராமபிரான் கூறியபடியே உள்ளது; இப்படி கட்டழகு அமைந்து இராமபிரானது உயிர்க்குச் சமமான இவளைப் பாவியான இராக்கதன் கவர்ந்து வந்து இஙகே ஒளித்துளளானே! என்று அனுமான் இரங்கிகூறின னென்பதாம். இலகக்ணம் - வடமொழிதிரிபு: பின்னிரண்டடிகட்கு, முடிகளுஞ்சொல் வருவித்து உரைக்கப்பட்டது. பி - ம்:— [1]அவ்விலக்கணங்களும். [2]நல். (சுசு)

சுஎ. மூவகை [1]யுலகையு முறையி னீககிய
[2]பாவிதன் னுயிர்கொள்வா னிழைத்த [3]பண்பிதா
லாவதே [4]யையமி லரவி னீங்கிய
தேவனே யவனிவள் கமலச் செல்வியே.

(இ - ள்.) இது - (சீதையைச சிறைவைத்த) இத்தொழில்,—மூவகை உலகையும் - (சுவர்க்கம் பூமி பாதாளம் என்னும்) மூன்று உலகங்களையும், முறையின நீக்கிய - நல்லொழுக்கத்தினின்றும் விலகச்செய்த, பாவி-கொடுந் தொழிலுடையவனாகிய இராவணன், தன் உயிர் கொள்வான்-தனது உயிரை (இராமன்) வாஙகும் பொருட்டு, இழைத்த - செய்த, பணபு - செயலாம்; ஆவதே - இவ்வாறு ஆவதிலே, ஐயம் இல்-சந்தேகமில்லை; அவன் ஸ்ரீராமன், அரவின் நீஙகிய - (பரமபதத்தில்) ஆதிசேஷசயனத்தினின்றும் நீஙகிவந்து (இஙகு) அவதரித்த, தேவனே - ஸ்ரீமந்நாராயணனேயாவன்; இவள் - சீதை, கமலம் செல்வியே - செந்தாமரைமலரில் வீற்றிருககிற செல்வத்துக்கு உடையவளான ஸ்ரீமகா லக்ஷ்மியே யாவள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராமபிரான் சீதை இவர்களது நல்லிலக்கணத்தை ஆராய்ந்துபார்த்தால், அப்பிரான் திருமாலினவதாரமும் இவள் இலக்குமியின் அவதாரமுமாகவே இருக்கவேணும்; இப்படிப்பட்டவர்களைப் பாவி இராவணன் பிரித்து வைத்தது தன்னுயிர்க்கு உலைவைத்துக்கொண்டதுதானென்று அநுமான் கருதினனென்க. உலகம் பதினான்காயிருக்க 'மூவகையுலகு' என்றது என்னையெனின்?—மேல் கீழ் நடு என்கிற நோக்கத்தாலென்க. இராவணன் எல்லாவுலகங்களிலுஞ் சென்று ஆங்காங்கு அவரவர் செய்யும்யாகம் தவம் தியானம் யோகம் முதலிய வற்றிறகெல்லாம் இடையூறு செய்தவனாதலால், 'முறையினீக்கிய பாவி' எனப்பட்டான். ஐயம் - பலதலையாய அறிவு. 'ஆவதேயையமில்' என்பதை மத்திமதீபமாகப் பின்வாங்கியத்திலுங் கூட்டலாம். பி - ம்:—[1]உலகமும். [2]பாவியர். [3]பணபிணால். [4]அரவணைத்துயிலும். (௬௭)

௬௨. மாசுண்ட மணியனாள் வயங்கு [1]வெங்கதிர்த்
தேசுண்ட திங்களு மென்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலு
மேசுண்ட தில்லைபா லறத்துக் கீறுண்டோ.

(இ - ள்.) மாசு உண்ட - அழுக்குப் படிந்த, மணி - இரத்தினத்தை, அனாள் - ஒத்தவளும்,—வயங்கு - விளங்குகிற, வெம் கதிர் - வெம்மையாகிய கிரணங்களையுடைய சூரியனது, தேசு உண்ட - ஒளி படப்பெற்ற, திங்களும் என்ன - சந்திரன்போல [சூரியன்முனனேநின்ற சந்திரன்போல], தேய்ந்து உளாள் தேககாந்தி மழுங்கியுள்ளவளும்,—காசு உண்ட கூந்தலாள்-அழுக்குப் பிடித்த கூந்தலையுடையவளும் ஆகிய இத்தேவியின், கற்பும்-கற்பு நிலையும், காவலும் - (அதினின்றும் வழுவாமல் தன்னைக்) காத்தலும், ஏசு உண்டது இல்லை - குற்றம் பொருந்தினதில்லை; அறத்துக்கு - தருமத்துக்கு, ஈறு - அழிவு, உண்டோ - உளதாகுமோ? [ஒருநாளும் உண்டாகாதென்றபடி.]

மாசுபடிந்த மணிபோல இவளுடம்பு புழுதிபடிந்து மாசுண்டும், சூரியன் முன் நின்ற சந்திரன்போலத் தேய்ந்து மிருந்ததலோடு, இவள்கூந்தல் அழுக்குப் பிடித்துமிருத்தலால், இவளதுகறபும் காவலும் ஏசுண்ணவில்லை யென்பது தெற்றெனவிளங்கு மென்று அநுமான் கருதினனென்பதாம். கற்புங் காவலும் ஏசுணனாமையை விளக்குதலால், 'மாசுண்டமணியனாள்' எனபது முதலிய மூன்றும ஸாபிப்பிராய விசேஷ்யங்கள்; - ஆகவே, கருத்துடையடைகோளியணியாம். திங்களும், உம்மை - இசைநிறை. கறபும் காவலும் தனித்தனி ஏசுணடதில்லையென்க. பி - ம்:—[1]வெங்கதிர்க்கே சுண்ட. (௬௮)

௬௩. புனைகழ லிராகவன் [1]புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழ லரசரின் [2]வண்மை வீகிடுஞ்
சுனகர்தங் குலத்தையோ [3]யாதைச் சாற்றுகேன்.

(இ - ள்.) புனை கழல்-அணிந்த வீரக்கழலையுடைய, இராகவன்-ஸ்ரீராமனது, புயத்தையோ-தோள்களையோ? புகழ் - (யாவராலும்) புகழத்தக்க, வனிதையர் திலகததின் - பெண்களுக்கெல்லாம் நெற்றியிலிடுந் திலகம்போல அழகு செய்தலாற சிறநத பிராட்டியின், மனததின் - நெஞ்சினது, மாண்பையோ - (கற்புநெறியில் நிற்றலாகிய) பெருநகுணததையோ? கழல் வனை-வீரககழலை யணிந்த, அரசரின் - அரசாகட்கு இருக்கவேணடிய, வண்மை - உதாரகுணத்தை, வீகநிடுய - (தன்னிடததில்) நிலையாகக்கொணடுள்ள, சனகர்தம் - ஜனகமகாராஜரது; குலததையோ-வம்சததையோ? யாதை - (இவற்றுள்) எதை, சாற்றுகேன் - புகழ்ந்து சொல்லுவேன், (யான்) ? (எ - று.)

இவ்வாறு ஈற்குணநறசெயல்களால் ஒப்புயர்வின்றி விளநகுகின்ற சீதாபிராட்டியைப் பெறுமாறு பாகநியஞ்செய்திருததலால் இராமபிரானது திருத்தோள்களும், ஒபபுயர்வின்றிசசிறந்து விளநகுகின்ற இராமபிரானைச சேர்ந்து மிக்கவருததம் நோந்து தனது உறுதியினின்று சிறிதும் குறைவின்றிக் கற்பைக்காககின்ற திண்மை வாய்ந்திருத்தலால் சீதாபிராட்டியின் மாட்சிமைபெற்ற மனமும, இங்ஙனம எல்லாப்படியாலும் மிகசசிறநத பெண்ணருநகலத்தைப் பெற்றதனால் சனகாதநகுலமும புகழத்தக்கனவாயினவென்க. சீதாபிராட்டியின் கறபு நிலைகெடாமைககுக் காரணமான மனமாட்சியே சிறந்ததாதல்பற்றி, அதனை இசசெய்யுளில் நடுநாயகமாக அமைத்தனரென்க. பி-ம்.—[1]பொற்புயத்தையோ. [2]வளமை மிகநிடும். [3]யாது. (சுக)

௭௦. தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதிய
ரேவரும் பிழைத்தில ரறமு [1]மீறின்றால்
யாவதிங் கினிச்செய லரிய தெம்பிராற்
சாவலென் னடிமையும் பிழைத்தின் றுமன்றே.

(இ - ள்.) தேவரும - தேவாகளும, பிழைத்திலா - ஒருகுறறமுஞ் செய்தாரில்லை; தெய்வம வேதியா எவரும-(பூமிககுத) தேவாகளாகிய அந்தணாகளெல்லாரும, பிழைததிலர் - ஒருதவறுஞ் செயதாரில்லை; அறமும் - தருமமும், ஈறு இன்று - அழிவுடையதனறு; இனி - இனிமேல், எம பிராறகு - எமது தலைவனாகிய இராமபிரானுககு, இநகு - இவ்வுலகததில், செயல் அரியது - செய்தறகு அரிய தொழில், யாவது - யாது உள்ளது? ஆவ-(எல்லாக் காரியநகளும) கைகூடுவனவாம்; என் அடிமையும் - எனது அடிமைததனமும், பிழைததின்று ஆம - தவறுததாம; (எ - று.)—அன்று, ஓ - தேறறம்.

சீதாபிராட்டி தனது கற்பு நிலையினின்று தவறியிருந்தால் அப்போது இராவணவதம் நோதறகு இடமில்லாமல் தேவர் முதலியோர் பாவஞ்செய்தவாபோலத துயரத்தை எப்போதும் அனுபவிக்க நேரிடும். அபபிராட்டி சிறிதும தனது கறபுநெறியினின்று தவறவில்லையாதலால் தேவர்முதலியோர் 'பிழைத்திலர்' என்றும், இனி இராமபிரான் இராவணசநகாரஞ் செய்யத் தருமஞ்செழிததோநகு மாதலால் 'அறமுமீறின்றால்' என்றும், இனி

இராமபிரான் நினைத்தபடி எல்லாம் கைகூடுமாதலால் 'யாவதிங்கினிச செயலரியது எம்பிராரகு' என்றும், தான் செய்த அடிமைத்தொழில் இப்போது பெரும்பயன்விளைககு மென்பான் 'எனையடிமையும் பிழைததின்றாம்' என்றும் அநுமன் கருதினன். ஆவ என்பதை எதிர்கால ஒன்றன்பால் வினையாலணையும் பெயராகிய ஆவது என்பதன் விகாரமாகக் கொண்டால், எம்பிரானுக்கு ஆவதாகிய எனது அடிமை யென்க. பி - ம்.—[1]இற்றில. (௧௦)

௧௧. [1]கேழிலா ணிறையிறை கீண்ட தாமெனி
ஞழியான் முனிவெனு மாழி [2]மீக்கொள
ஊழியி னிறுதிவந் துறுமென் றுனனினேன்
[3]வாழிய ருலகினி வரம்பி னாளெலாம்.

(இ-ள்.) கேழ் இலாள்-ஒப்பிலலாத சானகியினது, நிறை-கற்புநிலைமை, இறை - சிறிது, கீண்டது ஆம் எனின் - சிதைந்ததாமாஞல், ஆழியான் - ஆஜ்ஞா சக்கரமுடைய ஸ்ரீராமனது, முனிவு எனும் -கோபமென்கிற, ஆழி- கடல், மீ கொள - மேலே பொகுகியெழ, ஊழியின் இறுதி - உலகமுழுவது மழியும் யுகமுடிவுகாலம், வந்து உறும என்று - வந்துநேரு மென்று, உன்னினேன் - எணணினேன்; (நிறை சிறிதும தவருமையால்), இனி—,உலகு - உலகநகள், வரம்பு இல் நாள எலாம - எல்லையில்லாத காலதத்துவமுள்ள வளவும், வாழியர் - வாழக்கடவன; (எ - று)

சில மாதகாலமாகச் சீதாபிராட்டி தான் தனியே அரக்கரிடையில் அகப்பட்டதஞல் ஒருகால் கறபுநிலையினின்று தவறுவளாயின், அப்போது இராமபிரானது சினக்கடல் பொகுகி உலகெல்லாம் அழிதலொழித்துவிடுமேயென்று அஞ்சி யிருந்தேன்; இப்போது அவ்வாறு ஐயப்படுதற்கு ஏதுவில்லை யென்று தெற்றென் விளநகுதலால், இனி உலகம யாதொருகுறையுமின்றி வாழ்வதாக என்று அநுமான் வாழ்ததின னென்க. நிறை - நெஞ்சைச் கறபு நெறியில் நிறுததல். பி - ம்.—[1]கேழிலா நிறை. [2]மீக்கொளின். [3]வாழிய வுலகினில். (௧௧)

௧௨. வெங்கனன் முழுகியும் புலன்கள் வீக்கியு
[1]நுங்குவ வருநதுவ நீககி நோற்றவ
ரெங்குளர் [2]குலனிலவந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவ நவிலற் [3]பாலதே.

(இ - ள்.) குலனில் வந்து - உயர்குலததிற பிறந்து, இல்லின் மாண்பு உடை - இல்லறததிற்குரிய நற்குணநறசெயகைகளை யுடைய, நநகையா - பெண்களது, மனம் தவம - மனவுறுதியாகிய தவம், நவிலல்பாலதே-சொல்லி முடியுந்தன்மையுடையதோ? [அன்றென்றபடி]; (இவர்களுக்குமுன்), வெம கனல் முழுகியும்-வெபபமாகிய பஞ்சாககினியின் மததியில் நின்றும், புலன்கள் வீககியும - ஐம்புலன்களை அடக்கியும், நுகுவ அருந்துவ நீக்கி-

குடிகத்தக்க நீர் முதலிய வற்றையும் உண்ணத்தக்க சோறுமுதலிய வற்றையும் ஒழிதது, நோற்றவர் - தவஞ்செய்தவர்கள், எங்கு உளர்-எங்கே உள்ளார்? (எ - று.)—எ - எதிர்மறை.

அருந்தவஞ்செய்தவர்களும் கற்பு நிலைதவறாத மகளிர்க்கு ஈடாகா ரென்பதாம். தவசியரினும கறபுநிலைதவறாத மகளிர் விஞ்சுதலை, தன்மீது எச்சமிட்ட கொக்கைத் தன் கணபார்வையால் எரிதத கௌசிகனென்னும் அந்தணன், தனது பர்ததாவுக்குப் பணிவிடை செய்வதனால் பிச்சையிடாது தாமதிதத மனைகயினிடத்துச சினங்கொண்டு பலிக்காமையால் அவளுக்குத் தாழ்ந்துபோன சரிதத்திரத்தாலும் அறியலாம். மாதவா நோன்பினும் மங்கையர்நோன்பு மகிமையுள்ளதென்க. பி-ம்:—[1]நுங்குவது. [2]குலததில். [3]பாலதோ.

எங. பேணநோற் றதுமனைப் [1]பிறவி பெண்மைபோ
ணாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலான்
மாணநோற் றீண்டிவ ளிருந்த வாறெலாங்
காணநோற் றிலனவன் கமலக் கண்களால்.

(இ - ள்.) நங்கை தோன்றலால் - இப்பிராட்டி தோன்றியதனால்,—பேண நோற்றது - (யாவரும் தன்னை) விரும்பும்படி தவஞ்செய்து உயர்ந்ததாகிய, மனைபிறவி - உயர்குடிப் பிறப்பும், பெண்மை - பெண்பிறப்பும், போல் - (என்னும் இவை) போல, நாணம் - (அப்பெண்களுக்கு உரிய குணங்களுட் சிறந்ததாகிய இலசசையுடி, நோறறு உயர்ந்தது - தவஞ்செய்து சிறந்தது; இவள் - சீதை, ஈண்டு - இவகே, மாண - மாட்சிமைப்பட, நோற்று - (கணவனையே தியானிததலாகிய) தவத்தைச செய்து, இருந்த ஆறு எலாம - இருந்தவிதத்தையெல்லாம், கமலம் கணகளால் - செநதாமரைமலர்போலுந் தமது திருககண்களால், காண - பாாததறகு, அவன்-இராமபிரான், நோறறிலன் - தவஞ்செய்தானில்லை; (எ - று.)

இப்படிப்பட்ட கற்புநிலைமையையுடைய சீதையொருததி உலகததில் திருவவதரித்ததனாற் குடிப்பிறப்புக்கும் ஸ்திரீஜாதிக்கும பெணகளுக்குரிய நாணமென்ற குணத்துககும ஒபபுயர்வில்லாத சிறப்பு உண்டாயிற்றெனபது, முதலிரண்டடிக்குக கருத்து. இங்ஙனமுள்ள தேபிராட்டியை இராகவபிரான் தனது கண்களாற் பிரதியக்ஷமாகக காணின் அப்போது அப்பிரானுக்குப் பெருமகிழ்சசி விளைபு மாதலால, அம்மகிழ்சசியை அடையாமலிருப்பது அவனது தவக்குறையேபோலு மென்று அநுமான் கருதின னென்பதாம். பி - ம்:—[1]பேதை.

(எங)

எச. [1]முனிபவ ராக்கியர் முறையி னீங்கினு
ரினியவ டானலா தியாரு மிலலையாற்
றனிமையும் பெண்மையுந் தவமு மின்னதே
வனிதையாக் காகுநல் லறததின் மாண்பெலாம்.

(இ - ள்.) அரக்கியர் - இராக்ஷசிகள், முனிபவர்-கோபிப்பவராய், முறையின் நீங்கினார் - நீதியினின்றும் நீங்கினவராயுள்ளார்; இனியவள் - நல்லவள், தான் அலாது - தானொருத்தியேயல்லாமல், யாரும் இலலை - எவருந்துணையில்லை; தனிமையும் - தனித்திருத்தலும், பெணமையும்-பெண்தனமையும், தவமும் - கற்பொழுக்கமும், இன்னதே - இப்படிப்பட்டதே; நல் அறத்தின் மாண்பு எலாம் - நல்லதருமத்தின் சிறந்த பயனனைத்தும், வனிதையாக்கு ஆக - பெண்களுக்கே உண்டாகட்டும்; (எ - று.)

இங்கே நீதிதவறிய பல அரக்கியா சீதாபிராட்டியைச சூழ்ந்துகொண்டு மிகவும் வருததுகின்றார்கள்; இவளுக்குத் துணையாக எவரேனும உளரோ வென்றால், ஒருவரும இல்லை; இவ்வாறு இவாகளிடையே சீதாபிராட்டி தான் தனியே அகப்பட்டுக்கொணடு மகளிர்க்குஉரிய நாணம் மடம் அசசம் பயிர்ப்பு என்னும மகடூஉக்குணங்களிற் சிறிதுங்குறைபாடின்றித தனதுகற்பு நிலை சிறிதும்வழுவாது வருந்திககாககின்றாள்; இவ்வளவு அருமைப்பட வேண்டியிருததலால், இவ்வாறான மங்கையர்க்குத் தருமமே துணையாகநின்று யாதொருதுன்பமும் நேராதவாறு பாதுகாகக வேணடுமென்று வேணடினன் அனுமான் என்க. இனி, அவள என்றும் பிரிததுப் பெருள் கூறுவர். இனியவள் தானலாது யாருமில்லை-ஆதத் திரிசடையே அல்லாமல் இவட்கு இனியவள் வேறுயாருமில்லை என்று கூறலும் ஒன்று. பி - ம்:—[1]முனிவாக ளருந்தவா முறையி னின்றுளார். (எச)

எரு. தருமமே காத்ததோ [1]சனகன் றன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
வருமையே யருமையே யாரி தாறறுவா
ரொருமையே யெம்மனோக் குரைக்கற் பாலதோ.

(இ - ள்.) தருமமே-தருமந்தான், காதததோ-(இவள் மனததைத் தவறாமற்) பாதுகாததது வோ? (அன்றி), சனகன்தன் - சனகமகாராஜனது, வினை கருமமே - நல்வினைச செயகைதான், காத்ததோ—? (இவையன்றி), கற்பின் காவலோ - கற்பாற் காக்குங காவல்தானோ? அருமையே அருமையே - (இவ்வாறு காததல்) மிக அருமையானதே, யா இது ஆற்றுவார் - யாவர் இவ்வாறு பொறுக்கவலலவா? (இநநோன்பு), எம் அனோர்க்கு - எம்மைபபோன்றவாக்கு, ஒருமையே உரைக்கற்பாலதே - ஒருபடியாகவாயினுஞ் சொல்லுந்தன்மையுடையதோ? (எ - று.)—அன்று என்றபடி.

பெருங்காமுகனான இராவணன் சீதாபிராட்டியைத தான் கவாந்துகொணடு வந்திருந்தும அவளைத தீண்டமுடியாதபடி நேர்ந்துள்ள இசசெயல் தருமதேவதையின் செயலே யென்பான் 'தருமங்காததோ' என்றும், அவ்வாறு தருமதேவதை காப்பவற்கும காரணம காமயோகததைமுக்கியமாகக் கொண்ட ஜநகனது மரபில் இவளுககுபபிறவி நேர்ந்ததே யென்று குறிப்பிப்பான், 'சனகன்றன் வினைக்கருமமே காததோ' எனறும், சீதை தனக்குநேர்ந்துள்ள பலவகைத் துன்பங்களையும் கருதித் தனது மனததிண்மையினின்று

சிறிது வழுவினளாயின், அப்போது எவராலும் ஒன்றுஞ்செய்ய இயலாதாகையால் அவள் கற்பே அவளைக்காத்ததென்பான், 'கற்பின் காவலோ' என்றும் அநுமான் கருதி, அவளது கற்புநிலையின் உறுதியைக கொண்டாடுகின்றனனென்க. பி - ம்:—[1]சழக்கன். (எடு)

எசு. செல்வ மோவது வவர்தீமை யோ[1]விது
வல்லினும் பகலினு மமர ராட்செய்வா
ரொல்லுமோ வொருவர்க்கீ துறுகண் யாதினி
[2]வெல்லுமோ தீவினை யறத்தை மெய்ம்மையால்.

(இ - ள்.) செல்வமோ (இராவணனது) ஐசுவரியமோ, அது-அப்படிப்பட்டது; அவா தீமையோ - அவ்விராவணனாலேவப்பட்ட அரக்கியர் செய்யும் கொடுமையோ, இது- இப்படிப்பட்டது; அல்லினும் பகலினும் - இராத்திரியிலும் பகலிலும [எப்பொழுதும்], அமரர் - தேவாகள், ஆள் செய்வார் - (இராவணனுக்கு) அடிமைத்தொழில செய்வார்கள்; ஈது - இங்கே இவ்வாறு கற்புதவறாதிருத்தல், ஒருவாக்கு - வேறொருத்தாக்கு, ஒல்லுமோ-கூடுமோ? [கூடாது]; இனி யாது உறுகண்-இனிமேல் என்ன துன்பம் உள்ளது? [ஒரு துன்பமும உண்டாகாது]; தீவினை - பாவம், அறத்தை - தருமத்தை, மெய்ம்மையால்-உண்மையாக, வெல்லுமோ - ஜயிக்கவல்லதோ? [அன்றென்றபடி]

'அது' என்றது, கீழ் ஊர்தேடுபடலத்துக் கண்டதனை. 'இது' என்றது-இப்படலத்திற் கூறியதனை. அமரா - மரணமில்லாதவர். 'ஒல்லுமோ ஒருவாக்கீது' என்பதற்கு - இப்படிப்பட்ட பாக்கியம் வேறொருவாக்குக் கிடைக்குமோ' என்று பொருள் கூறுவாரு முளர். பி - ம்:—[1]அது. [2]வெல்லுமே. ()

எஎ.—அநுமான் இவ்வாறு கருதி அங்கு ஒரு மரக்கிளையில் மறைந்துநிற்க, இராவணன் தோன்றுதல்.

என்றிவை யினையன வெண்ணி வண்ணவான்
பொன்றிணி நெடுமரப் பொதுமபர் [1]புக்கவ
ணின்றன னவ்வழி நிகழ்ந்த தென்னெனிற்
றுன்றுபூஞ் சோலைவா யரக்கன் றோன்றினான்.

(இ - ள்.) என்று—, இவை - இவற்றையும், இனையன-இப்படிப்பட்ட இன்னும் பலவற்றையும், எண்ணி - (அநுமான்) சிந்தித்து, வண்ணம் - அழகிய, வான் - பெரிய, பொன் - பொன்மயமான, திணி - அடர்ந்த, நெடு - நீண்ட, மரம் - ஒருமரத்தினது, பொதும்பர் - இலைசெறிந்த கிளையில், புக்கு-போய், அவன் - அவ்விடத்தில, நின்றனன் - மறைந்து பாத்திருந்தான்; அவழி - அவ்விடத்தில [அப்போது], நிகழ்ந்தது - நடந்தது, என் எனின் - என்ன வென்றால்,—துன்று பூ சோலைவாய்-நெருங்கிய பூக்களையுடைய அவ்வசோகவனிகையில், அரக்கன் - இராவணன், தோன்றினான் - வந்தான்; (எ - று.) பி - ம்:—[1]புக்கவன். (எஎ)

காட்சிப்படலம் முற்றிற்று.

நான்காவது

நிந்தனைப் படலம்.

இராவணன் தன்னைநோக்கிததகாத பலவார்ததைகள் கூறக்கேட்டசீதா பிராட்டி இராவணனைத துரும்பாகக்கொண்டு பலபடி நிந்தித்துக்கூறிய செய்தியை விவரிக்கும் கூறுபாடு என்பது, இதன்பொருள். சில பிரதிகளில் நிந்தனைப்படலமென்று ஒன்று காணப்படாமல், "குடிமை மூன்று" (௩௭)என்று தொடங்கும் பாடல் முடிவுவரையில் காட்சிப்படலமாகவும், அதன்பின் "காய்ந்தன சலாகை"(௩௮)என்ற பாடல் முதல் உருக்காட்டுப் படலமாகவும் உள்ளன.

க.—இதுமுதல் பத்தொன்பது கவிகள் தூதகம். இராவணன் அசோக வனிகையில் வருவதைப்பற்றிய வருணனை.

சிகரவண் குடுமி நெடுவரை யெவையு மொருவழி திரண்டன சிவண, மகரிகை வயிர குண்டல மலம்புந் திண்டிறற் றோள்புடை வயங்கச், சகரவே லையினீர் தழுவிய கதிரிற் றலைதொறுந் தலை தொறுந் தயங்கும், [1]வகையபன் மகுட மிளவெயி [2]லெறிப்பக் கங்குலும் பகல்பட வந்தான்.

(இ - ள்.) சிகரம வள் குடுமி நெடுவரை எவையும் - சிகரமென்று சொல்லப்படுகின்ற வளப்பமுள்ள உசசியோடுகூடிய நீண்ட மலைகள்பலவும், ஒரு வழி திரணடன சிவண - ஓரிடததில் சேர்ந்தனபோல, வயிரம் மகரிகை குண்டலம் அலம்பும் திண திறல் தோள் - வைர ரதிதினங்க ளிழைத்துச் செய்யப்பட்ட மகர குணடலங்கள் அசைந்தாடுகின்ற மிக்க வலிமையை யுடைய இருபதுதோள்களும், புடை வயங்க - (தனது) இருபக்கத்திலும் விளங்கவும்,—சகரா வேலையின் நீர் தழுவிய கதிரின் - சகரபுத்திரர்களால் தோண்டப்பட்ட சமுததிரத்தினது நீரைச சாரநதுள்ள இளஞ்சூரியன் போல, தலை தொறும தலை தொறும தயங்கும் வகைய - ஒவ்வொருசிரசிலும் (அணியப்பட்டு) விளங்குகின்ற தன்மையையுடைய, பல மகுடம - பல [இருபது] கிரீடங்கள, இள வெயில் எறிப்ப - இளவெயிலை வீசுதலினால், கங்குலும் பகல் பட - (காரிருள நிறைந்த) அந்த நள்ளிருட்பொழுதும் (ஒளி மிகுதியினால்) பகற்பொழுதாக விளங்கவும, வந்தான் - (இராவணன் சீதையிருநத அந்தச் சோலையினிடம) வந்தான்; (எ - று.)

இராவணன் பருததயாந்த இருபதுதோள்களையுடைமையால், அத் தோள்வரிசைகட்கு 'நெடுவரையெவையும ஒருவழிததிரண்டனசிவண'என்று உவமை கூறினா. காதிலணிந்த குணடலங்கள் தோளின்மீது அசைந்தாடுதல் இயல்பு. மகரிகைகுணடலம - சுறாமீன்வடிவமையச் செய்யப்பெற்ற குணடலம். இருபது செவியிலுமணிந்திருக்கும் மகரகுண்டலங்கள் இராவணனது

இருபதுதோள்களின் மேலும் தோன்று மென்க. கருநிறமுள்ள இராவணன் தலைமீது அணியப்பட்டு விளங்குகின்ற ஒருபதுமகுடங்களுக்கு - கருநிறமுள்ள கடலின்மீது தழுவி விளங்கும ஒருபது பாலசூரியா இல்பொருளுவமையாவர். 'கங்குலும பகல்பட' என்றது - இரதினகிரீடங்களின் ஒளி மிகுதியை விளக்கும அதிசயோக்தி. சகரபுதத்திரரால் கடல் தோண்டப்பட்டதாதலின், 'சகரவேலை' எனப்பட்டது. இசசெய்யுளிலுள்ள 'வந்தான்' என்ற வினைமுறறே, மேல் பத்தொன்பதாங்கவி வரையிலுமுள்ள 'உதவ' முதலிய செயவெனெசசங்கட்கும் முடிக்குஞ்சொல்லாம். சிவண்ண வயங்க பகல்பட வந்தான் என இயையும். பி - ம்:—[1]பகரில். [2]விரிப்ப.

இதுமுதல் இருபதொரு கவிகள இரண்டு நான்கு எழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான்கும விளசசீர்களுமாகிவந்த எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள். (க)

உ. உருப்பசி யுடைவா [1]ளெடுத்தன டொடர [2]மேனகை வெள்ளடை யுதவச், செருப்பினைத தாங்கித் திலோத்தமை [3]செலல வரம்பையர் குழாம்புடை [4]சுற்றக், கருடபுரஞ் சாந்தங் கலவையு மலருங் கலந்துமிழ் பரிமள கந்த, மருப்புடைப பொருப்போ மாதிரக் களிறறின் வரிக்கைவாண் மூக்கிடை மடுப்ப.

(இ - ள்.) உருப்பசி - ஊர்வசி யென்பவள், உடைவாள் - இடையிற் செருகக்கூடிய வாளாயுதத்தை, எடுத்தனள் தொடர-எடுத்துக்கொண்டு (தன் பின்னே) வரவும்,—மேனகை - மேனகையென்பவள், வெள் அடை - வெற்றிலையை, உதவ கொடுத்துக்கொண்டுவரவும,—திலோத்தமை-திலோத்தமையென்பவள், செருப்பினை - செருப்பை, தாங்கி செல்ல - எடுத்துகெண்டு உடன்போகவும்,—அரமபையா குழாம்-மற்றைத் தேவமாதாகளின் கூட்டம், புடை சுற்ற - பகங்களிலே சூழ்ந்துவரவும்,—(தான் அணிந்துள்ள), கலவை கருப்புரம் சாந்தம்உம் - பசசைக்கருப்புரஞ்சேர்ந்த கலவைச் சந்தனமும, மலரும் - மலர்மாலைகளும, (இவையிரண்டும்), கலந்து - ஒன்றுகூடி, உமிழ்- வெளிவீசுகின்ற, பரிமள கந்தம் - மிக்க நறுமணமானது, மருப்பு உடை - தந்தங்களையுடைய, பொருப்பு -மலைபோன்ற, ஓர் மாதிரம் களிற்றின் - ஒப்பற்ற திககஜத்தினது, வரி கை-புள்ளிகளையுடைய துதிக்கையிலுள்ள, வாள் மூக்கிடை-கூறிய மூகத்தினில, மடுப்ப-நிறைந்து உட்செல்லவும்,—(எ - று.)—வந்தான்.

தனது செருக்குவெளிததோன்றுமாறு தேவமாதர்கள் பணிசெய்ய, இராவணன மிகக சம்பிரமததோடு வந்தன னென்க. இலங்கை தெற்குதிக்கிலிருததலால், இங்கு, 'களிறு' என்றது - தெற்குத்திசையிலுளள 'வாமனம்' என்னும் திக்கஜத்தைக் குறிக்குமென்னலாம. இனி, மாதிரக்களிறு என்பது பால்பகா வஃறிணைப்பெயராதலால், அஷ்டதிககஜங்களையுங குறிக்குமென்றலுமொன்று; இப்பொருளில, ஓர் - ஒப்பற்ற என்க. கலவைசசாந்து மலர

இவற்றின் நறுமணம், மிக்கிருததல்பற்றி வெகுதூரத்திலிருககுந் திக்கஜத்தின் மூக்கிலும் சென்ற தென்க. இதுபற்றியே, பரிமளகந்தம் என ஒரு பொருட்பன்மொழியாற் கூறினர். வெள்ளடை என்பது - பாக்கு முதலிய மற்றையினத்தையும் உபலக்ஷணத்தாற் குறிக்கும். ஈண்டு:—[1]ஏந்தினள். [2]வெள்ளடை மேனகை. [3]ஏக. [4]செல்லக. (உ)

௩. நானநெய் விளக்க நாலிரு கோடி நங்கையர் ரங்கையி லெடுப்ப, மேனிவந் தெழுந்த மணியுடை யணியின் விரிகதி ரிருளெலாம் விழுங்கக், கான்முதற் றொடர்ந்த நூபுரஞ் சிலம்புக் கிண்கிணி கலையொடுங் [1]கலிப்பப், பானிறத் தன்னச் குழாம்படர்ந் தென்னப் பற்பல மழலையும் பகர.

(இ - ள்.) நால் இரு கோடி நங்கையர் - எட்டுக்கோடி மகளிர், நானம் நெய் விளக்கம் - புழுகுத்தைலம் விட்டு ஏற்றிய விளக்குகளை, அம்கையில் எடுப்ப - அழகிய தமது கைகளி லேந்திவரவும்,—மேல் நிவந்து எழுந்த - (அம்மகளிரின்) உடம்புகளில் உயர்ந்துதோன்றுகின்ற, மணி உடை அணியின் விரிகதிர் - இரத்தினாபரணங்களினுடைய பரவுகின்ற ஒளியானது, இருள் எலாம் - (அப்பொழுதுள்ள) இருள் முழுவதையும், விழுங்க-ஒழித்து விடவும்,—கால் முதல் - (அம்மகளிரது) பாதங்களில், தொடர்ந்த-அணியப் பெற்ற, நூபுரம் - சிலம்புகள், சிலம்பு - ஒலித்தலினாலும், கிண்கிணி-சதங்கை யணிகளும், கலையொடும் - (அரையிற்பூண்ட) மேகலாபரணமும், கலிப்ப - ஒலித்தலினாலும, பால் நிறத்து அன்னம் குழாம படர்ந்து என்ன - பால் போலும் வெணணிற முடைய அன்னப்பறவைகளின் கூட்டம் (இனிமையாக ஒலித்துக்கொண்டு) செலவதுபோல, பல் பல மழலையும் - மிகப்பல இனிய ஒலிகளும், பகர - ஒலிக்கவும்,—(எ - று.)—வந்தான்.

தமது உடம்பிலணிந்துள்ள இரத்தினாபரணங்களின் ஒளியே அப்போது செறிந்துள்ள இருளைப் போக்க மங்களார்த்தமாகக் கைகளிற் புழுகுநெய் ஊற்றிய விளக்கை யேந்திக்கொண்டு, எட்டுக்கோடிமகளிர், இன்னொலிகளைச் செய்யும அன்னக்கூட்டம் செல்வதுபோலத் தமது பாதங்களி லணிந்துள்ள நூபுரமும் கிணகிணியும் இடையிலணிந்துள்ள மேகலாபரணமும் இன்னொலி செய்யுமாறு இராவணனைசசூழ்ந்து நடந்துவந்தன ரென்க. நிரம்பாமென் சொல்லைக் குறிப்பதாகிய 'மழலை' என்பது-இலக்கணையால், இன்னோசையை உணர்த்திற்று. இனி, அம்மகளிர நூபுரம் சிலம்பவும், கிண்கிணியும் மேகலையும் கலிப்பவும், அன்னக்கூட்டம் சூழ்ந்துவருவதுபோல் இனிய மழலைசசொற்களைக் கூறிக்கொண்டு உடன்செல்ல வந்தான் என்று கூறினும் அமையும. முந்திய பொருளில் நூபுரம் முதலியவற்றின் ஒலிக்கு அன்னங்களின் இன்னொலியும் பிந்தியபொருளில் நூபுரம் முதலியவை யொலிக்க மெல்லெனநடககும் மகளிரகு இனனொலிசெய்யும் அன்னப்பறவையும் உவமை யெனக் காண்க. நாலிருகோடிநங்கையர் - மிகப்பலமகளி ரென்றபடி,

மேனி வந்து எழுந்த என்று பிரிதது உரைப்பாரு முளா. கலை - மேகலை யென்பதன் முதற்குறை. பி - ம்:—[1]கவின. (௩)

௪. அந்தரம் புகுந்த துண்டென முனிவுற் றருந்துயி [1]னீங்கினு ணுண்டைச, சந்திர வதனத் தருந்ததி யிருந்த தண்ணறுஞ் சோலை யின் [2]றனையோ, மந்திரம் யாதோ யாரொடும் போமோ வென்று [3]மா மனமறுக் குறலா, லிந்திரன் முதலோ [4]ரிமைப்பிலா நாட்ட முகிழ்த் தன ருயிர்ப்பவிந் திருப்ப.

(இ - ள்.) '(இராவணன்)' அந்தரம புகுந்தது உண்டு என - (தனது கருத்திற்கு) இடையூறு நேர்ந்திருகிறது என்ற எண்ணத்தினால், முனிவு உற்று - கோபங்கொண்டு, அரு துயில் நீங்கினான் - (தனது) அருமையான தூக்கம் நீங்கப்பெற்றானாக (அதனால்), (இவனதுசீற்றம்), ஆண்டை - அங்குள்ள, சந்திர வதனத்து - பூர்ணசந்திரன்போலும் முகமுடைய, அருந்ததி - (மகாபதிவிரதையாகிய) அருந்ததிபோன்ற சீதாபிராட்டி, இருந்த - சிறையிருக்கின்ற, தண் நறு சோலையின் தனையோ - குளிர்ந்த வாசனையுள்ள சோலைவரையிலும நிற்குமோ? (அன்றி), யாரொடும் போமோ - யாவரையிலும் சென்று முடியுமோ? (அதுவன்றி), மந்திரம யாதோ - (இவர்) ஆலோசனைதான் என்னவோ? என்று—மா மனம் மறுக்குறலால-பெரிய (தமது) மனம் கலக்கத்தை யடைவதனால், இந்திரன் முதலோ - இந்திரன் முதலிய தேவர்கள், இமைப்பு இலா நாட்டம் முகிழ்த்தனர் - (தமது) இமையாக்கண்களும மூடபபெற்றவாகளாய, உயிர்ப்பு அவிந்து இருப்ப - மூச்சுக்காற்றும அடககி நிற்கவும்,—(எ - று.)—வந்தான்.

அப்போது, இராவணன் காமபரவசனாகி உறககமும் ஒழிந்து, பிராட்டி தன்கருத்துக்கு இணகாமையாற் சினம பொங்கச செலவதைக் கண்ட இந்திரன்முதலிய தேவர்கள், 'இவனது இக்கோபம் சீதாபிராட்டி சிறையிருக்கும் பூஞ்சோலையோடும் நிற்குமோ? அன்றி, இன்னும் யாமீது சென்றுமோ? அல்லாவிடின், இவன் எண்ணந்தான் வேறு யாதோ?' என்று மனங் கலகி மிகக அச்சதினால் தமது இமையாகககண்களும் மூட, மூச்சும் அடககி யிருந்தன ரென்பதாம. சீதாபிராட்டி தனக்கு இணகாததுபற்றி, இராவணனுக்கு முனிவும் துயிலொழிவும் நேரந்தன வென்க. கோபமானது 'இன்னதுசெய்யற்பாலது, இன்னது செய்யத்தகாதது' என்ற பகுததறிவைப் போக்கு மாதலால், 'யாரொடுமபோமோ' என்று எண்ணவேண்டுவ தாயிற்று. இந்திரன் முதலிய தேவர்கள் இராமதூதனாகிய அனுமான் வந்திருப்பதை யறிந்திருத்தலால், இராவணன் சீதாபிராட்டியினிடம் வருவதைக் கண்டு, இவ்விராவணனும் அநுமான்வந்திருததலை யறிந்தனன்போலு மென்று கருதி அந்தரம்புகுந்த துண்டென வருவதாக எணணலாயின ரெனக் கூறுவாரு முளர். பி - ம்—[1]நீங்கினனன்றே. [2]தலையோ. [3]தம. [4]இமைப்பில நாட்டத் தெனைவரும். (௪)

௫ நீனிறக் குன்றி [1]நெடிதினிற் றாழ்ந்த நீத்தவெள் ளருவியி
னிமிர்ந்த, பானிறப [2]பட்டின் மாலையுத் தரியம் [3]பண்புறப் [4]பசும்
பொ னாரத்தின், [5]மானிறப் புடவி யுடையுறப் பரந்த வளர்கதி ரிள
வெயில பொருவச், சூனிறக் கொண்மூ[6]க் கிழித்திடை துடிக்கு மின்
னென [7]மார்பினூ லுளங்க.

(இ - ள்.) நீல் நிறம் குன்றின் - நீலநிறமுள்ள மலையிலிருந்து, நொடிதி
னில் தாழ்ந்த - நீளமாக இறங்குகின்ற, நீத்தம் வெள அருவியின் - பெருக்
காகிய வெணணிறமுள்ள அருவிபோல, நிமிர்ந்த பால் நிறம் பட்டின் மாலை
உத்தரியம - சிறந்த பால்போன்ற வெணணிறமுடைய பட்டினாலியன்ற மாலை
யாகத் தரித்த (தனது) மேலாடையானது, பண்பு உற - அழகு பெறவும்,—
பசும் பொன் ஆரத்தின் மால் நிறம்-(தன கழுத்திலே தரித்த)பசும் பொன்னா
லியன்ற ஆரத்தினது சிறந்தநிறமானது, புடவி உடை உற பரந்த - பூமி
தேவிககு ஆடையைப்போன்ற [பூமியைசசுற்றியுளள] சடலிலே மிகவும் பர
வியு, வளா கதிா இள வெயில - (ஆயிரமென்னுந தொகையுண்டாகுமபடி)
மிகுந்துள்ள கிரணங்களையுடைய சூரியனது இளவெயிலை, பொருவ - ஒத்
திருக்கவும்,—சூல் நிறம கொண்மூ - கருககொண்டிருததலால் கருநிறம்
படைத்த மேகததை, கிழிதது - பிளநதுகொண்டு, இடை துடிக்கும் - அதன்
நடுவிலே அசைநது தோன்றுகிற, மின் என - மினனலைப்போல, மார்பில்
நூல் - மாாபிலே யணிந்துள்ள பூணூலானது, துளங்க - விளங்கவும்,—
(எ - று.)—வந்தான்.

வெணபட்டாடையை மாலைபோலத் தரித்துக்கொணடு, தான்பூண்ட
பொன்னாரமபளபளவென்றுஒளிவீசவும்,மாாபில் மின்னலைப்போன்று பூணூல்
விளங்கவும் இராவணன்வந்தனனென்க. கருநிறமுள்ளஇராவணனுடமபிற்கு-
நீல்நிறகுன்றும கருங்கடலும சூனிறக்கொணமூவும் உவமையெனவும்; அவ்
வுடம்பின்மீது விளகுகின்ற வெண்பட்டு உத்தரீயத்துககு - நீததவெள்ள
ருவியும, பசும் பொனாரதின் நிறத்துக்கு - சூரியனது இளவெயிலும், யஜ்
ஞோபவீதத்திற்கு - மின்னறகொடியும்உவமையெனவும் காணக. உத்தரீயம-
மேலாடை: (அரையாடை-அந்தரீய மெனப்படும.) வெண்ணிறப் பூணூலைக
கருநிறவுடம்பில் தரிததிருக்கையில் உடலின் கருநிறம் பிளவுபட்டுத்தோன்று
மாதலால், அதறகு ஏற்ப, உவமையில் - 'கொண்மூகிழிதது' என்றார். வளர்
கதிா-வினைதொகைப் புறததுப்பிறந்த அன்மொழி. மானிறப்புடவி-எதுகை
நோக்கிய வலிததல. பி-ம்.—[1]நெடிதுடன்சூழ்ந்த, நெடிதுயர்ந்தாழ்ந்த. [2]பட்டு
மாலையுத்தரிகம. [3]பசுப்புறப். [4]பசும்புறச சாந்தம். [5]மானிறப் புடவியிடையுறப்
படர்ந்த, மானிறமணிக ளிடையுறப் பிறழ்ந்த. [6]சுழித்திடைகிழிக்கும். [7]மார்
பினிறறோன்ற. (௬)

௬. தோடொறுந் தொடர்ந்த [1]மகரிகை வயிரக் கிம்புரி வலயமாச்
சுடர்க, ளொறுஞ் சுடருங் கலிகெழு விசும்பி னொளொடு கோளினை

நக்கத், தாடொறுந் தொடர்ந்த தழங்குபொற் கழலின் றகையொளி நெடுநிலந் தடவக, கேடொறுந் தொடர்ந்த முறுவல்வெண் ணிலவின் முகமல ரிரவினுங் கிளர.

(இ - ள்.) தோள் தொறும் தொடர்ந்த-(இருபது)தோள்களிலும் ஒழுங்காக அணிந்துள்ள, மகரிகை - சுறாமீன்வடிவமமையச் செய்யப்பட்டனவும், வயிரம் - வயிரரத்தினங்களா லியன்றனவுமான, கிம்புரி வலயம் - தோளணியாகிய வலயங்களினது, மா சுடர்கள் - பேரொளிகள், கலிகெழு விசும்பில் - ஓசை விளங்கக் காரணமான ஆகாயத்திலே, நாள் தோறும்,— சுடரும் விளங்குவனவான, நாளொடு - நக்ஷத்திரங்களையும், கோளினை - கிரகங்களையும், நக்க - போய்ப்பரிசிக்கவும்,—தாள்தொறும் தொடர்ந்த-இரண்டுகால்களிலுங் கட்டிய, தழங்கு - ஒலிகின்ற, பொன்கழலின் - பொன்னினாலான வீரக்கழலின், தகை ஒளி - சிறந்த ஒளியானது, நெடு நிலம்-பெரியநிலத்தை, தடவ - தடவிக்கொண்டே செல்லவும்,—தேள்தொறும தொடர்ந்த - சுற்றத்தா ரொவ்வொருவரிடத்தும் தொடர்ந்து செல்லுகின்ற, முறுவல் - புன்சிரிப்பாகிய, வெள் நிலவின் - வெண்ணிறமுள்ள நிலவினாலே, முகம்மலர் - முகமாகிய தாமரைமலர்கள், இரவினும் - அந்த இராப்பொழுதிலும், கிளர - விளங்கவும்,—(எ - று.)—வந்தான்.

இராவணன் செல்லும்போது தனது உயர்ந்ததோள்களில் அணிந்துள்ள வயிரவாகுவலயங்களின் ஒளி ஆகாசத்திலுள்ள கிரகநட்சத்திரங்களையும், கால்களிலணிந்துள்ள வீரகழலின் ஒளி அவன் நடந்துசெல்லுந் தரை முழுவதையும் பொருந்துமென்க. அவ்வாறு இராவணன் செல்லுகையில் வழியிலெதிர்ப்படுகின்ற உறவினரைக் காணுமபொழுதெல்லாம் புன்முறுவல் செய்து முகமலர்ச்சிகாட்டுவதை, ஈற்றடியால் விளக்கினார். பகலில் சூரியனது வெயிலைக் காண்கையில் மலர்தல் தாமரைக்கு இயல்பாயிருக்க, இங்கு அதற்குமாறாக 'வெண்ணிலவின முகமலா இரவினுங்கிளர'என்றுங் கூறினார்: இது-வேற்றுமையணியை அகமாககொண்டுவந்த உருவகவணியாம். ஆகாசம் சப்தத்தை தனக்குக் குணமாகவுடையதென்பது நூற்கொள்கை யாதலால் 'கலிகெழுவிசும்பு' எனப்பட்டது. மகரிகையென்று தனியே எடுத்து - காதிலணிந்துள்ள மகரகுண்டலமெனப் பொருள் கூறுவாருமுளர். கிம்புரி வலயம் - பூண்போல வடிவம் விளங்குகின்ற தோள்வளை யென்னலாம். பி - ம்:—[1]மகரவாய்.

(௬)

எ. தன்னிறத் தோடு மாறுதந் திமைக்கு நீவியந் தழைபட வுடுத்த, பொன்னிறத் தூசு கருவரை மருங்கிற் றழுவிய புதுவெயில் பொருவ, மின்னிறகதிரீற் சுற்றிய பசும்பொன் விரற்றலை யவிரொளிக் காசின், கன்னிறக் கற்றை நெடுநிழல் பூத்த கற்பக முழுவனங் கனின.

(இ - ள்.) தன் நிறததோடு மாறு தநது இமைக்கும் - தனது உடம்பின் நிறத்தோடு மாறுபட்டு விளங்குகின்றதும, நீவி அம் தழை பட - முடிசசும் அழகிய கொய்சகமும் பொருந்தும்படி, உடுத்த - (தன் அரையிலே) தரிக்கப் பட்டதுமான, பொன் நிறம் தூசு - பொன்மயமான வஸ்திரம் [பீதாமபரம்], கரு வரை மருங்கில்-கருநிறமுளள மலையின் நடுவிடத்தில், தழுவிய-பொருந் திய, புது வெயில் - இளவெயிலை, பொருவ - ஒத்திருக்கவும்,—விரல் தலை - (தனது இருபது கைகளிலு முள்ள) விரல்களில், மின் நிறம் கதிரின் சுற்றிய பசும் பொன் - மின்னலின் நிறம் போன்ற ஒளியோடு வட்டவடிவமாகச சூழ்ந்துள்ள பசும்பொன்னுலியன்ற மோதிரங்களிலே (பதித்துள்ள), அவிர ஒளி காசின கல் - விளங்குகின்ற ஒளியையுடைய இரத்தினக்கற்களின், நிறம் கற்றை - ஒளிததொகுதியானது, நெடு நிழல் பூதத - பேரொளியோடு மலர்ந்துள்ள, கற்பகம் முழுவனம் - பெரிய கற்பகச்சோலைபோல, கவின - அழகுசெய்து விளங்கவும்,—(எ - று.)—வந்தான்.

அரையில் பீதாம்பரமும் கைவிரல்களில் இரத்தின மோதிரங்களும் விளங்க இராவணன் வந்தன னென்க. கருநிறமுள்ள அரையில் செம் பொற்றூசைத் தரித்திருத்தலால், 'தன்னிறததோடு மாறு தந்திமைக்குந் தூசு' என்றார். நீவி-வஸ்திரமுடிசசு' வடசொல்; இது, இங்கே கச்ச மென்ற பொருளைக் காட்டுமெனனலாம. தழை - தழைந்து தொங்கும் கொய்சகம்; இரத்தினக்கற்களிழைததுசசெய்யப்பட்ட செம்பொன்மோதிரங்களை நிறைய அணிந்துள்ள கைவிரலகளுககு - பேரொளியோடு மலர்ந்துள்ள மலாகளை யுடைய கற்பகவனத்தை உவமை கூறினார். பசும்பொன் - கருவியாகுபெய ரால், மோதிரத்தை யுணாத்திற்று. காசு இரத்தினப்பொதுப்பெயர். "மணிப் பொதுப்பேர் காசொடு மனவுமாகும்" என்பது, நிகண்டு. (எ)

அ. சன்னவீ ரத்த கோவைவெண் டரள மூழியி னிறுதியிற் [1]றனித்த, பொன்னெடு [2]வரையிற் றோற்றிய கோளு நாளு மொத் திடையிடை பொலிய, மின்னொளி மௌலி யுதயமால் வரையின் மீப்படர் வெங்கதிச் செல்வர், பன்னிரு வரினு [3]மிரு வரைத் தவிர்வுற் றுதித்ததோர் படியொளி பரப்ப.

(இ - ள்.) சன்னவீரத்த கோவை - (தான் அணிந்துள்ள) வெற்றிமாலை யாகிய பொன்னூரத்திலே (பதிக்கப்பட்ட), வெள் தரளம் - வெணமையான முததுககளானவை, ஊழியின் இறுதியில்-யுகாந்தகாலத்தில், தனித்த-தனிப் பட்டுநின்ற, நெடு பொன் வரையில் - நீண்ட பொன்மலையாகிய மேருவிலே, தோற்றிய - காணப்பட்ட, கோளும் - கிரகங்களையும், நாளும் - நட்சத்திரங் களையும், ஒத்து - போன்று, இடை இடைபொலிய - நடுவே நடுவே விளங்க வும்,—மின் ஒளி மௌலி-மின்னுகின்ற ஒளியையுடைய பத்துக் கிரீடங்கள், மால் உதயம் வரையின் மீப்பா - பெரிய உதயகிரியில் உதிக்கின்ற, வெம் கதிர் செல்வர் பனனிருவரினும் - உஷ்ணகிரணங்களைச் செல்வமாகவுடைய

ஆதிததியர் பன்னிருவரிலே, இருவரை தவிரவு உற்று - இரண்டு பேரை யொழிதது, (மற்றைப்பதின்மா), உதிததது - ஒருசேரத் தோன்றிவிளங்கு வதாகிய, ஓர் படி - ஒருதன்மையையொதது, ஒளி பரப்ப - ஒளியை வீச வும்,—(எ - று.)—வந்தான்.

இராவணன் அணிந்துள்ள வெற்றிமாலையாகிய பொன்னூரதின் இடை யிடையே பதிததுள்ள முத்துக்களுக்கு - யுகாந்த காலத்தில் தனிப்பட்டுள்ள மேருமலையின்மீது விளங்குமகிரகநட்சததிரங்களைமுன்னிரண்டடியில் உவமை யாக்கினார். அவ்விராவணன் தனது பத்துத்தலைகளிலும் அணிந்துள்ள இரத் தினகசிதமான பததுகிரீடங்களுக்கு - உதயமலையில் ஏககாலததில் தோன்று கின்ற பததுச் சூரியரை உவமையாகக் குறிததார். இல்பொருளுவமை யணி. பன்னிரண்டு மாதங்கட்கும் பன்னிருவா சூரியர் உரியவ ரென்பது நூற் கொள்கையாதலால், தசக்கிரீவனான இராவணனது பத்துக்கிரீடங்கட்கு உவமைகூறுமாறு அப்பன்னிருவரில் இருவரை விலக்கவேண்டிய தாயிற்று. "துன்னுகோளினொடு தாரகை தொடுத்த துழனிச், சன்னவீரம்" என்று கூறியது முன்னிரண்டடியிற் கருதத்தக்கது. பி - ம்.—[1]தழுவிப். [2]வளையத் தொற்றிய. [3]இருவருந்தவிர. (அ)

௯. பயிலெயிற் றிரட்டைப் பணை [1]மருப் பொடியப் படியினிற் பரிபவஞ் சுமந்த, [2]மயிலடித் தொழுகுகி னனையமா மதத்த மாதிரக் காவன்மால் யானை, கயிலையிற் றிரண்ட முரணடொடர் தடந்தோட் கனகன துயர்வரங் கடந்த, வயிலெயிற் றரியின் சுவடுதன் கரத்தா லளைந்தமாக் கரியினின் றஞ்ச.

(இ - ள்.) பயில் எயிறு - பொருந்திய பற்களாகிய, இரட்டை - இரண் டாகிய, பணை மருப்பு - பருத்த தந்தங்கள், ஒடிய - (இராவணன் திக்குவிச யஞ் செய்த காலத்தில். அவனைத் தாக்கி) முறிந்ததனால, படியினில் - பூமி யிலே, பரிபவம் சுமந்த - மிக்க அவமானத்தைத தாங்குவனவும்,—மயில் அடித்து ஒழுகினன் - மயிலின்பாதமபோல (ஒழுகுகின்றிப் பெருகுகிற) பெருக்கததையுடைய, அனைய மா மதத்த - அப்படிப்பட்ட மிக்க மதநீரைக் கொண்டனவுமாகிய, மாதிரம் காவல் மால்யானை - திக்குக்களைக் காவல்செய் கின்ற பெரியதிககஜங்கள்,— கயிலையின் திரண்ட - கைலாசமலை போலத் திரட்சியான, முரண் தொடா - வலிமை பொருந்திய, தடதோள் - பெரிய தோள்களையுடைய, கனகனது-இரணியனது, உயர் வரம் - சிறந்தவரங்களை, கடந்த - வென்ற [பயனிலவாம்படி செய்த], அயில எயிறு அரியின் - கூரிய பற்களையுடைய நரசிங்கததினது, சுவடு-அடிசசுவட்டை, தன் கரத்தால்-தன் துமபிக்கையால், அளைந்த—,மாகரியின் - பெரியயானைபோல, நின்று அஞ்ச- (ஒன்றுந்தோன்றாது) நிலைததுநின்று பயப்படவும்,—(எ - று.)—வந்தான்.

முன்பு திககுவிசயகாலத்தில் இராவணனால் தந்தம் முறியப்பெற்ற திக்கஜங்கள் சிங்கததின்கால்சுவட்டைத் துமபிகையால் தீண்டப்பெற்ற யானை போலப் பேச்சடங்கொள்ளும்படி இராவணன் வந்தன னென்பதாம்.

கவி, அசசதநின்மிகுதியை விளக்கவேண்டி, இரணியாசுரனைக் கொன்றநரசிங்கத்தின் காற்சுவட்டைத் துதிக்கையாலளைந்த யானையென்றார். தந்தம்முறிந்தது பார்ப்பவர்க்கு எப்போதும் அவ்யானைகளின் தோல்வி விளங்குமபடியிருத்தலால், 'மருப்பொடியப் படியினிற் பரிபவஞ்சுமந்த' என்று மாதிரயானைக்கு அடைமொழி கொடுத்தார். இராவணன் திக்குவியஞ்செய்த காலத்தில் ஐராவதம் முதலிய திககஜங்களை யெதிர்ததபொழுது அவை கோபங்கொண்டு அவன்தோளில் தந்தங்களால் தாக்குகையில், மிககவலிமையுடைய அவன் தோள்களை ஊறுபடுதத மாட்டாமல் அவை நுனியொடிந்திட்டன வென்றும், பின்பு இராவணனும போரில் அவற்றின் தந்தங்களை நன்றாக ஒடிததிட்டா னென்றும் உணாக. "திக்கின்மாவெலாந்தொலைதது', "நெருப்படியின் பொடி சிதறநிறைநத மததிசையானை, மருப்பொடியப் பொருட்பிடியத் தோணி, மிாதத வலியோனே," "திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப் பொசித்த, விசையாலே நிறைந்தபுயத் திராவணவோ விராவணவோ" என வந்துள்ளமை காண்க. இரட்டைப்பணைமருப்பு - ஒவ்வொரு பக்கததிலும் இரட்டையாக அமைநதுள்ள பருத்த(நான்கு) தந்தங்கள் என்னலாம். கனகன் - இரணியன் என்பதன் பரியாயம்: பொன்னிறமானவனென்பது பொருள். கனகனது உயாவர மென்றது - தனிததனி தேவர் மனிதா விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானததிலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமில்லாதபடி பெற்றதை. பி-ம்:—[1]முரணபணை, முரட்பனை. [2]மயிரடிததொழுகி. (௬)

௧௦. அங்கயற் கருங்க ணியக்கியர் துயக்கி லரம்பையர் விஞ்சையாக் கமைந்த, [1]மங்கையர் நாக மடந்தையர் [2]சித்த நாரிய ரரக்கியா முதலாக், குங்குமக் [3]கொம்மைக் குவிமுலை கனிவாய் கோகிலந் துயர்ந்தமென் குதலை, மங்கைய ரீட்ட மால்வரை தழீஇய மஞ்ஞையங் குழுவென மயங்க.

(இ - ள்.) அம் கயல் கரு கண் - அழகிய கெண்டைமீன் போன்ற கறுதத கணகளையுடைய, இயக்கியா-யக்ஷஸ்திரீகளும், துயக்கு இல் அரம்பையர் - சோாவுபடுதலில்லாத அரம்பை முதலிய தேவதா ஸ்திரீகளும், விஞ்சையாக்கு அமைந்த மங்கையா - வித்தியாதரர்கட்கு உரியவராகிய விததியாதரஸ்திரீகளும, நாகம் மடந்தையர் - நாகசாதி ஸ்திரீகளும, சிதத நாரியர் - ஸித்தஸ்திரீகளும், அரக்கியர் - ராக்ஷசஸ்திரீகளும், முதல் ஆ - முதலாகவுள்ளவராகிய,—குங்குமம் கொங்கை குவி முலை - குங்குமமணிந்த பருதத குவிந்த முலைகளையும, கனி வாய - கொவ்வைப்பழம் போலச் சிவநத வாயையும், கோகிலம துயர்ந்த மெல் குதலை - குயில்களும் வருந்துதற்குக் காரணமான [இனிமை மிக்க] மெல்லிய குதலைகசொற்களையுமுடைய, மங்கையர் - மகளிரது, ஈட்டம் - கூட்டமானது,—மால் வரை தழீஇய - பெரிய தொரு மலையைச் சூழ்ந்துள்ள, அம் மஞ்ஞை குழு என - அழகிய மயிலகளின் கூட்டம்போல, மயங்க - கலந்துவரவும்,—(எ - று.)—வந்தான்.

இராவணனுக்கு அடிமைப்பட்டுள்ள இயக்கியா முதலிய தெய்வசாதி மகளிர் அவனைச் சூழ்ந்துவருதற்கு, மலையைச் சூழ்ந்துள்ள மயிற் கூட்டத்தை உவமைகூறினர். சாதாரணமாக மகளிரின் குதலைச்சொல்லுக்கு உவமை யாதீற்கு ஏற்ற குயில் இம்மடந்தைமாகளின் குதலைக்கு ஒப்பாகமாட்டா மையால் வருந்து மென்க; இங்ஙனம் உவமையாவதற்கு உரிய குயிலை உவமை யாகாமையாலே துயரு மெனக கூறியது - எதிர்நிலையணியாம்; இதனை, வட நூலார்-ப்ரதீபாலங்கார மென்பர். பி-ம்:—[1]ஈங்கையா. [2]சிததா. [3]கொங்கைக்

கக தொளையுறு புழைவேய்த் தூக்கிசைக் கானந் [1]துயலுறு
வொருநிலை [2]படர, விளையவர் மிடறு [3]மிந்நிலை யிசைப்பக் கின்னரர்
முறைநிறுத் தெடுத்த, கிளையுறு பாடல் சில்லரி பாண்டி தழுவிய
முழவொடு கெழுமி, யளை[4]யுறு மரவு மமுதுவா யுகுப்ப வண்டமும்
வையமு மளப்ப.

(இ - ள்.) தொளை உறு - துளைசெய்யப்பெற்றுள்ள, புழை வேய் - (உட்புறததில)இயற்கைததுவாரததையுடைய வேய்ங்குழலினின்று உண்டா கின்ற, தூக்கு இசை கானம - பாடலின் இனிய ராகமானது, துயல் உறு - பிரழ்தலில்லாமல், ஒரு நிலை படர - ஒதது வருமாறு, இளையவர் மிடறும் - இளம்பெண்களுடைய (இனிய) குரலும், இ நிலை இசைப்ப - இந்தவேய்ங் குழலினிசையோடு ஒத்து ஒலிககவும்,—கின்னரா கின்னரசாதியார்,முறை நிறுத்து எடுத்த-கிரமமாக ஆராய்ந்து பாடதொடங்கிய, கிளை உறு பாடல் - (கின்னரமென்ற யாழின்) நரம்பினின்று வெளிப்படுகின்ற பாடலானது, சில்லரி - சில்லரியென்னும வாசியவிசேஷமும, பாண்டில-நஞ்சதாளமும், தழுவிய முழவொடு - மார்ச்சனைசெய்துஒலியெழுப்பப்படுகின்ற மததளத் தொனியோடு, கெழுமி - ஒத்து, அளை உறும் அரவும் அமுது வாய் உகுப்ப- புற்றில் வாழ்கின்ற பாம்பும் (இந்த இன்னொலியைக் கேட்டுத தனது விஷக் கொடுமை நீங்கி) அமிருததததை வாயிலிருந்து சொரியும்படி, அண்டமும் வையமும் அளப்ப - மேலுலகத்திலும இநதப் பூமியிலும் (இன்னோசை) பரவவும்,—(எ - று.)—வந்தான்.

அப்போது வாசிகக்ப்படுகின்ற வேய்ங்குழலுக்குஒப்ப இளமகளிர் தமது மிடற்றினால இனிமையாகப் பாடிவரவும, கின்னரசாதியார் இன்னொலியைக் கேட்ட விஷப்பாம்புகளும் விஷததன்மை நீங்கி அமுததததைக் கக்கும்படி தமகு உரிய கின்னரமென்ற நரப்புக்கருவிகொணடு இன்னோசை மண்ணி லும் விணணிலும பரவுமாறு மற்றைசசில்லரிமுதலிய இசைககருவிகளோடு ஒதது ஒலிககவும இராவணன் வந்தனனென்க. கின்னரா - கின்னர மென் னும் இசைககருவிகொணடு இசைபாடித்திரிபவராய்க குதிரைமுகமுள்ள வராகிய தேவசாதியா. பி - ம்:—[1]துயாவுறு. [2]தொடர. [3]இன்னிலையி யககா. [4]உறை (கக)

கஉ. அன்னபூஞ் சதுக்கஞ் சாமரை ..யுக்க மாதியாம் வரிசை
யிற் கமைந்த, வுன்னரும் பொன்னின் மணியினிற் புனைந்த விழைக்

குல [1]முழைக்குல மனைய, மின்னிடை செவ்வாய் குவிமுலை பணைத் தோள் வீங்குதே ரல்குலார் தாங்கி, நன்னிறக் காரின் வரவுகண் டுவக்கு நாடகமயிலென நடப்ப.

(இ - ள்.) அன்ன பூ சதுக்கம் - (இராவணன் செல்லுகின்ற) அப்படிப் பட்ட அழகிய நாற்புறமும் வந்து கூடுகின்றவீதியில்,—உன் அரும் பொன் னின்-நினைத்தற்கும் முடியாத [மிகச்சிறந்த] பொன்னினாலும், மணியினில்- இரத்தினங்களினாலும், புனைந்த - அழகாகச் செய்யப்பட்ட, இழைகுலம்- ஆபரணங்களின் தொகுதிகளை [பலவகை யாபரணங்களை] யணிந்தவர்களும், உழை குலம் அனைய - மான்கூட்டங்களை யொத்தவர்களும், மின் இடை - மின்னல்போலத் (துவளுகின்ற) இடையையும், செம் வாய் - சிவந்த வாயையும், குவி முலை - குவிந்த தனங்களையும், வீங்கு பணைதோள் - பருத்த மூங்கில்போன்ற தோள்களையும், தோ அல்குலார் - தேர்த்தட்டுப் போன்ற அல்குலையு முடையவர்களுமாகிய மகளிர்,—சாமரை - வெண்சா மரமும், உக்கம் - ஆலவட்டமும், ஆதி ஆம்-முதலியனவாகிய, வரிசையிற்கு அமைந்த - உபசாரத்திற்கு ஏற்றவைகளை, தாங்கி - ஏந்திக்கொண்டு, நல் நிறம் காரின் வரவு கண்டு உவக்கும்-மிகக் கருநிறத்தையுடைய கார்கால மேகத் தின் வருகையைக் கண்டு சந்தோஷிக்கின்ற, நாடகம்மயில் என - கூத்தாடு தலையுடைய மயில்போல, நடப்ப-கூட நடந்துவரவும்,—(எ-று.)—வந்தான்.

சாமரை ஆலவட்டம் முதலிய உபசாரஞ் செய்தற்குஉரிய கருவிகளை ஏந்தியவராய், அழகிய மகளிர் கார்மேகங் கண்ட மயில்போன்று மிக்க மகிழ்ச்சி யோடு மெல்ல நடந்துவர, இராவணன் சென்றனனென்க. சதுக்கம்— சதுஷ்கம் நாற்சந்திகூடுமிடம். இழைக்குலம் அல்குலார், உழைகுலமனைய அல்குலார் என இயையும். உழைக்குலம் - மருண்ட பார்வையிலும், மயில்- சாயலிலும் மகளிர்க்கு உவமையாம. குவிமுலை பணைதோள் முரணிதோடை. பி - ம்:—[1]கருங்கடைக்கண.

(௧௨)

௧௩. தந்திரி [1]நெறியிற் றாக்குறு கருவி தூக்கின [2]ரெழுவிதச் சுதியின், முந்துறு குணிலோ டியைவுறு குறட்டிற் [3]சில்லரிப் பாண் டிலின் முறையின், மந்தர கீதத் திசைப்பதந் [4]தொடர வகையுறு கட்டளை வழாம, லந்தர வானத் தரம்பையர் கரும்பிற் [5]பாடலா ரரு குவந் [6]தகவ.

(இ-ள்.) நெறியின் தாக்குறு கருவி தந்திரி-சாஸ்திரமுறைப்படி (விரல் கொண்டு) ஒலியெழுப்பப்படுகின்ற இசைக் கருவியாகிய தந்திரியாழை, எழு விதம் சுதியின் - எழுவகைப்பட்ட இசையும் அமையும்படி, தூக்கினர் - விர லால் தெறித்து வாசிப்பவரும், கரும்பின் பாடலார் - கரும்புபோ லினிய வாய்ப்பாடலை யுடையவருமாகிய, அந்தரம் வானத்து அரம்பையர் - சுவர்க்க லோகத்தவரான தெய்வமகளிர்,—முந்துறு குணிலோடு இயைவுறு குறட்டின்- முன்புறத்தில் அடிகக்ப்படுகிற குறுந்தடியோடு பொருந்திய குறடு என்னும்

தோற்கருவியும், சில்லரி பாண்டிலின் [பாணடில் சில்லரியின்]-வட்டவடிவமாகிய சில்சில் என்று ஒலிக்கின்ற தோற்கருவியும், (ஆகியவற்றின்), முறையின் - முறைக்கு ஏற்பவும,—மந்தரம் கீதத்து இசைப் பதம் தொடர-இனிய பாடல்களின் இராகஅமைப்பு ஒத்துவரவும்,—வகை உறு கட்டளை வழாமல்-(நடன சாஸ்திரத்திற் கூறியுள்ள) பலவகைப்பட்ட முறைமை தவறாமல், அருகு வந்து அகவ - (தனது) சமீபத்திலே வந்து நாத்தனஞ் செய்யவும,—(எ - று.)—வந்தான்.

தெய்வலோகத்து மகளிர் வாய்ப்பாடலுக்கும் இசைக்கருவிக்கும் தாளத்துக்கும் சிறிதும் தவறாமல் ஒத்து வருமாறு இராவணனது சமீபத்தில் அப்போது நர்த்தனஞ் செய்யலானார்கள் என்க. [3]சில்லரிபாண்டிலின்' என்று பாடமாயின், சில்லரியும் பாண்டிலு மென்னலாம். சுதி - ஸ்ருதி. [2]எழுவகைச் சதியின்' என்றும்,' எழுவியசதியின்' என்றும பாடம் காணப்படுகின்றது. சதி - தாள வொற்று. பி - ம்:—[1]கணணில். [4]தொடர்ந்த. [5]பாடலர். [6]ஆல. ()

கச. [1]அந்தில்வே ளனங்க னழல்படத் துரந்த வயின்முகப் பகழிவா யறுத்த, வெந்துறு புண்ணின் வேனுழைந் தாங்கு வெண் மதிப் பசுங்கதிர் விரவ, மந்தமா ருதம்போய் மலர்தொறும் வாரி வயங்குநீர் [2]மம்மரின் வருதேன், சிந்துநுண் டுளியின் சீகரத் திவலை யுருக்கிய செம்பெனத் தெறிப்ப.

(இ - ள்.) அந்தில் - அப்பொழுது,— அனங்கன் வேள் - உருவமில்லாதவனாகிய வேளென்னும் பெயரையுடைய மன்மதன், அழல்பட - நெருப்புத தோன்றும்படி, துரந்த-பிரயோகித்த, அயில் முகம்-கூர்மையான நுனியையுடைய, பகழி-அன்பு, வாய்-(தனது கூரிய) நுனியினால், அறுத்த-அறுபடும்படி செய்து உண்டாக்கிய, வெந்துறு புணணின்-வெந்திருக்கிற புணணிலே, வேல் நுழைந்து ஆங்கு - வேல் ஊடுருவிசசென்றாற போல, வெள் மதி பசுங்கதிர் - வெள்ளிய சந்திரனது குளிர்ந்த கிரணம், விரவ - பொருந்தவும்,—மந்தம் மாருதம் - இளந்தென்றறகாற்றானது, போய் - (ஆங்காக்குச) சென்று, மலர்தொறும் - புஷ்பங்களிலெல்லாம, வாரிவரு - வாரிக்கொணடு வருகின்ற, வயங்கும் நீர் - விளங்குகின்ற நீரதன்மையையுடைய, தேன் - தேனினது, நுண் துளியின் சிந்து - சிறுதுளியாகச சிந்துந் தன்மையுள்ள, சீகரம் திவலை-மிகசசிறிய திவலைகள், உருக்கிய செம்பு என - உருக்கப்பட்ட செம்பின் துளி சிந்துவதுபோல, மம்மரின்-மயக்கததோடு [காமமயக்கம்மிகுமபடி], தெறிபப-மேலேசிந்தவும்,—(எ - று.)—வந்தான்.

இராவணன் வரும்போது, மன்மதபாணததினால் துளைக்கப்பட்டுள்ள அவனது உடற் புண்ணில் வெந்தபுணணில் வேலுருவியது போலக் காமோத தீபகமான சந்திர கிரணங்கள் பட்டு வேதனையை மிகுவிக்க, உருக்கிய செம்பை யூற்றியதுபோல மந்தமாருதமானது புஷ்பங்களினின்று தேனை வாரிக்கொணடு தெறித்த தென்க. சீகரத் திவலை - ஒருபொருட்பன்மொழி;

இங்கே மிகச்சிறிய திவலையென்ற பொருளைத் தந்தது. அதில் - அசையாக வுமாம். பி - ம்:—[1]அந்தியினனகன். [2]அம்மலர். (கச)

கரு. இழைபுரை மருங்கு லிறுமிறு மெனவு மிறுகலா வன முலை யிரட்டை, யுழைபுகு செப்பி னொளிதர மறைத்த வுத்தரி யத்தினை ரொல்கிக், குழை[1]புகு கமலங் கோட்டினர் நோக்குங் குறு நகைக் குமுதவாய மகளிர், மழைபுரை [2]தடங்கட் செங்கடை யீட்ட மார் பினுந் தோளினு [3]மலைய

(இ - ள்.) 'இழை புரை - நூலிழையை யொத்த, மருங்குல் - (தமது) இடைகள், இறும் இறும் - முரிந்துபோய்விடும் முரிந்துபோய்விடும, எனவும - என்று (காணபவர்க்குத்) தோன்றினாலும், இறுகலா - ஒடுங்காது மேன்மேல் வளர்கின்ற, வனம்முலை இரட்டை - அழகிய இரண்டு ஸ்தநங்களும், உழை புகு செப்பின் ஒளிதர மறைத்த - உள்ளிடத்திற்புகுந்துள்ள இரண்டு செப் புக்களபோல விளங்குமபடி (அவற்றைப்) போர்த்துள்ள, உத்தரியத்தினர் - மேலாடையுடையவர்களும்,— ஒல்கி - (தாங்கள்) மெலிவுதோன்ற நடந்து [நடந்த வணணமாக], குழை புகு கமலம்-(காதுகளிலணிந்த) குண்டலங்கள் வரையிற் செல்லுகின்ற தாமரைமலர்போன்ற (தமது) கணகளினால், கோட் டினர் நோக்கும் - (நாணத்தினால நேராகப்பாராமல்) சாய்த்து நோக்குகின்ற வர்களுமான, குறு நகை குமுதம் வாய் - புன்சிரிப்போடுகூடிய செவ்வாம்பல் மலாபோன்ற வாயையுடைய, மகளிர்-பெண்களது, மழை புரை - மேகத்தை யொத்த [குளிர்சசி மிகுந்த], தட செம் கண கடை ஈட்டம்-பெரியசெவ்வரி பரந்த கடைக்கண் பார்வைகளின் கூட்டம், மார்பினும் - (தனது) மார்பிலும், தோளினும - தோள்களிலும், மலைய - சென்று பொருந்தவும்,—(எ - று.) வந்தான்.

இராவணன் வருகையில், மகளிர தமதுகடைக்கண்பார்வை கொண்டு பார்த்தன ரென்க. மிகவும் நுணணியதாயிருத்தல்பற்றி, மகளிரிடைக்கு நூலிழையை உவமைகூறுதல், மரபு. அப்படிப்பட்ட இடை துவளுமாறு மேன்மேல் விமமுகின்ற தனங்களின்மீது உத்தரியத்தை மகளிர் அணிந் திருக்கையில், அவை உட்புறததுப் பொருந்திச செப்புப்போலத் தோன்று மென்பது, முன்னிரண்டடியிற் கூறிய விஷயம். 'குழைபுகு கமலம்' காதளவும் நீண்ட கண்கள். கண்களை உவமையாகுபெயரால் 'கமலம்' என்றே கூறினர். 'நோககும்' என்ற பெயரெச்சம், 'மகளிர்' என்ற பெய ரைக் கொணடு முடியும். பி - ம்:—[1]பொரு. [2]ஒண்கண. [3]வயங்க. (கரு)

கசு. மாலையுஞ் சாந்துங் கலவையும் பூணும் வயங்குநுண் டுகிலொடு காசுஞ், சோலையின் றொழுதிக் கற்பகத் தருவு நிதிகளுங் கொண்டுபின் [1]றொடரப், பாலின்வெண் பரவைத் திரைகருங் கிரி மேற பரந்தெனச் சாமரை பதைபப, வேலைநின் றுயரு முயலில் [2]வெண் மதியின் வெண்குடை[3]மீதுற விளங்க.

(இ - ள்.) தொழுதி சோலையின்-கூட்டமாகவுள்ள சோலையாகிய, கற்பகம் தருவும் - கற்பகவிருக்ஷமும், நிதிகளும்-(சங்கநிதி முதலிய) நவநிதிகளும், —மாலையும - மலர்மாலைகளையும், கலவை சாந்தும்-கலவைசசந்தனத்தையும், பூணும் - ஆபரணங்களையும, வயங்கு நுண் தூசொடு விளங்குகின்ற மெல்லிய வஸ்திரங்களையும், காசும் - இரத்தினங்களையும், கொண்டு - ஏந்திக் கொண்டு, பின் தொடர - (தன்) பின்னே தொடர்ந்து வரவும்,—வெள் பாலின் பரவை திரை - வெணமை நிறமுள்ள பாற்கடலின் அலைகள், கருகிரிமேல் - கருநிற முள்ள மலையின்மேல், பரந்து என - பரவினாற்போல, சாமரை - வெணசாமரங்கள், பதைப்ப - அசைந்துவீசவும்,—வேலைநின்று உயரும் - கடலினின்று வெளிதோன்றுகின்ற, முயல் இல் வெள் மதியின்- முயற்கரையில்லாத வெள்ளிய பூரணசந்திரன்போன்ற, வெள் குடை - வெள்ளைகுடையானது, மீது உற விளங்க - தலையின்மேல் விளங்கவும்,— (எ - று.)—வந்தான்.

இராவணன் தேவலோகத்தை வென்றமையால், அங்கிருந்த கற்பக விருக்ஷமும், நவநிதிகளும், அவ்விராவணனையடைந்து அவனுக்கு வேண்டிய பொருளை உதவலாயின. பாற்கடலினலை - வெண்சாமரைக்கும், கருங்கிரி - இராவணனது உடம்புக்கும் - உவமையாகும். இராவணனுகுப் பிடிக்கப்படுகின்ற ஒற்றைவெணகொற்றகுடைக்கு - முயலில்லாத வெண மதி, இல் போருவமையாம சந்திரனிடததுள்ள களங்கத்தை, முயலென்றும் மானென்றும் சேறென்றும் இப்படிப் பல படியாகக் கூறுதல், கவிசமயம. சாந்தும், உம்மை - இசைநிறை. பி-ம்.—[1]துள்ளி. [2]வாள். [3]மீசசென்று. (கசு)

கஎ. [1]ஆர்தரு மகழி யருவரை யிலங்கை யடிபெயர்த் திடுதொறு மழுந்தி, நேர்[2]தரும் பரவைப் பிறழ்திரை தவழ்ந்து நெடுந்தடந் திசைதொறு நிமிரச், [3]சாரதருங் கடுவி னெயிறுடைப் பகுவா யனந்தனுந் தலைதடுமாற, மூரிநீ ராடை யிருநில [4]மடந்தை முதுகுளுக் குற்றனண் முரல.

(இ - ள்.) அடி பெயர்த்து இடு தொறும்-(தனது) கால்களை மாறி மாறி வைக்கும் பொழுதெல்லாம்,—ஆர்தரும் அகழி - நீர்நிரம்பியுளள (கடலாகிய) அகழியையுடைய, அரு வரை இலங்கை - பெரிய திரிகூடமலையின்மீதுள்ள இலங்காநகரமானது, அழுந்தி-(மிக்கபாரத்தினுற்)குழிவடைந்து, (அதனுல்), நேர்தரும் - இலங்கையைச சூழ்ந்திருக்கிற, பரவை - கடலினது, பிறழ் - மடங்கியடிக்கிற, திரை - அலைகள், தவழ்ந்து - பாய்ந்து, நெடு தட திசை தொறும - நீண்ட பெரிய (அந்நகரத்தின்) திக்குக்களிலெலலாம், நிமிர - மிகுந்து பரவவும்,—சார்தரும் கடுவின் எயிறு உடை—(தன்னிடத்துப்) பொருந்திய விஷப்பற்களையுடைய, பகு வாய் - திறந்த வாயோடுகூடிய, அனந்தனும் - ஆதிசேஷனும, தலை தடுமாற - (பாரமிகுதியைப் பொறுக்க மாட்டாமையால் ஆயிரந) தலைகளும் வருந்தவும,—மூரி நீர் ஆடை - வலிய

நீரைக்கொண்ட கடலை ஆடையாகவுடைய, இரு நிலம் மடந்தை - பெரிய பூமிதேவி, முதுகு உளுக்குற்றனள்-(பாரந்தாங்கமாட்டாமல்)முதுகு நொந்த வளாய், முரல - வாய்விட்டலறவும்,—(எ - று.)—வந்தான்.

இராவணன் கால்களை மாறி மாறி வைத்து நடக்கும்போது அவனது ஒற்றையொற்றைக்கால் அழுத்துவதனால் இலங்கை பள்ளமாக, அப்போது சுற்றிலுமுள்ள கடலின் நீர் உள்ளே புகுவதாயிற் றெனவும், பூமியின் கீழிருந்து தனது ஆயிரந்தலை[1]களையுங்கொண்டு தாங்குகின்ற ஆதிசேஷனும் அவனது உடற்சுமையைத் தாங்கமாட்டாது தலைதடுமாறலாயின னெனவும், பூமிதேவியும் அவ்வாறே அப்பாரமிகுதியைத் தாங்கமாட்டாமல் வாய்விட்ட லறலாயின ளெனவும் இராவணன் நடக்கும்போது அவனது உடற் பொறையை உயர்வுநவிற்சிவகையால் வருணித்தன ரென்க. பி - ம்.— [1]ஆரல்துன்று. [2]பொரு. [3]சார்வரும். [4]பாவை. (கஎ)

கஉ. கேடகத் தோடு மழுவெழுச[1]சூல மங்குசங் கப்பணங் கிடுகோ, டாடகச் சுடர்வா ளயில்சிலை குலிச முதலிய வாயுத மனைத்துந், தாடகைக் கிரட்டி யெறுழ்வலிக[2]கமைந்த தகைமையர் தடவரை பொறுக்குஞ், சூடகத் தடக்கைச் சுடுசினத் தடுபோ ரரக்கியர் தலைதொறுஞ் சுமப்ப.

(இ - ள்.) தாடகைக்கு இரட்டி எறுழ் வலிக்கு அமைந்த தகைமையர்- தாடகையைக்காட்டிலும் இருமடங்கு மிகப்பெருவலிமை பொருந்திய தன்மை யையுடையவர்களாகிய, தட வரை பொறுக்கும - பெரிய மலையையும் தாங்க வல்ல, சூடகம் தட கை-வளையல்களையணிந்த பெரியகைகளைக் கொண்டு, சுடு சினத்து அடு போர் - பொங்கி யெரிகின்ற கோபத்தினாற் (பகைவரைக்) கொல்லும்படியான போரைச்செய்யவல்ல, அரக்கியர்-இராட்சசஸ்திரீகள்,— கேடகததோடு - பரிசையும், மழு - எரியிரும்புப்படையும், எழு - இருப்புலக் கையும், சூலம் - முததலைசூலமும், அங்குசம் - மாவெட்டியும், கப்பணம் - இருப்புநெருஞ்சிமுள்ளாயுதமும், கிடுகோடு - கிடுகும், ஆடகம் சுடர் - பொன் போல் ஒளிவீசுகின்ற, வாள் - வாளும், அயில் - வேலும், சிலை - வில்லும், குலிசம் - வசசிரமும, முதலிய - முதலான, ஆயுதம் அனைத்தும்-ஆயுதங்களை யெல்லாம், தலைதொறும் - (தமது) சிரசுகளிலெல்லாம், சுமப்ப - தாங்கி வரவும்,—(எ - று)—வந்தான்.

'இராவணன் எப்பொழுது எந்த ஆயுதத்தைவேண்டுவனோ அப்போது அதனைத் தரவேணும் என்ற கருததால், அரககியா எல்லா வாயுதங்களையும் தாங்கிக்கொண்டு இராவணன் வரும்போது உடன்வருவாராயின ரென்க. பெண்கள் வசிக்கின்ற இடத்திறசெல்வதனால், பெண்பணியாளா படைககலங் களைத தாங்கலாயினர். கேடகம், கிடுகு என்பன - பகைவரது படைககலங் களைத் தம்மேறபட வொட்டாது தடுககவல்ல கருவிவிசேடங்கள். கேடகம் கிடுகு என்பன வெவ்வேறுகவும கூறப்படுதலை "போர்மயிர்கேடகம் புளகத

தோற்பரம் வார்மயிர்க்கிடுகொடு" என்ற சிந்தாமணியிலும் காண்க. பி - ம்:— [1]முசலம். [2]தகைத்த. (கஅ)

கக. விரிதளிர் முகைபூக் கொம்படை [1]முதல்வே ரிவையெலா
[2]மணிபொனால் விரிந்த, தரு[3]வுயர் சோலை திசைதொறுங் கரியத்
தழலுமி ழுயிர்ப்புமுன் றவழத், திருமக ளிருந்த திசையறிந் திருந்
துந் திகைப்புறு சிந்தையன் கெடுத்த, தொருமணி [4]நெடும்பற்
பஃறலை யரவி னுழைதொறு முழைதொறு முலாவ.

(இ - ள்.) விரி தளிர் - மேன்மேல் தோன்றிவிரிகின்ற தளிரும், முகை-அரும்பும், பூ - மலரும், கொம்பு-கொம்பும், அடை-இலையும், வேர் வேரும் (என்ற சினைப்பொருள்களும்), முதல் முதற்பொருளும், இவை எலாம்-ஆகிய இவைமுழுவதும், அணி பொனால் விரிந்த-அழகிய செம்பொன்மயமாகப் பரந்துள்ள, தரு உயர்சோலை மரங்கள் உயர்ந்துள்ள அசோகவனம், திசைதொறும் கரிய-நாற்புறங்களிலும் தீந்துபோம்படி, தழல் உமிழ் - நெருப்புச்சுவாலையை வீசுகின்ற, உயிர்ப்பு-(தனது) பெருமூச்சு, முன் தவழ - முன்புறத்திற செல்லவும்,—திருமகள் இருந்த திசை - இலக்குமியின் அமிசமான சீதாபிராட்டி இருந்த இடத்தை, அறிந்து இருந்தும்—, திகைப்பு உறு சிந்தையன்-தெரியாமல் மயங்குதல் பொருந்திய மனமுடையவனாகி, (அவளைத் தேடிக்கொண்டு, ஒரு மணி - (தனது) ஒப்பற்ற மாணிக்கத்தை, கெடுத்தது-இழந்ததான, நெடு பல் பல் தலை அரவின் - நீண்டபற்களையும் பல தலைகளையுமுடைய சர்ப்பம் போல, உழைதொறும் உழைதொறும் - பற்பல இடங்களிலும், உலாவ - (தன்மனஞ்) செல்லவும்,—(எ - று.)—வந்தான்.

சீதை தனக்குக் கிடையாமையால் மனவெதுப்புடனே சோலையிலுள்ள மரங்கள் யாவும் தீந்துபோகுமாறு பெருமூச்செறிந்துகொண்டு, சீதை தங்கியிருக்கிற இடம் தெரிந்திருந்தும் காமமயக்கத்தினால் அதனைமறந்து அவளைத் தேடிய வண்ணம் தன்மனம மாணிக்கத்தைக் கெடுத்த சர்ப்பம்போலப் பல திசைகளிலும் வருந்திச்செல்ல இராவணன் வந்தனனென்க. தனது மணியை இழந்த நாகம் அதனைத்தேடிக்கொண்டு வருந்து மென்பதை "அருமணியிழந்தோர் நாகம் அலமருகின்றது" என்ற சிந்தாமணியிலுங் காண்க. பல் + தலை = பஃறலை, "குறில்வழி ஒளத் தவ்வணையி னாய்த, மாகவும் பெறூஉம் அல்வழியானே" என்ற விதியினால், தனிக்குறிலைச்சார்ந்த ஔகாரம் ஆய்தமாகத் திரிந்தது. பி - ம். [1]அடை. [2]செம்பொனாலாரத். [3]அமர். [4]நெடும்போர். (கக)

௨௦.—இராவணன் வருவதைக் கண்ட அநுமான் மறைந்திருத்தல்.

இனையதோர் தன்மை யெறுழ்வலி யரக்க ரேந்தல்வந்
தெய்துகின் றானை, யனையதோர் தன்மை யஞ்சனை சிறுவன் கண்டன
னமைவுற நோக்கி, வினையமுஞ் செயலு மேல்விளை பொருளு மிவ்
வழி விளங்குமென் றெண்ணி, வனைகழ லிராமன் பெரும்பெய
ரோதி யிருந்தனன் வந்தயன் மறைந்தே.

(இ - ள்.) இனையது ஓர் தன்மை-இப்படிப்பட்ட தன்மையோடு, எறுழ் வலி அரக்கர் ஏந்தல் - மிக்க வலிமையையுடைய ராக்ஷஸ ராஜனாகி, வந்து எய்துகின்றானை - வந்து சேர்கின்ற அவ்விராவணனை, அனையது ஓர்தன்மை- அங்கு நிகழ்வதைப்பார்த்துக்கொண்டிருந்ததன்மையுள்ள, அஞ்சனை சிறுவன்- அஞ்சனாதேவியின் குமாரனாகிய அனுமான், கண்டனன் - கண்ணினாற் கண்டு, அமைவு உற நோக்கி - தான் என்ன செய்யவேண்டுமென்று மனத்தினாற் செவ்வனே ஆலோசித்து, 'வினையமும் - (இவ்வரக்கனது) வஞ்சனைக் குணமும், செயலும - செய்கையும, மேல் விளை பொருளும் - அதற்குப்பின் (சீதாபிராட்டியினால்) நடக்கும் காரியமும், இவ்வழி - இந்த இடத்தில் [இப்போது], விளங்கும - தெரியவரும்,' என்று எணணி—, கழல் வனை இராமன் பெரும் பெயர் ஓதி - வீரக்கழலைப் புனைந்துள்ள இராமபிரானது பெருமை பெற்ற திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு, அயல் வந்து - முன்னிருந்த விடத்தை விட்டுச் சிறிது அப்பால் நெருங்கவந்து, மறைந்து இருந்தனன்—.

அனுமான் அப்போது இராவணன் அங்கு வந்ததனால், இனி நடக்குஞ் செயலை நன்கு கவனிக்கவேணுமென்று நினைத்து, அவற்றையெல்லாம் நன்றாகக் காணுமாறு அருகில் வந்து அவ்விராவணன் முதலியோர் தான் இருப்பதை உணராவணணம் மறைந்துநின்றனனென்பதாம். (௨௦)

௨௧.—அப்போது சீதை அஞ்சுதல்.

ஆயிடை யரக்க னரமபையர் குழுவு மல்லவும் வேறயலகல, மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையா ளிருந்துழியாண்டவள் வெருவிப், போயின வுயிர ளாமென நடுங்கிப் பொறிவரி யெறுழ்வலி புகைக்கண், காய்சின வுழுவை தின்னியவந்த கலையிளம் பிணையெனக் கரைந்தாள்.

(இ - ள்.) அ இடை-அப்பொழுது, அரம்பையர் குழுவும் - (தன்னுடன் வந்த) தெய்வமகளிர் கூட்டமும், அல்லவும் - மற்றையோர் திரளும், வேறு அயல் அகல - தனியே அப்பால் விலகி நிற்க,—அரக்கன் - இராவணன், பெணணின் விளகு எனும் தகையாள் - பெணகளுக்குள் விளக்குபோன்றவளாகிய பிராட்டி, இருந்த உழி - இருந்த இடத்தில், மேயினன் - சென்று அடைந்தான்; ஆண்டு-அப்பொழுது, அவள் - அப்பிராட்டி, வெருவி - அஞ்சி, போயின உயிரள் ஆம் என - உயிர் நீங்கினவள்போல, நடுங்கி - நடுக்கங் கொண்டு, பொறி - புள்ளிகளையும், வரி - கோடுகளையும, எறுழ் வலி - மிக்க வலிமையையும், காய் சினம் - வெதுமபுகின்ற கோபத்தையும், புகை கண - (அந்தக் கோபாகினியின்) புகைதோன்றப பெற்ற கணகளையுமுடைய, உழுவை - புலி, தின்னிய-(தன்னை) உண்ணும்பொருட்டு, வந்த-வரப்பெற்ற, கலை இளம் பிணை என - ஆண மானினது இளமையாகிய பெண்மான்போல, கரைந்தாள் - உடலுருகினாள்; (எ - று.)

உடன்வந்த பரிவாரமெல்லாம் அப்பால்அகல, இராவணன் தனியே பிராட்டியினிடம சென்று சேர, அவள் அவனைகண்டு கடும்புலியைக் கண்டு அஞ்சி நடுநகும பெண்மான்போல அஞ்சி நடுநடுங்கி உடல் கரைந்தன ளென்பதாம். அல்லவும் என்றது-சீதைககுக காவலாக இருந்த அரககமகளிர் திரளைக் காட்டும். (உக)

வேறு.

௨௨.—அனுமான் அவ்விருவர் நிலைமையையும் காணுதல்.

கூசி யாவி குலைவுறு வாளையு
மாசை யாலுயி [1]ராசழி வானையுங்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டன
[2]னூச லாடி யுளையு முளத்தினன்.

(இ - ள்.) கூசி - (அசசத்தினால்) உடல்நடுங்கி, ஆவி குலைவுறுவாளையும்- உயிரும் நடுங்குகின்ற சீதையையும், ஆசையால் - காமமோகததினால், உயிர் ஆசு அழிவானையும - உயிரகட்குக குலைபவனாகிய இராவணனையும, காசு இல் கண இணை சான்று என - குற்றமற்ற (தனது) கணகளிரண்டும சாட்சியாக [பிரதியட்சமாக], கண்டனன்-பாரததவனாகி,—(அனுமான்), ஊசல்ஆடிஉளையும் உளததினன் - ததளிததுவருந்துகின்ற மனமுடையவனானான்; (எ-று.)

இராவணன் காமமயக்கமகொண்டு உடனவந்தவா யாவரும் விலகி அப்பாற்செல்லத் தான் தனியனாகி அநகு வந்திருப்பதையும, சீதை துணையின்றிச் செய்வது தெரியாது நடுநடுங்கி உயிரகரைவதையும கணகூடாகக கண்ட அனுமான், 'இந்தநிலையில யாது நடககுமோ' என்று மனம் ததளிததது நிற்கலாயின னென்பதாம். ஆசு - பற்றுசு. கட்டு. விரைவு என்று கொள்வாருமுளர். பி - ம்:—[1]ஆசறுவானையும. [2]ஊசலாடலொழிந்தன வுள்ளத்தான்.

இது முதல் பதினாறுகவிகள் - பெருமபாலும் முதற்சீர மாசசீரும், மற்றை மூன்றும் விளசசீரகளுமாகிய கலிவிருத்தங்கள் (உஉ)

உங.—அநுமான் வாழ்த்து.

வாழி சானகி வாழியிராகவன்
வாழி நான்மறை வாழிய ரந்தணர்
வாழி நல்லற மெனறுற வாழ்த்தினா
னூழி [1]தோறும் புதிதுறுங் கீர்த்தியான்.

(இ - ள்.) 'சானகி-சீதாபிராட்டி, வாழி - (இவ்விராவணனால் யாதொரு தீங்கும நேராமல்) வாழக்கடவள்; இராகவன் - இராமபிரான், வாழி - (சீதை குறைவின்றி வாழ்வதனால் தானும) வாழக்கடவன்; நால் மறை - (அவனது கீரததியைப் பரக்க ஓதுகின்ற) நான்குவேதங்களும், வாழி - வாழக்கடவன; அந்தணா-(அநதவேதத்தை ஓதுதல் முதலிய செயலால் உலகத்துக்கு நன்மையை விளைக்கின்ற) பிராமணா, வாழியர் - வாழக்கடவா; நல் அறம் - (அந்த

வேதங்களிற்கூறிய) நல்லதருமங்களெல்லாம், வாழி—,' என்று—, உற வாழ்த்தினான் - மனப்பூர்வமாக வாழ்த்துகூறினான்;— (யாவனென்னில்),—ஊழி தோறும் புதிது உறும் கீர்த்தியான் - யுகந்தோறும் மேன்மேற் புதிதாகவளராகின்ற கீர்த்தியையுடைய அனுமான்; (எ - று.)

அப்போது 'இராவணனாற் சீதைக்கு ஏதேனும் தீங்கு நேருமோ!' என்று எணணி அஞ்சிக கலங்கிய அனுமான், அக்காலத்துத் தன்னாற் செய்யலாவதொரு பரிகாரம் தோன்றாமையால், இவ்வாறு வாழ்த்துக் கூறலாயினனென்க. பி - ம்:—[1]சென்று. (உ௩)

உச —அப்போது இராவணன் சீதையை வேண்டுதல்

அவ்வி டத்தரு கெய்தி[1]ய ரக்கன்றா
னெவ்வி டத்தெனக் கின்னரு ளீவது
நொவ்வி டைக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை யமிழ்தென வேண்டுவான்.

(இ - ள்.) வெம் விடத்தை அமிழ்து என வேண்டுவான் - உயிரைக் கொல்லுந்தன்மையுள்ள கொடியவிஷத்தை அமிருதமாகநினைத்து விரும்புகின்றவனாகிய, அரக்கன் - இராவணன், அ இடத்து - அங்கே, அருகு எய்தி - (சீதாபிராட்டியின்) சமீபததில் வந்து, 'நொ இடை குயிலே - வருந்துகின்ற இடையையுடைய குயிலபோன்றவளே! எ இடத்து - எப்போது, எனக்கு—, இன் அருள் ஈவது - (நீ) இன்னருள் செய்வது? நுவல்க- சொல்வாயாக,' என்றனன்;—(எ - று.)—தான் - அசை. படர்க்கைப் பெயருமாம்.

சீதாபிராட்டியை இராவணன் விரும்புவது - கொல்லுந் தன்மையுள்ள விடத்தை 'இதனைவிரும்பி யுண்டால, இது நமது உயிரைவாங்கிவிடும்' என்று கருதாமல், 'அமுதம்போல் இனிமையைததரும்' என்று மாறுபாடாகக் கருதி வேண்டுவதை ஒக்கு மென்பது, ஈற்றடியிற் கூறிய பொருள். சீதையை இன்னருள் ஈயுமாறு விரும்புகின்றவனை வெவ்விடததை அமிழ்தென வேணடுவானாகக கூறியது - காட்சியணி: இதனால், சீதாபிராட்டியினால் இராவணனுக்கு மரணமநேவது திணணமெனக் குறிப்பித்தவாறு. பி-ம்:— [1]அமாந்தனன். (உ௪)

உரு.—கவிக்கூற்று.

ஈசற் காயினு மீ[1]டழி வுற்றிறை
வாசிப் பாடழி யாத மனத்தினா
னாசைப் பாடுமந் நாணு மடர்த்திடக்
கூசிக் கூசி யினையன கூறினான்.

(இ - ள்.) ஈசற்கு ஆயினும் - (தனதுவழிபடுதெய்வமாகிய) சிவபெருமானிடததிலும், ஈடு அழிவுற்று - (தனது) வலிமை குறையப் பெற்று, இறை - சிறிதும், வாசிப்பாடு - (தனது) பெருமிதம், அழியாத - குறையப் பெறாத, மனத்தினான் - மனததையுடையவனாகிய இராவணன்,—ஆசைப் பாடும - (பிராட்டியின்மேற் கொண்டுள்ள) பெருநகாதலும், அ நாணும் -

அப்படிப்பட்ட (தனது) நாணமும், அடர்ததிட - (தன்னை) வருத்த, கூசி கூசி - (மனத்திற்) கூசசுங்கொண்டு, இனையன - இப்படிப்பட்ட வணக்க மொழிகளை, கூறினன்-(அரிதிற்) சொன்னான்; (எ-று.)—அவற்றை அடுத்த பன்னிரண்டு கவிகளிற் காண்க.

தனது வழிபடுதெய்வ மாகிய சிவபெருமானிடத்திலும் தனது பெருமைக்குக் குறைவாக வணங்கவிருமபாத இராவணன், அப்போது சீதாபிராட்டியினிடங்கொண்ட பெருங்காதல் அவளிடத்துத தாழ்ந்து போகுமாறு தூண்ட 'ஒருபெண்ணினிடததிலா நாம தாழ்ந்துபோவது?' என்ற நாணம் மற்றொருபக்கம் இழுக்க, அவஸ்தைப்பட்டு மெல்ல மெல்லப் பின் வருமாறு நயந்து கூறலாயின னென்பதாம். பி - ம்:—[1]அழியாதுயா. (உரு)

உசு.—இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - இராவணன் சீதாபிராட்டியினிடம் நயந்துகூறுவதைத் தெரிவிக்கும்.

இன்றி றந்தன நாளை யிறந்தன
வென்[1]றி றந்தருந் தன்மை யிதாலெனைக்
கொன்[2]றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கி மறந்தரு செங்கணாய்.

(இ - ள்.) குழை சென்று இறங்கி - குழையென்னுங காதணிவரையிற்போய்ப் பாய்ந்து, மறம் தரு-கொடுமை செய்கின்ற, செம் கணாய-சிவந்த கணகளையுடையவளே!—இன்று இறந்தன - இன்றைவரையிலும் நாள்கள் கழிந்தன; நாளை இறந்தன - இனியும அவ்வாறே கழிவதாயிருக்கின்றன; என் திறம் - என்விஷயததில், தரும் - (நீ) செய்கின்ற, தன்மை—, இது ஆல் - இவ்வாறாக இருக்கின்றது: (இப்பொழுது எனகுத் தோன்றியிருக்கிற இக்காம நோய), எனை கொன்று இறந்த பின் - என்னைக் கொன்றுவிட்ட பிறகு, கூடுதியோ - (என்னைச்) சேர இருக்கின்றாயோ? (எ - று.)

நீ அருள் செய்யாமையால் இதுவரையிலும் ஒவ்வொருநாளாக வீணே கழிந்திட்டன; இனியும் அவ்வாறுதான் கழியு மென்று தோன்றுகின்றது; இப்போது எனக்கு உண்டாயிருக்கும் காமநோயினால் யான் இறநதழிந்த பிறகே நீ என்னைக் கூடுவாய்போலு மென்று இராவணன் மிகவும வருந்திக கூறினனென்க. 'கொனறிறந்தபின் கூடுதியோ' என்றது - நீ இப்பிறவியில் என்னைக் கூடமாட்டாய்போலு மென்ற குறிப்பு. பி - ம்:—[1]திறந்தருதன்மையிதா லெனககு. [2]இறந்தனை. "இன்று நாளையருளுந் திருவரு, ளென்றுகொண்டிராலழிவேனைநீ, கொன்றிறந்தனை கூடுதியோ குழை, தின்றுறங்கி மறந்தவர் செல்வியே" என்று ஒருபாடல் சிலபிரதிகளில் இவகுக்காணகின்றது. (உசு)

உஎ. உலக மொன்றொ டிரண்டொருங் கோம்புமெ
னலகில் செல்வத் தரசிய லாணையிற்

றிலக மேயுன் றிறத்தனங் கன்றரு
கலக மல்ல தெளிமையுங் [1]காண்டியோ

(இ ள்) திலகமே - திலகம்போலச சிறந்தவளே! உலகம் ஒன்றொடு இரண்டு - மூன்று உலகங்களையும், ஒருங்கு ஓம்பும் - ஒருசேர [முழுதும்] அரசாட்சிசெய்கின்ற, என்-எனது, அலகு இல் செல்வத்து - எல்லையில்லாத ஐசுவரியத்தையுடைய, அரசு இயல் - ராஜாங்கத்திலே செல்லுகின்ற, ஆணையில் கட்டளையிலே, உன் திறத்து அனங்கன் தரு கலகம் அல்லது - உன்விஷயமாக (எனக்கு) மன்மதன் உண்டாக்கிய போரேயல்லாமல், எளிமையும் - (எனக்கு) இழிவைத் தரக் கூடிய (ஏதேனும் ஒரு) செயலையும், காண்டியோ பாரபரியோ? (எ - று.)

சுவர்க்கம் பூமி பாதாளம் என்ற இந்த மூன்றுலகத்திலும் எனது ஆணை தட்டுத்தடையின்றி எளிமைப்படாமற செல்வதாயிருக்க, மன்மதன் உனவிஷயமாச செய்கின்ற இந்த ஒரு போராட்டத்தில் யான் எளிமைப்படவேண்டியதாயிருக்கின்றதே! நீ உனது அருள்நோக்கால் இதனைத் தவிர்க்கலாகாதோ? என்று இரங்கிக்கூறினன் இராவணனென்க. இச செய்யுளில்—இல் திலகமே - (இருக்கின்ற) வீட்டுக்குத் திலகமபோன்றவளே! அரசியல் ஆணை - எனது அரசாட்சியின்மேல் ஆணை; உன் திறத்து அனங்கன் தரு கலகம் அல்லது - (இராமபிரானைப் பிரிந்திருத்தலால்) உனக்கு மன்மதன் உண்டாக்குகின்ற இக்கலக்கம் விரைவில் இல்லாமற போய்விட, எளிமையும் காணடியோ - எளிதாக ஸ்ரீராமபிரானை அடைவதையும் பெறுவாய்போலும் என்ற மற்றொரு பொருளும் இராவணன் வசனத்தில் தோன்று மென்பர் ஒருசாரார் பி - ம்.—[1]காணடுமோ, காண்டியால். (உஎ)

உஅ. பூந்தண் வார்குழற் பொற்கொழுந் தேபுக
ழேந்து செல்வ [1]மிகழ்ந்தனை யின்னுயிர்க்
காந்தன் மாண்டிலன் காடு கடந்துபோய்
வாழ்ந்த [2]வாழ்வது மானுடர் வாழ்வன்றோ.

(இ - ள்.) பூ தண் வார் குழல் பொன் கொழுந்தே - பூவையணிந்துள்ள நீண்ட கூந்தலையுடைய பொன்மயமான கொழுந்து போன்றவளே! புகழ் எந்து கீர்த்தி மிகுந்த, செல்வம்-(எனது) ஐசுவரியத்தை, இகழ்ந்தனை- விரும்பாமல் உபேட்சித்தாய்; இன் உயிர் காந்தன் - உனது இனிய பிராணநாயகன், மாண்டிலன் - இறந்துபோகாமல் [அரிதில உயிரைவைத்துக் கொண்டு], காடு கடந்து போய் - (தான் இப்போது வசிக்கின்ற காட்டை நீங்கிச்சென்று, வாழ்ந்த - வாழ இருக்கின்ற, வாழ்வு அது - அந்தவாழ்வு, மானுடர் வாழ்வு அன்றோ - அற்பமான மனிதர்வாழ்க்கை தானே; (எ - று)

ஒருகால் பிராணனைத்தப்பித்துக்கொண்டு காடுகடந்து அயோத்தி சென்று மீண்டும் அரசாட்சி பெற்ற கணவனோடு நீ வாழ்வதாயிருந்தாலும் அதுவும் வலிமை செலவம் ஆயுள் முதலியவற்றில் மிகவும் எம்மிலும் இழிந்த

மானுடவாழ்க்கைத்தானே; அதனையா நீ விரும்புவது? திரிலோகத்தையும் ஆள்கின்ற எனது செல்வவாழ்க்கையை இகழ்ந்து இழிந்த அவ்வாழ்க்கையை விரும்புவதில் யாதுபயன்?' என்று இராவணன் தனதுவாழ்க்கைச சிறப்பையும், இராமனது வாழ்க்கையின் சிறுமையையும் எடுத்துக்காட்டினனென்க. வாழ்ந்த - இயல்பினால்வந்த காலவழுவமைதி. பி - ம்:—[1]இழந்தனை. [2]மாய்ந்த. (உஅ)

உ௬. நோற்கின் றார்களு நுண்பொரு ளுண்ணிதின்
பார்க்கின் றாரும் பெறுமபயன் பார்த்தியேல்
வார்க்குன் றாமுலை [1]யென்சொன் [2]மவுலியா
[3]லேற்கின் றாரொ டுடனுறை யின்பமால்.

(இ - ள்.) வார் குன்று முலை-கச்சுக்குள் அடங்காத [மிகப்பருத்த] தனங்களையுடையவளே!—நோற்கின்றார்களும்-பெருந்தவஞ்செய்கின்ற இருடியர்களும், நுண பொருள்-சூட்சுமமான நூற்பொருளை, நுணணிதின் - சூட்சுமமாக, பார்க்கின்றாரும் - ஆராய்கின்ற மகான்களும், பெறும் - அடைகின்ற, பயன் - பயனை, பார்த்தி ஏல் - (நீ உனது புததியினால்) சிறிது ஆராய்ந்து காண்பாயானால்,—என் சொல் - எனதுகட்டளையை, மவுலியால் ஏறகின்றாரொடு - (தமது) சிரசால் அங்கீகரிகின்ற தேவர்களுடனே, உடன் உறை-ஒருங்கே வசிக்கின்ற, இன்பம் - இன்பமேயாகும் (என்பது பெறப்படும்); (எ - று.)

ருஷிகளும தத்துவசாஸ்திரிகளும் என் பணியைத் தலையாலேற்று நடக்கின்ற பிரமன் முதலிய தேவர்களோடு ஒருலகத்தில் வாழ்தலாகிற இன்பத்தையே நாடுகிறார்கள்; அப்படிப்பட்ட தேவர்களினும் மேம்பட்டுள்ள நான் உன்னிடத்து மிகவும் வேண்டவும் நீ உபேட்சிப்பது தகுதியோ? என்று இராவணன் கூறினனென்க. வார் குன்று ஆம் முலை என்று எடுத்து - கசசணிந்த மலைபோன்ற தனங்களையுடையாய் என்று கூறலுமாம். பி - ம்:—[1]யாசொல். [2]மௌலிமேல். [3]ஓர்க்கின்றாரொடு. (உ௬)

உ௦. பொருளும் யாழும் விளரியும் பூவையு
மருளு நாளு மழலை வழங்குவாய்
தெருளு நான்முகன் [1]செய்ததுன் சிந்தையி
னருளு மின்மருங் கும்மரி தாக்கியோ.

(இ - ள்.) பொருளும - (உலகததுப்) பொருள்களுள் மிகச சிறந்ததாகிய குழந்தையும், யாழும - வீணையும், விளரியும்-விளரியென்ற பண ணும், பூவையும்-நாகணவாய்ப் பறவையும், (எனனும் இவை), மருளும - (இணையாகாமல்) பின்வாங்குகின்ற, மழலை-குதலைசசொற்களை, நாளும்-எப்பொழுதும், வழங்குவாய் சொல்பவளே! தெருளும்-அறிந்த, நான்முகன்-நான்குமுகங்களையுடைய பிரமதேவன், செய்தது - (உன்னைப்) படைததது,—உன்சிந்தையின்-உன்மனததிலே, அருளும் இரக்கததையும், மின் மருங்கும் மின்னல் போல் துவண்டு தோனறாத தனமையுளள இடையையும், அரிது ஆக்கியோ-இல்லாம லாகிவிட்டதோ? (எ - று.)

உன்னைப் பாதாதிகேசாந்தமாக அவயவங்களை யெல்லாம மிகவும் அழகாகப்படைத்த பிரமன் உன்உடம்பில் இடையில்லாமல் சிருட்டித்தது போலவே மனத்தில் அருளுமில்லாமற் படைத்துவிட்டானோ? உனக்கு அருள் இருப்பின் நீ என்மீது இரக்கங்கொண்டு என்விருப்பத்திற்கு இணங்கயான வாழ்ந்திடுவேன் என்று இராவணன் வேண்டியவாறு. "தம்பொருளென்பதம்மக்கள்" என்றவாறு உலகத்துப் பொருள்களுள் குழந்தையென்ற பொருள் மிகச்சிறத்தலால், அதனை 'பொருள்' என்றே கூறினார். அருளில்லாமையைக் கூறவேண்டிய இவ்விடத்தில், சீதையின் இடையின்மையாகிய அப்ரஸ்துதத்தையும் உடன்கூறினது-விளக்கணியின்பாற்படும். பி - ம்:—[1]செய்தது. (௩௦)

௩௧. ஈண்டு நாளு மிளமையு [1]மீண்டில
மாண்டு மாணடு பிறிதுறு மாலைய
வேண்டு நாள்வெறி தேவிளிந் தாலினி
யாண்டு [2]வாழ்வவ் விடருழன் றாழ்தியோ.

(இ - ள்.) ஈண்டும் நாளும் - (கழிகின்ற உனது) வாழ் நாள்களும், இளமையும - (விஷயசுகத்தை யனுபவித்தற்குஉரிய உனது) யௌவனமும், மீண்டில - (சென்றவை) மீணடுவருவனவல்ல; மாணடு மாணடு - (அவை) சிறிதுசிறிதாகக் கழிந்துபோய், பிறிது உறும மாலைய - ஒழிந்துபோகின்ற தன்மையையுடையன; வேண்டும் நாள் - விருமபி (இன்பம்) அனுபவித்தற்கு உரிய யௌவனகாலம், வெறிதே - (இவ்வாறு இன்பதத்தை அனுபவித்தல் இல்லாமல்) வீணாகவே, விளிந்தால் கழிந்துஒழியுமானால், இனி - இனிமேல், வாழ்வு - சுகமனுபவிப்பது, யாண்டு - எப்போதோ? அ இடா - அந்த மிகக பெருந்துன்பதத்தில் தானே, உழன்று - வருந்தி, ஆழ்தியோ மூழ்கிவிடக் கடவாயோ? (எ - று.)

ஆயுள்நாட்களும் இளமையும சிறிதுசிறிதாகக் கழிவனவற்றை எவராலும் மீட்கஇயலாது: இன்பத்தை நுகாதற்குஉரிய இவ்விளமையை வெறிதே கழித்துவிட்டால், அப்புறம் இளமையொழிந்த முதுமைப்பருவத்திலா இன்பம் நுகரப்போகின்றாய்? அன்றி, ஆயுள் முழுதும், இப்போழ்து போலவே துன்பத்தில்தானே மூழ்கிக்கிடப்பதாகவே கருதியிருககின்றாயோ? என்று இராவணன் கூறின னென்க. ஈண்டில என்று பிரித்துப் பொருள் கூறலு மொன்று. பி - ம்:—[1]என்றிவை, யாண்டுமாண்டுபிரிந்துறுமாதலால். [2]வாழ்விடருழந்தீதியோ. (௩௧)

௩௨. இழவெ னக்குயிர்க் கெய்தினு மெய்துக
குழைமு கத்துநின் சிந்தனை கோடினாற
[1]பழக நிற்புறும் பண்பிவை காமத்தோ
டழகி னுக்[2]கினி யாருள ராவரோ.

(இ - ள்.) குழை முகத்து - (இன்பமஅனுபவியாமையால்) வாடுகின்ற முகத்தையுடைய, நின - உனது, சிநதனை - எண்ணம், கோடினால் - (என்மீது இரங்காது) மாறுபட்டால், (அதனால் யான் உயிர

தாகமாட்டாது இறந்துபடுவேன்; அவ்வாறு), இழவு-நாசம், எனகு உயிர்க்கு - எனது உயிர்க்கு, எய்திலும் எய்துக - நேர்ந்தாலும் நேரட்டும்; (அதுஒருபொரிதல்ல); பழக நிற்புஉறுழ - (உன்னோடு) பழகுமாறு நிலையாக உள்ள, பணபு இவை - இப்படிப்பட்ட குணங்களும், காமத்தோடு - காமமும ஆகியவற்றோடு, அழகினுக்கு இனியார் - (உனது) அழகுக்கு ஏற்றவாறு அமைந்த நல்லஆடவர், உளர் ஆவரோ - (என்னைததவிர) வேறு யாவரேனும் இருப்பார்களோ? (எ - று.)

நீ என்மீது கருணைபுரியாமல் மாறுபட்டால், அதனால் யான் இறந்தொழிவது திண்ணம்; அவ்வாறு யான் இறந்திட்டால், பிறகு உனது அழகுக்கு ஏற்ற நற்குணம் முதலியவை அமையப்பெற்ற என்னைப்போன்ற வேறு ஆடவர் உனக்குக் கிடைப்பாரோ? என்று இராவணன் கூறினனென்க. இனியார் என்று பிரிததும் உரைக்கலாம். பி - ம்:—[1]பழகிநிற் புறும்பணபியை. [2]அணியார். (௩௨)

௩௩. பெண்மை யும்மழ கும்பிற ழாமனத்
திண்மை யும்முதல் யாவையுஞ் செய்யவாய்க்
கண்மை யும்பொருந் திக[1]கரு ணைப்படர்
வண்மை யென்கொல் சனகரின் மாண்டவா.

(இ - ள்.) பெணமையும் - பெண்தன்மையும், அழகும் - (அதற்குஏற்ற) அழகும், பிறழா மனம திண்மையும் - தவறாத மனவுறுதியும், முதல் - முதலான, யாவையும - எல்லா நற்குணங்களும், செயய ஆய் - நலலனவாகி அமைந்திருந்தும, கண்மையும் - தாக்ஷிணியமும், கருணைபொருந்தி படாவணமை (உம்) - அருள் பொருந்துவதனால் உண்டாகின்ற ஈகைக்குணமும், சனகர் இல் - சனகமகாராசனது வமிசத்தில், மாணட ஆ(று)-ஒழிந்துபோன வகை, என் கொல்-யாதுகாரணமோ? (எ - று.)

சீதைககு அழகுமுதலியயாவும குறைவில்லாமல் அமைந்திருந்தும, தாட்சிணியமும் அதன்பயனாகததோன்றும் ஈகைக்குணமும் இல்லாமலொழிந்தது யாதுகாரணம் பற்றியோ? என்றன னென்பதாம. இந்தசீதைக்குத தாட்சிணிய மிருப்பினும் என்னிடதது இரங்கி எனது விருப்பததை நிறைவேற்றவேண்டும; ஈகைக் குணமிருப்பினும யான் வேணடுவததை தரவேண்டும்; எனது விருப்பததை நிறைவேற்றாமல் உபேக்ஷிததலால், சீதைக்கு அவ்விரணடும் இல்லையென்றான். பி - ம்:—[1]கருணைப்படா .சனகர்மடந்தையே. (௩௩)

௩௪. வீட்டுங் காலத் தலறிய மெய்க்குரல்
கேட்டுங் காண்டற் கிருக்திகொல கிள்ளை நீ
நாட்டுங் காணெடு நல்லறத் தின்பய
னூட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ.

(இ - ள்.) கிள்ளை - கிளிபோன்றவளே! வீட்டும் காலத்து - (இராமனைநான்) கொன்றபோது, அலறிய - ஓலமிடடுக கூவிய, மெய் குரல் - (ஹாஸீதே! ஹாலக்ஷ்மணா! என்ற) உணமையான குரலை, கேட்டும் -

(காதார்க்) கேட்டிருந்தும், (அநுமாரீசன்குரல்! இராமன் என்னும் யாதொரு தீங்கு மின்றிப் பிழைத்திருக்கின்றான் என்று நம்பிக்கைகொண்டு), காணடற்கு - (அவ்விராமனைப்) பார்க்கப் போகிறேமென்றே, நீ இருத்திகொல் - நீ இருக்கின்றாயோ?, நாட்டும் கால் - நிலையாகச் சொல்லுமிடத்தில்,—நெடு நல் அறத்தின் பயன் - மிகச்சிறந்த புண்ணியத்தின் பலனை, ஊட்டும் காலத்து - அனுபவிக்குமபடி (விதி) கூட்டியபோது, இகழ்வது - (அதனை வேண்டாமென்று) அவமதிப்பது, உறும் கொலோ - தகுதாகுமோ? (எ - று.)

நான் உன்னைக்கொணர்தற்கு முன்னமே உனது கணவனாகிய இராமன் மாண்டுபோனான்; அவன் இறக்கும்போது 'ஹா ஸீதா! லக்ஷ்மணா!' என்று கூறியதையும் நீ காதாரக்கேட்டிருக்கின்றாய்; அப்படியிருக்க, அப்பொழுது நீ கேட்ட குரலைப் பொய்க்குரலென்று கருதி, இராமனைக் கூட வேண்டுமென்று கருதுகின்றாயே! இது என்ன பேதைமை? உனது நல்விதி என்னை உன்னிடத்துக் கூட்டியிருக்க, அந்த நற்பயனை அவமதித்து நீ என்னை உபேட்சிப்பது தகுதியோ? என்று இராவணன் கூறின னென்க. ஓகாரம் - இரக்கம். (௩௪)

௩௫. தக்க தென்னுயிர் வீடெனிற் றாழ்கிலா
தொக்க [1]செல்வ முலையு மொருத்திநீ
புக்கு யர்ந்த தெனும்புகழ் போக்கிவே
றுக்க தென்னு முறுபழி கோடியோ.

(இ - ள்.) என் உயிர் வீடு - (என்மீது நீ அருள்புரியாததனால்) எனது உயிர்நாசமடைதல், தகுதி எனின் - நேர்படுமாயின், தாழ்கிலாது - தாமதமில்லாமல் [உடனே], ஒக்க - ஒருசேர, செல்வம் - (எனது) ஐசுவரியம் முழுதும், உலையும் - அழிந்துவிடும்; 'ஒருத்தி நீ-ஒப்பற்ற நீ, புக்கு - (இராவணனிடம்) சேர்ந்ததனால், உயர்ந்தது - (அவனதுசெல்வம்) வளர்வதாயிற்று', எனும் - என்கிற, புகழ் - கீர்த்தியையும், போக்கி - (பெறாமல்) ஒழிந்து, வேறு - அதற்குமாறாக, உக்கது - (சீதைபுக்கதனால் இராவணன் செல்வம்) ஒழிந்தது, என்னும் - என்கின்ற, உறு பழி - பெரும்பழியை, கோடியோ - கொள்ளக்கடவாயோ? (எ - று.)—பி - ம்.—[1]செல்வமுந் தொலையும். (௩௬)

௩௭. தேவர் தேவியர் சேவடி கைதொழுந்
[1]தாவின் மூவுல கின்றனி நாயக
மேவு கின்றது நுன்கண் விலக்கினை
யாவ ரேழையர் நின்னி னிலங்கிழாய்.

(இ - ள்.) இலங்கு இழாய் - விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்தவளே! தேவர்-தேவர்களும், தேவியர் - அத்தேவரது மனைவிமார்களும், சேவடி கைதொழும் - (உனது) சிவந்தபாதங்களைக் கைகூப்பிவணங்குமபடியான, தா இல் - அழிதலில்லாத, மூ உலகின் தனி நாயகம் - மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைமை, நுன்கண் - உன்னிடத்து,

மேவுகின்றது - வருவதாயிருப்பதனை, விலக்கினை - வேண்டாவென்று விலக்கினாய்; நின்னின் - உன்போல, ஏழையர் - அறிவில்லாதவர், யாவர்-யாவருளர்? (எ - று.)

நீ என்னிடத்து அருள்புரிந்தாயாயின், என்வசத்திலுள்ள மூவுலகத் தாட்சியும் உனக்குக் கீழடங்கியதாகிவிடும; அப்படி வலிவில் வருவதா யிருக்கின்ற பெருஞ் செல்வத்தை மறுக்கின்றாயே! உன்னைவிட அறிவில்லாத வர் யாவர்? என்று இராவணன் பழித்துக் கூறினனென்க. பி - ம்.—[1]தாவு மூவுலகும். (௩௬)

௩௭. குடிமை மூன்றுல குஞ்செயுங் கொற்றத்தெ
னடிமை கோடி யருளுதி யாலெனு
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்[1]விழுந் தான்பழி பார்க்கலான்.

(இ - ள்.) பழி பார்க்கலான் - (பிறாமனைவியை நயத்தலினால் தனக்கு நேரும்) அபகீர்த்தியைச் சிறிதும் கருதாத இராவணன்,—'மூன்று உலகும் குடிமைசெயும் கொற்றத்து - மூவுலகத்துள்ளாரையும் கீழ்வாழுங்குடி யாகச் செய்துள்ள வெற்றியைக்கொண்ட, என் அடிமை - எனது அடிமைத் தன்மையை, கோடி அருளுதி - அருளுடனே அங்கீகரிப்பாய்', என - என்று, முடியின் மீது-(தனது) தலையின்மேல், முகிழ்த்து உயர்கையினன் குவித்து-உயர்ந்த கைகளையுடையவனாய், படியின்மேல் விழுந்தான் - தரையின்மீது விழுந்து வணங்கினான்; (எ - று.)

இராவணன் திரிலோகாதிபதியாகிய என்னை ஆட்கொள்ளவேணு மென்று தலையின்மேற்கைகூப்பிச் சீதாபிராட்டியை வேண்டிக்கொண்டு ஸாஷ்டாங்கமாக விழுந்துவணங்கினனென்பதாம். பி - ம் —[1]படிந்தான் பழிநோக்கிலான். (௩௭)

வேறு

௩௮.—அப்போது சீதை கடுங்கோபத்துடன் கூறத் தொடங்குதல்.

காய்ந்தன சலாகை யன்ன வுரைவந்து கதுவா முன்னந்
தீய்ந்தன செவிக ளுள்ளந் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்களொன்றும் பரிந்தில ளுயிர்க்கும் பெண்மைக்
கேய்ந்தன வல்ல வெய்ய மாற்றங்க ளினைய சொன்னாள்.

(இ - ள்.) காய்ந்தன சலாகை அன்ன - நெருப்பிற் பழுக்கககாய்ந் தனவாகிய நாராசங்களைப் போன்ற, உரை - (இராவணனது) வார்த்தை கள், வந்து கதுவா முன்னம் - வந்து நுழைதற்குமுன்னமே, செவிகள் - பிராட்டியின் காதுகள், தீய்ந்தன - (கொடுமை தாங்கமாட்டாமல்) எரி ந்துபோயின [மிகவும் வருந்தின என்றபடி]; (பெருஞ்சினத்தினால்), உள் ளம் திரிந்தது - மனம் (சாந்தமானநிலையினின்று) மாறுபட்டது, கண் கள் - இரண்டுகண்ணிலும, சிவந்த சோரி - செந்நிறமான இரத்தம், பாய்ந் தன - ஒழுகின; (அப்போது), உயிர்க்கும் - (தனது) உயிரைப்பற்றியும், ஒன்றும் பரிந்திலள் - (இவ்வாறு கூறுவதுபற்றி இராவணனால் என்ன

தீங்கு நேருமோ? என்று) சிறிதும் வருந்தாதவளாய், பெண்மைக்கு ஏய்ந்தன அல்ல - பெண்தன்மைக்குத் தகுந்தனவல்லாத, வெய்ய மாற்றங்கள் இனைய - இத்தகைய கொடுஞ்சொறகளை, சொன்னாள் - (இராவணனை நோக்கிக்) கூறலாயினாள்; (எ - று)—அதனை அடுத்த இருபத்தொரு கவிகளிற் காண்க.

காய்ந்த இருப்புநாராசம்போன்ற இராவணனது வார்த்தையைக் கேட்டவுடனே, சீதை, அடங்காதகோபங்கொண்டு தனது உயிரையும் லக்ஷ்யஞ் செய்யாமல், மஹாவீராகள் பேசுவதுபோல மிகவும் கடுமையாக அவ்விராவணனைநோகக்கி கூறலாயினளென்பதாம். சிலபிரதிகளில் இந்தப்பாடலிலேயே உருககாட்டுபபடலம் தொடங்குகின்றது. (௩௮)

௩௬ இதுமுதல் இருபத்தொருகவிகள்-சீதை இராவணனைநோக்கிக் கூறுவன.

மல்லடு திரடோள் [1]வஞ்சன் மனம்பிறி தாகும் வண்ணங்
கல்லொடுங் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்ட துண்டோ
வில்லொடுந் தொடர்ந்த மாதர்க் [2]கேய்வன வல்ல [3]வெய்ய
சொல்லிது [4]தெரியக் கேட்டி துரும்பெனக் கனன்று சொன்னாள்.

(இ - ள்.) (சீதை இராவணனை ஒருதுரும்பாக மதிததது, துரும்பு - துரும்பே! வெய்ய சொல் - (நீ கூறிய) கடுஞ்சொற்கள், இல்லொடும் தொடர்ந்த மாதர்ககு - இல்லறத்தோடுங கூடிவாழ்கின்ற மகளிர்களுக்கு, ஏய்வன அல்ல தகுதியறறவையாம்; கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம்-கல்லோடு ஒதத மனம் (உண்டாவதற்கு), கறபின்மேல் - கறபைக் காட்டிலும் வேறொன்று, கணடது உணடோ - காரணமாவது உள்ளதோ? இது தெரிய கேட்டி - இப்போது நான்கூறுவததைத் தெரியும்படி [நன்றாகக] கேட்பாயாக, என என்று, மல் அடு திரள தோள் வஞ்சன் மனம பிறிது ஆகும் வண்ணம் மற்போரினால் (பகைவரைக்) கொல்லவல்ல திரண்ட தோள்களையுடைய வஞ்சகனான இராவணனது மனம் மாறுபடும்படி, கனன்று-கடுங கோபங்கொணடு, சொன்னாள - பினனும கூறலானாள்; (எ - று.)

பிராட்டி இராவணனதுமுகத்தை நேரிற்பார்க்கவும் விருப்பங் கொள்ளாது கீழேகிடகின்ற துரும்பை எடுதது இடையேபோகட்டு, அவனை அத்துரும்பாக மதிததது முன்னிலைப்படுததி, 'மகளிர் மனம் கண்டபடி கெடாது உறுதியாயிருப்பதற்குக் கற்பென்பதே சிறந்த கருவியாகும்; அப்படிப்பட்ட கற்பைப்பூணட என்போலியர்க்கு ஏலாதவற்றைப் பிதறுகின்றாய், நான் சொலவதைக கேள்' என்று அவன்மனத்திலுறைக்கும்படி கோபத்துடன் சிலகூறத் தொடங்கினளென்று இதன் கருத்தை விரித்துக் கூறுக பி - ம்.—[1]மைந்தன். [2]இயைந்தனவல்ல. [3]என்றன். [4]தெளியக்கேட்டி. சிலபிரதியில் 'சொல்லொடுந்தொடர்கைகேட்டுத்தொலைவுறக் கனன்றுசொன்னாள்' என்று நான்காவதடி. (௩௬)

௪௦. மேருவை [1]யுருவல் வேண்டின் விண்பிளந் [2]தேகல் வேண்டி
னீரெழு புவனம் [3]யாவு [4]முற்றுவித் திடுதல் வேண்டி
னாரியன் பகழி வல்ல தறிந்திருந் தறிவி லாதாய்
சீரிய வல்ல சொல்லித் தலைபத்துஞ் சிந்து வாயோ.

இருபத்தொரு கவிகள - ஒருதொடர்.

(இ - ள்.) அறிவு இலாதாய் - அறிவற்றவனே!—மேருவை - மேரு மலையை, உருவல் வேண்டின்-துளைக்க விரும்பினாலும்,—விண - ஆகாயத்தை, பிளந்து ஏகல் வேண்டின்-கிழித்துக்கொண்டு அப்புறஞ்செல்ல வேண்டுமென்றாலும்,—ஈர் எழு புவனம் யாவும் - பதினான்குலோகங்கள் முழுவதையும், முற்றுவித்திடுதல் வேண்டின் - அழிக்கவேண்டுமென்று விரும்பினாலும்,—(இவற்றையெல்லாம் செய்ய), ஆரியன் பகழி - இராமபிரானுடைய பாணம், வல்லது - வல்லமையுள்ளது; அறிந்து இருந்து - (இதனை நீ) தெரிந்திருந்தும், சீரிய அல்ல சொல்லி - சிறப்பில்லாத வார்த்தைகளைச் சொல்லி, தலை பத்தும் சிந்துவாயோ-உனது பத்துத்தலைகளையும் சிதறிவிடக்கடவாயோ? (எ - று.)

இராமபிரானது ஆற்றலை அறிந்திருந்தும் அறிவில்லாது தகுதியற்றவார்த்தையைக் கூறி, உனது உயிரை யிழக்க விருக்கிறாயோ? என்றுசீதை கூறினளென்க. பி - ம்:—[1]உருவ. [2]ஏக. [3]மற்றும். [4]முற்றுவித்தெறிய. (௪௦)

௪௧. அஞ்சினை [1]யாத லானன் றாரிய னற்ற நோக்கி
வஞ்சனை மானொன் றேவி மாயையான் மறைத்து [2]வந்தா
யுய்ஞ்சனை போதி யாயின் விடுதியுன் குலத்துக் கெல்லா
நஞ்சினை யெதிர்ந்த போது நோக்குமே நினது நாட்டம்.

(இ - ள்.) அஞ்சினை ஆதலான் - (இராமபிரானிடத்து நீ) அச்சங்கொண்டாயாதலால், அன்று - அககாலத்தில், வஞ்சனை மான் ஒன்று ஏவி - மாயமானகுணமுள்ள ஒருமானை ஏவிவிட்டு, (அதன்பின்னே இராமபிரான் தொடர்ந்துசென்றானாக), ஆரியன் அற்றம் நோக்கி - இராமபிரானில்லாத அச்சமயம்பார்த்து, மாயையால் - வஞ்சனைக் குணத்தினால், மறைந்து வந்தாய் - (உனதுவடிவத்தை) மறைத்து (எவரும் நமபுதற்கு உரிய சந்யாசிவேஷங்கொண்டு என்னைக் கவர) வந்தாய்; உய்ஞ்சனை போதி ஆயின் - (இப்பொழுது) பிழைத்துப்போக வேண்டுமென்னுங் கருத்தை யுடையையானால், விடுதி - (என்னை இராமபிரானிடத்திற் கொண்டுபோய்) விட்டிடு; (நீ அவ்வாறு செய்யாமலிருப்பின் என்னை மீட்குமாறு அவ்விராமபிரான் இங்குததானேவருவர்); உன் குலத்துக்கு எல்லாம் நஞ்சினை-உனதுவமிசம முழுதுங்கும விஷமபோன்றவனான அவ்விராமபிரானை, எதிர்ந்த போது - (போர்செய்ய) எதிரிடுமபோது, நினதுநாட்டம்-உனது கண்கள், நோகுமே - (அப்பிரானுடைய எதிரே நின்று) காணத்தான் முடியுமோ? (எ - று.)

"பெருங்கண்வட்டத்திலே நின்று நீ தப்புவையோ? புலிமுன்னே நிற்கும் நாயபோலே பதினாலாயிரம்பேரைததனியே நின்று கொன்று

சூறையாடின தனிவீரத்துக்கு ப்ரதிக்ரியையாக மாரீசனைக்கொண்டு நீ பண்ணின க்ரித்ரிமத்திலே கண்டிலோமோ? அவ்வாண்புலிகள் நாற்றம் கெட்டுநின்றால், பின்பன்றோ உன்வெற்றியும் ஆணபிள்ளைத்தனமுங் காணலாம்'' என்ற தனிஸ்லோகிவாகியங்கள் இங்குக் காணத்தக்கன. உன்குலத்துக்கெல்லாம் நஞ்சினை என்பதற்கு-உனது குலம்முழுதுக்கும் நஞ்சுபோன்ற என்னை, எதிர்ந்தபோது நோக்குமே நினது நாட்டம்-எதிரில்வந்தபோது உனதுகண்கொண்டு கூசாது பார்க்கக்கடவையோ? என்று உரைத்து உனது கண்களால் என்னை நேர்நின்றுபார்த்தலால் உனதுகுலத்துக்கே நாசம் விளையுமென்று கூறியதாகக் கருத்துக் கொள்ளலும் ஒன்று. பி - ம்:—[1]ஆதலாலேயாண்டகை. [2]வைததாய். (சக)

சஉ. பத்துள தலையுந் தோளும பல [1]பல பகழி தூவி
வித்தக வில்லி னுற்கு திருவிளை யாடற் கேற்ற
சிதத்திர விலக்க மாகு மல்லது செருவி லேற்குஞ்
சத்தியை போலுமேனுள் சடாயுவாற றரையின் வீழ்ந்தாய்.

(இ - ள்.) மேல் நாள் - (நீ என்னைகவர்ந்துசென்ற) முற்காலத்தில், சடாயுவால் தரையின் வீழ்ந்தாய் - சடாயுவினாலே (அடிபட்டுமூர்ச்சையாகிப) பூமியில் விழுந்தவனே! பத்து உள தலையும்-உனதுபத்தாகவுள்ள தலைகளும், தோளும - தோள்களும்,—பல பல பகழி தூவி - மிகப்பல அம்புகளைப் பிரயோகித்து, வித்தகம் வில்லி னுறகு - வில்வித்தையில் தேர்ந்த இராமபிரானுக்கு, திருவிளையாடற்கு ஏற்ற - திருவிளையாடல் செய்தற்குத்தகுந்த, சிதத்திரம இலக்கம் ஆகும அல்லது - விசித்திரமான இலட்சியப்பொருளாகுமே யல்லாமல், செருவில் - போரில், ஏற்கும - எதிர்த்துப் போர்செய்கின்ற, சததியை போலும் - நீ வலிமையுள்ளவனுவாய்போலும் ?

கிழப்பறவையாகிய சடாயுவுக்கே முன்னே நின்று பொரமாட்டாமல் மூர்ச்சித்துக் கீழ்விழுந்திட்ட நீ பேராற்றல்படைத்த இராமபிரானுக்கு முனனே நின்று போரசெய்யும வலலமையுளளவனுவாயோ ? உனது பத்துத் தலைகளும் இருபதுதோளகளும் அப்பிரான் அலட்சியமாகச செய்யும்போரில் அவனது அம்புக்கு விசித்திரமான இலக்குஆகத்தான் வேணடு மென்று சீதை கூறினளென்பதாம் 'போலும்' என்ற ஒப்பில் போலி - ஏறகுஞ் சத்தியையுடையவனல்லை யென்ற பொருளைக்குறிப்பிகும், சித்திர இலக்கம்- இகறகுமுன் பாததிராத லட்சியம. சததியை - முன்னிலைக குறிப்புமுற்று. பி - ம்.—[1]உள. (சஉ)

சங. தோற்றனை பறவைக் கன்று துள்ளுநீர் வெள்ளஞ் சென்னி
யேற்றவன் வாளால் வென்று [1]யன்றெனி னிறத்தி யன்றே
நோறறநோன் புடைய வாணுள் வாமிவை துணித்த வெலலாங்
கூற்றினுக கனறே வீரன் சரத்திறகுங [2]குறித்த துண்டோ.

(இ - ள்.) அன்று - முன்னுளில, பறவைககு - (சடாயுவென்னும) பட்சிக்கு, தோறறனை - தோறறுப்போனுய்; (அப்படியிருந்தும்), துளளும் நீர் வெள்ளம - பொஙகிப் பாயகின்ற நீரபெருக்கையுடைய கஙகாநதியை,

சென்னி ஏற்றவன் - (தனது) சிரசிற் கொண்டுள்ள சிவபிரானது, வாளால்- (சந்திரஹாஸமென்னும்) வாளாயுததினால், வென்றாய் - (அந்தச் சடாயுவைக் கொன்று) வெற்றிபெற்றாய்; அன்று எனின் - (அந்தவாளினுதவி) இல்லாவிட்டால், அன்றே இறந்தி - அப்பொழுதே செத்துப்போயிருப்பாய்; நோற்ற நோன்பு உடைய - செய்த தவத்தின் பயனாக (உனக்குக்) கிடைத்த, வாழ் நாள்-(கோடிக்கணக்கான) ஆயுளநாளும், வரம் - பின்னும் வரபலங்களும், (ஆகிய), இவை நுனித்த எல்லாம குறித்துக் கூறிய இவையாவும், கூற்றினுக்கு அன்றே - யமதேவனால் உனக்கு ஒருதுன்பமும் நேரிடாமலிருக்கத்தற்கு அல்லவோ? வீரன் சரத்திற்கும் குறித்தது உண்டோ - (அந்த உனதுவரங்களை முழுதும்) இராமபிரானது அம்புகளாலும் யாதொருதீங்கும நேராமலிருப்பதைக் குறிப்பன வாகுமோ? (எ - று.)

உனதுவலியையொடுகூடிய சடாயுவைச் சிவபெருமான் உனக்குத் தந்த வாளாயுததைக் கொண்டு வென்றாயேயல்லாமல், அந்தவாள் இல்லாவிட்டால் நீ அப்போதே இறந்திருப்பாயல்லவோ? வரபலமே யல்லாமல் இவ்வாறு உடல் வலிமையில்லாத நீ தவஞ்செய்து தேவர்களிடம் நீண்ட ஆயுள் முதலிய வரபலங்களைப் பெற்றா யென்றாலும் அந்த வரங்கள் யாவும் யமன் தானே உன்னைக்கொண்டுபோவதைத்தடுக்குமேயல்லாமல் மானிடனாகத் திருவவதரித்துள்ள இராமபிரானது பாணத்தைத் தடுக்கும வல்லமையுடையனவல்லவே என்று சீதை கூறினளென்க. எல்லாரும் யமன்வாய் வீழ, நீ இராமபிரானது அம்பின்வாயில வீழ்வா யென்கிறாள் சீதை யென்க. "அன்னகாலையயன்றோன்றி யவனைநோக்கியருந்தவத்தி, னின்னையொப்பா நீயன்றி யொருவரில்லை நின்கரத்தான், முன்னமரிந்ததலையெல்லாம் முன்பு போல முளைத்திடுக," "பின்னும் சொல்லும் பிதாமகன்றான் பெருகுதவத்து நீ யிதுகுச், சொன்ன சொன்ன வரந்தருவேன் சொல்லென்றுரைக்கத் தொல்லுலகில், மன்னுமனிசாதமைப் பொருளாய் மனதினினையான் வாளரக்க, னுன்னு பொருளொன்றொழியாமல் வேண்ட விரிஞ்சனுவந்தளித்தான்," "மூவ்வகையுலகுமாள மூனறரைக்கோடியாண்டும், எவ்வகைப் பகையும் வெல்லும் சந்திரவாளு மீந்தான்" என்பவற்றால் பிரமதேவனும் சிவபிரானும் இராவணனுக்கு வரங்களும் வாளும அளித்தமையை அறிக. பி - ம்:—[1]இல்லெனிலிறுதி. [2]கூறிற்று.

(சரு)

சரு. பெற்றுடை வரனு நாளும் பிறந்துடை யுரனும் பின்னு
மற்றுடை யெவையுந் தந்த மலரயன் முதலோர் வார்த்தை
விற்றொடை யிராமன் கோத்து விடுதலும் விலக்குண் டெல்லா
மிற்றிடைந் திறுதன்மெய்யே விளக்கின்முன் னிருளுண் டாமோ.

(இ - ள்.) பெற்று உடை - நீ பெற்றுள்ள, வரனும்—,நாளும் - வாழ் நாளும், பிறந்து உடை உரனும் - (உன்னிடத்து) உண்டாயிருக்கின்ற பலமும், பின்னும் உடை மற்று எவையும் - இன்னும் நீ அடைந்துள்ள மற்றை விஞ்சைகளும், (ஆகிய இவற்றையெல்லாம்), தந்த - (உனக்குக்)

கொடுத்த, மலர் அயன் முதலோர் - தாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவன் முதலியோரது; வார்த்தை - வாததைகள், எல்லாம் - யாவும்,—இராமன்—, வில் தொடை கோத்து விடுதலும் - (தனது) வில்லில் அம்பைதொடுத்து விட்டவளவிலே, விலக்குண்டு - விலகப்பட்டு, இற்று இடைந்து இறுதல் - துண்டாகிப் பின்வாங்கி யழிதல், மெய்யே - சத்தியமேயாகும்; விளக்கின் முன்—, இருள் உண்டாமோ - இருள் நிற்குமோ? (எ - று.)

அவ்விராமபிரான் அம்பெய்தவளவிலே உனது வரபலமும் தேஹபலமும் மாயாபலமும் மற்றும் அனைததும் வலியழிந்திடு மென்பதாம். இராமபிரானது அம்புக்கு முன்னே இராவணனது வரபலம் முதலியன நிறகமாட்டாத்தன்மைககு விளக்கின்முன் இருள்நிற்கமாட்டாமை உவமையாக எடுத்துக் காட்டினள்; எடுத்துக்காட்டுவமையணி. "புரம்பற்றியபோ விடையோனருளால், வரமபெறறவு மற்றுளவிஞ்சைகளு, முரமபெற்றனவாவன வுணமையினோன், சரம்பறறியசாபம விடுநதனையே" என்ற சடாயுவின் வார்தததை இங்கு ஒப்புநோககத் தக்கது. (சச)

சரு. குன்றுநீ யெடுத்த நாடன் சேவடிக் கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிசசரந் துரந்த மேரு
வென்றுணைக் கணவ னுற்றற் குரனிலா திற்று வீழ்ந்த
வன்றெழுந் துயர்ந்த வோசை கேட்டிலை போலு மம்மா.

(இ - ள்.) குன்று - கைலாசமலையை, நீ—, எடுத்த நாள் - (வேரோடு பறித்து) எடுதத காலததில், தன் சே அடி கொழுந்தால் - தனது சிவநத பாதநகளின விரலால், உன்னை—, வென்றவன் - (அழுததி) வென்றவனாகிய சிவன், புரங்கள் வேவ - திரிபுரநகளும்பற்றியெரியுமபடி, கனி சரம்துரந்த - ஒப்பில்லாத பாணததை விடுவதற்கு இடமாக இருந்த, மேரு-மேருமலையாகிய வில் [சிவதனுசு], என் துணை கணவன் ஆறறறகு - எனக்கு உற்றதுணையான நாயகனது வலிமையைத தாங்குவதற்கு, உரன் இலாது - (எற்ற) வலிமையில்லாமல், இறறு வீழ்ந்த - முரிநது விழுந்த, அன்று - அப்போது, எழுந்து - தோன்றி, உயர்ந்த - எங்கும்பரவிய, ஓசை - பேரொலியை, கேட்டிலை போலும் - நீ கேட்கவில்லைபோலும்; (எ - று.)

நீ திக்குவிசயததிற்குச சென்றபோது, கயிலை உனது பயணததுக்குத் தடையாகி வழியிடையே கிடந்ததென்ற காரணத்தால் நீ சினந்து பிடுங்கி அப்பாலெறிந்துவிடுவதென்று தொடங்கியபோது தனது பாதததின் விரலால் உனதுவலிமையை யொடுக்கிய சிவபெருமானது வில்லும் எனது கணவனான இராமபிரானது ஆற்றலைத தாங்கமாட்டாது முரிந்திட்டதை, அப்போழ்து தோன்றிய பேரொலியினால் நீ உணர்ந்திருககலாம்; அப்படியிருகக, நீ இராமபிரானது பேராறறலை யுணரகில்லாது தாறுமாறாகப் பிதற்றுதலால் அது உன்செவியிற படவில்லைபோல் தோனறுகின்றதென்று சீதாபிராட்டி கூறினளெனக அம்மா - வியப்பிடைசசொல்; உலகமெங்கும்பரவிய அநத வில்லினோசை, இராவணன் செவியில் மாததிரம் வீழாமையைக்குறித்து

வியந்தவாறு, திரிபுரசங்காரகாலத்தில் மேருமலை சிவபெருமானுக்கு வில்லாக அமைந்ததனால், சீதாவிவாக காலத்திற் கல்யாணகல்கமாக ஏற்பட்ட சிவதநுசையும அபேதமாக அம்மேருவாகவே கூறினாள். (சரு)

வேறு.

சசு. மலையெடுத் தெண்டிசை காக்கு மாக்களை
நிலைகெடுத் தேனெனு [1]மாற்ற நேருநீ
சிலையெடுத் திளையவ னிற்கச் சேர்ந்திலை
தலையெடுத் தின்னமு [2]மகளிர்த் தாழ்தியோ.

(இ - ள்.) 'மலை எடுத்து-கைலாசமலையைப் பேர்த்தெடுத்து, எண்திசை காக்கும் மாக்களை - எட்டுதிக்குக்களையும் (ஆங்காங்கு நின்றுகொண்டு) பாதுகாக்கிற திக்கஜங்களை, நிலைகெடுத்தேன் - நிலைகலங்கசசெய்து வென்றேன்', எனும் மாற்றம் - என்கிற வீரவார்த்தையை, நேரும் - சொல்லிகொண்டு திரிகிற, நீ—, சிலை எடுத்து - வில்லையேந்திக்கொண்டு, இளையவன் - இளைய பெருமாள், நிற்க - நிற்கும்போது, சேர்ந்திலை - வராமல் பின்வாங்கினாய்; (அப்படிப்பட்ட நீ), இன்னமும்—, தலைஎடுத்து - (மகாவீரன் போலத்) தலை தூக்கிக்கொண்டு, மகளிர் தாழ்தியோ-பெண்களின் காலிலும் வீழக்கடவையோ.

'மலையையெடுத்தேன், அஷ்டதிக்கஜங்களைவென்றேன்' என்று வீரம் பேசுகிற நீ எங்கள் இளையபெருமாள் கையிலே வில்லையேந்தி நிற்கையில் அங்கேவந்து அவரை வெல்லத்தக்க நிர்வாகமில்லாமல் அவரில்லாதபடி தந்திரஞ்செய்து என்னைக் கவர்ந்துவந்து நானும ஒரு வீரனென்று இன்னமும் இறுமாப்புத்தோன்றத் தலைநிமிர்த்துக்கொண்டு திரிகின்றாயே! அந்நிலைக்கும் மாறாகப் பெண்ணின்காலிலும் விழுகின்றாயே! உனது வீரம் என்ன வீரம்? என்று சீதாபிராட்டி இராவணனை இகழ்ந்ததனென்க. மகளிர்த தாழ்தியோ என்ற விடத்து - புருஷோத்தமனாகிய இராமபிரானது தாளில் வீழ்ந்து உய்யலாமேஎன்ற பொருள தொனிக்கும். பி - ம்:—[1]ஆற்றனேருநீ. [2]மகளிற்றாழ்தியோ. (சசு)

சஎ. ஏழைநின் னொளித்துறை [1]யின்ன தாமென
வாழியெங் கோமக னறிய வந்தநா
ளாழியு மிலங்கையு மழியத் தாழுமோ
ஊழியுந் தீயுமுன் னுயிரொ டோயுமோ.

(இ - ள்.) ஏழை - அறிவில்லாதவனே! 'நின் ஒளித்து உறை - நீ ஒளிந்துவாழ்கின்ற உறைவிடம், இன்னது ஆம - இதுவாகும்', என - என்று, எம் கோமகன் - எமதுதலைவனாகிய இராமபிரான், அறிய - தெரிந்துகொண்டு, வந்த நாள் - இங்கே வரப்போகின்ற காலத்தில்,— ஆழியும் - (இலங்கையைச் சூழ்ந்துள்ள) இந்தக் கடலும், இலங்கையும் - இலங்காபட்டணமும், அழிய - அழிந்துபோக, தாழுமோ - (அவ்வளவோடு அப்பெருமானது கோபம்) அடங்குமோ? ஊழியும் - ஊழிக்காலத்துத்

தோன்றுகின்ற காலாக்கினியையும், தீயும்-தீந்துபோம்படி செய்யவல்ல, (மிகபராக்கிரமமுள்ள) உன் உயிரொடு - உனது உயிரையும் வாங்கித்தான், ஓயுமோ - அடங்குமோ? (எ - று.)

நீ என்னை ஒளித்துக் கொணர்ந்து சிறைவைத்து மறைந்துவாழும் இவ்விடத்தை எனது தலைவனான ஸ்ரீராமபிரான் தெரிந்துகொண்டு நாளைக்கே வருவான்; அப்போது அப்பரமனது கோபாக்கினி என்னைச் சிறைவைத்துள்ள இவ்விலங்கையையும், அதனைச் சூழ்ந்துள்ள கடலையும் அழித்து அவற்றோடுதான் சாந்த மடையுமோ? சாந்த மடையாது; இவ்விலங்காதிபதியாகிய உன்னையும் அழித்துத்தான் சாந்தமடையும் என்று சீதை கூறினளென்பதாம். ஊழி - ஊழிக்காலத்துத் தீக்கு ஆகுபெயர். பி - ம்:—[1]இன்னிடத்தென. (சஎ)

சஅ. வெஞ்சின வரக்கரை [1]விளித்து [2]வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தா
லெஞ்சலி லுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்
றஞ்சுகின் றேனிதற் கறனுஞ் சான்றரோ.

(இ - ள்.) (இன்னும் அப்பரமனது கோபம்) வெம் சினம் அரக்கரை - கொடிய கோபத்தையுடைய இராட்சசரை, விளித்து-கொன்று, வீயுமோ - (அவ்வளவோடேயாவது) அடங்குமோ? (அடங்காது); நீ - நீ ஒருத்தன், வஞ்சனை செய - வஞ்சனைத்தொழிலைச் செய்துவிட [மோசமாக என்னைக் கவர்ந்து சிறையில் வைத்திட], (அதன்பயனாக), வள்ளல் சீற்றத்தால்-உதார குணமுள்ள இராமபிரானது கோபத்தினால் எஞ்சல் இல் உலகுஎலாம் - யாதொரு குறைவு மில்லாத உலகம் முழுவதும், எஞ்சும் எஞ்சும் - அழிந்து போய்விடுமே! என்று—, அஞ்சுகின்றேன—; இதற்கு - இவ்வாறு நான் அஞ்சுவதற்கு, அறனும்-தருமதேவதையும், சான்று - சாட்சியாகும்; (எ-று.)—அரோ - ஈற்றசை.

எனதுநாயகனுடைய கோபம் உன்னைமாத்திரமேயன்றி உன் இனத்தவரான அரக்கரையெல்லாம் கொன்றாலும் அடங்காது; இப்படி நீ ஒருவன் செய்த அநியாயத்தினால் இவ்வுலகமெல்லாம் அழிந்துவிடுமேயென்று தருமதேவதை சாட்சியாக நான் அஞ்சுகின்றே னென்று சீதாபிராட்டி கருணை மிகுதியால் இரங்கிக் கூறினளென்க. "ஏகஃ பாபாநிகுருதே - பலம் புநக்தி மஹாஜநஃ [ஒருவன் தீச்செயலைப்புரிகிறான்; அதன்பயனை மஹாஜநங்கள் அநுபவிக்கின்றனர்]" என்பது, இங்குக் கருதத்தக்கது. பி - ம்:—[1]விளிய, விளிகை. [2]வீரமோ. [3]அதற்கு. (சஅ)

சஆ. அங்கண்மா ஞாலமும் விசும்பு மஞ்சவாழ்
வெங்கணாய் புன்றொழில [1]விலக்கி [2]மேறகொளாய்
செங்கண்மா லுன்முகன் சிவனென் றேகொலோ
வெங்கணா யகனையு நினைந்த தேழைநீ.

(இ - ள்.) அம கண மா ஞாலமும் - அழகிய இடத்தையுடைய பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களும், விசும்பும் - வானுலகத்திலுள்ள

வர்களும், அஞ்ச - அஞ்சும்படி, வாழ் - வாழ்கின்ற, வெம் கணாய் - கொடுமை யுள்ளவனே! எழ - புதுதியில்லாதவனே! தொழில் - (நீ மேற்கொண்டுள்ள) இழிதொழிலை, விலக்கி - நீக்கி, மேல் கொளாய் - மேன்மையான தொழிலைக் கைக்கொள்ளவில்லை; செம் கண் மால் - சிவந்த கண்களையுடைய திருமாலும், நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், சிவன் - சிவபெருமானும், என்றே கொலோ - என்ற இவர்களைப்போலச் சாமானியமாகவோ, எங்கள் நாயகனையும்-எமது தலைவனாகிய இராமபிரானையும், நீ நினைந்தது நீ கருதியிருப்பது? (எ - று.)

நீ செய்கிற அதிகக்கிரமமான செயல்களுக்குத் திரிமூர்த்திகளாலும் ஒன்றும் மாறுசெய்ய இயலவில்லை யாதலால், எமது தலைவனாலும் அவர்களைப் போலவே ஒன்றுஞ்செய்ய இயலாது என்று நீ கருதுவது பெரும் பேதைமை; எமது தலைவர் திரிமூர்த்திகளினும் மிகவும்மேம்பட்டவராதலால், உனது அதிக்கிரமச் செயலுக்கு இனி விரைவில்தானே அவரால் ஏற்ற தண்டனைகிடைக்கு மென்று கூறின ளென்பதாம். பி - ம்:—[1]விலக்க. [2]மேற்கொளா. (௪௬)

௫௦. [1]மானுய ரிவரென மனங்கொண் டாயெனிற்
காணுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
றானொரு மனிதனாற் [2]றளர்ந்து ளானெனிற்
றேனுயர் [3]தெரியலான் றன்மை தேரியால்.

(இ - ள்.) 'இவர் - இந்த எனதுதலைவர், மானுயர் - மனிதர்', என - என்று, மனம் கொண்டாய் எனின் - மனத்தினால் (அலட்சியமாக) நினைத்தாயாயின், கான் - காட்டில், உயர் - உயர்ந்து தோன்றுகின்ற, வரை நிகர் - மலையை யொத்த, கார்த்தவீரியன்தான் - கார்த்தவீரியார்ச்சுனன், ஒரு மனிதனால் - (பரசுராமனென்னும்) ஒரு மனிதனாலே, தளர்ந்து உளான் எனின் - வலியொடுங்கினா னென்றால், (அப்பரசுராமனையும் வலியொடுக்கின), தேன் உயர் தெரியலான தன்மை - தேன் நிறைந்த மலர்மாலையை யணிந்த இராமபிரானது தன்மையை, தேர்தி - ஆலோசித்துப்பார்; (எ - று.)

ஒருகால் நீ எனது கணவனைக்குறித்து மானுடன்தானே யென்று அலட்சியமாகக கருதக்கூடும்: முன்னொருகாலத்து உனது இருபது தோள்களையும் பிடித்துக கட்டிச சிறையிலிட்ட காத்தவீரியாரசுசுனனது ஆயிரந்தோள்களையும் தனது கோடாலியினால் துணித்துத தள்ளிய பரசுராமன் மனிதன்தானே! அப்படிபபட்ட பரசுராமனையும் எனது தலைவர் தமதுதோள்வலியால் வென்றன ரென்றால் இவரை ஒருமனிதனென்று சாமானியமாகக கருதுதல்கூடுமோ? என்று சீதை கூறினளென்க. காத்தவீரியன் - கருதவீரியனது மகனென்று பொருள்படுந் தத்திதாந்தநாமம்.

இராவணன் திக்குவிசயஞ் செயதுவருகிறபோது கார்த்தவீரியார்ச்சுனனது மாகிஷ்மதிநகரததுக்குச சென்றுபோர் செயயமுயலுகையில்,

அங்குஉள்ளார் 'எங்களரசன் தனகுஉரிய மாதர்களுடனேபோய் நருமதை யாற்றில் ஜலகிரீடை செய்கின்றான்' என்று சொன்னதனால் அவ்விராவணன் அங்கிருந்து நருமதையாற்றைச சேர்ந்து அதில் நீராட்டிக்கரையில் மணலாற் சிவலிங்கத்தை யமைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசிகும்பொழுது, அந்தயாற றில் மேறகே இறங்கியுள்ள கார்த்தவீரியார்சசுனன் தனது நீரவிளையாடலு க்குஅந்நீர்பபெருக்குப் போதாதென்ற கருததினால் அந்நீரைத் தனது ஆயிரங ணைகளுள் ஐந்நூற்றினால் த்டுத்து நீரைமிகுவித்து மற்றை ஐந்நூறு கைகளைக் கொண்டு பலவகைவிளையாட்டுக்கள் நிகழ்ததுகின்றதனால் எதிர்வெள்ளமாகப் பொங்கிவருகிற நீர்ப்பெருகுத் தனதுசிவலிங்கததை நிலைகுலையசசெய்ய, அதனாறகோபங்கொண்டு அவ்விராவணன் இராக்கதசேனையுடனே சென்று காததவீரியார்சசுனனையெதிரததுப் போரசெயகையில், அவன் தனது ஆயி ரங்கைகளுள் இருபதினால் 'இராவணனது இருபதுகைகளைப் பற்றி மற்றைய கைகளால் அவனைப் பலவாறு வருததிகொண்டுபோய்ச சிறையில வைததிட, அதனை விபீஷணனால் அறிந்த அவன்பாட்டனாகிய புலஸ்தியமகாமுனிவர் அவ்வருச்சுனனிடம வந்து வேண்டி அவனுககு இராவணஜித் என்ற பெரும் பெயரைக கொடுதது இராவணனைசசிறைவிடுவிததுச சென்றனரென்பதும்; இவ்வருசசுனன் ஒருகாலததில் சேனையுடனே வனததிற்சென்று வேட்டை யாடிப் பரசுராமனது தநதையான ஜமதகநிமுனிவரது ஆசசிரமததை யடைந்து அவரநுமதியால் அங்கு விருநதுண்டு மகிழ்ந்து மீளுங்கையில், அவரி டமிருந்த ஓமதேனு அவருக்குப் பல வளங்களையும எளிதிற் சுரந்தளிததமை கண்டு அதனிடம ஆசைகொண்டு அப்பசுவை அவரநுமதியில்லாமல் வலியக் கவர்ந்துபோக, அதனையறிந்த அப்பரசுராமன் பெருங்கோபங்கொண்டு ஆயு தங்களுடனேசென்று காத்தவீரியாசசுனனுடனே போரசெய்து அவனைப் பதினொரு அக்ஷௌகிணிசேனையுடனே நிலைகுலைதது அவனது ஆயிரங்தோள களையும தலையையும் தமது கோடாலிப்படையால் வெட்டிவீழ்ததி வெற்றி கொண்டாரென்பதும் இங்கு அறியததக்கன. பி - ம்:—[1]மானுடர். [2]தலத துளாரெனில். [3]கொன்றையான். (௩௦)

௩௧. இருவரென் றிகழ்ந்தனை யெனனின் [1]யாண்டெல்லை
யொருவனன் றேயுல கழிக்கு மூழியான்
செருவருங் காலையென் மெயம்மை தேர்தியாற்
பொருவருந் திருவிழந் [2]தநாயம் பொன்றுவாய்.

(இ - ள்.) அநாயம - அநியாயததினாலே, பொருவு அரும் திரு - ஒப் பில்லாத (நினது) ஐசுவரியததை, இழந்து—, பொன்றுவாய் - அழிய இருக்கின்றவனே! இருவர் என்று - (ராமலக்ஷ்மணர்களை வேறு துணை யற்ற) இருவர் மாததிரநதானே யென்று, இகழ்நதனை என்னின் - அலட் சியஞ் செய்தாயானால், யாண்டு எல்லை - யுகததின்முடிவில், உலகு அழிக கும் ஊழியான் - உலகங்களையெல்லாம் அழிபபவனான சங்காரககட வுள், ஒருவன் அன்றே - ஒருவன்மாததிரமேயல்லவோ? செரு வரும்

காலை - (இனிப்) போர் நிகழும்போது, என் மெய்ம்மை - யான் உண்மை கூறினே னென்பதை, தேர்தி - (நீ) உணர்வாய்; (எ - று)—ஆல் - ஈற்றசை, தேற்றமுமாம். அநாயம் - அந்யாயம் என்பதன் விகாரம். பி - ம்:—[1]யாண்டெனின். [2]ஆவி. (௫௧)

௫௨. பொற்கணுன் றம்பியென் றினைய போர்த்தொழில்
விற்கொணுண் பொருவுதோ ளவுணர் வேறுளார்
நற்கணுர் [1]நல்லறந் துறந்த நாளினு
மிற்கணு லிறந்தில ரிறந்து நீங்கினுர்.

(இ - ள்.) பொன் கணுன் - இரணியாட்சனும், தம்பி - (அவனது) தம்பியாகிய இரணியகசிபுவும், என்று—, இனைய - இத்தன்மையரான, போர் தொழில் - போர்செய்கின்ற தொழிலிலே, வில் கொள் நாணபொருவு தோள் - வில்லிற்பூட்டிய நாண உராய்ந்து தழும்பேறிய தோள்களையுடைய, வேறு உளார் அவுணர்-மற்றுமுள்ள ராக்ஷசர்கள்' நல்கண ஆர் நல் அறம துறந்த நாளின் உம - நல்லவழியிற பொருந்திய சிறந்த தருமத்தைத் தவறின காலத்தும் [அவ்வசுரர்கள தருமம்தவறித் தீயவழியிறசென்றுராகளாயினும], இல் கணுல் இறந்திலர் - (பிறா) மனைவியின்விஷயதத்தில் (உன்போல) வரமபு கடநது நடவாதவர்களாகியே; இறந்து நீங்கினுர் - இறந்தொழிந்தாகள.

முற்காலத்தில் இரணியாட்சன் முதலிய பல அசுரர்கள் தருமநெறி தவறி அதருமஞ்செய்து இறந்தொழிந்தாகளாயினும, அவர்கள் உன்னைப் போலப் பிறர்மனைவியாவிஷயத்தில் தீங்குபுரியவில்லை யென்றுளென்க. இதனுல், இராவணு! நீ இரணியாக்ஷன்முதலிய அசுராகளைக் காட்டிலும் கொடியவ னென்று அவனைப் பழிததவாறு. இரணியாக்ஷன் என்ற வடமொழிக்கு ஏற்பப் பரியாயமாகத் தமிழ்ச்சொற்களையமைதது 'பொற்கணுன்' என்றார். இரணியாக்ஷ - இந்தப் பூமியையே பாயாகச சுருட்டிக் கொணடு போய்ப் பிரளயப் பெருங்கடலிற் புககொளிதது, வராஹாவதாரஞ் செய்த திருமாலாற் கொல்லப்பட்டவன். அவன்தம்பியாகிய இரணியகசிபு - நான்தான தெய்வ மென்றுசொல்லி, கடைசியாக நரசிங்காவதாரஞ்செய்த திருமாலாற் கொல்லப் பட்டவன். நற்கணுர் நல்லறம் என்பதற்கு - மஹாஞானவான்களான பெரியோர்களால் நிரணயிககப்பட்ட தருமம் என்று கொள்ளினுமாம்; கண் - ஞானம். இல் - மனைவிக்கு ஆகுபெயர்; கண் - மூலம். இறத்தல் - வரம்பு கடத்தலும், சாதலும். பி - ம்:—[1]நறறவர். (௫௨)

வேறு.

௫௩. பூவிலோனுதி யாகப் புலன்கள்போ நெறியிற போகாத்
தேவரோ வவுணர் தாமோ நிலைநின்று வினையிற் றீர்ந்தா
[1]ரேவலெவ் வுலகுஞ் செய்யச செல்வநிற் கிசைந்த தென்றுற்
பாவமோ முன்னீ செய்த [3]தருமமோ தெரியப் பாராய்.

(இ - ள்.) பூ இலோன் ஆதி ஆக - (திருமாலினது நாபீ)கமலத்தை (த்தனக்கு) இருப்பிடமாக வுடைய பிரமன்முதலாக, புலன்கள் போம் நெறியில்போகா - (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற) ஐம்புலன்களின் வழியிற்செலலாத [ஐமபொறிகளையும சப்தாதி விஷயங்களிலே செலுததாமல் தமதுமனத்தை அடக்கியாளுகின்ற], தேவரோ - தேவர்களோ, அவுணர் தாமோ - அசுரர்களோ, நிலைநின்று - நிலைததிருந்து[அழியாமல்], வினையின் நீங்தார் - பாவங்களினின்று நீங்கியுள்ளார்? [தேவர்களே ஜிதேந்த்ரியர்களாதலால் நல்வினைபபயனை யனுபவித்த வணணம் நீடித்து நிற்கிறார்கள என்றபடி]; (புண்ணியம நன்மையை விளைக்குமென்பதற்கு வேறுஉதாரணம் தேடவேணடுமோ?) எ உலகும்-எல்லாவுலகததாரும, ஏவல் செய்ய-(உனது) கட்டளைககு அடங்கி நடக்குமபடி, செலவம்-பெரும்பாக்கியம், நிற்கு இசைந்தது என்றால் - உன்னிடததில் தானே அமைந்திருककுமானால், (அது), பாவமோ - பாவததின்பயனாக விளைந்ததோ? (அன்றி), முன் நீ செய்த தருமமோ - முற்காலத்தில் [உனது இளம்பிராயததில்] 'நீ செய்த' தருமச செயலின் பயனாக விளைந்ததோ? தெரிய பாராய - (இதனை) நன்றாக விளங்க ஆலோசிததுப்பார்; (எ - று.)

நீ இளம்பிராயததிற் செய்த பெரும்புண்ணியததின் பயனாக உனக்குக கிடைததுள்ள பெருமபாக்கியம, எந்த அசுரராலும் இது வரையிற் செயயப்படாத பெரும்பாதகமாகிய பிறர்மனைவியைவிரும்புதலாகிற இப்பெரும்பாதகததால் அழிநதுவிடுமே! இதனை ஆலோசிததுப் பார்க்கவேணடாமா? என்ற கருதது ஈற்றடியில் தோன்றும். பி - ம்:—[1]ஏவாமுவுலகின் செல்வமெய்தின ரிசையினேழாய். [2]முன்னர்ச. [3]தருமமோதெளியப்பாராய். செல்வநிறகீநததோராய். (௩௩)

௩௪. இப்பெருஞ் செல்வ நின்க [1]ணீந்தபே ரீசன் யாண்டு
மபபெருஞ் செல்வந் துய்ப்பா [2]னின்றுமா தவத்தி னன்றே
யொப்பருந் [3]திருவு நீங்கி யுறவொடு முலக்க [4]வுன்னித்
தப்புதி [5]யறத்தை யேழாய் தருமத்தைக் காமி யாதே.

(இ - ள்.) இ பெருஞ் செல்வம் - இப்படிப்பட்ட பெரிய செல்வத்தை, நின்கண ஈந்த - உனக்குக கொடுத்த, பேர் ஈசன - பெருமையுள்ள சிவபெருமான், யாணடுமெ - எப்பொழுதும், அ பெரும் செல்வம - அப்படிப்பட்ட பெருஞ்செல்வத்தை, துய்ப்பான் - அனுபவிப்பவனாவது, இன்றும் - இப்போதும், மா தவததின அனறே - பெருநதவத்தில் நிலை நிற்றலா லல்லவோ? ஏழாய் - அறிவில்லாதவனே! ஒப்பு அரு திருவும் நீங்கி - ஒப்பில்லாத உனது பெருஞ்செல்வமும ஒழிநது, உறவொடும் உலகக - (உனது) சுற்றத்தாரோடும் அழியுமபடி, உனனி - நினைதது, தருமத்தை காமியாது - தரும வழியில் நடத்தலை விருமபாமல், அறததை தப்புதி - அந்ததருமததைத தப்பிநடககினறாய்.

மஹாததான ஐசுவரியமுடையவ னென்பது பற்றி, சிவபெருமானுக்கு 'ஈசன்' என்று பெயர். சிவபெருமான் உன்போலியர்க்கு வேண்டிய பெருவரங்களை அளிக்குமாறு பெருஞ்சிறப்புடையவனு யிருத்தற்குக் காரணம அவன் எப்போதும் தருமநெறியில்தவறாது நிற்றலினாலேயேயாம்; இதனால், தேவர்களான அவர்கட்கும் தருமநெறி தவறாது நிற்கவேண்டுவது இன்றியமையாததென்று தெளிவாக ஏற்பட, நீ தருமததைவிரும்பாமல் தவவலிமையாற்பெற்ற ஐசுவரியததையும் இழந்து பரதுமிதிரரோடு அழிய வழி தேடுகின்றனையே! இது என்ன அறிவீனம்!! என்று சீதாபிராட்டி இராவணனுக்குக் கட்டுரை கூறினளென்க. நின்று மாதவத்தின் என்றும் பிரிக்கலாம். இனி, முதலிரண்டடிக்கு - பேரீசன் நின்கண இப்பெருஞ்செல்வம் ஈந்த(து), (நீ), யாண்டும் - எப்போதும், மாதவத்தின் நின்று அப்பெருஞ் செல்வம் துய்ப்பான் [துய்க்குமபொருட்டு] அன்றே என்று பொருளுரைததுமி, அப்படிப்பட்ட செல்வம் முதலியன அழியும்படி தருமத்தைத தவறலாமோ? என்று உரைகாணலுமாம். வற்புறுத்தற்பொருட்டு உடன்பாட்டு முகத்தினாலும் எதிர்மறை முகத்தினாலும் கூறினாள். பி - ம்.—[1]ஈய்ந்தபேரின்னம். [2]இன்றுமாதவீததனன்றே, நினதுமாதவததினன்றே. [3]திருவினீங்கி. [4]முன்னிஉள்ளம். [5]அதற்கே. (௫௪)

௫௫. மறந்திறம் பாத தோலா வலியின ரெனினு மாண்டா,
ரறந்திறம பினரு மக்கட் கரு [1]டிறம் பினரு மன்றே, பிறந்திறந்
துழலும் பாசப பிணக்குடைப் பிணியிற் [2]றீர்ந்தார், துறந்தரும்
பகைகண் மூன்றுந் துடைத்தவர் பிறர்யார் சொல்லாய்.

(இ - ள்.) மறம் திறம்பாத - வீரததினினறு வழுவாத, தோலா - (எவரிடத்தும்) தோல்வியடையாத, வலியினா - பலமுள்ளவர், எனினும் - ஆனாலும், அறம் திறமபினரும் - தருமமார்கக் தவறினவர்களும், மக்கட்கு அருள் திறம்பினரும் - மனிதாகள் விஷயத்தில் இரக்கமில்லாதவர்களும், மாண்டார் அன்றே-(அததீவினையினால்) இறநதொழிவாகளல்லவா? துறநது - (பற்றுக்களை) நீஙகி, அரு பகைகள மூன்றும - (அழித்தற்கு) அரிய (காமம் வெகுளி மயக்கம் என்ற) மூன்று உட்பகைகளையும, துடைத்தவர்-போகினவாகள,—பிறந்து இறந்து உழலும - பிறந்து இறந்து அலைகிற, பாசம பிணககு உடை - பாசமாகிய பந்ததகதையுடைய, பிணியின் - (இநத ஸம்ஸாரமாகிய) நோயினின்று, தீர்ந்தா (அன்றே) - நீங்கினவரல்லவோ? பிறா யா - (பாசபந்தமாகிற பிணியினின்று தீர்ந்தவா) வேறு யாவர்? சொல்லாய் - (இதனை) நீ சொல்வாயாக; (எ - று.)

மிக்கவலிமையுள்ளவராலும், தருமந்தவறினவர்களும், அருளற்றவாகளும் அததீவினைப்பயனால் இறந்தொழிந்தவாகளே யாவா; காமம வெகுளி மயககம் என்னும் உடபகைகளை யொழிததவர்களே அவ்வகைப் பிறவிததுன்பததினின்றுநீஙகி ஈடேறுவார்க ளென்றனளென்க.

இதனால், நீ எவ்வளவு பலசாலியா யிருந்தபோதிலும அறமும் அருளும் அற்ற செயலைச செய்வதனால் இறந்தழிவது திண்ணம்; பிறத்தல் இறத்தல் என்ற இந்தப் பாசபந்தப்பிணியினின்று நீ ஈடேற விரும்பினால், காமம் வெகுளி மயக்கம்என்ற உட்பகைகளை உடனே யொழிக்கவேணுமென்று உபதேசித்தவாறு. மாண்டார் - தெளிவினாலவந்த காலவழுவமைதி. இனி, மாண்டார் அறம் - மாட்சிமைப்பட்டவரது அறத்தை, திறம்பினர் அன்று - (பிணியில் தீர்த்தா) அல்லர் என்று பொருள கூறலுமொன்று. பி - ம்·— [1]துறந்தவரும். [2]போந்தார். (௫௫)

௫௬. தென்றமி [1]ழுரைத்தோன் [2]முன்னாத் [3]தீதுதீர் முனிவர் யாருப, புன்றொழி லரக்கர்க் காற்றே நோற்கிலம் புகுந்த போதே, கொன்றரு ணின்னா லன்னார் குறைவது சரதங் கோவே, யென்றனா யானே கேட்டே னீயிதற் கிபைவ செய்தாய.

(இ - ள்.) புகுந்த போது - (இராமபிரான் தண்டகாரணியத்திற) பிரவேசித்தபொழுது, தென தமிழ் உரைத்தோன் முன் ஆ - இனிய தமிழ்ப்பாஷையை வளர்த்த அகஸ்தியமுனிவர் முதலாக, தீது தீர் முனிவர் யாரும் - குறறமற்ற (தண்டகாரணியவாசிகளான) இருடியார் யாவரும், (இராமபிரானை நோக்கி), 'கோவே - எமதுதலைவனே! புலதொழில் - அரக கர்க்கு-இழிதொழிலையுடைய அரககாசெய்கின்ற உபததிரவத்தைப் பொறுத தற்கு, ஆறறேம-வல்லமையுடையோ மல்லோம்; நோற்கிலம் - தவஞ்செய்ய வும் முடியாதவராஞேம; கொன்றருள - (அவ்வரக்காகளையெல்லாம்) கொன்று (எங்கட்கு) அருள்செய்யவேணும்; நின்னால் - உன்னால், அன்னார்- அந்தராக்ஷஸாகள், குறைவது - அழிந்தொழிவது, சரதம் - நிச்சயம்,' என் றனர் - என்று முறையிட்டார்கள்; யானே கேட்டேன் - (அவ்விருடியரின் முறையீட்டை) நானே நேரிற் கேட்டேளேன்; நீ—, இதற்கு - இநத முறையீட்டுக்கு, இயைவ - தக்க கொடுஞ்செயல்களையே, செய்தாய் - செய துள்ளாய்; (எ - று.)—முனிவர்கள்முறையிட, இராமபிரானபயமளிதததை, ஆரணியகாண்டத்திற் காணலாம. பி - ம்·—[1]இசைததோன். [2]முன்னாள். [3]தீதறு, தீயுறு. (௫௬)

௫௭. உன்னையுங் கேடடு மற்றுன் னூற்றமு முடைய நாளும
பின்னையிவ் வரக்கர் சேனைப் பெருமையு முனிவர் [1]பேணிச்
சொன்னபி னுங்கை மூக்கு மும்பியர் தோளுந் தாளுஞ்
சின்னபின் னங்கள் செய்த [2]வதனைநீ சிநதியா யோ.

(இ - ள்.) உன்னைக் கேட்டு உம்-உன்னைப்பற்றிக் கூறியதைக கேள்வி யுற்றபின்பும், உன் ஊற்றமும் உனதுவலிமையும், உடைய நாளும் - நீ பெற்றுள்ள ஆயுள் வலிமையும், பின்னை பின்னையும், இ அரக்கா சேனை பெருமையும - இநத இராட்சசாகளுடைய சேனையின் பெருககத்தையும, முனிவா - (தண்டகாரணியவாசிகளான) ருஷிகள், பேணிசொன்னபின் - மிகவிரும்பிக கூறிய பின்பும், உங்கை-உன்தங்கையாகிய சூர்ப்பணகியி னுடைய, மூக்கும - மூக்கு முதலிய உறுப்புகளையும், உம்பியா - உனது

தம்பிமார்களாகிய கரன்முதலியோரது, தோளும் - தோள்களையும், தாளும்- கால்களையும், சின்னபின்னங்கள் செய்த - துண்டு துண்டாக வெட்டிய, அசனை - அசசெய்தியை, நீ சிந்தியாயோ - நீ நினைக்கமாட்டாயோ? (எ - று.)

தண்டகாரணியவாசிகளான முனிவர்களின் மூலமாக உனதுவரலாறு முழுதும் அறிந்த பின்பே இராமபிரான் உன்னைச சிறிதும் பொருள் செய்யாது உனது தங்கை சூர்ப்பணகையினது மூக்குமுதலிய உறுப்புக்களை யறுத்ததையும்; அவளது தூண்டுதலினால் பெருஞ்சேனைகளோடு எதிர்த்து வந்த உனது தம்பியரான கரன் முதலியோரை மிக எளிதில் வெகுவிரைவில் அழித்ததையும், நீ சிந்தித்துப்பார்க்கவில்லையோ? நீ சிந்தித்துப் பார்த்திருந்தால், இவ்வாறு இராமபிரானைப்பற்றி அஞ்சாது தீசசெயலைச்செய்தலும கடுஞ்சொற்களைசசொல்லுதலும் செய்யமாட்டாயென்பதாம் இராவணனது வலிமை முதலியவற்றைத் தண்டகாரணியவாசிகளான முனிவர்கள் கூறினா ரென்பதை, இங்கு அநுவாதமுகததாற் கவி கூறுகின்றன ரென்க.
பி - ம்.—[1]பேசி. [2]அவனை. (௫௭)

௫௮. ஆயிரந் தடக்கை யானின் னைந்நான்கு [1]கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குததிவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்க டுணித்தவன் றொலைந்த மாற்ற
நீயறிந் திலையோ வேகு நெறியறிந் திலாத நீசா.

(இ - ள்.) ஏகும் நெறி அறிநது இலாத நீசா-செல்லவேணடிய சன்மார்க்கதைத இன்னதென்று அறிந்திராத இழிகுணமுடையவனே! நின் - உனது, ஐந்நான்கு கரமும் - இருபதுகைகளையும, பற்றி - பிடித்துகொணடு, வாய் வழி குருதி சோர - (உனது) வாயின வழியாக இரததஞ்சொரியுமபடி, குததி—, வான் சிறையில் வைதத - பெருஞ் சிறையில (உன்னை) அடைதத, தூயவன் - சுததவீரனான, ஆயிரம தடகையான் - பெரிய ஆயிரங்கைகளையுடையவனாகிய கார்ததவீரியார்சுனனது, வயிடம தோள்கள் - பெருவலிமையடைத்த தோள்களை, துணிததவன் - .வெட்டிததள்ளியவனாகிய பரசுராமன், தொலைநத - (இவ்விராமபிரானால) வலியழிந்த, மாறறம் - செயதியை, அறிந்திலையோ—? (எ - று.)

இங்கு, இராவணனினும மேமபட்டவன் காததவீரியன்; அவனினும் மேம்பட்டவன் பரசுராமன்; அவனையும அடககிமேம்பட்டவன் இராமபிரான் என்று அப்பெருமானது பெருமையை விளக்கியது - மேன்மேலுயர்ச்சியணி; இதனை, வடநூலார் ஸாரலங்காரமென்பர்.
பி - ம்:—[1]தோளும. (௫௮)

௫௯. கடிக்கும்வல் லரவுங் கேட்கு மந்திரங் களிக்கின் றோயை
யடுகுமீ த[1]டாதென் றுனற வேதுவோ டறிவு காட்டி
யிடிக்குந [2]ரில்லை யுளளா ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது [4]முடிவன்றி [5]முடிவ துண்டோ.

(இ - ள்.) கடிக்கும் வல் அரவும் - கடித்துக்கொல்லவல்ல கொடிய ஸர்ப்பமும், மந்திரம் - மந்திரத்தை, கேட்கும் - கேட்டு அடங்கிநடக்கும்; (அதுபோல, நீயும் ஏற்ற மந்திரம் கூறுவா ரிருப்பின் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பாய்;) களிகின்றேனை - (யதேச்சையாகக) களிப்புக்கொண்டு திரிகின்ற உன்னை, 'ஈது அடுக்கும் - இது தகக்கது, (ஈது) அடாது - இது தகாது,' என்று—,ஆன்ற ஏதுவோடு - சிறந்த காரணங்களுடனே, அறிவு - நல்லறிவை, காட்டி - எடுத்துதெரிவித்து, இடிக்குநர் - (உனக்கு) நன்மதியை யிடித்துச்சொல்லுபவர், இல்லை - ஒருவருமில்லை; உள்ளார் - உன்னிடம் இருப்பவர்களோ, எண்ணியது எண்ணி-(நீ) நினைத்ததையே தாமும் நினைத்து, (தாங்கள் ஆராய்ந்து நற்புத்தி எதனையும் சொல்லாமல்), உன்னை முடிக்குநர் - உன்னையழிப்பவரா யிருக்கிறார்கள், என்ற போது - என்றால், முடிவு அன்றி - (உனக்கு) நாசம் நேரிடுமேயல்லாமல், முடிவது உண்டோ - முடியுந்தொழில் வேறு உளதோ? (எ - று.)

விஷஸாப்பமும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதாயிருப்பதுபோல, நீயும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடு மென்றாலும், இப்போது உன்னைச்சுற்றி நன்மந்திரிகள் எவருமில்லாதொழிய, உள்ளவர்கள் உன்னோடு ஒருமனமுடையராய, உன்னையழிக்கக் காத்திருக்கிறார்கள், அதனால், உனக்கு நாசமுண்டாகுமே தவிர நன்மை யுண்டாகா தென்று கூறியவாறாயிற்று. 'ஈது' மத்திமதீபமாம். மந்திரம் என்பது - ஆலோசனையும், மறைமந்திரமும். பி - ம்:—[1]அடாததீதென்றறிவினாலேதுக். [2]இல்லையுன்னாவெண்ணியது. [3]முடிக்கின்றபோது. [4]முன்னின. [5]முடிந்தது. (௫௯)

வேறு.

௬௦.—இராவணனுக்குக் கோபம் மிகுதல்.

[1]என்ற றத்துறை கேட்டலு மிருபது நயன
மின்[2]றி றப்பன வொத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பினன் குறிப்பதென் காமன்
றன்றி றத்தையுங் கடந்தது சீறறத்தின் றகைமை.

(இ - ள்.) என்று—, அறம துறை - தரும மார்க்கத்தை, கேட்டலும் - (பிராட்டி சொல்லக்) கேட்டவுடனே, (இராவணனது), இருபது நயனம் - இருபதுகண்களும், மின் திறப்பன ஒத்தன - மின்னல்தோன்றுவதை யொத்திருந்தன [கணகளில் நெருப்புப்பொறி பறந்தன என்றபடி]; வெயில் விடு பகு வாய் - உக்கிரத்தை வெளிக்காட்டுகிற பிளந்துள்ள (தனது) ஒருபதுவாயகளாலே, குன்று - மலைகளும், இற - இற்றுவிழும்படி, தெழித்து உரப்பினன் - அதட்டி யாரவாரித்தான்; குறிப்பது என் - (நாம) சொல்லுதற்கு யாது உளது? சீற்றத்தின் தகைமை - (அவனது) கோபத்தின் தன்மை, காமன் தன் திறத்தையும் கடந்தது - மன்மதனது வல்லமையையும மீறிவிட்டது; (எ - று.)

இப்படிச் சீதாபிராட்டி இராவணனைநோக்கித் தருமோபதேசஞ செய்யவே, அவன் அது தனக்கு அநிஷ்டமாயிருததலாலே பொறுக்காமல், சீதாபிராட்டியினிடம் தான் கொண்ட காதலையும் மறந்து கடுங கோபங்கொண்டு அப்பிராட்டியைஅதட்டி அசசுறுத்தின னென்பதாம். பி - ம்.—[1]என்றுரைததலு மிருபதுநயனமுமழலின். [2]திருததின. (சுஂ)

சுக.—இராவணனது சீற்றமும் காதலும்.

வளர்ந்த நாணினன் மாதிர மனைத்தையு மறைவித்
தளந்த தோளின னனல்சொரி கண்ணின னிவளைப் [ரான்
பிளந்து தின்பெனென் [1]றுடன்றனன் [2]பெயர்ந்தனன் பெய
கிளர்ந்த சீற்றமுங் காதலு [3]மெதிரெதிர் கிடைப்ப.

(இ - ள்.) (இராவணன), வளர்ந்த நாணினன் - மேன்மேல் வளர்கின்ற வெட்கத்தையுடையவனும், (அப்போது மூணட கோபத்தினுல்), மாதிரம் அனைததையும் - திக்குக்களையெல்லாம், மறைவிதது - மறையச செய்து, அளந்த - அளவிடுகின்ற, தோளினன் - தோள்களையுடையவனும், அனல்சொரி கண்ணினன் - நெருப்பைக்கக்குகின்ற கண்களையுடையவனுமாய, 'இவளை—, பிளந்து தின்பேன்—', என்று - என்று சொல்லி, உடன்றனன் - கோபித்து, கிளர்ந்த - (இப்படிப்) பொங்கியெழுந்த, சீற்றமும - கோபமும், காதலும - (பிராட்டியினிடததுக்கொணட) ஆசையும், எதிர் எதிர் கிடைப்ப - மாறிமாறிததோன்ற, பெயர்ந்தனன் பெயரான் - (அப்பிராட்டியுள்ள இடததைநோக்கிச) செல்லுதலும் செல்லாமலிருததலு முடையவனுனன; (எ - று.)

'ஒருபெண இப்படிததனக்குப் புததிகூறுமாறு ஆயிறறே!' என்று நினைக்க நினைகக ஒருபால் வெட்கம் மேலிட்டு, மற்றொருபால தனது கருத்து நடேறுமையாற் கோபம் மிக, அதனுல் தோள்கள் வளரக் கணகள் நெருப்புப்பொறிபறக்க, 'இவளைப் பிளந்து தின்பேன்' என்றுஎழுந்து, அப்பிராட்டியினிடங்கொண்ட மோகததினுல் அடியெழாமற் சிறிது பின்வாங்க இவ்வாறு ஒன்றும செய்யமாட்டாது தவிததனன் இராவணனென்பதாம். கீழ்ச்செயயுளில் இராவணனது சினம் காதலை வென்றிட்டமையைக கூறினவர் இசசெய்யுளில் அஃது சிறிதுகுறைய, காதலும் சீற்றமும் ஒததநிலையின வாயினமையைக கூறினரென்க. பி - ம்:—[1]உடன்றவன். [2]நின்றனன்பெயராக், பெரியவடன்பாற. [3]இடையிடை. (சுக)

சுஉ.—அப்பொழது அநுமான் கொண்ட சிந்தனை.

அன்ன காலையி னனுமனு மருந்ததிக கற்பி
னென்னை யாளுடை நாயகன் றேவியை யென்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன் முன்றுகைத துழக்கிப்
பின்னை நின்றது செய்குவெ னென்பது பிடித்தான.

(இ - ள்.) அனுமனும்—, அன்ன காலையின் - அப்பொழுது,—'அருந்ததி கற்பின் - அருந்ததிபோன்ற பதிவிரதாதருமததையுடைய, என்னை

ஆள் உடை நாயகன் தேவியை - என்னையாட்கொண்டுள்ள தலைவனாகிய இராமபிரானது மனைவியாகிய இச்சீதாபிராட்டியை, என்முன் - எனக்கு எதிரில், சொன்ன - தாறுமாறாகப்பேசிய, நீசன - இழிகுணமுடைய இவ் விராவணன், கைதொடுவதன்முன் - 'தன்) கையினால பரிசிப்பதற்கு முன்னமே, துகைத்து உழக்கி - (அவனைகாலினால்) மிதித்து வருத்தி, பின்னை - அதன்பின்பு, நின்றது - செய்யவேண்டுவதான (சீதையைச் சிறைமீட்டலாகிய) செயலை, செய்குவென் - செய்வேன்,' என்பது - என் பதை, பிடித்தான் - மனத்தில் நினைத்தான்; (எ - று.)

'சீதையைப் பிளந்து தின்பேன்' என்று இராவணன் சினந்ததைக் கண்ட அனுமான் 'ஒருகால் அவ்வாறே செய்திடுவனோ?' என்று அஞ்சி, 'அவ்வாறு செய்யத் தொடங்குமுன் நான் இவனை ஒழித்துவிடவேண்டும், என்று கருதின னென்பதாம். (௬௨)

௬௩.—இதுவும் அது.

தனியி னின்றனன றலைபத்துங் கடிதுகத் தாக்கிப்
பனியின் வேலையி லிலங்கையைக் கீழுறப பாய்ச்சிப்
புனித மாதவத் தணங்கினைச் சுமந்தனன் போவா
னினிதி னென்பது நினைந்தனன் கரம்பிசைந் திருந்தான்.

(இ - ள்.) (பின்னும் அனுமான்),—'தனியில் நின்றனன் - தனிய னாய் நிற்கின்றவனான இவ்விராவணனது, தலை பத்தும - பத்துத்தலைகளை யும, கடிது உக-விரைவிற சிதறும்படி, தாக்கி - மோதியடித்து, பனியின் வேலையில் - குளிர்சசி பொருந்திய சமுத்திரத்தில், இலங்கையை - இவ் விலங்காபட்டணத்தை, கீழ் உற கீழேஅழுந்தும்படி, பாயசசி - போகச செய்து, புனிதம மாதவத்து அணங்கினை - பரிசுத்தமான பெருந்தவத் தையுடைய பிராட்டியை, சுமந்தனன - எழுந்தருளப்பணிகொண்டு, இனிதின் - சுகமாக, போவான் - போதலே, (தக்கது)', என்பது - என் பதை, நினைந்தனன்-எண்ணினவனாய், கரம பிசைந்து இருந்தான்-கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான்; (எ - று.)

மரதின்மேலேயிருந்த அனுமான், இராவணனது கடுஞ்சொற் களைக்கேட்டுச சீறறம்மிகுந்து, 'இபபோதே நாம் இவனது பத்துத்தலைகளை யும சிதறவடித்து, இலங்கையைக கடலினுள்ளே மூழ்கவடித்து, இப்பிராட் டியை எழுந்தருளபபணிக்கொண்டு போகலாமா? அவ்வாறு செயவது ஒருகால் இராமபிரானது திருவுள்ளத்துககுப் பாகாது அல்லாமலும் அப்பெருமானது பெருமைக்குக் குறைவாகவும் இருக்குமோ?' என்று நினைததுச செய்வது உறுதிபபடாமற கவலையினால கையைப் பிசைந்து கொண்டிருந்தன னெனக (௬௩)

௬௪.—இராவணனதுசினம் காதலால் தணிந்துவிட, மீண்டும் அவன் கூறத்தொடங்குதல்.

ஆண்ட வாளரக் கன்[1]கனன் றண்டத்தை யழிப்பான்
மூண்ட காலவெந் தீயென முற்றிய சீறற

நீண்ட [2]காதனீர் நீத்தத்தின் [3]வீவுறு நிலையின்
மீண்டு நின்றொரு தன்மையா லிவை யிவை விளம்பும்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, அ வாள் அரக்கன் - வாள்போற் கொடிய இந்தஇராவணன்—, கனன்று - உகிரகொண்டு, அண்டத்தை அழிப்பான் - உலகத்தை யழிகரும்பொருட்டு, மூண்ட - கிளம்பின, காலம் வெம் தீ என - கொடிய காலாகினிபோல, முற்றிய - முதிர்ந்து நின்ற, சீற்றம் - (தனது) கோபாக்கினியானது, நீண்ட காதல் நீர் நீத்தத்தின் - மிகுந்த காமமாகிய நீர்வெள்ளததினால், வீவுறும் நிலையின் - அவிகின்ற தன்மையிலே, மீண்டு - திரும்பிவந்து, நின்று—, ஒரு தன்மையால் - ஒப்பற்ற (காதல்) தன்மையினால், இவை இவை விளம்பும் - பின்வருவனவற்றைக் கூறுவானாயினான்; (எ - று.)—அவற்றை, அடுத்த எட்டுச்செய்யுளிற் காண்க.

யுகாந்தகாலத்தில் உலகங்களையெல்லாம எரித்து அழிக்கின்ற காலாக்கினிபோல இராவணனுக்குச சீதாபிராட்டியினிடமதோன்றிய கோபாக்கினியானது காதல்வெள்ளததினால் அடியோடு அழிந்துவிட, உடனே அவ்விராவணன் மீணடுவந்து சில கூறத்தொடங்கின னென்பதாம். அ வாளாரககன், தொகுத்தல். பிரளயகாலததிலே பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய ஆயிரம் முகங்களிலிருந்து வெளிவரும மிகப்பெரிய மூசசுககாறறிலிருநது காலாக்கினி யுருததிரமூர்ததி புண்டாகிக கோபாவேசததோடு விஷாகினிசசுவாலைகளினால் அதியுக்கிரமாய் உலகங்களையெல்லாம் எரித்திடுவ ரென்பதும், கடலினிடையே யுள்ளதான வடவாமுகாக்கினியும் அசசமயத்தில் வெளிகக்கிளம்பி உலகங்களையெரிககு மென்பதும் நூற்கொள்கை. காதலைநீர்நீததம் என்று உருவகஞ் செய்ததற்கு ஏறபச சீறறத்தை அக்கினியாகக் கொள்க. பி - ம்:—[1]காததணடததை. [2]காமநீர். [3]அவிற்ற. [4]இனையன. (கச)

வேறு.

சுரு.—இதுமுதல் எட்டுக்கவிகள்-இராவணன் சீதையை நோக்கி மீண்டுங்கூறுவன.

கொல்வெனென் றுடன்றே னுன்னைக் கொல்கிலன் குறித்துச சொன்ன, சொல்லுள வவற்றுக் கெல்லாங் காரணந் தெரியச் சொல்லி, னெல்வதீ தொல்லா தீதென் றெனக்குமொன் றுலகத் துண்டே, வெல்வதுந தோற்ற றானும விளையாட்டின் விளைந்த மேனாள்.

(இ - ள்) கொல்வென் என்று - (யான் உன்னைக்) கொன்றிடுவே னென்று, உடன்றேன் - சினங்கொணடேன், (அபபடிச சினங்கொணடமெ இப்போது), உன்னை கொல்கிலன் - (நான் உன்னிடததுக்கொண்ட அன்பினால்) உன்னைகொல்லமாட்டுகிறிலேன்; குறிதது சொன்ன - என்னைப்பறறி நீ இழிவாகப்பேசிய, சொல் - சொறகள், உள - உணமையாகவே யுள்ளன; அவறறுக்கு எல்லாம - அவைகளுக்கெல்லாம், காரணம -

காரணத்தை, தெரிய சொல்லின் - விளங்கும்படி சொல்வதானால்,—உலகத்து - இவ்வுலகத்தில், எனக்கும்—, 'ஒல்வது ஈது - எளிதிற்செய்தற்கு உரியது இத்தொழில்; ஒல்லாது ஈது - செய்யமுடியாதது இது', என்று—, ஒன்று உண்டோ - ஒன்று உள்ளதோ? மேல்நாள் - முன்னாளில், வெல்வதும் - (நான்) வெற்றியடைந்ததும், தோற்றல் தானும் - (நான்) தோல்வியடைந்ததும், விளையாட்டின் - விளையாட்டாகவே, விளைந்த - நேர்ந்தன; (எ - று.)

'நீ இப்போது என்னைப்பற்றி இழித்துக்கூறியவை உண்மையாக நிகழ்ந்தவை யென்றாலும், அவை எனது வல்லமையின்மையினால் நிகழ்ந்தனவல்ல; விளையாட்டுத் தன்மையால் நிகழ்ந்தவை; எனக்கு இவ்வுலகத்தில் முடியாத காரியம் எதுவுமில்லை' என்று இராவணன் சீதையை நோக்கிக்கூறின னென்பதாம். சீதை இராவணனைக்குறித்துச்சொன்ன பழிப்புச்சொற்கள் - இளையவன் இல்லாத சமயம்பார்த்துத் தன்னைத் தூக்கிச்சென்றது, சடாயுவின்சிறையினு லடிப்பட்டு வீழ்ந்தது, கார்த்தவீரியார்ச்சுனனிடத்திற் பிடிபட்டது என்பவை. (சுரு)

சுசு. ஒன்றுகே ளுரைக்க நிற்கோ ருயிரென வுரியோன் றன்னைக்
கொன்றுகோ ளிழைத்தா னீநின் னுயிர்விடிற் கூறறங் கூடு
மென்றனு ருயிரு நீங்கு மென்பதை யிவைய வெண்ணி
யன்றுநான் வஞ்சஞ் செய்த தாரெனக் கமரி னேர்வார்.

(இ - ள்.) உரைக்க - (நான்) சொல்ல, ஒன்று - ஒருவிஷயத்தை, கேள் - கேட்பாயாக:—'நிறகு - உனக்கு, ஓர் உயிர் என - ஒப்பற்ற பிராணன்போல, உரியோன் தன்னை - கணவனான இராமனை, கொன்று - கொலை செய்து, கோள் இழைத்தால் - (உன்னைக்) கவர்ந்துகொண்டுவந்தால், நீ—, (அதற்காக), நின் உயிர் விடின் - உனதுஉயிரை (விடுதல்கூடும்; அவ்வாறு) விடுவாயானால், கூற்றம் கூடும - (அப்போது என்னுயிரைக் கொள்ளும்படி) யமன் (வருவான); (அதனால்), என்தன் ஆர் உயிரும் நீங்கும்—[நானும் இறந்தொழிவேன்]', என்பதை - என்கிற இந்தஒருவிஷயத்தையே, இவைய எணணி - பொருந்த ஆலோசித்து, அன்று - முன்னாளில், நான் வஞ்சம் செய்தது - நான் (உன்னை) வஞ்சனையாற் கவர்ந்துவந்த செயல் நிகழ்ந்தது; (அது காரணமேயன்றி வஞ்சனையாகக கவர்ந்து சென்றதற்கு வேறுகாரணமில்லை;) அமரில் - போரில், எனக்கு—, நேர்வார் - எதிரில்நிற்பவர், ஆர் - எவர்? (எ - று.)—இதனால், இராவணன் வஞ்சனையாற் கவர்ந்துவந்ததற்குக காரணம எடுத்துக்காட்டின னென்க. (சுசு)

சுஎ. மானென்ப தறிந்து [1]போன மானுட ராவார் மீண்டி
யானென்ப [2]தறிந்தால் வாரா ரேழைமை யெண்ணி நோக்க
றேனென்ப தறிந்த சொல்லாய் தேவர்தாம் யாவ ரேயெங்
கோனென்ப தறிந்த பின்னைத் திறம்புவார் குறையினலலால.

(இ - ள்.) தேன் என்பது அறிந்த சொல்லாய் - தேனைப்போன்ற சொற்களையுடையவளே! மான் என்பது அறிந்து - (மாரீசன் மாயமா

ஞகிவந்ததை உணரமாட்டாமல்) உணமையான மானென்றேகருதி, போன - பின்தொடர்ந்துசென்ற, மானுடாஆவார் - (வலிமையற்ற) மனிதரான ராம லக்ஷ்மணர், மீணடு திரும்பி, யான் என்பது அறிநதால்-(சீதையைக கவாந்து சென்றவன்) இராவணனென்று தெரிநதுகொண்டால், வாரார் - உன்னை மீட்கும்பொருட்டு இஙகு) வரமாட்டார்கள்; எண்ணி - (அவாகள் வருவார்க ளென்று) நினைத்து, நோக்கல் - எதிர்பாாப்பது, ஏழைமை - (உனது) அறி யாமையேயாகும்; எம்கோன் என்பது - (சீதையைககவர்ந்துசென்றவன்) தமது தலைவனாகிய நான் என்பதை, அறிந்த பின்னை - உணர்ந்தபின்பு, குறை யின் அல்லால் - பின்வாங்குவதேயல்லாமல், திறமபுவார் - மாறுபட்டுபபொரு பவர்களான, தேவர்தாம் தேவர்கள்தாம், யாவர் - யாவருளா? [ஒருவரு மில்லை யென்றபடி]; (எ - று.)

இராமலட்சுமணர் உன்னை இஙகுநின்று மீட்டுககொண்டுபோமாறுவருவா ரென்று உனது அறியாமையினால் நீ கருதுகின்றாய்; உன்னைஎடுததுக் கொண்டுபோனவன் நான்என்பதை யுணாந்தால், தேவர்களேயாயினும், 'எமது தலைவன்' என்று சொல்லிக்கொணடு பின்வாங்காரேயல்லாமல், என் னோடு எதிர்ததுநிற்கமாட்டாாகளே! அப்படியிருகக, கேவலம மனிதரான அவர்கள் இஙகு வருவது எவ்வாறு இயலும்? இயலவே இயலாது என்று இரர்வணன் சீதையை நோக்கிக்கூறினனென்க. "ஏழைநின்னொளித்துறை" என்பது முதலியவற்றால், இராமபிரான் லக்ஷ்மணனுடன்வந்து தன்னைமீட்பா னென்று நம்பிசசீதாபிராட்டி கூறியவற்றிற்கு மாறு கூறியவாறு. 'நோக்கல்' என்பதை எதிாமறை முற்றாகக் கொணடு, ஏழைமையினால் இராமலட்சும ணர் வருவாரென்று கருதி அவரை எதிர்பாராதே என்று பொருள்கூறினு மாம். பி - ம்:—[1]போநத, போனார். [2]அறிந்ததோராய் (கூஎ)

கூஅ வென்றோரு [1]மிருப்ப யார்க்கு மேலவர் விளிவி லாதோ
ரென்றோரு மிருப்ப வன்றே யிந்திர னேவல் செய்ய
வொன்றாத வுலக மூன்று முணாகின்ற வொருவன் யானே
மென்றோளா யிதற்கு வேறோர் காரணம் விரிப்ப துண்டோ.

(இ - ள்.) மெல் தோளாய் - மெல்லிய தோள்களை யுடையவளே! வென்றோரும் - (என்னை) வென்றதாக நீ கூறினவாகளும, இருபப - இருக்கட்டும்; விளிவு இலாதோர் - அழிவு இல்லாதவர்களாகி, யார்க் கும் மேலவர் என்றோரும - எல்லாாகளும் மேலானவரென்று சொல் லப்படுகின்ற திரிமூாத்திகளும், இருப்ப - கிடக்கட்டும், அன்றே - அன்று தொடஙகியே [வெகுகாள்முன்பு தொடஙகியே], இந்திரன் - தேவராச னான இந்திரன், ஏவல செய்ய - ஊழியஞ்செய்யுமாறு, ஒன்றாத - ஒரு படிப்பட்டிராத, உலகம் மூன்றும் - மூன்று உலகததாரும, உணாகின்ற - ('இவனே எல்லாரினும் உயர்ந்தவன்' என்று) தெரிந்து கொள்ளு கின்ற, ஒருவன் - ஒப்பறறவன், யானே - நானொருவனே யல்லவோ?

இதற்கு - (இப்படிப்பட்ட எனது) பெருமைககு, வேறு ஓர் காரணம - வேறொரு ஏதுவை, விரிபபது - விவரிததுச சொல்லவேணடியது, உணடோ- உள்ளதோ? (எ - று.)

காரதததவீரியன் முதலிய சிலா என்னை வென்றிருக்கிறாகளென்று சொன்னாய்; தரிமூர்ததிகளை உயாந்ததவரென்று நாட்டிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள்; இவர்களுள் என்போல தரிலோகாதிபதியான தேவேந்திரன் ஊழியஞ்செய்ய மூன்றுலோகத்திலும் ப்ரஸிததிபெற்றவர் யாவரேனும் உணடோ? அப்படியில்லாமையால் அவாகள யாவரினும் நானே உயாந்தவனென்பதற்கு வேறுகாரணம காட்டவேண்டுமோ? என்று இராவணன் தான் யாவரினும உயர்ந்தவனென்பதைத தெரிவிததவாறு. யார்க்கும் மேலவா விளிவிலாதோர் என்றோரும என்பதற்கு - தரிமூர்ததிகளினும் உயாந்தவராய (ப் பகைவாகளால்) அழிவில்லாதவரென்று நீ கருதுகின்ற ராமலக்ஷ்மணருமென்று கூறினுமாம். இருப்ப - வியங்கோள்முற்று. பி-ம்:— [1]இருகக. (௬௮)

௬௯. மூவருந் தேவர் தாமு முரணுக முற்றுங் கொறறம், பாவைநின் பொருட்டி னாலோ பழி [1]பெறப் பயன்றீர் நோன்பி, [2]னுவியின் மனிதர் தம்மை யடுகிலே னவரை [3]யீண்டுக், கூவிநின் றேவல் கொள்வென் காணுதி குதலைச் சொல்லாய்.

(இ - ள்.) குதலை சொல்லாய் - மழலைசசொற்களையுடையவளே! பாவை- சித்திரப்பிரதிமைபோன்றவளே! மூவரும்-திரிமூர்ததிகளும், தேவர்தாமும் - மற்றைததேவாகளும், முரண் உக - வலிமை யொழியும்படி, முற்றும - நிரம்பக்கிடைத்துளள, கொறறம் - (எனது) வெற்றியானது, நின்பொருட்டினால் - உன்நிமிததமாக, ஓா பழி பெற - மிகக அபகீர்த்தியை யடையும்படி, பயன் தீா நோனபின் - பயனற்ற விரதங்களையுடைய, ஆவி இல்- வலிமையற்ற, மனிதாதம்மை - (இராமன் லக்ஷ்மணன் என்ற) அவ்விரண்டு மனிதாகளையும, அடுகிலேன் - கொல்லமாட்டேன்; அவரை - அவ்விருவரையும், ஈண்டு - இங்கே, கூவி நின்று - அழைதது, ஏவல் கொள்வேன்- பணிவிடை செய்யுமாறு செய்வேன்; காணுதி - (எனது) திறமையைப பாா; (எ - று.)

திரிமூர்ததிகளையும் மற்றைத்தேவரையும் வென்ற எனக்கு இந்த இரண்டு மனிதரைக கொன்றொழிப்பது ஒருபெரியகாரியமன்று; ஆனால், நான் அப்படிசசெய்வது எனதுவீரததுக்குப் பழியாகுமாதலால் அவ்வாறு செய்யவிரும்பவில்லை; இப்போது அவாகளைக் கொல்லாமலே எனது வீரத்தினால் அவர்களைப் பிடித்துக் கொணாந்து அடிமையாககொள்வேனென்று தனதுவீரம்தோன்றக் கூறியவாறு. பி - ம்—[1]வர. [2]ஆவியல். [3]ஈண்டக். (௬௯)

௭௦. சிற்றியற் சிறுமை யாற்றல் சிறுதொழின் மறவ ரோடு
[1]முற்றிய தாவில் வீர முனிவென்கண் விளையா தேனு

²மிற்றையிற் பகலி னெய்தி யிருவரை யொருகை யாலே
பற்றினென் கொணருந் தன்மை காணுதி பழிப்பி லாதாய்.

(இ - ள்.) பழிப்பு இலாதாய் - குற்றமற்றவளே! சிறு இயல-அற்பத் தன்மையும், சிறுமை ஆறறல் - அற்பபலமும், சிறு தொழில் - அற்பச் செய்கையுமுடைய, மறவரோடு - அற்பவீரரான ராமலக்ஷ்மணா விஷயத்தில், முற்றிய - முதிர்ந்த, தா இல் - குற்றமில்லாத, வீரம் - வீரததினால் தோன்றுகின்ற, முனிவு - கோபம், என்கண - என்னிடத்து, விளையாது எனும் - உண்டாகாதென்றாலும், (நான அவர்களை உபேட்சித்திருப்பதைக காரணமாகக்கொண்டு என்னை வலியற்றவ னென்று நீ கருதுவதனால்), இற்றையின் பகலின் - இன்றைப் பகற்பொழுதிலேயே, எய்தி - (அவர்களுள்ளவிடஞ்) சென்று, இருவரை - அவ்விருவரையும், (எனது பததொன்பதுகைகளும் வேலையில்லாமலிருக்க), ஒரு கையாலே—, பற்றினன் கொணரும் தன்மை - பிடித்துகொண்டுவரும வேடிகைகையை, காணுதி - பார்ப்பாய்; (எ - று.)

மூவுலகங்களையும எளிதில்வென்ற எனதுவீரததுக்கு இழுக்காகுமென்று யான் இதுவரையில் அற்பவீரரான அந்த ராமலக்ஷ்மணாமீது கோபங்கொள்ளாதிருந்தேன்; அதுபற்றி என்னைக் குறைவாக நீ மதிததலால், நான் இப்போதே சென்று அவ்விருவரையும் எனது ஒற்றைக்கையினாலேயே பிடித்துக்கொண்டுவருகின்றேன்; பார்! என்று இராவணன் கூறினனென்க பி - ம்:—¹முற்றியதாயின். ²இற்றையிப். (எ௦)

எக. பதவிய மனித ரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
வுதவியை யுணர நோக்கி னுயிர்க்கொலைக் குரிய ரல்லர்
சிதைவுற லவர்க்கு ¹வேண்டிற் செய்திறன் றேர்ந்த தெண்ணி
²னிதனினக் கீதே யாகி னியற்றுவல் காண்டி யின்னும்.

(இ - ள்.) பைந் தொடி - பசுமையான வளையல்களையணிந்தவளே! பதவிய - (நான் தின்னுவதற்குப்) பக்குவமான, மனிதா எனும் - மனிதாகளேயானாலும, (ராமலக்ஷ்மணாகள்),—நின்னை - உன்னை, தந்த - (எனக்குக்) கொடுததத, உதவியை - உபகாரததை, உணர நோக்கின் - நன்றாக ஆலோசிததால், உயிர் கொலைகு - உயிரைகொல்லுதற்கு, உரியர் அலலர் - ஏற்றவராகார்; (அதற்குமாறாக), அவர்க்கு-அவ்விருவர்ககும, சிதைவு உறல் - அழிவுநேரதலை, வேணடின - (நீ) விரும்பினால், செய் திறன் தேர்ந்து அது எண்ணின் - (நான்) இனிச செய்யபபோவதை ஆலோசிதது அது (அவ்வாறே நிகழவேணடுமென்று) விரும்பினால்,—நினக்கு இதன் ஈதே ஆகின் - உனக்கு நன்மை இதுவே யாகுமானால், இயற்றுவல் - (நான்) அவ்வாறே செய்வேன் [ராமலக்ஷ்மணர்களைக கொல்வேன்], காணடி - (இதனைப்) பார்: இன்னும் - இதன்மேலும்,—(எ - று.)—இசசெய்யுளிலுள்ள 'இன்னும்' என்ற சொல் அடுத்த கவியில் 'அயோத்தி நண்ணி' என்பதனோடு தொடரும்.

உன்னை எனக்குக் கொடுத்தவரென்ற நன்றியறிதலினால் நான் இது வரையில் ராமலக்ஷ்மணர்களைக் கொல்லப் பின்வாங்கினேன்; இவ்வளவு காலம் சென்றும் நீ எனக்கு இணங்காமையால், இனி உனக்கு விருப்பத்தைச் செய்யவேணு மென்ற என் கருத்தை மாற்றி, இப்போது நான் அவர்களைக் கொல்வேனென்பதாம். நீ இதுவரையில் எனககு இணகாமையால், நான் ராமலக்ஷ்மணர்களை இனிக் கொல்வேனென்பதை யுணர்ந்து அதனையே நீ உனககு இதமென்று கருதினாற்போலத் தோன்றுகின்ற தென்று, தான் சீதையை மருட்டியாவது இணங்குவிக்கலா மென்று இராவணன் பின்னிரண்டடிகளாற கூறுகின்றனனென்க; அடுத்த செய்யுளும் இக் கருததே பற்றிவரும். பி - ம் —[1]வேணடிசசெய்தநீதேர்ந்ததின்றி. [2]இதனிக ரோதியாகில். (எக)

எஉ. பள்ளநீ ரயோத்தி நண்ணிப் பரதனே முதலி னோராண், டுள்ளவர் தம்மை யெல்லா முயிராகுடித் தூழித் தீயின், வெள்ள நீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதி னெய்திக், கொள்வெனின் னுயிரு மென்னை யறிந்திலை குறைந்த நாளோய்

(இ - ள்.) குறைநத நாளோய் - வாழ்நாள் குறைந்தவளே! [இறக் குவகாலம் நெருங்கப்பெற்றவளே!] (நான்), பள்ளம் நீர அயோத்திநணணி - ஆழமான நீருள்ள அயோத்தியாபட்டணததை யடைந்து, ஆண்டு உள்ளவர் பரதனே முதலினோர்தமமை எல்லாம் - அநகுள்ளவரான பரதன்முதலிய எல்லாரையும், உயிர குடிதது - உயிரை வதைத்து, ஊழி தீயின் - யுகாந்த காலதது அகனினிபோல, வெள்ளம் நீர மிதிலையோரை - பிரவாகமான நீரையுடைய மிதிலையிலுள்ளவரையும, வேர்அறுதது - அடியோடு ஒழிதது, எளிதின் எய்தி - சுலபமாக (இங்கு) வந்து, நின் உயிரும்-உனது பிராண னையும், கொள்வென் - வாங்கிவிடுவேன்; என்னை அறிநதிலை - எனது பராக் கிரமத்தை (இன்னதென்று) அறிந்தாயில்லை; (எ - று.)

இராமலக்ஷ்மணரைக் கொல்வதோடு நில்லாமல், அவர்கள்பிறந்த ஊரான- அயோத்தியிலுள்ள பரதன்முதலியோரையும் நீ பிறந்தஊரான மிதிலையிலுள்ளவரையும் வேரோடழிதது, அப்போதும் இணகாயாயின் உன்னையும் கொனறுவிடுவே னென்று இராவணன் சீதைககு அசச முறுத்தின னென்க. (எஉ)

எங.—இராவணன் சீதையை அச்சுறுத்திச் செல்லுதல்.

ஈதுரைத் தழன்று பொங்கி யெரிகதிர் வாளை நோக்கித்
தீ[1]துயிக் கிழைக்கு நாளுந [2]திங்களோ ரிரண்டிற றேய்ந்த
தாதலி [3]னின்ற தெண்ணென் றறிந்தவா [4]றறிவா யென்னாப்
போதரிக்,கண்ணி னாளை [5]யகத்துவைத் துரப்பிப் போனான்.

(இ - ள்.) ஈது - இவ்வாறுனசொல்லை, உரைத்து - சொல்லி, (இரா வணன்), அழன்று பொங்கி - மிகவுங கோபித்து, எரி கதிர் வாளை நோககி - (தனது) விளகுகின்ற ஒளியையுடைய வாளாயுதத்தைப் பாா த்து, (மீணடும சீதாபிராட்டியை நோககி, 'நீ இணங்காவிட்டால்)

உயிர்க்கு - (உனது) உயிருக்கு, தீது இழைக்கும் - தீமையைச செய்ய வேணடிய [உன்னைக் கொலலவேணடிய], நாளும்-நாளும், திங்கள் ஓர் இரணடில் - இரண்டுமாதகாலததிறகுள், தேய்ந்தது முடிந்துவிடும்; ஆதலின் - ஆகையால், நின்றது - இனி உனக்கு நேர இருபபதை, எண-ஆலோசிததுப்பார்', என்று - என்றும், 'அறிந்த ஆறு - புததிமானகள ஆலோசிககின்ற முறையில், அறிவாய் - (இப்போது செய்யததக்சதை) ஆலோசித்துப்பார', என்ஞ - என்றுஞ்சொல்லி, (இராவணன்), போது அரி கணணிஞளை - செந்தாமரைமலா போன்றனவும் செவ்வரி பரந்தனவுமான கண்களையுடைய பிராட்டியை, அகதது வைதது - (தன்) மனததில் எணணியவண்ணம், உரப்பி - (பலவாறு) அதட்டிவிட்டு, போஞன் - அவ்விடத்தைவிட்டுச சென்ருன்; (எ - று)

இராவணன் சீதாபிராட்டியைக் கவாந்துவந்து தன்விருப்பத்தை அவளிடத்துத்தெரிவிததபோது அன்ஞள் இணஙகாது பழித்துப்பேச, அப்பொழுது அவ்விராவணன் கடுஙகோபஙகொணடு "சீதையே! நான் சொல்வதைக் கேள்; பன்னிரண்டுமாதகாலம் நான் பொறுத்துப்பார்ப்பேன்; அதற்குள் நீ என்னையடையாவிட்டால், பாசகா என்னுடைய காலையுணவுககாக உன்னைக கணடம்கணடமாக வெட்டிவிடுவார்கள்" என்று கூறியதாக வான்மீகத்திலிருப்பதும், பெரும்பாலும பதது மாதஙகள்கழிந்த இந்தச்சந்தாப்பததில் ஸ்ரீ வால்மீகத்தில் இராவணன் "த்வெளமாஸௌ ரக்ஷிதௌயௌமே, யோவதிஸ்தே மயாகருத:-ததஸ்ஸாயமாரோஹ மம த்வம் வரவர்ணினி ஊர்த்வம தவாப்யாந்து மாஸாப்யாம பர்ததாரம மாமநிசசதீம - மமதவாம் ப்ராதராஸாததம் ஆரபந்தேமஹாநஸே! [நான் உனககு முன்பு குறிததுள்ளபடி இன்னும் இரணடு மாதங்கள் வரையில் பார்ததிருககவேணடும். சிறநதவடிவழகுடையவளே! அதறகுள்ளாவது நீ எனது பகிககையை யேறுக. இரண்டுமாதம் கழிந்துவிட்டாலோ தாமதமின்றி அடுததநாள் பகலில் தானே என்னைக் கணவனுக விரும்பாத உனனைப் பாசகா எனது காலைப்போசனததிற்காகக கொல்வாரகள்" என்று கூறியதும் நோககத்தககன. வாளைநோகஙியது - அதறகுள் நீ இணஙகாவிட்டால் இந்த வாளே உன்னைக கொல்லுமென்று தெரிவிததறகு சீதையை எபபொழுதும நினைததவண்ணமாகவே இராவணன் இருககின்ருனென்பார், 'போதரிககண்ணிஞளை யகத்துவைததது' எனருர; இனி, 'பிராட்டியை அரக்கியருடைய நடுவில்வைததது' என்று கூறலுமொன்று. தேய்ந்தது, நின்றது என்பவை - இயலபினுல்வந்த காலவழுவமைதிகள். பி - ம்:— [1]உயிரதது. [2]திங்களிரணடிற்றீநத. [3]பின்னைநீயே [4]அறிதியென்ஞ. [5]தெளித்து. (எ௩)

எ௪.-இராவணன் 'சீதையை எப்படியாவது வசப்படுத்த வேண்டும்' என்று அரக்கியர்க்குக் கட்டளையிட்டுச் செல்லுதல்

அஞ்சுவித் தானு மொன்ரு லறிவுறத் தேற்றி யானும்
வஞ்சியிற் செவவி யாளை வசிததென்பால் [1]வருவீ ரன்றே

ஞ்சுமக் காவெ னென்ரு நகையிலா முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத் தரக்கி மார்க்கு வேறுற வுணர்த்திப [2]போனான்.

(இ - ள்.) (பின்பு இராவணன்),—'வஞ்சியின் செவ்வியாளை - வஞ்சிக் கொடிபோல் அழகுள்ள சீதையை, அஞ்சுவிதது ஆனும்-பயப்படுத்தியாவது, அறிவு உற - (அவளுக்கு) நல்லறிவு உண்டாகும்படி, தேற்றி ஆனும் - சமாதானவார்த்தை கூறியாவது; ஒன்ருல் - ஏதேனும் ஒருவகையால், வசிதது - வசப்படுததி, (பிறகு), என்பால் - என்னிடத்தில், வருவீா -(எனக்கு அதனைத் தெரிவிக்குமாறு) வாருங்கள். அன்று ஏல் - (அவ்வாறுசெய்ய உங்களால்) ஆகாது ஆனுல், உமக்கு நஞ்சு ஆவென் - (நான்) உமகட்கு விஷம்போலக கொடியவனுவேன்,' என்று—, நகை இலா முகத்து பேழ் வாய் வெம்சினத்து அரகிமார்க்கு - சிரிப்பில்லாத [எபபோதும் கடுமையையேயுடைய] முகத்தையும பிளவுபட்டவாயையும கடுகோபத்தையுமுடைய ராக்ஷஸ ஸ்திரீகளுக்கு, வேறு உற உணர்த்தி - தனியாகக கூறிவிட்டு, போனான் - (தன்னிருப்பிடம் நோகிச) சென்றான்; (எ - று.)

'எப்படியாவது சீதையை வசப்படுத்தாவிட்டால் நான் உங்களைக்கொல் வேன்' என்று அரகிமாரைத் தனியேயழைததுக கட்டளையிட்டு, இராவணன் சென்றன னென்க. வசித்து - வஶம் என்ற வடமொழியினடியாப் பிறந்த இறந்தகாலவினையெசசம். பி - ம்:—[1]வரசசொல்லீரேல், வருவீரன்ருல். [2]மீண்டான். (எச)

எரு.—அரக்கிமார்கள் தம்தமக்குத் தோன்றிய வாறு சீதையை அதட்டிக் கூறத் தொடங்குதல்.

போயின னரக்கன் பின்னைப பொங்கரா நுங்கிக கான்ற
தூயவெண் [1]மதிய மொத்த தோகையைத் தொடர்ந்து சுற்றித்
தீயவல் லரக்கி மார்க டெழீஇத்தெழித் துரப்பிச் சிந்தை
மேயின [2]வண்ண மெல்லாம் [3]விளம்புவ ருடன்று மிக்கார்.

(இ - ள்.) அரக்கன் போயினன் - இராவணன் (தன்னிடத்திற்குப்) போய்விட்டான்; பின்னை-பின்பு, பொங்கு அரா சீறுந் தன்மையுள்ள இராகு, நுவகி கான்ற - விழுங்கி வெளிபுமிழ்ந்த, தூய வெள்மதியம் ஒத்த - பரிசுத்தமாய் வெண்ணிறமான பூரணசந்திரனைப்போன்றவளும், தோகையை - மயில் போன்ற சாயலையுடையவளுமான சீதாபிராட்டியை,—மிக்கார் - மிகபபலராகிய, தீய வல் அரகிமார்கள - மிகக்கொடிய ராக்ஷசஸ்திரீகள், தொடர்ந்து சுறறி - ஒருசேரச சூழ்ந்தபடி, உடன்று - மிகவும் கோபங்கொண்டு, தெழீஇ தெழிதது உரபபி - மிககபேரொலியுண்டாகுமாறு அதட்டி, சிந்தை மேயின வணணம எல்லாம் - தங்கள் மனமபோன விதமெல்லாம், விளம்புவர் - கூறலானுர்கள்;(எ - று.)—அவற்றை, மேலே நான்குகவிகளிற் காணக,

இராவணனால் அசசுறுத்திக கூறப்பெற்று விடப்பட்ட சீதாபிராட்டிக்கு, இராகுவினால் உட்கொள்ளப்பட்டுக் ககப்பெற்ற சந்திரன் உவமையாவன். பி - ம்:—[1]மதியை. [2]எணணம். [3]விளம்புவான். (எரு)

வேறு.

எசு.—இதுமுதல் நான்குகவிகள் - அரக்கியர் தம்தமக்குத்தோன்றியவாறு சீதையைக் கடிந்துகூறுதல்.

முன்முன் னின்றார் கண்கனல் சிந்த முடுகுற்றார்
மின்மின் னென்னுஞ் சூலமும் [1]வேலு மிவையோச்சிக்
கொன்மின் கொன்மின் கொன்று [2]குறைத்துக் குடாராத்
தின்மின் றின்மி னென்று தெழித்தார் சிலரெல்லாம்.

(இ - ள்.) சிலர் எல்லாம் - அரகிமார்களிற சிலர்,—முன் முன் நின்றார் - (ஒருத்தியைவிட மற்றொருத்தி சீதையைக் கடிவதில்) முற்பட்டுநின்றவராய், கண கனல் சிந்த - தமது கண்களினின்று நெருப்புப்பொறிபறக்க, முடுகுற்றார் - விரைந்தவர்களாய், மின்மின் என்னும் சூலமும் வேலும் இவை-பளிசசுப்பளிசசென்று ஒளிவீசுகிற சூலாயுதமும வேற்படையும் என்ற இவைகளை, ஓசசி - உயரத தூக்கிக்கொணடு, கொன்மின் கொன்மின் கொன்று குறைத்து குடாஆர தின்மின் தின்மின் என்று - இவளைக்கொல்லுங்கள் கொல்லுங்களென்றும் (இவளைக்) கணடம் கணடமாகக்கி கொன்று வயிறு நிறையத் தின்னுங்கள தின்னுங்களென்றும் கூறி, தெழித்தார் - அதட்டினார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]வாளும்மவை, [2]முறித்து. (எசு)

எஎ. வையந் தந்த நான்முகன் மைந்தன் மகன்மைந்த
னையன் வேத மாயிரம் வல்லோ னறிவாளன்
மெய்யன் புன்பால் [1]வைத்துள தல்லால் வினைவென்றோன்
செய்யும் புன்மை [2]யாதுகொ லென்றார் சிலரெல்லாம்.

(இ - ள்.) சிலர் எல்லாம்—,—வையம் தந்த - உலகத்தைப்படைத்த, நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனது, மைந்தன் - குமாரனாகிய புலஸ்தியமுனிவனுககு, மகன-குமாரனான விசிரவமுனிவனது, மைந்தன் - குமாரனும், ஐயன் - (மூவுலகுக்குந்) தலைவனும, வேதம் ஆயிரம் வல்லோன் - ஆயிரஞ்சாகைகளாக வுள்ள சாமவேதத்தில் மிகவும்வல்லவனும், அறிவாளன் - பேரறிவுடையவனும, வினைவென்றோன் - (தவஞ்செய்து) தீவினைகளையொழித்தவனுமான ராவணன், உன்பால் - உன்னிடத்தில், மெய் அன்பு - உண்மையான பிரீதியை, வைத்து உளது அல்லால் - வைத்திருப்பதல்லாமல், செய்யும் புன்மை - செய்துள்ள இழிதொழில்கள், யாது கொல் - யாதுதான்? என்றார் - என்று கூறினார்கள்; (எ - று.)

பலவகையாலுஞ் சிறப்புப்பெறற இராவணன் உன்மீது உணமையான அன்பை வைததா னென்றால், அது அவனது மேன்மையைக் காட்டுமே யன்றி, அவனுக்குக் குற்றமாகாது; அப்படிப்பட்டவன்

அன்புவைக்கவும், நீ அதனைப்பாராட்டாதது உனது புன்மையேயாமென்று சீதாபிராட்டியை நோக்கிக் கூறியவாறு. முதலடியினால் இராவணனது உயர்குடிப்பிறப்பையும், இரண்டாவது அடியினால் அவனது கல்வியறிவையும், 'வினைவென்றேன்' என்றதனால் அவனது செயலின் தூய்மையையும் அரக்கியர் விளக்கினர். பி - ம்:—[1]வைத்தனன். [2]யாதுளது. (எஎ)

எ௨. மண்ணிற்[1] றீய மானுயா தத்தம் [2]வழியோடும்
பெண்ணிற் றீயோய் நின்முதன் மாயும் பிணிசெய்தாய்
புண்ணிற் கோலிட் டாலன சொல்லிப் பொதுநோக்கா
[3]லெண்ணிக காணாய் மெய்ம்மையு மென்றார் சிலரெல்லாம்.

(இ - ள்.) சிலர் எல்லாம்—,—பெண்ணில் தீயோய் - பெண்களிற் கொடியவளே!—புண்ணில - புண்ணிலே, கோல் இட்டால் அன - கோலைக் கொண்டு குதறினாற்போன்ற கொடுஞ்சொற்களை, சொல்லி - (எமது அரசனை நோக்கிச்) சொல்லி, மண்ணில் - இவ்வுலகத்தில், மானுயர் - மனிதர்கள், தம் தம் வழியோடும் - தங்கள் தங்கள் வமசத்துடனே, தீய - அழிந்து போகுமாறு, நின்முதல் மாயும் -, உனது உடலும் அழியும்படியான, பிணி - நோய்போற் கொடியசெயலை, செய்தாய் - செய்துவிட்டாய்; பொதுநோக்கால் - (பட்சபாதமிலலாத) பொதுத்தன்மையால், மெயம்மையும் - உண்மையையும், எணணி காணாய் - ஆலோசித்துப்பாக்கின்றாயில்லை, என்றார் என்று கூறினார்கள்; (எ - று.)

நீ புண்ணிற் கோலிட்டது போலக் கொடுஞ்சொற்களைச் சொல்லிப் பட்சபாதங்கொணடு உணமையையுங கண்டறியமாட்டாமல் உலகத்து மானிடவர்க்கமே அழியும்படிக்கும் உனதுஉடமபும் ஒழியும்படிக்கும் தீம்பு செய்துகொணடாயே! உனது அறிவீனத்தை என்னெனறு சொல்வது! என்று சில அரகசியர் கூறின ரென்க. இனி, முதலடிக்கு— (உன்னிடத்து மெய்யன்புள்ள இராவணனிடம் விருப்பங்கொள்ளுவதை விட்டு) இந்தப்பூமியிலே அற்பமனிதாகள் பின்னேயே நாடிச் செலலுகிற, பெணணில தீயோய! என்று பொருளகாணுவாரு முளர். பி - ம்:— [1]தீயோர். [2]வலியோடும. [3]எணணில. (எஅ)

எ௩. புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகைவெந்தீ
யொக்க விதைப்பா யுற்றனை யன்றோ வுணர்வில்லா
[1]பிக்கண மிற்றாய் முந்தின மெலலா [2]மினிவாழாய்
சிக்க வுரைத்தே மென்று [3]தெழித்தார் சிலரெல்லாம்.

(இ - ள்.) சிலா எல்லாம்—, —'உணர்வு இல்லாய் - விவேகமில்லாதவளே! (நீ), புகுகவழிக்கும - புகுநதகுலததுக்கும, போந்த வழிக்கும - பிறநதகுலத்துக்கும, புகை வெந் தீ ஒக்க விதைப்பாய் உற்றனை அன்றோ - புகைகினற கொடுநெருப்பை ஒருசேர வாரியிறைக்கும்படி பொருநதினாயல்லவோ? இ கணம இற்றாய் - (நாங்கள் கூறும் வழியில் நடவாவிட்டால்) இப்போதே நீ இறப்பது நிசசயம்; இனி வாழாய - இனிமேல் நீ(இவ்வுலகததில) உயிருடன் இருக்கமாட்டாய்; முந்தினம் -

(நாங்கள்) முற்பட்டு, எல்லாம் - எல்லாவிஷயத்தையும், சிக்க உரைத்தேம் - (உன்மனத்திற்) பதியுமபடி செவ்வனே கூறினோம்,' என்று—, தெழிததார் - அதட்டிக் கூறினார்கள்; (எ - று.)—இற்றாய் - தெளிவினால் வந்த வழுவமைதி. பி - ம்:—[1]இக்கணமுற்றேயுன்னினம. [2]உயிர. [3]கதிர்ததா. (எகூ)

அ௦.—சீதாபிராட்டி தனக்குநேர்ந்துள்ள நிலைமைக்கு வருந்துதல்.

கொல்வா [1]னுற்ற பெற்றிமை யாதுங் [2]குறையாதாள்
வெல்வா னங்கோன் றின்னுமின் [3]வம்மென் பவர்மெய்யும்
வல்வாய் வெய்யோ னேவலு [4]மெல்லா மனம்வைத்தா
ணல்லா [5]ணல்ல கண்கள் கலுழ்ந்தே நகுகின்றாள்.

(இ - ள்.) கொல்வான் உற்ற - (அரக்கியர் தன்னைக) கொல்லுமாறு தொடங்கிய, பெற்றிமை - கொடுந்தன்மையினால், யாதும குறையாதாள் - (தனது மனவுறுதியினின்று) சிறிதுங்குறையாதவளாகிய, நல்லாள் - சீதாபிராட்டி,—'நம கோன் - நமது தலைவனாகிய இராவணன், வெல்வான் - (எப்போதும) வெறறிபெற்று மேம்படுபவனாயிருக்கின்றான்; (ஆகையால், அவ்விராவணனது கட்டளைப்படி), தின்னுமின் - (இணங்கி வராத இவளைத்) தின்னுங்கள்; வம - வாருங்கள்', என்பவர் - எனறு அதட்டிக் கூறுகிற அரக்கியரது, மெய்யும் - உடம்பின்பரபரப்பையும், வல் வாய் வெய்யோன் ஏவலும் - வலிமைவாய்ந்த கொடியவனான இராவணனுடைய கட்டளையையும், எல்லாம - (ஆகிய) இவற்றையெல்லாம, மனம்வைத்தாள்- மனத்தில்எணணி, நலல கண்கள் கலுழ்ந்து ஏ - அழகியகண்களினால் நீரைப் பெருகிகொண்டே, நகுகின்றாள் - (தனக்கு நேர்ந்துள்ள நிலைமைக்குச) சிரிப்பவளானாள்; (எ - று.)

எந்தக்கடைககண் பார்வையினால் உலகத்தவா நல்வாழ்சசி பெறுவரோ, அத்தகைய கணகள் இப்போது துயரமுற்று வருந்துவன வாயினவே! என்றஇரககந் தோன்ற 'நல்லகண்கள் கலுழ்நது' என்றா. நகை - அவலம் பற்றியது. பி - ம்:—[1]உற்றோர். [2]குறையாதா. [3]வம்மினிவள் மெய்யும். [4]என்னு. [5]நல்லாள். (அ௦)

அக.—இதுவும், அடுத்த கவியும் - அப்போது திரிசடையின் மொழியினால் அரக்கிமார் அடங்குதல்.

இன்னோ ரன்ன வெய்திய காலத் திடைநின்றாண்
முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவம்மா
பின்னே வாளா [1]பேதுறு வீரேற் பிழையென்று
ளன்னே நன்றென் [2]றாரவ ரெல்லா மறிவுற்றார்.

(இ - ள்.) இன்னோ அன்ன - இப்படிப்பட்ட தன்மைகள், எய்திய காலத்திடை - நேர்ந்தபொழுதில், நின்றாள் - அசைகுநின்றவளாகிய திரிசடை, (பிராட்டியைநோக்கி), 'அம்மா - தாயே! கண்ட கனவின் முடிவு - நான் கண்டகனவினது பயனை, முன்னே சொன்னேன் - முன்னமே (உம்மிடத்துச்) சொல்லியிருக்கின்றேன்; பின்னே - அதன் பிறகு

[இப்போது], வாளா - வீணாக, பேதுறுவீர்எல் - கலங்குவீராஞல், பிழை - (அது உமதுதகைமைக்குக்) குறைவாகும்', என்ருள் - என்று சொல்லி (மீண்டும் சீதையை)த தேற்றினுள்; அவர் எல்லாம் - (அதுகேட்ட) அரக்கியரெல்லாம், அறிவுறருர் - (அந்தத்திரிசடை கூறியதை விசாரித்துத) தெரிந்துகொண்டு (திரிசடையைநோக்கி), 'அன்னே - தாயே! நன்று - நல்லது', என்ருர் - என்று உடன்பட்டுச்சொன்னுர்கள்; (எ - று.)

அப்போது அதனைக் கேட்டறிந்த அரக்கியரும் திரிசடையின்பேச்சை அங்கீகரித்தார்க ளென்பதாம். நன்று என்பது உடன்பாட்டைக் குறிப்பிக்கும். இனி, திரிசடை பிராட்டியைப் பேதைமைக் குணங்கொண்டு மருட்டினுல் அது உங்கட்குப் பெருங்குற்றமாய் முடியுமென்று அரக்கியரை நோக்கிக் கூற, அவர்களும் உடன்பட்டனரென உரைத்தலும ஒன்று. பி - ம்.—[1]பேதுறவீரோ. [2]ஏவலெலாரும் வினவுற்ருர், அன்னவரெல்லாமவிவுற்ருர். (அக)

௩௨. [1]அறிந்தா ரன்ன முச்சடை யென்பா [2]ளவள் சொல்லப்
பிறிந்தார் சீற்ற மன்னனை யஞ்சிப [3]பிறிதில்லார்
செறிந்தா [4]ராய தீவினை [5]யன்னுர் தெறலெண்ணுர்
நெறிந்தா ரோதிப் பேதையு மாவி நிலைநின்ருள்.

(இ - ள்.) மன்னனை அஞ்சி - (தமது) அரசனுகிய இராவணனுக்குப் பயந்து, பிறிது இல்லார் - (அவனது கட்டளையன்றி) வேருென்றையும அறியாதவர்களும், செறிந்தார் ஆய தீவினை அன்னுர் - மிகவும் நெருங்கினவராகிற தீவினையை யொத்தவர்களுமாகிய அவ்வரக்கிமார்கள், அன்ன முச்சடை என்பாள் அவள் சொல்ல - அந்தத்திரிசடையென்பவள் சொல்லியதனுல், அறிந்தா - நல்லுணர்ச்சி பெற்றவர்களாய், சீற்றம் பிறிந்தார் - (தாம கொண்ட) கோபத்தினின்றும் மாறி, தெறல் எண்ணுர் - (அப்பிராட்டிக்கு) அச்சமுறுத்துவதை நினையாமல் விட்டிட்டார்கள்; (அப்போது), நெறிந்து ஆர் ஓதி பேதையும் - நெறிப்புக் கொண்டுள்ள கூந்தலையுடைய பிராட்டியும், ஆவி நிலைநின்ருள் - (சிறிது வருத்தம் நீங்கி) தன்னுயிர் நிலைத்திருக்கப்பெறருள்; (எ - று.)

திரிசடையின் சொல்லைத தோந்தறிந்த அரக்கியர் தாம் பிராட்டியை வருத்துவதை யொழிந்து நிற்க, அப்பிராட்டி சற்றுத் துயரொழிந்து ஆவி தரித்திருக்கப்பெற்றன ளென்பதாம. பி - ம்:—[1]அறிந்தாள்போலும. [2]அது. [3]பிறிதில்லா. [4]சுற்றும். [5]என்னுத்திறலென்ன. (அஉ)

நிந்தனைப்படலம் முற்றிற்று.

ஐந்தாவது
உருக்காட்டு படலம்.

அநுமான் பிராட்டியின் அருகிற சென்று தனது வடிவத்தைக்காட்டி இராமபிரானது செய்தியைத தெரிவித்துத் தனது பெரிய உருவதத்தையும் காண்பித்த வரலாற்றைக் கூறும் பாகம். உரு - ரூபம் என்ற வட சொல்லின் சிதைவு.

க.—சீதையைக் காணவிரும்பிய அநுமான் அவளைக்காவல்செய்கிற அரக்கியரை மந்திரபலத்தால் உறங்கச்செய்தல்.

காண்டற் கொத்த காலமு மீதே தெறுகாவ
லாண்டற் கொத்த சிந்தையி னாருந் துயில்கில்லார்
வேண்டத் துஞ்சா ரென்றொரு விஞ்சை வினைசெய்தான்
மாண்டற குற்றா ராமென வெல்லா மயர்வுற்றார்.

(இ - ள்.) 'காண்டற்கு ஒதத காலமும் ஈதே - (நான் பிராட்டியைக்) காணத்தகக சமயமும் இதுவேயாம்; தெறு காவல் தூண்டற்கு ஒத்த சிந்தையினாரும் வருத்தி நெருககுகிற காவலைச செய்தற்குப் பொருந்திய மனத்தையுடைய அரக்கியரும், துயில்கில்லார் - தூகுகின்றாரில்லை: வேண்ட துஞ்சா - (தூங்கவேணடுமென்று யான்) விருமபுகிற மாத்திரத்தால் (இவர்கள்) தூகுகமாட்டார்,' என்று - என்று (அநுமான்) ஆலோசித்து, (அவ்வரககியரை உறகுகசசெயவதனிமித்தம்), ஒரு விஞ்சை வினை செய்தான் - ஒரு மாயவிதத்தையைச் செய்தான்; (செய்யவே), எல்லாம் - அரககியாயாவரும், மாண்டற்கு உற்றார் என - இறத்தற்குக் காலம்நேர்ந்தவாபோல, மயர்வு உறறா - மயககமடைந்தார்கள்; (எ - று)—ஆம் - அசை.

அரக்கியரால் வருததப்பட்டு மிகமனகலகிய சீதை திரிசடையாற சிறிது தேறியிருககுஞ் சமய மாதலால், அந்தத திரிசடையின் வார்த்தைக்கு இணகக இப்பொழுதே நானும சென்று இராமபிரானது வரலாற்றைத் தெரிவிததல் தககதா மென்று அநுமான் சீதையைக் காணவேண்டின னென்க. அரக்கியர் இராவணனது குறறேவன்மகளிராதலின், அவனுணைகடவாது சீதையைவருததுபவர்களாய்ச சிறை செய்யுந் தமதொழிலில் நிலைநின்று உறகுகாது நிறபரென்பான், 'தெறுகாவல்தூண்டற்கொத்த சிந்தையினாரும் துயில்கிலலார்' என்றான். அரககியா கணவிழிததிருக்கையில தான் சென்று பிராட்டியுடன் பேச அவர்கள் விடா ராதலாலும், இரகசியம் வெளிப்பட்டுவிடு மாதலாலும், அநுமான் மந்திரபலததால் அவாகளை உறகுகும்படி செய்தன னென்க.

அயர்வுற்றார் என்று பிரித்தல், மோனைத்தொடைககுச சிறவாது.

௨.—அரக்கியர் உறங்குகையில், பிராட்டி யோசிக்கத்தொடங்குதல்.

துஞ்சா தாருந் துஞ்சுதல் கண்டா [1]டுயராற்று
ணெஞ்சா லொன்று முய்வழி காணு [2]ணெகுகின்று
ளஞ்சா நின்றாள் பன்னெடு நாளு மழிவுற்று
ளெஞ்சா வன்பா லின்னப காந்தாங் கிடருற்றாள்.

(இ - ள்.) பல்நெடு நாளும அழிவுற்றாள் - மிகப்பலநாளாக வருந்துபவளான பிராட்டி,—துஞ்சாதாரும் துஞ்சுதல் கண்டாள் - ஒருநாளும் தூங்காதவர்களான ராக்ஷசிகளும (அன்று) தூங்கினதைப்பார்த்து, துயர் ஆற்றாள் - (தனக்குநேர்ந்த) துன்பத்தை இன்னமும் பொறுக்கமாட்டாதவளாய், உய் வழி ஒன்றும் நெஞ்சால் காணாள் - (அத்துன்பத்தினின்று) தப்பும்வழி சிறிதும் தன்மனதால் அறியாதவளாய், நெகுகின்றாள் - மனமுறிந்து, அஞ்சாநின்றாள் - அஞ்சுகிறவளாய்,—எஞ்சா அன்பால் - குறையாத [மேன்மேல்மிகுகிற] (இராமனிடத்துஉள்ள) அன்பினால், இன்ன பகர்ந்து - இவ்வாறாதனைகளைச் சொல்லி, ஆங்கு - அப்பொழுது, இடா உற்றாள் - துன்பப்படுபவளானாள்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவிகளிற் காண்க

அருகிலிருந்த அரக்கியர்யாவரும் உறங்கத தன்மனதிற்கு வேற்றிடத்திற் போக்கில்லாமையால், இராமனைப்பிரிந்ததனால் நேர்ந்த துன்பம் சீதைக்கு மிகுவதாயிற்று. பி - ம்:—[1]துயாவுற்றாள். [2]நெஞ்சிழ்கின்றாள்.

வே று.

௩.—இதுமுதல் ஏழுகவிகள் - பிராட்டியின் புலம்பலைக் கூறும்.

கருமே கநெடுங் கடல்கா ரனையான்
றருமே தனியே னெனதா ருயிர்தா
னுருமே [1]றுறழ்வெஞ் சிலைநா ணொலிதான்
வருமே யுரையாய வலியார் வலியே.

பத்தொன்பதுகவிகள் ஒருதொடர்.

(இ - ள்.) வலி ஆர் வலியே - (தடுக்கப்படாது அனுபவித்தே தீர வேண்டிய) வலிமைபொருந்திய (என்) விதியே! கரு மேகம் - கருநிறமுள்ள மேகத்தையும், நெடுங் கடல் - பெரிய கடலையும், கார் - இருளையும், அனையான் - ஒத்த (திருமேனிநிறத்தையுடைய) இராமபிரான், தனியேன் எனது ஆர்உயிர் - (தன்னைவிட்டுப் பிரிந்ததனால்) தனியேயிருந்து வருந்துகிற என்னுடைய அருமையான உயிரை, தருமே - (இங்குவந்து கூடி அழியாமல்) நிலைபெறச்செய்தருளுவனோ? உரும் ஏறு உறழ் வெம சிலை நாண ஒலி - பேரிடி முழக்கத்தையொத்த (பகைவர்க்குப்) பயங்கரமான (அவனது) வில்நாணியின் தொனியானது, வருமே - இங்கு வருமா? உரையாய் - சொல்வாயாக; (எ - று.)

தான்இருக்கிற இவ்விடத்தைத் தெரிந்துகொண்டு இராமபிரான் கடல் கடந்துவந்து பகைதொலைக்கச செய்யும் தனுஷ்டங்காரம்

தனக்கு ஆறுதலையுண்டாக்கு மாதலால், அப்பெருப்பேற்றைச் சீதை எதிர்நோக்குபவளாயினள். "ஊழிற பெருவலி யாவுள" என்றபடி எல்லாவற்றினும் மிகக வலியுள்ள தாதலால், விதியை 'வலி' என்றே கூறினர். இருளை எம்பெருமான் திருமேனிக்கு உவமைகூறுதலை, "ராத்திரிமேனியம்மான் பைமபொன்வேங்கடவன்" என ஆன்றோமொழியினுங் காண்க. நாணொலி குணதொனி, தநுஷ்டங்காரம். பொறுக்கவொண்ணாத்துயரம் நேர்ந்தகாலத்து விதியை நினைத்துப் புலம்புதல், இயற்கை. 'தான்' இரண்டும் - அசை. இவ்வாறுனகவிகளைக் கலிவிருத்தங்களாகப்பிரிக்காமல் 'கருமேகநெடுங்கடல காரனையான்' என இவ்வாறு வஞ்சிவிருத்தமாகப் பிரிப்பினும் இழுக்காது. (௩)

௪. [1]கல்லா மதியே கதிர்வா ணிலவே
செல்லா விரவே சிறுகா விருளே
யெல்லா மெனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ.

(இ - ள்) கல்லா மதியே - படியாதவனான [மூடனான] சந்திரனே! கதிர் வாள் நிலவே - மிக்கஒளியையுடைய நிலாவே! செல்லா இரவே - (விரைவிற்) கழியாத இராபபொழுதே! சிறுகா இருளே - குறையாமற் பெருகுகிற அந்தகாரமே! எல்லாம - நீங்களெல்லாரும், எனையே - (இராமபிரானைப்பிரிந்து வருந்தும் பெணபாலான) என்னையே, முனிவீர் - கோபித்துவருததுவீர்; நினையா - (என்னைச சிறிதும) எணணாக, வில் ஆளனை - வில்வீரனான இராமபிரானை, யாதும் விளிததிலிரோ - சிறிதும் வருத்தமாட்டீர்களோ? (எ - று.)

அவ்விராமபிரானை வருத்துவீராயின், பிரிவாற்றாமையால் உடனே வநது அவன் என்னை அணைவான் மகாவீரனான அவனையும் வென்று வசப்படுததினால் அபபோது உங்கள் திறமை பயன்பெற்றதாகும் என்றபடி. 'வில்லாளன்' என்றதனால், அவனது விலவன்மைக்கு நீவிர் அஞ்சினீரபோலும் என்றவாறு. அன்றியும உங்கள் திறத்தைச செலுததுதற்கு ஏறற வலிமையுடையவனை விட்டு அபலையாகிய என்னை வருத்துதல் நீதியன்றென்பதாம். பெணணைவருத்துதல் பெருமபாவமென்று உணராது தன்னை வருத்துதலால் சீதை, சந்திரனை 'கல்லாமதி' என இகழ்ந்தனள். சந்திரன்முதலிய பொருள்கள விரகிகளுக்குக காமோத்தீபகமாய்ப் பெருந்துயரை விளைக்கும். 'எல்லாம் எனையேமுனிவீர்' என்றது, உங்களுக்குள் ஒன்றினது திறலுக்கும் ஈடுகொடுக்கமாட்டாத என்னையொருததியையே நீங்கள் இததனையோ ஒன்றுசேர்ந்து வருததுவது உங்கட்கு மிக இழிவாமென்று குறிப்பித்தபடி; இது, கூட்டவணி: ஒவ்வொன்றுமே தனிததனி போதுமான வல்லமையுள்ள காரணங்கள் பல ஒருதொழிலை நிகழ்ததுவனவாகக் கூறுதல், இதன் இலக்கணம: இதனை வடநூலா ஸமுச்சயாலங்கார மெனபா. இசசெய்யுள், கேளாதவற்றைக் கேட்பனபோலச சொன்ன மரபுவழுவமைதி; மேலதற்கும் இஃது ஒக்கும். பி - ம்:—[1]கல்லார். (௪)

௫. தழல்[1]வீ சவுலாய் வருவா டைதழீ இ
யழல்வீ ரெனதா வியறிந் திலிரோ
நிழல்வீ ரையனு [2]ருடனீர் நெடுநா
ளுழல்வீர் கொடியீ ருரையா டிலிரோ.

(இ - ள்.) கொடியீர் - பூங்கொடிகளே! தழல் வீச - நெருப்புசுசுவாலை எரிய, உலாய் வரு - உலாவிவருகிற, வாடை - வடகாற்றை, தழீஇ - துணையாகக்கொண்டு, அழல்வீர் - (என்னை) வருத்துகின்றீர்கள்; எனது ஆவி அறிந்திலிரோ - எனதுஉயிரின்நிலைமையை (நீங்கள் சற்றும்) அறியவில்லையோ? நிழல் வீரை அனுருடன் - (தனது) தேககாந்தியாற் கடலையொத்த இராமபிரானுடனே, நெடு நாள் உழல்வீர் - பலகாலமாக வனத்திற் பயில்கிற, நீர் - நீங்கள், உரை ஆடிலிரோ - (என்குறையைச்) சொல்ல மாட்டீர்களோ? (எ - று.)

நீங்கள் எனது நட்பினராயிருக்கதலால் எனதுதுன்பத்தைநீக்குவது நுமதுகடமையாயிருக்க, என் நிலைமையை அறிந்திருந்தும் எனக்குச் சிறிதும தேற்றுதலைசசெய்யாது எனக்குத்துன்பஞ்செய்யுந்தன்மையுள்ள காற்றைத் துணையாகககொண்டு இவ்வாறு என்னை வருத்துதல் நுமக்குத் தககதோ? என்னை இங்ஙனம் வருத்தாது, உங்களோடு நெடுநாள்பழகியுள்ள அப்பிரானிடத்து நீவிர் தூதுசென்று என்நிலைமையைச் சொல்லவேண்டுமெனச சீதை பூங்கொடிகளை நோக்கிக் குறையிரந்து வேண்டியபடி. பூங்கொடிகள் மகளிர்க்கு உவமைப்பொருளாதலால் அவற்றைத் தன சுற்றமபோல்வைத்துக் கூறினள். கொடியென்னுஞ் சாதியொற்றுமை பற்றி, 'வீரையனுருடன் நீர் நெடுநாள் உழல்வீர்' என்றது 'வாடைதழீஇ யழல்வீர்' என்றதனால், இராமபிரான் எழுந்தருளியிருக்கிற திசகிலிருந்து வருகிற காற்றைக் கொடிகள்தழுவியதைக் கண்டு பொறாமையுற்றதை வெளியிட்டாள்போலும் வாடை - வடகதிற்செல்லுங்காற்றென்று உரைத்துத் தென்றலென்றுங் கொள்ளலாம். எனது ஆவி யறிந்திலிரோ என்பதற்கு - எனதுபிராணநாயகன் இன்னானென்று உங்கட்குத்தெரியாதோ? என்றும் உரைகூறலாம் வீரை - கடல். 'கொடியீர்' என்பதில், கொடுந்தன்மையுடையீரென்பது தொனி. கொடியீர் - உயர்வுபற்றி வந்த திணைவழுவமைதி. பி - ம் —[1]வீசி. [2]உடனே. (௫)

௬. வாரா தொழியா னெனும் [1]வண் மையினு
லோரா யிரகோ டியிடர்க் [2]குடையேன்
றீரா வொருநாள் வலிசே வகனே
நாரா யணனே தனிநா யகனே.

இதுவும, அடுத்தகவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) ஒரு நாள் வலி தீரா - ஒருபொழுதும் வலிமை குறையப் பெறாத, சேவகனே மகாவீரனே! நாராயணனே - நாராயணனென்னுந் திருநாமமுடையவனே! தனி நாயகனே - ஒப்பற்ற தலைவனே! வாராது ஒழி

யான் எனும் வண்மையினால் - (எனது பிராணநாயகன்) வராமலிருக்க மாட்டானென்கிற (அவனுடைய) உதாரகுணத்தை நோக்கியே, தூர் ஆயிர கோடி இடர்க்கு உடையேன் - (எனக்கு இப்பொழுது நேர்ந்துள்ள) மிகப்பலவாகிய துன்பங்கட்கும் உயிரோடிருக்கிறேன் (யான்).

இல்லாவிட்டால் முன்னரே பிராணத்தியாகஞ் செய்திருப்பேனென்பது, இசையெச்சம். எதிரிலில்லாத இராமனை இங்ஙனம் சீதை விளித்துக்கூறினது, தனது மனத்திற்குப் புலனாய்நின்றமையா லென்க. தன்னை அலட்சியஞ்செய்தா னென்பதனா லுண்டான ஊடலின் மிகுதியால் முன்னிலையாகக் கூறுதலை யொழித்து 'வாரா தொழியான்' எனப் படர்க்கையாற் கூறினாள். இடவழுவமைதி. இனி, 'சேவகனே' முதலிய மூன்று பெயர்களிலு முள்ள ஏகாரத்தை இசைநிறையாக்கி, சேவகனும் நாராயணனுமாகிய தனிநாயகன் வாராதொழியான் என வழாநிலையாக் கூறுதலும் பொருந்தும். நாராயணன் - நார—அயநன்: தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர்; சிருஷ்டிப்பொருள்கட்கெல்லாம் சேர்விடமானவ னென்றும், சிருஷ்டிப்பொருளகளைத் தனக்குச் சேர்விடமானவனென்றும், பிரளயகாலப்பெருங்கடல்நீரைத் தனகு இருப்பிடமாகவுடையவனென்றும் பொருள்படும். பி - ம் —[1]வன்மையினால். [2]உடைவேன். (௬)

எ. தருவொன் றியகா [1]னடைவாய் தவிர்நீ
வருவென் சிலநா ளினின்மா நகாவா
யிருவென் றனையின் னருடா னிதுவே
லொருவென் றனியா விமையுண் ணுதியோ.

(இ - ள்.) (வனத்திற்கு புறப்படும்பொழுது நீ என்னை நோகி), 'நீ—, தரு ஒன்றிய கான் அடைவாய் மரகதங்கள் பொருந்திய காட்டிற்கு (என்னுடன்) வரவிரும்புகின்றாய். தவிர் - (அவ்விருப்பத்தை) ஒழிப்பாயாக: சில நாளினில் - சிலநாள்களுகுளளே, வருவென் - (வனத்தினின்று இவ்விடத்தில்) வந்துசேர்வேன். மா நகர்வாய் - இந்தப் பெரிய பட்டணத்தில்தானே, இரு - தங்கியிரு', என்றனை - என்று கூறினாய்; இன் அருள்தான் - இனிய கருணையோடுகூடிய உன்கட்டளைதான், இது ஏல் - இங்ஙனமாயின், ஒருவென் தனி ஆவியை உண்ணுதியோ - (உன்னைவிட்டு) தனியே யிருக்கிற எனது வேறுகதியில்லாத உயிரை (நீ) வருத்துவாயோ? (எ - று.)

நீ காட்டிற்குச் செல்லவிருக்கையில் என்னை நோக்கி 'காட்டிற் பலவகைத்துன்பங்க ளுள்ளன; ஆதலால் நீ இங்கேயே இனிது இரு; நான் சிலநாள்களுள் மீண்டுவருவேன்' என என்னை அவ்வருத்தத்திற்கும உள்ளாகக்கலாகாதென்று மிகககருணைகொண்டு கூறிவிட்டு, நான் தூரக்கர்கைப்பட்டு இவ்வாறு பெருந்துயரமுறுகையில் இங்கு வந்து உதவாது வருத்துதல உனக்குத்தகுதியோ? எனச சீதை

நொந்துகூறியவாறு; "கருவி மாமழைக் கற்கடங்கண்டு நான், வருவெ னீண்டு வருந்தலை நீ யென்றான்", "வல்லரக்கரின் மால்வரை போய் விழுந், தல்லரக்கி னூருக்கழல் காட்டயற், கல்லரக்குங் கடுமையவல்ல நின், சில்லரக்குண்ட சேவடிப்போ தென்றான்" என்ற அயோத்தியாகாண்டச் செய்யுள்கள் இங்கு அறியத்தக்கன. யான் உனதுகட்டளையைக்கடந்து உடன்புறப்பட்டு வந்ததனாலேயே நீ என்பக்கல் இவ்வாறு கருணைதவறினாய் போலும் என்பதும் கருத்து. ஆவியை உண்ணுதி - மரபு வழுவமைதி. பி - ம்:—[1]இடைவாய். (எ)

௩. பேணும் முணர்வே யுயிரே [1]பெருநா
ணாணின் றுழல்வீர் [2]தனிநா யகனைக்
காணுந் துணையுங் கழிவீ ரலிர்நான
பூணும் பழியோடு பொருந் துவதோ.

(இ - ள்.) பேணும் உணர்வே - விரும்பிக்காக்கப்படுகிற (எனது) அறிவே! உயிரே - (என்) உயிரே! பெரு நாள் - பலநாளாக, நாண் இன்று - வெட்கமிலலாமல், உழல்வீர் - (என்னைவிட்டு) நீங்காமல் (என்னோடு நீங்கரும்) அலைகிறீர்கள்; தனி நாயகனை - ஒப்பற்ற தலைவனான இராமபிரானை, காணும் துணையும் - (யான்) பார்க்குமளவும், கழிவீர் அலிர் - நீங்கமாட்டீரோ நான்—, பூணும பழியோடு-வருகிற பழியுடனே, பொருந் துவதோ - சேர்வது தகுதியோ? (எ - று.)

நாயகனை இனிக்காணுதல் அரிதாதலால், அவனைப்பிரிந்தும உணர்வோடு நெடுநாள் உயிர்தரித்திருந்தா ளென்னும்பழி எனக்குவருவது நிச்சயம்; அங்ஙனம் அப்பழியை நான் அடையாமலிருக்கும்படி நீவிர் என்னைவிட்டு நீங்கினால் அதுவே நுமக்குத் தகுதியாம; நீங்கள் உற்ற துணைவராயிருந்தும் எனக்குப்பழிவரும்படி செயதல் நுமக்கு உசிதமல்லவே எனச் சீதை உயிருடனிருப்பதை மிகையாக எண்ணிக் கூறினளென்க. இனி, நான்காமடிக்கு - நான் அடையும்பழியை நீங்களும் அடையப்போகிறீர்களோ? என்றுங் கருதத்துக்கொள்வா. இராமனை விட்டுப்பிரிந்த பின்பும இறவாதிருத்தல் பழிப்புக்கிட மாதலால், 'நாணின்றுழல்வீர்' என்றாள். பி - ம்:—[1]ஒருநாள். [2]நனி.

௪. முடியா முடிமன் னன்முடிந் திடவும்
படியே ழுநெடுந் துயர்பா விடவும்
[1]மடியா நெறிவந் துவனம் புகுதுங்
[2]கொடியார் வருமென் றுகுலா வுவதோ.

(இ - ள்.) முடியா - (வேறொருவகையாலும்) இறவாத, முடி மன்னன் - கீரீடத்தையுடைய தசரதசக்கரவாத்தி, முடிந்திடவும - இறந்தொழியும்படியும், படி ஏழும் - ஏழுலகங்களிலும், நெடுந்துயா - மிக்கதுன்பம், பாவிடவும் - பரவும்படியும், மடியா நெறி - முடியாத [மிகநீண்ட] வழியிலே வந்து—, வனம புகுதும் - வனத்திற் பிரவேசித்த, கொடியாா - கொடுந்தன்மையை யுடையவா, வரும் - (இங்கே) வந்து (எனது) துய

ரைத் தணிப்பா, என்று - என்று எண்ணி, குலாவுவதோ (யான்) மகிழ்ந்து வாழ்வது தகுதியோ? (எ - று.)

வேறெவ்வாற்றாலும் இறவாத [மிகவலியனான] தந்தையையும் தனது பிரிவாற் கொன்று, எல்லாவுலகத்தவரையும் துன்பதிற்குள்ளாகுகி வனத்திற்குச்சென்ற இரக்கமில்லாக் கல்நெஞ்சன என்பக்கலில் மாத்திரம் இரங்குவ னென்றெண்ணுவது பெருமபேதைமையாமென்பது கருத்து. ஆதலின், உயிரையொழித்து இத்துன்பத்தினின்று நீங்குவதே தகுதி யென்பது, குறிப்பு. முடியா - (மூததமகனாகிய இராமனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வதாக நினைத்த காரியத்தை) நின்றவேற்றாத என்றும், முடி ஆம் எனப்பிரிதது எல்லாவரசாகட்குத் தலைவராகிய [சக்கரவாத்தியான] என்றும, முடிமுடியாஎன இயைத்து (ப் பிள்ளைகுப் பட்டாபிஷேகம் செய்து) முடிசூட்டாத என்றும பொருள் கூறலாம். முடியா முடிமன்னன் முடிநீதிடவும் - மாறுபட்டசொற்கள் வந்தது, தொடைமுரண். இவ்வடியில் பிராசமென்னுஞ சொல்லணியும் அமைந்திருததல் காண்க. 'கொடியா' என்றது, நிஷ்டூரவார்த்தை; கோபததினால் ஆணபால் பலாபாலாகக் கூறப்பட்ட பால்வழுவமைதி; இசசொல, சொல்லாற் பலாபாலாயினும் பொருளால் ஆண்பாலாதலால், 'வரும்' என்னும செய்யுமென்முற்றைக் கொண்ட வழாநிலையேயாம. பி - ம்:—[1]அடியேனுடன். [2]கொடியான்.

கo.—சீதை தான் இறப்பதே ததுதியென்று தீர்மானித்தல்

என்றென் றுயிரிவிம் மியிருந் [1]தழிவாண
மின்றுன் னுமருங் குல்விளங கிழையா
ளொன்றென் னுயிருண் டெனினுண் டிடர்யான்
பொன்றும் பொழுதே புகழ்பூ ணுமெனு.

(இ - ள்.) மின் துன்னு மருங்குல் - மின்னலைப போன்ற இடையையும. விளங்கு இழையாள் - பிரகாசிகுகிற ஆபரணங்களையுமுடைய சீதை, என்று என்று - எனப் பலவாறுகககூறி, உயிர் விம்மி - பெருமூசசுவிட்டு, இருந்து - (இருந்தவிடததைவிட்டுப்பெயராமல்) நிலையாயிருந்து, அழிவாள் - வருந்துபவளாய், 'என உயிர் ஒன்று உண்டு எனின் - எனது உயிரொன்று (உடமபில்) உள்ளதாமாறால [உயிருள்ளமட்டும], இடர் உண்டு - (கூடவே) துன்பமும உளதாகும் யான் பொன்றும் பொழுதே - நான் இறகுமபொழுதுதான், புகழ் பூணும - (எனது துன்பங்கள் ஒழிந்து) கீரத்தி (எனககு) உண்டாம்', எனு - என்று எணணி, (எ - று.)—'எனு' என்பது, மேல் உக - ஆங கவியில் 'எபதினுள்' என்பதனோடு முடியும.

பின் 'புகழ்பூணும்' என்பதற்கு ஏற்ப, முன் 'இடர்உண்டு' என்பதற்கு- துன்பதிற்குக்காரணமான பழி யுண்டு எனறுங கொள்ளலாம் துன்னு - உவமவுருபு. உயிர்சுமநது பழியுடனிருததலினும, அவ்வுயிரை யொழித்துப புகழ்பெறுதலே சிறந்தது என்பது கருத்து. பி - ம்:—[1]அயாவாள். (கo)

வேறு.

கக.—இதுமுதல் பத்துக்கவிகள் - பிறநாரில் தான் வசிக்கநேர்ந்ததைக் குறித்துச்சீதை பலவாறு வெறுத்துக்கூறுதல்.

பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினே
னறையிருங் கழலவற் காணு மாசையா
னிறையிரும் பல்பக னிருதர் நீணகர்ச்
சிறை[1]யிருந் தேனையப் புனிதன் றீண்டுமோ.

(இ - ள்) அறை இருங கழலவன் - ஒலிகிற பெரிய வீரக்கழலை யணிந்த இராமபிரானை, காணும் - (நான்) காணலாகுமென்கிற, ஆசையால் - விருப்பதினால், இருந்து - (இங்கே) இருந்து, பொறை ஆற்றி - (எல்லாததுன்பங்களையும) பொறுததலசெய்து, என் உயிரும - எனது உயிரையும், போற்றினேன் - (போகவொட்டாது) பாதுகாததுவைத் திருந்தேன்; (ஆயினும), 'நிறை இரும பல் பகல் - நிறைந்த மிகப்பல நாளாக, நிருதர் நீள் நகர் - அரக்கரது பெரியபட்டணததில், சிறை இருந்தேனை - சிறைப்பட்டிருந்த என்னை; அப் புனிதன் - பரிசுததகுணமுள்ள அந்த ஸ்ரீராமன், தீண்டுமோ - (மீண்டும்) அங்கீகரிப்பனோ? [அங்கீகரியான் என்றபடி]; (எ - று.)

இராமபிரானிடத்துள்ள வேட்கைமிகுதியால், எனமீதுள்ள குற்றத்தை நான் சிறிதும் கருதாது அவன் வந்து சிறைமீட்ப னென்று எணணி உயிரைவைத்திருந்தேன்; அவன் மிகப்பரிசுத்தமூர்த்தியாதலால், அரககரூரில் வசித்துப் பெருங்குற்றமுடையளான என்னை அங்கீகரிக்கும் எண்ணமில்லாமைபற்றியே இதுவரையும் வந்திலன்போலும்; ஆதலின், இனி யான உயிர்வைததிருத்தலிற் பயனிலலை யெனக் கருதின னென்றவாறு. இராமபிரான், இங்கு வாராமைக்குக் காரணம் அரக்கரிடதது அசசத்தினாலன றென்பாள், அவனை 'அறையிருங்கழலவன்' எனறாள். பி-ம்:—[1]இருந்தேனையும். (கக)

கஉ. உன்னினர் பிறரென வுணர்ந்து [1]முய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியிற் றூங்கவு
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினே
னென்னின்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ.

(இ - ள்.) பிறர் உன்னினா என உணாந்து - பரபுருஷாகள் (என்னை) விரும்பினாகளென்று அறிந்தபின்பும், உயரது - (இறவாமல்) பிழைத்திருந்து, அவா சொன்னன சொனனன செவியில் தூங்கவும் - அவ்வரககாகள் (என்னைப்பற்றிப) பலபடிகூறிய கடுஞ்சொற்களெல்லாம (எனது) காதிலே தஙகி நிற்கவும், மன் உயிா காத்து - நிலையான தன்மையுள்ள (எனது) உயிரைவிடாமற் காத்திருந்து, இருங காலம் வைகினேன் - பலகாலம வாழ்ந்தேன்; (ஆதலால்), என்னின் வேறு அரக்கியா - (இப்படிப்பட்ட) என்னைகாட்டிலும் கொடிய

வேறு ராக்ஷஸிகள், யாண்டையார்கொலோ - எவ்விடத்தில் உளரோ? [எங்கும் இரார் என்றபடி];(எ - று.)

பரபுருஷர் விரும்பினமையும், பிறர்கூறிய கடுஞ்சொற்களும்என்ற ஒவ்வொன்றே நான் உயிர்விடுவதற்குப்போதுமான இரண்டுகாரணங்களாயிருந்தும் பழிக்குச் சிறிதும் அஞ்சாது உயிர்வைத்துக்கொண்டு அவ்வரக்கியருடன் ஒருங்குவசித்திருந்தமையால், சீதை 'என்னின் வேறரக்கியா யாண்டையார்' என்றாள். உயிர்வைத்திருத்தல் பெரும்பழிக்குக்காரண மென்பது கருத்து. பி - ம்:—[1]முந்தவர். (கஉ)

கங. சொற்[1]பிரி யாபபழி சுமந்து தூங்குவே
னற்பிறப் புடைமையு நாணு நன்றரோ
கற்புடை மடந்தையர் [2]கதையு ளோர்கடா
பிற்பிரிந் துய்ந்தவா யாவர் யானலால்.

(இ - ள்.) சொல் பிரியா பழி - சொல்லுதல்நேகாத நிந்தையை, சுமந்து- ஏற்றுக்கொண்டு, தூங்குவேன் - கவலையற்றிருக்கின்ற எனது, நல் பிறப்பு உடைமையும் - உயர்குடியிற்பிறத்தலையுடையளா யிருக்குந்தன்மையும், நாணும் - நாணுடைமையும், நன்று மிகநன்றாயுள்ளது! கதை உளோர்கள் - சரிதநிரங்களிற் சம்பந்தப்பட்டுள்ளவர்களாகிய, கற்பு உடை மடந்தையர் - பதிவிரதாதருமத்தையுடைய பெண்களுள், இல் பிரிந்து உய்ந்தவர் - இல்வாழ்க்கைக்குஉரிய கணவனைப் பிரிந்து பிழைத்திருந்தவர், யான் அலால் - யானொருத்தியேயல்லாமல், யாவர் - வேறுயாவர் உளர்; (எ - று.)

கற்புடைமடந்தையர்க்குத் தமதுஉயிரினும் கணவனே சிறந்தவனென்பது கருத்து. காலம்போம வாத்தைநிற்கு மாதலால், 'சொற்பிரியாப்பழி' எனப்பட்டது. சீதை ஒருபெண்ணினது கருப்பத்தினின்று பிறவாமல் நிலத்தினின்று தோன்றி அயோநிஜையெனனுஞ்சிறப்புப் பெற்றிருத்தலும், கர்மயோகத்தினால் மிக்கமேன்மையடைந்துள்ள ராஜரிஷியான ஜநகமகாராஜனை வளர்த்ததந்தையாகவுடைமையும் வாய்ந்துள்ளவ ளாதலால், நற்பிறப்புடையவளாவள்; இம்மேன்மைகள், நற்குணநற்செய்கைக ளில்லாமையால், இகழுமபடியாயின வென்க. நன்று - இகழ்ச்சிபற்றிய பிறகுறிப்பு. நாணுவது- தமக்கு ஒவ்வாதகாரியங்களில் மனமொடுங்குதல். பி-ம்:—[1]தெரியாப். [2]கதையிற்றானுளோர். (கங)

கச பிறாமனை [1]யெய்திய பெண்ணைப் பேணுத
றிறனல தென்றுயிர்க கிறைவன் றீர்ந்தனன்
[2]புறனல றவனுறப் போது போககியா
னறனல [3]தியற்றிவே றென்கொண் டாற்றுகேன்.

(இ - ள்.) 'பிறர் மனை எய்திய - அயலாவீட்டிற் சேர்ந்த, பெண்ணை- ஒருபெண்ணை, பேணுதல் - (பின்னும்) விருமபிக் கொணர்ந்துவைத்துக்கொள்ளுதல், திறன் அலது - தகுதியன்று', என்று - என்று நினைத்து,

உயிர்சகு இறைவன் - (எனது) பிராணநாயகனான இராமபிரான், தீர்ந்தனன் - (என்னைமீட்டுகொண்டுசெல்ல நினையாது) கைவிட்டுப் போனான்; அவன் - அவ்விராமபிரான், புறன - அயலாரிடத்தில், அவர் உற - பழிகேட்க, யான்—, அறன் அலது இயற்றி - தருமமல்லாத தைச [நாயகனின்றிபபிறர்மனைவாழ்வதைச] செய்துகொண்டு, போது போக்கி - வீண்காலங்கழித்து, வேறு என் கொண்டு - வேறே எந்த நன்மையை எதிர்பார்த்துகொண்டு, ஆறுகேன் - உயிரைவைத்திருப்பேன்.

யான் உயிர்நீங்கினால், 'மனைவியை மாற்றான் கொண்டான்' என்னும்பழியும் இராமபிரானுக்கு ஒருவாறுநீங்கும்; யானும் பதிவிரதை கட்குஉரிய கடமையில் தவறாதவளாவேன் எனச சீதை கருதின ளென்க. அலா என்பது - பலரும் அறிந்து எடுத்துத்தூற்றும் பழி மொழி. பி - ம்:—[1]மேவிய [2]புறநலமருளுற. [3]இயற்றினேன். (சச)

கரு. எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினே
னப்பொழு தேயுயிர் துறக்கு மாணையே
னெப்பரும் பெருமறு வுலக மோதயான்
றுப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ.

(இ - ள்.) எ பொழுது இ பெரும் பழியின எய்தினேன் - எப்போது இந்தப்பெரியபழிப்புக்கு உள்ளானேனோ, அ பொழுதே உயிர் துறக்கும் ஆணையேன - அப்பொழுதுதானே பிராணனை விடவேண்டிய நியதி யுள்ளேனாகிய, யான் - நான,—உலகம் ஒப்பு அரும் பெரு மறு ஓத - உலகத்தவர் (என்னைப்பற்றி) ஒப்பில்லாத பெரிய பழிசசொற்களைச் சொல்லும்படி, துப்பு அழிந்து உயவது - பெருமைகெட்டு உயிர்வாழ்ந்திருப்பது, துறக்கம துன்னவோ - சுவர்க்கம்பெறவோ? (எ - று.)

இம்மையில் இன்பமனுபவிககப்பெறாத பாவியாகிய எனககு மறுமை யின்பம கிடைப்பதுதானும அரிதே யென்றபடி. தீசசெயலையுடைய தனககுப் பழிவந்ததுபோலவே பாவமும் வருமென்று சீதை கவன்றன ளென்க. முன்னிரண்டடி - வடமொழிநடை. (கரு)

கசு. அன்பழி சிந்தைய ராய வாடவர்
வன்பழி சுமக்கினுஞ் சுமக்க [1]வானுயர்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துட் டோன்றினே
னென்பழி துடைப்பவ [2]ரென்னின் யாவரே.

(இ - ள்.) அன்பு அரு சிந்தையர் ஆய ஆடவா - (என்னிடத்தில்) அன்புஇல்லாத மனத்தையுடைய ஆண்மககளாகிய இராமலக்ஷ்மணர், வல் பழி சுமக்கினும சுமகக - கொடிய பழியை ஏறறுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்க; வான் உயா - வான்போல் உயாந்த, துன்பு அழி - துன்பதனைத அனுபவித்தறியாத, பெரும் புகழ் - மிககபுகழ்த்தியையுடைய, குலததுள் - (சனகமகாராசனது) வம்சததில், தோன்றினேன் - பிறந்து வளர்ந்தவளான, என் - எனககு (உண்டாயிருக்கிற), பழி - (பிறரகத்

தில்வசிக்கிறா ளென்ற) பழியை, துடைப்பவர் - போக்குபவர், என்னின் யாவர் - என்னையல்லது வேறாயாவர் உளர்? [துன்பமகீக்கிக காத்தற்கு உரிய ஆடவர் உபேக்ஷித்தமையால் யானே என்பழியை நீக்கிக்கொள்ளல் தகுதி யெனறபடி]; (எ - று.)

இராமலக்ஷ்மணா என்பககல் அன்பில்லாதிருந்தமையால் அக்குற்றத்தின்பயனாக அவர்கள் க்ஷத்திரியகுலத்தில்தோனறி மாறறான்கைப் பட்ட ஓர்பெணணையும காக்க வலியில்லாத இவர் என்ன வீரர்?' என உலகததார் தூறறும பழிசசொல்லைப் பெறும்படி நான் உயிர்நீத்து, இதுவரையிற பழியென்பதில்லாத என்குலத்துக்கு என்னால் ஒரு பழியு முணடாகாதபடி செய்துகொள்வேனெனப் பிராட்டி கருதியவாறு. அவாகள்மீதுள்ள வெறுப்பினால் பெயர்கூறவும மனமில்லாது 'ஆடவா' என்றாள். வானுயாகுலம் - மிகசசிறநத குலம். ''வானுயாதோற்றம்' என்பது - 'வான்றோய்குடி' என்றாறபோல இலக்கணவழக்கு' என்ற பரிமேலழகரூரை இங்கு அறியத்தககது. துன்புஅழி - குறறமறற எனினு மாம். ''தமக்கு மருததுவர் தாம்'' என்றபடி ஒவ்வொருவரும தம்தம்மைத தாமே பாதுகாததுகொள்ளுதற்கு உரியரேயனறிப் பிறருதவியைத் தேடுதல் தகுதியன்றாதலால், 'என்பழிதுடைப்பவா என்னின் யாவரே' என்றா ளென்னலாம பி - மீ.—[1]யானவா. [2]எணணில். (கசு)

கஎ. வஞ்சனை மானின்பின் மன்னைப் போககியென்
மஞ்சனை வைதுபின வழிகொள் வாயெனா
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையா
னுய்ஞ்சனெ னிருத்தலு முலகங் கொளளுமோ.

(இ - ள்.) வஞ்சனை மானின் பின - கபடமாய்வநத மாயமானின் பின்னே, மன்னை - நாயகனாகிய இராமபிரானை, போக்கி - அனுப்பி விட்டு, என்மஞ்சனை - எனது மைததுனப்பிள்ளையாகிய லக்ஷ்மணனையும, வைது - கடுஞ்சொறகூறி, பின் வழி கொள்வாய் எனா - (அவ்விராமபிரான்) சென்றவிடததுக்குச செல்வா யென்று அனுப்பிவிட்டு, நஞ்சு அனையான் அகம் புகுந்த - விஷததையொகத [மிககொடிய] இராவணனது வீட்டில் வந்துசேர்ந்த, நங்கை - பெணணாகிய யான்—,உய்ஞ்சனென் இருத்தலும் - பிழைதிருததலையும, உலகம கொள்ளுமோ - உலகத்தார் நேரிதென்று) உடன்படுவார்களோ? (எ - று)

கீழ்க தனனைமீட்கவில்லை யென்று ராமலக்ஷ்மணர்மீது குற்றங கூறிய சீதை, தன்மீதுள்ள குற்றத்தை நிரூபிதது, இதனாலும தான் உயிரவிடதலையே தகுதி யெனக் கருதின ளென்க. வஞ்சனை மான்' என்றது, இங்கு மாரீசனை மைத்துனனை 'மஞ்சன்' என்றது, துன்பு பற்றிய மரபுவழுவமைதி. சீதை இலகுமணனை வைதது, ''குற்றம் வீந்தகுணத்தி னெகுலோமகன், மற்றை வாளரக்கன் புரிமாயையா, லிற்றுவீழ்ந்தன னென்னவு மென்னயல், நிற்றியோவினையோயொரு நீ,'' ''நின்றநின்னிலையிது மெறியிற்றன்று,'' ''ஒருபகல்பழகினாருயிரையீவ

ரால், பெருமகனுலைவுறு பெற்றி கேட்டு நீ, வெறுவலை நின்றனை வேறென் யானினி, யெரியிடைவிழுந்துயிரிறப்பனீண்டு'' என்றவிடங்களிற் காண்க. வழிக்கொள்ளுதல் - பிரயாணப்படுதல். 'நங்கை' என வேண்டாதுகூறியது, இவையெல்லாம் பெண்ணுக்குரிய குணங்களுக்கு முற்றும் மாறுபட்டவையென்பதைக் குறித்தற்கு. இரண்டாமடி - முற்றுமோனை.

கஉ. வல்லியன் மறவர்தம் விடுவிற் றீர்பவர்
வெல்லினும் வெல்கபோர் விளிந்து வீடுக
வல்லிய லறத்தையா [1]னிறந்து வாழ்ந்தபின்
சொல்லிய வென்பழி யவரைச் சுற்றுமோ.

(இ - ள்.) வல் இயல் மறவர் - வலிமை பொருந்திய வீரராகிய இராமலக்ஷ்மணர், தம் வடுவின் தீர்பவள் - (சீதையைக்கவர்ந்தவரைத் தாம்எதிர்த்தாரில்லையென்று) தமகுவரும்பழியினின்றும் நீங்குபவராய், போர் வெல்லினும் வெல்க - (வந்துபொருது அரக்கரைப்) போரிற் சயித்தாலும் சயிக்கட்டும் (அன்றி), விளிந்து வீடுக - இறந்து போனாலும் போகட்டும்; யான்—, இல் இயல் அறத்தை - இல்வாழ்க்கைக்கு உரிய தருமத்தை, இறந்து - கடந்து, வாழ்ந்த பின் - (இவ்வாறு பிறரூரில்) உயிர்வாழ்ந்த பின்பு, சொல்லிய என் பழி - (உலகத்தவரால் தூற்றிச்) சொல்லப்படுகிற எனது பழி, அவரை சுற்றுமோ - அவரைத் தொடருமோ? (எ - று.)—தொடராது; என்னையே தொடரு மாதலால், அதனைப்போக்கிக்கொள்ள யானே உபாயந்தேடவேண்டு மென்றபடி.

என்பழியை நீக்கிக்கொள்ள யான உயிர்துறக்கின்றேன்: அவர்கள் தமதுபழியை நீக்கிக்கொள்ள இங்குவந்து அரக்கரோடு போர்செய்து வென்றால் வெல்லட்டும்; அன்றி, அப்பழியுடனேயே இறந்தாலும் இறக்கட்டு மெனச் சீதை உபேட்சித்துக கூறியவாறு. விளிந்து வீடுக என்பதற்கு - போரில் இறந்தாலும இறக்கட்டும் எனக கூறுவாரும் உளர். இச்செய்யுளிலும் இரண்டாம்அடி-முற்றுமோனை. பி - ம்:—[1]இகழ்ந்து.

கக. வருந்தலின் மானமா வனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையா முன்பு பேதையேன்
கருந்தனி [1]முகிலினைப் [2]பிரிந்து கள்வரு
ரிருந்தவ ளிவளென வேச நிற்பெனோ.

(இ - ள்.) மானம வருந்தலில் - (தமது) மானததுக்கு ஒருவருத்தம் நேர்ந்தவிடத்து [அவமானம் நேருமாயின்], மா அனைய - கவரிமானைப் போன்ற [தமது உயிரை விடுகின்ற], மாட்சியர் - மேன்மையையுடையவர்களாகிய, பெருந் தவம் மடந்தையர் முன்பு - எல்லாத்தவங்களிலுஞ் சிறந்த (பாதிவிரதயமாகிற) தவத்தையுடைய மகளிர்முன்னே, பேதையேன் - அறிவில்லாதயான், 'இவள் - இச்சீதை, கரு தனி முகிலினை - கரிய ஒப்பற்ற மேகம்போன்ற இராமபிரானை, பிரிந்து - விட்டுநீங்கி,

கள்வர் ஊர இருந்தவள் - மாயசசெய்கையையுடையவராகிய அரக்கரது ஊரில் (பலநாள்) உயிரவாழ்ந்திருநதவள்', என - என்று, ஏச - (அம்மகளிர் என்னைப்) பழிததுசசொல்லும்படி, நிற்பெனோ - உயிரசுமந்து வாழ்வேனோ? (எ - று.)—வாழ்தல் தகுதியனறு எனபதாம்.

தன்மயிர்ததிரளில் ஒருமயிர்நீஙகினுலும அக்குறையைப்பொருமற் பேரவமானஙகொணடு பின்பு உயிரவாழாது உடனே இறந்துவிடுதல், கவரி யெனனும் மானின் சாதிககு இயல்பு. 'மயிரநீரப்பின் வாழாக் கவரிமா வன்னு, ருயிரநீப்பா மானம்வரின்'' எனறது காணக. மான்மாவது- எப்பொழுதும் தம்நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வு வந்தவிடத்து உயிரவாழாமையுமாம. உயிரும் மானமும உடனில் லாமைக்கண், பின்னும் போவதாகிய உயிரை நீதது என்றும் நிறப தாகிய மானத்தையே எய்துவா என்பதாம. பி - ம்:—[1]முதலினை. [2]பிரிந்த.

உ0. [1]அற்புத னரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநா
ளிறபுகத் தக்கலை யென்னின் யானுடைக்
கற்பினை யெபபரி சிழைத்துக் காட்டுகேன்.

(இ - ள்.) அற்புதன் - ஆசசரியகரமான திருக்கலியாண குணங களையுடைய இராமபிரான், வில் பணிகொண்டு - வில்லின்தொழிலைக் கொண்டு, அரககர்தம வருககம ஆசற - ராக்ஷசர்கூட்டமெல்லாம அடி யோடுமுடியுமபடி, (போரசெய்துகொன்று வென்று), அருஞ் சிறையின் மீட்ட நாள - (மீட்பதற்கு) அருமையான சிறைககாவலினினறு (என்னை) மீளசசெய்யுஙகாலத்தில், இல புக தககலை - 'நீ என்வீட்டுககுவரத தகுதியுடையவளல்லை', என்னின் - என்றுசொல்லித தடுததால், (அப் பொழுது), யான் உடை கற்பினை - யான்உடைமையாகககொணடுளள கற்புநிலையை, எ பரிசு இழைத்து காட்டுகேன - எவ்விதமாக நிரூபித் துக் காணபிப்பேன்? (எ - று.)—காட்டவகையில்லையே யென்பது கருதது.

இஙஙனமே மீட்சிப்படலத்தில் இராமன் கூறுதல் காணக. எதிர காலவரலாற்றை முன்னரே குறிப்பித்தல், ஒருவகைக்கவிசமயம். ''ஆத லிற் புறததினி யாருககாக வென், கோறுதவததினைக கூறிக காட்டு கென்'' என்ற மீட்சிப்படலதது அடிகள, இஙகு ஒப்புநோகககதக் கன. மீட்ட - இயல்பில்வநத காலவழுவமைதி. பி - ம்:—[1]அற்புதவருககா.

உக.—பிராட்டி உயிர்விடத்துணிந்து துருக்கத்திப்புதரை யடைதல்.

ஆதலா னிறததலே யறத்தி னுறெனுச்
சாதல்காப் பவருமென் றவத்திற சாமபினு
ரீதலா [1]திடமும்வே றிலலை யென்றொரு
போதுலா மாதவிப் பொதுமப ரெய்தினுள்.

(இ - ள்.) 'ஆதலான் - ஆதலால், இறத்தலே - சாதலே, அறத்தின் ஆறு - தருமத்தின் முறைமையாம்,, எனு - என்று எண்ணி, சாதல் காப்பவரும் (நான்) இறததலைத் தடுப்பவராகிய அரகியரும், என் தவத்தின் - எனது நல்வினைப்பயனால், சாம்பினர் - (இப்பொழுது) உறவகிகிடக்கின்றாகள். ஈது அலாது இடமும வேறு இல்லை - இதுவல்லாமல் (உயிரைததுறக்கத்தக்கசமயமும வேறு கிடைக்காது,' என்று - என்று நினைந்து, போது உலாம் - மலாகள் அசையப்பெற்ற, ஒரு மாதவி பொதும்பர் - ஒரு குருக்கத்திமரசசெறிவை, எய்தினள் - (சீதை) சென்று சேர்ந்தாள்; (எ - று.)

ஆதலான் - இராமபிரான் ஒருகால் மீட்கவந்தால் அப்பொழுது எனது கறபுநிலையை எவ்வாற்றாலும் பிரததியக்ஷமாக்க முடியாமையால் என்றபடி. அதறகு அநுகூலமாக அரக்கியா உறவகிகிடததலும ஒருவகே நிகழ்ந்துள்ளமையால், 'ஈதலாதிடமும் வேறில்லை' என்றாள். மாதவீ - வடசொல். பொதுமபா - புதர். சீதை சிம்சுபாமரததினகிளையை அடைந்து, தன்னுடைய கூந்தலினால் சுருகிகட்டு உயிர்விட விரும்பினள என முதனூலிர கூறப்பட்டுள்ளது, பி - ம்:—[1]இறையும. (உக)

உஉ.—இதுவும் அடுத்தகவியும் - அநுமான் சீதையைச் சென்று கிட்டித் தன்வரலாறு கூறுதல்.

கண்டன னனுமனுங் [1]கருத்து மெண்ணினான்
கொண்டனன் றுணுக்கமெய் தீண்டக கூசுவா
னண்டர்நா யக[2]னரு டேதன் யானெனாத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினான்.

(இ - ள்.) அனுமனும் - அநுமானும், கண்டனன் - (சீதை அசுசசென்றதைக) கண்டவனாய, கருத்தும் எண்ணினான் - (அவளது) எண்ணததையும் ஆலோசித்தறிந்து, துணுக்கம் கொண்டனன் - அசசங்கொண்டு, மெய் தீண்ட கூசுவான் - (அப்பிராட்டியின்) திருமேனியைத தொட்டுவிலக்குதறகு மனமகூசினவனாய், அண்டர் நாயகன் அருள் தூதன் யான் எனு-'தேவர்கட்கெல்லாந் தலைவனாகிய இராமபிரான் அனுப்பியருளிய தூதனாவேன்யான்' என்றுசொல்லிக்கொணடே, தொண்டை வாய் மயிலினை தொழுது - கோவைப்பழமபோற சிவந்த ஆரததை யுடையளான மயில்போலுஞ்சாயலையுடைய பிராட்டியைத் தொழுதுகொண்டே, தோன்றினான் - (தன்உருவைக்காட்டி) எதிர்நின்றான்; (எ - று.)

அநுமான் தன்னை இராமனது சமபநதம்பெற்றவனெனவெளியிட்டது, சீதைககுத தனனிடம ஐயமுணடாகாமைப்பொருட்டு, சீதை உயிர் விடததுணிநததை யறிந்த அநுமான், என்செய்வதெனப பலவகையாக ஆலோசித்துப் பின்பு மறைநதபடியே மனிதவாகநினால் இராமனது வரலாற்றை ஆதிதொடஙகிககூறித் தன்னையும் இன்னானெனத தெரிவித்தானென முதனூல் கூறும். தொழாநின்று என்பது, தொழுது எனத

திரிந்துநின்றது; "தொழுதெழுவாள்" என்ற திருக்குறளிற போல. பி-ம்:— [1]கருத்தின். [2]அருட்தேன். (உஉ)

உங. அடைந்தனெ னடியனே னிராம னாணைபாற்
குடைநதுல கனைத்தையு நாடுங் கொட்பினான்
மிடைந்தவ ருலப்பிலர் தவத்தை மேவலான்
மடந்தைநின் சேவடி வந்து நோக்கினேன்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மடந்தை - மடந்தையே! அடியேன் - (நினது) அடியவனாகிய யான், இராமன் ஆணையால் - இராமபிரானது கட்டளையால், அடைந்தனென் - (இங்கு) வந்துசேர்ந்தேன்; உலகு அனைதையும் - எல்லாவுலகங்களையும், குடைந்து - அரித்து [சிறிதிடமும் விடாது செவ்வையாக], நாடும் - (உன்னைதேடிப்பார்க்கவேண்டு மென்கிற, கொட்பினால் - கோட்பாட்டினால், மிடைந்தவர் - (ஆங்காங்கு) நெருங்கிச்சென்ற வாநரவீரா, உலர்ப்பு இலர் - முடிவில்லாதவராவர்; (அவர்களால் யான்), தவத்தை மேவலால்-(முற்பிறப்பில்) நல்வினையைச் செய்திருந்ததனால், நின்சே அடி-உனது சிவந்த திருவடிகளை, வந்து நோக்கினேன் - இங்குவந்துதரிசிக்கப்பெற்றேன்.

கொட்பு - கொள்கை; 'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர். 'தவத்தை மேவலால்' என்றதனால், மற்றைத்தூதர்யாவரும் என்னைப்போல உன்னைக் காணத்தவஞ்செய்தவ ரல்லா என்றதாம் மடந்தை-அண்மைவிளி (உக)

உச.—அநுமான் இராமன்வரானமைக்குக் காரணங்கூறல்.

ஈண்டுநீ யிருந்ததை யிடரின் வைகுறு
மாணடகை யறிந்தில னதற்குக் காரணம்
வேண்டுமே யரக்காதம் வருக்கம் வேரொடு
[1]மாண்டில வீதலான் [2]மாறு வேறுண்டோ.

(இ - ள்.) ஈண்டு - இங்கே, நீ—, இருந்ததை - இருப்பதை, இடரின வைகுறும ஆணதகை - (உன்னைபபிரிந்ததனாலாகிய) துன்பததில தங்கியிருக்கிற ஆண்மைகுணமுள்ள இராமபிரான், அறிந்திலன்-அறிந்தானில்லை: அதற்கு காரணம - அங்ஙனம அறியானென்பதற்குக் காரணம் [ககுந்த சாக்ஷியும்], வேண்டுமே - சொல்லவேண்டுமோ? [தானே விளங்குதலால் சொல்லவேண்டா என்றபடி]; (அசசாக்ஷி), அரக்கர்தம் வருக்கம் - ராக்ஷசர் கூட்டம், வேரொடு மாண்டில - அடியோடு அழிந்தனவில்லை யென்பதே: ஈது அலால் - இதுவே யல்லாமல், மாறு - (இதற்கு) மாறாக, வேறு - வேறு சாட்சியும், உண்டோ - உள்ளதோ? [இல்லை], (எ - று)—இதனால், இராமபிரான் இலங்கையில்வந்து தன்னை மீட்டுக்கொண்டு செல்லாமையைப்பற்றிச் சீதை பலவாறாகக்கொண்ட சங்கையை அநுமான் ஒழித்தனன்.

ராக்ஷசராசதானியாகிய இவ்விலங்கையில் நீ இருப்பதை இராமபிரான் அறிந்திருப்பானானால அப்பொழுதே சகலராக்ஷசரையும் சங்

காரஞ்செய்திருப்பான்; அதுசெய்யக காணுமையாலே, அவன் அறிந்தில னென்று ஊகித்துணரலாம் என்பதாம். பிரிவுத்துயா மகாவீரனை இராமபிரானையும் வருத்துமென்பான், 'இடரின் வைகுறு மாணடகை' என்றான். பி - ம்:—[1]மாணடிலது. [2]மற்று. (உச)

உரு —அநுமான் தன்னைப்பற்றிச் சந்தேகிக்கவேண்டா வென்றல்.

ஐயுற லுளதடை யாள மாரியன்
மெய்யுற வுணர்த்திய வுரையும் வேறுள
கையுறு [1]நெல்லியங் கனியிற் காண்டியா
னெய்யுறு விளக்கனாய் நினையல் வேறென்றான்.

(இ - ள்.) நெய் உறு விளகு அனாய் - நெய்நிறைய வார்ககப்பட்டுள்ள விளக்குப்போன்ற திருமேனி விளகத்தையுடையவளே! ஐயுறல் - (என் விஷயததில்) சநதேகநகொள்ளவேண்டா. அடையாளம் உளது-(உனது சந்தேகத்தை நீகககதக இராமபிரான்கொடுததருளிய) அடையாளம் (என்னிடததில்) உளது; ஆரியன்-பெரியோனாகிய இராமபிரான், மெய் உற-உணமை விளகநகும்படி, உணாத்திய - சொல்லியனுப்பின, உரையும் -*(அடையாள) வாரத்தைகளும், வேறு உள-வேறேஉளளன: (அவற்றையெல்லாநகொணடு), கை உறு நெல்லி அம்கனியின் - உள்ளநகையிற் பொருந்திய அழகிய நெல்லிக்கனியைப்போல, காணடி - (நீ என்னை ஐயமற) உணாவாயாக: வேறு நினையல் - (என்னைப்பற்றி) வேறுவகையாக எண்ணவேண்டா, என்றான் -- என்று கூறினன், (அநுமான்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'அடையாளம்உளது' என்றது, இராமனதுபெயர்பொறித்த மோதிரத்தை. 'உணாததியவுரையும் வேறுள' என்றது, இராமபிரானுக்கும் சீதைக்கும் தெரிந்துள்ளவையான கீழ்நடநதுள்ள சிலவரலாறுகளை; அவற்றை இப்படலததின் ௬௦-ஆம செய்யுள்முதலாக அநுமான் கூறுமாறு காண்க. கையுறு நெல்லியநகனி - கரதலாமலக மெனப்படும்; இது, முற்றும் நன்றாக விளகுதலில உவமம். வேறுநினையல் - இராவணன் என்னை ஏமாற்றுதற்காக் இவ்வண்ணம இராமதூதனென்று போலிப்பேரிட்டுக்கொணடு வந்துள்ளானோ என்று சநகிக்கவேணடா என்றபடி. பி - ம்:—[1]நெல்லியிறகடிது. (உரு)

வேறு

உசு.—இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்: சீதை அநுமானைப்பற்றி முதலிற்பலவாறுசங்கித்து ஒருவாறுதேறிப் பின்னர் யாரென்று அவனை வினவுதல்.

என்றவ [1]னிறைஞ்ச நோக்கி யிரக்கமு முனிவு மெய்தி
நின்றவ னிருத னல்ல னெறிநின்று பொறிக ளேந்தும
வென்றவ னல்ல னாகில விண்ணவ னாக வேண்டும்
நன்றுணா வுரையன் றாய னவையிலன் போலு மென்னா.

(இ - ள்.) என்று - என்றுஇவ்வாறுகூறி, அவன் - அவ்வநுமான், இறைஞ்ச - வணங்கிநிற்க,—(பிராட்டி), நோக்கி - (அவனைப்) பார்த்து, இரக்கமும் முனிவும் எய்தி - கருணையையுமகோபத்தையும (ஒருங்கு) அடைந்து, 'நின்றவன் - (எதிரில்) நின்றவன், நிருதன் அல்லன் - ராக்ஷசனல்லன்: நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன - நலலொழுக்கத்தில் தவறாதுநின்று பஞ்சேந்திரியங்களையும் அடக்கிச்சயித்த முனிவனாவன்; அல்லன் ஆகில் - அப்படியல்லாவிடடால், விண்ணவன் ஆக வேண்டும - தேவனாயிருக்கக்கூடும் (ஏனெனின்,—இவன்) நன்று உணர்வு உரையன் - நலலறிவைப்புலப்படுத்துகிற சொற்களையுடையவனும, தூயன் - பரிசுத்தமனமுடையவனும், நவை இலன் போலும் - குற்றமில்லாததொழிலுடையவனுமாவன்போலும்', என்னு - என்று எண்ணி,—(எ - று.)—இக்கவியிலுள்ள 'என்னு' என்பது, உஅ - ஆங்கவியில் 'எனநினைத்து என்னு என்றாள்' எனத தொடர்ந்து முடியும.

வந்தவன் இராமபிரானது திருநாமத்தைச் சொல்லிவந்தமைபற்றி மனங்கனிந்து இரக்கத்தையும, இராவணனே இவ்வாறு மாறுவேடமபூண்டு வஞ்சனைக்கருத்துடன் வந்துள்ளானெனக கருதியமைபற்றிகோபத்தையும் சீதை முதலில் ஒருங்கேகொண்டனளென்க. நெறிநின்று பொறிகளைந்தும் வெல்லுதல் - தனதுநலலுணாவினால் மனத்தை நல்வழிப்படுத்திப் பொறிகளின்வழியே ஐம்புலன்களிற போகவொட்டாது தடுத்தல்; இத்தன்மையன், ஜிதேந்திரியனெனப்படுவன்: பிராணிகளை அகப்படுத்தும் யந்திரங்கள்போல மனத்தை யகபபடுத்துதலின், இந்திரியங்கள் பொறிகளெனப்படுமென்பா. மனம் வாக்குக்காய மென்னுந திரிகரணங்களும ஒத்துத் தூயனாகப்பெற்றவன் என்பது, நான்காமடியில விளங்கும். இரண்டு மூன்று மடிகளிற் கூறியவற்றை ஈற்றடி சமர்த்தித்துநிற்பது, தொடர்நிலைச்செய்யுட் துறையணி; இதனை வடநூலார் காவ்யலிங்க மென்பா. போலும - ஒப்பில்போலி.

பி - ம்:—[1]இறைஞ்சி. [2]மெலிவும். (உசு)

உஎ.* அரக்கனே யாக வேறோ ரமரனே யாக [1]வன்றிக்
குரக்கினத் [2]தலைவ னேதா னாகுக கொடுமை யாக
விரக்கமே யாக வந்திங் கெமபிரா னாமஞ் சொல்லி
[3]யுருக்கின னுணாவைத் [4]தந்தா [5]னுயிரிதி னுதவி யுண்டோ.

(இ - ள்.) (இவன்), அரக்கனே ஆக - ராக்ஷசனேயானாலும் ஆகட்டும்: வேறு ஓர் அமரனே ஆக - அன்றி ஒருதேவனானாலும் ஆகட்டும்: அன்றி - அல்லாமல், குரங்கு இனம் தலைவனேதான் ஆகுக - (இப்பொழுதுகாணப்படுகிறபடி) குரங்குக்கூட்டத்துக்குத தலைவனேயானாலும் ஆகட்டும்: (இவனால் விளைவது), கொடுமை ஆக - தீமையேயானாலும் ஆகட்டும்: இரக்கமே ஆக - மனமிரங்கிச்செயயும நன்மையேயானாலும ஆகட்டும்: இங்கு வந்து - இவ்விடத்தில் [எனதுஎதிரில்] வந்து, எம்பிரான் நாமம சொல்லி - எனதுதலைவனாகிய ஸ்ரீராமனது திருநாமத்தைச சொல்லி, உணர்வை உருகநினன் - என அறிவை உருகசசெய்து,

உயிர் தருதான் - (போகிற) உயிரை (ப போகவொட்டாது காப்பாற்றி)த் தந்தான்; இதின் உதவி உண்டோ - இதைக்காட்டிலும் (செய்யத்தக்கதோர்) உபகாரமும் உளதோ? [அல்லை யென்றபடி]; (எ - று.)—எல்லாவுதவியினும் உயிருதவியே பெரிய தென்பதாம்.

இசசெய்யுளினால், சீதை இராமபிரானிடததுக் கொண்டுள்ள பேரன்பு நனகுவிளகுகும் உயிரிடததுணிந்த சீதைக்கு அநுமான் தக்ககாலததில் எதிர்பாராது வந்து ராமநாமோசசாரணத்தாற பிராணுபாயத்தைநீககினனுதலால், சீதை அவ்வுதவியை நன்குமதித்து 'இதினுதவியுண்டோ' என்றாள். 'அரககனே' முதலியவறறுளள ஏகாரங்கள் - பிரிநிலையோடு தேறறபபொருளை யுணாததும, 'ஆக', 'ஆகுக' என்ற வியவகோள்வினை முற்றுககள - விகறபப்பொருளன. ஆகஎன்பது பலமுறை அடுக்கிவந்தது சொற்பொருட்பின்வருநிலையணி. பி - ம்:—[1]அல்லை [2]ஒருவனே. [3]உருக்கினை. [4]தந்தாய். [5]உயிரககு (உஎ)

உஅ. எவ[1]நினைத தெய்த நோக்கி [2]யிரங்குமெ னுள்ளங கள்ள
மனனகத் துடைய ராய [3]வஞ்சகர் மாற்ற மல்ல
னினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப் புலம்பாநின்றான்
வினவுதற குரிய னென்னு வீரநீ [4]யாவ னென்றாள்.

(இ - ள்.) என நினைத்து - என்று எண்ணி, எய்த நோக்கி - (அநுமானைச) செவ்வையாகப் பாரததது, 'என்உள்ளம்-எனதுமனம், இரககும - (இவன் விஷயததில்) இரங்குகின்றது; (இவன்), மனன் அகத்து கள்ளம் உடையா ஆய - (தமது) மனத்திற கபடததையுடையவராகிய, வஞ்சகர் - வஞ்சகத்தையுடைய அரக்கரது, மாற்றம் - வார்ததைபோன்ற வார்ததையை, அல்லன - உடையவனல்லன; நினைவு உடை சொறகள் - (நல்ல) எணணததையுடைய சொறகளோடு, கண் நீர் நிலம் புக - கணணீர் பூமியிறபெருகுமபடி, புலம்பாநின்றான - (எனது வருததத்தைப் பாரத்துப் பொறாது) பிரலாபிககிறான்; (ஆதலால்), வினவுதற்கு உரியன் - (நீ யாவனென்று நான்) விசாரிததறகு உரியவனாவன்,' என்னு - என்று எணணி, 'வீர - வீரனே! நீ—யாவன் - யார்? என்றாள் - என்று வினவினாள்; (எ - று.)

"ஸதாம்ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாண மந்த. கரண ப்ரவ்ருததய நல்லோரகுச சந்தேகாஸ்பதமான விஷயங்களில் மனப் போக்குககளே நிரணயிபபதற்கு உரிய அறிகுறியாம்]" என்பவாதலால், சீதை, அநுமானமீது தன்மனமிரங்கித் தெளிந்தமையையும தான் வினவுததகுதியுடைய னாதறகு அறிகுறியாகக் கொண்டனள. பிரதியக்ஷ பிரமாணததால் அன்புடைமையை அறிய முடியாமையால், அநுமானபிரமாணததால் அறிநதன ளென்க. பி - ம்:—[1]உரைதது. [2]இரகுவான். [3]வஞ்சகமன்றம். [4]யாரை. (உஅ)

உகூ —இதுமுதல் எட்டுக் கவிகள் அநுமான் தான் அங்குவந்த வரலாற்றைச் சீதைக்கு விவரித்துக் கூறுதலை யுணர்த்தும்.

ஆயசொற் றலைமேற் கொண்ட வங்கைய னன்னை நின்னைத்
தூயவன் பிரிந்தபின்பு தேடிய துணைவன் றொல்லைக்
காய்கதிர்ச் செலவன் மைந்தன் கவிகுல[1]மவற்றுக் கெல்லா
நாயகன் சுக்கி ரீவ னென்றுள னவையிற் றீர்ந்தான்.

மூன்றுகவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) ஆய சொல் - அந்தப்பிராட்டிவார்த்தையையும், அம்கை - (தனது) அழகியகைகளையும், தலைமேல் கொண்டவன் - தலைமேற்கொண்டவனாய்,—(அநுமான் சீதையை நோக்கி),—அன்னை-தாயே! நின்னை - உன்னை, தூயவன் - பரிசுத்தகுணமுடைய இராமபிரான், பிரிந்த பின்பு—, தேடிய - தேடிப்பெற்ற, துணைவன் - சிநேகிதனும், தொல்லை கதிர் காய் செல்வன் மைந்தன் - பழமையான சுடுகிற கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியனது குமாரனும், கவி குலம் அவற்றுக்கு எல்லாம் நாயகன் - குரங்குக்கூட்டங்கட்கெல்லாந் தலைவனும், நவையின் தீர்ந்தான் - குற்றத்தினின்று நீங்கினவனுமாகிய, சுக்கிரீவன் என்று - சுகிரீவனென்று பெயர்சொல்லப்பட்டு, உளன் - (ஒருவன்) உள்ளான்; (எ - று.)

பிராட்டிவார்த்தையைச் சிரஸாவகித்துக் கௌரவித்துக் கைகளைத்தலைமேற்குவித்துத் திரியங்க நமஸ்காரஞ்செய்துகொண்டு அநுமான் விடைகூறுவானாயின னென்பது, முதலடியின் கருத்து. 'தலைமேற்கொண்ட'எனபது, முன்னுள்ள 'ஆயசொல்' என்பதனோடும், பின்னுளள 'அங்கை' என்பதனோடும் சென்று இயைவது, இடைநிலைத்தீவகம். பி-ம்.—[1]அதனுக்கு. (உகூ)

உ௦. மற்றவன் முனனோ னங்கா ளிராவணன் வலிதன் வாலி
னின்றுகக் கட்டி யெட்டுத் திசையினு மெழுந்து பாய்ந்த
[1]வெற்றியன் றேவா வேண்ட வேலையை விலங்கன் மத்திற்
[2]சுற்றிய நாகந் தேய வமுதெழக் கடைந்த தோளான்.

(இ - ள்.) அவன் முன்னோன் - அச்சுக்கிரீவனுக்கு மூத்தவனாகிய வாலி,—அ நாள் - முற்காலத்தில், இராவணன வலி இறந்து உக - இராவணனது பலமழுழுவதும அழிந்தொழியுமபடி, தன் வாலின் கட்டின - தனது வாலினால் (அவனை) இறுகக்பிணித்துக்கொண்டே, எட்டுதிசையினும் - எட்டுத்திக்குக்களிலும், எழுந்து பாய்ந்த - தாவிச்சென்ற, வெற்றியன் - சயத்தையுடையவன்' தேவா வேண்ட - தேவர்கள் பிரார்த்தித்ததனால், வேலையை - திருப்பாற்கடலை, விலங்கல் மத்தில் சுற்றிய நாகமதேய அமுது எழ கடைந்த - மந்தரகிரியாகிய மத்திலே (கடைகயிறாக) சுற்றின (வாசுகி யென்னும்) பாம்பு உடம்புதேயும்படியும் அமிருதம தோன்றும்படியும், கடைந்ததோளான் - தோளவலிமையை யுடையவன்; (எ - று.)

முன்னோன் - முன்பிறந்தவன்; தமையன. ருக்ஷரஜஸ்என்னும் பெண்குரங்கின் வாலைக் கண்டு காதல்கொண்ட இந்திரனுக்கு அத

னிடததிற் பிறந்தவன், வாலியெனப் பெயர்பெற்றான். அந்நாள - இராவணன் திக்விசயஞ் செய்துவந்தகாலததில். ராவணன் என்ற வடமொழிப் பெயர் - கூசசலிடுபவ னென்றும், கூச்சலிடச்செய்பவ னென்றும பொருள் படும்; சிவபிரானது கைலாசமலையைப் பெயர்க்கத்தொடஙகி அதன்கீழ்த் தன்கைகள் அகப்படடு நசுஙகுண்டபோது பேரிரைச்சலிட்டதனாலும், தனது கொடியசெய்கைகளால் உலகத்தைக கதறசசெய்ததனாலும், இவனுக்கு இப்பெயா.

இராவணன் ஒருகாலத்தில் வாலியோடு போர்செய்யும்பொருட்டுக் கிட்கிந்தா பட்டணஞ்சேர்ந்து அப்போது அவன் அஙகுஇல்லை யென்றும், வழக்கப்படி நாறகடலிலும நீராடி நிததியகரும்ம முடிக்கச சென்றுள்ளா னென்றும் அறிந்து, தென்கடற்கரைக்குச சென்று, அங்கு மந்திரஜபஞ் செய்துகொண்டிருககிற வாலியைப் பார்த்து, அவனைத் தந்திரமாக எளிதிற் பிடித்துக்கொள்ளுமபொருட்டு அடியோசைப்படாமல் மெதுவாய்நடந்து அவன்பின்னே சேர, அதனைக கீழ்க்கணணாற் கண்ட வாலி, ஜாக்கிரதைப் பட்டு, கிட்டவந்து தன்னைக கட்டியவுடனே இராவணனைக் கைகளால் இடுககி வாலினாற் சுற்றிககொண்டபடியே ஆகாயமார்க்கமாய்ச்சென்று மற்றைககடல்களிலுஞ் சோந்து நியமஙகளை நிறைவேற்றிகொண்டு தனது நகரமடைந்து இவனைக கீழே உதறின னெனறு அறிக. தேவர்களும் அசுராகளும் ஒருஙகுகூடிச சாவாமருந்தாகிய அமிருததைப் பெறுமாறு மந்தரமலையை மததாகநாட்டி வாசுகி நாகத்தைக கடைகயிறுகப்பூட்டிச சந்திரனை அடைதூணுகநிறுத்திப் பாற்கடலைக கடையமுயல்கையில், இருதிறதாரும் அதனைககடையும வலிமையிலராய் ஒடுஙகிநிற்குமளவிலே, வாநரராசனும் தேவேந்திரகுமாரனும் மகாபலசாலியுமான வாலி தான் நாள்தோறும் பலகடல்களிலுஞ் சென்று வைதிக நிததியகரும்ஙகளை முடித்து வரும் வழககப்படி பாற்கடல் சென்றுசேர, தேவர்கள் அவனை வேண்டிக் கொள்ள, அவன் சுராசுராகளை விலக்கிவிட்டுத் தான் ஒருவனாகவே இருகைகளாலும வாசுகியின்தலையையும் வாலையும் பிடித்து வலியஇழுத்து விஜரவிற் கடையவே, அமிருதமெழுந்த தென்பது கதை; (இவ்வரலாறு முதனூலாகிய ஸ்ரீவால்மீகிராமாயணததில இல்லையாயினும் புராணந்தரங்களிலேயாதல், கல்பாந்தரததிலேயாதல் உண்டென்றுகொள்க.) இசசரிததிரத்தைக காஞ்சிப் புராணதது மணிகண்டேசுரப்படலத்திற் பரக்ககாணலாம். பி - ம்:— [1]முன்னாள். [2]சுற்றிமா. (௩௦)

௩௬. அன்னவன் றன்னை யுங்கோ னம்பொன்றா லாவி வாங்கிப
பின்னவற் கரசு நல்கித் துணையெனப பிடித்தா னங்கண்
மன்னவன் றனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன் வானி
னன்னெடுங் காலின் மைந்த னுமமு [1]மறும னென்பேன்.

(இ - ள்.) அன்னவன்தன்னை - அப்படிப்பட்ட வாலியை, உமகோன் - உமதுநாயகனாகிய இராமபிரான், அம்பு ஒன்றால் - ஓரமபினால்,

ஆவி வாங்கி - உயிரைக் கவர்ந்து [கொன்று], பின்னவற்கு அரசு நல்கி - அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்கு இராசசியத்தைக் கொடுத்து, துணை என பிடித்தான் - (உன்னைத்தேடுதற்கு அவனையே) துணையாகக் கொண்டான்: நாயேன் - நாய்போற் கடைப்பட்ட நான், நங்கள் மன்னவன் தனக்கு - எங்கள் அரசனான அச் சுக்கிரீவனுக்கு, மந்திரத்து உள்ளேன் - ஆலோசனைச்சபையி லுள்ளவன்: வானின் நல் நெடுங் காலின் மைந்தன் - ஆகாயத்திலுலாவுகிற நல்ல நீண்ட வாயுதேவனது புதல்வன்: நாமமும் - (எனது) பெயரும், அநுமன் எனபேன் - அநுமானென்று சொல்லப் படுவேன்; (எ - று.)

கீழ் வாலியைச் சிறப்பித்துக்கூறி, இங்கு 'அன்னவன் தன்னையுங் கோனம் பொன்றா லாவிவாங்கி' என்று கூறியதன் நோக்கம்,—இராவணனையழித்துத் தன்னைமீட்கும் ஆற்றல் இராமனுக்கு உண்டோ இல்லையோ என்னும் ஐயம் சீதைக்கு நிகழாதவாறு தேறுதற் கென்க. மந்திரத்துள்ளேன் - மந்திரித தொழில்செயபவன். பி - ம்.—[1]அநுமனென்றான். (௩௧)

௩௨. எழுபது வெள்ளங் கொண்ட வெண்ணன வுலக மெல்லாந்
தழுவினின் றெடுப்ப வேலை தனித்தனி கடக்குந் தாள
குழுவின வுங்கோன் செய்யக் குறித்தது குறிப்பி னுன்னி
வழுவில செய்தற் கொத்த வாநரம் வானி னீண்ட.

(இ - ள்.) எழுபது வெள்ளம் கொண்ட எண்ணன - எழுபதுவெள்ளமென்னுந் தொகையைக் கொண்டவையும், உலகம் எல்லாம் தழுவி நின்று எடுப்ப - எலலாவுலகங்களையும் ஒருசேரக் கைகளால் எடுக்க வல்லவையும், வேலை தனி தனி கடக்கும் தாள - கடலைத் தனித்தனியே தாண்டவல்ல கால்களையுடையவையும், வானின் நீண்ட - ஆகாயத்தினும் உயர்ந்தவையுமான, வாநரம் - குரங்குகள்,—உம் கோன் செய்ய குறித்தது - உமது தலைவனாகிய இராமபிரான் செய்யநினைத்ததை, குறிப்பின் உன்னி - (முகம் கண் புருவம் முதலியவற்றின்) குறிப்பினால் ஆராய்ந்தறிந்து, வழு இல செய்தற்கு - (அக்காரியங்களைத்) தவறாதனவாயச் செய்தற்கு, ஒத்த - மனம்ஒருமித்தவையாய், குழுவின - கூடியுள்ளன; (எ - று.)

அநுமான், துணைவலிசிறப்பை அறிவித்தற்கு, வாநரங்களின் வலிமை முதலியவற்றை எடுத்துக்கூறின னென்க. வெள்ளம் - ஓர் பெருந்தொகை; மிகப்பல அக்ஷௌகிணி கொண்டது; (யானை ஒன்றும், தோ ஒன்றும், குதிரை மூன்றும், காலாள ஐந்துங் கொண்டது - பத்தி யெனப்படும்; அப்பத்தி மூன்று பங்குகொண்டது - சேனாமுகம்; சேனாமுகம் மூன்று - குல்மம், குல்மம் மூன்று - கணம்; கணம் மூன்று - வாகினி; வாகினி மூன்று - பிரதனை; பிரதனை மூன்று - சமூ; சமூ மூன்று - அநீகினி; அநீகினி பத்து - அக்ஷௌகிணி; (ஆகையினால், அக்ஷௌகிணி யென்பது - தோ உகஅஎo, யானை உகஅஎo, குதிரை சுருசுகo, காலாள் கoகுகுடுo: ஆக, உகஅஎoo - கொண்டதாம்.) அக்ஷௌகிணி எட்டுப்

பங்குகொண்டது - ஏகம்; ஏகம் எட்டு - கோடி; கோடி எட்டு - சங்கம்; சங்கம் எட்டு - விந்தம்; விந்தம் எட்டு - குமுதம்; குமுதம் எட்டு - பதுமம்; பதுமம் எட்டு - நாடு; நாடு எட்டு - சமுத்திரம்; அநதச சமுத்திரம் எட்டுப் பகுகொண்டது - வெள்ளம் எனக் காண்க. குறிப்பு - இகழ்தி மெனப்படும்.

ரூ.ரூ. துப்புறு பரவை யேழுஞ் சூழ்ந்தபா ரேழு மாழ்ந்த
வொப்புறு நாகர் நாடு [1]மும்பரி னிம்பர் காறு
மிப்புறந் தேடி நின்னை யெதிர்ந்தில வென்னி னண்டத்
தப்புறம் போயுந் [2]தேட வவதியி னமைந்து போன.

(இ - ள்.) (அவற்றிற் பலவாநரங்கள்),—துப்பு உறு பரவை ஏழும் - பவழக்கொடிபொருந்தப்பெறற ஏழுகடல்களிலுய, சூழ்ந்த-(அக்கடல்களாற்) சூழப்பட்டுளள, பா ஏழும - ஏழுதீவுகளிலுமாக, இம்பர் காறும் - இந்தப் பூமியிலும், ஆழ்ந்த ஒப்பு உறு நாகா நாடும் - கீழே ஆழ்ந்துள்ள (தனகுத் தன்னையே) உவமையாகக்கொணட நாகலோகமாகிய பாதாளததிலும், உம்பரின் - மேலுலகததிலுமாக, இ புறம் - இவ்வண்டத்தில், தேடி - தேடிப் பார்த்து, நின்னை—, எதிர்ந்தில எனனின் - காணப்பெறுதனவாயின், அண்டது அபபுறம் உம் - இவ்வண்டததுகு அப்பாலுள்ள பகிரண்டங்களிலும், போய் தேட - சென்று தேடிபபாக்குமபடி, அவதியின் அமைந்து - ஒரு காலவெல்லையை உடன்பட்டு, போன - (அதற்குளதேடிவருவதாகச்) சென்றுள்ளன; (எ - று.)

துப்புறு - வலிமைமிக்க என்றுமாம். கடல் ஏழ் - உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின்மயமானவை. பார் என்னும் சொல் - நிலவுலகம் முழுதையுமேயன்றித தன்கட் கூறுபட்ட நிலநகளை உணாத்திநின்றது; "மாயோன் மேயகாடுறை யுலகம்" என்ற விடதது 'உலகம்' என்னுஞ்சொற் போல. 'நாகர்நாடு' என்றது - கீழேழுல கநகளையும், 'உம்பர்' என்றது - பூமிக்குமேலுள்ள ஆறு உலகநகளையும் உபலக்ஷணத்தாற் குறிக்கும். இந்தப் பதினான்குஉலகமுஞ் சேர்ந்ததே ஓரண்ட மெனப்படுவது. அவதி - (கால) எல்லை; வடசொல். அவதியின் அமைந்தமையை, "ஒருமதி முற்றுருதமுன் முற்றுதி ரிவ்விடைக், கொற்றவாகையி னீர்" என்றதனால் அறிக. பி - ம்:—[1]உம்பருமிம்பாநாடும். [2]தேடுமமைதி யையமைந்துன்னி. (ரூரூ)

ரூச. புன்றொழி லரக்கன் கொண்டு போந்தநாள் பொதிந்துதூசிற்
குன்றினெம் மருங்கி னிட்ட வணிகலக் [1]குறியி னாலே
வென்றியா [2]னடியன் றன்னை வேறுகொண் டிருந்து கூறித்
தென்றிசை சேறி யென்று னவனருள் சிதைவ தாமோ.

(இ - ள்.) புல் தொழில் அரக்கன் கொணடு போந்த நாள் - இழி தொழிலையுடைய ராக்ஷசனாகிய இராவணன் (உன்னை) எடுத்துக்கொண்டு சென்ற காலத்தில், (நீ), தூசின் பொதிந்து - ஆடையில் முடிநது, குனறின் எமமருகின இட்ட - (ரிசியமூக) பருவததில் எமது அருகிலே

போகட்ட, அணிகலம் - திருவாபரணங்களின், குறியினால் - குறிப்பினால் [அவ்வாபரணங்களை நான் எடுத்துக்காட்டிற சொன்ன அடையாளத்தினால்], வென்றியான் - வெற்றியையுடைய இராமபிரான், அடியன் தன்னை - (தனது) அடியவனாகிய என்னை, வேறுகொண்டு இருந்து-தனியே அழைத்து வேறிடத்தில் வைத்துக்கொண்டிருந்து, கூறி - (சிலவார்த்தைகள்) சொல்லி, தென் திசை சேறி என்றான - '(நீ) தெற்குத்திக்கை நோக்கிச் செல்வாயாக' என்று (எனக்குக்) கட்டளையிட்டருளினான்: அவன் அருள் சிதைவது ஆமோ -அவனது கருணைபழுதுபடுவதாகுமோ? (எ - று.)—ஆகா தாதலால், அடியேன் உன்னை இங்குக் காணப்பெற்றேன் என்பதாம்.

சீதை சீலையில் முடிந்தெறிந்த அணிகலன்களை அநுமான் தந்து தன் மனத்துக்குத் தேறுதலை யுண்டாக்கினமைபற்றி, இராமபிரான் அவ்வநுமான் மீது மற்றையோரிடத்தினும் மிக்கநம்புதலையுடையனாயினனென்க. வென்றியான் அநுமானை வேறுகொண்டிருந்து கூறினமையை, கீழ்க்காண்டத்து நாடவிட்டபடலத்துக் காண்க; இதுபற்றியே, அநுமான் முன்னதன்னை 'அருந்தேன்' என்று உரைத்ததும். அப்பொழுது கூறியன - அடையாள வார்த்தைகள். பி - ம்.—[1]குறிப்பினாலே. [2]அடியனேனை. (௩௪)

௩௫ கொற்றவற் [1]காண்டுக் காட்டிக் கொடுத்தபோ தடுத்ததன்மை
பெற்றியி னுணர்தற பாற்றோ வுயிரநிலை பிறிது முண்டோ
விற்றைநா ளளவு மன்னா வன்றுநீ [2]யிழித்து நீத்த
மற்றை நல் லணிகள காணுன் மங்கலங் காத்த மனனோ.

(இ - ள்.) அன்னா - தாயே! கொற்றவற்கு - வெற்றியையுடைய இராமபிரானுக்கு, ஆண்டு - (சுக்கிரீவனோடு நட்புகொண்ட) அப்பொழுது, காட்டி கொடுத்த போது - (நான் ஆபரணங்களை எடுத்துக) காண்பித்து (அவன் கையிற்) கொடுத்த சமயத்தில், அடுத்த தன்மை - (அப்பிரானுக்கு) நேர்ந்த நிலைமை, பெற்றியின் - (நான இப்பொழுது சொல்லும) வகையினால், உணர்தல் பாற்றோ-அறியத்தக்க தன்மையுடையதோ? [கண்டிருந்தால்தான் உணரமுடியும என்றபடி]; உயிர் நிலை - (அப்பிரானது) உயிர் (உடம்பை விட்டுநீங்காமல்) நிற்றற்குக் காரணம், பிறிதும் உண்டோ (அவ்வாபரணங்களேயன்றி) வேறொன்றும் உள்ளதோ? நீ—, அன்று - அந்நாளில், இழித்து நீத்த - கழற்றியெறிந்த, மற்றை நல் அணிகள - மற்றைச் சிறந்த ஆபரணங்களே, உன் மங்கலம் - உனது மங்கலநாணை [திருமங்கலியத்தை], இற்றை நாள் அளவும் - இன்றைத்தினமட்டும், காத்த - காப்பாற்றின; (எ - று.)

தன்வரலாறுகூறிவந்த அநுமான் இராமபிரானதுசெய்தியை இடைப் பிறவரலாகக்கூறியது - இராமபிரான் தனமீது மிகக் அன்புடையனென அறிந்து சீதை மனந்தேறியிருத்தற்பொருட்டும், தான் இராமபிரானுக்கு அந்தரங்கன் எனச் சீதைக்கு உணர்த்துதற்பொருட்டு

மென்க. அவ்வாபரணங்களைக் கண்டதினாலே உன்னைப்பிரிந்து இதனை நாளாயும் இராமபிரான் உயிர் வைத்திருக்கின்றனன்: காணாவிடின் அன்றே உயிரிழந்திருப்பனென்பதாம் இராமன் இறந்து படுவனென்பதை வாயினால் சொல்லக்கூசி 'உன்மங்கலங் காத்த' என வேறு வகையாக கூறினது பிறிதினவிற்சியணி. ஆண்டு - அவ்விடத்தில [ரிசிய மூககிரியில்] என்றுமாம். மறை என்னும் இடைச்சொல் - சுட்டியதற்கு இணமான பொருளுளது. அணி - அணியப்படுவ தென்னும் பொருளிற செயப்படுபொருள விகுதி புணர்ந்து கெட்ட பெயர் பி - ம் —[1]கொண்டு காட்டி. [2]கழித்து.

௩௬. ஆயவன் றனமை நிற்க வங்கதன் வாலி மைந்த
னேயவன் றென்பால வெளள மிரண்டினோ டெழுந்து சேனை
[1]மேயின படர்ந்து தீர வனையவன் விடுத்தா னென்னைப
பாய்புன லிலங்கை மூதூர்க் கெனறனன் பழியை வென்றான்.

(இ - ள) ஆயவன தன்மை நிற்க- அந்த இராமபிரானது தன்மை (இவ்வாறு) இருக்கட்டும். வாலி மைந்தன - வாலியின் புதல்வனாகிய, அங்கதன - அங்கதனென்பவன், ஏயவன் - (இராமபிரான கட்டளைபடி சுக்கிரீவனால்) ஏவப்பட்டவனாய, தென்பால் - தெற்குத்திக்கை நோக்கி, இரண்டு வெளளம் சேனையோடு எழுந்து படர்ந்து - இரண்டு வெளளமென்னுந் தொகையுடைய சேனையுடனே (கிஷ்கிந்தாநகரத்தினின்று) புறப்பட்டுச்சென்று,—மேயின - பொருந்திவந்தனவான அந்தச்சேனைகள், தீர - (கடலைக்கணடு) பின்வாங்கித்திரக,—அனையவன் - அந்த அங்கதன், என்னை—, பாய் புனல் இலங்கை முதூர்க்கு - பாயும் இயல்புளள கடல நீராற் சூழப்பட்ட பழமையான இலங்கா நகரத்திற்கு, விடுத்தான் - அனுப்பினான், என்றனன - என்று கூறினான (யாவனெனில்,—)பழியை வென்றான் - பழிக்கப்படுவனவாகிய (காமம் முதலிய) குற்றங்களைச் சயித்தவனான அனுமான்; (எ - று)

கடல் கடந்து இலங்கை சென்று செய்தி தெரிந்து மீண்டுவரும் வலிமை தமக்கு இல்லாமையை அங்கதன் முதலிய வாநரவீரர் தெரிந்து சொல்ல, பின்னர் ஜாம்பவான் தூண்டியதனால் அநுமான் கடல் கடக்க உடன்பட்டனனென்க ப்ரஸ்தாநுபரஸ்தமாக [தொட்டதைத் தொடுக்க] கீழ இராமபிரானது வாலாற்றை யுணர்ந்ததினாலையால், 'ஆயவன்றன்மை நிற்க' என வேண்டிற்று அங்கதன - வாலிக்குத் தாரையிடம் பிறந்த குமாரன். தெற்கு நோக்கிச் சென்ற வாநரவீரர்க்குத் தலைவனான இவ்வங்கதன் தன்னை ஏவாதிருக்கவும், அநுமான் தன்னை ஏவினதாகக் கூறினது, தான் கடல் கடக்கச் செல்கையில் அதற்கு உடன்பட்டிருந்தமைபற்றி பி - ம் —[1]ஏயின.

௩௭.—அனுமாள் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்த சீதை அவனைநோக்கி 'இராமபிரான் திருமேனியழகைக் கூறு என்றல்.

எய்தவனுரைத்த லோடு மெழுந்தும்பே ருவகை யேற
வெயதுற லொடுங்கு மேனி வாணுற விமமி யோங்கி

யுய்தல்வந் துறற தோவென் றருவிநீ ரொழுகு கண்ணா
ளையசொ லையன் மேனி யெப்படிக் கறிதி யென்றாள்.

(இ - ள்.) எய்து அவன் - (தூதாக) வந்த அவ்வநுமான், உரைத்த லோடும் - (இவ்வாறு) கூறின மாத்திரததில்,—(சீதை), பேர் உவகை எழுந்து ஏற - (தன்மனததிற்) பெருங்களிப்பு உண்டாகி வளர, வெய்து உறல் ஒடுங்கும் மேனிவான் உற விமமி ஓங்கி - வெப்பமுடையதாகிய துன்பத்தை யடைந்ததனால் வாடிப்போன தன் உடம்பு பருமையை யடையும் படி பூரித்து உயர்ந்து, உய்தல் வந்து உற்றதோ என்று - '(துன்பம் நீங்கி) உயிர்பிழைக்குங்காலமும் (எனக்கு) வந்து பொருந்தியதோ!' என்று வியந்துகூறி, நீர் அருவி ஒழுகு கண்ணாள் - கண்ணீர் அருவிநீர்ப்பெருக்குப் போலப் பெருகுகின்ற கணகளையுடையவளாய, 'ஐய - பெரியவனே! ஐயன் மேனி - இராமபிரானது திருமேனியை, எப்படிக்கு அறிதி - எந்த விதமாக அறிகிறாய்? சொல் - சொல்வாயாக, என்றாள் - என்று வினவினாள்; (எ - று)

பிரிவினால் மெலிந்து கிடந்த மேனி பூரிததமையை அதிசயோக்தி வகையால் 'வானுறவிம்மி யோங்கி' என்று ரென்னலாம் ஓகாரம்-மகிழ்ச்சி. இங்குக்கூறிய கண்ணீர், ஆநந்தபாஷ்பம். ஐயசொல் ஐயன் மேனி என் பதற்கு, அழகிய சொற்களையுடைய இராமபிரானது திருமேனி யென்றுமாம். தனது கணணாறகாண இபபொழுது கூடாவிடினும் கேட்டாவது சிறிது மகிழலா மென்னுங் கருததோடு 'எப்படிககு அறிதி' என வினவினளென்க; இதில், அவ்வநுமானது தன்மையைப் பரீக்ஷிக்குமாறும் விளங்கும். "படி கண்டறிதியே பாம்பணையினன்புட், கொடிகண்டறிதியே கூறாய" என்றது, இவ்வு நினைவிறகு வருகின்றது. (௩-எ)

௩அ.-அநுமான் இராமபிரானது திருமேனியழகை வர்ணிக்கத்தொடங்குதல்.

படியெடுத் [1]துரைத்துக காட்டும் படிததன்று படிவம்பண்பின்
முடிவுள [2]வுவம மெலலா மிலக்கண [3]மொழியு முன்னர்த்
துடியிடை யடையா ளத்தின றொடாரவை தொடர்தி யென்னா
வடிமுதன் [4]முடியின் காறு மறிவுற வநுமன் [5]சொல்வான்.

(இ - ள்.) 'துடி இடை - உடுக்கைபோனற இடையையுடையவளே! படிவம் - (இராமபிரானது) திருமேனி, படி எடுத்து உரைத்து காட்டும், படிதது அன்று - உபமானம எடுததுச சொல்லிக் காட்டுந் தன்மையை யுடையதன்று: (ஏனெனில,—) பண்பின் முடிவு உள உவமம் எல்லாம - (தமது இயற்கைககுணங்களில் சிறிதும குறைவுபடாது) நிறைந்துள்ள உபமானப்பொருளகள் யாவும, முனனா - (இராமபிரானது திருவுருவத் தின) முன்னே, இலककணம ஒழியும - (தமதமது) உவமைததன்மை குன்றி நிறகப்பெறும [உவமையாக மாட்டா]; (ஆகையால்) அடையா ளததின தொடா அவை - (யான்கூறிவரும) அடையாளங்களின் தொடர்ச்சி யைககொணடே, தொடர்தி - (அவ்வடிவததின அமைதியைப்பறறி எனது கருத்து இவ்வாறெனறு) ஊகிததுணாவாய', எனனு - எனறு சொலலி,

அநுமன்,—அடி முதல் முடியின் காறும - திருவடிமுதல் திருமுடி ாறாக, அறிவுற - (சீதை) அறிந்துகொள்ளும்படி, சொல்வான் - சொல்பவ னானான்; (எ - று)—அவறறை, மேல் இருபதுகவிகளிற காண்க.

'படியெடுத்துரைததுககாட்டுமபடித்தன்று' என்ற முதலவாகியதனைப பின்வாககியம சமாததிததுநின்றது, தொடர்நிலைச் செய்யுட்குறியணி. பணபு - உவமையாவதறகுரிய குணம தமககு இருகக வேணடிய குணங களிற சிறிதும குறைபாடின்றி நிறைநதிருப்பினும், உபமானபபொருளகள், இராமபிரானது திருவுருவத்திறகு உபமானமாயிருககுந்தனமையைத் தாங கள் சிறிதும் பெறமாட்டா என்பது, இரணடாமடியின் கருததது; இதனால், இராமபிரானது திருவுருவபபொலிவு நனகு விளங்கும் 'பணபின் தொடாதி' எனபதறகு - குணங்களில எல்லையுள்ளவையாகிய பலஉபமானங் களால் (அததிருமேனியின்) லகஷணங்களை யான் சொல்லுமுனனே [சொல்லிவரும அபபொழுதபபொழுதே] அவ்வடை ாளங்களினால அறியத தக்க அததிருவவயவங்களை அறிவாயாக என்றலும் ஒன்று. இனிககூறபபடும் இராம வாணனையாகிய பிரபந்ததுககு இசசெய்யுள அவையடக்கமாய் அமைந்ததெனனலாம். பி - ம்—[1]ஏது [2]உவமைகளெல்லாம், [3]உரைக்கின் முந்தத். [4]முடியீறாக [5]சொன்னான் (ஙஅ)

வேறு

ஙகூ—திருவடிச் சிறப்பு

சேயிதழ்த் தாமரை யென்று சேணுளோ
ரேயின ரதனறுணை யெளிய தில்லையா
னாயகன் றிருவடி குறிதது நாட்டுறிற்
பாயதிரைப பவளமுங குவளைப [1]பண்பினும்.

(இ - ள) சேண உளோர - உயாசசியையுடைய விததுவானகள, சேய இதழ் தாமரை என்று ஏயினர் - (பாதங்கட்கு உவமைபபொருள) சிவந்த இதழ்களையுடைய [செந] தாமரைமல ரென்று நியமித்து வைத தாகள்' நாயகன் திரு அடி குறிதது நாடுறின் - இராமபிரானது திரு வடிகளை உததேசிதது (உவமையை) நிலைநிறுத்த தொடங்கினால், அதன் துணை எளியது இல்லை - அசசெநதாமரைமலரினளவு தாழ்வுடைய பொருள ஒன்றும இல்லை [திருவடிகட்குமுன அசசெநதாமரைமலா மிகவுந்தாழ்ந்த தாம என்றபடி]; (அன்றியும), பாய திரை பவளமும - பாய்கின்ற அலைகளை யுடைய கடலில்தோன்றுகிற பவழமும, குவளைபணபின ஆம - (அததிரு வடியின செமமைககுமுன்) நீலோறபலமலாபோலககருநிறமுடையதாம; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராமபிரானது திருவடிக்குக தாமரையும பவழமும ஒப்பாகா என்பதாம; எதிர்நிலையணி; மேல்வருவனவறறிறகும இவ்வனமே அணி கொள்க. செமமைமென்மைகளால் தாமரையும, நிறததால பவழமும அடிக்கு உவமையாக கூறப்படும். மூன்றுமடியை மதிமதீபமாக முன்

பின்வாக்கியம் இரண்டிலுங கூட்டுக 'பவளமும் குவளைப்பண்பினும்' என்றது, பவழததோடு கருநெயதல்மலாக்கு நிறத்தில் எவ்வளவுவேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடு, இராமபிரானது திருவடியின செந்நிறததோடு பவழத்தின் செந்நிறததிறகு உணடு என்றவாறு பி பி —[1]பண்பிற்றால். (ருகூ)

சஂ —திருவடிவிரல்களின் சிறப்பு.

தளங [1]கெழு கற்பக முகிழுந் தண்டுறை
யிளங்கொடிப் பவளமுங் கிடக்க வென்னவை
துளங்கொளி விரற்கெதி ருதிக்குஞ் சூரிய
னிளங்கதி ரொக்கினு மொக்கு மேந்திழாய்.

(இ - ள்.) எந்து இழாய் - தரிதத ஆபரணங்களையுடையவளே! தளம் செழு கற்பகம் முகிழும - இதழ்களோடுகூடிவிளங்குகின்ற கற்பகவிருக்ஷங்களின் செவ்வரும்புகளும, தண துறை இளங கொடி பவளமும - குளிர்ந்த கடல் நீர்த்துறையில் தோன்றுகிற இளமையான பவழக்கொடியும், கிடக்க - இருக்கட்டும. அவை என் - அவறறுற் பயன் என்ன? [அவை திருவடிவிரல்களுககுச சிறிதும உவமையாகாஎன்றபடி]; உதிகரும் - உதயமலையில் தோன்றுகின்ற, இள சூரியன் கதிர் - இளஞ்சூரியனது கிரணங்கள், துளங்கு ஒளி விரற்கு - விளங்குமஒளியையுடைய (இராமபிரானது) திருவடிவிரல்களுககு, எதிர் ஒகினும ஒக்கும் - உவமையாக (ஒருகால்) பொருந்தினுலும பொருந்தும்; (எ - று.)

இளஞ்சூரியகிரணங்களும் திருவடிவிரல்கட்குச செம்மைநிறத்தில் தககஉவமையாகா தென்றவாறு 'கிடக்க' என்றது, அலட்சியத்தைக் குறிக்கும் ஒருசொல்விழுக்காடு. பி - ம்·—[1]கிளா. (சஂ)

சஃக —திருவடிவிரல் நகங்களின் சிறப்பு.

சிறியவும் பெரியவு மாகித் திங்களோ
மறுவில பத்துள வலல மறறினி
யெறிசுடா வயிரமோ திரட்சி யெய்தில
வறிகிலெ னுகிர்க்கியா னுவம மாவன.

(இ - ள்.) சிறியவும - (சில) சிறியனவாயிருப்பவையும், பெரியவும - (சில) பெரியனவாயிருபபவையும, ஆகி - இவ்வாறு வெவ்வேறு வகைப்பட்ட வடிவையுடையனவாய், மறு இல - களங்கமில்லாதனவாகிய, திங்கள் பதது ஓ - பததுச சந்திரமண்டலங்களோ, உள அல்ல - (உலகததில்) உள்ளன வல்ல; இனி—, எறி சுடர் வயிரமோ - வீசுகின்ற ஒளியையுடைய வசசிரமென்னும் இரத்தினமோ, திரட்சி எயதில - திரண்ட வடிவததை அடைந்தனவில்லை; (ஆதலால்), உகிர்கு - (அப்பிரானது) திருவடிவிரல் நகங்களுககு, உவமம் ஆவன - உபமானமாவதற்கு ஏறறபொருள்களை, யான்—, அறிகிலென - அறிகிறேனில்லை; (எ - று.)

சிறியனவும பெரியனவுமான வடிவமுடையனவும் களங்கம் நீங்கினவுமாகி ஒருங்குகூடி நிலத்தில் விளங்குகிற பத்துப் பூரணசந்திரா

களும, இயல்பிலே திரண்டவடிவுள்ள பத்து வயிரக்கற்களும் உளவாயின் அவை திருவடி நகநகட்கு ஒருபடியொப்பாமென்ற கருத்து அமையக் கூறியிருத்தலால், இச்செய்யுளில் உயிர்த்துணரவைப்பணி தொனிக்கும். ()

சஉ.—புறவடியின் சிறப்பு.

பொருந்தில நிலனொடு போந்து கானிடை
வருந்தின வெனினது நூலை மாறுகொண்
டிருந்தது நின்றது புவனம் யாவையு
மொருங்குடன் புணர்வஃ துறைக்கற் பாலதோ.

(இ - ள்.) நிலனொடு பொருந்தில - (அயோத்தியிலிருந்தபொழுது) தரையில நடவாதிருந்த திருவடிகள், (பின்பு), கானிடை போந்து வருந்தின எனின் - காட்டில் நடந்துசென்று வருத்தமுற்றன வென்றாலும், அது - (அப்பாதங்களின்) புறவடி, நூலை மாறுகொண்டு இருந்தது - புத்தகத்தை ஒப்பாகக்கொண்டிருந்தது; (மேலும்), புவனம் யாவையும் - எல்லாவுலகத்தவரும், ஒருங்கு உடன் புணர்வஃது - ஒருசேர வீழ்ந்து சரணமடையப் படுவதாய், நின்றது—; உரைக்கற்பாலதோ - (அதன் சிறப்புக) சொல்லத் தகுமதோ? (எ - று.)

சுவடி புறவடிக்கு வடிவில் உவமையாதலை "நாடும் புறவடியே நன் கமைந்த புத்தகமும்," "நூலெழுது புத்தகம் ஆமை புறவடியொப்பாம்," என்பவற்றாலும அறிக. நூலைமாறுகொண்டிருந்தது என்பதற்கு - ஸாமுத்திரிகசாஸ்திரலக்ஷணத்தையுங கடந்து அதிக விலக்ஷணமாயுள்ள தென்றும் பொருள்கொள்ளலாம். நூல் - உவமையாகுபெயர். புணர்வஃது - புணர்வது என்பதன் விரிதல் விகாரம்: இங்கு, ஆய்தம் உயிர்போலநின்றது. இச செய்யுட்குத் திருவடியின் சிறப்பைத் தெரிவிப்பதாகப் பொருள்கூறுதல் பொருந்தாது; முன்னரே [ங்க - ஆம் கவியில்] கூறியுளளதனால். (சஉ

சங.—கணைக்கால்களின் சிறப்பு.

தாங்கணைப் பணிலமும் வளையுந் தாங்கரா
வீங்கணைப பள்ளியா னெனினும் வேறினிப்
பூங்கணைக் காற்கொரு பரிசு தான்பொரு
மாங்கணைக் காவமோ வாவ தன்னையே.

(இ - ள்.) அன்னையே - தாயே! இனி—, அணை தாங்கு பணிலமும் - கடற்கரையில் தங்கும இயல்புள்ள சங்கத்தையும், வளையும் - சக்கரத்தையும், தாங்கு - (திருகைகளில்) தரித்துள்ள, அரா வீங்கு அணை பள்ளியான் எனினும் - ஆதிசேஷனை (க காறறுநிறைந்து) உள்பூரித்துள்ள படுகை மெத்தையாகவுடைய திருமாலே சொன்னாலும், பொரும் கணைக்கு ஆம ஆவம் - போர்செய்யும் அம்புகட்கு இருப்பிடமாகிய அம் பறாத்தூணி, பூ கணைக்காற்கு - (இராமபிரானது) அழகிய திருக்கணைக் கால்களுக்கு, ஒரு பரிசு தான் ஆவது ஓ - (முழுவதும் ஒப்பாகாவிடினும்)

ஒருபடியாக வாவது ஒபபாகவல்லதோ? வேறு - வல்லதன்று; (எ - று)—கணைகால் - முழங்காலின் கீழிடம்.

கணைகாலுககும அமபறாத தூணிககும ஒப்புமை, வடிவில். இனி, இசசெயயுளுககு, கணைகாற்கு ஒபபுமை சொல்லுமிடத்து அராப் பள்ளியான் எனினும [திருமாலின திருககணைகாலேயானாலும] வேறு ஒரு பரிசதான பொரும [நேரான உவமையாகாது]; அதுவே அங்ஙன மானபோது, இனி அதறகு அம்பறாததூணி உவமையாவதறகு ஏறற தாகுமோ? எனத தோடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணியும் தோன்று மாறு பொருளகூறலும் பொருந்தும. இப்பொருளில், பொரும என்பது - பொருவும எனற செய்யுமெனெசசததின விகாரம அணை - கரைபபொது. அணைதாஙகு - பணிலததுககுச சாதியடை. தாங்கு-தஙகு எனபதன் நீட்டல். வளை - வட்டமாகவளைந்த வடிவுடையது எனச சககரததுககுக காரணககுறி. காறறை உணவாக உட்கொளளும ஆதிசேஷனைப படுககை மெததையாக வுடைமையால், திருமாலை 'வீஙகணைபபளளியான்' எனறா அணைபபளளி - இருபெயரொட்டு. இசசெய்யுளில், திரிபுஎன்னுஞ சொல்லணி காணக (சஙட)

சஙச —தொடைகளின் சிறப்பு.

அறங்கிளர் பறவையி [1]னரச னுடெழிற
பிறங்கெருத் தனையன [2]பெயரும் பெற்றுடை
மறங்கிளர் மதகரி [3]கரமு நாணின
குறஙகினுக் குவமையிவ வுலகிற் கூடுமோ.

(இ - ள்.) (இராமபிரானது திருகதொடைகள),—அறம் கிளர் பறவையின் அரசன் - தருமசொரூபியாய் விளஙகுகினறவனும் பறவைகட்கு ரசனுமான கருடபகவானது, ஆடு எழில் - நிரமபிய அழகையுடைய, பிறங்கு எருத்து - விளஙகுகிற பிடரியை, அனையன - ஒததுவிளஙகு கின்றன; பெயரும் பெறறு உடை - (திக்கஜஙகளென்று) பெரும பெயரை யும் படைததுளள, மறம் கிளா - வலிமைமிகுநத, மதம் - மததததையுடைய, கரி - யானைகளின், கரமும - துதிகககளும, நாணின - (அததொடை கட்கு ஒப்புமையாகமாட்டாது) வெட்க மடைநதன; குறஙகினுகு - (இப படிபபடட) தொடைகளுககு, உவமை - (வேறு) உபமானம, இ உலகில் கூடுமோ - இநதவுலகததிற கிடைககுமோ? (எ - று)

பறவையின் அரசன் - பக்ஷிராஜன்; காசியபமுனிவாககு விநதையி னிடம் தோன்றியவன, சூரிய சாரதியான அருணனது தமபி; திருமா லுக்கு வாகனமும் துவசமுமாயிருபபவன் இவனை 'பெரிய திருவடி' என வழங்குவது, வைஷணவசம்பிரதாயம (அநுமான், சிறிய திரு வடி' எனபபடுவன்.) கருடபகவான் வேதசொரூபியாதலால், 'அறங் கிளா பறவையினரசன்' எனபபட்டான கரிகரம - திரட்சியாலும், நீட்சி யாலும உவமை. கரி - கரததையுடையது; (கரம் - துதிககை) பரம பததில் எழுநதருளியிருககிற பெரிய திருவடியின் பிடரியும தெய்வத்

தன்மையுள்ள திக்கஜங்களின்கரங்களுமே உவமையாமாதலால், 'குறகினுககு உவமை இவ்வுலகிற் கூடுமோ' என்றான. பொன்மயமாக விளங்குதலால், அவனது பிடரி 'பிறங்கெருத்து' எனப்பட்டது. 'பிறங்கெருத்தனையது' என்ற பாடததுககு - எருததும அத்தன்மையதே [ஒப்பாகாமையால வெள்கினதே] எனப பொருள காணக பி - ம்:—[1]அரசின். [2]எவரும். [3]கரத்தை. (சச)

சடு —திருவுந்தியின் சிறப்பு

வலஞ்சுழித தொழுகுநீ [1]வழங்கு கங்கையின்
பொலஞ்சுழி யென்றலும் புன்மை பூவொடு
நிலஞ்சுழித தெழுமணி யுந்தி நேரினி
யிலஞ்சியும [2]போலும்வே றுவமை [3]யாண்டரோ

(இ - ள.) பூவொடு - தாமரைபபூவோடு, நிலம சுழிதது எழும - எல்லாவுலகங்களும ஒன்றுகூடி உணடாகப்பெற்ற, மணி உந்தி - அழகிய கொபபூழுககு, (உவமை), வலம சுழிதது ஒழுகும நீர கங்கையின் வழங்கு பொலம் சுழி - வலப்பக்கமாய்ச சுழிககபபெற்றுப் பெருகுகிற நீரையுடைய கங்காநதியிற பொருநதிய அழகிய நீரசசுழியாம', என்றலும - என்று சொல்லுதலும, புன்மை - இழிவாம. இனி—, இலஞ்சியும - மகிழம பூவும, நோ போலும - (அதறகு) ஒப்புபபோலும' [அதுவும ஒவ்வாது]: வேறு உவமையாணடு - (இதறகு) வேறே உபமானம் எவவிடத்தில் உளளது?(எ - று)—அரோ - ாறறசை

இராமபிரான் திருமாலின் திருவவதார மாதலால், அவனது திருநாபி, 'பூவொடு நிலஞசுழித்து எழு மணியுநதி' எனபபடடது உந்திவலஞ்சுழிந்துள்ள வென்பதனை விளகுதறகு, அதன் உபமானததை, 'வலஞ்சுழி தொழுகுநீரகங்கையின்சுழி' எனறார். 'கங்கையினசுழி' எனறது, கங்கை ரததோடு மிகக தூயமையுடைமையும விளகுதறகு. "அங்கைபோல் வயிறணிநத வலஞசுழியமைகொபபூழ், கங்கையின்சுழியலைகும" என்ற சிந்தாமணியும அதனுரையும் இங்கு நோककततककன இங்கு, 'நிலம' என்றது, பல உலகங்கள கூடிய அணடவுருணடையை இலஞ்சி - மகிழமரம. இது- இங்கு, அதன் மலாககு முதவாகுபெயா. உம-இழிவு சிறப்பு. 'நோபோலும' என்பது - நேரனறென்று பொருள்படும், இனி, ஒலிவேறுபாட்டால் எதிர மறைபபொருளுணாததியதாகவும கொளள இடமுண்டு. பி-ம் —[1]வாங்கு. [2]பொருவும. [3]யாவதோ. (சடு)

சகூ.—திருமார்பின் சிறப்பு.

பொருவரு மரகதப் [1]பொலங்கொண் மாலவரை
வெருவுற விரிநதுயர் விலங்க லாகத்தைப்
பிரிவற [2]நோறறன ளென்னிற் பின்னையத்
திருவினிற [1]றிருவுளா யாவர் தெய்வமே.

(இ - ள்.) தெய்வமே - குலதெய்வம் போன்றவளே! (இலக்குமி),—பொருவு அரு - ஒப்பில்லாத, பொலம் கொள் - அழகைக் கொண்ட, மால்-பெரிய, மரகதம் - மரகதரத்தினமயமான, வரை - மலை, வெருவுற - அஞ்சும்படி, விரிந்து உயர்-(அதனினும்) அகன்று வளர்ந்துள்ள, விலங்கல் ஆகததை-மலைபோன்ற [எதற்கும் சலியாத] இராமபிரானது திருமார்பை, பிரிவு அற-பிரிதலில்லாமல், (எப்பொழுதும் கூடிவாழுமபடி), நோற்றனள் - தவஞ் செய்தாள், என்னின் - என்றால், பின்னை - பின்பு, அ திருவினில் - அந்த இலக்குமியினும், திரு உளார் - மேன்மையுடையவர், யாவர் - எவர் உளர்? [எவரு மில்லை]; (எ - று.)

திரு - எல்லாராலும விரும்பப்படும் பேரழகுடையவளென இலக்குமிக்குக காரணக்குறி. இங்ஙனம பெருமையையுடைய அவ்விலக்குமியும் இத்திருமார்பின் சிறப்பு நோக்கி இதனைவிட்டுப் பிரியாதிருக்குமாறு பெருந்தவஞ் செய்தன ளென்றால், இத்திருமாபிற்கு ஒத்ததும் மிக்கதும் இல்லையென்பது, தானே பெறப்படும. இச்செய்யுளில், இலக்குமியின் சிறப்பைக் கூறியதாகத் தோன்றினும், சந்தர்ப்பதததை நோக்கித் திருமார்பின் சிறப்பையே கூறியதாகக கருத்துக்கொள்க. விலங்கல் - இராமபிரானுக்கு உவமையாகு பெயர். பி - ம்.—[1]புயல்கொள். [2]பிரிவுற. [3]நோற்றுளள், நோற்றிலள். [4]திருவிலார்.

(சசு)

சஎ.—திருக்கைகளின் சிறப்பு.

நீடுறு கீட்டிசை நின்ற யானையின்
கோடுறு காமெனச் சிறிது கூறலாந்
தோடுறு மலரெனச் சுரும்பு சுற்றருத்
[1]தாடொடு தடக்கைவே றுவமை சாலுமே.

(இ - ள்.) தோடு உறு மலர் என - இதழ்கள் நெருங்கிய செந்தாமரை மலரென்று எணணி, சுரும்பு சுற்று அறு - வண்டுகள சுழ்ந்று மொயததலை நீங்காத, தாள் தொடு தட கை - முழந்தாளை அளாவியுளள பெரிய (இராமபிரானது) திருகைகள்,—கீழ் திசை நின்ற யானையின் - கிழக்குததிக்கில் நின்ற (ஐராவதமென்னும்) திக்கஜததினது, கோடு உறு - தந்தங்கள் பொருந்திய, நீடு உறு - நீணடுள்ள, கரம-துதிக்கையை ஒத்திருக்கும, என - என்று, சிறிது கூறலாம் - சற்றே (ஒருபடி உவமை) சொல்லலாம; (என்றால்), வேறு உவமை சாலுமே - வேறே உபமானம் சொல்லதகுமோ? [தகாது என்றபடி]; (எ - று.)

கைகள் செந்தாமரை மலர்போலச சிவந்திருததலும், முழந்தாள்வரையில் நீணடிருத்தலும, உத்தம புருஷலக்ஷணம். தாள்தொடுதடக்கை - ஆஜானுபாஹு. திருக்கைகளைத் தாமரைமலரென மயங்கியதாகக் கூறியதனால், மூன்றுமடி மயக்கவணியா மென்பா. தாள் - இங்கே முழந்தாள. சுறறறு என்பதைத தாளுக்கு அடையாக்கொள்ளுதலும பொருந்தும். கீள் + திசை = கீட்டிசை; இப்புணர்ச்சி "பதினைந்தொ டெண்ணிரண்டாயத், தோன்

றுடற் பின்னாத தகாரமவரி னிரணடுந் தொடர்பா, லான்ற வைந்தாமுட லாம்'' எனனும வீரசோழிய விதியால அமைநதது; இனி, நிலைமொழியீறு ழகரததுககு ளகரம போலியாய்ப பின் இரண்டும டகரமாததிரிநத தெனினும அமையும; மரூஉவு மாம திசையாலே -திகசஜங்கள; அவை ஐராவதம, புண்ட ரீகம, வாமநம, குமுதம், அஞ்சநம், புஷபதநதம், சர்வபௌமம, சுபபிரதீகம என்பன இவற்றைக் கிழகு முதலாக முறையே கொளக. பி-ம்:—[1]தாடறு

சஅ.—திருக்கைந் நகங்களின் சிறப்பு.

பச்சிலைத தாமரை பகலகண் டாலெனக்
கைச்செறி முகிழுகிர் கனக னென்பவன்
வச்சிர யாககையை வகிர்ந்த வன்றொழி
னிசசய மன்றெனி னைய [1]நீக்குமே.

(இ - ள்) பசு இலை - பசுமையான இலைகளையுடைய, தாமரை - செந தாமரையின், முகிழ் - அருமபு, பகல கணடால் என - சூரியனைககணடாற போல [சூரியனொளியால் மலாநத செநதாமரை மலாபோல], (விளஙகுகின்ற கை - (இராமபிரானது) திருககைகளில், செறி - பொருநதிய, உகிர - நகஙகள,—கனகன என்பவன் வச்சிரம் யாக்கையை வகிர்ந்த வல் தொழில்- (இவ்விராமபிரான் நரசிஙகாவதாரததில்) இரணிய னென்னும அசுர னுடைய வசசிரம்போலறுதியான உடம்பை இடநத வலிய செய்கை, நிசசயம் அன்று எனின - உண்மையோ அன்றோ என (எவராயினும்) சநதே கப்பட்டால, ஐயம - (அவாகளுடைய) சந்தேகததை நீககும் - நீஙகச செய்யும்; (எ - று)— ஏ - தேறறம்

இராமபிரானது திருககைந்நகஙகள இரணியனது மார்பை யிடந்த காலததது அவ்வசுரனது இரகததாற சிவநதன போல எபபொழுதும் சிவந் துள்ளன வென்பதாம. இராமபிரானும் திருமாலின அவதார மாதலால், இஙஙனங கூறியது. ஒன்னிறமுளளவனுதல் பற்றி வநத இரணிய னென்ற பெயாகளுப் பரியாயமாக 'கனகன்' என்றார் சூரியனைககணடவுடன மலாதல், தாமரைககு இயலபு வசசிரம - வஜ்ரம். இது ஒளிககு உவமையு மாம். பி - ம் —[1]நீஙகும

கனகனென்பவனது -வச்சிரயாக்கையை வகிர்ந்த கதை —தனித் தனி தேவர் மனிதர் விலஙகு முதலிய பிராணிகளாலும ஆயுதஙகளாலும பகலிலும இரவிலும பூமியிலும வானததிலும வீட்டின் அகததிலும புறத் திலும தனககு மரணமிலலாதபடி வரம பெறறவனும், இரணியாககனது உடன் பிறந்தவனுமான இரணியன் தேவா முதலிய எல்லார்ககும கொடுமை யியறறித் தன்னையே கடவுளாக அனைவரும் வணஙகும்படி செய்துவருகை யில், அவனது மகனான பிரகலாதாழ்வான் இளமை தொடஙகி மகாவிஷ்ணு பகதனாயத் தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன் பெயர் சொல்லிக் கலவிகற்காமல் நாராயண நாமம சொலலிவரவே, கடுஙகோபங்கொண்ட இரணியன் பிரகலாதனைத் தன் வழிபடுததுவதறகுப் பலவாறு முயனற

பின், அங்ஙனம் வழிப்படாத அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயஞ்செய்தும் அவன் பகவானருளால் இறந்திலனாக, ஒருநாள் சாயங்காலத்தில் தந்தை மைந்தனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன்? காட்டு' என்ன, அப்பிள்ளை "சாணினுமுள னோர்தண்மை யணுவினைச்சத கூறிட்ட, கோணினு முளன் மாமேருக் குன்றினுமுளன் இந்நின்ற, தூணினுமுளன் நீ சொன்ன சொல்லினுமுளன்" என்று சொல்ல, உடனே இரணியன் 'இங்கு உளனோ? என்று சொல்லி எதிரிலிருந்த தூணைப்புடைக்க அதனினின்று திருமால் மனிதரூபமும் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தன்மடி மீது வைத்துக் கொண்டு தனது திருக்கைந்நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டுப் பிரகலாதனுக்கு அருள்செய்தனன் என்பதாம். (சஅ)

சகூ.—திருத்தோள்களின் சிறப்பு.

திரண்டில வொளியில [1]திருவின் சேர்வில
மூரண்டரு மேருவின் முரிய மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பென் றொன்றுபோன்
றிரண்டில புயங்களுக் குவம மேற்குமோ.

(இ - ள்) (இராமபிரானது திருத்தோள்கள் போல, மலைகள்), திரண்டில - கன்கு திரண்டுள்ளனவில்லை; ஒளி இல - ஒளியையுடையனவில்லை; திருவின் சேர்வு இல - ஜயலக்ஷ்மியின் சேர்க்கையை யுடையனவில்லை, மூரண்தரு மேரு வில் முரிய மூரி நாண் புரண்டில - வலிமை பொருந்திய மகா மேருகிரியாகிய வில் [சிவதநுசு] ஒடியும்படி வலியநாணி புரளப்பெறறனவில்லை; புகழ் இல - கீர்த்தியையுடையன வில்லை; ஒன்று போன்று இரண்டு இல - ஒன்றைபபோல இரண்டு இல்லை; (ஆதலால்) புயங்களுக்கு அத்திருத்தோள்களுக்கு, பொருப்பு என்று உவமம - மலைபோலு மென்று உவமை கூறுதல், ஏற்குமோ-பொருந்துமோ? (எ - று.)—பொருந்தா தென்பதாம்.

இசசெய்யுளில் உபமானமாகிய மலையினும் உபமேயமாகிய தோள்களுக்குச சிறப்புக கூறியிருபபது, வேற்றுமையணி. இராமபிரான் தனதுதோள் வலியால் மிகசசிறந்தசிவதநுசை முறித்தவாறுபோல மலைகளிலொன்றும் முறியாமையாலும், இததோள்களுகு உவமையாகா தென்பதுகருதது.

இராமபிரான் சிவதநுசை முறித்த கதை:—முன்னொருகாலததில் தெய்வததசசனான விசுவகர்மனால் நிருமிககப்பட்ட மிகவலிய இரண்டு விறகளில் ஒன்றை ஸ்ரீமகாவிஷ்ணுவும் மற்றொன்றைப் பரமசிவனும் எடுத்துக்கொண்டாகள்; அவற்றில், சிவபிரானுடைய வில், மகாமேரு கிரியின் அச்சமுடையது; அதனைகொண்டு அப்பெருமான் திரிபுரசங்காரமும் தக்ஷயாகவிநாசமுஞ் செய்திட்டான்; 'பின்பு ஒரு சமயத்

தில் அவ்விற்சளில் எது சிறந்ததென்று அறியவிரும்பிய தேவர்களின் வேண்டுகோளினால் ஹரிஹரர்கள் தம்மிற் போர்செய்கையில், சிவபிரான் எடுத்த வில் முறியவே, போர் நிறுத்தப்பட்டது: அவ்வில்லை அப்பெருமான் நிமிகுலத்துதேவராதனென்னும் மகாராசனிடம் ஒப்பிக்க, அவ்வரசன் அதனை வெகுஜாகிரத்தையாகப் பாதுகாத்துவந்தான்; பின்பு அகுலத்தில் தோன்றிய சனகனென்னும் அரசன் யாகசாலை யமைத்ததற்காகப் பூமியை உழுதபொழுது அவ்வுழுபடைசசாலில்தோன்றிய லக்ஷ்மியம்சமானபெண்ணை அவ்வரசன் தனதுமகளாகககொண்டு சீதையென்று பெயரிட்டு வளாத்து 'இசசிவத்துசை யெடுத்து வளைத்து நாணேற்றியவனுக்கே இம்மகளைக் கொடுப்பேன்' என்று அதனைக கன்யாசுல்கமாக நியமிக்க, பற்பலர் முயன்றும முடியாதபின, திருமாலின் திருவவதாரமான இராமபிரான் அவ்வில்லை யெடுத்து வளைத்து நாணேற்றுகையில் அவ்வில் முறிந்தது என்பதாம், மலைகளெல்லாவற்றினுஞ் சிறந்த வில்வடிவங்கொண்ட மேருமலையையே இத் தோள்கள் முறித்தன வென்றால், சாதாரணமான மலையை இவற்றிறகு உவகுமயாகக்கூறுதல் சிறிதும்தகாது என்றவாறு. ஒருமலை மற்றொரு மலையை முறித்து விழுத்தாது என்பது, தொனி. பி - ம்·—[1]திருவு. (சகூ)

ரு০·—திருக்கழுத்தின் சிறப்பு.

கடற்படு பணிலமுங் கன்னிப் பூகமு
மிடற்றினுக் குவமையென் றுரைக்கு [1]மெல்லியோ
ருடற்பட வொண்ணுமோ வுரகப் பள்ளியா
னிடத்துறை சங்கமொன் றிருக்க வெங்களால்.

(இ - ள்.) உரகம பள்ளியான் - ஆதிசேஷனைச் சயனமாகவுடைய அத திருமாலினது, இடத்து - இடது திருககையில், உறை - (எப்பொழுதும்) பொருந்தியுள்ள, சங்கம் ஒன்று - (பாஞ்சஜந்ய மென்ற) திருசசங்கு ஒன்று இருக்க - (உவமைப் பொருளாகச சொல்லுதற்குத) தகுதியாயிருததலினாலே,—கடல்படு பணிலமும - கடலிலுண்டாகிற (சாதாரண) சங்கமும், கன்னி பூகமும - இளைய பாக்குமரமும, மிடற்றினுக்கு - (இராமபிரானது) திருக்கழுத்துக்கு உவமை - உபமானமாம, என்று உரைக்கும் - என்று சொல்லுகிற, மெல்லியோர் - சிற்றறிவுடையோரது கொளகையை, உடற்பட - அநுகூரிக்க, எங்களால்—, ஒண்ணுமோ கூடுமோ? (எ - று.)

சாதாரணசங்கத்தையும் இளங் கமுகையும் இராமபிரானது திருக்கழுத்துக்கு உவமை கூறுவார்கொளகையை மறுத்து, நாங்கள், அவ்வெம்பெருமானது பாஞ்சஜந்யத்தையே அதற்கு உவமைகூறுவோமென்பது கருத்து. கன்னி, இது, இங்கே இளமைகுகு இலக்கணை. கன்னிப்பூகம் - சூலைதள்ளாத கமுகு என்றவாறு. சங்கு - வடிவத்துக்கும், கமுகு - வரையுடைமைக்கும நெய்ப்பிற்கும் கழுத்துகுகு உவமையென அறிக. மெல்லியோர் - அறிவீனர். உடற்பட - எதுகைநயம்

நோக்கி வலிந்துநின்றது. உரகம் - மார்பினால் ஊவது; உரஸ் - மார்பு. சாதாரணசங்கத்திலும் பாஞ்சஜந்யம் மிகச்சிறந்ததாகும். பி - ம்:—[1]வெள்ளி யோர்க்கு (ரு0)

ரு௧.—திருமுகத்தின் சிறப்பு.

அண்ணறன் றிருமுகங் கமல மாமெனிற்
கண்ணினுக் குவமைவே றியாது காட்டுகேன்
[1]றணமதி யாமென வுரைககத் தக்கதோ
வெண்மதி [2]பொலிந்தது மெலிந்து தேயுமால்.

(இ - ள்.) அணணல்தன் - பெருமைக்குணமுடைய இராமபிரானது, திரு முகம் - மேன்மையையுடைய முகம், கமலம் ஆம் - தாமரைமலரை ஒக்கும், எனின் - என்றால், கணணினுக்கு - (அப்பிரானது) திருக் கண்களுக்கு, வேறு யாது உவமை காட்டுகேன் - (அந்ததாமரைமலரை விட்டு) வேறு எதனை உபமானமாக எடுத்துக்காட்டவல்லேன்? வெள் மதி - வெண்ணிறமாகிய சந்திரனும், பொலிந்தது - (பதினாறுகலைகளும்) நிரம்பி விளங்கியிருந்தது, மெலிந்து தேயும் - (அவ்வாறே இராமல்) கலைகுறைந்து (நாளுககுநாள் வடிவமும்) குறையப்பெறும்: ஆல் - ஆதலால், தண் மதி ஆம் என - (திருமுகம்) குளிர்ந்தசந்திரனை யொக்கு மென்று, உரைகக தக்கதோ - சொல்லததககதோ? [தக்கதன்றென்றபடி;] (எ - று)

புண்டரீகாக்ஷன் என்றும் பெரியோர்களால் திருமாலின் திருக்கண்க ளுக்குச் செந்தாமரைமலர் உவமைகூறப்பட்டிருத்தலாலும் அவற்றிற்கு அதனையன்றி வேறுஉவமை அகப்படாதாதலாலும் முகத்தின் உறுப்புககளுள் ஒன்றாகிய கணணுககே உவமையாகசசொல்லக்கூடிய தாமரையை அம்முக முழுமைககும் உவமைகூறுதல் சிறவா தாதலால், அததாமரைமலர் இராம பிரானது திருமுகததுக்கு நிகராகாது; என்றும ஒருபடியாய் விளங்கி களங்கம் சிறிதுமில்லாத அசதிருமுகமணடலததுக்கு, குறையுந்தன்மையதாய் மறு வோடுகூடிய சந்திரனும் உவமையன்று என்பதாம். இராமபிரானது திரு முகசசிறப்பைக் கூறியமுகததால், திருக்கணகளின் சிறப்பையும் வெளியிட் டார். சந்திரன் வளருங்காலம் சுக்கிலபக்ஷமென்றும் தேயுங்காலம் கிருஷ்ண பக்ஷமென்றும் பெயர்பெறும. பி - ம்·—[1]எணமதிவிடுகெனீயேயப்பாரெனு [2]பொலிநததேமெலிந்ததேயலால். (ரு௧)

வேறு

ரு௨.—திருவாயின் சிறப்பு

ஆரமு மகிலு நீவி யகன்றதோ ளமலன செவ்வாய்
நாரமுண் டலாந்த செங்கேழ் நளினமென் றுரைக்க நாணு
மீர முண் டமுத மூறு மின்னுரை யியம்பா தேனு
மூரலுவெண் முறுவல் பூவாப் பவளமோ மொழியற் [1]பாற்றே.

(இ - ள்.) 'ஆரமும் அகிலும் நீவி அகன்ற தோள் அமலன் செவ்வாய் - சந்தனக்குழம்பும் அகிற்குழம்பும் பூசப்பட்டுப் பரந்துள்ள திருத்தோள்களை யுடைய குற்றமற்ற இராமபிரானது சிவந்த வாய்,—நாரம் உண்டு அலர்ந்த செம் கேழ் நளினம் - நீரைக்குடித்து மலர்ந்த சிவந்த நிறத்தையுடைய தாமரை மலரை ஒக்கும்', என்று உரைக்க - என்று (உவமையெடுத்துக்) கூற, நாணும் - (தான் ஒப்பாகாமையால் அத்தாமரைமலர்) நாணமுறும்; ஈரம் உண்டு அமுதம் ஊறும் இன் உரை இயம்பாது ஏனும் - குளிர்ச்சியைப் பொருந்தி அமிருதம்போன்ற இனிமை சுரக்கின்ற இனியசொற்களைச் சொல்லாதாயினும், மூரல் வெள் முறுவல் பூவா - பற்களின் வெள்ளிய புன்சிரிப்புத்தானும் (தன்னிடத்துச் சிறிதும்) தோன்றப்பெறாத, பவளமோ—, மொழியல் பாறறு - உவமையெடுத்துக்கூறுந் தரத்தது? (எ - று.)

தாமரை மலர் இராமபிரானது திருவாய்க்குத் தன்னை உவமையாகச் சொல்ல நாணுகின்றது; இனி, பவழத்தை உவமையாகக்கூறலாமென்றால், அதுவும் குளிர்ந்த இன்சொறகளைச் சொல்லாமையோடு புன்சிரிப்பும் கொண்டிலது; ஆதலால், இவ்விருபொருளும் அப்பிரானது வாய்க்கு ஒரு சிறிதும் உவமையாகா வென்பதாம எதிரிநிலையணி. 'நாரமுண்டு' என்பது - தாமரையின்செழிப்பு மிகுதிக்குக காரணமான நீர்வளத்தின் இருப்பைக் கூறியபடி. நாரம் - கடவுளால் (முதலில்) படைககப்பட்டது என நீர்க்குக் காரணக்குறி; வடசொல், (நரன் - திருமால்) 'வெணமுறுவல்' 'என்றது, சிறிக்குநகாலத்துப் பற்களின் வெள்ளொளி சிறிது வெளிததோன்றுதலால். நாணும - (இழி பொருளை உவமை கூறியதனால் வாய்) நாணுகொள்ளும் எனினுமாம். பி - ம்:—[1]பாற்றோ (௫௨)

வேறு.

௫௩.—பற்களின் சிறப்பு.

முத்தங் கொல்லோ முழுநிலவின் முறியின் றிறனோ முறைய முதச், [1]சொத்தின் றுள்ளி வெள்ளி[2]யினந் தொடுத்த கொல்லோ துறையறத்தின், [3]வித்து முளைத்த வங்குரங்கொல வேறே சிலகொன் மெய்ம்முகிழ்த்த, தொத்தின் றொகைகொல் யாதென்று பல்லுக் குவமை சொல்லுகேன்.

(இ - ள்.) பல்லுக்கு - (இராமபிரானது) திருப்பற்களுக்கு, உவமை - உபமானம்,—முத்தம் கொல் ஓ - முததுககளோ? முழு நிலவின் முறியின் திறனோ - பூரணசந்திரனது துண்டங்களின் வரிசையோ? வெள்ளிஅமுதம் சொததின் துள்ளி இனம் முறை தொடுத்த கொல் ஓ - வெண்ணிறத்தை யுடைய தேவாமிருதமாகிய பொருளினுடையதுளிகளின் கூட்டம் வரிசைப் படததொடுத்துவைத்தவையோ? துறை அறத்தின் விததுமுளைத்த அங்குரம் கொல் - பலவழிகளாலுஞ் செய்யப்படுகிற தருமததினது விதையினின்று தோன்றிய முளையோ? மெய் முகிழ்த்த தொத்தின் தொகை கொல் - சத்திய

மாகிய மரத்தில் அரும்பின அரும்புகளின் தொகுதியோ? வேறே சிலகொல் - மற்றுஞ்சிலவாகிய முல்லையரும்பு மயிலிறகினடி முதலியவைகளோ? யாது என்று சொல்லுகேன் - எதுவென்று (உவமைப்பொருளை நிருணயித்துச்) சொல்லவல்லேன் (யான்)? (எ - று.)

இச்செய்யுளிற்கூறிய உவமைகள், வெண்ணிறம்பற்றியன. நிலவு - சந்திரனுக்கு ஆகுபெயர். முறி - துண்டு. பூர்ணசந்திரன் பல்லுக்கு உவமையாக எலாமையால், அசசந்திரனைக் கூறுக்கிய துண்டங்களோவெனக் குறித்தார். இனி, நிலவின் முறியின் திறனோ என்பதற்கு - நிலவின் கொழுந்துகளின் வகைகளோ? என்றுமாம். சொத்து - ஸ்வம் என்ற வடசொல்லின் சிதைவு. துள்ளி - துளியென்பதன் விரிதல். தருமத்தையும் சததியதத்தையும் வெண்ணிறமுடையதாக கூறுதல் கவிமரபாதலால், தருமத்தின் முளையையும், சததியமாகிய மரததின் அரும்பையும், வெண்ணிறமுடைய பறகளுக்கு உவமைகூறினர். தருமமும் சத்தியமும மிகப்பெரியனவாதலால், அவை சிறியபற்களுக்கு உவமமாகாவென்று கொண்டு, முறையே அவற்றின் முளையையும் அருமபையும ஒப்புமையாகக் கற்பிததனரபோலும். 'தொத்து' என்றதற்கு ஏறப, மெய் - மரமென்று கொள்ளப்பட்டது. 'கொல்' ஏன்பதை முறையமுதசசொததின் துள்ளிகொல், வெள்ளியினம்தொடுத்த கொல்என்று தனித்தனி கூட்டி யுரைப்பினுமாம். தொத்து என்னும பூங்கொத்தின் பெயர், இலக்கணையால், அரும்பை யுணர்த்திற்று. ஆங்காங்கு வரும் ஆதாகமென்னுஞ் சொல்லணி உற்றுநோக்கத்ககது. பி - ம்:— [1]தொத்தின். [2]எனத். [3]விததின். (நுஙூ)

ருச.—திருமுக்கின் சிறப்பு.

எள்ளா நிலத்திந் திரநீலத் தெழுந்த [1]கொழுந்து மரகதத்தின்
விள்ளா முழுமா நிழற்பிழம்பும் வேண்ட வேண்டு மேனியதோ
[2]தள்ளா வோதி கோபத்தைக் கவ்வ வநது சார்ந்ததுவுங்
கொள்ளா வள்ள நிருமூககிற் குவமை பினனுங் குணிப்பாமோ.

(இ - ள்.) (இராமபிரானது திருமூகக),—எள்ளா நிலதது இந்திர நீலத்து எழுந்த கொழுந்தும் - இகழப்படாத நல்லநிலததில் தோன்றிய இந்திர நீலரத்தினத்தினின்று உண்டான ஒளிககொழுந்தும், மரகதத்தின் விள்ளா முழுமா நிழல் பிழம்பும - மரகதரததினததினது நீஙகாத திரண்ட ஒளியின் திரட்சியும், வேணட - (தாம் உவமையாகத தன்னை) விருமப, வேண்டுமெ - (தான் அவறறை உவமையாகககொள்ள) விரும்புகிற, மேனியதோ - (தன்மையையுடையதோ? [அன்று என்றபடி]; கோபததை - இந்திரகோபத்தை, தள்ளா - விடாமல், கவ்வ - பிடித்தற்கு, வந்து சார்ந்தது - அருகில்வந்து சோந்ததாகிய, ஓதி உம் - பச்சோநதியும், வள்ளல் திரு மூக்கிற்கு - வரையாமற்கொடுகெகுந் தன்மையுடையனான இராமபிரானது அழகிய திருமூக்கிற்கு, கொள்ளா-உவமையாகாது; (என்றால்),—பின்னும் உவமை குணிப்பு ஆமோ- வேறே உபமானமும் சொல்லுதற்குக கூடுமோ? [கூடாது என்றபடி].(எ-று.)

இந்திர நீலத்தின் சுடர்கொழுந்தும், மரகதத்தின் நிழற்பிழம்பும் திருமூகிற்கு நிறததில் உவமையாகா வென்பது, முன்னிரண்டடிகளின் கருததது. இந்திரகோபதனைதக் கவ்வும் பச்சோந்தி - சிவந்த அதரத்தை யடுத்துள்ள மூக்கிற்கு வடிவும் நிறமும் பற்றிய உவமை. அதரததிற்கு இநதிரகோபம உவமைகூறபபடுதலை "இந்திரகோபங்களே யெம்பெருமான் கனிவாயொப்பான், சிந்தும்புறவிற் றென்றிருமாலிருஞ்சோலையே" என்ற விடத்துங காண்க. கோபம்=இநதிரகோபம; தம்பலப்பூச்சி. இச்சொல், முதற்குறை விகாரததினபாற்படும. இநதிரநீலம் - ஒருவகையிரத்தினம். நிழல் - ஒளி. ஓதி - ஒணான்; ஓந்தியென்பதன் இடைக்குறை விகாரம். கௌவ=போலி. உம்மை, பிரித்துக்கூட்டப்பட்டது.

இனி, இச்செய்யுளுககு வேறுபொருளும் உரைக்கப்படும்; அதுவரு மாறு:—பசசோந்தி நல்ல நிலததில்தோன்றியஇந்திரநீலரத்தினத்தினின்று உண்டான சுடாக்கொழுந்தினாலும்மரகதரத்தினத்தினதுஒளித்திரட்சியினாலும் விரும்புதற்கு உரிய மேனியழகையுடையதன் ருகையால், அப்பச சோந்தி இந்திரகோபத்தை விடாமற்பிடிததறகு அருகில்வந்து சேர்ந்ததாயினும் இராமபிரானதுதிருமூக்கிற்கு உவமையாக ஏற்றுக்கொள்ளப்படாது; இதுவேஇவ்வாருனபோது வேறுஉபமானம்சொல்லத்தகுவோமோ? என்பது. சிவநததிருவதரதததைசசேர்ந்திருக்கும்திருமூக்கிற்கு இந்திரகோபத்தைக் கவ்வும் பசசோந்தியைஉவமைகூறலாமாயினும், இராமபிரானது திருமூகினது சிறநதநிறம் இந்திரநீலததின சுடாக்கொழுநதினாலும் மரகதத்தின் நிழற்பிழம்பினாலும் விரும்பம்படுதலபோல அப்பசசோந்தியின்நிறம் அவற்றால் விரும்பப்படாமையின், அஃது உவமையாகா தென்றவாறு.

பி - ம்.—[1]கொழுந்தின். [2]கள்ளார். (௫௪)

௫௫—திருப்புருவத்தின் சிறப்பு.

[1]பனிக்கச சுரத்துக் கரன்முதலோர் கவந்தப் படையும் பல்பேயுந்
தனிக்கைச் சிலையும் வானவரு முனிவர் குழுவுந்தனியறனு
மினிக்கட் டழிந்த தரக்கர்குல மென்னுஞ் சுருதி யீரிரண்டுங்
குனிக்கக்[2]குனிந்த புருவத்துக் குவமமீயே கோடியால்.

(இ - ள்.) சுரதது - தணடகாரணியத்தில், கரன் முதலோா - கரன் முதலிய ராக்ஷசர், பனிக்க - (அச்சததால் உடல) நடுங்கவும், கவந்தம் படையும் - (அவர்களது) தலையற்றஉடம்பின் தொகுதியும், பல் பேயும்-(அவற்றை யுணணவந்த) பல பேய்களும், தனி கை சிலையும் - ஒப்பற்ற (தனது) திருக்கையில் தாஙகியுள்ள வில்லும், வானவரும - தேவாகளும், முனிவர் குழுவும் - இருடிகளதுகூட்டமும், தனி அறனும - ஒப்பறற தருமமும், 'இனி—, அரக்கா குலம் - இராக்கதா கூட்டம், கட்டு அழிந்தது - முழுவதும் அழிந்ததாம,' என்னும - என்றுகளிக்கிற, சுருதி ஈர் இரண்டும்- நான்கு வேதங்களும், குனிக்க - கூததாடுமபடி, குனிந்த - தான் வளைந்த, புருவததுககு - (இராமபிரானது) திருப்புருவத்துக்கு, உவமம் -

உபமானதத்தை, நீயே—, கோடி - கண்டுகொள்வாயாக; (எ - று)—என்னுற் கூறமுடியாது எனபதாம ஆல் - ஈறறசை.

இராமபிரான் கோபத்தாற் புருவதத்தைச சிறிது நெறித்துக கோதண்டத்தைக கையில் எடுத்து நாணேற்றியமாத்திரத்தில், ஜநஸ்தாநத்திலிருந்து எதிர்ததுவந்த கரன்முதலிய அரககாகளனைவரும் அஞ்சிநடுங்குவாராயினர்; அவர்களது உடமபுகளெலலாம, தலையறுபட்டவேகத்தாற குதித்துக கூத்தாடின; அவறறை உண்பதறகு வந்தபலபேயகள அவ்விடத்து மிகுந்த இரைகிடைததனால் மகிழநது கூததாடின; அவறறைக்கண்டு 'இனி இவ்வாறே அரககர்குலம்முழுவதும் ஒழியும்' என்று நினைதது மகிழ்நது அககளிப்பினால் தேவர்களும் முனிவாகளும தருமதேவதையும் வேதபுருஷனும கூததாடினர் என்பதாம். எனவே, இபபடிபபட்ட பேராறறலையுடைய புருவத்துககு ஒப்புசசொல்லல் அரிது என்றவாறு. 'இனிக்கட்டழிநதது அரககர் குல மெனனும்' என்ற விசேடணதத்தை வானவாமுதலிய மூன்றுககும கூட்டுக. படையும் பேயும் சிலையும் வானவரும குழுவும அறனும சுருதியும குனிக்க - உடனவிற்சியணி. காரணமாகிய சிலையின வளைவும் காரியமாகிய கவநதப்படையும பலபேயும முதலியன கூத்தாடினமையும ஒருங்குநிகழ்நதனவாகக கூறியது, முறையிலுயர்வுநவிற்சியணி; இதனைவடனூலார் அகரமாதிசயோகதி யென்பா. இவ்விரண்டு அணியும ஒருசேரக கலநது வந்தது, உறுப்புறுப்பிக்கலவையணி

கதன் - பூவிக ராக்ஷசசிரேஷ்டனான சுமாலியின் மகளும, இராவணன் தாயான கேகசியின் தங்கையும, இராவணனது தநதையான விசிரவமுனிவரையே கொழுநனாக அடைந்தவளுமான கும்பீநசியின் குமாரன, இராவணனுககுத தமபிமுறையில நிறபவன். தண்டகாரணியததிலே ஜநஸ்தாநததில் சூர்பபணகை வசிபபதறகென்று ஏறபடுததிய இராசசியததில அவளுககுப் பாதுகாவலாகவும் அவளிட்ட கட்டளைப்படி நடத்தறகாகவும இராவணனால நியமிதது வைககப்பட்ட பெரிய அரககா சேனைகு முதலதலைவன். கரன என்னும் வடசொலலுகு - கொடியவனென்று பொருள் சூர்பபணகை தனது சில உறுபபுக்களை அறுததிடட ராமலக்ஷ்மணாமீது கறுசகொணடு சென்று கரனகாலில் விழுந்து புலமபி முறையிட, அவன மிகபபெரிய சேனையோடும், அறுபதுலக்ஷம படைவீரரோடும, சேனைததலைவர் பதினாலவரோடும, தூஷணன் திரிசிரா எனனும் முககியசேனாதிபதிகளோடும் புறபபட்டுச செருககிவிரைநதுவந்து போரதொடங்குகையில், இராமன, பாணசாலையினின்று போரகசோலங்கொணடு வெளிபபட்ட லக்ஷ்மணனை விலககிச சீதைககுக்காவலாக வைததுவிட்டு, தான தனியே எதிரததுசசென்று பெருமபோர்செயது பலரையும அழிதது முடிவிற கரனையுந் துணிதது வெறறிகொணடனனெனக.

சூரம் - ஜுவரம்; வெபபமுடையதெனக காட்டைக குறிக்கும கவந்தம் - கபந்தம்; தொழிலுடன்கூடிய தலையறறஉடல். சேனையில் மிகப்

பெரியதொகை இறந்தபொழுது கவந்தம் எழுந்துகூத்தாடு மென்றல், மரபு. படை - இங்கே, தொகுதிக்கு இலக்கணை. இனிக்கட்டு அழிந்தது - தெளிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக கூறிய காலவழுவமைதி. பி - ம்:— [1]பனிக்கற். [2]குனிக்கும். (ருரு)

ருகூ.—திருநெற்றியின் சிறப்பு.

வருநாட் டோன்றுந் தனிமறுவும் வளர்வுந் தேய்வும் வாளரவ
மொருநாட் கவ்வு முறுகோளு மிறப்பும் பிறப்பு [1]மொழிவுற்ரு
லிருநாற் பகலி னிலங்குமதி யலங்க லிருளி னெழி னிழற்கீழ்ப்
பெருநா ணிற்பி னவநெற்றிப் [2]பெற்றித் தாகப் பெறுமன்னே.

(இ - ள்.) இரு நால் பகலின் - அஷ்டமியென்னும் எட்டாந்திதியில், இலங்கு - விளங்குகிற,மதி - அர்த்தசந்திரன்,—வரு நாள் தோன்றும் தனி மறுவும் - தான் உதயமாம்போதே உடன்தெரிகிறதொரு களங்கமும், வளர்வும் - (சிலகாலத்தில்) வளர்தலும், தேய்வும் - (சிலகாலத்திற்) குறைதலும், வாள் அரவம் ஒரு நாள் கவ்வும் உறுகோளும் - வாள்போலக்கொடிய பாம்பினாற் சிலகாலத்திற் பற்றப்படுகிற துன்பமும், இறப்பும் - அஸ்தமநமும், பிறப்பும் - உதயமும, ஒழிவுஉற்ரூல் - நீங்கப்பெற்று,—அலங்கல் இருளின் - அசைகின்ற இருட்டின், எழில் நிழல்கீழ் - அழகிய நிழலில், பெரு நாள் - மிகப்பலகாலம், (எப்பொழுதும்), நிற்பின் - நின்ரூல்,—அவன் நெற்றி பெற்றித்து ஆகபெறும் - அவ்விராமபிரானது திருநெற்றியின் தன்மையை யுடையதாகப்பெறும; (எ - று.)—மன், ஓ - ஈறறசை.

அஷ்டமீசந்திரன்ஒன்று இயல்பாகக் களங்கம் நீங்கி வளாவுதேய்வுகளில்லாமல் சிலகாலதுஉண்டாகுங் கிரகணமு மின்றி உதயாஸ்தமநமுமில்லாததாய் என்றும ஒருபடியாய இருளின்கீழ் நிலையாக நிற்குமாளுல, அந்தப் பாதிசசந்திரன் இராமபிரானது திருநெற்றிக்கு உவமையாம்; அப்படிப்பட்டதொன்று உலகதில் இல்லாமையாலே, தனக்குத்தானே உவமையாவதன்றி அப்பிரானது நெற்றிக்கு உவமைப்பொருளில்லை யென்பதாம். இங்கு உபமேயமாகிய முகதிற்கு உபமானமாகியபிறைச்சந்திரன் இன்னவாறிருந்தால் உவமையாகுமென்று கூறியது - உயிர்த்துணர்வணியாகும்: இது, வடமொழியில் ஸம்பாவனாலங்காரமெனப்படும். 'வருநாள் தோன்றுந் தனிமறு' என்றது, அக்களங்கம் எப்பொழுதும் சநதிரனைவிட்டு நீங்காமல் உடனிருக்குந்தன்மையை உணர்த்துதற்கு. பூர்ணசந்திரனுககு உள்ள வாளரவுகவ்வுதலைக் குறைச்சந்திரன்மேலேற்றிக் கூறியது, ஒருவகை உபசாரவழக்கு. இராமபிரானது கருநிறமுள்ள திருககுழறகற்றையின்கீழ் விளங்குந்திருநெற்றிக்கு, எந்நாளும இருளினகீழ்ப் பொருந்தும் மதியையே உவமை கூறலாமென்க பகலிலும் இருத்தலால், குறைமதி, என்றும் இருளின்கீழ் நில்லாததாகும. பி - ம்:—[1]ஒழிவுற்ற. [2]பெற்றிற்று. (ருகூ)

ருஎ.—திருக்குழலின் சிறப்பு.

நீண்டு [1]குழன்று நெய்த்திருண்டு [2]நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து [3]சரிந்துகடை சுருண்டு புகையும் நறும் பூவும்
வேண்டு மல்ல வெனத்தெய்வ வெறியே கமழு நறுங் குஞ்சி
யீண்டு சடையா யினதென்றான் மழையென் றுரைத்த [4]விழிபன்றோ.

(இ - ள்.) 'நீண்டு - நீட்சியுடையதாய், குழன்று - திரண்டு, நெய்த்து - வழுவழுப்புப்பொருந்தி, இருண்டு - கறுத்து, நெறிந்து - ஒழுங்குபட்டு, செறிந்து - அடர்ந்து, நெடு நீலம் பூண்டு - மிகக கருநிறத்தை இயற்கைக் குணமாகக்கொண்டு, புரிந்து - முறுகுப்பட்டு, சரிந்து - (பின்னே) தாழ்ந்து, கடை சுருண்டு - நுனி சுருளப்பெற்று, புகையும் நறும் பூவும் வேண்டும் அல்ல என-(அகில் முதலியவற்றின் வாசனைப்) புகையும் நல்லமணமுடைய பூக்களும் வேண்டுவனவல்ல வென்னும்படி, தெய்வம் வெறியே கமழும் - தெய்வத்தன்மையையுடைய இயற்கைமணமே வீசுகிற, நறுங குஞ்சி-(இராமபிரானது) நல்ல திருக்குழல், ஈண்டு சடை ஆயினது-இப்பொழுது திரண்ட சடையாய்விட்டது,' என்றால—, மழை என்று உரைத்தல் - மேகம்(அதற்கு உவமை) என்று சொல்லுதல், இழிபு அன்றோ - தாழ்வன்றோ? [தாழ்வேயாம் என்றபடி]; (எ - று.)

'ஈண்டு' என்றது, வனவாசஞ்செய்யும் இப்பொழுது என்றவாறு. இங்குக்கூறிய இப்பொழுது சடையாயுள்ள இராமபிரானது திருக்குழலினது தன்மைகள் மேகத்திற்குச சிறிதுமில்லை யாதலால், அமமேகம் உவமையாகாது என்பதாம். நெய்த்து - எணணெய் தடவப்பெற்று என்றுங கொள்ளலாம். உத்தமசாதியரான ஆடவர்மகளிரது தலைமயிர்கள் இயற்கைமணமுடையனவாமென்பது, நூற்றுணிபு. திருககுழலின் இயற்கைமணம், இதற்குமேல் வாசனையூட்ட முடியாதவாறு பூ புகை முதலியவற்றினும் மிக்குள்ளதென்பது, மூன்றாமடியின்கருத்து. சடை - ஜடா என்னும் வடசொல் திரிபு. "நெயத்துக கருகி நெறிததுவிடும் பூமாலை, வைததுக் கடைகுழன்று வார்ந்தொழுகி - மொய்ததளிகள், சூழ்ந்து வடிவம்பலமபித துஞ்சுடைத்தா யூட்டு புகை, வாழ்நது தகரநகமழுமால" என்ற இரத்தினசசுருக்கச்செய்யுள் இங்குக் கருதத்தककது. பி - ம்:—[1]சழன்று. [2]நெறித்துச்செறிந்து. [3]கடைசுருணடு புகையுநறும் பூவேனையவும. [4]இழிவாமால். (ருஎ)

ருஅ.—நடையின் சிறப்பு.

புல்ல லேற்ற திருமகளும் பூவும் பொருந்தப் புவியேழு
பெல்லை யேற்ற நெடுஞ்செல்வ மெதிர்ந்த ஞான்று மஃதின்றி
யல்ல லேற்ற கானகத்து மழியா நடையை [1]யிழிவான
மல்ல லேற்றி னுளதென்றான் மத்த யானை வருந்தாதோ.

(இ - ள்.) 'புல்லல் ஏற்ற - (தன்னிடம் வந்து) சேர்தலை விரும்பிய, திருமகளும் - இலக்குமியும், பூவும - பூமிதேவியும், பொருந்த - (வந்து தன்

னிடததிற) பொருந்துமபடி, புவி எழும் எலலை ஏற்ற நெடுஞ் செலவம்-ஏழு தீவுகளையும தனக்கு எல்லையாகககொண்ட பெரியசெலவததை, எதிர்ந்த ஞான்றும் - (தசரதசகரவாத்தி கொடுகக தான்பெற) இணஙகிய பொழுதும், அஃது இன்றி ஏசசெல்வம கிடைத்தல் இல்லையாய, அல்லல் ஏற்ற கானகததும - துன்பத்தைததருவதான காட்டில் வநதபொழுதும், அழியாதன் தன்மைமாறாத, நடையை-(இராமபிரானது) நடையை,—இழிவு ஆன- இழிந்ததாகிய, மல்லல ஏற்றின் - வலிமையையுடைய காளையினிடத்து, உளது - உள்ளது,' என்றால் - எனறுசொன்னால், மத்தம் யானை - மதம பிடித்த யானை, வருநதாதோ - வருததமடையாதோ? (எ - று.)

இன்பமநோநதகாலததும துனபமநோநதகாலததும் என்றும் ஒருபடியாகவுளள இராமபிரானது கமபீரமான பெருமிதநடைக்கு, இனப துன்பங்களில் ஒருபடியாயிராத எருதினது நடையை உவமைகூறினால், அப்படிப்பட்ட நடையையுடைய களிறறியானை தன்னை உவமைகூறவில்லையே யெனறு வருநதுமாதலால, இவ்விரணடையும உவமைகூறுதல பொருநதாதென்பதாம. இராமபிரான நாடுதுறநது காட்டிறகுசசெலவ தைபபற்றிச சிறிதும வேறு பாடுறாதிருநதன னெனபதை, "இப்பொழு தெமமனோரா லியமபுதற கெளிதே யாருஞ, செப்பருங குணததிராமன றிருமுகச் செவ்வி நோக்கி, னொப்பதே முனபு பின்பவ் வாசக முணரககேட்ட, வபபொழு தலாந்த செந்தா மரையினை வென்றதமமா" என்ற அயோததியாகாண்டச செய்யுள கொணடு அறியலாம பூ - வடசொல. 'நெடுஞசெல்வம' என்றது, உலகமுழு தாளும சககரவாத்தி பதவியை. கானகத்து அல்லலேற்றஞான்று என்றும கூட்டலாம பி - ம்:—[1]அழிவான. (ருஅ)

ருகூ.—இராமபிரான் கூறிய அடையாளமொழிகளை அநுமான் சீதைக்கு எடுத்துக்கூறத்தொடங்குதல்.

இன்ன மொழிய வம்மொழிகேட் டெரிபி னிட்ட மெழுகென்னத்
தன்னை யறியா தயர்வாளைத் தரையின் வணங்கி நாயகனார்
சொன்ன [1]குறியுண் டடையாளச சொல்லு முளவா லவைதோகை
யன்ன நடையாய [2]கேட்கெனன வறிய வறைவா னாயினான்.

(இ - ள்) இன்ன மொழிய - இவ்வார்த்தைகளை (அநுமான்) சொல்ல, அ மொழி கேடடு - அசசொற்களைச் செவியேறறு, எரியின இட்ட மெழுகு எனன - நெருபபிலேபோகடட மெழுகுபோல, தன்னை அறியாது அயாவாளை - தன்னைததான் அறியாமல் [தனவசநதப்பிப பரவசமாயத] தளாகிற பிராட்டியை, (அநுமான்), தரையின வணஙகி - பூமியிலேவிழுந்து [சாஷ்டாநகமாகத] தணடனிட்டு, 'நாயகனார் சொன்ன குறி உணடு - (உனது கணவனாகிய) இராமபிரான (எனனிடம) செல்லியனுபபிய குறிபபுககளும உண்டு அடையாளம சொல்லும உள - அடையாளமான வார்த்தைகளும

உள்ளன: அவை - அவற்றை, தோகை-மயில்போலுஞ் சாயலையுடையவளே! அன்னம் நடையாய் - அன்னம்போன்ற நடையையுடையவளே! கேட்க - (நீ) கேட்பாயாக', என்ன - என்றுசொல்லி, அறிய - தெரியும்படி, அறைவான ஆயினன் - (அவற்றைச) சொல்பவனாயினன்; (எ - று.)—அவற்றை, மேற் கூறுகின்றார்.

'சொன்ன குறி' என்றது, சீதையின் திருமேனியடையாளங்களைக் கூறியதை. 'சொன்னகுறி உண்டு' என்பதற்கு - ஸ்வர்ணமயமான அடையாளமாயுள்ள மோதிர முணடென்றும் பொருள் கொள்ளலாம். [சொன்னம்=ஸ்வர்ணம்.] "மயில்கணடன்ன மடநடைமகளிர்," "மயிலெனப் போந்து," "மணிமயிறழுழில்," "நடைமயிலே" என முன்னோர் மயிலை நடைக்கு உவமையாககூறியிருத்தலால், தோகை அனனம் நடையாய் - மயிலையும் அன்னததையும போன்ற நடையையுடையவளே! என்றும் பொருள்கொள்ளவுமாம. பி - ம்:—[1]குறிகோள். [2]கேட்கவென. (ருகூ)

வேறு

சுரு.—இதுமுதல் மூன்று கவிகள் - அவ்வடையாளச் சொற்கள் இன்னவென அநுமான் சீதையினிடம் விண்ணப்பித்தல்.

நடத்தலரி தாகுநெறி நாள்கள்சில தாயர்க்
கடுததபணி [1]செய்திவணி ருத்தியென [2]வச்சொற்
குடுத்ததுகி லோடுமுயி ருக்கவுட லோடு
மெடுத்தமுனி வோடுமய னின்றதுமி சைப்பாய்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'நெறி - காட்டுவழி, நடத்தல் அரிது ஆகும் - (நீ) நடந்து செல்லுதற்கு அரியதாகும. நாள்கள் சில - (நான் வனத்துக்குப்போய்வரும) நாள்களோ சிலவாம். (அதுவரையில்), தாயர்க்கு அடுதத பணிசெய்து இவண் இருத்தி - (என) தாய்மார்க்குத தக்க பணிவிடைகளைச செய்துகொண்டு இங்கேயே [அயோததியிலேயே] இருப்பாய', என-என்று (நான்) சொல்ல, அ சொற்கு - அந்தசசொல்லைக கேட்டும், உடுதத துகிலோடும் - உடுத்த வஸ்திரத்துடனேயும், உயிர் உக்க உடலோடும் - உயிர்நீங்கினதுபோன்ற உடம்புடனே, எடுதத முனிவோடும் - (என்னிடத்திற்) கொண்ட கோபத்துடனேயும், அயல் நின்றதும் - (என்) அருகில் (அசசீதை) நின்றதையும், இசைப்பாய் - (நீ அவட்கு) அடையாளமாகச சொல்வாய்; (எ - று.)—இங்ஙனம் இராமபிரான் தன்னிடததுக கூறியதை அநுமான் சீதையினிடத்து விண்ணப்பிகின்றனன்.

"முன்புநானறிகிலா முளிநெடுங்கானிலே, யென்பினே போதுவான் நினைததியோ வேழைநீ, யின்பமா யாருயிர்க் கினியையா யினையினித், துன்பமாய் முடிதியோ வென்றதுஞ் சொல்லுவாய்", "ஆன பேராசிழந் தடவிசேர் வாயுனக், கியானலா தனவெலா மினியவோ

வினியெனு, மீனுலாநெடுமலர்க் கண்கணீர்விழ விழுந், துனிலா வுயிரின்வெந் தயர்வதும் முரைசெய்வாய்'' என்ற நாடவிட்டபடலச் செய்யுள்களின் பொருளநுவாதம், இது, பதினான்குவருஷமாயிருக்கவும் 'நாள்கள்சில' என்று இராமன் கூறினது, 'அக்காலவெல்லையை மிகஎளிதிற்கழித்து வெகு விரைவில் மீண்டுவருவேன்' என்று அப்பிராட்டிக்குத் தேறுதல்கூறிய வாறும். 'உடுத்ததுகிலோடும் அயல்நின்றது' என்றது, அப்பிரானுக்கு முன்னே தான் காட்டுக்குப்புறப்பட்டுச் சித்தமாய் நின்றது என்றபடி; 'உடுத்ததுகிலோடும்' என்றது - உலகவழக்கு. ''அனையவேலையகன்மனை யெய்தினள், புனையுஞ் சீரந் துணிந்து புனைந்தனன், நினைவில் வள்ளல்பின்வந்த யல் நின்றனள், பனையி னீள்கரம் பற்றிய கையினள்''என்றார், அயோத்தியா காண்டத்தில். இராமபிரான்சொன்ன வார்த்தையைக்கேட்டுப் பொறாது தோன்றின வருத்தத்தின் மிகுதியையும், அச்சத்தின் மிகுதியையும் விளக்க, 'உயிருக்கவுடல்' என்றது. பி - ம்:—[1]செய்திலன். [2]அச்சுற்று. (சுஂ)

சுக. நீண்டமுடி வேந்தனரு [1]ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளி
னாண்டகர ராரை யொடு வாயிலக லாமுன்
யாண்டையது காணெனை விசைத்தது மிசைப்பாய்.

(இ - ள்.) நீண்ட முடி வேந்தன் அருள் ஏந்தி - நீட்சியான கிரீடத்தை யுடைய தசரதசக்கரவர்த்தியின் ஆஜ்ஞையைத் தலைமேற்கொண்டு, நிறை செல்வம்பூண்டு - நிரம்பிய (உலகமுழுதாளுஞ்) சிறப்பை (முதலில்) ஏற்றுக கொண்டு, (பின்பு), அதனை நீங்கி - (அரசுசெல்வதனை கைகேயிகட்டளையாற்) கைவிட்டு, நெறி போதல் உறு நாளின் - (காட்டுக்குச்செல்லப்) பிரயாணம் புறப்பட்டபொழுது, ஆண்ட நகர் ஆரையொடு வாயில் அகலாமுன் - (நான்) ஆளுதற்குஉரிய அவ்வயோதியாபுரியின் மதிலோடுகூடிய கோட்டை வாயிலைக் கடந்துவருவதற்கு முன்னமே, காண்யாண்டையது என இசைத்த தும்-(என்னைநோக்கிச்சீதை) 'காடு எவ்விடத்தி லுள்ளது?' என வினவியதை யும், இசைப்பாய் - (நீ அவட்கு அடையாளமாகச) சொல்வாய்; (எ - று.)

''மல்லன்மா நகர்துறந் தேகுநாண மதிதொடுவ, கல்லின்மாமதின் மணிக் கடைகடந்திடுதன்மு, னெல்லைதீர்வரிய வெங்கானம யாதோவெனுச், சொல்லினு ளஃதெலா முணரநீ சொல்லுவாய்'' என்ற செய்யுளின் அநு வாதம், இது. இதனால், பிராட்டியினது கணவன் திருமனையையேயன்றி வேறொன்றையும் அறியாத தன்மையும், சௌகுமாரியமும், பேதைமையும் வெளியாம. இராசசியத்தையாள்வதில் விருப்பாவது வெறுப்பாவது தனக்கு இல்லையாயினும் பித்ருவாக்கியபரிபாலனஞ்செய்வதே தனக்கு மேலான தருமமெனக்கருதித் தான் முன்பு அதற்கு உடன்பட்டன னென்பான், 'வேந்தனருளேந்தி நிறைசெல்வம பூண்டு' என்றான்; ''தாதை யப்டரிசுரை செயத தாமரைக்கண்ணன், காதலுற்றிலனிகழ்ந்திலன் கடனிதென்

றுணர்ந்து, யாது கொற்றவனேவிய ததுசெய லன்றோ, நீதி யெற்கென நினைந்து தன்பணி தலைநின்றான்", என்ற அயோததியாகாண்டச செய்யுளை யுகாண்க நீண்ட முடி - வம்சபரம்பரையாகவந்த கிரீடமுமாம். நெறிபோதல் - பிரயாணப்படுதல். ஆரை - மதில். பி - மீ:—[1]வேண்டி. (சுக)

சுஉ. எள்ளரிய தேர்தரு சுமந்திர னிசைப்பாய்
வள்ளன்மொழி வாசக மனத்துயர் மறந்தாள்
கிள்ளையொடு பூவைகள் [1]கிளர்த்தல் கிளவென்னும்
பிள்ளையொடு தன்றிற முணர்த்துதி [2]பெயர்த்தும்.

(இ - ள்.) 'எள் அரிய தேர் தரு சுமந்திரன் - இகழ்வதற்கு அருமையான [ஒருகுற்றமுமில்லாத] இரதத்தை ஓட்டுகிற சுமந்திரனே! வள்ளல் மொழி வாசகம் - இராமபிரான் தேறுதல்கூறிய வார்த்தைகளால், மனம் துயர் மறந்தாள் - (சீதை) மனதிலுள்ள துன்பத்தை நீங்கினவளாக, இசைப்பாய் - நீ சொல்வாய்: கிள்ளையொடு பூவைகள் - (நான் வளர்த்த) கிளிகளையும் நாகணவாய்ப்பறவைகளையும், கிளர்த்தல் - வளர்க்கவேண்டிய வகையையும், கிள - சொல்வாய்', என்னும் - என்று (அயோத்தியிலுள்ள ஊர்மிளைமுதலியோர்க்கு வனத்திலிருந்து சுமந்திரனிடம்செய்தி) சொல்லியனுப்பின, பிள்ளையொடு - இளமைக்குணமுடைய அசசீதையோடு, தன் திறம் - அவள் இவ்வாறுசொன்ன செயதியை, பெயர்த்தும் - மீண்டும், உணர்த்துதி - (அவளுக்கு அடையாளமாகச்) சொல்வாய்; (எ - று.)

ஸுமந்தரன் என்னும் வடசொல்லுக்கு - நல்ல ஆலோசனையுடையவனென்றுபொருள்; இவன், தசரதனுக்கு வம்சபரம்பரையாய் வந்த மந்திரியும் சாரதியுமா யுள்ளவன்; (இராசாங்கததுப்பொருள் வரவுசெலவுகளைக் கவனிக்கும் பிரதான உத்தியோகஸ்தனுக்கு 'சுமந்திரன் என்றபெயா' என வடமொழிநீதிநூல்கள்கூறும்; இவன், மந்திரிகளுச்சிறிதுதாழ்ந்தவன்.) இச சொல், அணைமைவிளியாதலின், இயல்பாய்நின்றது. மனத்துயர், நாட்டை விட்டுக் காட்டுக்குசசென்றதனு லாகியது. இனி, இரண்டாமடிக்கு - தசரத சகரவர்த்தி வனத்திற்குப் போம்படிசொன்ன வார்தையா லாகிய மனத துன்பத்தை நீங்கினுளென்றும் பொருள்கூறலாம். பிள்ளை - ஆண் பெண் என்ற இருபாற்கும் பொதுவாகவரும் இளமைப்பெயா; "தவழ்பவைதாமு மவற்றோரன்ன" என்னுந் தொல்காப்பியசூத்திரத்து 'தாமும்' என்றதனுல் இது சிறுபான்மை உயர்திணைக்கும் உரியதாய்வரு மென்க. சீதை இவ்வாறு சொன்னது, நாட்டைவிட்டுச் சிறிதுதூரம்சென்றதும் சுமந்திரனை அனுப்பி விட்டபொழுது; "அன்னவள்கூறுவா ளரசாக கதத்தையாக, கென்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப், பொன்னிறப்பூவையுங கிளியும் போற்றுகென், றுன்னு மென் றங்கையர்க குணர்த்துவா யென்றாள்" என்றார் அயோத்தியாகாண்டததில். இச்செய்யுளுககு வேறு வகை

யாகவும பொருளகொள்ளலாம. பி - ம்.—[1]கிளததல், வளாததல். [2]பெயாந்தாய். (கூஉ)

கூஙு.—அநுமான் இராமபிரானது மோதிரத்தைச் சீதைக்குக் காட்டுதல்

மீட்டுமுரை வேண்டுவன விலலையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவவே
நீட்டிதென நேர்ந்தன னெனுநெடிய கையாற்
காட்டினனொராழியது வாணுதலி கண்டாள்.

(இ - ள.) மீட்டும் உரை வேணடுவன இலலை என - மீணடும்மீண்டும் (அடையாளமாகச) சொலலவேணடுமவை இல்லை என்று எணணி,—'(இராமபிரான்), மெய போ தீட்டியது - (தனது) உணமையான திருப்பெயர் எழுதபபெறறுள்ளதும், தீட்டு அரிய செய்கையது - (சித்திரத்திலும) எழுதுதற்கரிய வேலைததிறமுடைபதுமாகிய, இது - இமமோதிரத்தை, செவ்வே நீட்டு - நேராக (ச சீதைகையிற) கொடுப்பாய, என - என்று சொலலி, நேநதனன - (இமமோதிரததைக) கொடுததான்,' எனு - என்றுசொல்லி, (அநுமான), நெடிய கையால் - நீண்ட (தனது) கைகளால, ஓர் ஆழி - ஒரு மோதிரததை, காடடினன் - (எடுததுக) காணபிததான் அது - அதனை, வாள் நுதலி-ஒளிபொருந்திய நெறறியையுடைய சீதை, கண்டாள்;—(எ-று)

பல அடையாளமொழிகள் கூறுவதனினும் சிறநத அடையாளமாகிய மோதிரததை யெடுத்துககாட்டுதலே நனறெனறு கருதி அநுமான் ராமநாமாங்கிதமோதிரததைச சீதைககுக காடடினனென்றவாறு. "மைத்தகுமா மலர்நகுழலாய் வைதேவி விண்ணபபம, ஒத்தபுகழ்வானரக்கோ னுடனிருநது நினைததேட, அததகுசீ ரயோத்தியாகோ னடையாளமிவை மொழிநதான், இததகையாலடையாள மீதவன்கை மோதிரமே" என்பது, பெரியாழ்வார் திருமொழி. அநுமான தன்னை மெயபபிததற்காக இராமனது பழையவரலாறுகளை யெலலாம சீதையினிடம எடுததுசசொன்னதாக முதனூலிற கூறியுளளது பலவகைப் பயனகளுககுங காரணமான மகிமையுடைததாயிருததலால், ராமநாமம, 'மெய்ப்பேர்' எனப்பட்டது தீட்டரிய செயகையது என்பதறகு - (ஒருவராலுஞ்) செயயமுடியாதது என்றும் உரைககலாம. இரணடாமடி - முற்றுமோனை (கூஙு)

கூசு.—இதுமுதல் ஆறுகவிகள் - அதுகண்ட சீதையின்தன்மையைத் தெரிவிக்கும்

இறந்தனர் பிறந்தபய னெய்தினா கொலென்கோ
[1]மறந்தன ரறிநதுணாவு வந்தனர் கொலென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடாந்தது கொலென்கோ
திறந்தெரிவ தெனனைகொலி நன்னுதலி செய்கை.

(இ - ள) நல் நுதலி இ செயகை - அழகிய நெற்றியையுடைய பிராட்டியினது (பெறுதற்கரிய மோதிரத்தைப பெற்றுமகிழும்) இச்

செய்கைகளு, (உபமானம்),—இறந்தனா பிறந்த பயன எய்தினாகொல் எனகோ - (மனிதபபிறபபெடுததததற்குப்பயனுய் மறுமைகளு உதவும தவம முதலிய நற்கருமங்களைச செயயாமலே) இறந்தவாகள பிறப்பின் பயனுகிய அவற்றை (த தறசெயலாய)ப் பெறறாகள என்றுசொல்வேனே? மறந்தனா அறிந்து உணர்வு வந்தனாகொல என்கோ - (ஒன்றை) மறந்துவிட்டவா மீண்டும ஞாபகமுண்டாகி அவவறிவுவந்து கூடபபெற்றனரென்று சொல் வேனே? துறந்த உயிா வந்து இடை தொடாந்ததுகொல் எனகோ - (உடம் பை) விட்டுநீங்கிச சென்றஉயிர் (மீண்டும் அவ்வுடமபினிடையே) வந்து சோந்தது என்று சொல்வேனே? திறம தெரிவது என்னைகொல - (இன்னும உவமையாதற்கு) ஏறறசெயகையை (யான்) தெரிந்துசொல்வது எவ்வாறே.

பிறந்தபயனினறியிறந்தவர் பிறந்தபயன பெற்றதுபோலவும, மறந்தவர் மீண்டும ஞாபகத்தைபபெற்றதுபோலவும, இறந்த உயிா மீண்டும உடமபில வந்து சேரப்பெறறது போலவும், பிராட்டி பெருமாளது மோதிரததைப் பெற்று மகிழ்ந்தனளென்பதாம இது, கவிககூறறு **தற்குறிப்பேற்றவணி.** சொல் - ஐயம என்கு - தன்மை யொருமைமுறறு; 'கு' விகுதி எதிா காலங காட்டிறறு. பி - ம்:—[1]கரந்தனரிறந்து (சுச)

சுரு இழந்தமணி புற்றர வெதிாந்ததென லானுள்
பழந்தன [1]மிழந்தன [2]படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிாத்தமல டிக்குவமை கொண்டா
[3]ளுழந்துவிழி பெற்றதொ ருயிாபபொறையு மொத்தாள்.

(இ - ள்.) (இன்னும அசசீதை), இழந்த மணி எதிாந்தது புறறு அரவு எனல் ஆனுள் - தான் இழந்த மாணிககததை மீளவும்பெற்றதாகிய புறறி லுள்ளபாமபு என்று உவமைசொல்லத்தக்கவளானுள்; இழந்தனபழந் தனம படைத்தவரை ஒத்தாள் - இழந்தனவாகிய பழமையான செலவங்களை மீண் டும பெறறவரைப் போனருள்; குழந்தையை உயிாதத மலடிககு உவமை கொண்டாள் - குழந்தையைப பெறறெடுதத பிளளையில்லாதிருந்தவளுககு ஒப்பாகப பொருந்தினுள, உழந்து விழி பெறறது ஓா உயிாபபொறையும் ஒததாள -(கண்ணிலலாமல) வருந்திப்பின்பு கணணைபபெற்றதாகிய ஒருடம் பையும போன்ருள்; (எ - று)

உவமையணி குழந்தையைபபெற்ற பிறகு மலடிததன்மை நீங்கியதா யினும், 'மலடி' என்றுகூறினது, முனனிருந்த தன்மையை நோகி; இது, பூதபூாவ வ்யவஹார மெனபபடும். உயிாபபொறை-உயிரைததாங்குவது என உடம்புகுக் காரணககுறி. பி - ம்.—[1]மறைததது [2]படைததவரும். [3]உழந்த.

சுரு. வாங்கினண் முலைக்குவையில வைத்தனள் சிரத்தாற்
ருங்கினண் மலாக்கண்மிசை யொத்தின டடந்தோள்
வீகினண் மெலிந்தனள குளிர்ந்தனள வெதுபபோ
[1]டேங்கினு ளுயிாத்தன ளி[2]தினனதென லாமே.

(இ - ள்.) (பிராட்டி அந்தமோதிரத்தை), வாங்கினள்-(அநுமான்கையினின்றும் தன்கையில்) வாங்கி, முலை குவையில்-(தனது)தனங்களின்முகட்டிலே, வைத்தனள் - வைத்துக்கொண்டாள்; சிரத்தால் தாங்கினள் - தலைமேல் வகித்துக்கொண்டாள்; மலர் கண்மிசை ஒதினள் - தாமரைமலர் போன்ற (தனது) கணகளில் ஒதிக்கொண்டாள்; தட தோள் வீங்கினள் - (தன்) பெரியதோள்கள் பூரிக்கப்பெற்றாள்; மெலிந்தனள் - இளைத்தாள்; குளிர்ந்தனள் - அகங்குளிர்ந்தாள்; வெதுப்போடு ஏங்கினள் - வாட்டத்தோடு ஏக்கமடைந்தாள்; உயிர்த்தனள் - பெருமூச்சுவிட்டாள்; இது இன்னது ஏனல் ஆமே - (அவள் அடைந்த) இந்நிலைமை இப்படிப்பட்டதென்று சொல்வதற்கு ஆகுமோ? (எ - று.)

"திகழ்நிறைபுகழாளன் றீவேள்விச சென்றநாள், மிக்கபெருஞ்சபை நடுவே வில்லிறுத்தான் மோதிரங்கண, டொகுமாலடையாள மநுமானென் றுச்சிமேல், வைத்துக்கொண டுகந்தனளான் மலர்க்குழலாள் சீதையுமே" என்றார் பெரியாழ்வாரும். மூன்றுமடி - தோடைழரண். தோள் வீங்கினள் - உயர்திணைசசினை அத்திணைமுடிபைக்கொணட திணைவழுவமைதி. ஒருவகே சீதை பலதொழில் செய்ததாகக் கூறினது, கூட்டவணி. பி-ம்:— [1]ஓங்கினள். [2]என்னது. (சுசு)

சுஎ. மோக்குமுலை வைத்துற முபங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்ப நெடுநீள
நோக்குநுவ லக்கருது மொன்றுநுவல் கில்லாண்
மேக்குநிமிர் விம்மலள் [1]விழுங்கலுறு கின்றாள்.

(இ - ள்.) (பின்னும் பிராட்டி அம்மோதிரத்தை),—மோக்கும்-மோந்து பாரப்பாள்; முலை வைதது - (தனது) தனங்களின்மேல் வைத்துக்கொண்டு, உற முயங்கும்-நன்றாகத் தழுவுவாள்; கண இணை நிறை ஒளிர் நல் நீர் நீக்கி - இரண்டுகணகளிலும நிறைந்துவிளங்குகிற மிக்க கணணீரை நன்றாய்த் துடைத்துவிட்டு, ததும்ப - (மீண்டும கண்ணீர்) தளும்பும்படி, நெடு நீளம் நோக்கும் - வெகுநேரம் பாரப்பாள்; நுவலகருதும் - (அதனோடு ஏதேனும்) பேசக் கருதுவாள்; ஒன்றும் நுவல் கில்லாள் - (பின்) ஒன்றும் பேசாள்; மேக்கு நிமிர் விம்மலள்-மேன்மேன் மிகுகிற பூரிப்பையுடையவளாய், விழுங்கல் உறுகின்றாள் - (அதனை வாயால்) விழுங்கதொடங்குவாள்; (எ - று.)

'மோகரும்' முதலிய செய்யுமென்முற்றுக்கள், இறகுப் பெண்பாலில் வந்தன. இறகுகூறியவை, மகிழ்சசிமிகுதிபற்றி நேர்ந்தவை. பி - ம் — [1]விழுங்க. (சுஎ)

சுஏ. நீண்டவிழி நேரிழைதன் மினனினிற மெல்லாம்
பூண்டதொளிர் பொன்னனைய பொம்மனிற [1]மெய்யே
யாண்டகைதன் மோதிர மடுத்தபொரு ளெல்லாந்
தீண்டளவில் [2]வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ.

(இ - ள்.) நீண்ட விழி நேர் இழைதன் - (காதளவும்) நீண்ட கண்களையும் அழகிய ஆபரணங்களையு முடைய பிராட்டியினது, மின்னின் நிறம் எல்லாம் - மின்னல்போன்ற திருமேனிமுழுவதும், (அமமோதிரத்தின் ஒளியால்), ஒளிர் பொன் அனைய - விளங்குகின்ற பொன்னையொத்த, பொம்மல் நிறம் - பொலிவுள்ள நிறத்தை, பூணடது - அடைந்தது: (ஆதலால்), மெய்யே - உண்மையாக, ஆணதகைதன் மோதிரம் - ஆண்மைகுணமுள்ள இராமபிரானது மோதிரம், அடுத்த பொருள் எல்லாம் தீண்டளவில் வேதிகை செய் தெய்வம மணி கொல் ஓ - (தன்னைச்) சேர்ந்த எல்லாப் பொருள்களையும் தான்படுகிறமாத்திரததில் மாற்றுயர்ந்தபொன்னாக) வேறுபடுத்துகிற தெய்வத்தன்மையுடைய (ஸ்பர்சபேதியென்னும்) ரசகுளிகை தானோ? (எ - று.)

முன்னிரண்டடிகளில், சீதையின் மின்னின்நிறமான உடம்பு மோதிரத்தின் ஒளியால் உயர்ந்தபொன்னிறம்பெற்றதெனக் கூறினது, பிறிதின்றாம் பெறலணி; இதனை வடநூலார் தத்குணாலங்கார மென்பர் பின்னிரண்டடி-தன்மைத்தற்குறிப்பேற்றவணி. 'மெய்யே' என்றது, தற்குறிப்பேற்றவணியின் உருபாய்நின்றது. முதலடியிலுள்ள 'எல்லாம்' என்பது - ஒருபொருளின் பலவிடம் குறிததுநின்றது. மூன்றும்அடியிலுள்ள 'எலலாம்' என்பது-பொருட்பன்மை குறித்தது. வேதிகை-பேதிகா: (உருவத்தை) வேறுபடுத்துவது. பி - ம்·—[1]அம்மா. [2]வேதனை. (சுஅ)

சுகூ இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்து
மருந்துமமு தாகிய தறத்தவரை [1]யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளு
மருந்துமென லாகியது வாழிமணி யாழி.

(இ - ள்.) (பிராட்டிகசு),—மணி ஆழி - அழகிய அமமோதிரம,—பசியால் இருந்து இடர் உழந்தவர்கள் - பசியினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்தவர்கள், எய்தும - பெற்ற, அருநதும் அமுது ஆகியது - உணணுதற்கேற்ற உணவை யொத்தது; அறத்தவரை அணமும - இல்லறவொழுககநதவருததவரை வந்தடைந்த, விருந்தும் எனல ஆகியது - விருந்தாளியை ஒதததென்றும் சொல்லலாம்படியாயிற்று; வீயும உயிர் மீளும் - இறந்தஉயிர் மீணடும் பிழைத்தற்குக் காரணமான, மருநதும் எனல ஆகியது - (மிருதசஞ்சீவினி யென்னும்) மருந்தையும் ஒத்தது என்னலாமபடியாயிற்று; வாழி - (அதநிருவாழி கண்ணெச்சில்படாமே காலதத்துவமுள்ளவளவும்) வாழ்வதாக; (எ-று.)

'அறத்தவர்' என்றது, இஙகே, இல்லறத்தாரைக் குறிக்கும்; தம்மிடம்வநத விருந்தினரைக் கண்டு அகமகிழ்ந்து எதிர்கொணடு மிக்கஅன்புடன் இன்சொற்கூறி உபசரித்தற்கு உரியவர் அவரே யாதலால். 'வீயுமுயிரீளும்மருந்துமெனலாகியது' என்றது, பிராட்டி பிராணபாயததினின்று நீங்கக் காரணமானதனால். கண்டவுடன் பேருவகைவிளைத்தலில், இங்குக் கூறியன உவமையாம். மணியாழி - இரத்

தினம்பதித்த மோதிரமுமாம். 'இடருழந்திருந்தவர்கள்' என விகுதி பிரித்துக்கூட்டப்பட்டது. அமுது - தேவாமிருதம்போ லினிய உணவு. பி - ம்:—[1]எய்தும் (சுகூ)

எ0.—சீதை அநுமான்செய்த நன்றியைப் பாராட்டி முகமன்கூறத்தொடங்குதல்.

இத்தகைய ளாகியுயி ரேமுறவி ளங்கு
முத்தநகை யாள்விழியி னுலிமுலை முன்றிற்
றத்தியுக மென்குதலை தள்ளவுயிர் தந்தா
யுத்தமவெ னுவினைய வாசகமு ரைத்தாள்.

(இ - ள்.) இ தகையள் ஆகி - இப்படிப்பட்ட தன்மையுடையவளாய், உயிர் எமுற - உயிர்இன்பமடைய, விளங்கும் - விளங்குகிற, முத்தம் நகையாள் - முத்துப்போன்ற பற்களையுடைய பிராட்டி—, விழியின் ஆலி - கண்ணின் நீர்த்துளிகள், முலை முன்றில் - தனங்களின் மேல்முகட்டில், தத்தி உக - பாய்ந்துஒழுக, மெல் குதலை தள்ள - மென்மையான மழலைச் சொற்கள் குழறும்படி, (அநுமானை நோக்கி), 'உத்தம - (யாவரினுஞ்) சிறந்தவனே! உயிர்தந்தாய் - (எனக்கு நீ) உயிரைக் கொடுத்தாய்', எனு - என்று, இனைய வாசகம் - இப்படிப்பட்ட வார்த்தைகளை, உரைத்தாள - சொல்வாளாயினாள்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

உயிரே விளங்கும் முத்தநகையாள்-இனித தனது பிராணநாயகனை எளிதிற்கூடலாமென்று மனதுக்கொண்ட பேருவகையை வெளிப்படுத்தும் புன்சிரிப்பினால் விளங்கும் பற்களையுடையாள் என்றவாறு. எமுற - ஏமமுற என்பதன் விகாரம். விழியின் ஆலி-மழைபோலப் பெருகிவழியுங் கண்ணீர்ப் பெருக்கு. குதலை - நிரம்பாத மென்சொல். தள்ளுதல் - தடுமாறுதல்; சொல் தடுமாறுதற்குக் காரணம் களிப்பு மேலிடுதல். (எ0)

எக.—சீதை அநுமானைப் புகழ்ந்துகூறுதல்.

மும்மையா முலகந் தந்த முதலவற்கு [1]முதல்வன் [2]றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்னு லெளிய துண்டே
யம்மையா யத்த னுய வப்பனே யருளின் வாழ்வே
யிம்மையே மறுமை தானு நல்கினை யிசையோ டென்றாள்.

(இ - ள்.) (சீதை அநுமானை நோக்கி), 'மும்மை ஆம் உலகம் தந்த முதல்வற்கும் முதலவன் தூது ஆய் - (மேல் கீழ் நடு என) மூன்றவகைப் பட்ட உலகங்களையெல்லாமபடைத்த (யாவாகக்கும) முதலிலுள்ளவனான பிரமதேவனுக்கும் காரணனாகிய (திருமாலின திருவவதாரமான) இராம பிரானது தூதனாய் (வந்து), உயிர் செமமையால் தந்தாய்க்கு - (எனது) உயிரை நன்மையாக (எனக்கு) க் கொடுத்த உனக்கு, எனனால் செயல் எளியது உண்டே - என்னால் எளிதிற் செய்யக்கூடியதொரு கைம்மாறும்

உளதோ? அம்மை ஆய் அத்தன் ஆய அப்பனே - (எனக்குத்) தாயாகித் தந்தையுமாகிய தலைவனே! அருளின்வாழ்வே - கருணைக்கு இருப்பிடமாகவுள்ளவனே! (நீ எனக்கு), இம்மையே - இவ்வுலகத்தில் அனுபவிக்கும் இன்பத்தையும், மறுமைதானும் - (இறந்து சென்று) மறுவுலகத்தில் அனுபவிக்கும் இன்பத்தையும், இசையோடு - கீர்த்தியையும், நல்கினை - கொடுத்தாய,' என்றாள் - என்று கூறினாள்; (எ - று.)

இராமபிரானது செய்திகூறி உயிரைப் பிழைப்பித்ததனால் இம்மையின்பத்தையும், செய்தற்குச் சித்தமாயிருந்த பெருநரகத்திற்குக்காரணமான தறகொலையை யொழித்ததனால் மறுமையின்பத்தையும், மாற்றான் கைப்பட்டு உழன்று அழிந்தாளென்று உலகத்தார் தூற்றும் பழியைப் போக்கியதனால் புகழையும் அநுமான் சீதைக்கு அளித்தவனாவன். இனி, முதலடிக்கு - மூன்று உலகங்களையுங் காத்த யாவர்க்குந் தலைவனாகிய தசரதசக்கரவர்த்திக்கு மூத்தகுமாரனான இராமபிரானது தூதனாய் என்றும் உரைக்கலாம். தூது-தூதனுக்குப் பண்பாகுபெயர். தான் இறக்கத் துணிவுகொண்டு நின்ற சமயத்தில் எதிர்ப்பட்டு அடையாளங்களால் தெளிவித்துத் தன்னைப் பிராணபாயத்தினின்று நீக்கினமையால், சீதை அநுமானை 'உயிர்தந்தாய்' என்றாள். இனி, எனது பிராணநாயகனைக் கொடுத்த உனக்கு என்றுமாம்: இராமபிரானது அடையாளங்களைக் கொடுத்ததையே அப்பிரானையே கொணர்ந்து கொடுத்ததாக் கருதினளாதலாலும், தான் அப்பிரானையடைதற்கு இவனே பிரதானகாரணமாய் நிற்பதனாலும் இங்ஙனம் கூறினாள். இப்போது அநுமான் செய்தது காலத்தினாற் பயன்கருதாது செய்யாமற்செய்த உதவியாதலால், 'செயலென்னாலெளியதுண்டே' என்றாள்: "செய்யாமற்செய்த வுதவிக்குவையகமும், வானகமு மாற்ற லரிது" முதலியன இங்கு அறியத்தக்கன. உலகம் - உலகவுருண்டை, அண்டகோளம். மும்மை என்பது - இங்கே எண்ணின் தன்மையென்ற பொருளைக் குறியாமல் எண்ணின்மேல் நின்றது. "இருமைவகை" என்பவற்றிறபோல. உணடே, ஏ - எதிர்மறை.

பி - ம்:—[1]முதல்வி. [2]முற்றும். (எக)

எஉ.—சீதை அநுமானை வாழ்த்துதல்.

பாழிய [1]பணைத்தோள் வீர துணையிலேன் பரிவுதீர்த்த
வாழிய வள்ளலேயான் [2]மறுவிலா மனத்தே னென்னி
னாழியோர் பகலா யோதும் யாண்டெலா முலக மேழு
[3]மேழும்வீ வுற்ற ஞான்று மின்றென விருத்தியென்றாள்.

(இ - ள்.) 'பாழிய பணை தோள வீர - வலிமைபொருந்திய பருத்த தோள்களையுடைய வீரனே! துணை இலேன் பரிவு தீர்த்த வள்ளலே - ஒரு துணையுமில்லாத என்னுடைய துன்பத்தை நீக்கின வரையாமலருளுந் தன்மையை யுடையவனே! வாழிய - (நீ) வாழ்வாயாக: யான்—, மறு இலா மனத்தேன் என்னின் - (கறுவுநிலையிற்) களங்கமில்லாத மனத

தையுடையேனுனல், ஊழி ஓர் பகல் ஆய் ஓதும் யாண்டு எலாம் - பலயுக காலங்கள் ஒருதினமாய்ச சொல்லப்படுகிற (பிரமனது ஆயுளாகிய) வருஷங்களெல்லாவற்றிலும் [பிரமபிரளய பரியந்தமும்], உலகம் ஏழும் ஏழும் வீவு உற்ற ஞான்றும் - பதினான்கு உலகங்களும் அழிவடைந்தபொழுதும், இன்று என இருத்தி - இன்றைத்தினத்தில் இருப்பதுபோலவே [என்றும் ஒருபடிப படச் சிரஞ்சீவியாய்] வாழ்ந்திருப்பாயாக', என்றாள் (சீதை அநுமானுக்கு) அநுக்கிரகித்தாள்; (எ - று.)

சீதை அநுமானைச சிரஞ்சீவியாயிருக்குமாறு வாழ்த்தினளென்க. வாழிய - முற்று; வாழிய இருத்தி யெனக் கூட்டியுரைத்தலுமாம்: மறு - தெட்டு எண்ணம். மனிதாக்கு ஒரு வருஷம் தேவர்க்கு ஒருநாளெனக் கொண்டு தேவமானத்தாற் கணக்கிடப்பட்ட ஆயிரஞ்சதுர்யுகம் பிரமனுக்கு ஒரு பகலாம்; அப்பகலின் முடிவிலுண்டாகும் பிரளயத்திற் கீழேழுலகங்களும் மேலேழுலகங்களில் முதல் மூன்றும் நான்காவதிற்பாதியும் கடல் கொள்ளப்பட்டு அழிய மற்றை மூன்றரையுலகங்களே அழிவின்றி நிற்கும்; இத்தன்மையான பகலின் அளவுகொண்ட இரவுங்கழியப் பிரமனுக்கு ஒரு தினமாம்: அவ்வாறு தொகையிடப்பெற்ற நாள்களினாலாகிய நூறுவருஷங்கள் கழிந்தபின்பு ஒரு பிரமனுக்கு ஆயுள் முடியும். அப்பொழுது உண்டாகும் மகாப்பிரளயத்திலே எல்லாவுலகங்களும் அழியுமென உணர்க. பி - ம்:— [1]புயத்து. [2]மறுவிலென் மனதுதலெணணில். [3]ஆழியுள்ளளவுநீயே யழிவிலாதிருத்தி. (எஉ)

எங.—சீதை இராமபிரானது வரலாற்றை வினவ, அநுமான் கூறத் தொடங்குதல்.

மீண்டுரை விளம்ப லுற்றாள் விழுமிய குணத்தோய் வீரன்
யாண்டையா னிளவ லோடு மெவவழி யெய்திற் றுன்னை
யாண்டகை யடியேன் செய்கை யாசொல வறிந்த தென்று
மேண்டிர டடந்தோ ளானு முற்றது சோற லுற்றான்.

(இ - ள்.) (சீதை அநுமானை நோக்கி), மீண்டு உரை விளம்பல் உற்றாள் - மறுபடியும் சிலவார்த்தைசொல்லத் தொடங்கினவளாய்,— 'விழுமிய குணத்தோய் - சிறந்த நற்குணங்களையுடையவனே! வீரன் - மகாவீரனாகிய இராமபிரான், இவளோடும் - இளையபெருமாளுடனே, யாண்டையான் - எவ்விடத்திலுள்ளான்? உன்னை எய்திற்று எ வழி - உன்னை (அவன்) அடைந்தது எவ்விடத்தில்? ஆண்தகை அடியேன் செய்கையார் சொல அறிந்தது - பராக்கிரமமுடைய இராமபிரானுக்கு என்னை இராவணன் எடுத்துவந்த செய்தி எவர்சொல்லத் தெரிந்தது?' என்றான் - என்று வினவினாள்; தூண் திரள் தட தோளானும் - தூண்போலத் திரண்டுள்ள பெரிய தோள்களையுடைய அநுமானும், உற்றது சோறல் உற்றான் - நடந்ததைச் சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை மேல் உக - கவிகளிற் காண்க.

விழுமிய - விழுமம் என்னும் உரிச்சொல்லினடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். இராமபிரானுக்குச சிறியவனாதலால், இலக்குமணன் 'இளவல்'

எனப்பட்டான்; 'இளையபெருமாள்' என இவனுக்கு வைஷ்ணவசம்பிரதாயத்தில் ஒருபெயாஇருத்தலும காணக சீதை, தனக்கு இராமபிரானிடமுள்ள பணிவை 'அடியேன்' என்றதனால் வெளிபிட்டாள் அநுமானிடத்துப் பணிவினாற்கூறினாளெனக் கொள்ளுதல் பொருந்தாமையை உய்த்துணாக. சோறல் - தொழிறபெயர்; சொல் - பகுதி (எங)

எச.— இதுமுதல் இருபத்தோரு கவிகள் - ஒருதொடர்: அநுமானது விடை.

உழைகுலத் தீய மாய வுருவுகொண் டுறுதல் செய்தான்
மழைக்கரு நிறத்து மாய வரககன்மா ரீச னென்பா
னிழைத்தட மார்பத தண்ண லெயயபோய் வையஞ் சேர்வா
[1]னழைதததவ் வோசை யுன்னை மயக்குதற் கரக்கன்சொல்ல.

(இ - ள்.) அரக்கன் - இராவணன், சொல்ல - சொன்னதனால்,— மழை கரு நிறதது மாயம அரககன் மாரீசன் என்பான - மேகமபோலக கரிய நிறத்தையுடைய வஞ்சனைததன்மையுள்ள இராகததனாகிய மாரீசனென்பவன், தீய மாயம் குலம உழை உருவு கொண்டு உறுதல்செயதான் - கொடியமாயையினாலாகிய சிறநத மானினுருவத்தை யடைந்து (நீ இருநத அவ்வனத்தில்) வநது,—இழை நட மாரபதது அணணல் போய் எய்ய - ஆபரணங்களையணிநத பெரியதிருமார்பையுடைய புருஷோததமனான இராமபிரான் (அவனை உண்மையானமானென்று எண்ணி உனது வேண்டுகோளினாற்பிடிததறகுப்) பினதொடாநதுசென்று .பிறகு மாயமானென்று துணிநது அமபை) எயததனால், ஸவயம் சோவான் - இறநது கீழ்விழுபவனாய் [மானுருவம் நீங்கி அரக்கவடிவததுடன் கீழ்விழுமபொழுது], உன்னை மயக்குதற்கு - உனனை மயங்கசசெயயுமபொருட்டு, அழைததது - கூபபிட்டதாம் அ ஓசை - ('ஹாஸீதா! ஹா லக்ஷ்மணா!!') என்ற இராமன்குரலாற் றோட்ட அவ்வோசை, (எ - று)

வரலாறு, கீழ்ககூறபபட்டது 'இழைத்தடமாபு' என்றது, அப்பொழுது ஆபரணமில்லையாயினும் முனனும பின்னு முள்ள நிலையைக கருதி; இனி, இழை - பூணூலுமாம. உன்னை மயக்குதறகு - இராமபிரான துன்ப முற்றானென்று நீ மயங்குமபடி என்றவாறு; இனி, உன்னை மயகுகதறகு அரககன்சொல்ல என்று கூட்டி, உன்மனததை மயகுகுமபடி பொன்மானாக வேண்டுமென்று இராவணன் கட்டளையிட என்றலுமாம. பி - ம்·— [1]அழைத்தவபபொழுதேயுன்னைமயகுவது. (எச)

எரு இக்குர லிளவல் கேளா தொழிகென [1]விறைவ னிட்டான், மெயகுரல் சாபம் பின்னை விளைந்தது விதியின [2]மெய்ம்மை, பொயகுர லன்று [3]போலாம் பொருள் பினனாப பயக்குமென்பான், கைக்குரல வரிவில லானு மிளையவன் வரவு கண்டான்.

(இ - ள்.) 'இ குரல் - இந்த (மாயமானின்) குரலை, இளவல் - (எனது) தம்பியாகிய இலக்குமணன், கேளாது ஒழிக - கேட்டுநம்பாம லிருப்பானாக', என - என்றுஎண்ணி, இறைவன் - தலைவனாகிய இராமபிரான், பின்னை - உடனே, சாபம் - (தன்கையிலுள்ள) வில்லினால், மெய்குரல் இட்டான் - உண்மையான தொனியை உண்டாக்கினான்: (உண்டாகச்செய்தும்), விதியின் மெய்மை விளைந்தது - ஊழ்வினையின் உண்மை (இவ்வாறு) பலித்து விட்டது; 'பொய் குரல் அன்று போல் ஆம் - (அந்தமாயமானினது) பொய் யானகுரல் வீண்குரலாகாதுபோலும்; பின்னர் பொருள் பயக்கும் - உடனே (யாதாயினுமொரு தீங்கான) காரியத்தை உண்டாக்கக்கூடும்,' என்பான் - என்றுஎண்ணித் திரும்பிவிரைந்துவருகிறவனான, கை குரல் வரி வில்லானும் - கையிற்பிடித்த ஒலியோடுகூடிய கட்டமைந்த கோதண்டத்தையுடைய இராமபிரானும், இளையவன் வரவு கண்டான் - இலக்குமணன் (தன்னை நோக்கி) வருவதைப் பார்த்தான்; (எ - று.)

இராமபிரான் 'இமமானின் குரலைகேட்டு என்னுடைய குரலென்று மயங்கி லக்ஷ்மணன் கவலைப்படாதிருக்கும் பொருட்டு எனது நிலைமையை அவனுக்கு ஒருவகையால் தெரிவிக்கவேண்டும்' என்று எண்ணி உடனே தனது வில்லின்நாணொலியை எழுப்பினானென்க. 'விளைந்தது விதியின் மெய்ம்மை' என்றது, சீதைக்குக் காவலாயிருந்த இலக்குமணன் பிரிதலையும், அசசமயம்நோகி இராவணன் சீதையைக் கவர்ந்துசென்றதையும் குறிக்கும். இராமபிரான் திருமபிவரும்பொழுது அடிக்கடி நாணொலியை எழுப்பி வருவது தோன்ற, 'கைக்குரல்வரிவில்லான்' என்றது. 'கேளாது' என்பதில், கேட்டல் - இலக்கணையால், கேட்டு (இராமன்குரலை) நம்புதலை புணர்த் திற்று. போலாம்-ஒப்பில்போலி; பி - ம்:—[1]இறைவி, விட்டான். [2]வெய்மை. [3]பொல்லாப். (எரு,

எசு. கண்டபி னிளைய வீரன் முகத்தினாற் கருத்தை யோர்ந்த
புண்டரி கக்க ணானு முற்றது புகலக் கேட்டான்
வண்டுறை சாலை வந்தா னுன்றிரு வடிவு காணா
னுண்டுயி [1]ரிருந்தா னின்ன லுழப்பதற் கேது வொன்றோ.

(இ - ள்.) கண்ட பின் - பார்த்தவுடனே, இளைய வீரன் முகத்தினால் கருத்தை ஓர்ந்த - இலக்குமணனது முகத்தின் குறிப்பினால் (அவனது) மனக்கருத்தைத் தெரிந்துகொண்ட, புண்டரிகம் கணானும் - தாமரைமலர் போலுந் திருக்கண்களையுடைய இராமபிரானும், உற்றது புகலகேட்டான் - நடந்தசெய்தியை (அவ்விலக்குமணன்) சொல்லத தான் கேட்டவனாய், வண்டு உறை சாலை வந்தான் - (பூக்களில் வந்து) வண்டுகள்மொய்க்கின்ற பர்ண சாலைக்கு வந்து, நுன் திருவடிவுகாணான் - உனது அழகிய வடிவதனைக் காணாது, உண்டு உயிர் இருந்தான் - (மிககசோகத்தினால்) உயிர்உண்டோ இல்லையோ என்று (கண்டோர்) சந்தேகிக்கும்படி மிகச்சோர்ந்திருந்தான்;

இன்னல் உழப்பதற்கு ஏது ஒன்றோ - (இவ்வாறு) துன்பமனுபவித்தற்கு வேறொருகாரணமும் வேண்டுமோ? [இவ்வொருகாரணமே போதுமன்றோ என்றபடி]; (எ - று.)

வந்த இலக்குமணன் சொல்லாற் செய்தியுணர்ந்த இராமபிரான் உடனே பர்ணசாலையிற்சென்று ஆகுச சீதையைக்காணாது இறந்துபடுவது போன்ற பெருந்துன்ப மடைந்தன னென்க. 'இன்னலுழப்பதற்கேது வொன்றோ' என்றது, முன்வாக்கியத்தைச் சமர்த்தித்து நின்றதனால், தொடர்நிலைச்செய்யுட்துறியணியாம். "அடித்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்" என்றபடி மனத்தின் நினைப்பை முன்னே தெரிவிப்பது முகம்போல வேறில்லை யாதலால், 'முகத்தினாற் கருத்தை யோர்ந்த' என்றார்; (இங்கே 'கோசலதேசத்திலுள்ளவர் குறிப்பறி தலில் வல்லவர்' என்னும் பொருளுள்ள 'இங்கிதஜ்ஞாஸ்து கோஸலா:" என்ற வடநூல்மேற்கோள் அறியதக்கது: "குறிப்பினாலுணருங் கொள்கை யான" என்பா மேல் திருவடிதொழுத படலத்தும்) கருத்து - இராமபிரான் கட்டளையைக் கடந்து பிராட்டியின் விருப்பத்தினால் அப்பிராட்டியைத் தனியேவிட்டு வரலாயிற்றே என இலக்குமணன் கொண்ட கவலை. உற்றது - மான்குரலைச் செவியுறாது மயங்கிச் சீதை கடுஞ்சொற்கூறி வற்புறுத்தித் தன்னை யனுப்பியது. வண துறை எனப்பிரித்து, வளப்பமான இடத்தை யுடைய [வாஸயோகியமான] பர்ணசாலை யென்றலு மொன்று. ஈற்றடிக்கு- உயிர் உடையனா யிருக்கும ஒருவன் துன்பமனுபவிப்பதற்கு வேறொரு காரணமும் வேண்டுமோ? இவ்வொன்றே அமையும் எனப் பொதுப்பொரு ளர்கக் கூறலுமாம், இனி, இராமன் உன்னைக காணானெனபின்பும் இறவாது உயிர்த்துநின்றான்; துன்பமனுபவிப்பதறகு ஒருவழிதானோ? [பலவழிகள உள] ஆதலால், இராமபிரானுக்கு உயிர் நீங்கிறறில்லை என்றுமாம் பி - ம்:— [1]உழந்தான். (எசு)

எஎ. [1]தேண்டிநேர் கண்டேன் வாழி தீதில னெங்கோ னாகம்
பூண்டமெய் [2]யுயிரே போகப் பொய்யுயிர் [3]போல நின்ற
வாண்டகை நெஞ்சி னின்று மகன்றிலை யழிவுண் டாமோ
வீண்டுநீ யிருந்தா யாண் [4]டங் கெவ்வுயிர் விடுமி ராமன்.

(இ - ள்.) தேண்டி - (உன்னை நான்) தேடிவந்து, நேர் கண்டேன் - பிரதியக்ஷமாக (இங்கே எதிரிற்) காணப்பெற்றேன்; வாழி - வாழ்வா யாக: எம்கோன் - எமதுதலைவனாகிய இராமபிரான், தீது இலன் - ஒரு தீங்கையும் அடையாமலிருக்கிறான்; ஆகம் பூண்ட மெய் உயிரே போக - (தனது) உடம்பிற்பொருந்திய உண்மையான உயிரேயாகிய நீ நீங்கிப் போனதனால், பொய் உயிர் போல நின்ற - பொய்யாகியஉயிரையுடைய னைப்போல விருக்கிற, ஆண்தகை - ஆண்மைக்குணமுள்ள இராமபிரா ன்து, நெஞ்சில்நின்றும் - மனத்திலிருந்து, அகன்றிலை - (நீ ஒருபொழு-

தும்) நீங்கினையில்லை [அப்பிரான் உன்னையே எப்பொழுதும் கருதியிருக்கின்றான் என்றபடி]; (அப்படி நீ நீங்காது அவன்மனத்திலேயே தங்கியிருத்தலால்), அழிவு உண்டாமோ - (அவனுக்கு) அழிவு உளதாகுமோ? [உளதாகாது என்றபடி]; (அன்றியும்), நீ - (அவனுக்கு உயிர்போன்றுள்ள) நீ, ஈண்டு இருந்தாய் - இங்கே [இலங்கையில்] இருந்தாய்; (ஆதலால்), இராமன்—, அங்கு - அங்கே [வனத்தில்], யாண்டு - எவ்வாறு, எ உயிர் விடும் - எந்த உயிரை விடுவான்? (எ - று.)

இச்செய்யுள், வருந்துகிற சீதையைத் தேற்றவந்த இடைப்பிறவரல். வரையறைகடந்த மிக்கபேரழகையும் உத்தமகுணங்களெல்லாவற்றையுமுடைய பிராட்டிக்கு, அநுமான், தன்குரங்குக்கண்ணாற் கண்டமையாற் கணவனைச்சில்பட்டு ஏதேனும் தீங்குவிளையுமோ வென்று தன்மனத்தில் திடுக்கென்றுஉண்டான சங்கையால் அந்தத்திருஷ்டிதோஷம் உண்டாகாதிருக்க வேண்டு மென்று 'வாழி' எனவாழ்த்தினான். இங்ஙனம் உயர்ந்தோரைக் கீழோர் வாழ்த்துதல், பொங்கும் பரிவையுடைய பெரியபக்தர்களின் மரபு. மிகக விருப்பத்தின்மேலீட்டினால் அவசியமில்லாதவிடத்திலும் பயசங்கையுண்டாதல், இயல்பு. நீ இராமபிரானைவிட்டு இலங்கையில் தனித்திருந்த போதிலும அப்பிரான்மனத்தைவிட்டுச் சிறிதும் நீங்காததனால், அவன் உயிர் விட்டானில்லை: அன்றியும், உன்னைத்தவிர அவனுக்கு வேறு உயிரு மில்லையாதலால், உயிரான உன்னைத் தன்னிடம் உடையனாகப்பெறாத அப்பிரான் எவ்வாறு உயிர்விடுவது? என்றவாறு; உன்னிடத்து அப்பிரான் கொண்டுள்ள காதலே அவனுடையஉயிரைக காத்துநிற்கின்றதென்பது, கருத்து. இவ்வார்த்தைகளால், அநுமானது சொல்வன்மை நன்குவிளங்கும். இராமபிரான் சீதையைத் தனதுஉயிராகவே பாவித்திருந்தானென்பது இரண்டாமடியிற் பெறப்படும்; "ஆததோவா ஏஷஆத்மா, யதபதநீ [மனைவியென்பவள் புருஷனது பாதியுயிராவள்]" என்று உத்தமமான மனைவியைக் கணவனுக்கு உயிராகக் கூறியிருத்தலும் காண்க. தேண்டி - தேடி யென்பதன் விரிதல். பி - ம்:—[1]தேண்டினன். [2]உயிரோநீயே. [3]போயேகின்றான். [4]எங்கு.

எ௨. அந்நிலை யாய வண்ண லாண்டுநின் றன்னை நின்னைத்
துன்னிருங் கானும் யாறு மலைகளுந் தொடர்ந்து நாடி
யின்னுயி ரின்றி யேகு மியந்திரப் படிவ [1]மொப்பான்
றன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான்.

(இ - ள்.) அன்னை - தாயே! அந்நிலை ஆய - அப்படிப்பட்டதன்மையையுடையவனாகிய, அணணல் - இராமபிரான், ஆண்டுநின்று - அந்தப்பர்ணசாலையிலிருந்து, துன் இருங் கானும் - நெருங்கிய பெரியகாடுகளிலும், யாறும் - ஆறுகளிலும, மலைகளும் - மலைகளிலும், தொடர்ந்து - போய், நின்னை நாடி - உன்னைத் தேடிக்கொண்டு, இன்உயிர் இன்றி ஏகும் இயந்திரம் படிவம் ஒப்பான் - இனியஉயிரில்லாமலேசெலலுகின்ற யந்திரம்அமைத்த

பிரதிமையை யொத்து நடப்பவனாய், தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை-தனது உயிரைப் புகழ்பெறும் பொருட்டு ஒழித்த ஜடாயுவென்பவனை, வந்து சார்ந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று)

இராமபிரான் சீதையின்பிரிவினால் அறிவழிந்திருந்தமையால், அவனுக்கு, இன்னுயிரின்றியேகும் இயதிரப்படிவதைத ஒப்புமைகூறினார். இராவணன் சீதையைக்கவர்ந்து செல்கையில் அவனைத்தடுத்துத்தன்னாலியன்ற மட்டும போரசெய்து தம்மவரிடமுள்ள அன்பினால் அவர் பொருட்டு உயிர் விட்டவனாதலால், சடாயுவை, 'தன்னுயிர்புகழ்கு விற்றசடாயு' என்றார். இராமபிரான் சடாயுவிடம் சென்றுசோகையில் அவன் குற்றுயிருடையனாயினும் 'உயிரவிற்ற' என்று இறந்தகாலத்தாற் கூறினது, தெளிவினால். இனி, 'தன்னுயிரபுகழ்ககுவிற்ற' என்பதைசசடாயுவுக்கு இயற்கையடைமொழியாக் கொள்ளினுமாம். தன்னுயிர புகழ்க்கு விற்றல் - தனது உயிராகிய பொருளைக் கொடுத்துப் புகழாகிய பண்டதைக் கொள்ளுதல்; ஏகதேசவுருவகம். அன்னை - அணமைவிளி. இயந்திரம - யந்த்ரம. விற்ற, வில் - முதனிலை.

சடாயு - ஜடாயு; பலமயிரகள் சேர்ததுத் திரித்த சடைபோன்ற ஆயுளுடையவன் என்பதுபொருள்; மிக்க ஆயுளுடையவ னென்பது, கருத்து. இனி, இதற்கு - இறகில்உயிரையுடையவ னென்றும், சடையையுடையவ னென்றும் பொருள் கூறுவாறுமுளர் சூரியசாரதியான அருணனுடைய புத்திரனும், சம்பாதியினது தம்பியுமாகிய இவன், தசரதசககரவாத்திக்கு உயிரத்தோழனாயிருந்து பின்பு தசரத குமாராகளான ராமலக்ஷ்மணாகளைத் தணடகாரணியத்திற் கணடு அவர்களைத் தனதுபுத்திரா போலவே பாவிததுஅன்புபாராட்ட, அவாகளும் தசரதனிலும் வயசுமுதிர்ந்த இவனைத் தமது பெரியதந்தையாகப் பாவித்துவந்தன ராதலால், வைஷ்ணவசம்பிரதாயத்தில் 'பெரியவுடையார்' என்று இவனுக்கு ஒரு திருநாமம் வழங்கும். இவன் இராவணனோடு எதிர்த்துசசெய்த போரில அடிபட்டு இறகொடிந்து வீழ்ந்தவுடனே இறந்திடாமல் இராமலக்ஷ்மணர்க்குச செய்தியறிவித்தபின்னரே இறக்கக் கருதிச சிறிதுபொழுது அரிதின்உயிரதாங்கியிருந்தன னென அறிக பி - ம்:—[1]மெய்யான். (எஅ)

எகூ. வந்தவன் மேனி நோக்கி வானுயர் துயரின் வைகி
யெந்தைநீ யுற்ற [1]தன்மை யியம்பென விலங்கை வேந்தன்
சுந்தரி நின்னைச் செய்த வஞ்சனை சொல்லச் சொல்ல
வெந்தன வுலக மென்ன நிமிர்ந்தது சீற்ற வெந்தீ.

(இ - ள்.) சுந்தரி - கட்டழகுடையவளே! வந்து - (இராமபிரான் அங்கு) வந்து, அவன் மேனி நோககி - (இராவணனால் அடிபட்டுக் குற்றுயிருடன்கிடந்த) அநதச்சடாயுவினது உடமபைப் பார்த்து, வான் உயர் துயரின்வைகி - மிகவும்அதிகமான துக்கத்தில் அழுந்தி, 'எந்தை-

எமதுதந்தையே! நீ உற்ற தன்மை - நீ (இந்நிலைமையை) அடைந்தவகையை, இயம்பு - சொல்வாயாக,' என - என்றுவினவ, (அதற்குச்சடாயு), இலங்கை வேந்தன் நின்னை செய்த வஞ்சனை சொல்லசொல்ல - இலங்கைக்கு அரசனான இராவணன் உன்னை வஞ்சித்துக்கவர்ந்துசென்றதைச சொல்லும் பொழுதே, சீற்றம் வெம் தீ - கோபமாகிற கொடிய அக்கினி, உலகம வெந்தன என்ன - எல்லாவுலகங்களும் வெந்துபோனவையாகு மென்று (கண்டோர்) அஞ்சும்படி, நிமிர்ந்தது - (அப்பிராணுக்கு) மிகுதியாக உண்டாயிற்று.

சொல்லச் சொல்ல - அடுக்கு, தொடர்சசிப் பொருளது. வெந்தன - தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. கோபததைத தீயாக உருவப்படுத்தியது, மிக்ககொடுமைபற்றி. பி - ம்:—[1]என்னை. (எகூ)

அ0 சீறியிவ் வுலக மூன்றுந் [1]தீந்துகச் சினவா யம்பா
ஞாறுவெ னென்று கைவி னோக்கிய காலை [2]நோக்கி
யூறொரு சிறியோன் செய்ய முனிதியோ வுலகை யுள்ள
மாறுதி யென்று தாதை யாற்றலிற் சீற்ற மாறி.

(இ - ள்.) (இராபிரான்), சீறி - (இவ்வாறு) கோபித்து, 'இ உலகம் மூன்றும தீந்து உக - இந்தமூன்று உலகங்களும் கரிந்து நீறாய்ப்போம்படி, சினம் வாய் அமபால் - கோபங்கொண்ட முனையையுடைய அம்பினால், நூறு வென் - அழிப்பேன்,' என்று - என்றுசொல்லி, கைவில் நோக்கிய காலை - (தனது) கையிலுள்ள கோதண்டமென்ற வில்லைப் பார்ததபொழுது,— தாதை - தந்தைமுறைமையையுடைய அச் சடாயு, நோக்கி - (அதனைப்) பார்ததது, 'ஒரு சிறியோன் - அற்பனொருததன், ஊறு செய்ய - (உனக்குத) துன்பஞ்செய்ய, (அதற்காக), உலகை முனிதியோ - (யாதொருகுற்றமுஞ் செய்யாத) எல்லாவுலகங்களையும் கோபிததது அழிகக்கடவையோ? [கோபித்தல் தகுதியன்று என்றபடி]; (ஆகையால்), உள்ளம் ஆறுதி - மனநதணிவாயாக,' என்று - என்றுசொல்லி, ஆற்றலின் - சமாதானப்படுத்தினதனால், சீற்றம ஆறி - அககோபந் தணிந்து, (எ - று.)—'ஆறி' என்பது அடுத்தகவியில் 'என்ன' என்பதனொடு தொடர்ந்து முடியும்.

அம்பைவிடப்புகுகிற தனது கோபததை, அம்பின்மே லேற்றி, 'சினவாயம்பு' என்றான்; உபசாரவழக்கு: அன்றியும், அம்புசெல்லுமபோது கோபத்துடன் செல்வதுபோலத் தோன்றுதல் இயற்கையென்பதையுங் உணர்க. 'ஊறுஒருசிறியோன்செயய முனிதியோ' என்பதை, "ஒருவனிக கிடுக்கணசெய்ய, வென்றருமுலகை மாய்த்தல் விதியன்றால்" என்பதனோடு ஒப்பிடுக. சடாயு இராமபிரானைததேற்றியதை "வமபிழை கொஙகைவஞ்சி வனததிடைத தமியள் வைகக, கொமபிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீ, ரம்பிழை வரிவிற் செஙகையையன்மீ ராயுஙகாலை, யுமபிழையென்பதல்லா லுலகஞ்செய பிழையு முண்டோ" என்றுகூறுதல் முதலியவற்றால் உணர்க. ஓகாரம்-

தகுதியின்மை குறிக்கும் உலகு - சாதியொருமை. உள்ளம மாறுதி, சீற றம் மாறிஎனறும பிரிக்கலாம. பி - ம்.—[1]தீரந்துறச [2]எயதி. (அ0)

௮௧. எவவழி [1]யேகி யுற்றான் யாண்டையா [2]னுறையுள் யாது
செவ்வியோய கூறு கென்னச செபபுவா னுற்ற செவ்வி
வெவ்வியல் விதியின் கொட்பால் வீடினன் கழுகின வேந்த
[3]னெவவிய வரிவிற செங்கை யிருவரு மிடரின் வீழ்ந்தார்.

(இ - ள) 'செவ்வியோய் நனமைகுணமுடையவனே' (அவ்வரக்கன்), எ வழி ஏகி உற்றான - எவ்வழியாகப் போய்சசேர்ந்தான்? யாண்டை யான் - எவ்வுலகததி லுளளவன்? உறையுள் யாது - (அவனது) இருப்பிடம் எது? கூறுக - சொல்வாயாக', என்ன - எனறு (இராமபிரான் சடாயுவைநோககி) வினவ,—செப்புவான் உறற செவ்வி - (அதறகு உத்தரஞ்) சொலலத்தொடங் கியபொழுது, கழுகின் வேநதன - கழுகுகட்கு அரசனாகிய அசசடாயு [illegible] இயல் விதியின கோட்பால் - கொடுந்தனமையை யுடைய விதியின் வசத்தி னால், வீடினன் - (அவ்விவரங்களை முறறுமசொலலாமலே) உயிர் நீங்கினான; எவ்விய வரி வில் செம கை இருவரும - (அமபுகளை) ஏவுதற்கு உரிய கட்ட மைந்த வில்லை யேநதிய சிவந்ததிருககைகளையுடைய இராமலக்ஷ்மணரிரு வரும், இடரின வீழநதார் - துன்பததில அழுநதினார்கள;(எ - று)

"போய தவவரக்க னெனகே புகலெனப் புள்ளின்வேநத, னேய் வின னுணர்வுந்தேய வுரைததில னுயிருநதீரநதான்" எனபது, ஆரணிய காண டம். கூறுகென்ன - தொகுததல் விதி - ஊழ்வினை; வடசொல. விதியின கொட்பு - மரண மடையவேணடிய காலம. உவவிய - ஏவிய என்பது எது கைநயமநோககிக குறுககலும விரிததலும பெற்றது இனி, எவ்வம் என னும பகுதியி னடியாப பிறந்த எசசமாகக்கொணடு, (பகைவாக்குத) துன்பஞ் செய்கிற என்றுமாம, கை சிவநதிருததல், உததமபுருஷ லக்ஷணம. பி-ம் — [1]எயதிறறன்னான் [2]உறையுளாதி. [3]வெவவிய. (அக)

௮௨. அயர்த்தவ ரரிதிற றேறி யாண்டொழிற் றாதைக் காண்டுச்
செயத்தகு கடன்மை யாவுந் தேவரு மருளச் செய்தார்
கயத்தொழி லரககன றன்னை நாடிநாங காண்டு மெனனுப
புயற்றொடு குடிமிக குன்றுங் கானமுங் [1]கடந்து போனார்.

(இ - ள.) அயாததவர் - (இவ்வாறு) துன்பபபட்ட இராமலக்ஷ்ம ணரிருவரும, அரிதின் தேறி - அருமையாக (அததுன்பததினின்று) தெளிநது, ஆண தொழில தாதைககு - ஆணமைககுணமுள்ள செய கைகையுடைய தமககுத தந்தைமுறையான சடாயுவுககு, ஆண்டு (இறந்த) அபபொழுது [அவ்விடததில்], செய தகு கடன்மை யாவும - செய்யத்தக்க கடணமையாகிய சரமகிரியைகளெலலாவற்றையும், தேவ ரும மருள - தேவாகளும (கணடு) வியககுமபடி, செயதார் - செயது முடிததது, (பின்பு), 'கய தொழில் அரககன் தன்னை - இழிவாகிய தொழி

லையுடைய இராவணனை, நாம்—, நாடி காண்டும் - தேடிக்கண்டுபிடிப்போம்', என்னு - என்றுஎண்ணி, புயல் தொடு குடுமி குன்றும் - மேகமண்டலத்தை யளாவிய சிகரங்களையுடைய மலைகளையும், கானமும் - காடுகளையும், கடந்து போனார் - தாண்டிச்சென்றார்கள்; (எ - று)

சீதையைப்பிரிந்ததும், தந்தைமுறையிலுள்ள சடாயு தமக்காக இறந்ததும், இராவணன்செய்தி தெரிந்துகொள்ளமுடியாமற் போனதும் ஆகிய பொறுக்கவொண்ணாத மூவகைப்பெருந்துயரத்தினாற் பீடிக்கப்பட்டன ராதலின், அரிதின் தேறவேண்டுவதாயிற்று. செயத்தகுகடன்கள் - தகநஸம்ஸ்கரம் முதலியன. தேவாதிதேவனான இராமபிரானதுகையினாற் சரமகிரியை பெறும்படி இச்சடாயுவின்பாக்கியம் இருந்தபடி என்னே! என்று தேவர்களும் வியந்தனரென்க; இனி, சரமகிரியைகளின் சிறப்பினாலாகவுமாம்: அன்றி, ஒருகழுகுக்கு இவர் அந்திமக்கிரியை செய்வதன் காரணம் யாது என உணராது திகைத்தனரென்றலு மொன்று. பிறவியினால் மேலானவர்கள் அப்பிறவியினால் தாழ்ந்தவராயினும் விலட்சண பாகவதர்விஷயத்தில் புத்ரக்ருதயம் அநுஷ்டிக்கலா மென்ற விஷயம் இந்த ஸ்ரீராமனது செய்கையால் காட்டப்பட்டதெனப. பி - ம்:—[1]கடிது. (அஉ)

௨௩. அவ்வழி நின்னைக் காணா [1]தயர்த்தவ ரரிதிற் றேறிச்
செவ்வழி நயனஞ் செல்லு நெடுவழி சேறு செய்ய
வெவ்வழ லுற்ற மெல்லென் மெழுகென வழியு மெய்ய
னிவ்வழி யினைய பன்னி யறிவழிந் திரங்க லுற்றான்.

(இ - ள்.) அ வழி - அவ்விடங்களிலெல்லாம், நின்னை காணாது - உன்னைப்பார்க்கப்பெறாமல், அயாத்தவர் - வருந்தின அவ்விராமலக்ஷ்மணர், அரிதின் தேறி - அருமையாக அவ்வருத்தந் தெளிந்து,—செவ் வழிநயனம் - செம்மைமிகுந்த (தமது) திருக்கண்களால், செல்லும் நெடுவழி - (தாம்) போகின்ற பெரியவழியை, சேறு செய்ய - (அவற்றினின்று பெருகுகிற நீரைக்கொண்டு) சேறாகக்கொண்டிருக்க,—வெம அழல் உற்ற மெல் என் மெழுகு என அழியும மெய்யன் - வெப்பத்தையுடைய நெருப்பிற் போகட்ட மென்மைக்குணமுடைய மெழுக்குப் போலக் கரைகிற உடம்பையுடையனாகிய இராமபிரான், இ வழி - இவ்வாறு, இனைய பன்னி - இத்தன்மையான வார்த்தைகளைச் சொல்லி, அறிவு அழிந்து - அறிவுகலங்கி, இரங்கல் உற்றான் - சோகிக்கத்தொடங்கினான்; (எ - று.)—அவற்றை, மேல் நான்கு கவிகளிற் கூறுகின்றார்.

செவ் அழி நயனம் எனப் பிரித்து, செம்மை [பொலிவு] அழிந்த கண்களெனினுமாம். மெழுகு - அரக்கு. மெழுகுக்கு மென்மை - தீயிற்பட்டதும் இளகுந்தன்மை. உபமானத்தில் 'அழல்' என்பதற்கு ஏற்ப, சோகத்தை உபமேயமாகக் கொள்க. 'நயனமநெடுவழிசேறுசெய்ய' என்றது, துயரின் மிகுதியை விளக்கும். பி - ம்:—[1]அயருவான். (அங)

வேறு.

அச. கன்மத் தைஞாலத் தவர் [1]யாருள ரேக டப்பார்
பொன்மொய்த் ததோளான் மயல்கொண்டு புலன்கள் வேறாய்
நன்மத் தைநாகத் தயல்சூடிய நமப னேபோ
லுன்மத் தனானான் றனையொன்றுமு ணர்ந்தி லாதான்.

(இ - ள்.) ஞாலத்தவா - இந்நிலவுலகத்திலுள்ளவர்களுள், கன்மத்தை- ஊழ்வினைப்பயனை, கடப்பா - கடக்கவல்லவா, ஆர் உளர் - யாவர் இருக்கின்றனர்? [எவராலும் கடக்கமுடியாது என்றபடி]; பொன் மொய்த்த தோளான் - வீரலக்ஷ்மிதங்கிய திருததோள்களையுடைய இராமபிரான், மயல் கொண்டு - புத்திமயக்க மடைந்து, புலன்கள வேறு ஆய் - ஐம்பொறிகளும் தத்தம் நிலைமைமாறப்பெற்று, தனை ஒன்றும உணர்ந்திலாதான் - தன்னை(த் தான்) சிறிதும் உணராதவனாய் [பரவசப்பட்டு],—நல் மததை - நல்ல ஊமத் தம்பூவை, நாகத்து அயல் - (ஆபரணமாகத தலையிலணிந்த) பாம்புகளின பக்கததில், சூடிய - அணிந்த, நமபனே போல் - சிவபிரான் போல, உன்மத் தன் ஆனான் - பிததம்பிடித்தவனானான; (எ - று.)

இச்செய்யுள் - வேற்றுப்பொருள்வைப்பணி: இது, வடமொழியில் அர்ததாந்தரந்யாஸாலங்கார மெனப்படும்; முதலடியிற் கூறிய பொதுப் பொருளால் பின்னடிகளிற்கூறுஞ் சிறப்புப்பொருளைச சாதிததுள்ளமை காண்க. இவ்வணியொடு உவமையணியும திலதண்டுல நியாயததாற் சோந்து வந்தது, சேரீவையணியாம் இராமபிரான் பரமபொருளான கடவுளா யிருந்தும் இவ்வாறு சீதையின்பிரிவுக்கு வருந்தியது, தான் கொணடுள்ள மநுஷ்யபாவனையின் மிகுதியா லென்க. பொன்மொய்த்த தோளான்-அழகு நிறைந்ததோள்களையுடைய னென்றுமாம். இனி, பொனனுபரணங்களை யணிந்த தோள்களையுடையவ னெனினுமாம். 'மயலகொணடு புலன்கள் வேறாய்' என்ற தொடரை உபமானமாகிய நம்பனுக்கும் கூட்டுக. சிவபிரான் இங்ஙனமாயினமை, பிரமனதுசிரசைககொய்து அதுதன்கையிற்பற்ற வருந் திப்பிசசையெடுத்தபோது. மததை - ஊமத்தை; முதறகுறைவிகாரம, பூவி ற்கு, முதலாகுபெயர். ஊமததைக்கு நன்மை - சிவபிரானுற் சூடப்படும் பேறு பெற்றமை. நமபன் - (அடியாரகளால்) நம்பிசசரணமடையப்படுபவன்: இனி, நமககு இன்னா னென்னுமபொருள்பட வருவதோர் உயாச்சிசசொல் லாகவுமாம். 'தனையொன்று.முணாந்திலாதான்' என்பதற்கு - தானும் தன் தன்மையைச சிறிதும் அறியப்பெறாதவன் என்று உரைதது, தோளானுக்கு அடைமொழியாகவுங கொள்ளலாம்; "தனக்குந் தனதன்மையறிவரியானை" வன்றார் பெரியாரும்.

சிவபிரான் நாகஞ்சூடிய கதை:—தவச்செருக்கினால் தன்னை மதி யாத தாருகவனத்து முனிவர்களுடைய கருவததைச சிவபிரான் பங்கஞ் செய்ய, அங்ஙனம் மானபங்கப்பட்ட அமமுனிவர்கள் ஒருயாகம் செய்து

மந்திரபலத்தால் அவ்வோமததீயினின்று எழுந்த நாகங்களைச சிவன்மேலேவ, அவ்வாறே சீறிக கொல்லவந்த நாகங்களை அப்பிரான் வலியடகி ஆபரணங்களாக அணிந்தனன் என்பதாம. பி - ம்:—[1]ஆருளரே கடநதார்

அரு. போதாயின போதுன தண்புன லாடல் பொய்யோ
சீதா பவளக் கொடியன்னவட் டேடி யென்க
ணீதா தருகிற் றிலையே னெருப் பாதி யென்னுக்
கோதா வரியைச் சினங்கொண்டனன் கொண்ட லொப்பான.

(இ - ள்) 'போது ஆயினபோது - சூரியோதயமானபொழுது, பவளம் கொடி - பவழககொடிபோனற, சீதா - சீதை, உன தண புனல் ஆடல் - உனது குளிரநதநீரில் முழுகுவது, பொய்யோ - பொய்யாகுமோ? [மெயயே மாம]. (ஆதலால்), நீ—, அன்னவள தேடி - அசசீதையைத தேடி, என்கண் தா - என்னிடம் கொணாந்துகொடு; தருகிறறிலை ஏல் - (அநவனம) கொடாமற்போவாயானல், நெருபபு ஆதி - (எனது அமபினல்) நெருப்பாய் வெந்து விடுவாய்,' என்னு - என்று சொல்லி, கொண்டல ஒபபான் - காளமேகம் போன்ற இராமபிரான, கோதாவரியை - கோதாவரிநதியை நோக்கி, சினம் கொண்டனன் - கோபங்கொணடான்; (எ - று)

பஞ்சவடியி லிருந்தபொழுது நாடோறும் காலையில கோதாவரியில் சீதை நீராடுமவழகநததைக் கொணடிருநததனல், அந்நதிககுச சீதையின் நிலைமை தெரியுமென்று இராமபிரான் அதனை வினவுவானயினன். பிரிவுத் துயா மிகுதியால் வருந்துகினறவர்கள், பிரிந்தபொருளோடு சிறிதுசம்பந்தப் பட்ட பொருளகளை நோககி இரங்கிககூறுதல், மரபு ஸீதா - வடமொழி ஆவீறு ஐயாகாமல் நின்றது (அரு)

அசு. குன்றே கடி [1]தோடினை கோமளக் கொம்ப ரன்ன
வென்றே விபைக்காட்டுதி காட்டலை யென்னி னிவ்வம்
பொனறே யமையும் முனுடைக்குல முள்ள வெல்லா
மின்றே பிளவா வெரியாக் கரியாக்க வென்றான்.

(இ - ள்.) 'குன்றே - மலையே! கடிது ஓடினை - விரைவில் ஓடிவந்து, கோமளம கொமபர் அன்ன என் தேவியை காட்டுதி - அழகிய பூங்கொமபு போன்ற எனது மனைவியாகிய சீதையைக் காண்பிப்பாயாக: காட்டலை என்னின் - காணபியாமற்போவாயானல், உன் உடை குலம உளள எல்லாம்- உன்னுடைய இனங்களாகவுள்ள மலைகளெல்லாவற்றையும், இன்றே - இப்பொழுதே, பிளவா - பிளநது, எரியா - எரித்து, கரி ஆகக - கரியாகச செயவதறகு, இ அமபு ஒன்றே அமையும - (எனது) இநத அம்பு ஒன்றே போதும', எனறான - என்றுகூறினன், (இராமபிரான்); (எ - று)

இடமவிட்டுபபெயராத அசலமாகிய மலையை நோக்கி 'கடிதோடினை காட்டுதி' என்று இராமபிரான கூறினது, பிரிவுத்துயரினல் தோன்றிய

மதிமயக்கத்தா லர்கிய மிக்கமனத்தடுமாற்றத்தினு லென்க. கோமளம் - மென்மையுமாம். பி - ம்:—[1]ஓடியென்னுருயிர்க்கொம்பினன்ன. (அசு)

௨௭. பொன்மா [1]னுருவாற் சிலமாயை புணர்க்க வன்றோ
வென்மா னகல்வுற்றன ளிப்பொழு [2]தென்க ணென்னு
நன்மான்களை நோக்கிநுந் நாமமு மாய்ப்பெ [3]னின்றே
வின்மாண் [4]கொலைவாளியி னென்று வெகுண்டு நின்றான்.

(இ - ள்.) (மாரீசனென்பவன்), பொன் மான் உருவால் - பொன்மய மான் மானின் வடிவதனைக் கொண்டு, சில மாயை - சில வஞ்சனைகளை, புணர்க்க அன்றோ - செய்ததனு லல்லவோ, என் மான் - எனது மான் போன்ற மனைவி, இப்பொழுது,— என்கண் அகல்வுற்றனள் - என்னிடத்தினின்று பிரிந்து நீங்கினுள்,' என்னு - என்று எண்ணி; நல் மான்களை நோக்கி - (காட்டிலுள்ள) அழகிய மான்களைப் பார்த்து, 'இன்றே - இப்பொழுதே, வில் மான் கொலை வாளியின் - வில்லினுல் எய்யப்படுகிற மாட்சிமையையுடைய கொல்லுதல் தொழிலில்வல்ல (எனது) அம்பினுல், நும் நாமமும் - உங்கள்பெயரையும், மாய்ப்பென் - (உலகததில் இல்லையாம்படி நான்) ஒழிப்பேன்', என்று - என்றுசொல்லி, வெகுண்டு நின்றான் - (அவற்றின்மீது) கோபித்துநின்றனன், (இராமபிரான்) ; (எ - று.)

மாரீசன் தான் மாயமாக மான்வடிவுகொண்டு வந்து சீதையின்பிரிவுக்குக் காரணமாய் நின்றதனுல் மானினங்களின்மீதெல்லாம் இராமபிரானுக்குப் பெருஞ் சினமுண்டாயிற்று. இச்செய்யுள், அகமலர்ச்சியணியின் பாற்படும். இதன் இலக்கணம், ஒன்றனது குற்றநற்றங்களால் மற்றொன்றதனு அவை உளவாகச் சொல்லுதல். இங்கே மாயமானவடிவங்கொண்ட மாரீசனது குற்றத்தினுல் எல்லா மான்களின்மீதும் அக்குற்றத்தை ஏற்றிக் கூறியமை காண்க. மான்-உவமையாகுபெயர்; மருண்ட பார்வையில் உவமம். 'நல்மான்கள்' என்றது, அவற்றின் குற்றமற்ற தன்மையை விளக்கிற் றென்னலாம். பிராட்டியால் வளர்க்கப்பட்டுத் தனக்கு இதமாயிருந்த மான்களையும் வெகுண்டானென்பார் 'நன்மான்களை' என்று ரென்றுங் கொள்ளலாம். மாய்ப்பென்-கருவற அடியோடு அழிப்பேன் என்றபடி. பி - ம்:—[1]உருவாய். [2]ஈதிர். [3]என்றே. [4]குலவாளி. (அஎ)

௨௮. வேறுற்ற மனத்தவ [1]னின்னதொர் விம்ம லோவ
வாறுற்ற நெஞ்சிற் றனதாருயி ராய தம்பி
கூறுற்ற சொல்[2]லென் றுளகோதறு நன்ம ருந்தாற்
றேறுற் றுயிர்பெற்றியல் புஞ்சில [3]சொல்ல லுற்றான்.

(இ - ள்.) (இராமபிரான்), வேறு உற்ற மனததவன் - வேறுபட்ட மனத்தையுடையவனுய் [மனததின் இயற்கைநிலை மாறி], இன்னது ஓர் விம்மல் நோவ - இப்படிப்பட்டதொரு துன்பத்தினுல் வருந்த, (பின்பு), ஆறுற்ற நெஞ்சின் தனது ஆர் உயிர் ஆய தம்பி கூறுற்ற சொல் என்று

உள கோது அறு நல மருந்தால் - தணிந்த மனத்தையுடைய தனது அரிய உயிர்போன்ற தமபியாகிய லக்ஷ்மணன் சொனன வார்த்தையென்றுள்ள குற்றமில்லாத நல்ல மருந்தினால், தேறுற்று - தெளிவடைந்து, உயிர் பெறற - உயிர் பெறறபின் நடநத, சில இயல்பும் - சிலதன்மைகளையும, சொல்லல் உறறான் - சொல்லத தொடநகினன், (அநுமான்) ; (எ - று.)

இசசெய்யுள், அநுமானதுவாததையில் இடைப்பிறவரலாகவநத கவிக் கூற்று. சொல்லெனறுள - சொல்லாகிய என்றபடி. இராமபிரானது மநோவியாதியை நீகினமையின, இலககுமணனது சொல்லை 'நன்மருந்து' என்றது. கீழ இராமபிரான் உயிரநீங்குமபடியான துன்பத்தை யடைந் தமைதோன்ற, இஙகு, 'உயிரபெற்ற' எனறார் ஆறு உறற நெஞ்சின் - சன் மார்ககததிற பொருநதிய மனததையுடைய என்றுமாம். பெற்றியல்பு - விகாரம். பி - ம் — [1]இன்னவிளமபிநோவ [2]ஒனது [3]சொல்லலுற்றேன் ()

அகூ. வந்தா னிளையானொடு வானுபர் தேரின் வைகு
நந்தா விளக்கின்வரு மெங்குல நாதன் வாழுஞ்
சந்தார் தடஙகுன்றினிற றன்னுயிரக் காத லோனுஞ்
செந்தா மரைககண்ணனு நட்டனர் தேவ ருய்ய.

(இ - ள்) வான் - ஆகாயத்தில், உயர் தேரின் - சிறந்த தேரிலே, வைகும் - செல்லுகின்ற, நநதா விளககின் - கெடாதசுடராகிய சூரியனிடததி னின்றும், வரும் - தோன்றின, எம குலம நாதன் - எஙகளகுலததுககுத் தலைவனுகிய சுகரீவன, வாழும் - வாழ்கிற, சந்து ஆரதட குன்றினில - சந்தனமரஙகள நிறைந்துளள பெரிய (ருசியமூக) பருவததில், இளையா னொடு வந்தான் - (இராமபிரான்) இலககுமணனுடனே (சீதையைத தேடிக கொணடு) வநதுசேர்நதான்; (அஙகு), செம தாமரை கணணனும - செந தாமரைமலாபோனற திருககணகளையுடைய அவ்விராமபிரானும, தன் உயிர் காதலோனும் - அவனது பிராணசிநேகிதனுகிய சுகரீவனும், தேவர் உய்ய - தேவர்கள் துன்பமநீங்கும்படி, நட்டனர் - சிநேகித்தாரகள; (எ - று.)

சூரியனது தோககு உயாவு - ஒறறைசசகரமுடையதாதலும், ஓய்வில் லாமல் அநதரத்தில் திரிநதுகொணடிருந்தும சிறிதும கெடாததாதலும் முதலியன. சந்து - சநதநமென்ற வடசொல்லின சிதைவு, 'தன்னுயிரக காதலோன' என்றது, சிநேகிததது முதல் உள்ள நிலைமையைக கருதி. இனி, தடஙகுன்றினில் தனனுயிரககாதலோன்' என்பதறகு - (வாலியின் வலிமைகு அஞ்சி அவன்வரகூ டாததாகிய) ருசியமூக பருவததில் தஙகித் தன் உயிா அழியாதபடி காககவிருமபியவன் எனறும பொருளகூறலாம்; (ருசியமூகபருவததில் வாலிவந்தால் உயிரிழககும்படி மதஙகமுனிவா சாப மிட்டுளளன ரென அறிக.) இராம சுகரீவரது சிநேகம், தேவர்கபு பகை

வாகளாகிய இராவணுதி ராக்ஷசர்களது சங்காரத்துக்குப் பிரதானகாரண மாதலால், 'தேவருய்ய நட்டனா' என்றார். (அகூ)

கூ0. உண்டாயது முற்றது முற்று முணர்த்தி யுள்ளம்
புண்டா னெனநோயுற விம்மிறு கின்ற போழ்தி
னெண்டா [1]னிழந்திட்டன னேந்திழை யாங்கள் காட்டக்
கண்டா னுயர்வேதமும் போதமுங் காண்கி லாதான்.

(இ - ள்.) உயர்வேதமும் - சிறந்தவேதங்களாலும், போதமும் - ஞானத்தாலும், காண்கிலாதான் - அறியக்கூடாத தன்மையையுடைய இராமபிரான்,—உண்டாயதும் - (தனக்கு) நேர்ந்ததுன்பத்தையும், உற்றதும் - (அத்துன்பம்நீங்கும்பொருட்டுத் தான் அங்கு) வந்ததையும், முற்றும் உணர்த்தி - முழுவதும் சொல்லி,—உள்ளம் - மனம், புண்தான் என் - புண்பட்டதேயென்னும்படி, நோய் உற - மநோவியாதி மிக, விம்முறுகின்ற போழ்தின் - சோகிக்கிறபொழுதில்,—ஏந்து இழை - (நீ) தரித்த ஆபரணங்களை, யாங்கள் - நாங்கள், காட்ட - எடுத்துக்காணபிக்க, கண்டான்-பார்த்து, எண் இழந்திட்டனன் - அறிவை யிழந்தான் [மூர்ச்சித்தான் என்றபடி].

உண்டாயது - சீதாவிரகம். சீதையின் ஆபரணங்களை அநுமான் சுக்கிரீவனுடன் இருந்து எடுத்துக்காட்டினதனால், 'யாங்கள்காட்ட' என்றான். இவ்விஷயத்தை அநுமான் மீணடும் கூறினது, கதைத்தொடர்ச்சியறியென்க. வேதமும் போதமும் காண்கிலாதான் என்பதற்கு - சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையையுடையவ னென்பதுகருத்து. பி - ம்:— [1]உழந்திட்டன. (கூ0)

கூக. தணிகின்ற நஞ்சொற் றொடர் தன்மையத் தன்மை தன்னைத்
துணிகொண் டிலங்குஞ்சுடர் வேலவன் றூய நினக
ணணிகண் டுழியே யமுதந் தெளித்தாலு மாறாப்
பிணி [1]கொண்டது பண்டதுண் டாயினும் [2]பேர்ப்பதன்றால்.

(இ - ள்.) தணிகின்ற - (இராமபிரானதுமூர்ச்சையைத் தணிததற்காகக்கூறிய, நம் சொல் - எங்களுடைய சொறகள், தொடர் தன்மை - (அப்பிரானது செவியிற்) செல்வதனால், அ தன்மைதன்னை துணிகொண்டு - அவ்வறிவிழந்த தன்மை நீங்கி, இலங்கும் - (உயிர்பெற்று) விளங்கும், சுடர் வேலவன் - ஒளியையுடைய வேறபடையையுடைய இராமபிரான், தூய நின்கண் அணி கண்டுழியே - தூய்மையையுடைய உன்னிடததில் இருந்தனவாகிய [உனது] ஆபரணங்களைப பார்ததபொழுதே,—அமுதம தெளித்தாலும் ஆறு - (சாவாமருந்தாகிய) அமிருததை (உடம்பின்மீது) தெளித்தாலும் தணியாத, பிணி - பெருநோய், கொண்டது - (அவனை) அடைந்தது: அது பண்டு உண்டு ஆயினும் - அப்பிணி முன்னமேதொடங்கி உள்ளதானாலும், பேர்ப்பது அன்று - நீக்கத்தக்கதொன்றன்று; (எ - று.)

உன்னைப்பிரிந்தநாள் முதல் இராமபிரானுக்கு உண்டான துன்பநோய் நீ கழற்றியெறிந்துவிட்டுப்போன ஆபரணங்களைக் கண்டபின் அமிருதந் தெளித்தாலும் ஆறுதபடி முதிர்ந்து மூர்ச்சையையும உண்டாக்கிவிட்டது; பின்பு நாங்கள் எத்தனையோ சமாதானவார்த்தைகள் சொன்னபோதிலும் அவற்றால் அப்பிரானது மூர்சசைநோய்மாத்திரம் ஒருவாறு நீங்கிற்றேயல்லாமல் நெடுநாளாயுள்ள மனப்பிணி தீர்ந்தபடியில்லை யென்பது கருத்து. தணிகின்ற - தணிக்கின்ற; பிறவினைப்பொருளில்வந்த தன்வினை: இனி, தாழ்ந்து சொல்லுகின்ற என்றுமாம. சுகரீவன் முதலியோரையுங கூட்டி உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாக 'நம்சொல்' என்றான். அததன்மை - கீழ்ககவியிற் கூறிய 'எண்டானிழந்திட்டதன்மை.' துணி கொண்டு-துணித்தலைக்கொண்டு. துணித்தல் - ஒழித்தல். இங்கே, வேல்என்றது, ஆயுதமாததிரமாய நின்றது. பி - ம்.—[1]கண்டது. [2]பொய்ப்பன். (கக)

கூஉ. அயர்வுற் றரிதிற் றெளிந்தம் மலைக்கப் புறற்றோ
ருயர்பொற் கிரியுற்றனன் வாலியென் றோங்க லொப்பான்
[1]றுயருற்ற விராவணன் வாலிடைப் பண்டு தூங்க
மயர்வுற்ற பொருப்பொடு மால்கட லாவி வந்தான்.

இதுவும, மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அயாவு உற்று - (இராமபிரான் அவ்வாறாயுள்ள மனப்பிணியினால்) சோர்வடைந்து, அரிதின் தெளிந்து (பின்) - அருமையாகததேறி,—அம் மலைக்கு அப் புறத்து ஓர் உயா பொன் கிரி உற்றுஉளன் - அந்த ருசிய மூக பருவததுக்கு அப்பாலுள்ளதோ உயர்ந்த அழகிய (கிஷ்கிந்தமென்னும்) மலையிற் பொருந்தியுள்ளவனும்,—வாலி என்று - வாலியென்று பெயர் சொல்லப்பட்டு, ஓங்கல் ஒப்பான் - மலையையொததிருப்பவனும்,—துயர் உற்ற இராவணன் வாலிடை பணடு தூங்க - (நீ) துன்பமுறுதற்குக் காரணமான இராவணன் (தனது) வாலிலே முன்னொருகாலத்தில் (கட்டுப்பட்டுத்) தொங்கும்படி, மயர்வு உற்ற பொருப்பொடு மால் கடல் தாவி வந்தான் - (கண்டவா) மயக்கமடைவதற்குககாரணமான மலைகளையும் பெரிய கடல்களையும் (தன் வழக்கபபடியே) தாணடிவந்தவனும, (எ - று.)—'ஆயானை' என மேற் கவியோடு இயையும்.

தெளிந்து என்னும் வினையெசசம், மேற்கவியில் 'உயிர்வாங்கி' என்பதைக் கொண்டுமுடியும். பொற் கிரி - பொன்னையுடைய மலை யென்றுமாம். 'உற்ற' என்னும் பெயரெச்சம் - இரணடிடத்தும், காரியப் பொருளது. இனி, துயருற்ற இராவணன் என்பதற்கு - (தனது எண்ணம நிறைவேறாது தான் வாலியினிடத்து அகப்பட்டுக்கொணடமையால) துன்பததையடைந்த என்றும் கொள்ளலாம். பணடு அ இராவணன் துயருற்று வாலிடைத தூங்க என்றுமாம். 'மயர்வுற்ற பொருப்பு' என்பது - மலையின் உயர்சசியை விளக்கிற்று. பி - ம்:—[1]துயர்வுற்ற, ()

கூங. ஆயானையொ ரம்பினி லாருயிர் வாங்கி யன்பிற்
றூயான் வயினவ்வர சீந்தவன் சுற்று சேனை
மேயான் [1]வருவானென விட்டனன் மேவு காறு
மேயா னிருந்தா னிடைதிங்க [2]ளிரண்டி ரண்டும்.

(இ - ள்.) ஆயானை - ஆகிய அவனை, (இராமபிரான்),—ஓர் அம்பினில் - ஒருபாணத்தினால், ஆர் உயிர் வாங்கி - அருமையான உயிரைக் கவர்ந்து [கொன்றுவிட்டு],—அன்பின் தூயான்வயின் - (தன்னிடத்தில்) அன்புகொண்டுள்ள பரிசுத்தகுணமுடைய சுக்கிரீவன்பக்கல், அ அரசு - அந்த (வாலியினது) இராசசியத்தை, ஈந்து - கொடுத்து,—'அவன் - அச்சுக்கிரீவன், சுற்று சேனை மேயான் - சூழ்ந்த சேனைகளோடு கூடியவனாய், வருவான் - (மழைக்காலம் கழிந்தபின் ஜானகியைத் தேடும்பொருட்டு) வரக்கடவானாக,' என - என்றுசொல்லி, விட்டனன் - (அச்சுக்கிரீவனை) அனுப்பிவிட்டு, மேவுகாறும் - (அவன்) வருமளவும், திங்கள் இரண்டு இரண்டும் - நான்குமாதகாலம், இடை - அவ்விடத்தில், ஏயான் இருந்தான் - பொருந்தியிருந்தான்; (எ - று.)

'திங்கள் இரண்டிரண்டும்' என்றது, 'மேவுகாறும்' என்பதன் விவரணம். அமாவாசைக்கு அமாவாசை ஒருமாசமெனக்கொண்டு சந்திரசம்பந்தத்தாற் காலவரையறைசெய்கிற சாந்திரமான பக்ஷரீதியாய் 'திங்கள்' என்று மாசத்துக்கு ஒருபெயர். பி - ம்:—[1]வருவாய். [2]இரண்டுமூன்று. (கூங)

கூச. பிற்கூ டியசே னைபெருந் [1]திசை பின்ன வாக
விற்கூ டுறுதற் றிரு [2]நின்னிடை மேவ வேவித்
தெற்கூ டுருவக் கடிதேவினன் [3]சேர்ந்த தென்ன
முற்கூ டியகூ றினன் காலமொர் மூன்றும் வல்லான்.

(இ-ள்.) வில் கூடும் நுதல் திரு-வில்லையொத்த நெற்றியையுடைய இலக்குமியின் அம்சமானவளே! பின்-(அந்நான்குமாசகாலத்தின்) பின்பு, கூடிய - (சுக்கிரீவன்கட்டளையால் வந்து) சேர்ந்த, சேனை - சேனைகளை, பெருந்திசை பின்ன ஆக நின்னிடை மேவ - பெரியதிக்குகள் (தமக்குப்) பின்னுள்ளனவாம்படி [நான்கு திக்குகளுக்கு அப்பாலும செல்லும்படி] நீ இருக்குமிடத்தைதேடிச்சென்று அடையுமாறு, ஏவி அனுப்பிவிட்டு, தெற்கு ஊடுருவ - தெற்குத்திக்கிற் செல்லும்படி, கடிது ஏவினன் - விரைவாக (என்னை இராமபிரான்) அனுப்பினான்; சேர்ந்தது - (இது நான் இவ்விடம்வந்து) சேர்ந்த வரலாறாகும், என்ன - என்று, முன் கூடிய - முன்னே நடந்த வரலாறுகளையெல்லாம், கூறினன் - சொல்லி முடித்தான்; (யாவனெனின்,—) காலம் ஓர்மூன்றும் வல்லான் - மூன்று காலத்து வரலாறுகளையும் அறியவல்ல அநுமான்; (எ - று.)

பெருந்திசை பின்னவாக - திக்குக்களின் எல்லையைக்கடந்து என்றப்படி. கூடும் - உவமவுருபு. நுதல் - புருவமுமாம். இனி, வில் என்பதை உவமையாகு பெயராக்கொண்டு, விற்கள்போன்ற புருவங்கள்

பொருந்திய நெற்றி யென்றுமாம் 'திரு' என்றசொல் அணைமைவிளியாதலின், இயல்பாய் நின்றது. கால மொரு மூன்றும் வல்லான் - முககாலவரலாறுகளையும் உணரவல்லவன்; திரிகாலஞானி காலம்-இங்கு ஆகுபெயராய, காலத்து நிகழும வரலாறுகளை உணர்த்தி நின்றது பி - ம்:—[1]கிகையனனவாக. [2]நினனடி. [3]என்னையென்ஞ. (கூச)

வேறு.

கூரு.—இராமபிரானது வருத்தத்தை நினைந்து சீதை துயருறுதல்.

அன்பின னிவவுரை யுணர்த்த வாரியன்
வன்பொறை நெஞ்சினன் வருத்த முன்னுவா
ளென்புற வுருகின ளிரங்கி யேங்கின
டுன்பமு முவகையுஞ் சுமந்த வுள்ளத்தாள்

(இ - ள்) அன்பினன் - அன்புள்ளவனாகிய அநுமான், இ உரை உணரதத - இவ்வார்த்தைகளைச சொல்ல,—ஆரியன்-உயர்குலத்தில் தோன்றியவனும், வல பொறை நெஞ்சினன் - மிகக பொறுமையைககொண்ட மனததையுடையவனு மாகிய இராமபிரானது, வருததம் - வருத்ததை, உன்னுவாள் - நினைத்து (சீதை), துன்பமும உவகையும் சுமந்த உள்ளதாள - துயரததையும மகிழ்சசியையும மிகுதியாகத தாஙகிய மனத்தையுடையவளாய, என்பு உற உருகினள - எலும்பு மிகக்கரைந்து, இரஙகி - மனமிரஙகி, ஏஙகினள - ஏககமுற்ருள; (எ - று.)

இராமபிரானது வருததததை அநுமான சொல்லக் கேட்டதனால சீதை அப்பிரானது துயாககாக மனவருததததையும, தனது பிரிவையரற்ருமல் இராமபிரான வருநதுகின்ரு னென்பதை உணரநதமையால் இனி அவன் விரைவில்வநது அடைவா னென மகிழ்சசியையும் ஒருஙகே மிகுதியாக அடைநதன ளென்க அன்பு - ஸ்ரீராமபகதி. 'வன்பொறை நெஞ்சினன வருததம்' என்ற தொடரில, இஙஙனம் பொறுமைககுணமுடைய இராமபிரானுககு இவ்வளவு பெருந்துயரம நேரவது தகாது எனபது தொனிககும.

கூசு.—கடல்கடந்ததைப்பற்றிச் சீதை அநுமானை வினவுதல்.

நையுறு சிந்தைய ணயன வாரியின்
றெய்யல் வெஞ் சுழியிடைச [1]சுழிக்கு மேனிய
னையநீ யளபபரு மளக்கா நீந்தினை
யெயதிய தெப்பரி சியம்பு வாயென்ருள்.

(இ - ள்.) (சீதை),—நையுறு சிநதையள - உருகுகிற மனத்தையுடையவளும, நயனம வாரியின் தொயயல வெம சுழியிடை சுழிககும மேனியன் - கண்ணீர்ப்பெருககினாலாகிய சேற்றிலுண்டான பயஙகரமான நீர்சசுழியிற் சுழல்கிற உடமபை யுடையவளுமாகி, (அநுமானை நோககி) 'ஐய - ஐயனே! நீ—, அளப்பு அரும அளககா நீநதினை - அளவிடுவதறகு அரிய கடலைக கடந்து, எய்தியது - இஙகே வநதது, எப்பரிசு - எவ்வாறு? இயம்புவாய - சொலவாயாக', எனருள - என்று வினவினாள; (எ - று.)

கணணீரபெருககினுற் சீதையிருநதவிடமெலலாம சேறுபடடு நீரசசுழியுடைாயிற் றென்பதை முனனிரணடடியிற கூறினா. தொயயல - சேறு. கணணீா, சோகத்தினுலும உவகையினுலும உணடானது. பி-ம்.[1]—சுரிககும

கூஎ.—அதற்கு அநுமானது விடை.

சுருங்கிடை [1]யுன்னொரு துணைவன் றூயதா
ளொருங்குடை யுணர்வினு [2]ரோய்வின் மாயையின்
பெருங்கடல கடந்தனர் பெயரும [3]பெற்றிபோற்
கருங்கடல் கடந்தனென் காலி னுலென்றான்.

(இ - ள்.) (அதற்கு அநுமான்), 'சுருநகு இடை-நுட்பமான இடையையுடையவளே! உன ஒரு துணைவன் - உனது ஒபபறற நாயகனுகிய இராமபிரானது, தூய தாள் - தூயமையையுடைய திருவடிகளை, ஒருநகு உடை உணர்வினா - தியானித்தலையுடைய அறிவினராகிய ஞானிகள, ஓய்வு இல மாயையின பெருங கடல் கடநதனா பெயரும பெறறிபோல்-ஒழிதலிலலாத மாயையாகிய பெரியகடலைத தாணடிசசெல்லுந தனமைபோல, காலினுல் - (எனது) கால்களால, கருங கடல் - கரிய இககடலை, கடந்தனென - (எளிதில்) தாண்டி வநதேன,' எனறான - என்று (விடை) கூறினன; (எ - று)

ஆனுல் மனம மாயைககு வசபபட்டபோது பொருளகளின் நிலைமையை ஒன்னபடி யறியுந தத்துவஞானம தோன்றுகின்றதிலலை; ஆகவே, நிலையுளள பொருள்களை நிலையில்லாதன வெனறும, நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளனவெனறும மாறுபட அறியும் விபரீதஞானம தலையெடுககும அதனுலேயே நித்தியமான ஆததுமாவுக்கு யாதொருசமபந்தமுமபடாமல் அநிததியமான தேகததையேபற்றிய தாயமுதலியோரிடததுச சுற்றததவரெனற பொய்யபிமானம் உண்டாய நிலைநிறகும; இவ்வகையான மாயையைக கடததல் எமபெருமானது திருவடியைநமபிச சரணமடைபவாகளே இயலும; "மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபதயநதே மாயாமேதாம தரநதிதே [எனது மாயை கடத்தற்கு அரியது; என்னையே யாவா சரணமாக அடைகினறார்களோ, அவாகளே இமமாயையைககடககின்றாகள]" என ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் அருளிசசெய்துள்ளமை காணக. கடத்தறகருமைபறறி, மாயையைக் கடலாக உருவகப்படுத்தினுர். உவமையணி இராமபிரானது திருவடிபலததினுலேயே யான் கடலைககடந்தே னென்பது கருத்து. ஒருநகு உடை என்பது - ஒருசேரகொணடுளள எனறும பொருளபடும முதல்மூன்றடிகளில் "பிறவிப்பெருநகடல் நீந்துவா நீநதா, நிலைறவனடி சேராதாா" என்ற திருககுறளின் கருத்து அமைநதிருத்தல்காணக சுருநகிடை-வினைத் தொகுதியன்மொழி; இடை சுருநகியிருததல், உததமவிலககணம, தாளுககுத் தூயமை - தீத்துணைபபாவமுடையராயினும் தமமை யடைந்தாரைப் பிறவிக்

கடலினின்று கடத்துவிததல். ஒருவகுதல்-சேர்தல்; இங்கே, இடைவிடாது நினைததல்: பி-ம்:—[1]நினனுயிர்த் பொய்யினமாயையிற். [2]பெறறியாள்.(கூஎ)

கூஅ.—இச்சிறியவடிவத்துடன் நீ கடலைக்கடந்தது எவ்வாறு'? எனச் சீதை மீண்டும் அநுமானை வினவுதல்.

இத்துணைச் சிறிபதோ ரெணணில் யாக்கையை
தத்தினை கடலது தவத்தி னுயதோ
சித்தியி னியன்றதோ செபபு வாயென்றுன்
முததினு நிலவினு முறுவன முற்றினுள்.

(இ - ள்.) முததினும - முகததைககாட்டிலும், நிலவினும் - சந்திர காந்தியைககாட்டிலும, முறுவல் முறறினுள - பறகளினொளி மிகுந்துள்ளவளான பிராட்டி, (அநுமானைநோககி), 'இ துணை சிறியது ஓர் எண இல் யாககையை - இவ்வளவுசிறியதாகிய (பிறரால்) மதிககப்படாத உடம்பை யுடைய நீ, கடல் ததினை - சமுததிரததைத தாணடிவந்தாய: அது - அச செயகை, தவததின் ஆயதோ-(நீ செயதுளள) தபோபலததினு லாகியதோ? சிததியின் இயன்றதோ - (அன்றி) மந்திரசிததியின் வல்லமையா லமைந்ததோ? செபபுவாய் - (இதன்உணமையை எனககுச) சொல்வாயாக', என்றுள - என்றுவினவினுள; (எ - று)

யாக்கையை - முன்னிலையொருமைக குறிப்பு வினையாலணையும் பெயா; ஐ - முன்னிலைவிகுதி. சித்தி - ஸிததீ; அணிமா முதலிய அஷ்டமகாசித்திகள்; (அவையாவன: அணிமா, மகிமா, கரிமா, லகிமா, ப்ராபதி, ப்ராகாமயம், ஈசதவம, வசிதவம என்பன) (கூஅ)

கூகூ —அநுமான் பேருருவங்கொள்ளுதல்.

சுட்டினனின்றனன றொழுத கையினன
விட்டுயா தோளினன் விசுமபின் மேக்குய
ரெடடரு நெடுமுக டெயதி [1]நீளுமேன
முட்டுமென் றுருவொடு [2]வளைநத மூர்ததியான்.

(இ - ள) (அநுமான்), தொழுத கையினன் - கூப்பிய கைகளையுடையவனும, விட்டு உயா தோளினன - வெளிபபட்டு உயாந்துளள தோளகளையுடையவனும், விசுமபின - ஆகாயததினது, மேககு உயர் - மேலேஉயாந்த, எடடு அரு நெடு முகடு-(பிறரால்) எட்டுதறகு அருமையான நீண்ட உசசியை, எயதி - அடைநது, நீளும ஏல முடடும என்று உருவொடு வளைந்த-பினனும நீணடுசென்றால் தலையில் தாககு மென்று எணணி (அதனுலாகிய) அசசததோடு வணஙகின, மூர்த்தியான் - வடிவததையுடையவனுமாய், சுட்டினன் நின்றனன் - (தன் பேருருவததைப் பிராடடிககுப) பிரததியக்ஷமாகக காட்டி நின்றான்; (எ - று.)

அநுமான் தான எணணியபடியெல்லாம உருவமெடுக்கவல்ல தன்மையுடையானெனபதை "பிறியாவறததி னனுமான் வளாசசி பெரு மேருவிற பெரியனுனு, சிறிதாயொடுகுமெனின மேனி யறபவணுவானதிற சிறியனு,

முறுகாரணத்தி னளவா முருகொ ளுபாவீரன்'' என்ற ஒட்டக்கூத்தருக்தர காணடசசெய்யுளாலும அறியலாம. பிராட்டியினிடத்து வணகக்தைக் காட்டுமாறு அநுமான் வணகின உருவமுடையனு யிருநதமையை, நிமிாநது நினருல் ஆகாயத்தின் மேல்முகடுமுட்டு மென்று அதற்கு அஞ்சி வணகின தாகக குறித்தார்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி; இதில தற்குறிபபேறறதின் உருபு தொககுநின்றது உரு - அசசமுணாததும உரிசசொல்; ''உரு உட் காகும'' என்பது, தொல்காபபியம அநுமான் சீதையினிடத்து 'நான உன்னையெடுத்துககொணடு கடல்கடநதுசென்று இராமபிரானிடம சோ வேன: அநுமதிகொடு' என்றுகூற அபபிராட்டி 'இத்துணைசசிறிய உருவத்தை யுடைய நீ எங்ஙனம என்னைககொணடு கடல்கடபபாய்?' எனறு வினவ, உடனே அநுமான் தனது பேருருவத்தைக காட்டினனென முதனூலிற கூறியுளளது பி - ம்.—[1]மீளுமேல் [2]விளைந்த. (கக)

கoo.—இதுமுதல் ஆறுகவிகள் - அநுமானது பேருருவத்தின் வருணனை.

செவ்வழிப பெருமையென றுரைக்குஞ செம்மைதான்
வெவ்வழிப பூதமோ ரைந்தின மேலதோ
வவ்வழித் தனறெனி னனுமன் பாலதோ
வெத்வழித தாகுமென் றெணணு மீட்டதே.

(இ - ள) 'செம வழி பெருமை எனறு உரைககும செமமை - நல்ல குணமாகிய பெருந்தன்மையென்று சொல்லப்படுகிற குணம, வெம வழி பூதம ஓ ஐந்தின் மேலதோ - கடுமையாகிய தன்மையையுடைய பஞ்சபூதங களினிடததில உள்ளதோ? அ வழிதது அனறு எனின - அவ்விடததி லுள்ளதன் றென்றால, அநுமன்பாலதோ - அநுமானிடத்தி லுளளதோ? எ வழிதது ஆகும (இவ்விரணடனுள) எதனிடததி லுளளதாம?' எனறு—. எணணும - நினைககுமபடியான, ஈட்டது - பெருமையையுடையது, (அவ் வுருவம); (எ - று.)

மிகப்பெருந்தோறறமுடைமையில அநுமானதுஉருவமும பஞசபூதங களின் உருவமும விகறபிககலாமபடியிருநதன வென்க பூதமோரைந்து - நிலம் நீர் தீ காறறு விசுமபு என்பன. பூதம - வடசொல் தான் - அசை. ()

கo௩. ஒத்துயா கனகவான் கிரியி னேங்கிய
மெயத்துறு மரந்தொறு மின்மி னிக்குல
[1]மொய்த்துள வாமென முனனும பின்னருந
தொததின தாரகை மயிரின் சுறறெலாம

(இ - ள.) ஒத்து உயா - (தனனைததானே) ஒதது (எலலாமலைகளி னும) உயாநதுள்ள, கனகம வான் கிரியின் - பொனமயமான பெரிய மேருமலையில், ஓங்கிய - உயாநதுவளாநத, மெய் துறு - தமவடிவம் (ஒன்றோடொன்று) நெருங்கிய, மரம் தொறும - மரங்கள்தோறும, மின்மினி குலம - மின்மினிப்பூசசியின்கூட்டம, மொய்த்து உள ஆம் என - சுறுகியுளளனபோல,—தாரகை - நகூததிரங்கள, மயிரின்

சுற்று எலாம்-(ஆகாயத்தையளாவிவளாந்த அநுமானது உடம்பிலுள்ள) மயிரின் சுறறிடமெங்கும், முன்னும் பின்னரும - முன்னேயும் பின்னேயும், தொத்தின - ஒட்டிக்கொண்டன; (எ - று.)

மேருமலை அநுமானது திருமேனிக்கும், அதில் அடர்ந்துள்ள மரங்கள்-அத்திருமேனியிலுள்ள மயிர்களுக்கும், அம்பரங்களில் மொய்க்கின்றமின்மினிக கூட்டம் - அம்மயிர்களில்ஒட்டுகிற நக்ஷத்திரக்கூட்டத்துக்கும் உவமையெனக் காண்க; தன்மைத்தற்குறிப்பேற்றவுவமையணி. மின்மினி - இருளில்மின்னுவதொரு பறக்கும்பூச்சி. பி - ம்:—[1]மொய்த்துளது. (௧௦௫)

௧௦௨. கண்டல மறிவொடு கடந்த காட்சியன்
[1]விண்டல மிருபுடை விளங்கு மெய்ம்மையக்
குண்டல மிரண்டுமக் கோளின் மாச்சுடர்
மண்டல மிரண்டொடு மாறு கொண்டவே.

(இ - ள்.) கண தலம அறிவொடு கடந்த காட்சியன் - கணகளினிடத்தையும அறிவையும மேலிட்டுசசென்ற தோற்றததை யுடைய அவவநுமானது, இரு புடை வின தலம விளகுகும மெயமமை அ குண்டலம் இரணடும் - இரணடுபககங்களிலும [காதுகளிலே] ஆகாயத்தினிடததில் விளகுகின்றதன்மையையுடைய அந்த இரணடு குண்டலங்களும,—அ கோளின் - அந்த [ஆகாயததிலுள்ள] நவக்கிரகங்களுள், மா சுடா மண்டலம் இரணடொடு - மிக்க ஒளியையுடைய (சூரியமணடலம் சந்திரமணடலம் என்கிற) இரணடோடும், மாறுகொண்ட - பகைமைகொணடன [ஒத்தன என்றபடி].

பிரதியக்ஷப்பிரமாணத்தாலும், அநுமானப்பிரமாணததாலும் அறியவொணணாதபடி அநுமான் பேருருவமாய வளாந்தன னென்றவாறு.' இச்செயயுளில அநுமானதுகுண்டலங்களை வருணித்துள்ளதாகத்தோன்றினும், அவனதுபேருருவததையே வருணிததாக கருததுக் கொள்க. இவ்வநுமானது குண்டலமணியும காதுகள ஆகாயத்திற்சூரியசந்திரமண்டலஸ்தானங்களில் நின்றனவென்க. உவமையணி. பி - ம்:—[1]விண்டலந்திருவொடு விளங்குமேன்மைய. (௧௦௨)

௧௦௩. ஏ[1]ணில வொருகுரங் கீதென் றெண்ணலா
வாணியை யநுமனை யமைய நோக்குவான்
சேணுயர் பெருமையோர் திறத்த தன்றெனு
நாணுறு முலகெலா மளந்த நாயகன்.

(இ - ள்.) உலகு எலாம அளந்த நாயகன - (திரிவிக்கிரமாவதாரஞ் செய்து தனது திருவடிகளால்) எல்லாவுலகங்களையும் அளவிட்டயாவர்கனு தலைவனாகிய திருமால்,—ஏண இல ஒரு குரங்கு ஈது என்று எணணலா - வலிமையில்லாத ஒரு குரங்கு இது வென்று (அலக்ஷயமாக) நினைக்ககூடாத, ஆணியை - அச்சாணிபோலுள்ளவனாகிய, அநுமனை - அநுமானை, அமைய நோககுவான் - நனறாகப பாரததது, 'சேண உயர்

பெருமை - மிகவுமஉயர்ந்த பெருந்தனமை, ஓர் திறததது அன்று - ஓரிடததிலேயே யுளளதன்று', எனு - என்று எணணி, நாண உறும - நாணமடைபவனுனன்; (எ - று.)

அநுமானகொணட பேருருவம திருமாலினது திரிவிகிரமாவதார காலத்திற்கொணட திருவுருவததை யொத்திருந்தது என்பது கருததது இச செயயுள, பிறிதினவிற்சியணியின்பாற் படும, ஒன்றை இயலபாகககூறாமல் வேறுவகையாகக கூறுவது, இதன இலककணம. ஏண - பெருமையெனறு மாம தேரினது சककரங்களைக் கோதத மரததில் அசசக்கரங கழலாமல் கடையிற செருகுகின்ற ஆணி பெரிய பாரங்களையெல்லாங கொண்டுசெலுத்துகின்ற வலிமையுடையதாயிருத்தல்போலப் பெரியகாரியங்களையெல்லாஞ் செயதுமுடிககும வலிமையுடையவ னெனபாா, அநுமனை 'ஆணி' என்றா சேணுயா - ஒருபொருட்பன்மொழி. இதுவரையில தானொருவனே கொணடுளள பெரிய வடிவததை அநுமானும இப்பொழுது கொணடனனுகவால், திருமால், ஓர் திறததன்றெனு நாணமுறுவானுயினன ஓர்திறததன்று - அறிநதுசொல்லுந்தரததது அன்று எனறுமாம. நாணுறும - செயயுமென்முறறு, ஆணபாலுசகு வந்தது பி - ம்:—[1]இலது. (கஅஉ)

கஅச எண்டிசை மருங்கினு முலகம யாவினுந்
தண்டலி [1]லுயிரெலாந் தன்னை நோககின
வண்டமென் றதினுறை யமரர் யாரையுங்
கண்டனன் றானுந்தன் கமலக கணகளால்

(இ - ள்.) (அப்பொழுது), எண திசை மருங்கினும - எடடுதிககுக்களினிடததிலும, உலகம யாவினும - எல்லாவுலகங்களினிடததிலும, தணடல் இல் - நீங்குதலில்லாத [உளள], உயிா எலாம - எலலாபபிராணிகளும, தனனை நோககின (அநுமானுகிய) தன்னைபபாாததன; அணடம என்றதின் உறை - மேலுலகததில வசிககிற, அமரா யாரையும - தேவாகளெல்லாரையும, தானும - அவ்வனுமானும, தன கமலம கணகளால் - தனது தாமரை மலாபோனற திருககணகளால, கணடனன் - பாாததான், (எ - று.)

உயிரென்பது, உயிரையுடைய ஜந்துககளை; இது, ஒருவகையிலककனை அணடம - உலகவுருணடை; இங்கு மேலுலகம. இசசெயயுள, அநுமானது பேருருவததை விளककவந்த உயர்வுநவிற்சியணி. பி - ம்:—[1]உலகெலாம.

கஅரு. எழுந்துயுர் நெடுந் [1]தகை யிரணடு பாதமு
மழுந்துற வழுத்தலி னிலங்கை [2]யாழகடல
விழுந்தது நிலமிசை விரிந்த வெணடிரை
தழைந்தன புரண்டன மீனந தாமெலாம

(இ ள.) எழுநது உயா - மேலேஓங்கிவளாநத, நெடுந் தகை-பெருமைககுணத்தையுடைய அநுமான, இரணடு பாதமும அழுநதுற அழுத்

தலின் - (தனது) இரண்டுகால்களையும (நிலத்தில்) அழுந்துமபடி அழுத்திய தனால், இலங்கை—, ஆழ்கடல் - ஆழமாகிய சமுத்திரததில், விழுந்தது - அழுந்தியது; (அதனால்), நிலம்மிசை - அபபூமியின்மேல், வெளதிரை - (கடலினது) வெணமையான அலைகள, விரிந்த - ப்ரவின; மீனம தாம் எலாம் - மீன்களெல்லாம், தழைந்தன புரணடன - (அவ்விலங்கையினமேல) மிகுதியாகப் புரளலாயின; (எ - று.)

இசசெய்யுளும - தொடர்புயர்வுநவிற்சியணியே. செய்யுதகை - பண்புத்தொகையன்மொழி. பி - ம்:—[1]திசை. ஆர்கலி (கஂ௫)

கஂசு.—சீதை அநுமானைநோக்கிப் பேருருவத்தையடக்கிக்கொள்ள வேண்டுதல்.

வஞ்சியம் மருங்குலம் மறுவில் கற்பினாள்
கஞ்சமும் புரைவன கழலுங் கண்டிலா
[1]டுஞ்சின ரரக்கரென் றுவக்குஞ் சூழ்ச்சியா
[2]ளஞ்சினெ னிவ்வுரு வடங்கு வாயென்றாள்.

(இ - ள்) வஞ்சி அம் மருங்குல அ மறு இல் கற்பினாள் - வஞ்சிகொடி போன்ற [நுணணிய] அழகிய இடையையும குறறமிலலாத கற்பு நிலைமையையும்உடைய அசசீதை,—கஞ்சமும் புரைவன கழலும - செந்தாமரை மலரையொத்திருப்பனவான (அநுமானது) பாதங்களையும, கண்டிலாள் - காணமுடியாதவளாய்,—அரககா துஞ்சினா என்று உவகுகும சூழ்ச்சியாள் - 'ராக்ஷசரெல்லாம் இனி இறநதவராவர்' என்று எண்ணி மகிழ்கிற ஆலோசனையையுடையவளாய, (அநுமானை நோகி), 'இ உரு - (உனது) இப்பேருருவததுககு, அஞ்சினென் - (நான்) பயநதேன்: அடங்குவாய் - (இவ்வுருவம்) ஒடுங்கப்பெறுவாயாக,' என்றாள் - என்று வேணடினாள; (எ - று.)

அநுமானுடைய பேருருவத்தைக கணடதும், இவவநுமானால் ராக்ஷசசங்காரம நேவது திண்ணமெனச சீதை துணிநதன ளென்க. 'அஞ்சினென் இவ்வுரு' என்று சீதை கூறியதனால், அவளிடததில் உள்ள மகடூஉககுணம் நான்கனுள அச்சம்என்னும குணம வெளிபிடப்பட்டதாம. 'இவ்வுரு' என்பது 'அஞ்சினென்' என்பதனோடும், 'அடங்குவாய்' என்பதனோடும் சென்று இயைவது, இடைநிலைவிளக்கு [மத்யமதீபம] துஞ்சினர் - தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக குறிககபபட்டகாலவழுவமைதி பி - ம்:— [1]துஞ்சினனரக்கன். [2]அஞ்சினனிவ்வுருவடககுவாயென்றாள. சிலபிரதிகளில் மூன்று நான்காமடிகள் மாறியுளளன (கஂசு)

கஂஎ —இதுவும் அது.

முழுவது [1]மிவவுருக் காண முற்றிய
குழுவில துலகினிக் குறுகு வாயென்று
ளெழுவினு மெழி[2]லிலங கிராமன் றோள்களைத்
தழுவின ளாமெனத் தளிர்க்குந் தன்மையாள்

(இ - ள) எழுவினும எழில இலங்கு இராமன் தோள்களை தழுவினள் ஆம என தளிர்கும தனமையாள் - தூணைகாட்டிலும எழுசசி விளங்குகிற இராமபிரானது திருததோளகளைத் தழுவியணைத்தவள போலக களிககின்ற தன்மையையுடையவளாகிய சீதை, 'உலகு - உலகம, இ உரு முழுவதும் காண - (உனது) இநதபபெருவடிவமமுழுவதையும பாரப்பதறகு, முற்றிய - வல்லமை முதிரநதுளள, குழு - (பிராணியின) கூட்டத்தை, இலது-உடைய தன்று, (ஆதலின), இனி—, குறுகு வாய - ஒடுங்குவாயாக,' என்றாள - என்றுவேண்டினாள; (எ - று)

கீழ்ககவியிறகூறிய 'இவ்வுறுவடங்குவாய்' என்றதனை யே மீணடும் இககவியில வேறுவகையாக [காரணங்காட்டி] விவரித்துக்கூறியதனால், கூறியது கூறலென்னுங குறறத்துக்கு இடமின்மை காண்க. அநுமான் பேருருவதைக கண்டவுடனே சீதை அவவநுமான் திறததுக்கொணடிருந்த சந்தேகமமுழுவதுமநீங்கபபெற்று 'இவன் இராமதூதனே இனி விரைவில இராமபிரான் இங்குவந்து பகைவெனறு எனனைச சிறைமீட்பது நிசசயம்' என்றுஎணணி மிகமமிழ்ந்தன ளென்பது, பின்னிரண்டடியின் கருத்து அநுமானது இப்பெருவடிவதைத அஞசாதுகாணவல்ல மனவுறுதி உலகத துபபிராணிகளொன்றுக்குமில்லை யெனபது, 'இவ்வுருககாணமுற்றியகுழுவி லதுலகு' என்பதன் தோந்த பொருள. பி - ம்:—[1]நின்னுரு [2]விளங்கு.

கஂஅ.—அநுமான் தன் பேருருவத்தை அடக்கிக்கொள்ளுதல்.

ஆண்டகை யநுமனு மருள தாமெனு
மீண்டனன் விசுமபெனும பதததை மீச்செலவான்
காண்டலுக் குரியதோ ருருவங காட்டினான்
[1]றூண்டரு விளக்கனா ளினைய சொல்லினாள.

(இ - ள) விசுமபு எனும்பதததை மீ செலவான் - ஆகாயமென்னுமிடத்தையுங கடநது மேலே வளாநதுசெல்பவனாகிய, ஆணதகை அநுமனும - ஆணமைகுணதததையுடைய அநுமானும், அருள அது ஆம எனு - (உனது) நியமனபபடியேயாம (நான் நடபபது) எனறுசொலலி, மீணடனன் - (வளாவதினினறு) ஒடுங்கினவனாய் [சுருங்கி], காண்டலுககு உரியது ஓர் உருவம காட்டினான் - பாரபபதற்குத தககதொரு (சாதாரண வாநர) ரூபத்தை(ததானகொணடு) காட்டினான; (அப்பொழுது), தூணடு அரு விளககு அனாள் தூணடுதல்வேண்டாத தீபம் போன்றவளாகிய பிராட்டி, இனைய - இவ்வாறதைகளை, சொலலினாள - சொல்லுபவளானாள்; (எ - று)—அவறறை, மேல் ஐநதுகவிகளிற் காண்க

அருளதாம - அங்கீகாரததைக காட்டும் பணிவுமொழி. முதலடி முற்றுமோனை. தூணடரு, அருமை - இன்மைகுறித்து நின்றது. தூணடரு விளககு - நந்தாவிளககு; எபபொழுதும ஒருபடிபபட விளங்கிநிற்றலில் உவமம். பி - ம்:—[1]தூணடலில்.

(கஂஅ)

வேறு

கஂகூ.—இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்: சீதை அநுமானைப் புனைந்துரைத்தல்.

இடந்தா யுலகை மலையோடு [1]மெடுத்தாய் விசும்பை யிவை சுமக்கும், படந்தா ழரவை யொருகரத்தாற் பறித்தா யெனினும் பயனின்று, நடந்தா யிடையே யென்றாலு நாணு நினக்கு [2]நளிர்கடலைக், கடந்தா யென்று லென்னுகுங் காற்று மன்ன கடுமையாய்.

(இ - ள்.) காறறு ஆம் அன்ன கடுமையாய் - வாயுவைப்போன்ற வேகத்தையுடையவனே! உலகை மலையோடும் இடந்தாய் (எனினும்) - இந்நிலவுலகத்தைப் பருவதங்களுடனே பெயர்த்தாயென்றாலும், விசும்பை எடுத்தாய் (எனினும) - மேலுலகத்தைப் பேர்த்தெடுத்துத்தூக்கினாயென்றாலும, இவை சுமக்கும படம் தாழ் அரவை ஒருகரத்தால் பறித்தாய் எனினும்- இவ்வுலகங்களையெல்லாந் தாங்குகிற படம்பொருந்திய ஆதிசேஷனை ஒருகையாலே யிழுததாயென்றாலும், இடையே நடந்தாய என்றாலும் - இக்கடலினிடத்தே நடந்துவந்தாயென்றாலும், நினக்கு பயன் இன்று - (உனது திறமைகளுப்) பயனாவதோ சிறப்பாகாது: நாண ஆம் - வெட்கததையே தருவதாம்; (ஆகவே), நளிர்கடலை கடந்தாய் என்றால் - குளிர்ந்தகடலைத் தாண்டிவந்தா யென்றால், என் ஆகும - (அதனால் உனதுதிறத்துக்கு) என்ன மேம்பாடு உண்டாம? (எ - று.)—ஆல் - ஏற்றவசை.

மிகப்பெரியதொழிலையும மிகஎளிதில் முடிக்கவல்ல பேராற்றலுடையானுக்கு, சாதாரணமான ஒருசிறுதொழில் செய்ததைக்கொண்டு புகழையுண்டாககமுயலுதல் அவனதுபுகழ்க்கு இழுக்காவதன்றிச சிறிதும் மேம்பாட்டை யுண்டாக்காதவாறுபோல, உலகையிடத்தல் முதலிய பெருந்தொழில்களையும் மிக எளிதிற் செய்யவல்ல பேராற்றலுடைய அநுமானுக்கு, கடலைகடந்து வந்தானென்றுகூறுதல் ஒரு சிறிதும் சிறப்பாகாது என்றவாறு. உலகையிடத்தல் முதலிய பெருந்தொழில்களே அநுமானுக்கு ஒருமேன்மையுண்டாக்காதிருக்க, கடலைக்கடத்தலில் அவனுக்கு என்ன மேன்மை? என, ஒருபொருளைசசொல்லி அதுகொண்டு, கைழதிசதியாய மென்னும் தண்டாபூபிகாநியாயத்தால் மறறொருபொருளைச சாதிததிருததலால், இசசெயயுள, தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியாம். ஆதிசேஷன் ஆயிரந்தலைகளுடன் கீழிருந்து உலகங்களைத் தாங்குகின்றனனென்பது, நூற்கொள்கை 'நளிகடல்' என்ற பாடத்துக்கு - பெரியகடலெனக. தநதையே மைந்தனுகப் பிறகின்றானென்பது நூல்வழக்காதலால், அநுமானுககுத தந்தையாகிய வாயுவையே உவமைகூறுதல் ஏற்கும். கடுமை- வலிமையுமாம். பி - ம்:—[1]பிடித்தாய் [2]நளி.

(கஂகூ)

கக0. ஆழி நெடுங்கை யாண்டகைத னருளும் புகழு மழி
வின்றி, யூழி பலவு நிலைநிறுத்தற கொருவ னீயே யுளை[1]யானாய்
பாழி நெடுந்தோள் வீராநின் [2]பெருமைக் [3]கேற்பப் பகையிலங்
கை, யேழு கடறகு மபபுறத்த தாகா திருந்த திழிபன்றோ

(இ - ள்.) பாழி நெடுந தோள் வீரா - வலிமையையுடைய நீண்ட தோள்களையுடைய வீரனே! ஆழி நெடுங கை ஆண்தகைதன் - ஆஜஞா சக்கரதத்தையேநதிய நீண்டகைகளையுடைய ஆண்மைககுணமுள்ள இராம பிரானது, அருளும-கருணையும், புகழும - கீரததியும, அழிவுஇன்றி - அழிதலில்லாமல், ஊழி பலவும - பலகறபகாலமளவும, நிலை நிறுத்தறகு-நிலைபெறச செயவதறகு, நீ ஒருவனே - நீ ஒருத்தனே, உளை ஆனாய் - உள்ளவ னானாய்; நின பெருமைககு ஏறப - உனதுபெருமைக்குத் தக்கபடி, பகை இலங்கை - பகைவர்களுடைய இநத லங்காநகரம், ஏழு கடறகும அபபுறததது ஆகாது இருநதது - ஏழுகடல்களுககும அப்பாலுள்ளதாகாமல் (இவ்வுவரிநீரககடலினிடையே) இருந்தது இழிபு அன்றோ - (உனதுபெருமைககு) ஓர இழிவல்லவோ ? (எ - று.)

ஏழுகடல்களையும் ஒருங்கேகடககும வல்லமையை யுடையவன் அநுமானென்பது கருததது ஏழுகடல்களையும எளிதிற கடககவல்ல உனககு இவ்வொருகடலின சிறியதொருபாகததைக கடததல் ஒரு சிறப்பன்று என்றாள ஆழிநெடுங கை என்பதறகு - மோதிரத்தையணிந்த (முழந்தாளளவும் நீண்ட) கை யென்றுமாம. ஆழி சககராயுதமென்றும, சககரரேகை யென்றுங கொளளலுமாம. பூமண்டலததையாளும் அரசாககுக கையிற சககரரேகையிருததல், உததமலகஷணம் இராமபிரான் சீதையினிடததது அருளுடையவனாயிருத்தல் அநுமான தூதனாய் வநததனால்தான விளைககுமாதலாலும, இராவணுதியரைச சங்கரித்துப பிராட்டியையடைநது புகழபெறுதற்கும ஜாநகியுளளவிடததையறிந்துவநத அநுமானதானே பிரதானகாரணமாவனாதலாலும, 'ஆண்டகைத னருளும் புகழு மழிவின்றி யூழிபலவும நிலைநிறுததறகு ஒருவனநீயே யுளையானாய்' என்றது ஊழி - பிரமனாயுள பி - ம் — [1]ஆனால். [2]பருமை [3]ஏறற. (கக0)

கக. அறிவு மீதே யுருவீதே யாறற லீதே யரும்புலததின்
செறிவு மீதே செயலீதே தேற்ற மீதே தேற்றத்தி
னெறியு மீதே நினைவீதே நீதி யீதே நினககென்றால்
வெறிய[1]ரன்றோ குணங்களான் விரிஞ்சன் [2]முதலா மேலானோர்.

(இ - ள்) நினககு - உனககு,—அறிவும் - ஞானமும, ஈதே - இபபடிப்பட்டதேயாம; உரு - வடிவமும, ஈதே—; ஆறறல் - வலலமையும, ஈதே—; அரும் புலததின் செறிவும - (அடககுவதற்கு) அரிய ஐமபுலங்களை யடককுந்தன்மையும், ஈதே—; செயல - செயயுநதொழிலும, ஈதே—; தேறறம் - மனத்தெளிவும, ஈதே—; தேறறததின் நெறியும் - அததெளிவின் பயனும, ஈதே—; நினைவு - எணணமும, ஈதே—, நீதி - முறைமை

யும், ஈதே—, என்றால் - எனறுசொன்னால், விரிஞ்சன் முதல் ஆம் மேலா னோர் - பிரமன் முதலிய மேலோர், குணங்களான் வெறியர் அன்றோ - நற் குணங்களால வெறுமையுடையவ [குணங்களில்லாதவ] ரன்றோ; (எ - று.)

எல்லாநற்குணங்களும் உன்னிடத்து ஒருங்கேகூடியமைந்திருததலால், நீ யாவரினுஞ் சிறந்தவ னென்றபடி. ஈதே எனபதறகு - இதுவே சிறந்த தென்றும், இதுவல்லது வேறு இலலை யென்றும, எல்லாம் ஒன்றற்கொன்று ஒத்து அவ்வவற்றின் முடிவெல்லையை யடைந்துள்ளன வென்றும கருததுக கொளக. இசசெய்யுளின முதல்மூன்றடிகளை "உணமைகளிவனே வலிக் கிவனே யுறவுகளிவனே யுரைகளிவனே, திண்மைகளிவனே நெறிக்கிவனே தேசுகளிவனே சிலைகளிவனே, வணமைகளிவனே" என்பதனோடு ஒப்பிடுக பயனை, 'நெறி' என்றா, காரணதத்தின் பின்னே நிகழ்வதாதலின். பிரமன் முதலியோர் இங்குக் கூறியவறறிற் சிலகுணங்களையும் சிறிதே யுடையராத லின், இவ்வெல்லாக்குணங்களையும ஒருங்கேயுடைய அநுமானுடன் ஒப்பு நோக்குமிடத்து அவாகள் சூரியனுககுமுன் மின்மினிபோலக குணமிலார் போலவே தோறறுவரென்பார், 'வெறியரன்றோ குணங்களான் விரிஞ்சன் முதலா மேலானோ' என்றார். ஐமபுலததின் செறிவு - பஞசேந்திரியங்களை யும் அதனதன் விஷயங்களாயுளள ஐம்புலன்களிற போகவொட்டாது தடுத் தல். பி - ம்:—[1]அன்றே [2]அன்ன (ககக)

ககஉ. மின்னே ரெயிற்று வல்லரக்கா வீக்க நோக்கி வீரற் குப், பின்னே பிறந்தா னலலதோர் துணையி லாத பிழைநோகி, யுனனு [1]நினறே யுடைகின்றே னொழிந்தே னைய முயிருயிர்ததே, னென்னே நிருத ரெனனுவ ரிவனே யெங்கோன் றுணை[2]யென்றால்.

(இ - ள்) மின நேர எயிறு வல் அரககா வீகக நோகி - மின்னலை யொதத பறகளையுடைய வலிய ராக்ஷஸாகளின் பெருககத்தைப்பாரத்து, வீரற்கு பின்னே பிறநதான் அலலது ஓர் துணை இலாத பிழை நோக்கி - மகாவீரனாகிய இராமபிரானுககுப் பின்பிறநத தமபியாகிய இலககுமணனொரு வனையன்றி வேறொரு துணையுமிலலாத குறைவையும பார்த்து, உன்னு நினறே - (இவ்விராமபிரான் எவ்வாறு அரககரையெல்லாம வெல்வா னென்று) ஆலோசித்துகொணடே, உடைகின்றேன - மனங்கலங்குகிற யான், ஐயம் ஒழிநதேன - (இப்பொழுது நீ துணையாக நேபட்டமையால) அசசநதேகம நீங்கப்பெறறேன [நீ துணையாகநிற்றலால் அப்பிரான்பகை வெலவது நிசசய மென்றபடி], உயிர் உயிர்ததேன - பிராணபாயததினின்று நீங்கபபெறறேன்; எனனே - (எனககு இனி) எனனகுறை யுளது? இவனே எம கோன துணை என்றால் - இபபடிபபட்ட மகாபுருஷனே எனதுநாயக னுக்குச சகாயனாக ஏறபடடா னெனறால், நிருதர்-அரககாகள், என் ஆவர் யாதாகுவா? (எ-று)—எளிதிலவெலலபபடடு அடியோடு அழிவ ரெனறபடி

இனி, இக்கவி சீதை அநுமானை முனனிலைபபடுததாது அவனைப் பறறித தன மனததிற சிறபபாகக கருதிய படியைக கூறுவதெனக கொளளினுமாம். பி - ம்:—[1]நினறேன [2]ஆனால் (ககஉ)

ககங. மாண்டே னெனினும பழுதன்றே யினறே மாயச்
சிறைநின்று, மீணடே னெனனை [1]யொறுத்தாரைக் குலங்க ளோடும்
வேரறுததேன், பூணடே னெங்கோன் பொலங்கழலும்
புகழே யன்றிப புனபழியுந், தீண்டே னெனறு மனமகிழ்ந்தா
டிருவின் முகத்துத திரு [2]வன்னாள்.

(இ - ள) மாணடேன் எனினும பழுது அன்றே - இனி இறநது போவேனானாலும (எனககு) ஒருகுறற மின்றாம; எனனை ஒறுததாரை-என்னை வருததபபடுததிய அரககரை, குலங்களோடும - வமசங்களுடனே, வேர் அறுததேன - வேரோடு அழியசசெய்தவளானேன, இன்றே-இபபொழுதே, மாயம சிறைநின்றும - வஞ்சனையாலாகிய (அரககரின) காவலினினறும, மீணடேன - நீங்கினவளுமானேன; எம கோன பொலம கழலும - எனது கணவனுடைய அழகிய திருவடிகளையும, பூணடேன-அடைநதுவிடடேன்; (இனி), புகழே அனறி - கீரததியைப்பெறுவேனையல்லாமல, புல பழியும தீணடேன - இழிவானபழியை அடையவும மாட்டேன, என்று - எனறு சொலலி, மனம மகிழநதாள - மனங்களிககபபெறறாள் (யாவளெனின்,—) திரு வில முகததது திரு அனனாள - அழகையும ஒளியையுமுடைய முகததை யுடைய இலககுமியை யொததவளாகிய சீதை, (எ - று)

இராமபிரான தனனிடததது வெறுபபுகொணளாமல மிககவிருபபோடு அநுமானைத தூதனுபபியகாரணததால அபபிரான் வநது தனனை மீட்கவில்லையெனறு தான இதுவரையிற கொணடிருநத மனககுறை நீங்கபபெற்றுச் சீதை இனித தான இறநதாலும பழுதில்லை யெனறு கருதின ளென்க. இராமபிரான் இங்குவநது அரககாகுலததை வேரோடு அழித்து எனனைச சிறைமீட்டு அரககரநிலவசிதத பழிககு உளளாககாதபடி எனனைசசேரததுக கொள்வது திணண மெனபாள, அறுத்தேன், மீண்டேன், பூண்டேன், தீண்டேன் என்றாள. தெளிவுபறறி எதிரகாலம இறநதகாலமாக கூறியது, கால வழுவமைதி. 'ஒறுத்தாரைக குலங்களோடுமவேரறுததேன்' எனத தன் தொழிலாகவே கூறினது, தானசிறையிருநததே ராக்ஷநாசததுககுப் பிரதாந காரணமெனபதுபறறி. பி - ம்:—[1]ஒறுததாதம [2]அனையாள (ககங)

ககச.—சீதை புகழ்ந்துகூறியதற்கு அநுமான் நாணிச் சிலகூறுதல்.

அண்ணற பெரியோ னடிவணங்கி யறிய வுரைபபா னருந்ததி
யே, வண்ணக் கடலி னிடைக்கிடநத மணலிற பலரால் [1]வானரததி,
சென்னிறை கரிய படைததலைவ ரிராமற கடியா யானவாதம,
பணணைக கொருவ னெனப்போந்தே னேவக [2]கடவபணிசெயவேன்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அசரீதையின் வார்த்தையைக் கேட்டு), அண்ணல் பெரியோன் - மிகவுமபெருந்தன்மையையுடைய அநுமான், அடி வணங்கி - (அப்பிராட்டியின்) திருவடிகளை நமஸ்கரித்து, (அவளைநோக்கி), அறிய உரைப்பான் - தெரியச்சொல்வானாயினான்.—'அருந்ததியே அருந்ததிக்கு ஒப்பானவளே! இராமற்கு அடியார் - இராமபிரானுக்கு அடியவர்களாகிய, எண்ணற்குஅரிய வானரத்தின் படைத்தலைவர் - எண்ணுதற்கு-அருமையான குரங்குக்கூட்டங்கட்குத் தலைவர்கள், வண்ணம் கடலினிடை கிடந்த மணலில் பலர் - அழகிய கடலிற் பொருந்திய மணலினும் அநேகராவர்; யான் - நான், அவாதம் பண்ணைக்கு - அவ்வாநரர்களின் கூட்டத்திற்குள், ஒருவன் என - ஒருத்தனாக, போந்தேன் - வந்தவனாவேன்; ஏவக்கடவ பணி செய்வேன் - (இராமபிரான்) ஏவியருளிய கட்டளையைச் செய்யுந் தன்மையுடையேன்; (எ - று.)—அநுமான் உரைத்தமையை இதுமுதல் நான்குகவிகளிற் காணக.

உருவினாலும் அறிவினாலும் பெரியவ னென்பது தோன்ற, 'அண்ணற் பெரியோன்' என்றாரென்னலாம். அருந்ததி வசிஷ்டமகாமுனிவரது மனைவி; இவள் பதிவிரதாதருமத்திற் சிறத்தலால், கற்புடைமாதாக்கு உவமைகூறப்படுவள்; ஏனையோரினும் இவட்குச் சிறப்பு - மற்றையிடங்களில மாத்திரமேயன்றி நக்ஷத்திரநிலையிலும் கணவனைவிட்டுப் பிரியாது உடனிருத்தல். சீதையை அருந்ததியே யென விளித்தது, உவமையாகுபெயரால். அளவிறந்தமைக்குக் கடலின் மணலை எடுத்துக்கூறுதல், கவிசமயம்; "நினைப்பான்புகுற கடலெக்கலினுண் மணலிற் பலா," "ஆத்தவாழிதனுளியின் தொகைய," "சிந்துவின்கட்செறிமணல" முதலியன காணக. எண்ணற்கரிய என்பது - இரட்டுறமொழிதலால, எண்ணுவதற்கும் நினைப்பதற்கும் அரிய எனப பொருள்படும். ஏவக்கடவபணி செய்வேன் - (அவ்வாநரர்க ளெல்லாம்) ஏவுந்தொழிலைச செயவேனென்றுமாம். பி-ம்:—[1]வானரங்கள். [2]கூவப். (ककच)

ककரு.—இதுமுதல் மூன்றுகவிகள் - வாநரர்களின் சிறப்பு.

வெள்ள மேழு பத்துளதால் வீரன் சேனை யிவ்வேலைப
பள்ள மொருகைந் நீரள்ளிக் குடிக்கச் சாலும் பானமையதோ
கள்ள வரக்கர் கடியிலங்கை காணு தொழிந்த தாலன்றோ
வுள்ள துணையு முளதாவ தறிந்த பின்னு முளதாமோ.

(இ - ள்.) வீரன் சேனை - இராமபிரானது வாநர சைந்யம், வெள்ளம் ஏழுபத்து உளது - எழுபது வெள்ளமென்னுந் தொகையையுடையது; இ வேலை பள்ளம் நீர் - இந்தக்கடலின் ஆழமாகிய நீர்முழுவதும், ஒரு கை அளளி குடிக்க சாலும பான்மையதோ - (அவ்வாநரங்கட்கு) ஒருகையினால எடுத்துக் குடிப்பதற்காயினும போதுந் தன்மையையுடையதோ? [அன்று என்றபடி]; கள்ளம் அரக்கர் - வஞ்சனையையுடைய ராக்ஷசரது, கடி இலங்கை - காவலையுடைய லங்காபட்டணம், காணாது

ஒழிந்ததால் அன்றோ - (இன்னவிடத்திலுளளதென்று) காணப்படாமற் போனதனு லலலவோ, உள்ள துணையும - இநநாளமடடும, உளது ஆவது - அழியாம லிருபபது; அறிந்தபின்னும - (இவ்விடத்திலுளளதெனறு) தெரிநத பின்பும் [இனிமேலும], உளது ஆமோ - அழியாமலிருபபதாமோ? [ஆகாது]; (எ - று.)—ஆல - அசை.

வீரன - சுககிரீவனுமாம. இரண்டாமடி - வானரககூட்டததின் மிகுதி யையும ஆறறலையுங குறிககவநத உயர்வுநவிற்சியணி. ஓகாரங்கள - வினு வகையால், எதிரமறையை யுணாததிநினறன. கடி - உரிசசொல். (ககடு)

ககசு. வாலி யிளவ லவன்மைநதன் மயிந்தன் றுமிந்தன் வயக்குமுத, னீல னிடபன் குமுதாக்கன் பனசன் சரப னெடுஞ் [1]சாம்பன், கால னனைய துன்மருடன் காமபன் கவயன் கவயாக் கன், ஞால மறியு நறசங்கன வினதன் றுவிந்த னளனென்பான்.

இதுவும், அடுதத கவியும் - ஒருதொடா

(இ - ள) வாலி இளவல - வாலியினதம்பியான சுககிரீவனும், அவன மைந்தன் - அவ்வாலியின்புதல்வனான அங்கதனும், மயிநதன் - மைநதனும, துமிநதன - தவிவிதனும, வய குமுதன - வெற்றியையுடைய குமுதனும, நீலன் - நீலனும, இடபன - ருஷபனும, குமுதாக்கன் - குமுதாக்ஷனும, பன சன் - பநசனும், சரபன்-சரபனும, நெடுஞ சாமபன் - பெரிய ஜாமபவானும், காலன அனைய துன்மருடன் - யமன்போன்ற துர்மர்ஷனும, காமபன்-காம் பனும, கவயன் - கவயனும, கவயாககன - கவயாக்ஷனும், ஞாலம அறியும் நல்சங்கன்-உலகமெல்லாம் அறியும நன்மையையுடைய சங்கனும, வினதன்- விநதனும, துவிந்தன் - துவிநதனும, நளன என்பான் - நளனென்பவனும.

மயிந்தன துமிந்தன்-மைநத தவிவிதா; இவா, இரட்டையரான அசுவிநீ தேவாகளின் புதலவா. குமுதன் - ஆம்பல்போன்ற நிறமுடையவன். நீலன் - நீலநிறமுடைய ஒரு வாநரன்: இவன, அகநினியின் அம்சமானவன். இடபன - ருஷபன்; காளைபோனறவன. குமுதாககன் - ஆமபலபோலுங கணகளையுடையவன. சரபன - சரபமபோன்றவன்; (சரபம - சிங்கததைக கொல்லவல்லதும எட்டுககாலகளையுடையதுமாகிய ஒரு பறவை; இதனை மிருக மெனபாரு முளா) சாமபன் - ஜாமபவாந எனபதன் விகாரம; இவன், பிரமனது கொட்டாவியினின்று அவனமசமாயக கரடிவடிவமாயப பிறந்த வன்; இவன், மிககமூததவனுதலால், 'நெடுஞசாமபன்' எனப்பட்டான். காலன் - பிராணிகளின ஆயுளெல்லையைக கணககிட்டுக கொல்லுதல [illegible]ழிலுடையவனுதல் பறறி யமனுககு வந்த காரணககுறி. துர்மாஷன - ([illegible]வாகளாற) பொறுககவொணணாக கோபமுடையவன். கவயன் - காட் டுபபசுவைபபோன்றவன. கவயாக்ஷன் - காடடுபபசுவின் கண்போலுங கண்ணுடையவன். ஞாலமறியும் நன்மை - புகழ். சங்கன் - சங்குநிறமா னவன். விநதன் - வணககமுடையவன. நளன் - சநதிரனம்சமான ஒரு வாநரன். [illegible]:—[1]பாதன. [2]மதன.

ககஎ. தம்பன் றூமத் தனிப்பேரோன் றதியின் வதனன் சதவலியென், றிம்ப ருலகோ டெவ்வுலகு மெடுக்கு மிடுக்க ரிரா மன்கை, யம்பி னுதவும் படைத்தலைவ ரவரை நோக்கி னிவ்வரக் கர், வம்பின் முலையா யுறையிடவும் போதார் [1]கணக்கு வரம் புண்டோ.

(இ - ள்.) தம்பன் - ஸ்தம்பனும், தூமன் தனி பேரோன் - தூமனென்னும் ஒப்பற்றபெயரையுடையவனும், ததியின் வதனன் - ததிமுகனும், சதவலி - சதவலியும், என்ற - என்றுபெயர்சொல்லப்பட்ட, இராமன்கை அம்பின்உதவும - இராமபிரானது கையினால் விடப்படுகிற அம்புபோல(க் குறிதப்பாமற்சென்று பகைவரைத் தவறாமறகொன்று) உதவுகிற, படை தலைவர் - சேனைத்தலைவர்கள், இமயா உலகோடு - இவ்வுலகத்தையும், எ உலகும் - மற்றெல்லாவுலகங்களையும், எடுக்கும் - பெயர்த்துத்தூக்கவல்ல, மிடுக்கர் - வலிமையையுடையவராவர்; வம்பின் முலையாய் - கச்சணிந்த தனமுடையவளே! அவரை நோக்கின் - அவ்வாநரராகளைப்பார்த்தால், இ அரக்கர் - இந்தராக்ஷசாகளெல்லாம், உறை இடவும் போதார் - (அவர்கள் தொகைக்கு) உறையிடவும் போதமாட்டார்கள்; கணக்குவரம்பு உண்டோ - (அவ்வாநரசேனைக்கு) ஓர் எண்ணளவு உளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.) —என்று இராமபிரானது துணைவலியை அநுமான் பிராட்டியினிடம் தெளிவாகக் கூறிமுடித்தன னென்க.

தம்பன் - தம்பம்போன்றவன். தூமன் - புகைநிறமானவன். சதவலி - பலதோல்மடிப்புக்களை யுடையவன். ததிமுகன் என்னும் பெயரை 'ததியன் வதனன்' என்றார். ததிமுகன் - தயிர்போல் வெள்ளியமுகமுடையவன். வம்பு - வாசனையுமாம். உறையிடுதலாவது - பொருள்களைக்கணக்கிடும்போது ஞாபகத்தின்பொருட்டு ஒவ்வொரு பெருந்தொகைக்கு ஒன்றாக இடுவதோர் இலக்கக்குறிப்பு; இவ்விலங்கையிலுள்ள அரக்கர்களின் தொகை இராமபிரானுக்குச சேனையாகவுள்ள வாநரவீரர்களின் தொகைக்கு உறையிடவும் போதாதென்று, வாநரசேனையின் தொகைமிகுதியை விளக்கியவாறு.பி-ம்:— [1]கணக்கும் வரமபுடைத்தால். (ககஎ)

உருக்காட்டுபடலம் முற்றிற்று.

ஆறாவது

சூளாமணிப் படலம்.

பிராட்டி தான்வைத்திருந்த சூளாமணியை இராமபிரானிடம் கொண்டுபோயத் தருமபடி அநுமானிடம் அடையாளமாகக் கொடுத்த வரலாற்றைக கூறுகின்ற பாகம். சூளாமணி - சூடாமணி; இது, வடநூல்முறைபபடிவந்த டகரளகரப்போலி. இது, சூளா மணி என்னும் இரணடுவடமொழிகள கூடிநின்ற தொகைநிலைத தொடர்மொழி. இதனை

ஏழாமவேற்றுமையுருபுமபயனு முடன்தொகைதொகையென்றால் தலையிலணி யும்மணியென்றும், ஆறுமவேற்றுமைமதொகை யென்றால் தலையினது சம் பந்தமான மணி யெனறும் விரிந்து பொருளபடும். இது, ஒருவகைத்தலை யணி சூடா - தலைமயிமுடி, மணி - இரதினம.

வேறு.

க.—அநுமான் சீதையை இராமபிரானிடங் கொண்டுசேர்க்கக் கருதுதல்.

உண்டுதுணை யென்னவெளி தோவுலகி னம்மா
[1]புண்டரிகை போலுமிவ ளின்னல்புரி கின்றா
ளண்டமுத னாயகன தாவியனை யாளைக்
கொண்டகலவ தேகரும மென்றுணர்வு கொண்டான்.

(இ - ள்.) (என்றுசொன்ன அநுமான்), 'இன்னல் புரிகின்றாள் துன் பமனுபவிப்பவளும, அண்டம் முதல் நாயகனது ஆவி அனையாள் - உலகங் கட்கெல்லாம முதலதலைவனாகிய இராமபிரானது உயிரை யொத்தவளு மாகிய, புண்டரிகை போலும இவளை - இலக்குமிபோன்ற இபபிராட்டியை, கொண்டு - எடுத்துக்கொண்டு, அகல்வதே - (அப்பிராணிடம்) செல்வதே, கருமம - (இப்பொழுது நான்) செய்யவேண்டிய தொழிலாம,' என்று உண ரவு கொண்டான் - என்று எண்ணினான்; (இவ்வனுமானுககு), உலகின் - லோகத்தில், துணை - வேறு உவமை, உண்டு—, என்ன - என்றுசொல்ல, எளிதோ - எளியதோ? [அன்று, தனககுததானே உவமையாவன் என்ற படி]; அம்மா-ஆச்சரியம்! (எ-று.)—அமம என்னும் வியப்பிடைசசொல், அம்மா என ஈறுதிரிந்துநின்றது; அநுமானது தைரியத்தைப்பற்றி வியந்தவாறு.

முதலடி - கவிக்கூற்று. அநுமான ஒபபுயாவறறவனுதலால், இவ்வருந் தொழிலைச செய்யக்கருதின னென்பதாம். முதலடியைப் பின் மூன்றடிகள் சமர்ததித்துநின்றது, தொடர்நிலைச்செய்யுட் குறியணி. புண்டரிகை - செந் தாமரையலரில் வாழும் இலக்குமி. 'உலகி லென்னு' என்ற பாடததுக்கு - கீழ்ச்சொன்ன வாநரசேனைக்கு உலகத்தில் ஓர் அளவு உண்டோ வென்று அநுமான்சொல்லி யெனப் பொருள் காணக. பி-ம்:—[1]புண்டரீகாபேருமென வின்னபுகல்கின்றாள். (க)

உ—இதுமுதல் ஒன்பதுகவிகள் - ஒருதொடர்: பிராட்டியினிடத்து அநுமான் விண்ணப்பித்ததைக் கூறும்.

கேட்டி யடியேனுரை முனிந்தருளல் [1]கேளான்
வீட்டியிடு [2]மேலவனை வேறல் வினையன்றா
லீட்டியினி யென்பல விராமனெதிர் நினனைக்
காட்டியடி தாழ்வெனிது காண்டியிது காலம்.

(இ - ள்.) (அநுமான் சீதையைநோக்கிப் பின்வருமாறு கூறுவான்), அடியேன் உரை - அடியவனான எனது வாரதததையை, கேட்டி - கேட்பா யாக: முனிந்தருளல் - கோபிக்க வேணடாம்: கேளான் வீட்டியிடும் மேல் - பகைவன் [இராவணன்] உன்னைக்கொன்றுவிடுவானாயின், (பிறகு), வேறல் வினை அன்று - அவ்விராவணனை வெல்லுதல் (இப்

பொழுது செய்யவேண்டிய) காரிய மன்று; இனி பல ஈட்டி என - இப்பொழுது பலவாறாதனைகளைத்திரட்டிச்சொல்லி யாதுபயன்? இராமன் எதிரின்னை காட்டி அடி தாழ்வென் - இராமபிரானதுமுன்னிலையில் உன்னைக் கொண்டுபோயச்சேர்தது (அபபிரானது) திருவடிகளை வணங்குவேன்; இது காண்டி - இந்த எனதுசெய்கையைக் காணபாயாக; இது காலம் - இச்செய்கையே இககாலத்திற்குஏற்றதாம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சீதையை எடுத்துக்கொண்டு செல்வதாக தான் கூறப்புகுவது சீதையின் மனதுககு இவன் இராவணனோ வென ஐயமுண்டாக்கக்கூடியதாகையாலும், இராமபிரானிட்ட கட்டளைகளுக்கு உட்படாமல் சுவதந்திரமாக இருத்தலாலும், மகாபதிவிரதையான சீதையைத் தான் எடுத்துச்செல்வது தகுதியற்றதாகத தோன்றுதலாலும், 'முனிநதருளல' என்றான். அடியேன்-இராமபிரானது பக்தனாகிய நான். காரியம பிரதானமே யன்றி வீரியம் பிரதானமன் றென்பான் 'மேலவனை வேறல் வினையன்று' என்றான். வினையன்று-ஒருபெருங்காரியமன்று என்றுமாம். இது காலம் என்பதற்கு-இதுவே (அதற்கு ஏற்ற) சமயமெனக் கூறினுமாம். இப்பொழுதேயென்றுமாம். பி - ம்:—[1]கேளாா. [2]மேவலனை, மேலவரை. (உ)

௩. பொன்றிணி பொலங்கொடியென் மென்மயிர் பொருந்தித்
துன்றிய புயத்தினி திருக்கதுயர் விட்டா
யின்றுயில் விளைக்கவொ ரிமைப்பினிறை வைகுங்
குன்றிடை யுனைக்கொடு குதிப்பெனிடை கொள்ளேன்.

(இ - ள்.) பொன் திணி பொலம கொடி - பொன் மயமான அழகிய பூங்கொடிபோன்றவளே! என் - எனது, மெல் மயிர் பொருநதி துன்றிய புயதது - மெனமையான மயிரகள நெருங்கியிருககப்பெற்ற தோள்களின் மேல், இனிது இருகக - இனிமையாக (நீ ஏறி) வீறறிருநது, துயர்விட்டாய இன் துயில்விளைகக - துன்பமநீங்கி இனிமையான தூக்கத்தைக் கொளவாயாக; (நான்), உனை கொடு-உன்னை எடுத்துக்கொண்டு, இடை கொள்ளேன்-நடுவில்தங்காது, ஓர் இமைப்பின் - ஒருகொடிபபொழுதினுள்ளே, இறை வைகும குன்றிடை-இராமபிரான் எழுந்தருளியுள்ள மலையிலே குதிபபேன்--.

பொன்திணி பொலங்கொடி - பொன்னுலகமான தேவலோகததிலே கற்பகததைச் சாரநதுளள காமவல்லியே! எனினுமாம். என் மெனமயிர் பொருநதித் துன்றியபுயம்-இதனை மெததையாகக கொள் என்பது, குறிப்பு.

௪. அறிந்திடை யரக்கர்தொடர் வாகளுள ராமேன்
முறிந்துதிர நூறியெதி ரென்சின முடிபபே
னெறிந்தகுழ னின்னிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேனொருவ ராலுமவிளி யாதேன்.

(இ - ள்) நெறிந்த குழல் - நெறித்த கூந்தலையுடையவளே! அறிந்து - (நான உனனை எடுத்துக்கொண்டுபோவதைத்) தெரிந்து, இடை - நடுவழியிலே, தொடர்வாகள அரக்கர் - பின்தொடர்ந்து போர்செய்வருபவர்களான இராக்கதர்கள், உளர் ஆம் ஏல - உள்ளார்ராயுல, ஒருவராலும் விளியாதேன்-ஒவராலும் கொல்லப்படமாட்டாத நான, எதிர் - (அவர்களை) எதிர்த்து, முறிந்து உதிர நூறி - அழிந்துசிதறும்படி நாசஞ்செய்து, என் சினம் முடிப்பேன்-எனது கோபத்தையும தீர்த்துக்கொள்வேன்; நின நிலைமை கண்டும்-உனது நிலைமையைக் கண்ணுற கண்டுவைத்தபின்பும, நெடியோன்பால் - பெருந்தனமையுடைய இராமபிரானிடம, வெறுங்கை பெயரேன் - (உனனை உடனகொண்டுசெலவேனேயன்றி) வெறுங்கையுடனே திருமபிப்போகேன்.

'உளராமேல்' என்ற சொல்லின் ஆற்றலால், ஒருவரும் அறியாதபடி செல்லவல்லேன் யான் என்று குறிப்பிட்டவாறும ஆம - அசை எதிர்த்து என்னும் வினையெச்சம் விகுதிமுதலியன கொக்கு 'எதிர்' என நின்றது; "வரிப்புனைபந்து" என்பதில், 'வரி' என்பதுபோல குழல் - குழலையுடைய பிராட்டிக்குச் சினையாகு பெயர் நின நிலைமை கண்டும் - அரக்கியர்களின கைப்பட்டு யாதொருதுணையுமின்றிக் காட்டுத்தீயினிடை யகப்பட்ட மான் போல் மிகத்தவிக்கும உனது தன்மையைப்பார்த்தும என்றவாறும எனவே, நான உன்னை உபேக்ஷித்துச்செல்லுதல் சிறிதும் தகுதியன்று என்பது, தொனி. நெடியோன் - திரிவிக்கிரமனும் நீண்டவ னென்றுமாம.

'அரசன் தெய்வம் குரு இவர்களிடத்து வெறுங்கையுடனே செல்லலாகாது' என்பது நூற்கொள்கை யாதலால், தெய்வமும அரசனுமாகிய இராமபிரானிடத்து அவனுக்குத் மிகச்சிறந்த பொருளான உன்னைக் கொண்டன்றி வெறுங்கையுடனே நான மீண்டுசெல்வது முறைமையன் றென்பான் 'நெடியோன்பால் வெறுங்கை பெயரேன' என்றான் விளியாதேன்-தோல்வாதேன என்றும பொருளபடும. நான உன்னை யெடுத்துக்கொண்டு செல்லுகையில் அரக்கர்கள பின்தொடர்ந்து போர்செய்து என்னை அழித்தால என்செய்வது? என நீ கவலவேண்டா; நான் மிக்கபலமுள்ளவனும சிரஞ்சீவியு மாதலால, நானே இறவாமலே வெல்வேன் என்ற ஸாபிப்பிராயவிசேஷமாதலால், ஒருவராலும் விளியாதேன்' என்பது - கருத்துடையடைகொளியணியாம்.

(ச)

ரு இலங்கையொடு மேகுதிகொ லென்னினு மிடந்தென்
வலங்கொளொரு கைத்தலையில் வைத்தெதிர் [1]தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோதம்
பொலங்கொள்கழ லுழ்குவெனி தன்னைபொரு ளன்றால்

(இ-ள்.) அன்னை - தாயே! 'இலங்கையொடும - இந்த லங்காபட்டணத்தி கொல் - (என்னை எடுத்துக்கொண்டு) செல்லலாம் - என்று கூறினாலும, (அவ்வாறே), இடந்து -

(இவ்விலங்கைமையப) போதநெடுத்து, என் வலம் கொள் ஒரு கைத தலையில வைத்து - எனது பலமபொருந்திய ஒருகைத்தலத்தில் வைத்துகொண்டு, எதிர் தடுப்பான விலங்கினரை தூறி - எதிரில் தடுக்கும்பொருட்டு வருகிற இராக்கதரையெல்லாம (மறறொருகையாற்) பொடியாகக்கிவிடு, வரி வெம் சிலையினோதம பொலம கொள் கழல தாழ்குவென் - கட்டமைந்த கொடிய விறகளையுடைய இராமலக்ஷ்மணர்களது அழகுகொண்ட திருவடிகளில் சரண்டாகமாக விழுந்து தண்டனிடுவேன்; (இவ்வளவுவலிமையையுடைய எனககு), இது - (உன்னைத தோளின்மீது எடுத்துசசெல்லும்) இசசிறு தொழில், பொருள அன்று-ஒருபொருட்டன்று; (எ - று)—ஆல்-ஈற்றசை.

தோடர்நிலைசெய்யுட்பொருட்பேறணி கொல் - வினு வலங்கொள் ஒரு கைத்தலையில் - வலககையில் என்றுமாம. இது லங்கையைப் பேர்த்தெடுததுச் செல்லுந் தொழிலென்றுமாம கைததலை-தோளுமாம் பி - ம்-— [1]தடுப்பின். [2]கழல்கடாழ்குவனினைதத (சு)

சு அருந்ததி யுரைத்தியழ கற்கருகு சென்றுன்
மருந்தனைய தேவிநெடு வஞசாசிறை வைப்பிற்
பெருந்துயரி னேடுமொரு வீடுபெற லிலலா
திருந்தன னெனப்பகரி னென்னடிமை யென்னும்.

(இ - ன்.) அருந்ததி - அருந்ததிபோலபவளே! அழகறகு அருகுசென்று-பேரழகனுன இராமபிரானிடஞ் சென்று, 'உன - உனது, மருந்து அனைய தேவி - தேவாமிருதமபோன்ற மனைவி, நெடு வஞ்சா சிறைவைபபில் - மிக்க வஞ்சனையையுடைய அரகாகளின் சிறைசசாலையில், ஒரு வீடு பெறல் இல்லாது - ஒருவகையாலும விடுதலையடையும உபாயத்தைப்பெறுமல், பெருந்துயரினேடும இருந்தனள - மிகக துன்பத்துடனே பிருக்கின்றுள்', என பகரின் - என்று (நான்) சொல்வேனுயின், என் அடிமை - எனது அடிமைததொழில், என ஆம - யாது பயன்பெறும? உரைத்தி - சொல்வாயாக; (எ - று.)

தலைவனுககு உகபபான தொழில் செய்தலே அடியவனுக்குக் கடமையாதலால், அதனைச்செயது உன்னைமட்காத என்அடிமை சிறிதும் பயன்படாது என்பதாம். 'சேஷிக்கு அதிசயத்தை விளைககை, சேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும்,பராப்யமும்' என்ற பெரியோவாக்கையும் நோகுக. இராமபிரானுககுத் தெவிட்டாத மிகக இனிமைவிளைத்தலில், சீதைக்கு அமிருதம உவமை. பி - ம் —[1]நெடு [2]பெறுகில்லாள (சு)

எ. புண்டொடர் வகற்றிய புயத்தினேடு [1]புக்கேன்
விண்டவா [2]வலததையும விரித்துரைசெய் கேனே
கொண்டுவரு கிறறிலெ னுயிரகுறுதி கொண்டேன்
கண்டுவரு கிறறிலெ னெனககழறு கேனே.

(இ - ள) புண் தொடாவு அகறறிய - புண்படுதலை நீகக்கிய, புயததினேடு - தோளகளுடனே, புகுகேன - (யான இராமபிரானிடம) சென்

றவனாய், விண்டவா வலததையும் - (நமது) பகைவாசளுடைய பலதங்த யெல்லாம், விரிதது உரை செயகேனோ - விவரிததுச சொல்வேனோ? 'கொணடு வருகிறறிலென் - (பிராட்டியை) உடன்கொணடுவநதேனில்லை: உயிர்ககு உறுதிகொணடேன் - (எனது) உயிரகு நன்மையையே தேடிக்கொணடேன் கணடு வருகிறறிலென் - (பிராட்டியைச செவ்வை யாகக) கணடுவந்தேனு மிலலை,' என கழறுகேனோ - என று சொல்வேனோ?

உன்னை நான் உடன்கொணடு செல்லாவிடின் உனனைககணடதனு லாகிய பயனதானும் இல்லை; நான் இராமபிரானிடம்சென்று பகைவாகளின் வலிமையையெல்லாம விவரிததுசசொல்வதறகாகவோ இபபோது இஙகு வநதது? அவவலிமைதானும எனககு எவவாறு செவவையாயத தெரியும்? உன்னை நான் எடுததுககொணடுபோக அபபொழுது அவாகள எதிாதது வந்தால்ன்றோ அவாகளவலிமை எனககுததெரியும்? உன்னை நான் கொணடுசெல்லாவிட்டால், என் உயிரககு ஏதாவது ஒருதீஙகுநேருமோ வென்று சஙகிதது அவ்வுயிரககு நன்மையைச செய்துகொணடவனாவேனே யன்றி, இராமபிரானுககும உனகககும ஒருநன்மையும் செயதவனாகேன் என்றவாறும. 'புணதொடாவகறறியபுயம' என்றது, இதுவரையிலும ஒரு பொழுதும பகைவாகளால் ஊறுபடாமையை விளகககிறறென்னவுமாம். 'உயிர்ககுறுதிகொணடேன்' என்பதை, 'கொண்டு வருகிறறிலென்' என்பத னோடும, 'கணடுவருகிறறிலென' எனபதனோடும் இயைதது மத்யமதீப மாகப் பொருள் காண்க கண்டுவருகிறறிலென் - நன்றுககககணடால் ஒருவேளை பகைவர்கள எனது உயிரககு எனனதீஙகுசெயவாகளோ வென்றுஅஞ்சி அதுதானும செயதேனிலலை யெனறபடி. ஓகாரஙகள, சொல்வது தகுதியல் லவே யென்று இரஙகியபடியைககாடடும. பி - ம் —[1]புகசே. [2]வலததையும் வலததையும்விரிபபன். (எ)

அ இருககுமதில சூழ்கடி யிலங்கையை [1]யிமைப்பி
னுருககி [2]யெரி யாலிக லரக்கரையு மொன்று
முருககிநிரு தककுல முடித்துவினை முறறிப
[3]பொருக்கவகல கென்னினு மதின்றுபுரி கின்றேன.

(இ - ள்) இருககும - (நீ) தங்கியுள்ள, மதில் சூழ் கடி இலஙகையை- மதிள்களினாற சூழபபட்ட காவலையுடைய இலஙகாபுரியை, இமைப்பின் - நொடிபபொழுதினுளளே, எரியால் உருககி - நெருப்பால உருகசசெயது,— இகல் அரககரையும - (இஙகுள்ள) வலிமையையுடைய ராகஷசாகளையும, ஒன்று ஆ முருக்கி - ஒருசேர அழிதது, நிருதர் குலமமுடிதது - அரக்கரது குலத்தையும வேரோடுஅழிதது, வினை முறறி - போாத்தொழிலை முடிததுக கொணடு, பொருகக - விரைவாக, அகல்க-செவவையாக, என்னினும்-என்று (நீ) கூட்டினையிடினாலும, அது - அச்செய்கையையும், இன்று இபபொழுதே, புரிகின்றேன் - செய்துமுடிகின்றேன்; (எ - று.)

இருக்கும் இலங்கை யென இயையும். வினை முற்றி - வந்தகாரியத்தை முடித்துக்கொண்டு என்றுமாம். பொருக்க - விரைவுக்குறிப்பினடைசொல். பி - ம்:—[1]இமைக்கண. [2]எரியா . ஒன்ரு, இலாலிகலாகக்கனையுமொன்ரே. [3]பொருக்கெனவகல்கெனினும். (அ)

கூ இந்துநுத னின்னொடிவ னெய்தியிகல் வீரன்
சிந்தையுறு வெந்துயர் தகிந்துதெளி வோடு
மந்தமி லரக்கர்குல மற்றவிய நூறி
நந்தலில் புவிக்கணிடர் பிற்களைத னன்ருல்.

(இ - ள்.) இநது நுதல் - சந்திரன்போன்ற நெற்றியையுடையவளே! இகல் வீரன் - வலிமையையுடைய வீரனாகிய இராமபிரான், நின்னொடு இவணஎய்தி - (நான் உன்னை எடுத்துக்கொண்டுபோக) உன்னோடு இப்பொழுதுகூடி, சிந்தை உறு வெம துயா தவிர்ந்து - மனத்திற பொருந்திய கொடிய துயரம் நீங்கப்பெற்று, தெளி வோடும் - மனதெளிவுடனே, பின் - பின்பு (இங்குவந்து), அந்தம் இல் அரக்கா குலம் அறறு அவிய நூறி - முடிவில்லாத [மிகக்தொகுதியாயுள்ள] அரக்கரதுகூட்டத்தை அழிந்தொழியும்படி நீறாகி, நந்தல் இல் புவிக்கண் இடர் களைதல் - அழிவில்லாத இவ்வுலகத்துக்கு (அவர்களால்நேரந்த) துன்பதைத தீர்ப்பது, நன்று - நல்லதாம்; (எ - று)—ஆல் - ஈற்றசை.

'இப்போது தான் அநுமானொடுமீண்டுவிட்டால் இராமபிரானுல் துஷ்டநிக்கிரகம் நடப்பது எவ்வாறு?' என்று சீதைக்கு உண்டாகக்கூடிய சந்தேகத்தை அநுமான் இவ்வாறுசொல்லி யொழித்தன னென்க (கூ)

கo வேறினி விளம்ப [1]வுள தன்றுவிதி யாலிப்
பேறுபெற வென்கணரு டந்தருளு [2]பின்போ
யாறு துய ரஞ்சொலிள வஞ்சியடி யன்ரே
ளேறுகடி தென்றுதொழு தின்னடிப ணிந்தான்.

(இ - ள்.) 'அம் சொல் இள வஞ்சி - அழகியசொற்களையுடைய இளமையான வஞ்சிக்கொடிபோன்றவளே! இனி வேறு விளம்ப உளது அன்று - இனி வேறோ ஆக்ஷேபமும (நீ) சொல்லத்தக்கதன்று: விதியால் - (முன் செய்துள்ள) நல்வினைப்பயனுல், இ பேறு பெற - (உன்னை இராமபிரானிடத்திற் சேர்த்த லென்ற) இப்படிப்பட்ட பாக்கியத்தை (யான்) பெறுமபடி, என்கண் - என்னிடத்தில், அருள் தந்தருளு - கிருபைசெய்தருள்வாயாக: பின் - (நான் எடுத்துக்கொண்டுபோன) பின்பு, போய் - (இராமபிரானிடம் நீ) சென்று, துயா ஆறு - துன்பந தணியப்பெறுவாயாக: அடியன தோள் - என்னுடையதோளின்மேல், (இப்பொழுது), கடிது ஏறு - விரைவில் ஏறியருள்வாயாக', என்று-என்றுவிண்ணப்பஞ்செய்து, தொழுது இன் அடிபணிந்தான் - கைகுவித்துக்கொண்டே (பிராட்டியினது) இனிய திருவடிகளை வணங்கினன், (அநுமான்); (எ - று.)

விதியால் - உனதுகட்டளையால என்றுமாம். நீ என்தோளின்மீது ஏறிக்கொண்டால், இராமபிரானைச் சென்றுசேர்ந்து இப்பொழுதுபடுந

துன்பதத்தினின்று நீங்கிச சுகமடையலாம் என்பது கருத்து பி - ம்:—[1]உள தின்று. [2]வின்னே. (கo)

வேறு

கக —சீதை அநுமான்வார்த்தைக்கு உடன்படாது சிலகூறுதல்.

ஏய நன்மொழி யெயதவி ளமபிய
[1]தாயின் முனனிய கன்றனை யான்[2]றனை
யாய தன்மை யரியதன் றுமெனத்
தூய மெனசொ லினையன சொல்லினாள்

(இ - ள்.) ஏய - தகுதியான, நல் மொழி - நல்ல வார்தைகளை, எயதவிளமபிய - (செவியிற) பொருந்துமபடி கூறின், தாயின முனனிய கன்று அனையான்தனை - தாயபபசுவிறகுமுன் சென்று நின்ற கனறை யொதத அநுமானை (நோகி, பிராட்டி),—'ஆய தன்மை - (கீழ் இவன கூறிய) அபபடிப்பட்ட செய்கை, அரியது அனறு ஆம - (இவனுககுச் செயவதறகு) அருமையானதொன்று அன்றாகும்', என - என்று எணணி, இனையன - இததனமையனவாகிய, தூய - குறறமறறனவான, மெல்சொல - மென்மையான வாதைகளை, சொல்லினாள் - சொல்பவளானாள், (எ-று)— அவற்றை, மேற் பதினைந்துகவிகளிற காண்க

'தாயின்முன்னிய கனறனையான்' எனறது, அநுமானது களிப்பு மிகுதியைக குறிககும். தாயபபசு - லோகமாதாவான பிராட்டிக்கும், கன்று - அநுமானுககும உவமையாம். 'தூய' என்றா, அபபிராட்டி சொல்லும வார்த்தைகள் அவளதுகற்புநிலைமைகுத தகுகிருநதனவாமென்றறகு மென்சொல என்பதைப பிராட்டிககு அனமொழித தொகையாகக, தூயசொலலினாள் என்றலுமொன்று பி - ம்—[1]தாயை [2]தனகு. (கக)

கஉ அரிய தன்று[1]நின னாறறலுக் கேற்றதே
தெரிய வெண்ணினை [2]செய்வதுஞ் செய்தியே
யுரிய தனறென வோாகினற துண்டதென
பெரிய பேதைமைச சினமதிப பெணமையால.

பதினைநது கவிகள - ஒருதொடா

(இ - ள்) அரியது அன்று - (இது உனக்குச் செய்தறகு) அருமையான தொழிலொனறன்று; நின ஆறறலுககு ஏறறதே தெரிய எண்ணினை - உனது வல்லமைக்குத தகுகதையே (செய்ய) நன்கு ஆலோசித்துள்ளாய செயவதும் - (நீ) செயவதாகசசொன்னதையும, செயதியே - செயதே முடிககவலலாய்; (ஆயினும்), என - எனது, பெரிய பேதைமை சில் மதி பெணமையால் - மிகக அறியாமையையும சிற்றறிவையுமுடைய பெணதன்மையால், உரியது அன்று என - (நீ சொன்னாரியம) தககதன றென்று, ஆகின்றது அது - ஆலோசிககிறதொனறு, உணடு - (உனது எணணத) உளது; (எ - று.)—அது, மேல விவரிததுக கூறபபடும்.

நீ என்னை எடுத்துச்செல்வதாகச் சொன்னது காலத்துக்கும் உனது ஆற்றலுக்கும் ஒக்கத்தாயினும் அது எனது பெண்புத்திக்கு நேரிதாகத்தோன்றவில்லை யென்றான் ஏன்ச உரியதன்றென வோர்கின்ற துண்டதென், பெரியபேதைமைச் சின்மதி—மாறுபட்டசொற்கள் வந்தது, தோடைமுரண். பி - ம்:—[1]உனக்காற்றலுக்கு, [2]செய்வது. (கஉ)

கங. வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்[1]சர நின்னொடுங் கோத்தபோ
தால மன்னவாக் கல்லையெற் கலையாற
சால வுந்தடு மாறுந் த[2]னிமையோய்.

(இ - ள்) (என்னை நீ எடுத்துக்கொண்டுசெல்லுங்காலை), வேலையின் இடையே - சமுத்திரத்தின்மத்தியில் [கடலுக்குநேராக மேலே நீ செல்லும் போது], வெய்யவர் - கொடுந்தன்மையையுடைய அரக்கர், வந்து - (உன்னைப் பின்தொடர்ந்து) வந்து, கோலி - (உன்னை) வளைத்துக்கொண்டு, நின்னொடும் - உன்னோடு, வெம் சரம் - கொடிய அம்புகளை, கோத்த போது - தொடுத்து எதிர்த்துப்போர்செய்யும்போது, ஆலம் அன்னவாக்கு அல்லை - விஷம்போன்ற ராட்சசர்களுடன் எதிர்த்துப் போர்செய்யவும் முடியாமல், எற்கு அல்லை - என்னைக்காப்பாற்றவும் முடியாமல், சாலவும் - மிகவும், தடுமாறும் - மனங்கலங்குகிற, தனிமையோய் - தனித்திருக்குந் தன்மையை யுடையவனாவாய்; (எ - று.)

நீ வேறுதுணையின்றித் தனிப்பட்டவனாயிருத்தலால், இடைவழியில் அரக்கரை யெதிர்த்து அழித்தலும், என்மீது அவ்வரக்கரது அம்பு படாமல் என்னை இடையூறின்றிக்காத்தலும் ஆகிய இரண்டையும் ஒருங்குசெய்ய மாட்டாமல் தடுமாறுவாய் என்றபடி. ஆலம் - பிறரைக்கொல்லுந் தன்மையாலும், கருநிறத்தாலும் அரக்கர்க்கு உவமை. மூன்றுமடி - முற்றுமோனை. பி - ம்:—[1]சமர். [2]தகைமை. (கங)

கச. அன்றி யுப்பிறி [1]துள்ளதொன் றாரியன்
[2]வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென் [3]பதம் வஞ்சித்த [4]நாய்களி
னின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ.

(இ - ள்.) அன்றியும் - கீழ்ச்சொன்ன காரண மல்லாமலும், பிறிது ஒன்று உள்ளது - (என்னை எடுத்துச்செல்லக்கூடாமைக்கு) வேறொரு காரணமும் இருக்கின்றது: (அது என்னவென்றால்,—) ஆரியன் - இராமபிரானது வென்றி வெம் சிலை - வெற்றியையுடைய கொடிய வில், மாசு உணும் - (மனைவியை மீட்கவில்லையெனனும்) பழிப்பை யண்டியும் (என்பதாம்; (இப்படி எல்லாவகையாலும் அச்செயலைக் குற்றத்துக்கு இடமாயிருத்தலால்), இனி வேறு நன்றி என் - (அதில்) இனி வேறு என்னநன்மை உளது? பதம் - பக்குவமானசொற்றை, வஞ்சித்த - வஞ்சனைசெய்து எடுத்துக்கொண்டுசெல்கிற, நாய்களின் - நாயகள

[illegible] - பொருந்திய வஞ்சனைதொழிலை, நீயும்—, நினைத்தியோ - நினைக்கக்கடவையோ? (எ - று)—நினைத்தல் சிறிதும் தகுதியன்றென்றதாம்

நீயும், உம்-இராமனுதனுய்சசிறபபுபபெறறுளள நீயுமஎன உயாவு சிறப்புப்பொருளையுந் தரும். இராவணன என்னைப பிறாககுததெரியாது ஒளிசிதது எடுததுவந்ததுபோல நீயும பிறாககுத தெரியாது இஙகிருநது என்னை யெடுததுசசெல்லுதல் இழிதொழிலா மென்பது கருதது. நீ என்னைஎடுத துசசெனறால் அது, அசகாயசூரனை இராமபிரானுககு, 'தன்பொருளைத்தானும் மீடகவலலமையிலலாதவன்' என்ற ஒரு பெரும்பழியை விளைகுமாதலால், தலைவனை அவனுககு இவவாறான பழியை உண்டாக்குதல் துடியனை உனககுத் தகுதியன்று என்று பிராட்டி தடுததன ளெனக. [illegible]ணும் - உடையவன் தனமையை உடைமைமேல் ஏறறிககூறிய [illegible] வழககு ஓகாரம தகுதியின்மை குறித்துநின்றது. பி - ம் —[1]உள்ளதுண்டு [2]வெனற. படுவா. நாயகன். (கச)

கரு. கொண்ட [1]போரினெங் கொற்றவன விற்றொழி
லண்ட ரேவரு நோக்கவென் னுககையைக
கண்ட போரரக் கன்விழி காகங்க
ளுண்ட போதன்றி யானுளெ னுவெனே.

(இ - ள.) கொண்ட போரின்-மேற்கொணடு செயயபபோகிற யுத்ததில், எம கொற்றவன்-எமது தலைவனுகிய இராமபிரானது, வில்தொழில்-வில் தொழிலின் வல்லமையை, அண்டா எவரும - (ஆகாயதது நின்று பேராகாணகிற) தேவர்களெலலாரும, நோகக - பாரததுககொணடிருககையில,—என் ஆககையை கண்ட போர் அரககன விழி - (பதிவிரதையான) எனது உடமபை(க காதல்கொண்டு) நேரகின போரிலவல்ல இராவணனது கண்களை, காகங்கள - காகககள, உண்டபோது அனறி - குததிததின்ற போதலலாமல், யான - நான, உளென் ஆவெனே - உயிருளளவளாவேனே?

எனகுததீங்குஇழைதத இராவணனது தலைகள இராமபிரானது அமபுகளால் அற்றுக கீழுருணடு காகககள குததித்தினறால்தான என்மனத்துயாதணிநது உயிா நிலைபெறுமேயன்றி, அஙஙனமாகாதவரையில மனக கொதிப்பு அடஙகாது; எனது உயிா இருநதாலும இலலாதது போன்றதேயாம என்பது, கருதது சீதையைக காதலகொணடு நோகின இராவணனது கணகட்குத் தண்டனை காகககளாற குததபபடுதலே யென்க பூமியிற போரிகழகையில தேவாகள ஆகாயததில் நின்று அபபோரைக காணுதல, மரபு பி - ம் —[1]போரினுங்கொற்றவன. (கரு)

கசு வெறறி நாணுடை வில்லியர் விற்றொழின்
முற்ற [1]நாணில ரக்கியா மூக்கொடு
மறற [2]நாணின ராயின போதன்றிப்
பெறற நாணமும் பெறறிய தாகுமே.

(இ - ள.) வெற்றி நாண் உடை வில்லியர் - ஜயத்தைத்தருகின்ற நாணியையுடைய வில்லை யேந்திய இராமலக்ஷ்மணர், வில் தொழில் - (தமது) வில்லினால் செயயும் போர்தொழிலை முற்ற - நிறைவேற்ற [போரிற் பகைவர்களையெல்லாம் கொல்வ], (அதனால்), நாண இல் அரக்கியர் - வெட்கங் கெட்ட ராக்ஷசிகளெல்லாம், மூக்கொடும் - (சூர்பணகையின) மூக்கு அறுபட்டதனோடு ஒப்ப; அற்ற நாணினர் ஆயினபோது அன்றி - அறுபட்ட மங்கலநாணையுடையவ ராயினபோ தல்லாமல், பெற்ற நாணமும் - (தான்) இயற்கையாகக் கொண்டுள்ள நாணமென்னுங் குணமும், பெற்றியது ஆகுமோ - பெருமையுடையதாமோ? [ஆகாது என்றபடி]; (எ - று)

நாண என்றது, மற்றைப பெண்குணங்க ளெல்லாவற்றிற்கும் உபலக்ஷணம் நான உத்தம பத்தினியாயின் அரக்கர்கள யாவரும் இராமலக்ஷ்மணரது அம்புகளினால் இறக்கக்கடவ ரென்பது, கருத்து. எனது நாண மற்றை நாணை [அரக்கியரின் மாங்கலியத்தை]ப் பொற்றென்பது, தொனி. எனனொருத்தியை வருத்தியதான பயனாக, அரக்கியரெல்லாம் தம்கணவரை யிழந்து வருத்தமுறக்கடவ ரென்பாள 'அரக்கியர் அற்ற நாணினராயின போதன்றிப்பெற்ற நாணமும் பெற்றியதாகுமோ' என்றாள். அற்ற நாணினர் - வடமொழிநடை; நாணற்றவர் என விகுதிபிரித்துக் கூட்டலுமாம். அரக்கியா மூக்கொடும் அற்ற நாணினர் - முன்னமே அரக்கியருள் ஒருத்தியான சூர்பணகைக்கு மூக்கு அறுபட்டுள்ளது; அதனோடு இப்பொழுது மற்றையரக்கியா யாவர்க்கும் மங்கலநாண அறுபட வேண்டு மென்றபடி: இது, உடனவிற்சியணி. பி - ம் —[1]நாணிம்வரக்கியா. [2]நாணிலரரக்கிய (அ சு)

கஎ. பொறபி றங்க லிலங்கை பொருந்தல
ரெறபு மால்வரை [1]யாகில தேயெனி
னிறபி றபபு மொழுக்கு மிழுக்கமில
கற்பும் யானபிறர்க் கெங்ஙனங் காட்டுகேன்.

(இ - ள) பொன் பிறங்கல் இலங்கை - பொன்மயமான (திரிகூடமென்னும் மலையினமே லுள்ள லங்கா பட்டணம், பொருந்தலா எனபுமால்வரை - பகைவர்களாகிய அரக்கரது பெரிய எலும்பு மலையையுடையதாக, ஆகிலதே எனின் - ஆகாமற்போமே யானால், இல் பிறபும் - (எனது) உயர்குடிப பிறப்பையும், ஒழுக்கும் - நன்னடக்கையையும், இழுக்கம இல் கறபும - வழுவுதலிலலாத கறபுநிலைமையையும், யான —, பிறர்க்கு - அயலார்க்கு, எங்ஙனம காட்டுகேன் - எவ்வாறு காணபிபபேன்? (எ - று)—காணபிக்க வழியிலலையென்றதாம.

அரக்கர்களெல்லாம அழிந்தால்தான் எனதுகுடிப்பிறப்பு முதலியன விளங்கு மென்றாள. 'பத்தினிவதை பொல்லாது' என்ற உலகவழக்கு, இங்கு நோக்கத்தக்கது. வாயுபகவான் வேகமாக மோதி வீழ்த்தித் தள்ளிய பொன்மயமான மேருமலையின் மூன்று சிகரங்களே திரிகூடமலையாயின என்ற

வரலாறுபற்றி, இங்கு 'பொர்பிறங்கல்' எனப்பட்டது பி - ம்·—[1]ஆக்கி யதில்லெனின். (கஎ)

கஅ. அலலன் மாக்க ளிலங்கைய தாகுமோ
வெல்லை நீதத வுலகங்கள் யாவுமென்
சொல்லி னுற்சுடு வேனது தூயவன்
வில்லி னுற்றறகு மாசென்று வீசினேன்.

(இ - ள) அல்லல் மாகக்கள் இலங்கையது ஆகுமோ - (பிறர்ககுத) துன்பஞ்செயயுந தனமையுள்ள ராக்ஷசர்களுடைய இலங்கா புரியை மட்டுமோ? எல்லை நீதத உலகங்கள் யாவும - கணககில்லாத எல்லா வுலகங் களையும், எனசொல்லினுல் - எனது (சாப) வாததையினுலே, சுடுவேன் - எரிததழித்திருப்பேன; அது - அவ்வாறு செய்தல், தூயவன்வில்லின ஆற் றற்கு மாசு - பரிசுதத மூாததியாகிய இராம பிரானது வில்தொழில் வன் மைககுக் குறைவையுண்டாக்கும, என்று - என்று எணணி, வீசினேன் - அவ்வாறு செய்யா தொழிநதேன்; (எ - று.)

அரககர்களை யெல்லாம அழிததுச சிறைமீளும வலலமை எனககு இருந்தும் நான் இராமபிரானுக்கு மேனமை விளைகக வேண்டியே அங்ஙனஞ் செய்யாது அடங்கி யிருததல் போல, உனககு என்னை யெடுததுச செலலும வல்லமை யிருந்தும் நீயும் அடங்கி யிருத்தலே முறைமையாகு மென்று சீதை அநுமானுககுக கூறினளென்க அரககரை அறிவில்லாத மிருகங்கள் போன்றவ ரென்பர், மாகக்கள்' எனறார் (கஎ)

கக. வேறு முண்டுரை கே[1]ளது மெய்ம்மையோ
யேறு சேவகன் மேனியல் லாலிடை
யாறு மைம்பொறி நின்னையு மாணைக
கூறு [2]மிவ்வுருத் தீண்டுதல் [3]கூடுமோ.

(இ - ள) 'மெயமையோய - சத்தியகுணமுடையவனே! வேறு உரை யும் உண்டு - (நீ எடுததுச்செல்லககூடாமைககு) வேறொருகாரணமும உண்டு அது கேள - அதனைககேட்பாயாக (அது என்னவெனின—), ஐம பொறி ஆறும நின்னையும்-பஞ்சேநதிரியங்களும அடங்கி யிருககப்பெறற உன்னையும, ஆண் என கூறும் - ஆணமக னெனறுசொல்லும (இவ்வுலகம), (ஆதலால்), ஏறு சேவகன் - உயாந்த மஹாவீரனுகிய இராமபிரானது, மேனி அல்லால் - திருமேனியைப் (பரிசிபபதே) யல்லாமல், இடை - நடுவில், இ உரு - இநத (உனது) உருவததை, தீண்டுதல் - (நான்) பரிசிததல், கூடுமோ - தகுமோ? [தகாது.]; (எ - று.)

பஞ்சேந்திரியங்ககிரகஞ் செயதவனுயினும் நீயும் ஆணபாலுள் அடங்கினவ னுதலால், பரபுருஷனைததொடுத லென்ற குறறம எனககு உண்டாகுமாறு உன்தோளின்மீது ஏறுதல் தகாது என்பதாம இச செய்யுளினுல், சீதையினது பயிரபபு என்னும மகஉகுணம் இனிது விளங்கும்; (பயிரப்பாவது - தகாதவறறில் அருவருப்புகொள்ளுதல்) இனி, ஏறு சேவகன எனறது - உவமைததொகையாய, ஆணசிங்கம

போன்ற வீரனென்றும் பொருள்படும். "ஏறுசேவகனாகக்" என்றார் பெரியாரும். பி - ம்:—[1]இது. [2]அவ்வுரு [3]கூறுமோ (கக)

உ0 [1]தீண்டு வானெனி னித்தனை சேண்பக
[2]ஈண்டு மோவுயிர் மெய்யி னிமைப்பின்முன்
மாண்டு தீவனென் றேநிலம் வன்மையாற்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான்.

(இ - ள்.) கீழ்மையான் - அற்பகுணமுடைய இராவணன், தீண்டுவான் எனின் - (என்னைத்) தொட்டிருப்பானானால், இத்தனை சேண் பகல் - இவ்வளவு நெடுங்காலம் உயிர் மெய்யின் நாண்டுமோ - (அவனது) உயிர் உடம்பிற் பொருந்தியிருக்குமோ? [இராது, அப்பொழுதே இறந்திருப்பான் என்றபடி]; (அவன் முன்பு என்னை எடுத்துவரும்பொழுது), இமைப்பின் முன் மாண்டு தீவன் என்றே - ('நான் இவளைப் பலாத்காரமாகத் தொட்டால்) நொடிப்பொழுதினுளளே உயிர்நீங்கிவிடுவேன்' என்று எண்ணியே, வன்மையால் - (தனது) வலிமையால், நிலம் கீண்டு கொண்டு எழுந்து ஏகினன் - தரையோடுபெயர்த்து (என்னை) எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றான்; (எ - று)—சீதை தான் பரபுருஷனைத் தீண்டுதல் தகாதென்றதன்மேலானாகும் ஐயத்தை இச்செயலினால் நீக்குகின்றாள்

இனி, இக்கவிக்கு - என்னை இராவணன் தொட்டிருப்பானானால் இத்தனைநாள் என்னுயிர் உடம்பில் தங்குமோ? என்னை வலியத்தொட்டால் நான் உயிர்விடுவேனென்று எண்ணியே அவன் என்னை நிலத்தோடு கொண்டேகினன் என்றும் உரைக்கலாம். பிறர்மனைவியை நயக்கும் பாவமுடையானாதலின், இராவணனை 'கீழ்மையான்' என்றாள். பி - ம் —[1]தீண்டினேனெனில். [2]ஈண்டுமேயுயிரென்னில். (உ0)

உக மேவு சிந்தையின் மாதரை மெய்தொடிற்
றேவு வன்றலை சிந்துக [1]தீதெனப்
பூவின் வந்த புராதன னேபுகல்
சாவ முண்டென தாருயிர் தந்ததால்.

(இ - ள்.) 'மேவு சிந்தை இல் மாதரை - தன்னைத் கூடவிரும்புகிற எண்ணமில்லாத பெண்களை, மெய் தொடின் - (இராவணன் பலாத்காரமாக) உடம்பைத் தொடுவானானால், தீது - அக்குற்றத்திற்காக, தேவு வல் தலை - தெய்வத்தன்மையையுடைய (அவனது) வலிய (பத்துத்) தலைகளும், சிந்துக- (மீண்டும் முளையாதபடி) சிதறிவிடுவனவாக,' என - என்று, பூவின் வந்த புராதனனே புகல் - (திருமாலின் நாபித்) தாமரை மலரில் தோன்றிய பழமையான பிரமதேவன்தானே சொல்லியுளள, சாவம் - சாபம், உண்டு - (இராவணனுக்கு) உளது; (அச்சாபம்), எனது ஆர் உயிர் தந்தது - எனது அரிய உயிரைப் (போக்கவொட்டாது) காத்து நின்றது; (எ - று)—இதனால், இராவணன் நிலத்துடன் கீண்டு கொண்டெழுந்ததற்குக் காரணங் கூறினாள். ஆல் - ஈற்றசை.

அசசாபமில்லாவிட்டால் என்னை அவ்விராவணன் கற்பழிக்க முயல்வானாதலால், யான் அப்பொழுதே உயிரீத்திருப்பேனென்றதாம். இராவணனது தலைகளுககுத தெய்வத்தன்மை - அறுக்க அறுககப் பிரமனது அநுகிரகததால் மீண்டும் முளைததல் திருமாலினது சஙகல்பத்தால் அவனது திருநாபியினின்று உணடான தாமரைமலரிற் பிரமன் தோன்றினனென்பது, நூற்கொளகை. பிதாமக னெனனும் ஒருபெயர்பறறி, பிரமனை புராதனன்' என்றார். புராதனன், சாபம் - வடசொற்கள். முன்னொருகாலத்திலே பிரமனை வந்தனஞ் செய்யுமபொருட்டு அவனது இருப்பிடததைக்குறிததுச சென்றுகொணடிருந்த புஞ்சிகஸ்தலை யென்னும அப்ஸரஸ்திரீயை ஆகாசமார்க்கததிலே கணணுற்ற இராவணன் அவளைக் காதலித்து வலியக்கற்பழிக்க, அஙகனம் கலஙகினநிலையோடு பிரமனிருக்கையைச்சார்ந்த அவளை நோக்கின நான்முகக்கடவுள் நிகழ்ந்ததை யுணர்ந்து கடுகுகோபகொணடு இராவணனைக்குறிதது 'இனி நீ அயல்மாதை வலியக் கற்பழிபையாயின், அப்பொழுதே உன்தலை நூறுகப்பிளந்து அழிக' எனச சபிததிட்டன னென்ற வரலாறு இஙகு உணரத்தக்கது. இதனை ஸ்ரீ வால்மீகிராமாயணத்து யுதத காண்டத்தில் பதின்மூன்றுஞ சருககததிற காணக இராவணனுக்குமுன் வலியற்றவனும் இராவணனுககு மகன் முறையாகிறவனுமான நளகூபரனும் அவனது காமக்கிழததியான ரமபையும் சபித்த சாபககள் இராவணன் விஷயத்திலே பலிககமாட்டாதனவாக, அவற்றைப் பொருள்செய்யாமல் இராவணன் புஞ்சிகஸ்தலையைப்பலாதகரித்து அதன்பின் பிதாமககடவுளிட்ட சாபத்திற்கே அஞ்சுவானாயின னென்பதையும் அறிக. பி-ம்.—[1]தீர்ந்தென.

உ௨. அன்ன சாப முளதென [1]வாணமையான்
மின்று [2]மௌலியன் மெய்ம்மையன் வீடணன்
கனனி யென்வயின் வைத்த [3]கருணையாள்
சொன்ன துண்டு துணுக்க மகற்றுவாள்.

(இ - ள்.) அன்ன சாவம் உளது என - அப்படிபபட்ட சாபமொன்று (இராவணனுக்கு) உணடென்று,—ஆணமையான் - பராககிரமமுள்ளவனும், மின்னும் மௌலியன் - ஒளிவிளங்குகிற கிரீடத்தை யுடையவனும், மெய்ம்மையன - சததியததை யுடையவனுமாகிய, வீடணன் - விபீஷணனது, கன்னி - மகளாகிய திரிசடை, என்வயின் வைதத கருணையாள் - என்னிடம் வைதத அருளையுடையவள், துணுககம் அகற்றுவாள் - (எனது) அசசத்தைப போகுகுபவளாய, சொன்னது—, உணடு—; (எ-று) —இராவணனுக்கு நேர்ந்துள்ள சாபவரலாற்றைத தான் அறிந்தவகையைச சீதை இதனாற் கூறினாள்.

ஆண்மையான் என்றதில், இலங்கையை யாளுதறகு உரியவனென்ற ஒருபொருளும் தொனிககும்; இஙகனம் எதிர்காலவரலாற்றை உய்ததுணரவைத்தல், மகாகவிகளின் இயற்கை. வீடணன்=வீபீஷணன்; இவன், இராவணது இறுதித்தம்பி; மிகக நற்குணமுடையவன்; வலி

யக் கவர்ந்துவந்த சீதையை விட்டுவிடுமபடி தான் பலவாறு நல்லறிவு கூறியும் இராவணன் கேளாமையால், இவன் அவனைத் துறந்து இராமபிரானைச் சரணமடைந்து இராவணவதத்தின்பொருட்டு அப்பிரானுக்குத் துணையாய் நின்றனன்; விபீஷணன்என்ற சொல் - (பகைவாக்குப்) பலவாறு பயங்கரனாகவுள்ளவனென்று பொருள்படும்; இனி, பயங்கரனல்லாதவ னென்று உரைத்தலு மொன்று. வீடணனுடைய கன்னியின் பெயர், திரிசடையென்பது. இவளும் இவளதுதாயும அரக்கியராற் சீதை வருத்தப்படுகையில் அவட்குத் தேறறரவுகூறி உற்ற துணையாயிருந்தனரென்க. பி - ம்:— [1]ஆணையால். [2]மௌலியவீடணன்மேன்மையான். [3]கருணையால். (உஉ)

உங. ஆய துணைமையி னானு மதன்றெனின்
மாய்வென் மன்ற வறமவழு வாதென்று
நாய கன்வலி யெண்ணியு நானுடைத்
தூய்மை காட்டவு மிதுதுணை தூங்கினேன்.

(இ - ள்.) ஆயது உண்மையின் - அந்தச்சாபம் உள்ளதனால்,—நானும்—,—அறம் வழுவாது என்றும் - தருமம (ஒருபொழுதும) தவறாதென்று துணிவுகொண்டும, நாயகன் வலி எண்ணியும் - இராமபிரானது பராக்கிரமத்தை நோக்கியும், நான் உடை தூய்மை காட்டவும் - நான்கொண்டுள்ள (கற்புநிலையின்) பரிசுத்தியைத தெரிவிக்கவுமே, இது துணை தூங்கினேன்—இவ்வளவுகாலம் உயிரோடு தங்கினேன்; அது அன்று எனின் - அச்சாபமில்லாவிட்டால், மன்ற - நிச்சயமாக, மாய்வென் - முன்னமே இறந்திருப்பேன்; (எ - று.)

இதுமுதல் மூன்றுகவிகளால், சீதை தான் கற்புநிலையில் உறுதிகொண்டிருந்ததை, அநுமான் இராமபிரானிடத்துத் தக்க சமயத்திற் சொல்லக் கூடுமென்ற நோக்கததுடன் கூறுகின்றாள். நானும என்ற உமமை - கணவனைப்பிரிந்து உயிரபிழைக்குந்தன்மையில்லாத மகாபதிவிரதை யென்ற பொருளைத் தருதலால, உயரவுசிறப்பு. மன்றஎன்னும் இடைச்சொல், தெளிவுப்பொருள்குறிக்கும். (உங)

உச. ஆண்டு நின்று மரக்க னகழ்ந்துகொண்
டீண்டு வைத்த திளவ லியற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி யையநின் மெய்யுணர் கண்களால்.

(இ - ள்.) ஆண்டுநின்றும - அததண்டகாரணியத்தினின்றும், அரக்கன்- இராவணன், அகழ்ந்து கொண்டு - (நிலத்தோடு) பேர்த்து எடுத்துக்கொண்டு வந்து, ஈண்டு வைத்தது - இவ்விலங்கையில வைத்த இவ்விடம், இளவல் இயற்றிய நீண்ட சாலையொடும - இளையபெருமாள (அங்கு) அமைத்த பெரியபாணசாலையினுடனே, நிலை நின்றது - பொருந்தியுள்ளது; ஐய-சிறந்தவனே! மெய் உணர் நின் கண்களால் - உண்மையைக் கண்டறியவல்ல உனது கண்களைக்கொண்டு, காண்டி - (இதனைப்) பார்ப்பாயாக; (எ - று.)

இதனால், இராவணன் தனனை நிலததோடுபேர்த்து எடுததுவந்தானென்றதைச சீதை அநுமானுக்குக் கணகூடாககாட்டினளென்க சாலை - பர்ணசாலை. (உ௪)

உரு. தீர்வி லேனிதொ ருபக லுஞ்சிலை
வீரன் மேனியை மானுமிவ வீங்குநீர்
நார் நாண்மலர்ப பொயகையை நண்ணுவேன்
சோரு மாருயிா காக்குந் துணிவிலை.

(இ - ள்.) இது - இவ்விடததை, ஒரு பகலும - ஒருபொழுதும், தீரவு இலேன் - (யான) விட்டுநீஙகுகிறே னில்லை; சிலை வீரன் மேனியைமானும் - கோதணடதததையுடைய சுத்தவீரனாகிய இராமபிரானது திருமேனியை ஒத்திருக்கிற, இ - இநத, வீஙகு நீர் நாரம - மேலெழுகின்ற தன்மைகொணட நீரையுடைய, நாள் மலா-புதிய [அன்று மலாந்த] தாமரைப்பூக்களையுடைய, பொய்கையை - தடாகத்தை, சோரும் ஆஉயிா காககும துணிவிலை-தளர்கிற எனதுஉயிரைக காததலவேணடுமெனற எணணததினால், நணணுவேன் - (சிறசிலகாலததில) அடைவேன; (எ - று.)

நான் இந்தஇடததைவிட்டு எஙகும செலவதில்லை; சிற்சிலசமயஙகளில் உயிரழியாமலிருக்குமபொருடடு நீபருகுதறகும இளைபபாறுதற்கும் இகுளத்துககுமாததிரம வருவதுணடு; இந்தக்குளம இராமபிரான் திருமேனியின் தன்மையைத தான்காட்டி எனதுதுயரததைசசிறிது ஆற்று மாதலாலும் இதனை நணணுவேன் என்று ளெனக. "வாய் கண கை யுந்தி பதம் கோகனகம்" எனறபடி திருககணகள் திருககைகள திருவடிகள் திருநாபி முதலிய பல உறுப்புகள்போலத தாமரைமலாஇருக்க, பசுஞ்சாமத திருமேனி நிறததைத தெளிவான நீரும அதிலுள்ள தாமரையிலைகளும போலுதலால், 'வீரன்மேனியைமானும வீஙகுநீரநாரநாணமலாப்பொய்கை' எனபபட்டது. இராமபிரானது திருமேனிககு உபமானபபொருளாகிய மலாப பொய்கையைமாறாக இஙகு உபமேயமாக்கியது, எதிரிநிலையணி. (உரு)

உ௬. ஆத லானது [1]காரிய மன்றைய
வேத நாயகன் பாலினி மீண்டனை
போதல் காரிய மென்றனள் [2]பூவையக்
கோதி லானு மினையன கூறினன்.

(இ - ள்.) ஆதலான் - ஆகையால், அது - (நீ செய்யநினைதத) அத தொழில, காரியம அன்று - செயயததக்கதனறு; ஐய - ஐயனே! இனி—, வேதம நாயகன்பால் - வேதகைட்குததலைவனாகிய இராமபிரானிடத்தில், மீண்டனை போதல் - (நீ) திருமபிசசெல்லுதலே, காரியம - செய்தொழிலாம, என்றனள் - என்றுகூறினள்: (யாவளெனின,—) பூவை - கிளிபோன்ற பிராட்டி; (அதுகேட்டு), அ கோது இலானும - குறறமில்லாத அவ்வநுமானும, இனையன கூறினன் - இவறறைச சொல்வானானான்; (எ - று.)— அவற்றை, அடுததகவிகளிற் காணக.

'அது' தன்னை அநுமான் தன்தோளின்மீது எடுத்துக்கொண்டு செல்வது. செவிக்கு இனிய சொல்லுடைமையில் பூவை உவமம். கோதுஇகுப் பிராட்டியின் கட்டளையைக கடத்த லென்னலாம். பி - ம்:—[1]அன்றையகாரியம். [2]பூவையைக் (உசு)

உஎ.—அநுமான் சீதையின்வார்த்தையை அங்கீகரித்துச் சொல்லுதல்.

நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
றன்று ணைப்பெருந் தேவி தவத்தொழி
லென்று சிந்தை களித்துவந் [1]தேத்தினு
னின்ற சங்கை யிடரொடு நீங்கினான்.

(இ - ள்.) நின்ற சங்கை - (மனததிற்) கொண்டுள்ள சந்தேகமும், இடரொடு - (அதனாலாகிய) துன்பமும், நீங்கினான் நீங்கினவனாகிய அநுமான்—, (சீதையை நோக்கி), 'இ உலகு உடை நாயகன் தன் - இந்த உலகங்களெல்லாவற்றையும அடிமையாகவுடைய தலைவனாகிய இராமபிரானது, துணைபெருந் தேவி - (இல்வாழ்க்கைக்குத்) துணையாகிய சிறந்தமனைவியாகிய சீதா தேவியே! தவம தொழில் - (உனது) தவசசெய்கை, நன்று நன்று - மிகவும் நன்றாயுள்ளது!' என்று - என்று வியந்துகூறி, சிந்தை களித்து உவந்து - மனம் மிகவும் களிக்கப்பெறறு, ஏத்தினான் - (பிராட்டியை) மிகுதியாகக் கொண்டாடிக் கூறினான். (எ - று)

நன்று நன்று - அடுக்கு, உவகைபற்றியது. பெருந்தேவி - பருவத்தாலும் ஒழுக்கத்தாலும் நற்குடிபபிறப்பாலும இராமபிரானது பெருமைக்குத் தகுதியான தேவீ யென்றபடி. 'ஒருசிறுதேவியுடைடாய்ப் பெருந்தேவியென்கிறதன்றே; பெருமாள் ஏகதாரவ்ரத ராகையாலே' என ஆன்றோர் அருளிச செய்த விசேடவுரை இங்கு அறியத்தக்கது. சீதைககுத் தவமாவது - இராமபிரானையே எபபொழுதுய இடைவிடாது மனததிற் கொண்டிருத்தல்; கறபொழுக்கமுமாம். இனி, முனனிலையிற படாகமைவநத இடவழுவமைதியாகக கொண்டு, பெருந்தேவியாகியஉனது தவததொழில் எனக்கூறினுமாம். அநுமான சிந்தை மிகஉவந்தது, தான் பிராட்டியைக் கற்புநிலையிற் சிறிதுங் குறைபாடில்லாதவளாகக் கண்டமைபற்றித தான் பட்டபாடு முழுதும் இராமபிரான்திறத்து வீணாகாது ஸபலமா முடிந்ததென்பதை எணணியதனாலென்க. பி - ம்:—[1]எய்தினான். (உஎ)

உஅ.—அநுமான் சீதையைத் தேற்றி 'இராமபிரானிடம் சொல்ல வேண்டுவது யாது?' என்று வினவுதல்.

இருளு ஞால மிராவண னுலிது
தெருளு நீயினிச சில்பக [1]றங்குறின்
மருளு [2]மன்னவற் கியான்சொலும் வாசக
மருளு வாயென் றடியி னிறைஞ்சினான்.

(இ - ள்.) 'நீ—, இனி சில் பகல் தங்குறின் - இன்னும் சிலநாள் மாத்திரம் [இராமபிரான் செய்திதெரிந்து இங்குவரும்வரையில் (இங்கே)

தங்கியிருந்தால்,—இராவணனால் இருளும இது ஞாலம - இராவணனால் (நலலொழுககங்கெடடு) இருளடைந்திருககிற இவ்வுலகமுழுதும, தெருளும்- தெளிவுபெறும; மருளும மனனவறகு - (உனனைபபிரிநததனால்) மயககங் கொணடிருககிற இராமபிரானுககு, யான சொலும் வாசகம் - யானபோய்ச சொல்லவேணடும வாத்தையை, அருளுவாய - (நீ) சொலலியருள்வாயாக என்று - எனறு (பின்னும) விணணப்பித்து, (அநுமான்), அடியின் இறைஞ் சினான - (அச சீதாபிராட்டியினது) திருவடிகளில் விழுநது வணங்கினான்

இனனம சிலநாளைககுள இராமபிரான லக்ஷ்மணனோடும வாநர சைநியத் தோடும இவ்விலங்கைககு வநது ராக்ஷசங்காரஞ்செயது, இராவணனால் அழிபபுணட தருமததையும் உலகததில் நிலைநிறுததுவான்; அவன் வருமள வும நீ பொறுததிருககவேணடும எனபது, முனனிரணடடிகளின் கருத்து. 'இராவணவதம விரைவில் நடககும' எனக கூறவேணடியவிடத்து அதன் பயனாகிய உலகம தெருளுதலைக கூறினது, காரணததைக காரியமுகததாற கூறிய பிறிதுமொழிதலெனனும அணியாம். பி - ம்—[1]தீங்குறல் [2]மனனறகு யானசொல்லும். (உஅ)

உகூ.—இதுழதற் பத்துக் கவிகள் - ஒருதொடர்: சீதை அநுமானைநோக்கிக் கூறியவை.

இன்னு மீணடொரு திங்க ளிருபபல்யா
னினனை நோககிப [1]பகாந்தது நீதியோய்
பின்னை [2]யாவி பிடிககினறி லேனந்த
மன்ன னாணை யிதனை மனக்கொணீ

(இ - ள) நீதியோய் - நனனெறியுடையவனே! இனனும ஒரு திங்கள- இன்னமும ஒருமாச காலம், யான், ஈணடு இருப்பல் - இவ்விலங்கையிலே உயிரோடிருப்பேன்; (அதறகுள் இராமபிரான இங்கு வராவிடின்), பின்னை- அதன்பினபு, அநத மனனன் ஆணை - அந்த இராமபிரான்மேல் ஆணை! ஆவிபிடிககினறிலேன் - உயிரவைததிருககமாடடேன்; நின்னை நோககி பகாநதது - உனனைபபார்த்தது (நான) சொனனதாகிய, இதனை - இவ்வாத தையை, நீ—, மனம கொள - மனததிற பதியவைப்பாய, (எ - று)

'பின்னை யாவி பிடிககின்றிலேன்'—''மாஸாதூர்த்வம நஜீவிஷ்யே'' என்ற முதனூலின் மொழிபெயர்பபு தானகொணட கருததின் உறுதியை வறபுறுதத, 'ஆணை' எனச சபதமிட்டுக கூறினாள், இதனை மனககொள - ஒருமாசமகழிநதபிறகு நான உயிரவைததிரே னெனபதை மறவாமல் இராம பிரானிடத்து விணணபபிகக வேணடு மெனச சீதை வேணடியபடி. பி-ம் — [1]பகாநதபின். [2]யாககைபிடிககின்றிலேனென்றன் (உக)

ஙூ0. ஆரந தாழதிரு மார்பற கமைந்ததோ
தாரந் தானல லேனுந் தயாவெனு
மீரந தானகத் திலலையென் றாலுந் [1]தன
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்,

(இ - ள்.) (யான்), ஆரம் தாழ் திரு மார்பறகு - மாலைகள்தொகைப பெற்ற அழகிய மார்பையுடைய இராமபிரானுககு, அமைந்தது - ஏற்றவளாகிய, ஓர் தாரம் தான அலள் எனும்-ஒருமனைவி யல்லளாயினும், தயா எனும ஈரம் கான் அகதது இல்லை என்றாலும் - (என்னைப்பறறித்) தயையென்கிற குளிரசசி (அவ்விராமபிரானது மனத்தில்) இல்லையாயினும், தன் வீரம காத்தலை-தனது வீரதகன்மையை(ததவறுபடாமற) காப்பதையாயினும், வேணடு - விருமபுவாயாக, என்றுவேணடுவாய - என்றுசொல்லி (அவனை கான் பிராததித்ததாகப்) பிராததிபபாய்; (எ - று.)

இராமபிரான் இதுவரையிலுஙு தன்னைச சிறைமடகவில்லை யென்ற சிததினுல், சீதை இஙஙனம கிட்ரேமாகக் கூறின ளென்க. 'ஆரகதாழ் மாரபன்' என்றது வனததுக்குவருவதன முன்னுளள நிலைமையைக கருதி தாரம்என்ற சொல்லின தனமைக்கு ஏறப, 'அமைநதது' என அஃறிணையாற கூறினது பி - ம்:—[1]நல். (ஙூ0)

ஙூக. ஏத்தும் வென்றி யிளையவற கீதொரு
வாரத்தை கூறுதி மனனரு ளாலெனைக்
[1]காததி ருந்தவற கே[2]கட [*]னேனறிடை
கோதத வெஞ்சிறை வீடென்று கூறுவாய்.

(இ - ள்.) ஏத்தும வென்றி இளையவற்கு - (யாவராலும்) கொணடாடப் படுகிற வெறறியையுடைய லகஷமணனுககு, ஈது ஒரு வாரததை - இவ்வொரு வாரத்தையை, கூறுதீ - சொலவாய. (அது எனனவெனறால்,—) மன் அருளால் - பெருமையையுடைய இராமபிரானது கட்டளையால், என்று - காவல் தொழிலைமேற்கொணடு, எனை - எனனை, காத்து இருநதவறகே - (பஞசவடியிற்) காவலசெயதுகொணடிருநத அவ்விலக்குமணனுககே, இடை கோத்த வெம சிறை வீடு - நடுவில்நேர்நத கொடிய சிறையினின்றும் (என்னை) விடுவிததல், கடன் - கடமையாம, என்று—, கூறுவாய - சொல்லிவேணடுவாய்.

இராமபிரான் சீதையின்வேணடுகோளின்படி மானின்பின்னே சென்ற போது இலகுமணன் சீதையைக் காகக உடன்பட்டிருந்தன னென்க. 'மன்னருளால் என்று எனைகாததிருந்தவறகே (இப்பொழுதும் காத்தல்) கடன, (ஆதலால்) இடைகோத்த வெஞ்சிறையினின்றும் (என்னை), வீடு - மீட்பாயாக' என்று கூறுவாய் என்றும உரைககலாம. பி - ம்:—[1]காததிருந்ததறகே [*]கடனின்றிடை, கடனென்றிடை (ஙூக)

ஙூஉ திங்க ளொன்றினென் செய்தவந் [1]தீர்ந்ததா
லிங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாறறங் கரை[2]யடி யேறகுததன்
செங்கை யாறகடன் செய்கென்று செப்புவாய்.

(இ - ள) திஙகள ஒன்றின - இன்னும ஒருமாசகாலத்தோடு, என் செய தவம - யான் கொணடுள்ள விரதம், தீர்ந்தது - முடிந்துவிடும; அல் - ஆதலால், (அவ்வொருமாதக்கிரகன்) இஙகு வந்திலனே எனின்

(அவ்விராமபிரான்) இங்கு வராமறபோவானே யாஞல், யானா நீர் கங்கை யாறு அம கரை-புதுவருவாய்நீரை யுடைய கங்காநதியின் அழகியகரையிலே, அடியேற்கு - (தனது) அடியவளாகிய எனக்கு, தன் செமகையால - தனது சிவந்த கையினுல், கடன செயக - செயயவேணடிய அந்திமகிரியைகளைச செய்து முடிபபாயாக, என்று —, செபபுவாய - (இராமபிரானுக்கு நீ) சொல்வாய்; (எ - று)

ஒருமாசததிறகுள அவன்வாராஞயின் தான் உயிரவிடுதல் திணண மென்பதை இவ்வாறு சீதை உறுதியாககூறினுள். யாணர் - அழகுமாம. செய தவம் - ஒருமாசகாலம உயிர பிழைததிருப்பதாகக கொணட கொள்கை. கடன் - நீரககடன, தர்ப்பணம்; ஜலாஞ்சலி யெனப்படும். பி - ம்·—[1]தீர்த லால் [2]அடியேறகுந் (ருஉ)

ருரு. சிறக்கு மாமியா மூவர்க்குஞ சீதையாண்
டிறககின் ருடொழு தாளெனு மினனசொ
லறத்தி ஞயகன் பாலருளினமையான்
மறக்கு மாயினு நீமற வேலையா.

(இ - ள்.) ஐயா - ஐயனே! அறததின் நாயகன்பால - தருமதத்துக்கு தலைவனுகிய இராமபிரானிடதது, அருள இனமையால் - (என்னைககாபக வேணடு மென்னுங) கருணை பில்லாமையால, மறககும ஆயினும - (அவன் என்னை) மறநதுவிடுவாஞஞலும, சிறககும மாமியா மூவாககும - சிறநத (எனது) மாமிமாரு மூனறு போககும, சீதை—, ஆணடு இறககினருள - இலங்கையில் மரணமடைகின்றவள, தொழுதாள - (அப்பொழுது உங்களை) வணங்கினுள்,' எனும - எனகிற, இன்ன சொல் - இந்தவாரததையை, நீ மறவேல் - நீ (சொல்ல) மறகாதே; (எ - று)

இராமபிரான எனவாசகங்கழிதது அயோததிசோகையில், அவன் என் மீது அருளில்லாமையால எனனைபபறறிக கருதாஞயினும, நீயாவது என் மாமிமாரிடத்து எனது வணகக்ததைத தெரிவிககவேணடுமென்று சீதை அநுமானை வேணடியபடி மாமியா மூவா - கோசலை, சுமித்திரை, கைகேயி என்பவா. இங்கே 'அறததின்நாயகன்' என்றது, தன்னை உபேக்ஷித்ததமையா லாகிய துயரம காரணமாக வநத வெறுபபுப்பற்றிப போலும. (ருரு)

ருச. வந்தெ னைக்கரம பறறிய வைகலவா
யிந்த விபபிற விக[1]கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேனெனற செவ்வரந
தந்த வாரததை திருச்செவி சாற்றுவாய.

(இ - ள்.) வந்து - (மிதிலாநகரததுக்கு) வந்து, எனை கரம பற்றிய - என்னை மணஞசெயதுகொணட, வைகல்வாய் - அநநாளில், 'இநத இ பிறவிககு - இவ்வுலகததில் எடுதத இபபிறப்பில், இரு மாதரை - (உனனை யன்றி) இரணடாமவளான ஒருததியை, சிநதையாலும தொடேன் - மனத்தினுலும் எணணேன்', என்ற,—செம் வரம - நல்லவரததை, தந்த-

(எனகருக்) கொடுத்தருளிய, வார்த்தை - செய்தியை, திரு செவி - (இராம பிரானது) திருச்செவிகளில், சாற்றுவாய - (நீ) சொல்வாயாக; (எ - று)

தான் பிறன்கைப்பட்டமைபற்றி இராமபிரான் ஒருகால் தன்னை உபேக்ஷித்து வேறுமணஞ்செய்துகொள்வனோ வென்னும் ஐயத்தினால், சீதை அப்பிரான் முன்கூறியுள்ள வார்த்தையை அறிவுறுத்துமாறு அநுமானுக்குக் கூறினள். கல்யாணத்திற்கு 'பாணிகிரகணம் [கைபிடித்தல்], என ஒரு பெயருள்ளதனால்' மணஞ்செய்துகொண்ட என்ற பொருளில் 'கரம்பற்றிய' என்றாள். சிந்தையால் தொடுதல் - எண்ணுதல்; அதனையும் செய்யேனெனவே உடமையினால் தீண்டாமை சைமுதிக நியாயத்தால் தானே பெறப்படும். பி - ம்.—[1]இனி (௩௪)

௩௫ ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினு
மீண்டு வந்து பிறந்துதன் மேனியை
தீண்ட லாவதொர் தீவினை தீர்வரம
வேண்டி னாடொழு தெனறு விளம்புவாய்.

(இ - ள்) நான்—, ஈண்டு இருந்து - (இராமபிரானாற் சிறை மீட்கப்படாமல) இவ்விலங்கையிலேயே இருந்து, இன உயிர் மாயினும் - இனிய உயிர் நீங்கப்பெறினும், மீண்டு வந்து பிறந்து - மற்றொரு சன்மமெடுத்து (இவ்வுலகத்திலே) வந்து தோன்றி, தன மேனியை - அப்பிரானது திருமேனியையே, தீண்டல ஆவது - தழுவுமபடியான, ஓர் தீவினை தீர் வரம - குற்றம் நீங்கிய தொருவரத்தை (த தருமபடி), தொழுது வேண்டினள - (சீதை) நமஸ்கரித்து வேண்டிக்கொண்டாள, என்று—, விளமபுவாய - (இராமபிரானிடத்து) விண்ணப்பிப்பாயாக; (எ - று.)

"மன்னவனே யிப்பிறப்பிற கண்டுமணந்திலனே, லின்னமொரு பிறப்பி லானுமு மேழையேன், தனனந்தனியேயிருந்து தவமாறறியுமுன், பொன்னகல முளளுருக்க புலவாதொழிவேனோ' என்ற பாடல இங்கு ஞாபகத்துக்கு வருகின்றது. (௩௫)

௩௬. அரசு வீற்றிருந் தாளவு மாய்மணிப்
புரசை யானையின் வீதியிற் [1]போகவும்
விரசு கோலங்கள் காண விதியிலே
[2]னுரைசெய் தென்னையென னூழ்வினை யுன்னுவேன்.

(இ - ள்) வீறறிருந்து - (இராமபிரான்) சிறப்புடன இருந்து, அரசு ஆளவும் - இராசசியத்தை ஆட்சிசெய்யவும,—ஆய மணி - ஆராய்ந்தெடுத்த [சிறந்த] மணிகளையும, புரசை - கழுத்திடுகயிறறையுமுடைய, யானையின் - பட்டத்துயானையின்மேல் (ஏறி), வீதியில் போகவும் - (அயோத்தியாபட்டணத்து) வீதிகளிற பவனிவரவும்,—விரசு கோலங்கள - (அப்பொழுதப் பொழுது) கொள்ளுகின்ற திருக்கோலங்களை, காண - கண்டுகளித்தற்கு, விதி இலேன் - நலவினையில்லாதவளான யான், உரைசெய்து என்னை - (பலவாறாதைகள) சொலலிப பயன் என்ன? என் ஊழ் வினை உன்னுவேன்- யான் முன் செய்துள்ள விதியை நினைத்து வருந்துவேன்; (எ - று)

ஆளவும், போகவும், காண, விதிஇலேன் என இயைக்க. இராமபிரான் மீண்டு அயோத்திசேர்ந்து அரசாளுதலைமேற்கொண்டு பலவகைச்சிறப்புகளையும் அனுபவிப்பதலைக் கண்டுகளிக்கும் நல்வினையை முற்பிறப்பிற்செய்யாது 'என்னைச் சிறைமீட்கவில்லை' என்று யான் பலவகையாகப் பிறர்மீது குற்றங் கூறுவதிற் பயனில்லையெனச் சீதை தன் விதியைநொந்து கூறியவாறு புரைச - யானைக்கழுத்திடுகயிறு பி - ம்.—[1]போதவும். [2]விரைசெய.

கஎ தனனை நோக்கி யுலகந் தளர்தற்கு
மனனை [1]நோய்க்கும் பரதன்[2]ங் காற்றுறு[3]
மினன னேயகுமங் கேகுவ தன்றியே
யென்னை நோக்கியிங் கெங்ஙன மெய்துமோ.

(இ - ள்) (இராமபிரான்),—தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும், தன்னை [தான் நகரத்தைவிட்டு வனத்துக்கு வந்ததை]க் குறித்து உலகத்தார் வருந்துதற்கும், அன்னை நோய்க்கும் - தாயினது துன்பத்துக்கும், பரதன் அங்கு ஆற்றாதும் இன்னல் நோய்க்கும் - பரதாழ்வான் நந்திகிராமத்தில் அனுபவித்துவருகிற துன்பமாகிற மனோவியாதிக்கும், (ஆகிய இவற்றையெல்லாம் தீர்க்கும்பொருட்டு), அங்கு ஏகுவது அன்றியே - அயோத்திக்குச் செல்வதே யல்லாமல், என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ - யான் ஒருத்தி படுந்துன்பத்தை நினைத்து இவ்விடத்திற்கு எவ்வாறு வருவனோ? [வரமாட்டான் என்றபடி], (எ - று)

ஒவ்வொன்றே போதுமான பலகாரணங்க ளுள்ளதனால், இராமபிரான் இங்குவாராது அயோத்திக்கே செல்வ னென்று சீதை சங்கையுறாக கூறினளென்க. 'பரதனங்காற்றுறு மின்னல்நோய்' என்றது, "ஆமெனி லேழிரண்டாண்டி லையமீ, நாமமீர் நெடுங்கார் நண்ணி நானிலங், கோமுறைபுரிகிலே யென்னிற் கூறெரிச, சாமிது சரத நின்னாணை சாற்றினேன்" என்று சபதஞ்செய்து பரதன்தானும் இராமபிரான்போலவே தவவேடங்கொண்டு அவனது வரவை எதிர்நோக்கி வருந்ததோடிருத்தலை. பரதன் - பாரமுடையவன்; பரம - பாரம்; லௌகிகவைதிக காரியங்களை நிர்வகிக்கவல்லவனென்பது கருத்து. இராசசியபாரத்தை இராமபிரான் திருவடிநிலைக்குச் சூட்டி யாண்டவனெனறுங் கொள்ளலாம். இனி, இராமன் வனத்தில் வசிக்கையில் தசரதனும் இறந்துபோக அராஜகமாயப்போன இராசசியபாரத்தைப் பரிக்கும் வல்லமையுடையானென்று ஞானதிருஷ்டியால் முன்னமே புணர்ந்தவசிஷ்டரால் இப்பெயர் தசரதன் புத்திரனான இவனுக்கு இடப்பட்டது என்றுங் கூறுவர். அன்னை - கௌசல்லை பி - ம்:—[1]நோக்கி. [2]மயங்குறும். [3]நோக்கியுமேகுவதன்றியிங்கு, [4]நோக்கினன் (கஎ)

வேறு.

கஅ. எந்தையாய முதலிய கிளைஞ ரார்க்குமென்
வந்தனை [2]விளம்புதி கவியின மன்னனைச்

சுந்தரத தோளனைத் தொடர்ந்து காதலுப்பொ
யந்தமி னெடுநகாக் கரசனுக கெனபாய.

(இ-ள்) எந்தை-எனது தந்தையான ஜனகமகாராசனும், பாய - தாயும், முதலிய - முதலான, கிளைஞர் யார்க்கும் - சுற்றத்தவரா எல்லாருக்கும், என் வந்தனை-எனது வணக்கத்தை. விளம்புதி-சொல்லவாயாக; கவியின்மன்னனை-வாரமகட்கு அரசனான சுக்கிரீவனை நோக்கி, சுந்தரம் தோளனை - அழகிய திருத்தோள்களையுடைய இராமபிரானை, தொடர்ந்து - விடாதுபின்தொடர்ந்து. காதலு - காப்பாற்றிக்கொண்டு போய்—, அந்தம் இல் நெடுநகாகக - (பகைவரால்). அழிதலில்லாத பெரிய அயோத்தியாபுரிக்கு, அரசன் ஆக்கு-அரசனாக முடிசூட்டிவைப்பாய், எனபாய - என்று சொல்லவாயாக; (எ - று.)

கவியின்மன்னனை என்பாய என இசைக்க. சுந்தரத்தோளன - ஸுந்தரபாஹு. அயோத்தியென்னுஞ் சொல்லுக்கு - பகைவரால் யுத்தஞ்செய்து வெல்லமுடியாத தென்று பொருளாதலால. அக்கருத்துபபற்றி, 'அந்தமில நெடுநகா' என்றார்; இனி, எல்லையில்லாத பெரிய நகரமெனினுமாம. பி ம்.—[1]எந்தையாமுதலினர. [2]விளம்பினை. (௩௮)

௩௯—அதுகேட்டு அநுமான் பிராட்டியை நோக்கி சில குறிப்புரை கூறத்தொடங்குதல்.

இதநிற [1]மினையன [2]வியம்ப வின்னுநீ
ததுறு லொழிந்திலீ தைய லீரெனு
வெத்திறத் தேதுவு மியைந்த வின்னுரை
யொத்தன தெரிவுற வுணர்த்தி னனரோ.

(இ - ள.) இ திறம - இவ்வகையாக, இனையன - இவ்வார்த்தைகளை, இயம்ப - (சீதை) சொல்ல, (கேட்டு, அநுமான்), 'தையலீர் - அழகுடைய வரே! நீர்—, இன்னும—, ததுஉறல் ஒழிந்திலீர் - துன்பப்படுதலை விட்டீரில்லை', எனு - என்று சொல்லி,—எ திறத்துஏதுவும் இயைந்த - எல்லா வகைப்பட்ட காரணமும பொருந்தியவையும. ஒத்தன - (தன் நிலைக்கு) தக்கவையுமாகிய, இன உரை - இனியவார்த்தைகளை, தெரிவுற - (பிராட்டி) அறியும்படி, உணர்த்தினன்-சொல்லானான்; (எ-று.)—அவற்றை, மேல் முப்பத்தைந்துகவிகளிற கூறுகின்றார் அரோ - ஈறாசை.

இராமபிரான் தன்னைமீட்குமாறு இலங்கைக்கு வாரானென்ற கருத்துப்படச சீதைகூறியதனால், சீதையின் அக்கருத்தைப்போக்குமாறு அநுமான் கூறலாயினனென்க. முதலடியும், மூன்றாமடியும - முற்றுமோனை. பி - ம்:—[1]அனையவள். [2]விளம்ப. [3]தையனீயென. (௩௯)

வேறு.

[4]௪௦.—இதுமுதல் முப்பத்தைந்து கவிகள் - ஒருதொடர் அநுமான் சீதையைத் தேற்றக்கூறுவனாவற்றைத் தெரிவிக்கும்.

வீவாய் நீயிவண [1]மெய்யமைதே
யோய்வா னின்னுயி ருய்வானும்

*போய்வா னந்நகர் புக்கன்றோ
வேய்வான் மௌலியு மெய்யன்றோ

(இ - ள்.) நீ—, இவண் - இவ்விலங்கையிலேயே, மெய்அஃதே - உண்மையாக, வீவாய் - இறப்பாயாம்; ஓய்வான - (உன்னைவிட்டுப் பிரிந்த தனாலாகிய துயரினால்) உயிர்தளர்பவனாகிய இராமபிரான், இன் உயிர் உய்வான் ஆம் - (நீ இறந்தபின்பும்) இனியஉயிர் பிழைத்திருப்பானும்; போய் - (காட்டைவிட்டுச்) சென்று, வான் அ நகர் - பெருமையையுடைய அவ்வயோதியாபட்டணத்தை, புகுது - அடைந்து, மௌலியும் , வேய்வான் அன்றோ - கிரீடத்தையும் சூட்டிக்கொள்வானன்றோ? மெய் அன்றோ - (இவையெல்லாம்) உண்மையல்லவோ? (எ - று.)

ஒருமாதகாலத்திற்குள் தவறாமல் இராமபிரான் இங்கேவந்து உன்னைச் சிறைமீட்டு அணைவான்: ஆதலால், நீ உயிர்விடும்படி நேராது நீ உயிர்விட்டால் பின்பு இராமபிரான் பிழைத்திருப்பானோ? பிழைத்திருந்து ஊர்க்குத்தான் செல்வானா? சென்று முடிதான் சூடுவானா? இவற்றில் ஒன்றும் நடவாது என்பதாம். எதிர்மறைவணி. கேட்போருள்ளம் மகிழுமாறு உடன்பாட்டுச் சொல்லால் எதிர்மறைப் பொருளைப்பெறவைத்தல், இவ்வணியின் இலக்கணம். இக்கவியிலும், அடுத்த கவியிலும் உள்ள 'ஆம்' என்னும் சொற்கள் - வியப்புப்பொருளோடு அலட்சியத்தையுங் குறிக்கும் அஃதே என்றதில், தேற்றப்பொருளுள்ள ஏகாரம் - பிறகுறிப்புவகையால் எதிர்மறைகுறித்தது. இதிலுள்ள ஆய்தம், மேயபோல் ஒலித்தது; அலகிட்டுக காண்க. பி - ம்:—[1]மெய்யாமே. *போவான். (சா)

சக கைத்தோ டுஞ்சிறை கற்போயை
வைத்தோ னினனுயிர் வாழ்வானும்
பொய்த்தேயா விலலிகள போவாரா
மித்தோ [1]டொபபதி யாதுண்டே.

(இ - ள்.) கைதது ஓடும் - (யாவரும்) வெறுத்து விலகிஓடிப்போகநிலைக்கும்படியான [மிககொடிய], சிறை - காவலிலே, கறபோயை - கறபுநிலை சிறிதுதவறாத உன்னை, வைததோன் - வைத்திட்ட இராவணன், இன் உயிர் வாழவான ஆம - இனிபஉயிரோடு பிழைத்து வாழ்வனும்; ஓவில்லிகள - ஒப்பற்ற வில்லையுடைய இராமலக்ஷ்மணர், பொயத்து - (தமது வாதிரியதருமததினின்று) பின்வாங்கி, போவார் ஆம-போயவிடுவாரகளாம; இதோடு ஒப்பது யாது உணடே - இநதவாதததைபோடு ஒபபது எது உணடு? (எ - று.)—இது மிகவும் அசம்பாவித மென்றதாம.

அதருமஞ் செய்தவன் வாழ்தலும், தருமததைத் தாபிகக்பிறந்தவரகள் அவனைஞ்செயயாது தருமததினின்று தவறுதலும்நிகழாவென்பது கருததது. 'ஓவில்லிகள' என்றது, அவர அநவணம பொயத்துப் போர ரென்பதை விளக்கவநத ஸாபிப்ராயவிசேஷய மாதலால்

கருத்துடையடைகொளியணியாம். அரக்கரைக் கொல்லோமென்று சொன்ன சொல் பிறழ்ந்து எனினுமாம. கற்போய் - முன்னிலையொருமைக் குறிப்பு வினையாலணையும்பெயர். இதோடு என்பது எதுகைநோக்கி இத்தோடு என விரித்தல் விகாரமாயிற்று. பி - ம்:—[1]ஒப்புளது. (சக)

சஉ. நலலோய் நின்னை நலிந்தோரைக்
கோல்லோ மெம்முயிர் கொண்டங்கே
[1]யெல்லோ முஞ்செல வெங்கோனும்
வில்லோ டுஞ்செல வேண்டாவோ.

(இ - ள்.) நல்லோய் - நற்குணநற்செய்கையையுடையவளே! எல்லோமும் - நாகரெல்லோமும, நின்னை நலிந்தோரை - உன்னை வருத்திய அரக்கரை, கொல்லோம் - கொல்லாதவர்களாய, எம் உயிர்கொண்டு - எங்களுயிர்க்கு யாதொரு தீங்கு மில்லாமற் பாதுகாத்துக்கொண்டு. அங்கே - இராமபிரானிடத்தில், செல - போக,—எம்கோனும் - எங்கள் தலைவனாகிய இராமபிரானும், வில்லோடும் - (தனது) கோதண்டத்துடனே, செல வேண்டாவோ - (அயோத்திக்குத் திரும்பிப்) போகவேண்டாவோ? (எ - று.)

ராக்ஷசசங்காரஞ் செய்யாமல் நாங்கள் பின் தொடர்ந்துவர இராமபிரான் அயோத்திக்கு மீண்டுசெல்லுதல் மிகவும் இழிவாம்; ஆதலால், அரக்கரைக் கொன்றன்றி மீண்டுசொல்லோமென்பது கருத்து. அவன் எங்களைத் துணையாக்கொண்டது, பகைவெல்லாது அயோத்திக்குத்திரும்பிச்செல்லத் தானோவென்பது குறிப்பு. 'வில்லோடும்' என்றது; வில்லுக்குப் பயன் இராவணாதியர்சங்காரமேயன்றி வேறன் றென்பதை விளக்கிற்று. அங்ஙனஞ் செய்யாவிடின் அது சுமையா மென்பது, தொனி. 'எம்' என்றது, மற்றை வாநரவீரரையும் உளப்படுத்தி. எல்லோமும் - இடவழுவமைதி. இசைசெய்யுள் - பிறகுறிப்பின்பாற்படும. பி - ம்·—[1]எல்லோரும. (சஉ)

சஙு. நீந்தா [1]வின்னலி னீந்தாமே
தேய்ந்தா ருதபெ ருஞ்செல்வ
மீந்தா னுக்குனை யீயாதே
யோய்ந்தா லெம்மி னுயர்ந்தார்யார்.

(இ - ள்.) நீந்தா இன்னலின் - கடப்பதற்கு அரிய துன்பக்கடலிடையே, நீந்தாமே-(நாகர்கள் அகப்பட்டு) வருந்தாதபடி, தேய்ந்து ஆருத பெருஞ் செல்வம - குறைந்தொழியாத மிக்க செலவத்தை, ஈந்தானுக்கு (எங்கட்குக்) கொடுத்தருளிய இராமபிரானுக்கு, உனை - உன்னை, ஈயாதே - (கொண்டு போய்க்) கொடாதபடி, ஓய்ந்தால் - (நாகர்கள்) நீங்கினால், எம்மின் உயர்ந்தார் யார் - எங்களினும் உயர்ந்தவர் யாவரு்ளர்? (எ - று.)

பேருதவிசெய்தவனான இராமபிரானிடத்து உன்னைக் கொண்டு சோததலாகிய இசிற்றுதலியையாவது நாகர்கள் செயயாவிடின், உய்தியில்லாததோர் பெருங்குற்றமாகிய செயந்நன்றிமறத்த லென்ற குற்றத்

திற்கு உட்பட்டு மிக்கதாழ்மையை யடைவோ மென்று அநுமான் கூறின னென்க. இராமபிரான் சுக்கிரீவனுக்குச்செய்த உபகாரத்தைத் தமக்குச செய்த உதவிபோலப் பாராட்டி அநுமான்கூறியதனால், அவ்வாநர வீரா கட்கு உள்ள ராஜவிசுவாசம நன்குவிளங்கும. எம்மினு பாந்தா யார் - பிற குறிப்பு; எங்களினும் இழிந்தவரில்லை என்க. இனி, முதலடிக்கு - கடத் தற்கு அரிய துயாக்கடலை (இராமபிரான்) கடவாதபடி யென்று பொரு ளுரைத்து, 'ஓயிந்தால்' என்பதனோடு கூட்டுதலுமாம். 'பெருஞ்செல்வம்' என் றது, வாலியைக்கொன்ற சுகிரீவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து அரசுகொடுத்து முடிசூட்டியதை. நீந்தாஇன்னல் - வாலியினுலுண்டான பெருந்துன்பம்; இதிலுள்ள எதிர்மறை - அருமைகுறித்துநின்றது; "காட் டாதனவெல்லாங் காட்டி" என்றவிடத்துப் போல. நீந்தா என்ற அவட் மொழிக்கு ஏற்ப, இன்னலைக் கடலாகக்கொள்க; இது, ஏகதேசவுருவகத் தின்பாற்படும். பி - ம்:—[1]இந்நிலைநீந்தோமே. (சஉ)

ஏஉ. [1]நன்றாய் நல்வினை நல்லோரைத்
தின்றார் தங்குடர் பேய்தின்னக்
கொன்றா லல்லது கொள்ளேனு
டென்றா னுக்கிவை [2]யேலாவோ.

(இ - ள்.) 'நல் வினை - நல்ல (யாகம தவம முதலிய) நற்செய்கைகளை, நன்று ஆய் - செவ்வையாக ஆராய்ந்து செய்கிற, நல்லோரை - நல்லொழுக்க முடைய முனிவர்களை, தின்றாதம் - கொன்றுதினகிற ராக்ஷசர்களுடைய, குடர் - குடல்களை, பேய் - பேயகள், தின்ன - தின்னும்படி, கொன்றால் அல்லது - கொன்றாலல்லாமல, நாடு - (என்) கோசலநாட்டை, கொள் ளேன் - சேரேன்', என்றானுக்கு - என்று (தண்டகாரணிய முனிவர்கட்கு) வாக்குதத்தஞ்செய்த இராமபிரானுக்கு, இவை - (அரக்கரைப்போரிற்கொல் லுதலும் உன்னை மீட்டுக்கொண்டு போதலுமாகிய) இசசெய்கைகள், ஏலா வோ - செய்தற்கு இயலாதனவோ? (எ - று.)

இராமபிரான் அரக்கரைக்கொல்வதாக முனிவாக்கு வாக்குஅளித்தமை, முன்னர்க்காட்டப்பட்டது. பி - ம்:—[1]நன்றால், நன்று. [2]ஏயாவோ. (சச)

ஏஙு. மாட்டா தார்சிறை வைத்தோயை
மீட்டா மென்கில [1]மீளவாமே
ஞட்டார் நல்லவர் நன்னூலுங்
கேட்டா ரிவ்வுரை கேட்பாரோ.

(இ - ள்.) 'மாட்டாதார் - (சொன்னபடி கேட்டு) இணங்கிவராத பகைஞர்களால, சிறை வைத்தோயை - சிறையில்வைக்கப்பட்டுள்ள உன்னை, மீட்டாம் - மீட்டுக்கொண்டு வந்தோம்', என்கில - என்றசிறப் பைப் பெறுமல், மீள்வாம் ஏல்—நாங்கள்) திரும்பிப்போயவிடுவோ மாயினும்,—நாட்டார் - நாட்டிலுள்ளவர்களான, நல்லவர் - நல்லவர்களா

புள்ள சாதாரணசனங்களும், நல் நூலும் கேட்டார் - நல்லசாஸ்திரங்களைக் கேட்டறிந்த பெரியோர்களும், இ உரை கேட்பாரோ - இந்தவார்த்தையைக் கேட்டு அங்கீகரிப்பார்களோ? (எ - று.)

அங்கீகரியாமல் இகழ்ந்த ரென்றபடி. வைத்தோலை - செயப்பாட்டு வினைப்பொருளது. 'இவ்வுரை'—பிராட்டியை மீட்கமாட்டாமற்போனா ரென்னுஞ் சொல். பி - ம்:—[1]மீளாமே. (சஙு)

சகூ. பூண்டாள் கற்புடை யாள்பொய்யா
மண்டா வஞ்சகர் தீண்டாமுன்
மாண்டா ளென்று மனந்தேறி
மீண்டால் வீரம் விளங்காதோ.

(இ - ள்.) 'கற்பு உடையாள் - பதிவிரதாதருமத்தை யுடையவளும், பூண்டாள் - (அவ்வொழுக்கத்தையே) ஆபரணமாகக் கொண்டவளுமாகிய மனைவி, பொய்யாள் - (அக்கற்புநிலையினின்றும்) சிறிதும் தவறாதவளாய், தீண்டா வஞ்சகர் தீண்டா முன் - தொடவுங்கூடாத [மகாபாவிகளான] வஞ்சனையையுடைய அரக்கர் (தன்னைத்) தீண்டுவதற்கு முன்னமே, மாண்டாள் - இறந்தாள்', என்று - என்றுகேட்டு, மனம்தேறி - மனந்தெளிந்து, மீண்டால் - (பகைவரை நாசஞ்செய்யாது ஊர்க்கு) திரும்பிச் சென்றால், வீரம் - (இராமபிரானது) வீரதனம், விளங்காதோ - விளங்காமாட்டாதோ? (எ - று.)

நீ இறப்பினும் பகைதொலையாது மீளக்கூடாத இராமபிரான், நீ உயிருடனே கற்புநிலையிற் சிறிதுங்குறைபாடின்றியிருக்கையில் உபேக்ஷித்துத் திரும்புதல், எவ்வனம் அவனுக்குத் தகுதியாம்? ஆகையால், அப்பிரான் பகைதொலைத்து உன்னைச்சிறைமீட்டே செல்வ னென்றவாறு. பூணுதலென்னும்வினைக்கு ஏற்ப, கற்பு, ஆபரணமாகக்கொள்ளப்பட்டது. மனந்தேறுதல் - தனதுமனைவி கற்புநிலை தவறினளில்லை யெனத் தெரிந்ததனால். 'விளங்காதோ' என்றதொடர் எதிர்மறையிலக்கணையாகிய பிறகுறிப்புவகையால், சிறிதும் விளங்காது என்ற பொருளது. (சகூ)

சஎ. [1]கெட்டே னீயுயிர் கேதத்தால்
விட்டா யென்றிடின் [2]வெல்லம்பா
லொட்டா ரோடுல கோரேழுஞ்
சுட்டா லுந் [3]தொலை யாவன்றோ.

(இ - ள்.) கெட்டேன்—! நீ—, உயிர் - பிராணனை, கேதத்தால் - மிக்க சோகத்தினால், விட்டாய் - விட்டிட்டாய், என்றிடின் - என்றால், வெல் அம்பால் - வெல்லக்கூடிய அம்புகளால், ஒட்டாரோடு - பகைவர்களுடனே, உலகு ஓர் ஏழும் - ஏழுலகங்களையும், சுட்டாலும் - எரித்தழித்தாலும், தொலையா அன்றோ - (இராமபிரானுக்குப் பழியும் பாவமும்) நீங்காதனவா மல்லவோ? (எ - று.)

இராமபிரான் உன்னைமீட்காது உயிர்விடுமபடி உபேக்ஷித்தகால், அது எவ்வகையாலும் என்றும் அழியாத பெருமபழியை விளைக்கு மென்பதாம். கெட்டேன்-இரக்கத்தாற் சொல்லுஞ் சொல். பி - ம்.—[1]கெட்டேனீ. [2]மேலம பால், மேலன்பா, மெல்லமபால் [3]தொலையாது. (சஎ)

சஅ முன்னே கொல்பவன் மூவுலகும்
பொன்னே [1]யோங்கிய போர்வில்லா
னென்னே [2]நின்னிலை யீதென்றாற்
பின்னே செம்மை பிடிப்பானோ.

(இ - ள.) பொன்னே - இலக்குமியின் அமிசமானவளே! நல்லபோர் வில்லான் - மிக்க போர்க்கு உரிய கோதண்டத்தை யுடைய இராமபிரான், முன்னே - (உன்னை இராவணன் எடுத்துவருவதற்கு) முன்னமே, மூ உலகும் - மூன்றுலோகங்களிலு முள்ள ராக்ஷசர்களையும், கொல்பவன் - கொல்லுக கொள்கையையுடையவன (அப்படிப்பட்டவன), நின் நிலை ஈது என்றால் - உனது நிலைமை இப்படிப்பட்ட தென்று, சொன்னால், பின்னே - பின்பு, செம்மை பிடிப்பானோ - சாந்தகுணத்தை மேற்கொள்வானோ? என்னே - (உனது பேசசு) மிகக வியப்பாயுளளது? (எ - று.)

இராமபிரான் ராக்ஷசவதஞ்செய்ய முன்னமே உததேசித்திருந்ததை, தண்டகாரணியத்து முனிவாகக அபயமளித்துள்ளதனாலும் அறியலாம. முனிவர்கட்குத் தீங்குசெய்ததற்காகவே அரக்கரைக் கொல்ல நினைத்துள்ளவன் தன்மாட்டுத் தீங்குசெய்த அவர்களை விட்டிடுவானோ என்பது, கருத்து; உலகு - இடவாகுபெயர். பொன - உவமவாகுபெயருமாம் என்னே - வியப்புக்குறிப்பு. ஓகாரம் - சாந்தகுணத்தை மேற்கொள்ளா னென்னும் பொருளைத்தந்ததனால், எதிர்மறை பி - ம்.—[1]பொங்கிய. இந்நிலை. (சஅ)

சஆ கோளா னுருயிர் கோளோடு
மூளா வெஞ்சின முற்றாகா
மீளா வே[1]லயல் வேறுண்டோ
மாளா தோபுவி வானோடும்.

(இ - ள்.) மூளா வெம சினம - (தக்ககாரணமில்லாமல்) உண்டாகாத (இராமபிரானது) கொடிய கோபம, கோள் ஆனா உயிர் கோளாடும்-வலிமையையுடைய அரக்கர்களது உயிரைககொள்ளுதல் மாத்திரத்தோடும், முற்றாகா - தணியாவாம; மீளா ஏல் - (அவ்வாறு) தணிவுபெறா வாயின், அயல் வேறு உண்டோ - (அதற்கு இலக்கமாக) வேறு யாதாயினும உள்ளதோ? புவி வானோடும் மாளாதோ - இந்நிலவுலகம மேலுலகத்துடனே அழியாதோ?

இராமபிரானது கடுஞ்சினம் அரக்கர்களைமாத்திரமேயன்றி அனைத்துலகையும் அழிக்கவல்லது எனபதாம். கோள் - வலிமை. இனி, கோளாளர் - (சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டு போய்த் தனக்கு)

இடையூறுசெய்பவ ரெனினுமாம். உயிர்கோள் - வதம். அரக்கர் பலராதலால் கோபமும் இடம்நோக்கிப் பல வாதலால், 'கினமுற்றுகா,' 'மீளாவேல்' எனப் பன்மையாகக் கூறினர். பி-ம்:—[1]அவை. இச்செய்யுள் சிலபிரதிகளில் "படுத்தான்" (இக) என்றதன்பின் உள்ளது. (௪௯)

இ௦. தாழித் தண்கட றம்மோடு
மேழுக்கீழுல கெல்லாமண்
ணாழிக் கையவ னம்பம்மா
வூழிக் தீயென வுண்ணுவோ.

(இ - ள்.) ஆழி கையவன் - மோதிரமணிந்த திருக்கையையுடைய இராமபிரானது, அம்பு - பாணங்கள்,—தாழி தண் கடல்தமமோடும் - ஆழ்ந்திருத்தலையுடைய குளிர்ந்த கடல்க ளெல்லாவற்றோடும், எழுக்கு ஏழ் உலகு எல்லாம் - எழுடன்கூடியஏழ் [பதினான்கு] லோகங்கள் முழுவதையும், அன்று - அந்நாளில் [உன் சிலைமையை யுணரும்பொழுது], ஊழி தீ என - பிரளயகாலத்து அக்கினி போல, உண்ணுவோ-அழிக்கமாட்டாவோ? (எ று.)

எல்லாவுலகங்களையும் நிச்சயமாய் அழிக்கு மென்றபடி. கடலினிடையேயுள்ள வடவைத்தீ யுலர்ந்தகாலத்தில் அக்கடலினின்று வெளிப்பட்டு உலகங்களைச் சுட்டு அழிக்குமென்பது, நூற்கொள்கை. தாழி, இ பகுதிப்பொருள் விகுதி; "உருளி மாமதி யோட்டொழித்தோன்கிய, வெருளி மாடங்கண்மேற் றுயிலெய்தலின்" என்னுஞ் சிந்தாமணியிற் போல. இனி, தாழ் இத் தண் கடல் என இரத்தைச் சுட்டாகவும் எடுக்கலாம். ஆழி - ஆஜ்ஞாசக்கரமும், சக்கரரேகையுமாம. அம்மா-வியப்பிடைச்சொல்; இராமபிரானது அம்புகளின் தொழிலைப்பற்றி வியந்தவாறு. இனி, இதற்கு - தாயே என்று விளியாகவும் பொருள் கூறுவர்; கேட்பாயாக என்றுமாம. அமபு உலகெல்லாம் உண்ணுவோ-உண்ணுதலை உண்பதுபோலவும, உணணப்படாததை உண்ணப்பண்பது போலவும் கூறிய மரபுவழுவலமதி. (இ௦)

இக. [1]படுத்தான் வானவர் பற்றுரைத்
[2]தடுத்தான் றீவினை தக்கோரை
[3]யெடுத்தா னல்வினை யெந்நாளுங்
[4]கொடுத்தா னென்[5]றிசை கொள்ளாயோ.

(இ - ள்.) (இராமபிரான்),—வானவர் பற்றுரை தேவர்கட்குப் பகைவராகிய (இராவணுதி) ராக்ஷர்களை, படுத்தான்-கொன்றான்; தீவினை-(அவர்களுடைய) தீச்செயல்களையெல்லாம், தடுத்தான் - (இனி உண்டாகாதபடி) விலக்கினான்; தக்கோரை - (ஞான அநுட்டானங்களினால்) மேன்மைபெற்ற முனிவர் முதலியோரை, எடுத்தான் - காத்தான்; நல்வினை - புண்ணியத தொழில்களை, எ நாளும் - எப்பொழுதும, கொடுத்தான் - (உலகத்தார் செய்யும்படி) கொடுத்தருளினான்', என்ற - என்று பலவகையாகக் கூறப்படுகின்ற,

இசை - புகழை, கொள்ளாயோ-(நிச்சயமாக அப்பிரான் பெறுவனென்று நீ) எண்ணமாட்டாயோ? (எ - று.)—எண்ணவேண்டும் என்பதாம.

இச்செய்யுளில், அவதாரத்தின் காரியங்களான துஷ்ட நிக்கிரகமும், சிஷ்டபரிபாலநமும், தர்மஸம்ஸ்தாபநமும் இனி இராமபிரான் செய்வது திண்ணமெனக் கூறியவாறு. இனி, இக்கவிக்கு - வானவர் பற்றுரைப் படுத்தான், (தக்கோர்க்கு வருந்) தீவினையைத் தடுத்தான், நல்வினை எடுத்தான், எக்காளும் இசை [புகழை] கொடுத்தான் என்று கொள்ளாயோ என்றும் பொருள்கொள்ளலாம். 'படுத்தான்' முதலிய இறந்தகாலங்கள் - விரைவும் தெளிவும் பற்றியன. பற்றார் - மனம் பொருந்தாதவர். எடுத்தல்-காத்தலென்னும் பொருளதாதலை "எடுப்பின், [illegible] மணிக்கடி கையிலுங் காண்க. பி - ம்:—[1]படுத்தான். [2]தடுத்தான். [3]எடுத்தான். [4]கொடுத்தான். [5]இவை. (இ)

௫௨. சின்னு ணீயிடர் [1]தீராதா
பின்னு வைகலி னெல்லோரு
நன்னாள் [2]காணுத னன்றன்றோ
வுன்னு னல்லற முண்டானால்.

(இ - ள்.) உன்னால் நல் அறம் உண்டானால் - உன்னாலே நல்ல தருமம் நிலைபெறுவதாயிருந்தால்,—நீ,— சில் நாள் - சிலநாள்கள, இடர் தீராதாய் - துன்பம் நீங்கப்பெறாதவளாய், இன்னு - அத்துன்பத்துடனே, வைகலென் - தங்கியிருத்தலினாலே, எல்லோரும் - (உலகத்தவர்) யாவரையும், நல் நாள் - (தங்கட்கு) நல்லகாலத்தை, காணுதல் - காணச்செய்தல், நன்று அன்றோ - (உனக்கு) நல்லதன்றோ? (எ - று.)—நல்லதேயாம் என்றபடி.

நீ அரக்கனாற் கவரப்பட்டு இங்கே சிலகாலம் துன்பமநுபவிப்பதனாலேயே இராமபிரான் விரைவில்வந்து அரக்கரையெல்லாம் அழித்துத தருமத்தை நிலைநிறுத்தி உலகங்களைக் காத்தருள்வன்; ஆகையால், நீ சிலநாள் துன்பமனுபவித்தலே துஷ்டநிக்கிரகத்துக்கும் சிஷ்டபரிபாலனத்துக்கும் தர்மஸம்ஸ்தாபநத்துக்கும் காரணமான புண்ணியசசெயலாமென்றபடி. இன்னு என்பதை இன்னவாறு என்பதன் விகாரமாகக் கொண்டு இவ்வாறு தங்குதலினால் என்றும் உரைக்கலாம். காணுதல் - பிறவினைப்பொருளில்வந்த தன்வினை. பி - ம்:—[1]தீராதால். [2]நண்ணுதல். (௫௨)

௫௩. புனிக்குங் கண்டகர் புண்ணீருட்
குனிக்கும் பேய்குடை யுந்தோறு
மொனிக்குந் தேவரு வந்துள்ளங்
களிக்குந் நல்வினை காணுயோ.

(இ - ள்.) புனிக்கும் - (யாவரும்) வெறுக்கத்தக்க. கண்டகர் - முள்ளைப் போலக் கொடிய அரக்கர்களது, புண் நீருள் - இரத்தவெள்ளத்தில், குனிக்கும் - குமுறுகிற, பேய் - பேய்கள், குடையும் தோறும் -

ஜலகரீடை செய்யும்பொழுதெல்லாம,—ஒளிகரும் தேவா - (இராவணனிடத்துப்பயத்தால் தாமஇருக்கிறவிடமும தெரியாமல்) மறைந்திருந்த தேவர்கள, (அசசமொழிந்து வெளியில்வந்து அதனைக் கண்டு), உளளம் உவகை - மனம மகிழ்ந்து, களிக்கும - செருக்கடைகிற, நல்வினை - நல்ல செய்கையை, காணுயோ - (நீ) காணமாட்டாயோ? (எ - று.)—ஓ - எதிர்மறை. விரைவிற காணபா யென்பதாம.

புளிகரும் என்பதைக் கண்டகாகரும், புண்ணீருக்கும் அடைமொழியாக கொளளலாம. புணணீர் - விரணத்திலிருந்து வழியும் நீர். (ரூக)

வேறு

ரூச. வாழியி னிறுதியி னுருமெறிந்தெனக்
கேழ்கிளர் சுடுகணை கிழிதத புண்பொழி
[1]தாழிருங் குருதியிற் றரங்க வேலைக
ளேழுமொன் றாகநின் றிரைப்பக காண்டியால்.

(இ - ள) ஊழியின் இறுதியின் உரும் எறிந்து என - யுகாந்தகாலததில் இடிவிழுந்தாற் போல, கேழ் கிளர் சுடு கணை கிழித்த - ஒளிவிளகுகிற (பகைவாகளை) அழிக்கும (இராமபிரானது) அமபுகள் கைததுப பிளந்ததனுலுண்டான, புண - விரணத்தினின்றும, பொழி - சொரிகிற, தாழ் இருங் குருதியின் - ஆழமான மிகக இரததபபெருக்கினுல், தரங்கம் வேலைகள் ஏழும ஒன்று ஆக நின்று - அலைகளையுடைய எழுகடல்களும் ஒருசேரகூடி நின்று, இரைப்ப-பேரொலிசெயவதை, காணடி - (நீ விரைவிற்) பாாப்பாய.

இசசெய்யுளில், வருங்காலத்து நிகழ்வதனை நேரிற்காணபதுபோலக கூறியுளளது, நிகழ்விாவிற்சியணி; டெலூலாா பாவிக மென்பா. அடுத்த செயயுள்களிலும இவ்வணமே காணக. பின்னிரண்டடி - உயர்வுநவிற்சியணி. இடியெறிதல - கணைகிழித்தற்கு உவமை. தாழ் - இழிவான என்றுமாம். பி - ம்:—[1]தாழிய (ரூச)

ரூரு. [1]சூலிரும் பெருவயி றலைத்துச சோர்வுறு
மாலியங் கண்ணிய ரறுத்து நீத்தன
வாலியுங் கடப்பரு வனப்ப வாலுயர்
தாலியம பெருமலை தயங்கக் காண்டியால.

(இ - ள) சூல் இரு பெரு வயிறு அலைதது-காப்பததையுடைய (தமது) மிகப்பெரிய வயிற்றைப் பிசைந்துகொணடு, சோர்வு உறும் - தளாசசியடைகிற, ஆலி அம் கணணியா - நீரததுளியைகொண்ட அழகிய கண்களையுடைய அரகியர், அறுதது நீததன - அறுத்துப்போகட்டனவான, தாலி-தாலிகளாகிய. அம - அழகிய, வான உயர் பெருமலை - ஆகாயத்தையளாவி உயாந்த பெரியமலைகள், வாலியும கடப்பு அரு வனபப - வாலியினுலும தாண்டுவதற்கருமிய வளாசசியினை யுடையனவாய, தயங்க - விளகுவதை, காணடி—; (எ - று.)—ஆல - ஈற்றசை.

மிகக சங்கடகாலததில் வயிறறைப் பிசைவது, இயலபு. தாலி மலைபோலகுவியு மென்று, இராமபிரான் கணைகளால இறந்துபடும்

அரக்கரின் மிகுதியை விளக்கியவாறு. வாலியும், உம் - உயர்வுசிறப்பு. பி - ம்;—[1]சூலியம். (ருரு)

ருசு. விண்ணினீ ளியநெடுங் கழுதும் வெஞ்சிறை
யெண்ணினீ ளியபெரும் பறவை யீட்டமும்
புண்ணினீர்ப் புனரியிற் படிந்து பூவையர்
கண்ணினீ ராற்றினிற குளிப்பக் காண்டியால

(இ - ள்.) விண்ணின் நீளிய நெடுங் கழுதும் - ஆகாயத்தினும் உயர்ந்த வையாகிய நீண்ட பேய்களும், எண்ணின் நீளிய வெம் சிறை பெரும் பறவை ஈட்டமும் - தொகையில் அதிகப்பட்டனவாகிய கொடிய இறகுகளையுடைய (கழுகுமுதலிய) பெரிய பறவைகளின் கூட்டமும், புண்ணினீர் புனரியிற் படிந்து - (ராக்ஷசர்களுடைய) இரத்தவெள்ளமாகிய கடலில்முழுகி, பூவையர் கண்ணினீர் ஆற்றினில் குளிப்ப - அரக்கியரது கண்ணீர்ப்பெருக்காகிய நதியில் நீராடுவதை, காண்டி—; (எ - று.)

கடலில் நீராடியவா, அவ்வுவாபபும் மணலும் உடம்பினின்றும் ஒழியும் பொருட்டு, உடனே நல்லநீரிலமுழுகுதல், இயலபு. உருவகவணி. பூவையர் - மகளிரென்னும் மாத்திரையாய் நின்றது; அரக்கியரைக் குறித்ததலால்

ருஎ. கரம்பயின் முரசினங் கறங்கக் கைதொடர்
[1]நரம்பினு மிமிழிசை நவில நாடக
மரம்பைய ராடிய வரங்கி [2]ணுண்டொழிற்
குரங்குகண் முறைமுறை குளிப்பக் காண்டியால்.

(இ - ள்.) கரம பயில் முரசு இனம கறங்க - கைகளினால் அடிக்கபபடுகிற மிருதங்கங்களின்வகைகள ஒலிககவும, கை தொடர் நரம்பினும் இமிழ் இசை நவில - கையினால் தடவி வாசிககபபடுகிற யாழ்நரமபின ஒலியினும் இனியதாகிய பாட்டிசை பொருந்தவும், அரமபையா நாடகம் ஆடிய-ரம்பை முதலிய தேவமாதாகள நாததனளுசெயத, அரங்கின - (லங்காபட்டணதது) நாடகசாலைகளில, (அததன்மை மாறி), ஆண்தொழில் குரங்குகள் முறை முறை குளிபப - பராக்கிரமததையுடையவானரங்கள் வரிசைவரிசையாக நின்று (போரவென்ற மகிழ்ச்சியாற்) கூததாடுவதை, காண்டி—; (எ - று.)

இசசெய்யுள - முறையில்படர்ச்சியணியாம்; இதன் இலககணம, ஒன்றின்தனமை மாறி வேறொருதன்மை யடையவதாகக கூறுதல். இஙகு, அரமபை முதலியோர ஆடும் நாடகசாலைகள் அத்தன்மைமாறிக்குரங்குகள் ஆடபபெறுமெனக கூறியிருததல் காணக. நரமபினும் இமிழ் இசை நவில- யாழ்நரம்புகளினின்றும் ஒலிகின்ற கீதம் பயில எனினுமாம். நரம்பு - ஒலிகரு ஆருபெயா. உம் - உயரவுசிறப்பு. இராவணனிடதது உளள அசசததாததால், தேவமாதாகள அவனதுசபையில் ஆடுவா ராயினரென்க. பி-ம்:— [1]நரம்பிவழிசை. [2]ஆடொழில். (ருஎ)

௫௮ புரையுறு புன்றொழி லரக்கர் புண்பொழி
திரையுறு குருதியா றீர்ப்பச் செல்வன
வரையுறு பிணபபெரும் [1]பிறக்க மண்டின
கரையுறு நெடுங்கட லார்ப்பக் காண்டியால.

(இ - ள்.) புரை உறு - குற்றம்மிகுந்த, புல் தொழில் - இழிதொழில் களையுடைய, அரக்கர் - ராக்ஷசர்களது, புண் - புண்களினின்று, பொழி-ஒழி கிற, குருதி-இரத்தமாகிய, திரைஉறு ஆறு-அலைகள் பொருந்தியநதி, தீர்ப்ப- இழுப்பதனால். செல்வன - செலபவையான, வரை உறு பிணம் பெரு பிறக்கம - மலைகளையொத்த பிணங்களின் பெரிய உருவம், மண்டின - நெருங்கியவையாய. கரை உறு நெடுங் கடல - கரையை மோதுகிற பெரிய கடலை, ஆர்ப்ப - கிரப்புவதை, காணடி—; (எ - று.)

இரண்டாமடி - உருவகவணி. பின்னிரண்டடிகள உவமை யணியை அங்கமாகக்கொண்டு வந்த உயர்வுநவிற்சியணி இவ்விரண்டணியும் பேதப் பட வந்தது, கேவைவயணியாம பெருமபிறக்கம - பெருகுகுவியலுமாம். பி - ம் —[1]பிறங்கல், பற்றை (௫௮)

௫௯. வினையுடை யரககரா மிருந்தை வெந்துகச்
சனகியென் றொருதழ னடுவட டங்கலா
[1]லனகன்கை யமபெனு மளவி லூதையாற்
கனகநீ டிலங்கைகின றுருகக் காண்டியால.

(இ - ள்.) வினை உடை அரககரா ஆம இருந்தை வெநது உக - கொடுந் தொழில்களையுடைய ராக்ஷசர்களாகியகரிகள் வெந்துபோம்படி, சனகி என்ற ஒரு கழல் நடுவண தங்கலால் - சீதை யென்ற ஓர் அக்கினி நடுவில் தங்கு தலினாலே, அனகன் கை அமபு எனும் அளவு இல் ஊதையால் - குற்றமற்ற இராமபிரானது கையினால் விடப்படுகிற அமபாகிய அளவில்லாத [மிக்க] பெருங்காற்றினால், நீடு இலங்கை கனகம - பெரிய லங்காபுரியாகிற பொன், கின்று உருக - நிலைபட்டு உருகுவதை, காணடி—; (எ - று.)

இலங்கை இராமபிரானது அம்புகளால் அரகக்களோடு விரைவில் அழிபு மென்பதாம. கருநிறமுடைமையால் அரககரைக் கரியாகவும், சிவந்த ஒளியாலும் தூய்மையினாலும் தன்கற்புநிலையாற் கொடியவரை யெரிததழிக் குந் தன்மையாலும் ஜாநகியைத் தழலாகவும, விரைந்துவருந்தன்மையாலும் சீதையின் கற்பாகிய தழலுக்கு மேன்மையை விளைததலாலும் இராமபிரா னது அமபைக காற்றாகவும, பொனமயமானதாதலால் இலங்கையைப் பொன்னாகவும் உருவகப்படுத்தினர; முற்றுருவகவணி. காற்றினால் நெருப்பு வளர்தல், இலங்கு. வினை - பாவமுமாம. இருநதை - கரி. 'சனகியென்றொரு தழல்' என்ற விதப்பு, உலகத்து நெருப்புசசுடுவது தன்னைத தொட்டவரை யே, இநநெருபபுத தன்னைததொட முயல்வாரையுஞ் சுட்டெரிககு மென்ப தைக காட்டிறது. பி - ம்:—[1]அனகலமபெனுமனிலவூதையால, அனகனல் லம்பெனு மமோகவூதையால. (௫௯)

சுo. [1]தாக்கிக விராவணன் றலையிற் றாவின
பாக்கிய மனையகின் பழிப்பின் மேனியை
நோக்கிய கணகளை நுதிகொண் மூக்கினுற
காக்கைகள் கவர்ந்துகொண் டுண்ணக காண்டியால்.

(இ - ள.) காகைகள்—, தாக்கு இகல் இராவணன் தலையில் தாவின- (யாவரையும்) மோதுகின்ற வலிமையையுடைய இராவணன் (இராமனம்பு களால இறந்துகீழ்விழுந்தபொழுது அவனுடைய) தலைகளிலே தாவியன வாய், பாகியம் அனைய கின் பழிப்பு இல் மேனியை நோக்கிய கணகளை - (நல்லோர்கள செயத) நல்வினைப்பயன் போன்று உன்னு[illegible] திரு மேனியைப் பார்தத (இருபது) கண்களையும், நுதிகொண் [illegible] கொண்டு - கூரமையைக்கொண்டுள (நமது) மூக்குக்களாற் பறித்துக் கொண்டு, உணண - உண்பதை, காண்டி—; (எ - று)

மேற் "ஏன் ஞ்கையைக், கண்ட போரரகன் விழி காகங்கள், உண்ட பொதன்றி யாலுளனுவெனோ" என்று சீதை கூறியதற்கு ஏற்ப, அநுமான் அங்ஙனமேயாகு மென இதனால் உறுதிகூறின னென்க. சீதை, சிறை யிருந்து, துஷ்டநிகிரகம் நடத்தற்குத் தானகாரணமாகுதலால், 'பாகிய மனையகின்' என்றான். பி - ம் —[1]தாககவில். [2]தலையிறறுலின. (சுo)

சுக மேலுற விராவணற் [1]கழிந்து வெள்கிய
நீலுறு திசைக்கரி திரிந்து நிறபன
வாலுற வனையவன் றலையை [2]வவ்வலிற்
[3]காலுறு கணைகடிந் திடுவ காண்டியால்.

(இ - ள்.) மேல் - முற்காலத்திலே, உற - மிகுதியாக, இராவணறகு - இராவணனுககு, அழிந்து - தோற்று, வெள்கிய - வெட்கமுற்ற, திரிந்து நிற்பன - (அதனால் முகநகாட்டாமற்) புறநகாட்டிநிற்பனவாகிய, நீல உறு திசை கரி - நீலநிறம்பொருநதிய திககஜங்களின, வால் - வாலிலே, உற - பொருந்தும்படி, கால் உறு கணை - காற்றையொதத [வெகுவிரைவுளள] (இராமபிரானது) அமபுகள, அனையவன் தலையை - அவ்விராவணன் தலை களை, வவ்வலிற் - (தாம) அறுத்தலினால், கடிநதிடுவ - விலகநித்தள்ளுவன வற்றை, காண்டி—, (எ - று)

இராவணனோடு எதிரததுப்பொருது அவன் வலிமைககுமுன் நிற்கமாட் டாமல தோறறோடிப் புறநகொடுத்த திககஜங்களின் வாறபுறததிலேயே அவ் விராவணன்தலைகள் சிதறிவிழுமபடி இராமபிரானது அமபுகள விரைவி லேயே அழிததுததள்ளு மென்பதாம். உற அழிநது எனவும, வாலுறக் கடிந் திடுவ எனவும இயையும். பி - ம்:—[1]அஞ்சிவெளகின. [2]அவ்வழிக. [3]காலுறக் கணைகடிந்திறப்ப. (சுக)

சுஉ. நீரத்தெழு [1]கணைமழை [2]வழங்க நீலவான்
வோர்த்ததென் றிடையிடை [3]விசுந் தூகபோற்

போர்த்தெழு பொலவகொடி யிலங்கைப பூழியோ
[3]டார்த்தெழு கழுதிரைத் தாடக் காண்டியால்

(இ - ள்.) 'நீலம் வான் - நீல நிறத்தையுடைய ஆகாயம், வேர்த்தது - வேர்வையடைந்தது', என்ற - என்றெணணி, (அவ்வோவையைப போகுவ தரகு); இடை இடை வீசும் - அங்கங்கே வீசுகின்ற, தூசபோல்-வெண்திரைக் கள்போல, போர்த்து எழு - நிறைந்துதோன்றுகிற, பொலம் கொடி-அழகிய கொடிசசீலைகளை யுடைய, இலங்கை - லங்காபுரியில், எழு - விளங்குகிற, கனை - அமபுகளை, மழை நீரது - மழையின்தன்மை யுடையனவாக [மழை போல], எதுக-(இராமபிரான்) பிரயோகிபபதனால், (தம்தமக்கு மிக்க இரை கிடைககுமெனறு அகமகிழ்ந்து) ஆரது எழு ஆரவாரித்து எழுகிற, கழுது-பேயகள. பூழியோடு - புழுதிகளுடனே [பூமியினின்று தூளிகள மேலே கிளம்ப], இரைதது ஆட-கொக்கரித்துக கூதாடுவதை, காணடி—; (எ-று)

மேகம நீரதுளி பொழிவதனை, நீலவான வேரகததாகக குறிததார். இயல்பாக வளைதகிற கொடியாடுவதனை ஆகாயததுகு உண்டான வேரவை யைப போக்குவதற்காக விசுறுவனவாகக கூறியது - பயன்தந்துறிப்பேற்ற வணி. வேரவையுண்டானால் வஸதிரதினால் வீசிறுதல், இயலபு. கனை-சாதி யொருமை. பி - ம்:—[1]கல் [2]விழுகு. [3]விகம்பு வீசிப்போய. [4]ஊழியோடு. [5]ஆர்த்தெழுந்திரைத்துநின்று. (கஉ)

சுரு. [1]நீனிற வரக்காதங் குருதி நீக்தநீர
[2]வேலைமிக் காறறொடு மீள வேலைசூழ்
ஞால[3]முற் றுங்கடை யுகக்து [4]நசசுறுங்
காலனும் வெறுத்துயிர் காலக் காண்டியால.

(இ - ள.) நீல நிறம் - கருநிறததையுடைய, அரக்கர்தம் - இராக்கதர்க ளுடைய, குருதி நீததம்-இரத்தவெள்ளததால், நீர வேலை - (உப்பு)நீரகடல், மிக்கு - கிரமபி. ஆறறொடு - அவவிரத்தநதிகளின்வழியே, மீள - திருமபுவ தையும,—வேலை சூழ் - கடல்களாற் சூழப்பட்ட, ஞாலம் - உலகம், முற்றும் - மூழ்கிபபோகிற, கடையுகததும் - யுகாந்தகாலகதிலும், நசசு அறு - (உயிரக ளைத் தின்பதில்) விருப்பம் நீகைாத, காலனும் - யமனும், வெறுத்து -(எத் தனையுயிர்களைக கொன்றுதின்பதென்று) வெறுப்படைநதுநின்று, உயிர்கால - (தான்முனதின்ற) உயிர்களைக்ககி வெளிப்படுதுவதையும், காண்டி-;(எ-று.)

இசசெய்யுள, இறந்து படும் அரககர்களின் மிகுதியை விளக்கவந்த தொடர்புயர்வுநவிற்சியணி. அளவுகு மிஞ்சி மிகுதியாக உணவைக் கொண் டால் கொணட உணவு வெளிபபடுதல். இயல்பு உயிரை யமன்தின்பதாகக கூறுதல் கவிமரபு. இனி, உயிர் கால என்பதற்கு - (துயர்ந்து) பெருமூச்சுவிட என்றும பொருள்கூறலாம். ஆறு - வழியும், நதியும். இரட்டுறமொழிதல். பி - ம் —[1]நீனிறத்து. [2]வேலையிற [3]முறறறு. [4]நஞ்சுறுக். (சுரு)

சுரு [1]அணங்கிள மகளிரொ டரக்க ரடுறு
[2]மணங்கிளர் கற்பகச சோலை வாவிவாய்ப்

[3]பிணங்குறு வான்முறை [4]பிடித்து [5]மாலைய
[6]கணங்கொடு குரகதங் குளிபபக் காண்டியால்

(இ - ள்) அரக்கர்—, அணைகு இள மகளிரொடு - தெய்வபபெண ணேன்ற [அழகிய] இளைய ராக்ஷச ஸ்திரீகளுடனே, ஆடுறு - ஜலக்கிரீடை செய்தற்கு இடமான, மணம் கிளர் கறபகம சோலை வாவினாய்-வாசனை மிகுந்த கற்பகவிருக்ஷத்தையுடைய சோலையிலுள்ள குளங்களில்,—குரங்கு இனம் - குரங்குக கூட்டங்கள், பிணங்குறு வால் - சிறிது வளைந்த வால்களை, முறை பிடித்து - முறையே [ஒன்றன் வாலைமறறொன்றாகப்] பிடித்துக்கொண்டு, மாலைய கணம கொடு - ஒழுங்காகிய கூட்டங்க, குளிப்ப [illegible] இயைத, காண்டி—; (எ - று.)

முறைபிடிச்சீயணி; அரக்கர் தமது ஸ்திரீகளோடு ஜலக்[illegible] செய்யும் வாவி, குரங்குக்கூட்டங்கள் குளிக்கும் வாவியாக மாறுவதெனக் கூறியுள்ளமை காண்க. ஆடுறு வாவி எனக. இராவணன் தனது சேனையோடு வாதுவுக்குக்கு சென்று தேவர்களோடு பொருது இந்திரனை வென்ற பொழுது அவருடைய சுறபகவிருக்ஷம் இலங்கையிற கொணர்ந்து வைக்கபபட்டதனால், 'அரக்கர்தாறு கறபகசோலை வாவி' எனப்பட்டது. குரங்குகள ஒன்றையொன்று வாலைப்பிடித்துக்கொண்டு குளிததல், கீரிலிறங்குவதிலுள்ள அசசத்தா லென்க. பி - ம் —[1]அணைகனமகளிரோடு [2]மனை [3]பிணங்குற. [4]பிடித்த. [5]மாலைகள். [6]கனகினொடழுகினம் (௬௪)

௬௫. செப்புற லென்பல தெய்வ வாளிக
ளிப்புறத் தரக்கரை முருகக் யேகின
முபபுறத் துலகையு [1]முடிகக [2]மூட்டலா
லப்புறத் தரக்கரு மவியக் காண்டியால.

(இ - ள்.) பல செப்புறல் என் - (இனி நடகுகு செய்கையைப்பறறிப்) பலவாகச சொல்லவேண்டுவது எனன? தெய்வம் வாளிகள - தெயவததன்மையையுடைய அஸ்திரங்களை,—இ புறத்து அரக்கரை முருகி இவ்விலங்கையிலுள்ள ராக்ஷசர்களைக கொன்று, ஏகின - அபபாறசென்றவையாய், மூப்புறத்து உலகையும் முடிகக - மூன்றுலோகங்களிலுமுள்ள அரகக்களையெல்லாங கொல்லும்படி, மூட்டலால - (இராமபிரான) பிரயோகித்தலினால்,—அ புறத்து அரக்கரும அவிய - மறறையவிடங்களிலுள்ள அரகக்களுமூட்பட அழிவதை, காணடி—; (எ - று.)

வாளிகளை மூட்டலால் அவியக காணடி யென இயையும தெய்வ வாளிகள் - பிரமன் முதலியோரைத தெய்வமாகககொண்ட அம்புகள்; தெய்வத்தன்மையையுடைய பாணங்களுமாம: அவறறிற்குத தெய்வததன்மை - இலக்கைத் தவறாது அழிததல் பி - ம்:—[1]முருகி. [2]ஊட்டலால. (௬௫)

௬௬. ஈண்டொரு [1]திங்களிவ விடரின் [2]வைகுதல
[3]வேண்டுவ தன்றுநான் விரைவின் வீரனைக்

காண்டலே குறைவுபின் காலம் வேண்டுமோ
வாண்டகை யினியொரு பொழுது மாற்றுமோ.

(இ - ள்.) ஈண்டு - இவ்விலவலகையில், ஒரு திங்கள் - (இன்னும்) ஒரு மாதகாலம் முடிய, இ இடரின் வைகுதல் - (இப்பொழுது அநுபவிக்கின்ற) இப்படிப்பட்ட துன்பத்தில் (நீ) தங்குதல், வேண்டுவது அன்று - வேண்டுவதில்லை; நான் —; விரைவின் - சீக்கிரத்தில், வீரனை - இராமபிரானை, காண்டலே - பார்ப்பதுவே, குறைவு - குறைவாம் [வேண்டுவதாம்]; பின் - (பார்த்த)பின்பு, காலம் வேண்டுமோ - (அப்பிரான் மீட்கவருதற்குத் தவணை யான) காலவளவு வேண்டியதில்லை; ஆண்தகை - ஆண்மைக்குணமுடைய இராமபிரான், இனி- நான் கண்டு செய்திசொன்ன) பின்பு, ஒருபொழுதும்- ஒருகணமாயினும், ஆற்றுமோ - (உன்னைச்சிறைமீட்கப் புறப்படத்) தாமதித் திருப்பனோ? (எ - று.)

"இன்னு மீண்டொரு திங்க ளிருப்பல் யான்" என ஒருமாதகாலம் இத்துயரத்தைப் பொறுத்துச் சிறையிருப்பே னென்று நீ கூறியவாறு அத் துணைக்காலத்தவணையும் வேண்டுவதில்லை; நான் இவ்விருந்து சென்று அப் பிரானைக் கண்டவுடனே உன்னைச்சிறைமீட்க அவ்விராமபிரான் இவ்விடம் வந்து சேர்வான்; நான் வழிகடத்தற்குச் செல்லும் சிலதினங்கள் மாத்திரமே நீ பொறுத்திருக்கவேண்டு மென்பதாம். பொழுது - இங்கு, மிகச்சிறிய காலமாகிய நொடியின்மேல் நின்றது. பி - ம்:—[1]திகைணி. [2]வைகவும். [3]வேண்டுதனன்று. (கூகூ)

கூஎ. ஆவியுண் [1]டென்னுமீ துண்[2]டுன் னுருயிர்ச்
சேவகன் றிருவுருத் தீண்டத் தீதிலாப்
பூவிலை தளிரிலை பொரிந்து வெந்திலாக்
[3]காவிலை கொடியிலை நெடிய கானெலாம்.

(இ - ள்.) ஆவி உண்டு என்னும் ஈது உண்டு - (இராமபிரானுக்கு) உயிர் உளது என்கிற இந்தச்சொல்மாத்திரந்தான் உண்டு; நெடியகான் எலாம் - (அப்பிரான் செல்லுகின்ற இடைவழியி லுள்ள) பெரிய காடுகள் முழுதும், உன் ஆர் உயிர் சேவகன் திரு உரு தீண்ட - உனது அரியஉயிர் போன்ற மகாவீரனாகிய இராமபிரானது அழகிய திருமேனி மேற்படுவதனால், தீது இலா - தீதுபோத லில்லையான, பூ - பூக்கள், இலை - இல்லை; தளிர் - துளிர்கள், இலை—; பொரிந்து வெந்திலா - பொரிப்பொரியாய் வெந்துபோ காத, கா - சோலைகள், இலை—; கொடி - கொடிகளும், இலை—; (எ - று.)

உன்னைப்பிரிந்த விரகவேதனையால் இராமபிரானுக்கு உண்டான தேக தாபத்தினால் அவன்செல்லுங் காடுகளிலுள்ள பூ தளிர் மரம் கொடி முதலி யனவெல்லாம் வெந்து நீந்து கரிந்து போகின்றன வென்பதாம். உனது பிரிவினால் இவ்வளவு தாபத்தை யடைந்தவன் உன்னைச் சிறிதும் உபேக்ஷியா னென்பது, கருத்து. 'ஆவியுண்டென்னுமீ துண்டு' என்றதனால், பிரிவுத துயரால் அப்பிரானுக்கு உண்டாயுள்ள மூர்ச்சைகளையுங் குறிப்பித்தவாறும். பி - ம்:—[1]எனினும். [2]என். [3]காயிலை. (கூஎ)

௬௨. சோகம்வந் துறுவது தெளிவு தோய்ந்தன்றோ
மேகம்வந் திடித்து[1]வந் துருமு வீழ்கினு
மாகமும் புயங்களு மழுந்த வைந்தலை
நாகம்வந் தடர்ப்பினு முணர்வு [2]நாறுமோ.

(இ - ள்.) சோகம் வந்து உறுவது - மனத்துன்பம் வந்து பொருந்துவது, தெளிவு தோய்ந்து அன்றோ - ஞாபகம் பொருந்தியிருந்தாலல்லவோ? மேகம் வந்து உருமு இடித்து வந்து வீழ்கினும் - மேகங்கள் (ஆகாயத்திற் கிளம்பி) வந்து இடி இடித்துக்கொண்டே மேலேவந்து விழுவதாயிருந்தாலும், ஐந்தலை நாகம் வந்து ஆகமும் புயங்களும் அழுந்த அடர்ப்பினும் - ஐந்துதலைகளையுடைய பாம்பு (சீறி) வந்து (தன்னுடைய) மார்பிலும் தோள்களிலும் (பற்கள்) பதியும்படி கன்றுகக்கடித்து வருத்துவதாயிருந்தாலும், உணர்வு நாறுமோ-(இராமபிரானுக்குப்) பிரஜ்ஞை தோன்றுமோ? [தோன்றுவதில்லையென்றபடி.] (எ - று.)

ஞாபகம் உள்ளபொழுது உண்டாகிற துயரத்திற்கே சோகமென்று பெயராம், இராமபிரானுக்கு, இடியிடித்தாலும் பாம்பு தீண்டினாலுங்கூட உணர்வு உண்டாவதில்லையென்று கீழ்க்கவியிற்கூறிய இராமபிரானது மூர்ச்சாவஸ்தையை இக்கவியால் விவரித்துக் கூறினான்; இதனால், இராமபிரான் உள்ளதைப்பற்றிக் கொண்டுள்ள வருத்தம் நீ அவற்காகப்படுகிற வருத்தத்தினும் மிக்கதென்றவாறும். 'ஐந்தலை நாகம்' என்றார், கடித்து வருத்தும் போதுள்ள கொடுமையின் மிகுதியை விளக்க. பி - ம்:—[1]உருமேரு. [2]நணணுமோ. ()

௬௩. மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்க டள்ளுறும்
[1]பித்துநின் பிரிவினிற் [2]பிறந்த வேதனை
யெத்தனை யுளவவை யெணணு மீட்டவோ.

(இ - ள்.) மத்து உறு தயிர் என-மத்தினாற்கடையப்படுகிற தயிரைபோல, வந்து - (உடம்பினுள்ளே) வந்தும், சென்று - (வெளியிற்) போயும், இடை - நடுவே, ததறும் தடுமாறுகிற, உயிரொடு - உயிரும், புலன்கள் - ஐம்புலன்களும், தள்ளுறும் - சோர்வடைதலினாலாகிய, பித்து - பைத்தியமும்,—நின் பிரிவினின் பிறந்த வேதனை - உன்னைவிட்டுப்பிரிந்ததனாலாகிய மற்றைத் துன்பங்களும், எத்தனை உள - எவ்வளவு உள்ளனவோ, அவை - அவைகளெல்லாம், எணணும் ஈட்டவோ - எண்ணிச்சொல்லுந் தன்மையையுடையனவோ? (எ - று.)

உனது பிரிவினால் இராமபிரானுக்கு அளவிடற்கரிய துன்பங்கள் உண்டாயுள்ளன என்றவாறும். மத்துறு தயிர் - கலக்கத்திற்கு உவமை. பி-ம்:—[1]பித்தநின். [2]பிறந்திறந்தன. (௬௩)

௬௪. இன்னிலை யுடையவன் றனக்கு மென்றியேன்
மெய்ந்நிலை யுணர்ந்துழி [1]மிடைந்த தீதெனிற்
பொய்ந்நிலை காண்டியான் டுகன்ற யாவுமுன்
னகந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

(இ - ள்.) 'ஓ நிலை உடையவன் - (உன்னைப்பிரிந்ததனால்) இப்படிப் பட்ட நிலைமையை யடைந்துள்ள இராமபிரான், தரிகும் - (என்னைவிட்டு) உயிரைவாழ்ந்திருப்பான்,' என்றி ஏல் - என்று (நீ) சொல்வாயேயானால், மெய் நிலை உணர்ந்த உழி மிடைந்தது ஈது எனின் - (அப்பிரானுடைய) உடம்பின் தன்மையை ஆலோசிக்கு மிடத்துப் பொருந்தியது இதுவாதலால், பொய் நிலை - (நீ சொல்வது) பொய்பொருந்தியதாம்; யான் புகன்ற யாவும் - நான் சொன்னவை எல்லாவற்றையும், உன் கை நிலை செல்வி அம் கனிதின் - உனது கையிற்பொருந்திய அழகிய நெல்லிக்கனிபோல, காட்டுகேன்-(நான் உனக்குக் கண்கூடாகக்) காணப்பிப்பேன்; காணடி - (நீ அவற்றைக்) காண் பாயாக; (எ - று.)

என்றி - முன்னிலையொருமை இறந்தகாலவினைமுற்று. ஈது என்றது- கீழ்க்கூறிய வெதுப்பு, மூர்ச்சை, பிதற்று முதலியவற்றை. புகன்றயாவும் - இராமபிரானது வெற்றியும், அரக்கரது அழிவும், அதனாலுண்டாகும் சம்பிர மங்களும். மெய்ந் நிலை - உண்மைநிலையுமாம். பி - ம்.—[1]விடைதந்திகென்ப.

எக. தீர்த்தனுங் கவிக்குலத் திறையுந் தேவிநின்
வார்த்தைகேட் டுவப்பதன மூன்னர் மாக்கட
லார்த்தன விலங்கையைச் சூழு மாக்குரங்
[1]கார்த்தது கேட்டுவந் திருத்தி யன்னைநீ.

(இ - ள்.) அன்னை - தாயே! தேவி - (இராமபிரானது) பத்நியே! தீரத தனும் - பரிசுத்தமூர்த்தியாகிய இராமபிரானும், கவி குலதது இறையும் - குரங்குக்கூட்டங்கட்குத் தலைவனான சுக்கிரீவனும், நின் வார்த்தைகேட்டு - உனது வரலாற்றைச் செவியேற்று, உவப்பதன் முன்னர் - மகிழ்வதற்கு முன்னமே [மிகவிரைவில் என்றபடி], மா கடல் தூர்த்தன - பெரிய கடலைத் தூர்த்துவிட்டு, இலங்கையை சூழும் - இலங்காபுரியை முற்றுகை செய்கிற, மா குரங்கு - பெரிய குரங்குகள், ஆர்ததது - ஆரவாரித்தலை, கேட்டு—, நீ—, உவந்து இருத்தி - மகிழ்ந்திருக்கப்போகிறாய்; (எ - று.)

இச்செய்யுளில் வாரரங்கள் கடலைத்தூர்தது இலங்கையை முற்றுகை செய்தலைக் கூறினான். குரங்கு - சாதியொருமை. ஆர்ததது - விரைவுபற்றிய காலவழுவமைதி. சீதையினது வரலாற்றை இராமசுக்கிரீவர் கேட்பதற்கு முன்னமே கடலைத்தூர்த்துக் குரங்குகள் இலங்கையை முற்றுகைசெயது ஆரவாரிக்குமென, காரணம் நிகழ்வதற்கு முன்னமே அதன் காரியம் நிகழ்வ தாகக் கூறியது - மிகையுயர்வுநவிற்சியணியாம். பி - ம்.—[1]ஆர்த்தன. (எக)

எஉ. எண்ணரும் பெரும்படை [1]நாளை யிந்நகர்
நண்ணிய [2]பொழுதது நடுவ ணங்கைநீ
விண்ணுறக் கருளன்மேல் விளங்கும் விண்டுவிற்
கண்ணனை யென்னெடு வெரிநிற் காண்டியால்.

(இ - ள்.) நங்கை - பெண்களிற் சிறந்தவளே! எண் அரும் பெரும் படை - கணக்கிடுதற்கு அரிய [மிக்க] பெரிய வாநரசேனைகள், நாளை - நாளைக்கே, இ நகர் - இந்நகரத்திற்கு, நணணிய பொழுது - வந்து சேர்ந்த பொழுது, அது நடுவண - அந்தச்சேனையின் நடுவிலே, விண் உற கருனன் மேல் விளங்கும் விண்டுவின் - ஆகாயத்திலே பொருந்தக் கருடப்பக்வான்மீது எழுந்தருளி விளங்குகின்ற திருமாலைப் போல, கண்ணனை-இராமபிரானை, என நெடு வெரிநில் - எனது பெரிய பிடரியின்மேல், நீ காண்டி - நீ பார்க்கப்போகின்றாய்; (எ - று.)

'நாளை' என்றது, மிக்கவிரைவுகுறித்ததற்கு; (இது, [illegible] காடு.) 'நணணிய' என்றதும் இவ்வாறே விண்டு - [illegible] மொழியின் சிதைவு; (எல்லாவிடத்திலும் அந்தர்யாமியாய்) வியாபித்திருப்பவன் என்ற பொருள். கரியோ னென்னும் பொருளதாகிய கருஷ்ண னென்னும் வடமொழி, 'கண்ணன்' என வந்தது; இது, இங்கே, அவதாரப் பெயர் தன்றி வந்த காரணப்பெயர் இனி, கண்ணோட்டமுடையவ னென்றும், கண்ணபோன்றவ னென்றும் கொள்ளலாம். பி - ம் —[1]ஏண்டி. [2]பொழுதது. விண்ணுற. (எஉ)

எந. அங்கதன் றோண்மிசை யிளைய லம்மலை
[1]பொங்குவெங் கதிரெனப் பொலியப் போர்ப்படை
யிங்குவந் திறுகுநீ [2]யிடரு மையமுஞ்
சங்கையு நீங்குதி தனிமை நீங்குவாய்.

(இ - ள்.) அங்கதன் தோணமிசை - அங்கதனது தோளின்மேல், இளைய - இளையபெருமான், அ மலை பொங்கு வெம் கதிர் என - அந்த உதயகிரியில் விளங்குகிற உஷ்ணமாகிய கிரணங்களையுடைய சூரியன்போல, பொலிய - விளங்க,—போர் படை - யுத்தத்துக்குச் சித்தமான வாநரசைந்யம், இங்கு வந்து இறுகும் - இங்கே [இவ்விலங்கையில்] வந்து இறங்கித்தங்கும்; (ஆகையால்), நீ—, இடரும் - (இப்பொழுது கொண்டுள்ள) துன்பத்தையும், ஐயமும் - (இராமபிரான் வருவனோ வரமாட்டானோ வென்கிற) சந்தேகத்தையும், சங்கையும்-(அப்பிரான் பகைவெல்வனோ மாட்டானோ வென்கிற) சங்கையையும், நீங்குதி - தவிர்வாயாக: தனிமை நீங்குவாய் - (நீ நாயகனைப்பிரிந்து) தனித்திருத்தலையும் (இனி விரைவில்) நீங்கப்பெறுவாய்; (எ - று.)—பி - ம்:—[1]பொங்கிவெங. [2]இடரின்முற்றவும். (எந)

எச. குராவருங் [1]குழலியிக் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கி லானெனிற்
பராவரும் பழியொடும் பாவம் [2]பற்றுதற்
கிராவண னவனிவ னிராம னென்றனன்.

(இ - ள்.) குரா வரும் குழலி - குராமலர்களை வாசனை வீசுகிற கூந்தலையுடையவளே! இ குறித்த நாளினே - (நீ) குறிப்பிட்ட இவ்வொரு மாசகாலத்துள்ளே, விராவரும் நெடுஞ் சிறை மீட்கிலான் எனின் - இவ

ஞ்பொருந்தியுள்ள பெரியசிறைக்காவலினின்று (உன்னை) அப்பிரான் மீட்காமற்போவானானால், பராவரும்பழியொடும் பாவம் பற்றுதற்கு-பராவிவருகிற பழியும் பாவமும் தொடர்தற்கு, அவன் இராவணன் - இராமபிரானே இராவணனாவான்; இவன் இராமன் - இவ்விராவணனே இராமனாவான், என்றனன் - என்று கூறிமுடித்தனன், (அநுமான்); (எ - று.)

இன்னும் ஒரு மாசகாலத்திற்குள் உன்னைச் சிறைமீட்டானாயின், இராமபிரான், இராவணனே மிகநல்லவனென்னும்படி பழியும்பாவமும் தன்னைப் பற்ற அவனிலும் மிக்க கொடியவனென்பதாம். குரா - மருதோன்றிமரம்; குரவகமென்னும் வடமொழியின் திரிபு. குராவரு குழலி என்றது, முன் நிலைமையைக் கருதிய விளி இனி, இயற்கையிலே அமைவரின் மனமுள்ள கூந்தலெனினுமாம். விராவரும். பராவரும் என்பவை - விராவிவரும், பராவிவரும் என்றவற்றின் விகாரங்கள். பி - பி:—[1]குழலினி. [2]முற்றுதற்கு. [3]இராவணனல்லனே. (எச)

வேறு.

எந.—அநுமான்வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து
சீதை சிலகூறத்தொடங்குதல்.

ஆக விம்மொழி யாசில கேட்டறி வுற்றா
ளோகை கொண்டுக ளிக்குமனத்தளு யர்ந்தாள்
போகை நன்றிவ னென்பது புந்தியின் வைத்தா
டோகை யுஞ்சில வாசக மின்னன சொன்னாள்.

(இ - ள்.) ஆக - இவ்வாறாக, ஆசு இல - குற்றமில்லாதனவாகிய, இமொழி - இவ்வாராதனைகளை, தோகைஉம் - மயில்போலுஞ் சாயலையுடைய பிராட்டியும், கேட்டு—, அறிவு உற்றாள் - அறிவுதெளிந்தவளாய், ஓகை கொண்டு களிக்கும் - மகிழ்ச்சியடைந்து சந்தோஷிக்கின்ற, மனத்தள் - மனத்தையுடையவளாய, உயர்ந்தாள் - உடம்புபூரித்து,—இவன் போகை நன்று என்பது புந்தியின் வைத்தாள் - 'இவ்வநுமான் (இராமபிரானிடம் விரைவிற்) போய்ச்சேர்வதே (தனக்கு) நன்மையுண்டாதற்குக்காரணம்' என்று மனத்தில் எண்ணி,—இன்னன சிலவாசகம் - இப்படிப்பட்ட சில வார்த்தைகளை, சொன்னாள் - சொல்லலானாள்; (எ - று.)

சீதை, அநுமான்வார்த்தையைக் கேட்டு, அவன் சொல்வனயாவும் உண்மையேயா மென்று துணிந்து, அவன் இராமபிரானிடம் எவ்வளவு விரைவிற் செல்வனோ அவ்வளவு விரைவில் தனக்கு நன்மையுண்டாகு மென்றெண்ணி அவனுக்கு விடைகொடுக்கக் கருதுதலுடன், அப்பிரானிடத்து விண்ணப்பிக்கவேண்டிய சில அடையாளமொழிகளைக் கூறுபவளாயினளென்க. உயர்ந்தாள் - சிறந்தவளாகிய, தோகை போல்வாளென்றுமாம்.

எசு.—சீதை 'நான்கூறும் சிலவார்த்தைகளை இராமபிரானிடம் விண்ணப்பிக்கவேண்டும்' என்றல்.

சேறி யையவிரைந்தனை தீயவை யெல்லாம்
வேறி யானினி யொன்றும் விளம்பலென் மேலோய்
கூறு கின்றன முன்குறி யுற்றன கோமாற்
கேறு மென்றவை சொல்லென வின்ன விசைப்பாள்.

(இ - ள்.) ஐய - ஐயனே! மேலோய் - மேன்மைக்குணமுடையவனே! விரைந்தனை சேறி - (இவ்விருந்து இராமபிரானிடம்) விரைந்து செல்வாயாக: தீயவை எல்லாம் வேறி - (இடையிலே நேரும்) தீங்குகளையெல்லாம் வெல்வாயாக: இனி யான் ஒன்றும் விளம்பலென் - இப்பொழுது நான் (அதிகமாக வேறு) ஒன்றும் சொல்லப்போகிறதில்லை; 'கூறுகின்றன - (நான் இப்பொழுது) சொல்லுகின்றனவும், முன் உற்றன - முன்னே நிகழ்ந்தனவுமாகிய, குறி - அடையாளங்கள், கோமாற்கு - எனது தலைவனாகிய இராமபிரானுக்கு, ஏறும்-சம்மதமாம், என்று - என்ற காரணத்தால், அவை சொல்-அவற்றை (அப்பிரானிடத்து) விண்ணப்பிப்பாய்,' என - என்று சொல்லி, இன்ன இசைப்பாள் - இவ்வார்த்தைகளைக் கூறுபவளானாள்; (எ - று.)—அவற்றை, அடுத்த எழுகவிகளிற் காண்க.

அநுமானிடம் தான் கொண்டுள்ள மிக்க அன்பினால் வழியில் அவனுக்கு யாதோரிடையூறும் நிகழாதிருக்கவேண்டு மென்பாள், 'தீயவையெல்லாம் வேறி' என்றாள். 'கோமாற்கு ஏறுமென்று அவைசொல்' என்றதனால், கீழ் அப்பிரானைப்பற்றித் தான் வெறுப்புடன் கூறியவற்றைக் கூற வேண்டாவென்று குறிப்பாக விலக்கியவாறு. பி - ம்:—[1]உரைத்தனை. (எசு)

எஎ.—இதுமுதல் ஏழுகவிகள் - சீதைகூறிய அடையாளம்.

நாக மொன்றிய நல்வரை யின்றலை மேனு
ளாகம் வந்தெனை [1]யள்ளுகிர் வாளி னளைந்த
காக மொன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிபபாய்.

எட்டுககவிகள் ஒருதொடர்.

(இ - ள்.) மேல் நாள் - முற்காலததில் [வனவாசஞ் செய்யத்தொடங்கிய காலத்தில்], நாகம் ஒன்றிய நல் வரையின்தலை - மேலுலகத்தையளாவிய [மிக உயர்ந்த] அழகிய சித்திரகூடபருவததிலே, வந்து - (அருகில்) வந்து, எனை - என்னுடைய, ஆகம் - மாரபை, அள் உகிர் வாளின் - கூர்மையான வாள் போன்ற (தனது) நகததினால, அளைந்த - குத்தின, காகம் ஒன்றை - ஒரு காக்கையை, முனிந்து - கோபித்து, அயல கல் எழு புல்லால் - அருகிற் கல்லினிடையே முளைத்த புல்லைக் கொண்டு, வேகம் வெம் படை - விரைவையுடைய உகிரமான பிரமாஸ்திரத்தை, விட்டது - (இராமபிரான்) பிரயோகித்ததை, மெல்ல விரிப்

பாய் - மெதுவாக (அப்பிராணுக்கு நான்சொன்னேனென்று அடையாளஞ்) சொல்லாய்; (எ - று.)—இதுமுதல் ஆறுகவிகளில் காகாசுர விருத்தாந்தம் கூறப்படுகின்றது.

காகமொன்றிய நல்லுரை - காகபுள்ளைமரங்கள் பொருந்திய மலையென்றுமாம். உயிர் என்பதற்கு - இடத்திற்கு எற்ப, மூக்கு எனப் பொருளென்பாரும், 'உயிர்' எனப்பாடங்கொண்டு-மூக்குஎன்பாரு முளர். இனி, கூரிய கால்களத்தாற் றேய என உரைப்பாரு முளர். அங்குக் கிடந்ததொரு புள்ளை யெடுத்து அதிற் பிரமாஸ்திரத்தை அமைத்து விட்டதனால், 'புள்ளைக் கேக வெம்படை விட்டது' எனப்பட்டது; 'நல்லவனுக்குப் புல்லு மாயுதம்' என்னும் பழமொழி இது பற்றி வந்ததென்க. பி - ம்:—[1]அகன். (எஎ)

எஅ. அங்க தஞ்சி நடுங்கி [1]யயன்பதி யண்மி
யிகுரு நின்வர வென்ன வெனக்கனல் வெய்த
மங்கை பங்கனெ டெண்டிசை யுஞ்செல மற்றோர்
தங்க டங்களி டங்கண் [2]மறுத்தமை தைப்பாய்.

(இ - ள்.) அகுரு - அப்பொழுது, அது - அக்காகம், அஞ்சி - (தன்னைப் பின்தொடர்ந்து கொல்லவருகிற அந்த அமபுக்குப்) பயந்து, நடுகி - (அச்சத்தால் உடம்பு) நடுகி, அயன் பதி அணமி - பிரமலோகத்தை யடைந்து,—(அப்பொழுது பிரமதேவன்), இகுரு நின்வரவு என்ன எனகனல்வு எய்த - 'இங்கே உனது வருகை என்ன?' என்றுசொல்லிக் கோபங்கொள்ள,—மங்கை பங்கனெடு எண் திசையும் செல் - உமாதேவியை (த்தனது இடப்) பக்கத்திற்கொண்ட சிவபிரானிடத்தும் மற்றும் எட்டுதிக்குகளிலும் செல்ல,—மற்றோர் - அவர்களெல்லாம், தங்கள் தங்கள் இடங்கள் மறுத்தமை - தங்கள் தங்கள் இடங்கட்கு (வராதே யென்று அக்காகத்தைத்) தடுத்ததை, தைப்பாய் - (அப்பிரானது மனதிற்) பொருந்தச் சொல்லாய்.

அந்த அஸதிரம மந்தகதியாக விடப்பட்ட தாகையாலே பின்தொடர்ந்து சென்றதென அறிக. அக்காகத்தின் வருகையைத் தாம் ஏற்றுக்கொண்டால் நமக்கும் என்ன அபாயம் வருமோவென்று அஞ்சி இவனைம் யாவரும் கைவிடுவாராயினர். அது அஞ்சி - அதற்கு [அவ்வஸ்திரத்திற்கு]ப் பயந்து என்றுமாம். 'எண்டிசை' என்றது, அஷ்டதிக்பாலகரைக் கருதி. பி-ம்:—[1]அண்ட. [2]மறுத்தனர்தக்கோர். (எஅ)

எகூ. இந்தி ரன்[1]மரு மைந்த னுறுந்துயர் யாவு
மந்த ரத்தினி னின்றவர் கண்டினி யந்தோ
வெந்தை தன்சர ணன்றியொர் [2]தஞ்சமு மின்றால்
வந்த வன்சரண் வீழ்கென வுற்றதும் வைப்பாய்.

(இ - ள்.) இந்திரன் தரு மைந்தன்-தேவேந்திரன்பெற்ற பிள்ளையாகிய சயந்தனது ஏடிவமான அக்காகம், உறும் துயர் யாவும் - அடைகிற துன்பம் முழுவதையும், அந்தரத்தினில் நின்றகர்-ஆகாயத்திற் பொருந்திய தேவர்க

சொல்லாம், கண்டு - பார்த்து, 'அந்தோ - ஐயோ! இனி - இப்பொழுது, எந்தைதன் சரண் அன்றி - எமது தலைவனாகிய இராமபிரானது திருவடிகளே யல்லாமல், ஓர் தஞ்சமும் இன்று - வேறொரு ரக்ஷகமும் (உனக்கு) இல்லை; ஆல் - ஆதலால், அவன் சரண் வந்து வீழ்க - அபிராமனது திருவடிகளிற் போய் விழுவாயாக,' என - என்றுசொல்ல, உற்றதும் - (அக்காகம இராமபிரானிடம்) மீண்டுவந்ததையும், வைப்பாய - மனத்திறபொருந்தச் சொல்வாய்; (எ - று)—எந்தைதன்சரணன்றி யொர்தஞ்சமுமின்று - இராமபிரானே சரணாகத ரக்ஷக னென்றபடி. பி - பி.—[1]தனி. [2]நன்றியிலாதால்.

௮௦. ஐய நின்சர ணஞ்சர ணென்றவ னஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளன் மகிழ்ந்தே
வெய்ய வன்க ணிரண்டொடு போகென விட்ட
தெய்வ வெம்படை [1]யுற்றுள தன்மை தெரிபபாய்

(இ - ள்) அவன - (இராமபிரானிடத்து வந்த) அந்தச்சயந்தன், அஞ்சி-பயந்து, வையம் வந்து-பூலோகத்துக்கு வந்து, 'ஐய-தலைவனே! [illegible] உனது திருவடிகளே, சரண - (எனக்கு) ரக்ஷகமாம்', என் [illegible] விக்கொண்டே, வணங்கிட - (திருவடிகளில் விழுந்து) [illegible], வள்ளல் - வரையாதருளுந்தன்மையையுடைய இராமபிரான், மகிழ்ந்து - திருவுள்ளமுவந்து, வெய்யவன் கண் இரண்டொடு போகு என - 'கொடிய இக்காகத்தினது இரண்டாவதுகணணைக் கவாதலோடு (நீ) போ' என்று (அஸ்திரத்தை) நியமிக்க,—விட்ட தெய்வ வெம் படை - (இராமபிரான் தான் முன்னே) பிரயோகித்த தெய்வத்தன்மையுடைய அவ்வஸ்திரம், உற்றுள தன்மை - (அவ்வாறே கணவிழிக ளிரண்டனுள் ஒன்றைப் பறித்துக்கொண்டு) சென்ற தன்மையை தெரிபபாய - தெரியச்சொல்வாயாக; (எ - று)

தன்பக்கல் மிகப்பெரிதும் அபசாரப்பட்டவனும் பின்பு தன்னைவந்து சரணமடைந்ததாதலிரதத்தில அவன்குற்றத்தைப் பொறுத்த பெருங்கருணையுடைமை தோன்ற, இராமபிரானை 'வள்ளல்' என்றார். பி - பி:—[1]உற்ற தமைய (௮௦)

௮௧. எந்தை நின்சர ணஞ்சர ணென்றவி தன்னான்
[1]முந்து நின்குறை யும்பொறை தந்தன முந்துன்
சந்த மொன்று கொடித்திரள் கண்க டமக்கே
வந்தொர் [2]நன்மணி நிறகென வைத்ததும் வைப்பாய்.

(இ - ள்.) 'எந்தை - தலைவனே! நின் சரணம் - உனது திருவடிகளே, சரண - (எனக்கு) ரக்ஷகமாம்,' என்ற இதனால் - என்று (தான் சரணாகதனானமை தோற்றச்) சொன்ன இதனால்; 'முந்து நின் குறையும் - முன்னே நீ செய்த குற்றத்தையும், பொறை தந்தனம் - பொறுத்தல் [illegible] - முந்து - எதிரிலுள்ள, உன் - உனது, சந்தம் - வடிவழகை, [illegible] கொடி - காகங்களின், திரள் - கூட்டத்தினுடைய,

கண்கள் தமகே - இரண்டுகண்களுக்கும், ஓர் கல் மணி - கலை கருவிழி யொன்றதானே, வாது சிந்த - உலாவிக்கூறு சிந்தாக', என - என்று, வைத்தலும் - (இராமபிரான்) அறுகிரிந்ததையும், வைப்பாய் - (அப்பிரானிடத்து அடையாள மொழிகளாகக்) கூறுவாய்; (எ - று.)

இதன்னுல் - விரித்தல்விகாரம். "ஏகஃ பாபாநி குருதே பலம் புநகதே மஹாஜநஃ [ஒருவன் குற்றஞ்செயகிறான் அதன்பயனைப் பலரும் அனுபவிக்கின்றனர்]" என்றபடி ஜயந்தனென்னுங் காகாசுரனொருவன் செய்த குற்றத்தின் பயனுக எல்லாக் காகங்களும் ஒரு கருவிழியை யிழந்தன வென்க. "சிதகிரகூடகத்துப்பச சிறுகாகைமுலைதீண்ட, அதகிரமேகொண்டெறிய வளைத்துலகுந் திரிந்தோடி, விதகனே யிராமாவோ நினைபய மென்றழைப்ப, வதகிரமே யதனணணை யறுத்தது மோரடையாளம்" என்பது, பெரியார் பாசுரம். பி - ம் —[1]முர்தை. [2]கண. (அ௪)

௬௨. வேகம் விண்டு சயந்தன் வணங்கி விசும்பிற்
போக வண்டாகள் கணடலர் கொண்டு பொழிந்தார்
நாக நர்ப னிளங்கிளை நன்குண ராத
பாகு தங்கிய [1]வென்றியி னின்சொல் பணிப்பாய்.

(இ - ள்.) சயந்தன —, வேகம் விண்டு - (தான முன்கொண்ட) அச்சம் நீங்கி, வணங்கி - (இராமபிரானை) நமஸ்கரித்து, விசும்பில் போக - வானுலகத்திற் செல்ல,—அண்டாகள் - தேவாகள், கணடு - (அதனைப்) பாரத்து, அலாகொண்டு பொழிந்தார் - பூக்களைக்கொண்டு மழைபொழிந்தாகள்; நாகம் நமபன் இளங கிளை - யானைபோன்ற [நமபிரானை] இராமபிரானது இளைய தமபியாகிய இலகுமணனும், நன்கு உணராத - நன்றாய அறியாத, வென்றியின் - இவ்வெற்றியைப்பற்றிய, பாகு தங்கிய இன் சொல் - கருப்பஞ்சாற்றின்சுவைபொருந்திய இனிய சொல்லை, பணிப்பாய் - (நான்சொன்னபடியே அப்பிரானிடத்தில் அடையாளஞ்) சொல்வாயாக; (எ - று)

காகாசுரனிருத்தாகதம் மிக்க வநாகதத்தில் இருவகுமாரசோத்திரியிலே நடக்த வரலாறுதலால, இலகுமணனுக்கும் தெரியாததாயிற்று; ஆகையால், இவ்வரலாற்றைக் கூறின, அநுமான் சீதையைக் கணடுதான் வந்தனனென இராமபிரான் நிரணயித்தல் கூடும்; ஆதலால், இவ்வரலாறே அடையாளமாகக் கூறுவதற்கு ஏற்றதா மென்றவாறு வேகம் விண்டு - அவ்வேகம் ஒழிந்து என்றுமாம. தேவாகள் பூமாரிபொழிந்தது, சரணாகதரிடத்து வாத்ஸல்யமகொண்டு பெருமபிழையையும் பொறுக்கின்ற இராமபிரானது ஸௌசீல்யகுணத்தைப் பாராட்டியும், தமது தலைவனை இந்திரனது குமாரன் தனக்குரோத ஆபத்தினின்று தப்பி உயிரிழைத்ததனை கருதியுமென்க. இளங்கிளை - தம்பி. பாகுதங்கிய வென்றி - தோனிறபொருந்திய வெற்றியைப்பற்றிய வெனவுமாம பி - ம்:—[1]ஒன்றிய. (அ௨)

அஉ. [1]என்னொ ரின்னுயிர் மென்கிளிக் கியார்பெய ரீகேன்
மன்ன வென்றலு மாசறு கைகயன் மாதெ
னன்னை தன்பெய [2]ராகென வன்பினொ டந்நாட் [தோய்.
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை தொடர்ந்

(இ - ள்.) மெய்ம்மை தொடர்ந்தோய் - உண்மையானவழியை அநுசரிப்பவனே! 'மன்ன - நாயகனே! என் ஓர் இன் உயிர் மெல் கிளிக்கு - எனது ஒப்பற்ற இனிய உயிரோன்ற [அருமையான]மென்மையான கிளிப்பிள்ளைக்கு, யார் பெயர் ஈகேன் - யாரெயரை இடுகிறது?' என்றலும் - என்று (நான்) கேட்டவளவில், 'என் அன்னை - எனதுதாயாகிய, மாசு அறு- குற்றமற்ற, கைகயன் மாதுதன் - கேகயதேசத்தரசனது புதல்வியாகிய கைகேயினது, பெயர் - பேர், ஆக - வைக்கக்கடவது,' என - என்று, அன்பினொடு - அன்புடனே, அ நாள் - அந்நாளில் [அயோததியிலிருக்கும்பொழுது], சொன்ன (இராமபிரான் எனக்குக்) கட்டளையிட்டருளிய, மெய்மொழி - மெய்ம்மையான வாததையையும், சொல்லுதி-(அடையாளமாகச) சொல்வாய்; (எ - று.)

இதனால், இராமபிரான் கைகேயியினிடத்துத தான்கொண்டிருந்த மெய்யன்பு நன்கு வெளியாகின்றது. மாது - அழகு: அதனையுடையவளுக்கு ஆகுபெயர். பி - ம்:—[1]என்னது. [2]ஈகென. (அஉ)

அச.—இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்; சீதை தனது ஆடையினின்று ஆனாமணியை யெடுக்க, அதன் ஒளியைக்கண்டு அநுமான்திகைத்தல்.

என்[1]று ரைத்தினி தித்தனை பேரடை யாள
மொன்று ணர்த்துவ தில்லென வெண்ணி யுணர்ந்தா
டன்றி ருத்துகி லிற்பொதி வுற்றது தானே
வென்ற தச்சுடர் [2]மேலொடு கீழுற மெய்யால்.

(இ - ள்.) (பிராட்டி),—என்று - என (இவ்வாறு அடையாளமொழிகளை அநுமானிடத்து)க் கூறி, இ தனை போ அடையாளம் இனிது உரைத்து ஒன்று உணர்த்துவது இல் என எண்ணி உணர்ந்தாள - இவ்வளவு சிறந்த அடையாளங்களை இனிமையாகச சொன்னபின்பு (இனி அடையாள வாததையாக) ஒன்றுஞ் சொல்லவேண்டுவதில்லை யென்று ஆலோசித்தறிந்தவளாய், (உடனே). தன் திரு துகிலில் பொதிவுற்றது - தான் உடுத்துள்ள அழகிய ஆடையில் முடியப்பட்டுளளதும், மெய்யால் மேலொடு கீழ் உற அ சுடர் தானே வென்றது - (தனது) வடிவததால் மேலுலகமும் கீழுலகமும பொருந்தி விளங்க (ச்சூரியன் முதலிய) அச்சுடர்களையெல்லாம தானென்றே ஜயித்ததுமாகிய, (எ - று.)—'அன்னது' என மேற்கவியோடு இயையும.

சீதை, ருசியமூககிரியில் வாநராகூட்டத்தின் நடுவில் விழும்படி தனது ஆபரணங்களையெல்லாம் ஒருசீலையில்முடிந்து எறிந்தபொழுது தனதுருவாமணியைமாதரம் எடுத்து, 'இது, சமயத்தில் உபயோகப்படும்' என்ற எண்ணத்துடன் தன்துணியில் முடிந்து வைததிருந்தன

னென அறிக. இதனால், பிராட்டியினது வருங்காலத்தைப்பற்றி ஆராய்ந்து தொழில்செயயுந்தன்மை வெளியாம். அச்சுடா, அகரசுட்டு - பிரசித்தியைக் காட்டிற்று. பி - ம்:—[1]உரைத்தனன். [2]மேலெனக்கீழும். (அச.

அடு வாங்கி னுடன் மலர்க்[1]கையி னன்னது முன்னு
வேங்கி னனவ் வனுமனு மென்கொலி தென்னு
வீங்கி னன்வியந் தானுல கேழும் [2]விழுங்கித்
தூங்கு காரிருண் முற்று [3]மிரிந்தது சுற்றும்.

(இ - ள்.) அன்னது - அசுடாமணியை, தன் மலர் கையின் வாங்கி னுள் - தனது தமரைமலரைபோன்ற [மென்மையான] கையில் எடுத்தாள், (சீதாபிராட்டி). அ அனுமனும் - அந்த அனுமானும், இது என்கொல் என்னு முன்னு - இது என்ன வென்று எணணி, ஏங்கினன் - திகைத்து, வீங்கி னன் - உடம்புபூரித்து, வியந்தான் - ஆச்சரியப்பட்டான்; (பிராட்டி அதனைக் கையில் எடுத்தபொழுது அதன் ஒளியால், உலகு எழும் விழுங்கி தூங்கு கார் இருள் முற்றும் - ஏழுலகங்களையும் உட்கொண்டு தங்குகிற கரியஇருள் முழுவதும், சுற்றும் இரிந்தது - சுற்றிலும் ஓடிப்போய்விட்டது; (எ - று.)

உலகேழும்விழுங்கித் தூங்கு காரிருண முற்று மிரிந்தது - தொடர் புயர்வுநவிற்சியணி; அதன் ஒளிமிகுதியை விளக்கிற்று. அநுமான், அம் மணியின்ஒளி மிகுதியைக்கண்டு இது என்கொலென முன்னிதியங்குபவ னாயின னென்க. பி - ம்:—[1]கையினன்மனம். [2]விழுங்க. [3]இரிந்தனசுற்ற. ()

அசு.—இதுவும், அடுத்தகவியும் - சூளாமணியின் சிறப்பு.

மஞ்ச லங்கொளி யோனுமிம் பாரகர் வந்தா
னஞ்ச லன்னென வெங்க ணரக்க ரயிர்ந்தார்
சஞ்ச லம்புரி சக்கர வாக முடன்றாழ்
கஞ்ச மும்மலர் வுற்றன காந்தின காந்தம்.

(இ - ள்.) (அப்பொழுது அம்மணியின்ஒளியால்), 'மஞ்சு அலங்கு ஒளி யோனும் - மேகமண்டலத்துக்குமேல் விளங்குகின்ற ஒளியையுடைய சூரிய னும், அஞ்சலன் - பயப்படாதவனும், இ மா நகர் - இந்தப்பெரிய பட்டணத் திலே, வந்தான் - வந்தான்போலும்', என - என்று, வெம்கண் அரக்கர் - பயங்கரமான கண்களையுடைய இராக்கதர், அயிர்த்தார் - சந்தேகித்தார்கள்; (அந்நகரத்திற் சூரியன் வருகை எப்பொழுதும் இல்லாமையால்), சஞ்சலம் புரி சக்கரவாகமுடன் - (துணையோடுகூடாமல் எப்பொழுதும்) வருத்த மடைந்துள்ள சக்கரவாகப்பட்சிகளும், தாழ்கஞ்சமும - (எப்பொழுதும் மல ராமற்) குவிந்தேயுள்ள தாமரைமலர்களும், மலர்வு உற்றன - மலர்ச்சி யடைந்தன; காந்தம் - சூரியகாந்தக்கற்கள், காந்தின - தீயுமிழ்ந்தன; (எ-று)

சூளாமணியின்ஒளியைக்கண்டு சூரியனதுஒளி யென்று மயங்கிய அரக்கர், 'நம் அரசனிடத்து அச்சத்தினால் இத்தனைகாள விளங்காத

சூரியன் இன்று அச்சமின்றி விளங்குவதனால், இச்சூரியனுக்கு என்னதுணை வலிமை யுண்டாயிற்றோ? நமக்குப் பெரும் பகைவனாய் உண்டாய்விட்டாரோ!' என்ற எண்ணத்தினால் அயிராப்பாராயின ரென்க. சக்கரவாகப்பறவைகள் இரவெல்லாம் பிரிந்திருந்து பகலில் சூரிய வெளிச்சத்தில ஆணும் பெண்ணும் கூடிக் குலாவுதலும், சூரியனொளியைக் கண்டமாதிரத்தில் தாமரை மலர்தலும், சூரியகாந்தமென்னுங் கல் சூரியனொளியால் தீயைக் கக்குதலும், இயல்பு. 'மஞ்சலங்கொளியோன்...வந்தான்...என' என்பதை, 'மலர்வுற்றன' 'காந்தின்' என்பவற்றோடுங் கூட்டுக. சூளாமணியினொளியைச சூரியனொளி யென்று அரக்கர் முதலியோர் மயங்கியதாகக் கூறியது, மயக்கவணியாம்: சகரவாகம் மலர்வுறுதல் - (பேடையுடன்கூடி) அகமகிழ்தல்; தாமரை மலர்வுறுதல் - விகசித்தல். சகரவாகமுடன் தாழ்கஞ்சமும் மலர்வுறுதல் - சிலேடையை மூலமாகக்கொண்டு வந்த அபேதாத்யவஸாயம் [வேறுபட்டிருக்கவும அதனை ஒன்றாகக்கருதுதல்] பற்றிய உடனாவிற்சியணி மயக்கவணியை இவ்வணி அங்கமாகக கொண்டிருப்பது, உறுப்புறுப்பிக்கலவையணி. காந்தம் - குறிப்பால் சூரியகாந்ததை உணாதநிற்று. இச்செய்யுள் எமக்குக்கிடைதத ஏட்டுப்பிரதிகளிலிலலை. (அக).

அஎ. கூந்தன் மென்மழை கொண்முகின் மேலெழு கோளின்
வேந்த தன்னது மெல்லிய றன்னெழின் மேனி
சேந்த தந்தமில் சேவகன சேவடி யென்னக்
காந்து கின்றது காட்டினண் மாருதி கண்டான்.

(இ - ள்.) மழைகொள் - குளிராசசியைக் கொணட, மெல் கூந்தல் - மெல்லிய (பிராட்டியின்) கூந்தலாகிய, முகில்மேல் - மேகததின்மேலே, எழு - விளங்குகிற, கோளின வேந்து அது - நவக்கிரகங்களுள் தலைவனாகிய சூரியனை, அன்னது - ஒத்திருப்பதும,—மெல் இயலதன் - மென்மையான தன்மையையுடைய பிராட்டியினது, எழில் மேனி - அழகிய திருமேனி போல சேந்தது - சிவந்துள்ளதும,—அந்தம் இல் - (திருக்கலியாணகுணங்களுக்கு) ஓர் எல்லையிலலாத, சேவகன் - வீரனாகிய இராமபிரானது, சேஅடி என்ன - சிவந்த திருவடிகள்போல, காந்துகின்றது - விளங்குகின்றதுமாகிய அசசூளாமணியை, காட்டினள - (பிராட்டி) காண்பித்தாள்; மாருதி - அநுமான், கண்டான் - பார்ததான்; (எ - று.)

'மழைகொள்' என்பதை முகிலுக்குங் கூட்டுக. மேகம் - கூந்தலுக்கும், சூரியன் - சூளாமணிக்கும் உவமை. இவ்வுவமை கூறியது, இம்மணியைக் கூந்தலிலணிந்தா லுண்டாகும் நிலைமையைக் கருதி. உருவகவணியை அங்கமாகக கொண்டுவந்த உவமையணி. (அஎ)

அஅ —சீதை அநுமானிடத்து அச்சூளாமணியைக் கொடுத்தல்.

சூடை யின்மணி கண்மணி யொப்பது தொன்னு
ளாடை யின்க ணிருந்தது பேரடை யாள
நாடி வந்தென தின்னுயிர் [1]நல்கிய நம்பா
கோடி யென்றுகொ டுத்தனண் மெய்ப்புகழ் கொண்டாள்.

(இ - ள்.) 'நாடி வந்து - (என்னைத்) தேடிவந்து, எனது இன் உயிர் நல்கிய நம்பா-என்னுடைய இனியபிராணனைக் கொடுத்த ஆடவரிற் சிறந்தவனே! கண்மணி ஒப்பது - கண்ணின் கருவிழியையொத்தது அருமையானதும், தொல் நாள் ஆடையின்கண் இருந்தது - பலநாளாக (எனது) ஆடையில் மூடிந்து வைக்கப்பட்டிருந்தது மாகிய, ஆடையின் மணி - இச்சூளாமணியை, பேர் அடையாளம் - பெரிய அடையாளமாய், கோடி - கொள்வாயாக,' என்று - என்றுசொல்லி; மெய் புகழ் கொண்டான் - உண்மையான கீர்த்தியைக் கொண்டபிராட்டி, கொடுத்தனள் - (அதனை அநுமானிடத்துக்) கொடுத்தாள்; (எ - று.)

தொளைஞள் - இராவணன் எடுத்துவந்த நாள் முதல். அநுமானை 'நாடி வந்து எனது இன்னுயிர் நல்கிய நம்பா'எனவிளித்ததனால். சீதையின் செய்ந்நன்றிமறவாததன்மை விளங்கும். 'பேரடையாளம்' ஒருததாலும் மறக்கவொண்ணாத அடையாள மென்க. பி - ம்:—[1]நல்கினைநல்லோய். (அஎ)

அகூ.—அச்சூளாமணியைப்பெற்றுக்கொண்டு அநுமான் விடைபெற்றுச் செல்லுதல்.

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது றாவகை பாதனை செய்தனன் வந்தித்
தழுது மும்மை வலங்கொ டிறைஞ்சின னன்போ
டெழுது பாவையு [1]மேத்தினை ளேகின னிப்பால்.

(இ - ள்.) (அநுமான்), தொழுது - (பிராட்டியை) வணங்கி, வாங்கினன் - (அதனை) வாங்கிக்கொண்டு, முற்ற - முடிய [இராமபிரானிடம் கொடுக்குமளவும்]. பழுது உறா வகை - ஒருபழுதும் உண்டாகாதபடி, சுற்றிய தூசினன் - (எனது) ஆடையிற் சுற்றிமுடிந்து, பத்தனை செய்தனன் - பத்திரப்படுத்தி, வந்தித்து - (அச்சூளாமணியை) நமஸ்கரித்து, அழுது - (அப்பிராட்டியின் தன்மையைக் கருதிப்) புலம்பி, மும்மை வலம்கொடு - (அப்பிராட்டியை) மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து, இறைஞ்சினன் - வணங்கினான்; எழுதுபாவையும் - சித்திரத்தில் எழுதிய பிரதிமைபோல மிக அழகிய பிராட்டியும், அன்போடு - அன்புடனே, ஏத்தினள் - (அவ்வநுமானுக்கு) ஆசீர்வாதஞ்செய்தாள்; (அநுமான்), இப்பால் ஏகினன் - பின்பு திரும்பினான்.

அநுமான் சூளாமணியைப் பத்திரப்படுத்திப் பின்பு சீதையினிடத்து விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தினின்று புறப்பட்டனனென்றவாறு. பழுதுறாவகை - இடைவழியிற் கீழ்விழுந்திடாதபடி. ஏகினன் - மீண்டான்; இப்பால் - பின்பு என மேற்படலத்துக்குத் தொடர்புவாயாகவுமாம். பி-ம்:—[1]ஏத்தனள்போயினள். (அகூ)

சூளாமணிப்படலம் முற்றிற்று.

ஏழாவது

பொழிலிறுத்த படலம்.

அநுமான் தன்வருகையை இராவணனுக்குத் தெரிவிப்பதன் பொருட்டு சீதாபிராட்டியைச் சிறைவைத்துள்ள அசோகவனிகை யெனப்படும். பொழிலையழித்த செயலை யுணர்த்தும் பாகம்.

க.—அப்போது அநுமான் தனக்குள் ஒன்று ஆலோசிக்கத் தொடங்குதல்.

நெறிக்கொடு [1]வடக்குற நினைப்பினி னிமிர்ந்தான்
பொறிக்குல மலர்பபொழி லிடைக்கடிது [2]போவான்
சிறுதொழின் முடித்[3]தகற நீதென தெரிந்தான்
மறித்துமொர் செயற்குரிய [4]காரிய மதித்தான்.

(இ - ள்.) நெறி கொடு - (தான் இனிச் செலலவேண்டிய) வழியைக் கருதி, வடகுறு உற - வடக்குத்திக்காகப் போகுமாறு, நினைப்பினில் - நினைத்ததனால், (அதற்கு ஏற்ப), நிமிர்ந்தான - பெரிய வடிவத்தைக்கொண்ட அநுமான,—பொறி குலம மலர் பொழிலிடை - இலக்குமியினமசமான சீதாபிராட்டி தங்கியுள்ள தொகுதியான மலர்களையுடைய அந்த அசோகவனத்தின் நடுவாக, கடிது போவான - விரைந்து செல்பவனாய [விரைந்து செல்லும்போது], 'சிறு தொழில முடித்து அகறல் - (பிராட்டியைக்கண்டு பேசுதலாகிய இந்த) அற்பகாரியத்தை மாத்திரம செய்து முடித்துவிட்டுத் திரும்பிச்செல்லுதல், நீது - (எனது ஆணமைக்கு)குறைவாகும்,' எனல் - என்ற இந்த விஷயத்தை, தெரிந்தான் - (மனத்தில) ஆலோசித்தவனாய்,—மறித்தும் மீண்டும், செயற்கு உரிய ஓர் காரியம்-செய்தற்கு உரிய ஒருகாரியத்தை, மதித்தான் - (செய்யவேண்டுமென்று) எண்ணினான்; (எ - று)—அவ்வாறு எண்ணுவதை அடுத்த ஆறுகவிகளிற் காண்க.

சீதையினிடத்து விடைபெற்று அப்பாற்செல்ல நினைத்த அனுமான் அங்கனம் செல்லுதற்கு ஏற்ற வடிவத்தைக் கொண்டு வடதிசைநோக்கி அசோகவனிகை நடுவாகத் திரும்பிச்செல்லுகையில், பிராட்டியைக் கண்டு பேசிப்போவதாகிய இந்த அற்பதொழிலோடு திரும்பிவிடுவது நமது ஆணமைக்கு இழுக்காகும்; ஆகவே, நமது ஆணமையைப் பகைவர் மதிக்குமாறு ஒரு பெருங்காரியத்தைச் செய்து போதலே தகுதியென்று மனத்திற் கருதின னென்பதாம. பொறி - இலக்குமி இனி, பொறிக்குலம - புள்ளிகளையுடைய வண்டுகளின கூட்டமெனக் கொள்ளுதலும் ஒன்று. பி-ம்:—[1]வடகுறு. [2]போனான. [3]அகலக. [4]காரணம. (க)

உ —இதுமுதல் ஆறுகவிகள் - அநுமானுடைய ஆலோசனையைத் தெரிவிக்கும்.

ஈனமுறு பற்றலரை யெற்றி யெயின்மூதூர்
மீனநில யதகினுக வீசி விழிமானை

மானவன மலர்ககழலின வைத்துமிலெ [1]னென்று
லானபொழு தெப்பரிசி னாடிய னாவேன.

இதுமுதல எழுகவிகள - ஒரு தொடர.

(இ - ள்.) ஈனமுறு - இழிதொழில் மிகுந்த, பறறலரை - (இகுவன) பலகைவாகளாகிய அரககாகளையெலலாம, வற்றி - அடித்துகொன்று, வயில் முது கூர - மதின்சூழ்ந்த பெரிய இந்தஇலஙகாபுரியை, மீனநிலயத்தின் உக வீசி - சமுதரிரதறிற போய்விழுமபடி வீசியெறிந்து, விழி மானை - பார்வையில மானையொத்த பிராடடியை, மானவன் மலர் கழலில் வைததும் இலென் எனறால் - மதுவமசதநிலமிதான்ய இராமபிரானது தாமரைமலர்போன்ற திருவடிகளிலே கொணடு சேரகராமறபோவேனையானால், ஆன பொழுது - அபபோது, எ பரிசில் - எநத வகையால நான அடியன ஆவேன் - நான் அடியவனாகபபெறுவேன? (எ - று.)

தலைவனது விருப்பதைத் நிறைவேறறுதலே அடியவனுககு ஏற்றதொழிலா மாதலால. இராமபிரான விஷயததில் தீகுபுரிநத இவ்வரக்காகளை இவா வாழுமிடததோடு அழிததுச சீதாபிராட்டியை அவ்விராமபிரானிடததிற சேரததால்தான் தனனடிமை நிலை நிறகுமென முதலிற கருதினன் அநுமானென்க. மீனநிலயம் - பலவகை மீன்களுககும வாழுமிடம கடல். பி-ம்:— [1]கல்லேன். [2]பணியின. (உ)

௩. வஞ்சனை யரககனை நெருககிநெடு வாலா
லஞ்சினுட னஞ்சுதலை தோளுற வசைததுந
வெஞ்சிறையில வைததுமிலென வெனறுமிலெ னென்று
றஞ்சமொரு வாககொருவ ரென்றறது மன்றோ

(இ - ள்) வஞ்சனை அரககனை - (சீதையைக கவாந்து சென்ற) கபடத தொழிலையுடைய அரககனாகிய இராவணனை, நெடு வாலால்-(எனது) நீணட வாலினாலே, அஞ்சினுடன அஞ்சு தலை தோள - பதுதுததலைகளும (இருபது) தோளகளும, உற ஒன்று சேரும்படி, நெருககி அசைததது - நெருக்கிககட்டி, வெம சிறையில் - கொடிய சிறைககாவலில், வைததும் இலென் - வைததலும் செய்திலேன்; (அவ்வளவு செய்யாவிட்டாலும), வென்றும் இலென் - அவ்விராவணனைப் போரில் வெல்லுததலும் செயதிலேன். என்றால்—, ஒருவாககு ஒருவா தஞ்சம் என்றல் - ஒருததருககு ஒருத்தர் உதவிசெயபவராதலெனபது, தகும் அனறோ - தகுதியுடையதாகுமலலவோ? [தகுதியுடையதாகாதென்றபடி]; (எ - று.)

சீதையைத் தான சிறைமீட்டுக கொடுததால, அது மகாவீரனான இராமபிரானது பெருமைககு இழுககாகுமென்று கருதிய அநுமான் இராமபிரானது மனைவியைக கவர்ந்த இராவணனைச சிறைவைததலோ, அல்லது போர செயது வெலலுததலோ இவ்விரணடில எதேனுஞ் செய்தாலே தகுதியாகுமனறி ஒன்றுஞ் செயயாது வாளா திருமபிசசெலவது தகுதியுடையதாகாதென்று கருதின னென்க. தகுமன்றோ' எனபது - இஙகுப் பிறகுறிபபு

ச. கண்டநிரு தக்கடல் [1]கலக்கினன் வலத்திற்
றிண்டிற லரக்கனு மிருக்கவொர் திறத்தின்
[2]மண்டவுத ரத்தவண் மலர்க்குழல பிடித்துக்
கொண்டுசிறை வைத்திடுத லிற் [3]குறைவ துண்டோ.

(இ - ள்.) வலத்தில் - (என்னுடைய) பலத்தினால், கண்ட நிருதர் கடல் - கணனுக்கு எதிர்படுகிற அரக்கர் கூட்டத்தை, கலக்கினன் - கலங்கச்செய்தது,—திண் திறல் அரக்கனும் இருக்க - மிக்கவலிமையையுடைய இராவணனும் பார்த்துக்கொண்டிருக்கையில், ஓர் திறத்தின் - ஒப்பற்ற (எனது) சாமர்த்தியத்தினால், மண்டவுதரத்தவன் - (அவனது) பட்டமகிஷியான மந்தோதரியின், மலர் குழல் பிடித்து கொண்டு - புஷ்பங்களையணிந்த கூந்தலைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய், சிறை வைத்திடுதலில் - சிறை வைப்பதில், குறைவது உண்டோ - குறைவு உள்ளதோ? (எ - று.)

'பழிக்குப்பழிவாங்குமாறு இராவணனைச் சிறைவைத்தல் அல்லது வெல்லுத லென்பதைத் தான் செய்வதும் மஹாவீரனான அவ்விராமபிரானது பெருமைகுக் குறைவு தருவதேயாம, என்று எணணிய அநுமான், இவனைச் சேர்ந்தவர்களாய் எதிர்த்துவருகிற அரக்கரை முறியடித்து இவன பார்த்துக் கொண்டிருக்கையில்தானே இவனது பட்டமகிஷியான மந்தோதரியின கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோயச் சிறைவைத்து இவ்வாறு பழிக்குப்பழி வாங்கினால்மாத்திரம எனது செய்கை நிறைவுற்றதாகுமென்று கருதினனென்க. மந்த உதர என்ற இரண்டுசொற்கள சேர்ந்த 'மந்தோதரி' என்பதில், இந்நூலாசிரியர் 'மந்த' எனபதை எதுகை நோக்கி 'மண்ட' எனத திரிததும், வடமொழி விதிப்படி குணசந்தி கொள்ளாமல் வகரவுடமபடுமெய் புணர்த்தும், வடமொழியிற பெணபாற்கு உரிய ஈகாரத்துப் பதிலாக 'அள்' என்ற விகுதிசேர்த்தும் 'மண்டவுதரத்தவள்' என்றார். பி - ம்.—[1]கலக்கி யென்க. [2]மண்டெதரததிதன. [3]குறையும். (ச)

ரு. மீட்டுமினி யெண்ணுபவினை வேறுமுள தன்று
லோட்டியிவ [1]வரக்கரை யுலைத்துரிமை யெல்லாங்
காட்டுமிது வேகரும மன்னவர் கடும்போர்
மூட்டும்வகை [2]யாதுகொ லென்றுமுயல கின்றான்.

(இ - ள்.) இ அரக்கரை - இந்த ராக்ஷஸர்களை யெல்லாம், உலைத்து - வருத்தி, ஓட்டி - ஓடச்செய்து, உரிமை எல்லாம் - (எனக்குஉளள) அடிமை முறை முழுவதையும், காட்டும் - வெளிப்படையாகக் காட்டுகின்ற, இதுவே—, கரும் - செய்யவேண்டிய காரியமாகும்; இனி - இனிமேல், மீட்டும் - மறுபடியும், எணணும் வினை - ஆலோசிக்கவேண்டிய தொழில், வேறும் உளது அன்று - வேறொன்று மிலலை; ஆல் - ஆதலால், அனைவர் - அந்தஅரக்கரை, கடும போர் மூட்டும் வகை - கொடியபோரில் மூளச்செய்யும்விதம், யாது கொல் - யாதாகுமோ? என்று—, முயல்

கின்றான - (அதற்கு உரிய உபாயத்தை) ஆலோசிக்கலாயினன், (அநு மான்; எ - று.)

'சீதாபிராட்டியைக் கவர்ந்து சிறைவைத்த இராவணன்மீது பெருங் குற்றமெனக்கூறுகின்றாரும் அவ்விராவணனது பத்தினியைத் தூக்கிக்கொண்டு வந்து சிறைவைத்தல்தான் நியாயமாகுமோ?' என்ற ஆராலோசனை கொண்ட அநுமான், 'நாம இப்போது இவ்வரக்கர்களையெல்லாம் வலிவப் போரகு அழைத்து வருத்தி துன்பத்தினால் தனமூலமாக இராமபிரானுடைய வலிமைசிறப் பைக் காட்டுவதே நமது தொழில் வேறு வகையாக ஆலோசிப்பதிற் பயனில்லை' என்று நிச்சயித்து, 'இவ்வரக்கர்களைப் போரகு இழுப்பதற்கு உபாயம் யாது?' என்ற சிந்திப்பவனாயின னெனக் பி - ம் —[1]அரக்கருயிருண்டு. 'யாவது கொல்லனை. (க)

சு. இப்பொழி லினைக்கடி திறுக்குவெ னிறுத்தா
லப்பெரிய பூசலசெவி சார்தலு மரக்கர்
வெப்புறு [1]சினத்தரெதிர் மேலவ ருவர்வந்தா
றுப்புறு முருக்கியுயி ருண்பலிது சூதால்.

(இ - ன.) இப்பொழிலினை - இந்தச்சோலையை, கடிது இறக்குவென் - விரைவில் முறித்தழிப்பேன்; இறுத்தால - (அவ்வாறு முறித்தழித்தால், அ பெரிய பூசல் - (அதனால்தோன்றும்) அந்தப் பேரொலி, செவி சார்தலும் - (தமது) காதிற் படுதலுடனே, அரக்கர் - ராக்ஷஸர்கள், வெப்பு உறு சினத்தர் - கொடுமைமிக்க கோபமுடையவராய், எதிர் மேல வருவர் - எதிர்த்து என் மேற போரகுவருவார்கள்; வந்தால்— துப்பு உற முருக்கி - (என்) வலிமை யைக்கொண்டு அவர்களையழித்து, உயிர் உண்பலி - அவர்களுயிரை வாகு வேன்; இது - இவ்வாறுசெய்வதே, சூது - (நான் இப்போது செய்யவேண் டிய) உபாயமுள்ளசெயலாம்; (எ - று.)—ஆல - அசை; தேற்றமுமாம்

'அரக்கரைப் போரில் மூட்டுவதற்கு வகை யாது?' என்று ஆலோசனை கொண்ட அநுமான், இதனாலும் அடுத்த செய்யுளினாலும் அதற்கு ஏற்ற உபாயத்தைத் தனக்குள் நிச்சயித்துக் கொள்கின்றான னெனக். பி - ம்:— [1]மனத்தா. (சு)

எ. வந்தவர்கள் வந்தவர்கண மீளகிலர் மடிந்தால்
வெந்திற லரக்கனும்.[1]விலக்கரு வலத்தான்
முந்துமெனி னன்னவன் முடித்தலை யிடித்தென்
சிந்தையுறு கோபமு மவித்தினிது செல்வேன்

(இ - ன்.) வந்தவர்கள் வந்தவர்கள் - (என்மீது எதிர்த்துப் போரகு) வருகின்ற அரக்கர்யாவரும், மீளகிலர் - திரும்பிச்செல்லாதவர்களாய், மடிந்தால்—, (பின்பு), வெம் திறல் அரக்கனும் - கொடிய வலிமையை யுடைய இராவணனும், விலக்க அரு வலத்தால் - (எவராலும்) விலக்க முடியாத பலத்துடனே, முந்தும் (என்மீது போரகு) முற்பட்டு

வருவான்; எனின்-அவ்வாறு வந்தானாயின், அன்னவன் முடி தலை இடிகது-அவ்விராவணனது கிரீடமணிந்த தலைகளிற குட்டி, என் சிந்தை உறு கோபமும அவிதது - எனது மனததிலேயுளள கோபத்தையும் தணியசசெய்து, இனிது செலவேன் - சுகமாக (இராமபிரானுளள விடதத்திறகுப பினபு) மீணடு செல்வேன், (எ - று.)

இராவணனது காவறசோலையாகிய அசோகவனிகையை நான் அழிகத அககாரணம்பற்றி என்மேற் போர்கரு வருகின்ற அரக்கர்களை யெலலாம கொன்றுகொணடேவந்தால் இறுதியாக இராவணனே பொருமபடி வருவான்; அசசமயததில் அவனது பததுததலைகளையிடிததேனானால் அப்போதுதான் என்சினம் தணியும்; அதன் பிறகு மீண்டு செல்வதே மனத்திற்கு மகிழ்ச்சியைத தரு மென்று அநுமான் நிசசயித்தனனெனக முடிததலையிடித்து என்பதறகு - முடிததலைகளை நறுகிபபோகட்டு என்று பொருளகாணபாரு முளர். பி - ம்:—[1]வெலறகரும் [1]மனததான் முறிததென, முசிததென.

அ.—அநுமான் அசோகவனத்தை யழித்தல்

என்றுநினை யாவிரவி சநதிர னியகுகுங்
குன்றமிரு தோளனைய தன்னுருவு கொண்டா
னன்றுல [1]கெயிறறிடைகொ ளேனமென லானான்
றுன்றுகடி காவினை யடிக்கொடு துகைத்தான்.

(இ - ள்.) என்று நினையா - என்று மனததி லெணணி (அநுமான), இரவி சநதிரன இயகுகும குன்றம் அனைய இரு தோள - சூரியசந்திரர்கள் வலம்வருகின்ற மேருமலையையொதத இரணடுதோள்களையுடைய, தன உருவு - தனது பெரியவடிவததை, கொணடான - எடுத்துககொணடு,—அனறு - முறகாலததில், [இரணியாக்ஷன் பூமியைச சுருட்டிககொணடு சென்றபோது] உலகு இவ்வுலகததை, எயிறறிடைகொள் - [குததியெடுத்த தனது) தந்ததிலே கொண்டுவந்த, ஏனம - மகாவராகமே, எனல் ஆனான் - என்று உவமைசொல்லத் தககவனாய், துன்று கடி காவினை - (மரங்கள்) அடர்ந்த காவலுள்ள அசோகவனததை, அடிக்கொடு - (தனது) கால்களால், துகைத்தான்—; (எ - று.)

அநுமான் பேருருவகொணடு அவ்வனததைத துகைகக லாயினனென்க. அநுமான்கொணட பேருருவததுககு, உலகததை யிடககுமாறு திருமால் கொணட மகாவராகரூபததை உவமைகூறினா. இரவிசநதிரனியகுகு குனறம் இருதோள் என்பதற்கு - சூரிய சந்திரா உதிதது அஸ்தமிகின்ற உதயகிரிமுதல் அத்தகிரிவரையிற் பரவியுள்ள இரணடு தோள்களையுடைய என்று கூறுவாரு முளர் இராவணனுடைய காவறகாடு என்பதை யுணாததத 'கடி கா' என்றா கடியென்பது - காப்பு முதலிய பல பொருள் குறிகளும் உரிசசொல். பி - ம்:—[1]எயிறறடையும். (அ)

கூ.—இதுமுதல் முப்பத்தொருகவிகள் - அநுமான் துணைத்தலால் அச்சோலை முறிபட்ட தன்மையை வருணிப்பன.

முடிந்தன [1]பிளந்தன முறிந்தன [2]நெரிந்த
[3]மடிந்தன [4]பொடிந்தன [5]மறிந்தன முறிந்த
விடிந்தன தகர்ந்தன [6]வெரிந்தன கரிந்த
வொடிந்தன வொசிந்தன வுதிர்ந்தன பிதிர்ந்த.

(இ - ள்) [illegible] சோலையிலுள்ள மரங்களிற் சில சில).—முடிந்தன - அழிந்துபோயின, பிளந்தன - பிளவுபட்டன, முறிந்தன - முறிந்துபோயின, நெரிந்தன - நொருங்கிப்போயின; மடிந்தன - தலைசாய்ந்தன; பொடிந்தன - பொடிபடியவிட்டன, மறிந்தன - கிளைகள் மடங்கிவிட்டன; முறிந்தன-சிதைந்துபோயின; இடிந்தன - இடிபட்டுப்போயின; தகர்ந்தன - உடைந்துபோயின; எரிந்தன - பற்றியெரிந்துவிட்டன; கரிந்தன - கருகிப்போயின, ஒடிந்தன - ஒடிந்துபோயின; ஒசிந்தன துவண்டுபோயின; உதிர்ந்தன—, பிதிர்ந்த - சின்னபின்னப்பட்டன; (ஏ - று. —பி - ம்—[1]எரிந்த [2]படிந்தன [3]பொரிந்தன. [4]பரிந்தன. [5]எறிந்தன. (கூ)

கo. வேரொடு [1]மறிந்தசில வெந்தசில விண்ணிறு
[2]காரொடு செறிந்தசில [3]காலினொடு வேலைக
[4]தூரொடு பறிந்தசில துடியொடு வானோ
[5]ரூரொடு மலைந்த சிலவுககசில நெகக.

(இ - ள்.) சில - சிலமரங்கள் வேரொடு மறிந்த - வேரோடு கீழ் விழுந்தன; சில—, வெந்த - வெந்துபோயின; சில—, விண்ணில் - ஆகாசத்தில், காரொடு - மேகத்தோடு, செறிந்த - நெருங்கின; சில—, காலினொடு - காற்றினால், வேலை - சமுத்திரத்தில், தூரொடு பறிந்த புராகசசென்று வீழ்ந்தன: சில—, துடியொடு - வண்டுகளுடனே, வானோ ஊரொடு மலைந்த - தேவலோகத்திலே சென்றுமோதின; சில—. நெகக உகக - பிளந்து சிதறிப போயின; (ஏ - று.)—பி - ம்:—[1]பரிந்த. [2]காரொடு மறிந்த. [3]காவினொடு. [4]தூரொடு மறிந்த. [5]ஊரொடுமறிந்த. (கo)

கக. சோனைமுதன் மறறவை சுழற்றிய திசைப்போ
ரானைநுக ரகளுளகு மான[1]வடி பற்று
மேனிமிர விட்டன விசுமபின[2]வழி மீபபோய்
வானவாக ணந்தன வனதுதையு மடித்த.

(இ - ள்) சோனை முதல் - மேகத்தைத் தன்னிடத்திற்கொண்ட. சுழறறிய - (அநுமான் தனகைகளாற், சுழறறியெறிந்த, மற்றுமவை - மறறுஞ சில மரங்கள்,—திசை போர் ஆனை - எட்டுத்திசைக்கண்ணுள தங்கியுள்ள போர்செயயும் வலிமையமைந்த திகககஜங்கள், நுகர - உண்ணும்படி, குளகு உம ஆன - இலையுணவுமாயின. (அன்றியும்), அடி பற்று - அடியைப் பிடித்துக்கொண்டு, மேல் நிமிர விட்டன - வானத்திற செல

லும்படி (மற்றும் அநுமான்) வீசியெறிந்த சிலமரங்கள், விசும்பின்வழி - ஆகாயமார்க்கமாய், மீ போய - மேலேசென்று, வானவர்கள் நந்தனவனத்தையும் - தேவர்களுடைய சிங்காரப் பூஞ்சோலையையும், மடித்த - அழித்தன, (எ - று.)

அநுமான் அப்போது தன் கையினாற் பறிந்த சுழற்றி ஆங்காங்குப் பக்கங்களில் வீசியெறிந்த மரங்களிற் சில எட்டுத்திக்குக்களினெல்லையில் நின்றுகொண்டு பூமியைத்தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்கட்கு உணவாக மேற்புறமாகி வீசியமற்றுஞ் சிலமரங்கள் ஆகாயமார்க்கமாகத் தேவலோகத்திற் சென்று அங்குள்ள நந்தனவனத்தையும் அழித்தன வென்பதாம் சோனை முதல் மற்றவை யென்றதனால், அம்மரங்கள் மேகமண்டலமளவும் ஓங்கி வளர்ந்துள்ளன என்று தெரிவித்தவாறு குளகு - விலங்கினுணவு. பி - ம் — [1]படி. [2]வழியின். (கக)

கஉ. அலைந்தன கடற்றிரை யரக[1]ரகன் மாடங்
குலைந்துக விடிந்தன குலகிரிக ளோடு
மலைந்துபொடி யுற்றன மயங்கிநெடு வானத்
துலைந்து[2]விழு மீனினொடு வெண்மல ருதிர்ந்த.

(இ - ள்.) (அநுமான வீசியெறிந்த சிலமரங்களினால்), கடல் திரை-கடலின் அலைகள், அலைந்தன —; அரகர் அகல மாடம் - ராக்ஷசரது விசாலமான வீடுகள், குலைந்து உக - நிலைகெட்டு விழும்படி, இடிந்தன - இடிந்து போயின; (வீசியெறிந்த மரங்களிற் சில), குலம் கிரிகளோடு - குலபர்வதங்களோடு, மலைந்து - மோதி பொடியுற்றன - பொடியாயசிந்தின; (வீசியெறியப்பட்ட சிலமரங்களினுடைய), வெண் மலர் - வெண்ணிறமான மலர்கள், நெடு வானத்து உலைந்து விழும் - (அம்மரங்களைப்பட்ட விசையினாற) பெரிய வானத்தினின்று நிலைகலங்கி விழுகின்ற, மீனினொடு - நட்சத்திரங்களுடனே, மயங்கி - கலந்து, உதிர்ந்த - கீழே சிந்தின; (எ - று.)

அநுமான் பக்கங்களில் வீசியெறிந்த சிலமரங்களால் கடலின் அலைகள் கிளர்ந்ததனாலும் அரக்கரின் மாளிகைஇடிந்து விழுந்ததனாலுமாக, சிலமரங்கள் குலகிரிகளிலமோதிப் பொடியாயவிழ, வானத்தைநோக்கி வீசியெறிந்த மற்றுஞ் சிலமரங்களால் நட்சத்திரங்கள் நிலைகுலைந்து விழத் தொடங்குகையில் அம்மரங்களின் மலர்களும் உடனகலந்து விழலாயின வென்பதாம் பி ம் — [1]இகல். [2]நெடு. (கஉ)

கங. [1]முடக்குநெடு வேரொடு முகந்துலக முற்றுங்
கடக்குமவகை வீசின களித்ததிசை யானை
மடப்பிடியி னுக்குதவ மையினுமிர் கைவைத்
[2]திடுக்கியன வொத்தன வெயிற்றினிடை ஞால்வ.

(இ - ள்.) முடக்கும் நெடு வேரொடு - வளைந்துள்ள நீண்டவேருடனே, முகந்து - பிடுங்கி, உலகம் முற்றும் கடக்கும் வகை - எல்லாவுலகத்தையும் கடந்து மேற்செல்லும்படி, வீசின - (அநுமானால்) வீசியெறியப

பட்ட சிலமரங்கள், (அகுருகின்ற கீழ் வீழ்வதற்குத் தொடங்கி), களிறு திசை யானை-மதங்களிபுகொண்ட திக்கஜங்களினுடைய, எயிறு நினைடை - தந்தங்களின் நடுவிலே, ஞாலவ - தொகுவனவாகி,—மடம் பிடியினுக்கு உதவ - (தமது) இளமையுள்ள பெண்யானைகட்குக் கொடுக்கும்படி, (அத திசையானைகள்), மையின் நீமிர் கை வைத்து இடுகியன ஒத்தன - மேக மண்டலம் வரையிலும் உயருந்தன்மையுள்ள (தமது) துதிக்கையில் இடுகி வைத்துக்கொண்டனவான மரங்களைப்போல தோன்றின; (எ - று.)

அநுமான் மேலே சொல்லி வீசியெறிந்த மரங்களிற் சில திக்கஜங்களின் தந்தங்களிற் சிக்கிக்கொண்டனவாய அந்தத் திக்கஜங்கள் தமது பெண்யானைகட்கு உணவூட்டும் பொருட்டு எடுத்துக் கொண்டும் தழுவுணவைப்போன்றன வென்பதாம். தாமரைத்தம் நறிய பூம்வாணி. பி - ம்.—[1]முடக்க நெடு வானொடு. [2]இடுகின வொடொத்தன. (கங

கச. விஞ்சையுல கத்தினு மியக்காமலை மேலுந்
குஞ்சுதலில் வானவர் தாகக்கக ரத்தும்
பஞ்சியடி வஞ்சியாகண் மொய்த்தனர் பறித்தார்
நஞ்சமனை யானுடைய சோலையி னறும்பூ

(இ - ள்.) (அநுமான் வீசியெறிந்த மரங்களிற் சிற்சில விஞ்சைய ருலகமுதலிய விடத்துச் செல்லத்தனல),—நஞ்சம் அனையானுடைய சோலையின் - விஷத்தையொத்த [மிக்க கொடியவனான] இராவணனுடைய பூஞ்சோலையின், நறு பூ - நறுமணமுள்ள மலர்களை —விஞ்சை உலகத்திலும் - வித்தியாதரர்கள் வாழ்கின்ற உலகத்திலும், இயக்கர் மலைமேலும் - யட்சர்கள் வாழுகின்ற மலைகளிலும், துஞ்சுதல் இல் வானவர் துறக்கம் நகரத்தும்-(அமிருதமுண்டதனல்) இறத்தலென்பது இல்லாத தேவர்கள் வாழுகின்ற சுவர்க்க லோகத்திலும், (வாழுபவர்களான) பஞ்சி அடி வஞ்சியாகள் - செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய பாதங்களையுடைய வஞ்சிக்கொடிபோன்ற மகளிர், மொய்த்தனர் - நெருங்கிவந்து, பறித்தார்—; (எ - று.)—இராவணனது பூந்தோட்டத்து மலர்களை விஞ்சைமகளிர் முதலியோர் பறிக்கும்வண்ணம் அநுமான் மரங்களை எப்புறத்திலும் வீசி யெறிந்தனனென்க (கஎ)

கரு. [1]பொன்றிணி [2]மணிபயரு மரன்றிசைகள் போவ
மின்றிரிவ வொத்தன வெயிறகதிரு மொத்த
வொன்றினொடு மொன்றிடை புடைத்துதிர வூழின்
[3]றந்திர ளொடுக்கிவிழு தாரகையு மொத்த

(இ - ள்.) பொன் திணி மணி பரு மரன் - பொன்னாலும் வலிய இரத்தனங்களாலும் இயன்ற பருத்த மரங்கள், திசைகள் போவ - பலதிக்குக்களிலுஞ் செல்வனவாய், மின் திரிவ ஒத்தன - மின்னல்கள் திரிவனவற்றை ஒத்தன; (அன்றியும்), வெயில் கதிரும் ஒத்த - சூரியனுடைய பிரகாசத்தையும் ஒத்தன; ஒன்றினொடும் ஒன்று இடை புடைத்து உதிர - (அநுமான் வீசி

யெறிந்ததனால் வானததிற் செலலுமபோது அவ்வகையான மரங்கள்) ஒன்றொடொன்று நடுவழியில் தாகி உதிராததனால், ஊழின் - கற்பகமுடிவில், தம் திரள் ஒடுக்கி விழு - தமது கூட்டங்கள் ஒடுக்கங்கொண்டு விழுகின்ற, தாரகையும் - நட்சத்திரங்களையும், ஒதத - ஒததன; (எ - று.)

வானததிலும மற்றைததிகுகுகளிலும அநுமான் வீசியெறிந்ததனால் திரிகின்ற பொன்மரங்கள் மின்னலையும் மணிமரங்கள சூரியகிரணததையும ஒததனவாகி, பிறகு ஒனறினோடு ஒனறு மோதிப பொடியாய் விழுவனவாய மரங்கள ஊழிககாலத்து வானத்தில் தாம இருகுகும் இடததைவிட்டுப பெயாந்து உதிர்கின்ற நட்சததிரங்களையும் ஒததன வென்பதாம. முன்னிரண்டடி முறைநிரநிறைப்போருள்கோள். பி - ம்:—[1]பொன்றின. பயப்பயமரன், மணிப்பயமரன். 'தன்றிரலொழுக்கிவிழு, தன்றிரல்களோடுவிழு. (கஙு)

கசு. புள்ளினொடு வண்டுமிஞி றுங[1]கடி கொள் பூவுங்
கள்ளுமுகை யுந்தளிர்க ளோடினிய காயும்
வெள்ளநெடு வேலையிடை மீனினம விழுங்கித
துள்ளின மரன்பட நெரிந்தன துடிததன

(இ - ள்) (அநுமான் வீசியெறிந்த மரங்களிலுள்ளனவான), புள்ளினொடு பறவைகளையும், வண்டும - வண்டுகளையும, மிஞிறும - மிஞிறுகளையும, கடி கொள் பூவும் - நறுமணமுள்ள மலாகளையும், கள்ளும - தேனையும, முகையும - அரும்புகளையும. தளிர்களோடு - துளிர்களையும இனிய காயும - இன்சுவையுள்ள காயகளையும், வெள்ளம நெடு வேலையிடை - நீர்ப்பெருக்கையுடைய நீண்ட கடலிலே. மீன் இனம - மீனகூட்டங்கள், விழுங்கி - உட்கொண்டு, துள்ளின - (மனககளிப்பால) துள்ளிக குதிககலாயின; (பிறகு), மரன் பட - (வீழ்ந்த) மரங்கள தமமேறபட்டதனால, நெரிந்தன - நசுங்கினவாகி, துடிததன - பதைபதைக்கலாயின' (எ - று)

அநுமான பிடுங்கி வீசியெறியுமாறு சுழறறிய மரங்களி லிருந்த பறவை முதலியனவ அவவிசையினால கடலிறசென்றுவிழ, அவைகளைத தின்றுகளிதத மீனகள் பின அமமரங்கள வீழ்ததபோது உடல நெருங்கித துடித்தன வெனபதாம கடலில் விழுந்த பறவை முதலியவற்றை விழுங்கவந்த மீனினங்கள் பினபு மரங்கள விழுதலால் நெரிந்தன என்ற இதனில், தனககு விருப்பமானதைப் பெறுகையில் அநிஷ்டமான ஒனறு விளைதலாகிற ததநியாயமையணி தோன்றுமாறு காணக. இதனை வடநூலா விஷமாலங்கார மென்பா பி - ம்:—[1]கன்னிகள். (கஙு)

கஎ தூவிய மலாத்தொகை சுமந்துதிசை தோறும
பூவினமண நாறுவ புலாலகமழ் கிலாத
தேவியாக ளோடுமுயா தேவரினி தாடு
மாவியென [1]லாயதிரை யாகலிக ளம்மா.

(இ - ள்.) தூவிய மலா தொகை சுமந்து - சிதறின மலாகளின கூட்டங்களைத தாங்கி, திசைதோறும பூவின மணம நாறுவ - எங்கும அம

மலர்களின் மணமே வீசுவனவாய், (அதனால்), புலால் கமழ்கிலாத - புலால் நாற்றம் வீசாம லடங்கியுள்ளனவான, நிரை ஆர்கலிகள் - அலைகளையுடைய கடல்கள்,—உயர் தேவர் - சிறந்த தேவர்கள், தேவியர்களோடும் - (தமது) மனைவிமாருடனே, இனிது ஆடும் - சுகோதயமாக நீர்விளையாடுகின்ற, ஆவி எனல் ஆய - (தாமரை முதலிய நீர்ப்பூக்கள் நிறைந்த) குளங்களென்று சொல்லத்தக்கனவாயின; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்.

அநுமான் மரங்களை வீசியெறிகையில், அம்மரங்களிலிருந்து தம்மிடத்து உதிர்ந்த நறுமலர்களினால் சமுத்திரங்களும் தம்முடைய இயற்கையான புலால்நாற்றம் ஒழிந்து அம்மலர்களின் நறுமணம் விஞ்சப்பெற்று, தேவர்கள் நீராடுகின்ற நீர்நிலைகளைப் போன்றன வென்பதாம். சமுத்திரம் புலால் நாற்ற மொழிந்து, நீர்நிலைகளின் குணமாகிய பூவின் மணம் விஞ்சியதாகக் கூறியது-பிறிதின்குணம்பெறலணி. இதனால், விழுந்த நறுமலர்களின் மிகுதி தொனிக்கும். பி - ம்.—[1]ஆனதிசை. (கஎ)

கஅ. இடந்தமணி வேதியு மிறுத்தகடி காவுந்
[1]தொடர்ந்தன துரந்தன படிந்துநெறி தூரக்
கடந்துசெல வென்பது [2]கடந்த விரு காலா
னடந்துசெல லாகுமென லாகியது நன்னீர்.

(இ - ள்.) இடந்த மணி வேதியும் - (அநுமான்) பெயர்த்தெறிந்த இரத்தினமயமான மேடைகளும், இறுத்த கடி காவும் - (அவ்வநுமான்) முறித்த காவலுள்ள சோலையின் மரங்களும், தொடர்ந்தன துரந்தன - தொடர்ந்து வேகமாகச்சென்றனவாய், படிந்து - (கடலிலே) ஒழுங்காக விழுந்து, நெறி தூர - வழியுண்டாம்படி தூர்ந்துவிட்டதனால்,—கடந்து செலவு என்பது - தானடியே செல்லுவதற்கு உரியதென்று சொல்லத்தக்கதாயிருந்த, நல் நீர்- (நறுமலர்களால்) மணங்கொண்ட கடலானது, கடந்த இரு காலால்-(வானத்தின்வழியாய்க்) கடந்து சென்ற (அநுமானது) இரண்டுகால்களாலும், நடந்துசெலல் ஆகும் எனல் ஆகியது - நடந்து செல்லுதற்கு உரியதாகுமென்று சொல்லும்படியாயிற்று; (எ - று.)

அநுமான் இடித்தும் ஒடித்தும் எறிந்த மேடைகளாலும் மரங்களாலும் கடல் தூர்ந்து நடந்துசெல்லும் நிலமாயிற் றென்று வருணித்தவாறு.பி-ம்.—[1]தொடர்ந்தன தொடர்ந்தன. [2]கடந்தது. (கஅ)

கக. வேனில்விளை யாடுசுட ரோனினொளி விம்மும்
வானினிடை வீசிய வரும்பனை மரத்தாற்
றானவர்கண் மாளிகை தகர்ந்துபொடி யாய
வானவிடி யா[1]லொடியு மால்வரைகண் மான.

(இ - ள்.) வேனில் விளையாடு சுடரோனின் - கோடைக்காலத்தில் மிகுதியாகக் காய்கின்ற சூரியனைப்போல, ஒளி விம்மும் - ஒளி மிகுகின்ற, வானினிடை வீசிய வரும் பனை மரத்தால் - ஆகாசத்தில் வீசியெறிந்தனவாய் வருகின்ற பருத்த மரங்களினால், தானவர்கள் மாளிகை -

(அவ்விலங்கையிலுள்ள) அரக்கரது வீடுகள், வானம் இடியால் ஒழியும் மால் வரைகள் மான - ஆகாயத்திலுள்ள இடியால் உடைந்த பெரிய மலைகளைப் போல, தகர்ந்து பொடி ஆய - இடிந்துபொடிபட்டன; (எ - று.)

மரங்களால் தாக்குண்டுவிழுந்த அரக்கர்மாளிகைகளுக்கு, இடிகளால் தாக்குண்டு விழுகின்ற மலைகள் ஒப்பா மென்க ஒளிவிம்மும் மரம் எனக் கூட்டுக. மிக்கபிரகாசமுடையன வென்றற்கு, வேனில் விளையாடு சுடரோனை அம்மரங்கட்கு உவமை கூறினர். பொன்னாலும் மணிகளாலும் மரங்கள் இயன்றுள்ளதனால். அவை ஒளிவீசின. மான - செயவெனெச்சம். பி - ம்:— [1]இடியும். (கக)

உ௦ எண்ணிறரு கோடிக ளெறிந்தன செறிந்தே
[1]தண்ணெண்மழை போலிடை [2]தழைந்தது சலத்தா
லண்ணலனு மானடலி ராவணன தந்நாள்
[3]விண்ணினொரு சோலையுள தாமென விதித்தான்.

(இ - ள்.) அ நாள் - அந்நாளதில், எறிந்தன - (தான்) பிடுங்கியெறிந்தனவான, எண் இல் தரு கோடிகள் - அளவிறந்த மரங்களின் கூட்டங்கள், செறிந்து - நெருங்கி, தண்ணென் மழை போல் - குளிர்ந்துள்ள மேகம் போல, இடை தழைந்தது - (வானினிடததில்) தழைந்து தோன்றியதனால், —அண்ணல் அநுமான் - பெருமைபொருந்திய அநுமான்,—சலத்தால் - கோபத்தால், 'அடல் இராவணனது ஒரு சோலை - வலிமைபொருந்திய இராவணனுடைய ஒப்பற்ற அந்த அசோகவனிகை யென்னுஞ் சோலை, விண்ணின் உளது ஆம் - ஆகாசத்திலுள்ளதாயிற்று', என - என்று (கண்டவர்) கூறும்படி, விதித்தான் - செய்தான்; (எ - று.)

அநுமான் வீசியெறிந்த மரங்கள், வானத்திற் செறிந்து 'இவ்வநுமான் இராவணன்மீது கோபத்தினால் பூமியின்மீது இருந்த இந்தச்சோலையை வானத்தினிடத்திலுள்ளதாம்படி செய்துவிட்டானென்று கண்டவர் சொல்லுமாறு விளங்கின வென்பதாம். தற்குறிப்பேற்றவணி. மேலிரண்டுசெய்யுள்களிலும் இவ்வணி காண்க. இதனால், சோலையிலுள்ள மரங்களெல்லாவற்றையும் அநுமான் பிடுங்கியெறிந்தா னென்பது, பெறப்படும். பி-ம் —[1]தண்ணமழைபோல். [2]தழைததது. [3]விணணுமொருசோலை, விணணினுமொரு. ()

உக. தேனுறை துளிப்பநிறை புட்பல சிலம்பப்
பூநிறை மணித்தரு[1]வி ரும்பினிடை யேபோய்
[2]மேன்முறை நெருக்கவொளி வாளொடு விலவீச
[3]வானிடை நடாயநெடு மானமென வான.

(இ - ள்.) தேன் உறை துளிப்ப - தேன்துளிகள் சிதறவும், நிறை புள் பல சிலம்ப - நிறைந்துள்ள பலபறவைகள் ஒலிக்கவும, பூ நிறை மணி தரு - மலர்கள் நிறைந்த இரத்தின மயமான மரங்கள், விரும்பினிடையே போய் - ஆகாயத்தினிடத்தே சென்று, மேல் - அந்தவானத்

நில், முறை நெருக்க - கரிசைவரிசையாக நெருக்குவதனால்,—வாளொடு வில் ஒளி வீச - வாள்போலவும் வில்போலவும் ஒளியை வெளிக்காலுமபடி, வானிடை நடாய - வானத்திற் செலுத்தப்படுகின்ற, நெடு மானம் - நீண்ட விமானங்கள், எனல் ஆன - என்று சொல்லத்தக்கனவாயின; (எ - று.)

அநுமான் வாளில் வீசியெறிந்தனவான புஷ்பகங்கள் நிறைந்த இரத்தின மரங்கள், வானத்தில் நெருங்கிச் செல்லுகின்ற புஷ்பகவிமானங்கள் போன்று, வாளைப்போலவும் வில்லைப்போலவும் பேரொளி வீசின வென்பதாம். பி - ம்:—[1]விசும்பின்மிசைபோவ. [2]மீன். [3]வானிடை நடக்கும், வானிறைநடக்கும். (உஉ)

உஉ. சாகநெடு மாபபணைத தழைத்தனத னிப்போர்
நாகமனை யானெறிய மேனிமிர்வ [1]நாளு
மாகநெடு வானிடையி ழிந்துபுனல் வாரு
மேகமென லாயநெடு மாகடலின் வீழ்வ.

(இ - ள்.) தனி போர் நாகம் அனையான் எறிய - ஒப்பற்ற போர்செய் தலிலவலல யானையைபபோனற அநுமான் வீசி யெறிந்ததனால், நெடு மா பணை தழைத்தன - நீண்ட பெரிய கிளைகள் தழைத்துள்ளனவான, சாகம் - தேக்கமரங்கள், மேல் நிமிர்வ - வானதில் உயரசென்றனவாய், நெடு மா கடலின் வீழ்வ - மிகப்பெரிய கடலில வீழ்பவை,—மாகம் நெடு வானிடை - மிகப்பெரிய ஆகாயததிலிருநது, இழிந்து - கீழிறநகி, புனல் வாரும் - கடல் நீரை முகப்பனவான, நாளு மேகம் எனல் ஆய - பலமேகங்களென்று சொல் லததக்கனவாயின; (எ - று.)

அநுமானால வீசியெறியப்பட்டு வானதிற் சென்று கடலில வீழ்ந்த தேககமரங்கள், வானவழியிறசென்று கடலிலிறங்கி நீபருகுகின்ற மேகங் களை யொததன வென்பதாம். மாக வான - ஒருபொருட்பனமொழி. பி-ம்:— [1]நாளும். (உஉ)

வேறு.

உக [1]ஊன முறறிட மண்ணி னுதித்தவர்
[2]ஞான முற்றுபு நண்ணினா வீடெனத்
தான [3]கறபகத் தண்டரு விண்டலம
போன புக்கன முன்னுறை பொன்னகர்.

(இ - ள்.) ஊனம் உற்று - பாவததைச செய்ததன்பயனாக, மண்ணின் உதித்தவா - பூமியில் தோன்றிய தேவாகள், ஞானம் முற்றுபு - நன்ஞானம் நிறையப்பெறறு, வீடு நண்ணினா என-(இவ்வுலகினின்று) விடுதலைபெற்று மேலுலகததை யடைந்தவர்போல,—தானம் கற்பகம் தன தரு - ஈகைக் குணமுடைய கற்பக மெனபபடுகின்ற குளிர்ந்தமரங்கள், விண்தலம் போன - வானவழியாகச சென்றனவாய, முன உறற பொன் நகர் - (தாம்) முன்பு இருந்த பொன்மயமான சுவர்க்கலோகத்தில், புக்கன - போய்ச்சேர்ந்தன.

பாவத்தினால் பூமியில் வந்து பிறந்த தேவர்கள் ஞானம் நிறையப்பெற்றுத் தமது பாவம் நீங்கி, மீண்டும் தமது உலகையே சேர்ந்ததுபோல, முன்பு இராவணனால் கொண்டுவரப்பெற்று இலங்கையில நாட்டப்பட்ட கற்பக விருக்ஷங்கள் அநுமான் பிடுங்கியெறிதலால் தாம் முன்னிருந்த தேவலோகத்தில்தானே போய்ச்சேர்ந்தன வென்பதாம். (அஷ்டவசுக்கள் முதலியோர் தமது தீவினைப்பயனால் வீடுமன் முதலியோராகப் பிறந்து நன்ஞானம் பிறந்து நல்லுலகையடைந்தனர் முதலிய சரித்திரங்களை, இங்குக் கூறியதற்கு மேற்கோளாகக் காணலாம்.) தேவதருக்கள் ஐந்தனுள் ஒன்றன்பெயராகிய கற்பகமென்ற சொல்பொதுவாகத் தேவதருக்கள் ஐந்தையும் காட்டுவது முண்டு. பி - ம்:—[1]ஊனமுற்றிடை. [2]ஞானமுற்றிட. [3]கற்பகத்தண்டலை. ()

உச. மணிகொள் குட்டிம மட்டித்து மண்டபந்
துணிப டுத்தயல் [1]வாவிக டூர்த்தொளிர்
திணிக வர்த்தலஞ் சிந்திச் செயற்கரும்
பணி[2]ப டுத்துயர் குன்றம் [3]படுத்தரோ.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அநுமான்),—மணி கொள் குட்டிமம்-இரத்தினங்கள் பதிக்கப்பட்ட திண்ணைகளை, மட்டித்து - தகர்த்து, மண்டபம் - மண்டபங்களை, துணிபடுத்து - துண்டுதுண்டாக உடைத்து, அயல் - அருகிலுள்ள, வாவிகள் - குளங்களை, தூர்த்து—, ஒளிர - விளங்குகின்ற, திணி - செறிந்த, சுவை தலம் - சுவர்களினிடங்களை, சிந்தி - இடித்துத்தள்ளி, உயர் குன்றம் பணித்து - உயர்ந்த குன்றுகளையும் அழித்து, (இவ்வாறு), செயற்கு அரு-செய்தற்கு அருமையான, பணி - வேலைகளை, படுத்து - செய்து; (எ - று.)—'வேங்கை செற்று' என அடுத்தகவியோடு தொடரும்.

இச்செய்யுட்கு - அநுமான் குட்டிமம் மண்டபம் முதலியவற்றை யிடித்து அவைகளை ஒருமலைபோலக் குவித்து என்றும் கூறினுமாம். குன்றம் - செய்குன்ற மென்றது மொன்று. பி - ம்:—[1]ஆவிகள். [2]படுத்தருவ. [3]பகுத்தரோ.

(உச)

உரு. வேங்கை செற்று மராமரம் வேர்பறித்
தோங்கு கற்பகம் பூவொ டொடித்துராய்ப்
பாங்கர்ச் [1]சண்பகப் பத்தி பறித்தயன்
மாங்க னிப்பணை மட்டித்து மாற்றியே.

(இ - ள்.) வேங்கை - வேங்கை மரங்களை, செற்று - அழித்து, மராமரம் - மராமரவிருட்சங்களை, வேர் பறித்து - வேரோடு பிடுங்கியெறிந்து, ஓங்கு கற்பகம் - உயர்ந்துவளர்ந்த கற்பகமரங்களை, பூவொடு ஒடித்து - மலர்களுடனே முறித்து, உராய - விரைந்து, பாங்கர் சண்பகம் பத்தி பறித்து - பக்கத்திலுள்ள சண்பகமரங்களின் வரிசைகளைப் பிடுங்கியெறிந்து, அயல் - அருகிலுள்ள, மாங்கனி பணை - மாம்பழங்கள் நிறைந்த நிலைகளை, மட்டித்து - முறித்து, மாற்றி - நிலைமாறச்செய்து,

(எ - து.)—'சந்தனங்கள் கலங்கி நடுங்க, தகர்ந்தன' என அடுத்த கவியோடு இதனையும். மாற்றிமாற்று; வசந்தநிரிபு. பி - ம்—[1]சண்பகம்பற்றிப் ()

உக சந்த னங்க டகர்ந்தன [1]தாள்பட
விந்த னங்களின் வெந்தெரி சிந்திட
[2]முந்த னங்க வசந்தன் முகங்கெட
நந்த னங்கள் கலங்கி நடுங்கவே

(இ - ள்.) (அப்போது), தாள பட (அவ்வதுமானது) கால்கள் பட்டதனால்,—முந்து அனங்க வசந்தன் - முற்காலத்திலதானே சரீரத்தையிழந்த மன்மதனது, முகம்— கெட - (துயரத்தினால்) பொலிவழியும்படி, சந்தனங்கள் - பூஞ்சோலைகள், கலங்கி நடுங்க - நிலைகுலைந்து நடுக்கமடைய,—சந்தனங்கள் - (ஆங்குள்ள) சந்தனமரங்கள், இந்தனங்களின் வெந்து - விறகுகள் போல எரிந்து, எரி சிந்திட - நெருப்புச்சுவாலை வீசினவண்ணம, தகர்ந்தன- அழிந்தன; (எ - று)

மன்மதன உல்லாசமாக இருக்கத்தகுதியுள்ள சந்தனங்கள் நிலை குலைந்ததனால், அவனதுமுகம் பொலிவழிந்ததென்க மன்மதன் முழுவலியுஞ் செலுத்திச் சஞ்சரிக்கத்தகுதியுள்ள காலம் வேனிற்பருவமேயாதலால், அவனுக்கு 'வேனிலான' என்ற பெயரிருத்தலபோல, 'வசந்தன' எனறும் ஒருபெயர் கூறப்பட்டது பி - ம்—[1]சணபகம். [2]இடை. [2]முந்தனங்கன வசந்தன். ()

உஎ. [1]காம ரங்களி வண்டு கலங்கிட
மாம ரங்கண மடிந்தன மண்ணொடு
தாம ரங்கவ ரங்கு தகர்ந்துகப்
பூம ரங்க ளெரிந்து பொரிந்தவே

(இ - ள்) காமரம் களி வண்டு - காமரமென்னும் பண்ணைப் பாடுகின்ற களிபபுள்ள வண்டுகள், கலங்கிட - கலங்குமபடி, மா மரங்கள்—, மண்ணொடு மடிந்தன - மண்ணோடு மண்ணாக விழுந்துபோயின; அரங்கு - நாடகசாலைகள், தரங்க - அழியவும், உக - கீழ்விழவும, பூ மரங்கள - மலர் மரங்கள, தகர்ந்து- முறிந்து, எரிந்து பொரிந்த - (ஒன்றோடொன்று மோதிய விசையினால்) எரிந்து பொரிந்துபோயின; (எ - று.)—தாம் அசை. பி-ம்:—[1]காமரங்களால்.

உஏ குழையுங் கொம்புங் கொடியுங் குயிற்குலம்
விழையுந் தண்டளிர்ச் சூழலு மென்மலர்ப
புழையும் வாசப் பொதுமபும் பொலனகொடேன
மழையும் வண்டு மயிலு [1]மடிந்தவே.

(இ - ள்.) குழையும் கொமபும் - வளையுந்தன்மையுள்ள பூங்கொமபுகளும், கொடியும - பூங்கொடிகளும், குயில் குலம் விழையும் தண் தளிர் சூழலும் - குயில்களின கூட்டம் விரும்புதற்கு இடமான குளிர்சியையுடைய தளிர்களையுடைய இடங்களும், மெல் மலர் புழையும் - மெல்லிய மலர்

களைக்கொண்ட (அச்சோலையிலுள்ள) நுழைவாயில்களும், வாசம் பொதும்பும் - வாசனையுள்ள புதர்களும், பொலன் கொள தேன் மழையும் - அழகுபொருந்திய தேன்மழையும், வண்டும் - வண்டுகளும், மயிலும் - மயில்களும், மடிந்த - அழிந்து போயின; (எ - று.)

அநுமானால் சின்னபின்னப்படுத்தப்பட்ட சோலையில் குழை கொம்பு முதலியன அழிந்தன வென்க. பி - ம் —[1]மறிந்ததலே. சிலபிரதிகளில் இந்தச்செய்யுள் "பவளமாககொடி" என்ற தன்பிறகுள்ளது. (உஅ)

உகூ. பவள மாக்கொடி வீசின பன்மழை
துவளு மின்னெனச் சுற்றிட்சூழ்வரை
திவளும் பொற்பனை மாமரஞ் சேர்ந்தன
கவள யானையி னோடையிற காந்தவே.

(இ - ள்.) வீசின - (அநுமானால்) வீசியெறியப்பட்டனவான, மா பவளம்கொடி - சிறந்த பவழக்கொடிகள், பல் மழை துவளும் மின் என - பலமேகங்களில் துவண்டு தோன்றுகின்ற மின்னல்கள்போல, சூழ் வரை - (அங்கே) சூழ்ந்திருந்த மலைகளில், சுற்றிட - சுற்றிக்கொள்ள,—கவளம் யானையின் ஓடையின் காந்த - கவளமாக உணவுண்டதன்மையுள்ள யானைகளின் நெற்றிப்பட்டம்போலப் பிரகாசிக்கும்படி, திவளும் பொன் பனை மா மரம் சேர்ந்தன - விளங்குகின்ற பொன்மயமான கிளைகளையுடைய மா மரங்கள் (அநுமானால் வீசியெறியப்பட்டனவாய) அவைகுச சேர்ந்தன; (எ - று)

அநுமான் வீசியெறிந்த பவழக்கொடிகள் அவைகுள்ள மலைகளின் மீது விழ, அவை மேகத்தில் விளங்கும் மின்னல்போலத் தோன்ற, மலைகளின் மீது வீசி யெறியப்பட்ட பொன்மயமான மாமரங்கள் யானையின் நெற்றியில் விளங்கும்பட்டம்போலத் தோன்றின வென்பதாம். (உகூ)

ரூ0. பறவை யார்த்தெழு மோசையும் பன்மர
[1]மிறவெ டுத்த விடிக்குர லோசையு
மறவ னார்த்தெழு மோசையு மண்டத்தின்
[2]புறநிலத்திலுங் கைமமிகப் போயதே.

(இ ள்.) (அந்தவேளையில்,) பறவை ஆர்த்து எழும் ஓசையும் - பல வகைப்பறவைகள் ஆரவாரித்தெழுகின்ற ஓசையும், பல் மரம் இற எடுத்த இடிகுரல் ஓசையும் - பலவகை மரங்களும் முறியத்தொடங்கியதனாலுண்டான இடிக்குரலையொத்த ஓசையும், அறவன் ஆர்த்து எழும் ஓசையும் - தருமஸ்வரூபியான அநுமான் ஆரவாரித்ததனாலுண்டாகிய ஓசையும், அண்டத்தின் புறம் நிலத்திலும் - இவ்வுலகவுருண்டையின் வெளி நிலத்திலும், கைமமிக போயது - மிகுதியாகப் போய்ப் பரவிற்று; (எ - று.)

இதனால், அபோது பேரொலியெழுந்ததைக் கூறினாரென்க. பி-ம்:—[1]இறல். [2]புறநிலத்தையும். (ரூ0)

ரூ௧. பாட லம்படர் கோங்கொடும் பன்னிசைப்
பாட லம்[1]பனி வண்டொடு பஃறிரைப்

[1]இறல். [2]புறநிலத்தையும்.

பாட லம்புயர் வேலையிற் பாய்ந்தன
பாட லம்பெறப் புள்ளினம் [4]பாறவே.

(இ - ள்.) படர் சோலையும் - (ஆகாயத்தளவும்) உயர்ந்துவளர்ந்துள்ள சோலைமரங்களும், படலமும் - பாதிரிமரங்களும், பன் இசைபாடல் அம் பனி வண்டொடு - சிறப்பிதுக்கூறப்படுகின்ற இசைப்பாடலையுடைய அழகிய குளிர்ந்த வண்டுகளுடனே, புள் இனம் - (அம்மரங்களிலுள்ள) பறவையினங்கள், பாடு அலம் பெற - துன்பத்தை மிகுதியாக அடையவும், பாற சிதறிக்கெடவும், பல் திரை பாடு அலமபு உயர் வேலையில் - பல அலைகள் (கரைப்) பக்கங்களிலே ஒலிக்கின்ற பெரிய கடலிலே, பாய்ந்தன-விழுந்தன.

அநுமான் வீசியெறிந்த சோலைமரங்களும் பாதிரிமரங்களும் தம்மீது மொய்க்கின்ற வண்டுகள் பெருந்துன்பமடையவும், தமமிடத்து வாழ்கின்ற பறவைகள் சிதறியோடவும், கடலிற் போய் விழுந்தன வென்பதாம். இச் செய்யுளில் யமக மென்னுஞ் சொல்லணி காண்க. அடுத்த சில செய்யுள்களிலும் இது காணலாம். இனி, பாடலமபெற என்பதற்கு - செந்நிறம் அடைய என்று பொருள்கூறி, வீசியெறிந்த இமமரங்கள் போய்விழுதலால் அதிலுள்ள உயிர்களெல்லாம் இரததத்தைக் கக்கிக்கொண்டு இறத்தலாற் கடல் கலங்கிச் செந்நிறத்தை யடைந்தது என்று கருததுக் கூறுவர். பி - ம்:—[1]படர். அலம்புற. [3]படப். [4]பார்பொடே. (கூக)

ருஉ. வண்ட லம்புன லாற்றின் மராமரம்
வண்ட லம்புன லாற்றின் மடிந்தன
விண்ட லம்புக நீங்கிய [1]வெண்புனல்
விண்ட லம்புக [2]நீண்மரம் வீழ்ந்தவே.

(இ - ள்.) வண்டு அலம்பு - வண்டுகள் ஒலிக்கப்பெற்ற, நல் ஆற்றில் - அழகிய சாலையி லிருந்த, மராமரம் - மராமரங்கள், (அப்போது), வண்டல் அம் புனல் ஆற்றில் - வண்டலைக்கொண்ட அழகிய நீர்நிறைந்த காவிரியாறறிலே, மடிந்தன - போய்விழுந்தன; விண் தலம் புக நீள் மரம் - வானத்தினிடத்திற்போய்ச்சேரும்படி நீண்டுவளர்ந்த வேறுசில மரங்கள், விண்டு அலம்புகம் நீங்கிய வெண் புனல் - திருமாலின் திருவடிகளைப் (பிரமதேவன்) கழுவியதனால்தோன்றி வானத்தினின்று இப்பூமியிலிறங்கிவந்த வெண்மையான நீரையுடைய கங்கையாறறிலே, வீழ்நத - வீழ்ந்தன; (எ - று.)

அநுமானால் வீசியெறியபபட்ட மராமரங்கள காவிரியாற்றில் விழ, வேறு சிலமரங்கள் கங்கையாற்றில் விழுந்தன வென்பதாம். கங்கையுடன் சேர்த்துக் கூறியிருத்தலாலும், "வண்டல் பாய் பொன்னி" என்றபடி வண்டலையுடையதாகக் கவிகளாற கூறப்படுவது அதுவே யாதலாலும், 'வண்டலம்புனலாறு' என்பதற்கு காவிரியாறு எனப்பட்டது. திரிவிக்கிரமாவதாரகாலத்திற் சதநி

யலோகததுச்சென்ற திருமாலின் திருவடியைப் பிரமதேவன் தன்கைக்கமண்டலதீர்த்தங்கொண்டு கழுவி விளக்க, அப்பரமனது அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதியாகப் பெருகிய தென்பது மூன்றுமடியில் விளங்கும். விண்டு - விஷ்ணு; எங்கும் வியாபித்திருப்பவனெனப்பது, அவயவப்பொருள் கம்-ஆகாசம்: வடசொல். திரிபு யமகங்களில் பொதுகரத்துக்கும் சிறப்பு னகரத்துக்கும் வேறுபாடுகருதாது ஒற்றுமையுடைக் கருதுவது கவிசமயமாகுமென்பது, முன்னிரண்டடிகளிற கவனிக்கத்தக்கது. பி-ம்:—[1]மென்புனல். [2]மென்மரம்.

ருரு. தாம் ரைத்தடம் பொய்கைசெஞ் சந்தனந்
தாம ரைத்தன வொத்தது கைத்தலின்
காம ரக்களி வண்டொடுங் கள்ளொடுங்
காம ரக[1]கடல் பூக்கடல் [2]கண்டவே.

(இ-ள்.) துகைத்தலின் - (அநுமான் வீசியெறிந்த மரங்கள் சென்று) குறுப்பியதனால், தட தாமரை பொய்கை - பெரிய தாமரைக் தடாகங்கள், செஞ் சந்தனம் தாம் அரைத்தன ஒத்த-செஞ்சந்தனக்கட்டையை யரைத்துக் கரைத்தசந்தம்போன் றோன்றின; (அன்றியும்), கா மரம் கடல - அசோக வனிகையிலிருந்த மரங்கள் போய் விழப்பெற்ற கடல்கள்,—காமரம் களி வண்டொடும் - காமரமென்னும் இசைபாடுகின்ற மதக்களிப்புள்ள வண்டுகளோடும், கள்ளொடும் - தேனோடுங்கூடி, பூக்கடல் - மலர்கள் நிரம்பிய கடலாக, கண்ட - காணப்பட்டன; (எ - று.)

அநுமான் வீசியெறிந்த மரங்களாற் குழம்பிய தாமரைப் பொய்கைகள் செஞ்சந்தனக்குழம்பைக் கரைத்தாற்போலத் தோன்ற, அவ்வகை மலர்மரங்கள் பல வீழப்பெற்ற கடல்கள் எங்குப்பார்த்தாலும் வண்டுகளும் தேன்களும் நிரம்பிய மலராமயமாகவே காணப்பட்டன வென்பதாம். 'துகைத்தலின்' என்பது - மத்திமதீபமாக முன்வாக்கியத்தோடும் பின்வாக்கியத்தோடும் இயையத்தக்கது. இனி, பின்னிரண்டடிகட்கு—துகைத்தலின் - (அநுமான்) துகைத்தலினால், கா மரம் - அசோகவனிகை யென்னுஞ் சோலையிலுள்ள மரங்கள், கடல் - வலவைசமுத்திரத்தை, காமரக் களி வண்டொடும் கள்ளொடும், பூக்கடல் கண்ட - புஷ்பக்கடலாகச் செய்தன என்று உரைத்தலு முண்டு. இப்பொருளில் 'காமரங்கடல்' என வரற்பாலது. எதுகைநயம் நோக்கி 'காமரக்கடல்' எனவிகாரம் பெற்றுவந்ததென்க. ஒத்தது உகைத்தலின் என்று பிரித்துக்கூறினுமாம் பி - ம் —[1]கமழ் [2]கண்டதே இச்செய்யுளின் பின் வெளிப்பிரதிகளில் "புல்லுமபொறபனை" (36) 'மயகில்" (37) என்றபாடல்கள்உள்ளன.

(ருரு)

ருஉ சிந்து வாரந் திசைதொறுஞ் சென்றன
சிந்து வாரம புரைதிரை [1]சேர்ந்தன
தந்து வாரம [2]புதவொடு தாளறத்
தந்து வாரந [3]துகள்படச் சாய்ந்தவே.

(இ - ள்.) (அநுமான் பிடுகி வீசியெறிந்ததனால்), சிந்துவாரம்-சொசிமரங்கள், திசைதொறும் சென்றன - நான்குதிசைகளிலுஞ் சென்றனவாய், சிந்து வா அம் புரை திரை சோர்ந்தன - சமுத்திரத்தின் நீரை அழியை உயர்ந்த அலைகளிற சேர்ந்திட்டன; (அன்றியும்), ஆரம் - சந்தனமரங்கள், தம் துவாரம் புதவொடு தான் அற தந்து - அரக்கர்தமது வாயில்கள் கதவும் தாழ்ப்பாள்களும் முறிந்துபோம்படி (அவ்வரக்கர் மாளிகைகளின்மேல்) வீசியெறியப்பட்டு, துகள் பட - (அவைகள்) துகளாய்ப்போம்படி, சாய்ந்த - விழுந்தன; (எ - று.)

அநுமான வீசியெறிந்ததனால் சொசிமரங்கள் சமுத்திரத்தில் விழ, அரக்கர் மாளிகை வாயில்கள் இடிந்து துகளாய் விடும்படி சந்தன மரங்கள் அவற்றின்மேல் விழுந்தன என்பதாம. திசைதொறுஞ் சென்றன என்பதற்கு - நான்கு திசைகளிலும் செலவனே தழைத்துவளர்ந்தனவான, சிந்துவாரம் எனினுமாம. தந்துவாரம் - குற்றியலுகரம் உயிர்வரக் கெடாது வரவுடமபடுமெய் பெற்று நின்றதென்க. இனி, இச்செய்யுளுக்கு—(அநுமான் வீசி யெறிந்ததனால சொச்சிமரங்கள் சமுத்திரத்தின்) உயர்ந்த அலைகளிற் சேர்ந்தனவாய (அச செயலினால்) பொலிகின்ற சமுத்திரம திசைதோறும் சென்றனவாய், வா அம் புதவொடு தான் அறமபடி செய்து, தம் துவாரம் துகளபட - அரககரது வாயில்கள் துகளாய் அழியும்படி, சாய்ந்தன - அலை மடனகி வீழ்ந்தன என்று உரைப்பாரும, பின்னும் வேறுவகையாகப் பொருள் கூறுவாருமுளர். பி - ம்:—[1]சோர்தென. [2]புசொடுதாழ்வரை, புரைபடத் தாழ்வரை [3]வரைபட. (௩௪)

௩௫. நந்த [1]வானத்து நாண்மலா நாறின
நந்த [1]வானத்து நாண்மலா நாறின
சிந்த வானந் திரிந்துகச செம்மணி
சிந்த வானந் திரிந்த திரைக்கடல்.

(இ - ள்.) (அநுமான் வீசியெறிந்ததனால்), நாறின - நறுமணம் வீசுவன வாகிய, நந்தவானத்து நாள மலா - நந்தவனத்து மலாமரங்களிலுள்ள அன்று பூத்த மலர்கள், வானத்து - ஆகாயத்தில், நந்த - மிகுதியாக, மலா-விளகுகின்ற, நாள் - நட்சத்திரகளபோல, நாறின - விளகின; சிந்து - புளிய மரகளை, திரிந்து அ வானம உக - (ஆகாயத்திற்) சுழன்று (சகரபுத்திரா தோண்டின) பள்ளமாகிய அசசமுத்திரத்திலே விழ, (அதனால் அசசமடைந்து), வால நந்து - வெணணிறமுள்ள சஙகுகள, திரை கடல் - அலைகளையுடைய அககடலில், செம் மணி - (தமது காப்பத்திலுள்ள) அழகிய முத்துக்களை, சிந்த - சிந்துமபடி, இரிந்த - நிலைகெட்டு ஓடின; (எ - று.)

மலர்மரகளை [illegible]யெறிந்தபோது, அமமரங்களின் மலர்கள் நட்சத்திர மண்டலம் வரைக்கும் சென்று அந்நட்சத்திரம போலவே விளகுக, மற்றும் வீசியெறிந்த புளியமரகளை கடலில் விழவே அருகி அதகுளள சங்குப்பூசிகள் தமது காப்பக கலகி முத்துக்களைச சிந்தி

கொண்டே சிலைகெட்டு ஓடின என்பதாம். நாதவனமென்பது முதலடியில் நீட்டல்விகாரம் பெற்று வந்தது. 'நாறின' இயல்பினால் வந்த காலவழு அமைதி. சிந்து - சிஞ்சா என்ற வடசொல்லின் திரிபென்பர்: புளியமரம். இலங்கு - பதித்தகுழி. பி - ம்:—[1]வானத்த. (௩௫)

௩௬. புல்லும் பொற்பணைப் பன்மணிப் [1]பொன்மரங்
கொல்லு மிப்பொழு தேயெனுங் கொள்கையா
லெல்லி யிட்டு விளக்கிய விந்திரன்
வில்லு மொத்தன விண்ணுற வீசின.

(இ - ள்.) விண் உற வீசின - ஆகாயத்திலே பொருந்தும்படி (அநுமானால்) வீசியெறியப்பட்டனவான, பொன் பணை புல்லும் - அழகியகிளைகளை பொருந்திய பல் மணி பொன் மரம் - பலவகைமணிகளாலும் பொன்னாலுமியன்ற மரங்கள்,—'இ பொழுதே—, கொல்லும்-(அநுமான், அரக்கரை பலரையும்) கொல்லுவான்,' எனும் - என்கின்ற, கொள்கையால் - எண்ணத்தினால், எல்லி இட்டு விளக்கிய - இராத்திரியிலே (உதபாதமாக) உண்டாகி விளக்கஞ்செய்த, இந்திரன் வில்லும - இந்திர தநுசையும, ஒத்தன;—(எ-ரு.)

அநுமான் வானத்தில் வீசியெறிந்த பொன்மணிமரங்கள், 'விரைவில் அரக்கர்பலரும் கொல்லப்படுவோர்கள்' என்பதை முன்னே அறிவிக்கும உதபாதமாக இரவில் இந்திரதநுசு தோன்றியதுபோல் விளங்கின வென்பதாம். இந்திரதநுசு பகலில் தோன்றுவதே இயல்பாதலால், இரவில் தோன்றுவது உத்பாதமா மென்க. 'வில்லும்' என்ற இடத்து உம்மை முன்னம வந்துள்ள வருணனைகளை நோக்கிய இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. பி-ம்:—[1]பூ.

௩௭. மயக்கில் பொறகுல வல்லிகள் வாரிநே
[1]ரியக்கு றத்திசை தோறு மெறிந்தன
வெயிறக திர்க்கற்றை [2]யறறுற வீழ்ந்தன
புயற்[3]க டற்றிலை புகநன [4]போலவன.

(இ - ள்.) வாரி நேர் இயக்கு உற - கடலுக்குநேராகச்சென்று வீழும்படி, திசை தோறும் எறிந்தன, எல்லாத்திசைகளிலும வீசியெறியப்பட்டனவாகிய, மயக்கு இல் பொன் குலம வல்லிகள்-ஒளிமழுங்குதலில்லாத பொன்மயமான கூட்டமாயுள்ள கொடிகள்,—வெயில் கதிர் கற்றை - சூரியகிரணங்களின் தொகுதி, அறறு - அறுபட்டு, உற வீழ்ந்தன - (நிலவுலகத்திற்) பொருந்த வீழ்ந்தனவாகி, புயல் கடல்தலை - மேகங்கள் படிந்து நீரபருகுகின்ற கடலினிடத்து, புக்கன போல்வன - புகுந்தவற்றை யொப்பனவாயின; (எ - று.)

அநுமான் வீசியெறிந்த பொற்கொடிகளின் கூட்டம் - அறுபட்ட சூரிய கிரணக்கற்றைகளையும், அவை கடலில் வீழ்ந்தவை - சூரிய கிரணங்கள கடலிற்புகுவதையும் போன்றனவென்க; தன்மைத்தற்றறிப்பேற்றவணி. பி - ம்:—[1]இயக்க. [2]அற்றவிழுந்தென. [3]கடற்றடம். [4]போவன. (௩௭)

௩௨. ஆனைத் தானமு மாட லரங்கமும்
பானத் தானமும் பாய்பரிப் பந்தியு
மேனைத் தாரணி தேரொடு மிற்றன
கானத் தார்தரு வண்ணல் கடாவவே.

(இ - ள்.) அண்ணல் - பெருமைபொருந்திய அநுமான், கானத்து ஆர்தரு - அசோகவனத்தில் நிறைந்துள்ள மரங்களை, கடாவ - (வேரோடுபெயர்ந்து) வீசியெறிய அதனால்,—ஆனை தானமும் - யானைகளைக்கட்டியுள்ள சாலைகளும், ஆடல் அரங்கமும் - நடனசாலைகளும், பானம் தானமும் - மதுபானஞ் செய்யும் இடங்களும், பாய் பரி பந்தியும் - பாய்ந்து நடக்கின்றமையுள்ளகுதிரைகளைக் கட்டுமிடங்களும், ஏனை - மற்றுமுள்ள, தார் அணி தேரொடும் - சிறுமணிகள் கட்டிய தேரோடும் இற்றன - முரிந்தொழிந்தன; (எ - று)

தார் அணி தேர்-படைவகுப்பை யலங்கரிக்கிற தேர் என்றும், கானத்து ஆர்தரு - காட்டில் தங்குகின்ற [வானர சாதியைச சேர்ந்த] என்றும் உரைப்பினுமாம். (௩௨)

௩௩ பெரிய மாமர னும்பெருங் குன்றமு
மிரிய வீசலி னிந்நெடும் பொன்மதி
னெரிய [1]மாடநெ ருப்பெழ நீறெழ
விரியல் [2]போனவி லங்கையு மெங்கணும்.

(இ - ள்.) மா பெரிய மரனும் - மிகப்பெரிய மரங்களையும், பெருங்குன்றமும் - பெரியமலைகளையும், இரிய வீசலின்-நிலைகெடப்பெயர்ந்து வீசி யெறிந்ததனால்,—இ நெடும் பொன மதில் - இந்த [இலங்கையிலுள்ள] நீண்ட பொன்மதில்கள், நெரிய - நெரிந்துவிழவும், மாடம் - மாளிகைகள், நெருப்பு எழ நீறு எழ - நெருப்புதோன்றிச சாம்பராய்ப் போகவும், எங்கணும் - எல்லாவிடத்திலும், இலங்கையும் - இலங்காபுரியும், இரியல்போன - நிலைகெட்டு அழிந்தன; (எ - று.)

அநுமான் வீசியெறிந்ததனால், மரங்களும் குன்றங்களும் அழிந்தது போலவே, அவைள் போய்விழுந்ததனால் இலங்கையின் மதில்களும் மாளிகைகளும வெந்து சாம்பராய் அழிந்தொழிந்தன வென்பதாம். பி - ம்: —[1]மாடு. [2]போனது. (௩௩)

வே று.

௪௦.—சந்திராஸ்தமன வருணனை.

தொண்டையங் கனிவாய்ச் சீதை துயக்கினா லென்னைச் சுட்டாய்
விண்டவா னவர்தம் முன்னே விரிபொழி லிறுத்து வீசக்
கண்டனை நின்றா யென்று காணுமே லரக்கன் காய்த
லுண்டென வெருவி னான்போ லொளித்தன னுடுவின் கோமான்.

(இ - ள்.) 'அம் தொண்டை கனி வாய் - அழகிய கொவ்வைக்கனியைப் போன்றவாயையுடைய, சீதை - சீதையினுடைய, துயக்கினால் - சம்பந்தத்தால் [மிதித்தமாச], என்னை சுட்டாய்—; விண்ட வானவர்தம் முன்னே

(என்னிடத்துப்) பகைமைகொண்ட தேவர்கட்கு எதிரில், விரி பொழில் - பரந்தசோலையை, இறத்து வீச - (ஒருகுரங்கு) முறித்து வீசியெறியவும், கண்டனை நின்றாய் - (வேடிக்கை) பார்த்துக்கொண்டிருந்தாய், என்று - என்று கருதி, அரக்கன் - இராவணன், காணும் எல் ஆலோசிப்பானேயானால் காய்தல் உண்டு - (என்மீது) கோபங்கொள்ளுதல் நிச்சயம், என - என்று கருதி, வெருவினன் போல் - அஞ்சினவன்போல, உடுவின் கோமான் - நட்சத்திரங்கட்குத் தலைவனாகிய சந்திரன், ஒளித்தனன் - (அஸ்தகிரியில்) மறைந்தான்; (எ - று.)

இங்கு இயற்கையாகச் சந்திரன் அஸ்தமித்ததற்கு, தான் இங்கு இருந்தால் தன்னைச் சுட்டதற்காகவும், அநுமான் சோலையை முறித்ததை கண்டு கொண்டிருந்ததற்காகவும் இராவணன் கோபிப்பானோ வென்று அஞ்சி மறைந்ததாகக் காரணங்கற்பித்துக் கூறியது - ஏதுத் தற்குறிப்பேற்றவணி. சந்திரன் காமோத்தீபகப் பொருள்களுள் முக்கியமான ஒன்று ஆதலால், சீதையின் காரணமாகக் காமவேதனைப்படுகின்ற இராவணனைச் சுட்டன வென்க. (௪௦)

௪௧.—அநுமான் வீசியெறிந்த சோலையால் உலகம் விளங்குதல்.

காசறு மணியும் பொன்னுங் காந்தமுங் கனலுவ தாய
மாசறு மரங்க ளாகக் குயிற்றிய மதனச் சோலை
யாசைக டோறு மையன் கைகளா லள்ளி யள்ளி
[1]வீசிய விளக்க லாலே விளங்கின வுலக மெல்லாம்.

(இ - ள்.) காசு அறு - குற்றமில்லாத, மணியும் - இரத்தினங்களும், பொன்னும்—, காந்தமும் - சூரியகாந்தம் சந்திரகாந்தம் எனனும் கற்களும், (ஆகிய இவற்றால்), கனல்வது ஆய - விளங்குவதான, மாசு அறு மரங்கள் ஆக - குற்றமற்ற விருட்சங்களாக, குயிற்றிய - முழுவதும் இயன்ற, மதனம் சோலை - மதக்களிப்பையுண்டாக்கவல்ல அந்தச் சோலை மரங்கள், ஆசைகள் தோறும் - திக்குக்களிலெல்லாம், ஐயன் - அநுமான், கைகளால் அள்ளி அள்ளி - இரண்டு கைகளாலும் பெயர்த்தெடுத்து, வீசிய - வீசப்பெற்றனவாய், விளக்கலாலே - பிரகாசத்தை யுண்டாக்குதலாலே, உலகம் எல்லாம் விளங்கின—; (எ - று.)

சந்திரன் அஸ்தமித்த பின்பும், அநுமான் வீசியெறிந்த பிரகாசமுள்ள மரங்களால், உலகம் முழுதும் விளங்கலாயின வென்பதாம். இருளில் ஒளிக்குக்காரணமாகிய சந்திரன் அஸ்தமித்த பின்பும் ஒளிதோன்றுதலாகிய காரியம் நிகழ்ந்ததாகக் கூறிய இதில், விபாவனை யென்னும் பிறிதாராய்ச்சியணி தொனித்தல் காண்க. மதனசசோலை - மன்மதனுக்கு இருப்பிடமான சோலை. அநுமான் அசோகவனிகையை முறித்து நாசமாக்கிய செய்தியை ஸ்ரீவால்மீகி பகவான் ஏழு ஸ்லோகங்களாற் சுருக்கமாகக் கூறியுள்ளார். அதனைக் கம்பர் [illegible] ஆற்றியால் விரித்துக்கூறியுள்ளா ரென அறிக. பி - ம்:—
[illegible]

(௪௧)

௪௨.—மிருகபட்சிகளின் நிலைமை

கதறின வெருவி யுள்ளங் கலங்கின விலங்கு கண்கள்
குதறின பறவை வேலை குளித்தன குளித்திலாத
பதறின பதைத்த வானிற் பறந்தன [1]பறந்து பார்வீழ்ந்
துதறின சிறையை மீள வொடுக்கின [2]வுலந்து போன.

(இ - ள்.) விலங்கு - (அவ்வனத்திலிருந்த) மிருகசாதிகள், வெருவி - அச்சங்கொண்டு, உள்ளம் கலங்கின - மனங்கலங்கினவும், கதறின - பெருங் கூச்சலிட்டனவுமாகி, (மரங்கள் பற்றி யெரிதலால்), கண்கள் குதறின - கண்கள் கலங்கப்பெற்றன; பறவை - பட்சிசாதிகள், வேலை குளித்தன - கடலில் விழுந்திட்டன; குளிததிலாத - அவ்வாறு விழாதபறவைகள், பதறின பதைத்த - மிகவுந்துடித்து, வானில் பறந்தன - வானிற் பறக்க ஆரம்பித்து, பறந்து - சிறிது தூரம்பறந்து, பார் வீழ்ந்து - (மேலேபறக்கமுடியாமற்) பூமியிலே விழுந்து, சிறையை உதறின - சிறகுகளையுதறிக்கொண்டு, மீள - பின்னும், ஒடுக்கின - (அச்சிறகுகளை) ஒடுங்கிக்கொண்டனவாய், உலந்துபோன - அழிந்துபோயின; (எ - று.)

அநுமான் மரங்களைப் பிடுங்கியெறிந்ததனு லுண்டான சம்பிரமத்தினால் மிருகங்களும் பட்சிகளும் நிலைகலங்கி வருந்திப் பலவகையாய் அவஸ்தையை யடைந்தன வென்பதாம். பி - ம்:—[1]மறிந்து. [2]உலைந்து. (௪௨)

௪௩.—சிலபறவைகளின் நிலை.

தோட்டொடுந் துறைந்த தெய்வ மரந்தொறும் தொடுத்த புட்டங்
கூட்டொடுந் துறக்கம் புக்க குன்றெனக் குவவுத் தின்டோள்
சேட்டகன் பரிதி மார்பன் சீறியுந் [1]தின்ட நன்னான்
மீட்டவன் கருணை செய்தாற் பெறும்பதம் விளம்பலாமோ.

(இ - ள்.) தோட்டொடும் துறைந்த - இதழ்களையுடைய மலர்களோடு கிளைத்த, தெய்வம் மரம் தொறும் - தெய்வத்தன்மையுள்ள மரங்களின் மீதெல்லாம், தொடுத்த - கட்டப்பட்டுள்ள, தம் கூட்டொடும் - தமது கூடுகளுடனே, குன்று என குவவு திண் தோள் - மலைபோலத் திரண்ட வலிய தோள்களையுடைய, சேடு அகல் பரிதி மார்பன் - அழகோடு பரந்த சூரியன் போல் விளங்குகின்ற மார்பையுடையவனான அநுமான், சீறி தின்டல் தன்னாலும் - கோபித்துத் தொட்டதனாலும், புள் - பறவைகள், துறக்கம் புக்க - சுவர்க்கலோகத்தை யடைந்தன; (என்றால்), அவன் - அவ்வநுமான், மீட்டு- (கோபத்தை) மாற்றி, கருணை செயதால - அருள்புரிந்து பரிசித்தானாலால், பெறும் - அடையக்கூடிய, பதம் - பதவியை, விளம்பல் ஆமோ - (நம்மாற்) சொல்ல முடியுமோ? [மிகப்பெரும்பதவி கிடைக்கு மென்றபடி]; (எ - று.)

அநுமான் மரங்களைப் பிடுங்கி மேலெறிந்தபோது, அம்மரங்களிலிருந்த பறவைகள் தமதுகூட்டோடும் வானுலகத்திற் சேர்ந்ததை வருணிப்பது, இக்கவி. அநுமான் கோபத்தோடு பரிசித்ததன் பயனாக

வே, பறவைகட்குச் சுவர்க்கலோகம் கிடைத்ததென்றால், அவ்வாறு சினங் கொள்ளாமல் அருளுடனே பரிசித்திருந்தால் அவைகட்குப் பெரும்பதவி கிடைப்பது நிசசய மென்று கைமுதிகநியாம் படக் கூறியது - தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணியாம் பி - ம்:—[1]தீண்டவந்தாள். (சரு)

சரு.—சீதை தங்கியிருந்த மரமொன்றும் அழிக்கப்படாதிருத்தல்.

பொய்ம்முறை யரக்கர் காக்கும் [1]புள்ளுறை புதுமென் சோலை
விம்முறு முள்ளத் தன்ன மிருக்குமவ் [2]விருக்க மொன்று
மும்முறை யுலக மெல்லா முற்றுற முடிவ தான
[3]வம்முறை யையன் வைகு மாலென நின்ற தம்மா.

(இ - ள்.) பொய் முறை அரக்கர் காக்கும் - பொய்மையையே ஒழுக்கமாகக்கொண்டுள்ள இராட்சதர்கள் பாதுகாக்கின்ற, புள் உறை புது மெல் சோலை - பறவைகள் வசிக்கின்ற புதுமையையுடைய [அதிசயிகத்தகக] கண்ணுக்கினிய அந்த அசோகவனத்தில், விம்முறும் உள்ளத்து அன்னம் இருக்கும் - வருந்திக்கொண்டிருக்கின்ற மனத்தையுடைய அன்னப் பறவை போன்ற சீதாபிராட்டி தங்கியிருக்கின்ற, அ விருக்கம் ஒன்றும் - அந்தமரம் ஒன்றுமாத்திரம், மு முறை உலகம் எல்லாம் - மூன்றுவகைப்பட்ட உலகங்கள் முழுதும், முற்றுற முடிவது ஆன - அழியும்படி முடிவுபெறுகின்ற, அ முறை - அக்காலத்தில் [பிரளயகாலத்தில்], ஐயன் வைகும் - திருமால் தங்குகின்ற, ஆல் என - ஆலமரம்போல, நின்றது - ஊறுபடாமல் நிற்பதாயிற்று.

அம்மா - வியப்பிடைச்சொல்; ஈற்றசையுமாம். மற்றைமரங்களெல்லாம் அழிய, பிராட்டி தங்கியிருந்த மரம்மாத்திரம் அழியாமலிருப்பதற்கு - யாவும் அழியும் பிரளயகாலத்தில் திருமால் பள்ளி கொள்ளுமாறு ஆல்மாத்திரம் நிற்பதை உவமை கூறினார். பி - ம்:—[1]புள்ளுறு கறுமென்சோலை. [2]இருகலை யொன்றும். [3]அம்முறையமரனவைகும். (சரு)

சரு.—சூரியோதய வருணனை.

உறுசுடர்ச் [1]சூடைக் காசவ் வுயிரினை யுயிரொப் பானுக்
கறிகுறி யாக விட்டா ளாதலான் வறிய ளந்தோ
செறிகுழற் சீதைக் கென்றோர் சிகாமணி தெரிந்து வாங்கி
யெதிகட லீவ தென்ன வெழுந்தன னிரவி யென்பான்.

(இ - ள்.) 'உறு சுடர் - மிக்க வொளியையுடைய, சூடை காசு அ உயிரினை - உயிரோடு சிறந்ததாகிய சூடாமணியை, உயிர் ஒப்பானுக்கு - பிராண நாயகனுக்கு, அறிகுறி ஆக - (தனனை அநுமான் கண்டதற்கு) அடையாளமாக, விட்டாள் - (சீதை) கொடுத்தனுப்பிவிட்டாள்; ஆத லால் — அந்தோ - ஐயோ! வறியள் - (இப்போது) ஓராபரணமும இல்லாதவளாகிவிட்டாள்', என்று - என்று நினைத்து, எறி கடல் - அலையெறியுங் கடலை, ஈவ, செறி குழல் சீதைக்கு - நெருங்கிய கூந்தலையுடைய

சீதாபிராட்டிக்கு; தூர் சிகாமணி - ஒப்பற்ற சிகையிலணிந்து கொள்ளுதற்கு உரிய இரத்தினத்தை, தெரிந்து வாவி - ஆராய்ந்து தேடி வாவி, ஈவது என்ன - கொடுப்பதுபோல, இரவி என்பான் - சூரியன், எழுந்தனன் - (அக் கடலினின்று) தோன்றினான்; (எ - று.)

கடலிலிருந்து இயற்கையாகச் சூரியன் எழுந்தமை, கலி, 'தன்மகளான லக்ஷ்மீதேவியின் அமிசமான சீதாபிராட்டி தன்னிடத்து இருந்த ஆபரணங் களையெல்லாம் முன்னமே கழற்றியெறிந்துவிட்டு மிசமாகவைத்துக்கொண் டிருந்த சூடாமணி யொன்றையும் இப்போது தன்னை அநுமான்கண்டதற்கு அறிகுறியாகக் கொடுத்துவிட்டுத் தான் ஓராபரணமுமில்லாமல் வறியவளாய் விட்டனளே! என்ற இரகசிய சமுத்திராசன் ஒருசூடாமணியைக் கொடுத் தனன்போலும்' என வருணித்தார்: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. சூடைக் காசு, சிகாமணி - ஒரு பொருளன. செறிகுழல் - சடையாகச் செறிந்த கூந்த லென்னலாம். பி - ம்:—[1]சூடைக்காசுக்கரசினையுயிரொப்பானுக்கு, சூடைக் காசையுயிரினுகருயிரொப்பானுக்கு. (சஎ)

சசு.—மரங்களையெல்லாம் அழித்துவிட்டு அநுமான் தனியே நிற்றல்.

தாழிரும் பொழில்க ளெல்லாந் துடைத்தொரு தமிய னின்று
ஏழினோ டேழு நாடு [1]மளந்தவ னெனலு மானு
ஞழியி னடுவ ணின்ற வருவரைக் காசு மொத்தா
னூழியி னிறுதிக் காலத் துருத்திர மூர்த்தி [2]யொத்தான்.

(இ - ள்.) தாழ் இரும் பொழில்கள் எல்லாம் துடைத்து - தழைத்த பெரிய சோலை முழுவதையும் அழித்து, ஒரு தமியன் நின்றான் - தான் ஒரு தனியேநின்ற அநுமான்,—ஏழினோடு ஏழு நாடும் - மேலேழ் கீழேழ் என்ற பதினான்கு உலகங்களையும், அளந்தவன் - (தனது இரண்டு திருவடிகளினு லும்) அளந்துகொண்டவனான திரிவிக்கிரமூர்த்தி, எனலும் ஆனான் - என்று சொல்லுதற்கும் தக்கவனானான்; ஆழியின் நடுவண் நின்ற அரு வரைக்கு அரசு உம் ஒத்தான் - பாற (கடல் கடைகையில் அக்) கடலின் நடுவே (கடை கிற மத்தாக) நின்ற (அளவுகாணுதற்கு) அரிய சிறந்த மலையாகிய மந்தரமலை யையும் போன்றான்; ஊழியின் இறுதி காலத்து உருத்திரமூர்த்தி ஒத்தான்- கற்பாந்தகாலத்தில் உலகத்தையெல்லாம் அழித்திட்டு நிற்கின்ற உருத்திரமூர்த் தியையும் போன்றான்; (எ - று.)

அப்போது தனியே நின்ற அநுமானுக்கு மிகப்பேருருவங் கொண்டத னால் திரிவிக்கிரமூர்த்தியும், அரக்கராகிற கடலைக் குழப்பப்போவதனால் மந்த ரமலையும், எல்லாவற்றையும் அழித்துநிற்றலால் உருத்திரமூர்த்தியும் உவமை யாவ ரென்க. பி - ம்:—[1]லோகமளந்தவனென்னலானான். [2]ஒப்பான். (சசு)

சஎ.—அநுமானைக்கண்டு அஞ்சிய அரக்கியர் அவனைக்துறித்துச் சீதையை வினவுதல்.

இன்னன நிகழும் வேலை யாககிய ரெழுந்து பொங்கிப
பொன்மலை யென்ன நின்ற புனிதனைப் புகன்று நோக்கி
யன்னையீ தென்னை மேனி யார்கொலென் றச்ச முற்றார்
நன்னுத றன்னைநோக்கி யறிதியோ நங்கை யென்றார்.

(இ - ள்.) இன்னன நிகழும் வேலை - இச்செயல்கள் நடக்கும்பொழுது, அரக்கியர் - (அகரு உறகிகிடந்த) அரகிமார்கள்,—எழுந்து - உறக்கத் தெளிந்து விழித்தெழுந்து, பொகி - (நிகழ்ந்தசெயலைககணடு) மனங் கொதித்து, பொன் மலை என்ன நின்ற புனிதனை-பொன்மயமான மேருமலை போலப் (பெருந்தோற்றத்தோடு) எதிரில் நின்ற பரிசுததனுகிய அநுமானைக் குறித்து, 'அன்னை ஈது என்னை மேனி அம்மா! இவகுதோன்றுவது என்ன வடிவம்! யார் கொல் - இவர் யாரோ?' என்று புகன்று நோக்கி - என்றுசொல் லிக்கொண்டு (அவனைப்) பாரத்து, அசசம் உற்றார் - பயகவகொண்டவர்க ளாய்,—(பிறகு), நல் நுதல்தன்னை நோக்கி - அழகிய நெற்றியையுடைய சீதையைப் பாரத்து, 'நகை - பெணணே! அறிதியோ - (இவனை இன்னு மென்ற நீ) அறிந்துள்ளாயோ?' என்றார் - என்று வினவினாகள்; (எ - று.)

அநுமான் செய்த விஞ்சைமகிமையால் உறகிக்கிடந்த அரக்கியர்கள அத்துயிலினின்று நீகிக் கண்விழிததெழுந்து தாம இருந்த அசோகவனிகை முழுதும் அலவகோலமாய்க கிடப்பதையும் பெருவடிவதோடு அநுமான் நிற பதையும் கணடு, வியப்பும் அசசமும் ஒருகுகே கொணடு, அவனைக குறிததுச சீதையை வினவின ரென்க பொன்மலை யென்ன நின்ற புனிதன் - "காஞ்ச நாத்ரி கமநீயவிகரஹம் . மாருதிம்" என்று அநுமானைபபற்றிய தியானஸ் லோகத்தில் வருதல் காண்க. அன்னை - 'அமமா' என்பதுபோல அச்சமும வியப்பும் குறிககும் இடைசசொல். மூன்றுமடிக்கு, அரக்கியா திரி சடையை நோக்கி வினவியதாகப் பொருளுரைததல் முதனூலுககு ஒவ்வாது.

சஅ.—சீதாபிராட்டி கூறும் உத்தரம்.

தீயவர் தீய செய்த தீயவர் தெரியி னல்லாற்
றூயவர் [1]துணித [2]லுண்டே [3]நும்முடைச் சூழ லெல்லா
[4]மாயமா னெய்த வம்மா னிளையவ னரக்கர் செய்த
மாயமென் றுரைக்க [5]வேயு மெய்யென மையல் கொண்டேன்.

இரண்டுகவிகள் - ஒருதொடா.

(இ ள்.) தீயவர் தீய செய்தல் - கொடுமையையுடைய அரக்கா கொடிய மாயததொழில்களைச செய்வதை, தீயவா தெரியின் அல்லால் - (அவர்களைப்போன்ற) கொடியவரே தெரிந்துகொண்டாற் கொள்ளலா மேயல்லாமல், நும்முடை சூழல் எல்லாம - (கொடிய அரககவர்ககத் தலைவகிய) உகைகளுடைய மாயசசெயல்களையெல்லாம், தூயவர் துணி

தல் உணடே - (என்னைப்போன்ற) நல்லவர் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுதல் கூடுமோ? [கூடாதென்றபடி]; ஆய மான் எய்த - (முன்பு வனத்தில் மாரீசனென்ற) அரக்கனாகிய மான்வடிவை கொண்டவன் (என்னெதிரில்) வர, அ மான் - அந்த மானைக்குறித்து, இளையவன் - இலட்சுமணன், 'அரக்கர் செய்த மாயம் - ராக்ஷஸர் செய்த மாயச்செயலாகும் (இது),' என்ற—, உரைக்க ஏ உம்-சொல்லச் செய்தேயும், (அவனது வார்த்தையைநம்பாமல்), மெய என - (அதனை) மெய்யான மானென்றே, மையல்கொண்டேன் - (அதன்மீது) விருப்பங்கொண்டு (இராமனைப்பற்றித்தரும்படி) கேட்டேன்; (எ - று.)—'என்றனன்' என அடுத்தகவியோடு தொடரும்.

அரக்கருடைய மாயத்தைத் தெரியாமையினால்தான், எனக்கு இத்தக்கதி நேர்ந்தது: தெரியும்வல்லமையைப் பெற்றிருப்பேனாயின், இளையபெருமான் வார்த்தையை நம்பி இவ்வாறான துன்பத்துக்கு இரையாகாமல் கவலையின்றியிருந்திருப்பேனே, தீயஅரக்கவர்க்கத்தாருடைய மாயச்செயல் நிக்குணமுடைய நும்போலியரான அரக்கர்வர்க்கத்தாரானன்றி, என்போன்ற நல்லகுண முடையவரால் ஒருகாலும் தெளியமுடியா தென்பதாம். எனவே, இப்போது இக்குவந்து பேருருவத்துடன் தோன்றுகின்றவனும், மாயத்தினால் வேற்றுருக் கொண்டு வந்துள்ள அரக்கனேபோலுமென்று கூறியவாறாயிற்று. அநுமானைப்பற்றி உணர்ந்திருந்தும் சீதை மனமார இவ்வாறு பொய்சொன்னது,—'உயிர்போகும் நிலை நேரிடுகையிற் பொய்சொல்லலாம்' என்ற தருமசாஸ்திரங்கள் கூறுவதனாலாகு மென்பர்: "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த, நன்மை பயக்குமெனின்" என்ற திருக்குறளும் இங்குக் கருதத்தக்கது. பொதுவாகக்கூறிய முன்னிரண்டடிகளைத் தன்னுடைய வரலாற்றையே எடுத்துக்காட்டாகக்கொண்டு பின்னிரண்டடிகளால் சமர்த்தித்தது - வேற்றுப்பொருள்வைப்பணியின்பாற் படும். பி - ம்:—[1]தெரிதல். [2]உண்டோ. [3]நும்முழைச. [4]எயமானெய்தமானை. [5]வேறு. (சஅ)

சகூ.—அப்போது அநுமான் செய்துன்றமண்டபத்தைக் கண்டு அதனைப் பற்றியெழியக் கருதுதல்.

என்றன [1]ளரக்கி மார்கள் வயிறலைத் திரியல் போகிக்
குன்றமு [2]முலகும் வானுங் கடல்களுங் குலைய வோட
[3]நின்றசெய் குன்று கண்டா னீக்குவ னிதனை யென்னாத்
தன்றடக் கைக ணீட்டிப் [4]பற்றினன் றூதை யொப்பான்.

(இ - ள்.) என்றனன் - என்று (சீதாபிராட்டி அரக்கியர்க்கு மறுமொழி) கூறினன்; (அதுகேட்டு), அரக்கிமார்கள்—, வயிற அலைத்து - வயிற்றிலடித்துக்கொண்டு, இரியல் போகி - (பேரச்சத்தினால்) நிலைகுலைந்து, குன்றமும் உலகும் வானும் கடல்களும் குலைய ஓட - மலைகளும் இந்நிலவுலகமும் வானமும் சமுத்திரங்களும (அப்போது உண

டான அதிர்ச்சியினால்) நடுங்கும்படி ஓடா நிற்க,—தாதை ஒப்பான்-(வலிமையில் தனது) தந்தையான வாயுதேவனை யொப்பவனான அநுமான், நின்ற - (அங்கு) உள்ள, செய் குன்று - செய்குன்றத்தை, கண்டான் - பார்த்து, 'இதனை—, நீக்குவல் - ஒழித்துவிடுவேன்,' என்னு - என்று நினைத்து, தன் தடக்கைகள் நீட்டி - தனது பெரியகைகளை நீட்டி, பற்றினன் - (பிடுங்கியெறிவதற்காக அதனை) உறுதியாகப் பிடித்தனன்; (எ - று.)

சீதாபிராட்டி அநுமானைக்குறித்துத் தனக்கு யாதொன்றுந் தெரியாதென்று சொல்லிவிடவே, அரக்கியர் அவ்வநுமானது தோற்றத்துக்கு மிகவும் அஞ்சி மலைமுதலியன அதிரும்படி நிலைகுலைந்து ஓடினராக, அநுமான் அங்குப்புலப்பட்ட செய்குன்றைப் பிடுங்கி யெறியுமாறு கருதி அதனை வலியப்பற்றினனென்பதாம். செய்குன்று - விநோதார்த்தமாக மலைபோலச் செய்யப்பட்டிருப்பது. அரக்கியர் சீதாபிராட்டியினிடம் அநுமானைக்குறித்து வினவ, அப்பிராட்டி 'பாம்பின் காலைப்பாம்பே அறியுமாறுபோல, அரக்கர் மாயம் நும்போல்வார்க்குத் தெரியுமேதவிர என்னைப்போன்றவர்கட்குத் தெரியுமோ? தெரியவே தெரியாது' என்று மறுமொழி சொல்லிவிட, அதுகேட்ட அரக்கியர் அஞ்சி எவ்வாத்திசைகளிலும் ஓடினராக, அவர்களிற் சிலர் அநுமான் இந்த பிராட்டியினுடன் பேசிவிட்டு அசோகவனிகையை அழித்ததுத் தோரணவாயிலில் தங்கியுள்ள செய்தியை இராவணனிடம் தெரிவிக்க, தோரணத்தின்மீதிருந்த அவ்வநுமானைப் பொருது வெல்லும்படி கிங்கரரென்னும் வீரர்களை அவ்விராவணன் ஏவினனன்று, ஸ்ரீவால்மீகத்திற் கூறியுள்ளது. பீ - ம்:—[1]அரக்கர்மாதர். [2]வாழ் மண்ணும். [3]நின்றதோர்சமித்தை, நின்றதோர்செய்தி. [4]மறித்தனன். (சகூ)

ரூ0.—இதுமுதல்மூன்றுகவிகள் - கவிக்கூற்று: அச்செய்குன்ற மண்டபத்தின் வருணனை.

கண்கொள வரிது மீது [1]கால்கொள வரிது திண்கா
லெண்கொள [2]வரிதி ராவு மிருள்கொள வரிது [3]மாக
விண்கொள நிவந்த மேரு வெள்குற வெதும்பி யுள்ளம்
புண்கொள வுயர்ந்த திப்பார் பொறைகொள வரிதுபோலாம்.

(இ - ள்.) (அச்செய்குன்று), கண் கொள அரிது - (உண்மைமலை யாலவே பேரதிசயம்பட வமைந்திருத்தலால் எவராலும்) கண் கொண்டு பார்க்க முடியாது: மீது கால் கொள அரிது - (காவற்சிறப்பினால்) அதனிடத்து (எவராலும்) கால் வைக்கவும் முடியாது; திண் கால் எண் கொள அரிது - (அச்செய்குன்றிலுள்ள) வலிய தூணங்களை எண்ணிக்கணக்கிடுதலும் (எவர்க்கும்) அரியது; இராவும் இருள் கொள அரிது - இராப் பொழுதிலும் இருளினால் கொள்ளமுடியாது; மாகம் விண்கொள நிவந்த மேரு - மிகப்பெரிய ஆகாயத்தினிடமெலலாங் கொள்ளும்படி உயர்ந்துள்ள மேருமலையானது, வெள்குற - நாணம் அடையும்படியும், உள்ளம் வெதும்பி புண் கொள - மனம் நொந்து புண்படும்படியும், உயர்ந்தது—; இ பார் பொறை கொள அரிதுபோல் ஆம் - இந்தப்பூமி

யும் (அதன்) பெருஞ்சுமையைத் தாங்குவதென்பது முடியாத செயல் போலும்; (எ - று.)—பி - ம்:—[1]கார். [2]அரிதரோ. [3]ரகவின். [4]பொறை கொளவெளிதுபோலாம். (இ௦)

௫௧. பொங்கொளி [1]நெடுநா ளீட்டிப் புதியபால் பொழிவ தொக்குந்
திங்களை நக்கு கின்ற விருளெலாம் [2]வாரித் தின்ன
வங்கைபத் திரட்டி யான்ற னுணையா ழழகு மானப்
பங்கயத் தொருவன் றானே பசும்பொனாற் படைத்த தம்மா.

(இ - ன்.) (அன்றியும், அசசெய்குன்று),—நெடு நாள் - பலநாள்கள் [பதினைந்து நாள்கள்], பொங்கு ஒளி - மேன்மேல் விஞ்சுகின்ற பிரகாசத்தை, ஈட்டி - சம்பாதித்து, புதிய பால் பொழிவது ஒக்கும் - புதியபாலைச் சொரிவதுபோன்ற [நிலாவை வீசுகின்ற], திங்களை - சந்திரனையும், நக்கு கின்ற - தீண்டுவதான, இருள் எலாம் - (களங்கமெனப்படுகின்ற) இருட்டு முழுவதையும், வாரி தின்ன - அள்ளித்தின்னும்படி [போக்கும்படி], அம் கை பத்து இரட்டியான்தன் ஆணையால் - அழகிய இருபது கைகளையுடையவனான இராவணனது கட்டளையினால், அழகு மான - அழகு பொருந்தும்படி, பங்கயத்து ஒருவன் - (திருமாலின் நாபீ) கமலத்தை வாழிடமாகவுடைய பிரமதேவன், தானே - (வேறொருவரை ஏவாமல்) தயமாகவே, பசும் பொனால் படைத்தது-பசும்பொன்னினாற செய்ததாகும்; (எ - று.)—அம்மா-வியப்பிடைச்சொல்: அசசெய்குன்றின் ஒளிசிறப்பை வியந்தவாறு.

சுக்கிலபட்சத்துப் பிரதமைமுதல் நினைந்தோறும் ஒவ்வொரு கலையாகப் பூர்ணிமையளவும் வளர்ந்து ஒளிபெற்று நிலவை வீசுவதனால், பூர்ண சந்திரனை 'பொங்கொளி நெடுநாளீட்டிப் புதியபால் பொழிவ தொக்குந் திங்கள்' என்றார். அப்படிப்பட்ட சந்திரனிடத்தும் நீங்காது பற்றியுள்ள களங்கமாகிய இருளையெல்லாம் தன்ஒளிமிகுதியாற் போக்குவது என அசசெய்குன்றின் ஒளிமிகுதி கூறியவாறு. சந்திரனுக்கும் போக்குதற்கு அரிய செறிந்த இருளையெல்லாம் போக்குவது இமமண்டபமென முதலிரண்டடிகட்குக் கருத்துக் கூறுவாரு முளர். பி - ம்:—[1]நெடுநாளீட்டி, நெடுநாளு நெடுநாளீட்டி. [2]வாரிதின்ற. (இக)

௫௨. தூணெலாஞ் சுடரும் காசு [1]சுற்றெலா முத்தஞ் சொன்னம
பேணலா மணியின் [2]பத்தி பிடரெலா மொளிகள் விம்மச்
சேணெலாம் விரியுங் கற்றைச் சேயொளிச் செல்வற் கேயும்
பூணலா மெம்ம னோராற் புகழலாம் புதுமைத் தன்றே.

(இ - ன்.) (அந்தச்செய்குன்றில்), தூண் எலாம் - தூண்போலச் செங்குத்தாயமைந்த விடங்களெல்லாம், சுடரும் காசு - ஒளிவிளங்குகின்ற இரத்தினத்தினா லியன்றவை; சுற்று எலாம் - (அதன்) சுற்றுப் பக்கமெல்லாம், முத்தம் சொன்னம் - முத்துக்களாலும் சொர்ணத்தாலும் இயன்றவை; பிடர் எலாம் - பின்பக்கமெல்லாம், பேணல் ஆம் மணியின் பத்தி - விரும்புதற்கு இடமான இரத்தினவரிசை வரிசையாலியன்

றலை; (இவ்வாறு), ஒளிகள் விமம - பிரகாசங்கள மிகுதலால், (அம்மண்டபமானது), சேண் எலாம் விரியும் கறை சேய ஒளி செல்வதற்கு ஏ உம் - ஆகாயமுழுதும் பரவுகின்ற தொகுதியான சிவந்தஒளியையே செல்வமாகக்கொண்ட சூரியனுக்கும், பூணல் ஆம் - ஆபரணமாக அணிதற்கு உரியதாய்; (அன்னைஞ் சிறப்புற்று இருத்தலால்),—எம் அனோரால் - எம்மைப் போன்றவர்களால், புகழல் ஆம புதுமைதது அன்ற - புகழ்ந்துசொல்லுதற்கு உரிய புதுமையை யுடையதன்று; (எ - று.)

பலவகை இரத்தினங்களாலியன்ற அந்தச்செய்குன்று பேரொளி வடிவமான சூரியனுக்கும் விளக்கதைத்தரும் ஓராபரணமாகுந் தன்மையாதலால், அதன சிறப்பைவருணித்துச சொல்லமுடியா தென்றவாறு. பி-ம்:—[1]சுற்றெலாமயரச. சுற்றெலாமற்ற. [2]பித்திப்பிடரெலாம். (இஉ)

இஉ—இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்: அநுமான் அம்மண்டபத்தை யெடுத்து இலங்கையின்மீது எறிந்து அழித்தல்.

வெள்ளியங் கிரியைப் [1]பண்டு வெந்தொழி லரக்கன் வேரோ
டள்ளின னென்னக் கேட்டா னத்[2]தொழிற் கிழிவு தோன்றப்
புள்ளிமா மேரு வென்னும் பொன்மலை யெடுப்பான் போல
[3]வள்ளுகிர்த் தடக்கை தன்னான் மண்ணின்றும் வாங்கி யண்ணல்.

(இ - ள்.) பண்டு - முற்காலத்தில், வெள்ளி அம் கிரியை - அழகிய வெள்ளிமலையாகிய கைலாசத்தை, வெம் தொழில் அரக்கன் கொடுந் தொழிலையுடைய இராவணன், வேரோடு அள்ளினன் என்ன - வேரோடு பறித்தெறிந்தனனென்று (உலகத்தார்) கூற, கேட்டான்-கேள்விப்பட்டவனாய்,—அண்ணல் - பெருமையிற் சிறந்தவனாகிய அநுமான்,—அ தொழிற்கு இழிவு தோன்ற - அந்தச்செயலுக்குக் குறைவு உண்டாகும்படி, மா மேரு என்னும் புள்ளி பொன் மலை எடுப்பான்போல - மஹாமேருவென்று சொல்லப்படும் பெருமைபெற்ற பொன் மலையைப் பெயர்த்தெடுப்பவன்போல, வள் உகிர் தட கைதன்னால் - கூரிய நகங்களையுடைய (தனது) பெரிய கைகளால், மண்ணின்றும் - தரையிலிருந்து, வாங்கி - பெயர்த்தெடுத்து; (எ - று.)—'விட்டனன் விலங்கைதன்மேல்' என அடுத்த கவியோடு தொடரும்.

அநுமான் அச்செய்குன்றை பெயர்த்தெடுத்தது - வெள்ளிமலையாகிய கைலாசத்தை இராவணன் பெயர்த்தெடுத்ததைக் கேள்வியுற்ற, அத தொழிற்கு இழிவுதோன்றுமாறு அதனினும் பெரியதும் சிறந்ததுமாகிய மகாமேருவென்னும் பொன்மலையைப் பெயர்த்தெடுத்ததுபோலு மென வருணித்தார்: தந்துதிப்பேற்றவணி. இதனால், அச செய்குனறத்தின் பெருந் தோற்றமும் சிறப்பும் பெறப்படும். பி - ம்:—[1]பண்டவ. [2]தொழிறகழிவு தோன்ற. [3]வள்ளுகிர்த்தடகைகீட்டி. (இஊ)

இஎ. விட்டனன் விலங்கை தன்மேல் விண்ணுற விரிந்த மாடம்
பட்டன பொடிக ளான [1]பகுதிதன பாங்கு நின்ற

சுட்டன பொறிகள் [1]பின்னைத் [2]துளங்கின ரரக்கர் தாமுங்
கெட்டனர் வீர ரம்மா பிழைப்பரோ கேடு சூழ்ந்தார்.

(இ - ள்.) இலங்கைதன்மேல் விட்டனன் - இலங்காபுரியின்மீது எறிந்தான்; (அதனால்), விண் உற விரிந்த மாடம் - வானத்தை யளாவும்படி பரவியிருந்த வீடுகள், பட்டன - மோதப்பட்டனவாய், பகுத்தன - பிளவுபட்டு, பொடிகள் ஆன-பொடிகளாய்விட்டன; (மண்டபம் மாடங்களோடு மோதும் போது தோன்றிய), பொறிகள் - நெருப்புப்பொறிகள், பாங்கு நின்ற சுட்டன - பக்கங்களிலுள்ள பொருள்களையெல்லாம் சுட்டெரித்தன; பின்னை - பின்பு, வீரர் அரக்கர்தாமும்-(எதற்குங்கலங்காத) ராக்ஷஸ வீரர்களும், துளங்கினர்-அஞ்சி நடுங்கினவராய், கெட்டனர் - அழிந்தொழிந்தார்கள், அம்மா - ஆச்சரியம்! கேடு சூழ்ந்தார் - (பிறர்க்குத்) தீங்கு செய்வதையே எப்போதுஞ் சிந்திப்பவரான தீயோர், பிழைப்பரோ - (இந்ததீவினைப்பயனை யனுபவியாது) தப்புவார்களோ? (எ - று.)

அனுமானெறிந்த அசசெய்குன்றினால் இலங்கையிலுள்ள மாடமாளிகைகள் தகர்ந்து பொடிகளாக, அப்போது தோன்றிய நெருப்புப்பொறிகளாற் பக்கங்களிலுள்ள பொருள்களியாவும் சுடப்பட்டொழிய, அங்குள்ள ராக்ஷஸ வீரர்களும் அஞ்சி நடுங்கிக் கெட்டன ரென்பதாம். அரக்கர் கெட்டொழிந்தன ரென்ற சிறப்புப்பொருளை 'கேடுசூழ்ந்தார் பிழைப்பரோ' என்ற பொதுப் பொருள் கொண்டு விளக்கியது வேற்றுப்பொருள் வைப்பணியாம். பிழைப்பரோ - உயிர்தப்புவரோ எனினுமாம். அம்மா என்ற வியப்பிடைச்சொல் - அரக்கர்க்கும் இவ்வாறு ஆபத்துக்காலம் நேர்ந்தது குறித்து வியந்தமையை விளக்கும். பி - ம் —[1]பரந்தன. [2]மீளத. [3]துளங்கின. (ரூச)

ரூரு.—பருவத்தேவர் அஞ்சியோடி இராவணனைச் சார்தல்.

நீரிடு துகில ரச்ச நெருபபிடு நெஞ்சர் நெக்குப்
பீரிடு முருவர் தெற்றிப் பிணங்கிடு தாளர் பேழ்வா
யூரிடு பூச லாரா [1]வுளைத்தன ரோடி யுற்றார்
பாரிடு [2]பழுவச் சோலை [3]பாலிக்கும் பருவத் தேவர்.

(இ - ள்.) பார் இடு பழுவம் சோலை பாலிக்கும் பருவம் தேவர் - லங்காபூமியில் வைத்து வளர்த்துள்ள பெருஞ்சோலையை [அசோக வனத்தைப்] பாதுகாக்கின்ற ஆறுபருவங்கட்கும் உரிய தேவர்கள்,—நீர் இடு துகிலர் [துகில் இடுவோர்] - உடுத்த வஸ்திரத்தில்தானே சிறுநீர் விட்டுக் கொண்டவர்களும், அசசம நெருப்பு இடு நெஞ்சர் - பயமாகிய நெருப்பு மூளப்பெற்ற மனமுடையவர்களும், நெகுகு பீரிடும் உருவர்—(அநுமான் மரங்களைப் பிடுங்குகையில் தன்மீது மரக்கிளை முதலியன படுதலாற்) பிளந்து இரத்தம்வடிகின்ற உடம்பை யுடையவர்களும், தெற்றி பிணங்கிடு தாளர் - (நடைதராமல்) பின்னிக்கொண்டு (ஒன்றோடொன்று) மோதுகின்ற கால்களையுடையவர்களும், பேழ் வாய் இடுபூசல் ஊர் ஆர

உளைத்தனர் - (தமது) திறந்தவாய்களினாற் செய்கின்ற பேராரவாரம் ஊரில் நிறையும்படி ஊளையிடுபவர்களுமாகி, ஓடி உற்றார் - ஓடி (இராவணனைச்) சமீபித்தார்கள்; (எ - று.)

ஆறு இருதுக்களுக்கு முரியவர்களாய் அந்த அசோகவனத்தைப் பாது காத்துக்கொண்டிருந்த தேவர்கள், பயாகினி மனத்திலே மூள, உடுத்த ஆடையில் சிறிதே விட்டபடி கால்நடைதாமல் முட்டித்தள்ள அலறி ஊளை யிட்டவண்ணம் ஓடி இராவணனுள்ள இடத்தைச் சேர்ந்தன ரென்பதாம் இவ்வாறு அவர்கள் ஓடிச் சென்றது இராவணனுக்கு அநுமானது செயலை யுணர்த்துதற்காக. பருவத்தேவர் - வேனில் முதலிய ஆறுபருவங்கட்கும் உரிய அதிதேவதைகளான தேவர்கள்: இத்தேவர்கள் இராவணன் எவ்வெப் போது எத்தன்மையதான பருவத்தை விரும்புகின்றானோ, அவ்வப் பருவத் தை அவன் விருப்பதற்கிணங்கி அவ்வப்போது உண்டாக்குவதன் பொருட்டு அந்தச்சோலையைப் பாதுகாத்த வண்ணம் அகுதுதானே வாழ்கின்றன ரென்க. இனி, எப்போதும் ஆறு இருதுகளுக்கும் உரிய மலர் காய் கனி முதலியவற்றைத்தரும்படி ஆறு இருதுக்களுக்கு உரிய தேவதைகளும், இரா வணனிடத்து அச்சத்தினால் அகு வாழ்கின்றன ரென்னலுமாம். இராவ ணன் இருதுகளைத் தன் விருப்பத்தினபடி ஆட்டுவிக்குந் திறலுடையவ னென்பதை, மாரீசன் வதைப் படலத்துங் காணலாம். பி - ம்:—[1]உரைத்த னர். [2]பவ்வச்சோலை. [3]பாரிகரும். (ருரு)

ருஎ.—இதுவும், அடுத்த கவியும் - சென்றவர் அநுமான்செய்தியை இராவணனிடத்து முறையிடுதல்.

அரிபடு சிற்றத் தான்ற னருகுசென் றடியின் வீழ்ந்தார்
கரிபடு திசையி னீண்ட காவலா காவ லாற்றோங்
கிரிபடு குவவுத் திண்டோட் குரங்கிடை கிழித்து வீச
வெரிபடு துகிலி னெய்தி னிற்றது கடிகா வென்றார்.

(இ - ள்.) அரி படு சிற்றத்தான்தன அருகு சென்று - அரிகளுபோகடும படியான [மிகக] கோபத்தைக் கொண்ட இராவணனுடைய சமீபத்திற் போய், அடியின் வீழ்ந்தார் - (அவனது) பாதங்களில் விழுந்து, (அவனை நோக்கி), 'கரி படு திசையின் நீண்ட காவலா - திக்கஜங்கள் வாழ்கின்ற திசைகளின் எல்லை வரையிலும் தடையின்றிச் செல்லுகின்ற காவலையுடைய அரசனே! காவல் ஆற்றோம் - (இப்போது சோலையைப்) பாதுகாக்கும் வல் லமையற்றவர்களானோம்; கிரி படு குவவு திண்தோள் குரங்கு - மலைபோலத் திரண்டவலிய தோள்களையுடைய ஒரு குரங்கு, இடை கிழித்து வீச-சோலை யினிடையிற் புகுந்து (மரங்களை) முறித்து வீசுதலினால், கடி கா - (நாங்கள்) பாதுகாத்துவந்த சோலை, எரி படு துகிலின் - நெருப்புப்பட்ட ஆடைபோல, வெயிலின் இற்றது - விரைவில் அழிந்திட்டது,' என்றார் - என்று கூறினார் [illegible], (அதுகேட்டு), (எ - று.)

அரிபடுசிற்மம் - "அரிசினத்தால்" என்றார் பெரியாரும். சிரிபடுகுரங்கு என்ற இலையத்து, மலையில்வாழுந் தன்மையுள்ள குரங்கு எனினுமாம். செருப்பிற்பட்ட துகில், விரைவில் அழிதற்கு உவமை. (இ௯)

௫௭. சொல்லிட வெளிய தன்றாற் சோலையைக் காலிற் கையிற்
புல்லொடு துகளு மின்றிப் பொடிபட நூறிப் [1]பொன்னால்
வில்லிடு [2]வேரங் கன்னை வேரொடு வாங்கி வீசச்
சிலலிட மொழியத் தெய்வ விலங்கையுஞ் சிதைந்த தென்றார்

(இ - ள்.) (பின்னும் அவர்கள் அவ்விராவணனை நோக்கி) 'சொல்லிட எளியது அன்று - (அந்தக்குரங்கு செய்த அரிதான செயல் எங்களால்) சொல்லுதற்கு எளியதல்ல; சோலையை - அசோகவனத்தை, காலின் - கால்களாலும், கையின் - கைகளாலும், புல்லொடு துகளும் இன்றி புற்களும் (அவற்றின் மீது ஒட்டிக்கொண்டிருக்கும்) தூசியுங் கூட இராமல், பொடிபட நூறி - பொடியாம்படி அழித்து, பொன்னால் விலஇடு வேரம்தனனை வேரொடுவாங்கி வீச - பொன்னினாற் கட்டப்பட்டிருந்ததனால் ஒளிவீசுகின்ற செய்குன்றை அடியோடு பறித்து எறிந்ததனால், தெய்வம் இலங்கையும் - தெய்வத்தன்மையையுடைய இலங்காபட்டணமும், சில் இடம் ஒழிய - மிகச் சிறியபாகம் மாத்திரம் அழிபடாமல் நிற்க, சிதைந்தது - (பெரும்பாலும்) அழிந்து விட்டது,' என்றார்—;(எ - று)

வேரம் செய்குன்றாதலை 'விண்டொடர்ந்த வேரங்கடம்மேற்புறத் தாடும் ..கிளிகள்", "வீசுபொன்சுடரின்றவேரமொன்று" என்றவற்றாலு மறிக. அரக்காட்குவாழிடமான இலங்காபுரியை 'தெய்வவிலங்கை' என்றார்; அரக்கரும்பதினெண்தேவகணங்களுள் ஒருவராதல் காண்க. பி-ம்:— [1]பொன்று. [2]ஓமந்தன்னை. (இ௰)

௫௮.—அது கேட்டு இராவணன் பரிகசித்துக் கூறுதல்

ஆடகத் தருவின் சோலை பொடிபடுத் தரக்கர் காக்குந்
தேடரும் [1]வேரம் வாங்கி யிலங்கையுஞ் சிதைத்த தம்மா
கோடா மொன்றே [2]கன்றி திராக்கதர் கொற்றஞ் [3]சொற்றன்
மூடரு மொழியா ரென்ன மன்னனு முறுவல் செய்தான்.

(இ - ள்.) (வந்த அந்தப்பருவதவேர்களை நோக்கி இராவணன்),— 'கோடாரம் ஒன்றே - ஒரு குரங்குதானே, ஆடகம் தருவின்சோலை - பொன்மயமான விருட்சங்களையுடைய சோலையை, பொடி படுத்து - நீறாக்கி, அரக்கர் காக்கும் - ராக்ஷஸர்கள் பாதுகாத்து வருகின்ற, தேடு அரும் வேரம் - எங்குந் தேடினும் காணுதற்கு அரிய [மிக அபூர்வமான] செய்குன்றத்தை, வாங்கி - வேரோடுபிடுங்கி, இலங்கையையும் சிதைத்தது—இலங்கா நகரத்தையும் அழித்துவிட்டது; அம்மா - ஆச்சரியம்! இது - இவ்வாறு கூறியதான, இராக்கதர் கொற்றம் - இராக்கதர்களுடைய வெற்றி, மன்று - மிகவும் நன்றாயிருந்தது! சொற்றல் - (இப்படிப்பட்ட) பேச்சை, மூடரும் மொழியார் - (என்னெதிரில்) அறிவீனருஞ் சொல்லமாட்டார்கள்,' என்ன - என்று,

மன்னனும் - ராக்ஷஸராஜனான ராவணனும், முறுவல் செய்தான் - பரிகாசமாகச்சிரித்தான்;(எ - று.)

முதலிரண்டடிகளால், பருவததேவர்கள் கூறியதை இராவணன் அநுவதித்து, இராக்கதர்க்கு நேர்ந்ததாகக் கூறிய தோல்வியைக்குறித்துப் பரிகசித்துக்கூறியபின் அததேவர்களை நோக்கி 'உங்களைப்போல என்னெதிரில் இராக்கதர்க்குத் தோல்வி நிகழ்ந்ததென்று இப்படிப் பொய்யாகப் பேசுவார் எவருமில்லை' என்று அததேவர்களின் பேச்சை நம்பாமல் அவர்களை யதட்டினனென்க. பி - ம்:—[1]ஓமம். [2]நன்றிவ். [3]சொற்றமூடர்தம்மொழியே யென்னுமன்னவன். (இஅ)

ருகூ.—பருவத்தேவர் அனுமான்திறத்தைப் பின்னும் வியந்து கூறுதல்.

தேவர்கள் [1]பின்னு மன்ன வதனுருச் சுமக்குந் திண்மைப்
பூவல யத்தை யன்றோ புகழ்வது புலவர் போற்று
[2]மூவரி னொருவ னென்று [3]புகலகினு முடிவி லாத
[4]வேவமக் குரங்கை யைய காணுதி யின்னே யென்றார்.

(இ - ள்.) தேவர்கள் - பருவத தேவர்கள். பின்னும்—, (இராவணனை நோக்கி), மன்ன - அரசனே! அதன் உரு - அநதக்குரங்கின் உடமபை, சுமக்கும் - தாங்கவல்ல, திண்மை - வலிமையையுடைய, பூவலயத்தை அன்றோ - பூமண்டலத்தையல்லவா, புகழ்வது - புகழவேண்டுவது! புலவர் போற்றும் - தேவர்கள் வாழ்த்துகின்ற, மூவரின் - திரிமூர்த்திகளிலே, ஒருவன் - ஒருவனாவன் (இவன்). என்று புகல்கினும் - என்று கூறினாலும், முடிவுஇலாத (து) - (அக்குரங்கின் பெருமை) சொல்லி முடியாததாகும்; ஐயனே! அ குரங்கை - அநதக் குரங்கின் வலிமையைக்குறித்து, ஏவம் - (காகளகூறிய) இப்படித்தான் (என்பதை), இன்னே - இபபொழுதே, காணுதி - காண்பாய்,' என்றார் - என்று கூறினார்கள்; (எ - று.)

'பெருவலிமைபெற்ற அநதக்குரங்கைச் சுமப்பதனால் இந்தப்பூமியையே புகழவேண்டும்; அநதக்குரங்கின் வலிமையைக் காணுமளவில் திரிமூர்த்திகளில் ஒருவனே இவ்வாறு குரங்கின் வடிவுகொண்டு வந்துள்ளானென்று சொன்னாலும், போதாது; இப்படி அந்தக்குரங்கு பெருவலிமைபடைத்துளளதென்பதை இனி நீ காணபாய்' என்று தமமைப் பரிகசித்துக்கூறிய இராவணனை நோக்கி அந்தப் பருவததேவர் கூறினரென்பதாம். புலவர்போற்றும் - வித்துவான்கள் கொண்டாடுகின்ற எனினுமாம். ஏவம் - இப்படித்தான் என்று பொருள்படும் வடமொழி யிடைச்சொல்: இனி, எவ்வமென்பதன் சிதைவு எனகொணடு, முடிவு இலாத ஏவம் என இயைதது - (இந்தக்குரங்கைத் திருமூர்த்திகளில் ஒருவனென்று சொல்வது) முடிவில்லாத துன்பத்திற்கே காரணம் [பொருததமற்றதாகும] என்று உரைப்பாரு முளர். பி ம்:— [1]மூன்னும் பின்னுந் தன்னுருச சுமக்குந் தன்மை. [2]மூவருமொன்றாய்நின்று.

*புகலினும். *ஏவமாமலைக்குரமைக்காணுதியின்னமென்றார், ஏவமா. மலைக் குஞ்சென்னைக்குரமுகாணின்றுமென்றார். (இக)

௬௦.—அநுமான்அது ஆரவாரம்.

மண்டலங் [1]கிழிந்த வாயின் மறிகடன் மோழை மண்ட
வெண்டிசை சமந்த மாவுந் தேவரு மிரியல் போகத்
தொண்டைவா யரக்கி மார்கள் சூல்வயி றுடைந்து சோர
வண்டமும் பிளந்து விண்ட தாமென வலுமம் ஆர்த்தான்.

(இ - ள்.) மண தலம கிழிந்த வாயில் மறி கடல் மோழை மண்ட - (அதிர்ச்சியினால்) பூமியினது கிழிபட்ட இடத்தின் வழியாக அலைமடங்கி யடிக்கிற கடலின் நீர் மோழையாகப் பாய்ந்து நிறையவும், எண் திசை சமந்த மாவும் தேவரும் இரியல் போக-எட்டுத்திக்குக்களையுந் தாங்குகின்ற திக்கஜங் களும் தேவர்களும (அஞ்சி) நிலைகெட்டோடவும்,—தொண்டை வாய் அரக்கி மார்கள் வயிறு சூல் உடைந்து சோர - கொங்கைக்கனிபோற் கெந்த அத ரத்தையுடைய அரக்கியர்கள் தமது வயிற்றிலுள்ள கருச் சிதைந்து தளரவும், அண்டமும் பிளந்து விண்டது ஆம் என - இந்தவுலகவுருண்டையே வெடித் துப் பிளவுபட்ட தென்னும்படி, அநுமன்—, ஆர்த்தான் - ஆரவாரஞ் செய்தான்; (எ - று)

தான் இருக்குமிடத்தையறிந்து அரக்கர் தன்னோடு பொரவரவேணு மென்ற கருத்தினால் 'இவ்வுலகவுருண்டையே பிளவு பட்டதுலையிய துசையோ!' என்ற கேட்பவர் நினைக்குமபடி அநுமான் பேரரவாரஞ் செய்த தனாற் பூமி கிழிந்து அவ்வாய்வழியாகக் கடல் நீர் மோழைபாய, அஷ்டதிக் கஜங்களும் கலங்கி நிலைகெட, கர்ப்பிணிகளாகிய அரக்கியர் தம் கருச் சிதையப்பெற்றன ரென்க. பி - ம்:—[1]கிழிந்தென்ன, கிழிந்தவாயில். (௬௦)

பொழிலிறுத்தபடலம் முற்றிற்று.

எட்டாவது

கிங்கரர்வதைப்படலம்.

அநுமான் கிங்கரரென்னும் அரக்கரைக் கொன்ற செய்தியைக் கூறும் படல மென்பது, பொருள். 'கிங்கிலியர் வதைப்படலம்' என்று சில பிரதி களிற் காணப்படுகின்றது.

௧.—அநுமான்செய்த ஆரவாரம் இராவணனுடைய காதில் விழுதல்.

அருவரை முழையின் முட்டு மசனியி னிடிப்பு மாழி
வெருவரு முழக்கு மீசன் வில்லிறு மொலியு மென்னக்
குருமணி மகுட கோடி முடித்தலை குலுங்கும் வண்ண
மிருபது செவியி னூடு நுழைந்ததவ வெழுந்த வோசை.

(இ - ள்.) அரு வரை முழையில் முட்டும் - பெரிய மலையின் குகை யிலே போய்த்தாக்குகின்ற, அசனியின் இடிப்பும் - இடியின் முழக்கமும்,

வெருவரு ஆழி முழக்கும் - (பிரளயகாலத்தில்) அச்சமுண்டாம்படி தோன்றுகின்ற கடலினோசையும், ஈசன் வில் இறும் ஒலியும் - சிவபிரானது வில் ஒடிபட்டதனால் தோன்றிய ஓசையும், என்ன - ஒக்குமபடி, குரு மணி மகுடம் கோடி முடி தலை குலுங்கும் வண்ணம் - பருத்த மணிகளழுத்திய (பத்து) கிரீடங்களை வரிசையாக அணிந்த மயிர்முடியையுடைய பத்துத் தலைகளும் அசையும்படி, எழுந்த - (எங்கும்) பரந்தெழுந்த; அ ஓசை - (அநுமானது) அர்த்தக்கர்ஜனையோசை, இருபது செவியினூடும் - (இராவணனது) இருபது காதுகளிலும், நுழைந்தது—;(எ - று.)

இங்கரரென்னும் பெயர்படைத்த எண்பதினாயிரவரான இராக்கதர் பல்வகைப் படைக்கலங்கள்கொண்டு அநுமானைத் தாக்கி யெதிர்த்து நின்றபோது, அநுமான் "மகாபலவானான இராமர் வெல்கிறார், மகா பலவானான இலட்சுமணரும் வெல்கிறார்; இராகவரால் பாதுகாக்கப்பட்டுள்ள சுக்கிரீவ மகாராஜா வெல்கிறார், கோசல தேசத்துக்குத் தலைவராகி எளிதில் தொழில் செய்ய வல்ல இராமருக்கு அடியவன் நான்; அநுமானென்பது என்பெயர்; பகைவர் சேனைகளை அறத்தொலைக்க வல்லேன்; மாருதனது புதல்வன் யான். ஆயிரக் கணக்கான மரங்களையும் கற்களையும் எறிந்து பொருகிற என்னுடனே போரில் ஆயிரமிராவணர்களாலும் எதிர்நிற்க முடியாது; இவ்விலங்காபுரியை உபதிரவித்துச் சீதாபிராட்டியைச் சேவித்து எல்லாவரக்கரும் பாரதத்தைக் கொண்டிருக்கையில் தானே வந்தகாரியம் கைகூடப்பெற்றவனாய் மீண்டு செல்லப் போகின்றேன்" என்று வாலினால் பூமியிற்புடைத்தவண்ணம் பெருஞ்சத்தமுண்டாகும்படி கர்ஜித்தானென்று ஸ்ரீ வால்மீகி பகவான் கூறியுள்ளார்.

அநுமானது கர்ஜனையொலிக்கு - மலைகுகையில்தாக்கும் இடியினோசையும், பிரளயகாலத்திற் பொங்குங் கடலினொலியும், இராமபிரான் முறித்த சிவதனுசினொலியும் உவமையாம். அவ்வொலி இராவணனும் அசசத்தினால் தலைகுலுங்கும்படி இருந்ததென்க. நுழைந்ததவ்வெழுந்தவோசை-பிராசம். (சு)

உ.—அநுமானைப்பற்றிக் கொணருமாறு இராவணன் பலரை யேவுதல்.

புல்லிய முறுவ லோன்றப் பொருமையுஞ் சிறிது பொங்க
வெல்லையி லாற்றன மாக்க ளெண்ணிறந் தாரை யேவி
வல்லையி னகலா வண்ணம் வானையும் வழியை மாற்றிக்
கொல்லலீர் குரங்கை நொய்திற்பற்றுதிர் கொணாதிரென்றான்.

(இ - ள்.) (இராவணன்),—புல்லிய முறுவல் தோன்ற - புன்சிரிப்பு உண்டாகவும், பொருமையும் சிறிது பொங்க - பொருமைகுணம் சிறிது தோன்றவும், எல்லை இல் ஆற்றல் மாக்கள் எண் இறந்தாரை ஏவி - வரம்பற்ற வலிமையையுடைய மிசப்பல வரக்கவீரர்களை ஏவியனுப்பி, 'அகலா வண்ணம் - (அக்குரங்கு) தப்பிப் போகாதபடி, வான் வழியையும் மாற்றி - [illegible] தடுத்துக்கொண்டு, நின்று கொல்லலீர் - கொல்லாத

வர்களாய், குரங்கை—, வல்லையின் - விரைவிலே, கொய்தின் - இலைகளாய், பற்றிக் கொணர்திர் - பிடித்துக்கொண்டுவருவீர்,' என்றான் - என்று கட்டளையிட்டான்; (எ - று.)

குரங்கு என்ற அளட்டியெதாற் பரிகாசச் சிரிப்பும், அரக்கருரிலும் இவ்வாறு பரிபவத்தை விளைத்தமையாற் பொறாமையும் அநுமான் திறத்து இராவணனுக்கு சிகழ்ந்தன. அநுமான் மாதருனிடத்திலின்று இலங்கையின் செய்தியை யறிந்துசெல்லவந்த ஒற்றனாதலான், அவ்வாறு வந்த ஒற்றனைக் கொல்லுதல் முறைமையன்று என்பது பற்றியும், அவன் மூலமாகத் தன் மாதருன் செய்தியை உணரக்கருதியும 'கொல்லலீர் குரங்கை கொய்திற் பற்றிர் கொணர்திர்' என்று கிங்கரர்க்கு இராவணன் கட்டளையிடலாயினன். மாகதன் - கிங்கரர். (௨)

௩.—அநுமானைப் பிடித்துக்கொணருமாறு பலவுக்கரர் புறப்படுதல்.

சூலம்வாண் முசலங் கூர்வே றோமரந் தண்டு பிண்டி.
பாலமே முதலா வுள்ள படைக்கலம் [1]பரித்த கையர்
ஆலமே யனைய மெய்ய ரகளிட மழிவு செய்யுங்
[2]காலமே லெழுந்த மூரிக் கடலெனக் கடிது செல்வார்.

(இ - ள்.) சூலம் - சூலாயுதமும், வாள் - வாளாயுதமும், முசலம் - உலக்கையும், கூர்வேல் - கூரிய வேலாயுதமும், தோமரம் - தோமரமென்னும் ஆயுதமும், தண்டு - தண்டாயுதமும, பிண்டிபாலமே - பிண்டிபாலமும், முதல் ஆ உள்ள - முதலான, படைக்கலம் - ஆயுதங்களை, பரித்த - தாங்கிய, கையர் - கைகளையுடையவர்களும், ஆலமே அனையமெய்யர் - விருக்ஷத்தை யொத்துக் கறுத்த உடம்பையுடையவர்களுமான பல அரக்கர்கள்,—அகன் இடம் அழிவு செய்யும் காலம் - பூமிப்பரப்பு முழுவதையும் அழித்துவிடுதலை யுடைய பிரளயகாலத்தில், மேல எழுந்த - பொங்கியெழும்பின, மூரி கடல் என - வலிய கடல்போல, கடிது செல்வார் - (அந்த அநுமானைப் பிடித்து இராவணனிடம் கொணரும்பொருட்டு) விரைந்து செல்வாராயினர்; (எ-று.)
—பி - ம்:—[1]படைத்தகையர். [2]காலமேயெழுந்த. (௩)

௪.—இதுமுதல் நான்கு கவிகள்-ஒருதொடர்; அவ்வரக்கரின் வருணனை.

நானில மதனி னுண்டு போரென நவிலி னச்சொற்
றேனினுங் களிப்புச் செய்யுஞ் சிந்தையர் தெரிந்து மென்னிற்
கானினும் பெரிய ரோசை கடலினும் பெரியர் கீர்த்தி
வானினும் பெரியர் மேனி மலையினும் பெரியர் மாதோ.

(இ - ள்.) (அவ்வரக்கர்),—நானிலம் அதனின் - இந்நிலவுலகத்தில், போர் உண்டு என நவிலின் - போர் நிகழுமென்று சொன்ன மாத்திரத்தில், அ சொல் தேனினும் களிப்பு செய்யும் சிந்தையர் - அந்தச்சொல் மதுவையுண்டால் தோன்றும் களிப்பைவிட மிக்க களிப்பைச் செய்கின்ற மனதையுடையவர்கள்; தெரிந்தும் என்னின் - (அவர்களின் தன்

மையைத்) தெரிந்து அறிவிப்போமென்றால்,—கானினும் பெரியர் - (நெருக்கம் பரப்பு முதலிய வற்றால்) காட்டைக் காட்டிலும் பெரியவர்; ஓசை கடலினும் பெரியர் - (அவர்கள் செய்யும்) ஆரவாரத்தாற் கடலினும் விஞ்சினவர்; கீர்த்தி வானினும் பெரியர் - (தமது) புகழால் ஆகாயத்தைக்காட்டிலும் பெரியவர்; மேனி மலையினும் பெரியர் - உடம்பின் தோற்றத்தினால் மலையைக்காட்டிலும் பெரியவர்; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசைகள்.

அவ்வரக்கரின் பரப்பு முதலியவற்றிற்கு உலகத்திற் பெரும்பொருள்களாகிய காடுமுதலியனவே உவமையாவதல்லது வேறு உவமைப்பொருள் இல்லை யென்க. 'பெரியர்' என்ற சொல் பலமுறைவந்தது - கோர்ப்பொருட் பின்வருநிலையணி. (ச)

௫. திருகுறுஞ் சினக்குத் தேவர் தானவ ரென்னுந் தெவ்வ,
ரிருகுறும் பெறிந்து நின்ற விசையினர் வசையென் [1]றெண்ணிப்,
பொரு [2]குறும் பொன்று வென்று புணர்வது [3]பூவுண் வாழ்க்கை,
யொருகுறுங் குரங்கென் றெண்ணி நெடிதுநா ணுழக்கு நெஞ்சா.

(இ - ள்.) (அன்றியும்),—திருகுறும் சினத்து - மாறுபாடு கொண்ட கோபத்தையுடைய, தேவர் - தேவர்களும், தானவர் - அசுரர்களும், என்னும் - என்று கூறப்படுகின்ற, தெவ்வர் இரு குறும்பு - பகைவராகிய இரு வகைக் குறும்புகளையும், எறிந்து நின்ற - ஒழித்துள்ள, இசையினர் - கீர்த்தியையுடையவர்; 'பொரு குறும்பு ஒன்று வசை என்று எண்ணி-(தம்மோடு) பொருகின்ற ஒரு சிறுபகை (யிருப்பதும்) பழிப்பென்று நினைத்து, வென்று புணர்வது - (அதனைப்போக்கி) வெல்லுமாறு நேர்ந்திருப்பது, பூஉண் வாழ்க்கை ஒரு குறு குரங்கு - பூமுதலியவற்றையுண்டு வாழ்தலையுடைய [சாகபட்சியான] அற்பமாகிய ஒரு குரங்காகும்,' என்று எண்ணி - என்று நினைத்து, நெடிது நாண் உழக்கும் - மிகவும் வெட்கத்தால் வருந்துகின்ற, நெஞ்சர் - மனத்தையுடையவர்; (எ - று.)

தேவர் அசுரர் என்ற இவர்களையே அறபப்பகையாக எண்ணி எளிதில் வென்ற அவ்வரக்கர்க்கு, இப்போது ஒரு அற்பகுரங்குடன் பொரும்படி நேர்ந்ததே யென்று நினைக்க நாணம் மிகுதியாகத் தோன்றுமென்க. குறும்பு - சிறுபகை. பூ - இலை முதலிய சாகபதார்த்தங்கட்கு உபலட்சணம். மாமிசத்தை மிகுதியாகவுண்ணுதலால் 'பிசிதாசனா' என்று பெயரபடைத்த அரக்கர்கட்கு ஏறற பகையன்று என்பதை விளக்க, 'பூவுண்வாழ்க்கைக் குரங்கு' எனப்பட்டது. பி - ம்.—[1]எண்ணப. [2]பொருகுறும்பென்றுவொன்று. [3]பூவின். (௫)

௬. கட்டிய வாள ரிட்ட கவசத்தர் கழலர் திக்கைத
தட்டிய தோளர் மேகந் தடவிய [1]கையர் வானை
யெட்டிய முடியர் [2]தாளா லிடறிய பொருப்ப ரீட்டிக்
கொட்டிய பேரி யென்ன மழையெனக் குமுறுஞ் சொல்லார்.

(இ - ள்.) கட்டிய வாளர் - (அரையிற்) கட்டிய வாளாயுதத்தை யுடையவர்கள்; இட்ட கவசத்தர் - (உடம்பிலே) தரித்த கவசமுடைய

வர்கள்; (இட்ட) கழலர் - (காலிற்) பூண்ட வீரக்கழலையுடையவர்கள்; திகை தட்டிய தோளர் - திசைகளினெல்லையை முட்டிய தோள்களையுடையவர்கள்; மேரும் தடவிய கையர் - மேருத்தைப் பரிசிக்கவல்ல கைகளையுடையவர்கள்; வானை எட்டிய முடியர் - ஆகாயத்தின் மேலெல்லையை முட்டுகின்ற தலையையுடையவர்கள்; தானான் இடறிய பொருப்பர் - கால்களால் இடறிய மலைகளையுடையவர்கள் [மலைகளைக் கால்களால் இடறித்தள்ளக்கூடியவர்கள்]; ஈட்டி கொட்டிய பேரி என்ன மழை என குமுறும் சொல்லர் - ஒருங்கே சேர்ந்து முழக்கப்பட்ட பேரிகைபோலவும் மேகத்தின் இடிபோலவும் முழங்குகின்ற சொற்களையுடையவர்கள்; (எ - று.)—பி - ம்:—[1]உடலர். [2]தாளின். [3]நீட்டிக. (௧)

எ வானவ ரெறிந்த தெய்வ [1]வடுபடை வடுககண் மற்றைத்
தானவர் துரந்த வேதித் தழும்பொடு தயங்குந் தோளர்
யானையும் பிடியும் வாரி யிடுங [2]கய வாய [3]ரின்ற [கண்ணர்.
[3]கூனவெண் பிறையிற் றோன்று மெயிற்றினர் கொதிக்குங்

(இ - ள்.) வானவர் எறிந்த தெய்வம் அடு படை வடுக்கள் - தேவர்கள் பிரயோகித்த தெய்வதத்தன்மையுள்ள கொல்லவல்ல ஆயுதங்களாலுண்டான தழும்புகளும், மற்றை தானவர் துரந்த ஏதி தழும்பொடு - (அதற்கெதிரிலும்) வேறான அசுரர்கள் பிரயோகித்த ஆயுதங்களின் தழும்புகளும், தயங்கும் - விளங்குகிற, தோளர் - தோள்களையுடையவர்கள்; யானையும் பிடியும் வாரி இடும் கய வாயர் - ஆண்யானைகளையும் பெண்யானைகளையும் வாரியுண்ணுகின்ற பெரிய வாயையுடையவர்கள்; ஈன்ற கூன வெண் பிறையின் தோன்றும் எயிற்றினர் - புதிதாகத் தோன்றிய [இளைய] வளைவுள்ள வெண்மையான பிறைச்சந்திரன்போற காணப்படுகின்ற பற்களையுடையவர்கள்; கொதிக்கும் கண்ணர் - கோபம் பொங்குகின்ற கண்களையுடையவர்கள்; (எ - று)

கூன - குறிப்புப் பெயரெச்சம். பி - ம்:—[1]படையிடு. [2]பிலவாயர. [3]கூனல். (எ)

அ.—இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்; அரக்கவீரர் படைக்கலங் கொண்டு போர்க்கெய்யச் செல்லுதல்.

சக்கர [1]முலக்கை தண்டு தாரைவாள் [2]பரிகஞ் சங்கு
முறகர முசுண்டி [4]பிண்டி பாலம்வேல் சூல முட்கோல்
பொற்கரக் குலிசம் பாசம புகர்பழு [5]வெழுபொற் குந்தம்
விற்கருங் கணைவிட் டேறு கழுக்கடை யெழுக்கண் மின்ன.

(இ - ள்.) சக்கரம் - சக்கராயுதங்களும், உலக்கை - உலக்கைகளும், தண்டு - கதாயுதங்களும், தாரை வாள் - கூர் நுனியையுடைய வாளாயுதங்களும், பரிசம் - இருப்புவளைதடிகளும், சங்கு - சங்கங்களும், முற்கரம் - சமமட்டிகளும், முசுண்டி - முசுண்டியென்னும் ஆயுதங்களும், பிண்டிபாலம் - எறியீட்டிகளும், வேல் - வேல்களும், சூலம் - சூலங்களும், முள்கோல் - முட்கோல்களும், பொன் கரம் குலிசம் - அழகிய

ஒளிவீசுகின்ற வச்சிராயுதங்களும், பாசம் - கயிற்றின் வடிவமான ஆயுதங்களும், புகர் மழு - ஒளியுள்ள மழுக்களும், எழு பொன் குந்தம் - மேலெழுந்து தோன்றுகின்ற அழகிய ஈட்டிகளும், வில் - விற்களும், கருங் கணை - பெரிய அம்புகளும், விட்டேறு - வீசி யெறிதற்குரிய விட்டேறென்னும் ஆயுதங்களும், கழு கடை எழுக்கள் - கூர்நுனியையுடைய இருப்புத்தடிகளும், மின்ன - பிரகாசிக்க; (எ - று.)—'முடுகுகின்றார்' என அடுத்த கவியோடு தொடரும். பி - ம்:—[1]முகலம். [2]பேரி. [3]பாலம்வேன்மழுச் [4]எழுக்கோல். (அ)

கூ. பொன்னின்று களுலுந் தெய்வப் பூணினர் [1]பொருப்புத்தோளர்
மின்னின்ற படையுங் கண்ணும் வெயிலவிரிக் கின்ற மெய்ய
ரெனனென்றார்க்கென் [2]னென்னென்று ரெய்திய தறிந்திலாதார்
முனனின்றா முதுகு தீயப பின்னின்றார் [3]முடுகு கின்றார்.

(இ - ள்.) பொன் நின்று களுலும் தெய்வம் பூணினா - பொன்னானது நிறைந்து விளங்குகின்ற தெய்வதன்மையுள்ள ஆபரணங்களைப் பூண்டவர்களும், மின் நின்ற படையும கணணும வெயில் விரிகின்ற மெய்யர் - ஒளி பொருந்திய ஆயுதங்களும் (கோபாக்கினியைக்கொண்ட) கண்களும் வெயில் போலும் காந்தியை வீசப்பெற்ற உடம்புடையவர்களும், பொருப்பு தோளர் - மலைபோலப் பருத்தோளையுடைய தோள்களையுடைவர்களுமான அவ்வரக்கவீரர்களுள், பின் நின்றார் - பின்னே நின்ற அரக்கவீரர்கள்,—என் என்றார்க்கு என் என்றார் - 'என் நெட்டித்தள்ளுகின்றீர்கள்?' என்றுகேட்கும் முன்னிற்பவர்களுக்கு ('நீங்கள் போகாமல் நிற்பது) ஏன் ஏன்?' என்று மறுமாற்றஞ்சொல்பவர்களாய், எய்தியது அறிந்திலாதார் - முன்னே செல்ல இடமில்லாமையால் அவர்கள் அவ்வாறு போகாமல் நிற்பதை யறிந்துகொள்ளாதவர்களாய், முன் நின்றார் முதுகு தீய - (தமக்கு) முன்னே நிற்கின்றவர்களின முதுகின்புறம் (தமதுகோபாக்கினியினால்) தீந்துபோம்படி, முடுகுகின்றார் - விரைபவராஞாகள்; (எ - று.)

அநுமானைப் பிடித்துக்கொணரும்படி இராவணன் கட்டளையாற் செல்லுகின்ற அரக்கவீரர்கள் மிகக பெருந்திரளாக இருந்ததனால், தமக்கு முன்னேயிருப்பவர்கள் செல்ல இடங்கிடையாமையால் தடைப்பட்டுநிற்க, அதனையுணராமற் பின்னேயிருப்பவாகள, நெட்டித்தள்ள 'என்தள்ளுகின்றீர்கள்?' என்று முன்னே நிற்பவரை கேட்க, அவாகளை நோக்கி 'நீகள ஏன் செல்லாது நிற்கின்றீர்கள்? செல்லாது நிற்கின்றீர்கள்' என்று மறுமொழி சொல்லிக்கொண்டே, தமது கணகளின் கோபாக்கினி அவாகள் முதுகிலே பொறுக்க விரையலாஞர்க ளென்பதாம். பி - ம்:—[1]பொருவிற்றோளர். [2]என்கின்றா. [3]மூர்ச்சிக்கின்றார். (கூ)

கரு.—பின்னும் அவ்வரக்கரின் வருணனை.

வெய்துறு படையின் மின்னர் வில்லினர் வீசு காலர்
மையுறு விசும்பிற் றோன்று மேனியர் [1]மடிக்கும் வாயர்

கைபரந் துலகு பொங்கிக் கடையுக முடியுங் [2]காலைப்
பெய்யவென் றெழுந்த மாரிக் குவமைசால்பெருமைபெற்றார்.

(இ - ள்.) மடிக்கும் வாயர் - (கோபத்தால்) மடிக்கின்ற உதட்டை யுடையவர்களாகிய அரக்கவீரர்கள்,—பெய்து உறு படையின் மின்னர் - கொடுமை மிகுந்த ஆயுதங்களாலான மின்னலையுடையவர்களும், வில்லினர் - வில்லையுடையவர்களும், வீசு காலர் - வீசுகின்ற மூச்சுக்காற்றை யுடையவர்களும் [பெருமூச் செறிபவர்களும்.] மை உறு விசும்பின் தோன்றும் மேனியர் - கருநிறம் பொருந்திய வானத்திற் காணப்படுகின்ற உடம்பையுடையவர்களுமாய்,—கைபரந்து - எங்கும் பரவி, உலகு பொங்கி - உலகு முழுவதும் (சமுத்திரம்) பெருக்கெடுத்து, கடையும் முடியும் காலை-யுகாந்தகாலம் வந்து முடியும்போது, பெய்ய 'என்று எழுந்த - பெருமழை பொழியுமாறு கிளம்பின, மாரிக்கு - மேகத்துக்கு, உவமை சால பெருமை பெற்றார் - உவமையாதற்கு ஏற்ற பெருமையைப் பெற்றார்கள்; (எ - று.)

அவ்வரக்கவீரர்கள் யுகாந்தகாலத்தில் வானத்துத் தோன்றுகின்ற மேகக்கூட்டத்தை யொத்தன ரென்பதாம். மின்னல் இந்திரதனுசு பெருங்காற்று கருநிறவுடம்புடன் ஆகாயத்துத்தோன்றுதல் முதலிய தன்மைகளால் மேகம் அரக்கர்க்கு உவமையாகக் ஏற்கும். விசும்பின் தோன்றும் - விசும்பு போலத் தோன்றுகின்ற என்றுமாம். பி - ம்:—[1]இடிக்கும். [2]காலை. (௧௦)

கக.—அநுமானால் நேர்ந்த அவமானத்தை நினைந்து, அரக்கவீரர் அவன்மீது விரைந்து செல்லுதல்.

பனியுறு [1]சோலை சிந்தி வேரமும் பறித்த தம்மா
தனியொரு குரங்கு போலா நன்றுநந் தருக்கென் றின்று
[2]யொரு பழிமற் றுண்டோ [3]விதனினென் றிரைத்துப்
முனிவுறு மனத்திற் [4]றாவி முந்துற முடுகு கின்றார். [பொங்கி

(இ - ள்.) 'பனி உறு சோலை சிந்தி - குளிர்ச்சிபொருந்திய (அசோக) வனத்தை யழித்து, வேரமும் பறித்தது - ஓமமண்டபத்தையும் அடியோடு பெயர்த்து அழித்தது, தனி ஒரு குரங்கு போல் ஆம் - தனியாய் வந்த ஒரு குரங்காகும்; அமமா - ஆச்சரியம்! நம் தருக்கு - நமது வீரச்செருக்கு, என்று-நன்றாயிருந்தது!' என்கின்றார் - என்று கருதுகின்றவர்களாய்,—(அவ்வரக்கவீரர்கள்), 'இதனின் - (இப்பொழுது ஒரு குரங்கினால் நேர்ந்த) இதனைக் காட்டிலும் (மிக்க), மற்று ஒரு பழி - வேறொரு அவமானம், இனி - இன்னும், உண்டோ - (நமக்கு) உள்ளதோ? [இதுவே மிக்க பேரவமானம் தருவதாகு மென்றபடி], என்று—,' இரைத்து - கர்ஜித்து, பொங்கி - கொதித்து, முனிவுறு மனத்தின் - சினங்கொண்ட மனத்தோடு, தாவி முந்துற முடுகுகின்றார் - தாவி (ஒருவரையொருவர்) முற்பட விரைந்து செலபவராயினார்கள்; (எ - று.)

ஒருபோதும் அவமானப்படாத அரக்கவீரர் புதிதாக அநுமானால் தமக்கு நேர்ந்த அவமானத்தை நினைந்து ரோஷங்கொண்டவர்களாய்,

அவ்வகுமானம் தம்மைத் துணட, ஒருவரினொருவர் முற்படலானார்களெனப நாம். மனத்தின் தாவி - மனோவேகததுடன் சென்று என்று உரைப்பினு மாம். குரனருபோலாம், போல் - ஒப்பில்போலி. பி - ம்:—[1]செயலை. [2]உறு. இதிலெனவெரிந்து. [1]தாமே. (கக)

கஉ.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்; அவ்வரக்கர் பேராரவாரத் தோடு அநுமா ரமிது போர்செய்யச் செல்வதைத் தெரிவிக்கும்.

எற்றுறு முரசும் விள்[1]ளு ணேறவிட் டெடுத்த வார்ப்புஞ்
சுற்றுறு சுழலுஞ் சங்குந் [2]தெழிதெழித் துரப்பபுஞ் சொல்லு
[3]முற்றுடன் றொன்று யோங்கி யொலித்தெழுந் தூழிப் பேர்வி
னற்றிரைக் கடல்க ளோடு மழைகளை நாவ டக்க.

(இ - ள்.) எற்றுறு முரசும் - எறிகின்ற முரசதனினோசையும், வில் நாண் ஏற விட்டு எடுத்த ஆர்ப்பும் - வில்லிலே நாணை யேற்றிப் பூட்டி (அதனைத் தட்டி) யெழுப்பிய ஆரவாரமும், சுற்றுறு கழலும் - (காலிற்) சுற்றிக்கட்டிய வீரக்கழலினின்று தோன்றிய ஓசையும், சங்கும்-(முழகுகின்ற) சங்கத்தின் நாதமும், தெழிதெழித்து உரப்பும சொல்லும் - ஆரவாரிதது அதட்டிக்கூறுகின்ற சொறகளில் தோன்றிய ஓசையும், (ஆகிய இவ்வொலிக ளெல்லாம்), உடன்று ஒன்று ஆய் உற்று ஓங்கி ஒலித்து எழுந்து - மாறுபட்டுப் பின்பு ஒன்றாகச்சேர்ந்து மிகப்பேரொலியாகிக் கிளம்பி, ஊழி போலில் - யுகாந்தகாலததில, நல் திரை கடல்களோடு - பெரிய அலைகளையுடைய சமுத்திரகோஷத்தையும், மழைகளை - மழைகளினிடிமுழக்கங்களையும், நா அடக்க - ஒலியடங்கும்படிசெய்ய;—(எ - று.)—'செல்கின்றாரும்' என அடுத்த கவியோடு தொடரும்.

அவ்வரக்கர் பொரஎழுந்துசென்றபோது பல்வகையொலிகள் தோன்றியமை இந்தச்செய்யுளில் விளக்கப்பட்டதென்க. முரசு முதலியவை - அவற்றினின்று எழும் ஒலிகளு முதலாகுபெயர்கள். பி-ம்:—[1]நாணேறும். [2]தெழித் தெழித்துரைக்கும். [3]உற்றுடனொன்றாய். [4]அலைகளை. (கஉ)

கங. தெருவிட மில்லென் றெண்ணி வானிடைச் செல்கின் றாரும்
புருவமுஞ் சிலையுங் கோட்டிப் புகையுயிரத் துயிர்க்கின் றாரு
மொருவரி னொருவர் முந்தி [1]முறைமறுத் துருக்கின் றாரும்
விரிவில திலங்கை யென்று வழி [2]பெறார் விளிக்கின் றாரும.

(இ - ள்.) தெரு இடம் இல் என்று எணணி - தெருவிலே (நடந்து செல்வதற்கு) இடம போதாது என்று நினைத்து, வானிடை செல்கின்றாரும் - ஆகாயத்தினிடத்திலுஞ் செல்லுகின்றவாகளும், புருவமும் சிலையும் கோட்டி புகை உயிரது உயிர்க்கின்றாரும் - (தமது) புருவங்களையும் கையிற்கொண்ட வில்லையும ஒருசேரவளைத்து வைத்தவணணம (கோபாக்கினியாற்) புகையை வெளிப்படுததிக்கொண்டு பெருமூச்சு விடுகின்றவாகளும், ஒருவரின் ஒருவா முந்தி முறை மறுத்து உருக்கின்றாரும் - (வரிசையாகச்செல்பவரில்) ஒருவரினும் ஒருவர்

முற்பட்டு முறைதவறியதனால் (முறைதவறியவர்மீது) கோபங்கொள்ளுகின்றவர்களும், வழிபெறார் இவரைக் விரிவு இலது என்று விளங்கின்றாரும் - இவரைவாயிரி (இவ்வீரர்கள்செல்லுதற்கு ஏற்ற) பரப்புடையதன்று என்று (தாராளமாகச்செல்லுவதற்கு) வழிவிடுக்கப் பெறாதவர்களாய்க் கத்துகின்றவர்களும்; (எ - று.)

முறைமறத்து - உறவுமுறை பாராட்டாமல் என்றது மொன்ற. பி - ம்:—[1]உரைமறத்துரைகின்றாரும். [2]பெறு. (கரு)

கச. [1]வாளுறை விதிர்க்கின் றாரும் வாயினை மடிக்கின் றாரும்
தோளுறத் தட்டிக் கல்லைத் துகள்படத் துகைக்கின் றாரும்
தாள்பெயர்த் திடம்பெ றாது தருக்கினார் செருக்கு வாரும்
கோள்வளை யெயிறு கின்று தீயெனக் கொதிக்கின் றாரும்.

(இ - ள்.) வாள் உறை விதிர்க்கின்றாரும் - வாள்களை உறைகளிலிருந்து எடுத்து அசைப்பவர்களும், வாயினை மடிக்கின்றாரும் - உதடுகளைத் (தமது கோபத்தோன்ற) மடிக்கின்றவர்களும், தோள் உற தட்டி கல்லை துகள்பட துகைக்கின்றாரும் - (தமது வீரத்தோன்ற தோள்களை உரப்பாகத் தட்டிப் பெருகைக்கல்லையும் துகளாம்படி துகைத்துவிடுபவர்களும், தாள் பெயர்த்த இடம் பெறாது தருக்கினார் செருக்குவாரும் - தாள்களைத்தூக்கி (ப் பிறகு அதனை வைத்தாகு) இடங்கிடைக்காமற் செருக்குக்கொண்டு செருக்குகின்றவர்களும், கோள்வளை எயிறு கின்று தீ என கொதிக்கின்றாரும் - பலமுள்ள வளைவான பற்களைக் கடித்து நெருப்புப்போலக் கொதிக்கின்றவர்களுமாகிய,— (எ - று) 'அனைவரும்' என்று முடிக்க. பி - ம்:— [1]வாளினை. [2](கச)

வேறு.

கரு. அனைவரு மலையென நின்றா ரளவறு படைகள் பயின்றா
ரனைவரு மமரி னுயர்ந்தா ரகலிட நெளியநடந்தா
ரனைவரும் வரனின மைந்தா ரசனியி னணிகள் ணிந்தா
ரனைவரு மமரரை வென்றா ரசுரரை [1]யுயிரை யயின்றார்.

(இ - ள்.) அனைவரும் - யாவரும், மலை என நின்றார் - மலைபோல எதற்குஞ் சலியாது நிற்பவர்; அளவு அறு படைகள் பயின்றார் - மிகப்பல ஆயுதங்களைப் பழகினவர்கள்; அனைவரும்— அமரின், உயர்ந்தார் - போர் செய்வதிற் சிறந்தவர்கள்; அனைவரும்—, வரனின் அமைந்தார் - வரபலம் பொருந்தப்பெற்றவர்கள்; அசனியின் அணிகள் ணிந்தார் - வச்சிராயுதம் போலப் பேரொளிவீசுகின்ற ஆபரணங்களைப் பூண்டவர்கள்; அமரரை வென்றார் - தேவர்களை வென்றவர்களும், அசுரரை உயிரை அயின்றார் - அசுரரது உயிரைக் கொன்றுதின்றவர்களுமாகிய, அனைவரும் - அவ்வரக்கவீரர்களாவரும், அகலிடம் நெளிய நடந்தார் - (பாரமிகுதியால்) இந்தப்பூமி நெளியும்படி (அதுமானுள்ள விடம்நோக்கி) நடந்தார்கள்; (எ - று.)

அரக்கவீரரில் ஒவ்வொருத்தர்க்கும மலையெனநிற்றல் முதலிய தன்மைகள் நிரமபியிருந்தன வென்பதை வற்புறுததுமபொருட்டு, 'அனைவரும்' என்பதைப் பன்முறை கூறினர். அசனி வசசிராயுததத்துக்குப் பெயராதலை "அசனி வச்சிரப்படையாகும்மே" என்ற பிங்கலந்தையாலும் அறிக. அசுரரை உயிரை அயின்றார் - இரணடுசெயயபடுபொருள் வந்த செய்வினை; இவ்வாறு வருவது 'தவிகாமகர்ததரிபரயோகம்' என்று வடமொழியிற் பெயர்பெறும். பி - ம்.—[1]வேரொடுதின்றார். (கரு)

கசு.—இதுவும், அடுத்த கவியும்-அவ்வரக்கவீரரின் வலிமையைத்தெரிவிக்கும்.

[1]குறுகின தவமுய லப்பொற் குரைகழ லுரகரும் வன்போர்
முறுகின கொழுதி னுடைந்தார் *முதுகிடை முறுவல்பயின்றா
ரிறுகின நிதிநிழ வன்பே ரிசைகெட வளகை யெறிந்தார்
தெறுகுர *ரின்மையின் வன்றோ டினவுற வுலகு திரிந்தார்.

(இ - ள்.) குறுகின தவம் முயல் - (இவ்வரக்கரோடுபொருது வெல்வதற்கு ஏற்றவாறு மிகக பெருந்தவததைசசெய்யாது) அற்பமான தவத்தைச் செய்த, அம்பொன் குரை கழல் உரகரும் - அழகிய பொன்னாலசெய்த ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த நாகசாதியாரும், வல் போர்முறுகின பொழுதின் உடைந்தார் - (இவ்வரக்கரோடு) வலிய யுத்தம் மும்முரமாக நடந்த பொழுதில் (இவ்வரக்கரிடத்தத) தோறறவாகளாய், (முதுகுகாட்டி ஓடும பொழுது), முதுகு இடை முறுவல் பயின்றார் - (அவர்கள்) முதுகுகாட்டு தலைக் கண்டு பரிகாசமாகச் சிரித்தவர்கள்; இறுகின நிதி நிழவன் போ இசைகெட - மிகுந்த செல்வநகட்குத தலைவனான குபேரனது பெருவகீரததியும் அழியும்படி, அளகை எரிந்தார் - (அவனது) அளகாபபட்டணத்தையும் (தமது படைக்கலங்கொணடு) மோதினவாகள, தெறுகுர இன்மையின் - (தமமோடு) மாறுபட்டுப் பொருபவரைப் பெறாமையால், வல் தோள் தினவுஉற - (தமது) வலியதோள்கள் தினவுணடாக, உலகு திரிந்தார் - உலகததில் (தம்மோடு பொருமாற எவரேனும கிடைப்பாரோ? என்று தேடிக்கொண்டு) திரியுந் தன்மையுள்ளவர்கள், (அவ்வரககாகள்); (எ - று.)

உரகர் - தேவசாதியுள் ஒருவகையார. அரக்கரை எதிரதது வெல்லும் நல்வினை செய்யாதவராய் இவரிடத்துத் தோற்று முதுகுகொடுத்த தன நாதலின், அவ்வாறான உரகரை 'குறுகினதவமுயல் ..உரகா' என்றார். உரகரும், உம் - உயர்வுசிறப்பு. அவ்வுரகவீரா தமமோடு எதிர்த்துப்பொருது முன்னிறகமாட்டாது அஞ்சி முதுகு கொடுத்துஓட, அப்போது அவர்கள் அஞ்சியோடுவது கணடு 'என்னே இவாகள் வலிமை!!' என்று அவ்வுரகரைகுறிகது எள்ளலநகைதோன்றச சிரிககலாயினர இவ்வரக்கவீர ரெனபது, முன்னிரணடடிகளிற கூறிய பொருள். [1]'குறுகினதவசரும் மின்போற்குரைகழலுரகரும்' என்று பாடங்கொண்டு - குறைதலான சட்டையிட்டிருக்கிற சிததரும் மின்போலொளிவிட்டுச சத்திகிற வீரக்கழலையணிந்த உரகசாதியாரும் என்று பொருளுரைத்து,

அவ்விருவரையும் முதுகுகொடுத்து ஓடுமாறு பெரு வீரவாட்டினவர் அரக்க வீரர் எனக் கருதத்கூறுவாருமுளர். பி-ம்:—"முதுகினில்." இன்னமையர்.

௧௧. வரைகளை யிடறுமி னென்றான் மறிகடல் பருகுமி னென்று
விரவியை விழவிடு மென்று லெழுமழை பிழியுமி னென்று
ரவியினை தரையினை யொன்றே தரையினொ டரையுமி னென்றுந்
தரையினை யெடுமெடு மென்றா லொருவர தமைதல் சமைந்தார்.

(இ - ள்.) (அன்றியும்), வரைகளை இடறுமின் என்றால் - மலைகளை விடறித தள்ளுவதாகென்றாலும், மறி கடல் பருகுமின் என்றால் - (அலை) மடங்குகின்ற கடல்நீரைக் குடித்துவிடுக வென்றாலும், இரவியை விழ விடும் என்றால் - (வானத்திற சஞ்சரிகின்ற) சூரியனைக் கீழே விழும்படி தள்ளிவிடுக வென்றாலும், எழு மழை பிழியுமின் என்றால் - (வானத்திற்) செல்லுகின்ற மேகங்களைப் பிழிந்துவிடுக வென்றாலும், அரவினது அரசனை தரையினொடு அரையுமின் என்றால் - சர்ப்பராசனான ஆதிசேஷனைத் தரையோடு தரையாக அரைத்துவிடுக வென்றாலும், தரையினை எடும் எடும் என்றால் - இந்தப் பூமியைப்பெயாதெடுத்து விடுங்க வென்று சொன்னாலும், ஒருவர் அது அமைதல் சமைந்தார் - (இவ்வரக்கவீரர்களுள்) ஒருத்தரே அவ்வத்தொழிலைச் செய்துமுடித்தற்குத் தக்கவர்; ஒன்றோ (இவர்வல்லமை) இவ்வளவு மாத்திரமேயோ? (எ - று.)

இவர்கள் வல்லமை இவ்வளவோடு அடங்கா தென்றபடி, எழுமழை - ஸப்தமேகமுமாம். அரவினை யரசினை யொன்றே என்றே எடுத்து - அரவினுக்கு அரசனாகிய ஆதிசேஷனை மாத்திரமோ? (அவன்போன்ற) அஷ்டமகாநாகங்களையும், தரையோடு அரையுமின் என்றாலும் அதையும் செய்யவல்லவர் என்னலுமாம். வரைகளை யிடறுமின் என்றால், ஒருவர் அது அமைதல் சமைந்தார்எனது தனித்தனி முடியும்; அதுபற்றியே, "அது" என்று ஒருமையாற் கூறினது. (௧௦)

கஅ.—அரக்கவீரர் அநுமானைநோக்கி வருதல்.

துளியி னிமிர்பட லம்போ யிமையவர் விழிதுற வெம்போர்
[1]மீளியி னினமென வன்றாள் [2]விரைபுலி நிரையென விண்டே
[3]யாளியி னணியென வன்றே [4]லலைகடல் விடமென வஞ்சா
வாளினின்விசைகொடுதிண்கார்வரைவரு வனவென வந்தார்.

(இ - ள்.) நிமிர் துளியின் படலம் போய் இமையவர்விழி துற - (அரக்கவீரா விரைந்துசெல்வதால்) மேலேகிளம்புகிற புழுதியின் தொகுதி விபாபித்து மேலுலகிலுள்ள தேவர்களது கண்விழிகளைத் தூாததுவிட,—வெம் போர்மீளியின் இனம் என - கொடிய போர்செய்தற்கு உரிய வலிமைத்தொகுதியே உருவெடுத்துவந்தாற்போலவும், வன்தாள் விரை புலி நிரை என - வலிமையுள்ள கால்களால் விரைந்து செல்லுகின்ற புலிகூட்டங்கள் போலவும், விண்தோய் ஆளியின் அணி

என - ஆகாயத்திற் பாய்ந்து செல்லுகின்ற சிங்கங்களின் வரிசை போலவும், அன்று எல் - (இவைகள்) அல்லாவிட்டால், அலைகடல் விடம் என - அலை கின்ற பாற்கடலினின்று தோன்றிய விஷம்போலவும், அஞ்சா - சிறிதும் அச்சமென்பதைக் கொள்ளாமல், வாளியின் விசைகொடு - பாணத்தின் வேகத்தைக்கொண்டு, திண் கார் வரை வருவன என - வலியமேகங்கள் மலையை நோக்கி வருவனபோல, வந்தார் - (அநுமானைநோக்கி அவ்வரக்கவீரர்) வந்தார்கள்; (எ - று.)

விழிதுற வந்தார் என இயையும். திண்கார்வரையென்று எடுத்து-வலிய கரியமலைகள் நடந்துவருவனபோல என்று உரைப்பதும் உண்டு. பி - ம்:— [1]ஆளியின். [2]அரி. [3]மீளியின். [4]விரி. (கஅ)

கக.—அரக்கவீரர் அநுமானுள்ள பொழிலைச் சூழ்தல்.

பொறிதர விழியுயி ரொன்றோ புகையுக வயிலொளி மின்போற்
செறிதர வுருமதிர் கின்றார் [1]திசைதொறும் விசைகொடு சென்றா
றெறிதரு கடையுக வன்கா லிடறிட [2]வுருமினினம்போய்
மறிதர மழையகல் விண்போல் [3]வடிவழி பொழிலை வளைந்தார்.

(இ - ள்.) விழி - (தமது) கணகளினின்று, பொறி தர - நெருப்புப் பொறி பறக்கவும், உயிர் ஒன்றோ - மூச்சுக்காற்று மாத்திரமோ? (அதனோடு), புகை - புகையும், உக - வெளிப்படவும், அயில் ஒளி மின் போல் செறிதர - வேலாயுதங்கள் ஒளியையுடைய மின்னலைப்போல நெருங்கி வரவும், உரும் அதிர்கின்றார் - இடிபோலக் கர்ஜிக்கின்றவர்களும், திசைதொறும் விசை கொடு சென்றார் - திக்குக்களிலெல்லாம் வேகமாகச் சென்றவர்களுமாகிய அவ்வரக்கவீரர்கள்,—கடை யுகம் எறிதரு வல் கால் இடறிட - (தாம் செல்லுகின்ற வேகத்தாலே) யுகாந்தகாலத்தில் வீசுகின்ற கொடிய பெருங்காற்று (த்தோன்றி) வீசியடிக்கவும்,—உருமின் இனம் போய் மறிதர - இடிகளின் கூட்டம் (இவர்கள் செய்யும் ஆரவாரத்துக்கு முன்னே தலையெடுக்காமல்) தலைமடங்கவும்,—மழை அகல் விண்போல் - மேகசஞ்சாரமற்ற ஆகாசம் போல, வடிவு அழிபொழிலை-தன்னுருவம் அழிந்துகிடந்த அசோகவனத்தை, வளைந்தார் - சூழ்ந்துகொண்டார்கள்; (எ - று.)

அநுமானால் மரங்கள் பலவும் அழிந்து வெற்றிடமான அசோகவனத்துக்கு, மழை நீங்கிய ஆகாயம் உவமை. பொறிதர உக செறிதர இடறிடமறிதர வளைந்தார் என இயையும். பி - ம்:—[1]திசைதொறு திசைதொறு. [2]உடுவின். [3]அட. (கக)

௨0.—அநுமான் அரக்கவீரர் வருவதைக் காணுதல்.

வயிரொலி வளையொலி வன்கார் மழையொலி முரசொலி மண்பா
[1]லுயிருலை வுறகிமி ரும்போ ருறுமொலி செவியினுணர்ந்தான்
[2]வெயில்விரி கதிரவ னும்போய் வெருவிட வெளியிடை விண்டோய்
[3]மலையென நின்று வளையவர் வருதொழில் கண்டான்.

(இ - ள்.) வெயில் விரி கதிரவனும் போய் வெருவிட [வெருவிப்போய் விட] வெயிலை வீசுகின்ற குரியனும் அஞ்சிவிலகிப்போயவிட, வெளியிடை-நிறைந்த வெளியான இடத்தில், விண தோய் கயிலையின் மலை என - ஆகாயத்தை யளாவிய கைலாச மலைபோல, நின்றான்-நின்றவனாகிய அநுமான்,—வயிர ஒலி - ஊதுகொம்பினோசையும், வலை ஒலி - சங்கினோசையும், வல்லார் மழை ஒலி முரச ஒலி - வலிய கார்காலத்து மேகமுழக்கம் போன்ற பேரிகையினோசையுமாகிய, மணபால் உயிர் உலைவு உற மிமிரும் பேர் உறும் ஒலி - தமையினிடத்துள்ள பிராணிகள் யாவும் மயங்கும்படி மிக்குத் தோன்றுகின்ற போர்செய்வதைக் குறிப்பிக்கின்ற ஓசையினை, செவியின் உணர்ந்தான் - காதினால் கேட்டு (அரக்கவீரர் தன்மீது வருவதை) அறிந்தவனாய், (பின்பு), அனையவர் வருதொழில் கண்டான் - அவ்வரக்கவீரர் வருவதைக் கண்டான்; (எ - று.)

போருக்குரிய பறை முதலியவற்றை முழக்கிக்கொண்டு அரக்கவீரர் வருவதை; அநுமான் அப்போது தனகாதில்வீழ்ந்த பேரோசையாதலால் முதலில் தெரிந்துகொண்டு, பிறகு அவர் வருவதையாக கண்ணினால் கேட்டான் னெனபதாம். இளம் பருவததிலேயே தன்னைத் தாவிப்பிடித்த அநுமான் ஏங்கி நிற்பது கண்டு மீண்டும் தன்னைபபற்றிக்கொள்வானோ? என்ற குரியன அஞ்சின னென்க: அன்றி, வெருவிட என்பதை 'வரு' என்பதனோடு சேர்தது, அரக்கவீரர் பெருந்திரளாக வருவதனால், அபபோது அவர்கள் பாதங்களினால் மேலெழுப்பப்படுகிற தூளி குரியனை அடியோடு மறைப்பது பற்றி, அரக்கவீரர் வருதொழிலால் கதிரவன் வெருவலாயின னென்னலுமாம். பி - ம்.—[1]பேருருமெறி. (உ0)

உக.—அநுமான் தனது ஆலோசனை பலித்ததற்கு மகிழ்தல்.

இதவிய விதுவென முந்தே யிளைபவுற வினிது தெரிந்தான்
பதவிய லறிவு பயந்தா லதினிலை பயனுள துண்டோ
[1]சிதவியல் கடிபொழி லொன்றே சிதறிய செடறரு திண்போ
[2]ருதவிய வினிதி னுவந்தா னெவரினு மதிக முயர்ந்தான்.

(இ - ள்.) எவரினும் அதிகம் உயர்ந்தான் - எல்லாரைக்காட்டிலும் மிகச் சிறந்தவனாகிய அநுமான்,—'இது இதம் இயல் - (அசோகவனத்தை முறிக்கின்ற) இதுதான் இதமான செயல்,' என - என்று, முந்தே - முன்னமே, இளையவுற இனிது தெரிந்தான் - பொருததமாக நன்கு அறிந்தான்; பதம் இயல் அறிவு பயந்தால் - பக்குவமான தன்மையையுடைய அறிவுதோன்றினால், அதின் நல பயன் உனது உண்டோ - அதைக்காட்டிலும் நல்ல பயனுளளது வேறு உண்டோ? [இல்லையென்றபடி]; கடி பொழில் சிதவு இயல் ஒன்றே - காவலுள்ள அசோகவனத்தை அழிதததான செயலொன்று தானே சிதறிய செயல் தரு திண்போர் உதவு இயல் - (அரக்கவீரர்) தோற்றோடுகின்ற செயலை யுண்டாக்கக்கூடிய வலியபோரை தோற்றுவிதத இந்த தன்மையைக்குறிதது, இனிதின் உவந்தான் - மிகுதியாகச் சந்தோஷித்தான்; (எ - று.)

முதலிரண்டடி - கவிகூற்று. "இப்பொழிலினைக் கடிதிறுக்குவெனி றத்தா, லப்பெரிய பூசல் செவிசார்தலு மரக்கர், வெப்புறசினத்த ரெதிர் மேல்வருவர் வந்தால், துப்புற முருக்கி யுயிருண்ப லிதுகூறுதால்" என்று அநுமான் ஆராய்ந்து தீர்மானிததபடியே நிகழ்வது பற்றி, 'இதவியலிது வென முந்தே யிலையுற வினிது தெரிந்தான்' என்றார். 'அநுமான் தன்னுடைய முதிர்ந்த அறிவினால் ஆராய்ந்து தீர்மானித்தது, இனியபயனையே விளைததது' என்ற சிறப்புப் பொருளை 'பதவியலறிவு பயந்தால் அதின்நல பயனுளது உணடோ' என்ற பொதுப்பொருள் கொண்டு சமர்ததித்தார்; இது - வேற்றுப்பொருள்வைப்பணியினபாற்படும். அநுமானது தான் நினைத்தபடியே அவ்வனதனதை முறித்தசெயல் அரக்கவீரர் பலரும் [illegible] தழியும்படி பெரும்போரை விளைத்ததற்கு மனமுவந்தா னென்பது, பின்னிரண்டடிகளிற் கூறிய விஷயம். பி - ம்:—[1]சிதைவில. [2]உதவியையினிதினு வந்தான். (உ௪)

உஉ.—இதுவும், அடுத்தகவியும் - அரக்கவீரர் படைக்கலங்களையெறிந்த வகையையும் அநுமானை நெருங்ததலைக் கூறும்.

இவனிவ னிவனென நின்று [1]ரிதுவென முதலி யெதிர்ந்தார்
பவனனின் முடுகி [2]நடந்தார் பகலிர வுறமிடை கின்றார்
புவனியு மலையும் விசும்பும் பொருவரு நகரு முடன்போர்
துவனியி லதிர விடம்போற் சுடர்விடு படைக டுரந்தார்.

(இ - ள்.) பகல் இரவு உற மிடைகின்றார்-பகற்பொழுதிலேயே இராப்பொழுது தோன்றும்படி நெருங்குபவராகிய மிகக்கருநிறமுள்ள அவ்வரக்கவீரர்கள்,—இவன் இவன் இவன் என நின்றார் - (இவ்வனத்தை யழிததவன்) இவன்தான் இவன்தான் இவன்தான் என்று குறிபபித்துக் காட்டுபவராகளாய், இது என முதலி எதிர்ந்தார் - (நாம் செயய வேணடியது, இவனைப்பிடிக்கின்ற) இசசெயலே என்று முற்பட்டு எதிர்ததது, பவனனின் முடுகி நடந்தார்- வாயுவைப்போல விரைந்து நடந்தவர்களாய், புவனியும மலையும் விசும்பும் பொரு அரு நகரும் - நிலவுலகமும் அதனிலுள்ளமலைகளும் ஆகாசமும் ஒப்பில்லாத அந்த இலஙகாபட்டணமும் ஆகிய இவை, உடன் போர் துவனியில் அதிர - ஒருசேரப் போர்முழக்கத்தினாலே அதிர்சசியடைய, விடம்போல் - விஷம்போல(த்தவறாமற் கொல்லவல்லனவாய்), சுடர் விடு - ஒளி வீசுகின்ற, படைகள் - ஆயுதங்களை, துரந்தார் - (அநுமான்மீது) பிரயோகித்தார்கள்; (எ - து.)—துவனி - த்வநி; வடசொல். பி - ம்:—[1]இவ்வெனமுதல்வர். [2]அடைந்தார். (உஉ)

உங. மழைகளு மறிகட லும்போய் [1]மதமற முரச மடைந்தார்
முழைகளி [2]னிதழ்க டிறந்தார் முதுபுகை கதுவமுனிந்தார்
பிழையில படவர விளரோள் பிடருற வடியிடு கின்றார் [தார்.
கழைதொடா வனமெரி யுண்டா லென [3]வெறி படைஞர்கலந்

(இ - ள்.) மழைகளும மறி கடலும் மதம போய் அற - மேகங்களினிடங்களும் அலைமடங்குகின்ற கடல்களின் கோஷமும (பேராரவார

முடைமையால் தாம் கொண்ட) செருக்குக் கெட்டு ஒழியும்படி [அவற்றினும் மிக்க ஒலியுண்டாகுமாறு], முரசம் அறைந்தார் - பேரிகைகளைக் கொட்டி முழக்குபவர்களும், முழைகளின் இதழ்கள் திறந்தார் - மலைக்குகைகள் போலத் தோன்றும்வண்ணம் வாய்களைத் திறந்து கொண்டிருப்பவர்களும், முது புகை கதுவ முனிந்தார் - மிக்க புகை கம்மிக்கொள்ளும்படி பெருஞ் சினங்கொண்டவர்களும், பிழை இல படம் அரவின் தோள் பிடர் உற அடி இடுகின்றார் - குற்றமற்ற படங்களையுடைய ஆதிசேஷனது தோள்களும் பிடரியும் (பாரமிகுதியைச் சுமக்கமுடியாமையால்) ஒன்றாய்விடும்படி கால்களைப் பெயர்த்துவைப்பவர்களுமாகி, கழை தொடர் வளம் எரி உண்டால் என - மூங்கில்கள் தகுதியிருக்கப்பெற்ற காடு தீப்பற்றிவிரிந்தாற்போல [மூங்கிற்காட்டில் நார்புறத்திலும் பற்றி மூளுந் தீப்போல], எறி படைஞர் - வீசுகின்ற ஆயுதங்களையுடைய அவ்வரக்கவீரர்கள், கலந்தார். - (அநுமான் மீது) ஒருங்கு திரண்டார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]மறைதர. [2]இருள்கள். [3]எரி. (உ௩)

உச.—அநுமானை அரக்கவீரரை யெதிர்க்குமாறு ஒருமரத்தைக் கையிற்கொண்டு நிற்றல்.

அறவனு மதனை யறிந்தா னருகினி னழகி னமைந்தா
[1]றிறவினி னுதவு நெடுந்தா ருயர்பர மொருகை யியைந்தா
[2]னுறவரு துணையென வனரோ வுதவிய வதனை யுவந்தா
னிறைகடல்[3]கடையு நெடுந்தாண் மலையென நடுவ ணிமிர்ந்தான்.

(இ - ள்) அறவனும் - தருமசொரூபியாகிய அநுமானும், அதனை அறிந்தான் - (அரக்கர் தன்னைச் சூழ்ந்துகலந்த) அந்தச்செயலை யறிந்து, அருகினின் அழகின் அமைந்தா இறவினின் உதவு - தன்னருகே இனிதான யுத்தவேஷத்தோடு சூழ்ந்துகொண்ட அரக்கரின் மரணத்துக்குத்துணையாக உதவக்கூடிய, தார் நெடு உயர் மரம் - நீண்ட ஒழுங்கான மிகவும் உயர்ந்த மரமொன்றை, ஒரு கை இயைந்தான் - (தனது) ஒருகையி லெடுத்துக்கொண்டு, உறவரு துணை என அன்றோ - 'மனதிற்கு ஏற்பஉதவி செய்ய வருகின்ற ஒரு துணைவனைபோல வல்லவோ (இதுஉள்ளது' என்று), உதவிய அதனை - (தனக்குத் தக்கசமயத்திலே) உதவுமாறு கிடைத்த அம்மரத்தைப்பற்றி, உவந்தான - சந்தோஷித்தவனாய்,—நிறைகடல் கடையும் - (பால்) நிறைந்த கடலைக் கடைதற்கு உரிய, நெடுதாள மலையென - நீண்ட அடியையுடைய மந்தரமலையைப்போல, நடுவண நிமிர்ந்தான் - (அவ்வரக்கர்களின்) நடுவிலே உயர்ந்து தோன்றினான்; (எ - று.)

மற்றை மரங்களைபோல வெகுதூரத்தில் விழுந்திடாமல் தவறி அருகில்தானே விழுந்து அரக்கர்களையழிதலொழிக்கும்படி தக்க சமயத்தில் உதவினமைபற்றி, அம்மரத்தை அநுமான் வியந்தனனென்க. தனக்கென்று ஒரு நன்மையையும் நாடாமல் தருமத்துக்கே பாடுபடுபவன் இவ்வநுமானென்பார், அவனை அறவன்' என்றார். அரக்காகட

லைக கலக்கப்போவதால், அநுமானுக்கு மந்தரமலை உவமையாதற்கு ஏற்கும். பி - ம்:—[1]இறவருவயிரநெடுந்தோளெழுபனைமரமிகவன் கால், இறவினிலுதவுநெடுந்தோளெழுபனைமரமிக வணைகால். [2]உறுபெருதுணை யெனவொன்றோ வுதவிய வதனையுவந்தான். [3]கடையநெடுந்தூண்மலையென வனுமன். (உச)

உரு.—இதுமுதற் பதினொரு கவிகள் - அரக்கவீரர் பலபடியாக அழிந்து போனதைத் தெரிவிக்கும்.

பருவரை [1]புரைவன வன்றோள் [2]பனிமலை யருவி நெடுங கால் சொரிவன பலவென மண்டோய் துறை பொரு குருதி சொரிந்தா ரொருவுணர் [4]யொருவர் தொடர்ந்தா ருயர்தலை யடைய வுருண்டா ரருவரை நெரிய [5]விழும்பே ரசனியு மசைய வறைந்தான்.

(இ - ள்.) (அவ்வநுமான),—அரு வரை நெரிய விழும் - பெரியமலைகளும் சிதைந்துபோமபடி விழுகின்ற, பேர் அசனியும் - பெரிய இடியும், அசைய - (தாகின விசையைக் கண்டு) பின்வாங்கும்படி, அறைந்தான் (அமரர்த்தைக்கொண்டு அரக்கவீரர்களை) அடித்தான். (அதனால் அவர்களிற) சிலர்), பனி மலை - குளிர்ந்த மலைகள், அருவி நெடு கால் பல சொரிவன என - அருவியினாலான நீண்டவாய்க்கால்கள் பலவறறைச் சொரிவன போல, பருவரை புரைவன வல் தோள் - பெரிய மலைகளையொப்பனவான வலிய தோள்களினால், மண் தோய் துறைபொரு குருதி சொரிந்தா - தரையிற் பொருந்திய கீர்த்துறைகளிலே போய்ப் பாய்கின்ற இரத்தநீரைச் சொரிந்தவர்களாய், ஒருவுணர் ஒருவர் தொடர்ந்தா - (அசசத்தினால்) ஒருத்தரை ஒருத்தர் பற்றிச்சொணடு, உயர் தலை உடைய உருண்டா - உத்தமாங்கமான தலைகள் (மரத்தினால்தாக்குணடு) உடைந்து இறந்தொழிந்தார்கள்; (ஈ - று.)

தோள்களுக்கு மலைகளும், அத்தோள்கள் சொரிகின்ற இரத்தப்பெருக்குக்கு அம்மலைகளின் அருவிநீர்க்கால்களும் உவமையாம். பி - ம்:—[1]புரைவனவென்றோள். படாமழை. கார். ஒரு. இருமபோர். (உரு)

உசு. பறைபுரை விழிகள் பறிந்தார் [1]படியிடை நெடிது படிந்தார், பிறைபுரை யெயிறு மிழந்தா பிடரொடு தலைகள் பிளந்தார், [2]நுறைபுரையிர் [3]சிதற நெரிந்தா குடரொடு குருதி [4]குழைந்தா, முறைமுறை படைக ளெறிந்தார் முடையுடன் மறிய முறிந்தார்.

(இ - ள்.) (இன்னுஞ் சிலவீரர்கள்), முறை முறை படைகள் எறிந்தார் - (அநுமானை வெல்லக்கருதி) முறையாக நின்று ஆயுதங்களை (அவன்மேல்) எறிந்து, (அவ்வநுமானால் தாக்கள்), பறை புரை விழிகள் பறிதந்தா - பறைகளைப்போன்ற கண்விழிகள் பறியுணடு, படியிடை நெடிது படிந்தார் - தரையினமீது நீள விழுந்தவர்களாய, பிறை புரை எயிறும் இழந்தா - பிறைசசந்திரன்போன்ற பற்களையும் இழந்து, பிடரொடு தலைகள் பிளந்தார் - பிடரியும் தலைகளும் பிளக்கப்பெற்று,

குறை உயிர் சிதற நெரிந்தார் - குற்றுயிரும் சிதறிப்போம்படி மிதிபட்டு நெரிந்து, குடரொடு குருதி குழைந்தார் - குடலும் இரத்தமும் ஒன்றோடொன்று குழைந்து போகப் பெற்று, (இவ்வாறு), முடை உடல் மறிய - முடைநாற்ற முள்ள (தமது) உடம்புகள் அழியும்படி, முறிந்தார் - முறியப்பெற்றார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]படையிடை. [2]சிதறி. [3]சொரிந்தார். (உகூ)

உஎ. [1]புடையிடை [2]விடுகன லினகாய் பொறியிடை மயிர்கள் புகைந்தார், தொடையொடு முதுகு துணிந்தார் சுழிபடு குருதி சொரிந்தா, படையிடை யொடிய நெடுந்தோள் பறிதர வயிறு திறந்தா, ரிடையிடை மலையின் விழுந்தா ரிகல்பொர முடுகி யெழுந்தார்

(இ - ள்) இகல் பொர முடுகி எழுந்தா - போர் செய்யும்படி விரைந்து எழுந்த சில வீராகள்,—புடையிடை விடு கனலின் காய் பொறியிடை மயிர்கள் புகைந்தார் - தாக்குகையில் வெளிப்படுகின்ற அக்கினியினுடைய எரிகின்ற தீப்பொறிகளிலே மயிர்கள் புகையப் பெற்று, தொடையொடு முதுகு துணிந்தா - தொடையும் முதுகும் அறுபட்டவர்களாய், சுழிபடு குருதி சொரிந்தார் - சுழிகளுண்டாகின்ற இரத்தவெள்ளத்தைக் கக்கிக்கொண்டு,—படை இடை ஒடிய - (தாம் கையிற்கொண்ட) படைக்கலம் நடுவே முறியவும், நெடு தோள் பறிதர-(தமது) நீண்ட தோள்கள் வேறாகிப் போகவும், வயிறு திறந்தார் - (தம) வயிறும் பிளக்கப்பெற்றவர்களாய், இடை இடை மலையின் விழுந்தா - அவ்வவ்விடங்களிலே மலைபோல விழுந்திட்டார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]புடையொடு. [2]விழி. (உஎ)

உஏ. புதைபட விருளின் மிடைந்தார் [1]பொடியிடை நெடிது புரண்டார், விதைபடு முயிரர் விழுந்தார் [2]விளிவொடு விழியு மிழந்தார், கதையொடு முதிர மலைந்தார் கணைபொழி சிலையர் கலந்தா, ருதைபட வுரனு நெரிந்தா [3]ருதறொடு குருதி யுமிழ்ந்தார்.

(இ - ள்.) கதையொடு - கதாயுதத்துடனே, முதிர மலைந்தார் - நன்றாகப் போர்செய்தவர்களும், கணை பொழி சிலையர் - அம்புகளைச்சொரிகின்ற வில்லையுடையவர்களுமாகி, புதை பட இருளின் மிடைந்தார் கலந்தார் - (பொருள்கள்யாவும்) மறையும்படி இருளைப்போன்று (கறுத்தவடிவத்துடனே) நெருங்கிக் கலந்துவந்த சில அரக்கவீரர்,—உதைபட - (அறுமாறுடைய) உதைபட்டமாத்திரத்தில், உரனும் நெரிந்தார் - மார்பு நொருங்கப் பெற்றவர்களும், விளிவொடு விழியும் இழந்தார் - வீரகோஷமும் விழியும் இழந்தவர்களும், உதறொடு குருதி உமிழ்ந்தார் - நடுக்கத்தோடு இரத்தத்தைக் கக்குகின்றவர்களுமாகி, பொடியிடை நெடிது புரண்டார் - புழுதியிலே நெடுநேரம் (பதைபதைத்துப்) புரண்டு, விதை படும் உயிரர் விழுந்தார் - விதைகள்போலச் சிதறிப்போயவிட்ட உயிரை யுடையவர்களாய் வெற்றுடலாய் விழுந்திட்டார்கள்; (எ - று.)

விளிவு - வீரர்கள் செய்கின்ற ஆரவாரம்; சாவு என்று கொள்வதிற் பொருட்பொருத்த மின்மை யறிக. பி - பி.—[1]பொறியிடை. [2]விழியொடு மொழியும். [3]உயிரொடு, உதரொடு. (உஅ)

உகூ. அயலயன் மலையொ [1]டறைந்தா னடுபகை யளகை யடைந்தார்
வியலிட மறைய விரிந்தார் [2]மிசையுல கடைய மிடைந்தார்
புயலொடு [3]கடலின் விழுந்தார் புடைபுடை [4]சிதைவொடுசென்றா
[5]ருயர்வுற விசையி னெறிந்தா னுடலொடு முலகு துறந்தார்.

(இ - ள்.) (அநுமான்),—(அரக்கவீரர்களை), அயல் அயல் மலையொடு அறைந்தான் - அருகேயருகேயுள்ள மலைகளின்மீது வீசியெறிந்தான்; (அதனால் அவர்களிற் சிலர்), அடு பகை அளகை அடைந்தார் - கொல்லவல்ல பகைமையையுடைய குபேரன் வாழ்கின்ற அளகாபட்டணத்தை யடைந்தார்கள்; (வேறுசிலர்), வியல் இடம் மறைய விரிந்தார் - ஆகாயத்தினிடம் மறைந்து போம்படி பரவினார்கள்; (மறறுஞ்சிலர்), மிசை உலகு அடைய மிடைந்தார் - மேலுலகம் முழுதும் நெருங்கினார்கள்; (பின்னுஞ்சிலர்), புயல் தொடு கடலின் விழுந்தார் - மேகங்கள் (நீரை) முகக்கின்ற கடலிலே போய் விழுந்தார்கள்; (வேறுசிலர்), புடைபுடை சிதைவொடு சென்றார் - நாற்புறங்களும் உடல்சிதைந்து போய்விட்டார்கள்; (மற்றுஞ் சிலரை), உயர்வுறு விசையின் எறிந்தான் - மேலே போம்படி வேகமாக எறிந்தான்; (அதனால் அவர்கள்), உடலொடும் உலகு துறந்தார் - தங்களுடமபுடனே இவ்வுலகத்தைத் துறந்து (சுவர்க்கலோகஞ்) சேர்ந்தார்கள்; (எ - று.)

வியல் - வியத் என்ற வடசொல்லின் சிதைவு. இனி, தமிழ் மொழியென்றே கொண்டு, வியலிடம் மறைய என்பதற்கு - அகன்ற பூமியினிடம் மறையும்படி யெனினுமாம் உடலொடும் உலகு துறந்தார் என்பதற்கு - உடலையும் உலகையும் விட்டனர் [தம்முடல்பூமியிறங்கிடக்க இவ்வுலகத்தை விட்டு வீரசுவர்க்கத்துக்குச்சென்றார்கள்] என்று கூறுவாரு முளர் பி-ம்.—[1]அறைந்தார். [2]விசையுலகெவையும். [3]மயலின். [4]திசைதொறு. [5]உயர்வற. ()

வேறு.

உ0. பற்றித் தாளொடு தோள்[1]பறித் [2]தெறிந்தனன் பாரி
[3]னிற்ற வெஞ்சிறை வெற்பின மாமெனக் கிடந்தார்
கொற்ற வாளிடைக் கொடுந்தொழி லரக்கரை யடங்கச்
சுற்றி [4]வீசலிற் பம்பர [5]மாமெனச் சுழன்றார்.

(இ - ள்.) (அநுமான்),—பற்றி - (அரக்கர்களைப்) பிடித்து, தாளொடு தோள் பறித்து - கால்களையும கைகளையும் பிடுங்கி, எறிந்தனன் - (கைகால்கள் நீங்கின அவர்களை) வீசி யெறிந்தான்; (அவர்கள்), இற்ற வெம் சிறை வெற்பு இனம் ஆம் என - அறுபட்ட வேகத்துக்குக்காரணமான இறகுகளையுடைய மலைகளின் கூட்டம்போல, பாரின் கிடந்தார் - பூமியிலே விழுந்து

கிடந்தார்கள்; (பின்னும்), கொற்றம்வாலிடை அடக்க - வெற்றி பொருந்திய தனது வாலிலே அடங்கிக்கிடக்கும்படி, சுற்றி—, கொடு தொழில் அரக்கரை - கொடிய தொழிலையுடையராக்ஷசர் சிலரை, வீசலின் - வீசியெறிதலினால், (அவர்கள்), பம்பரம் ஆம் என சுழன்றார் - பம்பரம்போலச் சுழன்றார்கள்; (எ - று.)

கைகால்கள் பறிக்கப்பட்டு முண்டமாய்க்கிடந்த அரக்கர்கூட்டத்துக்குச் சிறகுகளை யிழந்த மலைகளின் கூட்டமும், வாலினாற் சுற்றிவீசி யெறிந்ததனாற் சுழல்கின்ற அவ்வரக்கர்கட்குக் கயிறறினாற் சுற்றி வீசியெறியப்பட்டு ஆடுகின்ற பம்பரங்களும் உவமையாம். பி - ம்.—[1]பதிந்து. [2]எழுந்தவர்பகழி, எழுந்தவர்பழகி. [3]இறைகுகுதிரமிடைதன. [4]வீசிடப். [5]எனவின்று. (௩௦)

௩௧. வாள்க ளிற்றன [1]விற்றன வரிசிலை வயிரத்
தோள்க ளிற்றன விற்றன சுடாமழுச் சூல
நாள் ளிற்றன விற்றன நகையெயிற் றீட்டந்
தாள்க ளிற்றன விற்றன படையுடைத் தடக்கை.

(இ - ள்.) (அநுமான் தாக்கியதனால், சில அரக்கர்களுடைய), வாள்கள் - வாளாயுதங்கள், இற்றன - ஒடிந்துபோயின; வரி சிலை - கட்டமைந்த விற்கள், இற்றன—; சுடா மழு சூலம் - ஒளியுள்ள மழுக்களும் சூலங்களும், இற்றன—; (அன்றியும்) வயிரம் தோள்கள் - உறுதிபொருந்திய தோள்கள், இற்றன—; நகை எயிறு ஈட்டம் - வெளவெளி வீசுகின்ற பற்களின் கூட்டம், இற்றன—; தாள்கள் இற்றன—; படை உடை தட கை - ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டுள்ள பெரிய கைகள், இற்றன—; (முடிவாக), நாள்கள்-ஆயுள் நாள்களும், இற்றன-முடிந்து போயின; (எ-று.)—பி - ம்.—[1]வார்சிலையிற்றன. (௩௧)

௩௨. தெறித்த வன்றலை தெறித்தன செறிசுடர் கவசந்
தெறித்த பைங்கழல் தெறித்தன சிலம்பொடு பொலந்தார்
தெறித்த பன்மணி தெறித்தன பொரும்பொறித் திறங்க
டெறித்த குண்டலந் தெறித்தன கண்மணி சிதறி.

(இ - ள்.) (அன்றியும், சில அரக்கவீரர்களுடைய), வல் தலை - வலிய தலைகள், தெறித்த-அப்பால் விழுந்தன; செறி சுடர் கவசம் - நிறைந்த ஒளியுள்ள கவசங்கள், தெறித்தன—; பைங் கழல் - பசும்பொன்னினாலாகிய வீரக்கழல்கள், தெறித்த—; பொலம் தார் - பொன்னாரி மாலைகள், சிலம்பொடு - ஓசையோடு, தெறித்தன—; மணி - (ஆபரணங்களிலழுத்தியுள்ள) பலவகையிரத்தினங்கள், தெறித்த—; பெரும்பொறி திறங்கள் - பெரிய தீப்பொறிகளின் வகைகள், தெறித்தன—; குண்டலம் - குண்டலங்கள், தெறித்த—; கண்மணி - கண்ணின் கருவிழிகள், சிதறி—, தெறித்தன—.

தெறித்த - 'அன்' சாரியைபெறாத முற்று; அடுத்த செய்யுளில் 'உக்க' என்பதும் இவ்வாறே. (௩௨)

௩௩. உக்க பற்குவை யுக்கன துவக்கெலும் பு[1]திர்வுற்
றுக்க முற்கர முக்கன முசுண்டிக ளுடைவுற
றுக்க சக்கர முக்கன [2]வுடறிறந் துயிர்க
ளுக்க கப்பண முக்கன வுயர்மணி மகுடம்.

(இ - ள்.) (மேலும்), முற்கரம் - (அவர்களிற் சிலரேந்திய) சம்மட்டிகள், உக்க—; முசுண்டிகள் - முசுண்டியென்னும் ஆயுதங்கள், உடைவுற்று - ஒடிந்து, உக்கன—; சக்கரம் - சக்கரமென்னும் ஆயுதங்கள், உக்க—; கப்பணம் - கப்பணங்கள், உக்க—; உயர் மணி மகுடம் - சிறந்த இரத்தின கிரீடங்கள், உக்கன—; பல் குவை-பற்களின் கூட்டம், உக்க—; எலும்பு உதிர்வுற்று - எலும்புகள் பொடிபொடியாய்ப்போய், துவக்கு - சருமம், உக்கன—, (மற்றும் அவ்வரக்கர்களிற் சிலருடைய), உடல் திறந்து - உடல்கள் பிளக்கப்பட்டு, உயிர்கள்—, உக்கன—; (எ - று.)

கப்பணம் - இரும்பினால் செருஞ்சிமுள்வடிவாகச் செய்யப்பட்டுத் தரையிலே யெறியப்படுவது. பி - ம்:—[1]உதிரம். [2]உடற்றுறந்து, 'உக்க மூளைகளுக்கனகிணக்குழம்புலைவுற்று' என்பது மூன்றுமடியாகவும், இங்குள்ள மூன்றுமடி இவைகுன்றாட்டி ; பாடபேதத்துடன் நான்காமடியாகவும் சில பிரதிகளிலுள்ளன. (௩௩)

௩௪. தாள்க ளாற்பலர் தடக்கைக ளாற்பலர் தாக்குந்
தோள்க ளாற்பலர் சுடர்விழி யாற்பலர் தொடருங்
கோள்க ளாற்பலர் குத்துக ளாற்பலர் தத்தம்
வாள்க ளாற்பலர் மரங்களி னாற்பலர் மடிந்தார்.

(இ - ள்.) (அநுமானுடைய), தாள்களால் - கால்களினால், பலர் - பலரும்,—தட கைகளால்—, பலர்—, தாக்கும் தோள்களால் - மோதுகின்ற தோள்களினால், பலர்—, சுடர் விழியால் - நெருப்பைக் கக்குகின்ற கண்களினால் விழித்துப்பார்த்ததினால், பலர்—, தொடரும் கோள்களால் - மேன்மேல் மிகுகின்ற வலிமையைக் காணுதலினால், பலர்—, குத்துகளால்—, பலர்—, தம் தம் வாள்களால் - தம் தமது (கைகளிலுள்ள) வாள்களை (அநுமான் பிடுங்கித்) தம்மீது வீசுதலினால், பலர்—, மரங்களினால் பலர்— மடிந்தார் - இறந்தார்கள்; (எ - று.)

கோள் - பற்றிக்கொள்ளுத லென்பாரு முளர். (௩௪)

௩௫. ஈர்க்கப் பட்டனர் சிலர்சில [1]ரிடிப்புண்டு பட்டார்
பேர்க்கப் பட்டனர் சிலர்சிலர் பிடியுண்டு பட்டா
ரார்க்கப் பட்டனர் சிலர்சில ரடியுண்டு பட்டார
பார்க்கப் பட்டனர் சிலர்சிலர் பயமுண்டு பட்டார்.

(இ - ள்.) (அநுமானால்), சிலர்—, ஈர்க்க - பிடித்திழுத்தலினால், பட்டனர் - இறந்தார்கள்; சிலர்—, இடிப்புண்டு - மோதப்பட்டு, பட்டார்—; சிலர்—, பேர்க்க - இருந்த இடத்தை விட்டு அபபுறப்படுத்த, பட்டனர்—; சிலர்—, பிடியுண்டு - பிடிக்கப்பட்டு, பட்டார்—; ஆர்க்க -

ஆரவாரித்தலினால், பட்டனர்—; சிலர்—, அடியுண்டு - அடிபட்டு, பட்டார்—; சிலர்—, பார்க்க - உறுகிய பாரத்தலினால், பட்டனர்—; சிலர்—, பயமுண்டு - அச்சங்கொண்டு, பட்டார்—; (எ - று.)—ஆக்க - பிடித்துக் கட்டுதலினால் எனினுமாம். பி - ம்:—[1]இடருண்டு. (கூடு)

கூசு.—இதுமுதல் மூன்றுகவிகள் - அநுமான்செய்த போர்த்திறத்தைத் தெரிவிக்கும்.

ஓடிக் கொன்றனன் சிலவரை யுடலுட னோறுங்
கூடிக் கொன்றனன் சிலவரைக் கொடிநெடு மரத்தாற்
சாடிக் கொன்றனன் சிலவரைப் பிணந்தொறுந் தடவித்
தேடிக் கொன்றனன் சிலவரைக் கறங்கெனத் திரிவான்.

(இ - ள்.) கறங்கு என திரிவான் - காற்றாடி போலத் திரிபவனாய், (சில அரக்கர்களை), உடல உடல் தோறும ஓடி - ஒவ்வொருதடவை இருக்குமிடத்திலும ஓடிப்போய், கொன்றனன் - கொன்றான்; சிலவரை—, கொடி நெடு மரத்தால் - கொடிகள் படர்ந்த பெரிய மரத்தினால், கூடி - நெருங்கி, கொன்றனன்—; சிலவரை—, சாடி கொன்றனன - அடித்துக்கொன்றான்; பிணம தொறும - பிணக்குவியல்களினிடையே, சிலவரை - (பதுங்கியிருந்த) சிலரை, தடவி தேடி - தேடிக்கண்டுபிடித்து, கொன்றனன்—; (எ - று.)

உடலுடல் தோறும் கூடிக கொன்றனன் என்பதற்கு - அவ்வவ்வரக்கர்களின் உடம்புகளதோறும தான் சூட்சுமவடிவுகொண்டு உட்புகுந்து (உடனே பெரிய வடிவமெடுத்து) அவ்வவ்வீரருடலைப் பிளந்து வெளிவந்து கொன்றானென்றும்; கொடி நெடு மரத்தால் என்பதற்கு நீண்டதுவசங்கட்டிய மரக்கொம்பினால் என்று பொருள்கூறலு முண்டு. (கூ)

கூஎ. முட்டி னார்பட முட்டினன் முறைமுறை முடுகிக்
கிட்டி னார்படக் கிட்டினன் கிரியென நெருங்கிக்
கட்டி னாபடக் கட்டினன் கைகளான் மெய்யிற்
றட்டி னாபடத் தட்டினன் மலையெனத் தகுவான்.

(இ - ள்.) மலை என தகுவான் - மலையென்று சொல்லத்தக்கவனாகிய பேருருவத்துடனிருந்த அநுமான்,—முட்டினா பட முட்டினன் - (தன்னை) முட்டினவர்கள் இறக்கும்படி (தான் அவரை) முட்டினான்; முறை முறை முடுகி கிட்டினா பட கிட்டினன் - வரிசைவரிசையாக விரைந்து (தன்னை) நெருங்கி வருபவர்கள் இறக்கும்படி (தானும் அவரை) நெருங்கினான்; கிரி என நெருங்கி கட்டினா பட கட்டினன் - மலைபோன்றவராய நெருங்கிவந்து (தமது கைகளால் தன்னைக) கட்டினவர்கள் இறக்கும்படி (தானும் அவரைக்) கட்டினான்; கைகளால் மெய்யின் தட்டினா பட தட்டினன் - (தானும்) கையினால் (தனது) உடம்பில் தட்டினவர்கள் இறக்கும்படி (தான் அவர்களைத்) தட்டிவிட்டான்; (எ - று.)

இதனால், எவ்வெவ்வரக்கவீரா எவ்வெவ்வாறு தன்னோடு பொரவந்தனரோ, அவரவருடன் அவ்வாறே பொருது அவர்களைக் கொன்றானென

அநுமான் சமயுததஞ் செய்த வகையைச சிறப்பித்துக் கூறினு ரென்க. கைகளால் மெய்யில் தட்டினுர் என்பதற்கு - வீரத்திற்கு அறிகுறியாகத தம் கைகளைக்கொண்டு தமது தோள்களிலும் துடைகளிலும் தட்டினவர்களைத் தனது கைகளினுல் தட்டிக் கொன்ருனென்று கொள்ளலுமாம். (ருஎ)

ருஎ. [1]மறக்கி னுங்கொல்லு முணரினுங் கொல்லுமால் விசும்பிற்
பறக்கி னுங்கொல்லும் படரினுங் கொல்லு[2]மின் படைக்கை
நிறகக ருங்கழ [3]லரக்கர்க ணெறிதொறும் பொறிகள்
பிறக்க நின்றெறி படைகளைத் தடக்கையாற் பிசையும்.

(இ - ள்.) (பின்னும் அவ்வநுமான்) —(அரககவீரர்களை), மறக்கினும் - (தன்னை நினையாமல்) மறநதாலும், கொல்லும் - கொன்று விடுவான்; உணரினும் - (தன்னை எப்போதும் மறவாமல்) மனத்திலேயே கருதிக்கொண்டிருந்தாலும், கொல்லும்—; மால் விசும்பில் பறகினும்-பெரிய ஆகாசத்திறபறந்து சென்ருலும், கொல்லும்—; படரினும - (நிலத்தின்மீது) நடந்து சென்ருலும், கொல்லும்—; மின் படை கை - ஒளிபொருந்திய ஆயுதங்களேந்திய கையையும், நிறம் கருக கழல் - நல்ல நிறத்தையுடைய பெரிய வீரக்கழலையு மணிந்த, அரக்கர்கள்—, நெறி தொறும் - வழிகளிலெல்லாம், பொறிகள் பிறக்க நின்று - தீபபொறிகள் தோன்றும்படி நின்றுகொண்டு, எறி படைகளை - (தன்மீது) எறிந்த ஆயுதங்களை யெல்லாம், தட கையால் பிசையும் - பெரிய தனது கைகளாற் பிசைந்து பொடிபொடியாக்கி விடுவான்; (எ - று.)

எத்தொழிலை மேற்கொண்டிருந்தாலும், அரககர்களைத தவருது அநுமான் கொல்பவனு னென்பதை வற்புறுததத 'மறகினும் கொல்லும், உணரினுங்கொல்லும்' என்ருர். பி - ம்:—[1]உறகினும் [2]இன படைக்கு. [3]அரக்கர்வாளெறிதொறும், அரக்கர்கணெறிதொறும். (ருஅ)

ருகூ.—படைகளச்சிறப்பு.

சேறும் வண்டலு மூளையு நிணமுமாய்த் திணிய
நீறு சேர்கெடுந் தெருவெலா நீத்தமாய் நிரம்ப
வாறு போல்வரும் [1]குருதியவ் வனுமனு லலைப்புண்
டறில் வாய்தொறு முமிழ்வதே யொத்ததவ் விலங்கை.

(இ - ள்.) மூளையும் நிணமும் - (அரக்கவீரருடைய) மூளைகளும் கொழுப்புக்களும் சேறும் வண்டலும் ஆய் திணிய - சேறும் வண்டலும் மேன்று செருங்கவும்,—நீறு சேர் கெடு தெரு எலாம் - புழுதி நிறைந்த நீண்ட தெருக்கள் முழுதும், நீத்தம் ஆய் நிரம்ப வெள்ளமாகி நிறையவும்,—ஆறு போல்வரும் - ஆற்றைப்போலப் பெருகியோடுகின்ற, குருதி - இரத்த வெள்ளதினுலே, அ இலஙகை - அந்த இலங்காபட்டணமானது, அ அனுமானுல் அலைப்புண்டு - அந்த அநுமானுல் அலைக்கப்பட்டு, ஈறு இல் வாய் தொறும - முடிவில்லாத [பலவான] வாயில் தோறும், உமிழ்வது (இரத்ததைக்) கக்குவதை, ஒத்தது—; (எ - று.)

சேறும் வண்டலும் நிறைந்திருக்கப்பெற்றதுபோல மூளையும் நிணமும் நிறைந்து தெருக்களின் வழியாகப் பெருகி இலங்காதுவாரங்களினாலே வழிந்து வெளிப்படுகிற ரக்தநதியின் தோற்றம், இலங்காபட்டணமே அநுமானால் அலைக்கப்பட்டுத் தனது வாயகளினாலெல்லாம் இரத்தத்தைக் கக்குவதுபோன்றிருந்ததென்பதாம். தர்மைத்தப்துறிப்பேற்றவணி. பி - ம்:—[1]குருதியை.

சா0.—இதுமுதல் ஆறுபாவிகள்-மீண்டும் அநுமான் போர்செய்த திறமையைத் தெரிவித்தல்.

கருது காலினுங் [1]கையினும் வாலினுங் கட்டிச்
சுருதி யேயன்ன மாருதி மரத்திடை துரப்பா
னிருத ரெந்திரத் திடுகரும் பாமென [2]நெரிவார்
குருதி சாறெனப் [3]பாய்வது குரைகடற் [4]கூனில்.

(இ - ள்.) சுருதியே அன்ன மாருதி - வேதத்தையே யொத்த (உண்மையையேயுடைய) அநுமான்,—கருது காலினும் - நினைக்கக்கூடிய ஒரு க்ஷணகாலத்திற்குள்ளாக, கையினும் வாலினும் கட்டி - கைகளினாலும் வாலினாலும் (சில அரக்கரைச்) சேர்த்துக்கட்டி, மரத்திடை துரப்பான்-மரத்தின் மீது எறிபவனாக,—(அப்போது), நிருதர் - (அவ்வாறு எறியப்பட்ட) இராட்சசவீரர், எந்திரத்து இடு கரும்பு ஆம் என-ஆலையிலேயிட்டு ஆட்டுகிற கரும்பு போல், நெரிவார்-(உடம்பு) நொருங்கிப்போகலானார்கள்; குருதி-(அவர்களது உடம்பிலிருந்து பெருகுகின்ற) இரத்தம், சாறு என - கருப்பஞ்சாறுபோல, குரைகடல் கூனில் - சப்திக்கின்ற சமுத்திரமுமாகிய ஒருவகைப் பாத்திரத்தில், பாயவது - பாய்கின்றதாகும்; (எ - று.)

அநுமான் தனது கைகளாலும் வால்களாலும் கட்டி அரக்கவீரர் சிலரை மரத்தினமீதுஎறிய, அவர்களுடம்புகள் ஆலையிலிட்ட கரும்புபோல நொருங்கி அந்தக்கரும்புகளிலிருந்து சாறுபெருகுவதுபோல அவ்வுடம்பினின்று பெருகுகின்ற இரத்தம் சமுத்திரத்திற்போய்ப் பாயலாயிற்றென்பதாம். காலினும் - கால்களினாலு மெனினுமாம. பி - ம்:—[1]வாலினுங் கையினுங் கடிதுறுகக்கட்டி. [2]நெரியக். [3]பாய்ந்தது, [4]கூனை.

(சா0)

சக. எடுத்த ரக்கரை [1]யெறிதலு மவருட லெற்றக்
கொடித்திண் மாளிகை யிடிந்தன மண்டபங் குலைந்த
தடகைகை யானைகண மறிந்தன கோபுரந் தகாந்த
பிடிக்கு லங்களும் புரவியு மவிந்தன பெரிய.

(இ - ள்.) (அநுமான்), அரக்கரை - (சில) இராட்சசரை எடுத்து எறிதலும் - தூக்கி யெறிந்தமாத்திரத்தில், அவர் உடல் எற்ற - அவ்வரக்கரது உடம்புகள் மோத, (அதனால்), கொடி திண மாளிகை இடிந்தன - கொடிகள் கட்டின வலிய உபரிகைவீடுகள் இடிந்துபோய்விட்டன; மண்டபம் குலைந்த- மண்டபங்கள் நிலைகுலைந்தழிந்தன; தட கை யானைகள் - பெரிய துதிக்கை

களையுடைய யானைகள், மறிந்தன - மடங்கி வீழ்ந்து இறந்தன; கோபுரம் தகர்ந்த - கோபுரங்கள் இடிந்து வீழ்ந்தன; பெரிய பிடி குலங்களும் புரவியும் அவிழ்ந்தன - பெரியனவான பெண்யானைகூட்டங்களும் குதிரைகளும் அழிந்தன; (எ - று.)—பி - ம்:—[1]எறிதொறும். (சக)

சஉ. தத்த மாடங்க டம்முட லாற்சிலர் தகர்த்தார்
தத்த மாதரைத் தங்கழ லாற்சிலர் சமைத்தார்
தத்த மாக்களைத் தம்படை யாற்சிலர் தடிந்தா
[1]றெற்றி மாருதி தடக்கைக ளான்[2]விசித் தெறிய.

(இ - ள்.) மாருதி - அநுமான், தட கைகளால் எற்றி விசித்து, எறிய - (தனது) நீண்ட கைகளினால் அடித்துக் கட்டித் தூக்கியெறிதலினால்,—சிலர் - சில அரக்கர்கள், தம் உடலால் - தமது உடம்புகளினால், தம் தம் மாடங்கள் - தங்கள் தங்கள் வீடுகளை, தகாததார் - உடைத்தார்கள்; சிலர்—, தம் கழலால் - தமது கால்களால், தம் தம் மாதரை - தங்கள் தங்கள் மனைவிமாரை, சமைத்தார் - அழித்தார்கள்; சிலர்—, தம்படையால் தமது (கைகளிலுள்ள) ஆயுதங்களினால், தம தம் மாக்களை - தங்கள் தங்களது குழந்தைகளை, தடிந்தார் - கொன்றார்கள்; (எ - று.)

அநுமான் சிற்சில அரக்கவீரரை அடித்துக் கட்டித் தூக்கியெறிய, அவர்கள் தமது மாளிகையின்மீது விழுந்து அவற்றை யழித்தும், விழும்போது தமது கால்கள் தம்மனைவியரின்மீது படுதலால அவர்களையழித்தும், தம் கையிலுள்ள ஆயுதங்கள் தம்மக்கள்மீது படுதலால் அவர்களையழித்தும் இவ்வாறு விழலாயின ரென்பதாம். இந்தச்செய்யுளில் அநுமான் அரக்கரைக் கொண்டே அவர்களுக்கு உரிய பொருள்களை யழியச் செய்தன னென அவ்வனுமான் பொருத விசித்திரக்கதையைப் பாராட்டிக் கூறியவாறு. மாக்கள் - மக்களென்பதன் நீட்டல். இனி, மாக்களை - தமது குதிரைகளை யென்னவுமாம். பி - ம்:—[1]ஏத்தி. [2]எடுத்து. (சஉ)

சங. ஆடல் மாக்களி றனையவ னரக்கியர்க் கருளி
வீடு நோக்கியே செல்கென்று சிலவரை விட்டான்
கூடி னார்க்கவ ருயிரெனச் சிலவரைக் கொடுத்தா
னூடி னார்க்கவா மனைதொறுஞ் சிலவரை யுய்த்தான்.

(இ - ள்.) ஆடல் மா களிறு அனையவன் - அசைந்தாடுந் தன்மையையுடைய பெரிய ஆண்யானையைப் போன்றவனாகிய அநுமான்,—அரக்கியர்க்கு அருளி - (சில) அரக்கியர் (படுகின்ற துயரத்தைக்கண்டு அவர்களிடத்துக) கருணைகொண்டு, வீடு நோக்கி செல்க என்று—, சிலவரை - சில அரக்கரை, விட்டான் - (கொல்லாது) உயிரோடு விட்டிட்டான்; கூடினார்க்கு (கணவரை) அப்போதுதான் சேர்ந்தவராகிய இளமபெண்களுக்கு, அவர் உயிர் என - அம்மாதர்களுக்கு உயிரேபோன்று இருப்பவரென்ற (இரக்கங்கொண்ட) எண்ணத்தினால், சிலவரை கொடுத்தான்—; ஊடினார்க்கு - (தம்மோடு சொல்லாது எங்கேயோபோய்விட்டா ரென்று தம்கணவரைப்பற்றி மாறுபாடாக நினைத்து)

ஊடல்கொண்ட அரக்கமகளிர்க்கு, (இரங்கி), அவர் மனைதொறும் - அவர்வீடுதோறும், (அவர்களது கணவர் போய்ச் சேரும்படி), சிலவரை - சிலரை,—உய்ததான் - அனுப்பிவிட்டான்; (எ - று.)

இதனால், வீரத்திலும் அநுமானுக்கு இருந்த இரக்கத்தைக் கவி விளக்கினார். இனி, விட்டான், கொடுத்தான், உய்த்தான் என்ற முற்றுக்களுக்கு வீசியெறிந்தானென்று கருத்துப்பொருள்கொண்டு, வீடுமுதலிய இடங்களிற் போய்விழும்படி அநுமான் எறிந்ததைக் கவி இவ்வாறு வருணிக்கின்றனரென்றலு மொன்று. (சரு)

சஅ. [1]தருவெ லாமுட றெற்றியெ லாமுடல் சதுக்கத்
துருவெ லாமுட லுவரியெ லாமுட லுள்ளூர்க்
கருவ லாமுடல் காயமெ லாமுட லரக்கர்
தெருவெ லாமுடல் தேயமெ லாமுடல் சிதறி.

(இ - ள்.) (அநுமான் அரக்கவீரர்பலரையும் வீசியெறிந்ததனால்),சிதறி - (நாற்புறத்திலுஞ்) சிதறுண்டு,—தரு எலாம் - மரங்களிலெல்லாம், உடல் - (அவ்வரக்கவீரரின) உடல்களும்,—தெற்றி எலாம் - தெருத்திண்ணைகளிலெல்லாம, உடல்—, சதுக்கத்து உரு எலாம் - நாற்சந்திகூடும் இடங்களிலெல்லாம், உடல்—, உவரி எலாம் - கடல் முழுவதும், உடல்—, உள்ளூர் கரு எலாம் - உள்ளூரின் நடுவிடமுழுவதும், உடல்—, காயம் எலாம்- ஆகாயமுழுவதும், உடல்—,அரக்கர் தெரு எலாம் - அரக்கருடைய தெருக்களிலெல்லாம், உடல் தேயம் எலாம் - அந்த இலங்காபிரதேசம் முழுவதிலும, உடல - உடல்களுமாகி, (சிரம்பிகிடந்தன); (எ - று.)

இதனால் எங்கும் அரக்கருடைய உயிர்கழிந்த வெற்றுடம்புகள் கிடந்தமையைக் கவி வருணிக்கின்றனர். சதுக்கம் - சதுஷ்கம். கரு - கர்ப்பம். வடசொற்கள். காயம் - ஆகாயமென்பதன் முதற்குறை. அரக்கர் என்பதை, 'உடல்' என்ற சொற்களோடெல்லாம் கூட்டலுமாம். (சஅ)

சரு [1]ஊனெ லாமுயிர் கவருறுங் காலனோய்ந் [2]துலந்தான்
றானெ லாரையு மாருதி சாடுகை தவிரான்
மீனெ லாமுயிர் மேகமெ லாமுயிர் மேன்மேல்
வானெ லாமுயிர் மற்றுமெ லாமுயிர் சுற்றி.

(இ - ள்.) மாருதி - அநுமான், தான் - தான் ஒருத்தனாகவே, எலாரையும் - (எதிர்ப்பட்ட) அரக்கர்யாவரையும், சாடுகை - மோதியடிக்கும் தொழிலினின்று, தவிரான்-(இன்னும்) நீங்காதவனாயினான் [மேன் மேற் சென்று கொண்டிருக்கிறான்]; (இந்தச் சமயத்திலே), ஊன் எலாம் உயிர் கவர்வுறும் காலன் - உடம்புகளிலிருந்து உயிரைக் கவர்ந்து செல்லவேண்டிய யமன், (போரில் மாள்பவர் மிகப் பலராய்விட்டதனால் தனது அத்தொழிலைச் செய்யமாட்டாமல்), ஓய்ந்து - தளர்ந்து, உலந்தான் - வலிமை கெட்டான்; (அதனால் எடுத்துக்கொண்டுபோகா எமருமில்லாமல்), சுற்றி - (அவ்வூரின் பலவிடங்களிலுஞ்) சூழ்ந்துகொண்டு,—மீன் எலாம் - நட்சத்திரமண்டலம்

முழுவதும், உயிர் - உயிராகவும், மேகம் எலாம - மேகமண்டல மெல்லாம், உயிர்—, மேன்மேல் வான் எலாம - மிகவுயரததிலுள்ள ஆகாயத்தினிடம முழுதும், உயிர்—, மற்றும் எலாம் - மற்றுமுள்ள இடைவெளிகளிலெல்லாம், உயிர் - உயிராகவும், (நிரமபிககிடநதன); (எ - று.)

உடல் பலவிடநகளிலுங கிடநததைக் கீழ்க்கவியில் வருணித்துக் கூறிய கவி, இசசெய்யுளினல், உயிரைக் கவாந்து செல்லவேணடிய யமனும் தனது அத்தொழிலைச் செய்யமுடியாமல் ஓய்ந்து விடவே, அநுமானுற் கொல்லப்பட்ட அரக்கவீரரின் பிராணன்கள் எடுத்துச் செல்லா மல்லாமல் வானம முதலிய பலவிடததும் நிரம்பிக்கிடந்தன என்று வருணித்தார் தொடர் புயர்வு நவிற்சியணி; இதனல் அளவற்ற அரக்கவீரர் இறந்தன ரென்பது பெறப்படும். பி - ம் —[1]கான். [2]உலைந்தான். (சஅ)

சகு.—இதுமுதல் நான்தகவிகள் - அநுமானும் அவனைச் சூழ்ந்துகொண்டு நிற்கும் அரக்கரும் என்ற இவர்களது வருணனையைக் கூறும்.

ஆக விச்செரு விளைவுறு மமைதியி னரக்கர்
மோக முற்றன ராமென முறைமுறை முனிந்தார்
மாக முற்றவு மாதிர முற்றவும் வளைந்தார்
மேக மொத்தனர் மாருதி வெய்யவ னெத்தான்.

(இ - ள்.) ஆக - இவ்வாறு, இ செரு விளைவுறும் அமைதியின் - இப்போர் நடக்கும் பொழுது,—அரக்கர் - (சில) அரககர்கள், மோகம் உற்றனர் ஆம் என - அறிவு மயக்ககொணடவாபோல, முறை முறை முனிந்தார் - மேன்மேற் கோபமகொண்டு, மாகம் முற்றவும் மாதிரம் முற்றவும் வளைந்தார் - பெரிய வானிளிடம் முழுவதும் திகுக்கள் முழுவதும் சூழ்ந்து கொண்டவராய், மேகம் ஒத்தனர் - கறுதத மேகத்தை யொத்துத் தோன்றினார்கள்; (அவர்களின் நடுவேயிருந்த), மாருதி - அநுமான், வெய்யவன் ஒத்தான் - சூரியன் போன்றான்; (எ - று.)

பலபடியாகச்சிதறுண்டு போன அரக்கர் இப்போது சினகொள்வது அஞ்ஞானத்தின் செயலா மென்பார், 'மோகமுற்றனராமென முனிந்தார்' என்றார். பற்பலவேளையில் விலகிப்போதலும சிற்சிலவேளையிற் சூரியனைக் கவிந்து மூடிக்கொள்ளுதலு முடைய மேகம் - அநுமானிடத்துப் பலகால் அடிபுண்டு விலகிப்போய் இபபோது அவனைக கவிநதுகொணட கறுத்த அரக்கவீரர்க்கு உவமை யாதறகு ஏற்கும். இப்போது அரககவீரராற கவியப்பட்டாலும் வெகு விரைவில் அவ்வரககவீரர்கள விலகிப்போய்விட இவ்வநுமான் பிரதாபத்தோடு விளகுவ னென்பதை விளகக, அநுமானுக்குச் சூரியனை உவமை கூறினர். (சகு)

[illegible] அடல ரக்கரு மார்த்தலி னலைத்தலி [1]னயரப்
[illegible] [2]பெ ருத்துயர் பெருமையிற் கருமையிற் பொலிவின்

*மிடல யிற்படை மீனென விலங்கலிற் கலங்குங்
கடனி காத்தனா மாருதி மந்தரங் கடுத்தான்.

(இ - ள்.) ஆர்த்தலின் - ஆரவாரித்தலினாலும், அலைத்தலின் - வருத்துதலினாலும [அலையுடைமையினாலும], அயர புடை பெருத்து உயர் பெருமையின் - (கண்டவர்) சோரும்படி எப்புறமும் பருத்து உயர்ந்து தோன்றுகின்ற பெருந்தோற்ற முடைமையாலும், கருமையின் பொலிவின் - கருநிறத்தோடு விளங்குவதனாலும, மிடல் அயில் படை மீன் என விலங்கலின் - வலிமைபொருந்திய வேல் முதலிய ஆயுதங்கள் மீன்கள்போல் வீட்டுவிட்டுப் பிரகாசித்தலினாலும,—அடல் அரக்கரும-வலிமை கொண்ட ராக்ஷஸர்களும், கலங்கும கடல் நிகர்த்தனா - (கடையும்போது) கலங்குவதான சமுத்திரத்தை யொத்தார்கள்; மாருதி - அநுமான், மந்தரம் கடுத்தான் - (அக்கடலைக் கலக்குகின்ற) மந்தரமலையை யொத்தான; (எ - று.)

உவமையணி. ஆர்த்தல், அலைத்தல், பெருந்தோற்றமுடைமை, கருமை, மீன்விலகுதல் என்ற தன்மை அரக்கரிடத்தும் கடலினிடத்தும் பொருந்தும் பொதுத்தன்மையாம். அலைத்தல் என்ற இடத்துச் சிலேடையும், படைமீன் என்ற இடத்து உருவகமும் இவ்வுவமைக்கு உபகாரப்பட்டன. கலகும் கடல் என வந்ததற்கு ஏறப, கலகும மந்தரம் என்க. பி - ம்:— [1]அமரா. [2]வளைதது. [3]மிடலியற்படை. (௪எ)

௪௮. கரத லத்தினுங் காலினுங் வாலினுங் கதுவ
நிரைம ணித்தலை நெரிந்துகச் சாய்ந்துயிர் [1]நீப்பார்
சுரர்ந டுக்குற வமுதுகொண் டெழுந்தநா டொடரு
முரக ரொத்தன ரநுமனுங் [2]கலுழனே யொத்தான்.

(இ - ள்.) கரதலத்தினும் - கைகளினாலும, காலினும் - கால்களினாலும், வாலினும் - வால்களினாலும, கதுவ - பற்றுதலினால்,—நிரை மணி தலை நெரிநது உக சாய்ந்து உயிர் நீப்பார் - வரிசையான அழகிய [இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற] (தமது) தலைகள் நெரிந்து சிந்துதலினால் (மண்மீது) விழுந்து உயிரைவிடுபவரான அரக்கர்கள்—, சுரர் நடுக்கு உற - தேவர்கள் நடுங்கும்படி, அமுதுகொண்டு எழுந்த நாள் - கருடன் அமுதத்தைக் கவர்ந்து கொண்டுவந்த காலத்தில், தொடரும் - (அந்த அமுததைக் கவரவொட்டாமல் அங்குக்காவலாய்த) தொடர்ந்துநின்ற, உரகர் - உரகரை, ஒத்தனர் - ஒத்தார்கள்; அநுமனும் - அநுமானும், கலுழனே - (அவர்களை வலியழித்ததால்) கருடனையே, ஒத்தான்—; (எ - று.)

கருடன் தனது தாயான விநதையின் அடிமைத்தன்மையைப் பொறுக்கக்கருதித் தேவர்களுடன் பொருது வென்று அந்தத் தேவலோகத்திலுள்ள அமிருதத்தை எடுத்து வரமுயலுங்காலையில் அதற்குக் காவலாயுள்ளவராய்த் திருஷ்டிவிஷமுள்ளவர்களும் நெருப்புப்பொறி பறக்கின்ற கண்களையுடையவரும் பெருவலிமைபடைத்தவரும் மிகக்கொடியவரும் கண்களினாலேயே சுட்டெரிக்கவல்லவருமான இரண்டு உரகர்கள் வந்தொட்டாமல் எதிர்த்து

நிற்பது கண்டு, இவர்களை நாம் எவ்வாறு வெல்வது? என்று ஆலோசித்துத் தனது இறகுகளினால் அவர்கள் கண்களைப்புழுதிநிரம்பும்படிசெய்து, அவர்கள் கண்கள் தெரியாதசமயத்தில் அவர்களைக் கண்டதுண்டமாகக்கிப் பிறகு அமுதத்தைக் கவர்ந்தானென்ற செய்தி, மஹாபாரதத்தில் ஆதிபர்வத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், அநுசாஸநபர்வத்தில் அமுதத்துக்குக் காவலாக இருந்த அக்கினியை மந்தேகமுள்ளவனாகச்செய்து அவனைக் கடந்து, காவலாளராயிருந்த அரக்கரைக் கொன்று, பிறகு சூழ்ந்துகொண்டிருந்த வீரர்களைக்கொன்றிட்டுக் காவலாயிருந்த சக்கரத்தின் ஜாலத்தையும் பிளந்து தேவலோகத்திலிருந்த அமுதத்தைக் கருடன் கவர்ந்து சென்றதாகக் கூறப்பட்டிருக்கின்றது. உரகர் - ஸர்ப்பசாதியார். பி - ம் — [illegible]ப்பர். [illegible]கலுழனை. (சஎ)

சகூ. மான முற்றதம் பகையினான் [1]முனிவுற்று வளைந்த
மீனு டைக்கட லுலகினி னுளவெலா மிடைந்த
ஆன நக்கொன்று துகைக்கவு மொழிவிலா நிருத
ராணை யொத்தன ராளரி யொத்தன னனுமன்.

(இ - ள்.) மானம் உற்ற - செருக்கைக்கொண்ட, தம் பகையினால் - தமது பகைமைக்குணத்தினாலே, முனிவுற்று - கோபித்துக்கொண்டு, வளைந்த - (அநுமானைச) சூழ்ந்துகொண்டவரும், மீன் உடை கடல் உலகினில் உள எலாம் மிடைந்த - மீன்களையுடைய கடலினாற்சூழப்பட்ட உலகத்திலே [இலங்கையிலே] யுள்ள இடம்முழுவதிலும் நெருங்கி யிருப்பவரும், ஆன் அது கொன்று துகைக்கவும் ஒழிவு இலா - (கணணிற் கண்டவர்) உடமபு முழுவதையெல்லாம் அழித்தொழிக்கவும் அழிந்திடாமற் பெருகித் தோன்றுபவருமான, நிருதர் - அரக்கர், ஆனை ஒத்தனர் - யானைகளையொத்தார்கள்; அனுமன் —, ஆன் அரி ஒத்தனன் - (மிருகங்களை) ஆளுந் தன்மையுள்ள (மிருகேந்திரனான) சிங்கத்தைப் போன்றான்; (எ - று.)

வேலம் தமது செருக்கினாற பகைமை கொண்டு சினந்து அநுமானை வளைந்துகொண்டவ ரெனவும், இலங்கை முழுதும நெருங்கி இருப்பவரெனவும், எக்காலவு கொன்றாலும் ஒழிந்திடாது பெருகித தோன்றுபவ ரெனவும் அரக்கரை முதல் மூன்றடிகளினாற் கூறினார். வளைந்தமிடைந்த ஒழிவிலா நிருதர் என்க. அப்படி அந்தநிருதா மிகப்பலராயிருந்தும் இவ்வநுமான் அவர்களையெல்லாம் பின்வாங்காது அழிக்கும் ஆற்ற லுடையா னென்பதை விளக்க, அவ்வரக்கர்க்கு யானைதிரளையும, அநுமானுக்குச் சிங்கத்தையும் உவமை கூறினர். (சகூ)

ருஒ0.— அநுமானது விழுப்புண்.

எய்த வெற்றின வெறிந்தன வீர்த்தன விகலின்
பொய்ய குத்தின பொறுத்தன தொளைத்தன பொழ்ந்த
[illegible] பற்றின குடைந்தன பொளிந்த
[illegible] புடைத்தன புண்ணளப் பரிதால்.

(இ - ள்.) எய்த - எய்தவற்றினாலும், எற்றின - அடித்தல்வகளினாலும், எறிந்தன - வீசியெறிந்தவற்றாலும, ஈர்த்தன - அறுத்தவற்றினாலும், இகலின் பொய்த - மாறுபாட்டோடு சொரிந்தவற்றினாலும், குத்தின - குத்தினவற்றாலும், பொருதன - பொருதினவற்றாலும், தொளைத்தன - தொளைத்தவற்றாலும, போழ்ந்த - பிளந்தவற்றாலும, கொய்த - தறித்தவற்றாலும, சுற்றினவளைந்துகொண்டு பரப்பப்பெற்றினவற்றாலும, பற்றின - பிடித்துக் கொண்டவற்றாலும, குடைந்தன - உட்புகுந்து குடைந்தவற்றாலும, பொலிந்த விளங்கிநிற்றோன்றுகின்ற, துயயன் மல பெரும புயத்தன - பெரியோனாகிய அநுமானது வலிமைபொருந்திய பெரிய தோள்களிலுள்ளனவான, புண் - புண்களை, அளப்பு - (இவ்வளவென்று) கணக்கிடுதல, அரிது - (எவர்க்கும்) முடியாததாம; (எ - று.)—ஆல் - ஈற்றசை; வியபபுமாம.

அரக்கரது அம்புமுதலியவற்றால் அநுமானது புயங்களில் தோன்றிய புண்கள் அளவிடமுடியா என்று கூறி, இந்நிலையில், அவன் அவ்வூறுபாட்டைச சிறிதும் இலட்சியஞ்செயயாமல அரக்கரை மிக எளிதில் அழிக்கின்ற வீரத்தைப் பெற வைத்தார். "விழுப்புண்பட்ட நாளெல்லாம் வழுக்கினான், வைக்கும் தன்னாளை யெடுத்து" என்றபடி விழும்புண பட்டதலை வீரர்க்குச் சிறப்பென்க. (௫௦)

ரூக.—வானோர் அநுமானைப் புகழ்தல்.

கார்க[1]க ருந்தடங் கடலகளு மழைமுகிற கணனும
வேர்க்க வெஞ்செரு விளைத்தெழும் வெளளெயிற றரக்கர்
[2]போர்க்கு ழாம்படி பூசலி னையனைப புகழ்வுற்
றார்கரும் [3]விண்ணவ [4]ரமலையே யுயர்ந்ததன் றமரில்.

(இ - ள்.) கார் கரு தட கடல்களும - மிகக்கரிய பெரிய (அலைமோதுகின்ற) சமுத்திரங்களும, மழை முகில் கணனும் - மழை பெய்கிற மேகக் கூட்டங்களும, வேர்கக மனம் புழுங்கும்படி [பின்னடையுமபடி], வெம்செரு விளைத்து - கொடிய போரை யுண்டாகி, எழும் - மேன்மேற் கிளமபுகின்ற, வெள் எயிறு அரககர் - வெணமையான கோரப்பறகளை யுடைய அரகக்களின், போர் குழாம் - போர் வரிசைகளில், படி - தோன்றுகிற, பூசலின் - பேராரவாரதைக்காட்டிலும், ஐயனை புகழ்வுற்று ஆர்கரும் விண்ணவர் அமலையே - அநுமானைக்கொண்டாடி ஆரவாரிகின்ற தேவர்களது ஆரவாரமே, அன்று அமரில்-அந்தப்போரில், உயர்ந்தது - மிகுந்தது. (எ று.)

மோதுதலையும் அம்புமழை தூவுதலையுமுடைய செருவைக்காணவே, முறையே அதனொழில்களையுடைய கடல்களும் மேகங்களும் தம்மிலும் அரக்கர்போர் விஞ்சியிருத்தல்பற்றித் தாம பின்வாங்கின வென்க: தமது பகைவரகளாகிய அரக்கவீரரைப் பெரிதும் கொன்றொழிப்பது கண்டு தேவர்கள் அநுமானை மிகவும் வாழ்த்துவாராயினர். மோதுதலும் அம்புபொழிதலும் என்ற இவற்றில் கடல் முகில் என்ற இவ்வாறு அரக்கர் விஞ்சினராக,

அந்நனம் அரக்கர் பொருகையிலுண்டாகின்ற பேராரவாரத்தினும் அவ்வரக்கர்க்குச் சிறிதும் பின்னிடையாது மேன்மேல் வெற்றியுண்டாகுமாறு பொருகின்ற அநுமானது திறத்தைக் கண்டு புகழ்கின்ற தேவர்களின் புகழொலியே மிக்குத் தோன்றிற்று என்ற இதில், ஒன்றினும் ஒன்று விஞ்சித் தோன்றுவதாகிய மேன்மேலுயர்ச்சியணிகாணக. இதனை வடநூலார் ஸாராலங்கார மென்பர். பி - ம்:—[1]கருங்கடற் கணங்களும். [2]போர்க்கவார்த்தெழு. [3]வானவர். [4]அமலையு முயர்ந்தனவமரில். (ருக)

ரு2.—தேவர்முதலியோர் அநுமான்மீது பூமாரிபொழிதல்.

மேவும் வெஞ்சினத் தரக்கர்கண் முறைமுறை விசையா
லேவும் பல்படை யெத்தனை கோடிக ளெனினுந்
தூவுந் தேவரு [1]மகளிரு முனிவருஞ் சொரிந்த
பூவும் புண்களுந் தெரிந்தில மாருதி புயத்தில்.

(இ - ள்.) மேவும் - (போருக்கு) வந்த, வெஞ்சினத்து அரக்கர்கள் - கொடிய கோபமுள்ள இராட்சசர்கள், முறை முறை-வரிசைவரிசையாக[மாறி மாறி], விசையால் ஏவும் - வேகத்தோடு விடுகின்ற, பல் படை - பலவகைப் பட்ட ஆயுதங்கள், எத்தனை கோடிகள் எனினும் - மிகப்பல கோடிகளானாலும் (அவற்றாலுண்டாகிற), புண்களும்—,—தூவும் தேவரும் - (இன்பத்தையே) அநுபவிக்கின்ற தேவர்களும், மகளிரும் (அவரது) மனைவிமாரும், முனிவரும் - தேவவிருடியரும், சொரிந்த - (போர் காணவேணுமென்று ஆகாயத்தில்வந்து) பொழிந்த, பூவும - மலர்களும்,—மாருதி புயத்தில் - அநுமானது தோள்களில், தெரிந்தில - வேற்றுமை தெரியாதபடியாக ஒருசேர விளங்கின; (எ - று.)

அநுமான் தன் தோளின்மீது அரக்கவீரரெறிந்த பலகோடிக் கணக்கான படைக்கலங்களாற் றோன்றிய புண்ணை, தேவர் முதலியோர் சொரிந்த மலர்கள்போலவே கருதின னென்பது, இங்குப் பெறப்படும். 'து' எனும் முதனிலை யடியாய் பிறந்த செயபுமென்னும் எச்சமாகிய 'துவ்வும்' என்பது 'தூவும்' என நீண்டுவந்தது. இனி, இச்செய்யுளுக்கு வேறுவகையாகக் கருதக்கூறுவது பொருந்துமாயிற கொள்க. பி-ம்:—[1]முனிவரு மகளிரும் (ருஉ)

ரு3.—அநுமானது சோர்வின்மையும், அரக்கர்கள் மடிதலும்.

பெயாக்குஞ் சாரிகை கறங்கெனத் திசைதொறும் பெயர்வி
னுபாக்கும் விண்மிசை யோங்கலின் மண்ணின்வந் துறலி
[1]னயர்த்து வீழ்ந்தன ரழிந்தன ரரக்கரா யுள்ளோர்
வெயர்த்தி லன் [2] மிசை யுயிர்த்தில னல்லற வீரன்.

(இ - ள்.) நல் அறம் வீரன் - சிறந்த தருமத்தி லூற்றமுள்ள வீரனான அநுமான்,—பெயாக்கும் சாரிகை கறங்கு என திசை தொறும பெயர்வினால் - இடம்விட்டு விரைந்து செல்லுதற்குரிய சாரிகைத்தொழிலிற்

காற்றடிபோல எட்டுத்திக்குக்களிலும் பெயர்ந்துசெல்லுதலாலும், உயர்க்கும் விண் மிசை ஓலகலின் - ஓங்கிய ஆகாயத்தின்மீது உயரச்செல்வதனாலும், மணணின் வந்து உறலின் - தரையில் வந்து பொருந்துவதனாலும்,—அரக்கர் ஆய் உள்ளோர் - இராக்கதவீரர்கள், அயர்ந்து வீழ்ந்தனர் அழிந்தனர் - சோர்ந்து வீழ்ந்து அழிந்தார்கள்; (அவ்வளவுமாலோ), மிசை - தன்னுடமபில், வெயாதிலன - (இவ்வளவு போரிற் சிரமப்பட்டும்) வேர்த்தல்தானும் கொண்டானிலலை; உயிர்ததிலன் - மூச்சுததானும விட்டானில்லை; (எ - று.)

அநுமான் எட்டுதிகுகுகளிலும ஆகாயத்திலும் பூமியிலுமாக எங்கும் திரிந்து அரக்கரையெல்லாம அழிததும், அதனாற சிறிதும் தான் சிரமம்பாராட்டினானில்லை யென்பதாம். பி - ம்:—[1]அயாகுகும். [2]உருவசைத்திலன். ()

ரு௪.—கவிக்கூற்று: அரக்கரது வீரத்தன்மையின் பாராட்டு.

எஞ்ச லக்[1]கணத் தறிந்தில மிராவண னேவ
நஞ்ச முண்டவ ராமென வனுமன்மே னடந்தார்
துஞ்சி னாரல்ல தியாவரு [2]மறத்தொடுந் தொலைவுற்
றஞ்சி னாரில்லை யரக்கரில வீரர்மற் றியாரே.

(இ - ன்.) இராவணன் ஏவ - இராவணன் கட்டளையிட்டு அனுப்ப, நஞ்சய உண்டவா ஆம் என அனுமன்மேல் நடந்தார் விஷத்தை யுண்டவர் போன்று அநுமான்மீது (போர்க்குச) சென்ற அரக்கவீரர்கள், எஞ்சல் - (தொகையினாற்) குறைதலை, அ கணத்து - அந்த இரு திகுஷணம் வரையிலும், அறிந்திலம் - அறிந்தோமில்லை; யாவரும - எல்லாவரசுகரும், துஞ்சினார் அல்லது - (எதிர்ததுப் போர் செய்து) இறநதாகளே யல்லாமல், மறத்தொடும் தொலைவு உறறு அஞ்சினா இல்லை - பராகிரமத்திற் குறைந்து அஞ்சி முதுகுகொடுதது ஓடிப்போனவரில்லை: அரக்கரின் வீரர் மற்று யாரே - (இப்படிப்பட்ட) அரக்கர்களைக்காட்டிலுஞ் சிறந்தவீரர் வேறு யாவர்தாம்? (எ-று.)

இராவணன் ஏவச சென்ற அரக்கவீரர்களில் உயிரமே வாகைசகொண்டு ஒருவராவது முதுகுகொடுதது ஓடாமல் யாவரும் எதிர்த்துப்போர்செய்தே ஒழிந்தனா; ஆகவே இவரே பெருவீர ரென்று வியந்தவாறு. அநுமான்மீது போர்செய்யச செல்பவர் நஞ்சமுணடவர்போல இறப்பது திணண மென்பதும், இவ்வரகுகர் நஞ்சமுணடவரபோல மதிமயகி யிருந்ததனால்தான் அநுமான்மீது பொரசசென்றன ரென்பதும தோன்ற, 'நஞ்சமுண்டவராமென வனுமன்மேல் நடந்தார்' எனறார். பி ம்:—[1]கணக்கு. [2]அமரதொழில். (இ௩)

ரு௫.—இதுவும், அறிந்த கவியும் - ஒருதொடர்; நந்தவனத்தில் மாருதாப் போர் கிங்கரர் மடிந்ததை இராவணனுக்கு உணர்த்துதல்.

வந்த கிங்கர ரேயெனு மாத்திரை மறுந்தன்
நந்த வானத்து நாயக னோடினர் [illegible]

பிந்து காலினர் கையினர் பெரும்பயம பிடரி
ஐந்த வாயிரம் பிணக்குவை மேல்விழுந் துளைவார்.

(இ - ள்.) வந்த கிங்கரர் - (அநுமான்மேற போர்க்கு) வந்த கிங்கர சென்னப்படும் அரக்கவீரர் யாவரும், ஏயெனும் மாத்திரை - இரண்டு மாத்திரைப் பொழுதிற்குள [மிக விரைவில்], மடிந்தார் - இறந்துவிட்டார்கள்; (உடனே), நந்தவனத்து நாயகர் - நந்தவனத்தைப் பாதுகாப்பவர், ஓடினர் - விரைந்து செல்பவராய், நடுகெடி பிரது காலினா கையினர் - நடுகெடிப் பின் வாங்குகின்ற கால் கைகளையுடையவராய், பெரும் பயம் பிடரின் உந்த-மிகக அச்சம கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டுசெல்ல, ஆயிரம் பிணம குவை மேல் விழுந்து - ஆயிரககணகான பிணக்குவியலின்மேலே விழுந்து, உளைவார் - வருந்துபவராய்,—(எ - று.)—'விரைவினுற்றனர்' என அறிந்த அவியோடு தொடரும்.

ஏ என்பது இரண்டு மாத்திரையுள்ள நெட்டெழுததாதலால், ஏயெனு மாத்திரையென்பது - இரணடு மாததிரைப்பொழுது ஆயிற்று. தவகள் காவலெல்லைகுள் நிகழ்ந்த செயலாதலால அதனைத தெரிவியாவிட்டால் 'தம் மீது சினைந்து கொள்வானே' என்ற அச்சம் ஒருபால் துணடவும, இராவணனிடத்து அவனுககு நேர்ந்த தோல்விசசெயலைத் தெரிவிககையில் அவன் வெருள்வானே யென்றதை நினைக்க அசசததால் ஒருபால் கைகால்கள் நடுகெடிகவும, இடைவழிகளிலுள்ள பிணக்குவியல்களின்மேல் இடறி விழுந்த வண்ணம் நந்தவனத்தைப் பாதுகாபபோர விரைந்து செல்வாராயின ரென்க. நந்தவனத்து—நந்தவனத்து. (௫௫)

௫௬. விரைவி னுற்றனர் விம்மலுற் றியாதொன்றும் விளம்பார்
காத லத்தினுற் பட்டதுங் கட்டுரைக் கினறார்
தரையி னிறகிலர் திசைதொறு நோக்கினர் சலிப்பர்
ராசன் மற்றவ ரலக்கணே யுரைத்திட வறிந்தான்.

(இ - ள்.) விரைவின் உற்றனர்-(இராவணனெதிரில்) விரைவாக வந்து சேர்ந்தவர்களாய,—விமமல் உற்று - ஏக்கமகொண்டு, யாது ஒன்றும் விளம்பார் - (வாயினால்) யாதொருவார்த்தையுங கூறமாட்டாதவராய், பட்டதும் - நேர்ந்ததெல்லாமற்றையும, காதலத்தினால் கட்டுரைகின்றார் - கைகளின் சைகைகளாற குறிப்பிதனுக் காட்டி, தரையில் நிறகிலா நிலததிற் பொருநதி நிறகமாட்டாமலும், திசைதொறும நோகினா - நான்குதிக்குக்களையும் மருணடு பாரத்தவணணமு மிருப்பாராய், சலிபபா - நடுநடுகுபவராஞர்கள்; அரசன் - (அதுகண்ட) ராக்ஷஸராஜனான இராவணன், அவா அலககணே உணரத்திட அறிந்தான் - அவாகள்படுகின்ற வருததமே (தனகு நேர்ந்த தோல்வியைத்) தெரிவிக்க உணர்ந்தான்; (எ - று.)—மற்று - அசை.

செய்தியை யுணர்ந்த சென்ற நந்தவனத்து காயகர் விரைந்து இராவணனைச் சேர்ந்து, நிகழ்ந்த செய்தியை சொல்ல காவெழாமல் கைச்சைகையினாற் செய்தியை யுணர்ந்தி சித்தமாட்டாமல் நாற்புறமும் மருண்டு பாரதத வண்ணம் நடுங்கினவராக, அவர்கள் பயின்ற அவ்வகையினாலேயே தான் ஏவிய கிங்கரவீரரால் தனக்குத் தோல்வியே நேர்ந்ததென்பதை இராவணன் உணர்ந்தா னென்பதாம். பி-ம்:—[1]விம்மினர். [2]பட்டது. [3]சவிப்பால். உரைசெய. (இ௩)

ரூ௭.—இராவணன் கிங்கரர் தோற்ற வகையை வினவுதல்.

இறந்து நீங்கின ரோவின்றெ [1]ஞாணையை யிகழ்ந்து
துறந்து நீங்கின ரோவென்றி வெஞ்சமர் தொலைந்தார்
மறந்து நீங்கின ரோ[2]வென்கொல் வந்ததென் றுரைத்தா
னிறஞ்செ ருக்குற வாய்தொறு நெருப்புமிழ் கின்றான்.

(இ - ள்.) நிறம் செருக்கு உற வாய் தொறும் நெருப்பு உமிழ்கின்றான்- (தன்னுடைய) கருநிறம் விளக்கமடையும்படி பதுவாய்களினாலும் (சினத்தினால் செந்நிறமான) நெருப்பைக் கக்குகின்றவனான இராவணன்,—(செய்தி சொல்லவந்த பருவத்தேவரைநோக்கி), (யான் ஏவிய கிங்கரரென்னும் வீரர்), இறந்து நீங்கினரோ - (போரிலே தம்முயிரைப் பலிகொடுத்து) ஒழிந்தார்களோ? இன்று என் ஆணையை இகழ்ந்து துறந்து நீங்கினரோ - இப்போது நான் இட்ட கட்டளையை (ஒரு குரங்குடனே போர்செய்வது? என்ற எண்ணத்தினால்) அலட்சியஞ்செய்து (போர் செய்தலைத்)தவிர்ந்து நீங்கிப்போனார்களோ? அன்றி - அல்லாமல், வெம் சமர் தொலைந்தார் மறந்து நீங்கினரோ - கொடிய போரில் (எதிர்த்துப் பொரமாட்டாமல்) தோற்றவர்களாய்(த் தமது மனைவி மக்கள் முதலியோரையும்) மறந்து எங்கேனும் போய்விட்டார்களோ? வந்தது என்கொல் - நேர்ந்தது யாது?' என்று—, உரைத்தான் - (அந்த நந்தவனத்து காயகரை) வினவினான்; (எ - று.)

'கிங்கரவீரர் தோற்றது - சண்டையில் மாண்டுபோதல் முதலிய மூன்று வகையில் எந்த வகையால் நிகழ்ந்தது?' என்று இராவணன் வந்தவர்களை வினவின னென்க. இராவணனுடைய கருநிறத்தோடு வாயினின்று உமிழ்கின்ற நெருப்பின் செந்நிறம் கலக்கையில், அவனது அந்தக் கருநிறம் செருக்கித் தோன்று மென்க. பி - ம்:—[1]ஆணையினிகழ்ந்தார். [2]என்னை. (இ௨)

வே று.

ரூ௮.—வந்தவர்கள் கூறிய விடை.

சலந்தலைக் [1]கொண்டன ராய தன்மையா
ரலந்திலர் செருக்களத் தஞ்சி னாரலர்
புலந்[2]தெரி பொய்க்கரி புகலும் புன்கணார்
குலங்களி [3]னவிந்தனர் குரங்கி னாலென்றார்.

(இ - ள்.) (அதற்கு, வந்த அவர்கள்),—'சலம் தலை கொண்டனர் ஆய தன்மையார் - கோபம் தலைக்கேறப்பெற்றவராகிய அந்தக் கிங்கராகள், அலந்திலா-('ஒரு சிறுகுரகோடு பொருவதோ?' என்று)வருந்தி யோடிப்போனரு மல்லர்; செரு களத்து அஞ்சினா அலா - போர்களத்தில் எதிர்த்துப் பொர முடியாது பயந்து முதுகுகொடுத்து ஓடிப்போனரு மல்லர்; புலம்தெரி பொய்கரி புகலும் புன்கணா குலங்களின - (தம்) புதல்விக்குப் (பொய்யென்று) தெரிந்த பொய்ச்சாட்சியைச் சொன்ன இழிகுண முடையோரின் வமிசங்கள் அழிதல்போல, குரங்கினால் - (எதிர்த்துநின்ற) ஒரு குரங்கினாலேயே, அவிந்தனர்-(யாவரும்) அழிந்தொழிந்தார்கள்,' என்றார் - என்று மறுமொழி கூறினார்கள்; (எ - று.)

இராவணன் விகற்பித்து வினவிய மூன்று வினாக்களுள் இரண்டை மறுத்து, பொருது இறந்தே நீங்கின ரென்று அவர்கள் மறுமொழி கூறினரென்க. காவியத்தின்நோக்கம் படிப்போர்க்கு நல்லொழுக்கத்தைப் புகட்டுவதே யாதலால், இவகே மனமாரப் பொய்க்கரி கூறுவோர் வமிசநாசமாவரென்று உபமானமுகமாகத் தெரிவித்து, அவ்வழியாற் பொய்க்கரி கூறுதலின் கொடுமையைக் கவி விளக்கினா. பி - ம்:—[1]கொண்டவவ். [2]தரு. [3]வீழ்ந்தனர். (ரூ௮)

ரூ௬—இராவணன் செய்தியுணர்த்தியவர்மீது சினத்தல்.

ஏவலி னெய்தின ரிருந்த வெண்டிசைத்
தேவரை நோக்கினா னுணுஞ் சிந்தையான்
யாவதென் றறிந்திலிர் போலு மாலென்றான்
மூவகை யுலகையும் விழுங்க மூள்கின்றான்.

(இ - ள்.) மூவகை உலகையும் விழுங்க மூள்கின்றான் - மூன்றுவகைப்பட்ட உலகங்களையும் விழுங்குவதற்குத் தொடங்குபவன்போன்று [மிக்க சினங்கொண்ட] இராவணன்,—ஏவலின் எய்தினா - (தன்) கட்டளையினால் வந்தவர்களாய், இருந்த-அருகே நின்றுகொண்டிருந்த, எண் திசை தேவரை- அஷ்டதிக்குப்பாலகர்களை, நோக்கினான் - பார்த்து, நானும் சிந்தையான் - (தனக்குப் பகைவரான திக்குப்பாலக ரெதிரில அரககா தோற்றதைச் சொன்னதற்காக) மிகவும் வெட்கங்கொண்ட மனமுடையவனாய்,—(செய்தி சொன்னவர்களைநோக்கி), (அவர்கள் வார்த்தையைப் பொயயென்று கருதினான் போன்று), 'யாவது என்று அறிந்திலிர் போலும் - (நடந்தது) இன்னதென்று அறியவில்லைபோல் தோன்றுகின்றது,' என்றான்-என்று அதட்டிக் கூறினான்; (எ - று.)—ஆல் - அசை.

தனது ஏவலைக் கேட்டற்காக அப்போது அங்கு வந்திருந்த திக்குப்பாலகரின் முன்னிலையிலே தனகு நேர்ந்த அவமானத்தைக் கேட்டதனால் வெட்கம் மிகுந்து அதனை மறைக்கும் பொருட்டுச் செய்தி சொன்னவர்களை நோகி 'உகைட்கு நடந்தது இன்னதென்று தெரியாதுபோல் தோன்றுகின்றது; அப்படியிருக்க, என் தாறுமாறாகச்

சொல்லுகின்றீர்கள்?' என்று இராவணன் அதட்டிக் கூறினனென்க. முதலடி - முற்றுமோனை. (ருகூ)

சுஂ.—இராவணன் மீண்டும் அநுதரித்து வினவுதல்.

மீட்டவ ருரைத்திலர் பயத்தின் விம்முவார்
தோட்டல ரினமலர்த் தொங்கன் மோலியான்
வீட்டிய தரக்கரை யென்னும் வெவ்வுரை
கேட்டதோ கண்டதோ கிளத்து வீரென்றான்.

(இ - ள்.) மீட்டு - மறுபடியும், அவர் - அந்தச்சோலையின் காவற்காரர், உரைதிலர் - (மறுமொழி) கூறாதவராகளாய், பயத்தின் விம்முவார் - அச்சத்தினால் நடுங்குவாராயினார்கள்; தோடு அலர் இனம் மலர் தொங்கல் மோலியான் - இதழ்களோடு விரிகின்ற பலவகை மலர் கொண்டு தொடுத்த மாலையையணிந்த சிரசையுடைய இராவணன்,—(செய்தி சொன்ன அவர்களை நோக்கி), 'அரக்கரை வீட்டியது என்னும் வெம் உரை-'(குரங்கொன்று பொரவந்த) அரக்கரையெல்லாம் கொன்று விட்டது' என்ற இந்தக் கொடுமையான வார்த்தை, கேட்டதோ - (அயலார் சொல்ல நீங்கள்) கேட்டுச் சொன்னதோ? (அன்றி), கண்டதோ - (நீங்களே நேரிற்) பார்த்துச் சொன்னதோ? கிளத்துவீர் - சொல்லுங்கள்,' என்றான் - என்று (மீண்டும்) வினவினான்; (எ - று.) (சுஂ)

சுஃக.—அவர்கள் கூறிய விடை.

கண்டன மொருபுடை நின்று கண்களாற்
றெண்டிரைக் கடலென வளைந்த சேனையை
மண்டலந் திரிந்தொரு மரத்தி னாலடித்
துண்டதக் குரங்கின மொழிவ தன்றென்றார்.

(இ - ள்.) (அவர்கள் இராவணனை நோக்கி),—'ஒரு புடை நின்று-ஒரு பக்கத்திலே [ஒதுக்கமாக] இருந்து, கண்களால் கண்டனம் - (நிகழ்ந்தது முழுவதையும் எங்கள்) கண்களால் நேராகப் பார்த்தோம்; அ குரங்கு-(அசோக வனத்தை யழித்த) அந்தக் குரங்கானது, தெண்திரை கடல் என வளைந்த சேனையை - தெளிவான அலைகளையுடை கடல்போலத் (தன்னைச்) சூழ்ந்து கொண்ட ராக்ஷஸ சேனையை, மண்டலம் திரிந்து - எப்புறத்தும் வளைந்து சுழன்றுசுழன்றுசஞ்சரித்து, ஒரு மரத்தினால் - (தன்கையிற்கொண்ட) ஒரு மரத்தினாலே, அடித்து—, உண்டது - உயிரைவாங்கிவிட்டது; இனம் ஒழிவது அன்று - இன்னும் (அது அவ்விடத்தைவிட்டு) நீங்கிப்போகவில்லை,' என்றார் - என்று கூறினார்கள்; (எ - று.) (சுஃக)

கிங்கரர்வதைப்படலம் முற்றிற்று.

ஒன்பதாவது
சம்புமாலிவதைப்படலம்.

இராவணன் கட்டளையால் அநுமானைப் பற்றிக்கொணருமாறு பொருதற்குச் சென்ற சம்புமாலி யென்பவனது வதையைக் கூறும் பகுதி யென்று பொருள்.

வேறு.

க.—சம்புமாலியென்பவனை நோக்கி அநுமானைப் பற்றிக்கொணருமாறு இராவணன் கட்டளையிடுதல்.

கூம்பின கைய னின்ற [1]குன்றெனக் குவவுத் திண்டோட்
பாம்பிவர் தறுகட் சம்பு மாலியென் பவனைப் பாரா
வாம்பரித் தானை யோடு [2] வளைத்ததன் மறனை மாற்றித்
தாம்பினிற் பற்றித் தந்தென் மனச்சினந் தணித்தி யென்றான்.

(இ - ள்.) (இராவணன்),—கூம்பின கையன் நின்ற - (என்ன கட்டளையிடப் போகின்றானோ? என்று) கூப்பிய கையையுடையவனாய் (த் தனக்கு எதிரில்) நின்றுகொண்டிருந்த, குன்று என குவவு திண் தோள் பாம்பு இவர் தறுகண் சம்புமாலிஎன்பவனை - மலைபோலத் திரண்ட வலிய தோள்களையும் பாம்பின்தன்மையைக் கொண்ட [சீறுந்தன்மையைக் கொண்ட] அஞ்சாமைக்குணத்தையுமுடைய சம்புமாலி யென்னும் அரக்கனை, பாரா - பார்த்து,—'(நீ), வாம் பரி தானையோடு - தாவிச்செல்கின்ற குதிரையைக் கொண்டுள்ள சேனையுடனே (போய்), வளைத்து - (அந்தக் குரங்கைச்) சூழ்ந்துகொண்டு, அதன் மறனை மாற்றி - அந்தக்குரங்கின் வலியை யடக்கி, தாம்பினில் பற்றி - கயிறினாலேகட்டி, தந்து - (என்னிடம்) கொண்டுவந்துவிட்டு, என் மனம் சினம் தணித்தி - என் மனத்திலுள்ள கோபத்தைத்தணியச் செய்வாய்,' என்றான்—; (எ - று.)—பி-ம்:—[1]குன்றிவர். [2]வளைத்தவன் வலியை. (க)

உ.—இராவணன் தன்னையேவினதற்காக மிகமகிழ்ந்து, சம்புமாலி புறப்படுதல்.

ஆயவன் வணங்கி [1]யைய வளப்பரு மரக்கர் முன்னர்
நீயிது முடித்தி யென்று நேர்ந்தனை நினைவி னெண்ணி
யேயினை யென்னப் பெற்றா லென்னினா ருயர்ந்தா ரென்னாப்
போயின னிலங்கை வேந்தன் போர்ச்சினம் போவ தொப்பான்.

(இ - ள்.) ஆயவன் - அந்தச் சம்புமாலி,—வணங்கி—, (இராவணனை நோக்கி); 'ஐய - தலைவனே! அளப்பு அரும் அரக்கர் முன்னர் - அளவிட முடியாத [மிகப்பல] இராட்சசர்களிருக்கையில் அவர்களெதிரே, நினைவின் எண்ணி நேர்ந்தனை - மனத்தில் ஆலோசித்துச் சம்மதித்தவனாய், நீ இது முடித்தி என்று - (அவர்களையெல்லாம் ஏவாமல் என்னை நோக்கி) 'நீ இதனைச்செய்து முடிப்பாய்' என்று, ஏயினை - கட்டளையிட்

டாய், என்ன பெற்றால் - என்று கூறும் பாக்கியத்தைப் பெற்றேனானால், என்னின் யார் உயர்ந்தார் - என்னைக்காட்டிலுஞ் சிறப்புப்பெற்றவர் யாவர்?' என்று - என்று - கூறி, இலங்கை வேந்தன் போர் சினம் போவது ஒப்பான் - இலங்காராசனான இராவணனது போர்செய்தற்கு உரிய சினம் ஒருருவெடுத்துப் போவது போன்றவனாய், போயினன் - போனான்; (எ-று.)

[1]வீர மனக்கரு மனக்கா முன்னர் என்ற பாடத்துக்கு-வீரத்தை யுடைய அளத்தற்கு அரிய சமுத்திரம்போன்ற அரக்கரெதிரில் என்றுபொருள். இராவணன் தன்னைத் தனியே விசேஷித்துக் கட்டளையிட்டதைச் சம்புமாலி பேருவகைகருதின னென்க. (உ)

௩.—சம்புமாலி பலவகைச் சேனையோடும் புறப்படுதல்.

தன்னுடைத் தானையோடுந் [1]தயமுகன் றருகென் றேய, மன்னுடைச் சேனை யோடுந் [2]தாதையந் தீந்த வாளின், மின்னுடைப் பரவை யோடும் வேறுளோர் சிறப்பின் விட்ட, பின்னுடை [3]யனிகத் தோடும பெயர்ந்தனன் பெரும்போர் பெற்றான்.

(இ - ள்.) பெரும் போர் பெற்றான் - பெரும்போர்செய்யும் பாக்கியத்தை (இராவணனது கட்டளையாற்) பெற்ற சம்புமாலி,—தன்னுடை தானையோடும் - தனக்குஉரியதான சேனையுடனும், தயமுகன் தருக என்று ஏயமன்னுடை சேனையோடும் - இராவணன் '(இவனுடன்) அனுப்புக' என்று (தன்ஏவலாளாக்குக்) கட்டளையிட (அவர்கள் அனுப்பிய) பெருமை பெற்ற சேனையுடனும், தாதை வந்து ஈந்த வாளின் மின் உடை பரவையோடும் - (தனது) தகப்பன் கொடுத்த வாளாயுதத்தினால் விளக்கம்பெற்ற சேனா சமுத்திரததோடும், வேறு உளோர் சிறப்பின் விட்ட பின்னுடை அனிகததோடும - மற்றுமுள்ளவர்களான நண்பர்கள் மிகுதியாக அனுப்பிய பின்னுமுள்ள சேனையோடும, பெயர்ந்தனன் - போனான்; (எ - று.)

சம்புமாலி போர்க்குப் போனதைக் கீழ்ககவியிற் சுருங்கக்கூறிய கவி, இச்செய்யுளில் விவரித்துக் கூறின ரென்க. இவ்வாறு வேறுபாடு இருத்தலால்தான், கூறியதுகூற லென்னுங் குற்றத்திற்கு இடமில்லை யாயிற்று. தாதைவந்தீந்த பரவை, மின்னுடைப் பரவையென இயையும். வந்து - சொல் விழுகாட்டால் வந்தது. சம்புமாலி யென்பவன், பிரகத்தனது புத்திரன். பி - ம்:—[1] தாதிரக்கிழவர் சூழ்ந்த. [2]அரசுவந்தீந்தவாளின். [3]சேனை சூழச சென்றனன். (௩)

௪.—இதுவும், அடுத்த கவியும் - அந்தச் சம்புமாலியோடு நால்வகைச் சேனையுஞ் சென்றதைத் தெரிவித்தும்.

உருமொத்த முழக்கிற் செங்கண் வெள்ளொளிற் றேரடை வெற்
[1]பருமித்த கிரியிற் றோன்றும் வேழமும் பதுமத் தன்னை[நிப்
னிருமித்த வெழிலி முற்றிற் றென்னலா யிலைய சேமிச்
சொரிமுத்த [2]மாலை சூழ்ந் [3]துகிற்கொடித் தடக்தேர் சுற்ற,

இது முதல் ஆறு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உரும் ஒத்த முழக்கின் - இடிபோன்ற பிளிறலையும், செங கண் (கோபக்குறி தோன்ற)சிவந்துள்ள கண்களையும், வெள் எயிறு-வெண்மை யான தந்தங்களையும், ஓடை நெற்றி - பட்டமணிந்த நெற்றியையு முடைய, கிரியில் தோன்றும் - மலைபோலத்தோன்றுகின்ற, பருமித்த - (போர்க்குரிய) அலங்காரத்தைக் கொண்ட, வேழமும - யானைகளும,—பதுமத்து அணனல் நிருமித்த எழிலி முற்றிற்று எனனல் ஆம் நிலைய-தாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவன் படைத்த மேகநிரை ஒருங்கே முடிவாக வந்துள்ளன என்று சொல்லத்தகு நிலைமையையுடைய, நேமி - சக்கரங்களையும், சொரி முத்தம் மாலை சூழும் துகில் கொடி - (ஒளியைச) சொரிகின்ற முத்துமாலைகள் சூழப் பெற்ற துகிற்கொடியையு முடையனவான, தட தேர்-பெரியதோகளும், சுற்ற சூழ்ந்துவரவும்,—(எ - று.)—'குழுவ' என அடுத்த கவியோடு தொடரும்.

முழக்கின் செங்கண் வெள்ளெயிறு ஓடைநெற்றி வேழம் எனவும் பருமித்த வேழம எனவும், கிரியிற்றோன்றும வேழம் எனவும் இயை யும். எழிலி - சாதி யொருமை; எழு மேகங்களும் ஒருங்கே திரண டாற்போன்ற தோற்ற முடையன, அங்கு வந்த தேர்களென்க அன்றி, வேழமும் எழிலி முற்றிற் றென்னலாம நிலையினவாக என்று உரைப் பினுமாம். இனி, மூன்றுமடிக்கு - மேகமண்டலம்வரையில் உயர்ந் துள்ள தென்று சொல்லத்தக்க தன்மையைக்கொண்ட சக்கரத்தையுடைய தடந்தேர் என்னனுமாம். நிலையதோ, நேமித்தேர், துகிற்கொடித்தோ என இயையும். நேமிசொரி என்ற இயல்பான பாடத்துக்கு - கடல் வெளிப்படுத் தின முத்தம் என்க. பி - ம்:—[1]பருமித்த கதியிற்றோன்றும். [2]வெண் கோட்டுச்செந். [3]நிறுகொடித் தடந்தேர். (அ)

இ. காற்றினை மருங்கிற் கட்டிக் கால்வகுத் துயிருங் கூட்டிக்
கூற்றினை யேற்றி யனன குலப்பரி குழுவக் குன்றின்
றூற்றினி னெழுப்பி யாண்டுத் தொகுத்தன சுழலைபங் கண்ண
வேற்றினப் புலியே றென்ன [1]வியந்தெழும் பதாதி யீட்டம்.

(இ - ள்.) காற்றினை - காற்றை, மருங்கில் கட்டி கால் வகுத்து - நான்குபக்கத்திலுங கட்டி (நான்கு) கால்களையு முண்டாககி, உயிரும கூட்டி உயிரையுஞ் சேர்த்து, கூற்றினை ஏற்றி அன்ன - யமனை மேலே யேற்றப் பெற்றுப் போன்றுள்ள[வீரரைத் தம்மீது கொண்ட], குலம் பரி-நல்ல சாதிக் குதிரைகள், குழுவ - கூட்டமாகத தொடரவும்,—வியந்து எழும் பதாதி ஈட்டம் - மனமகிழ்ச்சி கொண்டு (போர்கருப்) புறப்படுகின்ற காலாள்களின் கூட்டம, குன்றின் தூற்றினன் எழுப்பி ஆண்டு தொகுததன - மலைப்புதர் களிலிருந்து எழுப்பி அந்தப் போர்களததிலே ஒன்று சோததனவும், சுழல் வைங்கணன - சுழல்கின்ற பசுமையான கணகளை யுடையனவுமான, வேறு இனம் புலி ஏறு என்ன - வெவ்வேறு வகையான ஆணபுலிகள் போலத் தோன்றும்,—(எ - று.) 'வயங்க' என அடுத்த கவியோடு தொடரும்.

குதிரைகள் வேகமாகச் செல்வன வென்பதை விளக்க, 'காற்றினை மருவகிற் கட்டிக் கால்வகுத் துயிருகூட்டி யன்னர் குலப்பரி' என்றார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. வீரர்கள் அத்தப்பரிகளின் மேலே புள்ளா ரென்பதை விளக்க, 'கூறறினை யேற்றியன்ன' என்ற உபமான முகத்தாற் கூறினார்; இது பிறிதுமொழிதலணி. கொடிமைவலிமைகள் நிறைந்தன வென் பதை விளக்க, பதாதிகூட்டத்துக்கு, நூற்றினின் எழுப்பித் தொகுத்த புலிக் கூட்டத்தை உவமைகூறினார். 'புலியேறென்ன' என்பதை வியந்து எழும் என்பதனோடு சேர்த்து புலியேறு போலப் போரில் உற்சாகத்துடனே யெழு கின்ற பதாதிகூட்டம், தழுவ எனக்கூட்டி முடித்தலுமாம். அன்றி புலியே றென்னப் பதாதியீட்டம் வியந்தெழும் என முற்றாகி யுரைப்பாருமுளர். பி - ம்:—[1]வியந்தது. (ஙு)

ஈ.—பலவகை ஆயுதங்கள் நிறைதல்.

தோமர முலக்கை கூர்வாள் சுடர்மழு குலிசந் தோட்டி
தாமரந் தின்ற கூர்வே [1]றழலொளி வட்டஞ் சாபங்
[2]காமர்தண் டெழுக்கள் காந்துங் கப்பணங் கால பாச
மாமரம் வலயம் வெங்கோன் முதலிய வயங்க மாதோ.

(இ - ள்.) தோமரம்—, உலக்கை—, கூர் வாள்—, சுடர் மழு - ஒளி வீசகின்ற எரியிரும்புப்படை, குலிசம் - வசிராயுதம், தோட்டி - அங்குசம், அரம் தின்ற கூர் வேல் - அரத்தினால் அராவப்பட்ட கூரிய வேலாயுதம், தழல் ஒளி வட்டம் - நெருப்பின் சுவாலையையுடைய சக்கரம், சாபம் - வில், காமர் தண்டு - அழகிய தண்டாயுதம், எழுக்கள் - இருப்புத்தண்டுகள், காந் தும் கப்பணம் - பிரகாசிகின்ற இருப்பு நெரிஞ்சிமுட்படைகள், காலபாசம் - யமனுக்கு உரிய கயிறறின்வடிவான ஆயுதங்கள், மா மரம் - பெரிய மரங் கள், வலயம் - வளையங்கள், வெம்கோல் - கொடிய அம்புகள், முதலிய - முதலிய பலஆயுதங்கள், வயங்க-விளங்கவும்,— (எ - று.)—'திசைதொறுஞ் செறிவசெல்ல' என அடுத்த கவியோடு தொடரும். தாம் - அசை. மாது, ஓ - ஈற்றசை. பி - ம்:—[1]சக்கரமெழுக்கள். [2]காமரத்தண்டுபிண்டி. (சு)

எ.—பல்வகைப் பதாகைகள் செறிதல்.

எத்திய வயில்வேல் குந்த மெழு[1]க்கழு முதல வேந்திக்
குத்திய திளைப்ப மீதிற் குழுவின [2]மழைமாக் கொண்மூப்
[3]பொத்துகு பொருவி னன்னீர் சொரிவன போல போலச்
சித்திரப் பதாகை யீட்டந் திசைதொறுஞ் செறிவ செல்ல.

(இ - ள்.) எத்திய - கொண்டாடுதற்கு உரிய, அயில் வேல் - கூரிய வேலாயுதங்களும், குந்தம் - எறியீட்டிகளும், எழு - இருப்புத்தடிகளும், கழு - கழுக்களும், முதல - முதலிய ஆயுதங்களை, ஏந்தி - தரித்து,— (சேனைகள்), குத்திய - (அவ்வாயுதங்களாற்) குத்தி, திளைப்ப - நெருங்கிச் செல்ல,—(அப்போது), மீதில் குழுவி மழை மா கொண்மூ -

வானத்தின்மீது கூட்டமாகக் கூடியுள்ள (சேனைகளின் ஆயுதங்களாற் குத்தப்பட்ட மழைபெய்யும்) தருணத்திலுள்ள கரிய மேகம், பொத்து உகு பொருஇல் நல் நீர் சொரிவன் போவ போல - (ஆயுதங்கள்) பொத்தின (வாயினின்று) வெளியில் வருகிற ஒப்பற்ற நலலநீரைச சொரிவனவாயச செல்வன போல, சித்திரம பதாகை ஈட்டம் - விசித்திரமான கொடிகளின்கூட்டம், திசைதொறும செறிவ செல்ல - எல்லாத்திசைகளிலும நெருங்கப்பெறறன வாய்ச செல்லவும,—(எ - று.)—'பல்லியமதுகைப்ப' என அடுத்த கவியோடு தொடரும.

சேனைகளில் நெருங்கப் பதாகைகள் பிடிக்கப்பட்டிச்சென்ற தோற்றம் - சேனைகள் தாங்கிச செல்லுகின்ற ஆயுதங்களாற பொத்துண்ட மேகங்கள் நீர்த்தாரைகளைச சொரிந்துகொண்டு செல்லுகின்ற தோற்றத்தைப் போலுமென்று வருணித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பலநிறமுள்ளனவாக வானத்தில்தோன்றும் பதாகைகட்கு மேகமும், சேனைகள் தாங்கிசசெல்வனவான அப்பதாகைகள்கட்டப்பட்டுள்ள மூங்கில்களுக்குப் பொதுண்ட வாயினின்று சொரியும் நீர்த்தாரைகளும் உவமையாம். வரிசை வரிசையாகச சேனையின் பதாகைகள் சென்றுகொண்டே யிருப்பதனால், நீர்த்தாரைகளைச சொரிகின்றனவாய்ச செல்வனவான மேகங்கள் உவமையாயின. சேனை செல்லுமிடத்தில் பெருந்தாரையாக நீர் வீழ்வதற்குக் காரணங கூறவேண்டி, 'அயில்வேல் குந்தமெழுக்கழுமுதல வேந்திக் குத்திய' என்றார். எதிய - எத்திய: விகாரம்; இனி, எத்திய - பகைவரை எமாற்றிகொல்லவல்ல என்றுமாம். பி - ம்:—[1]முதலனையவெந்தீ. [2]மதமாக்கொண்டல், மழைமாக் கொண்டல். [3]பொத்துகள். (எ)

அ.—அச்சேனையில் பலவித ஒலிகள் மிதுதல்.

பல்லியந் துவைப்ப நன்மாப் பணிலங்கண் முரலப்பொற்றேர்ச்
சில்லிக ளிடிப்ப வாசி சிரித்திடச் செறிபொற் றாரும்
[1]வில்லுநின் றிசைப்பயானை முழக்கம்விட் டார்ப்பவிண்டோ
பொல்லொலி வானிற் றேவ ருரைதெரி வொழிக்க மன்னே

(இ - ன்.) பல்லியம் துவைப்ப - பலவகை வாததியங்கள் ஒலிகளவும், நல் மா பணிலங்கள் முரல - அழகிய பெரிய சங்குகள் சதிகளவும், பொன் தேர் சில்லிகள் இடிப்ப - பொன்மயமான தேரின் சக்கரங்கள் (புரண்டு செல்வதனால்) ஒலியையுண்டாக்கவும், வாசி சிரித்திட - குதிரைகள் கனைக்கவும், செறி பொன் தாரும் வில்லும் நின்று இசைப்ப - நெருங்கிய பொன்மயமான கிணிகிணிமாலைகளும் வில்லும் நிலையாகநின்று ஒலிகளவும், யானை விட்டு முழக்கம் ஆர்ப்ப - யானைகள் வாய்விட்டுப் பிளிறுதலைச செய்யவும், விண் தோய் ஒல் ஒலி - (இவ்வாறு தோன்றி) ஆகாயத்திற சென்ற ஒல்லென்னும் ஒலிகள், வானில் தேவர் உரை தெரிவு ஒழிக்க - வானத்திலுள்ள தேவர்கள் (ஒருவரோடொருவர் பேசும்) பேசசைத தெரியவொட்டாமல் அடகி [illegible] (இ - று.)

—மன், ஓ - ஈறறசைகள், 'அன்னவன் சேனைசெல்ல' என மேலிற் றொடரும்.

பூமியில் அரக்கர் சேனையின் தேர்ன்றிய பல்லக்கை யொலிகள் வானத்திரசென்ற தேவர்கள் ஒருவரோடொருவர் பேசுகையைத் தெரியவொட்டாமற் செய்தன எனத் தொடர்புயர்வுநவிற்சியணி வகையால் ஒலியின் மிகுதியைத் தெரிவித்தார். பி - ம்: —[1]வில்லினின்றார்ப்பு மானைமுழக்கும். (அ)

கூ.—தூளியினெழுச்சி.

மின்னகு கிரிகள் யாவு மேருவின் விளங்கித் தோன்றத்
தொன்னகர் பிறவு மெல்லாம் பொலிந்தன துறக்க மென்ன
வன்னவன் சேனை செல்ல வார்கலி யிலங்கை யாய
பொன்னகர் [1]தகர்ந்து பொங்கி யார்த்தெழு தூளிபோர்ப்ப.

(இ - ள்) அன்னவன் - அந்தச் சம்புமாலியினது, சேனை — செல்ல - செல்லுதலினால் — ஆர்கலி—, இலங்கை ஆய பொன் நகர் கடலினாற் சூழப்பட்ட இலங்கையென்கிற பொன்னகரமானது, தகர்ந்து - உடைபட்டு, பொங்கி ஆர்த்து எழு - மிகவும் நிறைந்து கிளம்புகின்ற, தூளி - புழுதி, போர்ப்ப - (தமமீது) படிதலால்,—மின் நகு கிரிகள் யாவும் - ஒளிவிளங்குகின்ற சாதாரண மலைகளெல்லாம், மேருவின் விளங்கி தோன்ற பொன்மயமான மேருமலைபோலப் பிரகாசங்கொண்டு விளங்குதலால், தொல் நகர் பிற எல்லாமும் - பழைய மற்றைப் பட்டணங்களெல்லாம், துறக்கம் என்ன - பொன்னுலகமான சுவர்க்கலோகம்போலவும், பொலிந்தன - விளங்கின.(எ - து.)

சம்புமாலியின் சேனைகள் பொன்மயமான இலங்காபட்டணத்திற் சென்றபோது, அவைகளின் தான்களினால் மேலெழுந்த பொற் புழுதிகள் படிதலால் சாதாரண மலைகளும் மேருமலைபோல் விளங்க, அப்புழுதி படியப் பெற்ற நகரங்கள் யாவும் சுவர்க்கலோகம்போலப் பொன்மயமாய்விளங்கின வென்பதாம்: பிறிதின்குணம்பெறலணி. பி - ம்:—[1]துறந்து. (கூ)

கஅ —சம்புமாலியின் நால்வகைச் சேனையின் அளவு.

ஆயிர மைந்தொ டைந்தா மாழியந் தடந்தே [1]ரத்தேர்க்
கேயின விரட்டி யானை யானையி னிரட்டி பாய்மா
போயின பதாதி சொன்ன புரவியி னிரட்டிபோலாந்
தீயவன் றடந்தோ சுற்றித் தெற்றெனச் சென்ற சேனை.

(இ - ள்.) தீயவன் தட தேர் சுற்றி தெற்றென [illegible] கொடியவனான சம்புமாலியினது பெரியதேரைச் சூழ்ந்துகொண்டு விரைவாகச்சென்ற அரக்கசேனை (யின் அளவைப்பற்றிச் [illegible]) அம் தட தேர் - சக்கரங்களையுடைய அழகிய பெரிய தேர்கள் [illegible] ஐந்து ஆயிரம் ஆம் - பதினாயிரமாகும்; [illegible] தியயானைகள், அ தேர்க்கு இரட்டி - அத்தேர்களைவிடவும் இரட்டிப்

புல்லதாகும் [இருபதினாயிரமாகும்], பாய மா - குதிரைகள், யானையின் இரட்டி - யானைகளின் தொகையிலும் இருமடங்கு ஆகும் [நாற்பதினாயிர மாகும்]; போயின பதாதி - சென்ற காலாட்சேனை, சொன்ன - (கீழ்க) கூறப்பட்ட, புரவியின் - குதிரைகளின் தொகையைக்காட்டிலும், இரட்டி - இருமடங்காகும். [எண்பதினாயிரமாகும்]; (எ - று)—போல், ஆம அசைகள். பி - ம் —[1]தேருக்கு. (கo)

கக.—தேர்வீரரின் வருணனை

வின்மறைக் கிழவர் நானா விஞ்சையா வரத்தின் மிக்கார்
வன்மறக் கண்ண ராற்றல் [1]வரம்பிலா வயிரத் தோளார்
தொன் [2]மறக் குலத்தர் தூணி தூக்கிய புறத்தர் [3]மார்பின்
கன்மறைத் தொளிருஞ் செம்பொற் கவசத்தர் கடுந்தே ராட்கள்.

(இ - ள்.) கடு தேர் ஆட்கள் - (அசுரசேனையிலுள்ள) கொடியதேர்வீரர்கள்,—வில் மறை கிழவர் - தநுர்வேதத்தில் தெரிந்தவர்கள்; நானாவிஞ்சையர் - பலவித மாயவித்தையில் வல்லவர்கள்; வரத்தின் மிக்கார் - மிக்க வரம் பெற்றவர்கள்; வல்மறம் கண்ணர் - கொடிய வீரத்தைத் தெரிவிக்கின்ற கண்களையுடையவர்கள்; வரம்பு இலா ஆற்றல் வயிரம் தோளார் - அளவில்லாத வலிமையையுடைய உறுதியான தோள்களை யுடையவர்கள். தொல மறம் குலத்தர் - பழமையான வீரக்குடியிற் பிறந்தவர்கள்; தூணி தூக்கிய புறத்தர் - அம்பறாத்தூணி கட்டிய முதுகையுடையவர்; மார்பின் கல் மறைத்து ஒளிரும் செம்பொன் கவசத்தர் - மார்பாகிய கலலை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொண்டு விளங்குகின்ற செம்பொற்கவசத்தைப் பூண்டவர்கள்; (எ - று.)—பி - ம்—[1]வரம்பிலார். [2]மறைக [3]மார்பாக. (கக)

கஉ.—யானைப்பாகரின் வருணனை.

பொருதிசை யானை யூரும் [1]புனிதனைப் பொருவும் பொற்பா
சூரிபடைத் தொழிலு [2]மறறை யங்குசத் தொழிலுந் தொக்கார்
கிருதியிற் பிறந்த வீரா [3]நெருபபிடைப் பரபபுங் கண்ணா
பரிதியிற் பொலியு மெய்யா படுமதக களிற்றின் பாகர்.

(இ - ள்.) மதம் படு களிற்றின் பாகர் - மதம்பொருந்திய ஆண்யானையின் பாகர்கள்,—பொரு திசை யானை ஊரும் புனிதனை பொருவும் பொற்பா - போர்செய்யுந் தன்மையுள்ள (கிழக்குத்) திக்கின் யானையாகிய ஐராவதத்தை ஏறிச் செலுத்துகின்ற பரிசுத்தனான இந்திரனையொத்த அழகுடையவர்கள்; சூரி படை தொழிலும் மறறை அங்குசம் தொழிலும் தொக்கார் - வாள் முதலிய ஆயுதவித்தையையும் மறறை அங்குசத்தைக் கொண்டு யானையோட்டுந்தொழிலையும் ஒருங்கேயுணர்ந்தவர். கிருதியின் பிறந்த வீரர் - கிருதியென்னுந் தென்மேற்குத் திக்குபாலகனது வமிசத்திற் பிறந்த வீரர்கள்; நெருப்பு இடை பரப்பும் கண்ணா-நெருப்புப்பொறிகளை இடையிடையே பரப்புகின்ற கண்களையுடையவர்கள்; பரிதியின் பொலியும் மெய்யர் - சூரிய

[illegible] விளக்கும் உடம்பையுடையவர்கள்; (எ-று.)—பி-ம்:—[1]புனிதரைப். [2]மறறம். [3]செருப்பெனவிட்டுக். (கஉ)

கஉ.—குதிரைவீரர்களின் வருணனை.

[1]ஏரெழு திசையுஞ் சாரி பதினெட்டு மியல்பி னெண்ணிப்
போர்செழு [2]படையுங் கற்ற விந்தகப் புலவர் போரிற்
றேர்செழு மறவர் யானைச் சேனைகள் [3]சிரத்திற் சென்றுந்
தார்செழு புரவி யென்னுந் தம்மனந் தாவப் [4]போனார்.

(இ-ள்.) ஏர் செழு திசையும் - அழகு மிகுந்த (தாம் செல்லவேண்டிய) இடத்தின் தன்மையையும், சாரி பதினெட்டும் - பதினெட்டுச் சாரியையும், இயல்பின் எண்ணி - நன்றாக ஆராய்ந்து, போர் செழு படையும் கற்ற - போர்க்குச் சிறந்த ஆயுத வித்தையையும் கற்றறிந்த, விந்தகம் புலவர் - விவேகத்திற் சிறந்த அறிஞரான குதிரை வீரர், செழு தேர் மறவர் - சிறந்த தேர் வீரர்களும், யானை சேனைகள் - யானை வீரர்களும், (ஆகிய இவர்களது), சிரத்தில் - தலைகளிலே, செல்லும் - (தமது வேகத்தினால்) அடியைவைத்துச் செல்லுகின்ற, தார் செழு புரவி என்னும் - கிணகிணிமாலையையணிந்த குதிரைகளென்கிற, தம் மனம் - தமது மனங்கள், தாவ - பாய்ந்துசெல்ல, போரில் போனார் - யுத்தகளத்திற் சென்றார்கள்; (எ-று.)

குதிரைச்சாரிகள் பதினெட்டையும் ஆயுதவித்தைகளையும் கற்றுத் தேர்ந்த குதிரைவீரர், தம்மனவிருப்பத்தின்படி தாவிச் செல்லுங் குதிரைகளின்மீது அந்த யுத்தகளத்திற் சென்றன ரென்பதாம். 'குதிரைவீரர் போனார்' என்று இந்தச் செய்யுளில் கூறியதற்கு ஏற்ப, கீழிரண்டு செய்யுட்களிலும் தோவீரர் யானைவீரர்களும் போரிற் போனா ரென்று கொள்க. தேர் யானை இவற்றைவிட விஞ்சிய வேகமுடையன குதிரைக ளென்பதும், யானை தேர்களால் வழி மறைக்கப்பட்டிருப்பினும் அதனைப் பாராட்டாது அவற்றைத் தாண்டிச்செல்லுந் திறத்தன குதிரைக ளென்பதும் மூன்றாமடியிற் பெறப்படும். "ஆர்ந்து கதியும் பதினெட்டுச் சாரியையும்" என்றார், புறப்பொருள் வெண்பாமாலையிலும். பி-ம்:—[1]ஈரெழு. [2]புடையும். [3]திறத்தில். [4]போவார்.

கஎ.—நால்வகைச் சேனையோடு சம்புமாலி போர்க்குச் செல்லுதல்.

அங்கெடுந் தானை சுற்ற வமரரை யச்சஞ் சுற்றப் [illegible]
பொன்னெடுந் [1]தேரிற் போனான் பொருப்பிடை நெருப்பிற்
தன்னெடுங் கண்கள் கார்த்தத் [2]தாழ்பெருங் கவச [3]மார்பின்
[4]மின்னிட வெயிலும் வீச வில்லிடு மெயிற்று வீரன்.

(இ-ள்.) வில் இடும் எயிறு வீரன் - ஒளி வீசுகின்ற கோரப்பற்களையுடைய வீரனான சம்புமாலி,—அங்கெடு தானை சுற்ற - அவ்வாறான பெரிய நால்வகைச்சேனைகளும் (தன்னைச்) சூழ்ந்துவரவும், அமரரை அச்சம் சுற்ற - தேவர்களைப் பயம் சுற்றிக்கொள்ளவும்,—தன் நெடு [illegible] - தனது நீண்டகண்கள் கோபத்தால் ஜ்வலிக்கவும், மார்பின் தாழ் பெருங்கவசத்தின் இடை

வெயிலும் வீச - மார்பில்தங்கிய பெரியகவசம் பிரகாசித்து மின்னலும் வெயிலும் போன்ற ஒளியை வீசவும், பொருப்பிடை நெருப்பின் - மலையினிடையிலேயுள்ள நெருப்புப்போல, பொங்கி - சினங்கொண்டு, பொன் நெடு தேரில் போனான் - பொன்மயமான பெரியதேரில் ஏறிச்சென்றான்; (எ - று.)

சம்புமாலி போகும மிடுக்கைக் கண்டு, ஒருகால் அனுமானுக்குத் தோல்வி நேருமோ? என்று தேவர்கள் அஞ்சுவாராயினரென்க தேரின்நடுவிலே மிக்க சினங்கொண்டு தங்கிநிருந்த சம்புமாலிக்குப் பொருப்பி னிடையி லுள்ள நெருப்பு உவமையாம். பி - ம்.—[1]தோகளுன்றிப்பொருப்படை. [2]தாழ்தரு. ஆர்ப்ப. [4]மின்னிடை. (கச)

கரு.—அநுமான் அரக்கர்வரவை யெதிர்நோக்கிக்கொண்டு அவ்வனத்தின் வெளி வாயிலில் நிற்றல்.

நந்தன வனத்து ணின்ற நாயகன் றூதன் றானும்
வந்திலர் ராக்க ரென்னு மனத்தினன் வழியை நோக்கிச்
சந்திரன் முதல வான மீனெலாந் தழுவ நின்ற
விந்திர தனுவிற் றோன்றுந் தோரண [1]மிவர்ந்து நின்றான்.

(இ - ள்.) நந்தனவனத்துள் நின்ற நாயகன் தூதன்தானும் - (அந்த வேளையிலே) அசோகவனமெனனுஞ் சிங்காரதோட்டத்துள்ளிருந்த இராமதூதனாகிய அநுமானும்,—அரக்கர்வந்திலர் என்னும் மனத்தினன் - (நம்மோடு போர்செய்யுமாறு இன்னும்) இராக்கதவீரர் வரவிலலையே யென்ற கருத்தை யுடையவனாய், வழியை நோக்கி - (அவர்கள் வருவதற்குஉரிய) வழியை எதிர்நோக்கிக்கொண்டு, சந்திரன் முதல - சந்திரன்முதலாகிய கிரகங்களும், வானம் மீன் எலாம் - வானத்திலுள்ள நட்சத்திரங்கள் எல்லாமும், தழுவ நின்ற - எட்டும்படி உயர்ந்துநிற்கின்ற, (பல்வகையிரத்தினங்கள் இழைத்திருப்பதனால்), இந்திர தனுவின் தோன்றும் - (பலவகை நிறங்களையுடைய) இந்திரதனுசுபோல விளங்குகின்ற, தோரணம் - (அப்பூஞ்சோலையின்) வெளிவாயிலில், இவர்ந்து நின்றான் - ஏறியிருந்தான்; (எ - று.)—மூன்றுமடி - அந்த வாயிலின் உயரச்சிமிகுதியை விளக்கும். பி - ம்:—[1]ஏறி. (கரு)

கசு.—அங்குநின்ற அநுமான் வருணனை.

கேழிரு மணியும் பொன்னும் விசும்பிருள் கிழித்து [1]நீக்கும்
ஆழிரண் கதிர்க ளோடுந் தோரணத் தும்பர் மேலான்
ஊழிரண் கதிர்க ளெல்லாந் தோறறிடச் சுடருஞ் சோதி
யாழியி னடுவட் டோன்று [2]மருக்கனே யனைய னானான்.

(இ - ள்.) கேழ் இரு மணியும் பொன்னும் விசும்பு இருள் கிழித்து நீக்க வல்லசிறப்புள்ள பெரியஇரத்தினங்களும் பொன்னும் வானத்திலுள்ள இருளைப் பிளந்து நீக்குகின்ற, ஊழ இரு கதிர்களோடும் - முறைமுறையே தோன்றுகின்ற (அந்தஇரத்தினம பொன் என்றவற்றின் மிக்கசிரணங்களுடனே கூடிய, தோரணத்து உம்பர் - அந்தத்

தோரணவாயிலின் (நடு) மேலே, மேலான் - மிக்க மேலான் இடத்திலுள்ள வனாகிய அனுமான்—சூழ் இருக கதிர்கள் எல்லாம் தோற்றிட - (தன்னைச்) சுற்றிலுமபெரிய ஆயிரங்கிரணங்களும் தோன்றி விளங்க, ஆழியின் நடுவண் தோன்றும்- சமுத்திரத்தின் நடுமுகட்டிலே காணப்படுகின்ற, சுடரும் சோதி அருக்கன் - பேரொளியையுடைய சூரியனை, அலையன் ஆனான் - ஒப்பவனானான்; (எ- று.)

மிகவும் பரந்த தோரணத்திற்கு அவ்வாறுள்ள சமுத்திரம், தோரண வாயிலிலிழைத்த பொன் மணி இவற்றின் ஒளி தன்னைச்சுற்றி விளங்கத் தான் அவற்றினால் சூழப்பட்டு அத்தோரணத்தின் நடுமுகட்டிலிருக்கும் அனுமானுக்குத் தனது ஆயிரங்கிரணங்களும் தன்னைச்சுற்றி விளங்கச் சமுத்திரத்தின் நடுமுகட்டில் தோன்றுஞ் சூரியனும் உவமையாம். தன்மைத்தற் குறிப்பேற்றவணி. சுடருஞ்சோதி யென்பதை ஆழிக்கே கூட்டி - இரத்தினாகரமென்றுபோற்றும்படி பலவகையிரத்தினங்களினால் பேரொளி விளங்கும் பரந்த கடல் என்று பொருளுரைத்து, பொன் இரத்தினம் என்ற இவற்றினால் விளங்குந் தோரணத்துக்கு அக்கடல் உவமையெனவும், தன்னுடல் முழுவதும் புனைபட்டு அதனாற் செந்நிறங்கொண்டு விளங்கும் அனுமானுக்குத் தன் செந்நிறக் கதிர்களோடுவிளங்கும் பாலசூரியன் உவமையெனவும் கூறலுமாம். பி - டீ.—[1]வீங்க. [2]அருக்கனும். (கக)

கஎ.—அனுமான் ஆரவாரித்தல்.

[1]செலலொடு மேகஞ் சிந்தத் திரைக்கடல் [2]சிலைப்புத் தீரக்
[3]கல்லளை கிடந்த நாக முயிரொடு விடமுங் காலக்
கொல்லிய லரக்கர் நெஞ்சிற் [4]குடிபுக வச்சம் வீரன
வில்லென [5]விடிக்க விண்ணோ நடுக்குற வீர னார்த்தான்.

(இ - ள்.) மேகம் செல்லொடு சிந்த - மேகங்கள் இடியுடனே சிதறவும், திரைகடல சிலைப்பு தீர - அலைகளையுடைய கடல் (தன்) பேரொலியடங்கவும, கல் அளைகிடந்த நாகம் உயிரொடு விடமும் கால - மலைகளின் நடுவே யிருக்கும புற்றுக்களிலுள்ள பாம்புகள் (அஞ்சித) தமது உயிருடனே விடத்தையுங் ககக்கவும், கொல இயல் அரக்கர் நெஞ்சில் அச்சம் குடி புக - கொல்லுந்தன்மை பொருந்திய அரக்கருடையமனத்திலே பயம் நிலைபாயுண்டாகவும், விண்ணோ நடுக்குற - தேவர்களும (திடீரென்று கேட்டதனால்) மனம் துணுக்குறவும், வீரன் வில் என இடிக்க - மகாவீரனான ஸ்ரீராமன் வில்நாணியைத தெறித்ததாறபோன்ற பேரொலியுண்டாம்படி, வீரன் - அனுமான், ஆர்த்தான்—; (எ - று.)—[1]சொல்லிடு. [2]இரைப்பு. [3]கல்லுழை. [4]குடற்புகவச்சமான. [5]வேட்க. (கஎ)

கஅ.—அனுமான் தோள் கொட்டுதல்.

நிறைறன திசைக்கண் வேழ நெடுங்களிச் செருக்கு நீங்கத்
தெறுதிசை நமனு முள்ளர் துணுக்கெனச் சிந்தி வானிற்

பொன்றலின் மீன்க ளெல்லாம் பூவென வுதிரப்பூவுங்
குன்றமும் பிளக்க வேலை துளக்குறக் கொட்டி னான்றோள்.

(இ - ள்.) திசைக்கண் நின்றன வேழம நெடுங களிசெருகுகு நீங்க - எட்டுத் திக்குக்களிலும நிற்பனவான யானைகள் (தமது) மிகக மதககளிப்பு நீங்கவும், தென்திசை நமனும உள்ளம் சிதகி துணுக்கென - தெற்குததிக்குப் பாலகனுகியயமனும மனம முறிந்து திடுககிடவும்,— (அப்போது தோன்றிய அதிரசியினுல), வானில் பொன்றல் இல மீன்கள் எல்லாம் பூவென உதிர - ஆகாயததில அழிவிலலாமல் நிற்கின்ற நட்சத்திரகளெல்லாம் நிலை பெயர்ந்து மலாகளுதிரவதுபோலக் கீழே சிந்தவும,—பூவும் குன்றமும பிளக்க - பூமியும மலைகளும் பிளவுபடவும் வேலை துளக்குற - சமுத்திரம் நிலைகலங்கவும, தோள் கொட்டினன - (தன்) தோளை (அநுமான்) தட்டினன்; (எ - று.) (கஉ)

கசு — அரக்கரும் ஆரவாரித்து, அநுமானுள்ள இடந்துக்குச் செல்லமுடியாது நிற்றல்.

அவ்வழி யரக்க ரெல்லா மலைநெடுங் கடலி னார்த்தார்
செவ்வழிச் சேற [1]லாற்றார் பிணப்பெருங் குன்றந தெற்றி
வெவ்வழி குருதி வெள்ளம் புடைபிடைந் துயர்ந்து வீங்க
வெவ்வழிச் சேறு மென்றார் தமருடம் பிடறி வீழ்வார்.

(இ - ள்.) அவ்வழி - அப்போது, அரக்கா எல்லாம - (பொரசசென்ற) அரககர் யாவரும, அலை நெடுங கடலின் ஆர்த்தார் - அலைகளையுடைய நீணட கடல்போல ஆரவாரித்து, தமர் உடமபு இடறி வீழ்வார் - தமது உறவினர்களினுடைய பிணங்களின்மேல இடறிவிழுபவரகளாய, பிணம் பெருங்குன்றம் தெற்றி - (போகின்ற வழியிலே) பெரியபிணமலைகள கிடந்து தமமை (ப்போகவொட்டாது) தடுததலாலும, வெம வழி குருதிவெள்ளம் புடைபிடைந்து உயர்ந்து வீங்க-வெமமையுடனே பெருகுகின்ற இரததப்பெருக்கு (ப்போகும்) இடங்களிலெல்லாம நெருங்கி மிகுப் பெருகுவதனுலும், செம்வழி சேறல் ஆற்றா - (அநுமானுள்ளவிடததுக்குச செமமையான வழியிலே செல்லமுடியாதவர்களாய [நேர்வழிகிடைககப பெறுதவர்களாய], எவ்வழி சேறும்என்றார் - நாம எந்தவழியாற் போய்ச்சேருவோ மென்று (செல்லும் வழி தெரியாது) திகைததார்கள்; (எ - று) பி - ம்:—[1] செலலார. (கசு)

உ0 — சம்புமாலி அணிவகுத்துநெருங்க, அநுமான் மகிழ்தல்.

ஆண்டுநின் றரக்கன் வெவ்வே றணிவகுத் தனிகந் தன்னை
மூண்டிரு புடையு முன்னு முறைமுறை முடுக[1] வேவித்
தூண்டினன் றானுந் திண்டேர் தோரணததிருந்த [2]தோன்றல்
வேண்டிய தெதிர்ந்தா னென்ன வீங்கினன்விசயத்திண்டோள்.

(இ - ள்.) அரக்கன் - சம்புமாலி,— ஆண்டுநின்று - அவகிருந்து, அணிமகன்னை - (தன்) சேனையை, வெவ்வேறு அணி வகுத்து - வெவ்வேறு அணியாகப் பிரித்து, இரு புடையும் முன்னும் முறை முறை

மூன்று முறை வலி - (அநுமானது) இரண்டு பகுதிகளிலும் எதிரிலும்முறை மூன்றாயக மூன்று விரையும்படி கட்டவையிட்டு, தானும் நின்றேர் தூண்டினன் - தானும் (தனது) வலியதேரைச் செலுத்திக் கொண்டு சென்றான்; (அப்பொழுது), தோரணத்து இருந்த தோன்றல்-(அரக்கர்வருவதைக்கண்ட) தோரணத்தின்மீதிருந்த அநுமான், வேண்டியது எதிர்ந்தான் என்ன-தான் எதிர்பார்த்ததைப் பெற்ற காரணத்தினால், விசயம் நிண தோள் வீங்கினன்-வெற்றிபொருந்திய வலியதோள்கள் பூரிக்கப்பெற்றான்; (எ - று.)

அநுமான் அரக்கர்வருகையை எதிர்பார்த் திருந்தானாதலால், 'வேண்டியதெதிர்ந்தானென்ன' என்றார் போரெனில் தோள் பூரித்தல், வீராக்கு இயல்பு. பி - மீ.—[1]மூச. [2]வீரன். (உ0)

உக —அநுமானும் போர்க்குச் சித்தனாக நிற்றல்.

ஐயனு மமைந்து நின்றா னாழியா னளவி னாம
கெய்சுடர் விளக்கிற் றோன்று நெற்றியே நெறறி யாக
மொய்ம்மயிர்ச் சேனை பொங்க முர[1]ணயி லுகிர்வாண் மொய்த்த
கைகளே கைக ளாகக் கடைக்கூழை திருவா லாக.

(இ - ள்.) ஐயனும் - பெரியோனாகிய அநுமானும், ஆழியான் - சக்கராயுதபாணியாகிய திருமாலினது, (அடிமையைக் குறிப்பிகின்ற) அளவின் நாமம்-பெருமையையுடைய திருமணக்காப்பு, நெய் சுடர் விளக்கின் [விளக்கு சுடரின்] தோன்றும் - நெய்தோய்ப்பெற்று அதனிடையே தோன்றுகின்ற தீபச்சுவாலைபோல விளங்குகின்ற, நெற்றியே - தனது நெற்றியே, நெற்றி ஆக - முன்னணிச சேனையாகவும்,—மொய் மயிர் சேனை பொங்க முரண் அயில் உகிர் வாள் மொய்த்த கைகளே - நெருங்கிய மயிர்த்திரள் சிலிர்க்கும்படி மாறுபடுகின்ற கூரிய நகங்களாகிய வாளாயுதங்கள் நெருங்கப்பெற்ற (தனது) இரண்டுகைகளே, கைகள் ஆக - பக்கச சேனையாகவும், திருவால் - (தனது) சிறந்தவால், கடைகூழை ஆக - பின்னணிச சேனையாகவும் (அமைந்துநிற்க), அமைந்து நின்றான் - (இவ்வாறு தன்னையே அணிவகுத்துக் கொண்டு போர்க்குச) சித்தமாய்நின்றான்; (எ - று.)

அநுமான் தன்உறுப்புக்களாற் பொருதற்குச் சித்தனாக இருந்தமை, கவி, சமபுமாலி அணிவகுத்துவருவதை நோக்கி அநுமானும் தன் உறுப்புக்களையே அணிவகுத்து நின்றானாக வருணித்தார்; உருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணி. திருமண்காப்பினிடையே ஸ்ரீசூர்ணம் செந்நிறமாகப்பிரகாசிப்பதுநோக்கி வெண்ணிறமுள்ள திருமண்காப்புக்குத் தோய்க்கநெயையும், ஸ்ரீசூர்ணத்துக்கு அந்த நெய்யினிடையே மேலாகி விளங்குகின்ற தீபச்சுவாலையையும் உவமைகூறினார். (ஸ்ரீவைஷ்ணவர் இவ்வாறு எங்கும் கூறாதிருக்கவும் கம்பர் இவ்வாறு கூறியதனால், கம்பர் திருமண்காப்புதரிக்கின்ற வைணவரென்பது, பெறப்படும்.) மயிர்ச்சேனை - மயிர்த்தொகுதி. கைந்நகங்களாற் பொருகையில் அப்போது தோன்றுகின்ற

மனவெழுசியால் மயிர் சிலிர்ப்பதுபற்றி, 'மயிர்சேனைபொங்க' என்றார். 'மயிர்ச்சேனைபொங்க' என்பதற்கு - மயிராகிய நடுவணிசேனைகள் பொங்கவும் என்று கூறுவது சிறக்குமேற் கொள்க. பி - மீ:—[1]உகிரயில்வாள். (உக)

உஉ.—அரக்கர்கள் அநுமான்மேற் படைக்கலங்களை விடுதல்.

வயிர்கள்வால வளைகள் விம்ம வரிசிலை சிலைப்ப மாயப்
பயிர்களாரப் பெடுப்ப மூரிப் பல்லியங் [1]குமுறப் பற்றிச்
செயிர் கொள்வா ளரக்கர் சீற்றஞ் செருக்கினர் படைகள் [2]சிந்தி
வெயில்கள்போ லொளிகள் வீச வீரனமேற் கடிதுவிட்டார்.

(இ - ள்.) செயிர் கொள் வாள் அரக்கர் - பகைமைகொண்ட கொடிய அரக்கர்கள், சீற்றம் செருக்கினர் - கோபம் விஞ்சியவராய,—வயிர்கள் வால் வளைகள் விம்ம - ஊதுகொம்புகளும் வெளியசங்கங்களும் ஒலிக்கவும,—வரி சிலை சிலைப்ப - கட்டமைந்த விற்கள் நாணொலியையுண்டாக்கவும், மூரி பல் இயம் குமுற - பெரிய பலவாததியங்கள் கோஷிக்கவும, மாயம் பயிர்களை ஆரப்புஎடுப்ப - வஞ்சனைக்குணமாகிய பயிர்கள் (மகிழ்ச்சிகொண்டு) ஆரவாரஞ் செய்யவும்,—படைகள் - ஆயுதங்களை, பற்றி - கையிலெடுத்து, வெயில்கள்போல் ஒளிகள் வீச—, வீரன்மேல் - அனுமான்மேல், கடிது சிந்தி விட்டார் - விரைவாக நாற்புறமும் பிரயோகித்தார்கள்; (எ - று.)

அரக்கர் வலிமைகொண்டு பொருவதுபற்றி மாயப்பயிர்கள் ஆர்ப்பெடுக்கலாயின. பி - மீ:—[1]முழங்கப். [2]சிந்த. (உஉ)

வேறு.

உங.—இதுமுதல் மூன்றுகவிகள் - அநுமான் உக்கிரமாகப் பொருதலைக் கூறும்.

கருங்[1]கட லரக்கர்தம படைக்கலங் கரத்தாற
பெருங்கட லுறப்புடைத் திறுத்துகப் பிசைந்தான்
விரிந்தன பொறிக்குல நெருப்பென வெகுண்டான்
டிருந்தவன் கிடந்ததொ ரெழுத்தெரிந் தெடுத்தான்.

(இ ள்.) ஆண்டு இருந்தவன் - அந்தத் தோரணதத்தின்மீது இருந்த அனுமான்,—கரத்தால்-(தன்) கைகளாலே, கருங் கடல் அரக்கர்தம் படைக்கலம் - கருநிறமுள்ள கடல்போற் பரந்த அரக்கவீரர்களெறிந்த ஆயுதங்களை, பெருங் கடல் உற புடைத்து - பெரிய கடலிற்போய் விழுமபடி அடித்தும், இறத்து - முறித்தும், உக - (இவ்வாறு பயனிலவாகச) சிதறிப்போம்படி, பிசைந்தான் - வலியழித்து விட்டான்; (அச்செய்கையால), பொறி குலம் விரிந்தன - தீப்பொறிகளின் கூட்டம் எங்கும் பரவலாயின; (அப்போது அவன்), நெருப்பு என வெகுண்டு - பற்றியெரிகிற அகினிபோலப் பெருஞ் சினம் மூண்டு, கிடந்தது ஓர் எழு - அங்குக்கிடந்த ஒரு இருப்புத் தடியை, தெரிந்து எடுத்தான - கணைடெடுத்தான்; (எ - று)

அதுதோரணதத்தின் குறுகலே பாயசசபடுகின்ற பரிக மெனபபடும்இருப்புஉழலைமரத்தைப போரசெய்யுமாறு அனுமான் எடுத்துகொண்டன னென்னலாம். பி - மீ:—[1]கழல். (உங)

உச. இருந்தன னெழுந்தன னிழிந்தன னுயர்ந்தான்
திரிந்தனன் புரிந்தன னெனநனி தெரியார்
விரிந்தவர் குவிந்தவர் விலங்கினர் கலந்தார்
பொருந்தினர் [1]நெருங்கினர் களப்படப் புடைத்தான்.

(இ - ள்) 'இருந்தனன் - (தோரணத்தின்மேல்) உட்கார்ந்திருந்தான், எழுந்தனன்—,இழிந்தனன் - கீழிறங்கினான், உயர்ந்தான்—, திரிந்தனன் - (தம்நடுவே) திரிந்தான், புரிந்தனன் - போர்புரிந்தான்,' என - என்று, நனி தெரியார் - (அவ்வநுமானைப்பற்றி) நன்கு தெரிந்து கொள்ளமாட்டாதவர்களாய்,—விரிந்தவர் பரவிநின்றவர்களும், குவிந்தவர் - ஒருங்கு திரண்டிருந்தவர்களும், விலங்கினர் - ஒதுங்கி நின்றவர்களும், கலந்தார் - (சண்டையில்) மூண்டு நின்றவர்களுமாக, பொருந்தினர் - பொருந்தின அரக்கர் யாவரும்,—நெருங்கினர் களம் பட - போர்க்களத்தில் நெருங்கி யழியும்படி, புடைத்தான் - (அநுமான் அந்த எழுவைக்கொண்டு) அடித்துத் தள்ளினான்; (எ - று.)—பி - ம்:—[1]பிரிந்தனர். (உச)

உரு. எறிந்தன வெய்தன விடியுரு [1]மெனமேற்
செறிந்தன படைக்கல மிடக்கையிற் [2]சிதைத்தான்
முறிந்தன தெறுங்கரி முடிந்தன தடந்தோர்
மறிந்தன பரிநிரை வலககையின் [3]மலைந்தான்.

(இ - ள்.) (அநுமான்),—எறிந்தன - (தன்மீது) வீசியெறியப்பட்டனவும், எய்தன - எய்யப்பட்டனவுமாகிய, இடி உரும் என மேல் செறிந்தன படைக்கலம் - பேரிடிபோலத் தன்மேல் நெருங்கிவந்தனவான ஆயுதங்களையெல்லாம், இடக கையில் சிதைத்தான - (தனது) இடக்கையால் அழித்துத் தள்ளுபவனாய், வலககையில மலைந்தான் - தன் வலககையினால் போரசெய்யலானான் (அதனால்), தெறும கரி முறிந்தன - அழிகுந் தன்மையுள்ள யானைகள் முறிந்துபோயின; தட தோ முடிந்தன - பெரிய தோள்கள சிதைந்து போயின; பரி நிரை மறிந்தன - குதிரைகளின் கூட்டம் கீழ்வீழ்ந்தழிந்தன.

அநுமான் தன் பகைவர் வீசும் படைக்கலங்களையெல்லாம் தன் இடக்கையால் போக்கிவிட்டு, தன் வலக்கையிற் கொண்டுள்ள படைக்கலத்தால் தான் எதிரிகளின கஜரததுரககங்களை யழித்தானென்க. இதனால், அநுமானது இருகைகளும் ஒருசேரப் போரில் விரைந்து தொழில் செய்த திறமை பெறப்படும பி - ம்:—[1]என்றென [2]சிதைப்பான். [3]மலைத்தான். (உஇ)

உசு.—யானைகள் அழிதல்.

இழந்தன நெடுங்கொடி யிழந்தன விருங்கோ
டிழந்தன நெடுங்கர மிழந்தன வியன்றா
ளிழந்தன முழங்கொலி யிழந்தன மதமபா
டிழந்தன பெருங்கத மிருங்கவு ளியானை

(இ - ள்.) (அநுமானால் அடிக்கப்பட்டு), இருங கவுள் யானை - (வீரர்கள் ஏறிவந்த) மதமபெருகுங கன்னத்தையுடைய யானைகள், நெடுகொடி -

(தம்மேற் பிடிககப்பட்ட) பெரிய கொடிகளை, இழந்தன—; இருகோடு-பெரிய தந்தங்களை, இழந்தன—; நெடு கரம - பெரியகைகளை, இழந்தன—; வியன் தாள் - பெரிய கால்களை, இழந்தன—; முழகு ஒலி - வீரிடுகின்ற ஒலியை, இழந்தன—; மதம் பாடு - மதம் ஒழுகுதலை, இழந்தன—; பெரு கதம - மிகக கோபதததை, இழந்தன—; (எ - று.)—யானையின் மீது கொடியெடுத்தல் வழக்கம். சொற்பொருட்பின்வருநிலையணி. (உசு)

உஎ.—தேர்கள் அழிதல்.

நெரிந்தன தடஞ்சுவர் நெரிந்தன பெரும்பார்
நெரிந்தன நுகம்புடை நெரிந்தன [1]வதன்கா
னெரிந்தன கொடிஞ்சில்க ணெரிந்தன வியன்றார்
நெரிந்தன கடும்பரி நெரிந்தன நெடுந்தேர்.

(இ - ள்.) (வீரர்களேறிவந்த தோகளினுடைய), தட சுவர் - பெரிய சுற்றுப்பக்கங்கள், நெரிந்தன - கொருங்கிப் போயின; பெரு பார் - பெரிய பார்கள், நெரிந்தன—; நுகம் - நுகத்தடிகள், புடை - பக்ககளிலே, நெரிந்தன—; அதன் கால் - அத்தேர்களின் சக்கரககள், நெரிந்தன—; கொடிஞ் சில்கள் - மேல்தட்டுக்கள, நெரிந்தன—; வியன்தார் - (தேரில்கட்டப்பட்டுள்ள) சிறந்த சிறுமணிகள், நெரிந்தன—; கடும் பரி - (அவற்றிறபூட்டப்பட்டுள்ள) வேகமான குதிரைகள், நெரிந்தன—; (முடிவாக), நெடு தேர் - பெரிய தேர்களே, நெரிந்தன—; (எ - று.) அதன் - சாதியொருமை. பார் - அடிப் பரப்பென்பாரு முளர். பி - ம்:—[1]அகந்தான். (உஎ)

உஅ.—குதிரைகள் அழிதல்.

ஒடிந்தன வுருண்டன வுலந்தன [1]புலந்த
விடிந்தன வெரிந்தன நெரிந்தன [2]வெழுந்த
மடிந்தன மறிந்தன முறிந்தன [3]மலைபோற்
படிந்தன முடிந்தன [4]கிடந்தன பரிமா.

(இ - ள்.) ஒடிந்தன - கழுத்து ஒடிந்தன (சில); உருண்டன - உருள லாயின (சில); உலந்தன - உயிர்போயின (சில); புலந்த - துன்பப்படுவன (சில); இடிந்தன - இடிபட்டன (சில); எரிந்தன - வெநதுபோயின (சில); நெரிந்தன - எலும்புகள் கொருங்கிப்போயின (சில); எழுந்த - மேலிடத்துச சென்றன (சில); மடிந்தன மறிந்தன - இறந்துபோய்க கீழ்விழுந்தன (சில). முறிந்தன மலை போல் படிந்தன - கால்முறிந்தனவான (சில) குதிரைகள் (இந்திரனால் இறகுமுறிக்கப்பட்ட மலைகள்போலப்) பூமியிற் படிந்துகிடந்தன; பரிமா - வீரர்களேறிவந்த) குதிரைகள், கிடந்தன முடிந்தன - (இவ்வாறு தம்முடைய கதி) முடியப்பெற்றுக் கிடந்தன; (எ - று.)—பி - ம்:—[1]பொலந் தன்ன. [2]எழுந்தான். [3]வயப்போர். [4]கிடந்தபரிமாவே. (உஅ)

உகூ.—பதாதிகள் அழிதல்.

வெருண்டனர் [1]வியர்த்தனர் விழுந்தன ரெழுந்தார்
மருண்டனர் மயங்கினர் [2]மறிந்தன ரிறந்தா
ருருண்டன ருலைந்தன [3]ருழைத்தனர் பிழைத்தார்
சுருண்டனர் புரண்டனர் தொலைந்தனர் மலைந்தார்.

(இ - ள்.) மலைந்தார்-(அநுமானோடு வந்து) போர் செய்த பதாதிகளிற் பலர்,—வெருண்டனர் - (அநுமானது திறலைக் கண்டு) அச்சங்கொண்டு, வியர்த்தனர் - கொண்டாடினவர்களாய், விழுந்தனர் எழுந்தார் - (மூர்ச்சித்துக்) கீழே வீழ்ந்து (பிறகு) தெளிந்தெழுந்து, மருண்டனர் - மருட்சி கொண்டு, மயங்கினர் - புத்திமாறுட்டமடைந்து, உலைந்தனர் - வருந்தி, மறிந்தனர் - மீண்டும்போர்செய்பவராய், இறந்தார் - உயிரொழியப்பெற்று, உருண்டனர் - தலையுருண்டார்கள்; பிழைத்தார் - (அவ்வாறு இறவாமல்) உயிர்தப்பியவர்கள்,—உழைத்தனர் - மிக்க வருத்தமடைந்து, சுருண்டனர் - (தமது உறுப்புகள்) சுருளப்பெற்று, புரண்டனர் தொலைந்தனர் - பூமியிற் புரண்டவராய் வலிகெட்டுஓடி விட்டனர்; (எ - று.)—பி - ம்:—[1]விழுந்தனர்வியந்தனர். [2]மறந்தனர். [3]உழந்தனர். (உக)

கூ௦.—இதுமுதல் ஒன்பதுகவிகள் - அநுமான் போர்செய்தவகையை விவரித்துக்கூறும்.

[1]கரிகொடு கரிகளைக் களப்படப் புடைத்தான்
[2]பரிகொடு பரிகளைத் தலத்திடைப் படுத்தான்
வரிசிலை [3]வயவரை வயவரின மடித்தா
னிரைமணித் தேர்களைத் தேர்களி னிரைத்தான்.

(இ - ள்.) (அநுமான்),—கரி கொடு - யானைகளைக்கொண்டு, கரிகளை - யானைகளை, களம் பட - போர்க்களத்தில் இறந்துவீழும்படி, புடைத்தான் - அடித்துக்கொன்றான்; பரி கொடு பரிகளை தலத்திடை படுத்தான் - குதிரைகளைக்கொண்டே குதிரைகளை அந்தயுத்தபூமியில் வீழ்த்திக்கொன்றான்; வரி சிலை வயவரை வயவரின் மடித்தான் - கட்டமைந்தவில்லையுடைய காலாள் வீரரைக் காலாள் வீரரைக்கொண்டே மடியச்செய்தான்; நிரை மணி தேர்களை தேர்களின் நிரைத்தான் - வரிசையாக மணிகள் கட்டிய தேர்களை(அவ்வாறான) தேர்களைக்கொண்டே அழிந்துகுவித்தான்; (எ - று.)

இந்தச்செய்யுளால், காலாள்களைச் சேனைகளையும் அவர்களையே தன் போர்க்கருவியாகக்கொண்டு, அநுமான் அழித்த தன்மையை விவரித்தார். பி - ம்:—[1]கரியொடு. [2]பரியொடு. [3]வயவரின் வயவர்தம். (கூ௦)

கூக. மூளையு முதிரமு முழங்கிருங் குழம்பாய்
மீளிருங் குழைபடக் கரிவிழுந் தழுந்தத்

தாளொடுந் தலையுகத் தடநெடுங் கிரிபோற
றோளொடு நிருதரை வாளொடுந் துகைத்தான்.

(இ - ள்.) தாளொடு தலை உம உக - காலகளும தலைகளும் சிதறி விழவும், தட நெடு கிரி போல் தோளொடு - பெரிய நீண்ட மலைபோன்ற தோள்களோடும், வாளொடும் - (அவாகையிறகொண்ட) வாளுடனும், மூளையும் உதிரமும் - அவாகளதுமூளைகளும் இரததமும், முழங்கு இரு குழம்பு ஆய் - கொதிக்கின்ற மிக்க குழம்பு ஆகி, மீள் இருங் குழை பட - (கண்டவா அஞ்சி) மீள்கின்ற மிகக குழைசேறாய்விட, (அதில), கரி விழுந்து அழுந்த - யானைகள விழுந்து அழுதுமபடி, நிருதரை துகைத்தான் - இராட்சவீரரைத (தனதுகாலகளால்) துகைதிட்டான், (அநுமான்); (எ - று.)

அநுமான் அரக்கவீரரைத் துகைத்துக கொன்றதனால் அவாகளுடைய மூளையும் இரத்தமும் குழம்புபோன்று யானைகளும் வழுக்கிவீழ்ந்தழுந்துங் குழைசேறாயின வென்க. (௩௧)

௩௨. மல்லொடு மலைமலைத் தோளரை வளைவாய்ப்
பல்லொடு நெடுங்கரப் பகட்டொடும் [1]பருந்தாள்
வில்லொடு [2]மயிலொடும் விறலொடும விளக்குஞ்
சொல்லொடு முயிரொடு நிலத்தொடுந் [3]துகைத்தான்.

(இ - ள்.) (அனறியும் அநுமான்), மல்லொடு மலை மலை தோளரை - வலிமையோடு பொருகின்ற மலைபோன்றதோள்களையுடைய வீராகளை, வாய் வளை பல்லொடும் - (அவர்களுடைய) வாயிலுள்ள வளைந்தபற்களோடும், நெடு கரம் பகட்டொடும் - (அவர்களேறிச்செல்லும்) நீண்ட துதிக்கையையுடைய ஆண்யானைகளோடும, பருதாள் வில்லொடும் அயிலொடும - (அவர்கள்கையிற்கொண்ட) பருமையான அடியையுடைய வில்லுடனும வேலுடனும், விறலொடும் விளிகரும் சொல்லொடும - பராகிரமததோடு கூவுகிற சொற்களுடனும், உயிரொடும் - உயிருடனும் (அழியுமபடி), நிலத்தொடும துகைத்தான் - பூமியோடுபூமியாய் அழுந்த மிதித்தொழிததான்; (எ - று.)

யானைமேல் ஏறிகொணடு வில் வேல் என்னும் படைககலம் ஏந்தி வீரராததுடன் வந்த அரக்கவீரரை, அவருடைய பல் முதலியன வெல்லாம் பொம்படி துகைததுக் கொன்றனன் அநுமா னென்பதாம். பி - ம்—[1]படுத்தான். [2]வாளொடுமவேலொடும், வெயிலொடும்வீரிகரும். [3]தேய்ததான். (௩௨)

௩௩. புகைநெடும் பொறிபுகுந் திசைதொறும் [1]பொலிந்தான்
சிகைநெடுஞ் சுடர்விடுந் தேர்தொறுஞ் [2]சென்றான்
நகைநெடுங் கரிதொறும் பரிதொறுஞ் [3]சரித்தா
னகைநெடும் படைதொறுந தலைதொறு நடநதான்.

(இ - ள்.) புகை நெடும் பொறி புகும திசைதொறும் பொலிந்தான் - புகையோடு கூடிய நீண்ட நெருப்புப்பொறி [கோபாக்கினி] செல்லுமி

டங்களினெல்லாம் போய்விளங்குபவனாகிய அநுமான்,—சிலைநெடுஞ்சுடர் விடுமே தோதொறும் சென்றான் - சிறந்ததையுடைய மிகக்ஒளியை வெளிவீசுகின்ற தோளைதோறும் போனான்; (அன்றியும்), தகை நெடு கரி தொறும் பரி தொறும்சரிந்தான் - தன்னையுடைதனமையுள்ள யானைகளினிடங்களிலும் குதிரைகளினிடங்களிலும் சஞ்சரித்தான்; (அல்லாமலும்), கை நெடு படைதொறும் - வீரர்கள் (கையிற்கொண்ட) விளங்குகின்ற நீண்டஆயுதங்களினிடங்களிலும், தலைதொறும் - (அவர்களது) சிரசிலும், நடந்தான்;—(எ - று.)

முதலடியில் தொகுத்துக்கூறியதை, மற்றைமூன்றடிகளினால் விவரித்துக் கூறின ரெனக். அநுமான் தனது கோபத்துக்கு இலக்கான சதுரங்க சேனைகளிடத்தும் அவற்றை யழித்தெழுகச் சென்றன னென்றவாறு. பி - ம்: —[1]பொலிந்தார். [2]செறிதாள். [3]சலித்தார். (கூகூ)

கூச. வென்றிவெம் புரவியின் வெரிநினும் விரவார்
மன்றலந் தாரணி மார்பினு மணித்தே
ரொன்றினின் றொன்றினு [1]முயர்மத மழைதாழ்
குன்றினுங் கடையுகத் துருமெனக் குதித்தான்.

(இ - ள்.) வென்றி வெம் புரவியின் வெரிநினும் - வெற்றியையுடைய வேகமாகச்செல்லுந்தன்மையுள்ள குதிரைகளின் முதுகுகளிலும், விரவார் மன்றல் அம் தார் அணி மார்பினும் - பகைவரான அரக்கவீரரது நறுமணமுள்ள அழகிய மாலையணிந்த மார்புகளினிடங்களிலும், மணி தேர் ஒன்றினின்று ஒன்றினும் - மணிகளகடடிய தேர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றினிடத்திலும், உயர் மதம் மழை தாழ் குன்றினும் - ஓங்கியுள்ள மதமழைபொழிகின்ற மலைபோன்ற யானைகளினிடங்களிலும், கடை உகத்து உரும் என - யுகாந்தகாலத்து இடிபோல, குதித்தான்—; (எ - று.)

கீழ்ச்செய்யுளிற்கூறியதையே இவரு வேறொருவகையாக விளக்கினார். அநுமான் நாலவகைச்சேனைகளின்மீதும் யுகாந்தகாலத்து இடிவிழுவது போல அவை அடியோடு நாசமாம்படி குதித்தன னென்பதாம். பி-ம்:—[1]மும-

கூரு. பிரிவரு [1]மொருபெருங் கோலெனப் பெயரா
விருவினை துடைத்தவ ரறிவென வெவர்க்கும்
வருமுலை விலைக்கென [2]மதித்தனர் வழங்குந்
தெரிவையா மனமெனக் கறங்கெனத் திரிந்தான்.

(இ - ள்.) (அப்போது அநுமான்),—பிரிவு அரு ஒரு பெருகோல் என (எங்கும்) நீங்காது செல்லவல்ல ஒப்பற்ற செங்கோல்போலவும், பெயரா இருவினை துடைத்தவர் அறிவு என நீக்கமுடியாத (நல்வினை தீவினைஎன்ற) இருவினைகளையும் ஒழித்த பெரியோரது அறிவுபோலவும், எவர்க்கும் வருமுலை விலைக்கு என மதித்தனர் வழங்கும் தெரிவையர் மனம் என - (இன்னார் இன்னையார் என்று பாராமல்) யாவருக்கும் வலர்கின்ற (தமது) மந்தகாசவிலைப்பொருள் பொருட்டே நன்குமதித்துத் தருகின்ற வேசைப்பெண்களின்

மனம்போலவும், கறங்கு என - காற்றாடிபோலவும், திரிந்தான் - (அவ்வரக்கரைக் கொல்லுமாறு) திரிந்துகொண்டிருந்தான்; (எ - று.)

அரசனுடைய செங்கோல், அனைவரையும் காக்கும்பொருட்டு எங்குந் திரிதல் இயல்பு. பெரியோர்களின அறிவு எவ்வளவு நுணணிய பொருளாயினும் அறியுமாறு தட்டுத்தடையின்றிச் செல்லவல்லது. வேசையரது மனம் பணத்தையே பெரிதாக எணணிப் பெரிதுந் திரியுந் தன்மையுள்ளது. காற்றாடியின தனமையோ கணகூடானது. இவைகளெல்லாம் அவ்யுத்தகளத்திலே தட்டுத்தடையின்றிச் சுழனறு சென்றுகொணடிருந்த அனுமானுக்கு உவமையாதறகு ஏறறகும். பி - ம்:—[1]பெருநெடுங்காலெனப். [2]மதித்தவர். ()

௩௬. அண்ணலவ் வரியினுக் கடியவ ரவன்சீர்
நணணுவ ரெனும்பொரு ணைவையறத தெரிபபான
மண்ணினும் விசுமபினு மருங்கினும் [1]வலித்தா
கண்ணினு மனததினுந் தனித்தனி கலந்தான்.

(இ - ள்.) அணணல் - பெருமையிறசிறந்தோனாகிய அநுமான், அ அரியினுக்கு அடியவா அவன் சீர் நணணுவா எனும் பொருள் - (முதற்கடவுளென்று பிரசித்தனான) அந்தத திருமாலின்பகதாகள அவனுடைய சிறப்பை [சாரூபியததை] பபெறுவரென்னும் விஷயத்தை, கவை அற தெரிபபான் - குறறமில்லாமல் (செவ்வனே) தெரிவிப்பவனாய்,—மணணினும் - பூமியிலும், விசும்பினும் - ஆகாயத்திலும். மருங்கினும் - திகுகுகளிலும், வலிததார் கண்ணினும் மனததினும் - வலிமைகொண்டு பொருத அரக்கருடைய கண்ணுக்கு எதிரிலும் மனத்திலும், தனி தனி கலந்தான - தனித்தனியே கலந்து விளங்கினான்; (எ - று.)

திருமாலின் அன்பர் அவனது ஸாரூப்யததைப (ஸாரூப்யம்-ஒத்தவடிவமுடைமை) பெறுவரென்பதை 'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம உபைதி' [பகவானை யடைதலினாற குறறமறறவன் அவனோடு பரம ஸாம்யத்தை அடைவான்] முதலிய ஸ்ருதிவாகியங்களிலும் கூறியுளளமை காண்க "மணியாழி வண்ணனுக் தாரைத் தன்வடிவாக்கு மென்றே, துணியாழிய மறைசொல்லும்" என்றார், பின்னைப் பெருமாளையங்காரும். திருமாலினடியாரககு அப்பரமனது சாரூப்பியம் சித்திகுமென்பதை இந்த உலகததாரும கண்கூடாகக் கணடு அறியுமபடி, அததிருமாலினது அடியவனாகிய அநுமான், அந்தர்யாமியான அததிருமால் எங்கும் பரந்து உறைதல்போல அந்தப்போர்க்களத்தில் எங்கும் தட்டுத் தடையின்றிச் சென்று இருப்பவனாயின னென்றதில், தன் செய்கையால் கற்பொருளைப் பிறருக்குப் போதிப்பதாகிய காட்சியணி காண்க. பி - ம்.—[1]வலிந்தார். (௩௬)

௩௭. கொடித்தடந் தேரொடுங் குரகதக் குழுவை
[illegible]தொரு தடக்கையி [1]னிலத்திடை யரைத்தா

[illegible]

னிடித்துநின் [2]றதிர்கதத் தெயிற்றுவன் பொருப்பைப்
பிடித்தொரு தடக்கையி னுயிருகப் பிழிந்தான்.

(இ - ன்.) கொடி தட தேரொடும் - கொடிகட்டிய பெரியதேருடனே, குரகதம் குழுவை - குதிரைக்கூட்டங்களை, ஒரு தடகையின் - (தனது) பெரிய ஒரு கையால், அடித்து—, நிலத்திடை அரைத்தான் - தரையிலே தேய்த்தான்; கதத்து இடித்து நின்று அதிர் எயிறு உன் பொருப்பை - சினத்தினால் கர்ஜித்து நின்று பேரொலிசெய்கிற தந்தங்களையுடைய மலையைபோன்ற யானைகளை, ஒரு தட கையின் - (தனது) மற்றொருபெரியகை யினால்: பிடித்து—, உயிர் உக - (அவற்றின்) உயிர் போய்விடும்படி, பிழிந் தான்—;(எ - று)—பி - ம்—[1]நிலத்தினிட்டு. [2]எதிர்த்துருத்து. (௩௭)

௩௮ கறுத்தெழு [1]நிறத்தின ரெயிற்றினர் கயிற்றார்
செறுத்தெரி விழிப்பவா சிகைக்கழு வலத்தார்
[2]மறுத்தெழு மறலிக ளிவரென வதிர்ந்தா
ரொறுத்துருத் திரனெனத் தனித்தனி யுதைத்தான்.

(இ - ன்) கறுத்து எழு நிறத்தினர் - கறுத்ததோன்றுகிற நிறமுடை யவர்களும், எயிற்றினா - கோரப்பற்களையுடையவாகளும், கயிற்றார் - பாசா யுதத்தைக் கொண்டவர்களும், செறுத்து எரி விழிப்பவா - கோபித்து நெருப் புப்போலக் கொடுமையாக விழிப்பவர்களும், சிகைகழு வலத்தார் - கூர் நுனியையுடைய கழுவென்னும் படையினாலான வலிமையமைந்தவர்களும், மறுத்து எழுமறலிகள் இவர் என அதிர்ந்தா - பகைமைபாராட்டிக் கிளம்பு கின்ற யமன்களே இவரென்னும்படி பெருமுழக்கஞ் செய்பவர்களுமான அரக்கவீரரை, தனித்தனி—, ஒறுத்து - (தன் கோபத்திற்கு ஏற்கத) தண் டித்து, உருத்திரன் என - (அழித்தற்கடவுளான) சிவன்போல, உதைத் தான் - உதைத்தொழித்தான்; (எ - று)—பி - ம்;—[1] மனத்தினர். [2]வெறுத் தெழு.....எதிர்ந்தா. (௩௮)

௩௯—இதுவும், அடுத்தகவியும் - சேனைகள் அழிந்த தன்மையைத் தெரிவிக்கும்.

சக்கரந் தோமர முலக்கைதண் டயில்வாண்
[1]மிக்கன தேர்பரி குடைகொடி விரவி
யுக்கன குருதியம் பெருந்திரை [2]யுருட்டிப்
புக்கன கடலிடை நெடுங்கரப் பூட்கை.

((இ - ன்.) சக்கரம்-சக்கரங்களும், தோமரம்-தோமரங்களும், உலக்கை - உலக்கைகளும், தண்டு - தடிகளும், அயில் வாள் - கூரியவாள்களும், மிக் கன தேர் - மிகப்பலவான தேர்களும், பரி - குதிரைகளும், குடை - குடை களும், கொடி - கொடிகளும், விரவி - ஒன்று கலந்து, உக்கன - (போர்க் களத்து) வீழ்ந்துகிடந்தன; குருதி பெரு திரை - (அந்தப்போர்க்களத்திலுண் டான) இரத்தவெள்ளத்தின் பெரியஅலைகள், நெடு கரம் பூட்கை - நீண்ட துதிக்கையை யுடைய யானைகளை, உருட்டி - உருட்டிக்கொண்டு, கட

லிடை புக்கன - சமுதிரத்தினிடததுப போய்ச சோநதன; (எ - று.)—பி - ம்:—[1]மிககவன். [2]உருட்டப். (நகூ)

சா0. எட்டின [1]விசும்பினை [2]யெழுப்பட வெழுந்த
முட்டின மலைகளை முயங்கின திசையை
யொட்டின [3]வொன்றையொன் [4]றூடடித் துடைந்து
தட்டுமுட் டாடின தலையொடு தலைகள்.

(இ - ள்.) எழு பட எழுந்த - (அநுமான்வீசிய) எழுவென்னும் படைக் கலம் பட்டதனால (உடமபையிட்டு வேறாகி) எழுந்தனவான, தலைகள்,—விசும்பினை எட்டின - ஆகாயததை யளாவினவும், மலைகளை முட்டின - மலைகளின்மீது மோதியனவும், திசையை முயங்கின - திகுக்களைத் தழுவியனவும, ஒன்றை ஒன்று ஒட்டின-ஒன்றோடொனறு சோந்தனவுமாகி, ஊடு அடித்து உடைநது - போர்க்களத்தில் அடிபட்டு உடைநதுபோய், தலையொடு தட்டு முட்டு ஆடின - (முன்னமே போர்க்களததில் விழுந்து கிடந்த) சிரசுகளோடு தட்டுமுட்டுப் பொருள்போல இஙகுமஙகுஞ் சிதறிக கிடந்தன; (எ - று.)—பி - ம்:—[1]விசுமபிடை. [2]எழுபடை. [3]ஒனறோடொன்ற [4]ஊட்டிடத்துதைந்து, ஊடடிததுதைந்து. (சா0)

வே று.

சக.—சம்புமாலி தனிப்பட்டுச் சீற்றங்கொள்ளுதல்.

காளை காவல் வேழக் [1]கணஙகள் கதவா ளரிகொனற
வாளை யெய்தத் தனியே நின்ற மதமால் வரையொப்பான்
றேனை புரைகண் கனலே சொரியச் [2]சீற்றஞ் செருக்கினான்
றானை யானான் சம்பு மாலி காலன் [3]றன்மையான்.

(இ - ள்.) காலன் தமமையான் - யமன்போன்ற கொடியதன்மையை யுடையவனாகிய, சம்புமாலி—,—கதம் வாள் அரி கொன்ற காளை காவல் வேழம் கணஙகள் வாளை எயத - கோபததையும கொடுமையையு முடைய சிஙகத்தினாற் கொல்லப்பட்டனவாய்க காட்டையே (தஙகட்டு உரிய) வாழிடமாகக்கொண்ட யானைக்கூட்டங்கள் வினனுலகததைச சேர [இறக்க],—தனியே நின்ற - தனிப்பட்டு, நின்றமதம்மால் வரை ஒப்பான் - மதமயககஙகொண்ட மலைபோன்ற யானையை யொத்து, தானை ஆனான் - (தன்னோடு வந்தவரெல்லாம் இறக்கத்) தான் ஒருவனே எஞ்சி நின்றவனாய, தேனை புரை கணகனலேசொரிய சீற்றம செருக்கினான் - தேன்போலசசிவந்த கண்கள் நெருப்புப்பொறியை வெளிப்படுததச சினம் விஞ்சினான்; (எ - று.)

அனுமானால தன்னோடு வந்தவாயாவரும கொல்லப்பட்டுத் தான் தனிததுநின்ற சமபுமாலிககு - சிஙகத்தினால் தன்னுடைய யூதங்களெல்லாம் கொல்லப்பட்டுத் தான் தனிததுநின்ற யூதபதி உவமையாகும். பி - ம்:—[1]கணஙகளுக்கதவாளரிகன்ற. [2]சீற்றத்தருக்கினால். [3]போன்ற தீமையான். (சக)

௪௨.—சம்புமாலி முயன்று போர்க்கு விரைதல்.

காற்றிற் கடிய கலினப் புரவி நிருதர் களத்துக்கா
ராற்றுக் குருதி நிணத்தோ டடுத்த வள்ளற் பெருங்கொள்ளைச்
சேற்றிற் செல்லாத் தேரி னாழி யாழு நிலைதேரா
வீற்றுச் செல்லும் வெளியோ வில்லை யளியன் விரைகின்றான்.

(இ - ன்) காற்றின் கடிய கலினம் புரவி நிருதர் களத்து உக்கார் - காற்றைக் காட்டிலும் விரைந்து செல்வனவான கடிவாளம் பூண்ட குதிரைச சேனையையுடைய இராக்கதவீரர்கள் போர்க்களத்தில் மாண்டார்கள்; குருதி ஆறு நிணததோடு அடுத்த - (அவருததோன்றிய) இரததப்பெருக்கு நிணததோடு சேர்ததனால்லுண்டான, பெரு கொள்ளை அள்ளல் சேற்றில் - மிகவும் அதிகமாகவுள்ள குழைசேற்றிலே, செல்லா - செல்லமாட்டாமல், தேரின் ஆழி ஆழும - (தனது) தேர்ச்சக்கரமகள் புதைகின்ற, நிலை - தன்மையை, தேரா - தேர்ந்தும், வீற்று செலலும் - (அவ்விடததைவிட்டுத) தனிப்பட்டுச செல்லகூடிய, வெளியோ-வெற்றிடமோ, இல்லை—; (இவ்வாறு இருககவும்), விரைகின்றான் - (போர்க்கு அந்தச்சம்புமாலி) விரைபவனானான்; அளியன் - (இவன் மிகவும்) இரகததக்கான்; (எ - று.)

கூடவந்தவர்கள் யாவரும் இறந்தொழிய, தனது ஒற்றைத் தேரும் நிணச்சேற்றிற் செல்லமாட்டாமற சகரம புதையாநிற்க, விரைந்து செல்லுதற்கு உரிய வெற்றிடம் ஒன்றும கிடையாமலிருக்கையில, தன் மனம் போர்க்கு விரைகின்ற சம்புமாலியின நிலைமைககு இரகி, கவி 'அளியன்' என்றார். (௪௨)

௪௩.—அநுமான் சம்புமாலியினிடத்து இரக்கங்காட்டிக் கூறுதல்.

ஏதி யொன்றாற் றேரு மஃதா லெளியோ ருயிர்கோட
னீதி யன்றா லுடன்வந் தாரைக் காக்கு நிலையில்லாய்
சாதி [1]யன்றேற் பிறிதென் செய்தி யவர்பின் றனிநின்றாய்
போதி யென்றான் பூத்த மரம்போற் புண்ணாற் பொலிகின்றான்.

(இ - ன்) பூதத மரம் போல் புண்ணால் பொலிகின்றான் - பூப்பூத்துள்ள மரம்போல (அரக்கர்தன்மீதுஎறிந்த படைக்கலங்களால்தோன்றிய) புண்களால் விளகுபவனான அனுமான்,—(அந்தச்சம்புமாலியை நோக்கி), 'ஏதி ஒன்று - (உனக்குஉள்ள) ஆயுதமும் ஒன்றே; தேரும் அஃது - தேரும் அவ்வாறானதே (ஒன்றேயுள்ளது); உடன் வந்தாரை காக்கும் நிலைஇல்லாய் - கூடவந்தவரைககாப்பாற்றும வல்லமையில்லாதவனான நீ, அவர் பின் தனிநின்றாய் - அவர்இறந்தபிறகு நீ தனிப்பட்டு நின்றுவிட்டாய்; (நீ என்றேனும் இப்போது போரசெய்ய வருவாயானால்) சாதி - இறப்பாய்; (இதுநிச்சயம்); அன்று எல் பிறிது என் செய்தி - இறப்பதல்லாமல் வேறு என்ன செய்யமாட்டுவாய்? எளியோர் உயிர் கோடல் - எளிமைப்பட்ட (வலிகுறைந்த) (உனனைப்போனற) வரின் உயிரை வாங்குதல், நீதி அன்று - நியாயமன்று;

(ஆதலால் இப்போது உன்னை விடுகின்றேன்); போதி - (நீ) திரும்பிச் செல்வாய்,' என்றான் - என்று (இரகசுதர்) தோன்றக் கூறினான்; (எ - று.)—மூன்றாவது ஆல் - தேற்றம். மற்றவை இரகசுதம்.

அநுமான் தனிப்பட்டு வந்த அரக்கச் சம்புமாலியினிடத்து இரக்கங் கொண்டு போர் செய்வதை நிறுத்திச் செல்லும்படி கூறினனென்க. இங்கனம் பகைவனிடத்து அருள்கொண்டு அவனை விடுதல் தழுஉச்சி யென்னும் புறத்துறையாம். இதனால், இவ்வநுமானது கருணை விளங்கும். பி - ம்:—[1]அன்றே. (சுரு)

சுச.—சம்புமாலி சினந்து அநுமான்மீது பல அம்புகளெய்தல்.

நன்று நன்றுன் கருணை யென்னு நெருப்பு [1]நகநக்கான்
பொன்று வாரி னொருவ னென்றாய் போலு மெனையென்னு
வன்றிண் சிலையின் வயிரக் காலால் வடித்திண் சுடர்வாளி
யொன்று பத்து நூறு நூறு யிரமு முதைப்பித்தான்.

(இ - ள்.) (சம்புமாலி அநுமானை நோக்கி), 'உன் கருணை - நீ என் மீது காட்டும் இரக்கம், நன்று நன்று - மிக நன்றாயுள்ளது'! என்னு - என்று சொல்லி, நெருப்பு உக நக்கான் - நெருப்புவெளிப்படச் சிரித்தவனாய், 'எனை பொன்றுவாரின் ஒருவன் என்றாய் போலும் - என்னைப் போரிலிறப்பவருள் ஒருவனென்று எளிதாக நினைத்தாய் போலும்', என்னு - என்று கூறி,—வல் திண் சிலையின் வயிரம் காலால் - மிகவும் வலிய வில்லினது உறுதி பொருந்திய தண்டத்தின் வலிமையால், வடிதிண் சுடர் வாளி - காய்ச்சி யடித்துக் கூர்மைசெய்தலையுடைய வலிய ஒளியுள்ள அம்புகள், ஒன்று பத்து நூறு நூறாயிரமும் - ஒன்றும் பத்தும் நூறும் நூறாயிரமு மென்ற கணக்குப் படும்படி, உதைப்பித்தான் - செல்லும்படி செய்தான்; (எ - று.)

'நீ என் விஷயத்திற் கருணையுள்ளவன்போற் பேசியது, என மனத்திற் பொத்தி நான் வருந்துதற்காகவே யல்லது நல்ல எண்ணத்தினாலன் றென்பது தெரிகின்றது; மேலும், என்னை மற்றவர்போலவே எளிதிலழிக்கத்தக்க வனென்று அலட்சியமாகக் கருதினாய் போலும்' என்று சினந்து அநுமான் மீது பல அம்புகளையேவினன் சம்புமாலி யென்க. தநூத்தண்டம் உறுதியாக இருந்தால்தான் மேன்மேலும் அம்புகளைத் தொடுத்து விடுக்க இயலுமாதலால், 'சிலையின் வயிரக்காலால்' என்றார். பி - ம்:—[1]நகை. (சுச)

சுரு.—அநுமான் சம்புமாலியெய்த அம்புகளை எழுவால் விலக்குதல்.

செய்தி செய்தி சிலைகைக் கொண்டால வெறுங்கை திரிவோரை
நொய்தின் வெல்வ தரிதோ வென்னு முறுவ லுகநக்கா
னய்ய னங்கு மிங்குங் காலா லழியு மழையென்ன
வெய்த வெய்த பகழி யெல்லா மெழுவா [1] லகல்வித்தான்.

(இ - ள்.) (சம்புமாலியைநோக்கி), 'சிலை கை கொண்டால் - (நீ) வில்லைக் கையிற்கொண்டால், வெறு கை திரிவோரை - (ஆயுதமில்லா

மல்) வெறுங்கையோடு திரிபவர்களுடன், செய்தி செய்தி - நன்றுபோர் புரிவாய்; (இப்போது நான் வெறுங்கையுடனிராமல் எழுவைக் கொண்டிருத்தலால் என்னுடன் உன்னாற்போர்முடியாது;) சொய்தின் வெல்வது அரிதோ- (கையில் எழுவைக்கொண்டுள்ள நான் உன்னை) எளிதாக வெல்வது அருமையான செயலோ?' என்று - என்று (தன் வீரம்தோன்றச்) சொல்லி, முறுவல் உக நக்கான் - பற்கள் வெளித்தோன்றச் சிரித்தவனாகி, அம்மான் - அநுமான்,—காலால் - காற்றினாலே, அகலும் இக்கும் அழியும் - நாற்புறமும் சிதறிப்போகின்ற, மழை என்ன - மழைபோல, எய்த எய்த பகழி எல்லாம் - (சம்புமாலி தன்) மேலெய்த அம்புகளை யெல்லாம், எழுவால் - (தன்கையிற் கொண்ட) பரிகத்தால், அலைவிததான் - (தன்மீதுபடாது) அப்பாற்போகும்படி செய்தான்; (எ - று)

இனி, சிலையைக் கைகொண்டால் - கைக்கொண்டிருத்தலால், சிராயுதபாணியாகிய என்போல்வாரை விரைவில் வெல்வது (உன்போல்வார்க்கு) அருமையோ? [அருமையன்று]; ஆதலால், நீ நனகு போர் புரிக என்று, சிராயுதனாயிருக்குந் தன்மீது சம்புமாலி அம்பை யெய்ததற்காக அவனை அநுமான் பரிகசித்துக் கூறியதாகக் கருத்துக கொள்ளவுமாம். இங்ஙனம் கருத்துக் கூறுமிடத்துச் சமபுமாலி அம்பை எய்யத்தொடகுகையில் அநுமான் எழுவைக் கைகொள்ளாதிருந்து பிறகு அதனைக் கைக்கொண்டனனென்றுகொள்க. பி - ம்:—[1]எழுவிததான். (௪௫)

௪௬.—சம்புமாலி சினந்து அனுமான்மையிலிருந்த எழுவை அறுத்துவீழ்த்துதல்.

முற்ற [1]முனிந்தா னிருதன் முனியா முன்னும் பின்னுஞ்சென்
றுற்ற பகழி யுறுது முறியா வுதிர்கின றதையுன்னாச
சுற்று நெடுந்தே ரோடடித் தொடர்ந்தான் றொடருந் துறைகாணான்
[2]வெற்ற வெழுவை மழுவா யம்பா [3]லறுத்து வீழ்த்திலான்.

(இ - ள்) நிருதன்-சமபுமாலியெனனும் அரகக்கன், முற்ற முனிந்தான்-மிகவும் கோபங்கொண்டான்; முனியா - (அவ்வாற) கோபித்து, முன்னும் பின்னும் சென்று உறற பகழி உறுது முறியா உதிர்கின்றதை உன்னா - தன்னாறபிரயோகிக்கப்பட்டு முன்னும்பின்னும் [பலஇடங்களிலும்] (அநுமான்மேல்) நெருங்கிய அம்புகள் (அவனைத் தாக்கமபட்டாமல்) முறிந்து கீழ்வீழ்வதை நினைத்து, சுற்றும் நெடு தேர் ஓட்டி தொடர்ந்தான் - (அவ்வநுமானைச) சுற்றிலும் தனது பெரியதேரைச செலுத்திநெருங்கப் பாய்ந்து, தொடரும் துறை காணான் - (அவனை) நெருங்கிச்செல்லும் வழியைப் பெறாமல், வெற்ற எழுவை - (இதுவரையிலும்) வென்றவந்த அந்தப்பரிகத்தை, மழு வாய் அமபால் அறுத்து வீழ்தலிலான்-மழுப்போன்ற நுனியையுடைய அம்பினால் அறுத்துத் தள்ளினான்; (எ - று.)

அநுமானைத் தேரினால் தொடரும் வழி கிடைக்காமைக்குக் காரணம், எனகும் பிணக்குவியல் செறிந்திருந்த வென்க. வெற்ற - வென்ற என்பதன்

வலித்தல், வெற்றம்என்றே ஒருசொல் கொள்ளினுமாம; வெற்றியென்று பொருள். பி - ம்:—[1]முனிந்த. [2]வெறறியெழுவைப்பிறைவாய். [3]இறுத்து.

சஎ.—அநுமான் சம்புமாலியைக் கொல்லுதல்.

சலித்தா னையன் [1]கையா லெயயுஞ் சரததை யுகசசாடி
யொலித்தா ரமரா [2]கண்டா ராரபபத தேரி னுட்புக்குக்
கலித்தானை [3]சிலையைக் கையால் வாங்கிக் கழுத்தி னிடையிட்டு
வலித்தான் பகுவாய் [4]மடிதது மலைபோற் றலைமண் ணிடைவீழ.

(இ - ள்.) ஐயன் - அநுமான், சலித்தான் - (தன்கையெழு அறுத்து வீழ்ததப்பட்டதனுற சற்று) மனஞ் சலிதது, (உடனே), எய்யும சரத்தை - (சம்புமாலி) தன்மீது எய்கின்ற அமபுகளையெல்லாம், கையால் உக சாடி - (தன்) கைகளினுலேயே உதிர்ந்துபோம்படி மோதித்தள்ளி,—ஒலி தார் அமரர் கண்டார் ஆரப்ப - தழைததலையுடைய மாலையை யணிந்த தேவாகள் கண்டு ஆரவாரிக்கும்படி, தேரினுள் புக்கு-(சம்புமாலியினது) தேரினுள்ளே பாய்ந்து புகுந்து, கலிததான் சிலையை - வீரகோஷஞ்செய்துகொண்டிருந்தவனுகிய அந்தச் சம்புமாலியினது வில்லை, கையால்வாங்கி - (தன்) கையினுற் பிடுங்கிகொண்டு, தலை பகு வாய் மடிதது மணணிடை மலைபோல் வீழ - (அவ்வரக்கனது) தலை பிளவுபட்டவாயை மடிததுக்கொண்டே தரையிலே மலைபோலவிழும்படி, கழுததினிடை இட்டு வலிததான் - (அவனது கழுத்திலே மாட்டியிழுததான், (எ - று.)

இனி, முதலடிக்கு - அநுமான் (எதிரியெய்கின்ற அமபுகளை விலகுதற்கு எழு இல்லாமையால்) தன்கையினுல்தானே சம்புமாலி யெய்யும் அம்புகளெல்லாம் உகும்படி மோதி மோதி மனஞ் சலிததுப்போய் என்று பொருள்கூறி, இனி அவ்வாறு செய்யவேண்டாதபடி, அவன் தேரினுட் குதித்து அவன் வில்லை அவன்கழுததில் மாட்டிச சிரததையறுத்தா னென்னலுமாம. ஒலிததல் - தழைததல. பி - ம்:—[1]தன்கரததாற. [2]கண்டாரப்பவுயர்மாமணிததேருள். [3]கையின்விலவாங்கிககழுத்தினிடையிட்டுலைய. [4]மடித்த. (சஎ)

சஅ.—அநுமான் செய்த செயலைக் கண்ட காவல்தேவர் இராவணனிடம் செய்திகொல்லச் செல்லுதல்.

குதித்துத தேருய கோல்கொ ளாளும் பரியுங் குழம்பாக
மிதிததுப் [1]பெயர்த்து நெடுந்தோ ரணத்தை வீரன் மேறகொணடான்
ககித்துப் பழிந்து கழிந்தார் பெருமை கண்டு [2]களததஞ்சி
யுதித்துப் [3]புலர்ந்த தோல்போ லுருவத் தமர ரோடினா.

(இ - ள்.) வீரன் - அநுமான்,—குதித்து - (தேரினின்று வெளியே) குதிதது, தேரும் கோல் கொள் ஆளும் பரியும் குழம்பு ஆக மிதித்து - (அவ்வரக்கன்) தேரும் அதனை உளவுகோலைக்கொண்டு செலுத்துஞ் [illegible] (அதனிற்பூட்டிய) குதிரைகளும் குழம்பாகப் போய்விடும்படி

காலினால் மிதித்து (அழித்து), பெயர்த்தும் - மீண்டும், நெடு தோரணத்தை மேற்கொண்டான் - பெரிய தோரணவாயிலின்மீது ஏறியிருந்தான்; உதிர்ந்த புலர்ந்த தோல் போல் உருவத்து அமரர் மேலுக்குமாத்திரம் பருத்து உள்ளேவறண்டுபோன தோல்போன்ற வடிவத்தையுடைய காவலாளிகளான தேவர்கள், கதி துப்பு அழிந்து கழிந்தார் பெருமைகண்டு - விரைவுள்ள (தமது) வலிமையழிந்து இரக்கப்போன அரக்கரது பெருந்தொகையைப் பார்த்து, அஞ்சி (இச்செய்தியை இராவணனிடத்துச் சொல்லவேணுமே யென்று) பயந்து, களத்து ஓடினார்-அந்தப்போர்க்களத்தினின்று (இராவணன் மாளிகையைநோக்கி) விரைந்து சென்றார்கள்; (எ - று.)

சோலையைக்காக்கின்ற தேவர்கள் மனத்தினுள் இராவணனிடத்துப் பணிசெய்யவேண்டியிருந்ததலை நினைந்து புலர்ந்திருந்தாலும் வெளிக்குமகிழ்ந்திருப்பவர் போன்றிருந்தன ரென்பது - 'உதிர்ந்துப் புலர்ந்த தோல்போலுருவத் தமரர்' என்றதன் கருத்து. பி - ம்:—[1]பெயர்ந்து. [2]கணத்தஞ்சி. [3]பொலிந்த. (சஅ)

சகூ.—கவிக்கூற்று.

பரிந்து புலம்பு மகளிர் காணக் கணவர் பிணமபற்றி
விரிந்த குருதிப் [1]பேரா றோடத் மனைக டொறும்வீச
விரிந்த திலங்கை யெழுந்த [2]தழுகை யின்றிங் கிவனாலே
சரிந்த தரகர் வலியென றெண்ணி யறமுங் [3]தளிர்த்ததால.

(இ - ள்.) விரிந்த குருதி பேர் ஆறு - பரவிச்செல்கின்ற பெரிய இரத்தப்பெருக்கானது, பரிந்து புலம்பும் மகளிர் காண - (தம் கணவரையிழந்ததனால்) இரங்கிப்புலம்புகின்ற இராக்கதமகளிர் காணும்படி, கணவர் பிணம் பற்றி ஓடத்து மனைகள் தொறும் வீச - (அவரவருடைய) கணவராகிய பிணங்களைப் பிடித்திழுத்துக்கொண்டு வீடுகள்தோறும் தள்ளும்படி, இலங்கை இரிந்தது - இலங்கைபுரி இவ்வாறு நிலைகுலைந்தது; அழுகை எழுந்தது - (ஆண்டுள்ளோரெல்லாம்) புலம்பும் ஒலி மிக்கது; 'இன்று-இன்றையதினம். இவனால் - இவ்விடத்தில், இவனாலே - இவ்வதுமானாலே, அரக்கர் வலி சரிந்தது - அரக்கருடைய வலிமை ஒழிந்துவிட்டது,' என்று எண்ணி-என்று நினைத்து, அறமும் - தருமதேவதையும், தளிர்த்தது-மனங்களித்தது; (எ - று)—ஆல்-ஈற்றசை. பி - ம்:—[1]பெரியாறு [2]குரலழுகை. [3]சாலத்தளிர்த்ததால். (சஉ)

ரு௦.—சம்புமாலி இறந்ததைப் பருவத்தேவர் இராவணனிடத்துச் சொல்லுதல்.

புக்கா ரமரர் பொலந்தா ரரக்கன் பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்றார் விளம்ப லாற்றார் வெருவி விம்முவார்
நக்கா னரக்க னடுங்க லென்றா னைய நமரெலலா
முக்கார் சம்பு மாலி யுலந்தா னென்றே குரங்கென்றார்.

(இ - ள்.) அமரர் - (செய்திசொல்லுமாறு ஓடின) தேவர்கள்,—பொலம் தார் அரசகன் பொரு இல் பெரு கோயில் புக்கார் - பொன்னரிமாலையை யணிந்த இராவணனது ஒப்பற்ற பெரிய அரணமனையினுட்புகுந்து, விளம்பல் ஆற்றார் - (இராவணனிடத்து நடந்தசெய்தியைச) சொல்லுதற்கு அச்சத்தி னால் வாயெழாமல், விககா நின்றார் - விகிவிக்கி யழுதுகொண்டுநின்று, வெருவி விம்மூவார் - அஞ்சியேகுவாராயினார்கள்; அரசகன - (அதுகண்ட) இராவணன், நக்கான் - சிரித்து, நடுங்கல் என்றான் - அஞ்சவேண்டாவென்று அவருக்குத் தைரியஞ்சொன்னான்; (பின்பு அவர் இராவணனைநோகி), 'ஐய - ஐயனே! நமர் எல்லாம - நமமைச்சேர்ந்தவர்யாவரும், உககார் - (அநுமானோடு செய்தபோரில்) இறந்தொழிந்தார்கள்; சம்புமாலி - சம்புமாலி யும், உலந்தான் - இறந்துபோனான்; ஒன்றே குரங்கு - இவ்வளவெல்லாம் செய்தது ஒரு குரங்குதான்,' என்றார் என்று செய்தியைத் தெரிவித்தார்கள்.

ரூக.—செய்தியுணர்ந்த இராவணன்தானே அநுமானிடத்துச்செல்லமுயல பஞ்சசேனாபதிகள் கூறத்தொடங்குதல்.

என்னு மளவி னெரிந்து வீங்கி யெழுந்த வெகுளியா
னுன்ன வுன்ன வுதிரக் குமிழி விழியு டுமிழ்கின்றான்
சொன்ன குரங்கை யானே பிடிப்பன் கடிது தொடர்ந்தென்னு
வன்ன துணர்ந்த சேனைத் தலைவ ரைவ ரறிவித்தார்.

(இ - ள்.) என்னும் அளவின் - என்று அவர்கள்கூறியபோது, எரிந்து வீங்கி எழுந்த வெகுளியான்-பற்றியெரிந்து மிகுதியாககிளம்பின கோபத்தை யுடைய இராவணன்,—உன்ன உன்ன உதிரம குமிழி விழி ஊடு உமிழ்கின் றான் - நடந்தசெய்தியை நினைக்குந்தோறும் இரத்தகுமிழிகளைக் கண்களின் வழியாகக் ககக்கொண்டு, சொன்ன குரங்கை யானே கடிது தொடர்ந்து பிடிப்பன், '(இவர்கள்) சொல்லிய குரங்கை யானே விரைந்துசென்று பிடிப்பேன்', என்னா - என்றசொல்ல —அன்னது உணர்ந்த - அது தெரிந்த, சேனை தலைவர் ஐவர் - பஞ்சசேனாபதிகள், அறிவித்தார் - (பின் வருமாறு) தெரிவிக்கலானார்கள்; (எ - று.)—அதனை, அடுத்த படலத்து முதல் நான்கு செய்யுள்களிற் காண்க.

பஞ்சசேனாபதிகள்-விரூபாட்சன், யூபாட்சன், துர்த்தரன், பிரகஸ்தன், பாசகர்ணன் என்ற இவர். (ரூக)

சம்புமாலிவதைப்படலம் முற்றிற்று.

பஞ்சசேனுபதிகள் வதைப்படலம்.

ஐந்துசேனுபதிகளையும் அநுமான் கொன்றதைக் கூறும் பாகம். ஐந்து சேனுபதிகள் இன்னுரென்பது கீழ்க்கூறப்பட்டது.

க.—இதுமுதல் நான்தகவிகள்-ஒருதொடர்: தானே தரங்கைப்பிடித்து
வருமாறு எழுந்த இராவணனை விலக்கித் தம்மையேவுமாறு
பஞ்சசேனுபதிகள்வேண்ட, அவன் இசைதல்.

சிலந்தி யுண்பதோர் குரங்கின்மேற் சேறியேற் றிறலோய்
கலந்த [1]போரிடைக் கட்புலன் கடுங்கனல் கதுவ
வுலந்த மால்வரை யருவியா றொழுக் [2]கற்ற வொக்கப்
புலர்ந்த மாமதம் பூக்குமன் றேதிசைப் பூட்கை.

(இ - ள்.) (பஞ்சசேனுபதிகள் இராவணனை நோக்கிக்கூறுவார்):—திறலோய் - பராக்கிரமமமைந்தவனே! (நீ), சிலந்தி உணபது ஓர் குரங்கின்மேல் சேறி எல் - சிலந்தியெனும் பூசசியைப் பிடிததுத்தின்று சீவிப்பதாகிய ஒரு குரங்கின்மேலே போர்செய்யச செல்வாயானால்,—திசை பூட்கை - தக்கயங்கள், கண் புலன் கடுங் கனல் கதுவ - கணகளிலிருந்து கொடிய நெருப்புப் பொறி பறக்க, கலந்த போரிடை - (உன்னோடு) எதிர்ததுச்செய்த போரில், உலந்த மால் வரை அருவி யாறு ஒழுக்கு அற்ற ஒக்க - (மழைபொழியாமையால்) வறண்டுபோன பெரியமலைகள் (தம்மிடதது இடையறாது பெருகுகின்ற) அருவிநீர்ப்பெருக்கு அறறுப்போனவையை யொத்திருக்குமாறு, புலர்ந்த - (உன்னு லடிபட்டு வலிமைகுறைந்தமையால்) அற்றுப்போன, மா மதம் - மிகக மதநீர், பூககும் அன்றே - (மீண்டும்) தோன்றப்பெறுமல்லவா?

முன்பு தம்மையெதிர்த்து வலிதொலைதத இராவணன் அற்பஜந்துவாகிய ஒருகுரங்கைத் தன்னுடைய பணியாளரைக்கொண்டு எளிதில் வெல்ல முடியாமல் எதிரிட்டுத் தானே போர்செய்யச செல்ல நேர்ந்த தாழ்ந்தநிலைமையைக் கருதி, 'இனி இவ்விராவணனுல் நம்மை யெதிர்க்கமுடியாது' என்று கருதுவதனுல் திகககஜகள் முன்புகொண்டிருந்த அசசம நீங்கி மதம்பெருகப் பெறு மென்க. அநுமானை ஒரு அற்ப சந்து என்று கூறுதற்காக, 'சிலந்தி யுண்பதோர்குரங்கு' என்றனர். சிலந்தி - ஒருமர மென்பாரு முளர். நீரருவிப்பெருக்கு நீங்கிய மலை - மதநீர்ப்பெருக்கு அற்ற திக்கஜங்கட்கு உவமையாம். பி - ம்:—[1]போரிலுன். [2]அற்றது. (4)

உ. இலங்கு வெஞ்சினத் தஞ்சிறை யெறுழ்வலிக் கதுழ
னுலங்கின் மே[1]லெழுந் தெண்ணரீ குரங்கின்மே [2]லுருத்தா
லலங்கன் மாலைநின் புயநினைந் தல்லுநன் பகலுங்
குலுங்கும் வன்றுயர் நீங்குமால் வெள்ளியங் குன்றம்.

(இ - ள்.) இலங்கு வெம் சினத்து - விளங்குகின்ற [வெளிதெரிகின்ற] கடுங்கோபத்தையும், நும் சிறை - நுழகிய இறகுகளையும், எழு வலி - மிகக வலிமையையுமுடைய கலுழன் - கருடன், உலங்கின்மேல் எழுந்து என்ன - கொசுகின்மேலே (போர்செய்ய) எழுந்தாற்போல, நீ குரங்கின்மேல் உருத்தால் - நீ (அற்பக) குரங்கின்மேற கோபித்துச்சென்றால்,—வெள்ளி அம குன்றம் - (முன்பு உன்னுற பெயர்த்தெடுக்கப்பட்ட) கைலாசகிரியானது, அலங்கல் மாலை நின் புயம் நினைந்து அல்லும் நல் பகலும் குலுங்கும் வல் துயா - தொங்கியசையும் வெற்றிமாலையையணிந்த உனது தோள்வலிமையை நினைத்து இரவும் பகலும் அஞ்சிநடுங்குகின்ற வலிய துயரத்தினின்று, நீங்கும் - நீங்கப்பெறும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

இப்போது உன்னுடைய பரிவாரங்களைக்கொண்டு வெல்லமுடியாமல் நீயே குரங்கின்மீது பொரச்சென்றால், நீ வலியற்றவனுனு யென்று நினைந்து, முன்பு உன்னுறபெயர்த்தெடுக்கப்பட்டு எளிமைபபட்ட கைலாசகிரியானது, உன்னிடத்துக்கொண்டிருந்த அச்சம் ஒழியுமல்லவோ? ஆகவே, பொரச் செல்லாமல் எம்போலியரை யேவுதலே தகுதி யென்று உணர்தலியவாறும். பி - ம்:—[1]உருத்தென்ன. [2]உருகின. (உ)

ங. உறுவ தென்கொலோ [1]வுரனழி வென்பதொன் றுடையார்
பெறுவ தியாதொன்றுங் காண்கிலர் கேட்கிலர் பெயர்ந்தார்
சிறுமை யீதொடுமா தியாதுநீ குரங்கின்மேற் [2]சேறின்
முறுவல் பூக்குமன் றேநின்ற மூவர்க்கு முகங்கள்.

(இ - ள்.) நீ குரங்கின்மேல் சேறின் - நீ ஒருகுரங்கின்மீது கோபித்துப் பொரச்சென்றால்,—(அப்போது), உரன் அழிவு என்பது ஒன்று உடையார் - (உன்னோடெதிர்த்துப்பொருது தமது) வலிமையழிதலை யுடையவராய், பெறுவது யாது ஒன்றும காணகிலர் - (உன்னோடு எதிர்த்துநிற்றலால்) தாங்கள் பெறக்கூடிய நன்மையொன்றும [சிறிது வெற்றியுங] காணப்பெறுதவராய, கேட்கிலர் - (உன்பெயர்) கேட்கவும் அஞ்சினவராய், பெயர்ந்தார் - நிலைகெட்டோடியவரான, நின்ற மூவர்க்கும - ஒடுங்கநின்ற திரிமூர்த்திகட்கும், முகங்கள்—, முறுவல் பூக்கும அன்றே - (உனைப்பற்றி) இகழ்ச்சிசிரிப்புத் தோன்றுமல்லவோ? ஈது ஒப்பது சிறுமை யாது - இதை யொப்பதாகிய தாழ்மையை விளைக்குஞ்செயல் வேறுயாதுஉளது? உறுவது என் கொலோ - (இதனுல் உனக்கு) வரககடவதான நன்மைதான் யாதோ? (எ - று.)

நீ ஒரு எளிய குரங்கின்மேற பொரச்சென்றால், அதனுல, உன்னிடத்துத்தோறற வலியழிந்த திரிமூர்த்திகள் இகழ்ந்து சிரிபபது தவிர, நீ பெறக்கூடிய பயன் யாதொன்று மில்லை யென்பதாம. பி - ம்:—[1]வானிழிவு. [2]செல்லின். (ங)

ச. அன்றி யும்முனக் காளின்மை தோன்றுமா லரச
[illegible] மெல்லி யோர்தமைச் செலவிட்டாய்

நன்றி [1]பின்றொன்று காண்டியேல் லெமைச்செல நயத்தி
யென்று கைதொழு திறைஞ்சின ராக்கனு மிசைந்தான்.

(இ - ள்.) அரச - (எம்முடைய) அரசனே! அன்றியும் - அல்லாமலும், உனக்கு ஆன் இன்மை தோன்றும், - உனக்குத் துணைவலிமையில்லையென்று பிறர்நினைக்கும்படியாகும்; (முன்பெல்லாம்), வென்றி இல்லவர் மெல்லியோர்தமை செல விட்டாய் - வெற்றிபெறத்தகு வலிமையற்றவராய் மெலிந்தவரான அரக்கரை (அநுமானமேற் போர்க்கு) செல்லும்படி யேவினாய்; இன்று நன்றி ஒன்று காணடி எல் - இப்பொழுது ஒரு நன்மையை விரும்புவையேயானால். எமை செல நயத்தி - எம்மை அக்குரங்கோடு போர்க்குச் செல்ல விரும்புவாய், என்று—கைதொழுது இறைஞ்சினர் - (அந்தப்பஞ்சசேனாபதிகள்) கைகூப்பி வணங்கினார்கள்; அரக்கனும் இசைந்தான் - இராவணனும் சம்மதித்தான்; (எ - று.)— ஆல் - தேற்றம்.

எம்போலியரைப் போர்க்கு அனுப்பாமல், வலியற்றவரை அநுமான் மீது போர்க்கு அனுப்பியதனால அவர்கள் இரந்தொழிந்தார்கள்; அது கொண்டு 'பிற அரக்கரை யனுப்பினால் அவ்வநுமானை வெல்லமுடியாது' என்று நினைத்து அநுபக்குரங்கின்மேல் நீ போருக்குச் செல்லுதல், உனக்கு மிக்க எளிமையைத் தருவதன்றி, உனக்குத் துணைவலியற்றதாகப் பிறர் நினைக்கும்படியு மாகும் ஆகையால், நீ போர்க்குச்செல்லாமல், எங்களை யனுப்புவதே உனக்கு நன்மையா மென்று இவ்வாறு பஞ்சசேனாபதிகள் வணங்கி இராவணனிடஞ்சொல்ல அதற்கு அவனும் இசைந்தனனென்பதாம். பி - ம்:—[1]நீயின்று. (௪)

௫.—இராவணனிடத்து அநுமதிபெற்ற பஞ்சசேனாபதிகள் வெளிப்பட்டு, சதுரங்கசேனைகளோடு அரக்கர்வருமாறு கட்டளையிடுதல்.

உலக [1]மூன்றுந் தம்முடைமைபெற றுரென வுவந்தார்
திலக மண்ணுற வணங்கினர் கோயிலிற் றீர்ந்தா
ரலகி றேர்பரி [2]யானையோ டடைந்தபோ ரரக்கர்
[2]தொலைவி லாதன கதுமென வருகெனச் சொன்னார்.

(இ - ள்.) உலகம் மூன்றும் தம்உடைமை பெற்றார் என உவந்தார் - மூவுலகங்களையுந் தமதுடைமையாகப்பெற்றவர் போலமகிழ்ந்த பஞ்சசேனாபதிகள்,—திலகம் மண உற வணங்கினர் - (தமது) நெற்றித்திலகம் தரையிற் படும்படி (சாஷ்டாங்கமாகவிழுந்து இராவணனை) நமஸ்கரித்தவர்களாய்,—கோயிலின் தீர்ந்தார் - அரண்மனையினின்று வெளிவந்து,—தொலைவு இலாதன - (எளிதில்) அழிதலில்லாதனவாகிய, அலகு இல் தேர்பரி யானையோடு- எண்ணிறந்ததேர்களும் குதிரைகளும் யானைகளும். (என்ற இச்சேனைகளோடு), அடைந்த - நெருங்கப்பெற்ற, போர் அரக்கர் - போர் செய்யவல்ல ராக்ஷஸவீரர்களும், கதுமென வருக - விரைவாக வரக்கடவர்', என-என்று, சொன்னார் - கட்டளையிட்டார்கள்; (எ - று.)

முதலடி - இராவணன் அநுமானோடு பொரச செல்லுமாறு கட்டளையிட்டதனால், பஞ்ச சேனாபதிகள் பெருமகிழ்ச்சி யடைந்தமையைத் தெரிவிக்கும். பி - ம்:—[1]மூன்றிரகு முதன்மை பெறுமோரென வுயாநதா [2]யானை யாடாண்மிடைந்தரக்கா, கரியொடாண்மிடைநதபோரரககர் [3]தொலைவிலாதது.

சு.—அக்கட்டளையை வள்ளுவர் தெரிவிக்க, சேனைதிரளுதல்.

ஆனை மேன்முர சறைந்தனர் [1]வள்ளுவ ருரைத்தார்
பேன வேலையிற் புடைபரந் ததுபெருஞ் சேனை
சோனை மாமழை முகிலெனப் [2]போர்ப்பணை துவைத்த
[3]மீன வானிடை மின்னெனப் படைக்கல மிடைந்த.

(இ - ள்) வள்ளுவர் - பறையறைவோர், ஆனைமேல் முரசு அறைந்தனர் உரைத்தார் - (பஞ்சசேனாபதிகளின்கட்டளையைத் தெரிவிக்குமாறு) யானையின்மீது முரசவாத்தியதைத யேற்றியடித்து (ச செய்தி) தெரிவித்தார்கள்; (உடனே),—பெருஞ் சேனை - பெரிய ராக்ஷசசேனை, பேனம் வேலையில் - துரையையுடைய கடல் போல, புடை பரந்தது - எல்லாப்பக்கங்களிலும் பரவலாயிற்று; சோனை மா மழை முகில் என - விடாப்பெருமழை பொழிகின்ற மேகம்போல, போர்பணை துவைதத - யுத்தபேரிகைகள் ஒலிததன; மீனம் வானிடை மின் என - நட்சத்திரங்கள் விளங்குகின்ற ஆகாயத்தினிடத்துத் தோன்றும் மின்னல்போல, படைக்கலம் மிடைந்த - ஆயுதங்கள் நிறைந்து விளங்கின; (எ - று.)

பஞ்சசேனாபதிகளின கட்டளையை வள்ளுவர் பறையறைந்து தெரிவித்த மாத்திரததில், ராக்ஷசசேனை, சதுரங்கபலங்களோடு யுத்தவாத்தியங்கள் பேரிடிபோல முழங்க, மின்னல் போன்று பளபளவென்று விளங்கும் ஆயுதங்களோடு பலவிடங்களிலும் திரளலாயிற் றென்பதாம். பி - ம்.—[1]வள்ளுவரழைத்தார், வள்ளுவரமைந்தா. [2]போர்ப்பணை துவைப்ப. [3]மீனவானிடுவில்லென, மீனின் வானிடுவில்லென. (சு)

எ.—அப்போது வானத்துத்தோன்றிய வெண்கொடிகளின் வருணனை.

[1]தானை மாக்கொடி மழைபொதுத் துயர்நெடுந் தாள
மான மாற்றரு மாருதி முனியநா ளுலந்து
போன மாற்றலர் புகழெனக் காலபொரப் புரண்ட
வான யாற்றுவெண் டிரையென வரம்பில பரந்த.

(இ - ள்) மழை பொதுத்து உயர் நெடுந் தாள - மேகத்தைக் குத்துமாறு உயர்ந்து நீண்ட கால்களையுடையனவும், வானம் யாறு வெள்திரை என வரம்பு இல பரந்த - ஆகாசகங்காநதியின் வெண்மை நிறமுள்ள அலைபோலப் பலவாக வுள்ளனவுமான, தானை மா கொடி - சேனையினிடையே பிடிக்கப்படுகிற பெரிய வெண்ணிறகொடிகள்,—மாற்ற அரு மானம மாருதி - (ஒருவராலும்) போகுதற்கு முடியாத பெருமையையுடைய அநுமான், முனிய - கோபித்துப் போர்செய்ய

அதனால், நான் உலந்து போன - ஆயுள் ஒழிந்து இறந்து வீர சுவர்க்கஞ் சென்ற, மாற்றலர் - (அவனது, பகைஞரான அரக்கரது, புகழ்ஏ - கீர்த்தி போல,—கால் பொர - காற்றுமோதுதலால், புரண்ட-(படபடவென்று அடித்துக்கொண்டு) அசைந்தாடின; (எ - று.)

ஆகாயத்தில வெண்ணிறத்தோற்றத்துடன் அசைந்தாடுகின்ற கொடியை-போரிற் பின்னிடாது எதிர்த்துநின்று அநுமானது கையால் இறந்தொழிந்துவீரசுவர்க்கஞ்சேர்ந்த அரக்கவீரரது புகழ்போலுமெனக் குறித்தார்; தந்தறிப்பேற்றவணி. புகழை வெண்ணிறமாகக் கூறுதல் கவிசமயம். நான் - துவஜதண்டம். தானை மாகொடி என்பதற்கு-வெண்ணிறத்துகிலினாலியன்ற பெருங்கொடி யெனினுமாம். பி-ம்· —[1]கூனன்மாக்கொடி . செங்கோல. (எ)

அ.—சதுரங்கசேனைகள் போர்க்கோலங் கொள்ளுதல்.

விரவு [1]பொற்கழல் விசித்தனர் வெரிநுற்று விளங்கச்
சரமொ டுக்கின புட்டிலுஞ் சாத்தினர் சமையக்
கருவி புக்கன ரரக்காமாப பல்லணங் [2]கவினப்
புரவி யிட்ட [3]தோ பூட்டின பருமித்த பூட்கை.

(இ - ள்.) அரக்கா - இராட்சசவீரர்,—விரவு பொன் கழல் விசித்தனர்- (வீரத்துக்கு அறிகுறியாகப) பொருந்திய பொன்னாற்செய்த வீரக்கழலைத்தாள்களிற் கட்டி, சரம ஒடுக்கின புட்டிலும சமையவெரிந் உற்று விளங்க சாத்தினர் - அம்புகளை உள்ளேகொண்ட தூணீரங்களை இனிதுபடியும்படி முதுகிற்பொருந்தி விளங்குமாறு தரித்து, கருவி புக்கனர் - கவசத்தையும் பூணடனர்; புரவி - குதிரைகள், மா பல்லணம கவின இட்ட - சிறந்த சேணங்கள் விளங்கும்படி அணியப்பட்டன; தோ பூட்டின - தோகள் சித்தஞ்செய்யப்பட்டன; பூட்கை பருமித்த - யானைகள் அலங்கரிக்கப்பட்டன; (எ - று.)

கருவி கவச மென்னும் பொருளதாதலை, "இளைஞருங்கருவிவீசினார்" என்ற சிந்தாமணியிலுங் காணக இனி, இட்ட தேர் மா பல்லணம் கவின புரவி பூட்டின என்று இயைத்து - அங்குக்கொணரப்பட்ட தேர்கள் சிறந்த அலங்காரங்கள விளங்கக் குதிரைகள் பூட்டப்பெற்றன என்று உரைத்தலுமொன்று. பி ம்·—[1]போர்கழல் .. ..வெரிநுற. [2]கலினப். [3]தேர்பூட்டினர்.

கூ.—கஜுரதுரகங்களால் தோன்றிய நிகழ்ச்சிகள்.

ஆறு செய்தன வானையின் மதங்களவ் வாற்றைச்
சேறு செய்தன தேர்களின் சில்லியச் சேற்றை
நீறு செய்தன புரவியின் குரமற் றந்நீற்றை
வீறு செய்தன வப்பரிக் கலினமா விலாழி.

(இ - ள்.) ஆனையின் மதங்கள் - யானைகளின் மத ஜலங்கள், (தாங்கள் செல்லுகின்ற இடத்தை), ஆறு செய்தன - ஆறாக்கிவிட்டன; அ ஆற்றை - அந்த மதநீரினால தோன்றிய நதியை, தேர்களின் சில்லி - தேர்களின் சக்க

ரங்கள், (தாம் ஓடித் தூளியை யெழுப்பி மதநீர்நதியில் விழசெய்து), சேறு செய்தன - (அம்மதநதியைச்) சேறாக்கின; அ சேறறை—, புரவியின குரம் - குதிரைகளின் குளம்புகள், நீறு செய்தன - (அவறறின்மீது விரைவாக வோடுவதனால் அசசேறுகளைப்) புழுதியாகப பண்ணின; அ நீற்றை - அநதத் தூளிகளை, அ பரி கலினம் மா விலாழி - அந்தக்குதிரைகளின் கடிவாளம் பூண்ட வாயிலிருந்து வழிகின்ற பெருநுரைகள், வீறு செய்தன - மறுபடியும் வேறுபடியாகக குழைசேறாகின; - (எ - று)—மற்று - அசை

ஒன்றைப்பற்றிக் கீழ்சசொன்னதை விட்டுச செல்வதாகிப் பல பொருள்களை மேன்மேல் அமைத்துக்கொண்டு செல்வதாகிய ஏகாவளியென்னு மலங்காரம் இவகு அமைந்திருத்தல் காண்க இது, ஒற்றைமணிமாலை யெனப் படும். ஆனை முதலியவை அந்தசசேனையில் மிக்கிருந்தன வென்று தொனிக்கும் பொருட்டு வீறுகோளணி யென்னும் உதாததாலங்காரம் பட, இவ்வாறு வருணித்தார். (கூ)

கo.—அப்போது தோன்றிய பேரொலி.

வழங்கு [1]தேர்களி னிடிபபொடு வாசியி னாப்பு
முழங்கு வெங்களிற் றதிர்ச்சியு மொய்கழ லொலியுந்
தழங்கு பல்லியத் தமலையுங் கடையுகத் தாழி
விழுங்கு மோதையின் மும்மடங் கெழுந்தது முடுகி.

(இ - ள்.) வழங்கு தோகளின் இடிபபொடு - விரைந்து செல்லுகின்ற தேர்களினொலியும், வாசியின் ஆபபும் - குதிரைகளின் கனைபபொலியும், முழங்கு வெம் களிறு அதிர்ச்சியும் - பிளிறுந்தன்மையுள்ள கொடிய ஆண் யானைகளின் கர்ச்சனையும, மொய் கழல் ஒலியும் - (வீரரகள் கால்களிற்) கட்டிய வீரககழலினொசையும், தழங்கு பல் இயதது அமலையும - ஒலிக்குந்தன்மையுளள பலவாசியகளின் பேரொலியும், (ஒருங்குகூடிய), கடை யுகத்து - யுகாந்தகாலததிலே, ஆழி முழங்கும ஓதையின் - (பொங்குகிற) கடலில் ஒலிகின்ற ஓசையைககாட்டிலும், மும் மடங்கு - மூன்றுமடங்கு அதிகமாக, முடுகி எழுந்தது - விரைந்து தோன்றிறது; (எ - று.)

ஒலிப்பொருளுள்ள இடிப்பு முதலிய பலசொற்கள் வந்தது - பொருட் பின்வருநிலையணியாம் பி - ம்.—[1]தேரொலியிடியொடு. (கo)

கக.—திரண்டசதுரங்கசேனைகளின் அளவு.

ஆழிசத தேர்ததொகை யைம்பதி னாயிர பஃதே
சூழிப பூட்கைக்குந் தொகையவற றிரட்டியின் றொகைய
ஊழிக் காற்றன்ன புரவிமற [1]றவறறினுக் கிரட்டி
பாழித் தோணெடும படைக்கலப் பதாதியின் பகுதி.

(இ - ள்.) ஆழி தோ தொகை - சக்கரங்களையுடைய தேர்களின எண், ஐம்பதினாயிரம் - ஐமபதினாயிரமென்னும் அளவினதாம; சூழி பூட்கைக்கும் - முகபடாததையணிந்த யானைகளுக்கும், தொகை -

அளவு, அஃதே - கீழ்க்கூறிய தேரின் அளவேயாகும்; ஊழி காற்று அன்ன புரவி - யுகாந்தகாலத்திலே தோன்றுகின்ற பெருங்காற்றுப்போன்ற (வேக முடைய) குதிரைகள், அவற்று இரட்டியின் தொகையே-கீழ்க்கூறிய ரதாஜன் களைக்காட்டிலும் இருமடங்கான எண்ணையுடையனவாம் [லக்ஷமென்னும் அளவினதாம்]; பாழி தோள் நெடும் படைக்கலம் பதாதியின் பகுதி வலிமை பொருந்திய தோள்களையும் சிறந்த ஆயுதங்களையுமுடைய காலாள்வீரரின் அளவு, அவற்றினுக்கு இரட்டி - இரண்டு லக்ஷமாகும்; (எ - று.)—பி-ம்:— [1]அவறரென்றிரட்டி. (௧௧)

௧௨.—படைகளின் நெருக்கம்.

கூய்த்த ருந்தொறுந் தருந்தொறுந் தானைவெங் குழுவி
னீத்தம் வந்துவந் தியங்கிடு மிடனின்றி நெருங்கக்
காய்த்த மைந்தவெங் கதிர்ப்படை யொன்றொன்று கதுவித்
தேய்த்தெ ழுந்தன பொறிக்குல மழைக்குலந் தீய.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கூய் தரும் தொறும் தரும் தொறும் - (சேனாபதிகளாற்) கூப்பிடப்பட்டு வருவிக்கும் போதெல்லாம், வெம் தானை குழுவின் நீத்தம் - கொடிய சேனைகூட்டத்தின் பெருக்கு, வந்துவந்து—, இயங்கிடும் இடன் இன்றி - சஞ்சரித்தற்கு உரிய இடமில்லாதபடி, நெருங்க - திரளவும்,— காய்த்து அமைந்த வெங் கதிர் படை (உலைக்களத்தில்) காய்ச்சிக் கூர்செய்யப் பட்ட (கண்கூசும்படி) கொடுமையான ஒளியுள்ள ஆயுதங்கள், ஒன்று ஒன்று கதுவி தேய்த்து - ஒன்றோடொன்று உராய்ந்து தேயத்தலினால், எழுந்தன - தோன்றியனவான, பொறி குலம் - நெருப்புப்பொறிகளின் கூட்டத்தினால், மழை குலம் தீய - மேகங்களின் கூட்டம் கருகவும்,—(எ - று.)—நெருக்க தீய என்ற செயவெனெச்சங்கள் - உடனிகழ்ச்சிப்பொருளனவாய், ௪௮ - ஆஞ்செய்யுளிலுள்ள 'இரங்கினர்' என்றதனோடு முடியும்: அதேத செய்யுளி லும் இவ்வனமே காண்க. மழைக்குலந்தீயப் பொறிக்குலம் எழுந்தன என்று இச்செய்யுளிலேயே முடித்தலு மொன்று.

சேனாவீரர்கள் வருவித்த சேனைத்தொகுதிகள் சலிப்பதற்கும் இடமில் லாமல் நெருங்க, அப்போது அச்சேனையிலுள்ள ஆயுதங்கள் ஒன்றோ டொன்று உராய்ந்து மழைக்குலம் தீத்துபோகும்படி நெருப்புப்பொறிகள் தோன்றி எங்கும்பரவின வென்பதாம். பதாதிகள் தாங்குதற்கு உரியனவான கதிர்ப்படையைக் குறித்துப் பின்னிரண்டடிகளில் வருணித்திருத்தலால், முதலடியிற்கூறியுள்ள 'தானை வெங்குழு' என்றது - பதாதியைக் கட்டு மென்னலாம். (௧௨)

௧௩ —யானைக்சேனை.

[1]பண்ம ணிக்குல யானையின் புடைதொறும் பரந்தி
வொண்ம ணிக்குல மழையிடை யுருமென வொலிப்பக்
கண்ம ணிகுலங் கனலெனக் "காந்துவ கதுப்பின்
றண்ம ணிக்குல மழையெழு கதிரெனத் தழைப்ப.

(இ - ள்.) பண மணி குலம் யானையின் புடைதொறும் பரந்த ஒள்மணி குலம்-(போர்க்குரிய) அலங்காரமமைந்த அழகிய சிறந்த யானைகளின் பக்கங்களிலே பரவியுள்ள அழகிய மணிகளின் கூட்டம், மழையிடை உரும என ஒலிப்ப - மேகங்களில் தோன்றுகின்ற இடியோசைபோலப் பேரொலி செய்யவும்,—கனல் என காந்துவ - நெருப்புபபோலச செந்நிறவொளியோடு பிரகாசிப்பன வாகிய. கண மணி குலம் - கண்களிலுள்ள கருவிழிகூட்டமும், கதுப்பின் தண மணி குலம் - கனனங்களிலணியபபட்டுள்ள (ஆபரணங்களிலுள்ள) குளிர்ந்த இரதினகூட்டங்களும், மழை எழு கதிர் என தழைப்ப-காளமேகத்திலிடததுத தோனறுகின்ற சூரியன்போல ஒளிவீசவும,—(எ - று.)—'இரங்கினா' என்க.

கருநிறமுள்ள யானைகளின் பகககங்களிலே தொங்குகின்றமணிகள் மேகத்தினிடததில் தோன்றுகின்ற இடிபோலப் பேரொலிசெய்ய, அவ்யானைகளின் கோபததினுறு செந்நிறமடைநத கண்மணிகளும், அவற்றின் கன்னங்களில் அணிந்த ஆபரணவிரததினங்களும் காளமேகததில் தோன்றுஞ் சூரியன்போலப் பிரகாசித்தன வென்று வருணிததவாறு மணியென்பது வெவ்வேறு பொருளில் வந்தது சொற்பின்வருநிலையணியின்பாற் படும். 'கனலெனக் காந்துவ' என்ற தொடா - முன்னுள்ள 'கண்மணி' என்பதனோடும், பின்னுள்ள 'கணமணி' என்பதனோடும் இயையும; இடைநிலைத் தீவகம். 'தழைப்ப' என்பதை முறறு எனகொண்டு, முடிததுவிடுதலுமொன்று. பி-ம்:—[1]பணமணிககுலம யானையின் [2]காந்துவமாபின், காந்துறமாபின். (கஙு)

கச.—புறப்பட்ட அரக்கவீரரை மனைவிமக்கள்முதலியோர் தடுத்து இரங்குதல்

[1]தொக்க தாம்படை சுரிகுழன் மடநதையா தொடிக்கை
மக்க டாயர்மற் றியாவருந் [2]தடுத்தனா மறுகி
பொக்க [3]வேகுதுங குரங்கினுக் குயிர்தர வொருவர்
புக்கு மீண்டில ரென்றழு திரங்கினர் புலமபி.

(இ - ள்.) (அப்போது), தொககது ஆம் படை - திரண்டதான இராக்கத சேனையிலேயுள்ள வீரரகளை, சுரி குழல் மடந்தையர் - நுனிசுருண்ட கூந்தலையுடைய (அவர்களுடைய) மனைவிமார்களும், தொடி கை மக்கள் - வளையலையணிநத கைகளையுடைய மககளும, தாயர் - தாய்மார்களும், மற்று யாவரும - மற்றமுள்ள சுதறததவரும, மறுகி - மனங்கலங்கி, தடுததனர் - (போர்செய்யசசெல்வதை முதலில்) தடுத்துச சொல்லி, (அவ்வீரர்கள் தம் சொல்லைகேளாமல் செலலத்தொடங்கியதனால் பின்னும் அவரகளை நோக்கி), 'புக்கு ஒருவா மீண்டிலர் - (குரங்கோடு யுத்ததத்திற்குச) சென்று ஒருவராவது திருமபிவந்தாரில்லை; குரங்கினுக்கு உயிர்தர - (இப்போது வந்துள்ள) குரங்குக்குப பிராணனைப் பலிகொடுக்கும்படி, ஒக்க எகுதும் -

(நாம் எல்லோரும்) ஒருமிக்கச் செல்வோம்', என்று-என்றுசொல்லி, அழுது புலம்பி இரங்கினர்-கோவென்று கதறியழலானார்கள்; (எ - று.)

'அறுமாறுடன் போர்க்குச்சென்றால் பிழைத்து மீளுவருதல் இயலாது' என்று துணிந்ததனாற் போர்க்குச்செல்லும் வீரரைத் தடுத்துச சொல்லிய மனைவி மக்கள் முதலியோர் அவ்வீரர்கள் பிடிவாதமாகப் போர்க்குச்செல்லத் தொடங்கவே, அவர்கள் இறக்கத் தமது உயிரைத் தாம் வைத்திருக்க மனமில்லாமல் 'உமதுயிரோடு எங்களுயிரையும் வானரம்கொள்ளுமாறு கொடுப்போம்' என்று மிகவும் கதறிப் புலம்பலாயின ரென்க.

பி - ம்:—[1]தொககரககர்தம், தொகதமபடை. [2]தொடர்ந்தனர் [3]எகுவர். (கச)

கரு.—பஞ்சசேனுபதிகள் தாண்ட தம் சேனையோடு செல்லுதல்.

[1]கைப ரந்தெழு சேனையங் கடலிடைக் கலந்தார்
செய்கை தாம்வருந் தேரிடைக் கதிரெனச் செல்வார்
மெய்க லந்தமா னிகர்வரு முவமையை வென்று
ரைவ ரும்பெரும் பூதமோ ரைந்துமொத் தமைந்தார்.

(இ - ள்.) மெய் கலந்த மால் நிகர் வரும் உவமையை வென்றார்-உடம்பு பெற்றுள்ள மேகத்தை உவமையாகச் சொல்லுகின்ற உவமைத் தன்மையை வென்றவர்களும் (சாதாரணமாக உவமையாகச் சொல்லப்படுங் காள மேகத்தினும பெருவடிவுபடைத்தவரும்), பெரும் பூதமதோர் ஐந்தும் ஒத்து அமைந்தார் - ஐம்பெருங பூதங்களையும் உவமையாகக் கொண்டு ஒன்றுசேர்ந்துள்ளவருமாகிய, ஐவரும் - பஞ்சசேனுபதிகளும்,— கை பரந்து எழு சேனை அம் கடலிடை கலந்தார் - (தமது) பக்கங்களிற் பரவி யெழுகின்ற கடல் போன்ற சேனையின் நடுவிறசேர்ந்தவர்களாய்,—செய்கை தாம்வரும் தேரிடை கதிரென - விநிதநிரமான செயகை (தன்மை) பொருந்தியுள்ள தேரின்மீது வருகின்ற சூரியன்போல, செல்வார் - விரைந்து செல்பவரானார்கள்; (எ - று.)

இவ்வுலகததுப் பொருள் யாவும் பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலே யியன்றவை யென்பது நூற்கொளகை. உலகத்திற் காரியப்படுதற்குப் பஞ்ச பூதங்களும் ஒன்று சேர்தல் போல, இந்தப் பஞ்சசேனுபதிகளும் போர்த் தொழில் நிகழ்தற்கு ஒன்றுசேர்ந்தன ரென்பது, ஈற்றடியின் கருத்து.

பி - ம்:—[1]கைகலந்தவெஞ். (கரு)

கசு.—இதுமுதல் ஒன்பது கவிகள் - ஒருதொடர்:
பஞ்ச சேனுபதிகளின் வருணனை.

முந்தி யமபல கறங்கிட முறைமுறை பொறிகள்
சிந்தி யம்புறு கொடுஞ்சிலை யுருமெனத் தெறிப்பார்
வந்தி யம்புறு முனிவர்க்கு மமரர்க்கும் வலியா
ரிந்தி யம்பகை யாயவை யைந்துமொத் திலையந்தார்.

(இ-ள்.) (அந்தப் பஞ்ச சேனுபதிகள்), முந்து இயம் பல கறங்கிட-முன் புறததிலே பலவகையான போர்கரு உரிய வாத்தியங்கள் ஒலிக்க, முறை

முறை பொறிகள் சிந்தி - வரிசைவரிசையாகக கோபாகினியினால் நெருப்புப் பொறிகளைச்சிந்திக்கொண்டு, அம்பு உறு கொடுசிலைஉரும என தெறிப்பா- அம்பு பூட்டிய (தமது) வளைந்த விற்களை இடிபோல நாணைத தெறிததுப் பேரொலி யெழுப்புபவாகளாய், —வந்து இயம்புறு முனிவாக்கும அமராக கும் - (தம்மிடத்து) வந்து அறிவுகூறுகிற முனிவாகளுக்கும் தேவாகளுக்கும, வலி ஆர் பகை ஆயவை இந்தியம ஐந்தும் ஒதது இயைந்தா - வலிமை பொருந்திய உட்பகையான பஞ்சேநதிரியங்களையும ஒதது (உபத்திரவஞ செய்பவர்களாய்ப்) பொருந்தினவாகள்; (எ - று.)

தங்கட்கு நல்லறிவு கூறுபவாகளா யிருந்தும் அவ்வுபதேசமொழியைக் கேளாமல், முனிவர்கட்கும் தேவர்கட்கும் எப்போதும உட்பகையான பஞ் சேந்திரியங்களைப் போல உபத்திரவஞ் செய்கின்றவாகளான பஞ்சசேனாபதி கள், பல போர்ப்பறைகள் முழங்க, கோபாக்கினிப்பொறி சிந்த, இடிமுழக் கம்போலக் குணததொனி செய்துகொண்டு போாககு வந்தாக ளென்றவாறு. உவமை - தொகையிலும பேரிடா செய்தலிலு மென்க. (கசு)

கஎ. வாச வன்வயக் குலிசமும் வருணன்வன் கயிறு
மேசி றென்றிசைக கிழவன்ற [1]னெரிமுனை யெழுவு
மீசன் வன்றனிச் சூலமு மென்றிவை யொன்று
[2]மூசி போல்வதோர் வடுசசெயா நெடுமபுய முடையார்.

(இ - ள.) (அன்றியும், அவர்கள்),—வாசவன் வய குலிசமும் - இந்திர னுடைய வலிய வசசிராயுதமும், வருணன் வல் கயிறும - வருணதேவ னுடைய வலிய பாசாயுதமும், ஏசு இல் தென் திசை கிழவன்தன் எரி முனை எழுவும் - குற்றமற்ற தெற்குததிக்குக்குரிய யமனுடைய நெருப்பை முனையி னுடைய தண்டாயுதமும், ஈசன் வல தனி சூலமும் - சிவபெருமானது வலிய ஒப்பற்ற சூலாயுதமும், என்ற இவை-என்ற இவைகளில், ஒன்றும்-எதுவும், ஊசிபோல்வது ஓர் வடு - ஊசி குததுகிற அளவான ஒரு வடுவையேனும், செயா - செய்யமாட்டாத, நெடு புயம் - பெரிய தோள்களை, உடையார் - படைத்தவர்கள்; (எ - று.)

இந்திரன் முதலிய தேவாகளின் வசசிராயுதம் முதலிய தெய்வப் படைகளில் எதுவும் ஒரு ஊசியினாலுண்டாகக கூடிய உபததிரவத்தையுஞ் செய்யமாட்டாத புஜபலததை யுடையவ ரென்று ,அந்தப் பஞசசேனாபதிகளின் வலிமையை வருணித்தவாறு. பி - ம்:—[1]அயில் [2]ஊசிபோவதோர். (கஎ)

கஅ. சூர்த டிந்தவன் மயிலிடைப் பறித்தவன் றோகை
பார்பு யந்தவ னன்னத்தி னிறகிடைப் பறித்த
மூரி வெஞ்[1]சிற கிடையிட்டுத் தொடுத்தன முறுக்கி
வீர சூடிகை [2]நெற்றியி னயலிட்டு விசித்தார்.

(இ - ள்.) (மற்றும் அவர்கள்),—சூர் தடிந்தவன்-சூரபத்மனைக்கொன்ற சுப்பிரமணியக் கடவுளின் (வாகனமான), மயிலிடை-மயிலின் வாலினிடத்தி னின்று, பறித்த - பிய்த்த, வல் தோகை - வலிய இறகுகளையும், பார் பயந்தவன் அன்னத்தின் இறகிடை பறித்த மூரி வெம் சிறகு - பூமியைப் படைக்கும் கடவுளான பிரமதேவனது வாகனமாகிய அன்னப்பறவையினது இறகிலிருந்து பிய்த்த வலிய அழகிய சிறகுகளையும். இடை இட்டு முறக்கி தொடுத்தன - நடுவேவைத்து முறுக்கித் தொடுத்தனவான, வீரசூடிகை - வீரத்துக்கு அறிகுறியான சுட்டியை, நெற்றியின் அயல் இட்டு விசித்தார் - நெற்றியினிடத்திலே வைத்துக் கட்டிக்கொண்டிருப்பவர்கள்; (எ - று.)

தமது வீரத்தினால் சுப்பிரமணியக்கடவுளையும் பிரதேவனையும் வென்று, அவ்வெற்றிக்கு அறிகுறியாக அவர்களது வாகனங்களான மயில் அன்னம் என்றவற்றின் சிறகுகளிலிருந்து பறித்த இறகுசட்டைகளைக்கொண்டு முறுக்கிய கயிற்றிலே இடையிட்டுத் தொடுத்த வீரச்சட்டியை நெற்றியில் அணிந்துள்ளன ரென்க. பி - ம்:—[1]சிலையிடை. [2]கயிறிட்டுநெற்றியின் விசித்தார். ()

கக. பொன்றி ணிந்ததோ ளிராவணன் மார்பொடும் [1]பொருத
வன்றி ழந்தகோ டரிந்திடு மழகுறு குழையர்
நின்ற வன்றிசை நெடுங்களி யானையி னெற்றி
மின்றி ணிந்தன வோடையின் வீரபட் டத்தர்.

(இ - ள்.) (பின்னும், அவர்கள் ,—பொன் திணிந்த தோள் இராவணன் - பொன்னாபரணங்கள் நிறைந்த தோள்களையுடைய இராவணனது, மார்பொடும் - மாரபுடனே, பொருத - தாக்கியதனால், அன்று - (இராவணன் திக்குவிசயஞ்செய்த) அக்காலத்தில், இழந்த - ஒடிந்துபோன, கோடு - (திக்கஜங்களின) தந்தங்களை, அரிந்திடும் - பின்னும் அறுத்து அவற்றைக் கொண்டு செய்த, அழகுறு - அழகுபொருந்திய, குழையர் - காதணியையுடையவர்கள்; (அன்றியும்), நிசை நின்ற வல் நெடு களி யானையின் - எட்டுத் திக்குக்களிலும், (அவ்வத்திசையைத் தாங்குமாறு) நிற்கின்ற வலிய பெரிய மதக்களிப்புக்கொண்ட (ஐராவதம்) முதலிய திக்கஜங்களினது, நெற்றி - நெற்றிகளிலணிந்த, மின் திணிந்த (து) அ(ன்)ன ஓடையின் வீரபட்டத்தர் - மின்னல்கள் நெருங்கிநின்றாற்போன்ற மிக்கவொளியையுடைய முகபடாத்தை வீரபட்டமாக அணிந்தவர்கள்; (எ - று.)

இராவணனோடு போர்செய்து முனைமுறிந்த திக்கஜங்களின் தந்தங்களைத் தமது வீரதினால் அறுத்துத் தமது வெற்றிக்கு அறிகுறியாக அவற்றினாற் காதணி செய்துகொண்டும், அந்தத்திக்கஜகளின் முகபாடத்தைக் கவர்ந்து அவற்றையே வீரபட்டமாகத் தரித்துக்கொண்டும் இருப்பவ ரென்று பஞ்ச சேனாபதிகளின் வீரச்சிறப்பை விளக்கியவாறு. பி - ம்:—[1]பொருந்த.

வேறு.

உ0. நிதிநெடுங் கிழவனை நெருககி நீணகர்ப்
பதியொடும பெருந்திருப பறித்த பண்டைநாள்
விதியொடு மன்னவன் விழுந்து வெந்திடப
பொதியொடும் வாரிய பொலன்கொள் பூணினர்.

(இ - ள்.) நிதி நெடு கிழவனை - நவநிதி நாயகனாகிய குபேரனை, நெருககி - போரில் வலியழித்து, நீள் நகர் பதியொடும - (அவனது) வாசத் தானமாகிய பெரியபட்டணத்திலிருந்து, பெரு திரு பறிதத - (அவனது) பெருஞ்செல்வத்தை (இராவணன்) கவாந்து கொண்ட, பண்டை நாள் - முற் காலததில், அன்னவன விதியொடும் விழுநது வெநதிட - அந்தககுபேரன் தீவினைப்பயனால் (போரில்) தோற்று முதுகுகொடுததோட, (அப்போது), பொதியொடும வாரிய பொலன் கொளபூணினா - பெருமூட்டையாக வாரிக கொணடுசென்ற பொன்னாபரணஙகளை யுடையவாகள்; (எ - று.)

இராவணன் திககுவிசயஞ் செய்து வருகையில குபேரனோடு பொருது அவனை வலியழித்து முதுகுகொடுததது ஓடசசெய்கையில், இந்தப் பஞ்சசேனா பதிகள் அவ்விராவணனது வெறறிகுகுத துணையாயிருந்து அந்தக்குபேர பட்டணததிலிருந்து அவனுடைய ஆபரணஙகளை யெல்லாம மூட்டையாக வாரிவந்து அணிந்துள்ளா ரென்றவாறு. பதியொடு-வேறறுமைமயக்கம். (உ0)

உக. இந்திர னிசையிழந தேகு வானிகற்
றந்திமுன் [1]கடாவினன முடுகத் தாமதன்
மந்தர வாலடி பிடித்து வல்லையே
லுந்துதி நீயென [2]வலித்த வூற்றத்தார்.

(இ - ள்) இந்திரன் - தேவேந்திரன், (அரககரோடுபோரசெய்யமாட் டாமல்தோறறு), இசை இழந்து - (தனது) புகழ்கெட்டு, ஏகுவான்-(முதுகு கொடுததுச) செலபவனாகி, இகல் தநதி முன் கடாவினன முடுக - வலிமை பொருநதிய (தனது ஐராவத மென்னும) யானையை முன்னே வேகமாகச செலுததிககொணடு விரைநதுசெல்ல,—தாம—, மந்தரம் அதன் - மந்தர மலைபோன்ற அநதயானையினது, வால் அடி - வாலின் அடிப்புறததை, பிடித்து-(தமதுகையினால் இறுகப்) பற்றிகொணடு, வல்லை ஏல் நீ உந்துதி- 'வல்லமையுள்ளவனானால் நீ செலுததிககொணடு போவாய்,' என - என்று, வலித்த - மேறசெல்ல வொட்டாமல் இழுத்துக்கொண்டுநின்ற, ஊறறத்தார் - பெருவலிபடைததவர், (எ - று.)

தேவேந்திரனுக்கு இராவணனோடு போர் நேர்ந்த காலததில் அவ னுடைய சேனாபதிகளாயிருந்த இவ்வரசகர்கள் அந்த இந்திரன் தோற்று முதுகுகொடுத்துத் தனது யானையை விரைவாகச செலுத்தியோடப் பார்க்க, அபபோது அவ்யானையின் அடிவாலைத் தமது கையாற் பற்றிநின்று 'நீ செலுத்து, பார்ப்போம்' என்று அவ்யானையை ஓடவொட்டாது தடுத்த

பெருவலியுடையவ ரென்பதாம். கீழ்ச்செய்யுளில் குபேரனைவென்றதோற் றோற்றமாறு செய்ததைக் கூறியவர் இந்தச்செய்யுளில் இந்திரன் தோல்வியுறமாறு செய்ததைக் கூறினர். அதேத செய்யுளில் யமனை வென்ற விளக்கியமையைக் கூறுவர். பி ம்:—[1]கடந்தவன். [2]வலித்த. (உக)

உஉ. [1]பானிறத் தந்தணன் பணிய னாகிநின்
கோனினைத் திலனென வுலகங் கூறலு
நீனிறத் திராவணன் முனிவு நீக்குவான்
காலனைக் காலினி லுங் கையிற் கட்டினர்.

(இ - ள்.) உலகம் - இலங்கையிலுள்ளார். அந்தணன் பணியன் ஆகி - முதலந்தணனாகிய பிரமதேவனது கட்டளையினபடி நடப்பவனாய், (யமனானவன்), பால நிறத்து-(உயிர்களின்) விதிப்பயன் சீர்தூக்கிப்பார்த்து (இவ்விலங்கையிலுள்ளாராகும் அவரவர் விதியின்படி ஆயுட்காலத்தை நடப்பிப்பவனாய்), நின் கோல் நினைத்திலன் - (இவ்விலங்கை தரிலோகாதிபதியாகிய இராவணனான) உன்னுடைய கோலுக்கு உட்பட்டதென்பதை நினைத்தானில்லை', என - என்று, கூறலும்-(இராவணனிடத்திற) சொல்லுதலும்,—(அதுகேட்டு இராவணன் சினங்கொள்ளவே), நீல் நிறத்து இராவணன் முனிவு நீக்குவான் - கருநிறமுள்ள அவ்விராவணனது கோபத்தைப் போக்கும்பொருட்டு, காலனை - யமனையும், காலினில் கையில் கட்டினர் - கால்களிலும் கைகளிலும் கட்டிச் சிறையிலேவைத்தவர்கள் (இவர்கள்); (எ - று.)

உலகமென்ற பெயர் "மாயோன்மேயகாடுறையுலகமும்" என்ற இடத்திற்போல உலகத்தின் ஏகதேசத்தை யுணர்த்துவதால், இலங்கையைக் காட்டி, பிறகு அங்குள்ள இராக்கதர்க்கு ஆகிவந்தது. ஈற்றடி-ஏற்றுமோனை. பி - ம்:—[1]பானிறத்தந்தணன்பணியனாயினும்.

உங. மலைகளை நகுந்[1]தட மார்பர் மால்கட
லலைகளை நகுநெடுந் தோளர் ஆந்தகன்
கொலைகளை நகுநெடுங் கொலையர் கொல்லனா
துலைகளை நகுமன லுமிழுங் கண்ணினர்.

(இ - ள்.) (அவர்கள்), மலைகளை நகும் தட மார்பர் - மலைகளைப் பரிகசிக்கின்ற பரந்த மார்பையுடையவர்கள்; மால் கடல் அலைகளை நகும் நெடுந் தோளர் - பெரியகடலினலைகளைப் பரிகசிக்கின்ற நீண்ட தோள்களையுடையவர்கள்; அந்தகன் கொலைகளை நகும் நெடுங் கொலையர் - யமனது கொலைத் தொழிலைப் பரிகசிக்கின்ற பெருங்கொலைத் தொழிலையுடையவர்கள்; கொல்லன் ஊது உலைகளை நகும் அனல் உமிழும் கண்ணினர்-கொல்லனூதுகின்ற உலைக்களத்தையைப் பரிகசிக்கின்றனவாய்நெருப்பை வெளிக்கக்குகின்ற கண்களை யுடையவர்கள்; (எ - று.)

இவ்வரக்கர்களுடைய மார்புமுதலியவை மலைமுதலியவற்றினும் விஞ்சியவை யென்பது, இங்குப் பெறப்படும். தோளர்-கையையுடையவ ரென்றல்,

ஏற்கும். பி - ம்:—[1]நெடுமார்டர்மாகடல். சிலபிரதிகளில் இசசெய்யுள் அடுத்த செய்யுளின்பின் உள்ளது. (உ௩)

உ௪. தோல்கிளர் திசைதொறு முலகைச் சுற்றிய
சால்கிளா முழங்கெரி தழங்கி யேறினுங்
[1]கால்கிளா தடிப்பினுங் காலங் கையுற
மால்கடல் கிளரினுஞ் சரிக்கும் வன்மையார்.

(இ - ள்.) காலம் கையுற - யுகாந்தகாலம் தோன்றும்படி,—சால்கிளர் முழங்கு எரி - மிகுதியாக விளங்குகின்ற சடுலவொலியோடு கூடிய வடவா முகாகினியானது,—உலகை சுற்றிய - உலகுமுழுவதையும் (எரிக்கும்படி) சூழ்ந்து கொள்ளும்பொருட்டு, தோல் கிளர் திசைதொறும - திக்கஜங்கள் நிற்கின்ற எல்லாத்திகளுக்களிலும், தழங்கி - பேரொலி செய்துகொண்டு, ஏறினும் - பரவினாலும்,—கால் கிளர்ந்து அடிபபினும் - சண்டமாருதம் மேன்மேலோங்கி வீசியடிததாலும,—மால் கடல் கிளரினும் - பெரிய கடல் பொங்கி வந்தாலும், சரிக்கும - (அவற்றையெல்லாம) வலியொடுகவல்ல, வன்மையார்- வலிமையையுடையவாகள்; (எ - று.)

யுகாந்தகாலததிலே முதலில் ஆதிசேஷனுடைய ஆயிரம் முகங்களினின்றும் மிகப்பெரிய மூசசுககாறறு எழுந்து உலகதது பிராணிகள் உலநது போமாறு வீசு மென்பதும்; கடலிடையேயுள்ளதான படபா முகாக்கினியும் அசசமயததில் வெளிக்கிளம்பி உலகங்களை எரிககுமென்பதும்; பிறகு, அண்ட கடாகத்திற்கு வெளியேயுளளதான பெரும் புறககடலின் வெள்ளம் பிரவேசித்து உலகங்களையெல்லாம் அழித்திடுமென்பதும் நூறகொள்கை. மால் கடல் - பெரும் புறககடல். சரிததல் - சரியச்செய்தல வலியொடுகசசெய்தல். இனி, சரிக்கும என்பதற்கு - சஞ்சரிகினற என்று பொருள்கூறி, அவ்வரக்கர்கள் யுகாந்தகாலமதோன்றும்படி முழங்கெரிமுதலியன எரித்தல் முதலியவற்றைச செய்யுபபோது சிறிதும் அசசமில்லாமற சஞ்சரிக்கும் மன வன்மையுடையவா என்று கூறுவாரு முளா. பி-ம் —[1]கால்கிளர்ந்தோங்கினும்.

உ௫.—பஞ்சசேனாபதிகள் தன்னைச் சூழ்ந்துகொண்டு அணிவகுத்துநிற்க, அநுமான் அவர்கள் நிலைமையைக் காணுதல்

இவ்வகை யனைவரு மெழுந்த தானையர்
மொய்கிளர் தோரண மதனை முற்றினா
கையொடு கையுற வணியுங் கட்டினா
ரையனு மவர்நிலை யமைய நோக்கினான்.

(இ - ள்.) இ வகை அனைவரும் - இவ்வாறுள்ள அந்தப் பஞ்சசேனாபதிகள்,—எழுந்த தானையர் - சேனையோடும் புறப்பட்டவாகளாய், மொய்கிளர் தோரணம் அதனை - வலிமையோடு நிறகின்ற (அநுமானுள்ள) அந்தத் தோரணவாயிலை, முற்றினா - சூழ்ந்துகொண்டு, கையொடு கை உற அணிவகுத்தனர்-எல்லாப்புறததிலும் பொருந்தியிருக்குமாறு (தமது சேனைகளை)

அணிவகுப்பதுஞ் செய்தார்கள்; ஐயனும் - அநுமானும், அவா நிலை - அந்த அரக்கர்களின்செயலை, அமையநோக்கினான் - நன்றாகப்பார்த்தான்; (எ - று.)

எழுந்த தானையர் - வடமொழிநடை: எழப்பெற்ற சேனையையுடையவரென்க. கை - பக்கம். சேனையின் பிரிவு எனினுமாம். (உரு)

உசு —அநுகண்ட தேவர்களின் மனநிலை.

[1]அரக்கர்த மாற்றலு மளவில் சேனையின்
றருக்குமம் மாருதி தனிமைத் தன்மையும்
பொருக்கென நோகிய புரந்த ராதிய
ரிரக்கமு மவலமுந் துளக்கு மெய்தினர்.

(இ - ள்) அரக்கர்தம் ஆற்றலும் - (அநுமானைச் சூழ்ந்துகொண்ட) பஞ்சசேனாபதிகளது வல்லமையையும் அளவு இல் சேனையின் தருக்கும் - எல்லையில்லாத சேனையினது கர்வத்தையும், அ மாருதி தனிமை தன்மையும்- (அவர்களின் நடுவேயுள்ள) அந்த அநுமானது தனிப்பட்ட நிலைமையையும், பொருக்கென நோகிய - திடீரென்று பாராத, புரந்தர ஆதியர் - இந்திரன் முதலியதேவர்கள், இரக்கமும - (அநுமானிடத்துக்) கருணையையும், அவலமும்- துன்பத்தையும், துளக்கும்-அச்சத்தையும், எய்தினர்-அடைந்தார்கள்.

அரக்கரின் பெருஞ்சேனைநடுவே அநுமான் அகப்பட்டுக்கொண்டதைக் கண்டதனால் இரக்கமும், 'ஒருகால் இவ்வநுமானுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ' என்று கருதியதனால் துன்பமும் அச்சமும் இந்திரன் முதலிய தேவர்கட்குத்தோன்றினவென்க. பி - ம்.—[1]அரக்கர்தாற்றலும். (உசு)

உஎ.—அநுமான் அரக்கச்சேனையை அலட்சியமாகப்பார்த்தல்.

இறந்தன ரரக்கரிப் பகலு ளேயெனக
கற்றுணர் மாருதி களிக்குஞ் சிந்தையான
முற்றுறச் சுலாவிய முடிவி றானையைச்
சுற்றுற நோக்கித்தன் றோளை நோக்கினான்.

(இ - ள்.) கற்று உணர் மாருதி-(பலநூல்களையுங்) கற்றுத்தேர்ந்த அநுமான்,—அரக்கர் இ பகலுளே இறந்தனர் என்று களிக்கும் சிந்தையான் - இவ்வரக்கர்கள் இன்றொருபகற்குளளே அழிவது தேற்றமென்று நினைத்து (அதனால்)மகிழ்கின்ற மனமுள்ளவனாய்,—முற்றுஉற சுலாவிய முடிவு இல் தானையை - (தன்னை) முற்றவும் சூழ்ந்துகொண்ட எல்லை காணப்பதற்கு அரிய (அரக்கப்) பெருஞ்சேனையை, சுற்று உற நோக்கி - நான்கு பக்கத்திலும் நன்றாகப்பார்த்து, தன் தோளை நோக்கினான் - தனது தோள்களையும் பார்த்தான்; (எ - று.)

மாருதிக்கு 'கற்றுணர்' என்ற அடைமொழி கொடுத்ததனால், அவ்வநுமான் எதையும் சரியானபடி ஆலோசனைசெய்து தீர்மானிக்கவல்லவனென்பது பெறப்படும். தோள்வலிகொண்டே அரக்காயாவரையும் தொலைக்கப் போவதனால், தானையை நோக்கித் தோளை நோக்கினனென்க. இற்றனர் - கால வழுவமைதி. (உஎ)

உஅ.—அரக்கர்கள் அநுமானைப்பற்றிக் கருதுதல்.

புன்றலைக் குரங்கிது போலு மாலமர்
வென்றது விண்ணவர் புகழை வேரொடுந்
தின்றவல் லரக்கரைத் [1]திருகித் தின்றதா
லென்றன ரயிர்த்தனர் நிருத ரெண்ணிலார்.

(இ - ள்.) எண் இலா நிருதர் - (அங்கிருந்த) கணக்கில்லாத அரக்கர்கள்,—'புல் தலை குரங்கு இது - இழிவான தலையையுடைய இக்குரங்கு ஒன்றுதான், மால் அமர் வென்றது - (இதுகாறும் நடந்த) பெரும் போரில் வெற்றி கொண்டதாய, விண்ணவர் புகழை வேரொடும் தின்ற வல் அரக்கரை திருகி தின்றது போலும் - (தேவர்களை வெனறு அத) தேவர்களின் கீர்த்தியை அடியோடு ஒழித்த வலிய அரக்கர்களை முறித்தழித்ததுபோலும்', என்றனர் - என்று, அயிர்த்தனர் - ஐயங்கொண்டார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

அநுமான் தனிப்பட்டவனாய்ச் சிறியவடிவோடு இருந்ததலைக் கண்ட அரக்கர்கள், 'இவனொருவனே கீழ்நடந்த போர்களில் மிகப்பல அரக்கர்களை அழித்திருப்பனோ?' என்று ஐயங்கொண்டன ரென்பதாம். இனி, தேவர்களை யெல்லாம வலியடக்கிய மகாசமாத்தரான அரக்கர்களையெல்லாம, இது வென்றதே! இது குரங்குதானோ?, என்று சந்தேகித்தன ரென்று பொருள் கொள்ளலுமாம்; இதற்கு - இது குரங்கன்று குரங்கின் வடிவுகொண்டதொரு கடவுளா யிருக்கவேண்டுமென்பது அரக்கருடைய கருத்தென்னலாம. போலும் - ஒப்பில்போலி. பி - ம்:—[1]தீர்த்ததன்றிதால். (உஅ)

உ௬.—அநுமான் பெருவடிவங்கொள்ளுதல்.

ஆயிடை யனுமனு மமரர் கோனகர்
வாயினின் றவ்வழிக் கொணர்ந்து வைத்தமாச
சேயொளித் தோரணத் தும்பர்ச் சேணெடு
மீயுயர் விசும்பையுங் கடக்க வீங்கினான்.

(இ - ள்.) அ இடை - அப்பொழுது, அனுமனும்—, அமரா கோன் நகர் வாயில் நின்று - தேவேந்திரனது நகரமான அமராவதிப்பட்டணத்தின் வாசலிலிருந்து, அ வழி கொணர்ந்து வைத்த - அவ்விடத்து [அசோகவனிகையின் வாயிலில்] கொணர்ந்து வைக்கப்பட்ட, மாசேய் ஒளி தோரணத்து - மிக்க செந்நிறத்தையுடைய தோரணத்தின், உம்பர் மேலே (இருந்தபடியே), சேணெடு மீ உயர் விசும்பையும கடக்க - மிகநெடுந்தூரமாக மேலேயுயர்ந்துள்ள ஆகாசத்தையும் கடந்துசெல்லுமாறு, வீங்கினான் - உடல்பெருக்கப் பெற்றான் [பெருவடிவங் கொண்டான் என்றபடி]; (எ - று.)

தோரணம் - அரசர் செல்லுமாறு இயற்றப்படுஞ் செய்வாயில். செம்மை ஒளி - சேயொளி. (உ௬)

ரு0.—அரக்கர் அனுமான்மீது படைவழங்குதல்.

[1]வீங்கிய வீரனை வியந்து நோக்கிய
[2]தீங்கிய லரக்கருந் திருகி னார்சினம்
வாகிய சிலையினர் வழங்கி னார்படை
யேங்கிய [3]சங்கின மிடித்த பேரியே.

(இ - ள்) வீங்கிய வீரனை - (அவ்வாறு) பெருவடிவுகொண்ட அனுமானை, வியந்து நோக்கிய - மருண்டு பார்த்த, தீங்கு இயல் அரக்கரும் - (பிறர்க்குத்) தீமைசெய்தலையே (தம்முடைய) இயல்பாகக்கொண்ட அரக்கர்களும், சினம் திருகினார் - கோபமிகுந்தவர்களாய்,—வாகிய சிலையினர் - (விலை வளைந்த, படை வழங்கினார் - (அனுமான்மீது) அம்புகளைப் பிரயோகித்தார்கள்; (அப்பொழுது), சங்கு இனம் ஏங்கிய - சங்குகளின் கூட்டம் ஒலித்தன; பேரி இடித்த - முரசங்கள் பேரொலி செய்தன; (எ - று.)

வீரர்கட்கு உற்சாகம்மிகுதற்பொருட்டுச் சங்கம் முதலியவற்றைப் போர்க்களத்தில் முழங்குதல் மரபு. பி - ம்.—[1]தீங்குடையரக்கரும். [2]வாகினரி வாசிலை. [3]சங்கநின்று. (ரு0)

ரு௧.—அப்படைகளை அனுமானை ஒன்றுஞ் செய்யமாட்டாமை.

எறிந்தன ரெய்தன [1]ரெண்ணி றந்தன
பொறிந்தெழு படைக்கல மரக்கர் போக்கினார்
செறிந்தன மயிர்ப்புறந் தினவு [2]தீர்வுறச
சொறிந்தன வெனவிருந் தையன றாங்கினான்.

(இ - ள்.) அரக்கர் - ராக்ஷஸர்கள், எண் இறந்தன பொறிந்து எழு படைக்கலம் - கணக்கிறந்த [மிகப்பல] வான அனற்பொறிகளைக்கக்கிக் கொண்டு எழுகின்ற ஆயுதங்களை, எறிந்தனர் எய்தனர் போக்கினார் - (அனுமான்மீது) எறிதலையும் எய்தலையுஞ் செய்பவராய்ச் செலுத்தினார்கள்; (அவை), மயிர்ப்புறம் செறிந்தன - (உடலின் மேற்புறத்திலுள்ள) மயிர்களின் மீது நெருங்கியனவாய், தினவு தீர்வுற சொறிந்தன என - தினவு தீரும்படி சொறிந்தாற்போன்றிருக்க, இருந்து - சுகமாக இருந்து, ஐயன் - அனுமான், தாங்கினான் - கணணுறங்குபவன்போல (ஆனந்தத்தினால்) கண்மூடிக்கொண்டிருந்தான்; (எ - று.)

அனுமான்மீது அரக்கர் எறிந்த ஆயுதங்கள் அவனுக்கு ஊறுசெய்யமாட்டாமையன்றிக்கே, தினவுக்கு இதமாகச் சொறிந்தாற்போன்றிருக்க, அனுமான் அவ்வானந்தத்தாற் கணமூடிக்கொண்டு இனிதாக இருந்தனனென்பதாம். இங்கு விருப்பத்தைப் பெற வேணுமென்று முயல்பவற்கு அவ்விருப்பங் கைகூடாமையன்றியே அரிஷ்டமும் கூடுவதாகிய நத்தியின்மையணி இருத்தல் காண்க: இதனை, வடநூலார் விஷமாலங்காரமென்பர். பி-ம்.—[1]எண்ணிறந்தனர் [2]தீர்தர. (ரு௧)

ரு௨.—அரக்கரையழிக்குமாறு இருப்புத்தூணை அனுமன் ஏந்துதல்.

[1]உற்றுட னரக்கரு முருத்து டன்றனர்
செற்றுற நெருக்கினர் [2]செருக்கு சிந்தையார்

மற்றையர் வருப்பரி சிவரை வல்விரைந்
தெற்றுவ னென [2]வெழு வனுமனேந்தினான்.

(இ - ள்.) அரககரும—, செருககு சிந்தையா - வீரசெருகக்கைக் கொண்ட மனமுடையவர்களாய்,—உடன் உறறு - ஒருசேரப் பொருந்தி, உருத்து - கோபித்து, உடனறனா - மாறுபட்டவர்களாய, செற்றுற - அழியுமாறு (கருதி), நெருக்கினா - (அநுமானை) மோதினாகள்; (அப்பொழுது), அனுமன்—,—'மற்றையர் வரும பரிசு - மற்றுமுளள அரககரும் போரசெய்ய வரும் விதமாக, இவரை - இநகுள்ள அரக்காகளை, வல் விரைந்து - மிக விரைவாக, ஏற்றுவன்-அடிதது அழிப்பேன்', என - என்று எண்ணி, எழு - (அவகிருந்தொரு)இருப்புததூணை,ஏந்தினான்-கையிலெடுத்துக் கொணடான்; (எ - று)—பி - ம்:—[1]உற்றுடன்றரக்கரு முருத்துடறினா. [2]செருக்குஞ். [3]எழுந்தனும னெய்தினான். (ஙஉ)

ஙஙங

செய்வான்; அ வீரர் வாளினால் - அவ்வாறு உருண்டுவிழுந்த அரக்கவீரரது கைவாள்களைக்கொண்டு, தார் உடை புரவியை துணிய தாக்கும் - கின்கிணி மாலைபூண்ட குதிரைகளைத் துணிபட்டு விழும்படி வெட்டுவான்; (எ - று.) ஆல் - ஈற்றசை.

கீழொன்பதாங் கலியிறபோன்ற ஒற்றைமணிமாலையணியை இதிற் காண்க. (௩௪)

௩௫. இரண்டுதே ரிரண்டு [1]கைத் தலத்து மேந்திவே
[2]றிரண்டுமால் யானைபட் டுருள வெற்றுமா
லிரண்டுமால யானைகை யிரண்டி னேந்திவே
றிரண்டுபா லினும்வரும பரியை யெற்றுமால.

(இ-ள்) இரண்டுதோ இரண்டு கைததலத்தும் ஏந்தி-இரண்டுதேர்களை (த் தனது) இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு, வேறு இரண்டு மால் யானை பட்டு உருள எற்றும்-வேறான பெரிய இரண்டு யானைகள் இறந்து பட்டு உருளும்படி மோதுவான்; இரண்டு மால் யானை கை இரண்டின் ஏந்தி-இரண்டு பெரியயானைகளை (த் தனது) இரணடுகைகளிலும் எடுத்துக் கொண்டு, வேறு இரண்டு பாலினும் வரும பரியை எற்றும்-வேறாக இரண்டு பக்கங்களிலும் வருகிற குதிரைகளை மோதுவான்; (எ-று.)—ஆல்-அசைகள்.

இதுவும் - முன்னைய அணியே. பி ம்:—[1]கைத்தலமு மேந்த [2]இரண்டு பாலினும் வருங கரியை யெற்றி வேறு. (௩௫)

௩௬. மாயிரு நெடுவரை வாங்கி மண்ணினிட்
டாயிரந் தேர்பட வரைக்கு மாலழித்
தாயிரங் களிற்றையோர் மரத்தி னாலடித்
[1]தேயெனு மாத்திரை யெற்றி முற்றுமால்.

(இ - ள்.) மா இரு நெடு வரை வாங்கி - மிகப்பெரிய நீண்ட மலை யொன்றைப் பேர்த்தெடுத்து (அதனைக்கொண்டு), ஆயிரம்தேர் பட - ஆயிரம் தேர்கள் அழியும்படி, அழிதது - சிதைதது, மண்ணின் இடத்து அரைக்கும் - பூமியின்மேல்வைத்து அரைத்துவிடுவான்; ஆயிரம் களிற்றை - ஆயிரம் யானைகளை, ஓர் மரத்தினால்-(அவைகள்ள) ஒருமரததைக்கொண்டு, ஏயெனும் மாத்திரை எற்றி அடித்து - ஒரு மாதத்திரைப் பொழுதிற்குள் தாக்கியடித்து, முற்றும் - உயிரொழியச செய்வான்; (எ - று.)—பி - ம்:—[1]ஏயெனுமாத் திரத்து. (௩௭)

௩௭. உதைக்கும்வெங் கரிகளை யுழக்குந் தேர்களை
[1]மிதிக்கும்வன் புரவியைத் தேய்க்கும் வீரரை
[2]யதுக்கும்வல் லெழுவினா லரைக்கு [3]மண்ணிடைக்
குதிக்கும் [4]வன் றலையிடைக் கடிக்குங் குத்துமால்.

(இ - ள்.) உதைக்கும் வெம் கரிகளை - (பகைவர்தன்மீது) செறுத்து கின்ற கொடிய யானைகளை, உழக்கும் - கலக்குவான், தேர்களை மிதிக்கும் - (தன்காலினால்) மிதிப்பான்; வல் புரவியை - வலியகுதிரைகளை, தேய்க்கும் -

தேய்த்துவிடுவான்; வீரரை—, அதுக்கும் வல் எழுவினால் மண்ணிடை அரைக்கும் - வலியழிக்கவல்ல வலிய இருப்பத்தூணினால் தரையிலிட்டு அரைப்பான்; வல தலையிடை குதிக்கும் - (யானை முதலியவற்றின்) வலிய தலைகளின்மேற் குதிப்பான; கடிக்கும் - கடிப்பான்; குத்தும் - குத்துவான்; (எ - று.)—பி - ம்:—[1]மதிக்கும வனபுரவியை. [2]மதிக்கும்வல்லெழுவினால். [3]விணணிடை. [4]வன்றலைகளை, வானறலைகளை. சிலபிரதிகளில் "விசையின்" என்ற அதேதபாடலின்பின் இசசெய்யுளுள்ளது. (௩௭)

௩௮. விசையின்மான் றேர்களுங் களிறும் விட்டகன்
றிசையுமா காயமுஞ் [1]செறியச் சிந்துமாற்
குசைகொள்பாய் பரியொடுங் கொறற வேலொடும்
பிசையுமா லரக்கரைப் பெருங்க ரங்களால்.

(இ - ள்.) விசையின் மான் தேர்களும் - வேகததோடுகூடிய குதிரைகள்கட்டிய தேர்களையும், களிறும் - யானைகளையும், அகல் திசையும் - ஆகாயமும், செறிய - அகன்ற திகசினிடங்களும் ஆகாசமும நெருங்குமபடி, விட்டு சிந்தும் - வீசியெறிவான்; குசை கொள பாய் பரியொடும - (எறிவருவனவாகிக) கடிவாளததைக் கொணடு பாயந்துசெல்லுந் தன்மையுள்ள குதிரைகளுடனும், கொறறம் வேலொடும - (கையாபிடித்த) வெற்றிபொருந்திய வேலாயுததுடனும, அரக்கரை - இராகததவீரகளை, பெருங கரங்களால் - தனது பெரிய கைகளினால், பிசையும் - பிசைந்துவிடுவான; (எ - று.)

நால்வகைச் சேனைகளுள யானைகளையும் தேர்களையும் வானததில் வீசியெறிந்தும், குதிரைகளையும் வீரர்களையும் கைகளினாற் பிசைந்தும் அழித்தனனென்க. அகல் + திசை=அகன்றிசை; வல்லினம்வர லகரம் னகரமாயிற்று: "குறில்செறியா ல ன" என்ற சூததிரதது 'பிற' என்ற மிகையால். பி-ம்:—[1]சிதைய. (௩௮)

௩௯.—இதுமுதல் நான்குகவிகளால்-முறையே, அநுமான் கடலில் வீழ்த்திய சதுரங்க வருணனை கூறப்படுகின்றது.

தீயுறு பொறியுடைச் செங்கண் வெங்கைமா
மீயுறத் தடக்கையால் வீரன் வீசுதோ
றாய்பெருங் கொடியன கடலி னாழ்வன
பாயுடை நெடுங்[1]கலம் படுவ போன்றவே.

(இ - ள்.) உறு தீ பொறி உடை செங கண் வெங் கை மா - மிகக நெருப்புப்பொறிகளையுடைய சிவந்த கண்களைக்கொண்ட வெவ்வியயானைகள், வீரன் தட கையால் மீ உற வீசு தோறு - அநுமான் (தன்) பெரியகைகளைக்கொணடு ஆகாயத்தின்மீது பொருந்தும்படி வீசியெறியுந்தோறும், ஆய் பெருங கொடியன கடலின் ஆழ்வன - சிறந்த பெரிய கொடிகளையுடையனவாகிக் கடலில் விழுபவை,—பாய் உடை நெடு

கலம் படுவ போன்ற - பாய்மரங்களையுடைய பெரிய மரக்கலங்கள் கடலில் மூழ்குவனவற்றை யொத்திருந்தன; (எ - று.)

அநுமானால் ஆகாசத்தில் வீசியெறியப்பட்டுத் தம்மீதாகாட்டிய கொடிகளோடு கடலில் விழுந்து முழுகிவிடுகின்ற யானைகள் - அந்நிலையில் பாய்மரங்களோடு கடலில் அமிழும் மரக்கலங்களைப்போலு மென வருவித்தார்: தன்மைந்தற்குறி: பேற்றவணி. 'நீயுற' என்பதை செகைண்ணோடும் 'பொறியுடை' என்பதைக் கைம்மாவோடும் இயைத்து, பொறியுடை - செம்புள்ளிகளையுடைய எனினுமாம். கைம்மா என வரவேண்டுவது, செய்யுளின்பம் நோக்கி மகரமெய் தொக்குவந்தது. பி - ம்.—[1]கலப்படிவம். (௬௧)

௪௦. தாரொடு முருளொடுந் [1]தடக்கை யாற்றனி
வீரன்விட் டெறிந்தன கடலின் வீழ்வன
வாரியி னெழுஞ்சுடர்க் கடவுள் வானவன்
றேரினை நிகர்த்தன புரவித் தேர்களே.

(இ - ள்.) தனி வீரன் - ஒப்பற்ற வீரனாகிய அநுமான்,—தட கையால் விட்டு எறிந்தன - (தனது) பெரிய கைகளால் வீசியெறியப்பட்டனவாகி, கடலின் வீழ்வன - கடலிற்சென்று விழுகின்றனவான, தாரொடும் உருளொடும் புரவி தேர்கள் - கிண்கிணிமாலையோடும் சக்கரத்தோடுங் கூடியனவாய்க் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள்,—வாரியின் எழும் - கடலில் உதிக்கின்ற, சுடர் கடவுள் வானவன் - ஆயிரங்கிரணங்களையுடைய சூரியபகவானாகிய தேவனுடைய, தேரினை—, நிகர்த்தன - ஒத்தன; (எ - று)

கடலில் விழுந்திய தேர்கள் - கடலினின்று தோன்றுஞ் சூரியன் தேரை யொத்தன வென்க. வாரி - கடலுக்கு, இலக்கணை. பி - ம்:—[1]ஒருதனித். இச்செய்யுள் சிலபிரதிகளில் "நீயுற" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளது.

௪௧. நீயுற விண்ணிடை முட்டி வீழ்வன
வாய்பெருந் திரைக்கட லழுவத் தாழ்வன
[1]வோய்வன புரவிவா யுதிரங் கால்வன
வாயிடை யெரியுடை வடவை போன்றவே.

(இ - ள்.) (அநுமானால் வீசியெறியப்பட்டு), நீ உற விண்ணிடை முட்டி - மேலேபொருந்தும்படி ஆகாசம்வரையிற்சென்று தடைப்பட்டு, வீழ்வன - அங்குநின்று கீழேவீழ்வனவும், ஆய் பெரு திரைகடல் அழுவத்து ஆழ்வன - சிறந்தபெரிய அலைகளையுடைய கடற்பரப்பிலே அமிழ்வனவும், ஓய்வன - வலியொடுங்கியனவும், வாய் உதிரம் கால்வன - (தம்) வாயினின்று இரத்தங்களை வெளிசிசிந்துவனவுமான, புரவி - குதிரைகள், வாயிடை எரி உடை வடவை போன்ற - வாயிலே அக்கினியையுடைய வடவையென்னும் பெண்குதிரையை யொத்தன; (எ - று.)

வடவை யென்பது - மழை யாற்றுவென்னாம் முகவியலற்றால் கடலில நீர் மிகாதபடி கடலினிடையேயிருந்து அந்நீரையுறிஞ்சுமாறு தன்

முகத்தில் அக்கினியைக்கொண்டதொரு பெண்குதிரை யென்று நூல்கள் கூறும். முகத்திற செந்நீரைக்கொண்டு கடலினிடையே விழுந்த குதிரை கட்கு - செந்தீயைத்தமமுகத்திறகொண்ட வடவையை உவமையாகக் குறித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்.—[1]ஒய்வில. (சக)

சஉ. வரிந்துற வல்லிதிற் சுறறி வாலினால
விரிந்துற வீசலிற கடலின் [1]வீழ்குநர்
திரிந்தனா செறிகயிற றாவி னாற்றிரி
யருந்திறன் மந்தர மனைய ராயினர்.

(இ - ள்.) வாலினால் - (அநுமானது) வாலினால், வல்லிதின் சுறறி உற வரிந்து - பலமாகச்சுற்றி இறுகக்கட்டப்பட்டு, விரிந்து உற வீசலின் - வெகுதூரஞ் செல்லும்படி வீசியெறிதலினால், கடலின் வீழ்குநர் திரிந்தனர் - சமுத்திரத்தில்விழுந்தவராய்ச் சுழல்கின்ற அரககவீராகள்,—கயிறு செறி அரவினால் திரி அரு திறல் மந்தரம் அனையர் ஆயினர் - கயிறுகப்பொருந்திய வாசுகியென்னும் நாகததினாலே சுழல்வதான மிகததிண்மையையுடைய மந்தரமலையை யொப்பவராஞர்கள்; (எ - று.)

கடலில்விழுநது சுழல்கிற அரக்கவீராககு - பாற்கடலிற சுழன்றமந்தரமலை உவமையாயிறறு; இதுவும் - முன்னைய அணியே. பி- ம்:—[1]வீழ்ந்தவர்.

சஙு —இரத்தப்பெருக்கின் வருணனை.

வீரன்வன் றடக்கையா லெடுத்து வீசிய
[1]வார்மதக களிற்றினிற் றேரின் வாசியின்
மூரிவெங் கடல்புகக் கடிது முந்தின
வூரின்வெங் குருதியா [2]றிரைப்ப வோடின.

(இ - ள்.) ஊரின் வெம குருதி யாறு - விரைந்துசெல்லுதலையுடைய உஷ்ணமான இரகதப்பெருக்குக்கள,—வீரன் வல் தட கையால் எடுத்து வீசிய - அநுமான் வலிய பெரியகைகளால் எடுத்துவீசியெறிநத, வார் மதம் களிற்றினில் - ஒழுகுகின்ற மதநீரையுடைய யானைகளினும், தேரின் - தேர்களினும், வாசியின் - குதிரைகளினும். மூரிவெம் கடல் புக கடிது முந்தின- வலிய அசசந்தருகிற கடலிலே சென்றுவிழும்படி மிகவுமவிரைநதனவாய், இரைப்ப ஓடின - பேரொலியுடையனவாய் ஓடின; (எ - று)

அநுமான்வீசியெறிந்த யானைமுதலியன கடலிறசென்று வீழ்தற்கு முன்னே அவற்றின் இரத்தப்பெருக்குக்கள சென்று வீழ்ந்தன வென்றபடி. பி - ம்:—[1]வார்மதகரியினில் [2]ஈர்ப்பவோடின. (சஙு)

சஙு —பிணக்குவியல்களின் வருணனை.

பிறைக்கடை யெயிற்றின பிலத்தின் வாயன
நறைப்புனல் பொறிகளோ டுமிழுங் கண்ணன

[1]வுறைத்தபு படையன வுதிர்ந்த யாக்கைகள்
மறைத்தன மகரதோ ரணத்தை வாலுற.

(இ - ள்.) கடை பிறை எயிற்றன - வாயின் இருபுறத்தோரங்களிலும் பிறைசசந்திரன்போன்ற பற்களையுடையனவும், பிலத்தின்வாயன - குகை போன்ற வாய்களையுடையனவும். கறை புனல் பொறிகளோடுஉமிழும் கணன் - கறைபடுதன்மையுள்ள இரத்தங்களையும் நெருப்புப் பொறிகளையும் வெளிவிடுகின்ற கண்களையுடையனவும், உறை தபு படையன - உறைகளினின்று நீங்கியெடுத்த ஆயுதங்கள் பொதுத்துக்கொள்ளப் பெற்றனவுமான, உதிர்ந்த யாக்கைகள் - உயிரொழிந்து கீழ்விழுந்துள்ள பிணங்குவியல்கள், வான் உற - ஆகாயத்தையளாவ, மகரதோரணத்தை - மகரத்தின் வடிவம் அமைந்துள்ள அந்ததோரண வாயிலை, மறைததன-மூடிவிட்டன.

பிணங்கள் மிகவுந்திரண்டிருந்ததனால், தோரணவாயிலை மறைததன வென்க; இதனால், பிணக்குவியலின் மிகுதியை விளக்கியவாறு. பி - ம் — [1]உறைப்புறுபடையின வுதிரயாக்கைகள். (சச)

சரு.—கவிக்கூற்று.

குன்றுள மரமுள குலங்கொள் பேரெழு
வொன்றல பலவுள வுயிருண் பானுள
னன்றினர் பலருள [1]ரையன் கையினிற்
பொன்றுவ தலலது புறத்துப் போவரோ.

(இ - ள்.) (படைகலமாக உதவுமாறு), குன்று உள மரம் உளதுலம் கொள்பேர் எழு ஒன்று அல பல உள - மலைகளும் மரங்களும் சிறப்புப் பொருந்திய பெரிய எழுகளும் என்றஇவை பலவாகவுள்ளன; உயிர் உண பான் உளன் - (இறந்த) உயிரைக்கொண்டுபோகுமாறு யமனும் சித்தமாகவுள்ளான்; அன்றினர் பலாஉளர் - சினந்துபோரசெய்யுமாறு அரக்கவீரர் பலரும் இருககின்றனர்; (இப்படியிருப்பதனால்), ஐயன் கையினில் பொன்றுவது அல்லது - அநுமான்கையினால் (அவ்வரக்கர்) இறந்தொழிதலன்றி, புறத்து போவரோ-உயிர்தபபிச செலவாரோ? (செல்லா ரென்றபடி;) (எ-று.)

அரக்கவீரர் இறந்தொழிதற்கு வேண்டியன யாவும் நிரம்பியிருத்தலால், அவர்கள் யாவரும் இறந்தொழிதலில் வியப்பில்லை யென்று தெரிவித்தவாறு. பி - ம்:—[1]கையுள. (சஎ)

சசு.—அநுமான் அரக்கர் யாவரையும் அழித்தொழித்தல்.

முழுமுதற கண்ணுதன் முருகன் றூதனைகம்
மழுவெனப் பொலிந்தொளிர் வயிர வான்றலை
யெழுவினிற் பொலங்கழ லரக்க ரீண்டிய
குழுவினைக் [1]களப்படக் கொன்று நீக்கினான்.

(இ - ள்.) (அநுமான்),—முழுமுதல் - முதல்மூர்த்திகளிற்சேர்ந்தவனாகிய, கண் நுதல் - (நெருப்புக) கணணை நெற்றியிலேகொண்ட, முருகன்

தாதை - முருகக்கடவுளின் தந்தையாகிய சிவபிரானது, கை மழுஎன - கையிலேந்திய மழுவாயுதமபோல, பொலிந்து ஒளிர-மிகுது விளங்குகிற, வயிரம் - உறுதியான, வான் தனி எழுவினில - சிறந்த ஒப்பற்ற இருமபுதூணினால், பொலம் கழல அரக்கா ஈண்டிய குழுவினை - அழகிய வீரக்கழலையணிந்த அரக்கருடைய நெருங்கிய கூட்டத்தை, களம் பட கொன்று நீக்கினான் - போர்க்களத்திலே இறந்து வீழுமாறு கொன்றொழித்தான்; (எ - று.)

அநுமான் சிவபெருமானது அமிசமாதலால், இவன்கைககொண்ட எழுவுக்கு - சிவபிரான் கையிற்கொண்ட மழு உவமையாதற்கு ஏற்றகும். பி - ம்:—[1]கரிப்பட. (சசு)

வேறு.

சஎ.—தமது சேனைகள்யாவும் அழிவுற பஞ்சசேனுபதிகள் தாமே
போருமாறு அநுமானை நேருங்கி வருதல்.

உலந்தது தானையு வந்தன ருப்ப
ரலந்தலை யுற்றதவ் வாழியி லங்கை
[1]கலந்த தழுங்குர லின்கட லோதை
வலந்தரு தோளவ ரைவரும் வந்தார்.

(இ - ள்.) தானை உலந்தது - (பஞ்சசேனுபதிகளின்) சேனைமுழுவதும் அழிந்திட்டது; (அதுகண்டு), உம்பா உவந்தனா-(முன்பு இரக்கமும் அவலமும் துளக்கும் எயதிய) தேவாகள் (அவை நீங்கி) மனமகிழந்தாகள்; அ ஆழி இலங்கை - கடல்சூழந்த அல்லிலங்காநகரம், அலந்தலை உற்றது - குழப்பமடைந்தது; அழும் குரலின் கடல் ஓதை கலந்தது-(இலங்கையிலுள்ளாரது) அழுகுரலாகியகடலோசையானது எங்கும் பரவிற்று; (அப்போது), வலம தரு தோளவர் ஐவரும் - (இதுவரையில) வெற்றிபொருந்திய தோளையுடையவராகிய பஞ்சசேனுபதிகளும், வந்தா - (அநுமான்மீது நெருங்கி) வந்தார்கள்; (எ - று)

அலந்தலையென்ற சொல் கலககமென்ற பொருளில் வருதலை "ஐயபுழுதி யுடம்பளைந்திவள்பேசுமலந்தலையாய" என்ற இடத்துங் காணக. பி - ம்:—[1]கலந்ததழுங்குரல் கணடவாநின்ற. (சஎ)

சஅ.—அந்தப் பஞ்சசேனுபதிகள் அரிதிற்சென்று அனுமானை நேருங்கி
அம்புமழை பொழிதல்.

[1]ஈர்த்தெழு செம்புன லெக்க ரிழுக்கத்
தேர்த்துணை யாழி யழுந்தினர் சென்று
ராத்தன ராயிர மாயிர மம்பாற்
றூர்த்தன ரஞ்சனை தோன்றலு நின்றான்.

(இ - ள்.) ஈர்த்து எழு செம் புனல் எக்கா இழுக்க - (பிணக்குவியல்களை இழுத்துக்கொண்டு செல்லுகின்ற இரத்த வெள்ளத்தினிடையே [illegible] மேடுகள (சக்கரங்களைத் தமமிடத்துப்) புதையச்செயய, தேர் [illegible] ஆழி அழுந்தினா சென்றார் - தேரசெல்வதற்கு உதவியாயுள்ள

தேர்ச்சக்கரங்கள் புதையப்பெற்றவர்களாய், (அநுமானை ஐவரும் கிட்டி), ஆர்த்தனர் - ஆரவாரஞ்செய்தது, ஆயிரம் ஆயிரம் அம்பால் - பல ஆயிரக் கணக்கான அம்புகளினால், தூர்த்தனர் - (அநுமான்உடல் முழுவதையும்) மறைத்தார்கள்; அஞ்சனை தோன்றலும் - அஞ்சனாதேவியின் குமாரனாகிய அநுமானும், நின்றான் - (சலியாது) நின்றான்; (எ - று.) பி - ம்:—[1]தூர்த்தழி.

சகூ.—அநுமான் சேனாபதிகள்எய்தஅம்புகளைநூறி, பின்பு ஒருத்தனுடைய தேர்ப்பொறியைச் சிதைத்தல்.

எய்த கடுங்கணை யாவையு மெய்தா
நொய்தக லும்படி கைகளி னூறுப்
பொய்தக டொன்று பொருந்தி நெடுந்தேர்
செய்த கடும்பொறி யொன்று சிதைத்தான்.

(இ - ள்.) எய்த - (தன்மேற் பஞ்சசேனாபதிகள்) பிரயோகித்த, கடுங்கணை யாவையும் - கொடிய அம்புகளெல்லாவற்றையும், எய்தாநொய்து அகலும்படி - தன்மேறபடாமல் எளிதில் ஒழிந்துபோம்படி, கைகளின் நூறு- (தனது) கைகளினால் பிசைந்துவிட்டு, (பிறகு அநுமான்), நெடுந் தேர் - (பஞ்சசேனாபதிகளுள் ஒருவனது) பெரிய தேரிலே,—பொய்து அகடு ஒன்று பொருந்தி - துளைகளப்பட்டு மத்தியில் காட்டப்பட்டதாகிப் பொருந்தி, செய்த - செய்திருந்த, கடும்பொறி ஒன்று - விரைந்துசெல்லுதற்கு உரிய யந்திரமொன்றை, சிதைத்தான் - அழித்தான்; (எ - று.)

தன்மேற பஞ்சசேனாபதிகள மிகுதியாகப்பொழிந்த அம்புமழைகளைத் தன்மேற் படாதபடி தன்கைகளினாலேயே பிசைந்தொழித்து, பின்பு அநுமான் அந்தப்பஞ்சசேனாபதிகளை யழிகக்கருதி, அவர்களுள் ஒருவனது தேரின் இயந்திரத்தைச் சிதைத்தன னென்பதாம. தேர்ப்பொறி - சக்கரம் எனக கொளளுதலு முண்டு. பஞ்சசேனாபதிகள் அநுமானைச் சூழ்ந்துகொண்டு பொருகையில், அவர்களுள் ஒருவனான துர்த்தரனென்பவன அநுமானைத் தாக்கிப் பேரொலிசெய்தவண்ணம் வானத்திலெழுந்து அவ்வநுமான்மீது அம்புமழைகளைப்பொழிய, அப்போது அநுமான் இடிவீழ்வதுபோல அந்தத் தேரில் தாவிகுதித்துக் குதிரை முதலியவற்றை யழிக்க, அந்தத்தேரினின்று உயிர்நீங்கியவனாய்த் தூர்த்தரன் நிலத்தில் விழுந்திட்டா னென்று முதனூலிற் கூறியுள்ளது. (சகூ)

ரு௦.—இதுவும், அடுத்த கவியும்-அநுமான் துர்த்தரனென்ற சேனாபதியோடு பொருது அவனையழித்தலைத் தெரிவிக்கும்.

உற்றுறு தேர்சிதை யாமு னுயர்ந்தான்
முற்றின வீரனை வானின் முனிந்தான்
பொற்றிர ணீளெழு வொன்று பொறுத்தா
னெற்றின னஃதவன் விலவினி னேற்றான்.

(இ - ள்.) உற்ற உறு தேர் சிதையா முன் - ஓடிக்கொண்டேயிருந்த (தனது) தேர் அழிவதற்குமுன்னமே, [அழிந்தவுடனே மிகவிரைவில்],—உயர்ந்தான் - (அததேரினின்று) வானததிற் கிளம்பினவனாகிய, முற்றின வீரனை - சிறந்த வீரனாகிய அந்தத்துர்ததரனென்ற அரக்கனை,—(அநுமான்),—வானில் முனிந்தான் - வானததிலிருக்கும்போதே (அவன்மீது) கோபங்கொண்டு, பொன் திரள் நீள் எழு ஒன்று பொறுததான்-கரும்பொன்னால் [இரும்பினால்] இயன்ற திரண்ட நீண்ட தூணொன்றைத தான் தாங்கினவனாய், எறறினன் - அடித்தான்; அஃது - அந்த இருப்புத்தூணை, அவன் - அவ்வரக்கன், வில்லினின் ஏற்றான் - (தன்) வில்லினால் எதிர்ததுத் தாக்கினான்; (எ - று. —முற்றின வீரனை - அநுமானை என்றுகொண்டு உரைக்கவும் இடமுண்டு. (௩o)

௩௧. முறிந்தது மூரிவி லம்முறி யேகொ
டெறிந்த வரக்கனோ வெற்பை யெடுத்தா
னறிந்த மனததவ [1]னவவெழு வேகொ
டெறிந்த வரக்கனை யின்னுயி ருண்டான்.

(இ - ள்.) (அப்பொழுது,) மூரி வில் - (எழுவை யெதிரத்த அரக்கனுடைய) வலிய வில்லானது, முறிந்தது - (அவ்வெழுவினால் தாக்கப்பட்டு) முறிந்திட்டது; எறிந்த அரககன் - (அநுமானால்) தாககப்பட்ட துர்ததரனென்ற அந்த அரக்கன்,—அ முறியே கொடு - (தனதுவில்) முறிந்த அந்தக காரணததினால், (போர் செய்யும்படி), ஓர் வெற்பை எடுத்தான்-(அப்போது) ஒருமலையை யெடுத்து (அநுமான்மீது) எறிந்தான்; அறிந்த மனத்தவன் - (போர்த்தொழிலை) அறிந்தமனத்தையுடையவனான அந்த அநுமான்,—அ எழுவே கொடு - (தனதுகையிற்கொண்டிருந்த) அந்த இருப்புத்தூணைக கொண்டே, எறிந்த அரக்கனை - (தன்மீது மலையை) வீசியெறிந்த அந்தத் துர்த்தரனென்ற அரக்கனை, இன் உயிர் உண்டான்-கொன்றான்; (எ-று.)—பி - ம்:—[1] அநதவெழுகொண்டு. (௩௧)

௩௨.—இதுவும், அடுத்த கவியும் - மற்றைநான்கு சேனாபதிகளும் அநுமானும் போருதமையைக் கூறும்.

ஒழிந்தவர் நால்வரு மூழி யுருத்த
கொழுந்துறு [1]தீயென வெஞ்சிலை [2]கோலாப்
பொழிந்தனர் வாளி புகைந்தன கண்கள்
விழுந்தன [3]சோரியவ் வீரன் மணித்தோள்.

(இ - ள்,) ஒழிந்தவர் நால்வரும - (துர்த்தரனை) யொழிந்த மற்றுநான்கு சேனாபதிகளும்—ஊழி - கறபாந்தகாலத்தில், உருத்த - உக்கிரங்கொண்டு வெளிகிளமபின, கொழுந்து உறு தீ என - ஜ்வாலைபொருந்திய நெருபபுப்போல (ச சிறி), வெஞ் சிலை கோலா - கொடிய (தமது) வில்லை வளைத்து, வாளி பொழிந்தனர் - அம்புகளை (அநுமான்மீது) சொரிந்தார்கள்; கண்கள் புகைந்தன - (அவ்வரக்கருடைய) கணகள்

கோபத்தினால்) புகைகளைக் கக்கின; அ வீரன் மணி தோள் - அழகிய வீரனாகிய அநுமானது அழகிய தோள்களிலிருந்து, சோரி விழுந்தன - இரத்தம் ஒழுகலாயின; (எ - று.)—பி - ம்:—[1]தீயென வெய்துற. [2]கொட்பர், கோவாப். [3]சோரிகள். (இஉ)

ருரு. ஆயிடை வீரனு முள்ள மழுன்றான்
மாய வரக்கர் வலத்தை யுணர்ந்தான்
மீயெரி [1]யுயப்பதொர் கற்செல விட்டான்
றீயவ ரச்சிலை யைப்பொடி செய்தார்.

(இ - ள்.) அ இடை - அப்போது, வீரனும் - அநுமானும், உள்ளம் அழன்றான் - மனங்கொதித்தவனாய,—மாயம் அரக்கர் வலத்தை உணர்ந்தான் - வஞ்சனையையுடைய அரக்கரது வலிமையை யறிந்து, எரி மீ உய்ப்பது ஓர் கல் செல விட்டான் - நெருப்பை மேலே உமிழ்வதான ஒருகற்பாறையை (அவர்கள்மீது தாக்குமாறு) வீசிவிட்டான்; தீயவர் - கொடிய அச் சேனாபதிகள், அ சிலையை பொடி செய்தார் - அந்தக்கல்லை நீறாக்கிவிட்டார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]ஒப்பதொர். (இரு)

ருச.—இதுமுதல் மூன்றுகவிகள் - அநுமான் அவர்களுள் ஒருவனை அழித்தமையைக் கூறும்.

தொடுத்த தொடுத்த சரங்க டுரந்த
[1]வடுத்தகன் மார்பி [2]னழுந்தி யகன்ற
மிடற்றொழி லான்விடு [3]தேரொடு நொய்தி
னெடுத்தொரு வன்றனை விண்ணி னெறிந்தான்.

(இ - ள்.) தொடுத்த தொடுத்த சரங்கள் - (அவ்வரக்கர்கள் மேன்மேல் வில்லில்) தொடுத்துவிட்ட அம்புகள், துரந்த - (அதகுகின்று) வெளிப்பட்டனவாய், அகல் மார்பின் அடுத்து அழுந்தி அகன்ற - (அநுமானது) பரந்த மார்பிலே பொருந்தித்தைத்து அப்பாறசென்றன; (அப்போது), மிடல் தொழிலான் - லலிமையுடனே போர்த்தொழில்செய்கின்ற அநுமான்,—ஒருவன்தனை - (நான்குசேனாபதியருள்) ஒருவனை, விடு தேரொடு நொய்தின் எடுத்து-(அவன்) செலுத்திவந்த தேருடனே விரைவாகஎடுத்து, விண்ணின் எறிந்தான் - ஆகாயத்தில் வீசினான்; (எ - று.)

அநுமானால் வீசி யெறியப்பட்டவன், விரூபாட்சனென்னலும். பி - ம்:—[1]அடுத்தன. [2]அழுந்தியனன்ற, அழுந்தவனன்ற. [3]தேரொடெய்தி.

ருரு [1]ஏய்ந்தெழு தேரிமிழ் விண்ணினை யெல்லா
நீந்திய தோடி நிமிர்ந்தது வேக
மோய்ந்தது வீழ்வதன் முன்னுயர் பாரிற்
பாய்ந்தவன் மேலுடன் மாருதி பாய்ந்தான்.

(இ - ள்.) ஏய்ந்து எழு தேர் - (அநுமானால்) எடுத்து எறியப்பட்ட அந்தத்தேரானது, இமிழ் விண்ணினை எல்லாம் - ஒலியைக்குணமாகக் கொண்ட ஆகாசத்தினிடம் முழுவதிலும், ஓடி நீந்தியது - விரைந்துஓடிந்த

காகி, சிமிக்கது வேகம் ஓயந்து வீழ்வதன் மூன் - (தனது மிகுந்தான பிகை ஓயந்துபோய் கீழ்வீழ்வதற்கு முன்னாக) உயர்பாரில பாயந்தனன் மேல - சிறந்தபூமியிலே குதித்தவனாகிய அந்தவிருபாட்சனென்ற அரக்கன் மேல, உடன் உடனே, மாருதி அநுமான், பாயந்தான்—; (எ - று.)

ஆகாசம் சப்தத்தைக் குணமாகக்கொண்டதென நூல்கள் கூறுதலால், 'இமிழ்விண்' என்றது. பி - ம்:—[1]ஏயந்தெழுதேருமவ்விண்ணினையெல்லாம்.

ருகூ. [1]மதித்த களிறறினின் வாளரி யேறு
[2]கதித்தது பாய்வது போற்கதி கொண்டு
[3]குதித்தனன் மால்வரை மேனி குழம்ப
மிதித்தனன் வெஞ்சின வீரருள் வீரன்.

(இ - ள்.) மதித்த களிறறினில் மதங்கொண்ட ஆணையானையின்மேல், வாள் அரி ஏறு கதித்தது பாய்வது போல் - கொடிய ஆண்சிங்கம் வேகங்கொண்டு பாய்வதுபோல,—வெஞ் சினம் வீரருள் வீரன் - கொடுங்கோபமுள்ள வீராதிவீரனாகிய அநுமான், கதி கொண்டு குதித்தனன் - விரைவாக அந்தவிருபாட்சனமேற் குதித்தவனாய், மால் வரைமேனி குழம்ப மிதித்தனன் - பெரியமலைபோன்ற (அவ்வரக்கனுடைய) உடம்பு சிதைந்து இரத்தங்குழம்பும்படி துவைத்துக்கொன்றிட்டான்; (எ - று.)—பி - ம்:—[1]மதத்த. [2]கதிர்த்தது. [3]குதித்தவன்மால்வரைத்தோள்கள். (ருகூ)

ருஎ.—இதுமுதல் ஆறுகவிகள் - அநுமான் பின்னும் இரண்டு சேனாபதிகளைப் போர்செய்து தொலைத்தலைக் கூறும்.

மூண்ட [1]சினத்தவா மூவர் முனிந்தார்
தூண்டிய தேரர் சரங்க டுரந்தார்
[2]வேண்டிய வெஞ்சமம் வேறு விளைப்பார்
[3]யாண்டினி யேகுதி யென்றெதிர் சென்றார்.

(இ - ள்.) மூண்ட சினத்தவர் மூவர் - கோபம்மூண்ட மூன்றுசேனாபதிகள், முனிந்தார் - கோபங்கொண்டு, தூண்டிய தேரர் - (தமது) தேரைச் செலுத்தினவர்களாய், சரங்கள் துரந்தார் - (அநுமான்மீது) அம்புகளைத் தொடுத்தவர்களாய், வேண்டிய வெம் சமம் வேறு விளைப்பார் - (தாங்கள்) விரும்பிய கொடியபோரை வேறாக [புதிதாக] மீண்டுஞ் செய்யத்தொடங்கியவர்களாய், இனி யாண்டு ஏகுதி என்று - 'இப்போது நீ எங்கு ஓடப்பார்க்கிறாய்?' என்று சொல்லிக்கொண்டே, எதிர்சென்றார் - (அநுமானை) எதிர்த்துச் சென்றார்கள்; (எ - று.)—இம்மூவர் பெயர் - முறையே, யூபாட்சன், ப்ரகஸன், பாஸகாணன என்பது. பி - ம்:—[1]சினத்தினர். [2]வேண்டினர். [3]யாண்டுனியேகுவது, ஈண்டினிதேகுவது. (ருஎ)

௫௮. திரண்டுயர் தோளினை யஞ்சனை சிங்க
[1]மரண்டரு விண்ணுறை வார்களு மஞ்ச
முரண்டரு தேரவை யாண்டொரு மூன்றி
னிரண்டை [2]யிரண்டுகை யிற்கொ டெழுந்தான்.

(இ - ள்.) திரண்டு உயர் தோள் இனை அஞ்சனை சிங்கம் - பருத்து உயர்ந்த இரண்டுதோள்களையுடைய ஆஞ்சனேயன், அரண் தரு விண் உறை வார்களும் அஞ்ச - காவலையுடைய தேவலோகத்தில்வாழ்பவரான தேவர்களும் அஞ்சும்படி, முரண்தரு - (தன்னோடு) மாறுபட்ட, தேர் அவை ஒரு மூன்றின் - மூன்று தேர்களுக்குளளே, இரண்டை - இரண்டுதேர்களை, ஆண்டு - அப்போது, இரண்டு கையில் கொடு எழுந்தான் - (தனது) இரண்டு கைகளிலே யெடுத்துகொண்டு கிளம்பினான்; (எ - று.)

இரண்டுதேர்களையும் இரண்டுகழறகாயபோல மிகஇலேசாகத் தன் இரு கைகளிலுங் கொண்டு அநுமான் எழுந்தனனென்க. இனி, போரின் கொடுமையைக் கண்டு தேவர்கள அஞ்சினரென்னலுமாம். பி ம்:—[1]மருண்டு விசும்புறைவோர்களுமஞ்ச. [2]இரண்டும். (௫௮)

௫௯ தூங்கிய பாய்பரி சூத ருலைந்தார்
வீங்கிய தோளவர் விண்ணின் விசைத்தா
ராங்கது கண்டவர் போயக லாமு
[1]னோங்கிய மாருதி யொல்லையி னுற்றான்.

(இ - ள்.) (அப்படி அநுமான் எழுந்தவிசையினால்),—தூங்கிய பாய் பரி சூதர் - (அதுதேர்களிற) கட்டப்பட்டுளள பாய்ந்துசெல்லுங குதிரைகளும் பாகர்களும், உலைந்தார் - உயிரொழிந்தார்கள்; வீங்கிய தோளவர் - பருத்த தோள்களையுடைய அவ்வரக்கசேனாபதிகள் இருவரும், விண்ணின் விசைத்தார் (அதுதேரினின்று) ஆகாயத்தில விரைந்துசென்றார்கள்; ஆகு - அப்போது, அது கண்டு - அவர்களை வானத்திறசெலவதைக் கண்டு, அவர் போய் அகலாமுன - அவ்வரக்கர்கள் (வானத்திறசென்று) மறைந்து நீங்குவதற்கு முன்னமே, ஓங்கிய மாருதி - பெருவடிவுபடைத்த அநுமான், ஒல்லையின் உற்றான் - விரைவில (அவர்களைச்சென்று) கிட்டினான்; (எ - று.)

பரிசூத ருலைந்தார் - அஃறிணையும உயர்திணையும் விரவி, சிறப்பினால் உயர்திணைமுடிபைக் கொண்ட தன்மைவழுவமைதி. பி-ம்:—[1]ஓங்கினன்மாருதி.

௬௦. கானிமிர் வெஞ்சிலை கையி னிறுத்தா
னானவர் தூணியு [1]மம்பு மறுத்தா
னேனைய வெம்படை யில்லவ ரெஞ்சார்
வானிடை நின்றுயர் மல்லின் மலைந்தார்.

(இ - ள்.) (சென்றுகிட்டின அநுமான்),—கால் நிமிர் வெம் சிலை கையின் இறுத்தான் - நீண்டகழுதையுடைய கொடியவிற்களைக் கையினால் முறித்தான்; (அன்றியும்), ஆனவர் தூணியும் அம்பும் அறுத்தான் - அவ்வரக்கருடைய அமபறாத்தூணிகளையும அமபுகளையும் சின்னபின்னப்படுத்தினான்; எஞ்சார் - அவ்வரக்கர்கள் (அவனுக்கு) எதிரிடாமல், வெம்படை இல்லவர் - கொடிய ஆயுதங்களையுடையவர்கள், வானிடை நின்று உயர் மல்லின் மலைந்தார் - வானத்திறநின்று உயர்ந்த மல்லுக்கு ஆயத்தமாயினர்; (எ - று.)

ஏனைய வெம் படை இல்லவர் - மற்றும் வேறே ஒரு ஆயுதமும் இல்லாதவரான அவ்வரக்கரிருவரும்,—எஞ்சார் - பின்வாங்காதவராகளாய், வானிடை நின்று - ஆகாயத்திலிருந்துகொண்டே, உயர்மல்லின் மலைந்தார் - சிறந்த மற்போரினால் (அநுமானோடு) பொருதாரகள்; (எ - று.)

ஆயுதங்கொண்டுபொருதற்குத் தமமிடத்துள்ள படைகள்யாவும் அநுமானால்தொலைந்திட்டதனால் அவ்வரக்காகள அநுமானோடு மற்போர் பொரலாயின ரென்க. பி - ம்:—[1]வாளுமகைததான். (சுo)

சுக. வெள்ளை யெயிற்றர் கறுத்துயர் மெய்யர்
பிள்ள விரித்த பிலப்பெரு வாயா
கொள்ள வுருததடா கோளர வொத்தா
ரொள்ளிகல் வீர னருக்கனை யொத்தான்.

(இ - ன்.) வெள்ளை எயிற்றர் - வெணமையான பற்களையுடையவரா களும், கறுத்து உயர் மெய்யா - கறுததது உயாந்த உடம்பையுடையவர்களும், பிளவிரிதத பிலம பெரு வாயா - விரியும்படிதிறநத குகைபோன்ற பெரிய வாயையுடையவரா களுமான அவ்வரககரிருவரும்,—கொள்ள உருததது அடா கோள் அரவு - உட்கொள்ளும்படி [க்ரஹிகுமபடி] கோபித்துநெருங்குகின்ற வலிய இராகுகேதுக்களென்னும் பாம்புகளை, ஒததா—; ஒள இகல் வீரன் - மிக்கபராக்கிரமதததையுடைய வீரனாகிய அநுமான், அருககனை ஒத்தான் - சூரியனைப் போன்றான்; (எ - று.)

முதலில் இராகுகேதுககளால் சூரியன் விழுங்கப்படுவதுபோலத் தோன்றினாலும பிறகு உட்கொள்ளப்படாமல ஒளியோடுவிளங்குவதுபோல, முதலில் இவ்வரக்கரிருவரால் அநுமான் தாககப்பட்டாலும், உடனே, அவர்களை வென்று விளங்குவ னெனபது கருததது மேறசெய்யுளில் இவ்விவரங்காண்க. வெள்ளையெயிறறா கறுத்துயர் மெயயா - முரண்டோடை. (சுக)

சுஉ. தாமபென வாலின் வரிந்துயர் தாளோ
டேம்ப[1]லி லாரிரு தோள்க ளிறுத்தான்
பாம்பென நீங்கினர் பட்டனர் வீழ்ந்தா
ராம்ப னெடும்பகை [2]போலபவ னின்றான்.

(இ - ன்.) தாமபு என - கயிறுபோல, வாலின் - (தனது) வாலினாலே, வரிந்து - கட்டி, ஏம்பல் இலார் - சிறிதும சலியாதுபோரசெய்த அவ்வரக்கவீரருடைய, உயா தாளோடு இரு தோளகள - நீண்ட கால்களையும் தோள்களையும், இறுததான் - (அநுமான்) முறிததான்; (அவ்வரக்கரிருவர்களும்), பாமபு என நீங்கினா - (சூரியனைககிரசிகின்ற இராகுகேதுக்களென்னும) பாமபுகள (நீங்குவது) போல (அநுமானை) நீங்கி, பட்டனர் வீழ்ந்தார் - இறந்து வீழ்நதார்கள்; ஆமபல் நெடுமை

பதை போன்பவன் - ஆம்பலென்னும் நீர்ப்பூவுக்குப்பகைவனான சூரியனை யெதுத்த அநுமான், நின்றான் - (தான் யாதோரூறுபாடும் இன்றி) விளங்கி நின்றான்; (எ - று.) பி-ம்:—[1] இலா. [2]போல்வன். (௯௨)

௯௩.—எஞ்சிய சேனாபதியையும் அநுமான் ஒழித்தல்.

[1]நின்றவ னேனைய னின்றது கண்டான்
குன்றிடை வாவுறு கோளரி போல
மின்திரி வன்றலை மீதுகு தித்தான்
பொன்றிய வன்புவி தேரொடு புக்கான்.

(இ - ள்.) ஏனையன் நின்றவன் - ஐவரில் மற்றொருவனாகிய சேனாபதி எதிர்த்துநின்றான்; நின்றது - (அவ்வாறு தனனை) எதிர்த்துநின்றதை, கண்டான் - கண்டவனாகிய அநுமான்—குன்றிடை வாவுறு கோள் அரிபோல - மலையின்மேல் தாவிப்பாய்கிற வலிய சிங்கமபோல, மின் திரிவல் தலைமீது - ஒளிவீசுகின்ற (அவ்வரக்கனது) வலிய தலையின்மேல், குதித்தான்—; அவன் - அவ்வரக்கன், பொன்றி - இறந்து, புவி - பூமியில், தேரொடு புக்கான் - தேரோடு அழுந்தி இறந்திட்டான்; (எ - று.)

இவ்வரக்கன்பெயர் பாஸகாண னென்னலாம் அநுமான் தன்னோடு எதிர்த்துநின்ற பாஸகர்ணனென்ற அரக்கன்தலைமீது குதிக்க, அவ்விசையினால் அவ்வரக்கன் தரையில் தேரோடு புதைந்து அழிந்தனனென்றவாறு. பி - ம்:—[1]நின்றவன். (௯௩)

வேறு

௯௪.—கவிக்கூற்று: பஞ்சசேனாபதிகள் அநுமானால் இறந்ததைப்பற்றிய வருணனை.

வஞ்சமுங் களவும வெஃகி வழியலா வழிமே லோடி
நஞ்சினும் கொடிய ராகி நவை செயற் குரிய நீரார்
[1]வெஞ்சின வரக்க ரைவ ரொருவனே [2]வெல்லப் பட்டா
ரஞ்செனும் புலன்க ளொத்தா ரவனுநல் லறிவை யொத்தான்.

(இ - ள்.) வஞ்சமும் களவும் வெஃகி - வஞ்சனையையும் களவுதொழிலையும் விரும்பி, வழி அலா வழிமேல் ஓடி - நீதியில்லாத தீயவழியிற் சென்று, நஞ்சினும் கொடியர் ஆகி - விஷத்தினும் கொடுமையையுடையவர்களாய், நவைசெயற்கு உரிய நீரார் - (பிறர்க்கு) தீங்குசெய்தலையே உரிய குணமாகக்கொண்ட தன்மையுடையவர்களாய், வெல்லப்பட்டார் - (அநுமானால்) வெல்லப்பட்டவரான, வெம் சினம் அரக்கர் ஐவர் - கடுங்கோபமுடைய அரக்கராகிய பஞ்சசேனாபதிகள், அஞ்சு எனும் புலன்கள் ஒத்தார் - பஞ்சேந்திரியங்களைப் போன்றாகள்; ஒருவனே அவனும் - தனிவீரனாகிய [illegible] யையும் வென்ற) அநுமானும், நல் அறிவை ஒத்தான் - [illegible] அறிவைப் போன்றான்; (எ - று.)

பெருவீரனாய்த்தனிப்பட்டவனான அநுமான் [illegible]யால் வெல்லுதற்கு அரிய பஞ்சசேனாபதிகளை வென்றதற்கு, [illegible]யே செல்லும்

தன்மையனவாய் அடக்கமுடியாத டஞ்சேந்திரியங்களையும் எளிதில் வெல்லுந் தத்துவவுணர்ச்சியை உவமை கூறினார். புலன் - பொறிகளு, இலக்கணை. பி-ம்:—[1]பைங்கழல். [2]வெல்லப்பட்ட. [3]ஐம்பெரும்பூத மொத்தாரனும னல்லறிவையொத்ததான். (சுச)

சுரு.—அரக்கர்யாவரும் போரில் இறந்தொழிந்ததைக் காவலாளர்யாவரும் காணுதல்.

நெய்தலை யுற்ற வேற்கை நிருதரச் செருவி னேர்ந்தா
ருயதலை யுற்று மீண்டா ரொருவரு மிலலையுள்ளார்
கைதலைப் பூசல் பொங்கக கடுகினா கால னுடகு
மைவரு முலகத தன்மை யனைவரு மமையக் கண்டார்.

(இ - ள்) உள்ளார் அனைவரும் - அந்தச்சோலையிற காவலாகவுள்ளவர்கள்யாவரும்,—அ செருவில் - அந்தப்போரில், நேர்ந்தார் - (போர்செயயும்படி) வந்தவர்களாய், நெய் தலைஉறற வேல் கை நிருதர் - நெய்யை முனையிலே பூசப்பெற்ற வேலாயுததைக கையிலேநதிய அரக்காகளில், உய்தலை உற்று - உயிர் பிழைத்தலைப பொருந்தி, மீண்டார் திரும்பி (ஊர்களு)சசென்றவர்கள், ஒருவரும் இல்லை - ஒருவரு மில்லையாகி, கைதலை பூசல்பொங்க கடுகினர் - அணிவகுப்பில் பேராரவாரமமிகுமபடி விரைநதுபோர்களு வந்தவர்களாகிய, காலன உட்கும் ஐவரும - யமனும் அஞ்சுமபடி கொடுந்தன்மையுடைய பஞ்சசேனுபதிகளும், உலந்த தனமை - அழிந்துபோனதை, அமைய கண்டார் - பிரதியட்சமாகப் பார்ததார்கள்; (எ - று.)

பொழிலுகுகுக்காவலாளிகளாயிருந்தவர்கள் போர்க்குவந்த பஞ்சசேனுபதிகள் தமது துணைப்படையுடனே யாவரும் இறந்துபோனதைப் பிரத்தியட்சமாகக்கண்டன ரென்க எதுகைநயம்நோககி'கைதலை' என இயல்பாயிற்று: கை படைவகுப்பு. இசசெய்யுட்கு வேறுவகையாகப் பொருள் கூறுவது பொருந்துமாயிற கொள்க. (சுரு)

சுரு —இதுவும், அடுத்த கவியும் - பஞ்சசேனுபதிகள் சேனையோடு ஒழிந்ததைச் சோலைகாப்போர் இராவணனிடத்துத் தெரிவித்தல்.

இறுக்குறு [1]மின்னே நம்மை யிக்குரங் கென்ன வேங்கி
மறுக்குறு கின்ற நெஞ்சின் மாதரை வைது நோக்கி
யுறுக்குறு சொல்லா னூழித தீயென வுலக மேழுஞ்
சுறுக்கொள நோக்கு வான்றன் செவித்தொளை தீயச் சொன்னார்.

(இ ள.) (யாவரும இறநததைக கணகூடாகக் கண்ட காவலாளிகள்),—'இ குரங்கு இந்தகலுரகுகானது, (நாம இகுகுததானே இருநதால்), நமமை இன்னே இறுக்குறும் - நம்மையும் இப்பொழுதே முறித்துகொன்றுவிடும்', என்ன - என்று கருதுதலால், ஏங்கி - ஏககங கொண்டு, (அவ்விடததைவிட்டு இராவணனுள்ள இடததிற்குச சென்று),—மறுக்குறுகின்ற நெஞ்சின் மாதரை - (சீதையினிடத்துள்ள காதவால தம்மைக்கணணெடுதது பாராம லிருப்பது பறறிக) கலககங

கொண்ட மனத்தையுடைய மாதர்களை, வைது நோக்கி - திட்டியவண்ணம் பார்த்து உறுகுறு சொல்வான் - கடுஞ்சொற்கூறுபவனாய், ஊழி தீ என உலகம் எழுமாறு நோக்குவான்தன் கற்பார்த்தகாலத்து அகினி போல உலகமேழும் தீந்துபோம்படி கடுமபார்வையைபார்த்துக் கொண்டிருப்பவனாகிய இராவணனது, செவி தொளை-காதுகளின் துவாரங்கள், நீய - நீந்து போம்படி [கர்ணகடோரமாக], சொன்னார் - (பஞ்சசேனாபதிகள் நிகழ்ந்ததைத்) கூறலானார்கள்;(எ - று.)—இதன் விவரணத்தை அடுத்த செய்யுளிற் காண்க.

பொழிலிறுத்தல் கிங்கராவதை முதலியவற்றை இராவணனிடத்துக் கூறியதுபோலவே பருவததேவர்கள், பஞ்சசேனாபதிகள் இறந்ததையும் கூறலானார்களென்க. எழுவாய, வருவித்துஉரைக்க. 'மறக்குறின் ..... நோக்குவான்' என்ற தொடர் - இராவணனைக் காட்டும். பருவத்தேவர் அது மானிடத்து அஞ்சியமையைக காட்டும். முதலடியில் - 'இறக்குறுமின்னே நம்மைக்குரங்கெனவிரங்கியேகி' என்றும் பாடமுண்டு. 'உறக்குறு சொல்லா' என்றுபாடம்கொண்டு, சில அரக்கா என்று எழுவாய் வருவித்து—'சமமை இப்போதே இக்குரங்கு கொன்றுவிடுமென்று மனமிறுகி ஏங்கித் துக்கிக்கின்ற ராக்ஷஸஸ்திரீகளைப் பார்த்துக் கோபித்து அதட்டுஞ் சொல்லராய் வைது விட்டு, சில அரக்கர்கள் ஓடிவந்து, ஊழிதீயைப்போல எழுவகைப்பட்ட உலகங்களும் எரியும்படி உக்கிரதிருஷ்டியாகப்பார்த்துக்கொண்டு கோபமே ஒருவடிவமெடுத்தாற்போலிருந்த இராவணனுடையசெவிதொளைகள்வெந்து நீயும்படி பஞ்சசேனாபதிகள்இறந்த செய்தியைக சொல்லத்தலைப்பட்டார்கள்' என்று உரைகூறுவாருமுளர்; அவ்வகைப்பாடம் பொருந்துமாயிற் கொள்க.

பி - ம்:—[1]அன்றே　　(கக)

கூஎ. [1]தானையு முலந்த தைவர் தலைவருஞ் சமைந்தார் தாக்கப்
[2]போனபின் மீள்வேம யாமே யதுவும்போர் புரிகி லாமை
வானையும் வென்று ளோரை வல்லையின் மடிய நூறி
யேனைய ரின்மை சோம்பி யிருந்ததக் குரங்கு மென்றார்.

(இ - ள்.) தாக்க - (அந்தக்குரங்கு) தாக்கியதனால், தானையும் உலந்தது-சேனையும அழிந்தது; ஐவர் தலைவரும - பஞ்சசேனாபதிகளும், சமைந்தார் - இறந்தொழிந்தார்கள்; போன பின் - இவ்வாறானபிறகு, மீள்வேம் - (அகன்று சென்று) மீண்டுவந்தோமும், யாமே - (அசசோலைக்குக் காவலாளிகளான) காங்களே; அதுவும - அவ்வாறு நாங்கள் உயிர் தப்பியதும், போர் புரிகிலாமை - (அக்குரங்கு எங்களிடம்வந்து) போர் புரியாமையினாலேயாகும்; (இப்போது), அ குரங்கும - அந்தக்குரங்கோ வென்றால், வானையும் வென்ற உளோரை வலலையில மடிய நூறி-ஆகாயத்திலுள்ளதேவர்களையும் ஜயித்தவரான பஞ்சசேனாபதிகளையும விரைவாக உயிரொழியும்படிகொன்று, ஏனையர் இன்மை - (தன்னோடு) போர்செய்பவர் எவரும்இல்லாமையால். சோம்பி இருந்தது-செய்

தொழிலில்லாமல் சோம்பல்கொண்டு இருக்கின்றது, என்றா - என்று செய்தி தெரிவித்தார்கள்; (எ - று.)—பி - ம்:—[3]தானையுமுலந்ததையா. [2]போனபி ஞேடி யாருமெய்தும்.என்றா என்ற முற்றுக்கு எழுவாய் வருவித்து உரைக்க.

பஞ்சசேனாபதிகள் வதைப்படலம் முற்றிற்று.

பதினோராவது

அட்சகுமாரன்வதைப்படலம்.

இராவணனதுகுமாரனான அட்சனென்பவன் அநுமானாற் கொல்லப்பட்டதைக் கூறும் பாகம்.

க.—அநுமானோடு போர ஒருப்பட்ட இராவணனைத் தடுத்து அட்சகுமாரன் தன்னை அனுப்ப வேண்டுதல்.

கேட்டலும் வெகுளி வெந்தீக் [1]கிளர்ந்தெழு முயிரப்பனாகித்
தோட்டலர் தெரியன் மாலை வண்டொடுஞ் சுறுக்கொண் டேற
ஊட்டரக் குண்ட போலு நயனத்தா னொருப்பட்டானைத்
தாட்டுணை தொழுது மைந்தன் றடுத[2]திடை தருதியென்றான்.

(இ - ள்.) கேட்டலும்-(பருவதகதேவர்கள்கூறிய வார்த்தையைக்) கேட்டவுடனே, வெகுளி வெம் தீ கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி - கொடிய கோபாகினியாற் பொங்கிவருகின்ற பெருமூச்சையுடையனாய்,—தோடு அலா தெரியல் மாலை வண்டொடும சுறுக்கொண்டு ஏற - இதழ்கள்மலரப் பெற்ற மலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட விளங்குவதான மார்பின்மாலை (அதனிடத்து மொய்கின்ற) வண்டுகளுடனே தீந்துவிட, ஊட்டு அரக்கு உண்ட போலும நயனத்தான - தீற்றப்பெற்ற அரக்குப் படியப்பெற்றன போன்றுள்ளனவான [மிக்கசிவந்த] கண்களையுடையவனாகி, ஒருப்பட்டானை- (அநுமான்மீது போர்க்குச்செல்ல) உடன்பட்டுச் சித்தனாயிருந்த இராவணனை,—மைந்தன் - அட்சகுமாரன்,—தாள் துணை தொழுது - (அவனது) இரண்டுபாதங்களிலும் வணங்கி, தடுத்து - (அவ்விராவணனைப்) போகவொட்டாமல் நிறுத்தி, இடை தருதி ('நான் சென்று அநுமானைவென்றுவருமாறு எனக்கு) இடந்தருவாயாக', என்றான் - என்றுவேண்டினான்; (எ - று.)

'பஞ்சசேனாபதிகளும இறந்துவிட்டனர்' என்ற செய்தியைக் கேட்டமாத்திரத்தில், மனத்திற்பொங்கியெழுந்த கோபாகினியாற் பெருமூச்சுத் தோன்றவும், மாபிலணிந்த மாலை அதனிடத்துமொய்க்கும் வண்டுகளுடனே கரிந்துபோகவும், கண்கள் செவ்வரக்கு ஊட்டப்பட்டன போல்ச் சிவந்துதோன்றவும், இனி எவரையும் அனுப்பாமல் தானே

அனுமனோடுபொருவதாக சிச்சயித்து அதற்குஎப்ப முயலும் இராவணனோடுபோக்கி, அவனது மகனான அட்சகுமாரன் அவன்காலில் விழுந்து அச்செயலில் தன்னையேவுமாறு வேண்டிக்கொண்டானென்பதாம். இந்த அட்சகுமாரன் தாரியமாலினி என்பவளிடம் இராவணனுக்குப் பிறந்த மகனாவன்; கம்பர் மந்தோதரிமகனென்றே என்னுமாறு இத்தப்படலத்துக் கூறுகின்றார். இடை தடுத்து - நடுவே தடுத்து, தருதி - விடைதருவா யென்றுகூறுதலும், 'இறைதருதி' என்ற பாடங்கொண்டு - விடைதருவாயென்று பொருள்கூறுதலு முண்டு. பி - ம்:—[1]கிளர்தெழுவிலகன்மார்பில். (௧)

—ஒருவும், அடுத்த கவியும் - ஒருதொடர்; அட்சகுமாரன் முனைக் கூறியதையே வேறுவகையாய் கூறுதல்.

முக்கணு னூர்தி [1]யனறேன் முன்றுல கடியிற் றாயோ
னொக்கலூர் பறவை யன்றே லவன்றாயி லூரக மன்றேற்
றிக்கய [2]மல்ல தேற்புன் குரங்கினமேற் சேறி போலா
[3]மிககட னடியேற சீதி யிருத்தியீண் டினிதி னெந்தாய்.

(இ - ள்.) எந்தாய் - எனது தந்தையே! (நம்மோடு பொருவது),—முக்கணுன் னூர்தி அன்றஎல் - மூன்றுகணுகளைப்படைத்த கடவுளாகிய சிவபெருமானது வாகனமாகிய இடபமன்றாயின்,—மூன்று உலகு அடியின் தாயோன் ஒக்கலூர் பறவை அன்ற எல் - மூவுலகங்களையும் (தனது திருவடிகளினால்) தாவியளந்தவனாகிய திருமால் எப்போதுமாக ஏறிச்செலுத்துகின்ற கருடப்பறவையன்றாயின், அவன் துயில் உரகம் அன்ற எல் - அத்திருமால் கண்வளர்கிற ஆதிசேஷனன்றாகில், திக்கயம் அல்லது எல் - திக்குக்களைத்தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்களு மன்றாயின்,—புல் குரங்கின்மேல் சேறி போல் ஆம் - (உன்னுடைய ஆற்றலுக்குச் சிறிதும் ஏற்றதல்லாத) இழிந்த ஒரு குரங்கின்மேற (போர்க்குச) செல்வாய்போலும்; (நீ பொருச் செல்வது சிறிதுந் தகுதியன்று); இ கடன் - இந்தக்கடமையை, அடியேற்கு ஈதி - எனக்குத் தந்து, ஈண்டு இனிதின் இருத்தி - இங்கே சுகமாக இருப்பாயாக; (௨ - ௩)

பெருவீரனான நீ உனக்குஎற்ற வலிமைபடைத்த பெருவீரருடனே பொருவதே தகுதி; அவ்வாறு பொருதற்கு வீரர்வாரது விலங்கோடு பொருவதென்றாலும், சிவபெருமானுடைய வாகனமாகிய விருஷபமோ, அன்றித் திருமாலின் வாகனமாகிய கருடனோ, அல்லாவிடின் அப்பரமன் பள்ளிகொள்ளும் ஆதிசேடனோ, அவைகளெல்லாம் அன்றாயின் திக்கஜங்களுள் ஒன்றோ, இவற்றுள் எதுவாக இருப்பினும் பொருதாலும் பொரலாம்; [illegible] மேம்பாடுபெறாத அற்ப[illegible]டனே மகாவீரனான நீ பொரச்செல்வது உனது ஆற்றலுக்குச் சி[illegible]ம் ஏற்குமோ? ஏலாது; ஆகவே, இந்த அற்பத் தொழிலைப்புரியுமாறு எனக்குக் கட்டளைகொடுத்துவிட்டு நீ 'இவனால், இக்குரங்கை வெல்லுதல் முடியுமோ முடியாதோ? என்ற சங்கைசிறிதுமின்றி

இங்கே இனிது இருப்பாய்' என அட்சகுமாரன் இராவணனை வேண்டிக் கொண்டனனென்க. பி - ம்:—[1]அன்றே, [2]அல்லவாகில். [3]இயபணி. (உ)

கூ.—அட்சகுமாரன் தன்னையேவவேண்டுமென்பதற்குக் காரணங்காட்டுதல்.

அண்டர்கோன் றன்னைப் பறறித் தருகெனு வடியே னீற்கக்
கொண்டனை [1]யெம்முன றன்னைப் பணியென நெஞ்சங் [2]கோட
லுண்டது தீரு மன்றே யுரனிலாக் குரங்கொன் றேனு
மெண்டிசை வென்ற நீயே யேவுதி யென்னை யென்றான்.

(இ ன்.) 'அடியேன் நிற்க - நான் (உனது கட்டளையை முடித்தற்குச் சித்தமாக) இருக்கையில், (என்னையேவாமல்),—அண்டர் கோன் தன்னை பற்றி தருக எனு - தேவராசனான இந்திரனைப் பிடித்துவருவாயென்று சொல்லி என் முன் தன்னை பணி கொண்டனை - என் தமையனான இந்திர சித்தினிடத்துக் தேவராசனைப்பிடித்து வருவதாகியஅத) தொழிலை வாங்கிக் கொண்டாய்', என - என்று, நெஞ்சம் கோடல் உண்டு - மனத்திற்கொண்ட குறையொன்று (எனக்கு) உள்ளது; உரன் இலா குரங்கு ஒன்று எனும் (இப்போது நான் எதிர்த்து வெல்லப்போவது) வலிமையிலலாத தொரு குரங்கே யாயினும், (அதனைவென்றுவருமாறு எனக்குக் கட்டளையிட்டாயாயின்), அது தீரும் அன்றே - அந்த மனக்குறை (ஒருவாறு) நீங்குமல்லவோ? (ஆதலால்), என்னை—, எண் திசை வென்ற நீயே - திக்விசயஞ்செய்த நீயே, ஏவுதி - (அக்குரங்கைவென்று வருந்தொழிலில்) ஏவுவாயாக,' என்றான் - எனறு (இராவணனை) வேண்டிக்கொண்டான் (அட்சகுமாரன்); (எ-று.)—பி - ம்:—[1]என்முன். [2]கோடி. (ஙூ)

ச.—இதுவும், அடுத்த கவியும் - அட்சகுமாரன் தான் குரங்கை வென்றுவருவதாக உறுதிகூறுதல்

கொய்தளிர் கோதும வாழ்க்கைக் [1]கோடரத் துருவுகொண்டு
[2]கைதல மியற்றி யீண்டோர் சிறுபழி யிழைக்குங் கற்பா
னெய்தின னிமையா முக்க ணீசனே யென்றபோது
நொய்தினின் வெனறு பறறித் தருகுவெ னொடியி [2]னுன்பால்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ன்.) இமையா முக்கண ஈசன் - இமைத்தலில்லாத மூன்று கண்களையுடைய சிவபிரானே, கைதவம் இயற்றி ஈண்டு ஓர் சிறு பழி இழைக்கும் கற்பான் - வஞ்சனைசெய்து இந்தஇலங்காபுரியில் ஒரு சிறிய அநௌரவத்தை விளைக்கக்கூடிய காரியத்தைச் செய்யவேண்டு மென்கிற நினைவினால், கொய் தளிர் கோதும் வாழ்க்கை கோடரத்து உருவு கொண்டு எய்தினன் - கொய்தற்குஉரிய தளிர்களைக் கொந்தி யுண்கிற உயிர்வாழ்க்கையையுடைய (அற்பக்) குரங்கினது வடிவத்தைக்கொண்டு வந்துள்ளான், என்றபோதும் - என்றாலும், (அவ்வாறு குரங்கின் வடிவுகொண்ட சிவனையும்), நொய்தினின் வென்று - இலேசு

சாகவென்று, கொடியின் பற்றிநுன்பால் தருகுவென் - வெகுவிரைவிற் பிடித்து உன்னிடம் கொணர்ந்துவிட்டிடுவேன்; (எ - று.)

சிவபெருமானுடைய மூன்றுகண்களில் நெற்றிக்கண் திறவாமல் மூடியிருத்தலாலும், மற்றையிரண்டுகண்களும் அப்பெருமானது தெய்வத்தன்மைக்கு ஏற்ப மூடாமல் திறந்தேயிருத்தலாலும், 'இமையா முக்கண்' எனப்பட்டதென்க. பழி - அபகீர்த்திக்கு இடமான செயல்: ஒரு அற்பப்பிராணியால் அரக்கர்பலர்மடிந்தாரென்பது. பி - ம்:—[1]கோடரவுருவன். [2]கைதவன் கண்ணி. [3]நின்பால். (௪)

௫. துண்டத்[1]தூ ணதனிற் றோன்றுங்கோளரி சுடர் வெண்கோட்டு
மண்டொத்த நிமிராண் கேழ லாயினு [2]மலைத லாற்றா
தண்டத்தைக் [3]கடந்து பொங்கி யப்புறத் தகலி னென்பாற்
றண்டத்தை [4]யிடுதி யன்றே நின்வயிற் றந்தி லேனேல்.

(இ - ள்.) துண்டம் தூண் அதனில் தோன்றும் கோள் அரி (ஆயினும்)- மரத்துண்டினாலாகிய கம்பத்திலிருந்து தோன்றிய வலிமையையுடைய நரசிங்கமேயாயிருந்தாலும், வெள சுடர் கோடு மண் தொத்த நிமிர் ஆண் கேழல் ஆயினும்-வெள்ளொளிபொருந்திய கோரப்பல்லிலே பூமி (ஒருதுகள் போல) ஒட்டிக்கொள்ளும்படி ஓங்கிவளர்ந்த வராகமே யானாலும், (அவையும்) மலைதல்ஆற்றாது (என்னோடு) பொருகற்குத் தரமுடையனவல்ல; (இப்போது நம்முரில்வந்து பொருகின்ற அசுரனுக்கு), (என்கையில் அகப்படாமல்),—பொங்கி அண்டத்தைக்கடந்து அ புறத்து அகலின் - கிளர்ந்தெழுந்து இவ்வுலகவுருண்டையைத்தாண்டி அப்பாற் சென்றுவிட்டால், (அதனால்), நின்வயின்தந்திலேன் எல் - (அதனை உன்னிடம் கொணர்ந்து நிற்கவைக்காமறபோவேனாயின், அன்றே-அப்போதே, என்பால் தண்டத்தை இடுதி - என்னிடம் தக்க தண்டனையை விதிப்பாய்; (எ - று.)

முன்னிரண்டடிகட்கு - நரசிங்கத்தினமிசமாகவேனும் வராகத்தினமிசமாகவேனும் இந்தக்குரங்கு இருந்தாலும் சரி, இதனால் என்னோடு பொர முடியாது என்று கருத்துகொள்ளினுமாம். வெண்கோட்டு மண்தொத்த நிமிர் ஆண்கேழல் - "பன்றியாய்ப் படியெடுத்த பாழியாயென்பரது - வென்றியா ருனதெயிற்றின் மெனறுகள்போன்றிருந்ததால்" என்றது காண்க. பி - ம்:—[1]தூணகத்து. [2]மலைந்தபோதா. [3]கடந்துபோகிலப்புறம்போயுமென்பால். [4]இடுகீ. (௫)

௬.—அட்சகுமாரன் இராவணனிடத்து விடைபெற்றுப் புறப்படுதல்.

எனவிவை யியம்பி யீதி விடையென விறைஞ்சி நின்ற
வனைகழல் வயிரத் திண்டோண் மைந்தனை மகிழ்ந்துநோக்கித்
துனைபரித [1]தேர்மே லேறிச் சேறியென் றினைய சொன்னான்
புனை[2]மலர்த் தாரி னானும் போரணி யணிந்து போனான்.

(இ - ள்.) என இவை இயம்பி - என்று இவ்வார்த்தைகளைச் சொல்லி, 'விடை ஈதி - (எனக்கு) விடைகொடுப்பாய்.; என-என்று, இறைஞ்சி நின்ற -

வணங்கி(ததன்முன்னே) நிறகிற, வனை கழல் வயிரம் திண தோள் மைந்தனை - கட்டியவீரக்கழலையும் மிகவலிய தோள்களையுமுடைய அட்சகுமாரனை,—(இராவணன்),— மகிழ்ந்து நோக்கி—, துனைபரி தேர்மேல் ஏறி சேறி - விரைந்து செல்லுகின்ற குதிரைகள்பூட்டிய தேரின்மேலேறிச் செல்வாய,'என்று—, இனைய சொன்னான் - இவ்வாறுகச சொன்னான்; மலா புனை தாரினனும் - மலாகொண்டுதொடுக்கப்பட்ட மாலையையணிந்த அட்சகுமாரனும், போர அணி அணிந்துபோனான் - போர்ககோலங் கொணடு புறப்பட்டான்; (எ - று.)

தான் குரஙகை எப்படியிருந்தாலும் வென்றுவருவே னெனத் தன்மகன் உறுதிகூறியதனால், அதுகேட்ட இராவணன் அவனை மகிழ்ந்து நோக்கிப் பொருமாறு விடைகொடுத்தன னென்க. பி - ம்:—[1]தேரின். [2]மணித் (சு)

எ.—அட்சகுமாரன் தேர்மே லேறுதல்.

ஏறின னென்ப மன்னோ விந்திர னிகலி னிட்ட
நூறொடு நூறு பூண்ட நொறிலவயப புரவி நோன்றேர்
கூறின ரரக்க ராசி குமுறின முரசக் கொண்மூ
ஊறின வுரவுத் தானை ஊழிபோர் கடலை யொப்ப.

(இ - ன்.) இகலின் - (முன் நிகழ்ந்த) போரில், இந்திரன் இட்ட - தேவேந்திரன் கொடுத்துப்போய்விட்டதும், நொறில் வய புரவி நூறொடு நூறு பூண்ட - விரைவுள்ள வெற்றிபெறற இருநூறுகுதிரைகள் பூட்டப்பட்டுள்ளதுமான, நோன் தேர் - வலிய தேரின்மீது, ஏறினன் - (அநத அட்சகுமாரன்) ஏறினான்; (அப்போது), அரக்கர் ஆசி கூறினர் - அரககர்கள் ஆசீர்வாதஞ் சொன்னார்கள்; முரசம் கொணமூ குமுறின - முரசவாததியங்களாகிய மேகங்கள் முழங்கின; ஊழி போ கடலை ஒப்ப - யுகாந்தகாலததில் நிலைபெயர்ந்து வருகின்ற சமுததிரத்தைப்போல, உரவு தானை- வலிய சேனை, ஊறின - மேன்மேற் சுரநது (அவ்வரகக்குமாரனைப்) பின்பறறிவரலாயின; (எ - று.)—என்ப, மன், ஓ - அசைகள். (எ)

அ.—அட்சகுமாரனோடு சென்ற நால்வகைச் சேனையின் மிகுதி.

பொருகடன் மகர மெண்ணி னெண்ணலாம் பூட்கை பொங்கித்
திரிவன மீன்க ளெண்ணி னெண்ணலாஞ் செம்பொற்றிண்டே
ருருவுறு மணலை யெண்ணி னெண்ணலா முரவுத் தானை
வருதிரை மரபி னெண்ணி னெண்ணலாம் வாவும் வாசி.

(இ - ன்.) (அந்த அட்சகுமாரனோடு சென்ற நால்வகைச சேனைகளில்),—பூட்கை - யானைச சேனையை, பொரு கடல் மகரம் எண்ணின் எண்ணல் ஆம் - (அலைகள்) மோதுகின்ற கடலிலுள்ள சுறாமீன்களை எண்ணக்கூடுமானால் எண்ணமுடியும்; செம் பொன் திண் தேர் - செம்பொன்மயமான வலியதேர்களை, பொங்கி திரிவன மீன்கள் எண்ணின் எண்ணல் ஆம் - (அந்தக் கடலில்) செருக்கித திரிவனவாகிய மீன்களை

எண்ணமுடியுமானால் எண்ணமுடியும்; உரவு தானை - வலிமைபொருந்திய காலாட்சேனையை, உரு மணலை எணணின் எண்ணல் ஆம் - அந்தக்கடலிலே (ஒன்றோடொன்று ஒட்டாது) தனித்தனியேயுள்ள மணலை எண்ணக்கூடுமானால் எண்ணமுடியும்; வாவும் வாசி - தாவிச் செல்லும் குதிரைகளை, மரபின் வரு திரை எணணின் எண்ணல் ஆம் - (அந்தக் கடலில்) முறைமுறையாகவருகிற அலைகளை எண்ணக்கூடுமானால் எண்ணமுடியும்; (எ - று)

கடலிலுள்ள மகரம முதலியவறறை எண்ணுதல் அரியதாதல் போல அந்த அட்சகுமாரனோடுசென்ற நாலவகைச சேனைகளையும் எணணுதல் அருமையாகு மென்க இது - உய்த்துணரி னபபு என்னும் அணியாம்; (இதனை வடநூலார ஸமபாவநாலங்காரமென்பா.) வேறொருபொருள் சிதறிப்பதற்காக 'இப்படியிருநதால் இனனது ஆகுமு' என்ற வாய்பாடு படக் கூறுவது, இவ்வணியின் இலககணம். இங்குகூறிய வருணனையில் அந்த நால்வகைப்படைகளுககூடிய சேனைகுச சமுததிரமும் அதனிடததுள்ள யானைகட்கு அக்கடலிலுளள சுறுமீன்களும, தோததிரளுககு மீன்திரளும், குதிரைகட்கு அலைகளும, காலாட்படைக்கு மணலும் உவமையாதல் பெறப்படும். (அ)

கூ.—இதுவும், அடுத்த கவியும் - பலஅரக்கக்குமரர் படைத்துணையாகச் செல்லுதலைத் தெரிவிக்கும்.

ஆறிரண் [1]டடுத்த வெண்ணி னாயிரங் குமர ராவி
வேறிலாத் தோழர் வென்றி யரக்கர்தம் வேந்தர் மைந்த
ரேறிய தேரர் சூழ்ந்தா ரிறுதியின் யாவு முண்பான்
சீறிய காலத் தீயின் செறிசுடர்ச் சிகைக ளன்னார்.

(இ - ள்.) இறுதியின் யாவும் உணபான் - யுகாந்தகாலத்தில் (உலகத்துப் பொருளகளை) எல்லாம் அழிககும்பொருட்டு, சீறிய - பொலிக் சிவுர்த்த காலம தீயின் - யுகாநதகாலாகநினியினுடைய, செறி சுடர் சிகைகள்-செருங்கிய ஒளியையுடைய சுவாலைகளை, அன்னார் - ஒததவாகளும், ஆவி வேறு இலா தோழா - (உடல வேறேயன்றித) தமமுயிர (அட்சகுமாரனைவிட) வேறாக இலலாத நணபரும, வென்றி அரகசர தம வேந்தர் மைந்தர் - வெற்றியையுடைய ராக்ஷஸராஜவமிசத்துப் பிறநத வீரரின் புத்திரராகளுமாகிய, ஆறு இரண்டு அடுதத எணணின் ஆயிரம குமரர் - பன்னீராயிரக குமாரர்கள், ஏறிய தேரர் சூழ்நதார் - தேரின்மீது ஏறிகொணடு (அந்தஅட்சகுமாரனைச) சூழ்நதுகொணடு சென்றாகள; (எ - று.)—பி - ம்.—[1]எடுதத. (கூ)

கo. மநதிரக் கிழவர் மைநதா மதிநெறி யமைச்சர் மக்க
டந்திரத் தலைவ ரன்ற தனயாகள் பிறருந தாந்தக்
கந்தரத் தரம்பை மாரிற றோன்றின ராகி [1]யாயோ
[2]ரெந்திரத் தேரர் சூழ்ந்தா ரிரிரண் டிலக்கம் வீரர்.

(இ - ள்.) மந்திரம் கிழவர் மைந்தா - (முன்பு சமயங்களில் ஆலோசனை சொல்லுபவர்களாயிருந்த) மந்திரிமாரது குமாரர்களும், மதிநெறி அமைச்சர் மக்கள் - புத்தியும் அரசநீதியு முணர்ந்த அமைச்சராயிருப்பவரது குமாரர்களும், தந்திரம் தலைவர் ஈன்ற தனயர்கள் - சேனாபதிகள் பெற்றுவளர்த்த குமாரர்களும், தாதைக்கு அந்தரத்து அரமபைமாரிலதோன்றினர் ஆதி ஆயோர் பிறரும் - இவ்வட்சகுமாரனது தந்தையாகிய இராவணனுக்குத் தேவமங்கையரிடம் பிறந்த புத்திரர் முதலிய பிறரும் ஆகிய ஈர் இரண்டு இலக்கம் வீரர் - நாலுலட்சம வீரர்கள், எந்திரம் தேரர் - எந்திரமுள்ள தேர்மீது ஏறியவர்களாய, சூழ்ந்தார் - (அவ்வட்சகுமாரனுக்குப் படைத்துணையாகச்) சூழ்ந்துவந்தார்கள்; (எ - று,)

மந்திரக்கிழவர் என்பது - இறந்துவிட்ட மந்திரிமாரையும், அமைச்சர் என்பது - அப்போது மந்திரிதொழிலிலிருப்பவரையும் காட்டுமென்க. இனி, மந்திரக்கிழவர் என்பது - விசேஷ காலங்களில் ஆலோசனை சொல்பவரையும், அமைச்சரென்பது எப்போதும் உடனிருந்து ராசாங்ககாரியத்தைப்பார்ப்பவரையும் காட்டு மென்னலுமாம. மந்திரக்கிழவர் முதலாகக் கூறியவர் நால்வராதலால், ஒவ்வொரு வகையினரின் குமாரரும ஓரிலட்சமாக நாலுலட்சம வீரரென்க. பி-ம்.—[1]வானோ. [2]எந்திரத்தரக்காவந்தார். ()

கக.—அச்சேனையின் பலவகைப் படைகள்.

தோமர முலக்கை சூலஞ் சுடர்மழு குலிசந் தோட்டி.
வேமரு வரிவில் வேலகோ லீட்டிவா ளெழுவிட் டேறு
மாமரம் வீசு பாசம் வளை யயில் வயிரத் தண்டு
காமரு கணையங் குந்தங் கப்பணங் கால நேமி.

இதுவும, அடுத்த கவியும - ஒருதொடர்.

(இ - ள்.) தோமரம்—, உலக்கை—, சூலம்—, சுடர், - ஒளியையுடைய, மழு—, குலிசம் - வச்சிராயுதம், தோட்டி - அங்குசம், வ மருவரிவில் - அம்பிபொருந்தியகட்டமைந்த விறகள், வேல்—, கோல்—, ஈட்டி—, வாள்—, எழு—, விட்டேறு—, மாமரம்-பெரிய மரங்கள், வீசு-வீசியெறிதற்குரிய, பாசம்—, வளை - வளையம், அயில் - கூர்மையையுடைய, வயிரம் - உறுதியான, தண்டு—, காமரு - அழகுபொருந்திய, கணையம - வளைதடி, குந்தம் - கைவேல், கப்பணம் - யானைநெருஞ்சிமுள், காலம நேமி-தவறாமற் கொல்லவல்ல சக்கராயுதம், (எ - று)—'என்றிவைமுதல்' என அடுத்த கவியோடு தொடரும.

விட்டேறு - விட்டெறியும் ஓராயுதம. 'பாசமெழுமுளை' என்றும் பாடம். எழு முளை - எழுகின்ற முளை யென்க. (கக)

கஉ.—சேனை செல்கையில் நேர்ந்த நிகழ்ச்சி.

என்றிவை முதல வாய வெழிறிகழ் படைக ளீண்டி
மின்திரண் டனைய வாகி வெயிலொடு நிலவு வீசத்

துன்றிருந் துளி பொங்கித் துறுதலா லிறுதி செல்லாப்
பொன்றிணி யுலக மான [1]பூதலம் வாழி மாதோ.

(இ - ள்.) என்ற இவை முதலாய - என்றசொல்லப்படுகிற இவை முதலாகவுள்ள, எழில் திகழ் படைகள் - (துருப்பிடியாமல்) அழகாக விளங்குகின்ற ஆயுதங்கள், ஈண்டி - நெருங்கியதனால், மின் திரண்ட(து) அனைய ஆகி - மின்னல்கள் ஒருசேரத்திரண்டாற்போன்று, வெயிலோடு நிலவு வீச- வெயிலையும் நிலாவையும் வெளிப்படுத்திக்கொண்டிருக்க,—துன்ற இரு துளி பொங்கி துறுதலால் - நெருங்கிய மிக்க துளிகள் மேலெழுந்து (வானத்தில்) நெருங்கியதனால். பூதலம் - பூமியானது,—இறுதி செல்லா பொன் திணி உலகம் ஆன-அழிவடையாத பொன்னுலகமன்ற தேவலோக மாயின; (எ - று.)—வாழி, மாது ஓ - அசைகள்.

பெருஞ்சேனைகள் செல்வதனால் பூதலத்திலுள்ள புழுதிகளெல்லாம் மேலேபோய்விட, பல்வகையாயுதங்களினால் எங்கும் பேரொளியுடன் விளங்கிய அந்தஇடம் மண்மயமன்றிப் பொன்மயமாய் விளங்குகின்ற தேவலோகம் போன்றதென்க; பிறிதின்குணம்பெறலணி. தன்குணத்தைவிடச் சிறந்த பிறிதின்குணத்தைப் பெறுதல், அதன் இலக்கணம். பி-ம்:—[1]பூதலமெனவையுமாதோ. (கஉ)

கங.—இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்; மிக்கஆடம்பரத்தோடு படையெடுத்து அட்சகுமாரன்வருதலை அநுமான் காணுதல்.

காகமுங் கழுகும் பேயுங் காலனுங் கணக்கில் காலஞ்
சேகுற வினையிற் செய்த தீமையுந் தொடர்ந்து செல்லப்
[1]பாகியல் கிளவி செவ்வாய படைவிழி பணைத்த வேய்த்தோட்
டோகையர் மனமுந் தொக்க தும்பியுந் தொடர்ந்து சுற்ற.

(இ - ள்.) காகமும்—, கழுகும்—, பேயும்—, காலனும் - யமனும் கணக்கு இல் காலம் சேகு உற வினையின் செய்த தீமையும் - பலகாலம் உறுதி பொருந்தத் தமது செயலாற்செய்த பாவமும், தொடராது செல்ல - பின் தொடர்ந்து வரவும்,—பாகு இயல் கிளவி செம் வாய் - பாகின் தன்மை பொருந்திய [இனிமையான] சொற்களையுடைய செந்நிறவாயையும், படைவிழி - வேலாயுதமபோன்ற கணகளையும், பணைத்த வேய் தோள - பருத்த மூங்கில்போன்ற தோள்களையுமுடைய, தோகையர் - மயில்போன்ற சாயலையுடைய அரக்கமகளிரது, மனமும—, தொக்க தும்பியும் - தொகுதியான வண்டுகூட்டங்களும், தொடாநது சுற்ற - சுற்றிலுந் தொடர்ந்துவரவும,—(எ - று.)—'மாறறங்க ளொழிபப'என அடுத்த கவியோடு தொடரும்.

அநுமானுற கொல்லபபடப்போகின்ற அரக்கருயிரைக் கவர்ந்து செல்லுதற்கு யமனும், போர்க்களத்தில் வீழும் பிணங்களைப் பிடுங்கித் தின்பதற்குக் காகமுதலியனவும் தொடாநது சென்றன வெனக. அரக்கர் தாம் பலகாலமாகச் செய்துவந்த தீவினை இபபோது பலித்து இவவரக்கர் தோல்வியுறு அழிவரென்பதை விளக்க, கவி 'கணக்கில் காலம் * * * செய்த தீமையுந்

தொடர்ந்து செல்ல' என்றார். அரசகுமாரர் காதலிக்குமாறு அழகுபடைத்தவ னென்பதைவிளக்க 'தோகையர் மனம் தொடர்ந்து சுற்ற' என்றார். பூமாலை யினிடத்துள்ள தேனைப்பருகுவதற்கு வண்டுகள் தொடர்ந்துசெல்லு மெனக பி - ம்:—[1]பாகுறு. (கரு)

கச. உழைக்குல நோக்கி னார்க ளுலந்தவர்க் குரிய மாத
ரழைத்தழு குரலின் வேலை யமலையி னரவச் சேனை
தழைத்தெழு மொலியி[1]னாலுப் பல்லியந் [2]துவைத்தலால்விண்
மழைக்குர லிடியிற சொன்ன மாற்றங்க [3]ளொழிய மன்னோ.

(இ - ள்) உலகதவாககு உரிய மாதர் - (முன்னேநிகழ்ந்தபோரில்) இறந்த அரக்கர்கட்குஉரிய மனைவியராகிய, உழை குலம் நோகினாகள - மான்கூட் டம்போன்ற (மருண்ட) பார்வையையுடைய அரகியர், அழைத்து அழு குர லின் - (தமதுகணவரைக) கூப்பிட்டு அழுகின்ற குரலினாலும், வேலை அமலை யின் - சமுத்திரகோஷததினாலும், அரவம சேனை தழைதது எழும் ஒலியின் - ஆரவாரஞ்செய்கின்ற சேனைகள் திரணடுசெலவதனால் நிகழ்ந்த ஒலியினாலும், கானு பல்இயம் துவைததலால் - பலவகைவாததியங்கள சப்தித்தலாலும், விண் மழை குரல் இடியின் சொன்ன - வானத்திலுள்ள மேகத்தின தொனி யாகிய இடிபோல ப பேரொலியுடைடாகுமாறு) பேசின, மாறறங்கள் - வார்த் தைகள், ஒழிய - (பிறர்ககுக கேளாமல்) அடங்கிவிடவும,—(எ - று.)— 'விழுங்க' என அடுதத கவியோடு தொடரும. மன் ஓ - ஈற்றசை.

இதனால் அப்போது தோன்றிய பேரொலியை வருணித்தவாறு. அட்ச குமாரனுக்குத தீ நிமித்தமாக அழுகுரல் தோனறியதை முதலிற காட்டினார். 'ஆனுப்பல்லியம' என்றும் பிரிக்கலாம. பி-ம்:—[1]ஓசைப். [2]துவைககுந்தாவில். [3]ஒழிப்ப. (கச)

கஇ. வெயிற்[1]கதிர் மணிகள் வீசும் விரிகதிர் விழுங்க வெய்ய
வயிற்கர மணிகள் காலு [2]மவிரொளி பருக [3]வஃகா
வெயிற்றிளம பிறைக ளீன்ற விலங்கொளி [4]யொதுங்கயாண
ருயிர்க்குல விரவு மன்று பகலன்றென் [5]றுணர்வு தோன்ற.

(இ - ள்.) வெயில் கதிர் மணிகள் - வெயிலைப்போன்ற ஒளிவீசுகின்ற (ஆபரணங்களிலுள்ள) இரத்தினங்கள், வீசும விரி கதிர் விழுங்க - (உலக முழுதும்) பரவுகின்ற பரந்த சூரியகிரணத்தை யடககவும,—வெயய அயில் கரம் - கொடிய வேலாயுதங்களினால் தோன்றுகின்ற காந்தியினா லே, மணிகள காலும் அவிர் ஒளி பருக - (ஆபரணங்களிலிழைத்த) இரததினவகள் வெளிவீசுகின்ற விளகுகின்ற ஒளியையடககுமாறு,— அஃகா - (ஒளியினாற) குறையாத, எயிறு இளம் பிறைகள் - பற்களாகிய இளம்பிறைகள், ஈனற - வெளிவிடுகின்ற, இலங்கு ஒளி - விளகுகின்ற ஒளி, ஒதுங்க - மறையவும்,—(இவ்வாறு இருததலால்), உயிர்ககு - பிராணிகட்கு, உலவு இரவும் அன்று - (இது உலகத்திலே) தோன்று கின்ற இரக்காலமும்அன்று, பகல்அன்று - (அவ்வாறே உலகத்தத

தோன்றும்) பகலும் அன்று, என்று—, யாணர் - புதுமையாக, உணர்வு தோன்ற-ஒருணாசகியுண்டாகவும்,—(எ - று.)—'இடத்துத் துள்ள' என அடுத்த கவியோடு தொடரும்.

அப்போது பகற்காலமாகையால் சூரியன் வெயில்வீச,— அதனை அரக்கர் அணிந்திருந்த ஆபரணங்களிலுள்ள அரதனங்களின் ஒளி அடக்கிற்று; அந்த ஆபரணவிரத்தினங்களினொளியையும் பிரகாசியாதபடி அவ்வரக்கரின் கோரப்பறகள் பிறைச்சந்திரனது நிலவுபோன்ற ஒளியை வீசின; அந்த எயிறு நிலவு விளங்காதவாறு வேற்படைகள் ஒளிவீசலாயின; இவ்வாறு சூரியனது வெயிலும எயிற்றுப்பிறையின் நிலவும் விளங்காமல் அடங்கிவிட்டதனால் பிராணிவர்க்கங்கள் அந்தக காலத்தைப் பகலென்றாவது இரவென்றாவது நினைக்க இடமில்லாமற் போயிற்றென்க. 'மணிகள் காலும் அவிரொளி பருக அஃகா' என்றதொடர் - எயிற்றிளம்பிறைக்கு அடைமொழி. மணிக்கதிராற பகலும் அயிற்கரத்தினால் எயிறதிளம்பிறையி னிலவுகொளியும் மறைக்கனவாகக்கூறியது - மறைவணியாம். இதனை, மீலிதாலங்காரமென்பர், வடநூலார். இசசெய்யுளுக்கு வேறுவகையாகப் பொருளுரைப்பாரு முளர்; அவை, அலங்காரநூலார்கொள்கைக்கு ஏற்குமேற் கொள்க. பி - ம்:—[1]கரம். [2]ஆரொளி. [3]வெளகும். [4]பொங்கி. [5]உரைத்தோன்று. (௪௫)

கூ. ஓங்கிருந் தடந்தேர் பூண்ட வுளைவயப் புரவி யொல்கித்
தூங்கின [1]வீழத் தோளுங் கண்களு [2]மிடத்துத் துள்ள
வீங்கின மேக மெங்குங் குருதிநீர்த் துள்ளி வீழ்ப்ப
வேங்கின காக மார்ப்ப விருளில்வின் ணிடிப்ப மாதோ.

(இ - ள்.) ஓங்கு இரு தட தேர் பூணட - உயர்ந்துள்ள மிகப்பெரிய தேர்களிற் கட்டப்பட்ட, உளை வய புரவி - பிடரிமயிரையுடைய வலிய குதிரைகள், ஒல்கி தூங்கின வீழ - சோர்ந்து தூங்கிவிழவும்,—தோளும் கண்களும் இடத்து துளள-(ராட்சசவீரரது) தோள்களும் கண்களும இடபபக்கத்தில் துடிக்கவும், வீங்கின மேகம் எங்கும் குருதி நீர் துள்ளி வீழ்ப்ப - மிக்குள்ள மேகங்கள் எவ்விடத்தும இரததநீர்த்துளியைச சொரியவும்,—ஏங்கின காகம் ஆர்ப்ப ஏங்கியிருந்த காகங்கள் (மகிழ்ச்சிகொண்டு) ஆரவாரிக்கவும்,—இருள இல் வின இடிப்ப - மேகசஞ்சாரததினாலாகிய இருட்டு இல்லாத ஆகாசததினின்று திடீரென்று இடிவிழவும்,—(எ - று)—மாது ஓ - ஈற்றசை. 'வெள்ளவெஞ்சேனை சூழ .....தோனறும் கள்ளவிழலங்கலானைக் காற்றின்சேய் வரவுகண்டான்' என அடுத்த கவியோடு முடியும்.

தேரிற் பூட்டப்பட்டு ஓடிக்கொண்டிருக்குங் குதிரைகள் சோர்ந்து தூங்கிவிழுதலும், வீரர்களுடைய இடத்தோளகளும் இடக்கண்களும் துடிததலும், மேகங்கள் இரததநீர்த்துளியைத தூவுதலும், காகங்கள் கததுதலும், வானத்தில் மேகமில்லாதபொழுது இடியுண்டாதலும அட்சகுமாரனுக்கு

இனிவரும் ஆபத்தை விளக்குந் துரகுறிகளாம். இருளில் காகம் ஆர்ப்ப என்று இயைத்து, கூட்டில் அடங்கியிருக்கவேண்டும் பொழுதாகிய இரவில் தானே காக்கை கத்தினது அபசகுனமென்பாரு முளர். பி- ம்:—[1]வீரர் தோளும். [2]இடத்திறனுள்ள. (கசு)

கஎ. வெள்ளவெஞ் சேனை சூழ விண்ணுளோர் வெருவி விம்ம
வுள்ளநொந் தனுங்கி வெய்ய கூற்றமு முறுவ துன்னத
துள்ளிய சுழலகட் [1]பேய்க டோள்புடைத் தார்ப்பத் தோன்றுங்
கள்ளவி முலங்க லானைக் காற்றின்சேய வரவு கண்டான்.

(இ - ள்.) வெள்ளம் வெம சேனை சூழ - வெள்ளமென்னுங் கணக்கான [பெருந்தொகையுள்ள] கொடிய சேனை (தன்னை) சூழ்ந்துவரவும்,—(அது கண்டு), விண் உளோர் வெருவி விம்ம - தேவர்கள் அஞ்சிக்கலங்கவும்,—வெய்ய கூற்றமும் - கொடிய யமனும், உள்ளம்நொந்து அனுங்கி - மிகவும் மனம்வருந்தி, உறுவது உன்ன - இனி நடக்கவேண்டுவதைப்பற்றி ஆலோசிக்கவும், துள்ளிய சுழல் கண பேயகள் - (தமக்கு உணவு வயிறு நிறையும்படி கிடைக்கப்போகின்றதென்ற காரணத்தால்) துள்ளுகின்றன வான சுழல்கின்ற கண்களையுடைய பேயகள், தோள்புடைத்து ஆர்ப்ப-(தமது) தோள்களைத் தட்டிக்கொண்டு ஆரவாரிக்கவும், தோன்றும - (இவ்வாறு சம பிரமத்துடனே) வருகின்ற, கள அவிழ் அலங்கலான் வரவை - தேனொடு மலர்கின்ற மலர்கொண்டு தொடுத்த மாலையை யணிந்த அநுமானது வருகையை, காற்றின சேய் - வாயுகுமாரனான அநுமான், கண்டான்—; (எ - று. —பி - ம்:—[1]பலபேய. (கஎ)

கஅ.—இதுவும். அடுத்த கவியும் - போர்க்குவந்தவனைக் கண்ட அநுமானது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்.

இந்திர சித்தோ மற்றவ் [1]விராவண னேயோ வென்னச்
சிந்தையி னுவகை கொண்டு முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தனன் முடிந்ததன்றோ மனக்கருத் தென்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி யிராமனைத் [2]தொழுது சொன்னான்.

(இ - ள்.) முனிவு உற்ற குரங்கு சீயம் - பெருங்கோபங் கொண்டுள்ள சிறந்தவாநரனான அநுமான்,—'(இப்போது போர்க்கு வருபவன்), இந்திரசித்தோ - (இராவணனது குமாரனான) இந்திரசித்தோ? மற்று அ இராவணனே யோ-அன்றி அந்த இராவணன் தானோ, வந்தனன் - போர்க்குவந்துள்ளான், என்னா என்று கருதி, சிந்தையின உவகை கொண்டு மனத்திற் சந்தோஷங் கொண்டு,—'மனம் கருத்து முடிந்தது அன்றோ - (எனது எண்ணம் நிறைவேறிவிட்டதன்றோ', என்ன - என்று சொல்லி, வாழ்த்தி-(இராமனை)வாழ்த்திவிட்டு, இராமனை தொழுது - இராமபிரானை (த் திக்குநோக்கி) த் தண்டன் சமர்பித்து, சுந்தரம் தோளை நோக்கி-(தனது) அழகிய தோள்களைப்பாராது, சொன்னான் - கூறுவானாயினான்; (எ - று.)—அதனை அடுத்தகவியிற் காணுக.

"வந்தவர்கள் வந்தவர்கள் மீளகிலர் மடிந்தால், வெந்திற லரக்கனும் விலக்கரு வலத்தால், முந்துமெனி னன்னவன் முடிததலை முசிதலென், சிரதையுற கோபமு மவிததினிது செல்வேன்" என்ற கீழ்ப்பொழிலிறதகபடலத்திற் கூறியபடி அநுமான தான் பொழிலை யிறததற்குக் காரணம் - அது காரணமாகத் தன்னோடு இராவணன் பொரவர அவனை வெல்லவேணு மென்பதேயாதலால், இப்போது வந்தவன் இராவணனினும் விஞ்சிய இந்திரசிததோ? அல்லது அந்த இராவணன் தானோ? என்று எண்ணமகொண்டதனால், மிக மகிழ்ந்து, தனது விருப்பததை நிறைவேற்றங்கடவுளாகிய இராமபிரானை அப்போது வணங்கி வாழ்ததி, செருக்குததோன்றத் தனதுவீரத்தோளை நோககலாயின னென்க. பி - ம்:—[1]இராவணன்றானோ. [2]வாழ்ததிச.

கக எண்ணிய விருவர் தம்மு ளொருவனால் யான்முன் [1]செய்த
புண்ணிய [2]முளதா லெங்கோன் றவத்தொடும் பொருந்தினானே
நண்ணின னானு நின்றேன் காலனு [3]நனுகி நின்றான்
கண்ணிய கருமமின்றே [4]முடிககுவென கடிதி னென்றான்.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) எண்ணிய இருவர்தம்முள் ஒருவன் ஆல் - (இங்குவருபவன்) நான் நினைத்த (இராவணன் இநதிரசிதது என்ற) இருவருள் ஒருவன் தான்; யான் முன செய்த புணணியம் உளது ஆல் - யான் முறபிறப்பிற்செய்த புண்ணியப்பயனும் எனககு உள்ளதே; எம கோன் தவததொடும் பொருந்தினான் - எமது தலைவனாகிய இராமபிரானும் நல்வினைப்பயனுடன் பொருந்தியவனானான்; நானும் நணணின னினறேன் - (பலஅரககாகளையும் கொன்றிட்ட) நானும் (இவனைக் கொல்லுமாறு) சிததனாக நிறகினறேன்; காலனும் நணுகி நின்றான்-(இவனுயிரைக கொணடுபோவதறகு யமனும் நெருங்கி நிற்கிறான்; கணணிய கருமம் - நினைதத காரியததை, கடிதின் - விரைவாக, இன்றே - இப்போதே, முடிக்குவென் - முடிததுவிடுவேன்,' என்றான் - என்றுசொன்னான், (அநுமான்); (எ - று.)

எங்கோன் - சுகரீவன் எனினுமாம். பொருந்தினானே, ஏகாரம் - தேற்றம். இசசெயயுள, அநுமானுடைய வீரவாத மென்க. பி - ம் — [1]நோற்ற. [2]உளதாம் [3]அமைந்து. [4]முரறுவன். (கக)

௨௦.—அநுமான் வந்தவனை இன்னானென்று தெரியாது ஐயுறுதல்.

பழியில துருவென் றாலும் பழிறலை யரக்க னல்லன்
விழிகளா யிரமுங் கொண்ட வேந்தனென் றானு மல்லன்
மொழியினமற றவாக்கு மேலான் முரடடொழின் முருக னல்ல
னழிவிலொண் குமரன் யாரோ வஞ்சனக் குன்ற மனனான்.

(இ - ள்) (பின்னும் இவன், நான் முன எணணியபட பல் தலை அரககன் அல்லன் - பததுத்தலைகளையுடைய இராவணனல்லன்; விழிகள் ஆயிரமும கொணட வேநதை வென்றானும் அல்லன் - ஆயிரமகண

களையுடைய இந்திரனைச் சயித்த இந்திரசித்து மல்லன்; மொழியின் (இவனை இன்னானென்று) கூறத்தொடங்குமிடத்து, மற்றவர்க்கு மேலான் - இராவணன் இந்திரசித்து என்ற இருவர்க்கும் மேற்பட்டவன் போலத் தோன்றுகின்றான்; உரு - (இவனது) உருவம், பழி இலது - குற்றமற்றது; என்றாலும் - ஆயினும், முரணைதொழில் முருகன் அல்லன் - போர்த்தொழிலையுடைய முருகக்கடவுளுமல்லன்; அஞ்சனம்குன்றம் அன்னான் - நீலமலைபோன்ற பெருவடிவமடைந்தவனான, அழிவு இல் ஒள் குமரன் - போரில்பின்வாங்குதலில்லாத இவ்வீரன்; யாரோ—? (எ - று.)

தூரத்தில் வந்தவனைக் கண்டபோது, அவன்வருகின்ற ஆடம்பரத்தினால் அவனை இந்திரசித்தோ? இராவணனோ? என்று சந்தேகித்த அநுமான், அவன் நெருங்கி வரவே, இராவணன் இந்திரசித்து என்பவர்க்குஉரிய பத்துத் தலைமுதலிய அடையாளங்களைக் காணாமையால் அவர்களல்லரென்று அறிந்தியிட்டு, பேரழகுடைமையால் முருகக்கடவுளோ என்று சங்கித்தது, ஆறுமுகமில்லாமையால் அவனுமல்லனென்று தெளிந்தது, பேரழகும் பெருவலியும் படைத்த அவனை இன்னானென்று உணரமாட்டாதவனாயினனென்க. (உ0)

உக.—அட்சகுமாரன் அநுமானைக் கண்டு அலட்சியமாகக் கூறுதல்.

என்றவ னுவந்து விண்டோ யிந்திர சாப மென்ன
நின்றதோ ரணைதனி னுமப ரிருந்ததோர் நீதி யானை
வன்றொழி லரக்க னோக்கி வாளெயி றிலங்க நக்கான்
கொன்றதிக் குரங்குபோலா மரக்காதங் குழாத்தையென்றான்.

(இ - ள்.) என்றவன் - என்று கூறினவனாகி, உவந்து - (பெருவீரன் போர்க்கு வருவதனால்) மனமகிழ்ந்து, விண் தோய இந்திரசாபம் என்ன நின்றதோரணைதனின் உம்பர் - வானத்திற்பொருந்திய இந்திரவில்லைப்போலப் பல நிறத்துடன் விளங்குவதான தோரணவாசலின்மீது, இருந்தது - தங்கியிருந்ததாகிய, ஓர் நீதியானை - ஒரு தன்மையையுடைய அவ்வநுமானை, வல்தொழில் அரக்கன் - கொடுந்தொழிலையுடைய அட்சகுமாரன், நோக்கி - பார்த்து, வாள் எயிறு இலங்க நக்கான் - ஒளியுள்ள (தனது) பற்கள் வெளிதெரியும்படி பரிகாசமாகச் சிரித்தவனாய், அரக்காதம் குழாத்தை கொன்றது இக் குரங்குபோல் ஆம் - 'அரக்கர் கூட்டத்தையெல்லாம் கொன்றது இந்தச் சிறுகுரங்குபோலும்,' என்றான் - என்று வியப்பும் அலட்சியமும் தோன்றக் கூறினான்; (எ - று.) (உக)

உஉ.—தூங்கென அலட்சியஞ்செய்யக்கூடாதென்று சாரதி எடுத்துக்காட்டுதல்.

அன்னதா மசசொற் கேட்ட சாரதி யைய கேண்மோ
[1]மின்னதா மென்ன லாபோ வுலகிய [2]லிகழ லம்மா
மன்னனோ டெதிர்ந்த வாலி குரங்கென்றான் மறுமுண்டோ
சொன்னது துணிவிற் கொண்டு சேறியென் றுணரச்சொன்னான்.

(இ - ள்.) அன்னது ஆம் அ சொல் - அப்படி 'அட்சகுமாரன்) கூறிய தான அவ்வார்த்தையை, கேட்ட—, சாரதி - (அவனது) சாரதி,—(அட்ச குமாரனை நோக்கி ,—'ஐய—!கேணமோ-(நான்) சொல்லுவதைக் கேட்பாயாக; உலகு இயல் - உலகதில் நிகழும் இயல்பை, இன்னது ஆம் என்னல் ஆமோ - (இது) இப்படிப்பட்ட தாகுமென்று நிச்சயித்துக்கூறமுடியுமோ? (ஆகையால்), இகழல் - (தோற்றமாதிரத்தைக்கொண்டு ஒருசிறுகுரங் கென்று) இகழவேண்டா; மன்னனோடு—(நமது) அரசனாகிய இராவணனோடு, எதிர்த்த - எதிர்த்துநின்றவென்ற, வாலி - வாலியென்பவனே, குரங்கு என்றால் - ஒரு குரங்கேயாகுமென்றால். மற்றும் உண்டோ - மேலும் (நாம் சொல்லவேண்டுவது) ஏதேனும் உள்ளதோ? சொன்னது-(நான் இப்போது) சொன்னதை, துணிவின் கொண்டு - உறுதியாகக்கொண்டு, (இது அற்பக் குரங்கு என்று அலட்சியங்கொள்ளாமல் இதைவெலலவேணுமேயென்ற கவலையுடனே), சேறி - செல்வாய்,' என்று—, உணர - (அவன்) மனத திற் படும்படி, சொன்னான்—; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல். பி-ம்.—[1]இன்னதாலென்னதாமோ, இன்னதாலென்னலாமோ. [2]இதழ்தல்.()

உ௩..—அட்சகுமாரன் செய்த பிரதிஜ்ஞை.

விடந்திரண் டனைய மெய்யா னவ்வுரை விளம்பக் கேளா
விடம்புகுந் தினைய செய்த விதனொடு சீற்ற மெஞ்சத்
தொடர்ந்துசென் றுலக மூன்றுந் துருவினெ னொழிவு றாமற்
கடந்துபின் குரங்கென் றோதுங் கருவையுங் களைவ னென்றான்.

(இ - ள்.) விடம் திரண்டு அனைய மெய்யான் - விடமே ஒரு அரக்க வடிவுகொண்டாறபோன்றுள்ள [கருததுள்ள] அட்சகுமாரன்,—அ உரை விளமப கேளா - (சாரதி) அந்தவாரததையைச சொல்லகேட்டு, (அவனை நோகி),—'இடம புகுந்து இனைய செய்த - நமது இருபபிடததில்வந்து இவ்வளவு கொடுந்தொழில்களைச செய்த, இதனொடு - இந்தக்குரங்கை யழித்தமாத்திரததால், சீறறம எஞ்ச - என்கோபம் அடங்காமல் எஞ்சிநிற்ற லால், பின் - (இதைககொன்ற) பிறகு: தொடர்ந்து சென்று - (இப்போரை இகுகுரங்கைககொன்ற இம்மட்டோடு நிறுததாமல்) தொடர்ந்துபோய், உலகம் மூன்றும் துருவினென் - மூவுலகங்களிலும் (குரங்கு எங்கே யிருக கிறது என்று) தேடினவனாய், ஒழிவுறாமல் கடந்து - (சிறிதிடமும) விடாமல் முறறும் ஆராய்ந்து, குரங்கு என்று ஓதும் கருவையும் - கர்பபததில் இருந் தாலும் குரங்கு என்றால் அநதக கருவையும, 'களைவென் - அழித்தொழிப் பேன்' என்றான் - என்று (கன்துணிவை) எடுத்துச சொன்னான்; (எ - று.)

நம்முடையஊரில்வந்து வனபங்களுசெயது அம்மட்டோடு நில்லாமல் மிகப் பல அரககரையும் அழிததது நமகுப் பேரவமானத்தை யுண்டாககிய தனால் இந்தக்குரங்கைக் கொல்வதோடு நில்லாமல், மூவுலகிலுமதேடிச சென்று இந்தசசாதியைக கருவோடுமெ அழித்து இம்மூவுலகிலும் குரங்கு

என்றபேரேயில்லாமற்செய்துவிடுவேனென்று அட்சகுமாரன் சாரதியை நோக்கிததன் துணிவை யெடுத்துக் கூறினனென்க இனி, இசசெய்யுட்கு—விடம் திரண்டு அனைய மெய்யான - சாரதி, அவ்வுரைவிளம்ப, கேளா - (அட்சகுமாரன்) கேட்டு, (அக்குமாரன்), அவனை நோக்கி ஒருகால் இந்தக் குரங்கு கான் எதிர்த்துப் போர்செய்கையில் முன்னிறகமாட்டாது கைக்கு எட்டாதபடி ஓடிவிட்டாலும் உலகம் மூன்றும் ஒழிவுறாமல் இதனோடு தொடர்ந்துசென்று துருவினேனாய் (இதனைக்) கடந்து - கொன்று, பின் - பின்னும், சீற்றம் - (என) கோபம், எஞ்ச-(அடங்காமல்) மிஞ்சியிருத்தலால், குரங்குஎன்ற ஓதும் கருவையும் களைவேன் என்று கூறியதாக உரைப் பினுமாம். (உங)

உச.—இனி அரக்கச் சேனைக்கும் அநுமானுக்கும் நடந்த போர்.

ஆதெழுந் தரக்கர் சேனை யஞ்சனைக் குரிய குன்றைப்
போர்த்தது பொழிந்த தம்மா பொருபடைப் பருவ மாரி
வேர்த்தனர் திசைகாப பாளர் [1]சலித்தன விண்ணு மண்ணுந்
தார்த்தனி வீரன் றானுந் தனிமையும் வரமேற் சார்ந்தான்.

(இ - ள்) அரக்கர் சேனை-இராட்சசசேனையானது, ஆர்த்து எழுந்து-ஆரவாரத்துடனே கிளமபி, அஞ்சனைக்கு உரிய குன்றை - அஞ்சனாதேவி குமாரனான மலைபோன்ற அநுமானை, போர்த்தது - சூழ்ந்துகொண்டதாய், பொரு படை பருவம் மாரி பொழிந்தது - போர்செய்கின்ற ஆயுதங்களாகிய பருவகாலத்து மழையைச் சொரிந்தது; (அதுகண்ட), திசை காப்பாளர் - (எட்டுத) திக்கையும் காக்கின்ற தேவர்கள், வேர்த்தனர் - (அச்சத்தினால்) உடல்வேர்க்கலானார்கள்; விண்ணுமமண்ணும் - விண்ணுலகமும் மண்ணுலகமும், சலித்த - (பொருகின்ற வேகத்தினால்) அதிரலாயின; தார் தனி வீரன் தானும் - வெற்றிமாலையையணிவதற்குஉரிய வீரனாகிய அநுமானும், தனிமையும் வர - தனிமையெனபது தன்னோடுவர [தான்தனியனாய்], மேல் சார்ந்தான - (அச்சேனையின்மீது பொருமாறு) சேர்ந்தான், (எ - று)—பி - ம்:—[1]சலித்தது விண்ணும மண்ணும் எனறபாடம - வழுவமைதி. உச)

உரு. எறிந்தனர் நிருதர் வெய்தி னெய்தன படைகள் யாவு
முறிந்தன வீரன் மேனி முட்டின முகர யானை
மறிந்தன மடிந்த தேரும வாவு [1]மாக் குழுவு மாவி
பிறிந்தன வரம்பில் யாக்கை யிலங்கைதன னிலையிற் பேர.

(இ - ள்) நிருதர் எறிந்தனர் - அரக்கர்கள் (பலவகையாயுதங்களை அநுமான்மேற்) பிரயோகித்தார்கள்; வெய்தின் எய்தன படைகள் யாவும - கொடுமையோடு பிரயோகித்த அவ்வாயுதங்களெல்லாம், வீரன் மேனி முட்டின அநுமான்உடம்பின்மீது பட்டனவாய், முறிந்தன—; (அநுமான் அப்பாயுதங்களை எதிர்த்துப்பொருததனால்), முகரம யானை - பேரொலி செய்கின்ற யானைச்சேனைகள், மறிந்தன - உயிரழிந்தன; தேரும மடிந்த - தேர்களும் அழிந்தன; வாவும் மா குழுவும் - தாவிச்செல்லுகின்ற குதி

ரைகளின் கூட்டமும், வரம்பு இல் யாக்கை வரமபில்லாத தம்முடம்பு, இலவகைதன் நிலையில பேர-இலவகையினிடததே பிரிந்துவீழ்ந்திருகக, ஆவி பிறிந்தன தாம் உயிர்நீஙகின; (எ - று.)

அரககரெய்த ஆயுதங்கள் அநுமானை ஊறுபடுததமாட்டாமற் போக, இவனுடைய வல்லமையால் அரக்காசேனை அழிந்தபடியைக கூறுகின்றார். 'இலவகைதன்னிலையிற்பேர' என்பதற்கு - படைகள் இறந்துவீழ்ந்திட்டதனால் அந்தப்பாரத்தைத தாகுகமாட்டாமல் இலவகை நிலைகுலைய என்று கூறலுமாம். [1] மாககுழுவும் மற்றும் நெறிந்தன' என்ற பாடததுக்கு - மற்றுமுளள காலாட்களும உயிரொழிந்து வரிசை வரிசையாக வீழ்ந்துகிடந்தன என்று பொருளாம். (உ௫)

உ௬. காயெரி முளிபுற [1]கானிற் கலந்தெனக் காற்றின் செம்ம
லேயெனு மளவிற கொல்லு நிருதர்களோ ரெலலை யில்லை
போயவ ருயிரும் போகித தெனபுலம் படாதல் [2]பொய்யா
வாயிர கோடி தூத ருளாகொலோ நமனுக் கமமா.

(இ - ள்.) காய் எரி - பற்றியெரியுந்தன்மையுளள நெருப்பானது, முளிபுல் கானில் கலந்து என - உலாந்தபுற்களின் தொகுதியிலே சோந்தாற் போல, காற்றின் செமமல் - வாயுபுதிரனாகிய அநுமான், எயெனும் அளவில் - வெகு விரைவில், கொல்லும - கொல்லுகிற, நிருதர்க்கு - அரக்கர்கட்கு, ஓர் எலலை இல்லை - ஓரளவில்லை; போயவர் உயிரும - (யுதததிற்குப்) போனவர்களின் உயிரும், போகி - (உடம்பைவிட்டுப்) போய், தென்புலம் படாதல் பொயயா - தென்திசையிலுள்ள யமலோகத்துக்குச செல்லுதலினறும தவறமாட்டா; இவ்வாறு இறநத உயிர்களையெலலாம் கொண்டு போகும்படி) நமனுக்கு - யமனுக்கு, ஆயிரகோடி தூதா உளாகொலோ—? அமமா - ஆசசரியம! (எ - று.)

அநுமானுககு எரியும, அரககாக்கு முளிபுற்காணும் உவமை. பி - ம்:— [1]காணைக். [2]பொய்யாது. (உ௬)

உ௭. வரவுற்றார் வாரா நின்றார் வந்தனர் வரம்பில் வெம்போர்
பொரவுறற பொழுதும வீரன் மூமமடங் காற்றல் பொங்கி
[1]யெரியிறபோய்க் கதிரோ னூழி யிறுதியி னென்ன லானு
னுரவுத்தோ ளரகக ரெலலா மென்பிலா வுயிர்க ளொத்தார்.

(இ - ள்.) வர உற்றார் - (இனி) வருமாறு இருப்பவர்களும, வாரா நின்றார் - வந்துகொணடிருப்பவாகளும், வநதனர் - முன்னமே வந்திட்டவர்களும், (ஆகிய யாவரும,) வரமபு இல வெம் போர் பொர உற்ற பொழுதும் - எல்லையிலலாத கொடியபோரைச செயயததொடஙகின பொழுதும்,— வீரன - அநுமான்,—ஆறறல் மூமமடஙகு பொஙகி - (தன்) வலிமை (முனனையினும) மூன்றுமடஙகு அதிகமாகப பொருநதி, எரியின் போய் - எரிகுந்தன்மை மிககு, ஊழி இறுதியின் கதிரோன் என்னல ஆனான் - யுகாநதகாலததுததோன்றும சூரியன் போல விளங்கினான; உரவு தோள் அரக்கா எல்லாம - (அவனோடு பொருதற்கு வநத) வலிமைபொருந்திய

தோள்களையுடைய அரக்கர்யாவரும், என்பு இலா உயிர்கள் ஒத்தா - உடம்பு எலும்பில்லாத பிராணிகளையொத்து (அதனால்) எரிகக்பட்டார்கள்; (எ-று.)

"என்பிலதனை வெயில்போலகககாயும்" என்றபடி எலும்பில்லாத பிராணியை வெயில் அழிக்குந தனமையதாதலால், எரிககின்ற அநுமானுககுச சூரியனையும் எரிபடுகின்ற அரக்கர்க்கு என்பிலலாவுயிரையும உவமை கூறினார் இவ்வுவமையால், அநுமான் அறததின்வடிவின னென்பதும, அரக்கர் அன்பில்லாதவ ரென்பதும தொனிக்கும. வரவுற்றார், வாராநின்றார் என்ற இவரையும் எடுத்துக கூறியது - வந்தவா போலவே இவர்களும் அழிவரென்ற தெளிவுபற்றி. பி - ம்.—[1]இரவுப்பொற். (உஎ)

வேறு.

உஅ. பிள்ளப் [1]பட்டன நுதலோ டைக்கரி பிறர்பொற் றோ
பரி பிழையாம, லள்ளப பட்டழி குருதிப் [2]பொருபுன லாறு கப
படி சேறுக, [3]வள்ளப் பட்டன மகரக் கடலென மதில்சுற் றிய
பதி மறலிககோர், கொள்ளைப் [4]பட்டுள வுயிரென் னும்படி கொன்று
னைம்புலன் வென்றானே.

(இ - ள்.) அள்ளப்பட்டு அழி குருதி பொரு புனல்-(வருகின்ற பிராணிகளையெல்லாம) அள்ளிக்கொண்டு மிகருள்ள இரத்ததின் பெரு வெள்ளம், ஆறுஆக - ஆறுபோலிருகக, பிள்ளப்பட்டன - உடல்பியககப் பட்டனவான, நுதல் ஓடை கரி - நெற்றியில் வீரப்பட்ட மணிநத யானைகளும், பிறழ் பொன் தோ பரி - (யுத்தத்திற்) செல்லுகின்ற தேர்களும் குதிரைகளும, பிழையாமல் படி சேறு ஆக - (அவ்வாற்றிற்) படிந்த குழைசேறாய்விடும படி,—ஐம்புலன் வென்றான் - பஞ்சேந்திரியநிககிரகஞ் செய்தவனான அநுமான்,—வள்ளம் பட்டன மகரம் கடல் மதில் என சுற்றிய பதி - தோணிகள் பொருந்தியதாகிய மகர மீனகள் நிறைந்துள்ள கடல் மதிலாகுமபடி சூழ்ந்துள்ள இலஙகாநகரததிலுள்ள, உயிர் - பிராணிகள்யாவும, மறலிககு ஓர் கொள்ளைப்பட்டு உள என்னும்படி - யமனுககுப் பெருஙகொள்ளையில் அகப்பட்டுள்ளனவென்று (கணடவர்) கூறுமாறு, கொன்றான்;—(எ - று.)

எற்கவே நடந்த பெருமபோரினால் இரத்தநீர் ஆறாயப் பெருகா நிற்க, அந்த ஆற்றிலே இப்போது பொரவநத ரதகஜதுரகஙகள் அழிநது சேறாய் விடுமாறு அநுமான் இலஙகையிலுள்ள யமன் பெருஙகொள்ளை கொள்ளும்படி புரிந்தன னென்பதாம. இலஙகை நீரரணுள்ளதாய் எவராலும் கிட்டவொணணாததென பதை, மூன்றாமடி தெரிவிககும. அநுமான் நிததியப்பிரமசாரியாதலால், அவனை 'ஐம்புலன் வென்றான' என்றார். பி - ம்:—[1]பட்டது. [2]பெரும். [3]அள்ளற்பட்டன. [4]பட்டனது. (உஅ)

உகூ. தேரே பட்டன வென்றார் சிலர்சிலர் தெறுகட் செம்
முக வயிரத்தோட், பேரே [1]பட்டன வென்றா சிலாசிலா பரியே

பட்டன பெரிதென்றார், காரே பட்டன நுதலோ டைக்கட கரி
யே பட்டன கடிதென்றார், "நேரே பட்டனர் படமா டேதனி
நில்லா வுயிரொடு நின்றாரே. ௧௫

(இ - ள்.) நேரே பட்டனர் பட-(பின்வாங்காது தாம்) நேரே சென்று (அநுமானோடு பொருது) இறந்தவர் இறந்து கொண்டிருக்க, (அங்ஙனம் நேரே சென்று பொரமாட்டாமல்), மாடே - (ஒதுக்கமான) பக்கங்களில், நில்லா உயிரொடு தனி நின்றார் - (அந்தக் கடும்போரைக் காணுதல் மாத்திரத்தாலேயே) உடலில் நிற்கமாட்டாது தவிக்கின்ற உயிருடனே தனியே நின்றவர்களில்,—சிலர்—,—நேரே பட்டன என்றார் - தோள்களே அழிந்தன என்றார்கள்; சிலர்—, நெறுகண செம் முகம் வயிரம் தோள் பேரே பட்டன என்றார் - (அழிக்கவல்ல) கடும்பார்வையையுடைய கண்களையும் (இரத்தம் குழம்பிச, சிவந்தமுகங்களையும் உறுதியான தோள்களையு முடைய காலாட்படைகளே யிறந்தன என்றார்கள்; சிலர்—, பெரிது பரியே பட்டன என்றார் - குதிரைகளே மிகுதியாக அழிந்தன என்றார்கள்; சிலர்—, காரே பட்டன நுதல் ஓடை கடம் கரியே கடிது பட்டன என்றார் - மேகத்தை யொத்தனவாகிய நெற்றிப் பட்டத்தையும் மதநீரையுமுடைய யானைகளே விரைவாக அழிந்தன என்றார்கள்; (எ - று.)

நேரேபொருஞ்சுதவீரர்கள் அநுமானோடு பொருது மாளுகையில், அங்ஙனஞ்சென்றுபொருதற்கு ஏற்ற மனவலிமையில்லாமையால் பொரசசெல்லாமலும் இராவணனிடத்து அச்சத்தினால் ஊரில் நிற்கமாட்டாமல் போர்க்களத்தில் வந்துமுள்ள சிற்சிலர் அநுகூத்தானே ஒதுக்கமான ஓரிடத்தில் தனி, நால்வகைப்படையும் இறப்பதைககண்டு பேசிய வண்ணம் அந்தக்கடும்போரைக் காணுதற்கும் மனம் பொறாமல் உயிர் தவிக்கலாயின ரென்பதாம். பி - ம்:—[1]பட்டனர். [2]நேரேபட்டவர்பட மாடேபட நில்லாவுயிர்கொடு.(௨௧)

௩௦. ஆழிப் பொருபடை நிருதர் பெருவலி யடலோ ராய்
மகள் பேழ்வாய்த், தாழிப் படுதயி ரொத்தார் மாருதி தனிமத்
தென்பதொர் தகையானு, னேழிப் புவனமு மிடைவா ழுயிர்களு
மெறிவே லிளையவ ரினமாக, வூழிப் பெயர்வதொர் புனலொத்தா
ரன லொத்தான் மாருத மொத்தானே.

(இ - ள்.) ஆழி பொரு படை நிருதர் பெரு வலி அடலோர் - கடல் போற்பரந்த போர்செய்கின்ற ஆயுதங்களையுடைய அரக்கராகிய மிக்கவலிமை படைத்த வீரர்கள்,—ஆய் மகள் - இடைப்பெண, (பாலைக்காய்ச்சிததோய்த்த), பேழ் வாய் தாழி படு - அகன்ற வாயையுடைய தாழியிலே பொருந்திய, தயிர் - தயிரை, ஒததார்—; மாருதி - அநுமான், தனி மதது என்பது ஓர் தகை ஆனான் - ஒப்பற்ற மததென்று சொல்லத்தகுந்த தன்மையைப் பொருந்தினான்; ஏழ் இ புவனமும் - இந்த ஏழுலோகங்களிலும், மிடைவாழ்- நெருங்கி வாழ்கின்ற, உயிர்களும் - பிராணிகளெல்லாம், எறி வேல் இளையவர் இனம் ஆக - எறிகின்ற வேலாயுதத்தைக் கொண்ட இராட்சச வீரர்க

வின் திரளாகவே தோன்ற, (அவ்வரக்கவீரர்கள்), ஊழி பெயாவது ஓர்புனல் ஒத்தார் - யுகாந்தகாலத்திற் பொங்கிவருந் தன்மையுள்ள கடல்வெள்ளத்தை யொத்தார்கள்; மாருதம் ஒத்தான் - (உடல்வலிமையால்) வாயுபகவானை யொப்பவனான அநுமான், அனல் ஒத்தான் - (அககடலநீரப்பெருககை மிக வொட்டாது உறிஞ்சுகின்ற) படபாமுகாக்கினியைப் போன்றான்; (எ - று.)

போர்களத்தினிடையே நிற்கின்ற அநுமானால் அரககா கலக்கப்படுதல்பற்றி அவ்வரக்காக்குக கடைதாழியிலுள்ள தயிரும், அநுமானுக்குக் கடைமத்தும் உவமையாமென்க. அப்போது எதுபாராததாலும் அரக்கவீரரைத தவிர வேறொருபிராணி காணப்படாமையால், 'எழிப்புவனமு மிடைவாழு யிர்களும் எறிவேலினையவரினமாக' எனப்பட்டது. 'எழிப்புவனமும் - ஏழு தீவுகளாகவுள்ள இந்தப் பூமிமுழுதும்' என்று கூறுதல் ஏறகும். (கூ0)

கூக.—இனி அநுமானுக்கும் அட்சகுமாரனுக்கும் நிகழும் போர்.

கொன்றா னுடன்வரு குழுவைச் சிலர்பலர் குறைகின்றாருடல் குலைகின்றார்,பின்றா நின்றன ருதிரப்பெருநதி பெருகா நின்றன [1]வருகாரு, நின்றார் நின்றிலர் தனிநின் றானொரு நேமித தேரொடு மவனேரே, சென்றான் வன்றிற லயில்வா யம்புக டெரிகின் றான்விழி யெரிகின்றான்.

(இ - ள்.) வரு குழுவை-(தன்மேற் போர்க்குவருகின்ற) அரக்கர்திரளை, உடன்-உடனுக்குடனே, கொன்றான் - (அநுமான்) கொன்றான்; (அதனால்), சிலா - சில அரக்கவீராகள், குறைகின்றா - இறந்தொழிந்தாரகள்; (அப்போது), உதிரம் பெரு நதி பெருகாநின்றன - இரததப்பெருநதிகள் பெருகின; பலர் - பல அரககவீரா, உடல குலைகின்றா - உடம்பு நடுநகுபவராய், பின்றாநின்றனர் - (போரசெய்யப்) பின்வாஙகினவாகளாக,—அருகு நின்றார் ஆரும் நின்றிலா - (அட்சகுமாரனுககுத துணையாக) அருகில் நின்றவர்கள் எவரும் நிற்கமாட்டாமல ஓடி மறைந்திட்டார்கள; தனி நின்றான் - (துணையில்லாமல்) தனிப்பட்டவனாகிய அட்சகுமாரனோ, விழிஎரிகின்றான்-(கோபத்தினால்) கண்களில நெருப்புப்பொறி பறகககபபெற்றவனும, வல் திறல் அயில் வாய் அம்புகள் தெரிகின்றான் - (அநுமான்மேல் எய்யும்பொருட்டு) மிக்க வலியுள்ள கூரமைபொருந்திய அம்புகளைததோநதெடுப்பவனுமாகி, ஒரு நேமி தேரொடும - சககரததாற செல்வதான (தன்) ஒற்றைததேருடனே, அவன் நேரே சென்றான் - அவ்வநுமானுடைய எதிரே சென்றான்; (எ - று.)—வி - ம்:—[1]அருகாக. (கூக)

கூஉ. உற்றா னிந்திர சித்துக் கிளையவ [1]னொருநா ளேபல ருயிருண்ணக், கற்றா னும்முக மெதிரவைத தானது கண்டார் விண்ணவர் கசிவுற்றா, [2]ரெற்றா மாருதி நிலையென் பாரினி யிமையா விழியினை யிவையொன்றோ, பெற்றா [3]நல்லது பெற்றா மென்றனா பிரியா தெதிரெதிர் செறிகின்றார்.

(இ - ள்.) இந்திரசித்துக்கு இளையவன் - இந்திரசித்தின் தம்பியாகிய அட்சகுமாரன், உற்றான் - (அநுமானுக்குநேரே) வந்தான்; ஒருநாளே பலர் உயிர் உணண கற்றானும் - ஒருதினத்தில்தானே பல வட்சக்கணக்கான வீரகுமாரகளையழிக்கப் பழகியவனாகிய அநுமானும், முகம் எதிர் வைத்தான் - அவனுக்கு அபிமுகனானான்; அது கண்டார் விண்ணவர் - அதனைக்கண்ட தேவர்கள், கவிவுற்றார் - மனமிரங்கினவர்களும், மாருதி நிலை எற்று ஆம் - அநுமான் நிலை யாதாகுமோ? என்பார் - என்று மனதில் துணுக்குக் கொண்டு கூறுபவருமாகி, இனி - இப்பொழுது, இவை இமையா விழியினை ஒன்றே பெற்றாம் - இந்த இமையாத கணகளையுடைமையாகிற ஒருசிறப்பைப் பெற்றிருகின்ற நாகுகள், (இவ்விருவரும் பொருகின்ற போரவிநோதத்தைக் காணுமாறு), நல்லது பெற்றாம்-நனமையைப்பெற்றவராவோம், என்றனர் - என்று கூறுபவாகளாய், பிரியாது எதிர் எதிர் செல்கின்றார் - (ஒருவரை விட்டு ஒருவர்) பிரியாமல் (அப்போரைக் காணுமபொருட்டு வானதத்தில்) அவ்விருவாக்கும் எதிராகப்போய் நின்றார்கள்; (எ - று.)

அட்சகுமாரன் அநுமானுடன் வெகு உக்கிரமாகப் போர்செய்யும்படி நெருகினபோது, தேவர்கள் தாம இமையாக்கண்களைப் பெற்றதற்காக உவந்து அப்போரைக் காணுமாறு அவர்கட்கு எதிராக வானத்திற் சென்றார்க ளென்பதாம். 'அல்லது பெற்றாமென்ற பாடத்துக்கு - அட்சகுமாரன் பெருஞ்சினகொண்டு வெகுகடுமையாகப் போர்செய்வது கண்ட விண்ணவர் அநுமானுக்கு ஒருகால் அபஜயம் நேருமோ வென்று அவனிடத்துள்ள பரிவினாலே அஞ்சியவர்களாய், தாம் இமையாக்கண்ணைப் பெற்றது அந்தக் கோரத்தைக் காணுதற்குக் காரணமாயிருக்குமாதல்பற்றி, நாம் 'இமையாக் கணகளையோ பெற்றோம்' துன்பத்தையே பெற்றோம் என்றன ரென்று பொருள்காண்க. பி - ம்:—[1]ஒருகாலே. [2]எற்றேமாருதிநிலை. (௯௨)

௯௩. எய்தான் வாளிக ளெரிவா யுமிழ்வன வீரே ழெழி[1]ரவை பார்சோர்ப், பொய்தான் மணியெழு வொனாரு லன்றது பொடியா யுதிரவுற வடிவாளி, வெய்தா யினபல விட்டான வீரனும் வேறோர் படையிலன் மாறாவெங, கைதா னேபொரு படையா கத்தொடர் காலார் தேரதன மேலானான்.

(இ - ள்.) (அப்போது அட்சகுமாரன்) எரி வாய உமிழ்வன ஈ ஏழ் வாளிகள் - நெருபபுப் பொறிகளோத தம்மிடத்தினின்று கக்குவனவான பதினான்கு அம்புகளை, எய்தான்-(அநுமான்மேற்) பிரயோகித்தான்; (அநுமான்) எதிர் - மாறாக, அவை-அந்தஅம்புகளை, மணி எழு ஒன்றால் - (தான் கையிற் கொண்ட) அழகிய இருபபுத்தண்டினாலே, பார் சோர-பூமியிலே விழும்படி, பொய்தான் - பயனிலவாகசசெய்தான்; அன்று - அப்பொழுது, அது-அந்த எழு, பொடி ஆய் உதிரவு உற பொடியாய்ச்சிதறிப்போம்படி, வெய்து ஆயின பல வடி வாளி - கொடுமையான பல கூரிய அம்புகளை, விட்டான் - (அவ்வட்சகுமாரன்) பிரயோகித்தான்; வீரனும் - அநுமானும்,—வேறு ஓர் படை

இலன்-வேறொரு ஆயுதம் இல்லாதவனாய, மாறு ஆ-அவ்வம்புகட்கு மாறாக, வெம் கை தானே பொரு படை ஆக - (தனது) கொடிய கைகளே போர் செய்கின்ற படைக்கலமாக (க் கொண்டு அவற்றையழித்து), தொடா கால் ஆர் தேர் அதன்மேல் ஆனான் - தொடர்ந்துள்ள [பலவான] சக்கரங்கள் பொருந்திய (அந்த அட்சகுமாரனுடைய) தேரின்மேற் பாய்ந்து தங்கினான்; (எ - று.)—பி - ம்:—[1]எதிர்வாயசோரப். (௩௩)

௩௪. தேரிற் [1]சென்றெதிர் கோல்கொள் வானுயிர் தின்றனப் பொரு செறிதிண்டேர், பாரிற சென்றது பரிபட் டனவவன் வரிவிற் சிந்திய பகழிக்கோன், பார்பிற் சென்றன சிலபொற் றோளிடை மறைவுற் றனசில மறவோனு, நேரிற் சென்றவன் வயிரக் குனிசிலை பற்றிக் கொண்டெதி ருறநின்றான்.

(இ - ள்.) (பாய்ந்து அநுமான்), தேரில் சென்று - (அட்சகுமாரனது) தேரிலே நின்று, எதிர் கோல் கொள்வான் உயிர் தின்றான் - எதிரேயுள்ள உளவு கோலைக்கையிற்கொண்டுள்ள சாரதியின் உயிரையொழித்தான்; (பின்னும் அநுமான் தன் கையால நொருக்கியதனால்),—அ பொரு செறி திண் தேர் - போர்செயது நெருங்குகின்ற அந்த வலிய தேர், பாரில் சென்றது - (சின்னபின்னப் பட்டுத்) தரையில் விழுந்திட்டது; பரி பட்டன - குதிரைகளும் இறந்தொழிந்தன; அவன் வரிவில் சிந்திய பகழி கோல் - அந்தஅட்சகுமாரன (தனது) கட்டமைந்த வில்லினின்று பிரயோகித்த அமபுகளில், சில—, மார்பில் சென்றன - (அநுமானது) மார்பிற் பாய்ந்தன; சில—, பொன் தோளிடை மறைவுற்றன - அழகிய தோளின்மேற் பாயந்து மறைந்திட்டன; மறவோனும் - வீரனான அநுமானும், (தன்மார்பிலும் தோளகளிலும் அட்சகுமாரன்எய்த அமபுகளை இலட்சியஞ் செய்யாமல்),— நேரில் சென்று - (அவ்வட்சகுமாரனது) எதிரிலே போய் நின்று, அவன் வயிரம் குனி சிலை பற்றிக்கொண்டு - (அம்புகளை அவன் இனி எயயமுடியாதபடி) அவ்வட்சகுமாரனது வலிய வளைந்த வில்லைப்பிடித்துக்கொண்டு, எதிர் உற நின்றான் - அவன்எதிரிலே நின்றான்; (எ - று)—பி - ம்:—[1]சென்றது. ()

௩௫. ஒருகை யாலவன் வயிரத் [1]திண்சிலை யுற்றுப் பற்றலு மூரவோனு, மிருகை யாலிவன் வலியா முன்னம திறறோ டியதிவர் பொற்றோளான், [2]சுரிகை யாலவ னுருவிக் குத்தலு மதனைச சொற்கொடு வருதூதன், [3]பொருகை யாலிடை பிதிர்வித் தான் முதிர் பொறியோ டும்படி [4]பறியாவே.

(இ - ள்.) ஒரு கையால் அவன வயிரம திண சிலை உற்றுப் பற்றலும்- (அவ்வாறு) அநுமான் (தனது) ஒருகையினால் அவ்வட்சகுமாரனது மிகவலிய வில்லை உறுதியாகப் பிடித்துக்கொண்ட வுடனே,—உரவோன் இவனும் - வலியவனாகிய இவ்வட்சகுமாரனும், இரு கையால் வலியா முன்னம் - (அவ்வில்லை அநுமானிடத்தினின்று மீட்குமபடி

தனது) இரண்டு கைகளினாலும் பிடித்திழுக்க அப்போது உடனே, அது இற்று ஒடியது - அவ்வில் முறிந்துபோய்விட்டது; இவர் பொன் தோளான் - (தன்மேல்) வந்த அழகிய தோள்களையுடைய அவ்வநுமானை, அவன் - அட்சகுமாரன், சுரிகையால் உருவி குத்தலும் - (உரையினின்று எடுத்து) உடைவாளினாற் குத்தத்தொடங்கவும், அதனை - அந்தஉடைவாளை,—சொல் கொடு வரு தூதன் - (இராமபிரானது) சொல்லை(ச் சீதாபிராட்டியினிடம் சொல்லுமாறு) கொண்டுவந்த தூதனாகிய அவ்வநுமான்,—பொரு கையால் - போர் செயகின்ற (தனது) கையினாலே முதிர் பொறி ஓடும்படி பறியா - (பிடுங்கின விசையினால்) மிக்க நெருப்புப்பொறி எங்கும் பறந்துசெல்லும்படி பறித்து, இடை பிதிரவித்தான் - (தன்மேற்படுவதற்கு முன்னம்) நடுவழியிலேயே பொடியாயுதிரும்படி செய்தான்; (எ - று.)

'ஒருகையாலவன் வயிரத்திணசிலையுற்றுப்பற்றலும்' என்றது - அநுவாதம். பி - ம்:—[1]சிலையினை. [2]சுரிகைவாளெதிர். [3]ஒரு [4]அறியாவே. (௩௫)

௩௬. வாளா லேபொர லுற்ரு னிறறது [1]மன்சே ராமுனம் வயிரத்திண், டோளா லேபொர முடுகிப் புக்கிடை தழுவிக் கோடலு [2]முடன்முற்று, நீளா ரயிலென மயிர்தைத் திடமணி நெடுவாலவனுட னிமிரவுற்று, மீளா வகை[3]புடை சுற்றிக்கொண்டது பற்றிக் கொண்டனன் மேலானான்.

(இ - ள்.) வாளாலே பொரல் உற்ருன்-வாளினாற்போர்செயயத்தொடங்கிய அட்சகுமாரன், அது இற்று மன சேராமுனம் - (கீழ்க்கூறியவாறு) அந்தச்சுரிகை பொடியாகிப் பூமியில்விழுவதற்கு முன்னம், வயிரம் திண தோளாலே பொர - மிக்கவலிய (தன்) தோள்களினாலேயே போர்செய்யும்படி, முடுகிஇடை புக்கு - விரைந்து அநுமானிடத்துச்சென்று, தழுவி கோடலும் - (அவ்வநுமானை) தழுவிக்கொள்ள முயன்றபோது, உடல் முற்றும் (தனது) உடம்பு முழுதும், நீள் ஆர் அயில் என மயிர் தைத்திட - நீட்சிபொருந்திய வேலாயுதம்போல மயிர் பொத்தும்படி, மணி நெடு வால - (அநுமானது) அழகிய நீண்டவால், அவன் உடல் நிமிரவுற்று மீளா வகை புடை சுற்றிக்கொண்டது அவ்வட்சகுமாரனது உடம்பு நிமிராது வரவொட்டாது (உடம்பின்) எல்லாப்பக்கங்களிலும் சுற்றிக்கொண்டது; பற்றிக்கொண்டனன்மேல் ஆனான் - (இவ்வாறு அட்சகுமாரனை அநுமான்) பிடித்துக் கொண்டு அவன்மேல் ஏறிக்கொண்டான்; (எ - று.)—பி - ம்:—[1]மன்சேர் வதனின்முன். [2]வழுவிப்போய், உடலசுற்றும். [3]உடல். (௩௬)

௩௭. பற்றிக் கொண்டவன் வடிவா ளெனவொளிர் பல்லிற் றுக நிமிர் படாகைபா, லெறறிக [1]கொண்டலி னிடைநின் றுமிழ்[2]சுடரினமின் னினம்விழு வனவென்ன, முறறிக குண்டல முதலா மணியுக முழைதா லாவிவர் குடர்நாலக, கொறறத திண்சுவல வயிரக் கைகொடு குத்திப் புடையொரு குதிகொண்டான்.

(இ - ள்.) பற்றிக்கொண்டவன் - (தன்வாலினாலே) பற்றிக்கொண்டவனான அநுமான்,—வடி வாள் என ஒளிர் பல் இற்று உக நிமிர் படர் கையால்பற்றி - கூரிய வாள்போலவிளங்குகின்ற பற்கள் உதிரும்படி ஓங்கிச் சென்ற தன் கையினால் கன்னத்தில் அறைந்து, (பின்பு), கொண்டலின் இடைநின்று உமிழ் சுடரின மின் இனம் விழுவன என்ன - மேகத்தினின்று வெளிவருகின்ற பேரொலியையுடைய மின்னறகூட்டம் விழுவனபோல, குண்டலம் முதல் ஆம மணி முற்றி உக - (காதிலணிந்திருந்த) குண்டலம் முதலிய இரத்தினாபரணங்களிற் பொருந்திய மணிகள் முழுவதும்சிதறிவிடவும், முழை நாலா இவர் குடர் நால - வயிற்றிலே தொங்காமற் பிணிபபுடன் தங்கியிருந்த குடல்கள் சரிந்துவிடவும், கொற்றம் திண சுவல் வயிரம் கைகொடு - (இதுவரையிலும்) வெற்றிபொருந்தியிருந்த வலிய (அவ்வட்சகுமாரன்) பிடரியை வலிமைபொருந்திய (தன) ஓரறைகையினாற் பிடித்துக் கொண்டு), (மற்றொருகையால), குத்தி - பலகுத்துக்குத்தி, புடை ஒரு குதி கொண்டான் - (அவனுடலினின்று) பக்கத்திலே அநுமான் ஒருகுதி குதித்தான்; (எ - று.)—பி - ம் —[1]கொண்டனன். [2]சுடர்மின்னினனினம். (௩௭)

௩௮.—அநுமான் அட்சகுமாரனை யொழித்தல்.

நீத்தா யோடின வுதிரப் பெருநதி நீரா கசசிலை பாரர்கப், போய்த்தாழ் செறிதசை யரிசிந் தினபடி பொங்கப் பொருமுயிர் போகாமுன், மீததா நிமிரசுடர் வயிரக் கைகொடு பிடியா [1]விண் ணொடு மண்காணத், தேயததா[2]னாழியி னுலகேழ் தேயினு மொரு தன் புகழிறை தேயாதான்.

(இ - ள்) (அப்போது), நீதது ஆய் ஓடின உதிரம் பெருநதி - வெள்ளமாகப் பெருகிய இரத்தப்பெருநதியே, நீர் ஆக - (அரைக்கும்போது வேணடிய) ஜலமாகவும்,—பார - பொருகளமே, சிலை ஆக - அமமிகல்லாகவும, போயதாழ் செறி தசை - (உடம்பினின்று) வெளிப்பட்டுக கீழ்விழுந்த (அவ்வட்சகுமாரனது) நெருங்கிய சதையே, அரிசிந்தினபடி பொங்க (அமமிக்கல்லிலிடப்படுகிற அரைப்பதற்காக எடுத்துவைத்த) ஊரலரிசிபோல மேன்மேற் பொங்க, (தசை நீங்கிய அவ்வரககனது உடற பகுதியைக குழவியாகக் கொண்டு) பொரும் உயிர் போகாமுன் - போரசெயகின்ற அவ்வரககனுயிர் போகாமுன்னம், மீதது ஆ நிமிர சுடா வயிரம கைகொடு பிடியா - (குழவியின் இருபுறத்து) மேற்பக்கததிலுமாக நிமிர்கின்ற ஒளிபொருந்திய உறுதியான கைகளினாற் பிடித்து, விணணொடு மண் காண - மேலுலகததாரும நிலவுலகத்தாரும் காணும்படி, தேயததான் - அரைத்தான்; (யாவனெனின்), ஊழியின் உலகு ஏழ் தேயினும் ஒரு தன்புகழ் இறை தேயாதான் - யுகாந்தகாலத்தில் ஏழுலகங்களும் அழிந்தாலும ஒப்பற்ற தனது புகழ் சிறிதும் குறைவுபடாத அநுமான்; (எ - று.)

ஏழுலகங்களும அழிகின்ற ஊழிக்காலத்திலும் அழியாத கீர்த்தியையுடைய அநுமான், பிரவாகமாகப் பெருகியோடுகின்ற உதிரமே

நீராகவும், பூமியே அம்மிக்கல்லாகவும், அட்சகுமாரனுடைய மாமிசாதிகளே அரைக்கவேண்டிய அரிசியாகவும், அவனுடைய தசை நீங்கிய உடற்பகுதியே குழவிக்கல்லாகவும் கொண்டு, சுவர்க்கலோகத்தாரும் பூலோகத்தாருங் காணும்படி தனதுகையினாலே அரைத்துத்தேய்த்து ஒழித்தானென்பதாம். பி ம்:—[1]மண்ணொடுவிணகாண. [2]ஊழியொடு. (௩௮)

௩௬.—இதுமுதல் மூன்றுகவிகள் - பொருந்துறவாத அரக்கர் ஓடிய செயிதியைத் தெரிவிக்கும்.

புண்டாழ் குருதியின் வெள்ளத் துயிர்கொடு புக்கார் சிலர்சிலர்
[1]பொதிபேயின், பண்டா ரததிடை யிட்டார் தம்முடல் பட்டார்
சிலர்சிலர் பயமுநதத, திணடா டித்திசை யறியா மறுகினர் [2]செற்
றார் சிலாசிலர் செலவறறார், கண்டார் கண்டதொரா திசையே விசை
கொடு கால்விட் டார்படை கைவிட்டார்.

(இ - ள்.) சிலா - (உயிரெஞ்சிய அரக்கரிற்) சிலா,—புண் தாழ் குருதியின் வெள்ளதது உயிரோடு புகுகா - புண்களிலிருந்து பெருகுகின்ற இரத்தவெள்ளததில் உயிரோடு புகுந்து ஒளித்துகொண்டார்; சிலர்—,—பொதிபேயின் பணடாரததிடை தம உடல் இட்டார் - (போர்க்களததில்) நிறைந்துள்ள பேயகளின் பொகிஷமாகிய பிணக்குவியலில் (தமது) உடலையும் போகட்டார் [பிணததோடு பிணமபோல விழுந்துகிடந்தார்கள்]; சிலா—,—பட்டார் - (அசசததினால் இறந்தார்கள்); சிலா—, பயம் உந்த திண்டாடி திசை அறியா மறுகினர் செறறார் - பயமானது தூண்ட அலைசசற்பட்டுத் திக்குதெரியாமற் கலகுகினவர்களாய் வலியொடுகுகினார்கள்; சிலா—செலவு அறறார் - போகமாட்டாமற கலகுகினார்கள்; கண்டார் கண்டது ஓர் திசையே- கண்டவர் கணடதிசைகளிலேயெல்லாம, படை கை விட்டார் - ஆயுதங்களைக் கைநழுவவிட்டவர்களாகி, விசைகொடு கால் விட்டார் - வேகத்தோடு ஓடலானார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]பொரு. [2]சென்றார். (௩௭)

௩௭. மீனாய் வேலையை யுற்றார் சிலர்சிலர் பசுவாய் வழிதொறு
மேய்வுற்றார், ஆனார் பறவையின் [1]வடிவுற் றார்சிலர் சிலர்நான் மறையவ
ருருவானார், மானார் கண்ணிள [2]மடவா ராயினர் முன்னே தங்குழல்
வகிர்வுறறார், ரானார், சிலர்சில ரையா நின்சர ணெனறார் நின்றவ ரரி
யென்றார்.

(இ - ள்.) சிலர்—, மீன் ஆய் - மீனுருவங்கொண்டு, வேலையை உற்றார்- சமுத்திரத்தைச சேர்ந்தார்கள; சிலா—, பசு ஆய் - பசுக்களின் வடிவங் கொண்டு, வழி தொறும் மேய்வு உற்றார் - வழிகள்தோறும் மேயததொடங்கினார்கள்; சிலர்—,—ஊன் ஆர் பறவையின் வடிவு உற்றார் - மாமிசத்தைக கொததித் தின்னுகின்ற பட்சிகளின்வடிவத்தைக் கொண்டார்; சிலா—, கால் மறையவர் உரு ஆனார்-பிராமணர்வடிவங்கொண்டுநின்றார்கள்; சிலர்—, மான் ஆர் கண இள மடவார் ஆயினர் - மான்போன்றகண்கள்படைததத இளையமகளிர்போன்ற வடிவமுடையவராய், முன்னே தம் குழல் வகிர்வுற்றார் ஆனார்

அநுமனெதிரிலே தமது கூந்தலை வகிர்ந்துகொண்டுநின்றார்கள்; சிலர்—,—ஐயா நின் சரண் என்றார் - ஐயனே! நாங்கள் உன்னடைக்கலம் என்றார்கள்; சிலர் - வேறுசிலர்,-நின்றவர் அரி என்றார்-'நாங்கள் உமது பகைஞரல்லோம்; (இதுகே) நிறபவரே உமது பகைஞர்' என்றார்கள்; (எ - று.)

அரக்கர் வேண்டியவுருக்கொள்ளவல்லவராதலால், மீன்முதலானவடிவங் கொண்டன ரென்க. பி - ம்:—[1]வடிவானார். [2]மடவராயிவன்முன்னே.

சக. கந்தா ரமு[1]முறு கிளையுந் தமையெதிர் தழுவுந் தொறு நுமதமரலலேம், வந்தேம [2]வானவ ரென்றே கினர்சிலர் சிலர்மா னுபரென வாய்விட்டார், மந்தா ரங்கிளர் பொழிலவாய் வண்டுக ளானார் சிலாசிலர் மருள்கொண்டா, ரிந்தா ரெயிறுக ளிறுவித்தா சில ரெரிபோற் குஞ்சியை யிருள்வித்தார்.

(இ - ள்.) சிலா - வேறுசில அரக்கா, தம் தாரமும் உறு கிளையும் - தமது மனைவிமாரும் நெருங்கினஉறவுமுறையாரும், தமை எதிர் தழுவும் தொறும்- (அநுமானிடதது அசசததினால் எதிரேவந்து) தழுவிகொள்ளுமபோதெல்லாம், (தாமும் அசசங்கொண்டிருத்தலால் தம்மை மறைககவேண்டி), (தம்மை), 'நுமதமர் அல்லேம - (நாங்கள்)உமதுசுற்றத்தாரல்லேம்; வந்தேம் - வந்தநாங்கள், வானவர் - தேவர்கள்,' என்று - என்றுசொல்லிவிட்டு, ஏகினர்- (அப்பாற்) போய்விட்டாரகள்; சிலா—, மானுயா என வாய்விட்டார் - (உமது சுற்றத்தாரான அரககரல்லோம், (நாங்கள்) மனிதரென்றுசொன்னாகள்; சிலர்—, மந்தாரம் கிளர் பொழிலவாய மந்தாரமென்ற தேவவிருட்சம்விளங்குகின்ற சோலையினிடததில், வண்டுகள் ஆனார் - வண்டுகளின் உருவங்கொண்டு சென்றார்கள்; சிலர்—, மருள் கொண்டா - (செயயவேண்டுவது இன்னதெனததோன்றாமல்) மயங்கநின்றாகள்; சிலர்—, (தமது அரக்கவடிவதைத மாறறுமபொருட்டு), இந்து ஆர் எயிறுகள் இறுவித்தா - பிறைசசந்திரன்போன்ற (தமது) கோரதந்தங்களை ஒடித்திட்டு, எரி போல் குஞ்சியை - நெருப்புப்போலச செந்நிறமுள்ள (தம்) மயிரை [செம்பட்டமயிரை], இருள்வித்தார் - கருமையாகச் செய்துகொண்டாகள்; (எ - று.)

மந்தாரம் - தேவதருக்கள ஐந்தனுள் ஒன்று; இது-மறறைத்தேவதருக்களுககும உபலட்சணம். பி - ம்:—[1]முது. [2]வானரம். (சக)

வேறு.

சஉ.—அழகை யொலி.

குண்டலக் குழைமுகக் குங்குமக் கொங்கையார்
வண்டலைத தெழுகுழற் கறறைகால் [1]வருடவாய்
விண்டலத் தகவிரைக் குமுதவாய் விரிதலா
லண்டமுற் றுளதவூ ரழுதபே ரமலையே.

(இ - ள்.) குண்டலம் குழை முகம - குண்டலமென்றகாதணியணிந்த செவியையுடைய முகத்தையுடைய, குங்குமம் கொங்கையார் - குங்குமக்

குழம்பையணிந்த ஸ்தநங்கள்படைத்தவரான இராக்கத மகளிர்,—வண்டு அலைத்து எழு குழல் கற்றை கால்வருடஆய - வண்டுகளை அலையசெய்து மேலெழுப்பப்பெற்ற தமது கூந்தற்றொகுதி அவிழ்ந்து கால்களிலேவிழுந்து புரண்டுகொண்டிருக்கும்படியாகி, விரை குமுதம் அலத்தகம் வாய் - நறுமண முள்ள ஆம்பல்போன்ற செம்பஞ்சூட்டிய தமதுவாய்கள், விண்டு விரித லால் - திறந்துவிரிவதனாலே, அ ஊர் அழுதபோ அமலை - அந்த இலங்கையி லுள்ளார் அழுத பெருங்குரலோசை, அண்டம் உற்று உளது - மேலுலகம் வரையில் எட்டிற்று; (எ - று.)

அரக்கியா கால்களிற்படும்படி தமதுகூந்தலை விரித்துக்கொண்டு பேரா ரவாரந்தோன்ற அழுதன ரெனபதாம். அலத்தகம் வாயக்கும் ஊட்டப்படுதலை "அம்மலரடியுங்கையு மணிகிளர்பவளவாயும், செம்மலர் நுதலு நாவுந் திருந் தொளி யுகிரோடங்கேழ், விம்மிதப்பட்டுவீழ வலத்தகமெழுகியிட்டாள்" என்ற சிந்தாமணியினாலும் அறிக. பி - ம்.—[1]வருடலால். (௪௨)

௪௩.—இதுமுதல் ஐந்துகவிகள் அரக்கமாதர் துயரப்படுவதைக் கூறும்.

கதிரெழுந் தனையசெந் திருமுகக் கணவன்மா
ரெதிரெழுந் [1]தடிவிழுந் தழுது[2]சோ ரிளநலா
[3]ரதிநலங் கோதைசே ரோதியோ டன்றவூ
ருதிரமுந் தெரிகிலா திடைபரந் தொழுகியே.

(இ - ள்.) கதிர் எழுந்த அனைய செம் திரு முகம் கணவன் மார் - சூரி யோதயமானாற்போன்ற சிவந்த அழகியமுகங்களையுடைய தமது காயகரு டைய, எதிர் - முன்னே, எழுந்து - போய், அடி விழுந்து அழுது சோர் - கால்களில்விழுந்து அழுது சோர்கின்ற, இள நலார் - இளம்பெண்களுடைய, அதி நலம் கோதை சேர் ஓதியோடு - மிக்க அழகுள்ள மாலையையணிந்த கூந்தலுடனே, அன்று அ ஊர் உதிரமும்-அப்பொழுது அந்த ஊரிற்பெருகு கின்ற இரத்தமும், பரந்து ஒழுகி - பரவிப்பெருகி, இடை - வேற்றுமை, தெரிகிலாது - அறியமுடியாதபடி யாயிற்று; (எ - று.)

இளநலாரோதியும் இரததமும் செந்நிறமாக இருததலால, வேற்றுமை தெரியாததாயிற் றென்க. ஓதிகளும் உதிரத்துக்கும் வேறுபாடு தோன்றாமை கூறியது - மறைவணியாம்; இதனை, வடநூலார் மீலிதாலங்காரமென்பா. பி - ம்:—[1]இடை. [2]சோ. [3]அதிரவங்கோதை. (௪௩)

௪௪. தாவில்வெஞ் செருநிலத் திடையுலந் தவர்தமே
லோவியம் புரைநலார் விழுதொறுஞ் சிலருயிர்த்
தேவுகண் களுமிமைத் திலர்களா [1]மிதுவெலா
மாவியொன் றுடலிரண் [2]டாயதா லேகொலாம்.

(இ - ள்.) தா இல - குற்றமற்ற, வெம் சருநிலத்திடை - கொடிய போர்க்களததிலே, உலந்தவர்தமமேல்-இறந்த வீரர்களின்மீது, ஓவியம்புரை நலார் சிலர் - சித்திரப்பதுமைபோன்ற அழகிய சிலமகளிர், விழு தொறும் - விழுமபோதெல்லாம, உயிர்த்து - மூச்சுவிட்டு, ஏவுகணகளும் இமைத்திலா

கள் ஆம் - அம்புபோன்ற கண்களும் இமையாதவராஞர்கள்; இது எலாம் இவ்வாறான செயலெல்லாம், ஆவி ஒன்று உடல் இரண்டு ஆயதாலே கொல் ஆம - உயிரொன்று உடம்பிரண்டு ஆனபடியினுலேதான்போலும்; (எ - று.)

மகளிர் இறந்த தம்கணவர்மீதுவிழுந்து அழுகையில மூர்ச்சித்து உயிரப்பும் கணணிமைத்தலும் இல்லாதவராயினரெனக; இவ்வாறு இமமகளிரும் இறந்த கணவரபோல உயிரப்பிலலாமலும கண்ணிமையாமலும இருந்ததற்குக் காரணம் - புருஷனுககும மனைவிககும உடலிரண்டாயிருந்தும் ஆவி ஒன்ருயிருததலினுலேதானே எனக் கவி உத்ப்ரேடசிகின்ருர்; இவ்வாறு உயிரப்பில்லாமை கணணிமையாமை என்றவறறிற்குக் காரணமல்லாததைக் காரணமாக்கிக் கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம். பி-ம்:—[1]இவை. [2]ஆதலால். (சச)

சரு. [1]ஓடினு ருயிரகளு டுடல்கள்போ லுதவியால்
வீடினுர் வீடினுர் மிடையுடற குவைகள்வாய்
நாடினுர் மடநலார் நவையிலா நண்பரைக்
கூடினு ருடினு ருமபாவாழ் கொம்பனுர்.

(இ - ள்) மடம் நலார் - மடப்பததையுடைய மகளிராகிய அரககியா, உயிரகள் நாடு உடலகள போல் - உயிரகளைததேடுகின்ற உடல்கள்போல, ஓடினுர் - (தமதுகணவரைததேடிக்கொண்டு) ஓடினவராய, வீடினுர் மிடை உடல் குவைகள் வாய் - இறநதுவீழ்நதுள்ள அரககரின் நெருங்கிய பிணக் குவியலின் நடுவில், நாடினுர் - கணடுபிடித்து,—உதவியால் - (அவாக்குச்செய்துள்ள) உதவியை நினைத்தலால், வீடினுர் - இறநதொழிந்து (வீரசுவர்க்கததையடைந்து), நவை இலா(த) நண்பரை-குற்றமறற தமகணவரை, கூடினுர் - (அநகுச) சேரப்பெறுர்கள்; உமபா வாழ் கொம்பு அனுர் - (அவ் வீரசுவர்க்கஞ்சேர்ந்த அக்கணவர்களையேதழுவிய) தேவலோகத்து வாழ்கின்ற பூங்கொம்புபோன்ற அமரமகளிர், ஊடினுர் - பிணங்கினுர்கள்; (எ - று)

தமதுகணவரைத தேடிச சென்ற அரககியாசிலர் போரக்களத்தில் இறந்து வீழ்ந்துகிடந்த தமது கணவருடலைககணடு அவாகளைததழுவி அவரிடத்துத்தாம் வைத்திருந்த பேரன்பினுல் தாமும இறநது, கணவன் புகுந்த உலகத்தையடைந்து அவகுக கூடினுரகளாக, அதுகணட தேவமகளிர பிணங்கினரென்பதாம். பி - ம் —[1]ஓடினுருடல்களுமுயிர்களபோலுதவியால். ()

சசு. தீட்டுவா ளனையகட் டெரிவையோர் திருவனு
ளாடடினின் றயாவதோ ரறுதலைக் குறையினைக்
[1]கூடடிநீ யோருயிர் துணைவனெங் [2]கோவினைக்
காட்டுவா யாதியென் றழுதுகை கூபபினுள்.

(இ - ள.) தீட்டு வாள் அனைய கண - தீட்டிககூராகக்பெற்ற வாள்போன்ற கணகளையுடைய, திரு அனுள் ஓர் தெரிவை - இலககுமி போன்ற ஓர் அரக்கப்பெண, ஆட்டில நினறு - கூத்தாடுதறெழிலை மேற்கொண்டிருந்து, அயர்வது - சோர்ந்துபோன, ஓர் அறு தலை குறை

யினை - தலையற்றதொரு கபந்தத்தை, கூட்டி - (தலையோடு) சேர்த்து (அதனை நோக்கி), நீ—, ஓர் உயிர் துணைவன் - ஒப்பற்ற பிராணநாயகனை, எம் கோவினை - எனது தலைவனை, காட்டுவாய் ஆகி - காட்டுபவனாகக் கடவாய், என்று—, அழுது—, கைகூப்பினள்—; (எ - று.)

"பேரொத்த வாயிரமபேர் மடிந்தாற் பிறக்குங் கவந்தம் பேரொத்தவர் டும்" என்றபடி பலவீரர் பட்டொழிந்தால், அப்போது தலையற்ற உடற்குறை யாகிய கவந்தம் எழுந்து ஆடு மெனக் கூறுவது, நூல்களின் மரபு; அவ்வா றான கவந்தத்தோடு தலையினைப் பொருததி, ஓர் அரக்கமாது துயரதிலுல் விவேகம இலலாமையால், என்தலைமகனைக் காட்டவேணு மென்று அதனை இரந்தன ளென்க. பி - ம்:—[1]கூட்டிநின்று. [2]கோனை நீ. (சகூ)

சஎ. ஏந்தினு டலையையோ [1]ரெழுதருங் கொடியனுள்
காந்தனின் றுடுவா னுடறகவந் தத்தினை
[2]வேந்தனீ யலசினுய் விடுதியா னடமெனுப்
பூந்தளிர்க் [3]கைகளான் மெய்யுறப் புலவினுள்.

(இ - ள்.) எழுத அரு ஓர் கொம்பு அனுள் - (சிதறிரத்தில்) எழுத முடியாத [மிகஅழகுள்ள] பூங்கொம்புபோன்ற ஓர் இராக்கதப்பெண், தலையை ஏந்தினுள் - இறந்த கணவன் தலையைக் கையிற்கொண்டு, நின்று ஆடுவோன் காந்தன் உடல் கவந்தத்தினை - நின்று கூத்தாடுகின்ற கணவனது உடற்குறையைப்பார்த்து, 'வேந்தன் - கணவனே, நீ—, அலசினுய் - (வெகுநேரம் ஆடியதனுல்) இளைத்தாய்; (இனி) நடம்விடுதி - கூத்தாடுதலைவிடுவாய்', என்று—, பூ தளிர் கைகளால் - மலரையும் தளிரையும்போன்ற மெல்லிய தன்கைகளினுல், மெய் - (அக்கணவனுடைய) உடலை, உற புல்லினுள் - இறுகத்தழுவிக்கொண்டாள்; (எ - று.)—பி - ம்:—[1]எழுதுபூவ. [2]கேந்தநீ. [3]கையினுல். (சஎ)

சஅ.—இங்ஙனீ அரக்கியீ துயருற்றிறக்க, பருவத்தேவர் இராவணனிடம் செய்தி சொல்லநீ சேறல்.

நாடினுர் நாடியே நனைவருங் கொம்பனுர்
வாடினுர் கணவர்தம் மார்புறத் தழுவியே
வீடினு ரவவயின் வெருவிவிண் ணவர்கடா
மோடினு ரரசன்மாட் டணுகிநின் றுரைசெய்வார்.

(இ - ள்) நாடினுர் - (தங்கணவரைத்) தேடினவர்களாகிய, நனைவரும் கொம்பு அனுர் - அரும்புகள் தோன்றுகின்ற பூங்கொம்புபோன்ற அரக்கமகளிர், நாடி - தேடியடைந்து, வாடினுர் - சோர்ந்தவர்களாய், கணவர்தம் மார்பு உற தழுவி - இறந்தகணவரது மார்புகளை இறுகத் தழுவிக்கொண்டு, வீடினுர் - (தாங்களும்) இறந்தொழிந்தார்கள்; அவயின் - அப்பொழுது, விண்ணவர் - தாம் - (பொழிலுக்குக் காவலான) பருவத் தேவர்கள், வெருவி - அச்சங்கொண்டு ஓடிச்சென்று, அரசன்மாடு அணுகி நின்று உரை செய்வார் - அரசனான இராவணனிடத்திற்போய் நின்றுகொண்டே நடந்தசெய்தியை

அட்சகுமாரன் இறந்திட்டதை]ச் சொல்லலானார்கள்; (எ - று)—இசசெய் செய்யுள் சில பிரதிகளிலில்லை. (௪௮)

வேறு.

௪௯ —அவ்வேளையில் மந்தோதரி அழுதல்.

கயன்மகிழ் கண்ணிணை கலுழி கான்றுகப்
புயன்மகிழ் புரிகுழல் பொடிய ளாவுற
வயன்மகன் மகன்மக னடியின் வீழ்ந்தனண்
மயன்மகள் வயிறலைத் தலறி மாழ்கினள்.

(இ - ள்.) மயன் மகள் - (அசுரசிறபியான) மயனது குமாரியாகிய மண்டோதரி, கயல் மகிழ் கண இணை கலுழி கான்று உக - கயல்மீன்போன்ற (தனது) இரணடுகண்களிலிருந்தும் நீர் வழிந்து பெருகவும்,—புயல் மகிழ் புரி குழல் பொடி அளாவுற - காளமேகததையொதத முறுக்கிவிட்ட கூந்தல் மண்ணின் புழுதியிலே புரளவும், அயன் மகன மகன் மகன் - பிரமகுமாரனான புலஸ்தியனது குமாரனான விசசிரவசுவினுடைய குமாரனான இராவணனது, அடியின-பாதங்களில், வீழ்ந்தனள்-வீழ்ந்தவளாய், வயிறு அலைத்து அலறிமாழ்கினள - வயிற்றிலடிததுககொணடு கதறிப்புலமபினள்; (எ - று.)

இசசெய்யுளை கோக்குமிடத்துக் கம்பர் அட்சகுமாரனை மந்தோதரி குமாரனெனவே கொண்டு கூறுகின்றனரென்று தோன்றுகின்றது. இனி, இறந்தவன் சதகளத்திகுமாரனாயினும அவனையும தன் மகன்போலவே பாவிதது இஙஙனம் குமாரன் இறக்கக காரணமாயிருந்த இராவணனது தான்களில் மந்தோதரிவிழுந்து அழுதனளென்பாருமுளர். (௪௯)

௫௦ —யாவரும் புலம்புதல்.

தாவருந் திருநகர்த் தைய லார்முத
லேவரு மிடைவிழுந் திரங்கி யேங்கினர்
காவலன் கான்மிசை விழுந்து காவன்மாத்
தேவரு மழுதனர் களிக்குஞ் சிந்தையார்

(இ - ள்) தா அரு திருநகர் தையலார் முதல் ஏவரும் - குற்றமறற அழகிய இலஙகாநகரததிலே மகளிர முதலிய எல்லாரும, இடை விழுநது இரஙகி ஏஙகினர - (இராவணனுடைய) பாதததினிடததில் விழுந்து இரகஙகொண்டு அழுதார்கள்; காவல் மா தேவரும - சோலையைப்பாதுகாத்தலை மேற்கொண்ட சிறநத பருவததேவரும, களிசகும சிநதையார - (இராவணனுககு நேர்ந்த அபஜயததினால்) மகிழ்கின்ற மனமுடையவரகளாயினும், காவலன் கால் மிசை விழுந்து அழுதனர் - இராவணனது பாதங்களில் விழுந்து அழுதார்கள்; (எ - று) இரணடாமடி - முற்றுமோனை. (௫௦)

அட்சகுமாரன் வதைப்படலம் முற்றிற்று.

பன்னிரண்டாவது

பாசப்படலம்.

இந்திரசித்து அநுமானைப் பாசத்தாற்கட்டிய செய்தியைக் கூறும் பாகம். இங்கு 'பாசம்' என்றது பெரும்பாம்புவடிவுகொண்டு அநுமானைக் கட்டுகிற பிரமாஸ்திரத்தை. பாசம் - கயிறு: வடசொல். கயிறுபோலச் சுற்றிக் கட்டுதலால், பிரமாஸ்திரம், பாச மெனப்பட்டது; மேல் யுத்தகாண்டத்தில் "நாகபாசம்" எனபதுங் காணக. பாசப்படலம் - பாசத்தைப்பற்றிய படலம் என இரண்டனுருபும்பயனுந் தொக்கதொகை; பாசத்தினது சம்பந்தமான படலம் என்று விரிந்தது, பாசத்தின்விஷயமான பாக மென்று கருதது உரைப்பினுமாம.

க.—அட்சகுமாரனைக் கொன்ற செய்தி கேள்வியுற்ற இந்திரஜித்து அநுமான்மீது பெருங்கோபங்கொள்ளுதல்

அவ்வழி யவ்வுரை கேட்ட வாண்டகை
வெவ்விழி யெரியுக வெகுளி வீங்கினு
னெவ்வழி யுலகமுங் குலைய விந்திரத்
தெவ்வழி தரவுயர் [1]விசயச் சீர்த்தியான்.

(இ - ள்.) அ வழி - அப்பொழுது, அ உரை கேட்ட - (அட்சகுமாரனை அநுமான் கொன்றன னென்ற) அந்தவார்த்தையைக் கேள்வியுற்ற, ஆண்தகை-ஆண்மைக்குணமுடையவனாகிய, இந்திரன் தெவ் அழிதர உயர் விசயம் சீர்த்தியான் - இந்திரனாகியபகைவன் வலியழியுமாறு உயர்ந்தவெற்றியைக் கொண்ட பெரும்புகழுடையவனான இந்திரசித்து,—வெவ் விழி எரி உக - பயங்கரமான தனதுகண்களினின்று நெருப்புச் சிந்தவும், எ வழி உலகமும் குலைய - எல்லாவிடங்களிலுமுள்ள உலகங்களும் நடுங்கவும, வெகுளி வீங்கினான் - கோபம் மிகப் பெற்றான்; (எ - று.)

"சீர்த்தி மிகுபுகழ்" என்ற தொல்காப்பிய வுரியியற்சூத்திரத்தால், சீர்த்தியென்பது மிககபுகழையுணாததுவதோ ருரிசசொல்லா மென விளங்கும். பி - ம்.—[1]விசயசசெய்கையான். இராவணன் திக்கு விசயஞ் செய்கையிற் சுவர்க்கலோகத்தையடைந்து இந்திரனை யெதிர்த்துப்போர் செய்த பொழுது, இராவணனால் இந்திரனைச் சயிக்கமுடியாத சமயத்தில், அவன் மகனான மேகநாதன் மாயையால மறைந்து பொருது இந்திரனைக் கலங்கச்செய்து அவனை மாயப்பாசத்தாற் கட்டிக்கொண்டுபோய் இலங்கையிற் சிறைவைத்திட, அதனையுணாந்த பிரமதேவன் தேவாகள்சூழ அங்கு வந்து இராவணனைக்கண்டு 'இந்திரனைச்சயித்ததனால், உன்மகனுக்கு 'இந்திரஜித' என்று இனிப் பெயா வழங்குக' என உபசாரவார்த்தைகூறி அம்மகனுக்கு வரமுமளித்து இந்திரனைச் சிறைமீட்டுகொண்டுசென்றன னென்பது வரலாறு.

உ.—இந்திரசித்து மனக்கோதிப்புடன் போர்குறித்து உக்கிரமாக எழுதல்.

அரஞ்[1]சுடர் வேற்றன [2] தனுச னிற்றசொ
லுரஞ்சுட [3]வெரியுயிர் தொருவ னேங்கினன்
புரஞ்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரஞ்சுட ரொருவனைப் பொருவும் பான்மையான்.

(இ - ள்.) ஒருவன் - ஒப்பற்றவனான அந்த இந்திரசித்து,— அரம் சுடர் வேல் தனது அனுசன் இற்ற சொல் உரம் சுட - அரமென்னும் வாள்வீசேடதால் (அராவப்பட்டு) விளங்குகிற வேலாயுதத்தையுடைய தனது தம்பியான அக்ஷகுமாரன் இறந்தா னென்ற வார்ததை தன் மனததை யெரித்தலால், எரி உயிர்த்து - நெருப்புப்புறப்பட (க் கோப தாபத்தால் வெவ்விதாக)ப் பெருமூசசுவிட்டுக் கொண்டு,—புரம் சுட - திரிபுரதததை யெரிபபதற்கு, வரி சிலை பொருப்பு வாங்கிய - கட்டமைந்த வில்லாகிய மகாமேருகிரியை வளைதத, பரம் சுடர் ஒருவனை - எல்லா வொளிகளினும் மேம்பட்ட ஒளிவடிவமைந்த திரிமூரததிகளி லொருவனான சிவபிரானை, பொருவும் - ஒக்கின்ற, பான்மையான் - தன்மையையுடையவனாய், ஓங்கினன் - எழுந்தான்; (எ - று.)

போர்குறித்து எழுகிற இந்திரசிததுக்கு, திரிபுரமெரிக்கப் புறப்பட்ட சங்காரககடவுளான உருததிரமூர்ததியை உவமைகூறியது, பயங்கரமான தோற்றததுக்கு என்க. அரம் - இரும்புமுதலியவற்றை அராவுங் கருவி. கீழ்ச்செயயுள் இந்திரசிததின் கோபரசத்தையும், இச செயயுள் அததோடு சோகரசமுங் கொண்டு அவன் போர்குறித்து எழுந்ததையுங் கூறுதலால், கீழ்சசெய்யுளோடு இசசெய்யுள் கூறியது கூற லெனனுங் குற்றத்தின் பாற்படாது; அன்றியும், ஒருவிஷயததையே பலவாறு கூறிவிளக்குதல் கவிததிறமாம். இனி, கீழ்சசெயயுளோடு இசசெய்யுளைக் குளகமாகக் கொண்டு அவ்விடதது அட்சகுமாரனிறந்தா னென்ற வார்ததையைக் கேட்ட ஆணமையிற் சிறந்தவனான இராவணன் கண்கள தீசசொறியவும் எவ்வகையுலகமும் நடுங்கவும் அதிககோபங்கொண்டான் (அசசமயததில) முன்பு இந்திரனை வென்று மிகக வெற்றியும புகழும படைததவனான ஒப்பற்ற இநதிரசிததுதன்தமபி மாண்டன னென்ற சொல் வந்து செவிப்பட்டு நெஞ்சைசசுடத் தீக்காலுமாறு பெருமூசசெறிநதுகொண்டு திரிபுரதகனஞ்செய்யும்படி மகாமேருவை வில்லாகவளைதத உருததிர மூரததிபோல மிகக உகிரங்கொண்டு எழுந்தான் என்று உரைப்பாரு முளர். அநுஜன என்ற வடமொழி - பின் பிறநதவனென்று பொருள்படும். பி - ம்:—[1]சுடு. [2]இளவலற்ற. [3]வரிசிலை யொன்றுவாங்கிமுப் - புரஞ்சுடுமொருவனிற பொலிந்து தோன்றினன். (உ)

ங.—இந்திரசித்து தேரேறுதலும், பெருங்குரலோடு வீரவாதங் கூறுதலும்.

ஏறினன் விசும்பினுக் கெல்லை [1]காட்டுவ
வாறிரு நூறுபேய் பூண்ட வாழித்தேர்

கூறின கூறின சொற்கள் கோத்தலாற்
பீறின நெடுந்திசை பிளந்த தண்டமே.

(இ - ள்.) விசும்பினுக்கு எல்லை காட்டுவ - வானத்தினது மேலெல்லையை இவ்வளவேயென்று தமது மிக்க உயர்ச்சியினால் காண்பிப்பவையான, ஆறு இரு நூறு பேய் - ஆயிரத்துநூறுபேய்கள், பூண்ட - பூட்டப்பெற்றுள்ளதான, ஆழி தேர் - (வலிய) சக்கரங்களமைந்த ஒருதேரில், ஏறினன் - (இந்திரசித்து) ஏறினன்; கூறின கூறின - (அங்ஙனம் ஏறியவன்) மிகுதியாகச் சொன்ன, சொற்கள் - வீரவாதங்கள், கோத்தலால் - ஒருசேரக்கூடி மோதியதனால் நெடுந் திசை பீறின - நீண்டதிக்குக்கள் பிளவுபட்டன; அண்டம் பிளந்தது - அண்டகோளமும் பிளவுபட்டது; (எ - று.)

விசும்பினுக்கு எல்லைகாட்டுவ - ஆகாயத்தின் உயரம் எவ்வளவு உண்டோ அதுவரையிலும் உயர்ந்துளளவையென்பது கருத்து: தற்குறிப்பேற்றவணி. 'கூறின கூறின' என்ற அடுக்கு, மிகுதிப்பொருளது. பின்னிரண்டடி - இந்திரஜித்து வீரவாதங்கூறிய பெருங்குரலினாலாகிய அதிர்ச்சியை விளக்கவந்த உயர்வுநவிற்சியணி. பி - ம்.—[1]காட்டுவான், காட்டுவது.

வேறு.

௪.—அதிபயங்காமான இந்திரசித்தின் ஆடம்பரம்.

ஆர்த்தன கழலுந் தாரும் பேரியு மசனி யஞ்ச
வேர்த்துயிர் குலையமேனி வெதும்பின னமரர் வேந்தன்
சீர்த்தது போரு மென்னாத் தேவர்க்குந் தேவ ராய
மூர்த்திக டாமுந் தத்தம யோகத்தின் முயற்சி விட்டார்.

(இ - ள்.) (மற்றும் இந்திரசித்தினது), கழலும - வீரக்கழலும், தாரும் - வீரகிண்கிணியும், பேரியும்-யுததவாத்தியங்களும், அசனி அஞ்ச ஆர்த்தன- இடியும் அஞ்சிப்பின்னிடும்படி மிகுதியாக ஒலித்தன; (அமுழக்கத்தைக் கேட்டு), அமரர் வேந்தன் - தேவராஜனான இந்திரன், உயிர் குலைய மேனி வேர்த்து வெதும்பினன - (என்னாகுமோ வென்ற அச்சத்தால்) உயிர்நடுங்க உடல் வியாத்துத தவிப்புற்றான்; தேவர்க்கும தேவா ஆய மூர்த்திகள்தாமும்- எல்லாததேவர்கட்குந் தலைமைததேவர்களான அயன் அரி அரன் என்னுந் திரிமூர்த்திகளும், போரும் சீரததது என்னா - 'யுத்தம வலிமைப்பட்டது' என்று எண்ணி, (அகக்கவலையினால்), தததம் யோகததின் முயறசி விட்டார் - தமதம்செய்தொழிலின் முயறசியைக் கைவிட்டாரகள் [படைத்தல் காதல் அழித்தல் என்னும் தம்தம்தொழிலகளை யொழிந்து நின்றார்கள் என்றபடி].

தார் - கிண்கிணிமாலை; முந்துறுப பொருபடையுமாம். அதாவது - முன்னணிச்சேனை; அது - கொடிப்படையெனவும் தூசிப்படையெனவும படும். தா என்றதறகு - படை, படைவகுபபு என்ற பொருளகளு முணடு,

மாலையென்று பொருள்கொண்டால், போர்க்கு அறிகுறியாக அவனணிந்த தும்பைப்பூமாலை தன்னிடத்து மொய்க்கும் வண்டுகளினொலியால் ஆரவாரித் ததென்று கொள்ளவேண்டும். தேவர்க்குத் தேவராய மூர்த்திகள் - பிரம விஷ்ணு ருத்திரர். மூர்த்திகள - பெரியோர். யோகம் - உத்தியோகம் இச்செய்யுள் - இந்திரசித்தின் யுததாடம்பரத்தை விளக்குகிற உயர்வு நவிற்சியணி. (அ)

ரு.—இந்திரசித்தின் வீரக்கருத்தும், அதுபற்றிய செயலும்.

தம்பியை யுன்னுந் தோறுந் தாரை நீர் ததும்புங் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியன் மாய வாழ்க்கைக் குரங்கினற் குரங்கா வாற்ற
லெம்பியோ தேய்ந்தா னெந்தை புகழன்றோ தேய்ந்த தென்றான்.

(இ - ள்.) தம்பியை உன்னுந்தோறும் தாரை நீர் ததும்பும் கண்ணன் - தன்தம்பியான அட்சகுமார னிறந்த செயதியை நினைக்கும் பொழுதெலலாம் (அவனிடத்து அன்பினாலாகிய சோகததால) தாரை தாரையாக நீர்ததும்பிப் பெருகுக கணகளை யுடையவனாகிய இந்திரசித்து—'கொம்பு இயல் மாய வாழ்க்கை - மரககொம்புகளிலே சஞ்சரிககிற நிலையிலலாத வாழ்வையுடைய, குரககினால் - இந்த ஒரு குரககினால, குரககா ஆற்றல் எம்பியோ தேய்ந் தான்-(எப்பொழுதுந்) தாழாதவலிமையையுடைய என்தம்பியான அட்சனோ மெலிவுறறழிந்தான்? [அல்லன] எநதை புகழ் அன்றோ தேய்ந்தது - என் தந்தையான இராவணனது கீர்ததியன்றோ மெலிவுற்று அழிந்தது,' என்றான் என்று எணணினவனாய்,—வம்பு இயல் சிலையை நோகி - போரத தொழிலுககு ஏறற தன்வில்லைப் பாரத்து, உருதது வாய் மடிதது நக்கான் - (அநுமான்மீது) கோபித்து (அதனால்) தனது உதட்டை மடித்துக கடித்துக கொண்டு சிரித்தான்; (எ - று.)

'குரககினால் எம்பியோ தேயந்தான், எநதைபுகழன்றோ தேய்ந்தது' என்றது - ஒழிப்பணி. "சிறப்பினும பொருளினுங குணததினு முண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதியாகும்" என்ற தண்டியலகார சூததிரத்து 'அவநுதி' எனனது 'ஆகும்' எனற மிகையினால் வினையவநுதி கொள்ளப்பட் டமை யுணரக. ஓ - எதிரமறை. அன்றோ - தேற்றம். ஓரிடமின்றிக் காடு களிலும் மலைகளிலும் மரக்கிளைகளில் திரிந்துவாழுந் தன்மையதான எளிய தொரு குரகு இராவணகுமாரனை அட்சனைக கொன்றது, அவ்விராவ ணன் திககுவிசயஞசெய்து எல்லாவுலகததும் பரப்பிய புகழுக்கு அழிவு செயவதாதல் காணக. குரகினது எளிமை தோன்ற, 'கொமபியல் மாய வாழ்க்கை' எனறான். மரககொமபுகளிற சஞ்சரிததலால் குரங்குக்கு, வட மொழியில் 'சாகா மருகம்' என ஒரு பெயரிருததல உணரததக்கது. மாய வாழ்ககை - பொய் வாழ்வு; மறைந்துவாழ்தல் எனினுமாம; வஞ்சகவாழ்வென் றுங் கொள்ளலாம், மகாமாயாவியான இநதிரசித்தும், 'மாயவாழ்க்கைக் குர

ங்கு' என்று வெறுத்து உரைக்கும்படி மிக்கிருந்தது அறுமான் மாலையில் வல்ல அரக்கர்பலரை எளிதிற் பொருது தொலைத்த நிறமென்க. குரங்குதல்-வளைதலாதலை "இலைப்பொழில் குரங்கின" எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. குரங்கு என்ற சொல்லை, கருத்திலும் செயலிலும் சேர்மையின்றிப் பலவிகற்பங்கொண்ட கோணுதலுடைமைபற்றி வந்த பெய ரென்னலாம். பி - ம்:—[1]நினையுந். [2]தரங்கவாற்றல். (இ)

சு.—இந்திரசித்தைச் சார்ந்த சேனையின்மிகுதி.

வேறிரண் டனவும் வில்லு [1]மிடைந்தவும் வெற்பென் றாலுங்
கூறிரண் டாக்கும வாட்கைக் குழுவையுங் குணிக்க லாற்றேஞ்
சேறிரண் டருகு செய்யுஞ் செறிமதச சிறுகண் யானை
யாறிரண் டஞ்சு நூற்றி னிரட்டிதேர்த் தொகையு மஃதே.

(இ - ள்.) வேல் திரண்டனவும - வேல்வீரர்களாக வந்துகூடிய பதாதிச்சேனைகளையும், வில்லு மிடைந்தவும் - வில்லாளிகளாகவந்து நெருங்கிய பதாதிசசேனைகளையும்,, வெற்பு என்றாலும் கூறு இரண்டு ஆக்கும் வாள் கை குழுவையும் - மலைகளே எதிரிகளென்றால் அவற்றையும் இரண்டு துண்டாகத்துணிக்கவல்ல வாளாயுதத்தை யேந்திய கையையுடைய பதாதிகளின் கூட்டத்தையும், குணிக்கல் ஆற்றேம் - இவ்வளவென்று தொகையிடவல்லேமல்லேம்; இரண்டு அருகு சேறு செய்யும் செறி மதம் - இருபுறத்திலும் (பொழிந்து நிலத்தைச) சேறாக்குகிற மதநீர்ப்பெருக்கையும், சிறுகண் - (சிறியகண்களையுமுடைய, யானை - யானைகளின்தொகை, ஆறு இரண்டு அஞ்சு நூற்றின் இரட்டி - பன்னீராயிரமாம்; தேர் தொகையும் அஃதே-தேர்களின் அளவும் அவ்வளவே [பன்னீராயிரமே]; (எ - று.)

இந்திரசித்து கோபங்கொண்டு எழுந்து தேரேறி வீரவாதங் கூறியமாத்திரத்தில் அவனது குறிப்பையறிந்து தொழில்செய்யுஞ் சேனைகள் போர்க்குச் சித்தமாய்ப் போர்ப்பறைமுழக்கம் முதலியவற்றோடு உடனெழுந்தன வென்க."ஒத்தவில்வேல்வாள்யானை உயர்பரிதேரோடாறே"என்ற அறுவகைப் படைகளுள வேறபடை, வில்படை, வாட்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற ஐந்தையும் இக்கவியிற் கூறி, குதிரைப்படையை அடுத்தகவியில் 'ஆயமா' எனக் கூறுவா. யானை தோ குதிரைஈட்கு 'பன்னிரண்டாயிரம்' என்று தொகைகூறி, மற்றைக காலாள்வீராவகை மூன்றிற்கும் தொகை குறிககவல்லோமல்லோ மென்று அளவின்மை கூறினர். 'குணிககலாற்றேம்' என்றது, கவிக்கூற்று. பி - ம்:—[1]மிடைந்துள. (சு)

எ.—இந்திரசித்து இராவணன் மாளிகையிற் செல்லுதல்.

ஆயமாத் தானை தான்வந்[1]தண்மிய தண்ம வேனைத்
தீயவா ணிருதர் வேந்தா சோந்தவர் சோத் தேரி
னேயெனு மளவின் வந்தா னிராவண னிருந்த யாணர்
வாயிறோய கோயில் புக்கா னருவிசோ வயிரக் கண்ணன்.

(இ - ள்.) ஆய - அவ்வாறே ஆகிய [பன்னீராயிரமென்னுந் தொகையளவினவாய்த திரண்ட], மா தானை - குதிரைச்சேனையும், வந்து அணமியது - வந்து (இந்திரசித்தினருகில்) கூடிநறு; அணம - (அணுகுணம அறுவகைப்படையும்) வந்துகூடவும்,—ஏனை-மறறும், தீய வாள நிருதர் வேந்தா- கொடிய வாளாயுததத்தையேந்திய இராககத (சேனை)ததலைவர்கள, சேர்ந்தவர் சேர - திரண்டு (தன அருகில்) வந்துசேரவும்,—அருவி சோர் வயிரம் கணணுன் - (தமபியிறந்தசோகததால்) மலையருவிபோல இடையறாது நீரொழுகுகின்றனவும் (அநுமான்மீது உண்டான) கோபம் வெளிபபடுவனவுமாகிய கணகளை யுடையவனான இந்திரசித்து, எயெனும அளவின் - விரைவிலே, தேரின் வந்தான் - தேரின்மீது வந்து, இராவணன் இருநத யாணாவாயில் தோய் கோயில் புக்கான-இராவணன்வசித்திருந்த அழகியவாயிலபொருந்திய அரண்மனையுட் சென்றான்; (எ - று.)—தான் - அசை.

கொடியவர்களாகிய அரக்கர்கள் பிராணிகட்குத தீங்குசெய்தற் பொருட்டு எப்பொழுதும் கையில் வாளேந்திநிற்றல் இயல்பாதலால், 'வாள்' என்பது, அரககர்க்குச சாதியடைமொழியாய்க் கூட்டிவழஙகபபடும். இங்கு 'நிருதர்வேந்தா' என்றது, அரககாகளிற் படைத்தலைவராயுள்ளாரை. சேர்தல் - தம்மில்திரளுதலும், வந்து சமீபித்தலும். 'யாணாவாயில்' என்பதற்கு - எபபொழுதும புதிதாகவேயிருககுமபடி செவ்வைசெய்து அலஙகரிக்கப்பட்டுள்ள வாயில என்றுமாம; யாணா - புதுமை. "பகைகமையும கேணமையும் கண்ணுரைககும்" என்றபடி வெகுளிக்குறிப்புக் கணபாவையில் தோன்றுதலால், 'வயிரககண்ணுன்' என்றார். பி - ம்.—[1]அணவினதணவுதானைத்.()

அ.—இந்திரசித்து இராவணனிடம் பேசத்தொடங்குதல்.

தாளிணை விழுந்தான் றம்பிக் [1]கிரங்கினுன் றறுக ணுனுந்
[2]தோளிணை பற்றி யேந்தித் தழுவின னழுது சோாந்தான்
வாளிணை [3]நெடுங்கண் மாதர் வயிறலைத் தலறி [4]மாழ்க
மீளிபோன் மொய்ம்பி னுனும் விலக்கினன் விளம்பலுற்றான்.

(இ - ள்.) (இராவணன்மாளிகையினுட் சென்ற இந்திரசித்து), தான் இணை விழுநதான் - (அவனுடைய) இரண்டுகால்களிலும விழுநது [வணஙகி], தமபிககு இரஙகினுன் - தமபியான அட்சகுமாரனிறந்ததற்காகச் சோகித்துப்புலமபினுன்; தறுகணுனும் - அஞ்சாமையையுடையவனான இராவணனும, தோள் இணை பறறி ஏந்தி தீழுவினன் - (இந்திரசிததின்) தோள்களிரணடையும் பிடிதது எடுதது (அவனை)க் கட்டியணைததுக கொணடு, அழுது சோாந்தான் - புலமபிசசோகிததான்; (அபபொழுது), வாள இணை நெடுங்கண மாதா - வாளாயுததத்துக்குச் சமானமான நீணடகணகளையுடைய (மநதோதரிமுதலிய) மகளிர, வயிறு அலைது அலறி மாழ்க - வயிறறிலடிததுககொணடு கதறிவருந்த, மீளி போல் மொய்மபினுனும் விலகினன் விளம்பல் உற்றான் - சிங்கம்போன்ற வலிமையுடையவனான இநதிரசித்தும (அவாகளை)

விலக்கி (த் தக்தையைநோக்கி) ஒன்றுசொல்லதொடங்கினன்; (எ - று.)— அதனை, அடுத்த நான்குகவிகளிற் காண்க.

'மீளிபோல் மொய்ம்பினன்' என்பதற்கு - அரசனான இராவணன் போலவே வலிமை யுடையவனாகிய அகன்மக னென்றும் பொருள் கொள்ளலாம். பி - ம்:—[1]இரகுவான். [2]தோளினைப். [3]செடுவகண்ணார்தம். [4]மாழ்கி. (அ)

கூ.—இதுமுதல் மூன்றுகவிகள் - இந்திரசித்து இராவணனை நோக்கிச் சிலகூறுதல்.

ஒன்றுநீ யுறுதி யோரா யுற்றிருந் துளைய கிற்றி
வன்றிறற் குரங்கி னாற்றன் மரபுளி யுணர்ந்து மன்னா
சென்றுநீ பொருதி ரென்று திறத்திறஞ் செலுத்தித் தேயக்
கொன்றனை நீயே யன்றோ வரக்கர் தங் குழுவை [1]யென்றான்.

(இ - ள்.) மன்னா அரசனே! நீ—, உறுதி ஒன்றும் ஓராய் - நன்மை விளைப்பதொன்றையும் சிறிதும் ஆலோசிக்கின்றாயில்லை; உற்று இருந்து உளையகிற்றி - துன்பத்தையடைந்து நின்று (அதன்பின்பு) வருந்து கின்றாய்: வல்திறல் குரங்கின் ஆற்றல் - கொடியவலிமையையுடைய குரங்கினது வல்லமையை, மரபுளி உணர்ந்தும் - (கடல்கடந்துவந்து அசோகவனத்தை வழித்ததுமுதலாக) முறைமையாக அறிந்திருந்தும், நீ சென்று பொருதிர் என்று திறம திறம் செலுத்தி - 'நீங்கள் போய்ப் போர்செய்வீர்கள்' என்று ஏவி வரிசைவரிசையாக அனுப்பி, நீயே அன்றோ அரக்கர்தம் குழுவை தேய கொன்றனை - நீயேயன்றோ இராக்கதர்களுடைய கூட்டத்தைக் குறைந்தொழியும்படி கொன்றுவிட்டாய்', என்றான் - என்று (இந்திரசித்து இராவணனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

கடத்தற்கு அரிய மிகககாவலையுடைய இவ்விலங்காபுரியினுள்ளே ஒரு குரங்கு வந்து சிறிதும் அச்சமின்றி அசோகவனத்தையழித்துத தன்னை யெதிர்க்குமரககரையும அழிகக தலைப்பட்டதென்றமாத்திரத்தால் அக்குரங்கின்வல்லமையை நன்றாக அறியலாயிருந்தும், அதனை வலியடக்கிவெல்லுந் திறமுள்ள என்னை அதனோடு எதிர்க்கச்செல்லு மாறு ஏவாமல் வேறுபல இராக்கதவீராகளை ஏவினது, நெருப்புசசுடு மென்று அறிந்திருந்தும் அதிற் கைவைத்தால் வைப்பவரதுபிழையே யாதல்போல ஏவின உனது பிழையே யாகும் என இராவணனைநோக்கி இந்திரசித்து கூறினனென்க. மேல்நாக பாசப்படலத்து இவ்வாறான கருத்துள்ள செய்யுள் வருவதுங் காணத்தக்கது. 'மரபு நீயுணர்ந்து மன்னா' என்ற பாடத்துக்கு, அன்னா எனப் பிரித்துக் கழிவிரக்கமாகக் கொள்க. திறம் - கூறுபாடு, பாகம். அன்றோ - தேற்றம். பி - ம்:—[1]எல்லாம். (கூ)

கo. கிங்கரர் சம்பு மாலி [1]கேடிலா வைவ ரென்றிப்
பைங்கழ லரக்க ரோடு முடன்சென்ற பகுதிச் சேனை
யினகொரு [2]வருமீண் டார்தா மிலலையேற குரங்க தெந்தாய்
சங்கர னயன்மா லென்பார் தாமெனுந் [3]தகைய தாமே.

(இ - ள்.) எந்தாய் - என் தந்தையே! கிங்கரர் - கிங்கரரென்னும் போர் வீரர்களும், சம்புமாலி - ஜம்புமாலியென்பவனும், கேடு இலா ஐவர் - அழிதலில்லாத பஞ்சசேனாபதிகளும், என்ற—, இ பைங் கழல் அரக்கரோடும் - பசுமையான வீரக்கழலையுடைய இந்த இராக்கதர்களுடனே, உடன் சென்ற- கூடிச்சென்ற, பகுதி சேனை - சேனையின் பாகங்களில், ஒருவரும் இங்கு மீண்டார் இல்லை ஏல - ஒருவரேனும் இங்குத் திரும்பி வந்தவரில்லையென்றால், குரங்கு அது - அக்குரங்கு, சங்கரன் அயன் மால் என்பார்தாம் எனும் தகையது ஆமே - உருத்திரன் பிரமன் திருமால் என்னுந் திரிமூர்த்திகளின் சொரூபமே யென்று கருதத்தக்க பெருமையுள்ளதாமன்றோ? (எ - று.)

தோலாவென்றியுடைய கிங்கரரும் சம்புமாலியும் பஞ்சசேனாபதிகளும் ஆகிய இந்த இராக்கதவீரர்களையும் இவர்களுடன் சென்ற இராக்கதசேனைகளையும் ஒருவரேனும் மீண்டுவரவொட்டாதபடி ஒரு குரங்கு கொன்றுவிட்டதென்றால், அந்தக்குரங்கை என்னவென்றுநினைக்க வேண்டியது? திரிமூர்த்தி சொரூபமென்று நினைக்கவேண்டியதன்றோ என்பது கருத்து. இனி, ஈற்றடிக்கு - திரிமூர்த்திகளே யென்றுதான் சொல்லத்தக்கதாமோ? என்று பதவுரைகொண்டு, அவர்கட்கு இவ்வகைத்திறமின்மையால் அவர்களென்று சொன்னாலும் சரியாகாதென்று கருத்துரைப்பாரு முளர்; இப்பொருளில் ஈற்று ஏகாரம் - எதிர்மறை: அக்குரங்கு திரிமூர்த்திகளினும் மேம்பட்டதாகுமென்பது, இதன் தாற்பரியம். பி - ம் —[1]கேழிலா. [2]பேருமீண்டார். [3]தரத்தாமே. (கo)

கக. [1]திக்கய வலியு மேனு டிரிபுரந் தீயச் செற்ற
[2]முக்கணன் கயிலை யோடு முலகொரு மூன்றும் வென்றா
யக்கனைக் கொன்று நின்ற குரங்கினை யாற்றல் காணடி
புக்கினி வென்று மென்றா புலம்பன்றிப் புலமைத் தாமோ.

(இ - ள்.) திக் கயம் வலியும - அஷ்டதிக்கஜங்களின் வலிமையையும், மேல் நாள் திரிபுரம் தீய செற்ற முக்கணன் கயிலையோடும் - முன்னொரு காலத்திலே மூப்புரத்தையும் எரியும்படி அழித்திட்ட திரிநேத்திரனான சிவபிரானது கைலாசகிரியையும், உலகு ஒரு மூன்றும் - மூன்று உலகங்களையும், வென்றாய் - சயித்தவனான நீ, (இப்பொழுது), அக்கனை கொன்று நின்ற குரங்கினை ஆற்றல் காணடி - அட்சகுமாரனைக் கொன்று தான்சோர்வுறாது நின்ற இக்குரங்கை (வெல்ல முதலிலேயே முயலாமல் அதனைத் தன் வலிமை காட்டும்படி விட்டு அதனை) இவ்வளவு வலிமையுடையதென்று பரீக்ஷைபார்க்கிறாய்; இனி - கிங்கரர்முதலிய இவ்வளவுபேரையும் அக்குரங்கு கொன்றபின்பு, புக்கு வென்றும் என்றால் - போய் (அதனை நாம) வெல்வோமென்றுசொன்னால் (அவ்வாறாதது), புலம்பு அன்றி புலமைத்து ஆமோ - பிதற்றலாகக் கருதப்படுமே யன்றி அறிவுடைய வார்த்தையாகுமோ? .

முதலிலேயே வெல்லாமல தலைக்கு ஏறவிட்டு நம்மவர்க்கு அழிவு நினைத்தபின்பு இனி வெல்வோ மென்றால், அசசொல் நன்குமதிப்

பைப்பெறுது என்பதாம். ஈற்றடிக்கு - இனிப் போய் வெல்வோமாயினும் முதலில் நம்மவர்பலர்க்கு அழிவுநேர்ந்ததனாலாகிய சோகத்துக்கும் அவமானத்துக்கும் பரிஹாரமில்லை யாதலால் நாமசெய்தசெயல் அறிவுடையசெயலின்பாற்படாது என்று கருத்துரைப்பினும் அமையும். ஐராவதம் புண்டரீகம் வாமநம் குமுதம் அஞ்சநம் புஷ்பதந்தம் சார்வபௌமம் சுப்ரதீகம் என்ற எட்டுயானைகளும் கிழக்குமுதலாக முறையே எட்டுத்திக்குக்களிலும் கீழ்நின்று பூமியைத் தாங்குதலால், திக்கஜ மென்று பெயர்பெறும். அவ்வடமொழிதொடர், திக்கய மென்று விகாரப்பட்டது. இராவணன் திக்குவிசயஞ்செய்தகாலத்தில் திக்கஜங்களை யெதிர்த்து அவற்றின் தந்தங்களை யொடித்து அவற்றை வலிதொலைத்து வென்றனனென அறிக. த்ரிபுரம் - வடமொழிதொடர்; பொன் வெள்ளி இரும்பு என்னும் இவற்றாலாகிய மதிலையுடைய மூன்றுபட்டணம். முக்கண்ணன் - இயற்கைக்கண் இரண்டும் நெற்றிக்கண் ஒன்று மாகிய மூன்றுகண்களை யுடையவன்.

உலகு ஒருமூன்று - சுவர்க்கம் பூமி பாதாளம் என்பன. இராவணன் திக்குவிசயகாலத்தில் மூவுலகத்துமுள்ள அரசரனைவரையும் வென்றதனாலும், திரிலோகாதிபதியான தேவேந்திரனை வென்றிட்டதனாலும், உலகமூன்றையும் வென்றவனாவன். "திகிண்மா வெலாந் தொலைத்து வெளிமலையெடுத்த துலகமூன்றுங் காவலான்" என்று கீழ் ஆரணியகாண்டத்திற் சூர்ப்பணகை கூறியதுங் காண்க. அகந்ன் - வடசொற் சிதைவு. 'ஆற்றல் காண்டி' என்பது, பரீக்ஷைபார்க்கிறாயென்று பொருள்பட்டு, ஒருசொல்தன்மையுற்று, 'குரங்கினை' என்ற செயப்படுபொருளுக்கு முடிக்குஞ் சொல்லாய் நின்றது: ஆடவிட்டுநாடகம்பார்ப்பதுபோல இக்குரங்கை அது மனம்போன படியெல்லாம் பல செயல்கள் செய்யும்படிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனை யென்பதாம். பி ம்:—[1]திகினைவெனறுமேனாள். [2]முக்கணான்வானவர்கோ.

கஉ.—இந்திரசித்து இராவணனுக்கு உறுதிகூறிப் போர்க்குச்செல்லுதல்.

ஆயினு மைய நொய்தி னாண்டொழிற் குரங்கை யானே
யேயெனு மளவிற பற்றித தருகுவெ னிடரென் றொன்று
நீயினி யுழக்கற பாலை யலலை[1]நீ டிருதத் தென்னா
போயின னமரர் கோவைப் புகழொடு கொண்டு போந்தான்.

(இ - ள்.) 'ஆயினும் - ஆனாலும், ஐய - ஐயனே! [தந்தையே!], ஆண்தொழில் குரங்கை - ஆண்மைதொழிலைசெய்கிற இக்குரங்கை, யானே - நானே (சென்று), ஏ எனும் அளவில - அதிகசிகிரதத்தில், நொய்தின் பற்றி தருகுவென் - எளிதிற் பிடித்துக் கொடுப்பேன்; இடர் என்று ஒன்றும் நீ இனி உழக்கறபாலை அல்லை - இனிமேல் நீ துன்பம் ஒருசிறிதையும் அனுபவித்துவருந்தத் தக்கவனல்லை; நீடு இருத்தி-நீண்டகாலம் இனிது வாழ்ந்திருப்பாயாக;' எனனா - என்று (இராவணனைநோக்கி உறுதிமொழி கூறிவிட்டு), போயினன் - (அநுமானைநோக்கிச்) சென்றான். (யாவனெனில்),—அமரர் கோவை புகழொடு கொண்டு போந்தான் - தேவராசனை

இந்திரனை அவனதுகீர்த்தியுட்பட அடக்கிக கட்டிக்கொண்டு வந்தவனான இந்திரசித்து; (எ - று)

நொய்தின் - சிரமமின்றி, அலக்ஷியமாக. ஆண்டொழில் - பராக்கிரமச் செயல். உழக்கற்பாலை - உழத்தலாகிய பான்மையுடையாய். உழக்கல் என்பதை உழக்கு என்றவினைப்பகுதியின தொழிற்பெயரெனக் கொண்டு, துன்பமென்ற ஒன்றினாலும் கலங்கத்தக்காயல்லை யென்று பொருள்கொள்ளுதலுமொன்று; உழக்குதல் - கலக்கம். நீடு இருத்தி—நீடூழிவாழ்க; மிக்க அன்பினால் மைந்தன் தந்தைக்கு வாழ்த்துக் கூறினன். 'நீடு' என்ற வினைப் பகுதி தானே பெயர்த்தன்மைப்பட்டு நெடுங்காலத்தை யுணர்த்திற்று. அமரர்கோவைக் கொண்டு புகழொடு போந்தான் என்று இயைத்து, தேவேந்திரனைப்பற்றிக்கொண்டு அவ்வெற்றியினாலாகிய கீர்த்தியைப் பெற்று மீண்டு வந்தவனென்று உரைப்பினும் அமையும். போந்தான்-பெயர். பி-ம்:—[1]ஈண்டு.

இவ்வேடுகளிலிருந்து பலபாடல்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

* 1. பத்தியிற் றேர்கள் செலலப் பவளக்கா றகுடைகள் சுற்ற
[1]முத்துநீர்ச் சிவிகை தன்னை முகிலெனத் தழைகள் சுற்ற
மத்தவெங் கரிக ளெல்லா மழையென [2]விருண்டு தோன்றத்
தத்திய பரிக [3]டன்னிற் சாமரை பதைப்ப வந்தான்.

பி - ம்:—[1]முதலினில். [2]மருண்டு [3]தமமிம்.

2. சங்குகள் முழங்கப் [1]பேரி கடையுகத் திடியின் வீழ
வெங்குரா றிமிலை யோடு கடுவையின் மரங்கள் வீங்கத்
தொங்கலின் குழாமுந் தூளி வெள்ளமும் விசும்பைத் தூர்ப்பத்
திங்களிற குடைகள் பூப்பத் [2]திசைகளிற் றிரிய வந்தான்.

பி - ம்:—[1]பேரிசகடைகளிடியில். [2]திசைககளிறிரிய.

3. தீயினிற் [1]சேர வைதத சினனங்கள் வேறு வேறு
வாயினி [2]லூறு வீரா வழியிடம் பெறாது செல்லக்
கா[3]யெரி கின்ற கண்ணி னரககாகள் கடுத்துச் செல்ல
நாயகன் றூதன் றானு நோக்கின னகையுங் கொண்டான்.

பி - ம்.—[1]செலல. [2]ஊத. [3]பொனிறமேன் றுங்கண்ணி.

4 செம்பொனிற் றேரிற் பாங்கா செங்குடைத் தொங்கற காடு
மும்பரிற் கொடிய ரொத்த வொருபிடி நுசுப்பிற் செவ்வாய்
வம்பவிழ் குழலி னார்கள் சாமரை [1]வகைந்து வீசக்
[2]கொம்பொடுங் கோலி தாரை குடர்பறித் தூத வந்தான்.

பி - ம்:—[1]பதைத்து. [2]கொம்பொடுகோடு.

---

* இப்பாடல்கள் பயில வழங்காமையின் இவைகட்கு உரையெழுதப்படவில்லை.

5. தொங்கலின் காடு நூறு யிர[1]மென்ப தொகைய வாகிப்
பங்கமில் பணிலம் பத்துப் பத்துநூ றுகு மென்பர்
செங்குடை வெண்மை [2]நீலம் பச்சையோ டினைய வெல்லாம்
பொங்கொளி மன்னு கோடிப் புரந்தரா தித்தர் சுற்ற.

பி - ம்:—[1]என்பாதோகைப்பிசசம். [2]நீலப்.

6. தீயெழு பொன்னின் சின்னம் [1]சின்னவீ மூரக்க வீரர்
வாய்களி றாத [2]பண்ணு மானமு மறுகிச் சேர்ந்தா
ராயது முடிவு காலங் [3]கிளர்ந்தன னரக்க னென்று
வாய்களிற பேசி வாணோர் மணடினர் [4]மலைத லேக்கி.

பி - ம்:—[1]சின்னம்வீழாககா. [2]மண்ணும்வானமும். [3]கிளர்ந்தன ரரக்கர். [4]மலைகன்.

7. அரந்தரு மயிலிற் காடு மழலுமிழ் குருதக் காடுஞ்
சாந்தரு சிலையிற் காடுந் தானவர் கடலு மின்ன
நிரநதாஞ் சங்கு தாரை நிலமகள் முதுகை யாற்றாள்
புரந்தர சித்து வந்தா னென்றன பொன்னின் சின்னம்.

8. புலித்தோலிற் பலகை யெலலாம் [1]பொருகடற் புரவி யென்னக்
கலித்தோடி யுப்ப ரோடு மோட்டின கால னஞ்ச
வொலிதகாழி யுவாவுற்றென்ன வும்பர்தோ ரணத்தைமுட்ட
வலித்தாதிண் சிலைக ளெலலா மண்டின சரத்தின் மாரி.

பி - ம் —[1]போருகட்புரவி தென்ன.

9. கடுவையின் மரங்க ளோடுஞ் சகடைக டிமிலை தாக்க
வுடுவின மான வெலலா முதிர்ந்தன பூவி தென்ன
அடுபுலி யனைய வீர ரமரினி லாரபடு மானை
நெடுமணி [1]முழக்கு மோத மண்ணக நிறைந்த தன்றே.

பி - ம்:—[1]முழககுமோதை.

வேறு

10 எண்பதி னாயிர கோடி யிருஞ்சிலை
புண்பயில் வெஞ்சரம் பூட்டின ரொன்றோ
விண்புகு தோரண மெல்லை [1]மறந்த
மண் [2]புகு கீர்த்தியன் மாருதி வாழ்ந்தான்.

பி - ம்:—[1]மறைநதது. [2]புகழ்.

11. [1]பாரெழு வாட்படை [2]பத்தினில வெள்ளம்
ஆறிரு கோடியின் வேலி னமைந்தா
கூறிடு வெள்ள மிடைந்தது குருதம
வீறுடை மாருதி [3]மேல்வரு சேனை.

பி - ம்:—[1]மாறெழு: [2]பத்திரு. [3]மேலின்.

12. பந்தென வாடிய பாய்பரி யெலலாஞ்
சிந்தையின் முந்தின தேர்கள் செறிந்த
அந்தியின் மேனிய வானைக ளெல்லாம்
வந்தன [1]வண்ணனை யத்துகள் மாய்ப்ப

பி - ம்:—[1]மணனையடித.

13. சங்குகள் தாரைகள் சச்சரி சின்னம
எங்கு மியம்பின பேரி யிடித்த
வெகுகுர லிற்பறை விண்ணி னிறைந்த
பொங்கி யரககர் பொருக்கென வந்தார்.

14. பார்த்தன பார்த்தன பாய்பரி யெங்குந்
தேர்த்திரள் தோத்திர னெத்திசை யெங்குங்
கார்த்திரண் மேனியி னிற்கய மெங்கு
[1]மார்த்தன மண்டுமி ரக்கர்க ளெங்கும்.

பி - ம்:—[1]ஆர்த்தனர்.

15. துகம்படு தேரவை நூற்றிரு கோடி
யுகம்பிறி தொன்றுவந் துற்றது வென்ன
வகமபடு வாயி லரக்காக ளென்ன
வகம்படி வீரர்க ளையிரு வெள்ளம்.

16. வெள்ளமோ நூறுடை விற்படை யென்பர்
துள்ளிய வாட்படை சொல்லிட வொண்ணா
[1]பொள்ள றருங்கரப பூட்கையு மஃதே
கள்ள வரக்கனைச சுறறினர் காப்பார்.

பி - ம்:—[1]பொள்ளல்கருங்கரிப்.

17. ஆய பெரும்படை செலவது கண்டு
மாய மிகுந்திறல் வானர வீரன
நாயக னைத்திசை நோக்கி வணங்கி
மேயதொ ரின்பம் விளங்கிட நின்றான்.

18. [1]ஆழி யினைய வரக்கர் பெருமபடை
யேழுல கும்[2]பெரு மிடலென வீண்டிச்
சூழ மெழுந்தனர் தோன்றினர் தம்மைக்
[3]கோழிய னேகுவக் கூவிடு கின்றான்.

பி - ம்:—[1]ஆழியனனை. [2]இடமில்லென. [3]கோழியினுக்கிய.

19. மாருதி [1]கூவி மகிழ்ந்தன னாகிக்
கூரிய புந்தியிற கோனைக் குறிக்கொண்டு
[2]காரென மேனி யரக்கர்கள் காணா
வாரிக ளூடு மடுததன வாளி.

பி - ம்:—[1]கூறி. [2]காரணமேனி.

20. துளி மிடைந்[1]துருத் தோன்றல வாகி
[2]யாளியி னானை யறிந்தில னாகிச்
[3]சூழுற நோக்கினன் சோதனை பெற்றான்
[4]கோளை யமர்ந்தனன் கூறுதல் செய்தான்.

பி - ம்:—[1]உரு. [2]யாளியனானை. [3]சூழுற. [4]கோளை.

21. இந்திரன் முன்பு மிடுநிரள் சோதிச்
சந்திர வெண்குடை தானெதிர் கண்டா
னந்தமில் கேள்விய னானைகள் காணாச
சிந்தை யுவந்து சிரித்துட னின்றான்.

22. சிந்தை யுவந்தவ [1]னாகி யரக்கன
முந்தி யெழுந்து [2]முனிந்தமை நோகாகி
வெந்திற லாய்விரை வின்வரு கென்றா
[3]னிந்திர சித்தவ னென்ப திசைத்தான்.

பி - ம்:—[1]ஆகியதீயோன். [2]அழைததமை. [3]இந்திரசித்துவன்.

23. என்றவன் மாற்ற மியம்புதல் கேட்டு
[1]குன்ற மெனும்புய வானர வீரன்
நனறிது நன்றிது வென்ன நயந்தான்
சென்றனை வுறற தாக்கர்கள் சேனை.

பி - ம்:—[1]வென்றிமிகுந்திறள்.

24. ஊழி யெழுந்துல கத்தை யொடுக்க
வாழியல் தானை யரக்க ரடங்க
வேழுல கும்மிட மிலலையெ னும்படி
யாழி கிளர்ந்தன வென்ன [1]வழைத்தான்.

பி - ம்:—[1]வளைத்தான்.

வேறு.

25. சந்திர னருக்கனொடு தாரகை யினங்கள்
சிந்திட வெழுந்த திசைமீண்ட வெதிர்செவ்வே
வந்தவிவ் வரக்கர்குழு வண்மையின வென்றா
லிந்திரனை யன்றியுல கேழும்வெலு மென்றான்.

கஉ.—இந்திரசித்தை வந்துஅடுத்த சேனையின் பரப்பு.

உடைந்தவ லிருணோற் றுப்ப லுருககொடக் கதிர்க்குழாங்கண்
மிடைந்தன மிலைச்சி யாங்கு மெயயணி பலவு மின்னக்
குடைந்துவெம் பகைவரூனறோய் கொற்றப்போர் வாள்வில் வீச
வடைந்தகா ரரக்கர் தானை யகலிட மிடமின் றென்ன.

(இ - ள்) உடைந்த - (முன்பு சூரியனுக்குத) தோற்றுப்போன, வல் இருள் - வலிய இருட்டு, தோற்று-(அசசூரியனைத் தான்வெல்லுதற்பொருட்

ித்) தவஞ்செய்து (அத்தவத்தின்பயனாக), பல் உரு கொடு - பலரூபங்களைக் கொண்டு, அகத்தீர் குழாங்கள் மிடைந்தன மிலைசசி ஆங்கு - அந்தச் சூரியனது கிரணங்களின கூட்டங்களை நெருக்க முள்ளனவாக (தாமரை வர்ந்து) அணிந்துகொண்டாறபோல, மெய் அணி பலவும் மின்ன - (இருள் நிறமான) தமஉடமபில் தரித்த ஆபரணங்கள பலவும பிரகாசிக்கவும,—குடைந்து வெம பகைவர் ஊன் தோய் கொறறம போர வாள் - அழுந்திக் கொடியபகைவருடைய தசையிற பாயு மியல்புள்ளனவும் வெற்றியைத்தரும போரைச் செய்யவல்லனவுமான வாளாயுதங்கள்; வில் வீச - ஒளியைவீசவும,—கார் அரக்கர் தானை - கருநிறமுள்ள இராக்கதர்கள்கூடிய சேனைகள், அகல்இடம் இடமஇன்று என்ன அடைந்த - விசாலமான பூமியில் இடம் போதாதெனறு சொல்லுமபடி (இந்திரசித்தை) அடுத்துவந்து கூடின; (எ-று)

இராக்கதர்களுடைய கருநிறமுள்ள உடம்புகளில் அணியப்பட்ட பல வகையாபரணங்கள நனகு விளங்குவதை, முனபு சூரியனுக்குத் தோற்ற வலிய இருள் பின்பு தான அசசூரியனைவெல்லத் தவஞ்செயது பலவடிவங்கொண்டு வென்று அசசூரியனொளிக்கறறைக்கேத தமமேல் அடாததியாகத் தரித்திருந்தாறபோலு மென வருணித்தார்; தற்குறிப்பேற்றவணி. ஆங்கு - உவமவுருபு. நான்காமடி - உயர்வுநவிற்சியணி. இச்செய்யுள் பலபிரதிகளிலில்லை. (கஙு)

கச.— பெரிய இராக்கதசேனை சூழ அதன் நடுவிலே இந்திரசித்து நின்றநிலை.

ஆழிபந் தேரு மாவு [1]மரக்கரு முருக்குஞ் செங்கட்
சூழிவெங் [2]கோப மாவுந் [3]துவன்றிய நிருதர் சேனை
யூழிவெங் கடலிற் சுற்ற [4]வொருதனி நடுவ ணின்ற
பாழிமா மேரு வொத்தான் வீரத்தின் [5]பான்மை தீர்ப்பான்.

(இ - ள்.) ஆழி அம தேரும் - சக்கரங்களினும் சிறந்த அழகிய தேர்களும், மாவும் - குதிரைகளும், அரக்கரும்-காலாள்களாகிய இராக்கதர்களும், உருக்கும் செம் கணசூழி வெம கோபம் மாவும் - கோபித்து நோக்குகிற சிவந்தகண்களை யுடையனவும் முகபடாததை யணிந்தனவும் கொடிய கோபமுள்ளனவுமான யானைகளுமாக, துவன்றிய - கூடிநிறைந்த, நிருதர் சேனை- இராக்கதசேனைகள், ஊழி வெம் கடலின் சுறற - பிரளயகாலததுக் கொதித்துப்பொங்குகிற கடல்போலத் தனது சுறறிலும் வந்துநிற்க, (ஒருதனி நடுவண் நின்ற)-ஒப்பற்ற தனியனாய் அவ்வரக்கர் சேனைநடுவிலே நின்ற, வீரத்தின் பான்மை தீர்ப்பான் - வீரத்தன்மைக்கு உரிய கடமையைச் செய்து தீர்க்கப்புறப்பட்டவனான இந்திரசித்து, ஒருதனி நடுவண நின்ற - அபபிரளயப்பெருங்கடலின் நடுவில் தன்னந்தனியே நின்ற, பாழி மா மேரு - வலிமையையுடைய மகாமேருகிரியை, ஒத்தான் - போன்றான்; (எ - று.)

உவமையணி; சேனையின் மிககபரபபையும், ஆரவாரத்தையும், அணியணியாதவந்து சூழ்தலையும், அசசந்தருந் தோற்றத்தையும், இந்

திரசித்தின் வலிமையையும், பருத்து ஓங்கிய வடிவின் காட்சியையும் விளக்கும். 'உருக்குஞ்செங்கட்சூழி வெகோபமா' எனவே, யானையாயிற்று. உருக்கும் என்ற தெரிநிலைப்பெயரெச்சத்தில், உரு - பகுதி. முருக்கும் என்று எடுத்து, பகையழிக்கும் குறிப்புத் தோன்றுகிற என உரைப்பினுமாம்; முருக்கு - முருகு என்பதன் மெலிவலியான பிறவினை. முருக்குதல் - அழிதல். பழிகருப்பழிவாங்கிப் பகையழித்தலாகிய வீரச்செயலைச் செய்பவனாய்த் தன்தம்பியைக் கொன்றவனை வலியடக்கப் பிரயாணப்பட்டவனென்பார், 'வீரத்தின்பான்மைதீர்ப்பான்' என்றார்; பிறரது வீரத்தன்மையை வென்றொழிப்பவனென்றும் பொருள் கொள்ளலாம். சூழி - முகபடாம். பி - ம்:—[1]அரக்கினையுருக்கும், அரக்கரை முறுக்கும். [2]கோலமா. [3]துன்னிய. [4]ஓதலீர்கடுவணின்ற. [5]பன்மை.

கரு.—இந்திரசித்து அனுமானுடைய திறமையைக் கொண்டாடுதல்.

சென்றன னென்ப மன்னோ திசைகளோ டுலக மெல்லாம்
[1]வென்றவ னிவனென் றாலும் வீரத்தே நின்ற வீர
னன்றது கண்ட வாழி யனுமனை யமரி னாற்ற
னன்றென வுவகை கொண்டான் யாவரு [6]நடுக்க முற்றார்.

(இ - ள்.) சென்றனன் - (இந்திரசித்து இவ்வாறு புறப்பட்டுப் போர்க்குச்) சென்றான்; வீரதேதே நின்ற வீரன் - வீரத்தன்மையிலே நிலைபெற்றுள்ள மகாவீரனான அந்த இந்திரசித்து, திசைகளோடு உலகம் எல்லாம் வென்றவன் இவன் என்றாலும் - எட்டுதிசையெல்லையு முட்பட உலகங்களையெல்லாம் தான் வென்றவனாயினும், அன்று அதுகண்ட ஆழி அனுமனை- அந்நாளில் அவ்வாறு போரசெய்து நின்ற ஆழ்ந்த கருத்துடையனான அநுமானைக் குறித்து, அமரின் ஆற்றல் நன்று என உவகை கொண்டான் - '(இவனது) போர்வல்லமை நன்றாயுள்ளது' என்று மகிழ்ச்சிகொண்டான்; யாவரும் - (அதுகண்ட) எல்லாரும், நடுக்கம் உற்றார் - (இது என்னோ வென்று) அச்சமுற்றார்கள்; (எ - று.)

வீராசெயலின் அருமைபெருமைகளையறிந்து பாராட்டவல்லவர் வீரரேயாதலால், வீரதேதேநின்ற வீரனான இந்திரசித்து அநுமனது அமரினாற்றலை நன்றென்று கொண்டாடினனென்க. 'வீரத்தே நின்ற வீரன்' என்ற விசேஷ்யம ஒருகருதத்தின் குறிப்பை யுட்கொண்டதாகுதலால், கருத்துடையடைகொளியணியாம். "முற்பகற்கண்டான் பிறன்கேடு" என்றவிடத்துப் போல, 'அதுகண்ட' என்றவிடத்துகாணுதல்-செய்தலென்னும் பொருளில் வந்தது. ஆழி என்ற பெயரில், இ கருததாப்பொருள் விகுதி. ஆழி அனுமன்- (கம்பீரத்தன்மையிற்) கடல்போன்ற அநுமான்எனினும், கடல்கடந்தவந்த அநுமான் எனினும் அமையும். வாழி என்றுஎடுத்தது, அசையென்றலு மொன்று. பி - ம்:—[1]வென்றனனென்றபோதும் விருந்தெனநின்றவீரன். [6]நடுக்கங் கொண்டார்.

கசு.—இதுவும், அடுத்தகவியும் - இந்திரசித்து சிந்தைகொண்டதை யுணர்த்தும்.

இலைகுலாம் [1]பூணி னுனு மிரும்பிணக் குருதி [2]யீரத்
தலகில வெம் படைக டெற்றி யளவிடற் கரிய வாகி
மலைகளுங் கடலும் யாறுங் கானமும் பெற்று மற்றோ
ருலகமே யொத்த தம்மா போர்ப்பெருங் களமென் றுன்னு.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) இலை குலாம் பூணினனும் - இலைவடிவமாகத் தொழில் செய்யப்பட்டு விளங்குகிற ஆபரணங்களை யுடையவனான இந்திரசித்தும்,—'இரும் பிணம் குருதி ஈரத்து - மிகுதியான பிணங்களையுடைய இரத்தவெள்ளத்தில், அலகு இல் வெம் படைகள் தெற்றி - அளவில்லாத கொடிய ஆயுதங்கள் அலைக்கப்பெறுதலால், போர் பெருங்களம் - பெரிய யுத்தகளமானது, அளவு இடற்கு அரிய ஆகி மலைகளும் கடலும் யாறும் கானமும் பெற்று - அளவு செய்யக் கூடாதனவாக [மிகப்பலவாக] மலைகளையும் கடல்களையும் நதிகளையும் காடுகளையும் ஒருங்கு பெற்று, மற்றோர் உலகமே ஒத்தது - வேறோருலகம் போலத் தோன்றுகின்றதே; அம்மா - ஆச்சரியம்!' என்று உன்னு - என்று எண்ணி, (எ - று.)—'நெஞ்சில் விம்மல்கொண்டான்' என, அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

பிணங்களை மலைகளாகவும், இரத்தவெள்ளத்தைக் கடல்களும் நதிகளுமாகவும், ஆயுதங்களைக் காடாகவும் கருதுக. அம்மா - வியப்பிடைச்சொல். 'பூணினனும்' என்ற உம்மை - கதைத்தொடர்பு பற்றியதாதலால், இறந்தது தழுவிய எச்சத்தின் பாற்படும்; உயர்வுசிறப்பாகக் கொண்டு, எதற்குங் கலங்காத நெஞ்சுறுதியுள்ளவனும் மனதகிற் சிறிது ஏக்கங்கொண்டான் என்றலு மொன்று. பி - ம்:—[1]பூணினன்றன், பூணினனவ். [2]ஏற்ற, அற்ற. (கசு)

கஎ. வெப்படை கில்லா நெஞ்சிற் சிறியதோர் விம்மல் கொண்டா, னப்படை வேலை யனன பெருமைய ராற்ற லோடு,
[1]மொப்படை கிலலா ரெல்லா முலந்தனர் குரங்கு மொன்றே,
யெப்படை கொண்டு வெலவ திராமன்வந் தெதிர்கக னென்றான்.

(இ - ள்.) வெப்பு அடைகில்லா நெஞ்சில் - (இதுவரையிலும் தமக்கு யாதொரு துயரும் நேர்ந்ததில்லை யாதலால்) தவிப்படையாததான தன் மனதிலே, சிறியது ஓர் விம்மல் கொண்டான் - சிறிது ஏக்கங்கொண்டான்; (மற்றும்), 'அப்பு அடை வேலை அன்ன பெருமையா - நீர் நிறைந்த கடல் போன்ற [அளவிடற்கு அரிய] பெருமையுடையவர்களும், ஆற்றலோடும் ஒப்பு அடைகிலலா - தமது வல்லமைக்கு உவமை பெறாதவர்களும் ஆகிய [2]இராக்கதவீரர்கள், எல்லாம் - எல்லாரும், உலந்தனர் - அழிந்தார்கள்; குரங்கு ஒன்றே - (இவ்வளவுபேரையும் அழித்திட்ட) வானரமோ ஒன்றுதான்;

இராமன் வந்து எதிர்கலின - (இனி) இராமன் வந்து எதிர்ததால், எ படை கொண்டு வெல்வது - (அவனை நாம்) எந்தசேனையினுதவி கொணடு சயிப்பது?' என்றான் என்னும் சிந்தை கொணடான், (இந்திரசித்து); (எ - று.)—பி - ம்:—[1]ஒப்படைக் கல்லா. (கஎ)

கஅ —இந்திரசித்து இராக்கதவீரர்கள் இறந்துகிடந்தலை நோக்கி ரோஷங்கொள்ளுதல்.

[1]கண்ணினு ருயிரே யொப்பார் கைப்படைக் கலத்திற் காப்பா
ரெண்ணலாந் தகைமை யிலலா [2]ரிறந்திடைக் கிடந்தார் தம்மை
மண்ணுளே நோக்கி நின்று வாயமடித் [3]துருத்து மாயாப்
புண்ணுளேகோலிட்டன்ன மானத்தாற் புழுங்குகின்றான்.

(இ - ள்.) கணணினுர் - (சிறந்த அநுகமாகுதலால் தமக்குக்) கண் போன்றவர்களும், உயிரே ஒப்பா - (இன்றியமையாமையாலும் அன்புக்கு இடமாதலாலும் தமககு) உயிரையே போல்பவர்களும், கைபடைக்கலத்தின் காப்பார் - தாம்தாம் கைதோந்துள்ள ஆயுதகளைககொண்டு (பொருது பகையழிததுத் தம்மவாகளைக) காபபவாகளும், எண்ணல் ஆம் தகைமை இல்லார் - எண்ணுதறகு உரிய அளவு இல்லாதவர்களும் [அளவிறந்தவர்களும்] ஆய், இறந்து இடை கிடந்தார் தம்மை - (அநுமானால்) உயிரிழந்து அவ்விடதிலே விழுந்துகிடந்த இராக்கதவீராகளை, மண்ணுளே நோக்கி - அந்தயுத்த பூமியிலே பாரதது, நின்று - (அநுகநகே) நின்று, வாய் மடிதது உருத்து - உதட்டை மடிததுக கடித்துககொணடு கோபிதது, மாயா புண்ணுளே கோல் இட்டு அன்ன மானததால் புழுங்குகின்றான் - ஆறாத புண்ணிலே கோலை யிட்டுக் குதிறுபோன்ற ரோஷததாற கொதிக்கின்றவனுனான், (இந்திரசிதது).

'கைப்படைகசலததின் காப்பார்' என்பதற்கு - கையிலுள்ள ஆயுதம் போலப் பாதுகாப்பவ ரென்று உரைப்பாரு முளர். தம்தமகைவசத்திலுள்ள ஆயுததைப் பாதுகாப்பதுபோலத தம்மவாகளை யுதததகளத்திலே எளிதிற் பாதுகாப்பவரென்று உரைப்பர் ஒருசாரார். 'எண்ணலாந்தகைமையில்லா' என்பது - நினைததற்குமியலாத பெருமையுடையவ ரென்றம பொருள்படும். அநுகன மிறந்தவர்களைப் பார்க்கப் பார்க்க மனஸ்தாபம் மிகுதலால், அதற்குப் புண்ணிலே கோலிட்டதனுலாகும் வருத்ததைஉவமைகூறினுர். இடைதான்போகின்ற வழியிடையே எனறபடி. மாநம் - அபிமாநம்: கடசொல். இட்டு - இட்டால் என்ற எசசததின் திரிபு; 'இட்டதன்ன' எனபது 'இட்டன்ன' எனத தொகக தென்றலு மொன்று. பி - ம்:—[1]கண்ணனுர். [2]இறந்தெதிர். [3]உருத்தான். (கஅ)

ககூ.—இந்திரசித்து தன்னை வெறுத்துக்கொள்ளுதல்.

கானிடை யத்தைக குற்ற குறறமுங் கரனுர் பாடும்
யானுடை யெம்பி வீந்த விடுக்கணும் பிறவு மெலலா
மானிட ரிருவ ராலும் வானர மொன்றி னுலு
[1]மானிடத் துளவென் வீர மழகிற்றே யம்ம வென்றான்.

(இ - ள்.) கானிடை - காட்டிலே [தண்டகாரணியத்திலே] அத்தைக்கு உற்ற - (எனது) அத்தையான சூர்ப்பணகைக்கு நேர்ந்த, குற்றமும் - உறுப்புகுறையாகிய பரிபவமும், கானூர் பாடும் - கரன் இறந்ததும, யான் உடை எம்பி வீந்த இடுகணும் - யான உடைமையாகப் பாராட்டிவந்த எனது தம்பியான அட்சகுமாரன் இறந்ததனாலாகிய துன்பமும், பிறவும் - மற்றவைகளும, எல்லாம் - ஆகிய யாவும, மானிடா இருவராலும் வாநரம் ஒன்றினாலும் ஆனிடத்து - இரண்டுமெனிதர்களாலும ஒரு குரங்கினாலுமே உண்டாயினவென்றால், என் உள வீரம் அழகிறதே - (இராககதராசகுமாரனான) என்னிடத்து உள்ள பராகிரமம் அழகுடையதே! அம்ம - ஆசசரியம்!! என்றான - என்றும் எண்ணினான், (இந்திரசித்து); (எ - று.)

அத்தை - தந்தையுடன் பிறந்தவள்; இங்கு, இராவணன் தங்கையான சூர்ப்பணகை. குற்றம் - அங்கபங்கம். கரன் இராவணனுக்குத் தம்பிமுறையாகின்றவன்; பூர்விகராக்ஷசிரேஷ்டனான சுமாலியின மகனும், இராவணன் தாயான கேகசியின் தங்கையும், இராவணனது தந்தையான விசிரவமுனிவரையே கணவனாக அடைந்தவளும், இவைகுக்காட்டிய இருமுறையினாலும இராவணனுக்குச் சிறிய தாயுமாகிய குமபீநசியின் குமாரன்; தண்டகாரணியத்திலே சூர்பபணகை வசிபபதற்கென்று இராவணன் வரையறுத்த ஜநஸ்தாநமென்னு மிராச்சியத்தில் அவளுக்குப் பாதுகாவலாகவும், அவளிட்டகட்டளைப்படி நடப்பதற்காகவுமஇராவணனால் நியமிதது வைககப்பட்ட பெரிய இராக்கதசேனைக்கு முதல் தலைவன். கானூர் என்ற பெயரில், 'ஆர்' என்ற பலர்பால்விகுதி உயாத்தற் பொருளில் வந்தது. பாடு - படுதல்; படுஎன்ற முதனிலை திரிந்த தொழிற்பெயா. 'யானுடை - என்னுடைய, எமபி-தம்பி' என்று உரைத்தலுமாம்.

'பிற' என்றது - தாடகைவதை முதலாக மாரீசன் வதை இடையாகப் பஞ்சசேனாபதிகள் வதைகளடையாக நேர்ந்த பல இராக்கதவததத்தையும் அசோகவன பங்கததையும் குறிக்கும் அத்தைக்கு உற்ற குறறம் மானிடரிருவரில் இலக்குமணனாலும, கானூர் பாடு இராமனாலும், எமபி வீந்த இடுகண வாநரதத்தினாலும ஆயின. 'பிற' என்றவற்றிறகுக கருததா ஏற்றபடி கண்டு கொள்க. 'ஆனவிடத்து' என்பது, 'ஆனிடத்து' எனத் தொககது. 'அழகிற்று' என்றது - பிறகுறிபபுவகையாகிய எதிர்மறையிலக்கணையால், அழகுடையதன்று என்ற கருத்தைக கொண்டது. தேற்றேகாரமும், அம்ம வென்ற வியப்பிடைசசொல்லும், இநகு இகழ்ச்சிககுறிப்பினவே. பி - ம்:—[1]யானிடைத்துளவென, யானிடைததுளவே. (கக)

௨௦ —இந்திரசித்து தான்செல்லும் போர்க்களத்திற் பலபிணங்களினிடையே தன்தம்பியினுடம்பைக்காணுதல்.

நீப்புண்ட [1]வுயிர வாகி நெருப்புண்ட நிறத்திற் றோன்றி
யீர்ப்புண்டற் கரிய வாய பிணக்குவ [2]டிடறச் செல்வான்

நேய்ப்புண்ட தம்பி யாக்கை சிவப்புண்ட கண்க டீயிற்
காய்ப்புண்ட செம்பிற்[3]றோன்றக் கறுப்புண்ட மனத்தன் கண்டான்.

(இ - ள்.) நீப்புண்ட உயிர ஆகி - நீங்குதலண்டைந்த உயிரையுடையவை யாய், நெருப்பு உண்ட நிறத்தில் தோன்றி - நெருப்புக்கொண்ட நிறத்தை யுடையவையாய்க காணப்பட்டு [இரத்தப்பெருகினுற் செந்நிறமுள்ளவை யாய்], ஈர்ப்பு உண்டற்கு அரிய ஆய - (வடிவத்தின் பருமையாலும் கனத்தி னாலும இரத்தவெள்ளதினால் இழுக்கப்படுதற்குக் கூடாதனவான, பிணம் குவடு - பிணங்களாகிய மலைகள், இடற - (தனது தேர்ச்சக்கரங்களில்) தட் டிததடுகக, செல்வான் - (போாககளவழியே) செல்பவனான இந்திரசித்து,— தேயப்பு உண்ட தமபி யாககை - தேயககப்பட்டுள்ள தன்தம்பியான அட்ச னது (உயிரீதத) உடம்பை, சிவப்பு உண்ட கண்கள் தீயில் காய்ப்பு உண்ட செமபின தோன்ற-(கோபததினாற்) செந்நிறகொண்ட தன்கண்கள் நெருப் பிற்காய்சசப்பட்ட செம்புபோல விளங்க, கறுப்பு உண்ட மனத்தன் கண் டான் - கோபகொண்ட மனததையுடையவனாய் நோககினான்; (எ - று.)

'பிணககுவ டிடறசசெல்வான்' என்றதனால், தேர் இனிது செல்லுதற் கியலாதபடி பிணககுவை மிககிருந்த தென்பது தோன்றும். 'பிணக்குவடு' என்றது, உருவகம். 'சிவபபுண்டகணகள் தீயிற்காய்ப்புண்டசெம்பின்தோன்ற' என்றது, உவமை. 'உண்ட' என்ற சொல் ஒருபொருளிலேயே பலமுறை வந்தது, சொற்பொருட்பின்வருநிலையணி. பி-ம்.—[1]உதிரவாரிநெடுந்திரைப் புணரிதோன்ற. [2]இடறிச. [3]தோன்றுங. (௨0)

உக.—அதுகண்ட இந்திரசித்தின் சோகமும் கோபமும்.

தாருகன் குருதி யன்ன குருதியிற் றனிமாச் சீயங்
கூருகிர் [1]கிளைத்த கொற்றக் கனகன்மெய்க் குழம்பித் தோன்றத்
தேருகக் [2]கையின் வீரச சிலையுக வயிரச செங்க
ணீருகக் குருதி சிந்த நெருப்புக வயிர்த்து நின்றான்.

(இ - ள்.) தாருகன் குருதி அன்ன குருதியில் - தாருகாசுரனுடைய இரத்தப்பெருககுப் போன்ற இரததவெள்ளததிலே, தனி மா சீயம் கூர்உகிர் கிளைதத கொற்றம கனகன் மெய் குழமபின் தோனற - ஒப்பறற பெரிய நர சிஙகமூாததியாற் கூரிய நகஙகொணடு கிணடிப்பிளந்து அளையப்பட்ட வெற் றியையுடைய இரணியாசுரனது உடம்பு (குழமபிகிடந்தது) போல (த் தன் தமபியின் உடம்பு குழமபி)க் காணப்பட,—(அதுகணட இநதிரசிதது), தோ உக - (அவவிடததே) தன்தேரும அழுந்திநிற்க, கையின் வீரம் சிலை உக - கையிலேந்திய வெறறியையததருவதான வில்லுமநழுவ, வயிரம் செம் கண நீர் உக குருதி சிந்த நெருப்பு உக வயிரதது நினறா - கோபததாற் சிவந்த தன் கண்களினின்று நீரும இரத்தமும் நெருப்பும சொரிய வைரகொணடு நின் றான்; (எ - று.)

தாரகனென்றபெயரே தாருகனென்றும் வழங்கும்; இவன், அசுரேசன் மகளாகிய மாயையென்னும் மறுபெயருள்ள சுரசையென்பவள் காசிபமகா முனிவரருளாற் பெற்ற புதல்வா மூவரில் சூரபதுமனுக்கும் சிங்கமுகனுக்கும் இளையவன்; யானைமுகத்தோடு பிறந்தவன்; தேவாதசசனுன விசுவகர்மா வினாற் பூலோகத்திலே ஜம்பூதவீபத்தில் ஏமகூடமலைக்கு அருகில் நிருமிததுக கொடுக்கப்பட்ட மாயமாபுரி என்னும் நகரத்தில அரசாண்டு கொண்டிருந்தவன். சூரபதுமன் முதலிய மூவரும சிவபிரானைக்குறித்து யாகமுந் தவமுஞ செய்து அப்பரமனருளால் அளவிறந்தவரங்களைப பெற்றுச் செருக்குற்றத தமதுகுருவாகிய சுக்கிரபகவானது தீயஉபதேசததாறகொடுமை கொண்டு பலவாயிரம் அசுராகளோடு கூடிசசென்று போரசெய்து இந்திரன் முதலிய தேவாகளனைவரையும் வென்று பற்பலவகையாக உலகததை வருததிவருமளவில், அததுன்பம் பொறுக்கலாற்றாத தேவாகள் கைலாயமடைநது பரமசிவனைத தொழுது துதிசெயது, 'தேவரீரைபபோல ஒருபுத்திரனை யுண்டாகி அக்குமாரனால் அசுராகளையழிதது எங்கள் துன்பததைப் போக்கிக் காததருளலவேண்டும்' என்றுப் பிராததிக்க, சிவபிரான் அவ்வேண்டுகோளுககு இரங்கி, குமாரக்கடவுளை யுண்டாகி அனுப்பியருள, அகக்கடவுள் வீரபாகு தேவா முதலான சிவகுமாராகளோடும மற்றும்பல லக்ஷம் வீரர்களுடனும், சகலதேவாளோடுமபோய யுததஞசெய்து அவ்வசுராக ளனைவரையு மழிததிடுமாறு பிரயாணப்பட்டுச சூரபதுமனது மகேந்திரநகரததை நோகிசசெல்லும் வழியிடையில வானுற ஓங்கிய கிரௌஞ்ச கிரியைக கண்டு தேவாகள் திகைததிடலும், நாரதமுனிவா கூறியதனால் அம்மலையில் ஒருசார் மாயமாபுரியிலே சூரபதுமனதுதமபியான தாரகன் பல அசுரசேனையுடனே இருததலை யறிந்து, முருகக்கடவுள வீரபாகுவைச சேனையோடுபோரக்கு அனுப்ப, அவ்வசுரராசனும சேனையுடன் வநது போர செய்கையில், அசுரர்கள் அழிய, யானைமுகமுளள அத்தாரகாசுரன் கடும்போர புரிந்து பூதகணங்களை யழிதது முடிவில் முன நிறகமாட்டாமல் அமமலையிலே ஒருகுகையில் ஒளிததிடுதலும், தொடாநது சென்ற வீரவாகு முதலியோா பலர் அக்குகையினுள்ளே அமமலையின் மாயையால் மயங்கினராக, அததாரகன் போாக்களம்புகுந்து பூதகணங்களை வருததித்துரதத, இசசெய்திகளை நாரதமுனிவர் சொல்லகேட்டு முருகவேள சேனையுடன்சென்று போரசெயது அவ்வசுரனது துதிக்கையையும் தநதங்களையும் துணித்து அவனது சேனைகளை யழிக்கையில், அவன் அக்கிரௌஞ்சமலையுடன்கூடிப் பலமாயைகள் புரிய, ஆறுமுகமூாத்தி வேலாயுதத்தை யெறிந்து அம்மலையையும் அவ்வசுரனையும் அழிதது. மயகககிடந்த தனது வீராகளையெல்லாம தனது திவ்யசக்தியால் எழுப்பி யழைததுக கொண்டு அப்பாற செல்பவனாயினனென்பது வரலாறு; அததாரகாசுரனது உடமபினின்று வழிந்த இரத்தப்பெருகின மிகுதியை "வீழுற்றிடலும விழு செமபுனல் வெள்ளமிக்கே, தாழுற்றபாரிற்புகுநதே புடைசாாதலுற்ற, பாழிக் கடலிற் பரிமாமுகம் பட்ட செந்தீச, சூழிக்களிற்றின் வனததினுந் தோன்று

மென்ன'', ''தந்தியின் வதனங்கொண்ட தாரகவுணன்மார்பிற், சிந்துறு குருதிசெந்நீர் திரைபொருதலைத்துவீசி, அந்தமினித்தமாகியயிற்படையட்ட குன்றில், வந்திடுபூழைபுக்கு மறிகடல்மடுத்ததன்றே'' என்ற கந்தபுராணச் செய்யுள்களாலும் காண்க. (அன்றியும், தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடல்கடைந்தபோது உண்டாகிய அமிருதத்தைத் திருமால் தேவர்கட்கே கொடுத்து அசுரர்களை மோகினிவடிவத்தால் மயக்கியமைபற்றி அசுரர்கள் கடுஞ்சினங்கொண்டு தேவர்களோடு எதிர்த்துச்செய்த போரில் முருகக்கடவுளால் அழிக்கப்பட்ட தாருகனென்ற அசுரனொருவனும், காளியாற் சங்காரஞ் செய்யப்பட்ட தாருகனென்ற அசுரனொருவனும் உண்டு.)

பொன்னிறமுள்ளவனாதல் பற்றிவந்த 'ஹிரண்யன்' என்ற பெயர்க்குப் பரியாயநாமமாக 'கனகன்' என்றார். கநகம் ஹிரண்யம் என்ற வடசொற்கள், பொன்னின்பெயர்களாம். கனகனைப் பிரஹ்ம கதை:—தனித்தனி தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமில்லாதபடி வரம்பெற்றவனும், இரணியாக்கனது உடன்பிறந்தவனுமான இரணியன் தேவாமுதலிய யாவர்க்கும் கொடுமையியற்றித் தன்னையே கடவுளாக அனைவரும் வணங்கும்படி செய்துவருகையில், அவனது மகனான பிரகலாதாழ்வான், இளமைதொடங்கி மகாவிஷ்ணுபக்தனாய், தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன்பெயர்சொல்லிக் கல்விகற்காமல், அதற்கு மாறாக நாராயணநாமஞ் சொல்லிவரவே, கடுங்கோபங்கொண்ட இரணியன் பிரகலாதனைத் தன்வழிப்படுத்துதற்குப் பலவாறு முயன்றபின், அங்ஙனும் வழிப்படாத அவனைக் கொல்லுதற்கு என்னவுபாயஞ்செய்தும் அவன் பகவானருளா லிறந்திலனாக, ஒருநாள் சாயங்காலத்தில் தந்தை மைந்தனைநோக்கி 'நீசொல்லும் நாராயணனென்பவன் எங்கு உளன்? காட்டு' என்ன, ''சாணினுமுளனோர்தண்மை யணுவினைச சதகூறிட்ட, கோணினு முளன் மாமேருக் குன்றினுமுளன் இங்கின்ற, துணினுமுளன் நீசொன்ன சொல்லினு முளன்'' என்றுசொல்ல, உடனே இரணியன் 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரிலிருந்த தூணைப் புடைக்க, அதனினின்று திருமால் அவன் பெற்ற வரங்கட்கெல்லாம விலக்காமபடி உடனே அந்த மாலைப்பொழுதிலே மனிதரூபமுஞ் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப்பிடித்து வாயிற்படியில் தன்மடிமீது வைத்துக்கொண்டு தனது திருநகங்களால் அவன்மாரைப் பிளந்து அழித்திட்டுப் பிரகலாதனுக்கு அருள்செய்தனன் என்பதாம். பி ம்:—[1]வாய்ந்த. [2]காறளாடச். [3]உயிர்தது நின்றான். (உக)

உஉ.—இந்திரசித்து அட்சனைக்குறித்துப் புலம்புதல்.

வெவவிலை யயிலவே லுந்தை வெம்மையைக் கருதி [1]நோக்கி
வவவுதல் [2]கூற்று மாற்றான் மாறுமாறு லகின் வாழ்வா

ரவ்வுல கத்து ளாரு மஞ்சுவ ரொளிக்க வையா
வெவ்வுல கத்தை யுற்ரு யெம்மைநீத் தெளிதி னெந்தாய்.

(இ - ள்.) எந்தாய் - எமது ஐயனே! வெவ் இலை அயில் வேல்-வெவ்வியதும் [பகைவர்க்கு அசசந்தருவதும] அரசிலைவடிவமாகத தொழில்செய்யப் பட்டதுமான கூரிய வேலாயுததததையுடைய, உந்தை - உன்தந்தையினது, வெம்மையை - கோபத்தை, கருதி நோக்கி-ஆலோசிததுப்பாரத்து, கூற்றும்-யமனும், வவ்வுதல் ஆற்ரூன் - (உனது உயிரைக) கவரவல்லனல்லன்; மாறு மாறு உலகின் வாழ்வார-மற்றும வெவ்வேறு உலகஙகளில் வாழ்பவர்களான, அ உலகத்து உளாரும - அந்தந்த உலகததுச சனஙகளும், அஞ்சுபவா-பயப் படுவார்கள்; (ஆகவே), ஐயா ஐயனே! ஒளிக்க - (நீதானே) ஒளித்துக்கொள்ளும்படி, எம்மை நீதது எளிதின் எ உலகததை உற்ரூய் - எஙகளை (இங்கு) விட்டு எளிதிலே எந்த உலகத்தைச சேர்ந்தனையோ? (எ - று.)—'என்று சொல்லி இந்திரசிதது புலமபினன' எனச சொற்கள் வருவிததது முடிகக வேண்டும்.

'வெவ்விலையயில்வேலுந்தை வெம்மையைக் கருதிநோக்கி' என்பதனை, 'அவ்வுலகத்துள்ளாருமஞ்சுவா' என்பதனோடுங கூட்டுக; இது, முதனிலைத் தீபகம். 'சஙகாரகாத்தாவான யமனும இராவணபயததால் உன்னைககொல்ல அஞ்சுவன்; மற்றை அனைவரும அப்படியே; இஙஙனம உன்னைக்கொல்ல வல்லவ ரெவருமில்லை; நீ தானே விளையாட்டுவகையால் எஙகட்குப் புலப் படாது ஒளிததுக்கொள்ளுதற்கு எநத உலகததிலேனும் சென்றனைபோலும்' என்று இந்திரசித்து அட்சனைககுறித்து அன்பினுற் கலஙகிப் பிரலாபிததன னென்க. கூற்றும், அவ்வுலகததுளாரும் என்ற உமமைகள் ஒன்றையொன்று நோக்கி எதிரதும் இறந்ததுந்தழுவிய எசசமாம. தனிததனி வாககியஙகளில் வந்ததனுல், இவை எணணுப்பொருளனவாகா; ஒளிகக அஞ்சுவா என்று கூட்டி, உன்னை ஒளிததுககொணடுசெல்லுதற்கு அஞ்சுவர் என்று உரைப் பாரு முளா. இஙகு, நோக்குதல் - உள்ளததாற் குறிததுப்பாரத்தல். பி-ம்:— [1]ஆவி. [2]கூற்றுமாற்ரு. (உஉ)

உங.—இந்திரசித்துக்கு சோகத்தினுங் கோபம் மிகுதல்.

[1]ஆற்றல னனைய னுகி யறிவழிந் தயரும் வேலை
சீறறமென் றொன்று தானே மேனிமிர் செலவிற் ருகித்
தோற்றிய துன்ப நோயை யுள்ளுறத துரந்த தம்மா
யேற்றஞ்சா [2]லாணி யாணி யெதிரெசலக் கடாய தென்ன.

(இ - ள்.) (இந்திரசித்து), ஆற்றலன்-[ப்ராதருசோகத்தைப்] பொறுக்க மாட்டாதவனுய, அனையன் ஆகி - அததன்மையனுகி [கீழ்ககூறியவாறு நிலைகலஙகி யென்றபடி], அறிவு அழிந்து அயரும வேலை - அறிவுமயஙகிச சோர்வடையுஞ சமயததில,—சீற்றம் என்ற ஒன்று தானே - (தன் தம்பியைக்கொன்ற வானரததினமே லுண்டான) கோபமெனகிற ஒரு [illegible] மிமிர் செலவிற்று ஆகி - மேன்மேற் பொஙகியெழுந்

தன்மையை யுடையதாய், ஏற்றமசால் ஆணி ஆணி எதிர் செல கடாயது என்ன - (முன்னேதைத்து) ஏறுதல்பொருந்திய ஓர் ஆணியின்மேல் மற்றோ ராணியை (அவ்வாணி) உள்ளடங்குமாறு அறைந்தாற்போல, தோற்றிய துன்பம் கோயை உளஉற துரந்தது - (அட்சனிறக்கதனால் அவ்விந்திரசித்தின் மனத்தில்) உண்டான சோகமாகிய பிணியை உள்ளேயடங்கும்படி செலுத்தி அடக்கிவிட்டது; அம்மா - ஆச்சரியம்! (எ - று.)

ஓரிடத்தில் ஆணியின்மேல் ஆணியை யடித்தால், பிந்திஅடிக்கும் ஆணி முந்தியடிககப்பட்டுள்ள ஆணியை உளளே செலுத்திவிடுதல்போல, தம்பி இறந்தன னென்றதனால இந்திரசித்தின் மனததில் முதலிலுண்டான சோகத்தை அத்தமபியைக்கொன்ற அநுமான்மீது உடனே உண்டான கோபம் உள்ளடக்கிவிட்ட தென்பதாம். எனவே, சோகரஸமடங்க ரௌத்ரஸம் அப்பொழுது அவனிடத்து மிகததனால, அவன் மூர்சசை யொழிந்தன னென்க. இங்ஙனம் சோகரசத்தை யடக்கும்படி, அதிகப்பட்ட கோபரசத தின் கொடுமையை 'அம்மா!' என்று வியந்தவாறு. ஆற்றலன் - எதிர்மறை முற்றெசசம்; இயற்கையில மிக்க வலலமையுடையனை அவ்விந்திரசிதது என்றுமாம். தான ஏ என்ற இடைசசொற்களில், ஒன்று - தேற்றம்; மற்றொன்று - பிரிநிலை. துன்பம் மனோவியாதியாதலால் 'நோய்' எனப்பட்டது. நோய் - தொழிற்பெயா; இதில், நொ என்பதன் விகாரமான நோ - பகுதி; ய் - தொழிற்பெயாவிகுதி என்னவேண்டும். கடாயது—கடாவியது. உவமை யணி என்ன - உவமவுருபு பி-ம்:—[1]ஆற்றலனாகியன்பால். [2]ஆணிக்காணி, ஆணியாணிக்கு. (உ௩)

வேறு

உச.—இந்திரசித்தை அநுமான் பார்த்தல்.

[1]ஈண்டிவை நிகழ்வுழி யிரவி தேரெனத்
[2]தூண்டுறு தேரின்மேற் றோன்றுந் தோன்றலை
மூண்டுமுப் புரஞ்சுட முடுகு மீசனி
னாண்டகை வனைகழ லநும னோக்கினன்.

(இ - ள்.) ஈண்டு - இவ்விடததில், இவை - இசசெயல்கள், நிகழ்வுஉழி-நடக்கும்போது,—இரவி தோ என தூண்டுறு தேரின்மேல் தோன்றும் தோன்றலை - சூரியனது தோபோல விரைவிற் செலுத்தப்பட்டு வருகிற தேரின்மீது காணப்படுகிற இராவணகுமாரனை இந்திரசிதததை,—மூண்டு முப்புரம சுட முடுகும ஈசனின் - கோபங்கொண்டு திரிபுரததை யெரித்தற்கு வந்து சமீபிதத சிவபிரான் போன்ற, ஆணதகை - ஆணமைக்குணமுள்ளவனை, வனை கழல் அநுமன் - கட்டிய வீரக்கழலையுடைய அநுமான், நோக்கினன் - பார்த்தான்; (எ - று,)

விரைவும் வலிமையுந் தோன்ற, இந்திரசித்தின் தேர்க்குச் சூரியன் தேர் உவமை கூறப்பட்டது; இதில், எளிதிற்பகையழிக்குந்திறம் மிகக ஒளி யுடைமை அனைவரையுமமிசததபிததல் என்னு மிவற்றால், இநதிரசித்து

சூரியனோ டொப்பானென்பதுந் தோன்றும். பலபராக்கிரமங்களிலும் பகைவர்க்கு அச்சந்தருந்தோற்றததிலும் அநுமானுக்குச சிவபிரான் உவமை:இனி, அனுமான் இலங்கையை யெரிப்பதனால், அவாககு 'மூண்டுமுப்புரஞ்சுடமுடுகுமீசன்' உவமை கூறப்பட்டனனெனக; "திருவின் பெருமான் விட்டவாகனம் போய்த தொல்லாழிநீரைக கடந்தது தாளிற்சுடாரிரணடுஞ், செல்லாதவூரைத திரிபுரங்கண்டது" என்பா திருவரங்கததது மாலையிலும். பி-ம்:—[1]ஈண்டது. [2]தூணடுயர். (உச)

வேறு.

உரு.—இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர். இந்திரசித்தைப் பார்த்த அநுமானது ஆலோசனை.

வென்றே னிதன்முன் சிலவீரரை யென்னும் [1]வெம்மை
யனறே முடுகிக் கடி [2]தெய்த வழைத்த தம்மா
வொன்றே யினிவெல லுத [3]றோபத டுதத துள்ள
தினறே [4]சமையும மிவனிந்திர சித்து வென்பான்.

(இ - ள்.) இதன்முன சிலவீரரை வெனறேன் என்னும் வெமமை அன்றே - இதற்குமுன்னே சிலவீரர்களை நான் சயித்தேன் என்கிற கடிய செயலன்றோ, முடுகி கடிது எயத அழைத்தது - மிககவிரைவாக வருமபடி (இவனை) இலங்கை கூப்பிட்டதாயிறறு; அமமா - ஆசசரியம்! இனி வெல்லுதல் தோற்பது ஒனறே அடுத்தது உள்ளது - இனி (இவனோடுபொருது இவனை) வெல்லுதல் (அன்றி இவனிடம்) தோற்றல என்ற இரண்டிலொன்றே சமீபிததததாயுள்ளது; இன்றே சமையும் - (அவ்விரணடிலொன்று) இன்றைத்தினத்திலேயே நிகழ்ந்து முடியும்; இவன் இந்திரசிதது என்பான் - இதோ வருகிற இவன் இநதிரசிததென்று சிறப்பிததுச சொலலப்படுவன்.

பிரசிததியினால இராவணகுமாரனான இந்திரசித்தின் பலபராகிரமங்களைக் கேள்வியுறறுணாநதுளள அநுமான் தனது நுண்ணுணர்வினால் இவன் அவனேயென்று உள்ளபடி ஊகிததறிந்தன னென்க. முடுகிக்கடிது- ஒருபொருட்பன்மொழி. இதற்குமுன்பு யான் சில வீராகளை வென்றேனென்பதனாலாகிய கொடியகோபமனறோ மூணடு விரைவாகவரும்படி இவனைத் தூணடிற்று என்று உரைப்பினும் அமையும. அம்மா என்பதை ஈற்றசையாகவுங கொள்ளலாம. பி-ம்:—[1]மெய்ம்மை. [2]எய்தியிழைததது. [3]தோற்றல். [4]அமையும. (உரு)

உசு. கட்டே றுநறுங் கமழ்கண்ணியிக் காளை யென்கைப
பட்டா லதுவே யவிராவணன் பாடு மாகுங்
கெட்டோ மெனவெண்ணியக் கேடருங கறபி னாளை
[1]விட்டே குமதன் றியரக்கரும் வெமமை தீவார்.

(இ - ள்.) கட்டு ஏறும் - (மலாகளைகொண்டு) கட்டுத லமைந்த - [illegible] கண்ணி - மிகமணம்வீசுகிற மாலையை யணிந்த, இக் காளை -

இந்த இளவீரன், என் கை பட்டால் - என்கையா லிறந்தால், அதுவே அ இராவணன் பாடும் ஆகும் - அசசெயலே அந்த இராவணனுக்கும் கேடு விளைத்ததாம்; (ஆகவே அவ்விராவணன்), கெட்டோம் என எண்ணி - யாம் இனித் தவறாமல் அழிவோ மென்று நினைத்து, அ கேடு அருங் கற்பி னாளை விட்டு ஏகும் - கெடுதலில்லாத பதிவிரதாதருமத்தை யுடையவளான அச்சீதையை (இராமபிரானிடம்) கொணர்ந்துவிட்டுச் செல்வான்; அது அன்றி - அதுவு மல்லாமல், அரக்கரும் வெம்மை தீர்வார் - இராக்கதரெல் லாருமே செருக்கடங்கித தமதம் கொடுமை யொழிவார்; (எ - று.)

எல்லாவரக்காகளோடுங கூடிச சென்று வலிய எதிர்த்துப் பொருத இராவணனால் வெல்ல முடியாதவனான இந்திரனைச் சயித்திட்டவனாகிய அவனை நான் அழித்துவிட்டால், அவ்வொருசெயலினாலேயே இராவணன் அசசங்கொண்டு பிராட்டியை விட்டிடுவான்; மற்றையரக்கர்களும வலி யொடுங்கினராய் இனிக கொடுஞ்செயல் செய்யாரென்று அநுமான் கரு தினனென்க. 'கட்டுஏறு' என்பதற்கு உறுதிமிக்க என்று பொருளகொண்டு, அதனைக் காளைக்கு அடைமொழியாககுதல மொன்று. கெட்டோம் என்ற இறந்தகாலம், தெளிவுபற்றியது. 'ஏகுமது' என ஒருசொல்லாக்கொண்டு தொழிறபெயரின் தன்மைய தாககுதல மொன்று. பி - ம்:—[1]விட்டேகுவ ரன்றி. (உசு)

உஎ. ஒன்றோ விதனான் வருமூதிய மொண்மை யானைக்
கொன்றே னெனினிந் திரனுந்துயாக் கோளு நீங்கு
மின்றே [1]கடிகெட் டதரக்கரி லங்கை யானே
வென்றே னவிரா வணன்றனனையும் வேரொ டென்றான்.

(இ - ள்.) இதனான் வரும் ஊதியம் ஒன்றோ - இவ்விநதிரசித்தைக் கொல்லும இசசெயலால வரும் இலாபம ஒன்றுதானோ? [அல்ல: பல என்றபடி]; (அவை யாவையோவெனின்)—ஒண்மையானை கொன்றேன் எனின் - ஒளியுளளவனான இவ்விநதிரசிததைக் கொன்றேனேயானால், இநதிரனும் துயா கோளும நீங்கும் - (முன்பு இவனால் வெல்லப்பட்டவ னான) இந்திரனும் துனபங்கொண்டிருத்தலை யொழிவான்; (மறறும), அரககர் இலங்கை இன்றே கடி கெட்டது - இராக்கதாகளுடைய (இராச தானியான) இவ்விலங்கா புரி இப்பொழுதே காவலொழிந்ததாம; யானே அ இராவணன் தனனையும் வேரொடு வென்றேன் - நானே அந்த இராவண னையும வேரோடு வென்றவனாவேன், என்றான் - என்று எண்ணினான் (அநுமான்); (எ - று.)

ஒண்மை=ஒளி, திருக்குறளில், "ஒளியொருவற்குண்டா லெறுக்கை" என்றவிடததுப் பரிமேலழகர் 'ஒளி - தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை; "ஒளி நிறு னோகுபுகழ்செய்யான்" என்றார் பிற ரும் என்றது, இகுகு கொள்ளதக்கது. ஒண்மையான் - பிறராற் செயற்கு அரியன செய்வோமென்று கருதும் ஊக்கமிகுதியை யுடையா னென்றபடி,

வேரொடு - வம்சத்துட னென்றபடி; இலக்கணை. பி - ம்:—[1]குடிகெட்ட தரக்கரிலமகைமூதா. (உஎ)

உஅ.—போர்தொடங்கிய அரக்கர்களை அநுமான் எதிர்த்தல்.

அக்கா லையரக் கருமானையுந் தேரு மாவு
முக்கா லுலகம் மொருமூனறையும வென்று முற்றிப்
புக்கா னின்முன்புக் கூபர்பூசல பெருக்கும வேலை
மிக்கா னும்வெகுண் டொர்மராமரங் கொண்டு [1]மிக்கான்.

(இ - ள்.) அ காலை - அப்பொழுது, அரக்கரும் - இராகதாகளும, ஆனையும் தேரும் மாவும - (அவாகளுடைய) யானைகளும தோகளும குதிரைகளும், உலகம ஒரு மூன்றையும முக்கால் வென்று முற்றி புக கானின் முனபுகு - மூவகையுலகங்களையும் (ஒருமுறைக்கு) மூன்று முறையாக (மிக்க இளமையிலேயே) சயிததுப் பின்பு பருவம் நிரமபி வந்தவனான அவ் விந்திர சிததுக்கு முன்னே வந்து, உயர் பூசல் பெருக்கும் வேலை - மிக்க போராரா வாரததை அதிகமாக விளைக்குமபோது,— மிககானும - பெரியோனான அநுமானும், வெகுண்டு - கோபிதது, ஓா மராமரம் கொண்டு - ஒரு ஸால விருக்ஷததைப பெயர்ததுக கையிற்கொண்டு, மிககான் - போரத் தொழில் மிக்கவனானான்; (எ - று.)

அரக்கரென்றது - யானைதோ குதிரைகளினமே லேறிய வீரர்களையும், காலாள் வீராகளையும் குறிக்கும். முற்றுதல் - பருவம் முதிாதல்; வலிமை மிகுத லென்றும், வளைததுவருத லெனறும் பொருள்படும. மிக்கான் - பலபராகிரமங்களினாலும் ஸ்ரீராமபக்தியாலும் மிக்கவன்; "செயற்கரிய செய்வா பெரியர்" என்றபடி பிறராற செய்தற்கு அருமையான பல தொழில்களைச செய்து பெருமையுறறவன். ஈற்றிலுள்ள 'மிக்கான்' என்பதற்கு - கோபாவேசததோடு உடல்பூரிததான் [அதாவது - பெருவடிவங கொண்டான்] என்று உரைபபினுய அமையும். பி - ம்:—[1]புகான. (உஅ)

உகூ.—இந்திரசித்தினுடன் சென்ற சதுரங்கசேனை அநுமானால் அழிக்கப்படுதலை இதுமுதல் நான்குகவிகளிற் கூறுகிறார்.

[1]உதைபபுண் டனயா னையுருண்டன யானை யொன்றோ
[2]மிதிபபுண் டனபா னைவிழுந்தன யானை மேன்மேற
[3]புதைப்புண் டனயா னைபுரண்டன யானை [4]போரால்
[5]வதைப்புண் டனயா னைமறிந்தன யானை [6]மண்மேல்.

(இ - ள்.) (அரககர்சேனையில்), யானை - சிலயானைகள், உதைப்புண்டன - (அநுமானால்) உதைக்கப்பட்டன; யானை - மற்றுஞ் சில யானைகள், உருண்டன - (அநுமானாற் கைகால்கள் கொண்டு மோதப்பட்டுக் கீழ் விழுந்து) உருளலாயின; ஒன்றோ - இதுமாததிரமோ? யானை - வேறு சில யானைகள். மிதிப்புண்டன - (அநுமானால்) மிதிக்கப்பட்டன; யானை - [illegible] யானைகள், மேல் மேல் விழுந்தன - (அநுயானால் தள் [illegible] லொன்றாக விழுந்திட்டன; யானை—, புதைப்

புண்டன - (அநுமானால் தாக்கப்பட்டுத் தரையிற்) புதைபட்டன; யானை—, புரண்டன - முன்பின்னாகவும் மேல் கீழாகவும் சிலைமாறின; யானை—, போரால் வதைப்புண்டன - (அநுமான் செய்த பலவகை) யுத்தத்தாற் கொலை யடைந்தன; யானை—, மண்மேல் மறிந்தன - அந்த யுத்தபூமியிற் சாய்ந் திட்டன; (எ - று.)

திருக்குறளில், "அறனொன்றோ ஆன்றவொழுக்கு" "பொய்ப்படு மொன்றோ புனைபூணும்" என்ற விடங்களிற் பரிமேலழகர் 'ஒன்றோவென் பது - எண்ணிடைச்சொல்' என்றது, இவ்வாறு கொள்ளத்தக்கது. பி - ம்:— [1]உதையுண்டன. [2]மிதியுண்டன. [3]புதையுண்டன. [4]போரில், போரால். [5]வதையுண்டன. [6]மணலில். (உக)

வேறு.

ங0. முடிந்த தேர்க்குல முறிந்தன தேர்க்குல முரணிற்
றிடிந்த தேர்க்குல மிற்றன தேர்க்குல மச்சிற்
றொடிந்த தேர்க்குல முக்கன தேர்க்குல நெக்குப்
படிந்த தோகுலம் பறிந்தன தேர்க்குலம் படியில.

(இ - ள்.) (அநுமானால அழிக்கப்பட்டு), தேர் குலம் - சிலதேர்க்கூட்டங் கள், முடிந்த - முற்றுமழிந்தன; தேர்குலம்—, முறிந்தன - (சிற்சிலபகுதி கள்) முறிபட்டன; தோக குலம—, முரண இற்று இடிந்த - தம் வலிமை யொழிந்து இடிபட்டன [சிதைந்தன என்றபடி]; தேர்க்குலம்—, இற்றன - கூட்டுவாயகள நெகுவிட்டன; தோகுலம்—, அசசு இற்று ஒடிந்த - அசசு முறிந்து ஒடியபபெறறன; தேர்குலம—, உக்கன - பொடியாய் உதிர்ந்தன; தேர்குலம்—, நெகுபடிந்த - சிதைந்து கீழ்விழுந்தன; தேர்க்குலம்—, படியில் பறிந்தன - தரையிற் சாய்ந்தன; (எ - று.)—அசசு-சக்கரவோக்கும் மரம்; அசுவம் என்ற வடசொல்லின் சிதைவு. (ங0)

ங1. சிரனெ ரிந்தவுங் கண்மணி சிதைந்தவுஞ் செறி[1]தா
டரனெ ரிந்தவு முதுகிறச் சாய்ந்தவுந் [2]தார்ப்பூ
ணூரனெ ரிந்தவு முதிரங்க ளுமிழ்ந்தவு [3]மொண்பொற்
குரனெ ரிந்தவுங் கொடுங்கழுத் திழந்தவுங் குதிரை.

(இ - ள்.) (அநுமானால் அழிகக்பட்டு), குதிரை - குதிரைகள்,—சிரன் நெரிந்தவும் - தலைநொருங்கியவையும், கண மணி சிதைந்தவும் - கண்களின் கருவிழிகள சிதையப்பெற்றவையும், செறி தாள் தரன் நெரிந்தவும் - வலிமை மிக்க கால்களின் தொகுதி நொருங்கப்பெற்றவையும், முதுகு இற சாய்ந் தவும - முதுகு ஒடியக கீழே சாய்ந்தவையும், தார் பூண் உரன் நெரிந்தவும்- கிணகிணிமாலையாகிய ஆபரணத்தையணிந்த மார்பு நொருங்கப்பெற்றவை யும், உதிரங்கள உமிழ்ந்தவும் - இரததப்பெருகுக்களைக் கக்கியவையும், ஒள் பொன் குரன் நெரிந்தவும் - பிரகாசமான பொற்சதங்கையை யணிந்த

கார்குளம்புகள் கொருகப் பெற்றவையும், கொடுங் கழுதது இழந்தவும் - வலைவான கழுததை யிழந்தவையு மாயின; (எ - று.)

'செறிதாள் தான்நெரிந்த' என்பதற்கு - நெருங்கியகால்களின் வலிமை ஒழியபபெறறனவென்று உரைப்பாருமுளா. கொடுமை வளைவாதலை 'கொடுங் கை,' 'கொடுங்கோல்,' 'கொடுமரம்' என்பவற்றிலுங்காண்க. பொன - அதனு லாகிய ஆபரணத்துக்குக் கருவியாகுபெயர். பி-ம்:—[1]தாாத் [2]தார்பூணுரன். [3]ஒளி. (௩௧)

௩௨. பிடியுண் டார்களும் [1]பிளத்தலுண் டார்களும் பெருந்தோ
ளொடியுண் டார்களுந் தலை[2]யுடைந் தார்களு [3]முருவக்
கடியுண் டார்களுங் கழுத்திழந் தார்களுங் [4]கரத்தா
லடியுண் டாகளு மச்சமுண் டாகளு மரக்கர்.

(இ - ள்.) அரக்கர் - இராக்கதாகள்,—பிடியுண்டாகளும் - (அநுமா னுற்) பிடிகக்பட்டவர்களும், பிளததலுண்டார்களும் - உடல் பிளகக்பட்ட வர்களும், பெருந் தோள ஒடியுண்டார்களும் - பெரியதோள்கள் ஒடிபட்டவர் களும, தலை உடைந்தார்களும் - தலையுடைந்தவாகளும், உருவ கடியுண்டார் களும - (பற்கள்) ஊடுருவுமபடி முழுதுங கடிகக்பட்டவர்களும், கழுதது இழந்தார்களும - கழுததை யிழகதவாகளும, கரத்தால் அடியுண்டாகளும் - கைகளால் அடிக்கப்பட்டவர்களும், அச்சமுண்டார்களும் - பயங்கொண்டவர் களு மானுர்கள்; (எ - று.)

கால்வகைப் படைகளிலுள்ள யானைமுதலிய வாகனங்களும், அவறறி லேறியவரும் காலாள்களுமாகிய அரக்காகளும் அநுமானுற பலவாறு சின்ன பின்னப்பட்டுச சிதைந்தழிந்தமை நான்குகவிகளில் முறையே விவரிகக்ப் பட்டது பி - ம்:—[1]பிளப்புண்டார்களும். [2]நெறிந்தாாகளும். [3]உருவங கடி யுண்டார்களும. [4]மரததால். (௩௨)

௩௩.—அரக்கர்கள் பிரயோகித்த ஆயுதங்கள் அநுமானுடம்பைச் சிறிதும் ஊறுபடுத்தமாட்டாமை

வட்ட வெஞ்சிலை யோட்டிய வாளியும் வயவர்
விட்ட [1]விட்டவெம் படைகளும் வீரன்மேல் வீழ்ந்த
சுட்ட [2]வலலிரும் படைகலைச [3]சுடுகலா தனபோற்
பட்ட பட்டன திசையொடும் பொறியொடும் பரந்த.

(இ - ள்.) வயவா - இராகததவீரர்கள, வட்டம் வெம் சிலை ஓட்டிய - நன்குவளைககப்பட்ட கொடியவிறகளினின்று செலுததிய, வாளியும - அம்பு களும, விட்ட விட்ட வெம் படைகளும - மறறும் மிகுதியாகப் பிரயோகித்த கொடிய ஆயுதங்களும், வீரன்மேல் வீழ்ந்த - மகா வீரனை அநுமான்மேல் விழுந்தவையாய், சுட்ட வல் இரும்பு அடைகலை சுடுகலாதனபோல் - நெருப் பிற்காய்ந்த வலிய இரும்புகள் பட்டடையைச சுடமாட்டாதனபோல (அநுமா னுடம்பைச் சிறிதும் ஊறுபடுததமாட்டாதவையாய்), பட்ட பட்டன திசை

பொறியொடும் பரந்த - (அவ்வுடம்பிற்) பட்டபட்ட விடங்களிலெல்லாம் நெருப்புப்பொறிகள் எழ அவற்றுடன் தாமும் தெறித்துச் சிதறிப் போயின; (எ - று.)

உவமையணி. அடைகல் - கம்மப்பட்டடை; அதாவது - கம்மாளர் பொன் முதலியவற்றை வைத்து அடிப்பதற்கும் வெட்டுதற்கும் ஆதாரமாயிருப்ப தொரு கருவி. தீயிலிட்டுக் காய்ச்சப்பட்ட இரும்பைப் பட்டடையின் மேல் வைக்கும்போது அக்காய்ந்த இரும்பு அப்பட்டடையைச் சுடாதாகப் பின்பு அவ்விரும்பு அடிபடுதற்கும் வெட்டுப்படுதற்கும் அப்பட்டடை இடமாதல் போலவே, வடிக்கப்பட்ட கூரிய அம்புகள் அநுமானுடம்பிற் பட்டும் அதனை ஒன்றுஞ் சிதைவு படுத்தாவாக அவ்வுடம்பு அவ்வாயுதங்கள் பொடிபடுதற்கு இடமாய் நின்றது என உவமையின் நயங் காண்க. இரும்பினாலாகிய உளி கொண்டு வெட்டுகையிற் கல்லினின்று தீப்பொறி எழுமாறு போல, எஃகினாலாகிய பலவகை ஆயுதங்கள் மிக வலிய அநுமானுடம்பிற் பட்டவளவிலே அனற்பொறி யெழுந்தன.

வட்டம் - வ்ருத்தம் என்ற வடசொல்லின் சிதைவு. 'விட்ட விட்ட' என்ற அடுக்கு, மிகுதி பற்றியது. 'பட்ட பட்டன' என்ற அடுக்கு, தொறுப் பொருளது. திசையொடும் - உருபு மயக்கம். வீரன் தான் ஊறுபடாமலே. பல அரக்காகளைக் கொன்றிட்ட ஆற்றலுடையான். பி - ம்:—[1]வெந்திறற். [2]மெல். [3]தொடர்கிலாதது போல். (௩௩)

௩௪.—இந்திரசித்து அநுமான்மேல் முதலில் எய்த அம்புகள் பழுதுபடுதல்.

சிகையெ ழுஞ்சுடர் வாளிக ளிந்திர சித்து
மிகையெ ழுஞ்சினத் தநுமன்மேல் விட்டன வெந்து
புகையெ ழுந்தன வெரிந்தன கரிந்தன போக
நகையெ ழுந்தன வழிந்தன வானுளோர் நாட்டம்.

(இ - ள்.) இந்திரசித்து—, மிகை எழும் சினத்து அநுமன்மேல்-மிகுதியாக மேல் மேல் மூண்டெழுகிற கோபாக்கினியையுடைய அநுமான்மேலே, விட்டன - (தூரத்திலிருந்து) தொடுத்து விட்டவையாகிய, சிகை எழும் சுடர் வாளிகள - சுவாலைகளுணடாகி விளங்கும் ஒளியையுடைய அம்புகள், (அநுமானுடம்பிற் பட்டவளவிலே) வெந்து புகை எழுந்தன - வெந்து புகை கிளம்பப் பெறறவையும், எரிந்தன - எரிபட்டொழிந்தவையும், கரிந்தன - தீந்துபோனவையுமாய, போக - அவனுடம்பைச் சிறிதும் ஊறுபடுத்தாதொழியவே, நகை எழுந்தன - (அது கண்ட அவ்விந்திரசித்துக்குக் கோபத்தாற்) சிரிப்பு உண்டாயின: (அக்கோபச் சிரிப்பைக் கண்டமாத்திரத்திலே), வான் உளோர் நாட்டம் அழிந்தன - (இனி என்னுகுமோ வென்று அஞ்சி மனங்கலங்கியதனால்) தேவர்களுடைய கண்கள் கலக்க மடைந்தன; (எ - று.)

இந்திரசித்தின் அம்புகள் அனுமானுடம்பிற் பட்டவளவிலே வெந்து புகை யெழுந்தனவும் எரிந்தனவும் கரிந்தனவுமாய்ப் போதற்குக் காரணம் அவ்வநுமான் கொண்ட பெருங்கோபாக்கினியினால் அவனுடம்பில் மிக்கதாப

மென்பது பட, 'மிகை யெழுஞ் சினத்து அநுமன்' என்றார். இங்கு விசேஷணம் ஒருகருதையுட்கொண்டதனால் கருத்துடையடை மொழியணி. இவ்வகுக்கூறிய சிரிப்பு, வீராட்டஹாஸ மெனப்படும். கணகலவகுதல் - மனத்து யாததின் காரியம. வானுளோர் - ஆகாயமார்ககத்தில் வந்து நின்று போர் காணுந் தேவலோகததவா. சிகை யெழுஞ் சுடர் வாளிகள் - நெருப்பைகக்குகின்ற ஒள்ளிய அம்புகள் எனினுமாம். (ஙச)

ஙரு.—இந்திரசித்து கோபத்தோடு அநுமானை நெருங்குதல்.

தேரும் யானையும் [1]புரவியு மரக்கருஞ் சிந்திப்
பாரின் வீழ்தலுந் தானொரு தனிநின்ற பணைத்தோள்
வீர வீரனு முறுவலும் வெகுளியும் வீங்க
வாரும் வாருமென் றழைக்கின்ற வநுமன்மேல் வந்தான்.

(இ - ள்.) தேரும் - (தனது) தேர்களும், யானையும் - யானைகளும், புரவியும் - குதிரைகளும், அரக்கரும - இராக்கதவீராகளும, (ஆகசசதுரங்க சேனைகள்யாவும்), சிதி பாரின வீழ்தலும் - (அநுமானால் அழிகக்பட்டுச்) சிதறிததரையில் விழுந்திடவே, தான ஒரு தனி நின்ற - (வேறு ஒரு துணையு மில்லாமல்) தான் ஒருவன் மாத்திரமே தன்னநதனியனாய் எஞ்சிநின்ற, பணை தோள் வீரவீரனும - பருத்த தோள்களையுடைய மகாவீரனான இந்திரசித்தும்,—முறுவலும வெகுளியும் வீங்க - சிரிப்பும் (அதறகுக்காரணமான) கோபமும் அதிகப்பட,—வாரும் வாரும என்று அழைக்கின்ற அநுமன்மேல் வந்தான - 'வாருங்கள் வாருங்கள்' என்று (அரக்கரையெல்லாம் வலியப் போர்க்கு) அழைக்கிற அநுமான்மேல் வந்து நெருங்கினான் [அநுமானைக் குறித்து வந்து சமீபிததான் என்றபடி]; (எ - று.)

வீரவீரன - வீரர்களிற சிறந்தவீரன். அடுகசு - உவகையும் விரைவும் பறறியது. இந்திரசிதது ஒருவனையே அநுமான இகழ்சசிப்பன்மையாக 'வாருமவாரும' என்று அழைததன னெனவுங கொள்ளலாம. இவ்வனம் 'வாரும் வாரும' என்று அழைததல், அநுமானது யுததோரசாகததைக் காட்டும; கீழ்ப் பல அரக்கரைகளகொன்றும அநுமான் போர்ததினவு தீர்ந்திலனென்க. பி - ம்.—[1]அரககரும்புரவியும. (ஙரு)

ஙசு.—இந்திரசித்து தனது வில்லின் நாணியைக் கைவிரலால் தெறித்துப் பேரொலி யெழுப்புதல்.

புரந்த ரன்றலை பொதிரெறிந் திடப்புயல் வானிற்
பரந்த பல்லுரு மேறறினம் [1]வெறித்துயிர் பதைப்ப
நிரந்த ரந்தலை நெடுநிலஞ் சுமந்த[2]பே ருரகன்
சிரந்து ளங்கிட வரக்கன்வெஞ் சிலையைநாண் [3]டெறித்தான்.

(இ - ள்.) புரநதரன் தலை - இந்திரனுடைய சிரசு, பொதிர் எறிந்திட அஞ்சி அதிரந்து மிகநடுங்கவும்,—புயல் வானில் பரந்த - நீர் கொண்ட காளமேகங்களில் மிகுதியாய் எழுகிற, பல் உரும் ஏறு

இனம் - பலபேரிடிகளின் கூட்டம், வெறித்து உயிர் பண்தப்ப - அச்சத்தால் மயக்கங்கொண்டு உயிர்நடுங்கவும்,—கிரந்தரம்-இடைவிடாமல் [எப்போதும்], தலை - தனது தலைகளால், நெடு நிலம் சுமந்த - பெரிய உலகத்தைக் கீழே யிருந்து) தாங்குகிற, பேர் உரகன் - சாப்பராஜனான பெரிய ஆதிசேஷனது, சிரம் - ஆயிரத்தலைகளும், துளங்கிட - அச்சத்தால் நடுங்கவும்,—அரக்கன் - இராக்கதனான இந்திரசித்து, வெம சிலையை நாண் தெறித்தான் - தனது கொடியவில்லின் நாணியைக் கைவிரலால் தெறித்து ஒலியெழுப்பினான்.

"விரிசிறநாகம் விடருளதேனும், உருமின்நடுங்கினஞ் சேணின்று முட்கும்" என்றபடி, வானத்து எழுகிற மேகத்தின் இடிமுழக்கத்தைச் செவி யுறவளவிலே வளைகளிலுள்ள நாகங்கள் அஞ்சியழிதல் இயல்பாதலால், அவ் விடியும் அஞ்சுமபடி மிகக்தான இந்திரசித்தின் வின்னொலிமுழக்கத்தைக் கேட்டமாத்திரத்திலே அனைத்துலகுந்தாங்கு கீழிருந்து உலகத்தைத்தாங்குகிற சரப்பராசனும் நடுங்குவனென்க. இந்திரசித்தின் வின்னொலி கேட்டவள விலே இந்திரன் இன்னும் எனக்கு என்னாகுமோ வென்று அஞ்சி நடுங்குவன். மேகவாகனனான இந்திரனுக்கு அசசந்தரும நாணொலிக்கு அவ்விந்திரனது கொடியாகிய இடியும் அஞ்சுமென்றல் தகுதியுடைத்து. அவ்வி நாணொலி யின்மிகுதியாலாகிய அதிர்ச்சியையும் அசசத்தையும் வர்ணனைவகையாற் கூறினார்; உயர்வுநவிற்சியணி. வெறுத்து - நிடுக்கிட்டுத் திகைத்து எனினு மாம். பி - ம்·—[1]எறிந்து. [2]நீடு. [3]எறிந்தான். (௧௬)

௧௭—அதற்குமேலாக அனுமான் தோள்தட்டி ஒலியெழுப்புதல்.

ஆண்ட நாயகன் றூதனு மயனுடை யண்டங்
கீண்ட தாமெனக் கிரியுக நெடுநிலங் கிழிய
நீண்ட மாதிரம் வெடிபட வவனெடுஞ் சிலையிற்
பூண்ட நாணிறத் தன்[1]னெழிற் றோள்களைப் புடைத்தான்.

(இ - ள்.) ஆண்ட நாயகன் தூதனும் - (எல்லாவுயிர்களையும்) அடிமை கொண்டருளுகிற தலைவனான இராமபிரானது தூதனாகிய அநுமானும்,—(அவ்வொலிகளுக்கு எதிராக),—அயனுடை அண்டம் கீண்டது ஆம் என - இந் தப்பிரமாண்ட முழுவதுமே பிளந்ததாகுமென்று சொல்லுமபடியாகவும், கிரி உக - மலைகள் பொடியாயசிந்துமபடியாகவும், நெடு நிலம் கிழிய - நீண்ட பூமி பிளக்கவும், நீண்ட மாதிரம் வெடிபட - நெடியதிசைகள் பிளவு படவும், அவன் நெடுஞ் சிலையில் பூண்ட நாண் இற - அவ்விந்திரசித்தினது நீண்ட வில்லிற பூட்டிய நாணியும் அறறுப்போமபடியும், தன் எழில் தோள்களை புடைத்தான் - தனது அழகிய தோள்களைத் தட்டினான்; (எ - று.)

அண்டங்கீண்டதாதல் முதலியன, அந்தோட்புடைப்பொலி மிகுதி சென்று தாக்குதலாலாகும் அதிர்ச்சியினாலென்க. ஆண்ட நாயகன் - எம் பெருமான். அயனுடை அண்டம் - பிரமனுடைய அண்டம்; பிரமனுடனே

படைக்கப்பட்ட அண்டம் என்றபடி. எழில் - வளர்ச்சியுமாம். பி - ம்:— [1]நெடுந்தோள் புடைத்தார்ததான். (௩எ)

௩அ.—இந்திரசித்து வீரவாதங் கூறுதல்.

நல்லை நல்லையிஞ் ஞாலத்து ணின்னொக்க நலலா
ரில்லை யில்லையா லெறுழ்வலிக் கியாரொடு மிகல
வல்லை வல்லையின் றுகுநீ படைத்துள வாணாட்
கெல்லை [1]யெல்லையென் றிந்திர சித்துவு மிசைத்தான்.

(இ - ள்.) நல்லை நல்லை - (நீ) மிகவுமசமாத்தன்: இ ஞாலத்துள் நின் ஒக்க நல்லார் இல்லை இல்லை - இந்நிலவுலகத்தில் உனக்குச் சமானமாகச சமர்த்தர்கள் இல்லை இல்லை; எறுழ் வலிக்கு - மிக்க வலிமைத்திறத்தில், யாரொடும் இகல வல்லை வல்லை - (நீ) எல்லாருடனும் மாறுபடுதற்கு மிகவும வல்லவன்; (ஆயினும்), இன்று நீ படைத்துள வாழ்நாட்கு எல்லை எல்லை ஆகும் - இன்றைத்தினமானது நீ பெற்றிருக்கிற ஆயுளுக்கு முடிவெல்லை யாகும் முடிவெல்லையாகும், என்று இநதிரசிததுவும் இசைததான் - என்று இந்திரசித்து (அநுமானைநோககி) வீரவாதமுங கூறினான்; (எ - று.)— ஆல் - அசை.

பிறரோடு வைத்து நோக்குமிடதது நீ ஒப்புயாவற்ற வீரனென விளங குவையேயாயினும், நான் உன்னை இன்றைக்குத் தவறாது கொன்றிடுவே னென்று வீரவாதங கூறின னென்க. 'எறுழ்வலிக்கு யாரொடும் இகலவல்லை வல்லை' என்பதற்கு பலபராக்கிரமங களைக் கொண்டு எததிறததாரோடும் விரைந்து போர்செய்ய வல்லாய நீ என்று உரைப்பினும அமையும். வேறுல கங்களில் உன்னைபபோலச சமாததர்களும் உன்னைக் காட்டிலுஞ் சமர்த்தர் களும் உளரென்பது தொனிக்க, 'இஞ்ஞாலத்துள் நின்னொக்க நல்லா இல்லை யில்லை' என்றான; யான் மூவுலகததை வீரரனைவரையும் திறங கண்டு வென் றுள்ளேனெனபது, குறிப்பு. நல்லைநல்லை, வல்லைவல்லை என்ற அடுகெகுக்கள் - மிகுதிப்பொருளன; இல்லையில்லை, எல்லையெல்லை என்ற அடுக்குககள் - தேற் றம்; எல்லாம் இகழ்சசிக் குறிபபின் பயத்தன; எறுழ் வலி - ஒரு பொருட் பன்மொழி. பி - ம்:—[1]இல்லை. (௩அ)

௩௩.—அதற்குமேலாக அநுமான் வீரவாதஞ்செய்தல்.

நாளுக் கெல்லையு நிருதரா யுலகத்தை நலியுங்
கோளுக் கெல்லையுங் கொடுந்தொழிற் கெல்லையுங் கொடியீர்
வாளுக் கெல்லையும் வந்தன வகைகொடு வந்தேன்
றோளுக் கெல்லையொன் றிலலையென் றநுமனுஞ் சொன்னான்.

(இ - ள்.) கொடியீர் - கொடியவர்களே! நாளுக்கு எல்லையும் - (உங்கள்) வாழ்நாளுக்கு முடிவும், நிருதா ஆய் உலகததை நலியும்கோளுககு எல்லையும் - அரக்காகளாய் உலகத்தை வருததுகிற (உங்கள்) கொளகைகுகு முடிவும், கொடுக தொழிற்கு எல்லையும - (உங்கள்) கொடிய செயலுககு முடிவும், வாளுக்கு எல்லையும் - உங்கள் ஆயுதங்கட்கு முடிவும், வந்தன - இப்பொழுது வரலாயின; வகை கொடு வந்தேன் - (அதற்குஉரிய) திறமையைக கொண்டே

(வான்) இக்குவத்துள்ளேன்; தோளுக்கு எல்லை ஒன்று இல்லை-(என்) தோள்களின் வலிமைக்கு முடிவு சிறிதும் உண்டாகாது, என்று அநுமனும் சொன்னான் - என்று அநுமானும் வீரவாதங்கூறினான்; (எ- று.)

'உனதுவாழ்நாளுக்கு முடிவு இன்றைககாகும்' என்று இந்திரசித்து அநுமானைநோகக்கூறியதற்கு, அநுமான், 'உங்களைவருடைய வாழ்நாள் முதலிய பலவற்றுக்கும் இப்பொழுது முடிவு ஆகுமாறு வந்துள்ளேன் யான்' என்று கூறினனென்க. 'கொடியீ' என்ற பன்மை, இராவணன் முதலியோரை உளப்படுத்தியது. இந்திரசித்தொருவனை நோக்கியே இகழ்ச்சிக் குறிப்புததோனறப் பன்மையாற் கூறியதாகக கொள்ளினுமாம். கோள் - திமையும், வலிமையுமாம். வகை - உபாயமுமாம வாள - இங்கு ஆயுதப் பொதுவாய் நின்றது; சிறப்புப்பெயா, பொதுப்பொருளின்மேலது. (௩௬)

௪௦.—இந்திரசித்து அநுமான்மேல் அம்புகளை எய்தல்.

இச்சி ரத்தைபைத் தொலைப்பெனென் றிந்திரன் பகைஞன்
பச்சி ரத்தம்வந் தொழுகிட வானவர் பதைப்ப
வச்சி ரத்தினும் வலியன வயிரவான் கணைக
ளச்சி ரத்தினு மார்பினு [1]மழுத்தலு மநுமன்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) (அதுகேட்டு), இந்திரன் பகைஞன் - இந்திரசித்தானவன், இ சிரத்தையை தொலைப்பென் என்று - (இகழுரைகினது) இந்த உறுதியான நம்பிகையை யழிததிடக்கடவே னென்று கருதி, அ சிரதத்தினும் மார்பினும் - அந்த அநுமானுடைய தலையிலும் மார்பிலும், பசு இரத்தம் வந்து ஒழுகிட-புதிய இரத்தம் வெளிப்பட்டுப் பெருகும்படியாகவும், வானவர் பதைப்ப-(அதுகண்டு) தேவர்கள துடிககும்படியாகவும், வச்சிரத்தினும் வலியன வயிரம்வான் கணைகள் - (இநதிரனது) வசசிராயுததததைக்காட்டிலும் வலிமையுடையனவான கூரமைகொணட பெரிய [சிறந்த] அம்புகளை, அழுத்தலும் - அழுந்த எய்தபோது,—அநுமன் - அநுமான், (எ - று.)—'செடுஞ்சினக கொண்டான் நிமிர்ந்தான்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

"கூர்பற்றியவென்குலிசததாற் கூறுபடுபுண்வடுத்தீர்க" என்றபடி இந்திரன் தனதுவசசிராயுததததினால் துயருறுதிருககுமாறு அநுமானுக்கு வரமளித்துள்ளானாதலால், அவ்வநுமானுடமபில் ஊறுபடுதலிய இந்திரசிதின் அம்புகளை வசசிரதத்தினும வலியன வென்றல் தகும; அன்றியும், இந்திரனை வென்றவனது கணைகளை அவ்விநதிரனது வசசிராயுதத்தினும வலியன வென்னத தட்டில்லை இந்திரன் பகைஞன் - இந்திரசத்ரு; இந்திரனைப் பகைத்து வென்றவனென்க. இகழுப்பசுமை, புதுமையின்மேலது. வானவர் பதைத்தல், அநுமான் அழிய இந்திரசிதது வென்றிடுவனோவென்னும் அச்சத்தால். வான் - உரிசசொல். பி - ம்:—[1]செறித்தலும். சிலபிரதிகளில் இச செய்யுளின் இரண்டுமூன்றுமடிகள் மூன்றிரண்டாமடிகளாக மாறியுள்ளன.

சக.—யோகபலத்தால் அநுமான் பெருவடிவுகொள்ளுதல்.

குறிது வானென்று [1]குறைந்தில னெடுஞ்சினங் கொண்டான்
மறியும் வெண்டிரை மாகட லுலகெலாம் வழங்கிச்
சிறிய தாய்சொன்ன திருமொழி சென்னியிற் சூடி
நெறியி னின்றதன் னாயகன் புகழென நிமிர்ந்தான்.

(இ - ள்.) நெடுஞ்சினம் கொண்டான் - மிகக கோபங்கொண்டு,—வான் குறிது என்று குறைந்திலன் - ஆகாயம் உயாவுபோதாது என்று தன்வடிவினுயர்வு குறுகாதவனுய் [வானமுகட்டினும் மேலாக வளர்பவனுய் என்றபடி],—சிறிய தாய் சொன்ன திரு மொழி - தனதுசிறியதாயான கைகேயி சொன்னதிருவார்த்தையை, சென்னியில் சூடி - தனதுதலைமேற்கொண்டு [சிரஸா வகித்துக் கௌரவித்து], மறியும் வெள் திரை மா கடல் உலகு எலாம் வழங்கி - மடங்குகிற வெண்ணமையான அலைகளையுடைய பெரியகடலினுற் சூழப்பட்ட நிலவுலகமுழுவதையும் (அசசிறியதாயின்மகனான பரதனுக்குக்) கொடுத்து, நெறியில் நின்ற - (மாத்ருவாகியபரிபாலன மாகிய) நல்லொழுக்கவழியிலே நிலை நின்ற, தன் நாயகன் - தனதுதலைவனான இராமபிரானது, புகழ் என - கீர்த்தி (வானுறஓங்கிவளாதல்) போல, நிமிர்ந்தான் /உயாந்துவளாந்தான்; (எ - று.)—குறைநதிலன் நிமிர்ந்தான் என்க.

காப்பியங்களிலே கதாநாயகனது சிறப்புத் தோன்ற அவனது சம்பந்தமான பொருளகளைச சிறசிலவிடங்களில் உபமானமாக அமைத்துக கூறுதல் கவிமரபாதலால், அநுமானதுவடிவின் வளாசசிக்கு இராமபிரானது புகழின் வளர்சசியை உவமைகூறினுர். சீதாகலியாணத்தின் பிறகு தசரதசக்கரவர்த்தி இராமபிரானுககுப் பட்டாபிஷேகஞ்செய்ய யததனிககையில் மந்தரை சூழ்சசியால் மனங்கலககப்பட்ட கைகேயி தன்கொழுநரான தசரதரை நோக்கி முன்பு அவர் தனககுக் கொடுத்திருநத இரணடுவரங்கட்குப் பயனுகத தன்மகனான பரதனுக்குப பட்டங்கட்டவும் கௌசல்யைமகனான இராமனைப் பதினான்குவருஷம் வனஞ்செலுத்தவும் வேணடுமென்று சொல்லி வற்புறுத்த, அதுகேட்டு வருந்தின தசரதா சத்தியவாதியாதலால் முன்பு அவட்கு வரங்கொடுதிருந்த சொல்லைத் தவறமாட்டாமலும், இராமன்பக்கல் தமககு உள்ள மிக்க அன்பினுல் அவ்வரததை நிறைவேறறுமாறு அவனை வனத்துக்குசசெல்லசசொல்லவும் மாட்டாமலும் கலங்கி வாய்திறவாதிருக்கிற சமயத்தில், கைகேயி இராமனை வரவழைத்து 'பிள்ளாய்! உங்களதந்தை பரதனுக்கு நாடுகொடுத்துப் பதினான்குவருடம் உன்னைக காடேறப் போகச சொல்லுகிறுர்' என்றுசொல்ல, அசசொல்லைத் தலைமேற்கொண்டு அந்த மாத்ருந்தாயின்வார்த்தையையும், அவட்குத் தனதுதந்தை கொடுதிருந்த வரங்களையும் தவறாது நிறைவேற்றி மாத்ருபித்ரு வாக்கிய பரிபாலனஞ் செய்தலினிமிததம

இராமபிரான் இலக்குமணனோடும் சீதையோடும் அயோத்தியைவிட்டு நீங்கி நடந்து வனவாசஞ் சென்றன னென்ற வரலாறு, கீழ் அயோத்தியாகாண்டத்தில் விரிதுரைக்கப்பட்டது.

இராமபிரானுற் சிரமேற்கொள்ளப்படும் பெருமையைப் பெற்றதனால், கைகேயியின் கொடியசொல்லை 'திருமொழி' என்றார்; அன்றி, திருவிழத்தற்குக் காரணமாகும் மொழியைத திருமொழி யென்று. இகழ்ச்சிக்குறிப்பாகிய எதிர்மறையிலக்கணைவகையாற் கூறினதுமாம். நெறி - சந்மார்க்கம். நெறியில் நின்ற என்பதற்கு - (மரவுரியையுஞ் சடைமுடியையுந் தரித்துத்) தவவொழுக்கவழியிலே நின்றவென்று உரைத்தலு மொன்று. பி-ம்:—[1]குறித்திலன்.

சஉ.—அநுமான்கொண்ட பேருவடிவைக் கண்டு இந்திரசித்து ஆச்சரியப்படுதல்.

பாக மல்லது கண்டில னநுமனைப் பார்த்தான்
மாக வன்றிசை பத்தொடும் வரம்பிலா [1]வுலகிற்
கேக நாதனை யெறுழ்வலித் தோள் [2]பிடித் தீர்த்த
மேக நாதனு மயங்கின னுமென வியந்தான்.

(இ - ள்.) மாகம் வல் திசை பத்தொடும் - பெரிய வானம் முதலிய வலிய பததுத்திகுகுகளுடனே, வரம்பு இலா உலகிற்கு - அளவற்ற உலகங்கட்கெல்லாம், ஏக நாதனை - தனித்தலைவனான இந்திரனை, எறுழ் வலி தோள் பிடித்து ஈர்த்த - மிக்கவலிமையையுடைய தோள்களைப் பிடித்து இறுக்கிக் கட்டிய, மேகநாதனும் - மேகநாதனென்னும் இயற்பெயருடையவனான இந்திரசித்தும்,—அநுமனை பாரததான் - அநுமானைப் பார்த்து, பாகம் அல்லது கண்டிலன் - (அவ்வடிவத்தின்) ஒரு பகுதியைக் கண்டனனேயன்றி (மற்று) முழுவதையுங் காணமாட்டாதவனாய், மயங்கினன் ஆம் என வியந்தான் - 'திகைப்புற்றான்' என்று (தன்னைக் கண்டவர்) சொல்லும்படி அதிசயித்தான்.

பாகமலலது கண்டில னநுமனைப் பாரததான்—அநுமானது பேருருவத்தைச சீதைகண்டசெய்தி கூறியவிடத்து "கஞ்சமும் புரைவன கழலுங்கண்டிலாள்" என்றதுகாண்க. இந்திரன் திரிலோகாதிபதி யாதலால், 'திசைபத்தொடும் வரமபிலாவுலகிற்கு ஏகநாதன்' எனப்பட்டான். திசைபத்து - மேல் கீழ்என்ற இரண்டும, மற்ற எட்டுமாம். மேல் உததரகாண்டதில் "வந்து பிறந்திடு மைந்தன மழையிடிததெனை வாய்விட்டழுதலோடும், மைந்தனைத் தான் வலிமேகநாதனெனப் பேரிட்டா னிலங்கைமன்னன்" என்பதனால், மேகநாத னென்ற பெயரின் பொருளையும (நாதம் - ஒலி), "செய்வதொன்றறியாது சிந்தை கலங்கி யிந்திரனின்றிடக், கையுமெய்யுமகப்படத் தெறு காலபாச மிதாமெனும், வெய்யபாசமுறப்பிணிததனன் மேகநாதன்" என்பதனால் அவன் இந்திரனைப் பிடிததுக்கட்டின செய்தியையும் அறிக. பி - ம்:—[1]உலகில். [2]பிணித்து. (சஉ)

சஙு.—அநுமான் இந்திரசித்தின் தேர்க்குதிரைகளையும் பாகனையும் அழித்தல்.

நீண்ட வீரனு நெடுந்தடங் கைகளை நீட்டி
யீண்டு வெஞ்சர மெய்தன வெய்திடா வண்ண
மீண்டு போய்விழ வீசியாங் கவன்[1]மிடற் றடந்தேர்
பூண்ட [2]பேயொடு சாரதி தரைப்படப் புடைத்தான்.

(இ - ள்.) நீண்ட வீரனும் - (அஙஙனப) பெருவடிவஙகொண்டு வளர்ந்த வீரனான அநுமானும்,—நெடுந் தட கைகளை நீட்டி - நீண்டபெரிய தன் கைகளை எதிரிலே நீளசெலுததி, எய்தன ஈண்டு வெமசரம எய்திடாவண்ணம் மீண்டு போய் விழ வீசி - (இந்திரசிததினால்) எயயப்பட்டவையாய் மேன் மேல் வருகிற கொடியஅமபுகள் தன்னுடமபிற்படாதபடி (அவற்றைக் கைப் பற்றி அவை) திரும்பி அவன்மேற்போய விழுமாறு வீசி யெறிந்து விட்டு, ஆஙகு - அதன் பின்பு, அவன்மிடல் தட தோ பூணட பேயொடு - அவனது வலிமையுள்ள பெரிய தேரிற் கட்டிய பேய்களையும், சாரதி - தோப்பாகனையும், தரை பட புடைததான்-கீழ்விழுந்திறகுமாறு அடிததிட்டான்; (எ-று.)

தரை என்ற சொல - (பொருள்களைத) தரிப்பது என்று, காரணப் பொருள்பெறும். பி - ம்:—[1]விட்டதடந்தேர். [2]மாவொடு. (சஙு)

சஙூ —இந்திரசித்து வேறொருதேரின்மிது ஏறி அநுமான்மேல் அம்பு எய்தல்.

ஊழிக் காற் [1]றன்ன வொருபரித் தேரவ ணுதவப்
பாழித் தோளவ னத்தடந் தேர்மிசைப் பாய்ந்தா
னாழிப் பல்படை [2]யனையன வளப்பருஞ் சரத்தால்
வாழிப போர்வலி மாருதி மேனியை மறைத்தான்.

(இ - ள்.) (இஙஙனம் தேர்க்குதிரைகளும சாரதியும் அழிந்துவிடவே.), ஊழி காற்று அன்ன ஒரு பரி தோ அவண் உதவ - சுற்பாந்தகாலத்துப்பிரசண்டமாருதத்தைப் போன்ற குதிரைகள் பூட்டிய வேறொருதேரை அப்பொழுது [அவ்விடததில] (வேறொருதோப்பாகன் அருகிற் செலுததிக்கொண்டு வந்து) உதவ, பாழி தோளவன் - வலிமையுள்ள தோள்களையுடையவனான இந்திரசித்து, அ தட தேர்மிசை பாய்ந்தான் - (இநதத்தேரினின்று) அநதப் பெரியதேரின்மீது பாய்ந்து ஏறி, ஆழிபல படை அனையன அளப்பு அருஞ் சரத்தால் - அநேகம் சக்கராயுதஙகளைப் போன்றனவான அளவிடுதற்கு அரிய [மிகப்பல] அம்புகளினால, வாழ இ போர் வலி மாருதி மேனியை மறைததான் - (எப்பொழுதும் அழிவின்றி) வாழ்பவனும இப்படிப்பட்ட [கீழ்க்கூறிய] யுத்தசாமர்ததியத்தையுடையவனுமான அநுமானது உடம்பை மூடினான்; (எ - று.)

அநுமானது உடமபு மறையுமபடிமிகுதியாகப் பாணப்பிரயோகஞ் செய்தன னென்பதாம. பிரளயகாலத்திற் பெருஙகாற்று எழுந்து வீசையொடுவீசி உலகத்தையழிக்கு மென்க. ஊழிககாற்று, பரிகளும் தேர்க்கும் உவமையாகத்தக்கது; விரைவிலும கொடுமையிலும உவமம். ஒரு தேர் என இயையும; இது, இந்திரசித்தினுடன் வந்த சேமத்தேர்

களிலொன்று. பாழி - பெருமையுமாம். பிரமன்முதலிய தேவர்களனைவரும் தம் தமது படைக்கலத்தால் அழியாதபடி அநுமானுக்கு வரமளித்துள்ளாராதலால், அவனையழிததற்கு எய்த இந்திரசித்தின் அம்புகட்குத தேவாதிதேவனான திருமாலின் சக்கராயுதத்தை உவமைகூறுதல் ஏற்கும். 'பலசக்கராயுதம்' என்றது, இஃபொருளுவமை. பி - ம்—[1]என்ன. [2]அனையவன்.(சச)

சரு.—அநுமான் பாய்ந்து இந்திரசித்தின் வில்லை முறித்தல்.

உற்ற வாளிக ளுரத்தடங் கின[1]வுக வுதறுக்
கொற்ற மாருதி யனையவன் றேர்மிசைக் குதித்துப்
பற்றி வன்கையாற் பறித்தெழுந் துலகெலாம் பலகான்
முறற வென்றபோர் மூரிவெஞ் சிலையினை முறித்தான்.

(இ - ள.) கொற்றம மாருதி - வெற்றியையுடைய வாயுகுமாரனான அநுமான்,—உற்ற-வந்துபட்டவையாய், உரததுஅடகின - (தன்) மாபிற பதிந்தவைகளான, வாளிகள் - (இந்திரசிததின்) அம்புகளெல்லாம், உக கீழே சிந்திவிழும்படி, உதறு - உதரித்தளளிவிட்டு, அனையவன் தேர்மிசை குதிததது-அவ்விந்திரசித்தின் தேரின்மேல் எழும்பிப்பாய்ந்து, உலகு எலாம் பல கால் முற்ற வென்ற போர் மூரி வெம் சிலையினை உலகனைவையெல்லாம் பலமுறை முடியசசயிதத போர்வலிமையையுடைய கொடிய (அவனது) வில்லை, வல் கையால் பற்றி பறித்து - (தனது) வலியகையினால் பிடித்துப் பிடுங்கிக்கொண்டு, எழுந்து - எழுமபி வெளியே வந்து; முறிததான் - (அவ் வில்லைக கைகளால் ஒடித்தெறிந்துவிட்டான்; (எ - று.)

'உலகெலாம் பலகால் முற்றவென்ற'—முன்னும் (உஅ-ஆம் கவியில்) "முககா லுலகம் ஒரு மூன்றையும் வென்று முற்றி" என்றார். பி - ம்:—[1]உள.

சசு.—உடனே இந்திரசித்து வேறொரு சிறந்தவில்லை யெடுத்துக்கொள்ளுதல்.

முறிந்த வில்லின்வல் லோசைபோய் முடிவதன் முன்னர்
[1]மறிந்து போரிடை வழிகொள்வான் வயிரவாட் படையாற்
செறிநத வான்பெரு [2]மலைகளைச் சிறகறச் செயிரா
வெறிந்த விந்திர னிட்ட [3]வார் சிலையினை யெடுத்தான்.

(இ - ன்.) முறிந்த வில்லின் வல் ஓசை போய் முடிவதன் முன்னர் வில்முறிபடுகையிலுண்டான வலிய ஒலி நீணடுசென்று ஓய்வதற்கு முன்னே,—(இந்திரசித்து)—போரிடை மறிந்து வழிகொள்வான் - (முன்பு) யுததத்தில்தோற்று வசப்படுபவனான, வயிரம்வாள் படையால் செறிந்த வான் பெருமலைகளை சிறகு அற செயிரா எறிந்த இந்திரன் - வச்சிராயுதமென்கிற பிரகாசமுள்ள (தனது) ஆயுதத்தைக் கொண்டு வலிமையிக்க ஓங்கிய பெரிய மலைகளை இறகுகளற்றுப்போம்படி கோபகொண்டு துணித்தவனான தேவேந்

திரன், இட்ட - திறையாககொடுத்த [இழந்துவிட்ட என்றபடி], வார் சிலையினை - நீண்டவில்லை, எடுத்தான் - கையிலெடுத்துக் கொண்டான்; (எ - று.)

'வழிகொள்வானாகிய இந்திரன் சிலையினை' முடிவதன் முன்னர் எடுத்தான் என்றுகூட்டுக. படையால் எறிந்த, மலைகளை யெறிந்த, சிறகு அறவெறிந்த, செயிராவெறிந்த என்று இயையும். அந்த வில் ஒடிக்கப்பட்டவுடனே வேறுவில்லெடுத்துக் கொண்டானென்ற மிக்க விரைவைக் காட்டுதலாகு, 'முறிந்தவில்லின் வல்லோசைபோய முடிவதன்முன்னர் எடுத்தான்' என்றார். இதில், அவ்வில்லொடிந்த வல்லோசை மிகநீண்டு சென்றதென அவ்வில்லின் வலிமையும் விளங்கும். பி - ம்:—[1]மறிந்துபாரிடை வழிக்கொளா. [2]சிறையற மலைகளைச் செயிரா. [3]வான்.

இசசெய்யுள் - முந்தினசெய்யுளோடு அந்தாதிதொடை யுடையது; மேல் ருக, ருங, ருசு, ருகூ, சுஅ-ஆங் கவிகளையும் இவ்வனங் காண்க. (சசு)

சஎ.—இந்திரசித்து எய்த அம்புகளினால் அநுமான் சிறிதுதளர்தல்.

நூறு நூறுபோர் வாளியோர் தொடைகொண்டு நொய்தின்
மாறில் வெஞ்சினத் திராவணன் மகன்சிலை வளைத்தா
னூறு தன்னெடு மேனியிற் பலபட வொல்கி
யேறு சேவகன் றூதனுஞ் சிறிதுபோ திருந்தான்.

(இ - ள்.) மாறு இல் வெம் சினத்து இராவணன் மகன் - (எப்பொழுதும்) மாறுதலில்லாத கொடிய கோபமுள்ள இராவணனுடைய புதிதிரனான இந்திரசித்து, போர் வாளி நூறு நூறு ஓர் தொடை கொடு - போரிற்சிறக்கிற நூறுநூறுஅம்புகளை ஒருதொடுப்பிலேகொண்டு [தொடுக்குந்தரம் ஒவ்வொன்றிலும் நூறறுக்கணக்கான அம்புகளைத் தொடுப்பவனாய் என்றபடி], நொய்தின் - விரைவில், சிலை வளைத்தான் - அவ்வில்லை வளைத்து எய்தான்; (அந்த மிகப்பல அம்புகளினால்), தன் நெடு மேனியில் - தனது பெரிய உடம்பிலே, ஊறு பல பட - பலபுண்களுண்டாக, (அதனால்), ஏறு சேவகன் தூதனும் - (அனைவரினுஞ்) சிறந்த வீரனான இராமபிரானது தூதனாகிய அநுமானும், சிறிதுபோது ஒல்கி இருந்தான் - சிறிதுபொழுது தளர்ந்து ஓய்ந்திருந்தான்; (எ - று.)

நூறுநூறு என்பதற்கு நூற்றினாற்பெருகிய நூறுஎன விரித்து, பதினாயிரமென்று உரைப்பாரு முளர். எயதல் என்ற காரியத்தை 'சிலைவளைத்தல்' என்ற காரணச சொல்லாற கூறியது, உபசார வழக்கு. ஏறுசேவகன் - மகாவீரன்; வினைதொகை. உவமைத் தொகையாக, ஆணசிங்கம் போன்ற வீரனென்று உரைப்பாரு முளர். ஒல்கியிருத்தல் - ஆயாசமுற்றிருத்தல். ()

சஅ —அநுமான் உடனே அயர்ச்சிதீர்ந்து ஒருமரத்தினால் இந்திரசித்தின் தலையி லடித்தல்.

ஆர்த்த வானவ [1]ராவலங் கொளீஇயறி வழிந்தார்
பார்த்த மாருதி தாருவொன் றங்கையிற் பறறித்

தூர்த்த வாளிகண் [2]முறைமுறை துணிபடச் சுற்றிப் [ன்.
போர்த்த பொன்னெடு மணிமுடித் [3]தலையிடைப் புடைத்தா

(இ - ள்.) ஆர்த்த வானவர் - (முதலில் அநுமான் இந்திரசித்தின் வில்லை முறித்திட்டமைகண்டு மகிழ்ச்சியால்) ஆரவாரஞ்செய்த தேவர்கள், ஆவலம் கொளீஇ அறிவு அழிந்தார் - (உடனே அநுமான் இந்திரசித்தின் அம்புகளால் ஊறுபட்டு அயர்வுற்றதனைப் பார்த்துத்) துன்பங்கொண்டு அறிவுகலங்கினார்கள்; பார்த்த மாருதி - அதுகண்டஅநுமான், (உடனே அயர்ச்சிதீர்ந்து), தாரு ஒன்று அம் கையில் பற்றி - ஒருமரத்தை (த் தனது) அழகிய கையிலேஎடுத்துகொண்டு, தூர்த்த வாளிகள் முறைமுறை துணி படசுற்றி - (இந்திரசித்து) எய்துகிறப்புகிற அம்புகளெல்லாம் வரிசைவரி சையாகத் துண்டுபட்டொழியும்படி (அந்த மரத்தைச) சுற்றிவீசி, பொன் மணி நெடு முடிபோர்த்த தலையிடைப்புடைத்தான் - பொன்னிழைச்செய் யப்பட்டு மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற நீண்ட கிரீடத்தைத்தரித்த (இந் திரசித்தின்) தலைமேல் (அம்மரத்தைக்கொண்டே) அடித்தான்; (எ - று.)

ஆவலம - அவலம் என்பதன் நீட்டல்விகாரம்; கிலேசம்; துயரம் என்று பொருள். கொளீஇ—கொண்டு. மயிர்முடியப்படுவதுபற்றி, சிர சுக்கு 'முடி' என்று பெயர். அது - இடவாகுபெயராய், சிரசிலணியுங் கிரீ டத்தைக் குறித்தது. பி - ம் —[1]ஆகுலங்கொண் டறிவழிந்தார். [2]துணி படமுறைமுறைசுழற்றி. [3]தலத்திடைப். (சஅ)

சகூ.—இந்திரசித்து தலையிலடிபட்டுத் தளர்தல்.

பார மாமர முடியுடைத் தலையிடைப் படலுந்
தாரை யின்னெடுங் கற்றைகள் [1]சொரிவன தயங்க
வார மாலவரை யருவியி [2] னழிகொழுங் குருதி
சோர நின்றுட லுளங்கின னமரரைத் [3]தொலைத்தான்.

(இ - ள்.) பாரம மா மரம - கனமுள்ள பெரிய அந்தமரம், முடி உடை தலையிடை படலும் - கிரீடத்தையுடைய தன்தலையின்மேற் பட்ட வளவிலே, நெடுங கற்றைகள் தாரையின் சொரிவன தயங்க - (அக்கிரீட த்திலுள்ள மாணிக்கங்களின்) நீண்டஒளிததொகுதிகள் ஒழுங்காக மேற் சொறிவன வற்றைப்போன்று விளங்கும்படி, மால் வரை அருவியின் அழி கொழுங குருதி ஆரசோர - பெரியமலையிலிருந்து வருகிற நீரருவிபோல வழிகிற கொழுமையான இரத்தம் மிகுதியாகப்பெருக, நின்று உடல் துளங் கினன - (ஒன்றுஞ்செய்யமாட்டாது) அயர்ச்சியுற்று நின்று உடம்பு நடுங் கினான்: (யாவனெனில்),—அமரரை தொலைத்தான் - தேவர்களை வென்றிட் டவனான இந்திரசித்து; (எ - று.)

இரண்டாமடிக்கு - தலையிலுள்ள நீண்ட செம்பட்டமயிர்த்தொகுதிகள் ஒழுங்காகக கீழ்விழுவனபோன்று விளங்கவென்று உரைப்பினும் அமையும். கற்றை - கதிர்ததொகுதியும், மயிர்ததொகுதியும். கிரீடத்திலுள்ள செந்நிற மான மாணிக்கங்களின் நீண்ட ஒளிததொகுதிகள் கீழ்நோக்கிவிழுவதும்,

தலையிலுள்ள செம்பட்டமயிர்தொகுதி அவிழ்ந்து உடம்பின்மேல்விழுத லும், இரத்தினகிரீடதையணிந்த சிரசிலிருந்து மிகுவழிகிற இரதப் பெருகுகுக்கட்கு உவமையாதற்கு ஏற்கும்; இனி, மழைததாரைகளின் நீண்ட தொகுதிகள் சொரிவனபோல வென்றலும ஒன்று. ஆரசசோர என இயை யும். உடல் துளங்கினன் - உடல் கலங்கினன் எனினுமாம. பி - ம்:[1]சுற் றியதயங்க. [2]இழி. [3]துரந்தான். (சகூ)

ரு0.—இந்திரசித்து அயர்ச்சிதீர்ந்து மீண்டும் அநுமான்மேல் அம்புஎய்தல்.

நின்று போதம்வந துறுதலு நிறைபிறை [1]யெயிற்றைத்
தின்று தேவரு [2]முனிவரு மவுணருந் திகைப்பக்
குன்று போனெடு மாருதி யாகமுங் குலுங்க
வொன்று போல்வன வாயிரம் பகழிகோத் துய்த்தான்.

(இ - ள்.) நின்று-(அங்ஙனமே இந்திரசித்து சிறிதுபொழுது) அயர்சசி யுற்றுநின்று, போதம் வந்து உறுதலும் - (பின்பு) அறிவு வந்து கூடின வளவிலே, நிறை பிறை எயிற்றை தின்று - தன்வாயில் நிறைந்துள்ளன வும், பிறைசசந்திரன்போன்றனவுமான பற்களைக கடித்து, தேவரும முனி வரும் அவுணரும் திகைப்ப-(போர்காணகிற) தேவர்களும தேவரிஷிகளும அசுரர்களும் திகைப்படைய, குன்று போல நெடு மாருதி ஆகமும் குலுங்க- மலைபோன்ற [வலியபெரிய] உயர்ந்தவடிவமுளள அநுமானுடைய உடம் பும் நிலைகலங்குமபடி, ஒன்று போல்வன ஆயிரம் பகழி கோத்து உய்த்தான்- ஒன்றுபோலவே எலலாம உள்ளனவான ஆயிரம் அம்புகளைத தொடர்சசியா கத் தொடுத்துவிட்டான; (எ - று.)

பற்களைக்கடித்தல், கோபகுறி. முனிவர்களும் அசுரர்களும் பதினெட் டுதேவகணங்களிற் சேர்ந்தவர்க ளாதலால, தேவர்களோடொப்பப் போர் காண்பவராகக கூறப்பட்டனர். 'குன்று போல' என்ற உவமை மாருதிக்கும் அவனது ஆகத்துக்கும் ஏற்கும். நிறை பிறை என்ற இரண்டும், எயிற்றுக்கு அடைமொழி. நிறையெயிறு-வினைதொகை. பிறையெயிறு-உவமதொகை. பிறை-கலைகுறைந்த சந்திரன். பி - ம்—[1]எயிறு [2]அவுணருமுனிவரும். (ரு0)

ரு௧.—அநுமான் இந்திரசித்தைத் தேரோடு எடுத்துஎறிதல்.

உய்த்த வெஞ்சர முரத்தினுங் [1]கரத்தினு மொளிப்பக்
கைத்த [2]சிந்தையன் மாருதி [3]நனிதவ கனன்றான்
[4]வித்த கன்சிலை விடுகணை விசையினுங கடுகி
[5]யத்த டம்பெருந் தேரொடு மெடுத்தெறிந் தார்த்தான்.

(இ - ள்.) உய்தத வெம் சரம் - (அங்ஙனம் இந்திரசித்து) செலுத தின கொடிய அம்புகள், உரத்தினும் கரத்தினும ஒளிபப - (தனது) மார்பிலும் கைகளிலும அழுந்த, மாருதி - அநுமான், கைத்த சிந்தை யன் - (இப்படி இவனோடு எவ்வளவுநேரம் போர்செயவது என்று) வெறுத்த மனமுடையவனாய, நனி தவ கனன்றான் - மிகவும் அதிகமாகக

கோபித்து, வித்தகன் சிலை விடுகணை விசையினும் கடுகி - ஞானசொரூபியான ஸ்ரீராமபிரானது வில்லினால் எய்யப்படுகிற அம்பின் வேகத்தைக்காட்டிலும் வேகமாகப் பாய்ந்து, அதட பெருந் தேரொடும் எடுத்து எறிந்து ஆர்த்தான் - அந்த மிகப்பெரிய தேருடனே (இந்திரசித்தைத்) தூக்கி மேலே எறிந்து (களிப்பினால்) ஆரவாரஞ்செய்தான்; (எ - று.)

காப்பியத்தலைவனான இராமபிரானது கோதண்டத்தா லெய்யப்படுகிற அம்பினது வேகம் பிரசித்த மாதலால், 'அதனினும் வேகமாகப் பாய்ந்து' என இராமதூதனதுவேகத்தை விளக்கினார். ஆர்த்தான் - தனது செய்திறம் தோன்றக் கொக்கரித்துக் கர்ச்சித்தான் என்றபடி. பி - ம்:—[1]சிரதினும். [2]சிநதனை. அதிகமுத. [4]வித்தகச. [5]அதுதுடைத். (௫௧)

௫௨.—இந்திரசித்து தேருடன் வானத்தில் நெடுந்தூரஞ்சென்று கீழ்வீழ்தல்.

கண்ணின் மீச்சென்ற விமையிடைக் கலப்பதன் முன்ன
மெண்ணின் மீச[1]சென்ற வெறுழ்வலித் திறலுடை யிகலோன்
புண்ணின் மீசசென்று பொழிபுனல பசும்புலால பொடிபப
விண்ணின் மீச்சென்று தேரொடும் பாமிசை விழுந்தான்.

(இ - ள்.) கண்ணின் மீ சென்ற இமை இடை கலப்பதன் முன்னம் - கணைகளினமேலுள்ள இமை கீழிமையிலே வந்துகூடுவதன்முன்னே [கண்ணிமைப்பொழுதாகிய ஒருமாத்திரைப்பொழுதினுள்ளே என்றபடி], எண்ணின் மீ சென்ற எறுழ் வலி திறல் உடை இகலோன்-அளவுக்குமேற்சென்ற [வரம்புகடந்த] மிகபலத்தையும் பராக்கிரமத்தையு முடைய பகைவனான இந்திரசித்து, தேரொடும் விண்ணின் மீசென்று - (அநுமான் எதெதெறிந்த விசையினால்) தேரோடு வானத்தின்மேலெல்லையிற் போய், புண்ணின் மீ சென்று பொழி புனல் பசும்புலால் பொடிப்ப பாமிசை விழுந்தான் - புண்களின்மேலே பெருகிவழிகிற இரத்தம் புதிய புலால்நாற்றத்தோடு வெளிப்படும்படி தரையில் விழுந்திட்டான்; (எ - று.)

'எண்ணின்மீசசென்ற' என்பதற்கு மனத்திற்கு எட்டாது அதனெல்லையைக்கடந்துபோயுள்ள வென்று உரைத்தலு மொன்று. 'புண்ணின் மீச சென்றுபொழிபுனல்' - புண்ணீர். இனி, மூன்றுமடிக்கு - புண்களின்வழியாக இரத்தமும் புதிய தசையும் வெளிப்படுமபடி என்று உரைப்பினுமாம். பி - ம்:—[1]சென்றது. (௫௨)

௫௩.—இந்திரசித்து வானத்தில் எழுதலும், அநுமான் அவனுடைய சேமத்தேர்களை யெல்லாம் சிதைத்தலும்.

விழுந்து பாரடை யாமுன மினனெனு மெயிற்றா
னெழுந்து மாவிசும பெய்தின னிடையவன் படையிற்
செழுந்தண் மாமணித் தோரகுலம யாவையுஞ் சிதைய
வுழுந்து போவதன் முன்னெடு மாருதி யுதைத்தான்.

(இ - ள்.) விழுந்து பா அடையா முனம - தேரொடும்கீழ்விழுந்து பூமியைச சேர்தற்குமுன்னே, மின் எனும எயிற்றான் - மின்னல்போல விளங்கும பற்களையுடையவனான இந்திரசித்து, எழுந்து மா விசும்பு

எய்தினன் - (சின்னபின்னப்படுகிற அதேரினின்று) எழும்பிக் கரிய ஆகாயத்திற் சேர்ந்தான்; இடை - (இவ்வனம தேரோடு வானததிற சென்று கீழ் விழுந்து மீண்டும் அவன்மாத்திரம் வானததிலெழுகிறபொழுதின்) இடையிலே, நெடு மாருதி - பெருவடிவமுடைய அநுமான், அவன் படையில் செழுந் தண் மா மணி தோ குலம் யாவையும் சிதைய-அவனுடைய சேனையிலுள்ள பெரிய குளிர்ந்த சிறந்த இரத்தினங்கள்பதித்த தேர்க்கூட்டங்களெல்லாம சிதையும்படி, உழுந்து பேர்வதன்முன் உதைததான் - ஓர் உளுந்து உருளுமளவினுளளே [வெகுவிரைவிலே] உதைதது அழிததான்; (எ - று)

இந்திரசிதது தேரி லிருநது போர்செய்யுமளவும் அவனைவெல்லுதல் முடியாதென்ற நோககததால் அநுமான் அவனேறியுளள தோ சிதையுமாறு அதனை யெடுதது வானததிலெறிநததுமன்றி அத்தேர் கீழ்விழுதறகு முன்பு மற்றைசசேமததேர்களையும உதைத்துச சிதைத்திட்டன னென்க. 'விழுந்து பாரடையாமுனம' என்பதும், 'உழுநது பேர்வதன்முன்' என்பதும் - விரைவைக காட்டும்; உயர்வுநவிற்சி. உழுந்து - நவதானியங்களிலொன்று. தண மணி-குளிரநத ஒளியுள்ள இரததினம. (ருஙு)

ருச.—பின்பு இந்திரசித்து பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்கக் கருதுதல்.

ஏறு தேரில [1]னெதிர்நிறகு முரணில [2]னெரியிற்
சீறு வெஞ்சினந் [3]திருகுகின் றுனறிரி வானும்
வேறு செயவதோ வினைபிறி தின்மையின் விரிஞ்சன்
மாறி லாப்பெரும் படைக்கலந் தொடுப்பதாய் மதித்தான்.

(இ - ள்.) ஏறு தோ இலன் - (தான் மீண்டும்) ஏறுதற்கு ஒருதேர் இல்லாதவனும், எதிர் நிறகும் முரண் இலன் - மீளவும் அநுமானெதிரிலே நின்று போர்செய்தற்கு உரிய வலிமையிலலாதவனுமாய், எரியின் சீறு வெம் சினம திருகுகின்றான் திரிவானும - நெருப்புப்போலத் தபிககிற வெவ்விய கோபததால் மாறுபடுகின்றவனாய (வானததிற) சஞ்சரிப்பவனான இந்திரசித்தும், வேறு செயவது ஓர் வினை பிறிது இன்மையின் - (அநுமானுக்கு) மாறாகத் தான் செய்யததகக செயல் வேறொன்றும் இல்லாமையினால், மாறு இலா பெரும் விரிஞ்சன் படைககலம தொடுப்பது ஆய்மதித்தான் - எதிரில்லாததான பெருமையையுடைய பிரமனது அஸ்திரததை (அநுமான்மேல்) தொடுததுவிடுவதாக நினைத்தான்; (எ - று.)

விரிஞ்சன் என்ற வடமொழிப்பெயா - (பிராணிகளைப்) படைககின்றவனென்றும், அன்னபபறவையாற சுமககப்படுகின்றவனென்றும் (வி-பறவை) காரணப்பொருளபெறும். மாறு இலா - ஒப்பிலலாத எனினுமாம். பி - ம்.—[1]எதிரிற்குமுரனிலன். [2]நெறியிற். [3]திருகினனந்தரந்திரிவான். (ருச)

ருரு.—இந்திரசித்து பிரமாஸ்திரத்தைப் பூசித்து எடுத்தல்.

பூவும் பூநிற வயினியுந் தீபமும் புகையுந்
தாவில் பாவனை யாற்கொடுத் தருச்சனை சமைத்தான்

[1]தேவி யாவையு முலகமுந் திருத்திய தெய்வக்
கோவி னான்முகன் படைக்கலந் தடக்கையிற் கொண்டான்.

(இ - ள்.) பூவும் - மலர்களையும், புகையும்-தூபத்தையும், தீபமும்-தீபத்தையும், பூ நிறம் அயினியும் - பூநிறமுள்ள வெண்சோறாகிய நைவேத்தியத்தையும், தா இல் பாவனையால் கொடுத்து - தவறுதலில்லாத தியான வகையினாற சமர்ப்பித்து, அருசசனை சமைததான் - (பிரமாஸ்திரத்துக்குப்) பூசை செய்து, தேவு யாவையும் உலகமும் திருத்திய தெய்வம் கோவில் நான்முகன் படைககலம் தடகையில கொண்டான் - தெய்வங்களெல்லாவற்றையும உலகங்களையும் ஒழுங்காகப்படைத்த தெயவததன்மையுள்ள (திருமாலின் திருநாபிக்கமலமாகிய) சிறந்த இடததில் தோனறி வசிக்கிற பிரமனது அஸ்திரத்தைத தனது பெரிய கையி லெடுத்துகொணடான், (இந்திரசித்து); (எ-று.)

ஷோடசோபசாரங்களில் புஷ்பம் தூபம் தீபம் நைவேதயம் என்ற நான்கைக் கூறினது, பிறவற்றிற்கும் உபலக்ஷணம்; வெண்ணிறமலா சிறத்தல் பற்றி, வெணணிறம் 'பூநிறம்' எனபபட்டது. உபசாரங்களைப் பிரதியக்ஷமாகக் கொணர்ந்துகொடுததுப் பூஜித்தாகு அப்பொழுது சந்தாப்பமில்லையாதலால், மாநஸமாகக்கொண்டு அவற்றைச சமாப்பிததுப் பூஜைசெய்தனனென்க. தீபம் - விளக்கு. பாவனை - மனத்தில் ஊன்றிய சிந்தனை. தே - தேவசப்தபவம்; அது, 'தேவு' என உகாரசசாரியை பெற்றது; 'தேவியாவையு முலகமுந் திருந்தியதெய்வக் கோவில் நான்முகன்'-தெய்வநான்முகக் கொழுமுளையீன்று முக்கணீசனொடு தேவுபலநுதலி, மூவுலகம்விளைதத வுந்தி" என்ற ஆழ்வாரருளிச செயலைக காண்க. நான்முகன்படைக்கலம பிரமனைத தெயவமாகவுடைய அஸ்திரம்: பிரமனாற் கொடுததருளப்பட்ட அஸ்திரம். பி - ம்:—[1]தேவுமயாவையும். (ருரு)

ருசு.—இந்திரசித்து அநுமான்மீது பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தல்.

[1]கொண்ட கொற்றவெஞ் சிலைநெடு நாணொடு கூட்டிச்
சண்ட வேகத்த மாருதி தோளொடுஞ் [2]சார்த்தி
மண்டு ளங்கிட மாதிரந் துளங்கிட மதிதோய்
விண்டு ளங்கிட மேருவுந் துளங்கிட விட்டான்

(இ - ள்.) கொண்ட - (முன்னமே இடக்கையிற) பிடிததுள்ள, கொற்றம் வெம் சிலை - (முன்பு பலபோர்களில) வெற்றிபெற்ற கொடியவில்லினது, நெடு நாணொடு - நீண்டநாணியுடனே, கூட்டி - (அந்தப்பிரமாஸ்திரததைச) சேர்த்து, [வில்லில் அநத அம்பைத் தொடுதது என்றபடி], சண்ட வேகத்த மாருதி தோளொடும சார்ததி - கொடியவேகமுள்ள அநுமானுடைய தோள்களுடனே இயைத்து [அநுமன்தோள்களை இலககாககுறித்தது என்றபடி], மணதுளங்கி - பூமி நடுங்கவும், மாதிரம் துளங்கிட - எட்டுத்திசைகளும் நடுங்கவும், மதிதோய் விண துளங்கிட - சந்திரன்பொருந்திய மேலுலகம் நடுங்கவும, மேருவும் துளங்கிட - (பூமியின் நடுவிலுளளதான) மகாமேரு கிரியும் நடுங்கவும், விட்டான் - (அதனை) எய்தான் [பிரயோகிததான்]; (எ - று.)

தெய்வத்தன்மையுள்ள அஸ்திரத்தை அநுமானுடைய தோள்களைக்கட்டு மாறு அபிமந்திரித்து விட்டனன் இந்திரசித்து என்க. 'மண் துளங்கிட மாதிரந் துளங்கிட மதிதோய விண் துளங்கிட' என்றது - பத்துத்திசைகளும அதிராசியாலும் அச்சத்தாலும கம்பிக்க என்றபடி. 'மேருவுந் துளங்கிட' என்றது - அசைதலில்லாமையால் அசலமெனப்படுகிற மலைகளுட் பெரியதான மகாமேருவும நிலைகுலைந்து அசைய என்றவாறு. முதலடிதகு - வில்லை வளைத்து நாணேற்றியென்று உரைப்பாரு முளர். சந்திரனைக் கூறினது, மற்றைக் கிரகநக்ஷத்திரதாரகைகளுக்கும உபலக்ஷணம். பி - ம்:—[1]கொண்டு. [2]சார, சாதத்தி. (ருசு)

ருஎ.—அந்த அஸ்திரம் நாகவடிவமாய் அநுமானது தோள்களைக் கட்டுதல்.

தணிப்ப ரும்பெரும் படைக்கலந் தழலுமிழ் தறுகட்
பணிக்கு லங்களுக் கரசின துருவினைப பற்றித்
துணுக்க முற்றுயர் கலுழனு நடுக்குறச் சுற்றிப
பிணித்த தப்பெரு மாருதி தோளகளைப பிறங்க.

(இ - ள்) தணிப்பு அரும பெரும் படைககலம் - (எவராலும) அடக்கு தற்கு அரியதான பெரிய அநத அஸ்திரமானது,—தழல உமிழ் தறுகண் பணிக குலங்களுககு அரசினது உருவினை பறறி - (கொடுமைமிகுதியால்) நெருப்பைசசொரிகின்ற அசசந்தருங கணகளையுடையபாம்புக் கூட்டங்களுககு அதிபதியான ஒருமகாநாகத்தினது வடிவதததை தான்கொணடு,—உயர் கலுழனும் துணுக்கம் உறறு நடுக்குஉற - சிறந்த கருடனும திடுக்கிட்டுநடுகககமடையும்படி, அ பெரு மாருதி தோள்களை - அந்தப பெரிய அநுமானுடைய தோள்களை, சுறறி - சூழ்ந்து, பிறங்க பிணித்தது - நனறுகககட்டியது [இறுககககட்டிற்று என்றபடி]; (எ - று.)

பாம்புகளை எளிதில் அழிக்கும் தன்மையதான கருடனும் இப்பெரும் பாம்பின் வடிவதததைக கணடு அஞ்சி நடுங்குமென, நாகவடிவு கொணட பிரமாஸ்திரததின் சிறப்பைக கூறியவாறும. பிறங்கப் பிணித்தது - (தன்வடிவு அததோள்களிலே பதிந்து) விளங்கும்படி அழுந்தககட்டியது எனினுமாம்; அன்றி, பிறங்க - (அஸ்திர மாதலால் தனது உருவம் திவ்விய ஒளி கொணடு) பிரகாசிகக என்றலுமாம். (ருஎ)

ருஅ.—அதனால் அநுமான் சாய்தல்.

திண்ணென் யாக்கையைத் திசைமுகன் படைசென்றுதிருக
வண்ணன் மாருதி [1]யன்றுதன் பின்சென்ற வறத்தின்
கண்ணி னீரொடுங் கனகதோ ரணததொடுங் கடைநா
டண்ணென் மாமதி கோளொடுஞ் சாய்ந்தெனச்சாய்ந்தான்.

(இ - ள்.) திண்ணென் யாக்கையை - உறுதியுளள (அநுமானுடைய) உடம்பை, திசைமுகன் படைசென்று திருக - அந்தப்பிரமாஸ்திரம் போயசசுற்றிக கட்டவே,—அண்ணல் மாருதி - பெருமையையுடைய அநுமான்—கடைநாள் - கற்பாந்தகாலத்திலே, தண்ணென் மா மதி கோளொடும் சாயந்து

என - குளிர்ச்சியான பெரிய [பூர்ண] சந்திரன் (ராகுவென்கிற) பாம்புடனே (வானத்தினின்று தவறிக்) கீழ்விழுந்தாற்போல,—அன்று தன் பின் சென்ற அரக்கின் கண்ணின் நீரொடும - அன்றைதினததில தன் பின்னே வந்த தருமதேவதையின் கண்களினின்று பெருகிய நீரோடு, கனகதோரணதொடும் சாய்ந்தான்-பொன்மயமான (அவ்வசோகவனத்து) வெளி வாயிலுடனே தன் உடம்பு படியுமாறு சாய்ந்து விழலானான்; (எ - று.)

தோரணம - வெளிவாயில். அசோகவனத்து வெளிவாயிலில் நின்று அரக்காகளோடெல்லாம பொருது அவாகளை அழித்த அநுமான் பிரமாஸ்திரததாற் கட்டுப்பட்டு அவ்விடததிலே சாய்ந்திட்டன னென்பார், 'கனகதோரணததொடும சாய்ந்தான்' என்றார். அவ்வெளிவாயிலிலே சாய்ந்திடலானனென உருபுமயககமாகக கருததுக்கொளக. தயை சத்தியம் பரிசுத்திமுதலிய நற்குணங்களில்லாதபடி ராக்ஷசராசனான இராவணன் அரசாட்சிசெலுததிவருகிற இலங்காபுரியில் வெகுகாலமாக நுழையாதிருந்த தருமதேவதையானது, சீதையிருக்கிற விடததை நாடிகொண்டு இராமனுக்குச் செய்தி கூறி அவனுக்குத் துணை நின்று அரக்காகளையெல்லாம் அழிகக்போகிற அநுமான் அவ்விலங்கையிற் பிரவேசிக்கும்போது தானும இனிசசெல்லலாமென்று அவன் பின்னே தொடாநது சென்ற தாதலால், 'அன்று தன்பின் சென்ற அறம்' எனப்பட்டது; மேலும் (சுஉ - ஆஞ் செய்யுளில்), "அறததுககு ஆங்கு ஒருதனித்துணையாநின்ற அநுமான்" என்பது காண்க. இலங்கனம் தான் சிறிது தலையெடுக்கலாமென்று சமயம்பார்ததது அனுமானுடனே சென்ற அறக்கடவுள அங்கு அவன் பிரமாஸ்திரத்தாற் கட்டுப்பட்டுச சாய்தலைக் கண்டு வருந்திப் புலமபிக கண்ணீரபெருக்கியதென்பாா, 'அறததின் கண்ணினீரொடுஞ் சாய்ந்தான்' என உடனிகழ்ச்சியணி தோன்றக கூறினா. கற்பாந்தகாலததிலே கிரகநக்ஷத்திரதாரகைகள வானததினின்று தவறிக் கீழ்விழுந்திடுதல், இயல்பு. கலை நிறைந்து விளங்குகிற சந்திரமண்டலம் - திவ்வியவொளியுடன் விளங்குகிற [illegible]ானது பெரிய வடிவுக்கும், சந்திரனைப் பற்றிக்கொள்கிற பாம்புவடிவமான ராகு - அநுமானுடம்பைச சூழ்ந்துகட்டிய நாகபாசததுககும் உவமை.

ஒவ்வொருசமயத்தில் சந்திரனைமறைக்கிற பூமியின்சாயையும், சூரியனை மறைககிற சந்திரனதுசாயையு மாகிய இராகு கேது வென்னும சாயாகிரகங்களைக் கரும்பாம்பு செம்பாம்புகளாகக கூறுதல், கவிசமயம். அன்றியும், பாற்கடல்கடைகையி லுண்டான அமிருததததை எடுத்துககொண்ட திருமால் மிக அழகிய மோகினியென்னும் பெண்வடிவததால் அசுராகளை மயகககித் தேவாகட்குமாத்திரம அமிருதத்தைப பகிர்ந்துகொடுததது வருகையில், இராகு வென்னும் ஓா அசுரன்தான் இருததற்கு உரிய அசுரர்கூட்டத்தை விட்டுத தநதிரமாகத தேவாகோட்டியினிடையிலேபுகுகுக் கையேற்று அமிருததத்தை வாங்கியுண்ண, அதனைச் சந்திரசூரியாகள் குறிப்பித்தமாத்திரத்தில்

எம்பெருமான் அவனை அகப்பையாலடித்துத தலைவேறு உடல்வேறாக்க, அமிருதமுண்டதனால், உயிர்நீங்காத அததலையும உடலும் விஷ்ணுவின் அனுக்கிரகத்தால் இராகுகேதுகளென இரண்டுகிரகங்களாகிச சூரியன் முதலிய ஏழுகிரகங்களோடு சேர்ந்து, தமமேற் கோள்சொன்ன சந்திராதித்தர்க்குப் பகையாய்ப் பாமபுவடிவுகொண்டு சிற்சிலகாலத்தில் அவர்களைகௌவுகின்றன வென ஒருபுராணகதையும உண்டு. இங்ஙனம மறைக்கிற அல்லது பற்றுகிற காலமே கிரஹணகால மெனப்படுகின்றது.

திண்ணெனல - வலிமைக்குறிப்பு. தணணெனல் - குளிர்சசிக குறிபபு. சந்திரன் சீதகிரணனாதலால், 'தணணென்மாமதி' எனப்பட்டான். பி-ம்:— [1]அயர்வொடுமாழிசூழ்தலததில். [2]தண்ணமாமதி. (௩அ)

௩௯.—பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுச்சாய்ந்த அநுமானை வலியோடுங்கினனென்று இந்திரசித்து எண்ணுதல்.

சாய்ந்த மாருதி சதுமுகன் படையெனுந் தன்மை
யாய்ந்து மற்றித னாணையை யவமதித் [1]தகற
லேய்ந்த தன்றென வெண்ணினன் கண்முகிழ்த் திருந்தா
னோய்ந்த தாமிவன் வலியென வரக்கன்வந் துற்றான்.

(இ - ள.) சாய்ந்த மாருதி - (இங்ஙனம்) கீழ்விழுந்த அநுமான்,—சதுமுகன் படை எனும் தன்மை ஆய்ந்து - (தன்மேற் பிரயோகிக்கப் பட்டது) பிரமாஸதிரமென்னுந் தன்மையை ஆராயநதறிந்து, இதன் ஆணையை அவமதித்து அகறல் ஏய்ந்தது அன்றுஎன எணணினன் - தெய்வத்தனமையுள்ள இந்த அஸதிரததின் கட்டளையை அலக்ஷியஞ செய்து இதனைவிட்டு விலகுதல தக்கதன்று என்று எணணினவனாய, கண முகிழ்த்து இருந்தான்- (அந்த அஸதிரததுககுக் கட்டுப்பட்டுக) கணகளை மூடிக்கொண்டிருந்தான்; (அதுகணடு), அரககன் - இந்திரசிதது, இவன் வலி ஓய்ந்ததுஆம் எனவந்து உற்றான் - 'இவ்வாநரனுடைய வலிமை ஒழிந்துவிட்டது' என்று எணணி அருகில் வந்து நெருங்கினான்; (எ - று.)

வரபலத்தாற் பிரமாஸ்திரத்தையுங கடககும வல்லமையுடையனாயினும், அநுமான், தேவர்களைப் பெருமைப்படுததவேணடு மெனனும் பெருந்தகைமையினால், தெயவிகசக்தியுள்ள அஸதிரததுககு வசப்பட்டிருந்தனனென்க. அவமதிதது என்றதில், 'அவ' என்றது - எதிரமறைபபொருள் குறிக்கும் வடமொழியுபசருக்கம. பி - ம் —[1]அகல்கை. (௩௯)

௫௦.—அரக்கர்கள் வந்து திரண்டு ஆரவாரித்தல்.

உற்ற காலையி னுயிர்கொடு திசைதொறு மொதுங்கி
யறற நோக்கினா நிற்கினற வாளெயிற் றரக்கர்
சுற்றும வந்துடல் சுற்றிய தொளையெயிற் றரவைப்
பற்றி யீர்த்தன ரார்த்தனர் தெழிததனர் பலரால்

(இ - ள்.) உற்ற காலையின் - (அவனைனம் இந்திரசித்து) வந்து சமீபித்த போது,—உயிர் கொடு திசைதொறும் ஓடுவகி அற்றம் நோக்கினர் நிரகின்ற வாள் எயிறு அரக்கர் பலர் - (அநுமானுடைய போரைப் பொறுக்கமாட்டாமல்) அரிதில் உயிர் தப்பி எல்லாததிக்குக்களிலும் ஓடி ஒளித்து (அவ்வநுமானுக்குச்) சோர்வுநேருஞ் சமயதைத எதிரபார்த்து நிற்கின்றவர்களான வாள் போலுவகூரிய பற்களையுடைய பல இராககதர்கள், சுற்றுய வந்து - எல்லாத் திசைகளினின்றும் வநது அவ்வநுமானைச சூழ்ந்துகின்று, உடல் சுற்றிய தொளை எயிறு அரவைபபறறி ஈாததனா - அவ்வநுமானுடம்பைச சூழ்ந்துள்ளதான துவாரம் பொருநதிய பறகளையுடைய அந்தப்பாமபைப் பிடித்து இழுத்தார்கள்; தெழிததனா - (அவ்வநுமானை) அதட்டினாகள; ஆர்த்தனர் - (மகிழ்சசியால) ஆரவாரிததார்கள; (௭ - று.)—ஆல் - ஈற்றசை.

தொளையெனினும, துளையெனினும ஒககும. அரவைப பறறி ஈர்ததனா - அப்பாமபின்வாலைப் பிடததிழுதது அநுமானுடம்பை இறுகுவாராயின ரென்க: ஈாத்தனா ஆர்த்தனா - இழுததுககட்டினாகள, தெழிததனா - (மகிழ்சசியாற) பேரொலிசெயதாகள எனறும் பதப்பொருள் கூறலாம. (௬௦)

௬௧.—இதுவும், அடுத்த கவியும் - அப்பொழுதை நிலைமையின் வருணனை.

குரக்கு நல்வலங் குறைந்ததென் றுவலங் கொட்டி
யிரைககு மாநக ரெறிகட லொத்ததெம் மருங்குந்
திரைக்கு மாசுணம வாசுகி யொததது தேவ
ரரக்க ரொத்தனா மந்தர மொததன னநுமன்.

(இ - ள்.) குரகுகு நல் வலம் குறைந்தது எனறு - இக்குரகுகினது மிகக வலிமை ஒடுவகிவிட்டதெனறு எண்ணிக களிதது, ஆவலம் கொட்டி - (எதிரியையிகழ்தறகுறிபபுத தோனற) வாயினால் ஒருவகை ஒலிசெய்து, இரைககும் - (அரககாகளனைவரும) ஆரவாரிககபபெறற, மா நகா - பெரிய அந்த இலவுகாபுரியானது, எறி கடல் ஒததது - அலைவீசியொலிககின்ற (பாற்) கடலைப் போன்றது; எ மருங்குகும திரைககும மாசுணம் - (அநுமானை) எல்லாப்பகககளிலும சுறறி இறுககுகிற அஸ்திரமாகிய அபபெரும்பாமபானது, வாசுகி ஒததது - வாசுகியெனனும மகாநாகததைப் போன்றது; அரக்கர் (அநாகபாசத்தைப பிடததிழுக்கிற) இராக்கதாகள, தேவா ஒததனா - (வாசுகியைப்பிடித்து இழுதத) தேவாகளைப போன்றாகள; அநுமன - (நாகபாசததாற்கட்டப்பட்ட) அநுமான், மநதரம ஒததனன் - (வாசுகியாற் சுற்றப்பட்ட) மநதரகிரியைப போனறான; (எ - று.)

உவமை பணி. ஆவலம்கொட்டுதல்-ஆர்தது வாய்கொட்டுதல். இலவுகையைப் பாற்கடலோடு உவமித்ததறகுஏற்ப, அந்நகரைக் கலக்குகின்ற அநுமானுககுக் கடல்கடைகிற மந்தரகிரியை உவமைகூறியமை சாலும். இவ்வரக்கரும அதுதேவரும பாம்பினவாலைப பறறி இழுததவராதலும் கருததத்தக்கது.

முன்னொருகாலத்தில் இவ்வண்டகோளத்துக்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச்சென்று திருமகளைப்புகழ்ந்துபாடி அவளால் ஒரு பூமாலை பிரசாதிகப்பெற்ற ஒருவித்தியாதரமகள், மகிழ்ச்சியோடு அமமாலையைத் தன்கைவீணையில் தரித்துகொண்டு பிரமலோகவழியாய் மீண்டு வருகையில், துர்வாசமகாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித்துதிக்க, அவவிஞ்சைமங்கை அமமாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள. அதன்பெருமையையுணர்ந்து அதனைச சிரமேற்கொண்ட அம்முனிவன், ஆனந்ததோடு தேவலோகத்துக்கு வந்து மிகக உல்லாசமாக ஐராவதயானையின்மேற் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனுக்கு அமமாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில் அம்மதக்களிறு அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது. அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு 'இங்ஙனஞ செல்வச்செருக்குற்ற நினது ஐசுவரியங்களெல்லாம் கடலில் ஒளித்துவிடக்கடவன' என்று சாபங்கொடுக்க, உடனே தேவாசெல்வம் யாவும் ஒழிந்தன. ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச்சரணமடைந்து அபபிரான் அபயமளித்ததுக கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைகொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி, வாசுகி யென்னும் பாம்பைக கடைகயிறாகப் பூட்டி அம்பாம்பின்வாலைத் தாங்களும் அதன்தலையை அசுரர்களுமாகப் பிடித்துஇழுத்து அந்தப்பாற்கடலைக கடைந்தனரென்பது இங்கு அறிய வேண்டிய கதை. (சுக)

சுஉ. கறுத்த மாசுணங் கனகமா மேனியைக் [1]கட்ட
வறத்துக் காங்கொரு தனித்துணை யாநின்ற வனுமன்
[2]மறத்து மாருதம் பொருதநாள் வாளரா வரசு
புறத்துச் சுற்றிய மேருமால் வரையையும் போன்றான்.

(இ - ள்) கறுத்த மாசுணம் - கருநிறமுள்ள அபபெரும்பாம்பு, கனகம் மா மேனியை கட்ட - பொன்னிறமான பெரிய (தனது) உடமபைச சூழ்ந்து கட்ட,—அறத்துக்கு ஆங்கு ஒரு தனி துணை ஆ நின்ற அனுமன் - தர்ம தேவதைக்கு அவ்விலங்காபுரியில் தானொருவனே துணைவனாகநின்றவனான அவ்வநுமான்,—மறத்து மாருதம் பொருத நாள் - வலிமையோடு காற்றுவீசியடித்தகாலத்து, வாள் அரா அரசு புறத்து சுற்றிய - ஒளியையுடைய சாப்பராசனான ஆதிசேஷனால் எப்புறத்துஞ் சூழப்பட்ட, மால் மேரு வரையையும் - மகாமேருகிரியையும், போன்றான் - ஒத்தான்; (எ - று.)

பெருவடிவமுள்ள அவனைச் சூழ்ந்து இறக்கிய பெரும்பாம்புக்கு, மகாமேருகிரியை வளைத்துக் கவிந்து இறக்கிய ஆதிசேஷனை உவமை கூறினர். இதுவும் உவமையணி. அநுமான் பொன்னொத்த மேனியனாதலால், அவனுக்குப் பொன்மயமான மேருமலையை உவமைகூறி யமை சாலும்; ("காஞ்சநாத்ரிகமநீயவிக்ரஹம்" என்ற வடமொழி

மேற்கோள் இவைகுக் கருதத்தக்கது.) கறுத்தமாசுணம் - கோபித்த பாம்பு எனினுமாம்; சீறுதலும் கறுக்கொள்ளுதலும் நாகத்தி னியல்பு. கனகம் ஆம் மேனி என்று பிரித்தும் உரைகலாம். மறம - பகைவெல்லுங் கருத்து மாம். பி - ம்:—[1]பற்ற. [2]மறுத்த. (கூஉ)

கூகூ.—அரக்கர்களிப்பு.

வந்தி ரைத்தனர் மைந்தரு மகளிரு [1]மழைபோ
லந்த ரத்தினும் விசும்பினுந் திசைதொறு மார்ப்பார்
முந்தி யுற்றதோ ருவகைக்கோர் கரையிலை [2]மொழியி
னிந்தி ரன்பிணிப் புண்டநா ளொத்ததவ் விலங்கை.

(இ - ள்.) மைந்தரும்-(இராக்கதர்களில்) ஆடவர்களும், வந்து இரைத்தனர் - (அப்பொழுது அங்கு) வந்து ஆரவாரஞ்செய்தார்கள்; மகளிரும் - பெண்பாலாரும், அந்தரத்தினும விசும்பினும் திசைதொறும் மழை போல ஆர்ப்பார் - வானத்திலும மேலுலகத்திலும் எட்டுத் திக்குக்களிலும் (ஒலி பரவுமபடி) மேகங்கள் (இடிமுழங்குவது) போல ஆரவாரிப்பவராஞர்கள்; உற்றது ஓர் உவகைக்கு - (இங்ஙனம அப்பொழுது இராக்கதர்களெல்லாரும) கொண்டு பாராட்டிய ஒப்பற்ற மகிழ்ச்சிக்கு, ஓர் கரை இலை - ஓர் எல்லையில்லை; மொழியின் - (அதற்கு ஒப்புமை) கூறுமிடத்து, அ இலங்கை- (அப்பொழுது) அந்த இலங்காபுரியானது. முந்தி இந்திரன் பிணிப்புண்ட நாள் ஒத்தது - முனபு தேவேந்திரன் (மேகநாதன்கையிற்) கட்டுப்பட்ட நாளிற் களிப்படைந்தது போன்றது; (எ - று.)

மேகநாதன் தேவேந்திரனைபபிடித்துக கட்டிக கொண்டுவந்தபோது இலங்காநகரத்து அரக்கர்கள எப்படி சந்தோஷித்தார்களோ அபபடியே அவன அநுமானைப பிடித்துக்கட்டிய இப்போதும சந்தோஷித்தார்களென்பதாம். இந்திரசித்தின் திறமையினாலாகிய மகிழ்ச்சிக்கு அவன திறமையினாலாகிய வேறொரு மகிழ்ச்சியே உவமையாகத்தகுமனறி வேறு உவமை ஏலாதென்பது தொனிக்க, "மொழியின் இந்திரன் பிணிப்புண்ட நாளொத்தது" என்றார். தேவாம்சமான வாநரர்களிற சிரேஷ்டனான அநுமானுக்குத் தேவராஜனான இந்திரனோடு ஒப்புமைஏற்றும. அந்தரம் - நிலவுலகத்துக்கும மேலுலகத்துக்கும நடுவிடம்; வடசொல். கரையென்றதற்கு ஏறப, உவகையைக் கடலாககொள்க. முந்தி உற்றது என்றுஇயைத்து, இனி அவ்வரக்கர்கள அடையுந் தினபத்துக்கு முன்னே நேர்ந்ததான ஒரு மகிழ்ச்சிக்கு என்று உரைபபாரு முளர்; அதுதன்பதுதை மேல் 'இலங்கை யெரியூட்டுபடலம்' முதலாகக் காண்க. பி-ம்.—[1]மழையின். [2]முனையின். ()

பாசப்படலம் முற்றிற்று

பதின்மூன்றாவது

பிணிவீட்டுபடலம்.

கட்டு விடுவித்த செயதியைக கூறும் பாகமென்று பொருள்படும். பாம்புவடிவுகொண்ட பிரமாஸதிரமாகிய பாசததினு லுண்டான அநுமானது உடற்பிணிப்பை இந்திரசிதது விடுவிதத செய்தியும், பின்பு அரக்கர்கள் பல கயிறுகள்கொண்டு கட்டிய பநததை அநுமான் தானே விடுவித்துக்கொண்ட செய்தியும் இப்படலத்துக் கூறப்படுகின்றன. பிணி வீட்டு படல மென மூன்று சொற்கள் - தாடாநத இரண்டு சந்தியில், முன்னது - இரண்டாம் வேற்றுமைததொகை; பின்னது வினைததொகையாகககொண்டு கருததமைக்கததக்கது. பிணி - முதனிலைததொழிற்பெயர். வீட்டு - விடு என்பதன் விகாரமான வீடுஎன்ற வினைப்பகுதியின் பிறவினை; இடையிலே தன் ஒறறுஇரட்டியது, பிறவினைக்குறி. வீட்டுப்படலம என்ற பாடத்துககு, விடுவிதததை யுணர்ததும் பாகமென இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகையாகப் பொருள்காண்க. ஏட்டுபபிரதிகள் பலவற்றில், 'பிணிவிடு படலம்' என்று உள்ளது அது, (அநுமான்) கட்டுநீஙகிய பாக மென்று இனிது பொருள்படும்.

வேறு.

க.—இதுமுதல் ஐந்துகவிகள் - கட்டுப்பட்ட அநுமானைக்கண்ட அரக்கரீகளின் பலவகை நிலைமையைக் கூறும்.

எய்யுமி னீருமி னெறிமின் போழுமின்
கொய்யுமின் குடரினைக் கூறு கூறுகள்
செய்யுமி னுலகிடைத் தேய்மின் றின்னுமி
னுய்யுமே லில்லைநம் முயிரென் றோடுவார்.

(இ - ள்.) எய்யுமின - (இநதகொடியகுரங்கை) அம்புகொண்டு எயயுங்கள்; ஈருமின் - கததியால் வெட்டுஙகள்; எறிமின் - ஈட்டியாற் குததுஙகள்; போழுமின் - கோடாலியாற் பிளவுஙகள்; குடரினை கொய்யுமின - (இதன்) குடலைப்பறிததிடுஙகள்; கூறு கூறுகள் செயயுமின் - (இதனைப், பலதுணடுகளாகச செய்யுஙகள்; உலகிடை தேயமின் - (இதனைப்பிடிததது) தரையிலே தேய்ததது அழியுஙகள்; தின்னுமின் - (இதன்உடற்றசையைத) தின்னுஙகள்; உய்யுமஎல் நம உயிர் இலலை - (இனி இது) பிழைக்குமானல் நமதுஉயிர் இல்லாததாகும எனறு - என்றுசொலலிக்கொண்டு, ஓடுவார - (பலஇராக்கதாகள) ஓடிவருவாரகள்; (எ - று.)

இது பிழைத்தால் நம்மையெல்லாந தவறாது கொன்றிடு மென்பது, அவர்கள்கொண்ட கருத்து. அரக்கர்களுடைய வெகுளிக் கொதிப்பு

விளங்குவதால், இச்செய்யுள், உருத்திரச்சுவைக்கு உதாரணமாகததக்கது. இரண்டாமடி - முற்றுமோனை. கூறுகூறு என்றவிடத்து, அடுக்கு - பன்மை குறிக்கும். பலகூறுகள் செயதல்-சின்னபின்னப்படுத்தல· உலகிடைததேய்த்தல் - தரையிலிட்டு அரைததலுமாம். (க)

உ. மைத்தடங் கண்ணியர் மைந்தர் யாவரும்
பைத்தலை யரவெனக் கனன்று [1]பைதலை
யித்தனை பொழுதுகொண்டிருப்ப தோவெனு
மொய்த்தனா கொலைசெய முயல்கின் றார்சிலர்.

(இ - ள்.) மை தட கணணியா - மையிட்ட பெரிய கண்களையுடைய வாகளான மகளிரும், மைந்தா - ஆடவரும், யாவரும் - ஆகிய எல்லாரும், பைதலை அரவு என கனன்று - படமுள்ள தலையையுடைய நாகம்போலச் சீற்றங்கொள்ள, சிலா - (அவாகளிற) சிலபேர், பைதலை இததனை பொழுது கொண்டு இருபபதோ எனு - 'இந்தக குரங்குப்பயலை இவ்வளவு நேரம் உயிருடன் வைத்துகொண்டிருப்பதோ' என்றுஎண்ணியும் சொல்லியும், மொய்ததனா கொலை செய முயலகின்றா - திரணடுவந்துநெருங்கி (அநுமானை)க் கொலல யததனஞ்செயகின்றவரானார்கள்; (எ - று.)

கனன்று=கனல· எசசத்திரிபு. இனி, 'மைததடங்கணணியர் மைந்தர் யாவரும்' என்பதை முந்தினசெயயுளோடு குளகமாககி 'ஓடுவார்' என்பதனோடு இயைததுவிட்டால் கனன்று என்பதைத் திரிக்க வேணடுவதில்லை. பைதல் - சிறுவன் என்றபடி· இஞ்சசி தோன்ற எளிதுபடக் கூறியது; துஷ்டப்பயலென்க. 9 - மீ —[1]பையலை. இசசெயயுள் "நசசடை" என்ற அடுத்தபாடலின் பின் சிலபிரதிகளிலுள்ளது. (உ)

ங. [1]நச்சடை படைகளா னலியு மீட்டதோ
[2]வச்சிர முடன்மறி கடலின் வாய்மடுத்
துச்சியி னழுத்துமி னுருத்த [3]தின்றெனிற்
கிச்சிடை யிடுபெனக் [4]கிளக்கின் றார்சிலர்.

(இ - ள்.) (இகுரங்கு), நஞ்சு அடை படைகளால் - விஷந்தடவிய ஆயுதங்களைகொணடு, நலியும ஈட்டதோ - வருததிக கொல்லப்படத் தக்கதோ? [கொல்லமுடியாது என்றபடி]; (ஆகவே), வசசிரமுடன் மறி கடலின் வாய் மடுதது - வசசிராயுததைத இதன்தலையில்வைததது அதனுடனே (இக் குரங்கை) அலைமடங்கப்பெற்ற கடலிலே போகட்டு, உருத்து உச்சியின் அழுததுமின் - கோபாவேசங்கொண்டு [உகரமான வேகததோடு] இதன் உச்சந்தலையிலே[அவ்வசசிராயுதமுட்பட மீணடும்மேலெழாதபடி எல்லாரும்] அழுததிடுங்கள்; அது இன்று எனின் - அங்ஙனமில்லையானால், கிச்சிடை

இடும் - இதனை நெருப்பிறபோகட்டுக கொல்லுங்கள், என கிளக்கின்றூ சிலர் - என்று சில அரகக்கள் சொல்லுகினறூர்கள்; (எ - று.)

உருததது இன்று எனின் என்று பிரித்து, இன்று உருததது எனின் - இப்பொழுது கோபங்கொண்டதானால் என்று உரைபபாரு முளர். கிசசு - க்ருஶாது என்ற வடசொலலின் திரிபென்பா. பி - ம்.—[1]நசசுறு. [2]வசசிர வுடல். தாள்களில் [3]கிளததினூர்பலா. (௩)

௪. எந்தையை யெம்பியை யெம்மு னோர்களைத்
தந்தனை போகெனத் தடுக்கின் றூபல
ரந்தரத் தமரர்த மாணை யா[1]லிவன்
வநததென் றுயிர்கொள மறுகி னூர்பலா.

(இ - ள.) 'எந்தையை - (உன்னால் உயிரகவரப்பட்ட) எமது தந்தை யையும, எமபியை - எமதுதம்பியையும, எம முனோகளை - எமது தமையன் மாகளையும்,—தந்தனை - மீளககொணாந்துகொடுதது, போகு -. அப்பாற் செல்', என தடுககினறூர் பலா - என்றுசொல்லிப் பல அரக்கர்கள் (அநு மானை) மறிததுக்கொளபவராணுகள்; 'இவன் வந்தது - இந்த ஆணகுரங்கு இங்குவந்தசெயல், அந்தரததது அமராதம ஆணையால் - வானுலகததிலுள்ள தேவர்களுடைய கட்டளையினுலாகும்', என்று - என றுமாறுகளண்ணி, உயிர் கொள மறுகினூ பலா - அததேவர்களுயிரைக் கொளளுமாறு மனமமாறு பட்டாகள் பல அரக்காகள்; (எ - று.)

பல அரக்காகளுடைய தநதையா தமபியர் தமையன்மாகளை அநுமான் கீழ்கிகழ்நத போாகளிற் கொன்றிட்டனனுதலால், அவாகளையிழநத மகக ளும் தமையன்மாரும தமபியருமான பலஅரகககாகள் 'உன்னால் உயிர்கவரப் பட்ட எமது அன்புடைச சுறறததாகளை மீளககொணர்நதுகொடு' என்று அநுமானை மறிததுக்கொண்டன ரென்க.'இவன் இங்குவந்தது மேலுலகததி லுள்ள தேவர்களின் கட்டளையினு லாதலால், அவர்கள் சொன்னது செய யும் ஏவலாளாய் வந்த இவனைக கொல்வதிற் பயனில்லை, இவ்னை இங்க னஞ்செய்யுமாறு ஏவியனுப்பிய அததேவாகளையே கொல்லவேணடும்' என்று பலஅரக்காகள் கருதின ரென்க. இவனைககொல்லுமாறு முதலிற்கொண்ட கருத்து உடனே ஆலோசித்ததில் மாறிவிட்டதனால் 'மறுகினூ' என்றூ; மறுகுதல் - புரளுதல் - பின்வாங்குதலுமாம. தேவாகள் கட்டளையால் வநத அவர்கள் படைவீரனை இவனைக கொல்லுமாறு மனங்கலங்கினூர்களென்று உரைகூறினுமாம. பி - ம்:—[1]இவண. (௪)

௫. [1]ஓங்கலம் பெருவலி யுயிரி னன்பரை
நீங்கல மின்றொடு நீங்கி னுமினி
[2]யேங்கல மிவன்சிரத் திருந்த லாற்றிரு
வாங்கல மென்[3]றழு மாத ரார்பலர்.

(இ - ள்.) ஓங்கல் அம் பெரு வலி - மலைபோன்ற மிக்க வலிமையை யுடைய, உயிரின் அன்பரை - (எமது) உயிர்போன்ற அன்புடைய கணவரை, நீங்கலம் - இதுவரையிலும் பிரிந்திலோம்; இன்றொடு நீங்கினும் - இன்றைக திணம் முதலாகப் பிரிவதானோம; இனி எங்கலம் - இங்ஙனம் பிரிவுநேர்ந்து விட்டபின்பு (அப்பிரிவுக்காக) ஏங்கிக்கிடவாமல், இவன் சிரத்து இருந்து அலால் திரு வாங்கலம் - (அப்பிரிவை விளைத்தவனான இவன் சிதையுமாறு) இவன்தலையின்மேல் ஏறியிருந்தே திருமகலியத்தை வாங்குவோம், என்று - என்றுசொல்லி, அழும - புலம்புகின்ற, மாதரார் பலர் - இராக்கதமகளிர் அநேகர்; (எ - று.)

கொடிய இராக்கதசாதியிற்பிறந்த மகளிராதலால், நேர்ந்தசோகத்தையே நெடுமபொழுது பாராட்டிக் கொண்டிராமற் கறுவுகொண்டு பழிவாங்குவ கருத்துடைய ராயினரென்க. ஓங்கல் - உயர்ச்சி; உயர்வுடையதான மலைக் குத் தொழிலாகுபெயர்; இக்காரணப்பெயர், யானைக்கும் வழங்கும். ஓங்கலம் பெருவலி,—அம் - சாரியை. திருவாங்குதல் - தாலியறுத்தல். திருஎன்ற இலக்குமியின்பெயர், ஆகுபெயராய், லக்ஷ்மீகரமான மங்கலநாணைக் குறித் தது .பி - ம்:—[1]ஓங்கரு. [2]யாங்களுமிவன் சிரமற்றலாற்றிரு. [3]எழு. (ரு)

சு.—இராக்கதர்களின் பேராரவாரம்.

கொண்டன ரெதிர்செலுங் கொற்ற மாநக
ரண்டமுற் றதுநெடி தார்க்கு மார்ப்பது
[1]கண்டமுற் றுளவருங் கணவாக் கேங்கிய
குண்டல [2]முகத்தியர்க் குவகை கூரவே.

(இ-ள்.) கொண்டனர் எதிர் செலும் (நாகபாசத்தைப்பற்றி அநுமானை) இழுத்துக்கொண்டு செல்பவர்களுக்கு எதிரிலே (வேடிக்கை பார்க்க) வருகிற, கொற்றம் மா நகர் - வெற்றியையுடைய அந்தப் பெரிய லங்காபுரியானது [இலங்கையிலுள்ள அரக்கர்களனைவரும்]. நெடிது ஆர்கும் - மிகுதியாக ஆர வாரஞ்செய்கிற, ஆர்ப்பு அது - அந்த ஆரவாரமானது,—கண்டம் உற்ற உள அருங் கணவர்க்கு ஏங்கிய குண்டலம் முகத்தியர்க்கு உவகை கூர - (அநுமா னால்) துண்டுபட்டு அழிவடைந்த அருமையான தங்கள் கணவர்களைக்குறித் துச் சோகிக்கிற குண்டலமென்னுங் காதணியினால் விளங்கும் முகத்தை யுடையவர்களான இராக்கதமகளிர்க்கு மகிழ்ச்சிமிகுமாறு, அண்டம் உற்றது உலகம் முழுவதும் பரவிற்று; (எ - று.)

தங்கள் கணவரைக் கொன்றிட்ட அநுமானைக் கட்டியிழுத்துவருகிற செய்தியைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு ஆரவாரிக்கிற பேரொலியைக் கேட்ட தனால், கணவரையிழந்த ராக்ஷஸஸ்திரீகள் சோகம் ஒழிந்து சந்தோஷங் கொள்வாராயின ரென்க. இங்குக் கொற்றம் - அநுமானைப் பிடித்ததனா

லானது. அண்டம் உற்றது-ஆகாயத்தை யளாவிற்று எனினுமாம். பி-ம்:—[1]கணடமறறுலந்த தங்கணவாக்கு [2]முகத்தியரோகை கூறவே. (சு)

எ.—அநுமான் தன்னுற்சிதைபட்ட மாடமாளிகைகளைப் பார்த்துக் கொண்டே இலங்கையின் வீதிவழியாகச் செல்லுதல்.

[1]வடியுடைக் கனற்படை வயவர் மால்கரி
கொடியுடைத் தேர்பரி கொணடு வீசலி
னிடிபடச் சிதைந்தமால் வரையி னில்லெலாம்
பொடிபடக் கிடந்தன கண்டு போயினான்.

(இ - ள்.) வடி உடை கனல் படை வயவர் கூரமையையுடைய நெருப்புப்போலக் கொடிய ஆயுதங்களைத் தரித்த வீரர்களையும், மால் கரி - பெரிய யானைகளையும், கொடி உடை தேர் - துவசத்தையுடைய தேர்களையும, பரி - குதிரைகளையும், கொணடு வீசலின் - தான் கையிலெடுத்து வீசியெறிந்ததனால், இடி பட சிதைந்த மால் வரையின்-(தம்மேல்) இடிவிழுதலாற சிதைவுபட்ட பெரியமலைகள்போல, பொடி பட கிடந்தன - பொடிப்பொடியாக நொறுங்கிக்கிடந்தனவான, இல் எலாம் - (இலங்கைமாநகரத்து) வீடுகளையெல்லாம், கணடு - (மகிழ்ச்சியோடு) பாரத்துக்கொணடே, போயினான் - (அநுமான் அந்நகரத்து வீதிகளின் வழியாயச) சென்றான்; (எ - று.)

அரக்கர்கள் நாகபாசத்தைப்பறறித தன்னையிழுத்துக்கொணடு செல்லுமளவில் அநுமான் அந்நகரத்து மாளிகைகளின அலங்கோல நிலைமையைப் பார்த்துக்கொண்டே போயின னென்க. தான் சோந்தவிடத்தை யழித்ததலால், ஆயுதங்கட்கு நெருப்பு உவமை. கனறபடை கொடுமை மிகுதியால் தீயைசசொரிகிற படைஎனினுமாம. பி - ம்:—[1]வடியிடை. (எ)

அ.—இதுமுதல் நான்கு கவிகள் - மற்றும் பல அரக்கர்களின் பலவகை நிலைமையைக் கூறும்.

முயிறலைத் தெழுமுது மரத்தின் மொய்ம்புதோள்
கயிறலைப் புண்டது கண்டு காண்கிலா
தெயிறலைத் [1]தெழிமித ழரக்க ரேழையா
வயிறலைத் திரியலின் மயங்கி னாபலா.

(இ - ள்.) கண்டு - (அநுமானைப்) பார்த்து, முயிறு அலைத்து எழும முதுமரத்தின் மொயமபு தோள கயிறு அலைப்புண்டது காணகிலாது - எறும்புகள் விரைந்துவந்து மேலேறிசசஞ்சரித்துச சூழ்ந்துமொய்க்கப்பெற்ற பழமையான [பெரிய] மரம்போல (அவ்வநுமானுடைய) வலிமையுள்ள தோளகள் நாகபாசததாற கட்டுப்பட்டிருப்பதைப பாரத்திடாமல், ஏழையர் வயிறு அலைத்து இரியலின் - பேதையரான ராக்ஷஸஸ்திரீகள் (அக்குரங்கு இங்கும் வந்துவிட்டதே யென்று அஞ்சி வருந்திய தங்கள்; வயிறறைப் பிசைந்து கொண்டு ஓடுகிறதனால், எயிறு அலைத்து எழும இதழ் அரக்கா பலர் மயங்கி

ஞர் - கோரப்பற்கள் வாயினுள்ளிருந்துமோதி வந்து வெளியேதோன்றப் பெற்ற உதட்டையுடைய பல இராக்கதர்கள் (இன்னும் இக்குரங்கு பயங்கரமானசெயல் யாதுசெய்யத தொடங்கிவிட்டதோ என்று) திகைப்புற்றார்கள்.

மேல்நோக்காக மரதத்தைப்பார்ப்பவர்கட்கு அம்மரம் தெரியுமேயன்றி அதன்மேலிடம் முழுதுஞ் சூழ்ந்து நிறைந்துகிரிகிற எறும்புகளின் வரிசை தெரியாதவாறுபோல, அநுமானை மேல்நோக்காகப் பார்த்த இராக்கதஸ்திரீகள் அவன்தோள்களிற பிணிபடுதுள்ள நாகபாசத்தை நுட்பமாக நோக்கினாரில்லை யென்க. நுணணிதாகநோக்கி உண்மையையுணராது மிகக அச்சமுற்ற தற்குக காரணம் மகளிர்க்குரிய மடமையென்னுங் குணமென்பது தோன்ற, 'ஏழையர்' என்றார். வயிறு அலைத்தல் - வயிற்றிலடித்துகொள்ளுதலுமாம்; இவை சோகத்தின் காரியம. அரகக்கர்கள் தமமகளிரிடத்துள்ள அன்புமிகுதியால், அவாகள் வயிறலைதது ஓடுதலைக் கண்டமாதிரததிலே, அதற்குக் காரணம் இன்னதென்று விசாரிததறியாமலே தாம்மதிமயகுகினரென்க. முறிறு - ஒருவகை எறும்பு. முதுமர மெனவே, பெரியமரமென்றதாயிற்று. மொய்ம்பு தோள்-செய்யுளோசைநயம் நோககி இயல்பாய் நின்றது. பி-ம்:— [1]அழுதெழும். (அ)

௯. ஆர்ப்புற வஞ்சின [1]ரடங்கி னார்பலர்
போர்ப்புறச் செயலினைப் [2]புகலகின் றார்பலா
பார்ப்புறப் பார்ப்புறப் பயத்தி னாற்பதைத்
தூர்ப்புறத் திரியலுற் றோடு வார்பலர்.

(இ - ள்.) ஆர்ப்பு உற அஞ்சினா அடஙகினார் பலா - (இதுவரையில் அநுமான்செயத செயல்களா லுண்டான அசசததால் இப்பொழுதும்) ஆரவாரஞ்செய்தறகுப பயந்து அடஙகியிருந்தார்கள பலஇராகககதாகள்; போர்ப்புறம் செயலினை புகல்கினறா பலர் - (அவ்வநுமான்) போரிறசெய்த செயல்களைச் சொல்லுகினறார்கள் பல இராககதர்கள்; பார்ப்புறபாரப்புற பயததினால் பதைததது ஊரப்புறதது இரியல் உறறு ஓடுவா பலா - (அவ்வநுமானைப்) பார்ககுநதோறும அசசததினால் துடிதுடிததது ஊரககுவெளியே சிதறியோடுபவரானார்கள் பல இராக்கதர்கள்; (எ - று.)

இனி, முதலடிக்கு - அநுமான் ஆரவாரஞ்செய்தலால் தாம் அஞ்சி அடஙகினா பல அரக்கா என்று உரைததல பொருந்தாது. 'போர்ப்புறம்' என்றவிடதது, புறம் - ஏழனுருபு. அடுகுது, தொறுபபொருளது. பி - ம்:— [1]அடஙகுவார். [2]புகழ்கின்றார். (கூ)

௧௦. [1]காந்துறு கதழெயிற் றரவின் கட்டொரு
[2]பூந்துணர் சேர்த்தெனப பொலியும் வாண்முகந்
தேர்ந்துறு பொருள்பெற வெண்ணிச் செய்யுமின்
வேந்துறல பழுதென விளமபு வார்சிலர்.

(இ - ள்.) காந்துறு - (எப்போதும்) கோபதாபங்கொள்வதும், கதழ் - கொடுமையுள்ளதும், எயிறு - (விஷப்) பற்களை யுடையதுமான, அரவின் - பாம்பினுலாகிய, கட்டு—, ஒரு பூ துணர் சோத்து என - ஒரு பூமாலை கொண்டு கட்டினதுபோல் ஆக, வாள முகம் பொலியும் - (இக்குரங்கினது) ஒளியுள்ள முகம் விளக்கமுற்றிருக்கின்றது; ஆதலால்), தோந்து - விரைவு படாது ஆலோசித்து, உறு பொருள் பெற எண்ணி - நல்ல பயனைப் பெறு மாறு சிந்தித்து, செய்யுமின் - (அதற்கப்பால் செய்யவேண்டிய காரியத்தைச) செய்யுங்கள்; வேந்து உறல் பழுது - (விரைந்து இதனை) அரசனிடத்திற் கொண்டுசேர்தல் பயனுடையதன்று, என - என்று, விளம்புவார் சிலர் - சில அரக்கர்கள் சொல்வார்கள்; (எ - று.)

இப்பொழுது இக்குரங்கினமுகம் சிறிதும்வாட்டமடையாமல் நன்கு விளக்க முற்றிருக்கின்றதே ஆதலால், இதற்கு நாகபாசபந்தம் ஒரு பூமாலை கொண்டு கட்டியவாறுபோலச சிறிதேனும் துன்பந்தந்திலது; இங்ஙனம் வலியொடுங் காத்தை விரைவில் அரசனிடங்கொண்டு சேர்தல் தகுதியன்று; ஆதலால், விரையாது தீர்ககாலோசனைசெய்து நன்மையுண்டாகும் வழியை யுணர்ந்து அதற்கு ஏற்பத தொழில்செய்யுங்களென்று பிறாபலரையும் நோக்கி கூறினர் சில அரக்கரென்க. இங்ஙனம நுண்ணிதினுணர்ந்து அதனைக் கூறுந்திறமுடையார் பலரன்றிச் சிலரே யாதலால், 'என விளம்புவார் சிலர்' என்றார்; அடுத்ததசெய்யுளில் 'தொழுகின்றார்சிலர்' என்பதற்கும் இங்ஙனமே காண்க. 'காந்துறுகதழ் எயிறு' என்பதற்கு - அக்கினிசுவாலைவீசுகிற உக்கிரமான பற்களென்றும பொருள்கொள்ளலாம். 'தேர்ந்து எண்ணி' என்பதை - நன்றாக ஆலோசித்து என ஒருபொருட்பன்மொழியாகக கொள்ளினுமாம். பி - ம்:—[1]காந்துகட்டழலெயிறு. [2]பூநதுணரசைத்தென, பூந்துணரசைந்தென.

(கo)

கக. ஒளிவரு நாகத்துக் [1]கொல்கி யன்றுத
[2]னிளிவர லின்றுபின் னெண்ணம் வேறெனுக
களிவரு சிந்தையாற காண்டி நங்களைச்
சுளிகிலை யாமெனத் தொழுகின் றார் [3]சிலர்.

(இ - ள்.) 'இன்று - இப்பொழுது, தன் இளிவரல் - இகுரங்கு மேறகொண்டிருக்கிற எளிமைதன்மை, ஒளி வருநாகத்துகு ஒல்கி அன்று பிரகாசம்பொருந்திய நாகபாசத்துக்குத தளர்ந்ததனுலன்று. பின் எண்ணம் வேறு - மற்று இக்குரங்கு கொண்ட ஆலோசனை வேறாகும். எனு - என்று ஊகித்துணர்ந்து,—(அவ்வநுமானை நோக்கி),— 'களி வரு சிந்தையால் நங்களை காண்டி - மகிழ்ச்சிபொருந்திய மனத்தோடு எங்களைப்பாராபபாய், சுளிகிலை - எங்களைக் கோபியாதே', என - என்றுசொல்லி வேண்டி, தொழுகின்றார் சிலர் - சில அரக்கர்கள (அவனைக) கைகூப்பி வணங்குகின்றவராஞர்கள்; (எ - று.)—ஆம் - அசை.

'தன்இளிவரல் இன்று' என்பதற்கு - இக்குரங்கு தானாகவே கொண்ட வலிமைக் குறைவு மில்லை யென்றும் 'பின்எணணம் வேறு' என்பதற்கு - இனிச் செய்யவேண்டுங் காரியத்தைக்குறித்து இக்குரங்கு கொண்ட ஆலோசனை வேறு மென்றும உரைப்பினும அமையும்; முந்தினவுரைக்கும் 'இன்று' என்பது-இடைச்சொல்லும், பிந்தினவுரைக்கு 'இல்' என்னும் எதிர்மறைப் பண்படியாப்பிறந்த ஒன்றன் பாற் குறிப்பு முற்றுமாம். 'சிந்தையால்' என்றவிடத்து, 'ஆல்' என்ற மூன்றனுருபு, அடைமொழிப் பொருளில் வந்தது; அன்புகொண்ட மனத்தை யுடையையாய் என்றபடி. 'நகளை' என்பதை மதிமதீபமாக, 'சுளிகிலை' என்பதனோடுங் கூட்டுக. பி - ம்:—[1]ஒல்கவின்மையின். [2]எளிவரவன்றிதின் [3]பலா. இவகே "திண்டிறல்" (கங), "கயிலையின்" (கரு) என்றபாடல்களிருக்க, அவற்றின்பின இந்தப்பாடலும்இதன்பின் "நீரிடை" (கஎ) என்றபாடலும் உளளன. (கக)

கஉ.—நாகபாசத்தைப்பற்றி அநுமானை இழுத்துக்கொண்டு செல்லும் அரக்கர்களின் தோகையும் வலிமையும்.

பைங்கழ லநுமனைப் பிணித்த பாந்தளைக்
கிங்கர ரொருபுடை கிளர்ந்து பற்றினா
ரைம்பதி னாயிர [1]ரளவி லாற்றலர்
[2]மொய்ம்பினி னெறுழ்வலிக் கருளன் மும்மையார்.

(இ - ள்.) அளவு இல் ஆற்றலர் - அளவற்ற வலிமையுடையவரானும், மொய்ம்பினின் எறுழ் வலி கருளன் மும்மையார் - தம்தம் புஜபலததால் மிக்கவலிமையுள்ள கருடனிலும் மூன்றுமடங்கு மிக்கவர்களுமான, கிங்கரர் ஐம்பதினாயிரர் - ஏவலாளர் ஐம்பதினாயிரமபேர், ஒரு புடை கிளர்ந்து - ஒரு பககததில் வந்து கூடி சிறைந்து, பைங்கழல் அநுமனை பிணிதத பாந்தளை பற்றினா - பசுமையான வீரகழலையுடைய அநுமானைக கட்டியுள்ள பாமபைப் பிடிதது இழுததுக்கொண்டு போகலானார்கள்; (எ - று.)

'ஒருபுடை கிளர்ந்து பாநதளைப் பற்றினா' என்றதனால், வாற்பக்கததை மாததிரம பிடிததுகொணடன ரென்க. ஒருபுடை யென்றதனானே மற்றொருபுடைகளும் அவ்வளவினரேயென்று கொள்வாருமுளர். மிககவலிமையுடைய அநுமானை இழுததுக்கொணடு செலலுதற்கு இததனைபேர் வேணடிற்றென்க. இசசெயயுளில இனவெதுகை காணக. பி - ம்:—[1]அரக்கராடெழில். [2]மொயம்பினா. (கஉ)

கங.—மற்றும் பல அரக்கர்கள் கருதியது.

திண்டிற லரக்கரதஞ் [1]செருக்குச சிந்துவான்
றண்டலி றன்னுருக கரந்த தனமையான்
மணடமர் தொடங்கினன் வான ரத்துருக்
கொண்டன னந்தகன் கொலலென் றார்பலர்.

(இ - ள்.) அந்தகன் - யமன், திண் திறல் அரககர்தம செருகு சிந்துவான - பலபராகிரமங்களையுடைய இராக்கதர்களது கருவத்தையடக்க

(க் கருதி), தண்டல் இல் தன் உரு கரந்த தன்மையான் - அழிதலில்லாத தனதுவடிவத்தை மறைத்துக்கொண்டவனாய், வானரத்து உரு கொண்டனன் - குரங்குவடிவத்தைக் கொண்டு, மண்டு அமர் தொடங்கினன் கொல் - மிக்கபோரைத் தொடங்கிச் செய்தனனோ? என்றார் பலர் - என்று எண்ணுதலுஞ் சொல்லுதலு மானார்கள் பல இராக்கதர்கள்; (எ - று)

தானான தன்மையில் அரக்கர்களை வெல்லவும் கொல்லவும் மாட்டாமல் முன்பு இராவணனது திக்விஜயயாத்திரையில் அவனுக்கு முன்நிற்கமாட்டாது மறைந்துபோயவிட்டவனான யமன், அவ்வரக்கர்களை வென்றும் கொன்றும் வலியடக்கிக் கருவபங்கஞ் செய்யவேண்டுமென்னுங் கறுவு கொண்டவனாதலின், அதற்கு உரிய சமயம் பார்த்து, இப்பொழுது, தனது நிஜரூபமான தேவஜன்மம் தேவர்களாற் கொல்லலாகாதபடி வரபலங்களைப் பெற்றுள்ள அரக்கரை யழித்தற்கு உதவாமையாலும், முன்பு தோல்வியுற்ற தேவவடிவத்தோடு மீளவும் அவர்கள் முன்னிலையில்வருதற்கு வெள்கியும், அத்தேவசரீரத்தைவிட்டு, "குரங்கு முகமென்றெனையிகழ்ந்தவுனிலங்கை நகரிற், குரங்குகள்புகுந்து நனிகொன்றிடுக நின்குலனை" என்று நந்திகேசுவரன் இராவணனுக்கு இட்ட சாபத்தை யனுசரித்து வாநரவடிவங்கொண்டு இங்ஙனம் வந்து போர்தொடங்கிவிட்டனனோ வென்று அநுமானைக்குறித்துப் பல அரக்கர்கள் சங்கித்துப் பேசினார்கள் என்று கருத்துவிவரங் காண்க. முன்புநிகழ்ந்த போரில் இராவணனாறகொல்லப்படாது தம்பியுய்ந்தனனென்ற இயல்பை யெடுத்துக்காட்டுவார், 'தண்டலில் தன்னுரு' என்றார். பி - ம்.—[1]செருக்குஞ். (கங)

கச.—அரக்கர்களும் அரக்கியர்களும் தம்தம் மாளிகையின்றா வேடிக்கைபார்த்தல்.

அரமியத் தலந்தொறு மம்பொன் மாளிகைத
தரமுறு நிலைதொறுஞ் சாள ரந்தொறு
முரசெறி கடைதொறு [1]மிரைத்து மொய்த்தனர்
நிரைவளை மகளிரு நிரைந்த மைந்தரும்.

(இ - ள.) நிரை வளை மகளிரும் - வரிசையான [பல] வளையல்களை யணிந்த பல இராக்கதஸ்திரீகளும், நிரைந்த மைந்தரும் - வரிசை வரிசையாக வந்துநிரண்ட இராக்கதர்களும்,—அரமியம் தலம் தொறும் மாளிகையின்மேலுள்ள நிலாமுற்றங்களிலும், அம் பொன் மாளிகை தரம உறு நிலைதொறும - அழகிய பொன்மயமான வீடுகளின் மேல் நிலைகளிலும், சாளரம் தொறும - பலகணிகளிலும், முரசு எறி கடை தொறும் - முரசவாத்தியங்கள் அடித்து முழங்கப்பெறுகிற வாயில்களிலும், இரைத்து மொய்த்தனர் - (அசோகவனத்தையும் இராக்கதவீரர்களையும் அழித்திட்ட குரங்கைக் கட்டி யிழுத்துக்கொண்டு போகும் விநோதத்தைப் பார்த்தற்கு) ஆரவாரஞ்செய்து கொண்டு கூடிநெருங்கி

ஞர்கள்; (எ - று.)—தரம் உறு நிலை-மேன்மைபொருந்திய நிலை. பி - ம்:—[1]நிரைத்து. (கச)

கடு.—மற்றும் பல அரக்கர்கள் கருதியது.

கயிலையி னொருதனிக் கணிச்சி வானவன்
மயிலியற் சீதைதன் கற்பின் மாட்சியா
லெயிலுடைத் திருநகர் சிதைப்ப வெய்தின
னயி [1]லெயிற் றொருகுரங் கா[2]யென் பார்பலர்.

(இ - ள்.) கயிலையின் - கைலாஸகிரியில் வீற்றிருக்கிற, ஒரு தனி கணிசசி வானவன - ஒப்பற்றதொரு மழுவென்னுமாயுதத்தை யேந்திய மகாதேவனாகிய சிவபிரான், மயில இயல் சீதைதன் கற்பின் மாட்சியால் - மயில் போலுஞ் சாயலுள்ள சீதாதேவியினது பதிவிரதாதருமத்தின் மகிமையினால் துணைபடப்பட்டு, அயில் எயிறு ஒரு குரங்கு ஆய் - கூரிய பற்களையுடைய ஒரு குரங்கின் வடிவமாகி, எயிலுடை திரு நகர் சிதைப்பஎய்தினன் - மதில்களையுடைய அழகிய லுந்த லங்காபுரியை அழிக்கவந்தான்போலும், என்பார் பலர் - என்று எண்ணுபவரும் சொல்லுபவருமானோர்கள் பல இராக்கதர்கள்.

"தெய்வக்தொழா ளள்கொழுநற் றொழுதெழுவாள். பெய்யெனப் பெய்யும் மழை" என்றபடி கற்புடையமகளிர்க்குத தெய்வமும் ஏவல் செய்யுமாதலால், சீதையினது கற்பின ஆற்றலாற் சிவபிரான் குரங்கு வடிவமாய் இங்கரை யழிகக வந்தனனென்று கொண்டன ரென்க. சாதாரணமான குரங்குக்கு இவ்வகை வலிமையும் திறமையும் இயல்பல்ல வாதலால், இதனை இவனானம் தெய்வகுரங்கென்று சங்கித்தனர். கணிச்சி - சூலாயுதமுமாம் பி - ம்:—[1]எயிற்று. [2]என்றார். (கடு)

கசு.—இலங்கையிலுள்ள தேவஸ்திரீகள் பலரும் அக்காட்சியைக் காண வந்து கூடுதல்.

அரம்பையர் விஞ்சைநாட் டளக வல்லியர்
நரம்பினு மினியசொ னாக நாடியா
கருப்பியல் சித்திய ரியக்கர் கன்னியர்
வரம்பறு சும்மையர் தலைம யங்கினா.

(இ - ள்.) அரமபையா - தேவஸ்திரீகளும், விஞ்சை நாடு அளக வல்லியர் - வித்தியாதர லோகததிலுள்ள கூந்தலையுடைய கொடிபோன்றவராகளானவித்தியாதரஸ்திரீகளும், நரம்பினும் இனிய சொல் நாக நாடியா - யாழ் நரம்பி னிசையைகாட்டிலும இனிமையான சொறகளையுடைய நாகலோகத்துக் கன்னிகைகளும், கரும்பு இயல் சித்தியர் - (தம்மைநுகர்வோர்க்கு மிகக இன்பரசத்தைக் கொடுததலிற) கருமபு போன்றவர்களான சித்த கனனிகைகளும், இயக்கர்கன்னியா - யகூகன்னிகைகளும,—வரம்பு அறு சும்மையா - அளவற்ற இரைசசலுடையவராகளாய், தலைமயங்கினர் - எவ்விடங்களிலும வந்து கூடினார்கள்: (எ - று.)

இவர்கள்: இராவணனால் ஆங்காங்கிருந்து பலாதகாரமாகக் கவர்ந்துகொண்டு வரப்பட்டவர். நரம்பு - அதன் ஒலிக்கு ஆகுபெயர்.

நாடியர் - பெண்பன்மைகுறிக்குஞ்சொல். சிததியர் - சித்தர் என்பதன் பெண்பால். (கசு)

கஎ.—மற்றும் பலர் கருதியது.

நீரிடைக் கண்டுயி னெடிய நேமியுந்
தாருடைத் தனிமல ருலகின் றாதையு
மோருடற் கொண்டுதம் முருவ மாற்றினர்
பாரிடைப் புகுந்தனர் பகைத்தென் பார்பலர்.

(இ - ள்.) நீரிடை கண் துயில் நெடிய நேமியும் - கடலிலே பள்ளி கொண்டு யோகநித்திரைசெயபவனும் பெரிய சக்கராயுதத்தை யுடையவனு மான திருமாலும், தாருடை தனி மலர் உலகின் தாதையும் - தாமரைமலா மாலையைத் தரித்துள்ளவனும் ஒப்பற்ற (திருமாலின் நாபித) தாமரைமலரில் தோன்றியவனும் உலகங்களைப் படைத்தவனுமான பிரமனும், பகைத்து - (அரக்கர்களோடு) பகைமைகொண்டு (அவர்களையழிததற்பொருட்டு), தம் உருவம் மாற்றினர் ஓர் உடல் கொண்டு - தங்கள் வடிவதைதை யொழித்தவர் களாய் வேறுஒரேவடிவமாகி, பாரிடைபுகுந்தனர் - (இங்ஙனம்) நிலவுலகத் திலே பிரவேசித்தார்கள்போலும், என்பார் பலர்—; (எ - று.)

அக்குரங்கை, பிரமன் விஷ்ணுஎன்னும் இருவருங் கொண்ட ஒரு வடிவமென்று கருதினர். பிரமவிஷ்ணுக்கள் தாமானநிலையில் அரக்கர் களையழிக்குந் திறமிலரென்பது தோன்ற 'பதைத்துத் தம்முருவம் மாற் றினர் ஓர்உடற்கொண்டு பாரிடைப்புகுந்தனர்' என்றன ரென்க. 'நீர்' என்றது பிரளயப்பெருவெள்ளத்தை; பாற்கடலென்று கொண்டால், இலக் கணையாம. நெடியநேமிஎன்பது - அடையடுத்த ஆகுபெயர். (கஎ)

கஅ.—இராக்கதர்களொழிந்த பிறரனைவருங் கண்ணீர் பெருக்குதல்.

அரக்கரு மரக்கியர் குழாமு மல்லவர்
கரக்கிலர் நெடுமழைக் கண்ணி னீரது
விரைக்குழற் சீதைதன் மெலிவு நோக்கியோ
விரக்கமோ வரத்தின [1]தெண்மை யேகொலோ.

(இ - ள்.) அரக்கரும அரக்கியா குழாமும அல்லவர் - இராக்கதாகளும் ராக்ஷஸஸ்திரீகளுடைய கூட்டமும் மல்லாத அரமபையர் முதலியோரனைவரும், நெடு மழை கண்ணின் நீர் கரககிலர் - நீண்ட மழைததாரைபோன்ற கண் ணீர்ப்பெருக்கை உள்ளடக்க மாட்டாதவராஞாகள்; அது - அங்ஙனம அடக்கமுடியாதபடி கணணீர் பெருக்கியது,— விரை குழல் சீதைதன் மெலிவு நோககியோ - நறுமணமுள்ள கூந்தலையுடைய சீதாதேவியின் துன்பததைப் பாத்ததனால் நேர்ந்ததோ? இரக்கமோ - (அன்றி அநுமான் பாசபந்தப்பட்ட விஷயததிற் கொண்ட இரக்கத்தால் நேர்ந்ததோ? அறத தினது எண்மையே கொலோ - தருமத்தினது எளிமையைக் கருதியதனா லேயே நேர்ந்ததோ? (எ - று.)

எனவே, இம்மூன்றும் அரம்பைமுதலியோர் கணணீர் சொரிதற்குத் தனிததனி காரணமாகத்தக்கனவென்பது விளகும். "தாவருந் திருநகர்த் தையலார்முத, லேவரு மிடைவிழுந் திரங்கி யேங்கினர், காவலன்கான் மிசை விழுந்து காவன்மாத, தேவரு மழுதனா களிக்குஞ்சிந்தையார்"என்று கீழ்க்கூறியபடி பல அரக்கர்களின் மரணத்துக்காக மற்றையரக்கர்களும் அரக்கியர்களும் அழுதபோது அரம்பையா முதலிய தேவமாதர்கள் மனத்துக் களிப்புற்றனராயினும் இராவணபயத்தால் அக்களிப்பு வெளிததோன்றாத படி அதனை உள்ளடக்கிவிட்டு அவ்வரக்கர்கள்பக்கல் அன்புள்ளவர்களாகத் தம்மைக்காட்டி அவர்களைமகிழ்வித்துத் தாம்உய்யுமாறு அவர்களுடன் அழுது நின்றசமயததில், அரககர்களைபழித்த குரங்கு கட்டுப்பட்டதென்ற செய்தி யைக கேட்டவுடன் அரக்ரகளும் அரகமாரும் களிப்புற்று முந்தியசோகத தைக் கைவிட்டு அழுகையொழிந்து கண்ணீர்ப்பெருக்கை அடகினராக, அரம்பையர் முதலியோர் அநநனம களிப்புறுமையாற் கண்ணீரையடக் காது பெருக்கியபடியே நின்றனரென்று விவரங்காணலாம். பி - ம்:—[1]எளி மையோ. (கஅ)

கக.—அநுமானுடைய கருத்தை இதுழதல் ஆறுகவிகளிற் கூறுகிறார்.

.. ஆண்டொழி லநுமனு மவரொ டேகினன்
[1]மீண்டிலன் வேறிலன் விரும்ப லுற்றில
னீண்டிது வேதொடர்ந் திலங்கை வேந்தனைக்
காண்டலே நலனெனக் கருத்தி னெண்ணினன்.

(இ - ள்.) ஆண் தொழில் அநுமனும் - ஆணமைத்தொழிலாகிய பராக் கிரமத்திற் சிறந்த அநுமானும்,—'ஈண்டு இதுவே தொடர்ந்து - இப்போது செல்லுகிற இசசெல்லுகையே காரணமாக இவாகளுடனே சென்று, இலங் கைவேந்தனை காணடலே - இலங்கையரசனான இராவணனைக் கண்டுபேசு வதே, நலன - நல்லது', என - என்று, கருததின் எண்ணினன் - தன்மனத் தில் நினைததவனும், மீணடிலன் - (நாகபாசபந்ததினின்று திமிறிக் கொ ண்டு) திரும்பிப்போய்விடாமலும், வேறு இலன் - (அவ்வரக்கர்கள் கருத் துககு) மாறுபடாமலும், விரும்பல் உற்றிலன் - வேறொன்றையும் மனத்தில் விரும்பாமலும், அவரொடு ஏகினன - அவ்வரகாகளுடனே சென்றான்.

இது - தொகுததுசசுட்டல். அதேத ஐந்துகவிகளும் - வகுத்துககாட் டல். பி - ம்:—[1]மீண்டலுமேறலும். (கக)

உ0. எந்தைய தருளினு மிராமன் சேவடி
சிந்தைசெய நலத்தினுஞ் [1]சீதை வானவர்
[2]தந்துள வரத்தினுந் தறுகட் பாசமுஞ்
சிந்துவெ னயர்வுறு சிந்தை சீரிதால்.

ஐநதுகவிகள் - ஒருதொடா.

(இ - ள்.) எந்தையது அருளினும் - என்தந்தையான வாயுதேவ னுடைய கருணையினாலும், இராமன் சே அடி சிந்தை செய நலததினும் -

ஸ்ரீராமபிரானுடைய சிவந்த திருவடிகளை (யான் எப்பொழுதும் இடைவிடாது) தியானஞ்செய்கின்ற நன்மையினாலும், சீதை வானவர் தந்துள வரத்தினும் - சீதாபிராட்டியும் தேவர்களும் கொடுத்துள்ள வரங்களினாலும், தறுகண பாசமும் சிந்துவென் - கொடிய இப்பிரமபாசத்தையும் அற்றுச சிதறிவிடச செய்யவல்லேன் யான்; (ஆயினும்), அயர்வு உறு சிந்தை சீரிது- (அப்படியொன்றுஞ்செயயாமல் இப்பாசத்துக்கு) இளைப்புற்றிருக்கிற கருத்தே (இசசந்தர்ப்பத்திற்குச) சிறப்புடையது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'அயர்வுசிந்தைசீரிது' என்றதன் காரணம், அடுத்த நான்குகவிகளில் விளங்கும். அநுமான் தான் பிறந்தவுடனே சூரியனைக் கவரச்சென்றபோது தேவேந்திரனது வச்சிராயுததினாற் கன்னத்தில் அறையப்பட்டுக் கீழ் விழுந்து மூர்சசையடைந்துவிட்ட துன்பத்தைத் தன்தந்தையான வாயுதேவன் உணர்ந்து அனபுடன்வந்து தன்னை எடுத்து மடியில்வைத்துக்கொண்டு செய்த முயற்சியால் தீர்ந்ததைமபற்றி, அத்தந்தையினருளினால் இப்பாசபந்தத்தையுஞ் சிதறுவேனென்றான். அப்பொழுது வாயுதேவன் கோபங்கொண்டு சகலபிராணிகளின் மலமூத்திராசயங்களில் தம்பித்திருந்ததனால் அனைத்துயிரும் வயிறுவீங்கிச சுவாசமவிடமாட்டாமல் தபிக்கவே, வேள்வி முதலிய வைதிகமொன்றும் நடவாமல தேவதைகட்கு மகிமை குறையலானமை பற்றித தேவர்யாவரும் பிரமதேவனையடுத்து உலகத்திற்குநேர்ந்த துன்பத்தை விண்ணபஞ்செய்ய, அந்நான்முகக்கடவுள் தேவர்களுடனே அநுமான் விழுந்திருந்த மலையினிடம்வந்து தந்தைமடியில் மந்தசுவாசததோடு கிடந்த இக்குரங்குக்குட்டியைக் கையால தடவினமாத்திரததில் இவன் வேதனை தீர்ந்து கண்திறந்துவிழிக்க, படைத்தற்கடவுள் அவ்வாயுவின் உகப்பிற்காகவும் இனி ஆகவேண்டிய பெரியகாரியங்கட்காகவும் அவ்வானரசிசுவுக்கு வரங்கொடுக்குமாறு தேவர்கட்குச சொல்ல, இந்திரன் சூரியன் வருணன் குபேரன் சிவபிரான் முதலிய தலைமைததேவாபலரும் பலவரங்களைவழங்க, பிரமனும் வரமருளி அனுக்கிரகித்துச சென்றன னென்ற வரலாறு இங்கு உணரத்தக்கது. இவ்வளவு பெருமைக்கும் காரணம் வாயுதேவனுக்கு மைந்தனிடமுள்ள பிரியமே யாதலால், அத்தந்தையது அருள் முக்கியமாகப் பாராட்டி முதலி லெடுத்துக் கூறப்பட்டது.

ஸ்ரீ ராமபாதாம்புஜத்தில் நிரந்தரபக்தி செய்தவர் எவ்வகை யிடுக்கணையுங் கடக்கவல்லவ ரென்பது, பிரசித்தம். சீதை தந்தருளியவரம்:—"பாழிய பணைததோள்வீர துணையிலேன் பரிவுதீர்த்த, வாழிய வள்ளலே யான் மறுவிலாயனதே னென்னின், ஊழியோபகலாயோதும யாண்டெலா முலகமேழும், எழும வீவுற்றஞான்றும் இன்றெனவிருத்தியென்றாள்" எனக் கீழ் உருக்காட்டுபடலத்திற் காண்க. பி - ம்:—[1]தேவரீந்தன. [2]முந்துளவரத்தினும்...முற்றுறச.

உக. வளைபெயிற் றரக்கனை யுற்று மந்திரத்
[1]தளவுறு முதியரு மறிய வாணையால்
[2]விளைவினை விளம்பினன் மிதிலை [3]நாடியை
யிளகின னென்வயி னீத லேயுமால்.

(இ - ள்.) வளை எயிறு அரக்கனை உற்று - வளைந்த கோரதந்தங்களை யுடைய ராக்ஷஸராஜனை ராவணனைப் போய்ச்சந்தித்து,—மந்திரத்து அளவுறு முதியரும அறிய - (அவனுடைய), ஆலோசனைசபையிலே சேர்ந்துள்ள பெரியோர்களான மந்திரிகளும அறியும்படி, ஆணையால் விளைவினை விளம்பினன் - (அவ்விராமபிரானுடைய) கட்டளையினால் நேரக்கூடியசெயலை (யான்) சொன்னால், (அவ்விராவணன்), இளகினன் - மனவுறுதிகுலைந்து நெகிழ்ந்தது, மிதிலைநாடியை என்வயின் ஈதல் ஏயும - சீதையை என்னிடம் கொடுத்துவிடக்கூடும்: (எ - று.)—ஆல - ஈற்றசை.

ஆணையால் விளைவு - இனி இராமபிரான் செய்யக்கூடிய ராக்ஷசநாசம் ராவணவதம் முதலியன. விளை வினை - வாலிவதம் முதலாக நிகழ்ந்தசெயல்களை, விளம்பினால என்றும உரைககலாம்; விளை வினை - இனி நேர்வதை, ஆணையால் விளம்பினால் - உண்மையாக எடுத்துசசொன்னால் என்றும்:ஆணையால் விளைவினை விளம்பினால் - சுக்கிரீவன் சொன்னதாக நடக்கப்போகிறதை நான்சொன்னால என்றும் உரைப்பாரும உளர். ஜநககுலத்து மிதியென்னும் அரசனால ஆளப்பட்டமைபற்றி, 'மிதிலை' என்று பெயர். பி - ம்:—[1]அளவுறு. [2]விளைவன [3]நாட்டியை. (உக)

உஉ. அலலதூஉ மவனுடைத் துணைவ ராயினார்க்
கெல்லையுந் தெரிவுறு மெண்ணுந் தேறலாம்
[1]வல்லவ னிலைமையு மனமுந் தேறலாஞ்
சொலலுக முகமெனுந் தூது சொல்லவே.

(இ - ள்.) அலலதூஉம் - அதுவல்லாமலும், அவனுடை துணைவர் ஆயினாககு - அவ்விராவணனுககுத துணைசெயபவராயுள்ள மந்திரிகள் சேநாபதிகள் முதலானவரகளுடைய, எல்லையும் - அளவும, தெரிவுறும் - தெரிவதாகும்; எணணும தேறலாம - (அவாகளுடைய) எண்ணததையும் தெரிந்துகொள்ளலாம்; வல்லவன் - வல்லவனான இராவணனுடைய, நிலைமையும் - நிலைமையையும, மனமும் - மனககருததையும், சொல் உக - (அவனதுவாயினின்று) சொற்கள் வெளிப்பட அவை கொண்டும, முகம எனும தூது சொல்ல - (அவனுடைய, முகமாகிய தூதர் சொலலவும், தேறலாம் - தெளிந்துகொள்ளலாம்; (எ - று.)

முகததின் குறிபபிலே மனக்கருதது வெளியாதலால், 'முகமெனுந் தூதுசொல்ல மனமுந் தேறலாம' என்றார்; இதனை, 'எணணுந்தேறலாம' என்றதனோடுங கூட்டுக. தூதர் செய்தி கூறுதல்போல முகம் மனககருததைப் பிறற்கு உணாதிவிடுதலால், 'முகமெனுந்தூதுசொல்ல' எனப்பட்டது; உருவகம். எண் - வலிமையுமாம். உக, சொல்ல என்ற

செயவெனெசசங்களில் உம்மை தொக்கது, வினைச செவ்வெண. பி - ம் — [1]வல்லவர். (உஉ)

உங. வாலிதன் னிறுதியு மரத்துக் குற்றதுங்
கூலவெஞ் சேனையின் குணிப்பி லாமையு
மேலவன் காதலன் வலியு [1]மெய்ம்மையா
னீனிறத் திராவண னெஞ்சி [2]னிற்குமால்.

(இ - ள்.) வாலிதன் இறுதியும் - வாலியின் மரணமும், மரத்துக்கு உற்றதும் - மராமரததுக்கு நேர்ந்த அபாயமும், வெம் கூலம் சேனையின் குணிப்பு இலாமையும - கொடிய குரங்குச்சேனையின் அளவில்லாமையும், மேலவன் காதலன் வலியும் - சூரியகுமாரனான சுககிரீவனுடைய வலிமையும்,—(யான் நேரிற்சென்று சொல்லுமிடதது), நீல் நிறத்து இராவணன் நெஞ்சில் மெய்ம்மையால் நிற்கும் - நீலநிறததையுடைய இராவணனது மனத்தில் உள்ளபடி பதியும்; (எ - று.) ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

இவையனைத்தும் இராவணன்மனத்திற பதியுமானால் அவன் அஞ்சிப் பிராட்டியை விட்டிடக்கூடு மென்பது உட்கோள். கூலம்=லாங்கூலம்: வாலென்றபொருளுளள அது - சினையாகுபெயராய், நீண்டவாலுள்ள குரங்கைக் குறித்தது.

மரத்துக்கு உற்றது:—இராவணனால் அபகரிக்கப்பட்ட சீதையைத் தேடிக்கொண்டு சென்ற இராமலக்ஷ்மணரை அநுமான் மூலமாகச் சுக்கிரீவன் சினேகிதத பிறகு, தனதுபகைவனும் மகாபலசாலியுமான வாலியைக கொல்லும் வல்லமை இராமபிரானுக்கு உண்டோ இல்லையோ வென்று ஐயமுற்றுத் தன்சந்தேகம் தீருமாறு 'எதிரிலுள்ள ஏழுமராமரங்களையும ஏக காலததில் தொளைபடும்படி எய்யவேண்டும்' என்று சொல்ல, உடனே இராமபிரான், ஓரம்பு தொடுத்து அந்த ஸப்தஸாலவிருக்ஷங்களையும ஒருங்குதொளைபடுத்தின னெனபதாம். பி - ம்.—[1]மேன்மையும். [2]தைக்கும. (உங)

உச. ஆதலா னரக்கனை யெய்தி யாற்றலு
நீதியு மனக்கொள நிறுவி [1]நின்றவும்
பாதியின் மேற்செல நூறிப் பைப்பையப்
போதலே கருமமென் றநுமன் போயினான்.

(இ - ள்.) ஆதலான் - ஆகையால்,—அரக்கனை எய்தி - இராவணனைச சந்தித்து,—ஆற்றலும - (இராமபிரானது) வல்லமையையும, நீதியும்-நியாய நெறியையும், மனம் கொள நிறுவி - அவன்மனத்திற் பதியும்படி (சொல்லி) நிலைநிறுத்தி,—(அவன் பிராட்டியை விட்டிடுதற்கு இசையானாயின்), நின்றவும் - (இதுவரை என்னால் அழிககப்பட்டவைபோக) மிச்சமாயுளள ராக்ஷஸ சேனைகளையும், பைப்பைய - கொஞ்சங்கொஞ்சமாக, பாதியின்மேல் செல நூறி - பாதிக்குமேலாக அழித்துவிட்டு, போதலே - (அப்பால் மீண்டு கிஷ்கிந்தைக்குச்) செல்லுதலே, கருமம - இப்பொழுது செய்யதககக தொழில், என்று - என்று தீர்க்கமாக ஆலோசித்துக்கொண்டே, அநுமன் போயினான.

அநுமான் (தன்வல்லமையைக காட்டாமல் அரக்கர்களுடனே அடங்கிச்) சென்றான்; (எ - று.)—பி - ம்:—[1]நின்றது. (உச)

உடு.—இந்திரசித்து அநுமானை இராவணன் மாளிகைக்குக் கொண்டு செல்லுதல்.

கடவுளர்க் கரசனைக் கடந்த தோன்றலும்
புடைவரும் பெரும்படைப புணரி போர்த்தெழ
விடைப்பிணிப் புண்டது போலும் வீரனைக்
குடைகெழு மன்னனிற் கொண்டு போயினன்.

(இ - ள்.) கடவுளர்க்கு அரசனை கடந்த தோன்றலும் - தேவராசனான இந்திரனை வென்ற வீரனான இந்திரசித்தும்,—புடை வரும் பெரும படை புணரி போரதது எழ - பக்கங்களில் வருகிற பெரிய சேனையாகிய கடல் சூழ்ந்துவர,—விடை பிணிப்புண்டது போலும் வீரனை - ருஷபம் கட்டுப் பட்டதுபோலுள்ள வீரனான அநுமானை, குடை கெழு மன்னன் இல் கொண்டு போயினன் - ஒற்றைவெண்கொற்றக குடையோடுகூடி விளங்குகிற ராக்ஷஸராஜனான ராவணனுடைய அரண்மனைககுக கொண்டு சென்றான்.

உசு.—தூதர்கள் ஓடி இராவணனுக்குச் செய்திகூறுதல்.

தூதுவ ரோடினா தொழுது தொல்லைநாண்
மாதிரங் கடந்தவற குறுகி மன்னநின்
காதலன் [1]மரைமலர்க் கடவுள் வாளியா
லேதில்வா னரம்பிணிப் புண்ட தாமென்றார்.

(இ - ள்) தூதுவா - (இந்திரசித்தினால் லேவப்பட்ட) தூதாகள்,—ஓடினர் - ஓடிசசென்று, தொல்லை நாள் மாதிரம் கடந்தவன் குறுகி - பூர்வகாலத்திலே திகக்குவிசயஞ் செயதவனான இராவணனைச சமீபித்து, தொழுது - (அவனை) வணங்கி, 'மன்ன அரசனே! நின் காதலன் - உனது புத்திரனான இந்திரசித்தினது, மரைமலா கடவுள் வாளியால் - பிரமாஸ்திரத்தினால், ஏதில் வானரம் பிணிப்புண்டது - நம்மின்வேறான குரங்கு கட்டுப்பட்டது', என்றார்-என்று செயதி கூறினாகள்; (எ-று.)—ஆம -அசை; தேற்றமுமாம்.

மாதிரம் - இடவாகுபெயராய், தேவாகளைக் குறித்தது. மரை - முதற் குறைவிகாரம். ஏதில்வானரம்-பகைமையுடைய வாநரம் எனினுமாம்; ஏதில-அயல், பகைமை. பி - பீ:—[1]செருவினிற் கடவுளாமெனப்-பேதிபா வானரம பிடித்திட்டா னென்றார். (உசு)

உஎ.—அந்த நற்செய்திகூறின தூதர்க்கு இராவணன் பரிசளித்தல்

கேட்டலுங் கிளர்சுடா கெட்ட வானென
வீட்டிருள் விழுங்கிய [1]மார்பின் யானையின்
[2]கோட்டெதிர் பொருதபே ராரங் கொண்டெதிர்
நீட்டின னுவகையி னிமிர்ந்த நெஞ்சினன்.

(இ - ள்.) கேட்டலும - (அச்சொல்லைக்) கேட்டவுடனே,—உவகையின் நிமிர்ந்த நெஞ்சினன் - சந்தோஷத்தினாற் பொங்கிய மனத்தையுடையவனான இராவணன்,—கிளர் சுடர் கெட்ட வான் என-விளங்குகின்ற சூரியன முதலியஒளிகள் ஒழியப்பெற்ற ஆகாயமபோல, ஈட்டு இருள விழுங்கிய மாபின் - செறிந்த இருளினால் விழுங்கபபட்ட [மிகக்கறுத்த], தனமாபில் (அணியப்பட்டுள்ளதும), யானையின் கோடு எதிர் பொருத - திக்கஜங்களின் தந்தங்களினால் எதிர்தது மோதப்பட்டதுமான, போ ஆரம் - பெரிய முத்து மாலையை, கொண்டு - கழற்றிககையிறகொண்டு, எதிர் நீட்டினன் - (அந்நற்செயதிசொன்ன தூதாககு) எதிரே கைநீட்டி - வகுமானமாகக கொடுத்தான்; (எ - று.)

இராவணன் திக்குவிசயஞ்செய்தகாலததில் ஐராவதம்முதலிய திக்கஜங்களை எதிர்ததபொழுது அவை கோபங்கொண்டு இவன்மாபில் தமது கூரிய தந்தங்களால் தாகசுகையில் மிக்கவலிமையையுடைய அந்தமாபு பெரிதும் ஊறுபடாதாக அதகநதங்கள் நுனிஒடிந்திட்டனவெனபது, இங்கு உணரத்தக்கது. 'விழுங்கிய' என்பதை வினையெசசமாகக்கொண்டு, சூரியன் முதலிய சுடாக ளிலலாத வானத்தைபபோலத தன்மார்பைச செறிந்த இருள் விழுங்க என்று உரைத்தலுமொன்று; வானததிற் சூரியன்போல அவன்மாபில் விளங்கிககொண்டிருந்த இரததினஹாரம், அமமாபைவிட்டு நீங்குதலால் அங்குப் பிரகாசமமாற என்பது கருதது. பி-ம் —[1]மாபன். [2]கோட்டொடும்.

உஅ.—பெருமகிழ்ச்சிகொண்ட இராவணன் அக்தூங்கைக் கொல்லாது கொணரச்சொல்லுதல்.

எல்லையி லுவகையா லிவாந்த தோளினன்
புல்லுற மலர்ந்தகட் குமுதப் பூவின
னெலலையி னோடிநீ ருரைத்தென் னாணையாற்
கொல்லலை தருகெனக் கூறு வீரென்றான்.

(இ - ள்.) எல்லை இல் உவகையால் இவர்ந்த தோளினன்-அளவிறந்த மகிழ்ச்சியாற் பூரித்த தோள்களையுடையவனும, புல்லுற மலர்ந்த கண் குமுதம் பூவினன் - (சுற்றிடததைத) தழுவுமாறு நன்குமலர்ந்த கணகளாகிய செவ்வாம்பல் மலர்களை யுடையவனுமான இராவணன், (அத்தூதர்களை நோக்கி), 'நீர் ஒல்லையின் ஓடி என் ஆணையால்உரைத்து - நீங்கள் விரைவில ஓடிசசென்று என்கட்டளையால் (இந்திரசித்தினிடஞ்) செய்திகூறுபவராய், கொல்லலை தருக என கூறுவீர் - (அக்குரங்கைக்) கொல்லாமலே கொணர்வாயாகவென்று சொல்லுங்கள்', என்றான் - என்று கட்டளையிட்டான்.

இவர்தல் - உயாதல், எழுசசி. உரைததுக் கூறுவீர் என்று இயைத்து-உறுத்திச்சொல்லீர் எனினும் அமையும். (உஅ)

உகூ.—அத்தூதர்கள் அச்செய்தியை இந்திரசித்துக்குக் கூறுதலும், இனிக் கவி சீதையின் செய்தியைச் சொல்லத் தொடங்குதலும்.

அவவுரை தூதரு மாணை யால்வருந்
தெவ்வுரை நீக்கினு னறியச் செப்பினு
ரிவவுரை நிகழ்வுழி யிருந்த சீதையாம்
வெவவுரை நீங்கினு ணிலைவி ளம்புவாம்.

(இ - ள்) அ உரை - அசசொல்லை, தூதரும் - அந்தத்தூதர்களும்ஆணை யால் - அவ்விராவணன் கட்டளைப்படியே, வரும் தெவ் உரை நீக்கினுன் அறிய செப்பினா - எதிரததுவருகிற பகைவனென்ற சொல்லையும் இல்லா மற செயபவனான இந்திரசிதது அறியுமபடி சொன்னாகள்; இ உரை நிகழ் வுழி - (அநுமான் கட்டுபபட்டு அரக்கா கையிற் சிகுண்டானென்ற) இந்த வாரததை எங்கும பரவியபோது, இருந்த சீதை ஆம வெவ் உரை நீங்கினுள் நிலை-(அசோகவனததிற்) சிறையிருந்த சீதையாகிய கொடிய பழிசசொல்லை நீங்கியவளது நிலைமையை, விளமபுவாம் - இனிச் சொல்வோம்; (எ - று.)—அதனை, அடுதத எழுகவிகளிற் காண்க.

இது - கவிக்கூற்று. எதிரததுவந்த பகைவரைப் பற்றற அழித்து, அத னுலாகும அசசததாற் பகைவரென்று எவரும எதிர்த்துவாராதபடி செய்யும் பலபராகிரமங்களை யுடையவ னென்பது, 'வருந்தெவ்வுரை நீக்கினுன்' என்பதன் கருதது. தெவ்வுரை நீகினுன் என்பதற்கு - பகைவர்களுடைய புகழை யொழிததவனெனறும் பொருள கொள்ளலாம். 'வரும்' என்பதை 'நீக்கினுன்' என்பதனேடு இயைத்து, அநுமானைப் பிணிதது வருகிற என்று பொருள் காணினுமாம. வெவ்வுரை நீங்கினுள் - எப்பொழுதும இன்சொற் களையே பேசுபவளாய்க கடுஞ்சொற்களிலலாதவ ளென்றும உரைக்கலாம்: கோபததோடு இராவணனைச சபிதது அவனைகக்புநிலையாமல் அழிக்கவல்ல ளாயினும பொறுமையினால அநுசனஞ் செய்யாதவள் என்பது கருதது.'இவ் வுரை நிகழ்வுழி' என்பதற்கு - இசசெயதி இப்படி நடந்துகொண்டிருக்கும் போது என்று உரைப்பாரு முளா. (உகூ,

ஙo.—அநுமான் பிடிபட்ட செய்தியைத் திரிஜடை சீதைக்குக் கூறுதல்.

இறுததனன் கடிபொழி லெண்ணி லோர்பட
வொறுத்தன னென்றுகொண் டுவக்கின் றாளுயிர்
வெறுத்தனள் சோர்வுற வீரற் [1]குற்றதைக்
[2]கறுத்தலில சிந்தையாள் கவன்று [3]கூறினுள்.

(இ - ள்.) 'கடி பொழில் இறுததனன் - (அரக்காகளுடைய) பாதுகாவ லுளள சோலையை [அசோகவனததை] முறிததழிததான்; எண் இலோர் பட ஒறுததனன் - அளவிறநத அரககாகள அழியுமாறுகொன்றிட்டான,' என்று கொண்டு - என்று அப்பொழுதைக்கப்பொழுது சொல்லக் கேட்டுணாந்து, உவக்கினறாள் - மகிழ்கின்றவளான சீதாபிராட்டி, உயிர் வெறுததனள்சோர்

வுற - தன் உயிரையும் வேண்டாதவளாய்த் தளர்ச்சி யடையும்படி,—வீரற்கு உற்றதை - அநுமானுக்கு நேர்ந்த துன்பத்தை, கறுத்தல் இல சிந்தையாள் - (சீதையினிடத்துக) கோபித்தலில்லாத மனத்தை யுடையவளான திரிஜடை யென்பவள், கவன்று கூறினள் - கவலைகொண்டு சொல்லினள்; (எ - று.)

வீரற்கு உற்றது - மகாவீரனான அநுமான் இந்திரசித்தின் பிரமாஸ்திரத்தாற கட்டுப்பட்டு அரக்காகையிற்சிக்கி இராவணனிடம் இழுத்துக் கொண்டு போகப்பெறுதல். இனி, இசசெய்யுட்கு - அனுமானுடைய வீரச செயல்களைக் கேள்வியுறறு அவற்றை மனத்திற் கொண்டு மகிழ்கின்றவளும இயல்பிலே கோபமில்லாத மனத்தையுடையவளுமான சீதை அநுமானுக்கு நேர்ந்த துயரத்தைக்குறித்து வெறுப்புக்கொண்டவளாய் உயிர் சோருமாறு கவலையுற்றுத் தன்னிலேதான் சிலசொல்லலானாளென்று உரைகொள்ளுதலும் ஒன்று. பி - ம்.—[1]உற்றதொ. [2]கறுத்தெழு [3]கூறுவாள். (௩௦)

வேறு.

௩௧.—சீதை வருந்திச் சில கூறத்தொடங்குதல்.

ஓவி யம்புகை யுண்டது [1]போலொளிர்
பூவின் மெல்லியன் மேனிபொ டியுறப்
பாவி வேடன்கைப் பார்ப்புறப் பேதுறுந்
தூவி யன்னமன் னாளிவை சொல்லினாள்

(இ - ள்.) மேனி பொடி உற - (ஸ்ரீராமனைப்பிரிந்தநாள் முதல் பத்து மாதகாலமாக ஸ்நானஞ்செய்தலும் அலங்காரஞ்செய்து கொள்ளுதலுமிலலாமையால்) உடம்பு புழுதிபடிந்திருக்க, (அதனால்), ஓவியம் புகை உண்டதுபோல் ஒளிர - சிதிதிரபபிரதிமை புகைபடியப் பெற்றதுபோன்று (ஒளி மழுங்கி) விளங்குகிற, பூவின் மெல் இயல் - மலரபோல் மென்மையான தன்மையுடையவளான சீதாபிராட்டி,—பாவி வேடன் கை பார்ப்பு உற பேதுறும் தூவி அன்னம அன்னாள் - (பிராணிஹிமஸபாகிய) பாவத் தொழிலைச் செயபவனான ஒரு வேடனுடைய கையிலே தன்குஞ்சு அகபபட்டுக்கொள்ள அதனால் வருத்தமடைகிற சிறகழகையுடைய அன்னப்பறவையைப் போன்றவளாய், இவைசொல்லினாள் - (அநுமானைக் குறித்து) இவ்வார்த்தைகளைச சொல்லிப் புலமபலானாள்; (எ - று.)—அவ்வாரதைகளை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

பாதகசசெயலுடையனான இந்திரசித்துக்குப் பாவிவேடனும், அவன்கையில் அகப்பட்டுக்கொண்ட அநுமானுக்கு வேடன்கையிற் சிக்கிய அன்னப்பாரபபும, அனுமானைக்குறித்து மனங்கலங்குகிற பிராட்டிக்கு அகுகுஞ்சைக்குறித்து மனமிரங்குகிற அதன் தாயான அன்னப்பறவையும உவமை யெனக காண்க. தாயக்குப் பிளளையினிடத்து உள்ளவவ்வளவு அன்பு லோகமாதாவான ஜானகிபபிராட்

டிக்கு அநுமானிடம் உள்ளதென விளங்கும். "ஓவியம்புகையுண்டதே யொக்கின்றவுருவாள்" என்றார் காட்சிப்படலத்தும். மேனிபொடியுற - உடம்பிலே புழுதிபடும்படி [தரையிலே விழுந்து புரண்டு] என்றலு மொன்று. பார்ப்பு - இளமைப்பெயர். பி - ம்:—[1]போலவொர். (ரூக)

ரூஉ —இதுமுதல் நான்தகவிகள் - அநுமானைக்குறித்துச் சீதை தன்னிலேதான் புலம்பல்.

[1]உற்றுண் டாய விசும்பை யுருவினாய்
முற்றுண் டாய்கலை யாவையு முற்றுறக்
கற்றுண் டாயொரு கள்ள வரக்கனாற்
பற்றுண் டாயிது வோவறப் பான்மையே.

(இ - ள்.) உற்று உண்டாய - மிகப்பரந்துள்ளதான, விசும்பை - ஆகாயத்தை, உருவினாய் முற்றுண்டாய் - ஊடுருவிச்சென்று அளாவி வளர்ந்து நிறைந்தவனும், கலையாவையும் முற்றுற கற்றுண்டாய் - சாஸ்திரங்களெல்லாவற்றையும் நிரம்பக் கற்று உணர்ந்து மனங்கொண்டவனுமான நீ, ஒரு கள்ளம் அரக்கனால் பற்றுண்டாய் - வஞ்சனையையுடைய ஓர் இராக்கதனாற் பிடிபடலானாய்; அறம் பான்மை இதுவோ - தருமமுறை இதுதானோ! (எ - று.)

மிகப்பெரிய உருவங்கொண்டு காட்டியவனும் கல்விமுற்றக்கற்றுத் தேர்ந்தவனும் கள்ளங்கபடமற்றவனுமான நீ கள்ளத் தன்மையையுடைய ஓர் அரக்கனாற் பற்றுண்டது அறநெறிக்குத தகுதி யன்று என்றபடி. 'நீ கடலைக் காலினாற் கடந்தது எவ்வனம்?' என்று பிராட்டி வினவ, அநுமான் உடனே தன் பேருருக்காட்ட, அதுகண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அச்சமுங் கொண்ட அவள் அதனையடக்குமாறு கூற, அநுமான் அப்பேருருவத்தை யடக்கிக் கொண்டு மீளவும் சிறியவடிவமெடுத்தன னாதலால், "உற்றுண்டாய விசும்பை யுருவினாய் முற்றுண்டாய்" என்றாள். ஆரியன் வரமருளியபடி அநுமான் அவனிடத்துச் சகல சாஸ்திரங்களையும் கற்று ஒப்புயர்வற்ற ஞானமுடையனாயினனென்பது பிரசித்தம் (ரூஉ)

ரூரூ. கடர்க டந்து புகுந்தனை கண்டக
ருடர்க டந்து நின்னூழி கடந்திலை
யடர்க டந்த திரள்புயத் தையநீ
யிடர்க டந்தனை வந்திடர் மேலுமே.

(இ - ள்.) நீ—, கடா கடந்து புகுந்தனை - கடலைக்கடந்து இங்குவந்தாய்; கண்டகா உடர் கடந்தும் - கொடியவர்களான அரக்கர்களுடைய உடம்பின் வலிமையை வென்று அழித்தும், நின் ஊழி கடந்திலை - உனது வாழ்நாள் ஒழியப்பெற்றிலை; (இவ்வாறு), அடர்கள் தந்த - வெற்றிகளையே பெற்று வந்த, திரள் புயத்து ஐய - திரண்ட தோள்களையுடைய ஐயனே! (முடிவில்

நீ அரக்கர்கையிற் சிகியதனால் , வந்து இடா மேலும் இடாகள் தந்தனை - (கிஷ்கிந்தையினின்று இங்கு) வந்து (எனகுத) துன்பதின்மேலும் துன்பகளை உணடாகியவ ஞனாய்; (எ - று.)

கணடக ருடாகடந்தும் நின்ஊழிகடந்திலை - கொடிய பல அரககரை யழிததும உனது உயிர்வாழ்வுக்கு ஒரு குறையும் இல்லாதிருந்தாய் என்றபடி. 'அடர்கள்தந்த' என்பதறகு - எனகு வலிமைகளைக் கொடுத்த என்றும் உரையிடலாம். இராமபிரானைப்பிரிந்ததனாலான சோகத்தின்மேல் அவ்விராம தூதன் பகைவாகையிறகட்டுணடதனாலான சோகமும் சோந்து மேன்மேல் வருத்துதலால், 'வந்து இடர்மேலும் இடர்கள்தந்தனை' என்றாள். உன் வரவு எனகு முதலில் துன்பகளையெல்லாம போகியதாயினும் முடிவில் துன்பத்தின்மேல் துன்பமேயாயிறறு என்றபடி. அடர்கடாகதிரள் புயம் - பகைவர்வலிமைக்கு அப்பாற்பட்ட திரணடதோள் என்றலும் ஒன்று. முதல் மூன்றடிகளில் கடல், உடல், அடல்எனப போலியிலலாப் பாடமு முணடு ()

ருச. ஆழி காட்டியென் னுருயிர் [1]காட்டினாய்க்
கூழி காட்டுவெ னென்றுரைத் தேனது
வாழி காட்டு[2]மென் றுண்டுன் வரைப்புயப்
[3]பாழி காட்டி யரும்பழி [4]காட்டினாய்.

(இ - ள்.) ஆழி காட்டி - (இராமபிரானது) மோதிரத்தை யான் காணுமாறு கொணடுவந்து எனக்குக கொடுத்து (அதனால்), என் ஆர் உயிர் காட்டினாய்ககு - எனது அருமையான உயிரை ஒழியாதபடி என் உடலிலேயே நிலைபெறச்செயதவனான உனககு, ஊழி காட்டுவென் என்று - (அவ்வுபகாரதுக்குஈடாகக) கறபாநதகாலததைக காணுமாறு நீணட ஆயுளைக் கொடுக்கக் கடவே னென்று, உரைததேன் - அங்ஙனம வாழ்ததுககூறினேன்; அது வாழி காட்டும் என்று உணடு - அங்ஙனம நான்வாழ்ததின சொல் (உனக்குச) சாவாதநிலையைத தருமென்பது உளளது [அது தவறாது என்றபடி]; (ஆனால்), உன் வரை புயம பாழி காட்டி அரும பழி காட்டினாய் - (நீ) உனது மலைபோனற தோளகளின வலிமையை அரககாக்கெல்லாங காட்டத தொடஙகி முடிவிலே நீகககற்கு அரிய பழிபபைப் பெறலானாய்; (எ - று.)

இதற்கு யான் என்செயவேன்! என்று இரஙகியவாறும. "யான் மறுவிலாமனத்தே னென்னின், ஊழியோர்பகலாயோதும யானடெலா முலகமேழு, மேழுமவீவுற்றனான்று மின்றென விருததி" என்று வாழ்ததியபடி நீடூழி வாழ்வையாயினும், அரக்கர்கையிலகப்பட்டுகொண்டதனால் அவ்வாழ்வு பழுதுபட்டதே என்று பரிதபித்துக் கூறினாள். இனி, கணையாழிகாட்டி எனககு நீ உயிருதவி செய்ததறகு ஈடாக யான் உனக்கு நெடுங்காலம அழியாத உயிர்வாழ்க்கை உணடாகுமாறு வாழததுககூறினேன்; அவ்வாததை வாழ்வைத்தரு மென்பதை உட்கொணடு உனதோளவலியைக்காட்டத் தொடஙகிவிட்டுப் பெரும்பழிப்புற்றாய் என்று பொருள்கொளளினுமாம்; இவ்

வுரைக்கு, உண்டு-உட்கொண்டு என்றபடி: மூந்தினவுரைக்கு, உண்டு என்பது-குறிப்புமுற்று. அருமபழி - ராமனுதன் பகைவர்கையிற் பட்டானென்பது. பி - ம் —[1]காட்டினாய். [2]ஒன்று. [3]பூழி. [4]பூட்டினாய். (௩௪)

௩௫. கண்டு [1]போயினை நீனெறி காட்டிட
மண்டு போரி னரக்கனை மாய்த்தெனைக்
கொண்டு மன்னவன் போமெனுங் கொள்கையைத்
தண்டி னாயெனக் காருயிர் தந்தநீ.

(இ - ள்.) 'எனக்கு ஆரு உயிர் தந்த நீ - (என்கணவனிடத்தினின்று என்னிடம் தூதுவந்து செய்திகூறித்தேற்றி) எனக்கு அருமையான உயிரை (உடம்பினின்றுஒழியாதபடி நிலைநிறுத்தி) உதவியவனான நீ, கண்டு போயினை - (இவ்விடங்களைக) கண்டு சென்று, நீள் நெறி காட்டிட - நீண்ட வழியைக்காட்டிகொண்டு முன்வர, மன்னவன் - தலைவனான இராமபிரான், (இங்குவந்து), மண்டு போரின் அரக்கனை மாய்த்து - நெருங்கிச் செய்யுமபோரில் இராவணனைக் கொன்று, எனை கொண்டு போம் - என்னைச சிறைமீட்டுகொண்டுசெல்வன், எனும் கொள்கையை-என்று (நான) எண்ணிகொண்டிருந்த கொள்கையை, தண்டினாய் - (இப்போது நீ உன் வலிமைகாட்டத்தொடங்கிப் பகைவர்கையிற் பிடிபட்டதனால்) போக்கிவிட்டாய்; (எ - று)

வளர்த்தவனே அழித்ததாற்போல, எனக்கு ஆருயிர்தந்த நீயே இனி எனக்கு உன்மூலமாக க்ஷேமமுண்டாகுமென்று நான்கொண்டிருந்த முழு நம்பிக்கையை அறகெடுத்துவிட்டாய் என்றபடி. எனக்கு நீ ஆருயிர்தந்த உதவி பழுதுபட்ட தென்றாள். மன்னவன் போம - செய்யுமென்முற்று, ஆண்பாலுக்கு வந்தது. பி -ம்:—[1]போயினநீனெறி. (௩௫)

௩௬ —இங்ஙனம் பலகூறிப்புலம்பிச் சீதை மூர்ச்சித்தல்.

[1]ஏயப் பன்னின ளின்னன தன்னுயிர்
தேயக் கன்று [2] பிடியுறத் தீங்குறு
தாயைப் போலத் தளர்ந்து [3]மயர்ந்தன
டீயைச் சுட்டதொர் கற்பெனுந் தீயினாள்.

(இ - ள்.) இன்னன - இதுதன்மையனவான வார்த்தைகளை, ஏய பன்னினள் - தகுதியாகச சொன்னவளாய், தன் உயிர் தேய - தனது உயிர் வலிமைகுறைய, கன்று பிடியுற தீங்கு உறு தாயை போல தளர்ந்து - தன்கன்று பிறர்கையிலகப்பட்டுக்கொள்ள அதனால துன்பம் மிகுகிற தாய்ப் பசுவைப்போலத் தளர்ச்சியுற்று, மயர்ந்தனள் - மயக்கமடைந்தாள்; (யாவளெனில்),—தீயை சுட்டது ஓர் கற்பு எனும தீயினாள் - நெருப்பையுஞ் சுடவல்லதான பதிவிரதாதருமமென்னும ஒரு பெரு நெருப்பை யுடையவளாகிய சீதை; (எ - று.)

கன்று - இளமைப்பெயர். இராவணவதத்தின்பின்னர் இராமபிரான் சீதாதேவியின் கற்புநிலைமையைக்குறித்துச் சுவகித்ததாகக காட்டும்போது பிராட்டி இலக்குமணனைத தீமூட்டசசொல்லி 'யான் திரிகரணத்தாலும்

தூய்மையுடையவளல்லேனாயின் என்னைத் தீச்சுடுக' என்று ஆணைகூறி அக்கினிப்பிரவேசஞ் செய்ய, அதனால் அவள் கற்பின்தீயால் தீந்து அவளைத் தன்மீதுகொண்டு வெளிப்பட்டு "அநுகியான் என்னை இவ்வன்னைகற் பெனும், பொருகுவெந்தீச்சுடப் பொறுக்கிலாமையால், இருகணைந்தேன்" என்றுதொடங்கி அவளது கற்புநிலைமையின் சிறப்பை வெளியிடுமாறு காண்க; மேல்மீட்சிப்படலத்தில், "பாலின்பஞ்சென்னத் தீந்ததவ்வெரி அவள் கற்பின்தீயினால்" என்பதும் நோக்கத்தக்கது. 'சுட்டது' என்றது - காலங் கருதாது - தன்மை கருதியது. பிற்காலத்து நூலியற்றிய கவி யுத்தகாண்டத்துவரலாறறை அநுவதித்து 'தீயைச்சுட்டது' என இறந்தகாலத்தாற் கூறினாரெனினுமாம். பி ம்.—[1]ஏயபன்னினள். [2]பிடியுண்டு. [3]மயங்கினாள். ()

ஙஎ.—இதுநிற்க இந்திரசித்து அநுமானைப் பிணித்தபடியே இராவண னரண்மனையுட் சென்று சேர்தல்

பெருந்த கைப்பெரி யோனைப்பி ணித்தபோர்
முருந்தன் மற்றை யுலகொரு மூன்றையு
மருந்த வப்பய னாலர சாள்கின்றா
னிருந்த வபபெருங் கோயில்சென் றெய்தினான்.

(இ - ள்.) பெருந் தகை - பெருமைகுணத்தையுடைய, பெரியோனை- உருவத்தினாலும் பெரியவனான அநுமானை, பிணித்த - கட்டிய, போர் முருந்தன் - யுத்தத்திற் புகழ்பெற்றவனான இந்திரசித்து,—உலகு ஒரு மூன்றையும் அருந் தவம பயனால் அரசு ஆள்கின்றான் இருந்த அ பெருங் கோயில் சென்று எய்தினான் - மூன்றுஉலகங்களையும தான்செய்த அருமை யான தவத்தின்பயனால் அரசாள்கின்றவனான இராவணன் வீற்றிருக்கின்ற அந்தப்பெரிய அரண்மனையை [சபாமண்டபத்தை] ப போயசேர்ந்தான்; (எ - று.)—மற்றை - அசை; பின்பு எனினுமாம. 'அருந்தவப்பயனா லரசாள் கின்றான்' என்றது - தனது நயனுடைமையால் அரசாள்கின்றவ னல்ல னென்ற குறிப்பு. (ஙஎ)

வேறு.

ஙஅ.—இதுமுதற் பதினேழுகவிகள் - இராவணன் அப்பொழுது அங்கு அரசு வீற்றிருக்கின்ற நிலைமையின் சிறப்பைக் கூறும்.

தலங்கண் மூன்றிற்கும் பிறிதொரு மதிதழைத் தென்ன
வலங்கல் [1]வெண்குடைத் தண்ணிழ லவிரொளி பரப்ப
வலங்கொ டோளினான் மண்ணின்று வானுற வெடுத்த
பொலங்கொண் மாமணி வெள்ளியங் குன்றெனப் பொலிய.

இதுமுதற் பதினெட்டுக கவிகள் - குளகம்.

(இ - ள்.) அலங்கல் - முத்துசரங்கள சுற்றிலும தொங்கிபசையப் பெற்றதான, வெள்குடை - ஒற்றைவெண்கொற்றக் குடையானது, தலங்கள மூன்றிற்கும் பிறிது ஒரு மதி தழைத்து என்ன - (இந்த நில வுலகத்திற்கு மாதிரம் ஒளிசெய்கிற இசசந்திரனன்றி) மூன்று உலகங

களுகும் (விளக்கந்தருமாறு) வேறொரு சந்திரமண்டலம் தோன்றி வளர்ந்து விளங்கினாற்போல, தண் நிழல் அவிர் ஒளி பரப்ப - குளிர்ச்சியான நிழலையும் விளங்குகிற ஒளியையும் பரவச்செய்யவும் —(அக்குடை தான்), வலம் கொள் தோளினால் மண் நின்று வான் உற எடுத்த பொலம் கொள் மா மணி வெள்ளி அம் குன்று என பொலிய - வலிமை கொண்ட (இருபது) கைகளைக்கொண்டு (அவ்விராவணன்) நிலவுலகததிலிருந்து ஆகாயததை அளாவுமாறு மேலே தூக்கிய அழகுகொண்ட பெரிய சிறந்த வெள்ளிமலையாகிய கைலாசம்போல விளங்கவும்,—(எ - று.)—இசைசெய்யுளிலுள்ள 'பரப்ப', 'பொலிய' என்ற செயவெனெச்சங்களும், அடுத்த பதினாறுகவிகளில் வரும் வினையெச்சங் களும், அடுகி மேல் ஞரு - ஆங கவியில் வரும் 'இருந்த' என்னும் பெயரெச சத்தைக் கொள்ளும்.

இராவணன் திரிலோகாதிபதியாதலால், அவனது மூவுலகததாட்சிக கும் அறிகுறியாய்ச் சிறந்தோங்குகிற பெரியகுடைக்கு, மூவுலகத்துக்கும் விளகக்தருமாறு வேறொரு சந்திரன் தோன்றிக கலைநிறைந்து எப்பொழு தும் பூரணமாய விளங்கினாற்போலவென இல் பொருளுவமை கூறவேண டிற்று. இராவணன் கைலாசகிரியைப பெயர்கதெடுத்த வரலாறுகூறு மிடத்து, அவன் அம்மலையைத் தலைக்கு மேலே தூக்கியதாகக் கூறுதலு முள தாதலின், அகங்கம் உயர எடுகக்பட்ட வெள்ளிமலையோடு அவ்வெண் கொற்றகுடை உவமிக்கப் பட்டது; அலகுகல் - தொங்கியசைவது; மாலைக்கு வழங்குகிற இது, குடையின்சுற்றிலுந் தொங்குகிற ஸரங்களை இங்குக் குறித் தது; "பொறகுடைகுச, சூழ்தர நிரைத்துத்தூகுகிய முத்தின் சுடர்மணித தொடையல்" என்னுமிடத்து 'தொடையல்' என்பது போல' (இச்சரங்கள், உலகவழக்கில் 'ஜாலர்' எனபபடும) பி - ம்:—[1]வெணகுடை கண்குடை யவி ரொளிப்பரப்ப' என்றும பாட முண்டு. (ரூஅ)

ரூ. புள்ளு யாத்தவன் றிகிரியும் புரந்தர னயிலுந்
தள்ளின் முக்கணான் கணிச்சியுந் தாக்கிய தழும்புங்
கள்ளு யிர்க்குமென் குழலியர் முகிழ்விரற் கதிர்வாள்
வள்ளு கிர்ப்பெருங் குறிகளும புயங்களின் வயங்க.

(இ - ள்.) புள் உயர்ததவன் திகிரியும் - சிறந்த பறவையான கருடனது வடிவமெழுதிய கொடியை உயரநாட்டியவனான திருமாலினது சக்கராயுத மும், புரந்தரன் அயிலும-இந்திரனது வசிராயுதமும், தள் இல் முகங்ஞன் கணிசசியும - (பகையழித்தலில்) தவறாத திரிநேத்திரனான சிவபிரானுடைய சூலாயுதமும், தாகிய - தம்மீதுபட்டதனாலான, தழும்பும் - வடுக்களும், கள் உயிர்க்கும் மெல் குழலியர் - (சூடிய மலாகளின்) தேனைச் சொரிகிற மென் மையான கூந்தலையுடைய மகளிருடைய, முகிழ் விரல் - செந்தாமரையரும்பு போன்ற விரல்களிலுள்ள், கதிர் வாள் வள் உகிர் - ஒளியையுடைய வாளா

யுதம்போற் கூரிய நகங்கள் படுவதனாலான, பெருங் குறிகளும் - பெரிய வடுக்களும், புயங்களின் வயங்க - தனது தோள்களில் விளங்கவும்,—(எ - று)

சிறப்புப்பற்றி 'புள்' என்ற பறவையின்பெயர் - பக்ஷிராஜனை கருடனையும், 'முகிழ்' என்ற அரும்பின்பெயர் - செந்தாமரையரும்பையும் குறித்தன. புள் - பறவையின் வடிவ மெழுதப்பட்ட துவசத்துக்குத் தானியாகுபெயர். 'கள்ளுயிர்க்கு மென்குழலியா' என்றது, மந்தோதரி தாரியமாலினி முதலாக இராவணனுக்கு உரிய பலமகளிரை இராகததமாதாகளுடைய கைவிரல்களின் கூரியநகங்கள், அவர்கள் ஆலிங்கனம் முதலிய சிருங்காரசேஷ்டைகள் செய்யும்போது இராவணன் தோள்களிற் பதிந்தன என்க. உகிர்க்குறி, நகக்ஷதம் எனப்படும் மிக்காதலையுடைய மகளிரது விலாசவகையால் நேர்ந்த நகக்குறிகள்போலவே பகைவர்கள் எறிந்த ஆயுதங்களும் இவன்தோள்களில் வடுமாத்திரத்தைச செய்தனவே யன்றி ஒன்றும் ஊறுபடுததாவாயினவென இராவணன்தோளகளின் பெருவலிமை விளங்கும் (ருகு)

சரு0. துன்று செம்மயிர்ச் சுடர்நெடுங் கறைகள் சுற்றி
நின்று திக்குற [1]நிரல்படக் கதிர்க்குழா நிமிர
வொன்று சீறறத்தி னுயிர்ப்பெனும் பெரும்புகை யுயிர்ப்பத்
தென்றி சைக்குமோர் வடவன றிருத்திய தென்ன.

(இ - ள்) துன்று - (பத்துத்தலைகளிலும்) அடர்ந்துள்ள, செம்மயிர் - செந்நிறமான மயிர்களின், சுடர் நெடுங் கற்றைகள - பிரகாசமுள்ள நீண்ட தொகுதிகள், சுற்றி நின்று - சுறறிலும பரந்து நினறு, திகு உற - எல்லாத் திசைகளிலும் அளாவ, நிரல் படக் கதிர் குழாம் நிமிர - (அவறறினின்று) வரிசைவரிசையாக (சிவந்த) ஒளிபபிழமபுகள (அவனது கரியமேனியின்மேல்) உயாந்தெழுந்து விளங்குதலாலும், ஒன்று சீற்றத்தின் உயிர்ப்பு எனும் பெரும் புகை உயிர்ப்ப - பொருந்திய கோபத்தோடு விடப்படுகிற பெருமூச்சாகிய பெரியபுகை வெளிப்படுதலாலும, தென் திசைககும் ஓர் வட அனல் திருத்தியது என்ன - தெறகுததிகிலும் (கடலினிடையே) ஒரு படபாமுகாக்கினி அமைக்கப் பட்டதென்று சொல்லும்படியும,—(எ - று.)

கரியபெரியவடிவமுடைய இராவணனது பத்துத்தலைகளின்மீது நெடுந்தூரம் உயர்ந்து விளங்குகிற செமபட்டமயிரகள சிவந்த அக்கினிச சுவாலைகள் போலவும், இராவணன் பத்துமுகங்களிலு முள்ள முகங்கின் துளைகளின்வழியாகக் கோபததோடுவிடுகிற பெருமூசசினின்று எழுகிற பெருமபுகை நெருப்பின் புகைபோலவும விளங்குதலால், தென்கடலிடையிலுள்ள இலங்காபுரியில் தோன்றுகிற அக்காட்சி, தென்கடலிலே ஒருபடபாமுகாக்கினி அமைக்கப்பட்டதுபோலப பிரகாசிக்கு மென்க; தற்குறிப்பேற்றவணி. கடலிலே ஒருபெணகுதிரையின் முகததினின்று ஒரு பெருந்தீ எழுந்து எப்பொழுதும் பற்றியெரிந்து கொண்டிருக்கிறதென்றும், அது மழைப்பெருக்கு முதலிய வற்றாற் கடல்பொங்காதபடி அதிகப்படும நீரை உறிஞ்சி வற்றச்செய்து வரு

கிற தென்றுங் கூறுதல் நூற்கொள்கை; அத்தப்படபாமுகாக்கினி வடவடவி லேயுள்ளதென்று குறிக்கப்பட்டு, 'வடவனல்' என்று வழங்கப்படுதலால், இங்கு 'தென்திசைக்கும்' என்ற உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொருளது. பி - ம்:—[1]நிறைதர, நிறைத்தன. (சா0)

சக. மரக தக்கொழுங் கதிரொடு மாணிக்க நெடுவா
ணரக தேயத்து ணடுக்குறு விருளையு நக்கச்
சிரம னைத்தையுந் திசைதொறுந் திசைதொறுஞ் செலுத்தி
[1]யுரகர் கோனினி தரசுவீற் றிருந்தன னொப்ப.

(இ - ள்.) மரகதம் கொழுங் கதிரொடு மாணிக்கம் நெடு வாள் - (பத்துத்தலைகளிலும் அணியப்பட்டுள்ள பத்துக்கிரீடங்களிலும் பதிக்கப்பட்டிருக்கிற) மரகதரத்தினத்தின் செழுமையான ஒளியுடனே (அவற்றிற்பதிக்கப்பட்டுள்ள) மாணிக்கங்களின் நீண்டஒளியும், நரக தேயத்துள் நடுக்கு உறு இருளையும் நகக - நரகலோகத்திலுள்ளே (எச்சுடர்களும்) அஞ்சாது நிறைந்திருக்கிற இருளையும் தாவிவிழுங்க. (அதனால்தான்), உரகர் கோன சிரம் அனைத்தையும திசை தொறும திசை தொறும செலுத்தி இனிது அரசு வீற்றிருந்தனன் ஒப்ப - சர்ப்பராசனான ஆதிசேஷன் தனது தலைகளையெல்லாம் எல்லாத்திசைகளிலுஞ் செல்லுமாறு பரப்பிக்கொண்டு இனிமையாக அரசுவீற்றிருக்கின்றனன் போன்று விளங்கவும்,—(எ - று.)

கொடிய அரக்கர்தலைவனான இராவணனுடைய உயர்ந்த பத்துத்தலைகளின் கிரீடங்களிலிருந்து எழுகிற மரகதரத்தினத்தி னொளியோடு கூடிய மாணிக்கத்தின் காந்தி, கொடியபாமபுகளின் தலைவனான ஆதிசேஷனுடைய பலதலைகளின் பசியபடங்களிலுள்ள மாணிக்கத்தி னொளிபோன்று விளங்குதலால், இராவணன் ஆதிசேஷன்போல்வனென்க. ராக்ஷசராசனது ஒவ்வொருதலைகளும நாகராசனது நூறு நூறுதலை ஏடாம்; இராவணன் பத்துத்தலைகளையும ஆதிசேஷன் ஆயிரந்தலைகளையு முடையனாதலின. மரகதம் - பச்சையிரத்தினம. மாணிக்கம - செந்நிறமுடையது நெடு வாள் - நெடுந்தூரஞ்சென்றுவிளங்கும் ஒளி. "இருள்சோந்த இன்னுலகம்," "ஆரிருளுய்த்துவிடும்" என்றபடி தாமிஸ்ரம அந்தாமிஸ்ரம என்ற சில நரகவகைகள திணிந்த இருளையுடைமையாலும், நரகம கீழுலகத்து உள்ளதாதலாலும, 'நரகதேயத்துள் நடுக்குறு இருள்' எனப்பட்டது; 'அதனையும் நக்க' என, கிரீடகாந்தி மிகுதியை விளக்கியவாறு. அரசுவீற்றிருத்தல் - சிறப்பாக அரசாட்சிசெலுத்திக்கொண்டு சபையிற் கொலுவீற்றிருத்தல். (சக)

சஉ. குவித்த பன்மணிக் குப்பைகள் [1]கலையொடுங் கொழிப்பச்
சவிச்சு டர்க்கல னணிந்த[2]பொற் றோளொடு தயங்கப்
புவித்த டபபடர் மேருவைப் பொன்முடி யென்னக்
கவித்து [3]மாலிருங் கருங்கட லிருந்தது கடுப்ப.

(இ - ள்.) குவித்த - தேர்ந்தெடுத்து ஒருங்குசேர்த்துப் பதிக்கப்பட்ட, பல் மணி குப்பைகள் - பலவகை யிரத்தினங்களின் கூட்டங்கள், கலையொடும் கொழிப்ப - அரைப்பட்டிகையினின்று ஒளி வீசி விளங்கவும்,—சுவி சுடர் கலன் அணிந்த பொன் தோளொடு தயங்க - சூரியகாந்திபோன்ற ஒளியை யுடைய ஆபரணங்கள் தமமை அணிந்துள்ள அழகிய தோள்களோடு அமைந்து விளங்கவும்,—மால் இருங் கருங்கடல் - மிகப்பெரிய கருநிறமான கடலானது, புவி தடம் படா மேருவை - பூமியினிடத்தில் நெடுந்தூரம் பரவி யுளள மேருமலையை, பொன்முடி என்ன கவித்து - சுவர்ண கிரீடமாகச் சூட்டிக்கொண்டு, இருந்தது - வீற்றிருப்பதை, கடுப்ப - ஒப்பவும்,—(எ - று.)

கருநிறமுள்ள பெருவடிவுடைய இராவணன் சுவர்ணகிரீடத்தைத் தரித்துக்கொண்டு அரசுவீறறிருத்தல், கரிய பெரிய கடல் பொன்மயமான மேருமலையை முடிமீதுகொண்டு வீற்றிருந்தாற்போலு மென வருணித்தார்; தற்குறிப்பேற்ற வுவமையணி. கலையொடுங்கொழிப்ப என்பதற்கு - காந்தி யோடு தொகுக்கப்பட்டு விளங்க எனினும் அமையும்; உத்தரீயத்தோடும் ஒளி வீசவென்று உரைப்பாரு முளர். 'புவித்தடமபடா' என்பது - பூமியிலே விசாலமாகப்பரவிய வென்றும பொருள்படும். 'தோளொடுதயங்க' என்ற விடத்து. 'ஒடு' என்பதை இசைநிறையெனக கொண்டு விலக்கி, தோள்கள விளங்கவென்றலுமொன்று. பி-ம்.—[1]தளைதொறும். [2]போலானனந். [3]மாலிரு கடலிருந்தன்னது. (சஉ)

சஙு. சிந்து ராகத்தின் செறிதுகிற் கச்சொடு செறியப்
பந்தி வெண்முதத் தணிகலன் முழுநிலாப் பரப்ப
விநது வெண்குடை நீழலிற் றாரகை யினம்பூண்
டந்தி வானுடுத் தல்லுவீற் றிருந்ததா மென்ன.

(இ - ள்.) சிந்துராகத்தின் செறி துகில் - சிந்தூரம் போன்ற செந்நிறத் தோடுபொருந்திய அரையிலுடுத்த ஆடையானது, கச்சொடு செறிய அரைக் கச்சுடனே கூடி விளங்க, பந்தி வெள் முதத்தின் அணிகலன் முழு நிலா மரப்ப - வரிசைவரிசையாக வெண்ணிறமான முத்துக்களைக்கொண்டு அமைக் கப்பட்ட ஆபரணங்கள பூரணசந்திரகாந்திபோன்ற ஒளியைப் பரவச்செய்ய, (அதனால்), அல்லு - இருளானது, அந்தி வான் உடுத்து - செவ்வானத்தை இடையிலே ஆடையாகத் தரித்துக்கொண்டு, தாரகை இனம் பூண்டு - நக்ஷத் திரங்களின் கூட்டத்தை ஆபரணமாகத்தரித்து, இந்து வெள் குடை நீழலில்- சந்திரனாகிய வெணகொற்றகுடையின் நிழலிலே, வீற்றிருந்தது - கொலு வீற்றிருந்த காட்சியை, ஆம - போலும், என்ன - என்று (தன்னைக்கண்டவ) சொல்லுமபடியும,—(எ - று)

இருள் அரசுவீறறிருத்தல் - கருநிறமுள்ள இராவணன் கொலு விருத்தறகும், செவ்வானம - செந்நிறமுள்ள அவனது ஆடைக்கும்,

வெண்ணிறமான நக்ஷத்திரக்கூட்டம் - அவனது முத்தாபரணங்களுக்கும், சந்திரமண்டலம் - வெண்கொற்றகுடைக்கும் உவமை யெனக் காண்க. (சரு)

சச. வண்மைக் குந்திரு மறைகட்கும் வானினும் பெரிய
திண்மைக் குந்தனி யுறையுளா முழுமுகந் திசையிற்
கண்வைக் குந்தொறுங் களிற்றொடு மாதிரங் காக்கு
மெண்மர்க் கும்மற்றை யிருவர்க்கும் பெரும்பய மியற்ற.

(இ - ள்.) வண்மைக்கும் - அழகுக்கும், திரு மறைகட்கும் - சிறந்த வேதங்கட்கும், வானினும் பெரிய திண்மைக்கும்-ஆகாயத்தினும் பெரியதான பலத்துக்கும், தனி உறையுள ஆம்-ஒப்பற்ற இருப்பிடமாகிய, முழு முகம் - (தனது) பெரியமுகங்கள் பத்தும், திசையில் கண வைக்கும தொறும் - பத்துதிக்குக்களிலும் கண்பார்வை யைச செலுத்தும்போதெல்லாம், களிற்றொடு மாதிரம் காக்கும் எண்மாகும் மறறை இருவர்க்கும் பெரும் பயம் இயற்ற - (ஐராவதம்முதலிய) திக்கஜங்களோடுகூடிய திக்குக்களெட்டையும பாதுகாக்கிற அஷ்டதிக பாலகர்களுக்கும மேலும கீழு மிருந்து பரிபாலிக்கிற (துருவன் ஆதிசேஷன் என்னும்) இருவர்க்கும் மிக்க அசசத்தைச் செய்யவும்,—.

"வீணையினிசைபட வேதம்பாடுவான்" என்றபடி இராவணன் வேதமோதியவ னாதலால், அவனது முகம் 'திருமறைகட்குத் தனியுறையுளாம் முகம்' எனப்பட்டது. 'வானினும் பெரிய திண்மை' என்றல், ஒருவகைக் கவிமரபு. உறையுள - உறை உள் எனப்பிரித்து. வசிக்குமிடம் என்க. காக்கும எண்மர் - இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என இவர்; இவர்களைக கிழக்கு முதலாக முறையே கொள்க. மூன்று உலகங்கட்கும் மேலிடத்தி லிருந்து ஆட்சிசெலுத்துதலால் துருவனும், பாதாளலோகத்துக்கு கீழிருந்து ஆட்சிசெய்தலால் ஆதிசேஷனும் முறையே மேலிடதுக்கும் கீழிடதுக்கும் பாலக னெனப்பட்டனர். மற்றையிருவர் - பத்துதிசைகளிற் கீழ்க்கூறிய எட்டு மொழிந்த மேலிடத்தையும் கீழிடத்தையும பரிபாலிப்பவ ரென்றபடி. (சச)

சரு. ஏக நாயகன் றேவியை யெதிர்ந்ததற் பின்னை
நாகர் வாழ்விட முதலென நான்முகன் வைகு
மாக [1]மால்விசும் பீறென நடுவண வரைப்பிற்
றோகை மாதர்கண் மைந்தரிற் றோன்றினர் சுற்ற.

(இ - ள்.) ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததன் பின்னை - (எல்லாவுயிர்கட்கும்) தனிததலைவனான இராமபிரானுடைய மனைவியாகிய சீதாபிராட்டியைச சந்தித்தது நோக்கின பின்பு, நாகா வாழ்வு இடம் முதல் என நான்முகன் வைகும் மா கம் மால் விசுமபு ஈறு என நடுவண வரைப்பில் தோகை மாதர்கள் மைந்தரின் தோன்றினா - சர்ப்ப சாதியா வாழுமிடமான பாதாள

லோகம் முதலாகப் பிரமதேவன் வாழ்கிற பெரிய வானத்தின்மீதுள்ள சிறந்த சத்தியலோகம் ஈறாக நடுவிலுள்ள உலகங்களனைத்திலும் உள்ளவாகளான மயில்போலுஞ் சாயலுள்ள அழகிய மகளிர்கள் (இராவணன் கணபார்வைககு) ஆடவர்போலத்[1]தோன்றியவராய் [அவனுக்குச் சிறிதுங் காதல்விளைக்க மாட்டாதவர்களாய்], சுற்ற - சூழ்ந்துநிற்கவும்,—(எ - று.)

பதினான்கு உலகங்களிலும் வசிப்பவரான பலமகளிரை முன்பு இராவணன் கண்டு காதலித்து வலியக் கவர்ந்துவந்தன னாயினும், அவன் சீதை பகல் பெருங்காதல்கொண்டதுமுதல் அவனுககு அம்மகளிரெவரிடத்தும் கிஞ்சித்தும் வேட்கைவிளைந்ததில்லை யென்பார், ஆடவாபக்கல ஆடவர்ககுக காமகுறிப்புஉண்டாகாத இயல்பை உவமைகூறினர். பற்பலவுகத்துமகளிரும், முனபெல்லாம தாமஅவனெதிரிற காணப்பட்டால் அவன் தம்மை வலியககறபழித்துவிடுவானென்னும் அசசத்தால் அவன்முன்னே வருகககூசுவராயினும், அவன் சீதையைக கண்டு காதல்கொண்டதுமுதல் பிறமகளிரைச் சிறிதும பொருள்செய்யாமையால் அம்மாதர்கள் ஆடவர்போலவே [அவன் காதற்குஇடமாகாதவராய்த] துணிவுடன் வெளிப்பட்டு அவனைச் சூழ்ந்துநிற்ப ரென்றுங கொளக. ஏகநாயகன, தேவீ - வடசொற்கள். விசுமபு-எல்லாவுலகங்கட்கும்மேலுள்ளதான சத்தியலோகத்துககு இடவாகுபெயர். பி - ம்:—[1]மாநிலமுதலிய. (சுரு)

சுசு. வான ரங்களும் வானவ ரிருவரு மனித
ரான புன்றொழி லோரென விகழ்கின்ற வவரு
மேனை நின்றவ ரிருடியர் சிலரொழிந் தியாருந்
தூக வின்றவே லரக்கர்தங் குழுவொடு சுற்ற.

(இ - ள்) வானரங்களும் - குரங்குகளும், வானவர் இருவரும் - தலைமைத்தேவர்களான ஹரிஹரர்களும், புல தொழிலோர் என இகழ்கின்ற மனிதர் ஆன அவரும் - எளிய செயல்களையுடையவாகளென்று (இராவணனால்) இழப்படுகின்றவாகளான மனிதாகளும, ஏனை நின்றவா இருடியர் சிலர் - மற்றும விலகிநின்றவாகளான சில முனிவாகளும், ஒழிந்து - (ஆகிய இவர்கள்) நீங்கலாக, யாரும்-மற்றையெல்லோரும், தூ நவின்ற வேல் அரககர் தம் குழுவொடு சுற்ற - (முன்கொல்லப்பட்டவர்களது) தசைதோய்ந்த வேலாயுதத்தையுடைய இராக்கதாகளின் கூட்டத்தோ டொப்பச சூழ்ந்துநிற்கவும்.

அரக்கர்போலவே மற்றைத தேவகணதாரும ராக்ஷஸராஜனான ராவணனுக்கு அடிமைப்பட்டுப் பரிசனங்களாக அமைந்து அவன் கட்டளையை எதிர்நோகிகொண்டு குறறேவலாளாபோன்று சூழ்ந்துநிற்கின்றன ரென்க. ஆதியில் இராவணன் கடுந்தவஞ்செய்து அரிய பெரியவேள்வியையும முடிககும்போது பிரமதேவன் அவனுககுப் பிரதியக்ஷமாகி 'நீ வேணடும வரம வேணடுக' என்றதற்கு, அத்தசமுகன், "எனககுத் தேவகணங்களாலும் சிங்கம முதலிய கொடியபிராணிகளா

லும் சாவில்லாதிருக்க வரமளிக்கவேணடும்; மனிதரையும் மற்றுமுள்ள அற்பஜந்துக்களையும் யான் இலக்கில் வைத்தேனில்லை'' என்று வரம் வேண்டிப் பெற்றன ஞதலால், அவன் மனிதர்களிடததுக் கொணடிருந்த அலக்ஷ்யதாபுத்தி விளங்கும். இங்ஙனம் மனிதாகளைக்குறிதது இகழ்சசிசகருத்துடையனுதலால் அவன் அவர்களை பரிசனமாகக் கொணடில னென்பதுபற்றி, 'மனிதரான புன்தொழிலோரென இகழ்கின்ற அவரும்' என்று மனிதாகளை விலக்கினா. வாநரநகள் அஃறிணையென்னுங கருததால் அவனுற் பரிசனமாகக்கொள்ளப் பட்டில வென்னலாம்; (மற்றும், வாநரராசனுகவிருநத வாலி இராவணனை வென்றவனுதலால வாநரங்கள் இராவணனுக்குக் கீழ்ப்படிந்திலவெனக.) வானவரிருவா-பிரம விஷ்ணுக்க ளெனினுமாம். தலைமைத்தேவாகளும், யோக பலத்தால் இராவணனுக்கு உட்படாது நின்ற சில சிறநத இருடிகளுமே, அவனுக்குக் குற்றேவலரா யொழுகாதார். 'இநகு வானவரிருவா' என்றது, தொகைக்குறிப்பு. 'தூநவின்ற' என்பதற்கு - புலாலநாற்றம் வீசுகிற என்று உரைப்பாரு முளர். (சசு)

சஎ. நரம்பு கண்ணகத் துள்ளுறை நறைநிறை பாண்டி
நிரம்பு சில்லரி பாணியுங் குறடுநின் றிசைப்ப
வரம்பை மங்கைய ரமிழ்துகுத் தாலன்ன பாடல்
[1]வரம்பி லின்னிசை செவிதொறுஞ் செவிதொறும் வழங்க.

(இ - ள்.) நரம்பு - யாழ்முதலிய கருவிகளின் நரம்பாகிய, கண் அகத்துள் - கரும்புக்கணுவினிடததே, உறை - பொருந்திய, நறை - இனிய ரசமாகிற இன்னிசையும், நிறை பாணடில - இலக்கணம்நிறைந்த பாண்டிலென்னும் வாததியமும், நிரம்பு சில்லரி - இலக்கணம்நிறைந்த சில்லரியென்னும் வாததியமும, பாணியும - கைத்தாளமும், குறடும் - குறடென்னும வாததியமும, நின்று இசைப்ப-இடையறுது நிலைநின்று ஒலிக்கவும்,—அரமபை மங்கையா - தேவமாதாகள், அமிழ்து உகுத்தால் அன்ன - அமிருதத்தைச சொரிநதாற்போன்ற [மிகஇனிய], பாடல் வரமபு இல் இன்இசை - வாயப்பாட்டினது அளவிறநத இனிமையையுடைய கீதததை, செவிதொறும் செவிதொறும்வழங்க-தனது இருபதுகாதுகளிலும் சொரியவும்,—()

கரும்பின்கணுவைச சிதைததலால் வெளியெழும் இனியசாறுபோல, யாழ் முதலிய கருவிகளின் நரம்பிற் கைவைததலால் எழும் இன்னிசை என்ற கருதது அணைய 'நரம்பு கணணகததுள்ளுறை நறை' எனப்பட்டது; உருவகவிரேடம். செய்யுளோசையினிமை நோககி, நரம்புக்கண்ணக மெனவலி மிகவிலலை பாணடில் - பிரமதாள மெனப்படும பெரிய வட்டமான தாளமென்றும, சில்லரி - நாகசுரமென்றும் கூறுவா. பாணி - கை: வடசொல; அதனுல் வரையறுதது இடப்படுகிற தாளத்திற்கு இலககணை. குறடு-குறுநதடி கொணடு அடிககப்படுவதொரு வாததியம். இன்னிசைப்பாடல் என மொழிமாறினுமாம். அமிழ்து உகுததால் அன்ன பாடல் - அமிருதம்

நாவுக்கினிமை தருதல்போலச செவிககு இனிமைதருகிற சங்கீத மென்க. 'நரம்பு கண் அகத்துள் உறை நறை' எனபதற்கு - தந்தியைக் கருதியழுதது கிற இடத்திலே இருப்பதான இசைத்தே னென்று உரைப்பாரு முளர். பி - ம் —[1]வரம்பிலின்சுவை. (சஎ)

சஅ. கூடு பாணியி னிசையொடு முழவொடுங் கூடத்
தோடு சீறடி விழிமனங் கையொடு தொடரு
மாட னேக்குறி னருந்தவ முனிவர்க்கு மமைந்த
வீடு மீட்குறு மேனகை [1]மேனகை விளங்க.

(இ - ள.) கூடு பாணியின் இசையொடும் - தகுதியுள்ளதா யமைந்த பாட்டின் இசையோடும், முழவொடும் - மத்தளதவநியோடும், கூட - (மாறுபடாது) ஒத்துவருமாறு, தோடு சீறு அடி விழி மனம கையொடு தொடரும் - செந்தாமரைமலரி னிதழைத் தமககு ஒபபாகாதென்று வெறுக் கிற கால்களும் கண்களும மனமும கைகளும ஆகிய இவ்வுறுப்புககளின் ஒற்றுமையுடன் செயகிற, ஆடல் - நாட்டியததை, நோக்குறின - பாரப்பரா னால், அருந தவம் முனிவாகளும அமைநத வீடு மீட்குறும - அருமையான தவததைச செய்கிற முனிவாகளும தமககு உளதாகும முததியின்பததைக் கைவிட்டுத தன்மேல் மனந்திருமபுமபடிசெய்கிற, மேனகைமேல - மேனகை யென்னுந் தேவமாதின்மேல் [தேவமாதைக்குறிதது என்றபடி], நகை விளநக - மகிழ்ச்சியாற் சிரிபபுத் தோன்றவும்,—(எ - று.)

இசைநாடகநூல்களின் முறைமை எழுவாது பாட்டிசைக்கும தாள வடைவுக்கும பொருநத மனககருத்தைக கணகைகளின் அபிநயததால் வெளியிட்டுக் கால்களை அடைவுபடவைத்துப பரதநாட்டியஞ் செயபவளும், எல்லாப் பற்றுகளையும முறறததுறநது வீடுபெறத் தவஞசெயது சித்தி பெறுகிற முனிவாகளும அநநாட்டியததைக் காணபராயின தமவைராககி யத்தையிழந்து தன்னைக் காதலிக்கப பெறுபவளுமான மேனகை கூத தாடுதலைக் கணடு அவள்பகக லுண்டான மகிழ்ச்சியால இராவணன் புன் னகை கொணடன னென்க. மேனகை அருநதவமுனிவா மனத்தையும் தன்பக்கல் மீட்கவலலவளாதலை, அவள விசுவாமித்திரமாமுனிவரைத தவ நிலைகெடுததனாலும அறிக. தோடு என்ற இதழினபெயா, இகுச சிறபபாய, செந்தாமரைமலரி னிதழைக குறிததது. 'பாணியினிசையொடும' என்ப தறகு - தாளவோசையோடும என்று உரைபபாரு முளர். பி - ம்:—[1]அரம் பையர். (சஅ)

சகூ. ஊடி னார்முகத் [1]துறுநறை யொருமுக முண்ணக்
கூடி னார்முகக் களிநறை யொருமுகங் குடிப்பப
பாடி னார்முகத் தாரமு தொருமுகம் பருக
வாடி னார்முகத் [2]தணியமு தொருமுக மருந்த.

(இ - ள்.) ஊடினார் முகத்து உறு நறை - தன்னோடுபிணங்கிய மகளிரின் முகத்திலே தோன்றுகிற இன்பச்சுவையாகிய தேனை, ஒருமுகம் உண்ண - (தனதுபத்து முகங்களில்) ஒருமுகமானது நுகரவும்,—கூடினார் முகம் களி நறை - தன்னோடுகூடின மகளிரது முகத்திலே தோன்றுகிற களிப்பாகிய களிப்பைத்தரும் மதுவை, ஒரு முகம் குடிப்ப - ஒருமுகமானது பானஞ்செய் வும், பாடினார் முகத்து ஆர் அமுது - (தன்னிடத்துவேட்கையுடன்) இசைபாடின மகளிரது முகத்தில் தோன்றுகிற காதற்குறிப்பாகிய அருமையான அமிருததத்தை, ஒரு முகம் பருக - ஒருமுகமானது குடிக்கவும்,—ஆடினார் முகத்து அணி அமுது - நர்த்தனஞ்செய்த மகளிரது முகத்திலே தோன்றுகிற அபிநயரசமாகிற அழகிய இனிய உணவை, ஒரு முகம் அருந்த - ஒரு முகமானது உணணவும்.—(எ - று.)

ஊடுதல், கூடுதல், பாடுதல், ஆடுதல் செய்யும் மகளிரது உள்ளக்கருத்து அவரவரது முகங்குறிப்பிலே வெளியாக, அதனை இராவணன் தனது பத்து முகங்களுள் ஒவ்வொன்றின் கணபார்வையைச செலுத்தும்போது நோக்கியுணரவு னென்க. (இங்கு 'ஊடினார்', 'கூடினார்' என்றதுஉரிமை பூணட மகளிரை யாதலின், உரிமைபூணாத மகளிரின் நிலைமையைக கூறிய நாற்பதைந்தாஞ் செய்யுளோடு மாறுகொளககூற லாகாதென்க.) 'பாடினாமுகத்து ஆரமுது' என்பதற்கு - பாடுகிற மகளிரின் வாயினின்று வெளிப்பட்ட இன்னிசையாகிய அரிய அமிருத மென்று உரைப்பாருமுளர்; ஒருபொருளைத் தருவனவான உணண, குடிப்ப, பருக, அருந்த என்ற பலசொற்கள இசசெய்யுளில் வந்தது, பொருட்பின்வருநிலையணியாம். பி - ம்:—[1]உறநறவு. [2]ஆரமுது. (சகூ)

ரு0. தேவ ரோடிருந் [1]தரசிய லொருமுகஞ் செலுத்த
மூவ ரோடுமா மந்திர மொருமுக முயலப்
பாவ காரிதன் பாவக மொருமுகம் பயிலப்
பூவை சானகி யுருவொடு மொருமுகம பொருந்த.

(இ - ள்.) ஒரு முகம—, தேவரோடு இருந்து அரசு இயல் செலுதத - (தன் கீழ்ககுடிகளாகிய) தேவர்களுடனே கலநது அளவளாவி அரசாட்சி நடத்தவும்,—ஒரு முகம—, மூவரோடு மா மநதிரம முயல - (மநதிரிகள் பிரதானிகள சேனாபதிகள் எனனும) முததிறததாரோடு கலந்து பெரிய ஆலோசனைசெயயவும,—ஒருமுகம—, பாவகாரிதன பாவகம் பயில-தீவினை செய்பவனான தனககு உரிய (தீய) சிநதனையைப் பொருந்தி அக்குறிப்பை வெளியிடவும்,—ஒரு முகம—, பூவை சானகி உருவொடும் பொருந்த - கிளி போன்றவளான சீதையினது உருவெளியுடனே பொருந்தவும்,—(எ - று.)

அரசர்க்குரிய ஐம்பெருநகுழு வெனப்படுகிற ஐந்து திறததாரில் முந்திய மூவரும் மந்திராலோசனைககுச சிறததலால் 'மூவரோடு மாமந்திரம ஒரு முகம முயல' எனப்பட்டது. மூவரோடு - திரிமூாததிகளோடொப்ப

எனினுமாம். பூவை - கிளி அல்லது நாகணவாய்ப் பறவை; இவ்விரண்டும் - மகளிர்க்குக் கொஞ்சிப்பேசும் இன்சொல்லில் உவமை கூறப்படும். இங்கு, பூவை - உவமையாகு பெயர். 'பூவை' என்பது சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாதலால், அதன் முன் வருமொழி முதல்வலி மிகவில்லை மனத்தில் இடைவிடாது நினைக்கப்படுகிற பொருள் அந்தப் பாவனையின் மிகுதியாற் கண்ணுக்கு எதிரிற் காணப்பட்டாற்போலத் தோன்றுதலியல்பு; அது உருவெளிதோற்ற மெனப்படும். அங்ஙனம் தனக்கு அருகிலே புலனாகிற சீதையின் உருவெளியை ஒருமுகம் தன்கணகளால் நோக்கிற்றென்க. பி - ம்:—[1]ஒருமுகமரசியல். (௫௦)

௫௧. காந்தண் மெல்விரற் சனகிதன் கற்பெனுங் கடலை
நீந்தி யேறுவ தெங்ஙனென் றொருமுக நினையச்
சாந்த ளாவிய கொங்கைநன் மகளிர்தற் சூழ்ந்தா
ரேந்து மாடியி னொருமுக மியல்புட னிலங்க.

(இ - ள்.) ஒரு முகம்—, காந்தள் - செங்காந்தள்மலரி னிதழ்போன்ற, மெல்விரல் - மெல்லிய விரல்களையுடைய, சனகிதன் - சீதையினது, கற்பு எனும் - பதிவிரதா தரும மாகிய, கடலை - சமுத்திரத்தை, நீந்தி ஏறுவது - கடந்து கரையேறுவது [சீதையின் கறபை யழிப்பது], எங்ஙன் - எவ்வாறு? என்று—, நினைய-நினைக்கவும்,—ஒரு முகம்—, சாந்து அளாவிய கொங்கை நல் மகளிர் - சந்தனம் பூசிய தனங்களையுடைய அழகிய மாதரபலா, தன் சூழ்ந்தார் - தன்னைச் சூழ்ந்துநின்று, ஏந்தும் - கையிற்கொண்டு காட்டுகிற, ஆடியின் - கண்ணாடியிலே, இயல்புடன் இலங்க - இயற்கையான அழகைக் காணுதலுடனே விளங்கவும்,—(எ - று.)

'கற்பெனுங் கடலை நீந்தி யேறுவது' என்றது, உருவகம். 'சனகிதன் கற்பெனுங் கடலை நீந்தியேறுவ தெங்ஙன் என்று நினைய' என்றது, அதன் கடத்தற்கு அருமை கருதியவாறும். 'ஒருமுகம் இயல்புடனிலங்க' என்றதனால், மற்றை ஒன்பது முகங்களும் அதனதன் காட்சிக்கு ஏற்ற இங்கிதக் குறிப்பு விளங்கப்பெற்றிருந்தன வென்பது தோன்றும். (௫௧)

௫௨. பொதும்பர் வைகுதேன் புக்கருந் துதற்கமம் புலரு
மதம்பெய் வண்டெனச் சனகிமேன் மனஞ்செல மறுகி
வெதும்பு வாரகம் வெந்தழி வார் [1]நகில் விழிநீர்
ததும்பு வார்விழித் தாரைவே றொடொறுந் தாக்க.

(இ - ள்.) பொதும்பர் வைகு - மரச செறிவினுள்ளே பொருந்திய, தேன் - தேனை, புகு அருந்துதற்கு - (அங்குப்) பிரவேசித்துக் குடிப்பதற்கு, அமம் புலரும் - (ஆசையினால்) மனம வாடுகிற, மதம் பெய் வண்டு என - களிப்பு மிகக்கொரு வண்டுபோல, சனகிமேல் மனம் செல - சீதையினிடத்தே (தன்) மனஞ் செல்ல, (அதனையுணர்ந்து),

அகம் மறுகி வெதும்புவார் - மனங்கலங்கித் தவிப்பவர்களும், வெந்து அழிவார் - உடல்புழுங்கி மிகவருந்துபவர்களும், விழி நீர் நகில் ததும்புவார் - (தங்கள்) கண்களினின்று நீர் தளும்பி (த் தங்கள்) கொங்கைகளின்மீது வழியப் பெறுபவர்களும ஆகிய பல மகளிருடைய, விழி - கண்களின் பாவையாகிய, தாரை வேல்-கூர் நுனியையுடைய வேலாயுதங்கள், தோள்தொறும் தாக்க - (தனது) இருபது தோள்களின் மேலும் படவும,—(எ - று.)

தன்னாலணுக முடியாததொரு புதரினுள்ளே யிருக்கின்ற தேனை அதனருமையறியாது ஒருவண்டு தான் அங்குப் புகுந்து குடிக்க அவாகொண்டு முயன்று தாவிததாவிச சுழன்று திரிந்து அலைந்து ஒருதினறபோலத் தன்னாற் கடத்தற்கரிய தலைமைக்காப்பாகிய நிறைக்காவலிலே நிலைநிறகின்ற சீதாபிராட்டியைச சேரமுடியாதென்று உணராமல் அவள் கற்புநிலையைக குலைத்து அவளையடைதற்கு மேன்மேல் விருப்பங்கொண்டு அதற்காகப் பலவாறு முயன்று சிறிதும் பயன்பெறாது வருந்துகின்றது கொழுத்தவனான இராவணனுடைய செருக்குக்கொண்ட மனமென்பது, முன்னிரண்டடிகளின் பொருள். (உபமானமாகிய தேனுக்குக் கொடுத்த 'பொதும்பாவைகு' என்ற அடைமொழி, உபமேயமாகிய சீதைக்கும் ஏற்கும்; அவள் அசோகவனத்திற் சிம்சுபாமரததினகீழ்ச் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளதனால். பொதும்பா - மரசசெறிவு; புதரும், சோலையுமாம். தான் வேண்டியபடியெல்லாம் பலமலர்களின் தேனை நிரம்பப் பருகிக களித்திருக்கின்ற தொரு வண்டு அங்ஙன மிருக்கவும் பொதும்பா வைகுதேனைப் புககு அருந்துதற்கு அகம் புலர்ந்தாற்போல, தான்வேண்டியபடியெல்லாம் இன்பநுகாதற்கு உரிமைமகளிரபலரிருக்க அவாகளோடு கூடிக்களிதது வாழ்கிற நிலையிலும் இராவணன் மனம்பிறன்மனைவியான சீதையின்மேற் சென்ற பேதைமையை விளகுவரா, உபமானமாகிய வண்டுக்கு 'மதமபெய்' என்ற அடைமொழி கொடுத்தனரெல்லாம்; இவ்விசேஷணத்தால், உபமேயமாகிய இராவணனது மனம் தனமதம, விதகியாமதம், குலமதம்முதலிய பலவகைமதம் மிக்க தென்பதும் விளங்கும்.

இங்ஙனம் தங்கள் காதலனான இராவணன் பரஸதிரீயை விரும்பி அவள் பக்கல் மோகங்கொண்டு அதனால் தமமை உபேகஷித்துத் தம்முடன் சரசவிளையாடல்கள் நிகழ்ததாதிருததலை யுட்கொண்டு அவனது உரிமை மகளிரெல்லாம் மனஸ்தாபமுற்று மனம்வருந்துதலையும், அதனால அவர்களுடல் தவித்தலையும், அங்ஙனம் அவர்கள் துக்கிததுக் கணணீர் பெருக்குதலையும், 'மறுகி வெதும்புவா ரகம்வெந்தழிவார் நகில்விழி நீரததும்புவார்' என்று வெளியிட்டார். தமகணவன் அயல்மாதரை விருமபினாலும் அதுபற்றி அவன்மேற் கோபமும் வெறுப்புங் கொள்ளாது அவன்பக்கல் தாம் மிக்க அன்பையே செலுததி அவன் மனத்தைத தமபக்கல் மீட்க முயலுதல் அறிவுள்ள கற்

புடைமாதரினியல்பாதலால், இராவணனது உரிமைமகளிர் பலரும் தம்மை அவன் புறக்கணிக்கையிலும தாம அவன்மீதே பார்வைசெலுததித் தமது கண்பாவையினழகுகொண்டு அவனை வசீகரிக்கப் பார்க்கின்றன ரென்பது, 'விழித்தாரை வேல் தோளதொறுந் தாக்க' என்பதனாற் போதரும். எவ்வகைப்படைக்கலங்களும சிறிதும் ஊறுபடுத்தமாட்டாத இராவணன்தோள்களில் மெல்லியலாரான மகளிர் செலுததிய அவ்விழிவேல்கள் பாய்ந்து அவனைச் சிறிதும வருததமாட்டாவாயின வெனக; எனவே, அவன் இவர்கள் கண்பாவையினழகி லீடுபட்டுச் சீதையினிடமிருந்து மனத்தை மீட்டு இம்மகளிர் வசமாயின னிலலை யென்பதாம். இம்மகளிர் விழிவேல் அவன்தோள்களில் தாக்கிற்றே யன்றி அவனது நெஞ்சில் தாக்கவில்லை; ஆகவே, இவர்கள் புறக்கணிப்புக்கே இலக்காயினர். மனம் மறுகிச் செல என மொழிமாற்றி - சீதையினிடததே மனங் கவன்று செல்ல என உரைத்தலும ஒன்று; மறுகி— சுழன்று. பி - ம் —[1]விழிமுழுநீர். (ருஉ)

ருங. மாற ளாவிய மகரந்த நறவுண்டு மகளிர்
வீற ளாவிய முகிழ்முலை [1]மெழுகிய சாந்தின்
சேற ளாவிய சிறுநறுஞ் சீகரத் தென்ற
லூற ளாவிய கடுவென வுடலிடை நுழைய.

(இ - ள்.) மகரந்தம் நறவு உண்டு - (மலர்களிலுள்ள) மகரந்தப் பொடிகளில் அளைந்து அவற்றை உடம்புமுழுவதும் பூசிக்கொண்டு (மலர்களின்) தேனைப் பருகி, மகளிர் வீறு அளாவிய முகிழ் முலை மெழுகிய சாந்தின் சேறு அளாவிய - மாதர்களுடைய மிககசிறப்புப் பொருந்திய அரும்புபோன்ற தனங்களில் நிரம்பப்பூசப்பட்டுள்ள சந்தனச்சேற்றிலே கூடிககலந்த, சிறு நறுஞ் சீகரம் தென்றல் - மந்தமாயவீசுவதும் பரிமளமுளளதும குளிர்சசியமைந்ததுமான தென்றற்காற்றானது, மாறு அளாவிய - (இராவணனுக்குத் தான்) எதிரசெய்யுமாறு, உடலிடை ஊறு - அவனுடமபிலே (மனமதபாணங்களினாலாகிய) புண்களிலே, அளாவிய கடு என நுழைய - பொருந்திய விஷமபோல உட்புகவும; (எ - று.)

எல்லாவுயிர்கட்குங குளிர்சசியைவிளைத்து இனிமையைச் செய்கின்ற இளந்தென்றற்காற்றானது, காமதாபங்கொண்ட இராவணன் மேற் படும் போது அவனுக்கு அததாபத்தைமிகுவிசது மிககவருத்தந்தருதலால, 'கடு வென நுழைய' என்றார். 'மகரநதம் நறவு உண்டு' என்பதற்கு - மகரநதப் பொடியையும் தேனையும் உண்டு என்றலும் அமையும. வாசனைப்பொடிகளை உடம்புமுழுவதும் நிரம்பப்பூசிக்கொண்டு அல்லதுஇனிய உணவையுண்டு மதுபானஞ்செய்து மிகசசிறநத மகளிரபாற் சோந்து அவர்கள் மாபிற்பூசிய சந்தனக்கலவையில் அளாவி நறுமணம்வீச மெதுவானநடையோடு தாபமின்றிக் குளிர்ந்துவருகிற ஒருசிங்காரபுருஷ னென்பது தோன்ற, 'மகரந்த நறவுண்டு மகளிர் வீறளாவிய முகிழ்முலைமெழுகிய சாந்தின் சேறளா

விய சிறு நறுஞ்சோதி தென்றல்' என்றார். தாம் பலநாளாக விரும்பிய மாதரைக் கூடப்பெறாது காமதாபமடைந்த ஆடவர்க்கு, அவரனைய கணவ மாதரிடததெல்லாந் தட்டுததடையின்றிக் கலந்து இனியராய்வருகிற ஆடவரைக் காணும்போது அசுயை முதலியவற்றா லுண்டாகும் வருததம், இப்பொழுது இராவணனுக்குத் தென்றலைகண்டவுடனே யுண்டாகின்றதென்க. ஓரிடத்திலே சிறப்புப்பெற்றுவிளங்குகிற ஒருவீரர் அவ்விடத்திலேயே தலையை பெறும் மற்றொருவர் பகைல் மாறுகொண்டு சமயம்பார்த்து அவரைமேற்சென்று தாக்கி அவரை அழிக்கத் தொடங்கும் இயல்பின்படி, தெற்கிலிருந்து வருவதனால் தென்றலென்று பெயரைபெற்று அத்திசைக்கு உரிமைபூணடு விளங்குகிற இளங்காற்று அததிசையிலே இலங்கைநகரில் நிலைத்து அத்திசைக்குத் தலைமைபூணும இராவணன்பக்கல் மாறுபாடு கொண்டு சமயம்பாரதது அவன்மீது தாகி அவனை அழிகக்தொடங்கியதென்னுங் கருத்து, 'மாறளாவிய' என்றதனாற் போதரும்; நெடுங்காலமாக இராவணனுக்கு அஞ்சிஅடங்கிகிடந்த வாயுதேவன் இப்பொழுது சமயம் பார்த்து மெல்லப்புறப்பட்டு ராகூஸராஜனான அவனுக்கு எதிர்செய்யத் தொடங்கின னென்பதும் இதில அமையும். (ருஉ)

ருச. திங்கள் வாணுதன் மடந்தையர் சேயரிக் கிடந்த
[1]வங்க யற்றடந் தாமரைக் கலரியோ னாகி
வெங்கண் வானவர் தானவ ரென்றிவர் விரியாப்
பொங்கு கைகளாந் தாமரைக் கிந்துவே போன்று.

(இ - ள்.) திங்கள் வாள் நுதல் மடந்தையா - (பாதிச) சந்திரன் போன்ற ஒளியுள்ள நெறறியையுடைய மகளிரது, சேய் அரி கிடந்த அம் கயல் தட தாமரைகளு - சிவந்த இரேகைகள் பொருந்திய அழகிய கயல் மீன் போன்ற கணகளையுடைய முகங்களாகிய பெரிய தாமரை மலர்களுக்கு, அலரியோன் ஆகி - சூரியன போன்றவனாகியும்,— வானவர் - தேவாகளும், வெம் கண தானவா - கொடுததன்மையுள்ள அசுராகளும், என்ற இவர் - என்கிற இவாகளுடைய, விரியா பொங்குகைகள் ஆம் - குவிந்திருக்கின்ற விளங்குகிற கைகளாகிய, தாமரைகளு - செந்தாமரை மலாகளுக்கு, இந்து போன்று - சநதிரன்போன்றவனாகியும,—(எ - று.)—இந்துவே, ஏ - அசை; பிரிநிலையுமாம்.

'அழகிய மகளிரது முகங்களாகிய தாமரை மலாகட்குச சூரியன் போன்றவனாய' என்றது - தனகது உரிமைபூணடுநிற்கும் பலமகளிர்கள் தனது கமபீரமான காட்சியைக் கணடு மகிழ்ந்து முகம்மலருமாறு பெருமிதததோற்றத்தோடு வெகுசிறப்பாக வீற்றிருநதனன் இராவணன் என்றவாறும். 'திங்கள்' என்றது, இங்கே பிறைசசநதிரனை; அதுவே, வடிவில் நெற்றிக்கு உவமையாவது. கணகளிற் சில செவ்வரிக ளிருத்தல், உததம விலகக்ணம். கயல் - கணகளுககு, உவமையாகுபெயா; பிறழ்ச்சியில உவமம். 'சேயரிக்கிடந்த அங்கயல தாமரை' எனவே, முகமென்ற தாபிற்று.

'தேவாசுராகளுடைய குவிந்த கைகளாகிய தாமரைமலர்கட்குச் சந்திரன்போன்று' என்றது - தேவாகளும அசுரர்களும் அசசத்தாற் கூப்பியகை நெகிழாதபடி அஞ்சலிசெயது தொழுதுநிற்குமாறு காண்பவா அஞ்சததக்க தோற்றமுடையனாய் வீற்றிருநதனன் இராவணன் என்றவாறும. தேவ கணநகளிற் சோந்தவரான அசுரா யக்ஷர் கநதருவர் விததியாதரர் கிந்நரா முதலிய பிறரையும் தேவாகளைப்போலவே இராவணன் எதிர்த்துப் பொருது வென்று வருத்திவந்தன னென்க.

இனி, முன்னிரண்டடிக்கு - மகளிரது செவ்வரிபரந்த அழகிய கயல் மீன்போலுங் கண்களாகிய பெரிய தாமரைமலாகட்குச் சூரியன் போன்று என்று உரைப்பாரு முளா; சூரியனைக்கண்ட தாமரைமலாகள்போலத தன்னைக்கண்டு மகளிர்கணகள் மலாந்தபடியிருகக என்று கருத்து. பி-ம்:—[1]அங்கயததடந்தாமரை. (ருச)

ருரு.—அநுமான் இராவணனைக்கண்டவளவிலே கோபங்கொள்ளுதல்.

இருந்தவெண்டிசைக் கிழவனை மாருதி யெதிர்ந்தான்
கருந்திணுகத்தை நோக்கிய கலுழனிற் கனன்றான்
றிருந்துதோளிடை வீக்கிய பாசத்தைச் சிந்தி
[1]யுருந்து [2]நஞ்சுபோல பவன்வயிற் பாய்வெனென்றுடன்றான்.

(இ - ள்.) இருந்த - (இவ்வாறு) வீற்றிருந்த, எண் திசை கிழவனை - எட்டுத்திக்குக்களுக்கும் உரியவனான இராவணனை, மாருதி - அநுமான், எதிர்ந்தான் - (தூரததிலிருந்து) கண்டான்; (அநுநனநு கண்டமாததிரததிலே), கருந் திண் நாகத்தை நோகிய கலுழனின் கனன்றான் - கரிய வலிய சாப்பத்தைக் கண்ட கருடன்போல மனநுகொதித்தவனாய,—திருந்து தோளிடை வீகிய பாசததை சிந்தி உருந்து நஞ்சுபோல்பவன்வயின் பாய்வென் என்று உடன்றான் - 'சிறந்த (எனது) தோள்களிற கட்டியிருககிற நாகபாசததைச சிதறடிததுக் கோபிதது விஷமபோற் கொடியவனான இவ்விராவணன்மேல (இப்பொழுது) பாயகிறேன் யான் என்று உககிரநு கொண்டான்; (எ - று.)

இராவணன், திக்குவிசயஞ்செய்யப் புறப்பட்டு இநதிரன்முதலிய அஷ்டதிக்பாலகாகளையும வென்று அததிசைகட்கெலலாம் உரிமை பூணடவனாதலால், 'எணடிசைகநிழவன்' எனப்பட்டான. கொடிய இராவணனை எளிதில அழிக்கவல்ல திறமையுடையவன் அநுமான் என்பது தோன்ற, 'கருந்திண்நாகததைநோகிய கலுழனின் கனன்றான்' என உவமைகூறினா. 'உருதது - உருந்து' மெலித்தல், எதுகைநோககி. பி - ம்:—[1]உருந்த. [2]நஞ்சுபோலிவன்வயிற்.

(ருஅ) பரப்ப, பொலிய, (ருகூ) வயநுக, (சா0) என்ன, (சுக) ஒப்ப, (சுஉ) கொழிப்ப, தயநுக, கடுப்ப, (சுரு) என்ன, (சுசு) இயற்ற, (சுடு) சுற்ற, (சுகூ) சுற்ற, (சுஎ) இசைப்ப, வழநுக, (சுஅ) விளநுக, (சுகூ) உண்ண, குடிப்ப, பருக, அருந்த, (டு0) செலுத்த, முயல, பயில, பொருந்த, (டுக) நினைய, இலநுக, (டுஉ) தாகக, (டுரு) நுழைய

(௫௪) ஆகி, போன்று, (௫௫) இருந்த எனக் குளகசசெய்யுள் பதினெட்டுக்கும் முடிபு காண்க. (௫௫)

௫௬.—இதுழதல் நான்குகவிகள் - இராவணன்மேல் தான் பாய்ந்து அவனைக் கொல்வதாக அநுமான் செய்யும் ஆலோசனை.

உறங்கு கின்றபோ துயிருண்டல் குற்றமென் றொழிந்தேன்
பிறங்கு பொன்மணி யாசனத் திருக்கவும் பெற்றேன்
றிறங்க ளென்பல சிந்திபப திவன்றலை சிதறி
யறங்கொள் கொமபினை மீட்டுட னகல்வெனென் றமைந்தான்.

(இ - ள்.) உறஙகுகின்ற போது - (இவ்விராவணன்) தூங்குகின்ற பொழுது, உயிர் உண்டல குற்றம என்று - (இவனைக்) கொல்வது தோஷமென்று எணணி, ஒழிநதேன்-(முன்பு இவனைக்) கொல்லாது விட்டிட்டேன்; (அஙஙனமனறி இபபொழுதோ), பிறஙகு பொன மணி ஆசனத்து இருக்கவும் பெறறேன் - விளஙகுகிற பொன்னாலும் இரத்தினங்களாலும் அமைந்த சிஙகாதனததில் (இவன் விழிதது) வீற்றிருககவும் பெறறேன்; (இப்படி நேரே சமயம்வாய்ககப்பெற்றபினபும), பல திறஙகள் சிந்திப்பது என் - பல வகையாக ஆலோசிக்க வேணடுவது என்ன? (இப்பொழுதே), இவன் தலை சிதறி இவனுடைய தலைகளைச சிதறடிததது, அறம கொள் கொம்பினை மீட்டு- (மகளிரகளுரிய சிறந்த) பதிவிரதாதருமத்தை (த் தவறாது உறுதியாக) க் கொணடிருககிற பூஙகொமபுபோல மெல்லிய அழகிய வடிவமுடையவளான சீதாபிராட்டியைச சிறைமீட்டுகொணடு, உடன் அகல்வென் - விரைவில் மீணடுசெல்வேன், என்று அமைந்தான் - என்றுஎணணினன், (அநுமான்.)

கொம்பு - சீதைக்கு, உவமையாகுபெயர்; மெல்லியதாய் ஒல்கி ஒசியும் வடிவில் உவமம. மகளிரகளுக கறபு நிலைமை பரமதரும மாதலால், இஙகு அது 'அறம்' என்று சிறப்பிததுக் கூறப்பட்டது. இனி, 'அறம் கொள் கொமபு' என்பதறகு - தருமமாகிய கொடி பற்றிக்கொளளுஙு கொழுகொமபு போன்றவளென்று பொருள கொள்ளுதலும் அமையும; இராவணனால் அழிக்கப்பட்ட தருமம் இவள் நிமித்தமாக அவன் கொல்லபபட மீளவுஞ் செழித்து வளரவிருபபதுபற்றி, இவள் தருமத்துக்கு ஆதாரமாவள். அமைதல் - கருதது அமைதல், உத்தேசித்தல. உயிருண்டல் - உணணுதது உண்பது போலச சொல்லப்பட்டது, மரபுவழுவமைதி. (௫௬)

௫௭. தேவா தானவர் முதலினர் சேவகன் றேவி
காவல கண்டிவ ணிருந்தவர் கட்புலன் கலுவப்
பாவ காரிதன் முடித்தலை பறிததிலெ னென்று
லேவ தியானினி மேற்செயு மாள்வினை யென்றான்.

(இ - ள்) சேவகன் தேவி காவல் கணடு இவண் இருந்தவர் - மகாவீரனான இராமபிரானுடைய மனைவியாகிய சீதாபிராட்டியை (இராவணன்) சிறைவைததிருப்பதைப் பார்ததுக்கொணடே (அதற்கு ஒன்றும் பரிகாரஞ்

செய்யமாட்டாமல்) இவ்விடத்தில் இருக்கின்றவர்களான, தேவர் தானவர் முதலினர் - தேவர்களும் அசுரர்களும் முதலானவர்களுடைய, கண புலன் - கண்களாகிய உறுப்பு, கதுவ - பற்றும்படி [இங்குள்ளாரனைவருங் கண்களாற் காணுமாறு என்றபடி], பாவகாரிதன் முடி தலை பறித்திலென் என்றால் - (பிறன்மனைவியை விரும்புதல்முதலிய) தீவினைகளைச் செய்பவனான இவ்விராவணனுடைய கிரீடமணிந்ததலைகளை (இப்பொழுதே வலியக் கொய்திலேனாயின், யான் இனிமேல் செயும் ஆள் வினை எவது - நான் இனிமேற்செய்யும் அடிமைத்தொழில் யாது உளது ? [எதுவுமில்லை என்றபடி], என்றான் - என்றும் எண்ணினன், (அநுமான்); (எ - று.)

யசமானனது மனைவியை வஞ்சனையாற் கவர்ந்து சென்று சிறைக்காவலில் வைத்தானுடைய தலைகளைப் பறித்தெறிவதனினும் மேலாக மெய்யடியவன் செய்யத்தக்க உறுதொழிலும் உளதோ? என்பதாம். ஆள்வினை - ஸ்ரீராமனுக்கு அடியவனாயிருந்து செய்யுந் தொழில்; இனி, இதற்கு - ஆண்மைத்தொழி லென்றும், முயற்சி யென்றும் பொருள் கொள்ளலாம். ஆள்வினை - ஆளின்வினை; ஆண்மைவினை; ஆளும்வினை; அல்லது, வினையை யாளுந் திறம்; அதாவது - முயற்சி. (ருஎ)

ருஅ. மாடி ருந்தமற் றிவன்புணர் மங்கையா [1]மயங்கி
ஓடி ரிந்திட முடித்தலை திசைதொறு முருட்டி
யாடல் கொண்டுநின் றாக்கின்ற ததுகொடி தமமா
தேடி வந்ததோ குரங்கெனும் வாசகஞ் சிறிதோ.

மூன்று கவிகள் - ஒரு தொடர்

(இ - ள்.) 'தேடி வந்தது ஓர் குரங்கு - (சீதையைத்) தேடிக்கொண்டு வந்ததாகிய ஒரு குரங்கானது,—மாடு இருந்த இவன் புணர் மங்கையர் மயங்கி ஓடு இரிந்திட - இவ்விராவணனருகிலே யிருப்பவர்களான இவன் சேரத்தக்க மகளிர்கள் திசைத்து உள்ளே ஓடிப்போமபடி, முடி தலை திசை தொறும் உருட்டி - (இவனது) கிரீடமணிந்த தலைகளைப் பல திக்குக்களிலும் உருளச்செய்து [பறித்துச்சிதறி யென்றபடி], ஆடல் கொண்டு - வெற்றி கொண்டு, நின்று - (தான சிறிதும் அழிவுறாது) நிலைபெற்றுநின்று, ஆக்கின்றது - ஆரவாரஞ் செய்கின்றது' அது அமமா கொடிது - அக்குரங்கு அந்தோ! மிகக்கொடியது,' எனும் வாசகம் - என்கிற புகழ்வாதத்தை (யைப் பெறுதல்), சிறிதோ - சிறியதாகுமோ? [அன்று: மிகப்பெரிது என்றபடி].

நான் நினைக்கிறபடி செய்துமுடிப்பேனாயின், 'சீதையைத் தேடிக் காணவந்ததொரு குரங்கு, இராவணனது பக்கங்களி லுள்ளவர்களான அவன்போகத்துக்குரிய மாதர்களனைவரும் இது என்னென்று திகைத்து உள்ளே ஓடியொளிக்கும்படி அவன் தலைகளைத் திருகி எல்லாத திசைகளிலும் உருட்டிச் சயம்பெற்றுநின்று ஆரவாரிக்கின்றது: அம்மம்மா! அது கொடிது கொடிது!!' என்று உலகத்தார் சொல்வார்கள்;

அப்படி சொல்லுஞ் சொல் எளிதிற்கிடைக்கத்தக்கதோ? மிக அரிய தன்றோ; ஆதலால், அப்புகழ் மொழியைப் பெறமுயல்வேன் என்று எண்ணினன் அநுமான் என்க. பி - ம்:—[1]அதுநெடிதம்மா. (ருஅ)

ருகூ. நீண்ட வாளெயிற் றரக்கனைக் கண்களி னேரே
காண்டல் வேண்டியிவ் வுயிர்சுமந் தெதிர்சில கழறி
மீண்ட போதுண்டு வசைபபொருள் வென்றிலே னெனினு
மாண்ட போதினும் புகழன்றி மற்றுமொன் றுண்டோ.

(இ - ள்) நீண்ட வாள் எயிறு அரக்கனை - நீண்ட வாளாயுதம் போற் கூரிய பற்களையுடைய ராக்ஷசனை [இராவணனை], கண்களின் நேரே காண்டல் வேண்டி - கண்களுக்கு எதிராகப் பார்க்க விரும்பி, (அதற்காக), இ உயிர் சுமந்து - இந்த என உயிரை உடம்பில் வைத்துக் கொண்டிருந்து, எதிர் சில கழறி (இவனைக்கண்டு) இவனெதிரிலே சிலவாதங்களைச் சொல்லி, மீண்ட போது - (நான் இங்கு நின்று) திரும்பிச் செல்வேனாயின் அப்பொழுது, வசை பொருள் உண்டு - பழியாகிய பயனே (எனக்கு) வாய்க்கும்; (அங்ஙனமன்றி இவனை எதிர்த்துப் போர்செய்வேனாயின்), வென்றிலேன் எனினும் - (ஒருகால் யான்) சயித்திலேனாயினும், மாண்ட போதினும் - (இவன்கையால் யான்) இறந்தாலும், புகழ் அன்றி மற்றும் ஒன்று உண்டோ - (எனக்குக) கீர்த்தியுண்டாகுமேயல்லது (அதற்கு) மாறான அபகீர்த்தி உண்டாகுமோ? (எ - று.)

இவன்மகனாற கட்டுப்பட்டதில் மானமபோனதுபற்றி யான் உயிர் போக்கிக்கொள்ளத்தகுவனாயிருந்தும், அங்ஙனஞ்செய்யாது கட்டுக்கு உட்பட்டு அரிதின் உயிர்வைத்துக்கொண்டிருந்தது, இவனை நேரிற்கண்டு சந்தித்துச் சிலபேசிப் பின்பு மீளவேண்டுமென்னும் எண்ணங்கொண்டன்றோ; அங்ஙனங் கண்டு சிலபேசிச் செல்லுதல் மாதரிரு செயலேனாயின், அது, பகைவனாற கட்டுண்டா னெனறு உலகத்தார் எனனை நிந்தித்தற்குக் காரணமாகுமேயன்றி, அந்த உலகநிந்தனைக்கு ஒருபரிகார மாகாது; மறறு இவனைத் தலைதடியுமாறு துணிந்து எதிர்த்துப்பொருவேனாயின், பெரும்பாலும் வெலவேன்; அன்றி, ஒருகால் தோற்றாலும இறந்தாலும், புகழ்விளையுமேயன்றிப் பழிவிளையாது என்று எண்ணினன அநுமான் என்க. ஆதலால், இவன்மேற் பாயக்கடவேன் என்பது உபதேசம் எதிர்சிலகழறி இவ்வுயிர்சுமந்து மீண்ட போது என்று மொழிமாற்றி, இவனைக் காணுதலையும் இவனெதிற சிலபேசுதலையுமே பயனாகக்கொண்டு அவற்றைச்செய்து முடித்து இந்த உயிரைச்சுமந்துகொண்டு திருமபிப் போவேனாயின் என்று உரைத்தலும் அமையும்; போரில் மாளுகறகு அஞ்சி உயிரைவைத்துக்கொண்டிருத்தல் பூமிபார மென்க. (ருகூ)

சுo —இங்ஙனம்துணிந்த அநுமான், உடனே அத்துணிவு தகுதியன்றென்று கருதுதல்

என்று தோளிடை யிறுக்கிய பாசமிற றேகக்
குன்றின் மேலெழு கோளரி யேறெனக் குதியிற

சென்று கூடுவ லென்பது சிந்தனை செய்யா
நின்று காரிய மன்றென நீதியி னினைந்தான்.

(இ - ள்.) என்று - என்று (அநுமான்) ஆலோசித்து, தோளிடை இறுக்கிய பாசம் இறுக - தன்தோளகளிற் கட்டியிருக்கிற நாகபாசம் அறுபட்டுப்போய்விடும்படி, குன்றின்மேல் எழு கோள அரி ஏறு என - மலையின்மேற் பாய்கின்ற வலிய ஆண்சிங்கம்போல, குதியின் சென்று கூடுதல் - ஒரு பாய்ச்சலிற் சென்று (அவனிடஞ்) சேரவேன், என்பது சிந்தனை செய்யா நின்று - என்பதாக எண்ணிக்கொண்டிருக்கும்போது,—காரியம் அன்று என நீதியின் நினைந்தான் - 'இது தகுதியன்று' என்று நியாயமாக ஆலோசிக்கலானான்; (எ - று.)—அதனை, அடுத்த நான்குகவிகளிற் காண்க.

குன்று - வலியபெரிய இராவணனுக்கும், வலிய ஆணசிங்கம் - பலபராக்கிரமங்களிற்சிறந்த அநுமானுக்கும் உவமை. (சுo)

வேறு.

சுக.—இதுமுதல் நான்குகவிகள் - மற்றும் அநுமானுடைய ஆலோசனை.

கொல்லலாம் வலத்தனு மல்லன் கொற்றமும்
வெல்லலாந் தரத்தனு மல்லன் மேலைநா
ளல்லெலாந் திரண்டன நிறத்த னாற்றலை
வெல்லலா மிராமனாற் பிறரும் வெல்வரோ.

ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (இவ்விராவணன்), கொல்லல் ஆம் வலத்தனும் அல்லன் - (யாராலுங) கொல்லக்கூடிய வலிமையுடையவனு மல்லன; கொற்றமும - (இவனது) அரசியலை நோக்குமிடத்து, வெல்லல் ஆம் தரத்தனும் அல்லன் - (யாராகிலுஞ்) சயிக்கத்தக்க நிலைமையுடையவனு மல்லன்; (ஆகவே), அல்லெலாம திரண்டு அன நிறத்தன ஆற்றலை - இருள்முழுவதும் ஒருங்குகூடினாற்போன்ற மிக்ககருநிறமுடையவனான இவனது வலிமையை, மேலை நாள் - இனிவருங்காலத்தில, இராமனால் வெல்லல் ஆம - ஸ்ரீராமபிரானொருவனாலேயே வெல்லுதல்கூடும்; பிறரும வெல்வரோ - (அப்பெருமானல்லாத) மற்றையோரும் (இவனை) வெல்லமாட்டுவரோ? [மாட்டார் என்றபடி]; (எ - று.)

இவனது தேகபலம் முதலியவற்றை நோக்குமிடத்து இவனைக் கொல்லுதலும் இவனது துணைவலிமை முதலியவற்றை நோக்குமிடத்து இவனை வெல்லுதலும் மகாவீரனான இராமனொருவனுக்கு எளியதேயன்றிப் பிறர்க்கு அரியதென்பதாம். கொற்றம - அரசியல் இங்கு, இலக்கணையாய், சேனாபலம் முதலிய துணைவலிமையின்மேல் நின்றது. 'கொற்றமும்' என்ற உம்மை - இவன் தனியே எதிர்த்துப்போர்செய்தற்குக் கிடைத்திடாமற பலரோடுகூடியுளனானே யென்று அநுமான் கருதுதலைக்காட்டும். (சுக)

கூஉ. என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிவன்
றன்னையும் வெலற்கரி தெனக்குத் தாக்கினு
லன்னவே காலங்கள் கழியு மாதலாற்
றுன்னருஞ் செருத்தொழி றொடங்க றூயதோ.

(இ - ள்.) என்னையும் இவனுககு வெலற்கு அரிது - என்னை வெல்லுதலும் இவ்விராவணனுக்கு முடியாது; ஈண்டு இவன்தன்னையும் வெலற்கு எனககு அரிது - இவ்வளவுதுணைவலிமையோடுகூடியுள்ள இவனை வெல்லுதல் எனககும முடியாது; (ஆகவே), தாக்கினுல் - (இவனோடு யான் எதிர்த்துப்) போர்தொடஙகினுல், அன்னவே காலஙகள் கழியும் - அத்தன்மையனவாகவே [போரிலேயே] பலநாளகள்கழிந்துவிடும்; ஆதலால்—, துன் அருஞ் செரு தொழில் தொடஙகல் தூயதோ - (பிறர்) நெருஙகுதற்கு அரிய போர்த தொழிலைத தொடஙகுவது நல்லதோ? [அன்று என்றபடி]; (எ - று.)—'வெலற்கு' என்றதில, நான்கனுருபு - கருததாப்பொருளில் வந்தது. (கூஉ)

கூஙு. ஏழுய ருலகங்கள் யாவு மின்புறப்
பாழிவன் புயங்களோ டரக்கன் பஃறலைப்
பூழியிற் புரட்டலென் பூணிப பாமென
வூழியான் விளம்பிய வுரையு மொன்றுண்டால்.

(இ - ள்.) (அன்றியும்),—'ஏழ் உயர் உலகங்கள் யாவும் இன்பு உற - ஏழுவகைப்பட்ட சிறந்த உலகஙகளிலுள்ள ஜனங்களெல்லாம் இன்பமடையும்படி, அரக்கன் - இராவணனுடைய, பாழி வல் புயஙகளோடு பெரிய வலிய தோள்களையும, பல் தலை-பலதலைகளையும, பூழியில் புரட்டல்-(துணித்துக்கீழேதள்ளிப்) புழுதியிற புரளுமபடி செயதல், என் பூணிப்பு ஆம்-யான் மேற்கொண்ட விரதமாகும,' என - என்று, ஊழியான் விளமபிய - ஸ்ரீராமபிரான் சொல்லியுள்ள, உரையும - வார்ததையும், ஒன்று—, உண்டு ஆல் - உள்ளதன்றோ; (எ - று.)—ஆல் - தேற்றம்.

'எல்லாவுலகத்தாரும் துன்பமநீஙகி இன்பமடையும்படி, லோககண்டகனான இராவணனது தோள்களையும தலைகளையும் துணித்துததள்ளுவேன் யான்' என்று முன்பு இராமபிரான் தணடகாரணியவாசிகளான முனிவர்கட்கு அபயமளித்து வாகுகுததததஞ்செயதுள்ளானன்றோ; இப்பொழுது யான் இராவணனை யெதிர்ததுப்பொருது கொல்வேனுயின், அந்தப்பிரதிஞ்ஞை நிறைவேறுமற்போமே; ஆதலாலும, யான் இபபொழுது போரதொடஙகுதல் தகுதியன்று என்று அநுமான் கருதின னென்க.

இஙகு 'உலகஙகள்' எனறது, அவறறில்வாழும் உயிரகளின்மேல் நின்றது. பாழி வன் புயஙகள்-வலிய கொடிய தோள்க ளெனினுமாம். பூணிப்பு - சஙகற்பம. ஊழி யான் - உலகிற்குததலைவன், காலத்துககுததலைவன், அழிவின்றி நித்தியனுய வாழ்பவன் என்ற பொருள்கள் உணடு. (கூஙு)

சுச. இங்கொரு திங்களே யிருப்பல் யானென
வங்கணு யகன[1]றன தாணை கூறிய
மங்கையு மின்னுயிர் துறத்தல் வாய்மையாற்
பொங்குவெஞ் செருவிடைப் பொழுது போக்கினுல்.

(இ - ள்.) (மற்றும்),—பொங்கு வெம் செருவிடை - மிககொடிய போரிலே, பொழுது போகினுல் - (யான் தலையிட்டு இங்குக்) காலத்தைக் கழித்துகொண்டிருந்தால்,—இங்கு ஒரு திங்களே இருப்பல் யான் என - 'இவ்விடத்திலே [இலங்கையிலே] இன்னும் ஒருமாதகாலமளவுமே உயிர் வைத்துக்கொண்டிருப்பேன் யான்' என்று, அம கண் நாயகன் தனது ஆணை கூறிய-அழகிய திருக்கணகளையுடைய தனது கணவனுன இராமபிரான்மீது ஆணைவைத்துச் சொன்ன, மங்கையும் - சீதாபிராட்டியும், இன் உயிர் துறத்தல் - (அதற்குட்செயதியறிந்து இராமன் வரக காணுது) தனது இனிமையான உயிரை (அவவொருமாதங்கழிந்தவளவிலே) விட்டிடுதல், வாயமை - நிச்சயம்; (எ - று.)—ஆல - தேற்றம்.

பொழுதுபோகினுல் துறத்தல் வாயமை என இயையும். கீழ்ச் சூளாமணிப்படலத்தில் "இனனுமீணடொருதிங்களிருப்பல் யா, னின்னை நோக கிப்பகாந்தது நீதியோய, பின்னையாவிபிடிக்கின்றிலேனந்த, மன்னனுனை யிதனை மனகொணீ" என்று அநுமானை நோக்கிச் சீதைசொன்னது, உணரத்தக்கது. தான்கொண்டகருத்தின் உறுதியை வற்புறுத்துதற்கு, கணவன் மேல் ஆணையிட்டுக்கூறின ளென்க. பி - ம்.—[1]தனியாணை. (சுச)

சுரு —அநுமான் இங்ஙனம் ஆலோசித்து அடங்கி இராவணனருகிற் சேர்தல்.

ஆதலா னமர்தொழி லழகிற் றனறருந்
தூதனுந தன்மையே தூயதென் றுனனினுன்
வேதநா யகன்றனித் துணைவன் வென்றிசா
லேதில்வா ளரக்கன திருக்கை யெய்தினுன்.

(இ - ள்.) ஆதலான் - ஆகையால், அமா தொழில் அழகிற்று அன்று - (இப்பொழுது) போர்செயதல் அழகுடைய தனறு. அருந தூதன் ஆம் தன்மையே தூய்து - அருமையாகவந்த (சிறந்த) தூதனுகமாததிரம (எனனைக் காட்டி) நிற்கிற இயல்பே நனமையுடையது, என்று உன்னினுன் - எணணினவனுய்,—வேதம நாயகன் தனி துணைவன் - வேதங்கட்குததலைவனுன இராமபிரானுக்கு ஒப்பற்ற உதவி செயபவனுகிய அநுமான்,—வென்றி சால ஏதில் வாள் அரக்கனது இருகை எய்தினுன - வெறறிமிககவனும பகைமையுள்ளவனுமாகிய கொடிய இராவணனது கொலுவீற்றிருககுமிடததைச் சேர்ந்தான்; (எ - று) (சுரு)

சுசு.—இந்திரசித்து அநுமானை இராவணனுக்குக் காட்டுதல்.

தீட்டிய வாளெனத தெறுகட் டேவிய
ரீட்டிய குழுவிடை யிருநத வேந்தற்குக்

காட்டின னனுமனைக் கடலி னாரமு
தூட்டிய வும்பரை யுலைய வோட்டினன்.

(இ - ள்.) தீட்டிய வாள் என - (மிக்ககூர்மையுடையதாம்படி) தீட்டப்பட்டவாளாயுதம்போல, தெறு - (ஆடவரது நெஞ்சுறுதியை) அழிக்கின்ற, கண - கணகளையுடைய, தேவியர் - (தனக்குஉரிய) மனைவிமார் (பலர்), ஈட்டிய - ஒருங்குகூடி நின்ற, குழுஇடை - கூட்டத்தின் நடுவிலே, இருந்தவீறறிருந்த, வேந்தற்கு - (ராக்ஷச) ராசனான இராவணனுக்கு,—கடலின் ஆர் அமுது ஊட்டிய உம்பரை உலைய ஓட்டினன் - திருப்பாற்கடலினின்று தோன்றிய அருமையான அமிருததைத் தம்மையுண்பித்தவர்களாகிய தேவர்களை வருந்துமாறு போரிற் புறங்கொடுத்தோடச்செய்து வென்றவனான இந்திரஜித்து, அநுமனை காட்டினன்-அநுமானைக் காணபித்தான்; (எ-று.)

கடலினாரமுதூட்டியஉமபர் - வெகுசிரமப்பட்டுப் பாற்கடல் கடைந்து அதனினின்று அருமையாக அமிருதத்தைப்பெற்று உண்டதனால் இறவாதிருக்கிற தேவர்கள் என்றபடி. இந்திரன்முதலிய தேவர்களோடு இராவணன் முதலிய இராக்கதர்கள் மூன்று செயத போரிலே தேவர்கள் வருந்தியோடுமாறு இந்திரனை வென்று இந்திரஜித்தெனப் பேர் பெற்றவனென்க. (சுகூ)

சுஎ.—அநுமானைக்குறித்து இந்திரசித்து இராவணனிடஞ் சொல்லுதல்.

புவன மெத் தனையவை யனைத்தும் போர்கடந்
தவனையுற் றரியுரு வான வாண்டகை
சிவனெனச் [1]செங்கணா னென்னச் சேவக
னிவனெனக் கூறினன் [2]றிருகை கூப்பினன்.

(இ - ள்) புவனம் எத்தனை அவை அனைத்தும் போர் கடந்தவனை உற்று - உலகங்களெத்தனையுண்டோ அவையெல்லாவற்றையும் போரில் வென்றவனான இராவணனை நோக்கி,—(இந்திரசித்து),—'அரி உரு ஆன ஆண்தகை இவன் - குரங்குவடிவமாக இருக்கிற ஆண்மைக்குணமுடையவனான இவன், சிவன் என செம் கணான என்ன சேவகன் - சிவபிரான்போலவும் திருமால்போலவும் வீரத்தனமையுள்ளவன்', என கூறி - என்று சொல்லி, நின்று இருகை கூப்பினன் - தனது இரண்டு கைகளையுங் குவித்து (அத்தந்தையைத்) தொழுதுநின்றான்; (எ - று)—இந்திரசித்து இராவணனுக்கு அநுமானைக் காட்டிய வகை இது

ஹரி என்ற வடசொல் - குரங்கைக்குறிக்கிறபோது, (பிறர்கைப் பொருளை) வலியக்கவர்ந்துகொள்வது என்று காரணப்பொருள்பெறும். 'அரியுருவான ஆண்தகை' என்ற தொடரில், பௌருஷமே ஒருகுரங்கு வடிவங்கொண்டாற் போன்றவனென்ற பொருளும் தோன்றும். அரியும் அரனும் மிக்கதிறமுடையராயிருந்தும் நமக்கு எளியராதல் போல, மிக்க திறமுடையவனான இவன் எமக்கு எளியனாயினனென்னுங் கருத்து மூன்றாமடியில் தொனித்தல் காண்க. பி - ம்:—[1]செங்கணமால். [2]எதிர். (கூகூ)

சுஅ.—இராவணன் மிக்ககோபத்துடன் அநுமானைப் பார்த்தல்.

நோக்கிய [1]கட்பொறி நுவன்ற வாய்களிற்
றாக்கிய பொறியொடு மயிர்சு றுக்கொளத்
தாக்கிய வுயிர்ப்பொடுந் தவழ வெம்புகை
வீக்கின னவவுடல் விசித்த பாம்பினே.

(இ - ள்.) நோக்கிய கண் பொறி (கோபத்தோடு அநுமானைப்) பார்த்த (இராவணனது இருபது) கணகளினின்று முணடான அனற்பொறிகள், நுவன்ற வாய்களில தூககிய பொறியொடு - பேசததொடஙகிய (அவனது பத்து) வாயகளினின்றும வெளியெழுந்த அனற்பொறிகளுடனே (சேர்ந்து), மயிர சுறுக்கொள தாககிய - (அநுமானுடைய உடமபிலுளள) மயிரகள் சுறு சுறு வென்று தீயும்படி (அவன்மேல்) வீசின; (அதுமாததிர மன்றி), உயிர்ப பொடுமெ வெமபுகை தவழ - (இராவணனது மூககின்துளையிருபதினின்றும வெளிப்பட்ட) பெருமூசசுடனே வெவ்விய அனறபுகை கிளமப, (அப்புகை யைக கொணடு இராவணன்), அ உடல் - அந்த அநுமானுடைய உடம்பை, விசிததபாமபின் வீககினன் - இறுககிக்கட்டியிருக்கிற நாகபாசம் போலக் கட்டினான்; (எ - று.)

இராவணன் உக்கிரமாகப்பார்த்துக் கடுமையாகப் பேசத்தொடஙகினானென்பது, முன்னிரணடடிகளின் கருதது; உயர்வுநவிற்சியணி. கருநிற மாய்த் திணிந்து அநுமானைச் சூழ்ந்துகொண்ட அப்புகைச செறிவுக்கு அநுமானைச சுற்றிபபிணிதத கருநிறமான இந்திரசித்தின் நாகபாசததையே உவமைகூறினார பினனிரணடடிகள - உயர்வுநவிற்சியையும் உவமையையும் அஙகமாககொணடுவந்த தற்குறிப்பேற்றம். நாகபாசம அநுமானுககுப் பெருந்துயா விளைத்திடமாட்டாமை இஙகுத தொனிககும

இனி, நோககிய - (அநுமானைப்) பாரதத, கணபொறி - கணகளாகிய பொறிகள் [இநதிரியஙகள], நுவன்ற வாய்களில் தூககிய பொறியொடு - (கட்பொறியென்று) சொலலபபட்ட தமமிடஙகளினின்று வெளியெழுந்த நெருப்புப் பொறிகளுடனே (சென்று), மயிர சுறுக்கொள தாககிய - (அநுமானது) மயிரகள் சுறுசுறுவென்று தீயுமபடி (அவனுடமபின் மேற்) பாயந்தன என்று உரைப்பினும அமையும். நோக்கிய கணகளாகிய இநதிரியஙகள் அநுமான்மேற சென்றவளவிலே அவறறினின்று எழுந்த தீபபொறிகளும மயிர சுறுககொளளுமபடி அவனுடமபின்மீது பட்டன என்பது கருத்து: உடனிகழ்ச்சியணி. இஙஙனமே இராவணனது பெருமூசசும் அதனுடனெழுந்த புகையும அநுமான்மீது பட்டன எனபது, பிரதிநிவாககியத்தாற் போதரும. பெரியோமேல் தனது மூசசுககாற்றுப் படும்படி செயதல், ஓர அபசாரம். புகைதோன்ற நெடுமூச செறிந்து அனறபொறி வீச அநுமானைப் பார்த்தன னென்பது, தேர்ந்த கருதது. 'பொறி

என்றது, உணரும் இந்திரியத்தை. 'வாய்' என்றது, அதற்கு இடமான உடலுறுப்பை. இவ்வளவும் இராவணனது கோபாக்கினியை வருணித்ததாதலால், உருத்திரமென்னுஞ் சுவையின்பாற் படும்; உருத்திரம் - வெகுளி. 'தாக்கிய' என்பதைத தாக்கியனவாக என்றுகொண்டு முற்றெச்சமாகின், ஒரே வாக்கியமாம். (சுஅ)

சுகூ.—இராவணன் அநுமானை வினவத்தொடங்குதல்.

அனனவோர் வெகுளிய னமர ராதியர்
துனனிய துன்னலாத துணுக்கஞ் சுற்றுற
வெனனிவண் வரவுநீ யாரை யென்றவன்
றன்மையை வினயினான் கூற்றின் றன்மையான்.

(இ ள்.) கூற்றின் தனமையான் - யமனது தன்மையையுடையவனான இராவணன்,—அன்ன ஓர் வெகுளியன் - அத்தனமைத்தான ஒருபெருங் கோபமுடையவனாய,—அமரர் ஆதியர் துன்னிய துன்னலா துணுக்கம் சுற்றுற - தேவர்கள முதலினோராக (எப்புறத்தும) நெருங்கியிருக்கின்ற பகைவர்களை அச்சம் சூழும்படி,—'இவண் வரவு என் - இங்கு (நீ) வந்த காரணமென்ன? நீ யாரை - நீ யார்?' என்று - என்பதாக, அவன் தன்மையை வினயினான் - அவ்வநுமானது இயல்பை வினவலானான்; (எ - று.)—'எனனிவணவரவு நீயாரை' என்றது, "தொகுத்துச்சுட்டல்." இதன் விவரத்தை, அடுத்த நான்குகவிகளிற கூறுகின்றார்; ஆகவே. அவை "வகுத்துக்காட்டல்."

ஓர்வெகுளி - ஒப்பற்ற கோபமுமாம். 'ஆதியர்' என்றது, இயக்கர் கருடா கந்தாவர் கினனரா கிம்புருடா விததியாதரா சித்தர் அசுரர்முதலிய தேவகணத்தவர்களை அவாகளனைவரும இராவணனாற் பகைத்து எதிர்த்துப் பொருது வென்று அடக்கப்பட்டு ஒன்றுஞ் செய்யமாட்டாது உட்பகைமை கொண்டு அவனது பரிவாரமாய் நிற்றலின், 'துன்னிய துன்னலா' எனப்பட்டனர். 'துணனலா' என்றது, சேராதவர் என்று பொருள்படுதலால், பகைவர்க்கு காரணக்குறியாம். 'துன்னியதுன்னலா' தொடைமுரண். அவனது பெருங்கோபத்தைக கண்டு யார்கு என்னுகுமோ வென்று அமரராதியா மிகத்திடுக்கிட்டன ரென்பார், 'துணுக்கஞ் சுற்றுற' என்றார். பயங்கரமான தோற்றமுடையனாய்த தயைதாக்ஷிணியமின்றி அனைவரையுங கொல்பவனும தென்திசையில் தலைமைபூண்டவனுமாய் நிற்பவ னென்பது 'கூற்றின் தன்மையான்' என்றதன் தாற்பரியம். (சுகூ)

எ0.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர். இராவணன் அநுமானை வினவுதல்.

நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகட் பஃறலைப்
பூமிதாங் கொருவனோ பொருது [1]முற்றுற
நாமமு முருவமுங் கரந்து நண்ணினாய்.

(இ - ள்.) நேமியோ - சக்ராயுதபாணியான விஷ்ணுவோ? குலிசியோ வசிராயுதபாணியான இந்திரனோ? நெடுங் கணிச்சியோ - நீண்ட சூலாயுத பாணியான சிவபிரானோ? தாமரைக் கிழவனோ - தாமரைமலரில் தோன்றிய வனான பிரமனோ? தறுகண் - அஞ்சாமையையும், பல் தலை - பலதலைகளையு முடைய, பூமி தாங்கு ஒருவனோ - பூமியை(க் கீழேயிருந்து) தாங்குகின்ற ஒருவனான ஆதிசேஷனோ? பொருது முற்றுற - போர்செய்து அழியுமாறு, நாமமும் உருவமும் கரந்து நணுணினாய் - பெயரையும் இயற்கைவடிவதனை யும் மறைத்துக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தாய்; (எ - று.)

திருமால்முதலியோருள் எவனோவொருவன் தன்பெயரையும் இயற்கை வடிவதனையும் மறைத்துக்கொண்டு இங்ஙனங் குரங்குவடிவமாய் வந்து போர் செய்யலாயின னென்று உட்கொண்டு, 'அங்ஙனம வந்த யாவன் நீ?' என அநுமானை வினவினன் இராவண னெனக 'நண்ணினாய்'—வந்தவனாகிய நீ யெனினும் அமையும். திருமாலமுதலிய இவர்களே மறைறயோரினும் ஆற்றல்மிக்கவர்களாதலின் ஒருகால் தனனோடு போர்கருவரக்கூடு மென்பது உட்கோள். அங்ஙனம்வரினும முடிவில அவர்கரு அழிவேநேவது எனத் தனதுசெருக்கினாற கூறுவான், 'பொருதுமுற்றுற' என்றார். குலிசம் - வச சிராயுதம்· அதனையுடையவன், குலிசீஎன இந்திரனுக்கு காரணக்குறி நெடுங் கணிச்சி - நீண்ட சூலத்தை யுடையவன் எனப் பண்புதொகையன் மொழி தாமரைக்கிழவன்-திருமாலின நாபிததாமரைமலரினின்று தோன்றி அதற்கு உரிமைபூண்டவன். சாப்பராஜனான ஆதிசேஷன் ஆயிரந்தலைகளை யுடையா னாதலின், 'பல்தலை' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பி - ம்·—[1]முற்றுவான். (எ0)

எக. நின்றிசைத் துயிர்கவர் நீலக் காலனோ
குன்றிசைத் [1]கயிலுற வெறிந்த கொற்றனோ
தென்றிசைக் கிழவனோ திசைநின் றாட்சிய
ரென்றிசைக் கின்றவர் யாருள் யாவனீ.

(இ - ள்.) நீ—, நின்று இசைத்து உயிர் கவர் நீலக் காலனோ - (எதற் குஞ்சலியாது) நிலைநின்று (தனதுபாசாயுததைக்கொண்டு) கட்டி (எந்தப்பி ராணிகளின) உயிரையுங் கவர்ந்துகொண்டுபோகிற கருநிறமுடைய யமனோ? குன்று இசைத்து அயில் உற எறிந்த கொற்றனோ - மலையிற்பட்டு (த தனது) வேலாயுதம் உட்புகுதும்படி (அதனை) எறிந்த வெற்றியையுடையவனான முருகனோ? தென்திசைக் கிழவனோ-தெற்குத்திக்குக்கு உரிமைபூண்டவனான அகத்தியமுனிவனோ? திசை நின்று ஆட்சியர் என்று இசைக்கின்றவர் யாருள் யாவன் - (மற்றும) திக்குக்களில் நின்று (அவற்றை) ஆளுதலுடைய வர் [திக்பாலகர்] என்று சொல்லப்படுகின்றவ ரனைவருள்ளும் யாவனோ?

(பிராணிகளின் ஆயுள்நாளைக்) கணக்கிடுதல்பற்றி, யமனுக்கு காலன் னென்று பெயர்; வடசொல். குன்று - இங்குக் கிரௌஞ்சகிரி.

அதன்மீது முருகக்கடவுள் வேலெறிந்து அதனைப்பிளந்த வரலாற்றைக் கந்தபுராணத்திற் காண்க. அன்றியும், சிவபிரான் பரசுராமனுக்கும் சுப்பிரமணியனுக்கும் ஒருங்கு படைக்கலவிததை பயிற்றுவிததபின்பு அவர்கள் திறததைப பரீக்ஷிக்கையில், குமாரமூாததி தனதுவேற்படையைக் கிரௌஞ்ச கிரியின் மீது எறிந்து அதனைப் பிளந்து தனது வேலின் திறத்தைக் காட்டின னென்ற வரலாறும் உண்டு.

அகததியமகாமுனிவன் பொதியமலையின்கண இருந்து இராவணனைக் கந்தருவததாறபிணிதது இராக்கதரை ஆணடு இயங்காமை விலக்கிய திறமுடைபா னாதலின, அவனே இவ னெனவும் இராவணன் ஐயமுறலாயிற்று. முன்னொருகாலததிற சகலதேவர்களும் முனிவாகளும் மேருகிரியிலே ஒருங்குகூடியதனால் அவ்வடபுறம தாழ்ந்து தென்புறம உயரவே, அதனைககணடு கலஙகிய அனைவரும மிககமகிமையுடையவனான அகததியமாமுனிவனைத தென்திசைககுச செல்லும்படி வேணட, அவவாறே அம்முனிவன் தென்திசைக்கண வந்து சோந்து பொதியமலையில் தஙகினனெனற வரலாறுபற்றியும், அகஸ்தியநக்ஷததிரம் தெனதிசையில் விளங்குதலாலும, அகஸதியமுனிவன 'தென்திசைக கிழவன்' எனப்பட்டனன்: ("தேவரெலலாருங கூடி, யாம் சேரஇருததலின் மேருத தாழ்ந்து தென்திசை உயாநதது இதற்கு அகஸ்தியனாரே ஆணடு இருத்தற்கு உரியா' என்று அவரை வேணடிக கொளள, அவரும தென்திசைககண போதுகின்றவர்... .... .காடுகெடுத்து நாடாககி பொதியிலின்கண் இருநது, இராவணனைக கநதருவததாற்பிணிதது இராக்கதரை ஆண்டுஇயங்காமை விலக்கி" என்பது, தொல்காப்பியப்பாயிரதது நசசினாககினியருரை. பத்துப் பாட்டுள் மதுரைக்காஞ்சியில் "தெனனவற்பெயரிய துன்னருந்துப்பிற் றொன்முதுகடவுள்" என்பதற்கு - 'இராவணனைத தமிழ்நாட்டை யாளாதபடி போகின கிட்டுதற்குஅரிய வலியினையுடைய பழமுதிர்ந்த அகததியன்' என்ற நசசினாககினியருரையும் நோகசததககது.) அகததியனை 'தென்திசைக கிழவன்' என்றது, பாண்டியனை 'தெனனவன்' எனறல் போலும். இனி, 'தென்திசைக கிழவன' என்பதற்கு - தெற்குததிக்குப் பாலகனான யமன் என்று கொணடு, முதலடியில் 'காலன்' என்றது - அந்த யமனது மந்திரியும சேனைத்தலைவனும் அவனைபபோன்ற திறலுடையவனுமான பிறனொருவனை யெனக கொள்ளுதலுமொன்று; காலன்' என்பது - யமனுககுப பரியாயநாமமாக வழஙகுததலோடு, இஙஙனம் வேறொருவன பெயராகவும் நிற்கும். அஷ்டதிகபாலகாகளுள இநதிரனும் யமனும கீழ்க கூறப்பட்டதனால - 'திசைநின்றாட்சிய ரென றிசைககின்றவா' என்றது, அவரொழிநத மற்றையோரை. பி - ம்:—[1]அயிலுக. (எக)

எஉ. அந்தணர் வேள்வியி னாக்கி யாணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ

முந்தொரு மலருளோ னிலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய [1]தறுகட் டெய்வமோ.

(இ - ள்.) அந்தணர் - முனிவாகள், வேள்வியின் - யாகததிலிருந்து, ஆகி - தோன்றுவிதது, ஆணையின் - (தமது) கட்டளையினால், வந்து உற விடுதது - (இஙகு) வந்து சேரும்படி அனுப்பப்பெற்றதான, ஓர் வய வெம் பூதமோ-வலிய கொடிய ஒருபூதத்தானோ? முந்து ஒரு மலர் உளோன் - பழைமையானதொரு தாமரைப்பூவின்மேலிருப்பவனான பிரமன், இலங்கை முற்றுற சிந்து என திருததிய - 'இலஙகாபுரி முழுவதை ம் அழித்துவிடு' என்று ஏவிப் புதிதாகசசெயதனுபபிய, தறு கண தெயவமோ - அஞ்சாத ஒரு தேவனதானோ? (எ - று.)

தணடகாரணியவாசிகளான முனிவாகள் தன்னைகொல்லக் கருதி அபிசாரயாகமொன்றுசெய்து அதனினின்று எழுப்பிக் கட்டளையிட்டு இலஙகையைநோகி யனுபபிய ஒருமகாபூதமோ என்றும சஙகிதது வினவினன் இராவணன் எனக. ஆணையின் ஆகி என்று இயைத்து, தமது ஆணையாகசசொலலிய மநதிரஙகளின் சகதியினால் உணடாகி என உரைப்பினும் அமையும். 'முநதொருமலா' என்றது, திருமாலின் நாபிக்கமலததை.

பி ம்:—[1]திகிரித். (எஉ)

எங. ஆரைநீ யெனனையிங் கெய்து காரண
மாருனை விடுத்தவ ரறிய வாணையாற்
சோவிலை சொலலுதி யென்னச் சொல்லினான்
வேரொடு மமரர்தம் புகழ்வி ழுங்கினான்.

(இ - ள்.) 'ஆரைநீ - (இவர்களில்) யாவன் நீ? இஙகு எய்து காரணம் என்னை - (நீ) இஙகு வநததனகாரணம் யாது? உனை விடுததவா ஆர் - உன்னை யனுப்பியவர் யாவா? அறிய - (யான்) அறிந்து கொள்ளுமாறு, ஆணையால் - (எனது) கட்டளையின்படி, சோர்வு இலை சொல்லுதி - தவறுதலில்லாமற்சொலவாய்' என்ன சொல்லினான் - என்று (அநுமானை நோக்கிக) கூறினான். (யாவனெனில்),—அமராதம் புகழ்வேரொடும விழுஙகினான் - தேவாகளுடைய கீாத்தியை அடியோடு விழுஙகியவனான இராவணன்.

வேரொடு மமராதம புகழ்விழுஙகினான் - உண்ணப்படாதது உண்ணப்பட்டது போலச் சொல்லப்பட்ட மரபுவழுவமைதி; தேவர்களை வென்று அவாகளுடைய கீாததிமுழுவதையுந் தனதாகககொணடவ னென்பது கருதது. (எங)

எச.—ஒன்பது கவிகள் - ஒருதொடர்: அநுமான் சொல்லும் உத்தரம்.

சொல்லிய வனைவரு மலலென் சொனனவப்
புல்லிய வலியினோ ரேவல் பூண்டிலே
னல்லியங கமலமே யனைய செங்கணோ
வில்லிதன் [1]றாதன்யா னிலங்கை மேயினேன்.

(இ - ள்.) சொல்லிய அனைவரும அல்லென் - (நீ) சொனன யாவரு மல்லேன் (யான்); சொன்ன அ புல்லிய வலியினோர் ஏவல் பூணடிலேன்-

(உன்னுற்) சொல்லப்பட்டவர்களான அந்த அற்பபலமுள்ளவர்களுடைய கட்டளையை மேற்கொண்டு வந்தேனு மல்லேன்; அல்லி அம்கமலமே அனைய செம்கண் - அகவிதழ்கள் நிறைந்த அழகிய செந்தாமரைமலரையே போன்ற சிவந்த திருக்கண்களையுடைய, ஓர் விலவிதன் - ஒப்பற்ற ஒருவில்வீரனது, தூதன் - தூதனாக, யான்—, இலங்கை மேயினேன் - இந்த இலங்காபுரிக்கு வந்தேன்; (எ - று.)

திரிமூர்த்திகள் முதலியோரது கட்டளையையும் பொருள் செய்யேன் யான்! இராமதூதனாய் இங்குவந்தேன் என்று, தனது திறத்தையும் இராம பக்தியையும் வெளியிட்டான். மிகக ஆற்றலையுடையவரென்று உன்னாற் கருதப்பட்ட அனைவரினும் மேம்பட்டவன் எனதுதலைவ னெனக் குறிப்பித்தானும். அநுமான் தனது தலைவனான இராமபிரானது வலிமையை மிகச சிறப்பிக்கவேண்டி, திரிமூர்த்திகளையுமுட்பட 'புல்லியவலியினோ' என்று இழித்துக்கூறினன்; ஈஷிநிந்தாந்யாயத்தால் இது குற்றமாகாது. இனி, திரிமூர்த்திகள் முதலியோர் கொல்லாது விட்ட இராவணனை இராமன் கொல்வ னென்பது பற்றி, அவர்களை 'புல்லியவலியினோ' என்றானுமாம். பி-ம்.— [1]தூதின். (எச)

எரு. அனையவன் யாரென வறிதி யாதியேன்
முனைவரு மமரரு மூவா தேவரு
மெனையவ ரெனையவர் யாவர் யாவையு
நினைவரு [1]மிருவினை முடிக்க நின்றுளோன்.

(இ - ள்.) அனையவன் யார் என அறிதி ஆதி ஏல் - அந்தவில்வீரன் யாவனென்று (விவரம) அறியவேண்டுவையானால், (விரிவாகச சொல்லுகின்றேன்.—) முனைவரும் - முனிவர்களும, அமரரும - தேவர்களும, மூவா தேவரும் - திரிமூர்த்திகளும, எனையவர் எனையவர் யாவர்-மற்றும எவ்வளவு மேம்பட்டவர்களாய எத்தனை வகுபபினருண்டோ அவர்களனைவரும், யாவையும்-மற்றை எல்லாப்பிராணிகளும், நினைவு அரும்-நினைத்தற்கும் அரியதான, இரு வினை - பெரிய காரியத்தை, முடிக்க - நிறைவேற்றுதற்கு, நின்று உளோன் - அவதரித்து நிலைபெற்றுளளவன்; (எ - று.)

'இருவினை' என்றது, இராவணவதத்தை. முனிவர் தேவர் முதலிய அனைவராலும் மற்றும அஃறிணையுயிர்களாலும தான் கொல்லப்படாதபடி இராவணன பிரமனிடம வரமவேண்டிப்பெற்றுளளா னாதலால், அவனைக் கொலலுதல் அவர்கள் யாவரும் யாவையும் நினைத்தற்கும் அரிதாயிற்று; 'முனைவரும்' என்றது முதல் 'யாவர்' என்றதுவரை - உயர்திணையுயிர்களுள் தேவர்கணத்தவர்களையும, 'யாவை' என்றது - அஃறிணையில உயிருள்ளவற்றையுங குறிக்கும். பி - ம்: — [1] வினையமும. (எரு)

வேறு.

எசு. ஈட்டிய வலியு மேனு ளியற்றிய தவமும் யாணர்
கூட்டிய படையுந் தேவா கொடுத்தநல வரமுங [1]கொட்புந்
தீட்டிய [2]பிறவு மெய்தித் திருத்திய வாழ்வு மெல்லா
நீட்டிய பகழி யொன்றுன முதலொடு நீக்க நின்றான்.

(இ - ள்.) ஈட்டிய வலியும் - (நீங்கள்) மிகுதியாகக்கொண்டுள்ள தேக பலத்தையும், மேல்நாள் இயற்றிய தவமும - முன்னாளில் (நீங்கள்) செய்து வைத்துள்ள தவத்தின வலிமையையும, யாணா கூட்டிய படையும் - புதிது புதிதாக (நீங்கள்) சேர்த்துவைத்திருக்கிற ஆயுதங்களையும சேனைகளையும, தேவா கொடுத்த நல் வரமும - தேவாகள் (உங்கட்குக) கொடுத்திருக்கிற சிறந்த வரங்களையும், கொட்புமு - (மற்றும் நீங்கள் கொண்டுள்ள) சிறப்புககளையும, தீட்டிய பிறவும் - (நீங்கள ஆங்காங்கு ஜயஸ்தம்பநாட்டி அவற்றில்) எழுதிவைத்துள்ள (பெயா பிரதாபம கீர்த்தி முதலிய) பிறவற்றையும, எய்தி திருத்திய வாழ்வும - (நீங்கள்) அடைந்து பின்பு சீர்திருத்திக்கொண்ட அரசாட்சிசெல்வங்களையும், எல்லாம - மற்றும உங்கள் சம்பந்தமுடையவை யனைத்தையும, நீட்டிய பகழி ஒன்றுல முதலொடு நீக்க - (நீண்ட தனது) அமபொன்றினால அடியோடு அழிகுமாறு, நின்றான - நிச்சயித்துநின்றவன், (அவன்); (எ - று.)

கொட்பு - மனத்தினகொள்கை யென்று கொண்டால், எண்ணமென்று பொருளாம. [1]கோட்புமு என்ற பாடத்துககு, பகுதி முதல் நீண்டதென வேண்டும. பி - ம்.—[2]அறிவுமமிகக. (எசு)

எஎ. தேவரும் பிறரு மல்லன் றிசைக்களி றல்லன் றிக்கின்
காவல ரல்ல னீசன் கயிலையங கிரியு மல்லன்
மூவரு மல்லன் மற்றை முனிவரு மல்ல [1]னெல்லைப்
பூவல யத்தை யாண்ட புரவலன புதல்வன் போலாம.

(இ - ள்.) (அந்தவில்வீரன் , தேவரும் பிறரும் அல்லன் - தேவர்களும மற்றை அசுராகள முதலியோரு மலலன்; திசைககளிறு அலலன - (அஷ்ட) திக்கஜங்களு மலலன; திகின காவலா அலலன் - (அஷ்ட) திகபாலகர்களு மல்லன்; ஈசன் கயிலை அம் கிரியும அல்லன் - சிவபிரானது அழகிய கைலாச கிரியு மலலன், மூவரும அலலன் - திரிமூர்த்திகளு மல்லன்; மற்றை - மற்றும, முனிவரும அல்லன - இருடிகளுமலலன்; எல்லை பூவலயத்தை ஆண்ட புரவலன் புதலவன போல ஆம - பூமண்டலத்தின் எல்லை எவ்வளவு உண்டோ அவ்வளவையும அரசாண்ட (தசரத) சக்கரவாத்தியின் குமார னுவன; (எ - று.)

'புரவலன புதலவன்போலாம்' என்றவிடத்தில், 'போல்' என்றது - உவமைப்பொருள்தராமையால், ஒப்பிலபோலியாய், அவன் உன்னால வெல்லப்பட்ட தேவாமுதலியோரல்லன், வெல்லபபடாத ஒரு சக்கரவாத்தியின் புதல்வன் என்றவாறு. பி - ம்.—[1]ஒலலை. (எஎ)

எஉ. போதமும் [1]பொருந்து கேள்விப புரையறு பயனும் பொய்தீர்
மாதவஞ் சார்ந்த தீரா வரங்களு [2]மற்று முற்றும்
யாதவ னினைந்தா னன்ன பயத்தன வேது வேண்டின்
வேதமு மறனுஞ் சொல்லு மெய்யற மூர்த்தி வில்லோன்.

(இ-ள்.) போதமும்-ஞானமும், பொருந்துகேள்வி புரை அறு பயனும் - பொருந்திய நூற்கேள்விகளினாற் பெறுங் குற்றமற்ற பயனும், பொய் தீர் மாதவம் சார்ந்த தீரா வரங்களும் பொய்ம்மையில்லாத பெரியதவத்தைச் செய்து பெறுகின்ற நீங்காதவரங்களும், மற்றும் முற்றும் - மற்றும் எல்லாம், அவன் யாது நினைந்தான் அன்ன பயத்தன - அவன் என்னநினைத்தானோ அந்தப் பயனை விளைப்பனவாம்; ஏது வேண்டின்-(இங்ஙன மாதற்குக) காரணத்தை (அறிய) விரும்பினால்,—வில்லோன் - அந்தவில்வீரன், வேதமும் அறனும் சொல்லும் மெய் அறம் மூர்த்தி - வேதங்களும் தர்மதேவதையும் துதிதுக் கூறும சததியமான தாமஸவடிவி, (எ - று.)

யாவும் ஸாவசக்தனான கடவுளினது சங்கற்பத்துக்கு உட்பட்டே நடக்கின்றன என்ற உண்மையை உணர்த்துவார், 'யாது அவன் நினைந்தான் அன்னபயத்தன' என்றார். நினது புதுதி பலம் முதலிய சிறப்புகளெல்லாம அழியுமாறு அவன்நினைப்பின் அங்ஙனமே தவறாமல் எளிதில் அழியுமென்று உணர்த்தியவாறும். அங்ஙனமாதற்குக் காரணம்-அவன் வேதப் பிரதிபாத்தியனும அறக்கடவுளும் தர்மஸ்வரூபியும ஸத்தியஸங்கல்பனுமான முழுமுதற் கடவுளென்பது, 'ஏதுவேண்டின், வேதமும் அறனுஞ் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன்'என விளக்கப்பட்டது. இயற்கைநுண்ணறிவு, செயற்கை நூலறிவு முதலிய அறிவுவகை யெல்லாம், 'போதம்' என்றதில் அடங்கும். கேள்வியாவது - கேட்கப்படும நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்; இது, கற்றவழி அதனின ஆய அறிவை வலியுறுத்துவதும், கல்லாத வழியும அதனை யுண்டாக்குவதுமாய "கற்றலிற் கேட்டலே நன்று"என்னும்படி சிறப்புறுதலால், 'பொருந்துகேள்வி' என விசேடித்துக் கூறப்பட்டது. அக்கேள்வியின் குற்றமற்ற நற்பயன்-வறுமை முதலியவற்றால் மனந்தளர்ந்த விடத்து அத்தளர்ச்சியை நீக்குதல், ஆன்றபெருமைதருதல், பேதைமை சொல்லாமை முதலியன. உபதேசமொழிகளை அநுபவமுடைய நல்லாசிரியாபக்கல் கேட்டலாகிய சிரவணம இங்கு 'கேள்வி'எனப்பட்டதென்று கொண்டால, அதன்பயன் - அமமொழிப்பொருளைத் தெளிய ஆராய்தலாகிய மநநமும், அப்பொருளைத் தெளிந்து இடைவிடாது பாவித்தலாகிய நிதித்யாஸநமுமாம். பொய்தீர் மாதவம் - கூடாவொழுக்கம முதலிய குற்றமின்றித் திரிகரண சுததியுடன் செய்யுந் தவம; பழுதுபடுதலின்றிப் பயனதருந் தவமெனினுமாம். தவஞ்செய்வாரகுரிய விரதங்களுள் வாயமை ஒன்றுதல் பற்றி, 'பொய்தீர்தவம்' எனப்பட்டது என்றுங் கொள்ளலாம். தலைமைத் தேவர்களை உகப்பித்து அவர்களிடத்தி னின்று தாமதாம வேண்டும் வரங்க

ளைப் பெறுதற்குத் தவம் கருவியாதலால், 'தவஞ்சார்ந்தவரங்கள்' எனப்பட்டன. அத்தவத்தின் சிறப்புககு ஏற்றபடி பெருவரங் கிடைத்தல்பற்றி, 'பொய்தீர்மாதவஞ்சார்ந்த தீராவரநகள்' என்றார். அவ்வரபலம் எவர்க்கும் ஒழிக்க அரிதென்பதுதோன்ற, அதற்கு 'தீரா' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பி - ம்:—[1]பொருந்துமவேள்விப். [2]மறறும்யாவும். (எஅ)

எகூ. காரணங் கேட்டி யாயிற் கடையிலா மறையின் கண்ணு
மாரணங் காட்ட மாட்டா வறிவினுக் கறிவு மன்னோன்
போரணங் கிடங்கர் கவ்வப் பொதுநின்று முதலே யென்ற
வாரணங் காக்க வந்தா னமரரைக் காக்க வந்தான்.

(இ - ள்.) காரணம் கேட்டி ஆயின் - (அந்த முதற்கடவுள் இகநனம தசரதன் மகனாத் தோன்றுதற்குக்) காரணம் (என்னவென்று) கேட்பையானால்,—கடை இலா மறையின் கண்ணும - முடிவில்லாத [அநந்தமான] வேதநகளிலும், ஆரணம-(அவ்வேதத்தின் ஞான காண்டமாகிய) உபநிஷத்துக்களிலும, காட்டமாட்டா-(இன்ன தனமையனென்று) முழுவதுங் காட்ட முடியாத, அறிவினுக்கு அறிவும அன்னோன் - (எல்லாப் பொருள்களையும்) அறிகின்ற அறிவுக்கும ஓர் அறிவை யொத்தவனும,—போர் அணகுகு இடநகர் கவ்வ - போரிலே வருதத்தத்தைச செயகின்ற முதலையானது கவ்விக் கொள்ள, (அதனால வருநதி), பொது நினறு முதலே என்ற - (இன்னகடவுளென்று பெயாகுறிததுக் கூப்பிடாமற்) பொதுப்பட ஆதிமூலமே! என்று கூவியழைத்து நினற, வாரணம - யானையை (கஜேந்திராழ்வானை), காக்க - பாதுகாததற்கு, வந்தான் - (முன்பு ஓடி) வந்தவனுமான அந்த ஸ்ரீமந நாராயணனே, அமரரை காக்க வந்தான் - (அரக்கர்களால் வருந்திய) தேவர்களைப் பாதுகாததற் பொருட்டு (இகநனம்) அவதாரஞ் செய்தருளினான்; (எ - று.)

மறை ஆரணம் என்பன வேதத்தின் பரியாய நாமமாக வழநகினும், இகுகு இரண்டுங கூறியதனால், 'மறை' என்றது - வேதத்தின் பூர்வபாகமாகிய கர்மகாண்ட மென்றும், 'ஆரணம்' என்றது - வேதத்தின் அந்தமாகிய உபநிஷதது என்றும் பகுத்துக்கொள்ளப்பட்டன. வேதம் பரம்பொருளின் சொரூபத்தை முழுவதும் சொல்லமாட்டாது மீண்டமையை, அவ்வேதங கூறுதல்கொணடே யுணரலாம். 'கண்ணும்' என்ற ஏழனுருபையும், உமமையையும், 'ஆரணம்' என்பதனோடுங கூட்டுக. அறிவுககு அறிகிற சகதியை யளிததவனும், அறிவுக்கு ஏற்ற விஷயமாகுபவனும் அவனே யென்பது, 'அறிவினுககறிவுமன்னோன்' என்றதன் கருத்து.

கஜேந்திராழ்வான் இன்னதெய்வமென்று பெயர்குறியாது 'ஆதிமூலமே!' என்று பொதுப்படக் கூப்பிட்டபொழுது திருமாலல்லாத பிற தேவரெல்லாரும் தாம்தாம் அசசொல்லுக்குப் பொருளல்லரென்று கருதி யொழிய, அதற்கு உரிய அததிருமால்தானே வந்து அருள்செய்தமை,

கருதத்தக்கது; "அழைத்தது செவியிறகேட்டும் அயனரனுதியாயோர், புழைக்கை வெங்கரிமுன் காப்பப்புகுந்திலராதியாகித், தழைத்தகாரணனே யென்ற தனிப்பெயர்ப் பொருள்யாமல்லோம், இழைதத காரியம் யாமாவோ மென் செய்து மா லின்றென்றார்" என்ற ஸ்ரீ பாகவததையுங் காண்க. திருமாலே பரம்பொரு ளென்ற உண்மையை இங்ஙனங் காரணங்காட்டி வெளியிட்டார். ஒரு விலங்கினால் மற்றொரு விலங்கிற்கு நேர்ந்த துன்பத்தைத் தான் இருந்த இடத்தி லிருந்துகொண்டே தீர்ப்பது ஸர்வஶக்தனான எம்பெருமானுக்கு மிகவும் எளிதேயாயினும், அப்பெருமான் அங்ஙனஞ் செய்யாது தனது பேரருளினால் அரைகுலையத் தலைகுலைய மடுக்கரைக்கே வந்து உதவின மகா குணத்தில் ஈடுபட்டு, 'வாரணங் காக்க வந்தான்' என்றார். (எகூ)

௨0. மூலமு நடுவு மீறு மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த காரணன் கையி லேந்திச்
சூலமுந் திகிரி சங்குங் கரகமுந் துறந்து தொல்லை [ன்.
யாலமு மலரும் வெள்ளிப் [1]பொருப்பும் விட்டயோத்தி வந்தா

(இ - ள்.) மூலமும நடுவும் ஈறும் இல்லது - ஆதி மத்திய அந்தங்களில்லாததான, ஓர் மும்மைதது ஆய காலமும - மூன்று வகைப்பட்ட காலத்தின் எல்லையையும், கணக்கும - (மறறும இடம் குணம் செயல் முதலியவற்றின்) எல்லைகளையும, நீதத - கடந்துநின்ற, காரணன்-(எல்லாப்பொருள்களுக்கும்) காரணபூதனான அந்த முழுமுதற்கடவுள்தானே, சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து கை வில் ஏந்தி - சூலாயுததையும சங்கசக்கரங்களையும் கமண்டலத்தையும் (தன்கைகளிற் கொள்ளாது) விட்டுக கையில் வில்லை யேந்திக் கொண்டு, தொல்லை ஆலமும் அலரும் வெள்ளிப்பொருப்பும விட்டு அயோத்தி வந்தான் - பழமையாகத தனக்கு உரிய இடங்களாகின்ற ஆலிலையையும் தாமரைமலரையும கைலாசகிரியையும் இடமாகக்கொளளாது விட்டு அயோத்தியாபுரியை இடமாககொண்டு அங்குவந்து திருவவதரித்தான்; (எ -று.)

திரிமூர்ததிஸவரூபியாய்ப்படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களை நடததுகின்ற ஜகதகாரண பூதனான ஸர்வேசுவரனே அத்திரிமூர்ததிஸ்வரூபங்களிற கைகொள்ளுகின்ற சூலம்முதலியவற்றை விட்டுக் கையில்வில் லேந்தி அம்மும்மூாததி கட்கு உரிய இடமாகின்ற ஆலிலை முதலியவற்றை விட்டு அயோததியில்வந்து தோன்றின னெனபதாம். சூலம் - அரன் கையிலேந்துவது, திகிரியும், சங்கும் - அரி கைகளிலேந்துவன. கரகம் - ஜலபாத்திரம். குண்டிகை இது, அயன் கையிலேந்துவது. ஆலிலை - திருமால் பிரளயதிற பள்ளிகொள்ளுமிடம். அது அநாதியான ஆதிசேஷனது அமிசமாதலால, அதறகு 'தொல்லை' என்ற அடைமொழி கொடுகக்கப்பட்டது. திருமாலின் நாபிததாமரைமலர் - பிரமன் தோன்றிவாழுமிடம். வெளளிமலையாகிய கைலாசம் - சிவபிரான் வாழு மிடம்.

காலம் நித்தியமாதலால், அதற்கு 'மூலமும் நடுவும் ஈறும் இல்லது' என்ற அடைமொழி கொடுத்தார். 'ஓர் மும்மைத்தாய காலம்' என்றது, இறப்பு நிகழ்வு எதிர்வு எனக காலம் மூன்றுவகைப்படுதலால், அக்காலத்தின் கழிவினுலுண்டாகிற பரிணுமங்களையுடைய ஞகாதவ னென்பது, 'காலம் நீத்தகாரணன்' என்பதன் கருத்து. அநந்தமான [வரம்பில்லாத] ஞானம காட்சி இன்பம் ஆற்றல் குணம செயல் முதலியவற்றையுடையா னென்பது, 'கணக்குநீத்த' என்றதனுற போதரும். ஆதிபகவனை 'காரணம்' என்ற சொல்லினுல் வேதம குறித்தல், இங்குக கருதத்தककது. மும்மையென்பது மூன்று என்னும் பொருளையே புணாத்தியதனுல, இதில் 'மை' - பகுதிப்பொருள விகுதி. பி - ம்:—[1]குன்றுநீத்து. (அ௦)

௮௧. அறந்தலை நிறுத்தி வேத மருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோ
ரிறந்துக நூறித் தக்கோ ரிடர்துடைத் தேக [1]விண்டு
பிறந்தனன் [2]றன்பொற் பாத மேத்துவார் பிறப்ப றுப்பான்.

(இ - ள்.) தன் பொன் பாதம் ஏத்துவா பிறப்பு அறுப்பான் - தனது அழகிய திருவடிகளைத் துதிப்பவாகளுடைய பிறபபைப்போகக யருளபவனுன, விண்டு - அந்த ஸ்ரீமகாவிஷ்ணு,—அறம தலை நிறுத்தி - தருமத்தை எங்கும் நிலைநிற்கசசெயது. வேதம அருள் சுரந்து அறைந்த நீதி திறம உலகம தெரிந்து பூண செம் நெறி செலுத்தி-வேதங்கள (ஜனங்களிடத்திற்) கருணை கூர்ந்துசொல்லிய நீதிவகைகளை உலகத்தா அறிந்து மேற்கொண்டொழுகும்படி (அவாகளைச) செவ்வையான வழியிலே செலுத்தி, தீயோர் இறந்து உக நூறி - கொடியவாகள் இறந்தொழியும்படி அழித்து, தக்கோ இடா துடைத்து - நல்லவர்களுடைய துனபங்களைப போககி, ஏக - (பின்பு தன்னுடைசசோதிக்கு) எழுந்தருளுமாறு, பிறந்தனன் - (அயோததியில) திருவவதரித்தான்; (எ - று.)

உலகமெங்கும தருமத்தை நிலைநிறுத்துதலும், உயிர்கள் நல்வழி தீவழிகளை நன்றாகப்பகுத்துணாந்து நடந்து நற்கதிபெறவேண்டுமென்று இயல்பாக எழுந்த பரமகிருபையால் தன்கட்டளைரூபமான வேதங்களில் வெளியிட்ட முறைமைகளை உலகத்தார் உணாந்து ஒழுகுமாறு அவாகளைச சந்மார்க்கத்திற் செலுத்துதலும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தலுமாகிய அவதாரத்தின் பயன்கள், இங்கு எடுத்துக்காட்டப்பட்டன. தனது திருவடிகளைத் துதிப்பவா மீளவும ஒரு பிறப்பெடுக்கவேண்டாதபடி அவரதுகரும மனைத்தையும் போக்கி அவாகளு முத்தியருள்பவ னென்பார், 'தனபொற பாத மேத்துவார் பிறப்பறுப்பான்' என்றார். இதனுல் எம்பெருமானது பரதவத்தை வெளியிட்டு, அநுகூலமுள்ளவன் உயிர்களைகாத்தருளுதலினுல் இங்ஙனம் மனிதனுப்பிறந்தன னென அவனது சௌலப்பியத்தையுங் குறித்தா. விண்டு - விஷ்ணு என்ற வடசொல்லின்சிதைவு;

எங்கும் வியாபித்துள்ளவன் என்று பொருள். பி - ம்:—[1]ஈண்டுப். [2]பிறவி கோய்க்குமருந்திவன் பிறிதொன்றுண்டோ. (அக)

அஉ. அன்னவற் கடிமை செய்வே னுமமு மனும னென்பே
னன்னுத றன்னைத் தேடி நாற்பெருந் [1]திசையும் போந்த
மன்னரிற் றென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மக [2]னவன்றன் றூதன் வந்தனென் [3]றனியே னென்றான்.

(இ - ள்.) அன்னவற்கு அடிமை செய்வேன் - அத்தன்மையனான சக்கரவர்த்தித் திருமகனுக்கு அடிமைத்தொழில்செய்பவன் யான்; நாமமும் அநுமன் எனபேன் - பெயர் அநுமானென்று சொல்லப்படுவேன்; நல்நுதல் தன்னை தேடி - அழகியநெற்றியையுடையவளான சீதாபிராட்டியைத் தேடிக் கொண்டு, நால் பெருந் திசையும் போந்த - பெரியதிக்குகள் நான்கிற்குஞ் சென்ற, மன்னரில - தலைவர்களுள், தென் பால் வந்த தானைக்கு மன்னன் - தென்திசையில் வந்த சேனைக்குத் தலைவன், வாலிதன் மகன் - வாலியின் குமாரனான அங்கதனுவன். அவன்தன் தூதன் - அவனது தூதனாய், தனியேன் வந்தனென் - நானொருவன் இங்கு வந்தேன், என்றான் - என்று (இராவணனைநோக்கி அநுமான்) கூறினான்; (எ - று.)

தானையின் அளவு, இரண்டுவெள்ளம். "குடதிசைக்கட் சுடேணன் குபேரன்வாழ், வடதிசைக்கட் சதவலி வாசவ, னிடதிசைக்கண் வினதன் விறற்றரு, படையொடுறறுப் படாகெனப் பன்னினான்" என்று கிட்கிந்தா காண்டத்து நாடவிட்டபடலத்தில் கூறியதுகொண்டு, பிறதிசைகளிற் சீதையைத் தேடிச்சென்ற வானரத்தலைவர்களின் பெயரையுணர்க. பி ம்:—[1]திசையிற். [2]அவனதேவல். [3]தமியேன். (அஉ)

அங.—வாலியின்யோகக்ஷேமங்களை இராவணன் விசாரித்தல்.

என்றலு மிலங்கை வேந்த னெயிற்றின மெழிலி நாபபண்
மின்றிரிந் தென்ன நக்கு வாலிசேய் விடுத்த தூத
வன்றிற லாய வாலி வலியன்கொ லரசின் வாழ்க்கை
நன்றுகொ லென்ன லோடு நாயகன் றூத னக்கான்.

(இ - ள்.) என்றலும - என்று (அநுமான்) சொன்னவுடனே,—இலங்கைவேந்தன் - இராவணன்,—எயிறு இனம-(தனது) பல்வரிசைகள், எழிலி நாபபண மின் திரிந்து என்ன - மேகத்தின் நடுவிலே மின்னல் உலாவினாற் போன்றனவாகுமபடி, நகு-சிரித்து, வாலி சேயவிடுத்ததூத - வாலியின் மகனால் அனுப்பப்பட்ட தூதனே!—வல் திறல் ஆயவாலி வலியன் கொல்-மிக்க பலமுடையவனான வாலி சௌகரியமா யிருக்கின்றனனா? அரசின் வாழ்க்கை நன்று கொல் - (அவனது) அரசாட்சி நன்றாக நடந்துவருகின்றதா?' என்னலோடும - என்று வினவிய வளவிலே, நாயகன் தூதன் நக்கான் - அனைத்துக்குந் தலைவனான ஸ்ரீராமபிரானது தூதனாகிய அநுமான் சிரித்தான்; (எ-று.)

யாரோ ஒருபெரியபகைவன் அல்லது ஒருபெரும்பகைவனது ஏவலாளன் என்று கருதப்பட்ட இவ்வானரன் தனது நண்பனான வாலியின் மகனது

தூத னெனத் தெரிந்தமை பற்றியும், தனது நண்பனுடைய மகனது தூதனாய் வந்த இவனை இவ்வளவு தீங்கு செய்தானென்பது பற்றியும், இராவணன் சிரித்தான். 'வன்திறலாய வாலி' என்று இவனால் நன்குமதித்து உயர்த்திக் கூறப்பட்டவன் தனது தலைவனான இராமபிரானால் அன்றைக்கே எளிதில் அழிக்கப்பட்டதைக் கருதி, அநுமான் நகைத்தான். கருநிறத்தவனான இராவணன் தனதுபத்துமுகங்களிலும் சிரிக்கிறபோது அவனது வாயகளினின்று வெளிவிளங்கிய பற்களினொளிக்கு, 'எழிலிநாப்பண மின்திரிந்து' என உவமை கூறினார். 'வன்திறலாய' என்றது, வாலுக்கும் அடைமொழியாகத் தகும். (அஉ)

அசு.—வாலியிறந்த செய்தியை அநுமான் கூறுதல்.

அஞ்சலை யரக்க [1]பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் [2]விளிந்த தன்றே
யஞ்சன மேனி யான்ற னடுகணை யொன்றான் [3]மாழ்கித்
துஞ்சின னெங்கள் வேந்தன் சூரியன் றோன்ற லென்றான்.

(இ - ள்.) அரக்க - ராக்ஷஸனே! அஞ்சலை - பயப்படாதே: வெம்சினம் வாலி - கொடியகோபத்தையுடைய வாலியானவன், அன்றே - அப்பொழுதே [சிலமாதங்களுக்குமுன்னமே யென்றபடி], பார் விட்டு அந்தரம் அடைந்தான்- இந்நிலவுலகத்தைவிட்டு வானுலகம் போய்ச்சேர்ந்தான்; மீளான் - இனித் திரும்பிவரமாட்டான; அன்றே - அவனிறந்துபோன அப்பொழுதே, வாலும் போய் விளிந்தது - (அவனது) வாலும் (அவனோடுகூடவே) அழிந்து போயிற்று; அஞ்சனம் மேனியான் தன் அடு கணை ஒன்றால் மாழ்கி துஞ்சினன் - மைபோன்ற கரிய நிறமுடையவனான இராமபிரானது பகையழிக்க வல்ல அம்பொன்றினாலே வருந்தியிறந்தனன் (அவ்வாலி); எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல் - (இப்பொழுது) எங்கட்கு அரசன் சூரிய குமாரனான சுக்கிரீவன்; என்றான் என்று (இராவணனைநோக்கிக்) கூறினன், (அநுமான்).

"கன்னெடுந்தோளாய் கலங்கினென் வாலாறகட்டுண்டு பட்டது கிடக்க, இன்னமும்பொரவோ இனிச்செரு அமையும் இன்று நின்தோழன் நான" என்று நீ அஞ்சிப் பணிவு கூறும்படி உன்னைவென்றவனான வாலியை ஓர் அம்புகொண்டு எளிதிற்கொன்றிட்டவன் இராமபிரான் என, அப்பெருமானது பேராற்றலை இராவணனுக்கு எடுத்துக்கூறினன் அநுமான். 'அங்ஙனம் உன்னைக்கட்டிவருத்திய மகாபலசாலியான வாலியைக்குறித்தும் அவனது மிக்கவலிமையுள்ள வாலைக்குறித்தும் இனி நீ சிறிதும்அஞ்சவேண்டா, அவனும் தொலைந்தான், அவனதுவாலும் போயிற்று' என்றனன் அநுமான். வாலியிடத்தும் அவன் வாலினிடத்தும் இராவணனுக்கு உள்ள மிக்க அச்சத்தை எடுத்துக்காட்டி அவனைப்பரிகசிக்கும் கருத்தினாலேயே 'அஞ்சலை' என்றும், 'பார்விட்டந்தரமடைந்தானன்றே வெஞ்சினவாலி' என்றதனபின் 'மீளான்' என்றும், அதன்பின்னும் 'வாலும் போய் விளிந்ததன்றே' என்றும் கூறினான். வாலியின் பேராற்றலைக் கண்கூடாக அறிந்த இரா

வணன் 'பாவிட்டந்தரமடைந்தான்' என்று அநுமான் கூறியதைக் கேட்ட வளவிலே தேவலோகத்துக்குப் போயிருப்பனென்று பொருள் கொண்டு இனி அவன் இங்குவரவுங்கூடு மென்று கருதுவனென்னுங் கருத்தினால், அநுமான் 'மீளான்' என்று கூறி ஐயமகற்றின னென்று கொள்ளலாம். 'அரக்க' என விளித்தது, அலக்ஷ்யத்தைக் காட்டும். 'அன்றே' என்றது - எங்கள் அரசனான சுகரீவனும் இராமபிரானும் நண்புகொண்ட அந்நாளி லேயே யென்றபடி.

திக்குவிசயஞ்செய்யப்புறப்பட்டு யாவரையும்வென்ற இராவணன், ஒரு காலத்தில் வாலியோடு போரைசெய்யக்கருதிக் கிஷ்கிந்தாபட்டணஞ் சேர்ந்து, அப்பொழுது அவன் அங்கு இல்லை யென்றும், வழக்கப்படி நாற்கடலிலும் நீராடி நித்தியகருமமுடிக்கச சென்றுள்ளானென்றும் அறிந்து, தென்கடற் கரைக்குச்சென்று, அங்கு மந்திரஜபஞ்செய்துகொண்டிருக்கிற வாலியைப் பார்த்து, அவனைத் தந்திரமாக எளிதிற்பிடித்துக்கொள்ளுதற்பொருட்டு அடி ஓசைப்படாமல் மெதுவாய்நடந்து அவன் பின்னே சேர, அதனைக் கீழ்க் கணணாற்கண்டவாலி, முன் ஜாகிரதைப்பட்டு கிட்டவந்து தன்னைக்கட் டதுதொடங்கியவுடனே இராவணனைக் கக்கத்தில் இடுக்கி வாலினாற் சுற் றிக்கொண்டபடியே ஆகாயமாக்கமாய்ச்சென்று மற்றைக் கடல்களிலுஞ் சோதது நியமங்களை நிறைவேற்றிக்கொண்டு தனது நகரமடைந்து இராவ ணனைக் கீழேஉதற, அவன் தன்வரலாறுகூறித தன்குற்றம் பொறுக்கவும் தன்னை நட்பாகக்கொள்ளவும வேண்டி அவனது நட்பைப் பெற்றன னென்ற வரலாற்றை உத்தரகாண்டத்தில் வாலிவரலாற்கட்டுண்ட படலத திற் பரக்கக்காணலாம். பி - ம்:—[1]மாண்டதவ்வுறவியாண்டுமாண்ட. [2]வீழ்ந் ததன்றே. [3]வாலி. (அச)

அரு—மற்றும் இராவணன் சிலவினவுதல்.

என்[1]னுடை யீட்டி னாலவ வாலியை யெறுழ்வா யம்பா
லின்னுயி ருண்டதிப்போ தியாண்டையா னிராம னென்பா
னன்னவன் றேவி தன்னை யங்கத னுட லுற்ற [வான்.
தன்மையை யுரைசெய்கென்னச் சமீரணன் றனயன் [2]சொல்

(இ - ள்.) 'அ வாலியை - அந்தவாலியை, எறுழ் வாய் அம்பால் - வலிய நுனியையுடைய அமபினால், இன் உயிர் உண்டது - (இராமன்) இனிய உயிரைக் கவர்ந்து [கொன்றது], என் உடை ஈட்டினால் - எதனு டைய நிமித்தததால்? இராமன் என்பான் - அந்த இராமனெனப்படுபவன், இப்போது யாண்டையான் - இப்பொழுது எவ்விடத்தி லிருக்கின்றான்? அன்னவன் தேவிதன்னை அங்கதன் நாடல்உற்ற தன்மையை - அவ்விராம னது மனைவியான சீதையை (அவனாற்கொல்லப்பட்ட வாலியின்மகனான) அங்கதன் தேடத்தொடங்கியவகையை, உரை செய்க - சொல்வாயாக,' என்ன - என்று (இராவணன்) வினவ,—சமீரணன் தனயன் சொலவான் - வாயுகுமாரனான அநுமான் சொல்பவனானான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டுகவிகளிற் காணக.

எறுழ் - வலிமையுணாத்தும் உரிசசொல். எறுழ்வாய்அம்பு - வலிமை வாய்ந்த அம்பு எனினுமாம். ஸமீரணன என்ற வடமொழிப்பெயா - நன்ருக சஞ்சரிக்கும் இயல்புடையவனென்று காரணப்பொருள் பெறும். பி - ம்:—[1]இடையீட்டினுல் [2]சொன்னுன். (அரு)

அசு.—இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர். அநுமான்சொல்லும் உத்தரம்.

தேவியை நாடி வந்த செங்கணுற் கெங்கள் கோமா
னுவியொன் ருக நட்டா னருந்துயா துடைத்தி யென்ன
வோவியர்க் கெழுத வொண்ணு வுருவத்த னுருமை யோடுங்
கோவியற் செல்வ முன்னே கொடுத்துவா லியையுங் கொன்ருன்.

(இ - ள்.) தேவியை நாடி வந்த - (தன்) மனைவியான சீதையைத் தேடிக்கொண்டுவந்த, செம் கணுற்கு - சிவந்த கணகளையுடையவனுன இராம பிரானுடனே, எங்கள் கோமான்-எங்கள்தலைவனுன சுக்ரீவன், ஆவி ஒன்று ஆக நட்டான்-(இருவர்க்கும்) உயிரொன்றேயென்னுமபடி சிநேகங்கொண்டு, அருந துயர் துடைத்தி என்ன - (எனக்கு வாலியினுல்நேர்ந்துள்ள) போகக தற்குஅரிய துன்பததைப் போகுவாய்' என்று வேண்ட,—ஓவியாக்கு எழுத வொணுது உருவத்தன் - சிதிரமெழுதவல்லாக்கும் எழுதமுடியாத வடிவழகையுடையவனுன ஸ்ரீராமன், உருமையோடும் கோ இயல் செல்வம முன்னே கொடுத்து - (சுக்கிரீவன்மனைவியான) ருமையென்பவளையும்(வாலி யினது) அரசியற் செல்வததையும் முன்னே (சுக்கிரீவனுக்கு வாக்தாநமாகக்) கொடுத்து, வாலியையும் கொன்ருன் - (அதற்குஎற்ப உடனே) வாலியை யுங கொன்றிட்டான்; (எ - று.)

ருக்ஷரஜஸ் என்னும் வாநரராஜன் இறந்தபின் அவனது மூத்தமகனுன வாலி பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்றுச சுககிரீவனை இளவரசனுககொண்டு கிஷ்கிந்தையை ஆளுங காலததில், மாயாவியென்னும் அசுரவீரன் வந்து வலியப் போர்க்கு அழைகக, வாலி தம்பியுடன் சென்று அவனை எதிர்த் துப் பொருகையில், அவன் அஞ்சியோடி ஒரு பிலத்தினுளளே செல்ல, வாலி சுககிரீவனைப் பிலவாயிலிற காவல்வைத்துவிட்டு உள்ளேசென்று அவனைதொடாந்து போசெயது கொணடிருக்கையில், பலமாதங்கள் கழிந் தபின், இரததவெள்ளம் வெளிபபட்டது கணடு, சுககிரீவன் அவ்வசுரனுல் வாலி கொல்லபபட்டனனென்று மாருககருதி, அவ்வரசன வெளிவராத படி அப்பிலவாயிலைப பெருங்கலலால் மூடிவிட்டு, வருததததோடு நகரஞ் சோந்து, அமைசசாகள் வேணடுகோளினபடி தான் அரசுபெற்று வாழ, அங்கு அரசனைக கொன்ற வாலி, மீணடுவநது, பிலவழியையடைதிருநத கல்லைக் காலாலுதைததுத தளளிவிட்டுப பட்டணஞ்சோநது செய்தி யறிந்து, அரசாட்சி விருப்பத்தாலும் தன்மனைவியான தாரையைக் கவாநது கொள்ளவேணடு மெனனுங கருத்தினுலும் சுக்கிரீவன் இவ் வாறுசெய்தா னென்று மாருக எணணி அவனமேல் மிகவுங்கோபங் கொணடு, அவன் வந்து தன்காலில் விழுந்து எவ்வளவு வேணடவுங

கேளாமல் இராச்சியத்தையும் அவன் மனைவியான ருமையையும் கவர்ந்து கொண்டு அவனை யடித்துத்துரத்தித் தொடர்ந்துசென்று பலவிடங்களிலும் பொருது தாக்க, அவன்தோற்று ஓடிச்சென்று ரிசியமூகபருவதத்தில் மதங்க முனிவர் ஆச்சிரமங்கொண்டு வீற்றிருக்கிற வனத்தைச் சேர்ந்தான்; மதங்க முனிவரதுசாபத்தால் வாலி வரத்தகாத அவ்வாச்சிரமத்திலே அநுமான் நீலன் முதலிய சிலருடனே சுக்கிரீவன் பதுங்கிவிகிகிறபோது ஒருநாள் சீதையைத் தேடிக்கொண்டு இலக்குமணனுடனவந்த இராமபிரானோடு அநுமான் மூலமாக சுக்கிரீவன் சிநேகஞ் செய்துகொள்ள, அச்சுக்கிரீவன் வேண்டுகோளின் படி ஸ்ரீராமன் வாலியைக்கொன்று ருமையையும் அரசாட்சியையும் சுக்கிரீவனுக்கு அளிப்பதாக முதலில் வாக்குத்தத்தஞ்செய்து பின்பு அங்ஙனமே வாலியைத் தந்திரமாகக்கொன்று சுக்கிரீவனுக்குக் கிஷ்கிந்தைநகரத்தில் முடிசூட்டிவைத்தனன் என்ற விவரம், கிஷ்கிந்தாகாண்டத்திற் பரக்கக்கூறப்பட்டது. வாலி முன்னமே இராவணனுடன் அக்கினிசாக்ஷியாக நட்புக்கொண்டிருந்ததுபற்றி, அவனைத் தான் உதவியாகக்கொண்டால் இராவணனிதுக்டர்களைத் தொலைக்க வகையில்லாமையால், இராமன் வாலியை நண்பாகக்கொள்ளாமல், சரணமடைந்த சுக்கிரீவனது வேண்டுகோளின்படி அவ்வாலியை வதைத்திட்டனனென்க. பகைவன் எவ்வளவுவலியனாயிருப்பினும் அவனைத் தவறாமல் வெல்லுதல்கூடுமென்ற துணிவினால், முன்னமே கொடுத்தனன்; இங்ஙனமே, பின்பும், இராவணனைத் தவறாது கொல்லலாகுமென்னுந் துணிவினால் முன்னமே விபீஷணனுக்கு இலங்கையரசு முடி சூட்டுதல் காண்க.

செம்கணான் - உத்தமவிலக்கணமாகிய செவ்வரிபரந்த கண்களையுடையவன். 'செங்கணாறகு' என்றது - உருபுமயங்கம். ஓவியா - சித்திரகாரா. 'ஓவியர்க்கு எழுதவொண்ணா உருவத்தன்' என்றது, இராமபிரானது திவ்விய சௌந்தரியாதிசயத்தைக் காட்டும். ருமா என்ற வடசொல், 'உருமை' என விகாரப்பட்டது. கோவியல - இராஜாங்கம். (அசு)

அஎ. ஆயவன் றன்னோ டாண்டோ ரிங்களோர் நான்கும் வைகி
மேயவெஞ் [1]சேனை சூழ வீற்றினி திருந்த வீரன்
போயினி நாடு மென்னப் போந்தனம் புகுந்த தீதென
றேயவன் றூதன் சொன்னா னிராவணனிதனைச்சொன்னான்.

(இ - ள்.) ஆயவனதன்னோடு - அந்தச்சுக்கிரீவனுடனே, ஆண்டு - அவ்விடத்திலே,—ஓர் திங்கள் ஓர்நான்கும் வைகி நான்குமாதகாலமளவுந்தங்கி, மேய வெம் சேனை சூழ இனிது வீற்றிருந்த - வந்துகூடிய பயங்கரமான வானரசேனைகள் தனது சுற்றிலும் நிற்க (அவற்றின் நடுவிலே) இனிமையாக வீற்றிருந்த, வீரன் - வீரனான ஸ்ரீராமன், இனி போய நாடும் என்ன - 'இனி (நீங்கள்) சென்று (சீதையைத்) தேடுங்கள்' என்று கட்டளையிட, போந்தனம்- (நாங்கள்) தேடிவந்தோம்; புகுந்தது ஈது - நடந்தசெயதி இது, என்று—, ஏயவன் தூதன் சொன்னான் - (தனனை) ஏவியனுப்பிய தலைவனான இராம

பிரானது தூதனாகிய அநுமான் கூறினான்; (அதுகேட்டவளவில்), இராவணன் இதனை சொன்னான் - இராவணன் இந்தவார்த்தையைச சொல்லலானான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

சிநேகிதத சுகரீவனது காரியமாகிய வாலிவதத்தை இராமன் செய்த பின்னர் மழைகாலம் நேர்ந்ததனால், அகாலம் கழியுமளவும் இராமபிரான் கிஷ்கிந்தாபுரியைசசாராத ரிசியமூககிரியில தங்கியிருந்து; அதன் பின்னர், சுக்கிரீவனால்வருவிககப்பட்ட வாநரசேனைகளைககண்டு அவர்களில் அங்கதன் முதலிய தலைவர்களைச் சேனையுடன் சென்று சீதையைத் தேடிவருமாறு அனுப்பினனென்க. 'ஓர்திங்கள் ஓர்நான்கும் வைகி' என்ற தொடரிலுள்ள 'ஓர்' என்ற சொல் இரண்டனுள், முந்தியதை அசையாகக்கொள்க. 'ஏயவன் தூதன்' என்றது, தன்னை ஏவிய தலைவனது காரியமே கருததாயுள்ள தூதனென்றபடி. 'ஏயவன்' என்றது அங்கதனை யென்பா ஒருசாரார். பி ம்—[1]சேனையோடும்வீற்றிருந்தானைவீரன். (அஎ)

அஅ.—இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்: இராவணன் பரிகசித்துச் சில கூறுதல்.

உங்குலத் தலைவன் றன்னோ டொப்பிலா வுயர்ச்சியோனை
வெங்கொலை யம்பிற் கொன்றாற் காட்டொழின் மேற்கொண் டீரே
லெங்குலப் புறுநுஞ் சீர்த்தி நுமமொடு மியைந்த தென்றான்
மங்குலிற பொலிந்த ஞால மாதுமை யுடைத்து மாதோ.

(இ - ள்.) உம குலம தலைவன் தன்னோடு ஒப்பு இலா உயர்சசியோனை- உங்கள்குலததுக்குததலைவனாக இருததலோடு ஒப்பற்றமேன்மையையுடையவனுமான வாலியை, வெம கொலை அம்பின் கொன்றாறகு - கொடியகொலையைச செயகின்ற அம்பினாற் கொன்றிட்டவனான இராமனுக்கு, ஆள் தொழில் மேற்கொணடீர்எல் - அடிமைசெய்யுந்தொழிலை (நீங்கள்) ஏறறுககொணடீரக ளென்றால், நும் சீர்த்தி எங்கு உலப்பு உறும - உங்கள்கீர்த்தி எப்படி அழிவு பெறும்? நும்மொடும் இயைந்தது என்றால் - (இங்ஙனம் குலத்தலைவனாகிய பெரியோனைக் சொன்றவனுககு அடிமைத்தொழில்செய்யத தலைப்பட்டபின்னும் உங்கள்புகழ் அழிவடையாமல்) உங்களோடு கூடியிருந்த தென்றால், மங்குலின் பொலிந்த ஞாலம் மாதுமை உடைததது-மேகத்தினால் வளமபெறறு விளங்குகின்ற இந்நிலவுலகமானது பெண்களின் தன்மையான பேதைமையை யுடையது; (எ - று.) மாது ஓ - ஈறறசை.

எங்கு உலப்பு உறும் - எவ்வாறு அழிவடையும்? வினாவகையால், அழிவுறாது என்று பொருளபடும்; என்றது, தவறாது அழிந்திடுமென்ற கருத்தையே பரிகாசததாற் கூறியதாம். கீர்த்தியாவது உலகம்உயர்த்துக்கூற நிலைபெறுஞ்சொல்லே யாதலால், இனிமேலும் உங்கள்கீர்த்தி அழியாதிருப்பின் அது உலகத்தாரது பேதைமையின் காரியமன்றோ?

என்பது, 'நும்மொடு பிறந்ததென்றால் ஞாலம் மாதுமையுடைத்து' என்ற தன் கருத்து. மாதுமை மாதின் தன்மை. "நுண்ணறி வுடையோர் நூலோடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைதே" என்பவாதலால், பேதைமை, 'மாதுமை' எனப்பட்டது. உலகுலத்தலைவன் தன்னோடு - சுக்கிரீவனோடு, ஆட்டொழில் மேற்கொண்டீரேல் என்று உரைப்பாருமுளர். (அஅ)

அகூ. தம்முனைக் கொல்வித் தன்னாற் கொன்றவற் கன்பு சான்ற
வும்மினத் தலைவ னேவ யா[1]தெனக் குணர்த்த லுற்ற
தெம்முனைத் தூது வந்தா யிகல்புரி தன்மை யென்னை
[2]நும்மினைக் கொல்லா நெஞ்ச மஞ்சலை நுவறி யென்றான்.

(இ - ள்.) தமமுனை கொல்வித்து - தனது தமையனை (இராமனைக் கொண்டு) கொலவித்து, அன்னான் கொன்றவாகக அன்பு சான்ற - அந்தத் தமையனைக கொன்றவனான இராமனபகல் அன்புமிகுந்த, உம் இனம தலைவன் - உங்கள் கூட்டததுககு அரசனான சுக்கிரீவன், ஏவ-அனுப்ப, எனக்கு உணர்த்தல் உற்றது - எனகக (நீ) சொல்லவநதது, யாது-என்ன? எம்முனை தூது வந்தாய்-எங்கள் முன்னிலையில் தூதுவந்தவனான நீ, இகல் புரி தன்மை-போர்செய்தகாரணம், என்னை - யாது? நுமமினை கொல்லாம்-(தூதனாய்வந்த) உன்னைக் கொல்லமாட்டோம்: நெஞ்சம் அஞ்சலை-மனதில அச்சங்கொள்ளாமல், நுவறி-சொல்வாய், என்றான்-(என்று இராவணன் அநுமானைநோக்கிச்) சொன்னான்; (எ - று.)

'நும்மினைக்கொல்லாம் நெஞ்சமஞ்சலை நுவறி' - ஒருமைப்பன்மை மயக்கம். இனி, முன்னிரண்டடிகளு-தமையனைக கொல்வித்து அவனைக்கொன்றவன பககல் அன்புமிகக [அயோகியனாகிய] உங்கள்கூட்டததரசன் உன்னை (என்னிடம்) அனுப்புமாறு எனக்கு என்னநீதி அறிவிக்கவேண்டுவ தாயிற்று? என்று உரைப்பா ஒருசாரார். பி ம்:—[1]எமக்குரைக்கல். [2]நொம்மெனக்கொல்லாம, நுமமுனைக்கொல்லாம். (அகூ)

வேறு.

கூ0.—அநுமான் ஆலோசித்துச் சில கூறத்தொடங்குதல்.

துணர்த்த தாரவன் சொல்லிய சொற்களைப்
புணர்த்து நோக்கிப்பொ துநின்ற நீதியை
யுணர்த்தி னாலது றுமென வுன்னருங்
குணததி னானுமி னையன கூறினான்.

(இ - ள்.) உன் அருங குணத்தினானும - (இததன்மையனவென்று) நினைததற்கும அருமையான நற்குணங்களையுடையவனாகிய அநுமானும்,—துணர்ததத தாரவன சொலலிய சொற்களை, புணர்த்து நோககி-பூங்கொததுக்களினாலாகிய மாலையை யணிந்துள்ளவனான இராவணன் (இவ்வாறு) சொன்ன சொற்களை (யெல்லாம) ஒன்றுசோததுப்பாரத்து, பொது நின்ற நீதியை உணாததினால் அது உறும் என - (யாவாக்கும) பொதுவாகநின்ற நீதியை (இப்பொழுது நாம) எடுத்துசசொன்னால அது தக்கதாம் என்றுகருதி,

இனையன கூறினன் - இந்தவார்த்தைகளைச் சொல்லலானான்; (எ - று.)—அவற்றை. அடுத்த பதினாறுகவிகளிற காணக. (கூ0)

கூக.—இதுமுதற் பதினாறுகவிகள் - அநுமான்வார்த்தை.

தூது வந்தது சூரியன் கானமுளை
யேது வொன்றிய நீதி யியைந்தன
சாது வெனறுணா கிற்றியேற் றக்கன
கோதி றந்தன நின்வயிற் கூறுவாம்.

(இ - ள்.) தூதுவந்தது - (நான் உனனிடம) தூதனாய்வந்தது, சூரியன் கான்முளை ஏது - சூரியனதுகுமாரனான சுககிரீவன் (சொன்ன சொற்களை உன்னிடனு சொல்வது) காரணமாகவேயாம; (ஆகவே),—ஒன்றிய - (இச்சமயததிறகு)ஏற்றவையும, நீதி இயைந்தன - நீதிபொருந்தியவையும, தக்கன-தகுதியானவையும, கோது இறந்தன-குறறமறறவையுமாகிய அசசொற்களை, சாது என்று உணாகிற்றி ஏல-(நீ செவிகொடுத்துகேட்டு) நல்லவையென்று உணர்வாயானால, நின் வயின் கூறுவாம - (அவற்றை) உன்னிடததிற் சொலவோம்; (எ - று.)—அடுததகவி முதலாக அவை கூறபபடுகின்றன. ஸாது - வடசொல். 'கூறுவாம' என்ற தன்மைப்பன்மை, உயாவை விளககும.

கூஉ. வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்னறஞ்
சிறிது நோககலை தீமை திருததினு
யிறுதி யுறறுள தாயினு மின்னுமோ
ருறுதி கேட்டி யுயிர்நெடி தோம்புவாய்.

பதினைந்துகவிகள் - ஒருதொடா.

(இ - ள்.) வாழ்ககையை - (உனது) செல்வவாழ்வை, வறிது வீழ்ததனை - வீணே போகககொண்டாய்; மன் அறம சிறிதும் நோக்கலை - ராஜதருமத்தைச சிறிதும நோককினாயில்லை; தீமை திருததினாய் - கொடியகாரியததை [பிறன் மனைவியை விரும்பிக கவர்ந்ததைச] செய்துவிட்டாய்; (அதனால்), இறுதி உற்று உளது ஆயினும்-(உனக்கு) அழிவு நெருககியுள்ள தானாலும, இன்னும - இனிமேலாயினும், ஓர் உறுதி கேட்டி - (நான்சொல்லும) ஓர உறுதிசசொல்லைக கேட்டு அதன்படி நடக்கக்கடவாய்-(அகமனம நடப்பாயானால), உயிா நெடிது ஓம்புவாய் - (உனது) உயிரை நெடுங்காலம பாதுகாததுகொளவாய; (எ - று.)—உறுதி - நன்மை; அதனை விளக்குஞ்சொல்லுக்குக் காரியவாகுபெயா. (கூஉ)

கூங. [1]போயிற் றீர்நும் புலன்வென்று போற்றிய
வாயிற் றீர்வரி தாகிய மாதவங்
காயிற றீர்வருங் கேடருங [2]கறபினு
டீயிற் றாயவ ளைத்துயர் செய்ததால்.

(இ - ள்.) ஆயின் - ஆராயநதுகூறுமிடதது,—காயின் தீவு அருங கேடு அருங கற்பினாள் - (பிறா) மிகவருத்தினாலும நீஙகுதலில்லாததும

குற்றமற்றதுமான பதிவிரதாதருமத்தை யுடையவளும், தீயின் தூயவளை - நெருப்பினும்பரிசுத்தியுடையவளுமான சீதாபிராட்டியை, துயா செய்ததால்- (நீ) துன்பப்படுத்திய பாவததால்,—நும புலன் வென்று போற்றிய தீர்வு அரிது ஆகிய மா தவம் போய் இற்றீர்-(நீகளை) உங்களுடைய ஐம்புலவாசைகளைசசயிததுசசெயததும் நீங்குதற்கு அரியதுமான பெரியதவததின் பயன் உங்களைவிட்டு நீங்கியொழியப் பெற்றீர்கள்; (எ - று.)

போற்றிய, ஆகிய என்ற இரண்டும் - தவததுக்கும், தீர்வரு, கேடரு என்ற இரணடும்-கறபுக்கும அடைமொழி. பி - ம்·—[1]போயிற்றீநின்பெருக. [2]கற்பினுறறீயிறறாயவளை. (௯௩)

௯௪. இன்று வீநதது நாளைச சிறிதிறை
நின்று வீந்த தலானிறை நிற்குமோ
வொன்று வீந்தது நல்லுண ரும்பரை
வென்று [1]வீங்கிய வீக்க மிகுத்ததால்.

(இ - ள்.) இறை - (உங்கள்) பெருமை, இனறு வீநதது - இன்றைத் தினமே (பெருமபான்மையும) அழிந்துவிட்டது; சிறிது - மறறைசசிறு பான்மையாயுளளதும, நின்று நாளை வீநதது அலால் - (இன்றைககு) நின்று நாளைக்கு அழிநததாகுமே யல்லாமல, நிறை நிறகுமோ-அழிவின்றி நிலைதது நிறகுமோ? [நிலலாது என்றபடி]; நல் உணா உமபரை வென்று வீங்கிய வீக்கம மிகுததததால் - நல்ல அறிவையுடைய தேவாகளைச சயிதது அதனு லெழுந்த பூரிபபு [செருககு] (உங்களிடததில்) வரமபுகடந்ததனுல், ஒன்று வீநததது-ஒப்பற்றதாகிய பெருமை (உங்களைவிட்டு) நீங்கிபபோயிறறு; (எ-று.)

நறகுணநறசெயல்கட்குக காரணமாகிற நல்லறி வுடையரா யொழுகுகிற தேவர்களை நீங்கள் அக்கிரமமாகவெனறு அதனுலாகிய பெருமதம உங்களிடததது விஞசியதனுல உங்கள்பெருமை அழிநதுவிட்டதென்பதாம். இராம தூதனுகிய எனதுவருகையினுலேயே அப்பெருந தகைமை பெரும்பாலுந் தொலைநததென்பா 'இனறுவீந்தது' என்றும, இன்றைககுத்தொலைந்து போக இனனும ஏதேனும ஒருபகுதி உளதாயின அதுவும நாளைகு இராமனது வரவினுல் அறத்தொலையு மென்பா 'நாளைச்சிறிதுநின்று வீந்ததலால் நிறைநிற்குமோ' என்றுங கூறினுர. இரணடாவதுவாக்கியததில 'சிறிது' என வருவதனுல், முதல வாகக்கியததில் 'பெரும்பான்மையும்' எனபது வருவிககப பட்டது. 'வீககம'என்ற சொல்லின் ஆற்றலால், வரமபுகடந்துபெருகி வெறுக்கததककதாய் வருததததுககு இடமாகிய பெருகக மென்றவாறும். 'பி - ம்:— [1]வீககிய. (௯௪)

௯௫ தீமை நன்மையைத் தீர்ததலொல் லாதெனும்
வாய்மை நீக்கினை மாதவத் தால்வநத
தூய்மை தூயவ டன்மையிற் றோன்றிய
நோயமை யாற்றுடைக் கின்றனை நோக்கலாய்,

(இ - ள்.) 'தீமை நன்மையை தீர்த்தல் ஒல்லாது பாவமானது புண்ணியத்தை வெல்லமாட்டாது,' எனும் - எனகிற, வாயமை - உண்மையான மூதாதோர்மொழியை, கேக்கினை - மனதுகொள்ளாது விட்டாய்; நோக்கலாய் - ஒன்றும் ஆலோசியாதவனுய,—மா தவத்தால வந்த தூயமை - பெரியதவத்தைச் செய்ததனுல் (உனகு) வந்த பரிசுத்தியை, தூயவள் தன்மையின் தோன்றிய நோய்மையால் துடைககின்றனை - பரிசுததியுடையவளான சீதாபிராட்டியின் விஷயமாக உண்டான ஆசைநோயினுற் போக்கிககொள்ளுகினருய; (எ - று.)

தீமை நன்மையைத தீரததலொல்லாது - 'அறமேவெல்லும் பாவம் தோற்கும்' எனபது தூயவள்தன்மையின் தோனறிய நோய்மையால் - சீதாபிராட்டியின் விஷயமாகச்செய்கின்ற வருத்தசசெயல்களால் எனினுமாம். ()

கூசு. திறத்தி [1]றமபிய காமச் செருக்கினுன்
மறந்து ததத மதியின் மயங்கினு
ரிறநதி றந்திழிந் தேறுவ தேயலா
லறந்தி றம்பின ராருள ராயினுர்.

(இ - ள்.) திறம் திறம்பிய - முறைமைதவறிய [நியாயவிரோதமான], காமம் செருக்கினுல - சிறறின்பவாசையின மோகததால், மறந்து - (சன்மாக்கததை) மறநதுவிட்டு, ததம மதியின் மயகினுர - தகுகளதங்களுடைய அறிவிலே மயக்கமுகொண்டவாகள,—(அக்கொடுவினைப்பயனுல்), இறந்து இறந்து இழிந்து ஏறுவதே அலால-செததுசசெததுக கீழ்மையுறறு அததாழ்விலமேம்படுவதேயல்லாமல, அறம திறமபினா ஆ உளா ஆயினுர-(அகுகுனக்) தருமநதவறி நடநதவாகளுள அழியாவாழவுடைய ரானவா எவர்தாம? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

செல்வவாழ்க்கையோடு உயிரவாழ்வும் ஒழியப் புகழ்கெட்டுப் பழிசிறந்த தீவினைபபயனுற கொடுநரகும இழிபிறப்பும உறறுச சிறுமைப்பட்டு அத்தாழ்வு மேனமேல் மிகப்பெறுவதேயலலாமல் என்பது, மூன்றுமடியின் கருத்து, கொடியமரணததையடைநது தீவினையால் நெடுநாள் நரகவேதனையுற்று அதினின்றும் மீளுமபோதும இழிந்தபிறப்பையே யடைவரென்க. உளராதல்-செல்வவாழ்வும உயிரவாழ்வும புகழுடமபுடை அழிவின்றி நிறகப்பெறுதல். பி - ம்:—[1]திருமபிய. (கூசு)

கூஎ. நாமத் தாழ்கடன் ஞாலத் தவிந்தவ
[1]ரீமத் தான்மறைந் தாரிள மாதாபாற்
காமத் தாலிறந் தார்களி [1]வண்டுறை
தாமத் தாரின ரெண்ணினுஞ் சாலவரோ.

(இ - ள்.) நாமதது ஆழ் கடல் ஞாலதது - அசசந்தருகிற ஆழ்ந்த கடல்சூழ்நத இந்நிலவுலகததிலே, இளமாதாபால் காமததால் இறந்தார் - இளமைப்பருவமுடைய மகளிரிடசது மோகத்தால் வரமபுகடந்தொழுகி, அவிநதவா - மரணமடைநதவாளாய், ஈமததால் மறைந்

தார்-சுடுகாட்டின் விறகடுக்கினால் உடலெறிக்கப்பட்டவர்களான, களிவண்டு உறை தாமம தாரினர் - (தேனைப்பருகுதலாற்) களிப்புகொண்ட வண்டுகள் (நீங்காது) மொய்க்கப்பெற்ற ஒளியுள்ள மலர்மாலையை யணிந்த ஆடவர்கள், எண்ணினும் சால்வரோ - கணக்கிடதொடங்கினால் ஏதாவதொரு பெருந் தொகையிலேனும் அடங்குவார்களோ? [அடங்கார் என்றபடி]; (எ - று.)

காமத்தாற் கெட்டொழிந்தவர் அளவிறந்த மிகப்பல ரென்பதாம். தாமத் தாரினர் - தம்மை மிகுதியாக அலங்கரித்துக்கொள்ளுஞ் சிருங்காரபுருஷ ரென்றபடி. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு இனி, இச்செய்யு ளுக்கு - இஞ்ஞாலத்திலே காமத்தாலிறந்தவர்கள் அவிந்தவராகி ஈமத்தால் மறைந்தார்கள்; அங்ஙனமானவர்கள் வண்டுகள் மொய்க்கப்பெற்ற போர் மாலைவெற்றிமாலைகளை யுடைய வீரர்களது தொகையிற் சேர்வார்களோ? [சேரார்] என்றும் உரைக்கலாம்; ஐம்பொறிகளையடக்குந் திறமில்லாமல் அழிந்தொழிந்தவர்கள் மற்றை வகையில் எவ்வளவுபேராற்றலுடையராயி னும் வீரரென்று எண்ணப்படுதற்கு ஏலா ரென்பதாம். பி - ம்:—[1]ஈமததா ரிறந்தார். [2]வண்டறை. (கூஎ)

கூஏ. பொருளுங் காமமு மென்றிவை போக்கிவே
றிருளுண் டாமென வெண்ணல ரீதலு
மருளுங் காதலிற தீர்தலு மல்லதோர்
தெருளுண் டாமென வெண்ணலர் சீரியோர்.

(இ - ள்.) சீரியோர்-(அறிவொழுக்கங்களிற்) சிறந்தவர்கள், பொருளும் காமமும் என்ற இவை போகி வேறு இருள் உண்டு ஆம் என எண்ணலர் - பொருளாசையும் சிற்றின்பவாசையும் என்ற இவற்றைத் தவிர்தது வேறே இருளொன்று (உலகதத்தில்) உள்ளது என்று நினையார்; ஈதலும் அருளும் காதலில் தீர்தலும் அல்லது ஓர் தெருள் உண்டு ஆம் என எண்ணலர் - (வறி யோர்க்குக்) கொடுத்தலும் (எல்லாவுயிர்களிடத்து நன்கு கொள்ளுங) கருணையும் அப்பொருளாசை சிற்றின்பவாசைகளினின்று நீங்குதலும் ஆகிய இவையே யல்லாமல் வேறேயொருதெளிவு இருக்கிற தென்றும் நினையார்; (எ - று.)

இருளெனபது, பொருள்கள் புலனாகாதபடி கண்ணை மறைப்பது. அங்ங னம், நீதிநெறி முதலிய எவையும்.புலனாகாதபடி பொருளும் காமமும் ஞானக கண்ணைக குருடாக்குதலால், அவையே பேரிருளாகுமென்க. அப்புறவிருள், ஐம்பொறிகளிலொன்றான கண்ணின் புலனையே மறைக்கும்: இவ்வாசையோ அகவிருளாகி அந்தககரணமாகிய மனத்தின் உணர்வையும் மறைப்பது எனக் காண்க. இனி, "இருணீங்கியின்பமயக்கும்" என்றவிடத்துப்போல, இரு ளெனபதற்கு - நரகம் என்று கொண்டு, பொருளுங காமமுமென்ற இவை யல்லது வேறே நரகமுண்டென்று எண்ணார் எனவும உரைக்கலாம்; இவற்றை 'இருள்' என்றது, காரணத்தைக காரியமாக உபசரித்துக் கூறிய வாறும. இவையே நரகத்துன்பத்துக்குக காரணமென்க. ஈகை அருள் அவா

வின்மை என்ற மூன்றுமே நல்லுணாவினுலாகிய தெளிவின் பயனென்பது, பிந்தினவாக்கியத்தின் கருத்து. இரண்டு வாக்கியங்களிலும் 'ஆம்' என்பது - அசைநிலை. தெருள் என்பதற்கு-சுவாககசுகமென்றும, முத்தியின்பமென்றும உரைப்பாரு முளர். (கூஅ)

கூகூ. இச்சைத் தன்மையி னிற்பிற ரில்லினை
நச்சி நாளு நகையுற [1]நாணிலன்
பச்சை மேனி [2]புலர்ந்து பழிபடூஉங்
கொச்சை யாண்மையுஞ் சீர்மையிற் கூடுமோ.

(இ - ள.) இசசை தன்மையினில் - ஆசையினியல்பினுல் ஆசையை அடக்குதலின்றி அது போகிறவழியிலே அறிவைச் செல்லவிட்டு, பிறர் இல்லினை நசசி - அயலாமனைவியை விருமபி, நாளுமநகை உற - (அதனுல்) எந்நாளும் (பிறா தனனையிகழ்ந்துசிரிக்குஞ்) சிரிப்புத்தோன்ற, நாண இலன் - வெட்கமில்லாதவனுப், பச்சை மேனி புலாந்து - பசுமையான உடம்பு (காமதாபத்தால்) உலரப்பெற்று, பழி படூஉம - பழிப்பையடைகிற, கொச்சை ஆண்மையும் - இழிவான இவ்வகை ஆணதன்மையும, சீாமையில் கூடுமோ - சிறந்தகுணங்களுள (ஒன்ருகச) சேருமோ? [சேராது என்றபடி]; (எ - று.)

இல் - மனைவிக்கு இடவாகுபெயா. நாளும் நகை உற - எந்நாளும் பிறர் பரிகசிக்க; பழிநிற்க என்றபடி 'கொச்சையாண்மையும்'என்ற உமமை-இழிவு சிறப்பு. பி - ம்:—[1]நாணிலை. [2]உலாந்துபழிபடும. (கூகூ)

கஂஂ. ஓத நீருல காண்டவ ருன்றுணைப்
போத நீதிய ராருளர் போயினுர்
வேத நீதி விதிவழிச் செலவருங்
காத னீயறத் தெல்லை கடத்தியோ.

(இ - ள.) ஓதம நீர் உலகு ஆணடவா போயினுர்-அலைகளையுடைய கடலின் நீரினுற் சூழப்பட்ட இநநிலவுலகததை யரசாணடு காலஞ்சென்ற அரசர்களுள, உன் துணை போதம நீதியா ஆா உளா-உன்னவ்வளவு நீதியறியுந் திறமுடையவா யாவரிருந்தனா? [எவருமில்லை யென்றபடி]; வேதம நீதி விதி வழி செல்வரும காதல் நீ - வேதங்களிற்கூறப்பட்ட நியாயமான முறைமை வழியிலே செலகிற விருப்பததையுடையனுயிருந்த நீ, அறதது எல்லை கடத்தியோ-தருமத்தின வரமபுகடநது ஒழுகக்கடவையோ! [அல்லையென்றபடி].

ஆதியில் இராவணன் வேதசாஸ்திரங்களனைத்தையும நனருகவுணாந்து யாகம் தவம்முதலிய வைதிகச செயலகளில்மிக்கவிருப்பங்கொண்டு அவற்றை அனுட்டித்துவந்தமைபற்றி, இவ்வனனங்கூறப்பட்டான். இதுபற்றியே, இராவணன், படித்துகெட்டவனெனவும தெரிநதுகெட்டவனெனவுங கூறப்படுவன். போதநீதியென்பது, நீதிபோதமென மாற்றப்பட்டது. இனி, வேதநீதி விதிவழிசசெல்வரும காதல் நீ என்பதற்கு-வைதிக நீதிமாககங்களிற் செலபவர்களும் விரும்பததக்கவனுன நீயென்றும் உரைபபாருமுளா; இவ்வுரைக்கு,

'செல்வர்' என்பது - பெயர்: உம்மை - உயர்வுசிறப்பு. முன்னிரண்டடிக்கு - உன்துணை போயினு ரென இயைத்து, உலகாண்டவராகிய போதரீதியரில் உன்னவ்வளவு (அநீதிநெறியில்) மிகுதிபாகச சென்றவர் யாவருள ரென்றும் உரைக்கலாம். இசசெய்யுள் சிலபிரதியில் "வெறுப்புண்டாய" என்ற அடுத்தசெய்யுளின் பின்உள்ளது. (கoo)

கoக. வெறுப்புண் டாய வொருத்தியை வேண்டினன்
மறுப்புண் டாயபின் வாழ்கின்ற வாழ்வினி
னுருபபுண் டாய்[1]நடு வோங்கிய நாசியை
யறுப்புண் டால தழகென லாகுமே.

(இ - ள்) (ஒருவன்), வெறுப்பு உண்டு ஆய ஒருததியை வேண்டினல் - (தன்மேற்) பிரியமில்லாத ஒரு மாதை விரும்பி நெருங்கிய விடதது, மறுப்பு உண்டாயபின்-(வேண்டாவென்று அவளால)மறுக்கப்படுதலுண்டான பின்பு, வாழ்கின்ற - (அந்த இழிவினுல் உடனே இறந்துபோகாமல்) உயிரோடுகூடி வாழ்கிற, வாழ்வினின் - வாழ்வைக்காட்டிலும், உறுப்பு உண்டு ஆய் நடு ஓங்கிய நாசியை அறுப்புண்டால் அது அழகு எனல் ஆகுமே - ஓர் அவயவமாகவுள்ளதாய் (முகததின்) நடுவிலே உயர்ந்திருக்கிற மூக்கை (ஒருவரால்) அறுககப் பெற்றுல அநநிலை அழகுடையதென்று செல்லத்தக்கதாகும்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம.

மூக்கறுபடுதல் அழகுடையதன் றென்பது, வெளிப்படை; அதனினும் அழகற்றது, தன்மேற் பிரியஙகொள்ளாத ஒருததியைத் தான் காதலித்து அணுகித் தன்கருத்தை அவள்பக்கல் கூறி அவளால் சீசீபோ என்று மறுக்கப்பட்டபின்பு உயிர்வாழ்தல என்பதாம். இராமனைக் காதலித்து நணுகி நலிந்து அதனுல் மூக்கறுக்கப்பட்ட நினது தஙகையின் இழிதகைமையினுங கீழ்ப்பட்டது, நீ சீதையைவிரும்பிவேண்டி அவளரல் மறுக்கப்பட்ட பினபு உயிரைவைததுக் கொணடிருக்கிற வாழ்க்கை என்றவாறுமாம். பி-ம்:—[1]மிகு. (கoக)

கoஉ. பாரைஞ் ஞூறு வபற்பல பொறபுய
மீரைஞ் ஞூறு தலையுள வென்னினு
மூரைஞ் ஞூறுங் கடுங்கன லுட்பொதி
சீரைஞ் ஞூறவை சேமஞ் செலுத்துமோ.

(இ - ள்.) பாரை ஞூறுவ பல்பல பொன் புயம் - உலகஙகளை யழிககவல்லனவான மிகப்பல அழகிய கைகளும, ஈரா ஐஞ்ஞூறு தலை - ஆயிரந் தலைகளும, உள என்னினும - உள்ளனவாலுலும, அவை சேமம் செலுத்துமோ - அவை (உயிரைப்) பாதுகாவலில் வைககமாட்டுமோ? (அவைதாம்), ஊரை ஞூறும் கடுங கனலுள் பொதி சீரை ஞூறு - ஊர முழுவதையும் அழிப்பதாய வளர்ந்த கொடியநெருப்பிலே யகப்பட்ட நூறுவஸ்திரஙகளே போலும்; (எ - று.)

திககுவிசயயாததிரையில் உலகங்கள் பலவற்றையழித்த மிககவலிமையுடையவனுன இருபதுகைகளும பத்துததலைகளும உனககு உள்

ளனவென்றும், அதனால் ஒருதலையையும் இரண்டுகைகளையுமேயுடைய இராமனுக்கு அஞ்சவேண்டுவதிலலை யென்றுங கருதிச் செருக்குற வேணடா. ஆயிரந்தலைகளும இரணடாயிரங்கைகளும் உணடானாலும் அவை உன்னைப் பாதுகாக்கமாட்டா; அவை யாவும பெருநெருப்பிற்பட்ட ஆடைப் பொதிபோல இராமனது பராக்கிரமாக்கினியில் எளிதில் அழிபட்டொழியுமென்பதாம். 'சீரைபோலும்' என்னாது 'சீரை' என உபமேயததை உபமான மாகவே கூறியது, காட்சியணி. சீரை - சீலை. நூறுவ, நூறு, நூறும என்பவற்றின் நகரததுககு ஞகரம் போலியால் வந்தது. இரணடாமடியொழிந்த மூன்றடிகளிலும, ஞகரமெய - விரித்தல் விகாரததால் வந்தது. நெருப்பு உவமை, சிறிதாயிருந்தும அழிக்கும் வல்லமையைக் காட்டும். நூறுதல் - பொடியாக்குதல். (கஙஉ)

கஙஊ. புரம்பி ழைப்பருந் தீப்புகப் பொங்கியோ
நரமபி ழைத்தன பாடலி னல்கிய
வரம்பி ழைக்கு மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்குமென் றெண்ணுதல் சாலுமோ.

(இ - ள்.) புரம் - திரிபுரததிலும், பிழைப்பு அருந தீ புக - (எவருந்) தப்ப வொணணாத பெருந்தீப் புகுந்து எரிக்குமாறு, பொஙகியோன் - கோபஙகொணடவனான சிவபெருமான, நரம்பு இழைத்தன பாடலின் நல்கிய-நரம்புகளைக்கொண்டு (நீ) பாடிய பாடல்களுக்காக (மனமுவநது உனக்கு) க்கொடுததருளிய, வரம் - வரமானது, பிழைக்கும - (நீ மறைநெறிதவறியதனால) தவறிப்போனாலும் போகும; மறை பிழையாதவன் சரம பிழைக்கும் என்று எணணுதல் சாலுமோ - வைதிகமார்க்கந் தவறாதவனான ஸ்ரீராமபிரானது அம்பு தவறிப்போமென்று (நீ) நினைததல தகுமோ? (எ - று.)

நினது வரபலத்தினால் இராமசரபலத்தைத தவறசசெய்யலாமென்று நீ எணணுகின்றாய். அஙஙனமாகாது. வரபலந்தவறும்; சரபலந்தவறாதென உணரககடவை யென்றவாறு. நரம்பு இழைதது அன என்று பிரிதது - வீணாகாநம்போன்ற என்றும் உரைக்கலாம். இராவணன கைலாசகிரியைப் பெயாதெடுததபொழுது சிவபிரான் சினந்து தன்கால்விரலாற் சிறிது அழுத்தவே, அரக்கன் மலையின் கீழ் அகப்பட்டு நசுஙகி மிகவருந்தி வெகு காலம்புலமபி, பின்னா மந்திரிகள் சொன்ன தந்திரத்தின்படி, தனது தலைகளிலொன்றைத் துணிததுத் தனதுகைகளி லொன்றனுடன் சோததுக கைந்நரம்புகளே வீணைநரம்புகளாக அமைய வீணைபோலமைதது அநதக் கைவீணையைககொணடு சாமவேதகானஞ்செயய, அப்பெருமான் திருவுள்ளமுகந்து அருள்செய்து, ராவணனென்ற பெயருடனும் சிறந்ததொரு வாளாயுதத்துடனும மிகநீண்டஆயுளை யளிக்க, அரக்கன் பெற்று அப்பாற் சென்றனனென்ற விவரம, இஙகு அறியததக்கது. (கஙஈ)

கஙஎ. ஈறி [1]னுணுக வெஞ்சலி [2]னற்றிரு
[3]நூறி நொய்தினை யாகி நுழைதியோ

வேறு மின்னு நகையாம வினைத்தொழி
*றேறி னார்பலர் காமிக்குஞ் செவ்வியோய்.

(இ - ள்.) ஈறு இல் நாண உக - (எவர்க்கும்) அழிவின்றியிருக்கவேண்டியதான நாணம் கெட, எஞ்சல் இல் நல் திரு நூறி - குறைதலில்லாத நல்ல (நினது) அரசாட்சிசெல்வத்தையும் அழித்துக்கொண்டு, நொய்தினை ஆகி - சிறுமைக்குணமுள்ளவனாய், வேறும நுழைதியோ - (நியாயமார்க்கத்துக்கு) வேறான (பிறன்மனைவிழைதலாகிய) சிறுநெறியிலுஞ்செல்வையோ! இன்னும் நகை ஆம் வினை தொழில் தேறினார் பலர் காமிகளும் செவ்வியோய் - மற்றும் (பிறர்) பரிகசித்தற்கு இடமான பலதொழில்களைச் செய்தலில் தேறியுள்ளவர்களாகிய பலராலும் விரும்பப்படுகிற சமயத்தை யுடையவனே! (எ - று.)

தீநெறிவிலக்கி நன்னெறிசெலுத்தும் பேரறிவுடையாரைத் துணையாககொள்ளுதலின்றிச் சிற்றினஞ்சேர்ந்து கெடுபவனே யென்பார், 'இன்னும் நகையாம்வினைதொழிலதேறினாபலர் காமிகளுஞ் செவ்வியோய்' என விளித்தார். சிறியஇனமாவது - நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லெனபோரும விடரும் தூர்த்தரும நடரும உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கு மியல்பினரான அவர்களே நின்சமயம்பார்த்து நிற்பவரென்க. நகை ஆம - மகிழ்ந்து சிரித்தற்கு இடமான எனினுமாம். 'நுழைதியோ' எனபதற்கு - (இராமபாணம உனது உடலிலே) நுழையப் பெறுவாயோ வென்று உரைபபாருமுளர். பி - ம்:—[1]நாளுக [2]அதிரு. [3]நூறினெய்திடுமெஃகினுழைததியோ. [4]தேறினாய். (கஂஈ)

கஂரு. பிறநது ளார்பிற வாத பெரும்பதஞ்
சிறந்து ளார்மற்றுந் தேவாக்குந் தேவரா
யிறநது ளார்[1]பிறா யாரு மிராமனை
மறந்து ளாருள ராகிலர் வாய்மையால்.

(இ - ள்.) பிறந்துளார் - (உலகங்களிற்) பிறந்துள்ளவர்களும், பிறவாத பெரும் பதம சிறநதுளாா - இனிபபிறததல்வேண்டாத பெரிய முததியுலகத்திலே மேமபட்டுளளவாகளான சித்தியமுகதாகளும, மற்றும் தேவாகளும் தேவர் ஆய இறந்து உளார் - மறறும தேவாகட்குஞசிறந்த தலைமைத தேவாகளாகி மேமபட்டுளளவாகளும் ஆகிய, பிறாயாரும - (உன்னையொழிந்த) மற்றையோரனைவரும், இராமனை மறந்துளாா உளா ஆகிலா - ஸ்ரீராமனை மறநதவாகளாய இருககின்றிலா; வாய்மை - (இது) உணமை; (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம.

பெருமபதம் - பரமபதம். அது, "மற்று ஈண்டுவாராநெறி" என்றபடி, புக்கவா மீளபபிறததலில்லையான உயாகதி யாதலால், அதற்கு 'பிறவாத' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இறத்தல் - வரமபுகடத்தல். இறந்துளாா - கடவுளா எனறபடி. 'தேவாகளுநதேவராய் இறந்துளாா' என்றது, பிரம ருத்திர இந்திரர்களை. பி - ம்:—[1]பலர். (கஂரு)

கoசு. ஆத லாற்ற னரும்பெறற் செல்வமு
மோது பல்கிளை யும்முயி ருமபெறச்
சீதை யைத்தரு கென்றெனச் செப்பினன்
சோதி யான்மக னிற்கெனச சொல்லினன்.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால், தன் - தனது, அரும் பெறல் செல்வமும்-(பிறர்) பெறுதற்குஅருமையான செல்வங்களையும, ஓதுபல் கிளையும்- சொல்லப்படுகிற பலவகைச சுற்றத்தவரையும், உயிரும் - உயிரையும், பெற- (இறவாதிருககப்) பெறுமாறு, சீதையை தருக - சீதையை (இராவணன் இராமனுக்குக்) கொடுததுவிடுவானாக, என்றுஎன - என்பதாக, சோதியான் மகன் நிற்கு செப்பினன் - ஒளிவடிவமான சூரியனது குமாரனாகிய சுககிரீவன் உன்கசுச சொலலியனுப்பினன், என சொல்லினன் - என்று (இராவணனைநோககிக்) கூறினன், (அநுமான்); (எ - று.)

மூன்றுமடியிலுள்ள 'என' என்பதை அசையாகவேனும், அவ்வடியிலுள்ள 'என்று, என' என்பவற்றை ஒருபொருட்பன்மொழி யென்றேனுங கொள்க. இனி, என்று என - என்று (உன்னிடம் நான) சொல்லுமபடி சோதியான் மகன் நிறகு செப்பினன் - சுகிரீவன் நினகசுச செய்திகூறியனுப்பினன், என சொல்லினன் - என்று (இராவணனைநோக்கி அநுமான்) கூறினன் எனப் பதவுரைகூறுவாருமுளர். 'தருகின்றெனசசெபபினன்' எனத திருததிப்படிப்பாருமுளர். அருமபெறற்செல்வம என்பதை, பெறலருஞ்செல்வ மென மாறுக; (நீ வருந்தித்தவஞ்செய்து) அருமையாகப்பெற்ற செல்வ மெனினுமாம. சீதையைத்தராவிடின் நினது செலவம முதலியன தொலையு மென்றவாறு. தான் வகுத்துககூறுவான, கூறியது கூறுவான், ஓலைகொடுத்துநிற்பான் என மூனறுவகைப்பட்ட தூதாகளில் முதல்வனாகிய உத்தமனுதன் அநுமா னென்பது உணரக. (கoசு)

கoஎ.—அதுகேட்ட இராவணன் இகழ்ச்சிதோன்றச் சிரித்தல்.

என்ற லும்மிவை [1]சொல்லிய தெற்கொரு
குன்றில் வாழுங் குரங்குகொ லாமிது
நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி [2]யென்றொன்று தானன்றி வேறிலான்.

(இ - ள்.) என்றலும் என்று (அநுமான்) சொன்னவுடனே,—வென்றி என்ற ஒன்று தான அனறி வேறு இலான - ஜயமென்ற ஒன்றையேயன்றி அதற்குமாறான அபஜயததை (எவ்விடததும்) பெறாதவனான இராவணன்,— 'எற்கு இவை சொல்லியது - (எல்லாமறிநத) எனகசு இந்த வாரத்தைகளைச சொன்னது. ஒரு குன்றில் வாழும குரஙகு கொல் ஆம - மலையில்வாழ்வதொரு குரஙகாகும்! இது நன்று நன்று - இசசெயல் நன்றாயிருககின்றது! நன்றாயிருக்கின்றது!! என - என்று எணணி, மா நகை செய்தனன்-பெருஞ் சிரிப்புச் சிரித்தான்; (எ - று.)

கொல் ஆம் என்பனவும், நன்று நன்று என்றதும் - இகழ்ச்சி தோன்ற நின்றன. 'குன்றில்வாழுங குரங்கு' என்றது, அதன் அநாகரிகத்தைக்காட்டும். வேறு - தோல்வி. பி - ம்:—[1]சொல்லியதற்கு. [2]ஒன்று. (கூ0எ)

கூ0அ.—'தூதனாய்வந்த நீ அரக்கரைக் கொன்றது என்?' என்று இராவணன் அநுமானை வினவுதல்.

குரக்கு வார்த்தையு மானிடர் கொற்றமு
மிருக்க நிற்க நீயென்கொ லடாவிரும
புரத்தி னுட்டருந் தூது புகுந்தபி
னரகக ரைகளைகொன்ற தஃதுரை யாயென்றான்

(இ - ள்.) 'குரக்கு வார்த்தையும் - குரங்காகிய சுகிரீவனது வார்த்தையும், மானிடர் கொற்றமும - மனிதராகிய இராமலக்ஷ்மணரது ஜயமும, இருக்க - இருக்கட்டும; நிற்க-(அவற்றை நீ சொல்வது) நிற்கட்டும்; அடா—! நீ—, இரும புரத்தினுள - பெரிய இந்த நகரத்தினுள்ளே, தரும தூது புகுந்த பின் - ஒருவரனுப்பிய தூதனாய வந்து பிரவேசித்த பினபு, அரக்கரை கொன்றது - இராக்கதர்களைக் கொன்றது, என கொல் - என்ன காரணத்தால்? அஃது உரையாய - அக்காரணத்தைச் சொல்வாய்,' என்றான் - என்று (அநுமானை) வினவினான், (இராவணன்); (எ - று.)—குரக்குவார்த்தையும இருக்க, மானிடர்கொற்றமும நிற்க என்று முறை நிரனிறைப்பொருள்கோள் பட இயைபபாரு முளர். (கூ0அ)

கூ0கூ.—அதற்கு அநுமான்கூறிய விடை.

காட்டு வாரின்மை யாற்கடி காவினை
வாட்டி னேனென்னைக் கொலல வந்தார்களை
வீட்டி னேன்பின்னு மென்மையி னாலுன்றன்
மாட்டு வந்தது காணு மதியினால.

இதுவும் அடுத்தகவியும - ஒருதொடர்.

(இ - ள்.) காட்டுவார் இன்மையால் - (உன்னை எனக்குக) காட்டுபவரெவரும நேரிடாமையால், கடி காவினை வாட்டினேன் - நறுமணமுள்ள அசோகவனத்தை அழித்தேன்; என்னை கொலல வந்தாரகளை வீட்டினேன - (என்கருத்தை யுணராமற் கோபங்கொண்டு) என்னைகொல்ல வந்த இராக்கதர்களை (அவனனாசெய்யாதிருந்ததற்பொருட்டு நான்) கொன்றிட்டேன்; பினனும - அதன்பின்பும், மென்மையினால் உன்தனமாட்டு வந்தது - அடக்கத்தை மேற்கொண்டு உன்னிடத்து (நான்) வந்தது, காணும் மதியினால-(உன்னைக) கண்டு செய்திகூறவேண்டு மெனனுங கருத்தினாலேயே; (எ - று.)

'காட்டுவாரின்மைமால' என்பதற்கு - (என்வரவையுணர்ந்து எனனை உனக்குக்) காட்டுபவரெவரும் (இநநகரில) இல்லாமையால் என்றுங் கொள்ளலாம். வேண்டுமெனறு நானுக அடங்கியிருக்கினறேனேயனறி என்னைக

கட்டுந்திறம் இந்திரசித்தினது நாகபாசததிற்கு இல்லையென்பது ஈற்றுவாக்கியத்தாற் குறிப்பிக்கப்பட்டது. (கஂகூ)

ககஂ.—இராவணன் கோபித்து அநுமானைக் கொல்லச் சொல்ல, விபீஷணன் தடுத்தல்.

என்னு மாத்திரத் தீண்டெரி [1]நீண்டுக
மின்னும் வாளெயிற றன்சினம் வீங்கினான்
கொன்மி [2]னென்றனன் கொல்லியர் சேர்தலு
நின்மி னென்றனன் வீடண னீதியான்.

(இ - ள்) என்னும மாததிரதது - என்று (அநுமான்) சொன்னவளவிலே, மின்னும வாள் எயிற்றன் - மின்னல்போல்விளகுகிற வாளாயுதம் போற் கூரிய பறகளையுடையவனான இராவணன், ஈண்டு எரி நீண்டு உகசினம் வீங்கினான் - மிககநெருப்பு நெடுந்தூரமளவுஞ் சிந்தும்படி கோபம் மிக்கவனாய, கொன்மின் என்றனன் - ('இக்குரங்ககை) கொல்லுங்கள்' என்று கட்டளையிட்டான்; (அவ்வளவிலே), கொலலியா சேர்தலும் - கொலைததொழிலாளிகள் (அநுமானருகிற்சென்று சோந்துவிட, நீதியான் வீடணன் - (அச்சபையிலிருந்த) நியாய முணாந்தவனாகிய விபீஷணன், நின்மின் என்றனன் - 'நில்லுங்கள்' என்றுசொல்லி (அககொலைஞரை) த தடுத்திட்டான்.

அநுமான் பயபக்தியும் அடக்கமு மின்றித தொழில்செய்ததுமன்றி செருக்கியும் பேசுகின்றன னென்று இராவணனுக்குக் கோபம் மிககது. ஈண்டு எரி - வினைத்தொகை. 'கொல்லி' என்பதில், இ - பெயர் விகுதி, அதன் பன்மை - கொல்லியா. பி - ம் —[1]மீண்டுக. [2]என்றலும். (கஂ)

ககக.—விபீஷணன் இராவணனுக்கு நீதிகூறத்தொடங்குதல்.

ஆண்டெ ழுந்துநின் றண்ணல ரக்கனை
நீண்ட கையன்வ ணங்கின னீதியான்
மூண்ட கோபமு றையதன் றுமென
வேண்டு மெயயுரை பையவி ளம்பினான்.

(இ - ள்.) நீதியான் - நியாயமுணர்ந்தவனான விபீஷணன், ஆண்டு அப்பொழுது [அசசபையிலே], எழுந்து நின்று—, அண்ணல் அரககனை பெருமையுடைய ராக்ஷஸராஜனான இராவணனை, நீண்ட கையன் வணங்கினன் - நீட்டியகைகளையுடையவனாய நமஸ்கரித்து, மூண்டகோபம் முறையது அன்று என - '(உனககு இப்பொழுது) மிகுதியாகவுண்டான கோபம நீதியுடையதன்று' என்பதாக, வேண்டுமெ மெய் உரை பைய விளமபினான் - (அனைவரும்) விரும்பததக்க உண்மையானவாததைகளை (அவனகோபம அடங்கும்படி) மெல்லக கூறலானான்; (எ - று)—அதனை, அடுதத ஐந்துகவிகளிற் காணக. ஆம் - ஆசை.

இசசெய்யுளில் 'மூண்டகோபம் முறையதன்று' என்றது - தொகுததுசசுட்டல், அடுதத ஐந்துகவிகளும் - வகுததுக்காட்டல். பிரியமாகவும பத

தியமாகவுமுள்ள சத்தியமான வசனங்களை இனிது கூறின னென்பார், "வேணடுமெய்யுரை டையவிளமபிளுன்" என்றார். நீதியால் என்றும் பிரிக்கலாம். (ககக)

வே று.

ககஉ.—இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்: 'தூதனைக்கொல்லலாகாது' என இராவணனுக்கு விபீஷணன் நீதிகூறுதல்.

அந்தண னுலகமூன்று மாதியி னறத்தி [1]னுற்ற
றந்தவ [2]னன்புக் கான்ற தவநெறி [3]யுணர்ந்து தக்கோ
[4]யிந்திரன் கருமம் மாற்று மிறைவனீ யியம்பு தூது
வந்தனெ னென்ற பின்பும் கொல்லியோ மறைகள் வல்லோய்.

(இ - ள்.) தகோய் - (அறிவு ஆறறல்களில்) தகுதியுடையவனே! மறைகள் வல்லோய் - வேதங்களில் வல்லவனே! உலகம் மூன்றும் மூவகையுலகங்களையும், ஆதியின - ஆதிகாலத்திலே, அறத்தின் ஆற்றல் - (தனது) தருமபலத்தினுல், தந்தவன - படைத்தவனுன, அந்தணன் - பிரமதேவனது, அன்புக்கு - அன்பைபபெறுமாறு, ஆன்ற-சிறந்துள்ள, தவம் நெறி - தவவழியை, உணர்ந்து - அறிந்து (செய்துமுடித்து வரமபெற்று), இந்திரன் கருமம் ஆற்றும் - இந்திரனது தொழிலாகிய திரிலோகாதிபத்தியத்தையும் நடத்துகிற, இறைவன் - தலைவனுகிய, நீ—, இயம்பு தூது வந்தனென் என்ற பின்பும் கொல்லியோ - '(ஒருவர்சொல்லியனுப்பியசெய்தியைச) சொல்லுந் தூதனுக வந்தேன்யான்' என்று (ஒருவன்) சொன்னபினபும் (அவனைக்) கொல்பவனுவையோ! [கொல்லறபாலையல்லை யென்றபடி]; (எ - று.)

'இந்திரன்கருமம் ஆற்றும் இறைவன நீ' என்பதற்கு - இந்திரன் குற்றேவல் செயயப்பெறற தலைவனுகிய நீயென்று உரைப்பாரு முளர். கருமம் மாறறும என்று எடுததால், இநதிரனது அதிகாரமாகிய மூவுலகாட்சியை அவனுககு இல்லாதபடி செயத என்று பொருளபடும். அந்தணன் அன்புக்கு- அந்தணன் உன்னிடம் அன்புவைக்குமாறு எனறபடி. பி - ம்:—[1] ஆற்றத. [2]மரபின்வந்து. [3]ஆய. [4]இந்திரதிருவை. (ககஉ)

ககங. பூதலப் பரப்பி னண்டப் [1]பொகுட்டினுட் புறத்துட் பொய்தீ
வேதமுற [2]றியங்கு வைப்பின் வேறுவே றிடத்து வேந்தர் [ர்
மாதரைக் கொலைசெய் தாக ளுளரென வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள் [3]யாவரே தொல்லை நல்லோர்.

(இ - ள்.) பூதலம் பரப்பின் - பரந்த இந்தப் பூலோகததின் எல்லை முழுவதிலும், அண்டம் பொகுட்டின் உள் புறததுள - இந்த அண்டகோளத்தின் உள்ளாகவும் புறம்பாகவு முள்ள, பொய் தீர் வேதம் உற்று இயகுவைப்பின் வேறு வேறு இடத்து - பொய்ம்மையில்லாத [சததியமான] வேதங்கள் பொருந்தி வழஙகப்பெற்ற உலகங்களாகிய வெவ்வேறு இடங்களிலும், தொல்லை நல்லோர் - பழமையாகவுள்ள நீதிமான்களில், மாதரை கொலைசெய்

தாகள் உளர் என வரினும் - மகளிரைக் கொலைசெய்தவர்க ளுண்டென்று சொல்லவருவதானாலும், வந்ததூதரை கொன்றுளார்கள் வேந்தர் யாவரே - (ஒருவரானுப்ப) வந்த தூதாகளைக கொன்றவர்களான அரசர்கள் யாவருளர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

ஸ்தரீஹத்திதோஷத்தினும் கொடியபாவத்தை விளைப்பது தூதரைக் கொல்லுத லென்பது, 'மாதரைக கொலைசெய்தாகளுளரெனவரினும் வந்த தூதரைக கொன்றுளார்கள் யாவரே' என்றதனாற போதரும். பூர்வத்தில் தேவர்கட்கும அசுராகட்கும பெரும போர நடந்தபோது ஸ்ரீமகாவிஷ்ணு வானவர் அசுரர்களைத துரதத அவர்கள் ஓடிப் பிருகுமுனிவரது ஆசசிரமத திலே நுழைந்து அவருடைய பதத்தினியாகிய கியாதியென்பவளை அடைக கலம் புகுதலும், அவள அபயங்கொடுத்து அசுரர்களை ஒளித்துவைததுக் காத்துவர, அதனை யறிந்த திருமாலின் அம்சமும் இந்திரன் தமபியுமாகிய உபேந்திரமூர்த்தி அவளை யடுத்துப் பகைவரைக் காட்டும்படி வெகுவாயக் கேட்டும அவள இசையாமையால், உபேந்திரர் சககராயுதத்தினால் முற்பட அவள்சிரததைததுணிததுப் பிறபட அசுரர்களை வதைததன ரென்பதும்; விரோசனனென்னும் அசுரராசனது மகளும தூய்புததி யுடையளாதலாற சுமதியென்று வழஙகபடுபவளுமாகிய மாதரையென்பாள் உலகத்து உயிர கட்கு மிக்கதீங்கு புரிந்துவர, அவளைத தேவேந்திரன வசசிராயுதத்தாற் கொன்றிட்டன னென்பதும் முதலிய வரலாறுகள்பற்றி, 'மாதரைக கொலை செய்தார்க ளுளரென வரினும்' எனப்பட்டது.(பெணகொலை பெரும்பாவ மென்பதுபற்றித தாடகையைக கொல்லுதறகுக கூசிய இராமபிரானுககு விசுவாமித்திரமுனிவா இவ்வரலாறுகளை எடுத்துக கூறியதுங காணக.) திரு மாலின் உந்தித்தாமரைமலரினிடையே தோன்றியதனால், 'அணடப் பொகுட்டு' எனப்பட்டது. 'அதனபுறம்' என்றது, பகிரணடங்களை. பி-ம்:— [1]பொகுட்டிடைப்புறததில். [2]உயாந்த. [3]யாவரோ. (ககங)

ககச பகைப்புல னணுகி யுய்ததார் பகாந்தது பகர்ந்து பறறூா
மிகைபபுல னடககி மெயயமமை விளபபுதல் விரதம் பூண்ட
[1]தகைபபுலக் கருமத தோரைக கோறலிற றககார் யார்க்கு
நகைபபுலன் பிறிதுண் டாமே நங்குல நவையுண் டாமே.

(இ - ள்.) பகை புலன் அணுகி - பகைவர்களுடைய இடத்தை(த துணி வுடன்) சேர்ந்து, உயததார் பகாநதது பகாந்து—(தம்மை) எவியனுப் பியவர்கள் சொன்ன செய்தியை (ப் பகைவரிடததில அஞ்சாது) சொல்லி, பற்றூா மிகை புலன் அடகக - (தாமசொல்லுஞ் செய்தியினால்) அப்பகைவர்கட்கு உணடாகுங கோபமாகிய உணாசசியை (த தாம மீளவுஞ் சொல்லுஞ் சொறகளால்) அடகக, மெயமமை விளம்புதல் - விரதம பூணட உணமையான சொல்லைச சொல்லுதலையே (தமககு உரிய) விரதமாககொணடு அநுஷ்டானம் நடத்துகிற, தகை புலம கருமத தோரை - தகுதியான அறிவையும தொழிலையுமுடைய தூதுவாகளை,

கோறலின் - (நீ) கொல்லுதலினால், தக்கார் யார்க்கும் நகை புலன் உண்டா மே - (அறிவொழுக்கங்களினால்) தகுதியுடையவர்களெல்லார்க்கும் இகழ்ந்து சிரித்தற்கு இடமுண்டாகுமே; பிறிது - மற்றும், நம் குலம் நகை உண்டா மே - நமதுகுலததுக்குக் குற்றமுண்டாகுமே; (எ - று.)—ஏகார மிரண்டும் - தேற்றம்.

துணிவுடைமை, பகைவர்க்கு அஞ்சாமை, சமயோசிதமாகப் பேசுந்திற முடைமை, வாய்மை, அறிவு, திறமை முதலிய முக்கியமான தூதலக்ஷணங் களைக்கருதி,'பகைப்புலனனுகி யுய்த்தார் பகர்ந்தது பகர்ந்து பற்றார் மிகைப் புலனடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட தகைப்புலக்கருமத்தோர்' என்றார். முதலடியில், புலன் - இடம் நாடுநகரம். பகை - பகைவர்க்குப்பண் பாகுபெயர். பகைவரது குணததை அவரது இடததின்மேலேற்றி 'பகைப் புலன்' என்றதாகவுங் கொள்ளலாம்; உபசாரவழக்கு. மிகை - வரம்பு கடத் தல்; இங்குக்கோபதிதின்மேல் நின்றது. புலன் - உணர்ச்சி. இனி, பற்று ஆர் மிகை புலன் அடகி என்று எடுதது - (பிரபஞ்சவிஷயங்களில்) ஆசை பொருந்திய வலிய ஐம்பொறிகளை யடகி யென்றும் பொருள்கொள்ளலாம்; பொருளின்பங்கள் காரணமாக வேறுபடாத தூய்மை தூதலக்ஷணமாத லுண ர்க. வேறாக [இகழ்ச்சியாக]ச் சிரிததற்கு இடமுண்டா மென்ற பொருளில் 'நகைப்புலன் பிறிதுண்டாம்' என்றதாகவுங் கொள்ளலாம். பி - ம்:— [1]திகைப்பற்றகமற்றோரைக்கோறலிற்றகையலாக்கு. [2]நகையின்றாமே. ()

ககரு. முத்தலை யெஃகன் மற்றை முராந்தகன் முனிவன் முன்னு
வத்தலை நம்மை [1]நோனு வமரர்க்கு நகையிற் றாமா
[2]லெத்தலை யுலகங் காக்கும் வேந்த [3]நீ வேற்றோ ரேவ
வித்தலை யெய்தி னானை கொல்லுத லிழுக்க மின்னும்.

(இ - ள்.) எததலை உலகம் காக்கும வேந்த - எவ்விடததுமுள்ள உலகங் களை [எல்லாவுலகங்களையும] ஆளுகின்ற அரசனே! நீ—, வேற்றோர் ஏவ இ தலை எய்தினானை கொல்லுதல் - அயலார் ஏவி பனுப்ப (அதன்படி) இங்கு வந்து சேர்ந்தவனான இவனைக கொல்லுதல், இழுக்கம் - குற்றமாகும்: (ஆத லால் அசசெயல்),—முத்தலை எஃகன் - மூன்று தலைகளையுடைய சூலாயு தத்தை யுடையவனான சிவபிரானும், மற்றை முராந்தகன் முனிவன் - மற் றைப் பிரமவிஷ்ணுக்களும் (ஆகிய திரிமூர்த்திகளும்), முன் ஆ - முதலாக, அ தலை - (நமக்கு) எதிர்த்தலையாயுள்ள, நம்மை நோனு அமரர்க்கும் - நமது ஆககத்தைக கண்டுபொறாத தேவாகட்கும், நகையிற்று ஆம் - இகழ்சது சிரித தற்கு இடமுடையதுமாம்; இன்னும் - இன்னமும், (யான் சொல்வதுகேள்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

முசதலை யெஃகு - முததலைவேல்; எனவே, சூலமாயிற்று. முராந்த கன் - முரன் என்ற அசுரனுககு அழிவைச் செய்தவன்; தீர்ககசநதிபெற்ற

வடமொழித்தொடர். (முரன் - நரகாசுரனது மநதிரி.) பிரமன் எப்பொழுதும் திருமாலை மனனஞ்செயதுகொணடிருததலால், 'முனிவன்' எனப்பட்டான். [2]'எத்தலையுலகுஙகாக்கும்' என்றபாடம, முற்றும்மைகொணடதாம. வேற்றோ - பகைவா. பி - ம்:—[1]நேரவ். [2]மெய்ததலை [3]நின்மாற்றோ (ககரு)

ககசு. இளையவ டன்னைக கொல்லா திருசெவி மூக்கொடீர்ந்து
விளைவுரை யென்று விட்டார் வீரராய் [1]மெய்ம்மை [2]யோர்வார்
களைதியே லாவி நம்பா லிவன்வந்து கண்ணிற் கண்ட
வளவுரை யாமற் செய்தி யாதியென் றமையச சொன்னான்.

(இ - ள்.) வீரர் ஆய் மெய்ம்மை ஓவவா - சுத்தவீரர்களாய் உண்மையான நீதிகளை யுணாந்தவர்களான அந்த இராமலக்ஷ்மணர்கள், இளையவள் தன்னை கொல்லாது - (நினது) தஙகையான சூர்ப்பணகையைக கொல்லாமல், இரு செவி மூககொடு ஈர்ந்து - இரண்டுகாதுகளையும் மூக்கையும் அறுத்து, விளைவு உரை என்று விட்டார் - (இவ்விடத்துச்) செயதியை (உனது தமையனுக்குச) சொல் என்பதாக (அவளை உயிருடன்) அனுப்பிவிட்டார்கள்; (அஙகனமிருக்க) ஆவி களைதி ஏல் - (நின்னிடம் தூதனாய்வந்த இவனது) உயிரை (நீ) போகவிடுவையானால், நம்பால் இவன் வந்து கண்ணில் கணட அளவு உரையாமல் செய்தி ஆதி - நம்மிடததில் இவன் வந்து கணகளாற கண்ட அளவை (இவன்சென்று அவர்கட்கு)ச சொல்லாதபடி செய்துவிட்டவனாகிறாய், என்று—, அமைய சொன்னான்-தகுதியாக நீதி கூறினான், (விபீஷணன்); (எ - று.)

நமது சூர்ப்பணகை இராமலக்ஷ்மணாகளிடத்திற் சென்று அவாகட்குத் தீஙகுசெய்யததொடங்கியபொழுது அவாகள் அவளைககொலலாமல மூககு முதலிய சிலவுறுப்புக்களை யறுத்தவளவோடு நின்று அவ்விடததுசசெயதியை நமககு வந்துகூறுமாறு அவளை உயிருடன் ஓட்டிவிட்டனா; அஙகனமிருகக, நமமிடம்வந்த அவாகள்தூதனை மீளவும் அஙகுச சென்று இவ்விடததுச செய்தியை அவர்கட்குக் கூறலாகாதபடி நீ கொலலுதல் நமது பராககிரமததுககுக குறைவாகும; எஙகனமெனின், நமது நிலைமைகளை அவாகளறிந்துகொள்ளுமாறு இவன் சென்று சொல்லலாகாது என்று பகைக்கு அஞ்சிச் செய்ததாகு மாதலால் என்பது கருத்து. பி - ம்:—[1]மேன்மை. [2]பார்ப்பார்.

வேறு.

ககஎ.—அதுகேட்ட இராவணன் அநுமான்வாலை கொளுத்திவிடச் சொல்லுதல்.

நல்ல [1]துரைத்தாய் நம்பியிவ னவைசெய்தானே யானாலுங்
கொல்லல் பழுதே போயிடைநீ கூறிக் கொணர்தி கடிதென்னாத்
தொல்லை வாலை மூலமறச சுட்டு நகரைச் சூழ்போக்கி
[illegible]லை கடக்க விடுமின்க ளென்றா னின்றா ரிரைத்தெழுந்தார்.

(இ - ள்.) நமபி - உத்தமகுணமுள்ளவனே! நல்லது உரைத்தாய் - நல்ல நீதியையே கூறினாய; இவன் நவை செய்தானே ஆனாலும் - இந்த வாநரன் (நமக்குப்) பொல்லாங்குகளைச செய்தனனே யாயினும், கொல்லல் பழுதே - (அவனை நாம்) கொல்வது குற்றமே; 'நீ—, இடை போய் - இவ்விடத்தினின்று சென்று, கூறி - (இவ்விடததுச்செய்திகளை யெல்லாஞ்) சொல்லி, கடிது கொணர்தி-விரைவில் (அவ்விராமலக்குமணர்களை) அழைத்துக்கொணடு வருவாயாக', என்னு - என்றுசொல்லி, தொல்லை வாலை - பழமையான [பெரிய] (இவ்வானரத்தின்) வாலை, மூலம் அற சுட்டு - அடியோடு அழியும்படி (நெருப்பைகொணடு) எரித்து, நகரை சூழ்போக்கி- (நமது இவ்விலங்கை) நகரததைச சுற்றிவர (இக்குரங்கை)க் கொண்டுபோய், (பின்பு) எல்லைக்கடகக விடுமின்கள் - இந்தநகரினெல்லையைக் கடந்துபோம்படி துரததிவிடுங்கள், என்றான் - என்று (விபீஷணன் முதலிய அரக்கர்களை நோககிச) சொன்னான்; நின்றார் இரைதது எழுந்தார்-(உடனே) அங்கு நின்ற அரககாகள் (அககட்டளையை மேற்கொணடு) ஆரவாரஞ்செய்து எழுந்தாகள்; (எ - று.)

'போயிடை நீ கூறிக்கொணர்தி கடிது' என்றது, அரக்கர்கள் அநுமானுக்குச சொல்லவேணடிய வாரததை. தொல்லை வால் - நெடுநாளாக வளாந்து நீணட வால் என்றபடி. எமக்குச சிறிதும் அசசமில்லை, நமது நகர முழுவததையும் இவன் நன்றாகப் பார்ததுக்கொண்டு போகுக என்பது 'நகரைசசூழ்போக்கி' என்பதன் உட்கோள். பிந்தினவாகியத்தில் 'விடுமின்கள்' என்ற பன்மை வந்தது, சபையிலுள்ள அரககர்கள்பலரையும் நோக்குதலால். (ககஎ)

ககஅ —அநுமானது பாசபந்தத்தை இந்திரசித்து விடுவிக்க அரக்கர்கள் கயிறு கொண்டு கட்டியிழுக்கத் தொடங்குதல்.

ஆய காலத் தயன்படையோ டிருப்ப [1]வாகா தனவிடுத, றூய பாச மெனபபலவுங் கொணர்ந்து பிணிமின் றோளென்னு, மேய தெய்வப் படைக்கலத்தை [2]மீட்டா னமரர் போர்வென்றா, னேயெ னாமுன் னிடைபுகுத் தொடைவன் கயிறறாற பிணித்தீர்த்தார்.

(இ - ள்.) ஆய காலதது - இங்ஙனமாகிய அப்பொழுது,—அமரர் போர் வென்றான் - (முன்பு) தேவாகள எதிரததுசசெய்த போரில வெற்றி கொண்டவனான இந்திரசிதது,—'அயன் படையோடு இருப்ப அனல இடுதல் ஆகாது - பிரமாஸ்திரததினது பிணிப்புட னிருக்கையில் நெருபபையிட்டெரிததல தகுதியன்று; தூய பாசம் என பலவும் கொணர்ந்து தோள் பிணி மின - சிறநத [வலிய] கயிறென்று உள்ளவை பலவறறையுங கொண்டுவநது (அவறறைக்கொணடு இவனது) தோள்களைக் கட்டுங்கள்,' என்னு - என்று (அரககாகளைநோககிச) சொல்லி, மேய தெய்வம படைகலததை மீட்டான்-(அவ்வநுமானது உடமபிற பாம்புவடிவமாயப்) பொருநதியிருநத தெயவத்தன்மையுள்ள பிரமாஸ்திரத்தை விடுவிததான்; (அவ்

விந்திரசித்தின் கட்டளைப்படியே இராக்கதாகள்), ஏ எனு முன் இடை புக்கு-ஏயென்று ஒருமுறைசொல்லுதற்கு முன்னமே [மிகவிரைவிலே என்றபடி] அவ்விடத்திற்கு வந்து, தொடை வல் கயிற்றால் பிணித்து ஈர்த்தார் - ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படுத்திய வலிய பலகயிறுகளைக கொண்டு (அநுமானைக) கட்டியிழுககலானாகள்; (எ - று.)

இநதப் பிணிவீட்டுபடலததிற்கு உயிரநிலைசசெய்யுள, இது; நாகபாசத்தின் பிணிப்பை இந்திரசித்து விடுவிததமை கூறுதலின். இசசெயயுளின ஈற்றடி, தொகுத்துசசுட்டல்; அடுத்த நான்குசெய்யுள்களும், இதன் வகுத்துக் காட்டலாம.

'பாசமென' என்றதன்பின், 'உள்ளவை' என்பது வருவிக்க. இனி, இரணடாமடிக்கு - பரிசுததமான பிரமபாசததால் (இதுவரை கட்டியிருந்தது) போல (உறுதியாக இனிக கயிறுகள்) பலவற்றையுங கொணடு தோள் கட்டுங்க ளென்றுசொல்லி யென வுரைப்பினு மமையும. படைககலம் என்பது, போர்ககுஉரிய கருவி யென்று காரணப் பொருள்பெறும். படைக்கலத்தை மீட்டல் - மந்திரபலத்தோடு ஸந்தாநஞ்செய்த அஸ்திரத்தை உபசஹாரஞ்செய்தல். ஒன்றோ டொன்று முடிந்தும் பலசோததுதிரிததும் பெரிதாக்கப்பட்ட வலிய கயிறுகளானுலென்பது, 'தொடைவன்கயிற்றால்' என்பதன் பொருள்: தொடை - தொடுத்தல், தொடர்ச்சிப்படுத்தல். 'இடை புக்கு' எனபதற்கு - பலஇடஙகட்குப்போய் (க் கயிறுகள்கொணாநது) எனறலு மொன்று. பி - ம்:—[1]ஆகாகனலிடுகை. [2]விட்டான். (ககஅ)

ககசூ.—அரக்கர்கள் கண்டகயிறுகளையெல்லாம் கொண்டுவருதல்.

நாட்டி னகரி னடுவுள்ள கயிறு நவிலுந [1]தகைமையவே
வீட்டி னூச னெடும்பாச மற்ற தேரும் விசி [2]துறந்த
[3]மாட்டும் புரவி யாயமெலா மருவி வாங்குந் [4]தொடையழிந்த
பூட்டும் வல்லி மூட்டோடும் புரசை யிழந்த போர்யானை.

(இ - ள்.) வீட்டின் ஊசல் நெடும் பாசம் - வீடுகளில் ஊஞ்சல்கட்டியிருந்த நீணடகயிறுகளும், அற்ற - (அரககர்கள் அவிழ்ததுக்கொணடு போனதனுல் அஙகஙகு) இல்லையாயின; தேரும் - தேர்களும, விசி துறநத - கட்டுக்கயிறுகளை இழந்தன; மாட்டும் புரவி ஆயம் எலாம - (பாதிகளிற்) கட்டப்பட்டிருந்த குதிரைக்கூட்டஙகளெல்லாம, மருவி வாஙகும தொடை அழிந்த - (தம்மைக்) கட்டியவிழ்க்குங கயிறுக ளொழியப்பெறறன; போர் யானை - போரததிறமமைந்த யானைகள், பூட்டும வல்லி மூட்டோடும புரசை இழந்த - (தமதுகால்களிற்) பூட்டுங் கயிறுகளின் சோககையையும் கழுத்திடுகயிற்றையும இழந்தன: (என்றால்),—நாட்டில் நகரில நடு உளள கயிறு நவிலும தகைமையவே - அந்தநாட்டிலும் நகரத்திலும (ஆஙகாஙகு) உள்ள வெறுங்கயிறுக ளெல்லாம் (கொணர்ந்தாயினவென்று)சொல்லவேண்டுந் தன்மையுடையனவோ? [அல்ல வென்றபடி]; (எ - று.)

ஊசல் தேர் குதிரை யானை இவைகளில் மிகவும உபயோகமாயிருந்த கயிறுகளெல்லாவற்றையுமே இதற்காக அரக்கர்கள் அவிழ்த்துக்கொண்டு போயவிட்டாரகளென்றால், நாடுகேரகளிலுள்ள வெறுங் கயிறுகளையெல்லாம் அவர்கள எடுத்துக்கொண்டுபோனார்க ளென்பது கூறவேண்டுவதொன்றோ? என்பதாம்; தோடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. ஏகாரம்-எதிரமறை. வல்லீ - வடசொல்; இது - உவமையாகுபெயராய், கால்விலங்கையும், அவ்விலங்குபோலக் கட்டுங கயிற்றையுங குறிக்கும். மூட்டு - பொருத்து, இசைப்பு. மதகுகொள்ளுங்காலத்தில் யானைகளை வசப்படுததுதற்கு உபயோகமாகவும், ஏறுபவர் காலகளை மாட்டிக்கொள்ளுதற்கு ஆதாரமாகவும, யானைகளின் கழுததில் எப்பொழுதுங கயிறு கட்டிவைததல், இயல்பு; அதற்கு 'புரசை' என்று ஒருபெயர். தேர்விசி - தேரிற்கட்டியிழுக்கும் வடம். பி - மீ:—[1]தகையெனவே. [2]மறநது. [3]வாட்டும்புரவியிலாயமெலாம். [4]தொடையலழிந்தனுக. (ககக)

கஉ௦.—கண்ட கயிறுகளையெல்லாங் கொண்டு கட்டுதல்.

மண்ணிற் [1]கண்ட வானவரை வலியிற் [2]கவர்ந்த வரம்பெற்ற
வெண்ணற் கரிய வேனையரை யிகலிற பறித்த தமக்கி யைந்த
பெண்ணிற் [3]கியையு மங்கலத்திற் பிணித்த கயிறே யிடை பிழைத்த
கண்ணிற் கண்ட வன்பாச மெல்லா மிட்டுக் கட்டினார்.

(இ - ள்.) மண்ணில் கண்ட - (இராவணனது திகுவிசயயாததிரைக காலத்தில) நிலவுலகத்திற் (பலவேறுதேசங்களிற்) காணப்பட்டுக் கவர்ந்து கொண்டுவந்த (பலவகைக) கயிறுகளும், வானவரை வலியின் கவர்ந்த - தேவர்களிடததினின்று வலியககவர்ந்துகொணடுவந்த பாசங்களும், வரம் பெற்ற - (தேவாகளைக்குறிததுத தாம்தாம தவஞ்செய்து) வரமாகப்பெற்ற பாசங்களும, எண்ணற்கு அரிய ஏனையரை இகலின் பறிதத - எண்ணியளவிட முடியாத [மிகப்பல] (அசுராமுதலிய) மறறையோரிடத்தினின்று வலியப்பறிததுகொண்டுவந்த பாசங்களும், (ஆக), கண்ணில் கண்ட எல் பாசம் எல்லாம் - தங்கள் கணகளிலேகணட வலிய கயிறுகளையெல்லாம், இட்டு - கொணர்ந்து சேர்த்து, கட்டினா - (அரக்கர்கள் அநுமானைக) கட்டினார்கள்; தமகு இயைந்த பெண்ணிற்கு இசையும் மஙகலததில் பிணித்த கயிறே - (அவ்வரசகர்கள்) தம்தமகு ஏற்ற மஙகையாக்கு அமைந்த விவாககாலததிலே (கழுத்திற) கட்டிய தாலிக்கயிறுகள் மாததிரமே, இடைபிழைதத-அசசமயத்திலே அறுத்துகொண்டுபோகபபடாமல் தப்பின; (எ - று.)

அரக்கியாகளின் தாலிககயிறுதவிர மற்றைககயிறுகளையெல்லாங கொணடு அரக்காகள் அநுமானைககட்டினாக ளென்பதாம். 'வானவரை வலியிற்கவர்ந்த', 'வரம்பெறற', 'இகலிறபறிதத' என்றன, காலபாசம வருணபாசம் போன்றவற்றை. பாசம் - கயிறறுவடிவமான ஓர் ஆயுதம். 'வான

வரை' 'ஏனையரை' என்றவை-உருபுமயங்கம். 'பெண்' என்றது சாதியொருமை. இசையும் மங்கலத்தின - உரியமங்கலத்திறகாக என்றுமாம். ஏ - பிரிநிலை. 'இடைபிழைத்த' என்றதில், விரைவில் அரக்காகளனைவரும் அழிவதனால் அறுபடப்போகிற அரகியரின் மங்கலநாணகள் இடையிலே சிறிதுகாலம் வலியுற்றுநின்றனவென்றகருத்துந் தொனித்தல்காணக. மூன்றுமடி, நகைச்சுவை [ஹாஸ்யரஸம்] தோன்றநின்றது. இட்டுஎன்றது, 'கொண்டு' என்றதுபோல மூன்றுமவேற்றுமைச சொலலுரு பெனத்தக்கதுமாம். பி - ம் —[1]கொணட. [2]கவர்நது. [3]அமைந்த. (கஉ0)

கஉக.—அப்பொழுது அநுமான் அகமகிழ்ச்சிகொள்ளுதல்.

கடவுட் படையைக் கடந்தறததி னுணைகடநதே னுகாமே
விடுவித் தளித்தார் தெவ்வரே வென்றே [1]னன்றோ விவர்வென்றி
சுடுவிக கின்ற திவவூரைச் சுடுகென் றுரைத்த துணிவென்று
நடுவுற் [2]றமைய முறநோக்கி முற்று முவந்தா னவையற்றான்.

(இ - ள்.) கடவுள் படையை கடந்து அறததின் ஆணை கடந்தேன் ஆகாமே - (யான்) பிரமாஸ்திரததைமீறித தருமநிலையைத்தவறினேனாகாதபடி, தெவ்வரே - பகைவாகளாகிய இராக்கதர்களே, விடுவித்து அளித்தார் - (என்னை அந்தஅஸ்திரததினின்று) விடுவித்து நன்மை செய்தார்கள்; இவர் வென்றி வென்றேன அன்றோ - (இனி) இவ்வரக்கர்களின் வெறறியைத் தவறாமல் விரைவிலே வென்றுவிடுவேனன்றோ; சுடுவிககினறது - (இராவணன அரக்காகளைகொண்டு என்னைவால்) கொளுத்துகின்ற முயறசி, இவ்வூரை சுடுக என்று உரைதத துணிவு - 'இந்தஊரை நீ எரிப்பாயாக' என்று (எனகுச) சொன்ன தெளிபொருளாகும், என்று - எணணி, நடு உற்று (அவ்வரககாகளின்) நடுவிலே பொருந்தி, அமையம உற நோகி - (அவர்களிடததினின்று தான் நீங்குதறகுஉரிய) சமயததை நன்றாக ஆலோசித்துக் கொணடு, முறறும் உவந்தான - நிறைநதமகிழ்சசி கொணடிருநதான்; (யாவனெனில்),—நவை அற்றான் - யாதொருகுறறமுமில்லாதவனான அநுமான.

பிரமாஸ்திரததைக கடககும் வல்லமை தனக்கு இருக்கவும் அநுமான் அகனனஞ் செய்யாது அந்த அஸ்திரததின்கட்டுக்கு உட்பட்டிருநதது, தேவர்களைப் பெருமைபடுததவேணடு மென்னுந் தருமநிநதையினால் என்பது, கீழ்ப்படலததின் ருக - ஆஞ் செய்யுளில் விளங்கிற்று. அகனனம் யான் பிரமாஸ்திரததைக்கடந்து தருமததின் வரமபை அலக்ஷ்யமாய் அவமதித்து மீறினேனென்ற பழிப்புக்கு இடமில்லாதபடி இப்பொழுது அரக்காகள் என்னை விடுவிததது மிகநல்லதாயிறறென்று பாராட்டினன். அளித்தார்-(என்னைப் பழிப்புககுஉள்ளாகாதபடி) பாதுகாத்தன ரென்க. அவ்வகையான தருமசமடைடம் தீர்கததனால், இனி இவாகளைத தடையின்றி வெல்வேனென்றவாறு. அவன் என்னைச் சுடுவிப்பதை இவ்வூரைசசுட்டெரிக்குமாறு தூண்டியதாகக்

கொள்வேன் யான் என்பது, மூன்றுமடியின்கருத்து. மேல் கஙஙு - ஆஞ் செய்யுளில் "வழுவுறுகாலமீதென்றெணணினன்" என வருவதை நோக்கு மிடத்து, இங்கு 'அமையமுற நோக்கி' என்ற பாடமே இனிது பொருந்து கின்றது. இங்ஙனம் அநுமான் தானுகவே வேணடு மென்று கட்டுப்பட்டி ருத்தலால், பகைவர்கையிற் கட்டுப்பட்டானெனன்ற பழிப்புக்கு இடமில்லை யென்பதுதோன்ற 'கவையறறான்' என்றதாகவுங கொள்ளலாம். 'வென் றேன்' காலவழுவமைதி: 'இவர் வென்றி சுடுவிக்கின்றது' என்பதற்கு - இவர் கள் தாங்கள் என்னை வென்றிட்டதாகக கருதி எரிக்கின்ற முயற்சி யென உரைப்பாரு முளர். பி - ம்·—[1]இன்றாய். [2]ஐயமற, அமையவுற. (கஉக)

கஉஉ.—அநுமான் அடங்கிச்செல்லுதல்.

நொய்ய பாசம் புறம்பிணிபப நோன்மை [1]யிலனபோ லுடனுணங்கி
வெய்ய வரக்கர் புறத்தலைப்ப வீடு முணாந்தே [2]விரைவில்லா
வையன் விஞ்சை தனையறிந்து மறியா தான்போலவிஞ்சையெனும்
பொய்யை மெய்போ னடிககின்ற யோகி போன்றான் போகின்றான்.

(இ - ள்.) நொய்ய பாசம் புறம் பிணிப்ப - (தனது போாறறலுக்குமுன்) எளியனவாகின்ற கயிறுகள் (தனது) உடம்பைக் கட்ட, நோன்மை இலன் போல் உடல் நுணங்கி - (அவற்றைபபொறுக்கும) வலிமையில்லாதவன்போல உடமபு துவண்டு, வெய்ய அரககா புறதது அலைப்ப - கொடிய இராக்கதர்கள் எப்புறததுஞ்சூழ்ந்துநின்று இழுத்து வருத்த, வீடும் உணாந்தே - (அந்தசசங கடததினினறு தன்னை) விடுவிததுக்கொள்ளும வகையைத தான் அறிந் திருநதே, விரைவு இல்லா - (அதற்கு ஏறற சமயததை ஆலோசிததுக கொணடு) விரைவு கொள்ளாத, ஐயன் - சிறந்தவனான அநுமான்,—விஞ்சை தனை அறிநதும் - பிரஹ்மவிததையைத தான் அறிந்திருந்தும, அறியாதான் போல் - (அதனை) அறியாதவனபோலிருந்து, அவிஞ்சை எனும பொய்யை மெய்போல் நடிககின்ற - அவிததையென்கின்ற பொய்ப்பொருளை மெய்ப் பொருள போலககொணடு வெளிநகுககாட்டியொழுகுகிற, யோகி யோகியை, போன்றான் - ஒததவனாய, போகின்றான் - (தன்னையிழுககின்ற அவாகளை பின்னே) செல்லலானான்; (எ - று.)

மிக்கவலிமையையுடைய தனதுஉடலை வருகதுந திறம் அககயிறு கட்கு இல்லாதிருநகவும் அந்தப பாசபந்ததைப் பொறுககும வலிமையில்லாதவன் போல அதறகு உட்பட்டு, உடம்புதுவளுதல்கொணடு, கொடிய அரக்கர்களின் சூழாததினின்றுதன்னைவிடுவிததுககொள்ளும வகையை யறிந்திருநதும் அதற்கு ஏறற சமயததை எதிரபார்ப்பதனால் விரைவுபடாமல அவ்வரக்கர்கு உட்பட்டு அவாகளிழுககிறவழியெல்லாம அநுமான சென்றுகொணடிருந்த னன்; அதறகு, யோகமுதிரசசியினால் ததுவப்பொருள்களை யுணாநத ஒரு யோகி, தனனை மெயயுணாவிலலாதவன போலக காட்டிய பொயயுணாவாகிய

அவித்தையை மெய்யுணர்வாக மேறகொண்டு பிரபஞ்சத்தவரோடொத்து நடித்தாற்போலு மென உவமை கூறினர். யோகிகள்சிலா ப்ரஹ்மவித்தை தேர்ந்து அவித்தியாசம்பந்த மில்லாதிருந்து உலகத்தவரை நல்வழிபடுத்து தற்பொருட்டுத் தாமும் அவரோடொத்துப்பயிலுமாறு பிரகிருதிவசப்பட்டவர்போன்று நடித்ததனை இதிஹாஸபுராணங்களிற் காணலாம். (சுகா ஜட பரதர் நம்மாழ்வார் முதலியவர்களை இத்திறத்தவ ரென்னலாம்.) பரமுத்தி நேர்கிற வரையில் ஜீவந்முக்தரிருக்கிறநிலை இத்தன்மைத்தெனப. சத்திய ஞானத்துக்குமாறாகிய திரிபுணர்வு ஆதலால், 'அவிஞ்சையெனும் பொய்' எனப்பட்டது. அற்பமான ஆசாபாசம் புறத்தே பிடித்திழுக்க அதனையகற்றும் வல்லமையில்லாதவன்போல அதற்குஉட்பட்டு மெலிந்துகாட்டுதலும், கொடிய இந்திரியங்களும் பிரஹ்மஜ்ஞானமில்லாதவர்களும் புறத்தேயிழுக்கத் தான் வீடுபெறும்வகையை யறிந்திருந்தும் விரைவுகொள்ளாமற சமயத்தை யெதிர்பார்த்துக்கொண்டு உலகத்தோடொப்ப நடந்துகாட்டுதலும், உபமானப் பொருளாகிய அந்தயோகியின் நிலையிலும் அமையுமெனக காணக. பி-ம்.— [1]இல்லான்போனுடங்கி. [2]விரைவில்லான். (கஉஉ)

கஉங.—அரக்கர்கள் அநுமான்வாலில் தீக்கொளுவுதல்.

வேந்தன் கோயில [1]வாயிலொடு விரைவிற் கடந்து வெள்ளிடையின்
போந்து புறநின் றிரைக்கின்ற பொறைதீர் மறவர் [2]புறஞ்சுற்ற
வேந்து நெடுவால கிழிசுற்றி முற்றுந் தோய்த்தாரிழுதெண்ணெய
காந்து கடுந்தீக் [3]கொளுத்தினா ரார்த்தா ரண்டங் கடிகலங்க.

(இ - ள்.) வேந்தன் கோயில் வாயிலொடு விரைவில் கடந்து - (இங்ஙனம அநுமானைக் கயிறுகள்கொண்டு கட்டியிழுத்துக்கொண்டே) இராவணனது அரண்மனை வாயிலை விரைவிற்கடந்து, வெள்ளிடையின் போந்து - வெறுவெளியிடத்திலே சென்று, புறம நின்று - (அநுமானைசசுற்றி) எப்புறமும நின்று, இரைகின்ற - ஆரவாரஞ்செய்கிற, பொறை தீர் மறவர் - பொறுமையில்லாத அந்த இராக்கதவீரர்கள்,—எந்து நெடு வால் புறம் சுற்ற கிழிசுற்றி - உயர எடுக்கப்படுகிற நீண்ட (அந்த அநுமானுடைய) வாலில் எப்புறமுஞ் சூழும்படி (பலவகைச) சீலைகளைக்கொண்டு சுற்றி, முற்றும் இழுது எண்ணெய் தோய்த்தா - அவ்வால் முழுவதையும் நெய்யிலும் எண்ணெயிலும் தோய்த்தெடுத்து, காந்துகடுந் தீ கொளுத்தினர் - உக்கிரமான கொடிய நெருப்பைப் பற்றவைத்து, அண்டம் கடி கலங்க ஆர்த்தார் - அண்டகோளம் முழுவதும் (அதிர்ச்சிபெற்றுத் தனது) நிலைகுலையும்படி ஆரவாரஞ்செய்தார்கள்; (எ - று)

மறம் - பலம், பராக்கிரமம், கோபம், கொலை; அதனையுடையவர், மறவர். எந்து நெடு வால் - நீண்டுஉயர்ந்த வால். 'புறமசுற்ற எந்து நெடுவால்' என்பதற்கு - பக்கங்களிலெல்லாஞ் சூழ நின்று (தாம கயிறுகட்டித) தூக்கிக் கொண்டுவந்த நீண்டவாலெனினு மமையும். கிழி - கிழிக்கப்பட்ட ஆடை.

எணெணெய் - எள்நெய்; காந்துதல் - ஒளிவீசுதல், எரிதல். பி - ம்:—[1]வாயி றுறும. [2]புடை. [3]கொளுததிப்பின்.
(கஉங)

கஉச.—மிகப்பல அரக்கர்கள் அங்குத் திரளுதல்.

ஒக்க வொக்க வுடன்விசித்த வுலப்பி லாத [1]வுரப்பாசம்
பக்கம பக்க மிருகூறாய் நூறு யிரவர் பற்றினர் [வோர்
புக்க படைஞர் புடைகாப்போர் புணரிக் கணக்கர் புறஞ்செல்
[2]திக்கி னளவா லயனின்று காண்போாக் கெல்லை தெரிவரிதால்.

(இ - ள) ஒகக ஒகக உடன் விசிதத - பலஒன்றுசேரும்படி ஒருங்கு சோத்துக்கட்டின, உலப்பு இலாத உரம பாசம் - அழியாத வலிமையை யுடைய கயிறறை, பககம பககம - இரணடுபெக்கங்களிலும், இரு கூறு ஆய - இரணடுபிரிவாய், நூறு ஆயிரவா பற்றினா - லகஷம்போ பிடித்துக்கொண டாாகள்; புக்க - (அவர்களுடன்) வநத, புடை காபபோர் படைஞர் - பக்கங களில் நின்று காவல்செய்பவாகளான ஆயுதபாணிகளாகிய வீராகள், புணரி கணககா - சமுததிரமென்னுந் தொகையுள்ளவா; புறம செல்வோர் - (அவா களின்) பககங்களிற சூழ்ந்து வருபவாகள, திககின் அளவு - (அவ்விடத்தின் நாற்புறத) திசையெல்லை எவ்வளவு உண்டோ அவ்வளவினர்; அயல் நின்று காணபோாககு - (அதறகும) அபபால் நின்று வேடிக்கைபார்ககவருபவர் கட்கு, எல்லை தெரிவு அரிது - அளவு அறியவொணணாதது; (எ - று.)

ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லகஷம் பத்துலகஷம் கோடி முதலாக எணணபபடுகிற ஒன்றினுமொன்று பதின்மடங்கான எண வகுப்புக களுள் இருபத்தாறுதானமாகிய எண, சமுததிர மெனப்படும, கடல் சாகரம் என வழங்குவதும அது. அதுவே இங்கு 'புணரி' என்ற பரியாயநாமத்தாற் குறிக்கபபட்டது அதன தொகை, பதினாயிரங்கோடி உலப்பு இலாத - அறு படாத என்றபடி; முடிவறற எனினுமாம. இனி, முதலடிககு - (கை கால் தோள தொடை கழுத்து இடுப்பு என்ற உறுப்புக்களிலெல்லாம்) ஒன்றிற் போலவே அனைததிலும் ஒருங்குகட்டபபட்ட அளவற்ற வலிய கயிறுகளென் றுங கொள்ளலாம். லகஷம போ இரணகூறாயபபிரிநது இரணடு பககங களிலும (ஒவ்வொருபககததுக்கு ஐமபதினாயிரவராகப்) பிடிததுக்கொண டாாக ளென்பது, இரணடாமடியின் பொருள்; மேல் கஙச - ஆஞ்செய்யுளில் "இற்றவாளாகக்ர் நூறாயிரவரும" என வருதல் காண்க. பின்னிரணடடிககு- அவர்களுடன் வந்த சமுததிரமென்னுந் தொகையினரான ஆயுதபாணிக ளாகிய வீரர்கள் அருகில்நின்று காவல்செய்பவாகளாய் எங்புறத்துஞ் சூழ்ந்து செல்லலானாகள், திசையெலலையளவாகப் புறத்துநின்று வேடிக்கை பார்ப் பவாகட்கு அளவு அறியவொணணாதது என்று பதவுரை கூறவும் படும். பி - ம்:—[1]உடறபாக்ம. [2]திக்கினளவா.
(கஉச)

கஉரு.—அரக்கர்கள் எங்கும் பறையறைந்து செய்திதெரிவித்து அனை வரையும் வேடிக்கைபார்த்தற்கு அழைத்தல்.

அந்த நகருங் கடிகாவு மழிவித் தக்கன் [1]முதலாயோர்
சிந்த நூறிச் சீதையொடும் பேசி மனிதர் திறஞ் [2]செப்ப
வந்த குரங்கிற் குற்றதனை வமமின் காண வம்மென்று
[3]தநதந் தெருவும் வாயிறொறும் யாரு மறியச் சாற்றினா.

(இ - ள்.) 'அந்த நகரும் கடி காவும் அழிவித்து - அப்படிப்பட்ட இலங்காபுரியையும் (அதனைச்சார்ந்த) பாதுகாவலுள்ள சோலையையும் அழியச்செய்து, அக்கன் முதல் ஆயோர் சிந்த நூறி - அட்சகுமாரன் முதலான இராக்கதவீராகள் அழியும்படி சிதைத்து, சீதையொடும் பேசி - சீதையுடன் பேசுவதுஞ்செய்து, மனிதர் திறம் செப்ப வந்த - சிலமனுஷ்யர்களுடைய திறமையை (இராவணனிடததே) சொல்லுதற்கு வந்த, குரங்கிற்கு-ஒருகுரங்குக்கு, உற்றதனை-நேர்ந்த துன்பநிலையை, காண-வேடிக்கை பார்த்தறகு, வம்மின் வம் - வாருங்கள் வாருங்கள்!' என்று—, தம் தம் தெருவும் வாயில்தொறும் யாரும் அறிய சாற்றினர் - (இராகதர்கள் அவ்விலங்காபுரி முழுவதிலு முள்ள) தங்கள் தங்கள் வீதிகளிலும் (அவறறிலுள்ள) வீட்டு வாசல்களெல்லாவறறிலும (போய்) அனைவரும அறியும்படி பறையறைந்து செய்திகூறினர்கள்; (எ - று)

செயல்நிகழ்ந்தமுறையை நோக்குமிடத்து 'சீதையொடும் பேசிக் கடி காவும் அந்தநகரும்அழிவித்து அக்கன்முதலாயோ சிந்த நூறி மனிதர்திறஞ் செப்பவந்த குரங்கு' எனக் கூறவேணடுவதாயினும, தாம் அறிந்த முறைமைப்படி இவ்வாறங் கூறின ரென்க 'அந்தநகர்' என்பதில், அகரசுட்டு - பிரசித்தியைக காட்டும்; அந்தம் நகா என்று பிரிதது, அழகியநகர மெனினுமாம். கடி - நறுமணமுமாம் பீ - மீ.—[1]முதலோரைச் [2]செப்பி. [3]தந்தந் தெருவுதொறும். (கஉரு)

கஉரு.—அச்செய்தியைச் சீதை அறிந்து வருந்துதல்.

ஆர்த்தா ரண்டத் தப்புறத்து மறிவிப் பார்போ லவ்வகோடிங்,
கீர்த்தார் முரச மெறறினு ரிடித்தார் தெழித்தா ரெம்மருங்கும,
பார்ததா ரோடிச் [1]சாரகிக்கும் பகர்ந்தா ரவளு முயிரபதைத்தாள்,
வேர்ததா [2]ளுலந்தாள் விம்மினாள் விழுந்தா ளழுதாள் வெய்துயிர்த்தாள்.

(இ - ள்.) (இராக்கதர்கள்),—அண்டதது அப்புறததும் அறிவிப்பாரபோல் - இந்த அண்டகோளததுககு வெளியிலும [பகிரண்டங்களிலுள்ளாரகளும்] (இச்செயதியைத) தெரிவிப்பவர்களபோல, ஆர்ததார் - (மிகக பேரொலியெழும்படி) ஆரவாரிததார்கள்; அவ்வகோடு இவ்வகு முரசம் ஈர்த்தா எறறினர் - அவ்வகும இவ்வகுமாக (ப பலவிடங்களிலும) பேரிகைவாததியங்களை இழுததுவந்து அடிததாகள்; இடிததா - இடிமுழக கம்போலக் காசிததாகள; தெழிததா - (அநுமானை) அதட்டினர்கள், எ மருங்கும் பார்ததா - (அநுமானை) எல்லாப்பகககளிலும்

பாரததார்கள்; ஓடி - ஓடிப்போய், சானகிக்கும் பகர்ந்தா - சீதைககும் (இச் செயதியைக) கூறினாகள; (அதுகேட்டவுடனே), அவளும - அந்தசசீதை யும், உயிா பதைததாள - உயிாதுடிததாள்; வோததாள் - உடல்வியர்ததாள்; உலந்தாள் - தவிததாள்; விம்மினாள் - ஏக்கமுற்றாள்; விழுந்தாள் - கீழே விழுநதாள்; அழுதாள்—; வெயது உயிாததாள - உஷ்ணமாகப் பெருமூசசு விட்டாள்: (எ - று.)

'அண்டத்தபுறததும அறிவிப்பார்போல்' என்றதை, மத்திமதீபமாக, 'முரசமெற்றினா' என்பதனோடுங கூட்டுக. 'அஙகோடு இஙகு ஈாத்தார்' என்பதற்கு - (அநுமானை) அஙகும இஙகுமாகப் பலவிடங்களில் இழுததுச் சென்றாகளென்றும, 'முரசம எறறினா இடிததா' என்பதற்கு - பேரிகை களை அடிதது இடிமுழககஞ்செயதாக ளென்றும் பொருள்கொள்ளலாம். பி - ம்:—[1]சானகிககுப. [2]உலந்தா. (கஉசு)

கஉஎ.—சீதை அக்கினிபகவானைப் பிரார்த்தித்தல்.

தாயே யனைய கருணை பான் [1]றுணையை யேதுந் தகவில்லா
நாயே யனைய வலலரக்கர் நலியக் கண்டா னலகாயோ
நீயே யுலகுக் கொருசான்று நிறகே தெரியுங் [2]கறபினாற
றாயேனென்னிற றொழுகின்றே னெரியே யவனைச் சுடலென்றாள்.

(இ - ள.) 'எரியே - அகனினிதேவனே! தாயே அனைய கருணையான் துணைய - (எலலாவுயிாகளிடததும) தாயபோன்ற அருளுடையவனான ஸ்ரீராமபிரானது துணைவனாகிய அநுமானை, ஏதும் தகவு இலலா நாயே அனைய வல் அரக்கா - சிறிதும் பெருமைகுணமிலலாத நாய்போலககடைப் பட்ட கொடிய இராககதாகள், நலிய - வருதத, கண்டால் - (நீ) பாாததால், நலகாயோ-(அவன்பகல்) அருள்செய்யமாட்டாயோ? உலகுககு ஒரு சான்று நீயே - இநத உலகததுக்கு ஒபபற்றசாகஷியாவான நீயே; (ஆதலால), நிற்கே தெரியும - உனககே (எல்லாந) தெரியும; கற்பினால் தூயேன என்னில-பதி விரதா தருமததினால (யான்) பரிசுததியுடையவளே யானால், அவனை சுடல்- அநத அநுமானைச சுடாதே; தொழுகின்றேன் - (உன்னை நான்) வணஙகு கின்றேன்,' எனறாள் - என்று (அகனினியைககுறிததுச சீதை) ஆணையிட்டுக் கூறினாள்; (எ - று.)

நீயே உலகுககு ஒருசான்று—மேல் யுத்தகாணடத்தில் ''அழிப்பில சான்று நீ யுலகுககாதலால, இழிபபிலசொல்லி நீ யிவளை யாதுமோ, பழிப் பில ளென்றனை பழியு மின்றினிக, கழிப்பிலள்'' என்று இராமபிரான் அக் கினிதேவனைநோககிக கூறுவது முணாக. சுடல - எதிாமறையொருமை யேவல். 'நலிய' என்பது, இனகே பிறவினை. பி - ம்:—[1]துணையே. [2]கற் பதனில். (கஉஎ)

வேறு.

கஉஅ.—அனல் தளிர்தல்.

[1]வெளுத்தமென் னகையவள விளம்பு [2]மேல்வையி
னொளித்தவெங் கனலவ னுள்ள முட்கினான்

றளிர்த்தன மயிர்புறஞ் சிலிர்ப்பத் தண்மையாற்
குளிர்த்ததக் குரிசில்வா லென்பு கூரவே.

(இ - ள்.) வெளுத்த மெல் நகையவள் - வெணணிறமான மெல்லியபற்களையுடையவளான சீதாபிராட்டி, விளமபும ஏல்வையின் - (இவ்வாறு) சொன்னபொழுது, ஒளிதத வெம் கனலவன் உளளம உட்கினன - ஒளி பெற்ற வெவவிய அககினிதேவன் (அவளது கற்பின் தூய்மையைக் கருதி அநுமானைசசுடுவதில்) மனத்து அசசங்கொணடான்; (அவ்வளவிலே), மயிர் தளிர்ததன புறம சிலிர்ப்ப - மயிர்கள தளிர்த்தவையாய் உடம்புமுழுவதுஞ் சிலிர்ததலுண்டாம்படி, அ குரிசில் வால் - பெருமையிற்சிறநதவனான அநத அநுமானது வாலானது, என்பு கூர - எலும்பினளவாக [எலுமபுவரையிலும்], தணமையால் குளிர்ததது - (உண்டான) சீதளததினாற் குளிரசசியடைந்தது; (எ - று.)

மெல் நகை - புன்சிரிப்புமாம். ஒளிதத என்பது - ஒளியென்னும் பெயரினடியாகப்பிறந்த பெயரெச்சம்; இது, அசசததினால் தன்வெப்பததை ஒளிததுகொள்ள முயல்கிற என்ற பொருளுமதோன்ற நின்றது மயிர்தளிர்ததல் - மயிர்க்கூச்செறிதல். இது - இங்கே, மிக்க குளிரசசியினாலாகியது. பி-ம்: —[1]விளாததவெணணகையினாள். [2]எல்லையின். (௧௨௮)

வேறு.

௧௨௯.—இதுவும், அடுத்த கவியும் - அதுபற்றிய விவரம்.

மற்றினிப் பலவென் வேலை வடவனல் புவிய ளாய
கற்றை [1]யங் கனலி மற்றைக காயத்தீ முனிவர் காக்கு
முற்றுறு மும்மைசெ சந்தீ முப்புர முருங்கச்சுட்ட
கொற்றவ னெற்றிக் கண்ணின் வன்னியுங் குளிர்ந்த வன்றே

(இ - ள்.) மற்று இனி பல என் - (பிராட்டியின் ஆணைப்படி அனல் முற்றுக குளிர்ந்ததெனபதைப்பற்றி) இனி மற்றும் பல கூறவேணடுவது என்ன இருக்கிறது! வேலை வட வனல் - கடலிலுள்ள படபாமுகாககினியும், புவி அளாய கற்றை அம் கனலி - பூமியிலேபொருந்திய சுவாலைததொகுதியை யுடைய அககினியும், மற்ற காயம் தீ - அதுவல்லாத வானத்திலுளள அக்கினியும், முனிவர் காக்கும் முற்றுறு மும்மை செம தீ - (அவிந்திடாதபடி) முனிவர்கள் பரிபாலித்துவருகிற (வைதிகநியமம) பூரணமாகப்பெற்ற செந்நிறமான மூன்றுவகை அககினிகளும், முப்புரம் முருங்க சுட்ட கொற்றவன் நெற்றி கணணின் வன்னியும் - மூன்றுநகரங்களும அழியும்படி எரிதத வெற்றியையுடையவனான சிவபிரானது நெற்றிக்கண்ணிலுள்ள அககினியும், குளிர்ந்த - குளிரசசியடைந்தன; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்; அன்று - அப்பொழுது எனினுமாம்.

அனல் முற்றுக குளிர்ந்த தென்ற கருததை இங்ஙனம் அதிசயோக்தி வகையாற் கூறினார்; அடுத்த செயயுளும் இவ்வாறே. பட

பாநல மென்ற வடமொழிததொடர், வடவனலென விகாரப்பட்டது; இது, கடலினிடையே ஒரு பெண்குதிரையின் முகத்தினின்று மூண்டெரியுந் தீ; கடல்நீரை மழைப்பெருககு முதலியவற்றால் மிகாதபடி உறிஞ்சிநிற்பது. படபா - பெண்குதிரை. அநலன் - அகநினி. காயம் - ஆகாய மென்பதன் முதற்குறை விகாரம். இனி, 'காயத்தீ' என்பதற்கு - உடம்பிலுள்ள அக்கினி [உதராகநினி யெனப்படும் பசிதீ] யென்று உரைப்பாரு முளர். வைதிக அகநினி என்பார், 'முற்றுறுதீ' என்றார். மும்மைதீ - காருகபத்தியம், ஆகவநீயம், தட்சிணாகநினி நெருப்பென்னும் ஒருபொருளைக்குறிக்கிற அனல, கனலி, தீ, வன்னி என்ற பலசொற்கள் அடுத்துவந்தது, பொருட்பின்வருநிலையணி. வஹ்நிஎன்ற வடசொல் வன்னியென விகாரபபட்டது. பி - மீ:—[1]வெங. (கஉகூ)

கரூ0. அண்டமுங் கடந்தா னங்கை யனலியுங் குளிர்ந்த தங்கிக
குண்டமுங் குளிர்ந்த மேகத் துருமெலாங் குளிர்ந்த கொற்றச
சண்டவெங் [1]கதிர வாகித் தழங்கிருள விழுங்குந்தாவின்
மண்டலங் குளிர்ந்த மீளா நரகமுங் குளிர்ந்த மாதோ.

(இ - ள்.) அண்டமும கடந்தான் - அண்டகோளத்தின் கீழெல்லைகளைக கடந்து மேலுள்ளவனான பிரமனது, அம் கை - அகங்கையிலுள்ள, அனலியும - அகநினியும், குளிர்ந்தது - குளிர்ச்சியடைந்தது; அங்கி குண்டமும குளிர்ந்த - (அப்பிரமன் வேள்விசெயயும) அகநினிகுண்டங்களும் குளிர்ச்சியடைந்தன; மேகத்து உரும் எலாம் குளிர்ந்த - மேகங்களிலுள்ள (தீவடிவமான) இடிகளெல்லாங குளிர்ச்சியடைந்தன; கொற்றம் சண்டம வெம கதிர ஆகி - வெற்றியையுடைய உகிரமான உஷ்ண கிரணங்களையுடையவையாய, தழங்கு இருள விழுங்கும - மிகக இருளை விழுங்குகிற, தா இல் மண்டலம் - அழிவற்ற சூரியமண்டலம், குளிர்ந்தது - குளிர்ச்சியடைந்தது; மீளா நரகமும - (தீவினைசெய்தவர்) மீளவொண்ணாத (அகநினிமயமான சில கொடிய) நரகங்களும், குளிர்ந்த - குளிர்ச்சியடைந்தன; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

அண்டத்திறகு உட்பட்ட பதினான்கு உலகங்களுள்ளும மேலதாகிய சத்தியலோகத்தி லிருப்பவனாதலின, பிரமன் 'அண்டமுங்கடந்தான்' எனப்பட்டான் அந்தணரது அகங்கையில அகநினியிருக்கிற தென்ற நூற்கொள்கை பற்றி, அந்தணசிரேஷ்டனான பிரமனது அகங்கையில் அனலி கூறினார். திரிவிகிரமனாய் வளர்ந்து அண்டமுழுவதையும அளந்தவனான வாமநமூர்த்தியினது அங்கைநெருபபென்று உரைப்பாரு முளர்; அவன அந்தணனாதலின. தா - உரிச்சொல். இருள விழுங்கும - இருளையொழிக்கு மென்றபடி; உணணாதது உண்பதுபோலச சொல்லபபட்ட மரபுவழுவமைதி. இங்கு 'மீளாநரகம்' என்றது, மகாஜ்வாலம அகநினிஜ்வாலம அகநினிப்பிரபை முதலியவற்றை.

இவ்விரண்டு செயயுள்களும, "அண்டமூலத்துககப்பா லாழியுங கொதித்த தேழு, தெண்டிரைககடலின் செயதை செப்பி யென தேவன

சென்னி, பணடைநாளிருந்த கஙகைகநகையும் பதைத்தாள் பாரப்பான், குணடிகை யிருந்தநீருங குளுகுளு கொதித்ததன்றே" என 'மேல் யுததகாணடத தில் வருஞ் செயயுளும ஒதத வாய்பாடுடையனவாதல் காண்க. பி - ம் — [1]கதிராகளாகி. (கஙூ0)

கஙக.—அனல்துளிர்ந்தகாரணத்தைக் கருதி அநுமான் களித்தல்.

வெறபினு லியன்ற தன்ன மேனியை விழுங்கி வெநதீ
நிறபிலுஞ சுடாது நின்ற நீரமையை [1]நினைவி னோக்கி
யறபினு ரறுத [2]சிந்தை யனுமனுஞ் சனகன் பாவை
கறபினு லியன்ற தென்பான் பெரியதோ [3]களிப்ப னுனன்.

(இ - ள்.) அற்பின் நாா அறுத சிந்தை அநுமனும் - (சீதாராமர்கள் பக கல்) அன்பாகிய பாசபந்தம நீஙகாத மனத்தையுடைய அநுமானும், வெம் தீ- (இயற்கையில) வெப்பமுடையதான அகநினி, வெற்பினுல் இயன்றது அன்ன மேனியை விழுஙகி நிறபினும-மலையினுலமைநதது போன்ற [பெரிய வலிய] தனது உடம்புமுழுவதும மறைய மூடிககொண்டு நின்றாலும், சுடாது நின்ற - தன்னைசசுடாமல (குளிராசசிகொணடு) நினற, நீர்மையை - ஆசசரி யகதன்மையை, நினைவின நோகக - தனது மனதிலுல் ஆராய்ந்து, சன கன் பாவை கற்பினுல இயன்றது என்பான் - ஜநகமஹாராஜனுடைய சிததி ரப்பதுமைபோலழகிய பெண்ணுன சீதையினது கற்புநிலைமையினுல் இஙஙன மாயிற்றென்று ஊகிதது உணாநதவனுகி, பெரியது ஓா களிபபின ஆனுன் - ஒப்பறற பெருஙகளிப்பை யுடையவனுயினுன்; (எ - று.)

நினைவின்நோககுதல் - நுண்ணுணர்வுகொணடு உண்மையை ஊகிதது அறிதல. மகாபுத்திமா னுதலால, உள்ளபடி ஊகிததனன். அநுமானது உடலில் நாகபாச பந்தம் அறறதேயன்றி அவனது சிந்தையிலே ராமபசதியா கிய பாசபந்தம அறறில தென்பா, 'அற்பினுரறுதசிந்தை யனுமனும்'என்றார். பி - ம்:—[1]நினைந்து. [2]உளளதது. [3]களியன. (கஙூக)

கஙஉ.—இலங்காபுரிழழவதையும் அரக்கர்கள் காட்ட, அநுமான் காணுதல்.

அற்றையவ் விரவிற றான்ற னறிவினுன் முழுது [1]முன்னப
பெற்றில னெனினு மாண்டொன றுளளது பிழையுறு மேமே
மறறுறு பொறிமுன செலல மறைந்துசெல [2]லறிவு மானக்
கறறிலா வரககா தாமே காட்டலிற றெரியக் கண்டான்.

(இ - ள்.) தான் - அவ்வநுமான்தான், அற்றை அ இரவில் - அன் றைததினதது முனனிரவிலே, தன் அறிவினுல் முழுதும் உனன பெற்றிலன் எனினும - தனது அறிவினுல் (அவ்வூரிலுளள) இடஙகளெல்லாவற்றையும் ஊனறியுணரப்பெறறனனில்லை யெனறாலும, ஆணடு உள்ளது ஒன்று பிழை உறுமே - அநநகரதது உள்ளவிடம ஒனறேனுந் தவறுமலே,—கறறிலா அரக் கர் தாமே காட்டலின் - மூடாகளான அவ்விராகததாகள தாஙகளே காட்டிய தனுல்,—மறறு உறு பொறி முன் செல்ல மறைந்து செல் அறிவு மான-புறத்

துறுப்பாயப் பொருந்திய இந்திரியங்கள் (பொருள்களினிடத்து) முன்னே செல்ல (அவற்றின் பின்னே) மறைந்து செல்லுகின்ற அறிவையொப்ப, தெரியக்கண்டான் - நன்றாகப்பார்த்தான்; (எ - று.)

உவமையணி. அன்றை மாலைப்பொழுதிற் கடல்கடந்து இலங்கைக் புகக அநுமான அவ்விரவின் முற்பகுதியிற் சீதையைத் தேடிக்கொண்டே அரக்கரமுழுவதுஞ் சென்று பலவிடங்களையும் பார்த்ததமை, கீழ் ஊர்தேடு படலத்திற் பரக்கக் கூறப்பட்டது. அங்ஙனம் விரைவுடன் தேடியபொழுது சில இடங்கள் ஊன்றிப்பார்க்கப்படாது. விட்டிருந்தாலும், அக்குறையும் தீருமாறு, இப்பொழுது அரக்கர்கள் தாமே அநுமானைச் சூழ்ந்து நின்று வலிய அழைத்துச்சென்று காட்ட, அவர்களிடையே பதுங்கிச்சென்ற அநுமான் கண்டனன். அதற்கு, கண் செவி மூக்கு முதலிய பொறிகளின் வழியே அறிவு புலன்களிற் சென்று பற்றுதலை உவமைகூறினார். பகைவரது தூதனாய வந்தவன் புலனறிந்து கொண்டுபோகுமாறு அவனுக்குத் தமது நகரமுழுவதையும் வலியக்கொண்டு காட்டுதல், பேதைமை யாதலால், 'கற்றிலாவரக்கர்' எனப்பட்டார். அறிவு உருவமில்லாததாதலால், அதற்கு 'மறைந்துசெல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பி - ம்.— [1]உளளப். [2]அறிவை. (கருஉ)

கருரு.—அநுமான் வானத்திலெழும்ப, அரக்கர்கள் தோளற்றுக் கீழேவிழுதல்.

முழுவதுந் தெரிய நோக்கி முற்றுமூர் முடிவிற் சென்றான்
வழுவுறு கால மீதென் றெண்ணினன் [1]வலிதிற் பற்றித்
தழுவின னிரண்டு நூறாயிரம் [2]புயந் தடக்கைதாம்போ
டெழு[1]வென நால விண்மே லெழுந்தனன் விழுந்த வெல்லாம்.

(இ - ள்.) முழுவதும் தெரிய நோக்கி - (அங்ஙனம்) அவ்விலங்காபுரி முழுவதையும் நன்றாகப்பார்த்துக்கொண்டே, முற்றும் ஊர் முடிவில் சென்றான் - சூழ்ந்துவரப்பெற்ற அந்த ஊரினது கடையெல்லையில் வந்து சேர்ந்தவனான அநுமான், வழுவுறு காலம் ஈது என்று எண்ணினன் - (இவ்வரக்கர்கள் கட்டுக்காவலினின்று தான்) தப்பி நீங்கிப் போதற்கு ஏற்ற சமயம் இதுவென்று எண்ணி, வலிதின் பற்றி தழுவினன் - (இருபுறத்துக்கயிற்றையும்) வலியப்பிடித்து (இருபுறத்து விலாவிலுஞ் சேர) இடுக்கிக் கொண்டு,—இரண்டு நூறாயிரம் புயந் தடக்கை தாம்போடு எழு என நால - (அரக்கர்களுடைய) இரண்டுலக்ஷம் தோள்களும் பெரியகைகளும் (இருபுறத்துக்) கயிற்றுடனே தூணைபோலத் தொங்கும்படி, விண்மேல் எழுந்தனன் - வானத்திலே உயர எழும்பினான்; (அங்ஙனம் எழுந்த மாத்திரத்திலே), எல்லாம் விழுந்த - (கயிற்றைப்பிடித்து இழுத்துவந்த) அரக்கர்கள் கூட்டமெல்லாம் கீழேவிழுந்தன; (எ - று.)

அநுமான் திடீரென்று விசையாகத் திமிறிக்கொண்டு மேல் எழுந்த பொழுது, அரக்கர்களுடைய தோள்களான கைகள் தளிர்பட்டுக் கயிற்று

டனே தொகை, அவர்கள் தோளற்றவர்களாய்க் கீழ்விழுந்தன ரென்க. மூற்றுதல்-வளைதல, சூழ்தல். பி - ம்:—[1]வலியிற். [2]புயததடக்கைதாம்போடு, புயந்தடக்கைதாமபோடு. [3]எனலான. (கஙஙு)

கஙச.—அநுமானது அப்பொழுதைய தோற்றம்.

இற்றவா ளரக்கர் நூறு யிரவரு மிழந்த தோளார்
முறறினு ருலந்தா ரையன் மொய்ம்பினோ டுடலை மூழ்கச்
சுற்றிய கயிற்றி னோடுந் தோன்றுவா னரவின் சுற்றம்
பற்றிய கலுழ னென்னப் பொலிந்தனன் விசும்பின் பாலான்.

(இ - ள்.) இற்ற - தனிப்பட்டுவிழுந்த, வாள் அரக்கா நூறுயிரவரும - கொடிய அந்த இராகததாகள் நூறுயிமபேரும, இழந்த தோளார்-தோளிழந்தவாகளாய, முற்றினா உலந்தா - இறந்தொழிந்தாகள்; மொய்மபினோடு உடலை மூழ்க சுற்றிய கயிறறினோடும - (தனது) தோள்களோடு உடம்பையும் அழுந்தககட்டிய கயிற்றினுடனே, விசும்பின் பாலான் தோன்றுவான் - வானததினிடத்தவனாய்க காணப்படுகின்ற, ஐயன்-சிறந்தவனான அநுமான், அரவின் சுற்றம பற்றிய கலுழன் என்ன பொலிநதனன் - சாப்பவாககங களாற் பிடிததுச சூழப்பட்ட கருடன்போல விளஙகினான்; (எ - று.)

சிறியதிருவடியாகிய ஆஞசநேயமூர்ததிககுப் பெரியதிருவடியாகிய கருடாழ்வான் ஒள்ளியபெரியவடிவிலும், அவ்வநுமானது உடம்பு முழுவதுஞ் சுற்றிய கயிற்றுககு அக்கருடனது உடமபிற் சுற்றிய நாகஙகள் வடிவிலும உவமை யெனக் காணக. கருடனுககு நாகம்போல, அநுமானுககு அக்கயிறு எளிதில்விடுவிக்கத்தக்க தென்பது போதரும்; சுற்றப்பட்டவாகளை ஒன்றுஞ செய்யமாட்டாமை இரண்டுக்கும ஒக்கும். பாம்பைக கருடன் பிடிததுக கொள்ளும்போது அதனுடம்பிற் சுற்றிக்கொள்ளுதல் பாம்பின் இயல்பாகும். (கஙஙச)

கஙடு —அநுமான் தனதுவாலை இலங்கையின்மீது செலுத்துதல்.

துன்னலர் புரத்தை முற்றுஞ் சுடுதொழிற் றொல்லை யோனும்
பன்னின பொருளு நாணப் பாதக ரிருக்கை பறற
மன்னனை வாழ்ததிய பின்னை வயங்கெரி மடுப்பெ னென்னுப
பொன்னகர் மீதே தன்போர் வாலினைப் போக விடடான்

(இ - ள்.) பின்னை - பின்பு,—(அநுமான்),— 'துனனலா புரததை முற்றும சுடு தொழில் தொல்லையோனும - பகைவாகளுடைய திரிபுரததை முழுவது மெரிததலாகிய தொழிலைசசெயத பழமையான பரமசிவனும், பன்னினபொருளும-(அவனுக்கு அப்பொழுது உதவியா யிருநதன வெனக்) கூறபபடுகின்ற (பல) பொருள்களும, நாண - வெட்கமடையும்படி, பாதகர் இருக்கை பற்ற மன்னனை வாழ்ததி வயஙகு எரி மடுப்பன - பாவிகளான இவவரக்காகளுடைய இருபபிடமாகிய இவவிலஙகை பறறியெரியுமாறு இராமபிரானைத் துதிததுப் பிரகாசிககிற நெருப்பைப் பறறவைப்பேன,' என்னு - என்று எணணி, தன் போர் வாலினை பொன் நகாமீதே போக

விட்டான் - தனது போர்த்திறமமைந்தவாலைப் பொன்மயமான அவ்விலங்காபுரியின்மேலே செல்லவிட்டான், (எ - து.)

இங்கே 'துன்னலா' என்றது, விதயுந்மாலி முதலிய திரிபுரத்து அசுரர்களை. 'பன்னினபொருள்' என்றது - மேருகிரியாகிய வில், ஆதிசேஷனாகிய நாணி, திருமாலாகிய அம்பு, பூமியாகிய தேர் முதலியவற்றை. உபபலங்கள் பலவற்றை உடன்கொண்டுசென்ற சிவபிரான் திரிபுரமெரித்ததனினும், யாதொரு துணையுமில்லாத தான் இவ்விலங்கையை யெரித்தல் சிறக்குமென்னுங் கருத்தால், 'துன்னலர்புரத்தை முற்றுஞ் சுடுதொழிற் றொல்லையோனும் பன்னினபொருளும் நாண' எனப்பட்டது. ஸ்ரீராமனருள்கொண்டு இந்த அரியசெயலைசெய்வே னென்பார், 'மன்னனைவாழ்த்தி வயங்கெரி மடுபபென' என்றார். 'மன்னனைவாழ்த்தி' என்பதை 'போகவிட்டான்' என்பதனோடு இயைப்பினுமாம். மன்னன் - எல்லாவற்றுக்குந் தலைவன்; சருவேசுவரன். பகைவாகளை வளைத்தற்கும் எடுத்து வீசுதற்கும அடித்ததற்குமாகப் பலவாறு போரில் அநுமானது வால் உதவுதலால், 'போவால்' எனப் பட்டது.

இனி, இசசெய்யுளுக்கு வேறொருவகையாற் பொருள் கூறவும் படும்; அது வருமாறு.—பன்னினபொருளும் நாண - (எமது துணைவலிமை கொண்டே சிவபிரான் திரிபுரமெரிகக்ப் போகின்றன னென்று செருக்கித் தற்புகழ்ந்து) கூறிய (உபபலமாய்நின்ற) பொருள்கள பலவும நாணமடையும்படி, துனனலா புரததை முற்றும சுடுதொழில் தொல்லையோனும் - பகைவாகளான அசுரர்களுடைய திரிபுரமுழுவதையும முன்பு (தனது சிரிப்பைக கொணடு) எரிததல் செய்தவனான சிவபிரானது அமசமாகிய அநுமானும், (இப்பொழுது) பாவிகளாகிய இவ்வரககாகளது இருப்பிடமான இவ்விலங்கை பறறியெரியும்படி எனது தலைவனான இராமனை வாழ்த்தி இந்நகரததில் நெருப்பைப் பற்றவைபபே னெனது அப்பொனனகரின்மீதே தனது வாலினைப போகவிட்டன னென்பது. (வாயுகுமாரனான அநுமான் ருத்திராம்சமுமுடையனாதல் முன்பு விளககப்பட்டது.) (கஙடு)

கஙசு.—இதுமுதல் மூன்றுகவிகள் - அந்தவாலின் வருணனை.

தன்னிறைக் குறுகண் வெய்யோர் தாமியற் றலுங்கேட் டிங்னே
யன்னவாக் கிறுதி யாக வணிநக ரழிப்ப லென்னாச
செந்நிறச சிகைய வெம்போர் மழுபபின்னர்ச சேறலொக்கு
மன்னிறத் தண்ண றாத னனல்கெழு கொற்ற நீள்வால்.

(இ - ள்.) அல் நிறத்து அண்ணல் - இராத்திரிபோனற கருநிறத்தையுடைய புருஷோத்தமனான ஸ்ரீராமனது, தூதன் - தூதனாகிய அநுமானுடைய, அனல் கெழு கொறறம் நீள் வால் - தீப்பற்றியெரிவதும வெற்றியை விளைப்பது மான நீண்ட வாலானது;—தன இறைக்கு உறுகண் வெய

யோர் தாம் இயற்றலும - தனது தலைவனான சிவபிரானுக்கு [மழுவைத தனது படைக்கலமாகககொண்டு ஆளுகிற சிவபிரானது அமசமாகிய அநுமானுக்கு]த் துன்பததைக கொடிய அரக்காகள் செய்தவளவிலே, கேட்டு - (அச செயதியைக்) கேள்வியுற்று உணர்ந்து, இனனே அன்னவர்க்கு இறுதி ஆக அணி நகர் அழிபபல் என்னு - 'இப்பொழுதே அவ்வரககர்கட்கு அழிவு உண்டாகுமபடி (அவாகளுடைய) அழகிய இலஙகாநகரத்தை அழித்துவிடுவேன்' என்று சங்கற்பஙகொண்டு, செம நிறம் சிகைய வெம் போர் மழு பின்னா சேறல் - செந்நிறமான ஜ்வாலைகளையுடையதும கொடிய போர்ததிறமமைந்ததுமான (சிவபிரானது) மழுவென்கிற ஆயுதம் (தனது இறைவனான அவ்வநுமானைத்) தொடாந்துசெல்லுதலை, ஒககும - போலும்; (எ - று.)

எரியிருமபுப்படையாகிய மழுவை வலக்கையிற் கொணடவன், சிவபிரான். அஙஙனஞ் சிவபிரானுககு ஆயுதமாகிய மழுவானது, தனது இறைவனான அந்தசசிவபிரானது அமிசமாகிய அநுமானுககுத துஷ்டராக்ஷசர்கள் கட்டுதல் இழுததல் தீககொளுவுதல முதலிய துன்பஙகளைச செய்தன ரென்கிற செய்தியைக கேள்வியுறறு 'இப்பொழுதே யான் அவர்கட்கு அழிவுணடாம்படி அவாகள் நகரததை அழிததுவிடுவேன்' என்று சென்றுற் போன்றது, அநுமானுல் இலஙகையின்மீது செலுத்தப்பட்ட தீககொளுவிய வால் என்க; தற்குறிப்பேற்றவணி. அல் நிறதது அண்ணல்—"ராததிரிமேனியம்மான"என்பா பிள்ளைபெருமாளையஙகாரும். அல் - இருளுமாம்; "இருளன்ன மாமேனி" என்றார் ஆன்றோரும். அனலினுற்சுடப்படாமையும, இலங்கையையெரிததலும பற்றி, 'கொற்றவால்' எனப்பட்டது. இச்செய்யுள் சிலஎட்டுப்பிரதிகளிலில்லை. (கஙசு)

கஙஎ. அபபுறழ் வேலை காறு மலங்குபே ரிலங்கை தன்னை
யெப்புறத் தளவுந் தீய வொருகணத் தெரித்த கோட்பாற்
றுப்புறழ் மேனி யண்ணன் மேருவிற் [1]குழையத் தோளான்
முபபுரத் தெய்த கோலே யொத்ததம் மூரிப் போர்வால்.

(இ - ள்.) அப்பு உறழ் வேலை காறும அலஙகு பேர் இலங்கை தன்னை- நீர்மயமாய மிக்க கடல் எல்லையாக விளஙகுகின்ற பெரிய அந்த இலஙகாபுரியை, எப்புறதது அளவும் தீய ஒரு கணத்து எரிதத கோட்பால - எல்லாப் பக்கங்களும தீந்துபோமபடி ஒரு கணப்பொழுதிலே யெரித்த திறததினுல்,—அ மூரி போர் வால் - வலிய போரததிறமுள்ள அநத வாலானது,— துப்பு உறழ் மேனி அணணல் மேருவில் குழைய தோளால முபபுரதது எய்த கோலே ஒததது - பவழம் போன்ற [சிவப்பான] திருமேனிநிறததை யுடைய பெருமையிற்சிறந்தவனான சிவபிரான் மகாமேருகிரியாகிய வில்வளையத தனது தோள் வலிமைகொணடு திரிபுரதத்தின்மேற் பிரயோகிதத அம்பையே போன்றது; (எ - று.)

உவமையணி. இரணடாமடியிற் பொருததன்மை விளஙகும. திரிபுரசங்காரகாலததில திருமால் சிவபிரானுககு அமபாயிருந்து தொழில்

செய்தமை, பிரசிததம். அப், கூணம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. 'வேலைகாறும்' என்பதை 'தீய' என்பதனோடுங் கூட்டலாம். பி - ம்:— [1]குழைதததோளால் (கஙஎ)

கஙஅ. உகக்கடை யுலகம் யாவு முணங்குற வொருதன் னுட்டஞ், சிகைக்கொழுங் கனலை வீசுஞ் செயன்முனம் பயில்வான் போல, மிகைத்தெழு தீய ராயோர் விரிநகர் வீயப் போர்வா, றகைத்தலி னோன்மை சாலுந் தனிவீரன் சேணி லுய்த்தான்.

(இ - ள்.) உகம் கடை-யுகாந்தகாலத்திலே, உலகம் யாவும் உணங்குற-உலகஙகளெல்லாம அழியும்படி, ஒரு தன் நாட்டம் சிகை கொழுங் கனலை வீசும - ஒப்பற்ற (காலாகினி ருததிரமூாததியாகிய) தனது ஒரு கண்ணினின்று [நெற்றிக்கணணிலிருந்து] ஜ்வாலைகளையுடைய மிக்கநெருப்பை வெளிவீசுவதாகிய, செயல-செய்கையை, முனம் பயில்வான் போல-அதற்கு முன்னமே (ஒருதரஞ்) செய்து பழகுபவன்போல,—தகைத்தல் இல் நோன்மை சாலும தனி வீரன் - (எவராலுந்) தடுக்கமுடியாத வலிமைமிக்க ஒப்பறற வீரனான அநுமான்,—மிகைதது எழு தீயா ஆயோர் விரி நகர் வீய-செருக்குகொணடு தலைப்பட்ட கொடியவாகளான இராக்கதர்களது பரந்த அவ்விலஙகாபுரி அழியுமபடி, போா வால் சேணில் உய்த்தான் - போர்த்திறமமைந்த தனதுவாலை நெடுநதூரமளவுஞ் செலுததினான்; (எ- று.)

கறபாநதகாலததிலே தனது நெற்றிககணணைத் திறந்து அதனினின்று பெருநெருப்பை நெடுந்தூரமவீசி உலகஙகளையெல்லாம எரிகின்ற காலாக்கினி ருததிரமூாததியும் அநுமானும ஆகிய இருவரும் சிவபிரானது சொரூபமேயாதலால், அவ்வொறறுமைநயமபறறி இஙஙனம் உத்பிரேக்ஷித்தார். ஏதுத்தற்குறிப்பேற்றவணி. ஊழிககாலததில உலகஙகளெரிகக வேணடியதறகாக முனனமே இலஙகையையெரிததுப் பயில்வான்போன்றனனென்க. அக்கண்ணின்கனல் இவ்வாலின் கனலுககு ஒப்புமை உணஙகுதல் - எரிதல். மிகைதது எழு - மிகுதியாயததிரணட எனினுமாம். இசசெய்யுள் சிலபிரதிகளிலில்லை. (கஙஅ)

கஙகூ.—அநுமான் வீடுகள்தோறும் தாவிச்செல்லுதல்.

வெள்ளியிற் பொனனி னுனு விளங்குபொன் மணியின் விஞ்சை
தெள்ளிய கடவுட டச்சன் கைம்முயன் [1]றரிதிற செய்த
தள்ளறு மனைகடோறு முறைமுறை தாவிச சென்று
[2]ளெள்ளரி யோடுங் குனறத் தூழிவீ ழுருமொ டொப்பான்.

(இ - ள்.) வெளளியின் - வெளளியினாலும, பொன்னின் - பொன்னினாலும, நானு விளஙகு பொன் மணியின - பலவகைப்பட்ட பிரகாசிகின்ற அழகிய இரததினஙகளினாலும், விஞ்சை தெள்ளிய கடவுள் தச்சன் கை முயன்று அரிதின் செய்த - (சிற்ப) சாஸ்திரஙகளில் தோநத தெய்வத்தசசனான விசசுவகாமன் கைகளால் வருநதி அருமையாகச செய்த, தள்ளரு மனைகள் தோறும் - அழிததற்கு அருமையான வலிய (அவ்விலங்கை நகரதது)

வீடுகளிலெல்லாம், (அநுமான்); ஒள் அரியோடும் குன்றத்து ஊரு வீழ் உரு மொடு ஒப்பான் - ஒள்ளியநெருப்புடனே மலையின்மீது கற்பாந்த காலத்தில் விழுகின்ற பேரிடியைப் போன்றவனாய, முறை முறை தாவி சென்றான் - ஒவ்வொன்றிலாகக் குதித்துகொண்டே சென்றான்; (எ - று.)

உயர்ந்தோங்கிய மாடத்துக்கு - மலையும், அதில் தாவிப்பாய்கிற வாலின் நெருப்போடுகூடிய வலிய அநுமானுக்கு - நெருப்புடன் வீழ்கிற பேரிடியும் உவமை யெனக் காணக. தன்மைத்தற்குறிப்பேற்றவணி. நாநா, ஹரி - வடசொற்கள். கைமுயன்று - கைதேர்ந்து என்றுமாம். தெய்வத தச்சனான விசுவகர்மா பூவுலகத்தில் இந்திரனுக்காக நிருமித்த இலங்காபுரி யிலே மாலியவான் முதலிய பூர்வகராக்ஷசாகள் குடியேற, அவர்களைத் திரு மால் வென்று துரத்தியபின்பு அந்நகரத்திலே குபேரன் வசிக்க, பிறகு அவனை அகற்றிவிட்டு இராவணன் அரக்கர்களுடன் அதிற குடியேறின னென அறிக. பி - ம்:—[1]திருந்தச்செய்த. [2]ஒள்ளெரி. (கஙகூ)

கசா0.—அவ்வாலின் தீ இலங்கையை யெரித்தல்.

நீனிற [1]நிருத ரீண்டு நெய்பொழி வேள்வி [2]நீங்கிப்
பால்வரு பசிய னென்பான் மாருதி வாலைப் பற்றி
யாலமுண் டவ[3]னன் றூட்ட வுலகெலா மழிவி னுண்ணுங்
காலமே யென்ன மன்னோ கனலியுங் கடிதி னுண்டான்.

(இ - ள்.) நீல் நிறம் நிருதர் - கறுத்த நிறமுள்ள அரக்கர்களால் [இராக் கதர்கள் செய்யும் உபத்திரவங்களினா லென்றபடி], ஈண்டு-இவ்வுலகத்திலே, நெய் பொழி வேள்வி நீங்கி - நெய்யைசொரிந்துசெய்யும் யாகங்களை (அனை வரும்) விட்டிட்டதனால், பால் வரு பசியின் என்பான் - தன்னிடத்தே மிகக பசியை யுடையவ னென்று சொல்லப்படுபவனான, கனலியும் - அக்கினி தேவனும்,—மாருதி வாலை பற்றி - (தனக்குத்துணைவனான) வாயுவினது குமாரனாகிய அநுமானது வாலை (த் தனக்கு) ஆதாரமாகக்கொண்டு,—ஆலம உண்டவன் நன்று ஊட்ட உலகு எலாம் அழிவின் உண்ணும் காலமே என்ன- விஷத்தை அமுது செய்தவனான சிவபிரான் நன்றாக உண்பிக்கத தான் உல கங்களெல்லாவற்றையும் அழியும்படி உண்ணும் [எரிக்கும்] காலத்திலே போல, கடிதின் உண்டான் - விரைவில் (அவ்விராகததகரமுழுவதையும) உண்ணலானான் [எரிககலானான் என்றபடி]; (எ - று.,—மன், ஓ - அசை.

தற்குறிப்பேற்றமும் உவமையுஞ் சேர்ந்துவந்த சேர்வையணி. வாலிற்பற்றிய தீ இலங்கையை யெரிததறகு, அரக்கர்களுபதிரவத தால் உலகமெங்கும் யாகங்களில்லாமற்போயினமைபற்றி நெய்மமுத லிய அவியுணவு கிடைத்திடாமையாற பசிமிககவனான அக்கினிதேவன அரக்கர்களிடத்து அசசததால் நேரில ஒன்றுஞ் செய்யமாட்டாது ருத் திராம்சமான அநுமானதுவாலைப் பற்றுகோடாகக்கொண்டு அவ்வ

ரக்கரது ஊர்முழுவதையும் விரைவில் உணணுபவனுயின னென உத்பிரேக்ஷை கூறியவாறும். பேராற்றலுடையவனும் சங்காரகர்த்தாவுமான சிவபிரானது நெற்றிக்கணணினின்று அசசங்காரகாலத்தில் வெளிப்பட்டு அப்பெருமானது அநுமதிப்படி உலகங்களையெல்லாம் எரிததழித்தல், இங்கு ஒப்புமைகூறப்பட்டது. 'நீங்கி' என்பதை 'நீங்க' எனக் காரணப்பொருட் செயவெனெசசமாகத் திரித்துப் பொருள் காணக. காலமேயென்ன - அக்காலமே இதுவென்று சொல்லும்படி யென்றலுமாம். அன்று என்று எடுத்துக காலமென்பதனேடு இயைத்து, அந்தககால மென்னலாம். பி - ம்.— [1]நிருதர்யாண்டும். [2]நீககப். [3]இன்று. (கசுஂ)

பிணிவீட்டுபடலம் முற்றிறு.

பதினன்காவது

இலங்கையெரியூட்டு படலம்

அநுமான் இலங்கையைக் கொளுததிய செய்தியைக் கூறும் பாகம். இலங்கையெரியூட்டுதல் - இலங்காபுரியை அக்கினிதேவனுக்கு உணவாக்குதல்: ஊட்டுதல் - உணபித்தல். 'ஊசுடுபடலம்' என்றும் பிரதிபேத முணடு.

வேறு.

க.—அநுமானதுவாலின் தீ அந்நகரத்து மாளிகைகளைப் பலபடியா லெரித்தல்.

கொடியைப் பற்றி விதானங் கொளுத்தித்தா
னெடிய தூணைத் தழுவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுது முருக்கிற்றுல்
கடிய மாமனை தோறுங் கடுங்கனல்.

(இ - ள்.) கடுங கனல் - (அனுமனதுவாலிற்பற்றிய) கொடிய நெருப்பானது,—கடிய மா மனை தோறும-சிறப்புள்ள பெரிய வீடுகள் தோறும்,—கொடியை பற்றி - துவசங்களிற் பற்றிக்கொண்டும், விதானம் கொளுத்தி - மேற்கட்டிகளை யெரித்தும், நெடிய தூணை தழுவி - உயாநத தூணகளைச சுற்றிலும்பிடித்துக்கொணடும், நெடுஞ் சுவர் முடிய சுற்றி - நீண்ட சுவாகள முழுவதுஞ் சுற்றிககொணடும், முழுதும முருக்கிற்று - அவ்வீடுகள் முழுவதையும் எரித்தழித்தது; (எ - று.)—தான், ஆல அசைகள்.

'கடிய' என்பதற்கு - பாதுகாவலையுடைய என்றும, விளககமுள்ள என்றும், எப்பொழுதும புதுமையாகத் தோன்றுகின்ற என்றும், மங்களகரமான என்றும் பொருள் கொள்ளலாம்; பலபொருள குறிக்கும் உரிசசொலலாகிய 'கடி' என்பத னடியாப் பிறந்த குறிபபுப பெயரெசசம். (க)

உ.—அதனால் அந்நகரத்துசனங்கள் கூக்குரலிடுதல்.

வாச லிட்ட வெரிமணி மாளிகை
மூச முட்டி முழுது முருக்கலா
லூச லிட்டன வோடி யுலைந்துளைப்
பூச லிட்ட விரியற் புரமெலாம்.

(இ - ள்.) வாசல் இட்ட எரி - (மாளிகை) வாயில்களில் (அநுமானால் வால்கொண்டு) பற்றவைக்கப்பட்ட தீயானது,—மணி மாளிகை முழுதும்- அழகிய மாளிகைமுற்றவும், மூச முட்டி - நெருங்கப் பிடித்துக்கொண்டு; முருக்கலால் - எரிததழித்தலினால்,—இரியல் புரம எலாம் - அஞ்சி நிலைகெடு தலையுடைய அந்நகரததுச சனங்களெல்லாம், ஊசல் இட்டன - ஊஞ்சலாடு தல்போல அங்குமிங்குமாக அலைபவையாய், ஓடி—, உலைந்து - வருந்தி, உளை பூசல் இட்ட-வருத்ததினாலாகும் பேரொலியைச செய்தன; (எ-று.)

புரததவர் அச்சத்தினால் விரைந்து வெளியிலோடிப்போவதும், அகத் தேயுள்ள அருமைப்பொருள்களை நினைந்து மீளவருவதுமாய் அலைந்தன ரென்பததோன்ற, 'ஊசலிட்டன' என்றார். (உ)

ங.—இரத்தினமாளிகைகளில் தீப்பற்ற மாதர்கள் வருந்திய வகை.

மணியி னாய வயங்கொளி மாளிகை
பிணியிற் செஞ்சுடர்க் கற்றை [1]பெருக்கலாற்
றிணிகொ டீயுற்ற துற்றில [2]தேர்கிலா
ரணிவ ளைக்கை நல்லா ரலமந்துளார்.

(இ - ள்.) மணியின் ஆய-இரத்தினங்களினாலாகிய [இரத்தினங்களைக கொண்டு அமைககப்பட்ட], வயங்கு ஒளி மாளிகை - விளங்குகிற ஒளியை யுடைய வீடுகள்,—பிணியின் செம சுடர் கற்றை பெருக்கலால் - தொகுதி யாகச செந்நிறமான ஒளியின் திரளை வீசுதலால், திணி கொள் தீ உற்றது உற்றில தோகிலா - நெருக்கங்கொண்ட தீப்பிடித்த இடததையும் பிடியாத இடத்தையும் பகுத்தறியாதவர்களாய், அணிவளை கை நல்லா அலமந்து உளார் - அழகிய வளையல்களை யணிந்த கைகளையுடைய மாதாகள் வருதத முற்றார்கள்; (எ - று.)

இரத்தினமயமான மாளிகைகளினுள்ளே மாதாகளிருக்கிறபோது அவ் வீடுகளில் தீப்பற்றிகொணடது; அவ்வில்லங்களிலமைந்த இரத்தினங் கள் இயல்பாகவே அக்கினிசசுவாலைபோன்ற சிவந்த ஒளிததொகுதியை வீசிக்கொணடிருந்ததனால், அமமாதர்கள் தீப்பற்றிய இட மினனதென்றும், தீப்பற்றாத இட மின்ன தென்றும வேறுபா டறிந்திலா; ஆகவே, தீப்பற் றாத இடங்களினின்று தீப்பற்றின இடங்கட்குச சென்றும, தீப்பற்றின இடங்களைத தீப்பற்றாத இடங்களென்று கொண்டு அவற்றிலே யிருந்தும் இவ்வாறு தற்காக்குமாறின்றித் தடுமாறி வருந்துவராயின ரென்பதாம். இங்ங ணம் இரத்தினவொளிககும அக்கினிச்சுவாலைக்கும் வேறுபாடு தோன்றாமை

கூறியது - மறைவணி (அதன் இலக்கணம் - பொதுக்குணத்தால் இரண்டு பொருள்கட்குவேற்றுமை தோன்றாமை.) இதனால், அந்நகரத்துமாளிகைகளி லமைந்த இரத்தினங்களின் ஒளிததொகுதி விளங்கிற்று. பி - ம்:—[1]பெருத்த லால். [2]ஓகிலார். (௯)

ச.—புகைசூழ மாதர்கள் வருந்துதல்.

வான கத்தை நெடும்புகை மாய்த்தலாற்
போன திக்கறி யாது புலம்பினார்
[1]தேன கத்த [2]மலர்பல சிந்திய
கான கத்து மயிலன்ன காட்சியார்.

(இ - ள்.) தேன் அகத்த - தேனை உள்ளேயுடைய, மலர் பல - பல வகை மலர்கள், சிந்திய - சிந்தப்பெற்ற, கானகத்து - காட்டிலே, (தன்னிச் சையாய்வளர்ந்து விளையாடுகின்ற), மயில் - மயில்களை, அன்ன-ஒத்த, காட்சி யார் - அழகிய சாயலையுடையவர்களான மாதர்கள்,—நெடும் புகை வான் அகத்தை மாய்த்தலால் - நெடுந்தூரம உயரவெழுந்த மிகப்புகையானது (எங் குங் கம்மிகொண்டு) ஆகாயத்தை மறைத்ததனால், போன திக்கு அறியாது புலம்பினார் - (தப்பியுய்யுமாறு தமக்கணவர் உயரஎழுந்து) போனதிசையைத் தாம் இன்னதென்றுஉணராமற் பிரலாபித்தார்கள்; (எ - று.)

மாய்த்தல் - மறைத்தல்; "களிறுமாய்க்குங் கதிர்க்கழனி" என்ற விடத் துப் போல. காட்சி - அழகிய தோற்றம். பி-ம்:—[1]தேனகத்து. [2]மலர்ப்பலி.

ரு.—அரக்கரும் அரக்கியரும் தலைமயிர் எரியப்பெறுதல்.

கூய்க்கொ ழுங்கனல் குஞ்சியிற் கூந்தலின்
[1]மீச்சொ ரிந்தன மாதரும் வீரரு
[2]மேய்த்த தன்மையி னாலெரி யின்மையுந்
தீகொ ளுந்தின வுந்தெரி கின்றிலார்.

(இ - ள்.) குஞ்சியில் கூந்தலில் (அரக்கர்களில் ஆடவரது) தலைமயிரி லும (மகளிரது) தலைமயிரிலும், கொழுங் கனல் - மிக்கநெருப்புக்கள், கூய் - சடுலவோசைசெய்துகொண்டு, மீ சொரிந்து அன-மேலேசொரிந்தாற்போன் றன [மிகப்பற்றிகொண்டன என்றபடி]; (அங்ஙனமாகியும்), ஏய்த்ததன் மையினால் - (அந்தத் தங்கள் செம்பட்டமயிரும் நெருப்பும் நிறத்தில்) ஒத் திருக்கின்ற இயல்பினால்,—மாதரும் வீரரும் - இராக்கதமாதாகளும் இராக் கதவீரர்களும், எரி இன்மையும் தீ கொளுந்தினவும தெரிகின்றிலார்-(தங்கள் தலைமயிர்கள்) நெருப்புப்பற்றாதன வென்றும் நெருப்புப் பற்றின வென்றும் வேறுபாடறியப்படாதவரா யிருந்தார்கள்; (எ - று.)—இதுவும், மறைவணி.

இராக்கதர்களது முடியிலுள்ள செம்பட்டமயிர்கள் இயல்பிலே நிறத்தி னால் அகநினிசசுவாலைபோ லிருக்கின்ற ஒப்புமைபற்றி, இங்ஙனங் கூறினார். முதலடியில் 'குஞ்சியிற் கூந்தலில்' என்ற முறைமைக்கு ஏற்ப, இரண்டா

மடியில் 'வீரரும மாதரும' என்னாது, மாறுபடககூறியது, எதிர்நிரனிறைப் பொருளாகோள். பி - ம்:—[1]மீககொழுந்தினா. [2]ஏககமொனறுமிலார். (௫)

சு.—தீப்பற்றியதைப் பற்றியதொரு வருணனை.

இலலிற் றங்கு வயங்கெரி யாவையுஞ
சொல்லிற றீர்ந்தன [1]போல்வன தொல்லுருப்
[2]புலலுக கொண்டன மாயைப் புனர்ப்பறக்
கல்வித் தம்மியல பெய்துங் கருத்தர்போல்.

(இ - ள்.) மாயை புணாப்பு அற - பிரகிருதிசம்பந்தம் நீங்க, கல்வி தம் இயல்பு எய்தும் - பிரஹ்மவித்தையின உணர்ச்சியினால் தமது இயல்பான பரிசுத்தசுவரூபததை யடைநத, கருததா போல் - மனோபாவனையுடையவர்கள்போல,—இல்லில தங்கு வயங்கு எரி யாவையும் - (அவ்வரககர்களுடைய) வீடுகளில் தங்கியிருந்த எரிகிற நெருப்புக்களெல்லாம, சொல்லின் தீர்ந்தன போல்வன - (இராவணனது) கட்டளைசசொல்லின் நிர்ப்பந்தத்தினின்று கடந்தவைபோல்பவையாய், தொல் உரு புல்லுககொண்டன - பழமையான (தமது) நிஜரூபததைப் புல்லுதலைக்கொண்டன [பொருந்தின].

இராவணன் தனதுபேராற்றலினால தேவர்களையெல்லாம் வலியடக்கி வென்று தனவசப்படுததி அடிமையாக்கி அரசாண்டன னாதலால், அக்கினி தேவன் அவனது ஆட்சிகு உட்பட்டு அசசததுடன் ஒடுங்கி அவ்விலங்கை நகரததுமாளிகைகளிலெல்லாம் அரககாகட்குச் சமையல்முதலிய காரியங்கள் ஆகவேண்டியதறகு எவ்வளவுவேணடுமோ அவ்வளவாக அடங்கி உதவி நின்று அதற்குமேலாகத தனது உக்கிரசொரூபத்தை வெளிக்காட்டாதிருந்தனன; இதுவரை அங்ஙனமிருந்த தீ இப்பொழுது அநுமானது வாலின் தீயோடு சேர்ந்துகொண்டு அந்த ஆசரயபலததால் இராவணனது கட்டளையைக கடநதாற்போலத தனது நிஜரூபததுடன் வெளிப்பட்டோங்கி யெரியலாயிற்று; அதற்கு, பிரஹ்மவித்யாஜ்ஞானத்தால் அவித்யையின்சம்பந்தம் நீங்கவே முன்பு மறைநதுநின்ற ஆன்மசொரூபம் விளங்கப்பெற்ற ஞானிகளை உவமை கூறினா. பி - ம்:—[1]போல்வருந். [2]புல்லி. (௬)

எ.—புகை யெழுந்து பரவுதல்.

ஆய தங்கோர் குறளுரு வாயடித்
தாய ளந்துல கங்க டரக் கொள்வான்
மீயெ ழுந்த கரியவன் மேனியிற்
போயெ ழுந்து பரந்தது வெம்புகை.

(இ ள்.) வெம் புகை ஆயது - வெவ்வியபுகையானது,—அங்கு - அக்காலத்தில், ஓர் குறள் உரு ஆய - (முதலில்) ஒரு வாமனவடிவமாகி நின்று, தர உலகங்களை அடி தாய் அளந்து கொள்வான - (மகாபலிக்சகரவர்ததி) [illegible]டுகக உலகங்களைப் பாதங்களினால் தாவியளந்து

கொள்ளுதற்பொருட்டு, மீ எழுந்த - மேலோங்கிவளர்ந்த, கரியவன் மேனியின் - கரு நிறமுடையவனான திருமாலின் திருமேனிபோல, எழுந்து போய் பரந்தது - மேலெழுந்து சென்று பரவியது; (எ - ரு.)

கருநிறமுள்ள வாமனமூர்த்தியின் வடிவத்தை, நிறத்திலும், எழுந்தோங்கி வளர்ந்துபரவுதலிலும் புகைக்கு உவமைகூறினார். அங்கு - முன்னொருகாலத்தில் மாவலி செருக்குற்றுத் திரிலோகாதிபத்தியத்தைத் தன் கைவசப்படுத்திக்கொண்ட அப்பொழுதென்க. (எ)

அ.—யானைகள் எரிபடுதல்.

நீல நின்ற [1]நிறத்தன கீழ்நிலை
மாலின் வெஞ்சின [2]யானையை மானுவ
மேல்வி ழுந்தெரி மூற்றும் விழுங்கலாற்
றோலு ரிந்து கழன்றன தோலெலாம்.

(இ - ள்.) நீலம் நின்ற நிறத்தன - நீல நிறமுள்ளனவாகிய, தோல் எலாம் - யானைகளெலலாம,—மேல் எரி விழுந்து மூற்றும் விழுங்கலால் தோல் உரிந்து கழன்றன - தம்மீது நெருப்பு விழுந்து (உடம்பு) முழுவதும் பற்றிகொண்டதனால் தோலுரிந்து கழலப்பெற்றவையாய், மாலின் வெம் சினம கீழ் நிலை யானையை மானுவ - மத மயக்கத்தையும் கடுங்கோபத்தையுமுடைய கீழ்த்திசையானையாகிய ஐராவதத்தைப் போல்வனவாயின; (எ-று.)

தீப்பற்றியதனால் தோலுரிந்து வெள்ளெலுமபு தோன்றநின்ற யானைகட்கு, வெள்ளையானையாகிய ஐராவதம் ஒப்புமை கூறப்பட்டது. கீழ்நிலை - கிழக்குத் திக்குக்கு உரிய, மாலின் வெஞ்சின யானை - இந்திரனது வெவ்வியசினமுள்ள ஐராவதயானை யென்றும பதவுரை கூறலாம்; மால் - இந்திரன். பி - ம்.—[1]நிறநிலை [2]யானையின். (அ)

கூ.—எருமைகளும் மாதர்களும் இரிதல்.

[1]மீதி மங்கலந் தாலன்ன வெம்புகை
சோதி மங்கலத் தீயொடு சுற்றலான்
[2]மேதி மங்குலின் வீழ்புனல் வீழ்மட
வோதி மங்களின் மாத ரொதுங்கினர்.

(இ - ள்.) மீது இமம கலநதால் அன்ன வெம் புகை - மேலே பனிபடர்ந்தாற்போன்ற வெவ்வியபுகை, சோதி மங்கலம் தீயொடு சுற்றலால்-பிரகாசமுள்ள மங்களகரமான நெருப்பினுடன சூழ்ந்துகொண்டதனால்,—அஞ்சி), மேதி - எருமைகள், மங்குலின்-மேகங்கள்போல, வீழ் புனல் வீழ் - ஆழ்ந்த கடல்நீரிலே போய்விழ,—மட ஓதிமங்களின் மாதர் ஒதுங்கினர் - நீர்நிலையிலேயிறங்குகின்ற) இளமையான அன்னப்பறவைகள்போல (அந்நகரதது) மகளிரகள் (அவ்வூரெல்லையினின்று) விலகி(க் கடலில்) விழுந்தார்கள்; (எ - ரு.)

எங்கும் மிககபுகை கம்ம நெருப்புப்பறறியதனால், ஓடிச்சென்று நீரில்மூழ்கித தப்பியுய்யுமாறு கடலில்விழுநத எருமைகட்கு - அக்கடலில் இறங்கும்

மேகங்களும், அங்ஙனமே கடலிலிறங்கிய மாதாகட்கு - நீரிலையிலிறங்கும் அன்னப்பறவைகளும் உவமை யெனக் காண்க. மங்கலச்சடங்கு பலவும் அங்கியங்கடவுளறிகரியாகச் செயயப்படுதல் பற்றியும, இன்றியமையாச்சிறப்புடைமைபற்றியும், தீக்கு 'மங்கலம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. மூன்றுமடியிலுள்ள 'வீழ்' என்ற சொல இரண்டனுன், பிந்தியது வீழஎன்பதன் விகாரம். இனி, இச்செயயுட்கு-புகையும் தீயும் சூழ்ந்துகொண்டதனுல அஞ்சி எருமைகள் மேகங்கள்போன்று விரும்பதத்க்க நீரிலையில் விழ, (அங்கு நீர்விளையாடிக்கொண்டிருந்த) மாதாகள் (எருமைகள் விழுதலால்) அன்னப் பறவைகள் (அஞ்சியொதுங்கினுற) போல அங்குநின்று விலகினுர்களென்று உரைகூறவும்படும். மேதி மங்குலின் வீழ்புன லென்பதற்கு - எருமைகள் போன்றமேகங்களினுல் விரும்பப்படுகிற நீரென்றுகூறி, நீரிலைகளில் விழும் இளவன்னங்கள்போல (அகக்டலில்) மகளிர் ஒதுங்கினா எனினும் இழுக காது. பி - ம்:—[1]மீதிமங்கலத்தான நெடும்புகை. [2]வீதிமங்குலின் வீழ்புனல மீப்படர். (கூ)

கo.—அவ்வனற்பொறிகளாற் கடல்வெதும்ப மீனினங்கள் தவித்தல்.

பொடித்தெ ழுந்து பெரும்பொறி போவன
விடிகுலங்களின் வீழ்தலு மெங்கணும்
வெடித்த வேலை வெதும்பிட மீன்குலந்
துடித்து வெந்து புலர்ந்துயிர் சோர்ந்தவால்.

(இ - ள்.) பொடித்து எழுந்து போவன - (அவ்வனலினின்று) சிதறியெழுந்துபோவனவாகிய, பெரும் பொறி - பெரிய நெருப்புப்பொறிகள், இடிகுலங்களின் எங்கணும் வீழ்தலும் - இடிக்கூட்டமபோல எல்லாவிடத்திலும் விழுந்தவளவிலே,—வெடித்த-வெடியோசைபோன்ற ஓசைபெற்ற, வேலை - கடல், வெதுமபிட - கொதிப்படைய,—மீன்குலம் - (அக்கடலிலுள்ள) மீன்களும் அவற்றினினமான நீர்வாழுயிர்களும், வெந்து புலர்ந்து துடித்து உயிர் சோர்ந்த-தாபமடைந்து வாடித துடிதது உயிரொடுங்கின; (எ-று.) (கo)

கக.—அந்நெருப்பினுல் அந்நகரத்துமாளிகைகளின் பொன் உருகுதல்.

பருகு தீமடுத் துளளுறப் பற்றலா
லருகு நீடிய வாடகத தாரைக
ளுருகி வேலையி னூடுபுக் குற்றன
[1]திருகு பொன்னெடுந் தண்டிற் றிரண்டவால்.

(இ - ள்.) பருகு - (நீரை) உறிஞ்சுமியலபுள்ள, தீ - நெருப்பு, மடுதது - நிறைந்து, உள் உற பற்றலால் - உள்ளளவாகப் பற்றியெரிதலினுல், உருகி அருகு நீடிய - உருகிப் பக்கங்களிற பெருகிய, ஆடகம தாரைகள் - (ஸ்வாணமயமான அந்நகரததுமாளிகைகளி லுண்டான) பொன்னின் தாரைகள், வேலையின் ஊடு புகுது உற்றன - கடலினகததே போய்ச் சேர்ந்தவையாய், திருகு நெடும பொன் தண்டின் திரண்ட -

(அந்நீர்பட்டமாத்திரததில்) முன்னே நிலைமாறி நீண்ட பெரியபொற்காறு களாய்த் திரணடன; (எ - று.)

அனலினுற் பொன்உருகுதலும், அவ்வுருகியபொன் நீரினு லிறுகி நிற்ற லும் இயல்பு. ஹாடகம் - வடசொல். ஆல் - ஈறறசை. பி - ம்:—[1]திருகில்.()

கஉ.—தரையுமுட்பட அந்நகரம் வேகுதல்.

உரையின் மூந்துல குண்ணு மெரியதால்
வரைநி வந்தன பன்மணி மாளிகை
நிரையி னீணெடுஞ் [1]சோலையி னிற்குமோ
தரையும் வெந்தது பொன்னெனுந் தன்மையால.

(இ - ள்) உரையின் மூந்து உலகு உணணும் எரி அதால் - ஒரு சொற் சொல்லுமுன்னே உலகங்களை விழுங்கவல்ல அப்பெருநெருப்பினுல்,—வரை நிவந்தன பல் மணி மாளிகை - மலைபோலுயாந்துள்ளனவும பல இரததினங கள்பதிததனவு மான மாளிகைகள், நிரையின் நீள்நெடுஞ் சோலையின் நிற் குமோ - வரிசையாகவளர்ந்த உயாநதசோலைகள (தீப்பட்டால்) நிற்கு மாறு போலக கரியளவாகவேனும் நிறகமாட்டுமோ? [மாட்டிற்றில;] (ஏனெ னின்),—பொன் எனும் தன்மையால் தரையும வெந்தது - பொன்மயமாக விருத்தலினுல (அவ்விலங்கையின்) தரையும் வெந்துருகியோடிவிட்டது.

மரச்செறிவாகிய சோலைகள தீப்பட்டெரிந்தால் அம்மரங்கள் கருகிநிற்க, அவை வளாந்தோங்கிய தரை எரிபடாதுநிற்கும; அங்ஙனமன்றி, அவ்விலங்கா புரியிலுள்ள வீடுகள் தளவரிசையுட்படப் பொன்மயமானதனுல் அத்தரையு முட்பட எரிந்துருகியழிந்தன வெனபதாம. இனி, எரி - அந்நெருப்பானது, உரையின் மூந்து உலகு உணணும அதால் - ஒரு சொறசொல்லுமுன்னே உலகங்களை விழுங்குந் திறததனதாதலால, வரையின் நிவந்தன பன்மணி மாளிகை நிரையில நீள் நெடுஞ் சோலையில் நிற்குமோ - மலைபோலுயர்ந்த வான பலஇரததின மாளிகைகளின் வரிசையிலும் மிகவுயர்ந்த (அந்நகரத் துச) சோலைகளிலும் அடங்கிநிறபதாமோ? பி - ம்·—[1]சோலைகணிற்குமோ சோலையுநிறகுமோ. (கஉ)

கங.—புகைமிதுதியும், தேர்களினழிவும்.

கல்லி னும்வலி தாம்புகைக கற்றையா
லெல்லி பெற்ற திமையவர் [1]நாடியல்
வல்லி [2]கோலி [3]நிவந்தன மாமணிச
சில்லி யோடுந் திரண்டன தேரெலாம்.

(இ - ள்.) கல்லினும் - கல்லைக்காட்டிலும், வலிது ஆம் - செறிவுள்ள தான, புகை கறறையால - புகையின் தொகுதி எழுநதுபரவிசசூழ்தலினுல், இமையவா நாடு - பொன்மயமாய்விளங்குகின்ற தேவலோகமும், எல்லி பெற் றது - இருளைப்பெற்றது; இயல் வல்லி கோலி நிவந்தன தேர் எலாம் - ஏற்ற கொடிகள் கட்டப்பெற்று உயர்ந்தனவான தேர்களெல்லாம், மா மணி சில்லி

யோடும் - பெரிய இரதத்தினகசிதமான சக்கரங்களுடனே, திரண்டன-(முழுவதும் பற்றியெரிந்து உறுப்புகளின் பாகுபாடின்றி) ஒரேதொகுதியாய் விட்டன; (எ - று.)

எல்லி - இராததிரி: இருளுக்கு இலக்கணை. வல்லீ என்ற வடசொல், படர்கொடியை யுணர்த்தும்: அது, கொடியென்றமாததிரமாகி, அந்தககொடியென்னுஞ் சொல்லினது மற்றொருபொருளாகிய துவசத்தை யுணாததிற்று; இது, லக்ஷிதலக்ஷணை. அவரவர் தகுதிக்கும் விருப்பத்திற்கும ஏற்ற வடிவம் வரைந்த கொடியைத் தேரின்மீது நாட்டுமியல்புபற்றி, வல்லி யென்பதற்கு 'இயல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பி - ம்:—[1]நாட்டிடம். [2]போல. [3]நிமிர்ந்தன. (கரு)

கச.—பானசாலையைத் தீமடுத்தல்.

பேய [1]மன்றினி லன்று பிறங்கெரி
மாய ருண்ட [2]நறவை [3]மடுத்ததா
[4]றூய ரென்றவர் வைகிடந் [5]துன்னினாற்
[6]றீய ரன்றியுந் தீமையுஞ் செய்வரால.

(இ - ள்.) பேயம் மன்றினில்-மதுவாகிய குடிககத்தக்கபொருள் பொருந்திய (பான) சாலையில், அன்று—, பிறங்கு - எரிந்துவிளங்குகிற, எரி - தீயானது, மாயர் உண்ட நறவும் மடுத்தது - வஞ்சகர்களான இராக்கதாகள பருகும்படியான மதுவையும (தான்) உணடது; தூயர் என்றவர் - பரிசுததியுடையவரென்று சிறப்பித்துசசொல்லப்படுபவர்களும், வைகு இடம் துன்னினால் - (தீயவாக ளிருக்கின்ற) இடததிற் சேர்ந்தால், தீயா அன்றியும் தீமையும் செய்வர் - தாம் இயல்பிற் கொடியவரல்லாமலிருந்தே தீசசெயல்களைச் செய்வார்கள்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

பரிசுத்தனான அக்கினிதேவன் அபரிசுததர்களான அரககர்களுடைய பானசாலையிற் புகுந்ததனால் அங்குள்ள மதுவைத தானும் பருகலானானென்ற சிறப்பப்பொருளை, தூயராயுள்ளவரும் தீயவர் வைகு மிடததைச சேர்ந்தால் தாம் இயல்பில் தீயவரல்லாதிருந்தே தீயசெயல்களைச செயவார்களென்ற பொதுப்பொருள்கொண்டு சாதிததது வேற்றுப்பொருள்வைப்பணி. பேயம் - வடசொல்; பானஞ்செய்தறகு உரியபொருள். மன்று - பொதுவிடம். உண்ட நறவு - உணணுதற்கேறற நறவு; இங்கு இறந்தகால விடைநிலை காலமுணர்ததாது தன்மையையுணர்ததிறது. இனி, வஞ்சகராகிய அரக்கர்கள் உண்ட மிச்சலாகிய மது வென்றும பொருள்படும். பி - ம்:—[1]மன்றினின்று. [2]நறவு [3]மடுததலால். [4]தூயரென்றிலர். [5]துன்னினார். [6]தீயது. (கச)

கரு.— அக்கினிச்சுவாலை சுற்றிலும் மேலும் பரவுதல்.

தழுவி லங்கை தழங்கெரி தாய்ச்[1]செல
வழுவில் வேலை யுலையின் மறுகின

'வெழுமெ ழுஞ்சுடர்க் கற்றைசென் றெய்தலாற்
குழுவு தண்புனன் மேகங் கொதித்தவே.

(இ - ள்.) இலங்கை தழுவு - (அந்த) இலங்காநகரத்திற் பறறிய, தழங்கு எரி - முழங்கிகொண்டு [சடுலவோசைசெயதுகொணடு] எரிகின்ற நெருப்பு, தாய செல் - தாவிசசென்று ஜுவாலைவீசுதலால், வழுவு இல் வேலை உலையின் மறுகின - தவறாமல் (அநநகரதைத நாற்புறத்துச) சூழ்ந்துளள கடல்கள் உலை நீரபோல மிகககொதிததன; எழுமெ எழும் சுடா கறறை சென்று எய்தலால் - மேன்மேலெழுகிற சுவாலைதொகுதிகள் போய் வீசுதலினால, குழுவு தண புனல் மேகம் கொதிதத - வானத்திலே திரணடுள்ள குளிர்சசியான நீரையுடைய மேகங்களும் கொதிபபடைந்தன; (எ - று.)

வழுவில்வேலை - குறறமற்ற கடல் எனினுமாம். நாற்புறத்துமுள்ள கடலைக கருதி, 'வேலைமறுகின' எனப் பன்மையாற கூறினார். பி - ம்:—[1]செலீஇ. [2]எழுவெழுஞ் (கரு)

கசு.—எரியினால் கவிந்த அரக்கியர் கானலில்விழுதல்.

ஊனி லோடு மெரியொ டுயங்குவார்
கானி லோடு நெடும்புனல காணெனு
வானி லோடு மகளிர் மயங்கினார்
வேனி லோடருந் தேரிடை வீழ்ந்தனர்.

(இ - ள்.) ஊனில் ஓடும் எரியொடு உயங்குவார் - தங்களுடம்பிலே தாவிபபாய்கிற நெருப்பினால வருந்துபவர்களாய், வானில் ஓடும் - (தப்பி யுய்தற்பொருட்டு) வானத்திலெழுந்து ஓடுகிற, மகளிர் - இராக்கதமாதர்கள்.—கானில் ஓடும நெடும்புனல் காண் எனு மயங்கினார் - காட்டிலே ஓடுகிற நீணடயாற்று வெளளமே யென்று மாறாககருதினவர்களாய், வேனில் ஓடு அருந் தேரிடை வீழ்ந்தனர் - வெப்பத்துடன் ஓடுவதுபோலக காணப்படுகின்ற அருமையான பேய்த்தேரெனப்படுங் கானலிலே விழுநதார்கள்; (எ - று.)

வேகமாகவந்து தமது உடம்பில் அனல் பற்றுகையினால் வருந்திய இராக்கதமாதர்கள தப்பிய்யுமாறு வானத்தில் எழுந்து ஓடும்போது, தரையிற் காணப்பட்ட கானலை ஓடுகிறநீரென்றுகருதித தமதுவெப்பந்தணிந்து உய்புமாறு அக்கானல்நீரிலே விழுந்து அழிந்தாரக ளென்பதாம: மயக்கவணி. கானலின்தோற்றம ஓடுகின்ற நீர்போலநகாணப்படுதல் இயல்பு. வானிலோடும் மகளிர் - வானத்திற் சஞ்சரிக்குநதன்மையுள்ள தேவமாதர்க ளெனினுமாம். எரியொடு, 'ஓடு'—கருத்தாப்பொருளில் வந்தது. அருந் தேர் - நீரன்றென்று அறிதற்கு அருமையதான பேய்த்தே ரென்றபடி. (கக)

கஎ.—வண்டுகள் தீச்சுடரில் விழுந்து அழிதல்.

தேன வாம்பொழி றீப்படச் சிந்திய
சோனை மாமலர்த் தும்பி தொடர்ந்தவற்

போன தீச்சுடர் புண்ட ரிகத்தடங்
கான மாமென வீழ்ந்து கரிந்தவே.

(இ - ள்.) தேன் அவாம் பொழில்-தேன்மிகக (அந்நகரத்துச்) சோலைகளில், தீ பட - நெருப்புப்பற்ற அதனால், சிதிய சிதறிய, சோனை மா மலர் - இடைவிடாத தேன்மழையைச சொரியுஞ் சிறந்தமலர்களில் மொய்த்துக் கிடக்கிற, தும்பி - வண்டுகள்,—அயல் தொடர்ந்து போன தீ சுடர் அருகிலே தொடர்ச்சியாகச்செல்லுகிற அக்கினிச சுவாலையை(க கண்டு), தட புண்டரிகம் கானம் ஆம் என-பெரியதாமரைக்காடா மென்று மாறாக்கருதி, வீழ்ந்து-(அத்தீச்சுடரில்) விழுந்து, கரிந்த - கருகிப்போயின; (எ - று.)

அக்கினிசசுவாலையை வண்டுகள் செந்தாமரைமலர்த தொகுதி யென மாறுபடக்கருதின வென்றதனால், இதுவும் - மயக்கவணி. தேன் அவாம் பொழில் - தேனினால் விரும்பதத்க சோலை யெனினுமாம். (கஎ)

கஅ.—மாளினிகளான சிலஅரக்கியர் அகக்கிலேயே அழிதல்.

நற்க டன்னிது நம்முயிர் நாயகன்
மற்க டந்தெற மாண்டனன் வாழ்வில
மிற்க டந்தினி யேகலம் யாமெனு
விற்க டந்த நுதற்சிலா வீடினார்.

(இ - ள்.) 'நம உயிர் நாயகன் - நமது உயிரோடொதத கணவன் [பிராணநாயகன்], மற்கடக் தெற மாண்டனன் - ஒருகுரங்கு [அநுமான்] கொல்லுதலால் (போரில்) இறந்துபோனான்; (அதனால்), வாழ்வு இலம் - மங்கலவாழ்க்கையில்லாதவர்களாய்விட்ட, யாம - நாம், இனி - இனிமேல், இல் கடந்து ஏகலம்-வீட்டைவிட்டு வெளியே செல்லக்கடவோமலலோம; இது நல் கடன்-இவ்வனம்இறத்தலே (நமக்கு) நலல கடமையாம்', எனு - என்றுநினைத்து, வில் கடந்த நுதல் சிலா வீடினா - வில்வடிவதததைவென்ற புருவத்தையுடைய சில இராகததமாதாகள (வாயிற்படிகடந்து வெளியே யோடிததப்பியுய்தலின்றி அகததிலிருந்தபடியே எரியின்வாய்ப்பட்டு) இறந்தார்கள.

கணவனிறந்தபின்பு விதவையாய் வெளியேதிரிதல் மானகதேடாதலால் எரியினவாய்ப்பட்டு இறததலே பதிவிரதாதருமநதவறாத நமக்குக கடமையென்று கருதி அவ்வனம இறந்தனா சில அரககிய ரென்க. அழகியதாய் வளைந்தவடிவததில், புருவததுக்கு வில் உவமை கூறப்படும; அதனினுஞ் சிறப்பாகவுள்ள புருவமென்பது, 'விறகடந்த நுதல், என்பதன் கருதது. நுதல் - நெறறியுமாம (கஅ)

கக.—அந்தநகரத்துச் சோலைகள் கரிந்துபோதல்.

பூக்க ரிந்து [1]முறிபொறி யாயடை
நாக்க ரிந்து சினைநறுஞ் சாம்பராய்

மீக்க ரிந்து நெடும்பனை வேரறக்
காக்க ரிந்து கருங்கரி யானவே.

(இ - ள்.) பூ கரிந்து - மலர்கள் தீந்து, முறி பொறி ஆய் - தளிர்கள் பொறிபடசிதறி, அடை ஈ கரிந்து - இலைகளும் அவற்றின் நடுவேயுள்ள அரும்புமுதலியனவும் தீந்து, சினை நறுஞ் சாம்பர் ஆய் - கிளைகள் கல்லசாம்பலாய் வெந்து, மீ கரிந்து - (இவ்வனமரமேலுள்ள பொருள்களெல்லாம் தீந்து, நெடுமரனை வேர் உற கரிந்து-நீண்ட பருத்த வேறுமுட்படத்தீந்து, கா - சோலைகள், கருங் கரி ஆன - கரிய கரிகளாய்விட்டன; (எ - று.)

கரிந்து, பொறியாய், கரிந்து, சாம்பராய. கரிந்து, கரிந்து என்ற சினைவினைகள் - 'கரியான' என்ற முதல்வினையைக் கொண்டன. கருமையென்ற அடைமொழியடுத்ததனால், கரியென்பது - வாளா பெயராய் நின்றது. பி - ம்:—[1]பொறிப் பொறியாய். (கக)

உ0.—பொன்னகரத்தின் பொன் உதிர்யொழுதுதல்.

கார்மு ழுக்க வெழுங்கனற் கற்றைபோ
யூர்மு ழுக்க வெதுப்ப வுருகின
சோரொ ழுக்க மறுமையிற றுன்றுபொன்
வேர்வி[1]ழுப்பது போன்றன விண்ணெலாம்.

(இ - ள்.) கார் முழுக்க - மேகங்களை (த் தமதகத்தே) முழுகடிக்கும்படி, எழும் - மேலே கிளர்ந்தெரிகிற, கனல் கற்றை - அக்கினிசுவாலைகள், போய்—, ஊர் முழுக்க வெதுப்ப (பொன்மயமான) அமராவதிநகரம் முழுவதையுஞ் சுட்டெரிக்க அதனால், உருகினசோர் - உருகி யொழுகுகின்ற, பொன் ஒழுக்கம் - பொன்னின் தாரைகள்,—அறுமையின் - இடைவிடாது பெருகுதலால்,—விண் எலாம் துன்று வேர் விழுப்பது போன்றன - அப்பொன்னகரமாகிய மரம்முழுவதும் நெருங்கிய வேரை இறங்கவிடுவது போன்றன; (எ - று.)

மேகங்கள்முழுகும்படி ஓங்கியெழுந்த அக்கினிசுவாலைகள் போய் மேலுள்ள பொன்னகரத்தைச் சுட்டெரிக்க, அது வெந்து உருகுதலால் இடைவிடாதுபெருகுகிற சுவர்ணதாரைகள், அப்பொன்னகரமாகிய மரம் தனது இடையறாது நீண்டவோர்களைக் கீழே இறங்கவிட்டாற்போலு மென்பதாம்; உருவகவணியை அங்கமாகக்கொண்டு வந்ததற்குறிப்பேற்றவணி. விண் எலாம் துன்றுபொனவேர்விடுபது போன்றன என்பதற்கு - பொன்னகரமாகிய அவ்வமராவதியிலுள்ள பொன்மயமான கற்பக விருட்சங்களெல்லாம் தமது வலிய பொன்மயமான வேரை யிறங்க விடுவதுபோன்றன என்றும் பொருள் கொள்ளலாம். இனி, ஊர் - இலங்கை யென்றே கொண்டு, பொன்மயமாயுயர்ந்துள்ள இலங்கைமுழுவதையும் மிக ஓங்கியெழுந்த அக்கினிச் சுவாலையெரிக்க அதனா லுருகியோடுகிற பொன்னின்தாரைகளை இவ்வனம் வருணித்ததாகக் கொள்ளலு மமையும். முதலடியிலுள்ள 'முழுக்க' என்பது

முழுக என்பதன் பிறவினை. இரண்டாமடியிலுள்ள 'முழுக்க' என்பது - முழுதும் என எஞ்சாமைப்பொருள் குறித்தது. பி - ம்:—[1]விடுப்பது. (உ0)

உக—.அவ்வனல்வீசுதலாற் சந்திரமண்டலமும் உருகுதல்.

நெருகுகி [1]மீமிசை யோங்கு நெருப்பழல்
செருக்கும் வெண்கதிர்த் திங்களைச [2]சென்றுற
வுருக்கு மெய்யி னமுத முகுத்தலா
லரக்க ருஞ்சில ராவிபெற் றாரரோ.

(இ - ள்.) நெருகுகி - அடர்த்தியாகி, மீமிசை - மிகமேலிடத்திலும், ஓங்கும் - உயரத்தாவுகின்ற, நெருப்பு அழல் - அக்கினியின சுவாலையானது, செருக்கும் வெள் கதிர் திங்களை சென்று உற - களிப்பை விளைகின்ற வெண்ணிறமான கிரணங்களையுடைய சந்திரமண்டலத்தைப் போய்ச் சேர, (அச்சந்திரமண்டலம்), உருக்கும் மெய்யின் அமுதம் உகுத்தலால் - உருக்கப் பெற்ற தனதுவடிவத்தினின்று அமிருததத்தைசசிந்துதலால், அரககரும் சிலர் ஆவி பெறாரர் - (இலங்கையில் தீயின்வாய்ப்பட்டு இறக்கிறநிலைமையை யடைந்த) சிலஅரக்கர்கள் (அந்த அமிருதம் தமமீதுசிந்துதலால்) உயிரபெற் றார்கள்; (எ - று.)—அரோ - ஏற்றசை; வியப்பிடைசசொல்லுமாம.

இலங்கையில் எழுந்தோங்கியெரிகிற அக்கினியின் சுவாலை சந்திரமண டலத்தின்மீது வீசுதலால அம்மண்டலம்உருக, அதனினின்று பெருகிய அமி ருதம் தம்மீது துளிததலால், எரிந்துஇறக்கிற அரக்கரிற் சிலர் இறவாது உயிர்பெற்றன ரென்பதாம. அகனிசசுவாலைகள மிகவோங்கி வளர்ந்த வென்பது, இதனாற் போதரும. செருககும் கதிர் - பிறாமகிழ்சசியடைதற் குக காரணமான கிரணம்; பெயரெசசம், காரியப்பொருளது. இனி, வளர்ந்து மிக்க கிரணங்க ளெனறலுமாம். சந்திரமண்டலம அமிருதமயமான தென்க. பி - ம்—[1]நெருககமீமிசையொக்கநெருப்பெழச. [2]சென்று. (உக)

உஉ.—அவ்வனல் மேகமண்டலத்திலும் சூரியமண்டலத்திலும் வீசுதல்.

பருதி பறறி நிமிர்ந்தெழு பைங்கனல்
கருகி முற்று மெரிந்தெழு கார்மழை
யருகு சுற்று மிருந்தைய தா[1]யதி
னுருகு பொற்றிர [2]ளொத்தன வெண்கதிர.

(இ - ள்.) பருதி பறறி நிமிர்ந்து எழு பைங் கனல்-சூரியமண்டலத்தை யளாவி யுயாநதெழுந்த புதுமையான அந்த அக்கினியினால், எழுகார் மழை முற்றும் எரிந்து கருகி அருகு சுறறும் இருந்தைஅது ஆய் - வானததிற் செல்லுகிற காளமேகங்கள முழுவதும வெநது கருகிப் பகககங்களிலெங்கும் கரிபோலிருகக, ஒள் கதிர் அதின உருகு பொன் திரள் ஒததனன - (அமமேக மண்டலததின்மீது விளங்குகின்ற) பிரகாசமான கிரணங்களை யுடைய சூரியன அககரிததொகுதியினிடையே உருகுகிற பொன்னின் திரளைப் போன்றான்; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. இருந்தை - கரி; அதன்மேல் 'அது' என்பது பகுதிப்பொருளவிகுதி. ஒணகதிர் - பணபுததொகையன்மொழி யென்றுவது, அடையடுதத சினையாகுபெய ரென்றுவது கொள்ளத்தக்கது. பி-ம்:— [1]அகல். [2]ஒகததுலாங்கதிர். (உஉ)

உங.—குதிரைகள் எரிபடுதல்.

தளை[1]கொ ளுந்திய தாவெரி தாமணி
முளை[2]கொ ளுந்தி முகத்திடை மொய்த்தபே
ருளை[3]கொ ளுந்த [4]வுலந்துலைவுற்றன
வளை[5]கு ளம்பின் மணிநிற வாசியே.

(இ - ள.) தளை கொளுந்திய - பின்காற்கயிறு எரிவதற்குக்காரணமான, தாவு எரி - (சுவாலை) தாவுகிற நெருப்பானது, தாமணி முளை கொளுந்தி - தாமணியென்னுங் கட்டுக்கயிற்றுடனே (அக்கயிறுகட்டுமிடமான) முளைகளும் எரியுண்டு, முகத்திடை மொய்த்த பேர் உளை கொளுந்த - முகததிலே நெருங்கியுள்ள மிகுதியான பெரியமயிர்களும் எரிந்துநிற்க,—வளை குளம்பின்மணி நிறம் வாசி - வளைந்தகாற்குளம்புகளையும் அழகியநிறத்தையுமுடைய குதிரைகள், உலந்து உலைவுற்றன - தவித்து அழிவடைந்தன; (எ - று.)—பி-ம்:— [1]கொளுத்திய. [2]கொளுத்தி. [3]கொளுதத. [4]எரிந்து. [5]குளப்பின். (உங)

உச.—அரக்கர்கள் தப்பியுய்யமாட்டாது தொலைதல்.

எழுந்து பொற்றலத் தேறலி னீள்புகைக்
கொழுந்து சுற்ற வுயிர்ப்பிலர் [1]கோளுமுற்
றழுந்து பட்டுள ரொத்தயர்ந் தாரழல்
விழுந்து முற்றினர் கூற்றை விழுங்குவார்.

(இ - ள்.) கூற்றை விழுங்குவார் - யமனையும் விழுங்கவல்லவர்களான [பேராறறலையுடைய] அரகர்கள்,—எழுந்து பொன் தலத்து ஏறலின் - (தப்பியுய்யுமாறு) மேலெழுந்து பொன்மயமான மேலுலகத்தை நோக்கிசசெல்லும் போது, நீள புகை கொழுந்து சுற்ற - மேலோங்கிய புகைத்திரள் (தம்மைச்) சூழ்ந்துகொள்ள அதனால், உயிர்ப்பு இலர் - மூச்சுவிடமாட்டாதவர்களாய், கோளும் உறறு - (அப்புகையை) உட்கொள்ளுதலுஞ்செய்து, அழுந்துபட்டுளர் ஒத்து அயர்ந்தார் - (நீரிலேயில்) அழுந்தியவர்களைப் போன்று தவித்தவர்களாய், அழல் விழுந்து முற்றினர் - நெருப்பில் விழுந்து முடிந்தார்கள் [இறந்தார்கள்]; (எ - று.)

'அழுந்துபட்டுளர்' என்ற வினையினால், 'ஆழமான நீர்நிலையில்' என்பது வருவிகக. பி - ம்:—[1]கோளமுற்று. (உச)

உரு.—ஆடை யிலுங் கூந்தலிலுந் தீப்பற்ற அரக்கியர் திகைத்தல்.

[1]கோசி கத்துகி லுற்றகொ ழுங்கன
றாசி னுததரி கததொடு சுறறுமு
வாச மைக்குழல் பறறம யங்கினார்
பாசி மைழப்பர வைப்பட ரல்குலார்.

(இ - ள்.) பாசு இழை பரவை படர் அல்குலார் - பசும்பொன்னுபரணங்களையும் கடல்போலப் பரந்த அல்குலையு முடையமாகளான இராகததமாதர்கள்,—கோசிகம் துகில் உற்ற கொழுங் கனல் - (அரையிலுடுத்த) பட்டாடையிற் பற்றிய மிகுநெருப்பு, துகின் உத்தரிகத்தொடு சுற்றுறு - மேலாடையாகத்தரித்த வஸ்திரத்திற பற்றி அதனுடன் சூழ்ந்து, வாசம் மைக் குழல் பற்ற- நறுமணமுள்ள கரிய கூந்தலிலும் பற்றிகொள்ள, மயங்கினார் - (இன்னது செய்வதென்று அறியாது) திகைத்து அழிந்தார்கள்; (எ - று)

கோசிகம் - பட்டு. துகில் - ஆடை. கோசிகத்துகில் - கோசிகமாகிய துகிலென இருபெயரொட்டு. இடையிலுடுக்கும ஆடை - அந்தரீய மெனவும், மேலேதரிக்கும ஆடை - உத்தரீய மெனவும படும். துகின் உத்தரிகத்தொடு - உத்தரிகத்துகிலொடு என மாறுக; துகு - வஸ்திரம். பி - ம்:— [1]கோசிகத்தினில்.

(உரு)

வேறு.

உசு.—ஆடை எரியுண்ண அரக்கரும் அரக்கியரும் போய்க் கடலில்விழுதல்.

நிலவி லங்கிய துகிலினை நெருப்புண நிருத
ரிலவி னுஞ்சில முத்துள வெனுநகை [1]யிளையார்
புலவி யின்கரை கண்டவ ரமுதுகப் புணருங்
கலவி யின்கரை கண்டிலர் மண்டினர் கடன்மேல்.

(இ - ள்.) புலவியின் கரை கண்டவர் - ஊடலின் முடிவெல்லையைக் கண்டவர்களாகிய [ஒருவரோடொருவர்கொண்ட ஊடல் தணியப்பெற்றவர்களாகிய], நிருதர் - அரக்கர்களும், இலவினும சில முத்து உள எனும் நகை இளையார் - இலவம்பூவினிதழிலும் சிலமுத்துக்களுள்ளன வென்று வருணிக்கத்தக்க பற்களையுடையவர்களான அவ்விராகததமாதர்களும்,—நிலவு இலங்கிய துகிலினை நெருப்பு உண - நிலாப்போல வெணணிறமாய் விளங்குகிற தங்களாடைகளை நெருப்பு எரிக்க, அமுது உக புணரும் கலவியின் கரை கண்டிலர் - இன்பம்சுரக்க(த தம்மிற்) கூடுங் கலவியின்பமாகிய கடலின் முடிவைக் காணுமலே, கடல்மேல் மண்டினர் - கடலிற் போய் விழுந்தார்கள்; (எ - று.)

ஊடிய ஆடவரும் மாதரும் ஊடல்தீர்ந்து கூடும்நிலையிலே தமது ஆடையைத் தீயுணக் கூடுதலினபங் கூடாத முன்னமே கடலிற் போய்விழுந்தார்க ளென்க. நிலவிலங்கிய துகில் - வெணபட்டாடை. செந்நிறமான வாயிதழ்களி னகததே வெளளிய அழகிய பற்களின் வரிசை யிருத்தல் இலவிதழிலே முத்துக்களிருக்கின்றனபோலுமென வருணிக்கத்தக்க அந்தச சாதி மாதாக ளெனபது, இணடாமடியின் கருத்து முத்துப் பிறக்குமிடம் இருபதென்பது பிரசித்தம்; அதற்கு மேலாக இலவமலரினிதழுக்கதும் முத்துக்களுள்ளன வென்று கூறுதலாக பற்களினழகையுடையா ரென்று பொருள் படுதலால், 'இலவினும' என்ற உமமை - இறந்ததுதழுவிய எச்சம். பி - ம்.—[1]அனையார்.

(உசு)

உஎ.—சிலஅரக்கியர் கிளியையிழந்து புகையில்மறைதல்.

பஞ்ச ரத்தொடு பசுநிறக் கிளிவெந்து பதைப்ப
வஞ்ச னக்கணி னருவிநீர் [1]முலைமுன்றி லலைப்பக்
குஞ்ச ரத்தன கொழுநரைத் தழுவுறுங் கொதிப்பான்
[2]மஞ்சி டைப்புகு மினனெனப் புகையிடை மறைந்தார்.

(இ - ள்.) பசு நிறம் கிளி - (தாங்கள்வளர்க்கிற) பசுமைநிறமுள்ள கிளிகள், பஞ்சரத்தொடு வெந்து பதைப்ப - (தாமிருக்கின்ற) கூட்டுடனே நெருப்பில் வெந்து துடிக்க, (அதுகண்ட சோகத்தால்), அஞ்சனம் கணின் அருவி நீர் - மையிட்ட தங்கள் கண்களினின்று மலையருவிபோலிடையறாத மிக்க நீர், முலை முன்றில அலைப்ப (தங்கள்) தனங்களின முகட்டிலே அலை வீசிகொண்டு பெருக, குஞ்சரத்து அன கொழுநரை தழுவுறும் கொதிப்பால் - யானைகளைப்போன்ற [வலிய பெரிய கறுத்த] தங்கள்கணவர்களைத் தழுவிக்கொள்ளக்கருதிய பதைப்பினால், மஞ்சி உற புகும் மின் என புகையிடை மறைந்தா - மேகத்தினுளளே பொருந்த மறைகிற மின்னல்போலப் புகைக்குளளே மறைந்தார்கள்; (எ - று.)

தாம் வளர்த்த கிளிகள் கூட்டுடன் அவ்வனல்பட்டு வெந்து துடிப்பதைக்கண்டு சோகித்துக் கண்ணுங்கண்ணீருமாய் அச்சத்தால் தம் கணவரைத் தழுவிக்கொள்ளக் கருதி யோடுகிற இராக்கதமாதர்கள், அருகிலே திரண்டெழுகிற புகைத்தொகுதியைக் கண்டு அதனைத் தம் கணவரது கரியபெரிய வடிவமென்றுகருதி அதனிடை மறைந்தார்கள்; அக்காட்சி, மேகத்தினிடையே காணப்பட்டு மறைகின்ற மின்னல்போலு மென்பதாம். புகைத்திரளைத் தம் கணவரென மாறுகக்கருதி அதனைத் தழுவுபவராய் அதனிடையே மறைந்தன ரென்றது, மயக்கவணி; கருநிறமாய் ஓங்கியெழுந்த தோற்றத்தில், அரக்கருடம்பும் புகையும் ஒக்கும். மேகத்தினிடையே மறைகிற மின்னல் போல என ஒப்புமைகூறியது, உவமையணி. அரக்கியாக்கு மின்னலும் உவமையெனக் காண்க. இரண்டு அணிகள் சேர்ந்துவந்ததனால், சேர்வையணி. பருத்தோங்கியவடிவமும் வலிமையும் கருநிறமும் பற்றி, 'குஞ்சரத்து அன கொழுநர்' எனப்பட்டார். கொதிப்பு - துடிப்பு, விரைவு. அச்சம் நேர்ந்தபோது கணவரைத் தழுவுதல், மாதரியல்பு. இனி, பினனிரண்டடிக்கு - மயக்கவணிகொள்ளாமல், கணவரைத் தழுவவேண்டுமென்னும் விரைவினால் அவரைநாடிச்செல்லும்போது இடையிலே சூழ்ந்த புகையில் அகப்பட்டு அழிந்தாரா ளென்று உரைத்தலுமொன்று. பி - ம்:—[1]முலையின் வந்தலைப்ப. [2]மஞ்சுறப். (உஎ)

உஅ.—அரக்கியர் புகையில் அகப்பட்டுக் கரிதல்.

வரையி னைப்புரை மாடங்க ளெரிபுக மகளிர்
புரையில் பொற்கலன் விசும்பிடை வில்லிடப் போவார்
[1]கரையி னுண்புகைப் படலையிற் கரிந்தனர் கலங்கித்
திரையி னுட்பொலி சித்திரப் பாவையின செயலார்.

(இ - ள்.) வரையினை புரை மாடங்கள் எரி புக - மலையையொத்த [மிகபபெரிய] மாளிகைகளில் தீப்பற்றிக்கொள்ள, (அதனினின்று தப்பியுய்யுமாறு), புரை இல் பொன் கலன் வில் இட விசும்பிடை போவார்-குற்றமற்ற பொன்மயமான (தாமணிக்துள்ள) ஆபரணங்கள் ஒளிவீச வானத்திலெழுந்து செல்பவர்களாகிய, மகளிர் - மாதர்கள், — கரை இல் நுண் புகை படலையில் கலங்கி-அளவிறந்த நுணணிய புகையின் திரளிலே அகப்பட்டு, திரையினுள் பொலி சித்திரம் பாவையின் செயலா - (அதனால் திரைமறைவினுள்ளே தோன்றுகின்ற சித்திரப்பிரதிமையின் தன்மையை யுடையவர்களாகி,— கரிந்தனர் - கருகினார்கள்; (எ - று.)

பின்னிரண்டடியில் உபமான உபமேயங்களுக்கு ஐக்கியத்தைச சொன்னது, காட்சியணி. நுணபுகைத்தொகுதிககுத் திரையும், அழகியமகளிரகுச் சித்திரப்பதுமையும் உவமம. கரையினுட்புகைப் படலை என்ற பாடத்துக்கு—கரையினுள் - அருகிலே (எழுந்த), புகைப்படலையி லென்க (உஅ)

உ௬.—நந்தவனங்கள் வேதுதல்.

[1]அகரு மஞ்ஞறுஞ் சாந்தமு முதலிய வனேகம்
புகரி னன்மரத் துறுவெறி யுலகெலாம் போர்ப்பப்
பகரு மூழியிற் காலவெங் கடுங்கனல் பருகு
மகர வேலையின் வெந்தன நந்தன வனங்கள்.

(இ - ள்.) அகரும் - அகில்மரங்களும், அம் கறுஞ் சாந்தமும் - அழகிய கறுமணமுள்ள சந்தன மரங்களும், முதலிய - முதலான, அனேகம் புகா இல் கல் மரத்து - குற்றமற்ற சிறந்த பலமரங்களில், உறு - பொருந்திய, வெறி - வாசனை, உலகு எலாம் போர்ப்ப - உலகமுழுவதும் வீசிககவிநது கொள்ளுமாறு,—நந்தனவனங்கள்-சிங்காரப்பூந்தோட்டங்கள்,—பகரும் ஊழியில் - (நூல்களிற்) சொல்லப்படுகிற யுகாந்தகாலததிலே, கால வெம் கடுங்கனல் பருகும் - மிக்கொடிய காலாக்கினியினால் உறிஞ்சப்படுகிற, மகரம வேலையின் - மீன்களையுடைய கடல்போல, வெந்தன—; (எ - று.)

அந்கறுஞ்சாந்த மென்பது, அஞ்ஞறுஞ்சாந்த மெனப் போலிபெற்றது. 'நன்மரத்து உறு வெறி உலகெலாம்போர்ப்ப' என்றதனால், அமமரங்களின் கறுமணமிகுதி தோன்றும் கடலுவமையினால், நநதனவனங்களின பரப்பைப் பெறவைததார. பி - ம்:—[1]அருவுந்நறுஞ். (உ௬)

௩௦.—இவ்வனல் எழுந்து தாவுதலாற் கற்பகதருக்கள் எரிதல்.

[1]மினலப ரந்தெழு கொழுஞ்சுட ருலகெலாம் [2]விழுங்க
நினைபப ரும்பெருந் திசையுற விரிகின்ற [3]நிலையாற
சினைப்ப ரந்தெரி சோந்தில நினறவுஞ் [4]சிலவுங்
கனறப ரந்தவுந் தெரிகில கறபகக் கானம.

(இ - ள்.) மினல் பரந்து எழு-மின்னலையொத்துவிளங்குகிற, கொழுஞ் சுடர் - செழுமையான (பொன்னின்) சோதி, உலகு எலாம் விழுங்க - உலக முழுவதையுங் கவிந்துகொள்ளுமாறு, நினைப்பு அரும பெருந் திசை உற விரிகின்ற நிலையால் - (இவ்வளவினதென்று) நினைத்தற்கும் அருமையானபெரிய திசைகளுக்கெல்லாவ ஒளிவீசுகின்ற தன்மையினுல்,—கற்பகம் கானம் - கற்பக விருட்சங்கள், கனல் பரந்தவும சினை பரந்து எரி சேர்ந்தில நின்றவும் சிலவும் தெரிகில - நெருப்புப்பற்றி யெரிகின்றவை இவைசில வென்றும கிளைகளில் தாவி நெருப்புப்பற்ருது நின்றவை இவைசில வென்றும் வேறுபாடு அறியவொணுதனவா யிருந்தன; (எ - று.)

இவ்வனலினுல், கற்பகதருக்களைந்தனுட் சில தீப்பற்றியன; அக்கற்பக தருக்களெல்லாம் பொன்மயமாய மின்னல்போன்ற பேரொளியை உலகமுழுவதும் வீசிகொண்டு நின்றதனுல், அவற்றுள் தீப்பற்றியவை இவைசில வென்றும், தீபபற்ருதவை இவைசில வென்றும பகுததுணரவொணுதவை யாயின என்பதாம; மறைவணி. முதலடியில், பரந்து என்பது - உவமவாசகமாய் நின்றது. கானம் - மரங்களின்தொகுதி. பி - ம்:—[1]மினை. [2]விழுங்கி. [3]நிலவால். [4]சிலவெங். [5]தெரிந்தில. (௩௦)

௩௧ —புகைகடலைக் கவிந்துகொள்ளுதல்.

மூளும வெம்புகை விழுங்கலிற் சுறறுற முழுநீர
மாளும் வண்ணமா மலைநெடுந் தலைதொறு [1]மயங்கிப்
பூளை வீயன்ன போவன புணரியிற் புனன்மீன்
மீள யாவையுந் தெரிந்தில முகிற்கண மிசைய.

(இ - ள்.) மூளும்வெம் புகை - மூண்டெழுந்த வெவ்விய [நெருப்போடு கூடிய] புகையானது, சுறறுற முழுநீர் மாளும வண்ணம் விழுங்கலின் - சுற்றிலுமுள்ள (கடலின்) நீர்முழுவதும் வற்றுமபடி (கடலைக்) கவிந்துகொண்டதனுல்,—மீன் மீள-(அங்குஇருந்த) மீன்கள் அபபாற் செல்வனவாக,—முகில் கணம் - மேககூட்டங்கள், புணரியில புனலமிசைய - கடலிலுள்ள நீரையுண்ணுந்தகு (வந்து), யாவையும் தெரிந்தில - புகைகவிந்துள்ளதனுற கடலின்செய்திகள் எவற்றையுந் தெரிந்துகொள்ளாதனவாகி, மா மலை நெடுந் தலைதொறும மயங்கி - (விரைந்து கீழிறங்கும்போது) பெரிய மலைகளின் உயர்ந்த சிகரங்களிற பட்டு, பூளை வீ அன்ன போவன - (பெருங்காற்றிற் பட்ட) பூளைமலர்கள் போன்றவையாய்ச் சிதறிப்போவன; (எ - று.)

வெவ்விய அவ்வனற்புகை கவிந்துகொண்டதனுல், மீன்கள் அலையுமாறு இலங்கையைசசுற்றிலும் கடல்நீர் வறறுவதாயிற்று; இஃது இங்ஙனமாக கடல்நீரைபபருகவருகிற மேகங்கள் புகைகவிதலினுல் அக்கடலில் நீரிருப்பதையும் இல்லாததையும பகுததுஉணராமற் கடலைக் குறித்து விரைந்து கீழிறங்கும்போது அககடலினுளளேயிருந்த மையாகம் போன்ற உயர்ந்தமலை

களின் சிகரங்களில் தாக்கிச் சிதறுவனவாயின வென்பதாம். 'மயங்கி' என்பதற்கு - புகைத்தொகுதியைக் கடலென மாறுக கருதி யென்றுங் கொள்ளலாம். பூளை - ஓர்செடி; அதன்மலர், மிகநொய்யது. பி - ம்.—[1]வழங்கி. ()

கஉ.—உலகமுழுவதும் புகைசூழ்தல்.

மிக்க வெப்புகை விழுங்கலின் வெள்ளியங் கிரியு
மொக்க வெற்பினோ டன்னமுங் காக்கையி னுருவ
பக்க வேலையின் படியது பாற்கடன முடிவி
றிக்க யங்களுந் தயங்களும் வேற்றுமைதெரியா.

(இ - ள்.) மிக்க வெம் புகை விழுங்கலின் - மிகுதியான வெவ்வியபுகை சென்று (உலகமுழுவதுங்) கவிந்துகொண்டதனால்,—வெள்ளி அம் கிரியும் வெற்பினோடு ஒக்க - அழகிய வெள்ளியலையான கைலாசமும் (கருநிறமாகக் காணப்படுகிற) மற்றமலைகளோடு ஒப்பாக,—அன்னமும் காக்கையின் உருவ - (வெண்ணிறமான) அன்னப்பறவைகளும் (கருநிறமான) காக்கைகளின் வடிவமாய்த் தோன்ற,—பால்கடல் பக்க வேலையின் படியது - (வெண்மையான) திருப்பாற்கடலானது அருகிலுள்ள (கரிய) உவாக்கடலின் தன்மையதாயிற்று; (மற்றும் அப்புகையின் சூழ்ச்சியால்), முடிவு இல் திசையங்களும் தயங்களும் வேற்றுமை தெரியா - அழிவில்லாத (ஐராவதம்முதலிய வெண்ணிறமான) திக்கஜங்களும் (கருநிறமான) சாதாரணயானைகளும் வேறுபாடறிய வொண்ணாதனவாயின; (எ - று.)

வெள்ளியங்கிரியும் மற்றைமலைகளும், காக்கையும் அன்னமும், பாற்கடலும் மற்றைக்கடல்களும் வேற்றுமை தெரியவொண்ணாதபடி எல்லாம் கருநிறமாயிருந்தன என்றதில் போதுவணிகாணக முடிவில் - திக்குக்களின் எல்லைகளிலுள்ள எனினுமாம். கைலாசகிரி திரிமூர்த்திகளுட் சிவபிரானுக்கு உரைவிடமும், அன்னப்பறவை பிரமனுக்கு வாகனமும், திருப்பாற்கடல் திருமாலுக்குப் பள்ளிகொள்ளுமிடமுமாய்ச் சிறத்தல்பற்றி, அவை இங்கு எடுத்துக் கூறப்பட்டன. திக்கஜங்களை எடுத்துக்கூறியது, உலகந்தாங்குஞ் சிறப்புடைமைபற்றி. (கஉ)

கக.—அரக்கரும் அரக்கியரும் கடலில் ழுழ்ந்தல்.

கரிந்து சிந்திடக் கடுங்கன லொடர்ந்துடல் கதுவ
வுரிந்த மெய்யின ரோடினர் நீரிடை யொளிப்பார்
விரிந்த கூந்தலுங் குஞ்சியு மிடைதலிற் றூமு
மெரிந்து வேகின்ற வொத்தன வெறிதிரைப் பரவை.

(இ - ள்.) கரிந்து சிந்திட - (அகப்பட்ட பொருளெதுவும்) கருகியழிந்திடுமாறு, கடுங் கனல் தொடர்ந்து - கடுமையான நெருப்புத் தாவி, உடல் கதுவ தமது உடம்பில் மிகுதியாகப்பற்றுதலால், உரிந்த மெய்யினர் - தோலுரிந்த உடம்பையுடையவர்களாய, ஓடினர் - ஓடிப்போய், நீரிடை ஒளிப்பார் - (தாபந்தணிதற்காகவும் தப்பியுய்தற்காகவும்) கடல் நீரில் மூழ்கி மறைபவர்களான இராக்கதர்களுடைய, விரிந்த கூந்தலும்

குஞ்சியும் - விரிந்த கூந்தலும் குடுமியும், மிடைதலின் - நீரின்மீது பரவித தோன்றுதலினால், எறி திரை பரவை தாமும் எரிந்து வேகின்ற ஓதன - வீசுகின்ற அலைகளையுடைய கடல்கள்தாமும் எரிந்து வேகின்றவை போன்றன; (எ - று.)

கூந்தல் - அரக்கியருடையது. குஞ்சி - அரக்கருடையது. இவை செம்பட்டமயிர்களாதலின், இவை பரவுதலாற கடல்கள் எரிகின்றன போன்றனவெனறார், தற்குறிப்பேற்றவணி. நாற்றிசைக் கடலகளாதலின், பன்மை கூறப்பட்டது. 'கரிந்துசிந்திட' என்றதை 'உரிந்த' என்றதனோடுங் கூட்டி யுரைத்தலுமாம். (௩௩)

௩௪.—சிலஅரக்கியர் தம்மகக்களுடனும் சுற்றத்தாருடனும் கடலில் விழுதல்.

மருங்கின் மேலொரு மகவுகொண டொருதனி மகவை
யருங்கை யாற்பற்றி மற்றொரு மகவு[1]பின் னரற்ற
நெருங்கி [2]ஞரொடு நெறிகுழல் சுறுக்கொள [3]நீக்கிக்
கருங்க டற்றலை வீழ்ந்தன ரரகியர் கதறி.

(இ - ள்.) மருங்கின்மேல் ஒரு மகவு கொண்டு - இடையிலே ஒரு குழந்தையை யெடுத்துக்கொண்டு, ஒரு தனி மகவை அருங்கையால் பற்றி - மற்றொருகுழந்தையை அருமையாகக கையாற்பிடித்துக்கொண்டு, மற்று ஒரு மகவு பின் அரற்ற - வேறொருகுழந்தை பின்னே அழுதுகொண்டு வர, நெருங்கிஞரொடு - மற்றும்நெருங்கிய சுற்றததாருடனே, அரக்கியர் - இராக்கதமாதாகள், நெறி குழல் சுறுக்கொள நீக்கி - நெறித்தகூந்தலிலே சுறுசுறுவென்று நெருப்புப்பற்ற (அதனை)த துடைத்து அவிததுக கொண்டே, கருங் கடலதலை கதறி வீழ்ந்தனர் - கரியகடலிலே கதறிக் கொண்டு விழுநதார்கள்; (எ - று.)—தனி - ஒபபற்ற எனினுமாம்: தனிக்கையால் என இயைப்பினும் அமையும. பி - ம்:—[1]சின்றகற்ற. [2]நீணெடு நிறை. [3]நீங்கி. (௩௪)

௩௫.—ஆயுதசாலைகளில் ஆயுதங்கள் உருகி ஒன்றுதல்.

வில்லும் வேலும் வெங்குந்தமு முதலிய விறகா
யெல்லு டைச்சுட ரெனப்[1]புக ரெஃகெலா முருகித்
தொலலை நன்னிலை [2]தொடர்ந்துபே ருணர்வன்ன தொழிலாற்
சல்லி யுண்டையிற் றிரண்டன படைக்கலச் சாலை.

(இ - ள்.) படைககலம் சாலை - ஆயுதசாலைகளில்,—வில்லும வேலும் வெம குந்தமும் முதலிய விறகு ஆய்-விற்களும் வேலகளும வெவ்விய ஈட்டிகளும முதலிய ஆயுதங்கள் விறகாக [தீககு இரையும் ஆதாரமுமாக என்றபடி], எல உடை சுடா என புகா எஃகு எலாம் உருகி - ஒளியையுடைய சூரியனென்னும்படி காந்தியுள்ள ஆயுதவடிவமாக இருககிற எஃகுகளெல்லாம உருகி, தொலலை நல நிலை தொடாநது - பழமையான தமது நிஜஸ்வரூபத்தையடைநது, பேர் உணாவு அன்ன தொழிலால் சல்லி உண்டையின் திரண்டன - பேரறிவுக்கு ஏற்றசெயல்பெற்று எஃகுருண்டைகளாய்த திரண்டன; (எ - று)

திரளுதல் - உருட்சியாதல், கூடுதல். ஆதியிற் கட்டிகட்டியாகத் திரண்டிருந்த எஃகை யழித்தே சம்மியர் பலஆயுதங்களாகச் செய்துள்ளார்: அப்படைக்கலவடிவமாகவுள்ள எஃகுகளெல்லாம் இவ்வனலினால் உருகி மீண்டும் பழைய தமது உருவதனை யடைந்து உண்டைகளாய்த் திரண்டன; ஒரு திரளிலிருந்து பலவேறுவகையாய்ப்பிரிந்து தனித்து நின்ற பிராணிகள் மீளவும் ஒற்றுமைகொண்டு ஒருங்குசேர்தல் பேரறிவின் செயலாதலால், அசேதநகாரியத்தை அசேதநமாகியஎஃகின்மீது கற்பனைவகையால் ஏற்றி, 'பேருணர்வன்ன தொழிலால் உண்டையின் திரண்டன' என்றார். ஆயுதங்களிறசம்பந்தமுள்ள மரப்பகுதிகள் விறகாக என்பது, முதலடியின் கருத்து. எல - பகல், வெயில். எஃகு உருகுகு; லோஹவகைகளி லொன்று. உண்டை-உருண்டை. பின்னிரண்டடிகளும பிறவாற்றான உரைப்பரேனும பொருந்துமாயிற கொளக. பி - ம்:—[1]புகல. [2]தொடாந்த. (கூ ரு)

கசு.—யானைகள் எரிபட்டு ஓடுதல்.

செய்தொ டர்ககழல் வல்லியும் புரசையுஞ் சிந்தி
[1]நொய்தி னிட்டவன் றறிபறித் துடலெரி நுழைய
மொய்த டச்செவி [2]நிறுத்திவான முதுகினின் முறுக்கிக்
கையெ டுத்தழைத் தோடின வோடைவெங் களிமா.

(இ - ள்.) ஓடை வெம களி மா - நெற்றிப்பட்டமணிந்த வெவ்விய மதக்களிப்புடைய யானைகள்,—உடல் எரி நுழைய - (தமது) உடம்பிலே நெருப்புப் பிடிக்கவே,—கழல் தொடா செய் வல்லியும - தமது கால்களிற் பூட்டுதல் செய்த விலங்குகளையும், புரசையும - கட்டுக்கயிற்றையும், சிந்தி - அறுத்துச் சிதறிவிட்டு,—இட்ட வல் தறி நொய்தின பறித்து - (தம்மைகட்டுதற்கு ஆதாரமாக நாட்டிய) வலியதூணகளை எளிதிற பெயர்த்துக்கொண்டு,—மொய் தட செவி நிறுத்தி - வலிய பெரியகாதுகளை அசையாமற்கொண்டு, வால் முதுகினில் முறுகி - வாலை முதுகின்மேலே முறுக்கிநீட்டி, கை எடுத்து அழைத்து - துதிக்கையைத் தூக்கிக் கதறிக்கொண்டு, ஓடின—.

தரிமைநவிற்சியணி. அழைத்தல் - கூவிவீரிடுதல். பி - ம்:—[1]நொய்திலவிட்ட. [2]அகறறியவ்வாலினை. (கூசு)

கஎ.—பறவைகள் கடலில் விழுந்து அழிதல்.

வெருளும வெம்புகைப் படலையின் [1]மீச்செல வெருவி
யிருளும வெங்கடல் விழுந்தன வெழுந்தில பறவை
மருளின் மீன்கணம விழுங்கிட வுலந்தன மனத்தோ
ரருளில வஞசரைத் தஞ்சமென் [2]றடைந்தவ ரனைய.

(இ - ள்.) வெருளும வெம் புகை படலையின் - (காண்பவர்) அச்சங்கொள்ளத்தக்க வெவ்வியபுகைகூட்டம பரவியதனால், மேல் செல வெருவி - வானத்திற பறந்து செல்லுதற்கு அஞ்சி, இருளும வெம் கடல விழுந்தன - கருநிறங்கொண்ட கொடியகடலிலேவிழுந்தனவாகிய,

பறவை பறவைகள், எழுந்தில - (பின்பு) வெளியெழாமல் மருளின் மீன் கணம் விழுங்கிட உலந்தன-மாறுபாட்டையுடைய மீன்கூட்டங்கள் (தம்மை) உணணுதலால் ஒழிந்துபோயின; (அவை), மனத்து ஓர் அருள் இல் வஞ்சரை தஞ்சம என்று அடைந்தவர் அனைய - மனதிலே அருளென்பது சிறிதுமில்லாத வஞ்சகர்களைத் தமகு அடைகலமாகக் கருதிச சரணமடைந்தவர்களைப் போன்றன; (எ - று.)

மனத்திற் சிறிதும்அருளில்லாத வஞ்சகர்களைப் பிறரிடத்து அச்சத்தாற் கதியாக அடைந்தவர்கள் அவராற்பாதுகாக்கப்படாது அழிகக்பட்டதொலைவர்; அவாகளை, புகைததிரளுக்கு அஞ்சிக் கடலைப் புகலிடமாகக கொண்டு அதகு மீனினம் விழுங்குதலால் அழிந்துபோன பறவைகட்கு உவமை கூறினா. பறவைகள் மீன்களைப் பிடிததுததின்னும் இயல்பினவாதலால் அப்பகையுயிர்கள்பககல் மாறுபாடுகொணட மீன்க ளென்பார், 'மருளின் மீன்கணம்' என்றார். தம்மைவிழுங்கும் உயிர்கள அவற்றிற்கு உரிய இடத்தை விட்டுத தாம்வாழுமிடமான நீர் நிலையில் வந்து அகப்பட்டுக கொள்ளவே, அவற்றை மீன்கள் வைரக்தீர விழுங்கின வென்க. மருள் இல் என்று பிரிதது, (அஞ்சவேணடிய அப்பறவைகட்கு) அஞ்சுதலில்லாத எனினுமாம். படலை - படலமென்ற வடசொல்லின் விகாரம். அனைய - பலவின்பாற்குறிப்புமுற்று. புகைப்படலையின்மேல் செல - புகைக்கூட்டத்தைக் கடந்து அபபாற்செல்ல எனினுமாம. பி - ம்:—[1]மேற்செல. [2]மருளும். [3]அடைந்தனா. (கஎ)

கஅ.—இராவணன்மாளிகையில் தீப்பற்றுதல்.

நீரை வற்றிடப் பருகிமா நெடுநிலந் தடவித்
தாரு வைச்சுட்டு மலைகளைத் [1]தழற்செய்து தனிமா
மேருவைப பற்றி [2]எரிகின்ற காலவெங் கனல்போ
லூரை முற்றுவித் திராவணன் மனைபுக்க துயாதீ.

(இ - ள்.) நீரை வறறிட பருகி - நீரை வறறும்படி உறிஞ்சி, மா நெடு நிலம் தடவி - மிகப்பெரிய பூமியிற பரவி, தாருவை சுட்டு - மரங்களை யெரித்து, மலைகளை தழல் செய்து - மலைகளை வேகப்பண்ணி, தனி மா மேருவை பறறி எரிகின்ற - ஒப்பறற பெரிய மேருமலையைப் பறறியெரிகிற, கால வெம கனல போல் - வெவ்விய கறபாததகாலாக்கினிபோல,—உயர் தீ - உயாந்துதாவுகிற அந் நெருபபானது, ஊரை முறறுவித்து-அவ்விலங்கா நகரம முழுவதையும எரிதது அழிதது இராவணன மனை புக்கது-(அக்கரினிடையே யுளள) இராவணனது மாளிகையிற பிரவேசித்தது; (எ - று.)

பூமியினிடையே பொன்மயமாய் உயர்ந்துள்ள மகாமேருகிரி - அக்கரினிடையே உயாந்துவிளங்குகிற பொன்மயமான இராவணன் மாளிகைக்கு உவமை. சுற்றிலும எதிர்த்துப் பின்பு இடையிலுள்ள மேருவிற புகுங

காலாக்கினிபோல, இவ்வக்கினி அவ்வூரைச சுற்றிலும் எரிததுப்பின்பு இடையிலுளள இராவணனரணமனையிற் புகததெனக பி - ம்:—[1]தணல். [2]எரிகின்ற. (௩௮)

௩௯.—அங்குஉள்ள தேவசாதியாரனைவரும் கலங்கி நிலைகுலைந்து ஓடுதல்.

வான மாதரு மற்றுள மகளிரு மறுகிப்
போன போனதிக் [1]கறிகில ரனைவரும் போனு
ரேனை நின்றவ ரெங்கணு மிரிந்தன ரிலங்கைக்
கோன வானவர் பதிகொண்ட நாளெனக் குலைந்தார்.

(இ - ள்.) வானம் மாதரும் - (அவ்விராவணன் மாளிகையிலுள்ள) தேவதாஸ்திரீகளும், மறறு உள மகளிரும - மற்றுமுள்ள (யக்ஷகந்தர்வ கிந்நராதி தேவகண) ஸ்திரீகளும, அனைவரும - ஆகிய எல்லாரும், மறுகி கலஙகி, போன போன திககு அறிகிலா போனுர் - (தாம தாம) செல்லுகின்றதிசை (இன்னதென்று தாம) அறியாதவாகளாய்க் கண்டபடி சிதறி ஓடிப்போனுர்கள்; ஏனை நின்றவர் - மற்றும (அங்குக குறறேவல் செய்து) நின்றவாகளான தேவசாதியார், எங்கணும் இரிந்தனர் - எல்லாவிடங்களிலும சிதறியோடினுர்கள்; (இஙஙனம் தேவசாதி ஸ்திரீகளும ஆடவர்களும்), இலஙகை கோன் அவானவாபதிகொண்ட நாள் என குலைந்தார் - இலஙகையரசனான இராவணன் அந்தத் தேவலோகததை வென்று தனதாகக்கி கொணட அககாலததில் (நிலை குலைந்தமை) போல நிலைகுலைந்தாகள்; (எ - று.)

அவானவர் - தொகுத்தல். போன இயல்புபறறி வநத காலவழுவமைதி, கீழ்வந்த நான்காஞ் செயயுளிலும இது. 'போனபோனதிககு அறிகிலா' என்பதற்கு - ஒருவர்போன திசையை மறறொருவர் அறியாதவராய் என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]அறிவரும. (௩௯)

௪௦.—அங்குஉள்ள கஸ்தூரிமுதலியன புகைய, நெடுந்தூரம் மணம்வீசுதல்.

[1]நாவி யுந்நறுங் கலவையுங் கற்பக நக்க
பூவு மாரமு மகிலுமென் றினையன புகையத்
தேவு [2]தண்மழை செறிபெருங் குலமெனத் திசையின்
பாவை மாநறுங் குழல்களும் பரிமளங் கமழ்ந்த.

(இ - ள்.) (அவ்விராவணன் மாளிகையிலே யிருகக்கிற), நாவியும் - கஸ்தூரியும், நறுங கலவையும் - வாசனையையுடைய (குங்குமப்பூ முதலிய) கலபபுக்கு உரிய பொருளகளும, கறபகம நகக பூவும - கறபக விருக்ஷங்களினின்றுகொணரப்பட்ட மலாந்த பூககளும, ஆரமும - சந்தனமும், அகிலும் - அகிற்கட்டைகளும், என்று இனையன - என்று இததனமையனவான பொருள்கள், புகைய - தீபபற்றி வெநதுபுகைதலினுல், தண மழை செறி தேவு பெருங குலம என - குளிர்ந்த (தேன்) மழைபொழிகின்ற தெயவததன்மையையுடைய பெரிய மேககூட்டமபோலவுள்ள, திசையின பாவைமா நறுங குழலகளும் - திகதேவிகளுடைய இயறகைநறுமணமமைந்த கூந்தல்களும, பரிமளம கமழ்நத - (இப்புகைவாசமவீச) நறுமணங்கமழ்வனவாயின.

எணதிசையெல்லையளவும அப்புகை பரவி நறுமணம்வீசியதென்க. திக் தேவகைகள் பெணபாலா ராதலால, 'திசையின்பாவைமார்' எனப்பட்டனர். இன் - சாரியை. பாவைமார் - சிதறிரப்பதுமைபோ லழகிய மகளிர். 'பாவை மார் நறுங்குழல்கள் பரிமளங்கமழ்ந்த' - இயறகை நறுமணமுள்ளவறறிற்குச செயறகை நறுமணமுண கூறியவாறு. நாவி - கஸ்தூரிமா னென்னும ஒரு வகைச சாதி மானினது நாபியினின்று எடுகக்படுவது. கலப்பது கலவை யெனக் காரணப்பெயா. ஈகுதல் - சிரித்தல்; இதகு மலர்தல். பி - ம்:— [1]நாவியின். [2]தேன். (௪௦)

௪௧.—இராவணன்மாளிகையின் ஏழுநிலையுபரிகைகளும் எரிதல்.

சூழும் வெஞ்சுடர் தொடர்ந்திட யாவருந தொடாரா
வாழி வெஞ்சினத தாண்டொழி லிராவணன் மனையி
னூழி வெஙகன லுண்டிட வுலகமென் றுயர்ந்த
வேழும் [1]வெந்தன வெரிந்தன நெடுநிலை யேழும்.

(இ - ள்) சூழும் வெம சுடா தொடாந்திட - (எஙகுஞ்) சூழ்ந்தெரி கின்ற வெவ்விய நெருப்பு பொயத தாவியதனால்,—யாவரும் தொடாரா - எவருமகிட்டவொண்ணாத, ஆழி வெம் சினதது ஆண தொழில் இராவணன் மனையின் - (உலகததையழிககுந) கடலபோன்ற கடுங்கோபததையும் பராகரி ரமசசெய்கையையு முடைய இராவணனது மாளிகையின், நெடு நிலை எழும் - உயாநத உபரிகையடுககுகள் ஏழும,—உலகம என்று உயர்ந்த ஏழும் ஊழி வெம கனல உண்டிட வெந்து அன - உலகமகளென்று சொல்லப்பட்டு (ஒன் றன்மேலொன்றாக) உயாநதுளள ஏழு இடங்களும் வெவ்விய கற்பாந்த காலக் கினறி உணணுதலா லெரிந்தாறபோன்றனவாய, எரிந்தன—; (எ - று.)

ஒன்றனமேலொனறாகவுயாநத ஏழுநிலைகட்கு அங்ஙனமுளள ஏழு உலகங்களும, இப்பெருநதீகு ஊழிததீயும உவமை யெனக் காண்க. யாவ ருந்தொடாரா எனபது - சினததுககும, இராவணனுக்கும், மனைகளும் அடை மொழியாகததககது இரணடாமடியின முதலில் 'வாழி' என்று ஏவுதது, அசையெனக கொளளுதலு மொனறு. முதலடியில் தொடைழுநயங் காண்க. பி - ம்:—[1]வெநதென. (௪௪)

௪௨.—இராவணனரண்மனை எரிதல்.

பொன்றி ருத்திய [1]தாயதா லிராவணன் புரைதீர்
குன்ற மொத்துயா தடநெடு மாநிலைக கோயி
[2]னினற துறறெரி பருகிட [3]நெரிவுற வுருகித்
தென்றி சைககுமோ மேருவுண் டாமெனத் தெரிந்த.

(இ - ள்.) இராவணன - இராவணனுடைய, புரை தீர் - குற்றமற்ற தும், குன்றம் ஒதது உயர் - மலைபோ லுயாந்ததும், தட நெடு மா நிலை - அகன்ற நீண்ட பெரிய (ஏழு) நிலைகளையுடையதுமான. கோயில் - அரண் மனையானது,—பொன் திருததியது ஆயதால் - பொன்னினாற் செய்யப்பட் டுள்ளதானது பற்றி,—எரி நின்றது உற்று பருகிட நெரிவு உற உருகி -

நெருப்பு (இருத்தலும் படுத்தலு மிணறி) எழுந்துநின்றாற்போலோங்கி யுணணுதலால் [எரித்தலால்] (அந்தஅடுகுகள்) நெரிந்து ஒருபிண்டமாம்படி வெந்து இளகி, தென்திசைக்கும ஓர் மேரு உண்டு ஆம் என தெரிந்த - தெறகுத திகிலும் ஒரு மேருமலை யுள்ளதென்று சொல்லுமபடி தோன்றிறறு; (எ - று.)—ஆம - அசை.

தற்குறிப்பேற்றவணி. இந்தப் பரதகண்டததுககு நெடுந்தூரம் வடககே ஜமபூத்வீபத்தின் நடுவில் பொன்மயமாய் ஓங்கிய மகாமேருகிரி இருககின்றதென்பது, புராணப்பிரசித்தம். தென்கடலிடையேயுள்ள தீவாகிய இலங்காபுரியிலிருககிற இராவணனது பொன்மயமா யோங்கிய அரணமனை, தீப்பற்றுதலா லிளகி விளங்கி, தென்திசையிலுள்ளதொரு மேருகிரியைபபோலுமென்க. பிரசித்தமான மேருமலை வடதிசையி லுள்ளதாதலால், 'தென்திசைககும்' என்ற உம்மை - இறந்ததுதழுவியஎச்சப்பொருளது நீர்ககு உரியதான பருகுத லென்ற சிறப்புவினையை இஙகு நெருப்புகககு கூறியது, ஒன்றன் வினையை மறறொன்றன்மே லேற்றிக் கூறும் உபசாரவழககு. திசைக்கு-உருபுமயக்கம். பி ம்:—[1]ஆதலின். [2]நின்றுதுறறெரி. [3]நெறியுற. ()

சுகூ.—இராவணன் முதலிய அரக்கர்கள் தப்பியுய்ய, இலங்கை வெந்தழிதல்.

அனைய காலையி னரக்கனு மரிவையர் குழுவும்
புனைம ணிப்பொலி புட்பக விமானத்துப் போனார்
நினையு மாத்திரை யாவரு நீங்கினர் நினையும்
வினையி லாமையின் வெந்ததவ் விலங்கன்மே லிலங்கை.

(இ - ள்.) அனைய காலையின் - (அவ்வாறு இராவணன் அரணமனை வேகின்ற) அப்பொழுது,—அரக்கனும்-தலைமையரககனான இராவணனும், அரிவையர் குழுவும் - (அவனுக்கு உரிமைபூண்ட) மகளிரது கூட்டமும், புனை மணி பொலி புட்பகவிமானதது போனார் - அழகிய இரத்தினஙகளினால் விளகுகின்ற புஷ்பகவிமானததின்மே லேறி (வானத்திறசென்று) தப்பிப் பிழைத்தார்கள்; யாவரும் - (எரிநதிறந்தவாகள் போக மற்றையரககர்கள) அனைவரும், நினையும் மாத்திரை நீஙகினர்-நினைத்தமாத்திரத்தினால் எழுந்து (வானத்திற்சென்று) தப்பியுய்ந்தார்கள்; நினையும் வினை இலாமையின் - அஙஙனம் நினைக்குந்தனமை யிலலாமையால், அ விலஙகல்மேல் இலஙகை வெந்தது - அந்தத் திரிகூடமலையின்மேலுளள இலஙகாபுரியானது வெந்து போயிற்று; (எ - று.)

புஷ்பகமென்ற விமானம், தனமேலேறியவா நினைததவிடததில் அவர் நினைத்தபடி செல்ல வல்லது; எததனைபோ ஒருஙகுஏறினாலும் அததனை பேர்ககும் தான் வளாநது இடஙகொடுப்பது; ஆதியிற் குபேரனுககுப் பிரமனிடததிலிருந்து வரமாகக கிடைததது. பினபு இராவணன தேவர்களையும் முனிவாகளையும மிகுதியாகவருததுதலை யறிநத குபேரன தமபியெனனும அன்பினால் ஒருதூதன்மூலமாக 'இஙஙனஞ செய்வது தகுதியனறு' எனறு தெரிவிக்கவே, அதுகேட்டவளவில்

இராவணன் பெருங்கோபங்கொண்டு சேனையோடுசென்று அவனை யெதிர்த்துப் பொருதுவென்று அவனது புஷ்பகவிமானத்தைக் கவர்ந்துகொண்டு அதன்மேலேறி இலங்கைக்கு மீண்டனன்; அதுமுதல் அவ்விமானம் இராவணன் வசமாய் இலங்கையில் இருந்தது. இப்பொழுது இராவணன் தனக்கு உரியமகளிர்களுடன் அவ்விமானத்திலேறி விசும்பிறசென்று இவ்வெரிக்குத் தப்பியுய்ந்தனனென்பது, முன்னிரண்டடியிற் கூறப்பட்டது. அரக்கர்கள் முதலியோர் நினைத்தபடி சஞ்சரிக்க வல்லவர்களாதலால் புஷ்பகத்திற் சென்றவர்போக மறைறையோர் நினைத்தமாத்திரத்தில் வானத்திலெழுந்து சென்று தப்பிப்பிழைத்தனர். அங்ஙனம் நினைத்து அப்பாற் செல்லுந் திறம் அசேதநமான இலங்காபுரிக்கு இல்லாமையால், அதுமாத்திரம் தப்பியுய்தலின்றி இருந்தவிடத்தி லிருந்தபடி எரிந்தழிந்ததென்பது, 'நினையும்வினையிலாமையின் வெந்தது அவ்விலங்கன்மே லிலங்கை' என்பதன் கருத்து. இது, கவிசமத்காரம். (சரு)

சச.—இராவணன் அரக்கரைநோக்கி 'இலங்கையெரியக் காரணமென்?' என்றல்.

ஆழித் தேரவ னரக்கரை யழலெழ நோக்கி
யேழுக் கேழென வடுக்கிய வுலகங்க ளெரியு
மூழிக் காலமவந் துற்றதோ [1]பிறிதுவே றுண்டோ
பாழித் தீச்[2]சுட வெந்ததென் னகரெனப் பகர்ந்தான்.

(இ - ள்.) ஆழி தேரவன் - ஒற்றைச்சக்கரமுடைய தேரையுடையவனாய சூரியன்போல (வானத்துப் புஷ்பகவிமானத்தின்மீது) விளங்குபவனாகிய இராவணன், அழல் எழ - கோபத்தால் (தன்கண்களினின்று) நெருப்பு எழ, அரக்கரை நோக்கி இராக்கதர்களைப் பார்த்து, 'ஏழுக்கு ஏழ் என அடுக்கிய உலகங்கள் எரியும் ஊழிக்காலம் வந்து உற்றதோ - ஏழுடன் ஏழாக [பதினான்காக] ஒன்றன்மீதுஒன்று அடுக்காய் அமைக்கப்பெற்ற உலகங்களெல்லாம் எரியும்படியான கறபாந்தகாலம் வந்து சேர்ந்ததோ? பிறிது வேறு உண்டோ - மற்றும் வேறு யாதேனும் உண்டாயிற்றோ? பாழி தீ சுட நகர் வெந்தது என் - (இங்ஙனம்) பெருநெருப்பு எரிந்ததலால் இவ்விலங்காபுரி வெந்த காரணமென்ன?' என பகர்ந்தான்-என்று வினாவினான்; (எ - று.)—பி-ம்:—[1]பிறிதுற்றதுண்டோ. [2]சுடவந்தது. (சச)

சரு.—நீகழ்ந்தசெய்தியை அரக்கர்கள்கூற, இராவணன் கோபித்தல்.

கரங்கள கூப்பினா தங்கிளை திருவொடுங் காணா
ரிரங்கு கின்றவல் லரக்கரீ தியம்பின ரிறையோய்
தரங்க வேலைபி னெடியதன் வாலிடட தழலாற்
குரங்கு [1]சுட்டதீ தென்றலு மிராவணன் கொதித்தான்.

(இ - ள்.) (அங்ஙனம் இராவணன் வினாவியவளவிலே),—தம் இளைதிருவொடும் காணாரு இரங்குகின்ற வல் அரக்கர் - தமதுசுற்றத்தாரையும்

செல்வத்தையும காணாதவாகளாய் [இழந்தவாகளாய]ச சோகித்துககொண்டிருககிற வலிய இராகததாகள், கரஙகள் கூபபினா ஈது இயமபினா - தஙகள் கைகளைக கூப்பிககொணடு [அஞ்சலிசெயதுகொணடு] இஙஙனஞசொல்லலானார்கள்:—(என்னவென்றெனில்,—) 'இறையோய் - தலைவனே! தரஙகம் வேலையினநெடிய தன் வால் இட்ட தழலால் - அலைகளையுடைய கடலினும் நீண்ட தனதுவாலிலே (நாம்) கொளுததிய நெருப்பைக் கொண்டு, குரஙகு சுட்டதுஈது - குரஙகு இவ்வாறு சுடலாயிறறு, என்றலும்-என்று சொன்னவுடனே,—இராவணன கொதித்தான் - இராவணன் கோபஙகொணடான்.

கிளை - உவமையாகுபெயா. சுட்ட தீது என்றுபிரிதது, குரஙகு எரித்த தீமை (இது) என்று பொருள் கொளளலுமாம். பி - ம் —[1]சுட்டது வெனறலும். (சகு)

சசு —இராவணன் சிலகூறிச் சிரித்தல்.

[1]இனறு புன்றொழிற் குரங்குதன் வலியினு லிலஙகை
நின்று வெந்துமா நீறெழுகின்றது [2]செநதீத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்று[3]போர் வலியென விராவண னககான்.

(இ - ள்.) இன்று—, புன் தொழில் குரஙகுதன் வலியினால் - அற்பத தொழிலையுடைய குரஙகினது வலிமையினால், இலஙகை - இலஙகாபுரியானது, நின்று வெந்து மா நீறு எழுகின்றது - முழுவதும் எரிநது பெருஞ் சாம்பல் பறக்கின்ற தாயிறறு! செந் தீ தின்று தேககிடுகின்றது - செநநிறமுள்ள நெருப்பு (இந்நகரததை) உணடு எப்பமிடுகின்றதாயிற்று!! (இதனைக் கணடால்), தேவர்கள சிரிப்பா - (நமமால் வெனறு வலிதொலைககப்பட்டவாகளான) தேவர்கள் நகைப்பார்களே!! போா வலி நன்று நனறு - (நமது) போர்ததிறம் மிக நனறாயிருககின்றது!!! என - என்று சொல்லி, இராவணன்—, நக்கான் - சிரித்தான்; (எ - று.)

'நின்று' என்பதை அசையென்றுங கொள்ளலாம். தேக்கிடுதல - நிறைந்து தெவிட்டுதலுமாம. 'நனறுநன்று' என்றது, இகழ்ச்சிக குறிப்பு. பி - ம்:—[1]எனறுகொல்குரஙகன்னதிவ்வலியுளது. [2]நெருப்பு. [3]போல். (சசு)

வேறு.

சஎ.—'அக்கினிதேவனைப் பிடித்துவாருங்கள்' என்று இராவணன் கோபத்தால் அரக்கரைநோக்கிச் சொல்லுதல்.

உண்டநெ ருப்பைக், கண்டனர் பற்றிக,
கொண்டனை கென்று, னண்டரை வென்றான்.

(இ - ள்.) 'உணட நெருப்பை - (இஙஙனம இலஙகையை) எரித்த அகநினியை, கணடனா பறறிகொணடு அணைக - நாடிபபிடிததுக கொணடு வருவீாகளாக', என்றான் - (இன்று அரககாகளை நோகககி

கோபததோடு) கூறினன்: (யாவனெனில்:—) அண்டரை வென்றான்-முன்பு தேவர்களைச் சயித்தவனான இராவணன்: (எ - று.)

முன்பு எல்லாததேவர்களையும் வென்று அடக்கியவனாதலின் அச்செருக்கினால், இப்பொழுது தணடிக்குங் கருத்துடையனாகி, 'தலையெடுத்துத் தீங்குசெயலான அகங்கினியைப் பிடித்துக் கொணடு வாருங்கள்' என்றான் ஆகவே, 'அண்டரை வென்றான்' என்ற பெயர் - ஸாபிப்ராயவிசேஷ்ய மாதலால், கருத்துடையடைகொளியணி. (௪௭)

௪௮.—அநுமானைப்பிடித்துவரும்படி இராவணன் அரக்கர்க்குக் கட்டளையிடுதல்.

உற்றக லாமுன, [1]செற்ற குரங்கைப்,
பற்றுமி னென்றான், முற்று முனிந்தான்.

(இ - ள.) (மற்றும் இராவணன்), முற்றுமுனிந்தான் - பெருங்கோபங் கொணடவனாய், (அரக்கர்களை நோக்கி), 'செற்ற குரங்கை - (நமக்கு இவ்வளவு) தீங்குசெய்த குரங்கை, உற்று அகலாமுன் பற்றுமின் - விரைந்து ஓடிப்போகாத முனனே பிடித்துவாருங்கள்', என்றான் - என்று கட்டளையிட்டான்; (எ - று.)

உற்று - (நீங்கள்) போய், பற்றுமின் என்று இயைத்தும் பொருள் கொள்ளலாம. பி - ம் —[1]கற்ற. (௪௮)

௪௯.—உடனே பல வீரர்கள் செல்லுதல்.

சாரய னின்றார், வீரர் விரைந்தார்,
நேருது மென்றார், தேரினர் சென்றார்.

(இ - ள.) சார் அயல் நின்றார் - அவ்விராவணனைச்சார்ந்த பக்கத்திலே நின்றவர்களாகிய, தேரினர் வீரர் - இரதாதிபதிகளான வீரர்கள், நேருதும் என்றார் - 'அங்ஙனமே செய்வோம்' என்றுசொல்லி, விரைந்தார் சென்றார் - விரைந்து சென்றார்கள்; (எ - று.)

சார அயல் - அடுத்த அருகில். நேருதல் - உடன்படுதல், எதிர்த்தல், பொருதல். (௪௯)

௫௦.—மற்றும் பலவீரர்கள் அவர்களுடன் செல்லுதல்.

[1]எல்லையி லந்தார், வில்லாவெ குண்டார்,
பல்[2]லதி காரத், தொல்லர்தொ டர்ந்தார்.

(இ - ள்.) எல்லை இலந்தார் - அளவற்றவர்களான, வில்லர் - வில்வீரர்களும், பல் அதிகாரம் தொலலா - (அமைசசு படைத்தலைமை முதலிய) பல வகை அதிகார ஸதாநங்களில் தொன்று தொட்டு [செய்து வரலாய்] உள்ளவர்களும, வெ குண்டார் - கோபங்கொணடு, தொடர்ந்தார்-அந்ததேர்வீரர்களுடன சென்றார்கள; (எ - று.)—பி - ம்:—[1]வல்லை. [2]அதிகாரதெல்லைபயந்தார். (௫௦

வேறு.

ருக.—தலைமைவீரர்களெழுவர் போர்க்கு எழுதல்.

நீர்கெழு வேலை நிமிர்ந்தார், தார்கெழு தானை சமைந்தார்,
போர்கெழு மாலை புனைந்தா, ரோரெழு வீர ருயர்ந்தார்.

(இ - ள்.) போர் கெழு மாலை புனைந்தா - போர்ககுஉரிய (துமபைப்பூ) மாலையை (எப்பொழுதுந்) தரித்துள்ளவாகளான [எப்பொழுதுமே யுததசந்நததரா யுள்ளவாகளான], ஓர் எழு வீரர் - எழுவீராகள்,—நீர் கெழு வேலை நிமிர்ந்தார் - நீரமயமாய நிறைநதுள்ள கடலபோலப பொஙகினவர்களாய், தார்கெழு தானை சமைந்தா - படைவகுப்பமைந்த சேனைகளைச சிததஞ் செய்தவாகளாய, உயர்ந்தா - (போராககு) எழுந்தார்கள்; (எ - று.)

இனி, உயர்ந்தா - தலைமைபெறறவர்களான, ஓர் எழு வீரர் - எழு வீராகள், தானை சமைந்தா - சேனைகளைச சிததஞ்செயதாகளெனினுமாம.

ருஉ.—அவர்கள் இலங்கையைச் சூழ்ந்து நாடி அநுமானைக்காணுதல்.

விண்ணினை வேலை விளிம்பா, மண்ணினை யோடி வளைந்தா,
ரண்ணலை நாடி யணைந்தா, கண்ணினின் வேறயல கண்டார்.

(இ - ள்.) விணணினை - வானததையும், விளிமபு வேலை ஆர் மண்ணினை - சுற்றிலுங கடல் சூழப்பெற்ற பூமியையும் [இலஙகைத் தீவையும்], ஓடி வளைநதார் - ஓடிவந்து சூழ்ந்தவாகளாய், அணணலை நாடி அணைந்தார் - பெருமையிற சிறந்தவனான அநுமானைத தேடி நெருஙகி, அயல் வேறு கணணினின் கணடார் - ஒருபக்ககதில (அவ்வநுமானைத) தனியே (தமது) கணகளாற பாததார்கள்; (எ - று.)

விளிமபு - ஓரம், கரை, எல்லை. கணணினின் என்பதி லுள்ள 'இன்' இரண்டனுள், முன்னது - சாரியை; பினனது - ஐந்தனுருபு. (ருஉ)

ருங.—இவர்கள் வீரவாதஞ்செய்து சூழ, அநுமான் காணுதல்.

பற்றுதிர் பறறுதி ரென்பா, ரெறறுதி ரெற்றுதி ரென்பா,
[1]முற்றினா முறறு முனிந்தா, கறறுணர் மாருதி கண்டான்.

(இ - ள்.) முற்றும முனிந்தா-பெருஙகோபஙகொணடவர்களான அவ்வரக்காகள்,—(அநுமானைககணடவுடனே), பற்றுதிர் பற்றுதிர் என்பார் - '(இவனைப்) பிடிததுககொள்ளுஙகள பிடிததுகொள்ளுஙகள்' என்று சொல்பவாகளும், எறறுதிர் எற்றுதிர் என்பா - '(இவனைத) தாக்குஙகள் தாக்குஙகள்' என்றுசொலபவாகளுமாய், முறறினா - (அனுமானை) வளைநது கொணடாகள்; (அதனை), கற்று உணா மாருதி கணடான-(சகலகலைகளையும் சூரிய பகவானிடததில) ஓதியுணாநத வாயுகுமாரனான அனுமான பாததான்;

பற்றுதிர், எறறுதிர் என்ற ஏவற்பனமை முற்றுக்களில், த - எழுத்துப் பேறு. பி - ம் —[1]சுறறுதிசுற்றுதிரென்பா-முற்றினா முறறு முனிநதா. ()

ருச.—அநுமான் தன்னைவளைத்துகொண்ட அரக்கர்களைத் தான் வாலினால் வளைத்துகொள்ளுதல்.

ஏல்கொடு வஞ்ச ரெதிர்ந்தார், கால்கொடு கைகொடு [1]கார்போல்,
வேல்கொடு கோலினர் வெந்தீ, வால்கொடு தானும் வளைந்தான்.

(இ - ள்.) ஏல் கொடு வஞ்சர் - (அநுமானையெதிர்ப்பதாக இராவணன் முன்னிலையில்) ஏற்றுகொண்டுவந்த கொடிய வஞ்சகர்களான அவ்வரக்கர்கள், எதிர்ந்தார் - (அநுமனம் அவனை) *எதிர்த்து, கால் கொடு கை கொடு வேல்கொடு - (தங்கள்) கால்களைக் கொண்டும் கைகளைக் கொண்டும் வேலாயுததைக் கொண்டும (தாகுபவர்களாய), கார்போல் கோலினர் - மேகம் போல (தடிரண்டு அநுமானை) வளைந்து கொண்டார்கள்; (அநுமனம்வளைந்த அவர்களை), தானும - அவ்வனுமான் தானும், வெம தீ வால் கொடு வளைந்தான் - வெவ்விய நெருப்பு மூண்டு எரியப்பெற்ற வாலைக்கொண்டு வளைந்தான்; (எ - று.)

கீழ் "நேருதுமென்றா" என்றதனைக் கருதி, இங்கு அரக்கர்க்கு 'ஏல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இரண்டாமடியில் 'வந்த' என ஒரு சொல் வருவிக்கப்பட்டது, கால்களையும கைகளையும் பெற்று வந்த மேகங்கள்போல என்று அரக்கர்க்கு இல்பொருளுவமை கூறியதாகவுங் கொள்ளலாம். பி-ம்:—[1]கால்போல். (ருச)

ருரு —அநுமான் ஒருமரத்தைக்கொண்டு அரக்கர்களை அடித்துக் கொல்லுதல்.

பாதவ மொன்று பகுத்தான், மாதிரம் வாலின் வளைத்தான்,
[1]மோதினன் மோத முனிந்தா, ரேதியு நாளு மிழந்தார்.

(இ - ள்.) மாதிரம் வாலின் வளைத்தான் - (எல்லாத) திசைகளிலும் [சுற்றிலும்] (அரக்கர்களைத் தனது) வாலினால் வளைத்துகொண்டவனான அநுமான், பாதவம் ஒன்று பகுத்தான் - ஒருமரத்தைப் பெயர்த்து எடுத்து, மோதினன் - (அந்தமரத்தினால்) அடித்தான்; மோத-(அநுமனம்) அடித்ததனால், முனிந்தார் ஏதியும நாளும் இழந்தா - கோபங்கொண்டு வந்தவர்களான அரக்கர்கள் (தம்தமது) ஆயுதங்களையும ஆயுளையும் இழந்தார்கள்.

ஈற்றடி உடனிகழ்ச்சியணி: வடநூலார், ஸஹோக்தியலங்காரமென்பர்: அஃதாவது - கற்றோரை மகிழ்விக்கும் உடனிகழ்தலைச் சொல்லுதல். படைக்கலங்களழியத தாம இறந்தன ரென்பது பொருள். வளைத்தான், முனிந்தார் - பெயர்கள். நாள் - வாழ்நாள். பி - ம்:—[1]மோதினர். (ருரு)

ருரு.—அவருடம்பினின்று பெருகிய இரத்தம் வெள்ளமாய் ஓடுதல்.

நூறிட மாருதி நொந்தா, ரூறிட [1]வூனிடு புண்ணீர்,
சேறிட வூரடு செந்தீ, யாறிட வோடின தாரூம்.

(இ - ள்.) மாருதி நூறிட - (அநுமனம்) அநுமான் அடிக்க, நொந்தார் - வருந்தினவர்களாகிய அரக்கர்கள், ஊறஇட - காயமடைய, ஊன்

இடு புண் நீர் - அவருடம்பினின்று பெருகிய இரத்தமானது, சேறு இட - (தரையெங்கும்) சேறாம்படியும், ஊர் அடு செம் தீ ஆறிட - அவ்வூரை யெரித்த சிவந்த நெருப்பு தணியும்படியும், ஆறு ஆய் ஓடினது - ஆறாய்ப்பெருகிற்று; (எ - று.)—பி - ம்:—[1]ஊனொடு. (௫௬)

௫எ.—இறவாதசிலர் மீண்டும் எதிர்க்க அநுமான்அவர்களையுங் கொல்லுதல்

[1]தோற்றினர் துஞ்சின ரல்லா, ரேற்றிகல் வீர ரெதிர்ந்தார்,
காற்றின் மகன்கலை கற்றான், கூற்றினு மும்மடி கொன்றான்.

(இ - ள்.) தோற்றினா - (கணணெதிரிலே) காணப்பட்டவாகளுள், துஞ்சினர் அல்லா - இறந்தவர்கள போக மிசசப்பட்டவர்களான, ஏறு இகல் வீரா - ஆண்சிங்கம்போன்ற பல பராகிரமங்களையுடைய வீரர்கள், எதிர்ந்தார் - (மீளவும் அநுமானை) எதிர்த்தாகள்; கலை கற்றான் காற்றின் மகன் - சகல சாஸ்திரங்களை ம் (சூரியபகவானிடதது) ஓதியுணாந்தவனும் வாயு குமாரனுமான அநுமான், கூற்றினும் மும்மடி கொன்றான் - யமனிலும் மூன்றுமடங்கு அதிகமாக (அவாகளனைவரையுங) கொன்றிட்டான்.

தோற்றினா துஞ்சினா - முனனிறந்தவாகள் (இங்ஙனம் அநுமானாற் கொல்லப்பட்டு) இறந்தார்கள; அல்லா - அவாகளலலாத மற்றவாகளான [பின்னின்றவாகளாகிய], இகல் வீரா - வலிமையையுடைய வீராகள், ஏற்று எதிர்ந்தார் - எதிர்ததுப் போர்செய்தாகள் என்றும் உரைகொள்ளலாம. பி - ம்:—[1]தோற்றிலர். (௫எ)

௫அ.—ஐம்பதினாயிரம்பேர் இறக்க, மற்றையோர் கடலில்மூழ்குதல்.

மஞ்சுறழ் [1]மேனியர் வன்றாண், [2]மொய்ம்பினர் வீரர் முடிந்தா,
[3]ரைம்பதி னாயிர ரல்லார், பைம்புனல் வேலை படிந்தார்.

(இ - ள்.) மஞ்சு உறழ் மேனியர் - மேகம்போன்ற உடம்பு நிறததையுடையவர்களும், வல தாள மொய்ம்பினா-வலியகால்களையும் தோள்களையுமுடையவர்களுமான, வீரா - வீரர்களில், ஐமபதினாயிரர் - ஐம்பதினாயிரம் போ, முடிந்தா - இறந்தாகள்; அல்லா - அவர்களல்லாதவாகளெல்லாம, பைம் புனல் வேலை படிந்தார் - (தப்பியோடிப) பசுமையாகக காணப்படுகிற நீரையுடைய கடலில முழுகினாக்கள; (எ - று.)—முதலடி - இனவெதுகை. பி - ம்:—[1]மேனிய. [2]மொய்ம்பின. [3]ஒன்பதினாயிரர். (௫அ)

௫௬.—அநுமான் தனது தீக்கொளுத்தியவாலைக் கடலில் தோய்க்க அதனால் அவர்களும் இறக்கவே, தலைமைவீரரெழுவரும் எதிர்த்தல்.

தோய்சசனன் [1]வாலதி தோயாக், [2]காய்ச்சின வேலைகலந்தார்,
[3]போய்ச்சிலா பொன்றினா போலு, [2]ரேசசெனமைந்த ரெதிர்ந்தார்.

(இ - ள்.) அப்பொழுது அநுமான்), வாலதி தோய்சசனன் - (தனது) வாலை (க் கடலில்) தோய்ததான்; தோயா - (அங்ஙனம்) தோய்த்ததனால்,—

காய்சசின - கொதிப்படைந்த, வேலை - கடலிலே, போய் கலந்தார் சிலர் - (முன்பு) சென்று முழுகியவாகளான சில அரக்காகள், பொன்றினர் போனார் - இறந்தொழிந்தாகள; (இவற்றைககணடு, மைநதர் - தலைமைவீரர்கள், ஏசசு என - (இவ்வனமான து தமக்கு மிகவும்) இழிவு என்று கருதி, எதிர்ந்தா - (தாகளும் அநுமானை) எதிர்ந்தார்கள்; (எ - று.)

தோய்சசனன் - தோய்த்தனன் என்பதன் போலி. 'தோய்' என்னுங் காரணப்பொருட்செயவெனெசசம் திரிந்ததெனக் கொள்ளலாம். ஏச்சு-ஏசப்படுவது. பி - ம் —[1]வாலது. [2]காய்ததுயா. [3]போய்த்திலா. [4]ஏயதெழு. (ருகூ)

சுரு — அவ்வேழவரையும் அநுமான் கொல்லுதல்.

சுறறின தேரினர் தோலா, [1]விற்றொழில் வீரம் விளைத்தா,
[2]ரெற்றினன் மாருதி யெற்ற, வுற்றெழு [3]வோரு முலந்தார்.

(இ - ள்.) சுற்றின தேரினர் - (அநுமானைச்) சூழ்ந்துகொண்ட ரதாதிபதிகளான வீராகள், தோலா வில தொழில் வீரம விளைததார் - தோலவியடையாத விற்போரதொழில் திறததைச செயதார்கள்; மாருதி எற்றினன் - (அவாகளையும்) அனுமான் அடிததான்; எறற-அடிததகளுல், உற்று-அடிபட்டு, எழுவோரும் - அந்த ஏழுவீரர்களும், உலந்தார் - அழிந்தார்கள்; (எ - று.) இவ்வெழுவரும், இராவணனது மந்திரிகளின் புதல்வா. பி-ம்:— [1]விற்றிறல். [2]எற்றின. [3]வீரா. (சுரு)

சுரு.—'அசோகவனத்திற் சிறிதும்தீப்படவில்லை' என்று வானத்திற் செல்லும் வித்தியாதரர் சொல்லுதல்.

விட்டுயர் விஞ்சையர் வெந்தீ, வட்ட முலைத்திரு வைதும்,
புட்டிரள் சோலைப் புறத்துஞ், [1]சுட்டில தென்பது சொன்னார்.

(இ - ள்.) விட்டு உயா விஞ்சையர் - வானததிலே உயரத்திற்செல்லுகின்ற வித்தியாதராகள,—வெம்தீ - (அனைததையுமெரித்த இக்குரங்கினது வாலின்) வெவ்விய நெருப்பானது, வட்டம முலை திரு வைகும் புன் திரள் சோலை - வட்டமான தனங்களையுடைய திருமகள் [சீதை] இருக்கிற பறவைகளடாந்த சோலையை, புறததும் சுட்டிலது - வெளிப்பக்கததிலு முட்படச சுட்டதிலலை, என்பது சொன்னா - என்ற அதிசயததை(ப் பாராட்டித் தமக்குட்) சொல்லிகொணடாகள்; (எ - று)—முதலடி - முந்து மொனை.

விணடு என்ற மென்றொடர்க்குற்றுகரம் வன்றொடராயிற்று. 'புட்டிரள்' என்ற அடைமொழி, சோலையின் செழுமையைக் காட்டும். பி - ம்:— [1]சுட்டிலன். (சுஎ)

சுரு.—அதுகேட்டு மகிழ்ந்த அநுமான் சீதையினருகிற் சென்று வணங்குதல்.

வந்தவர் சொலல மகிழ்ந்தான், வெந்திறல் வீரன் வியந்தா,
னுய்ந்தன னென்ன வுயாந்தான, பைந்தொடி தாள்கள் பணிந்தான்.

(இ - ள்.) வந்தவா சொல்ல - (வானததில்) வந்தவர்களான வித்தியா தரர்கள் (இவ்வாறு) சொல்ல, (அதுகேட்டு), மெய் திறல் வீரன் - வெவ் விய பலபராக்கிரமங்களையுடைய வீரனான அநுமான், மகிழ்ந்தான் - மகிழ் ச்சிகொண்டு, வியந்தான் - அதிசயித்து, உய்ந்தனென் என்ன - '(தீவினையி னின்று) தப்பினேன் (யான்)' என்று எண்ணி, உயர்ந்தான் - எழுமபி (அசோகவனத்திற்குதித்து), பைந் தொடி தாள்கள் பணிந்தான் - பசுமை யான தொடி யெனனும்வளையலையுடையவளாகிய சீதையினது திருவடிக ளில் நமஸ்கரித்தான்; (எ - று.)

இராமபிரானுக்கு அநுகூலமாக அரக்கர்க்கு எதிராய்த் தான் செய்த இவ்வளவுகாரியமும், தனதுவாலின் தீக்குச சீதை இலக்கமாகியிருந்தால் வீணாகி, தானும தீவினைக்கு உள்ளாமபடியாயிருக்கு மாதலால், அவ்வனம் அப்பிராட்டிக்குத் தீங்குநேராததை யுணர்ந்தவளவிலே அநுமான் வியந்து 'உய்ந்தனென்' என மகிழ்ந்தன னென்க. மற்றவையனைததும தீப்பட் டெரிய அசோகவனம்மாததிரம தீப்படாதிருந்தமை, வியபபுக்கு காரணம்.

சுஉ.—சீதை அனுமானைக்கண்டு மகிழ, அநுமான் விடைபெற்றுச் செல்லுதல்.

பார்த்தனள்சானகிபாரா, வோதெரி மேனி குளிர்ந்தாள், வார்த்தை யென்வந்தனை யென்னுப, போர்த்தொழின் மாருதிபோ னான்.

(இ - ள்.) சானகி - ஜனகராஜகுமாரியான சீதாபிராட்டி, பாரததனள் - (அநுமானைப்) பாரததாள்; பாரா - பாரதது [பாரததமாத்திரத்தில்], வோத்து எரி மேனி குளிர்ந்தாள் - (அநுமான்வாலில் அரக்கர்கள் தீவைதத செய்தியைக் கேட்டதுமுதல் 'அவனுக்கு என்னாயிற்றோ?' என்றுகொண்ட தாபத்தால்) வியாததுகொதிக்கின்ற தன்னுடம்பு குளிரப்பெற்றாள், போர் தொழில் மாருதி - போர்தொழிலிற் கைதேர்ந்தவனான அநுமான், வார்த் தை என் - (சொல்லவேண்டிய) வார்தததை என்ன இருக்கிறது? வந்தனை - நமஸகாரம், என்னு - என்று (சீதையைநோக்கிச) சொல்லிவிட்டு, போனான் - மீணடுசெல்லலானான்; (எ - று.)

ஜானகீ என்ற பெயர், குலப்பெருமையைக் காட்டும். முன்னமே எல்லா வார்த்தைகளுஞ் சொல்லிமுடிந்துவிட்டதனால், இப்பொழுது 'வார்த் தை யென்' எனறான். இங்கு 'வந்தனை' என்றது - விடைபெறுதற் பொரு ட்டு. போரதொழின் மாருதி - போரில்வெற்றிகொண்ட அநுமான் என்ற படி. (சுஉ)

சுஊ.—இலங்கையிற்பற்றிய தீ, பின்பு தணிதல்.

தெள்ளிய மாருதி சென்றான், கள்ள வரக்கர்கள் கண்டா,
[1]லெள்ளுவர் பற்றுவ ரென்னு, வொளவெரி யோனு மொளிததான்.

(இ - ள.) 'தெள்ளிய மாருதி சென்றான - தெளிந்த ஞானமுடைய அநுமானே போயவிட்டான்; (இனி), கள்ளம், அரக்கர்கள கண்டால் - வஞ்சனையையுடைய இராகதர்கள் - (என்னைப்) பார்த்தால், எள்ளுவர் பற்றுவர் - அலட்சியமாகப்பிடித்துகொள்ளுவார்கள்', என்று - என்று எண்ணி, ஒள் எரியோனும் ஒளிததான் - ஒளிபொருந்திய அகினிதேவனும் மறைந்தான்; (எ - று.)

அநுமான் தனது தீக்கொளுந்தியவாலைக் கடலில்தோய்த்துத் தீயையவிததுவிட்டு மீண்டுசெல்ல, அநுமானால் இலங்கையிற் பற்றவைக்கப்பட்ட தீ அந்நகரதததையெரிததுவிட்டுத தன்னடைவிலே தணிந்தது: இதனை, இவ்வளவுகாலமாய் இராவணனுககு அடங்கியிருந்து இப்பொழுது அநுமானது துணைமைகொணடு இலங்கையை யெரிததழிக்கத் தலைப்பட்ட அகினி தேவன் அததுணைவனான அநுமான் சென்றுவிட்டவுடன் அரக்கரகு அஞ்சி யொளிததன னென்றது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி-ம்: —[1]எள்ளலர்.

இலங்கையெரியூட்டுபடலம் முற்றிற்று.

பதினைந்தாவது

திருவடிதொழுதபடலம்.

(அநுமான் இலங்கையினின்று மீண்டுவந்து இராமபிரானது) சரபாதங்களை வணங்கிய வரலாற்றைக கூறும் பாகம திரு - மேன்மை; அழகுமாம். அடி - பாதம். தொழுதலென்னும் வினைக்கு 'அநுமான்' என்னும் எழுவாய் வருவிக்க. இனி, 'இராமபிரானை' என்னுஞ்செயபபடுபொருள் வருவிதது, (ஸ்ரீராமனை) அநுமான் தொழுத படலமெனனுங் கூறலாம்; இப்பொருளில், 'திருவடி' என்பது - அநுமானுககுப் பெயா இத்திருநாமம, வைஷ்ணவசம்பிரதாயத்தில வழங்குவது; "பொருவருவேலைதாவும் புந்தியான் புவனந்தாய, பெருவடிவுயாகத மாயோன மேககுறப்பெயாந்ததான்போ, லுருவறி வடிவனும்பரோங்கின னுவமைபாலுந், திருவடியென்னுந் தன்மை யாவாக்குந தெரியகின்றான்" என்றார கிஷ்கிந்தாகாண்டதகிலும் 'அநுமான்திருவடி தொழுதபடலம்' என்றும், திருவடிதொழுபடலம் என்றும் இப்படலததுக்குப் பெயா ஏட்டுப்பிரதிகளிற் காணகின்றன.

வேறு.

க.—அநுமான் ஒருமலைமீது நின்று எழுப்பி ஆகாயமார்க்கமாகச் செல்லுதல்.

நீங்குவென் விரைவி னென்னு நினைவினன் மருங்கு நின்ற
தாங்கொரு குடுமிக் குன்றை யருக்கனி னணைந்த [1]வையன்
வீங்கின னுலகை யெல்லாம விழுங்கின னென்ன வீரன்
பூங்கழ லொழுது வாழ்த்தி விசுமபிடைக் கடிது போனான்.

(இ - ள்.) 'விரைவின் - சீக்கிரததில், நீங்குவென் - இவ்விலங்கையினின்று போவேன்', என்னும் - என்கிற, நினைவினன் - எண்ணததையுடையவனாய்,—ஆங்கு - அவ்விலங்கையில, மருங்கு நின்றது - அருகிற்பொருந்தியதாகிய, ஒரு—, குடுமி குன்றை - சிகரத்தையுடைய மலையை, அருக்கனின் - சூரியன்போல, அணைந்த - சேர்ந்த, ஐயன் - அநுமான்,—உலகை எல்லாம் விழுங்கினன என்ன - எல்லாவுலகங்களையும் உட்கொண்டவனான திருமால்போல, வீங்கினன் - (தனது வடிவம்) பூரிததுநின்று,—வீரன் - ஸ்ரீராமனது, பூ கழல் - தாமரைமலாபோன்ற திருவடிகளைக்குறிததது, தொழுது - (திக்குநோக்கி) அஞ்சலிசெய்து, வாழ்த்தி - துதிததது, விசும்பிடை - ஆகாசமார்க்கததிலே, கடிதுபோனான் - விரைந்து சென்றான்; (எ - று)

மூன்றுமடிக்கு எல்லாவுலகங்களையும் பிரளயகாலததிலே திருவயிற்றினுட்கொள்ளுகிற திருமால் திரிவிகிரமனாய் நீண்டு வளர்ந்ததுபோல வளர்ந்தவனாய் என்று கருததது; ஸ்ரீமகாவிஷ்ணுவின் விசுவரூபத்தை இங்கு ஒப்புமை குறிததததாகவுங் கொள்ளலாம். இனி, உலகங்களையெல்லாம் மறைததவனென்னுமபடி வளர்ந்தவனாய் என்றும், எல்லாவுலகங்களையும் வென்றேனென்று மனம்பூரித்தவனாய என்றும பொருள்காணலாம. இந்தமலையின் பெயர் அரிஷ்டமென முதனூலால் விளங்குகின்றது. இம்மலையின்மீது நின்று விளங்குகிற அநுமானுக்கு, உதயகிரியின்மீது விளங்குகிற சூரியன் உவமை. தொழுதல் - திக்குநோக்கித் தண்டன்சமாபபித்தல். பி - ம்:—[1]மெயயன். ()

௨.—அநுமான் மைநாககிரிக்குச் செய்திசொல்லிவிட்டு மகேந்திரகிரியிற் குதித்தல்.

மைந்நாக மென்ன நின்ற குன்றையு மரபி னெய்திக்
கைந்நாக மனையோ னுற்ற துணர்த்தினன் கணத்தின் காலைப்
[1]பைந்நாக நூக்கும் வீரா தன்னெடு வரவு பார்க்குங் [டான்.
கொய்ந்நாக நறுந்தேன் சிந்துங் குன்றிடைக் குதியுங்கொண்

(இ - ள்.) கை நாகம் அனையோன் - துதிக்கையையுடைய யானையைப் போன்றவனான அநுமான்,—மைநநாகம் என்ன நின்ற குன்றை உம் - மைநாகம் என்று பெயாசொல்லபபட்டுநின்ற மலையையும, மரபின்எயதி-முறைப்படி அடைந்து, உற்றது உணாததினன் - (இலங்கையில) நிகழ்ந்த செயதியை (அதற்குச) சொல்லி,—கணத்தின் காலை - ஒருகணப்பொழுதிலே,—பை நாகம நூகுகும வீரா - பசியமலைகளைப் பெயாததுததள்ளும வீரசெயலையுடைய (அங்கதன முதலிய) வாநரவீராகள, தன நெடு வரவு பாரகுகும் - தனது தலைநிமிாநதுவரும வருகையை எதிாபாாததது நிற்கப்பெற்ற, கொய்நாகம நறுந் தேன் சிநதும குனறிடை - மலாபறிததற்கு உரிய சுரபுனை மரங்கள் நல்லதேனைச சொாிகின்ற மகேநதிரமலையிலே, குதியும கொணடான - குதிததலையுஞ செயதான்; (எ - று.)

அநுமான் கடல்தாவி இலங்கைநோக்கிச் செல்லுகையில் தன்மீதுதங்கி யிளைப்பாறிச் செல்லும்படிவேண்டிய மைனாகமலையைநோக்கி மீண்டு வரும் பொழுது அதனவிருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்குததஞ் செய்து போயினான்; அந்தச்சொல் தவறாமல் இப்பொழுது வந்ததைப்பற்றி, 'மரபி னெயதி' எனப்பட்டது. மைந்நாகம் - எதுகைநோக்கிய விரிதல் விகாரம். ("மைந்நாகப்பள்ளி" என்ற சீவகசிந்தாமணிச் செய்யுளின் நான்கடிகளிலு முள்ள எதுகைச் சொற்களே இச்செய்யுளின் நான்கடிகளிலும் எதுகைச் சொல்லாக நிற்றல் காண்க.) அநுமானுக்கு யானை யுவமை, நடை வலிமை காம்பீரியங்கட்கும், பெருவடிவத்திற்கும், மறைததற்குரிய காலத்தே மறை தது வெளிப்படுத்தற்குரிய காலத்தே வெளிப்படுத்துகிற சிற்றத்துக்கும்எனக் காண்க. அநுமானது கை யானைதுதிக்கைபோலுமென்ற கருத்தும், 'கைந் நாக மனையோன்' என்ற தொடரினாற் பெறப்படும் உற்றது - தான் பிராட் டியைக் கண்டது முதலியன. நெடுமையென்பது தலைகிளர்ந்துநிற்கும் நிலை யை யுணர்ததுவதனை "நெடியவல்லதுபணிந்து மொழிபலனே" என்ற புற நானூற்றிலுங் காண்க. இனி, நெடுவரவு - நெடுந்தூரத்திலிருந்து வருகை யென்றும், நெடுவரவுபார்க்கும் - நெடுநேரமாக அநுமான்வருகையை யெதிர் பாராதது நிற்கிற என்றும் பொருள்கூறுவாருமுளர். நறுந்தேன் - நன்யணம் வீசுந் தேனுமாம். கணதத்தின்காலைக் குதியுங்கொண்டான் என இயையும். பி - ம்.—[1]பைந்நாகவரையின், பைந்நாகநிற்கும். (உ)

௩.—அங்கிருந்த வாநரவீரர்கள் அநுமானைக்கண்டு மகிழ்தல்.

போய்வருங் கரும முற்றிற் றென்பதோர் பொம்மல் பொங்க
வாய்[1]வெரீஇ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத் தாங்க [2]ணிருந்தன பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்ட தன்ன வுவகையிற் றளிர்த்தா ரம்மா.

(இ - ள்.) வாய் வெரீஇ நின்ற - (அநுமான் கடல்கடந்து சென்றது முதல் அவன் இனிது வந்து சேரவேண்டுமே யென்ற கவலையினாலும் அவ னுக்கு என்னாகுமோ வென்ற அச்சத்தாலும்) வாய்குளறி நின்ற, வென்றி - வெற்றியடையவல்ல, வாநர வீரா - (அங்கதன் முதலிய) வாநர வீரர்கள்,— போயவரும் கரும்ம்-(அநுமான் இலங்கைக்குச்)சென்று மீண்டுவருந்தொழில், முற்றிற்று - முடிந்தது, என்பது - எனபதனாலாகிய, ஓர் - ஒப்பற்ற, பொம் மல் - மகிழ்ச்சி, பொங்க - அதிகப்பட,—பாய்வரு நீளத்து ஆங்கண் இருந் தன - பாயநது உட்புகுதற்கு உரிய கூண்டினிடத்திலே யிருந்தனவாகிய, பறவை பார்ப்பு - பறவைக்குஞ்சுகள், தாய் - (தமது) தாய்ப்பறவை, வர - (வெளியிற்சென்றது) மீண்டுவர, கண்டது (அதனைப்) பார்த்ததை, அன்ன - போன்ற, உவகையின்-மகிழ்ச்சியினால், தளிர்த்தார் - செழித்தார்கள்; (எ று.) —மன், ஓ, அம்மா - ஈற்றசைகள்.

வாநரவீரா பொம்மல்பொங்க உவகையின் தளிர்ததா என்க. கூண்டி லிருந்த பறவைக்குஞ்சுகள் - மகேந்திரகிரியி லிருந்த வாநர வீரர்கட்கும், அக

குஞ்சுகள் தமது தாய்ப்பறவையின் வருகையைககண்டு மகிழ்தல் - அவ்வீரர்கள் அநுமானது வரவைக் கண்டு மகிழ்தற்கும் உவமை நீடம என்ற வடமொழி ளீமென விகாரப்பட்டது; டகரளகரப்போலி வடமொழியிலேயுண்டு. 'டளயோரபேதம்' என்பா. இதன்பொருள் - பறவைகளூடு. காரியப்பொருளைக் காரணச சொல்லாற் கூறும உபசாரவழக்குப்பற்றி, 'வாய்வெரீஇ'எனப்பட்டது. பார்ப்பு - பறவையின் இளமைப்பெயா. பி - ம்:—[1]வருகின்ற. [2]இருந்தனர். (௩)

ச.—அவ்வாநரர்கள் பலவாறு மகிழ்ச்சிபாராட்டுதல்.

அழுதனர் சிலவர் முன்னின் றூர்த்தனர் சிலவ [1]ரண்மித்
தொழுதனர் சிலவ [2]ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதுற விழுங்கு வாரபோன் மொய்த்தனர் சிலவர் சுற்றுந்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவா தாங்கி.

(இ - ள்.) (மகிழ்ச்சியினால்), சிலவா - சில வாநரர்கள், அழுதனர்-அழுதார்கள்; சிலவர்—, முன் நின்று - அநுமானெதிரில் நின்று, ஆர்த்தனர் - ஆரவாரித்தார்கள; சிலவா—, அணமி - அவனைச்சமீபித்து, தொழுதனர் - வணங்கினார்கள்; சிலவர்—, ஆடி துள்ளினா - குதித்துக் கூத்தாடினார்கள்: சிலவா—, அள்ளி முழுது உற விழுங்குவார் போல் - (அநுமானை) எடுத்து முழுதும விழுங்குபவா போல, மொயத்தனா - சூழ்ந்துகொண்டார்கள்; சிலவா—, சுற்றும தழுவினர் - சுற்றிலும் (அநுமானை) ஆலிங்கனஞ் செய்தாகள்; சிலவா—, தாங்கி கொண்டு சுமந்தனர் - (அவனைத்) தூக்கிகொண்டு சுமந்தாகள்; (எ - று.)

உவகைமிகுதியில அழுகைதோன்றுதலும், இயல்பு: இனி, அநுமான் பிரிந்து சென்றிருந்தபோது தாமகொண்டிருந்த சோகததைககருதி அழுதனரெனினுமாம் 'அள்ளி முழுதுறவிழுங்குவாபோல் மொய்த்தனா' என்றதை "பருகுவாரிற் புல்லி" என்பதுபோலக கொள்க. பி - ம்.—[1]அன்பில். [2]ஓடி.

௫ —அவ்வாநரர்கள் அநுமானை உபசரித்தல்.

தேனொடு கிழங்குங காயு நறியன வரிதிற் றேடி
மேன்முறை [1]வைத்தே மண்ண னுகாந்தனை மெலிவு தீரதி
மானவாண் முகமே நங்கட குரைத்தது மாற்ற மெனறு
தா[2]னுகர் சாக மெல்லா முறைமுறை சிலவா தந்தார்.

(இ - ள்.) சிலவர் - சிலவாநரர்கள்,—(அநுமானை நோக்கி), 'அண்ணல் - பெருநதனமையையுடையவனே! மானம வாள முகமே - பெருமையையும் ஒளியையுங் கொண்ட (உனது) திருமுகந்தானே, மாற்றம் - (நீ பிராட்டியைககண்ட உவகைச) செய்தியை, நங்கட்கு - எங்களுக்கு, உரைததது - (உன்வாயாற்சொல்லுமுன்) சொல்லிவிட்டது; தேனொடு - தேனையும, கிழங்கும் - கிழங்குகளையும, காயும - காய்களையும், நறியன - நல்லனவாக, அரிதின தேடி - அருமையாயத தேடிகொண்டுவந்து, மேல் - முன்னமே, முறை - ஒழுங்காக, வைததேம - வைத்திருக்கி

ரேயை; (அவற்றை), நுகர்ந்தனை - (நீ) உணடு, மெலிவு தீர்தி-இளைப்பாறுவாயாக,' என்று - என்று சொல்லி, தான் - அநுமான், நுகர்-உணணுதற்குரிய, சாகம எலலாம் - சிறந்த இலையுணவு முதலிய எல்லாவற்றையும், முறை முறை - வரிசைவரிசையாக, தந்தார்-கொணர்ந்து கொடுத்தார்கள்; (எ - று.)

மேன்முறை - மேன்மையாக எனினுமாம். அண்ணல் - அண்மைவிளி. நீ சீதையைதேடிக் கண்டுவந்தனையென்கிற சந்தோஷசமாசாரத்தை கினது முகமலர்ச்சியே எமகட்குத்தெரிவித்த தென்பது, மூன்றுமடியின் கருத்து. முகம் மாற்றம உரைததது - பேசாதது பேசுவதுபோலச் சொல்லப்பட்ட மரபுவழுவமைதி. பி - ம்:—[1]வைததோமன்ன. [2]உயர். (இ)

சு.—அநுமானது உடம்பின் விரணங்களை நோக்கி வாநரர்கள் வருந்துதல்.

தாள்களின் மார்பிற் றோளிற் றலையினிற் றடக்கை தம்மில்
வாள்களின் வேலிற் [1]கோலின் மழையினின் [2]வகுத்த புண்க
ளுள்கண்மே லுலகிற் சென்ற [3]வெண்ணென நம்பி கண்ண
லுழ்கொள நோக்கி நோக்கி யுயிருக [4]வுளைந்து யிர்த்தார்.

(இ - ள்.) தாள்களில் - கால்களிலும, மார்பில் - மார்பிலும், தோளில் - தோள்களிலும், தலையினில் - தலையிலும், தட கைதம்மில் - பெரிய கைகளிலும், வாள்களின் - வாள்களாலும், வேலின் - வேல்களாலும், கோலின் மழையினின் - அம்புகளினாலாகிய மழையினாலும், வகுத்த - உண்டாக்கப்பட்ட, புணகள் - விரணவகள, உலகில் - உலகத்தில், நாள்கள் மேல் சென்ற எணஎன - நாளகள்மேலேகழிந்த எண்கள்போல [அளவிடமுடியாதபடி], நமபிகண்ண - அநுமானிடதது உள்ளவற்றை, ஊழ் கொள - முறைமை பொருந்த [ஒவ்வொன்றாக],நோக்கி நோக்கி - பார்ததுப் பார்த்து, உயிர் உக- (தமது) உயிா வெளியிற் செல்லும்படி, உளைந்து - வருந்தி, உயிர்த்தார் - (வாநரவீரர்கள்) பெருமூசசுவிட்டார்கள்; (எ - று.)

தாளமுதலியவறறில் வாளமுதலியவற்றின் மழையினாலான நம்பி கண்ணவாகிய மிகப்பலபுணகளைக கணட அநுகதன்முதலிய வானரர்கள், தமமுடலின்மீது அவ்வாள்முதலியன பட்டனபோலகருதி உயிருக உயிர்த்தாரெனக. இதனால், அநுமான்பக்கல் வாநரர்கட்குஉள்ள அனபு விளங்கிற்று. வாள்கள் முதலியன, இராகததருடையவை. வாள்களின் வேலின் கோலின் மழையினின் என்று எடுதது உரைததலுமுண்டு. உலகில் நாள்களின்மேற் சென்ற எணகள் இததனை யென்று அளவிட்டுச் சொல்லமுடியாதனவாதலால், அளவிறந்த மிகப்பலஎன்றற்கு - 'உலகில் நாள்கள்மேற்சென்ற எண் என'என்றார். நாள்கள்மேறசென்ற எண்-ஒன்று இரண்டுஎன்று கழிந்த நாளைக கணககிடும் எணகள்: மேலுலகிற் கழிந்தநாள்களின் எண் என இயைதது-மேலுலகத்திலேசெல்லுகின்ற நக்ஷதிரங்களின் தொகையென்ன எனி

ணுமாம். நக்ஷத்திரமண்டலம் இருக்கிற இடம மேலுலகமேழனுள் ஸுவாலோக மாதலால் 'மேலுலகு' என்றார். நாள்-நாணமீன். இனி உலகில் மேறசென்ற நாள்கள் எண்ணன என்று மொழிமாற்றி, உலகததில் இதுவரையிலுங்கழிந்த நாள்களின் தொகையென்னுமபடி என்று பொருள்கொள்ளினுமாம்; அதுவும் அளவிறந்ததற்கு உவமை. பி-ம்:—[1]வாளி [2]வ கிர்ந்த. [3]எண்ணன நம்பிகண்ண, நம்பிதன்கண்ணவாகி. [4]உயிர்த்துநொந்தா. (சு)

எ.—அங்கதன்முதலியோரை வணங்கி அநுமான் செய்திகூறுதல்.

வாலிகா தலனை முந்தை வணங்கின னெண்கின் [1]வேந்தைக்
காலுறப் [2]பணிந்து பின்னைக் கடன்முறை கடவோர்க்கெல்லா
மேலுற வியற்றி யாங்க ணிருந்திவ ணிருந்தோர்க் கெல்லா
ஞாலநா யகன்றன் றேவி சொல்லின ணன்மை யென்றான்.

(இ - ள்.) (அநுமான்),—வாலி காதலனை-வாலியின்புதிரனாகிய அங்கதனை, முந்தை - முதலில், வணங்கினன் - வணங்கி, பின்னை - பின்பு, எண்கின் வேந்தை - கரடிகட்குததலைவனாகிய ஜாம்பவானை, கால் உற பணிந்து - கால்களிலே பொருந்தவிழுந்து (ஸாஷ்டாங்கமாக) நமஸ்கரித்து, கடவோர்க்கு எல்லாம் - மற்றும் உரியவர்கட்கெல்லாம, கடன முறை - செய்யத்தகக உபசாரமுறைமைகளை, எலுற - எற்றபடி, இயற்றி - செய்து, ஆங்கண இருந்து- அவ்விடத்திலே இருந்து, 'இவண இருந்தோர்கக எல்லாம் - இங்கேயிருநத வாநரவீராக்கெல்லாம், ஞாலநாயகன் தன் தேவி - உலகங்கட்குத் தலைவனான ஸ்ரீராமபிரானது பத்தினியாகிய சீதாபிராட்டி, நன்மை - மங்களதததை, சொல்லினள் - சொன்னாள்', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

அங்கதன் இளவரசனாதலால, முதலில் வணங்கப்பட்டான். ஜாம்பவானைக் காலுற வணங்கியது, பிரமபுத்திரனாதலாலும், பிராயத்தில் மூத்தவனாதலாலு மென்க. காதலன் - அன்புடையவன். மேலுற எனப் பதம் பிரிததல் மோனைக்குப் பொருந்தாதென மறுக்க. பி - ம்:—[1]மன்னை. [2]நோகிப். (எ)

அ.—நடந்தசெய்திகளை ஆதியோடந்தமாய் விவரமாகச்சொல்லும்படி ஆவலோடு வினவிய வாநரர்க்கு அநுமான் அங்ஙனங்கூறுதல்.

என்றலுங் கரங்கள் கூபபி யெழுந்தன ரிறைஞ்சித் தாழா
நின்றன ருவகை பொங்க [1]விம்மலா னிமிர்ந்த நெஞ்சர்
சென்றது முதலா வந்த திறுதியாச் செப்பற் பாலை
வன்றிற லுரவோ யென்னச் சொல்லினன மருத்தின் மைந்தன்.

(இ - ள்.) என்றலும் - என்று (அநுமான்) சொன்னவுடனே, (வாநரவீரரகள), எழுந்தனா - எழுந்து, கரங்கள் கூப்பி இறைஞ்சி தாழ நின்றனா - கைகளைகூப்பி வணங்கித தாழ்ந்து நின்று, உவகை பொங்க - மகிழ்ச்சியிக, விம்மலால் நிமிர்ந்த நெஞ்சர் - களிப்பினால் நிறைந்த மனததை யுடையவாகளாய்,—'வல் திறல் உரவோய் - கொடிய பலபராக்கிரமங்களை யுடையவனே! சென்றது முதல்ஆ - (நீஇங்கிருந்து)

போனது முதலாக, வந்தது இறுதி ஆ - (இஙகு) மீண்டுவந்தது ஈறாக, (நடந்ததை), செப்பல்பாலை - சொல்லக்கடவாய்' என்ன-என்றுசொல்ல,—மருத்தின் மைந்தன்-வாயுகுமாரனான அநுமான், சொல்லினன்-சொன்னான்.

செப்பற்பாலை - சொல்லுந்தன்மையுடையாய். தேகபலம் மனோபலம புதிபலம் என்ற மூன்றையுஙு குறித்தற்கு, 'வன் திற லுரம்' என மூன்று சொல்தொடர வைத்தன ரென்றலு மொன்று. பி - ம்.—[1]விம்மலாய். (அ)

கூ.—அநுமான் பெரும்பாலுஞ்சொல்லிச் சிலவற்றைச் சொல்லாதுவிடுதல்.

ஆண்டகை தேவி யுள்ளத் தருந்தவ மமையச் சொல்லிப்
பூண்டபே ரடையா ளங்கைக் கொண்டதும் புகன்று போரி
னீண்டவா ளரக்க ரோடு நிகழ்ந்தது நெருப்புச சிந்தி
மீண்டதும் விளம்பான் [1]றான்றன் வென்றியை யுரைபபவெள்கி.

(இ - ள்.) ஆணதகை - (அறிவு நிறை ஓப்புக் கடைப்பிடி யென்னும்) ஆண்மைககுணஙகளையுடையவனான அநுமான்,—தேவி உள்ளத்து அருந தவம் - பிராட்டியின்மனத்திலுள்ள அரியதவமாகிய கற்பொழுகக்தை, அமைய சொல்லி - செவ்வையாகசசொல்லி, பூணட பே அடையாளம் கை கொண்டதும் புகன்று - (அப்பிராட்டி) அணிநதிருந்த (சூளாமணியாகிய) பெரிய அடையாளததைக கையிற பெற்றுவந்ததையுஞ் சொல்லி,—போரில்-யுதததில், நீணட வாள் அரக்கரோடு - பெரிய ஆயுதஙகளையுடைய அரக்காகளுடன், நிகழ்ந்ததும் - நடந்தசெயதியையும, நெருப்பு சிந்தி மீணடதும-(தான் இலஙகைமுழுவதிலும) நெருப்பை வைத்துவிட்டுத் திரும்பிவந்ததையும், தான் தன் வெனறியை உரைப்ப வெள்கி விளமபான் - தானே தனது ஜயததைச சொல்லுதற்கு நாணிச் சொல்லானாயினான்; (எ - று.)

இதனால், அநுமானது தறபுகழ்ச்சியில்லாத்தன்மை விளஙகுகின்றது. ஆணடகைதேவி-இராமன்மனைவி என உரைதது, 'அநுமான்' என்னும் எழுவாய் வருவிததலுமாம பிராட்டி கற்பிற்குறைவற்றிருநதால் தான் வானரர் பட்ட கஷ்டமெலலாம பயனுள்ள தாமாதலால், அந்தக கற்பைககூறினான், அநுமான்: இனி,"உற்றநோயநோன்றலுயிர்க்குறுகண் செயயாமை, யற்றே தவததிற்குஉரு"எனபவாதலால், பிராட்டியின இடாபொறுத்தலும் பிறாக்கு இடாசெயயாமையுமாகிய குணததைத தவமென்று மென்றலு மொன்று; சீதாபிராட்டி இராமனுடைய பெருமைக்குக குறைவாமெனறு தான் சாபமிட்டு அரககரை யழியாமல, இராமனை யடையலாமென்ற ஆசையால அவ்வரக்கரால்நேர்ந்த இடரைப் பொறுத்திருந்தாளென்க. தற்புகழ்ச்சிசெய்தல் தன்மேன்மைககு இழுக்காமாதலால், அரக்கரோடு நிகழ்ந்தபோரையும் நெருப்புச்சிந்தியதையும் அநுமான் கூறவில்லை. பி-ம்.—[1]செயதவெனறியை விளம்ப வெள்கி. (கூ)

க௦.—'கூறுத சிலவற்றைக் குறிப்பா லுணர்ந்தோம்' என்று வாநரர் கூறல்.

பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
யுரைசெய வூர்தீ யிட்ட தோங்கிரும் புகையே யோதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர வுணர்ந்தேம் பின்ன ரெனனினிச் செய்து மென்றார்.

(இ - ள்.) (அவ்வாநரர்கள் அநுமானைநோக்கி),—'பொருதமை - (நீ அங்கு அரக்கரோடு) போரசெய்ததை, புண்ணே - (உனது உடம்பிலுள்ள) விரணங்களே, சொல்ல - தெரிவிககவும்,—வென்றமை - (நீ அங்குச) சயித்ததை, போந்த தன்மை - (அங்கு நின்று தலையெடுப்புடன்) வந்த வகை தானே, உரைசெய - தெரிவிக்கவும்,—ஊர் தீ இட்டது - அவ்வூரில் (நீ) நெருப்பு வைத்து எரித்ததை, ஓங்கு இரு புகையே - உயர்ந்தெழுந்த மிகக புகைதானே, ஓத - தெரிவிககவும்,—கருதலா பெருமை - அப்பகைவாகளது பெருமையை, தேவி மீண்டிலாசெயலே - பிராட்டி மீண்டு (உன்னுடன்) வராத செய்கையே, காட்ட - தெரிவிக்கவும், தெரிதர உணாநதேம்-தெரிய அறிந்தோம; பின்னர் - இனிமேல, என்செயதும் - (நாம) என்ன செய்யக் கடவோம்?' என்றா - என்று வினவினாகள்; (எ - று.)

அநுமானவகையால் நீ அரக்கருடன் பொருது வென்றுவந்தமை யுணாந்திட்டோம்: இனி நாம செய்யவேணடுவது என்? என்று வானரவீரர்கள் வினவினரென்க. 'நெடுவரவு' என்று கீழ்வநதமையால், போந்த தன்மை என்பதற்கு - தலையெடுத்துவந்தவரவு என உரைக்கப்பட்டது. கருதலா பெருமை - பகைஞர் செயற்கரியதொழிலினால் வெல்லவேணடியவ ராதல். ஏகாரநகள் - பிரிநிலை; நீசொல்லாமலே என்று கருதது. கருதலர் - (நனமையை) எணணுதவா; தீமையையெணணுபவா. தெரிதர உணாநதேம - ஐயமற அறிநதோம என்றபடி. (க௦)

கக.—இராமனுக்குச் செய்திகூறுதற்பொருட்டு அனைவரும் புறப்படுதல்.

[1]யாவது மினிவே றெண்ணல வேண்டுவ திறையு மில்லை
சேவகன் றேவி தன்னைக் [2]கண்டமை விரைவிற செப்பி
யாவதவ் வண்ண லுள்ளத தருந்துய [3]ரகற்ற லேயாம்
போவது புலமை யென்னப பொருக்கென வெழுந்து போனார்.

(இ - ள்.) இனி—, யாவதும - எந்த விஷததைப் பற்றியும், வேறு எணணல் வேணடுவது-வேறே ஆலோசிககவேணடுவது, இறையும் இல்லை - சிறிதும் இல்லை; ஆவது-(நாம்) இனிச செய்யவேணடியது, சேவகன் தேவி தன்னை - மகாவீரனான ஸ்ரீராமனது மனைவியாகிய சீதையை, கண்டமை - பார்த்த செய்தியை, விரைவின் செப்பி - விரைவிற் கூறி, அ அண்ணல் உள்ளதது அருந் துயா ஆற்றலே ஆம - அநத ஸ்ரீராமபிரானது மனத்திலுள்ள அரிய துன்பதததை தணியசசெய்வதுவேயாகும; போவது-(அதற்காக இனியாம் இராமனிடம்) போவதுவே, புலமை-அறிவு, என்ன-என்று (திருவடி)

சொல்ல,—பொருக்கென எழுந்து போனா - விரைவாக அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்; (எ - று.)

'என்னினிசெயதும்?' என்று வினவிய வானரவீரர்க்கு, அநுமான், 'இராமபிரானையடைந்து அவனிடஞ் செய்தி சொல்லி, அப்பிரானது துயரத்தைத தீரததலே, நாஞ் செய்யவேணடிய செயல்' என்று தெரிவிக்க, யாவரும் இசைந்து இராமபிரானிடத்துச் செல்லுமாறு புறப்பட்டன ரென்க. யாம்போவது என்றும் எடுக்கலாம். பொருக்கென-விரைவுக்குறிப்பு.-பி-ம்:—[1]யாவையும். [2]கண்டது. [3]ஆற்றல். (கக)

கஉ.—அவ்வாநரவீரர்கள் மதுவனஞ் சேர்தல்.

போயினர் களிப்பி னோடும் புகவன் சிலையி னின்று
மேயின பகழி யென்ன வெழுந்துவிண் படர்ந்து தாவிக்
காய்கதிர்க் கடவுள் வானத் துச்சிசென் றிறுக்குங் [1]காலத்
[2]தாயன வீர ரும்போய் மதுவன [3]மதிலி றுத்தார்.

(இ - ள்.) ஆய் அன வீரரும் - (எவற்றையும்) ஆராயுந்தன்மையுள்ள அவ்வாநரவீராகளும,—களிப்பினோடும - மகிழ்சசியுடனே, போயினா - புறபபட்டுச் சென்று, புகவன் சிலையின்நின்றும் ஏயின பகழி என்ன - சிறந்தவனான ஸ்ரீராமனது வில்லினின்று தொடுக்கப்பட்ட அம்புபோல(க் குறித்த இலகுததப்பாமல் விரைந்து), விண படாந்து எழுந்து தாவி - ஆகாயத்திலேபொருந்தி எழுமபிப் பாயந்து, காய் கதிர் கடவுள் - சுடுகிற கிரணங்களையுடைய சூரியன, வானத்து உசசி - ஆகாயததிலே உசசியில், சென்று - போய, இறுக்கும் - தங்குகின்ற, காலத்து - சமயததில், மதுவனம்அதில் - மதுவனததில, போய் இறுத்தா - போய்த தங்கினாகள்; (எ - று.)

காப்பியத்தலைவனது சம்பந்தமுள்ள பொருளையே, உபமானமாகக் கூறிச் சிறப்பிப்பதொரு கவிமரபுபற்றி, வாநரவீரா விரைந்துசெல்லுதற்கு, இராமபாணம விரைந்துசெலலுதலை உவமை கூறினர். இராமன் ஏவியபகழி குறியாகக்கொண்டதையடைந்து காரியம்முற்றியபின் மீளுந்தன்மையதாதலால், அங்ஙனம குறிததகாரியம்முடிதது மீள்கின்ற வானரவீரர்க்கு இராமபாணத்தை உவமைகூறினாரெனினுமாம்: வாலிமேல்விட்ட இராமனமபைக் குறிதது "ஐயன் வென்விடாதகொற்றத தாவமவநதடைந்ததன்றே" எனக் கூறியது காணக. அன - தொகுத்தல. புகவன் - காளைபோன்றவன். ஏயின - ஏவினவென்பதன் விகாரம. மதுவனம - மதுவையுடைய சோலை; இது, முன்புதேவேநதிரனால் வாலிகருககொடுக்கப்பட்டு வாலியினுடையதாயிருந்து பின்பு சுககிரீவனது ஆணைககு உட்பட்டது: தேனை மிகுதியாகக் கொணடுள்ள வனமென்று காரணப்பொருளபடும்; 'அது' என்பது-பகுதிப் பொருள் விகுதி. பி-ம்:—[1]காலை. [2]தாய்வரும, ஆயின. [3]அதனைச்சார்ந்தார் .()

கங.—பசிதீரக்கருதி வாநரவீரர்கள் அங்கதனை யடுத்தல்.

[1]ஏயநா ளிறந்த சால வென்பதோர் வருத்த நெஞ்சத்
[2]தாயலா [3]லுணாவு தீர்ந்து வருந்தின மளிய மெம்மைச்

சாதநீர்த் தளித்த வீர தந்தரு ளுணவு மென்னப்
போதுநாம் வாலி சேய்பா லென்றுட னெழுந்து போனார்.

(இ - ள்.) 'எம்மை சாதல் தீர்த்து அளித்த வீர - (சீதையைக் காணாமையால்) யாங்களெல்லாம் இறந்துபோதலை (நீ போய்க் கண்டுவந்ததனால்) ஒழித்து (எங்களை) க்காத்தருளின வீரனான அநுமானே!—ஏய நாள் சால இறந்த - (சுக்கிரீவன்) தவணைவைத்த நாள்கள் மிகவும் கடந்துபோயின' என்பது - என்பதனால் லாகிய, ஓர் வருத்தம் - ஒரு துன்பம், நெஞ்சதது - (எங்கள்) மனததில், ஆயதால் - உண்டானதனால், உணவு தீர்ந்து - உணவு கொள்ளாமல், வருநதினும - (இதுவரையில்) வருத்தமுற்றோம்' அளியம் - (உன்னால்) அருள்செய்யத்தக்கவர் யாம்; உணவும் தந்தருள் - (எங்கட்கு) உணவையுந் தந்தருள்வாயாக,' என்ன - என்று (வாநரர்கள் அநுமானை) வேண்ட,—நாம வாலிசேய்பால் போதும் என்ற உடன் - 'நாமெல்லாம் (இதைக்குறித்தது) வாலியின் புதல்வனாகிய அங்கதனிடத்திற்செல்வோம்' என்று (அவ்வநுமான்) சொன்னவுடன், எழுந்து போனார் - (எல்லாரும்) எழுந்திருந்து போனார்கள்; (எ - று.)

'ஒருமாத காலத்திற்குட் சீதையைத்தேடிமீள்வீராக' என்று சுக்கிரீவன் சொன்ன தவணை முன்னமே கடந்து போனதனால், அங்ஙனந் தவணை கடந்த நமக்கு இனிச் சுக்கிரீவராஜனையால் மரணமே நேருமென்பதுபற்றிய வருத்தத்தால் அநுமான் சீதையைக்கண்டு மீண்டு வரும்வரையில் உணவு துயாகொண்டிருந்தனர் வாநரரென்க. உணவும், உமமை - இசைநிறை; இனி, முன் உயிரைத்தந்ததேயன்றி, இப்பொழுது உணவையுந் தருவாயென்று இறந்ததுதழுவிய எச்சவும்மையாகவுங் கொள்ளலாம். என்றுடன்- தொகுத்தல். பி - ம்:—[1]ஏது, [2]ஆதலால். [3]உணவு. [4]தேய்நது (கரு)

கச.—வாநரசேனைக்கு மதுவளிக்குமாறு வாநரவீரர்கள் அங்கதனை வேண்டுதல்.

அங்கதன் றன்னை [1]யணமி யனைவரு [2]மிருகை கூப்பிக்
[3]கொங்குதங் கலங்கன் மார்ப நின்னுடைக் குரக்குச் சேனை
வெங்கத மொழிந்து சால வருந்தின வேடை யோடி
யிங்கிதற் களிததல் வேண்டு மிறுலுமிழ் பிரச மென்றார்.

(இ - ள்) அனைவரும் - வாநரவீராகளெல்லாரும், அங்கதன் தன்னை - அங்கதனை, அணமி - சமீபித்து, இரு கை கூப்பி - இரண்டுகைகளையுங் கூப்பிகொண்டு, 'கொங்கு தங்கு அலங்கல் மாவ - வாசனை பொருந்திய மாலையைத் தரித்த மார்பையுடையவனே! நின் உடை குரங்கு சேனை - உனது வாநரசேனைகள், வேடை ஓடி - தாகம்மிகுந்து (அதனால்), வெம கதம் ஒழிநது - வெவ்விய வலிமை ஓயந்து, சால வருந்தின - மிகவும் வருத்தப்பட்டன; (ஆதலால்), இங்கு - இப்பொழுது [இவ்விடத்தில்], இதற்கு - இவ்வாநரசேனைக்கு, இறுல் உமிழ் பிரசம் -

கூட்டினின்று பெருகுகிற தேனை, அளித்தல் வேண்டும் - கொடுத்தருள வேணடும்', என்றார் - எனறு வேண்டினார்கள்; (எ - று.)

தென்திசைபிலனுப்பிய குரங்குசசேனைககு அங்கதன் தலைவனாதலாலும் வாநரப்படைகட்கெல்லாம் இவனே இளவரசனாதலாலும் வாநரங்கள் அவனை இறாலுமிழ்பிரசம வேணடின. நின்னுடைககுரககுசசேனை யெனக கூறியதும் காணக. வெம் கதம் மொழிநது என எடுத்து - கடுங்கோபத்துடன் பேசி எனினுமாம. கொங்கு - தேனுமாம். 'இதறகு' என்றது, சாதியொருமை. பி - ம்:—[1]கண்டாங்கு. [2]அங்கை. [3]கொங்கிறையலங்கல். (கச)

கரு.—அங்கதன் அநுமதிசெய்ய, வாநரர் மதுவனத்தை யழித்தல்.

நன்றென வவனு [1]நேர்ந்தா னரலையு நடுங்க வார்த்துச்
சென்றுறு பிரசந் தூங்குஞ் செழுவன மதனி னூடே
யொன்றின்மு னொன்று பாயு மொடிக்குமென் பிரச மெல்லாந்
தின்றுதின் [2]றுவகை கூருந் தேனுக ளளியின் மொய்த்தே.

(இ - ள்.) அவனும் - அவ்வங்கதனும, நன்று என - 'நல்லது' என்று, நேர்ந்தான் - உடன்பட்டான்; (உடனே வாநரசேனை),—நரலையும் - கடலும், நடுங்க - அஞ்சுமபடி, ஆர்த்து - ஆரவாரித்து, உறு பிரசம் தூங்கும் - மிக்க தேனிறால் தொங்கியசையப்பெறற, செழுவனம் அதனினூடு - செழுமை யான அந்த மதுவனததினுள்ளே, சென்று - போய், ஒன்றினமுன் ஒன்று - ஒருவாநரத்துக்குமுன் மற்றொருவானரமாக, பாயும - தாவும்; ஒடிக்கும - (கிளைகளை) முறிககும்; தேன் நுகர் அளியின் மொய்த்து - தேனைக் குடிககிற வண்டுகள்போல நெருங்கி, மெல் பிரசம் எல்லாம - இனிமையான தேன் முழுவதையும், தின்று தின்று - மிகுதியாகககுடித்து, உவகை கூரும்-களிப்பு மிகும; (எ - று.)

திரண்டுதேனுகர்தலில், வாநரங்கட்கு வண்டு உவமை. உறு - உரிச சொல். தின்று=பருகி; உபசாரவழககு: இனி, வானரங்கள் இறாலிவிருந்து தேனைப்பிழிந்துபருகுதற்குப் பொறுததிராமல் வேட்கை மிகுதியால் கூண் டோடு தேனை யருந்தியதனால் 'தின்றுதின்று' எனக் கூறினாரெனினுமாம். பி - ம்:—[1]சொல்ல. [2]ஒண. (கரு)

கசு.—வாநரர் மதுபானஞ்செய்து களித்தல்.

ஒருவர்வாய்க் கொள்ளுந் தேனை யொருவ[1]ருண் டெளிதிற்
போவா, ரொருவர்கைக் கொள்ளுந் தேனை யொருவா [2]கொண்டோ
டிப் போவா, ரொருவரோ டொருவ ரொன்றத தழுவுவர் விழுவ
ரோடி, யொருவர்மே லொருவ ரேறி யோகை யென் றுவகை கூர்வார்.

(இ - ள்.) ஒருவர் வாய் கொள்ளும் தேனை - ஒருவாநரவீரர் (சிரமப்பட் டுக் கொணாந்து) வாயிற் கொண்டு உணணவிருக்கிற தேனை, ஒருவர் - மற் றொரு வாநரவீரர், எளிதில் உண்டு போவாரா - (தாம் அது கொணர்தற்கு ஒரு

சிரமமுங் கொள்ளாமலே) எளிதில்வாஙகிக் குடித்துப் போய்விடுவார்; ஒரு வா—, கை கொள்ளும - கையில் வைததுக்கொணடிருககிற, தேனை—, ஒரு வா - வேறொருவா, கொணடு - பறிததுக்கொணடு, ஓடி போவா—; (மது மயக்கத்தால்), ஒருவரோடு ஒருவர்—, ஒன்ற தழுவுவர் - இறுக அணைத்துக கொளவார்; ஓடி விழுவா—; ஒருவர்மேல் ஒருவா ஏறி—, ஓகை என்று உவகை கூர்வார் - 'ஆனந்தம்!' என்று சொல்லி மகிழ்ச்சிமிகுவார்; (எ - று.)

ஓகை - உவகை என்றதன் மரூஉ. 'ஓகையென்று' என்பதறகு நமக்கு மகிழ்ச்சிவருஙகாலமிதுவெனறு என உரைப்பாரு முளர். பி - ம்.—[1]ஒருவா வாய்க் கொள்வரோடி. [2]கணடுண்டு. (கசு)

கஎ.—அச்சோலைக்காவலாளர் தமதுதலைவனான ததிமுகனென்னும் வாநரவீரனுக்குச் செய்தி கூறல்.

இன்னண நிகழுங் காலை யெரிவிழித் தெழுந்து சீறி
யந்நெடுஞ் சோலை காக்கும் வானர ரவரை நோக்கி
மன்னெடுங் கதிரோன் மைந்த னாணையை மறுத்து [1]நீயி
ரென்னினைந் [2]தென்செய தீர்மன னும்முயிர்க கிறுதியென்ன.

(இ - ள்.) இன்னணம் நிகழும காலை - இவ்வாறு நடக்கும்பொழுது, அ நெடுஞ் சோலை காக்கும வானரா - அந்தப் பெரிய மதுவனத்தைக்காவல்செய் கின்ற வாநரர்கள், எரிவிழிதது - நெருபபுபபொறி பறககக கணகளை விழிதது, சீறி - கோபித்து, எழுநது—, அவரை நோககி - அவ்வாநரர்களைப்பாரத்து, மன நெடுங கதிரோன மைநதன் ஆணையை மறுதது-மிகுதியான நீணடகிர ணஙகளையுடையவனாகிய சூரியனது குமாரனான சுககிரீவனது கட்டளை யைக கடநது, நீயிர்-நீஙகள, என நினைந்து என் செயதீர - என்ன நினைதது என்னகாரியஞ்செய்தீரகள்? உம உயிரககு இறுதி - உஙகளுயிரகளுக்கு முடிவு (நேரும),' என்ன - என்றும,—(எ - று.)

இன்னணம - இன்னவணணம் என்பதன் மரூஉ. ஆயிரஙகிரணமுடை மைபறறி, 'மன்கதிரோன்' என்றார. 'நெடுஙகதிர' என்றது - மிகககதூரததி லுஞ் சென்றுவிளஙகும் கிரணம என்றபடி. மன்னும உயிரககு இறுதி என் றும் பிரிதது உரைககலாம், நும்என்றும பிரிககலாம. பி - ம்:—[1]நீரின்று. [2]என்னசெயதீர. (கஎ)

கஅ முனியுமா லெம்மை யெங்கோ னெனறவர் மொழிந்து போந்து
கனியுமா மதுவ னததைக் கட்டழித் திட்ட தின்று
[1]நனிதரு கவியின் றானை நண்ணலார் செயகை நாண
வினியெம்மாற் செயலின் றெனனாத ததிமுகற் [2]கியம்பினாரால்.

(இ - ள்.) 'எம் கோன் - எமது தலைவனாகிய ததிமுகன், எம்மை—, முனியும - கோபிபபான்,' என்று - என்றும, மொழிநது - சொல்லி, அவா - அவ்வனஙகாப்பாளர், போநது - போய, 'நனி தரு கவியின் தானை - மிகுதிபொருந்திய வாநரசேனை, இனறு - இப்பொழுது, கனி

யும் மா மதுவனததை - செழிப்பான பெரிய மதுவனததை, கட்டு அழித்திட்டது - முழுவதும அழித்துவிட்டது; இனி-இப்பொழுது, நண்ணலார செய்கை நாண - அப்பகைவரது செய்கை ஒடுங்கும்படி, எம்மால் செயல் இன்று-எங்களாற் செய்யலாவதொன்றுமில்லை,' என்னு - என்று, ததிமுகற்கு - ததிமுகனுககு, இயம்பினுர - சொன்னுர்கள்; (எ - று.)

இரண்டு மூன்றுமடிகளுக்கு - மிகுந்த குரங்குக்கூட்டம் பகைவர்களது செய்கையும் வெள்ளும்படி [அதனினும் அதிகமாக] மதுவனத்தை நிலைகுலைத்தது என்றும் பொருள்கொள்ளலாம். நண்ணலார் - சேராதவர். ததிமுகன் மதுவனதுககுக் காவற்காராகளாகிய வாநரர்கட்குத தலைவன். பி - ம்:—[1]கனி காண. [2]இயமபினுரே. (கஅ)

கசு.—மதுவனத்தை யழித்தவர் யாவர்? என்ற ததிமுகனுக்குக் காவலாளர் கூறுதல்.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்

கேட்டவன் யாவ ரேயம் மதுவனங் கேடு சூழ்ந்தார்
[1]காட்டிரென் றெழுந்தா னன்னுர் வாலிசேய் முதல கற்றோ
ரீட்டம்வந் திறுத்த தாக வங்கத னேவ றன்னுன்
மாட்டின கவியின் ருனை மதுவள ருலவை யீட்டம்.

(இ - ள்) அவன் - அததிமுகன் கேட்டு - (அக்காவலாளர்வாாத்தையைக) கேட்டு, 'அ மது வுனம கேடு சூழ்ந்தா-அந்த மதுவனத்துககு அழிவு செய்தவர்கள், யாவரே - எவாதாம? காட்டிா - காட்டுவகள்' என்று - என்று சொல்லி, எழுந்தான்—; அனனுர - அக்காவல் வாநரா,—'வாலி சேய் முதல - வாலிகுமாரனுன அங்கதன் முதலிய, கற்றோ-படித்த வாநரர்களது, ஈட்டம் - கூட்டம, வந்து இறுததது ஆக - அங்கு வநது தங்கியதாக, (பின்பு), அங்கதன் ஏவல்தன்னுல் - அங்கதனது கட்டளையினுல், கவியின் தானை - குரங்குசசேனைகள, மதுவளா உலவை ஈட்டம - தேன்கூடுகள் மிக்க மரகங்களின் கூட்டததை, மாட்டின - ஒடிததன'; (எ - று.)

அன்னுர் எனனலோடும என மேற்கவியோடு இயையும். கேட்டவன் என்றுஎடுதது, அதுகேட்டவனுன ததிமுக னெனினுமாம். 'கற்றோ' என்றது, அனுமன முதலியோரை. மாட்டல் - மாள்வித்தல். பி - ம்·—[1]காட்டும. (கக)

௨௦·—காவலாளர் சொற்கேட்ட ததிமுகன் சினந்துகூறுதல்.

உரங்கிளர் மதுகை யான்ற னுணையா லுறுதி கொண்டே
குரங்கினந் தம்மை யெல்லாம் விலக்கினங் கொடுமை கூறிக்
கங்ரகளா லெற்ற நொந்தேங் [1]காவல வென்ன லோடுந்
தரங்கிளர் [2]தாதை பட்ட தறிந்திலன் றனயன் போலும.

(இ - ள்.) 'காவல-காததற்றொழிலில் வல்லவனே! உரம் கிளா மதுகையான்தன் ஆணையால் - வலிமை மிகக வெற்றியையுடையவனுன சுக்கிரீவனது கட்டளைப்படியே, உறுதி கொணடு - உறுதிய மேற்கொண்டு, குரங்கு இனமதம்மை எல்லாம - அந்தக் குரங்குக்கூட்டங்களை யெல்லாம்,

விலகினம - தடுத்தோம்; (அகக்குரங்குகள்), கொடுமை கூறி - கொடிய வார்த்தைகளைச் சொல்லி, கரங்களால் எற்ற - (தமது) கைகளால் அடிக்க, நொந்தேம் - வருந்தினோம்', என்னலோடும - என்று சொன்ன வளவில்,—(ததிமுகன்,—'தரம கிளர் தாதை பட்டது-வலிமை மிக்க தன் தந்தையாகிய வாலி இறந்ததை, தனயன் - அவனது மகனான அங்கதன், அறிந்திலன் போலும் - அறிந்தானில்லை போலும்', (எ - று.)—'என உரைத்து' என வருங்கவியோடு தொடரும்.

கொடுமை - கொடுஞ்சொல்லுக்குப் பண்பாகுபெயர். தரம் கிளா - மலை போல விளங்கிய என்றுமாம. மகாபலசாலியாகிய வாலி சுக்கிரீவனால் எளிதி லிறந்ததை அறிந்தும இவ்வங்கதனது செருக்கு அடங்க வில்லையோ? என்றது, நான்காமடியின் கருத்து; வாலிக்கு உரியதாயிருந்த இம்மதுவனம் அவனிறந்தபின்பு சுக்கிரீவனதாய்விட்டதை அங்கதன் அறியானபோலும என்றுங் கொள்க. பி - ம்:—[1]காவலோய. [2]தந்தைபட்டதுணாந்திலன்போலுஞ் சால. (உ0)

உக.—இரண்டுகோடிவாநரங்களுடன் ததிமுகன் மதுவனத்துக்கு வர, வாநரர்கள் அங்கதனடியில் விழுதல்.

எனவுரைத் தனலிற் பொங்கி யெழுந்திரைத் திரண்டு கோடி
கனைகழற் கவியின் சேனை கலலெனக் கலந்து [1]புலலப்
புனைமதுச் சோலை புக்கான் மதுநுகா புனிதச் சேனை
யனகனை வாழ்த்தி யோடி யங்கத [2]னடியின் வீழ்ந்த.

(இ - ள்.) என உரைத்து - என்றுசொல்லி, (ததிமுகன்), அனலின் பொங்கி எழுந்து - நெருப்புப்போலக் கொதித்தெழுந்து, இரைத்து - ஆரவாரித்து,—இரண்டு கோடி - இரண்டு கோடி யென்னுந் தொகையுள்ள, கனை கழல் கவியின் சேனை - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த குரங்குகளின் கூட்டம், கல்என கலந்து புல்ல - கல்லென்று ஒலித்துத் தனனோடுகூடிவர, புனை மது சோலை புக்கான்-அழகிய மதுவனத்திற் பிரவேசித்தான்; (அவ்வளவில்),—மது நுகர் புனிதம் சேனை - தேனைப் பருகுகிற பரிசுத்தமான வாநர சேனைகள், அனகனை வாழ்ததி - குற்றமற்றவனான ஸ்ரீராமனை வாழ்ததிக் கொண்டு, ஓடி - விரைந்துசென்று, அங்கதன அடியின் வீழந்த - (இளவரசனான) அங்கதனது பாதங்களில் விழுந்தன; (எ - று.)

கோடி - நூறுலக்ஷம. கலலெனல்-ஒலிகுறிப்பு; சப்தாநுகரணம். அகம்-தோஷம்; அஃது இல்லாதவன் - அநகன்; வடசொல். பி - ம் —[1]சுற்ற. [2]தன்னைச்சார்ந்தார். (உக)

உஉ.—ததிமுகன் அங்கதனை நோக்கிக் கூறுதல்.

இந்திரன் வாலிக் கீந்த வின்சுவை மதுவின் கான
மந்தரத் தவர்க்கு [1]நோக்கற் கரியவென் னாண தன்னைச்
சிந்தினை கதிரோன் மைந்தன் றிறலினை யறிதி யன்றே
மந்தர மனைய தோளா யிற்றதுன் வாழ்க்கை யின்றே.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) 'மந்தரம் அனைய தோளாய - மந்தரமலையையொத்த தோள்களையுடையவனான அங்கதனே, இந்திரன் வாலிககு ஈந்த - தேவேந்திரன் (தன் மகனான) வாலிக்குக் கொடுத்த, இன் சுவை மதுவின் கானம் - இனிய உருசியுள்ள மதுவை யுடைய இவ்வனம், அந்தரத்தவர்க்கும் நோக்கற்கு அரிய - ஆகாயத்திற சஞ்சரிககின்றவர்களான தேவர்கட்கும் பார்ப்பதற்கும் அரியதாமபடி செய்துவந்த, என் ஆணை தன்னை - எனது கட்டளையை, சிந்தினை - அழித்தாய்; கதிரோன் மைந்தன் திறலினை அறிதி அன்றே - சூரிய குமாரனான சுககிரீவனது வலிமையை அறிவையன்றோ? உன் வாழ்ககை - உனது உயிர்வாழ்வு, இன்றே-இன்றைககே, இற்றது-முடிந்ததாகும்;'(எ-று.)

மந்தரம பாற்கடலைக கலககுதல் போலத தோள் போர்ககடலைக கலககுதலால் உவமை. இற்றது - துணிவுபறறிய காலவழுவமைதி. [1]நோககற்கரியதென் என்ற பாடததுக்கு—'அரியது' முற்று. இந்தச செய்யுள் சில பிரதிகளிலில்லை. (உஉ)

உ௩.—ததிமுகனும் அங்கதனும் போருதல்.

மதுவனந் தனனை யினனே மாட்டுவித் தனைநீ யென்னுக்
கதுமென வாலி சேய்மே [1]லெறிந்தனன் கருங்கற் பாறை
யதுதனைப் புறங்கை யாலே யகற்றி[2]யங் கதனுஞ் சீறித்
ததிமுகன் றனனைப் பற்றிக் குத்தினன் றடக்கை [3]தனனுல்.

(இ - ள்.) நீ—, மது வனமதன்னை மதுவனத்தை, இன்னே - இவ்வாறாக, மாட்டுவித்தனை - அழிப்பித்தாய், என்னு - என்றுசொல்லி (ததிமுகன்), வாலி சேய்மேல் - அங்கதன்மேலே, கருங்கல் பாறை - கருங்கற் பாறையொன்றை, கதும் என - விரைவாக, எறிந்தனன் - எடுத்துவீசினான்; அங்கதனும—, அதுதனை-அபபாறையை, புறங்கையாலே அகற்றி - (தனது) பின்னங்கையால் தள்ளிவிட்டு, சீறி - கோபித்து, ததிமுகனதன்னை பற்றி - ததிமுகனைப் பிடித்து, தட கைதன்னுல் குத்தினன் - பெரிய கையினுற் குத்தினான்; (எ - று)

வானரப்படைக்குத்தலைவ னுதலால், அங்கதன்மேல் ததிமுகன் போருக்குவந்தான். வாலி-வாலில்வலலமையுடையவன்: இராவணனை வாலிற் கட்டிசசென்றதனுலும் இதனையறியலாம். ததிமுகன் - மதுவனத்துக்குக் காவறகாராகளாகிய வானராகட்குத தலைவன். மாட்டுவித்தனை=மாள்விப்பித்தனை: 'மாள்' என்ற வினைபபகுதி இரணடுபிறவினை பெற்றுவந்த முன்னிலையொருமை யிறந்தகால வினைமுறறு; வானரங்கள் மதுவனததை மாட்டின [மாளவித்தன] அவ்வண்ணம் மதுவனத்தைமாள்விக்குமாறு அங்கதன் ஏவினுனுதலால்"மதுவனந்தன்னை யின்னே மாட்டுவித்தனை"என்கின்றான், ததிமுகன் மாட்டு - மாள் என்பதன் பிறவினை: அதன்மேற் பிறவினை- 'மாட்டுவி' எனபது 'மாள' என்பது பிறவினையில 'மாட்டு' என்று வருவதனை, திருககோவையாரில் "வாட்டியன்றே" என்ற விடத்துப பேராசிரியர்

''மாட்டி=மாள்வித்து, மூள்வித்தற்கண் மூட்டியென நின்றவாறுபோல, மாள்வித்தற்கண்மாட்டி என நின்றது'' எனக் கூறியது கொண்டும் உணர்க. கதுமென - விரைவுக்குறிப்பு. கைப்புறம் - புறங்கை என இலக்கணப் போலி. இன்னே - இன்றே யெனினுமாம். பி - ம்:—[1]ஏவினன். [2]அங்க வனுஞ் [3]ஒன்றுல். (உஙு)

உச.—அங்கதன் ததிமுகனை அடித்துத்துரத்தி மற்றையோரைக் குத்தச் சொல்லுதல்.

வாய்வழி குருதிசோர [1]மணிக்கையான் மலங்க [2]மோதிப்
போய்மொழி கதிரோன் மைந்தற் கென்றவன் றன்னைப் போக்கித்
தீயெழு வெகுளி பொங்க மற்றவன் சேனை தன்னைக
[3]காய்கனல் பொழியுங் கையாற் குத்துதிர் கட்டி யென்றான்.

(இ - ள்.) (மற்றும் அங்கதன்),—வாய் வழி குருதி சோர - (ததிமுகனது வாயின் வழியாக இரததம் வழிய, மலங்க - (அவன்) வருந்துமாறு, மணி கையால் மோதி - (தனது) அழகிய கையினுல் தாக்கி, 'கதிரோன் மைந்தற்கு - சூரியன்மகனுன சுக்கிரீவனுக்கு, போய் மொழி - (நீ) போய்ச சொல்லு,' என்று - என்றுசொல்லி, அவன்தன்னை போக்கி - அததிமுகனைத துரததிவிட்டு,—தீ எழும் வெகுளி பொங்க - நெருப்புப் பறக்கும்படியான [உக்கிரமான]கோபம் மிக, அவன் சேனைதன்னை - அத்ததிமுகனது வாநர சேனையை, காய் கனல் பொழியும் கையால் - சுடுகின்றநெருப்புச சொரிகிற [உக்கிரமான] கைகளினுல், கட்டி - பிணித்து, குத்துதிர் - குத்துங்கள், என்றான்-என்று (தனது சேனை வாநரர்களைநோக்கிச) சொன்னுன்; (எ-று.)

மற்று - அசை; பினபு எனினுமாம். 'போய்மொழி கதிரோன் மைந்தற்கு' என்றது. களிப்புத் தலைகேறியதனுல். பி - ம்.—[1]மலர்க்கையால். [2]மொததி. [3]காயனல். (உச)

உரு.—மற்றவாநரர்களையும் அடித்துத்துரத்துதல்.

பிடித்தனர் கொடிக டம்மாற் பிணித்தனா பின்னு முன்னு
மிடித்தன ரசனி யஞ்ச வெறுழ்வலிக் கரங்க டோச்சித
துடித்தன ருடலஞ் சோர்ந்தார் சொல்லும்போய் நீரு மென்னுப
படித்தனன் வாலி மைந்தன் பயத்துட னவரும் போனுர்.

(இ - ள்) (அங்கதன்சேனைவாநரா ததிமுகன்சேனைவாநரரை), பிடித்தனர் - பிடித்து, கொடிகள் தமமால் பிணித்தனர் - கொடிகளாற கட்டி, 'எறுழ் வலி கரங்கள ஓசசி - மிகவலியகைகளை உயரவெடுத்து, அசனி அஞ்ச - இடியும அஞ்சுமபடி, பின்னும் முன்னும் பின்பக்கததிலும் முன்பக்கததிலும், இடித்தனா - இடித்தார்கள்; (அவ்விடி பொறுக்கமாட்டாமல் அவர்கள்), உடலம் துடித்தனா சோர்ந்தார் - உடமபு துடித்துக் களைத்தாகள்; (அபபொழுது), வாலி மைந்தன்-அங்கதன், நீரும் போய சொல்லும

என்னு - நீங்களும் போய்ச (சுக்கிரீவனிடஞ்) சொல்லுங்கள்' என்று, படித்தனன்-சொன்னான்; அவரும் - அவ்வாநரர்களும், பயத்துடன்-அச்சத்தோடு, போனார் - (சுக்கிரீவனிடஞ்) சென்றார்கள்; (எ - று.) (௨௫)

உசு.—வாநரர்கள் மதுவனத்தில் இனிதிருத்தல்.

அலைபுனல் குடையு மாபோன் மதுக்குடைந் தாடித் தத்தந்
தலைவர்கட் கினிய தேனுங் கனிகளும் பிறவுந் தந்தே
யுலைவுறு வருத்தந் தீர்ந்திட் [1]டுபவனத் திருந்தா ரப்பால்
சிலைவளைத் துலவுந் தேரோன் [2]றெறும்வெயி றணிவு பார்த்தே.

(இ - ள்.) (அங்கதன்சேனை வாநரர்), அலை புனல் குடையும் ஆ போல்-அலைகின்ற நீரில் முழுகி விளையாடும் விதம்போல மது குடைந்து ஆடி - மதுபானத்திலே முழுகி விளையாடி, தத்தம் தலைவர்கட்கு - தங்கள் தங்கள் தலைவர்களாகிய வாநரர்களுக்கு, இனிய - இனிமையான, தேனும் - தேனையும், கனிகளும்-பழங்களையும், பிறவும்-மற்றவற்றையும், தந்து-கொணர்ந்து கொடுத்து, உலைவுறு வருத்தம் தீர்ந்திட்டு - இளைப்பையடைந்த துன்பம் நீங்கி,—அப்பால் - பின்பு,—சிலைவளைத்து உலவும் தேரோன் - மகாமேருகிரியைச சூழ்ந்து சஞ்சரிக்கிற தேரையுடையவனான சூரியனது, தெறும் வெயில் - சுடுகின்ற வெயில், தணிவு - குறையுஞ்சமயத்தை, பாராது எதிர்பார்த்துக்கொண்டு, உபவனத்து இருந்தார் - அப்பூஞ்சோலையிலே இருந்தார்கள்; (எ - று.)

அலை புனல்-வினைத்தொகை; அலைகளையுடைய புனல் என்னும் பொருளில் 'அலைப்புனல்' என வலியிகும் பிற - காய் கிழங்குமுதலியன. தணிவு-தாழ்தல். பி - ம்.—[1]உயாவனத்து. [2]தெறுவயில். (௨௬)

உஎ.—கவிக்கூற்று 'இனி இராமன்செய்தி சொல்வோம்' என்றல்.

முத்தலை யெஃகி னாற்கு முடிப்பருங் கருமம் முற்றி
[1]வித்தகன் [2]றூது மீண்ட திறுதியாய் விளைந்த தன்மை
யத்தலை யறிந்த வெல்லா மறைந்தன மாழி யான்மாட்
டித்தலை நிகழ்ந்த வெல்லா மியமபுவா னெடுத்துக் கொண்டாம்.

(இ - ள்.) விததகன் - ஞானஸ்வரூபியாகிய ஸ்ரீராமனது, தூது - தூதனாகிய அநுமான், முத்தலை எஃகினாற்கும் முடிப்பு அருங் கருமம் முற்றி - மூன்று தலைகளையுடைய சூலாயுதத்தை யுடையவனான உருத்திரனுக்குஞ் செய்து நிறைவேற்றுதற்கு அருமையான தொழிலைச்செய்து முடிந்தது, மீண்டது இறுதியாய் - திரும்பிவந்தது முடிவாக, அத்தலை - அவ்விடத்தில் [தெற்குத்திக்கில்]. விளைந்த தன்மை - நடந்த செய்தியை, அறிந்த எல்லாம் - தெரிந்தவரையிலும், அறைந்தனம் - சொன்னோம்; (இனி), இத்தலை - இவ்விடத்தில் [கிஷ்கிந்தையருகில்], ஆழியானமாட்டு-ஸ்ரீராமனிடத்தில, நிகழ்ந்த எல்லாம் - நடந்தவற்றை யெல்லாம, இயமபுவான் - சொல்வதற்கு, எடுத்துக்கொண்டாம் - தொடங்கினோம், (எ - று.)

'முத்தலை யெஃகினாற்கும் முடிப்பருங்கருமம்' - இலங்கையை எரியூட்டுதல். ஆழியான - சக்கராயுத முடையவன்; கடலிற பள்ளிகொள

பவன்; கடல்போலுங் கரியதிருநிறமுடையவன்; ஆஜ்ஞாசக்கரமுடையான். பி - ம்:—[1]வித்தகத்தூதன். (உஎ)

வேறு.

உஅ.—சீதையைத் தேடுமாறு வாநரர்களை யனுப்பிய சுக்கிரீவன் இராமனுக்குத் தேறுதல் கூறிக்கொண்டிருத்தல்.

சேறறிள மரைமலர்த் திருவைத் தேர்கெனக்
காற்றின்மா மகன்முதற் கவியின் சேனையை
நாற்றிசை மருங்கினு மேவி நாயகற
றேற்றின னிருந்தனன் [1]கதிரின செம்மலே.

(இ - ள்.) கதிரின் செமல - சூரியனது குமாரனாகிய சுகிரீவன்,—'சேறு இள மரை மலா திருவை - சேற்றில்தோன்றிய இளமையான செந்தாமரைமலரில் வீற்றிருக்கிற திருமகளை [சீதையை], தோக - தேடுவீராக', என - என்று, காறயின் மா மகன் முதல் கவியின் சேனையை - வாயுவினது சிறந்த குமாரனான அநுமான் முதலிய குரங்குச் சேனையை, நால்திசை மருங்கினும் - நான்கு திக்குக்களினிடங்களிலும், ஏவி - அனுபபிவிட்டு,—நாயகன் - (யாவர்க்குந்) தலைவனான ஸ்ரீராமனை, தேற்றினன் இருந்தனன் - தேற்றிக்கொண்டிருந்தான்; (எ - று.)

கிட்கிந்தாகாண்டத்து நாடவிட்டபடலத்தின் தொடாச்சியாக, இராமபிரான்பக்கல் நிகழ்ந்த செய்தியைக் கூறுகின்றார். அதற்கு அடுத்ததான பிலநீங்குபடலம் முதலாக இதுவரையிலும், சீதையை நாடித் தென்திசைப் பக்கஞ்சென்ற அநுமான் முதலியோரது செயதியைக் கூறிப்போந்தார். தாமரை பங்கஜமாதலால், 'சேற்றிளமரை' எனப்பட்டது. திருமால் இராமனாகத் திருவவதரித்தபோது திருமகள் சீதையாகத் திருவவதரித்தனளென்று இதிகாசபுராணங்கள் கூறுதலால, சீதையை 'மரைமலாதிரு' என்றார். மரைமலா - முதற்குறை விகாரம். தேறறுதல் - துயரந்தீர்ந்து தெளியச்செய்தல். செம்மல்-ஆண்பாறசிறப்புப்பெயா. பி-ம்:—[1]கவியின்செமல். ()

உக.—இராமன் சீதையைப்பிரிந்த சோகத்தால் மூர்ச்சிக்குந்தோறும் சுக்கிரீவன் வார்த்தையால் தேறுதல்.

கார்வரை [1]யிருந்தனன் கதிரின் காதலன்
சீரிய சொற்களாற் றெருட்டச் செங்கணா
னாருயி ராயிர முடைய னாமெனச்
சோரதொறுஞ் சோர்தொறு முயிர்த்துத் [2]தோன்றினான்.

(இ - ள்.) கதிரின் காதலன் - சூரியகுமாரனான சுகிரீவன், கார்வரை இருந்தனன் - கரிய பிரஸரவணமலையிலே யிருந்துகொண்டு, சீரிய சொற்களின - நலல வாாதைகளினால, தெருட்ட - தேற்ற, (அதனால்),—செமகணான - சிவந்த திருக்கணகளை யுடையவனான ஸ்ரீராமன், ஆர் உயிர் ஆயிரம் உடையன் ஆம என - அருமையான உயிர்கள் பலவற்றை யுடையவனென்னுமபடி, சோரதொறும சோரதொறும் உயிர்

த்து தோன்றினன் - மயங்கிமூர்ச்சிக்கும பொழுதெலலாம் மீணடும உயிர் பெறறு எழுந்தான; (எ - று.)

கார் வரை - பெரிய மலை யென்றுமாம், (உயாசசியால்) மேகந்தங்கும மலை யெனினுமாம் தெருட்ட உயிர்த்துததோன்றினனெனன இயையும. பல முறை மூர்ச்சித்து உயிர்சோர்ந்து சுககிரீவனது இன் சொல்லால் உயிர்த்து எழுதல்பறறி, 'ஆருயிராயிரமுடையனுமென உயிர்த்துததோன்றினன்' என்றார். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இங்கு 'ஆயிரம்' என்றது, பல வென்றபடி. பி - ம்.—[1]இருந்தவக. [2]தோனறுவான். (உகூ)

ங0.—மற்றைத்திசைகளிற் சென்றவரீகள் சீதையைக்காணாது மீண்டபின்பும் அநுமானிடத்து நம்பிக்கையால் இராமன் ஜீவித்திருத்தல்.

தண்டலி னெடுந்திசை மூன்றுந் தாயினர்
கண்டிலர் மடந்தையை யென்னுங் கட்டுரை
யுண்டுயி ரகததென [1]வொறுக்க வும்முளன்
றிண்டிற லனுமனை நினையுஞ் சிந்தையான்.

(இ - ள்.) 'தண்டல் இல் - தடையில்லாமல், நெடுந் திசை மூன்றும் - பெரிய (வடக்கு கிழக்கு மேறகு எனனும்) மூன்றுதிகக்களிலும, தாயினர் - (சீதையைததேடுதறகுத) தாவிசசென்ற வாநரர்கள், மடந்தையை - அப்பிராட்டியை, கண்டிலா - கணடாரில்லை, என்னும்-என்கிற, கட்டு உரை-உறுதியானவார்ததை, ஒறுக்கவும் - (தன்னை) வருத்தவும,—(ஸ்ரீராமன்),—திணதிறல் அநுமனை நினையும சிந்தையான் - மிகக வலிமையுடைய அநுமானை எண்ணுகிற மனத்தையுடையனாய் [அநுமான் பிராட்டியைக் கண்டு வருதல் கூடு மென்று எண்ணி], அகததது உயிர் உண்டு என உளன் - உயிர் உடம்பினுள் உளளதென்னுமபடி உள்ளவனானான் [பிழைததிருநதான் என்றபடி].

வினைப்பகுதிகள் சிலவிடங்களில் வினையெச்சப்பொருள்பட்டு நிற்றல் போல, 'இல்' என்ற பணபுப்பகுதி இங்கு வினையெசசப்பொருள்பட்டுநின்றது. இனி, 'இல்' என்பதைத் திசைககு அடைமொழியாக்கி, முட்டுபபடாமல் நீணடுசெல்கிற திகககுக்க ளென்றுங கொள்ளலாம. 'உண்டுயிரகததெனனை ஒறுக்கவும' என்பதற்கு - உயிர் உளளே உணடோ என்று ஐயப்படுமபடி வருத்தவும் என்றும், உடம்பினுள்ளேயுள்ள உயிரை உணடாறபோல வருத்தவும் என்றும் பொருளுரைககலாம். பி - ம்:—[1]ஒடுகுமுள்ளத்தான். (ங0)

ங௧.—ஒருநாள் இராமன் சுக்கிரீவனை நோக்கிச் சிலகூறுதல்.

ஆரிய னருந்துயர்க் கடலி னாழ்பவன்
சீரிய தன்றுநஞ் செய்கை தீர்வரும்
[1]பூரிய வெம்பழி பொடித்த தாமெனாச்
சூரியன் சிறுவனை நோக்கிச் சொல்லினன்.

(இ - ள்.) ஆரியன் - ஸ்ரீராமன்,—அருந் துயர் கடலின ஆழ்பவன் - (பொறுப்பதற்கு) அரிய துன்பமாகிய கடலில் முழுகுபவனாய்,—சூரியன்

சிறுவனை நோக்கி - சுக்கிரீவனைப்பார்த்து,—'நம் செய்கை - நமது முயற்சி, சீரியது அன்று - பயன்பட்டதன்று, தீவு அரு - நீங்குதலில்லாத, பூரிய - இழிவையுடைய, வெம் - கொடிய, பழி - (சீதையைதேடிக் கண்டாரில்லை யென்னும்) நிந்தனை, பொடித்து ஆம் - உண்டானதாகும்,' எனு - என்று சொல்லி, சொல்லினன் - மற்றும சொல்பவனானான்; (எ - று)—அவற்றை அடுத்த நான்குகவிகளிற் கண்க.

இசசெய்யுளின் இடையிரண்டடி - தொகுத்துச்சுட்டல்; அடுத்த நான்கு கவிகள - வகுத்துக்காட்டல. சீரியது அன்று நம் செய்கை - நாம இங்ஙனம் வாளாவிருப்பது தகுதியுடையதன்று என்றுமாம். இனி, 'நம்' என்பதைத் தனித்தனமைப்பன்மை யெனக கொண்டு, இராமன் அருந்துயர்க்கடலின் ஆழ்பவனாய் 'எனதுசெய்கை [இனியான இங்ஙனம் வாளாவிருப்பது] தக்கதன்று, நீங்குதற்கு அரிய இழிவான கொடிய பழிப்பு அமைந்ததாம்' என்று எணணிச சுக்கிரீவனை நோக்கிச சொல்லலானான் எனப் பொருள் கூறலுமாம். பூரிய - பூரி என்ற பகுதியின்மேற்பிறந்த குறிப்புப்பெயரெசசம்; பூரி - குற்றம், கீழ்மை இனி, பூரிய - மிகுதியான எனினுமாம்; இப்பொருளில், பூரி - மிகுதி வடசொல். பி ம்—[1]மூரிவெம்பழியொடுமுடிந்தாமெனச. ()

௩௨.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்; இராமன்வார்த்தை.

குறித்தநா [1]ளிகந்தன குன்றத் தென்றிசை
வெறிக்கருங் குழலியை நாடன் மேயினா
மறிததிவண வருதிலர் மாண்டு ளார்கொலோ
பிறித்தவர்க் குறறுள தென்னை [2]பெற்றியோ.

(இ - ள்.) குறிதத நாள - (நாம் முன்னே) தவணையிட்டு அனுப்பிய நாள்களெல்லாம், இகந்தன - கழிந்துபோயின; குன்றம் தென் திசை - இமமலையின் தென்திசையைநோக்கி, வெறி கருங குழலியை நாடல் மேயினா - நறுமணமுளள கருநிறமான கூந்தலையுடையவளாகிய சீதையைத் தேடச சென்றவாகள், மறிதது இவண வருதிலா - மீளவும் இவ்விடதது வந்தாகளில்லை; மாண்டு உளார்கொலோ - இறநதுபோயினாகளோ? அவாககு-அவாகட்கு, பிறிது உற்றுளது-வேறே நேரந்துள்ளது, என்னை பெற்றியோ-என்னதன்மையோ?(எ - று.)

குறிததகாலததுக்குள் மீணடுவராமையால் ஒருகால் தென்திசை சென்ற வானரா மாணடுவிட்டனரோ? என்று அயிர்கின்றான் இராமன். பிறிது அவர்க்கு - பிறிததவாக்கு; [நன் - உயிா - 33 - உரையிற காணக.] இனி, குன்ற என வினையெசசமாக எடுத்து - குறிததநாள்கள் கழிந்தன வாயக குறைய என்றும் உரைகூறலாம. பி - ம் —[1]இறந்தன. [2]பெறறியோய்.

(௩௨)

௩௩. மாண்டன ளவளிவண் மாண்ட வார்த்தையை
மீணடவாக் குரைததலின் விளித னன்றெனாப்
பூண்டதோ துயர்கொடு பொன்றி னார்கொலோ
தேணடின ரின்னமுந் திரிகின் றார்கொலோ.

(இ - ள்.) (அன்றி), 'அவள் - அசீதை, மாண்டனள் - இறந்தாள்; மாண்ட வாதையை-(அவள்) இறந்தசெய்தியை, இவண் மீண்டு அவர்க்கு உரைததலின் - இங்குமீண்டுவந்து அவர்கட்கு [ராமலக்ஷ்மண சுக்கிரீவர்களுக்கு]ச சொல்லுதலினும், விளிதல் - (நாம) இறந்துபோதலே, நன்று - நல்லது,' என - என்று எண்ணி, பூண்டது ஓர் துயர்கொடு - மேற்கொண்டதொரு துன்பததினால், பொன்றினார்கொலோ - (அநுமன் முதலானவர்கள்) இறந்துபோனார்களோ? (அன்றி), இன்னமும்—, தேண்டினர் திரிகின்றார் கொலோ - தேடி அலைகின்றார்களோ; (எ - று.)

கொடுவிலங்குமுதலியவற்றால் வானரங்கட்கு மரணமநேரிட்டிருப்பின் ஒன்று இரண்டுவானரம் தப்பிவரக்கூடுமாதலால் அங்ஙனம் வராமைபற்றி, ஒருகால் சீதை உயிர்மாண்டனளாக, அததுயரசசெய்தியை எவ்வாறு சொல்வதென்று கருதிய எண்ணததினால் தம்முயிரை வானரா மாயத்துக் கொண்டனரோ? என்று இதனால் இராமன் சநதேகிக்கின்றான். வார்ததா என்ற வடசொல்லுக்கு - செய்தியென்றபொருளும உண்டு. கொடு - தொகுத்தல். தேணடினா - தேடினா. எதுகைநோக்கிய விரிதல். (௩௩)

௩௪. கண்டன ரரக்கரைக் கறுவு கைம்மிக
மண்டமர் தொடங்கினர் வஞ்சர் மாயையால்
விண்டல [1]மதனின்மே யினாகொல் வேறிலாத்
தண்டலி னெடுஞ்சிறைத் தளைபபட் டாகொலோ.

(இ - ள்.) அரக்கரை - இராகததாகளை, கண்டனர் - பார்த்து, கறவு கைம்மிக-கோபம் அதிகரிதததால், மனறு அமர் தொடங்கினர் - மிகுதியான போரைச செய்யத்தொடங்கி, வஞ்சர் மாயையால் - வஞ்சகர்களான அவ்விராகததாகளசெய்த மாயையினால், விணதலம்அதனில் மேயினாகொல் - (இறந்து) வீரசுவர்க்கத்திற சேர்ந்தார்களோ? வேறு இலா - வேறே தப்பும் வழி யொனறுமில்லாமல், தண்டல் இல் நெடுஞ்சிறை - (எக்காலததிலும்) நீங்குதலில்லாத பெரிய சிறையில், தளைப்பட்டார்கொலோ - கட்டுப்பட்டார்களோ? (எ - று.)

கறவு - முதனிலைத்தொழிறபெயர். கைம்மிக என்பதில், கை - தமிழுபசாரகம். வேறுஇலா என்பதற்கு-தமமுள் வேறுபடாமல் [ஒருங்கே] என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]மேயினரேகொல். (௩௪)

௩௫. கூறின நாளவ ரிருக்கை கூடல
மேறலஞ் சுதுமென வின்பு துன்புக
ளாறின ரருந்தவ மயர்கின றாகொலோ
வேறவாக குற்றதென் விளமபு வாயென்றான்.

(இ - ள்.) 'கூறின நாள - தவணைசொன்ன நாள்கட்குள்ளே, அவர் இருக்கை - இராமன்முதலியோரிருப்பிடத்தை, கூடலம் - சேர்ந்தோமில்லை. ஏறல் அஞ்சுதும - (இனி அங்குப்) போவதற்குப் பயப்படுவோம்,' என-என்று எணணி, இன்பு துன்புகள் ஆறினா - இன்பமுந் துன்பமுந தணிந்தவர்க

ளாய், அருந் தவம் அயர்கின்றார்கொலோ - அருமையான தவத்தைச் செய்கின்றார்களோ? அவர்க்கு-அவர்களுக்கு, வேறு உற்றது என் - வேறேநேர்ந்தது யாதோ? விளம்புவாய் - சொல்வாய், என்றான் - என்று (ஸ்ரீராமன் சுகிரீவனைநோக்கிச்) சொன்னான்; (எ - று.)

தன்னுயிரான சீதைக்கு அழிவுநேரிடின் தன்னுயிர்நிலைத்திராது ஆதலால், அதுவும் நிகழ்ந்திராதென்று எண்ணிய இராமன், இதனால், ஒருமாத காலத்திற்குள் தேடித திரும்பிவரவேண்டுமென்று, தவணை குறித்து வானரர்களைத் தேடுமாறு அனுப்பியுள்ளதனால் அத்தவணைநாள் கடந்துவிட்டது குறித்து அஞ்சி வானரர் தம்முயிரைத் துறந்தனரோ? வேறுகாரணமோ? என்று இராமன் தென்திசையிற்செலுத்திய வானரர் மீண்டு வாராததுகுறித்து ஐயுற சந்தேகித்துக் கூறுகின்றனனென்க. 'இன்பு துன்புகள் ஆறினர்' என்பதற்கு - இன்பத்தையும் துன்பத்தையுஞ் சமமாகப்பாவித்து என்று கருத்து. இருகை - தொழிலாகுபெயர். (௩௫)

௩௬.—இங்ஙனம் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அங்கதன் குத்தினால் குருதி சொட்டத் ததிமுகன் வருதல்

என்றுரைத் திடருழந் திருக்கு [1]மேல்வையில்
வன்றிறற் றதிமுகன் [2]வான ரேசன்முன்
றன்றலைப பொழிதரு குருதி தன்னொடுங்
குன்றெனப் பணிந்தன னிருகை கூப்பியே.

(இ - ள்.) என்று உரைத்து - என்று சொல்லி, இடர் உழந்து இருக்கும் ஏல்வையில்-(ஸ்ரீராமன்) வருத்தப்பட்டுகொண்டிருக்குஞ் சமயத்தில்,—வல் திறல் ததிமுகன் - கொடிய வலிமையையுடைய ததிமுகன், வானர ஈசன்முன் - குரங்குகட்குத் தலைவனான சுகிரீவனது எதிரில், தன் தலை பொழி தரு குருதிதன்னொடும் - தனது தலையினின்று சொரிகிற இரத்தத்துடனே, (சென்று), இரு கை கூப்பி - இரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு, குன்று என பணிந்தனன் - மலைபோல விழுந்து நமஸ்கரித்தான்; (எ - று)

இடருழந்து - மனத்திலிருக்குந் துயரத்தினால் வெளிப்பட வருந்தி. [2]வானரேசர்முன் என்ற பாடத்துக்கு - தன்னுடன் வருகிற இரண்டுகோடி வானரவீரர்களின் முன் (சென்று) என்று பொருளுரைத்து, 'சுகிரீவனை' என்னுஞ் செயப்படுபொருள் வருவிக்க முதலடி - முற்றுமோனை பி - ம்.—[1]வேலையில். [2]மன்னன்பால்வந்தே. (௩௭)

௩௭.—'மதுவனம் அழிந்தது' என்று ததிமுகன்கூற, சுகிரீவன் 'அதனையழித்தவர் யார்' என்றல்.

எழுந்துநின் றையகே ளின்று [1]நாளையோ
டழிந்தது மதுவன மடைய வென்றலும
[2]வழிந்திடு குருதியின் வதன நோக்கியே
மொழிந்திடங் கியாரது முடித்து ளோரென.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ள்.) எழுந்து நின்று—, (சுகரீவனைநோக்கி), 'ஐய - தலைவனே! கேள்—' இன்று நாளையோடு-இன்றைததினத்துடனே, மதுவனம் அடைய-மதுவனம் முழுவதும், அழிந்தது - அழிந்துபோயிற்று,' என்றலும - என்று (ததிமுகன்) சொன்னவளவில்,—(சுகரீவன்), வழிந்திடு குருதியின் வதனம நோக்கி-வழிகின்ற இரத்தத்தையுடைய (ததிமுகனது) முகத்தைப் பார்த்து, 'அகரு - அவ்விடத்தில், அது - (மதுவனததையழித்தலாகிய) அசசெயலை, முடிததுளோர் - செய்து முடித்தவர, யார - யாவர்? மொழிநதிடு - சொல்வா யாக?' என - என்று விளுவ —(எ - று.)—பி ம்:—[1]நாளையால். [2]வழிந்திழி.

ஙஅ.—இதுமுதல் மூன்றுகவிகள் - ததிமுகன்வார்த்தை.

நீலனுங் குமுதனு நெடிய குன்றமே
[1]போலுயா சாம்பனும் புணரி போர்த்தென
மேலெழு [2]சேனையும் விரைவின் வந்துறுச்
சால்புடை மதுவனந் தனைய ழிப்பவே.

(இ - ள்.) நீலனும்—, குமுதனும்—, நெடிய குன்றமே போல் உயா - பெரிய மலைபோல உயர்ந்த, சாம்பனும் - ஜாயபவானும், புணரி போர்த்து என மேல் எழு சேனையும் - (கடல் பொஙகியெழுந்து உலகத்தை) மூடினாற் போல மேலெழுந்துவருகிற வாநரசேனையும், விரைவின் வந்து உறு - விரைந்து வந்துசோந்து, சால்பு உடை மது வனந்தனை அழிப்ப - சிறப்பை யுடைய மதுவனததை அழிக்க,—(எ - று.)

உறு - இறந்தகாலவினையெசசம். நீலன் - வாநரப்படைததலைவரில ஒரு வன்; நீலநிறமுடையான்: அகனியமசமானவன். குமுதன் - ஆம்பல் போன்ற நிறமுடையவன்; இவனும், வானரப்படைத்தலைவரில் ஒருவன். சாம்பன-வடசொல்திரிபு. சால் புடை என்று பிரித்தால், பெரிய இடத்தை யுடைய என்று பொருளாம், பி - ம்:—[1]போலிய [2]சேனையின். (ஙஅ)

ஙகூ. தகைந்தவச் சேனையைத் தள்ளி நின்னையு
மிகழ்ந்து [1]ரைத் தியைந்தனன் வாலி சேயெமக்
[2]குகந்தன புகன்றவவ் வுரைபொ றுமையே
புகைந்தொரு பாறையின் புணர்ப்பு நீககியே.

(இ - ள்.) தகைந்த - (அழிககவேண்டாவென்று) தடுத்த, அ சேனையை- அம்மதுவனத்துககுக் காவலான (நமது) சேனையை, வாலி சேய - அஙகதன், தள்ளி - அடித்துத்துரததி, நின்னையும் இகழாது உரைதது - உன்னையும இகழ்சசியாகப் பேசி, இயைந்தனன் - (அவ்வனததை நீலன் முதலியோர் அழிததற்கு) உடன்பட்டிருந்தான்; எமகு உகந்தன புகன்ற - (அவன் அஙக னம்) எஙகளைநோககித் தனமனம் விருமபியபடி பேசிய, அ உரை - அந்த வாரதைகளை, பொறுமையே - (யான்) பொறுக்காமல், புகைந்து கோபிதது, ஒரு பாறையின் புணாப்பு நீககி - ஒரு கருஙகற்பாறையின் தொடாசசியை நீஙகசசெய்து [ஒரு பெருமபாறையை அது இருநத இடததினின்று

பெயர்த்து எடுத்து],—(எ - று.)—'இமைத்தன்முன் எறிதர' என அடுத்த கவியோடுதொடரும்.

அங்கதன்சேனையை மதுவனங்காக்குஞ் சேனை தகைந்தது; அந்த மதுவனத்துச்சேனையைத் தன்வலியால் தள்ளிவிட்டு அங்கதன் நின்னையும் இகழ்ந்துகூறி, தனது வானரசேனைவீரருடன் சேர்ந்து மதுவனத்தை யழிக்கலானான்: அவன் நமக்கு உகந்தவனாயினும அவன் கூறிய கடுஞ்சொல்லைப் பொறாது அவனுடன் பொரலாயினேனென்கின்றான் ததிமுகன். பொறாமை-'மை' விகுதிபெற்று வந்த எதிர்மறை வினையெச்சம் புணர்ப்பு - நிலத்தின் கூட்டுறவு. பி - ம்.—[1]உரைத்திருந்தனன், உரைத்தீநதனன். [2]உகந்தில புகன்ற. (௩௬)

௪௦. இமைத்தன்முன் வாலிசே யெழில்கொள யாக்கையைச்
சமைத்தியென் றெறிதரப புறங்கை யாற்றடுத
[1]தமைத்தரு கனலென வழன்[2]றெற் பற்றியே
குமைத்[3]துயிர் பதைபபநீ கூறு போயென்றான்.

(இ - ள்.) 'இமைதல் முன் - ஒருமாத்திரைப்பொழுதினுள்ளே, வாலிசேய் - அங்கதனது, எழில் கொள் யாககையை-வளாசசிகொண்ட உடம்பை, சமைதி - அழிப்பாயாக,' என்று - என்று சொல்லி, எறிதர-(அப்பாறையை அவன்மேலே) எறிய, (அவ்வங்கதன்), புறங்கையால் - புறங்கையாலே (அதனைத்) தள்ளிவிட்டு, அமைதரு கனல் என - மூங்கிலில் தோன்றிய நெருபபுப் போல, அழன்று - கொதிப்புக்கொண்டு, என் பற்றி - என்னைப் பிடித்து, உயிர் பதைப்ப - உயிர்துடிக்கும்படி, குமைதது-குதிக்க குமைத்து, நீ போய் கூறு என்றான் - 'நீ (சுகிரீவனிடம) போயசசொல்' என்றுசொன்னான்; (எ - று.)—என்று ததிமுகன் சுகிரீவனிடஞ்சொன்னான் என வருவிதது, முடிக்க.

வாலிசேய் என்பதை விளிவேற்றுமையாககொண்டு 'வாலிசேய் - வாலி புதிரனே! எழில்கொள் யாக்கையை-அழகிய (உனது) உடமபை, சமைத்தி-(இந்தப்பாறை யழியாமல்) ஏற்பாடுசெய்துகொள் என்று உரைததலும் உண்டு. இமைதல்முன் - கண்மூடித்திறப்பதறகுள் எழில்-எழுச்சி, இல் - தொழிற் பெயா விகுதி. அமை - மூங்கில். பி - ம்:—[1]தகைதது. [2]அங்கெற்றியே. [3]நின்மன்னறகுக்கூறென்றானென். (௪௦)

௪௧.—'இச்செயீதி உவகைக்த அறிதறி' என்று சுக்கிரீவன் இராமனுக்குக் கூறுதல்.

ஏப்பலொ டெழுந்துநின் றிரவி கான்முளை
பாம்பணை [1]யமலனை வணங்கிப் பைநதொடி
பேம்படு கற்பின ளெனனு மெய்ம்மையைத்
தாப்புகன் றிடடதிச் சலமென் றோதினான.

(இ - ள்.) (அவ்வளவிலே),—இரவி கான்முளை - சூரிய குமாரனான சுக்கிரீவன், ஏமபலோடு மகிழ்ச்சியுடனே, எழுந்து நின்று,—, பாமபு

அணை அமலனை வணங்கி - ஆதிசேஷனைச் சயனமாகவுடைய குற்றமற்ற திருமாலின் திருவவதாரமாகிய ஸ்ரீராமனை நமஸ்கரித்து,—'பைந்தொடி - பசுமையாகிய தொடியென்னுங் கைவளையை யுடையவளான பிராட்டி, மேம்படு கறபினள் - சிறந்த கற்புடையவளா யிருக்கிறாள், என்னும் மெய்ம்மையை- என்கிற உண்மையை, இ சலம் - இந்த (அங்கதனது) கடுந்தொழில், புகன்றிட்டது - தெரிவித்தது,' என்று ஓதினான் - என்று சொன்னான்; (எ - று,— தாம் - அசை.

நீலன் முதலிய மற்றவானரர்களோடு கூடி இவ்வாறு செருக்குக் கொண்டு அங்கதன் மதுவனத்தை அழித்ததுகொண்டே, பிராட்டி கறபுநிலை சிறிதுந்தவறாமல் உயிர்வாழ்ந்திருக்கின்றா ளென்கிற செய்தியை அவர்கள் கண்டுணர்ந்தாரென அனுமானித்து அறியலாமென்று மகாராஜர் பெருமான் பக்கல் விண்ணப்பஞ்செய்தன ரென்க. சலம் - கலஹமுமாம். பி - ம்.— [1]அமலனைப்பணிந்து. (சக)

சஉ.—இராமனுக்குச் சுக்கிரீவன் தேறுதல் கூறுதல்.

பண்டரு கிளவியா டன்னைப் பாங்குறக்
கண்டன [1]ரன்னதோர் களிப்பி னாலவா
வண்டுறை மதுவன மழித்து [2]மாந்தின
ரண்டநா யகவினி யவலந [3]தீர்கென்றான்.

(இ - ள்.) 'அண்டம நாயக - உலகங்கட்குத் தலைவனே!—பணதரு கிளவியாள்தன்னை - இராகதத்தை யொத்த [மிகவினிய] சொறகளையுடையவளான பிராட்டியை, பாங்கு உற - நன்மைபொருந்த, கண்டனர் - பார்த்தார்கள்; அன்னது ஓர் களிப்பினால்-அங்ஙனங்கண்டதனாலுண்டாகிய ஒப்பற்ற களிப்பினால், அவர் - அவ்வங்கதன்முதலியோர், வண்டு உறை மது வனம் அழித்து மாந்தினர் - வண்டுகள் தங்கப்பெற்ற மதுவனத்தை அழித்துத் தேனைக்குடித்தனர்; இனி - இனிமேல், அவலம்தீர்க - துன்பம் நீங்குவாயாக,' என்றான் - என்று (சுகரீவன் இராமனைநோக்கிச்) சொல்லினான்; (எ - று.)—பி - ம்:— [1]என்பதோர். [2]மாந்தியது. [3]தீர்கெனா. (சஉ)

சங.—'வந்தவர்யாதுசொல்வரோ' என்று இராமன் சிந்தித்திருத்தல்.

வந்தனர் தென்றிசை [1]வாவி னாரெனப்
புந்திநொந் தென்னைகொல் புகலற் பாலரென்
றெந்தையு மிருந்தன னிரவி கான்முளை
நொந்தவத் ததிமுகன் றன்னை நோக்கினே.

ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்) 'தென்திசை வாவினா - தெற்குத்திக்குப்போனவர்கள், வந்தனர் - திரும்பிவந்தவர்களாவா,' என - என்று (சுகரீவன்) சொல்ல,—'எந்தையும் - எமதுதலைவனான இராமபிரானும், என்னை புகலற்பாலர் கொல் - (அவர்கள்) என்னசொல்லுந்தன்மையையுடையவர்களாவரோ?' என்று என்று எண்ணி, புந்தி நொந்து - மனம்வருந்தி, இருந்தனன (அவர்கள் வருகையை)

எதிர்பார்த்திருந்தான்; இரவி கான்முளை - சுக்கிரீவன், நொந்த அ ததிமுகன் தன்னை நோககி - வருந்திவந்த அநதத் ததிமுகனைப் பார்த்து; (எ - று.)— 'என' என்று அடுத்தகவியோடு தொடரும். பி - ம் —[1]வரம்பிலர். (சஉ)

சச —மற்றும் விவரம்வினவிய சுக்கிரீவனுக்குத் ததிமுகன் கூறுதல்.

யாரவ ணிறுததவ ரியம்பு வாயென
மாருதி வாலிசேய் மயிந்தன் சாம்பவன்
[1]சோர்வறு பதினெழு வோர்க டுனனிரு
காகலி நாணவந் தார்க்குஞ் சேனையார்.

(இ - ள்.) 'அவண - அம்மதுவனத்தில், இறத்தவர் - வந்து தநகியவா கள், யா - எவரெவர்? இயம்புவாய் - சொல்லுவாய்,' என - என்று (சுககிரீ வன் ததிமுகனை மீணடும்) வினவ,—(அவன்), 'மாருதி - வாயுபுததிரனான அநுமானும், வாலி சேய் - வாலிகுமாரனான அங்கதனும், மயிந்தன் - மைநத னும், சாம்பவன் - ஜாம்பவானும், (முதலிய), சோர்வு அறு-தளர்ச்சியில்லாத பதின் எழுவோர்கள் - பதினேழு படைததலைவர்கள், ஆகலி நாண வந்து ஆர்க்கும் சேனையார் - கடலும் வெளகும்படி ஆரவாரித்துவருகிற சேனையை யுடையவர்களாய், துன்னினர் - (அநகு) வநது சோந்தார்கள்;' (எ - று.)— 'என்று' என மேற்கவியோடு தொடரும்.

மயிந்தன்=மைந்தன்; வடமொழித்திரிபு போலி. இவ்னும், தவிவித னும் - இரட்டையராகிய அசுவிநீதேவர்களின் புதல்வரான வாநரவீரர். இவ குக்குறித்த பதினெழுவா - அநுமான், நீலன், ஜாம்பவான், ஸுஹோதரன், சராரி, சரகுலமன, கஜன், கவாக்ஷன், கவயன், ஸுஷேணன், ருஷபன், மைந்தன், தவிவிதன், விஜயன், கந்தமாதநன், உல்காமுகன், அஸங்கன் என முதனூல்கொண்டு உணரலாம் பதினெழுவா, பதினெழுவோர் எனச சிறு பான்மை ரகரவீறறயலகரம் ஓகாரமாயிறறு; கள-விகுதிமேல்விகுதி. பி-ம்.— [1]சோரவிலா. (சச)

சரு.—இதுமுதல் மூன்றுகவிகள் - ததிமுகனுக்குச் சுக்கிரீவன் கூறுஞ் சமாதானம்.

என்றவ னுரைத்தபோ திரவி காதலன
வன்றிறற் றதிமுகன வதன நோக்கியே
யொன்றுனக் குணர்த்துவ துளது வாலிசேய்
புன்றொழிற் செய்கைசேர் புணர்ப்ப னல்லனால்.

(இ - ள்) என்று—, அவன் - அந்தததிமுகன், உரைத்த போது - சொன்னபொழுது,—இரவி காதலன - சுககிரீவன்,—வல் திறல் ததி முகன் வதனம நோக்கி - கொடிய வலிமையையுடைய ததிமுகனது முகததைப்பாரத்து,—ஒன்று உனககு உணாததுவது உளது - உனககு (நான்) தெரிவிப்பதொன்று உள்ளது: (அது எனனவென்றால்),—வாலி

சேய் - அங்கதன், புல் தொழில் செய்கை சேர் புணர்ப்பன் அல்லன் - இழிவான தொழில்களைச் செய்தல்பொருந்திய தன்மையை யுடையவனல்லன்

உரைத்தபோது, இரவிகாதலன், வதனநோக்கி என்றவை, மேல் ௪௭ - ஆங்கவியில் வரும் 'என' என்பதனோடு இயையும். புணர்ப்பு - ஆலோசனையுமாம். ஆல் - ஈற்றசை. (௪௫)

௪௬. கொற்றவன் பணிதலைக் கொண்டு தெண்டிரை
சுறறிய திசையெலாந் துருவித் தோகையைப்
பற்றிய பகைஞரைக் கடிந்து பாங்கர்வந்
துற்றன [1]ரவரையா முரைப்ப தென்னையே.

(இ - ள்.) (அநுமான் முதலியோர்), கொற்றவன் பணி தலைகொண்டு- வெற்றியையுடையவனான ஸ்ரீராமனது கட்டளையைத் தலைமேறகொண்டு, தெள் திரை சுறறிய எலாம - தெளிவான அலைகளையுடைய கடலினாற் சூழப்பட்ட இடம முழுவதும், தோகையை - சீதாபிராட்டியை, துருவி - தேடி, பற்றிய பகைஞரை - (அப்பிராட்டியைக்) கவர்ந்துபோன பகைவரை, கடிந்து - அழித்து, பாங்கா வந்து உற்றனர் - அருகில் வந்து சேர்ந்தாகள; அவரை-(இங்ஙனம் அருந்தொழில் செயதுவந்த) அவர்களை, யாம்- நாம, உரைப்பது - (கோபித்துப்) பேசுவது, என்னை - எவ்வாறு? (எ - று.)

தலைக்கொள்ளுதல் - சிரஸாவகித்தல். தெண திரை - பண்புத்தொகையன்மொழி. இனி, திரை என்பது - சினையாகுபெயராகவுமாம். தோகை- மயில்போன்ற சாய லுடையாளுக்கு இருமடியாகுபெயர். பாங்கா - பாங்கு எனபதன் ஈற்றுப்போலி. பி - ம் —[1]அவரையும். (௪௬)

௪௭. அன்றியும் வாலிசே யரச தாதலிற்
[1]பின்றுத நீதரோ பிணங்குஞ் சிந்தையா
யொன்றுநீ யுணரலை யுறுதி வேண்டுமேற்
சென்றவன் றனைச்சரண் சேர்தி [2]மீண்டென்றான்.

(இ - ள்.) அன்றியும் - அதுவல்லாமலும், வாலிசேய்-அங்கதன், அரசு அது ஆதலின் - இளவரசனாதலால, பின்றுதல் - (அவனோடு நீ) மாறுபட்டமை, நீது - கொடியது; பிணங்கும சிந்தையாய் - மாறுபட்ட மனமுடையவனே! ஒன்றும் நீ உணரலை - நீ ஒன்றையும அறிந்தாயில்லை. உறுதிவேணடும எல் - (உமக்கு) நன்மை வேணடுமாயின், மீணடு சென்று - திரும்பிப் போய், அவன்தனை சரண் சோதி - அவ்வங்கதனைச சரணமடைவாய், என்றான் - என்றுசொல்லினான்; (எ - று.)—அரோ - அசை.

இனி, 'வாலிசேயரசதாதலின்' என்பதற்கு - (முன்பு வாலியினதாகிய அம்மதுவனம் இப்பொழுது) அவ்வாலியின்மகனான அங்கதனது ஆட்சிக்கு உரியதாதலால் என்றும் பொருள்கூறுவர். பி-ம்:—[1]அரிதரோ. [2]ஈணடென.()

சஅ.—ததிமுகன் தாழ்ந்து மதுவனத்துக்குச் செல்லுதல்.

வணங்கிய சென்னியன் [1]மறைத்த வாயினன்
னுணங்கிய சிந்தைய னொடுங்கு மேனியன்
கணங்களொ டேகியக் கான நண்ணினன்
மணங்கிளர் தாரினன் மறித்து வந்ததோ.

(இ-ள்.) மணமகிளர் தாரினன்-வாசனைவீசுகின்ற பூமாலையையுடையவனான ததிமுகன்,—வணங்கிய சென்னியன் - (சுககிரீவனை) நமஸ்கரித்த தலையையுடையவனும், மறைதத வாயினன் - மூடிய வாயையுடையவனும், உணங்கிய சிந்தையன் - மெலிந்த மனமுடையவனும், ஒடுங்கும் மேனியன் - ஒடுங்கிய உடம்பையுடையவனுமாய், கணங்களொடு ஏகி-(தன்) பரிவாரங்களுடனே புறப்பட்டு, மறிததும் வந்து-மீணடும வந்து, அ கானம் -அந்த மதுவனதத்தை, நணணினன் - அடைநதான்; (எ - று.)—அரோ-ஈற்றசை.

கையினால் வாயபுதைதது நிறறல, வணக்ககுறி. பி - ம்:—[1]வயவெஞ்சேனையோடு. (சஅ)

சக—ததிமுகனைக்கண்டு கோபங்கொண்ட அங்கதனை அவன் சரணமடைதல்.

கண்டனன் வாலிசேய் கறுவு கைம்மிக
[1]விண்டவ னமமெதிர் மீண்டு ளானெனி
னுண்டிடு குதுமுயி ரென்ன வுன்னினன்
றொண்டெனத் ததிமுகன் றொழுது தோன்றினன்.

(இ - ள்.) (ததிமுகன் பரிவாரத்தோடு மீண்டுவருவதை), வாலி சேய் - அங்கதன், கண்டனன் - பாரத்து, கறுவு கைம்மிக - கோபம அதிகப்பட, 'விணடவன் - (மதுவனததைவிட்டு) நீங்கிப்போனவனான ததிமுகன், நம் எதிர மீண்டுளான் எனின் - மறுபடியும் நமககு எதிராக (ப் போராககு) வருவானானால், உயிர உண்டிடுகுதும - அவனுயிரை யுண்டுவிடுவோம் [கொல்வோம்],' என்ன - என்று, உன்னினன் - எணணினன்; (அப்பொழுது), ததிமுகன்—,தொணடு என - 'நான் உனககு அடிமை' என்று சொல்லிக்கொண்டே, தொழுது - கைகூப்பியவண்ணமாய், தோன்றினன் - எதிரில் வநதான்; (எ - று.)

விண்டவன்-பதைததவன் என்றுமாம். பி-ம்:—[1]விணடிலன் மோதிட. ()

ரு௦.—ததிமுகனும் அங்கதனும் அளவளாவுதல்.

போழ்ந்தன யான்செய்த குறைபொ றுக்கெனு
வீழ்ந்தன னடிமிசை வீழ வாலிசேய்
தாழ்ந்துகைப் பறறிமெய் தழீஇக்கொண் [1]டுன்னையான்
சூழ்ந்தது பொறுக்கெனு [2]முகமன் சொல்லினன்.

(இ - ள்.) 'போழ்ந்து அன - (வாள்கொண்டு) வெட்டினாற் போன்ற, [மிகவருததததைச செய்கின்ற], யான் செயத குறை - நான்செய்த குற்றததை, பொறுகக பொறுததருளவாயாக,' எனு - என்றுசொல்லி, அடிமிசை - (அங்கதனது) பாதங்களில, வீழ்ந்தனன் - விழுந்து (ததி

முகன்) நமஸ்கரித்தான்: வீழ - (அங்ஙனம அவன்) விழுந்தவளவில், வாலி சேய் - அங்கதன், தாழ்ந்து - குனிந்து, கை பற்றி - அவனகையைப்பிடித்து எடுத்து, மெய தழீஇகொண்டு-அவனுடம்பை அணைத்துகொண்டு,'உன்னை யான் சூழ்ந்தது பொறுக்க எனு - உனககு நான் செய்த குற்றத்தைப் பொறுப்பாயாக' என்று, முதன்மை சொல்லினுன் - முக்கியமான உபசார வாதத்தையச சொன்னுன்; (எ - று.)

போழ்ந்தால் என்னும் வினையெசசம், போழ்ந்து எனத் திரிந்தது. பி - ம்:—[1]உம்மை [2]முதனமை. (௫௦)

ருக.—அனைவரும் அநுமானை முந்துற இராமன்பக்கல் அனுப்புதல்.

யாமுதற் குறித்தநா [1]ளிறத்த லெண்ணியே
[2]பேமுறத் துயர்துடைத் தளித்த பெற்றிபோல்
ருமரைக் கண்ணவன் றுயரந் தள்ளநீர்
போமெனத் தொழுதுமுன் னனுமன் போயினுன்.

(இ - ள்.) 'யாம - நாமெல்லோரும், முதல் குறித்த நாள் இறத்தல் எணணி-முன்னே (சுக்கிரீவன்) தவணையிட்டு அனுப்பிய நாளகளெல்லாங கழிந்துபோதலை நினைத்து, பேம உற - (இனி நமக்கு மரணம் நேருமே யென்று) அசசமடைய, துயா - அவ்வருத்தத்தை, துடைத்து - (இலங்கைக் குப்போய்ச சீதையைக் கண்டு வந்ததனுற்) போக்கி, அளித்த - (எங்களைக) காத்த, பெற்றிபோல்-தன்மைபோல,—தாமரை கண்ணவன் துயரம் தள்ள- செந்தாமரைமலாபோலுந் திருக்கண்களை யுடையவனுன ஸ்ரீராமனது துன் பத்தைப போகக்கும்பொருட்டு, நீர்—,போம - (முன்னே) செல்லும்' என - என்று (அங்கதன் அநுமானை நோக்கிச) சொல்ல,—அநுமன் - அநுமான், தொழுது - (அவனை) வணங்கி, முன் போயினுன் - முன்னே சென்றான்.

ஏம் - ஏமம் என்பதன் விகாரம், நீர போம்-உயாவுப்பன்மை. பி - ம் — [1]இற்றல். [2]எழுறததுயா துடைத்தளித்த வேற்றம்போல். (ருக)

ரு௨.—வெயில்தணியுமளவிலே வாநரரனைவரும் சுக்கிரீவனிருக்கிற விடத்தை நோக்கிச் செல்லுதல்.

வன்றிறற் குரிசிலு முனிவு மாறினுன்
வென்றிகொள் கதிருந்தன் வெம்மை [1]யாறினு
னென்றுகொண் டியாவரு மெழுந்து போதலே
நன்றென வேகினுர் நவைக்க ணீங்கினுர்.

(இ - ள்.) 'வல் திறல் குரிசிலும் - மிககவலிமையையுடைய சுக்கிரீவ மகாராஜனும், முனிவு மாறினுன் - (தானகுறித்ததவணை கடநதோமென்பது பற்றியும் மதுவனமழித்ததோ மென்பதுபற்றியும நமமீது கொள்ளக்கடவ தான) கோபம இலனுயினுன்; வென்றி கொள் கதிரும் தன் வெம்மை ஆறி னுன்-வெற்றியைககொணட கிரணங்களையுடைய சூரியனும் தனது வெப்பந் தணிந்தான', என்று கொண்டு - என்பதை அறிந்து, எழுந்து போதலே நன்று என - '(இனி நாம இராமனுள்ள விடத்துக்குப்) புறப்பட்டுச செல வதே நல்லது' என்று எணணி, நவைக்கண நீங்கினுர யாவரும - குறறதநி

னின்று நீங்கியவாகளான (குற்றமற்றவர்களான வாநரர்க ளெல்லாரும், எகினா - சென்றாகள; (எ - று.)

தம்பக்கல் சுக்கிரீவன் கோபங்கொண்டில னென்பதைத ததிமுகன வந்தவாறுகொண்டு அறிநதன ரென்க. மகனான சுக்கிரீவன் கோபந்தணி தலும், தநதையான சூரியன் வெப்பநதணிதலும் ஒன்றுக்கு ஒன்று நிகரென் னுங கருததுப்பட நிற்றலால், முதலிரண்டடியில் எடுத்துக்காட்டுவமை யணி தொனிக்கின்ற தென்னலாம். சுககிரீவன கோபநதணிந்ததனாலும், சூரி யன் வெப்பந்தணிந்ததனாலும், இனி நாம இனிது போய்ச சுக்கிரீவனிடஞ் சேரலாமெனறு துணிந்து அனைவரும் சென்றன ரென்க. முதலிரண்டடியி லுளள உமமைகள் - ஒன்றையொன்று நோககி எதிரதும இறந்ததுந் தழுவிய எசசமாம். நவைக்கண - உருபு மயக்கம். சூரியகிரணததுக்கு வெற்றி-மற்றை யிருசுடாகளாகிய சநதிர அகநினியரது ஒளியினும மேம்பட்டிருத்தலும், இருட்டிரளை எளிதில் அழிததலும். பி - ம்:—[1]நீங்கினன. (௩உ)

௩௩.—இப்பால் இராமன் சுக்கிரீவனை வினவுதல்.

இப்புறத் திராமனு மிரவி சேயினை
யொப்புற [1]நோககிவந் துறற தானையர்
தப்பறக கண்டன மென்ப ரோதகா
தப்புறத் தென்பரோ வறைதி யாலென்றான்.

(இ - ள்) இ புறத்து - இவ்விடத்தில், இராமனும்—,இரவி சேயினை - சூரியகுமாரனான சுகரீவனை, ஒப்பு உற நோக்கி - தகுதிபொருந்தப் பாரதது, 'வந்து உற்ற தானையா - (மதுவனததில) வநது கூடியுள்ள சேனவீராகள், தப்பு அற கண்டனம என்பரோ - தவறாமற் (சீதையைப்) பாரத்தோமென்று சொல்வாகளோ? தகாது - அங்ஙனந தகுதியாகக கூறாமல், அ புறத்து என் பரோ - (இவ்வுலகததிலில்லை) இதற்கு அப்பாலுளள உலகததில் இருததல் கூடுமென்று சொல்வாகளோ? அறைதி - சொல்வாய', என்றான் - என்று வினவினான்; (எ - று.)

சீதையைக் கணடுதான் வானராகள் வந்திருககவேணுமென்று சுக்கிரீ வன் ஊகிததுசசொல்லவும், 'சீதையைக கணடுவநதிருந்தாலும், அசசீதை கற்புநெறி தவறாமலிருககின்றா ளென்றசொல் வருமோ? வராதோ?' என்று இராமன ஐயுற்று மீண்டும் சுக்கிரீவனை வினவுகின்றான். தப்பு அறககண்ட னம எனபரோ - தவறாமற் (சீதையைப்) பாரததோமென்பாகளோ? தகாது அப்புறததது என்பரோ - (அஙஙனந்) தகுதியாககக்கூறாமல் (இவ்வுலகததி லில்லை இதற்கு) அப்பாலுள்ள உலகததில் இருககககூடுமெனபரோ?' என்று உரைகூறுதல், சிறவாது. இப்புறம்-ப்ரஸ்ரவணகிரி. பி-ம்:—[1]நெருக்கி.

௩௪.—அனுமன்வரவை இராமன் நோக்கதல்.

என்புழி யனுமனு மிரவி யென்பவன்
றென்[1]புறத் துளனெனத் தெரிவ தாயினான்

பொன் பொழி தடக்கையப் பொருவிரல் வீரனு
மன்புறு சிந்தைய [2]னமைய நோக்கினன்.

(இ - ள்.) என்புஉழி - என்று வினவும் பொழுதில்,—அநுமனும்—, இரவி என்பவன் தென் புறத்து உளன் என - சூரியனானவன் தெற்குத் திசையில்விளங்குகின்றானென்னும்படி, தெரிவது ஆயினன் - (தென்புறத்திற்) காணப்படுபவனானான்; பொன் பொழி தட கை - (இரப்பவர்க்குப்) பொன்னை மிகுதியாகச் சொரிகிற பெரிய திருகைகளையுடைய, அ பொருவு இல் வீரனும் - ஒப்பற்ற வீரனான அந்த ஸ்ரீராமனும், அன்பு உறு சிந்தையன்- அன்புமிக்க மனத்தையுடையவனாய், அமைய நோக்கினன்-(அவ்வநுமானைச்) செவ்வையாகப் பார்த்தான்; (எ - று.)

பொன் பொழி தடக கை - அழகுவழிகின்ற பெரிய கை யென்றுமாம். பொரு வில் வீரன் - போரைசெய்தற்குஉரிய வில்லையுடைய வீரன் என்றுங் கொள்ளலாம. பி - ம்:—[1]புலத்து. [2]மையல. (௫௪)

௫௫.—அநுமான் பிராட்டியின் நிலைமையைக் குறிப்பாலுணர்த்துதல்.

எய்தின னனுமனு மெய்தி யேந்தறன்
மொய்கழ றொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன கையினன்
வையகந் தழீஇ நெடி திறைஞ்சி [1]வாழ்த்தினன்.

(இ - ள்.) அநுமனும்—, எய்தினன் - வந்துசேர்ந்தான்; எய்தி - வந்து சேர்ந்து, ஏந்தல்தன் - பெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமனது, மொய்கழல் - வலிய வீரகழலை யணிந்த திருவடியை, தொழுகிலன் - வணங்காதவனாய, முளரி நீங்கிய தையலை - தாமரைமலரினின்று நீங்கிய [பூமியில் அவதரித்த] இலக்குமியாகிய சீதாபிராட்டி யிருக்கின்ற தென்திசையை, நோக்கிய—, தலையன - தலையையுடையவனும், கையினன் - (தலைமேற்கூப்பிய) கைகளையுடையவனுமாய், வையகம் தழீஇ - பூமியில் விழுந்து, நெடிது இறைஞ்சி - நீட்சியாக [ஸாஷ்டாங்கமாக] நமஸ்கரித்து, வாழ்த்தினன் - வாழ்த்துக் கூறினன்; (எ - று.)

இங்ஙனம் சீதையை வணங்கியது - அவள் குறைமில்லாது இலங்கையில் வாழ்ந்திருக்கின்றாளென்று வெளிப்படையாக வாயினாற்சொல்லித் தெரிவித்தற்கு முன்னமே குறிப்பினாலுணர்த்துதல் சிறப்பெனக் கருதி யென்க. முளரி நீங்கியதையல் - தனக்கு உறைவிடமான செந்தாமரைமலரை விட்டு மிதிலா நகரத்தில் திருவவதரித்த திருமகள்; முளரிநீங்கிய தையலை நோக்கிய தலையன் கையினன் வையகந்தழீஇ நெடிதிறைஞ்சி-பிராட்டியிருக்கிற தென்திசையை நோக்கித் தண்டன் சமர்ப்பித்து என்றபடி. முளரி நீங்கிய தையல் என்பதற்கு - நெருப்புதன்னைச் சுடாது நீங்குவதற்குக்காரணமான தையலென்று பொருளுரைப்பினுமாம. அநுமான்வாலில் இராவணனது பணியாளர் தீப்பற்ற வைத்ததபோது சீதாபிராட்டி தன்கற்பின்மகிமையால் அநுமானுக்குத் தீசுடாதுகுளிர்ந்திருக்குமாறு செய்ததனால், இவ்வாறு கூறியதெனக்.

முளரி - நெருப்பு. மொய் கழல் - (தன்னைசசரணமடைந்தவர்களது அருவினையனைதையு மழிக்கும்) வலிமையுடைய திருவடி யெனினுமாம். (தாமரைமலரோவென்று வணடுகள்) மொய்க்கப்பெற்ற திருவடியென்றுங கொள்ளலாம; மொய் - பெருமையுமாம். இனி, 'ஏந்தல் தன் மொய்கழல் தொழுகிலன்' என்பதற்கு - தகுகளரசனான சுகரீவனது பாதங்களை வணங காதவனுயென்றும் உரைப்பர். ஏந்தல் - ஆண்பாறசிறப்புப்பெயா. பி - ம்:— [1]வைகினன். (௫௫)

௫௬.—நிகழ்ந்தசெய்தியை இராமபிரான் குறிப்பாலுணர்தல்.

திண்டிற லவன்செய றெரிய நோக்கினன்
[1]வண்டற லோதியும் வலியண் மற்றிவன்
கண்டது முண்டவள் கற்பு நன்றெனக்
கொண்டனன் குறிபபினு லுணருங் கொள்கையான்.

(இ - ள்.) குறிபபினுல் உணரும் கொள்கையான் - (முகம்முதலிய அவயவங்களின்) குறிப்பைகொண்டு (நடநததை) அறியுந்திறததையுடையவனான ஸ்ரீராமன், திண் திறல் அவன் செயல - மிக்கவலிமையையுடைய அவ்வனுமானது செய்கையை, தெரிய நோக்கினன் - நன்றாகப் பாரத்து, 'வணடு அறல் ஓதியும் - வணடுகளையும கருமணலையுமொத்த கூநதலையுடையவளான ஜானகியும், வலியள் - கேமமாயிருக்கிறாள்; இவன் கண்டதும் உண்டு - இவ்வனுமான் (அவளைப்) பாரததது உண்டு; அவள் கறபும் நன்று - அவளது கற்புநிலைமையும கலகாநிலைமையுடையது', என - என்று, கொணடனன் - தெரிநதுகொணடான; (எ - று.)—மறறு - அசை.

"இஙகிதஜ்ஞாஸ்துகோஸலாः [குறிப்பறிதலிற சிறந்தவர் கோசலதேசத்தார்]"என்றபடி இராமபிரான் நுணணிதிற் குறிப்புணர்பவனெனக. பி-ம்:— [1]வணடுறை, வணடியல். (௫௬)

௫௭.—அப்பொழுது இராமபிரான் கொண்ட உவகை

ஆங்கவன் செய்கையை யளவை யாமெனு
வோங்கிய [1]வுணாவினுல் விளைந்த துன்னினுன்
[2]வீங்கினன் றோள்புனல் கணகள் விமமின
னீங்கிய தருந்துயா காத [3]னீண்டதே.

(இ - ள்.) (ஸ்ரீராமன்),—ஆஙகு அவன் செய்கையை - அப்பொழுது நிகழ்ந்த அவ்வநுமானது செய்கையையே, அளவை ஆம் எனு - அளவு கருவியாமென்றுகொணடு, ஓஙகிய உணாவினுல் - சிறநத [குறிப்பறியவல்ல] (தனது) அறிவினுல், விளைநதது உன்னினுன் - நடந்த செய்தியை அறிந்தவனுய், தோளவீஙகினன் - (மகிழ்ச்சியால்) தோள்கள் பூரிததான; கணகள் புனல விமமினன - கணகள் நீர் பெருகப்பெறறான்; அருந் துயா - (அவனது நீஙகுதறகு) அருமையான துன்பம, நீஙகியது - நீஙகிப்போய்விட்டது; காதல் - (சீதையிடததது) அனபு, நீணடது - அதிகப்பட்டது; (எ - று.)

இராமன் தோள்வீங்கியதும் கண்கள் புனல்விம்மியதும் தன்மனைவி கற்புடன் இனிதுவாழ்ந்திருத்தலை யுணர்ந்த உவகைமேலீட்டினு லாகும். இனி, கணகள் புலன்விமமியது - அததகையாளைப் பிரிநதிருக்கும வருததத்தினு லெனினுமாம். அளவை - ஒருபொருளின் உண்மையை அளவிட்டு அறியககருவியாவது; அள - பகுதி, ஐ - கருவிப்பொருள்விகுதி: பிரதியகஷம் அநுமாநம முதலிய பிரமாணங்களை யுணர்ததும்: இங்கு, அநுமானம் விளைந்ததை உன்னுதற்கு, முளரிநீங்கிய தையலைநோக்கிய கையினனுதலையனறி வையகநோகாகி நெடிதிறைஞசி வாழ்ததிய அவன்செய்கையே கருவியாயிற்று; உன்னுதல் - நுட்பமாக ஊகிததறிதல், உய்த்துணாதல். இராமன் தோள் வீங்கினன், கண்கள் புனல் விமமினன் என்ற முடிபுகள் - திண் வழுவமைதிகள். பி - ம்:—[1]வினையினன். [2]வீங்கினதோள் புனல்மலாக் கணவிமமின். [3]நீண்டதால (ருஎ)

ருஅ.—அநுமான் தான் சீதையைக்கண்ட செய்தியைத் தொகுத்துக் கூறுதல்.

கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களாற்
றெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னக
ரண்டநா யகவினித் துறத்தி யையமும்
பண்டுள துயருமென் றனுமன் [1]பன்னுவான்.

இருபததுநான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள். (அநுமன்—, (இராமனைநோக்கி), 'அண்டநாயக - தேவாகட்குத தலைவனே! தெள திரை அலை கடல் இலங்கை தென்னகர் - தெளிவான அலைகளை யலைகின்ற கடலாற் சூழப்பட்ட இலங்கை யென்கிற தெறகிலுள்ளநகரத்தில், கற்பினுக்கு அணியை - பதிவிரதா தருமததுககு ஆபரணம்போல் அழகுசெய்பவளான பிராட்டியை [பிராட்டி கறபில வழுவாதுநிற்கின்றா ளெனபதை யென்றபடி], கண்களால் - (அவளது) கணகளால், கண்டனன் - அறிநதேன்: இனி-இனிமேல், ஐயமும்-(பிராட்டி கற்புடையளோ? இலளோ? என்னுஞ்) சந்தேகததையும், பண்டு உள துயரும் - (அதுபற்றி) முன்னேதொடங்கியுள்ள துன்பத்தையும், துறததி - நீங்குவையாக,' என்று - என்றுசொல்லி,—பன்னுவான் - (மற்றுஞ்) சொல்பவனுனான்; (எ-று.)—அதனை, அடுதத இருபததுமூன்று கவிகளிற காண்க.

'பிராட்டியை' என்று முதலிற் கூறினுல அவளதுநிலைமை என்னுயிற் றென்றுகூறுவனோ வென்னுஞ் சங்கையினுல் இராமனுக்கு மிக்க துன்பமுளதாகக்கூடு மெனக்கருதி, 'கண்டனன்' என முதலிற் கூறினன் அநுமான்; ஸ்ரீவால்மீகிராமாயணததில "தருஷடா ஸீதா" என வருதலுங காண்க. 'கண்டனன்' என்றதை யடுதது 'கற்பினுககணி' எனறு கூறிய தன் காரணம் தானே விளகுகும்; அவள் கற்பிற் சிறவாதிருப்பின், அவளைக கண்டது பயன்படாமை யுணர்க. 'கற்பினுககுஅணி' என்பதற்குக் கருதது - பிராட்டி ஒருததி உளளானதனுலேயே பாதிவிரத்தியம் உலகததிற் சிறநது விளங்கிற்று என்பது. கற்பினுக்கணியைக கண்களாற்கண்டேன் என்றது-

அந்தச சீதாபிராட்டி உன்னைப்பிரிந்து சிறைப்பட்டிருக்கின்ற அங்குக கண களினின்று நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக் கொண்டிருப்பதனால், அவள் கற்பினுககணியாவ ளென்பதை யுணாநதே னென்றவாறு: கற்புநிலை கெட்டிருப்பின் துயாக்குக் காரணமிலலை யாதலால், இவ்வாறு கூறியது. "கலங்குதெண டிரையிற்றாய கணணினீாக்கடலிற் கணடேன்" என மேல் வருவதும, "அழுவதலலதயலொன்று செய்குவதறியாள்" என்றதுங காண்க. இனி, கண்களால் - (எனது) கணகளால் என வுரைத்து, 'கணக ளால' என வேணடாது கூறியது கணடமையின் துணிவை விளககுதற்கு என்பாரு முளர். பி - மீ:—[1]பன்னினன். (ருஅ)

வேறு.

ருகூ.—இதுமுதல் இருபத்திமூன்றுகவிகள் - அதனை வதுத்துக்கூறல்.

உன்பெருந தேவி யென்னு முரிமைக்கு முன்னைப்பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை மன்னன்
றன்பெருந் தனயை யென்னுந் [1]தகைமைக்குந் தலைமை சான்றா
ளென்பெருந் தெய்வ மையா [2]வின்னமுங் கேட்டி யென்பான்.

(இ - ள்.) ஐயா - ஸவாமி!—என் பெருந் தெய்வம் - எனது சிறந்த தெயவமாகிய பிராட்டி,—உன் பெருந் தேவி என்னும் உரிமைக்கும்-உனது சிறநத மனைவி எனகிற தகுதிக்கும், உன்னை பெற்ற மன் பெரு மருகி என்னும வாய்மைககும - உன்னைப்பெற்ற தசரத சககரவாததியினது சிறந்த மருமகள என்கிற வாததைககும், மிதிலை மன்னன் தன் பெருந் தனையை என்னும் தகைமைககும் - மிதிலாநகரததரசனாகிய ஜநகமகாராஜனது சிறந்த பெண என்னுந் தன்மைக்கும் ஏற்ப, தலைமை சான்றாள் - சிறப்பு அமைந் துள்ளாள்; இன்னமும கேட்டி - இன்னமும் (நான் சொல்வதைக்) கேட்பா யாக, என்பான் - என்று (பின்னும அநுமான்) கூறுவான்; (எ - று.)

ஜாநகி தான் பிறந்த குலததுககும், புக்ககுலத்துககும், கணவனது தகுதிகும் ஏற்பச சிறநதவொழுக்கமுடையளா யிருககின்றன ளென்பதாம. தசரதன் சக்கரவாததியாய அறந்திறம்பாதவ னென்பதும், ஜநகமகாராசன் வைதிகாசாரமுறைமைசிறநத பரம்பரையின னென்பதும, இராமபிரான் புரு ஷோத்தம னென்பதும-பிரசித்தம. உரிமை-உரியபொருளென்றும், தலைமை சான்றாள்-தலைமையுளதாதற்கு ஏற்பச சால்புடையாளென்றும் கூறினுமாம். 'எனபெருந்தெயவம்'எனபதை இராமனைநோககிய விளியெனககொணடால், 'பிராட்டி' என்ற எழுவாய வருவிக்கவேணடும. மருகி - மருக னென்பதன் பெணபால். தனையை - தநயா என்ற வடசொல்லின்விகாரம. மிதியென்ற அரசனால அமைககப்பட்ட நகரமாதலின், 'மிதிலா'என்றுபெயா: அது ஆவீறு ஐயாயிற்று. பி - மீ —[1]தன்மைக்குந்தகைமைசான்ற. [2]என்னினும (ருகூ)

சுo. பொன்னல திலலைப பொன்னை [1]யொப்பெனப் பொறையினின்
டன்னல திலலைத் தன்னை யொபபெனத் தனக்குவந்த [ரு
நின்னல திலலை நின்னை யொபபென நினக்கு நோந்தா
ளென்னல தில்லையென்னை யொப்பென வெனக்கு மீந்தாள்.

(இ - ள்.) பொன்னை ஒப்பு - பொன்னை யொத்திருக்கும்பொருள், பொன் அலது இல்லை - பொன்னையல்லது வேறில்லை: என - அதுபோல, தனனை ஒப்பு - தன்னை ஒத்திருப்பவள், தன் அலது இல்லை - தன்னையே யல்லது வேறொருத்தியில்லை, என - என்று (யாவருஞ்) சொல்லும்படி, (பிராட்டி), பொறையில் நினறாள் - பொறுமைகுணத்தில் நிலைநின்றாள்; தனக்குவந்த நின் அலது - தனக்கு(க் கொழுநனாக) வாய்த்த உன்னையே யல்லாமல், நின்னை ஒபபு - உன்னை ஒத்திருப்பவா, இல்லை - வேறெவருமில்லை, என - என்கிற கீர்த்தியை, நினக்கு நேர்ந்தாள - உனக்குக் கொடுத்தாள்; என்னை ஒப்பு - என்னையொப்பவன, என் அலது இல்லை - என்னையேயல்லது வேறெவனுமில்லை, என-என்கிற பெருமையை, எனக்கும் ஈந்தாள - எனக்கும அனுகிரகித்தாள; (எ - று)

பிராட்டி தனது பொறுமைகுணத்தால் தன்னை யொப்பாரும் மிக்காரு மிலராமபடி சிறப்புற்று நின்றன ளென்பது, முதலிரணடடியின் கருத்து. "புகழ்புரிந்தில்லிலோர்களிலலை யிகழ்வார்மு, னேறுபோற பீடு நடை" எனப வாதலால், மனைவியின் கறபொழுகக்கம் கணவனது மிக்க சிறபபுகுக காரணமென்பது விளங்குதலின், 'தனகு வந்தநின்னலதில்லை நின்னையொப்பென நினகுநேர்ந்தாள்' என்றா. தான் தூதுபோய்வந்த செயல் பயன்பட்டுத் தனக்குப் பெருமையை யளித்ததற்குக காரணமாகுமாறு அவள் நிறைகாத்து நின்றன ளென்பதை, ஈற்றடியில் விளக்கினா. தனக்கு உவந்த என்று எடுத்து - தனக்குப் பிரியமான என்று பொருள்கொள்ளலுமாம். பி - ம்:— [1]ஒப்பன. (சுo)

சுக. உன்குல முன்ன தாக்கி யுயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலந் தன்ன தாக்கித் தன்னை[1]யித் தனிமை செய்தான்
வன்குலங் கூற்றுக கீந்தவ் வானவா குலத்தை வாழ்வித்
தென்குல மெனக்குத் தந்தா ளென்னினிசெய்வ[2]தெம்மோய்.

(இ - ள்.) எம் மோய் - எமதுதாயாகிய பிராட்டி, உன் குலம் உன்னது ஆககி-உனது குலத்தை உனக்கு உரியதாகசசெய்து, உயா புகழ்க்கு ஒருததி ஆய தன் குலம் தன்னது ஆககி - சிறந்த கீாததியில் (தன்னையொப்பவரில்லாமல்) ஒருததியேயாய்நின்ற தான பிறந்த குலததைத தனக்கு உரியதாக்கிக் கொணடு, தனனை இ தனிமை செய்தான் வல் குலம் கூற்றுக்கு ஈந்து - தனனை உன்னைவிட்டுப்பிரிந்து தனிததிருககும்படி செய்தவனான இராவணனது வலிய குலத்தை யமனுககுககொடுததது, அ வானவா குலத்தை வாழ்வித்து - அத்தேவாகளது குலததை வாழசசெய்து, என் குலம் எனகு தந்தாள - எனது குலபபெருமையை எனக்குககொடுததாள்; இனி என் செய்வது - இன்னும் அவள யாது செய்யதககதுஉளது? [ஒன்றுமில்லை[; (எ-று.)

பிராட்டி தனதுகறபுநிலை கலங்காத தன்மையினால் தன்குலததுககும் உன்குலத்துககும் ஒப்புயாவில்லாத சிறப்பை யுண்டாக்கி, ராவணாதிராக்ஷசாகளை யழிப்பவளாய்த் தேவர்கூட்டத்துககு வாழ்வளித்து, தன்னைத்தேடிவந்த

எனக்கும் பெருமையைக் கொடுத்தன ளென்பதாம். உன்குலம் உன்னதாக்கி யென்றது - இதற்குமுன் இராமனான நீ பிறந்தகுலம் 'சூரியகுலம் மநுகுலம் ககுத்ஸ்தகுலம் இரகுகுலம்' என முன்னோர் பேரிட்டு வழங்குவாதாயிறு. கற்பினுக்கு அணியைப் பெற்றதனால், இனி உன்பேரிட்டு 'ராமகுலம் ராகவ குலம்' என இவ்வாறு வழங்குமாறு செய்வித்தா ளென்றபடி. தன்குலம், இதற்கு முன் 'ஜநககுலம்' என்றுவழங்கப்பட்டுவந்தது. ஜாநகிகுலம என்று அகுலததை இவள்பெயரிட்டுசசொல்லுமபடி செய்தா ளென்பது 'தன்குலந தன்னதாகி' எனபதன்பொருள். என்குலம் என்றது - வானரகுலம் அதனை எனக்குததந்தாளென்றது - அக்குலததுப்பிராணிகளையெல்லாம் அநுமானென்றுவழங்குமாறு செயதாளெனபது, கருதது: குரங்குகள் அநுமானென்று இப்போதும் வழங்கப்படுதல் காணக. தன்னை இததனிமை செய்தான - தனனை இராமனைவிட்டுப்பிரித்து எடுத்துவந்து தனியே நெடுநாள சிறைவைததவனது. வன்குலம் - அரக்கர்குலம், கூற்றுகுகு ஈதல்-அழிததல் அவ்வானவா-இராவணனால் வெல்லப்பட்டு, ஒடுங்கிக்கிடந்த தேவர்களெனக. குலம - கூட்டம. இனி, உன குலம் உன்னதாகி - உனது குடிப்பிறப்புகுகு ஏறற சிறப்பை உன்னையடையசசெயது எனறும், தன்குலந் தன்னதாக்கி - தனது குடிபபிறப்புகுகு ஏறற சிறப்பைத தானே பெற்று என்றும், 'என் குலம எனகுததந்தாள்' என்றது - வாயுகுமாரனான யான் எனது தந்தை போலவே பெருமையடைதற்கு ஏதுவாயநின்றவ ளென்றும் உரைப்பாருமுளர். இவ்வுரைகுகு உலகததுத தனகுடிபபிறபபொன்றை மேம்படுததுவதே ஒருவாகுகு அரிது: இவளோ தான் பிறந்த இடததின குடிப்பிறப்பையும புகுந்த இடததின் குடிபபிறபபையும் தேவர்கள்பிறப்பையும் என்குடிப்பிறப்பையும் ஓங்கச செய்தன ளென்பார், இவ்வாறு கூறினா ரென்க. குலம் - இனம என்று கொணடு, பிராட்டியை நாடிததருவோ மென்ற வார்ததை பொய்க்காமையால் எனது இனத்தவரான வாநரரனைவரும் உயிரபெற்று வாழுமாறு செய்தன ளென்றலுமொன்று. பி - பீ.—[1]இததனகை. [2]அம்மா.

கூஉ. விறபெருந தடந்தோள் வீர [1]வீங்குநீ ரிலங்கை வெற்பி
னற்பெருந் [2]தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லே [ங்
னிற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறை யென்ப தொன்று
கறபெனும் [3]பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்.

(இ - ள்.) வில் பெருந் தட தோள் வீர - வில்லையேந்திய பெரிய நீணடகையையுடைய வீரனே.—வெறபு - திரிகூடமலையின்மேலுளள, வீங்கு நீர் இலங்கையில் - மிககநீரினால் [கடலினால்] சூழப்பட்டுள்ள லங்காபுரியில், நல்பெருந் தவததள ஆய - நல்ல பெரிய கறபொழுக்கமாகிய தவததை யுடையவளான, நங்கையை - பிராட்டியை, கண்டேன் அல்லேன் - பார்ததிலேன் (யான்); (பின்னை எதனைக் கணடேன் என்றால்),—இல் பிறப்பு என்பது ஒன்றும - உயாகுடியிறபிறதத ளென்பதொரு

குணமும், இரும் பொறை என்பது ஒன்றும் - சிறந்த பொறுமை யென்ப தொரு குணமும, கற்பு எனும் பெயரது ஒன்றும - பதிவிரதாதருமமென்னும் பெயரையுடையதொரு குணமும், (ஒருங்குகூடி), களி நடம் புரிய - களிப் போடு கூத்தாடுதலைச செய்ய, கண்டேன் - பார்த்தேன்; (எ - று.)

சீதை ஒருபெண்ணரசியாகவுள்ளா ளென்பது மாததிர மன்று: உயர் குடிப்பிறப்பு பொறுமை கற்புநிலை என்றவற்றின்சொரூபமாயுமுள்ளா ளென் பது கருதது. பண்பாகிய இற்பிறப்புமுதலியவற்றை விலக்காது உடன்பட்டு அவற்றிற்கு இடமான பணபியாகிய பிராட்டியை விலகியதனால், வெளிப் படையாக மறுத்த பொருள்விலக்கணி: இது வடமொழியில், தர்ம்யாக்ஷேப பாலங்கார மெனப்படும். பிராட்டியைக் காணக் கருதுமிடத்து இற்பிறப்பு முதலியனவே முற்பட்டுத் தோன்றுகின்றன வென்க. பிராட்டியினிட முள்ள இற்பிறப்பு முதலிய குணங்களின் சிறப்பைத தெரிவித்தல், இவ்வாறு கூறியதன் பயனும். இறபிறப்புமுதலியன பிறவிடங்களிலும் இவ்வகுச சிறந் திருத்தல் தோன்ற, 'களிநடம்புரிய' எனப்பட்டது. பிராட்டிக்குத் தவம் - உன்னை மணந்துகொள்ளுமாறு செய்ததோன்பு: பெருந்தவம் - காட்டிற் பிரிந்த நிலையிலும் உன்மனத்திலிருக்க நோற்றது ஆகவே, நற்பெருந்தவத் தள என்றது - உன்னை மணந்து காட்டிற்கு உன்னுடன்வந்து பிரிந்தநிலையி லும் உன்மனத்தால் நினைந்திருக்குமாறு உள்ளவ ளென்றபடி. இலங்கை வெற்பில் எனனுமிடதது உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. பி - ம்:— [1]விலங்கு. [2]தவத்துள். [3]கற்பது. (௯௨)

௯௩. கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ வாயி
னெண்ணினு முளைநீ கொங்கை யிணைக்குவை தன்னி [1]னேவா
தண்ணல்வெங் காம னெய்த [2]வலரம்பு தொளைத்த வாறுப்
புண்ணினு முளைநீ நின்னைப் [3]பிரிந்தமை பொருந்திற் றுமோ.

(இ - ள.) நீ—, தையல் - பிராட்டியினது, கண்ணினும்-கண்களிலும, உளை - (எப்பொழுதும்) இருக்கின்றாய்; கருத்தினும்-மனத்திலும், நீ உளை—; வாயின் எண்ணினும் - வாயினெல்லையிலும், நீ உளை—; கொங்கை இணை குவைதன்னின் - இரண்டு தனங்களின் முகட்டிலும், ஓவாது - இடைவிடா மல், அணணல் வெம் காமன் எய்த - பெருமையையுங் கொடுமையையு முடைய மன்மதன் பிரயோகித்த, அலர் அம்பு புஷ்பபாணங்கள், தொளைத்த - தைத்து ஊடுருவியதனாலுண்டான, ஆறு - ஆறுத, புணணினும் - புணகளி லும், நீ உளை—; (இங்ஙனமிருக்க), நின்னை பிரிந்தமை-உன்னைப் (பிராட்டி) பிரிந்தனளென்பது, பொருந்திற்று ஆமோ - பொருந்தியவார்தையாகுமோ? [ஆகாது என்றபடி]; (எ - று.)

பிராட்டி எப்பொழுதும் மனம் மொழி மெய் என்னும் மூன்றுகரணங்க ளாலும் உன்னைச சிறிதும் பிரியாதிருக்கின்றாளென்பது, கருத்து. அவள கண்களில் இராமபிரா னுளனாதல், உருவெளிததோற்றத்தால். அவள் எப் பொழுதும் இராமநாமோசசாரணஞ் செய்துகொண்டிருததலால, 'வாயினு

ழுளை, என்றார். கொங்கையிணைக்குவைதன்னின் புண்ணின் உளை' என்றது - அவள பாவனையினால் இராமனைத தழுவுதலுடையா ளென்பது பற்றி. இராமனுகிய ஒருபொருளைப் பலவிடங்களி லிருப்பதாகச் சொன்னது சிறப்புநிலையணி: இதனை, வடநூலார விசேஷாலங்கார மென்பர். இக காரணதத்தைக்கொண்டு ராமவிரஹத்தை விலகியது, காரணவிலக்கணி. எண - எல்லை. கருத்தின எணணினும் எனப்பிரித்துக் கூட்டுதலுமாம். தொளைத்த புண் - பெயரெச்சம் காரணப்பொருளது; உளை - முன்னிலை யொருமைக் குறிப்புமுற்று. பி - ம்:—[1]ஒவ்வாது. [2]அயில். [3]பிரிந்தன. (சுஉ)

சுச. வேலையு ளிலங்கை யென்னும் விரிநக ரொருசார் விண்டோய்
காலையு மாலை தானு மில்லதோர் கனகக் கற்பச
சோலை [1]யங் கதனி னும்பி புல்லினாற் றொடுத்த தூய
சாலையி னிருந்தா ளேய தவஞ்செய்த தவமாந் தையல்.

(இ - ள்.) ஐய - ஸ்வாமி! தவம் செய்த தவம் ஆம்தையல் - தவம் தான் செய்ததொரு தவததின் வடிவமாகிய பிராட்டி,—வேலையுள் - கடலினிடையில், இலங்கை என்னும் விரி நகர் - லங்கை யென்னும் பெரியபட்டணதின், ஒருசார் - ஒருபுறததிலே, — விண தோய் - ஆகாயததை யளாவி வளாந்த, காலையும மாலை தானும இல்லது - (சூரியகிரணங்கள் நுழைதல் செய்தறியாமையால்) உதயகாலமும அஸ்தமனகாலமுந் தெரியாதிருப்ப தாகிய, ஓர் - ஒரு, கனகம் கற்பம் - பொன்மயமான கல்பக விருக்ஷங்களை யுடைய, சோலை அங்கு அதனின் - பூஞ்சோலையினிடத்தில்,—நும்பி புல்லி னால் தொடுத்த தூய சாலையின் இருந்தாள் - உமது தமபியாகிய லக்ஷ்மணன் புற்களினால் அமைதத பரிசுததமான பாணசாலையிலே இருந்தாள்; (எ - று)

விண்டோய் சோலை என இயையும். கற்பம்=கல்பம் என்ற வட சொல்லின் விகாரம. கனகக கற்பச்சோலை - பொன்னுலகமாகிய தேவ லோகத்திலுள்ள பொன்மயமான கற்பகவிருட்சங்கள பொருந்திய, இந்திர னதுநந்தனவன மென்னும் பூஞ்சோலைக்குச சமமான அசோகவன மென்க: ஆகவே, 'கற்பசசோலை' என்பது - இங்கு, உவமவாகுபெயராம். இராவ ணன் திகவிஜயஞ்செய்த காலத்தில் தேவலோகததிலிருந்து கற்பகவிருட்சங் களைப் பெயாதுக்கொணர்ந்து இசசோலையில் வைததன னென்பதுபற்றி 'கனகககற்பசசோலை' என்றதாகவுங் கொள்ளலாம; மூநதினவகையில் 'காலையும மாலைதானுமில்லது' என்பதற்குக கருதது - மரங்களி னடாத்தி யாற் சோலை எப்பொழுதும இருணடுள்ள தென்பது. பிந்தினவகையில் இந்த அடைமொழி - பொன்மயமான கற்பகவிருட்சங்களி னொளிசசிறப்பை விளகுவதாம. அதனின் உமபி என்றும பிரிககலாம். கோதாவரிநதிதீரத் திற் பஞசவடியென்னுஞ சோலையில இலகுமணனு லமைககப்பட்ட பர்ண சாலையி லிருந்த சீதையை இராவணன் அசசாலையுடனே பெயர்தெடுததுக் கொணடுபோய் அசோகவனததிற சிறைவைததன னென்பதை யுணர்க: இதன் விவரத்தை, அடுத்த கவியிலுங காணக. பதிவிரதா தருமமெனனுந்

தவம் தான் செய்ததொரு தவத்தின் பயனாக வுள்ளவ ளென்பார், 'தவஞ் செய்த தவமாந்தையல்' என்றார்: கற்புநிலையை யாதரிததலிற் சிறந்தவ ளென்பது, தோந்த கருதது. பி - ம்:—[1]அநகண. (சுச)

சுரு. மண்ணொடுங் கொண்டு போனான் வானுயர் கற்பி னுடன், புண்ணிய மேனி தீண்ட வஞ்சுவா னுலகம் பூத்த, கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாட் டொடுதல கண்ணி, னெண்ணருங் [1]கூறாய் மாய்தி யென்றதோர் மொழியுண் டென்பான்.

(இ - ள்.) உலகம் பூத்த - உலகங்களைப்படைத்த, கண் அகல் கமலத்து அண்ணல் - இடமகன்ற (திருமாலின் திருநாபித) தாமரை மலரில் தோன்றிய பிரமன், (இராவணனைநோக்கி), 'கருத்து இலாள் தொடுதல் கண்ணின் - (உன்னிடம்) விருப்பமில்லாத பெண்ணை (வலியத) தொடுதல் செய்வையாலுல், எண அருங கூறு ஆய்-எண்ணுதற்கு அரிய பிளப்புக்களாய் (த் தலைகள்) வெடித்து, மாய்தி - இறப்பாய,' என்றது - என்று இட்டதாகிய, ஓர் மொழி - ஒரு சாபவாததை, உண்டு - உளது; (ஆதலால், இராவணன்), வான் உயர் கற்பினுள் தன்-மிகசசிறந்த கற்புநிலையையுடையவளான பிராட்டியினது, புண்ணியம் மேனி - பரிசுததமான திருமேனியை, தீண்ட - தொடுதற்கு, அஞ்சுவான் - அஞ்சுபவனாய், மணணொடும் கொணடுபோனான் - (அவளிருநத) நிலத்தோடு பெயர்தது எடுததுக்கொணடுபோனான், என்பான் - என்று (அனுமான் பின்னுஞ்) சொல்வான்; (எ - று.)

முன்னொருகாலததிலே பிரமனை வந்தனஞ்செய்தற் பொருட்டு அவனது இருப்பிடத்தைக குறித்துச் சென்றுகொணடிருந்த புஞ்சிகஸ்தலை யென்னும் அப்ஸரஸ்த்ரீயை ஆகாசமார்க்கததிலே கணணுற்ற இராவணன் அவளைக்காதலிதது வலியககற்பழிக்க, அங்ஙனங கலங்கின நிலையோடு பிரமனிருக்கையைச சாந்த அவளை நோகிய நான்முகக்கடவுள் நிகழ்ந்ததை யுணாந்து கடுங்கோபங்கொணடு இராவணனைககுறித்து 'இனி நீ அயல் மாதை வலியக் கற்பழிப்பையாயின், அப்பொழுதே உன்தலை நூறாகப்பிளந்து அழிக' எனச சபிததிட்டனன் என்ற வரலாறு, இங்கு உணரத்தக்கது. பி - ம்:—[1]கூறுமியாகக. (சுகு)

சுசு. திண்டிலனென்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை
கீண்டிலதனந்த னுச்சி கிழிந்திலதெழுந்து வேலை
மீண்டிலசுடர்கள் யாவும் விழுந்திலவேதஞ் செய்கை
மாண்டிலதென்னுந் தனமை வாய்மையா னுணாதி மன்னோ.

(இ - ள்.) தீண்டிலன் எனனும் வாய்மை - (பிராட்டியை இராவணன்) தொட்டானில்லை யென்னும் வார்த்தையை,—'திசைமுகன் செயத முட்டை - நான்குமுகங்களையுடையவனான பிரமன் படைததத அண்டகோளம், கீண்டிலது - பிளந்ததில்லை: அனந்தன் உசசி - (உலகததைத் தாங்குகின்ற) ஆதிசேஷனது தலை, கிழிந்திலது-வெடித்ததில்லை. வேலை - கடல்கள், எழுந்து மீண்டில - பொங்கி மேல்வந்தனவில்லை. சுடாகள் யாவும் - (சூரியன் சநதிரன் நகூததிரங்கள் முதலிய) ஒளிகளெல்லாம், விழுந்தில கீழே விழுந்தன

வில்லை: வேதம் செய்கை மாண்டிலது - வேதமும் (அவ்வேதவிதிப்படி) செய்யுங் கருமமும் அழிந்ததில்லை', என்னும் தன்மை - என்கிற இத்தன்மைகள், வாய்மையான் - மெய்யாயிருத்தலை நோக்கி அதனால், உணர்தி - அறிவாயாக; (எ - று.)—மன், ஓ - ஈறறசை.

இராவணன் பிராட்டியைக் கையால் தொட்டிருப்பானானால் அண்டங்கீண்டதாம், அனந்தனுச்சி கிழிந்ததாம், வேலைகள்யாவும் எழுந்து தலைமேல் வரும்; சுடாகள்யாவும்விழுந்தனவாம, வேதமும் வைதிக கிரியையும் மாண்டனவாம் என்பதறகு ஐயமில்லை: இவையெல்லாம் அநுநனம் ஆகாததனாலேயே பிராட்டியை இராவணன் தொட்டானில்லை யென்பதை ஐயந்திரிபற அறியலாம் என்று கருதது. அநந்தன் - பிரளயகாலத்திலும் அழிவில்லாமல் எப்பொழுதும் நித்தியனாயிருப்பவனென்று பொருள்படும் வடசொல்; ந அந்த என்று பிரியும். வேதம் மாண்டிலது, செய்கை மாண்டிலது எனத் தனித்தனி இயைக்க. இனி, வேதம் செய்கை [ஒழுகக்கம்] மாண்டிலது எனினுமாம். (சுசு)

சுஎ. சோகத்தா ளாய நங்கை கறபினாற் றொழுதற் கொத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்றார் மற்றைப்
பாகத்தா ளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளு
மாகத்தா ளல்லண் மாய னாயிர [1]மௌலி மேலாள்.

(இ - ள்.) சோகத்தாள் ஆய - (உன்னைப்பிரிந்ததனாலாகிய) துக்கததை யுடையவளான, நங்கை - பிராட்டியொருததி, கற்பினால - கறபுநிலைமை குன்றாதிருததலால்,—மாகத்தா தேவிமாரும - பெரிய வானததில வசிப்பவர்களாகிய (இந்திரன் பிரமன் முதலிய) தேவர்களது மனைவிகளான இந்திராணி சரசுவதி முதலியோரும், இப்போது—, தொழுதற்கு ஒதத வான்சிறப்பு உற்றார்-(அவரவர்) வணங்குதற்கு ஏற்ற மிகக பெருமையை அடைந்தாகள்; ஈசன் - பரமசிவனது, மறறை பாகததாள - மறறொருபாகமாகிய இடப்புறத்தி லுள்ளவளான உமாதேவி, மகுடததாள - (இப்பொழுது அப்பெருமானது) தலைமே லிருகக்கதக்க சிறப்பையடைந்தாள்; பதுமததாளும் - செந்தாமரைமலரில் வசிபபவளான திருமகளும், மாயன ஆகததாள் அல்லள் - இனித திருமாலின் திருமாபில் வீறறிருககத் தககவளல்லள், ஆயிரம் மௌலி மேலாள-(அப்பெருமானது) ஆயிரந்திருமுடிகளின்மேலும இருக்கத்தக்கவளானாள்; (எ - று.)

ஓரினத்தாரில் ஒருவரது நன்மைதீமைகளினால் அவ்வினத்தவாக்கெல்லாம பெருமைசிறுமைகளுணடாதல், இயல்பு; அநுநனம, மகளிருட் சீதாபிராட்டியின் கற்புநிலையினால இந்திராணி முதலிய மாதர்களனைவரும் சிறப்படைந்தன ரென்பார், 'நங்கைகறபினால் தேவிமாரும வான்சிறப்புற்றார், பாகத்தாள், மகுடத்தாள், பதுமததாள, மௌலிமேலாள்' என்றார். 'ஈசன் மகுடததாளு,' 'மாயனாயிரமௌலிமேலாள்' என்பவறறின் கருத்து - அவரவா தலைமேற்கொண்டு கொண்டாடத் தகக சிறப்

பையுற்றன ரென்பது. 'நஙகைகற்பினால்' என்றதை எல்லா வாகியஙகளிலுஙகூட்டுக; முதநிலைத்தீவகம். இஙகு 'மகுடம்' என்பது - தானியாகுபெயராய், சிரசை யுணாததிற்று. மாகம் - மஹாகம் என்னும் வடமொழியின விகாரம்; பெருவானம் என்று பொருள. அர்ததநாரீசுவர மூர்ததததிலே சிவபிரானது பாகம் வலப்புற மாதலால், இடப்புறம் 'மற்றைப் பாகம்' எனப்பட்டது. 'ஆயிரமௌலி' என்றது - விராட்ஸவ ரூபததின் நிலைமையைக கருதி. பி - ம்:—[1]மௌலியாளால். (௬௭)

௬௮ இலங்கையை முழுது நாடி யிராவண னிருக்கை யெய்திப், பொலங்குழை யவரை யெலலாம் [1]பொதுவுற நோக்கிப் [2]போந்தே, னலஙகுதண சோலை புக்கே[1]னவ்வழி யணங்க ளாளைக், கலஙகு தெண்டிரையிற் றூய கண்ணினீர்க் [3]கடலிற கண்டேன.

(இ - ள்.) (யான்), இலங்கையை முழுதும் நாடி - இலங்காபுரி முழுவதுந் தேடிப் பார்தது, இராவணன் இருககை எய்தி - இராவணனது இருப்பிடத்தை அடைநது, பொலம குழையவரை எல்லாம - (அஙகுஉள்ள) பொன்னாலாகிய குழை யென்னுஙகாதணியை யுடையவாகளான மகளிரை யெல்லாம், பொதுஉற நோகி போநதேன் - பொதுவாகப் பார்ததுக் கொணடே சென்று, அலஙகு தண சோலை புக்கேன்-அசைகின்ற குளிர்ந்த அசோகவனத்திற பிரவேசிததேன்; அ வழி - அவ்விடததில், அணஙகு அனாளை-திருமகள்போன்றவளான சீதாதேவியை, கலஙகு தெள் திரையிற்று ஆய - அலைகின்ற தெளிந்த அலைகளையுடையதாகிய, கணணின் நீர் கடலின் - கணணீராகிய கடலினாலே, கணடேன்—; (எ - று.)

கறபிற்குறைபாடில லென்பதை மூன்றுகவிகளா லுணர்ததியபின், தான் அப்பிராட்டியைக் கண்டமையை இனி உணாத்துகின்றனன் அறுமா னென்க. சீதை இராவணன் மாளிகையினுளளே யிருந்தில லென்பது, முன்னிரண்டடியினாற் போதரும்; அதனால், அவள் அவனுக்குச சிறிதும் வசப்பட்டிலலென்பதைப் பெறவைததாா. அவளைக் கணணினீர்க்கடலிற் கணடேன் எனறதனால், அவள் இராமவிரகத்தாற் சோகக்கடலில் ஆழ்ந்திருககுந் துன்பநிலையை விளக்கி, அவ்வகையால் அப்பிராட்டி கறபிற் குறைபாடில லென்பதைத் தான் அறிந்தமைக்குக் காரணத்தை விளக்கியபடியாம. இருக்கை - அரணமனை. அணஙகு அனாள - (எமது) குலதெய்வம் போன்றவள் என்றுமாம். திரையிற்று - இன்சாரியையும 'று' விகுதியும் பெற்றுவந்த ஒன்றன்பாற குறிப்புவினையாலணையும்பெயா. திரையினதாய எனப் பிரிதது - அலைகளோடு பரவிய எனறுமாம்; தாய—தாவிய, கடலின - கடலின் நடுவில் என்றுமாம். பி - ம்:—[1]பொதுவத. [2]போனேன். [3]கடலுட். (௬௮)

௬௯. அரக்கிய ரள[1]வற் றூர்க [2]ளமரர்தங் குழுவு மஞ்சச்
[3]செருககினர் காப்ப நின்பா னேசமே யசசநீகக
விரககமென் றொன்றுந் [4]தானோ ரேநதிழை வடிவ மெய்தித்
[5]தருக்குயர் சிறையுற் றன்ன [6]தகைமைய டமிய ளம்மா.

(இ - ள்.) தமியள் - தனியளாகிய அப்பிராட்டி,—அரக்கியர் அளவு அற்றார்கள்-அளவில்லாத [மிகப் பல] ராக்ஷசிகள், அமராதம் குழுவும் அஞ்ச-தேவர்களின் கூட்டமும் அஞ்சும்படி, செருச்கினா - காவிததவாகளாய, காப்ப - காவல் செய்யாநிற்க,— நினபால் நேசமே - உன்னிடததிலுள்ள அன்பே, அச்சம் நீக்க - தன்னுடைய அசசததைப்போகக, இரக்கம என்ற ஒன்று தான் - சிறந்த கருணை ரஸமென்கிற ஒரு குணமே, ஓர் எந்து இழை வடிவம் எயதி - தரித்த ஆபரணஙகளை யுடையாளொரு பெணணினுருவத்தை யடைந்து, தருக்கு உயாசிறை உற்று அன்ன-கொடுமைமிக்க சிறைசுகாவலில் அகப்பட்டிருநதாற் போன்ற, தகைமையள் - தன்மையுடையவளாயிருக்கின்றாள்; (எ - று.)—அம்மா - ஈற்றசை; இரகககுறிப்புமாம.

குழுவும - உமமை, எதற்குமஞ்சாநெஞ்சுபடைத்ததன்மையை அறிவிததது. பி - ம்:—[1]அற்றாரும. [2]அலகையின். [3]செருக்கினல்கணடு செயயமெயக கனறீக்கசசீரதத. [4]தானே. [5]தருககிய. [6]தகையளத, தன்மையள். (௬௧)

௧௦. மாண்பிறந் தமைந்த கற்பின் வாணுத னின்பால் வைதத
சேண்[1]பிறந் தமைந்த காதல் [2]கண்களிற் றெவிட்டித்தீராக்
காண்[3]பிறந் தமையா னீயே கண்ணகன் ஞாலந் தன்னு
ளாண்பிறந் தமைந்த [4]செலவ [5]முண்டனை யாதி யன்றே.

(இ - ள்.) மாண பிறந்து அமைந்த - (நாணம் மடம் அசசம பயிர்ப்பு முதலிய) பெருஙகுணஙகள் இயல்பிலே உணடாகிப் பொருந்தப் பெற்ற, கற்பின் - நிலைமையையுடைய, வாள்நுதல் - ஒளியுள்ள நெற்றியையுடையவளான பிராட்டி, நின்பால் வைதத-உன்னிடம வைததுள்ள, சேண்பிறந்து அமைந்த காதல் - உயாவுளளதாயப்பொருந்திய விருப்பததை, கண்களின்-கண்களினால், தெவிட்டி தீரா - தெவிட்டிவிடாமல, காண - பாரத்தறகு, பிறந்தமையான் - (நீ) அவதரிததனால்,—நீயே - நீ ஒருவனே, கண அகல ஞாலந்தன்னுள - இடமகன்ற நிலவுலகததில், ஆணபிறந்து அமைந்த செல்வம உணடனை ஆதி - ஆண்மகனாய்ப்பிறநது பொருந்தியதன் பயனாகிய பாக்கியத்தை அடைந்தவனாகினாய்; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்.

கற்புநிலைமையிற் கலஙகுதலில்லாத பிராட்டியினது பெருஙகாதலைக காணபபெற்றதனால, நீயே புருஷோததமனாவை யெனபதாம். [“அபரமேயம்ஹி ததேஜஃ யஸ்யஸா ஜநகாதமஜா” எவனுக்கு அநத ஜநகராஜன் திருமகள் உரியளோ, அந்த ஒளி அளவிடமுடியாததன்றோ]” என்ற ஸ்ரீராமாயணமும, ‘ஸ்ரீயஃ பதியே புருஷோததமனாவன்’ என்று அதற்கு பெரியாதாறபரியம அருளிசசெயதிருததல் இஙகுககருததத்தக கன. மாண் - மாணபு என்பதன் விகாரம். வாணுதல் - அன்மொழித தொகை. காதல் காண என இயையும. காண - காண என்பதன் விகாரம; முதனிலைதொழிற பெயராககொணடு, நான்காம்வேற்றுமைத்தொகை யென்னவுமாம. தெவிட்டித் தீாதல் - இவ்வளவுகண்டது

போதுமென்று வெறுத்துவிடுதல். நீயே, ஏ - பிரிநிலை. மாணபு இறந்து அமைந்த எனப்பிரித்து, மாட்சிமைக்குணங்கள் மிகுஅமைந்த என்னவுமாம. இனி, இசசெயயுளுகு - சிறப்பாக உடன்பிறந்தமைந்த கற்பையுடைய பிராட்டி தான் உன்பக்கல்வைத்துள்ள மேன்மை பொருந்திய காதல் தெவிட்டுதலால் [மிகநிறைதலால] இடைவிடாது (பாவனையால்) நின்னைக கணகளாற்காணுமாறு நீ பிறந்துள்ளதனால், நீயே உலகத்தில் ஆண்பாலாகப் பிறந்து அடையவேண்டிய செல்வத்தை யடைந்தனையாகின்றா யென்று உரைகூறவுமபடும். பி-ம்.—[1]பிறந்தனைய. [2]உகக்களி ..தீரக். [3]பிறநதமைந்த, பிறந்தமைய. [4]தன்மை. [5]கணடிலை, உணடிலை. (எ௦)

எக. அயிர்ப்பிலர் காண்பார் முன்னு மறிந்தில ரெனினு மைய
வெயிற்புனை யிலங்கை மூதூ ரிந்திரன் [1]யாககைக் கேற்ற
மயிற்புனை யியலி னாரு மைந்தரு நாளு[2]மாங்கே
யுயிர்பபொடு முயிரி னோடு மூச[3]னின் றாடு வாரும்.

(இ - ள்.) ஐய - சுவாமி!—எயில் புனை - மதில் சூழ்ந்த, இலஙகை லங்கையென்கிற, மூது ஊர் - பழபஊராகிய, ஆஙகே - அவ்விடததில்,—நாளும - நாள்தோறும், உயிர்ப்பொடும் - பெருமூசசுடனேயும, உயிரினோடும - குற்றுயிருடனேயும், ஊசல நின்று ஆடுவாரும - (வருவதும் போவதுமான) ஊஞ்சல்போல அலைந்துநிற்பவாகளாகிய, இந்திரன் யாக்கைக்கு ஏற்ற மயில் புனை இயலினாரும் - இந்திரனது உடம்பிற்குப் பொருந்திய மயிலையொதத சாயலை யுடையவாகளான தெய்வமகளிரும், மைந்தரும - தேவாகளும், முன்னும அறிந்திலர் எனினும் - முன்னே (பிராட்டியை) அறியாதவாகளாயினும், அயிர்ப்பு இலா காணபார் - (அவளது கற்பின் நிலைமையைச) சநதேகமில்லாமற் கண்டறிவார; (எ - று.)

'இந்திரன்யாக்கைக்கு ஏற்ற மயிற்புனையியலினார்' என்றது - இந்திரனது போகத்துக்குப்பொருந்திய மகளிர் என்றபடி; இனி, இதற்கு - இந்திரனது ஆயிரஙகணகளினாலும பாரததற்குத தகக கட்டழகுடையவா என்றுங் கருத்துக்கொள்ளலாம். உயிர்ப்பொடும உயிரினோடும் ஊசல்நின்றாடுதல் - இராவணன் முதலிய இராக்கதர்க ளிழைக்கும் இடையூற்றின் மிகுதியாலென அறிக. இனி, இககவிக்கு - இலஙகைக்கு இந்திரனாகிய இராவணனது உடம்பைத் தழுவுதற்கு ஏற்ற அவன்மனைவிமாராகிய மகளிரும மற்றைஇராக்கதரும ஜாநகியை முன்னே அறியாதவாகளாயினும் (அவள்படும் விரகவேதனையை) ஐயமின்றிக கணகூடாகக்கண்டு (தாம இரஙகி) நாடோறும் அவ்வூரிற் பெருமூசசோடுங குற்றுயிரோடும மனமலைநது பரிதவிப்பா ரென்று பொருள்கூறுவாரு முளர். இனி, முதலடிக்கு, எனினும் - என்னைக்காட்டிலும், அயிர்ப்பிலா காணபா - சந்தேகமின்றி அறிவார்; முன்னும் அறிந்திலர் - முற்காலத்திலும் இவளைப்போன்றவளைக கணடா ரில்லை என்றும உரைக்கலாம. பி - ம்:—[1]இயற்கைக்கு. [2]அஙகை. [3]நின்றாடுமுன்னே. (எக)

எஉ. தையலை வணங்கற் கொத்த [1]விடம்பெறுந் தன்மை நோக்கி
யையயா னிருந்த காலை யலங்கல்வே லிலங்கை வேந்த
னெய்தின னிரந்து கூறி யிறைஞ்சின [2]னிருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறன்மேற் கொண்டு விட்டான்.

(இ - ள்.) ஐய - சுவாமி,—நான்—, தையலை - பிராட்டியை, வணங்கற்கு - (எதிரசென்று) வணங்குதற்கு, ஒத்த - தகுதியான, இடம் - சமயத்தை, பெறும் - பெறும்படியான, தன்மை - தன்மையை, நோக்கி - எதிர்பார்த்து, இருந்த காலை - (அவ்வசோகவனத்தில்) இருந்தபொழுது,—அலங்கல் - வெற்றிமாலையைச சூடிய, வேல் - வேலாயுதத்தையுடைய, இலங்கை வேந்தன் - லங்காராஜனான ராவணன், எய்தினன் - அங்கு வந்து, இரந்து கூறி - (பிராட்டி தன்னைக்காமிக்கும்படி) பிரார்த்தித்து (ப்பலவார்த்தைகள் சொல்லி,) இறைஞ்சினன் இருந்து - (அவளை) வணங்கி நின்று, நங்கை வெய்து உரை சொல்ல - பிராட்டி கடுஞ்சொற்களைச சொல்ல (க்கேட்டு), சீறி - கோபித்து, கோறல் மேற்கொண்டு விட்டான் - (அவளைக்) கொல்லத தலைப்பட்டான்; (எ - று)—கீழ் 'கணணினீர்க்கடலிற்கணடேன்' என்ற பிராட்டியின் கற்புநிலையைத் தான் அனுமானித்து உணர்ந்ததைத் தெரிவிதத அனுமான், பிரதியட்ச பிரமாணததாலும் அபபிராட்டியின் கற்புநிலையைத தான் கணடறிந்ததை இதனால் தெரிவிக்கின்றான். கோறல் - தொழிற்பெயர். பி - ம்:—[1]இடை. [2]இருந்த. (எஉ)

எங. ஆயிடை யணங்கின் கற்பு மையநின் னருளுஞ் செய்ய
தூயநல் லறனு மென்றிங் கிணையன தொடர்ந்து காப்பப்
போயின னரக்கி மாரை[1]ச் சொல்லுமின் பொதுவி னென்றுங்
[2]கேயின னவரெ லாமென் மந்திரத் துறங்கி யிற்றார்.

(இ - ள்.) ஐய—! அ இடை - அப்பொழுது, அணங்கின் - பிராட்டியினது, கறபும் - கறபுநிலையும், நின் அருளும் - உனது கருணையும், செய்ய தூய நல் அறனும் - செவ்வையாகிய பரிசுததமான நல்ல தருமமும், என்ற இவைகு இணையன-என்கிற இவைகளெல்லாம், தொடர்ந்து காப்ப - (பிராட்டியினுயிரை) விடாமற்பாதுகாக்க, (அவளைக் கொல்லாதுவிட்டு), ஆவைகு - அப்பொழுது, (இராவணன்), அரகிமாரை - (அருகிற் காவல்செய்துநின்ற) ராக்ஷசிகளைநோகி, சொல்லுமின் என்று - '(நீவகள் சீதைககுப்) புததி சொல்லி என்கருத்துககிணங்கச செய்யுவகள்' என்று, பொதுவின் எயினன்- பொதுவாகக கட்டளை யிட்டுவிட்டு, போயினன் - (தன்னிடததிற்குச) சென்றான்; அவா எலாம - அவ்வரக்கியரெல்லாம், என் மந்திரத்து - யான் உச்சரிதத மந்திரத்தின் வலிமையால், உறவகி இற்றா-தூவகிவிட்டாகள்;(எ-று.)

அநுமான் தனக்குச சீதையைக் கணடுபேசுமாறு சந்தர்ப்பம வாய்ததமையை விவரிக்கின்றான். பொதுவின சொல்லுமின் என்று

இயைத்து, மனிதரது இழிவையும் எனது பெருமையையும் பொதுப்பட இவட்கு எடுத்துககூறி இவளை இசைவியுங்க ளென்றும் பொருள் கொள்ளலாம். அரக்கியர் கணவிழிததிருக்கையில் தான்சென்று பிராட்டியுடன் பேசவிடா ராதலாலும் இரகசியம் வெளிப்பட்டுவிடு மாதலாலும், அநுமான் மந்திரபலததால் அவாகளை உறங்கும்படி செய்தன னென்க. பி - ம்.—[1]கொல்லுமின்வெறுமின், சொல்லுமின்போமின். [2]ஏயினவவர்களெல்லாமந்திரத்துறங்குகின்றார். (எகூ)

எச. அன்னதோர் பொழுதி னங்கை யாருயிர் துறப்ப தாக,
வுன்னினள் கொடியொன் றேந்திக் கொம்பொடு முறைப்பச் சுற்றித்,
தன்மணிக் கழுத்திற் சார்த்து மளவையிற் றடுத்து நாயேன்,
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் [1]புகன்ற போழ்தில்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அன்னது ஓா பொழுதில் - அததன்மையதான சமயத்தில்' நங்கை - பிராட்டி, ஆர் உயிர் துறப்பது ஆக - அருமையான (தனது) உயிரை விட்டிடுவதாக, உன்னினள் - நினைத்தவளாய், கொடி ஒன்று ஏந்தி - ஒரு கொடியை யெடுத்து, கொம்பொடும் உறைப்ப சுற்றி-ஒருமரததின் கிளையிலே உறுதியாகக் கட்டி, தன் மணி கழுத்தில் - தனது அழகிய கழுத்திலே, சாததும் அளவையின் - சேர்த்துச சுருக்கிட்டுக்கொள்ளுஞ் சமயத்தில், நாயேன் - நாய்போற் கடைப்பட்டவனாகிய அடியேன், தடுத்து - (அதனைத) தடைசெய்வதாகி, பொன் அடிவணங்கி நின்று - அழகிய (அப்பிராட்டியின்) திருவடிகளை நமஸ்கரித்து நின்று, நின் பெயர் புகன்ற போழ்தில் - உனது திரு நாமததைச சொன்ன பொழுதில்,—(எ - று.)

மணிக்கழுத்து-இரததினாபரணங்களை யணிந்த கழுத்தென்றும, பொன்னடி - பொன்னாபரணங்களை யணிந்த பாதமென்று மாம். 'நாயேன்' என்றது, பணிவினால தன்னைத் தாழ்த்திக்கூறியது; [நைசயாநுஸந்தாநம்.] இராமன்பெயரை அநுமான்புகன்றதே பிராட்டி சுருகிட்டுகொண்டு உயிர் மாய்ப்பதைத் தடைசெய்ததென்க: "அஞ்சன வண்ணத்தான்றன் பெயருரைத் தளியையென்பாற், றுஞ்சுறுபொழுதிற்றந்தாய் துறக்கல்" என மேற்செய்யுளில்வருவதுங்காண்க. பி - ம்:—[1]புகழ்ந்த. (எச)

எரு. வஞ்சனை யரக்கர் செய்கை [1]யிதுவென மனக்கொண்டேயு, மஞ்சன வண்ணத் தான்றன் பெயருரைத் [2]தளியை யென்பாற், றுஞ்சுறு பொழுதிற் றந்தாய் [3]துறக்கலென் றுவந்து சொன்னாண், [4]மஞ்சென வனமென் கொங்கை வழிகின்ற மழைக்கணீராள்.

(இ - ள்.) மஞ்சு என - (மலைமேற்பெய்கிற) மழைபோல், வனம் மெல கொங்கை வழிகின்ற - அழகிய மென்மையான (தனது) தனங்களின்மேற் பெருகுகின்ற, மழை கண நீராள - குளிர்ந்த கண்களின் நீரையுடையவ

ளாகிய பிராட்டி,—இது வஞ்சனை அரக்கர் செய்கை என மனம கொண்டே யும் - யான் இவ்வாறு செய்ததை வஞ்சனையையுடைய இராககதரது மாயச செய்கையா மென்று மனத்தில்நினைத்துச சந்தேகித்தும், (என்னைநோக்கி), 'எனபால் அளியை - என்பக்கல் அருளுடையவன் நீ; துஞ்சுறு பொழுதில்- (யான்) இறக்கும்பொழுதில், அஞ்சனம வண்ணத்தான்தன் பெயர் உரைத்து- மைபோலுங கரிய திருநிறமுடைய ஸ்ரீராமனது திருநாமத்தைச சொல்லி, துறககல தந்தாய்-(யான் மரணததை) ஒழிதலைச செய்தாய்', என்று உவந்து சொன்னாள் - என்று மகிழ்சசியோடு சொன்னாள்; (எ - று.)

"அரக்கனேயாக வேறோரமரனேயாக வன்றிக, குரககினததலைவ னேதா னுகுக கொடுமையாக, விரககமேயாக வாதிங கெம்பிராணுமஞ் சொல்லி, யுருக்கினனுணாவைததந்தா னுயிரிதி னுதவியுணடோ" என்று உருககாட்டுபடலத்தில் வந்த செய்யுள் இஙகுக காணததககது. மஞ்சென வனமென்கொஙகை வழிகின்ற மழைக்கணீராள்—"தழைததபொன் முலைத் தடஙகடந தருவிபோய்ததாழப், புழைததபோல நீர நிரந்தரம் பொழிகின்ற பொலிவா, லிழைக்கு நுணணிய மருஙகுலா ளிணைநெடுஙகணகள், மழைகக ணென்பது காரணக்குறியென வகுததாள்" என்றா காட்சிப்படலத்தும். என்பால் துறக்கல் தந்தாய் - என்னிடத்து உயிரொழிதலைததந்தாய்: (ஆத லால்), அளியை - அருள் செய்தறகுஉரியை என்று உரைததலுமாம். [3]துறக்க மென்றும் எனப் பாடமோதி, துஞ்சுறுபொழுதில் - நான் இறக்குஞ்சமயத் தில், அஞ்சன வண்ணததான்தன் பெயர் உரைதது - இராமபிரானது திரு நாமததைச் சொல்லி, எனபால் அளியை தந்தாய் - என்பககல் கருணையைச செய்தாய்; துறக்கம் - (அககருணை) பரலோக இன்பததுக்குச சமமானது, என்று உவந்து சொன்னாள்' என வுரைப்பாரு முளா. பி - ம்:—[1]ஆமென. [2]அளிய. [4]மஞ்சனமெனனக். (எரு)

எகூ. [1]அறிவினிற் றேறிச் சொன்ன பேரடை யாளம் [2]யாவுஞ்
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையிற் [3]றிருக்க மின்மை
முறிவற வெண்ணி வண்ண மோதிரங் காட்டக் [4]கண்டா
ளிறுதியி னுயிர்தந் தீயீ மருந்தொத்த தனைய தெந்தாய்.

(இ-ள்.) எந்தாய்-எமதுதலைவனே!—சொன்ன-(அடியேன்) சொனன, பேர் அடையாளம் யாவும-பெரிய அடையாளஙகளை யெல்லாம், (பிராட்டி), அறிவினின் தேறி - (தனது) அறிவினால் தெரிய அறிந்து, செறிவு உற நோககி - (அவ்வடையாளஙகளைப்) பொருததமாகப் பாரததது, நாயேன் சிந் தையில் திருககம் இன்மை முறிவு அற எண்ணி - அடியேனது மனததில் மாறுபாடில்லாமையை வேறுபாடிலலாமல் அறிந்து, வணணம் மோதிரம காட்ட கணடாள் - அழகிய (தினது) மோதிரததை (யான் எடுததது)க காட் டப பாரததாள்; அனையது - அநத மோதிரமானது,— (அப்பிராட்டிககு), இறுதியின உயிர் தந்தீயும மருநது ஒததது - மரணகாலததில் உயிரை

இறவாதபடி நிலைநிறுத்திக்காக்கிற (மிருதசஞ்சீவியென்னும்) மருந்தைப் போன்றது; (எ - று.)

திருககம் - தொழிறபெயர்; திருகு - பகுதி. அம்மோதிரத்தைக் கண்டவுடனே பிராட்டியின் உயிர் நிலைநின்றது என்பது, நான்காமடிக்குக்கருத்து. "வீயுமுயிர்மீளும், மருந்துமெனலாகியது வாழிமணியாழி" என உருககாட்டு படலத்தில் வந்தது முணாக. தருமென்பது 'தந்தீயும்' என விகாரப்பட்டு வந்தது' அது, வினைத்திரிசொல் எனப்படும்: "மதித்தீதை" "மருதீவாள்" என்பன முதலியன காணக. பி - ம்:—[1]அறிவுறத்தெரியச. [2]ஐய. [3]தெரிககுந் தன்மை குறியுரையென்ன, தெரிககுந்தன்மை குறிப்புரையெணணி. [4]காணடாள். (எசு)

எஎ. ஒருகணத் திரண்டு கண்டே னொளிமணி யாழி [1]யான்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலுஞ் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னுல்வெந்
துருகிய துடனே யாறி வலித்தது [2]குளிர்ப்புள் ளூற.

(இ - ள்.) செல்வ - எல்லாச்செல்வமு முடையவனே!—ஒரு கணத்து- ஒருகணப்பொழுதிலே, இரண்டு கணடேன் - இரணடுதன்மையை (யான்) பார்த்தேன்; (அவை என்னவெனில்,)—ஒளி மணி ஆழி - விளகுகின்ற இரத்தினம்பதித்த மோதிரத்தை(ப் பிராட்டி என்கையினின்றும் வாஙகி), ஆன்ற திரு முலைத் த்டத்து - சிறந்த (தனது) கொஙகைகளில், வைததாள் - வைததுக்கொண்டாள: வைத்தலும் - வைததவுடனே, (அப்பொன்மோதிரம்),—நின்பால் விரகம் என்பதனின் வந்த வெம கொழுந் தீயினுல் - உன்னிடத்தினின்றும் பிரிந்ததென்பதனுலுண்டான வெப்பமாகிய செழிதத நெருப்பினுல், வெந்து உருகியது - காய்ந்து 'இளகிவிட்டது; குளிர்ப்பு உள் ஊற - (மோதிரம உடம்பிறபட்ட மகிழ்ச்சியினு லாகிய) குளிராசசி உடம்பில் மிகுதலால், உடனே ஆறி வலித்தது-அப்பொழுதே (அவ்வெப்பந்) தணிந்து இறுகி முன்போலாய்விட்டது; (எ - று.)

மோதிரம பிராட்டியின் விரகாககினியால் உருகுதலும், உடனே மகிழ்சசியாலாகிய குளிராசசியால் ஆறி இறுகுதலும ஆகிய இரண்டு தன்மையையும் ஒருகணததிற் கணடே னென்றதாம. உயர்வுநவிற்சியணி. ஆன்ற - அகன்ற வென்பதன் மருஉ. பி - ம்:—[1]ஊனறத். [2]துளிரா தததாகி. சிலபிரதியில் இசசெயயுள அடுததசெய்யுளின் பின் உள்ளது. (எஎ)

எ௮. வாங்கிய வாழி தன்னை வஞ்சரூர் வந்த தாமென்
றுங்குயர் மழைக்க ணீரா லாயிரங் கலச மாட்டி
யேஙகின [1]ளிருந்த தல்லா லியம்பல [2]ளெய்த்த மேனி
[3]வீங்கினள் வியந்த தல்லா லிமைத்தில ளுயிர்ப்புவிண்டாள்.

(இ - ள்.) (பிராட்டி),—வாஙகிய ஆழிதன்னை - (என்கையினின்றுதன்கையில்) வாஙகிக்கொண்ட மோதிரததை, வஞ்சர் ஊர் வந்தது ஆம் என்று -

வஞ்சனையுடையவராகளான அரகக்காகளது நகரத்தில் வந்ததனால் அபரிசுத்தியடைந்ததென்று,—ஆங்கு - அப்பொழுது, உயர் மழை கண் நீர்ால் - மிகக மழைபோன்ற ஆனந்தக்கண்ணீரினால், ஆயிரம் கலசம் ஆட்டி - ஆயிரங்குடம அபிஷேகஞ்செய்து, எங்கினள் இருந்தது அல்லால் - இரங்கிக்கொண்டிருந்ததல்லாமல், இயமபலள் - (ஒன்றுஞ்) சொல்லமாட்டாதவளாயினள்; எய்தத மேனி வீங்கினள் - இளைத்திருந்த உடம்பு பூரித்து, வியந்தது அல்லால் - அதிசயப்பட்டதல்லாமல், இமைத்திலள் - (நோக்கின கண்களை) மூடினளில்லை; உயிர்ப்பு விண்டாள் - பெருமூசசெறிந்தாள்; (எ - று.)

மோதிரத்தைக கண்டு கையில் வாங்கி நோக்கியவுடனே பிராட்டியின் கண்களினின்று தாரைதாரையாகப பெருகுகின்ற கண்ணீரவெளளத்தில் அம்மோதிரம் நனைந்ததனை, வஞ்சகராகிய ராக்ஷசரது ஊரில் வந்ததனால் அதற்கு உண்டான அசுசியைப் போக்கக கருதி அவள்பலகுடமநீரைகொணடு நீராட்டுவித்ததாக உத்பிரேக்ஷித்ததனால் தற்குறிப்பேற்றவணி. வஞ்சகரி னூர்க்குவருவதே நல்லவாக்கு இழுக்காகு மென்ற பொருள் இதிற்புலனும். இங்கு 'ஆயிரம்' என்றது, பலவென்னும மாத்திரையாய் நின்றது. பி - ம்:— [1]குழிந்ததல்லாலிடைந்திலள். [2]உயிர்ப்பும் விட்டாள். [3]ஓங்கியவுவகையோடு முன்னின்றவூசனின்றாள், ஓங்கிய வுவகையோடு முணணின்றவூசனீங்கி.

எகூ. அன்னவற் [1]கடிய னேனிற் பிரிந்தபி னடுத்த வெல்லாஞ்
சொன்முறை யறியச சொல்லித் தோகைநீ யிருந்த சூழ
லின்னதென [2]றறிகி லாமே யித்தனை தாழ்த்த தென்றே
மன்னநின வருத்தப் பாடு முணர்த்தினே னுயிர்ப்பு வந்தாள்.

(இ - ள்.) மன்ன - தலைவனே!—அடியனேன் - யான், அன்னவற்கு - அப்பிராடிக்கு, நின பிரிந்த பின் அடுத்த எலலாம் - உன்னைப்பிரிந்த பினபு நேர்ந்த செயதிகளையெல்லாம், சொல் முறை அறிய சொல்லி - யான்சொல்லும் முறையால் அறியும்படி சொல்லி,—'தோகை - மயில்போன்றவளே! நீ இருந்த சூழல் - நீ இருந்த இடம், இன்னது என்று அறிகிலாமே - இன்னவிடத்ததெனறு தெரியாமையினாலேயே, இதனைதாழ்ததது - இவ்வளவு காலம நீட்டித்தது,' எனறு - எனறுஞ் சொலலி, நின் வருத்தப்பாடும் உணர்த்தினேன் - (அவளைபபிரிந்ததனால்) நீவருத்தப்படுநதன்மையையும தெரியச சொன்னேன்; (அதன்பின்பு), உயிர்ப்பு வந்தாள - உயிரநீங்காதிருக்கப்பெற்றாள்; (எ - று.)

அறிகிலாமே - மேயீற்று எதிரமறைத தெரிநிலைவினையெசசம. வருத்தபபாடு - முதனிலைதிரிந்த தொழிறபெயா. பி-ம்.—[1]அடியேனும்மிற், அடியனுன்னில். [2]அறிகிலாமை. (எகூ)

அ0. இங்குள தனமை யெல்லா [1]மியைபுழி யியையக கேட்டா, ளங்குள தனமை யெலலா [2]மடியனுக் கறியச சொன்னா, டிங்

களொன் றிருப்பெ [3]னினனுந் திருவுளந் தீர்ந்த பின்னை [4]மங்குவெ
னுயிரொ டென்றுன் குரைகழற் றலைககண் வைத்தாள்.

(இ - ள்.) இங்கு உள தன்மை எல்லாம - இவ்விடத்திலுள்ள தன்மை களையெல்லாம், இயைபுழி இயைய கேட்டாள - நிகழ்ந்தமுறையிற் பொருந் தககேட்டு. அங்கு உள தனமை எல்லாம - அவ்விடத்திலுள்ள தன்மைகளை யெல்லாம், அடியேனுககு - அடியனுககு, அறிய சொனனுள் - தெரியச சொல்லி, - 'இன்னே - இனி, திங்கள் ஒன்று இருப்பென் - ஒருமாதகாலம் (இங்கே) உயிர்வைத்திருபபேன; திருஉளம் தீர்ந்த பின்னை - (அதற்குள் என்னை வந்து அழைததுப்போகச சக்கரவாததித திருமகனுக்கு) மனமில்லை யாகுமாளுல் அதன்பின்பு, உயிரொடு மங்குவென்-உயிரிழப்பேன்,' என்று - என்றுசொல்லி. உன் குரை கழல் தலைக்கண வைததாள் - உனது ஒலிக கின்ற வீரக்கழலையணிநத திருவடியைத (தனது) தலையின்மேல வைததுத (திககுநோக்கித்) தண்டன் சமாப்பிததாள; (எ - று.)

உயிரொடு மங்குவென் - வலிய உயிரவிடுவே னெனறபடி. உன் குரை கழல் தலைககண வைத்தாள் - பாவனையினுல் நினதுதிருவடியைத தலைமேற் கொண்டு வணங்கினளென்றபடி பி - ம்:—[1]இயல்புளி. [2]அடியனேற்கு. [3]என்றுளன்னது. [4]மங்குவதுயிருண்டென்றுனமலரடி. (அ0)

அக.—சீதை தந்த சூளாமணியை அநுமான் இராமனிடங் கொடுத்தல்.

வைத்தபின் றுகிலின் வைத்த மாமணிக் கரசை வாங்கிக
கைத்தலத் தினிதி னீநதா டாமரைக் கண்க ளார
வித்தக காண்டி யென்று கொடுததனன் வேத நன்னூ
லுய்த்துள கால மெல்லாம புகழொடு [1]மோங்க நிற்பான்.

(இ - ள்.) வைத்த பின் - (அவ்வாறு உனதுதிருவடியைத தலைமேல்) வைத்துகொணடபின்பு,—துகிலின் வைதத மா மணிககு அரசை வாநகி - தனது ஆடையில் முடிநதுவைத்திருந்த சிறநத இரத்தினங்களுககெல்லாந் தலைமையாகிய சூளாமணியை எடுத்து, கை தலதது - (எனது) கையில், இனிதின் ஈந்தாள் - இனிமையாகக கொடுததாள்; (அதனை), வித்தக - ஞான சொரூபியாயுள்ளவனே! தாமரைகணகள் ஆர காணடி - செநதாமரை மலர்போன்ற திருககணகள மகிழக காணபாயாக, என்று - என்றுசொல்லி, வேதம் நல் நூல் உயத்து உள காலம எல்லாம புகழொடும ஓங்க நிற்பான் கொடுததனன் - சிறநத வேதங்களுஞ் சாஸ்திரங்களும் வழங்குவதான கால தத்துவமுள்ள அள்வும் கீரததியுடனே மேம்பட (ச சிரஞ்சீவியாய) நிற பவனுகிய அநுமான (சூளாமணியை ஸ்ரீராமனிடங்) கொடுததான்; (எ-று.)

வேதநன்னூல் - வேதங்களாகிய நல்லநூல்க ளென்றுமாம். பி - ம்:—

[1]ஓக்க.

அஉ.—அதுபெற்றவளவில் இராமன் தாபந்தணிந்து மகிழ்தல்.

[1]பையவுட் பயந்த காமம் பரிணமித் துயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி யுள்ள மெலிவுறு [2]நிலையை விட்டா
[3]னையனுக் கங்கி முன்ன ரங்கையாற் பற்று நங்கை
கையென லாயிற றன்றே கைபுக்க மணியின் காட்சி.

(இ - ள்.) பைய - மெல்ல, உள் பயந்த - உள்ளேயுண்டான, காமம்—, பரிணமித்து - வளர்ந்து, உயர்ந்து பொங்கி - மேல்மேல் அதிகப்படுதலால், மெய் உற வெதும்பி - உடம்பு மிகவுங்கொதித்து, உள்ளம் மலிவுறும் - மனந் தளர்ச்சியடைகின்ற, நிலையை - தன்மையை, விட்டான - (ஸ்ரீராமன் அச்சூளாமணியைப் பார்த்தவுடனே) நீங்கினான்; கை புகக மணியின் காட்சி - (ஸ்ரீராமனது) திருககையை யடைந்த சூளாமணியினது தோற்றம், ஐயனுக்கு - அந்த இராமபிரானுகக்கு, அங்கி முன்னர் அம கையால் பற்றும் நங்கை கை எனல் ஆயிற்று - (விவாகாலத்தில்) அக்கினியின் முன்னிலையில் அழகிய கையினால பிடிககப்பட்ட பிராட்டியின் கை யென்னலாம படியாயிற்று; (எ - று.)

இராமபிரான் சீதையைப் பாணிக்கிரகணஞ் செய்தகாலத்திற போலச சூளாமணியைப் பெறற பொழுதில் மிகமகிழ்ந்தன னென்பதாம். காட்சியணி. பைப்பய - பையப்பைய என்னுங குறிப்புவினையெச்ச வடுகக்கின் தொகுதல் பி - ம்:—[1]பையுறப், பைப்பயப். [2]நிலைமை. [3]ஐயனும். (அஉ)

அங.—அப்பொழுது இராமனிடம் உண்டான பலவகைமெய்ப்பாடுகள்.

பொடித்தன வுரோமம் [1]போந்து பொழிந்தன கண்ணீர் பொங்கித்
துடித்தன மார்புந் தோளுந் [2]தோன்றின வியர்வின் றுள்ளி
மடித்தது மணிவா [3]யாவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி யென்னே [4]யாருளர் தன்மை தேர்வார்.

(இ - ள்.) உரோமம்-மயிர்கள், பொடித்தன - சிலிர்த்தன; கண நீர்—, போந்து - வழிந்து, பொழிந்தன - பெருகின; மார்பும தோளும்—, பொங்கி-பூரித்து, துடித்தன—; வியர்வின் துள்ளி - வேர்வைநீர்த்துளிகள், தோன்றின - உண்டாயின; மணி வாய் - அழகிய வாயானது, மடித்தது - மடிப்பையடைந்தது; ஆவி வருவது போவதுஆகி - உயிர் வருவதும் போவது மாகபபெற்று, மேனி தடித்தது - உடம்பு பூரித்தது; என்னே - (இது) என்ன ஆச்சரியம்! தன்மை தேர்வார் - அத்தன்மைகளை ஆராய்ந்து அறிய வல்லவர், யார் உளர் எவ ரிருக்கின்றனர்! [எவருமில்லை யென்றபடி]; (எ-று.)

இராமபிரானுக்கு அப்போதுநேர்ந்த மெய்ப்பாடுகளை யறிந்துணர்த்துவது, எம்மனோர்க்கு இயலாதென்றபடி. 'ஆவிவருவதுபோவதாகி' என்றது, நெட்டுயிர்ப்பெறிதலை ரோமம் என்னும் வடமொழி, உகரம் மொழி முதலாகி முன்வரப்பெற்றது. பி - ம்:—[1]மேன்மேல் [2]தோன்றினதவரென்றுன்னி. [3]வீரம். [4]காகுத்தன றன்மைதேர்வார். (அங)

அச.—அங்கதன் முதலானவர்கள் வந்துசேர்தல்.

ஆயிடைக் கவிகளோடு மங்கதன் முதலி னுயோர்
மேயினர் வணங்கிப் புக்கார் வீரனைக் கவியின் வேந்தைப்
போயின கருமமுற்றிப் புகுந்ததோர் பொம்ம றன்னாற்
சேயிரு மதிய மென்னத் திகழ்தரு முகத் தாரானார்.

(இ - ள்.) அ இடை - அப்பொழுது [அவ்விடத்தில்], கவிகளோடும் - மற்றை வானராகளுடனே, அங்கதன் முதலின் ஆயோர் - அங்கதன் முதலான படைத்தலைவர்கள், மேயினர் - வந்து, வீரனை - ஸ்ரீராமனையும், கவியின் வேந்தை - வாநர ராஜனான சுக்கிரீவனையும், வணங்கி - நமஸ்கரித்து, புக்கார் - அங்குசசேர்ந்து, போயின கருமம் முற்றி புகுந்தது ஓர் பொம்மல் தன்னால் - (தாங்கள்) போன காரியம் முடிந்து வந்த தனாலாகிய தொரு மகிழ்ச்சியினால், சேய் இரு மதியம் என்ன திகழ்தரு முகத்தர் ஆனார் - உயர்ந்த [ஆகாயத்திலுள்ள] பெரிய [பூரண] சந்திரன்போல விளங்குகின்ற முகத்தையுடையவராஞார்கள்; (எ - று.)

மதியம், அம-சாரியை. கவி-கபி யென்ற வடசொல்லின விகாரம். (அச)

அரு.—மேல் நடக்கவேண்டிய காரியத்தைக் குறித்து இராமன் விரைவுகோள்ளுதல்.

[1]ஆண்டையி னருக்கன் மைந்த னையகே ளரிவை நம்பாற், காண்டலுக் கெளிய ளானா [2]ளென்றலுங் காலந் தாழ, வீண்டினு மிருத்தி போலா மென்றன னென்ற லோடுந், தூண்டிரண் டனைய தோளான் பொருக்கென வெழுந்து சொன்னான்.

(இ - ள்.) ஆண்டையின் - அப்பொழுது, அருக்கன் மைந்தன் - சூரிய குமாரனான சுகிரீவன், (ஸ்ரீராமனை நோகி), 'ஐய—! கேள்—: அரிவை - பிராட்டி, நமபால் காண்டலுக்கு எளியள் ஆனாள் - நம்மாற் பார்ப்பதற்கு எளியவளாயினாள்,' என்றலும் - என்றுசொன்னவளவில், - (ஸ்ரீராமபிரான்) 'காலம் தாழ - காலம் விளம்பிகக, இனும் - இன்னமும் [சீதையிருக்குமிடந் தெரிந்தபின்பும்], ஈண்டு - இங்கேயே, இருத்திபோல் ஆம் - இருக்கின்றாய் போலும்,' என்றனன் - என்றுசொன்னான்; என்றலோடும் - என்றுசொன்ன வுடனே, தூண திரணடு அனைய தோளான்-தூண திரண்டிருப்பது போன்ற தோள்களையுடையவனான சுகிரீவன், பொருக்கென - விரைவில், எழுந்து எழுந்திருந்து, சொன்னான் - கட்டளையிடுபவனானான்; (எ - று.)

'அரிவை' என்னுஞ் சொல் - இங்கே, பருவப்பெயராகாமல், பெண் என்ற மாத்திரமாய் நின்றது. நமபால் - உருபுமயககம். இனும் - இன்னும்: தொகுத்தல். 'இருத்திபோலாம்' என்றது - இருத்தல் தகுதியன் றென்றபடி. பி - ம்:—[1]ஆணடையவ், ஆணடகை. [2]என்றபின் காலந்தாழா. (அரு)

அசு.—சுக்கிரீவன்கட்டளைப்படி வாநரசேனை புறப்படுதல்.

எழுக[1]வெம் படைக ளென்று [2]னேயெனு மளவி னெங்கு
முழுமுரா [3]செற்றிக் கொற்ற [4]வள்ளுவர் [5]முடுக்க முந்திப்
[6]பொழிதிரை யன்ன வேலை புடைபரந் தென்னப பொங்கி
வழுவலில் வெள்ளத் தானை தென்றிசை வளர்ந்த தன்றே.

(இ - ள்.) 'ஏ எனும் அளவின் - ஏயென்னுமொலி உண்டாகுமளவினுள் [மிகவிரைவில் என்றபடி], வெம் படைகள் - கொடிய சேனைகளெல்லாம, எழுக - புறப்படுவனவாக,' என்றான்-என்று (சுக்கிரீவன்) கட்டளையிட்டான்; (உடனே), கொற்றம் வள்ளுவர் - வெற்றியையுடைய பறையறைவோர், எங்கும் - (சேனைகளுள்ள) எல்லாவிடத்தும், முழு முரசு எற்றி-பெரிய பறைகளை யறைந்து, முடுக்க - துரிதப் படுத்த,—வழுவல் இல் - (அசசுக்ரீவாஜ்ஞையை) தவறுதலில்லாத, வெள்ளம் தானை - (எழுபது) வெள்ளம் வாநரசேனை, முந்தி-விரைந்து, பொழி திரை அன்ன வேலை புடை பரந்து என்ன பொங்கி - பாய்கின்ற அலைகளையுடைய அந்தக்கடல் தானிருக்கும நிலையை விட்டு வெளியிலே பரவினாற்போல எழுந்து, தென்திசை வளர்ந்தது - தெற்குத்திகைக நோக்கிப் பரவலாயிற்று; (எ - று.)—அன்றே - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம.

எம் படைகள் என்று பிரித்தும் உரைக்கலாம். முழு முரசு - உத்தம விலகணமமைந்த பேரிகை யெனினுமாம். அன்ன - பிரசிததி பற்றியது.
பி - ம்.—[1]என்படைஞா. [2]என்றதோரளவிலெங்கும். [3]ஒற்றக். [4]வள்ளுவன். [5]முடுகி. [6]எழுதிரை பொழுதுலா. (அசு)

அஎ.—முன்சென்று சரியானவழியை நாடிப்போமாறு இராமன் நீலனைப் பணித்தல்.

நீலனை நெடிது நோக்கி நேமியோன் பணிப்பா [1]னந்தம்
பால்வருஞ் சேனை தன்னைப் பகைஞர்வந் தடரா வண்ணஞ்
சால்புற முன்னர்ச் சென்று சரிநெறி துருவிப் போதி
மால்தரு களிறு [2]போலும் படைஞர்பின் மருங்கு சூழ.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) நேமியோன் - ஸ்ரீராமன், நீலனை - (வாநரசேனாதிபதியான) நீலனை, நெடிது நோக்கி - செவ்வையாகப் பாரதது, பணிப்பான் - கட்டளையிடுவான் —நம்தம் பால் வரும் சேனை தன்னை - நமது பக்கதில் வருகிற சேனையை, பகைஞா வந்து அடாராவணணம - சதுருக்கள் வந்து அழிக்காதபடி, (நீ), மால் தரு களிறு போலும் படைஞர் பின்மருங்கு சூழ-மதமயக்கங கொண்ட ஆணயானைபோன்ற வீராகள் பின்பக்கதில் தொடர்ந்துவருமாறு, சால்புஉற - தகுதிபொருநத, முன்னர் சென்று - முன்னேசென்று, சரி நெறி துருவி போதி - தகுதியானவழியைத தேடிபபோவாயாக; (எ - று.)

"ஆறுபதெழுகோடியநீகருக், கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன், கூறு சேனைபதிகொடுகூற்றையு, நீறுசெய்திடுநீலனென்றோதினான்" என்றபடி நீலன் வாநரப்படைத்தலைவாகெல்லாந் தலைவனாதலால், அவனை முக்கிய மாக விளித்தது இதுகூறினன் இராமபிரான். நேமியோன் - சகரராயுதபாணி யான திருமாலின் அம்சமானவன். சரி - ஸத்ருஶ என்ற வடமொழியின் சிதைவு; அது, பிராகிருதபாஷையில் ஸரிஸோ என நிற்கும். மால் தரு - பெருமைபொருந்திய என்றுமாம்; எதுகைநோக்கி, சந்திபெறாது நின்றது. துருவி, துருவு - பகுதி. பி - ம்:—[1]நீநம். [2]போலப். (அஎ)

அஅ.—அநுமான் பிரார்த்தித்தபடி அவன்தோள்மேல் இராமன்ஏறுதல்.

[1]என்றுரைத் தெழுந்த வேலை மாருதி யிருகை கூப்பிப
புன்றொழிற் குரங்கெ னாதென் றோளிடைப் புகுதி யென்னாத்
தன்றலை படியிற் [2]றாழ்ந்தா னண்ணலுஞ் சரணம் வைத்தான்
வன்றிறல் வாலி சேயு மிளவலை வணங்கிச சொன்னான்.

(இ - ள்.) என்று உரைத்து - என்று (நீலனுக்குக்) கட்டளையிட்டு, எழுந்த வேலை - (ஸ்ரீராமன்) புறப்பட்டபொழுது, மாருதி - அநுமான், இரு கை கூப்பி - அஞ்சலிசெய்து, 'புல் தொழில் குரங்கு எனாது - இழிவான தொழிலை யுடையதொரு குரங்கு என்று எணணி (என்னை) இகழாமல், என் தோளிடை புகுதி - எனதுதோளில் ஏறுவாயாக,' என்னா - என்று விண் ணப்பஞ்செய்து, தன் தலை படியில் தாழ்ந்தான் - தனதுதலை பூமியிற் படு மாறு வணங்கினான்; அணணலும் - ஸ்ரீராமனும், சரணம் வைத்தான் - (அங் ஙனமே அவ்வநுமான் தோள்களில்) திருவடியைவைத்து ஏறியருளினான்; வல் திறல் வாலிசேயும் - மிக்கவலிமையையுடைய அங்கதனும், இளவலை வணங்கி - லக்ஷ்மணனை நமஸ்கரித்து, சொன்னான் - சொல்பவனானான்; (எ - று.)—அது மேற்கவியிற் கூறுகின்றார். சரணம் - வடசொல். பி - ம்:— [1]என்றவனெழுந்தவேலைமாருதி யெதிர்சென்றெந்தாய். [2]தாழ. (அஅ)

அகூ.—அங்கதன்பிரார்த்தித்தபடி அவன்தோள்மேல் இலக்ஷ்மணன் ஏறுதல்.

நீயினி யென்றன் றோண்மே லேறுதி நிமல வென்ன
வாய்புதைத் திறைஞ்சி நின்ற வாலிகா தலனை நோக்கி
நாயகற் கிளைய கோவு நன்றென வவன்றன் றோண்மேற்
பாய்தலுந் தகைபபி றானை படர்நெறி [1]பரந்ததன்றே.

(இ - ள்.) 'நிமல - குற்றமற்றவனே!—நீ—, இனி-இப்பொழுது, என் தன் தோள்மேல் ஏறுதி - எனது தோளின்மே லேறியருள்வாய', என்ன - என்று விண்ணப்பஞ்செய்து, வாய் புதைத்து - (கைகளால்) வாயை மறைத் துகொண்டு, இறைஞ்சி நின்ற - வணங்கி நின்ற, வாலி காதலனை - வாலி புத்திரனான அங்கதனை, நோக்கி - பார்த்து, நாயகற்கு இளைய கோவும் - ஸ்ரீ

ராமனுக்கு இளைய தம்பியாகிய லக்ஷ்மணனும், நன்று என - நல்லதென்று உடன்பட்டு, அவன்தன் தோள்மேல் - அவ்வநுகதனது தோளின்மேல், பாய்தலும் - ஏறினவளவில்,—தகைப்பு இல் தானை - தடையில்லாத வாநரசேனை, படர் நெறி பரந்தது - செல்லவேணடும் வழியிற் பரவிச் சென்றது; (எ - று.)

படர் நெறி - பரந்த வழியுமாம். அன்று, ஏ - ஈற்றசை. பி - ம்·— [1]படர்ந்த. (அகூ)

கூ0.—அவ்வளவில் தேவர்கள் பூமாரிபொழிதல்.

கருடனில் விடையிற் றோன்று மிருவருங் கடுப்பக் காலி
னருடரு குமரன் றோண்மே லங்கத னலங்கற் றோண்மேற்
பொருடரும் வீரர் போதப் பொங்கொளி விசுமபிற் றங்குந்
தெருடரு புலவர் வாழ்த்திச் சிந்தினர் தெய்வப் பொற்பூ.

(இ - ள்.) கருடனில் - கருடன்மேலும், விடையில் விருஷபத்தின் மேலும், தோன்றும் - எழுந்தருளகிற, இருவரும் - (அரி அரன் என்னும்) இருவரையும், கடுப்ப - ஒக்க, காலின் அருள்தரு குமரன் தோள்மேல் - வாயுவினாற பெறப்பட்ட குமாரனாகிய அநுமானது தோளின்மேலும், அங்கதன் அலங்கல் தோள்மேல் - அங்கதனது போர்மாலையணிந்த தோளின்மேலும் (ஏறிகொண்டு), பொருள் தரு வீரர் - (வேண்டுவோரவேணடும்) பொருள்களையெல்லாங்கொடுக்கவல்ல ஸ்ரீராமலக்ஷ்மணர், போத - செல்ல, (அப்பொழுது),—பொங்கு ஒளி விசும்பில் தங்கும தெருள் தரு புலவர் - மிக்க ஒளியையுடைய சுவர்ககலோகததில் தங்குகின்றவர்களும் தெளிவைத்தருகிற அறிவையுடையவர்களுமாகிய தேவாகள், வாழ்தி - ('பகைவாகளை வெல்லுக' என்று) வாழ்தது கூறி, தெய்வம பொன பூ - தெய்வத்தனமையுடைய பொன்மயமான கல்பகவிருக்ஷததின்மலர்களை, சிந்தினா - (மேலே) சொரிந்தாகள்; (எ - று.)

பொன்னுலகமாதலால், 'பொங்கொளிவிசும்பு' எனப்பட்டது கற்பகப் பூவுககுத தெய்வத்தன்மை - வாடாமை முதலியன. பொருள் - அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப்பொருள்கள. முதல்மூன்றடிகளில் முறைநிரனிரைப்பொருள்கோள் காணக. (கூ0)

கூக.—வாநரசேனை மலைகளின் வழியாகச் செல்லுதல்.

வையக [1]மதனின் மாக்கண் மயங்குவா வயவெஞ் சேனை
யெய்திடி னென்ப துன்னி யிராகவ னினிதி னேவப்
பெய்கனி கிழங்கு தேனென் றினையன பெறுதற் கொத்த
செய்ய[2]மால் வரையே யாறாச சென்றதத் தகைப்பில் சேனை.

(இ - ள்.) 'வய வெம் சேனை - வலிய கொடிய வாநரசேனை, எயதிடின - (நாட்டுவழியே) சென்றால், வையகமதனில் மாக்கள் - பூமியி

லுள்ள மனிதர்கள், மயங்குவர்-கலங்குவார்கள்,'என்பது என்பதை, உன்னி-எண்ணி, இராகவன் - இராமபிரான், இனிதின் ஏவ - இனிமையாகக கட்டளையிட,—அ தகைப்பு இல் சேனை - (பிறரால்) தடுக்க முடியாத அச் சேனை,—பெய் கனி - சொரிகின்ற பழங்களும், கிழங்கு - கிழங்குகளும, தேன் - தேனும், என்ற—, இனையன - இப்படிப்பட்டவைகளை, பெறுதற்கு-அடைவதற்கு, ஒத்த - தகுதியான, செய்யமால் வரையே - அழகிய பெரிய மலைகளே, ஆறு ஆ-வழியாக, சென்றது-; (எ-று.)—பி-ம்·—[1]மருங்கின்.[2]கல்.()

கூஉ.—அநுமான் கதைகள்சொல்லிவர அனைவரும் எளிதில் வழிகடத்தல்.

வீரரும் விரைவிற் போனார் விலங்கன்மே லிலங்கை [1]வெய்யோர்
சோர்விலாக் [2]காவற் பாடும் பெருமையு மரணுங் [3]கொற்றக்
காநிறத் தரக்க [4]ரென்போர் முதலிய கணிப்பி லாத
வார்கழலனுமன் சொல்ல வழி [5]நெடி தெளிதிற்போனார்.

(இ - ள்.) விரைவில் போனார் - விரைவிற்புறப்பட்டவர்களாகிய, வீரரும்-வாநர வீராகளெல்லாரும்,—விலங்கல்மேல்-திரிகூடமலையின் மேலுள்ள, இலங்கை - லங்கையில் வாசஞ்செய்கிற, கொற்றம் - வெற்றியையும், கார் நிறத்து - கரியநிறத்தையுமுடைய, அரக்கரென்போர்-ராக்ஷசரென்று சொல்லப்படுபவர்களாகிய, வெய்யோர் - கொடியவர்களுடைய, சோர்வு இலா - தளாசசியில்லாத, காவல் பாடும் - காவல் செயயுந் திறமும், பெருமையும்—, அரணும்—, முதலிய - முதலான, கணிப்பு இலாத - அளவில்லாத சிறபபுகளையெல்லாம், வார் கழல் அனுமன் - நீண்ட வீரககழலையுடைய அநுமான், சொல்ல - சொல்லிவர, (கேட்பதனால் இளைப்புத்தோனறாமலே), நெடிது வழி - நீண்டவழியை, எளிதில் போனார் - எளிதாகக் கடந்துபோனார்கள்.

'வீரரும் விரைவிற்போனார்' என்பதைத தனிவாக்கியமாகஎடுத்து, வாநர வீராகளான சுகரீவன் முதலியோரும விரைவிற்சென்றாகளென்று உரைத்தலுமாம். பெருமை-தொகையிலும் வலிமையிலும பெரிதாயிருக்குந் தன்மை. அரண் - மதில் அகழி முதலியன. பி - ம்:—[1]வெய்யோன். [2]வலியுமூரிப், வலியுமூரிந். [3]சொல்லிக். [4]தங்கள கணிதமும்பிறவுமெல்லாம். [5]இனிதெளிதிற்செல்வார். (கூஉ)

கூங,—அனைவரும் பன்னிரண்டுதினத்தில் தென்கடல்சேர்தல்.

அந்நெறி [1]நெடிது செல்ல வரிக்குலத் தரச னோடு
நனனெறிக் குமார் போக நயந்துடன் புணர்ந்த சேனை
யின்னெடும் [2]பழுவக் குன்றிற் பகலெலா மிறுத்த பின்னர்ப்
பன்னிரு பகலிற் சென்று தென்றிசைப் பரவை கண்டார்.

(இ - ள்.) அ நெறி நெடிது - அநத நீண்டவழியில், செல்ல - (வாநர வீரர்களெலலாம்) போக, அரி குலத்து அரசனோடு - குரங்குக்கூட்டத்துக்கு

அரசனான சுக்கிரீவனுடன், நல் நெறி குமரர் - சந்மார்க்கத்திற்செல்லுகிற ராமலக்ஷ்மணர்களும், போக - செல்ல, நயந்து உடன் புணர்ந்த சேனை-விரும்பிக் கூடவந்த வாநரசேனைகளெல்லாம்,— இன் நெடும் பழுவம் குன்றில் - இனிய நீண்ட சோலைகளையுடைய மலைவழியிலே, பகல் எலாம் இறுதத பின்னா - பதினொருநாளையுங் கழித்த பின்பு, பன்னிருபகலில் - பன்னிரண்டாம நாளில், சென்று - போய், தென் திசை பரவை கண்டார் - தெற்குத்திசகிலுள்ள கடலைக் கண்டார்கள்; (எ - று.)—பவழமலை - தொண்டைநாட்டின் மேற்கெல்லைமலை. பி - ம்—[1]இரண்டுநாளிலங்கதன்முதலினோர்கள் பொன்னடி வணங்கினரைப் புகழ்ந்துடன் பொருந்திப்போவார், [2]பவளக்குன்றினின்னுழி. (கூ௩)

திருவடிதோழுதபடலம் முற்றிற்று.

சுந்தர காண்டம்

முற்றுப்பெற்றது.

சுந்தர்காண்டச் செய்யுளகராதி.

	பகம்
அ	
அகருமஞ்ஞுஞ்	836
அகலன்மாளிகை	207
அக்காலையரககரு	702
அகலாலையரககியு	73
அங்கணமாஞால	367
அங்கதஞ்சி	513
அங்கதன்றன்னை	862
அங்கதன்றோணை	510
அங்கயற்கரு	343
அங்குசநெடு	150
அஞ்சுலையரகக	782
அஞ்சினையாத	362
அஞ்சுவண்ணத்தி	156
அஞ்சுவிததானு	384
அடலரகக்கரு	578
அடலெலாநதிகிரி	38
அடியாமுன்ன	164
அடைந்தனனடி	404
அணங்கரவரசா	134
அணங்கிளமகளி	505
அண்டமுங்கடந்தா	813
அண்டமுற்றவும	112
அண்டாகோன்	650
அணணலவ்வரி	606
அண்ணறன்றிரு	424
அணணற்பெரி	468
அததிரம்புனை	227
அந்தணர்வேள்வி	773
அந்தணனுலக	799
அந்தநகருங	810
அந்தரம்புகுந்த	338
அந்தில்வேள	346
அந்நிலையாய	445
அந்நிலையான்	277
அந்நெடுந்தானை	595
அந்நெறிநெடிது	907
அப்புறழ்வேலை	818
அயர்த்தவரரி	448
அயிர்ப்பிலா	895
அயாவுற்றரி	455
அயலயன்மலை	570
அரக்கருமரககி	736
அரக்கர்தமாற	629
அரககனேயாக	406
அரககியரயின்	325
அரக்கியரளவற்	893
அரசுவீற்றிரு	491
அரஞ்சுடர்	678
அரநதரு	687
அரமியததல	734
அரமபைமேனகை	250
அரம்பையர்விரு	735
அரிதுபோக	291
அரிபடுசீறற	550
அரியதன்று	478
அரியமஞ்சி	290
அருந்தி	475
அருநதவன்	141
அருந்துமெல்	296
அருவரைமுழை	553
அலங்கலிற	4
அலைநதனடற	526
அலைபுனல்	869
அல்லதூஉ	739
அல்லனமாக்க	482
அவிததுநின்	197
அவ்வயினரககி	322
அவ்வழிநின்னை	449
அவ்வழியநுமனு	145
அவ்வழியரகக	598
அவ்வழியவ்விருள்	136
அவ்வழியவ்வுரை	677
அவ்விடததரு	353
அவ்வுரைதூதரு	743
அழுதனர்சில	856
அளककவரி	151
அள்ளல்வெஞ்	228
அறங்கிளா	418
அறந்தலை	780
அறவனுமதனை	566
அறிந்தாரன்ன	473
அறிந்திடை	898
அறிவினிறறேறி	466
அறிவுமீதே	402
அறுபுதனரக்கா	814
அறுறையவ்விரவி	875
அனையகாலை	754
அனையவன்	561
அனைவருமலை	399
அனபழிசிநதை	457
அன்பினனிவ்வுரை	479
அனறியும்பிறிது	616
அன்றியுமமுன	879
அன்றியும் வாலி	216
அனனவேலை	376
அன்னகாலை	484
அன்னசாவ	191
அன்னதனடு	660
அன்னதாமச	166
அன்னதேமுடி	897
அனனதோபொ	344
அன்னபூஞ்	781
அன்னவற்கடிமை	900
அன்னவாகடியனே	409
அன்னவனறனனை	771
அன்னவோர	60
ஆ	
ஆகவிசசெரு	578
ஆகவிம்மொழி	511
ஆகாசெய்	158
ஆங்கவன்	884
ஆடகததரு	551
ஆடன்மாரக	576
ஆணியிறகிடந்த	241
ஆணடகைதேவி	859
ஆணடகையநுமனு	464
ஆணடகையாணட	7
ஆணடகையிராவ	315
ஆணடநாயகன்	707
ஆணடவாளரककன்	377
ஆணடுநின்றரकக	598
ஆணடுநினறு	485
ஆணடெழுந்து	798
ஆணடையினரு	903

ஆணடொழிலநும 737
ஆதலானது 486
ஆதலாற்றன 796
ஆதலானமர் 768
ஆதலானரக்கனை 740
ஆதலானிறததலே 492
ஆததுறுசாலை 171
ஆயகாலததயன் 803
ஆயதஙகொர 824
ஆயதாகிய 211
ஆயசொற்றலை 408
ஆயதுணமை 485
ஆயதுதேரினுன் 312
ஆயபெரும்படை 688
ஆயபொழுதமமதி 224
ஆயபொறறல 262
ஆயமாததானை 681
ஆயவனெழுத 24
ஆயவன வணஙகி 588
ஆயவன றன்மை 413
ஆயவன றன்னே 785
ஆயவிளுசையா 248
ஆயானையொரம் 456
ஆயிடைககவி 903
ஆயிடைததிரிச 308
ஆயிடையணஙகின 896
ஆயிடையநுமனு 630
ஆயிடையரகக 351
ஆயிடையுரை 325
ஆயிடைவீரனு 641
ஆயிரநதடககை 374
ஆயிரந்திருவிளக 320
ஆயிரமைநதொ 59
ஆயினுமைய 685
ஆரந்தாழ் 488
ஆரமுமகிலு 424
ஆரியனருந்துயர் 871
ஆரைநீயென்னை 774
ஆதருமகழி 348
ஆததவானவ 714
ஆதனகழலுந 679
ஆததாரணடத 810
ஆததனாகள 89
ஆததெழுநதரக்க 662
ஆபபுற 731
ஆலமபாததது 276
ஆலையின்மலை 182
ஆவதாகிய 196
ஆவதொன்றரு 229
ஆவியநதுகில் 293
ஆவியுணடென 507
ஆழநீர 301
ஆழிகாட்டி 746
ஆழிததேரவ 845
ஆழிகதோ 620
ஆழிநெடுவ 466
ஆழிப்பொரு 665
ஆழியகழாக 145
ஆழியந்தேரு 690
ஆழியினுய 688
ஆறிரணடடு 653
ஆறுசெயதன 619
ஆற்றலனனைய 698
ஆனைத்தானமு 539
ஆனைமுமமத 212
ஆனைமேன் 618
ஆன்றனெடு 49

இ

இகழ்வரும் 144
இகுரலிளவல் 442
இஙகுளதன்மை 900
இஙகொருதிங 768
இசையுடை 25
இசசிரததை 709
இசசைததனமை 792
இடநதமணி 529
இடநதாயுல 465
இடுகுறு 30
இதவியலிது 565
இததகையளாகி 439
இதிறததரககி 244
இததிறநிகழும 20
இததிறமினை 493
இததுணைசசிறிய 459
இநதிரசிததோ 658
இந்திரனிசை 626
இநதிரன்மூன்பு 689
இநதிரனவளநகா 137
இந்திரன்வாலி 866
இந்திரனறரு 513
இந்துநுதனின 477
இந்நாகமனனு 45
இந்நிலையுடைய 508
இநநீரினென் 50
இப்புறத்திராம 882
இப்பெருஞ்செல்வ 371
இபபொழிலினை 523
இமைத்தன்மூன் 876
இயகியரரககி 189
இரணடுதேரி 633
இருகரும்தில் 476
இருநதவெணடி 762
இருந்தனடிரிசடை 307
இருந்தனனெழுந்த 601
இருந்துபசியா 438
இருவரென்றிகழ் 369
இருளுஞால 487
இலகணஙகளு 256
இலக்கணமரபிற 175
இலஙகுவெஞ்சின 615
இலஙகையி 23
இலஙகையை 893
இலஙகையொடு 474
இலைகுலாமபூணி 692
இலலிறறஙகு 824
இவனிவனிவ 566
இவனையின்று 206
இவ்வகையனை 628
இவ்விடை 321
இழநதமணி 436
இழநதனநெடு 601
இழவெனகருயிர் 357
இழைதொடா 185
இழைபுரை 347
இழையுமாலையு 120
இளகுகரிழு 222
இளையவடனனை 802
இறஙகினநிற 218
இறந்தனர்பிற 435
இறந்துநீஙகி 584
இருகுறு 646
இறுததனன் 743
இறறவாளரகுகா 816
இறறனரரகக 629
இறறுசூல 163
இறறைபபோ 277
இனையதன்மை 233
இனையதோ 350
இனையமாட 104
இன்றிறந்த 354
இன்றுபுன்றொழிற் 846

இன்றுவீழ்ந்தது 789
இன்னணநிகழுங 864
இன்னதன்மை 252
இன்னமொழிய 431
இன்னராமிரும் 208
இன்னலம்பர 301
இன்னநிகழுமவே 544
இன்னுமீணடொரு 488
இன்னோரன்ன 388

ஈ

ஈசற்காயினு 353
ஈட்டியவலி 776
ஈட்டுவார 174
ஈண்டிவைநிகழ் 699
ஈண்டியானகடி 65
ஈண்டுநானிரு 491
ஈண்டுநாளு 357
ஈண்டுநீயிரு 404
ஈண்டொரு 506
ஈதுரைதத 383
ஈரதென்ற 229
ஈர்க்கப்பட்ட 572
ஈர்தெழு 638
ஈறிலுணுக 794
ஈனமுறுபற்ற 520

உ

உகக்கடையுலகம் 819
உக்கபற்குவை 572
உங்குலததலைவன் 786
உடைந்தவலி 689
உட்புலனெழு 97
உணடநெருப்பை 846
உணடாயது 454
உண்டுதுணை 472
உதைக்கும 633
உதைப்புணடான 702
உந்தாமுனுலை 58
உய்த்தவெஞ்சர 716
உரகிளர் 865
உரகநகொடே 303
உருப்பசி 336
உருமொதத 589
உரைததானுரை 62
உரையின் 827
உலகமூன்றும் 616
உலகமொன்றெ 354
உலந்ததுதானை 638
உழைகுலத்தீய 442
உழைகுலநோக்கி 656
உழையுழை 238
உள்ளுடை 181
உறகுகின்ற 763
உறுசுடா 542
உறுவதென் 616
உறறகலா 847
உற்றகாலை 722
உற்றவாளி 713
உற்றுனிந்திர 666
உற்றுடனரச் 631
உற்றுணடாய 745
உற்றுநின றவ 202
உறறுறுதேர் 639
உன்குலமுன்ன 887
உனபெருநதேவி 886
உன்னிறம் 311
உன்னினா 397
உனனுநாரை 213
உன்னையுநகேட்டு 373

ஊ

ஊக்கியபடை 632
ஊடினாமுத 756
ஊழிககாற்ற 712
ஊழியினிறுதி 501
ஊழியெழுந்து 689
ஊறியநறவு 19
ஊறுகடிதுறு 91
ஊனமுற்றிட 531
ஊனிலோடு 829
ஊனெலாமுயிர் 577

எ

எஞ்சலக்கண 583
எடுத்தரககரை 575
எட்டினவிசும 608
எட்டுததோளா 154
எணடிசை 462
எணணரும 509
எணணிறரு 530
எணணியவிரு 659
எணணினுக்கள 324
எணணுடை 142
எணணெய்பொன் 313
எணபதினுயிர 687
எததனைகால 166
எததியவயில் 591
எந்தைநின் 514
எந்தையதருளி 737
எந்தையாய் 492
எநதையை 728
எபபொழுதிப் 399
எய்ததடுகணை 639
எய்தவனுரைதத 413
எய்தவெற்றி 580
எய்தான்வாளி 667
எய்தினனநும 883
எய்யுமினீருமின் 762
எரிசுடர்மணி 233
எருவைககு 283
எல்லாமுட்கு 157
எல்லியினி 143
எல்லையிகந்தார 847
எல்லையிலுவகை 742
எவ்வமர 152
எவ்வழி 448
எழுகவெம் 904
எழுந்தனர் 125
எழுந்துநின் 874
எழுந்துபொற் 833
எழுந்துயர் 462
எழுந்தோநகி 57
எழுபது 410
எள்ளரியதோ 434
எள்ளருமுரு 328
எள்ளாநில 426
எள்ளுறை 284
எறிததகுநகும 124
எறிந்தனநிருதர் 662
எறிந்தனரெய்தன 631
எறிந்தனவெய்தன 601
எற்புவான் 253
எற்றுறுமுரசும் 560
எனநினைந்தெய்த 407
எனவிவையியம்பி 651
எனவுரைததனவிற் 866
என்புழி 882
என்றலுநகரநகள் 858
என்றலுந்திரிசடை 311
என்றலுமிலநகை 781
என்றலும்மிவை 796
என்றவனிறைஞ்ச 405
என்றவனுரைதத 878

என றவனுவநது 660
என்றவன் 689
என்றறத்துறை 375
என்றனளரககி 545
என்றனளியம்பி 319
என்றனனியமபி 170
என்றனனிலஙகை 132
என்றிவைமுதல 654
எனறிவையினை 334
என்றுகைம்மறி 207
என்றுசோலை 286
எனறுணாநது 257
என்றுதோளிடை 765
எனறுநினையா 524
எனறுரைதகிட 874
என்றுரைதகினி 516
என்றுரைதகெழு 905
என்றூக்கி 275
எனறெண்ணி 278
எனறெனறுயிர் 396
என்னுமுனன 160
என்னுடையீட்டி 783
என்னுமளவி 614
என்னுமாதகிர 798
என்னைனுயக 295
என்னையும 767
என்னொரின 516

ஏ

ஏகநாயகன் 753
ஏகவாளி 305
ஏணிலவொரு 461
ஏதியஙகொழு 184
ஏதியேநதிய 203
ஏதியொன்றுற் 609
ஏததும்வெனறி 489
ஏந்தலிவ்வகை 200
ஏந்தினுடலை 675
ஏமபலோடெழு 876
ஏயநன்மொழி 478
ஏயநாளிறநத 861
ஏயப்பன்னின 747
ஏயநதெழு 641
ஏய்வினை 133
ஏாகெழுதிசை 595
ஏல்கொடு 849
ஏவலினெய்தி 586
ஏழுநூறோசனை 281
ஏழுயருலக 767
ஏழுலகின் 148
ஏழைநின்னொளி 364
ஏறினனென்ப 652
ஏறினன்விசும்பி 678
ஏறுதேரி 718

ஐ

ஐயகேள்வைய 165
ஐயநின்சரண 514
ஐயனுமமைந்து 599
ஐயுறலுள 405

ஒ

ஒக்கவொக்க 809
ஒடிந்தன 602
ஒத்துயா 460
ஒருகணதிரண்டு 899
ஒருகையா 668
ஒருபதுகை 323
ஒருவாவாய் 863
ஒழிந்தவா 640
ஒளிவரு 732
ஒறுத்தலோ 130
ஒன்றுகேளுரை 379
ஒன்றுநீயுறுதி 683
ஒன்றோவிதனுன் 701

ஓ

ஓஙகலம்பெரு 728
ஓஙகிருந்தட 657
ஓசனையுலப்பி 44
ஓசனையேழகன் 190
ஓடிககொனற 573
ஓடினுருயிா 674
ஓதநீருலகா 792
ஓவியமனைய 187
ஓவியம்புகை 744

க

கடாகடந்து 745
கடலுறுமததி 16
கடவுட்படை 806
கடவுளாககரச 741
கடற்படுபணில 423
கடிகசும்வல் 374
கடுவையின 687
கட்டியவாள 556
கட்டேறுநறு 700
கணகொள 546
கணடநிருத 522
கணடபினிளைய 443
கண்டலமறிவொடு 461
கண்டனமொரு 587
கண்டனரரக்க 873
கண்டனனறுமனு 403
கண்டனனிலஙகை 8
கண்டனன்வாலி 880
கண்டனென்கற்பி 885
கண்டிலன் 293
கண்டுகண் 248
கணடுபோயினை 747
கண்டுவருமென் 279
கண்ணியநாள் 280
கணணனுருயிரே 693
கண்ணினுமுளை 889
கணணின்மீச 717
கதறினவெருவி 541
கதிரெழுந்தனைய 673
கமையினுடிரு 292
கயன்மகிழ் 676
கயிலையினொரு 735
கரஙகள்கூப்பி 845
கரதலதகினு 579
கரமபயின் 502
கரிகொடு 602
கரிததமூன் 134
கரிந்துகிந்தி 838
கரிபரிவேஙகை 324
கரியநாழிகை 217
கருஙகடல் 152
கருஙகடலரக்க 600
கருடனில் 906
கருதுகாலினு 575
கருமேகநெடு 391
கலஙகலில் 146
கல்லாமதி 392
கலலினுமவலி 827
கவ்வுதீககணை 232
கழலுலாககாலுங 127
களியாவுள்ள 159
களவாயரக்கி 87
கள்ளுறக்கனி 128
கறஙகுகால் 117
கறுததமாசுண 724
கறுததெழுகிற 607
கற்றைவெண் 140
கன்மத்தை 450

கா

நாகமுங்கழுகும் 655
நாசறுமணி 540
நாட்டுவாரின்மை 797
நாணடற்கொத்த 390
நாதககடுங 80
நாந்தனமெல் 758
நாந்துறு 731
நாமரங்களி 533
நாயத்தாற் 126
நாயெரிமுளி 663
நாய்ந்தன 360
நாய்ந்தேழுலக 72
நாரணங்கேட்டி 778
நாரகருந்தட 581
நாரமுழுக்க 831
நாரேக 61
நாவரை 870
நாற்றிககடிய 609
நாற்றினை 590
நானகமயில் 173
நானிடையத்தை 693
நானிமிர்வெஞ் 643
நானேகாவல் 608

நி

நிங்கரா 683
நின்னரமிதுனம 188

நீ

நீண்டதுவேலை 27
நீதகளிசை 76

நு

நுடிமைமூன் 360
நுணடலக்குழை 672
நுதிதுத்தேருங 612
நுரகநுலவலங 723
நுரக்குவாத்தை 797
நுராவருங் 510
நுவித்தபன் 751
நுழந்தைவெண 263
நுழலும்வீணை 103
நுழவிஞாயிறு 261
நுழையுங 533
நுறிதுவானென்று 710
நுறிததநாளிறந்த 872
நுறுதினதவமுயல 562
நுறுநிநோக்கி 197
நுறுமுனி 21
நுன்றுநீயெடு 365
நுன்றுளமர 636
நுன்றேகடி 451
நுன்றொடு 42

நூ

நூசியாவி 352
நூடிநான்கு 232
நூடுபாணி 756
நூந்தன்மென் 518
நூம்பினகை 588
நூயகொழு 823
நூயததரு 621
நூறினநாளவ 873
நூன்சுன் 53

நெ

நெட்டேனீயுயிர் 497

கே

கேடகததோடு 349
கேட்டலுங்கிளர் 741
கேட்டலும்வெகு 648
கேட்டவன் 865
கேட்டியடி 472
கேழிருமணி 596
கேழிலாணிறை 331
கேழுலாமுழு 37

கை

கைபரந்தெழு 623
கைததோடு 494

கொ

கொடிததடங் 606
கொடியைப்பற்றி 821
கொடுநாலொ 56
கொட்புறு 31
கொண்டதோருரு 273
கொண்டபேரூக்க 265
கொண்டபோரி 480
கொண்டவான் 118
கொண்டனரெதிர 729
கொண்டகொற்ற 719
கொய்தளிர 650
கொல்லலாம் 766
கொல்வெனென் 378
கொல்வாமன் 162
கொல்வாலுற்ற 388
கொற்றவற்காணடு 412
கொற்றவன்பணி 879
கொன்றுனுடன் 666
கொன்றுனே 279

கோ

கோசிகததுகி 833
கோதறுங்குவளை 178
கோவையுங்குழை 189
கோளாறுயிர 498

ச

சக்கரந்தோமர 607
சக்கரமுலக்கை 557
சங்குகள்தாரை 688
சங்குகள்முழங்க 686
சங்கொடு 185
சந்தப்பூம 176
சந்தனங்க 533
சந்திரனருக்க 689
சலந்தலை 585
சலிததானைய 612
சவிபடு 235
சன்னவீரத்த 341

சா

சாகநெடு 531
சாகாம்ருக 88
சாந்தளாவிய 264
சாயாவரங் 85
சாய்ந்தமாருதி 722
சாரயனின் 847

சி

சிரகவண் 335
சிகையெழுஞ் 705
சிததிரப்பத்தி 138
சிந்தாரத்தின் 157
சிந்துராகததின் 752
சிந்துவாரங் 536
சிந்தையுவந்த 689
சிரநெரிந்த 703
சிலந்தியுண்ப 615
சிறகுமாமி 490
சிறியவும் 416
சிறுகுகால 247
சிற்றியற்சிறு 381
சின்னணீ 500

சீ

சீரியிவ்வுலக 447

சு

சுட்டினனின் 459
சுருங்கிடை 458
சுற்றினதேரினர் 851

சூ

சூடையின்மணி 518
சூர்தடிந்த 624
சூலமழுவா 150
சூலம்வாண 555
சூலமவாள் 323
சூலிருமபெரு 501
சூழுமவெஞ்சுடர் 843

செ

செப்புறலென் 506
செம்பொனிற் 686
செய்திசெய்தி 610
செயதொடர் 840
செல்லொடு 597
செலவமோ 334
செவ்வழி 460
செவ்வான் 66
சென்றன 691

சே

சேயிதழ்த் 415
சேறியைய 512
சேறும்வண் 574
சேற்றிளமரை 870

சொ

சொல்லிடவெளி 551
சொல்லியவனை 774
சொற்பிரியா 398
சொற்றூகள் 90

சோ

சோகத்தாளாய 892
சோகம்வந்துறு 508
சோனைமுதன் 525

த

தக்கதென் 359
தகைந்தவச 875
தசும்புடை 92
தடககை 35
தடிததாமென் 162
தடைபுகு 195
தணிகின்ற 454
தணிப்பரும 720
தண்டலினெடு 871
தண்டலைவாழை 242
தததமாட 576
தந்தாரமு 672
தந்திரிநெறி 345
தமபன்றாம 471
தம்பியையுன்னு 680
தம்முனைககொல் 787
தயிரிறத 244
தருமமேகாத்த 333
தருவெலா 577
தருவொன்றிய 394
தலஙகண 748
தழஙகுபேரி 109
தழலவீச 393
தழுவாநின்ற 271
தழுவிலஙகை 828
தழைத்தபொன் 289
தழைந்தமொய் 226
தளஙகெழு 416
தளைகொளுந்தி 833
தள்ளற்கரு 48
தனிக்கட 209
தனியினின்ற 377
தன்னிறத 340
தனனிறை 817
தன்னுடை 589
தன்னைநோக்கி 492

தா

தாக்கிகலிரா 504
தாங்கணைப்பணில 417
தாதுகுறு 15
தாமரைத்தடம் 536
தாம்பெனவாலின் 644
தாயேயனைய 811
தாரகைசுடா 14
தாருகன்குருதி 695
தாரொடுமுரு 635
தாவருந்திரு 676
தாவில்வெஞ் 673
தாழித்தண 499
தாழிரும் 543
தாளிணைவிழுந்தா 682
தாளகளாற 572
தாளகளின் 857
தானையுமுலந்த 647
தானைமாககொடி 618

தி

திக்கயவலியு 684
திஙகளொனறி 489
திஙகள்வாணுதன் 761
திணடிறலரககா 733
திணடிறலவன் 884
திண்ணென் யாக் 720
திரண்டிலவொளி 422
திரண்டுயர் 643
திரியுமாலிலங்கை 316
திருகுவெஞ் 111
திருகுறுஞ் 556
திருத்தியபளி 177
திறந்தாள் 86
திறநதிறம்பிய 790

தீ

தீட்டியவாளென 768
தீட்டுவாளனைய 674
தீண்டருந் தீவினை 139
தீண்டிலனென் 891
தீண்டுவானெனி 483
தீமைநன்மை 789
தீயசெய்குநர் 116
தீயவாதீய 544
தீயினிற்சேர 686
தீயுறுபொறி 634
தீயெழுபொன் 687
தீயேயென 71
தீர்த்தனுங 509

து

துஞ்சாதாரும 391
துணாத்ததாரவன் 787
துணடததுண 651
துணடபபிறை 82
துப்பினுற்செய்த 290
துப்புறுபரவை 411
துயிலில 312
துயிலென 288
துள்ளியமகர 29
துன்றுசெம 750
துன்னலர் 816

தூ

தூஙகியபாய் 643
தூணெலாஞ் 547
தூதுவந்தது 788
தூதுவரோடி 741
தூவியமலா 528
தூளிமிடை 689
தூளியினிமிர 563

தெ

தெம்மடஙகிய 291
தெயவத்தசச 193
தெரிந்தொளிர 141

தெருவிடமில் 560
தெவ்வளவிலா 146
தெள்ளியமாருதி 852
தெறிததவன் 571
தென்றமிழுரை 373
தெனனகு 240

தே

தேக்குறு சிகர 13
தேநகுகநகை 300
தேண்டிநோ 444
தேரிற்சென்றெ 668
தேருமயரனை 706
தேரேபட்டன 664
தேவருமவுண 138
தேவரும் பிழை 330
தேவரும் பிறரு 776
தேவரென்ப 108
தேவரோடி 757
தேவாகள் 552
தேவர்தானவர் 763
தேவாதேவி 359
தேவியனேமி 267
தேவியை நாடி 784
தேறன் மாந்தினர் 123
தேனவாம் 829
தேனுஞ்சாந்த 112
தேனுறைதுளிப் 530
தேனொடு கிழநகு 856

தை

தையலை வணநக 896

தொ

தொக்கதாம் 622
தொநகலின் 687
தொடற்கரு 326
தொடுதத 641
தொண்டை 539
தொழுதுவாநகி 519
தொளையுறு 344

தோ

தோடுழுத 271
தோடொறு 339
தோட்டொடு 541
தோமர.....கூர் 591
தோமர.....சூல 654
தோயசசனன் 850
தோரண முறிந்த 317
தோல்கிளா 628
தோளாற்ற 274
தோற்றனை 363
தோற்றினா 850

ந

நகையெரி 235
நக்கசெம 230
நக்காளை 160
நச்சுடை 727
நசசென 243
நஞ்சனையான் 310
நடததலரி 432
நடிததுவாழ் 274
நநதவானததுர் 537
நந்தனவனதது 596
நரமபுகண் 755
நலததமாதர் 214
நலநதுடிககின்ற 308
நலனுறுகணவா 183
நல்லதுரை 802
நலலைநல்லை 708
நல்லோய 495
நறவுநாறி 214
நறகடனனிது 830
நற்றாயினு 61
நனறாயநல் 496
நன்றுநன்றி 487
நன்றுநன்று 610
நன்றென 863
நன்னகர 95

நா

நாகமொன்றி 512
நாகாலய 99
நாடிஞாநாடி 675
நாட்டினகரி 804
நாணுளுநதா 153
நாமததாழ் 790
நாலிலொடு 39
நாவியுநநறு 842
நாளுகெல்லை 708
நாணநாண 102
நானநெய் 337
நானிலமதனி 555

நி

நிதினெடுநகிழ 626
நிததநியம 223
நிலநதுடி 258
நிலவிலநகிய 834
நிறநகுங்கும 52
நின்றனதிசை 597
நின்றனனேனை 645
நின்றுணிமிர்ந்தலை 83
நின்றிசை 772
நின்றுபோதம் 716

நீ

நீநகுவென் 853
நீடுறுகீட்டிசை 420
நீண்டமுடி 433
நீண்டவாளெயிற் 765
நீண்டவிழி 437
நீண்டவீரனு 712
நீணடானுடனே 74
நீணடுகுழன்று 430
நீததாயோடின 670
நீந்தாவின்னலி 495
நீப்புண்ட 694
நீயினியென் 905
நீரிடுதுகில 549
நீரிடைக்கண 736
நீருமவையமு 114
நீரைவற்றிட 841
நீர்கெழு 848
நீரதெழு 504
நீர்மாநகடன் 66
நீரேமேற்பட்டா 57
நீலகின்ற 825
நீலமேமுத 216
நீலனுநகுமுதனு 875
நீலனைநெடிது 904
நீனிறகுன்றி 339
நீனிறகிருத 820
நீனிறவரக்கர் 505

நு

நுகம்படு 688

நூ

நூலேந்து 47
நூறிடமாருதி 849
நூறுநூறு 714
நூற்பெரு 260

நெ

நெயதலை 646
நெரிநதன 602
நெருக்கி 832
நெறிகொடு 520

நே

நேமியோ 771

நை

நையுறுசிந்தை 457

நோ

நொய்யபாசம் 807

நோ

நோககியகட் 770
நோற்கின்றார் 356

ப

பகைப்புலனணுகி 800
பகையென 194
பச்சிலைத்தாமரை 421
பஞ்சாரதொடு 835
பஞ்சியூட்டிய 101
படியெடுத்துரை 414
படுத்தான் 499
பண்டருகிளவி 877
பணணிமை 220
பணமணிககுலம் 621
பதவியமனித 382
பத்தியிற்றோ 686
பத்துளதலை 363
பந்தெனவாடி 688
பயிலெயிற்றி 342
பரித்தசெலவ 304
பரிந்துபுலமபு 613
பருகுதீமடு 826
பருதிபறறி 832
பருவரை 568
பல்லாயிர 54
பல்லியந்துலை 592
பவளமாककொடி 534
பழியிலதுரு 659
பழுதின்மன் 228
பளிக்குமாளிகை 122
பளிக்குவேதிகை 201
பளிஙகுசெறறி 215
பள்ளநீரயோததி 383
பள்ளியின் 186
பறவையார 534
பறைபுரை 568
பற்றிककொண்ட 669
பறறிததாளொடு 570
பற்றுதிா 848
பனிக்கசசுர 427
பனியுறுசோலை 559
பன்னककவரசா 239

பா

பாகமல்லது 711
பாடலம்படர் 534
பாடுவார்பல 118
பாதவமொன்று 849
பாரமாமர 715
பாராநின்ரு 155
பாரைஞ்ஞூறு 793
பாரெழுவாட்படை 687
பாத்தன 688
பாத்தனள் 852
பாழிநன்னெடு 210
பாழியபணை 440
பானலுண 236
பானிறுதத 627

பி

பிடித்தனா 868
பிடிமதம 315
பிடியுணடார் 704
பிரிவருமொரு 605
பிள்ளபபட்டன 664
பிறநதுளார 795
பிறைக்கடை 636
பிறாமனை 398
பிற்கூடிய 456

பு

புகலருமுழை 11
புகைநெடும 604
புककவழி 387
புककாரமரா 613
புककுநின்று 259
புடையிடை 569
புணடாழ் 671
புணடொடா 475
புதைபட 569
புரந்தரன் 706
புரமபிழை 794
புரியுநன்னெறி 246
புரையுறு 503
புலிததோலிற் 687
புலிபடு 186
புல்லலேற்ற 430
புல்லியமுறு 554
புல்லுமபொற்ப 538
புவனமெததனை 769
புளிக்குங்கண்ட 500
புள்ளிஞெடு 528
புள்ளுயர்த்த 749
புறததுறலஞ்சி 36
புனைகழலி 329
புனறலை 630
புன்னெழிலரக் 411

பூ

பூக்கரிந்து 830
பூணடாள் 497
பூதலப்பரப்பி 799
பூருதணவா 355
பூவாலிடை 51
பூவிலோஞதி 370
பூவுமபூநிற 718
பூழியின் 194

பெ

பெணபாலென 85
பெணபாலொரு 71
பெணமையும் 358
பெயர்ககுஞ் 582
பெரியநாளொ 172
பெரியமாமர 539
பெருந்தகை 748
பெற்றதாய 297
பெற்றுடை 364

பே

பேணநோற்ற 332
பேணும்முணா 395
பேயமன்றி 828
பேழ்வாயாக 84
பேழ்வாயொர 70

பை

பைஙகழல 733
பையயவுட் 902

பொ

பொஙகொளி 547
பொசிவுறு 169
பொடிததன 902
பொடிததெழு 826
பொதும்பா 758
பொயமமுறை 542
பொருகடன் 652
பொருதமை 860
பொருதிசை 594
பொருந்திய 417

பொருவருமரகத 419
பொருவருமுருவ 45
பொருளுகாமமு 791
பொருளுமயாமும 356
பொறிதாவிழி 564
பொறையிருந் 397
பொறகணுன் 370
பொற்பிறகக 481
பொன்கொணடிழை 98
பொன்பிறழ் 13
பொன்மனை 321
பொன்மானுரு 452
பொன்றிணிநத 625
பொன்றிணிபொல 473
பொன்றிணிமணி 527
பொன்றிருகதிய 843
பொன்னகா 137
பொன்னலதில்லை 886
பொன்னின் 121
பொன்னின்று 558

போ

போதமும் 777
போதாயின 451
போயிறறீர 788
போயினர் 861
போயினனரககன் 385
போய்வருங 855
போரியறகை 225
போரியைந்தன 107
போழ்ந்தன 880

ம

மகரவீணை 121
மக்களுஞுசுறற 314
மங்கையா 318
மஞ்சலடை 517
மஞ்சுறழ் 850
மடகலரி 147
மணிகளெத்துணை 105
மணிகொளகுட்டி 532
மணிகொள்வாயி 199
மணியிலுய 822
மணடலங 553
மணணடி 94
மண்ணிறகனாட 805
மணணிறறீய 387
மணவெணுடு 891
மதித்தகளி 642
மதுவனநதனை 867
மத்துறுதயிரென 508
மநதாரமுநது 77
மந்திரகிழவா 653
மயகில்பொற 538
மரகதகொழு 751
மரகததினு 110
மரமடங்க 107
மருங்கின் 839
மலைகளை 627
மலையெடு 366
மல்லடு 361
மலலொடு 604
மழுவின 305
மழைகிழி 34
மழைகளும் 566
மறகினுங 574
மறநதனென் 310
மறநதிறம 372
மறறவன 408
மற்றினிபபல 812
மனையிறபொலி 55
மன்னவன 318

மா

மாகாரின 100
மாசுணட 329
மாடகூடங 198
மாடிருந்த 764
மாடுநினற 285
மாட்டாதா 496
மாணியாம் 33
மாண்டதோர் 96
மாணடனளவ 872
மாண்டாளரககி 89
மாணடுபோயின 294
மாணடேனெனி 468
மாணபிறநத 894
மாயிருநெடு 633
மாருதிகூவி 688
மாலையுஞ்சாந்து 347
மாவொடு 26
மாறளாவிய 760
மானமுற்ற 580
மானுயரிவரென 368
மானுயர்த்திரு 255
மானெனபதறி 379

மி

மிகுந்தகை 269
மிக்கவெம் 838
மினல்பரந் 836
மினமேற 75
மின்னகுகிரி 593
மினனேரெயிற்று 467

மீ

மீட்டவருரை 587
மீட்டுமதிரிசடை 321
மீட்டுமினி 522
மீட்டுமுரை 435
மீணடுரை 441
மீதிமகல 825
மீபுரவிணணிடை 635
மீயோகு 47
மீனுய்வேலை 671

மு

முக்கணுனாதி 649
முககணுகி 204
முடகுநெடு 526
முடிந்ததோ 703
முடிந்தன 525
முடியாமுடி 395
முட்டினுர 573
முததங்கொல் 425
முததலையெஃகன் 801
முததலையெஃகினு 869
முந்தரம்பை 202
முநதியமபல 623
முமமையாமுலக 439
முயற்கருங 225
முயிறலைதெழு 730
முரனென 298
முழுமுதற்கண 637
முழுவதுக்தெரிய 815
முழுவதுமிவ்வுரு 463
முறிநதது 640
முறிநதவில் 713
முற்றமுனி 611
முனிபவரரககி 332
முனியுமாலெமமை 864
முனியொடு 309
முன்பிறசிறநதார 64
முனமுன்னின 386
முனனமயாவரு 115
முன்னியகனை 192

முன்னேகொல் 498

மூ

மூசியவுயிர் 193
மூணடசின 642
மூலமுநடுவு 779
மூவகையுலகை 328
மூவருந்தேவர் 381
மூளும்வெம் 837
மூளையுமுதிர 603
மூன்றுறற 69

மெ

மெய்த்ததாதை 303
மெய்த்திருப்பத 299
மென்றொழிற 270

மே

மேகநால் 211
மேக்குறசசெல் 93
மேருவைநிறுத்தி 148
மேருவைமுழுது 41
மேருவையுருவல் 362
மேலுறவிராவணற் 504
மேவுசிந்தை 483
மேவும்வெஞ்சின 582

மை

மைத்தடகணை 727
மைந்நாக 854

மொ

மொம்மணி 168
மொய்யுறுசெவி 12

மோ

மோக்கு 437

யா

யாமுதறகுறித்த 881
யாரவணிறுத்த 878
யாவதுமினி 860

வ

வஞ்சநகொணடா 161
வஞ்சமுநகளவும 645
வஞ்சனைமானின் 400
வஞ்சனையரகசா 897
வஞ்சனையரகசனை 521
வஞ்சியமமரு 463
வடநதரு 219
வடநகளுந 131
வடிததாய் 284
வடியுடை 730
வட்டவெஞ்சிலை 704
வணநகிய 880
வணடலம்பு 535
வணமைகநதிரு 753
வணமைநீநகா 135
வந்தகிங்கர 583
வந்தவாகள் 523
வநதவர்சொல்ல 851
வந்தவன்மேனி 446
வந்தனாதென்றி 877
வநதனனிராகவன் 139
வந்தானிளையா 453
வந்திரைத்தனா 725
வநதெனைககரம் 490
வயிரொலி 564
வயிர்கள் 600
வயிறறிடை 322
வரமபிலா 320
வரவுற்றா 663
வரிந்துற 636
வருநாட்டோன்று 429
வருந்தவின 401
வருநதேனது 63
வரைகளை 563
வரையினை 835
வலநகை 42
வலஞ்சுழி 419
வல்லரகசன் 281
வல்லியன் 401
வழநகுந்தெய்வ 163
வழநகுதோகளி 620
வளாநதகாதலர் 245
வளாந்தநாணினன 376
வளையும் 205
வளையெயிற் 739
வள்ளிநுண 129
வறிதுவீழ்த்தனை 788
வனகண் 297
வன்மருநகுல் 287
வன்றநதவரி 9
வனறிறற்குரிசிலு 881

வா

வாநகியவாழி 899
வாநகினண 436
வாநகினுடன் 517
வாசலிட்ட 822
வாசவன் 624
வாமநறை 220
வாயில்வழி 153
வாய்வழி 868
வாராதொழி 393
வார்மதககரி 632
வாலிகாதலனை 858
வாலிதன்னிறுதி 740
வாலியிளவ 470
வால்விசை 23
வாழிசானகி 352
வாழுமன்னுயிர் 105
வாளாலேபொர 669
வாளினுற்றெனி 231
வாளுறைவிதா 561
வாளொத்தொளிர் 68
வாள்களிற்றன 571
வானகதனை 823
வானமாதரு 842
வானமாதரோ 119
வானரநகளும் 754
வானவரெறிந்த 557
வானவரே 282
வானவர் 192
வானுந்நிலனும் 114
வானறொடா 168

வி

விசையின் 634
விளுசையுலக 527
விடந்திரண்ட 661
விட்டனனிலநகை 548
விட்டுயர் 851
விணடொடா 317
விணணவரேதத 32
விண்ணினீளிய 502
விணணினை 848
விரவுபொற்கழல் 619
விரிதளிர் 350
விரிநதன 221
விரிமழை 326
விரைவினுற்ற 584
வில்லும்வேலும் 839
விழுதல் விமமுதன் 288
விழுந்தாணுந்தா 165
விழுந்துபாரடை 717
விழைவுநீநகிய 251
விளரிசசொல் 124
விளிதலுப்பின் 40
விறபகலின்றி 316

விற்படர் 179
விற்படை 132
விற்பெருந்தட 888
வினையுடை 503
வின்மறை 594

வீ

வீகுகியவீரனை 631
வீசுறுபசுங 143
வீடினதன்றறன் 327
வீட்டுகுகால 358
வீரரும்விரை 907
வீரன்வன்றடக் 636
வீரனும்விரும்பி 167
வீவாய்நீ 493

வெ

வெங்கனன் 331
வெங்கார் 79
வெஞ்சின 367
வெப்படை 692
வெயிற்கதிர் 656
வெயிலியற் 18
வெய்தின்வான் 28
வெய்துறுபடை 558
வெருண்டனர் 603
வெருளுமவெம் 840
வெவ்விராதனை 306
வெவ்விலை 697
வெள்ளமேழுபத் 469
வெளுத்ததமென் 811
வெளளமொரு 149
வெள்ளமோர 688
வெள்ளவெஞ் 658
வெள்ளிவெண 266
வெள்ளியகுகிரி 548
வெள்ளியிற்பொன் 819
வெள்ளையெயிற்றா 644
வெறுப்புண்டாய 793
வெற்பிளுலியன்ற 814
வெற்றிநாணுடை 480
வென்றிவெமபுரவி 605
வென்றேனிதன் 700
வென்றேருமிருப் 380

வே

வேகம்விண்டு 515
வேகுகைசெற்று 532
வேந்தன்கோயில் 808
வேரியுமடகுகின 217
வேரொடுமறிந்த 525
வேலையின்னிடை 479
வேலையுளிலங்கை 890
வேல்வாள் 156
வேறிரண்டனவும் 681
வேறினிவிளமப 477
வேறுமுண்டுரை 482
வேறுற்றமனதத 452
வேற்றுப்புல 59
வேனில்விளை 529

வை

வைத்தபின் 901
வையகமதனின் 906
வையந்தந்த 385

அகடு மத்தி, பஞ்ச-49
அகதுறையழகன், ஊர்-102
அகம்=வீடு, உருக் - 17. மனம், நி நத - 73
அகருதூபம், ஊா - 29
அகலுதல், உருக - 61, பொழிலி - 1
அகல்உறுதல் - நீங்குதல், உருக் - 87
அகவுதல் - கூதாடுதல், நிந்த - 13
அகழி × கிடந்ததேழ்கடல், ஊா-146 இராவணன் படை, ஊர்-149
அகழிஞ்சி, ஊர் - 166
அகழிநீர் யானைமத முதலியனநாறு தல், ஊா - 150
அகழியிற்பலவகை மணிகளினொளி வீசுதலின் வருணனை, ஊா - 155
அகழ்தல்=பேர்த்தெடுத்தல்: சூளா - 24 [றல்காணடி, பாசப் - 11
அககனைகொன்ற குரங்கினையாற்
அக்கன், ஊா - 144
அங்கணமாஞாலம், நிந்த - 49
அங்கதன் ததிமுகனுக்கு முகமன் சொல்லல், திருவடி - 50
அங்கதன் தோளமிசை விளங்கும் இளவல் + (உதய) மலை பொங்கு வெங்கதிர், சூளா - 73
அங்கதன் முதலியோா ததிமுகாதிய ரை வெல்லுதல், திருவடி - 24, 25
அங்கதாதியர் செயல் சீதைமேம்படு கற்பினளென்று புகலும், திரு வடி - 41
அங்காரதாரை யனுமானை நாடி வரல் × மதுகைடபர் திருமாலை நாடிவரல், கடாரூவு - 76
அங்குரம்=முளை, உருக் - 53
அசனி - இடி, பாசப் - 4, கிங்க - 1: வசிராயுதம், கிங்க - 15
அசனியினணிகள், கிங்க. வதை-15
அசுமபு - ஊற்று, கடரூவு - 89
அசுமபூறுதல், வடிதல், ஊர் - 209
அசோகவனததுச சீதாபிராட்டி தங கிய மரம்மாத்திரம் அழியாமை - மும்முறை யுலகமெல்லாம் முற றுறமுடிவதான வம்முறை யை யனவைகுமால்நிற்றல் பொழி-44
அசோகவனத்தைத் தீசசுடவிலலை யென்று வித்தியாதரா கூறுதல், இலங - 61
அசசஞ்சுற்றல், சம்பு. வதை-14
அசசுறுத்தி விடப்பெற்ற சீதை × பொங்கராநுங்கிக் கான்ற துய வெணமதி· நிந்த-75
அஞ்சனம, ஊர்-4, 109 [48
அஞ்சனைசிறுவன், நிநத-20, பஞ்ச
அஞ்சுதல்-பயப்படுதல்; நிந்த-48
அஞ்சுவ(ண)ண வாடை, ஊா-79
அடகு, காட்சி - 15
அடங்குதல், உருக - 106
அடர்கள்-வெற்றிகள், பிணி-33
அடர்தல்-நெருங்குதல், பஞ்ச-61
அடாத்தல் × வருந்துதல், நிந்த-25, சூளா-68 [20
அடல்-வலிமை, கடரூ-31, பொழி -
அடிக்கொழுந்து, நிந்த - 45
அடிதாழ்தல், சூளா-2
அடித்து உண்ணுதல், கிங்க - 61
அடிபெயர்த் திடுதொறும் பரவை திரைதவழ்ந்து இலங்கையிற்றி சைதொறு நிமிர்தல், நிந்த-17
அடியினிறைஞ்சுதல், சூளா-28
அடியுறுதல் - முன்னடியிலிருத்தல், கடரூவு-91
அடுதல், நிநத-69
அடுத்தல் - நேர்தல், சேர்தல். உருக்-35, 68. தக்கதாதல், நிந்த-59
அடைகல், பாசப்-33
அடைய - எல்லாம், திருவடி - 37: அட்ச குமாரனுக்கும் அனுமனுக் கும நிகழ்ந்தபோா: அட்ச - 31, 37: அட்சகுமாரனை யனுமா னொழித்தல், அட்ச - 38: அட்ச குமாரனோடு சென்ற நால்வகைச் சேனைமிகுதி, அட்ச - 8. அட்ச சேனைகளும அநுமா னுக்கும் நிகழ்ந்தபோா, அட்ச - 24, 30: அட்சனணிந்த குண்டலம் முதலி யவற்றினின்று மணிகளுகுதல் ×

கொண்டலினின்று மின்னினம் விழுதல்-37. அட்சனைக் கண்ட அநுமானுடையஜயுறவு-18. அட்சன்றேரேறுதல்-7
அணங்கு-தெய்வப்பெண், சூளா-64
அணங்கு, நிந்த-63
அணிகலம், உருக்-34 [79
அணுக்கன்-நெருங்கியவன், கடருவு-
அணுததப்புறம், உருக்-33
அணடப்பொகுட்டு - அண்ட வுருணடை, பிணி-113
அணடமனந்தம, கடருவு-70
அணடம-உலகவுருணடை, உலகம், பொழி-60, நிந்தனை-64. ஆகாயம், கடருவு-24 [ஊர்-24
அணடம் திருமாலுந்தி பயந்தது,
அணடர்-தேவர், சூளா-15, 82
அணடாகோன், அட்ச-4
அணணல், உருக-51
அணமுதல், கடருவு-89, உருக்-69, சூளா-78, பாசப்-7
அதிகாயன், ஊர்-144
அதிநலம, அட்ச-43
அததிரம-மலை, ஊர்-170
அத்தைக்குற்றவருத்தம், பாசப்-19
அநாயம்-அநியாயம, நிந்தனை-51
அநதகன், ஊர்-48
அந்தமில்நெடுநகர, சூளா-38
அந்தம், சூளா-9, 38, 87
அந்தரம-ஆகாயம, சூளா-79: இடையூறு, நிந்த-4 [தல், பாசப்-63
அந்தரததினும் விசுமபினு மிரைத்
அந்தில் - அவவிடத்தில், அப்போது, ஊர்-109, நிந்த-14 [பாசப்-17
அப்படைவேலையன்ன பெருமையா,
அப்புறழ்வேலை, பிணி-137
அப்பு-நீர், காட்-8
அமரராட்செய்வா, காட்-76
அமரரா - தேவர், உருக்-104
அமரர்தமாணையா லனுமன்வந்ததெனல், பிணி-4
அமலன, உருக்-52
அமலை-ஆரவாரம. கிஙக-5, அட்ச-42
அமளி-படுகசை, ஊர்-123
அமுது-இன்பம, இலங-26
அமுதூட்டிய வுமபரை யுலையவோடடினுன், பிணி-66
அமைதி, ஊர்-25, 93
அமைதல், உருக-33 [திருவடி-40
அமைத்தரு கனலென வழலுதல,
அமைததல-படைததல், கடரு-77
அம்-அழகு, நீர, ஊர்-79, பொழி-31
அம்பலம, ஊர்-133
அம்பரவேந்தற் கின்னலியற்றிய பதினுலாயிரம்படை, காட்-22
அமபுண்ணுதல், சூளா-50
அயல், உருக்-50
அயன்-பிரமன், கடரு-26
அயன்பதி-பிரமலோகம், சூளா-78
அயிராத்தல், சூளா-86
அயிரப்பு-சந்தேகம, திருவடி-71
அயில்-கூர, ஊர்-70; வேல், காட்-62; கிஙகரர், 19
அயினி-சோறு, பாசப் 55
அயோத்திவேந்தன புகழ் × அனுமான், ஊர்-100
அரக்கர்சேனை யனுமானை அணுக முடியாது திகைததல், சமபு-19
அரககமாதரின கண்கள் புருவம் தோள் வலந்துடிததல், ஊர்-24. அரககமாதா துயரப்படுதல், அட்ச-43-47
அரக்கா அச்சத்தினுல் மீன்முதலிய பல்வேறுருககொள்ளுதல, அட்ச-40: அரக்கரைக்கொலல அந்தகனே வானரனுருக்கொண்டானெனல்; பிணி - 13: அரக்கரை யனுமன் கொல்லக காரணம், பிணி - 109. அரக்கரொழிந்த அனைவருமகணணீர்பெருக்குதல, பிணி-18; அரககா அனுமான்மீதுபடைவழங்கல், பஞ்ச 30, சம்புவதை-22: அரக்கர்களின் களிப்பு, ஊர்-30. அரக்காகளின் பெருந்தொகை, ஊர்-34 அரককாகளின்போகம், ஊர் - 31, 32 அரக்கர்காட்ட அனுமான் இலஙகையி லொன்று தவருமற் காணுதல், பிணி - 132: அரக்கர் படைககலம் அனுமானை யூறுசெய்யமாட்டாமை × இரும்பு அடைகலைச சுடுகலாதன: பாசப் - 33 அரக்கா யமனைவென்றமை, பஞ்ச - 22. அரককா வீரததைக கவி பாராட்டுதல, கிஙகரா-54 அரকক

வீரரை. மனைவிமக்கள் தடுத்தல், பஞ்ச - 14: அரக்கா × ஊழிப் பெயர்வதோரா புனல், அட்ச 30· மேகம், கிஙகரர் வ. 46 × கருமபு, 47: × உரகா, 48 × யானை, 49

அரககிமாகளின் கோரரூபஙகள், காட் - 56, 60 அரககியரின் நடனச சிறபபு, ஊர் - 38 அரககியர் சூழல்சுறுககொளக கடற்றலை வீழ்தல், இலஙக - 34· அரககியா கொழுநரைத் தழுவுறுஙக கொதிப்பால் மஞசிடைப்புகும் மின்னெனப் புகையிடை மறைதல், இலஙக-27

அரககியா நெருகக இலஙகையிலிருந்த சீதை × கன்மருஙகிலோர் துளிவரககாணு மருஙகு, காட் - 3: அரககியா குழுவிற சீதை × புலிக்குழாத்திடையகப்பட்ட மான்பேடை, வெயிலிடை ததந்தவிளக்கு, 4: மழைக்குலஙகிழிததொளிருமின், 63

அரக்குதல்-அழிதகல், ஊர்-230

அரஙகு, சூளா-57, பொழி-27

அரஙகுதல்-அழிதல், பொழி-27

அரசு-இராசசியம், உருக-93

அரசுவீற்றிருந்த இராவணனுடைய வருணனை, பிணி-38, 54

அரஞ்சுடர்வேல், பாசப்-2

அரணம்-பாதுகாப்பான இடம், கடரு-29: மதிள், ஊர்-64

அரணடருதல் - காவலைபபெற்றிருததல், பஞ்ச-58

அரணமனையில் துயிலு மிராவணன் × மேருவின்பொகுட்டிடைததுயிலுஞ் சீயம, ஊர்-207

அரததவாடையன, காட்-40

அரநதின்றகூரவேல், சம்பு. வதை-6

அரமடந்தையா, ஊர்-10

அரமியம - ஹாம்யம்: நிலாமுற்றம, ஊர்-5, பிணி-14

அரமபை மஙகைய ரமிழ்துகுததாலன்ன பாடல், பிணி-47

அரவம, உருக-56

அரவினதரசு, கிஙகரா-17 [வ-42

அரவினுல்மநதரம்திரிநதமை, பஞ்ச.

அரவினகட்டு × பூமாலைககட்டு, பிணி-10

அரவின்தோள்பிடருறவடியிடுதல், கி [ஙகரா-வ 23

அரா, நிந்தனை-75

அரி-இந்திரன், கடரு-54, குரஙகு, 66 ஊறலரிசி, அட்ச 38: பகை [வன, 40

அருகர்-அருகே, கடரு-1

அருக்கன், கடரு-86

அருக்கன்றோமேற் குதிகொணட வரலாறு, கடரு-62

அருத்தி. காட்-26

அருந்ததி, நிந்தனை-62, உருக்-114

அருந்துதல், காட்-15

அருமறைத்துணிவு, கடரு-93

அருமையேயருமையே, காட்-75

அருளில் வஞ்சரைத தஞ்சமென்றடைநதவா × புகைப்படலையால் வெருவிக்கடல வீழ்ந்துமீன்விழுஙகியபறவை இலஙக-37

அருள-ஆஞ்ஞை, உருக்-61· இரககம், நிந்தனை-55

அலகு-அளவு. நிந்தனை-27

அலக்கண, ஊர்-202, கிஙகரா-56

அலஙகலிற்றோன்றும் பொய்மை யரவு, கடவுள்வாழ்த்து.

அலஙகல்-அசைதல், உருக்-56: விளஙகல், சூளா-86

அலததகக்குழம்பு, ஊர்-152

அலததகததளிரககை, ஊர்-105

அலத்தகம், ஊர்-109

அலததகவாய, அட்ச-42

அலந்தலையுறுதல், பஞ்ச. வதை - 47

அலம்புதல்-அசைதல், ஊர்-80, நிநதனை-1: ஒலிததல், பொழி 81, கழுவுதல, 32

அலம்பெறுதல், பொழி-37

அலரி-சூரியன், ஊர்-16

அலா-பழி, உருக-14· பூ, சூளா-82

அலர்தல்-மலாதல், உருக-52

அலைகடல விடம, கிஙகரர்-18

அலைபபுண்ணுதல, கிஙகரா-39

அல் இருள், காட்-2

அல்லல்-துன்பம், உருக-58

அ(ல்)லோதி - உவமைத்தொகையன் மொழி, காட்-2

அவதி-(கால)வெல்லை, உருக-33

அவமிதததகால், பாசப்-59

அவலநதீரக, திருவடி-42

அவிஞ்சை, பிணி-122
அவிதல் - அழிதல், சூளா-65 [ழி-7
அவிததல் - தணியசசெய்தல், பொ
அவிநதவா - இறந்தவர், பிணி-97
அவுணர், நிந்தனை 53
அவ்வழி, உருக-100
அழலுதல்-வருததுதல், உருக்-5
அழலவிழுந்துமுற்றுதல், இலங-24
அழிதல், உருக்-10
அழிவுறுதல், உருக்-2
அழுகுரல் முதலியவற்றுற் பெருங குரலுடன பேசுவதுங கேளாமை, அட்ச-14
அமுதபேரமலை யணடமுற்றுளது, அட்ச 42
அழுவம்-வெள்ளம், கடரு-8
அளகம்-கூந்தல, ஊர்-53
அளகவலலியா, பிணி-16
அளகை, கிஙகரா 16, 29
அளககர்-கடல், உருக-96
அளவேசிரிததல், கடரு-58
அளி-கருணை, கடரு-33: விருப்பம, ஊர்-83, 84 [183
அளி கள - பெருகுகின்றமது, ஊர்-
அளிதல்-சினேகிததல், ஊர-154
அளிததல்-தரல், ஊர-30
அளியன், சமபு. வதை-42
அளை-மலைககுகை, ஊர-141
அளைதல், சூளா-77
அளையுறுமரவு மின்னிசையாலமுது வாயுகுததல், நிநதனை-11
அளளல்-அளளுதல், ஊர-171
சேறு, சமபு-வதை-42
அறஙகொளகொமபு, பிணி-56
அறததகையரசனுழி × அனுமான, கடரு-29
அறத்தவா - இலலறத்தார், உருக-69
அறததுககீறுணடோ, காட்-68
அறததுககுததனித துணையானவனு மன், பாசப 62
அறததுறை - தரும மாரகம், நிந் தனை-60
அறந்திறம்பினுருளராகா, பிணி-96
அறபபான்மையிதுவோ, பிணி-32
அறமாற்றுதல், கடரு 82
அறமுமீறின்று காட்-70 [95
அறமவெல்லும் பாவஙதோறகும,ஊர-
அறவன. பொழி-30, கிஙகரர்-24
அறன், நிநதனை-48, உருக்-14
அறிதல், நிநதனை-82
அறிவன், ஊர்-97
அறுதலைக்குறை, அட்ச-46
அறுபகை, கடரு-50
அறைதல்-ஒலித்தல், உருக் 11-சொல் லுதல், 59
அறபினுரருத சிந்தை யனுமன், பிணி 131
அறபுதம்-வியப்பு, ஊர்-109
அறபுதன், உருக் 20
அறபுவான்றலை, ஊர-200
அறறம், நிநதனை-41, பாசப-60
அனகன், சூளா 59, திருவடி-21
அனங்கம், பொழி-26
அனஙகவேளமிழ்துகொணடு செய்த வோவியம் புகை புணடதையொக் கின்ற உருவாள, காட்-11
அனங்கன், ஊர-209, நிந்தனை-27
அனந்தன்றலைதடுமாறல, நிந்த-17
அனலெனனபபுகைகண், ஊர்-82
அனல்பற்றிய வாலினவருணனை, பிணி-136, 138
அனல்யாவுஙகுளிர்தல், பிணி-129
அனிகம், சமபு-3
அனுஙகுதல்-வருநதுதல், அட்ச-17
அனுசன், பாசப-2
அனுமன், கடரு - 33: அனுமான் வானரமல்லன், ஊர-86. × இரா மன் பகழி: ஊர-60: × ஆளரி, கிஙகரர் - 49: × அனல், சாற்று, அட்ச 30: × மந்தரம, பாசப்-61: × கலுழன், கிங்கரா-48 × கரும் பாட்டுபவன-40: × அழிவுறக்கடுகு மவேகததாளை, கடரு-27. × கயி லையின மலை, கிஙகரர்-20: × தென் புறத்துளனுனயிரவி. திருவடி-54: அனுமனைககொள்ள விரிததவாயா ரான அரககர் × அருக்கனைககொள் ளும அரவு, பஞ்ச-61: அனுமான × மேரு அரககாதானை ஊழிக்கட லும, பாசப-14: அனுமானதுவால் × கோள: கடரு-64 சிவபிரான மழு, பிணி-136, முப்புரதெய்த கோல் - 137. அனுமான் மால் போலவெளியனுய் கரியனுய்ச

செயயனுய்க்காட்டல், ஊர்-102· அநுமானதுபேருருவம், உருக - 100, 105· பாசப்-41·அனுமான் பெருவடிவங்கொள்ளல், பஞ்ச-29: அநுமான்கொண்ட பேருருவம × உலகெயிற்றிடை கொளேனம, சூளா-8· அனுமனைப் பிரம விஷ்ணுக்களின் மாற்றுருவமெனல், பிணி-17: அனுமானது சோர்வின்மை, கிஷ்க-53· அனுமான் கருணை, சம்பு-43· அனுமானது முன்னேநீட்டிய கைகளின்வருணனை, கடரு 38: உடமபின்வருணனை-64: அனுமானது வேகததின்வருணனை - 36 38· அனுமானுடலால்மேலிற்பகலும்கீழிலிருளுமுண்டாதல் - 64· கடல்கடக்க மேலெழுந்ததன்மை - 16: பாய வெழுகையில் அநுமனது விசையால் மரம் முதலியனவும் உடன் செல்லல் 17: பாதாளலோகததையும்காணுதல்-20· தன் வாலினுல் விண்டு காலினுலளந்ததுபோல் மேலுலகளந்தான்-32·கடலகலக்குமாறு மலையிற கால்களையூனறுகையில நிகழ்ந்தநிகழ்ச்சிகள் - 3-12 மைநாகமலையிடங கூறியமுகமன-59,60 சுரசையின்வாயினுட்புகுவெளிவரல்-71: அனுமான வல்லமையையுணாநது தேவாமலாதூவுதல் 71: அங்காரதாரையுடலைபபீறிக்கொண்டுவருதல் 82 அரக்கிகுடலைக கொண்டுவருதல × கருடன்மலைமுழையினின்று அரவைக கொண்டெழுதல்-83·அனுமானைக கண்டுவந்த் இலங்கையாள × சுடரோனைக்காணுவந்தகட்செவி,ஊர்-75· அனுமான் இலங்கையினுட் செல்லததொடங்கல்-61 இலங்கை மதிலையடுத்தல், ஊர்-62 மதிலைக கடந்து நகரினுட்புகச்செல்லல 74 இலங்கிணியைக கண்டு வருகெனல-81: இலங்கிணியின தெயவப் படைகளையெலலாம்பற்றிவிணணிலெறிதல்-89· அரக்கியாமுதலிய பலரைப் பார்த்துக்கொண்டு செல்லல-103 121: அனுமன அனுவின்மேருவினுழியானெனச செலவன்-134: குமபகாணனைப் பாரததல், ஊர் 121:அகநகரில் நுணணிதிற்சென்று தேடுதல்-169: இராவணன மாளிகையில்தோன்றியவுற்பாதங்கள்-204· படுதிருக்குமிராவணனைப்பாரததல்-206·இராவணனை யழிக்கக்கருதுதல் - 219. அனுமன் றனனுள்ளுறையுமழகனைப்போலெம்மருங்குமுலாவுதல் - 234· சீதைக்குத் தன்வரலாறு முதலியவற்றைகக்கூறுதல், உருக-29-36: கூறிய அடையாளசசொறகள், உருக-60, 62 இராமபிரானதுவரலாறறைத தெரிவிததல்-74 94 தோளமேல் ஏறிசசெல்லுதற்குச சீதை உடன்படாது கூறுதல், சூளா-12 26· சீதாபிராட்டி செயதி சொல்லியனுபபுதல் - 29-38 அநுமான் வீசியெறிந்தபொன்மயமான மரங்கள் மினனலையும், மணிமரங்கள் சூரியகிரணத்தையும், பொடிந்துவீழ்வனவான மரங்கள் தாரகையையும் ஒததன, பொழி-15 அனுமான் செய்கையால் காலனுமோயநதமை, கிஷ்கரா - 45 அநுமான அறைநத அறை × அருவரை நெரியவிழும அசனி, கிஷ்கரா-25 அநுமானுல் அரககவீராஅழிதல - 25-38 சமமாக யுததஞ்செயதமை - 37 அநுமானுல் எறியபபட்ட அரக்காதததமவீடு முதலியவைகளைததாமே அழிததமை - 42· விழுபபுண அடைந்தமை - 50 : அரக்கா கணணினுமனததினுங தனிததனிகலததல், சமபு - 36 : இருகையினுலும பொரல்-25· சேனைகளின் மேல் குதிததல - 34 அநுமான் திரிதல × செங்கோல, வேசையரதுமனம, காறறுடியின் தன்மை, இருவினைதடைததவர் அறிவு - 35 திருமாலடியார் தன்மையைத தெரிவிததல - 36 . அனுமானுல கொல்லபபட்டுத தனிததுநின்ற சம்புமாலி × கிஷ்கததால் கொல்லபபட்ட யாளைகளின

நடுவில்யானை யரசனநிறறல - 41 சமபுமாலியைகொல்லல - 47. திறநகணடு அறமுந்தளிர்ததல் - 49 எதிரக்கததானேசெல்ல இராவணன்நினைததல்-51. அரகநகரை நேநகநித தன்தோளையும நோக்கல், பஞ்ச - 27: அனுமானுல சடலில்எறியப்பட்டதோ × கடலில எழும சூரியன்தோ - 40 அனுமான் கைகொணடஎழு × சிவன்கைகொண்டமழு - 46. அநுமானு லெரிகநப்பட்டவரகநா × ஊழிகநதிரோ னெரிததவென்பிலாவுயிர, அட்ச - 27· அனுமன் வாலாற்சுற்றி யட்சனைப்பறறிக கொணடு அவன்மேலேறுதல்-36. இந்திரசித்தைக கணடுகொணடஆலோசனை, பாசப் - 25 - 27 அநுமன், வாரும்வாருமென்றழைததல், பாசப் - 35. தோளபுடைததல - 37. வீரவாதம - 39. அனுமனபேருருவைககணடு இந்திரசிததுவியததல் - 42: அனுமன்பின் சென்ற அறம - 58: அனுமன்பிணிபபுணடநாள் × இந்திரன்பிணிப்புணடநாள் - 63. பிணிப்புணடதுகணடு உவகையாலரகநாகள கூறியன × பிணி-125; அனுமனசிரததிருநது திருவாநகுவோமெனல் - 5· கட்டுணடதை வேடிக்கைப் பாரகநப் பலவிடநகளிலு மரகநா திரளுதல்-14 பாசததாற்கட்டுணடானபோன்றிருந்ததறகுக்காரணம-19, 21 - 24. அனுமன் பிணிப்புணடதைத தூதுவாகூறல்-26. அனுமன் பிடிபட்டதைத திரிஜடை சீதைக்குக்கூறல்-30: அனுமன்பிணிபபுணணவருந்துஞ் சீதை × கன்று பிடியுறத தீநகுறுதாய்-36. இராவணனைகொல்லலாமா வெனறு லோசிததல-56-59. ராவணனருகிற்சோதல்-65· தானின்னுனென்பதும வந்தகாரணமும-82. இராவணனுக்கு நீதியுணாததல - 91 - 106 வால்கொளுத்திவிடுமாறுஇராவணன்சொல்லுதல் - 117: அனுமனுடைய பிரமாத்திரத்தை விடுவிததுபபாசததாற் கட்டி யிழுததல்-118· அனுமன வாலிவரகநர் தீகொளுவுதல்-123· அனுமான் செய்தியையறிந்து சானகிவருந்துதல்-126 அனுமனுடலிற் சுற்றிய கயிறு × கலுழனைசசுறறிய அரவின்சுறறம-134: இலநகையெரிக்குஞ் செயலைகநகணடுசிவனுணுதல்-135: தன்வாலையிலநகையினமீது செலுததுதல் - 135 . பிணிபபினின்றுமீளவறிந்தும்அறியாதானபோனருன் × விஞ்சைதனை யறிந்தும அறியாதான, பொயயைமெய போனடிகநின்றயோகி-122 அனுமான் தனனைவளைநது கொணட வீரரை வாலினுல் வளைததல், இலந 54· அனுமான்மீணடுவருவது கணட வானராகள் × தாய்வரக்கணட பறவைப்பார்ப்புகள், திருவடி-3: அனுமன்மீட்சிகண்டவானரரின மகிழசசிசசெயல், திருவடி-4· அனுமனை வானரருபசரிததல 5; அனுமனுடலின விரணநகளைககணடு வானராவருநதல்-6: அநகதனைப்பணிநது பின்னை சாமபவானைக காணுறப்பணிதல், 7, வெனறியை யுரைபப வெளகி மறறவைகூறல் 9. அனுமனுதியா மீணடுவராமை பறறிய இராமன சிததனை - 32, 35. அனுமன் செயகையாற் சீதை கறபுடையளாய் இனிதிருநகினருளெனவுணாதல், 56. 'கணடனை கறபினுககணியை யெனல், 58; சீதை கறபுடையளாயிருக்க கணடமையை-விவரிததுககூறல் 59-87:

அனைய, உருக-19, பொழி-22
அனையன, உருக-44
அன்பா, கடரு 12
அனறுதல், பஞச-45
அனனம × அமகநியா, ஊர்-103
அன்னிறததணணல், பிணி-136
ஆகம், சூளா 68, உருக-46 உடமபு,
ஆகாயம × சுரபி, ஊர-56 [உருக-77
ஆசறுதல, உருக்-20
ஆசு - ஆஸு; விரைவு, ஊர 59, பறருசு, கட்டு, நிந்தனை-22: குற்றம, சூளா-75

ஆசை-திககு, கடரு-37, ஊர-122
ஆடகததாரை, இலங-11
ஆடகம், பொழி-58
ஆடல்பாடலாதிவினோதம, ஊர-25
ஆடவா, உருக-16 [ர-43
ஆடன்மாககளிறு, மாருதி; கிஙகர
ஆடியுழுந்தோடுகாலம், கடரு 51
ஆடுதல்-நிரமபுதல், உருக்-44
ஆட்டு-ஆடல், அட்ச-46
ஆட்டொழில் - அடிமைத்தொழில, பிணி-88 [பாசப்-23
ஆணியாணி யெதிரசெலக் கடாவல,
ஆணியிற்கிடநதகாதல், ஊர்-187
ஆணை, உருக-15
ஆணடகை, கடரு-1, உருக்-73
ஆண்டான, கடரு-61
ஆதியோடந்தமாகித தோன்றுநின்றான், கடரு-43
ஆதிவானம, ஊர்-56
ஆத்துறுசாலை தொழுவம, ஊர்-101
ஆமிடம-ஆமிஷம, கடரு-66
ஆமபனெடுமபகை - சூரியன × அனுமன். பஞ்ச-62
ஆயததா-சித்தமாகஇருப்பவா, (விகாரமெனக கொள்ளாமல் இதுவே வடசொல் லெனனலாம).ஊர-35
ஆயம் - மகளிரகூட்டம, ஊர - 184· கூட்டம,பிணி-119"புரவியாயம"
ஆய்மணி-சிறநதமணி, சூளா-36
ஆர, நிந்தனை-76
ஆரணமந்திரம, காட்-46
ஆரமுமகிலுநீவி யகனறதோளமலன் செவ்வாய × நாரமுணடலாந்த செநகேழ்நளினம்.
ஆரம, ஊர-79, 80, உருக-52,சூளா-30, பொழி-34
ஆரியம-மேனமையானது, ஊர்-11
ஆரியன், உருக-25
ஆரை-மதிள், ஊர-21, உருக்-61
ஆகலி - நிறைந்தஓசை, ஊர் - 13.
கடல, கடரு-8, பொழி-17
ஆர்த்தல், பொழி-60, கிஙகரா 35
ஆபபு, பிணி-9
ஆ-முன்னிலைப்பன்மைககு வருதல், கடரு-75
ஆலமேயுருவு கொண்டனையமேனி காட்-58
ஆலம, சூளா-13, கிஙகரா-3
ஆலாலம, கடரு-75
ஆலி-நீரததுளி, சூளா-55, உருக-70
ஆல், பொழி-44
ஆரம-அமபருத்துணி, உருக-43
ஆவலஙகொட்டுதல், பாசப்-61
ஆவலம்-அவலம், துன்பம், பாச-48
ஆவி-சூளம, பொழி-17· உயிர,நிநத-82 வலிமை, நிந்த-69: புகை,ஊர-150. பிராணி, கடரு-87
ஆவிபிடித்தல், சூளா-29
ஆவியந்துகில், காட்-11
ஆவியொன்றுடலிரணடு, அட்ச-44
ஆவிவேறிலாததோழர், அட்ச-9
ஆழி-சககரம், ஆஜஞாசககரம· சககரரேகை, உருக - 110 சமுத்திரம், சம்பு வதை-16 மோதிரம, உருக-63
ஆழி-விலாழி, ஊர-150 [34
ஆழிகாட்டியுயிரகாட்டினாய், பிணி-
ஆழிதாயிடராழியிடை வீழ்நதழிவேனோ, ஊர்-229
ஆழிபெறற சீதையின் தன்மை, உருக 64 69 [44
ஆழிப்பல் படையன்ன சரம், பாசப-
ஆழியகழ், ஊர-62
ஆழியணடம-அண்டகோளம், ஊர-9
ஆழியான், சம்பு.வதை-21, திருவடி-27
ஆழிவெஞ்சினம, இலங-41
ஆளாற்றல, ஊர-219
ஆளி-சிஙகம், கிஙகரா-18
ஆறு, ஊர-230, நிந்த-73, பொழி-32
ஆறுதல், உருக்-80
ஆற்றல்-வலலமை, கடரு-61, நிந்தனை-45, 56
ஆற்றுதல், உருக-2, 14,80·சூளா-66
ஆறறுறுதல் - அநுபவித்தல, சூளா - 37
ஆனனகமலப்போது, ஊர-103
ஆனிடதது - ஆயினவிடதது, பாசப்-19
ஆனைதானம, பொழி-38
ஆனைமேல் முரசறைதல், பஞ்ச-6
ஆன்ற, நிநதனை-59
இகல், சூளா-8
இகழ்தல், நிந்தனை 51

இக்குரங்குபோலாம அரக்காகுழாத தைக கொன்றதென்று அகக்கன் நகுதல், அட்ச 21
இசை, கடரு-18, பஞ்ச வதை-21
இசைகானம - இனியராகம, நிநத-11
இசைதல், நிந்த-53.
இசைத்தல்,-சொல்லுதல், பாடுதல், கடரு-73, உருக்-61, பிணி-71
இசசை, பிணி 99
இஞ்சிமதில, ஊா-82
இடத்தல், சூளா-5.
இடந்துடித்தது, காட்-35
இடம-சமயம, உருக-21
இடருறுதல், உருக்-2· இடர்-துன்பம, உருக்-6
இடறிடல், கிஙகரா-19
இடி-பேரொலி, கடரு-23
இடித்தல், பொழி-7
இடிபடசசிதைந்த மால்வரை × சதுரங்கசேனைகளையனுமன் வீசலாற் பொடிபட்ட இல்· பிணி-7
இடிப்பு-முழககம, கிஙகரா-1
இடியேறுண்டநாகமென வீழ்தல், ஊா-91
இடுககு-இடைப்பகுதி, கடரு-23
இடை-இடம, அட்ச-1; நடு, சூளா-4
இடைகொள்ளுதல், சூளா-3
இடைகோததல் - நடுவில்நோதல், சூளா-31
இடைதல, ஊர்-160, நிந்த-44
இடையசுழியின்வருணனை, ஊர்-147
இடையூறு-தடை, கடரு 87· தீமையானசெயல்-45
இட்டுநீததபைகிளி, கடரு-12
இதவியல், கிஙகரா-21
இதழ்திறததல், கிஙகரா-23
இதன், நிநத-71
இந்தனம், பொழி 26
இந்திரசாபம் × தோரணம்; அட்ச-21
இந்திரசித்தின் சதுரங்க சேனைகளனுமானுலழிகக்படுதல், பாசப், 29-32 இந்திரசிததின் வீரவாதம, பாசப்-38· இந்திரசிததின் வெறுப்புரை, பாசப்-19: இந்திரசிததது அட்சனைக குறிததுப்புலம்பல், பாசப்-22 இநதிரசிததது அநுமனையிராவணனுககுககாட்டுதல், பிணி-66 இந்திரசிததது அனுமானைககுறிததது இராவணனிடங்கூறல்,பிணி-67. இநதிரசித்துக்குச் சீறறமமிகுதல், பாசப் - 23 இந்திரசிததின் தோற்றம, ஊா-140: இந்திரசிததது மாருதி திறனைக கொண்டாடுதல, பாசப்-15· இந்திரசிததது மாளிகையினரக்கா பாதுகாவல, ஊா-136· இந்திரசித்து மெய்யணிபூணுதல் × இருள் கதிாககுழாங கணமிலைசசுதல் பாசப்-13: இநதிரசிததைச சாாந்த சேனையின் மிகுதி, பாசப் 6: இந்திரசித்தை நிகாபபவா திரிமூாததியரே, ஊா - 142· இந்திரசிததை வந்தடுத்த சேனைபபரப்பு, பாசப-13
இந்திரத்தெவ்வழிதரவுயர் விசயச் சீாததி, பாசப-1
இநதிரதனு, சம்பு-15
இநதிரநீலம-ஒருவகை யிரத்தினம, உருக-54
இந்திரவில, பொழி-36
இநதிரறகமைவர வெடுத்தமாடம் இலஙகைமாடமெனில் அசசொல் மாசுணணுமு, ஊா-7· இந்திரறகின்னலியறறிய பதினாலாயிரம படை, காட்-22. இந்திரன் கருமம-திரிலோகாதி பதியம, பிணி-112 : இந்திரன் சிறையிருந்த வாயில், ஊா-138· இந்திரனபகைஞன், பாசப்-40. இந்திரன் முதலோரினமப்பிலா நாட்டம முகிழ்ததல், நிந்தனை-4
இநதிரனமே லென்னையேவாத குறைதீரக குரங்கின்மேலேவுக வெனறு அகக்கன் வேணடுதல, அட்ச-3.
இநதிரன்றேளைப் பிடித்தீாததவன், பாசப்-42
இந்து, சூளா 9, அட்ச-41. அறம, ஊா-52
இபபி, கடரு-47
இமம × புகை, இலங-9
இமிாதல் - செறிதல் ஒலிததலுமாம; ஊா-58
இமிழ், சூளா-57
இமைப்பு, சூளா-3
இமையடைததல-கணமூடுதல், ஊா-162

இமையாமுக்கண, உட்ச-4
இமையைநீக்கியகண × உறை நீக்கிய வாள, ஊர்-117
இமபா, உருக 33 [ரு-51
இம்பாகொழுந்து - அடிவோ, கட
இயகதம், ஊர 39
இயகதா-யட்சர், ஊர்-49, பொழி-14
இயகுறுதல், பொழி-37
இயம, ஊர-25, சமபு, வதை-8
இயம்புதல், உருக்-79, சூளா-39
இயலுதல்-உலாவுதல், ஊர்-206
இயல்-சாயல், காட்-4
இயறறுதல், நிநத-71
இயைதல் - பொருந்துதல், நிநதனை-66 தககதாதல், 56
இரததபபெருகநின் வருணனை, பஞச-43 [ரர்-40
இரததம × கருப்பஞ்சாறு, நிநக
இரவி, ஊர-14, பொழி-45
இரவிசநதிரனியநகும்குன்றம-மேரு மலை· உதயகிரி அஸ்தகிரியுமாம· பொழி-8
இரவிதேர், பாசப் 24
இரவு-இருள், காட்-44
இராகவன், ஊர-53 [ஊர்-144
இராகவன்கழலெனப் புகழோன்,
இராகவன் புகழெனுநலததான்-அனுமன், ஊர்-133
இராகவன்புகழ் செவிக்குததேன, ஊர-132
இராகததரின்பேராரவாரம், பிணி-6
இராமநரமம் இடையூறுகளைப்போக கும, கடரு 88, பிணி-20. இராமபிரானின் திருமேனிவருணனை, உருக. 39-58. இராமபிரான் சிவதநுசை முறிததமை, உருக - 49· இராமபிரான்மீட்க வராமையைப் பற்றிப்பலபடி சீதை சிந்திககுங காரணங்கள் - காட்-12,. 14, 16-18 இராமனரவினீங்கிய தேவன், காட்-67. இராமனுககுச சீதையினசெய்தி சொல்ல யாவருமெழுநதுபோதல், திருவடி - 11· இராமனெதிர்ககி னெபபடை கொணடுவெல்வது, பாசப் - 17· இராமனையினனுனென வனுமன தெரிவிததல், பிணி-75 81. இராமனை யெவருமமறந்திலர், பிணி-105: இராமனைவணங்காது அனுமன சீதையுள்ளதிசைநோக்கி கை கூப்பி வணங்கல், திருவடி-55· இராமன் சிலையினின்று மேயின பகழியென்னத்தாவுதல், திருவடி-12· இராமன் சுககிரீவனிடம் நகு செய்கை சிரியதன்றெனல், திருவடி-31: இராமன் தேவருமலலன்: புரவலன் புதல்வன், பிணி-77. இராமன்பால் நேசமே யசசநீக குதல், திருவடி-69: இராமன்புகழென்றிமிர்ந்த னனுமன், பாசப-41: இராமன்மேலுககிய காதல் மீனுயர்ததவன் மருங்குதான் மீளுமோ, ஊர-201· இராமன்வந்தவாயாது கூறுவரோ எனச சிந்தை கொள்ளல், திருவடி-53· இராமன் வாலியைக்கொன்று சுக்ரீவறகு உரிமையையும் கோவியற செல்வமுந்தருதல், பிணி-86
இராவணனதுவரபலம்யாவும் இராமன் அமபின்முன் அழிதல் × இருள்விளகநின்முன்அழிதல், நிந்த-44: இராவணனது வழிபடுதெய்வம் சிவபிரான், நிந்த-25: இராவணனது வாரததையைக்கேட்ட சீதையினநிலைமை, நிந்த - 38 அரணமனையுருகித் தென்றிசைக குமோ மேருவுணடா மெனத தெரிதல், இலங-42 அனுமனைக கொல்லுமாறுகூற, விபீடணன் தடுத்தல், பிணி-110: மனை வான வேறெறியக் கீளுதல், காட்-42· இராவணனுல் அனுப்பப்பட்டுச சமபுமாலி அனுமானமேறசெல்லல், சமபு-2· திரிமூரத்திகளவலியிழந்தமை, பஞச-3 இலங்கை வேவககாரணம வினவியறிதல், இலங 45· இராவணனிலையாலசீதையினகற்பழியாத் தன்மையை யனுமா னுகிததல், ஊர்-224 இராவணனுககுக கிவகரரிறந்தவிததததைககூறல், கிஙக-58· சிவபிரான வரமுமவாளும ஈதல், நிநத-43 இராவணனுடன்செருத தொழில்தூயது அன்று, பிணி -

62; தவத்தின்சிறப்பு, ஊா - 12 பத்துமுகங்களின்செயல், பிணி-49 - 51 எழுநிலைமாடம் எரியாலெரிதல் × ஊழித தீயாலேழுலகுமெரிதல், இலங-41 இராவணனைக்கண்ட அனுமன் கோபம், ஊா - 218, பிணி-55 இராவணனைக்கொல்வது தகுதியன்றென அனுமன் கருதுதல், ஊா - 221, பிணி-60 - 64· இராவணனைசுழ்வோா, பிணி-46: அனுமனுறுதி கூறியதுகுறித்திகழ்தல், பிணி - 107· இராவணன் அநுமானை யெதிர்ககச செல்லல் × கருடனொசுகின்மேறசெல்லல், பஞ்ச-வதை-2. இந்திரனைவென்றமை, பஞ்ச வதை - 21. இருபதுகைகளும் பத்துத்தலைகளு முடையவன், கடரு-28 இராவணன கிரீடஞ சூடியிருத்தல × மேருவைகக கடல கவித்துக கொண்டிருத்தல், பிணி - 42 குபேரனைவென்றமை பஞ்ச-வதை-20. கைலையையெடுத்தல், நிநத-45. இராவணனென்ற பெயாககாரணம், உருக-30 சீதையைககோறலைமேறகொளளல், திருவடி - 72 . தனனையடையுமாறு சீதாபிராட்டியினிடம நயநது கூறல், நிநத-26 37 திகககயவலி வென்றவன, பாசப் 11 திகவிஜயம, பஞ்ச-வதை-19. இராவணன் புயங்களிலதிகிரியின வடுமுதலியனவிளங்குதல், பிணி-39. இராவணன்பூணட பசும்பொனாரம × கடலிறபரநத கதிரிள வெயில, நிநத-5. × கடல்மீது உதய மலையிலெழுஞ சூரியன, ஊா-216. இராவணனமனை × மேரு, ஊா-203, இலங-38 மனையாகிய திங்கட்குநாரியருரைவிடம தாரகைகுழு, ஊா 167 இராவணன்மாபு × சுடா கெட்டவான, பிணி 27; இராவணன் வணமை மறை திணமை யிவற்றிற் குறையுள, பிணி-44., இராவணன, வளாககுமனல ஒருசேர விறத்தல், காட்-42 இராவணன் றவம், ஊா-18

இரிதல்-ஓடிப்போதல், சூளா-85
இரியல்போதல், பொழி-39, 49
இரு, உருக-11
இருதோகளை இருகைக்கொடு அநுமானெழுதல், பஞ்ச 58
இருநிதிகிழவன, கிஙகரா-16
இருநூறுவெள்ளமரககா, ஊர்-68
இருந்தை, இலங 22, சூளா-59
இருவினையெலலோர்ககு மொக்கும், ஊா-205
இருளரசுவீற்றிருத்தல் × இராவணன்கொலுவிருத்தல், பிணி-43
இருளிலரககாதிரிதலின் வருணனை ஊா-47
இருளின்வருணனை, ஊர்-44-46
இருளுதல் - கறுத்தல், இலங - 37, உருக-57
இருள் பொருளுங்காமமும, பிணி-98
இரைத்தல், சூளா-54
இரைத்தாடுதல், சூளா-62
இலककணककிரி, ஊா 152
இலककண மரபிறகேற்ற நரம்பு, ஊர்-105
இலக்கணம். ஊா-202, உருக்-38
இலककம, நிந்தனை 42
இலங்காதேவிக்குப்பிரமன் கட்டளை, ஊா 94
இலங்காதேவி யனுமனைப் புகழ்ந்து விடையளித்துச செல்லல், ஊர்-95· இலங்காதேவியனுமானிடம் தன பிழைபொறுக்க வேண்டுதல், 93: இலங்கைககோபுரததின சிறப்பு, ஊா-20: இலங்காதேவியனுமானை வழிமறித்தல், 75 இலங்காதேவியினியல்பு, 76. இலங்காதேவியின எட்டுப் படைககலம், 78 இலங்காதேவியின் சிந்தை, 86 இலங்கிணி அனுமான மீது சூலமெறிதல், 87· இலங்கிணி கணிகண-ஊாவைகுமுறை, 81
இலங்குதல், உருக-56
இலங்கை, கடரு - 24 × திருமால் திருவயிறு,ஊா-9· இலங்கை செல்லும அனுமான: திரிகூடமலையைகாணச செல்லுமமேரு, கடரு-26 இலங்கை நகரதெொளிச சிறப்பு,

ஊர்-15. இலங்கை நகர் வாயிலை யனுமனகாணல், ஊர-65 இலங்கை, மாடமாளிகைவருணனை, ஊர்-1: இலங்கை மாளிகைகளி னொளிசசிறபபு, ஊர்-16. இலங்கையிலழுகைமிகுதல், சமபு - 49. இலங்கையில் தோன்றிய உற்பாதங்கள், காட்-43 இலங்கையில் மரமகற்பகம, ஊர்-10 இலங்கையிற் பகலோவெனுமாறு இரவிலும வெளிசசம, ஊர-97 இலங்கையிற் பலவிடங்களிலுஞ சீதையைதேடிச், செல்லும அனுமன் × பூததொறும் வாவிசசெலலும் வண்டு, ஊர-101. இலங்கையிற பொருதாா மறைஞளுககிறுதியாவா, கடவுள்வாழ்தது-இலங்கையினுட்புறம எழுநூறியோசனை, கடரு 94: இலங்கையின்கான், ஊர-19. இலங்கையின செல்வமும் பணியாளரும, ஊர-10, 12. இலங்கையின் பரப்பு, ஊர - 35 இலங்கையின்பொழில், ஊர்-19. இலங்கையெரிகையிலிராவணனாரி வையாகுழுவுடன் புட்பகததிற் போதல, இலங-43· இலங்கையை நோககிய அனுமன வியபபு, கடரு - 92 - 94. இலங்கையை யெரிகுந் தீ × காலவெங்கனல்· இலங 38: இலங்கையை யெரியுண கையில இலங்கைககோன் தமபதி கொண்டாளெனவானவா சிலைகுலைதல், இலங-39 இலங்கை வாயிலைப்பறறிய வியபபு, ஊர 66, 67. இலங்கைவெளிசசததின வருணனை, ஊர-98, 99: இலங்கை வெற்புநுடங்குதல × கலம வாடை தாககத தளாநதுதளளுதல்· கடரு-90.

இலஞ்சி-மகிழ் உருக-45

இலவிலுஞ்சிலமுததுளவெனு நகையிளையா, இலங-26

இல-மனைவி, நிநதனை 52

இலலுறைதெயவம, ஊர 115

இலவெலாடுந தொடாநதமாதா, நிந்தனை-39

இவாதல, பிணி-28, அட்ச 35

இவாந்துநிறறல், சமபு-15

இவனைததுணையுடைய யிராவணன் புவன மூன்றையும வென்றதோா பொருளலல, ஊர்-142

இழவு-நஷ்டம், ஊர-83

இழிதல் கீழிறங்குதல், பொழி-22

இழித்து நீத்தல் - கழற்றியெறிதல் உருக-35

இழிநதேறுதல் - இழிவில் மிக்கவாதல், பிணி-96

இழிவு, உருக்-57

இழுகுதல், ஊர-124, காட்-40

இழுகுகம-வழு, குளா-17, பிணி-115

இழுகுதல-தவறுதல், ஊர 93

இழுது-நெய, ஊர 117

இழுதெஞ்சவிழும பலவிளகககைத் துளகுந் தெனறல் × பகைசோரவுயாவோா ஊர-164

இழை, ஊர-184, 207, உருக் 10,74

இழைககு நுணணிய மருங்குல, காட் 6

இழைத்தல்-செய்தல், காட்-35

இழைநதநூல், ஊர்-169

இழைபுரைமருங்குல, நிந்தனை 15

இளகுதல் - மனவுறுதி குலைதல், பிணி 21

இளக்கம-சோர்வு, ஊர-71 [164

இளககா இளகு - இளகுதல் - ஊர்-

இளங்கிளை-தமபி, குளா 82

இளிவரல-எளிமை, பிணி-11

இறங்குதல்-தலைசாயதல் ஊர-159

இறததல், நிந்த 52 உருக-18

இறப்பு-அஸ்தமனம், உருக-56

இறவு மரணம· கிங்கரா 24

இறுல் தேன் கூடு, திருவடி-14

இறுகுதல அழுநதப பெறுதல், ஊர-194

இறுக்குதல, ஊர 202, பொழி-6

இறுககுறுதல - முறிததுக கொல்லுதல, பஞ்ச 66

இறுதல துண்டாதல, சாதல், நிந்தனை-44, 79

இறுதியின்யாவு முணபான சீறிய காலததீ, அட்ச-9

இறை சிறுமை, நிநதனை-25 இறைவன, குளா 3: பெருமை, பிணி-94: தங்குகை, ஊர-64

இறைஞ்சுதல், உருக 26 சூளா-89
இறைவன, உருக-75
இற்பிறப்பு, சூளா-17
இற்றுவீழ்தல், நிநதனை-45
இறறோடுதல், அட்ச-35 [30
இனம, உருக-53, சூளா-57, அட்ச-
இனிது, நிநத-63. பொழி-7
இனிமை, பொழி-17
இன்று நாளையோடழிந்தது மதுவன ம, திருவடி 37
இன்னல், உருக-76, சூளா-1, 37
ஈசனசூலம, பஞ்ச-17
ஈட்டம், உருக-100
ஈட்டு-சோகை, கிஙகரர்-6 வலி, காட்சி-60
ஈட்டுதல்-திரட்டிச சொல்லுதல், சூளா-2· சமபாதித்தல, பொழி - 51
ஈமம், பிணி-97
ஈரம-குளிராசசி, உருக-52, சூளா - 30: வெள்ளம், பாசப-19
ஈர்ததல, சூளா-58
ஈனம, பொழி-2
உ-அப்பால், ஊர்-191
உகல், கடறு-4, நிந்தனை-35, 63, 69
உகிர, உருக-41
உகிர்ககுறி, பிணி-39
உஙகை, நிநதனை-57
உடலுடறோறுஙக கூடிக் கொல்லல, கிஙகரா-36
உடலொடு உலகுதுறததல், கிஙகரர்-29
உடலுதல், நிநதனை-61, கிஙக 12
உடற்படுதல், உருக-50
உடுவின்கோமான, பொழி-40
உடைதல், உருக-112
உணஙகல்-குறைவு, ஊர-45, மெலிதல, திருவடி-48. உணஙகுறுதல-அழிதல, பிணி-138
உணரநோககுதல், நிநதனை-71
உணாத்துதல், உருக-62
உணாவினா, உருக-97
உணாவு, நிந்த-79 [சூளா-1
உணாவுகொளளுதல - எண்ணுதல், உணாவுநாறுதல், சூளா-68
உதயமாலவரையின மீபபடாகதிர்ச செல்வர் × இராவணன் முடிக் கிரீடம, நிநதனை-8
உதவி, நிநதனை-71
உதறுதல-நடுகுகுதல், கிஙகரர்-28
உதிததுப்புலாந்த தோல்போலுருவத்தமரா, சம்பு-48 [பு-51
உதிரக்குமிழி விழியூடுமிழ்தல், சம்
உதிரம, சூளா-4, அட்ச-43
உதைக்கபபுளகுதிததல், ஊர-110
உதைததல - செலுததுதல், பஞ்ச - 37· உதைப்பிததல், சமபு-44
உததமன, உருக-70 [று-40
உததரியம × அருவிததிரள்: கட
உநதி, உருக்-45
உநதுதல், கடறு-53
உபவனம, திருவடி-26
உமபா, வானுலகம் கடறு - 10, உருக் - 33
உமபாககொழுந்து - முடிசசிகரம், கடறு 51 [பஞ்ச-29
உமபாசசேணெடு மீயுயா விசும்பு,
உமபி, நிந்தனை-57
உயஙகுதல், இலஙக-16
உயாதலை, கிஙகரா-25
உயாதல் - பரவுதல், நிந்தனை - 45, நிறைதல், தேனுயிரதெரியல் - நிந்தனை-50
உயிராயிர முடையனுமெனச சோர் தொறுமுயிாததல், திருவடி - 29
உயிருணணல, பஞ்ச 51
உயிருணடல, பொழி-6 [தனை 66
உயிரெனவுரியோன்-கணவன், நிந்
உயிர, காட்சி 37. உருக 104
உயிரகளுடடல்கள் × கணவரை நாடி சசெலலும அரகபா, அட்ச-45
உயிர்காலுதல - பெருமூசசு விடுதல, சூளா 63
உயிர்குடிததல், நிந்தனை-72
உயிரகோள் - வதம, சூளா 49
உயிரககுஉறுதிகொள்தல், சூளா - 7
உயிர்ததல - பெறறெடுததல, பெருமூசசுவிடுதல, உருக்-65, 66. கிஙகரா - 13 [வடி-71
உயிரப்பினோசேணினறுடுவா, திரு
உயிரப்பு-காற்று, ஊர-210
உயிரப்புறுதல், காட்-37 [40
உயிரப்பெனும் பெரும்புகை, பிணி -
உயிரப்பொடும் புகைதவழப் பாமபின வீகஙினன், பிணி-68

உயிர்ப்பொறை, உருக-65
உயிர்வாங்குதல், உருக்-93
உயிர்விமமுதல், உருக-10
உய்ஞ்சுதல், உருக-17
உயதல - பிழைததிருததல உருக - 12, துன்பமநீங்குதல் - பிழைத தல, உருக-89. நிந்தனை - 41, [குளா-40
உய்ததல், கிங்கரா-43
உயயானம், ஊர-234 [50
உயவழி, உருக-2 உரகம, உருக -
உரகாகோனரசு வீற்றிருந்ததொப்ப, பிணி-41
உரகனசிரந்துளங்கிடல், பாசப - 36
உரப்பாசம, பிணி-124
உரப்புதல்-அதட்டுதல, கிங்கரர் - 12 ஊர-90, நிநத-73, ஆரவாரிததல, [நிந்தனை-60
உரம்,ஊர-10
உரன, நிநதனை-45
உராய்தல், பொழி - 25
உரிமை, பொழி 5
உரிவை-தோல, ஊர-44
உரு - அசசம், உருக் 99
உருகுதல, உருக-95 [குளா-54
உருகுமறிதல × கணைகிழிததல்
உருகுதல, உருக-27 கிங்கர - 13
உருததல - எழுசசி கொளளுதல, ஊர - 117
உருநிறம-மேனிநிறம், காட்-63
உருநது - உருததது, பிணி 55
உருப்பசி யுடைவா ளெடுத்துத தொ
உருமு, குளா 68[டாதல, நிநதனை-2
உருமெனக கொடுஞ்சிலை தெறித
உருமேறு, உருக-3 [தல், பஞ்ச-16
உருவகததை யடங்கமாகக கொடுவந்த தற்குறிபபேறறவணி. சமபு-21
உருவகம. கிங்கரா-47
உருவம மாயன் குறளினுங குறக கின்றான்-அனுமான் ஊர்-218
உருவினிலககணம, காட் 66
உருவெளிப்படுதல், ஊர-214
உருள், பஞ்ச-40 [உருக-5
உரை, உருக - 25, உரையாடுதல,
உலகமழிய நாட்டங கொழுங்கனலை வீசுமுருததிரன × இலங்கையழிய வாலினுலெரிவீசுமனுமன், பிணி-138 [ஊர்-216
உலகமூன்றுங காக்கு முதற்றேவா,
உலகமூனறையும முककால்வெனறு புककான், பாசப-28 [உருக-109
உலகம் சுமககும படந்தாழரவு,
உலகின்றுதை - பிரமன், பிணி-17
உலகுककாணி, கடறு-26 [103
உலகெலாமளநத நாயகன், உருக -
உலகொரு மூன்றும் வென்றவனிரா வணன, பாசப் 1
உலங்கு-கொசுகு, பஞ்ச-2
உலததல் - அழிதல், நிந்தனை - 54, பஞ்ச 65, தவிததல், இலங-23
உலபபிலா-முடிவிலலாதவா, உருக-
உலவருமுயிர். ஊர-113 [23
உலவுதல-தோன்றுதல, அட்ச - 15
உலவையீட்டம, திருவடி-19
உலாயவருதல், உருக-5
உலாவுதல, உருக-21
உலைதல், நிந்த-35, பஞ்ச - 59
உலைததல், பொழி-5
உலைவுறல-தவிததல, இலங-23
உலைவுறுவருத்தம், திருவடி-26
உவகை,உருக்-37, 95 [காட் 65
உவகைத தேனுண்டான் செயல,
உவணததரசு கருடன, கடறு-42
உவணம-கருடன.
உவததல, குளா-27
உவமை, உருக-65, கிங்கரா 47
உழகுதல் - வருததுதல், நிநத - 62. கலककுதல, பஞ்ச-37
உழததல. உருக 65, 76, பாச-12
உழலுதல், நிநதனை-55, உருக-5
உழுநதுபோவதன் முன, பாசப் 53
உழுவைதின்னிய வநத சலையிளம பிணை × இராவணனைக் கணடுநடுங குஞ சீதை, நிநதனை-21 [50
உழுவையங்குழு-புலித்திரள், காட் -
உழை-மான, உருக்-74, அட்ச-14
உழைததல - மிகக வருததமடைதல்: சமபு-29
உழைபுகுசெப்பு × உததரியமறைதத வனமுலை, நிந-15 [198
உழையா-ஏவலாளா, ஊர-10, 27,
உளில-உள்ளான, ஊர-151
உளைதல், கிங்கரா-55
உளைததல் பொழி-55
உளைப்பூசல், இலங-2

உள்ளமழலுதல், பஞ்ச-53
உள்ளமின்றி யுறங்குதல், ஊா-171
உறல், எருக 37
உறவருதுணை, கிங்கரா-24
உறவு, நிந்த-54
உறழ்தல், உருக்-3
உறு-மிகுதி, கடரு-14
உறுகண-துன்பம், காட்-76
உறுகோள-துனபம், உருக்-56
உறுதல், ஊா - 136 நோதல, நிந்த-71. துன்பமடைதல், பாசப்-9
உறுப்பு-உறுதி, ஊா-37
உறை, கடரு-77. நிந்த-47
உறைதல் - வசித்தல், உருக - 104; மொய்த்தல், 76 [உருக-50
உறைத்தல் - பொருந்தி யிருத்தல்,
உறையிடுதல், ஊா-34; உருக-117
உறையுள, உருக-81
உன்மத்தம், உருக-84 [ஊா-151
உன்னம்-நீவாழ் பறவைபபொது,
உன்னுதல்-விரும்புதல், உருக - 12. நினைத்தல, நிந்த-54
ஊக்கம்-உற்சாகம, ஊா-211
ஊக்குதல் - உற்சாகங கொளளுதல், முயலுதல, ஊனறுதல ஊா-221 பிரயோகித்தல்; பஞ்ச-33
ஊசிபோல்வதோ வடுசசெயா நெடும் புயம், பஞ்ச-17
ஊடடித்துடைதல், சமபு 40
ஊடல், கடரு-12 [அடச-1
ஊட்டரக்குணடபோலுநயனத்தான்,
ஊதியம, பாசப-27
ஊதை, சூளா-59
ஊாதல, பஞ்ச-43
ஊழி - பிரமனுயுள், உருக் - 110. ஊழித்தீ, நிந்த - 47. வாழ்நாள், பிணி-33
ஊழிக்கால், கடரு - 22. ஊழிககால ஒவ்வாதன ஒவ்வவீசும, கடரு-62
ஊழிககாற்று × தோ, பாசப்-44
ஊழித்தீ, பஞ்ச-66
ஊழிநாயகன, ஊா-9
ஊழிபோகடல × உரவுததானை:
ஊழிபோவு, கிங்கரா-12 [அட்ச-7
ஊழியான், காட்-63, ஊா-229
ஊழியிறுதிக்கதிரோன் × அனுமான்: அட்ச-27
ஊழியோர் பகலாயோதும யாண்டெலாம, உருக-72
ஊழிவீழுருமு × அனுமன் பிணி - 139. ஊழிவெங்கால் × அனுமான், கடரு-62
ஊழ்-யுகாந்தகாலம், கடரு-4, விதி, கடரு - 21 வரிசை, கடரு - 64: முறை, சமபு-16
ஊழ்முறையலலதுவலியதொன்றில், ஊா-205 [அட்ச-38
ஊறலரிசி × அட்சனது செறிதசை:
ஊறியநறவு, கடரு-12
ஊறு-துனபம், உருக-80, பாசப்-47, பிணி-53 குற்றம், கடரு-58, 88
ஊறுதல, உருக-52
ஊற்றம், நிந்த-57
ஊனம-பாவம, பொழி 23
ஊனாபறவை, அட்ச-40
ஊனறுதல்-உள்ளத்துக கொள்ளுதல், ஊா-92
எக்கா, பஞ்ச-48
எஞ்சுதல-குறைதல், நிந்த-48, உருக்-2, கிங்கரா 54, அழிதல, நிந்தனை-48, மிசசமாகவிடுதல, அட்ச-23, பின்வாங்குதல், பஞ்ச-60
எடுக்குறுதல-பிரதிஞ்ஞை செயதல, கடரு-23
எடுத்தல-காத்தல், சூளா-51
எட்ட நிற்றல - தீண்டுமாறு அளாவி நிறறல, ஊா-24
எண-அறிவு, உருக-90, மகிப்பு 98
எணகொளளுதல் - கணக்கிடுதல், பொழி-50
எணடிசைததேவா, கிங்கரா-59
எணடிசையானை, கடரு-23
எண்ணுதல, நிந்தனை-78
எணவகையுரு, ஊா 12
எதிரெதிரகிடைததல, நிந்தனை-61
எதிர்தல, உருக் 58
எதிரமாற்றம, ஊா-84
எந்திரததேரா, அட்ச-10
எபபரிசு, பொழி-2
எமபியோ தேயந்தானெநதைபுகழன றோ தேயந்தது, பாசப-5
எமபிவீநத விடுககண, பாசப்-19
எம்முன், அட்ச 4
எயில, பொழி-2, ஊா-159

எயிறு, பொழி-13 [50
எயிறுதின்னல், கிஙகரா,14, பாசப்-
எயிறறூறுதேன், ஊர், 112
எய்தநோக்குதல், உருக-28
எய்துதல், உருக 21, 64
எரி - நெருப்புசசுவாலை, பொழி-26
சூளா-8
எரிகக்றைநெற்றி-அக்கினிசசுவாலை
யின் மேலிடம், ஊர்-181
எரிசசேர்ந்திலகின்றவும கனற்பரநத
வும் கற்பककானந் தெரிகில,
இலஙக-30
எரிதாவ மேகப்புனலுங கொதிததல்,
இலஙக-15
எரிபோதல்-எரிககுந்தன்மை மிகுதல்,
அட்ச-27
எரிபோற்குஞசி, அட்ச-40
எரிமடுததல, பிணி-135
எரியால் மழை யிருநதையதாக, சூரி
யன் அककரியினுருகுபொற்றிரள
போலுதல், இலஙக-22
எரியாவையும தொலலுருப்புல்லுதல்
×கருத்தா (மாயைப்புணாபபறக்
கலவியில) தமமியல் பெய்தல்,
இலஙக-6
எரியினிட்டமெழுகு, உருக்-59
எரியைமீயுய்ப்பதோ கல், பஞ்ச-53
எரியோனரककர் பற்றுவரெனறெ
ளிததல், இலஙக, 64
எருததுபிடரி, உருக-44
எருமைகளுமமாதருமிரிதல, இலஙக-9
எருவை-கழுகு ஊர-232
எல-சூரியனொளி,ஊர-230. சூரியன்,
காட்-44
எல்லி - இரா. ஊர-58, பொழி 36,
இருள், இலஙக-13
எவ்விய - ஏவிய, துன்பஞ் செயகிற
உருக-81 [56-எழுசசி, உருக-107
எழில-அழகு, சூளா-87, உருக-44,
எழு, கிஙகரா-8, சமபு - 7
எழுதல - தோனறுதல, பெறுதல்,
உருக-45, 54 நிநதனை-45விளங
குதல்-சூளா 62
எழுநூறுரோசனை சூழ்ந்த வெயிலகிடந
த திலஙகை, ஊர-229
எழுநததானையா - வடமொழிநடை,
பஞ்ச 25
எழுமழை, கிஙகரா-17
எழுவகை நரமபு, ஊர-105
எழுவிதச்சுதி, நிஙக-13
எளிமை, உருக்-39
எளியோ உயிரகோடல் நீதியன்று,
எளுதல், உருக 54 [சமபு-43
எள்ளுறை, ஊர-234
எறிதல், உருக-41 கிஙகரா-7
எறிததல-ஒளிவீசுதல், ஊர-32
எற்புவான்றொடாயாककை, ஊர்-200
எறறுதல, பொழி-2
எனகுதல், உருக-64
எனகுலமென்னது ஆக்குதல். திருவ
என்பிலாவுயிர, அட்ச 27 [டி-61
என்பு, உருக்-95
என்புகூரததளிர்ததல், பிணி-128
என்புயாककைக்கு ஊறறம,கடறு-60
எனனடிமையும பிழைததின்று,காட்
ககநாயகன்றேவி, பிணி-45 [-70
ஏகவாளி, காட்-28
ஏகுதல், நிநதனை 58
ஏஙகுதல் - ஐயுறல், காட்-21, 25
திகைததல்; சூளா-85, ஒலிததல்,
பஞ்ச-30 ஏककமுறுதல,உருக-95
ஏசு, பஞ்ச-17 [காட்-68
ஏசுணணுதல் - குற்றமபொருந்துதல்
ஏசுதல், உருக-19
ஏசசு, இலஙக-59
ஏண, உருக-103 [சமபு-43
ஏதி, ஊர - 114, 139, கிஙகரா - 7
ஏநுயுநாளுமிழததல, இலஙக-55
ஏது, நிநதனை-59
ஏததுதல - கொணடாடுதல, சூளா -
27-ஆசீரவாதஞ்செய்தல், சூளா -
89 [ஊர - 135
ஏந்தல் பெருமையிற் சிறந்தோன்,
ஏந்துதல் - தலைமேற் கொள்ளுதல்,
உருக்-61 தரிததல, ஊர-90
ஏமம், ஊர - 159
ஏமுறுதல்-மகிழ்தல், ஊர 53 கலக்கம்
அடைதல, - 203 இன்பமடை
தல், உருக-70 [திருவடி-41
ஏம்பல்-சலிபபு, பஞ்ச-62 மகிழ்சசி,
ஏயவன்-ஏவியவன, பிணி-87
ஏயெனுமுன், பிணி-118
ஏயெனுமளவு, அட்ச - 26ஏயெனு -
36 மாத்திரை,கிஙகரர்-55,பஞ்ச-36

ஏய்தல், உருக-36
ஏல்-ஏறறல், இலஙக-54
ஏல்தல் - எதிரததுப்போர்செய்தல், நிந்தனை-42 பொருநதுதல், உருக-49, மேறகொள்ளுதல், சூளா 31
ஏல்வை, திருவடி-36
ஏவம, பொழி-59
ஏவல், நிந்தனை-80
ஏவல்செய்தல்; நிந்தனை-53, 68
ஏவுகண்கள், அட்ச-44 [இலஙக 51
ஏழுதலைமைவீரா போர்ககுஏழுதல், ஏழுதலைமைவீரா அனுமனுல் மாய்
ஏழை, நிநதனை-54 [தல், இலஙக-60
ஏறல்-போதல், திருவடி-35
ஏறு, உருக-58 [தல், பஞ்ச-24
ஏறுதல்-வளர்தல், உருக-37, பரவு
ஏறுசேவகன், பாசப-47
ஏற்றல், பஞ்ச-50
ஏனம், பொழி-8
ஐஙகரக்களிறு, ஊர-11
ஐம்பதினுயிரஙகிஙகரர்ஒருபுடையனு மனபாசததைப்பறறுதல், பிணி 12
ஐமபதினுயிரவரகக ரிறககமறறை யோரகடலில் மூழ்குதல் இலஙக-58
ஐம்பொறி, சூளா-19
ஐயம், உருக-25
ஐயன், பொழி 44
ஐராவதம் பாறகடலினின்று தோன் றியது, கடரு 39
ஒசிதல், பொழி-9
ஒடிதல், ஊர-91
ஒடுஙகுதல், உருக-37
ஒட்டார்—பகைவர, சூளா-47
ஒணணுதல், உருக-50
ஒணமை-ஒளி, பாசப-27
ஒதுக்குதல்-நிசசயிததல், ஊர-61
ஒததுதல்-ஒறறறுததல், ஊர-106
ஒருஙகு, உருக-97
ஒருஙகுடையுணாவினுர மாயையின் பெருஙகடல் கடததல × அனுமன் காலினுல் கருஙகடல் கடததல்; உருக-97
ஒருசடையாகிய குழல் × தூமதியை வாயிறபெய்துமிழ்கின்ற வரவு, காட்-10
ஒருதிஙகளே யானிருப்ப லெனக கூறியமஙகை, பிணி-64
ஒருப்படுதல்-உடனபடுதல், அட்ச-1
ஒருவாதரம், ஊர-10
ஒருவர்மேலொருவ ரோடியோகை யென்றுவகைகூர்தல், திருவடி-16
ஒருவனது தீசசெயலின் காரணமா கப் பலா அழிதல் இராவணனது தீசசெயலின் காரணமாக அரககர் குலம் அழிதல்; நிந்தனை-48
ஒலிததல-தழைததல் சம்பு-47
ஒல்வது, நிநதனை-65
ஒழிதல், உருக-38
ஒழிந்தவா-மிகுநதவர்; பஞ்ச-52
ஒழிவுறுதல, உருக்-56
ஒழுககு-நன்னடககை, சூளா-17 வரிசை. ஊர்-215
ஒளிகக, பாசப்-22
ஒளிதல், நிநதனை-47
ஒளிதத-ஒளிபெறற, பிணி-128
ஒளியோன், சூளா-86
ஒளிாதல், உருக 67
ஒறுததலோநிறக, ஊர-39
ஒறுததல், கடரு-68, பிணி-30
ஒறுததா, உருக-113
ஒற்றைமணிமாலை, பஞ்ச-8, 34, 36
ஒறறையுருளைததேரோன, ஊர-97
ஒனறுதல, உருக-7, நிந்தனை-68
ஒனறாகியொன்றிழைதத ஞானர் வுடைமைககுரித்தனறு, ஊர 221
ஓகை, சூளா-75
ஓஙகல—மலை, உருக 92· உயாதல், உருக-37, கிஙகரர்-53
ஓசசுதல-உயரவெடுததல், ஊர் - 90, நிந்தனை-76
ஓடுநதன்மை, ஊர-51
ஓடை - நெறறிபபட்டம, ஊர்-37, பொழி-29; வீரபபட்டம, சம்பு 4, அட்ச-28
ஓதம, கடரு-76
ஓதி—ஓந்தி, உருக் 54: கூந்தல் அட்ச - 43. ஓதி பின்னவிழ்நது வீழ்தல், காட்-49
ஓதிமம, இலஙக-9
ஓதுதல், உருக-15
ஓமம, கிஙகரர்-11
ஓய்தல சூளா-40, 43
ஓயவிலாதுயாதல, காட்-61
ஓயவு, உருக்-97

ஓராழிதேர் ஊர்-11
ஓர்தல், உருக 76
ஓவியம் × மாதர், ஊர் 118. அட்ச-44
ஓவியர்கெழுத வொண்ணாவுருவத தன், பிணி-86
ஓளி கை என்ற இரண்டும் வரிசை யெனப பொருள கொண்டன வாதலால் ஓளிகை - ஒருபொருட் பனமொழி, ஊர்-133
கங்குலும்பகலபடுதல், நிந்தனை-1
கங்கையைச சென்னியேற்றவன், நிந்தனை-43 [32
கசிவுறுதல் - மனமிரங்குதல்: அட்ச-
கசசம்-கசசபம். கூர்மம், கடரு-41
கஞ்சுதல், இங்கரா-9, பொழி 41
கஞ்சம, உருக்-106, சூளா-86
கடகரி, அட்ச-29
கடததல் மீறுதல், தாண்டுதல, நிந்தனை-60, பொழி-18
கடலி லாழுங கலம × பாரிடையழுந்துகுன்றம, கடரு 8
கடலில விழுந்துகழலு மராக்கர் × கடலில்சுழனறமந்தரமலை, பஞ்ச-42
கடலுங்கமழும, ஊர்-17
கடலுறுமதது, அநுயானேறிய மகேந்திரமலை, கடரு - 10, இங்கரா-24
கடல்கடந்தஅனுமான் பவளமலையிற் பாயதல, கடரு-89
கடலதிரை × கவரி, ஊர் 54 [28
கடலமதிலெனசசுறறுதல், அட்ச -
கடற்கதிர் கனியெனத தொடரந்தவன், ஊர்-146
கடறபெருங்கடவுள், ஊர்-146
கடறறுணைநெடியகண. காட்-64
கடன-கடமை, சரமகிரியை, நீர்க கடன, உருக-82, அட்ச-2, சூளா 31, 32
கடாவுதல்-வேரோடு பிடுங்கி வீசி யெறிதல், பொழி 38 ஆராயதல, ஊர் 196
கடி-காவல், வாசனை, கடரு 2, 89, உருக-115; பொழி-16
கடிதல், சூளா 61
கடிது, நிந்தனை-63
கடிததல், ஊர்-88
கடு-விஷம, நிந-17
கடுததல் ஓததல, கடரு 11
கடுமை, உருக-109
கடை, உருக 57, வாயில், பிணி-14[21
கடைகூழை பிணணணிசசேனை, சமபு-
கடைநாள மதிகோளொடுஞ சாயதல் × அனுமன பிரமாததிரததாற பிணிகசப பட்டுசசாய்தல, பாசப-58 [196
கடைநிறறல் - நிறைவேறுதல், ஊர்-
கடையுகம, சூளா-63, சமபு-34
கடையுக வன்கால், இங்கரா-19
கடைவாயில தலைவாயில், ஊர்-138
கட்குடியினு ளுண்டாகுங கணசிவததல முதலியன, ஊர்-111
கட்செவி, ஊர்-75
கட்டழிதல, உருக-55
கட்டழிததல திருவடி-18
கட்டளை-முறைமை, நிந-13
கட்டுபபடடவனுமன × பிணிப்புணட விடை, பிணி 25
கட்டுரை, காட்-31
கட்டுரைததல, இங்கரா-56
கட்டேறுகணணி; பாசப-26
கட்புலங்கதுவல, கடரு-24
கடபுலம, கடரு-61
கட்புலமபுறததுநாரு, கடரு-6
கணகங்கிறுதிகண, கடரு-76
கணம-சூளா-64
கணவன, காட்-36
கணி ஊன்றிபபார்க்கை, ஊர்-134
கணிசசியான, ஊர்-141
கணிசசிவானவன, ஊர்-44
கணை, சூளா-54
கணையாழிபெறற சீதை × இழந்த மணி அரவு, இழநதன பழநதனம படைததவர, குழநதையையுயிரதத மலடி, உழநதுவிழிபெறறதொரு யிரபபொறை, உருக-65
கண.வாததியததில்அடிககபபடுமிடம, ஊர்-159-வழி, நிந்தனை-52
கணகளாற காணவவணோறறிலன, காட்-73
கணகளாற் குவளைக கோட்டங்கடுத்தல, ஊர்-33
கணகள × குவளை, ஊர் 33
கணகொளளுதல, பொழி-50
கணடகம்-முள், சூளா-53

கண்டகர், சூளா - 53: கண்டகன், ஊர்-223
கண்டம்-துண்டம், பிணி-6
கண்டவாறு-செய்யும்வகை, ஊர்-16
கண்ணடி, கடறு-91
கணணன்-கருநிறமுடையவன்; கண போன்றவன்; கணணோட்டமுள்ளவன்; சூளா-72
கண்ணினைசான்று, நிந்-22
கணணிய கருமமின்றே முடிக்குவென, அட்ச-19
கண்ணிற் கணட பாசமெல்லாமிட்டுக் கட்டுதல், பிணி-120
கண்ணீரினு னனைந்து யாக்கை வெப்பினுற் புலாந்த துகிலாள், காட்-8
கண்ணுத லொழியச செல்லுங கயிலையகிரி × இலங்கை நோக்கிச செல்லும் அனுமன; கடறு-25
கண்ணுதல்மழு ,பஞ்ச-46
கணமணி, சூளா-88, கிங்கரர் - 32, பஞ்ச-13
கணமுகிழ்த்தல், பாசப்-59
கணவழுகுறுதல், ஊர-21
கதம், ஊர - 83, சம்பு - 37, திருவடி-16
கதவி கயிறுமண்ணுற வாலோடு வானத்துசசெலலுதல் × அரககியின் குடல் பூமிவரைபொருநத அனுமான் வாலொடு வானத தெழுதல்: கடறு 84
கதி-விரைவு, பஞ்ச-56
கதிததல் - வேகங கொள்ளல், பஞ் 55
கதிரெழுந்தனைய திருமுகம், அட்ச-43
கதிர, உருக்-29, பொழி-15, 37
கதிரவேந்தன் மின்மினி, ஊர-98
கதுபபு, காட்சி-9, பஞ்ச-13
கதுமென, திருவடி-23, பஞ்-5,
கதுவல், கிங்கரர்-48, இலங - 33, நுழைதல், நிந்தனை-38
கந்தர்பப நகரமெனகணுந் தெரியும, காட் 45 [106
கந்தர்ப்பமகளிராடு நாடகம், ஊர்-
கந்தாரம்-கந்தாரப்பண்; கடறு 74, ஊர்-80

கபாடம், ஊர-162
கப்பணம், கிங்கரர-33
கமலக்கணணனு ருள்ளுறை யுயிர், காட்-66
கமலத்தணணல் சாபமொழி, திருவடி-65
கமலம், உருக-51
கமழ்தல்- வாசனை வீசுதல், உருக்-57
கமை-பொறுமை, ஊர-76, காட்-10
கம-ஆகாசம், பொழி-32
கமபா திருமண்காப்புத் தரிக்கும் வைணவா, சம்பு-21
கம்மியர்கள், ஊர்-158
கய, கிங்கரர்-7
கயககமிறுயிறசி, ஊர்-121
கயத்தொழில-இழிதொழில், உருக்-82
கயிலைமலை, கிங்கரர்-20 [85
கயிலையிற் றெலைவி லோன், கடறு-
கயிலையையெடுத்த வரலாறு, கடறு-11
கயிறலைப்புண்ட வனுமன்றேள் × முயிறலைதெழுமுதுமரம்,பிணி-8
கயிறுகளாற் கட்டினதற்கு அனுமான் மகிழ்தல், பிணி-121
கரணம-அந்தककரணம், ஊர-118
கரநதுறை, ஊர-145
கரம-கை, உருக-44, 109 நிந்த-63: காநதி, அட்ச-15
கரமபற்றுதல், சூளா-34
கானாபாடு, பாசப்-19
கரன, உருக-55
கரன்பிசைந்தெழுதல், ஊர-221
கரி-யானை, உருக-44, சூளா-61
கரித்தல - கரியாக்குதல், எரித்தல்; ஊர்-44
கரி . நாயணிமுகத்தினர், காட்-59
கரியநாழிகை-இரவு, ஊர-157
கரு-நடுவிடம், ஊர-232· கிங்க-44
கருட னமுதங்கொணட கதை, கடறு 21, 42, கிங்கரா-48
கருத்தியல்புரைக்குங்கண, ஊர-107
கருத்து எண்ணம், உருக-22
கருநிறமுள்ள கழற்கற்றையின்கீழ் விளங்கும் நெற்றி × இருளின் கீழ் விளங்கும மதி, உருக-56
கருப்புரம, நிந்தனை-2

கருமமே கண்ணுயினார்க்குப் பசி தோன்றாது, கடரு-59
கரும்பிற்பாடலார், நிந்-13
கருமபசசுவை கைபபிததசொல்லியா, ஊா-197
கருவரைமருங்கிற் றழுவிய புது வெயில் × இராவணன மருங்கிற் பொற்பட்டாடை, நிந்-7
கருளன்-கருடன், சூளா-72
கருளன்-நாகத்தைக்கடித்து முறிதல் × அனுமான் சூலத்தைப் பற்றியொடித்தல், ஊர்-88
கரை-அருகு, இலங-28
கல்வியின்கரைகாணாது கடலிடை மண்டுதல், இலங-26
கலவை, ஊா-109
கலிகெழுவிசும்பு, நிந் 6
கலிததல், சம்பு 47
கலினம்-கடிவாளம, சம்பு 42: கலினமா-குதிரை, ஊர்-40
கலுழன், கடரு-21· கிங்கரா-48
கலுழி-வெள்ளம், அட்ச-49
கலுழ்தல் - நீரைப்பெருக்குதல், நிந்தனை-80
தலை-அரைப்பட்டிகை, பிணி-42
கலைக்கண்ணுலளந்தபாடல், ஊர் - 192
கல்லளை, சம்பு-17
கல்லினுமவலிதாம புகை, இலங-13
கல்லுதல், ஊா-58
கல்லென, திருவடி 21
கல்லெனநிற்றல், ஊா-86
கல்லொடுந்தொடாந்த நெஞ்சங்கற்பு, நிந்தனை-39
கவந்ததினைநடம் விடுதியெனப்புல்லல், அட்ச-47
கவந்தம், உருக-85
கவிக்குநாயகன், ஊா-132
கவிக்கூற்று, சம்பு-49, பஞ்ச 45
கவிா, ஊா-182
கவ்வுதல், உருக-54
கவ்வை-ஒலி, ஊா-72
கழல், உருக-106, பொழி-2
கழறுதல், சூளா-7
கழுகின்வேந்து-சடாயு, உருக்-81
கழுக்கடை, கிங்கரா-8
கழுது, சூளா-56
கழைதொடர் வனமெரியுண்டது, கிங்கரர்-23
களந்தவாக்கருவி, ஊர்-192
களப்படககொல்லல், பஞ்ச-46
களி-மயககம, காட்-30
களிசசெருக்கு, சமபு-18
களிததல், கடரு-33, பொழி - 13, சூளா-53
களிற்றினின் வாளரியேறுபாய்தல் ×அனுமான் ஒரு சேனுபதிமீது பாய்தல், பஞ்ச - 56
கள-தேன், பொழி-16, 33
கள்ளம், உருக-19, 28
கள்ளுண்டலாற் கண்சிவந்து வாய் விளகரும், ஊா-108
கள்ளுறககனிநதபறவி, ஊா-37
கறங்கு-காற்றடி, கிங்கரர்-36
கறங்குதல் - ஒலிததல், ஊா-159, சூளா-57, பஞ்ச-16
கறுத்தலில்சிந்தையாள், பிணி-30
கறுப்புண்டமனம், பாசப்-20
கறைப்புனல், பஞ்ச-44
கற்பகத்தருவுநிதியமும்மாலைமுதலியனகொண்டுதொடாதல், நிந்த-16
கற்பகநாடு, கடரு-89
கற்பகமாலைபுலவுகாலுதல், காட் - 44
கற்பகவல்லியா, ஊர்-176
கற்பகவீயின் துளிவீழ்தொறுமேனி தீய்தல், ஊர்-208
கற்பணம-கப்பணம், ஊர்-41
கற்பினுற்றாயவளைத் துயர் செய்ததனுல்விளைந்ததீங்குகள், பிணி-93
கற்பினுற்றாயே னென்னிலனுமனைச சுடேலென்னல், பிணி-127
கற்பு-எணணம, கடரு-36
கற்பெனுங்கடல், பிணி-51
கற்றை, பொழி 37
கனகமால் வரையின்சிறுவன் - திரிகூடம, கடரு-26
கனகம், உருக்-101
கனகவான்கிரியின் ஓங்கிய மெய்த் துறுமரந்தொறுமின்மினிக் சூலமமொயததல் × அநுமான துவானுறவளர்ந்தமெய்யினுள்ள மயிரி

ரின்சுற்றெலாம தாரகைதொதது தல், உருக் 101
கனகன-இரணியன், ஊர-207
கனகன்மெய் × அட்சனுடல்: பாச ப்-21 [கதை, உருக்-48
கனகன்வசசிரயாககையை வகிர்ந்த
கனஙகுழை, ஊர-200
கனலி-நெருபபு, பிணி-129
கனலுட்பொதிசீரை ஞாறு × இராவ ணன் பெருவலி, பிணி-102
கனலுதல் - கடுஙகோபஙகொள்தல், நிந்தனை-39, 64
கனல்வு கோபம், சூளா-78
கனன்முழுகுதல்-கனலினடுவி னிற் றல்; காட்-72
கனிதல், திருவடி-18
கன்மம்-ஊழ்வினை, உருக-84
கன்னி-இளமை, உருக-50 மகள், சூ ளா-22
கன்னிமாநகா-145 [
கன்னியாரை, ஊர 21
கா-சோலை, பொழி-33, சூளா-67
காகமுறறும ஓர கணணிலவாகிய வென்றி, காட்-28
காகம் முதலியன சேனைகளோடுதொ டாந்துசென்றமை, அட்ச 13
காகுததன, ஊர-200
காக கரியாதல், இலஙக-19
காசின்கல-இரததினககல், நிந்-7
காசு-இரததினம,கடரு-48,அழுகு, காட்-68, குறறம, பொழி-41
காட்சியணி, சமபு 36
காட்டிற்குசசெலலுமபோது வேதிய ற்கு ஆன்குல மீநது அவ்வேதிய ஞைசைககரையின்மை கணடுசிரித தவன், காட்-26
காட்டுதல், நிந்தனை-59
காணுதல்-அறிந்து கொள்ளுதல், ஊ ர-218, உருக 25, செய்தல், பாச ப்-15
காணடகுதோகை, கடரு-1
காதல்-விருப்பம, ஊர-37, காட்-28
காததுறுகடை-காவல் செய்யப்பட்ட ஸைமந்த இடம், ஊர-101
காந்தம-சந்திரகாநதம, ஊர-125: சூ ரியகாநதக்கல், சூளா 86, அழகிய பொருள், காட்-63
காந்தள், ஊர்-135
காந்தன், அட்ச-47
காநதுதல்-தீயுமிழ்தல், விளஙகுதல், சூளா-86, 87, சம்பு-6
காந்துறுகதழெயிற்றரவு, பிணி-10
காமசசெருக்கு, பிணி-96
காமத்தாற் கெட்டொழிநதோர் மிகப் பலர், பிணி-97
காமப்பயிரகுநீர் நறவு, ஊர-107
காமரம-இசை, ஓர பணணுமாம, ஊ ர-197, பொழி-27, 33
காமா, சம்பு 6
காமனெய்தவலரம்பு, திருவடி-63காம ன-மன்மதன, நிநதனை-60 காம ன் சரம்பெயதுணி × கணைக்கால், ஊர-197
காமிததல், நிநதனை-54
காயததீ, பிணி-129
காயம - ஆகாயம, ஊர்-22: நிநகரா-44. உடமபு, ஊர-35
காயெரிமுளிபுற்காளிற் சவத்தல் × அரக்கா குழாதது அனுமான் சேர் தல், அட்ச-26
காய்தல், உருக-29, நிநகரர்-27
காய்நதன சலாகையன்னது × இரா வணன் கூறியவாாத்தை; நிநதனை [38
காரணகுறி, காட்-6
காரம-பக்கம், வீடு: ஊர்-3
காரிகையாக்கு, ஊர-201
காரினவரவுகண்டுவக்குமயில் × இரா வணனைக்கணடுவககும் மகளிர,நிந -12
கா, பொழி-10
காக்கருநதடஙகடல், நிங்க-51
காததவீரியன், நிநதனை-50
காலததீயின்சிகை × அட்சனைச சூழ்ந்து சென்ற அரகககவீரர், அட்ச-9
காலபாசம், சம்பு-6. × அனுமன்வால் கடரு-33
காலமொாமூன்றும் வல்லான் - திரி கால ஞானி, உருக-94
காலம், உருக-1, 94
காலம்பாாததிறைவேலை கடவாத கடல், ஊர்-222
காலவெநதீ, நிந்தனை-64
காலன், கடரு-32, உருக்-116
காலினமைந்தன, உருக-31

காலுதல், சூளா-63· நிந்த-75, கால்-
துண்: ஊா - 125, பொழி - 50
காற்று, உருக - 31, சூளா - 61,
சம்பு-45, சககரம், அட்ச-33
கால்கொளளுதல் = கால்வைததல்,
பொழி-50
கால்விடுதல்-ஓடுதல்: அட்ச-39
காவலன், பொழி-56
காவற்சேனையெயனுமன் காணல்,
ஊா-71 [ஊா-73
காவற் பெருநகடல் கடப்பரிது,
காவறறேவா களிகசுஞ சிந்தையார
ழுதல், அட்ச-50
காவியநகணணி, ஊர்-213
காற்றிற்கடியகலினப்புரவி, சம்பு-42
காற்றினால் மேருமலையின் மூன்று
சிகரநகளிடிந்த கதை, கடரு-23
காற்றுநகுள்ள மூவகைக்கதி, ஊா-
124 [103
கானகமயில் × அரககமாதா: ஊா-
கானகம், உருக-58
கானிமிர்வெஞ்சிலை, பஞ்ச-60
கானுயாத்ததா, ஊா-201
கானெதிர்ந்தது, காட்-18
கான் = காடு, உருக்-7, நிநதனை-50
கிநகரர்-4
கான்முதல், நிநதனை-3
கான்முளை, பிணி-91
கிநகரா, பாசப்-10 பிணி-12
கிநகரா எவ்வாறு தோற்றுரென
இராவணன வினவல், கிநக-57
கிசசு = கருபபாது நெருப்பு, பிணி-3
கிடநகு, ஊா-147
கிடை-படுத்திருககை, ஊா-127
கிணகிணிப்பதுமம், ஊர்-4
கிரகணம், பாசப்-58
கிலுக்கம், ஊா-151
கிழக்கெழுவழகு, கடரு 28
கிளாத்தல், நிநதனை-61: உருக-62
கிளிகட்குமகளிர மொழிகற்பிததல்,
கிளை-நரமபு, நிநதனை-11 [ஊா 6
கிளைஞர், சூளா-38
கிளளை, உருக-62
கின்னரமிதுனம், ஊா-119
கின்னரம் - நீவாழ்பறவை வகை,
ஊா-151
கின்னரர், கடரு-73
கீட்டிசை, கடரு-39
கீதங்கள, கடரு-73
கீழைநாள்-விடியற்காலம, காட்-42
கீழ்ததிசைப்பெண, ஊா-53
கீழ்நிலையானை-ஐராவதம இலங-8
கீழ்மையான், சூளா-20
கீழ்விழுதல்-கீழிறநகுதல், ஊா-149
கீளுதல், கடரு-20
குகைப்புறத்துப் புரணடுபோகும
நாகநகள் × மலையின வயிறுகீழ்நத
குடர்களபோலும, கடரு-3
குசை, பஞ்ச-38
குசசரித்திறத்தின், ஊா-189
குஞ்சரத்தனகொழுநா, இலங-27
குஞ்சியிலுங கூந்தலிலுங தீகொளுந்
தியமையும கொளுநதாமையுமறி
யாமை, இலங-5
குடா, சூளா-44, நிந்தனை-76
குடுமிக்குன்றம, உருக-82. திருவடி-1
குடைதல்-அரிததல, சலகரீடை
செய்தல். உருக-23, சூளா-53
குட்டிமம், பொழி-24 [151
குணலம்-ஓரநீவாழ்ப்பறவை, ஊா-
குணித்தல், கடரு-35
குணிப்பு-அளவு, பிணி-23
குணில்-குறுநதடி, நிநதனை-13
குணடநகுளிரதல், பிணி-130
குண்டலமுகததியா, பிணி-6
குதலை, உருக-70. நிந்தனை-69
குதலைதளளுதல், உருக்-70
குதறுதல்-கலங்கப்பெறுதல், பொழி-
42
குதிரைசசேனை மிகுதி, ஊா-9
குப்புறுதல்-கடததல், கடரு-14
குமுறுதல, கிநகரா-6
குமை-நெருக்கம், காட்-10
குமபகர்ணனுயிரப்பு × ஊழியின்
வரவுபார்த துழல்வதான உல
கெலாந் துடைககும மாருதம,
ஊா - 127: குமபகாணனுயிரபபு
அனுமனை நிறுவி நாசியினளவை
யினடததல் - 126· கும்பகாண
னுறககமெய்தல × நாகம தடை
மநதிரததாற் றகையுறுதல்,
கடையுகமுடிவுபாரததுக கடல
புடைபெயரா திருத்தல் - 129:
கும்பகர்ண னெயிற்றின் வரு

ணனை-128. கும்பகாணனை யனு மன் இராவணனென்று ஈருதி மிகசசினததல, 130. கும்பகா ணன-121: × பன்னகவரசு, பர வை, ஒருவழிததொகக விருள, உருககொணடதீவினை-123 கும்ப கர்ணன் துயிலகொணடிருককு நிலை, 123 - 129: கும்பகாணன படுததிருককும மணடபம-122
குயிற்றுதல்-அமைததல், காட் - 56. பொழி-41
குரகதம்-குதிரை, ஊர-14 சமபு-37
குரককு,கோளரியாயினும் மகா வராக மாயினும் பற்றித தரேனையின தணடிக்கவெனல், அட்ச-5
குரককு சককரனயன்மாலென்பார் தகையது, பாசப்-10
குரக்குசசியம், கடறு-35 அட்ச-18, 20
குரককுதல்-தாழ்வுபடுதல, பாசப்-5
குரককு நகரைசசுட்டதென்றுகேட்டு இராவணன் நகைததுச சில கூறல, இலக-46
குரককு போர முடிதத தென்றல சிலைத தொழிறককு குறைவு, ஊர்-223
குரককென்றேதுককருவையுককளை வெனென்று அட்சன பிரதிஞ ஞைசெய்தல, அட்ச-23
குரணடம், ஊர-151
குரமபு-எலலை, காட் 51
குரல், உருக-75
குரவை, ஊர-38
குரன், பாசப்-31
குரா, குளா-74
குரு-பருதத, கிককரா-1
குருதி, குளா-54: நிந்தனை 58
குருதிப்புனல் × ஆறு: அடச-28
குரைததல்-ஒலிததல், கடறு-47
குலককிரி, பொழி 12
குலம் வமிசம, தொகுதி, உருக்-16· பொழி-1
குலாவுதல, உருக்-9
குலிகம, கடறு-9
குலிசததான, கடறு-24, ஊர-216, கிককரா-8
குலிசி இந்திரன், பிணி-70
குலுককுதல், கிককரா-1
குலுককுமவன்றுயா, பஞ்ச-2
குலைதல், பொழி-12
குவவு, கடறு-8. பொழி-43, சமபு-1
குவளை, உருக்-39
குவை, அட்ச-45
குழல்-கூந்தல, ஊர-150
குழற் புதுக குதலையர், ஊர 13
குழற்றுதல்-ஆரவாரிததல், ஊர-188
குழன்று-திரணடு, உருக 57
குழு-கூட்டம், உருக-55, 107
குழுவுதல், உருக-32, இலக-15
குழை, ஊர - 116, பஞ்ச - 19. நிந தனை-15
குழைதல் - தோற்றல், குளறுதல், ஊர-6, 27வருந்துதல, காட்சி - 12 வாடுதல், நிநதனை 32 வளை தல், பொழி-28
குளককு-விலককினுணவு, பொழி-11
குளிததல-நீராடுதல், குளா-64
குளிரதல, உருக் 66
குறককு, ஊர-188, உருக-44
குறடு ஒருதோற்கருவி, நிந்-13
குறி, குளா-76
குறிததல, நிந்தனை-60
குறிததுச்சொல்தல், நிந்தனை-65
குறிப்பாற் கூறுதவற்றை யுணரந் தோமென்று வானரரகள் கூறுத ல், திருவடி-10
குறிப்பு, உருக்-32
குறுகினதவம், கிককரா-16
குறுகுதல, உருக-107
குறுமுனிகுடிததவேலை, கடறு-14
குறும்பு, கிককரா 5 [காட்-53
குறை - துணடம, மிச்சம், ஊர் 58:
குறைதல்-அடককுதல், ஊர்-223 அழிநதொழிதல, நிந்தனை-56 பின் வாককுதல், நிந்தனை-67
குறைத்தல, நிந்தனை-76
குறையுயிர், கிককரா-26
குனிதல், உருக-55
குனிததல, உருக-54, 55, குளா-57
குனறயிலுற வெறிந்த கொற்றன், பிணி-71
குன்றிடை வாவுறு கோளரி × சேனு பதி தலைமேற்பாயு மனுமன்: பஞ் ச 63

குன்றிவர்ந்தகுழவிஞாயிறு × இராவணன் முடியிலணிந்த மௌலி, ஊர-207
குன்றின் தூற்று, சம்பு-5
குன்று-சிறுமலை: இங்கு ரிசியமூகபாவதம். உருக-34. நிந்தனை-60
குன்றுகளைக கழங்கும்பந்துமாடுங்கரம், ஊர-90
கூசுதல், உருக்-22
கூடம் - யானைகட்டுமிடம், ஊர்-101 மாளிகை, ஊர-136
கூடுதல், சூளா-19
கூம்பு × குமிழி: கடரு-8
கூலம-கரை, வால், கடரு 32
கூலவெஞ்சேனை, பிணி-23
கூவுதல்-சடுலவோசை கொள்ளுதல், இலங-5 [சம்பு-5
கூறறினை யேற்றியன்ன குலப்பரி,
கூன்-வளைந்தவுடமபு, கடரு-47: கிங்கரர்-7 பாதிரம், கிங்க-40
கெழுதல-விளங்குதல,ஒதுதல்; உருக-40: நிந்தனை-11
கேடகம் முதலியன அரக்கியா தலை தொறுஞ்சுமத்தல், நிந-18
கேடுசூழ்தல், பொழி 54
கேதம, ஊர-160· சூளா-47
கேழல், அட்ச-5
கேழிலாள், காட்-71
கேழ், கடரு-30; உருக-52 சப்பு-16
கேளான், சூளா-2
கேள், நிந-6
கை, பொழி-13; பஞ்ச-25
கைகயாமடந்தை நிலம்உம்பியதென மூகம் மும்மடங்குபொலிதல,காட்-19
கைகாலற்ற அரக்கர் கூட்டம × சிறகற்றவெற்பினம், கிங்க 30
கைதொழுதிறைஞ்சல, பஞ்ச 4
கைததலை, சூளா-5 கை (த) தலை - அணிவகுபபில். பஞ்ச-65
கைததல், சூளா-41
கைநரமபினுற சிவன் புகழை நயப்புறப்பாடினான், ஊர-178
கைபரததல, கிங்கரா-10
கைபரந்தெழுதல, பஞ்ச 15
கைமறிததுகூறல, கடரு-92
கைம்மறிததல், ஊர 143
கையனலி, பிணி 130
கையில்முக மிருததல் × மலர்மிசை மலாபூததல், ஊர-113
கையினால்தூதா இராவணனுக்குச்செய்திகூறல், கிங்க-56
கையுறல், பஞ்ச-26
கையுறுநெல்லியங்கனி, உருக்-25
கொசசை, பிணி-99
கொடி, சூளா-62 இலங-1
கொடிஞ்சு, சமபு-27
கொடியொடுங்கரிகள் கடலில்வீழ்வ × பாயுடை நெடுங்கலம கடலில் படுவ, பஞ்ச-39
கொட்டில, ஊர-14
கொட்டுதல், கிங்கரா-6
கொட்பு-மண்டலம, கோட்பாடு, கடரு-24: உருக-23 சிறப்பு, பிணி 76
கொண்டல், ஊர-1 உருக்-85
கொணமூக்கிழிததிடை துடிக்கும மின் × இராவணன மாபினால் நிந்தனை-5
கொதிததல, கிங்கரர்-7
கொழுநதுறுதீ, பஞ்ச 52
கொள்கை, பொழி-36
கொள்ளுதல், உருக-17, பஞ்ச-61
கொற்றம, நிந்தனை-69
கொற்றவெணகுடை, ஊர-54
கொற்றன்-பிணி-71
கோ, நிந்தனை-56
கோசிகததுகில், இலங-25
கோடரம, பொழி-58. அட்ச-4
கோடு, பிணி-27
கோடுதல், உருக்-55
கோட்டகம்-நீரநிலை, ஊர-33
கோட்டுதல், கிங்கரா-13
கோட்பு, பிணி-137
கோதாவரி, உருக-85
கோது, உருக-88, சூளா-26
கோதுவிடுதல், நிந்தனை-44
கோபததாறல, ஊர-31
கோபததைத தள்ளாது கவ்வ வந்து சாரந்த ஓதி × அதரத்தையடுததுள்ள மூக்கு, உருக்-54
கோபம தமபலபபூசசி. உருக்-54
கோமகன், நிந்தனை-47
கோமளம், உருக்-86

கோமான், சூளா-76
கோலுதல், சூளா-13 [34
கோல்கொள்வான்-பாகன், அட்ச -
கோவை-ஆரம், ஊர்-120
கோழ்-கொழுமை, கடரு-66
கோளரவு, பஞ்ச-61
கோளரி, கடரு-82
கோள் - அழிவு, ஊர் - 87 வலிமை, சூளா - 49, கிஙகரா - 34 காரியம், ஊர்-227 நவக்கிரகம், உருக்-102, பாசப-58: இடையூறு, சூளா-49 பலம், கிஙகரர்- 14 உட்கொள்ளல், இலங-24 கோள் இழைத்தல், நிந்தனை-66
கௌத்துவம மணிகளி லகன்றது, ஊர்-8
சகரவேலை, ஊர்-29, நிந்தனை-1
சக்கரவாகம், சூளா-86
சசசரி - ஓராவாதியம, ஊர்-189
சஞ்சலம், சூளா-86
சடாயு-உருக-78, காட்சி 13
சடாயுவாற றரையின் வீழ்ந்தவன், சடை, உருக்-57 [நிந்தனை-42
சண்டவேகம, பாசப்-56
சதுககம், நிந்தனை-12, கிஙகரர் - 44
சதுமுகன்படை, பாசப்-59
சந்தம, ஊர்106, சூளா-81
சந்திரமண்டலந் தீயாலுருகியமுது குததலாற சிலவரககா ஆவிபெறுதல், இலங-21
சந்திரன் × சுரபியின்முலை, ஊர் - 56
சந்திரோதய வருணனை, ஊர் - 52 -
சந்து-சந்தனமரம, உருக-89 [54
சமைதல்-அழிதல், பஞ்ச-67: நிகழ்ந்திடுதல, பாசப்-25
சமைததல்-அழிச்தல், கிஙகரா - 42
சமபாதி, ஊர்-232
சமபுமாலி, பாசப் - 10, சம்புமாலி அணிவகுத்து அனுமானை நெருங்கல், சமபு - 20· சம்புமாலி அனுமான் எழுவைஅறுததது வீழ்த்தல், 46· சமபுமாலி இறநததைத தேவா இராவணனிடங கூறல் - 50. சம்புமாலி தன்மீது அம்பு எய்ததற்காக அனுமன் பரிகசித்தல-45· சமபுமாலி தாதை - பிரகத்தன்-3 சமபுமாலிதானே யானான்-41: சமபுமாலி பலவகை சசேனையோடும் புறப்படுதல் - 3 சம்புமாலியிறந்த செய்தியைச்சொல்லத் தேவர் இராவணனிடஞ்செல்லல்-48: சம்புமாலியின் சினம × பொருப்பிடைநெருப்பு-14 சம்புமாலியின்தேர் இரத்தச் சேறறில் ஆழுதல் - 42: சம்புமாலியோடு நால்வகைச சேனையும் சென்றவருணனை-4
சயந்தன், சூளா-77
சரதம், நிநதனை - 56
சரம, நிநதனை-53, சூளா - 13,
சரளசசேலை, ஊர்-103 [பஞ்ச - 8
சரளம், ஊர்-42
சரிதல், ஊர்-51, உருக-57
சரிததல் - சஞ்சரிததல்; சமபு - 33, வலியொடுங்கசசெய்தல்: பஞ்ச-24
சலம், ஊர்-82, பொழி - 20, திருவடி - 41
சலிததல், கோபங்கொளளல், ஊர் -
சலலியுணடை, இலங-35 [48
சவிசசுடர், பிணி-42
சவிபடுதகைசால்வானம் × மேனி: ஊர் 182
சனகனீட்டிய கைகளைத்தன் கைகளாற்பற்றுதல், காட்-24
சனகனபாவை கற்பினாற் றீசசுடாமை, பிணி-131 [75
சனகன்றன்வினைக்கருமம், காட்
சனகிமேல் மனஞ் செல்லுமிராவணன் × பொதும்பர்த தேனையருந்த வகம்புலரும மதவண்டு, பிணி 52
சன்ன வீரக்கோவையிற்றரளம் × பொன்வரையிற் றோற்றிய கோளும்நாளும். நிந்-8
சாகம, பொழி-22, திருவடி-5
சாகாமிருகம, கடரு-84
சாகாமூலம-சாகாமுமமூலமும், ஊர்- [82
சாடுதல், கிஙக-36
சாது - நலலது, பிணி-91
சாபம, உருக்-75
சாமரைமுதலியன மகளிர்தாங்குதல், நிந-12
சாமபன்-சாம்பவான், உருக்-116
சாம்புதல், காட்சி-27, உருக்-21

சாயா-நிழல், கடரு-80
சாரதி, அட்சனுக்குப்புததிகூறுதல், அட்ச-22
சாரல்-ஓரம், ஊா-100
சாரிபதினெட்டு, சம்பு-13
சால, சூளா-13
சாலை=பாணசாலை, சூளா-24, உருக-76
சால்பு, திருவடி-38
சாவம, சூளா-21
சாளரததாள-பலகணிககமபி, ஊா-134
சாறறுதல், சூளா-34
சானகி, ஊா-199, இலங-63
சான்று, நிந்தனை-48, பிணி-127
சிகரமாளிகை, ஊர்-29
சிகரவணகுடுமி, நிந-1
சிகை-கூாநுனி சமபு 38, சிகை நெடுஞ்சுடா-33, சிகையெழுஞ் சுடாவாளி, பாசப்-34
சிக்கவுரைததல் = மனததிறபட சொல்லுதல், நிந்தனை-79
சிக்கறுதல்-தவறுநேநகுதல், காட் 41
சிததல், உருக் 34
சிதைவு, நிந்தனை-71
சித்தியர்-சித்தமகளிர், ஊா-186
சிததிரபத்தி, ஊா-51
சித்திரம்-அழகு, ஊா-94: சிததிரிதத உருவம, காட்சி-20: விசிததிரம, நிநதனை-42
சிததிரவிலக்கம=பாத்திராத இலட்சியம், நிந்தனை-42
சிந்தாகுலம, கடரு-53
சிந்திததல், நிநதனை-57
சிந்து-சமுத்திரம, பொழி-34 புளிய மரம-35
சிந்துதல், பிணி-125
சிந்துரம், ஊா-138
சிந்துராகம், பிணி-43
சிந்துவாரம, பொழி 34
சிந்தை, உருக-16
சிந்தையாலதொடுதல்=எணணுதல், சூளா-34 [ஊா-192
சிந்தை யிடையினும் நடுநகுதல்,
சிமயகோடு-மலைசசிகரம, கடரு-6
சிமயததடம - மலையுசசியிடம், கடரு-48
சிரததாற்றுநகுதல், உருக-66
சிரததை, பாசப்-40
சிரல், ஊா-151 [10
சிலதியா - குற்றேவன்மகளிர, ஊர்-
சிலாதியுணணும்குரநகு, பஞ்ச-1
சிலமபு, ஓசை கிநகரா-32
சிலம்புதல், பொழி-21
சிலேடை, கிநக-47
சிலை=வில், கல், மலை, கிநகரா-13, பஞ்ச-53, திருவடி-26
சிலைகோலுதல், பஞ்ச-52
சிலைப்பு, சம்பு-17
சிலைப்பொருபபுவாநகிய பரஞ்சுடா, பாசப்-2
சிலையின்வயிரக்கால், சம்பு-44
சில்-ஓர்முடியணி, ஊா-4
சில்லரி நிந்தனை-11
சில்லி, சமபு 8, இலங-13
சிவணுதல், நிந்தனை-1
சிவதநுசின வரலாறு, உருக்-49
சிவபிரானே யிலங்கையையொழிக்க அனுமனாக வந்தானெனல், பிணி-15
சிவபிரான்கைம்மாவுரிதரித்த வரலாறு, கடரு 77
சிவனே குரநகுருக்கொணடுவந்தானென்றாலும் பற்றிததருகுவேனெனல், அட்ச-4
சிவன்வில்லிரண்டாயிற்றுவிழ வீங்குதோள், காட் 21 [194
சிறுகுகாலநகளுழிகளாதல், ஊா -
சிறுதொழில, பொழி-1
சிறுத்தல்-குறைதல், உருக்-4
சிறுமை-துயரம, காட்சி- 1· அற்பம், நிநதனை-70
சிறை-சிறகு, காவல், பொழி - 42, சூளா-41
சிறை வைப்பு-சிறைசசாலை, சூளா 6
சிள்மதி-சிற்றறிவு, சூளா-12
சீகரததிவலை, நிந்தனை-14
சீகரதென்றல் × ஊறளாவியகடு. பிணி-53
சீதை, கடரு - 53: சீதாபிராட்டி இராவணனுககு அறிவு புகட்டுதல், நிந்தனை-39-59: அணிகலனைச சீலையில்முடிந்து நிசியமூக பர்வதத்தில் எறிந்தமை, உருக்

34 அநுமானிடம்சொன்ன அடையாளம், சூளா-77-83, 88 அநுமானைசசிரஞ்சீவியாக வாழுமாறு அநுககிரகித்தல், உருக - 72 · அநுமானைப் புனைநதுரைத்தல், உருக-109-113 உம்பிபுல்லினுற் றொடுததசாலையிலிருததல், திருவடி-64. சீதை கமலசசெல்வி, காட்-67 சீதைகறபால் பெண்பாலாா மேன்மை பெற்றுரெனல், திருவடி-67. சீதைகற்பு இராமனருள், நல்லறன் இவைகாபப, இராவணன்கோறலைவிட்டு போயினன், திருவடி-73· நேர்ந்தநன்னியிததநகள, காட்-32-34. துயரததால்மெலிந்தநிலை, 2 29· மருநகுல்போல் வேறுளஅநகமுமமெலிதல்-3. அனுமனகட்டுணடது குறித்துப்புலமபல், பிணி 32-35. சீதையினிடததுக்காதலால், இராவணன் மறுககுறு' மாதாரை வைது சுறுக்கொளநோக்கல், பஞ்ச - 66 சீதையின்கையிற பட்ட கணையாழி × இருந்துபசியால் ..அருந்துமமுது, அறததவரையணமும,...விருநது, வீயுமுயிா மீளும் மருந்து, உருக்-69: சீதையினசிநததையி லருளின்மை, நிந்தனை - 30: சீதையினபிரிவால அறிவழிந்தஇராமபிரான் × இனனுயிரினறியேகுமயநதிரப்படிவம, உருக்-78: சீதையென்பெருநதெயவம, திருவடி-59: சீதையைககணடிலேனெனில் இலஙகையைவீட்டிவீடுவேன், காட்-1· சீதையைக கண்ணி னீாக்கடலிற் காணுதல், திருவடி 68. சீதையைக் காணப் பெறாத அனுமானசிநதனை, ஊா - 225 233: சீதையைததருகெனல், பிணி - 106: சீதையை யிராவணனொளிததது வைததிருத்தல பறறியனுமான் தன்னுட கருதுவன, காட்66-76

சீயம், கடரு-4

சீா, நிந்தனை 40

சீர்ததது-வலிமைப்பட்டது, பாசப்-4

சீர்ததி, பாசப-1

சீாமை, பிணி-99

சீலம்பாககுரியோ ரெணணுதுசெயயா, ஊா 222

சீறுதல், உருக் 80 [23

சீற்றந்துன்பதததுரததல், பாசப்

சீற்றம், நிந்தனை 48, 60

சு - அழகிய, ஊா 79

சுககிரீவன் ததிமுகனிடம் வாலிசேயைச சரணசேரெனல, திருவடி-47· சுக்கிரீவன்முன்னோன்=வாலி உருக 30. சுக்கிரீவனவரலாறு, உருக 29

சுடரெனப்புகரெஃகு, இலங 35

சுடரோன், பொழி 19

சுடா, ஊா 216, ஒளி, உருக் 41

சுடுதல், சூளா 47

சுடுவிககின்றது இவ்வூரைசசுடுகென்றுரைத்ததுணிவு, பிணி 121

சுட்டிநிறறல், உருக 99

சுநதரம், உருக 79

சுந்தரி, ஊா 53

சுமததல், உருக் 13, 109 பொழி 17

சுமநதிரன, உருக 62

சுரசை, கடரு 65

சுரபி × ஆகாயம: ஊா 56

சுரம, உருக் 55 [183

சுரிகுழல்-நுனிசுருணடகூந்தல், ஊா

சுரிகுழன்மடந்தை, பஞ்ச 14

சுருங்கிடை, உருக 97

சுருதி, உருக 55: சுருதிநாயகன், காட் 9 சுருதியன்ன சேவகன், கடரு 19: சுருதியேயன்ன மாருதி, கிஙக 40

சுரும்புசுறறறுத தாடொடு தடக்கை × நீடுறு கீட்டிசை நின்றயானையின்கோடுறு கரம், உருக் 47

சுலாவுதல, பஞ்ச27[ன்றது,கடரு43

சுவணததனி யணடமபிரமதேவனையீ

சுவணம-பொன், ஊா 79

சுவல-பிடரி, அட்ச 37

சுழலுதல, ஊா 6

சுழிததல், உருக 45

சுளித்தல், பிணி 11

சுறவு, கடரு 22

சுறுககொணடேறுதல், காட் 49

சுறுககொளல், பிணி 68, பஞ்ச 66 அட்ச 1

சுற்று-ஒனறைச சுற்றியிருககை, கடரு 34
சுனைநீர் தாதுமுதலியபூசிககுருதி நீர சூடுதல், உருக 84
சூடைக்காசு - சூடாமணி, பொழி 45
சூதா-பாகா, பஞ்ச 59
சூது-உபாயம், பொழி 6
சூரியன்புரவியேழ், ஊா 9
சூரியன்முன் மின்மினி, ஊா 16
சூரியாததமனம ஊா 47
சூரதடிநதவன, பஞ்ச 18
சூரபபணகையை மூககறுததுவிட்டது, பிணி 116
சூலநாள் - கருவுயிரக்குநாள, கடரு 47
சூல்,பொழி 60, நிந்தனை 5,சூளா 55
சூழல் - இடம், சோலை பொழி 28
மாயசசெயல, பொழி 48
சூழி, காட் 46, பஞ்ச 11, பாசப் 14
சூழ்ச்சி, உருக 106
செசசை-பூசுதற்குரியகுழம்பு ஊா 80
செஞ்செவி-மிககவழகு, ஊா 4
செமமயிர × சுடாநெடுவகற்றை, பிணி 40
செமமல்-புதல்வன் அட்ச-26
செம்மைபிடிததல் - சாந்தகுணததை மேற்கொள்ளுதல்
செயிரியர்-பாடகா, ஊர்-192
செயிர-பகைமை, சம்பு 22
செயிரததல், பாசப் 46
செயகுன்று, பொழி 49
செயயவள், காட் 52
செரு, கடரு 7· நிந்தனை 42, 51, பிணி 64
செருககல், சம்பு 22, இலங் 21
செலவு, கடரு 24, பொழி 18
செல்-இடி; சம்பு 17
செலலுதல், உருக் 4
செலவம், நிநதனை 53
செல்வம் முதலியவற்றின மிகுதி, ஊா 39, 40
செல்வி, ஊா 153
செவி-செவவி, அழகு; கடரு 74
செவிசாததல-காதிறபடுதல்,பொழி 6
செவிததொளைதீயசசொலலல், பஞ்ச 66
செவ்வரம், சூளா 34
செவ்வழி, ஊா 61, உருக 100
செவவாயூரனமாந்தல், ஊா 31
செவ்வி, நிநதனை 74 உருக81. பிணி 104
செவ்விராது செவ்வே நிலலாமல, காட் 29
செவ்வே, உருக 63
செவ்வையில் துயிலநம்மைச செகுத்ததது, காட் 55
செறிதல், உருக 57, பொழி 10, நிநதனை 82
செறுதல், அட்ச 39
செற்றம், ஊர் 137
சென்றீ, கடரு 13
சென்னம - ஸ்யேநம: ஊா 151
சேகு. அட்ச 13
சேக்கை மகளிர்படுக்கை, ஊா 106
சேடியா, ஊா 105
சேடு, பொழி 43
சேணுயா, கடரு 26
சேண - உயர்ச்சி, உருக 39, ஆகாயம, பொழி 52
சேண்பகல, சூளா 20
சேதுகட்டினவரலாறு, கடரு 19
சேதுவென்னததெரிதல், கட 19
சேந்தது, சூளா 87
சேமம, ஊா 72
சேயொளிசசெலவன்சூரியன், பொழி 52
சேர்தல், நிந்தனை 46, திரளல், பாசப் 7
சேவகன், உருக 6
சேவகன்றேவி, பிணி 57
சேறல், உருக் 34
சேறுசெயயுமமதம, பாசப் 6
சேனைசெனறபோது நிகழ்ந்தநிகழ்சசி, பஞ்ச 9
சேனையாலெழுநத பேரொலி × கடையுகததாழிவிழுநகு மோதை, பஞ்ச 10
சொதது, உருக் 53
சொறிதல், நிநதனை 61
சொற்றல-பேசசு, பொழி 58
சொனமவுலியாலேற்றல், நிநத 29
சோதியாமமகன, பிணி 106
சோபனம, காட் 36
சோாதல, சூளா25
சோலைகரியவுயிரததல், நிந 19
சோலைகாககும வானரா, திருவடி 17
சோனகா மனையிற் றேனகிடைககும, ஊா 112

சோனை, ஊர்-183, பொழி-11, பஞ்ச-6
சோனைவாகுழல், ஊர்-26
ஞாலம், உருக-84, 116
ஞாலுதல்-தொகுதல், பொழி-13
ஞானத்துததமா, ஊர்-165
ஞானம்பிறந்தோர் அறுபகைமுகுற்றவகளினுலாகிய வருததநீவகல் × நாகம பந்திதத வுயிரப்பு நிமிரதல், கடரு-50
ஞானம முகுற்றததையும்அறுபகையையும் ஒழிகரும, கடரு-50
தகாதல், பொழி-9
தகவு-பொறுமை, ஊர்-90
தகுதியினமையணி, பஞ்ச-31
தகை நறகுணம, அழகு கடரு-29, ஊர்-13, 214, அட்ச-30
தகைமுததம, கடரு-47
தகைமை-தன்மை, உருக்-70
தகையொளி-சிறந்தவொளி, நிந்-6
தகைவு-தடை, ஊர்-199
தக்கோர், சூளா-51
தசும்பு-கலசம, கடரு 89
தஞ்சம், பொழி-3, சூளா-79
தடக்கை தாமபோடெழுவன நாலுதல், பிணி-133
தடம்-பெரிய, தடாகம, உருக்-47,காட்சி 64
தடவிததேடுதல், கிவகரா 36
தடி-மின்னல, காட்சி-43
தடிததது-மின்னல, ஊர்-88
தடுததல், சூளா-51
தடுமாறுதல, சூளா-13
தடைபுருமநதிரந் தகைந்தநாகம் × உறகமெயதிய குமபகர்ணன், ஊர்-129
தட்டுமுட்டாடுதல், சமபு-40
தணடம்-தணடனை, அட்ச-5
தணடமிழ்பபசுநதெனறல், ஊர்-210
தணடலை வாழையன்ன குறவகு,ஊர்-188 [திருவடி-30
தணடல, உருக-104, பிணி-13, 35,
தண்டு, கிவகரா-3
தணணுமை, ஊர்-186
தண(மை), உருக 40
ததிமுகன், திருவடி-18. ததிமுகனவ கதனைச சரணமடைதல்,-49. ததிமுகனும அவகதனுமபொருதல் 23 ததிமுகன் இரணடுகோடி வானர வீராகளோடு வருதல், 21: ததிமுகன் தலைபொழிகுருதிதன்னொடு பணிதல-36
தத்தியுகுதல், உருக-70
ததுதுதல், உருக-98
ததுறல், சூளா-39
தநதம், கடரு-3
தநதி, பஞ்ச-21
தந்திரத்தலைவர், அட்ச-10
தந்திரி-யாழ், நிந்-13
தபபுதல், நிந்தனை-54
தமளியவரவகு, ஊர்-106
தமியன், பொழி-46
தமமுனைகொலவித்தன்னுற் கன்பு சான்றவினததலைவன், பிணி-89
தயவகுதல், சூளா-55, பாசப்-49
தயா, சூளா-30
தயிரநிறததுறு கள், ஊர்-190
தரவதம, சூளா-54
தரம்-வலிமை, திருவடி-21
தரிததல்-தவகுதல், உயிரவாழ்தல்; கடரு-89, சூளா-70
தரு, உருக்-7, பொழி-20
தருககு-தைரியம, வீரசெருக்கு, ஊர-231: கிவகரா-11, கொடுமை, திருவடி-69
தருதல், நிநதனை-77
தருமம், நிந்தனை-54
தலததிடைபபடுததல், சம்பு-30
தலைதொறுமவயவகும மகுடம் × வேலையினீரதழுவியகதிர். நிந்-1
தலைமயவகுதல, பிணி-16
தலைமேறகொள்ளல், காட்-28
தலையெடுததல், நிந்தனை-46
தவஞ்செயத தவம, ஊர்-10
தவததாலவந்த தூய்மை, பிணி-95
தவததையீட்டுதலனறிமற்றைபன ஈட்டுவதாற் பயனில்லை, ஊர்-104
தவபபயன, கடரு-28
தவம தபசும, பயனும்: ஊர-10, உருக்-21, விரதம், சூளா 32, கற்பு, திருவடி-9
தவுதல், ஊர் 24
தழல, உருக-5
தழிய-தழுவிய, கடரு-80

தழுஞ்சி யென்னுமபுறத்துறை,சம்பு-
தழுவுதல், உருக்-5 [43
தழைததல், உருக்-105
தளம் உபரிகை, கடரு-2, இதழ், உ
ருக்-40
தளாதல், சூளா-37, நிந்தனை-50
தளி, ஊர்-125
தளிரதல் - செழிததல், திருவடி-3
தளை-பின்காற்கயிறு, இலங-23
தள்ளிவீழ்தல், கடரு-18
தள்ளுதல்-தளாச்சியடைதல், கடரு-
38, விடுதல், உருக-54; தடுமாறு
தல், உருக-70
தறி, இலங-36
தறுகணுன், பாசப்-8
தனம், உருக-65
தனிமைத்தன்மை, பஞ்ச-26
தனமை-நிலைமை, உருக-35
தனனிறததோடுமாறுதந்து இமைக்கு
ம்பொன்னிறததூசு, நிந்தனை-7
தனனுயிர் கொள்வானிகழததபண
தா, நிநதனை-36 [பு, காட்-67
தாகுதல், சூளா-60, நிநதனை-63
தாங்குதல், உருக-43
தாடகைகிரட்டி யெழுவலிககமை
நத தகைமையா, நிந்தனை-18
தாது - காவிக்கல், மகரநதப்பொடி.
தாதை, பொழி-49 [கடரு 9
தாதைககு அரமபைமாரிறரேனறி
னா, அட்ச-10
தாமணி-கட்டுககயிறு, இலங 23
தாம்பு, சம்பு 1
தாயேயனையகருணையான,பிணி 127
தாயமொழிசூடி, பாசப் 41
தாரகை, கடரு 8 உருக-101, பொழி
15, பிணி 43
தாரம்-இசைவகை, ஊர் 80: மனைவி,
சூளா 30, அட்ச 41
தாரு, பாசப் 48 [21
தாருகன்குருதியன்னகுருதி, பாசப்
தாரை-இடையறுதவொழுககு, ஊர்
56 கூரமை, ஒழுங்கு, கிங்கரா-8,
பாசப் 49
தாரைநீர், பாசப் 5
தார, கடரு 57, சம்பு 8, சிறுமணி,
பொழி-38. படை, படைவகுப்பு.
கிங்கிணி, பாசப் 4, இலங 51
தாரப்பூண, பாசப் 31
தாழிப்படுதயிர் × நிருதா, அட்ச 30
தாழ்-இழிவு, சூளா 54
தாழ்தல் கீழுக்குஇறங்குதல், கடரு8
குவிதல், சூளா 86 காலிலவீழ்தல்
வணங்குதல், நிநதனை 46· பெருகு
தல், அட்ச 39
தாளம், நிநதனை 8
தாளாறுடைப்பறவை, ஊர 5
தாள் - கால, உருக் 32, தாழ்ப்பாள,
பொழி 34, துவஜதண்டம், பஞ்ச7
தானகம - ஈகை, பொழி 23
தானம, பொழி 38 [ழி 19
தானவா, கிங்கரா 7· அரக்கா, பொ
தானவாரி - மதநீர், ஊர் 17
தானைமாககொடி, பஞ்ச 7
திகைததல், பாசப் 50
திக்காரம், கடரு 70
திங்கட்போழ், ஊர 78
திங்கணமாயநநதியமுகம், ஊர 195
திங்கள சந்திரன், உருக 41, மாதம்-
93 × வெண்குடம· ஊர 55
திங்கள்கதிர் சுடுதல், ஊர 193
திசைககரி, சூளா 61
திசைமுகன், ஊர 29
திசைமூனறுநதாயினர் கூறியவுரை
யுணடுயிரகததென வொறுததல்,
திருவடி 30
திசையானை, உருக் 47
திசையானையின்மருப்புற்றிற்ற பழந்
தழும்பு, ஊர் 209
திசையின்பாவைமாரகூந்தல், எரிந்த
நாவிமுதலியவற்றுற்பரிமளங்கமழ்
தல், இலங 40
திடல் - மேடு, கடரு 10
திணி, பொழி 15
திணடாடுதல், அட்ச 39
திணடிறல், பொழி 4
திணணென்யாககை, பாசப 58
திணமை, பொழி 59
திநநாகம, கடரு 39
திமிங்கிலகிலங்கள, கடரு 37
திமில் ஓமீன், கடரு 49
திரங்குதல, காட் 25
திரள - கூட்டம், பொழி 15
திரிசடை, காட் 30, 31. திரிசடை
கணட கனவு, காட் - 40 - 41

50 53, திரிசடைகண்ட நன்னி மிதத்ம, காட் 37-38
திரிதலைசிறுவன் - திரிகூடாசலம்: கடரு-26
திரிதல், பொழி-35 [சூளா61
திரிந்து நிற்றல் - காட்டி நிறறல், திரிபுரஞ்செற்ற முககண்ண், பாசப் - திரு, உருக்-46, நிநதனை-51 [11
திருகுதல - மாறுபடுதல், ஊர் - 15, கட்டுதல், பாசப்-58, நிலைமாறுதல, இலங-11
திருகுறுதல், கிகரர்-5
திருததுதல், ஊர-107, பிணி-40
திருபபதமே வெனறபோதும் இத் திருததுறவென்ற போதும் ஓத திருக்குமமுகம, காட்-20
திருபபாற்கடலிற் சநதிரனதோனறுதல், கடரு-45
திருமகள், உருக் 58
திருமாறபு, ஊர-8
திருமாலடியாரா அவன்தன்மையை யடைவர், சம்பு-36
திருவயிறு, ஊர-9
திரை, உருக-39 சூளா-58
திரைக்கடலழுவம, பஞ்ச-41
திரைக்கும மாசுணம × வாசுகி, திரைததல், பாசப்-61 [பாசப-61
திலகம மணணுற வணணகல்,பஞ்ச-5
திலோததமை, ஊர-197, திலோததமை செருப்பினைத தாஙகுதல், திவளுதல், பொழி-29 [நிந்தனை-2
திறததிறம, பாசப் 9
திறம, கடரு-29, நிந்தனை-60,உருக்-103, பொழி-4
திறமபுகாலம, ஊர-23 [96
திறம்புதல், நிந்தனை 55, 63; பிணி -
திறல், பொழி-7 [உருக - 53
திறன-தகுதி, உருக - 14, வரிசை, தீசசுடாதுநின்ற நீரமை, பிணி-131
தீட்டுதல், உருக - 63, பிணி - 76, அட்ச-46
தீணடுதல், உருக-11, 22 சூளா-19
தீது, உருக்-77, நிநதனை-56
தீநிமிததகதோன்றுதல, அட்ச-16
தீநதுகுதல, உருக்-80
தீமைநன்மையைத தீரத்தலொல்லாது, பிணி-95
தீயாவைகிடந்துன்னினுல் துயருந் தீமைசெயவா, இலங-14
தீயிற் காய்ப்புண்ட செம்பு × கோபததாற் சிவந்த இந்திரசிததின்கண்: பாசப்-20 [67
தீயேயெனலாய பசிப்பிணி, கடரு - தீயைசசுட்டதொா கற்பெனுந்தீயினுள், பிணி-36
தீயதல், நிநதனை-78 [தனை-47
தீயததல் - அழியச்செய்தல, நிந்
தீரதல், உருக்-36; நிந்தனை-53 55
தீர்ததன், சூளா-71
தீவினை, சூளா-35, × இருள்.ஊர-43
தீவினைசசலம, காட்-32
தீவினைதீததல, ஊர-52
தீவினை யறததை மெய்ம்மையால் வெலலுமோ, காட்-76
துசள், பொழி-34 சூளா-84
துகிலொன்று புனைவது, காட்-11
துகைததல், நிநதனை-62: பொழி-32
துஞ்சுதல், உரு-106, கிகரா - 54 பொழி-14
துடி, உருக-38
துடிததல், பொழி-16
துடிப்பு, கடரு-22
துடிமருஙகுல, காட்-31
துடைததல, உருக-16; நிநத-55
துணாபூஙகொததது, பிணி-90
துணிததல், உருக-91
துணிவு, ஊர-8 சூளா-25
துணுககம, உருக - 22; சூளா-22; பாசப-57
துணை-ஒப்பு, சூளா1, கடரு - 77; அளவு, கடரு-87, உருக - 39; நிநேகம, உருக-112
துணைவன, உருக்-29
துணைவி - தோழி, காட்-31
துணடததுணை, அட்ச-5
துணடப்பிறை, கடரு-77
துணணென - அச்சக்குறிப்பு, ஊர - 88
துததததல், பொழி-43
துபபினுறசெய்த கைகொடு கால் பெற்ற துளி மஞ்சு ஒப்பினுன, காட் - 8
துப்பு, பொழி-6, கடரு-33, உருக் - 15, உருக-33

தும்பி, பொழி-10 தும்பி தீசசுட ரைப் புண்டரீகத் தடமா மென வீழ்ந்துகரிதல், இலங-17
துயக்கு - சந்தேகம், கடரு - 50, சோவு, நிந்தனை-10; சம்பந்தம், பொழி-40
துயா, உருக-2, 62
துயர்க்கோள், பாசப்-27
துயாதல், நிந-10
துயிலுதல்-தங்குதல், ஊா-2
துயிலுறுதல், நிந்-11
துயில, சூளா-3
துயில்செய்தல், ஊா-5
துயினறை, காட் 30
துய்த்தல, நிந்தனை 54
துரத்தல், நிந்தனை 45, கிங்கரா 7, பஞ்ச 54
துரிசு-குற்றம், ஊா 143
துரிதம், கடரு 7, ஊா 106
துருவாசமுனி சாபத்தாற் கடலில் தேவாவளனொளிததல் கடரு 45
துருவுதல், ஊா 166, அட்ச 23
துவக்கு, கிங்கரா 33
துவசா - கள்விற்போர், ஊா 112
துவாரம, பொழி 34
துழனி-கள, ஊர் 13
துளக்கம், பஞ்ச 26
துளங்குதல, உருக் 40, பொழி 54
துளித்தல், பொழி 21 [16
துளளி - துளிகள, உருக 53, அட்ச
துள் ளிதருவெள்ளம், ஊா 163
துள்ளுதல, நிந்தனை 43
துறக்கநாட்டை யிலங்கையென் றையுறல, கடரு 1. துறக்கமின்ன தெனபது, கடரு 93· துறக்கமஇந் நகாக்குநரகமொககும், ஊா 14. துறக்கம, உருக15, பொழி 14
துறத்தல், நிந்தனை 52, 55
துறை-இடம, ஊா 161, உருக 40
துனி, காட் 33
துன்பு, உருக் 16
துன்றுதல், காட்சி 2, பொழி - 8, சூளா 3 [பிணி 69
துணனலா - பகைவா, உருக - 78,
துன்னுதல - போலுதல், உருக 10, பெறுதல், உருக 15; நெருங்குதல், பிணி 69
தூக்கு, நிந்தனை 11 [68
தூக்குதல-வெளியெழுதல, பிணி-
தூங்கமளி, ஊா 176
தூங்குதல் - தங்கிநிற்றல். கவலைய ற்றிருத்தல, உருக 12, 13சூளா 23, 85: கட்டப்படுதல், பஞ்ச 59. தொங்குதல், உருக 92
தூசினுத்தரிகம, இலங 25
தூசு, ஊா 59, உருக் 34 சூளா 62
தூசுறை, ஊா 59
தூணி, பஞ்ச 60
தூணடருவிளக்கு, உருக் 108
தூணடுதல்-செலுத்தல, பஞ்ச 57
தூதரின றன்மை, பிணி 114
தூதரைக்கொலலுவது வீரசெயல னறு, பிணி 116
தூதியா, ஊா 114
தூதுபுகுந்தபி னரக்கரைக கொன்ற தென்னெனல, பிணி 108
தூதுளங்கனியையென்றவாய, ஊர் [108
தூயதாள உருக 97
தூயன், உருக 26
தூா பொழி 10
தூர்த்தல, சூளா 58
தூவி, ஊா 118
தூவுதல், பொழி 17, கிங்கர 52
தூளிபொங்குதல் - புழுதிமேலெழு தல், அட்ச 12
தூளியினிமிரபடலம, கிங்கரர் 18
தெட்பு உயாவு, கடரு 94
தெயவககறபு, ஊா 200
தெயவததச்சன், ஊா 8 [10
தெய்வமணி நிந்தித்ததுதவும், ஊர்
தெயவமபடிதல், ஊர் 190
தெரித்தல், சூளா 80
தெரியசசொல்லுதல், நிந்தனை 65
தெரியப்பாரத்தல், நிந்தனை 53
தெரியல், நிந்தனை 50
தெரியன்மாலை, அட்ச 1
தெரிவை, ஊா 29. அட்ச 46
தெரின் - தெரியின, ஊா 222
தெருட்டுதல், திருவடி 29
தெருவிலோா தெருவிலசேறல் × தே யத்தாா தேயஞ்சேறல் ஊா 35
தெருளுதல - தெளிவுபெறுதல்சூளா 28, தெருள, பிணி 98
தெவ்வர், கிங்கரா 5

தெவ்வுநாசீகிஞ்ஞ, பிணி-29
தெழிதெழிசுகல், கிங்கரர்-12
தெழித்தல-நிந்தனை-60, 75
தெளிந்தசிந்தையரும் சிறியாரகளோ டளிநத போகறிதறகெளிதாவ ரோ, ஊர்-154
தெளிவு, சூளா-68
தெறல், நிநதனை-82
தெறுகுநர், கிங்கரா வதை-16
தெற்றல், சமபு-19
தெற்றி, கிங்கரா 44
தெற்றிபிணகிடுதல், பொழி 55
தெற்றுதல், பாசப்-16
தெற்றெனசசெலலல், சம்பு-10
தென்றமிழுரைததோன், நிநத-56
தென்றல், காமககணலைவளாததற்கு உமிழுந் துருததிககாற்று,ஊர்-210: தென்றலபுககு பெயாவதோரூச லினுளதாகும, ஊர்-198[பிணி-71
தென்திசைககிழவன - அகததியன்;
தென்திசைக்கிழவன எரிமுனைஎழு, பஞ்ச-17
தென்திசைககுமோவடவனல × இராவணன், பிணி 40
தென்திசைநமன, சம்பு-18
தென்புலம, அட்ச 26
தென்னகுகுடம - அழகாகவிளங்கு கினறகுடமுழா, ஊர்-186
தேக்கிடுகின்றது, இலங-46
தேக்கு, கடறு-7
தேசுண்டகிங்கள, காட்-68
தேணடி, உருக்-77 தேணடினா,திருவடி-33
தேம்புதல், காட்-29. 61
தேயதல், நிந்தனை-73, அட்ச 38
தேர் × கடல்மீனினம், அட்ச-8
தோ-பேயததோ இலங-16
தேர்க்கொட்டிலின்சிறப்பு, ஊர்-14
தோதல், நிந்தனை-50
தோமடிதல், அட்ச-25
தேவகணததவா இரவிறபணிசெய்யத கிரனல,ஊர்-50. தேவசாதிமகளிர × மின்னினம்-49. தேவசாதிமகளிரபலரும் பணிசெய்ய விரைதல்-49· தேவராலயம், 133: தேவருக கமுதமீநதகுன்று, 100. தேவா × அரககா பாசப-61. தேவர் அனுமானைவாழ்ததுதல், கிங்கரர் - 51: தேவா அநுமான்மீது பூமாரிபெய்தல-52
தேவேந்திரன்நகரிலிருந்து தோரணவாயில கொணரபபட்டது, பஞ்ச-29
தேவி, உருக்-86, நிந்தனை-62
தேவிமாரகள்தழுவியவானோர் × அணைகுபுல்லக் கயிலையினிருநத தேவு கடறு-11
தேவியனேமியான், ஊர்-213
தேவியாவையு முலகமுந்திருத்திய தெயவககோ, பாசப்-55
தேவு-தெய்வததன்மை, காட் - 11. சூளா-21
தேறல், கடறு-88, ஊர்-30
தேற்றம், உருக்-111
தேறறுதல், நிந்தனை-74, திருவடி - 28
தேனிசை, ஊர்-31
தேனுகரளி × மதுவனததுவானரம் திருவடி-15
தேனேபுரைகண், சம்பு-41
தேன × உருகுகியசெமபு. நிந-14
தேனகொளளகிடைக்கு மிடகுகள், ஊர் 112
தைததல, சூளா-78
தையல், சூளா-39
தொகுதல, ஊர்-11
தொகை-தொகுதி; உருக-53. கூட்டம, பொழி-17
தொடரசெய்தல்-பூட்டுதல் இலங-36
தொடர்தல் - வாதுககு அழைததல், ஊர்-26· ஊகிததுணர்தல், உருக்-38 ஓததல், நிந்தனை 39
தொடாநதுசுற்றுதல, நிந்தனை-75
தொடறகருமரககியா, காட் 64
தொடி, நிந்தனை-71, பஞ்ச-14
தொடுதல், நிந்தனை-62
தொடுதல், பொழி-43
தொணடை, உருக-22, பொழி-40
தொதது, கடறு 13, அரும்பு, உருக் 53
தொதததுதல், உருக்-101
தொய்யல்-சோரவுபடுதல், ஊர் - 18· சேறு, உருக்-96
தொலைதல், நிந்தனை-58, சூளா-47

தொல்லா-பழமையானவர், இலங-56
தொல்லை, உருக-29
தொலலைநாணமாதிரங கடந்தவன், பிணி 26
தொளையுறுபுழைவேய, நிந்-11
தோகை, நிநதனை-75
தோகையாமனமுந்துமபியுந் தொடாந்துசுற்றுதல், அட்ச-13
தோடு-மலரிதழ், ஊா-217, பிணி-48
தோமரமுதலிய பல்வகைப்படைக் கலம, அடச-1
தோரணத துமபரிருந்த நீதியான் அட்ச-21
தோரணம, சமபு-15, 16
தோரணம்முறிந்தன துணிதல், காட்-46
தோரணவாயிலில்தோன்றும அனுமான் × ஆழியினடுவட்டோனறு மருகனை, சமபு 16
தோல்-கேடகம, கடரு-7, யானை, பஞ்ச 24
தோளிலிருநது இரததம்சொரிதல × மலையிலிருநது அருவிசொரிதல், கிநக-25 [-39
தோளுகவெலலையொன்றில்லை, பாசப்
தோள்கொட்டியாததல், கடரு-2
தோற்றம்-காட்சி, கடரு-15
தோற்றல்-விளகல: சம்பு-16
தோன்றல் குமாரன, ஊா 102
நகரமைதி × திருமாலுந்திபயநத வணடம, ஊா-24
நகரவமைப்பின்வருணனை, ஊர்-28
நகா × கடல், பாசப்-61
நகர்வாயில்-யமனதுவாயில், ஊா-65
நகில், பிணி-52
நகுதல்-விளங்குதல், ஊா-125, சிரித்தல், நிநதனை - 80, பரிகசித்தல, பஞ்ச-23 மலாதல், இலங-40
நகை-ஒளி, ஊர்-181, பற்கள, உருக் 70· சிரிப்பு; நிந்தனை-74
நகையாமவினை, பிணி-104
நகையெயிறு, கிநகரா-31
நககுதல்-குடிததல், ஊா-189, நீணடுதல், பொழி 51
நங்கை, உருக-17, பொழி-47
நங்கையாமனததவம நோற்றவரினறவததினுமேம்பட்டது, காட்-72
நசசு, சூளா 63
நசசெனககொடியகள், ஊா 189
நஞ்சமுணடவா × அனுமான் மேறசெனற அரககா. கிநகரா 54
நஞ்சம, பொழி 14
நஞ்சனையான், காட 32
நஞ்சு உருக 17
நடக்கிரியை, ஊா 26
நடம்-நாததனம, ஊா 25
நடனசசிறபபு, ஊா 26
நடித்துவாழ்தகைமையதோ வடிமை, ஊா 220
நடுநகு, கடரு 23
நடுநிசியில் நகரிலிருந்தநிலைமை, ஊர் 158, 165
நடுவகழி, ஊா 145
நட்சததிரம × பாற்றுளி ஊா 55: அந்தரததே நிற்கும வானோசிந்தியபூ மழை 57. நட்சததிரவருணனை. ஊா 57
நட்டல, உருக 89
நணணுதல், நிந்தனை 72, சூளா 25
நதது-சங்கு, ஊா 79
நந்தல்-அழிதல், சூளா 9
நநதவனம, கிநகரா 55
நநதவானம்=நநதவனம், பொழி 35
நந்தனம, பொழி 26
நந்தனவனம், பொழி 11
நந்தனவனம் காலக்கனல பருகும் வேலைபோலவேதல, இலங 29
நந்து, பொழி 35
நந்துதல், பொழி 35
நமனுககாயிரங்கோடி தூதருளாகொல், அட்ச 26
நம்பன், உருக 84, சூளா 88
நயததல், ஊா 168
நயனம, ஊா 81, நிந்தனை 60
நரகதேயதது விருளேயும கிரீடததுமணிகள நககுவன, பிணி 41
நரகமுநகுளிரதல், பிணி 130
நரசிங்கமூர்த்தி × அரக்கியுடலைப் பிளந்துவெளிவநத அனுமன், கடரு 82
நரந்தம், ஊா 163
நரமபிழைததன பாடல், பிணி 103
நரமபு, சூளா 57
நரமபு கணணகததுள்ளுறை நறை, பிணி-47

நரலை-கடல், திருவடி-15
நலிநதோர்-வருத்துபவர்; சூளா-42
நலசுதல், உருக 71, சூளா-88
நல்லறத்தின்மாணபு வனிதையாகக்கா
க, காட்-74
நல்லறவீரன்-அனுமான்; கிஷ்க-53
நவிலுதல், சூளா-57
நவை, ஊர்-113, உருக-26
நளிர், உருக்-109 [92
நளினம்-தாமரை, உருக-52, கடரு-
நள்-நடு, காட்-30 [ஊர-158, 165
நள்ளிரவிலிடைநகரி விருந்த நிலை,
நறு-மை=மணம், பொழி 14
நறும்பூ, உருக-57
நறுவிரை, ஊர-5
நறை-மது, நறுமணம்; ஊர-150,161
நனிதவ, பாசப்-51
நனை-அரும்பு, அட்ச 48 [உருக்-84
நன்மதத்தை நாகத்தயல் சூடியவன்,
நன்மை சொல்லுதல்-மங்களஞ்சொல்
லுதல், திருவடி-7
நா-நடு, இலங-19
நாகணைப்பள்ளியான், ஊர-24
நாகம-மலை, யானை, கடரு-39; சூளா-
82, மேலுலகம, சூளா-77 சுரபுன
னை; திருவடி-2
நாகா-தேவர்; கடரு-32
நாகாநாடு, உருக-33
நாகாலயம-தேவருலகம, ஊர-2
நாகியர, ஊர 121
நாசி, ஊர-126
நாசியை யறுப்புண்டாலதழகு,பிணி-
101
நாஞ்சில், கடரு-2
நாடுதல், உருக-23
நாட்டம், நிந்தனை-41
நாணம, நிந்தனை-61
நாணிழல்-புதியவொளி, ஊர-175
நாணுதல, உருக-44
நாணொலியின்வருணனை, பாசப்-36
நாண, சூளா-16
நாணடெறித்தல், பாசப-36
நாயகன், நிந்தனை-62
நாயகன்தூதன்-அனுமான், சம்பு 15
நாயகன் வருமென்பதோர் துணிவா-
ல மாதிரமனைதலையு மளகின்ற
கண், காட்-9
நாயேயனைய வரதகர், பிணி-127
நாரம-நீர, உருக-52, சூளா-25
நால்வகைச சேனைகளையும அவைய
வைகளைகொணடே அநுமான்
அழிததல், சம்பு-30
நாலவகைமேகம, ஊர-149
நாவடகுதல், கிஷ்கரா-12
நாவி, இலங-40
நாளொடுகோளினைநக்க, நிந் 6
நாளொளிகொணமணி, ஊர-102
நாள-நட்சதிரம, ஊர-102; பொழி-
35, ஆயுசு,நிநதனை-57
நாளகண மேலுலகிற சென்றவெண்,
திருவடி-6
நாள்களிறுதல், கிஷ்கரா-31
நாள்மலர, சூளா-25
நாறுதல், ஊர-5, 175, பொழி-35
நாற்றுதல், 176, காட்-57
நானநெய விளககம், நிந் 3
நானம, ஊர-5
நாணு, பொழி-22
நாணுப்பல்லியம, அட்ச-14
நாணுவிஞ்சை, சமபு-11
நாணுவிதம, ஊர-102
நானிலம், கிஷ்கரா 4
நான்கு வேலையுங கோக்கவாடினான்,
ஊர-178
நானமுகன், ஊர 92, நிநதனை - 49
நானமுகன்மைந்தன்மகன் மைந்த
ன்=இராவணன், நிந்தனை-77
நிகர்ததல், நிந்தனை-50
நிசிசரர, ஊர-99
நிசசயம, உருக-48
நிணம, கடரு-67
நிதியகுற்றேவல்புரிதல், ஊர்-27
நிததநியமதொழிலர, ஊர-165
நிமிரசி-வேகம். கடரு-63
நிமிரதல, கடரு-63,பொழி-13,ஊர்-
20, உருக்-67, இலங-51
நிரநதரம, காட்-6, பாசப்-36
நிரபபுதல், கடரு-26
நிரமபுறுதல, காட்-51
நிரல், பிணி-40
நிருதர, ஊர-99, உருக்-11, 112,
நிருதர நிசிசரரானமைகளுக கற்பனை
ககாரணம், ஊர-99
நிருதியிறபிறநதவீர, சம்பு-12

நிலஞ்சுமந்தவுரகன், பாசப்-26
நிலவிலங்கியதுகில், இலங-26
நிலாததோற்றத்தின்வருணனை, ஊா-55· நிலாப்பரவுதல் × இராமன் புகழ்பரவுதல், ஊா-60
நிலாமுன்றில், ஊர்-183
நிலைகெடுத்தல் செயதல், நிநதனை-46
நிலைநிற்றல், நிந்தனை-53
நிலலாவுயிரொடுநின்றா, அட்ச-29
நிவந்ததல், பொழி-50, இலங-12
நிழல்-ஒளி, ஊா-102, உருக-54
நிறககற்றை, நிந்தனை-7
நிறஞ்செருகுறவாய்தொறும் இராவணன் நெருப்புமிழ்தல், நிநகரா-57
நிறம், உருக்-68 காட்சி-63
நிறை-கற்பநிலை, காட்-71
நினைதல், நிந்தனை-63
நினைப்பு-மனம, கடறு-86
நின்னுணை, கடறு-69
நின்னைபபிராட்டி பிரிந்தாளென்பது பொருநதிற்றன்று, திருவடி 63
நீநகிடுதல் - இறத்தல், ஊா-132
நீசன் - இழிகுணமுடையோன், நிந்தனை-58
நீடு-வெகுகாலம், பாசப்-12
நீடுதல், இலங-11
நீட்டுதல், உருக்-63
நீதிநலம், ஊா-83
நீததம், நிந்தனை-64, பஞ்ச-12
நீந்துதல், உருக்-96, சூளா-43, பஞ்ச-55
நீப்பு, பாசப்-20
நீயேயரககர்குழுவை தேயக்கொன்றனை, பாசப்-9
நீர-சிறுநீர், பொழி-55, தன்மை, சூளா-25
நீரஅனுமான்மேற் செல்லல்தककதன் றனப்பஞ்சசேனுபதிகள் இராவணனுககுக்கூறல், பஞ்ச-1
நீலக்குன்றம், கடறு-3
நீலம, உருக்-57
நீவுதல், உருக-52
நீளம்-பறவைகூடு, திருவடி 3
நீறு, பொழி-39
நீறெழுதல், ஊா-89
நீனிறகருன்றிற்றுழ்ந்த வெள்ளருவி × இராவணன்மீது தரிததுளள பட்டாடை, நிந்தனை-5
நீனிறதிராவணன், பஞ்ச-22
நுகாதல், பொழி-11
நுங்குதல், கடறு-74, காட்-72
நுடங்குதல்-அசைதல், கடறு-90
நுணங்குகேளவி, கடறு-94
நுணங்குதல், பிணி 122
நுகல், உருக-63
நுதி, சூளா-60
நுனிததல், நிந்தனை-43
நுன், உருக்-76
நூகுதல், கடறு-52, பெயாத்துததள்ளுதல், திருவடி-2
நூகுறுதல், கடறு-90
நூபரகுரல், ஊா-13
நூலேந்துகேள்வி, கடறு 41
நூல்-மேகலை, புததகம, ஊா-115 உருக 42
நூறுதல்-அரிதல், கடறு-54, அழித்தல, உருக-80, காடசி-27, சூளா-4, பிணி-102
நெகுதல், உருக-2
நெகவுகுதல பிளந்துசிதறுதல், பொழி-10
நெடியோன், சூளா-4
நெடுங்கரப்பூட்கை, சம்பு 39
நெடுநிழல-பேரொளி, நிந்-7
நெடுநதுயா, உருக-9 [வடி-2
நெடுவரவு-தலைகிமிர்ந்துவருகை; திரு
நெயசுடாவிளகது, சமபு-21
நெயதலையுறறவேல், பஞ்ச-65
நெயததல், உருக-57
நெரிதல், கடறு-3, பொழி-9, 16, பாசப்-31
நெருகியசைததல், பொழி-3
நெருக்குதல, காட்-51
நெருபபுசசீதையுளளவனத்தையெரியாமைகேட்டு அனுமன்மகிழ்தல, இலங-62
நெருப்புநகநகுதல், சமபு-44
நெருபபைபபிடிததுவைக கட்டளையிடல், இலங்-47
நெறி, உருக-111, நிந்த-13, பொழி 1, 18

நெறிதல், உருக்-57
நெறிநின்றுபொறிகளைந்தும் வென்றவன், உருக-26 [க்-61
நெறிபோதல், பிரயாணப்படுதல்·உரு
நெற்றி, சமபு 21
நெற்றிகண்ணின்வன்னி பிணி-129
நெற்றியில்சூடிகையணிதல், பஞ்ச-
நேமி, சமபு-4, பிணி-17 [18
நேமிததோ, அட்ச-31
நேராா-பகைவர், கடரு-7
நேரேபடுதல், அட்ச-29
நோ, உருக்-68
நோதல்-எதிரததல, ஊா-42, உருக்-63 ஒத்தல், உருக-112 சொல்லுதல். நிநதனை - 46: எதிரிநிறறல, நிந்தனை-66 நோதல், சமபு 2
நைதல், உருக்-96
நொடி, அட்ச-4
நொய்தின், கடரு-21 பொழி 56
நொவ்விடைமடநதை, காட்-54
நொறில, அட்ச-7
நோதல், உருக 88
நோய், சூளா-37
நோய்மை, பிணி-95
நோற்றல், நிந்தனை 56
நோற்றீணடிருநதவள், காட்-73
நோன்புநோற்றல், நிந்தனை-43
நோன்மை-வலிமை, விரதம், கடரு-21, 72; தன்மை, கடரு - 90, பிணி-122
நோன்ருள்வேரபெருநகடல், ஊா-206
பஃறாலை, அட்ச-20
பகடு, சம்பு-32
பகர்தல், உருக் 2, சூளா-6
பகழி, பாசப் 50
பகுதல், நிந்தனை-60, பொழி-54
பகுதி-பாகம, பாசப்-10
பகுத்தல் - பெயர்த்தெடுத்தல், இலந 55
பகையாழியேழினளவன்று, ஊா-67
பகைகள்மூன்று - காமம, வெகுளி, மயககம, நிநதனை-55
பங்கி-ஆண்மயிர், ஊா 37
பங்குனிமலர்ந்தபலாசவனம், ஊா-70
பசப்பு, காட்-37
பசிப்பிழை, கடரு-68
பசுங்கதிர, ஊா-59
பசுங்காறறு-இளங்காற்று, ஊா 208
பசை-பசுமை, கடரு-18
பசிரததம், பாசப்-40
பச்சைமேனிபுலர்தல், பிணி 99
பஞ்சசேனுபதிகள், சமபு-51 பஞ்சசேனுபதிகளை வெனறவனுமான் × ஐமபொறியைவென்ற நல்லறிவு பஞ்ச-64: பஞ்சேந்திரியம-16, 64: பஞ்சசேனுபதிகள இராவணனுககுக கூறததொடஙகல், சமபு-51: சுபபிரமணியக்கடவுளை வெனறவா, பஞ்ச 18· பஞ்சபூதங்களையொததிருததல்-15 பிரமனை வென்றவா-18. பஞ்சசேனுபதிகள் மூயன்று அனுமானையடைந்து அமபுமழைபொழிதல்-48
பஞ்சபூதங்கள் வளாசசியுடையன, ஊா-20
பஞ்சரம-கூடு, இலங-27 [
பஞ்சு, பொழி-14
பஞ்சியூட்டுதல, ஊா-4
படா, காட்-18
படாதல்-பரவுதல், கடரு-52, உயர்ந்துவளாதல், பொழி-31: நடந்து செல்லுதல், கிங்க-38
படி-உலகம், உருக 9: உவமானம், தனமை-38 [66
படி(க)கால்-ஏணிப்படிககட்டு, ஊா-
படிதல்-மூழ்குதல், இலங-58
படிததல-சொல்லுதல், திருவடி-25
படிவம, உருக-78
படுகளவருணனை, கிங்க-39
படுததல், பொழி-24, சூளா-51
படை, கிங்கரா-7
படைகள் வெயிலொடுநிலவுவீசுதல், அட்ச-12
படைககலசசாலை சலலியுணடையிறறிரளல, இலங-35
படைககலம, கிங்கரா-3
பட்டிமணடபம, ஊா-133
பணம-படம, ஊா-45
பணுமணி, ஊா-185
பணி-கட்டளை, கடரு - 17, அட்ச-3, தொழில, உருக - 20, பொழி-24

பணிககுலம, பாசப்-57
பணிததல், சூளா 82
பணிமாறுதல், ஊர்-197
பணிலம், உருக 43, சம்பு-8
பணை-பருமன், உருக்-72, பொழி-19· கிளை, பொழி-22
பணை-அலங்காரம், பஞ்ச-13
பண்டு, பொழி-53
பணணை-மகளிர்கூட்டம், ஊர் - 119, உருக்-114
பணபு - உவமையாவதறகு உரிய குணம, உருக-38, 39
பதம-இடம், உருக 108, பககுவம், சூளா-14
பதம வேதிகைவைதத செய்தி, காட்-24
பதவியலறிவு, கிங்க-21
பதவு-பகுவம, நிநதனை-71
பதாதி × கடலின்மணல்: அட்ச-8
பதாதிகளழிதல், சம்பு-29
பதினாலாயிரமபடைகன்னன் மூன்றிறகளம்படக கால்வளை வின்னலம், காட்-22
பதைததல் - அசைநதுவீசுதல், நிந்தனை-16
பதைப்பு-இமைத்தல், ஊர்-170
பதையாது - விரைவுபடாமல், ஊர்-82
பததி, பொழி-25, 52
பததிரம் - தாமரையிதழ், அம்பு: ஊர்-170
பந்தனைசெய்தல்-பததிரப்படுததுதல்: சூளா-89
பநதி-குதிரைகட்டுமிடம், ஊர்-101, பிணி 43, பொழி-38
பமபுதல்-மிகுதல், ஊர்-183
பயததினால் கால்கைபிந்துதல், கிங்க-55
பயததின்விம்முதல், கிங்க-60
பயமுணணுதல், கிங்க-35
பயமபிடரிபிடிததுநதல், கிங்க-55
பயிரவு-ஆரவாரம, ஊர்-190
பயிலுதல, ஊர்-161, காட்-39
பயிலெயிறு, நிந்தனை-9
பரசுராமனது தவவலிமையோடு வில்லைததழுவியமேன்மை, காட்-27
பரதனசடைகட்டியசெயல், காட் - 25
பரந்தபுகை × திரிவிக்கிரமனான திருமால், இலங்-7
பரந்தொழுகுதல், அட்ச-43
பரவை, கடரு 4, உருக்-33
பரவை தனனில்வீழ்ந்த அரககர்களின் கூந்தறகுஞ்சிகளால் எரிந்து வேகின்றதொததல், இலங்-33
பராவருதல்-பரவி வருதல், சூளா - 74
பரி, பொழி-38, பஞ்ச-59
பரிசு விதம, பஞ்ச-32· பரிசு இழைத்துககாட்டுதல் - நிரூபிததுக் காணபிததல், உருக்-20
பரிதி, பொழி-43 பரிதிவானவன், காட் 9
பரிததல், காட்-26· கிங்கரர்-3
பரிபவம, ஊர்-146
பரிமளகந்தம், நிந்தனை-2
பரிவு, உருக்-72
பருகுநீ, இலங்-11
பருணிதா-புததிமான்கள், ஊர்-198
பருமிததல்-அலங்காரங கொளளல்: சம்பு-4· பஞ்ச-8
பருவத்தேவா, பொழி 55
பலவசையாயுதங்கள, சம்பு-6
பலாசவனம, ஊர்-70
பல்லணம, பஞ்ச-8
பல்வகையோசை, ஊர்-13
பவளகொடி, கடரு 46
பவளமலை இலங்கைத் தீவிலுள்ளது, கடரு - 89: பவளமலையினின்று இலங்கைகையகாணல்-91
பவளமாககொடி மினனென வரை சுற்றிட, வரைசேர்ந்த திவளும் பொற்பணைமாமரம், யானையின் ஓடையிற்காந்துதல், பொழி-29
பவனன், கிங்க-22
பழி, உருக-13, 36, நிந்-69
பழிப்பு, நிந்தனை-70, சூளா-60
பழுவசசோலை, பொழி-55
பழையமயாமெனப் பணபிலசெய்வரோ பயனோவா, ஊர்-198
பள்ளம, உருக-115· நிந்தனை-72
பளளி-படுகைகை, ஊர் - 117: உருக் - 50

பறவை, கடரு-4
பறவையினரசன, உருக்-44
பறழ், கடரு 6
பறைகின்றாள் ஊர்-102
பறைபுரைவிழி, கிங்கரர்-26
பற்றலா, பொழி-2
பற்றா, சூளா-51
பறறு, ஊர்-60
பறறுதல் நிந்தனை-59, சூளா-76
பனி. நிந்தனை-63, பொழி 31
பனித்தல், உருக-55
பனிப்பு, ஊர்-173
பனைமீன், கடரு-22
டன்னகவனிதையர், ஊர்-49
பன்னுதல் - ஆராய்தல், ஊர் - 28: பொழி-31
பாகியல்கிளவி, அட்ச-13
பாகு பாகம், கருப்பஞ்சாற்றுப்பாகு, ஊர - 2, 3: சுண்ணச்சாந்தின் குழம்பு, 182 தோள் சூளா-82
பாங்கர், பொழி-25, திருவடி-46
பாங்கு நன்மை, திருவடி-42. பக்கம், பொழி-54
பாசதைச் சிந்தவல்லமையுடைய னனுமன், பிணி-20
பாசம், கடரு - 10, நிந்தனை - 55: கயிற்றுவடிவான ஆயுதம், கிங்கரர்-8
பாசி × மழை, கடரு-47
பாடலம், பொழி-31
பாடலரவு செவிபுக வலமருதல், ஊர-192
பாடல் பணணிமை யடைத்தன, ஊர்-162
பாடு - இடம, துன்பம்; கடரு-48, பொழி-31· இறத்தல், பாசப்-26
பாணி-கை, கடரு-74, ஊர்-115 தாளக்கிரமம், ஊர் - 18, 187, பிணி 48
பாணடில், நிந்தனை-11
பாதகன - பாவி, துன்பம்விளைப்பவன். ஊர்-174
பாதசாலகம், ஊர-115
பாதவம் மரம, இலங 55
பாந்தளீகிய முழை × இராவண னெஞ்சு, ஊர் 210
பார்தல்; பிணி-12
பாம்பிவாதறுகட், சமபுமாலி, சம்பு-1
பாரமாமரம், பாசப்-49
பாரி-பாரிப்பு, ஊர்-158
பாரிடையழுந்து குன்றம் × கடலி லாழுங்கலம், கடரு 8
பார்-பூமி, உருக்-33, தேரின் அடிப் பரப்பு, சம்பு-27
பாரப்பு, பிணி-31
பாலிததல், பொழி-55
பால்லின்பரவை கருங்கிரிமேற்பரத் தல் × இராவண னிருமருங்கிற் சாமரமபதைததல நிந்-16
பாவகம்-மனக்குறிப்பு, பிணி-50
பாவகாரி, பிணி-50
பாவனை, பாசப்-55
பாவிவேடன × இந்திரசித்து, பிணி-31
பரவுதல், உருக 9
பாவை பேசுவபோற் புலமபுதல், ஊர-173
பாழி அகலம், ஊர-147, வலிமை, உருக்-72, 110, பஞ்ச-11
பாழிததீ, இலங 44
பாறுதல், உருக-52, பொழி 31
பாறபெருங்கடலில் மாற்பெருங்கடல் வதிதல் × மலாப்பளளியி லிராவ ணன் படுதிருததல: ஊர-206
பானம், ஊர்-5
பானல்-நீலோறபலம, ஊர்-183
பானிறததன்னகுழாம், நிந்-3
பானமை கடமை, பாசப்-14
பிடா, பொழி-52
பிடி, பொழி-13, கிங்கரா-41
பிடிததல - கவர்ந்துசெலலல, ஊர-233; மனத்திலநினைததல், நிந்தனை-62
பிடிமதமபிறததல், காட்-43
பிடியுணடார், பாசப் 32
பிணகு, நிநதனை-55
பிணகுவடு, பாசப்-20
பிணா மகரம், கடரு-46
பிணி-நோய, நிநதனை-55. தொகுதி, இலங-3
பிணிபபுணட செயதிகூறிய தூது வாககுஇராவணனாரமீதல், பிணி-27

பிணிபபுணட வனுமன் இராவண னைகாணபேனெனக கருதல், பிணி-19
பிணடிபாலம - எறியீட்டி, ஊர் - 41 கிஙகரா-8
பிதிர்கள, ஊர்-139
பிதிர்தல், பொழி-9
பிதிர்விததல், அட்ச-35
பிததிபபதி, ஊர-102
பிதது, சுளா-69
பிரசம, கடரு-89, திருவடி-14
பிரமன இராவணனுககு இணஙகா மாதரைமேவினால் தலைசிநதுக எனசசாபமகொடுத்தது, சுளா-21
பிரமன்வரம், ஊர-18
பிராட்டியின காதலைப் பெற்றமை யால், நீயே யாணபிறந்தமைநத செல்வமுணடனையாதி, திருவடி 70
பிரிதல், உருக-13
பிரிந்தவா நெஞ்சமெரிதல, ஊர்-163
பிலத்தின்வாய், பஞ்ச-44
பிலம, பஞ்ச-61
பிழமபு, உருக்-54
பிழை, நிநதனை-81
பிழைததல், பொழி-54- சம்பு-29
பிளததலுணடாா, பாசப்-32
பிளிறுதல, கடரு-5
பிளளபபடுதல், அட்ச-28
பிளளவிரிதல்-விரியுமபடி திறததல், பஞ்ச-61
பிளளை உருக்-62
பிறகமம-உருவம, சுளா-58
பிறஙகப்பிணிததல், பாசப-57
பிறஙகல, சுளா-17
பிறஙகிணா நறுங்குழலர், ஊர-159
பிறஙகுதல, கடரு-34, உருக 44
பிறந்தாரெனனப் பெயாதல், கடரு-82
பிறபபு உதயம, உருக-56
பிறா, சுளா-17
பிறழ்தல - விளஙகுதல், கடரு 6
பிறை, கிஙகரா-7
பிறைக்கடையெயிறு: பஞ்ச-44
பிறிதல, நிநதனை-82
பின்றுதல, ஊர-203, அட்ச - 31, திருவடி-47
பினனவன், உருக-31
பின்னை, உருக-75
பீறுதல், பாசப்-3
புகா, கிஙகரா-8,இலங 29
புகல்-சரணம்,ஊர - 193, புகலுதல், பொழி - 59. புகழை வேரொடுந் திணனல், பஞ்ச-28
புகுதல, கடரு-4, நிநதனை - 35, 56
புகை கதுல முனிதல், கிஙக - 23 புகைககொழுநதா ழுழுந்தபட் டுளரொத்தல, இலங - 24 புகை புகாவாயிலும புகுவான, ஊர் - 140: புகைப்படலையிற கரியுமரக கியா × திரையினுட் பொலி சித் திரப்பாவை; இலங - 28: புகை யால கைலை அன்னம பாறகடல் இவை கருநிறமடைந்து சாதா ரணமலையுமகாகமும உவாககடலும் போலுதல, இலங-32: புகையால் மாதாபோன திகக்தியாமை,இலங-4 புகையிடை மறையுமரக கியா × மஞ்சிடைப் புகுமின்: இலங - 27: புகையுணடவோவி யம × சீதை பிணி-31
புகககவழி - புகுந்தகுலம், நிந்த-79
புகககவன, திருவடி - 12
புடவியுடைகடல் நிநதனை - 5
புட்பகவிமானம், இலங - 43 புட்பக விமானம போவது × அனுமான் போவது கடரு - 24
புட்டில, பஞ்ச - 8
புணரி, கடரு - 19, 75; சுளா - 56
புணரிககணககா - பதினாயிரங கோடி யர், பிணி - 124
புணரிதர வேரோ ராகலிபொலி தல் × அஙகாரதாரை கடலின் மீது விளஙகுதல, கடரு-75
புணரிபோர்தகென வெழுசேனை, திருவடி - 38
புணாசசிதருகேதம, ஊர் - 160
புணாதல், உருக - 42, 87
புணாததல, பிணி - 90
புணாபபு - கூட்டுறவு, திருவடி - 39
புணடரிகை, சுளா - 1
புணடரீகம, உருக் - 76
புணடிரநததி லெரி நுழைதல் × இராவணனுடைய சிறையிறபட்ட துயரோடு இராமபிரான்மீட்க

வராமையாலாகிய துன்பம் சேர்தல், காட் - 12
புணணிய மென்னும் பொருளென் றுழைப்போயது, ஊர்-228
புணணின்வேறுழைதல் × பகழிவாயறுக்க புண்ணில மதிகசதிர விரவுதல், நிந்தனை - 14
புண்ணீராற் செந்தீ யாறிடுதல், இலங் - 56
புணணீர், சூளா - 53
புணணுளே கோலிட்டன்ன மானம் × அரக்கன் வதையாற றுயர்கின்ற மனத்து மடிந்தவரக்கரைக் காணதகோன்றிய வருததம, பாசப் - 18
புதவு, பொழி - 84
புதுபபிழை, ஊர் - 110
புதுமணம், ஊர் - 120
புதுமலை புகுதல், ஊர் - 119
புயம் - தோள், உருக் -49
புயல், உருக - 82, பொழி-37, கிஙகரா - 29
புயல்பொதிந்தவாடை, கடரு - 90
புயல்மகிழ்புரிகுழல், அட்ச-49
புரசம் - (யானை) கழுததிசெயிறு, சூளா -36
புரசை, பிணி - 119
புரந்தரன், பாசப் - 36
புரமட்டான், ஊர் - 84
புரம், காட் - 51
புரவி, கடரு - 24,
புராதனன், சூளா - 21
புரிதல், உருக-57, சூளா-1, 8
புரை-உயர்ந்த, பொழி-34, குற்றம், சூளா-58, இலங-28
புரைவை, உருக் - 106
புலகதல், சமபு-28
புலம்பு-பிதற்றொலி, பாசப்-11
புலம்புதல், உருக - 28 [10
புலர்தல் - உலர்தல், காட்-8, இலங-
புலவர் - பொழி-59
புலவியின் கரைகண்டவர், இலங-26
புலனோக்கல், கடரு - 41
புலன், கடரு 94, பஞ்ச-64,கடரு-9
புலனகள் வீசகுதல், காட் - 72
புலன்கொடுநோக்குதல், ஊர்-205
புலால், பொழி-17, பாசப் - 52
புலியடுமதுகை, ஊர்-110
புல்லியமுறுவல், கிஙகரர்-2
புல்லுதல், உருக-58, பொழி-36
புவனம், உருக்-42, பிணி-67
புழை-துளை, குகை கடரு-70, நுழைவாயில், பொழி-28
புழைததல் - துளையினின்றுவழிதல், காட்-6
புளகு-மயிர்க்கூச்சு, ஊர்-110
புளிததல்-வெறுத்தல், சூளா-53
புள், பொழி-16
புள்ளிவெணமொகுள் × வேர்வை நீர், ஊர்-212
புறங்கை, திருவடி 40
புறஞ்சிலிரததல், பிணி-128
புறமயிர், கடரு-6 [பு, 9
புறம்-உடம்பு, பிணி 122, ஏழனுரு
புறன், உருக-14
புனல், பொழி-22
புனல்குடையுமாபோல் மதுககுடைதல், திருவடி-26
புனிதம், நிந்தனை-63
புனிதன், உருக்-11, பொழி-47 [77
புன்மை-இழிதொழில், நிநதனை-49,
பூ - அழகு, பூதேவி, உருக் 43, 58
பூகம், உருக-50
பூசல்-பஞ்ச-65, பொழி-6, காட்-18
பூசனை, கடரு-60
பூசுரேசா, கடரு 73
பூட்கை யானை, பஞ்ச-8 × கடலின் மகரம், அட்ச-8
பூணிப்பு-விரதம, பிணி-63 [ஊர்-39
பூண வெறுக்கையால் வீதிதூதல்,
பூதங்கள-பிராணிகள், கடரு-73
பூதலம பொனனுலகமாதல், அட்ச-12
பூத்தமரம்போற் புணணுற்பொலிகின்றான், சமபு 43
பூததல், கடரு-6 உருக-52
பூந்துணா, பிணி-10
பூமபந்தா, ஊர்-106
பூமழை, காட்சி-2
பூரணகுடதது நறவு பொநகுதல், காட்-46
பூரிய - குற்றமுள்ள, கீழ்மையான, மிகுதியான, திருவடி-31
பூவலயம், பொழி-59

பூவிலோன்-பிரமன், நிந்தனை-53
பூவை, உருக - 62, நிந்தனை-30, சூளா-26, பிணி-50
பூவையா, ஊர்-49, 120, சூளா - 56
பூழி, சூளா 62
பூழியின்றொகை, ஊர்-127
பெகு-பல, உருக்-8
பெட்பு-விருப்பம், கடரு-66
பெண்ணிவள்கொலலிறபிழை, ஊர் - 91
பெணணின் விளக்கெனுந்தகையாள், நிந்தனை-21
பெணணெனப் பெயாகொடுதிரியும பெற்றியர், காட்-60
பெணபால், கடரு-68
பெணமை - மகளிரக்குரிய குணம், ஊர்-49
பெணமைகேயந்தனவல்ல வெய்ப மாற்றங்கள், நிந்தனை-38
பெயரா இருவினை, சம்பு-35
பெயாதல், நிந்தனை-61
பெயாதும் உருக் 62,
பெருங்கோல், சம்பு-35
பெருமை, உருக-19
பெருமபணணுன்கு, ஊர்-178
பெருமபிறகம், சூளா-58
பெருமபொறியிடிககுலங்களின் வீழ்தல், இலங-10
பெற்றி, உருக-56 [நிந்தனை-57
பேணுதல் - விரும்புதல், பொழி-52,
பேதம-கிளை, பிரிவு, கடரு-73
பேதுறுதல, நிந்தனை-31, பிணி - 31
பேதைமை, சூளா-12
பேம-அச்சம், திருவடி-51 [14
பேயமன்று - குடிகுடிடம், இலங -
பேயதோள்புடைததாததல, அட்ச-17
பேரி, ஊர்-116
பேரியிரட்டவின்றி முழங்குதல், காட்-43
பேருருக்கொணட வனுமன்தோ ணுண்ட போயொடு சாரதியைப் புடைததல், பாசப்-43
போ, நிந்தனை-54
போததல், கிங்க-35
பேழ்வாய், கடரு-79, பொழி - 55
பேறு, சூளா - 10
பேனவேலை, பஞ்ச - 6
பை-பசுமை, நிந்தனை-71
பைங்கழலனுமன, பிணி-12
பைதல-சிறுவன், பிணி-2 [ப 2
பைத்தலையரவெனகனன்று, பாச
பைப்பய, பிணி - 24
பொகுட்டு-மலை ஊர்-207
பொங்குளை, கடரு-4
பொசிதல்-நெகிழ்தல, ஊர்-99
பொடிததல-அரும்புதல, ஊர்-212. போகசுடிததல, காட-28, வெளிப்படுததல, பாசப் - 52, சிதறுதல், இலங - 10
பொடிபடுததல, பொழி - 58
பொதிதல, உருக-34
பொதிபேயின்பணடாரம், அட்ச - 39
பொதிரெறிதல் அஞ்சியதிர்ந்து நடுங்கல், பாசப் 36
பொதிவுறுதல, சூளா 84
பொதுததல, கிங்க-50
பொதுநின்றநீதி, பிணி - 90
பொதுநோகசு, நிந்த 78
பொதுமபர்-சோலை, ஊர் - 186, உருக - 21
பொதும்பு-புதர், சூளா - 28
பொம்மல - பொலிவு, மகிழ்ச்சி, உருக-68, திருவடி - 2
பொய்கை, பொழி - 33; சூளா - 25
பொய்ககரி கூறுதலின் கொடுமை, கிங்க - 58 பொயககரி புகலும் புன்கணுர்குலங்களி னவிந்தா, கிங்க. வதை - 59
பொய்தல் - சொரிதல், கிங்க - 50, துளைக்கப்படுதல், பஞ்ச - 49. பயனிலவாதல், அட்ச-33
பொய்த்தல-பின்வாங்குதல், சூளா - 41; தவறுதல, சூளா - 46
பொய்யிடை, ஊர் - 104
பொய்யுறகசு, ஊர் - 213
பொருகக-விரைவாக, சூளா-8
பொருகெனவெழுதல, திருவடி-11
பொருட்டு, நிந்த 69 [சம்பு-12
பொருதிசையானையூரும் புனிதன்,
பொருநா-போர்வீரா, ஊர்-144 கூததா-162
பொருந்தலர்-பகைவர், சூளா-17

பொருபவரின்மையாற் சோம்பியிருத்தல், பஞ்ச 67
பொருப்பிடைநெருப்பு, சம்பு 14
பொருப்பு, கடரு 14, உருக் 49, 92, கிஙகரர் 6
பொருமுதல்-துக்கித்தல், ஊர் 225, காட் 18
பொருவு ஒப்பு, உருக் 46, நிந்தனை 51
பொருவுதல், நிந்தனை 52
பொருள், நிந்தனை 30
பொருள்பயக்குதல்-காரியதத்தையுண்டாகசுதல், உருக் 75
பொலஙகெழுமலை, கடரு 15
பொலந்தா, சம்பு 50
பொலம், உருக் 46, காட் 32, பொழி 28
பொலிதல், பிணி 88
பொழிதல், சூளா 54
பொழில்-சோலை, பொழி 6, சூளா 1
பொறி-உடற்புள்ளி, ஊர் 101 யந்திரம்: பஞ்ச 49 இலககுமி-பொழி 1 பொறிகசுலம் - புள்ளிகளையுடைய வண்டின்கூட்டம
பொறிகளைந்து - பஞசேந்திரியம், உருக 26
பொறிமுன்செல்லமறைந்து செலலறிவு × அரக்காபின செல்லும அனுமன், பிணி 132
பொறை-பொறுததல், பகதிகை கடரு 50, உருக 95
பொறைதருதல், சூளா 81
பொறையாற்றுதல், உருக 11
பொற்கணுன், நிந்தனை 52
பொறபிறஙகல்-திரிகூடம, சூளா 17
பொறறை, ஊர் 137
பொன்-அழகு, பொழி 36, இலக்குமி, சூளா 48
பொனதந்தமுழை, கடரு 3
பொன்மை அழகு, கிஙகரா 8
பொன்மொய்தததோள, உருக் 84
பொன்றல், சமபு 18, நிந 51
பொன்றுதபொழுது கொடுந்துயரம போகாது, ஊர் 226
பொன்னகருருகிசசோரொழுக்கமறுமையின்விணவேர் விழுப்பது போலும், இலங 20
பொன்னகர, ஊர் 49, 95, பொழி 23
பொன்னிறததுமபிவந்துதிப்போதல், காட் 37
பொன்னெனுந்தன்மையால் தரையுமவேதல், இலங 12
போகம், ஊர் 27, கடரு 93
போதம், உருக் 90: பாசப் 50
போதல்-(விஷயம்) இவ்வாறுதல், பஞ்ச 67, பாசப் 34
போது, உருக 21, நிந்தனை 73
போதுபோகசுதல், உருக் 14
போந்தவழி-பிறந்தகுலம், நிந 79
போரணி, அட்ச 6
போர்க்களவருணனை, பாசப் 16
போர்த்தல், காட் 47
போர்த்தெழுதல், சூளா 62
போர்ப்பணை, பஞ்ச 6
போர்முறுகுதல், கிஙக 16
போவதுபுலமை, திருவடி 11
போழ்ந்தன யான்செய்த குறை, திருவடி 50
போறறுதல்-கொண்டாடுதல், வாழ்ததுதல், பொழி 59
மகரதோரணம், பஞ்ச 44
மகரந்தம, கடரு 74
மகரம், கடரு 22, 46
மகரவீணை, ஊர 29
மகரிகைநெடுமுடி, ஊர 192
மகரிகைவயிரகுண்டலம், நிநதனை 1
மகரிகைவயிரகஙிமபுரிவலயம், நிந 6
மகனறில், ஊர் 151
மககள, நிந்தனை 55
மஙகலகலசஞசிந்தினவிரைதல், காட் 45
மஙகலததிறபிணிததகயிறே யிடைபிழைதத, பிணி 120
மஙகலததீ, இலங 9
மஙகலம-மஙகலநாண, உருக 35
மஙகுல், பிணி 88
மஙகைபஙகன-சிவன், சூளா 78
மஙகையாதாலிதாமேவீழ்தல், காட் 48
மஞ்சனம, ஊர 103
மஞ்சன்-மைததுனன், உருக் 17
மஞ்சின்மெய், கடரு 5
மஞ்சு. ஊர 4, சூளா 86, இலங 58
மஞ்சுமுதலியன கண்டவிடததுக்கணணீர் மிகுதியாகப் பெருக்கல, காட் 7

மஞ்சுளம்-அழகு, ஊர் 32
மஞ்ஞை, ஊர் 116
மஞ்ஞை குன்றொழிததுவேறோகுன்றுசோதலரிது × மயிலனனாா ஒருதோளொழிததது மறறொருதோள சோதலரிது, ஊர் 215
மடநகல-சிநகம, காட்-19
மடந்தையர், உருக் 13, 19
மடந்தையா கயற்றடந்தாமரைக்கலரியோன், பிணி 54
மடந்தையாதனமுகட்டிடைக கிடததல், ஊர் 160
மடம்,பொழி 13
மடிதல், உருக 9
மடிததல்-அழிததல், பொழி 11
மடுததல்-உட்கொள்ளல், இலங 14
மட்டிததல-தகர்ததல், பொழி 24
மணததல-கூடியிருததல, கடறு 74, ஊர் 215
மணநாறுதல் - வாசனைவீசுதல், பொழி 17
மணம், சூளா 64
மணி-இரத்தினம், ஊர் 8, அழகு, உருக்-45, 69; ரசகுளிகை,உருக் 68 முதது, பொழி 35 மணிகெடுத்த நெடுமெயற்பஃறலையரவி னுலாவுதல, நிந 19: மணிக்கதிர முதலியன வெயில்முதலியவற்றை விழுங்கல், அட்ச 15. மணிதூவுதல, கடறு13· மணியணியிருள விழுங்குதல், நிந 3: மணியினிளவெயில, மணிவெயிலிருள்பருக விளக்கின்றி விளங்கு மாடம, ஊர் 180
மண், பொழி 23, 60
மணடலந்திரிதல், கிங்க 61
மணடவுதரததவள - மணடோதரி, பொழி 4
மண்டிலமதில், கடறு 2
மணடுதல-நெருங்குதல், சூளா 85
மதமழைதாழ்குன்று, சமபு 34
மதம, கிங்க 23
மதனம-மதககளிப்பு, பொழி 41
மதி, உருக 51
மதிததல், பொழி 1
மதியினைப்பிளநது மீனெழுதல்,காட் 47
மதிலினொளி, ஊர் 21
மதிலினதிணமை, ஊர் 23
மதிலினுயாசசி, ஊர் 22, 63 64
மதுகைடவரோததின் மேவியகதை கடறு 67
மதுகையான், திருவடி 20
மதுவனததுததங்கியதலைவா பதினெழுவா, திருவடி 44
மதுவனம, திருவடி 18. மதுவன வரலாறு, 22
மத்தம, உருக் 58
மதது × மாருதி, அட்ச 30
மததை, உருக் 84
மநதமாருதம, நிந 14
மநதரகீதம மநதிரகீதம் நிந 13
மாதரம், கடறு 41
மநதாரம-பஞசதருககளிலொன்று, கடறு 74, ஊர் 80, அட்ச 41
மந்திரகீதம, ஊர் 29
மந்திரம், திருவடி 73, வீடு, ஊர் 138 ஆலோசனை, ஊர் 144, நிந்தனை 4, பிணி 21, ஆலோசனைசசபை, உருக் 31
மமமா மயககம், நிந் 14
மயககு, ஊர் 111 பொழி 37
மயஙகுதல்-கலஙகுதல், காட்-23
மயாதல்-மயகக மடைதல், பிணி 36
மயர்வு, உருக 1, 92
மயல், உருக 84
மயனமகளழுதல், அட்ச 49
மயன்மகளுறைமாடம, ஊர் 195
மயன்மடநதை, காட் 49
மயிர அயிலெனததைததல், அட்ச 36
மயிரதளிர்ததல், பிணி 128
மயிலடிதலொழுகின் மதத்தயானை, நிந் 9
மரபு-சமபிரதாயம், ஊர் 105
மரபுளி-முறைமையால· உளி-மூன்ற னுருபு: பாசப் 9
மரன், பொழி 15
மராமரம, பொழி 25
மருஙகு-அருகு; உருக் 34, சம்பு 5
மருஙகுல், உருக 10. மருங்குலென்னவுளளநதளளுதல், ஊர் 38
மருநது-அமிருதம, கடறு 42
மருபபொடியப்படியினிற பரிபவஞ் சுமந்த மாதிரயானை, நிந் 9

மருவுதல் கட்டுதல், பிணி 119
மருளுதல், உருக் 82, நிநதனை 30, சூளா 28
மரைமலாகக்கடவுள், பிணி 62
மலர்தல், பொழி 35
மலாப்பலி-புஷ்பபூசனை; ஊா 115
மலாவுறுதல் - மகிழ்ச்சியடைதல்; சூளா 86
மலாவெள்ளம், கடரு 85
மலைகளைசசிறகற வெறிந்தவன், பாசப் 46
மலைசசிகரங்களி லருவி பாய்தல் × மாளிகைகளினமேற்கொடிசசீலைகளசைதல் கடரு 49
மலைதல், பொழி 10
மலையால் கடலகடைந்த வரலாறு, நிநக 24
மல, சமபு வதை 32
மல்லல-வலிமை, உருக் 58
மல்லிகையில வணடுமொயத்தலின் வருணனை, ஊா 58
மல்லினமலைதல, பஞ்ச 60
மழலை இனனொலி, நிந-3; ஊா-6
மழுவாயமபு, சமபு-46
மழை, உருக 57 குளிரசசி, சூளா 87 மழை குருதிபொழியும், காட் 47 மழைகொளமெல்கூந்தன்மேல் விளங்கிய சூளாமணி × முகின்மேலெழு கோளின வேந்தன, சூளா 87 மழைக்கண, காட் 6 மழைக்குரலிடி, அட்ச 14 மழைதொடாமஞ்ஞை × பலலியதொடுதொடாமகளிர, ஊா 116 மழைபுரைகண, நிந் 15, மழைபோலாததல, ஊா 77: மழைமாகொண்மூ, சமபு 7 மழைமுகிறகணன், நிநக 51. மழையின்வாய் பொத்துவார், ஊா 105: மழையெழுகதிர, பஞ்ச வதை 13
மறத்தல-நீங்குதல, உருக் 62 பகைமைபாராட்டுதல. சமபு 38
மறம்-பகைமை, கடரு 25, பாவம, 29, கொடுமை, ஊா 23, நிந்-26; வலிமை, உருக 44, பாசப் 62: வீரம, நிந்தனை 55
மறலி-யமன், ஊர் 23. சம்பு 38
மறலிக்கோர்கொளளை, அட்ச 28
மறவா, நிநதனை 70
மறிக்கண், ஊா 32
மறிதல்-மடங்குதல், பொழி 9, உயிரழிதல், அட்ச 25, தோற்றல், பாசப் 46
மறு-பழிசசொல், உருக் 15, களங்கம, உருக 41, 8
மறுககம, கடரு 21
மறுகுறுதல்-கலங்குதல், பஞ்ச 66
மறைகளுககிறுதியாவார், கடவுளவாழ்ததது
மறகடம், இலங 18
மற்பகமலாநததோள, காட் 44
மனக்கொளளுதல, சூளா 29
மனத்தின்மாண்பு. காட் 69
மனத்தின்முன்செல்வான், ஊர் 138
மனமுதற்கரணம, ஊா 210
மனிதரான புன்றொழிலோரென விகழ்கின்றவவா, பிணி 46
மனுவின்வந்த ..சேவகன, கடரு 29
மனைக்குலமணிகளெல்லாம் விணடுவின் மாபின் மணியொததது இது, ஊா 196
மனைபபிறவி பெணமைபோல் நாணமபேணநோறறது, காட் 73
மனையின் விமானசிகரததுயாசசி, ஊா 24
மன், உருக 17 பெருமை, சம்பு 3
மன்ற, ஊா 233, சூளா 23
மனனரைமூவெழு பொழுதினுறிப் புணணினீராமுழுகினன், காட் 27
மன்னன், பொழி 58, சூளா 83
மனனுயிர, உருக 12
மா-கவரிமா, உருக 19, நிநதனை 46, யானை, பொழி 60
மாகம்-மஹாகம், கடரு 49, பெரிய, பொழி 22, 50
மாகவனறிசைபத்து, பாசப 42
மாகக்ள-நிங்கரா, நிநக 2, குழந்தைகள 42
மாசு-குறறம். பொழி 41, பழிபபு, சூளா 14, குறைவு 18
மாசுணடமணியனுள, காட் 68
மாடகூடம-மணடபசசிகரம, ஊர் 133
மாடம-உபரிகைவீடு, ஊா 183, பொழி 12
மாடவீதி, கடரு 2

மாட்சிமை, உருக் 19
மாட்டாதார்-பகைவர், சூளா 45
மாட்டுதல்-கட்டுதல், பிணி 119: மாளவித்தல், திருவடி-19
மாட்டுவித்தனை, திருவடி 23
மாணிவேடம்-பிரமசாரியவுருவம், கடரூ 26
மாண, உருக 87
மாதரைகொலைசெய்தா ருளராஞலுந்துதரைக கொலைசெயதாரிலை, பிணி 113: மாதா × துவிப்பேடை, மின்· ஊா 118 மாதாகளமைந்தரிற்றோன்றுதல், பிணி 45: மாதா புனைகோலம், ஊா 109
மாதவி, உருக 21
மாதிரககளிறு, நிந்தனை 2
மாதிரககாவல்யானை அரியின் சுவடளைந்த கரியினஞ்சவிராவணன்வருதல், நிந்தனை 9
மாதிரம்-திககு, நிநதனை 61, மாதிறவகாககுமெணமாககு மற்றையிருவாககும் முகவகள்கண்வைககுந தொறும்பயமியற்றல், பிணி 44· மாதிரந்துளவகுதல், பாசப் 56
மாது-புதல்வி, சூளா 83
மாதுமை பேதைமை, பிணி-88
மாதுறு மாடம-தோகளநிறகுமிடம, ஊர் 101
மாந்துதல்-பருகுதல், ஊர் 31
மாயப்பயிா, சமபு 22
மாயோன், கடரூ 40
மாயோன்மகரககடனின் றெழுமாணபு × மைநாகமமேல்வந்ததோற்றம், கடரூ 40
மாய்தல நிந்தனை 78. சூளா 35
மாயததல, உருக 87, இலவ 4
மாரி, கிஙகரா 10
மாருதம், அட்ச 30 மாருதம்பொருதநாளராவரசுசுறறியமேருபாசப் 62
மாருதி, சூளா 87: கடரூ 25 மாருதி சூரியனையொததிருததல், கிஙக 46· மாருதிமந்தரவகடுததல், கிஙக 47 மாருதிமேனியைச்சரததான்மறைததல், பாசப் 44. மாருதியாகியமாரியால் அறமுளைததல, ஊா 52
மாலணியுவகாசு கௌததுவம, ஊா 8
மாலி அனுமான்மேல்போதல் × இலவகைவேந்தன் போாசசினம் போதல், சம்பு 2
மாலை-வரிசை, கடரூ 49· ஒழுககு, சூளா 64
மால், உருக 92
மால்வரையருவி × குருதி பாசப் 49
மாளிகை, பொழி 19. மாளிகை தீப்பற்றியதையும, பற்றுததையும் மணிகளி ஞெளியால் அரகியருணராதுவருந்தல், இலவ-3
மாளுதல், சூளா 49, நிநத 55
மாறுகொள்ளுதல், உருக 102, மாற்றிக்கொளளுதல், ஊா 217
மாறுமாறுலகு, பாசப-22
மாற்றம்-வாா்தததை, உருக் 28, அட்ச 14, செயதி 58
மானததாறபுழுஙகுதல், பாசப் 18
மானம்-செருககு கிஙக வதை 49: விமானம, பொழி 21
மானவன, பொழி 2
மானுதல், சூளா 25
மானுயா், ஊா் 201, அட்ச 41, நிந்தனை 50, 78
மானமதம், ஊா 17
மிகுதல் - மேன்மேல்வளர்தல், ஊா் 214
மிகுததல் - வரம்புகடததல்: பிணி 94
மிகை-குற்றம, ஊா் 101
மிகைபபுலன்-கோபமாகியவுணர்ச்சி, பிணி 114
மிஙகையெழுஞ்சினம், பாசப் 34
மிடல், கடரூ 10, பஞச 54
மிடறு-கழுததது, உருக 50
மிடுகெகு, உருக் 117
மிடைதல், உருக் 23
மிதிலைநாடி, பிணி 21
மிலைசசுதல், பாசப் 13
மின், பொழி 15. மினகொடி × விளககுமாறு: ஊா 3
மின்னகுகிரி, சமபு 9
மின்னுதல்-பிரகாசிததல், கிஙகரா் 8
மீகூாதல, ஊா 215
மீகொளல் - மேலே பொஙகியெழுகா்ட் 71

மீசசென்ற விடையிடைகலத்தல், பாசப் 52
மீட்டல், உருக 20
மீட்டும, பொழி 5
மீத்து-மேறபககதிலுள்ளது, அட்ச 38
மீளி, பாசப் 8, கிஙகரர் 18
மீளுதல்-பிழைததல், தணிவுபெறுதல், உருக் 69, சூளா 49
மீனநிலயம சமுததிரம, பொழி 2
மீனுயாததவன், ஊா 201
மீன்சூழ்வரு மூழுமதி × முததமுயிர்த தசஙகம், கடரு-47
முகக்குழு × முளரிக்கானம, ஊா 33
முகடு, கடரு 32
முகடு-உசசி, ஊா 62, உருக 99
முகததல் - பிடுஙகுதல், பொழி 13
முகமெதிர்வைததல - எதிரமுகமாதல் அட்ச 32
முகஙகெடுதல் முகமபொலிவழிதல், பொழி 26
முகம்மாறறமுரைததது, திருவடி 5
முகரயானை, அட்ச 25
முகில், உருக 19, சூளா 87
முகிழ், உருக 40
முகிழததல், உருக 53
முகிற்கணம் புகைவிழுஙகலின் தெரிந்திலவாய மலைததலை தொறும மயஙகிப் பூவைவீ யென்னப்போவன, இலஙக 31
முகை, பொழி 16, நிநதனை 19
முககணு ணூாதிமுதலியன வல்லாத குரஙகின்மேறசேறியோ, அட்ச 2
முককணுக்கினன், ஊா140
முகசுற்றம், கடரு 50
முசலம, கிஙகரர் 3
முடகசு, பொழி 13
முடி, உருக 9
முடிதல, உருக 9
முடிததல், நிநதனை 59, சூளா 65 திருவடி 37
முடிநதிடுதல-அடஙகிவிடுதல், ஊா 223
முடியுமுததமும்பிருந்த சரணததான், ஊர் 217
முடிவது-நடப்பது, ஊா 220
முடுகுதல, கிஙகரா 9, அட்ச 36
முடுகுறுதல், நிந்தனை 76
முடுகுதல், கடரு 36
முடையுடல், கிஙக 26
முட்டில்-சிறை ஊா 25
முட்டுதல, ஊா 76, கிஙகரா 1
முட்டை-அணடம, திருவடி 66
முணடம-உடல், கடரு 77
முதலி முற்பட்டுச செல்பவன் கிஙக 22
முதல, நிநதனை 78
முதல்வன்-காரணன், உருக்-71
முதிரதல், அட்ச 35
முதுகுளுக்குறுதல், நிந17
முதுமரம × அனுமன்தோள: பிணி 8
முதுமை - பழமை, உருக் 36
முத்தலையெரிகன், 115
முததன்-நான்முகன், ஊா 94
முந்துதல், நிநதனை 79, பொழி 7
முந்தை, திருவடி 7
முந்நீர்-கடல், கடரு 87
முபபுரஞ்சுடமுடுகுமீசன × அனுமன் பாசப் 24
முமமதம், ஊா 150
முமமைததீ, பிணி 129
முமமைத்தூரியம, ஊா 158
முமமைநூறுயிரங்கெரு, ஊா 157
முயஙகுதல-தழுவுதல், ஊா 194 உருக 67
முயலிலவெணமதி × வெணகுடை, நிந-16
முயலுதல, பொழி 5
முயறகறை மலராததிஙகள், ஊர் 121
முயிறு-எறுமபுவகை, பிணி 8
முரசகொணமூ, அட்ச 7
முரண - வலிமை, பாசப் 54, உருக் 49, நிந்தனை 69, மாறுபாடு, பஞ்ச 58
முரனெனத தகுமொய்ம்பினோ, காட் 18
முராநதகன், பிணி 115
முரிதல், ஊா 55, உருக 49
முருகன, அட்ச-20
முருக்குதல, ஊர் 207, சூளா 8 பாசப் 14

முருகுதல், கடரு 30
முருந்தன், பிணி 37
முலைக்குவை, உருக 66
முலைவிலை, சம்பு- 35, முழுக்க முழு கடிகக, முழுவதும்: இலங 20
முழுநிலவு பூரணசந்திரன், உருக் 53 [தை, பஞ்ச46
முழுமுதற்கணணுதன் முருகன்ரு
முழை-குகை, கடரு 4, கிஷகரா 1 உளதொளை, ஊர் 116
முழைநாலாக்குடா, அட்ச 37
முளரிவந்தான், கடரு 77
முளைதல், உருக 53
முளளிலாமுளரி × கை, ஊர் 113
முறி - துணடம, உருக் 53 தளிர், இலங 19
முறிந்துஉதிரம்நூறி- அழிந்துசிதறும படிநாசஞ்செய்து, சூளா 4
முறுகுகாதல், ஊர் 194
முறுவலுகநகுதல், சம்பு 45
முறுவல், ஊர் 38 உருக 52 முறுவல் செயதல் - பரிகாசமாகச சிரித்தல், பொழி 58 [உருக 53
முறை-தலைமை, ஊர் 222 வரிசை,
முறைமறுததல், கிஷகரா 13
முறகரம சம்மட்டி, கிஷகரா 8
முற்றமுனிதல், சம்பு 46
முறறுதல் - முடிநதிடல், தணிதல். சூளா 49 [50
முறறினவீரன் - சிறந்தவீரன் பஞ்ச
முறறுதல நிறைவேறுதல், ஊர் 95 நிரமபுல் 214, நிநத 69 பொழி 23
முநிதல, நிந்தனை 64 சூழ்ந்துகொள்ளல், பிணி 134, பஞ்ச 25
முற்றுவித்தல, ஊர் 222
முனிதல், உருக 4
முனிநதருளல் - கோபிக்கவேணடா: சூளா 2
முனிவா: உருக் 55 நிநதனை, 56
முனிவாகுமமைநதவீடு மீட்குறுமேனகை, பிணி 48
முனிவாகும அமராகும் வலியாா பகையாயவை இநதிரியமஐந்து, பஞ்ச 16
முனிவன்-பிரமன், பிணி 115
முனிவு கோபம, நிந்தனை 70: முனிவெனுங கடலை அறிவென்னுமபெருமபரவைப் புனலாலவிததல். ஊர் 131
முனைவீரன்-முனைநதுநிற்கிற வீரன்: ஊர் 223
முன்றில் - முன்னிடம், கடரு 46, உருக 70
முனனுதல, ஊர் 49
முனனோன் - தமையன், உருக் 30
மூசமுட்டுதல் - நெருங்கப்பிடிததல், இலங 2
மூசுதல், ஊர் 126
மூடா, பொழி 58
மூட்டு, பிணி 119
மூட்டுதல், சூளா 65
மூணடகாலவெந்தீ × முற்றியசீற்றம, நிந்தனை 64
மூதுரை - முதுமொழி, ஊர் 139
மூரல், உருக 52
மூரி, உருக 49, கிஷகரா 3, சம்பு 22
மூரிநீர் - கடல, ஊர் 13
மூலம, ஊர் 222
மூவகையுலகததையு முறையினீககியபாவி, காட் 67
மூவகையுலகையும் விழுங்கமூள்கினறான் - இராவணன: கிஷக 59
மூவா-மந்திரிகள சேனாபதிகள் பிரதானிகள், பிணி 50
மூவாமுதனுபகன, கடரு 45
மூளுதல் - கிளமபுதல், நிநதனை 64 உணடாதல, சூளா 49
மூன்றெயில - திரிபுரம, ஊர் 44
மெய-மேனி உடமபு உருக 22 உணமை 25, நிந்தனை 77, 44 மெய்கலநத மால், பஞ்ச 15
மெயததல் - நல்லொழுக்கந் தவறாதிருததல், காட் 24 நிரூபிததல, கடரு 34 [உருக 63
மெய்ப் பெயா உணமைப் பெயா,
மெயமமை தனமை, உருக் 102
மெயயறமூாததி. பிணி 78
மெயயுறுவிளககம் விளகினமபோல் விளக்கும, ஊர் 164
மெலிதல், உருக 66
மெலலரகு × ஊர், ஊர் 230
மெலலியோா, உருக் 50
மென்லென்பிடி, கடரு 5
மென்மை - அடக்கம், பிணி 109

மேகநாதன்-இந்திரசித்து: பாசப் 42
மேக்கு, உருக் 67
மேகுறவிசைததல், கடரு 7
மேதி இலங 9
மேரு × அனுமான்: கடரு 34: மேரு + வில், நிந்தனை 45 சம்பு 9: மேருவையனுக்குமாகால், ஊர் 2
மேலது, உருக 100
மேல்-எழனுருபு, ஊர் 28
மேன்மை, நிநதனை 49
மேவுதல்-கூடுதல், சூளா 21
மேற்கொளளுதல்-கைககொள்ளுதல், நிநதனை 49
மேனுள்-முந்நாள், நிந்தனை 65
மேனியது, உருக் 54
மை-மேகம், பொழி 13.கடரு 5
மைநாகஞ் சிகரங்களிலமணியிமைக்க வருதல × ஒருவன் கடலுண மூழ்கி மணிகளையெடுத்துவருதல், கடரு 48: மைநாகததின்வேணடுகோள் - 57·மைநாகமலைசிறையறுப்புணணுமல தப்பினமை 54. மைநாகமலை தோன்றியதன்வருணனை 40, 50· மைநாகமலை மானுடவடிவு கொணடுபேசுதல 53. மைநாகமலையைத்தள்ளிவிட்டுசசெலலல் 52· மைநாகமலைவருதல் 39. மைநாகம் அனுமானைததங்குமாறு வேணடுக காரணம் 55 மைநாகம அனுமான்வருகையை யறிநதவிதம 56: மைநாகததையெய்துதல், திருவடி 2
மையல், பொழி 48
மொகுகுள்-அருமபு, நீரகுமிழி,கொப்புளம: ஊர் 212
மொய்மபு-வலிமை. பிணி 8
மொய்மமயிரசேனை, சம்பு 21
மோகமுறுதல்-அறிவுமயங்குதல்· கிங க 46
மோய்-தாய, திருவம 61
மௌலி, சூளா 22
யக்கை, கடரு 69
யாணர் - புதுமை, அழகு, புதுவருவாய, ஊர் - 116, 118. சூளா - 32 பாசப் 7
யாண்டு, நிந்தனை 51
யாண்டும், நிந்தனை 54
யாணடை எவவிடம, உருக் 12; எவ்வாறு, காட் 13
யாதும, உருக் 4
யாய், சூளா 38
யாழொலி, ஊர் 29
யாழ்ததேள், ஊர் 176
யானைகளழிதல், சம்பு 26 யானைகளின் தனமை, ஊர் 37 யானைகள் தோலுரிந்து கழன்று ஐராவதம்போலுதல், இலங - 8· யானைசசேனை தோச்சேனைமிகுதி, ஊர் 11: யானைமீதுகொடியெடுத்தல்வழக்கம, சம்பு 26. யானை வீரரை அனுமான அழிததல், சம்பு 32
யோகம்-செய்தொழில், பாசப் 4
வகிரவுறுதல், அட்ச 40
வகை-திறமை, பாசப் 39
வசந்தன்-மன்மதன், பொழி 26
வசிததல், நிந்தனை 74
வசை, கிங்கரா 5
வசசிரம-இந்திரன்படை, கடரு 54
வஞ்சி-ஓர்கொடி, நிந்தனை 74, சூளா 10
வஞ்சியா-மகளிர், பொழி 14
வடககெழுந்திலங்கைசெல்லும் பரிதி, கடரு 28
வடபாற்றோன்றுமுவாமதி,கடரு 30
வடம் - காற்றுடிவிடுங்கயிறு, கடரு 84, ஆரம், ஊர் 40
வடவனலமுதலிய அக்கினியாவுங குளிரதல், பிணி 129, 130
வடவை, பஞ்ச 41
வடி, பிணி 7
வடிவழிபொழில் × மழையகல் விண, கிங்க 19
வடு-பழி, உருக் 18· தழும்பு, கிங்கரா 7
வணங்குதல், உருக் 59
வணடலமபுனல், பொழி 32
வணடறலோதி, திருவடி 56
வண்ணம-அழகு, உருக 114
வணமை, உருக 6, காட் 69
வதனம, ஊர் 113, திருவடி 37
வதிந்தது, ஊர் 206
வந்தனம, சூளா 38

வந்தனை, இலங 63
வந்தித்தல், சூளா 89
வமபு - கசசு, வாசனை, உருக் 117- போர்த்தொழில், பாசப் 5
வயமா-யானை, ஊர் 17
வயம், உருக 116
வயவர், பிணி 7
வயிரம்-வலிமை, நிந்தனை 58, பகை, பாசப் 7, கோபம் 21
வயிரவேதி-வசிராயுதம், கடரு 36
வயிர-ஊதுகொமபு, சமபு 22, கிஙக ரா 20
வயிரத்ததோரபகை, ஊர் 193
வயிரத்தல் - பகைகொளளல், ஊர 194, பாசப் 21
வயிறலைததல் - வயிற்றிலடித்துக கொள்ளுதல், பாசப் 8, பொழி 49, சூளா 55
வயிறுதிறததல், கிஙக 27
வயின், உருக 93
வரம்-மேன்மை, காட் 25
வரமபறுசுமமையா, பிணி 16
வரம்பிழைகசும் - சரம்பிழையாது, பிணி 103
வரனினமைதல், கிஙக 15
வரிவில், உருக் 75
வருக்கம், உருக 20
வருணன்கயிறு, பஞ்ச 17
வரை, உருக் 46, நிநதனை 50
வரைதழீஇயமஞ்ஞை × இராவண னைசசுழ்நத பலதிறமகளிர், நிந் 10
வலஙகொடுததல், சூளா 89
வலததோரகசுப்பிறாவைத்த வாயி ல்வழி யேகுதல் அழகன்று ஊர் - 74
வலந்துடித்தல், காட் 35
வலம,சூளா 5, வலப்பகக்ம, காட் 32
வலிபலம, கடரு 65, நிந்தனை -55, விதி, உருக 3
வலிததல் - வலிமைகொண்டு பொரு தல் சம்பு 36, 47
வலலி-கொடி, கடரு 19 பொழி 37
வல்லி-கயிறு, விலஙகு, பிணி 119, இலங 36, துவசம் இலங 13
வல்லியம், கடரு 6
வல்லே, கடரு 18, ஊர 81
வல்லையின், கிஙகரர் 2
வவ்வுதல், சூளா 61
வழஙகுதல, சூளா 62
வழி-வமிசம, நிந்தனை 78
வழிகொள்ளுதல்-வசப்படுதல், பாசப் 46 பிரயாணஞ்செய்தல், உருக - 17
வழியலாவழிமேலோடல், பஞ்ச 64
வழியின்மேல் வைததகண், ஊர் - 114
வழு, உருக 32
வழுவுறுகாலம, பிணி 133
வளர்வு × தேயவு, உருக் 56
வளை, உருக 43
வளைகுளமபு, இலங 23
வளைதல் - வணஙகுதல, உருக 99
வளைத்தல சூழ்தல், திருவடி 26
வள்ளம் - தோணி, அட்ச 28
வள்ளல், உருக் 54 நிநதனை 48
வள்ளலகளமூவகையர், கடரு 60
வள்ளுகிர், கடரு 22
வறியள், பொழி 45
வனப்பு - வளாசசி, சூளா 35
வனிதையாதிலகம், காட் 69
வன்றோள் × பருவரை, கிஙக 25
வன்னி, பிணி 129
வாஙகுதல் - விடுதல், ஊர 170
வாசகம் - வாரத்தை, சூளா - 28, வா சனை, பொழி 28, இலங 25
வாசவன்குலிசம, பஞ்ச 17
வாசி - குதிரை: ஊர் 101 பஞ்ச 10, இலங-23 வாசி கடற்றிரையள வின, அட்ச - 8: வாசிசிரித்தல், சமபு 8
வாசிப்பாடு-பெருமிதம், நிந் 25
வாடை-தென்றல், கடரு-74: வட காற்று, உருக 5
வாட்டுதல் - அழிததல், பிணி 109
வாணுட்கெல்லையின்று, பாசப் 38
வாணமூக்கு - கூரியமூகு, நிந் 2
வாநரம, உருக 32
வாமம் - அழகு, இனிமை, ஊர 161
வாயாறபவளக காடெனப்பொலிதல், ஊர 33
வாயில், உருக் - 61 வாயிலஉதிரத் தோடு கடலில் விழுந்த குதிரைக ள × வாயிடையெரியுடை வட வை, பஞ்ச 41

வாயில்காவலரின் படைக்கலங்கள், ஊர-69, 70 [தல், ஊர-68
வாயில்காவலரை யனுமான்பாரத
வாயு மைநாகத்தைக்காத்தான், கடரு - 54
வாய், கிஙக - 14: பவளம் ஊர-32
வாயமடிதல், பாசப-5
வாய்மை-உண்மை, கடரு-93, பிணி-105 [திருவடி-3
வாய்வெருவுதல் - வாயகுளறுதல்,
வாரணங்காக்கவந்தான், பிணி-79
வாரி-கடல், பொழி-37, பஞ்ச-40
வாரிநேரியகுறளறிந்த பொறகுல வல்லிகள்புயறகடறறலை வீழ்வன × வாரிநேரியகுற வெயிற்கதிர்க் கற்றையற்றுப் புயற்கடற்றலைபுக கன, பொழி-37 [வன், பஞ்ச-40
வாரியினெழுஞ்சுடாகடவுள் வான
வாரிவானம, ஊர்-20
வாருதல, பொழி-22
வார், ஊர-25, பொழி-34
வார்குன்றுமுலை, நிந்தனை-29
வார்த்தை, சூளா-34, இலங-63
வார்பூட்டுமுலை, ஊர-104
வாலதி-வால், கடரு-5
வாலதிதோய்சசனன், இலங-59
வாலம - பிண்டிபாலம், ஊர-69
வாலி, இராவணனைதன்வாலிற்கட்டி எட்டு திசையில் தாவிசசெலலுதல், உருக்-30 வாலிசேயரசது, திருவடி-47 வாலிசேய் புகனறவுரைபொருமை திருவடி - 39: வாலிசேய முதலகறரோரீட்டம, திருவடி-19. வாலி,தேவாவேண்டவேலையை விலங்கன்மத்திற் சுற்றியநாகம் தேய வழுவெழக்கடைதல், உருக்-30
வாலிமைந்தன், உருக்-36
வாலியினிறப்புஞ் சுக்கிரீவன் றலைமையும், பிணி - 84
வாலியினவரலாறு, உருக-30
வாலியைககொன்றுனுக காட்டொழின்மேற்கொண்டமை இராவணன் பரிகசித்தல், பிணி-88
வலியையழிக்கவும இராமன்றேவியை யங்கதனுடவுமகாரணமென்னெனல, பிணி-85
வாலிற்பட்டுச சுழலுமரக்கா × சுற்றி வீசலிற் சுழலும பமபரம், கிஙக-30
வாலைததோய்ததனுற் கடலில் முழுகினவரிறத்தல், இலங-59
வால்-காற்றுடிவால், கடரு-84, வெணமை, பொழி-35
வால்அம்தரிததவன - தூய்மையான நீரை [கங்கையை] முடியிற்கொண்டவன் சிவன் காட்-58
வாவி-குளம், சூளா-64
வாழி-சாவாதுவாழ்ந்திருக்கும் நிலை, வாளா, நிந்தனை-81 [பிணி 34
வாளாற்றுகணணுள், ஆற்று-உவம வு
வாளி, சூளா-65 [ருபு, ஊர-219
வாளெனவொளிர் பல், அட்ச-37
வாள்-ஒளி, கடரு 58 ஊர-116
வானமீனைகழங்காடுதல், ஊர-183
வானம்-பறிததகுழி, பொழி-35
வானயாறு, ஊர-5. வானயாற்றுநீர குளிரப்பிலவென்று மழைபொதுத்தாடுதல், ஊர-184
வானரர் இராமனிடம் அனுமானை முந்துறவனுப்புதல், திருவடி-51· வானராமதுபானஞ்செய்து களிததல்-16. வானரர் மதுவனததிலினிதிருததல்-26 வானரவீரா சேனைகட்கு மதுவளிக்குமாறு அங்கதனைவேண்டுதல்-14
வானவமகளிர் அரகியர்க்கு நீராட்டல், ஊர்-103, 104
வானவா, உருக-55 [பிணி 54
வானவா .. . கைததாமரைகநிந்து,
வானவேறு, காட்-42
வானினிடைவீசியமரததால்மாளிகை ததாந்துபொடியாதல் × மால்வரைகள் வானவிடியாலொடிதல், பொழி-19
வானுயாதேரின்வைகு நந்தாவிளககு உருக-89
வானோ, பொழி-10
வான, உருக்-89 பெருமை, சூளா-40
விகடவேடததா, காட்-57
விகாரப்பாடு-கடவுள்வாழ்ததது
விக்காது விழுங்குதல், கடரு-70
விசயமவைகுருதோள், கடரு-14
விசி-கட்டு, பிணி-119

விசிததெறிதல், கிங்க-42
விசுமபு, கடரு-31, உருக்-99, சூளா-82, 108 நிந்தனை-49
விசை, கடரு-22
விஞ்சை - விததியாதரா, ஊா - 185 ப்ரஹ்மவிதயை, பிணி-122: சாஸ திரம-139, விஞ்சைமன்னவாமுடி முதலியனபணையமாகச சூதுபொருதல் ஊா-185· விஞ்சையுலகம, பொழி-14· விஞ்சைவினை, உருக-1 விஞ்சைவேந்தா கேடகம முதலியவற்றுடன் மேலெழுந்ததோற்றம, கடரு-7
விடாகம, கடரு-50
விடுதல, நிந்தனை-60
விடுதேர்-செலுததியதேர், பஞ்ச-54
விடுததல்-அனுப்புதல், உருக 36
விடை-இடபம், காட்-54
விட்டு-விஷ்ணு ஆகாயம, இலங-61
விண, பொழி-23
விண்டலமபுக நீங்கியவெணபுனல், கங்கை, பொழி-32 [சூளா-7
விண்டவர் - பிரிந்தவர், ஊா - 227
விண்டு-திருமால், விஷ்ணு, பொழி-32, சூளா-72, நீங்கி, 82
விண்டுபிறந்தனன, பிணி 81
விண்ணவன், உருக-26
விணணாடு, கடரு-1 [ரு-91
விணணுலகமாகியமெல்லியல், கட
விணணுறக்கருளன்மேலவிளங்கும்விணடு × அனுமான் நெடுவெளிநில் விளங்குமகண்ணன், சூளா-72
விதானம, இலங-1
விதி, உருக 75, சூளா-10
விதிததல், பொழி-20 [104
விதியார் - படைததற்கடவுள், ஊா-
விதியின்கொட்பு, உருக-81, 82
விதிாததல, ஊா-126
விதிவலிகடததலரிது, காட்-9
விதைபடுமுயிரா, கிங்க-28
விததக, கடரு-13
விததகம், நிநதனை-42
விததகன், பாசப்-51
விதது, உருக் 53
விபீடணனைசகணடு அனுமான் குறறமிலலவனென்வுணாதல், ஊர் - 137: விபீடணன் கருநிறதத வனுயிருததற்குக கற்பிதத காரணம, விபீடணன்தருமமனனான - 136. விபீடணனதூதரைக கொல்லலாகாதென்று இராவணனுககு நீதிகூறுதல, பிணி-112-116: விபீடணன்வேந்தா...கீழுளோாவிருமபப போநதபுணணியன்: ஊா-135
விமமல்-துன்பம், உருக்-88, ஏககம, பாசப-17, களிப்பு, திருவடி-8
விமமுதல-பூரிததல, உருக-37, 67, மிகுதல், பொழி-19· வாயவிட்டுபுலமபுதல், காட்-5 15
விமமுறுதல-சோகிததல, அழுதல, உருக 90. காட் - 13
வியலிடம், கிங்க-29
விரசுதல், சூளா-36
விரவார்-பகைவா· சமபு 34
விராதனை தீவினைவவ்விய சாபமுமாற்றுதல், காட்-29
விராவருதல, சூளா-74
விரிஞ்சன், உருக 111: விரிஞ்சனாடு, கடரு-16: விரிஞ்சன்படைக்கலம், பாசப்-54
விரிதல் - பிளவுபடுதல், கடரு - 6, உருக-46: பரவுதல், உருக - 105 பொழி 52
விரிததல-விவரிததல், நிநதனை-68. வீசுதல், கிங்கரா-9
விருககம, பொழி-44
விருந்து, கடரு-61, 73, காட்-15
விரை, பிணி-18
விலகுதல், நிநதனை-49
விலங்கல்-மலை, கடரு-14, 54,உருக-30, 46
விலங்கினா, சூளா 5 [
விலங்கு, பொழி-42
விலங்குதல், கடவுளவாழ்ததது
விலாழி, பஞ்ச-9
வில-ஒளி, கனுசு, ஊர்-116.சம்பு-14
வில்மறைகிழவர், சமபு-11
வில்லிடுதல, பொழி-57
விலலிதூதன், பிணி-74
விழி, பொழி-2, உருக்-65, அட்ச-31
விழிகளாயிரமுங கொணடவேநது, அட்ச 20 [ல், பிணி-48
விழிமனங்கையொடு ஏதாடருமாட
விழுங்குதல, சூளா-85 [ஊா-164
விழுதல் - அழியுமநிலையையடைதல,

விழுமிய, உருக-73
விழைதல், பொழி-28
விழைநதவெவ்வினை வேரறவீசினு, ன், ஊர் - 169
விழைவு, ஊா - 198
விளங்குதல், பொழி-41
விளமபுதல், நிநதனை-75
விளரி - ஓரபண, நிநதனை-30. விளரிசசொல்லியா, ஊா-33
விளிதல்-இறததல், உருக-18, கழிதல், நிந்தனை-31
விளிததல் - பேராரவாரஞ் செயதல், கடரு-33, கொல்லுதல, நிநதனை-48, கிங்கரா-13
விளிமபு சுற்றிடம், இலங 52
விளிவு - அழிவு, நிந்தனை-68, வீர கோஷம, கிங்கரா-28
விளைதல்-பலித்தல், உருக-75. நிந்தனை-65, 70, திருவடி - 27
விளையாடுதல, பொழி-19
விளையுமஃது-விளைவது, ஊா 96
விள்ளுதல் - நீங்குதல, உருக் - 54 பகைமைகொள்ளுதல,பொழி 40, விளங்குதல், ஊா-163
விறகடந்தறுதற்சிலர், இலங-18
விற்பகல், காட் - 44
விறபடைமுதலியசேனைகளின் மிகுதி, ஊா - 41
விற்றல-ஒழிததல், உருக-87
வினவுதல், உருக-28
வினை - முறைமை, ஊழ்வினை: கடரு-49 பாவம, நிந்தனை-53 போரத, தொழில, சூளா-8
வினையுடையரகக்கா × இருநதை: சனகிதழல,அனகன்வில × ஊதை: இலங்கை × கனகம. சூளா-59
வீக்கம்-மிகுதியானது, கடவுள்வாழ்தது, உருக-112, பூரிப்பு, செருக்கு, பிணி-94
வீககிடுதல - நிலையாககொள்ளுதல, வீக்குதல், பிணி-68 [காட்-69
வீங்குதல், கடரு-72 உருக-66
வீசுதல-செய்யாதொழிதல், சூளா - [18
வீடணன்கோயில், காட்-52
வீடினதன்றறன, காட்-65
வீடு - நீங்குகை, ஊா - 25 சூளா-6 உருக் - 81
வீட்டுதல், சூளா-2
வீணையிமையடைததன, ஊர்-162
வீணையுங்குழலுமமிடறும வேற்றுமையிறறீாதல, ஊா-187
வீணையுமயாழுமவேறு, ஊர்-6
வீதல், கடரு-37
வீதி, ஊர்-100
வீயதல, உருக 69
வீரசூடிகை, பஞ்ச-18
வீரபட்டம, பஞ்ச-19
வீரம, ஊர்-174
வீரை-கடல், உருக-5
வீவுறுதல்-அழிவடைதல், உருக்-72
வீறு-பெருமை, கடரு-47
வீற்றுசசெல்லல், சமபு-42 [ரு 54
வீறறுப்படுதல் - வேறுவேறுதல், கட
வெடிததல்-உடைதல், ஊர் - 204 வெடியோசையுறல், இலங-10
வெணகுடை × பிறிதொருமதி, வானுறவெடுதத வெள்ளியங்குன்று: பிணி 38
வெணகொடிபரத்தல் × வானயாற்று வெண்டிரைபரத்தல், பஞ்ச-7
வெண்மழைகிழித்துத தோன்றும் மின் × விமானமூாந்தம்களிா ஊா-
வெணமுறி, ஊா-58 [119
வெணமைநீங்கியபுகழ் - அபகீர்ததி,
வெதுபபு, உருக-66 [ஊா-46
வெதும்புதல, காட்-19
வெந்நிடுதல், பஞ்ச 20
வெப்பு, பொழி-6 பாசப்-17
வெமமை - கோபம், கடுஞ்செயல், பாசப்-22, 25
வெயில், காட்-39, பொழி-15, 37 உகிரம, காந்தி, நிந்தனை-60, கிங்கரா-9
வெயில்தணிகையிற் சுககிரீவனிருக்கையை வானரர் யாவருஞ் சோதல், திருவடி-52
வெயில்விரிகதிரவன, கிங்க-20
வெய்தின், கடரு-21
வெயது, உருக-37
வெய்ய, நிநதனை-39
வெய்யவா, சூளா-13
வெய்யோன், ஊா-42 [சம்பு-ட
வெரிந, கடரு-6 முதுகு, காட் - 59
வெருவல், கடரு-5

வெருவி விம்முதல் - அஞ்சிககலஙகுதல், அட்ச-17
வெருவுதல், பொழி-40, அட்ச-48
வெருளுமவெம்புகை, இலங-37
வெல்லுதல், நிந்தனை-80
வெல்லுதறோறற லொனறேயடுதததது, பாசப-25
வெவ்வழி, உருக்-100
வெவ்விடத்தையமிழ்தென வேண்டுதல் × சீதாபிராட்டியை (இராவணன) வேண்டுதல், நிந்தனை-24
வெளி-ஆகாயம், வெளிசசம், ஊர்-62, 71
வெளிததல் - வெளிப்படையாதல், வெணணிறததையடைதல், கடறு-20, ஊர-136
வெளியிடை, கிஙக-20
வெள்குதல, சூளா 61
வெள்ளடை, நிங-2
வெள்ளம - ஓரபெருக்தொகை, ஊர-68· உருக-32 நனனீர: ஊர-154 மலையமானுட்டினினறு வழங்குந் திசைசசொல், பெருக்கு, நிநதனை-72
வெள்ளி-வெணணிறம், உருக்-53
வெளளிடை, பிணி-123
வெளளிடைமருஙகுல், ஊர-111 [53
வெள்ளியஙகிரி-கைலாயம், பொழி-
வெள்ளியஙகுன்று இராவணனுககு அஞ்சியிருந்தவரலாறு, பஞ்ச-2
வெறி, உருக-57 [பாசப்-36
வெறிததல - மயககஙகொள்ளுதல,
வெறுகக்கை-மிகுதி, ஊர-39
வெறுப்புணடாயவொருததி மறுகக வாழ்வு அழகன்று, ஊர-101
வெறறம, சமபு-46
வென்று-வெறறி, கிஙகரா-5
வேகமோய்தல், பஞ்ச-55
வேகம-அசசம, சூளா-82
வேஙகை ஒருவகைமரம், பொழி 25
வேடனு ஙகமபி நின்றமபி...எனச சொனனநனபு, காட்-23
வேடன்கைபார்ப்புறப் பேதுறு மன்ன மன்னுள், பிணி 31
வேணடுதல், சூளா-30
வேதநாயகன் றனித்துணைவன், பிணி-65
வேதநீதிவிதி, பிணி-100
வேதமும்போதமும், உருக்-90
வேதல், நிந்தனை-45
வேதனை, ஊர-194, சூளா-69
வேதி, பொழி-18
வேதிகை, ஊர-136. வேறுபடுத்துவது, உருக-68
வேய்தல்-சூடுதல், சூளா-40
வேரம செய்குன்று, பொழி-57
வேரறுததல-அடியோடு அழித்தல், நிநதனை-72
வேரி-மதுபானம, ஊர-158
வோ-மலையினடிப்புறம், கடறு - 52
வியாவை, 74
வோத்தல் - மனம்புழுஙகல்: இது - அச்சததின்செயல். கிஙக-51, அட்
வோர்பொடிததல், ஊர-111 [ச-24
வோர்விழுததல - வேரிறஙக விடுதல், இலங-20
வேலை-கடல், உருக-30, 115: நிந்தனை-63, சூளா - 54; வேலையினாகலி, ஊர - 29: வேலை யெரிதாய்ச செல வுலையின்மறுகுதல், இலங-15 வேலையொளித்த குன்
வேள், காட்-11 [று, கடறு-53
வேள்வி நீஙகியதாற் பசிததகனவி மாருதிவாலைப்பற்றி இலஙகையை யுணணுதல், பிணி-140
வேறல், சூளா-2
வேறு-மாறு: பாசப்-54 [கடறு 54
வேறறுப்புலததோன் - பகைகவன்,
வேற்றோ-பகைவர், பிணி-115
வேனில, பொழி-19
வைகுதல் - வாழ்தல, தஙகுதல் - உருக-12, 24, 79
வைதல், உருக்-17 [81
வைத்தல - அநுகககிரகித்தல், சூளா -
வைபபு-உலகம, பிணி-113
வையஞசோதல் - இறந்து விழுதல், உருக் - 74
வையம-உலகம, சூளாமணி-80

ஆ. ஜீ. பிரஸ, ஜீ. டி. மதராஸ்.